T. 3317

ENGLISH - TAMIL DICTIONARY

VOLUME — I

CHIEF EDITOR:

Dr. A. CHIDAMBARANATHA CHETTIAR

With a Foreword

by

Dr. A. LAKSHMANASWAMI MUDALIAR,

D.C.L., (Oxon.) B.A., M.D., LL.D., D.Sc.,

D.Litt., F.R.C.O.G., F.A.C.S., M.L.C.,

Vice-Chancellor



UNIVERSITY OF MADRAS

1963

CONTENTS

		Page
Foreword	....	v
Advisory Committee	...	vii
Editorial Staff	...	ix
Editor's preface	...	xi
Note to the Users of the Dictionary	...	xiii
List of Abbreviations	...	xxi
The Dictionary	...	1-400
பதிப்பாசிரியர் முன்னுரை	...	xvii
பயன்படுத்தும் முறை	...	xix
சுருக்க வடிவங்களின் அட்டவணை	...	xxii
ஆங்கிலம்—தமிழ்ச் சொற்களஞ்சியம்	..	1-400

FOREWORD

By

THE VICE-CHANCELLOR

I am glad that the first volume of the English-Tamil Dictionary is to be issued shortly. The publication of such a Dictionary was undertaken on the advice of the Senate of the University, as it was felt that it will serve a real need in the present context of events. I am glad that the Chief Editor and his staff have devoted considerable amount of energy and enthusiasm to bring out the first volume, and it is hoped that the three volumes will be completed by the year 1965.

This scheme formulated by the Syndicate of the University was placed before the University Grants Commission which undertook to bear the cost of preparation and publication of the Dictionary to the extent of 66 per cent of the total cost during the first three years. The scheme has had to be extended and the University hopes that it will be possible that grants may be given by the State Government.

The compilation of this Dictionary naturally demanded a great deal of thought and the Chief Editor was helped by an Advisory Committee in the general policy making in bringing out this Dictionary. It is hoped that a Dictionary of this kind will play a very useful part in spreading knowledge of Tamil and English to the general public.

University Buildings,
Chepauk, Madras,
28th January 1963

ADVISORY COMMITTEE

1. Dr. R. P. SETHU PILLAI, B.A., B.L., D.Litt.,
   Professor of Tamil,
   University of Madras
   (Chairman – till March 1961)

2. Dr. M. VARADARAJAN, M.A., M.O.L., Ph.D.,
   Professor of Tamil,
   University of Madras
   (Chairman from July 1961 and Member from 1959)

3. PROF. T. P. MEENAKSHISUNDARAM, M.A., B.L., M.O.L.,
   Professor of Tamil and Linguistics,
   Annamalai University

4. REV. Dr. XAVIER S. THANINAYAGAM, M.A., M.Litt.,
   Department of Education,
   University of Ceylon
   (now Professor of Indian Studies, University of Malaya)
   (till September 1961)

5. PROF. P. ALALASUNDARAM, M.A.,
   Professor of Tamil,
   Madras Christian College, Tambaram
   (from September 1961)

6. PROF. S. ARUMUGA MUDALIAR, M.A., B.O.L., L.T.,
   Principal,
   Sri. Palaniyandavar College of Oriental Culture,
   Palani, Madurai District
   (from September 1961)

7. Dr. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph.D.,
   Chief Editor

EDITORIAL STAFF

Dr. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph.D., *Chief Editor*

SRI K. APPADURAI, M.A., L.T., *Assistant Editor*

SRI V. BALASUBRAMANIAM, B.A., *Assistant*

SRI T. A. V. NATHAN, B.A., B.L., *Assistant*
(till 20-1-1962)

SMT. P. S. INDIRA, M.A., B.T., M.Litt., *Assistant*

SRI A. JAGADEESAN, M.A., *Assistant*
(Aug.–Sept. 1960)

SRI N. SANJEEVI, M.A., *Assistant*
(since 1-11-1962)

PREFACE

I. The Senate of the University of Madras resolved at its meeting held on the 27th October 1955 that necessary steps be taken for the compilation and publication of a standard and authoritative English-Tamil Dictionary. The Syndicate of the University formulated a scheme for the implementation of this proposal. The scheme was accepted by the University Grants Commission which undertook to bear the cost of the preparation and publication of the Dictionary to the extent of 66 per cent of the total cost during the first three years. The scheme originally sanctioned for three years had to be extended mainly because the Advisory Committee later recommended that phrases also should be included in the Dictionary.

II. The work commenced on the 16th March 1959. Certain principles for adoption by the staff were formulated by the Advisory Committee and they have been followed by the Editorial staff.

These principles are :—

(1) The Oxford English Dictionary (Concise) (1958 Edition) be taken as the basis for preparing the basic word list.

(2) Each derivative from a word is to be taken as a separate word in order to help the consultants.

(3) Phrases in frequent use are to be included.

(4) The pronunciation of the English words need not be given in Roman or in International phonetic script or in Tamil script. It would suffice to indicate the English accents without syllabification.

(5) The Anglicized pronunciation of French or Latin or German words is to be adopted wherever they need transliteration.

(6) Letters corresponding to Grantha characters are to be used wherever necessary in giving the pronunciation of words borrowed from other languages.

(7) Highly specialized technical words need not be taken up.

(8) Transliteration of the English word need not be given.

III. Ordinarily, the logical sequence of meanings has been kept in mind in giving the Tamil renderings, wherever there are more senses than one for an English word. Occasionally, however, the Editor's discretion had to be used in arranging the meanings of a particular word. Words which have the same spelling but which are different in origins or have different accents are treated as separate words for purposes of convenience.

In giving the meaning of a particular word which may occur as different parts of speech in English, the following order has been followed :— noun, pronoun, adjective, verb, adverb, preposition, conjunction, interjection.

IV. Though the Tamil language is one of the earliest of the cultivated languages, it has not been put to uses that have been necessitated during the last two centuries by the phenomenal growth in the fields of Science, Technology, Medicine, Law etc. Consequently, there are not adequate terms for expressing the ideas denoted by the English words. In this Dictionary, therefore,

attempts have been made to make the consultant understand the precise meaning of the English term very often by a descriptive meaning given for scientific and technological words. Wherever possible, the Tamil equivalents in vogue have been given. And when necessity demanded, efforts have been taken to coin Tamil expressions by keeping close to the idea expressed in the English language. In such connections, the usual method by which all languages replenish their vocabulary, namely, building up words from known prefixes and suffixes has been adopted.

V. As early as 1786 an English-Malabar Dictionary was published but copies of this Dictionary are not now available. There is, however, a copy of this in the University Library declared as "unusable." In 1844, Rev. J. Knight and Rev. L. Spaulding published an English-Tamil Dictionary. In 1936, Mr. P. Ramanathan, M.A., published his English-Tamil Dictionary upto the word "sparre." None of these is available now for sale. The stupendous task undertaken by these pioneers in this field deserves to be acknowledged and remembered. "A vocabulary in English Teloogoo and Tamil languages" of about 260 pages prepared by a late student of Mr. Lewis and Mr. T. M. Kistanasawmy Pillay published in 1851, and "A Builder's Vocabulary in English and Tamil" of about 70 pages prepared by Mr. T. S. Veeraswamy Moodeliar and published in 1880 deserve to be mentioned as other pioneering efforts in this direction.

VI. Since then, there have been great strides in the extent to which the English language has developed. This Dictionary, which is more comprehensive, takes note of such developments and covers many words not attempted in the earlier Dictionaries and gives more meanings than one that belong to a particular word. However, the consultant will have to choose and decide the meaning according to the context in which the word occurs.

VII. To *Dr. A. Lakshmanaswami Mudaliar,* the revered Vice-Chancellor of the University, abundant thanks are due for sponsoring this work and for nurturing this department with the kindness characteristic of him.

I acknowledge with thanks the help and guidance which I received from the late Dr. R. P. Sethu Pillai (Former Professor of Tamil) and from Dr. M. Varadarajan, the present Professor of Tamil in the University.

I offer my sincere thanks to the Members of the Advisory Committee for their valuable suggestions given from time to time.

Sri R. Ramachandran of Mylapore was good enough to place with us for consultation a list of certain English words he had rendered into Tamil as a hobby. Mr. C. Rajaratna Mudaliar also furnished us with a copy of certain mathematical terms etc. rendered into Tamil by the late Mr. P. V. Manikka Naicker. I thank them for their kindness.

I am deeply indebted to the Assistant Editor, Mr. K. Appadurai and other members of the Editorial staff and the Ministerial staff for their unstinted help in the fruition of this work.

VIII. It has been decided to publish the Dictionary in three volumes and to present all the volumes together on the completion of the entire work. This volume is the first in the series. Rathnam Press Madras, who took up this work in January 1960, deserve our thanks for their hearty co-operation.

MADRAS-5,
Dated 26-1-1963

A. C. CHETTIAR
Chief Editor

NOTE TO THE USERS OF THE DICTIONARY

(1) Words in the Dictionary have been alphabetically arranged.

(2) A word having the same form in its many parts of speech is treated as one word if its etymons are the same. (E.g. double, *n.* இருமடங்கு; *a.* இரட்டிப்பான; *v.* இரட்டிப்பாக்கு; *adv.* இருமடங்காக.)

(3) If the same word-form has more origins than one, it is treated as so many separate words and is serially numbered. (E.g. coil , *n.* கயிற்றுச்சுருள்; coil[2], *n.* குழப்பம்.)

(4) Whenever the word-form varies in accentuation, the word is marked as[1], [2], [3], etc. in the series. (E.g. es'cort[1], *n*; escort'[2], *v.*)

(5) Accents are marked as in authoritative English Dictionaries like the Concise Oxford Dictionary. But in the case of French loan words accents are not marked.

(6) Though the tracing of words etymologically to the language of origin is out of place in a bi-lingual dictionary, foreign loan words of importance inclusive of loans from Tamil and other Indian languages and Eastern languages are shown as such with appropriate abbreviations [like த. for Tamil (anicut), இ. for Hindi (dhal), ச. for Sanskrit (deodar), துரு. for Turkish (bairam), அரா. for Arabic (bulbul) etc., etc.]

(7) Words printed in italics indicate that they have been treated as foreign words in English Dictionaries. For instance, ***double entendre,*** (பிர. for French) *n.* இருபொருட் சிலேடை; ***brio,*** (இத். for Italian) *n.* இளர்ச்சி; ***caldarium,*** (ல. for Latin) *n.* சுடுநீரிற் குளிப்பதற்கான அறை.

(8) The meanings of technical words are given with indications of the field to which the word belongs. E.g. cell, மின். for மின்சாரம் (Electricity); உயி. for உயிர்நூல் (Biology); cribriform, தாவ. for தாவரவியல் (Botany); affirm, சட். for சட்டம் (Legal); aetiology, மரு. for மருத்துவம் (Medical); crypt, வில. for விலங்குநூல் (Zoology) etc. etc.

(9) A comma is used after every single entry of meaning but a semicolon is employed to show that a different sense or a different shade of meaning follows. (E.g. cynical, நாய்க்குணம் படைத்த, எரிந்து விழுகிற; குறறம் காடுகிற etc. etc.,).

(10) Derivatives of a word are treated as separate words and are placed in the alphabetical order. (E.g. clear, clearage, clearance etc.)

(11) Compound words connected ordinarily with a hyphen are treated as separate words and are given in the alphabetical order. (E.g. earth-born, earth-fed, earth-house etc.)

Occasionally, however, groups of words without a hyphen are also shown as separate words if they are important. (E.g. Chiltern Hundreds)

(12) English verbs are rendered into Tamil as verbal roots which are identical with the imperative singular forms in the language. (E.g. deny - மறு; deploy - மடிப்பவிழ்; abstain - விட்டிரு, தவிர்; disagree - இசையாதிரு.)

(13) Phrases are arranged alphabetically within the bounds of a word and are shown at the end of the main word with an abbreviation enclosed in brackets. [E.g. (தொ.) call attention to, call to mind, call up, etc.]

(14) Grammatical forms with internal changes like bear - bore, can - could are treated in their alphabetical order.

Regular grammatical forms such as plurals in -s or -es, past tenses and past participles in -ed or -t, present participles in -ing, adverbs in -ly, comparative and superlative forms in -er and -est, and nouns in -ness, -ment, -ship etc. are generally not given, unless such forms are in any way important or peculiar.



ஆங்கிலம்–தமிழ்ச் சொற்களஞ்சியம்

முதல் தொகுதி

தலைமைப் பதிப்பாசிரியர் :

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
எம்.ஏ., எம்.எல்.சி.,

துணை வேந்தர்

டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார்
எம்.டி., டி.சி.எல்., டி.லிட்.,
டி.எஸ்.சி., எம்.எல்.சி.,

அவர்கள்

எழுதிய ஆங்கில முகவுரையுடன் வெளிவருவது

சென்னைப் பல்கலைக்கழகம்

1963

முன்னுரை

1955 அக்டோபர் 27-ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட்டு கூட்டத்தில் தக்கதோர் ஆங்கிலம்–தமிழ்ச்சொற்களஞ்சியம் தொகுத்து வெளியிடுதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. இதனை நிறைவேற்றுதற்காகப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்டு ஒரு திட்டத்தை வகுத்தது. இந்திய பல்கலைக்கழக மானியக் குழுவினர் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டு, இச் சொற்களஞ்சியத்தைத் தயார்செய்து வெளியிடுதற்காகும் செலவினில் மூன்றில் இரண்டு பங்கு ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தனர். இச்சொற்களஞ்சியத்தின் ஆலோசனைக் குழுவினர் ஆங்கிலச் சொற்களை மாத்திரமல்லாமல் ஆங்கிலச் சொற்றொடர்களையும் இப்பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பின்னர்ப் பரிந்துரைத்த முக்கிய காரணத்தால் இத்திட்டம் முதலில் மூன்றாண்டிற்கு என வகுக்கப்பட்டது தொடர்ந்து நீட்டிக்கப்படுவதாயிற்று.

(2) 1959 மார்ச்சு 16-ஆந் தேதி வேலை தொடங்கிற்று. பதிப்பாசிரியப் பணியினர் மேற் கொள்ளவேண்டிய சில கொள்கைகளை ஆலோசனைக் குழுவினர் வகுத்துத் தந்தனர். அவற்றைப் பதிப்பாசிரியப் பணியினர் பின்பற்றியுள்ளனர். அக் கொள்கைகளாவன :—

1. 1958-இல் வெளியான ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் (சுருக்க) அகராதியை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலச் சொற்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
2. சொற்களஞ்சியத்தை நோக்குவோருக்கு உதவியாக இருக்கும்பொருட்டுச் சொல்லினின்று விரியும் ஒவ்வொரு வடிவமும் தனித்தனிச் சொல்லாக எடுத்துக்காட்டப்பட வேண்டும்.
3. பெருவழக்கிலுள்ள சொற்றொடர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.
4. ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பினை ஆங்கில எழுத்திலோ தமிழ் எழுத்திலோ காட்ட வேண்டுவதில்லை. ஆங்கில அசையழுத்தங்களை மாத்திரம் காட்டுவது போதுமானது.
5. பிரஞ்சு, லத்தீன், செர்மன் ஆகிய மொழிகளிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்துள்ள சொற்களின் உச்சரிப்பு முறை ஆங்கில உச்சரிப்பு முறையாகவே இருக்கலாம்.
6. பிற மொழிகளிலிருந்து கடன்வாங்கப்பட்டுள்ள சொற்களை எழுத்திற் காட்டும்பொழுது தமிழ் நெடுங்கணக்கின் கிரந்த எழுத்துக்களினுல் வேண்டியவிடத்துக் காட்டவேண்டும்.
7. சிறப்புரிமை பெற்ற கலைச்சொற்களை இச்சொற்களஞ்சியத்தில் எடுத்துக்கொள்ள வேண்டா.
8. ஆங்கிலச் சொல்லுக்கு நேராகத் தமிழ் எழுத்தில் அச்சொல்லை எழுத வேண்டுவதில்லை.

(3) ஒரு பொருளுக்கு மேற்பட்ட பொருள்களையுடைய ஆங்கிலச் சொல்லின் அர்த்தத்தினைத் தரும்பொழுது தொடர்புடைமை பொதுவாக மனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், ஒவ்வொரு சொல்லின் வெவ்வேறு பொருள்களை வரிசைப்படுத்துதலிற் பதிப்பாசிரியரின் தேர்வுரிமை கைக்கொள்ளப் பட்டுள்ளது. எழுத்தினுல் ஒத்திருந்து தோற்றுவாய் காரணமாக வேறுபடுஞ் சொற்கள் வெவ்வேறு சொற்களாகவே கொள்ளப்பட்டுள்ளன. அசையழுத்தத்தான் வேறுபட்ட சொற்களும் வசதி காரணமாக வேவ்வெருகவே காட்டப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தில் வெவ்வேறு இலக்கண உறுப்புக்களாக அமைந்துள்ள ஒரே சொல்லினை எடுத் தாளும்பொழுது, பெயர்ச்சொல், மறுபெயர்ச்சொல், பெயருரிச்சொல், வினைச்சொல், வினையுரிச்சொல், முன்னீடு, இணைப்புச்சொல், வியப்பிடைச்சொல் என்றவாறு வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) செப்பனிடப்பட்டுத் திருத்தமுற்ற உலக மொழிகள்தம்மில் தமிழ்மொழி மிக்க பழமை வாய்ந்ததொன்று. எனினும், சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம் முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய வளர்ச்சிக்குப் பொருந்திய வகையில் அது பயன்படுத்தப்படவில்லை. ஆதலால், ஆங்கிலச் சொற்கள் குறிக்கும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கப் போதுமான பதங்கள் இப்பொழுதில்லை. இக்காரணத்தால், நுணங்கியல்துறைச் சொற் களையும் தொழில்நுட்பத்துறைச் சொற்களையும் தெளிவுபட மக்கள் உணர்ந்துகொள்ளுதற்காகச் சில நேரங்களில் விளக்கமான பொருள்கள் தரப்பட்டுள்ளன. இயன்றவிடங்களில், வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில், தமிழ்ச்சொற்கள் புதியனவாக அமைக்கப்

பட்டுள்ளன. இவ்வாறு, முன்னரே தாம் அறிந்துள்ள பகுதிகளையும் பிற சொற்கூறுகளையும் சேர்த்தமைத்துப் புதுச்சொற்களைப் படைத்துக்கொண்டு தத்தம் சொற்களஞ்சியத்தை வளம்படச் செய்துகொள்வது எல்லா மொழிகளிலும் வழக்கமாக உள்ளது. இம்முறை இச்சொற்களஞ்சியத்திலும் கையாளப்பட்டுள்ளது.

(5) 1786-இல் ஓர் ஆங்கில - மலபார் அகராதி வெளிவந்ததெனினும், அவ்வகராதியின் படிகள் இப்பொழுது கிடைக்கவில்லை. சென்னைப் பல்கலைக்கழக நூனிலையத்திற் பயன்படுத்த முடியாத நிலையில் ஒருபடி காட்சிக்கு உளது. 1844-இல் அருட்டிரு. ஜே. நைட் என்பாரும் அருட்டிரு. எல். ஸ்பால்டிங் என்பாரும் வெளியிட்டதோர் ஆங்கிலம் - தமிழகராதி உண்டு. 1936-இல் "A" முதல் "sparre" என்ற சொல்வரையில் திரு. பி. இராமநாதன் அவர்கள் ஓர் ஆங்கிலம் - தமிழ் அகராதி வெளிப்படுத்தினர். இவற்றில் எதுவும் இப்பொழுது விலைக்குக் கிடைத்தலில்லை. இம்முன்னோடியர்கள் மேற்கொண்ட மாபெரும் பணி நினைவில் வைக்கத் தக்கதொன்று. 1851-இல் திரு. லூவிஸ் என்பாருடைய மாணவரும், திரு. டி. எம். கிருட்டிணசாமி பிள்ளையும் ஒருங்கேகூடி 260 பக்கத்தில் வெளியிட்ட "இங்கிலீஷ் - தெலுங்கு - தமிழ்ச் சொற்கள் தொகுப்பு" என்பதும், 1880-இல் திரு. டி. எஸ். வீராசாமி முதலியார் 70 பக்க அளவில் வெளிட்ட "கொத்தனரது ஆங்கிலத் தமிழ்ச்சொல் அட்டவணை" என்பதும் பிற முன்னோடி முயற்சிகளாகக் குறிப்பிடத்தக்கவை.

(6) ஆங்கிலமொழி மிகப்பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளமை யாவரும் அறிந்தது. முந்திய அகராதிகளிற் சேர்க்கப்படாத பல ஆங்கிலச் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் இச் சொற்களஞ்சியத்திற் காணலாம். அன்றியும், முந்திய அகராதிகளில் ஒவ்வொரு சொல்லுக்குந் தரப் பட்டிருக்கும் பொருள்களைவிட மிக்க எண்ணிக்கையுடைய பொருள்களை அவ்வச்சொல் பெற்றிருக்குமாயின், அவற்றையும் இதனுள் தந்துள்ள வகையான் இச்சொற்களஞ்சியம் முன்னைய அகராதிகளைக் காட்டிலும் விரிவுடையது. சில நேரங்களில், இடம்நோக்கி வேண்டிய பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு இச்சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்துவோருடையதாகிறது.

(7) இப்பணியைத் தோற்றுவித்து, இத்துறையிற் பணியாற்றுவோரிடத்துத் தமது பெருந்தகைமைக்கேற்ப அன்புகாட்டிவரும் மதிப்பு மிக்க துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களுக்கு மிக்க பெருநன்றி உரியது.

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் (மறைந்த) டாக்டர் ரா. பி. சேதுபிள்ளை அவர்களும், இந்நாள் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்களும் உதவியாகவும் வழித்துணையாகவும் உள்ளமை பொருட்டு நன்றியுடையேன்.

இந்நூலின் ஆலோசனைக் குழுவினராக அமர்ந்து அடிக்கடி நல்ல கருத்துரைகளை வழங்கியுதவிய அறிஞர்கள் திருவாளர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அருட்டிரு. தனிநாயகர், பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், சரவண ஆறுமுக முதலியார் ஆகியோருக்கு என் உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாப்பூர் திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தாம் பொழுதுபோக்காகத் தொகுத்திருந்த சில ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களை இப் பதிப்பாசிரியர் பார்வைக்கு அனுப்பிவைத்திருந்தார். முன்னர்ச் சென்னை அரசின் மேற்பார்வைப் பொறியாளராக இருந்த திரு. பா. வே. மாணிக்க நாயகர் அவர்களாற் கணக்கியல் முதலிய விஞ்ஞானத் துறைகளுக்காக இயற்றப்பட்ட தமிழ்க்கலைச் சொற்களின் பட்டியல் ஒன்றைத் திரு. சி. இராசரத்தின முதலியார் அன்புகூர்ந்து கொடுத்துதவினர். அப்பட்டியலும் பதிப்பாசிரியப் பணியினருக்குச் சில வேளைகளிற் பயன்பட்டது. அவர்களது அன்புடைமைக்கு நன்றி உரியது.

உதவிப் பதிப்பாசிரியர் திரு. கா. அப்பாத்துரை அவர்களுக்கும், பதிப்பாசிரியப் பணியில் என்னுடன் பொறுப்பேற்றுப் பங்குகொண்டு என்னெடு அலுவல் இயற்றிய ஏனைய உதவியாளர்கள் திரு. வல்லி. பாலசுப்பிரமணியம், (மறைந்த) திரு. டி. ஏ. வி. நாதன், திருவாட்டி பி. எஸ். இந்திரா, திரு. ஏ. சகதீசன், திரு. ந. சஞ்சீவி ஆகியோருக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இப்பணியைச் செவ்வனே முடித்தற்கு உதவிய இவ்வலுவலக எழுத்தர்களுக்கும் என் நன்றி உரியது.

(8) இச்சொற்களஞ்சியத்தை மூன்று பாகங்களாக வெளிப்படுத்துவதென்றும் முழு வேலை முடிந்ததும் மூன்று பாகங்களையும் சேர்த்து ஒரு தொகுதியாக வெளியிடுவதென்றும் முடிவுகள் செய்யப் பட்டுள்ளன. இப்பணியினை 1960 ஜனவரியில் தொடங்கிய சென்னை இரத்தினம் அச்சகத்தாரது மனமுவந்த ஒத்துழைப்பிற்கு மிக்க நன்றி.

சென்னை-5,
26-1-1963

அ. சிதம்பரநாதன்
தலைமைப் பதிப்பாசிரியர்

இப்புத்தகத்தைப்

பயன்படுத்துவோருக்குச் சில குறிப்புக்கள் :

(1) ஆங்கில அகர வரிசையிற் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(2) ஆங்கில எழுத்துக்களால் ஒரே வடிவமுடைய சொல் வெவ்வேறு உறுப்பிலக்கணம் உடைய தாயினும், ஒரே சொல்லாக எடுத்துக்கொள்ளப்பட்டுப் பொருள் தரப்பட்டுள்ளது. ஒரே சொல் பெயராகவும் வினையாகவும் இருந்தால் அச்சொல்லுக்குரிய பத்தியில் n. பெயர்ச்சொல் என்றும், v. வினைச்சொல் என்றும் காட்டப்பட்டுப் பொருள்கள் தரப்பட்டுள்ளன. (எ-டு. double, n. இருமடங்கு; a. இரட்டிப்பான; v. இரட்டிப்பாக்கு; adv. இருமடங்காக.)

(3) ஆங்கிலச் சொல் ஒரே எழுத்துவடிவம் உடையதாயினும், வெவ்வேறு தோற்றுவாய்கள் உடையதாக இருப்பின், வெவ்வேறு சொற்களாக மதிக்கப்பட்டு மேலே எண்கள் இடப்பட்டுள்ளன. (எ-டு. coil [1], n. கயிற்றுச்சுருள்; coil [2], n. குழப்பம்.)

(4) ஆங்கிலச் சொல் அசையழுத்த வகையான் வேறுபடும் இடங்களில் அச்சொல் [1], [2], [3], முதலிய எண்கள் கொடுத்துக் காட்டப்பட்டுள்ளது. (எ-டு. es'cort [1], n., escort' [2], v.)

(5) ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி முதலிய அளவைச் சொற்களஞ்சியங்களினுடைய துணைக் கொண்டு அசையழுத்தங்கள் குறியிடப்பட்டுள்ளன. எனினும், பிரஞ்சுச் சொற்களின் அசையழுத்தங்கள் காட்டப்படவில்லை.

(6) இருமொழி அகராதிகளில் அடிவேர்களினுடைய தொடர்புகள் காட்டப்படுவது வழக்கமில்லையாயினும், தமிழ் முதலிய இந்திய மொழிகளிலிருந்தும், ஏனைய கீழ்த்திசை மொழிகளிலிருந்தும் ஆங்கிலம் கடன் வாங்கியுள்ள முக்கிய சொற்களின்பின் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன. [தமிழ் என்பதைக் காட்ட (த.); சம்ஸ்கிருதம் என்பதைக் காட்ட (ச.); அராபிக் என்பதைக் காட்ட (அரா.) போன்ற சுருக்கங்கள் கையாளப்பட்டுள்ளன. பிற சுருக்கங்களை அட்டவணையிற் காண்க.]

(7) சாய்வெழுத்திற் காட்டப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்கள் ஆங்கில அகராதிகளில் அன்னிய மொழிச் சொற்களாக மதிக்கப்பட்டுள்ளவை. [எ-டு. *double entendre*, (பிர. = French) n. இருபொருட் சிலேடை; *brio*, (இத். = Italian) n. கிளர்ச்சி; *caldarium*, (ல. = Latin) n. சுடுநீரிற் குளிப்பதற்கான அறை.]

(8) கலைச்சொற்கள் எவ்வெக் கலைத்துறைக்குச் சிறப்பாகப் பொருந்தியன என்பது அவ்வவ் விடத்துச் சில சுருக்கக் குறியீடுகளாற் காட்டப்பட்டுள்ளன. [எ-டு. cell, மின். = மின் சாரம் (Electricity); உயி. = உயிர்நூல் (Biology); cribriform, தாவ. = தாவரவியல் (Botany); affirm, சட். = சட்டம் (Legal); aetiology, மரு. = மருத்துவம் (Medical); crypt, வில. = விலங்குநூல் (Zoology.)]

(9) சொல்லின் பொருள் ஒவ்வொன்றும் காட்டப்பட்டவுடன் ஒவ்வொரு காற்புள்ளி இடப்பட்டுள்ளது. பின்வரும் பொருள் முந்திய பொருளின் வேறுபட்டதாக அல்லது சிறிது வேறு

பட்ட சாயலுடையதாக உள்ள இடங்களில் அரைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது. (எ-டு. cynical, நாய்க்குணம் படைத்த, எரிந்து விழுகிற; குற்றம் நாடுகிற).

(10) ஆங்கிலச் சொல் ஒன்றிலிருந்து பிரிந்து விரிவுற்ற பல்வேறு வடிவங்கள் தனித்தனிச் சொற்களாக மதிக்கப்பட்டு அகர வரிசைப்படி காட்டப்பட்டுள்ளன. (எ-டு. clear, clearage, clearance).

(11) சிறு இணைப்புக்கோடு உடைய ஆங்கிலத் தொகைச்சொற்கள் தனித்தனிச் சொற்களாகக் கொள்ளப்பட்டு அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. (எ-டு. earth-born, earth-fed, earth-house).

சில நேரங்களில் சிறு இணைப்புக்கோடு இல்லாத சொற்றொகுதிகளும் தத்தம் சிறப்புடைமை காரணமாக வெவ்வேறு சொற்களாகக் காட்டப்பட்டுள்ளன. (எ-டு. Chiltern Hundreds).

(12) ஆங்கில வினைச்சொற்களுக்குப் பொருள் தரும்பொழுது முன்னிலையேவல் வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன. (எ-டு. deny - மறு; deploy - மடிப்பவிழ்; abstain - விட்டிரு, தவிர்; disagree - இசையாதிரு).

(13) ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லின்கீழே அதனையொட்டிய சொற்றொடர்கள் அகர வரிசைப்படி தரப்பட்டுள்ளன. [எ-டு. (தொ.) call attention to, call to mind, call up.]

(14) வினைக்கூற்றின் வேறுபாடுகளைக் காட்டுதற்காகச் சொல்லின் உள்ளீடாக மாறுதல்களைப் பெறும் ஆங்கிலச் சொற்கள் அகர வரிசையின்படியே அமைக்கப்பட்டுள்ளன. (எ-டு. bear-bore, can - could).

வழக்கமாக மரபுப்படி முடியும் பன்மை வடிவங்களும், கால வடிவங்களும், இன்ன பிற வடிவங்களும் பொதுவாகத் தனித்தனியே காட்டப்பட்டில; சிறப்பு நோக்கிச் சில இடங்களில் மாத்திரம் காட்டப்பட்டுள்ளன.

ENGLISH ABBREVIATIONS

a.	Adjective
adv.	Adverb
art.	Article
conj.	Conjunction
fem.	Feminine gender
f.t.	Future tense
int.	Interjection
masc.	Masculine gender
n.	Noun
pl.	Plural
p.p.	Past participle
pref.	Prefix
prep.	Preposition
pron.	Pronoun
pr.t.	Present tense
p.t.	Past tense
p.v.	Passive voice
refl.v.	Reflexive verb
rel.a.	Relative adjective
rel.adv.	Relative adverb
rel.pron.	Relative pronoun
sing.	Singular
v.	Verb

TAMIL ABBREVIATIONS

சுருக்க வடிவங்கள்

அச்சு.	அச்சுத்தொழில்	Printing
அரா.	அராபிய மொழி	Arabic
அரு.	அருவழக்கு	Rare usage
அள.	அளவையியல்	Logic
இ.	இந்தி, இந்துஸ்தானி	Hindi, Hindustani
இசை.	இசைத்துறை	Music
இத்.	இத்தாலிய மொழி	Italian
இ-ப.	இயற்படி	Positive degree
இய.	இயற்பியல்	Physics
இயந்.	இயந்திரத்துறை	Mechanics
இலக்.	இலக்கணம்	Grammar
இழி.	இழிவழக்கு	Vulgar usage
இறை.	இறையியல்	Theology
உட.	உடல் நூல்	Physiology
உ-ப	உறழ்படி	Comparative degree
உயி.	உயிர் நூல்	Biology
உரு.	உருது	Urdu
உள்.	உள்ளமைப்பியல்	Anatomy
உள.	உள நூல்	Psychology
எ-டு.	எடுத்துக்காட்டு	Example
எல்.	எல்லை அளவை	Survey
ஏ-ப.	ஏற்றுயர்படி	Superlative degree
ஒலி.	ஒலியியல்	Phonetics
க-க.	கட்டிடக்கலை	Architecture
கட்.	கட்டியம்	Heraldry
கண.	கணக்கியல்	Mathematics
கப்.	கப்பல்துறை	Nautical
கனி.	கனிப்பொருளாராய்ச்சி	Mineralogy
கிரே.	கிரேக்கம்	Greek
ச.	சமஸ்கிருதம்	Sanskrit
சட்.	சட்டத்துறை	Legal
சுரங்.	சுரங்கத்துறை	Mining
சுரு.	சுருக்கம்	Abbreviation
சு.வ.	சுருக்க வடிவம்	Abbreviated form
செது.	செதுக்குருவக்கலை	Sculpture
செய்.	செய்யுள் வழக்கு	Poetical usage
செர்.	செர்மன் மொழி	German
சொல்	சொற்கோப்புக்கலை	Rhetoric
சோதி.	சோதிடநூல்	Astrology
டச்.	டச்சு	Dutch
டே	டேனிஷ்	Danish

த.	தமிழ்	Tamil
தாவ.	தாவரவியல்	Botany
துரு.	துருக்கி	Turkey ; Turkish
தொ.	தொடர்	Phrase
தொல்.	தொல்பொருளாய்வு	Archaeology
நகைச்.	நகைச்சுவை	Jocular
நி-ப.	நிழற்படக்கலை	Photography
நில.	நிலவியல்	Geography
படை.	படைத்துறை	Military
பிர.	பிரஞ்சு	French
பூச்.	பூச்சிநூல்	Entomology
பெர்.	பெர்சியன் மொழி	Persian
பெரு.	பெரும்பொருளியல்	Theosophy
பே-வ.	பேச்சு வழக்கு	Colloquial
பொறி.	பொறியியல்	Engineering
போர், போர்ச்.	போர்ச்சுகீசிய மொழி ; போர்ச்சுகல்	Portuguese ; Portugal
ம.	மலையாளம்	Malayalam
மண்.	மண் நூல்	Geology
மரு.	மருத்துவம்	Medical
மின்.	மின்சாரம்	Electricity
மெய்.	மெய்விளக்கியல்	Philosophy
மொழி.	மொழிநூல்	Philology
யாப்.	யாப்பியல்	Prosody
ருசிய.	ருசியா ; ருசியமொழி	Russia ; Russian
ல.	லத்தீன்	Latin
வங்.	வங்கமொழி	Bengali
வடி.	வடிவியல்	Geometry
வர.	வரலாறு	History
வான்	வானியல்	Astronomy
வானிலை.	வானிலைநூல்	Meteorology
விசை.	விசையியக்கவியல்	Dynamics
வில.	விலங்குநூல்	Zoology
விவி.	விவிலியநூல் வழக்கு	Biblical usage
வேதி.	வேதியியல்	Chemistry
ஸ்பா.	ஸ்பானிய மொழி	Spanish
ஸ்வீ.	ஸ்வீடிஷ்	Swedish
ஜப்.	ஜப்பான் ; ஜப்பானிய மொழி	Japan ; Japanese

A *art.* ஒரு; ஏதாவதொரு; ஒவ்வொரு; முதல்தரமான.

aard'-vark, *n.* தென் ஆப்பிரிக்கப் பன்றி வகை.

aard'-wolf, *n.* தென் ஆப்பிரிக்க ஓநாய் வகை.

Aar'on, *n.* யூதர் தலைமைக்குரு.

Aaron'ic, Aaron'ical, *a.* யூதர் தலைமைக்குருவினைச் சார்ந்த.

aa'svogel, *n.* தென் ஆப்பிரிக்கக் கழுகு.

a'ba, aba'ya, abb'a, *n.* அராபிய நாட்டு முரட்டு ஆடை வகை.

aback', *adv.* பின்புறமாக, பின்னேக்கி; (தொ.) taken aback, துணுக்குற்று, திகைப்புற்று, வியப்புக்குள்ளாகி.

abac'tor, *n.* கால்நடைத் திருடன், ஆனிரைக் கள்வன்.

ab'acus, *n.* பரற்கட்டை; மணிச்சட்டம்.

Abad'don, *n.* நரகத்தலைவன்.

abaft', *adv., prep.* (கப்.) பின்னுல், பின்புறமாக.

aban'don, *n.* கவலையற்ற மனநிலை; தங்குதடையற்ற மனப் பான்மை; *v.* விட்டுவிடு, கைவிடு, உதறித்தள்ளு; (தொ.) abandon oneself to, முழுதும் ஈடுபட்டு நுகர், தோய்.

aban'doned, *a.* கைவிடப்பட்ட; ஒழுக்கங்கெட்ட, இழிந்த.

abandonee', *n.* (சட்.) கப்பல் அழிபாட்டில் மீட்பு உரிமை யாளர்.

aban'donment, *n.* விட்டுவிடுகை, கைதுறப்பு.

abase', *v.* தாழ்த்து, இழிவுபடுத்து.

abase'ment, *n.* தாழ்த்துதல்; தாழ்வு, இழிவு.

abash', *v.* நாணவை, தலைகுனியச் செய்; குழப்பம் உண்டு பண்ணு; (தொ.) be abashed, வெட்கப்படு; குழப்பம் அடை.

abash'ment, *n.* கலக்கம்; வெட்கத்தினுல் ஏற்படும் மனக் குழப்பம்.

abask', *adv.* வெதுவெதுப்பான நிலையில்.

abate', *v.* தாழ்த்து; குறை, தணி; தள்ளுபடி செய்; விலக்கி வை.

abate'ment, *n.* தள்ளுபடி; (சட்.) பிறர் உரிமையில் தலை யிட்டுக் குறைத்தல்.

ab'atis, abatt'is, *n.* மரக்கிளை அரண், கொப்புக் கவரரண்.

abattoir, (பிர.) *n.* ஆடுமாடு அடிக்கும் தொட்டி; இறைச்சி வெட்டும் களம்.

abb, *n.* ஊடுநூல்; குறுக்கிழை.

Abb'a, *n.* (விவி.) தந்தை; கடவுள்.

abb'acy, *n.* மடத்துத் தலைவரின் பதவி; மடத்துத் தலைவரின் பதவிக் காலம்; மடத்துத் தலைவரின் ஆட்சி எல்லை.

abba'tial, *a.* மடத்துத் தலைவருக்குரிய; திருமடத்துக்குரிய.

abb'e, *n.* சமய குருவுக்குரிய ஒரு மரியாதை வழக்கு; ஒரு சிறப்புப் பெயர்; சமய குருவின் உடுப்பு அணிதற்குரியவர்.

abb'ess, *n.* குருமட முதல்வி.

abb'ey, *n.* திருமடம்; குருமடம்; திருமடக்கோயில்; திருமடக் குழாம்.

abb'ot, *n.* குருமட முதல்வர்; (தொ.) Abbot of Misrule, Abbot of Unreason, இடைக்காலக் களியாட்டக் கூத்துக் களில் வரும் குருமடத்து முதல்வர்.

abb'otcy, *n.* = abbacy.

abbrev'iate, *a.* சுருக்கமான, குறுகிய; *v.* சுருக்கு; குறுக் கம் செய்.

abbrevia'tion, *n.* சுருக்குதல்; குறுக்கவடிவம், சுருக்கக் குறியிடு.

A B C, *n.* நெடுங்கணக்கு, தொடக்கச்சுவடி; அடிப்படைக் கருத்து.

Ab'derite, *n.* திரேஸ் (Thrace) தேசத்து ஆப்டிரா (Abdera) என்ற ஊரிற் பிறந்தவர்; அறிவு குறைந்தவர்; வெள்ளை உள்ளத்தர்.

ab'dicant, *n.* துறப்பவர்.

ab'dicate, *v.* உரிமை பதவி முடி போன்றவற்றைத் துற; விடு, நீக்கு.

abdica'tion, *n.* துறத்தல்; துறவு.

abdom'en, *n.* அடிவயிறு, அகடு.

abdom'inal, *a.* அடிவயிற்றைச் சார்ந்த.

abdom'inous, *a.* தொந்தி வயிறுடைய.

abduct', *v.* கடத்து; கடத்திச்செல்; பிரித்தெடு.

abduc'tion, *n.* கடத்திச்செல்லுகை; பிரித்தெடுத்தல்.

abduc'tor, *n.* கடத்துபவர்; பிடித்திழுக்கும் தசை.

abeam', *adv.* (கப்.) குறுக்காக.

abecedar'ian, *n.* தொடக்கச்சுவடி கற்போர்; நெடுங்கணக்குக் கற்பிப்போர்; *a.* நெடுங்கணக்குக்கு உரிய, அகர வரிசையான; அடிப்படையான.

abed', *adv.* படுக்கையில்.

abele', *n.* வெண்ணிற மரவகை.

Aberdeen', *n.* ஸ்காத்லாந்தில் (Scotland) உள்ள நகரம்; குட்டைநாய் வகை; (தொ.) Aberdeen Angus, கொம்பு நீக் கப்பட்ட எருது வகை; Aberdeen terrier, குட்டை நாய் வகை.

aberdevine', *n.* குறும் பறவை வகை.

a'berglaube, (செர்.) *n.* அளவு கடந்த நம்பிக்கை, மூட நம்பிக்கை.

abe'rrant, *a.* சுற்றித்திரிகிற; நெறி திறம்பிய; இயல்புக்கு மாறுபடுகிற.

ab'errate, *v.* நேர் வழியினின்றும் விலகு; நெறியின் நீங்கு.

aberra'tion, *n.* நிலையினின்று விலகுதல், கோட்டம், வழுவு தல்; மனமாருட்டம்; கோள் நிலைமாறிய தோற்றம்; பழுது.

abet', *v.* தூண்டிவிடு, உடந்தையாயிரு.

abet'ment, *n.* தூண்டிவிடுதல்.

abett'er, abett'or, *n.* தூண்டிவிடுபவர்.

ab ex'tra, (ல.) *adv.* வெளியிலிருந்து.

abey'ance, *n.* நிறுத்திவைத்தல், விட்டுவைத்தல்; தயக்கநிலை.

abhor', *v.* வெறு, அருவரு.

abho'rrence, *n.* பெருவெறுப்பு, அருவருப்பு.

abho'rrent, *a.* வெறுப்பிற்குரிய, அருவருக்கத்தக்க.

abid'ance, *n.* தொடர்ந்திருத்தல்; தங்கியிருத்தல்; ஒத்துப் போதல்.

abide', *v.* ஒத்துப்போ, ஒத்திசை; பின்பற்று; பொறுத்திரு; தங்கிவாழ், உறை.

abid'ing, *a.* நிலையான, அழிவில்லாத; தொடர்ந்த.

ab'igail, *n.* பாங்கி, தோழி.

abil'ity, *n.* திறமை, ஆற்றல், வல்லமை.

ab init'io, (ல.) *adv.* தொடக்கத்திலிருந்து, முதலிலிருந்து, அடிமுதல்.

ab'iogen'esis, *n.* (உயி.) முதல் உயிர்த்தோற்றம்; உயிரிலிப் பிறப்பு; உயிரிலாப் பொருளிலிருந்தே உயிர்ப்பொருள் தோன் றியதென்னும் கோட்பாடு.

ab'iogenet'ic, *a.* தற்பிறப்பான; உயிரிலாப்பொருளிலிருந்தே உயிர்ப்பொருள் தோன்றியதென்னும் கோட்பாட்டைச் சார்ந்த.

abio'genist, *n.* உயிரிலாப்பொருளிலிருந்தே உயிர்ப்பொருள் தோன்றியதென்ற கோட்பாடுடையவர்.

ab'ject, *n.* துணையற்றவர்; இழிந்தவர், அடிமை; *a.* தாழ்வான, கேடுகெட்ட, முழுமோசமான; ஆதரவற்ற, ஏழ்மை மிக்க; இழிவுபடுத்திக்கொள்ளுகிற.

abjec'tion, *n.* இழிநிலை, இழிதகவு.

abjura'tion, *n.* சபதத்தின்மேல் துறத்தல், சூளிட்டு மறுத்தல்

abjure', *v.* கொள்கை மறு, உறுதி தவறு; ஆணையிட்டுக் கைவிடு; விட்டொழி.

abjur'er, *n.* கொள்கை மறுப்பவர்.

ablacta'tion, *n.* தாய்ப்பால் மறக்கச்செய்தல்; தாய்ச் செடியின் ஒட்டறுக்காமல் மறுசெடியுடன் ஒட்டுதல்.

abla'tion, *n.* நீக்கம், ஐந்தாம் வேற்றுமைப் பொருள்; (மண்.) தேய்மானம்.

ab'lative, *n.* ஐந்தாம் வேற்றுமை; *a.* நீங்கற்பொருளுக்குரிய, ஐந்தாம் வேற்றுமைக்குரிய, ஐந்தாம் வேற்றுமைத் தொடர் புடைய.

ab'laut, *n.* (மொழி.) உள்ளுயிர் மாற்றம்.

ablaze', *adv.* கடர்விட்டு, கொழுந்துவிட்டு.

a'ble, *a.* ஆற்றலுடைய, வல்லமையுள்ள, திறமையான; இயலுகிற.

a'ble-bod'ied, *a.* உடல் திடமுடைய, யாக்கை நலனுடைய.

ab'let, ab'len, *n.* புதுப்புனலில் வாழும் சிறுமீன் வகை.

abloom', *adv.* மலர்ச்சியுற்று, சிவந்து, ஒளிநிறைந்து.

ablush', *adv.* நாணமுற்று, நாணி.

ablu'tion, *n.* கத்தோலிக்கர் சமயச்சடங்கில் பயன்படும் நீர், மண்ணுநீர்; (*pl.*) மேனியலம்புதல்.

ablu'tionary, *a.* மேனிகழுவுதலைச் சார்ந்த.

a'bly, *adv.* திறமையாக.

ab'negate, *v.* மறுதலி, விட்டொழி.

abnega'tion, *n.* விட்டொழித்தல், மறுதலித்தல்.

abnorm'al, *a.* இயல்பு கடந்த, நிலையில் வேறுபட்ட, நெறி பிறழ்வான.

abnormal'ity, *n.* இயல்பு கடந்தமை.

abnorm'ity, *n.* அருவருப்புப்பொருள்; முறையின்மை.

aboard', *adv.* கப்பலில்; *prep.* (கப்பல், ஊர்தி) மீது.

abode', *n.* உறையுள், இருப்பிடம்.

aboil', *adv.* கொதித்துக்கொண்டு, குமுறிக்கொண்டு.

abol'ish, *v.* நீக்கு, ஒழித்துக்கட்டு.

aboli'tion, *n.* நீக்கம்; (வர.) அடிமை ஒழிப்பு.

aboli'tionism, *n.* அடிமை ஒழிப்புக் கோட்பாடு; ஒழிப்புக் கோட்பாடு.

aboli'tionist, *n.* அடிமை ஒழிப்புக் கோட்பாட்டினர்.

A'-bomb, *n.* அணுக்குண்டு.

abom'inable, *a.* வெறுக்கத்தக்க, அருவருப்புக்குரிய.

abom'inate, *v.* வெறுத்தொதுக்கு, வெறுத்துத்தள்ளு.

abomina'tion, *n.* மிக்க அருவருப்பு.

abori'ginal, *n.* தொன்முதுவர்; *a.* தொன்முதிய, தொடக்க காலந்தொட்டு உள்ள.

aborig'inalism, *n.* தொன்முதுமக்களுக்கு அளிக்கப்படும் மதிப்பு.

abori'gines, *n. pl.* தொன்முதுமக்கள்; முதற்குடிகள்.

abort', *v.* கருச்சிதைவுறு; காய்விழு; உரிய காலத்துக்கு முன் ஈனு.

abort'ed, *a.* காலத்துக்குமுன் பிறந்த; முதிராத; முதிராக் கருநிலை யுருவடைந்த.

abor'tion, *n.* கருச்சிதைவு; (மரு.) சூல்கொண்ட முதல் மூன்று மாதத்திற்குள் சிதைதல்; வளர்ச்சித் தடை; வளர்ச்சி தடைப்பட்ட பொருள்; உருக்கோணல்.

abort'ive, *a.* உரிய காலத்துக்குமுன் பிறந்த; பயனற்ற, நிறைவேறாத; வளர்ச்சி தடைப்பட்ட.

abou'lia, *n.* எண்ணத்திட்ப இழப்பு.

abound', *v.* மிகுந்திரு; நிரம்பியிரு; பொங்கு, மல்கு.

about', *v.* கப்பலின் போக்கிலோ எதிர்ப்புறமாகத் திருப்பு; *adv., prep.* குறித்து, பற்றி; சுற்றி; இங்குமங்குமாய்; ஏறத்தாழ, கிட்டத்தட்ட.

above', *a.* மேற்சொன்ன, மேலே கண்ட; *adv., prep.* உயரமாக, தலைக்குமேல்; விண்ணில்; முன்னிடத்தில்; மேலே; மேற்பட்டு, அப்பாற்பட்டு.

above'-board, *a.* களங்கமற்ற, ஐயத்திற்கிடமில்லாத.

above'-ground, *a.* பிழைத்திருக்கிற.

abracadab'ra, *n.* மந்திரச்சொல், மறைமொழி, பொருளொடு புணரா மொழி.

abrade', *v.* தேய், அராவு, சுரண்டு.

abranc'hial, abranc'hiate, *a.* செவுள் அற்ற.

abra'sion, *n.* தேய்த்தல்; சுரண்டுதல்; உராய்வு.

abras'ive, *n.* உராய்பொருள்; தேய்ப்புப் பொருள்; *a.* உராயகிற.

abrax'as, *n.* மறைச்சொல்; தாயத்து.

abreast', *adv.* இணையாக, சேர்ந்தாற்போல்; தோளொடு தோளாக; நிலையொத்து; பின்னடையாமல்.

abridge', *v.* சுருக்கு, தொகு, அடக்கு; இல்லாமற்செய்.

abridge'ment, abridg'ment, *n.* சுருக்கம், குறுக்குதல்.

abrim', *adv.* பொங்கிவழிந்து; விளிம்புவரை.

abroach', *adv.* பொங்கத் துளைத்த நிலையில்; கலங்கலாகி.

abroad', *adv.* வெளியே; தொலைவில்; வெளிநாட்டிற்கு; பரவிக்கொண்டு.

ab'rogate, *v.* வழக்கொழியச்செய்; விட்டொழி; ஒழித்துக் கட்டு; 'ரத்து' செய்.

abroga'tion, *n.* வழக்கொழித்தல்.

ab'rogative, *a.* விட்டொழிப்புக்குரிய.

ab'rogator, *n.* ஒழித்துக்கட்டுபவர்.

abrupt', *a.* திடீரென்ற; செங்குத்தான; திடீர் விழ்ச்சியான; திடீரென்று துண்டிக்கப்பட்ட; முரடான.

abrup'tion, *n.* அற்றுவிழுதல், முறிவு.

ab'scess, *n.* கட்டி, சீழ்க்கட்டு, கழலை.

abscind', *v.* வெட்டு, துண்டாக்கு.

absci'ssa, *n.* (வடி.) கிடையச்சுத்தூரம், மட்டாயம், ஒரு புள்ளியிலிருந்து நிலையச்சுக்குள்ள நேர் தொலைவு; (*pl.*) absci'ssae.

absci'ssion, *n.* வலியப் பிரித்தல்.

abscond', *v.* தலைமறைவாகு, பதுங்கு.

abscond'ence, *n.* தலைமறைவு, சட்டத்திற்கஞ்சி ஓடி ஒளிதல்.

ab'sence, *n.* இராமை, வராமை; இன்மை; (தொ.) absence of mind, நாட்டமின்மை, கவனமின்மை.

ab'sent[1], *a.* இராத, வந்திராத, இல்லாத; கவனக்குறைவான.

absent'[2], *v.* வருகை ஒழி.

absentee', *n.* வராதவர்; உடனுறையாதவர்.

absentee'ism, *n.* உடைமையினின்றே கடமையினின்றே விலகியிருத்தல்.

ab'sently, *adv.* நாட்டமின்றி, கவனக்குறைவாக.

ab'sent-min'ded, *a.* கவனக்குறைவான; வேறு நாட்ட முடைய.

ab'sinth, ab'sinthe, *n.* காஞ்சிரை; எட்டிச் சந்து; எட்டியின் வடிதேறல்.

ab'sit om'en, (ல.) (தொ.) ஆனந்தக் குற்றம் வாராதொழிக.

Ab'solute, *n.* தனிமுதல்.

ab'solute, *a.* முழுமையான; வரம்பற்ற; கலப்பற்ற; தன் விருப்பப்படி ஆளுகிற; தொடர்பற்ற.

absolu'tion, *n.* குற்றச்சாட்டினின்றும் விடுதலை; மன்னிப்பு.

ab'solutism, *n.* நங்குதடையற்ற ஆட்சி; பரம்பொருட் கொள்கை.

ab'solutist, *n.* நங்குதடையற்ற ஆட்சிக் கோட்பாடு உடையவர்.

absolve', *v.* குற்றச் சாட்டினின்றும் விடுவி; பொறு; (பழி பாவங்களினின்றும் அல்லது கடமையினின்றும்) விடுவி.

ab'sonant, *a.* பொருந்தாத, முரணிய; இயற்கையின் வேறுபட்ட; அறிவுக்கொவ்வாத; அருவருப்பான.

absorb', ப. உறிஞ்சு, ஈர்த்துக்கொள் ; உட்கொள் ; (தொ.) be absorbed by, அழுந்திக்கிட, மூழ்கிக்கிட, தன்னை மறந்து ஈடுபடு.

absorbed', a. தன்னை மறந்த, அமிழ்வுற்ற.

absorb'ency, n. உறிஞ்சும் தன்மை, ஈர்க்கும் ஆற்றல்.

absorb'ent, n. உறிஞ்சி, ஈர்க்கும் பொருள் ; a. உறிஞ்சுகிற, ஈர்க்கும் இயல்புடைய.

absorb'er, n. சேர்த்துக்கொள்பவர் ; சேர்த்துக்கொள்வது ; உறிஞ்சுவது, ஈர்த்துக்கொள்வது ; நொதுமின் பெருக்கா மலே நொதுமின்னை எடுத்துக்கொள்ளும் பொருள்.

absorb'ing, a. கருத்தைக் கவர்கிற.

absorp'tion, n. உறிஞ்சுதல் ; உட்பட்டு மறைதல் ; சேர்ப்பு, கலப்பு ; முழு ஈடுபாடு.

absorp'tive, a. உறிஞ்சும் தன்மையுள்ள.

absquat'ulate, ப. மறைந்துவிடு, ஓடிவிடு ; குந்தியிரு.

abstain', ப. விட்டிரு, தவிர்.

abstem'ious, a. உணவு முதலிய நுகர்பொருள்களில் அளவோடிருக்கிற ; மெட்டான.

absten'tion, n. தவிர்த்திருத்தல் ; வாக்குரிமை செலுத்தா திருத்தல், நடுநிலைமை தாங்குதல்.

absterge', ப. துப்புரவாக்கு, சுத்தம் செய்.

abster'gent, n. துப்புரவாக்கும் பொருள் ; a. துப்புரவுப்படுத் துகிற.

abster'sion, n. தூய்மைப்படுத்துதல், மல நிக்கம்.

absters'ive, a. தூய்மைப்படுத்தும் இயல்புடைய.

ab'stinence, n. தவிர்ப்பு, விட்டொழித்தல் ; உண்ணுநோன்பு.

ab'stinency, n. நுகர்பொருள் விலக்கும் பழக்கம்.

ab'stinent, a. தவிர்கை மேற்கொண்டுள்ள ; மெட்டான.

ab'stract[1], n. சுருக்கம் ; பொழிப்பு ; பிழிவு ; பிரித்தெடுக்கப் பட்ட பொருள் ; a. பிண்டமல்லாத, அருவமான, பண்பிய லான ; கோட்பாட்டளவான ; மறைபொருளான, புலனுகாத ; (கண.) கருத்தியலான.

abstract'[2], ப. பிரித்தெடு ; கவர்ந்துகொள் ; பிண்டத்திற் பிரித்துக்கருது.

abstract'ed, a. பிரித்தெடுக்கப்பட்ட ; கவனக்குறைவான ; வேறு எண்ணமுடைய.

abstrac'tion, n. பிரித்தெடுத்தல் ; கவனமின்மை ; பிண்ட மல்லாத பொருள் ; மனக்கண் தோற்றம் ; உலகப் பொருள் களினின்று விலகி இருத்தல் ; கவர்ந்துகொள்ளுதல் ; பிண்டத்திற் பிரித்துக் கருதுதல் ; கருத்துப்பொருள்

abstruse', a. எளிதில் அறியப்படமாட்டாத, மறைபொருளான.

absurd', a. பொருளற்ற ; பொருந்தமில்லாத ; நகைப்புக் கிடமான ; அறிவு குறைந்த.

absurd'ity, n. முட்டாள்தனம், நகைப்புக்குரியது ; அறிவுக்கு ஒவ்வாமை.

abu'lia, n. = aboulia.

abun'dance, n. மிகுதி, நிறைவு, மாவளம், மல்லல்.

abun'dant, a. நிறைவான, ஏராளமான.

ab urb'e con'dita, (ல.) adv. ரோம் நகரம் நிறுவப்பட்ட காலந்தொட்டு ; (சுரு.) A. U. C.

abuse', n. தவருன வகையில் பயன்படுத்துதல் ; கெடுவழக் கம் ; மோசடி ; வைதல், வசவு ; ப. தவருகப் பயன்படுத்து ; ஏசு ; பழிகூறு.

abus'ive, a. திட்டுகிற, பழி தூற்றுகிற.

abut', ப. எல்லையோடு எல்லை ஒட்டியிரு ; அண்டைகட்டு.

abut'ment, n. ஒட்டிக்கிடக்கை ; முட்டிடம் ; உறைவி.

abutt'er, n. (சட்.) பக்கத்திலுள்ள சொத்தின் உரிமையாளர்.

abysm', n. (செய்.) படுகுழி ; கெவி.

abys'mal, a. படுபாதாளமான ; ஆழம் அறியப்படாத ; எல்லை யற்ற.

abyss', n. படுகுழி, கெவி, படுபாதாளம் ; தொல்பெரும்பாழ் ; நரகம் ; கசம்.

abyss'al, a. அகாதமான, கடற்பரப்பின்கிழ் முந்நூறு பாகத்தைக் காட்டிலும் ஆழமான.

aca'cia, n. வேல மரம்.

ac'ademe, n. (செய்.) = academy.

academ'ic, n. பிளேட்டோவின் கோட்பாட்டினர் ; பல்கலைக் கழக உறுப்பினர் ; ஏதாவதொரு கலைக்கழகத்தின் கோட் பாட்டில் பித்தேறியவர் ; a. பிளேட்டோவின் கருத்துக்கு இயைந்த ; பிளேட்டோவின் மரபுக்குரிய ; கோட்பாட்டள வான ; அறிவு செறிந்த ; செயல் சாராத ; கல்வி அளவேயான ; கலைநிலைக்கு ஒத்த ; ஐயமனப்பான்மை உடைய.

academ'ical, a. பல்கலைக்கழகத்துக்கு ஒத்த ; கல்லூரிக்கு உரிய.

academ'icals, n. pl. பல்கலைக்கழக உடைகள்.

acad'emi'cian, n. கலைக்கழக உறுப்பினர்.

academ'ics, n. pl. கோட்பாட்டளவேயான ஆராய்ச்சிகள் ; பல்கலைக் கழக உடைகள்.

acad'emy, n. கலைக்கழகம் ; சங்கம் ; புரவர்கூட்டு ; கல்விச் சாலை ; கலைக்குழு ; கலைபயில் களரி ; கிரேக்க அறிஞர் பிளேட்டோ கற்பித்துக்கொண்டு இருந்த தோட்டம் ; பிளேட்டோவின் சிடர்கள் ; பிளேட்டோவின் மெய்ந்நூல் முறை.

ac'ajou, n. முந்திரி மரம் ; முந்திரிப் பழம் ; முந்திரிப் பசை.

ac'aleph, ac'alephe, n. கடல்மீன் வகை, 'இழுது' மீன், 'பாகு' மீன்.

acan'thus, n. முட்செடி வகை ; கிரேக்க சிற்பத்தில் மரபாகக் காட்டப்படும் முள்ளிலை வடிவம்.

acap'sular, a. பொதியுறை இல்லாத.

acard'iac, a. நெஞ்சுப்பை அற்ற.

acarpell'ous, a. (தாவ.) மலர்ப் பெண்ணனு அற்ற.

acarp'ous, a. (தாவ.) காய்க்காத.

acatalec'tic, n. (யாப்.) அசை குன்றுச் செய்யுள் ; a. (யாப்.) முழு அலகுடைய, அசை குன்றுத.

acat'alepsy, n. (மெய்.) பொருள்களை முழுதும் அறியமாட் டாமை.

acaules'cent, acaul'ous, a. தண்டு இல்லாத, தண்டு குன்றிய.

accede', ப. இணங்கு ; பதவிகொள் ; இசைந்துகொள் ; முன் வந்து ஏற்றுக்கொள்.

accelcran'do, (இத்.) int. ஏற்றி இசை !

accel'erant, n. விரைவுபடுத்தும் கருவி.

accel'erate, ப. விரைவுபடுத்து ; முடுக்கிவிடு.

accel'erated, a. விசை ஏறிக்கொண்டு இருக்கிற.

accelera'tion, n. விரைவுபடுத்துதல், வளர்விசை ; முடுக்கம்.

accel'erative, a. விரைவுபடுத்தும் இயல்புடைய.

accel'erator, n. முடுக்குப் பொறி ; முடுக்கி விடுபவர் ; (வேதி.) விசை தூரப்பி, செயல் விரைவுபடுத்தும் பண்டம் ; (உட.) விசை நரம்பு, விசைத்தசை.

ac'cent[1], n. அசை அழுத்தம், அசை ஊன்றல், ஒலியெடுப்பு ; வற்புறுத்தல் ; அழுந்தக்குறி ; வெவ்வேறு இடத்தவர் அல்லது இனத்தவர் பேசும் வகை ; (இசை.) இடையிட்ட அலை எழுச்சி ; கூரிய வேறுபாடு.

accent'[2], ப. அழுத்தம் கொடு ; அசையழுத்தம்பட உச்சரி ; உரம்படச் செய் ; அழுந்தக்குறி இடு ; உயர்வாக்கு.

accen'tor, n. வேலிக் குருவி வகை.

ac'cents, n. pl. மொழி.

accen'tual, a. அசையழுத்தமான.

accen'tuate, ப. அசையழுத்தம்பட உச்சரி ; அசையழுத்தக் குறி இடு ; வலியுறுத்து ; சிறப்படையச் செய்.

accentua'tion, *n.* = accent[1].

accept', *v.* ஏற்றுக்கொள் ; ஒப்புக்கொள், உடன்படு ; நம்பு ; மேற்கொள்ள இணங்கு.

accept'able, *a.* ஏற்றுக்கொள்ளத்தக்க, விரும்பத்தக்க ; மகிழ்ச்சி விளைவிப்பதான.

acceptabil'ity, *n.* ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை.

accept'ance, *n.* ஏற்றுக்கொள்ளுதல் ; ஏற்பு ; உடன்பாடு ; ஒப்புதல்பட்டி ; நம்பிக்கை.

accepta'tion, *n.* ஏற்புடைப் பொருள் ; ஒரு சொல்லுக்குப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருள்.

accept'or, *n.* ஒப்பந்தச் சிட்டை ஏற்றுக்கொள்பவர், மாற்று உண்டியலை ஒப்புக்கொள்பவர்.

ac'cess, *n.* நுழைவு, நுழைவுரிமை ; செவ்வி ; வழி ; வாய்ப்பு ; நோயின் திடீர்த்தோற்றம், நோய் திடீரெனத் தாக்குதல்.

access'ary, ac'cessary, *n.* தூண்டுபவர் ; உதவியாளர் ; துணைப்பொருள், துணைக்கருவி ; *a.* துணையான, குற்றம் செய்ய உதவுகிற.

accessibil'ity, *n.* எளிவரல், காட்சிக்கு எளிமை, எளிதில் அணுகத்தக்க தன்மை.

access'ible, *a.* அணுகத்தக்க, செவ்வியுடைய.

acce'ssion, *n.* இணக்கம் ; பதவியேற்றல் ; கூடுதல் ; கூட்டு ; (சட்.) மேலிட்டம், உடைமையின் மேல் ஈட்டிய பொருள்.

access'ories, ac'cessories, *n. pl.* துணைப் பொருள்கள்.

access'ory, ac'cessory, *n.* துணைப்பொருள் ; குற்றம் செய்யத் துணையாயிருப்பவர் ; *a.* துணையான, குற்றம் செய்ய உதவுகிற.

ac'cidence, *n.* சொல்லிலக்கணம் ; அடிப்படைக் கருத்துக்கள்.

ac'cident, *n.* எதிர்பாராத நிகழ்ச்சி, கருதிச் செய்யப்படாத செயல் ; விபத்து.

acciden'tal, *a.* தற்செயலாய் நிகழ்வதான ; அவசியமற்ற, இன்றியமையக் கூடிய.

accident'alism, *n.* (மெய்.) இயல்புக்கோட்பாடு, காரணமின்றிச் செயல்கள் நிகழ்கின்றன என்னும் கோட்பாடு ; (மரு.) குறிமுறை, காரணத்தின் அடிப்படையில்லாமல் அறிகுறிகளைத் தழுவிய முறை.

accinge', *v.* இறுக்கிக்கட்டு.

accip'itral, accip'itrine, *a.* வல்லூறு போன்ற, பெருந்தினி கொள்ளுகிற ; கூரிய பார்வையுடைய.

accite', *v.* சான்றுகாட்டு ; சான்றுக்கு அழை.

acclaim', *n.* பாராட்டுப் பேரொலி ; *v.* பாராட்டு ; ஆர்ப்பரி ; இசைவினைத் தெரிவி.

acclama'tion, *n.* பாராட்டுப் பேரொலி ; பேரொலியோடு இசைவு தெரிவித்தல்.

acclam'atory, *a.* பாராட்டும் தன்மையுள்ள.

acclimata'tion, acclima'tion, acclimatisa'tion, acclimatiza'tion, *n.* இணக்கப்பாடு, புதிய தட்பவெப்ப நிலைக்கு ஏற்பப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் ; புதிய தட்பவெப்ப நிலைக்கு ஒப்பப் பழகுதல் ; வேற்றிட வயமாதல்.

accli'matise, acclim'atize, *v.* இணக்குவி, புதிய தட்பவெப்ப நிலைக்குப் பழக்கு.

accliv'ity, *n.* சாய்வான ஏற்றம், மேல் நோக்கிய சரிவு.

accolade', *n.* வீரத்திருத்தகை (knight) என்ற பட்டம் அளிக்கும்போது அணைத்தல் முத்துதல் அல்லது தோளில் வாட் புறத்தால் தட்டுதல் ; (இசை.) இடையிணைப்புக் கோடு.

accomm'odate, *v.* இசைவுபடுத்திக்கொள் ; இணக்குவி ; இடங்கண்டு கொடு ; கடன் கொடுத்துதவு ; இணங்கு ; உதவி செய் ; இணங்கிப் போ.

accomm'odating, *a.* உதவும் மனப்பான்மை உடைய.

accommoda'tion, *n.* இசைவுபடுத்துதல் ; இட உதவி ; இட வசதி ; குடியிருப்பு, இடம் ; கடனுதவி ; (தொ.) accommodation bill, கடனுதவி உண்டியல் ; accommodation unit, குடியிருப்பிடக் கூறுபாடு.

accomm'odative, *a.* உதவும் போக்குடைய ; ஒத்துப்போகும் இயல்புடைய.

accom'panier, *n.* துணைக்கருவி.

accom'paniment, *n.* உடன்போதல் ; பின்தொடரல் ; (இசை.) துணைக்கருவி.

accom'panist, *n.* பக்கவாத்தியக்காரர்.

accom'pany, *v.* உடனேகு ; பின்தொடர் ; சேர், இணை ; (இசை.) இணையாகு.

accom'plice, *n.* உள்ளாள், உடந்தையாய் இருப்பவர்.

accom'plish, *v.* முடித்துவிடு, நிறைவேற்று ; பலதிறப் பண்புகளால் நிறைவாக்கு.

accom'plished, *a.* பல்வகைப்பண்புகள் நிறைந்த.

accom'plishment, *n.* முடித்தல் ; நிறைவேற்றல் ; நிறைவேற்றிய செயல் ; சிறப்புத் திறமை ; சமூக வாழ்வில் ஒருவர்க்கு நிறைவுதரும் சீர் ; வித்தகம்.

accord', *n.* இசைவு, ஒப்பந்தம் ; பொருத்தம் ; *v.* பொருந்து ; பொருத்துவி ; (தொ.) according to, பின்பற்றி, பொருந்துமாறு ; முன்னிட்டு, எடுத்துச் சொல்கிறபடி ; of one's own accord, இயல்பாக, தானாக ; with one accord, ஒருமனப்பட்டு.

accord'ance, *n.* பொருத்தம் ; ஒத்த உயரம் ; (தொ.) in accordance with, பொருந்துமாறு.

accord'ancy, *n.* = accordance.

accord'ant, *a.* பொருந்துகிற.

accord'ing, *adv.* இசைய, ஏற்ப, ஒப்ப ; (தொ.) according as, ஒத்திசைய.

accord'ingly, *adv.* சொல்லப்பட்டதற்கு இயைய ; கூறியாங்கு ; ஆதலால்.

accord'ion, *n.* இசைக்கருவி வகை.

accost', *n.* திறப்புச்சொல் ; கைகூப்புரை ; வணக்க மொழி ; அழைப்பு ; *v.* அணுகி அழை ; முதலில் பேசு ; கைதட்டி அழை, கைகாட்டிக் கூப்பிடு.

accouchement, (பிர.) *n.* பிள்ளைப்பேறு, பிரசவம்.

accoucheur, (பிர.) *n.* பேறுகால மருத்துவன்.

accoucheuse, (பிர.) *n.* பேறுகால மருத்துவச்சி.

account', *n.* எண்ணுதல் ; கணிப்பு ; கணக்கு ; மதிப்பு ; விவரம் ; விவரமான அறிக்கை ; *v.* எண்ணு ; கணக்கிடு ; மதி ; (தொ.) account for, கணக்குக் கொடு ; காரணங்கூறு, பதில் சொல் ; on account of, பொருட்டு, காரணமாக ; on no account, எக்காரணத்தாலும் இல்லாது ; bring to account, call to account, விளக்கந்தரப் பணி, பொறுப்புக் காட்டச்சொல் ; குற்றங்காட்டு ; go to one's long account, கடைநாள் தீர்ப்புக்கு ஏகு ; இற, மாள்வுறு ; hold to account, பொறுப்புடையவராக்கு ; take into account, கவனத்திற்கு எடுத்துக்கொள், கருத்துக்கு எடுத்துக்கொள் ; take no account of, புறக்கணி ; turn to good account, பயனுடைய தாக்கிக்கொள்.

accoun'table, *a.* பதில் சொல்லும் பொறுப்புடைய.

account'ably, *adv.* காரண காரிய முறைப்படி.

accoun'tancy, *n.* கணக்கர் வேலை ; கணக்கர் பதவி ; கணக்கர் துறை.

accoun'tant, *n.* கணக்கர், கணக்கு வைப்பவர் ; கணக்கில் தேர்ச்சியுடையவர்.

account'ing, *n.* கணக்குவைப்பு முறை.

accou'tre, *v.* போர்க்கோலப்படுத்து.

accou'trement, *n.* போரணி, போர்க்கோலம்.

accred'it, *v.* மதிப்பேற்று ; சான்றிதழோடு அனுப்பு ; சான்றளி.

accred'ited, *a.* முறைப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட, பொது ஒப்புதல் பெற்ற ; ஏற்கப்பட்ட.

accresc'ence, *n.* வளர்ச்சி, திரட்சி, பெருக்கம்.

accresc'ent, *a.* மேன்மேலும் வளர்ந்துகொண்டிருக்கிற.

accrete', *a.* (தாவ.) சேர்ந்து ஒன்றுபட்ட; *v.* சென்றுசேர்; திரள், திரண்டு உருவாகு; ஒன்றுக்கு.

accre'tion, *n.* பெருக்கம்; அடர்வளர்ச்சி, திரள்படுவளர்ச்சி; புறவொட்டு; (சட்.) சொத்தின் இயல்பு வளர்ச்சி; விருப்ப ஆவணப் பங்கின் கூடுதற் பொருள்.

accre'tive, *a.* புறவொட்டான; கூடுதலாகும் இயல்புடைய.

accru'al, *n.* இயல்பாகச் சேர்தல்; தொகை ஏற்றம்.

accrue', *v.* தொகு; சிறுகச்சிறுகச் சேர்; உரிமையாகு.

accum'ulate, *a.* திரண்ட; குவிக்கப்பட்ட; *v.* திரள்; குவி; சேர்; ஒருங்குகூடு; திரட்டு, தொகு; அடுக்கடுக்கான பட்டங்களை ஒரேகாலத்திற் பெறு.

accumula'tion, *n.* திரட்டுதல்; குவித்தல்; திரளுதல்; குவிதல்; குவியல்; திரட்சி; தொகுதி; குவிந்துகிடத்தல்.

accum'ulative, *a.* குவிகிற; குவிக்கிற; சிறுகச்சிறுகச் சேருகிற, திரண்டுருவான.

accum'ulator, *n.* குவிப்பவர், திரட்டுபவர்; பணம் பெருக்குபவர்; அடுக்கடுக்கான பட்டங்களை ஒருசேர எடுப்பவர்; மின்சேமகலம், மின்னுற்றலைத் தொகுத்து வைத்தற்குரிய கருவி.

acc'uracy, *n.* திட்பநுட்பம்; வழுவாமை, திருத்தமாயிருத்தல்.

acc'urate, *a.* திட்பநுட்பமான; குறிதவறுத; உண்மைக் கொத்த; அளவுக்கியைந்த; வழுவாத, திருத்தமான, செம்மையான.

accurse', *v.* சாபமிடு, தெறுமொழி கூறு.

accurs'ed, accurst', *a.* சபிக்கப்பட்ட; தெறுமொழி பெற்ற; வெறுப்புக்குரிய.

accus'al, accusa'tion, *n.* குற்றச்சாட்டு; குற்றப்பத்திரம் படித்தல்.

accus'ative, *n.* இரண்டாம் வேற்றுமை; இரண்டாம் வேற்றுமைச்சொல்; *a.* இரண்டாம் வேற்றுமைக்குரிய; குற்றம் சாட்டுகிற.

accusator'ial, *a.* குற்றம் சாட்டும் முறையை ஒட்டிய

accus'atory, *a.* குற்றச்சாட்டடங்கிய.

accuse', *v.* குற்றம்சாட்டு; பழிகூறு; குற்றம் சுமத்து.

accused', *n.* குற்றம் சாட்டப்பட்டவர்; *a.* குற்றம் சாட்டப்பட்ட.

accus'tom, *v.* பழக்கமாக்கு; பயிற்று; (தொ.) accustom oneself to, பழகிக்கொள்.

accus'tomary, *a.* பழக்கமான இயல்புடைய.

ace, *n.* (கவருடல் முதலியவற்றில்) பகடைப்புள்ளி ஒன்று; கெலிப்புச் சிற்றெண்; சிறு துகள்; மயிரிழை அளவு; அருந்திறல் பெற்றவர்; பல எதிரிவிமானங்களைச் சுட்டு வீழ்த்தியவர்; சீட்டுக்கட்டில் உயர்வகை; பிரிட்டனின் தானியங்கிக் கணக்கீட்டு இயந்திரத்தில் அணுச்சக்தி மூலம் செயலாற்றும் கணக்குப் பொறிக்கருவி.

ace'dia, *n.* கவனமின்மை; உணர்ச்சியின்மை; மடிமை; மலைப்பு.

aceph'alous, *a.* தலையற்ற.

acerb', *a.* கசப்பும் புளிப்புமான; கடும்புளிப்பான; மிக வெறுப்பான.

a'cerbate, *v.* கைம்புளிப்பாக்கு; கடும்புளிப்பாக்கு; எரிச்சல் உண்டாக்கு.

acerb'ity, *n.* கசப்பான புளிப்பு; கடுஞ்சுவை; கடுகடுப்பு, சிடுசிடுப்பு.

ac'erose, *a.* (தாவ.) ஊசி போன்ற முனையுடைய.

ace'rous, *a.* கொம்பற்ற; உணர் இழையற்ற, உணர்கொம்பு அற்ற; கொடுங்கையற்ற.

acerv'ate, *a.* குவிந்த; கொத்தாக வளருகிற.

acesc'ence, acesc'ency, *n.* புளித்தல்; பால் உறைதல்.

aces'cent, *a.* புளித்த; உறையூட்டப் பெற்ற.

acetab'ulum, *n.* தொடையெலும்பின் பந்துக்கிண்ண மூட்டு பொருந்துகிற குழிவு; (*pl.*) acetab'ula.

ac'etal, *n.* உயிரகம் ஊட்டப்பட்ட வெறியநீர்.

acet'ic, *a.* புளிங்காடி சார்ந்த; (தொ.) acetic acid, புளிங்காடி.

acet'ify, *v.* புளிங்காடியாக மாற்று; புளிங்காடியாக மாறு; புளிப்பாக்கு.

a'cetone, *n.* உயிரியக்கச் சேர்மங்களுடன் கலந்து கரைசலாகும் இயல்புடைய நிறமற்ற படிக நீர்மம்.

acetose', a'cetous, *a.* புளிங்காடி போன்ற; புளிப்பான.

acet'ylene, *n.* ஒள்வளி, சுண்ணக்கரியகையும் நீரும் சேர்தலால் உண்டாகும் ஒளியுடை வளி.

acharnement, (பிர.) *n.* ஆவேசம், எழுச்சியார்வம்.

ache, *n.* நோவு, வலி; *v.* நோ; தொடர்ந்து நோவுறு.

achieve', *v.* செய்துமுடி; எய்தப்பெறு; முயன்று அடை.

achieve'ment, *n.* செயல்வெற்றி காணல், செய்து முடித்தல், சாதனை; வெற்றிக் கேடயம்.

Achille'an, *a.* அக்கிலிஸ் (Achilles) போன்ற; அக்கிலிஸைச் சார்ந்த.

Achill'es, *n.* கிரேக்கப் பெருங்காப்பிய வீரன்; (தொ.) Achilles tendon, குதிகால் தசைநார்.

achil'ous, *a.* (தாவ.) இதழ் இல்லாத.

achlamyd'eous, *a.* (தாவ.) அலர் இதழ் அற்ற, சுற்றுறை இல்லாத.

achromat'ic, *a.* வண்ணம் இல்லாத, நிறம் காட்டாத.

achro'matin, *n.* வண்ணம் ஏற்காத உயிரணுவின் கூறு.

achro'matise, *v.* நிறம் நீங்கச் செய்.

achrom'atism, *n.* நிறங்காட்டாத நிலை

achrom'atize, *v.* = achromatise.

acic'ular, *a.* ஊசி வடிவான.

acic'ulate, *a.* ஊசியால் கீறியது போன்ற.

aid, *n.* உதவி, உறுதுணை, ஒத்தாசை, சகாயம்; உதவுபவர்; உதவும் பொருள், கருவி; துணைவன்; துணைக்காரணம்; துணைக்கலங்கள்; துணைவரி; இறைதிறை; பொருளாயக் கடன், அரசருக்குக் கொடுக்கும் பண உதவி; (சட்.) உரிமை; உதவி; *v.* உதவு, கைகொடு, துணையளி, ஆவன செய்து ஆதரி.

aid'ance, *n.* துணை, ஆதரவு.

aid'ed, *a.* உதவிபெற்ற, ஆதரவுபெற்ற.

aide'-de-camp, *n.* களத்துணைவர், அரசருடைய அல்லது ஆட்சியாளருடைய மெய்க்காப்பாளர்; *pl. aides'-de-camp.*

aig'let, *n.* = aglet.

aig'rette, *n.* நாரைவகை; நாரை இறகு; இறகு; குஞ்சம்; கனித்துய்; கனித்துய் போன்ற அணிகலன் வகை.

aig'uille, *n.* ஊசிப்பாறை; தொலைக்கருவி வகை; தொலைஊசி.

aiguillesque', *a.* ஊசிப்பாறை போன்ற.

aiguillette', *n.* = aglet.

ail, *n.* நோவு; தொந்தரவு; *v.* தொந்தரவு கொடு, துன்புறுத்து, தொல்லைக்காளாக்கு; நோய்ப்பட்டிரு.

ail'eron, *n.* விமானச்சிறையின் ஓர மடக்கு; கட்டிடச் சாய்விறக்கியின் அணைசுவர்.

ail'ing, *a.* நோய்வாய்ப்பட்ட; உடல் நலிவுற்ற.

ail'ment, *n.* நோவு; உடல் நலிவு; நோய், பிணி.

aim, *n.* இலக்கு, குறி; நோக்கம், குறிக்கோள்; செயல் நோக்கம்; உள்ளெண்ணம், உட்கோள்; *v.* இலக்குவை, குறிபார்; நாடு, நோக்கமாகக் கொள்; குறியாகக் கொள்; நாடி எறி, குறித்த திசையில் வீசு; நாடித்திட்டமிடு, பெற எண்ணு; அடைய முயற்சிசெய்.

aim'less, *a.* இலக்கற்ற, குறிக்கோளில்லாத.

aine, (பிர.) *n.* மூத்த மகன்.

air, *n.* காற்றுமண்டலம், காற்றுவெளி, வளிமண்டலம்; சிறு காற்று, காற்றுவீச்சு; வாடை; சூழ்வளி; சூழ்திறன்; தோற்றம்; நடையியல்பு, நடையுடைத்தோற்றம்; பாவனை; இறுமாப்பு; வெளியீடு, விளம்பரம்; இசைத்திறம், பண் நயம்; *v.* காற்றில் உலரவிடு; காற்றுப் புகவிடு; பகட்டாகக் காட்டு, பலரறிய அணி; விளம்பரப்படுத்து; உலாவச் செல்; (தொ.) in the air, தெளிவற்ற நிலையில்; உருவாகா நிலையில்; on the air, ஒலி பரப்பிக்கொண்டு; take air, பரவு; take the air, காற்று வாங்கு.

air'-arm, *n.* படைத்துறையின் விமானக்கிளை, விமானப் படைத்துறை.

air'-ball, air'-balloon, *n.* சிறுவர் விளையாட்டுக்குரிய காற்றூட்டிய ஊதல் பை.

air'-base, *n.* விமானத்தளம், விமானத்துறை மூலதளம்.

air'-bath, *n.* வளி முழுக்கு, காற்றுட இருத்தல்; தனியழுத்தக் காற்றுப் பேழை, தனிப்பட்ட அழுத்தம் மிக்கதாகவோ அழுத்தங் குறைந்ததாகவோ அமைக்கப்படும் காற்றறை.

air'-bed, *n.* காற்றூட்டப்பட்ட மெத்தை, காற்று மெத்தை.

air'-bends, *n.* = aeroembolism.

air'-bladder, *n.* ஊதல் பை; காற்றுப்பை; மீனின் உள்ளுறுப்பு, மிதவைப்பை.

air'-borne, *a.* காற்றினூல் ஈர்த்துச் செல்லப்படுகிற; காற்று வெளியில் உயரப்பறக்கிற; காற்றூடான.

air'brake, *n.* அழுத்தம்பெற்ற காற்றினுல் இயக்கப்படும் முட்டுக்கட்டை, விமான வேகத்தடைக்கருவி.

air'-brick, *n.* காற்ருேட்டத்திற்கான இடைவெளியுடைய கற் செதுக்கம்.

air'-bridge, *n.* விமானப்பாதை இடையிணைப்பு.

air'-brush, *n.* அழுத்தம்பெற்ற காற்றினுல் துளிசிதறி வண்ணம் தெளிக்கும் கருவி.

air'-built, *a.* காற்றுவெளியில் கட்டப்பட்ட, அடிப்படை இல்லாத; கற்பனையான.

air'-bump, *n.* விமானத்திற்கு அதிர்ச்சிதரும் காற்றின் செறி திரள்; செறிதிரள் அதிர்ச்சி.

air'-cavity, air'-cell, *n.* (தாவ.) உயிரணுக்களின் இடையி லுள்ள காற்று இடைவெளி.

air'-chamber, *n.* நீர்விசைப்பொறிகளின் சம அழுத்தத்திற் குரிய காற்றறை.

air'-chief-mar'shal, *n.* விமான முதன்மைத் தளவாய்.

air'-comm'odore, *n.* விமானத் தாணைமுதல்வர்.

air'-condi'tioned, *a.* காற்று வரைகாப்புடைய, விரும்பிய அளவுக்கேற்பத் தூய்மை வெப்பம் ஈரம் உடையதாகக் கட்டுப்படுத்தப்பட்ட காற்றையுடைய.

air'-condi'tioning, *n.* காற்றுக் கட்டுப்பாடு.

air'-cooled, *a.* காற்றில் ஆறிய.

air'-cooling, *n.* காற்ருல் அமைந்த குளிர்ச்சி; காற்றில் ஆறுதல்.

air'craft, *n.* வான்கலம், வானில் இயங்கும் பல்வகை ஊர்திப் பொது; விமானங்கள்.

air'craft-ca'rrier, *n.* விமானம் தூக்குகப்பல், விமானத் தளக்கப்பல்.

air'craftman, air'craftsman, *n.* விமானப்படை கீழ்நிலை அலுவலர்.

air'-cushion, *n.* காற்றூட்டப்பட்ட மெத்தை, காற்று மெத்தை.

air'-drawn, *a.* கற்பனையான.

air'-drop, *n.* (படை.) வான்குடை மூலம் ஆட்கள் அல்லது சரக்குகள் நிலத்தில் வந்திறங்குதல்.

Aire'dale, *n.* வேட்டைநாய் வகை.

air'-engine, *n.* வெப்பம் அல்லது அழுத்தம் ஊட்டப்பட்ட காற்றினுல் இயங்கும் விசைப்பொறி, காற்று இயந்திரம்.

air'er, *n.* உலாவுகிறவர்; துணி உலர்த்து சட்டம்.

air'field, *n.* விமானத்திடல்.

air'-force, *n.* விமானப்படை.

air'-gap, *n.* காந்த வட்டணையில் இடைவெளி; காற்றிடை வெளி.

air'-gas, *n.* ஒண்காற்று வளி, காற்றுடன் கல்லெண்ணெய் ஆவி அல்லது வேறு நீர்க்கரியப்பொருள் ஊட்டப்பெற்று ஒளிகாலும் காற்று வளி.

air'graph, *n.* விமான வழி அனுப்புவதற்காகச் சிற்றுருவில் நிழற்படமாக்கப்பட்ட கடிதம்.

air'-grating, *n.* காற்ருேட்டக் கிராதி.

air'-gun, *n.* அழுத்தம் பெற்ற காற்றின் உந்து விசையால் இயக்கப்படும் துப்பாக்கி.

air'hole, *n.* காலதர், காற்றுப்புகும் புழைவாய்; பனிக் கட்டியின் பரப்பில் உயிர்கள் வந்து மூச்சுவிடுவதற்கு உதவும் புழைவாய்; வான் இடையிறக்க மண்டலம், இடையே காற்றின் அழுத்தக் குறைவாலோ கீழோட்டத்தாலோ விமானம் இறங்கிச் செல்லவேண்டி வருகிற காற்று மண்டலம்.

air'-hostess, *n.* விமானப்பாங்கி.

air'ily, *adv.* காற்றுப்போல; நுண்ணிதாக; ஊகமாக; திட்பமின்றி; விரைவுக்கமாக; கவலையின்றி; தொட்டுத் தொடாமல்.

air'iness, *n.* காற்ருேட்டம்; காற்றுப்போன்ற தன்மை; நுண்மை; மென்மை; பஞ்சுவின்மை; ஆவிநிலை; விரை வியக்கம்; கவலையற்ற தன்மை; தொட்டுந்தொடாத நிலை.

air'ing, *n.* காற்றுடவிடல்; காயவைத்தல்; பொதுப்பார்வை யில் வைத்தல்; உலாப்போதல்.

air'-jacket, *n.* வெப்பம் குறைவதை அல்லது கூடுவதைத் தடுக்கவோ நீரில் மிதக்கும்படி பளுக்குறைக்கவோ அணியப் படும் காற்றுறைச் சட்டை.

air'less, *a.* காற்றில்லாத; காற்ருேட்டமில்லாத; காற்று அகற்றப்பட்ட; காற்று வெளித்தொடர்பற்ற; காற்று இறுக்கமான.

air'-lift, *n.* காற்றியக்க மூலம் தடையைக் கடக்கச் செய்யும் அமைப்பு; விமானத்தூக்கல், நிலவழி அடைபட்ட நிலையில் பிரயாணிகளையும் பொருள்களையும் விமானமூலம் எடுத்துச் செல்லும் முறை.

air'line, *n.* வானெறி, விமானப்பாதை.

air'liner, *n.* பெரிய பயணவிமானம்; வானெறிப்போக்கு வரத்து விமானம்

air'-lock, *n.* காற்றழுத்தத்தைக் கூட்டவும் குறைக்கவும் வாய்ப்புடைய காற்றுப்பேழை; குழாயில் நீர்ம ஓட்டத்தைத் தடுக்கும் குமிழி.

air'mail, *n.* விமான அஞ்சல்.

air'man, *n.* விமானி; பறந்து செல்லும் மனிதர்.

air'manship, *n.* விமானம் செலுத்தும் கலை.

air'-mar'shal, *n.* விமானப்படைத் தளவாய்.

air'-mechan'ic, *n.* விமானம் பழுது பார்ப்பவர், விமானப் பொறி அலுவலர்.

air'-minded, *a.* வான்செலவு விருப்புடைய, விண்ணிவர் ஆர்வமுடைய.

air'officer, *n.* விமான அதிகாரி.

air'plane, *n.* விமானம், வானூர்தி.

air'plant, *n.* ஒட்டுயிராய் இராமலே செடிமீது வளரும் செடி.

air'-pocket, *n.* காற்றழுத்தக் குறைவினுலோ காற்றின் கீழோட்டத்தினுலோ விமானம் சட்டென்று இறங்க நேரும் காற்று வெறுமை.

air'-power, *n.* விமானப்படைவலிமை.

air'-pump, *n.* காற்றுவாங்கி; காற்றூட்டி.

air'-raid, *n.* விமானத்தாக்குதல்.

air'-sac, *n.* புற நுரையீரல், உடலின் பளு குறைக்கவும் மூச்சுவிடவும் இருவழியிலும் பயன்படுகிற பறவைகளின் நுரையீரலின் வெளிப்புடைப்பு; பூச்சி இனத்தின் குரல்வளை விரிவு.

air'-screw, *n.* விமானத்தின் உந்துவிசை.

air'-shaft, *n.* காற்றுப்புழை, சுரங்கத்தினுள் காற்று செல்லுதற்குரிய வழி.

air'ship, *n.* இயந்திர விசையால் செலுத்தப்படும் வான் கூண்டு, பறவைக்கப்பல்.

air'sick, *a.* விமானப் பயணக் குமட்டலுடைய.

air'-sickness, *n.* விமானப்பயணக் குமட்டல்.

air'-space, *n.* காற்றின் பரும அளவு, மூச்சு விடுவதற்கு உரிய காற்றின் கன அளவு; (தாவ.) உயிரணுக்களின் இடையிலுள்ள காற்று இடைவெளி.

air'-stop, *n.* முகட்டு விமான நிலையம்.

air'-strip, *n.* தற்காலிகமாக விமானம் இறங்கப் பயன்படும் திட்டு.

air'-thermom'eter, *n.* பாதரசத்திற்குப் பதிலாகக் காற்று வழங்கப்படும் வெப்பமானி.

air'-threads, *n.* நூலாம்படை, சிலம்பி நூல்.

air'-tight, *a.* காற்று இறுக்கமான, காற்றுப்புகாத ; எதிரியின் தாக்குதலுக்கு இடங்கொடாத.

air-to-air, *a.* வானூர்தியிலிருந்து வானூர்திக்கு மாறுகிற ; *adv.* வானூர்தியிலிருந்து வானூர்திக்கு.

air'-trap, *n.* நச்சுக்காற்று வெளிச்செல்லாமல் காக்கும் அமைவு.

air'-truck, *n.* சரக்குத்தூக்கி விமானம்.

air'vice-mar'shal, *n.* விமானத் துணைத்தளவாய்.

air'ward, air'wards, *adv.* மேல் மண்டலத்தில்.

air'way, *n.* சுரங்கத்தில் காற்றுச் செல்லும் வழி, காற்று வாங்கி ; வானெறி, விமானப்பாதை.

air'ways, *n. pl.* வானெறிக்குழுப்பெயர்.

air'-woman, *n.* பெண் விமானி.

air'worthy, *a.* பறக்கத் தகுதி வாய்ந்த.

air'y, *a.* காற்றுலான ; காற்றடங்கிய ; காற்றுச்சார்பான ; காற்றுப் போன்ற ; காற்றேட்டமான ; பொருண்மையற்ற ; ஆவிபோன்ற ; விரை துடிப்புடைய ; கவலையற்ற ; தொட்டுந் தொடாத ; உயர்ச்சிமிக்க ; மெல்லிதான ; மென்னடை வாய்ந்த ; மென்னயமான ; நுண்ணயமான ; மேற்போக்கான ; சிறுபிள்ளைத்தனமான.

aisle, *n.* கோயிலின் திருச்சிறை, பக்கச்சிறை, பிரகாரம் ; இடைகழி.

ait, *n.* சிறுதீவு, ஆற்றின் சிறு துருத்தி.

aitch'bone, *n.* பிட்ட எலும்பு, மாட்டின் பிட்டதசைக்கறி.

ajar', *adv.* சிறிது திறந்து ; செவிக்கு அருவருப்பாக.

aju'tage, *n.* = adjutage.

akim'bo, *adv.* கைமுட்டு மடக்கி இடுப்பில் வைத்த நிலையில்.

akin', *adv.* குருதித்தொடர்புகொண்டு ; அணிமை உறவு தாங்கி ; ஒத்த இயல்புற்று.

á'la, *n.* (தாவ.) காய்கனியின் மேல்தாள் வளர்ச்சி ; பயற்றினத்தில் பக்க இதழ் : காம்பலகு ; (வில.) எலும்பின் இறகு போன்ற புற வளர்ச்சி.

al'abaster, *n.* வெண்சலவைக்கல், நிலாக்காந்தக்கல் ; *a.* வெண்சலவைக்கல்லாலான ; வெண்சலவைக்கல் போன்ற ; வெண்ணிறமான ; வழவழப்பான.

à la carte, (பிர.) *adv.* உணவுப்பட்டியலின்படி.

alack', *int.* அந்தோ ! ஐயோ !

alack'-a-day, *int.* அந்தோ என்ன காலம் ! அந்தோ காலம் இருந்தவாறு என்னே !

alac'rity, *n.* சுறுசுறுப்பு ; முந்தார்வம்.

Aladd'in's lamp, *n.* வேண்டுவதளிக்கும் மந்திரச் செப்பு.

ala'lia, *n.* நாத்தடை, பேச்சாற்றல் இழத்தல்.

a'lamode, *n.* பளபளப்பான மெல்லிய கரும்பட்டு வகை ; *a.* புத்தம் புதுப்பாணியிலுள்ள ; (தொ.) alamode beef, காய்கறிகளுடன் சேர்த்து அளிக்கப்படும் மாட்டிறைச்சித் துண்டுகள்.

a la mode, (பிர.) *a.* புது நாகரிகமான ; *adv.* காலத்திற்கேற்ற புதுமைப்போக்கில்.

alamort', *a.* குற்றுயிரான ; மனம் நொந்த, கிளர்ச்சியற்ற.

aland', *adv.* நிலத்தின்மீது, கரைமீது.

a'lang-a'lang, *n.* கோரைப்புல்வகை.

al'ar, *a.* சிறகு சார்ந்த ; சிறகுபோன்ற ; சிறகு வடிவமைந்த.

alarm', *n.* போரெழுச்சிக்கான ஆர்ப்பொலி, போர் முரசு, செருப் பறை ; அபாய அறிவிப்பொலி ; எச்சரிக்கை ; பீதி, கிலி ; சிலம்பத் துறையில் ஒருகால் முன்னெடுத்துவைத்து நிலத்தில் அறைதல் ; *v.* அதிர்ச்சியெழுப்பு ; போரெழுச்சிக்கான அழைப்பாணை யிடு ; அபாயம் உணர்த்தும் ஆர்ப்பொலி செய் ; இடர் உணர்த்தி விழிப்பூட்டு ; கிலிபூட்டு ; அச்சுறுத்திக் கலக்கமுண்டாக்கு ; கிளறு.

alarm'-bell, *n.* எச்சரிக்கை மணி ; ஆராய்ச்சி மணி.

alarm'-clock, *n.* அதிரல் கடிகாரம், விழிப்பு மணி அமைப்புடைய கடிகாரம்.

alarmed', *a.* குழப்பமடைந்த, கலவரமடைந்த.

alarm'ing, *a.* அச்சந்தருகிற, கவலைக்கிடமான.

alarm'ist, *n.* பொய் அரவம் எழுப்புபவர் ; வீண் பீதி பரப்புபவர் ; *a.* பீதி பரப்புகிற.

alarm'-post, *n.* போரார்ப்பு வேளையில் படைவீரர் வந்து கூடவேண்டிய இடம், போரரவக் குறியிடம்.

ala'rum, *n.* கடிகாரத்தின் அதிர்மணியோசை ; எச்சரிக்கை.

al'ary, *a.* = alar.

alas', *int.* 'அந்தோ !' 'அச்சோ !' 'ஐயகோ !' போன்ற வியப்பிடைச்சொல்.

Alas'tor, *n.* பழிவாங்கும் தெய்வம் ; பழிக்குப்பழி.

alas'trim, *n.* சின்னம்மை நோய் வகை.

al'ate, al'ated, *a.* சிறகுடைய ; சிறகு வடிவ எலும்பமைப்புடைய.

alb, *n.* கால்வரை நீண்ட வெள்ளை அங்கி.

al'bacore, *n.* பெருங்கடல் உணவு மீன்வகை.

Alban'ian, *n.* ஸ்காத்லாந்து (Scotland) நாட்டுக்குடிமகன் ; *a.* அந்நாட்டைச் சார்ந்த.

Al'bany, *n.* பிரிட்டனின் பழைய பெயர்.

albat'a, *n.* வெள்ளி உலோகவகை, 'செர்மன் வெள்ளி' வகை.

al'batross, *n.* பறக்கும் பேராற்றலுடைய கடல்வாழ் பறவை வகை.

albe'do, *n.* வெண்மை ; கோள்களின் வாங்கொளி விகிதம் ; ஒளி திருப்பும் திறன்.

albe'it, *conj.* இருந்தபோதிலும், எனினும்.

al'bert, Al'bert chain, *n.* கைக்கடிகாரச் சிறுசங்கிலி.

Albert Hall, *n.* இங்கிலாந்தில் கென்சிங்டன் (Kensington) பகுதியிலுள்ள இசைத்திற விளக்க மண்டபம்.

albesc'ence, *n.* வெண்மையாதல்.

albes'cent, *a.* வெண்மையாகிற ; வெளிறிய.

Albigen'ses, *n. pl.* தென் பிரான்சில் 12—14-ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய முரண்சமயக்குழுவினர்.

albi'ness, *n.* பாண்டு நோய்க்காட்பட்டவள்.

albi'no, *n.* பாண்டு நோய்க்காளானவர் ; பாண்டு நோய்க்காட்பட்ட உயிரினம் ; வெளிறிய செடி ; *pl.* albi'nos.

albinot'ic, *a.* பாண்டுநோயுடைய ; பாண்டு நோய் சார்ந்த.

Al'bion, *n.* பண்டைக்காலத்திற் பிரிட்டனுக்கு வழங்கிய பெயர்.

al'bite, *n.* வெண்ணிறமுடைய அல்லது வண்ணக் கலப்புடைய களிமப்பாறை வகை.

albugin'eous, *a.* முட்டையின் வெண்கருப்போன்ற.

al'bum, *n.* வெள்ளேடு, சேகர ஏடு, நிழற்படங்கள் கையெழுத்துக்கள் மேற்கோள்கள் அஞ்சல்தலைகள் முதலியவற்றைச் சேர்த்து வைப்பதற்குரிய செருகேடு.

album'en, *n.* முட்டை வெண்கரு ; (வில.) உயர்தர உயிரினங்களின் முட்டையில் மஞ்சட்கருவைச் சுற்றியுள்ள புரதங்கலந்த உணவுப்பொருள் ; (தாவ.) விதைகளில் கருமூலையைச் சுற்றியுள்ள உணவுப்பொருள்.

album'enise, album'enize, *v.* (நி.ப.) வெண்கரு அல்லது வெண்கருக்கலவையின் கரைசல் பூசு ; வெண்கருக்கலவை தோய்.

albu'min, *n.* கருப் புரதம், நீரில் கரையக்கூடியதும் கரைந்து வெப்பத்தால் கட்டியாகக் கூடியதுமான புரதவகை.

albu'minate, *n.* கருப் புரதத்திலடங்கிய காரச்சேர்மானம்.

album'inoid, *n.* ஊன்செய் புரதவகை; *a.* வெண்கருப் போன்ற.

albu'minous, *a.* வெண்கரு அல்லது கருப் புரதம் போன்ற; வெண்கரு அல்லது கருப் புரதம் அடங்கிய; உப்புச்சப்பற்ற.

albuminur'ia, *n.* வெண்ணீர் நோய், சிறுநீரில் கருப் புரதம் இருக்கும் நோய்.

alburn'ous, *a.* மென்மரம் சார்ந்த.

alburn'um, *n.* உள்மரப்பட்டைக்கும் உட்காழுக்கும் இடையிலுள்ள மென்மரம்.

al'cahest, *n.* = alkahest.

Alca'ic, *a.* அல்கேயஸ் (கி. மு. 600) என்ற கிரேக்க கவிஞருக்குரிய; அல்கேயஸ் படைத்த பாவகையைச்சார்ந்த.

Alca'ics, *n.* அல்கேயஸ் பாவகை.

alchem'ic, alchem'ical, *a.* இரசவாதம் சார்ந்த.

al'chemise, al'chemize, *v.* இரசவாதம் செய், பொன் மாற்றுச்செய், மட்ட உலோகங்களைப் பொன்னுக்கு; மட்டமான பொருளை உயர்தரப் பொருளாக மாற்று.

al'chemist, *n.* இரசவாதி, பொன்மாற்றுச்சித்தர்.

alchemis'tic, alchemis'tical, *a.* = alchemic.

al'chemy, *n.* இரசவாதம்; மட்ட உலோகங்களைப் பொன்னுக்கும் முயற்சி; இடைப்படு காலத்திய வேதியியல்.

al'cohol, *n.* வெறியம், சாராயச்சத்து, சர்க்கரைக் கலவைகளிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட வெறியச்சத்து; சாராய வகை; நீர்க்கரிமக் கலவைவகை.

alcohol'ic, *n.* மட்டுமிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்; *a.* வெறியம் சார்ந்த; வெறியம் கலந்த; வெறிக்குடிவகை சார்ந்த; வெறிக்குடிவகை காரணமான, மட்டுமிஞ்சிய குடிக்கு ஆட்பட்ட.

alcoholisa'tion, *n.* வெறிமயமாக மாற்றுதல்; வெறியம் செறிவித்தல்; வடித்துத் தூய்மையாக்கல்.

al'coholise, *v.* வெறியமாக மாற்று; வெறியம்தோய்; வடித்துத் தூய்மைப்படுத்து.

al'coholism, *n.* வெறிய விளைவு, வெறிய நச்சுத்தன்மை.

al'coholist, *n.* வெறிக்குடி ஆதரவாளர்; வெறிக்குடியர்.

alcoholiza'tion, *n.* = alcoholisation.

al'coholize, *v.* = alcoholise.

alcoholom'eter, *n.* வெறியமானி, வெறியக்கலவையில் வெறியவிகிதம் அளக்கும் கருவி, மதுவகைகளில் வெறியச் செறிவை மதிப்பிடுவதற்கான கருவி.

alcoholom'etry, *n.* வெறியச் செறிவின் அளவு.

al'cove, *n.* அறையின் ஒதுப்புறம்; கவிகைமாடம், மாடக்குழி; பள்ளியறை; வேனிலகம்.

al'dehyde, *n.* உயிரகம் ஊட்டப்படுவதால் இருநீரக அணுக்கள் குறைவுபட்ட வெறியம்; எளிதில் ஆவியாய்ப்போகிற நெடிவீசும் நீர்மம்.

al'der, *n.* பூர்ச்சமரம் போன்ற மரவகை.

al'derman, *n.* நகரத்தந்தை, மூப்பர், நகராட்சிக்குழு உறுப்பினர்; சாத்து முதல்வர்; வணிகக்குழுத் தலைவர்; *pl.* al'dermen.

al'dermanic, *a.* நகரத்தந்தைக்குரிய.

al'dermanlike, al'dermanly, *a.* ஆரவாரமான; பீடுடைய.

al'dermanry, *n.* நகரத்தந்தை ஆட்சிவட்டாரம்; நகரத்தந்தையின் படிநிலை.

Al'dine, *a.* 16-ஆம் நூற்றாண்டில் ஆல்டஸ் (Aldus) என்ற வெனிஸ் நகரத்தவர் பெயரால் வழங்கிய அச்சுருப் படிவம் சார்ந்த.

ale, *n.* மாவடி, கோதுமை வாற்கோதுமை முதலியவற்றின் மா ஊறலிலிருந்து வடித்தெடுக்கப்படும் மதுவகை.

al'eatory, *a.* குருட்டாம்போக்கான; சூதாட்டப்பாங்கான; வருநிலைப்போக்கினைச் சார்ந்த.

ale'bench, *n.* மதுக்கடையிலுள்ள அமர்பலகை.

ale'-berry, *n.* அப்பத்துண்டுகளிட்டுச் சுவையூட்டப்பட்ட மாவடித் தேறல்.

ale'-conner, *n.* மதுவின் தர ஆய்வாளர்.

alecost, *n.* மாவடித் தேறலைச் சுவையூட்ட வழங்கப்படும் மணப்பூண்டு வகை.

alee', *adv.* (கப்.) காற்றுக்கொதுங்கிய பக்கத்தில்; காற்றின் திசையில்; காற்றுச் செல்கிற திசையில்.

aleft', *adv.* இடதுபுறத்தில்; இடதுபுறம் நோக்கி.

al'egar, *n.* புளிப்பு மாவடிக்காடி.

ale'hoof, *n.* நிலம்படர்க்கொடி வகை.

ale'-house, *n.* மதுக்கடை.

Alemann'ic, *n.* தென் செர்மனி நாட்டுமொழி வகை; *a.* தென்மேற்கு செர்மனியிலுள்ள பண்டைமொழிக் குழுவினரைச் சார்ந்த.

alem'bic, *n.* பழங்கால வடிகலம்.

alerce', *n.* சாந்தரக்கு மரக்கட்டை.

alerion, allerion, (பிர.) *n.* (கட்.) காலும் அலகும் இன்றிக் காட்டப்படும் பருந்து வடிவம்.

alert', *n.* இடையரு விழிப்பு; எச்சரிக்கை ஒலி, எச்சரிக்கை அறிவிப்பு, திடீர்த்தாக்கு, அதிர்ச்சி; விமானத் தாக்குதல் எச்சரிக்கை; விமானத்தாக்கு எச்சரிப்புக்குரிய இடர்நேரம்; *a.* விழிப்பான, உன்னிப்பான; சுறுசுறுப்பான; *v.* எச்சரிப்பூட்டு, விழிப்புடன் இருக்கச்செய்.

ale'-taster, *n.* = ale-conner.

aleur'on, aleur'one, *n.* சிலவகை விதைகளில் காணப்படும் புரதவகை.

ale'-wife, *n.* மது விற்பனை செய்யும் பெண்; வட அமெரிக்க மீன்வகை; *pl.* ale'wives.

Alexan'drian, *a.* எகிப்து தேசத்து (Egyptian) அலெக்ஸாண்டிரியா நகரத்திற்குரிய; கி. பி. தொடக்க நூற்றாண்டுகளுக்குரிய எகிப்திய நாகரிகம் சார்ந்த; அலெக்ஸாண்டிரியா நகரத்திற்குரிய பிற்கால கிரேக்க நாகரிகம் சார்ந்த.

Alexan'drine, alexan'drine, *n.* அடிக்குப் பன்னிரண்டு அசைகொண்ட பாவகை; *a.* அடிக்குப் பன்னிரண்டு அசை கொண்ட பாவகையைச் சார்ந்த.

alexan'drite, *n.* பச்சைக்கல்வகை.

alex'ia, *n.* வாசிக்க இயலாமை; சொற்குருடு, பார்க்கும் சொற்களை உணர்ந்து வாசிக்க முடியாத மூளைநோய் நிலை.

alex'in, *n.* குருதியில் நோயணுக்களை அழிக்கும் திறனுடைய புரதவகை.

alexiphar'mic, *n.* நஞ்சுக்கு மாற்றுமருந்து; *a.* நஞ்சுக்கு மாற்று மருந்தான.

alfal'fa, *n.* மணப்புல் வகை.

alfres'co, *a.* திறந்தவெளியிலுள்ள; *adv.* ஈரச்சாந்தில்; திறந்த குளிர்காற்று வெளியில்.

al'ga, *n.* கடற்பாசி வகை; பாசி வகை; *pl.* al'gae.

al'gal, *a.* கடற்பாசிக்குரிய.

al'gebra, *n.* குறிக்கணக்கியல், இயற்கணிதம், எண்களுக்குப் பதிலாகக் குறியீடுகளை வழங்கும் கணக்கியல்துறை.

algebra'ic, algebra'ical, *a.* குறிக்கணக்கியல் சார்ந்த.

algebra'ist, *n.* குறிக்கணக்கியலாளர், இயற்கணிதர்.

al'gid, *a.* குளிருற்ற, சன்னியுற்ற.

algid'ity, *n.* குளிர், சன்னி.

algolag'nia, *n.* துன்புறுத்தி அல்லது துன்பமேற்றுப் பெறப்படும் சிற்றின்ப நுகர்ச்சி, பெருந்தீமை மகிழ்ச்சி.

algol'ogy, *n.* கடற்பாசி ஆய்வுத்துறை.

al'gorism, al'gorithm, *n.* அராபிய பதின்முறை இலக்க மானம் ; கணக்கு.

al'gum, *n.* அகில்.

Alham'bra, *n.* ஸ்பெயினைச் சார்ந்த கிரானடா (Granada) நாட்டு இஸ்லாமிய மன்னர் அரண்மனை.

Al'hambraic, Alhambresque', *a.* சித்திர வேலைப் பாடமைந்த ; அல்ஹம்பிராவின் சிற்ப மரபுக்குரிய.

al'ias, *n.* புனைபெயர், மறுபெயர்; *adv.* மாற்றுக, மறுபெயராக.

al'iases, *n. pl.* மறுபெயர்கள்.

al'ibi, *n.* (சட்.) பிறிதிடமிருப்புவாதம், வேற்றிட வாதம், குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றம் நிகழ்ந்த இடத்திற்குத் தொலைவிலுள்ள பிறிதோரிடத்தில் இருந்தார் என்று காட்டப் படும் வாதம் ; பிறிதோரிடம் ; *adv.* பிறிதோரிடத்தில்.

alicyc'lic, *a.* (வேதி.) கொழுப்புச் சேர்மானம் மண்டலச் சேர்மானம் ஆகிய இரண்டின் பண்புகளும் இணைந்த.

al'idad, al'idade, *n.* உயரமானியிலும் கோணமானியிலும் அளவெண் காட்டும் முள்.

al'ien, *n.* அயலார், வெளியார், பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு நிலைபெற்ற செடி அல்லது உயிரினம், வெளிவர வினம் ; *a.* பிறிதொன்றிற்குரிய ; புறம்பான, வெளியிடத்திற் குரிய ; விருப்பத்திற்கு ஒவ்வாத ; சூழலுக்கு உகவாத ; ஒத்திசைவற்ற ; இசைவு அறுபட்ட ; தனக்குரியதல்லாத ; புற ஆட்சிக்குரிய; முரணியல்பான; விலக்கப்பட்ட; *v.* அயலாக்கு, அன்னியமாக்கு, தொடர்பறு ; (சட்.) உடைமைமாற்று.

alienabil'ity, *n.* மாற்றிக்கொடுக்கப்படும் இயல்பு; அயலாகும் தன்மை.

al'ienable, *a.* உடைமை மாறுபடத்தக்க, கைமாற்றத்தக்க ; விலக்கத்தக்க ; துண்டாடத்தக்க.

a'lienage, *n.* அயலாக்குதல், அன்னியமாயிருத்தல்.

al'ienate, *a.* மனமுறிவுகொண்ட ; *v.* உடைமை மாற்று ; உறவு தொலைவாக்கு ; மனமுறிவுகொள்.

aliena'tion, *n.* உடைமை மாற்றம் ; பராதீனம் ; நட்புப் பிரிவு ; வேறு காரியத்திற்குப் பயன்படுத்துதல்.

al'ienator, *n.* உடைமை மாற்றுபவர் ; வேறுபாடு செய்பவர் ; பயன் திருப்பிவிடுபவர்.

alienee', *n.* உடைமை மாற்றிக் கொடுக்கப் பெறுபவர்.

al'ienism, *n.* அயன்மை ; மனப்பிணி ஆராய்ச்சி ; மனப்பிணி மருத்துவம்.

al'ienist, *n.* மனப்பிணி மருத்துவர் ; மனப்பிணி ஆராய்ச்சி யாளர்.

a'lienor, *n.* உடைமை மாற்றிக்கொடுப்பவர்.

al'iform, *a.* சிறகு வடிவமுடைய.

alight'[1], *v.* இறங்கு, வானிலிருந்து இழி, வந்துவிழு ; தற் செயலாக வரப்பெறு.

alight'[2], *adv.* தீ வைக்கப்பட்டு ; ஒளியேற்றப்பட்டு, சுடர் விட்டு.

align', *v.* வரிசைப்படுத்து, ஒழுங்குபடுத்து ; வரிசையுடன் சேர், ஒரு நிலைப்படுத்து ; ஒழுங்குபடு, வரிசைப்படு.

align'ment, *n.* ஒழுங்குபடுத்துதல், வரிசைப் படுத்துதல் ; வரிசையில் சேர்த்தல், இணைப்பு ; வரிசை, ஒழுங்கு ; பாதைக்கோ இருப்புப் பாதைக்கோ உரிய நிலவரைத் திட்டம்.

alike', *a.* போன்ற, ஒத்த ; *adv.* அதுபோலவே ; சரியொப் பாகவே ; ஒத்த நிலையில் ; ஒருங்கே.

al'iment, *n.* உணவு, ஊட்டம் ; வாழ்வதற்கு வேண்டிய ஆதரவு ; *v.* உணவளி, ஊட்டு ; தாங்கு, ஆதரவளி, பேணு.

alimen'tal, *a.* உணவளிக்கிற ; இயற்கை வளர்ச்சிக்கு உதவுகிற.

alimen'tary, *a.* ஊட்டமளிக்கிற ; உணவூட்டம் சார்ந்த ; வாழ்க்கை ஆதாரம் வழங்குகிற.

alimenta'tion, *n.* உணவு வழங்கல், ஊட்டமளித்தல்; ஊட்டி வளர்த்தல்.

aliment'ative, *a.* உணவு சார்ந்த; உணவு விருப்பம் சார்ந்த.

al'imony, *n.* ஊட்டம் ; வளர்ப்பு ; (சட்.) வாழ்க்கைப்படி, பிரிந்துபோகிற அல்லது பிரிக்கப்பட்டுவிட்ட மனைவியின் சீவனும்சம்.

aline', *v.* = align.

aline'ment, *n.* = alignment.

al'iped, *n.* காலோடு இணைந்த சிறகுடைய உயிரினம், வௌவால் ; *a.* காலோடு இணைந்த சிறகுடைய.

aliphat'ic, *a.* (வேதி.) கொழுப்பார்ந்த ; மண்டலிக்காத, திறந்த தொடரினம் சார்ந்த ; உயிர்ச்சேர்மான வகைக்குரிய.

al'iquant, *a.* (கண.) சரி ஈவாகாத, மீதத்துடனேயே வகுக் கிற ; சரி நேர் கூறுகாத (எ-டு: 12-க்கு 5:-5 ஈவாகாத எண்).

al'iquot, *a.* (கண.) சரி ஈவான, மீதமில்லாமல் வகுக்கிற, சரி நேர்கூறுன (எ-டு : 12-க்கு 3:-3 சரி ஈவான எண்).

alit', *v.* alight என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

alive', *adv.* உயிருடன், உயிரோடு, வாழ்கிற நிலையில் ; ஊக்கத்துடன், செயல் விரைவுடன், உயிர்த்துடிப்புடன் ; உணர்வுக்கத்துடன், முழு விழிப்புடன் ; நிறைந்து.

aliza'ri, *n.* செஞ்சாயத்துக்கு உதவும் கிழங்கு, மஞ்சிட்டி வேர்.

aliz'arin, *n.* செஞ்சாயப்பொருள்.

al'kahest, *n.* எல்லாவகைப் பொருட்களையும் கரைக்கக்கூடிய தென்று பொன்மாற்றுச் சித்தர் கருதிய நீர்மம், 'அரச நீர்மம்'.

alkales'cence, alkales'cency, *n.* இலேசாகக் காரப்பொரு ளாகும் இயல்பு.

alkales'cent, *n.* இலேசாகக் காரமாகும் பொருள் ; *a.* இலே சாகக் காரமாகத்தக்க.

al'kali, *n.* (வேதி.) காரப்பொருள், காடித்தன்மையை எதிர் நின்று சமப்படுத்தும் பொருள் ; செடியினம் சார்ந்த மஞ்சள் நிறத்தை ஊதாவாகவும் சிவப்பு நிறத்தை நீலமாகவும் கருஞ் சிவப்பைப் பச்சையாகவும் மாற்றுந்தன்மையுள்ள சேர்மான வகை.

al'kalify, *v.* காரப்பொருளாக்கு.

alkalim'etry, *n.* காரமானம், பொருளின் காரத்தன்மையை மதிப்பிடுதல்.

al'kaline, *a.* காரத்தன்மையுடைய.

alkalin'ity, *n.* கார எல்லை ; காரத்தன்மை.

al'kaloid, *n.* வெடியக் கலப்புடைய வேதியியல் மூலப்பொருள் வகை.

al'kanet, *n.* செஞ்சாய வகை ; செஞ்சாயம் தரும் வேரை யுடைய செடி வகை.

all, *n.* முழுமை ; எல்லோரும் ; எல்லாம் ; தொகுதி ; பொரு ளுலகு ; *a.* முழுமையான ; எல்லா, அணைத்து ; விலக் கில்லாத ; முழு அளவான ; *adv.* முற்றிலும், முழுவதும், தீர ; எல்லாப் பக்கங்களிலும் ; எல்லா வகைகளிலும் ; தங்கு தடையின்றி ; (தொ.) after all, மொத்தத்தில் ; அனைத் திற்கும் மாறுக, எப்படியிருந்தாலும் ; all along, தொடக்க முதல் முடிவுவரை, எப்போதும் ; all at once, திடுமென ; all but, கிட்டத்தட்ட ; all in, முழுதும் சோர்வுற்று ; எல்லாம் அடங்கலாக ; all in all, முழு நிறைவான ; முழுதும் ஈடு பட்டு ஆழ்ந்துள்ள பொருள் ; all out, முழு வேகத்துடன் ; முழுதும் சோர்வுற்று ; all over, எங்கும், முழுப்பரப்பிலும் ; முழுதும் ; முழு மயமாக ; all over with, தீர்ந்துபோன, முடிவுற்ற, முடிவெய்திய; all there, தெள்ளத் தெளிந்த அறிவோடிருக்கிற, முழுதும் விழிப்பான ; all up with, கடந்துபோன நிலையில் ; for all, இருந்தபோதிலும் ; for good and all, முடிவாக ; once for all, ஒரேயடியாக; முடிவாக ; when all is said and done, எல்லாவற்றையும் கருத்தூன்றிப்பார்த்தால் ; மொத்தத்தில்.

All'ah, *n.* (இஸ்லாமிய வழக்குப்படி) முழுமுதற் கடவுள்.

allanto'ic, allan'toid, *n.* உயிரகப் பை ; *a.* உயிரகப் பை சார்ந்த ; சிறு குழல் உருவான.

allay', *n.* குறைப்பு, தணிப்பு, மட்டுப்படுத்துதல்; மட்டமான உலோகக் கலவை, மட்ட உலோகம்; *v.* அடக்கு; அமைதிப் படுத்து; தணி; குறை, மட்டமாக்கு; நலங்கெடு; இழிவு படுத்து; கலப்படஞ்செய், மட்ட உலோகத்தைக் கல.

all-cheer'ing, *a.* மகிழ்ச்சியளிக்கிற.

all'-day, *a.* நாள் முழுதும் நடைபெறுகிற.

all-dread'ed, *a.* எல்லோராலும் அஞ்சப்படுகிற.

allega'tion, *n.* சாட்டியுரைத்தல், குறிப்பிடுதல்; சாட்டுரை, உறுதிப்படுத்தப்படாத கூற்று, சுட்டுரை, குறிப்பீடு; சாட்டப்பட்ட செய்தி, இடுவந்தி.

allege', *v.* வாதத்திற் குறிப்பிடு; அடித்துப்பேசு; சாட்டியுரை; வாதிடு.

alleged', *a.* சாட்டியுரைக்கப்பட்ட, குறிப்பிடப்பட்ட.

alleg'edly, *adv.* சாட்டியுரைத்தபடியே, குறித்த முறையில்.

alle'giance, *n.* கடப்பாடு, பற்றுறுதி.

allego'ric, allego'rical, *a.* தொடர் உருவகமான.

all'egorise, all'egorize, *v.* தொடர் உருவக வடிவிற்கூறு; மறைபொருளுடன் உரை.

all'egorist, *n.* உருவக வகையாற் பேசுபவர், பிசியாளர்.

all'egory, *n.* தொடர் உருவகம்; உருவகக்கதை.

allegrett'o, *(இத்.)* *a.* *(இசை.)* ஓரளவு விரைவான; *adv.* ஓரளவு விரைவாக.

alleg'ro, *(இத்.)* *n.* *(இசை.)* விரைவிசையுடைய பாடல்; *a.* விரைந்த இயக்கமுடைய; *adv.* விரைந்த இயக்கமுடன்.

allele', **allel'omorph**, *n.* மெண்டல் (Mendel) என்ற அறிவியல் ஆய்வாளர் கருத்துப்படி உயிர்களின் மரபுவழியில் தொடரும் இரட்டைப் பண்புக் கூறுகளில் ஒன்று, 'இணை இனக்கீற்'றில் ஒன்று.

allelu'ia, allelu'iah, *n.* கடவுட் புகழ்மாலை.

all'emande, *n.* மெல்லியக்கமுடைய நடுத்தர வேக இசை; செர்மனி நாட்டு ஆடல்வகை.

aller'gic, *a.* *(மரு.)* உடலில் அயற்பொருள் நுழைவின் எதிர்வினைவாக வீக்கம் இழைம அழிவு ஆகியவை ஏற்படுகிற.

all'ergy, *n.* *(மரு.)* மிகு நுட்ப ஊறுணர்வு; உடலில் அயற் பொருள் நுழைவின் எதிர்வினைவு; ஊறுபொருள் அல்லது உயிர்க்காப்பு மூலம் பொருள்வகையில் ஏற்படும் கூருணர்வு நிலை.

allev'iate, *v.* எளிதாக்கு, இலேசாக்கு, மட்டுப்படுத்து; துன்பம் தணி.

allevia'tion, *n.* மட்டுப்பாடு, துயர்தணிப்பு.

allev'iative, *a.* மட்டுப்படுத்தும் இயல்புடைய.

allev'iator, *n.* துன்பம் குறைப்பவர்; மட்டுப்படுத்த உதவும் பொருள்.

allev'iatory, *a.* துன்பம் தணிக்க உதவுகிற.

all'ey[1], *n.* தோட்டப்பாதை; சந்து; குறுந்தெரு; பந்துகள் கழங்குகள் வைக்க உதவும் நீண்டொடுங்கிய இடம்; *(தொ.)* blind-alley, முடுக்குத்தெரு, முட்டுச்சந்து.

all'ey[2], **alley-taw'**, **alley-tor'**, *n.* உயர்ந்த கோலிவகை, கழங்கு.

all'eyed, *a.* பக்கச்சந்துகளுடைய; சந்துவடிவான.

all'eyway, *n.* சந்துவழி; இடைகழி.

All'-father, *n.* கடவுள்; பரமபிதா; கிரேக்கப் பெருந்தெய்வம் சியூஸ் (Zeus); டியூடானியப் பெருந்தெய்வம் ஓடன் (Woden).

all-good', *a.* மிகவும் நல்ல, முழுநலம் வாய்ந்த.

all-hail', *n.* வணக்க வாழ்த்துமுறை; *v.* வாழி வாழி என்று வணங்கி வாழ்த்து; *int.* வாழி வாழி!

all-hid', *n.* கண்ணுமூய்ச்சி ஆட்டம்.

allia'ceous, *a.* வெள்ளைப்பூண்டு போன்ற.

alli'ance, *n.* நட்புத்தொடர்பு; இணக்கநிலை; நேச நாடு; திருமண உறவு; உறவு; ஒப்பந்தம்.

all'igate, *v.* பிணை, சேர்த்திணை, கட்டு; இணைப்புச்செய்.

alliga'tion, *n.* இணைத்துக்கட்டுதல்; இணைப்பு; *(கணை.)* கலவைகளில் மதிப்புக்கூறுகளைக் கணித்தல்.

all'igator, *n.* முதலைவகை, பெரிய அலகுடைய முதலை.

allit'erate, *v.* மோனைப்படுத்து, முதலெழுத்தை ஒன்று படுத்து.

allitera'tion, *n.* மோனை, முதலெழுத்து ஒன்றிவரும் தொடையமைப்பு.

allit'erative, *a.* முதலெழுத்து அடுக்கிவருகிற, ஒலியொத்து இசைகிற, மோனையுடைய.

all'-night, *a.* இரவு முழுதும் நிலவுகிற.

all'ocarpy, *a.* *(தாவ.)* இருபால் கலப்பின்பின் காய்க்கிற.

all'ocate, *v.* இடங்குறி; இடத்தில் வை; இடம் ஒதுக்கிக் கொடு; பங்கீடு செய்.

alloca'tion, *n.* இடக்குறிப்பீடு; இட ஒதுக்கீடு; பங்கு; ஒதுக்கி வைத்த தொகை, மானியம்.

allocu'tion, *n.* பேருரை, செவியறிவுறூஉ; கத்தோலிக்க உலகத் திருத்தந்தை தம் தலைமைத் தூதர்களிடையே ஆற்றும் பொது உரை.

allod'ial, *a.* நிலப்பண்ணைமுறை சாராத, பண்ணைக்குக் கட்டுப்படாத.

allod'ium, *n.* பண்ணைக்கு உட்படாத தனியுரிமை நிலவுடைமை.

allog'amous, *a.* *(தாவ.)* வேறு இனக்கலப்புடைய, மாற்றுக் கலப்புடைய.

allog'amy, *n.* *(தாவ.)* அயலினக்கலப்பு, மாற்றுக்கலப்பு, ஒரு செடியின் மலர்த்துகள் மற்றொரு செடியின் மலர்க் கருவகத்துடன் இணைந்து இனம்பெருக்கும் முறை.

all'ograph, *n.* அயல் எழுத்து மானம், ஒருவர் சார்பில் மற்றொருவர் எழுதுவது.

all'opath, *n.* 'எதிர்முறை' மருத்துவர்.

allopath'ic, *a.* 'எதிர்முறை' மருத்துவம் சார்ந்த, எதிர் முறையான, நோய்க்குறிகளுக்கு எதிர்ப்பண்புகள் ஊட்டுவதன் மூலம் நோயைக் குணப்படுத்த நாடும் மருத்துவ முறையைச் சார்ந்த.

allop'athist, *n.* 'எதிர்முறை' மருத்துவர்; 'எதிர் முறை' மருத்துவத்தில் நம்பிக்கையுடையவர்.

allop'athy, *n.* 'எதிர்முறை' மருத்துவம், நோய்க் கூறுகளுக்கு எதிர்க்கூறுகளை ஊட்டுவதன் மூலம் நோய் தீர்க்க நாடும் மருத்துவ முறை.

allophyl'ian, *n.* ஆரிய செமித்திய (Semitic) இனங்கள் சாரா மொழிக்குரியவர்; *a.* ஆரிய செமித்திய இனங்கள் சாராத.

allot', *v.* பங்கிட்டளி; கூறுகளாகப் பிரி; ஒதுக்கிக்கொடு; திருவுளச்சீட்டையொட்டிப் பிரித்துக்கொடு.

all'otheism, *n.* விசித்திரமான தெய்வங்களின் வழிபாட்டு முறை, அயல் வழிபாட்டு முறை.

allot'ment, *n.* பங்கிடுதல், பிரித்துக்கொடுத்தல், பங்கீடு; பங்கு, பிரித்துக் கொடுக்கப்பட்ட கூறு.

allotriomor'phic, *a.* 'அகமணியுருவான', புற அமைப்பில் மணியுருப்பெருமல் அக அமைப்பில்மட்டும் பெறுகிற.

all'otrope, *n.* பொருண்மை மாருமல் அணு அமைப்பு மட்டும் மாறும் மறுவடிவம்.

allotrop'ic, *a.* அணுத்திரிபுள்ள.

allot'ropous, *a.* *(தாவ.)* எல்லாவகைப் பூச்சி இனங்களும் எளிதில் வந்தணுகி அடைவதற்குரிய தேனையுடைய; தேனுக்காகச் சில மலர்களை மட்டும் அணுகத்தக்க குட்டையான நாவுடைய.

allot'ropy, *n.* தனிப்பொருள்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களில் அணுக்களையுடையனவாய் இருக்கும் தன்மை.

allott'ed, *a.* குறிக்கப்பட்ட; வரையறுக்கப்பட்ட; ஒதுக்கப்பட்ட; விதிக்கப்பட்ட.

allottee', *n.* பங்கினர், வகுக்கப்பட்ட பங்கீடு பெறுபவர்.

allow', *v.* ஒத்துக்கொள்; இசைவுகொடு; தடுக்காமல் விடு, இடமளி; கொஞ்சம் கொஞ்சமாக வழங்கு; கொடுத்துதவு; சலுகையளி; ஈடுசெய், சரிக்கட்டு; சேர்த்துக்கொள்ள இணங்கு; புகவிடு.

allow'able, *a.* ஒத்துக்கொள்ளத்தக்க; பெருங்கேடற்ற, மோச மல்லாத; பொறுத்தமையக்கூடிய; மன்னிக்கக்கூடிய.

allow'ance, *n.* இசைவு, இணக்கம்; உதவித்தொகை, படி, செலவுத்தொகை; சலுகை, கழிவுரிமை; பொறுப்பமைதி; சரியீடு; *v.* உதவித்தொகையளி; குறிப்பிட்ட அளவில் கொடுத்துதவு.

alloy', *n.* உலோகக்கலப்பு, மட்ட உலோகக்கலவை, மட்ட உலோகம்; பொன் வெள்ளி மாற்று; *v.* உலோகம் கல; மட்ட உலோகத்துடன் கல, தரங்குறை; கலந்து மதிப்புக் குறை; மட்டாக்கு, மிதப்படுத்து; பண்பு சிறிதுமாற்று; மட்டக் கலவையாகு.

all'seed, *n.* விதைப்பெருக்கமுள்ள செடியினப்பெயர்.

all'spice, *n.* வால்மிளகு, பன்மணப் பொருள் தரும் செடி யினம்.

allude', *v.* மறைமுகமாகக் குறிப்பிடு, குறிப்பாகத் தெரிவி; இயல்பான இணைக்கருத்துகள் தோன்றவை; குறிப்பிடு.

allure,' *n.* கவர்ச்சி, மருட்சிப்பொருள்; *v.* மயக்கு, கவர்ச்சி செய்; மருட்டு, மருட்சியூட்டு; வயப்படுத்து, சிக்கவை.

allure'ment, *n.* மயக்குதல், மருட்டுதல்; கவர்ச்சி; மருட்சி.

allur'ing, *a.* கவர்ச்சிவாய்ந்த, மயக்குகிற.

allu'sion, *n.* மறை குறிப்பு, சுட்டு, குறிப்பீடு.

allus'ive, *a.* மறைமுகமாகக் குறிப்பிடுகிற; சாடையாகத் தெரிவிக்கிற; புதையுரையான.

alluv'ion, *n.* கடல் ஆறு ஆகியவற்றின் கரை அரிப்பு; வெள்ளம், நீர்ப்பெருக்கு; வண்டல்; (சட்.) நீரின் செயலால் புதுவதாக நிலம் உருவாதல்.

alluv'ial, *a.* வண்டலாலான, வண்டல் சார்ந்த.

alluv'ium, *n.* வண்டல்மண், ஆறிடு மண்.

ally', *n.* நட்புநாடு; நண்பர்; *v.* ஒன்று கூடு.

T 3317

al'ma, *n.* எகிப்திய ஆடலணங்கு.

al'magest, *n.* கி. பி. 150-இல் வாழ்ந்த டாலமி (Ptolemy) என்ற அலெக்சாண்டிரிய அறிஞர் இயற்றிய வானநூல் ஏடு; அறிவுப் பேரேடு.

al'mah, *n.* = alma.

al'ma mat'er, (ல.) *n.* அருளன்னை, அற்புத்தாய்; பயின்ற பல்கலைக் கழகம் அல்லது கலைக்கூடம்.

al'manac, *n.* பஞ்சாங்கம், ஐந்தொகுதி.

al'mandine, *n.* சிவப்பு மணிக்கல்வகை.

almi'ghty, *a.* எல்லாம் வல்ல; தடுக்க முடியாத; வெல்ல முடி யாத; (தொ.) the Almighty, கடவுள்; the Almighty dollar, வெள்ளையப்பர்.

almir'ah, (போர்.) *n.* அலமாரி, நிலையடுக்கு.

alm'ond, *n.* வாதுமை மரம்; வாதுமைக் கொட்டை; வாதுமைப் பருப்பு; வாதுமைக் கொட்டை வடிவப்பொருள்.

al'moner, *n.* ஐயமிடுபவர், அற்றார்க்கு வழங்குபவர்; இரவ லர்க்கு உதவுவதற்குரிய அரசியல் பணியாளர்; மருத்துவ மனை நோயாளிகள் செலுத்தவேண்டிய தொகையை வரை யறுக்கும் பணியாளர்.

al'monry, *n.* ஈதல் மனை, ஐயம் இடும் இடம்.

al'most, *adv.* பெரும்பாலும், சற்றேகுறைய.

alms, *n.* இரவலர்க்கு வழங்கும் பொருள், பிச்சை, நன்கொடை.

alms'-house, *n.* ஏழையர் காப்பு மனை.

alms'man, *n.* இரவலன், பிச்சைக்காரன்.

alms'woman, *n.* பிச்சைக்காரி.

al'mug, *n.* அகில்.

alod'ium, *n.* = allodium.

al'oe, *n.* சோற்றுக்கற்றாழை.

al'oed, *a.* கற்றாழை நடப்பட்ட; கற்றாழை நிழலுடைய.

al'oes-wood, *n.* காழகில், மூசாம்பரம்.

aloet'ic, *n.* கற்றாழையிலிருந்து செய்யப்பட்ட மருந்து வகை; *a.* கற்றாழைசார்ந்த.

aloft', *adv.* உயரத்தில், தலைக்குமேலே; மேலாக; உச்சியில்; பாய்மரத்தின் மேற்பகுதியில்; வானில்; வான் நோக்கி.

alog'ical, *a.* தருக்க நூலுக்குப் புறம்பான.

alone', *adv.* தன்னந்தனியாக, தனியாக; துணையின்றி; தனிப்பட்ட நிலையில்; ஒப்புயர்வில்லாமல்; மட்டும்.

along', *adv.* நெடுக; நெடுநீளமாக; முழுவதும்; முன்னேறி; உடனுடனுக; துணையோடு; *prep.* ஊடாக; நெடுகிலும்; பக்கமாக, ஓரமாக; மூலமாக.

along'shore, *a.* கரையோரப்பகுதி சார்ந்த.

alongshore'man, *n.* கரையோரப்பகுதிக் காவலன்.

along'side, *adv., prep.* பக்கத்துக்குப் பக்கமாக; ஒருங்கே, ஓரத்தின் அருகாக; கப்பலின் பக்கமாக.

aloof', aloof'ly, *adv.* துண்டாக; தனியாக; அப்பால், தள்ளி, தொலைவில்; வேருக; பற்றின்றி; தற்பெருமையுடன் விலகிநின்று, ஒட்டாமல்.

aloof'ness, *n.* தனிநிலை; ஒட்டில்லாமை.

alope'cia, *n.* (மரு.) தலைவழுக்கை.

alope'coid, *a.* குள்ளநரிபோன்ற.

aloud', *adv.* உரக்க, நன்கு கேட்கும்படி.

alow', *adv.* (கப்.) தாழ, கீழே.

alp, *n.* மலை முகடு, மலை; மலைச்சாரல், மேய்ச்சல் நிலம்.

alpac'a, *n.* ஒட்டக இனத்தைச் சார்ந்த தென் அமெரிக்க விலங்கு வகை; ஒட்டக இன விலங்குவகையின் மயிராற் செய்யப்பட்ட பட்டாடைவகை.

alp'enhorn, *n.* ஆல்ப்ஸ் மலைப்பகுதியிலுள்ள ஆயர் ஊது குழல்.

al'penstock, *n.* மலைவாணரது நீண்ட ஊன்றுகோல்.

al'pha, *n.* கிரேக்க நெடுங்கணக்கில் முதலெழுத்து; நட்சத்திர மண்டலத்தின் ஒளிமிக்க விண்மீன்; தொடக்கம்; (தொ.) alpha and omega, தொடக்கமும் இறுதியும்; alpha particle, கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளியேற்றப்படும் அணு நுண்மம்; alpha plus, ஏற்றுயர்படியில் நல்ல, உச்ச அளவில் நல்ல; alpha rays, கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளி வரும் அணு நுண்ம வரிசைகள்.

al'phabet, *n.* நெடுங்கணக்கு, மொழியின் எழுத்துத் தொகுதி; அடிப்படை அறிவுக்கூறுகள்; *v.* நெடுங்கணக்கு முறையில் வரிசைப்படுத்து.

alphabeta'rian, *n.* நெடுங்கணக்குப் படிக்கத் தொடங்கு பவர், தொடக்கநிலை மாணவர்.

alphabet'ic, alphabet'ical, *a.* நெடுங்கணக்குச் சார்ந்த; நெடுங்கணக்கு வரிசை முறையான.

alphabet'ically, *adv.* நெடுங்கணக்கு வரிசையாக.

alphabet'iform, *a.* எழுத்துக்கள் போன்ற உருவமுடைய.

al'phabetise, *v.* நெடுங்கணக்கு முறையில் ஒழுங்குபடுத்து.

Alphon'sine, *a.* காஸ்டைல் (Castile) நாட்டரசன் பத்தாம் அல்பான்சோவுக்கு (Alphonso X) உரிய; (வான.) 1252-இல் பத்தாம் அல்பான்சோ முடிவு செய்த கோள் அமைவு சார்ந்த.

Al'pine, al'pine, *n.* ஆல்ப்ஸ் போன்ற உயர் மலைப்பகுதிக் குரிய செடி இனம்; ஆல்ப்ஸ் பகுதி சார்ந்த மனித இனத் தவர், வெள்ளை இனத்தின் ஒரு பகுதியினர்; *a.* ஆல்ப்ஸ் மலைநிலத்திற்குரிய; மலை உச்சியில் வளர்கிற; மலைப்பகுதி சார்ந்த.

Alpi'ni, *n. pl.* இத்தாலிய மலைப்போர்ப்படை.

alp'inism, *n.* மலையேற்றக்கலை; மலையேற்றப் பயிற்சி.

Al'pinist, al'pinist, *n.* மலையேற்றக் கலைஞர் ; மலையேற்றப் பயிற்சியாளர்.

Alpi'no, *n.* இத்தாலிய மலைப்போர்வீரர்.

alread'y, *adv.* ஏற்கெனவே, முன்னதாகவே.

Alsat'ia, *n.* செர்மனிக்கும் பிரான்சுக்கும் இடையே அடிக்கடி மாறி வந்துள்ள ஒரு மாவட்டப்பெயர் ; இலண்டனில் முன்பு (1697 வரை) கடனாளிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் அடைக்கலம் அளித்துவந்த ஒயிட் பிரயர்ஸ் (White Friars) என்ற இடத்தின் புனைபெயர்.

Alsa'tian, *n.* அல்சேஷியாவுக்குரிய ஓநாய் போன்ற வளர்ப்பின நாய் வகை ; *a.* அல்சேஷிய மாவட்டத்திற்குரிய.

al'sike, *n.* நறுமணப்புல் வகை.

al'so, *adv.* கூட, கூடுதலாக, தவிர, அதுவன்றி ; மேலும்.

alt, *n.* (இசை.) உச்சக்குரல், உறுமேற்பாலை ; உயர்ந்த மனப்பாங்கு.

al'tar, *n.* பலிபீடம் ; வழிபாட்டுத் திருவினைக்குரிய இடம் ; வணங்குதற்குரிய இடம் ; மண மேடை ; நீர் வாங்கும் இரேவு மதிலிலுள்ள ஏந்துபலகை.

alt'arage, *n.* பலிபீடப் படையல்.

al'tar-cloth, *n.* பலிபீட விரிப்பு.

al'tar-piece, *n.* பலிபீடத்தின் பின்னணிக்கலை வேலைப்பாடு.

alt'ar-rails, *n.* பலிபீட வேலி.

alt'ar-stone, *n.* பலிபீடக்கல் ; பலிபீட நடுக்கல்.

al'tar-tomb, *n.* பலிபீட மாடம்.

al'tarwise, *adv.* பலிபீட நிலையில், வடக்கு தெற்காக.

altaz'imuth, *n.* வான கோளங்களின் அகடு முகடு மதிப்பிடு தற்குரிய கருவி, அகட்டு முகட்டுமானி.

al'ter, *v.* மாற்று ; நிலை மாறச் செய் ; திருத்தி அமை ; மாறுபடு.

alterabil'ity, *n.* மாற்றியமைக்கக்கூடிய தன்மை.

al'terable, *a.* மாற்றக்கூடிய ; மாறுபடும் தன்மையுடைய.

al'terant, *n.* அடிப்படை உயிரியக்கங்களில் மாறுதலை உண்டு பண்ணத்தக்க மருந்து ; *a.* மாற்றக்கூடிய ; மாறுபடும் தன்மையுடைய.

altera'tion, *n.* மாற்றம் ; திருத்தியமைப்பு.

al'terative, *n.* = alterant.

al'tercate, *v.* பூசலிடு ; சொல்லெதிர் சொல்லு ; சண்டையிடு.

alterca'tion, *n.* வாய்ச்சண்டை.

al'tercative, *a.* ஓயாது வாய்ச்சண்டையிடுகிற.

al'ter eg'o, (ல.) *n.* ஆளின் மறுபடிவம், தன்மாற்று வடிவம் ; ஒருயிரும் ஈருடலுமாக இயங்கும் உற்ற நண்பர்.

alter'ity, *n.* மற்றொன்றாய் இருக்கும் தன்மை.

altern'ant, *n.* மாறிமாறி வரும் அளவை, ஒன்றுவிட்டு ஒன்றாக வரும் எண் ; *a.* ஒன்றுவிட்ட, ஒன்று விட்டடுத்த ; ஒற்றை மாற்றான.

altern'ate [1], *a.* மாறிமாறி வருகிற ; ஒன்றுவிட்டு ஒன்றான, பொழிப்புத் தொடையான, மாறி மாறி அமைத்த ; (தாவ.) கணுத்தோறும் எதிரெதிர்ப்பக்கமான இலைகளையுடைய ; வரிசை தோறும் முன் வரிசையில் இடைவெளி நிரப்பும் மலர்க் கொத்துக்களையுடைய ; (உயி.) பால் இனப்பெருக்கம் தளிர் இனப்பெருக்கம் ஆகிய இரண்டும் மாறி மாறி வரும் தலை முறைகளையுடைய ; (வடி.) மாறெதிரான, கோட்டின் இரு கோடியிலும் எதிரெதிர்ப் பக்கமான.

al'ternate [2], *n.* மாற்றுப்பதிலாள், மாற்றுப்பெயராள் ; *a.* பிரதிநிதிக்கு மாற்றியலான, மாற்றான.

al'ternate [3], *v.* மாறி மாறி நிகழ் ; ஒன்று விட்டு ஒன்றாக அமை ; மாறி மாறித் தொடர்.

altern'ately, *adv.* மாறி மாறி, ஒன்றுவிட்டு ஒன்றாக ; பொழிப்பாக.

al'ternating, *a.* முதலில் ஒன்றும் பின் மற்றொன்றுமாக மாறி மாறி வருகிற ; (தொ.) alternating current (A.C.), மாற்று மின்னோட்டம்.

alterna'tion, *n.* மாறி மாறி வருதல் ; ஒன்றுவிட்டு ஒன்றாக அமைதல் ; மாறி மாறித் தொடர்தல் ; மாறி மாறி வாசித்தல் ; மாறி மாறிப் பாடுதல் ; கொடுக்கல் வாங்கல் உறவு.

altern'ative, *n.* இரண்டில் ஒன்றன் தேர்வு, இரண்டில் ஒன்று ; இணைக்குழுவில் ஒன்றன் தேர்வு ; இணைக்குழுவில் ஒன்று ; இரண்டில் மீந்த ஒன்று ; ஒன்று அல்லது மற்றொன்று என்ற நிலையிலுள்ள இணை ; *a.* இரண்டில் ஒன்றாக நடை பெறக்கூடிய ; இரண்டில் ஒன்று உறுதியான ; (தொ.) alternative vote, ஒற்றைமாற்று வாக்கு.

altern'atively, *adv.* இரண்டில் ஒன்றாக, ஒற்றை மாற்றாக ; இன்னொரு வகையாக ; மாற்று வகையாக.

Al'thing, *n.* ஐஸ்லாந்தின் (Iceland) சட்ட மன்றம்.

although', *conj.* போதிலும், என்றாலும்.

altim'eter, *n.* உயரமானி, உயரத்தை மதிப்பிடும் அழுத்த மானி.

altis'simo, *a.* (இசை.) மீ உயர்வான ; (தொ.) in altissimo, உச்ச உயர்நிலையில்.

al'titude, *n.* உயரம் ; குத்துயரம், ஏற்றக்கோணம், ஆழம் ; (வான.) அடிவானத்திற்கு மேலெழும் கோண அளவு ; (வடி.) கோணம் முக்கோணம் ஆகியவற்றின் செவ்வுயர அளவு ; உயர்வு, பெருமை, உயர்நிலை.

al'titudes, *n. pl.* உயர்ந்த மனவெழுச்சிகள், உயரிய உணர்ச்சி, பீடுநடை, மேன்மை.

altitud'inal, *a.* உயரம் சார்ந்த ; செவ்வுயர அளவு சார்ந்த.

altitudina'rian, *n.* உயர்வுள்ளலுடையவர்.

altitud'inous, *a.* உயரமுள்ள, மேடான.

al'to, *n.* (இசை.) உச்ச ஆண்குரல்.

altogeth'er, *n.* முழுமை ; *adv.* ஒருங்கு சேர்த்து ; என்றென்றும் ; மொத்தமாக ; முற்றிலும் ; விலக்கின்றி.

al'to-relievo, (இத்.) *n.* உருவில் பாதி கனம் முனைப்பாக வெளித் தெரியும்படி செதுக்கப்பட்ட உருவம்.

al'truism, *n.* பிறர்க்கென வாழுந் தகைமை, பொதுநலப்பண்பு.

al'truist, *n.* பிறர்க்கென வாழும் பெற்றியாளர்.

altruis'tic, *a.* பிறர்க்கென உழைக்கும் கோட்பாட்டினை உடைய.

al'udel, *n.* திடப்பொருளை நேராக ஆவியாய் மாற்ற உதவும் கலயம்.

al'ula, *n.* போலி இறகு, இறகு போன்ற அமைப்பு.

al'um, *n.* படிக்காரம்.

alum'ina, *n.* அலுமினிய உயிரகை.

alumin'ium, alumi'num, *n.* அலுமினியம்.

alum'inous, *a.* படிக்காரத்தின் இயல்புடைய ; அலுமினிய உயிரகை சார்ந்த.

alum'na, *n.* மாணவி, பழைய மாணவி.

alum'nae, *n. pl.* மாணவியர், பழைய மாணவியர்.

alum'ni, *n. pl.* பழைய மாணவர், கல்லூரியில் முன் படித்துப் பட்டம்பெற்ற மாணவர்.

alum'nus, *n.* மாணவன், பழைய மாணவன்.

al'veary, *n.* தேன்கூடு ; பலர் உழைப்பின் தொகுதி ; சொல் லகராதி ; (உள்.) குறும்பியடையும் புறச்செவி.

alve'olar, *n.* (ஒலி.) பல்லடி ஒலி ; *a.* (ஒலி.) அண்பல் நாவுறப் பிறந்த ; குழிந்த, குழிவு குழிவான, குழி நிறைந்த.

alve'olate, *a.* குழிந்த, குழிவுகுழிவான ; குழிவாயில் பொருந்திய.

alve'olus, *n.* குழி ; சிறுபள்ளம் ; பல்பொருந்து குழி ; ஈரல் கண்ணறை ; *pl.* alve'oli.

al'vine, *a.* வயிறு சார்ந்த.

al'way, *adv.* (செய்.)=always.

al'ways, *adv.* எப்போதும், எல்லாக்காலங்களிலும்; எல்லாத் தறுவாய்களிலும்; என்றென்றைக்கும்; தொடர்ச்சியாக, இடைவிடாது; எப்படியும், எல்லா வழிகளிலும்.

am, *v.* be என்பதன் தன்மை ஒருமை வடிவம்.

amadavat', *n.* தூக்கணங்குருவியினம் சார்ந்த பாடும் இந்தியப் பறவை வகை.

am'adou, *n.* கடற்பஞ்சு போன்ற சிக்கிமுக்கிப் பொருள்.

a'mah, *n.* பால் கொடுக்கும் செவிலி, ஆயா; தாதி.

amain', *adv.* வல்லாற்றலுடன், முழு வேகமாக, மிகவும்.

amal'gam, *n.* இரசக்கட்டு, இரசக்கலவை, பாதரசமும் மற்றொரு உலோகமும் சேர்ந்த கலவை; குழைவுடைய மென் கலவை; பற்பல தனிமங்களின் கூட்டு; கலப்பு உலோகத்தின் சேர்க்கைப் பொருள்களில் ஒன்று.

amal'gamate, *a.* ஒருங்கிணைந்த; பல மொழிகள் கலந்த; *v.* ஒன்றுபடு; கல; பாதரசத்துடன் சேர்.

amalgama'tion, *n.* கூட்டு, சேர்ப்பு, இணைப்பு, கலவை.

amal'gamative, *a.* இணையும் பாங்குள்ள.

aman'dine, *n.* வாதுமைப் புரதம்; வாதுமையிலிருந்து செய்யப்படும் பாலேடு கலந்த ஒருவகை இனிப்புத் தின்பண்டம்.

Amani'ta, *n.* நச்சுக்காளான் இனம்.

amanuen'sis, *n.* கற்றுச்சொல்லி; சொல்வதை எழுதுபவர், படியெடுக்கும் செயலாளர்; *pl.* amanuen'ses.

am'arant, am'aranth, *n.* வாடா மலர்; கீரைத்தண்டு வகை.

amaran'tine, *a.* வாடாத; அழியாத; கீரைத்தண்டு வகையைச் சார்ந்த.

amaryll'is, *n.* இலையுதிர் காலத்தில் மலரும் ஒருவகைப் பூண்டு.

amass', *v.* பேரளவில் சேர், பெருந்திரளாகக் குவி.

amass'ment, *n.* திரட்டல், குவித்தல்.

am'ateur, *n.* பொழுதுபோக்குக் கலைஞன், அருங்கலை விநோதன்.

amateur'ish, *a.* நிறைவற்ற, குறைபாடுடைய.

am'ative, *a.* காதல் பாங்குள்ள.

am'atol, *n.* விசையாற்றல் மிக்க வெடிமருந்து வகை

am'atory, *a.* காதலுக்குரிய; காதல் விளைக்கிற; காதலருக்குரிய.

amauros'is, *n.* பார்வை நரம்புக்கோளாற்றினால் உண்டாகும் குருட்டுத்தன்மை, கண்ணின் புறத்தோற்றத்தினால் மாறுதல் தோன்றுத குருட்டுத்தன்மை.

amaurot'ic, *a.* கண்ணின் புறவுறுப்புச் சரியாயிருந்தும் முழுக்குருடாயிருக்கிற.

amaze', *v.* திகைக்கவை, வியப்படையச் செய்.

amaz'edly, *adv.* மலைப்புடன்.

amaz'edness, amaze'ment, *n.* திகைப்பு, வியப்பு.

amaz'ing, *a.* வியப்புக்கேதுவான.

amaz'ingly, *adv.*=amazedly.

Am'azon, *n.* சூர்மகள்; ஆண்டகைப் பெண்; கதைகளில் வரும் வீராங்கனை; சண்டை போடும் இயல்புள்ளவள்; தென் அமெரிக்கப் பேரியாறு.

Amazon'ian, *a.* சூர்மகளுக்குரிய; ஆண்தன்மையுள்ள; சண்டை போடும் இயல்புடைய.

amba'ges, *n. pl.* சுரிவழி, சுற்றுவழி.

amba'gious, *a.* சுற்றி வளைந்த.

am'ban, *n.* சீனப் பேரரசின் புறமாகாண நிலைப்பேராள்.

ambass'ador, *n.* நிலைத்தூதர், ஒருநாட்டின் சார்பாக வேற்று நாட்டு அரசவையில் நிலையாக இருக்கிற பிரதிநிதி; அரசாங்கச் செய்தியாள், அரசு ஓலையாள்.

ambassador'ial, *a.* அரசுத்தூதருக்குரிய.

ambass'adress, *n.* அரசியல் தூதணங்கு, அரசுத்தூதரின் மனைவி, அரசுப்பெண்தூதுவர்.

am'ber, *n.* ஓர்க்கோலை, அம்பர், நிமிளை.

am'bergris, *n.* மீனம்பர்; வெப்பமண்டலக்கடல்களில் மிதப்பதும் ஒருவகைத் திமிங்கிலத்தின் குடலில் காணப்படுவதுமான மெழுகுப்பொருள்.

am'bery, *a.* அம்பரின் இயல்புடைய.

am'biance, *n.* கலைத்துறையில் துணைப்பொருட் பின்னணி; துணைப்பொருள் அமைவு.

ambidex'ter, *n.* இரு கைகளையும் ஒரேவகையாக ஆளக் கூடியவர்; இரு வேறு செயலுடையவர்; பித்தலாட்டஞ் செய்பவர்; *a.* இரு கைகளையும் ஒரேவிதமாகப் பயன்படுத்தக் கூடிய; இரண்டகமான.

ambidexte'rity, *n.* இரு கைகளையும் ஒப்பப் பயன்படுத்தும் ஆற்றல்.

ambidex'terous, ambidex'tral, ambidex'trous, *a.* இரு கைகளையும் ஒரே வகையாகப் பயன்படுத்தக்கூடிய.

am'bience, *n.* சூழல்; சூழ்விளைவு; சுற்றுப்புறத் தோற்றம்.

am'bient, *n.* சுற்றியிருப்பது; காற்று; வானம்; *a.* சுற்றிச் செல்லுகிற, சூழ்ந்துள்ள; எம்மருங்கும் வளைந்துள்ள.

ambigu'ity, *n.* இரு பொருள்; பல பொருள்களுக்கிடந்தரும் சொல்; பொருள் தெளிவின்மை.

ambig'uous, *a.* ஐயப்பாடான; தெளிவற்ற; உறுதியற்ற; இரட்டுற மொழிதலான.

am'bit, *n.* வளைவு, சுற்று; சுற்றெல்லை; புறவெல்லை; சுற்றுப்பரப்பு எல்லை.

ambi'tion, *n.* உயரவா, பேராவல்; புகழார்வம், சிறப்படைய விருப்பம்; அடைய விரும்பும் குறிக்கோள்.

ambi'tious, *a.* பேராவலுடைய; ஆர்வம் நிரம்பிய, பெரு விருப்பத்தைக் காட்டுகிற; ஒன்றைப்பெறும் அவாவுடைய; பகட்டான.

ambiv'alence, ambiv'alency, *n.* இருமுக உணர்ச்சிப் போக்கு, இருமனப்போக்கு.

ambiv'alent, *a.* இருமுக உணர்ச்சிப்போக்குடைய; இருமுகப் போக்கில் ஒன்றுடைய.

am'bivert, *n.* உள்முக உணர்ச்சிக்கும் புறமுக உணர்ச்சிக்கும் இடைநிலைப்பட்டவர்.

am'ble, *n.* ஒருசிறை இருகால் தூக்கி ஆடி வருகிற குதிரையின் நடை; கவலையற்ற நடை; *v.* கெச்சை மிதிமிதித்து நட; கெச்சைக் குதிரையிவர்ந்து செல்; குதிரையைத் தன் போக்கில் போகவிட்டு அதன்மேல் ஏறிச்செல்; கெச்சை மிதிமிதித்துப் போகும் குதிரையைப்போல் நட.

amblop'ia, *n.* பார்வை மந்தம்.

amblyop'ic, *a.* பார்வை மந்தமுடைய.

am'bo, *n.* தொடக்ககாலக் கிறித்தவக் கோயில்களின் சொற்பொழிவு மேடை.

amboy'na, amboy'nawood, *n.* ஆசியாக்கண்டத்து வண்ண மரக்கட்டை வகை.

ambro'sia, *n.* சாவா மருந்து, அமிழ்தம், நறுஞ்சுவைப் பொருள்; தேறல்; மகரந்தம்.

ambro'sial, *a.* நறுஞ்சுவையுடைய; இறவாத இனிய மணமுள்ள; விண்ணிற்குரிய.

ambro'sian, *a.* அமிழ்தத்துக்குரிய; நான்காம் நூற்றாண்டில் மிலானில் (Milan) இருந்த சமயத்தலைவர் அம்புரோசு (St. Ambrose) என்பவரோடு தொடர்புடைய.

am'bry, *n.* திருக்கலமாடம், கிறித்தவக் கோவில் சுவர்களில் வழிபாட்டுக் கலங்களை வைப்பதற்காக அமைந்துள்ள மாடம்.

ambs-ac'e, *n.* இரண்டு பகடைப் புள்ளிகள்; இரு தாயம்; மிகக் குறைந்த எண்ணிக்கை தரும் பகடை வீச்சு, துரதிர்ஷ்டம்; பயனற்ற தன்மை.

am'bulance, *n.* இயங்கு மருந்தகம், நோயாளி வண்டி, படையைப் பின்பற்றிச் செல்லுகிற மருந்து வண்டி; காய மடைந்தோரைப் போர்க்களத்தினின்றும் எடுத்துச் செல்வதற் கான பெரிய வண்டி; *a.* இயங்கு மருந்தகமாயிருக்கிற.

am'bulant, *a.* நடக்கிற, இடம்விட்டுப் பெயர்கிற.

am'bulatory, *n.* உலாவிடம்; நடைப்பாதை, வேய்சாலை; *a.* நடப்பதற்குரிய, நடப்பதற்கென அமைக்கப்பட்ட; இயங்கு கிற; நிலையற்ற, மாறுகிற.

am'bury, *n.* குதிரையின் உடலிலுள்ள குருதிநிறப் புடைப்பு; கிழங்கு வகைகளின் வேர் நோய்.

ambuscade', *v.* = ambush.

am'bush, *n.* பாயப் பதுங்குதல்; பதுங்கிடம்; பதுங்கிப் பாய்வோர்; *v.* தாக்குதற்காகப் பதுங்கியிரு; படைவீரர்களை ஒளித்துவை; ஒளிந்து காத்திரு; வழிப்பறி செய்.

ame damnee, (பிர.) *n.* கையாள், கைப்பாவையாயிருப்பவர், ஒருவர் விருப்பத்திற்கேற்பக் குருட்டுத்தனமாய் நடப்பவர்.

ameer', *n.* முஸ்லிம் இளவரசர் சிலரது பட்டம்.

amel'iorate, *v.* சீர்ப்படுத்து, நல்லதாக்கு, உயர்ந்ததாக்கு; சீர்ப்படு.

ameliora'tion, *n.* நலப்படுத்துதல்; உயர்வாக்குதல்; சீர்ப் பாடு.

amel'iorative, *a.* செம்மைப்படுத்தும் இயல்புடைய, மேன் மைப்படுத்தும் தன்மையுடைய.

amen', *int.* அங்ஙனமே ஆகுக; *v.* சரியென்று சொல்; மனப்பூர்வமாய் உறுதிப்படுத்து.

amen'able, *a.* கட்டுப்பட்ட; உட்பட்ட; பொறுப்பாளரா யுள்ள; இணங்கத்தக்க, வழிக்குக் கொண்டுவரக்கூடிய, எளிதில் ஆளாக்கத்தக்க.

amenabil'ity, amen'ableness, *n.* கட்டுப்படுந்தன்மை, எளிதில் இணங்குந்தன்மை.

amend', *v.* தீமையகற்று; பிழை திருத்து; திருத்தம் செய்; சீர்ப்படுத்து; சீர்ப்படு.

amend'able, amend'atory, *a.* திருத்தஞ் செய்கிற.

amende, (பிர.) *n.* அபராதம், நட்ட ஈடு.

amende honorable, (பிர.) *n.* தீங்கிழைக்கப்பட்டவர் மானத் துக்கு மாறுபடாதவகையில் குற்றத்தினை ஒப்புக்கொள்ளுதல்.

amend'ment, *n.* திருத்தம், சீர்மை; கூட்டத்தில் கொண்டு வரப்படும் பதில் திட்டம்; மாற்றுத் தீர்மானம்.

amends', *n.* ஈடு, கழுவாய், பரிகாரம்.

amen'ities, *n. pl.* வசதிகள்; இனிய சிறப்பியல்புகள்.

amen'ity, *n.* வசதி, இன்பச் செவ்வி; இனிய வாய்ப்பு; இனிமை; குடிமை; பாடறிதல்.

amenorrhoe'a, *n.* மாதவிடாய் தோன்றுமை.

a men'sa et to'ro, (ல.) *adv.* உணவு பாயல் முதலாக.

a'ment[1], ament', *n.* வளர்ச்சி குன்றிய மனத்தை உடையவர்.

a'ment[2], *n.* நெருக்கமான பூங்கொத்து; *pl.* amen'ta.

amenta'ceous, amen'tal, *a.* வஞ்சமலர்க் கொம்புக்குரிய.

amen'tia, *n.* மனவளர்ச்சியிற் குறைபாடு.

amentif'erous, *a.* பூங்கொத்துத் தோற்றுவிக்கிற.

amen'tiform, *a.* பூங்கொத்தின் வடிவுடைய.

amen'tum, *n.* = ament.

amerce', *v.* அபராதமிடு; ஒறு; இழக்கப்பண்ணு.

amer'ciable, *a.* தண்டிக்கத்தக்க.

amerce'ment, amer'ciament, *n.* அபராதம் விதித்தல்; அபராதம்.

Ame'rican, *n.* ஐரோப்பியர் வழிவந்த அமெரிக்க நாட்டவர்; அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடி; *a.* அமெரிக்கக் கண்டத் தைச் சேர்ந்த; அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குரிய.

Amer'icanise, *v.* அமெரிக்கக் குடியாக்கு; அமெரிக்க இயல் புடையவராக்கு; அமெரிக்கப் பாங்குடையவராகு; அமெரிக்க மொழி நடையைப் பின்பற்று.

Ame'ricanism, *n.* அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கேயுரிய சொல் அல்லது சொற்றொடர்; அமெரிக்க ஐக்கிய நாடுகளிடம் பற்று; அமெரிக்கக் குடிமகனுக்குரிய நிலை.

Ame'ricanize, *v.* = Americanise.

ameri'cium, *n.* யூரேனியத்தைவிட முஞ்சப்பான கதிரியக்க முடைய உலோகத் தனிமம்.

ames-ac'e, *n.* = ambs-ace.

am'ethyst, *n.* செவ்வந்திக்கல்.

amethys'tine, *a.* செவ்வந்திக்கல்லுக் குரிய.

am'iable, *a.* கேண்மைப்பாங்குள்ள; அன்பு கொள்ளத்தக்க, மனத்துக்கினிய.

amiabil'ity, am'iableness, *n.* கேண்மைப்பாங்கு, அன்பு கெழுநிலைமை.

amian'thus, amian'tus, *n.* இழையாகப் பிரியக்கூடிய மிக நேர்த்தியான கல்நார் வகை; இழைவான பச்சைக்கல் வகை.

am'ic, *a.* (வேதி.) நவச்சார ஆவிக்குரிய.

am'icable, *a.* நட்பிணக்கமான; நட்பு முறையான; நட்புப் பாங்குடன் செய்யப்பட்ட.

amicabil'ity, am'icableness, *n.* நட்பாங்கிழமை.

amice, *n.* ரோமன் கத்தோலிக்கக் குருக்கள் கோயிற் சடங்குகளின்போது தலையில் அல்லது தோளில் அணியும் சதுரச் சல்லாத்துணி; கிறித்தவக் குருமாரது தொப்பி அல்லது தலைச்சீரா அல்லது கழுத்துப்பட்டை; பிரான்சிலுள்ள கிறித்தவக் குருக்கள் இடக்கையிலணியும் வில்லை.

amic'us cur'iae, (லத்.) *n.* (சட்.) நீதிமன்றத்தில் நீதியை எடுத்துக்கூறும் நடுநிலை அறிவுரையாளர்.

amid', *prep.* இடையில்; இடைநிகழ்வாக.

am'ide, *n.* (வேதி.) நவச்சாரச் சேர்மான வகை.

am'idin, *n.* மாச்சத்தின் கரையத்தக்க கூறு; கரைசல் நிலையி லுள்ள மாச்சத்து.

am'idol, *n.* நிழற்படத்தை உருப்படுத்தும் கருவி.

amid'ships, *adv.* கப்பல் நடுவில்.

amidst', *prep.* = amid.

aminobu'tene, *n.* நோவு தணிக்கும் மருந்து வகை.

ami'r, *n.* = ameer.

amiss', *adv.* எதிர்பார்த்த அளவிற் குறைந்து; ஒழுங்கு மீறி; தவருக; இசைவு கேடாக.

am'ity, *n.* நட்பு; நட்புறவு; நல்லெண்ணம்.

am'meter, *n.* மின்னுற்றல்மானி.

am'monia, *n.* நவச்சார ஆவி; நவச்சார ஆவிக்கரைசல்; (வேதி.) நவச்சார ஆவியை ஒத்த சேர்மம்.

ammon'iac, ammoni'acal, *a.* நவச்சார ஆவித்தன்மை வாய்ந்த; நவச்சார ஆவிக்குரிய.

ammon'iated, *a.* நவச்சார ஆவிகலந்துள்ள.

amm'onite, *a.* மரபிறந்துபோன புதைபடிவ நத்தை வகையின் தோடு.

ammon'ium, *n.* நவச்சியம்.

ammuni'tion, *n.* படைத்தளவாடம், சிறப்பாக வெடிமருந்து குண்டு முதலியன.

amnes'ia, *n.* நினைவிழப்பு, மறதி.

am'nesty, *n.* அரசியல் குற்ற மன்னிப்பு; கண்டுங்காணாதது போலிருத்தல்; மறதி; *v.* பொது மன்னிப்பு அளி.

am'nion, *n.* பிறப்பதற்குமுன் கருவை அடுத்துச் சுற்றியுள்ள சவ்வு; *pl.* am'nia.

amoeb'a, *n.* வயிற்றுடலி, ஒழுகுடலுடைய அணு உயிரினம்; *pl.* amoeb'ae.

amoebae'an, *a.* இடையிட்ட விடைமுறையான.

amoeb'iform, *a.* வயிற்றுடலி வடிவமுள்ள.

amoeb'oid, *a.* வயிற்றுடலி போன்ற.

amok', *adv.* பித்துப் பிடித்து.

among', amongst', *prep.* உள், இல், இடையில், சூழப் பட்டு; குழுவிற்பட்டு; தொகுதியில் இணைந்து.

Amontilla'do, *n.* இனிய குடி வகை.

amo'ral, *a.* ஒழுக்கத்துறைச் சார்பற்ற; ஒழுக்கஞ் சாராத.

amorce', *n.* வெடிமருந்து திணிப்பு; விளையாட்டுத் துப்பாக்கி யின் அமுக்க வாயுறை.

am'orist, *n.* காதலர்; நவநாகரிகர்; காதல் எழுத்தாளர்; பெண் வேட்டையாளர்.

am'orous, *a.* காதலிக்கும் பாங்குள்ள; மோகங்கொண் டுள்ள; காதலுக்குரிய.

amorph'ism, *n.* வடிவற்ற நிலை; மணி உருப்பெரு நிலை.

amorph'ous, *a.* வடிவமற்ற; ஒழுங்கற்ற; (வேதி.) மணி உருவற்ற.

amortisa'tion, *n.* கடன்தீர்நிதி மூலமாகக் கடன் குறைத்தல்.

amort'ise, *v.* பின்னும் மாற்ற முடியாத நிலையில் சொத்துரி மையை மாற்று; கடன்தீர்நிதி மூலமாகக் கடனைத்தீர்.

amortiza'tion, *n.* = amortisation.

amort'ize, *v.* = amortise.

amount', *n.* மொத்தம், தொகை; முழு மதிப்பு; அளவு; *v.* மொத்தமாகு; தொகையாகு; சரியாகு.

amour', *n.* காதற்செயல்; காதல் விளையாட்டு; மறை காதல் தொடர்பு.

amourette', *n.* சிறு காதல் நிகழ்ச்சி.

amour-propre, (பிர.) *n.* தன்மதிப்பு.

ampelop'sis, *n.* முந்திரிக் கொடி வகை.

am'pere, *n.* (மின்.) மின்னோட்ட அலகு, ஒரு மின் ஏகம் ஓர் 'ஓம்' மூலமாகச் செலுத்தக்கூடிய மின்னோட்டம்.

ampersand', *n.* உம்மைக் குறி (&).

Amphib'ia, *n. pl.* நீர் நில வாழுயிர், தவளைகள்போல் நிலம் நீர் இரண்டிலும் வாழும் இயல்புடைய உயிரினங்கள்; படி முறை வளர்ச்சியில் ஊர்வனவற்றிற்கும் மீன் வகைகளுக்கும் இடைப்பட்ட முதுகந்தண்டுடைய பிராணிகள்.

amphib'ian, *n.* நில நீர்வாழ் உயிரினம்; நிலநீர் இரண்டிலும் இயங்கவல்ல போர்க்கலம்; *a.* நில நீர்வாழ் உயிரினம் சார்ந்த; நீர்நிலம் இரண்டிலும் இயங்கவல்ல.

amphibiol'ogy, *n.* விலங்கு நூலில் நில நீர்வாழ் உயிர்களைப் பற்றிய பிரிவு.

amphib'ious, *a.* நிலத்திலும் நீரிலும் வாழ்கிற; நில நீர்த் தொடர்புடைய; இரண்டு வகுப்புக்களோடு தொடர்பு கொண் டிருக்கிற; இருவேறு வாழ்வுடைய.

am'phibole, *n.* தகட்டியல் கனிப்பொருள் வகை.

amphib'olite, *n.* தகட்டியல் கனிப்பொருட் பாறைவகை.

amphibolo'gical, *a.* சொற்பிறழ்வான.

amphibol'ogy, *n.* சிலேடை; இரட்டுற மொழிதல்; தெளி வற்ற உரை.

am'phibrach, *n.* (இலக்.) குறில் நெடில் குறில் என இணைந்த மூவசைச்சீர்.

amphictyon'ic, *a.* பண்டைக் கிரேக்க அரசுகளின் கூட் டவைப் பிரதிநிதிகளுக்குரிய.

amphic'tyons, *n. pl.* பண்டைக் கிரேக்க அரசுகளின் கூட்டவைக்குச் செல்லும் பிரதிநிதிகள்

am'phigam, *n.* (தாவ.) தெளிவான பாலுறுப்புக்களற்ற செடி.

am'phigory, amphigour'i, *n.* போலி ஏடு; பிதற்றுரை ஏடு.

amphimix'is, *n.* (உயி.) பாலணுக்கலப்பு; பால் சார்ந்த இனப்பெருக்கம்; தாய்தந்தையருடைய பண்புக் கூறுகளின் கலப்பு.

amphiox'us, *n.* முதுகெலும்பின் கருமூலத்தடங்களையுடைய முதுகெலும்பில்லாத மீனினவகை.

am'phipod, *n.* நீரருகே வாழும் நண்டு போன்ற உயிரினம்; *pl.* am'phipoda.

amphip'rostyle, *a.* இரு மனைகளிலும் நுழைமாடமுள்ள.

amphisbaen'a, *n.* கதைகளில் வரும் இருதலைப்பாம்பு; (வில.) பாம்பு போன்ற அமெரிக்கப் பல்லியினம்.

am'phitheatre, *n.* சுற்றுமாளிகையரங்கம், திறந்தவெளி யான நடுவிடத்தைச் சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக எழும் இருக்கைகளைக் கொண்ட வட்டமான அல்லது நீள்வட்டமான கட்டிடம்; பொது விளையாட்டரங்கு; பொதுக்காட்சிக் கூடம்; வட்டரங்கம்; அரங்கின் பகுதி; வடிவத்தில் பொது விளையாட்டரங்கினை யொத்த ஓரிடம்; படியடுக்கான மலை வார இயற்கைக் காட்சி; போட்டி நடத்துமிடம்.

amphithe'atral, amphitheat'rical, *a.* சுற்றுமாளிகை யரங்கத்தைச் சார்ந்த; வட்டரங்கம் போன்ற.

Amphit'ryon, *n.* விருந்தினர்க்கு இன்முகங்காட்டி மகிழ் விப்பவர்.

am'pholyte, *n.* இருவழி மின்பிரி, மின் கூறுபாட்டில் காடிப் பொருளாகவோ அடிமூலப் பொருளாகவோ அல்லது நேர்மின் எதிர்மின்னுகவோ எவ்வழியும் செயலாற்ற வல்ல மின்பிரி பொருள்.

am'phora, *n.* இரண்டு கைப்பிடிகளுள்ள ரோம அல்லது கிரேக்க கலம்; *pl.* am'phorae, am'phoras.

ampho'ric, *a.* (மரு.) குப்பிக்குட் பேசுவதனால் உண்டாகும் ஒலியைப் போன்ற.

amphoter'ic, *a.* இருவழியிலும் அமைந்த; இருவழிமின் செயலுடைய, மின் கூறுபாட்டில் காடிப்பொருளாகவோ அடிமுதல் பொருளாகவோ நேர்மின் எதிர்மின்னுகவோ இரு வழியும் செயலாற்ற வல்ல.

am'ple, *a.* இடமகன்ற, அகலமான; தாராளமான, மிகுதி யான; பெரிய; மொத்தையான; போதிய; நெடு நீளமான.

am'pliative, *a.* (அள.) நுண்ணியல் கருத்தினை விரித்து அகலமாக்குகிற.

amplifica'tion, *n.* விரிவு, பெருக்கம்.

amplifi'catory, *a.* பெருக்குந்தன்மையுள்ள.

am'plifier, *n.* அதிகப்படுத்துபவர்; பார்வைபடியும் பரப்பினை அதிகப்படுத்தும் கண்ணாடி வில்லை; (மின்.) ஒலி அல்லது மின் தாக்குதலின் ஆற்றலை அதிகப்படுத்தும் கருவி; ஒலி பெருக்கி.

am'plify, *v.* அதிகமாக்கு; பெருக்கு; விரிவாக விளக்கு.

am'plitude, *n.* அகலம், நிறைவு, பெரும் பரப்பு; வீச்சு; வளமை; மதிப்பு; மேன்மை; அதிர்வின் உச்ச இழிபெல்லை வேறுபாட்டளவு; (வான்.) கோளங்கள் எழுகிற இடத் துக்கும் அடைகிற இடத்துக்கும் நேர்கிழக்கு மேற்கிலிருந்து ஏற்படும் தூரம்; (இய.) அதிர்வு அலையின் வீச்சு; ஊசல் குண்டின் வீச்சு; (தொ.) amplitude modulation, வீச்சின் ஏற்ற இறக்கம்.

am'poule, *n.* தோலினுக்குள் செலுத்தப்படும் ஊசி மருந்தினை உடைய கண்ணாடிச் சிமிழ்.

ampull'a, *n.* இரண்டு கைப்பிடிகளுடைய குண்டிகை; வழி பாட்டுச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுங் கலம்; (உயி.) ஒரு விலங்கின் உடலிலுள்ள குழாய் அல்லது பையின் விரிந்த கடைப்பகுதி; *pl.* ampull'ae.

am'putate, *v.* வெட்டியெடு; துண்டி.

amputa'tion, *n.* உறுப்பினை அறுத்து எடுத்துவிடல்.

am'putator, *n.* துண்டிப்பவர்.

amputee', *n.* உறுப்புத் துண்டிக்கப்பெற்றவர்.

am'track, *n.* நீர் நிலம் இரண்டிலும் இயங்கும் சுற்றுருளை யிட்ட மோட்டார் இறங்கு கலம்.

amuck', *adv.* பித்துப்பிடித்து; (தொ.) run amuck, குருதி வெறிகொண்டு இங்குமங்கும் ஓடு.

am'ulet, *n.* தாயத்து.

amus'able, *a.* மகிழ்ச்சியூட்டத்தக்க.

amuse', *v.* கடுஞ்செயலிலிருந்து திருப்பு; வேடிக்கை காட்டு; மனக்கற்பிதங்களைத் தொட்டெழுப்பு.

amuse'ment, *n.* பொழுதுபோக்கு; விளையாட்டு; மனத்துக் கினிய மாற்றுச் செயல்; சிரிப்பூட்டும் கிளர்ச்சி; வேடிக்கை.

amus'ing, *a.* வேடிக்கையான; மகிழ்ச்சியூட்டுகிற.

amus'ive, *a.* மகிழ்ச்சியூட்டும் ஆற்றலுடைய.

amygdal'ic, *a.* வாதுமை சார்ந்த.

amyg'dalin, *n.* வாதுமை முதலிய கொட்டைகளிலிருந்து எடுக்கப்படும் வெல்லச்சத்து.

amyg'daloid, *n.* 'வாதுமைப்பாறை', வாதுமை வடிவுடைய உட்புழையிடங்களில் கனிப்பொருட்கள் செறிந்துள்ள அனற் பாறை வகை; *a.* வாதுமை வடிவுள்ள.

amyg'dule, *n.* எரிபாறைக்குழம்பில் கனிப்பொருள் நிறைந்த ஆவிக்குமிழியிடம்.

am'yl, *n.* (வேதி.) வெறிய வடிப்பில் சிறிதளவில் கிடைக்கும் நச்சுச் சத்து வகை.

amyla'ceous, *a.* மாச்சத்துக்குரிய; மாச்சத்துப்போன்ற; மாச்சத்துக்கொண்ட.

am'yloid, *n.* மாச்சத்து உணவு; *a.* மாச்சத்துக்கொண்ட.

amylop'sin, *n.* மாச்சத்தைச் சர்க்கரையாக்கும் கணைய நீர்.

an, *art.* ஓர்.

an'a, *n.* வாய்மொழித் தொகுதி, ஒருவர் உரையாடல்கள் நிகழ்ச்சிக்குறிப்புக்கள் முதலியவற்றின் தொகுதி.

anabaptise', *v.* சமய மறுஇணைவு விணையாற்று.

anabap'tism, *n.* மறு ஞானஸ்நானக் கோட்பாடு, வயது வந்தபின் சமய இணைவு விணையாற்றுவதே நேர்மை என்றும் குழந்தைப் பருவத்தில் பெயரீட்டு விழாவையொட்டி அவ் விணை நிகழ்ந்திருந்தாலும் வயதுவந்தபின் திரும்பவும் அவ் விணை நிகழ்த்தியே ஆகவேண்டும் என்றும் கொள்ளுங் கோட்பாடு.

anabap'tist, *n.* மறு ஞானஸ்நானக் கோட்பாட்டாளர், குழந்தைப் பருவத்தில் சமய தீக்கை ஆற்றி இருந்தாலும் வயதுவந்தபின் மறு தீக்கை ஆற்றியே ஆகவேண்டுமென்னும் கோட்பாட்டாளர்.

anabaptist'ic, anabaptis'tical, *a.* சமய மறு தீக்கைக் கோட்பாடு சார்ந்த.

an'abas, *n.* செதில்களால் மரமேறும் மீன்.

anab'asis, *n.* மேலே போதல்; பகைவர் அக எல்லைக்குள் மேற்செலவு; பாரசிகப் பேரரசன் சைரஸ் (Cyrus) ஆசியப் படையெழுச்சி பற்றிக் கிரேக்க வரலாற்றுசிரியர் செனொபன் (Xenophon) எழுதிய ஏடு.

anabat'ic, *a.* மேலெழுந்து செல்கிற.

An'ableps, *n.* நீரிலும் காற்றுவெளியிலும் பார்க்கத்தக்க கண்ணமைப்பும் உயிர்ப்புப்பையும் உடைய மீனினம்.

anabol'ic, *a.* உயிர்ப்பொருள் கட்டமைப்புச் சார்ந்த, உயிர்ச் சத்து அடிப்படையாக உயிர்ப்பொருள் கட்டமைவதற்குரிய, உயிர்ப்பொருள் ஆக்குதற்கு உரிய.

anab'olism, *n.* (உயி.) உயிர்ச்சத்தை அடிப்படையாகக் கொண்ட சேர்மான வகைகள் வேதியியல் முறையில் உரு வாதல், உயிர்ப்பொருள் கட்டமைப்பு.

an'abranch, *n.* ஆற்றிலிருந்து பிரிந்து ஆற்றிலேயே திரும்ப வந்து விழும் ஓடை.

anacathar'sis, *n.* வாந்தி எடுத்தல்.

anacathar'tic, *n.* வாந்தி மருந்து; *a.* குமட்டுகிற, வாந்தி எடுக்கத் தூண்டுகிற.

anachron'ic, *a.* கால வரிசைக்கு ஒத்துவராத; பழமைப் பட்டுப்போன.

anach'ronism, *n.* காலக்கணிப்பு வழு; கால இட முரண்பாடு; பிற்காலப் பண்புகளை முற்காலத்திற்கும் முற்காலப் பண்பு களைப் பிற்காலத்திற்கும் தவருக ஏற்றிக் குழப்புதல்; காலக் குளறுபடி; பழமைப்பட்டுப்போன பொருள்; காலங் கடந்து விட்ட செய்தி; தற்காலத்திற்கு ஒவ்வாத ஒன்று.

anachronis'tic, anach'ronous, *a.* கால வரிசைக்கு ஒவ் வாத, கால முரண்பாடான.

anaclas'tic, *a.* ஒளிக்கோட்டம் சார்ந்த, பட்டுத்தெறிக்கிற.

anacolu'thia, *n.* சொல் தொடரியைபின்மை, வாக்கிய வழு, வாக்கியம் முன்பின் ஒத்திசையாமை.

anacoluth'on, *n.* ஒத்தியையாது பிழைபட்ட வாக்கியம்; *pl.* anacolu'tha.

anacon'da, *n.* மாசுணம், மலைப்பாம்பு வகை, பெரிய விலங்கு களையும் உடலை வரிந்து இறுக்கிக் கொல்லத்தக்க பாம்பு வகை.

anacreon'tic, *n.* கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் வாழ்ந்த அனக்கிரியான் (Anacreon) என்ற கவிஞன் வழங்கிய பா வகை; *a.* அனக்கிரியானைப் பின் பற்றிய; காதற்சுவை செறிந்த; களியாட்டப் பண்புடைய.

anacru'sis, *n.* பாட்டின் தொடக்கத்தில் வரும் அழுத்த மில்லாத அசை; *pl.* anacru'ses.

anacrus'tic, *a.* பாடலின் முதலில் அழுத்தமில்லாத அசை வருகிற.

an'adem, *n.* தலைமாலை, கண்ணி.

anad'romous, *a.* முட்டையிட ஆற்றோட்டத்தை எதிர்த்துச் செல்லுகிற.

anaem'ia, *n.* (மரு.) இரத்தச்சோகை, குருதியின்மை, இரத் தத்தில் சிவந்த நுண்மங்கள் குறைபடுதல்; வெளிறிய தோற்றம்.

anaem'ic, *a.* குருதிச் சோர்வுடைய; இரத்தச்சோகை உள்ள; வெளிறிய தோற்றமுடைய, நலிந்த, கிளர்ச்சியற்ற, தளர்ந்த.

ana'erobe, *n.* நேரடியாக உயிர்வளியில்லாமல் வாழத்தக்க உயிர்வகை.

anaerob'ian, anaerob'ic, *a.* நேரடியாக உயிர்வளியில் லாமல் வாழ்கிற; உயிர்வளியில்லாமல் வாழும் உயிர்வகை களின் செயல் விளைவான, உயிர் மாற்றியலான; உயிர்வளி யில்லாமல் வாழும் உயிரினத்தின் செயல் சார்ந்த.

anaerobio'sis, *n.* உயிர்வளியில்லா உயிர் வாழ்வு.

anaesthe'sia, anaesthe'sis, *n.* உணர்விழப்பு, உணர்ச்சி மயக்கம்; உணர்ச்சியின்மை, நோவுணராமை.

anaesthet'ic, *n.* மயக்க மருந்து, உணர்வின்மை ஊட்டும் பொருள்; *a.* உணர்ச்சி மயக்கமூட்டுகிற; உணர்ச்சியின்மை சார்ந்த.

anaes'thetise, *v.* மயக்க மருந்து கொடு; மருந்து கொடுத்து மயக்கம் உண்டுபண்ணு; உணர்ச்சியில்லாது ஆக்கு.

anaes'thetist, *n.* மயக்க மருந்து கொடுப்பவர்.

anaes'thetize, *v.* = anaesthetise.

an'aglyph, *n.* பள்ளம்படச் செதுக்கப் பட்ட அணிமணி வகை; விழித்திரை வேற்றுமை விம்பங்கள், எதிர் நிரப்பு இணை வண்ணக் கண்ணாடிமூலம் ஒரே படமாகப் பார்க்கத்தக்க இரு படப் படிவங்கள், ஈரிணை வண்ணப்படம்.

anaglyph'ic, anaglyp'tic, *a.* ஈரிணை வண்ணமான, ஈரிணை வண்ணப்படம் சார்ந்த.

anagno'risis, *n.* ஆளடையாளம் அறிதல் மூலம் நாடகம் நடுச் செறிவு தளரப்பெற்று முன்னேறுதல்.

anago'ge, *n.* மறை நிலைப்பொருள்கோள், ஆன்மிக விளக்கம், உருவக உட்பொருள் விரித்தல்.

anago'gic, anago'gical, *a.* மறை உட்பொருள் விளக்குகிற.

an'agogy, *n.* = anagoge.

an'agram, *n.* கரந்துறை மொழி, ஒரு சொல்லின் எழுத்துக்களை மாற்றியமைத்து ஆக்கப்படும் வேறொரு சொல்; *v.* சொற் சிதைத்துக்கூட்டு, சொல்லின் எழுத்துமுறை மாற்றிப் புதுச் சொல்லாக்கு.

anagrammat'ic, anagrammat'ical, *a.* மற்றொரு சொல்லின் முறை மாறிய எழுத்துக்களால் ஆன.

anagramm'atise, *v.* சொற் சிதைத்துக் கூட்டு, சொல்லின் எழுத்து முறை மாற்றிப் புதுச்சொல்லாக்கு.

anagramm'atism, *n.* சொல்லின் எழுத்து மாற்றியமைக்கும் முறை.

anagramm'atist, *n.* சொல்லின் எழுத்துக்களை மாற்றி அமைப்பவர், ஒரு சொல்லின் எழுத்து முறையை மாற்றிப் புதுச்சொல் ஆக்குபவர்.

anagramm'atize, *v.* = anagrammatise.

an'al, *a.* எருவாய்க்கு உரிய, ஆசனவாயை அடுத்த.

anal'cime, anal'cite, *n.* (மண்.) பாறை வகை, கல் வகை.

analec'ta, *n. pl.* இலக்கியத் துணுக்குகளின் தொகுப்பு.

analec'tic, *a.* இலக்கியத் தொகுப்பான.

an'alects, *n.* = analecta.

analep'tic, *n.* நலமூட்டும் மருந்து, ஊக்க மருந்து; *a.* நலி வகற்றுகிற, நலமூட்டுகிற; ஆறுதலளிக்கிற.

analges'ia, *n.* நோவின்மை, உணர்ச்சியின்மை.

analges'ic, *n.* நோவகற்றும் மருந்து; *a.* உணர்ச்சியின்மை உண்டுபண்ணுகிற.

analo'gic, *a.* ஒப்புமை சார்ந்த.

analo'gical, *a.* ஒப்புமையுடைய; ஒப்பான.

anal'ogise, *v.* ஒப்புமைப்படுத்திக் காட்டு; ஒப்புமை மூலம் விளக்கு; உவமை பயன்படுத்து; ஒப்பாயிரு, ஒத்திசை.

anal'ogist, *n.* ஒப்புமை காண்பவர்; உவமையைப் பயன் படுத்துபவர்; ஒப்புமை நாடுபவர்; சொற்களில் பொருள் ஒப்பு நாடுபவர்.

anal'ogize, *v.* = analogise.

anal'ogous, *a.* ஒத்த, ஒப்புமையுடைய, ஒத்திசைவான; இனமொத்த; ஒத்த தோற்றமுடைய, போன்றிருக்கிற; வெப்பத்தால் நேர்மின் ஊட்டப்பட்ட.

an'alogue, *n.* ஒத்த சொல்; ஒப்புடைய பொருள்; (உயி.) ஒத்த செயல்வகையுடைய உறுப்பு, இனச்சினை.

anal'ogy, *n.* ஒப்பு, ஒத்திசைவு; இணையொப்பு, ஒத்த உறவு; (கண.) ஒப்புமை, ஒப்புடைமை.

anal'phabet, anal'phabete, *n.* எழுத்தறிவற்றவர்; *a.* நெடுங்கணக்கை அறியாத, எழுத்தறிவற்ற.

analphabet'ic, *a.* நெடுங்கணக்குச் சாராத; அகர வரிசை முறையில் இல்லாத; முற்றிலும் எழுத்தறிவற்ற.

an'alysable, *a.* பிரித்தாராயத்தக்க; கூறுபடுத்தக்கூடிய.

an'alyse, *v.* கூர்ந்து ஆய், நுணுகி ஆராய்; கூறுபடுத்தி ஆராய்; பகுத்து ஆய்; கருமெய்மை காண்; மூலம் காண்; (இலக்.) பாகுபடுத்து; (வேதி.) தனிப்பொருள்களாகக் கூறுபடுத்து.

analys'er, *n.* பகுத்தாய்பவர்; ஒளிக்கருவியில் ஒளி முனைப் படுத்தும் இணைப்பட்டை.

anal'ysis, *n.* பகுப்பு, கூறுபாடு; கருமூலம் காண்டல், பொது மெய்ம்மை ஆய்ந்து தேர்தல்; (வேதி.) பகுப்பாய்வு, கூறு பாட்டாராய்ச்சி; தனிப்பொருள் தேட்டம், ஆக்கக்கூறுகளைத் தேர்ந்தாராய்தல், தேர்வாராய்ச்சி; (கண.) தொகை கூறு படுத்தல்; (இலக்.) வாக்கிய உறுப்பாராய்வு, வாக்கிய உறுப்பிலக்கணம்; *pl.* anal'yses.

an'alyst, *n.* மாற்றியல் தேர்வாராய்ச்சியாளர்.

analyt'ic, *a.* பகுப்பாராய்ச்சி சார்ந்த; பகுத்தாய்கிற; மூல மெய்ம்மைகள் காண்கிற.

analyt'ical, *a.* பகுப்பாராய்ச்சி முறையைப் பின்பற்றுகிற; (மொழி.) உருபுகளுக்குப் பதில் சொற்களை ஆளுகிற.

analyt'ics, *n.* ஆராய்ச்சிமுறை நூல்; தேர்வாராய்ச்சி முறைத் தருக்கநூல்; பகுப்பாராய்ச்சி முறை வடிவியல்.

anamnes'is, *n.* முன் நினைவு, இறந்தகாலம் பற்றி எண்ணங்கள்; மறதியில் ஆழ்ந்துவிட்ட முன்னைய செய்திகளின் மறு நினைவு; நோயாளியின் பழைய நினைவு; பிளேட்டோவின் (Plato) கருத்துப்படி நினைவின் மூல முதற்படிவம்.

anamor'phic, *a.* போகப்போகச் சிக்கல் பெறுகிற.

anamorph'osis, *n.* குறிப்பிட்ட கோணிய பார்வையில் நேராகத் தெரியும் கோணல்மாணலான வடிவம், நேர் திரி வடிவம்; (தாவ.) நேர் மரபு திறம்பிய மாறுபாடு.

anamor'phous, *a.* திரிபு வடிவமுடைய; நேர் மரபு திறம்பி மாறுபடுகிற.

an'ana, anan'as, *n.* அன்னாசிப்பழம்.

anan'drous, *a.* (தாவ.) பூவிழையற்ற.

an'apaest, *n.* (யாப்.) இரு குறிலசைகளும் ஒரு நெடிலசையும் கொண்ட சீர், குறிலிணை நெடிற்சீர்.

anapaes'tic, anapaes'tical, *a.* குறிலிணை நெடிற்சீரான.

an'aphase, *n.* இனமுனைப்புப்படி, இனக்கீற்றுக்கள் இரு கூறுகப் பிரிந்து குவிவுறும் நிலை.

anaph'ora, *n.* அந்தாதித் தொடை.

anaphrodis'iac, *n.* பாலுணர்ச்சி மட்டுப்படுத்தும் மருந்து; *a.* பாலுணர்ச்சி மட்டுப்படுத்த உதவுகிற.

anaphylax'is, anaphylax'y, *n.* அயற்பொருளைத் தாங்கிக் கொள்ளக்கூடிய வலிவு, வெளியிலுள்ள புரதம் அல்லது வேறு பொருள் குத்தி ஏற்றப்படும்போது அதேபொருள் முன்னரே இருப்பதனால் தாங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றல்.

an'aplasty, *n.* உயிர்க்கூருெட்டுமுறை, அருகிலுள்ள நல்ல கூறுகளை ஒட்டி மேலீடான சிறு காயங்களைக் குணப் படுத்தும் மருத்துவ முறை.

anaptyc'tic, *a.* (ஒலி.) மெய்யொலிகளிடையே தோற்றுகிற உயிரொலியைச் சார்ந்த.

anaptyx'is, *n.* (ஒலி.) மெய்யொலிகளிடையே ஓர் உயிரொலி தோன்றுதல்.

an'arak, *n.* = anorak.

an'arch, *n.* குழப்பம் விளைவிப்பவர்; புரட்சித் தலைவர்.

anarc'hic, anarc'hical, *a.* அரசழிந்த; குழப்பமான; சட்ட ஒழுங்கற்ற.

an'archism, *n.* ஆட்சி வேண்டாக் கொள்கை, அரசு இல்லாச் சமுதாய நிலையே மேம்பட்டதென்னும் கோட்பாடு.

an'archist, *n.* அரசிலிக் கோட்பாட்டாளர், ஆட்சியில்லா நிலையே சிறந்ததென்ற கருத்துடையவர்; ஆட்சி கவிழ்ப்பவர்; அரசழிப்பவர்; *a.* அரசிலாக்கோட்பாடுடைய; ஆட்சி கவிழ்க்கிற; கிளர்ச்சி தூண்டுகிற.

anarchist'ic, *a.* அரசிலாக்கோட்பாடுடைய; ஆட்சி கவிழ்க் கிற, கிளர்ச்சி தூண்டுகிற.

an'archy, *n.* அரசிலா நிலை, ஆட்சியில்லா நிலை; அரசழிவு; சட்டமில்லா நிலை, ஒழுங்கின்மை; அமைதிக்கேடு, குழப்பம்.

anar'throus, *a.* (உட.) கணுவற்ற, இணைப்பற்ற; (இலக்.) சார்படையற்ற.

anasar'ca, *n.* தோலடி நீர்க்கோவை.

anasar'cous, *a.* தோலடி நீர்க்கோவையுள்ள.

anas'tasis, *n.* துருக்கியக்கலையில் நரக வேதனைக்காட்சி; நோய் நீங்கி உடல்நலம் தேறுதல், உடல்நல மீட்பு.

anastat'ic, *a.* உறு முனைப்பான, புடைப்புருவான.

anastig'mat, *n.* கதிர்முனைப்புக் கோளாறற்ற கண்ணுடிச் சில்லு.

anastigmat'ic, *a.* கதிர் முனைப்புக் கேடற்ற.

anas'tomose, *v.* குறுக்காக இணை; பின்னி இணை.

anastomos'is, *n.* குருதி நாளங்கள் அல்லது மரக்கிளைகள் அல்லது ஆறுகள் ஆகியவை பின்னி ஒன்றுபடல்; *pl.* anastomos'es.

anas'trophe, *n.* (சொல்.) தலைகீழ்மாற்றம்.

anath'ema, *n.* திருச்சபைப் பழிப்பு; சாபம்; பழிப்புரை; பழிகேடர்; பழிகேடு; சாபப்பொருள்; வெறுக்கத்தக்க பொருள்.

anathemat'ical, *a.* வெறுப்புக்குரிய; பழிக்கத்தக்க.

anathematisa'tion, *n.* சாபமிடுதல்; பழித்தல்.

anath'ematise, anath'ematize, *v.* சாபமிடு; பழிபகர்.

anatom'ic, anatom'ical, *a.* உறுப்பியல் சார்ந்த; உடற் கூற்றமைப்புச் சார்ந்த; அமைப்பியலான.

anat'omise, *v.* அறு, கூறுபடுத்து; பகுத்துப்பார்.

anat'omist, *n.* உறுப்பியல் ஆராய்ச்சியாளர், பகுத்தாய்நர்.

anat'omize, *v.* = anatomise.

anat'omy, *n.* அறுத்தல், பிளந்து பார்த்தல், பகுத்தாராய்தல், கூறுபடுத்துதல்; உள்ளமைப்பியல்; உடல் உறுப்புக்களின் அமைப்பியல்; கங்காளம்; சேம உடலம், பதனப்படுத்தப் பட்ட உயிரற்ற உடல், வற்றல் உருவம்.

anat'ta, anat'to, *n.* ஆரஞ்சு சிவப்புச் சாயம்.

an'bury, *n.* குதிரையின் உடலிலுள்ள குருதிநிறப் புடைப்பு; கிழங்கு வகைகளின் வேர்நோய்.

an'cestor, *n.* முன்னோன், மூதாதை, குலமுதல்வர்.

ancesto'rial, *a.* = ancestral.

ances'tral, *a.* முன்னோருக்குரிய; மூதாதையர்களுக்குச் சொந்தமான; முன்னோர் மரபில் வந்த; மூதாதையர் வழியுரிமையான.

an'cestress, *n.* முன்னோள், குலமுதல்வி.

an'cestry, *n.* மூதாதையர் மரபு, ஊங்கணோர் வழி, முன்னோர் வழி; வழி மரபு, குல மரபு.

anc'hithere, *n.* (உயி.) குதிரையின் முன்னோடியென்று கருதப்படும் மிகச் சிறிய மட்டக்குதிரை போன்ற புதையுயிர்ப் படிவ விலங்கு, 'முன்குதிரை'.

anc'hor, *n.* நங்கூரம்; ஆதாரம், பற்றுக்கோடு; *v.* நங்கூரமிடு; நங்கூரமிட்டுக் கப்பலை நிறுத்து; நிலைநிறுத்து; தங்கு, ஓய்வுகொள்; (தொ.) at anchor, நங்கூரமிட்டு; weigh anchor, நங்கூரம் உயர்த்து.

anc'horage [1], *n.* நங்கூரமிட்டு நிற்றல்; நங்கூரமிட்டுத் தங்குமிடம்; ஆதாரம்; உறுதிக்கடைப்பிடி; கப்பல் தங்குவதற்கான தீர்வை.

anch'orage [2], *n.* துறவியின் குடிசை.

anc'horess, *n.* பெண் துறவி; உலக வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி வாழ்பவள்.

anc'horet, *n.* = anchorite.

anchoret'ic, anchoret'ical, *a.* துறவிக்குரிய.

anch'or-hold, *n.* நங்கூரத்தின் பிடி; விடாப்பிடி, உறுதிப் பிடி; சேமக்காப்பு.

anch'or-ice', *n.* நிலத்தளப் பனிக்கட்டி.

anc'horite, *n.* துறவி; உலக வாழ்க்கையிலிருந்து ஒதுங்கியிருப்பவர்.

anc'hor-plate, *n.* தொங்குபாலத்தின் வடக்கம்பிகளுக்கான ஆதாரக்கட்டை.

anch'or-ring, *n.* நங்கூர வளையம்.

anch'or-stock, *n.* நங்கூர அச்சு.

anchov'y, *n.* நெய்த்தோலி போன்ற மீன்வகை.

anchus'a, *n.* மயிரிழை போன்ற தண்டுடைய செடியினம்.

anc'hylose, *v.* மூட்டுக்கள் விறைத்துப் போ; எலும்புகள் பொருத்தப் பெறு.

anchylos'is, *n.* கணுக்கள் திமிர் கொள்ளுதல்; மூட்டுக்களின் விறைப்பு.

anchylostomi'asis, *n.* கொக்கிப்புழு நோய், கொக்கிப்புழு போன்ற புழுவால் ஏற்படும் குருதிச்சோர்வு.

ancien regime, (பிர.) *n.* பிரெஞ்சுப் புரட்சி (1789) நிகழ்வதற்கு முற்பட்ட காலம்.

an'cient [1], *n.* கிழவன், முதியவன்; மூத்தவர், உயர்ந்தவர்; *a.* பண்டைய, தொன்மையான, நெடுநீள் மரபுடைய; ரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்கு (கி.பி. 476-க்கு) முற்பட்ட.

an'cient [2], *n.* கொடி; கொடி பிடிப்பவர்.

an'cientry, *n.* மிகு பழமை; பழம்பாணி.

an'cients, *n. pl.* பண்டையர், பண்டைக் காலத்தவர்; கிரேக்கர்; ரோமர்.

ancill'ary, *a.* குற்றேவல் செய்கிற; துணைமையான.

an'cle, *n.* கணுக்கால்.

an'con, *n.* (உட.) முழங்கை, கைமுட்டு; குறுங்கால் ஆட்டு வகை; (க.க.) அழகுக்காகச் சுவர் அல்லது வளைவுகளின் பக்கங்களை ஒட்டி ஆதாரத்தட்டுப் போல அமைக்கப்படும் சிற்ப உறுப்பு; *pl.* anco'nes.

Anco'na, *n.* நடுநிலக்கடலகம் (Mediterranean) சார்ந்த புள்ளிகளையுடைய கோழியினம்.

and, *conj.* உம், மற்றும்.

Andalu'sian, *n.* ஸ்பெயின் (Spain) நாட்டிலுள்ள அண்டலூஷியாவுக்கு உரியவர்; கோழி இனத்தின் வகை; *a.* அண்டலூஷியாவுக்கு உரிய; கோழி இனத்தின் வகை சார்ந்த.

andan'te, (இத்.) *n.* (இசை.) இடைநடைச் செலவு; மட்டமான மென்னடைப் பாட்டு; *adv.* இடைநடைச் செலவில்; மட்டமான மென்னடையில்.

andanti'no, (இத்.) *n.* (இசை.) மட்டமான மெல்லிசை நடை; *adv.* மிதமான மெல்லிசை நடையுடன்.

An'derson shel'ter, *n.* விமானத் தாக்குக்கு மாறுக தூக்கிச் செல்லக்கூடிய எஃகுப் பாதுகாப்பு.

an'diron, *n.* விறகுதாங்கி, அடுப்பணைகோல், அடுப்பில் விறகுகளை ஏந்தி வைப்பதற்குரிய இருப்புச்சட்டம்.

androceph'alous, *a.* மனிதத் தலையையுடைய.

androe'cium, *n.* (தாவ.) பூவிழைத் தொகுதி.

an'drogen, *n.* ஆண்பால் இயக்குநீர்மம், ஆண்பால் மரபுக் கூறுகளை வளர்த்துப் பேணவல்ல பொருள்.

androgen'ic, *a.* ஆண்பால் இயக்குநீர்மம் சார்ந்த.

androg'ynous, *a.* இருபால் கூறுகளுடைய; பால் வேறுபாடற்ற; (தாவ.) ஆண் பெண் இருவகைப் பூக்களும் ஒரே மலர்க்கொத்தில் உடைய.

androg'yny, *n.* இருபால் கூறுகளும் ஒருங்கே உடைமை; (தாவ.) ஒரு மலரிலேயே அல்லது ஒரு செடியிலேயே பூவிழையும் கருவகமும் உடன்கொண்டு இயலும் செடியினம்.

Androm'eda, *n.* குறும்புதர்க் காட்டுச் செடியினத்தின் வகை; வடமீன் குழுக்களுள் ஒன்று.

androm'edotox'in, *n.* குருதியமுக்கத்துக்கு மருந்தாய் உதவும் தாவரச் சரக்கு.

anear', *v.* அணுகு; *adv.* அருகே; ஏறத்தாழ; *prep.* அருகில்.

an'ecdota, *n. pl.* வெளியிடப்படாத வரலாற்று நுணுக்கங்கள்.

an'ecdotage, *n.* நொடிக்கதைத் தொகுதி, துணுக்குத் தொகுதி; கதையளக்கும் கிழவயது.

an'ecdotal, *a.* இடை நிகழ்வான; துண்டுத் துணுக்கான; நொடிக்கதை உருவான.

an'ecdote, *n.* வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு; நொடிக்கதை; இடை நிகழ்ச்சி; துண்டுத் துணுக்கு; செய்தித் துணுக்கு.

anecdot'ic, anecdot'ical, *a.* = anecdotal.

an'ecdotist, *n.* வாழ்க்கைக் குறிப்பாளர்; நொடிக்கதையாளர்.

anecho'ic, *a.* எதிரொலியற்ற.

anem'ogram, *n.* காற்றளவைக் குறிப்பு.

anem'ograph, *n.* காற்றின் திசையையும் வேகத்தையும் மதிப்பிட்டளக்கும் கருவி.

anemograph'ic, *a.* காற்றின் திசையையும் வேகத்தையும் அளக்கிற.

anemol'ogy, *n.* காற்றுக்கள் பற்றிய ஆய்வு நூல்.

anemom'eter, *n.* காற்று வேகமானி; கருவியில் காற்றழுத்தம் காட்டும் அமைவு.

anemomet'ric, *a.* காற்று வேகம் அளக்கிற.

anemom'etry, *n.* காற்றின் வேக அளவை.

anem'one, *n.* மலர்ச்செடியினங்களின் வகை; கடற்பஞ்சு; ஆழ்கடலிலுள்ள மணியுருக்கள் போன்ற உயிரினங்களின் வகை.

anemoph'ilous, *a.* காற்றினுல் இனப்பொலிவு பெறுகிற.

anemoph'ily, *n.* காற்றினுல் பெறும் இனப்பொலிவு.

anent', *prep.* பற்றி; குறித்து; தொடர்பாக; நோக்கி.

an'eroid, *n.* நீர்மம் வழங்காத காற்றின் அழுத்தமானி; *a.* நீர்மம் வழங்காத.

an'eurin, aneu'rin, *n.* நரப்பூட்டச்சத்து, சத்துக்குறை பாட்டால் நரம்புகள் சீர்கெடாதபடி தடுக்கும் ஒருவகை ஊட்டம்.

an'eurism, *n.* = aneurysm.

aneuris'mal, *a.* = aneurysmal.

an'eurysm, *n.* (மரு.) குருதிநாள அழற்சி; இயற்கை மீறிய வீக்கம்.

aneurys'mal, *a.* குருதிநாள அழற்சியுடைய; இயற்கை மீறி வீங்கிய.

anew', *adv.* மறுபடியும்; இன்னொரு வகையாக, புதிதாக.

anfractuos'ity, *n.* சுற்று வளைவு; கோணல்மாணல்; சிக்கற் சுற்று மண்டிலம்.

anfract'uous, *a.* சுற்றி வளைந்த; சிக்கலான.

ang'ary, *n.* (சட்.) போரிடும் அரசுகளின் பற்றுரிமை, நடுநிலை தாங்குபவருடைய உடைமைகளைப் பின்னுல் இழப்பீடு செய்யும் எண்ணத்துடன் போரிலீடுபடுபவர் பயன்படுத்து தற்குரிய உரிமை.

an'gel, *n.* தேவதூதர், சம்மனசு; ஆதரவு தரும் தெய்வம்; துணையாளி; மென்மையும் தூய்மையும் உடையவர், களங்க மற்றவர்; அழகுரு; தூதர்; பழங்கால ஆங்கில நாட்டு நாணயவகை.

an'gel-cake, *n.* முட்டையின் வெண்கரு மாவு சர்க்கரை ஆகியவை கலந்து செய்யப்படும் அப்ப வகை.

an'gel-fish, *n.* சுரு மீன் வகை.

an'gel-food, *n.* = angel-cake.

an'gelhood, *n.* திப்பியம், தேவதூதரின் இயல்பு.

angel'ic, *a.* தேவதூதருக்குரிய; தேவதைகளுக்குரிய; தேவதை போன்ற, திப்பியமான.

angel'ica, *n.* சமையலுக்கும் மருந்துக்கும் பயன்படும் ஒரு வகை வாசனைச் செடி.

angel'ical, *a.* = angelic.

angelol'atry, *n.* தேவதை வழிபாடு, திப்பிய வணக்கமுறை.

angelol'ogy, *n.* தேவதூதர் பற்றிய கோட்பாடு.

angeloph'any, *n.* மனிதர்முன் தேவதூதர் வெளிப்படத் தோன்றுதல், தேவதை பிரத்தியட்சம்.

an'gelus, *n.* கன்னித்தாய் மேரி பற்றிய வணக்கப் பாடல்; ரோமன் கத்தோலிக்கக் கோயில்களில் காலை நண்பகல் மாலை வழிபாட்டுக்கு அழைக்கும் மணி.

ang'er, *n.* கோபம், கடுஞ்சினம், சீற்றம்; எரிச்சல், கடு வெறுப்பு; *v.* கோபமூட்டு; எரிச்சலுண்டாக்கு.

an'gico, *n.* தென் அமெரிக்கப் பிசின் மர வகை; அம்மரப் பிசின்.

angin'a, *n.* தொண்டை வீக்கம்; (தொ.) angina pectoris, இடது மார்பு வேதனை தரும் இதயநோய்.

angiocar'pous, *a.* உறையினுள் காயுடைய; சிதல் தளத்தை உறையினுள் கொண்ட.

angio'ma, *n.* குருதிக்கட்டி; *pl.* angio'mata.

an'giosperm, *n.* மூடுவிதைச் செடியினம்; *pl.* angiosperm'ae.

ang'le[1], *n.* மூலை; வடிவின் புறமுனைப்பு, கூம்பு; சாய்வு; நோக்கின் சாய்வு; (கணை.) கோணம், முடக்கு, சமதள வரை மீதுள்ள கோட்டின் சாய்வளவு, இரு தளங்களின் இடை வெளிச் சாய்வளவு, தளச் சாய்வளவு.

ang'le[2], *n.* தூண்டில்; *v.* தூண்டிலிட்டு மீன் பிடி; வசப் படுத்திப் பிடிப்பதற்காகத் தேடித்திரி, கைப்பற்ற நாடு; மருட்டு; பொறியில் பெற முயலு; மாறுபட்ட உள்ளெண் ணத்துடன் செய்தி வெளியிடு.

Ang'le, *n. pl.* ஆங்கிலேயரின் முன்னோரான செர்மானிய இனத் தின் கிளையினத்தைச் சேர்ந்தவர், 'ஆங்கிள்' மரபினர்.

ang'led, *a.* கோணத்தை உடைய.

ang'ler, *n.* தூண்டிலிட்டு மீன் பிடிப்பவர், மீன் நாடித் தூண்டிலுடன் திரிபவர்.

ang'lewise, *adv.* கோணமாக, சாய்வாக.

ang'le-worm, *n.* தூண்டிற் புழு.

Ang'lian, *n.* ஆங்கிலேயர் முன்னோர் உட்பட்ட செர்மானிய இனத்தவர், 'ஆங்கிள்' மரபினர்; 'ஆங்கிள்' மரபுக்குரிய கிளைமொழி; 'ஆங்கிள்' மரபின் பேச்சு வழக்கு; *a.* 'ஆங்கிள்' மரபுக்குரிய.

Ang'lican, *n.* ஆங்கில நாட்டுத் திருச்சபை மரபு ஏற்பவர்; கிறித்தவ சமயத்தில் ஆங்கில நாட்டு உரிமைக்கிளை சார்ந்த வர்; *a.* ஆங்கில நாட்டுத் திருச்சபை மரபு சார்ந்த; கிறித்தவ சமயத்தின் ஆங்கில நாட்டு உரிமைக்கிளை சார்ந்த.

Ang'licanism, *n.* ஆங்கில நாட்டுத் திருச்சபை மரபுக்குரிய கோட்பாடு; கிறித்தவ சமயத்தின் ஆங்கில நாட்டு உரிமைக் கிளை; ஆங்கில நாட்டு மரபுச் சார்பு.

Ang'lice, (ல.) *adv.* ஆங்கிலத்தில்.

Ang'licise, *v.* ஆங்கில மரபுப்படுத்து, ஆங்கில மயமாக்கு; ஆங்கில மரபுக்கு இணக்கு, ஆங்கிலப் பண்புக்கிசைய மாற்றி யமை; ஆங்கில மயமாகு.

Ang'licism, *n.* ஆங்கில மரபு; ஆங்கிலப்பண்பு; ஆங்கில நாட்டுக்குரிய தனிச்சிறப்புக்கூறு; ஆங்கிலச் சார்பு; ஆங்கில நாட்டுச் சார்பான கோட்பாடு.

Ang'licize, *v.* = Anglicise.

ang'lify, *v.* ஆங்கிலமாக்கு.

ang'list, *n.* ஆங்கில மொழியையும் இலக்கியத்தையும் பண் பாட்டையும் பற்றித் தேர்ந்த அறிவுடையவர்.

anglist'ic, *n.* ஆங்கில மொழியையும் இலக்கியத்தையும் பண் பாட்டையும் பற்றிய ஆராய்ச்சித்துறை.

Ang'lo-Amer'ican, *n.* ஆங்கிலோ அமெரிக்கர், ஆங்கில நாட்டுப் பிறப்பு அல்லது மரபுரிமையுடன் அமெரிக்க நாட்டுக் குடி வாழ்க்கை அல்லது குடியுரிமை உடையவர்; *a.* ஆங்கில நாட்டுப் பிறப்பு அல்லது மரபுரிமையுடன் அமெரிக்க நாட்டுக் குடி வாழ்க்கை அல்லது குடியுரிமையுடைய; ஒரு கூறு ஆங்கிலச் சார்பாகவும் மறுகூறு அமெரிக்கச் சார்பாகவும் உள்ள.

Ang'lo-Cath'olic, *n.* ஆங்கிலோ கத்தோலிக்கர், ஆங்கில நாட்டுத் திருச்சபை மரபு கத்தோலிக்க நெறி அளாவியதே என்று வற்புறுத்தும் கட்சியாளர்; ஆங்கில நாட்டு மரபுக் குரிய கத்தோலிக்கரெனத் தம்மைக் கருதுபவர்; குரு மரபை ஆதரிக்கும் கட்சி சார்ந்த ஆங்கில நாட்டுத் திருச்சபை மரபினர்; *a.* ஆங்கிலநாட்டு மரபுக்குரிய கத்தோலிக்கரெனத் தம்மைக் கருதுகிற.

Ang'lo-French', *n.* ஆங்கிலோ பிரஞ்சுமொழி, முன்பு ஆங்கில நாட்டில் பேசப்பட்ட பிரஞ்சு மொழி ; *a.* இங்கிலாந்து பிரான்சு ஆகிய இரு நாடுகளுக்கும் உரிய ; ஆங்கிலநாடு பிரான்சு ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள.

Ang'lo-In'dian, *n.* ஆங்கிலோ இந்தியர், இந்தியாவின் நீடித்துக் குடிவாழும் ஆங்கிலேயர் ; ஐரோப்பிய இந்தியக் கலப்பினத்தவர் ; *a.* இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உரிய ; இந்தியாவில் பேசப்படுவது போன்ற ஆங்கில மொழி சார்ந்த ; ஐரோப்பிய இந்தியக் கலப்பினஞ் சார்ந்த.

Ang'lo-I'rish, *n.* அயர்லாந்தில் பேசப்படுவது போன்ற ஆங்கில மொழி ; ஆங்கில மரபில் வந்த ஐரிஷ் மக்கள் ; ஆங்கில ஐரிஷ் கலப்பினத்தவர் ; *a.* இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் உரிய ; அயர்லாந்தில் பேசப்படுவது போன்ற ஆங்கில மொழி சார்ந்த ; ஆங்கில ஐரிஷ் கலப்பினஞ் சார்ந்த.

Ang'lo-Is'raelite, *n.* அசிரியர்களால் (Assyrians) கி. மு. 721-இல் கொண்டு செல்லப்பட்டுத் தவறிப்போன இஸ்ரவேலர் குலங்களின் மரபினரே ஆங்கிலேயர் என்னும் கோட்பாட்டாளர்.

Angloman'ia, *n.* ஆங்கில வெறியார்வம், ஆங்கில மோகம்.

Angloma'niac, *n.* ஆங்கில வெறியர்.

Ang'lo-Nor'man, *n.* இங்கிலாந்திலுள்ள நார்மானியர் வழக்கிலுள்ள பிரஞ்சு (French) மொழி ; *a.* இங்கிலாந்திலுள்ள நார்மானியருக்குரிய.

Ang'lophil, Ang'lophile, *n.* ஆங்கிலப் பண்பார்வலர் ; *a.* ஆங்கிலப் பண்பார்வமிக்க.

Ang'lophobe, *n.* ஆங்கிலச் சார்பு வெறுப்பவர் ; ஆங்கிலச் சார்பினை அஞ்சுபவர் ; *a.* ஆங்கிலச் சார்பு வெறுக்கிற, ஆங்கிலச் சார்பு அஞ்சுகிற.

Anglophob'ia, *n.* ஆங்கிலச் சார்பு வெறுப்பு.

Anglophob'iac, Anglophob'ic, *a.* ஆங்கிலச் சார்பு பற்றி வெறுப்புடைய.

Ang'lo-Sax'on, *n.* பழங்கால ஆங்கில மொழி ; ஆங்கிலேயரின் முன்னோரான செர்மானிய இனத்தவர் ; ஆங்கிலேயரின் மூதாதையர் ; ஆங்கில மொழி பேசுபவர் ; ஆங்கில இன மரபினர் ; *a.* பழங்கால ஆங்கில மொழி சார்ந்த ; ஆங்கிலேயரின் மூதாதையரினம் சார்ந்த ; ஆங்கில மொழி மரபு சார்ந்த.

Ang'lo-Sax'ondom, *n.* ஆங்கில மொழி பேசப்படும் உலகப் பரப்பு.

Ang'lo-Sax'onism, *n.* ஆங்கிலமொழி மரபின் தனி உரிமைக் கோரிக்கைகள் பற்றிய நம்பிக்கை.

angol'a, angor'a, *n.* துருக்கி நாட்டு ஆட்டு வகை ; பட்டுப் போன்ற மெல்லிய கம்பளி வகை ; கம்பளி ஆடை வகை ; பட்டுப் போன்ற மென்மயிரை உடைய சிறு விலங்கு வகை.

angostur'a, *n.* காய்ச்சலுக்கு மருந்தாயுதவும் தென் அமெரிக்க மரப்பட்டை வகை ; (தொ.) angostura bitters, அங்கோஸ்துரா மரப்பட்டையின் குடிநீர்.

ang'ry, *a.* கோபமான, சிற்றமுள்ள, கடுஞ் சினங்கொண்ட ; கடு வெறுப்புடைய ; சீறுகிற.

Ang'strom un'it, *n.* ஒளி அலைகளின் நீளத்தை அளந்து மதிப்பிடுவதற்குரிய நுண்ணளவைக்கூறு.

ang'uifauna, *n.* திணைக்குரிய பாம்பினத் தொகுதி.

ang'uiform, *a.* பாம்புருவான.

Anguill'a, *n.* விலாங்கினம், மலங்கினம்.

ang'uine, *a.* பாம்பு போன்ற ; பாம்பிற்கு உரிய.

ang'uiped, ang'uipede, *a.* பாம்பு வடிவான கால்களுடைய.

Ang'uis, *n.* நிலப்புழுவினம் ; நாங்கூழ்.

ang'uish, *n.* உடல் நோவு ; பொறுக்கமாட்டாத வலி ; சாத்துயர் ; மனநோய் ; கடுந்துயரம் ; *v.* வேதனைப்படுத்து ; கடுந்துயருறு.

ang'ular, *a.* கோணத்தின் உருவான, முடக்கான ; கோணத்தை உட்கொண்ட ; கோணங்களையுடைய ; கோண வடிவான முக்குடைய ; சாய்வான ; கோணத்தின் அளவான ; ஒடுங்கிய உடலுடைய ; எலும்பும் தோலுமான, உருட்சி திரட்சியற்ற ; நடை நயமற்ற ; விழுறப்பு நடையான.

angula'rity, *n.* கோணத்தின் இயல்பு, முடங்கிய தன்மை ; தனி இயல்பு, சமூகத்துக்கு ஒவ்வா முரண்பாடு.

ang'ulate, *a.* மூலை முடுக்குக்களோடு கூடிய ; முக்கோண வடிவமான ; *v.* கோணத்தின் வடிவமாக்கு.

ang'ulated, *a.* மூலை முடுக்குக்களோடு கூடிய ; முக்கோண வடிவான.

angula'tion, *n.* கோணமாக உருவாதல் ; முடக்காக்குதல் ; கோண வடிவான முக்கு.

angus'ti-foliate, *a.* ஒடுங்கிய இலைகளையுடைய.

angus'ti-rostrate, *a.* ஒடுங்கிய அலகுடைய.

angustura', *n.* = angostura.

anharmon'ic, *a.* இசைவில்லா ; முரணிசையான.

anhela'tion, *n.* குறு மூச்சு, மூச்சுத் திணறல்.

anhy'dride, *n.* (வேதி.) நீர் நீக்கப்பட்ட காடி.

anhy'drite, *n.* (வேதி.) கனிப்பொருள்களில் ஒன்று, நீர் வாங்கப்பெற்ற சுண்ணக்கந்தகி.

anhyd'rous, *a.* (வேதி.) மணியுருநிலையின் நீர் வாங்கப்பட்ட.

anicon'ic, *a.* மனித அல்லது விலங்கு உருவில் அமையாத.

ani'conism, *n.* பொருளைக் கடவுளின் உருவமாகக் கருதாது குறிக்கும் குறியாக மட்டுமே கருதி வழிபடும் முறை.

ani'conist, *n.* குறியை உருவமாகக் கொள்ளாது கடவுளை நினைவூட்டும் கருத்துக்குறிப்பாக மட்டும் கொள்பவர்.

an'icut, (தமி.) *n.* அணைக்கட்டு.

anigh', *adv., prep.* அருகே.

an'il, *n.* அவுரிச்செடி ; அவுரிச் சாயம், நீலச்சாயம்.

an'ile, *a.* கிழவியின் நிலையுடைய, கிழடு தட்டிய, தளர்வுற்ற.

an'iline, *n.* பண்டு அவுரியிலிருந்தும் இப்போது கீலெண்ணெயிலிருந்தும் கிடைக்கும் சாயப்பொருள் ; *a.* சாயப்பொருள் சார்ந்த.

anil'ity, *n.* கிழவிநிலை, கிழத்தனம், முதுமைத்தளர்ச்சி.

animadver'sion, *n.* குறைகூறல், கடிந்துரை, இடித்துரை, கண்டித்தல்.

animadvert', *v.* கருத்தில் பதிவு செய்துகொள் ; திறனுய்ந்து உரை ; குறை சொல் ; இடித்துரை ; குறித்துக்கொள்.

an'imal, *n.* விலங்கு, இயங்கும் உயிரினம், பிராணி, உயிர்மை ; நாற்கால் உயிரினம் ; மாக்களில் வைத்து எண்ணப்படுவர் ; புலனுகர்ச்சியில் தோய்ந்தமைபவர் ; *a.* விலங்கு சார்ந்த ; விலங்கு போன்ற ; கீழ்நிலை உயிரினத்துக்குரிய ; இழிந்த, கீழான ; உடலின்பம் நாடுகிற ; உயிர்த்துடிப்புடைய, உயிரியக்கமுடைய ; இயங்கும் உயிரினம் சார்ந்த.

animal'cule, *n.* குறுவிலங்கு ; சிற்றுயிரினம் ; நுணுக்க உயிரி ; கண்ணுக்குப் புலப்படாத உயிரினம்.

animal'culism, *n.* உடலின் செயல்கள் யாவும் நுண் உயிரினங்களின் செயல்விளைவே என்ற கோட்பாடு.

animal'culist, *n.* உடலியக்கத்துக்கு நுண் உயிரினங்களே காரணம் என்ற கோட்பாட்டாளர்.

an'imalise, *v.* விலங்கின் உருவங்கொடு ; விலங்கின் வடிவிற் கருத்துருவங்கொள் ; உயிரின் பண்பேற்று ; உயிர்ப்பொருளாக மாற்று ; விலங்கியற்படுத்து ; புலனுகர்ச்சிப்படுத்து.

an'imalism, *n.* விலங்கியல் வாழ்க்கை ; புலனுகர்வு இயல்பு ; மனிதர் விலங்கினத்துட்பட்டவர் என்ற கோட்பாடு.

an'imalist, *n.* புலனுகர்ச்சி வாழ்க்கை வாழ்பவர் ; புலனுகர்ச்சி வாழ்க்கைக் கோட்பாட்டாளர் ; விலங்குகளைப்பற்றிய கதை எழுத்தாளர் ; விலங்குகளின் ஓவியம் வரைபவர் ; விலங்குகளின் உருவம் செதுக்குபவர்.

animal'ity, *n.* விலங்கியல்பு; மிருகத்தன்மை; விலங்கு வாழ்க்கை; விலங்குநிலை; விலங்கு உலகம்.

an'imalize, *v.* =animalise.

an'imal-worship, *n.* விலங்கு வழிபாடு.

an'imal-worshipper, *n.* விலங்கு வழிபாட்டினர்.

an'imate, *a.* உயிருள்ள; உயிரியக்கமுள்ள, உயிர்த்துடிப்புள்ள; *v.* உயிரூட்டு; ஊக்கு; தூண்டு, கிளர்ச்சியூட்டு.

an'imated, *a.* கிளர்ச்சியுடைய, ஆர்வமிக்க; உயிருடையது போன்று இயங்குகிற; உயிருள்ளதுபோன்ற.

an'imating, *a.* கிளர்ச்சியூட்டுகிற.

anima'tion, *n.* உயிரூட்டுதல்; ஊக்குதல்; உயிர்த்தல்; உயிருடனிருத்தல்; உயிரியக்கம்; கிளர்ச்சி; உயிர்த்துடிப்பு; ஊக்கம், எழுச்சி.

an'imator, *n.* உயிர்ப்பூட்டுபவர், உயிர்ப்பூட்டுவது; ஊக்குபவர், ஊக்குவது; தூண்டுபவர், தூண்டுவது.

anime, (பிர.) *n.* மேலை இந்தியத் தீவுகளுக்குரிய பிசின்; பிசின், பசை.

an'imism, *n.* உயிரிலாப் பொருளுக்கும் இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் ஒரே ஆன்மாவைக் கற்பிக்கும் கொள்கை; பருப்பொருள் சாராத ஆன்மா ஒன்றின் மூலமே உயிரியக்கம் உண்டாகிறது என்ற கோட்பாடு; ஆன்மவாதம்; ஆவியுலகக் கோட்பாடு.

an'imist, *n.* ஆன்மவாதி; உயிரிலாப்பொருட்களிலும் இயற்கை நிகழ்ச்சிகளிலும் உயிர் இயல்பு காண்பவர்; ஆவியுலகக் கோட்பாட்டாளர்.

animis'tic, *a.* ஆன்மவாதச் சார்பான; உயிரிலாப் பொருட்களிலும் இயற்கை நிகழ்ச்சிகளிலும் உயிரியக்கம் காண்கிற; ஆவியுலகக் கோட்பாடு சார்ந்த.

animos'ity, *n.* கடுவெறுப்பு; பகைமை.

an'imus, *n.* உள்தூண்டுதல், உள்ளுணர்ச்சி; செயல்நோக்கம்; பகைமை.

an'ion, *n.* எதிர்மின்மம்.

anion'ic, *a.* எதிர்மின்மம் சார்ந்த.

an'ise, *n.* சோம்பு, பெருஞ்சீரகச்செடி.

an'iseed, *n.* பெருஞ்சீரகம், சோம்பு விதை.

anisette', *n.* பெருஞ்சீரக வடிநீர்.

anisom'erous, *a.* பூவிதழ் வட்டத்தில் உறுப்பு நேரொவ்வாத, செவ்விசைவற்ற.

anisophyll'ous, *a.* முளைத்தண்டில் இருபக்க இலைகள் ஒவ்வாத.

anisosthen'ic, *a.* வலிமை ஒப்பிசைவற்ற.

anisotrop'ic, *a.* வேறுவேறு பக்கங்களில் வேறுவேறு தன்மைகளையுடைய.

ank'er, *n.* எட்டரைக் கேலன் (gallon) பிடிக்கும் நீர்ம முகத்தளவை; மிடா, பீப்பாய்.

an'kerite, *n.* இரும்புச்சத்து அதிகமுடைய கனிப்பொருள் வகை.

ankh, *n.* எகிப்திய சிலுவை வகை; உயிரின் சின்னம்.

an'kle, *n.* கணுக்கால்.

an'kle-jack, *n.* கணுக்காலுக்குமேல் செல்லும் கால் புதையரணம்.

ank'let, *n.* சிலம்பு, கணுக்கால் வளை.

an'kus, (இ.) *n.* அங்குசம், தோட்டி, யானைத்துறட்டி.

an'lace, *n.* இருபுறக் கூருடைய குத்துவாள் வகை.

an'lage, *n.* (உயி.) உறுப்பின் கருமுதல் வடிவம்.

ann'a, (இ.) *n.* அணா.

ann'alise, *v.* ஆண்டுப்பட்டிகையாகத் தொகு; வரலாற்றுப் பட்டியிற் சேர்; பதிவுசெய்; நிலையாகப் பொறி.

ann'alist, *n.* வரலாற்றுப்பட்டி வகுப்பவர், ஆண்டுக்குறிப்பேடு தொகுப்பவர், நிகழ்ச்சிப் பதிவாளர்.

annalist'ic, *a.* வரலாற்றுப்பதிவான, கால வரிசையான; ஆண்டு வரிசைத் தொகுப்பான.

ann'als, *n. pl.* ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பு; ஆண்டு வரிசைப்பதிவேடு, வரலாற்றுப்பட்டி; வரலாற்றுப் பதிவேடுகள், வரலாற்று ஆதார ஏடுகள்; ஆண்டுத் தொகுப்பேடுகள்.

ann'ates, *n. pl.* நாட்கதிர் விளைவு, முதல் விளைவு; முதலாண்டு விளைவு, முன் காலங்களில் போப் ஆண்டவருக்கு அல்லது அரசருக்குக் கடமையாக அனுப்பப்பட வேண்டிய கோயில் மானியத்தின் முதலாண்டு விளைபலன்.

annat'ta, **annat'to**, *n.* அமெரிக்க மரவகையிலிருந்து எடுக்கப்படும் செம்மஞ்சள் நிறமான சாயப் பொருள்.

anneal', *v.* கண்ணாடி உலோகங்கள் முதலியவற்றைக்கட்டுப்படுத்தி ஆறவைத்தல் மூலமோ நன்கு சூடாக்கி மெல்ல ஆற விடுவதன் மூலமோ கடும் பதப்படுத்து, வாட்டிப் பதப்படுத்து; கண்ணாடி முதலிய பொருள்கள்மீது சாயம் ஏற்றுவதற்காகச் சூடுபடுத்து.

annec'tent, *a.* இணைக்கிற.

ann'elid, *n.* வளையம் போன்ற கணுக்கள் தாங்கிய செங்குருதிப் புழுவகை.

annex', *n.* பின்னெட்டு, பின் சேர்க்கை; கட்டிடத்தின் புத்திணைப்புப் பகுதி; பத்திரப் பின்னிணைப்புப் பகுதி; *v.* இறுதியில் சேர், ஒட்டு; பின்னிணை; கைப்பற்று, உரிமைப்படுத்திக்கொள்.

annexa'tion, *n.* கைப்பற்றிச் சேர்த்துக்கொள்ளுதல்; சேர்த்துக்கொண்ட பகுதி, புத்திணைப்புப் பகுதி; வென்று கொண்ட நிலம்.

annexa'tionist, *n.* புதுநிலம் வென்று சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோட்பாட்டாளர்.

annexe', **ann'exe**, *n.* பின் சேர்க்கை; கட்டிடத்தின் புத்திணைப்புப் பகுதி.

anni'hilate, *v.* துடைத்தழி, நிர்மூலமாக்கு, ஒழித்துக்கட்டு.

annihila'tion, *n.* வறிதாக்குதல்; பூண்டோடொழித்தல், பாடழிவு, நூழிலாட்டு; (மெய்.) உடலொடு ஆன்மாவும் அழிவுறுதல்.

annihila'tionism, *n.* செய்பழிக்கு இரங்காதவர் ஆன்மா உடலோடு அழிவுறும் என்னும் கொள்கை.

anni'hilative, *a.* இல்லாதாக்குகிற, பாழ்படுத்துகிற.

anni'hilator, *n.* முற்றிலும் அழிப்பவர்.

annivers'ary, *n.* ஆண்டு விழா, ஆண்டு நிறைவுநாள்; *a.* ஆண்டிறுதியான; ஆண்டுதோறும் நிகழ்கிற.

ann'o aetat'is su'ae, (ல.) (தொ.) தன் நிகழ்வயது நிறை ஆண்டில்.

Ann'o Dom'ini, (A.D.) (ல.) (தொ.) இயேசுபிரான் ஆண்டில், கி.பி.

ann'otate, *v.* உரைவிளக்கங்கொடு; குறிப்பெழுது; உரை எழுதிச்சேர்.

annota'tion, *n.* உரைவிளக்கம் செய்தல்; உரைவிளக்கம்; குறிப்புரை.

ann'otator, *n.* உரையாசிரியர்; உரைவிளக்கம் செய்பவர்.

announce', *v.* சாற்று, பறையறை, பொது அறிவிப்புச்செய், தெரிவி, செய்தி கூறு; வருகை அறிவி.

announce'ment, *n.* அறிவிப்பு, பொது அறிக்கை, விளம்பரம்; அறிவிக்கப்பட்ட செய்தி.

announ'cer, *n.* அறிவிப்போர்; வானொலி அறிவிப்பாளர்; கம்பியில்லாத் தந்தி அறிவிப்பாளர்.

annoy', *n.* அலைப்பு, தொல்லை; *v.* அலைத்து அரி, தொல்லைப்படுத்து, தொந்தரவு கொடு, நச்சரி; திகைக்க வை, குழப்பு; துன்புறுத்து.

annoy'ance, *n.* அலைக்கழித்தல், தொல்லை கொடுத்தல், நச்சரித்தல்; தொந்தரவு; தொல்லை தரும் செய்தி.

annoy'ing, *a.* நச்சரிப்பான, எரிச்சலுண்டாக்குகிற.

ann'ual, *n.* ஓராண்டு வாழும் செடியினம்; ஆண்டுமலர், ஆண்டுக்கொரு முறை வெளியிடப்படும் ஏடு; *a.* ஆண்டு தோறும் நிகழ்கிற; ஆண்டு தவருது நடைபெறுகிற; ஒவ்வொரு ஆண்டிலும் முடிவுறுகிற; ஆண்டுக்கணிப்பான; ஓராண்டு வாழ்வுடைய.

ann'ually, *adv.* ஆண்டுதோறும்; ஆண்டுமுறையில்.

annu'itant, *n.* ஆண்டுத்தொகை பெறுதற்குரியவர்.

annu'ity, *n.* ஆண்டுத்தொகை, குறிப்பிட்ட கால அளவுக்கோ வாழ்நாள் காலத்துக்கோ ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் முறையாக அளிக்கப்படும் பணத்தொகை.

annul', *v.* ஒழி, துடைத்தழி; வறிதாக்கு; நடைமுறையிலிருந்து நீக்கு; செல்லுபடி ஆகாதென்று அறிவி.

ann'ular, *n.* மோதிர விரல்; *a.* வளையம்போன்ற, வளைவடிவமான; வளையங்கள் கொண்ட.

annular'ity, *n.* வளைவடிவம்; வளையத்தன்மை.

ann'ulate, ann'ulated, *a.* வளையங்கள்கொண்ட, வளையங்களையுடைய.

annula'tion, *n.* வளையவடிவம்; வளையம்; சூழ்வளைவம்.

ann'ulet, *n.* குறுவளையம்; (க. க.) தூணின் மேல்தள உறுப்பு.

annul'ment, *n.* ஒழிப்பு, நீக்கம், விலக்கீடு.

ann'uloid, *a.* வளையம்போன்ற.

ann'ulose, *a.* வளைய வடிவமான; வளையங்கள் கொண்ட.

ann'ulus, *n.* (உயி.) வளைவடிவ அமைப்பு, குறிமறையினத் தாவரத்தில் சிதல் உறை விரிய உதவும் வளைய வடிவமான உயிர்மத் தொகுதி; *pl.* ann'uli.

annun'ciate, *v.* எடுத்துரை, சாற்று, அறிவிப்புச்செய்.

annuncia'tion, *n.* சாற்றுதல், அறிவிப்பு; கன்னி மரியாளிடம் தேவதூதன் வந்து இயேசு திருப்பிறப்பு உணர்த்தியமை, இயேசு திருப்பிறப்பு உணர்த்துவிழா (மார்ச் மாதம் 25-ஆம் நாள்), கன்னித்தாய் விழா.

annun'ciative, *a.* முன் அறிந்து கூறுகிற; சாற்றுகிற.

annun'ciator, *n.* அறிவிப்பவர்; பணிநாடிய இடம் சுட்டிக் காட்டுவதற்கான ஏவல் மணியின் பொறி அமைப்பு.

an'ode, *n.* நேர்மின்வாய், காற்று வாங்கப்பட்ட வெற்றுக் குழாயில் மின்னோட்டம் புகும் நேர்மின்கோடி.

anodise', *v.* மின்பிரிமூலம் உலோகத்துக்குப் பூச்சுக்காப்பிடு.

an'odyne, *n.* நோயாற்றும் மருந்து; மனத்துக்கு ஆறுதல் தருவது; *a.* துன்பந் தணிக்கிற.

anoes'is, *n.* (உள.) புலனுணர்ச்சி மட்டுமுள்ள சிந்தனையற்ற உணர்வு நிலை.

anoet'ic, *a.* புலனுணர்வு மட்டுமுள்ள உணர்வு நிலைப்பண்புடைய.

anoint', *v.* எண்ணெய் பூசு, நறுநெய்யாட்டு; (தொ.) the anointed, திருமுழுக்காட்டப் பெற்றவர், கடவுள் மைந்தர், இயேசுநாதர்; the Lord's anointed, கடவுளால் உரிமையளிக்கப்பட்டவர், அரசர்.

anoint'ment, *n.* திரு நெய்யாட்டு, எண்ணெய்ச் சார்த்து, அபிடேகம்; புனிதப்படுத்தும் செயல்.

anomalis'tic, *a.* முறை விலகிய, நிரல் திறம்பிய, ஒழுங்கு முரணிய; நிலைத்த விதிமுறைகளினின்று விலகிய; (வான்.) ஞாயிற்றணிமை நிலையிலிருந்து அடுத்த ஞாயிற்றணிமை நிலைக்கு நிலவுலகு செல்வதற்குப் பிடிக்கிற; நிலவுலக அணிமை நிலையிலிருந்து அடுத்த நிலவுலக அணிமை நிலைக்குத் திங்கள் செல்லப்பிடிக்கிற.

anomalist'ical, *a.* முறை விலகிய; அமைதி நிலைக்கு மாறுன; ஒழுங்கற்ற.

anom'alous, *a.* ஒழுங்கு மீறிய, பொதுநிலை திறம்பிய; ஒழுங்கற்ற, தாறுமாறுன; ஒரு சில வண்ணங்களைத் தெளிவாகக் காண மாட்டாத.

anom'alure, *n.* செதிள் வாலுடைய ஆப்பிரிக்க அணில்.

anom'aly, *n.* ஒழுங்கற்ற தன்மை; நெறி திறம்புதல், முறைகேடு; (வான்.) ஞாயிற்றுச் சேண்மிகையளவு, கடைசியாகக் கடந்த ஞாயிற்றணிமை நிலையிலிருந்து கோள் அல்லது துணைகோள் விலகியுள்ள தொலைவில் கோண அளவு.

an'omocarp'ous, *a.* வழக்கத்துக்கு மாறுகக் காய்கனியுடைய, வழக்கத்துக்கு மாறுக விளைந்த.

an'omophyll'ous, *a.* ஒழுங்கு திறம்பிய இலை அமைப்புடைய.

anon', *adv.* ஒரு கணத்துக்குள்ளாகவே, உடனே, உடனடியாக; விரைவில்; இன்னொரு தடவை; *int.* என்ன அது! (தொ.) ever and anon, அடிக்கடி.

Ano'na, *n.* சீத்தாப்பழ இனம்.

anona'ceous, *a.* சீத்தாப்பழ இனப்பிரிவு சார்ந்த.

an'onym, *n.* பெயர் தெரியப்படாதிருப்பவர்; பூனைபெயர்.

anonym'ity, *n.* பெயர் தெரியப்படாநிலை, பெயர் மறைவுநிலை.

anon'ymous, *a.* பெயர் அறியப்படாத; எழுதியவர் பெயரில்லாத; (தொ.) anonymous letter, மொட்டைக்கடிதம்.

anoph'eles, *n.* கொசுவகை; முறைக்குளிர் காய்ச்சலுக்குரிய நச்சுக் கொசுவினம்.

Anoplu'ra, *n. pl.* மூட்டைப்பூச்சியினம்.

an'orak, *n.* வடதுருவப்பகுதியிலுள்ள மக்கள் அணியும் தலைக்கவிகையோடு கூடிய தோலால் அல்லது துணியால் செய்யப்பட்ட நீர் ஏறுத உடுப்புவகை.

anorex'ia, an'orexy, *n.* உணவவாவின்மை, பசிச்சுவையின்மை.

anor'thic, *a.* மூன்று முரண்பாடான ஊடச்சுக்களையுடைய.

anos'mia, *n.* முகர்வுணர்வு இழப்பு.

anoth'er, *pron.* வேறொருவர்; இன்னும் ஒருவர், இன்னும் ஒன்று, வேறொன்று; ஒப்புடைய இன்னும் ஒருவர்; ஒத்த இன்னொன்று; *a.* வேறொரு; இன்னும் ஒரு, ஒப்புடைய ஒரு, இனத்தில் இன்னொரு; (தொ.) taken one with another, மொத்தத்தில், சராசரியாக.

anour'ous, *a.* வாலில்லாத.

anox'ia, *n.* இழைமங்களுக்கு உயிர்வளியின் வருவளம் போதாமை, உயிரகக் குறைபாடு.

anox'ic, *a.* உயிரகக்குறைபாடுடைய.

an'sate, an'sated, *a.* கைப்பிடியுடைய.

an'schluss, (செர்.) *n.* ஐக்கியம்.

an'serine, *a.* வாத்தின் இயல்புடைய; மடமை மிக்க, முட்டாள்தனமான.

an'swer, *n.* மறுமொழி, விடை, பதில்; மறுப்பு; விஞ எதிர்விளக்கம்; புதிர் விடுவிப்பு; சிக்கலின் தீர்வு; ஒப்புக்கொள்ளுகை; எதிர்மாறு, மாற்று; எதிர்ச்செயல்; எதிரொலி; (இசை.) வேறு இசைக்கருவியின் மறு இசைப்பு; *v.* மறுமொழி பகர், விடை கூறு; பதில் எழுது; எதிர்மாற்றம் அனுப்பு; இணங்க நட; இசை, இசைவாயிரு; அளவொத்திரு, ஒத்திசை; புதிர் விடுவி; பிரச்சினை தீர்வு செய்; தறுவாய்க்குப் போதியதாயிரு; நிறைவேற்று; சரியீடு செய்; தக்க தண்டனை பெறு; பொறுப்பேற்று நட, பொறுப்பேற்றுக்கொள்; உத்தரவாதமாயிரு; விளைவு ஏற்றுக்கொள்; தேறு, உறுப்படு; எதிர்ச்செயலாற்று; பெயர் குறித்தழைப்பவர்க்கு எதிர்க்குரல்கொடு; குற்றச்சாட்டுக்கு எதிர்விளக்கமளி.

an'swerable, *a.* மறுமொழி கூறத்தக்க; பொறுப்புடைய; பொறுப்பேற்பதற்குரிய; தக்க; நேர் எதிரான; ஒத்திசைந்த, அளவொத்த.

ant, *n.* எறும்பு; (தொ.) White Ant, கறையான்.

an'ta, *n.* சுவர்ப்பட்டிகைக் கல், வாயிலருகே அல்லது மூலை ஓரமாகச் சுவரில் குறுக்காகப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் பட்டிகைக் கல்; *pl.* an'tae.

anta'cid, *n.* வயிற்றுப் புளிப்பகற்றும் மருந்து; *a.* புளிப்பு மாற்றுன, காடித்தன்மைக்கு எதிரீடான.

antag'onize, *v.* எதிரியாக்கு; எதிர்ப்பைத் தூண்டு; எதிர்ச் செயலாற்று; எதிர்த்துப் போராடு.

antag'onism, *n.* எதிர்ப்பு, பகைமை; முரண்பாடு.

antag'onist, *n.* எதிரி, பகைவன்; (உட.) ஈதிர்த்தசை; *a.* எதிர்ச்செயலாற்றுகிற.

antagonis'tic, *a.* எதிரான, எதிர்ப்பான, மாறுன; பகையான.

antal'kali, *n.* காரப்பொருளுக்கு எதிர்மாற்றுன பொருள்.

antal'kaline, *a.* காரப்பொருளுக்கு எதிர்மாற்றுன.

antaphrodis'iac, *n.* சிற்றின்பம் தணிக்கும் மருந்து; *a.* சிற்றின்ப வேட்கை தணிக்கிற.

antarc'tic, *n.* தென்துருவமடுத்த பெரும் பனிப்பரப்பு; *a.* தென்துருவமடுத்த; தென்துருவப்பகுதி சார்ந்த; (தொ.) Antarctic Circle, தென்துருவ வளையம், தென்துருவத்திலிருந்து 23½ பாகையளவிலுள்ள வட்டவரை; Antarctic Ocean, தென்மாக்கடல், அண்டார்ட்டிக் மாக்கடல்.

ant'-bear, *n.* எறும்பைத்தின்னும் மிகப்பெரிய தென் அமெரிக்கக் கரடியினம்; தென் ஆப்பிரிக்கக் கரடியினம்.

ant'-cow, *n.* 'தேனு', உடலிலுள்ள தேன் கசிவுக்காக எறும் பினத்தால் வளர்க்கப்படும் பூச்சியினம்.

an'te [1], *n.* பந்தயச் சீட்டாட்டக்காரரால் சீட்டுப்பார்ப்பதற்கு முன்னே கட்டப்படும் பணம்.

an'te [2], *adv.* முன்னுல், மேலே.

ant'-eater, *n.* எறும்பைத் தின்னும் விலங்குவகை.

an'te-bellum, (ல.) *a.* போருக்கு முந்திய.

anteced'ence, *n.* முன்னிகழ்வு; முந்திய நிலை; முதன்மை நிலை; முற்பகுதி; முன்மொழி; பீடிகை; (வான்.) கோளின் பின்னிடைவுத்தோற்றம், கோள்கள் மேற்கு நோக்கிச் செல்வ தாகத் தோன்றும் தோற்றம்.

anteced'ent, *n.* முன்னேடி, முன்னிகழ்ச்சி, முற்சான்று; (இலக்.) பொருள் முதற்சொல், மறுபெயர்; மறுபெயரிணை-வினையடுத்தஇணை ஆகியவற்றின் குறிப்பு மூலமான சொல்; மறுபெயர்-மறுபெயரிணை-வினையடுத்தஇணை ஆகியவை குறிக்கும் மூலவாசகம்; (அள.) நிபந்தனை வாக்கியத்தின் நிபந்தனை வாசகம்; (கண.) தகவெண்ணின் முகவெண், வித எண்ணிணையின் முன்னிணை.

anteced'ents, *n. pl.* முற்பண்புகள், முன்னடத்தை; முன் வரலாறு.

an'techamber, *n.* இடைக்கூடம், கூடத்தின் முக்கிய அறைக்குச் செல்வதற்குரிய இடைவழியறை.

an'techapel, *n.* திருக்கோட்டத்தின் வாயிற்கூடம், கோட்டத் திருமுன்.

an'tedate [1], *n.* மெய்யான காலத்துக்கு முற்பட்டதாகக் குறிக்கப்படும் காலம், முற்பாடாகக் குறிக்கப்பட்ட காலம்.

antedate' [2], *v.* முந்துநாள் குறி, மெய்யான தேதிக்கு முற்படத்தேதியிடு; முன்னுட்களுக் குரியதாக்கு; குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே செயல்முறைப்படுத்து; முற்படு, முன் தேதியுடையதாயிரு; விரைவுபடுத்து; முன்கூட்டிச்செல்.

antedilu'vial, *a.* உலகப்பெரு வெள்ளத்துக்கு முற்பட்ட; முன்னூழிக்குரிய; மிகப்பழமைப்பட்ட; நாகரிகமற்ற.

antediluv'ian, *n.* விவிலிய நூலின் உலகவரலாற்றின்படி நோவா (Noah) காலத்தில் நிகழ்ந்த உலகப்பெரு வெள்ளத் துக்கு முற்பட வாழ்ந்தவர், ஊழி மூதாளர்; நீள்வாழ்வு கண்டவர், முதுபேராளர்; காலத்துக்கு ஒவ்வாத நெடும் பழமைப்பட்டவர்; *a.* உலகப் பெருவெள்ளத்துக்கு முற்பட்ட காலத்துக்குரிய; பழம்பேரூழி சார்ந்த; தொல்பழங்காலத் துக்கு ஏற்றநிலையில் உள்ள; காலத்துக்கு ஒவ்வாத நெடும் பழமைப்பட்ட, உலகத் தொடக்கக் காலத்துக்கு உரிய.

an'telope, *n.* மானியல் ஆட்டுவகை, மறிமான், மானினது போன்ற கொம்பினையுடையதும் அசைபோடுவதும் ஆகிய விலங்கினம்.

antemerid'ian, *a.* நண்பகலுக்கு முந்திய, முற்பகல் சார்ந்த.

an'te meridiem, (*a. m.*), (ல.) (தொ.) முற்பகலில், நண்பகலுக்கு முன்.

antemun'dane, *a.* உலகத்தோற்றத்துக்கு முற்பட்ட, உலகப் படைப்புக்கு முன் நிகழ்ந்த.

antenat'al, *a.* பேறுகாலத்துக்கு முற்பட்ட.

antena'ti, *n. pl.* குறிப்பிட்டதொரு காலத்திற்கு முன் பிறந்தவர், ஸ்காத்லாந்தில் 1603-க்கு முன் பிறந்தவர்; அமெரிக்காவில் 1776-க்கு முன் பிறந்தவர்.

antenn'a, *n.* உணர்கொம்பு, பூச்சிவகையில் உணர்ச்சியுறுப்பு; (தாவ.) செடிவகைகளில் ஊருதல் தரும் அமைவு; வானலைக் கொடி, கம்பியில்லாத் தந்தியில் வானலை வாங்கவும் பரப்பவும் பயன்படுத்தப்படும் அமைவு; *pl.* antenn'ae.

antenn'al, *a.* உணர்கொம்பினுடைய; உணர்ச்சியுறுப்புக் குரிய.

antenn'ary, *a.* உணர்கொம்பியல்புடைய; உணர்ச்சியுறுப்புத் தாங்கிய.

antennif'erous, *a.* உணர்கொம்பு தாங்கிய.

antenn'iform, *a.* உணர்கொம்பு வடிவான.

antenup'tial, *a.* திருமணத்துக்கு முன் நிகழ்ந்த, திருமணத்துக்கு முந்திய.

antepen'dium, *n.* பலிபீடத்துக்கு முன்னுலுள்ள திரை.

antepenult', *n.* ஈற்றயல் அடுத்தது, கடையிரண்டு அடுத்தது.

antepenul'timate, *n.* ஈற்றயலடுத்தது; *a.* ஈற்றயல் அடுத்த, ஈற்றயலுக்கு முன்னுன.

an'te-post, *a.* பந்தய எண் அறிவிப்புக்கு முற்பட்ட.

antepran'dial, *a.* உண்டிக்கு முந்திய, சாப்பாட்டுக்கு முற்பட்ட.

anter'ior, *a.* காலத்தால் முற்பட்ட, முந்திய, முன் நிகழ்வான; முன்புறமான, முன்பக்கமான; (தாவ.) காம்பின் கவட்டிலிருந்து எதிர்ப்புறமான.

anterio'rity, *n.* காலத்தால் முந்தியது; முன்புறம் இருத்தல், முன்னிடம்.

an'te-room, *n.* முகப்பு அறை; முக்கிய அறைக்குச் செல்லும் இடைவழியறை.

anthel'ion, *n.* ஒண்ணிற முகில் வளையம், முகில்-உறை பனிப்படலம் ஆகியவற்றிற்கு அப்பால் கதிரவன் ஒளிபடுவதால் ஏற்படும் வண்ண அருகுவளையம்; *pl.* anthel'ia.

anthelmin'thic, anthelmin'tic, *n.* குடற்புழு அகற்றும் மருந்துப்பொருள்; *a.* குடற்புழு அழிக்கிற, குடலிலுள்ள புழுக்களை வெளியேற்றுகிற.

an'them, *n.* உறழொலிப்பாடல்; இசைப்பாடல், கோயிற்றிருப் பாடல்; திருவிசைப்பா; நாட்டுவணக்கப்பாடல், தேசிய கீதம்; *v.* இசைப்பாடலால் புகழ்.

anthe'mion, *n.* பழங்கலையில் பயன்படுத்தப்பட்ட தளிர்க் கொடி வகைகளின் சித்திரப் படிவம்.

an'ther, *n.* (தாவ.) பூந்தாதுப்பை, மகரந்தப்பை.

an'theral, *a.* (தாவ.) பூந்தாதுப்பையைச் சார்ந்த.

antherid'ium, *n.* (தாவ.) ஆண்பாலணுக்கள் உண்டாகுமிடம், ஆண் அணுவகம்; *pl.* antherid'ia.

antherif'erous, *a.* (தாவ.) பூந்தாதுப்பை உடைய.

an'theroid, *a.* (தாவ.) பூந்தாதுப்பை போன்ற.

anthe'sis, *n.* அலர்வு, பூவிதழ்விரிவு, அரும்பவிழ்வு ; மலர்வுக் காலம், அலர்ச்சி முதல் விதைபிடிப்பு வரையிலுள்ள மலர்ப் பருவம்.

an'thocarp, *n.* பன்மலர்களிலிருந்து ஒன்றுபட்டு உருவாகும் காய், பல்சூலைக் கனி.

an'thochlore, *n.* மலர்களின் பொன்னிற வண்ணப்பொருள்.

anthocy'an, anthocy'anin, *n.* காடிப்பொருள்களால் சிவப் பாகவும் காரப் பொருள்களால் நீலமாகவும் காடியும் காரமு மல்லாத நடுநிலைப்பொருள்களால் செங்நீல நிறமாகவும் மாற வல்ல செடியின் வெல்லச் சத்து, மலர் நிறத்துக்கு மூலமான வேதிப்பொருள்.

an'thoid, *a.* பூவடிவான ; பூப்போன்ற.

anthol'ogise, *v.* மலர்தொகு, பூத்தொகு ; பாத்தொகு, நூல் திரட்டு, தொகை நூலாக்கு.

anthol'ogist, *n.* மலர் தொடுப்பவர் ; பாத்தொகுப்பாளர் ; நூல் திரட்டாளர்.

anthol'ogy, *n.* பாடல் திரட்டு ; தொகைநூல், நூற்கோவை ; மணிமொழித் தொகுதி, மலர்த்தொடையல்.

anthoma'nia, *n.* மலர்வேட்கை ; பூவெறி.

anthoma'niac, *n.* பூவெறியர்.

anthoph'ilous, *a.* மலர்விருப்புடைய ; பூப்பயில்கின்ற ; பூமிசைகிற.

Anthozo'a, *n. pl.* கடற்பஞ்சு-பவழம் முதலியவற்றை உள்ளடக்கிய உயிரினங்களின் வகை.

an'thracene, *n.* கீலிலிருந்து எடுக்கப்படும் சாயப்பொருள் மூலம்.

anthrac'ic, *a.* நச்சுப்பருவுக்குரிய, கால்நடைகளின் நச்சுச் சீக்கட்டுக்குரிய.

an'thracite, *n.* 'மட்கரி', நிலக்கரிவகை, நிலக்கீல் சத்தற்ற நிலக்கரி.

anthracit'ic, an'thracitous, *a.* மட்கரிசார்ந்த, நிலக் கீலற்ற நிலக்கரிக்குரிய.

an'thracoid, *a.* நச்சுப்பருப்போன்ற, கால்நடை நச்சுச் சீக் கட்டு மாதிரியான.

anthraco'sis, *n.* நிலக்கரித்தூள் கலந்த காற்றை உட் கொள்ளுவதனால் ஏற்படும் நுரையீரல் நோய்.

an'thrax, *n.* நச்சுப்பரு ; கால்நடைகளுக்கு உண்டாகும் ஆபத் தான நச்சுச் சீக்கட்டு.

anthrop'ic, anthrop'ical, *a.* மனிதத்தன்மையுடைய, மாந்த ரியல்புடைய.

anthropocen'tric, *a.* மன்மையமான, மனிதனை மையமாகக் கொண்ட ; மனித இனத்தையே இயற்கையின் இறுதி இலக் காகக் கொண்டு இயற்கை நிகழ்ச்சிகளை மதிப்பிடுகிற ; மனித உள்ளத்தினுடன் ஒப்புமையுடையவையாகக் கொண்டு உயிரியக்கங்களை ஆராய்கிற.

anthropogen'esis, *n.* மனித இனத்தோற்றம் பற்றிய ஆராய்ச்சி.

anthropogeog'raphy, *n.* மன்பதை நிலை நூல், மக்கள் இனங்கள் உலகில் பரவி இருக்கும் பான்மை பற்றிய நூல்.

anthropog'eny, *n.* மன்முதலாய்வு, மனித இனத் தோற்ற ஆராய்ச்சி ; மனித இனத்தோற்ற வரலாறு.

anthropog'raphy, *n.* மன்னினப் பரப்பாய்வு, நிலஇயல் அடிப்படையான மனித இன ஆராய்ச்சி, நிலஇயல்அடிப் படையான மக்கள் இனங்களின் பரப்புப்பற்றிய ஆராய்ச்சி.

an'thropoid, *n.* மனிதக்குரங்கு ; *a.* மனிதனைப்போன்ற, மனித உருவான.

anthropoid'al, *a.* மனிதக்குரங்குக் குரிய.

anthropol'atry, *n.* மனித வழிபாடு, மனிதரைக் கடவுளாக வழிபடுதல்.

anthropolo'gical, *a.* மனித இன ஆராய்ச்சிக்குரிய.

anthropol'ogist, *n.* மனித இன நூலர்.

anthropol'ogy, *n.* மனித இன நூல், மனிதன் உடல் உளம் இரண்டும் சார்ந்த முழு வரலாற்று ஆராய்ச்சித்துறை.

anthropom'etry, *n.* மனித உடல் சார்ந்த அளவை.

anthro'pomorph, *n.* மன்கலைவடிவம், கலைமரபு வழிப்பட்ட மனித வடிவின் சாயல் அமைவு.

anthropomorph'ic, *a.* மன்புனைவான, இறைவனுக்கோ தெய்வங்களுக்கோ பொருள்களுக்கோ மனித வடிவம் அல்லது மனிதப்பண்பு கற்பிக்கிற ; மனிதப்பண்பு ஏற்றப்பட்ட.

anthropomorph'ise, *v.* மன்னியலாக்கு, மனித உருவில் ஆக்கு ; இறைவனுக்கோ தெய்வங்களுக்கோ பொருள் களுக்கோ மனித வடிவு அல்லது மனிதப்பண்பினை ஏற்று.

anthropomorph'ism, *n.* மன்னியல்பு சார்த்தும் கொள்கை, மனித வடிவம் கற்பித்தல் ; மனிதப்பண்பேற்றுதல், இறைவ னுக்கோ தெய்வங்களுக்கோ பொருள்களுக்கோ மனிதவுரு அல்லது பண்பு சார்த்துதல்.

anthropomorph'ist, *n.* மன்புனைவாளர், இறைவனுக்கோ தெய்வங்களுக்கோ பொருள்களுக்கோ மனித வடிவம் அல்லது பண்பு ஊட்டுபவர்.

anthropomorph'ite, *n.* மன்னியல் வழிபாட்டாளர், இறை வனை மனித வடிவு உடையவராகக் கொள்ளும் கோட்பா டுடைய சமயக் கிளையினர் ; இறைவனுக்கோ தெய்வங் களுக்கோ பொருள்களுக்கோ மனித வடிவு அல்லது பண்பு ஏற்றுபவர்.

anthropomorph'itism, *n.* மன்னியல் வழிபாட்டுக் கோட் பாடு, இறைவனை மனித வடிவுடையவராகக் கொள்ளும் சமயக்கிளையின் கோட்பாடு ; மனித வடிவங்கற்பித்தல் ; மனிதப்பண்பேற்றுதல்.

anthropomorpho'sis, *n.* மனித வடிவாக மாற்றுதல்.

anthropomorph'ous, *a.* மனித வடிவில் அமைந்த ; மனிதனைப் போன்ற.

anthropopath'ic, *a.* மன்னுணர்வேற்றுகிற, இறைவனுக் கும் இயற்கைக்கும் பிற பொருட்களுக்கும் மனித உணர்ச்சி கற்பிக்கிற.

anthropop'athism, anthropop'athy, *n.* இறைவனுக்கும் இயற்கைக்கும் பிற பொருட்களுக்கும் மனித உணர்ச்சி ஏற்றுதல்.

anthropoph'agi, *n. pl.* மனிதரைத் தின்பவர் ; மனிதரைத் தின்னும் மாக்கள்.

anthropoph'agite, *n.* மனிதரைத் தின்பவர் ; மனிதரைத் தின்னும் உயிரினம்.

anthropoph'agous, *a.* மனிதரைத் தின்னுகிற.

anthropoph'agy, *n.* மனிதத்தசை மிசைதல்.

Anthropopithe'cus, *n.* ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்கு வகை.

anthropopsy'chism, *n.* மன்னுணர் வேற்றம், இயற்கைக்கோ கடவுளுக்கோ மனித உள்ள உணர்ச்சிகளை ஏற்றுதல்.

anthropos'ophy, *n.* மனித இயல்புபற்றிய அறிவு ; மனித இன அறிவு ; ருடால்ப் ஸ்டீனரின் (Rudolph Steiner, 1861-1925) கோட்பாடு.

ant'i, *n.* எதிர்ப்பாளர் ; *a.* எதிரான, எதிர்ப்புச்செய்கிற.

antiadi'tis, *n.* தொண்டைச்சதை வளர்ச்சி.

anti-air'craft, *a.* விமான எதிர்ப்புக்குரிய ; (தொ.) anti-aircraft gun, எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்துவதற்குரிய பீரங்கி.

an'ti-al'coholist, *n.* வெறிய வெறுப்பாளர், மதுபான விரோதி ; வெறிக்குடி வெறுப்பவர்.

an'tiar, *n.* மலாய் நில நச்சுமரவகை ; நச்சுப்பால், நச்சுப் பிசின்.

antibil'ious, *a.* பித்தத்துக்கு எதிரான, பித்த மாற்றான.

antibio'sis, *n.* உடன்வாழ் வொவ்வாமை, இயல்பான இனப் பகைத் தொடர்பு, ஓர் உயிரின் இயல்பான வாழ்க்கை விளை வான பொருள் மற்றோர் இன உயிரின் வளர்ச்சிக்குக் கேடாய் இருக்கும் தன்மை.

antibiot'ic, *n.* உயிர் எதிரி, உயிர் வாழ்வுக்கு ஊறு செய்யும் பொருள்; *a.* உயிர் வாழ்வுக்கு ஊறு செய்கிற; இயல்பான இனப்பகைத் தொடர்புடைய.

an'tibody, *n.* (உட.) நோய் எதிர்ப்பொருள், உயிரின் தற்காப் புப்பொருள்; தீங்கு தரும் அயற் பொருளுக்கெதிராக உயிரினத் தின் உடலில் உண்டாகும் பொருள்.

an'tic, *n.* கோணங்கி உருவம்; கூத்தாடித்தனம்.

anticath'ode, *n.* ஊடு கதிருக்குரிய வெற்றுக்குழாயின் மின் னூட்ட இலக்கு, எதிர்மின் கதிர்களின் குவியம்.

anticath'olic, *a.* ரோமன் கத்தோலிக்க நெறியை எதிர்த்த, கத்தோலிக்க நெறியை எதிர்த்த; பொது நோக்கெதிர்த்த.

an'tichlor, *n.* 'எதிர்ப்பாசிகம்', தாள் உண்டுபண்ணும் தொழிலில் கூழில் படிந்துள்ள பாசிகத்தை இறுதியாக அகற்றக் கையாளப்படும் பொருள்.

an'ti-chorus, *n.* எதிர் இசைக்குழு, இசைக்குழுவில் பாடலை எடுத்திசைக்கும் குழு; எதிரிசைப்பாடல், இசைப்பாடலில் தொடுப்பு என்னும் உறுப்பு, அனுபல்லவி.

an'tichrist, *n.* எதிர் இயேசு, இயேசுவின் எதிரி; எதிர் காலத்தில் வரப்போவதாக முற்காலக் கிறித்தவர் கருதிய மறுஇயேசு.

antichris'tian, *a.* எதிர் இயேசுவுக்குரிய; கிறித்தவ சமயத் துக்கு எதிரான.

antichris'tianism, *n.* எதிர் இயேசுவின் ஆட்சி, எதிர் இயேசுவின் முறைமை அல்லது கோட்பாடு; கிறித்தவ சமய எதிர்ப்பு.

Antich'thon, *n.* பிதகோரஸ் (Pythagoras) என்ற பண்டைக் கிரேக்க அறிஞர் கோட்பாட்டின்படி ஞாயிற்றின் மறுபக்க மிருப்பதாகக் கருதப்பட்ட மற்றொரு நிலவுலகம்; நிலவுலகக் கோளகையின் தென்பாதி.

antich'thones, *n. pl.* நிலவுலகக் கோளகையின் நேர் எதிர் பாதியிலிருப்பவர்; நேர் அகட்டு நிலையினர்.

anti'cipant, *n.* எதிர்நோக்குபவர்; *a.* எதிர்நோக்குகிற.

anti'cipate, *v.* எதிர்பார், எதிர்நோக்கு, அவாவு; முன் கூட்டி நிகழ்த்து; முன்னதாகவே அமை; காலத்தை முற் படக் குறி; முற்படு; முன் நிகழ்; முந்து, முந்திக்கொள்; முந்துறக்குறி; அவசரப்படு; விரைவுபடுத்து; முன்னறி; முன்னரே உறுதிகொள்; முன்னேற்பாடாயிரு, முன் கருதலா யிரு; முன்கருது.

anticipa'tion, *n.* எதிர்பார்த்தல்; கால முன்னிடைவு; முன் னறிவு; முன்செயல், முன்நிகழ்வு; முன்கருதுதல், முன் கருத்து; முன்னுணர்வு; முற்பாவனை; முன்சுவை; முன் முகம்; (இசை.) பின் வரவெதிர் நோக்கிய முன்னீடு.

anti'cipative, *a.* எதிர்பார்க்கும் இயல்புடைய.

anti'cipator, *n.* எதிர்நோக்குபவர்.

anti'cipatory, *a.* எதிர்பார்க்கும் இயல்புடைய; எதிர்பார்க் கப்பட்ட; முன்னீடான.

anticiv'ic, *a.* குடியுரிமைக்கெதிரான.

anticler'ical, *n.* திருச்சபைப் பணியாளருக்கெதிரான கட்சி யினர்; *a.* திருச்சபைப் பணியாளருக்கெதிரான; திருச்சபைப் பணியாளரின் உரிமைகளை எதிர்க்கிற.

anticlimac'tic, *a.* உச்ச நிலைக்கு எதிரான; சுவையிறக்க மான.

anticlim'ax, *n.* உயர்ந்தேறியிழிதல், சுவையிறக்கம், உணர்ச்சி நிலையில் வீழ்ச்சி.

an'ticline, *n.* (மண்.) நில அடுக்கின் வளைமடிப்பு, மேல் வளைவு.

anticlin'al, *n.* (மண்.) நில அடுக்கின் கவிகை மடிப்பு; *a.* (மண்.) கவிகை மடிப்பான, இருபுறச் சாய்வுடைய; (உள்.) தண்டெலும்பு வளையங்களில் இருபுற வளையங்களும் தன்னை நோக்கிச் சாயும்படி உந்தலான நடுவளையமாக அமைந் துள்ள; (தாவ.) தண்டிலிருந்து செங்குத்தாக வளர்கிற.

anticlino'rium, *n.* (மண்.) வளை மடிப்புக்களடங்கிய மாபெருங் கவிகை மடிப்பு; மேல் வளைவுத் தொகுதி.

an'tics, *n. pl.* கேலிக்குரிய கற்பனைவினை; சிறுகுறும்பு; ஆட்டபாட்டம்.

anticyc'lone, *n.* எதிர் சூறுவளி; அழுத்தமிக்க மையத்தி லிருந்து புறநோக்கிச் சுழன்று செல்லும் வன்காற்று.

an'tidotal, *a.* மாற்றுன, நச்செதிரான.

an'tidote, *n.* மாற்று, மாற்று மருந்து, முறிவு.

an'ti-dysenteric, *n.* அளைச்சலுக்கெதிரான மருந்து; *a.* அளைச்சலுக்கெதிரான.

anti-fed'eral, *a.* கூட்டாட்சிநிலை எதிர்க்கிற.

anti-fed'eralist, *n.* கூட்டாட்சி எதிர்ப்பவர்; அமெரிக்க ஐக்கியநாட்டுக் கட்சி வகையினர்.

antifoul'ing, *a.* கப்பல் அடிப்புறம் கெடாமல் பாதுகாப் பதற்குரிய.

antifric'tion, *a.* உராய்வு தடுக்கிற.

anti-Gall'ican, *n.* பிரஞ்சுப்பண்பு வெறுப்பவர்; *a.* பிரஞ்சுப் பண்பு வெறுக்கிற.

an'tigen, *n.* 'காப்பு மூலம்', அயற் பொருளிலிருந்து உயி ரினைக் காக்கும் உயிர்த்தற்காப்புப் பொருளை உண்டுபண்ணும் பொருள் மூலம்.

antihe'lix, *n.* புறச்செவியின் உள்வளைவு; *pl.* anthel'ices, antihe'lices.

antihis'tamine, *n.* 'எதிர் விழுப்புப்பொருள்', புண்ணுற்ற இடத்தில் குருதியில் விழுப்புப் பரவிச் செயலாற்றுமல் தடுக்கும் மருந்துச்சரக்குகளில் ஒன்று.

anti-Jac'obin, *n.* பிரஞ்சுப் புரட்சிக்கு எதிரானவர்; *a.* பிரஞ் சுப்புரட்சிக் கெதிரான; புரட்சிக் கெதிரான; குடியாட்சிக் கொள்கைகளுக்கு மாறுன.

an'ti-king, *n.* எதிரரசன், போட்டியரசன்.

antiknock', *n.* உள்வெப்பாலையில் வெடிப்புத்தடுக்கும் பொருள்.

anti-league, anti-League, *a.* நேசக்குழு எதிர்த்த; முதல் உலகப்போரின்பின் உருவான நேசதேசக்குழுவை (League of Nations) எதிர்த்த; நேசதேசக் குழுவில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.) சேர்வதை எதிர்த்த.

antilog'arithm, *n.* எதிர் அடுக்குமூலம், முரண் மடக்கை.

antil'ogous, *a.* எதிர்மாறுன; வெப்பத்தால் எதிர்மின் ஊட்டப்பட்ட.

antil'ogy, *n.* முரண்; முரணுரை.

antimacass'ar, *n.* நாற்காலியுறை, சாய்மான இருக்கையுறை.

antimala'rial, *a.* முறைக்குளிர் காய்ச்சலுக்கெதிரான.

an'timask, an'timasque, *n.* இடைக்காட்சிக் களி நாடகம், உயர் நாடகங்களுக்கு முன்னே இடையிலோ ஆடப்படும் களியாட்ட இடை நாடகம்.

an'ti-matter, *n.* எதிர் மீப்பொருள், நிலவுலகப் பொருட் சூழல் கடந்த மறிமின் அல்லது மறிகாந்த ஆற்றலுடைய பொருளின் துகள்.

antimetab'ole, *n.* சொல்லெதிர் மறியணி.

antimetath'esis, *n.* எதிர் முரணணி.

antimnemon'ic, *n.* நினைவாற்றல் தளர்த்துவது; *a.* நினை வாற்றலைப் படிப்படியாகக் குறைக்கும் திறமுடைய.

antimonarc'hical, *a.* முடியரசுக்கெதிரான, முடியாட்சியை எதிர்க்கிற.

antimon'archist, *n.* முடியரசினை எதிர்ப்பவர், முடியாட்சி எதிர்ப்பாளர்.

antimo'nial, *a.* அஞ்சனக் கல்லுக்குரிய, கருநிமிளை அடங்கிய.

an'timonite, *n.* கருநிமிளை உப்பு வகை ; கருநிமிளை உப்புப் போன்ற கனிப்பொருள்.

an'timony, *n.* அஞ்சனக்கல், கருநிமிளை, எளிதில் உடையுமியல்புடைய நீலச்சாயல் வாய்ந்த வெண்ணிறத் தனிப் பொருள்.

anti-nat'ional, *a.* தாய்நாட்டுக் கெதிரான, நாட்டாண்மைக் கெதிரான ; தேசிய எதிரியான.

antinephrit'ic, *a.* குண்டிக்காய் பற்றிய நோய்களுக்கெதிராகச் செயலாற்றுகிற.

ant'ing, *n.* எறும்பேற்றுதல், உயிருள்ள எறும்பையோ பிற உறுத்தற் பொருளையோ சிறகுகளுக்குள் செருகுவித்து இறக்கையையும் தோலையும் துப்புரவாக்கும் பறவைகளின் செயல்.

antineu'tron, *n.* எதிர் நொதுமின், நொதுமினுடன் கலந்து அதனுடன் தானும் வெற்றுற்றலாக அழிந்து போகின்ற மின்னியக்குறுத நுண்துகள்.

antinod'al, *a.* நள்ளிடைக்கணு சார்ந்த, கணு இடையிடத்தின் வலிவு மையம் சார்ந்த.

an'tinode, *n.* நள்ளிடைக்கணு, கணுவிடையே உச்ச அளவு அலைப்புடைய மையப்பகுதி.

antinom'ian, *n.* அற மறுப்பாளர், அறவொழுக்கத்தின் கட்டுப்பாடுடைமையை மறுப்பவர் ; அறங்கடந்த சமயப்பற்றுளர், கிறித்தவத் திருமறையே அற அமைதியின் கட்டுப்பாட்டிலிருந்து கிறித்தவரை விடுவித்து விட்டமையால் கிறித்தவருக்கு அற ஒழுக்கம் வேண்டியதில்லை என்றும் சமயப் பற்றுறுதியே போதுமென்றும் நம்புபவர் ; *a.* அற முறைக் கட்டுப்பாடேற்காத, ஒழுக்கக் கட்டுப்பாட்டை மறுக்கிற.

antinom'ic, antinom'ical, *a.* அற முரணுன ; அற முரணுடைய ; முரணுணையான ; உள்ளார்ந்த முரண்பாட்டுடன் சொல்லளவில் மேலீடாக இசைவான.

antin'omy, *n.* அறமுரண், முரண்பட்ட அறங்களின் இணைவு ; ஆணை முரண், முரண்பட்ட கட்டளை இணைவு ; மேலீடான சொல்லிசைவுடைய பொருள் முரண், முரணுரை.

Antio'chian, *a.* சிரியா (Syria) நாட்டிலுள்ள அண்டியாக் (Antioch) நகரத்துக்குரிய ; பண்டை ரோம நாட்டைச் சேர்ந்த அண்டியோக்கஸ் (Antiochus) என்ற அறிஞரின் பொதுநிலைக் கோட்பாட்டுக்குரிய ; அண்டியோக்கஸ் என்ற அரசருக்குரிய.

antiodontalg'ic, *n.* பல்வலி தடுக்கும் மருந்து ; *a.* பல்வலிக் கெதிராகப் பயன்படுத்தப்படத்தக்க.

antipa'pal, *a.* போப்பாண்டவர்க்கு எதிரான ; போப்பாண்டவரின் கொள்கை முறைக்கு எதிரான.

antipar'allel, *n.* எதிரிணை வரை, வெட்டுக்கோட்டின்மீது கோணங்களில் ஒன்றன் அகம் மற்றதன் புறத்துடன் ஒப்பாகக்கொள்ளும் இரு வரைகளுள் ஒன்று ; எதிரிணை தளம், எதிரிணை வரைபோலமைந்த தளம் ; *a.* எதிரிணையான, குறுக்குக் கோட்டின்மீது அகக்கோணத்துடன் புறக்கோணம் ஒப்பாகக்கொண்ட.

antipathet'ic, antipathet'ical, *a.* வெறுப்புடைய ; எதிருணர்ச்சியுடைய ; இயல்பிலே ஒவ்வாத, முரண்பட்ட பண்புடைய.

antipath'ic, *a.* நேர் எதிர்ப்பண்புடைய ; (மரு.) நேரெதிர்க் குறிகளையுடைய.

antip'athist, *n.* வெறுப்பவர்.

antip'athy, *n.* இயல்பான வெறுப்பு, நீடித்த உவர்ப்பு ; எதிருணர்ச்சி ; பண்பொவ்வாமை, பண்பு முரண் ; இயல்பான முரண்பாடு ; வெறுப்புக்குரிய பொருள் ; வெறுப்புக்குரியவர்.

antiperiod'ic, *n.* நோய் முறைப்படி அடுத்தடுத்து வருவதைத் தடுக்கும் மருந்து ; *a.* நோய் முறைப்படி அடுத்தடுத்து வருவதைத் தடுக்கிற.

anti-personnel', *a.* ஆள் தொகுதிக்கு எதிரான.

antipet'alous, *a.* இதழுக்கு எதிரிலுள்ள.

antiphlogis'tic, *n.* வீக்கம் தணிக்கின்ற மருந்து ; *a.* வீக்கம் அகற்றுகிற ; வெப்புத்தணிக்கிற.

an'tiphon, *n.* எதிரெதிர்ப் பாடல் ; திருக்கோயில் இணைக்குழு பாட்டு.

antiph'onal, antiph'onary, *n.* எதிரெதிர்ப்பாடல் ஏடு ; புகழ்ப்பாடல் தொகுதி ; *a.* எதிரெதிர் பாடுவதற்கு உரிய.

antiph'oner, *n.* இணையெதிரொலி ; புகழ்ப்பாடல் ஏடு.

antiphon'ic, antiphon'ical, *a.* எதிரிணைப்பாட்டான, எதிர்ப்பாட்டான.

antiph'ony, *n.* = antiphon.

antiph'rasis, *n.* நேர் பொருளுக்கு எதிர்மாருன பொருளில் சொற்களை வழங்குதல்.

antiphras'tic, antiphras'tical, *a.* எதிர்மறைப்பொருள் தருகிற ; போலிப்புகழ்ச்சியான.

antip'odal [1], *a.* நிலகத்துக்கெதிரிலுள்ள, கருவகத்தில் கருவிற்கெதிரிலுள்ள.

antip'odal [2], **antipode'an,** *a.* கோள எதிரெதிர் நிலையான ; நேர் எதிர்மாருன ; (கண.) நேர் எதிர்மாருன புள்ளிகளையுடைய.

antip'odes, *n. pl.* எதிரெதிர் முகடுகள், கோளகையின் எதிரெதிர் நிலைகள்.

an'tipole, *n.* நேர் எதிரடியிடங்கள், எதிர்க்கோடிமுனை, எதிர்த்துருவம் ; நேர் எதிர்மாறு.

an'tipope, *n.* போப்பாண்டவருக்கு எதிரானவர், போட்டிப் போப்பாண்டவர்.

anti-pro'ton, *n.* எதிர்மின்னூட்டப்பட்ட நேர்மின்.

antipyret'ic, *n.* காய்ச்சல் முரணி, காய்ச்சல் அகற்றும் மருந்து ; *a.* காய்ச்சல் அகற்றும் தன்மையுடைய.

antipyr'in, *n.* கிலெண்ணெயின் துணை விளைபொருள்களிலிருந்து எடுக்கப்படும் வாணிக மருந்துச்சரக்கு.

antiquar'ian, *n.* பழம்பொருள் திரட்டுபவர், பழம்பொருள் ஆர்வலர் ; 53 அங்குலத்துக்கு 31 அங்குலம் நீள அகலமுள்ள வரைதாள் அளவு ; *a.* பழம்பொருள் ஆய்வு சார்ந்த.

antiquar'ianism, *n.* பழமையாய்வு ; பழமையார்வம் ; அரும்பழமை நாட்டம்.

an'tiquary, *n.* பழமையார்வலர் ; பழம்பொருள் ஆய்வாளர் ; அரும்பழமைத் திரட்டாளர்.

an'tiquate, *v.* பழமைப்படுத்து, காலங்கடந்ததாக்கு.

an'tiquated, *a.* பழமைப்பட்டுப்போன, காலங்கடந்த.

antique', *n.* தொல்பழம் பொருள் ; பழமைச்சின்னம், அரும் பழமைப் பொருள் ; பழமைச்சேகர ஆர்வலரின் தேட்டப் பொருள் ; 'முருட்டுரு', முனைப்பான முகமுடைய திண்வரை அச்சுருவகை ; *a.* தொல்பழமை வாய்ந்த ; பழங்காலத்துக்குரிய ; முதிய, நெடுநீள் காலஞ்சென்ற ; பழம்பாணியான ; முற்காலத்தடமுடைய ; பண்டைக்காலப் பாணியைப் பின்பற்றுகிற ; (தொ.) the antique, பழங்கலைப்பொருள் ; பண்டைக்கலைப்பாணி.

antiq'uities, *n. pl.* பழமைச் சின்னங்கள் ; பழங்காலப் பண்புகள் ; பண்டைக்காலப் பழக்க வழக்கங்கள், தொன்மை நடைமுறைகள், தொன்மை நிகழ்ச்சிகள் ; முன்னை மரபு முறைகள்.

antiq'uity, *n.* தொல்பழமை ; பண்டைக்காலம், கிரேக்க ரோமர் பெரு வாழ்வுக்காலம் ; தொல்பழமைக்காலம் ; பழமைச் சின்னம்.

anti-rab'ic, *a.* வெறிநாய்க்கடியின் நச்சு அகற்றுகிற.

antirachit'ic, *n.* கணைச்சூட்டுக்குரிய மருந்து ; *a.* கணைச்சூடு தடுக்கிற ; கணைச்சூட்டைக் குணப்படுத்துகிற.

an'ti-ritualistic, *a.* விணைமுறையை எதிர்க்கிற, சடங்கெதிர்ப்பான.

antirrhin'um, *n.* நொடித்தால் சுடக்கிடும் மலர்களையுடைய செடிவகை.

antisabbatar'ian, *n.* புண்ணிய கிழமை மறுப்பாளர், திருக்கிழமை எதிர்ப்பாளர்; *a.* புண்ணிய கிழமை மறுக்கிற, திருக்கிழமை மறுப்புக்கு உரிய.

anti-saloon', *a.* மதுக்கூடங்களுக்கு எதிரான, குடிவகைகள் அருந்தப்படும் அருந்தகங்களை எதிர்க்கிற.

antisc'ian, *n.* எதிர் மைவரையாளர், ஒரே மைவரையில் நடு நேர்வரையின் மறுபுறமுள்ளவர்; *a.* எதிர் மைவரை நிலையான.

antiscorbut'ic, *n.* கரப்பானுக்குரிய மருந்து; *a.* கரப்பான் வராமல் தடுக்கிற; கரப்பானைக் குணப்படுத்துகிற.

antiscrip'tural, *a.* திருமறை நூலுக்கெதிரான, மறை நூலுக்கு மாறான.

anti-Sem'ite, *n.* யூத வைரி, செமித்திக் (Semitic) இனத்தை வெறுப்பவர்.

anti-Semit'ic, *a.* யூதரை வெறுக்கிற, செமித்திக் இனத்துக்கு எதிரான.

anti-Sem'itism, *n.* யூதப்பகைமை, செமித்திக் இன வெறுப்பு.

antisep'alous, *a.* புல்லிக்கு எதிரே உள்ள.

antisep'sis, *n.* நுண்ம அழிப்பு; நுண்மத்தடை, நுண்மங்கள் வளர்ச்சியடையாமல் தடுத்தல்.

antisep'tic, *n.* நச்சரி, நோய் நுண்மத் தடை; *a.* நோய் நுண்மங்களை அழிக்கிற, நுண்மத்தடையான, நச்சுத் தடையான.

antiso'cial, *a.* மன்னுயத்துக்கு எதிரான, மன்னலக்கேடான, சமுதாயத்துக்கு மாறான; மக்களுடன் பழகாத; மன்பாச உணர்வற்ற.

antiso'cialism, *n.* மன்னலத்துக்கு மாறுபட்ட தன்மை.

antiso'cialist, *n.* மன்னுயத்துக்கு எதிரானவர்; மன்பாச மற்றவர்; மன்னுடைமை வெறுப்பவர்.

antisocial'ity, *n.* மன்னுயப்பற்றின்மை, சமுதாய வெறுப்பு; மன்னலக்கேடு.

antispasmod'ic, *n.* நடுக்கு அகற்றும் மருந்து; *a.* நடுக்க மகற்றுகிற, துடிப்புத் தடுக்கிற.

antispast'ic, *a.* ஏறிறங்கு நாலசைச்சீரான, ஈரசை ஏறுசீரும் ஈரசை இறங்கு சீரும்கூடிய.

antis'trophe, *n.* மீளிசை, கிரேக்க இசைக்குழுக்கள் முன்னேறிச் சென்று திரும்பும்சமயம் பாடும் பாடற்பகுதி; எதிர்ப்பாடல்; எதிர்ச்சந்தம், சந்தப்போக்கு எதிர்மாறிய இசை; எதிர்கிரல் கிரை; எதிர் மறித்துரைத்தல், கூறியதைத் தலைமாற்றி மீண்டும் கூறல்; எதிர்மறுப்புவாதம்.

antistroph'ic, *a.* மீளிசைக்குரிய; எதிர்ச்சந்தஞ் சார்ந்த.

antis'trophon, *n.* வாத எதிர்வீச்சு, எதிர் மறுப்புவாதம்.

an'ti-tank, *a.* இயங்கரணுக்கு எதிரான, வெடித்தொட்டியைத் தாக்குகிற.

antithali'an, *a.* களிப்பு எதிர்ப்பான, மகிழ்ச்சி வெறுக்கிற.

antithe'ism, *n.* கடவுட்கொள்கை மறுப்பு, கடவுள் மறுப்புக் கொள்கை; கடவுட்கோட்பாட்டுக்கு மாறான கொள்கை; கடவுளெதிர்ப்பு.

antithe'ist, *n.* கடவுள் மறுப்பாளர், கடவுட்கோட்பாட்டு எதிர்ப்பாளர்.

antitheist'ic, *a.* கடவுட்கொள்கைக்கு மறுப்பான, கடவுட் கோட்பாட்டுக்கு மாறான.

antith'esis, *n.* முரணிசைவு நயம், எதிரிணை இசைவணி; எதிர் ஆய்வுரை; நேர்மாறு; எதிர்ப்பு; *pl.* antith'eses.

antithet'ic, antithet'ical, *a.* முரணிசைவான; முரணான, முரண்பட்ட; நேர் எதிரான.

antitox'ic, *a.* எதிர் நச்சுத்தன்மை வாய்ந்த.

antitox'in, *n.* எதிர்நச்சு, நச்சுமுறி.

an'ti-trade, *n.* எதிர்தடக்காற்று; *a.* தடக்காற்றுக்கு எதிரான.

antitra'gus, *n.* செவிக்கரடு, புறச்செவியின் நுழைவாய் எதிர்ப்புடைப்பு.

antitrinitar'ian, *n.* மூன்றொருமைக்கோட்பாட்டை எதிர்ப்பவர்; *a.* மூன்றொருமைக்கோட்பாட்டை மறுக்கிற.

antitrinita'rianism, *n.* மூன்றொருமை மறுப்புக்கோட்பாடு.

antityp'al, *a.* மாதிரிப்படிவ மூலத்துக்குரிய.

an'titype, *n.* மாதிரிப்படிவமூலம்; நேர் எதிர்ப்பாமுகம்.

antityp'ic, antityp'ical, *a.*=antitypal.

antivaccina'tionism, *n.* அம்மைகுத்தெதிர்ப்பு.

antivenene', *n.* நச்சுமாற்று, பாம்பு நச்சுமாற்று.

anti-vit'amin, *n.* எதிர் ஊட்டம், ஊட்டச்சத்தின் செயல் தடுக்கும் ஊட்டப்போலி.

anti-vivisec'tion, *n.* உயிரோடறுவை எதிர்ப்பு, உயிருடன் விலங்கு சிற்றுயிரினங்களை அறுத்து ஆராய்வதை எதிர்த்தல்.

anti-vivisec'tionism, *n.* உயிரோடறுவை எதிர்ப்புக் கோட்பாடு.

anti-vivisec'tionist, *n.* உயிரோடறுவை எதிர்ப்புக் கோட்பாட்டாளர்.

ant'ler, *n.* மானின் முன்னெலும்பிலிருந்து கிளைக்கும் எலும்பு வளர்ச்சி, மான் கொம்பு.

ant'lered, *a.* கவர் கொம்புடைய.

ant'ler-moth, *n.* சிறகில் மான்கொம்பு போன்ற அடையாளங்களையுடைய விட்டில் வகை.

ant'lia, *n.* உறிஞ்சு கூம்பு, விட்டில் வகைகளில் உறிஞ்சு குழல்; *pl.* ant'liae.

ant'liate, *a.* உறிஞ்சு குழலுடைய.

ant'-lion, *n.* முட்டைப்புழுப் பருவத்தில் மணற்குழி செய்து எறும்புகளைப் பொறியிட்டுப் பிடித்துத் தின்னும் சிறகுடைப் பூச்சிவகை.

antonomas'ia, *a.* சிறப்புப்பெயரைப் பொதுப் பெயராக வழங்குதல்; அடைமொழியையே இயற்பெயர் போல வழங்குதல்.

an'tonym, *n.* எதிர்ப்பொருட்சொல்.

an'tre, *n.* முழைஞ்சு, மலைக்குகை.

an'trum, *n.* குடுவை, பொந்து; உடற்குழிவு; மேல்தாடை உள்வளைவு.

Anu'ra, *n. pl.* தவளைபோன்ற வாலில்லாத நீர்நில உயிரினம்.

anu'ria, *n.* சிறுநீர்ப் பிடிப்பு, சிறுநீர்த்தடை.

anu'rous, *a.* வாலில்லாத.

an'us, *n.* எருவாய், குதம், மலங்கழியும் வாய்.

an'vil, *n.* பட்டடைக்கல், அடைகல்; (உட.) செவியெலும்புகளில் ஒன்று; (தொ.) on the anvil, upon the anvil, உருவாகுநிலையில்; ஆராய்ச்சிக்கு உரியதாய்.

anxi'ety, *n.* கவலை, ஏக்கம்; அக்கறை, பற்றுர்வம்.

anx'ious, *a.* கவலையுள்ள; ஆவலுள்ள, ஆர்வமுடைய; அக்கறையுடைய; கவலைக்கிடமான.

an'y, *pron.* யாராவது ஒருவர், ஏதாகிலும் ஒன்று; *a.* யாராவது, எவராவது; ஒருவராவது; ஏதாவது, எவ்வளவாவது, கொஞ்சமாவது; ஒன்றாவது; *adv.* எம்முறையிலேனும், எந்த அளவிலாவது, கொஞ்சமாயினும், ஒருவகையிலாவது; (தொ.) at any rate, எது எப்படியானாலும்; எப்படியும்.

an'ybody, *pron.* எவரேனும் ஒருவர்; எத்தகையவராயினும் ஒருவர்.

an'yhow, *adv.* எப்படியோ ஒருவகையில், ஏதோ ஒரு வழியாக; எது எப்படியானாலும்; குறைந்த அளவிலாவது.

an'yone, *pron.* எவராயினும் ஒருவர்.

an'ything, *pron.* ஏதாவது ஒன்று; *adv.* சிறிதளவாவது, கொஞ்சமாவது.

anythinga'rian, *n.* எதிலும் நம்பிக்கையற்றவர்.

an'ytime, *adv.* எந்த நேரத்திலும்; எந்த நேரத்திலாவது.

an'yway, *adv.*, *conj.* எப்படியும், எந்த வழியிலாகிலும், எப்படியாவது.

an'ywhere, *adv.* எங்காவது, எந்த இடத்திலாவது.

an'ywise, *adv.* எவ்வகையிலாவது, எம்முறையிலேனும்.

An'zac (Australian-New-Zealand-Army-Corps), *n.* ஆஸ்திரேலியத் தண்டுப்படை வீரர்; *a.* ஆஸ்திரேலியத் தண்டுப்படை சார்ந்த.

An'zus, *n.* (வர.) 1952-இல் இயற்றப்பட்ட ஆஸ்திரேலியா (Australia) நியூசிலந்து (New Zealand) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (United States of America) ஆகிய மூவரசு ஒப்பந்தம்.

Ao'nian, *a.* கிரீசில் உள்ள அயோனியாவுக்குரிய; அயோனியாவில் வதிவதாகக் கருதப்பட்ட இசைக்கடவுளர்கட்குரிய.

a'orist, *n.* (இல.) பொது இறந்தகாலம், கிரேக்க முதலிய பண்டை மொழிகளின் இலக்கணத்தில் தொடர்ச்சி-இரட்டுற நிகழ்தல் போன்ற விவரங்களைக் காட்டாமல் வெறும் இறந்த காலத்தை மட்டும் காட்டும் வினை வடிவம்; *a.* வரையறையில்லாத.

aoris'tic, *a.* சிறப்பு வரையறையில்லாத; இறந்தகாலம் சார்ந்த.

aort'a, *n.* கண்டரை, ஆதார நாடி, இதயத்தின் இடது ஏற்றறையிலிருந்து புறப்படும் பெரிய இரத்தக்குழாய்.

a ou'trance, (பிர.) (தொ.) உயிர் இறுதிவரை, உயிர் இருக்குமளவும்.

apace', *adv.* விரைவாக, விரை நடையில்.

apache', *n.* செவ்விந்தியர் இணக்குழு வகை; பாரிஸ் தெரு வீணர்.

apago'ge, *n.* மறுதலைத் தவறு மூலம் மெய்ம்மை எண்பிக்கும் முறை.

ap'anage, *n.* இளைய அரசகுடியினர் உயர் குடியினர் ஆதரவுக்கான ஏற்பாடு; மேல் வருமானம்; ஒட்டு நிலம்; சார்பு நாடு; இயல்பான அடை, துணைப்பண்பு.

apart', *adv.* புறம்பாக; வேருக; தனியாக; சார்பின்றி; ஒட்டாமல், சேராமல், பிரிந்து; நீங்கலாக.

apart'heid, *n.* தென் ஆப்பிரிக்க இன ஒதுக்கீட்டுக் கொள்கை; இன ஒதுக்கீடு.

apart'ment, *n.* தனி அறை.

apartmen'tal, *a.* தனி அறைக்குரிய.

apart'ments, *n. pl.* அறைகளின் தொகுதி.

apathet'ic, *a.* உணர்ச்சியற்ற, பராமுகமாயிருக்கிற, ஆர்வமில்லாத.

ap'athy, *n.* உணர்ச்சியின்மை; அக்கறையற்ற நிலை; பற்றின்மை; உவர்ப்பு; மடிமை.

ape, *n.* குரங்கு; வாலில்லாக் குரங்கினம்; பிறரைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுபவர்; பிறர்போல் நடிப்பவர்; *v.* பிறரைக் கண்மூடிப் பின்பற்று; பிறர்போல் நடி; (தொ.) make one his ape, கோமாளியாக்கு.

apeak', *adv.* (கப்.) செங்குத்தாக, நேர் நிமிர்வாக.

ape'dom, *n.* = apery.

apep'sia, **apep'sy**, *n.* வயிற்றுமந்தம், செமிக்கும் ஆற்றல் குறைவாயிருத்தல்.

aper'cu, (பிர.) *n.* சுருக்க விளக்கம், குறிப்புரை.

ape'rient, *n.* பேதிமருந்து; *a.* குடல்இளக்குகிற, பேதியாகச் செய்கிற.

aperiod'ic, *a.* கால ஒழுங்குப்படி நிகழாத; ஊசலாட்டமின்றி அமைந்திருக்கிற.

ape'ritif, *n.* பசியெழுப்பும் நீர்மம்; பசியூட்டும் மதுபானம்.

ape'ritive, *n.*, *a.* = aperient.

a per se, (ல.) *n.* ஒப்புயர்வற்றதொன்று.

ap'erture, *n.* துளை; இடைவெளி; ஒளியியல் கருவிகளில் ஒளிக்கதிர் ஊடறுத்துச் செல்லும் இடையிடம்.

ap'ery, *n.* பிறர்போல் நடித்தல்; குரங்கினதுபோன்ற செயல்; குரங்கினம் கூடிவாழும் இடம்; குரங்கு மனை.

apet'alous, *a.* (தாவ.) இதழில்லாத.

ap'ex, *n.* மேல் நுதி, மேல் நுனி, உச்சி, முகடு; முக்கோணம் வட்டக்கூம்பு ஆகியவற்றின் முகடு; கோடி, முடிவிடம்.

aphae'resis, *n.* (இலக்.) சொல்லில் முதற்குறை, தலைக்குறை.

aphas'ia, *n.* மூளைக்கோளாறினால் ஏற்படும் பேச்சிழப்பு.

aphas'ic, *n.* பேச்சிழப்புக் கோளாறுக்குரிய மருந்து; *a.* பேச்சிழப்புக் கோளாறுக்குரிய.

aphel'ion, *n.* ஞாயிற்றின் சேண், ஞாயிற்றின் நெடுஞ்சேய்மையில் அமைந்த கோளின் இடம்; *pl.* aphel'ia.

aph'esis, *n.* முதலுயிர்க்கேடு, சொல்லின் தொடக்கத்தில் ஒலியெழுத்தம் பெறுத உயிரெழுத்து பையப்பைய மறைந்து போதல்.

aphet'ic, *a.* சொல்லின் முதல் உயிரெழுத்து மறைந்து போவதற்குரிய.

aph'etise, **aph'etize**, *v.* சொல்லின் முதல் உயிரெழுத்து மறைந்து போகச்செய்.

aph'id, *n.* = aphis.

aphid'ian, *a.* செடிப்பேனுக்குரிய.

aph'is, *n.* செடிப்பேன்; செடிச்சாறுகளை உறிஞ்சுவதும் ஒத்த இரு சிறகுகளை உடையதும் ஆகிய பூச்சிவகை; *pl.* aph'ides.

aphon'ia, *n.* நரம்புக்கோளாறினால் பேச்சாற்றல் இழப்பு.

aphon'ic, **aphon'ous**, *a.* வாய்பேசாத.

aph'orise, *v.* மணிச்சுருக்கமாகக் கூறு; நூற்பா இயற்று.

aph'orism, *n.* நூற்பா, மணி மொழி, முதுமொழி.

aphoris'mic, *a.* = aphoristic.

aph'orist, *n.* நூற்பா இயற்றுபவர், முதுமொழியாளர்.

aphoris'tic, *a.* முதுமொழி இயல்பான, சூத்திர வாய்பாடுடைய.

apho'tic, *a.* ஒளியற்ற; ஒளியின்றி வளரக்கூடிய.

aphrodis'iac, *n.* இணைவிழைச்சினைத் தூண்டுகிற மருந்து; சிற்றின்ப நுகர்ச்சியைத் தூண்டும் பொருள்; *a.* இணைவிழைச்சுக்கு உரிய.

aph'tha, *n.* கொப்புளவகை; *pl.* aph'thae.

aphyll'ous, *a.* (தாவ.) இயல்பாகவே இலையற்ற.

aphyll'y, *n.* (தாவ.) இலையின்மை.

a'pian, *a.* தேனீக்கள் சார்ந்த.

apiar'ian, *a.* தேன்கூட்டுக்குரிய, தேனீ வளர்ப்புக்குரிய.

ap'iarist, *n.* தேனீ வளர்ப்பவர்; தேனீக்களின் பழக்க வழக்கங்களை ஆய்பவர்.

ap'iary, *n.* தேனீப்பண்ணை.

ap'ical, *a.* மேல் நுதிக்குரிய, முகட்டுக்குரிய, முக்கோண மேல் நுனிக்குரிய.

ap'ices, *n. pl.* apex என்பதன் பன்மை.

ap'iculture, *n.* தேனீ வளர்ப்பு.

apicul'turist, *n.* தேனீ வளர்ப்பவர்.

apiece', *adv.* தனித்தனியாக, ஒவ்வொருவருக்கும்; ஒவ்வொன்றுக்கும்.

apiezon oils, (தொ.) சேற்றெண்ணெய்த்துறையின் வளி வாங்கு வடிப்புமுறையின் பின் மீந்த ஆவியழுத்தக் குறைவான சரக்கு.

ap'ish, *a.* குரங்கின் இயல்புடைய; குரங்கின் தோற்றமுடைய, குரங்குபோல் நடந்துகொள்கிற; மடத்தனமான.

apiv'orous, *a.* தேனீக்களைத் தின்கிற.

aplacen'tal, *a.* கொப்பூழ்க் கொடியற்ற.

ap'lanat, *n.* உருளாடிக் கோட்டத்துக்கு இடந்தராத முழு ஒளி ஊடுருவவல்ல கண்ணுடி ஈரொட்டுச் சில்லு.

aplanat'ic, *a.* உருளாடிக்கோட்டம் சரிசெய்யப்பட்டுள்ள.

aplomb',(பிர.) *n.* செங்குத்துநிலை; தன்னிறைவு, நிறைவமைதி.

apnoe'a, *n.* மூச்சு நின்றுபோதல்.

apoc'alypse, *n.* கடவுள் அருள் வெளிப்பாடு; தூயதிரு யோவானுக்கு வெளிக்காட்டப்பட்ட செய்தி; புதிய ஏற்பாட்டின் இறுதி ஏடு; பின்னர் நேர்வனவற்றையோ ஊழியிறுதிச் செய்திகளையோ பற்றிக் கூறும் நூல்.

apocalyp'tic, apocalyp'tical, *a.* கடவுள் அருள் வெளிப்பாட்டுக்குரிய, கடவுள் அருள் வெளிப்பாட்டுத் தன்மை வாய்ந்த.

apocar'pous, *a.* (தாவ.) சூல் இணையாத, சூலகம் வேருக உடைய.

apoc'ope, *n.* கடைக்குறை, சொல்லின் இறுதி எழுத்தை நீக்கிவிடல்,

apoc'rypha, *n. pl.* மறைவுச்செய்திகள்; கிறித்தவத் திரு மறைத் தொகுதியிலிருந்து பிரித்தொதுக்கப்பட்ட ஏடுகள்.

apoc'ryphal, *a.* ஏற்கப்படாத, மேற்கோளாக ஏற்கப்பட முடியாத; ஐயத்துக்கிடமான; போலியான, கட்டுக்கதையான.

ap'od, *n.* கால்கள் அல்லது வயிற்றடிச்செதிள்கள் இல்லாத உயிரினம்.

apodeic'tic, apodeic'tical, apodic'tic, *a.* நன்கு நிறுவப்பட்ட, வல்லுறுதியான, மறுக்க முடியாத.

apod'osis, *n.* நிபந்தனை வாக்கியத்தின் முடிந்த வாசகம், தொடர் வாக்கியத்தின் நிலைவாசகம்.

apodyter'ium, *n.* குளிப்புக்கூட ஆடை மாற்றும் அறை.

apog'amous, *a.* பால் தொடர்பற்ற இன மரபுடைய.

apog'amy, *n.* பால் கலவா மாற்றுத் தலைமுறையுடைமை.

apoge'al, apoge'an, *a.* நிலவுலகச் சேண்சார்ந்த, ஞாயிறும் கோள்களும் நிலவுலகுக்கு உறுநெடுந்தொலைவாயிருக்கும் நிலைசார்ந்த.

ap'ogee, *n.* (வான்.) புவிச்சேணிலை, ஞாயிறும் திங்களும் கோள்களும் நிலவுலகுக்கு உறுநெடுந்தொலைவாயிருக்கும் நிலை, பூமி உச்சநிலை; முகடு.

apogeotrop'ic, *a.* நிலஈர்ப்பின் திசைக்கெதிராகத் திரும்புகிற.

ap'ograph, *n.* மெய்ப்படி, முற்றிலும் சரியான பகர்ப்பு.

apolaus'tic, *n.* இன்பநாட்டக்கோட்பாடு; *a.* இன்ப நுகர்ச்சி நாட்டமுடைய; தற்கட்டுப்பாடின்றி இன்பத்தில் மிதக்கிற.

Apollinar'is, *n.* பிரஷ்யா (Prussia) நாட்டில் ஆர் (Ahr) பள்ளத்தாக்கில் ஊறும் மருந்து நீர்.

apoll'ine, *n.* அப்போலோ (Apollo) என்ற கிரேக்க தெய்வத்துக்குரிய.

Apoll'o, *n.* கிரேக்க ஞாயிற்றுக்கடவுள், கவிதை இசை மருத்துவம் வில்லாண்மை முதலியவற்றிற்குரிய தெய்வம்.

apollo'nian, apollon'ic, *a.* அப்போலோவின் இயல்புகளமைந்த.

Apoll'yon, *n.* பிசாசு, நாசகாரி, சாத்தான்.

apologet'ic, apologet'ical, *a.* குற்றத்தை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளுகிற; செய்ததற்கு இரங்கும் இயல்புடைய; தவறுக்குக் காரணங்காட்டுகிற.

apologet'ics, *n.* தன் சமயத்துக்கு ஆதரவான வாதம்.

apolo'gia, *n.* தன்கோள் விளக்கும் எழுத்துமூலம்.

apol'ogist, *n.* இரங்கியுரைப்பவர், வாதம் செய்து தன் சமயம் ஆதரிப்பவர்; பட்டிமன்றம் ஏறித் தன்கோள் நிறுவுபவர்.

apol'ogize, *v.* இரங்கியுரை, காப்பு விளக்கங்கூறு.

ap'ologue, *n.* நீதிக்கதை; கட்டுக்கதை; விலங்குகதை.

apol'ogy, *n.* செய்ததற்கு இரங்கல்; குற்றத்தை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளுதல்; மனமாரத் தெரிந்துசெய்த குற்றமல்ல என விளக்க உறுதிகூறல்; சமாதானம், விளக்கம்; வாத விளக்க ஆதாரம்; பெயருக்குத் தகுதியற்ற ஆள், கண்துடைப்புப் பொருள்.

apopemp'tic, *a.* பிரிவு குறித்த, பிரிவுபசாரமான.

ap'ophthegm, *n.* பொருள் பொதிந்த உரை, செறிமொழி.

apophthegmat'ic, *a.* சுருங்கிய செறிமொழிகளாலான.

apoplec'tic, apoplec'tical, *a.* வலிப்புநோய்க் குரிய; வலிப்புநோய் விளைவிக்கிற; வலிப்புநோய் கண்டுள்ள; வலிப்புநோய்க்குள்ளாகும் பாங்குடைய.

ap'oplexy, *a.* வலிப்புநோய், சன்னி, மூளையின் குருதிப் பெருக்கினால் பெரும்பாலும் விளைகிற உணர்ச்சி செயல் ஆகியவற்றின் இழப்பு.

a-port', *adv.* துறைமுகத்தின் பக்கத்தில், துறைமுகப்பக்கம் நோக்கி.

aposemat'ic, *a.* (வில.) எச்சரிக்க உதவும் நிறம் சார்ந்த, எச்சரிக்கிற.

aposiopes'is, *n.* வாசகத்தின் நடுவில் திடீரென நிறுத்தி உணர்ச்சி அல்லது ஆற்றல் பெருக்கிக் காட்டும் அணிமுறை.

aposit'ia, *n.* உணவு வெறுப்பு.

apos'tasy, *n.* கொள்கை மீறுகை; கட்சிமாறுதல்; சமய எதிர்ப்பு; சமயத் தலைமையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தல்; கடமை தவறுதல்.

apos'tate, *n.* சமயப்பகைவன்; பழைய கொள்கைகளைக் கைவிடுபவன்; *a.* சமயக் கோட்பாடுகளுக்கடங்காத.

apostat'ic, apostat'ical, *a.* சமயத்தைத் துறக்கிற; கொள்கை மீறுகிற.

apos'tatize, *v.* சமயக்கொள்கைகளை எதிர்ப்பவராகிவிடு.

a posteriori, (ல.) *a.* நுகர்ச்சிக்குப்பின் பெற்ற; காரியத்திலிருந்து காரணத்துக்குச் செல்லும் வாதமுறை சார்ந்த; *adv.* விளைவிலிருந்து மூலம் காணும் வகையில்.

apos'til, apos'tille, *n.* பக்கக்குறிப்பு, ஓரக்குறிப்பு.

apos'tle, *n.* திருத்தூதர், இயேசு தமது கொள்கைகளைப் பரப்புவதற்கு அனுப்பிய பன்னிரண்டு திருத்தொண்டர்களில் ஒருவர்; ஒரு நாட்டில் கிறித்தவ சமயத்தைப் பரப்பி வெற்றி கண்ட முதல் தொண்டர்; சீர்திருத்தத்தலைவர்; செயல் தூணாயாளர்.

apos'tleship, *n.* திருத்தூதர் நிலை.

apos'tolate, *n.* திருத்தூதர் நிலை; கொள்கை பரப்புவதில் முதன்மை; இயக்கத்தலைமை.

apostol'ic, apostol'ical, *a.* திருத்தூதர்களுக்குரிய; திருத்தூதர் இயல்புள்ள; போப்பாண்டவர் சார்ந்த; போப்பாண்டவர் நிலை சார்ந்த.

apostol'icism, apostolic'ity, *n.* திருத்தூதர் நிலைக்குரிய இயல்பு.

apos'trophe[1], *n.* முன்னிலையணி, சொற்பொழிவில் அல்லது பாட்டில் இறந்துபோன ஒருவரை அல்லது உடன் இராத ஒருவரை முன்னிலைப்படுத்தி விளித்தல்; எதிரே இல்லாத ஒரு பொருளை முன்னிலைப்படுத்தல்; (தாவ.) பாசிய ஒதுக்கம், மூன்றத்த ஒளிக்கு விலகி உயிர்மங்களில் பாசியம் ஓரத்தில் ஒதுங்கல்.

apos'trophe[2], *n.* எழுத்தெச்சக்குறி; உடைமை வேற்றுமைக் குறி.

apostroph'ic[1], *a.* முன்னிலையணிக்குரிய.

apostroph'ic[2], *a.* எழுத்தெச்சக்குறி சார்ந்த.

apos'trophize, *v.* இறந்தாரை அல்லது உடன் இராதவரை முன்னிலைப்படுத்திப் பேசு.

ap'othegm, *n.*=apophthegm.

apotheos'is, *n.* தெய்வமாக்கல்; புகழ்ந்து போற்றுதல்; கடவுள்மங்கலம்; பிரதிட்டை; அடியவர் குழாத்தில் சேர்த்தல்; கொள்கை வழிபாடு.

apoth'eosize, *v.* தெய்வமாக்கு.

apotropa'ic, *a.* தீங்கு விலக்குகிற; தீமை விலக்கத்தக்க.

ap'ozem, *n.* வடிசாறு, கியாழம்.

appal', *v.* திகைக்கவை, அச்சுறுத்து.

appall'ing, *a.* திகைக்க வைக்கிற.

app'anage, *n.*=apanage.

apparat'us, *n.* ஆய்கருவி, செய்கருவி, கருவிகலம், இயல் நூல் செய்ம்முறைகள் முதலியவற்றிற்கு வேண்டிய கருவி கரணங்களின் அமைவு; இயற்கை உறுப்பமைவு; ஆராய்ச் சிக்கு வேண்டும் சாதனங்கள்.

appa'rel, *n.* கிறித்தவ சமயக்குருக்கள் அங்கியிலுள்ள சித்திரப் பூவேலைப்பாடுகள்; ஆடை, உடை; *v.* அணிவி; ஒப்பணை செய்.

appar'ency, *n.* வெளிப்படைத் தெளிவு; சட்டப்படி உறுதி யான பின்னுரிமை.

appa'rent, *a.* தோற்றமான; வெளிப்படையான; எளிதில் உணரத்தக்க; மேலீடாகத் தோன்றுகிற; காட்சி மூலம் உணரப்பட்ட; உறுதிப்படுத்தப்பெறுத; (தொ.) heir apparent, சட்டப்படி உறுதியான பின்னுரிமையுடையவர்.

appari'tion, *n.* பொய்த்தோற்றம்; இறந்தவர்களின் உருவத் தோற்றம்; ஆவியுரு, பேய்.

appa'ritor, *n.* ரோமக் (Roman) குற்றஇயல் நடுவரின் ஏவலர்; பொது நீதிமன்றத்தின் அல்லது சமயத்துறை நீதிமன்றத்தின் அதிகாரி; கட்டியக்காரன், வாயிலோன்.

appeal', *n.* மேல் முறையீடு, மேல் வழக்கு; மேல் வழக்காடும் உரிமை; வேண்டுகோள்; *v.* மேல் வழக்காடு; வேண்டு கோள் விடு; அழை; கவனிக்கும்படி செய்; நோக்கிச் செய லாற்று; கவர்ச்சியூட்டு; (தொ.) appeal to the country, பொதுத்தேர்தலின் மூலம் மக்கள் கருத்திசைவு நாடு.

appeal'able, *a.* மேல் வழக்காடத்தக்க; வேண்டுகோள் விடுத்தற்குரிய.

appeal'ing, *a.* கவர்ச்சியூட்டுகிற.

appear', *v.* கண்ணுக்குத் தோன்று, முறைப்படி முன்னிலைப் படு; பலர்முன் காட்சியளி; பிரதிநிதியாகச் செயலாற்று; வெளிப்படு; வெளிப்படையாகப் புலப்படு; போன்று தோற்றமளி.

appear'ance, *n.* தோன்றுதல்; வந்திருத்தல்; தோற்றம்; வெளித்தோற்றம்; வெளிப்பகட்டு; பொய்த்தோற்றம்; உரு வெளித் தோற்றம்; வெளிவரல்; (தொ.) keep up appearances, ஒப்புக்காகப் புறத்தோற்றத்தைக் கைவிடாம லிரு; put in an appearance, நேரில்வந்து தோன்று; to all appearances, வெளியே தெரிகிற வரையில்.

appeas'able, *a.* ஆற்றத்தக்க, அமைதிப்படுத்தத்தக்க.

appease', *v.* ஆற்று; தணி; சமாதானப்படுத்து, அமைதிப் படுத்து, இன்மொழி கூறிச் சாந்தப்படுத்து; திருப்திப்படுத்து; பணம் கொடுத்துச் சரிப்படுத்து; விட்டுக்கொடுத்து இணக் குவி; ஆவல் நிறைவேற்று.

appease'ment, *n.* ஆற்றுதல், தணித்தல், திருப்திப்படுத் துதல்; தணிக்கப்பெற்றநிலை.

appell'ant, *n.* மேல் வழக்காடி, கீழ்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்பவர்; *a.* வேண்டுகோள் செய்கிற; (சட்.) மேல்வழக்குத் தொடர்பான.

appell'ate, *a.* மேல்வழக்குச் சார்ந்த; மேல்முறையீடுகளை ஏற்று ஆராய்கிற.

appella'tion, *n.* பெயர்; தனி மனிதருக்கு இட்டழைக்கும் குறிச்சொல்; பட்டப்பெயர், இடு பெயர்.

appell'ative, *n.* பொதுப்பெயர்; ஒரு குழுவினத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் அல்லது ஒவ்வொன்றுக்கும் வழங்கத்தக்க பெயர்; இடு பெயர்; *a.* ஒரு வகுப்பைக் குறிப்பிடுகிற, பொதுவான பெயரீட்டுக்குரிய.

append', *v.* ஒட்டு; ஒட்டித் தொங்கவிடு; இணை.

appen'dage, *n.* இணைப்பு, பின் ஒட்டு; தொங்கல், தொங்கு பவர்; பின்சேர்ப்பு; துணையுறுப்பு, சினை; புடை வளர்ச்சி; மிகை ஒட்டுப் பொருள், துணைப்பொருள், சார்பொருள்.

appen'dant, *n.* அண்டியிருப்பவர்; அடுத்துள்ள பொருள்; துணைப்பண்பு, இயல்பு.

appendicec'tomy, *n.* குடல்முளை அகற்றுதல்.

appendicit'is, *n.* குடல்முளை அழற்சி.

append'icle, *n.* சிறுதுணையுறுப்பு.

appendic'ular, *a.* துணையுறுப்புச் சார்ந்த.

appen'dix, *n.* பிற்சேர்க்கை, இணைப்பு, அனுபந்தம்; (உள்.) முளை, முளை, ஓர் உறுப்பின் மேற்புறத்தினின்று தோன்றும் சிறுமுளை; குடல்முளை; *pl.* appen'dices, appen'dixes.

apperceive', *v.* பொறியுணர்வை உள்ளங்கொண்டு புலனுணர் வாக்கு.

appercep'tion, *n.* மனத்தில் தன்னுணர்வு, உள்நோக்கு; உட்புலன் உணர்ச்சி; புலன் உணர்வு, முன்னறிவோடு புணர்த்தல்.

appercep'tive, appercip'ient, *a.* பொறிவுணர்வை வாங் கிப் புலனுணர்வாக்கும் இயல்புள்ள, புதிய பொறியுணர்வைப் பழைய உணர்வுகளுடன் இணைக்கும் திறமுள்ள.

appertain', *v.* உரித்தாயிரு, சார்ந்திரு; பொருத்தமாயிரு; தொடர்புடையதாயிரு.

app'etence, app'etency, *n.* வேட்கை, ஆவல், விருப்பம்; நாட்டம்.

app'etent, *a.* ஆர்வங்கொண்ட, பெருவிருப்புடைய.

app'etite, *n.* விருப்பம், நாட்டம், இயல்பான தேவைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஆவல்; பசி; பசியார்வம்; நுகர்ச்சி வேட்கை; இன்சுவைக்கவர்ச்சி.

appet'itive, *a.* பசியைத்தூண்டும் இயல்புடைய; ஆவ லெழுப்புகிற.

app'etize, *v.* பசியுண்டாக்கு; ஆராயத்தூண்டு.

app'etizer, *n.* பசிச்சுவை பெருக்கும் பொருள்.

app'etizing, *a.* பசிச்சுவை உண்டுபண்ணுகிற.

applaud', *v.* கைதட்டுவது மூலமாய் உடன்பாட்டினை உரக்கத் தெரிவி; ஆதரவு தெரிவி; மெச்சு; பாராட்டு; புகழ்.

applause', *n.* கைகொட்டி ஆர்ப்பரித்தல்; உரக்கத்தெரிவிக்கப் பட்ட ஒப்புதல்; ஆரவாரப்பாராட்டு.

applaus'ive, *a.* பாராட்டி ஆர்ப்பரிக்கிற.

ap'ple, *n.* ஆப்பிள் பழம்; (தொ.) apple of discord, பகைமை-போட்டி இவற்றிற்குக் காரணமாயுள்ள பொருள்; apple of Sodom, Dead Sea apple, பார்ப்பதற்கு அழகாயிருந்து தொட் டால் சாம்பலாக உதிர்ந்துவிடும் பழம்; அழகாயிருந்து ஏமாற்றந்தரும் பொருள்; apple of the eye, கண்மணி, விழிப்பாவை; அருமையாக வைத்திருக்கும் பொருள்; upset the apple-cart, திட்டங்களைப் பாழாக்கு.

ap'ple-brandy, *n.* புளிப்பேறிய ஆப்பிள் சாற்றிலிருந்து வடிக்கப்படும் சாராயம்.

ap'ple-butter, *n.* புளிப்பேறிய ஆப்பிள் சாற்றில் வதக்கிய ஆப்பிள் சுவைச் சத்து.

ap'ple-cheese, *n.* அழுத்தப்பட்ட ஆப்பிள் பழச்சக்கை.

ap'ple-jack, *n.* ஆப்பிள் சாராயத்தின் அமெரிக்கப்பெயர்.

ap'ple-john, *n.* வாடியும் கெடாமலிருக்கும் ஆப்பிள் வகை.

ap'ple-pie, *n.* ஆப்பிள் பணியாரம்.

ap'ple-pomace, *n.* சாறு பிழிந்தெடுக்கப்பட்ட ஆப்பிள் பழச்சக்கை.

appli'able, *a.* = applicable.

appli'ance, *n.* பயன்படுத்தல் ; துணைக்கருவி, சாதனம்.

app'licable, *a.* பயன்படத்தக்க ; பொருத்திக் காட்டக்கூடிய, இயைபுள்ள.

app'licant, *n.* குறையிரப்போர், மனுதாரர், விண்ணப்பம் செய்துகொள்பவர்.

applica'tion, *n.* வேண்டுகோள் ; விண்ணப்பம் ; மேலே பூசுதல், செயற்படுத்தல், பயன்படுத்துதல்; பூசப்படும் சாந்து தைலம் முதலியன, பற்று, பூச்சு ; பொருந்தவைத்தல் ; பொருத்தம் ; இடைவிடா முயற்சி.

app'licative, *a.* செயல்முறையான.

app'licatory, *a.* பயன்படுத்தக்கூடிய.

applied', *a.* செயல்முறை சார்ந்த ; (தொ.) applied science, செயல்முறை விஞ்ஞானம்.

applique', *n.* மேலடைப்பணி, ஒரு பொருளினின்று வெட்டப்பட்டு மற்றொன்றின் மேல் பொருத்தப்படும் ஒப்பனை வேலைப்பாடு அல்லது அணிகலன்.

apply', *v.* இடு, அருகே வை ; மேல் வை ; கருத்தூன்று ; பயன்படுத்து ; தொடர்புடையதாகச் செய், பொருந்து ; ஈடுபடுத்திக்கொள் ; நன்கு கவனி ; குறையிரந்து கேள் ; விண்ணப்பம் செய்துகொள் ; வேண்டுகோள் விடு.

appoggiatur'a, (இத்.) *n.* (இசை.) முன்வரும் துணைச்சுரம்.

appoint', *v.* காலங்குறி ; உறுதி செய் ; நியமி ; இடத்தில் அமர்த்து ; விதித்துக்கொடு ; உடைமை முதலியவை சேரிடம் அறிவி.

appointee', *n.* நியமிக்கப்பெற்றவர்.

appoint'ment, *n.* வேலையில் அமர்த்தல், நியமனம், பணி, குறிப்பிடுதல், உறுதி செய்தல் ; சந்திப்புத்திட்டம் ; விதித்துக் கொடுத்தல் ; தீர்ப்பு ; அவசரச்சட்டம்.

apport', *n.* கண்காணு ஆற்றலால் கொண்டுவந்து காட்டப்படும் பருப்பொருள்.

appor'tion, *v.* பகுத்துக் கொடு, பங்கீடு செய், பிரித்துக் கொடு.

appor'tionment, *n.* பங்கீடு, பகுத்துக் கொடுத்தல், பாதீடு.

appose', *v.* ஒன்றன்மேல் மற்றொன்றைப் பொருந்த வை ; ஆவணத்தின்மேல் முத்திரை வை ; ஒன்றன் பக்கத்தில் ஒன்றுக வை ; எதிர்நில்.

app'osite, *a.* நன்கமைந்த, இசைவான, தகுதியான, பொருத்தமான.

apposi'tion, *n.* முத்திரை பொறிப்பு ; புடை வைப்பு, அருகமைவு ; (இலக்.) நேரியைவு, ஒரே தொடர்புற வைத்தல்.

apposi'tional, appos'itive, *a.* அடுத்தடுத்து வைக்கப்பட்ட, நேரியைபான.

apprais'able, *a.* மதிப்பிடக்கூடிய.

apprais'al, *n.* = appraisement.

appraise', *v.* விலைகுறி, மதிப்பிடு, தரம் குறி.

appraise'ment, *n.* மதிப்பீடு, மதிப்பிடுதல், தர மதிப்பு.

apprais'er, *n.* சொத்து மதிப்பாளர், தரம் கணிப்பவர்.

appre'ciable, *a.* மதிப்பிடத்தக்க, உணரத்தக்க, புலன்களுக்குத் தெரியக்கூடிய, கணிசமான.

appre'ciate, *v.* மதிப்பிடு, சரியாகக் கணி ; உணர், உணர்ந்து நுகர் ; பாராட்டு ; மதிப்பை உயர்த்து ; மதிப்பில் உயர்.

appreciation, *n.* மதிப்பீடு, நடுநிலை முடிபு ; உண்மை யுணர்ந்து போற்றுதல் ; நுகர்வுணர்வு ; பாராட்டு, குணநலன்களைத் தக்கவாறு ஒப்புக் கொள்ளல் ; மதிப்புயர்வு ; திறனுய்வுரை, திறனுய்வுக்கட்டுரை.

appre'ciative, *a.* உண்மையுணரும் இயல்புடைய, பாராட்டுதல் தெரிவிக்கிற.

appre'ciator, *n.* பாராட்டுபவர், சரியாக மதிப்பிடுபவர்.

appre'ciatory, *a.* = appreciative.

apprehend', *v.* கைப்பற்று ; கைதுசெய் ; புலன்கொள், பொருளறி, உணர் ; அறி, எதிர்நோக்கி அஞ்சு, ஐயுற்று அஞ்சு.

apprehensibil'ity, *n.* மனங்கொள்ளும் தன்மை ; புலனுணர்வாற்றல்.

apprehen'sible, *a.* உளங்கொள்ளத்தக்க.

apprehen'sion, *n.* கைப்பற்றல் ; கைது செய்தல் ; மனத்தில் வாங்கிக் கொள்ளுதல் ; கருத்து புரிந்து கொள்ளுதல் ; அச்சம்.

apprehen'sive, *a.* புலன்களால் பற்றுதற்குரிய ; மனத்தால் வாங்குதற்குரிய ; கருத்துடைய, உணர்கிற, அறிவுக்கூர்மையுள்ள ; ஐயுற்றஞ்சுகிற ; அச்சங்கொள்கிற.

appren'tice, *n.* பணிபயில்பவர் ; மற்றொருவருக்குக் கட்டுப்பட்டு வேலை கற்றுக்கொள்பவர், புது வேலையாள், கற்றுக்குட்டி ; *v.* பணிபயில்வோராகப் பிணைப்படுத்து.

appren'ticeship, *n.* தொழில் பயில்வோர் நிலை, தொழிற் பயிற்சி ; செயல்முறைப் பயிற்சிக் காலம் ; பயிற்சிப் பருவம்.

apprisé', *v.* அறிவி, தெரிவி.

apprize', *v.* மதிப்பிடு, தரமுணர், நலங்கண்டு பாராட்டு ; கடன் தீர்க்க விற்பனை செய்.

approach', *n.* அணுகுதல் ; ஏறத்தாழ ஒத்திருத்தல் ; அணுகுநெறி, நோக்கு ; செல்வழி ; பாதை ; *v.* அணுகு, இயல்பு முதலியனவற்றில் ஏறத்தாழ ஒத்திரு ; கண்டுபேசு ; (படை.) தாக்குக் குறியை அடைவதற்குக் குழிகள்வெட்டிச் சாலைகள் போடு.

approachabil'ity, *n.* அணுகக்கூடிய நிலை.

approach'able, *a.* கிட்டிச் செல்லத்தக்க, நெருங்கக்கூடிய.

approach'es, *n. pl.* (படை.) முற்றுகையிடுபவர்கள் தாக்குக் குறியை அடைவதற்கு வெட்டுக் குழிகள் போடும் பாதைகள் முதலியன.

app'robate, *v.* ஒப்புறுதியளி, அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்.

approba'tion, *n.* பாராட்டு, ஏற்றுக்கோடல், அங்கீகாரம்.

app'robative, app'robatory, *a.* பாராட்டுகிற, ஏற்றுக் கொள்கிற.

approof', *n.* தேர்வு, தெளிவு, ஏற்பிசைவு.

approp'riate, *a.* உரிய, ஒன்றுக்கே சிறப்பான, தகுதியுள்ள, சரியான, பொருத்தமான, ஒன்றுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட ; *v.* உரிமைப்படுத்திக்கொள் ; தனதாக்கிக்கொள் ; குறிப்பிட்ட காரியங்களுக்குப் பயன்படுத்து அல்லது ஒதுக்கிவை.

appropria'tion, *n.* கைப்பற்றல் ; ஒதுக்கிவைத்தல் ; (தொ.) appropriation bill, ஒதுக்கு மசோதா, பண ஒதுக்கி வைப்பு மசோதா.

approp'riative, *a.* தன் சொந்த உடைமையாக்கிக் கொள்கிற ; ஒன்றனுக்கென ஒதுக்கி வைக்கிற.

approv'able, *a.* ஒப்புக்கொள்ளத்தக்க, ஏற்கக்கூடிய.

approv'al, *n.* ஏற்றல், ஒப்புறுதி, அங்கீகாரம்.

approve', *v.* ஏற்றுக்கொள், நற்சான்றளி ; மெய்ப்பித்துக் காட்டு ; உறுதிப்படுத்து ; பாராட்டு.

approve'd, *a.* அங்கீகாரம்பெற்ற ; (தொ.) approved school, அரசாங்கம் நடத்துகிற இளங்குற்றவாளிச் சீர்திருத்தப் பள்ளி.

approv'er, *n.* ஒப்புக்கொள்பவர் ; (சட்.) குற்ற உடந்தைச் சாட்சி, குற்றத்துக்கு உடந்தையாயிருந்து பிறகு குற்ற வாளிக்கு எதிராகச் சான்று கூற அனுமதிக்கப்பட்ட ஒருவர்.

approx'imate, *a.* மிக்க அண்மையில் உள்ள, பெரிதும் ஒத்திருக்கிற ; ஏறத்தாழச் சரியாயிருக்கிற ; *v.* பெரிதும் ஒத்திருக்கச் செய் ; அணுகு.

approxima'tion, *n.* ஒத்திருத்தல்; அணுகுதல்; (கண.) நெருங்கிய அளவீடு; ஒரு கணக்குக்கு முழுதும் சரியாய் இராவிட்டாலும் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்குப் போதுமான அளவிற்கு ஏறத்தாழச் சரியாய் இருக்கிற விடை.

approx'imative, *a.* அணித்தான.

appui', *n.* (படை.) துணைவலி, துணை, அண்டைக்கட்டு; ஏ. தாங்கு, காப்புப்படைவரிசையில் ஆற்றல் மிக்க இடத்தண்டை நிறுத்து.

appurt'enance, *n.* உடைமை; சேர்மானம்; துணைப்பொருள்; (சட.) உடைமைக்கு உரிமை.

appurt'enant, *n.* உடைமை; *a.* உடைமையான; இணைந்துள்ள; தொடர்பான.

ap'ricot, *n.* வாதுமை போன்ற கொட்டைப் பழவகை, சீமை வாதுமைப்பழம்; சீமை வாதுமை நிறம்; சீமை வாதுமை மரம்.

Ap'ril, *n.* ஆங்கில ஆண்டில் நான்காவது மாதம்.

Ap'ril-fish, *n.* ஏப்ரல் மாதம் முதல் நாளன்று ஒருவரை ஏமாற்றுதற்காக அவருக்கிடும் பயனற்ற வேலை.

Ap'ril-fool, *n.* ஏப்ரல் மாதம் முதல் நாளன்று ஏமாற்றலாக பயனற்ற வேலைக்கு ஏவப்படும் ஒருவர்.

April'ian, A'prilish, *a.* ஏப்ரல் மாதத்துக்குரிய; ஏப்ரல் மாத இயல்புள்ள.

a prior'i, (ல.) *a.* காரண காரிய முறையான, விதி தரு முறையில் அமைந்த; *adv.* மூலத்திலிருந்து விளைவு காணும் முறையில், காரண காரியமாக.

aprio'rism, *n.* காரண காரிய வாதம்.

aprio'rist, *n.* காண்ட் (Kant) என்ற செர்மானியத் தத்துவப் பேராசிரியர் கொள்கையைப் பின்பற்றுபவர், நுகர்ச்சி சாராத மனக்கோட்பாடுகளிலிருந்து மெய்ம்முடிவுகளுக்கு வரவேண்டுமென்னும் கொள்கையினர்.

aprio'rity, *n.* =apriorism.

ap'ron, *n.* முன்ரூனை, துரசிதாங்கி, உள்ளாடைகளுக்குப் பாதுகாப்பாக முன்புறத்தில் அணியப்படும் முரட்டுத்துணி அல்லது தோல்; சமய நிலைகளுக்குரிய உடுப்பு; திறந்த வண்டியில் கால்களுக்குப் பாதுகாப்பான தோல் போர்வை; வாத்தின் வயிற்றுப்புறத்தின் மேலுள்ள கொழுப்படர்ந்த தோல்; கப்பலின் முன்புறத்துக்குப் பின்னுள்ள மரக்கட்டை; அரங்க மேடையில் முதல்திரைக்கு முன்னுள்ள பகுதி; வண்டிகள் விமானங்கள் முதலியவை தங்கிடத்தின் நுழைவாயிலில் உள்ள கடுந்தரைப்பரப்பு; ஏ. முன்ரூனை போன்றதைக்கொண்டு மூடு அல்லது போர்த்து.

ap'roned, *a.* முன்ரூனை பொருத்தப்பட்டுள்ள.

ap'ron-string, *n.* முன்ரூனையை உடம்போடு சேர்த்துக் கட்டும் கயிறு; (தொ.) tied to apron-strings of, மனைவி தாய் முதலியோரின் அளவுக்கு மீறிய கட்டுப்பாட்டுக்குட் பட்டிருக்கிற.

apropos', *n.* பொருந்தம்; *a.* பொருத்தமான; தொடர்பான; காலந்துக்கேற்ற; ஏற்புடைய; *adv.* பொருட்டாக, நிமித்தமாக; பொருந்தமாக.

apse, *n.* திருக்கோயில் கவிகைக் கூரையுள்ள அரை வட்ட ஒதுக்கிடம்; பல பக்கங்களுள்ள வளைவு ஒதுக்கிடம்.

ap'sidal, *a.* திருக்கோயிலில் உள்ள ஒதுக்கிடத்தின் வடிவுள்ள; கிரகத்தின் ஞாயிற்றுச்சேணுக்குரிய அல்லது அண்மைக்குரிய; நிலவுலகத்தின் திங்கள் சேணுக்குரிய அல்லது அண்மைக்குரிய.

ap'sis, *n.* ஞாயிற்றின் நெடுஞ்சேய்மையில் அல்லது மிக அண்மையில் அமைந்த கிரகத்தின் இடம்; திங்கள் நிலவுலகத்தை நெடுஞ்சேய்மையாக அல்லது மிக அண்மையாக இருக்கும் நிலை; *pl.* ap'sides.

apt, *a.* தகுதியுள்ள, பொருத்தமான; பாங்குடைய; ஒரு துறையில் அறிவுக்கூர்மையுள்ள.

apte'rium, *n.* பறவைகளின் இறகுகளுக்கு இடைப்பட்ட வெறும் இடம்; *pl.* apte'ria.

ap'terous, *a.* சிறகற்ற; (தாவ.) மென்தோல் நீட்டிப்பு இல்லாத.

ap'teryx, *n.* நியூசிலாந்தில் (New Zealand) காணப்படும் வாலற்றதும் பறக்காததுமான ஒருவகைப் பறவை.

ap'titude, *n.* தகுதி; இயற்கைப் பாங்கு, போக்கு, நாட்டம், திறமை; கற்றுக்கொள்ளும் ஆர்வம்.

ap'tote, *n.* வேற்றுமையுருபு ஏற்கமாட்டாத பெயர்ச்சொல்.

aptot'ic, *a.* வேற்றுமை ஏற்கமாட்டாத.

apyrex'ia, *n.* காய்ச்சல் நின்றிருத்தல்; காய்ச்சல் இல்லாமை.

a'qua; *n.* (வேதி.) நீர்; நீர்மம், நீரியற்பொருள், கரைசல்.

aqua-for'tis, *n.* வெடியக்காடி; வெடியக்காடியைக் கொண்டு செதுக்குதல்.

aquafort'ist, *n.* வெடியக்காடியைக்கொண்டு செதுக்கு வேலை செய்பவர்.

a'qualung, *n.* மூழ்க உதவும் அமைவு, நீர்மூழ்குபவர் கொண்டு செல்லும் உயிர்ப்புக்குழாய்க்கலம்.

aquamarine', *n.* கடல் வண்ணக்கல்; *a.* நீர்ப்பச்சை நிற முடைய.

a'qua-mirab'ilis, *n.* இலவங்கம் சாதிக்காய் இஞ்சி மதுச் சாரம் இவற்றிலிருந்து வடித்திறக்கப்படும் சாறு.

a'quaplane, *n.* விரைவோடத்திற்குப் பின் இழுக்கப்படும் பலகை; ஏ. விரைவோடப் பலகைமீது ஏறு.

a'qua-re'gia, *n.* அரச நீர்மம், பொன்னையும் விழுப்பொன்னையும் (Platinum) கரைக்கக்கூடிய வெடியக்காடியும் நீர்ப்பாசிக் காடியும் சேர்ந்த கலவைநீர்.

aquarelle', *n.* நீர்வண்ண ஓவியம், நீர்வண்ணப்படம்.

aqua'rian, *n.* நீர்வாழ் பொருட்காட்சிச்சாலை வைத்திருப்பவர்; *a.* நீர்வாழ் பொருட்காட்சிச்சாலைக்கு உரிய.

aqua'riist, aqua'rist, *n.* நீர்வாழ் பொருட்காட்சிச்சாலை வைத்திருப்பவர்.

aquar'ium, *n.* நீர்வாழ் பொருட்காட்சிச்சாலை; *pl.* aqua'ria, aquar'iums.

Aquar'ius, *n.* கும்பராசி, 11-வது வான்மனை, கும்பராசியடுத்த விண்மீன் குழு.

aquat'ic, *n.* நீர்வாழ் செடி; நீர்வாழ் உயிரினம்; நீர்விளையாட்டுக்காரர்; *a.* நீரில் வளர்கிற; நீருக்கருகில் வளர்கிற; நீரில் வாழ்கிற; நீரில் நிகழ்கிற; நீர்மேல் நடத்தப்படுகிற.

aquat'ics, *n. pl.* நீர்விளையாட்டுக்கள்.

a'quatint, *n.* காடிச் செதுக்குமுறை, பிசினையும் வெடியக் காடியையும் கொண்டு செம்பின்மேல் செதுக்குவேலை இழைக்கப்படும் முறை; ஏ. செம்பில் பிசினும் காடியும்கொண்டு செதுக்கு.

a'qua Tofana, *n.* 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த டொபானு (Tofana) என்ற மாது உண்டுபண்ணிய நச்சுப்பொருள்.

a'qua-vit'ae, *n.* வெறியம், சாராயம், வெறிநீர் வகை.

a'queduct, *n.* கட்டுக்கால்வாய்; கால்வாய்ப்பாலம்; உயர் தளத்தின் ஊடாகச் செல்லும் நீர்க்குழாய்; சாலகம்; (உட.) பாலுணிகளின் தலையில் அல்லது உடலில் உள்ள சிறுகுழாய்.

a'queous, *a.* நீர் சார்ந்த, நீர்கலந்த, நீர்த்த; (மண்.) நீரினால் படியவிடப்பட்ட; (தொ.) aqueous humour, முன் கண்நீர், விழிமுன் தோலுக்கும் விழிச்சில்லுக்கும் இடையிலுள்ள நீர்; aqueous rocks, (மண்.) நீரினால் உண்டாக்கப்பட்ட பாறைகள், நீர்ப்பாறை.

aquifolia'ceous, *a.* பசுமை மாறுத; இலையுதிராத.

Aq'uila, *n.* பொன்னிறக் கழுகினம்; கழுகு வடிவான விண்மீன் குழு.

aquos'ity, *n.* நீர்த்தன்மை.

A'rab, *n.* அராபிய நாட்டவர்; அராபிய இனத்தவர்; அராபியக்குதிரை, அஞாதைச் சிறுவர்; *a.* அராபிய, அராபியர்களுக்குரிய.

ara'ba, *n.* மூடாக்கு வண்டி, தட்டை வண்டி.

arabesque'[1], *n.* அராபிய வண்ணச்சித்திர வேலை; தொடர் வண்ண இசைப்பாட்டு, ஆடல் நிலைவகை, உடலையும் ஒரு காலையும் நிலத்தளத்துக்கு இணையாக்கி ஒருகாலில் நிற்கும் நிலை.

arabesque'[2], arabesqued', *a.* அராபியமுறை சார்ந்த; விசித்திரமான; விசித்திரப் பூப்பின்னல் வேலைப்பாட்டினுல் ஒப்பனை செய்யப்பட்ட.

Arab'ian, *n.* அராபியர்; *a.* அராபியாவுக்குரிய; அராபிய இனத்தவருக்குரிய.

A'rabic, *n.* அரபுமொழி; *a.* அராபியாவுக்குரிய; அரபுமொழித் தொடர்பான; (தொ.) arabic numerals, அரபு எண்மானம், தற்கால இலக்கமுறை.

ar'abin, *n.* பிசினம், வேல் இன மரப்பிசினில் உள்ள அடிப்படைப்பொருள்.

Ar'abis, *n.* (தாவ.) கடுகுச் செடியினம்.

Ar'abism, *n.* அரபுமொழி மரபு, அரபு மரபுவழக்கு.

A'rabist, *n.* அரபுமொழி இலக்கியங்களில் வல்லவர்.

a'rable, *n.* சாகுபடி நிலம், உழுது பயிரிடத்தக்க நிலம்; *a.* உழுது பயிரிடத்தக்க.

arac'hnid, *n.* (வில.) சிலந்திப்பேரினம், சிலந்தி தேள் ஆகிய வற்றை உள்ளடக்கிய பூச்சியினப் பிரிவு.

arac'hnoid, *n.* சிலந்திநூல் போன்ற சவ்வு; *a.* நூலாம்படை போன்ற; (தாவ.) சிலந்திநூல் போன்ற நீள் மயிரால் மூடப்பட்டுள்ள.

arachnol'ogist, *n.* சிலந்திப் பேரின ஆராய்ச்சியாளர்.

arachnol'ogy, *n.* சிலந்திப் பேரின ஆய்வுத்துறை.

araeom'eter, *n.* செறிவுமானி, செறிவெண் இன்னதெனக் காட்டும் கருவி; நீர்மச் செறிவுமானி.

araeom'etry, *n.* செறிவு அளத்தல்.

arae'ostyle, *n.* (க-க.) நாலலகுத் தூண்வரிசை.

araeosys'tyle, *n.* (க-க.) நாலலகு ஈரலகுத் தூண் வரிசை.

Ara'lia, *n.* ஒப்பனைக்குரிய கொடியின வகை.

Arama'ic, *n.* மேலை ஆசியாவிலுள்ள மொழி வகை; *a.* அரமியா (Aramaea) நாட்டுக்குரிய; அரமிய மொழி சார்ந்த.

Arama'ism, *n.* அரமிய மொழிமரபு; அரமிய மரபுவழக்கு.

ara'neid, *n.* சிலந்தி.

Arane'idan, *a.* சிலந்தியினத்தைச் சார்ந்த.

arapai'ma, *n.* நன்னீரில் வாழும் தென் அமெரிக்க உணவு மீன்வகை.

ar'ar, *n.* பிசின்வகை தரும் 'சாந்தரக்கு' மரம்.

araro'ba, *n.* கோவாப் பொடி.

Araucar'ia, *n.* தென் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலு முள்ள விதை மூடா முள்ளிலை மரம்.

arb'alest, *n.* குறுக்குவில், கல்லை அல்லது கல் எறிவதற்காக இடைக் காலத்திற் கையாண்ட வில் போன்ற படைக்கலன்; குறுக்கு நிலைதாங்கி, நில அளவை செய்வோர் கையாளும் கருவி.

ar'balester, *n.* குறுக்கு வில்லாளர்.

arb'iter, *n.* நடுவர், நீதிபதி; காரணிகர், மத்தியஸ்தர்; முழு ஆளுகை உடையவர்; (தொ.) arbiter elegantiarum, சுவை நயத் தீர்ப்பாளர்.

ar'bitrable, *a.* நடுவர் தீர்ப்புக்கு உரிய.

arb'itrage, *n.* மத்தியஸ்தம்; பற்பல சந்தைகளில் நிலவும் வெவ்வேறு விலைகளினுல் ஆக்கம் பெறுவதற்காக உண்டியல்களில் அல்லது பங்குகளில் நடத்தும் வாணிகம், விலை வேற்றுமை வாணிபம்.

arb'itral, *a.* காரணிகத்துக்கு உரிய.

arbit'rament, arbit'rement, *n.* மத்தியஸ்தத்தால் முடிவு செய்தல்; நடுவர் தீர்ப்பு, அதிகாரத்தோடு ஒட்டிய தீர்ப்பு.

arb'itrary, *a.* விதிக்கட்டின்றி, மனப்போக்கான; கொடுங் கோன்மையான; (சட்.) விருப்பப்படியான.

arb'itrate, *v.* நடுவராயிருந்து தீர்ப்புக்கூறு; மத்தியஸ்தத் திற்கு விடு; காரணிகராய் இரு.

arbitra'tion, *n.* நடுவர் தீர்ப்பு; நடுவர் தீர்ப்புக்கு விடுதல்; (தொ.) arbitration of exchange, இரண்டு நாணயச் செலாவணிகளுக்கிடையில் மறைமுக மாற்றுவீதத்தை நிச்சயித்தல்.

arb'itrator, *n.* (சட்.) நடுவர், காரணிகர்; *fem.* ar'bitratrix.

arb'itress, *n.* பெண் மத்தியஸ்தர், பெண் காரணிகர்.

arb'last, *n.* = arbalest.

arb'laster, *n.* = arbalester.

arb'or, *n.* மரம்; பொறியின் முதன்மையான ஆதாரம்; சக்கரம் சுழலும் இருசு அல்லது கதிர்; காம்பு; உத்திரம்; (தொ.) Arbor Day, மரம்நடுவிழா நாள், வனமகோற்சவ நாள்; arbor vitae, வாடாச்செடி, இலையுதிராத பலவித மரங்களுக்கு வழங்கும் பொதுப் பெயர்; மனிதர்களின் சிறுமூளை குறுக்கிடாக வெட்டப்படும்போது காணப்படும் மரம்போன்ற தோற்றம்.

arbora'ceous, *a.* மரம் போன்ற; மரங்கள் நிறைந்த.

arbor'eal, *a.* மரங்களுக்குரிய; மரங்களில் வாழ்கிற; மரங்களுக்குத் தொடர்புடைய.

arbor'eous, *a.* மரங்கள் நிறைந்த; மரங்களின் தன்மை வாய்ந்த; மரம் போன்ற தோற்றமுடைய.

arbores'cence, *n.* மரம் போன்ற வளர்ச்சி.

arbores'cent, *a.* மரம் போல் வளர்கிற; மரம் போன்ற தோற்ற முடைய.

arboret'um, *n.* பயிர்நூல் முறைப்படி அமைந்துள்ள தோட்டம்; *pl.* arboret'a.

arboricul'tural, *a.* மரங்களை வளர்ப்பதற்கு உரிய.

arb'oriculture, *n.* காடுகள் பேணும் கலை; மரங்களையும் புதர்களையும் சிறப்பாகத் தேக்கு மரங்களையும் வளர்த்தல்; மரவேளாண்மை.

arboricul'turist, *n.* மர ஆய்வாளர்.

ar'borist, *n.* = arboriculturist.

arboriza'tion, *n.* மரம் போன்ற தோற்றம்.

arb'our, *n.* பொதும்பர், கொடிவீடு.

arb'oured, *a.* இளமரக்கா அமைந்துள்ள.

arc, *n.* வில், வட்டவரையின் அல்லது வளைவரையின் பாகம்; (மின்.) தனித்தனியான இரண்டு கரிய துருவங்களுக்கிடையில் தோன்றும் ஒளி வட்டப் பகுதி.

arcade', *n.* வில் வளைவு விமானப்பாதை, நடை வானப்பந்தல்; (க-க.) ஒரே மட்டத்தில் உள்ள மேல்வளைவுத் தொகுதி.

arcad'ed, *a.* வில்வளைவு விதானம் அமைந்த.

Arcades am'bo, (ல.) இருவரும் கயவர்கள்.

Arcad'ia, *n.* நாட்டுப்புறப் பொழில்.

Arcad'ian, *n.* நாட்டுப்புறத்தான்; *a.* நாட்டுப்புறஞ்சார்ந்த; கள்ளங்கபடற்ற, அப்பாவியான.

arcad'ing, *n.* வில்வளைவு விதானங்களை அலங்காரமாய் அமைத்தல்.

Arc'ady, *n.* கிரீஸ் (Greece) தேசத்து மாவட்டம் ஒன்று; நாட்டுப்புற இலட்சிய மோக்கம், விண்ணுலகு.

arcan'um, *n.* மறைபொருள், இரகசியம்; மாமருந்து, சஞ்சீவி; *pl.* arcan'a.

arch, *n.* மேல்வளைவு, வில்வளைவு, கவான்; பாலம் தளம் முதலியவற்றைத் தாங்கும் வளைவுக் கட்டுக்கோப்பு; வில் வளைவைப் போன்ற வடிவமுள்ள பொருள்; வில்வளைவான கூரை; மேலே கவான் அமைந்த நடை வழி; *a.* முதன்மை யான, விளங்கித் தோன்றுகிற; தந்திரமுள்ள; சதுரப் பாடுடைய; வேடிக்கைக்காகக் குறும்பு செய்கிற; *v.* வில் வளைவு அமை; கவான் ஆக்கு; மேல்வளைவு கட்டு; கரைக்குக் கரை கவான் நீட்டிக் கட்டு; வில் போல் வளை.

archae'an, *a.* மண் நூலில் பேசப்பட்ட முதல் ஊழியைச் சார்ந்த.

archaeolo'gic, archaeolo'gical, *a.* மனிதனின் பழமைச் செய்திகள் பற்றிய அறிவியல் ஆய்வு சார்ந்த.

archaeol'ogist, *n.* மனித குலத்தின் தொன்மைச் செய்திகள் பற்றிய அறிவியல் ஆய்வாளர், தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்.

archaeol'ogy, *n.* தொல்பொருள் ஆராய்ச்சி, மனிதனின் பழ மைச் செய்திகள் பற்றிய அறிவியல் ஆய்வு.

archaeop'teryx, *n.* தெரிந்த வரையில் மிகப் பழமையானதும் பறப்பனவற்றிற்கும் ஊர்வனவற்றிற்கும் இடைப்பட்டதுமான பறவை.

Archaeorni'thes, *n.* ஊர்வன போன்ற பண்டைக்காலப் பறவைகள்.

archa'ic, *a.* பழைய, தொன்மையான; இப்போது வழக்கில் இல்லாத.

archa'icism, *n.* = archaism.

arc'haism, *n.* மொழியிலும் கலையிலும் பழமையையும் வழக் கற்றவைகளையும் வைத்துக் கொள்ளுதலும் பின்பற்றுதலும்; அத்தகைய மனப்பாங்கு; தொல்சொல்.

arc'haist, *n.* தொல்வழக்குகளைக் கையாள்பவர்.

archais'tic, *a.* தொல்வழக்குகளைப் பின்பற்றுபவர்போல் காட்டிக் கொள்கிற; பண்டை வழக்குகளைக் கடைப்பிடிக்கிற.

arc'haize, *v.* பண்டைய வழக்கைப் பின்பற்று; தொல்வழக் கைக் கடைப்பிடிப்பதாகக் காட்டிக்கொள்; தொல்வழக் குடையதாகச் செய்.

arc'hangel, *n.* தலைமைத் தேவதூதன்; பெரிய இலைகளையும் மலர்க் கொத்துக்களையுமுடைய தோட்டச் செடிவகை; வறட்டு முட்செடிவகை; ஒருவகைப் புரு.

arch'bish'op, *n.* தலைமைக்குரு, அதிமேற்றிராணியார்; தலை மைக் கண்காணியார்.

archbish'opric, *n.* தலைமைக் கண்காணியாரின் ஆட்சிக்கு உட்பட்ட மாவட்டம்; அதிமேற்றிராசனம்.

arch'-build'er, *n.* புகழ்வாய்ந்த கட்டிடச் சிற்பி.

arch'deac'on, *n.* மேற்றிராணியார், கண்காணியாருக்கு அடுத்த பெரிய அதிகாரி.

archdi'ocese, *n.* அதிமேற்றிராசனம்.

arch'duch'ess, *n.* பெரிய கோமகனின் மனைவி; ஆஸ்டிரியப் பேரரசரின் மகள்.

arch'duch'y, *n.* கோமகளின் அல்லது கோமகனின் ஆட்சிப் பரப்பு.

arch'duke, *n.* பெரிய கோமகன்; ஆஸ்டிரியப் பேரரசரின் மகன்.

arch'duke'dom, *n.* = archduchy.

arched, *a.* கவான் வடிவமான; வில்வளைவு கவிந்துள்ள.

arch'-en'emy, *n.* பெரும்பகைவன், முதல் எதிரி; சாத்தான்.

archen'teron, *n.* (வில.) கருமுளையில் முதலில் தோன்றும் குடல்.

arch'er, *n.* வில்லாளர், தனுசு இராசி.

arch'eress, *n.* விற்றொழில் கைவந்த பெண்.

arch'ery, *n.* வில்லாண்மை; விற்றொழில் கலை; வில்லாளர் களின் ஈட்டம்.

arc'hetypal, *a.* மூலப்பிரதியான.

arc'hetype, *n.* மூலப்படிவம், முன்மாதிரி.

arch'-fiend', *n.* பெரும் பிசாசு; சாத்தான்.

arch'ibald, *n.* விமான எதிர்ப்புப் பீரங்கி.

archidiac'onal, *a.* மேற்றிராணியாருக்கு உரிய.

arch'ie, *n.* = archibald.

archiepis'copacy, *n.* தலைமைக் கண்காணியாரின் மதிப்பு அல்லது ஆட்சிப் பரப்பு.

archiepis'copal, *a.* அதிமேற்றிராணியாருக்குரிய.

archiepis'copate, *n.* = archiepiscopacy.

arch'il, *n.* பலவகைப் பாசிகளிலிருந்து செய்யப்படுகிற சிவப்பு அல்லது ஊதா நிறச் சாயப் பொருள்; பாசி வகைகள்.

ar'chimage, *n.* தலைமை மந்திரவாதி.

archiman'drite, *n.* கிரேக்கத் திருச்சபைத் துறவிகள் மடத் தின் முதல்வர்.

Archimed'ean, *a.* ஆர்க்கிமிடீஸ் (Archimedes) (கி. மு. 287-212) என்ற கிரேக்கக் கணிதநூற் புலவர் தொடர்பான; (தொ.) Archimedean screw, ஆர்க்கிமிடீசின் திருகாணி, தண்ணீரை உயர்த்துவதற்கான பொறி; Archimedean spiral, ஆர்க்கிமிடீசின் சுருளி.

arch'-impos'ter, *n.* பெரிய ஆள்மாறாட்டக்காரன்; பெரிய எத்தன்.

archipelag'ic, *a.* தீவுகள் செறிந்த கடல் சார்ந்த; தீவுக் கூட்டத்தின் இயல்புடைய.

Archipel'ago, *n.* ஈஜீயக்கடல் (Aegean Sea).

archipel'ago, *n.* தீவுகள் செறிந்த கடல்; தீவுக்கூட்டம்; *pl.* archipel'agos.

arc'hitect, *n.* சிற்பி, கட்டிடக்கலைஞர்; இயற்றுபவர்; உலகைத் தோற்றுவித்த கடவுள்; எண்ணியாங்கு எய்து பவர்.

architecton'ic, architecton'ical, *a.* சிற்பக்கலை சார்ந்த, சிற்பிகளைப் பற்றிய; ஆக்குந்திறனுள்ள; கட்டுப்படுத்துகிற; கட்டளையிடுகிற; அறிவுக் கூறுகளை ஒழுங்காயமைப்பது பற்றிய.

architecton'ics, *n.* சிற்பக்கலை நூல்; அறிவுக்கூறுகளின் ஒழுங்கமைப்பு நூல்.

architec'tural, *a.* சிற்பக்கலை சார்ந்த.

arc'hitecture, *n.* கட்டிடக்கலை நூல்; சிற்பக்கலை நூல்; கட்டப்பட்ட பொருள், கட்டுக் கோப்பு, கட்டிடப்பாங்கு; கட்டுதல்.

arc'hitrave, *n.* தூணின் உச்சியிலுள்ள பரற்கட்டையின் மீது தங்கியிருக்கும் முதன்மையான தூலம்; வாயிற்படி அல்லது ஜன்னலைச் சுற்றியுள்ள பல்வேறு பாகங்கள்; கவா னின் வெளிப்புறத்தைச் சுற்றியுள்ள அச்சுரு.

arch'itraved, *a.* சித்திர வேலைப்பாடமைந்த அச்சுரு அமைக் கப்பெற்ற.

archiv'al, *a.* சுவடிக்கூடம் சார்ந்த.

arc'hive, *n.* சுவடிக்கூடம்; பொது ஆவணக்களரி; பொதுப் பத்திரங்கள்; *pl.* arc'hives.

arc'hivist, *n.* சுவடிக்கூடம் காப்பவர்; சுவடிகளைக் காப்பவர்.

arc'hivolt, *n.* கவானின் உள்வளைவு, கவானின் உள்வளைவை அழகு செய்யும் அச்சுருக்கள்.

arch'-knave, *n.* பெயர்போன போக்கிரி.

arch'let, *n.* சிறிய வில்வளைவு.

arch'-liar, *n.* பெரும்புளுகன்.

arch'lute, *n.* பெரிய இரட்டைக்கழுத்து யாழ்வகை.

arch'ly, *adv.* கவான்போல் வளைந்திருக்கும் நிலையில்; போக் கிரித்தனமாக.

arch'-mock, *n.* கேலிக்கூத்தின் உச்சநிலை.

arch'ness, *n.* வளைவாயிருக்கும் தன்மை, போக்கிரித்தனம்.

arc'hon, *n.* பண்டைய ஆதன்ஸ் (Athens) நகரில் இருந்த முதன்மையான ஒன்பது குற்ற நடுவர்களில் ஒருவர்; ஆளுநர்; தலைவர்.

arc'honship, *n.* குற்றநடுவர் நிலை.

arch'ontate, *n.* ஆளுநரின் ஆட்சிக்காலம்.

archont'ic, *a.* ஆட்சியாளருக்குரிய.

arch'-pi'rate, *n.* கடற்கொள்ளைக்காரத் தலைவன்.

arch'-priest', *n.* தலைமைப்புரோகிதன், குருக்களில் முதல்வர்.

arch'-rogue', *n.* பெரிய திருடன்; பெரும்போக்கிரி.

at'imy, *n.* மானக்கேடு, அவமதிப்பு, குடியுரிமை இழப்பு.

ating'le, *adv.* உடல் சிலிர்த்து.

Atlante'an, *a.* லிபியா (Libya) விலுள்ள அட்லாஸ் (Atlas) மலையைச் சார்ந்த ; மிகப் பெரிய ; கடல் கொண்ட பண்டை அட்லாண்டிஸ் (Atlantis) மாநிலத்திற்குரிய.

atlan'tes, *n. pl.* (க-க.) ஆண் உருவச்சிலை வடிவான தூண்கள்.

Atlan'tic, *n.* அட்லாண்டிக் மாகடல் ; *a.* அட்லாண்டிக் மாகடற்பகுதியைச் சார்ந்த ; லிபியாவிலுள்ள அட்லாஸ் (Atlas) மலையைச் சார்ந்த.

atlan'tosaur'us, *n.* தொல்பழங்காலப் பெரும் பல்லி உருவான விலங்கு வகை.

At'las, *n.* லிபியா(Libya)வின் மலை ; மேல் உலகங்களைத் தாங்குவதாகக் கருதப்பட்ட கிரேக்கப் புராணப் பழந் தெய்வம்.

at'las, *n.* நிலப்பட ஏடு ; வரைதாள் அளவு வகை ; (உட.) மண்டை ஓட்டைத் தாங்கும் கழுத்தெலும்புப் பூட்டு.

At'man, (ச.) *n.* ஆன்மா, உயிரின் உள்ளொளி.

atmol'ogy, *n.* வளிமண்டல நீராவி நிலைநூல்.

atmol'ysis, *n.* புகைகளைப் பிரிக்கும் முறை.

atmom'eter, *n.* ஆவிமானி.

at'mosphere, *n.* வளிமண்டலம், பவனம் ; வளிச்சூழல் ; ஆவியமுக்கம் ; படத்தின் பின்னணித் தொலை உணர்வு ; சூழ்நிலை.

atmosphe'ric, atmosphe'rical, *a.* வளிமண்டலம் சார்ந்த ; சூழ்நிலைக்குரிய.

atmosphe'rics, *n. pl.* வானொலி-தொலைபேசி ஏற்புக்களைத் தடைப்படுத்தும் இடையோசைகள்.

ato'cia, *n.* பெண்மலடு.

at'ok, *n.* தீ மணக் கசிவுநீரை வெளிப்படுத்தும் கீரியின விலங்கு வகை.

at'okous, *a.* பின்மரபற்ற.

atoll', *n.* காயலைச்சூழ்ந்த பவழத் தீவு, வட்டப்பவழத் திட்டுக்கள்.

at'om, *n.* அணு ; பருப்பொருளின் முன்கூறு.

atom'ic, atom'ical, *a.* அணுவைச் சார்ந்த ; அணுவினுடைய ; அணு இயக்கத்திற்குரிய ; (தொ.) atomic bomb, அணுக்குண்டு ; atomic clock, அணு இயக்கக் கடிகாரம் ; atomic energy, அணு ஆற்றல் ; Atomic Energy Authority, பிரிட்டனில் (Britain) அணு ஆற்றல் கட்டுப்பாட்டு நிலையம் ; Atomic Energy Commission, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (U.S.A.) அணு ஆற்றல் கட்டுப்பாட்டு நிலையம் ; atomic pile, அணு ஆற்றலைக் கட்டுப்படுத்தி இயக்கும் பொறி நுட்பம் ; atomic warfare, அணுக் குண்டுப்போர்.

at'omism, *n.* அணுவாதம் ; அணு இயக்கக் கோட்பாடு.

at'omist, *n.* அணுக்கோட்பாட்டாளர்.

atomis'tic, *a.* அணுச் சார்ந்த ; அணுக்கோட்பாட்டிற்குரிய.

ato'mium, *n.* அணுவின் உள்ளமைப்புக் காட்டும் குழைகுச்சு அமைவு.

atomiza'tion, *n.* அணுவாக்குதல் ; (மரு.) நீர்மங்களை நுண் திவலைகளாக மாற்றுதல்.

at'omize, *v.* அணுக்களாகக் குறை.

at'omizer, *n.* (மரு.) நீர்மங்களை நுண்திவலைகளாக்கும் கருவி.

a'tom-smasher, *n.* அணுத்தகர் பொறி.

at'omy[1], *n.* எலும்புக்கூடு ; தேய்ந்த உடல்.

at'omy[2], *n.* அணு ; நுணுகிய உயிர்ப்பொருள்.

aton'al, *a.* (இசை.) பண்முறையற்ற.

atone', *v.* ஈடுசெய் ; கழுவாய்தேடு ; பொருத்து.

aton'ic, *n.* அசையழுத்தம் அற்ற சொல் ; *a.* ஒலியழுத்தம் அற்ற ; உறுதி குன்றிய.

atop', *adv.* உச்சியில் ; மேலிடத்தில்.

atrabil'ious, *a.* கடும்பித்தத்திற்கு உள்ளான ; மனச்சோர்வுடைய ; மனக்கசப்பிற்கு உரிய.

atrip', *adv.* (கப்.) நங்கூரம் தரையிலிருந்து உயர்த்தப்பட்ட நிலையில்.

at'rium, *n.* பண்டை ரோம நாட்டினர் வீட்டின் முற்றம், முன்றில் ; திருக்கோயிலில் மோடிட்ட வாயில் முகப்பு ; (வில.) துவாரம் ; துளை.

atro'cious, *a.* மிகக் கொடிய ; அடாத.

atro'city, *n.* அட்டூழியம்.

at'rophy, *n.* உடல் மெலிவு ; சத்தின்றித் தேய்ந்து போதல் ; ஆளாமைத் தேய்வு.

at'ropine, *n.* நச்சுக்கார வகை.

attach', *v.* பிணை, ஒட்டவை ; பொருத்து, கட்டுப்படுத்து ; உரித்தாக்கு ; (சட்.) பற்றிக்கொள், ஜப்தி செய்.

attach'able, *a.* பிணைக்கத்தக்க ; பற்றத்தக்க.

attache', *n.* நிலைத்தூதரின் பிணைச்சு.

attached', *a.* பற்றுதலுள்ள.

attach'ment, *n.* பிணைக்குஞ் செயல் ; பொருத்தும் வழி ; அற்புத்தளை ; பற்றுசை ; (சட்.) முறைப்படிப் பற்றிக் கோடல்.

attack', *n.* தாக்குதல் ; அடர்ப்பு, எதிர்ப்பு ; கடுமையான கண்டனம், பழிப்புரை ; *v.* தாக்கு ; சாடு.

attack'able, *a.* தாக்குதற்கு உரிய.

attain', *v.* முயற்சியினால் அடை ; நிறைவேற்று.

attain'able, *a.* முயன்று அடையக்கூடிய.

attain'der, *n.* சாவு தண்டனையின் பின்விளைவுகள் ; (சட்.) பெருந்துரோகத்திற்காகக் குடியுரிமைகளை இழத்தல்.

attain'ment, *n.* முயற்சியால் அடைதல் ; பேறு.

attain'ments, *n. pl.* கல்வியின் ஈட்டப்பட்டவை, தேர்ச்சிப் பேறுகள்.

attaint', *v.* குற்றவாளியென முடிவுசெய் ; மன்பகைத் தண்டனையாக உரிமை இழக்கும்படி செய் ; இழிவுபடுத்து.

att'ar, *n.* ரோசா இதழ்களிலிருந்து இறக்கப்படும் நறுமண நெய், அத்தர்.

attem'per, *v.* தக்க அளவில் கல ; தட்பவெப்பநிலையை மட்டுப்படுத்து ; மிதமாக்கு ; சரிப்படுத்து.

attempt', *n.* முயற்சி ; *v.* முயல் ; முயற்சி செய்.

attend', *v.* உற்றுக்கேள், கவனி ; உடன்செல் ; கூட இரு ; இடத்திரு.

atten'dance, *n.* வந்திருக்கை, வரவு ; (தொ.) attendance register, வருகைப் பதிவேடு.

atten'dant, *n.* ஊழியன் ; *a.* உடன் செல்கிற, உடனிருக்கிற.

attend'er, *n.* கையாள், சிற்றெழுத்தர்.

attend'ment, *n.* (அரு.) உடனிணைவு ; பக்கமேளம்

atten'tion, *n.* கவனம், பார்வை, கருத்து ; (படை.) நிமிர்ந்து நிற்கும் உருவமைதி.

atten'tive, *a.* கருத்துள்ள, நினைப்புள்ள, எச்சரிக்கையான, வணக்கமுள்ள.

attent'ively, *adv.* கருத்துள்ள நிலையில்.

attent'iveness, *n.* கவனிக்கும் தன்மை.

atten'uate, *a.* மெல்லிய; தளர்த்தியான; *v.* மெல்லியதாக்கு, குறை.

attenua'tion, *n.* மெலிவு, நொய்ம்மை, நுண்மை.

attest, *v.* சான்று கூறு; கையெழுத்திட்டு உறுதியளி.

attesta'tion, *n.* அறிசான்று; சான்று அளித்தல்; உறுதியளித்தல்.

attest'ed, *a.* என்புருக்கி நுண்ம நீக்க உறுதிச்சான்று பெற்ற.

Att'ic, *a.* ஆதன்ஸ் அல்லது அட்டிகாவைச் சார்ந்த; தூய; (தொ.) Attic salt, நாகரீக நகைச்சுவை.

att'ic, *n.* மேன்மாடச் சிறு அறை.

att'icism, *n.* ஆதன்ஸ் மொழிநடை; நவின்றோர்க்கு இனிமை.

attire', *n.* உடை; *v.* உடுத்திக்கொள்.

att'itude, *n.* மனப்பான்மை; உருவமைதி; சாயல்; பழக்க நடக்கை.

attitudina'rian, *n.* பழகிய நடக்கைகளை ஆராய்ச்சி செய்பவர்.

attitud'inize, *v.* போலி நடக்கைகளை மேற்கொள்.

attoll'ent, *n.* எழுப்பும் தசை; *a.* எழுப்புகின்ற.

attorn', *v.* (சட்.) மற்றொருவருக்கு மாற்று; புதிய நிலக்கிழாரைச் சட்டப்படி ஒப்புக்கொள்.

attorn'ey, *n.* வழக்குரைஞர்; மாற்றுரிமையர்; (தொ.) power of attorney, பகராள் செயலுரிமைப் பத்திரம்.

Attorney General, (தொ.) இங்கிலாந்தின் சட்டத்தலைமைப் பணி முதல்வர்; அமெரிக்கக் குடியரசுத்தலைவர் அமைச்சரவையின் நியாயத்துறை உறுப்பினர்; சட்டத்துறையின் தலைவர்.

attorn'ment, *n.* புதிய நிலக்கிழாரை ஒப்புக்கொள்ளல்.

attract', *v.* கவர், ஈர், மயக்கு.

attract'able, *a.* கவருகிற, ஈர்க்கின்ற.

attrac'tion, *n.* கவர்ச்சி.

attrac'tive, *a.* கவர்ச்சியான.

att'rahent, *n.* கவரும் பொருள்; *a.* கவரக்கூடிய, ஈர்க்கத்தக்க.

attrib'utable, *a.* உடைமையாக்கத்தக்க; கற்பித்துக் கூறத்தக்க.

att'ribute [1], *n.* இயற்பண்பு, இயல்புக்குணம்; (இலக்.) அடைமொழி.

attrib'ute [2], *v.* கற்பித்துக்கூறு; உடைமையாகக் கருது.

attribu'tion, *n.* கற்பித்துக்கூறுதல், உடைமையாக்கிச் சொல்லப்பட்ட பொருள்.

attrib'utive, *n.* அடைமொழி; *a.* அடைமொழி ஊட்டத்தக்க; அடைமொழி சேர்க்கப்பட்ட.

attrit'e, attrit'ed, *a.* உராய்வதால் தேய்ந்துள்ள; (மெய்.) கடவுள் அன்பினுலன்றித் தண்டனை அச்சத்தினுல் செய்ததற்கு இரங்குகிற.

attri'tion, *n.* உராய்தல்; சென்று தேய்ந்திறுதல்; (மெய்.) பாபத்திற்காக ஓரளவு வருந்துதல்.

attui'tion, *n.* பொறியுணர்வுக்கும் புலனுணர்வுக்கும் இடைப்பட்ட மன நிகழ்வு.

attun'e, *v.* இசைவி; பொருத்து.

attune'ment, *n.* இசைவித்தல்.

atyp'ical, *a.* பொதுமாதிரியல்லாத.

aubade, (பிர.) *n.* வைகறைப்பாடல்.

auberge, (பிர.) *n.* சத்திரம், தங்குமனை.

aubrie'tia, *n.* இளவேனிலில் பூக்கும் குத்துச் செடிவகை.

aub'urn, *a.* செம்பொன்னிறமான, கோதுமை நிறமுடைய.

au courant, (பிர.) *a.* அறிவது அறிந்த.

auc'tion, *n.* ஏலம்; ஏலச்சீட்டாட்டம்; *v.* ஏலத்தில் விற்பனை செய்.

auc'tionary, *a.* ஏலவிற்பனைக்கு உரிய.

auc'tioneer', *n.* ஏலவிற்பனை செய்பவர்; *v.* ஏலவிற்பனை நடத்து.

auda'cious, *a.* துணிச்சலான; வெட்கங்கெட்ட, துடுக்கான.

auda'city, *n.* துடுக்கு.

audibil'ity, *n.* கேட்கப்படும் தன்மை; ஓசைத்தெளிவு.

aud'ible, *a.* கேட்கத்தக்க, செவிமடுக்கத்தக்க.

aud'ience, *n.* கேட்டல்; வழக்கு மன்றத்தில் கேட்டல்; பேட்டி; கேட்போர் கூட்டம்; (தொ.) give audience, கூர்ந்து கேள்.

aud'ile, *n.* ஒலி உணர்ச்சி வழியாக ஆராய்பவர்; எ.கு செவியாளர்; *a.* கேள்விக்குரிய.

aud'io, *n.* விமானந்தூக்கிக் கப்பலை நோக்கி விமானம் இறங்குதற்கு உகந்த வேகச் செவ்வியை உணர்த்தும் ஒலி அமைவு; *a.* ஒலி சார்ந்த, ஒலிபரப்பைச் சார்ந்த.

aud'io-engineer', *n.* ஒலிபரப்புப்பொறி இயக்குநர்.

audiom'eter, *n.* கேள்விமானி.

aud'iophil, aud'iophile, *n.* ஒலிப்பதிவிலும் ஒலிபரப்பிலும் இயற்கைக்குரலே மீட்டெழுப்பப்பட வேண்டுமென்ற ஆர்வமுடையவர்.

audio-vis'ual, *a.* காட்சி கேள்விகளை ஒருங்கு சார்ந்த.

aud'iphone, *n.* பல்லில் அழுத்தப்படுவதால் காது கேட்க உதவும் கருவி.

aud'it, *n.* தணிக்கை, கணக்குப் பரிசோதனை; *v.* தணிக்கை செய்.

aud'ition, *n.* செவிப்புலன்; கேட்டல்; கேட்டாய்தல்; கேட்டல் முறை.

aud'itive, *a.* = auditory.

aud'itor, *n.* கேட்போர்; தணிக்கையாளர்.

auditor'ial, *a.* தணிக்கையைச் சார்ந்த.

auditor'ium, *n.* அவைக்களம், கேட்போர் அமர்ந்திருக்கும் இடம்; வரவேற்புக்கூடம்.

aud'itory, *n.* கேட்போர்; கேட்குமிடம்; *a.* கேட்டல் தொடர்புடைய.

aud'itress, *n.* பெண் தணிக்கையாளர்.

auf, *n.* குறளியின் குழந்தை, சிறுக்கியின் சேய்.

au fait, (பிர.) *a.* நன்குதெரிந்த.

au fond, (பிர.) *adv.* அடித்தலத்தில், அடிப்படையில்.

Auge'an, *a.* அழுக்கான, எளிதில் சுத்தம் செய்ய முடியாத.

aug'er, *n.* துரப்பணம்; நிலத்தைத் துளைக்கும் கருவி.

aught, *n.* யாதாவது ஒன்று; சிறிதளவு; நுண்கூறு.

aug'ment [1], *n.* வளர்ச்சி, மிகுதி; (இலக்.) சாரியை.

augment' [2], *v.* பெரிதாக்கு; வளரச்செய்; பெரிதாகு, அதிகமாகு.

augment'able, *a.* பெரிதாக்கத்தக்க.

augmenta'tion, *n.* வளர்ச்சி, அதிகரித்தல்.

augmen'tative, *a.* பெருகும் தன்மையுள்ள; அதிகரிக்கும் ஆற்றல் உடைய; (இலக்.) பொருட்செறிவு உண்டாக்குகிற.

augment'er, augment'or, *n.* பொறியின் செயன்மையைப் பெருகுவிக்கும் நரம்பு.

aug'ur, *n.* குறிசொல்பவர்; கணி; *v.* குறிசொல்; வருவது கூறு.

aug'ural, *a.* குறி கூறுதலைச் சார்ந்த.

aug'ury, *n.* நிமித்தம், புள்வாய்ப்பு, குறி கூறுதல்; முன்னுணர்வு.

Aug'ust, *n.* ஆங்கில ஆண்டின் எட்டாம் மாதம்.

august' [1], *a.* மேதக்க, மாண்புறு.

august' [2], **auguste'**, *n.* விளையாட்டு வளவரங்கில் திறமை யற்ற விதூடகன்.

Augus'tan, *n.* ரோம இலக்கியத்தின் பொற்கால எழுத் தாளர்; *a.* அகஸ்டஸ் சீசரின் (Augustus Caesar) காலத் தைச் சார்ந்த; இலக்கியத்தின் பொற்காலம் சார்ந்த.

Augustin'ian, *n.* தூயதிரு. அகஸ்டைனைப் (St. Augustine) பின்பற்றும் கிறித்தவத் துறவி; *a.* தூயதிரு. அகஸ்டைனைச் சார்ந்த.

auk, *n.* குட்டையான இறகுகளையுடைய கடல் பறவை.

au'la, *n.* மண்டபம்; (தொ.) **aula regis,** (வர.) முதன்மை யான குடிவாரத்தார் அடங்கிய நிலமானியக்குழு; அரசர் நாளவை; மன்னர் நீதிமன்றம்.

aul'ic, *a.* மண்டபஞ் சார்ந்த; (தொ.) Aulic Council, பழைய செர்மானிய அத்தாணி மண்டபம்.

aum'bry, *n.* = ambry.

au'mil, *n.* வரி வசூலிப்பவர், அமில்தாரர்.

au naturel, (பிர.) *adv.* மிக எளிமைவாய்ந்த முறையில்.

aunt, *n.* பெற்றோருடன் பிறந்தவள்; அத்தை; சிற்றன்னை.

au pair, (பிர.) *n.* ஒருவருக்கொருவர் ஊழிய உதவியன்றி வேறுபண இடையீடில்லாத.

au pied de la lettre, (பிர.) *adv.* சொல்லின் நேர் பொருளிலேயே.

aur'a, *n.* மலர் போன்ற பொருள்களினின்று நுட்பமாக வெளிப்படும் சுரப்பு; (மின்.) ஒரு கூரிய முனையினின்று மின்சாரம் வெளிப்படும்போது உண்டாகும் காற்று மின் னோட்டம்; (மரு.) காக்கை வலிப்புக்கும் ஈரம்புத் தளர்ச்சிக்கும் முன்னுணர்வான அறிகுறி.

aur'al [1], *a.* பொருளினின்று வெளிப்படும் நுட்பமான காற்றைப் பற்றிய.

aur'al [2], *a.* காதினைச் சார்ந்த.

au'rate, *n.* பொன்னியல் உப்பு.

au'rated, *a.* பொன்னிறமான; பொன்னியல் உப்புக் கலந்த.

au'reate, *a.* பொன்னிறம் பூசப்பட்ட, பொன் போன்ற; ஒளி பிறங்கிய; பல சொல்லணி வாய்ந்த.

Aurel'ia, *n.* இழுதுமீன் வகையில் ஓர் இனம்; புழுக்கூடு.

aurel'ian, *n.* பூச்சியின ஆராய்ச்சியர்; *a.* பொன்னிறமான.

aure'ola, *n.* உயர்குறிக்கோளுக்காக உயிர் துறந்தவர்களும் தூய்மையான கன்னிப் பெண்களும் வைத்தியர்களும் பெறும் திப்பிய தலையணி.

aur'eole, *n.* தலைசூழ் ஒளிவட்டம்.

au'reoled, *a.* ஒளிவட்டத்தால் சூழப்பட்ட.

aureomy'cin, *n.* நச்சுக் காய்ச்சல் முதலிய நோய்களைத் தடுக்கப் பயன்படும் உயிர் எதிரிப் பொருள்.

au revoir, (பிர.) (தொ.) திரும்பச் சந்திக்கும்வரை நலமே விளைக!

aur'ic, *a.* பொன்னைச் சார்ந்த; (வேதி.) முத்திற இயல் புடைய தங்கம் அடங்கிய.

aur'icle, *n.* விலங்குகளின் காதுமடல்; அடிக்காது போன்ற இலை முதலியவற்றின் மடல், இதயத்தின் மேல் அறைகள் இரண்டனுள் ஒன்று.

aur'icled, *a.* காதுபோன்ற பிற்சேர்க்கையுடைய.

Auric'ula, *n.* ஆல்ப்ஸ் மலைத்தொடர்களில் உண்டாகும் பன்னிற மலர்ச்செடிவகை; நத்தையினம்.

auric'ular, *a.* காதைச் சார்ந்த; காதிற் சொல்லப்பட்ட; காதுமடல் போன்ற.

auric'ulate, *a.* காது வடிவுடைய.

aurif'erous, *a.* பொன் தருகிற, பொன் விளைகிற.

aur'ify, *v.* பொன்னுக்கு.

aur'iform, *a.* காதுவடிவு போன்ற.

Auri'ga, *n.* வடக்கு இராசி, தேராளன்.

Aurigna'cian, *a.* பழங்கற்காலத்துக்கு உரிய.

aur'ilave, *n.* காது கழுவு கருவி.

aur'ist, *n.* காதுநோய் மருத்துவர்.

aur'ochs, *n.* காட்டா, காட்டெருது.

Auror'a, *n.* வைகறை; புலரிப் பெண்தெய்வம்.

auror'a, *n.* அடர்ந்த மஞ்சட் சிவப்புநிறம், துருவ மின்னொளி.

auror'a austral'is, (ல.) *n.* தென்துருவ விண்ணொளி.

auror'a boreal'is, (ல.) *n.* வடதுருவ விண்ணொளி, வடமுனை வளரொளி.

auror'al, *a.* வைகறையைச் சார்ந்த; ரோஜா நிறமுள்ள; புதிய; அழகான.

aur'ous, *a.* ஒருதிறப் பொன்னுடைய.

aur'um, *n.* வெடிப்பொன்.

aus'cultate, *v.* கேட்டல் மூலம் சோதி.

ausculta'tion, *n.* இதயத்தின் அல்லது நுரையீரலின் அசை வினைக் கேட்டல்.

aus'cultator, *n.* கேட்டல் வழியே இருதய சோதனை செய்பவர்; இருதயத் துடிப்பைக் கேட்க உதவும் கருவி.

auscult'atory, *a.* கேட்டலைச் சார்ந்த.

Aus'gleich, *n.* (வர.) பத்தாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக் கப்படவேண்டிய ஆஸ்திரியா ஹங்கேரி அரசியல் ஒப்பந்தம்.

aus'picate, *v.* வருவது காட்டு, தொடங்கு.

aus'pice, *n.* புட்குறி, குறி, சகுனம்; முற்குறி.

aus'pices, *n. pl.* சார்பு, ஆதரவு.

auspi'cious, *a.* நற்குறியுள்ள, சாதகமான; தகுந்த, உகந்த.

Aus'ter, *n.* தென்றல்.

austere', *a.* இனிய குணமற்ற, வெடுவெடுப்பான; கொடுமை யான; இரக்கமற்ற; கண்டிப்பான; தன்னொழுக்கத்தில் கண்டிப்பான, ஆடம்பரமில்லாத; மிக்க எளிமை வாய்ந்த.

auste'rity, *n.* இனிய குணமில்லாதிருத்தல்; கடுமையான பழக்கவழக்கம்; துறவறம்; உடையிலும் பழக்கவழக்கங் களிலும் மிக்க எளிமையோடிருத்தல்.

aus'tral, *a.* தெற்கைச் சார்ந்த.

Australa'sian, *n.* ஆஸ்திரலேஷியாவின் பழங்குடியினர்; *a.* ஆஸ்திரலேஷியாவைச் சார்ந்த; ஆசியாவின் தென்கிழக்கு நாடுகளைச் சார்ந்த.

Austral'ian, *n.* ஆஸ்திரேலியாவின் தொல்குடியார்; ஆஸ்திரேலியக் குடியுரிமையாளர்; *a.* ஆஸ்திரேலியாவைச் சார்ந்த; (தொ.) Australian rules, ஆஸ்திரேலிய காற்பந்து ஆட்டவகை.

au'stringer, *n.* பருந்துகளை வளர்ப்பவர்.

aut'archy [1], *n.* முழுஅதிகாரம்; தன்னுரிமையாட்சி; வல் லாட்சி.

aut'archy [2], *n.* = autarky.

aut'arky, *n.* தன்னிறைவு.

authent'ic, *a.* உண்மையான, அதிகாரபூர்வமான, நிலை நிறுத்தப்பட்ட, நம்பத்தக்க.

authen'ticate, *v.* உறுதிப்படுத்து; உண்மையாக்கு; சட்ட பூர்வமாக்கு; ஆக்கியோன் உரிமைக்குச் சான்றுபகர்.

authenti'city, *n.* நம்பத்தக்க நிலை.

auth'or, *n.* ஆக்கியோன், நூலாசிரியன், படைப்பன்.

auth'oress, *n.* நூலாசிரியை.

author'ial, *a.* நூலாசிரியரைச் சார்ந்த.

authoritar'ian, *a.* ஆட்சியாதிக்கக் கொள்கையுடைய.

author'itative, *a.* அதிகாரம் பெற்ற; தகுதியுடைய.

autho'rity, *n.* ஆணையுரிமை, சட்டத்தோடு ஒட்டிய உரிமை; நிலையால் அல்லது பணியால் அல்லது குணநலத்தால் பெற்றுள்ள அதிகாரம்; சான்று வலிமை; இசைவு; அதிகார முடையவர்; அதிகாரக் குழு; நிபுணர்; மேற்கோள்.

authoriz'able, *a.* அதிகாரம் பெறத்தக்க; அதிகாரம் கொடுக்கக்கூடிய.

authoriz'ation, *n.* சட்டத்தோடு இயைந்த அதிகாரம் வழங்குதல்.

auth'orize, *v.* அதிகாரம் கொடு; இசைவாணைகொடு; காரணம் காட்டி விளக்கு; உரிமையால் நிலைநிறுத்து.

auth'orized, *a.* அதிகாரம் பெற்ற.

auth'orless, *a.* ஆசிரியர் பெயர் தெரியாத.

auth'orship, *n.* நூலாசிரியர் தொழில்.

auti'sm, *n.* தற்காதல் நோய், தற்புனைவு ஆழ்வு.

aut'obahn, *n.* செர்மன் நாட்டுப் பெருஞ்சாலை.

autobio'grapher, *n.* தம்வரலாற்றைத் தாமே எழுதுபவர்.

autobiograph'ical, *a.* தன்வரலாற்றைச் சார்ந்த.

autobiogr'aphy, *n.* தன்வரலாறு.

au'tocar, *n.* பொறியினால் தானே ஓடும் ஊர்தி.

autoceph'alous, *a.* தனியான, சார்பற்ற.

autoch'thon, *n.* தொல்முதுகுடிமகன்; மண்ணோடு பிறந்தவர்; *pl.* autoch'thons, autoch'thones.

autoch'thonous, *a.* தொல்குடிச் சார்ந்த.

autoch'thony, *n.* பழங்குடியாய் உள்ள நிலை.

au'toclave, *n.* கடுவெப்பமும் உயர் அழுத்தநிலையும் ஏற்கும் வலிமைவாய்ந்த பெருங்கொப்பரை.

autoc'racy, *n.* தன்முனைப்பாட்சி; ஏகாதிபத்தியம்.

aut'ocrat, *n.* தன்முனைப்பாட்சியர்; ஏகாதிபதி.

autocrat'ic, *a.* தன்விருப்பம்போல் ஆளுகிற; ஏகாதிபதியான.

autoc'ratrix, *n.* தன்முனைப்பாட்சி பூண்ட ருசியப் பேரரசிகளின் பட்டப்பெயர்.

aut'o-da-fe', (போர்ச்.) *n.* உயர்வழக்கு மன்றத்தின் கடுமையான தண்டனை; முரணான சமயக் கோட்பாடுள்ளவர்களை எரித்தல்; *pl. aut'os-da-fe'.*

aut'odidact, *n.* தானே கற்கும் ஒருவர்; *a.* தானே கற்கின்ற.

auto-diges'tion, *n.* தற்செரிமானம், புறப்பொருளுதவியின்றி உடலில் அகப்பொருளுதவி கொண்டே நிறைவுதரும் செரிமானம்.

aut'o-e'rotism, *n.* தன்விழைச்சுத் தினவு.

autog'amy, *n.* தற்கருவுறல்.

autog'enous, *a.* தானே உற்பத்திசெய்கிற; தன்னுரிமையுடைய.

autog'eny, *n.* தானே உற்பத்தியாதல்.

aut'ograph, *n.* தற்கையெழுத்து; தற்கையொப்பம்; மூலக்கையேடு; *v.* தன்கையால் எழுது.

autograph'ic, *a.* தன்கையால் எழுதுவதைச் சார்ந்த.

autog'raphy, *n.* தன்கையால் எழுதுதல்; ஒருவர் எழுதியதைப் படிசெய்தல்.

autogravure', *n.* நிழற்படம் செதுக்குதல்.

aut'oharp, *n.* பொறியமைப்பினால் தானேஇயங்கும் நரம்புகளைப் பெற்றுள்ள இசைக்கருவி.

autol'atry, *n.* தன்வணக்கம்.

autol'ogy, *n.* தன்னைப்பற்றி ஆயும் கலை.

Autol'ycus, *n.* திருடர்; அற்பப்பொருட்களையும் அபகரிப்பவர்; எழுத்துத்திருடர்; கருத்துக்கள்வர்.

autol'ysis, *n.* உடலிலுள்ள உயிரணுக்கள் அவ்வுடலினின்று வடியும் ஊன்நீரால் அழிதல்.

au'tomate, *v.* இயந்திரமூலம் செயல் முழுதியக்கும் முறையைப் பின்பற்று.

automat'ic, *a.* தானே இயங்குகிற; (தொ.) automatic transmission, இயக்கவிசை இணைப்புக்களையும் இயந்திரம் தானே இயக்கிக்கொள்ளும் முறை.

automa'tion, *n.* செய்பொருளாக்கத்தின் எல்லாப்படிகளையும் தானே இயங்கும் இயந்திரத்தின் மூலம் கட்டுப்படுத்தும் முறைமை, இயந்திர மூலம் செயல் முழுதியக்குதல்.

autom'atism, *n.* தன்னியக்கமுடையது.

autom'atist, *n.* தன்னியல்பு கொண்டொழுகும் கொள்கையுடையவர்.

autom'aton, *n.* தானே இயங்கும் பொறி; மறைந்திருக்கும் பொறியால் இயங்குவது; உணர்ச்சி விழிப்பற்ற உயிர்ப்பொருள்; தசை நரம்புகளின் தானே இயங்கும் ஆற்றல்; அறிவின்றிப் பழக்கத்தினால் செயலாற்றுபவர்; *pl.* autom'ata, autom'atons.

automobile', *n.* தானியங்கி, மோட்டார் வண்டி; *a.* தானே இயங்குகிற.

automo'bilism, *n.* தானியங்கியைப் பயன்படுத்தும் முறை; மோட்டார் ஓட்டுபவர் மரபு.

automo'bilist, *n.* மோட்டார் வண்டி ஓட்டுபவர், தானியங்கி உடைமையர்.

autonom'ic, *a.* தன்னுரிமையுடைய; தன்னியக்கமுடைய, தானே இயங்குகிற.

auton'omist, *n.* தன்னுட்சிக் கோட்பாட்டாளர்.

auton'omous, *a.* தன்னுட்சி உரிமையுடைய.

auton'omy, *n.* தன்னுட்சி உரிமை; தன்னுரிமை; தன்னிருப்புரிமை; தன்னுட்சியுடைய சமுதாயம்.

autoph'agous, *a.* தன் தசையைத் தானே தின்றுசெமிக்கிற; தன்னுணிகள் சார்ந்த.

autoph'agy, *n.* தன்னூண் உடைமை, உடலிலுள்ள இழைமங்கள் தம்மைத் தாமே உறிஞ்சிக்கொண்டு உயிர் வாழ்தல்.

autoph'anous, *a.* தன்னொளியுடைய.

autoph'oby, *n.* தற்சுட்டச்சம், தானே தன்னைப்பற்றி உரைக்கக் கூசுதல்.

autoph'ony, *n.* தன்குரலுணர்வு, தன் குரலின் எதிரொலியைத் தானே கேட்டல்.

au'toplasty, *n.* உயிர்க்கூறுசீட்டுமுறை, நலங்குன்றிய பகுதியை அறுவை மருத்துவத்தினால் நீக்கிவிட்டு அதே உடலிலுள்ள நலமான இழைமங்கள் வைத்துக் குணப்படுத்தும் முறை.

autop'sia, autop'sy, *n.* நேர்மேற்பார்வை, சாவின் பின் ஆய்வு; கூறுபாட்டாய்வு.

autop'tic, *a.* தன் கண்ணாற் காணுகிற.

auto-suggest'ion, *n.* தற்றூண்டுதல், உள்தூண்டுதல்.

autotox'in, *n.* உயிரியினுள் விளையும் மாறுதலால் ஏற்படும் நச்சுச்சத்து.

au'totroph, *n.* நேரே இயற்பொருளிலிருந்து உணவு ஆக்க வல்ல உயிர்.

autotroph'ic, *a.* இயற்பொருளிலிருந்து நேரே உணவு ஆக்க வல்ல; தன்னுணவாக்குகிற.

au'totype, *n.* மூல ஏட்டின் பதிவு உருப்படிவம், எழுத்து முதலியவற்றின் வடிவுருக்கெடாது எடுக்கும் நிழற்படப் படிவம்; நிழலுருப்படிவ ஒருவண்ண நிலையச்சு.

autotypog'raphy, *n.* பட அச்சு, நிணப்பசைப் படத்தைத் தகட்டில் ஒட்டுவதன் மூலம் உருவாக்கப்படும் பட அச்சுருப் பாளம்.

au'tovac, *n.* கல்லெண்ணெயை மேல்தளத் தொட்டிக்கு இயல்பாய் ஒழுகவிட உதவும் காற்றுநீங்கிய வெற்றிட அமைவு.

aut'umn, *n.* இலையுதிர் காலம், கூதிர்ப்பருவம்; கனிதரும் பருவம்.

autum'nal, *a.* இலையுதிர் காலத்திற்கு உரிய ; கூதிர்ப்பருவக் கனிவுடைய, கூதிர்ப்பருவத்தில் மலர்கிற ; முதிர்கனிவான, நடுப்பருவம் கடந்த; (தொ.) autumnal equinox, தென் திசை செல்லும் வழியில் ஞாயிறு நடுநேர்க் கோட்டைக் கடக்கும் காலம்.

auxanom'eter, *n.* செடி வளர்ச்சிமானி.

auxe'sis, *n.* பருமன் வளர்ச்சி ; மிகையுரை, புனைந்துரை.

auxil'iar, *n.* உதவியாளர், துணைவர் ; *a.* உதவுகிற.

auxil'iary, *n.* உதவியாளர், துணைவர் ; துணைப்படை வீரர் ; (இலக்.) துணைவினை ; *a.* துணையான, உடனுதவியான ; உதவியாளரான.

a'va, *n.* ஓரின மீளகு ; கள்வகை.

avail', *n.* பயன், இலாபம் ; *v.* உதவியாயிரு ; பயனுறு ; பயன்படுத்து, உறுதி கூறு.

availabil'ity, *n.* எளிதில் கிடைக்கக்கூடிய தன்மை.

avail'able, *a.* கிடைக்கக்கூடிய.

av'al, *a.* பாட்டனுரைச் சார்ந்த.

av'alanche, *n.* பனிப்பாறைச் சரிவு.

avani'a, (துரு.) *n.* கடுமையான வரி.

avant'-cour'ier, *n.* முன்செல்லும் தூதர் ; முற்பாதுகாப்பாளர்.

av'arice, *n.* பேராசை.

avast', *int.* (கப்.) கெட்டியாகப்பிடி ; நிறுத்து.

av'atar, (ச.) *n.* திருவிறக்கம், திருப்பிறப்பு, அவதாரம் ; திருவுரு.

avaunt', *int.* விரைந்து செல் ; போய்விடு ; முன்செல்.

av'e, (ல.) *n.* வாழ்த்தொலி ; *int.* வாழி !

avenge', *v.* பழிதீர், பழிதுடை ; குற்றவாளியைத் தண்டி ; நேர்மையை மெய்ப்பி.

avenge'ful, *a.* பழிதீர்க்கும் உறுதியுடைய.

avenge'ment, *n.* பழிதுடைப்பு.

aveng'er, *n.* பழிவாங்குபவன்.

aveng'eress, *n.* பழிவாங்குபவள்.

av'ens, *n.* ரோசாவை உள்ளடக்கிய மலர்ச்செடியினம்.

av'entail, **av'entaile**, *n.* கலசத்தில் திறந்து மூடத்தக்க முகத்தகடு.

aven'turin, **aven'turine**, *n.* செம்புக் கலப்புடைய தவிட்டு நிறக்கண்ணுடி ; செம்புநிறப் படிகக்கல்வகை ; *a.* மின்னுகின்ற ; ஒளிவிடுகின்ற.

av'enue, *n.* அகல்கவின் பாதை ; இருபுடை மரம்பயில் சாலை ; நுழை வழி, புகுநெறி.

aver', *v.* மெய்யெனக்கூறு ; உறுதியளி ; வற்புறுத்திக்கூறு ; (சட்.) மெய்யெனக் காட்டு, எண்பி.

av'erage, *n.* நிரலளவு, சராசரி ; வழக்கமான தொகை ; பொதுப்படையான மதிப்பீடு ; *a.* பொதுவான மதிப்பளவுள்ள ; *v.* சராசரிக் கணக்கிடு.

aver'ment, *n.* உறுதிக்கூற்று ; எண்பித்தல்.

aver'rable, *a.* உறுதியாகக் கூறத்தக்க.

Averrho'a, *n.* புளிமா இனம்.

averruncat'or, *n.* கிளைவெட்டி, உயர் கிளைகளை வெட்டும் கருவி.

averse', *a.* விருப்பமில்லாத, வெறுப்புடைய.

aver'sion, *n.* வெறுப்பு, பகைமை.

avert', *v.* வேறுபக்கமாகத் திருப்பு ; தடுத்துதவு, அணுக விடாது தடு.

A'ves, *n. pl.* பறவையினம்.

Aves'tan, *n.* பண்டை ஈரானிய மொழி ; *a.* பண்டைப் பாரசீகரின் திருமறையைச் சார்ந்த.

av'ian, *a.* பறவை இனத்தைச் சார்ந்த.

a'viarist, *n.* பறவைப் பண்ணையாளர்.

av'iary, *n.* பறவைப் பண்ணை ; பறவைக்கூண்டு.

av'iate, *v.* இயந்திர சாதனங்கள்மூலம் பற, விமானத்தில் செல்.

avia'tion, *n.* வானூர்திகளிற் பறத்தல், வானப்பயணம்.

a'viator, *n.* வானூர்தியாளர், வானோடி.

a'viculture, *n.* பறவை வளர்ப்பு.

av'id, *a.* ஆர்வமுடைய ; பேராவலுள்ள.

avid'ity, *n.* பேரார்வம் ; மிகுந்த ஆவல்.

aviette', *n.* இயந்திரமில்லாமல் மனித ஆற்றல் கொண்டே இயக்கப்படும் வானூர்தி.

avifau'na, *n.* நிலப்பிரிவுக்குரிய பறவைத் தொகுதி.

avion, (பிர.) *n.* போர்த்துறை வானூர்தி.

avi'so, *n.* அறிவிப்பு ; அறிவிப்புக்களைக் கொண்டு விரைந்து செல்லும் கலம்.

avi'tal, **av'ital**, *a.* பாட்டனைச் சார்ந்த ; முன்னோருக்குரிய.

avizan'dum, (ல.) *n.* (சட்.) முன்னாய்வு, தீர்ப்பளிக்குமுன் நடுவர் வழக்கைத் தனியாக ஆராய்தல்.

avoca'do, *n.* பெரிய பேரிக்காய் போன்ற பழவகை.

avoca'tion, *n.* துணைத்தொழில் ; ஒருவர் தொழிலினின்று சிறிது வேறுபட்ட வேலை ; வாழ்க்கைத் தொழில்.

av'ocet, *n.* ஆழமற்ற நீர்நிலையில் நடமாடும் நீண்ட அலகுள்ள பறவை வகை.

Avogadro's law, (தொ.) ஒத்த வெப்பநிலையும் ஒத்த அமுக்கமும் முள்ள சம பருமன அளவுடைய வளிகள் யாவும் ஒத்த எண்ணிக்கையுடைய மூலக் கூறுகளையே உடையன என்னும் அமீடியோ அவோகாட்ரோ (Amedeo Avogadro, 1776-1856) என்பாரின் கோட்பாடு.

avoid', *v.* தவிர், விலக்கு ; தப்பிச்செல் ; தட்டிக்கழி ; (சட்.) பயனற்றதாக்கு.

avoid'able, *a.* தவிர்க்கக்கூடிய.

avoid'ance, *n.* தவிர்ப்பு, தட்டிக்கழிப்பு ; ஒழிவிடம்.

avoirdupois', *n.* ஆங்கில நாட்டு நிறுத்தலளவை முறையின் பெயர் ; எடை, பளு.

av'oset, *n.* = avocet.

avouch', *v.* உறுதிமொழி கொடு, உத்தரவாதம் செய் ; உண்மையென ஒத்துக்கொள்.

avouch'able, *a.* உத்தரவாதம் அளிக்கத்தக்க.

avouch'ment, *n.* உறுதிமொழி அளித்தல்.

avow', *v.* உண்மையென்று ஒப்புக்கொள் ; குற்றத்தை ஏற்றுக்கொள் ; ஏற்பு அறிவி, ஒப்புதலுரை.

avow'able, *a.* உண்மையென்று ஒப்புக்கொள்ளத்தக்க.

avow'al, *n.* உறுதிமொழி, சூளுரை.

avowed', *a.* ஒத்துக்கொள்ளப்பட்ட, பலரறிந்த.

avow'edly, *adv.* யாவரும் ஒப்பிய நிலையில்.

avulse', *v.* பறி, சட்டென இழு, கிழித்திழு.

avul'sion, *n.* வலுக்கட்டாயமான பறிப்பு ; (சட்.) திடீரென வெள்ளத்தால் வேறொருவருக்கு உரிமையான நிலம்.

avunc'ular, *v.* பெற்றோரின் உடன்பிறந்தவரைச் சார்ந்த ; பெற்றோர் உடன்பிறந்தாரைப் போன்ற.

await', *v.* எதிர்பார்த்துக் காத்திரு, எதிர்நோக்கியிரு ; பதிவிரு ; வர இரு : பின்வருங் காலத்துக்குரியதாயிரு.

awake', *v.* விழி, தூக்கத்திலிருந்து எழுந்திரு ; உறக்கத்தினின்று எழுப்பு ; எழு, சோம்பலொழி.

awak'en, *v.* எழுப்பு, விழிப்பூட்டு ; எழுச்சியூட்டு ; கவனிக்கும்படி செய் ; பழியுணர், குற்றமுணர்ந்து திருந்தத் தலைப்படு ; எழுச்சியடை.

awak'ening, *a.* விழிப்பூட்டுகிற ; கிளர்ச்சியுடைய.

award', *n.* நடுநிலைத்தீர்ப்பு ; நடுவர்களின் கடைசியான முடிவு ; கொடுக்கப்பட்ட பொருள், பரிசு ; *v.* பரிசளி ; பாத்தளி, ஒதுக்கிக் கொடு; தீர்ப்புச்செய்; நடுத்தீர்ப்புக் கூறு.

aware', *a.* தெரிந்துள்ள ; உணர்கிற ; உணர்வுடைய ; முன்னுணர்வுடைய, எச்சரிக்கையான.

aware'ness, *n.* தெரிநிலை, விழிப்புள்ள நிலை ; சூழல் உணர்வு ; பொறியுணர்வு ; முன்னுணர்வு.

awash', *adv.* நீர்மட்டத்தோடு இணைவாக ; அலையில் மிதந்து, அலைநீரால் அலம்பப்பட்டு ; களையுடன்.

awatch', *adv.* கவனமாயுள்ள நிலையில் ; எச்சரிக்கையான தன்மையில்.

awave', *adv.* அலைமீது.

away', *adv.* அப்பால் ; தொலைவில் ; எதிர்ப்புறத்தில் ; வெளியே ; தீர ; முற்றிலும் ; தடமில்லாமல் ; ஒழித்து ; உடனடியாக ; *int.* ஒழி ! தொலைந்து போ ! எட்டச்செல் ! (தொ.) do away with, ஒழி; explain away, விளக்கி மழுப்பு, போலிவிளக்கம் தந்து ஒதுக்கித் தள்ளு ; fall away, தேய்ந்திறு, ஆர்வங்குன்றி விலகு ; fire away, தாமதமின்றி மேற்செல் ; make away with, கொன்றொழி, அழி.

awe, *n.* மதிப்பச்சம், வீறச்சம் ; வியப்பார்வம் ; பயபக்தி ; அச்சம், அதிர்ச்சி, மலைப்பு ; *v.* வியப்பூட்டு ; அச்சத்தால் பிணிப்பூட்டு ; மலைக்கவை.

awe'ary, *adv.* களைப்படைந்து, சோர்வுற்று.

a-weigh', *adv.* (கப்.) எடையிட்ட நிலையில், தூக்கிய நிலையில்.

awe'-inspir'ing, *a.* அச்சமும் மதிப்பும் தருகிற.

awe'less, *a.* மதிப்பச்சம் அற்ற.

awe'to, *n.* கம்பளிப்புழு, காளான் வகை போர்த்த உடலுடைய ஒட்டுயிர்ப்புழு.

awf'ul, *a.* அச்சந்தருகிற ; வீரூர்ந்த மதிப்புக்குரிய ; மிக மோசமான, குறிப்பிடத்தக்க, பொறுக்கமுடியாத, மட்டு மீறிய.

aw'fulness, *n.* மதிப்பச்சநிலை, வீறச்சநிலை.

awheel', *adv.* சக்கரங்களின் மேல், மிதிவண்டிமீது.

awhile', *adv.* சிறிது காலம் ; சிலகாலம்.

a-wing', *adv.* பறந்து கொண்டு.

awk'ward, *a.* அலங்கோலமான ; அருவருப்புத்தருகிற ; தடுமாற்றமுடைய ; சீர்கேடான, மனக்குழப்பமான ; பொருத்தமற்ற ; இடர்ப்பாடான.

awk'wardish, *a.* தடுமாற்றமுள்ள, மனக்கலக்கமுடைய.

awk'wardness, *n.* தடுமாற்றம் ; மனக்குழப்பம் ; இடக்குமுடக்குத் தன்மை.

awl, *n.* தமரூசி.

awn [1], *n.* கூல வகைகளின் கதிரலகு.

awn [2], *v.* தலைக்கு மேலாகப் பாதுகாப்பளி.

awned, *a.* கூல வகைகளில் கதிரலகுடைய.

awn'ing, *n.* மேற்கட்டி, பந்தல் ; மேற்கவிகை ; தங்கிடம் ; (கப்.) பின்கட்டுத்தளம்.

awn'less, *a.* கூல வகைகளில் கதிரலகற்ற.

awoke', *v.* awake என்பதன் இறந்தகாலம்.

awork', *adv.* வேலையில் ஈடுபட்டு, வேலை செய்துகொண்டு.

awrong', *adv.* தவருக.

awry', *a.* கோணலான ; உருத்திரிந்த ; வளைந்த ; தவருன ; இடக்கு முடக்கான ; *adv.* கோணலாக ; உருத்திரிந்து ; தவறி ; இடக்கு முடக்காக.

ax, axe, *n.* கோடரி ; தீவிரச் செலவினக் குறைப்பு ; *v.* வெட்டு, பிள, செலவைக்குறை.

axeroph'thol, *n.* முதல் இன (ஏ) ஊட்டச்சத்து.

ax'ial, *a.* ஊடச்சுச் சார்ந்த ; ஊடச்சியலான ; நடுஊடு வகையான.

ax'il, *n.* (தாவ.) காம்புக்கவடு ; இலைக்கோணம் ; கிளைக்கவடு.

ax'ile, *a.* அச்சோடு ஒத்திணைவான.

axill'a, *n.* (உட.) அக்குள் ; (தாவ.) கவடு ; *pl.* axill'ae.

ax'illar, ax'illary, *a.* அக்குளுக்குரிய ; (தாவ.) கவட்டுச் சார்பான.

axiol'ogy, *n.* அடிவழக்கு நூல், முடிவான மெய்ம்மதிப் பீட்டினை ஆராயும் நூல் துறை.

ax'iom, *n.* முதுரை ; வெளிப்படை உண்மை, வெள்ளிடை மலை ; மேற்கோள் வாசகம் ; அடிவழக்கு ; வாதத்திற்கு அடிப்படையாக ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்து.

axiomat'ic, axiomat'ical, *a.* தானே விளங்குகிற, வெளிப்படையாகத் தெரிந்த; அடிவழக்குச் சார்ந்த; முதுரையார்ந்த.

ax'is [1], *n.* ஊடச்சு, கோளம் சுற்றி வருவதாகக் கொள்ளப்படும் கற்பனையான நடு ஊடுவரை ; செங்கோடு, உருவத்தை ஒழுங்காகப் பிரிக்கும் நடுக்கோடு ; (உட.) விழிநோக்கின் மைவரை ; உடலுறுப்புக்களின் நடு ஊடுவரை ; வல்லரசுகளின் இணைப்புக்கு மூலதளமாகவுள்ள அடிப்படை உடன்படிக்கை ; *pl.* ax'es.

ax'is [2], *n.* வெண்புள்ளியுள்ள மான்.

a'xle, *n.* இருசு, சக்கரத்தின் அச்சு.

a'xle-box, *n.* இருசுப் பெட்டி.

ax'led, *a.* இருசு தாங்கிய.

a'xle-guard, *n.* இருசு முகப்பு.

a'xle-journal, *n.* இருசில் அச்சு உராயுமிடம்.

ax'le-tree, *n.* இருசுக்கூடு.

ax'olotl, *n.* ஒருவகை மீனின் முட்டைப்புழு.

ax'on, *n.* நரம்பணுவின் வால்.

ay, *n.* சட்டமன்றத்தில் 'ஆம்' என்பவர், ஏற்பாளர் ; *pl.* ayes.

ay'ah, *n.* பணிப்பெண், செவிலி.

aye, *adv.* என்றும், எக்காலத்தும், எப்போதும்.

aye'-aye, *n.* கொறிக்கும் அணில்போன்ற விலங்கு வகை.

Azal'ea, *n.* புதராக வளரும் மலர்ச்செடி இனம்.

az'arole, *n.* பேரியினம் சார்ந்த பழவகை.

Azil'ian, *a.* பழங் கற்காலத்துக்கும் புதுக் கற்காலத்துக்கும் இடைப்பட்ட.

az'imuth, *n.* முகட்டு வட்டை, திசைவில், வானுச்சியிலிருந்து அடிவானம் வரையிலுள்ள செங்கோண வளைவு.

azimuth'al, *a.* திசைவில்லைச் சார்ந்த, முகட்டு வட்டையை ஒட்டிய.

azo'ic, *a.* உயிரினங்களின் தோற்றத்திற்கு முன்னுள்ள ; உயிரினத்தடமற்ற.

azon'ic, *a.* திணை வரையறையற்ற, இட வரையறையில்லாத, எங்கும் பரவியுள்ள.

az'ote, *n.* வெடியம், உப்புவளி, காலகம்.

az'oth, *n.* பாதரசம் ; முற்காலச் சஞ்சீவி மருந்து.

azot'ic, azo'tous, *a.* வெடியுப்புச் சார்ந்த, வெடியுப்பின் கலவையான.

az'otize, *v.* வெடியத்துடன் கல.

Azotobac'ter, *n.* வளிமண்டலத்திலுள்ள கலப்பற்ற வெடியத்தைப் பற்றும் இயல்புடைய நில உயிர்ம வகை.

Az'tec, *n.* அமெரிக்கக் கண்டத்து மெக்சிகோ (Mexico) பகுதியின் பழங்குடி இனத்தவர்.

a'zure, *n.* மங்கலான நீலம் ; நீலவானம் ; நீலவண்ணப் பொருள் ; நீலமணி ; *a.* வானீல நிறமான ; முகில் தடமற்ற ; நிறை அமைதியான.

azure'an, *a.* வானீல நிறமான.

az'urine, *n.* கருநீல அவுரிச்சாயம் ; நன்னீர் மீன்வகை.

az'ury, *a.* நீலச் சாயலான.

az'ygous, *n.* உடனிணையில்லாத ஒற்றை உறுப்பு ; *a.* உடனிணையில்லாத.

az'ym, *n.* புளிப்படையாத அப்பம்.

az'ymous, *a.* புளிப்பேறுத, உறையேறுத.

Baa, *n.* ஆட்டின் கத்துதல் ஒலி; *v.* கத்து, ஆடுபோல ஒலியெழுப்பு.

Ba'al, *n.* பினீசியர்களின் (Phoenician) தெய்வம்; பொய்த் தெய்வம்; *pl.* Ba'alim.

Ba'alism, *n.* பொய்த்தெய்வ வழிபாடு; உருவ வணக்கம்.

Ba'alist, *n.* போலிவழிபாட்டினர்.

baas, *n.* தென் ஆப்பிரிக்காவிலுள்ள தலைவர்.

ba'bacoote, *n.* மனிதக்குரங்கு வகை.

babb'itt, *v.* உலோகக்கலவை வகையாற் பொருத்து.

Babb'itt-met'al, *n.* உராய்வு தடுக்கும் மசகுப் பொருளாகப் பயன்படும் மென்மையான உலோகக்கலவை வகை; தகரம்-செம்பு-அஞ்சனம் முதலியவற்றின் கலவை.

bab'ble, *n.* மழலைச்சொல்; அரைகுறைப்பேச்சு; பயனில் கூற்று; நீரோட்டத்தின் மென்மையான சலசலப்பு; *v.* மதலையைப்போலப் பேசு; தொடர்பற்றமுறையில் உரையாடு; மறை வெளியிடு; பிதற்று; உளறு.

bab'bler, *n.* பிதற்றுபவர்; ஒளிமறைவான செய்திகளை வெளியிடுபவர்; நீண்ட கால்களையுடைய இன்னிசைப் பறவை வகை.

babe, *n.* (செய்.) குழந்தை; கள்ளங்கபடமற்றவர்.

Ba'bee, *n.* பாரசீக சமயப்பிரிவினர்; எல்லாச் சமயங்களின் கருக்கூறுகளையும் இணைக்க முயன்ற பரபெதீன் மிர்சா அலி முகம்மது (Bab-ed-Din Mirza Ali Mohammed, 1821-1850) என்ற பெரியாரைப் பின்பற்றுபவர்.

Ba'beeism, *n.* பாரசீகப் பெரியார் பாபெதீன் 1844-இல் தோற்றுவித்த கோட்பாடு.

ba'bel, *n.* (விவி.) சீனரில் (Shinar) அமைக்கப்பட்ட உயர் கோபுரம்; கனவுக்கோட்டை; செயல்முறைக்கு ஒவ்வாத திட்டம்; கம்பலை; குழப்பக்கூட்டம்.

ba'beldom, *n.* கூட்டிரைச்சல், குழப்பநிலை.

ba'belish, *a.* குழப்பம் நிறைந்த.

ba'belism, *n.* = babeldom.

babirous'sa, babirus'sa, *n.* செலிபிஸ் (Celebes) தீவுக் குரிய நீண்ட தந்தமுள்ள காட்டுப்பன்றி வகை.

Bab'ism, *n.* = Babeeism.

Ba'bist, *n.* பாரசீகப் பெரியார் பாபெதீனின் கோட்பாட்டினர்.

bab'lah, *n.* வேலமரத்தையொத்த மரவகை; சாயப்பொருளுக்கு உதவும் மரவகைகளின் நெற்று.

Ba'boo, *n.* வங்காள நடுத்தர வகுப்பினர்.

baboon', *n.* ஆப்பிரிக்காவுக்கும் தென் ஆசியாவுக்கும் உரிய பெரிய குரங்கு வகை.

baboosh', **babouche'**, **babuche'**, *n.* கீழைநாடுகளில் வழங்கும் குதிகால் உயர்வற்ற மிதியடிவகை.

babul', *n.* = bablah.

bab'y, *n.* குழந்தை, மதலை; குழந்தை போன்றவர், குழந்தை மனப்பான்மையுடையவர், உலகம் தெரியாதவர்; இனத்திற் சிறியது, கன்று, குட்டி, குஞ்சு, பிள்ளை; *v.* குழந்தையாக நடத்து; செல்லங்கொடு.

bab'yhood, *n.* குழந்தைப்பருவம்.

ba'byish, *a.* குழந்தைத் தன்மையுடைய.

Bab'ylon, *n.* கால்டியப் பேரரசின் (Chaldea) தலைநகர்; பெருநகர், ரோம்நகர்; லண்டன்; பழிச்செயல் மிகுந்த நகரம்.

Babylon'ian, *n.* பண்டைய பாபிலோனியா (Babylon) நாட்டவர்; *a.* பாபிலோனுக்குரிய; பாரிய உருவுடைய, பெரிய அளவான; குழப்பமிக்க.

ba'by-sitter, *n.* பெற்றோர் வெளியே செல்லும்போது குழந்தையுடனிருந்து அதனைப் பேணுபவர்.

bacc'a, *n.* (தாவ.) கொட்டை.

baccalaur'eate, *n.* 'இளங்கலைஞர்' என்னும் பல்கலைக்கழகப் பட்டம்.

bacc'ara, bacc'arat, *n.* சீட்டுச்சூதாட்டம்.

bacc'ate, *a.* கொட்டைகளுள்ள; கொட்டையுருவான.

Bacc'hanal, *n.* மதுவுக்குரிய கிரேக்கத் தெய்வமான பாக்கஸ் (Bacchus) வழிபாட்டுக்குரிய மதகுரு; பாக்கஸ் என்ற தெய்வத்தின் வழிபாட்டாளர்; குடிவெறியர்; கூத்தாடி; 'பாக்கஸ்' விழாவுக்குரிய நடனம்; கூத்து; களியாட்டப்பாட்டு; *a.* கிரேக்க மதுத்தெய்வத்துக்குரிய; கலகம் விளைவிக்கிற; கட்டுக்கடங்காத.

Bacchanal'ia, *n. pl.* 'பாக்கஸ்' (Bacchus) என்ற கிரேக்க மதுத் தெய்வத்துக்குரிய விழா; குடிவெறியாட்டம்.

Bacchanal'ian, *n.* 'பாக்கஸ்' என்ற கிரேக்க மதுத் தெய்வத்துக்குரிய விழாக்கூத்தாடி; வெறியர்; *a.* 'பாக்கஸ்' விழாவுக்குரிய; குடிவெறியுள்ள; கலகத்துக்குரிய, அமளி செய்கிற.

Bacc'hant, *n.* 'பாக்கஸ்' என்ற கிரேக்க மதுத்தெய்வத்துக்குரிய மதகுரு; 'பாக்கஸ்' வழிபாட்டாளர்; *a.* மதுத் தெய்வத்தை வழிபடுகிற; குடிப்பழக்கத்தில் ஆர்வமுள்ள.

Bacc'hante, *n.* Bacchant என்பதன் பெண்பால்.

Bacchan'tic, *a.* மதுத்தெய்வத்தை வழிபடுகிற; குடித் தாடுகிற.

Bacc'hic, *a.* கிரேக்க மதுத்தெய்வத்துக்குரிய; கலகம் விளைவிக்கிற; கட்டுக்கடங்காத.

Bacc'hus, *n.* கிரேக்க மதுக்கடவுள், திராட்சைரசத் தெய்வம்.

baccif'erous, *a.* கொட்டைகளைத் தாங்கியுள்ள.

bacc'iform, *a.* கொட்டை போன்ற உருவுடைய.

bacciv'orous, *a.* கொட்டைகளையே உணவாகக் கொள்கிற.

bacc'o, bacc'y, *n.* = tobacco.

bach'arach, *n.* உயர்தர இன்தேறல் வகை.

bach'elor, *n.* திருமணமாகா ஆடவர், காளை, விடலை; 'இளங்கலைஞர்' என்ற பல்கலைக்கழகப் பட்டதாரி; மற்றொருவரின் கொடிக்கீழ்ப் பணிபுரியும் பயிற்சிவீரன்; (தொ.) bachelor's buttons, பலதிறப்பட்ட பித்தானைப் போன்ற மலர்கள்; வாதுமை முதலிய பருப்புக்களால் செய்யப்பட்ட மாப்பண்ட வகை; தைக்காமல் இணைக்கப்படும் பித்தான்கள்.

bach'elordom, *n.* ஆடவர் திருமணமாகா நிலை.

bach'elor-girl', *n.* திருமணமின்றித் தனித்து வாழும் பெண்.

bach'elorhood, bach'elorism, *n.* = bachelordom.

bach'elorship, *n.* 'இளங்கலைஞர்' என்னும் பல்கலைக்கழகப் பட்டம்.

bacill'ar, bacill'ary, *a.* நோய்நுண்மங்களைச் சார்ந்த; சிறுகோல் வடிவான.

bacill'icide, *n.* நோய் நுண்மக்கொல்லி.

bacill'iform, *a.* இழை நுண்கம்பி வடிவான.

bacill'us, *n.* நோய்நுண்மம், நுண்கீடம்; *pl.* bacill'i.

back[1], *n.* முதுகு, மனித உடலின் பின்புறம், விலங்கினத்தின் மேற்பகுதி; பின்பக்கம்; மறைந்த பக்கம்; இலை-நரப்புக் கருவி - ஏடு முதலியவற்றின் அடிப்புறம்; ஏட்டின் மூட்டுப் பகுதி; நாவின் மேற்பரப்பின் உட்பாகம்; கத்தி-வாள் ஆகியவற்றின் மொட்டைப்பக்கம்; நாற்காலி - விசுப்பலகைச் சாய் பகுதி; கப்பலின் அடிக்கட்டை; காற்பந்தாட்டக்காரர்களுள் பின்னணியில் நிற்பவர்; *a.* பின்னுலுள்ள; பின்னேக்கிய; தொலைவான; முற்காலத்திய; நேர்மாறான; *v.* ஏறு; இவர்ந்து செல்; உதவி செய், ஆதரி, ஆதரித்துப் பந்தயம் கட்டு; எதிர்க்கையொப்பமிடு, ஆதரித்தெழுது; பின்புறமாகத் தள்ளு; பின்னேக்கிச் செல், எதிர்மறையான திசையில் செல்; *adv.* பின்னேக்கி; பின்னுல்; காலத்தால் பின்னடைந்து; திரும்பி; மீண்டும்; (தொ.) at the back of பின்னுல்; ஆதரவாக, பின்பற்றி; மறைவாக.

back[2], *n.* எரிபொருள் கொண்டுசெல்ல உதவும் தொட்டி, கொப்பரை.

back'-ache, *n.* முதுகு வலி.

back'band, *n.* வண்டி ஏர்க்கால்களின் தலை.

back'-bench'er, *n.* பின்னணியில் இருப்பவர்.

back'bite, *v.* புறங்கூறு.

back'biter, *n.* புறங்கூறுபவர்.

back'biting, *n.* புறங்கூறுதல்; *a.* புறங்கூறுகிற.

back'-bone', *n.* முதுகெலும்பு; முக்கிய ஆதாரம்; உறுதி தரும் பகுதி.

back-bone'less, *a.* முதுகெலும்பில்லாத; ஆதாரமற்ற; உறுதியிழந்த.

back'-chain, *n.* = backband.

back'-chat, *n.* எதிர்ப்பான மறுமொழி; சுடுசொல்; துடுக்கான பேச்சு.

back'-cloth, *n.* நாடகமேடைப் பின்புற ஓவியத்திரை.

back'-country, *n.* மக்கள் எண்ணிக்கை மிகாத மாவட்டங்கள்.

back'cross, *n.* கலப்பினப் பிறவிக்கும் மூல இனங்களில் ஒன்றற்கும் இடையேயுள்ள கலப்பு.

back'-door, *n.* புழைக்கடை, பின்வாயில்; *a.* தகுதியற்ற; ஒளிவு மறைவான; களவான.

back'-draught', *n.* பின்னோக்கிய ஒழுக்கு.

back'-drop, *n.* = back-cloth.

back'-end', *n.* பின்கோடி, கடைக்கோடி; காலப்பிரிவின் இறுதிப் பகுதி; இலையுதிர் காலத்தின் இறுதி.

back'er, *n.* போட்டியாளரை ஆதரிப்பவர்; குதிரை முதலிய வற்றின்மீது பணயம் வைத்துச் சூதாடுபவர்.

back'-fall, *n.* குத்துச்சண்டையில் முதுகு கீழேபடும்படி வீழ்தல், தோல்வி; பேரிசைக்கருவியின் உறுப்பு.

back'-fire, *n.* உள்வெப்பாலை முதலியவற்றில் கால இடந் தவறித் தீப்பற்றுதல்.

back'fisch, *n.* இளமங்கை.

back'-forma'tion, *n.* பின் அடிச்சொல் ஆக்கம்.

backgamm'on, *n.* தலைக்குப் பதினைந்து காய்களுடன் இருவர் ஆடும் கட்ட ஆட்ட வகை.

back'ground, *n.* பின்னணி வண்ணம்; பின்னணிச்சூழல்; பகட்டாக எடுத்துக் காட்ட உதவும் ஒவியப் பின்னணி, பின் பக்கம்; பின்னணிக்களம்; மூலை, பின்னிடம்; மங்கல் நிலை; தேய்நிலை; ஒய்நிலை; தனிமனிதரின் பண்பாட்டறிவு அனுப வங்களின் தொகுதி.

back'-hand, *n.* பின்புறமாகச் சாய்ந்துள்ள கையெழுத்து; பந்தாட்டத்தில் பின்னோக்கிய கையடி.

back'-hand'ed, *a.* பின்கைப் புறமான; மறைமுகமான; ஐயுறவுகொண்ட; ஏளனமான; இரண்டகமான.

back'hand'er, *n.* பின்கையினல் அடிக்கும் அடி; பங்கீடு முடிந்தபின் தரப்படும் தேறல் குவளை.

back'ing, *n.* பக்க ஆதரவு; குதிரையின் சேணம்; பின்தள்ளு தல்; பின்னிடைவு; உதவி செய்யும் கூட்டம்; பின்னணியை உருவாக்கும் பொருள்; இடஞ்சுழியான காற்றோட்டமாற்றம்.

back'ing-down, *n.* தட்டிக்கழிப்பு.

back'-lash, *n.* நன்கு பொருந்தும் இசைவற்ற இயந்திரத்தின் செவி ஈர்க்கும் அரவம்.

back'-log, *n.* விறகுப் பின்கட்டை; சேமப்பொருள் வைப்பு; சேமப்பணி; பணி எச்சம், நிறைவேறாது எஞ்சிக் கிடக்கும் பணித் தொகுதி.

back'most, *a.* பின்கோடியான, மிகப்பிந்திய.

back'numb'er, *n.* நாட்கடந்த பத்திரிகை இதழ்; ஒதுக்கப் பட்டது; ஒதுக்கப்பட்டவர்; காலத்திற்கு ஒவ்வாதவர்.

back'-ped'al, *v.* மிதிவண்டியைப் பின்னோக்கி மிதி, மெல்ல மெல்ல இயக்கு; பின்தங்கு, தயங்கி நில்; செயல் திசை திருப்பு; மற்போரில் எதிரியை நோக்கிக் கொண்டே பின்செல்.

back'-piece, back'-plate, *n.* கவசத்தின் முதுகுப்பகுதி.

back'-room, *n.* பின்னறை, பின் கூடம்.

back'-rope, *n.* = backband.

back'-saw, *n.* தடித்த புறமுடை இரம்பம்.

back'-scratcher, *n.* முதுகுச் சுரண்டி.

back seat driver, (தொ.) பொறுப்பில்லாமலே அறிவுரை கூறுபவர்.

back'set, *n.* தடை, தோல்வி; மறிசுழி.

back'side, *n.* பின்புறம்; விலங்கின் பிற்பகுதி.

back'-sight, *n.* பின்னோக்கி அளவிடல்; சுழல் துப்பாக்கியின் பின்பகுதிப் பார்வை.

back'-slang, *n.* கடைசியிலிருந்து எழுத்துக்களைப் பின்னோக்கிக் கூறும் கொச்சை மரபு.

back'slide', *v.* பின்புறம் சறுக்கு, பழைய பழியிற் சென்று விழு, அடைந்த முன்னேற்றம் அழி.

back'slid'er, *n.* பின்சறுக்குபவர், திருந்திய திருத்தங் கெட்டு விழுபவர்.

back'slid'ing, *n.* பின் சறுக்கல்.

back'stair, *a.* = backstairs [2].

back'stairs [1], *n. pl.* பின்புறப் படிக்கட்டு; பணியாளர்கள் படிக்கட்டு.

back'stairs [2], *a.* மறைமுகமான, திருட்டுத்தனமான, நேர்மை யற்ற.

back'-stall, *n.* திருட்டில் பின்னணியில் நின்று பாதுகாக்கும் கூட்டாளி.

back'stays, *n.* (கப்.) பக்க ஆதரவான பாய்மரக் கயிறுகள்; பின்னுதாரம்.

back'-stitch, *n.* உருட்டுத் தையல், பின்னிடைந்து முன்செல் லும் தையல்.

back'stroke, *n.* பின்னோக்கிய கைவீச்சு, பின்னோக்கிய அடி.

back'sword, *n.* ஒருபுற வாள்; கூடை போன்ற வேலைப் பாடுடைய கைப்பிடியுள்ள தடி.

back'track, *v.* வந்த வழி பின்னோக்கிச்செல்.

back'ward, *n.* சென்ற காலப்பகுதி; *a.* பின்தங்கியுள்ள, பிற்பட்ட; நாணமுடைய; விருப்பமற்ற; வளர்ச்சிக்குறைவுள்ள; கால தாமதமான; அறிவிற்பிற்பட்ட, அறிவு மந்தமான; பின்னோக்கிய; *adv.* பின் நோக்கியவாறு; முதுகின்மீது; சென்ற காலத்தை நோக்கி; பிற்பட்டு; இழிந்த நிலை நோக்கி.

backwarda'tion, *n.* இறக்குத்தரகர் வட்டி, விற்ற பங்கை மறுகணக்கின் போது ஒப்படைப்பதற்காக விற்பனையாளர் தள்ளிக் கொடுக்கும் சலுகை வீதம்.

back'wards, *adv.* பின்னோக்கி.

back'wash, *n.* பின்னோக்கிச் செல்லும் அலை; பின்னடையும் நீரோட்டம்; பிற்போக்கான செயல்; *v.* பின்னடித்துச் செல்; கம்பளி நீவியபின் நெய்ப்பசை கெட அலசு.

back'water, *n.* காயல், உப்பங்கழி; அணையின் தேங்கு நீர்; கட்டு நீர், ஆற்றோரக்குட்டை; விசைச் சக்கரம் சுழலுங்கால் பின்னோக்கிச் சிதறும் நீர்; பின்னோக்கிய நீரோட்டம்; கப்பல் செல்வதால் ஏற்படும் நீர்மட்ட எழுச்சி; ஓடா நீர்; காலவேகத் தின் தொடர்பற்ற இடம், நாகரிகத்தில் பின்தங்கிய இடம்.

back'woods, *n. pl.* காட்டகம், உட்காடு.

back'woodsman, *n.* காட்டகத்தில் குடியிருப்பவர், உட்காட் டாளர்; பிரிட்டனின் மாமன்ற மேலவைக் கூட்டத்திற்குச் செல்லாமலிருக்கிற அல்லது பெரிதும் செல்லாதிருக்கிற பெரு மகனர்.

back'-yard', *n.* புழைக்கடை, கொல்லைப்புறம்.

bac'on, *n.* பன்றி இறைச்சி, பன்றியின் பதனப்படுத்தப்பட்ட முதுகு விலா இறைச்சி.

Bacon'ian [1], *n.* பேக்கன் (Francis Bacon, 1561—1626) என்ற அறிஞரின் மெய்விளக்கக் கொள்கையைப் பின்பற்றுபவர்; ஷேக்ஸ்பியருடைய (Shakespeare) நாடகங்களின் மெய்யான ஆசிரியர் பேக்கன்தான் என்ற கொள்கையுடையவர்; *a.* பேக்கனோடு தொடர்புடைய; பேக்கனின் மெய்விளக்கக் கொள் கையைச் சார்ந்த; செயலாய்வுக்குரிய; தொகுத்து அறிகிற.

Baco'nian[2], *a.* ரோஜர் பேக்கன் (Roger Bacon - மறைவு 1292) என்ற முற்பட்ட ஆய்வறிஞருக்குரிய.

bac'ony, *a.* பன்றி இறைச்சி போன்ற.

bacter'ia, *n. pl.* நுண்மங்கள், நோய்க்கிடங்கள்; நுண்ணுயிரிகள்.

bacter'ial, bacte'rian, bacter'ic, *a.* நுண்மங்களைச் சார்ந்த.

bacterici'dal, *a.* நுண்மங்களை அழிக்கிற.

bacte'ricide, *n.* நுண்மக் கொல்லி, நுண்மங்களை அழிக்கும் பொருள்.

bacte'rioid, bac'teroid, *n.* பயற்றின வேரில் கூட்டு வாழ்வொட்டாக இருந்து உருப்பருக்கும் நுண்ம வகை, ஒட்டுயிர் நுண்மம்.

bacteriolog'ical, *a.* நுண்ம ஆராய்ச்சியைச் சார்ந்த.

bacteriol'ogist, *n.* நுண்ம ஆராய்ச்சியாளர்.

bacteriol'ogy, *n.* நுண்ம ஆய்வுநூல்.

bacterioly'sin, *n.* நுண்மங்களை அழிக்கும் உயிரின் தற்காப்புப் பொருள்.

bacteriol'ysis, *n.* உயிரின் தற்காப்புப் பொருளால் ஏற்படும் நுண்ம அழிவு.

bacteriolyt'ic, *a.* உயிரின் தற்காப்புப் பொருளால் தோன்றும் நுண்ம அழிவைச் சார்ந்த.

bacte'riophage, *n.* நுண்மத் தெவ்வு, இயற்கைப் பரப்பிலும் உயிரினங்களிலும் உள்ள நுண்ம அழிவுக்கூறு.

bacterio'sis, *n.* நுண்மங்களால் ஏற்படும் செடியின நோய், நுண்ம நோக்காடு.

bacterios'tasis, *n.* நுண்ம வளர்ச்சித் தடை.

bacte'riostat, *n.* நுண்ம வளர்ச்சியைத் தடுக்கும் பொருள்.

bacteriostat'ic, *a.* நுண்ம வளர்ச்சியைத் தடைசெய்கிற.

bacter'ium, *n.* **bacteria** என்பதன் ஒருமை வடிவம்.

bac'terize, *v.* நுண்மங்களைக் கொண்டு பண்டுவம் செய்.

Bac'trian, *n.* இருதிமில் ஒட்டகம்; *a.* பாக்டிரியா (Bactria) நாட்டைச் சேர்ந்த; இருதிமிலுடைய ஒட்டகத் தொடர்புள்ள.

bac'uline, *a.* பிரம்பு சார்ந்த.

bad, *n.* கேடு, அவப்பேறு, தீங்கு; அழிவு; கணக்கிற் பிழைப் பகுதி; *a.* கெட்ட, தீய; கொடிய, கெடு பண்புடைய; கயமைத்தனமான; கீழ்த்தரமான; நாகரிகமற்ற; துன்பந் தருகிற; தீங்கான, பாதகமான; தொல்லை தருகிற; தவருன, சட்டப்படி செல்லாத; பிழைபாடான; சீர்கேடான, இசைவு கேடான; குறைபாடுடைய, மோசமான; பண்பற்ற; வளமற்ற; துப்புரவுக்கேடான; நச்சுப்பட்ட; திறமையற்ற; பயனற்ற; உடல் நலக்கேடான; போலியான; (தொ.) bad blood, சின உணர்ச்சி; மனக்கசப்பு; bad debt, மீட்க முடியாத கடன்; bad shot, தவருன ஊகம்.

bade, *v.* **bid** என்பதன் இறந்த காலம்.

badge, *n.* அடையாளக்குறி, சிறப்புக் குறியீடு; முத்திரைப் பொறிப்பு, சின்னம்.

badg'er, *n.* வளைக்கரடி, வளை தோண்டி வாழும் கரடியின உயிர் வகை; கரடியின உயிரின் மயிராலான ஓவியத் தூரிகை; *v.* ஆர்வத்தோடு பின்பற்று; தொந்தரவு செய், துன்புறுத்து, தொல்லைகொடு, நச்சரி.

badg'er-bait'ing, badg'er-drawing, *n.* கரடி வெருட்டு, கரடியின விலங்கினை வளையிலிருந்துவெளிப்படுத்த நாய்களை ஏவும் விளையாட்டு.

badg'er-legged, *a.* குட்டையும் நெட்டையுமான கால்களையுடைய.

badg'erly, *a.* வளைக்கரடி போன்ற; நரையுள்ள, மூப்பு வாய்ந்த.

badinage, (பிர.) *n.* நயநாகரிகக்கேலி, மென்னயம் வாய்ந்த ஏளனம்.

bad'ly, *adv.* தவருக; குறைபாட்டுடன்; வெற்றி பெருமல்; சீர்கேடாக; இரக்கமற்ற முறையில்; இடருக்கு ஆட்பட்டு; மிகமோசமாக; மிக அவசியமாக.

bad'mash, (பெர்.) *n.* போக்கிரி.

bad'minton, *n.* பூப்பந்தாட்டம்; வேனிற்கால இன்னீர்க் கலவை.

bad'ness, *n.* தீமை, தீங்கு, கேடு; கெடுபண்பு; கீழ்த்தரம்.

ba'el, *n.* கூவிளமரம்; வில்வக்கனி.

baff, *v.* குழிப்பந்தாட்டக் (golf) கழியின் பின்புறத்தால் நிலத்தை அடி.

baf'fle, *n.* நீர்மத்தின் போக்கைத் தடுக்கிற அல்லது ஒழுங்கு படுத்துகிற தகடு; *v.* திணற அடி; ஏமாறவை; குழப்ப மடையச் செய்; புரியாதபடி செய்.

baf'fle-board, *n.* ஒசை பரவுவதைத் தடுக்கும் அமைவு.

baf'fle-plate, *n.* நீர்த்தன்மையுள்ள பொருளின் போக்கைத் தடுக்கும் அல்லது ஒழுங்குபடுத்தும் தகடு.

baf'fler, *n.* குழப்பமடையச் செய்பவர், தடுமாறச் செய்பவர், திகைக்க வைப்பவர்.

baf'fle-wall, *n.* = **baffle-board.**

baff'ling, *a.* திகைப்பை உண்டாக்குகிற; தடைசெய்கிற; (தொ.) baffling winds, மாறும் இயல்புள்ள காற்று; நேராகச் செல்வதைத் தடுக்கும் காற்று.

baff'y, *n.* குழிப்பந்தாட்டக் (golf) கழிவகை.

baft,[1] *n.* முரட்டுத்துணி.

baft,[2] *adv., prep.* பின்னுல், பின்புறமாக.

bag[1], *n.* பை; பசுவின்மடி; *v.* வீங்கு; திணி; வழிவிலகு; (தொ.) bag and baggage, மூட்டை முடிச்சுகளுடன்; எல்லா உடைமைகளோடும்; bag of bones, எலும்புக்கூடு; bag of tricks, எல்லாவிதமான சூழ்ச்சிகள்; in bottom of bag, கடைத்தஞ்சமாக, இறுதிப் புகலிடமாக, முடிவான வழியாக; in the bag, ஒருவர்பிடிக்குள்; let cat out of bag, மறை பொருளை வெளியிடு.

bag[2], *v.* அரி.

bagasse', *n.* சர்க்கரை உற்பத்திக் கழிவுப் பொருள்கள்.

bagatelle', *n.* சுண்டாங்கி, சிறுதொகை; எளிய நடை இசைப் பகுதி; மேசைக்கோற் பந்தாட்ட வகை.

bagg'age, *n.* பயண மூட்டை முடிச்சுக்கள்; எளிதில் தூக்கிச் செல்லத்தக்க படைத்தளவாடம்; பயனற்ற பெண்; துடுக்கு நடைச் சிறுமி.

bagg'age-animal, *n.* மூட்டைகள் சுமந்து செல்லும் விலங்கு.

bagg'age-car, *n.* பயண மூட்டைகளுள்ள இருப்புப்பாதை வண்டி.

bagg'age-train, *n.* சுமைவிலங்குகளின் தொடர்; சரக்கு வண்டித் தொடர்.

bagg'y, *a.* புடைத்துள்ள, தளர்ச்சியாய்த் தொங்குகிற.

bag'man, *n.* வாணிகப் பிரயாணி.

bagn'io, *n.* நீராடு மனை; சிறைச்சாலை; பொதுமகளிர் மனை.

bag'pipe, *n.* பைக்குழல் இசைக்கருவி.

bags, *n.* (பே-வ.) கால்சட்டை.

bag'-sleeve, *n.* தளர்ச்சியான சட்டைக்கை.

bag'-wig, *n.* பின்முடி கொண்ட பையுள்ள பொய்மயிர்த் தொப்பி.

bah, *int.* வெறுப்பைக் காட்டும் ஒலிக் குறிப்பு.

Bahad'ur, *n.* பட்டப் பெயர்; தற்பெருமையுள்ள பணி முதல்வர்.

baignoire, (பிர.) *n.* நாடகக் கொட்டகையில் மூடிருக்கை.

bail[1], *n.* பிணை; *ப.* நம்பிக்கையின்மீது சரக்குகளைக் கொடு; பிணைய விடுதலைக்கு இணக்கமளி; பிணையத்தின்மீது விடு; பிணையமளித்து விடுவி; அடைத்துவை; (தொ.) bail out, பிணையமளித்துச் சிறையிலிருந்து விடுதலை செய்; bail up, கட்டிவை; திருடுவதற்காகக் கைகளை உயர்த்தச் செய்; கைகளை உயரத் தூக்கு; forfeit one's bail, குறித்த காலத்தில் குற்றவாளி வகையில் வராமலிரு; give leg bail, ஓடிப்போ, save one's bail, குறிப்பிட்ட நாளில் தோன்று.

bail[2], *n.* முளைகளாலான வெளிப்புற அரண் வரம்பு; கோட்டை வீட்டு முற்றச்சுவர் அல்லது முற்றம்; குதிரை இலாயப் பகுதிகளின் பிரிவு; (தொ.) swinging bail, குதிரை இலாயத்தின் மேல்தளத்திலிருந்து தொங்கும் பிரிப்புத்தட்டி; மரப்பந்தாட்ட (Cricket) முளைகளின் மீதுள்ள கட்டை.

bail [3], *n.* வண்டி குடை சாய்வதைத் தடுக்கும் அரை வளையம்; கெண்டியின் வளைப்பிடி; கறவைப் பசுவின் முகப்பிடிப்புச் சட்டம்.

bail [4], *ப.* படகிலுள்ள நீரைத் தொட்டிகளால் இறை; (தொ.) bail out, வானூர்திக் குடை மிதவையால் கீழிறங்கு.

bail'able, *a.* பிணையில் விடத்தக்க.

bailee', *n.* குறிப்பிட்ட நோக்குடன் சரக்குகள் ஒப்படைக்கப் பட்டவர்.

bail'er [1], *n.* வானூர்திக்குடை மிதவையால் கீழிறங்குபவர்.

bail'er [2], *n.* மரப்பந்தாட்டத்தில் (Cricket) முளை முனைக் கட்டையைத் தாக்கும் பந்து.

Bail'ey, *n.* கோட்டை வெளிச்சுவர்; உட்பாதுகாப்புச் சுற்றரேட்டம்; இடைவெளி முற்றம்; (தொ.) Old Bailey, லண்டன் குற்ற இடைநிலைத் தீர்ப்பு மன்றம்.

Bail'ey bridge, *n.* அவசரத் தேவையை முன்னிட்டு முன்னரே உருவான பால அமைப்பு.

bail'ie, *n.* ஸ்காத்லாந்தின் (Scotland) நகரவைப் பணி முதல்வர்.

bail'iff, *n.* அரசரின் மாவட்டப் பகராள்; மாநகர் மணியக் காரரின் பணி முதல்வர்; நிலக்கிழாருடைய மேலாள்.

bail'iwick, *n.* மாநகர் மணியக்காரரின் ஆட்சி எல்லை; ஆட்சி எல்லை.

bail'ment, *n.* நம்பிக்கையின்மீது சரக்குகள் ஒப்படைப்பு; கைதிகளைப் பிணையத்தின்மீது விடுவித்தல்.

bail'or, *n.* குறிப்பிட்ட செயலுக்காக ஒருவரிடம் சரக்குகளை ஒப்படைப்பவர்.

bain-marie, (பிர.) *n.* வதக்குத் தட்டுக்களை வெதுவெதுப் பாக்கும் சுடுநீர்க்கலம்.

bairam, (துரு.) *n.* முஸ்லீம் திருவிழா.

bairn, *n.* குழந்தை, குழவி.

bait, *n.* தூண்டில் இரை; அவாவூட்டும் பொருள், கவர்ச்சிப் பொருள்; இடைத்தங்கல் உணவு; சிற்றுண்டிக்கான பயண இடைத்தங்கல்; *ப.* தூண்டிலில் இரை வை, உணவுத் துணுக்கிட்டு மருட்டு; அவாவூட்டு, கவர்ச்சிசெய்து மருட்டு; இடைத்தங்கல் உணவளி; இடைத்தங்கல் உணவுகொள்; உணவுக்காக இடைவழியில் தங்கு; வழிமனையில் தங்கு; தீனிகொடு; தீனிகொள்; வேட்டை விலங்கின்மீது நாய்களை ஏவி விடு; ஏவிவிட்டுத் தொந்தரவு செய்; (தொ.) live bait, தூண்டில் இரையாகப் பயன்படுத்தப்படும் சிறுமீன்.

baize, *n.* முரட்டுக் கம்பளி விரிப்பு.

bake, *ப.* வாணலில் வேகவைத்துச் சுடு; வெயிலில் காயவைத் துக் கெட்டியாக்கு; வாட்டி முறுமுறுப்பாக்கு; சூட்டினால் கெட்டியாக்கு; வறட்டு; பழுக்கவை; செங்நிறமாக்கு; வறட் டப்பத் தொழில் செய்.

bake'house, *n.* வறட்டப்பம் சுடும் இடம்; அப்பமனை, அப்பக் கிடங்கு.

bak'elite, *n.* செயற்கைக் குழை பொருட்சரக்கு.

bake'meat, *n.* அப்பமாவு, அப்பச்சுருணை.

bak'er, *n.* வறட்டப்பம் சுடுபவர்; (தொ.) baker's dozen, பதின்மூன்று.

bak'er-legged, *a.* முட்டிக்காலுள்ள.

bak'ery, *n.* = bake-house.

bake'stone, *n.* அப்பம் சுடும் கல் அல்லது இருப்புத்தட்டு.

bak'ing, *n.* அப்பம் சுடுதல், அப்பம் சுடும் முறை; ஒரே தடவையாகச் சுடும் அப்பங்களின் எண்ணிக்கை.

bak'sheesh, bakh'shish, (பெர்.) *n.* நன்கொடை, சிறு கையுறை, விருப்பக் கைக்கூலி.

Bal'aam, *n.* ஏமாற்றம் விளைக்கும் சமயத்தலைவர்; செய்தித் தாளில் இடம் அடைப்பதற்காக முன்னெச்சரிக்கையாகச் சேமித்து வைக்கப்படும் குறிப்பு.

Ba'laamite, *n.* சமயப்பகட்டன்; மோசக்காரன்.

Ba'laamit'ical, *a.* மோசத்தன்மையுடைய.

Balaclav'a, *n.* கிரீமிய (Crimean) போர்க்களம்; (தொ.) Balaclava helmet, படையினர் அணியும் கம்பளித் தலைமூடி.

balalaik'a, *n.* முக்கோண வடிவுள்ள ருசிய நாட்டுக்கு உரிய நரப்பிசைக் கருவி வகை.

bal'ance, *n.* துலாக்கோல், நிறைகோல், தராசு; ஆய்கனத் தின் எடை நுண்ணளவைப் பொறி; கடிகாரத்தின் ஒழுங் கமைப்பு உறுப்பு; துலாராசி, துலாம் என்னும் வான்மனை; சமநிலை; அமைதி நிலை; சரியீடு; வேற்றுமை, வேறுபாடு; மிச்சக் கையிருப்பு, மீதி; *ப.* நிறு, எடையிடு; எடைபோட்டுப் பார்; எதிரெதிர் வைத்துப்பார், ஒப்பிடு; சமநிலை உண்டு பண்ணு, ஒப்புடையதாக்கு; சமநிலை அடை, ஒப்பாகு; சரியீடு செய், எதிரீடு செய்; சமமாயிரு; இருதிறமும் ஒப்பக் காண்; துடித்தாடு, ஆடியசை; (தொ.) balance of advantage, எஞ்சி நிற்கும் நலன்; balance of power, அரசுகளின் சமநிலை வலிமை; balance of trade, ஏற்றுமதி இறக்கு மதியிடையே வேறுபாட்டு மிகை.

bal'anced, *a.* சரிசமநிலையுடைய; நிலவர அமைதியுடைய.

bal'ancer, *n.* சமநிலைப்படுத்துபவர்; சமநிலைப்படுத்தும் கருவி; ஈயின் வளர்ச்சியடையாத பின்சிறகு; கழைக்கூத்தாடி.

bal'ance-sheet, *n.* இருப்புநிலை ஏடு, ஐந்தொகை.

bal'ance- wheel, *n.* கடிகாரத் துடிப்பியக்கச் சக்கரம்.

bal'as, *n.* கெம்புக்கல் வகை.

balbrig'gan, *n.* பஞ்சுத்துணியால் ஆன உட்சட்டை.

balbu'tient, *a.* திக்கிப்பேசுகின்ற.

balconette', *n.* சிறு மாடிமுகப்பு.

bal'conied, *a.* மாடி முன்முகப்புள்ள.

bal'cony, *n.* மாடி முகப்பு; மச்சுவீட்டின் முன்முகப்பு; திரைப்படக் கொட்டகை அல்லது நாடக அரங்கின் மாடி யிருக்கை வரிசை.

bald, *a.* வழுக்கைத் தலையான, மொட்டையான, மயிரற்ற; ஒன்றும் வளராத, மரமற்ற; இலையற்ற, கொம்புக்கவடற்ற; வெறுமையான, அணிமணியில்லாத; ஆடையற்ற, மூடாக் கற்ற; வளமற்ற; உருமாற்றமற்ற; சலிப்பூட்டுகிற; சிறப் பற்ற; ஒளிவு மறைவில்லாத, வெளிப்படையான; குதிரை களின் முகத்தில் வெண்சுட்டி ஆகிய.

bal'dachin, bal'daquin, *n.* இழை தூக்கியமைத்த தையல் வகை; அரசிருக்கை முதலியவற்றின் மீதுள்ள மேற்கட்டி.

bald'-coot, *n.* வெண்ணிற நெற்றியுள்ள பறவை; வழுக்கைத் தலையர்.

bal'derdash, *n.* பயனில் சொல்; சொற்கதம்பம்; இழிமொழி; கீழ்த்தர எழுத்து நடை.

bald'head, *n.* வழுக்கைத் தலையுடையவர்; மாடப்புரு; வாத்து வகை.

bald'icoot, *n.* = bald-coot.

bald'ly, *adv.* மொட்டையாக; அணி ஒப்பணையின்றி; வக்கணையில்லாமல்; முழுதும் வெளிப்படையாக, ஒளிவுமறை வின்றி.

bald'money, *n.* குடைவடிவான மஞ்சள்நிறப் பூக்கொத்துக் களையுடைய செடிவகை.

bald'ness, *n.* மொட்டைத்தன்மை; வெறுமை; வெளிப்படைப் பண்பு.

bald'pate, *n.* வழுக்கைத்தலையர்; வாத்து வகை.

bal'dric, bal'drick, *n.* வாள் - கொம்பு முதலியவற்றைத் தொங்கவிடப் பயன்படும் தோள்வார்.

bale [1], *n.* கேடு, தீங்கு; அழிவு; துன்பம், அஞர்; நோவு.

bale [2], *n.* பெருங்கட்டு, மூடை; பாரம், நிறுத்தல் பேரளவை; *v.* கயிறு அல்லது உலோகப்பட்டைத் தகடுகளினால் சரக்கு மூட்டைகளைக் கட்டு.

bale [3], *v.* =bail [4].

baleen', *n.* திமிங்கில எலும்பு, திமிங்கிலங்கள் சிலவற்றின் மேல்வாயிலிருந்து வளரும் கொம்புபோன்ற தகட்டெலும்பு.

bale'fire, *n.* திறந்தவெளிப் பெருநெருப்பு; ஈமத்தீ; குன்றின் மேலிட்ட விளக்கு; சொக்கப்பனை; வாணவேடிக்கை.

bale'ful, *a.* துயரம் தரத்தக்க; துன்பம் விளைவிக்கிற; தீங்கான; தீமைதருகிற; துயரார்ந்த.

balk, *n.* உழாத வரப்பு; விடுபட்ட ஒன்று; தடை, முட்டுக் கட்டை நிலை; ஏக்கம்; மேசைக்கோற் பந்தாட்டத்தில் தடைப்படுத்தப்பட்ட பகுதி; சதுர மரவிட்டம்; வீட்டு மேல் தூல விட்டம்; மீன் வலையின் இணைப்புக்கயிறு; *v.* தவறவிடு; கடமை நழுவவிடு; பின்வாங்கு; தடைப்படுத்து; மறைமுகத் தடை செய்; இடர்செய்; ஏமாற்றமளி; ஊக்கம் கெடு; திடுக்கிடச் செய்; தடையிட்டு நில்; செயல் விலக்கியிரு; தவிர்த்திரு.

Bal'kan, *a.* ஏட்ரியாடிக் (Adriatic)-ஈஜியன் (Aegean) கருங் கடல்களாற் சூழப்பட்ட தீவக்குறையைச் சார்ந்த; ஏட்ரியாடிக் ஈஜியன் முதலிய மக்களைச் சார்ந்த.

Bal'kanize, *v.* நாட்டை ஒன்றுடனொன்று சச்சரவிடும் பல சிறு அரசுகளாகப் பிரி.

balk'er, *n.* பின்வாங்குபவர்; தடைப்படுத்துகிறவர்; இடர் செய்பவர்.

balk'ing, *n.* பின்வாங்குதல்; ஏமாற்றம்; *a.* இடர்செய்கிற.

balk'-line, *n.* மேசைக்கோற் பந்தாட்ட மேடையின் குறுக்குக் கோடு; குதித்துத் தாண்டும் போட்டியில் முன்னோட்ட வரம் புக்கோடு.

balk'y, *a.* இடர்ப்படுத்தும் இயல்புடைய.

ball [1], *n.* பந்து; பந்தெறிதல், பந்தாட்டம்; குண்டு, துப்பாக்கி அல்லது பீரங்கியால் எறியப்படும் திண்ணிய உருளை; கோளகை, உருண்டை வடிவான ஒன்று; வானின் ஒளிக் கோளம்; கண்விழி; உடலின் திரளான பகுதி; உருண்டையான நூற்கண்டு; கயிற்றுச் சுருள் உருளை; குதிரைக்குரிய கவளம்; *v.* பந்தாக வரிந்து சுற்று; பந்துரு வாக்கு; உருண்டையாகத் திரட்டு; உருண்டையாகத் திரள்; செறு, தடு; தடைபடு; சிக்கவை; திரண்டு மொய்; (தொ.) ball and socket, பந்துக்கிண்ண மூட்டு; have the ball at one's feet, வெற்றிக்கு வழிகாண்; keep the ball rolling, keep up the ball, காரியங்கள் தொடர்ந்து நடக்கும்படி செய்; உரையாடல் தளராமல் இயக்கிவிடு; உரையாடலில் தனக்குரிய பங்கு நிறைவேற்று; on the ball, நிலைமை தெரிந்து கொண்டு உறுவிழிப்பாக.

ball [2], *n.* குழுநடனம்; (தொ.) open the ball, முதல்நடனத்தைத் தொடங்கு; நிகழ்ச்சிகளைத் தொடங்கு.

ball'ad, *n.* நாட்டுப்பாடல், மக்கள் பாட்டு; கதைப்பாடல்; நடனப்பாட்டு; (தொ.) ballad concert, நாட்டுப் பாடலிசை யரங்கு; ballad opera, நாட்டுப் பாடலிசை நாடகம்.

ballade', *n.* தாழிசை வண்ணப்பாவகை, மூன்றடுக்கி அல்லது மும்மூன்றுக ஒருவரி மிகும் ஏழு அல்லது எட்டடிப் பாவகை; ஏழு அல்லது எட்டடிப் பாக்களாலான கவிதை; (தொ.) ballade royal, பத்து அசை கொண்ட ஏழு அல்லது எட்டடிப் பாவகை.

ball'adist, *n.* நாட்டுப்பாடல் இயற்றுபவர்; பாணர், பாடகர்.

ball'ad-monger, *n.* நாட்டுப்பாடல் விற்பனை செய்பவர்.

ball'adry, *n.* நாட்டுப்பாடல் தொகுதி; நாட்டுப்பாடல் கலை.

ball'ast, *n.* கப்பல் எடைப்பாரம்; அடிச்சுமை; சாலை-இருப்புப் பாதையின் உடைகல்லாலான அடிப்பரப்பு; உறுதிப்பொருள்; உறுதிப்பண்பு; *v.* அடிச்சுமை ஏற்று; நிலைப்படுத்தச்செய், நிலைப்படும்படி செய்; (தொ.) in ballast, எடைப்பாரமன்றி, வேறு பாரமில்லாமல், வெறுமையாக.

ball'ast-heav'er, *n.* அடிச்சுமை இழுக்கும் பொறி.

ball'-bear'ings, *n. pl.* சுழலும் அச்சு உராயமைப்பு; உராய்வு படாமல் தடுக்க உதவும் எஃகினாலான நுண்ணிய உருள் குண்டுகள்.

ballerin'a, (இத்.) *n.* ஆடல்நங்கை, கூட்டு நடனப் பெண்.

ball'et, *n.* கூட்டுநடனம்; கூட்டுநடன இசை; கூட்டு நடனக்குழு.

ballis'ta, (ல.) *n.* பண்டைக்கால ரோமரின் (Romans) பார எறிபடைப் பொறி.

ballis'tic, *a.* உந்து விசைப்படையைச் சார்ந்த; (தொ.) ballistic missile, செலுத்து விசை நடுவே ஓய்ந்து எறிவிசை இறங்கும்படி அமைக்கப்பட்ட உந்துவிசைப் படை; ballistic pendulum, உந்து படைவிசை மானி, உந்து படை வேகத்தை அளக்கவல்ல தொங்கற்பாளமுடைய பொறி.

ballis'tics, *n.* எறிபடைத்துறை, எறிபொறியியல்.

ballis'tite, *n.* புகையற்ற வெடிமருந்துத்தூள்.

ball'ium, *n.* பண்டைக் கோட்டையின் வெளிச்சுவர்; புற முற்றம்; கோட்டைவரம்பின் உள்முற்றம்.

ballon dessai, (பிர.) *n.* புதிய கொள்கைமாற்ற வகையில் பொதுமக்களின் அல்லது அயல்நாடுகளின் சகிப்புத்தன்மை யைச் சோதித்துப் பார்க்கும் தேர்வுமுறை.

ball'onet, *n.* புகைக்கூண்டு அல்லது வானூர்தியில் உள்ள காற்றறைப் பை.

balloon', *n.* ஆவிக்கூண்டு, புகைக்கூண்டு; விளையாட்டு ஊதற்பை, உப்பற்பையுறை; விளையாட்டிற்கான காற்றூட்டப்பட்ட உதை பை; தூண் மீதுள்ள சிற்பக்குட அமைப்பு; மரஞ் செடிகளுக்குத் திட்ட உருக்கொடுக்கும் சட்டம்; (வேதி.) வடிகலமாகப் பயன்படும் கண்ணுடிக்கோளகை; *v.* ஆவிக் கூண்டில் உயரச் செல்; புகைக்கூண்டுபோல் பருமனாகு, ஊது, உப்பலாகு; (தொ.) balloon barrage, புகைக் கூண்டுக் கட்டமைப்புடனிணைக்கப்பட்ட எஃகுக் கம்பி வடத்தாலான வானூர்தித் தாக்குதலுக்குரிய தடுப்பரண் காப்பு; balloon tire, பொறிவண்டியின் குறைவழுத்தமுடைய குழாய்ப்பட்டை; when the balloon goes up, நடவடிக்கை தொடங்கும்பொழுது; தொல்லை தொடங்கும் சமயத்தில்.

balloon'er, *n.* ஆவிக்கூண்டில் மேலெழுந்து செல்பவர்; (கப்.) உப்பிய கப்பற்பாய்.

balloon'ist, *n.* ஆவிக்கூண்டில் மேலெழுந்து செல்பவர்; ஆவிக்கூண்டு இயக்குபவர்.

ball'ot [1], *n.* மறைவான வாக்களிப்பு; வாக்களிப்புச் சீட்டுகள்; தாள் நறுக்கு, சீட்டு; திருவுளச்சீட்டெடுப்பு; *v.* மறை வடக்கமாக வாக்களி; திருவுளச்சீட்டெடு; வாக்களி.

ball'ot [2], *n.* 70 முதல் 120 இராத்தல் வரை எடையுள்ள சிறு கட்டு.

ball'otage, *n.* பிரஞ்சு நாட்டில் உரிய பெரும்பான்மை வாக்குப்பெறுத இருவரிடையே இரண்டாவது வாக்கெடுப்பு.

ball'ot-box, *n.* வாக்களிப்புப் பெட்டி.

ball'ot-paper, *n.* இரகசியத் தேர்தல்சீட்டு, குடவோலை.

ball'-point, *n.* ஊற்றுப்பேனுவில் மை ஒழுங்குபடுத்தும் உருள் குழைமுனை.

ball'-proof, *a.* குண்டுகளால் துளைக்கப்பட முடியாத.

balls, *n. pl.* விரைகள்; அறிவீனம்.

ballyhoo', *n.* கிழ்த்தர ஆரவார விளம்பரம்.

ball'yrag, *v.* கேலிசெய்; முரட்டு விளையாட்டில் ஈடுபடு.

ball'yragging, *n.* வசைச்சொல்லால் வதைத்தல்; விளுக்களால் வதைத்தல்.

balm, *n.* நறுமணப்பொருள்; நன்மணமருந்து, மரப்பிசின் வகை; நோவகற்றும் களிம்பு; இன்னலம், குணநலம்; நல்லாறுதல், இன்னமைதி; நறும்பிசின்தரும் மரவகை; (தொ.) Balm of Gilead, பண்டு நோவகற்று மருந்தாகப் பயன்பட்ட பொன்மெழுகு.

balm'-cricket, *n.* மரப்பாச்சை, சுவர்க்கோழிவகை.

balm'iness, *n.* நறுமணத்தன்மை.

balmo'ral, *n.* பின்னல் வேலைப்பாடுள்ள காலணி வகை; மாதர் உள்ளாடை; ஸ்காத்லாந்து (Scotland) நாட்டுக் குல்லாய்.

balm'y, *a.* நறுமணமுள்ள; மென்மையும் தணிவுமுடைய; குணப்படுத்தத்தக்க.

bal'neal, *a.* நீராடல் சார்ந்த.

bal'neary, *n.* நீராட்டு; நீராடும் இடம்; மருத்துவநல்ச் சுனை; *a.* நீராட்டுக்குரிய; நீராடும் இடத்தைச் சார்ந்த.

balnea'tion, *n.* நீராடல்.

balneol'ogy, *n.* நீராட்டுத்துறை ஆய்வுநூல்.

balneother'apy, *n.* நீராட்டு மருத்துவமுறை, நீராடல் மூலமே நோய் நீக்கும் பண்டுவம்.

bal'sa, *n.* தெப்பம், மிதப்பு; தக்கை மரவகை.

bal'sam, *n.* குங்கிலிய வகை மரம்; குங்கிலிய வகை நறுமணப்பிசின்; செயற்கை நறுமணக்குழம்பு; நோவு ஆற்றும் பொருள்; பண்டு நோயகற்றும் மருந்தாகப் பயன்பட்ட பொன்மெழுகு; காசித்தும்பை; *v.* குணப்படுத்து.

balsam'ic, *a.* நறுமணப்பிசின் போன்ற; குணப்படுத்தக் கூடிய.

balsamif'erous, *a.* நறுமணப்பிசின் அடங்கிய.

bal'samy, *a.* நறுமணமுள்ள.

Bal'timore, *n.* வட அமெரிக்கப் பறவை வகை.

baluchithe'rium, *n.* காண்டாமிருகத்தின் முன்மரபுத் தொடர்புடைய மாபெரும் புதைபடிவ விலங்கு.

bal'uster, *n.* சிறுதூண்; கைப்பிடிச்சுவர் தாங்கும் கம்பம்.

bal'ustered, *a.* கைப்பிடிச்சுவர்த் தூணுள்ள.

balustrade', *n.* சிறு தூண் வரிசைத்தொகுதி; மாடிக் கைப்பிடிச்சுவர், கைப்பிடி மேடை.

bambin'o, **(இத்.)** *n.* குழந்தை; இயேசுநாதரின் குழந்தைத் திருவுருவ ஓவியம், இயேசுநாதரின் குழந்தைத் திருவுருவச்சிலை.

bamboo', *n.* மூங்கில்; மூங்கிற்கம்பு; கைத்தடி, பிரம்பு; (தொ.) bamboo curtain, 'மூங்கில்திரை', சீனு முதலிய ஆசியப் பொதுவுடைமை யாட்சிகளில் அரசியல் செய்திகட்குரிய தடைவேலி; *pl.* bamboo's.

bamboo'zle, *v.* ஏமாற்று, மோசஞ்செய்; குழப்பு, மதிகலக்கு.

bamboo'zlement, *n.* ஏமாற்றல், மோசம் செய்தல்; மனங்குழப்பமாக்கல்.

ban [1], *n.* தடையுத்தரவு; நாடுகடத்தல்; திருச்சபை தடையாணை, விலக்காணை; திருச்சபைப் பழிப்பு, திருப்பழிப்பு; *v.* தடையாணையிடு, தடைப்படுத்து; கண்டனம் செய், விலக்கீடு செய்.

ban [2], *n.* ஹங்கேரி (Hungary) குரோசியா (Croatia) முதலிய மாவட்டங்களின் அரசப் பெயராட்சியாளர்.

ban'al, *a.* பொதுப்படையான, பொதுநிலையான; நன்கறியப்பட்ட; சிறப்பற்ற, மிகச் சிறுதிறமான.

banal'ity, *n.* பொதுச்செய்தி; அற்பம்.

bana'na, *n.* ஏற்றன் வாழை, நேந்திர வாழை, வாழை.

banau'sian, banau'sic, *a.* கைவினைஞரைச் சார்ந்த; நாகரிகமற்ற; மட்டமான.

banc, banc'o [1], *n.* பொதுச்சட்ட நீதிமன்றம்.

banc'o [2], *n.* பொருளகக் கணக்கு முறையில் வழங்கும் திட்ட நாணயம்.

band, *n.* கட்டு, தளை; இழைக்கச்சை, தளைக்கயிறு; கட்டுக்கம்பி, இணைப்புத்தகடு; புத்தகக் கட்டடத்துக்குரிய மூட்டுவார்; அரைக்கச்சை; சட்டை-மேற்சட்டை-தலையணி ஆகியவற்றின் சுற்று வரிப்பட்டை; வார்; சக்கர இணைப்புப் பட்டை; வண்ணக்கரை; பட்டைக்கோடு; அடையாளச் சின்னம்; குழு, குழாம்; கூட்டணி, ஒன்றுபட்டுழைக்கும் கூட்டம்; இசைமேளம், இசைக்கருவிக்கூட்டு; இசைக்கருவியாளர் குழாம்; *v.* கூட்டு; இணை; வரிந்து கட்டு; ஒருங்கு கூட்டு, குழுவாக அமை; பட்டைக் கோடுகளிடு.

ban'dage, *n.* கட்டு, கட்டுமானம்; புண் கட்டுத்துணி, துணிப் பட்டை; கண்கட்டு; *v.* கட்டுப்போடு; வரிந்து கட்டு; கண்களைக் கட்டு.

ban'dalore, *n.* விளையாட்டு வட்டு, திருகுவட்டு.

bandan'a, bandann'a, **(இ.)** *n.* வண்ணப்புள்ளியிட்ட கைக்குட்டை, மணிக்குட்டை.

ban'dar, **(இ.)** *n.* குரங்கு வகை.

band'box, *n.* மாதர் உடையணிமணிகளுக்குரிய அட்டைப் பெட்டி.

bandeau', *n.* மயிர்க்கொடி, முடிகட்டு கயிற்றிழை; பெண்டிர் தொப்பியின் உட்பட்டை; கண்ணுக்குரிய துணிக்கட்டு; *pl.* bandeaux'.

band'elet, *n.* **(க-க.)** தூணின் சுற்றுவரிப்பட்டை.

bandelier', *n.* துப்பாக்கிக் குண்டுகளுக்கான தோளணிப் பட்டை.

banderill'a, *n.* மஞ்சுவிரட்டாளர் காளையின் கழுத்தில் குத்தும் கொடிதாங்கிய எறிபடை.

banderille'ro, *n.* கொடி கொண்ட எறிபடை ஏந்திய மஞ்சுவிரட்டாளர்.

ban'derol, ban'derole, *n.* பாய்மரத்தலைப்பில் உள்ள இரு பிளவான பக்கமுடைய கொடி; போர்வீரன் ஈட்டியின் துகிற்கொடி; அணியிழைச்சுருள்; **(க-க.)** பட்டயக்கல்.

ban'dicoot, *n.* பெருச்சாளி.

ban'dit, *n.* கொள்ளைக்காரர்; சட்டமீறுபவர்; சட்டப் பாதுகாப்பிற்குப் புறம்பாக்கப்பட்டவர்; சமுகத்திலிருந்து தள்ளப்பட்டவர்; *pl.* ban'dits, banditt'i.

band'master, *n.* இசைக்குழுத்தலைவர், இசைக்குழு இயக்குநர்.

ban'dog, *n.* சங்கிலியால் கட்டப்பட்ட நாய்; பெரிய வேட்டை நாய்; குருதிமோப்ப நாய்.

bandoleer', bandolier', *n.* = bandelier.

bandoler'o, *n.* வழிப்பறி செய்பவர், ஆறலைக் கள்வர்.

ban'doline, *n.* முடி அல்லது மீசையைப் படியவைக்கும் பசைநெய்.

bandore', *n.* நரப்பிசைக்கருவி வகை.

bands, *n. pl.* கழுத்துப்பட்டித் தொங்கல்கள்.

band'saw, *n.* வாள்போன்று அறுப்பதற்குரிய பற்களிணைத்த வட்டச் சங்கிலி.

band'sman, *n.* இசைக்குழுவினர்.

band'stand, *n.* இசைக்குழு மேடை.

band'stone, *n.* கற்சுவரை வலுப்படுத்தி இணைக்கும் குறுக்குக் கற்பட்டி.

band'-wagon, *n.* இசைக்குழாத்தினர் வண்டி; பயிற்சிக் காட்சியரங்கின் இசைக்குழு வண்டி; வெற்றிபெறும் அரசியல் கட்சியினர் ஏறிச்செல்வதாகக் கருதப்படும் வண்டி; (தொ.) climb on the bandwagon, வெற்றிபெறும் கட்சி பக்கமாக நிற்க முயற்சிகொள்.

band′-wheel, *n.* இன்னொரு சக்கரத்தோடு பட்டையால் இணைக்கப்பட்டு இயங்குஞ் சக்கரம்.

ban′dy [1], *n.* வளைகோல், முனையில் வளைவுடைய பந்தடிக்கும் கோல்; வளைகோற்பந்தாட்டம்; சிறப்புவகை வரிப்பந்தாட்டம்; பனிக்கட்டிப் பரப்புமீது ஆடப்பெறும் விளையாட்டு வகை; *v.* பந்தடி, பந்தெறி; பந்தைக் கைமாற்றி அனுப்பு; பந்தை இங்குமங்குமாகச் செல்லவிடு; கதைகளை இடத்துக்கிடம் நடமாடவிடு; சொற்களைப் பரிமாறிக்கொள்; பெயர்களை அடிபடவை; அடிகளைக் கொடுத்து வாங்கு; கருத்துக்களைப்பற்றி வாத எதிர்வாதம் செய்; பண்ட மாற்றிக்கொள்.

ban′dy [2], (*த.*) *n.* வண்டி.

ban′dy [3], *a.* கால்கள் முழங்காற் பகுதியருகில் வளைந்தகன்ற.

ban′dy-ball, *n.* வளைகோற் பந்தாட்டம்.

ban′dy-legged, *a.* வளைகாலுள்ள; கோணற்காலுடைய.

ban′dyman, *n.* வண்டிக்காரன்.

bane, *n.* அழிவுக்காரணம், கேட்டின் கருமூலம்; அழிவு; சாவு; குறும்புச்செயல்; நஞ்சு.

bane′berry, *n.* கருநச்சுக்கொட்டை வகை; நச்சுச்செடி.

bane′ful, *a.* அழிவைத்தரத்தக்க; கேடுவிளைவிக்கிற; நச்சுடைய.

bane′fully, *adv.* பாதகமாக, பழிகேடாக.

bane′fulness, *n.* நிறையழிவுத்தன்மை; பெருங்கேடு.

bang [1], *n.* வெடி ஓசை; பேரொலியடி; துப்பாக்கி வெடி; திடீர்ப்பேரொலி; *v.* பேரொலியுடன் அடி; ஓசையொடு மூடு; வெடியோசை செய்; கையப்புடை; மிகைத்து நில், மேம்படு, சிறந்ததாகு; *adv.* திடீரென, சடுதியில்; முழுதும்; வெடி ஓசையுடன், வெடித்து; (தொ.) go bang, வெடி, வெடிபடு, வெடி ஓசையிடு.

bang [2], *n.* நெற்றி அளவில் சதுரமாக வெட்டப்பட்ட முன் முடி; *v.* நெற்றி அளவில் சதுரமாக முன்முடியை வெட்டு.

banged, *a.* முன்முடி சதுரமாக வெட்டப்பட்டுள்ள.

bang′le, (*இ.*) *n.* வளையல், காப்பு.

ban′gled, *a.* வளையலுடைய, காப்பணிந்துள்ள.

bang′-tail, *n.* நுனிக்குஞ்சம் சதுரமாக வெட்டப்பட்ட வால்; நுனி சதுரமாக வெட்டப்பட்ட வால் உடைய விலங்கு.

ban′ian [1], *n.* ஆலமரம்.

ban′ian [2], (*இ.*) *n.* குஜராத்திய வணிகன்; இந்திய வணிகன்; ஐரோப்பிய வணிகரின் இந்தியத் தரகன்; முதலாளி; முதலீடு செய்பவன்; பணியன், உள்சட்டை.

ban′ian-day, *n.* (*கப.*) புலாலுணவற்ற நாள்.

ban′ian-hospital, *n.* விலங்குகளுக்கான மருத்துவ நிலையம்.

ban′ian-tree, *n.* = **banian** [1].

ban′ish, *v.* தூரத்து; நாடுகடத்தல் தீர்ப்பளி; அகற்று, புறத்தாக்கு; உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்து.

ban′ishment, *n.* நாடு கடத்தல்; தூரத்தல்.

ban′ister, *n.* படிக்கட்டுக் கைப்பிடிக்கம்பி.

ban′jo, *n.* தம்பூராவில் உள்ளது போன்ற பத்தருடைய ஐந்து நரம்புக் கருவி.

ban′joist, *n.* நரப்பிசைக் கருவி வகையைக் கையாளுபவர்.

bank [1], *n.* மேடு, திட்டு, திடல்; அணைகரை, வரப்பு; ஆற்றங்கரை; ஏரிக்கரை; நீர்நிலை அடித்தளம்; கடல் அடித்தள மேடு; பாதையோர உயர்வரம்பு; உச்சமட்ட மேகத் தொகுதி; உச்சமட்ட பனிக்கட்டித் தொகுதி; பள்ளத்தின் வாய் ஓரம்; நிலக்கரிச் சுரங்க முகப்பு; நீராழமற்ற இடம்; கிளிஞ்சல் படுகை; வானூர்தியின் ஒருபுறச் சாய்வு; *v.* இருபுற வரம்பாக்கு; கரையாய் அமை; கரையெழுப்பு; கரையாக இரு; ஊர்தி - வானூர்தி வகையில் ஒருசாய்வாகச் செல்; படியவிடு; குவி; சேமித்து வை; அடுக்கி வை; நெருப்பின் எரியளவைக் குறைக்கும்படி மூடி இறுக்கு; மணிப்பொறியின் ஒழுங்குபடுத்தும் கருவியைக் கட்டுப்படுத்து; (தொ.) bank up, பனிக்கட்டிகளைத் தொகுதியாகச் சேர்த்துக் குவி; அடர்த்தியாகு; செறிவாக்கு; from bank to bank, நிலக்கரிச் சுரங்க வேலையாள் சுரங்கக் குழிக்குள் இறங்கி முடிவில் கரையேறும் வரையில்.

bank [2], *n.* பொருளகம், நிதிமனை, பொருள் வைப்பிடம், பணங்கொடுக்கல் வாங்கல் மனை; வட்டிக்கடை, காசுக்கடை; சேமிப்புப் பணப்பெட்டி; பொதுநிதி; சேமநிதி, நிதி நிலுவை, நிலவர மூலதனம், விடுமுதல்; சூதாட்டக்கள மூலதனம்; சூதாட்டக்கள மேசைப்பணம்; எவரும் எடுத்தாள உரிமை உடைய பொதுச் சீட்டுக்குவை; *v.* பொருளகத்தில் பணம் சேமித்து வை; நிதிமனை நடத்து; நிதிக்கணக்கு வை; பண வாணிகம் செய்; பணமாகமாற்று; சூதாட்டக்கள மூலதனம் பெற்றிரு; நம்பியிரு; (தொ.) bank of issue, பணச்சீட்டைத் தானே வெளியிடும் பொருளகம்; break the bank, சூதாட்டத்தில் செயலாட்சியினரின் பணயத்தொகை யனைத்தையும் பெறும்படி வெற்றியடை; joint-stock bank, கூட்டுப் பங்குப் பொருளகம்.

bank [3], *n.* கைதிக்கப்பலில் தண்டுவலிப்பவரின் இருக்கைப் பலகை; துடுப்பு வரிசை, தண்டுத்தொகுதி; இசைக்கருவி முறுக்காணி வரிசை; தொழிற்கள மேசை, பட்டறைப் பலகை; நடுவர் அமரும் நீள் தவிசு; பாண்டத்தொழிற்களம்; அன்னம் முதலிய பறவைகளின் கும்பு.

bank′able, *a.* பொருளகம் ஒப்புக்கொள்ளக்கூடிய.

bank′-bill, *n.* பொருளகங்களிடையே பரிமாறப்படும் கடன் சீட்டு.

bank′-book, *n.* வாடிக்கைக்காரரின் பொருளகக் கணக்குப் புத்தகம்.

bank′-cheque′, *n.* வங்கியாணைச்சீட்டு; காசோலை.

bank′-credit, *n.* பிணையத்தின் மீது பணம் மிகையாக எடுக்கும் நிதிமனை ஏற்பாடு.

bank′er [1], *n.* பொருளக முதல்வர், நிதிமனை நடத்துபவர்; பொருளகப் பங்காளி; பொருளக இயக்குநர்; பொருளக ஆளுநர்; பொருளகத்தொழிலில் இருப்பவர்; சீட்டாட்டத்தில் நிலுவைப்பணம் வைத்திருப்பவர்; பந்தயச்சீட்டாட்ட வகை; குருட்டு யோக ஆட்டங்கள் நடத்துபவர்.

bank′er [2], *n.* கொற்றனின் பணிக்குரிய அடைகல், கொல்லத்து வேலையின் அடிப்பலகை.

bank′er [3], *n.* தொழிலாள்; கரைதாவும் வேட்டைக்குதிரை.

bank′er-mark, *n.* கல்லில் கொற்றன் பொறிப்பு.

bank′et, *n.* பொன்விளையும் தென்னுப்பிரிக்கக் கூழாங்கற் பாறை வகை.

bank′high, *adv.* கரை ததும்பி.

bank′ing [1], *n.* நிதிமனைத்தொழில்; *a.* நிதிமனை சார்ந்த.

bank′ing [2], *n.* கரையமைத்தல்; கடற்கரையில் மீன்பிடித்தல்; வானூர்தி வகையில் ஒரு சாய்வாகப் பறத்தல்.

bank′ing-house, *n.* வணிகத் தொழிலமைப்பின் நிதிமனை.

bank′-note, *n.* பொருளகப் பணமுறி; பொருளகத்தின் பண அளிப்பு வாக்குறுதிச் சீட்டு.

bank′-pap′er, *n.* சுற்றோட்டத்திலுள்ள பொருளகப் பணமுறி.

bank′-rate, *n.* இங்கிலாந்தின் பொருளகத்துக்குரிய (Bank of England) கழிமான வீதம்.

bank′rupt, *n.* (*சட்.*) ஓட்டாண்டி; பொருளற்ற கடனாளி, கடன் தீர்க்க வகையில்லார்; வாணிகத்தில் தோல்வியுற்றவர்; *a.* கடன் தீர்க்க வகையற்ற; பொருளகவகையில் நொடித்த; திறன் இறந்த; *v.* ஓட்டாண்டியாக்கு; கடன் தீர்க்க வகையில்லாமற் செய்; வாணிகத்தில் தோல்வியுறு.

bank′ruptcy, *n.* கடன்தீர்க்க வகையற்ற நிலை; பொருளக முறிவு; நொடிப்பு.

bank′sia, *n.* மலர்ப்புதர்செடி வகை.

banks′man, *n.* சுரங்கக்கரை மேற்பார்வையாளர்.

bank′-stock, *n.* மூலதன முதலீட்டுப் பங்குகள்.

bann'er, *n.* கொடி ; படைத்துறைச்சின்னங்களுள்ள சதுரக் கொடி ; படைத்துறையின் கொடி ; ஊர்வலங்களில் கொண்டு செல்லும் துகிற் கொடி ; நாட்டுக்கொடி ; கொள்கைச் சின்னம் ; விளம்பரப் பட்டிகை ; முனைப்பான விளம்பர அறிவிப்பு ; (வர.) ஒரு கொடியின் கீழ் பணிபுரிபவர் ; (தொ.) banner headline, செய்தித்தாள்களில் முழுநீளக் கொட்டைத் தலைப்பு.

bann'ered, *a.* கொடிகளுள்ள.

bann'eret, *n.* தன்கொடியின்கீழ் துணைவீரர்களைக்கொண்ட போர்வீரன் ; போர்க்களத்திலே வீரப்பட்டம் அளிக்கப் பட்டவர்.

bann'erol, *n.* பெரியவர்களின் கல்லறைமீது வைக்கப்படும் இழவு நேர ஊர்வலக்கொடி.

bann'er-screen, *n.* கணப்புத்திரை.

bann'ock, *n.* புளிப்புரு மாவாற் செய்யப்பட்ட வீட்டு அப்பம்.

banns, *n. pl.* திருமண முன்னறிவிப்பு ; திருக்கோயில் மணவினைக்கு முற்பட்ட அறிக்கை.

banq'uet, *n.* பெருவிருந்து ; பெருஞ்சோற்று விழா ; பாராட்டுப் பேச்சுக்களுடன் கூடிய விருந்து ; *v.* விருந்தளி ; நிறை விருந்துண், விருந்தாட்டயர் ; அளவு மீறிக் குடி.

banqueteer', **banq'ueter**, *n.* அளவு மீறிக் குடிப்பவர்.

banq'ueting-hall, *n.* பெருவிருந்து மண்டபம்.

banq'ueting-house, *n.* பெருவிருந்து மாளிகை.

banquette', *n.* கோட்டைக் கைப்பிடிச்சுவருக்குப் பின்னுள்ள உயர்பாதை ; வண்டியோட்டுபவன் பின்புறமுள்ள விசுப் பலகை.

ban'shee, *n.* அயர்லாந்து ஸ்காத்லாந்து (Ireland and Scotland) நாடுகளில் சாவு அறிகுறியாக ஓலமிடுவதாகக் கருதப்பெறும் தேவதை.

bant, *v.* உடலின் கொழுப்பகற்றச் சர்க்கரையையும் மாப் பொருளையும் கொழுப்புப் பொருளையும் உணவில் விலக்கு.

ban'tam, *n.* சண்டையிடும் இயல்பு மிக்கதான வீட்டுக்கோழி வகை ; குள்ளமான போர்வீரன்.

ban'ter, *n.* நயமான நகைச்சுவை, நட்பார்வமுடைய கேலிப் பேச்சு ; *v.* வேடிக்கையாகப் பேசு ; கேலி செய்.

bant'erer, *n.* பரியாசகர், வேடிக்கைப்பேச்சாளர்.

bant'ering, *a.* கிண்டலான, கேலியாகப் பேசுகிற.

ban'thine, *n.* வயிற்றுப்புண்ணுற்றும் திறமுடைய சேர்மான மருந்துச் சரக்கு.

ban'ting, *n.* பருத்த உடலின் தேவையற்ற கொழுப்பு நீக்கும் உணவு முறை.

ban'tling, *n.* சிறுகுழவி, மதலை.

Bantu', *n.* தெற்கு நடு ஆப்பிரிக்க (South and Central Africa) மொழிக்குழு ; தெற்கு நடு ஆப்பிரிக்க மொழிக் குழுவினர் ; *a.* தெற்கு நடு ஆப்பிரிக்க மொழிக்குழு சார்ந்த ; தெற்கு நடு ஆப்பிரிக்க மொழிக்குழு இனம் சார்ந்த.

banx'ring, *n.* சாவகத் (Java) தீவுக்குரிய புழுத்தின்னும் அணில் வகை.

ban'yan [1], (இ.) *n.* ஆலமரம்.

ban'yan [2], *n.* = **banian** [2].

banzai', *int.* ஜப்பானியர்கள் தம் அரசரைச் சந்திக்கும்போது கூறும் வரவேற்புச் சொல் ; போர்க்கள வீர ஊக்கொலி.

ba'obab, *n.* மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள பருத்த அடியுடைய மரவகை.

bap'tism, *n.* தீக்சை, ஞானஸ்நானம், மெய்யுணர்வு நீராட்டுச் சடங்கு ; பெயரீட்டு விழா ; திருக்கோயில் சமய நுழைவுச் சடங்கு ; (தொ.) baptism of blood, உயிர்த்தியாகம் ; ஞானஸ்நானம் பெறுத கிறித்தவரின் உயிர்த்தியாகம் ; baptism of fire, படைவீரனின் முதற்போர் ; கோயில்மணி. கப்பல் ஆகியவற்றின் பெயரீட்டுவினை ; 'தூய ஆவி' யின் அருட்கொடை ; தீக்குளித்து உயிர்நீத்தல் ; எண்ணெய்க் கொப்பரைத் தேர்வு.

baptis'mal, *a.* தீக்கைக்குரிய, தூய நீராட்டுச் சடங்கோடு தொடர்புள்ள ; (தொ.) baptismal name, பெயரீட்டு விழாவில் இட்டு வழங்கிய பெயர், குடிப்பெயருக்கு முன்னிட்டு வழங்கும் கிறித்தவ சமயச் சார்பான பெயர்.

Bap'tist, *n.* கிறித்தவ சமயக் கிளைக்குழு வகையினர், இளங் குழந்தைகளின் தீக்கை தவறென்றும் முழுநீராட்டுச்சடங்கு தீக்கைக்கு இன்றியமையாததென்றும் இயேசுநாதரிடம் நம்பிக்கையுடையவர்க்கு மட்டுமே அது உரியதென்றும் கருத்துடைய கிறித்தவ சமய உட்பிரிவினர்.

bap'tist, *n.* தீக்கை செய்விப்பவர்.

bap'tistery, **bap'tistry**, *n.* தீக்கையிடம், ஞானஸ்நானச் சடங்குக்குரிய இடம் ; முழுநீராட்டு விழாக்குரிய தொட்டி.

baptize', *v.* தீக்கை பெறுவி, திருவினை முழுக்காட்டுச்செய், ஞானஸ்நானம் செய்வி ; பெயரீட்டு விழாவாற்று ; சமய நுழைவுச்சடங்கு செய் ; தூய்மைப்படுத்து ; மேன்மையுறச் செய்.

bar [1], *n.* கம்பி, கோல், உலோகங்களாலான சலாகை ; தண்டு ; கட்டை, நீண்ட மரத்துண்டு ; பாளம், வார், சவுக்காரம் முதலியவற்றின் நீள்கட்டி ; தாழ், தாழ்ப்பாள் கட்டை ; தடை, தடைகள், தடங்கல் ; தடைவேலி, தடை வரம்பு ; எல்லை ; இடையீடு, தடுப்பு ; தடை நடவடிக்கை ; முறை மன்றக் கம்பித்தடுப்பு ; தேறல்மனைக் கம்பிஅழி ; தேறல் அருந்தும் அறை ; மணற்கரை, ஆற்று முகத்திடம், துறை முகத்திட்டு ; வழக்கறிஞர் குழாம் ; பதக்கப்பட்டை ; கோடு ; சருகு ; விளிம்பு ; சிறைக்கட்ட ஆட்டம் ; (இசை.) கால அளவு குறிக்கும் நிறுத்தல் வரைக்குறி ; கால அளவு ; படுத்தல் கோடு ; *v.* தடு, தடுத்து நிறுத்து ; வழியடை ; தாழிடு, மூடு, அடை, பூட்டு ; தடை நடவடிக்கை மேற்கொள் ; தவிர்க்கச்செய் ; கம்பிகளாகப் பிரி ; கோடுகளிடு.

bar [2], *n.* பெரிய ஐரோப்பியக் கடல்மீன்வகை.

bar [3], *n.* (வான்.) இலக்கழுத்தம், சதுர செண்டிமீட்டருக்கு இலட்சகொடி விசைகளுக்கு (dynes) நிகரான வளிமண்டல அழுத்த அளவை ; (வேதி.) 'இலங்கழுத்தம்', சதுர செண்டிமீட்டருக்கு ஒரு கொடி விசைக்கு நிகரான அழுத்தம்.

barathe'a, *n.* பருத்தியோ பட்டோ கலந்தும் கலவாமலும் நெய்யப்படும் மென்மையான கம்பளித்துணி வகை.

ba'rathrum, *n.* ஆதன்ஸ் (Athens) நகரின் குற்றவாளிக் குழி ; பாதாளம், படுகுழி.

barb [1], *n.* தாடிபோன்ற மீனின் தசை இழை ; கன்னித்துறவியின் முக்காட்டு மோவாய்ப் பகுதி ; இறகுத்துய் ; அம்பு நுனி வளைவு ; தூண்டில்முள் ; கொடுக்கு ; *v.* கூர்நுதியமைவி ; தசையிழை வாய்ப்புறுத்து ; மோவாய் இழை அமைவி ; மழி ; சீவு, சிக்கெடு ; ஒழுங்குசெய், ஒப்பனைசெய் ; தூளை, ஊடுருவு ; முள்ளிணை, முள்முனை ; அமைவி.

barb [2], *n.* குதிரைமரபின் வகை ; திண்ணிற மாடப்புரு வகை.

barb'ara, *n.* நினைவுக்குறிப்பு, அளவையியல் வாய்பாடுகளில் ஒன்று.

barbar'ian, *n.* காட்டுமிராண்டி, நாகரிகமில்லாதவர், பண்பற்றவர் ; கிரேக்க வழக்கில் அயல்நாட்டான் ; *a.* காட்டுமிராண்டித்தனமான ; முரட்டுத் தன்மையுடைய.

barba'ric, *a.* முரட்டுத்தனமான, காட்டாளான ; பண்பற்ற ; நாகரிகமற்ற தன்மையுடைய ; புறப்பகட்டான ; சுவை கேடான ; காட்டுமிராண்டிப் பண்புடைய.

barb'arism, *n.* காட்டுநிலைப்பண்பு ; நாகரிகமற்ற வாழ்க்கை, காட்டுமிராண்டி வாழ்க்கை ; முரட்டுத்தனமான நடத்தை ; தாய்மொழிச் சொல்லை நீக்கி அயல்மொழிச் சொல்லைப் பயன் படுத்துதல்.

barba'rity, *n.* நாகரிகமற்ற நிலை ; கொடுமை ; கொடுஞ் செயல், அட்டூழியம் ; பகட்டுச்சுவை கேடு.

barbariza'tion, *n.* முரட்டுத்தனமாக்குதல் ; காட்டுமிராண்டித் தனம்.

barb'arize, *v.* காட்டுமிராண்டியாக்கு, கரடுமுரடாக்கு ; மொழித்தூய்மையைக் கெடு ; அழுகலாக்கு.

barb'arous, *a.* நாகரிகமற்ற ; கொடுமையான ; பண்புக் கேடான, முரடான ; தூய்மையற்ற ; கிரேக்க ரோம வழக்கில் அயற்பண்பாட்டுக் குரிய.

bar'barousness, *n.* நாகரிகமற்ற நிலைமை ; கொடுந்தன்மை, காட்டுமிராண்டித்தனம் ; தூய்மையற்ற தன்மை ; எழுதப் படிக்கத் தெரியாநிலை.

Barb'ary, *n.* வட ஆப்பிரிக்கப்பகுதி ; (தொ.) Barbary ape, வாலில்லாக் குரங்கு வகை ; Barbary sheep, வட ஆப்பிரிக்கக் காட்டுச் செம்மறியாடு.

barb'ate, *a.* மயிர்க்கொத்துள்ள.

barb'ated, *a.* கூர் நுதியுடைய ; தாடிபோன்ற அமைப்பு வாய்ந்த, மயிர்க்கொத்தோடு கூடிய.

barb'ecue, *n.* அகப்பைக்கோல், இறைச்சி சுடும் இரும்புச் சட்டம் ; நெருப்பில் வாட்டப்பட்ட முழு விலங்கு இறைச்சி ; காப்பிக்கொட்டை முதலியன காயவைக்கும் தள முற்றம் ; வாரி வழங்கும் மாபெரும் விருந்து ; *v.* நெருப்பில் முழுமையாக வாட்டு ; இரும்புச்சட்டத்தில் வைத்து நெருப்பில் சுடு.

barb'ed, *a.* அம்பு முனைபோன்ற முனையுடைய.

bar'bed-wire, *n.* வரிமுட்கம்பி, குத்துமுள் வரிந்த கம்பி.

barb'el, *n.* வாயருகே நார்போன்ற தசையிழை அமைவுடைய மீன் வகை ; தாடிபோன்ற தசையிழை அமைவு.

bar'-bell, *n.* உடற்பயிற்சியில் 'வன்பிடி'க்கருவி, இரு புறமும் பளுத்தாங்கிய இரும்புத்துண்டு.

barb'er, *n.* அம்பட்டன், முடி ஒப்பனையாளர் ; *v.* மயிர் களை ; முடி வெட்டு ; (தொ.) barber's block, பொய்முடிக் குல்லாய் செய்யும் வட்டக்கட்டை ; barber's itch, மழித்தலின் போது தொற்றிக்கொள்வதாகக் கருதப்படும் தோல் நோய் வகை ; barber's pole, முடியழகு நிலையச் சின்னக்கோல்.

barb'erry, barb'ery, *n.* மஞ்சள் வண்ணமலரும் செங்நிறப் பழமும் கொண்ட புதர்ச்செடி வகை.

barb'et, *n.* அலகடியில் முள்போன்ற மயிர்க் கொத்துடைய பறவை வகை.

barbette', *n.* கோட்டையில் அல்லது போர்க்கப்பலில் நின்று துப்பாக்கி சுடுவதற்குரிய பீரங்கிமேடு.

barb'ican, *n.* நகர் அல்லது கோட்டையின் வெளிப்பாதுகாப் பரண் ; தொங்குபால அரண்.

barb'ital, barb'itone, *n.* தூக்கமருந்தாகப் பயன்படுத்தப் படும் வெள்ளை உருப்பளிங்குப்பொடி.

Barb'izon, *n.* பாண்டனேபுளூ (Fontainebleau) வுக்கு அண்மையிலுள்ள கிராமம் ; (தொ.) Barbizon school, உள்ளதை உள்ளவாறே படமெழுதும் பிரெஞ்சு ஓவியர் குழு.

barbol'a, *n.* வண்ணப்படிவ மலர்கள்-கனிகள் முதலிய வற்றைப் பதித்துச் செய்யப்படும் சித்திர வேலைப்பாடு.

barb'ule, *n.* மிகநுண்ணிய சூனை அல்லது முள்.

barc'arole, barc'arolle, *n.* படகோட்டிப் பாட்டு ; வஞ்சிப் பாட்டு போன்ற இசைப்பாடல்.

bard [1], *n.* பாணன், கவிஞன்.

bard [2], *n.* போர்க்குதிரையின் காப்புக்கவசம்.

bard'-craft, *n.* பாணற்குரிய தொழில்.

bard'ed, *a.* குதிரைவகையில் போர்க்கவசம் பூட்டப்பட்ட.

bard'ic, *a.* பாணர்களுக்குரிய ; பாணர்களின் பாடல்களுக் குரிய.

bard'ling, *n.* போலிக்கவிஞர்.

bare, *a.* உடையற்ற, வேடம் அற்ற ; பார்வைக்குத் தெரிகிற ; முடியில்லாத, வழுக்கைத் தலையுடைய ; வறிய, தேவைப் பொருள்கள் அமைக்கப்பெறுத ; படைக்கலம் தாங்காத, பாது காப்பற்ற ; சாரமில்லாத ; தேய்ந்துபோன ; உரையினின்றும் எடுக்கப்பட்ட, வெறிய, கோலம் செய்யப்படாத, போதாத ; *v.* அவிழ், நீக்கு ; உரையினின்றும் எடு, வெளிப்படுத்து.

bare'backed, *a.* வெறும் முதுகுடைய, குதிரைச்சேணம் இல்லாத.

bare'faced, *a.* தாடி முதலியவையற்ற ; முகமூடியில்லாத ; போலியல்லாத ; வெட்கங்கெட்ட ; ஆணவமான.

bare'foot, *a.* வெறுங்காலுடைய, காலிற் செருப்பு இல்லாத ; *adv.* வெறுங்காலுடன், செருப்பு முதலியவை இன்றி.

bare'footed, *a.* வெறுங்காலுடைய, காலில் செருப்பு இல்லாத.

barege', *n.* பட்டுப் போன்ற சல்லாத்துணி ; *a.* பட்டுப்போன்ற சல்லாத்துணிக்கு உரிய.

bare'headed, *a.* தலைவறிதான, தொப்பி இல்லாத.

bare'legged, *a.* வெறுங்கால்களையுடைய.

bare'ly, *adv.* ஆடையின்றி ; உண்மையான வடிவத்துடன் ; வெளிப்படையாக ; திறந்த மனத்துடன்.

bare'ness, *n.* புனையா நிலை, முட்டாக்கின்மை.

bare'sark, *n.* நார்வே போர்வீரன் ; *adv.* போர்க்கவசமின்றி.

bar' ful, *a.* தடைகள் நிறைந்த.

barg' ain, *n.* கொடுத்து வாங்குவது பற்றிய ஒப்பந்தம் ; நலம் பயக்கும் வாணிகம் ; நல்ல கொள்முதல் ; *v.* பேரம் பேசு, விலை பேசு, கொடுத்து வாங்குவது பற்றிய நிபந்தனைகளைப் பற்றி இழுத்துப் பறித்துக்கொண்டு நில் ; (தொ.) bargain and sale, (சட்.) மதிப்புள்ள பொருளை முன்னிட்டு சொத்து ஒப்படைக்கப்படக்கூடிய உரிமைமாற்று முறை ; into the bargain, கண்டிப்பான நிபந்தனைகளுக்கு அப்பால், அன்றியும் ; strike a bargain, விலைக்கு முடி, ஒப்பந்தத்துக்கு வா ; wet bargain, குடியலொடு முடிந்த பேரம்.

barg'ainer, bar'gain-hunter, *n.* பேரம் செய்வதற்காகக் கடைகளுக்குச் செல்பவர்.

barge, *n.* படகு, போர்க்கப்பல் அதிகாரிகளின் உபயோகத் துக்கான பெரிய விசைப்படகு ; அரசாங்க விழாக்களின் போது பயன்படுத்துவதற்கான கோலம் செய்யப்பட்ட கப்பல் ; மகிழ்ச்சிச் செலவுக்கான படகு ; *v.* திறங்கெட இயங்கு ; அலங்கோலமாகப் பெயர்த்துச் செல் ; திடுமென இடையே சென்று குதி.

barge'-board, *n.* மஞ்சடைப்புத் தூலங்களுக்கு அலங்கார மறைப்பு.

barge'-coup'le, *n.* இரட்டை மஞ்சடைப்புத் தூலங்கள்.

bargee', barge'man, *n.* படகோட்டி.

barge'-master, *n.* படகின் உரிமையாளர்.

barge'-pole, *n.* படகின் உந்துகோல்.

barge'-stones, *n.* மஞ்சடைப்பின் சரிந்த விளிம்பினைக் கட்டு வதற்கான கற்கள்.

bar'ghest, *n.* சாவுக்கு முன்னறிகுறியாகக் கருதப்படும் நாய் வடிவப் பேய் வகை.

bar'-graph, *n.* (கண.) அளவைக் கோடுகளில் அளவை யடுக்குகளைக் குறித்துக் காட்டும் உருவகைக் கட்டம்.

bar'ic, *a.* வெண்மை உலோகத் தனிமவகையின் தொடர்பான ; வெண்மை உலோகத் தனிமவகை அடங்கிய.

barill'a, *n.* கடலோரச் செடிவகை ; கடலோரச் செடிவகை யின் சாம்பலிலிருந்து கிடைக்கும் துப்புரவற்ற உவரக் கரியகை.

bar'-iron, *n.* தகடாக்கக்கூடிய இரும்புப்பாளம்.

bar'ish, *a.* சிறிது திறந்த, நன்கு மூடப்பட்டிராத.

bar'itone, *n.* = barytone.

bar'ium, *n.* (வேதி.) பாரியம், 56 அணுஎண் உடைய வெண்மையான உலோகத்தனிமம்.

bark [1], *n.* மரப்பட்டை, தோல்பதனிடுவதற்கு உதவும் பட்டை ; காய்ச்சல் மருத்துப்பட்டை, கொயினு ; மேல்தோல் ; *v.* பட்டை உரி ; தோல் உரி ; மரத்தைச் சுற்றிலும் பட்டையை அறுப்பது மூலமாக மரத்தை அழி ; உராய்வினால் மேல் தோலிழ ; அசறுகட்டு ; பட்டையாக அமை.

bark [2], *n.* மூன்று பாய்மரங்களையுடைய மரக்கலம் ; சிறு கப்பல் ; படகு.

bark [3], *n.* நாய் குரைப்பொலி ; நரி ஓநாய்களின் ஊளை ஒலி ; அணிலின் கிறீச்சொலி ; பீரங்கி அதிர்வேட்டு ; இருமல் ஒலி ; *v.* குரை ; உறுமு ; சள்ளென்று விழு ; எரிந்து விழு, சீறு ; அதிகாரமாகப் பேசு ; திட்டு ; நாய்போல் காவல் செய்.

bark'-bed, *n.* ஆவாரம்பட்டையின் சக்கை கொட்டப்பட்டுள்ள எருப்பாத்தி.

bark'-beet'le, *n.* மரப்பட்டைகளைத் துளைத்து அழிக்கும் வண்டு வகை.

bark'-bound, *a.* பட்டை அகலாதிருப்பதனால் உடற்செறிவுற்ற.

bar'-keeper, *n.* இன்தேறல் கடைக்காரர்.

bark'en, *v.* உலர்ந்து பட்டை போலாகு.

bark'entine, *n.* மூன்று பாய்மரங்களுள்ள மரக்கல வகை.

bark'er, *n.* கூச்சலிட்டுத் தாக்குபவர் ; கடையில் அல்லது ஏலத்தில் வாடிக்கைக்காரர்களைக் கூவி அழைப்பவர் ; நாய், குரைக்கும் நாய் ; காவற்காரர்.

bark'y, *a.* பட்டை மூடிய, பட்டை உடைய ; பட்டை போன்ற.

barl'ey, *n.* வாற்கோதுமை, யவை.

barl'ey-brake, *n.* மூன்று இரட்டையர்கள் சேர்ந்து ஆடும் பழைய நாட்டுப்புற விளையாட்டு வகை.

barl'ey-bree, bar'ley-broo, bar'ley-broth, *n.* புளித்த வாற்கோதுமைமாத் தேறல்.

barl'ey-corn, *n.* வாற்கோதுமை மணி ; அங்குலத்தில் மூன்றில் ஒரு பங்கு கொண்ட நுண்ணெல்லை நீட்டலளவை.

bar'ley-mow, *n.* வாற்கோதுமைக் குவியல்.

barl'ey-su'gar, *n.* உருக்கி ஆறவைத்த சர்க்கரை மிட்டாய்.

barl'ey-wa'ter, *n.* நோயாளிகளுக்குக் கொடுப்பதற்குரிய வாற்கோதுமைக் கஞ்சி.

barl'ow, *n.* ஒரே அலகுடைய கத்தி.

barm, *n.* புளிப்பேறிப் பொங்கும் சாராயம் முதலியவற்றின் நுரை, கொதி.

bar'-magnet, *n.* இரும்புப்பாள உருவான நிலைக்காந்தம்.

bar'maid, *n.* இன்தேறல்கடையின் பணிப்பெண்.

bar'man, *n.* இன்தேறல்கடையின் பணியாளன்.

barm'brack, *n.* கொடிமுந்திரிப்பழ வற்றல் அடங்கிய அப்ப வகை.

Barm'ecide, *n.* போலிக்கொடையர், வாய்ப்பந்தல் வீரர் ; *a.* ஏமாற்றுகிற, சுற்பனையான, பொய்யான.

barm'kin, *n.* கோட்டை மதிற்சுவர் ; குடுமி.

barm'y, *a.* புளித்துப் பொங்குகிற, நுரையுள்ள.

barm'y-brained, *a.* அறிவற்ற, எண்ணுந்திறனற்ற.

barn, *n.* களஞ்சியம், பத்தாப்புரை ; *v.* களஞ்சியத்தில் சேர்த்து வை.

Barn'aby, *n.* தூயதிரு. பார்னபஸ் (Saint Barnabas) ; (தொ.) Barnaby Bright, Barnaby Day, Long Barnaby, தூயதிரு. பார்னபஸ் திருநாள் (*ஜூன்-11*).

barn'acle [1], *n.* மாரிக்காலத்தில் பிரிட்டனுக்கு வரும் துருவ மண்டல வாத்துவகை ; பாறைகளிலும் கப்பலின் அடிப்பாகங்களிலும் ஒட்டிக்கொள்ளும் சிப்பி வகை, ஊமைச்சி ; எளிதில் அசைத்துவிட முடியாத தோழன்.

barn'acle [2], *n.* இலாடம் அடிக்கையில் குதிரையின் மூக்கிலிடும் குறடு.

bar'nacle-goose, *n.* காட்டுவாத்து வகை.

barn'acles, *n. pl.* (பே-வ.) மூக்குக்கண்ணாடி.

barn'-dance, *n.* அமெரிக்கரின் ஆடல்வகை.

barn'-door, *n.* களஞ்சியத்தின் கதவு ; மரப்பந்தாட்டத்தில் பந்துவீச்சு ஒவ்வொன்றினையும் தடுக்கும் ஆட்டக்காரர் ; மட்டமான அகல் இலக்கு.

barn'-owl, *n.* மேற்பாகம் வைக்கோல்நிறமாயும் கீழ்ப்பாகம் வெண்மையாயுமுள்ள ஆந்தை வகை.

barn'-storm, *v.* இடம் பல சென்று நாடகமாடு.

barn'-stormer, *n.* பல இடம் பெயர்ந்து நடிப்பவர்.

barn'yard, *n.* பண்ணைமுற்றம் ; (தொ.) barnyard fowl, வீட்டுக்கோழி.

ba'rograph, *n.* அமுக்க வரைவி.

barol'ogy, *n.* எடைமான நூல்.

barom'eter, *n.* காற்றழுத்தமானி, பாரமானி, வானிலை முன்னறிதற்கும் கடல்மட்டத்தின் மேல் உயரங்களைக் கண்டறிதற்கும் பயன்படும் கருவி ; மக்கள் கருத்துமாறுதலை மதிப்பிட்டுக் காட்டும் பொருள்.

baromet'ric, baromet'rical, *a.* காற்று அழுத்தமானியைச் சார்ந்த.

barom'etry, *n.* காற்றழுத்தமானியைக் கொண்டு அளவெடுக்கும் முறை.

ba'ron, *n.* பண்ணைநில ஆட்சிக் கோமான் ; குறுநிலக்கோப் பெருங்குடிமகன் ; பெருந்தொழில் முதல்வர் ; அரசமன்ற நடுவரின் பழம் பட்டம் ; பழய சட்டமன்ற உறுப்பினர் பட்டம் ; பழங்கால ஆங்கிலச் சட்டத்தின்படி கணவர் ; (தொ.) baron os beef, துண்டுபடுத்தப்படாது எலும்போடு இருபுறமும் உள்ள மாட்டின் இரட்டை இடுப்பினிறைச்சி.

ba'ronage, *n.* கோமக்கள் தொகுதி ; பெருங்குடி மக்கள் ; மேற்குடி மக்களின் பட்டியலும் அவர்களைப் பற்றிய செய்திகளும் அடங்கிய ஏடு.

bar'on-bail'ie, *n.* பெருமகன் ஆட்சிக்கு உட்பட்ட குற்ற இயல் நடுவர்.

ba'roness, *n.* பெருமானின் மனைவி ; கோமகள், பெருங்குடிப் பெண்டு.

ba'ronet, *n.* இளங்கோமான், கோமானுக்கு அடுத்தபடி தாழ்ந்த பட்டம் ; *v.* இளங்கோமான் நிலைக்கு உயர்த்து.

ba'ronetage, *n.* இளங்கோமக்கள் தொகுதி ; இளங்கோமக்கள் பெயர்ப்பட்டியல் விவரங்கள் அடங்கிய ஏடு.

ba'ronetcy, *n.* இளங்கோமான் படிநிலை.

baronet'ical, *a.* இளங்கோமானுக்கு உரிய.

baron'ial, *a.* பெருங்குடி மக்களுக்குரிய ; பெருமகனுக்குத் தகுதியான.

ba'rony, *n.* பெருமகனின் ஆட்சிப்பரப்பு ; பெருமகன் நிலை ; பெருமகன் காணியுரிமை ; ஸ்காத்லாந்தில் பெரிய பண்ணை ; அயர்லாந்தில் நாட்டின் பிரிவு.

baroque', *n.* 17-வது 18-வது நூற்றாண்டுகளின் கலைப்பாணி ; *a.* 17-வது 18-வது நூற்றாண்டுகளின் கலைப்பாணிக்குரிய ; சுவைக்கோளாறுடைய ; கோணங்கித்தனமான, மனம் போன போக்கான.

bar'oscope, *n.* வளிச்செறிவுமானி, வளிமண்டலத்தின் செறிவு நிலையிலுள்ள மாறுபாடுகளைத் தெரிவிக்கும் கருவி.

barouche', *n.* மடக்கக்கூடிய விதானமுள்ள நான்கு சக்கர வண்டி.

bar'-par'lour, *n.* இன்தேறல் அறை அடுத்த துணையறை.

barque, *n.* = bark [2].

barq'uentine, *n.* = barkentine.

ba'rrack, *n.* போர்வீரர் குடியமைப்பு வரிசை, கட்டுக்குடியிருப்பு ; கவர்ச்சியற்ற நெருக்கிய மட்டக் கட்டிடக் குவை ; *v.* போர்வீரர்களை விடுதிகளில் தங்கவை ; பந்தாட்டத்தில் ஆட்டக்காரர்களை இகழ்ந்து கூச்சலிடு.

barracoon', *n.* அடிமைகளுக்கான குச்சுக்குடியிருப்பு ; கைதிகளுக்குரிய கொட்டில் வளவு.

barracud'a, *n.* மேலை இந்தியத் தீவுகளின் கடற்பெருமீன்.

barr'age, *n.* அணையிட்டுத் தடுத்தல், குறுக்கணை ; (படை.) இடைத்தடையிடும் திட்டமிட்ட குண்டுமாரி.

barr'age-fire, *n.* பகைவர்கள் குறிப்பிட்ட எல்லைக்கோட்டினைக் கடந்து செல்லமாட்டாமல் தடுத்துக் குண்டு போடுதல், குண்டு மாரித் திரை.

barran'ca, barran'co, *n.* ஆழமான கெவி, மலைப்பள்ளம்.

ba'rrater, ba'rrator, *n.* தீராவழக்காடி, சச்சரவு உண்டு பண்ணுபவர்.

barr'atrous, *a.* வீண்வழக்காடுகிற; வீண்வழக்குத் தூண்டுகிற.

ba'rratry, *n.* (கடல்துறைச் சட்டம்) கப்பற் சொந்தக்காரர்களுக்குத் தீங்குண்டாகும் வகையில் கப்பல் தலைவர் அல்லது கப்பலோட்டிகள் மோசம் செய்தல் அல்லது கடமை தவறல்; (சட்.) வீண்வழக்காடல்; வீண் வழக்காடத் தூண்டுதல்.

barred, *a.* கம்பிபோட்ட; கம்பிகள் உடைய; பாதுகாக்கப்பட்ட; அடைக்கப்பட்ட, மூடப்பட்ட; கம்பியால் அடையாளம் இடப்பட்ட; தடுக்கப்பட்ட; பிரிக்கப்பட்ட; துறைமுக மணல்மேட்டினால் அடைக்கப்பட்ட.

ba'rrel, *n.* பீப்பாய், மிடா; உருள்தொட்டி; இயந்திரங்களின் சுழல் உருளை; மிடா அளவு; குதிரை இடுப்புப் பகுதி; உடற் பகுதி; துப்பாக்கிக் குழல்; கொளுவி, பித்தான்; *v.* மிடாவில் வை, பீப்பாயிலிட்டு அடை.

barr'elage, *n.* மிடாவினால் அளந்த அளவு, மிடா எண்ணளவு.

barr'el-bulk, *n.* மிடா அளவு, ஐந்து கன அடி அளவை.

barr'elful, *n.* பீப்பாய் அளவு, மிடா கொள்ளக்கூடிய அளவு; *pl.* barr'elfuls.

barr'elled, *a.* மிடாவையுடைய; மிடாவில் அடைக்கப்பட்ட; துப்பாக்கியில் குழல் உடைய.

ba'rren, *n.* தரிசு நிலம்; *a.* மலடான, குழவி ஈனுத; பலன் தராத, விளைவு அளிக்காத; வெறுமையான; தரிசான; வள மற்ற, வறண்ட, ஊதியந்தராத; மந்தமான.

barr'enness, *n.* மலடு; தரிசுநிலை.

ba'rret, *n.* தட்டைத் தொப்பி.

barricade', *n.* வழியடைப்பு, தெருமறிப்பு; தடை அரண்; *v.* வழியை அடைத்துத் தடைசெய்; தடை அரணைக் கொண்டு காப்பு அளி.

ba'rrier, *n.* தடைவேலி, தடையரண்; இடைவேலி; வழிமறிப்பு, தட்டி; தடை, தடங்கல்; இடையூறு; இடைத்தடுக்கு; எல்லை; சுங்க எல்லை; கம்பி அழி, பழைய வண்டியோட்டப் பந்தயங்களில் புறப்படும் இடம் குறித்த கம்பிச் சட்டம்; *v.* தடையிடு; வேலியிட்டு அடை; (தொ.) barrier cream, புழைவழி அழுக்குப் புகாமல் காக்கும் உடற் பூச்சு மருந்து.

barr'ier-reef', *n.* கடற்கரைக்கு அருகிலுள்ள பவளத்திட்டு.

ba'rriers, *n. pl.* வேலி, அடைப்பு, போட்டிப் பந்தயக் களத்தின் சூழ்கம்பிவேலி அரண்; பழங்கால வேலெறி போட்டிப் பந்தயத்தில் மையக் கம்பி எல்லை.

barr'ing, *prep.* தவிர, விடுத்து, தவிர்த்து, நீங்கலாக, இல்லாமல்.

barr'ing-out', *n.* உரிமைகளை வற்புறுத்தப் பள்ளி ஆசிரியரை மாணவர்கள் பள்ளிக்குள் நுழையவிடாமல் தடுக்கும் தடைமுறை.

ba'rrister, ba'rrister-at-law, *n.* மாவழக்கறிஞர், மாவழக்கறிஞர் பட்டம் பெற்றவர்; உயர்முறை மன்றங்களில் வழக்காடும் உரிமையுடைய சட்டத்துறை மாணவர்.

barriste'rial, *a.* மாவழக்கறிஞருக்குரிய.

barri'stership, *n.* மாவழக்கறிஞர் நிலை.

bar'-room, *n.* இன்தேறல் வகைகளுள்ள அறை; இன்தேறல் குழாயுள்ள அறை.

ba'rrow [1], *n.* குன்று; புதைமேடு; மண்குவியல்; கல்லறை.

ba'rrow [2], *n.* கைவண்டி, தள்ளுவண்டி; பிணப்பெட்டி, பாடை; நோயுற்றோரைத் தூக்கிச் செல்வதற்கான நீள்சட்டம்; (தொ.) barrow boy, பழங்கள் விற்கும் தள்ளுவண்டிப் பையன்; குற்றேவற் கையாள்.

ba'rrow [3], *n.* குழந்தைகளுக்கான கையற்ற நீண்ட கம்பளிச் சட்டை.

ba'rrow [4], *n.* காயடித்த ஆண் பன்றி.

bar'-tend'er, *n.* இன்தேறல் கடைக்காரர்.

bart'er, *n.* பண்டமாற்று, பரிவர்த்தனை, பண்டமாற்று வாணிகம்; (கண.) ஒரு பண்டத்துக்கு நிகரான மற்றொரு பண்டத்தின் அளவுக் கணக்கீடு; *v.* பண்டமாற்றுச் செய்; சிறு பொருள் பெற்று வீணுகக் கொடுத்திழந்துவிடு.

bartizan', *n.* ஞாயில், கோட்டையின் கைப்பிடிச்சுவர்; அரணின் கூடகோபுரத்தின் புறநோக்கு வழி; கோபுர அலங்கம்.

bartizaned', *a.* அலங்கம் அமைக்கப்பெற்ற.

bart'on, *n.* பண்ணை வெளி.

Bart's, *n.* லண்டனில் உள்ள தூயதிரு. பார்த்தலமியூ மருந்தகம் (St. Bartholomew's Hospital) என்பதன் சுருக்க வழக்கு.

bar'wood, *n.* ஆப்பிரிக்காவிலிருந்து நீளுருளையாக இறக்குமதி செய்யப்படும் செஞ்சாயக் கட்டை மரவகை.

barycen'tric, *a.* ஏணுக்குரிய, பொருளின் எடை மையத்துக்குரிய.

bar'ysphere, *n.* நிலவுலகக் கோளகையின் மையத்திலிருப்பதாகக் கருதப்படும் பளுவேறிய உட்கருப் பகுதி.

baryt'a, *n.* (வேதி.) பாரிய ஒருயிரகை, மிகுதி நிறையுடைய கார மண் வகை.

baryt'es, *n.* (வேதி.) வெண்சாயத்துக்கு வழங்கப்பெறும் இயற்கனிப் பொருளான பாரிய கந்தகை.

ba'rytone, *n.* (இசை.) உச்சவகைக் குரலுக்கும் மட்டவகைக் குரலுக்கும் இடைப்பட்ட வீரூர்ந்த ஆண் குரல்; வீரூர்ந்த ஆண் குரலையுடைய பாடகர்; வீரூர்ந்த ஆண் குரலுக்குப் பொருத்தமான இசை; இசைக்குரிய பித்தளையாலான துளைக் கருவி வகை; கடை அசை அழுத்தம் பெறுத சொல்; *a.* உச்ச வகைக் குரலுக்கும் மட்டவகைக் குரலுக்கும் இடைப்பட்ட; கடை அசை அழுத்தம் பெறுத.

bas'al, *a.* அடிக்கு உரிய; அடியிலுள்ள; அடியாக அமைகிற; மிகத் தாழ்வாயுள்ள; அடிப்படையான, அடிப்படை சார்ந்த; (தொ.) basal anaesthesia, ஆழ்ந்த பெருமயக்கத்துக்கு அடிப்படையாகச் செயல்புரியும் மயக்கம்; basal plane, கிடை அச்சுக்கு ஒரு போகு ஆகவுள்ள முகம்.

bas'alt, basalt', *n.* திண்ணிய பசுமை நிறமுடைய தீக்கல், எரிமலைப்பாறை வகை.

basal'tic, *a.* எரிமலைப் பாறையினாலான; தீக்கல் வகை அடங்கிய; எரிமலைப் பாறை போன்ற; திண்ணிய பசுமை நிறத் தீக்கல் வகை சார்ந்த.

bas'an, *n.* மரப்பட்டை வகையினால் பதனிடப்பட்ட ஆட்டுத் தோல்.

bas'anite, *n.* உரைகல்லாகப் பயன்படுத்தப்படும் எரிமலைப் பாறை வகை.

bas bleu, (பிர.) *n.* நீலக் காலுறை.

bas'cule, *n.* எடைக்கட்டு இயக்கக்கருவி, ஒருமுனை ஏறும் போது மறுமுனை தாழுகிற நெம்பு அமைவு; (தொ.) bascule bridge, எடைக்கட்டலினால் உயர்த்தவும் தாழ்த்தவும்படுகிற பால வகை, இயங்குபாலம்.

base [1], *n.* அடி, அடிப்பகுதி; அடிவாரம்; ஆதாரம், கடைக்கால், அடித்தளம்; நிலத்தளம்; கேடயத்தின் நிலவரை; அடிப்படை; மூலம், மூலமுதல்; (க-க.) தூணின் அடிக்கட்டு; படைத்துறையின் மூலதளம்; கடற்படைத் தலைமையிடம்; நில அளவையின் பொது மூலவரை; கலவையின் தலைக்கூறு; மருந்தின் மூலக்கூறு, பொதுக்கூறு; உறுப்பின் இணைப்பிடம், தலைப்பு; புறப்படுமிடம்; (வடி.) அடிமூலவரை, அடி மூலத்தளம்; (வேதி.) உப்பு மூலம்; காடியுடனிணைந்து உப்பு வகையாகவல்ல பொருள்; (கண.) கணிப்புமூலம், தான மூலம்; பந்தாட்டங்களின் நிலைத்தளம்; *v.* அடிப்படையாக்கு; அடிப்படை மீதெழுப்பு; மூலமுதலாகக் கொண்டு செயலாற்று; ஆதாரத்தின்மீது செயற்படுத்து; வாதத்துக்கு ஆதாரமாகக்கொள்; நிறுவு.

base [2], *a.* தாழ்ந்த, கீழான ; இழிவான ; கயமைத்தனமுடைய ; ஒழுக்கங்கெட்ட; குறுகிய தன்னலமுடைய, அற்பத்தனமான; கீழ்நிலைப்பட்ட ; அற்பவிலையுடைய ; பயனற்ற ; போலியான ; வெறுக்கத்தகுந்த ; அடிமையூழியம் செய்கிற ; (சட்.) அடிமைப்பட்ட ; (மொழி.) உயர்தனிச் செம்மொழியாயிராத ; (தொ.) base coin, போலி நாணயம் ; base metals, இழிந்த உலோகங்கள், விலை மதிப்புக் குறைந்த உலோகங்கள், காற்றுப் பட்டால் நிறம் முதலியன மாறும் உலோகங்கள்.

base'ball, *n.* தளக்கட்டுப் பந்தாட்டம், பக்கத்துக்கு ஒன்பதின் மராக ஆடும் அமெரிக்க நாட்டுப் பந்து விளையாட்டு ; தளக் கட்டாட்டத்துக்குரிய பந்து.

base'baller, *n.* தளக்கட்டுப் பந்தாட்டக்காரர்.

base'-born, *a.* கீழ்ப்பிறப்பான ; கீழ்நிலையுடைய ; முறை கேடாகப் பிறந்த.

base'-court, *n.* மாளிகை அரணின் வெளிமுற்றம் ; கீழ்நீதி மன்றம்.

base'less, *n.* அடிப்படையற்ற ; ஆதாரமற்ற ; காரண மில்லாத.

base'-line, *n.* நில அளவை வகையில் முக்கோண நில அளவைக்கு அடிப்படையான அடி மூலவரை ; வரிப்பந்தாட்ட ஆடரங்கின் எல்லையிலுள்ள கோடு ; தளக்கட்டுப் பந்தாட் டத்தில் தளங்களை இணைக்கும் கோடு.

base'ly, *adv.* இழிவாக, அற்பத்தனமாக.

base'man, *n.* தளப்பந்தாட்டக்காரர், தளக்கட்டுப் பந்தாட் டத்தில் பந்தைப் பிடித்து நிறுத்துவதற்காக தளத்துக்கருகில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஆட்டக்காரர்.

base'ment, *n.* அடிப்படை ஆதாரம் ; கட்டிடத்தின் அடித் தளம் ; நில அறை, கீழ் அறை.

base'mind'ed, *a.* சிறுமனமுடைய.

bas'enji, *n.* மிகுதியும் குரைக்காத இயல்புள்ள சுருட்டை வாலும் நிமிர்காதும் உடைய சிறிய ஆப்பிரிக்க நாய் வகை.

base'-runner, *n.* தளக்கட்டுப் பந்தாட்டத்தில் தளங்களைச் சுற்றிவரும் ஆட்டக்காரர்.

bas'es, *n.* basis என்பதன் பன்மை.

bash', *n.* நல்ல அடி, தல்லுகை; அடித்துரைத்தல் ; *v.* ஆழ் தழும்புற அடி, உள்ளழுந்த அடி.

bash'ful, *a.* நாணமுள்ள, கூச்சமுடைய ; குழப்பமடைந்த ; எளிதில் குழப்பமடைகிற ; தன்னம்பிக்கையற்ற.

bash'fully, *adv.* வெட்கத்துடன், நாணிக்கோணி.

bash'fulness, *n.* வெட்கம், நாணம், நாணிக்கோணுதல்.

bashi-bazouk', (துரு.) *n.* கொடுமைக்கும் கொள்ளைக்கும் பேர்போன முறையணி சாராக் கூலிப் போர்வீரர் ; கொடிய கொள்ளையிலீடுபடும் படைவீரர்.

bashi-bazouk'ery, (துரு.) *n.* துருக்கியக் கூலிப் போர் வீரர் தொழில், கொடுங்கொள்ளை.

bash'less, *a.* நாணமற்ற.

bas'ic, *a.* அடிப்படையான ; அடிக்கு உரிய ; அடியிலுள்ள ; அடியாக அமைகிற; (வேதி.) உப்பு மூலத்தின் இயல்புடைய, உப்பு மூலம் கொண்ட ; கன்மச்சத்துக் குறைவாகக் கலந்த ; உலோகங்களில் கன்மச்சத்துக் கலவாத முறைப்படி உருவாக் கப்பட்ட ; (தொ.) basic English, எளிய இன்றியமையாத 850 சொற்கள் கொண்ட ஆங்கில மொழிவழக்கு ; basic process, உலோக உயிரகை உட்சூழ்ந்த உலையில் எஃகு உருவாக்கும் முறை ; basic salt, மூல உப்பு ; basic slag, காரச் சிட்டம் ; உரமாகப் பயன்படுத்தப்படும் இரும்புச் சிட்டம்.

basi'city, *n.* (வேதி.) காரங்கள் உப்பு மூலங்களுடன் கலக்கும் தர அளவு.

basid'ial, *a.* சிதல் நெற்றுக்குரிய; சிதல் நெற்றுடைய.

basid'iospore, *n.* (தாவ.) காளான் வகையின் சிதல் நெற்றி லுள்ள சிதல் விதை.

basid'ium, *n.* காளான் வகையின் சிதல் நெற்று, சிதல் விதைகளை வெடிக்க வைக்கும் காளான் உறுப்பு; *pl.* basid'ia.

ba'sifixed, *a.* அடி ஒட்டிய, அடித்தளத்தால் இணைக்கப்பட்ட.

basif'ugal, *a.* அடி அகல்வான, அடித்தளத்திலிருந்து விலகிப் புறநாடிச் செல்கிற.

bas'il [1], *n.* துளசியினம் சார்ந்த நறுமணச் செடிவகை.

bas'il [2], *n.* முழுதும் பதனிடப்படாத ஆட்டுத்தோல்.

bas'il [3], *n.* மணியின் பட்டையிட்ட சாய்கோணப் பக்கம்.

basil'ic, *a.* குருதி நாளங்களில் முழங்கையிலிருந்து தொடங்கி அக்குள் நாளத்தில் முடிகிற.

basil'ica, *n.* அரைவட்ட ஒதுக்கிடமுடைய தூண் வரிசை வாய்ந்த நீள்சதுர மண்டபம் ; நெடுமாடக்கோயில் ; பண்டை ரோம் நகரில் (Rome) பேரரசர் கான்ஸ்டன்டைன் (Constantine) கட்டிய கோயில்களில் ஒன்று ; பண்டைக் கால அரசுமனை.

basil'ical, *a.* அரசுக்குரிய.

basil'ican, *a.* பிறை நெடுமாடத்துக்குரிய, அரசுமனைக்குரிய.

basil'icon, basil'icum, *n.* உயர்மருந்துக் களிம்பு.

bas'ilisk, *n.* திட்டிவிடம், பழங்கதை மரபுக்குரிய நச்சு மூச்சும் நச்சுப் பார்வையுமுடைய பாம்பு வகை ; உச்சிக் கொண்டையுடைய அமெரிக்கப் பல்லி வகை ; பண்டைக் காலப் பித்தளைப் பீரங்கி வகை.

bas'in, *n.* தட்டம், வட்டில், கிண்ணம் ; வட்டில் நிறையளவு ; குழிவான பள்ளம் ; நிலங்கவிந்த நீர்நிலை ; நீர்த்தேக்க நீக்க வாய்ப்புடைய கப்பல்துறை ; வடிநிலம் ; ஆற்றுப் பள்ளத் தாக்கு ; நீள்வட்டப் பள்ளத்தாக்கு ; (மண்.) உட்குழிவான நில மடிப்பு உள்ள இடம் ; உள் மடிப்பிட நிலக்கரிப்படிவு ; உள்மடிப்பிடக் கனிப்பொருள் படிவு.

bas'inet, *n.* இலேசான உருள் கவிவுடைய எஃகு தலைச்சீரா.

bas'inful, *n.* கிண்ணம் கொள்ளும் அளவு ; *pl.* bas'infuls.

basip'etal, *a.* (தாவ.) இதழ்கள் வகையில் அடிநோக்கி வளர்கிற.

bas'is, *n.* அடிப்படை ; மூலமுதல் ; அடிநிலை, பீடம், மூலச் சரக்கு ; மூலக்கொள்கை, தொடக்கத் தத்துவம் ; உடன் பேச் சுக்குரிய பொது மூலம் ; படைத்தளம்.

bask, *v.* குளிர்காய், வெயிலிற் காய், ஒளியில் திளை ; சார்ந்து இன்பந்திளை ; (தொ.) basking shark, மிகப் பெரிய சுருமீன் வகை.

bas'ket, *n.* கூடை ; கூடை கொள்ளும் அளவு ; பெட்டி ; கூடைப் பந்தாட்டத்தில் ஆட்ட இலக்காகப் பயன்படுத்தப் படும் வலை ; அஞ்சல் வண்டியின் பின்புற வெளியிருக்கை ; பிரம்பு வேலை செய்து உருவாக்கப்பட்ட கைப்பிடி ; கூடை வடிவ அமைப்பு ; *v.* கூடையில் வை ; கழிவுக் கூடையில் போடு.

bas'ket-ball, *n.* கூடைப்பந்தாட்டம்.

bas'ket-chair', *n.* பிரம்பு நாற்காலி.

bas'ketful, *n.* கூடை நிரம்பக்கொள்ளும் அளவு ; *pl.* bas'ketfuls.

bas'ket-maker, *n.* கூடை முடைபவர்.

bas'ket-mak'ing, *n.* கூடை முடைதல்.

bas'ketry, *n.* கூடை முடைதல் ; பிரம்புபின்னிய வேலைப் பாடு.

bas'ket-work, *n.* பிரம்பு முதலியவற்றின் பின்னல் வேலைப் பாடு.

bas'net, *n.* = basinet.

bas'on [1], *n.* = basin.

bas'on [2], *n.* தொப்பிக்குரிய அழுத்தக் கம்பளித்துணியைச் செய்வதற்கான விசிப்பலகை ; *v.* விசிப்பலகையின்மேல் வைத்து அழுத்தித் தொப்பிக்குரிய அழுத்தக் கம்பளித்துணி செய்.

Basque, *n.* பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் இடைப்பட்ட பிரென்னீஸ் (Pyrenees) மலை வட்டாரத்தில் வாழும் பழங்குடியினத்தவர்; மேற்குப் பிரென்னீஸ் பகுதிப் பழங்குடியினர் பேசும் மொழி; *a.* பாஸ்குப் பழங்குடி யினத்துக்குரிய; பாஸ்குப் பழங்குடி மொழி சார்ந்த.

basque, *n.* இடுப்பின் கீழதாய கச்சு நீட்டம்.

basqued, *a.* கச்சு வகையில் இடுப்பின்கீழ் நீண்ட பகுதி யுடைய.

basquine', *n.* பாஸ்கு (Basque) ஸ்பெயின் (Spain) நாட்டுப் பெண்டிர் கச்சின் மீதணியும் புறச்சட்டை.

bas-relief', *n.* குவி ஓவியம், பின்னணி அரை அகழ்வான புடைப்புருச் செதுக்கோவியம்.

bass [1], *n.* கடல்மீன் இனங்களின் வகை.

bass [2], *n.* பாய்-கூடை முடையவும் மலர் கட்டவும் பயன் படும் எலுமிச்சை இனமரத்தின் நார்போன்ற உள்பட்டை.

bass [3], *n.* உச்சக்குரலுக்கும் மட்டக் குரலுக்கும் இடைப்பட்ட வீரூர்ந்த ஆண்குரல்; படுத்தலோசை, வீரூர்ந்த ஆண் குரலில் பாடுபவர்; *a.* தாழ்வான, படுத்தலோசையுடைய, வீரூர்ந்த; படுத்தலோசைக்குப் பொருத்தமான; *v.* வீரூர்ந்த குரல் எழுப்பு.

Bass, *n.* இங்கிலாந்தில் செய்யப்படும் மாத்தேறல் வகை, தோப்பி வகை.

bass'-bar, *n.* நரப்பிசைக்கருவியின் சிற்றுறுப்பு, யாழ் நடுக்கட்டை.

bass'-broom, *n.* முரட்டுநார்த் துடைப்பம்.

bass'-clef, *n.* இசைமானத்தில் இழை வரையில் குறிக்கப் படும் சுருதிக் குறியீட்டு வகை.

bass'-drum, *n.* இசைக் குழுவினரின் பெருமுரசு.

bass'et [1], *n.* பெரிய வேட்டைநாய் வகை.

bass'et [2], *n.* பழங்காலச் சீட்டாட்டம்.

bass'et [3], *n.* (மண்.) தெரிபாறை, புறந்தோன்றும் அடிநிலப் பாறை; *v.* வெளித்தோன்று.

bass'et-horn, *n.* ஓசை நயமுடைய நாதசுரம்போன்ற துளைக் கருவி.

bassinet', *n.* மூடாக்கமைந்த பிரம்புத் தொட்டில், சிறு பிரம்புத் தள்ளுவண்டி.

bass'o, *n.* வீரூர்ந்த ஆண்குரலில் பாடுபவர்.

bassoon', *n.* துளைக்கருவி வகை.

bassoon'ist, *n.* துளைக்கருவி வகை வாசிப்பவர்.

basso-relievo, (இத்.) *n.* பின்னணி அரை அகழ்வான புடைப் புருச் செதுக்கோவியம்; *pl.* *basso-relievos*.

bass-relief', *n.* = bas-relief.

bass'-vi'ol, *n.* மந்தயாழ், கூட்டிசையில் படுத்தலோசையை எழுப்புவதற்காகப் பயன்படும் நான்கு நரம்புகளுள்ள இசைக்கருவி.

bass'-wood, *n.* எலுமிச்சை இனமரம்; எலுமிச்சை இனமரத் தின் கட்டை.

bast, *n.* எலுமிச்சை இனமரத்தின் நாரியல் வாய்ந்த உள் பட்டை; உள்மரப்பட்டை, மென்மரம்.

bas'tard, *n.* குண்டகன், சோரப்பிள்ளை, வேசிமகன், வேசி மகள்; புறமனாப் பிள்ளை, மணவாழ்க்கைக்குப் புறம்பாய்ப் பிறந்தவர், இழிமகார்; *a.* கூடா ஒழுக்கத்தின் விளைவாகப் பிறந்த, மணவாழ்க்கைக்குப் புறம்பாய்ப் பிறந்த; முறை கேடான கலப்பினத்தைச் சேர்ந்த; பொய்யான, போலியான, தவருகப் பெயர்தாங்கிய.

bast'ardism, *n.* = bastardy.

bas'tardize, *v.* முறைகேடனென்று சாற்று; இழிபிறப்பின ரென்று எண்பி.

bas'tardy, *n.* தகாவழிப்பிறப்பு; முறைகேடனுயிருக்கும் நிலை; ஒழுக்கக்கேடு; போலித்தன்மை.

baste [1], *v.* தைப்பதற்கு முன்னீடாகப் பெருந்தையல் போடு, தளர்த்தியாய் இழையோட்டு.

baste [2], *v.* தூட்டிறைச்சி தீய்ந்துபோகா வண்ணம் நெய் வார்; மெழுகுத் திரிக்கான துணியில்மேல் உருக்கியமெழுகு ஊற்று.

baste [3], *v.* தடியாலடி, புடை, சிதை.

Bastille', **bastille'**, *n.* அரண்; 1789-இல் அழிக்கப்பட்ட பாரிஸ் (Paris) நகரத்துச் சிறைக்கோட்டம்; கொடுங் கோன்மைச் சின்னமாகவுள்ள சிறை.

bastinade', **bastinad'o**, *n.* உள்ளங்காலில் பிரம்பாலடித் தல்; *v.* உள்ளங்காலில் பிரம்பாலடித்து ஒறு.

bastinad'oes, *n.* **bastinado** என்பதன் பன்மை.

bas'tion, *n.* கோட்டை அரணில் முனைப்பான முகப்புடைய பகுதி, பரிகம்; கோட்டைக் காவல், அரண், காப்பு.

bas'tioned, *a.* அரண் அமைந்த.

bat [1], *n.* வௌவால்.

bat [2], *n.* பந்தடிக்கும் கோல்; மரப்பந்தாட்டக்காரர்; கோமாளி யிடமிருக்கும் தட்டுப்பலகை; செங்கல்துண்டு; *v.* மரப் பந்தாட்டத்தில் மட்டையாலடி, மட்டை வீசு.

bat [3], *v.* கண் இமை, இமையாடு.

batat'a, *n.* சீனிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்குவகை

Batav'ian, *n.* நெதர்லாந்தில் (Netherlands) உள்ள பண்டை பட்டேவியாவில் வாழ்ந்தவர்; தற்கால ஆலந்தில் (Holland) வாழ்பவர்; ஜாவாவில் உள்ள பட்டேவியா நகரின்கண் (ஜகர்த் தாவில்) வாழ்பவர்; *a.* பண்டை பட்டேவியாவுக்குரிய; தற்கால ஆலந்துக்கு உரிய; ஜாவாவில் உள்ள பட்டேவியா வுக்குரிய.

batch, *n.* அப்பங்களின் ஒரு வேக்காட்டளவு, ஓர் ஈடு, தொகுதி; அடுக்கு; கும்பு; *v.* தொகுதிகளாகத் திரட்டு, கும்புகளாகப் பிரி.

bate [1], *n.* தோலை மென்பதமாக்குதற்கான காரக்கரைசல்; *v.* தோலைக் காரக்கரைசலில் ஊறவை.

bate [2], *v.* அடக்கு; இழ, தளரவிடு; தணி, குறை; வீழ்ச்சியுறு; கழி, தள்ளு; மழுக்கு; (தொ.) with bated breath, மூச்சை அடக்கிக்கொண்டு.

bateau', *n.* பரிசில், இலேசான ஆற்றுப்படகு; *pl.* **bateaux'**.

bate'ment, *n.* குறைத்தல்; (தொ.) batement light, பலகணிச் சட்டச் சாய்வொளி.

bat'fowling, *n.* இரவில் ஒளிகாட்டியும் புதர்களைக் கலைந்தும் பறவைகளைப் பிடித்தல்.

bath [1], *n.* குளிப்பு, முழுக்கு, நீராட்டு; குளிநீர்; குளிப்புத் தொட்டி; முழுக்கறை, முழுக்குமனை; குளிப்பு முறை மருத்துவ இல்லம்; நீர்-ஆவி-ஒளி ஆகியவற்றில் செறிவு-தோய்வு-அளாவல்; தணல்-மண் பொதிவு; (வேதி.) செறிகலம், பொதிதளம்; *v.* குளிப்பாட்டு, நீராட்டு; தொட்டி நீருள் அமிழ்த்தி முழுக்காட்டு; (தொ.) Order of the Bath, வீரப்பெருந்தகைப் பட்டவரிசை.

bath [2], *n.* யூதர் வழங்கிய முகத்தற் பேரெல்லையளவை.

Bath, *n.* குளிப்புமுறை மருந்துநீரூற்றுடைய ஆங்கில நகரப் பெயர்.

bath'-brick, *n.* மெருகுக்கல், உலோகங்களை மெருகிடுதற்குப் பயன்படும் மண்சத்தடங்கிய சுடப்படாத செங்கல்.

Bath'-bun', *n.* சுவைமிக்க இனிப்புப் பொங்கப்பம்.

bathe, *n.* குளிப்பு, நீர்முழுக்கு; நீத்துக்குளிப்பு; *v.* குளி, நீராடு; நீர்மூழ்கு; நீந்திக்குளி; திளை, தோய்; காற்றுடவிடு, ஒளிதோய்வி; நீராட்டு; கழுவு; அலம்பு; நனைவி, நீர்கொட்டு.

bathet'ic, *a.* தலைகீழான உணர்ச்சிப்போக்குடைய.

bath'house, *n.* குளிப்பகம், நீராட்டுமனை.

bath'ing-box, *n.* நீராடுபவர் உடைமாற்றும் அறை.

bath'ing-cost'ume, **bath'ing-dress**, *n.* குளியல் உடை.

bath'ing-machine', *n.* நீராட்டுப்பொறி, குளிப்பவரை நீரில் ஆழத்துக்குக் கொண்டு போகக்கூடிய சக்கரங்களுள்ள சிறு வண்டி.

bath'ing-suit, *n.* = bathing-costume.

bath'man, *n.* உப்புக்கண்டம் போடுபவர்.

bath'mic, *a.* வளர்ச்சி ஆற்றலுக்குரிய.

bath'mism, *n.* (உயி.) வளர்ச்சி ஆற்றல்.

bath'olite, bath'olith, *n.* (மண்.) மிக்க ஆழத்திலிருந்து எழும்பிய தீப்பாறைத் திரள்.

bathom'eter, *n.* நீராழமானி.

Bathon'ian[1], *n.* பாத் (Bath) நகரவாழ்நர்; *a.* பாத் நகருக்குரிய.

Bathon'ian[2], *n.* (மண்.) பறவை தோன்றிய ஊழி இடைப் பிரிவு; *a.* (மண்.) பறவை தோன்றிய ஊழி இடைப்பிரிவுக்குரிய.

bat'horse, *n.* அதிகாரியின் மூட்டைகளைச் சுமந்து செல்லும் பொதிகுதிரை.

bath'os, *n.* சுவை இறக்கம், உணர்ச்சித் தலைதடுமாற்றம்.

bath'room, *n.* குளிக்கும் அறை; (தொ.) bath-room ballerina, ஊர்பேர் தெரியாத ஆடல்நங்கை.

bathyb'ius, *n.* முன்பு ஊன்ம இயல்புடையதென்று தவருகக் கருதப்பட்ட கடலடி வண்டற்குழம்பு.

bathygraph'ical, *a.* படமூலம் நீராழத்தைக் காட்டுகிற.

bathym'eter, *n.* = bathometer.

bathymet'ric, bathymet'rical, *a.* நீராழமானிக்குரிய.

bathym'etry, *n.* கடல்-ஏரி ஆகிய இவற்றின் ஆழங்காண்பது பற்றிய நூல்.

bathyorograph'ical, *a.* திணைப்படங்களில் நில உயரத்தையும் நீராழத்தையும் காட்டுகிற.

bathypelag'ic, *a.* கடலாழத்தில் காணப்படுகிற.

bath'yscope, bath'ysphere, *n.* ஆழ்கடற் காட்சிக்கோளகை, ஆழ்கடல் ஆய்வுக்கான பெரிய வலுவான நீர்மூழ்கும் கவிகை மாடம்.

bat'ik, *n.* துணியில் சாயம் போட வேண்டியிராத பாகங்களுக்கு மெழுகு பூசி எஞ்சிய பாகங்களில் வண்ணப் படங்களை அச்சிடும் கீழைநாட்டு முறை.

bat'ing, *prep.* தவிர.

batiste', *n.* மெல்லிய இழையுள்ள நேர்த்தியான துணி; *a.* மெல்லிய இழையுள்ள, நேர்த்தியான துணிக்குரிய.

bat'man, *n.* பொதிகுதிரைப்பாகன்; அதிகாரியின் வேலையாள்.

batolog'ical, *a.* முட்செடி ஆய்வுக்குரிய.

batol'ogist, *n.* முட்செடி ஆய்வாளர்.

batol'ogy, *n.* முட்செடிகளைப் பற்றிய ஆய்வுநூல்.

bat'on, *n.* ஊர்க்காவலரின் குறுந்தடி; கட்டியக்கோல்; (கட.) கேடயத்திலுள்ள குறுந்தடி வடிவம்; (இசை.) இசைக் குழுத்தலைவர் நாளத்தைக் குறிப்பதற்காக அசைக்கும் கோல்; ஏ. தடியாலடி; (தொ.) baton sinister, (கட.) முறை கேடான பிறப்பைக் குறிக்கும் இடமிருந்து வலஞ்சாய்வான குறுந்தடி உருவக்குறிப்பு.

bat'-pay, *n.* பொதி சுமப்பதற்கான படி.

batra'chia, *n. pl.* நிலநீர்வாழுயிர்கள், தவளை-தேரை யினம்.

batra'chian, *n.* நிலநீர் வாழுயிர்களில் ஒன்று, செவுள்களையும் வாலையும் உதிர்த்துவிடும் உயிரினங்களில் ஒன்று; *a.* தவளை-தேரையினத்துக்குரிய, நிலநீர்வாழுயிர்களுக்குரிய.

bats'man, *n.* மரப்பந்தாட்டக்காரர்.

bats'wing, *n.* வாவல் அடுப்பு, வௌவால் இறகு போன்ற வடிவுடைய அழல்காட்டும் பொறி அடுப்பு வகை.

batt'a, (த.) *n.* படைத்துறையில் கொடுக்கப்படும் உதவிப்படி; படிச்செலவு, படிப்பணம்; செலவுப்படி; பட்டைச்சோறு.

battal'ia, *n.* போரணி; அணிவகுப்புப் படையில் சிறப்புப்பிரிவு.

battal'ion, *n.* அணிவகுத்த படை; போர் அணிப்பிரிவு, தானை; காலாட்படை வகுப்பு.

batt'els, *n. pl.* ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மடப்பள்ளிகளிலிருந்து பெறும் பண்டங்களுக்கான கணக்குகள்; கல்லூரிக் கணக்குகளில் காட்டப்படும் செலவுத்தொகைகள்.

batt'en[1], *n.* தளம் பாவுதற்குப் பயன்படும் மரப்பலகை; கம்பை, அள்ளு, பற்று; மின் விளக்குகளின் வரிசை; மின் விளக்குகள் பொருத்தப் பெற்றுள்ள மரச்சட்டம்; (கப்.) உராய்தலைத் தடுப்பதற்காக தூலத்தின்மேல் ஆணியடித்துப் பொருத்தப்படும் மரத்துண்டு; ஏ. அள்ளுகளைக் கொண்டு வலுப்படுத்து; அள்ளுகள் அமை.

batt'en[2], *n.* பட்டுத்தறியில் ஊடுநூலைச் செறிவாகத்தள்ளும் இயங்கு சட்டம்.

batt'en[3], ஏ. பேருண்கொள்; தின்றுகொழு; கிடந்துதிளை.

batt'ening, *n.* சுவர் அல்லது சட்டத்தின்பேரில் அள்ளுகள் அமைந்த மரவேலைப்பாடு.

batt'er[1], *n.* நீர்மத்தில் சேர்த்துப் பசையாகக் குழைக்கப்படும் பொருள்கள்; ஒட்டுதற்கான பசை; அச்சுரு அல்லது அச் சுருத் தகட்டிலுள்ள வடு; ஏ. கை; கொறுக்கு; பீரங்கிகளைக் கொண்டு தாக்கு; கடுமையாக நடத்து; உருக்குலையுமாறு தகர்; அடித்துப் பள்ளமுண்டாக்கு; உபயோகத்தின் மூலம் உருச்சிதை.

batt'er[2], *n.* குத்துக்கோட்டிலிருந்து உள்பக்கமான சாய்வு; ஏ. உள்பக்கமாகச் சாய், நிலத்தளத்திலிருந்து மேல்நோக்கிச் சாய்.

batt'er[3], *n.* பந்தாட்டமட்டை கையாள்பவர், ஆட்டக்காரர்.

batt'ering-charge, *n.* பீரங்கியில் செறிக்கத்தக்க வெடி மருந்தின் முழுநிறை அளவு.

batt'ering-ram, *n.* மதிற்சுவர்களைத் தகர்ப்பதற்குரிய உலோகப் பூணிட்ட பெருந்தூலம்.

batt'ering-train, *n.* முற்றுகை பீரங்கிகளின் தொகுதி.

batt'ery, *n.* அடித்தல்; (சட்.) கைத்தாக்குதல், ஆடை பங்க முறக் கைநீட்டல்; அதட்டிக் கையாளுதல்; பீரங்கித்தொகுதி; பீரங்கிப்படை வகுப்பு; பீரங்கிப் படை வீரர்கள்; பீரங்கிகள் நிறுத்தப்பட்டுள்ள இடம்; மின்பொறி அடுக்கு, மின்கலம்; அடுக்குச் சமையற்கலம்; உணவுக்கல அடுக்கு; விரைவளர்ச்சி முறையில் முட்டையிடும் கோழிகளை அடைத்துவைப்பதற்கான கூண்டுப்பெட்டி வரிசை; தளக்கட்டுப்பந்தாட்டத்தில் பந்தெறிபவரும் ஏற்பவரும் கொண்ட தொகுதி; வாத அடுக்குச்சொல், வாத அடுக்கு.

batt'ing, *n.* பந்துமட்டையைக் கையாளும் சதுரப்பாடு; மெத்தைகளுக்குரிய திணிப்புப்பொருள்.

bat'tle[1], *n.* சண்டை, போர்; மல்லாட்டம்; சூழ்ச்சியாட்டம்; போர்த்திறம், வெற்றி; ஏ. சண்டையிடு, போரிடு; எதிரிடு, மல்லாடு.

bat'tle[2], ஏ. ஞாயில்கள் அமைத்துக்கொடு.

bat'tle-ax, batt'le-axe, *n.* மழு, போர்க்கோடரி; ஆற்றல் வாய்ந்த மாது.

bat'tle-cruiser, *n.* போர்க்கப்பலின் திறங்கள் வாய்ந்த பெரிய காவற்கப்பல்.

bat'tle-cry, *n.* போர்க்குரல், போர்க்கூச்சல்; அரசியல் கட்சியின் போராட்டக் குறிக்கோள்.

bat'tledoor, bat'tledore, *n.* மரத்தடுப்பு; இறகுப்பந்து மட்டை.

bat'tle-dress, *n.* போர்வீரர் உடுப்பு.

bat'tle-field, *n.* போர்க்களம், பறந்தலை.

bat'tlemented, *a.* ஞாயில்கள் அமைந்த.

bat'tlements, *n. pl.* பீரங்கியேற்றும் மதில் வாய் இடம் அல்லது கொத்தளம், ஞாயில்.

bat'tle-piece, *n.* போர்க்காட்சியின் படம்; போரைப் பற்றிய விரிவுரை.

bat'tle-plane, *n.* பெரிய போர்விமானம்.

bat'tle-scarred, *a.* விழுப்புண்பட்ட, போர் பல கண்ட.

bat'tle-ship, *n.* போர்க்கப்பல்.

bat'tology, *n.* பயனின்றிக் கூறியது கூறல்.

battue, (பிர.) *n.* வேட்டைக்காரர்களிருக்கும் இடத்துக்கு விலங்குகளை விரட்டுதல்; விலங்குகளைக் கலைத்து விரட்டச் செல்லும் வேட்டைக்குழு; பெருவாரியான அழிவு வேட்டை, படுகொலை.

bau'ble, *n.* பகட்டான விளையாட்டுப் பொருள்; அற்பப் பொருள், பயனற்ற பண்டம்; அரசவைக் கோமாளிச்சின்னம், கழுதைக் காது பொருந்திய தலையுடைய தடி.

baulk, *n.* = balk.

baus'ond, baus'on-faced, *a.* நெற்றியில் வெள்ளைப்புள்ளி களுடைய; முகத்தின் கீழ்ப்பாகத்தில் வெள்ளைக்கீற்று உடைய.

baux'ite, *n.* (கனி.) அலுமினியம் அகப்படும் இடத்தில் உள்ள மண் வகை.

bav'in, *n.* சுள்ளி விறகுக்கட்டு.

bawd, *n.* பரத்தைத் தரகி; பரத்தைத் தரகர்; கீழ்த்தரப்பேச்சு.

bawd'ry, *n.* பரத்தமைத் தரகு.

bawd'y, *n.* காமப்பேச்சு; *a.* இழிந்த, ஒழுக்கங்கெட்ட.

bawd'y-house, *n.* இழிமனை, பரத்தையில்லம்.

bawl, *n.* பேரொலி, உரத்த கூச்சல்; *v.* இரை, கத்து, கூச்சலிடு, உரக்கக்கூவு.

bawl'ey, *n.* (பே-வ.) கடற்கரைக்குரிய மீன் பிடிக்கும் சிறு படகு.

bawn, *n.* மாளிகை அரண்முற்றம்; கால்நடைப் பட்டி.

bay [1], *n.* கருஞ்சிவப்புக் குதிரை; *a.* கருஞ்சிவப்பான.

bay [2], *n.* விரிகுடா; கடற்கரையின் உட்பக்க வளைவு; மலைத் தொடரில் ஒதுக்கிடம்.

bay [3], *n.* தூணிடைவெளி; மதிலிடை வளைவு; ஒதுக்கிடம்; தொழுவம்; (படை.) போர்க்காலப் பதுங்கு குழியில் கடந்து செல்லும் இடம்; கிளை இருப்புப்பாதை வளைவு.

bay [4], *n.* புன்னைமரம்; வெற்றித்தழை, புகழ்மாலை; இலக்கியப் புகழ்.

bay [5], *n.* பெரிய நாயின் குரைப்பு; வேட்டை நாய்களின் கூட்டுக் குரைப்பு; வேட்டையாடப்படும் விலங்கு போக்குமுட்டி எதிர்த்து நிற்றல்; கடைசி எதிர்ப்பு நிலை; *v.* குரை, உறுமு; குரைத்துக் கொண்டு துரத்து; வளைத்து மடக்கு, மடக்கி நிறுத்து; (தொ.) hold at bay, keep at bay, போக்கு முட்டச் செய்; stand at bay, போக்கு முட்டி எதிர்த்து நில்.

bay [6], *n.* மான்கொம்பின் இரண்டாவது முனை.

bayadere', *n.* நாட்டிய நங்கை.

bay'-antler, *n.* = bay [6].

Bay'ard, *n.* கருணைமறவன், பண்புசான்ற வீரன்.

bay'ard, *n.* குதிரை; குருட்டுப் போக்கான துணிச்சல்.

bay'-line, *n.* வளைவான கிளை இருப்புப்பாதை.

bay'onet, *n.* துப்பாக்கிமுனை ஈட்டி; சனியன்; படைவலி; சுருகைத் துப்பாக்கி தாங்கிய வீரர்; *v.* துப்பாக்கி ஈட்டிமுனையினால் குத்து; துப்பாக்கிமுனை காட்டி வினையை முடித்துக் கொள்.

bay'oneted, *a.* சுருகைத் துப்பாக்கி தாங்கிய.

bay'onets, *n. pl.* படைவலி.

bay'ou, *n.* வடஅமெரிக்காவின் தென்பகுதியில் ஏரி ஆறு ஆகியவற்றின் சேரும்ந்த கிளை.

bay'-rum, *n.* மேற்கிந்திய மரவகையின் இலைகளிலிருந்து வடித்திறக்கப்படும் நறுமணக் குடிவகை.

bay'-salt, *n.* சொரசொரப்பான உப்பு.

bazaar', (பெர்.) *n.* கடை, கடைத்தெரு, அங்காடி.

baz'an, *n.* = basan.

bazar', *n.* = bazaar.

bazoo'ka, *n.* வேடிக்கையாக வாசிக்கப்படும் துளைக்கருவி வகை; வாணத்தினுல் உந்தப்படும் எறிபடைகளுக்கான துப்பாக்கி.

bdell'ium, *n.* நறுமணப்பிசின் தரும் மரவகை; ஒருவகை மரப்பிசின்.

be, *v.* இரு, உளதாகு, எய்தப்பெறு; வாழ், நிலைகொள், தங்கியிரு, தொடர்ந்து இரு; நிலை எய்து; பண்பு உடையதாய் அமை.

beach, *n.* கடற்கரை; ஏரிக்கரை; அலைகளால் ஏற்பட்ட ஓர மேட்டிடம்; *v.* கரையில் தள்ளி ஏற்று; கரைமீது இழு.

beach'comber, *n.* உருள்பேரலை; பசிபிக் (Pacific) கடற் கரையோரங்களில் ஒண்டித்திரிபவர்; பசிபிக் தீவுகளின் முத்துக்குளிப்புத் தொழிலாளர்.

beached, *a.* கடற்கரை வாய்ந்த; கடற்கரையின்மேல் செலுத் தப்பட்ட.

beach'head, *n.* கடல் முகப்புத்தளம், படை இறங்குதற்காகப் பகைவருடைய கடற்கரையில் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பு.

beach-la-mar', *n.* தென் கடற்பகுதிக்குரிய கொச்சை ஆங்கில மொழி, மேற்குப் பசிபிக் வாணிகத்தில்பயிலும் கொச்சை ஆங்கிலம்.

beach'-rescue, *n.* கடலாடிக் காப்பாளர், கடலிற் குளிப்பவர் களில் இடருற்றவர்களைக் காப்பதற்குரிய அதிகாரி.

beach'y, *a.* கூழாங்கற்கள் நிறைந்த.

beac'on, *n.* தொலை அடையாளக்குறி; தீ நா; குன்றின் மேலிட்ட விளக்கு; தீப்பந்தம்; அடையாளக்குறி காட்டும் நிலையம்; முனைப்பாகத் தெரியும் மேடு; கலங்கரை விளக்கம்; எச்சரிக்கை ஒளி; இடர் எச்சரிப்பு; வழிகாட்டி; விமான வழி காட்டி; தெரு அடையாளக் குறி; கப்பல்கள் அல்லது விமானங்களுக்கு வழிகாட்டுவதற்கான கம்பியில்லாத்தந்தி ஏற்பாடு, *v.* ஒளிகாட்டு; வழிகாட்டு; குறிகாட்டும் விளக்குகளை அமை.

bead, *n.* உருண்மணி, குமிழ்மணி, செபமாலையின் உருமணி; சிறுகுமிழ் வடிவப் பொருள்; நீர்த்துளி; குமிழி; வியர்வைத் துளி; துப்பாக்கி முனைவாய்; (க-க.) மணிவரிசை உருவ அழகு வேலைப்பாடு; சக்கரப்புறத் தோட்டின் குமிழ்புடைப்பு; *v.* குமிழ் மணிகள் அமை; தொடு, கோவைப் படுத்து; உருமணிகளாக அமை; உருமணிகள் பெருக்கு; (தொ.) draw a bead on, நோக்கிக் குறிபார்; tell one's beads, மந்திர உரு வேற்றி வழிபடு.

bead'ed, *a.* குமிழ்மணி வாய்ந்த; உருள் மணிகளை உடைய; உருள்மணி வடிவமுள்ள.

bead'-house, *n.* ஆன்மநல விடுதி, நிறுவியவரின் ஆன்மநலனுக்காக வேண்டிக்கொள்ளும் கடப்பாடுடைய பிச்சைக் காரர்கள் வாழும் அறநிலையம்.

bead'ing, *n.* மணிகளின் அச்சரு; மணிகள் கோத்தல்; மணியுரு அமைவு.

bea'dle, *n.* தண்டேந்தி, துணைவேந்தர் மெய்க்காவலர்; தொழிற்குழுக் காவலாளர்; திருக்கோயிற் காவற்பணியாளர்; தண்டகர், சிறு குற்றஞ் செய்தாரைத் தண்டிக்கும் உரிமையுடைய திருவட்டகைப் பணியாளர்.

bea'dledom, bea'dlehood, *n.* மடமிக்க விரிவான பணி ஆர்வநிலை.

bead'-proof, *a.* குமிழ் நலமுடைய, உயர்குடிவகைகளில் கலகக்கிய பின்னும் குமிழியருதிருக்கும் இயல்புடைய.

bead'-roll, *n.* பெயர்ப்பட்டியல்; தொடர் வரிசை; செபமாலை.

beads'man, *n.* வழிபாட்டுப்பணியாளர், வேண்டுதல் செய்வதற்காக மானியம் பெற்றவர்.

beads'woman, *n.* beadsman என்பதன் பெண்பால் வடிவம்.

bead'y, *a.* உருண்மணிபோன்ற ; சுடரொளி வீசுகிற, மின்னி மினுங்குகிற.

bea'gle, *n.* முயல் வேட்டை நாய்வகை ; ஒற்றர் ; தலையாரி ; சிறு சுருமீன் வகை ; *v.* முயல் வேட்டையாடு.

bea'gler, *n.* முயல் வேட்டையாளர்.

bea'gling, *n.* முயல் வேட்டை, நாய்களைக் கொண்டு வேட்டையாடுதல்.

beak, *n.* பறவைகளின் அலகு ; ஆமையின் முகறை ; கொடுமூக்கு ; பண்டைப் போர்க்கப்பலின் தகர்முனை ; கெண்டியின் தூம்பு, கலத்தின் கூர்வளைவான அருகு.

beaked, *a.* அலகு உடைய, கூர்வளைவான அருகுடைய.

beak'er, *n.* பருகுகலம், கொடுகலம் ; ஆய்களங்களுக்குரிய மூக்குடைய ஊற்றுகலம் ; கல அளவு நீர்மம் ; (தொ.) Beaker Folk, வெண்கலஊழித் தொடக்கத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் வாழ்ந்த மக்கள்.

be'-all, *n.* முழுவாழ்க்கை, முழுப்பொருள்.

beam, *n.* உத்தரம், தூலம் ; பாவுநூல் வரிந்து சுற்றப்படும் தறிக்கட்டை ; ஏர்க்கால் ; துலையின் கோல் ; நங்கூரத் தண்டு ; இயந்திரத்தின் நெம்புகோல் ; வண்டியின் நெடுங்கட்டை ; கப்பலின் பக்கம் ; மான்கொம்பின் நடுத்தண்டு ; ஒளிக்கதிர் ; மின்கதிர் ; ஒளிக்கோடு, மின்கதிர்க்கற்றை ; அவிரொளி, சூழ்ஒளி ; ஒளி படைத்த நோக்கு ; முறுவல் ; (விவி.) பெருங்குற்றம் ; *v.* ஒளிவீசு, கதிருமிழ் ; முறுவலி ; இலங்கு, தோற்று ; ஒளிக்கதிர் மூலம்தெரிவி ; உத்தரத்தின்மீது வை ; (தொ.) beam system, ஒருதிசையில் மட்டும் ஒலிபரப்பும் கம்பியில்லாத்தந்தி முறை ; fly the beam, ride the beam, வானொலிக் கதிரலையின் திசையில் விமானம் செலுத்து ; off the beam, வானொலிக் கதிரலைக் கோட்டிலிருந்து விலகி ; இலக்குத்தவறி ; on the beam, கப்பல் போகும் திசைக்குச் செங்கோணத்தில் ; திசைகாட்டும் அடையாளத்தின் துலை கொண்டு ; வானொலிக் கதிரலை காட்டிய நெறியில் ; சரியாக இலக்குமீது.

beam'-ends', *n. pl.* கப்பலின் குறுக்குவிட்ட முனைகள்.

beam'-en'g'ne, *n.* (பொறி.) சக்கரத்துடன் இணைக்கப்பட்ட உந்து தண்டினையுடைய நீராவி இயந்திரம்.

beam'er, *n.* தறிக்கட்டையின்மேல் இழை சுற்றுபவர் ; இழை சுற்றுப் பொறி.

beam'iness, *n.* ஒளிப்பொலிவு, தறிக்கட்டை போன்ற அகல் விரிவு.

beam'ing, *n.* ஒளிகாலுதல் ; *a.* ஒளிகாலுகிற, முறுவலிக்கிற, மகிழ்ச்சி நிலவுகிற, மலர்ச்சியுடைய.

beam'ingly, *adv.* புன்முறுவலுடன்.

beam'less, *a.* ஒளியற்ற.

beams, *n. pl.* கப்பலின் குறுக்குவிட்டங்கள்.

beam'-trawl, *n.* தண்டிழுவை வலை, தண்டினைக் கொண்டு வாய் விரிவாக வைக்கப்பட்டுள்ள இழுவை வலை.

beam'y, *a.* ஒளிவீசுகிற, கதிர் உமிழ்கிற ; தறிமரம்போல் பருமனான ; அகலமான.

bean, *n.* பயிற்றினம், அவரை, மொச்சை, அவரையினம் ; கொட்டை, பருப்பு, காப்பிக்கொட்டை ; (தொ.) full of beans, கிளர்ச்சியுடன் ; give one beans, கடுமையாக நடத்து.

bean'-ca'per, *n.* ஊறுகாய் போட உதவும் மலர் மொக்கு வகை தரும் செடியினம்.

bean'feast, bean'o, *n.* முதலாளிகள் பணியாளர்களுக்கு அளிக்கும் ஆண்டு விருந்து ; கொண்டாட்டம், களியாட்டம்.

bean'-king, *n.* களியாட்டங்களில் தலைமை வகிப்பவர்.

bear[1], *n.* வாற்கோதுமை.

bear[2], *n.* கரடி ; பாங்கறியா முரட்டு ஆள் ; பங்குக்களவிலை யிறக்கச் சூதாடி, மலிவு விலையில் வாங்கும் நாட்டத்துடன் பின்விலைக்கு விற்று விலைகுறைப்பவர் ; பங்குக்களவிலை யிறக்கம் ; தொலை போடும் பெரிய பொறி ; (வான்.) விண்மீன் குழுக்கள் இரண்டில் ஒன்று ; *v.* பங்குக்கள விலை யிறக்கம் நாடித் துணிச்சல்சூதாட்ட முறை நடத்து.

bear[3], *v.* பெறு, ஈனு ; பெற்றளி ; உண்டுபண்ணு ; விளைவி.

bear[4], *v.* எடுத்துச்செல், கொண்டேகு ; சுமை, தாங்கு ; சுமையாயிரு ; சார்த்து ; சாய்வி ; படு, ஆட்படு, ஏற்றனுபவி ; கொண்டிரு, பெற்றிரு ; உரிமையாகப் பெற்றிரு ; மேற்கொள் ; அடை, எய்தப்பெறு ; ஏற்றுக்கொள், பொறுத்துக்கொள் ; ஒத்துக்கொள், இசைவளி ; ஆதரவளி ; கொள் ; கைக்கொள், பிடித்திரு ; உளங்கொள் ; தொடர்புகொள் ; உறவுகொள் ; பொருள்கொள் ; பொருத்தமாயிரு, உகந்ததாயிரு, தகவுடையதாயிரு ; நடத்து ; செலுத்து ; வெற்றிகரமாகக் கடந்துசெல், நிறைவேற்று ; நடந்துகொள் ; அளி, வழங்கு ; பங்குகொள், உடனீடுபடு ; கட்ட ஆட்டத்தின் முடிவில் பலகைதுடைத்துக் காய்களை அப்புறப்படுத்து ; (தொ.) bear a hand, உதவு ; bear down, நெருக்கித்தள்ளு, அழுத்து ; bear out, வெற்றியுடன் மீளு ; எண்பித்துக்காட்டு ; bear upon, சார்ந்ததாயிரு ; bear with, பொறுத்துக்கொள்.

bear'able, *a.* பொறுத்துக்கொள்ளக் கூடிய.

bear'-bait'ing, *n.* கரடி வெருட்டு, காடிமீது நாய்களை ஏவிவிட்டு வேடிக்கைபார்க்கும் விளையாட்டு.

beard, *n.* தாடி ; விலங்குகளின் தாடைமயிர் ; சிப்பியின் செவுள்கள் ; கிளிஞ்சில் வகைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் நூல்போன்ற உறுப்பு ; பறவை அலகின் பொடிமயிர் ; சுணை, கூர், புல்கதிர் ; தூகம், கூலக் கதிர்த்தோகை ; கொக்கி வளைவுகளையிறகுத்துய் ; *v.* வெளிப்படையாய் எதிர் ; தாடியைப் பிடித்திழு.

beard'ed, *a.* தாடியுள்ள ; சுணைபூத்த ; தூகம் உடைய ; இறகுத்துய் வாய்ந்த.

beard'less, *a.* தாடியற்ற ; முழுமனிதப் பருவம் அடையாத, இளம்பிள்ளைப் போக்கான, அனுபவமில்லாத.

bear'er, *n.* எடுத்துச்செல்பவர் ; எடுத்துச் செல்வது ; பிணம் சுமப்பவர் ; பல்லக்குத் தூக்குபவர் ; குற்றேவல் புரிபவர் ; கையாள் ; செய்தி அல்லது கடிதம் கொண்டுவருபவர் ; பணமுறி கொண்டு வருபவர் ; (தொ.) bearer company, (படை.) போர்க்களத்தில் காயமுற்றோரைக் கவனித்துப் பேணிக் கொணரும் மருத்துவப்படை.

bear'-garden, *n.* கரடி வெருட்டுக்கான வளைவு ; அமளி மிக்க அவை, அமர்க்களம்.

bear'ing, *n.* நடத்தை, ஒழுகலாறு ; கோலம், நடையுடைத் தோற்றம் ; மரபுவழிச் சின்னக் குறிப்பு ; தொடர்புக் கூறு, நிலை ; திசைக்கூறு, திசைநிலை ; தாங்குதளம் ; *a.* விளைவு தருகிற ; தாங்குகிற.

bear'ings, *n. pl.* உராய்தலைத்தாங்கும் பொறியின் உலுப்புக்கள் ; இசையளவுகள்.

bear'ish, *a.* கரடிபோல் நடந்துகொள்கிற.

bear'leader, *n.* கரடியை வேடிக்கைகாட்டக் கொண்டு வருபவர் ; வெளிநாட்டு உலாவுக்குப் புறப்படும் இளைஞனின் பொறுப்பாசிரியர்.

bear's-breech, *n.* கழுதைமுள்ளி.

bear'skin, *n.* கரடித்தோல் ; மேலங்கிகளுக்கான முரட்டுக் கம்பளித்துணி ; நீண்டு பரந்த மயிர்த்தொப்பி.

bear'-ward, *n.* கரடிகளை வைத்திருப்பவர்.

beast, *n.* விலங்கு, நாற்கால்மிருகம் ; கால்நடைகள் ; ஏறிச்செல்லும் விலங்கு ; சுமைவிலங்கு ; இழுப்புவிலங்கு ; கொடியவர் ; காட்டாள் ; வெறுப்புக்குரியவர் ; (தொ.) The Beast, இயேசுநாதரின் எதிரி ; the beast, மனிதனுக்கு இருக்கும் விலங்கியல்பு, கீழ்ப்பண்பு.

beast'-fa'ble, *n.* விலங்குக்கதை, விலங்குகள் மனிதர்களைப் போலப் பேசும் கட்டுக்கதை.

beast'hood, *n.* விலங்குநிலை, விலங்கியல்பு.

beast'ings, *n.* = beestings.

beast'like, *a.* விலங்கு போன்ற; *adv.* விலங்கினைப்போல.

beast'liness, *n.* விலங்கியல்பு, மிருகத்தனம்; பெருந்திண்டி; பெருங்குடிமயக்கம்; பண்புக்கேடு; வெறுக்கத்தக்க நிலை.

beast'ly, *a.* விலங்கு போன்ற, விலங்கின் செயல்களுள்ள; மனிதர் பயன்படுத்தத் தகுதியற்ற; விலங்குத்தனமாகச் சிற்றின்ப நாட்டமிக்க; அழுக்கடைந்த; விரும்பத்தகாத; *adv.* மிகக் கேடாக, மோசமாக; வருந்தத்தக்க நிலையில்.

beat, *n.* முரசொலி, முரசறைவு, முரசடித்துத் தெரிவிக்கப்படும் அறிவிப்பு; இசைக்குழுத்தலைவரின் கோலசைவு; ஒலி அழுத்தம்; தாளம்; அடிப்பு, துடிப்பு; அடுத்தடுத்து அடிக்கும்போது கேட்கப்படும் ஒலி, மணிப்பொறித் துடிப்பரவம்; காவலர் கடமைச் சுற்று, முறைகாவல்; ஒருவர் வழக்கமாகப் போய்வரும் வழி; வேட்டையாடும் எல்லை; சந்திப்பிடம்; *a.* சோர்ந்துபோன, களைப்படைந்த; மூட்டு வீக்கங் கண்டுள்ள; *v.* அடி; துவை, புடை; தட்டு; ஓழுங்காய் ஓசைபடு, அடுத்தடுத்தடி; மோது; உடை, நைய நொறுக்கு; அடித்து ஊக்கு; ஆட்டு. அலுத்துக் கொள்; தோற்கடி; வெல்; வேட்டைக்காட்டைக் கிளரிக் கலை; கடை, கலக்கு, செய்யமுடியாததாயிரு, ஆற்றல் கடந்ததாயிரு; அடித்துத் தகடாக்கு; தடம்பதியவை; தாளமிடு, கோலால் தாளங்குறி.

beat'en, *a.* அடிபட்ட; தோற்ற; தேய்ந்த, அடித்துத் துவைக்கப்பட்ட; சோர்ந்துபோன; இடுக்கணழிந்த; மனம் வெறுத்துப்போன.

beat'er, *n.* வேட்டை விலங்குகளைக் கலைத்து வெளிக் கொணர்பவர், அடித்துத் துவைப்பதற்குரிய கருவி.

beatif'ic, **beatif'ical**, *a.* தெய்விகமான; பேரின்பம் தரவல்ல.

beatifica'tion, *n.* பேரின்ப நிலை எய்தச்செய்தல்; பேரின்ப நிலை அடைதல்; ரோமன் கத்தோலிக்க சமய குரவர் வரிசையில் சேர்ப்பதில் முதற்படி; இறந்தவர் பேரின்ப நிலையிலிருக்கிறார் என அறிவித்தல்.

beat'ify, *v.* இன்பநிலையிலிருக்கச்செய்; ரோமன் கத்தோலிக்கச் சமயமுறைப்படி பரமண்டலத்தில் நிலைபேறுடைய இன்பம் துய்க்கிறாரென அறிவி.

beat'ing, *n.* தோல்வி; அடித்தல், மோதுதல், ஒறுத்தல்; துடிப்பு; வேட்டை விலங்குகளைக் கிளப்புதல்; மூளையைச் செலுத்தல்.

beat'itude, *n.* விண்ணுலக இன்பம், பேரின்பம்; பழைய முறையிலுள்ள திருக்கோயில்களில் திருச்சபைத் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் பட்டம்.

beat'itudes, *n. pl.* விவிலிய நூலில் மத்தேயுப் பிரிவில் இயேசுநாதர் வகுத்து உரைத்த திருவருட்பேறுகள்.

beau, *n.* பிலுக்கன், பகட்டுக்காரன், ஆகுலநீரன், பெண்களை வட்டமிட்டுத் திரிபவன், காதலன்; *pl.* beaux.

beau geste, (பிர.) *n.* பெருந்தகைமை காட்டும் நடவடிக்கை; பெருந்தன்மையான செயல்.

beau ide'al, *n.* மூல முன்மாதிரி, எடுத்துக்காட்டாக விளங்குவது, இலட்சியம்; சால்பு.

beau'ish, *a.* பகட்டுத்தனமான, பிலுக்கனின் இயல்புள்ள.

beau monde, (பிர.) *n.* நாகரிக உலகம், உவகையர் உலகு.

beaumontage', **beaumontague'**, இரும்பு-மரவேலைகளில் வெடிப்புகளை நிரப்புவதற்கான சேர்மானப் பொருள்.

Beaune, *n.* பிரெஞ்சு தேசத்துப் பர்கண்டியில் (Burgundy) வழங்கும் சீவப்புநிறமான கொடிமுந்திரித் தேறல்வகை.

beaut'eous, *a.* (செய்.) கவினுற்ற.

beauti'cian, *n.* ஒப்பனை செய்பவர், கோலம்செய் நிலையம் வைத்திருப்பவர்.

beaut'ies, *n. pl* அழகிய வாசகங்கள், நயமுடைய எடுகுறிப்புக்கள்.

beautifica'tion, *n.* அணி செய்வித்தல், ஒப்பனை.

beau'tifier, *n.* ஒப்பனை செய்பவர்; அழகளிக்கும் பொருள்.

beaut'iful, *a.* அழகிய, கண்ணுக்கினிய, வனப்புள்ள, செவிக்கினிய, சிந்தைக்கினிய; கருத்தைக் கவர்கிற; மன நிறைவுதருகிற.

beaut'ify, *v.* அழகுபடுத்து, கோலஞ்செய்.

beaut'y, *n.* அழகு, வனப்பு, கண்ணுக்கினிமை, அழகுக்கூறு; விஞ்சிய சிறப்பு, நேர்த்தி; வடிவமைதி, நிற அமைதி; கூட்டிசைவு, செப்பம்; முழுநிற வனப்பு, அழகுப்பிழம்பு; அழகுரு; அழகாரணங்கு; அழகுத்துறை; அழகியர் தொகுதி; மனநிறைவுதரும் அழகுக்கூறு; இனத்தில் நேர்த்திமிக்க ஒன்று; (தொ.) beauty parlour, கோலம்செய் நிலையம், பெண்களுக்குரிய ஒப்பனைமனை; beauty sleep, நள்ளிரவுக்கு முந்திய துயில், புதுக்கிளர்ச்சி விளைக்கும் தூக்கம்; beauty spot, அழகிய எடுத்துக்காட்டுதற்காக முகத்தில் அமையும் மறு அல்லது மச்சம்.

beau'xite, *n.* = bauxite.

beaux yeux, (பிர.) *n.* கவின் கண்கள்; அழகிய அனங்கு.

beav'er[1], *n.* நீர்நாய்; நில நீர்வாழ் எலியுருவ விலங்கு; நீர்நாயின் நுண்மயிர்த்தோலாலான தலைக்கவிகை; நீர்நாயின் நுண்மயிர்த் தோலாலான கையுறை; கனத்த கம்பளித்துணி.

beav'er[2], *n.* போர்க்கவச அமைப்பில் முகத்தின் கீழ்ப் பக்கத்தைக் காக்கும் பகுதி.

beav'er-board, *n.* கட்டிடங்களுக்குப் பயன்படும் நார் அட்டை.

beav'ered, *a.* போர்க்கவசத்தில் முகத்தின் கீழ்ப்பக்கத்தைக் காக்கும் அமைப்புடைய; முகத்தின் கீழ்ப்பகுதி காக்கும் அமைப்புடைய கவசமணிந்த.

beav'erteen, *n.* கண்ணிகள் வாய்ந்த ஈரிழைக்குறுக்குப் பின்னலுடைய பருத்தியாடை வகை.

beav'er-tree, **beav'er-wood**, *n.* நீர்நாய் தின்னும் பட்டை களையுடைய மரவகை.

beav'ery, *n.* நில நீர் வாழ் விலங்குவகையை வளர்க்கும் இடம்.

beblubb'ered, *a.* அழுது உருக்குலைந்த.

be'bop, *n.* கொந்தளிப்பான இசைவகை.

becall', *v.* குறித்துப்பேசு, திட்டு.

becalm', *v.* அமைதிப்படுத்து; காற்றில்லாமல் கப்பலை ஓடாது நிற்கவை.

becalmed', *a.* காற்றின்மையால் அசைவற்று நின்றுபோன.

became', *v.* become என்பதன் இறந்தகால வடிவம்.

because', *adv.*, *conj.* காரணத்தினால், நிமித்தமாக; (தொ.) because of, முன்னிட்டு.

beccafic'o, *n.* இத்தாலியர்கள் விரும்பியுண்ணும் சிறிய நாடோடிப் பறவைவகை; *pl.* beccafic'os.

be'chamel, *n.* வெண்ணெய் - மாவு - பாலேடு முதலியவை கலந்துள்ள வெள்ளைக்குழம்பு வகை.

bechance', *v.* தற்செயலாக நேர்; *adv.* தற்செயலாய், எதிர்பாராமல்.

becharm', *v.* மயக்கு, மருட்டு.

beche-de-mer, (பிர.) *n.* சீனமக்கள் விரும்பியுண்ணும் கடல்வாழ் கம்பளிப்பூச்சி வகை.

beck[1], *n.* சிற்றாறு, மலைப்பகுதியிலுள்ள ஓடை.

beck[2], *n.* சைகை, தலையசைப்பு; விரல் அசைப்பு; குறிப்பாக உணர்த்தப்படும் ஆணை; *v.* சைகை செய்; தலை அல்லது விரல் அசைத்துக் கூப்பிடு.

beck'et, *n.* (கப்.) தளர்ந்த கயிறுகள், பாய்மரக் கயிறுகளைப் பிணித்திறுக்குவதற்கான அமைப்பு.

beck'on, v. அழைக்கும் அடையாளம் காட்டு, தலையை அசை; ஊமைச்சைகை செய்.

becloud', v. மேகங்களினுல் மறை; மங்கவை, நிழலடி.

become', v. உண்டாகு; நேர்; ஆகத்தொடங்கு; பொருந்து, தகுதியாயிரு; அணிசெய், நயம்படத்தோன்று.

becom'ing, a. தக்க, ஏற்ற; பொருந்துகிற, இசைவான, நன்கு இணங்குகிற.

Becque'rel rays, n. pl. கதிரியக்க நுண்மங்கள் உமிழும் கதிர்கள்.

becurl', v. சுருள்.

bed', n. படுக்கை; கட்டில்; விலங்குகளின் பாயல்; படுகை; கடல் ஆறு ஆகியவற்றின் அடிப்பரப்பு; பாத்தி; கிளிஞ் சில்; கோற்பந்தாட்ட அடித்தட்டு; பீரங்கிவண்டியின் உடற் பகுதி; (மண்.) நில அடுக்கு, அடை, படலம்; திருமண இணைவு; மன்றப்படுக்கை; மண உரிமைக் கூடப்பாடுகள்; v. படுக்கை போடு; படுக்கவை; பள்ளி கொள்; கூடிமுயங்கு; பாத்தியிற் பயிரிடு, நடவுசெய்; பதித்துவை; இடையீடாக அமை, இடையடுக்காக்கு; (தொ.) bed of roses, பூம்படுக்கை, இனிய இடம், இன்பப் பணி யிடம்; bring to bed, மகப்பேறுறுவி; make a bed, படுக்கை விரிப்புக்களை அமைவுபடுத்து.

bedab'ble, v. அழுக்குநீர் அல்லது குருதிகொண்டு தெறி, நனைவி; கறைப்படுத்து.

bedad', *int.* ஆண்டவன் பெயரால், கடவுள் ஆணையாக.

bedagg'le, v. சேற்றினூடாக இழு, இழுத்து அழுக்காக்கு; சேறுபுரட்டு.

bedaub', v. அப்பு; வண்ணம் பூசு, அழுக்காக்கு; பகட் டாக நடுத்து.

bedaze', **bedazz'le**, v. கண்கூசவை, மேம்பட்ட ஒளியுடன் பகட்டு, மலைக்கவை, ஆற்றல்காட்டி அடக்கு.

bedazz'lement, n. மலைப்பூட்டுதல்.

bed'bug, n. மூட்டுப்பூச்சி.

bed'chamber, n. பள்ளியறை; (தொ.) Lord of the bed chamber, Lady of the bed chamber, அரண்மனைப் பள்ளி யரங்கப் பணிமுதல்வர்.

bed'-closet, n. பள்ளியறையாகப் பயன்படும் உள்ளறை.

bed'-clothes, n. படுக்கைக்குரிய உடைகள்.

bed'cover, n. படுக்கையின் விரிப்பு, படுக்கை விரிப்பவர்; நாற்று நடுபவர்.

bedd'er, n. மலர்ப்பாத்தியில் நடுவதற்குரிய நாற்று.

bedd'ing, n. படுத்தல்; படுக்கை வசதி; படுக்கைப்பொருள்கள்; மெத்தை விரிப்புக்கள்; கால்நடைகளின் கிடைப்பட்டி; அடிப்படலம்; அடியடுக்கு, அடித்தளம்; (மண்.) அடுக் கமைவு, அடையடுக்கு.

bedeck', v. ஒப்பனைசெய், கோலம் பண்ணு, அணிசெய்.

bed'eguar, n. மலர்ச்செடி வகைகளின் பூச்சி துளைப்பதனுல் உண்டாகும் பாசி போன்ற கரணை.

bed'el, **bedell**, n. ஆக்ஸ்போர்டு (Oxford) கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகங்களில் தண்டகராகப் பணி செய்பவர்.

bedev'il, v. பேய்த்தனமாக நடத்து, கொடுமைசெய்; நாய் பேயென்று கூறித்திட்டு; பேயாட்டம் ஆட்டு; பேயினின்று பிடுபடு; கெடு, பாழாக்கு; குழப்பு.

bedev'illed, a. கேடுகெட்ட, பாழான, பேய்பிடித்த, பேய்த் தனமான.

bedev'ilment, n. பேய்பிடித்தல்; தாங்க முடியாத தொல்லை; பழிசேடு, கலக்கம்.

bedew', v. பனித்துளியால் நனை; துளிசிதறு.

bed'fast, a. படுக்கையாய்க் கிடக்கிற.

bed'fellow, n. படுக்கைப் பங்காளி, மிக நெருங்கிய கூட்டாளி.

bedim', v. மங்கலாக்கு, நிழலடிப்புச்செய்.

bediz'en, v. பகட்டாக உடுத்து.

bediz'ened, a. பகட்டாக உடுத்துள்ள.

bed'key, n. கட்டில் சட்டங்களைப் பூட்டிக் கழற்றுவதற் கான கருவி.

bed'lam, n. பித்தர் காப்பகம், உன்மத்தர் மருத்துவமனை; a. பித்தர் விடுதிக்குரிய.

bed'lamism, n. பைத்தியக்காரத் தன்மை.

bed'lamite, n. பித்தன், உன்மத்தன்; a. பித்துப்பிடித்த.

Bed'lington, **Bedlington terrier**, n. குறுமயிரும் சிறு தலையும் நீளுடலும் உடைய வேகமிக்க வீரக்கேளிக்கை களுக்குரிய நாய்.

bed'maker, n. படுக்கையை ஒழுங்கு செய்பவர்.

bed'-of-hon'our, n. மாண்ட புகழ்வீரர் கல்லறை.

bed'-of-just'ice, n. பிரான்சு (France) நாட்டு மாமன்றத் தில் உள்ள அரசரின் அரியணை; அரசர் திருவிருக்கை மேற்கொள்ளும் மாமன்றக்கூட்டம்.

bed'ouin, n. *sing.*, *pl.* அராபிய நாடோடி; a. அராபிய இனத்துக்குரிய; நாடோடியான, கூடாரமடித்து வாழ்கிற.

bed'pan, n. நோயாளியின் கழிகலம், கனற்சட்டி.

bed'-plate, n. பொறியின் அடித்தட்டு.

bed'post, n. கட்டில்கால், படுக்கையின் மூலை உதைவு.

bedrab'bled, a. மழையாலும் சேற்றாலும் அழுக்கடைந்த.

bedrag'gle, v. சகதியிலிட்டிழு, உடுப்பு முதலியவற்றைச் சேற்றில் இழுத்து அழுக்காக்கு.

bedrench', v. நீரில் நனை, ஈரமாக்கு.

bed'rid, **bed'ridden**, a. பாயும் படுக்கையுமாய்க் கிடக்கிற; மூப்பினுல் தளர்ந்த; நோயுற்ற; ஆற்றல் ஒடுங்கிய, இளைத்துப்போன.

bed'rock', n. அடிகிலப்பாறை, புறத்தே காணப்படுபவை களுக்கு அடியிலுள்ள கெட்டியான பாறை; மூலக்கோட் பாடு; மிகக்குறைபடு நிலை; இழிவுநிலை; a. அடித்தளம் சார்ந்த; எல்லாவற்றிற்கும் அடியிலுள்ள.

bed'room, n. பள்ளியறை, படுக்குமிடம்.

bedrop', v. துளிகளாக விடு; தெளி.

bedropped', **bedropt'**, a. துளிகளாகத் தெளிக்கப்பட்ட, தூவப்பட்ட.

bed'side, n. படுக்கையின் பக்கம்; நோயாளியின் படுக்கை மருங்கு; a. படுக்கை அருகான; படுக்கை இடத்துக்குரிய; (தொ.) bedside book, துயில்வராத இரவுகளில் படிப்பதற்குத் தகுதியான சுவடி; bedside manner, நோயாளியின் முன் னிலையில் மருத்துவர் நடந்துகொள்ளும் முறை.

bed'-sitt'er, **bed'-sitt'ing-room**, n. படுப்பதற்கும் அமர்வ தற்குமாகப் பயன்படும் அறை.

bed'sore, n. படுக்கைப்புண், நீண்டகாலம் நோயுற்றுப் படுக்கையில் கிடப்பதனுல் தோன்றும் புண்.

bed'spread, n. படுக்கைப் பகல்நேர மேல்விரிப்பு.

bed'-staff, n. படுக்கைச்சட்டம்; முரட்டுத்தடி; *pl.* bed'-staves.

bed'-stead, n. கட்டில்; படுக்கைச் சட்டம்.

bed'straw, n. முன்பு படுக்கையாகப் பயன்படுத்தப்பட்ட புல்வகை.

bed'-table, n. படுக்கையிலிருப்பவர் பயன்படுத்துவதற்கான மேசை.

bed'tick, n. பஞ்சடைப்பதற்குரிய படுக்கை உறை.

bed'time, n. படுக்கும் வேளை, துயில்கொள்ளும் நேரம்.

beduck', v. நீருக்குள் அமிழ்த்து.

bedung', v. எருவிடு; சாணம் பூசி அழுக்காக்கு.

bedust', v. புழுதி அளை.

bed'ward, **bed'wards**, *adv.* படுக்கை இருக்கும் திசையில்; படுக்கைநேரம் நோக்கி.

bedwarf', *v.* குள்ளமாக்கு ; குட்டையாக்கு.

bedye', *v.* சாயமிடு ; கறைப்படுத்து.

bee, *n.* தேனீ, சுரும்பு, தும்பி, வண்டு ; வண்டுபோன்ற பூச்சி வகை ; கவிஞர் ; சொத்தியர், சுறுசுறுப்பாக வேலை செய்பவர் ; கூடியுழைப்பவர் ஈட்டம் ; கூட்டுக் களியாட்டக்குழு ; (தொ.) a bee in one's bonnet, ஒன்றைக் குறித்துப் பித்துக்கொள்ளும் மனப்போக்கு.

bee'-bread, *n.* மலர்த்துகள், வண்டுணவு.

beech, *n.* (தாவ.) புங்கமரம் ; புங்கமரக்கட்டை.

beech'-drops, *n.* புங்கமர வேர்களை அழிக்கும் ஒட்டுண்ணிச் செடியினத்தின்வகை.

beech'en, *a.* புங்கமரத்தால் செய்யப்பட்ட.

beech'-fern, *n.* ஈரச்சுவர் போன்ற இடங்களில் வளரும் கூரல் புதர்வகை.

beech'-mar'ten, *n.* வெள்ளை அடிப்பக்கத்தையுடைய கீரியினத்தின்வகை.

beech'mast, *n.* புங்கங்கொட்டை.

beech'-oil, *n.* புங்க நெய்.

bee'-eat'er, *n.* பஞ்சுவிட்டான், தேனீ போன்ற பூச்சிகளைத் தின்னும் பறவைவகை.

beef, *n.* மாட்டிறைச்சி ; குதிரை முதலியவற்றின் இறைச்சி ; இறைச்சிக்காகக் கொழுக்க வைக்கப்பட்ட மாடுகள் ; கொழுக்க வைக்கப்பட்டுள்ள மாடுகளின் உயிரற்ற உடலம் ; தசை ; தசைவலு.

beef'-brained, *a.* அறிவற்ற.

beef'-brew'is, *n.* மாட்டிறைச்சிச்சாறு.

beef'eater, *n.* மாட்டிறைச்சி தின்பவர் ; உண்ணிகளைக் கொத்தித் தின்னும் சிறு பறவைவகை ; மெய்க்காவல் படையினர் ; லண்டன் சிறைக்கோபுரக் (Tower of London) காவலர்.

beef'-ham', *n.* மாட்டிறைச்சி உப்புக்கண்டம், மாட்டிறைச்சி உணங்கல்.

beef'iness, *n.* மாட்டிறைச்சி போன்றிருத்தல் ; கொழுமழுப்பு ; திண்ணிய தன்மை ; உணர்ச்சியின்மை.

bee'-flower, *n.* தேனீக்களால் மலர்த்துகள் கொண்டுவந்து பொலிவூட்டப்படும் மலர்.

beef'steak, *n.* வறுப்பதற்கான பெரிய மாட்டிறைச்சிக் கண்டம்.

beef'tea', *n.* கொதித்து வடிகட்டிய மாட்டிறைச்சிச்சாறு, நோயாளிகட்கு ஊக்கந்தரும் சூப்பி உணவுவகை.

beef'-witt'ed, *a.* அறிவுக்கூர்மையற்ற, முட்டாளான.

beef'-wood, *n.* சவுக்கு முதலிய மரங்களின் செந்நிறக்கட்டை.

beef'y, *a.* மாட்டிறைச்சி போன்ற ; வன்பொருளான, கெட்டியான ; கொழுத்த ; தசைவலிமிக்க ; உணர்ச்சியற்ற.

bee'-glue, *n.* தேனீப்பசை, தேனீக்கள் மரங்களினின்றும் திரட்டி ஒட்டுப்பொருளாகவும் மெருகுநெய்யாகவும் பயன்படுத்தும் பசைப்பொருள்.

bee'hive, *n.* தேன்கூடு ; தேனீ வளர்க்கும் பெட்டி ; (தொ.) beehive house, பண்டைய குவிமாட வீடு ; beehive tomb, குவிமாட வடிவமுள்ள பழங்காலக் கல்லறை.

bee'house, *n.* தேனீ வளர்ப்பிடம்.

bee'keeper, *n.* தேனீ வளர்ப்பவர்.

bee'keeping, *n.* தேனீ வளர்ப்பு.

bee'-kite, *n.* தேனீ - குளவி முதலியனவற்றைத் தின்னும் வல்லூறு போன்ற பெரிய வேட்டைப்பறவை.

bee'-line, *n.* நேர்வழி.

Beel'zebub, *n.* சாத்தான், பேய்.

bee'-master, *n.* தேனீ வளர்ப்பவர்.

bee'-moth, *n.* இளந்தேனீக்களைக் கொல்லும் முட்டைப்புழுக்களை ஈனும் அந்துப் பூச்சிவகை.

been, *v.* be என்பதன் முடிவெச்சம்.

Bee'-or'chis, *n.* தேனீ வடிவமைந்த மலருடைய செடிவகை.

beer [1], *n.* வாற்கோதுமைக் கள் ; புளிப்பேறிய குடிவகை ; (தொ.) beer and skittles, குடித்துக் கூத்தடித்தல், சோம்பர் வாழ்வு ; bitter beer, நறுமணம் சுவை ஊட்டப்பெற்ற வாற்கோதுமைக் கள்.

beer [2], *n.* பாவு நூல் முடிகளின் கூறு.

beer'-engine, *n.* மதுவை மிடாக்களிலிருந்து மேலே எடுப்பதற்கான பொறி.

beer'-gar'den, *n.* மதுவகைகளும் சிற்றுண்டிகளும் பரிமாறப்படும் மேசை வரிசைகளையுடைய தோட்டம்.

beer'-house, *n.* மதுக்கடை.

beer'iness, *n.* கள்ளுண்டநிலை.

beer'-mon'ey, *n.* ஏவலாளருக்கு மதுவகைகளுக்குப் பதிலாகக் கொடுக்கும் சம்பளப்படி உதவித்தொகை.

beer'y, *a.* கட்குடியால் பாதிக்கப்பட்ட ; வாற்கோதுமைக் கள்ளுக்குரிய.

bee'-skep, *n.* வைக்கோலால் ஆன தேனீக்களின் கூடு.

bees'tings, *n. pl.* சீம்பால், பசுவின் ஈன்றணிமைப்பால்.

bees'wax, *n.* தேன்மெழுகு ; *v.* தேன்மெழுகு கொண்டு மெருகிடு.

bees'-wing, *n.* மண்டிகப்படலம், நீடித்த புளிப்பேறிய தேறல்களில் தோன்றும் ஆடை.

bees'-winged, *a.* மண்டிகப்படலம் தோன்றச் செய்யும் அளவுக்குப் பழமை வாய்ந்த.

beet, *n.* அக்காரக்கிழங்கு, தித்திப்பான சாறுடைய கிழங்கு தரும் செடிவகை.

beet'-fly, *n.* அக்காரக்கிழங்குச் செடிகளுக்குக் கேடிழைக்கும் முட்டைப்புழுக்களை ஈனும் ஈ வகை.

bee'tle [1], *n.* கொட்டாப்புளி, வல்லீட்டிக்குற்றி ; *v.* கொட்டாப்புளியால் அடி.

bee'tle [2], *n.* வண்டு ; விட்டில், கிட்டப்பார்வையுள்ளவர் ; (தொ.) black beetle, கரப்பான்பூச்சி.

bee'tle [3], *a.* மயிரடர்ந்த, கவிந்த ; *v.* புடைத்திரு, பிதுங்கியிரு, கவிந்து தொங்கு ; ஊழ்போன்று அழிக்க அற்றம்பார் ; (தொ.) beetle brow, கவிந்த புருவங்கள்.

bee'tle-brain, *n.* மடையன்.

beet'le-browed, *a.* அடர்ந்து தொங்கும் புருவங்களையுடைய.

beet'le-crusher, *n.* பெரிய மிதியடி ; பாரிய காலடி ; ஊர்க் காவலர் ; காலாட்படையினர்.

beet'le-eyed, *a.* குருடான.

bee'tlehead, *n.* முட்டாள்.

bee'tleheaded, *a.* அறிவு குறைந்த.

beet'ling, *a.* கவிந்துள்ள, உந்தலான, முன்வந்து தொங்குகிற.

beet'root, *n.* அக்காரக்கிழங்கு வகை.

beet'-sugar, *n.* அக்காரக்கிழங்கிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை.

beeves, *n. pl.* கால்நடைகள், எருதுகள்.

befall', *v.* நிகழ், நேர், நேரிடு ; நேர்படு, வந்தெய்து ; *p. p.* befall'en ; *p. t.* befell'.

befit', *v.* ஏற்புடைத்தாயிரு, தகுதியாகு, பொருந்து ; கடப்பாடு ஆகு ; உரிமை ஆகு.

befitt'ing, *a.* பொருந்துகிற.

befog', *v.* மூடுபனியினால் கவி ; மறை.

befool', *v.* முட்டாளாக்கு, ஏமாற்று, மூடன் எனக்கருதி நடத்து.

before', *adv.* முன்னிலையில்; முற்பட, முந்தி; முன்னுட்களில், முன்பு; *rel. adv.* முன்னுல், முன்பு; *prep.* எதிரில்; முன்பாக; முந்திக்கொண்டு; முன்னிலையில்; கண்காண; அறிவுடன்கூட, முற்பட்டு: விட, மேம்பட, முன்னுரிமைப்பட; சென்ற காலத்தில்; முன்னுட்களில்; மேம்பட்ட; (தொ.) before Christ (B.C), கிறித்துவுக்கு முன் (கி. மு.)

before'hand, *adv.* முன்னரே, முன்னதாக; குறித்தகாலத்துக்கு முன்; எதிர்நோக்கி; முன்னேற்பாடாக; தேவைகளை முன்னதாக நிறைவு செய்துகொண்டு; (தொ.) beforehand with the world, கையில் பணமுடன்.

before'-men'tioned, *a.* மேற்குறிப்பிட்ட.

before'time, *adv.* முற்காலத்தில்.

befoul', *v.* அழுக்காக்கு, கெடு.

befriend', *v.* உதவு, ஆதரி; நட்புக்காட்டு, நேசங்கொள்.

befringe', *v.* ஓரங்களில் குஞ்சமிட்டு ஒப்பனைசெய்.

befudd'le, *v.* வெறிமயக்கமுறச் செய்.

beg, *v.* இர, பிச்சைகேள், பிச்சையெடுத்துப் பிழை; வேண்டு, இரந்துகேள்; மன்றாடு; குறையிர; உண்மையென்று வைத்துக்கொள்; (தொ.) beg off, மன்றாடிக்கேட்டு விடுதலை வாங்கிக் கொடு; go a-begging, go begging, மன்றாடித் தண்டம் முதலியவற்றிலிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொடு.

begad', *int.* கடவுள்மேல் ஆணை!

began', *v.* begin என்பதன் இறந்தகாலம்.

begem', *v.* மணிக்கல் பதிக்கச்செய், இரத்தினக் கற்களைக் கொண்டு ஒப்பனை செய்.

beget', *v.* ஈன்றெடு, பெறு; தோற்றுவி; தோன்ற ஏதுவாயிரு, விளைவி.

begett'er, *n.* தோற்றுவிப்பவர்; தந்தை; தோற்றுவிக்கும் நிமித்த காரணம்.

begg'ar, *n.* இரவலர், பிச்சைக்காரர்; வறியவர், ஏழை; கீழ்நிலையினர்; சிறியவர்; *v.* வறியராக்கு, இரவலர் நிலைக்குக் கொண்டுவா; வறிதாக்கு, போதாதாக்கு; (தொ.) beggar all description, வருணனை கடந்த பண்புடையதாயிரு.

begg'ardom, *n.* பிச்சைக்காரர் உலகு, இரவலர்குழாம்.

begg'arliness, *n.* இலம்பாடு, நல்குரவு, இழிதகவு, அற்பத்தனம்.

begg'arly, *a.* நல்கூர்ந்த; அறிவுகுறைந்த; இழிந்த, அற்பத்தனமான; கஞ்சத்தனமான; பயனற்ற; *adv.* அற்பத்தனமாக.

begg'arman, *n.* இரவலன்.

begg'ar-my-neigh'bour, *n.* சீட்டாட்டவகை, ஒருவர் மற்ற எல்லாருடைய சீட்டுக்களையும் தன் கைவசப்படுத்திக் கொள்ளும்வரை ஆடும் ஆட்டம்.

begg'ary, *n.* கடுவறுமை.

begg'ing, *n.* பிச்சையெடுத்தல், பிச்சைக்காரத் தொழில்; *a.* பிச்சைகேட்கிற.

begift', *v.* பரிசுகள் நல்கு.

begild', *v.* பொன்மெருகிடு; பொன் தகடு போர்த்து, பொன் வேய்.

begin', *v.* தொடங்கிவை, முதற்செயல் நிகழ்த்து; முதற் கண் எடுத்துக்கொள்; புருமுகஞ்செய், தோற்றுவாய்செய், செயல் தலைப்படு; தொடங்கு; பிறப்புறு, உண்டாகு, தோன்று; தோற்றங்கொள்.

beginn'er, *n.* தொடங்குபவர்; பணி பயில்பவர், தொடக்கக் கல்வி கற்பவர்.

beginn'ing, *n.* செயலாற்றத் தொடங்குதல்; தோற்றுவாய், தொடக்கம்; தோற்றக்காலம்; கருமுதல், பிறப்பு, மூல வடிவம்; மூலம்.

beginn'ingless, *a.* தோற்றுவிக்கப்படாத, தொடக்கமற்ற.

begird', *v.* கச்சைகட்டு; வரிந்து சுற்று; சூழ், வளை.

begird'ed, begirt', *v.* begird என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவங்கள்.

begloom', *v.* சோர்வூட்டு, சோகம் பரப்பு.

begnaw', *v.* கரம்பு அரித்துத்தின்னு.

begone', *int.* போய்விடு, ஒழிந்துபோ, போய்த்தொலை.

begon'ia, *n.* அகவிதழ்கள் இன்றி வண்ண அலர்வட்ட முடைய செடிவகை.

begor'ra, begor'rah, *int.* கடவுள் ஆணையாக.

begot', *v.* beget என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

begot'ten, *v.* beget என்பதன் முடிவெச்ச வடிவம்.

begrime', *v.* புழுதி படியவை, மாசுபடுத்து.

begrudge', *v.* கறுவு, பொறுப்பின்மை காட்டு, பொருமை கொள்.

beguile', *v.* ஏமாற்று; மருட்டு, வசியப்படுத்து, வேடிக்கைக் காகப் பராக்குக்காட்டு.

beguile'ment, *n.* வஞ்சித்தல்.

beguin, (பிர.) *n.* beguine என்பதன் ஆண்பால்.

beguinage, (பிர.) *n.* நெதர்லாந்தில் (Netherlands) நோன்பு மேற்கொள்ளாத துறவுச்சார்பற்ற கன்னியர் தங்கும் நிலையம்.

beguine, (பிர.) *n.* நெதர்லாந்தில் நோன்பு மேற்கொள்ளாத துறவுச்சார்பற்ற கன்னிமாடத்துப் பெண்.

beg'um, (உரு.) *n.* முகம்மதிய அரசி; முஸ்லீம் பெருங்குடியணங்கு.

begun', *v.* begin என்பதன் முடிவெச்ச வடிவம் (ஒரோவழி இறந்தகாலம்).

behalf', *n.* சார்பு, நலன், ஆதரவு; நிமித்தம், காரணம் பொருட்டு.

behave', *v.* நடந்துகொள், செயலாற்று, ஒழுகு; நடத்து; நல்லமுறையில் நடந்துகொள்; பணியாற்று.

behav'iour, *n.* நடக்கை; ஒழுகலாறு; ஒழுக்கம், நல்லொழுக்கம்; பிறரை நடத்தும் முறை; வாழ்க்கையின் போக்கு; இயங்குகிற முறை, தொழிற்படுகிற வகை.

behav'iourism, *n.* ஒழுக்கக்கொள்கை, அகப்பண்புகளுக்குப் புறவாழ்வுக்கூறுகளே காரணம் என்ற கோட்பாடு; (உள.) புறக்கூறுபாடுகளைக் கொண்டும் ஒழுக்கத்தைக் கொண்டும் ஒருவரைப்பற்றி ஆராயும் முறை.

behav'iourist, *n.* அகப்பண்புகளுக்குப் புறவாழ்வுக் கூறுகளே காரணம் என்னும் கோட்பாட்டாளர்; (உள.) புறவாழ்வுக் கூறுபாடுகளை ஆராய்ந்து அகத்தின் பண்புகளை உணர முயலுபவர்.

behead', *v.* தலையை வெட்டு, தலைவாங்கும் தண்டனையளி, தூக்கிடு.

behead'ing, *n.* தலைவாங்கல், தூக்கிடல்.

beheld', *v.* behold என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

behem'oth, *n.* (விவி.) மிகப்பெரிய பழங்கால விலங்குவகை, நீர்ப்பெரும் பகடு.

behest', *n.* (செய்.) கட்டளை.

behind', *n.* பின்புறம்; பின்பகுதி, பிட்டம்; *adv.* பின்னால், பின்பக்கமாக; பின்னேக்கி; பின்னணியில்; பின்பு, பிற்பட; சென்ற காலத்தில், முந்தி; *prep.* பின்னுல், ஆதரவாக; பின்பற்றி, அடுத்து; அப்பால், தொலைப்பக்கத்தில்; பிந்தி; அடுத்தபடியாக; அடுத்த கீழ்ப்படியில்; பின்னிடைந்து; மறைந்து; மீப்பாக, எச்சமாக, சேமிப்பாக, இருப்பாக.

behind'-door', *a.* கரவான, கள்ளத்தனமான.

behind'-hand, *a.* பிற்பட்ட, பிந்திய; பிந்துகிற, காலந் தாழ்த்துகிற; காலத்துக்கொவ்வாத, காலநிலைக்குப் பிற்பட்ட, பழமைப்பட்ட; வாய்ப்பு வளமற்ற; பாக்கி வைத்துள்ள; *adv.* காலப்பிற்பாடாக, நிலுவையாக.

behold', *v.* பார், நோக்கித் தெரிந்துகொள்; அறி; கவனி *int.* அதோ பார்!

behol'den, *a.* ஒருவருக்குக் கடமைப்பட்ட ; நன்றிக் கடப் பாடுடைய.

behoof', *n.* நலன், பயன், ஆதாயம்.

behoove', *v.* = behove.

behove', *v.* கடமையாயமை, ஏற்புடைத்தாயிரு, இன்றி யமையாததாகு.

behowl', *v.* ஊளையிட்டு நையாண்டி செய், ஊளையிட்டு அவமதி.

beige, *n.* சாயமிடாத கம்பளித்துணி.

be'ing, *n.* இருத்தல், இருப்பு ; மெய்ம்மை, நிலைபேறுடைய ஒன்று ; அமைப்பு ; இயல்பு ; உயிருரு, ஆள் ; பொருண்மை.

beinked', *a.* மையூசப்பட்ட.

beje'wel, *v.* அணிகளால் ஒப்பனை செய்.

bekiss', *v.* நிரம்ப முத்தங்கொடு.

beknave', *v.* கயவனென்று அழை ; கயவனெனக் கருதி நடத்து.

bel, *n.* ஒலிகள்-மின்னோட்டங்கள் முதலியவற்றின் செறிவினை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான அளவை.

belab'our, *v.* நையப்புடை.

belace', *v.* சரிகையைத்துக் கோலம் செய்.

belat'ed, *a.* மிகுநேரம் கழித்து வருகிற ; பிற்பட்ட, காலங் கடந்த, பழம்பாணியிலுள்ள ; அகாலமாய்விட்ட நிலையி லுள்ள, பயணத்தினிடையே இரவாய்விட்ட.

belaud', *v.* போற்றிப்புகழ்.

belay', *n.* கயிற்றை இறுக்கிக் கட்டுவதற்குரிய ஒரு முழுச் சுற்று ; முழுச்சுற்றுக்குரிய பொருள் ; *v.* இறுக்கிக்கட்டு ; அணிகலன் பூட்டு ; தடு ; முற்றுகை யிடு ; வழிப்பறிசெய் ; *int.* போதும் ! நிறுத்து !

bel can'to, (இத்.) *n.* அருந்திறல் உத்தியுடன் ஓசைநயம் நிரம்பப் பாடுதல்.

belch, *n.* நேக்கெறிதல் ; ஏப்பம் ; பீரங்கி-எரிமலை முதலியவை வெளிப்படுத்தும் ஒலி ; அனற்கொழுந்து, கொந்தழல் ; *v.* ஏப்ப மிடு, நேக்கெறி ; குடித்துவிட்டு வசைக்கூச்சலிடு ; பீரங்கியின் வெடிதீர் ; எரிமலையின் புகையனல் கக்கு.

bel'cher, *n.* பலநிறக் கழுத்துக்குட்டை.

bel'dam, bel'dame, *n.* பாட்டி, முதியவள்.

beleag'uer, *v.* முற்றுகையிடு.

beleag'uerment, *n.* முற்றுகை.

bel'emnite, *n.* மரபற்றுப்போன கணவாய் மீனின் கூர்முனை யுடைய புதைபடிவ எலும்பு.

bel esprit, (பிர.) *n.* சொல் வித்தகர்.

bel'fried, *a.* மணிக்கூண்டு உடைய.

bel'fry, *n.* மணிக்கூண்டு ; திருக்கோயில் கோபுரத்தில் மணி தொங்கவிடுவதற்கான இடம் ; இடைக்காலத்தில் கோட்டை களைத் தாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரத்தினாலான இயங்கு கோபுரம்.

bel'ga, *n.* பெல்ஜிய (Belgium) நாட்டு முக்கிய நாணயம்.

Bel'gian, *n.* பெல்ஜிய (Belgium) நாட்டைச் சேர்ந்தவர் ; *a.* பெல்ஜியத்துக்கு உரிய.

Bel'gic, *a.* நெதர்லாந்துக்கு (Netherlands) உரிய ; பண்டைப் பெல்ஜிய இனத்தவருக்குரிய.

Belgrav'ia, *n.* லண்டன் நகரைச் சேர்ந்த புதுநாகரிகக் குடி யிருப்பிடம்.

Belgrav'ian, *a.* லண்டன் நகரைச் சேர்ந்த பெல்கிரேவியா (Belgravia) என்னும் புதுநாகரிகக் குடியிருப்புக்குரிய ; நாகரிக வாழ்வுக்கு உரிய ; ஆரவார முறையில் அமைந்த.

Bel'ial, *n.* பேய், தியவை புரியும் ஆவியுரு.

belie', *v.* பொய்ப்படுத்து, பொய்யாக்கு, பொய்யெனக் காட்டு ; ஒன்றைப்பற்றித் தவருன கருத்துத் தெரிவி ; நிறைவேற்றத் தவறு ; தகுதியை இழ ; போலியாக்கு.

belief', *n.* நம்பிக்கை ; கோட்பாடு ; எண்ணம், கருத்து ; உணர்வு ; உண்மையென ஒப்புக்கொள்ளுதல் ; நம்பிக்கை வைத்துள்ள பொருள் ; சமயம்.

believ'able, *a.* நம்பத்தகுந்த.

believe', *v.* நம்பு. ஆளிடம் நம்பிக்கைகொள் ; சொல்லில் அல்லது கருத்தில் நம்பிக்கைவை ; உண்மையென ஒப்புக்கொள் ; பயனுள்ளதெனக் கருது ; நிலைபேறுடையதென எண்ணு ; கருத்தில்கொள் ; மதிப்பு நலமுடைமை கருது ; (தொ.) make believe, பாசாங்கு செய்.

believ'er, *n.* நம்புபவர் ; சமய ஏற்பாளர் ; மெய்க்கோட்பாட் டாளர்.

believ'ing, *a.* நம்புகிற, நம்பிக்கை கொண்டிருக்கிற.

belike', *adv.* ஒருவேளை (ஏளனக்குறிப்பு).

Belisha' beac'on, *n.* நடந்து செல்பவர்கள் தெருவைக் கடத் தற்குரிய இடத்தைக் குறிப்பதற்காக உச்சியில் மஞ்சள் கோளத்துடன் அமைக்கப்பட்டுள்ள கம்பம்.

belit'tle, *v.* பொருளல்லவென்று கருது ; சிறுமைப்படுத்து, இகழ், புறக்கணி, மதிப்பைக் குறை, சிறிதாகத் தோற்றுவி.

bell [1], *n.* மணி ; மணிபோன்ற வடிவுடைய மலரின் அல்லி வட்டம் ; மணியோசை ; தூணின் பொதிகை ; கடல் மூழ்கு பவர் வழங்கும் மணிக்கூண்டு ; ஆய்கள மணிக்கவிகைச்சாடி ; இசைப்பேழைகளின் ஒலிமுகவாய் ; மணியோசையின் குறிப்பு ; (கப்.) கடிகாரத்தில் மணி - அரைமணி முதலியவற்றைக் காட்டும் மணியடிப்போசை ; *v.* மணி கட்டு ; (தொ.) bear the bell, carry off the bell, முதற்பரிசைத் தட்டிக் கொண்டு போ ; bell the cat, துணிவுச் செயலில் முதன்மை கொள்.

bell [2], *n.* ஆண்மான் இணைவிழைச்சுக் கிளர்ச்சியுற்றிருக்கும் போது வெளிப்படுத்தும் ஒலி ; *v.* பாலினக்கிளர்ச்சியுற்றிருக் கும் ஆண்மானைப்போல் ஒலியுண்டாக்கு ; பெருங்கூச்சலிடு ; உக்காரம் போடு, உறுமு.

bell [3], *n.* நீர்க்குமிழி.

belladonn'a, *n.* கொடிய நச்சுப்பூண்டு வகை ; (மரு.) நச்சுப் பூண்டிலிருந்து எடுக்கப்படும் மருந்து வகை.

bell'armine, *n.* தாடியுடைய முகத்தின் உருவம் நீட்டப்பெற் றுள்ள பெருவயிறுடைய குண்டிகை.

bell'-bottomed, *a.* கணுக்காலை நோக்கி விரிவடைகிற.

bell'-boy, *n.* குற்றேவலன்.

bell'-buoy, *n.* எச்சரிக்கை மணிமிதவை, அலை அசைவு களினால் அடிக்கப்பெறும் மணி பொருத்தப்பெற்றுள்ள கடல் மிதப்புக்கட்டை.

bell'cote, *n.* (க-க.) மணிமாடம், கட்டிடச் சுவர்களிலிருந்து புறந்துருத்திய மணிகள் பொருத்தப்பெற்றுள்ள சிறு கட்டுக் கோப்பு.

bell'-crank, *n.* இரட்டை நெம்புகொண்டி.

belle, *n.* அழகி, அணங்கு ; அழகரசி.

belles-lettres, (பிர.) *n.* கவின்கலை நயம் பொருந்திய உயர் நடை இலக்கியம் ; கவின்கலை இலக்கிய எழுத்தாண்மை ; கவின்கலை இலக்கியப் பயிற்சி.

bell'eter, *n.* மணிகளை வார்ப்பவர்.

bellet'rist, *n.* கவின்கலைப் பேரிலக்கியங்களில் ஈடுபாடுடை யவர்.

belletris'tic, belletris'tical, *a.* கவின்கலைப் பேரிலக்கியங் கட்குரிய.

bell'-flower, *n.* மணிவடிவ மலர்ச்செடிவகை.

bell'-founder, *n.* மணிகளை வார்ப்பவர்.

bell'-glass, *n.* மணிக்கவிகை, செடிகளை மூடி வைப்பதற்கான மணிவடிவக் கண்ணாடிக்கலம்.

bell'-hanger, *n.* மணிகளைக்கட்டுபவர்; மணிகளைச் செப்பனிடுபவர்.

bell'-heather, *n.* புதர்வெளி, புதர்க்காடு.

bell'icose, *a.* போர்விழைவுள்ள.

bellicos'ity, *n.* போர் விருப்பம்.

bell'ied, *a.* பெருவயிறுடைய, தொந்திசரிந்த, தொப்பை விழுந்த; பிதுங்கியுள்ள, புடைத்திருக்கிற.

belli'gerency, *n.* பொருநிலை, போர்நிலை, போரில் ஈடுபட்ட நிலை.

bell'igerent, *n.* பொருநர், போரிலீடுபட்டவர்; போரிலீடுபட்ட நாடு; *a.* போரிடுகிற; பொருநருக்குரிய.

bell'man, *n.* மணி அடிப்பவர், மணியடித்துப் பொதுச் செய்தி அறிவிப்பவர்; நகரின் தெருக்களில் செய்திகளைக் கூவியறிவிப்பவர்.

bell'-metal, *n.* செம்பும் வெள்ளியமும் கலந்த மணி செய்வதற்கான கலப்பு உலோகம்.

Bellon'a, *n.* ரோமர்களின் போர்த்தேவதை; வீராங்கனை, கவர்ச்சிகரமான வீரத்தோற்றமுடைய பெண்மணி.

bell'ow, *n.* எருத்தின் உக்காரம்; வயிற்றிலிருந்து எழும் ஆழ்ந்த ஒலி, உறுமல்; அலறல்; முழக்கம்; *v.* உக்காரமிடு; உரக்கக்கூவு; நோவெடுத்து அலறு; சீற்றத்தினால் உரக்கக் கூச்சலிடு; இடி-பீரங்கி போல அதிரொலிசெய், முழங்கு.

bell'ows, *n. pl.* உலைத்துருத்தி, காற்றூதுந் துருத்தி; வெறுப்பு-அழுக்காறு முதலிய உணர்ச்சிகளைக் கிளறிவிடும் செய்தி; நுரையீரல்; நிழற்படக்கருவியில் விரிந்துசுருங்கும் பகுதி.

bell'-pull, *n.* மணியடிப்பதற்கு உதவும் கயிறு; மணியடிப்பதற்குரிய கைப்பிடி.

bell'-punch, *n.* இயக்கப்படும்போது மணியடிக்கும் தூளைக் கருவி.

bell'push, *n.* மின்விசைமணியை அடிக்க உதவும் விசைக் குமிழ்.

bell'-ringer, *n.* குறிப்பிட்ட காலங்களில் மணியடிப்பவர்; கைமணிகளை அடித்து இசை உண்டுபண்ணுபவர்.

bell'-ringing, *n.* இசைமணிகளை மிழற்றும் கலை.

bell'-rope, *n.* மணியடிக்க உதவுங்கயிறு.

bell'-shaped, *a.* மணி வடிவமுள்ள.

bell'-tent, *n.* மணிவடிவக் கூடாரம்.

bell'-tower, *n.* மணிக்கூண்டு, மணிக்கோபுரம்.

bell'-wether, *n.* கழுத்தில் மணிகட்டிய தலைமை ஆடு; கலாம் விளைப்பவர், கலகத்தலைவர்.

bell'y, *n.* வயிறு; வயிற்றறை; உடம்பில் முன்புறத்தின் கீழ்ப்பாகம்; இரைப்பை; குடல்; உடல்; கடும்பசி; பெருந்தீனி; கருப்பை; தூருத்தியுள்ள பகுதி; பிதுக்கம்; முன்புறம்; கீழ்ப்புறம்; உட்புறம்; இலைமேற்புறம்; இசைப்பெட்டியில் ஒலி கொண்டுசெல்லும் பகுதி; நரப்பிசைக் கருவியின் மேற்பரப்பு; *a.* வயிற்றின் பக்கமான; வயிற்றுக்குரிய; உடற்பற்றுள்ள; *v.* உப்பலாகு, ஊது, புடை, பிதுங்கு.

bell'y-ache', *n.* வயிற்றுநோய்.

bell'y-band, *n.* சேணப்பட்டை, குதிரையின் வயிற்றின்கீழ் செலுத்தி வண்டியின் ஏர்க்கால்களுடன் கட்டப்படும் பட்டை அல்லது வார்.

bell'yful, *n.* நிறைவயிற்றளவு; விருப்பநிறை அளவு, நிறைவு.

bell'y-god, *n.* வயிற்றுளி, வயிற்றுச்சாமி; பெருந்தீனிக் காரர்.

bell'ying, *n.* உப்பல், உட்புடைத்தல்; *a.* உப்புகிற, புடைப்பாகிற.

bell'y-landing, *n.* சக்கரங்களைப் பயன்படுத்தாமல் விமானம் இறங்குதல்.

bell'y-laugh, *n.* அடங்காப் பெருஞ்சிரிப்பு.

bell'y-pinched, *a.* வயிறுகாய்ந்த, உணவுக்குத் தீண்டாடுகிற.

bell'y-worship, *n.* வயிற்றுச்சாமிபூசை, பேருண்கொள்ளுதல்.

bel'omancy, *n.* அம்புகளைக் கொண்டு குறி கூறுதல்.

belong', *v.* உரிமைப்படு, உரியவராயிரு; உரியதாயிரு; தொடர்புடையராயிரு; தொடர்புள்ளதாயிரு; உடைமையாயிரு; கூறுயிரு, இணைபகுதியாயிரு; பிறப்புரிமை கொண்டிரு, வாழ்தொடர்பு கொள்; உறுப்பினராயிரு, இனமுறைப்படு, வகைப்படு; தகுதிப்படு; கடமைப்படு.

belong'ings, *n. pl.* உடைமைகள், மூட்டை முடிச்சுக்கள்; உடனிருப்புக்கள்; துணைப்பொருள்கள்.

belov'ed, *n.* அன்பிற்குரியர், அருமையானவர்; செல்வக் குழந்தை; காதலன்; காதலி; *a.* கண்மணி அனைய, பெரிதும் நேசிக்கப்பட்ட.

below', *adv.* கீழ்ப்புறமாக, தாழ்வாக; உயரம் குறைந்த இடத்தில்; நில உலகின்மீது; நரகத்தில்; கீழ்த்தளத்தில்; நீரோட்டம் செல்லும் திசையில்; கீழ்ப்படியில்; இழிநிலையில்; ஏட்டின் அடிப்பாகத்தில்; நூலில் பின்வரும் பகுதியில்; *prep.* கீழாக, தாழ; கீழ்ப்படியில்; மதிப்புக் குறைவாக, இழிபடியாக, இழிநிலையில்; ஆழ்தொலைவில்; கீழே தொலைவில்; தாழ்ந்த நிலையில்; தகுதியற்று.

below'stairs, *a.* கீழ்த்தளத்திலுள்ள; *adv.* கீழ்த்தளத்தில்.

belt, *n.* அரைக்கச்சை; கோமான்-வீரத்திருத்தகைக்குரிய அரைப்பட்டிகை; மேகலை; வார்; இயந்திர உறுப்புக்களை இணைத்தியக்கும் தோல்பட்டை வார்; திணைமண்டலம்; நீள் திட்டு, இடைகழி, இடைநிலப் பகுதி; கவசக்கப்பலில் நீர்வரைக்குக் கீழேயுள்ள கவசத் தகடுகளின் வரிசை; *v.* சுற்றி அரைக்கச்சையிடு; பட்டிகை அணிவி; தோல்பட்டை முதலியவற்றால் கட்டு; நிறம் முதலியவற்றால் பட்டையிடு; அரைக்கச்சுக் கொண்டு கையப்புடை; வளை, சூழ், சுற்று.

bel'tane, *n.* பண்டைக் கெல்டிக் (Celtic) இனத்தவரின் மே முதல்நாள் விழா.

belt'ed, *a.* அரைக்கச்சை அணிந்த; வீரத்திருத்தகைப் பட்டிகை அணியப்பெற்ற; பட்டை போட்டுள்ள.

belt'ing, *n.* வார், வார்ப்பட்டை-தோல்வார்ப்பட்டைகளின் திரள்.

belu'ga, *n.* வெள்ளைத் திமிங்கிலம்.

bel'vedere, *n.* நிலா மேடை, வேனில் மாடம்; முகப்புக் கூடாரம்.

bem'a, *n.* பண்டை ஆதென்ஸ் (Athens) பொதுப்பேரவையில் பேச்சாளர்கள் நின்று பேசிய மேடை.

bemaul', *v.* கையப்புடை.

bemazed', *a.* திகைப்புண்ட, குழப்பமடைந்த.

Bem'bex, *n.* பெருத்த ஒலியெழுப்பும் மணற் குளவிவகை.

bemean', *v.* தாழ்த்து, இழிவுபடுத்து.

bemire', *v.* சேறுபூசு, அழுக்காக்கு; சேற்றில் அமிழ்த்து.

bemoan', *v.* புலம்பு, துயருறு, எண்ணி இரங்கு, வருந்தி ஏங்கு.

bemouth', *v.* தாராளமாகப் புகழ்ந்துரை, கட்டுரை கூறு.

bemudd'le, *v.* முற்றும் குழப்பமடையச்செய்.

bemuse', *v.* உணர்வு மழுங்கச்செய், மனங்குழப்பு.

ben [1], *n.* மலைக்குடுமி.

ben [2], *n.* உள்ளறை; *adv.* உள் அறையை நோக்கி; *prep.* உள்ளறையில்.

ben [3], *n.* முருங்கை மரத்தின் சிறகல்லி விதை.

bename', *v.* பெயரிடு; குறிப்பிடு; தூருரை.

bench, *n.* மரத்தினுல் அல்லது கல்லினுல் ஆன நீண்ட இருக்கை; விசிப்பலகை; படகில் உட்காருமிடம்; நடுவர் இருக்கை; நடுவர்நிலை; நீதிமன்றம்; அதிகாரியின் இருக்கை; நடுவர் ஆயம், குற்ற நடுவர் ஆயம்; பாராளுமன்றத்தில் தனிக்குழுவினர்க்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இருக்கைகள்; தச்சர் முதலியோர் வேலைசெய்யும் மேசை; மதிலின் பிதுக்கம்; நிலப்படிக்கட்டு; ஏ. இருக்கையில் அமர்த்து; விசிப்பலகைகள் அமைத்துக்கொடு; நாய்களைக் காட்சிக்கு வை.

ben'cher, *n.* இங்கிலாந்து வழக்கறிஞர் மன்றத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்.

bench'-mark, *n.* மட்டக்குறி, நில அளவைக்காரர்கள் தங்கள் அளவைமட்டத்துக்கு மூலக்குறியாகப் பாறை-கல்போன்றவை களின்மீது வெட்டும் அடையாளம்.

bench'-warr'ant, *n.* நடுவர் பிறப்பிக்கும் பற்ருணை.

bend [1], *n.* வளைத்தல்; வளைவு; வளைந்தபகுதி; கொக்கி; கொளுவி; குனிவு; திருப்பம்; வணக்கம்; ஏ. வளையவை; வளை; சாய்வி, சாய்; கோணச்செய்; கோணு; குனி; தனர், தொய்; புருவம் கோட்டு; திருப்பு, திரும்பு; தினை, கிழடங்கு; தாழ்ந்துபோ, அடங்கு; முடிச்சிடு; (தொ.) round the bend, மூளைதிறம்பிய; மூளைதிறம்பி.

bend [2], *n.* (கப்.) பல்வேறு வகைப்பட்ட முடிச்சு; (கட்.) குறுக்குச் சாய்வான பட்டைக்கீற்று; மாட்டுத் தோல்களின் பதனுருவம்; ஏ. முடிச்சைக்கொண்டு பிணை.

bend'ed, *a.* பட்டைபோட்ட; வளைந்த; (தொ.) on bended knees, முழந்தாளிட்டு.

bend'ing, *n.* வளைக்கும் செயல்; *a.* வளைக்கிற.

bend'let, *n.* (கட்.) அரை அகல வளைவுப் பட்டை.

bends, *n. pl.* (பே-வ.) இறுக்கமான காற்றில் வேலைசெய் பவர்களுக்கு வரும் நோய்வகை.

beneaped', *a.* மென்திரையால் கரைமீதிடப்பட்ட.

beneath', *adv.* கீழே, அடியில், அடிப்புறத்தில், தாழ; உட் புறத்தில்; பின்னுல், புறத்தே; *prep.* கீழாக; அடியில்; பெருமைக்குத் தகாதவாறு, தகுதியற்று.

benedi'cite, (ல.) *n.* வாழ்த்துமுறை நேர்வு; உணவுக்கு முன்னைய வழிபாட்டுரை; வேண்டப்பட்ட ஆசி; *int.* வாழ்க!

ben'edick, *n.* மணமகன்; நீண்டகாலம் மணம்செய்துகொள் ளாமலிருந்து புதிதாக மணம்செய்து கொண்டவர்.

ben'edict, *a.* போற்றுதற்குரிய; கருணைவாய்ந்த.

Benedic'tine, *n.* தூயதிரு. பெனிடிக்டு (St. Benedict) 529-இல் கண்ட திருமடத்தைச் சேர்ந்த துறவி; நறுமண மது வகை; *a.* தூயதிரு. பெனிடிக்டு கண்ட திருமடத்துக்குரிய.

benedic'tion, *n.* வாழ்த்து, திருக்கோயிலில் ரோமன் கத்தோலிக்க வழிபாட்டின் பின்னர் ஆசி வழங்கல்; ஆசி; பேரின்பநிலை

benedic'tional, *a.* வாழ்த்து வழங்குவது பற்றிய.

benedict'ive, *a.* வாழ்த்தும் பாங்குள்ள.

benedict'ory, *a.* வாழ்த்தியலான, ஆசிக்குரிய.

Benedic'tus, (ல.) *n.* திருக்கோயில் வழிபாட்டில் பாடப்பெறும் சிறுபாடல்களில் ஒன்று.

benefac'tion, *n.* உதவி, நற்செயல்; அறச்செயலுக்கான நன்கொடை; மானியம், நிதிஏற்பாடு.

ben'efactor, *n.* கொடையாளர்; நல்லது செய்தவர்; நிலை யத்துக்கு நிதிவிட்டுச் செல்பவர்; புரவலர்.

benefac'tory, *a.* நன்மைபயக்கிற; நலம் செய்வோருக்குரிய.

benefac'tress, *n.* நலம் செய்யும் மாதர்.

ben'efice, *n.* திருக்கோயில் மானியம், மானியம்.

ben'eficed, *a.* மானியம் பெற்றுள்ள.

benef'icence, *n.* நற்செயல், அறச்செயல்; அன்புதவி, நல் லெண்ணக் கொடை.

benef'icent, *a.* அன்பு நலமுடைய; நலம் செய்கிற, நன்மை பயக்கிற.

beneficiaire, (பிர.) *n.* நிதி ஊதியம் பெறுகிற நடிகர்; நிதி ஊதியத்துக்குரிய மட்டைப் பந்தாட்டக்காரர்.

benefi'cial, *a.* பயனுள்ள, நலம் பயக்கிற; (சட்.) சொத்தின் நுகர்வாட்சி உரிமையுள்ள, சொத்தின் நுகர்வாட்சிக்குரிய.

benefi'ciary, *n.* (சட்.) அனுபவப் பாத்தியம் உடையவர்; மானியக்காரர்; *a.* அனுபவப் பாத்தியம் சார்ந்த; மானியம் பற்றிய.

ben'efit, *n.* நலன், பயன், அனுகூலம்; ஆதரவு; அன்புச் செயல்; படி, ஒய்வு ஊதியம்; உதவிநிதி; நீதிமன்றங்களில் மதிப்புத்தரத்தால் அளிக்கப்படும் விலக்கு; நிதி உதவி ஆட்டம்; நிதி உதவிக் காட்சி; ஏ. நலம்செய்; நன்மை அடை; (தொ.) the benefit of the doubt, ஐயநிலையின் சாதகம்.

bene'fit-association, bene'fit-club, *n.* = **benefit-society.**

bene'fit-match, *n.* உதவிப் போட்டிஆட்டம்.

bene'fit-night, *n.* உதவிநிதிக் காட்சிக்குரிய இரவு.

bene'fit-society, *n.* நோய் மூப்புக்களிலிருந்து ஒருவருக் கொருவர் காப்பீடு செய்துகொள்வதற்கான கழகம்.

Ben'elux, *n.* பெல்ஜியம் (Belgium) நெதர்லாந்து (Netherlands) லக்ஸம்பர்க் (Luxemberg) என்னும் நாடுகளின் கூட்டுப்பெயர்.

benev'olence, *n.* அறச்செயல் விருப்பம், இரக்க மனப் பான்மை; அன்புச்செயல்; பணவுதவி; (வர.) கட்டாயக் கடன்.

benev'olent, *a.* நற்செயலாற்றும் விருப்பமுள்ள; இரக்க மனப்பான்மை கொண்ட, பரந்த உள்ளமுடைய; இன்முகங் கொண்ட.

Bengal'ee, Bengal'i, *n.* வங்கநாட்டவர்; வங்கமொழி; *a.* வங்கம் சார்ந்த.

Ben'gal-light, *n.* கப்பல் இடர் அறிவிப்புக்கான வாணவெடி; விழா வாணவெடி.

benight', ஏ. இருளில் ஆழ்த்து, இருளில் சிக்கவை; ஏமாற்றிக் கலங்கச் செய்.

benight'ed, *a.* இருளில் சிக்கிய, இருளார்ந்த; அறியாமை வயப்பட்ட; பாழ்பட்ட, கேடுற்ற.

benign', *a.* சாதகமான, பெருந்தகைமையுள்ள; அன்பான, கண்ணோட்டமுடைய; நற்பேறுள்ள; நலம் செய்கிற; நோய் வகையில் கடுமையாயிராத, தணிவான, ஏதம் விளைக்காத.

benig'nancy, *n.* அருளிரக்கம், பெருந்தகைமை.

benig'nant, *a.* அருளுடைய; அன்புடைய; நலம் பயக்கிற.

benig'nity, *n.* அருளுடைமை; அன்புடைப் பண்பு, பண் புடைமை; நோயின் தணிநிலை; வானிலை வகையில் ஆக்கந் தரும் சூழ்நிலை.

ben'ison, *n.* வாழ்த்து; கடவுள் ஆசி.

Ben'jamin, *n.* கடைசிப்பிள்ளை, செல்லப்பிள்ளை; (தொ.) Benjamin's mess, பெரும்பங்கு.

ben'jamin [1], *n.* சாம்பிராணி.

ben'jamin [2], *n.* பழம்பாணியான புறமேற்சட்டை.

ben'jamin-tree, *n.* சாம்பிராணி மரம்; நறுமணப்பட்டை யுடைய வடஅமெரிக்கப் பூடுவகை; அத்திமர வகை.

benn'et [1], *n.* மஞ்சள் நிற மலர்களையுடைய பூண்டு வகை.

benn'et [2], *n.* உலர்ந்த புல்தண்டு.

ben'-nut, *n.* முருங்கை விதையின் பருப்பு.

ben'-oil, *n.* முருங்கை எண்ணெய்.

bent [1], *n.* கம்பிபோன்ற தண்டுடைய நாணற்புல்வகை; புல்லி னத்தின் விறைத்த மலர்த்தண்டு, உலர்ந்த பழம்புல், களைப் பூடு வகை; புதர்; வேலியில்லாத புல்தரை; மலைச்சரிவு.

bent[2], *n.* வளைவு, நெளிவு, கோணல்; வளைந்த பாகம்; மனப்பாங்கு; மனக்கோட்டம், விருப்பம், இயற்கை அவா; வில்லை வளைக்கக்கூடிய அளவு; இழுவிசையின் அளவு; பொறுத்திருக்கும் ஆற்றல்; *a.* வளைவான, கோட்டமுடைய; ஊன்றிய கருத்துள்ள; உறுதிபூண்ட.

bent[3], *v.* bend என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

Ben'thamism, *n.* மிகப்பெரும்பாலோருக்கு மிகப் பேரளவான இன்பமே குறிக்கோளாகக் கொண்ட ஜெரிமி பெந்தம் (Jeremy Bentham, 1748-1832) என்பாரின் அறமுறைக் கோட்பாடு.

Ben'thamite, *n.* மிகப்பெரும்பாலோருக்கு மிகப் பெரிய அளவில் இன்பம் நாடும் அறமுறைக் கோட்பாட்டாளர்.

bén'thic, *a.* கடல் அடியிலுள்ள மாவடை மரவடைகளுக்கு உரிய.

ben'thos, *n.* கடல் அடியிலுள்ள செடிகொடி உயிரினத் தொகுதி.

ben'thoscope, *n.* ஆழ்கடல் உயிர்வாழ்க்கை ஆராய்வுக்குரிய மூழ்கத்தக்க கோளகை.

ben trova'to, (இத்.) *a.* பொருந்துமாறு புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட; மெய்யன்ருயினும் குறிப்பிடத்தக்க மெய்ப் பண்புடைய.

bent'wood, *n.* நாற்காலி முதலியவை செய்வதற்காகச் செயற்கையாய் வளைக்கப்பட்ட மரம்; *a.* செயற்கையாய் வளைக்கப்பட்ட மரத்தினுல் இயன்ற.

bent'y, *a.* வளைவான; விறைத்த அல்லது கம்பியனைய தண்டுள்ள நாணற்புல் போன்ற.

benumb', *v.* மரத்துப்போகச்செய், திமிர் அடையும்படி செய்; உணர்விழக்கச்செய்; ஆற்றலிழக்கப்பண்ணு.

benumbed', *a.* மரத்துப்போன, விறைத்த; உணர்ச்சியிழந்த.

ben'zal, *n.* கசப்பு வாதுமை எண்ணெய்.

ben'zene, *n.* சாம்பிராணி எண்ணெய், நிலக்கரிக் கீலிலிருந்து பெறப்படும் நறுமண நீர்க்கரிமப்பொருள்.

ben'zil, *n.* (வேதி.) சாம்பிராணியை உயிரதை ஆக்குவதனுல் உண்டாகும் மஞ்சள்நிற மணிஉருச் சேர்மம்.

ben'zine, *n.* நிலஎண்ணெயிலிருந்து பெறப்படுவதும் கொழுப்புக்கறையை நீக்குதற்குப் பயன்படுவதுமான கரிநீர்மக் கலவை.

ben'zoate, *n.* சாம்பிராணிக் காடியுப்பு.

ben'zocaine, ben'zocane, *n.* உடற் கூற்றில் உணர்வகற்று தலிலும் வயிற்றுவீக்கத்திலும் பயன்படுத்தப்படும் மருந்து வகை.

benzo'ic, *a.* சாம்பிராணிக்குரிய.

ben'zoin, *n.* மர நறுமணப் பிசின் வகை, சாம்பிராணி.

ben'zol, ben'zole, *n.* விசைவண்டி எண்ணெயாகப் பயன் படும் செப்பமற்ற சாம்பிராணி எண்ணெய்.

ben'zoline, *n.* = **ben'zine.**

ben'zoyl, *n.* (வேதி.) சேர்க்கையில் மட்டுமே காணப்படும் ஓரணுமுக உறுப்பு வகை.

benzpy'rene, *n.* கிலெண்ணெயிலும் புகையிலைப் புகையி லும் உள்ள புற்று உண்டுபண்ணும் நீர்க்கரியக வகை நச்சுப் பொருள்.

ben'zyl, *n.* (வேதி.) மரஎண்ணெய் கலந்த சாம்பிராணி எண்ணெயின் நீரகை மூலமாயுள்ள ஓரணுமுக அடிச்சரக்கு வகை.

bepatched', *a.* ஒட்டுப்போட்டுச் செப்பனிடப்பட்ட; முகத்தில் ஒட்டுகள் போட்டு ஒப்பனை செய்துகொண்ட.

bepepp'er, *v.* குண்டுமாரியால் தாக்கு; அடித்துத்தள்ளு.

beplas'ter, *v.* கனமாக அப்பு, திண்ணமாகப் பூசு.

beplumed', *a.* இறகுகளால் கோலம் செய்யப்பட்ட.

bequeath', *v.* விருப்ப ஆவணம் வாயிலாக விட்டுச்செல்; மரபு உரிமையாகப் பிற்காலத்தினருக்கு அஞ் ஒப்படை, பொறுப்பில் விடு.

bequeath'able, *a.* விருப்ப ஆவண மூலமாய்க் கொடுக்கப் படத்தக்க.

bequeath'al, *n.* விருப்ப ஆவண மூலமாய்க் கொடுத்தல்.

bequest', *n.* விருப்ப ஆவணவழிக் கொடுத்தல்; வருங்காலத் தினருக்கு மரபுரிமையாகக் கொடுத்தல்; கொடைப்பொருள்; எச்சம், விருப்ப ஆவணவழிக் கொடை; இறந்தார் விடு பொருள்.

berate', *v.* கண்டி, திட்டு, வசைமாரி அடுக்கு.

beray', *v.* மாசுபடுத்து.

Berb'er, *n.* பார்பரி (Barbary) யின் பழங்காலக்குடிகள் உட்படத் தொடர்பான மொழிகள் பேசும் வடஆப்பிரிக்க இனத்தவர்; பெர்பெர்களின் மொழி; *a.* பார்பரியின் பழங் காலக்குடிகள் உள்ளிட்ட வட ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்த.

ber'berry, *n.* = barberry.

berceuse, (பிர.) *n.* தாலாட்டுப்பாடல்: தாலாட்டு மெட்ட மைந்த இசைப்பாடல்.

bere, *n.* தலையணை உறை.

bereave', *v.* பறிகொடு; இழக்கச்செய்; தனியாகத் தவிக்க விடு; இறப்பினுல் உறவினர் மணைவி முதலியோர் கையற வுற விட்டுச்செல்.

bereaved', *a.* இழப்புக்கு ஆளான.

bereave'ment, *n.* இழப்பு, இழந்தநிலை, கையறுநிலை.

bereft', *a.* இழப்புக்காளான, இழந்த.

be're't, *n.* ஸ்பெயினில் (Spain) உள்ள பாஸ்க் (Basque) இனஞ்சார்ந்த குடியானவர்கள் அணியும் வட்டமான தட்டைத்தொப்பிவகை; ஆடவர் மகளிர் விளையாட்டு-விடு முறை உடுப்புகளுடன் அணியும் வட்டத்தொப்பி; படைத் துறைத் தொப்பி.

berg[1], *n.* = iceberg.

berg[2], *n.* தென் ஆப்பிரிக்காவில் (South Africa) உள்ள குன்று; (தொ.) berg wind, நன்னம்பிக்கை முனையில் மே-ஆகஸ்டு மாதங்களில் வீசும் வெப்பமான வடகாற்று.

ber'gamask, *n.* இத்தாலியில் உள்ள பெர்காமோ (Bergamo) வைச் சேர்ந்தவர்; பெர்காமோவுக்குரிய நாட்டுப்புற ஆடல் வகை.

berg'amot[1], *n.* எலுமிச்சை-கிச்சிலி இனமரம்; எலுமிச்சை-கிச்சிலி இனப்பழத்திலிருந்து வடித்திறக்கப்படும் நறுமணப் பொருள்; எலுமிச்சை-கிச்சிலியின் நறுமணமுள்ள செடிவகை.

berg'amot[2], *n.* பேரிஇனப் பழவகை.

bergan'der, *n.* ஒள்ளிய சிறகுடைய காட்டுவாத்து வகை.

berg'mehl, *n.* (மண்.) தேய்ப்புப் பொருளாகவும் உறிஞ்சு பொருளாகவும் பயன்படுகிற மாவுபோன்ற சாம்பல் நிற மான கிளிஞ்சில்கள் மக்கி மடிந்த படிவு மண்பாறை.

berg'schrund, *n.* மலையேறலில் செங்குத்தான மேற்சரிவி னின்றும் பனிப்படலம் விலகுமிடத்தில் ஏற்படும் பிளவு.

Bergso'nian, *n.* ஹென்ரி பெர்க்ஸன் (Henri Bergson, 1859-1941) என்னும் மெய்விளக்கியலாரைப் பின்பற்றுபவர்; *a.* பெர்க்ஸனின் படைப்பாக்கமுடைய படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டுத் தொடர்புடைய.

ber'gylt, *n.* வடகடல் செம்மீன் வகை.

berhyme', *v.* செய்யுளில் விரிவுரை எழுது; வசைக்கவி பாடு; செய்யுள் வடிவில் அமை.

be'riberi, *n.* தவிட்டான், ஊட்டச் சத்துக்குறைவால் உண் டாகும் நோய்.

Berkelei'an, *n.* சடப்பொருளான உலகத்தின் தனிநிலை மெய்ம்மையை மறுத்த மாவட்டச் சமயமுதல்வர் பெர்க்லி (Bishop Berkeley, 1685-1753) என்பவரை அல்லது அவரது கொள்கையைப் பின்பற்றுபவர்; *a.* பெர்க்லிக்குரிய; பெர்க் லியின் கோட்பாட்டுத் தொடர்புடைய.

Berlin', *n.* வலவன் இருக்கை தனியாக அமைந்துள்ள விசைவண்டி ; (தொ.) Berlin black, இரும்பு மெருகு எண்ணெய் ; Berlin gloves, பின்னப்பட்ட கையுறை ; Berlin iron, வார்ப்பிரும்பு ; Berlin warehouse, நேர்த்தியான சாயம் தோய்த்த பின்னப்பட்ட கம்பளிவகை நிறுவனம் ; Berlin wool, நேர்த்தியான வண்ணம் தோய்த்துப் பின்னப்பட்ட கம்பளி.

berm, *n.* மதிலின் பிதுக்கம்.

Ber'nardine, *n.* துறவிமட அமைப்பைச் சார்ந்தவர் ; *a.* துறவிமட அமைப்புச் சார்ந்த.

berr'ied, *a.* கனிகளைக்கொண்ட.

berr'ies, *n.* = berry [1] என்பதன் பன்மை.

be'rry [1], *n.* தீங்கனி ; கொட்டையில்லாப்பழம் ; (தாவ.) சதையால் மூடப்பட்ட விதைகளுள்ள பழம் ; காப்பிக்கொட்டை ; கூலமணி ; கோதுமைமணி ; நண்டுபோன்ற உயிரினங்களின் முட்டை ; அன்னப்பறவை அலகின் மேலுள்ள குமிழ் ; *v.* கனி விளையப்பெறு ; விளைந்து திரளுருப்பெறு ; திரிந்து கனிதிரட்டு.

berr'y [2], *n.* கூம்பு, புற்கை.

bersaglie'ri, (இத்.) *n. pl.* முன்னுட்களில் துப்பாக்கியேந்திய தலைசிறந்த இத்தாலியக் காலாட்படைப் பிரிவினர்.

ber'serk, ber'serker, *n.* வீரவெறியுடன் சண்டையிடும் இயல்புடைய பண்டை நார்வே நாட்டு மூர்க்கப் போர்வீரன் ; *a.* வீரவெறிகொண்ட நார்வே நாட்டுப் போர்வீரருக்குரிய.

berth, *n.* கடலில் கப்பல் வசதியாய் இயங்குமிடம் ; கப்பல் நங்கூரம் பாய்ச்சுவதற்குப் போதிய அகலிடம் ; நாவாய்க் குறட்டில் கப்பல் தங்குமிடம் ; உரியிடம் ; கப்பல்-தொடர் வண்டி முதலியவற்றில் துயிலிடம் ; பதவியிடம், நற்பணியிடம் ; *v.* கப்பலைத் தக்க இடத்தில் நிறுத்தி நங்கூரம் பாய்ச்சு ; துயிலிடம் அமைத்துக்கொடு.

berth'a, ber'the, *n.* பெண்களின் சட்டையில் தோள்களில் மடிந்து விழும் கழுத்துப்பட்டை ; (தொ.) Big Bertha, தொலைவீச்சுடைய பெரிய செர்மானியத் துப்பாக்கி வகை.

Berth'on boat, *n.* மடித்துச் சுருக்கக்கூடிய படகுவகை.

bertillonage', **Bertill'on system**, *n.* அளவுகளைக் கொண்டு குற்றவாளியை அடையாளம் கண்டுபிடிக்கும் அல்பான்சி பெர்ட்டில்லான் (Alphonse Bertillon) என்பவரின் முறை.

be'ryl, *n.* இரத்தின வகை, மரகதம்-கடல்வண்ணக்கல் ஆகியவை உள்ளிட்ட மணிக்கல் வகை ; கனிப்பொருள் இனத்தின் வகை ; *a.* இளம்பச்சையான.

beryll'ia, *n.* கெட்டியான வெள்ளை உலோகத் தனிம வகையின் உயிரகை.

beryll'ium, *n.* கெட்டியான வெள்ளை உலோகத் தனிம வகை.

bes, *n.* மான்கொம்பின் முதற்கிளை.

besaint'ed, *a.* திருத்தொண்டர் குழாத்திற் சேர்க்கப்பட்ட ; திருத்தொண்டர்களின் காட்சி ஆவேசத்துக்கு உள்ளாகும் பழக்கமுடைய.

bescatt'er, *v.* எங்கணும் சிதறும்படிசெய்.

beseech', *v.* குறையிர, கெஞ்சிக்கேள், மன்றாடு.

beseech'ing, *n.* குறையிரத்தல் ; *a.* கெஞ்சிக்கேட்கிற, மன்றாடுகிற.

beseem', *v.* ஏற்புடைத்தாயிரு, பொருந்து ; தக்கதாயிரு ; அணிசெய்.

beseem'ing, *n.* தோற்றம் ; *a.* தகுதியான, பொருந்துகிற.

beset', *v.* வளைத்துக்கொள், சுற்று, சூழ், முற்றுகையிடு, நெருக்கித்தாக்கு ; வழியடைத்துக்கொள் ; குழப்பமடையச்செய் ; சிக்கவை, இடருக்கு உட்படுத்து.

beset'ment, *n.* சுற்றி வளைத்தல், சூழ்வு ; சூழ்வினை, பற்றித் தொடரும் பாவம்.

besett'ing, *a.* சூழ்கிற ; சிக்கவைக்கிற.

beshrew', *v.* பாழாக்குக ! பாழாகுக !

beside', *adv.* அருகே ; அன்றியும் ; தவிர ; பக்கநோக்கி ; *prep.* அண்மையில், பக்கத்தில், அருகில் ; சரிமட்டமாக, ஒப்ப நோக்குமிடத்து ; தவிர, ஒழிய, விலகி, உட்படாமல், தொடர்பின்றி ; (தொ.) beside onself, தன்னையறியாமல், உணர்விழந்து ; beside the mark, beside the point, beside the question, குறிவிலகிய, தவறிய ; தொடர்பற்ற.

besides', *adv.* மேலும், அதாஅன்று, அல்லாமலும் ; அப்படியிராவிடில், மற்றபடி ; வேருக ; *prep.* மேற்கொண்டு, தவிர.

besiege', *v.* முற்றுகையிடு, திரண்டுவளைத்துக்கொள் ; உதவிகள் கோரி நெருக்கு, கெஞ்சித் தொல்லைப் படுத்து.

besieged', *a.* முற்றுகையிடப்பட்ட.

besiege'ment, *n.* முற்றுகை, சூழ்கை.

besieg'er, *n.* முற்றுகையிடுபவர்.

besieg'ing, *n.* முற்றுகையிடல் ; உழிஞைவினை ; *a.* முற்றுகையிடுகிற.

beslav'er, *v.* வாய் வழிந்தோடும் எச்சில்படச்செய் ; வெறுப்பூட்டும் அளவுக்கு இச்சகம்பேசிப் புகழ்.

beslobb'er, *v.* வாய் வழிந்தோடும் எச்சில் பூசு, எச்சில்படும்படி நிரம்ப முத்தம் கொடு ; வரையறையின்றி இச்சகம் பேசு.

beslubb'er, *v.* பூசு, அப்பு.

besmear', *v.* பூசு, வண்ணம் பூசு ; அப்பு, அழுக்காக்கு.

besmirch', *v.* அழுக்காக்கு, நிறம் மங்கச்செய், ஒளிமழுங்கச்செய்.

besmutt'ed, *a.* கரியப்பிய, ஒட்டடை மூடிய.

bes'om, *n.* குச்சுத்துடைப்பம், விளக்குமாறு ; துப்புரவாக்கும் பொருள் ; *v.* துடைப்பத்தால் பெருக்கு.

be'som-head, *n.* மட்டி, மடையன்.

be'som-rid'er, *n.* சூனியக்காரி.

besot', *v.* மயக்கு, உணர்வு மழுங்கச்செய் ; மட்டியாக்கு ; கண்மூடிப்பற்றுக் கொள்ளு, மோகம் கொள்ளு.

besott'ed, *a.* மயக்கத்துக்காளான, கண்மூடிப்பற்றுக் கொண்ட.

besought', *v.* beseech என்பதன் இறந்தகால வடிவம்.

bespang'le, *v.* மின்தகடுகள் பொருத்தி ஒப்பனைசெய், மின்னணிசெய்.

bespatt'er, *v.* சிதறித்தெளி ; அழுக்காக்கு ; திட்டு, பழிகூறு ; இச்சகம் பேசு.

bespeak', *n.* நடிகரின் உதவி நாடகம் ; முன்னதாகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் ; *v.* முன்கூட்டிப் பேசிவை ; ஆடை வகையில் உருவாக்க உத்தரவு இடு ; பொருள் வரவழைத்து வாணிகமுறைக் கட்டளையிடு ; நிபந்தனைகுறி ; குறித்துக்காட்டு ; சான்றுபகர் ; (செய்.) முகங்கொடுத்துப் பேசு.

bespec'tacled, *a.* மூக்குக்கண்ணுடி அணிந்துள்ள.

bespoke' [1], *v.* bespeak என்பதன் இறந்தகால வடிவம்.

bespoke' [2], bespok'en, *p.p.* bespeak என்பதன் முடிவெச்ச வடிவங்கள்.

besport', *v.* விளையாடு ; மகிழ்ந்து பொழுதுபோக்கு.

bespott'ed, *a.* புள்ளிகளிட்ட ; புள்ளிகளிட்டு நிரப்பிய.

besprent', *p.p.* (செய்.) தெளிக்கப்பட்ட ; சிதறுண்ட.

besprin'kle, *v.* தெளி, துளிசிதறு, தூவு.

Bess'emer, *n.* சர் ஹென்றி பெஸ்ஸமர் (Sir Henry Bessemer) என்பவரால் புத்தமைவுற்ற முறைப்படி செய்யப்பட்ட எஃகு ; *a.* பெஸ்ஸமர் புத்தமைத்த எஃகுச் செய்முறை சார்ந்த ; (தொ.) Bessemer iron, பெஸ்ஸமர் முறைப்படி உருவான இரும்பு ; Bessemer process, காய்ச்சி உருகுநிலையிலுள்ள கட்டிரும்பூடாகக் காற்றுரோட்டக் கீற்றுக்களைப் பாயவிட்டு அதிலுள்ள கரி-கன்மம் ஆகியவற்றை நீக்கும் முறை ; Bessemer steel, பெஸ்ஸமர் முறைப்படி செய்யப்பட்ட எஃகு.

best [1], *n.* முழுநிறை முயற்சி ; உறுசிறப்புநிலை ; மிகச்சிறந்த பங்கு ; பெருவெற்றி ; *a.* மிகச்சிறந்த ; முதன்மையான, மேலான, பெருநலம் வாய்ந்த ; *adv.* மிகச்சிறந்த முறையில், மிக நன்றாக.

best [2], *a.* good என்பதன் ஏற்றுயர்படி வடிவம்.

bestain', *v.* முற்றும் கறைப்படுத்து, அழுக்காக்கு.

bestar', *v.* விண்மீன்களால் நிரப்பு.

bestead' [1], *v.* உதவு ; துணைசெய் ; இடர்தணி ; பயன்படு ; பயனடை ; நலந்தருவதாயிரு, ஆதாயமளி.

bestead' [2], *p.p.* bestead [1] என்பதன் முடிவெச்ச வடிவம்.

bestead'ed, *v.* bestead' என்பதன் இறந்தகால வடிவம்.

bested', *a.* நெருக்கப்பட்ட, சூழலுட்படுத்தப்பட்ட, நிலைக்குட்பட்ட.

bes'tial, *a.* விலங்கின் இயல்புள்ள, மிருகம் போன்ற ; முரட்டுத்தனமுள்ள ; அநாகரிகமான ; இழிந்த ; சிற்றின்ப நாட்டமுள்ள, கீழ்த்தர உணர்ச்சி சார்ந்த.

bes'tiality, *n.* விலங்கு நடத்தை.

bes'tiary, *n.* ஒழுக்கமுறை சார்ந்து எழுதப்பட்ட இடைநிலைக் காலத்திய விலங்கியல் விளக்க ஏடு.

bestick', *v.* சுற்றிலும் கூர்முனையுடைய பொருள்களை ஒட்டவை ; அசையாது நிறுத்து ; ஒட்டுமானமூலம் ஒப்பனை செய்.

bestir', *v.* எழுச்சிகொளவை, ஊக்கு, முனைந்தெழச்செய்.

bestow', *v.* அளி, வழங்கு ; இருப்பிடம் கொடு ; ஈடுபடுத்து ; சேமித்துவை.

bestow'al, *n.* வழங்குகை, கொடுத்தல் ; மணம் செய்து கொடுத்தல் ; வகை செய்தல் ; நன்முடிவு காண்டல் ; கொடைப் பொருள்.

bestradd'le, *v.* கால்விரித்து நட.

bestreak', *v.* கோடிடு, கோடுகள் சிதறவிடு, அங்குமிங்குமாக வரிகள் கீறு.

bestrew', *v.* தூவு, சிதறு, பரவலாகச் சிதறவிடு.

bestrewed', *p.p.* bestrew என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

bestrewn', *p.p.* bestrew என்பதன் முடிவெச்ச வடிவம்.

bestrid', **bestridd'en**, *p.p.* bestride என்பதன் முடிவெச்ச வடிவங்கள்.

bestride', *v.* குதிரைமீது கால்விரித்து ஏறு ; கால்விரித்தேறி அமர் ; நாற்காலிமீது கால் பரப்பி உட்கார் ; தாவிநில், மேற்கவிந்தமை ; பாதுகாத்து நில்.

bestrode', *v.* bestride என்பதன் இறந்தகால வடிவம்.

best'seller, *n.* மிகப்பெரிதும் விற்பனையாகும் நூல் ; எல்லாரும் விரும்பி வாங்குகிற நூலின் ஆசிரியர்.

bestuck', *v.* bestick என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

bestud', *v.* முத்தணி வேலை செய்.

besung', *a.* பாடல் மூலமாய்க் கொண்டாடப்பட்ட.

bet, *n.* பந்தயம் ; பந்தயப்பொருள், பணையம் ; *v.* பந்தயம் கட்டு, பந்தயம் கூறு, பணையம் வை.

bet'a, *n.* கிரேக்க நெடுங்கணக்கின் இரண்டாவது எழுத்து ; விண்மீன் குழுவின் இரண்டாவது விண்மீன் ; (தொ.) beta plus, இரண்டாம் தரத்துக்கு மேம்பட்டது ; beta rays, கதிரியக்கப் பொருள்களால் உமிழப்படும் விரைசெலவுடைய எதிர்மின்மங்களின் வரிசை.

be'tacism, *n.* தளர் பகர (*b*) ஒலியை வகர (*v*) ஒலியாக ஒலித்தல்.

betake', *v.* மேற்கொள்ளுவி ; அணுகுவி ; ஒருமுகப்படச்செய், ஒருங்குவி, ஒருவழிப்படுத்து ; (தொ.) betake oneself to, ஒருங்கு செயலில் முனை ; அணுகு, செல்.

betak'en, *p.p.* betake என்பதன் முடிவெச்ச வடிவம்.

be'ta-part'icles, *n.* (இயற்., வேதி.) கதிரியக்கப் பொருள்களால் உமிழப்படும் எதிர்மின்மங்கள்.

be'tatron, *n.* விசைவேக எதிர்மின்மங்களின் கதிரலையை நிலையான மண்டல நெறியில் இயக்கி அதன்மூலம் மிசையாற்றலுடைய அணுக்கூளைப் பெறவைக்கும் கருவி.

bet'el, (த.) *n.* வெற்றிலை.

bet'el-nut, *n.* பாக்கு, துவர்க்காய், அடைக்காய்.

bete noire, (பிர.) *n.* கருவிலங்கு, கருநிற மிருகம் ; கடுந்தொல்லை ; வெறுப்புத்தரும் பொருள்.

beth'el, *n.* புனித இடம் ; மெத்தடிஸ்ட் (Methodist) அல்லது பாப்டிஸ்ட் (Baptist) திருக்கோயில் ; மாலுமிகளின் திருக்கோயிலாக வழங்கப்படும் பழைய கப்பல்.

bethes'da, *n.* ஆங்கிலேயத் திருச்சபைக் கொள்கையை ஏற்காதவர்களின் தொழுகையிடம்.

bethink', *v.* ஆழ்ந்து நினைக்கச்செய் ; நினைவூட்டு ; கருதச்செய் ; (தொ.) bethink oneself, ஆழ்ந்து நினை, நினைத்துப் பார், அமைந்தாய்ந்து பார் ; bethink oneself of, நினைவுகூர் ; செய்யக்கருது.

bethought', *v.* bethink என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

bethumb', *v.* கைப்பெருவிரல் அடையாளமிடு.

bethump', *v.* அழுந்த அடி.

bethwack', *v.* தாக்கியடி.

betide', *v.* நிகழ், வந்துநேர்.

betimes', *adv.* காலம் உண்டாக, காலம்பெற, உரிய காலத்தில், பருவத்தில் ; முன்கூட்டி ; விரைவாக.

betise, (பிர.) *n.* மடமை காரணமான செயற்சோர்வு, செய்தக்க அல்ல செயல் ; சொல்லிழுக்கு, சொலத்தக்க அல்ல சொலல்.

beto'ken, *v.* குறித்துக்காட்டு ; முன்னறிவி.

bet'on, *n.* சுண்ணநீறு, நீறு, நீற்றுக்காரை.

bet'ony, *n.* பண்டை மருத்துவத்தில் பெரும்பயனுடையதாகப் புகழ்பெற்ற கருஞ்சிவப்பு மலரையுடைய செடி.

betook', *v.* betake என்பதன் இறந்தகால வடிவம்.

betray', *v.* காட்டிக்கொடு, நம்பினவரை ஏமாற்று ; நம்பிக்கை கெடு, நட்புக்கேடுசெய் ; உண்மையற்றவராயிரு ; தவறான வழிகாட்டு ; வஞ்சனைசெய் ; கற்பழி ; மறைவெளியிடு ; பண்பு வெளிப்படுத்து ; சான்றாயமை.

betray'al, *n.* காட்டிக்கொடுத்தல் ; இரண்டகம், வஞ்சனை ; நம்பிக்கைக் கேடு ; மறைவெளியீடு.

betray'er, *n.* நம்பிக்கை கொன்றவர் ; நம்பிவந்த பெண்ணைக் கெடுத்தவர்.

betroth', *v.* மணஉறுதியினால் பிணைப்படுத்து.

betroth'al, *n.* மண உறுதி, மண உறுதிவினை.

betroth'ed, *n.* மணஉறுதி செய்யப்பெற்றவர் ; *a.* மண உறுதி செய்யப்பெற்ற.

bett'er [1], *n.* மேலவர் ; திறமைமிக்கவர் ; *a.* மேம்பட்ட நல முடைய, சிறப்பு மேம்பட்ட, விஞ்சிய மேன்மையுடைய ; மிருதியான ; ஏற்றுக்கொள்ளத்தக்க ; சீர்திருத்தமிக்க, தகுதி மேம்பட்ட ; முன்னிலும் மிகுநலமுடைய ; *v.* நலம் அடைவி, சீர்ப்படுத்து, மேம்படுத்து ; நலமடை, சீர்ப்படு ; *adv.* நலம் மிகுந்து ; மிகுநிறைவாகி ; மேம்பட்டு ; மேம்பட்ட நல் விளைவுடன், விஞ்சிய சிறப்புடன்.

bett'er [2], *n.* பந்தயம் வைப்பவர்.

bett'er [3], *a.* good என்பதன் உறழ்படி வடிவம் ; *adv.* well என்பதன் உறழ்படி வடிவம்.

bett'ered, *a.* நன்னிலைப்படுத்தப்பெற்ற.

bett'ering, *n.* சீர்ப்பாடு ; நலம்பெறல் ; *a.* சீர்ப்படுகிற.

bett'erment, *n.* சீர்திருத்தம் ; வாழ்க்கை மேம்பாடு ; சொத்தின் மதிப்புயர்வு.

bett'erness, *n.* நன்னிலை, மேனிலை.

bett'ers, *n.* மேலவர்கள், மேல்நிலையிலுள்ளவர்கள்; மன்னுயத்தில் உயர்படியினர்.

bett'ing-book, *n.* பந்தயங்களை எழுதிவைப்பதற்கான ஏடு.

bett'or, *n.* = better [2].

bett'y, *n.* பெண்களின் வீட்டு வேலையில் தலையிட்டுப் பொறுப்பு மேற்கொள்ள முயலும் ஆடவர்.

between', *n.* இடைநிலையளவுடைய ஊசி வகை ; *adv.* இடைநிலையிடத்தில், இடையீடாக ; இடைப்பட்ட இடத்துக்கு, இடையிட்டு ; இடை நேரங்களில் ; *prep.* இடையிலே, இருவர் நடுவிலே ; இரண்டின் மத்தியிலே ; இடைவெளியூடாக ; இடைநிலைப்பட்டு ; தம்முள் ; ஒன்றற்கொன்று ; ஒருவருக்கொருவர் ; ஒருங்கிணைந்த செயலால் ; ஒருங்கிணைவின் பயனாக ; தம்மிடையே, தம்முள் ஒருவரிடமிருந்து ஒருவராக ; ஒன்றனிடமிருந்து ஒன்றுக ; இருவர் பொதுவுடைமையாக ; (தொ.) between cup and lip, நம்பிக்கைகள் சிதறுண்ட நிலையில் ; between devil and deep sea, தப்பித்துக்கொள்ள வழியின்றி ; between wind and water, சேதமுறத்தக்க நிலையில்.

between'-decks, *n.* கப்பலின் இரண்டு தளங்களுக்கு நடுவிலுள்ள இடம் ; *adv.* மேல்தளங்களுக்கிடையே.

between'-maid, *n.* இரண்டு வேலையாள்களுக்கு (சமையற்காரி-உணவுமேசை வேலைக்காரி ஆகியவர்களுக்கு) உதவியாயிருக்கிற பணிப்பெண்.

between'ness, *n.* இடைப்பட்ட நிலை.

between'-time, between'whiles, *adv.* இடையிட்டு நேரங்களில், இடைவேளைகளில்.

betwixt', *adv., prep.* (செய்.) = between.

Beu'lah, *n.* ஆங்கிலேயத் திருச்சபைக் கொள்கையை ஏற்காதவர் தொழுகையிடம்.

bev'atron, *n.* அணுமின்மங்களுக்கு நூறுகோடிக் கணக்கான மடங்கு ஆற்றல் பெருக்கும் அணு ஆற்றல் விசையியக்க அமைவு.

bev'el, *n.* சாய்தளம், சரிவு, சாய்வு ; கோணம் அளக்கும் கருவி ; *a.* கோணம் அளக்கும் கருவி வடிவமைந்த ; சரிவான ; *v.* சரிவுள்ளதாக அமை.

bev'el-gear, *n.* (பொறி.) பற்கள் மட்டும் சாய்வாக இணைந்து ஒன்றை ஒன்று இயக்கும்படி அமைக்கப்பட்ட வேறு வேறு தளத்தில் சுழலும் சக்கர அமைவு, சாய் இயக்க இணைவு.

bev'elled, *a.* சாய்கோணமாக அமைந்த ; சரிவாக்கப்பட்ட.

bev'eller, *n.* சரிவுள்ளதாக அமைக்கும் ஆள், சாய்வு உண்டு பண்ணும் பொறி.

bev'el-wheels, *n.* = bevel-gear.

bev'er, *n.* இடையுணவுச்சிற்றுண்டி.

bev'erage, *n.* மதுபானம் ; நீரில் கலந்த குடிவகை, குடிநீர்மம் ; நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்கான விருந்து ; கொண்டாட்ட விருந்துக்கான செலவுப்பணம்.

Bev'in boy, *n.* சிட்டுக்குலுக்கிச் சுரங்கவேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் புதிய கட்டாயப்படைச் சேர்ப்புக்குரிய இளைஞன்.

bev'y, *n.* மங்கையர் ஈட்டம் ; மான்கணம் ; வானம்பாடிகளின் கூட்டம் ; அன்னங்களின் குழாம் ; பறவைப்பந்தி.

bewail', *v.* அழு, இழப்பு நினைந்து புலம்பு, ஏங்கு, அழுதரற்று.

beware', *v.* எச்சரிக்கையாயிரு, கவனமாயிரு.

bewel'tered, *a.* குருதியிற் புரண்ட ; இரத்தக்கறை தோய்ந்த.

bewigged', *a.* பொய்மயிர்த்தொப்பி பொருத்தப்பெற்ற.

bewil'der, *v.* தடுமாறச்செய், குழப்பு.

bewil'dered, *a.* மனங்குழம்பிய, கையற்ற, திக்குத் தெரியாத.

bewitch', *v.* மாயத்தால் மயக்கு, மருட்டு, சூனியம் வை ; கவர்ச்சி செய்.

bewitch'ery, *n.* மந்திரத்தால் மயக்குதல் ; கவர்ச்சி.

bewitch'ing, *a.* கவர்ச்சியுள்ள ; மகிழ்வூட்டுகிற.

bey, *n.* துருக்கிய ஆட்சித்தலைவர்.

bey'lic, *n.* துருக்கிய ஆட்சித்தலைவரின் ஆட்சி எல்லை.

beyond', *n.* அறியவொண்ணுதது; மறைவுகடந்தநிலை; வரும் பிறவி ; உம்மை, மேலுலகு ; அறிந்த உலகுக்கு அப்பாலைய வெளி ; *adv.* அப்பால், மறுபுறம், பின்னும், சேய்மைகடந்து ; *prep.* மறுபக்கத்தில், தொலைப்பக்கத்தில் ; அப்பாலுக்கப்பால் ; எட்டாத இடத்தில் ; மேம்பட்டு, மிகுதியாக; தவிர.

bez'ant, *n.* பண்டை ஐரோப்பாவில் கான்ஸ்டாண்டிநோப்பிள் (Constantinople) நகரில் 9-ஆம் நூற்றாண்டுமுதல் செலாவணியிலிருந்த பொற்காசு ; (கட..) பொற்காசு போன்ற மஞ்சள் நிறமான சிறுவட்டம்.

bez'el, *n.* உளிவாய் ; பட்டை தீட்டிய மணிக்கற்களின் சாய்பக்கம் ; மணிக்கல் பதித்த இடத்தின் பொதிவாய், தவளிப்பு.

bezique', *n.* இருவர் அல்லது நால்வர் ஆடும் சீட்டாட்ட வகை.

bez'oar, *n.* கோரோசனை.

bhang, (இ.) *n.* பங்கி, கஞ்சா.

bhar'al, *n.* இமயத்திலும் திபேத்திலும் காணப்படும் கீழ்நோக்கி வளைந்த கொம்புகளையுடைய நீலநிற ஆட்டுவகை, காட்டாடுகளையும் வெள்ளாடுகளையும் மரபு முறையில் இணைப்பதாகக் கருதப்படும் ஆட்டின் வகை.

bhees'tie, bhees'ty, bhis'tee, bhis'ti, *n.* நீர்கொண்டு செல்லும் பணியாள்.

biann'ual, *a.* ஈராண்டுக்கான ; அரையாண்டுக்கான ; ஈராண்டுக்கு ஒருமுறையான.

bi'as, *n.* முடப்பந்தின் சாய்வுரு ; முடப்பந்தின் ஒரு முகச் சாய்வுக்காக உள்ளீடாகப் பொருத்தப்படும் உலோகப்பளு ; ஒருசார்பு, சாய்வு, கோட்டம் ; *a.* சாய்வான, கோட்டமான ; *v.* ஒருபுறமாகச் சாய்வி ; ஒரு பக்கமாகத் திருப்பு ; *adv.* சாய்வில், கோட்டமாய்.

bi'ased, bi'assed, *a.* ஒருபுறச்சாய்வான.

biax'ial, *a.* இரண்டு விழி முனைப்புகளையுடைய.

bib [1], *n.* அரையாடை, குழந்தையின் ஆடை மாசடையாமல் காக்கும் கழுத்தாடை.

bib [2], *n.* மீன்வகை.

bib [3], *v.* குடிவகை அருந்து; அடிக்கடி குடித்துப்பழகு.

biba'cious, *a.* குடிப்பழக்கமுடைய.

bibas'ic, *a.* (வேதி.) இரு பொருள்மூலங்களையுடைய.

biba'tion, *n.* குடிப்பழக்கம்.

bibb'er, *n.* அடிக்கடி குடிப்பவர்.

bibb'ling, *n.* அடிக்கடி குடித்தல் ; *a.* அடிக்கடிக் குடிக்கிற.

bib'-cock', *n.* கவிழ்முகப்புடைய குழாய்முனை.

bibe'lot, *n.* சிறுதிற அழகுப்பொருள், பாசி சிப்பி போன்ற சில்லறை மணி.

bi'bi, *n.* இந்திய உயர்குடியணங்கு.

Bi'ble, *n.* கிறித்தவத் திருமறை, விவிலிய ஏடு.

bib'lical, *a.* கிறித்தவத் திருமறை சார்ந்த ; விவிலிய ஏட்டில் சுறிப்பிடப்பட்ட.

bib'licism, *n.* கிறித்தவத் திருமறைப்புலமை ; விவிலிய ஏட்டுக்கொள்கை ; விவிலிய ஏட்டை எழுத்துக்கெழுத்து ஏற்கும் கோட்பாடு.

bib'licist, *n.* கிறித்தவரின் மறைப்பயிற்சியுள்ளவர் ; விவிலிய ஏட்டைச் சமயச் சட்டமாகக் கொள்பவர் ; விவிலிய ஏட்டை எழுத்துக்கெழுத்து ஏற்பவர்.

biblio'grapher, *n.* புத்தக விளக்க அட்டவணையாளர் ; புத்தகப்பட்டி தொகுப்பவர்.

bibliograph'ic, bibliograph'ical, *a.* புத்தக விளக்க அட்டவணை சார்ந்த.

bibliog'raphy, *n.* புத்தகப் பட்டியல்; நூற்பெயர்க்கோவை; புத்தக விவரத்தொகுப்பு; ஆசிரியர் இயற்றிய ஏடுகளின் தொகுதி.

bibliol'ater, bibliol'atrist, *n.* புத்தக வழிபாட்டினர்.

bibliol'atrous, *a.* புத்தகத்தைக் கண்மூடித்தனமாக வணங்குகிற.

bibliol'atry, *n.* கிறித்தவத் திருமறையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல், விவிலிய வழிபாடு; புத்தகப் பூசணை.

bibliol'ogy, *n.* திருமறை விளக்கவியல்; புத்தக விளக்கப் பட்டியல்.

bib'liomancy, *n.* கிறித்தவத் திருமறை ஏட்டைத் தற் செயலாகப் புரட்டிக் குறிபார்த்தல்; ஏட்டிற் கயிறு சாத்திப் பார்த்தல்.

biblioma'nia, *n.* புத்தகத் தொகுப்புப் பித்து.

biblioman'iac, *n.* புத்தகத் தொகுப்புப் பித்தேறியவர்.

bibliopeg'ic, *a.* புத்தகத்தின் கட்டடத்துக்குரிய.

bibliop'egy, *n.* புத்தகக் கட்டடத்தொழில்.

biblioph'agist, *n.* ஏடு விழுங்குபவர்.

bib'liophil, bib'liophile, *n.* புத்தக ஆர்வலர்.

biblioph'ilism, *n.* புத்தக விருப்பு.

biblioph'ilist, *n.* ஏட்டார்வலர்; ஏட்டுத்திரட்டாளர்.

bibliopho'bia, *n.* புத்தக வெறுப்பு.

bib'liopole, *n.* அரிய நூல்களை விற்பவர்.

bibliopol'ic, bibliopol'ical, *a.* அருஞ்சுவடி விற்பனை சார்ந்த.

bibliop'oly, *n.* அருநூல் விற்பனை.

bibliothe'ca, *n.* ஏடகம், நூலகம்; புத்தக வரிசை, தொடர் ஏடுகள்; புத்தகப் பட்டியல்.

biblioth'ecary, *n.* ஏடகத்தார், நூலகத்தலைவர்.

bib'ulus, *a.* குடிக்கிற; உறிஞ்சுகிற; கடற்பஞ்சு போன்ற.

bicam'eral, *a.* ஈரவையுடைய.

bicarb'onate, *n.* கரியகக்காடியின் உப்பு.

bice, *n.* வெண்ணீலம் அல்லது பச்சை வண்ணப் பொருள்.

bicen'tenary, *n.* இருநூறும் ஆண்டு விழா; *a.* இருநூறு சார்ந்த; இருநூறு ஆண்டுகளுக்குரிய.

bicentenn'ial, *n.* இருநூறும் ஆண்டு விழா; *a.* இருநூறு ஆண்டுகளுக்குரிய; இருநூறு ஆண்டுகளடங்கிய; இருநூறு ஆண்டுகளுக்கு ஒருமுறையான.

biceph'alous, *a.* இருதலையுடைய.

bi'ceps, *n.* இருதலைத்தசை, மேற்கை உள்தசை; *pl.* bi'cepses.

bichlor'ide, *n.* இருபாசகை.

bichrom'ate, *n.* இருகுருமிகை.

bicip'ital, *a.* இருதலைப்புடைய.

bick'er [1], *n.* சண்டை, கலகம்; சடசடவெனும் ஒலி, கலகலப்பு ஒலி; *v.* பூசலிடு; நடுங்கு; கலகலப்புடன் ஓடு; மின்னு, மினுங்கு.

bick'er [2], *n.* மரந்தாற் செய்யப்பட்ட மதுக்கிண்ணம்; கஞ்சிக்கலம்.

bicor'porate, *a.* ஈருடலுடைய.

bicus'pid, *n.* முன்கடைவாய்ப்பல்; *a.* பல்லில் இரு முனைகளையுடைய.

bi'cycle, *n.* இருசக்கரவண்டி, மிதிவண்டி; *v.* மிதிவண்டி ஓட்டு.

i'cyclist, *n.* மிதிவண்டி ஓட்டுபவர்

bid [1], *n.* விலைகேட்டல், விலைக்குறிப்பீடு; ஏலத்தில் விலைக் குறிப்பு; துணிவுமிக்க திட்டம்; முனைப்பான முயற்சி; ஆட்டக் கேள்வி, சீட்டாட்டத்தில் ஏற்றுக்கொள்ளும் கெலிப்பெண்; எல்லை முன்குறித்த ஆட்டக்கோரிக்கை; *v.* கட்டளையிடு; வேண்டு, அழை; மண அறிவிப்பை வெளிப்படத் தெரிவி; குறிப்பிடு, கூறு; வணக்கமுறை தெரிவி; விலைகுறித்துக்கேள்; விலைகுறி; சீட்டாட்டத்தில் ஆட்ட மதிப்பெண் குறித்து ஆட்டம் கேள்; அறிகுறியாயமை.

bid [2], *v.* bid என்பதன் முடிவெச்ச வடிவம்.

bidd'able, *a.* கீழ்ப்படிதலுள்ள; ஆட்டம் கேட்கக்கூடிய; ஏலத்தில் விலைக்குக் கோரக்கூடிய.

bidd'en, *v.* bid என்பதன் முடிவெச்ச வடிவம்.

bidd'er, *n.* விலைகூறுபவர், விலை குறிப்பிட்டுக் கேட்பவர்.

bidd'ing, *n.* ஆணை, கட்டளை; கூப்பிடுதல், அழைப்பு; விலைகேள்வி.

bidd'y, *n.* (பே-வ.) கோழிக்குஞ்சு, கோழி.

bide, *v.* பொறுமையுடன் காத்திரு; தங்கு, உறை; நீடித்திரு.

bi'dent, *n.* இருகவர்க்கருவி.

bident'al, bident'ate, *a.* இருகவர் உடைய.

bienn'ial, *n.* இரண்டாண்டு வாழும் செடியினம், ஈராட்டைப் பயிர்; *a.* ஈராட்டை வாழ்வுடைய; இரண்டாண்டிற்கொரு முறை நிகழ்கிற.

bier, *n.* பாடை.

bifa'cial, *a.* இருமுகப்பினையுடைய; வேறுபட்ட இருபக்கங்களையுடைய.

bifa'rious, *a.* இரட்டையான; இருவரிசையான.

biff, *n.* அறை; உறைப்பான அடி; அடி.

biff'in, *n.* உணவுக்கு உதவும் மிகச் சிவந்த ஆப்பின் பழவகை; ஆப்பிள் அடை.

bif'id, bif'idate, *a.* இருபிளவான.

bifi'lar, *a.* ஈரிழையான.

biflo'rate, *a.* இருமலர்களைக் கொண்ட.

bifo'cal, *n.* இருமுகப்புக்களையுடைய பகுதிகள் இணைந்த மூக்குக்குண்ணுடி; *a.* இருமுகப்புக்களுடைய பகுதிகள் இணைந்த.

bifol'iate, *a.* ஈரிலைகளையுடைய.

bifur'cate, *a.* இருகவருடைய; இருகிளைகளாலான; *v.* இரு கூருக்கு.

bifurca'ted, *a.* பிளவுற்ற; இருகூருக்கப்பட்ட.

bifurca'tion, *n.* பிளவிடு; இருபிரிவாகப் பிரித்தல்.

big [1], *n.* = bigg.

big [2], *a.* பெரிய, பருத்த; பேரளவான, பாரித்த; கருத்தரித்த; முக்கியமான; வீறிய, தோற்றத்தாலுயர்ந்த; உரத்த; பகட்டான; *adv.* பகட்டாக; பாரித்து; (தொ.) Big Brother, வல்லாட்சியாளர், சர்வாதிகாரி.

big'amist, *n.* இருமணவியாளன்; இருகணவரை உடையவள்.

big'amous, *a.* இருமணவிகளையுடைய; இருகணவரையுடைய.

big'amy, *n.* இருமணவி மணம்; இருகணவர் மணம்.

bigaroo', **bigaroon',** *n.* பெரிய வெண்ணிறப் பழமர வகை.

Big Ben, *n.* பிரிட்டிஷ் மாமன்றத்தின் பெரிய மணி.

bigem'inal, *a.* இருவரிசைகளாக அடுக்கப்பட்ட.

bi'gener, *n.* இருவேறினக் கலப்பு மரபு.

bigg, *n.* வாற்கோதுமை வகை.

bigg'in, *n.* குழந்தையின் குல்லாய்; பணித்துணைவர் தலையணி; இரவு அணியும் தலையுறை.

bight, *n.* கயிற்றுச் சுருக்கு, சுருக்குக் கண்ணி; கடற்கரையின் அகல்வளைவான பகுதி; விரிகுடா.

big'ot, *n.* குருட்டுப் பிடிவாதமுடையவர்.

big'oted, *a.* குருட்டுப் பிடியான.

big'otry, *n.* மதவெறி.

big'wig, *n.* (பே-வ.) தலையானவர், முதல்வர், பெரிய தனக்காரர்.

bijou, (பிர.) *n.* அணிகலன்; சிறு மணி; சிறுபேழை.

bijouterie, (பிர.) *n.* அணிகலன்கள்; *a.* அழகுமிக்க, சிங்காரமான, சிற்றளவிலான.

bike, *n.* (பே-வ.)=bicycle.

biki'ni, *n.* மிகக் குறுக்கமுற்ற குளியலாடை.

bila'bial, *n.* ஈரிதழ் இணையொலி, இதழிணை மெய்யொலி; *a.* ஈரிதழுடைய; இருபிளவுடைய; (இலக்.) ஈரிதழிணை வால் பிறக்கிற.

bi'lander, *n.* ஒன்று சாய்வான இருபாய்களையுடைய படகு வகை.

bilat'eral, *a.* இருபக்கமுள்ள; ஈரிடையான; நேரிணைத் தொடர்பான; சமதளத் தொடர்பான.

bil'berry, *n.* கருநீல நிறமுள்ள பழங்களை உடைய புதர்ச் செடி வகை; கருநீலக்கனிவகை.

bi'lbo, *n.* கொடுவாள், கனமில்லாத மெல்லிய வாள்.

bi'lboes, *n. pl.* விலங்கு, சிறையாளிகளைப் பிணைக்கும் சறுக்கு சங்கிலி வாய்ந்த இரும்புத்திரணை.

bi'le, *n.* பித்தநீர்; சிடுசிடுப்பு.

bile'duct, *n.* பித்தநீர்க்குழாய்.

bilge, *n.* மிடாவின் பருத்த தூர்ப்பகுதி; கப்பலின் அடி அகடு; சேறு; அழுக்கு; அவகேடு; *v.* விம்மிப் பிள, தூர் உடை; பரு; உப்பு.

bilge'-keel, *n.* அகட்டுப்பட்டிகை, கப்பலின் அடிப்புறம் உருளாதிருக்க இணைக்கப்படும் நீள்கட்டை.

bilge'-pump, *n.* அகன்ற குழாய்; கப்பலிலூறும் நீர் இறைக்கும் குழாய்.

bilge'-water, *n.* கப்பலில் ஊறும் நீர்.

bilg'y, *a.* அருவருப்பான மணமும் தோற்றமும் உடைய, முடை நீர் நாற்றமிக்க.

bilharz'ia, *n.* வெப்பமண்டலவாசிகளின் குருதியிலுள்ள ஒட்டுயிர்ப் புழுவகை.

bilharzias'is, *n.* குருதியிலுள்ள தட்டையான ஒட்டுயிர்ப் புழுவகையால் ஏற்படும் நாட்பட்ட நோய் வகை.

bil'iary, *a.* பித்தநீர் சார்ந்த; பித்தநீர் கொண்டு செல்கிற.

bilim'bi, *n.* புளிப்பான காய்வகை; புளிப்பான காயுடைய தென்கிழக்காசிய மரவகை.

biling'ual, *a.* இருமொழி பேசுகிற; இருமொழிகளில் எழுதப்பட்ட.

biling'ualism, *n.* இருமொழி பேசும்நிலை; இருமொழி வழக்கு.

biling'uist, *n.* இருமொழி பேசுபவர், இருமொழி தெரிந்தவர்.

bil'ious, *a.* பித்தத்துக்கு உரிய; பித்தத்துக்கு ஆட்பட்ட.

bil'iousness, *n.* பித்தமயக்கம்.

bilk, *v.* நழுவு; கடன் தட்டிக்கழி; ஏமாற்று, எத்திச்செல்.

bilk'er, *n.* ஏமாற்றுபவர்; நழுவித்தப்புபவர்.

bill [1], *n.* சட்டப்பகர்ப்பு, மசோதா; கலந்து ஆராய்ந்த சட்டத்தின் வரைவு; பட்டியல், விலைவிவரப்பட்டி; உறுதிமுறி, குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்ட தேதியில் கொடுப்பதற்குரிய உறுதிச்சீட்டு; விளம்பரத்துண்டு; எழுத்து மூல அறிவிப்பு; (தொ.) bill of exchange, மாற்று முறி; bill of fare, உணவுவகைப் பட்டியல்; bill of health, உடல்நிலைச் சீட்டு; bill of lading, (கப்.) ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு; bill of sale, விற்பனைச்சீட்டு; விற்பனை ஒப்பந்தச்சீட்டு; bill of sight, காட்சிக்குறிப்பு, அளவோ பண்போ வணிகருக்குத் தெரியாமல் இறக்குமதியான பொருட்களின் பதிவுக் குறிப்பு.

bill [2], *n.* மழுப்படை, ஈட்டியுடனிணைந்த போர்க்கோடரி; புல் அரிவாள்.

bill [3], *n.* அலகு, பறவையின் அலகு; அலகுபோன்ற உறுப்பு; நிலக்கூம்பு; நங்கூரத்தின் கொக்கிமுனை; *v.* அலகுடன் அலகுகோது; தழுவு; அன்பாக அணை.

bill [4], *v.* துண்டுத்தாள் விளம்பரம் செய்; அறிவி; பட்டியலில் சேர்; திட்டத்தில் இணை.

bill'abong, *n.* ஆற்றின் வற்றிய கிளைப்படுகை.

bill'-board [1], *n.* துண்டுவிளம்பரம் ஒட்டப்படும் பலகை; அறிவிப்புப் பட்டிகை.

bill'-board [2], *n.* நங்கூரம் தொங்கவிடப்படும்போது கொக்கி சுவரில் படாமல் காக்கும் காப்புப் பலகை.

bill'-book, *n.* பட்டியலேடு.

bill'brokers, *n. pl.* பொருளகத் தரகர்கள்.

bill'-chamber, *n.* ஸ்காத்லாந்து நாட்டின் அமர்வு நீதி மன்றத்தின் விரைதீர்வுப் பிரிவு.

bill'-discounter, *n.* முறிமாற்றுத் தரகர்.

bill'et [1], *n.* சிறுகுறிப்பு, தாள்நறுக்கு; படை ஆணைச் சீட்டு, படைவீரனுக்குரிய தங்கிடவாய்ப்புச் செய்துகொடுக்கும்படி தனிமனிதருக்கிடப்படும் ஆணை; படை வீரர் இட ஒதுக்கீட்டுச்சீட்டு; ஓய்விடம்; இலக்கான இடம்; பணியிடம்; *v.* படைப்பிரிவுக்குத் தங்கிடம் அமர்த்து; படைவீரர் தங்கிடப் பொறுப்புச் சுமத்து.

bill'et [2], *n.* விறகுக்கட்டை; (க-க.) உலோகக்கட்டை; இடைக்கட்டை, நார்மன் கட்டிடக்கலையில் இடைப்பள்ளங்களை விட்டுவிட்டு நிரப்பிக் காட்டுவதற்குரிய சிறு துண்டுக் கட்டைகள் போன்ற வேலைப்பாடு.

billet-doux, (பிர.) *n.* காதல் கடிதம்; *pl. billets-doux.*

bill'et-head, *n.* திமிங்கில வேட்டைக்குரிய எறிவேலின் கயிறு சுற்றப்படும் உருளை.

bill'-head, *n.* முகப்புப்பட்டி, பெயர் முகவரி உடைய வாணிகக்குறிப்பு முகப்பு.

bill'-hook, *n.* புல்லரிவாள்.

bill'iard, *a.* மேசைக்கோற் பந்தாட்டத்தைச் சார்ந்த.

bill'iard-marker, *n.* மேசைக்கோற் பந்தாட்டக்காரருடைய ஆட்டப்புள்ளியைக் குறிப்பவர்.

bill'iards, *n.* மேசைக்கோற் பந்தாட்டம்.

bill'ie, *n.*=billy.

bill'ingsgate, *n.* வசைமாரி, கீழ்த்தரப் பழிப்புரை, சந்தைக் கடைப்பேச்சு.

bill'ion, *n.* ஆங்கில நாட்டு வழக்கில் இலக்கங்கோடி; அமெரிக்க-பிரஞ்சு நாடுகளின் வழக்கில் நூறுகோடி.

bill'ionaire, *n.* கோடி குவித்தவர், கோடிச்செல்வர்.

bill'-man, *n.* பழங்கால மழுப்படை வீரன்.

bill'on, *n.* தங்கம் வெள்ளியுடன் தாழ்ந்த உலோகம் கலந்த கலவை; வெள்ளிசெம்புக் கலவை; தகரவெள்ளிக் கலவை.

bill'ow, *n.* பெரிய அலை; கடல்; *v.* எழு; அசை.

bill'owed, bill'owy, *a.* அலைபோன்ற.

bill'-poster, bill'-sticker, *n.* விளம்பரம் ஒட்டி.

bill'y, *n.* நண்பன், தோழன்; வழிப்போக்கரின் தகரக் குவளை; *pl.* bill'ies.

bill'yboy, *n.* வாணிகப்படகு, ஆற்றில் அல்லது கடற்கரையோரமாகச் செல்லும் ஒற்றைப்பாய் மரக்கலம்.

bill'ycock, *n.* வட்டத்தொப்பி வகை.

bill'y-goat, *n.* வெள்ளாட்டுக்கடா.

bilo'bar, bilob'ate, bi'lobed, bilob'ular, *a.* ஈரிதழ்களுடைய, இருமடல்கள் கொண்ட.

biloca'tion, *n.* ஒரேநேரத்தில் ஈரிடங்களில் இருக்கும் ஆற்றல்.

biloc'ular, *a.* இரு கண்ணறைகளாகப் பிரிக்கப்பட்ட.

bil'tong, *n.* இறைச்சி உணக்கல் கீற்று.

bim'anal, bim'anous, *a.* இரண்டு கைகளையுடைய.

bimbash'i, *n.* படைத்துறைப் பணிமுதல்வர்.

bim'bo, *n.* தேறல் வகை.

bimetall'ic, *a.* இரு உலோக நாணயத் திட்டத்தைச் சார்ந்த.

bimet'allism, *n.* இரண்டு உலோக நாணயத்திட்டம்.

bimet'allist, *n.* இரு உலோக நாணயத் திட்டக்கோட்பாட்டாளர்; *a.* இரு உலோக நாணயத் திட்டத்தைச்சார்ந்த.

bimonth'ly, *a.* இருமதி ஒரு வெளியீடான; மாதத்திற் கிரண்டு வெளியீடான.

bin, *n.* தொட்டி, கூலமோ தேறலோ குப்பையோ கொட்டி வைக்கும் கொள்கலம்.

bi'nac, *n.* மீவிரைவுடைய மின்னியக்கக் கணிப்புமானி.

bin'ary, *n.* விண்மீன் இரட்டை; தம் மையம் சுற்றும் விண்மீனிணை; *a.* இரண்டிணைந்து உருவான, ஈரிணையான; இரு மடங்கான; (தொ.) binary scale, இரண்டன் மானம், ஒன்று (1) என்பதற்குமேல் இலக்கமற்ற எண்மானம்; binary theory, (வேதி.) இருமூலகக் கோட்பாடு, எல்லா வேதியியற் பொருள்களும் எதிரெதிர்ப் பண்புகளுடைய இரு மூலப் பொருள்களால் ஆயின என்னும் கொள்கை.

bin'ate, *a.* இணையாக வளர்கிற; இரட்டையான; இரண்டு உறுப்புக்களை யடக்கிய.

binaur'al, *a.* இரு செவிகளையுடைய; இரு செவிகளையும் பயன்படுத்துகிற; இரு செவிகளையும் சார்ந்த.

bind[1], *n.* கடுங்களி, நிலக்கரி அடுக்குகளிடைப்பட்ட இறுகிய கடுங் களிமண் பாளம்; முசுமுசுக்கை சார்ந்த செடியினத்தின் அடித்தாள் கட்டை; (இசை.) சுர இணைப்புக்குறி, இரு சுரங்களை ஒன்றுசேர்க்கி இணைக்கும் வளைப்புக்குறி.

bind[2], *v.* கட்டு; வரிந்திறுக்கு; இறுகப்பற்று; உறுதி செய்; கட்டுப்படுத்து; கடப்பாடுமூலம் தளைப்படுத்து, ஆணையால் பிணி; சட்டத்தால்பிணை; மாயத்தால் மயக்கு; சூழ், சுற்றியமை, எல்லைகோலு; புத்தகக் கட்டிடமிடு; கரையோர அருகுவைத்திணை; மலச்சிக்கலுண்டு பண்ணு.

bin'der, *n.* பிணிப்பவர்; ஏடுகட்டுபவர்; அறுவடைசெய்த கதிர்மணிகளைச் சேர்த்துக் கட்டும்பொறி.

bin'ding, *n.* கட்டுப்படுத்துதல்; கட்டுப்பாடு; ஏட்டின் மேல் அட்டை; ஏட்டுக் கட்டிடப்பணி; *a.* தடுக்கிற; கட்டுப்படுத்துகிற; கடப்பாடாயமைந்த.

bind'weed, *n.* (தாவ.) தழுவு கொடிவகை; கட்டுக்கொடி.

bine, *n.* (தாவ.) நெகிழ்வுடைய இளந்தண்டு, தழுவு கொடியின் மெல்லிய தண்டு.

bing, *n.* குவியல்; தொட்டி.

bin'go, *n.* இன்தேறல் வகை.

binn'acle, *n.* (கப்.) திசையறிகருவி வைக்கப்பட்டுள்ள பேழை.

binoc'ular, *n.* இரட்டைத் தொலைநோக்காடி; இருகண் நுண்ணோக்காடி; *a.* இருகண்களையுடைய; இருகண்களுக்கேற்ற; இருகண்காட்சி மூலம் பிழம்புருக்காட்டுகிற.

binom'ial, *n.* (கண.) ஈருறுப்புத்தொடர்; *a.* குறிமதிப்பெண் இரண்டு கொண்ட; (தொ.) binomial expression, (கண.) மதிப்பறியவராத இரு தொகையுடைய தொடர்; binomial theorem, ஈருறுப்புத்தேற்றம், ஈருறுப்புத் தொடரின் மதிப்புணர்த்தும் விதிமுறை.

binom'inal, *a.* இரட்டைக்கிளவியான பெயர் கொண்ட, இனப்பெயரும் வகைப்பெயரும் அடங்கிய இரு பெயருடைய.

bin'turong, *n.* வாலால் பற்றும் ஆற்றலுடைய புனுகுப்பூனை போன்ற ஊனுணி விலங்கு வகை.

bio-bibliograph'ical, *a.* ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றையும் அவரெழுதிய நூல்களையும் பற்றிய.

bi'oblast, *n.* ஊன்மத்திலிருப்பதாகக் கருதப்படும் உயிர்க்கூறு.

bioche'mical, *a.* உயிர்வேதியியல் சார்ந்த.

biochem'ist, *n.* உயிர்வேதியியல்-வல்லுநர்.

biochem'istry, *n.* உயிர்வேதியியல், உயிரினங்களின் உடலில் ஏற்படும் வேதியியல் இயக்கங்களையும் அவற்றின் விளைவுகளையும் பற்றி ஆயும் நூல்துறை.

biocoeno'sis, *n.* சார்விணைகுழுமை வாழ்வு, சூழலுக்கேற்ற தற்காப்பு முறைகளுள் ஒன்றுக உயிர்கள் ஒன்றை ஒன்று சார்புற்றுக் குழுமிவாழ்தல்.

biocoenot'ic, *a.* சார்விணைவாகக் குழுமி வாழ்கிற; சூழல் சார்ந்த.

biodynam'ics, *n.* உயிர்நூலில் உயிரின் ஊக்காற்றலைப் பற்றிய பகுதி; உயிரின் ஆற்றல் உள்ளுயிரிலிருந்தே வருகிறதென்ற கோட்பாடு.

bi'ogen, *n.* உயிர்த்தசையில் இருப்பதாகக் கருதப்படும் உயிர்க்கூறு.

biogen'esis, *n.* உயிர் மரபு, ஓர் உயிரிலிருந்தே மற்றோர் உயிர் இயல்பாகத் தோன்றுமென்னும் கோட்பாடு.

biogenet'ic, *a.* உயிர் மரபான; மூல உயிர்கூற்றினுக்குரிய; உயிர்மரபுக் கோட்பாடு சார்ந்த.

bio'genist, *n.* உயிர் மரபுக்கோட்பாட்டாளர்.

biog'eny, *n.* உயிர் மரபு.

bi'ograph, *n.* தொடக்ககாலத் திரைப்படக்காட்சி; வாழ்க்கை வரலாறு.

biog'raphee', *n.* வாழ்க்கை வரலாற்றுக்குரிய முதல்வர்.

biog'rapher, *n.* வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்.

biograph'ic, biograph'ical, *a.* வாழ்க்கை வரலாறு பற்றிய.

biog'raphy, *n.* வாழ்க்கை வரலாறு, வாழ்க்கை வரலாற்று இலக்கியம்.

biolo'gical, *a.* உயிர் நூலைச் சார்ந்த; (தொ.) biological control, தீங்கிழைக்கும் நுண்மங்களின் எதிர்நுண்மம் பெருக்கி இயற்கைக் கோளாறு மட்டுப்படுத்தும் முறை; biological warfare, நோய்க்கீடங்கள் போன்ற நுண்மங்களைப் பயன்படுத்தும் போர்முறை.

biol'ogist, *n.* உயிர்நூல் அறிஞர்.

biol'ogy, *n.* உயிர்நூல்.

biomag'netism, *n.* விலங்குக் காந்த ஆற்றல்.

biom'etry, *n.* உயிரியற் செய்திகளின் ஆயளவை முறை.

bionom'ics, *n.* சூழல் தொடர்பு பழக்கவழக்கங்கள் ஆயும் உயிர்நூற் பிரிவு.

biophys'ics, *n.* இயற்பியல் விதிமுறைசார்ந்த உயிர்நூல் விளக்கம்.

bi'oplasm, *n.* ஊன்மம்.

bi'oplast, *n.* ஊன்ம நுண்கூறு, உயிர்த்தாது.

bi'oscope, *n.* படக்காட்சிப்பெட்டி.

bi'otaxy, *n.* இயற்கை உருவ அமைப்புக்கேற்ப இனங்களை வகைப்படுத்தல், இயற்கை இனவகுப்பு.

biot'ic, *a.* உயிரைச் சார்ந்த.

bi'otin, *n.* ஊட்டச்சத்து பி-இரண்டு (B-2) கலவக்கூட்டில் அடங்கியுள்ள எச். (H) ஊட்டக்கூறு.

bip'arous, *a.* இரட்டை ஈற்றுன, ஒரே தடவையில் இரட்டையாகப் பெறுகிற; (தாவ.) இரு கவர்விட்டுச்செல்கிற.

bipart'isan, *a.* இருகட்சிகளையுடைய; இரு கட்சிகள் சார்ந்த.

bipart'ite, *a.* இலைகள் வகையில் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட; பத்திரங்களில் ஒத்திசைவான இருபகுதிகளையுடைய.

biparti'tion, *n.* ஒத்த இருபகுதிகளாகப் பிரித்தல், பிளவீடு.

bi'ped, *n.* இருகால் உயிரினம்; *a.* இருகால் உயிரைப்பற்றிய.

bip'edal, *a.* இருகாலுள்ள ; இருகால் உயிரைப்பற்றிய.

bipen'nate, bipen'nated, *a.* இரு இறகுகளையுடைய.

bipin'nate, *a.* இறகுகளின் இழைத்துய்களிலும் கிளைத்துய்கள் உடைய.

bip'lane, *n.* இருதள வானூர்தி.

bipol'ar, *a.* இருமுனைக்கோடிகளையுடைய.

biquadrat'ic, *n.* நாற்படி ; *a.* நாற்படி சார்ந்த ; (தொ.) biquadratic equation, நாற்படிச் சமன்பாடு.

biquin'tile, *n.* கோள்களின் ஈரைங்கூற்று வட்டத்தொடர்பு, வட்டத்தின் ஈரைங்கூறுகிய 144 பாகையளவில் கோள்கள் அமையும் தொடர்பு நிலை.

birch, *n.* காட்டு மரவகை, பூர்ச்சமரம் ; பிரம்பு ; *v.* பிரம்பினால் அடி.

birch'en, *a.* பூர்ச்சமரத்தினால் ஆன ; வலிய காட்டு மரத்தைப் பற்றிய.

bird, *n.* பறவை, புள், குருவி ; *v.* பறவை எய், பறவை பிடி, வலையிட்டுப் பிடி ; (தொ.) bird in bush, நிச்சயமின்மை, உறுதியின்மை ; bird in hand, நிச்சயம், உறுதி ; bird is flown, கைதி தப்பிவிட்டான் ; bird of passage, நிலைக் குடியாயிராதவர், இடமாறி ; birds of a feather, ஒத்த பண்புள்ளவர்கள் ; bird of prey, கொடும் பறவை, பறவைகளை இரை கொள்ளும் பறவை ; kill two birds with one stone, ஒருகல்லில் இரு பறவைகளை வீழ்த்து ; ஒரே தடவையில் இருவகைப் பயன்களை அடை.

bird'-call, *n.* புள்ளொலி போன்று ஒலியெழுப்பும் கருவி.

bird'-catcher, *n.* பறவை பிடிப்போர், குருவிக்காரன்.

bird'-catching, *n.* பறவை பிடித்தல் ; *a.* பறவை பிடிக்கிற.

bird'-eyed, *a.* கூரிய பார்வையுள்ள.

bird'-fancier, *n.* பறவை வளர்ப்பதில் விருப்புடையவர் ; பறவை விற்பனையாளர்.

bird'ie, *n.* சிறு பறவை ; பறவைக்குஞ்சு ; முடப்பந்தாட்டத்தில் நிலைவுக்கு ஓர் அலகு குறைபாடாகப் பெறும் குழி.

bird'ing, *n.* பறவை வேட்டை ; புட்பிடித்தல் ; புள் வலையீடு.

bird'ing-piece, *n.* பறவை வேட்டைத் துப்பாக்கி.

bird'-lice, *n.* bird-louse என்பதன் பன்மை.

bird'-lime, *n.* பறவை பிடிக்கப் பயன்படும் பசைப்பொருள்.

bird'-louse, *n.* பறவைப் பேன், பறவைகளுடலில் ஒட்டி வாழும் ஒட்டுயிர் வகை.

bird'-of-par'adise, *n.* அழகிய இறகுகளையுடைய கோழி வகை.

bird's'-eye, *n.* மலர் வகை ; (தொ.) bird's-eye view, புட்காட்சி வண்ணம், மேலிருந்து காணும் காட்சி.

bird's'-nesting, *n.* பறவைக்கூண்டு வேட்டை.

bird'-spi'der, *n.* சிறு பறவைகளையுண்ணும் பெருஞ்சிலந்தி வகை.

bird'-table, *n.* பறவை இரை மேசை.

bird'-wit'ted, *a.* நிலையான கவனமில்லாத ; எதிலும் பிடிப்பற்ற.

bir'eme, *n.* இருபுறங்களிலும் துடுப்புக்களை உடைய மரக்கல வகை.

birett'a, *n.* குருமார் அணியும் சதுரக்குல்லாய்.

Birm'inghamize, *v.* செயற்கையாகச் செய், போலியாக இயற்று.

biros'trate, *a.* இரட்டையான அலகுடைய.

Bir'relism, Bir'rellism, *n.* அகஸ்டின் பிரெல் (Augustine Birrel) என்ற ஆங்கில எழுத்தாளரின் பண்பு, அன்பார்ந்த கூர்வசை இயல்பு.

birth, *n.* பிறப்பு ; பிறத்தல் ; பெறுதல், ஈன்றெடுத்தல், பேறு, ஈற்று ; குடிப்பெருமை ; தோற்றம், தொடக்கம் ; உயர்குடி மரபு.

birth'-control, *n.* கருத்தடை, பேற்றுக்கட்டுப்பாடு.

birth'day, *n.* பிறந்த நாள் ; வெள்ளணி நாள் ; (தொ.) birthday honours, அரசர் பிறந்தநாள் விழாவின்போது அளிக்கப்படும் நன்மதிப்புப் பட்டங்கள்.

birth'-mark, *n.* பிறவிக்குறி, பிறக்கும்போது உடலில் காணப்படும் தனிப்பட்ட அடையாளம்.

birth'-place, *n.* பிறப்பிடம்.

birth'right, *n.* பிறப்புரிமை.

bis, *adv.* இருமுறை, இருதடவை ; (இசை.) மறுமுறை பாடுவதற்குரிய அடையாளக்குறி.

Bis'cayan, *n.* நீண்ட கனமான துப்பாக்கி ; துப்பாக்கிக்குண்டு ; *a.* ஸ்பெயின் (Spain) நாட்டின் பிஸ்கே மாகாணத்தைச் சார்ந்த, பாஸ்க் (Basque) இனத்துக்குரிய.

bis'cuit, *n.* மாச்சில்லு, மாப்பண்டம் ; மெருகு வரா நிலைப் பீங்கான் துண்டு ; படைவீரர் படுக்கைக்கூறு ; *a.* இளந் தவிட்டு நிறமான.

bis dat qui cit'o dat, (ல.) விரைவில் நன்கொடை யளிப்பவர் இருமடங்கு கொடுத்தவராவார்.

bise, *n.* சுவிட்சர்லாந்துப் (Switzerland) பகுதியில் வீசும் கொடுங்குளிர் வடகாற்று.

bisect', *v.* ஒத்த இரு பகுதிகளாகப் பிரி.

bisec'tion, *n.* ஒத்த இரு பிரிவுகளாகப் பிரித்தல்.

bisec'tor, *n.* பிரிகோடு, இரு சம கூறுக்கும் கோடு.

biseg'ment, *n.* ஒரு கோட்டினையோ உருவினையோ ஒத்த இரு பகுதிகளாக வெட்டிப் பிரித்தல்.

biserr'ate, *a.* (தாவ.) இருபுறமும் வாள்போன்ற பற்களுடைய.

bisex'ual, *a.* இருபால் உறுப்புக்களையும் ஒருங்கே உடைய, இருபால் கூறுள்ள ; இருபால் கூறுபாடுடைய.

bish'op, *n.* மேற்றிராணியார், சமய வட்டத்தலைவர் ; மாவட்டச் சமயமுதல்வர் ; தலைமைக்குரு ; சதுரங்க ஆட்டத்தில் ஒட்டகத்துக்கினையான காய் ; மணப்பொருளிட்டு வடித்துக் காய்ச்சிய மதுவகை ; தூக்கணங்குருவி வகை ; *v.* சமய வட்டத் தலைவராக நடி, சமய வட்டத்தலைவரின் உரிமை நடைமுறைப்படுத்து, தீக்கையளி.

bish'opdom, *n.* சமய வட்டத்தலைவரின் ஆட்சி எல்லை ; சமயவட்டத்தலைவர் பதவி.

bish'opric, *n.* மேற்றிராசனம், சமயவட்டத் தலைவரின் ஆட்சி அலுவலகம் ; சமய வட்டத்தலைவரின் ஆட்சி எல்லை.

bisk, *n.* = bisque [1].

bis'mar, *n.* நிறைகோல், வெள்ளிக்கோல்.

Bismill'ah, *int.* அல்லாவின் திருப்பெயரால்.

bis'muth, *n.* நிமிளை.

bis'on, *n.* காட்டெருது, ஆமா.

bisque [1], *n.* மீன் வகையின் சூப்பு, மீன் சாறு.

bisque [2], *n.* மெருகு முடிவுறுத பீங்கான் வகை ; முதற்படியளவில் சுடப்பட்ட மட்கலம்.

bisque [3], *n.* வரிப்பந்து-குழிப்பந்து ஆட்டங்களில் திறமையற்றவர்களுக்கு அளிக்கப்படும் சலுகை.

bissex'tile, *n.* நாள் மிக்க ஆண்டு ; *a.* நாள் மிகையான.

bis'tort, *n.* ஊன்வண்ண மலர்களும் திருகிய கிழங்கும் உடைய செடிவகை.

bis'toury, *n.* (மரு.) ஒடுங்கிய அறுவைக் கத்தி.

bis'tre, *n.* புங்கமரத்தின் புகைக்கரியிலிருந்து உண்டுபண்ணப்படும் செந்தவிட்டு நிற வண்ணப்பொருள் ; *a.* செந்தவிட்டு நிறமான.

bis'tred, *a.* செந்தவிட்டு வண்ணந் தோய்க்கப்பட்ட.

bisul'cate, *a.* பிளவுபட்ட ; கவரடிவாய்ந்த ; இரண்டு சால் வரிகளையுடைய.

bisul'phate, *n.* இருகந்தகி.

bisulph'ide, *n.* இருகந்தகை.

bit [1], *n.* சிறு துண்டு, துணுக்கு; கவனம்; அமெரிக்க நாணயம்; மிகக்குறைந்த அளவு ; கணம், குறுகிய நேரக்கூறு; தமரூசி, துளைக்கருவி ; துளைப்புப் பொறியின் நுனி ; கடிவாளத்தின் வாயிரும்புப் பகுதி ; வெட்டிரும்பு ; இடுக்கியின் வாய் ; *v.* வாயில் கடிவாளம் மாட்டு; கடிவாளமிட்டுப் பழக்கு; அடக்கு; (தொ.) a bit, கொஞ்சம் ; bit by bit, படிப்படியாக ; bits and pieces, துண்டுத் துணுக்குகள் ; not a bit, சிறிது கூட இல்லை.

bit [2], *v.* **bite** என்பதன் இறந்தகால வடிவம் ; bite என்பதன் முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

bitch, *n.* பிணவு, முடுவல், பெண் நாய் ; பெண் நரி ; பெண் ஓநாய் ; கீழ்மகள், சிறுக்கி.

bite, *n.* கடி, கடித்தல் ; கௌவுதல், பற்றுதல் ; பிடி ; கடி காயம், கடித்த தடம் ; கறிப்பு, கரம்புதல் ; கடிக்கும் அளவான சிறுதுண்டு ; சிறிதளவான உணவு ; காரம், அரிப்பு ; *v.* கடி, கௌவு, பல்லினால் பற்று ; பற்று ; பல்லினால் வெட்டு ; பிளவுபடுத்து ; பல்லினால் துளை ; துளை ; அரித்துத்தின், கரம்பு ; ஊறுபடுத்து ; தோல்விக்கு ஆளாக்கு ; (தொ.) bite off more than one can chew, செய்வதற்கரிய மிகப் பெரிய செயலில் முயற்சி செய் ; bite one's lips, சினத்தைக் கட்டுப்படுத்து ; bite the dust or ground, கீழ் வீழ்ந்து இற.

bite'-in, *v.* செதுக்கு வேலையில் காடிமூலம் இடைவரி விழும்படி அரி ; உள்ளடக்கு.

bit'er, *n.* கடிப்பவர் ; கடிக்கும் இயல்புடைய விலங்கு ; தூண்டில் இரையைக் கௌவும் மீன் ; ஏமாற்றுபவர்.

bit'ing, *n.* கடித்தல் ; *a.* கடிக்கிற.

bitt, *n.* (கப்.) தந்திவடம் சுற்றிவரியப்படுவதற்கான தூலங்கள் இரண்டினுள் ஒன்று ; *v.* தந்திவடத்தைத் தூலத்தில் வரிந்து சுற்று.

bitten, *v.* **bite** என்பதன் முடிவெச்ச வடிவம்.

bitt'er [1], *n.* தந்திவடச்சுற்று.

bitt'er [2], *n.* கசப்புப் பொருள் ; கசப்பு அனுபவம், இன்னல் ; *a.* கசப்பான ; வெறுப்பூட்டுகிற ; துன்பந் தருகிற ; விறு விறுப்பான, கூர்மையான.

bitt'er-apple, *n.* பேதி மருந்துக்கு உதவும் வெள்ளரியினக் காய்வகை ; வெள்ளரியினக் கொடிவகை.

bitt'erish, *a.* சற்றே கசப்பான.

bitt'erling, *n.* நடு ஐரோப்பாவிற்குரிய நன்னீர்வாழும் சிறு மீன் வகை.

bitt'erly, *adv.* கடுமையாக; கடுந்துயருடன்.

bitt'ern [1], *n.* காளையின் கதறலைப்போன்ற ஒலி எழுப்பும் நாரையினப் பறவை வகை.

bitt'ern [2], *n.* உப்பளங்களில் உப்பு உருவான பிறகு எஞ்சிநிற்கும் எண்ணெய்ப் பற்றுள்ள நீர்மம்.

bitt'erness, *n.* கசப்புத்தன்மை ; கடுமை.

bitt'er-pit, *n.* ஆப்பிள்பழ நோய்வகை, பொட்டு, புள்ளிவிழல்.

bitt'er-root, *n.* தசையிலையுடைய அமெரிக்கப் பாலூன்றிலப் பூண்டுவகை.

bitt'ers, *n. pl.* கசப்புப் பூண்டு வகைகளினின்றும் வடிக்கப் பட்டுச் செரிமானத்திற்குப் பயன்படும் மருந்துநீர் ; கசப்புச் சுவையூட்டப்பட்ட கார மது.

bitt'er-sweet, *n.* கசப்பும் இனிப்பும் உடைய நச்சுக்கொடி வகை.

bitt'ing, *n.* குதிரை வாயில் கடிவாள வாயிரும்பு மாட்டுதல், குதிரையை மடக்குதல்.

bitt'ock, *n.* சிறு துண்டு, சிறு கூறு.

bitts, *n. pl.* கப்பல் தளத்தில் கயிறுகள் கட்டுவதற்கான இரட்டைக் கம்புகள்.

bitulith'ic, *n.* உடைந்த கற்களாலும் நிலக்கீலாலும் பாவப் பட்ட நிலத்தளம் ; *a.* உடைந்த கற்களாலும் நிலக்கீலாலும் பாவப்பட்ட.

bit'umen, *n.* நிலக்கீல், எளிதில் தீப்பற்றக்கூடிய கனிப் பொருட்குமுவில் ஒன்று.

bitu'minate, *v.* நிலக்கீலோடு கல ; நிலக்கீல் பூசு.

bituminif'erous, *a.* நிலக்கீல் அடங்கிய.

bitum'inize, *v.* = **bituminate.**

bitum'inous, *a.* நிலக்கீலார்ந்த.

biv'alent, *a.* (வேதி.) ஈரிணைத் திறமுடைய.

biv'alve, *n.* இருதோடுடைய சிப்பி போன்ற உயிரினம் ; சிப்பி போன்ற விதை வகை ; *a.* இருதோடுடைய.

biv'alved, bival'vular, *a.* இருதோடு உடைய.

biv'ium, *n.* முள்ளிப்பி வகையில் இரு கால் நாளங்களையுடைய ஒருபக்கப் பகுதி.

biv'ouac, *n.* படைவீரர்கள் வெட்டவெளியில் இராத்தங்குதல் ; *v.* வெட்ட வெளியில் இரவைக்கழி.

biv'ouacked, *v.* **bivouac** என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

biv'ouacking, *v.* **bivouac** என்பதன் தொடரெச்ச வடிவம்.

bi-weekly, *n.* வார இருமுறை வெளியீடு ; இருவார ஒரு முறை வெளியீடு ; *a.* வாரத்திற்கு இருமுறையான ; இரு வாரங்களுக்கு ஒருமுறையான ; *adv.* வார மிருமுறையாக ; இருவாரங்கட்கு ஒருமுறையாக.

biz, *n.* (பே.வ.) தொழில் முறை.

bizarre', *a.* இயற்கை கடந்த; இயல்புக்கு மீறிய; நம்பத்தகாத; எல்லைமீறி மிகைப்பட்ட ; கட்டற்ற புனைந்துரையான ; புதுமை வாய்ந்த.

bizar'rerie, *n.* கழிமிகு புனைவு, நம்பமுடியாப்பண்பு.

biz'one, *n.* இரண்டாம் உலகப்போரில் (1939-1945) பிரிட்டிஷ் அமெரிக்க ஆட்சி மண்டலங்கள் இரண்டினுக்கும் உரிய அரசியல் பொருளியல் அரங்கக்கூறு.

blab [1], *n.* மறைவெளியிடுபவர் ; *v.* மறை வெளியிடு, உளறு; பிதற்று.

blab [2], *v.* வீங்கு, புடை.

blabb'er [1], *n.* மறைவெளியிடுபவர், உளறுவாயர்.

blabb'er [2], *a.* துருத்திக் கொண்டுள்ள.

black, *n.* கருமை, இருள் நிறம் ; கறுப்புச்சாயம் ; கால்புதையடிக்குக் கறுப்பு மெருகிடும் மை ; கறை ; கருநிற உடை ; கறுப்பர், நீகிரோவர் ; *a.* கரிய ; ஒளியற்ற, இருண்ட ; மாசடைந்த ; தெளிவற்ற ; அடர்த்தியான ; புகையார்ந்த ; துயரார்ந்த ; கறுத்த, கறுவிய; சிடுசிடுத்த தோற்றமுள்ள ; அச்சுறுத்தலான ; கொடிய; பகையார்ந்த; சூழ்வினை செய்கிற; தூனியக்காரத் தன்மையுடைய ; பாழான ; கறுப்பு உடையணிந்த ; சட்டத்தின் கட்டறுத்த ; முறைகேடான ; தொழிற் சங்கத்தின் தடைக் கட்டளைக்குரிய ; *v.* கறுப்பாக்கு ; கால் புதையரணத்துக்குக் கருநிற மெருகிடு; கருப்புநிறம் தீட்டி வரை ; அழுக்காக்கு, கரி அப்பு ; பெயர் கறைப்படுத்து ; துடைத்தழி ; முழுதும் மறை ; (தொ.) black and blue, கைவுற்றுக் குருதி கன்றும்படி ; black art, சூழ்வினை, தூனிய வினை ; black book, தண்டனைக் குரியவர் பட்டியலேடு; குற்றப்பதிவேடு; black out, வானொலி முதலிய துறைகளில் இருட்டடிப்புச்செய், செய்தியை அடக்கி ஒடுக்கிவிடு ; black sheep, குடும்பத்திலோ குழுவிலோ விரும்பத்தகாத உறுப்பினர் ; black velvet, குடிக்கலவை வகை ; in black and white, அச்சில் ; in one's black books, வெறுப்புக்கு ஆளாக ; in the black, கணக்கில் வலப்புறத்தில் மிகை காட்டும் வகையில் ; put in black and white, எழுத்து வடிவில் பதிவுசெய்துவை, எழுதிவை.

black'amoor, *n.* கறுப்பர் ; நீகிரோவர்.

black'-and-tan, *n.* அயர்லாந்து நாட்டுக் காவற்றுறையினர் ; *a.* நாய்வகையில் பின்புறம் கறுப்பு நிறமும் மற்ற இடங்களில் பொன்தவிட்டு நிறமும் உள்ள.

black'-a-vised, *a.* கருநிற மேனியுடைய, கருமுகமுடைய.

black'-ball', *v.* தேர்தல் பெட்டியில் கரும்பந்து இடுவதன் மூலம் எதிர்வாக்கிடு, மறுப்பறிவி.

black'-band, *n.* முற்றிலும் வெண்காய்வு ஆக்கப்படப் போதிய நிலக்கரியைத் தன்னகம் கொண்ட இரும்புத்தாது.

black'-beetle, *n.* கரப்பான்.

black'-berry, *n.* கனிவகை ; கனிதரும் முட்செடி வகை.

black'bird, *n.* பாடும் கருநிறப் பறவை வகை, கருங்குருவி.

black'-board, *n.* கரும்பலகை.

black'-bod'ing, *a.* தீக்குறியான, தீமைகுறித்த.

black'-book, *n.* = black-list.

black'-browed, *a.* புருவங்கறுத்த; முகங்கடுத்த: துயரார்ந்த.

black'-cap, *n.* தூக்குத்தண்டனைத் தீர்ப்புவேளையில் முறை நடுவரணியும் கருந்தொப்பி ; பாடும் பறவை வகை.

black'-coated, *a.* கருஞ்சட்டையுடைய ; அறிவுழைப்புச் சார்ந்த.

black'coffee, *n.* கடுங்காப்பி, பால் கலவாத காப்பி.

black'-damp, *n.* இருகரியகை வளியால் உயிர்வளி நீக்கப் பட்ட நச்சுக் காற்று.

black'-death, *n.* (வர.) உலகளாவப்பரவிய 1348-ஆம் ஆண்டின் கொள்ளை நோய் அழிவு.

black'-diamond, *n.* தென் அமெரிக்க பிரெசிலில் (Brazil) உள்ள கரியகம் போன்ற கடுங்கனிப்பொருள் வகை.

black'-dog, *n.* சிடுசிடுப்பு.

black'-draught, *n.* (பே-வ.) பேதிமருந்து.

black'-drop', *n.* அபின் கலந்த குடிவகை.

black'-earth, *n.* செழிப்பான கரிசல் மண்.

black'en, *v.* கருமையாக்கு; பெயர்கெடு, கறைப்படுத்து, இகழ் உண்டுபண்ணு ; கருநிறமாகு, கருகு.

black'eye, *n.* கருங்கண், கருவிழியுடைய கண்; படுகாயத்தால் கறுப்பான கண், விழுப்புண்பட்ட கண்.

black'-eyed, *a.* கருங்கண் உடைய.

black'-face, *n.* முகங்கறுப்பான ஆடு.

black'-fellow, *n.* ஆஸ்திரேலியாவின் பழங்குடி மகன்.

black'-fisher, *n.* இரவில் அயலார்க்குரிய இடம் சென்று மீன்பிடிப்பவர்.

black'-flag, *n.* கருங்கொடி; கடற்கொள்ளைக்காரர்கள் சின்னம்; தூக்குத்தண்டனைக் களத்தின் கொடி.

Black'-foot, *n.* வடஅமெரிக்கச் செவ்விந்திய மரபுவகையினர்; *pl.* Black'-feet.

black'-friar, *n.* கரிய மேலாடையணிந்த துறவுச்சங்கத்தினர்.

black'-frost, *n.* பனிபெய்யா உறைபனி.

black'guard, *n.* மிகக்கீழ்த்தர ஊழியர் ; இழிமகன், கயவன் ; *a.* இழிந்த ; *v.* இழித்துரை ; கயமைத்தனம் காட்டு.

black'guardism, *n.* கயமை.

black'guardly, *a.* இழிந்த, கெடுகேடான.

Black'- hand, *n.* இரகசியக் கொள்ளைக்கூட்ட அமைப்பு

black'-head, *n.* கடற்பறவை வகைகள் ; தோலில் காணும் பருவகை.

black'hole, *n.* இருட்டறை, நிலவறைச்சிறை.

black'ing, *n.* தோலுக்குக் கறுப்புச் சாயம் ஊட்ட உதவும் பொருள்.

black'ish, *a.* கறுப்பு நிறம் கலந்த, கருஞ்சாயலான, சற்றே கறுப்பு மிகுந்த, சிறிதே கறுப்பான.

black'jack, *n.* தோலாலான பழங்காலக் குடிகலம் ; கடற் கொள்ளைக்காரருக்குரிய கருங்கொடி.

black'lead, *n.* எழுதும் கரிக்கோலின் கருங்குச்சி.

black'leg, *n.* கள்ள ஆட்டம் ஆடுகிறவர் ; கருங்காலி, வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத தொழிலாளி ; சூதாடி ; கால்நடைகளின் வலிப்பு நோய்வகை.

black'-letter, *n.* செர்மன் எழுத்துப் போன்ற பழைய ஆங்கில அச்சு எழுத்து வடிவம்.

black'list, *n.* கரும்பட்டியல், குற்றங்குறையுடையவர் பட்டியல் ; எச்சரிக்கையாயிருக்கவேண்டியவர் பட்டியல் ; *v.* கரும்பட்டியலிற் சேர்.

black'mail, *n.* அச்சவரி ; கொள்ளைக்காரர் பிரிக்கும் காப்பு வரி ; *v.* அச்சுறுத்திப் பணம் பறி.

black'mailer, *n.* அச்சுறுத்திப் பணம் பறிப்பவர் ; பகற் கொள்ளைக்காரர்.

black' Maria, *n.* சிறைவண்டி.

black'market, *n.* கள்ள வாணிகம்.

black'marketeer, *n.* கள்ள வாணிகர்.

black'mass, *n.* கேலி வழிபாடு ; பேய்வழிபாடு.

black'ness, *n.* கருமை.

black'-out, *n.* முழுவிளக்கணைப்பு ; முழுமறைப்பு, பலகணிக் கருந்திரை இருட்டடிப்பு ; திடீர் உணர்விழப்பு ; *a.* முழு மறைப்புக்குரிய.

black'pudding, *n.* குருதிக்களி, குருதிக்குழம்பு.

black'-quart'er, *n.* கால்நடைகளின் வலிப்பு நோய்வகை.

black'smith, *n.* கருமான், கொல்லன்.

black'thorn, *n.* கைத்தடிக்குப் பயன்படும் கருநிறமுள்ளுடைய மரவகை ; கைத்தடி.

black'water, *n.* ஆடுகளின் பித்தநோய் ; (தொ.) black-water fever, வாந்தியோடும் குருதி கலந்த சிறுநீரோடும் கூடிய காய்ச்சல்.

bladd'er, *n.* சவ்வுப்பை, மெல்லிய தாள் போன்ற தோற்பை, ஊதற்பை ; காற்று நிரம்பிய சவ்வு, நீர் நிரம்பிய பை ; பொள்ளல் பொருள், சத்தற்ற பொருள் ; வெற்று வாயடிப்பவர், வாய்ப்பட்டி ; வீங்கிய தோற்பை உறுப்பு ; (தொ.) gall bladder, பித்தநீர்ப்பை; urinary bladder, சிறுநீர்ப்பை.

bladd'ery, *a.* ஊதற்பை போன்ற; பொள்ளலான.

blade, *n.* அலகு, தாள், கதிர் ; இலையில் பரந்த பகுதி ; புல்லின் இதழ் ; கூலவகையின் நீளிலை ; கத்தி-வாள் முதலிய வற்றின் வெட்டுவாய்ப்பகுதி ; உகை தண்டு-எலும்பு முதலிய வற்றின் அகலருகு ; விடலை, களிமகன், ஆர்வலன்.

blade'-bone, *n.* பின்புறத் தோளெலும்பு.

blad'ed, *a.* அலகுடைய, வெட்டுவாய் கொண்ட.

blague, (பிர.) *n.* போலி, பாசாங்கு ; புளுகு ; முழுப்பொய்.

blaguer, (பிர.) *n.* புளுகர்.

blain, *n.* பரு, மயிர்க்குரு ; மீன்வகை.

blam'able, *a.* குறைகூறத்தக்க ; குற்றத்துக்கு இடமளிக்கிற.

blame, *n.* குற்றச்சாட்டு ; குற்றப்பொறுப்பு ; குற்றம் ; குறை, பழி ; *v.* குற்றஞ்சாட்டு ; குறைகூறு ; பழிசுமத்து ; பொறுப்பேற்று.

blame'ful, *a.* கண்டித்தற்கு உரிய.

blame'less, *a.* குற்றமற்ற,தீங்கறியாத.

blame'worthy, *a.* கண்டிக்கத்தக்க.

blanch, *v.* வெள்ளையாக்கு ; வெண்மை தீற்று ; வெளிறு ; வெண்ணிறந்தோன்று.

blancmange', *n.* வெண்ணிறக் கூழுணவு வெண்குழம்பு, வெண்பாகு.

bland [1], *n.* நீர்மோர்.

bland[2], *a.* மெதுவான; பசுமையான; மென்னயம் வாய்ந்த, அமர்ந்த; நயாகரிகமிக்க; இன்னயமான; நகைநயம் வாய்ந்த, வஞ்சப்புகழ்ச்சியான.

blan'dish, *v.* கொஞ்சு, பசப்பு, முகமன்கூறு.

blan'dishment, *n.* கொஞ்சுதல்; பசப்புநயம்; இன்னயம்; மருட்சி; கவர்ச்சிநயம்.

blan'dly, *adv.* மென்னயமாய்; கேலிநயத்துடன், கிண்டலாக.

bland'ness, *n.* மென்னயம், இன்னயம்; கேலிநயம்.

blank, *n.* வெறுமை, வெறும்பாழ்; வெற்றிடம்; வெறுங்கோடு; கோட்டுக்குறி; *a.* வெறுமையான; எழுதி நிரப்பப்படாத, வெறுங்கோடான; தொகை குறிக்கப்படாத; வெற்றிடமான, மொட்டையான; ஒன்றும் வளராத; வெடிக்காத; கிளர்ச்சி தராத, சப்பையான; மலிப்புடைய; இடைவேறுபாடு அற்ற, கவர்ச்சி தராத; எதுகையற்ற, செந்தொடையான; (தொ.) **blank cartridge**, வெற்றுத்தோட்டா; **blank cheque**, தொகை குறிக்கப்படாத பொருளகமுறி; **blank door**, போலி வாயிலின் தோற்றமுடைய கட்டிடக்கலை அணி அமைப்பு; **blank verse**, ஆங்கில ஏற்றசை ஐஞ்சீர்ச் செந்தொடைப்பா, கிரேக்க அறுசீர்ப்பா; **blank window**, போலிப் பலகணியின் தோற்றமுடைய கட்டிடக்கலை அணி அமைப்பு.

bonnes fortunes, (பிர.) *n.* பெண்டிர் பாராட்டும் பேறு, தற்புகழ்ச்சிக்குரிய அணங்காதரவு.

bonn'et, *n.* பெண்ணின் தலையணி; ஆடவரின் மெல்லிய தலைக் கவிகை; பெருமக்கள் அணிமுடியின் உள்ளணியும் மென்பட்டுக் குல்லாய்; பாய்மரத்தோடு இணைக்கப்பட்ட ஒட்டுத் துணி; புகைப்போக்கியின் மேல்மூடி; பொறிவண்டி இயந்திரத்தின் கவிகை மூடாக்கு; பல்வேறு இயந்திரங்களின் பூண்மூடி; அசைபோடுகிற உயிரினத்தின் இரண்டாவது வயிறு; தீங்குக்குதவும் துணையாள், கூட்டாளி; *v.* மெல்லிய குல்லாய் அணி, கண்களின்மீது தலையணியை அமுத்திக் கவிய விடு; (தொ.) bee in bonnet, பித்துக்கொள்ளிச் செயல்.

bonn'eted, *a.* மெல்லிய குல்லாயுள்ள; மேல்மூடியைக்கொண்ட.

bonn'et-laird, *n.* ஸ்காத்லாந்துநாட்டின் சிறுநில உடைமையாளர்.

bonn'et-piece, *n.* குல்லாய் அணிந்த அரசன் தலையுருக்காசு.

bonn'et-rouge, *n.* புரட்சிச் சின்னமான செந்நிறக் குல்லாய்.

bonn'ie, *a.* அழகிய, வனப்புமிக்க; கழிமகிழ்வுள்ள; கொழுகொழுத்த; மனநிறைவளிக்கத்தக்க; தளதளப்பான.

bonn'ily, *adv.* அழகுடன்; அகமகிழ்வாக.

bonn'iness, *n.* அழகு; மகிழ்ச்சி.

bonn'y, *a.* = bonnie.

bonn'y-clabb'er, *n.* புளித்து இயல்பாக உறைந்த பால்.

bon'spiel, *n.* போட்டி ஆட்டம்; ஸ்காத்லாந்து நாட்டுக்குரிய சறுக்குகல் ஆட்டப் போட்டிப்பந்தயம்.

bon ton, (பிர.) *n.* நற்பயிற்சி மரபு; நாகரிக உலகு; உச்ச உயர்நாகரிகப் பாணி.

bon'us, *n.* கல்லூதியம், மிகையூதியம்; மிதூதியம், பங்கு மிகையூதியம்; காப்பிட்டு உறுதித்தாளர்களுக்குரிய ஆதாயப்பங்கு ஊதியம்; உழைப்புக்கூலியல்லாத விருப்பக் கொடையூதியம்; வட்டிக்கு மிகுதியான விருப்பக் கட்டணம்.

bon vivant, (பிர.) *n.* இனியபாங்கர் ; மட்டின்றி வாழ்பவர், நாக்குருசி படைத்தவர் ; குதிர்.

bonx'ie, *n.* பெரிய கடற்பறவை.

bon'y, *a.* எலும்பைச்சார்ந்த ; பெரிய எலும்புடைய ; எலும்பு போன்ற ; திண்ணிய ; வற்றலான, உணங்கிய ; மெல்லிய, சதைப்பற்றற்ற, ஒடுங்கிய ; சதைக்குறைவுள்ள ; எலும்பு நிரம்பிய ; கடுமையான.

bonze, *n.* ஜப்பானிய-சீனப் புத்தசமயக்குரு.

boo, *int.* வெறுப்புணர்த்தும் ஒலிக்குறிப்பு; கண்டன ஓசைக் குறிப்பு ; *v.* கூப்பாடுபோடு ; இரைந்து வெறுப்பைக்காட்டு.

boob, *n.* வெள்ளையுள்ளத்தான், பேதை.

boob'y, *n.* அசடன், பெருமுகடி, முட்டாள், பேதை ; வகுப்பின் கடைமாணவன் ; மிக எளிதாகப் பிடிக்கக்கூடிய கடற் பறவைவகை ; *a.* முழுமூடத்தனமான.

boo'byish, *a.* முழுமூடத்தனமான.

boo'byism, *n.* பெரும்பேதைமை, கழிமடமை.

boo'by-prize, *n.* இறுதி மதிப்பெண்ணுக்குரிய பரிசு.

boo'by-trap, *n.* கையாண்டிச் சூழ்ச்சிப்பொறி ; எதிர்பாராது தொட்டவுடனே வெடிக்கும் பொறி அமைப்பு ; *v.* கேலி விளையாட்டுச் சூழ்ச்சி செய் ; தொடுவெடிப்பொறி அமை.

boo'dle, *n.* கூட்டு, குழாம், குழுமம் ; போலிநாணயம், பொய்ப்பணம் ; அரசியல் கைக்கூலிப்பணம் ; கொள்ளை ஊதியம் ; சிட்டாட்டம்.

bood'y, *v.* முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டிரு, சோகை பிடித்திரு.

boog'ie-wocg'ie, *n.* இசைப்பேழையில் ஆரவார இசைப்புச் சந்தம்.

boohoo', *n.* இரைந்தழுமொலி ; *v.* கூச்சலிட்டழு.

book, *n.* புத்தகம், ஏடு, சுவடி; இலக்கியப்படைப்பு; காப்பியம்; இசைநாடக எழுத்து மூலம் ; தொடர் ஏட்டின் தனிச் சுவடிப்பகுதி ; ஏட்டின் பெரும் பிரிவு ; விவிலிய ஏட்டின் பெரும் பிரிவு ; அறிவுத்தொகுதி ; அறிவுமூலம் ; படிப்பினைகள் தரும் பொருள் ; கற்பனை அறிவின் மூலமுதல் ; குறிப்பேடு ; பந்தயக்குறிப்புத் தொகுதி ; குறிப்பு எழுதுவதற்காகக் கட்டப்பட்ட வெற்றேடு ; சிட்டு-அஞ்சல்தலை முதலியன தொகுத்து வைப்பதற்குரிய வெள்ளேடு ; மாதிரி ஏட்டுப் படிவம் ; தற்குறிப்புத் தொகுதி ; சீட்டுத்தொகுப்புக் கட்டிடம் ; சிட்டாட்ட வகையில் முதல் ஆறுபிடி ; சரியான நகவல் ; மேற்கோள் : *v.* புத்தகத்தில் பதிவுசெய் ; விவரம் குறித்துக்கொள் ; முகவரி எழுதிக்கொள் ; காவல் துறையில் குற்றம் செய்தவராகக் கருதப்படுபவரின் பெயரைப் பதிவு செய்துகொள் ; முன்கூட்டி இடம் ஒதுக்கிவை ; முன்னதாக ஆள் திட்டம் செய்துவை; முன்னரே ஏற்பாடுசெய் ; ஒதுக்கிய இடத்துக்கு ஆட்பெயர் பதிவுசெய் ; பயணச்சிட்டளி ; பயணச்சிட்டுப் பெறு.

book'-account', *n.* புத்தகப்படியான பற்றுவரவு விவரம்.

book'-binder, *n.* ஏடுகட்டுபவர்.

book'binding, *n.* ஏட்டுக்கட்டிடம்; புத்தகம் கட்டும் தொழில் ; புத்தகமேலட்டை ; அட்டை அமைப்பு வேலை.

book'case, *n.* புத்தக அடுக்குப்பெட்டி.

book'-club, *n.* ஏடகக்குழு, புத்தகங்களைப் பொதுவில் வாங்கித் தமக்குள் பரிமாறிக்கொள்பவர் கூட்டுக்குழாம் ; நிலை வரியாளருக்குக் காலப்படி புதுநூல்கள் அனுப்பும் தொழிலகம்.

book'-debt, *n.* வணிகப் பதிவேட்டில் உள்ள கடன் குறிப்பு.

book'-end, *n.* புத்தக நிலைஅடுக்கில் கடைசிப்புத்தகம் தாங்கும் முட்டணி.

book'ful *a.* நூலறிவு நிறைந்த.

book'hold'er, *n.* நாடகக்குறிப்பேட்டாளர், நாடகக் குறிப்பேட்டைக் கையில் வைத்துக்கொண்டு நடிகர் பகுதிகளை நினைவூட்டுபவர்.

book'-hunt'er, *n.* அருநூல் வேட்டுவர் ; நூல் தேட்டாளர்.

book'ie, *n.* (பே-வ.) குதிரைப்பந்தயப் பணயக்கணக்கர்.

book'ing-clerk', *n.* நுழைவுச்சீட்டு விற்பனையாளர்.

book'ing-hall, **book'ing-off'ice**, *n.* நுழைவுச்சீட்டு விற்பனை நிலையம், பிரயாணிகளின் பெயர்ப் பதிவகம்.

book'ish, *a.* புத்தக ஆர்வமுடைய ; ஏட்டறிவு மட்டுமுள்ள; புத்தகத்தை நினைவூட்டுகிற.

book'ishness, *n.* புத்தக ஆர்வம்; ஏட்டறிவுமட்டும் உடைமை.

book'-keeper, *n.* கடைக்கணக்கர் ; கணக்கெழுத்தாளர்.

book'-keep'ing, *n.* வாணிகக் கணக்குமுறை, கணக்கெழுத்தாண்மை.

book'-land, *n.* பட்டாநிலம், பொதுநிலக் கணக்கிலிருந்து தனிப்பட்டவருக்கு அளிக்கப்படும் நிலம்.

book'-learn'ing, *n.* நூலறிவு, வெறும் புத்தகப்படிப்பு.

book'-less, *a.* புத்தகங்களில்லாத ; நூலறிவற்ற, படிப்பில்லாத.

book'-let, *n.* சிற்றேடு, சிறிய புத்தகம்.

book'-lore, *n.* புத்தகக்கல்வி, நூலறிவு; புத்தகப்பட்டி அறிவு.

book'louse, *n.* புத்தகப்பூச்சி வகை, புத்தகப் 'பேன்' ; *pl.* book'lice.

book'mak'er, *n.* திரட்டு நூலாளர், பிற புத்தகங்களிலிருந்து எடுத்துத் திரட்டி நூலாக்குபவர் ; நூல் திரட்டாளர், புத்தகத் தொகுப்பாளர் ; குதிரைப்பந்தயப் பணயத் தொழிலர்.

book'making, *n.* புத்தகம் தொகுத்தல், பந்தயப் பணம் வைத்தல்.

book'man, *n.* அறிஞர் ; மாணவர்.

book'-mark, *n.* புத்தகப்பக்க அடையாளச்சீட்டு.

book'-minded, *a.* புத்தக மனப்பான்மை கொண்ட, ஏட்டியற் சார்பான சிந்தனையுடைய.

book'-mus'lin, *n.* புத்தக அட்டைக்குரிய மெல்லிய துணி.

book'-plate, *n.* நூலின் உள்ளட்டையில் ஒட்டப்படும் நூல் உடைமையாளர் பெயர்ப்பொறிப்புச்சீட்டு.

book'-post, *n.* நூல் அஞ்சல்.

book'-rest, *n.* மேசைமீது வைப்பதற்குரிய புத்தகந்தாங்கி.

books, *n. pl.* வாணிகக் கணக்கேடுகள் ; தொழிலகப்பதிவுக் குறிப்புக்கள் ; கூட்ட நடவடிக்கைப் பதிவுகள் ; நிகழ்ச்சிக் குறிப்புக்கள்.

book'scor'pion, *n.* புத்தகப் பூச்சிவகை, புத்தகத் 'தேள்'.

book'-seller, *n.* புத்தக விற்பனையாளர்.

book'-selling *n.* புத்தக விற்பனை.

book'shelf, *n.* புத்தக நிலைப்பெட்டி.

book'shop, *n.* புத்தகக்கடை.

book'sie, *a.* இலக்கியப் பாணியில் இறங்குகிற.

book'-stall, *n.* புத்தக விற்பனைச்சாவடி.

book'-stand, *n.* புத்தக நிலைதாங்கி.

book'-tally, **book'token**, *n.* குறிப்பிட்ட புத்தக விலை மதிப்புக்கீடான புத்தகப் பரிசுச் சீட்டு.

book'-trade, *n.* புத்தக வாணிகம்.

book'-value, *n.* கணக்கேட்டு மதிப்பீட்டு விலை.

book'-work, *n.* விதிகளைப்படித்தல், பாடப்புத்தகக்கல்வி; புத்தகஞ்சார்ந்த வேலை.

book'-worm, *n.* புத்தகப்பூச்சி ; ஏட்டுப்படிப்பில் ஆழ்ந்தவர்.

book'y, *a.* = bookish.

boom[1], *n.* கப்பல் பாயினடிப்புறத்தை நீட்டிப் பிடிக்க உதவும் மரச்சட்டம் ; ஆறு அல்லது துறைமுக வாயிலில் மிதக்கும் மரத்தாலான தடைவரம்பு ; துறைமுகக் குறுக்குச்சங்கிலி அல்லது வரம்பு ; நீண்ட கட்டை, விட்டம்.

boom[2], *n.* ஆழ்ந்திரையும் முழக்கம்; அதிரொலி ; கடலோசை ; நாரை வகையின் கூவிளி ; *v.* ஆழ்ந்து எதிரொலிக்கும் ஓசைசெய் ; கூச்சலிடு ; முனங்கு, முரலு ; நாரைவகைபோல் கூக்குரலிடு.

boom[3], *n.* திடீர் உயர்வு; திடீர் வளர்ச்சி. திடீர்ச் செயல் விரைவு; *v.* திடீரென முயற்சிசெய்; விரை வளர்ச்சிகாட்டு; விரைவில் செல்வப்பெருக்கடை; உடனடியான மக்கட் செல்வாக்குப்பெறு; ஆரவாரத்துடன் தொடங்கு.

boom'er *n.* ஆண் 'கங்காரு', பைம்மா ஏறு, வயிற்றடியில் குட்டிகளை வைப்பதற்குதவும் பையை உடைய ஆஸ்திரேலிய மாநில விலங்குவகையின் ஆண்; அமெரிக்கச் செவ்வணில் வகை.

boom'erang, *n.* வளைதடி, தாக்கித் திரும்பும் குறுந்தடி; தன்னையே சுடும்வினை; தன்னையே திருப்பித்தாக்கும் வாதம்; தற்கேடு விளைக்கும் கருத்து.

boom'ing, *n.* திடீர் முயற்சி; விரைவு வளர்ச்சி; விரைவுச் செல்வம், ஆரவாரத் தொடக்கம்; *a.* திடீர் முயற்சியுள்ள; விரைவாக வளர்ச்சியுற்ற, விரைவுச் செல்வம் பெற்ற; ஆரவாரமாகத் தொடங்கிய.

boon[1], *n.* வரம்; அருட்கொடை, நன்கொடை, பேருதவி; அருட்பேறு; பரிசு; வேண்டுகோள், மனு; வேண்டிக் கொள்ளும் பொருள்; வாழ்விக்கும் பொருள், அருநலம், அன்புச்செயல், நல்மை, நற்பேறு, நற்பயன், நல்விளைவு.

boon[2], *a.* வள்ளன்மையுடைய; அன்புடைய; அருளுடைய, களிகூர்ந்த, இன்பமான, நிறைமகிழ்ச்சியுள்ள; மகிழ்ச்சி விளைவிக்கிற; (தொ.) boon companion, இன்பத்தோழர்.

boor, *n.* காட்டான், காட்டாள்; முரடன்; நாட்டுப்புறத்தான்; அருவருப்பானவன், நற்பயிற்சிப்பண்பற்றவன்; தென்னுப் பிரிக்காவிலுள்ள டச்சுக் (Dutch) குடிமகன்.

boor'ish, *a.* பட்டிக்காட்டுத் தன்மையுள்ள; முரட்டுத்தன முடைய; அருவருப்பான; நற்பயிற்சிப்பண்பற்ற.

boor'ishness, *n.* பட்டிக்காட்டான் தன்மை; காட்டாள்குணம்; முரட்டுத்தனம்.

boost, *n.* புகழ்விளம்பரம்; செயற்கையுதவி; *v.* வீண் விளம்பரஞ்செய்; மேலே ஏற்று; மதிப்பை உயர்த்து; (பே-வ.) முன்னுக்குத்தள்ளு; (இயக்.) மின்னியக்கஞ் செறிவுறுத்து.

boost'er, *n.* விசைவாணத்தில் விசையளித்தவுடன் விடுபட்டு விடும் துணை உந்துகலம்.

boot[1], *n.* புதைமிதியடி, அடிபுதையரணம்; அரைகுறையாக மூடப்பட்ட செருப்புவகை; சித்திரவதைக்கருவி; நான்கு சக்கர வண்டியின் பயண மூட்டைப்பெட்டி: உந்துகலத்தின் பின்புற மூட்டைவைப்பிடம்; *v.* புதைமிதி போட்டுக்கொள்; உதை; வெளியில்தள்ளு; வேலையினின்று விலக்கு.

boot[2], *n.* நற்பயன், ஆதாயம், இலாபம், இழப்பீடு; *v.* நற்பயன்கொடு, ஆதாயம் அளி; கலந்தருவதாயிரு; (தொ.) to boot, கூடுதலாக, மேலும்.

boot'black, *n.* புதைமிதி வகைகளைத் தூய்மையாக்கி வண்ண மிடுபவன்.

boot'-catcher, *n.* தங்கல்மனை விருந்தினரின் புதைமிதி கழற்றும் ஊழியன்.

boot'ed, *a.* புதைமிதியுடைய; குதிரை இவர்வதற்கான முன் ஏற்பாடு முற்றுவித்த.

bootee', *n.* பெருமாட்டியின் சிறிய புதைமிதி; குழந்தையின் கம்பளிக் காலணி.

Boo'tes, *n.* சோதி விண்மீன் குழு, வடதிசை விண்மீன் குழுக்களுள் ஒன்று.

booth, *n.* சாவடி, சவுக்கை; திரைச்சீலை விடுதி: சந்தைக்கடை, தட்டுக்கடை; (தொ.) polling booth, வாக்களிப்புச் சாவடி.

boot'-hook, *n.* நீண்ட புதைமிதி அணிவிக்கும் கருவி.

boot'ikin, *n.* சித்திரவதைப் புதைமிதி; கீல்வாதப் புதைமிதி.

boot'jack, *n.* புதைமிதி நீக்குங்கருவி.

boot'lace, *n.* புதைமிதி கட்டுங்கயிற்றிழை.

boot'-last, *n.* புதைமிதி உருவமைதிக்கு உதவும் மர உருக் கட்டை.

boot'leg, *n.* உயர் புதைமிதியின் கால்புறம்; *v.* கடுந்தேறலைக் கள்ளத்தனமாகக் கொண்டுசெல்.

boot'legger, *n.* கள்ளச்சாராயக்காரன், திருட்டுச் சாராய வணிகன்.

boot'legging, *n.* கள்ளச்சாராய வணிகம்.

boot'less[1], *a.* புதைமிதியற்ற.

boot'less[2], *a.* ஆதாயமற்ற; பயனற்ற.

boot'licker, *n.* காரியத்திற்காகக் கெஞ்சி நடக்கும் இழிஞன்.

boot'licking, *n.* கெஞ்சுதல்; *a.* கெஞ்சும் இழிகுண முடைய.

boot'-maker, *n.* புதைமிதி செய்பவர்.

boot'-making, *n.* புதைமிதித் தொழில்; *a.* புதைமிதி செய்கின்ற.

boots, *n.* உண்டி விடுதிப்பணியாள்; விடுதியில் புதைமிதி துடைப்பவன்.

boot'-tree, *n.* = boot-last.

boot'y, *n.* கொள்ளைச்செல்வம், திருட்டுச்சொத்து, கொள்ளை யடிக்கப்பட்ட பொருள்.

booze, *n.* சாராயத்தைக் கூட்டமாகக் குடித்தல்; கள் தொலைச்சு; *v.* மிகுதியாகக்குடி, தொடர்ந்து குடி.

booz'y, *a.* குடிப்பழக்கம் மிகுதியாகவுள்ள; மிகுந்த குடிவெறி யுள்ள.

bo-peep', *n.* குழந்தைகளின் 'கண்ணும்பொத்தி' ஆட்டம்.

bor, *n.* அண்டை வீட்டுக்காரர்.

bor'a[1], *n.* இத்தாலி நாடடுத்த அட்ரியாட்டிக் (Adriatic) கடற்கரைப் பகுதியில் வீசும் வடகிழக்குக் குளிர்காற்று.

bor'a[2], *n.* முஸ்லீம் வணிகர்.

borach'io, *n.* ஸ்பெயின் நாட்டில் சாராயம் வைக்கும் தோல்மிடா; குடிவெறி இழிஞன்.

bora'cic, *a.* பொரிகம் சார்ந்த.

bo'racite, *n.* வெளிமப் பொரியகியும் பாசிகையும் இணைந்த கனிப்பொருள்வகை.

bo'rage, *n.* தேறலுக்கு மணமூட்டப் பயன்படுத்தப்படும் நீல மலர்களையும் துய்யார்ந்த இலைகளையுமுடைய செடிவகை.

bor'ax, *n.* பொரிகம், நீருடை உவர உப்புவகை.

bor'azon, *n.* மனித முயற்சியாலாக்கப்பட்டு வைரத்தினும் கடுமை வாய்ந்த சேர்மப்பொருள்வகை.

Bordeaux', *n.* தென் பிரான்சில் போர்டோ என்னுமிடத்துக் குரிய இன்தேறல் வகை; (தொ.) Bordeaux mixture, பூச்சித்தடை நச்சுப்பொடிவகை.

bord'er, *n.* பக்கம், ஓரம், அருகு; கரை; எல்லை; எல்லைப் புறம்; நாட்டின் எல்லை; தோட்டத்தின் மலர்ச்செடி வரம்பு; உடையின் அழகுக்கரை; *a.* எல்லையைச் சார்ந்த; *v.* எல்லைக் கருகில் செல், அணுகு, நெருங்கு; ஓரத்தை அமை, எல்லை கோலு, வரம்பிடு; ஆடை வகையில் கரையமை.

bordereau, (பிர.) *n.* உள்ளடக்கக்குறிப்பு; நினைவுக்குறிப்பு.

bord'ered, *a.* ஓரத்தையுடைய; கரையிட்ட; அருகுகொண்ட; எல்லையாகக்கொண்ட.

bord'erer, *n.* எல்லைப்புற வாழ்நர்.

bord'erland, *n.* எல்லைநிலம்; *a.* இருபொருள்களுக்கிடையி லுள்ள வரம்பிடப்படாத ஓரத்துக்குரிய.

bord'erless, *n.* வரம்பில்லாத, கரையற்ற.

bord'er-line, *n.* வரம்புக்கோடு, எல்லைவரை; *a.* வரம்புக் கோட்டிலுள்ள; (தொ.) border-line case, (உள.) பைத்திய நிலைக்கு அருகில் வந்துவிட்ட நோய் நிலை.

bor'dure, *n.* (கட்.) கேடயச்சுற்று வரம்பு.

bore[1], *n.* துளை; துப்பாக்கிக் குழலின் உட்புழை; நீள்துளை; உட்புழையின் குறுக்களவு; நீர் ஊற்றுக்காகச் செய்யப்படும் ஆழமான சிறுதுளை; *v.* துளையிடு; குதிரை வகையில் தலையை முன்னுற நீட்டு; பந்தயக் குதிரை வகையில் மற்றொரு பந்தயக் குதிரையை ஓட்டப் பாதையிலிருந்து தள்ளு.

bore [2], *n.* தொந்தரை, தொல்லை; சலிப்புறுத்தல், சோர்வு; ஒய்வில்லாமல் தொந்தரை தருவது; பொருளில்லாது பேசுபவர்; *v.* பேசிச்சலிப்படையச்செய்.

bore [3], *n.* சுவர்போலெழுந்து வரும் கழிமுக வேலியேற்றப் பேரலை.

bore [4], *v.* **bear** [3], **bear** [4] என்பவற்றின் இறந்தகாலம்.

bor'eal, *a.* வடதிசைத் தொடர்பான; வடகாற்றைச் சார்ந்த.

Bor'eas, *n.* வடகாற்றுத்தெய்வம்; வடகாற்று, வடந்தை.

bore'cole, *n.* கோசுக்கீரை.

bore'dom, *n.* சலிப்பு, முசிவு, சோர்வுணர்ச்சி.

boreen', *n.* சந்து, இடைவழி, ஒதுக்கமான பக்கவழி.

bore'hole, *n.* நீர்-எண்ணெய் ஆகிய ஊற்றுக் காண்பதற்காக இயந்திரத்தால் தோண்டப்படும் ஆழ்துளை.

bor'er, *n.* துளையிடுபவர், துளைக்கருவி; தலையை முந்தி நீட்டும் குதிரை; துளையிடும் பூச்சிவகை.

bo'ric, *a.* பொரிக்காடியைச் சார்ந்த.

bor'ing, *n.* துளையிடும் செயல்; துளையிடப்பட்ட பள்ளம்; *a.* துளையிடுகிற.

bor'ings, *n. pl.* துளையிட்டதாலான சிறு துண்டுகள்.

born, *v.* **bear** [3] என்பதன் முடிவெச்ச வடிவம்.

borne, *v.* **bear** [4] என்பதன் முடிவெச்ச வடிவம்.

borne, (பிர.) *a.* வரையறைப்பட்ட; குறுகிய; குறையறிவுள்ள, குறுகிய மனப்பான்மையுடைய.

born'ite, *n.* செம்புச் சுரங்கக்கலவை, செப்பிரும்புக் கந்தகை.

bor'on, *n.* உலோகச்சார்பற்ற கருந் தவிட்டுநிறத் தனிப் பொருள்வகை.

bor'ough, *n.* அரசுரிமைப் பத்திரத்தின்படி நகராண்மைச் சலுகைகளுள்ள பேரூர்; அரசியல் மாமன்றத்திற்கு உறுப்பினர் அனுப்பும் நகரம்; (தொ.) close borough, pocket borough, உடையவர் தமக்கென வாக்குகளைப் பயன்படுத்தவல்ல நகரத் தொகுதி; rotten borough, வாக்காளரில்லாமலே வாக்குரிமை தொடர்ந்திருந்த தேர்வுத் தொகுதி.

borough-Eng'lish, *n.* கடைசி இளையமகனுக்கு நிலச் சொத்துரிமை செல்லும் பண்டை ஆங்கில வழக்கம்.

bor'oughmonger, *n.* ஆங்கில நகராண்மைத் தேர்வுத் தொகுதிகளின் ஆதரவை விலைப்படுத்துபவர்.

bor'ough-reeve, *n.* 1835-க்கு முற்பட்ட பதிவு பெறுத ஆங்கில நகரின தலைமைப் பணியாளர்.

bo'rrow, *v.* கடன் வாங்கு; இரவல் வாங்கு; தற்கால உபயோகத்துக்குப் பணம் பெறு; தனதல்லாததை வழங்கு; அயலிடத்திலிருந்து தனதாக ஏற்றுக்கொள்; வேறெரு இடத்திலிருந்து தருவித்துக்கொள்; மற்றொன்றிலிருந்து வருவித்துக்கொள்; குழிப்பந்தாட்டத்தில் மேட்டின்மீது பந்தடித்துப் பின் புறமாக இறங்கும்படி செய்; ஆட்டத்தில் சரிவுகளுக்கோ காற்றோட்டத்துக்கோ ஈடுசெய்து செயலாற்று.

borr'owed, *a.* கடன்வாங்கிய; தனதல்லாத; போலியான; செயற்கையான; பாவனையான.

borr'ower, *n.* கடன்வாங்குபவர்; பயன்கொள்பவர்.

borr'owing, *n.* கடன்வாங்குதல்; *a.* கடன் வாங்குகின்ற.

borsch, *n.* அருஞ்சுவை யூட்டப்பட்ட இனிப்புக்கிழங்குவகை கலந்த ருசியச் சூப்பிவகை.

Bors'tal, *n.* குன்றின் மேல் பாதை; (தொ.) Borstal Association, விடுதலை பெற்ற கைதிகள் உதவிக்கழகம்; Borstal Institution, Borstal system, பார்ஸ்டல் சிறைக்கூடத்தில் முதலில் தொடங்கப்பட்ட இளங்குற்றவாளிகள் காவல் நிலைய முறை.

bort, *n.* வைரம் அறுக்கும்போது ஏற்படும் சிறு துண்டுகள்.

borz'oi, *n.* ருசிய வேட்டைநாய் வகை.

bos'cage, *n.* மரத்தொகுதி; செடித்திரள்; அடர்த்தியான இலைத்தொகுதி.

bosh [1], *n.* முட்டாள்பேச்சு, மடப்பேச்சு; *int.* முட்டாள்தனம், மடமை.

bosh [2], *n.* உலைக்கள அடுப்பின்கீழ் சாய்வுப்பகுதி.

bosk, *n.* புதர்க்காடு, அடர்ந்த கானகம்; தோப்பு, தோட்டம், பண்ணை.

bos'kage, *n.* = **boscage.**

bos'ket, *n.* = **bosk.**

bosk'iness, *n.* அடர்கானத்தன்மை.

bos'ky, *a.* மரங்கள் அடர்ந்த, புதர் நிறைந்த; நிழல் மிகுந்த.

bo'som, *n.* மார்பு; மார்பக உடை; சட்டையின் முன்புறம்; நீர்நிலை மேற்பரப்பு; அணைப்பு; அணைக்கும் கைகளும் மார்பும் கொண்ட வளைப்பு; சுற்றுவரம்பு; உள்ளம்; இருதயம்; உணர்ச்சியின் இருப்பிடம்; மையம், நடுப்பகுதி; உள்ளுணர்ச்சிகள், அக அவாக்கள்; மறைவான வைப்பிடம்; *a.* நம்பகமான; மறைவடக்கமான; நெருங்கிய பழக்கமுள்ள; *v.* மார்போடு அணை; (தொ.) Abraham's bosom, இறந்துபோன நல்லோர் உறைவிடம்.

bos'omed, *a.* மார்புடைய; அணைப்புள்ள; அடைக்கப்பட்டுள்ள.

bos'quet, *n.* = **bosk.**

boss [1], *n.* புடைப்பு, முனைப்பு முகப்பு; உலோகக்குமிழ்; குமிழ் போன்ற அணிகலம்; (கட்.) கவிகைமாட மையக்குமிழ்; (இயந்.) இயந்திரக் கம்பத்தின் புடைப்புப்பகுதி; *v.* குமிழ்களால் அணிசெய்.

boss [2], *n.* பணிமுதல்வர், மேலாண்மை உரிமையாளர்; தொழில் முதல்வர்; அரசியல் கட்சி இயக்குநர்; விஞ்சிய திறலாளர்; வாகை முதல்வர்; *a.* தலைமையான, மிகச்சிறந்த; *v.* நடத்து, செயலாட்சிசெய்; கட்டுப்படுத்து, அடக்கியாள்; தலைமை யுரிமைகொள், முனைத்திரு.

bossed, *a.* மேடாக அமைக்கப்பட்டுள்ள, முனைப்புருவுள்ள.

boss'y [1], *a.* குமிழ்களுள்ள.

boss'y [2], *a.* செயலாட்சியுள்ள; அடக்கியாளுகின்ற, அதிகாரத் தன்மையுடைய.

Bos'ton, *n.* இருவர் நடனவகை; சீட்டாட்ட வகை.

Bos'well, *n.* அறிஞர் ஜான்சன் (Dr. Johnson) என்பவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஜேம்ஸ் பாஸ்வெல் (James Boswell) போன்ற தலைசிறந்த வாழ்க்கை வரலாற்றுசிரியர்; வியப்பார்வத்துடன் எழுதும் வாழ்க்கை வரலாற்றுசிரியர்.

Boswell'ian, *a.* பாஸ்வெல் (Boswell) போன்று வாழ்க்கை வரலாற்றில் வியந்து பாராட்டும் ஆர்வமுடன் நுணுக்கக் குறிப்புக்களைக்கூட எழுதும் வீர வழிபாட்டியல்புடைய.

Boswell'ism, *n.* வீரவழிபாட்டு வாழ்க்கை வரலாறு வரையும் பான்மை.

Bos'wellize, *v.* வீரவழிபாட்டியல்போடு வாழ்க்கை வரலாறு எழுது.

bot, *n.* ஈ வகையின் புழுப்பருவ உரு, குதிரை முதலிய விலங்குகளின் குடலில் தங்கிவாழும் ஒட்டுயிர்ப் புழுவகை.

botan'ic, botan'ical, *n.* மருந்துப்பூண்டு; *a.* தாவரவியலைச் சார்ந்த.

bot'anist, *n.* தாவரவியல் நூல் பயிலும் மாணவர்; தாவரவியல் வல்லுநர்.

bot'anize, *v.* செடியினங்களைச் சேகரித்து அவற்றின் வளர்ச்சியை ஆராய்ச்சி செய்.

bot'any, *n.* தாவரவியல்.

Bot'any, Bot'any wool, *n.* சிறந்த கம்பளி, ஆஸ்திரேலிய கம்பளி மயிர்.

botar'go, *n.* மீன்வகையிலிருந்து உண்டுபண்ணப்படும் இன் சுவைப்பொருள்; *pl.* botar'goes, botar'gos.

botch, *n.* தோல்மேல் தடிப்பு, கரிசல, பற்றை; அரைகுறை வேலை; மோசமான வேலைப்பாடு; *v.* அரைகுறையாகப் பழுதுபார்; ஒட்டுப்போட்டுச் சமாளி; மோசமாகவேலைசெய்.

botch'er, *n.* பழுது பார்ப்பவர்; அரைகுறையாகச் செய்பவர்.

botch'ery, *n.* அரைகுறை வேலைப்பாடு.

botch'ing, *n.* அரைகுறை வேலை; *a.* அரைகுறையான, ஒட்டுப்பொருத்தான.

botch'y, *a.* குற்றங்கள் கொண்ட, குறைபாடுகள் நிறைந்த.

bot'fly, *n.* குதிரை முதலிய விலங்குகள்மீது முட்டையிடும் ஈ வகை.

both, *pron.* இருவரும், இரண்டும்; *a.* இருவரில் இருவரும் இணைந்த; இரண்டில் இரண்டும் சேர்ந்த; இருசார்புகளும் ஒருங்கு சார்ந்த; *adv.* இருவரும் சேர்ந்து; இரண்டும் சேர்த்து; இரு சார்பிலும்.

both'er, *n.* தொந்தரை, தொல்லை, சிறு துன்பம், இன்னல்; *v.* தொந்தரை எடுத்துக்கொள்; தொல்லைகொடு, மனக்கவலை உண்டாக்கு.

bothera'tion, *n.* நச்சரிப்பு, தொந்தரைச் செயல்; *int.* பாழாய்ப்போக.

both'ersome, *a.* நச்சுப்படுத்துகிற, தொல்லை தருகிற.

both'ie, both'y, *n.* குடில், வேய்மனை, ஒரே அறையுள்ள தொழிலாளர் உறைவிடம்.

bot'hole, *n.* ஒட்டுயிர்ப் பூச்சியால் தோலில் இடப்பட்ட துளை.

both'y-man, *n.* குடில் வாழ்நன், குடிசைவாழ் பண்ணையாள்.

bo'-tree, *n.* போதி மரம்.

bott, *n.* = bot.

bottin'e, *n.* உயர் புதையடி, உயர் குதிகால் பகுதியுடைய கால் புதையரணம்; அரை புதையடி; பெண்டிர் புதை யரணம்; சிறு மிதியடி.

bot'tle[1], *n.* புட்டி, குப்பி; புட்டியிலுள்ள பொருள்; சாராயம்; குடித்தல்; *v.* புட்டியில் நிரப்பு, குப்பியில் அடை; (தொ.) bottle off, மிடாவிலிருந்து குப்பியில் அடை; bottle up, மறைத்து வை; தடுத்திருத்து; bring up on the bottle, புட்டிப்பால் கொடுத்து வளர்.

bot'tle[2], *n.* உலர்ந்த புல் கட்டு, வைக்கோல் பொதி.

bot'tle[3], *n.* செடிவகைப் பெயர்.

bott'le-chart, *n.* கடல் நீரோட்டப்போக்கைப் புட்டிகளின் மூலம் அறிந்து குறிப்பிடப்பட்ட விளக்கப்படம்.

bott'le-coaster, *n.* புட்டி கலன்களை வைத்துத்தள்ள உதவும் மேசைச் சறுக்கு தட்டம்.

bott'led, *a.* குப்பியில் அடைக்கப்பட்ட; புட்டியைப் போன்ற உருவமுடைய; தடைப்படுத்தப்பட்ட.

bott'le-fish, *n.* புட்டியைப்போல உடலை உப்பிக்கொள்ளவல்ல மீன்வகை.

bott'le-gas, *n.* ஒளிக்காகவும் வெப்பத்துக்காகவும் புட்டியி லடைத்துப் பயன்படுத்தப்படும் நீரியற்பட்ட சதுப்புநிலவளி வகை.

bot'tle-glass, *n.* புட்டி செய்யப் பயன்படுத்தப்படும் பரு வெட்டான கரும் பச்சைக் கண்ணாடி.

bott'le-gourd, *n.* சுரைக்காய் வகை.

bottl'e-green, *n.* கரும் பச்சை; *a.* கரும் பச்சை நிறமுள்ள.

bott'le-head, *n.* புட்டி மூக்குத் திமிங்கிலம்.

bot'tle-holder, *n.* குத்துச் சண்டைக்காரரின் உதவியாளர்; ஆதரவளிப்பவர்.

bott'le-imp, *n.* குப்பிக்குள் அடைக்கப்பட்ட குறளி.

bot'tle-neck, *n.* போக்குவரத்து நெருக்கடி இடம்; உற்பத்தி முதலியவற்றின் வளர்ச்சித்தடை நிலை.

bot'tle-nose, *n.* குமிழ் மூக்கு, பெருத்து வீங்கிய நாசி; குபபி மூக்குத் திமிங்கிலம்.

bott'le-nosed, *a.* குமிழ் மூக்குள்ள.

bot'tle-party, *n.* ஒவ்வொருவரும் தத்தம் புட்டிகளுடன் வந்து குடிவகை கொள்ளும் ஏற்பாடுடைய விருந்துக் குழு.

bott'le-shouldered, *a.* சரிந்த தோள்களையுடைய.

bott'le-slider, *n.* குப்பித்தட்டு, குப்பிகளை வைத்து மேசை மீது தள்ளுவதற்கு உதவும் சறுக்கு வட்டில்.

bott'le-washer, *n.* குப்பிகளைக் கழுவும் தொழிலாள்; பலதிற வேலையாள், கீழ்த்தரப் பணியாள்.

Bott'ogas, *n.* bottle-gas என்பதன் வாணிக உரிமைப் பெயர்.

bott'om, *n.* அடி, அடிப்புறம், அடிப்பரப்பு, அடித்தளம்; அடிப்படை, மூடு, தூர்; ஆதாரம்; உடலின் பிட்டம்; நாற்காலியில் இருப்பிடம்; நீர்நிலைப் படுகை; கலத்தின் அடிக்கட்டு; புத்தகப் பக்கத்தின் அடிப்பகுதி; மலையின் தாழ்வாரம்; ஆற்றடுத்த தாழ்நிலம்; கப்பல் அடித்தட்டு; கப்பல்; கீழ்ப்புறம், மறுபுறம்; இழிபுறம்; உட்கடந்த பகுதி; நிலத்தளம்; நிலத்தளப்பணி; முக்கிய கூறு, நிலையாற்றல், உறுதியான செல்வவளம்; பொய்ம்மையிர்த் தொங்கல்; *a.* அடிப்பகுதி சார்ந்த; தாழ்வான, கடைப்பட்ட, கடைசி யான; அடிப்படையான; *v.* வாத ஆதாரமாக்கு; அடிப் படையாக்கு; நிலைநாட்டு; ஆழங்காண், உளவுகாண்; அடி மெய்ம்மை கண்டுபிடி; அடித்தங்கு; அடிப்பகுதி அமை, தூர்; (தொ.) at the bottom of, உண்மைக் காரணம்; bottom drawer, மணவினை எதிர்நோக்கிப் பெண்டிர் ஆடையணி மணி வைத்திருக்கும் நிலைப்பெட்டியின் அடித் தட்டு இழுப்பறை: get to the bottom of, முழுதும ஆய்ந்தறி.

bott'omed, *a.* தூருடைய, அடிப்பகுதியுள்ள.

bott'om-fish, *n.* அடிப்பகுதி உணவுண்டு வாழும் மீன், அடித்தள உணவுண்டு வாழும் மீனினம்.

bott'oming, *n.* அடித்தளம்.

bott'omless, *a.* அடிப்பகுதியில்லாத, அடித்தளமற்ற; ஆழம் காணமுடியாத.

bott'om-most, *a.* மிகக் கீழ்ப்பட்ட; மிகக் கடைப்பட்ட, மிக அடிப்பட்ட.

bott'omry, *n.* கப்பல் பயண இடர் ஏற்று அளிக்கப்படும் பிணையக்கடன் ஒப்பந்தம்; *v.* கப்பல் பிணையம் வைத்துக் கடன் பெறு.

bott'om-sawyer, *n.* இரம்பக் குழியில் கீழிருந்து பணி செய்யும் வாள் அறுப்புத் தொழிலாளர்.

botts, *n.* குதிரை முதலிய விலங்குகளுக்குக் குடற்புழு வகையால் ஏற்படும் நோய்.

bot'ulism, *n.* (மரு.) காரச்சுவையுண்டியின் மூலம் ஏற்படும் நச்சுப்பாடு; தகரக்கல உணவினுல் நச்சுப்பாடு உண்டாதல்.

boudoir, (பிர.) *n.* பெருமாட்டியின் தனி அறை.

bouffe, *n.* கேலிக்கூத்து இசைநாடகம்.

Bou'gainvil'ia, Bou'gainvillae'a, *n.* வண்ணச் செதில் களுடைய வெப்பமண்டல மலர்ச்செடிவகை.

bough, *n.* கொப்பு; வெட்டிய சிறுகிளை; தூக்குமரம்.

bough'pot, *n.* பூந்தொட்டி; பூங்கொத்து.

bought[1], *n.* குடா, வளைவு, சுருள்.

bought[2], *v.* buy என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

bougie, (பிர.) *n.* மெழுக்குதிரி, மெழுக்குவத்தி; (மரு.) வளையும் இயல்புடைய மென்மையான அறுவைக்கருவி.

bouillabaisse, (பிர.) *n.* சிறப்பாக மார்செயில்ஸ் (Marseilles) நகரில் வழங்கும் உயர்தர பிரஞ்சு மீன் கறிவகை.

bouilli, (பிர.) *n.* வேகவைத்துத் துவட்டிய ஊனுணவு.

bouil'lon, *n.* கெட்டிக்குழம்பு, கொழுஞ்சாறு, ஆனம்.

bould'er, *n.* கற்பாளம், துறுகல், தொங்கற்பாறை; *a.* கற்பாளங்களுள்ள.

bould'er-clay, *n.* (மண்.) கற்பாளங்களும் கூழாங்கற்களும் உட்கொண்டு பனியடியில் உருவான கற்பொடி மேடு.

Boule, *n.* பண்டைக் கிரேக்க நாட்டின் சட்டமன்றம்; கற்கால கிரேக்க நாட்டுச் சட்டசபை.

boulevard, (பிர.) *n.* இருமருங்கும் மரவரிசையுள்ள அகன்ற தெரு; அகல் பெருஞ்சாலை.

boulevardier, (பிர) *n.* அகன்ற பெருந்தெருக்களில் அடிக்கடி ஊடாடுபவர்.

boult, *v.* துணியில் வடித்திறு, வேடு கட்டு; சலிப்பதன் மூலம் ஆராய்ந்துபார்.

boult'er [1], *n.* சல்லடை, அரிதட்டு, அரிப்புக்கருவி.

boul'ter [2], *n.* பலகொக்கிகளுள்ள நீண்ட மீன்தூண்டில்.

boult'ing, *n.* சலித்தல், அரிதல்.

boult'ing-hutch, *n.* சலிக்கும்போது மாவு விழும் பெட்டி.

boun, *v.* முன்னேற்பாடு செய்; உடையணி; புறப்படு; *a.* முனனேற்பாடான, ஆயத்தமான.

bounce [1], *n.* துள்ளல்; பாய்ச்சல்; செருக்குரை, தற்புகழ்ச்சி, மிசையுரை, உயர்வு நவிற்சி, வீம்பு நடை; மெத்தென விழும் ஒளி; துணியுள்ள பொய்; *v.* துள்ளு, திடீரெனக்குதி; எதிர்த்தடி, எதிர்த்துப் பந்துபோல் எழும்பு; காசாகாத பண முறி வகையில் திரும்பக் கைக்குவந்துசேர்; இங்குமங்கும் ஆடு; திடீரெனப் பாய்; நுழை, சட்டென வெளியேறு; தற்புகழ்ச்சி செய், வீரூப்புப்பேசு, மிகைப்பட உரை; *adv.* திடீரென, இரைச்சலுடன்; *int.* திடீரென, அதோ வெடி ஒலி என்ற குறிப்பு, திடீர்க்குறிப்பிசைப்பு ஒலி.

bounce, *n.* குறைபுள்ளியுள்ள நாய்மீன் வகை.

boun'cer, *n.* குதிப்பவன்: பெரும்பொருள்; பெரிய பொய்; பொய்யன்; முரடன்; காசாகாமல் திரும்பக் கைவந்துசேரும் பணமுறி.

bounc'y, *a.* துள்ளுகிற, குதிக்கிற.

bound [1], *n.* நிலவரம்பு; வரையறை; *v.* வரம்பிடு, கட்டுப்படுத்து.

bound [2], *n.* துள்ளல், பாய்ச்சல்; *v.* துள்ளு, குதி, பாய்; முன்னேறு, எதிர்த்துத் துள்ளு. திருப்பித் தாக்கு.

bound [3], *a.* புறப்படுந்தறுவாயில் உள்ள, புறப்பட ஆயத்தமான.

bound [4], *v.* bind என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

boun'dary, *n.* வரம்பு, எல்லைக்கோடு; எல்லைப்புறம்: முடிவு; பந்தாட்ட வரம்பு வீச்சடி; வரம்பு வீச்சடியின் மதிப்பெண்.

boun'dary-rider, *n.* குதிரை ஏறிச்சென்று வேலிகளைப் பழுது பார்ப்பவர்.

bound'ed, *a.* கட்டுப்படுத்தப்பட்ட, நெருக்கமான; எல்லையாகக்கொண்ட.

bound'en, *a.* கடப்பாடான.

boun'der, *n.* ஒழுக்கமிலி, பரத்தர்.

bound'ing, *a.* துள்ளிச்செல்கிற, பாய்கின்ற.

bound'less, *a.* எல்லையற்ற, வரம்பின்றிப் பரந்த, அளவற்ற.

bounds, *n. pl.* எல்லை, வரம்பு; மட்டு, மதிப்பு, ஒழுக்க வரம்பு, கட்டுப்பாட்டெல்லை; எலலைப்புறம், எல்லைப்பகுதி, திணை எல்லை.

boun'teous, *a.* வண்மையுடைய, தாராளமான, இலவசமாக அளிக்கப்பட்ட.

boun'teousness, **boun'tifulness**, *n.* வண்மை; ஈகைத் தன்மை; கொடைவளம்.

boun'tiful, *a.* வண்மை நிறைந்த, தாராளக்குணம் மிகுந்த; ஏராளமான, வளம் நிறைந்த, வளந்தருகிற.

boun'ty, *n.* வண்மை; பணிவள ஊதியம்; காலாட்படை-கப்பற்படையினர்க்கு அளிக்கும் பணிக்கொடை; ஊக்க ஊதியம், வணிக முயற்சியை ஊக்குவிப்பதற்கு வணிகர்களுக்கு அளிக்கப்படும் தொகை.

bouquet', *n.* பூச்செண்டு; மலர்க்கொத்து; இன்தேறல் மணம், மதுமணம்.

bouq'uetin, *n.* ஆல்ப்ஸ் (Alps) பருதியிலுள்ள காட்டாடு.

bourasq'ue, *n.* புயல், கடுங்காற்று.

bour'bon, *n.* மதுவகை, ஒருவகை விஸ்கி.

Bour'bon, *n.* ரோசா மலர் இனத்தின் வகை.

bour'don, *n.* பாட்டின் பல்லவி, மட்ட இசை, இசைமட்டக் குரல்; இசைக்கருவிகளில் மட்ட இசைப்பாணி; குழலிசைக் கருவிகளில் குறை ஒலி.

bourg'eois [1], (பிர.) *n.* நடுத்தர வாணிக வகுப்புக்குடிமகன்; வணிகன், கடைக்காரன்; நடுத்தர வகுப்புக்குரிய வாழ்க்கை முறைக் கருத்துக்களுடையவர்; *a.* நடுத்தர வகுப்பைச் சார்ந்த; மரபு ஒழுங்கான; ஒரேமாதிரியான; பழமைப் பற்றுள்ள.

bourgeois', *n.* (அச்.) நடுத்தர அச்சு எழுத்துருப்படிவம், மட்டப்படிவம்; *a.* மட்ட உருப்படிவம் சார்ந்த, மட்ட உருவான.

bourgeoisie, (பிர.) *n.* நடுத்தர வகுப்பினர் தொகுதி, நடுநிலை வகுப்பு.

bour'geon, *n.* = **bur'geon.**

Bourign'ian *a.* அறிவுமுறை வினைமுறை மறுத்து உள்ளுணர்ச்சியே சமயம் என்ற அந்தாய்னெட் பூரிக்னனின் (Antoinette Bourignon, 1616-1680) கொள்கை பின்பற்றுகிற.

bour'law, *n.* ஸ்காத்லாந்தில் நீடித்திருந்த பழங்காலப் பஞ்சாயத்துப் போன்ற சிற்றூர் மக்கள் வழக்குமன்ற முறைமை.

bourn [1], *n.* சிற்றாறு, ஓடை.

bourn [2], **bourne** *n.* வரம்பு, எல்லை; இலக்கு.

bourree', *n.* முடுகியல் நடன வகை; விரை நடன இசைப் பாட்டு வகை.

bourse, (பிர.) *n.* அயல்நாட்டு நாணயமாற்றுக்களம், பாரிஸ் நகர அயல் நாணயமாற்று நிலையம்.

bouse [1], *n.* மயக்கமது; பெருங்குடி விருந்துக்குழு; *v.* மிகுதியாகக்குடி.

bouse [2], *v.* மீன்பிடி கருவியால் வலித்து இழு.

boustrophed'on, (கிரே.) *a.* இடதுபுறமிருந்து வலமாகச் செல்கிற, இடவலமாக எழுதப்படுகிற; *adv.* இடமிருந்து வலமாக.

bous'y, *a.* குடிக்கும் தன்மையுடைய, குடிவெறியார்ந்த.

bout, *n.* ஆட்டவட்டம், ஆட்டமுறை, ஆவர்த்தி, திருப்பம், வரிசை; தொழில் ஊக்க அளவு, தவணை முறை; பந்தய முயற்சி, வலிமைப்போட்டி; குடிவெறியாட்டம்; நோய்வீச்சு, எழுச்சிமுறை.

boutade', *n.* திடீரெழுச்சி; உணர்ச்சிப்போக்கு, மனம்போன போக்கு.

boutonniere, (பிர.) *n.* சட்டைத்துளையில் மாட்டும் மலர்ச் செண்டு.

bouts-rimes, (பிர.) *n. pl.* கடையெதுகை வரிப்பாட்டுப் போட்டி, முடிவுச் சொற்களைக் கூறிப் பிறர் பாட்டின் வரிசையை நிறைவுசெய்தல்.

bo'vate, *n.* எட்டு எருதுபூட்டி உழவல்ல பதின்மூன்று ஏக்கர்ப் பரப்புடைய பண்டை ஏர்நிலத்தில் எட்டில் ஒருபகுதி.

bo'vine *a.* கால்நடைகளைச் சார்ந்த, எருத்தினத்துக்குரிய; எழுச்சியற்ற, மந்தமான போக்குடைய.

bov'ril, *n.* இறைச்சிச் சத்துப்பொருள் நீர்மம், வாணிகப்பதிவு செய்யப்பட்ட உண்டிவகையின் பெயர்.

bow [1], *n.* வில்; வளைவு; வானவில்; யாழ்வில், நரப்பிசைக் கருவிவகை வாசிக்க உதவும் நீள் நரப்புக்கருவி; உலோகக் கைப்பிடி வளையம்; ஒன்றிரண்டு கண்ணிவளையங்களை இணைக்கும் முடிச்சு; இழைக்கச்சியின் கொக்கி வளைவான முடிச்சு; சுழுத்துப்பட்டியின் அணி முடிச்சு: யாழ்வில்லின் ஓரைப்பு; *v.* யாழ்வில் கையாளு, யாழ்வில் மீட்டு.

bow [2], *n.* தலை நாத்தல், உடல்வளைத்தல்; வணக்கம்; நன்மதிப்பறிவிப்பு, தலையசைப்பு; இணக்க அறிவிப்பு; *v.* வளை; குனி, தலைவணங்கு; பணி, கிழ்ப்படி; அடங்கு, உட்படு, தலையசை, இணக்கமளி; வளையச்செய்; பணியில் கீழடக்கு; இணக்குவி.

bow [3], *n.* கப்பலின் முகப்பு, படகின் முன்புறம்.

bow'-backed, *a.* கூனிய ; வளைமுதுகுள்ள.

Bow bells, *n.* லண்டன் நகரமணியோசை எல்லை, லண்டன் நகரம்.

bow'-boy, *n.* வில்லாள் சிறுவன்.

bow'-compasses, *n. pl.* வில்வளைவு அமைப்பு மீது சுழலும் கவராயம்.

bowd'lerism, *n.* புத்தக வெட்டுக்குறைப்பு.

bowd'lerize, *v.* நாணத்தக்க பகுதியைப் புத்தகத்தினின்று நீக்கு, புத்தகத்தை வெட்டிக்குறை.

bowed, *a.* வளைந்த, குனிந்த.

bow'el, *n.* குடல் ; உட்பகுதி ; நெஞ்சம், இரக்கம், மென்மை உணர்ச்சி ; *v.* குடலை வெளியே எடு.

bow'er [1], *n.* கொடிப் பந்தர் ; நிழலுள்ள தோட்ட இருக்கை ; தோட்ட மனை, வேனிலகம் ; வேனில் மாளிகை : இருப்பிடம் ; வீடு ; உள் அறை ; பெருமாட்டியின் தனி அறை.

bow'er [2], *n.* கப்பல் நங்கூரம்.

bow'er [3], *n.* சீட்டாட்ட வகையின் இருதலைமைச் சீட்டுக்களில் ஒன்று.

bow'er-anchor, *n.* = bower [2].

bow'er-bird, *n.* தங்கும் கொடிமனையெங்கும் வண்ண இறகுகள் நிரப்பி அழகுபடுத்திவிடும் இயல்புடைய ஆஸ்திரேலிய பறவை வகை.

bow'ery, *a.* கொடிப்பந்தலுள்ள ; நிழலார்ந்த.

bow'fin *n.* வடஅமெரிக்க நன்னீர் மீன்வகை.

bow'-hand, *n.* விற்கை, இடக்கை ; யாழ்வில் ஏந்தும் கை, வலக்கை.

bow'ie-knife, *n.* குத்துவாள் போன்ற ஓரடி நீளமுள்ள நீண்ட கத்தி வகை.

bowe [1], *n.* கிண்ணம், குடிகலம் ; கமண்டலம் ; கும்பா, ஆழ்ந்தகன்ற தட்டம் ; கலங்கொள் பொருள் ; கருவிகலங்களின் உட்குழிவுப்பகுதி ; வலையடுக்கின் மைய இழிவு.

bowe [2], *n.* முடப்பந்து, ஒருபகுதி கனத்துள்ள மரப்பந்து ; கழற்சி ; *v.* மரப்பந்தாட்டமாடு ; பாய்ந்து உருண்டு செல் ; வண்டியில் விரைந்து பயணம் செல் ; மரப்பந்தாட்டக் காரரின் வரம்புக் குச்சிகளை நோக்கிப் பந்து வீசு ; ஆட்டக் காரனை விலக்கு.

bow'-legged, *a.* முட்டிக்காலுள்ள, வளைகாலுடைய.

bowl'er [1], *n.* மரப்பந்தாட்டத்தில் பந்து வீசுபவர்.

bowl'er [2], **bow'ler-hat**, *n.* வட்டக்கம்பளத் தொப்பி வகை.

bow'line [1], *n.* கப்பல் முன்புறக் கயிறு.

bow'line [2], *n.* = bowler [2].

bow'ling, *n.* பந்து வீச்சு.

bowl'ing-alley, *n.* முளையடிப் பந்தாட்டச் சாலை.

bowl'ing-crease, *n.* நின்று பந்து வீசுவதற்குரிய எல்லைக் கோடு.

bowl'ing-green, *n.* முளையடிப்பந்தாட்டப் புல்வெளி.

bowls *n. pl.* முடப்பந்தாட்டம் ; (பே-வ.) கழற்சியாட்டம்.

bow'man [1], *n.* வில்லோன்.

bow'man [2], *n.* படகின் முற்புறத்துள்ள தண்டுகைக்கும் பட கோட்டி.

bow'-saw, *n.* வில் வாள், வில்போன்ற சட்டத்தில் நாண் போல் ஏற்றப்பட்ட ஒடுங்கிய அறுப்பு வாள்.

bowse, *v.* = bouse.

bow'shot, *n.* வில்லிலிருந்து அம்பு எய்யப்படும் தொலைவு, கூவுதல்தொலை, வில்லடித் தொலை.

bow'sprit, *n.* கப்பலின் முன்புற மரச்சட்டம்.

bow'string, *n.* வில் நாண் ; துருக்கியர் (Turks) குற்ற வாளியின் கழுத்தை இறுக்கிக் கொல்லும் கயிறு ; பாலத்தின் தளமட்டக்கட்டு ; *v.* வில் நாணினால் கழுத்தை இறுக்கிக் கொல்.

bow'stringed, *a.* வில் நாணுள்ள ; வில் நாண் அமைப்புடைய ; வில் நாணுக்குரிய ; வில் நாணுகளான.

bow'-strung, *a.* = bowstringed.

bow'-win'dow, *n.* வளைகோணப பகுதியிலுள்ள பலகணி.

bow'-win'dowed, *a.* வளைகோணப்பகுதியில் பலகணியுடைய.

bow'wow', *n.* நாயின் குரைப்பு ; நாய்.

bow'yer, *n.* வில் செய்பவர், வில் விற்பவர்.

box [1], *n.* பெட்டி ; பெட்டி அளவு, பெட்டியிலடங்கிய பொருள் ; வண்டி ஓட்டுபவரின் இருக்கை ; தனி அறைகூடம் ; நாடகக் கொட்டகையில் தனி இருக்கைகள் கொண்ட அறை ; பேட்டையாளர் கூண்டுப பெட்டி ; சான்றாளர்-காவலர் முதலியவர்க்கான பெட்டிக்கூண்டு ; சமிக்கை அடையாளப் பெட்டி ; குளிப்பு முதலியவற்றுக்கான தொட்டியறை ; தங்குமனை, சாவடி ; நிதிப்பெட்டி, நிதி ; பரிசுப்பெட்டி, பரிசு ; கட்டப் பந்தாட்டத்தில் பந்தெறிபவர் நிற்குமிடம் கப்பல் திசைக் கருவி உறைப் பெட்டி ; *v.* பெட்டி இணை ; பெட்டியில்வை ; நீதிமன்றத்தில் பத்திரத்தைப் பதிவு செய் ; மற்ற அறைகளிலிருந்து பிரித்துவை ; (கப்.) ஒழுங்கு வரிசையில் குறிப்புக்களை ஒத்திகைசெய் ; துவங்கிய இடத்தில் முடிவாக்கு ; (தொ) Box and Cox, ஒரே நேரத்தில் வீட்டில் தங்காத இரு நாடக பாத்திரங்கள் ; box the compass, ஒரு கருத்தின் எல்லாக் கூறுகளையும் அலசி ஆராய் ; in the wrong box, பொய்யான நிலையில்.

box [2], *n.* தோட்ட வேலிப் புதர்ச்செடி வகை ; புதர்ச்செடி வகையின் மரவேலைக்குதவும் கட்டை.

box [3], *v.* செவிட்டில் அறை ; குத்துச் சண்டை போடு.

box'-bed, *n.* பெட்டிப் படுக்கை, பெட்டியைப் போன்று மூடி விடத்தக்க படுக்கை வகை.

box'calf', *n.* கட்டங்கட்டமான வரையழுத்தப்பெற்ற பசுங் கன்றின் பதனிடப்பட்ட தோல் வகை.

box'-cloth, *n.* குதிரை ஏற்றத்துக்குரிய கெட்டித்துணிவகை.

box'-coat, *n.* பாரமான புறமேற்சட்டை.

box'-day, *n.* நீதிமன்ற ஓய்வு நாட்களில் பத்திரப் பதிவுக் காகக் குறிக்கப்படும் நாள்.

box'en, *a.* புதர்ச்செடிவகையின் மரக்கட்டையாலான.

box'er, *n.* குத்துச்சண்டை செய்பவர் ; குத்துச் சண்டை வல்லுநர்.

Box'er, *n.* (வர.) அயல்நாட்டினர்க்கு எதிரிடையான சீனக் கழக உறுப்பினர் ; செர்மன் (German) வளர்ப்பின மரபில் வந்த நடுத்தர அளவுடைய மென்மையான நாய்வகை.

boxful, *n.* பெட்டி கொள்ளதக்க அளவு, நிறை பெட்டி அளவு.

box'-haul, *v.* இயங்கிடமில்லாத இடத்தில் தன்னிலையிலேயே கப்பலைத் திசை திரும்பச் செய்.

box'ing, *n.* குத்துச்சண்டை.

Box'ing-day, *n.* கிறுஸ்துமஸ் (Christmas) நாளையடுத்துப் பரிசுகள் அளிக்கும் நாள்.

box'ing-glove, *n.* குத்துச் சண்டைக்காரர் அணியும் அடை மொகைக்கை யுறை.

box'-iron, *n.* வண்ணரப் பெட்டி, துணிகளைத் தேய்க்கும் வெம்பேழை.

box'-keeper, *n.* நாடகசாலையின் தனி அறைகளைத் திறந்து விடும் ஊழியர்.

box'-kite, *n.* பக்கங்கள் திறந்த பெட்டிகளாலான காற்றாடி.

box'-lobby, *n.* நாடகசாலைத் தனி அறைகளின் வாயிற்கூட அறை.

box'-number, *n.* அஞ்சல் பெட்டி எண், விளம்பரங்களின் விடைக்குரியதாகக் குறிக்கப்படும் முகவரி எண்.

box'-office, *n.* நாடகசாலை முதலியவற்றில் இருக்கைகளைப் பதிவு செய்யும் அலுவலகம்.

box'-pleat, *n.* மாறிமாறித் திருப்பி மடிக்கப்பட்ட இரட்டை மடிப்புத் துணி.

box'-seat, *n.* வண்டி ஓட்டுபவரின் இருக்கை.

box'-wagon, *n.* புகைவண்டித் துறைக்குரிய மூடப்பட்ட பெட்டிவண்டி.

boy, *n.* பையன், சிறுவன், இளைஞன்; மைந்தன்; சிறுவர் தன்மையும் இயல்புகளுமுள்ளவர்; பணியாள், பணிப் பையன்; (தொ.) Boys' Brigade, கட்டுப்பாடும் நற்பண்பாடு பழக்க வழக்கங்களும் உண்டுபண்ணுவதற்கான சிறுவர் அமைப்பு: Boy Scout, சாரணச் சிறுவன், சாரணர்; boy's love, எட்டி மரவகை; boy's play, அற்பம்.

bo'yau, *n.* கோட்டையில் நீண்டு நெருங்கிய போக்குவரத்துக் குரிய அகழிச் சந்து; *pl.* bo'yaux.

boyc'ott, *n.* ஊர்க்கட்டு, சமுதாய வணிக வாழ்வினின்று விலக்கீடு செய்தல்; *v.* சமுதாய-வாணிகத் தொடர்பிலிருந்து விலக்குச் செய்.

boy'hood, *n.* சிறுமைப் பருவம், சிறு வயது; சிறுவர்கள்.

boy'ish, *a.* சிறுபிள்ளைத்தனமான.

bra, *n.* brassiere என்பதன் சுருக்கக் குறிப்பு.

brab'ble, *n.* சிறுபூசல், சச்சரவு; இரைச்சல், ஆரவாரம், வீண்பேச்சு; *v.* சச்சரவிடு; பிதற்று, கூக்குரலிடு.

bracc'ate, *a.* சிறகார்ந்த காலடிகளையுடைய.

brace, *n.* நாய்கள்-சீட்டுக்கள் ஆகியவற்றின் இணை, சோடி; கட்டிட உறுப்புக்கள் தளைக்கட்டு; பற்றிறுக்கி; இடுக்கி திருப்புளி, துளைக்கருவிகளைத் திருப்பும் சட்டம்; உட்பிணைப்புக் குறிவளை கோடு, இலக்கவிதை; *v.* இணை, பிணை; இழுத்துக் கட்டு, இறுக்கு; உரங்கொடு, வலிமையூட்டு; தாங்கு, ஆதாரம்கொடு; சோடியாக இணை; (கப்.) பாய்மரக்குறுக்குக் கட்டைகளை இழுத்துப்பாயைச் சீர்செய்.

brace'let, *n.* கைவளை, கடகம், காப்பு.

brac'er, *n.* விற்பயிற்சியிலும் சிலம்பத்திலும் மணிக்கட்டுக் குரிய வலுக்காப்பு.

Brac'es, *n. pl.* இடுப்பு காலுறை தளைப்பட்டைகள்; இசைக் கம்பியின்வார்; வில்வண்டியின் இணைப்பு வார்; (கப்.) பாய்மரக் குறுக்கைகளை இழுத்துப் பாயைச் சீர்செய்ய உதவும் வார்.

brach, *n.* பெண் வேட்டைநாய்.

brach'et, *n.* பெண் வேட்டைநாய்; குட்டி நாய், குருளை.

bra'chial, *a.* மேற்கையைச் சார்ந்த; (தொ.) brachial artery, மேற்கைக்குருதி நாளம், மேற்கைத்தமனி.

bra'chiate, *a.* (தாவ.) எதிரெதிர் இணைக்கிளையுடைய, கிளைகள் இணையிணையாகச் செங்கோணமாகவும் தமக்குள் ஒன்றடுத்து ஒன்று செங்கோணமாகவும் உள்ள.

brach'iopod, *n.* வாயின் இருபுறங்களிலும் நீண்ட கைகள் போன்ற அமைப்புடைய சிப்பி இனங்களின் வகை; *pl.* Brachiop'oda.

brachy-ax'is, *n.* குறுகிய ஊடச்சு, குறுக்கு ஊடச்சு.

brachyceph'al, *n.* குறுந் தலையர்.

brachycephal'ic, brachyceph'alous, *a.* குறுகிய தலையை உடைய.

brachyceph'aly, *n.* குறுகிய தலையுடைமை, நீளத்தில் ஐந்தில் நான்கு பங்கு அகலமுடைமை.

brachydactyl'ic, brachydac'tylous, *a.* குறுகிய விரல்களுடைய.

brachyg'raphy, *n.* சுருக்க எழுத்துமுறை.

brachyl'ogy, *n.* பேச்சுச்சுருக்கம்; சொற்செறிவு, உரைத் திட்பம்; சுருக்க மிகுதியினால் ஏற்படும் வழு.

brachypin'akoid, *n.* குறுக்கு ஊடச்சுக்கு இணைவான இருதள முகப்பு மணியுரு.

brachyp'terous, *a.* குட்டை இறகுடைய.

Brachyu'ra, *n. pl.* நண்டுகளை உள்ளடக்கிய உயிரினவகை.

bracing, *a.* வலிமை உண்டாக்குகிற, உடலுரமளிக்கிற, திண்மை தருகிற.

brack, *n.* துணியின் நெசவுப்பிழை.

brack'en, *n.* காட்டுப்புதர் வகை: சூரல் வகை.

brack'et, *n.* அடைப்புக்குறி, இணைப்புக்கவிகைக்குறி; வருவாய் முதலியவற்றில் அடைப்புக்குறியால் இணைக்கப்பட்ட தொடர்பு ஒப்புடைய இனம்; சுவரில் மாட்டப்பட்ட ஏந்தற் பலகை, பாரந்தாங்கி, தண்டயம்; வளைவுதாங்கி; சுவர்நிலை அடுக்குப்பேழை; ஆதாரவளைவு; ஆவி விளக்கின் மாட்டல் கொம்பு; விளக்குத்தண்டு; பீரங்கி வண்டியின் இருசிறைப் புறம்; *v.* ஏந்து வளைகொண்டு தாங்கி நிறுத்து, முட்டுக் கொடு; அடைப்புக்குறியிடு; ஒத்த மேதகைமை உடையவர் இருவரின் பெயர்களை ஒருங்கிணை; (கணை.) ஒத்த இனமாகத்தொகு.

brack'ish, *a.* சிறிது உப்பான.

bract, *n.* (தாவ.) பூ வடிச்சிதல், கவட்டில் பூத்தோற்றுவிக்கும் உருத்திரிந்த இலை.

brac'teal, *a.* = bracted.

brac'teate, *n.* வெள்ளி பொன் மெல்லிழைத்தகடு; *a.* மெல்லிழைத்ததகடான; பூவடிச்சிதலுடைய.

brac'ted, brac'teolate, *a.* பூவடிச்சிதலிலை உடைய.

bract'eole, *n.* (தாவ.) பூ வடிச்சிதலிலை.

brad, *n.* சிறுபக்கத் திருப்பமுடைய தலைப்பில்லாத மெல்லிய ஆணி, தட்டையான சிறுதலை உடைய ஆணி.

brad'awl, *n.* திருகு சுருளற்ற சிறிய துளையிடும் கருவி.

Brad'shaw, *n.* பெயர்போன இரயிலட்டவணை.

bradycard'ia, *n.* தளர் நெஞ்சுப்பைத் துடிப்பு.

bradypept'ic, *a.* மெதுவாகச் செமிக்கிற.

brad'yseism, *n.* நிலவுலகத்தோட்டின் மெல்லதிர்வு.

brag, *n.* தற்புகழ்ச்சி; தற்பெருமைச் செய்தி; சீட்டாட்ட வகை; *v.* தற்பெருமை பேசு.

braggado'cio, *n.* வீண்பிதற்றலர்; வீண்பெருமை.

bragg'art, *n.* வீண்பெருமை கொள்பவர்; தற்பெருமையாளர்; *a.* தற்புகழ்ச்சி பேசுகிற; வீண்பெருமை கொள்கிற.

brag'ging, *a.* தற்பெருமை பேசுகிற.

brah'ma, brahmapoot'ra, *n.* வீட்டுக்கோழி வகை.

brah'min, *n.* பிராமணர்.

brahminee' [1], *n.* பிராமணப்பெண்.

brah'minee [2], *a.* பிராமணர் மரபுக்குரிய; பிராமண வழக்குக் குரிய.

brahmin'ic, bramin'ical, *a.* பிராமணருக்குரிய, பிராமணர் கோட்பாட்டுக்குரிய.

Brah'minism, *n.* பிராமணீயம்.

Brah'mo, *n.* = Brahmoist.

Brah'moism, *n.* பிரம சமாசக் கொள்கை.

Brah'moist, *n.* பிரம சமாசத்தைப் பின்பற்றுபவர்.

braid, *n.* பின்னல், சடை, புரிகுழல்; *v.* பின்னு; இழை; முடை.

braid'ed, *a.* பின்னப்பட்ட; இழைக்கப்பட்ட; முடைந்த.

braid'ing, *n.* பின்னல், பின்னுதல்.

Braid'ism, *n.* டாக்டர் ஜே. பிரேய்ட் (Dr. J. Braid, 1842) என்பவரால் இயன்முறையில் வகுத்தமைக்கப்பட்ட வசிய நூல்.

brail, *n.* பருந்தின் இறகுகளைக் கூட்டும் சிறு தோல்துண்டு; கப்பற்பாயின் நுனிக்கயிறு; *v.* கப்பற்பாயை நுனிக்கயிற்றால் இழு.

braille, *n.* லூயி பிரேயில் (Louis Braille, 1809-1852) என்பார் கண்டு புனைந்த குருடர்கள் எழுத்துமுறை; கண்ணற்றோர் அச்சுமுறை; *a.* கண்ணற்றோர் கல்விமுறை சார்ந்த.

brails, *n. pl.* பருந்தின் பிட்ட இறகுகள்; (கப்.) பாய் மரத்தைச் சுருட்டிக்கட்டும் கயிறு.

brain, *n.* மூளை; அறிவின் இருப்பிடம், அறிவாற்றல்; *v.* மூளையை அடித்துச் சிதறடி; (தொ.) brains trust, பொது மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு முன்னேற்பாடின்றி உடனே விடை இறுப்பதற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்ட திறமை யாளர் குழு.

brain'-case, *n.* மண்டை ஓடு.

brain' child, *n.* புதுமைக்கருத்து; புதுத்திறப்பணி.

brain'-cor'al, *n.* மூளையைப் போன்ற வடிவுடைய பவள வகை.

brained, *a.* மூளைவாய்ந்த, மூளைத்திறமுடைய, அறிவுடைய.

brain' fag, *n.* மூளைத்தளர்ச்சி.

brain'fe'ver, *n.* மூளைக்காய்ச்சல், மூளையதிர்ச்சி, மூளை அழற்சி ழுயக்க வெறி; வெறிப்பிதற்றல்; (தொ.) brain-fever bird, மூளை நோயாளர்போல் விடாது அழுகை ஒலி எழுப்பும் குயிலினப் பறவை.

brain'less, *a.* மூளை இல்லாத; அறிவற்ற; மடத்தனமான.

brain'-pan, *n.* மண்டை ஓடு, கபாலம்.

brains, *n. pl.* அறிவுத்திறம்.

brain'-sick, *a.* மூளைக்கோளாறுள்ள, அறிவு திரிந்த.

brain'-storm, *n.* திடீர் மூளை அதிர்ச்சி.

brain'-wash, brain'-washing, *n.* கருத்துமாற்றத்துக்கான வன்பிடிபோதனை; குற்றவுறுதிக்கான வன்பிடிச் சித்தத் தாக்குதல்.

brain'-wave, *n.* கருத்தொளி, திடீர்ப்புதுக் கருத்தலை அறிவு மலர்ச்சி.

brain'y, *a.* மூளை நலம் வாய்ந்த, நுண்மதியுடைய, திறமை மிக்க.

braird, *n.* முதல் முளை, குருத்து; *v.* குருத்துவிடு, முதல் முளைவிடு; மண்ணிற்குமேல் தோன்று.

braise, *v.* மேலும் கீழும் நெருப்பிட்டு ஆட்டு இறைச்சியோடு பன்றி இறைச்சித் துண்டுகளைப் புழுக்கு, கலவை வேவலாக அளி.

brake[1], *n.* தடுப்புக்கருவி, முட்டுக்கட்டை; *v.* தடுத்துநிறுத்து, தடைபோடு, முட்டுக்கட்டையிடு.

brake[2], *n.* குதிரைகளின் முரட்டுத்தனத்தை அடக்க வழங்கப் படும் சக்கரச் சட்டங்களை மட்டுமே உடைய தெறிவேக வண்டி; அகற்றத்தக்க கூண்டு வாய்ந்த இன்பப் பயணத் துக்குரிய பெரிய குதிரை வண்டி.

brake[3], *n.* பொறி இயக்கும் நெம்புகோல்; குழாயின் தண்டு.

brake[4], *n.* சணலை அரைக்கும் பற்களையுடைய கருவி; பரம்பு, வயலில் பரம்படிக்கும் கருவி; மரப்பட்டை உரிக்கும் கருவி; *v.* சணலைக் குறுகத்தறித்து அரை, அடித்துத் துவைத்து நொய்தாக்கு.

brake[5], *n.* புதர்க்காடு, புதர்.

brake[6], *n.* = bracken.

brake[7], *v.* break என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்; broke, broken, என்பனவற்றின் பழங்கால மறுவடிவம்.

brake'-block, *n.* முட்டுக்கட்டை, விசைத்தடுப்புப் பொறி யாகப் பயன்படும் கட்டை.

brake'less, *a.* தடுப்புக் கருவியற்ற.

brake'-shoe, *n.* தடைப்பொறியின் உராய்வுக்குரிய பகுதி.

brakes'man, *n.* புகைவண்டி தடுப்புப் பொறியைக் கண் காணிப்பவர்.

brake'-van, *n.* புகைவண்டியின் தடுப்புப்பொறி அமைக்கப் பட்ட வண்டி.

brake'-wheel, *n.* தடைப்படு சக்கரம்.

brak'y, *a.* புதர்க்காடான, புதர் நிரம்பிய.

Bram'ah-press, *n.* ஜோசப் பிரமா என்பவரால் (Joseph Braman, 1748-1814) புனைந்து காணப்பட்ட நீர்வலங் கொண்ட அழுத்தக்கருவி, நீரின் ஆற்றலால் வேலை செய்யும் அழுத்தக் கருவி.

bram'ble, *n.* கருப்புப் பழங்களைக் கொண்ட முட்செடி வகை; கள்ளிபோன்ற முள்ளடர்ந்த நீண்ட படர்தண்டுடைய புதர் வகை.

bram'ble-berry, bram'ble-bush, *n.* அடர்ந்த முட்புதர் வகை.

bram'ble finch, bram'bling, *n.* மலைப்புள் வகை.

bram'bly, *a.* முட்புதருடைய, முள்ளடர்ந்த.

bran, *n.* தவிடு; கூலக்குப்பை, குத்துமி.

brancard, (பிர.) *n.* குதிரை படுக்குமிடம்.

branch, *n.* கிளை, கொப்பு; பகுதி, பக்கம்; கூறு, பிரிவு; கிளையாறு; கிளையினம்; கிளைநிலையம்; துணைநிலையம்; தலைப்பின் உட்பிரிவு; நூல்துறை; கலைத்துறை; தொழில் துறை; *v.* கிளைகளாகப்பிரி; கப்புக் கவர்விடு; கிளைவிட்டுப் பரந்துசெல்; பிரி, விலகு; பிரிந்துசெல்.

branched, *a.* கிளையுடைய.

branch'er, *n.* கூட்டை விட்டுக் கிளை வாழ்வை மேற்கொண்ட சிறு பறவை.

branch'ery, *n.* கப்புக்கவர், கிளைகளின் தொகுதி.

branc'hia, *n.* மீன் செவுள்; *pl.* branc'hiae.

branc'hial, *a.* செவுள்சார்ந்த.

branch'iate, *a.* செவுள்களுடைய.

branch'ing, *n.* கிளைவிடல்; *a.* கிளைவிடுகின்ற, பிரிவுகள் கொண்ட.

branch'less, *a.* கிளைகள் அற்ற, பிரிவுகள் அற்ற.

branch'let, *n.* சிறுகிளை.

bran'chy, *a.* பல கிளைகளுள்ள; பல பிரிவுகளைக்கொண்ட.

brand', *n.* கொள்ளிக்கட்டை, கரிக்கட்டை; சூட்டுக்கோல்; சூடிட்டதழும்பு, சூட்டுக்குறி; சூடாக்கிப் பொறிப்பிடுவதற் கான இரும்பு அச்சு, சூடு முத்திரை; தொழிற்சின்னம்; வாணிகப்பொறிப்பு; தர அடையாளம்; தரவகை; பண்பு வகை, நயவகை; ஒளிமிக்க வாள், பளபளப்பான கத்தி; இழிவுக்குறி; பயிர்வெப்ப நோய்; *v.* சூடிடு; நிலையாக அடையாளமிடு; நிலையாகக் குறித்துவிடு; நிரந்தரமில் இருத்து; அறிவுறுத்து; தீக்குறியிடு; இகழ்குறி; இழுக்குண்டாக்கு, கறைப்படுத்து, வசைகூறு.

brand'ed, *a.* சூடிட்ட; தொழிற்குறி உடைய; பழிசுமத்தப் பட்ட; குறிக்கப்பட்ட.

brand'er, *n.* கம்பி அடுப்பு, உணவு சமைக்கும் இருப்புக்கலம்; *v.* கம்பியடுப்பில் உணவு சமை.

bran'died, *a.* பிராந்தியினால் ஊக்க வலிவு பெற்ற.

brand'i'ron, brand'ing-i'ron, *n.* கம்பியடுப்பு; சூட்டுக் கோல்; பாலை வைக்கும முக்காலி.

brand'ise, *n.* சமையல் கலங்கள் வைக்கும் முக்காலி.

bran'dish, *n.* சுழற்றல், வீசுதல், ஆட்டுதல்; *v.* சுழற்று, ஆட்டு, ஓச்சு.

brand'ling, *n.* மீன்வகையின் குஞ்சு; தூண்டில் இரையாகப் பயன்படும் சிறுபுழுவகை.

brand'-new', *a.* புத்தம் புதிய, அறப்புதிதான, புதுப்பளப் பளப்புடன் கூடிய.

brand'reth, *n.* மிடா வைக்கும் மரத்தாங்கி, வைக்கோற் போர்ச்சட்டம்; கிணற்றின் தோவளை அழி.

bran'dy, *n.* திராட்சைச் சாற்றினின்றும் வடித்தெடுக்கப் பட்ட இன்தேறல் வகை, பிராந்தி.

brand'y-ball, *n.* இனிப்புப்பண்ட வகை.

brand'y-paw'nee, *n.* பிராந்தி தண்ணீர்க் கலவை

brand'y-snap, *n.* பிராந்தியினுல் மணமூட்டப்பட்ட அப்ப வகை.

brang'le, *v.* வாதாடு, சச்சரவிடு.

brang'ling, *n.* வழக்காடுதல், மாறுபடுதல்.

brank [1], *n.* கோதுமை வகை.

brank [2], *v.* தள்ளு ; தலைகால் தெரியாமல் நட.

brank'-urs'ine, *n.* (தாவ.) கழுதைமுள்ளி.

bran'mash', *n.* தவிடும் மாவும் பிசைந்த விலங்குத் தீனி வகை.

bran-new, *a.* = brand-new.

bran'ny, *a.* கூலைகுபபை உடைய ; கரடு முரடான, பண் படாத.

brant'-goose, *n.* = brent-goose.

brase're, *n.* பித்தளை வேலைசெய்பவர் ; எரியூட்டுத் தண்டனை நிகழ்த்தும் களம்.

brash [1], *n.* கட்பிக்கல், கோணங்கோணமாக அமைந்த அடித் தளப் பாறைத் துண்டு ; உடைந்த பனிக்கட்டித்துண்டு ; வெட்டப்பட்ட வேலி மரக்கிளைகளின் துண்டுத்துணுக்கு.

brash [2], *n.* பித்தவாந்தி ; திடீர் மழை வீழ்ச்சி ; *v.* அமைதி குலை.

brash'y, *a.* துண்டு துண்டான.

bras'ier, *n.* = brazier [2].

brass, *n.* பித்தளை, செம்பும் செம்புடன் நாகமோ வெள்ளீயமோ கலந்த உலோகக்கலவை ; துடுக்குப்பேச்சு ; நாணயமிலா நடத்தை ; பித்தளைக்கலம் ; கல்லறை மீது பொறிக்கப்பட்ட பித்தளைப் பட்டயம் ; *a.* பித்தளையால் செய்யப்பட்ட ; (இதா.) brass band, பித்தளை இசைக்கருவிகளை வாசிக்கும் இசைக் குழுவினர் ; brass farthing, செப்புக்காசு ; top brass, பித்தளைத் தொப்பிகள் ; உச்ச உயர் அதிகாரிகள்.

brass'age, *n.* நாணயம் அடிப்பதற்கான கூலி.

brassard', *n.* மேற்கையில் அணியப்படும் வில்லை ; மேற் கைக் கவசம்

brass'art, *n.* மேற்கைக் கவசப் பகுதி.

brass' bounder, *n.* கப்பலில் உரிமைப் பயிற்சிப் பணியாளர்.

brass'erie, (பிர.) *n.* தேறல் மனை, தேறல் அருந்தும் சோலை.

brass'es, *n. pl.* பித்தளையால் செய்யப்பட்ட துளையிசைக் கருவித் தொகுதி ; துளை இசைக்கருவிப் பயிலுநர் குழு.

brass'et *n.* = brassart.

brass'founder, *n.* பித்தளை உருப்படிகள் செய்பவர், கன்னான் ; கருஞ்சக்காரன்.

brass'ie *n.* = brassy [1].

brass'iere, *n.* பெண்டிர் மார்புக் கச்சு, உட்கச்சு.

brass'-plate, *n.* வீட்டில் குடியிருப்பவரின் பெயர் பொறித்த தகடு.

brass-tacks, *n.* விலை விவரங்கள் தகடு.

brass'-vis'aged, *a.* வெட்கங்கெட்ட.

brass'y [1], *n.* பித்தளை அடியுடைய குழிப்பந்தாட்டச்செண்டு ; *a.* பித்தளை போன்ற ; வெட்கங்கெட்ட ; நாணயம் இல்லாத ; உணர்ச்சியற்ற ; இரக்கம் இல்லாத ; கடுங்குரல் கொண்ட.

brassy [2], *n.* மீன் வகை.

brat, *n.* மதலை, சிறு குழந்தை பற்றிய மதிப்புக் குறைவான வழக்கு ; தொல்லை தரும் குழவி ; குழந்தையின் தளர்த்தி யான அலையாடை ; முரட்டு மேலாடை.

bratch'et, *n.* வேட்டை நாய் ; குட்டி நாய் ; பெட்டை நாய் ; சிறுகுழந்தை பற்றிய மதிப்புக்குறைவான வழக்கு.

brat'ling *n.* சிறுமதலை, சிறுகுழந்தை பற்றிய மதிப்புக் குறைவான வழக்கு.

bratt'ice [1], *n.* நிலக்கரிச் சுரங்கங்களிலுள்ள மரத்தடுப்பு ; சுரங்கங்களின் காற்றோட்ட அமை தட்டி ; சுரங்க வழியின் பக்கங்களுக்குரிய பலகைப்பொதிவு ; *v.* தட்டியிட்டுத்தடு, அமை தட்டி அமை, பலகை உட்பொதிவு செய்.

bratt'ice [2], *n.* இடைக்கால அரண் முற்றுகை நடவடிக்கை களுக்குரிய நிலையான மரக்கோபுரம் ; மதில் முகங்காக்கும் அரண் மாளிகையின் காப்பு மேன்மாடம்.

bratt'ice-cloth, *n.* சுரங்கங்களில் பலகை பதிப்பதற்குப் பதில் பயன்படுத்தப்படும் கீல் பூசப்பட்ட துணி ; தார் பூசப் பட்ட சீலை.

bratt'icing, *n.* சுரங்கங்களில் தட்டியிட்டு இடைத்தடுத்தல் ; இடைத்தடுப்பு, தட்டி.

brat'tle, *n.* சடசடவென்னும் ஒலி ; பூசல் ; குழப்பம், அமளி ; *v.* சந்தடி உண்டுபண்ணு.

brat'tling, *n.* சடசடவெனும் ஒலி உண்டுபண்ணுதல் ; சந்தடி ; பூசல் ; அமளி ; *a.* சடசடக்கிற ; அமளி உண்டு பண்ணுகிற.

brava'do [1], *n.* வீரவெளிப்பாடு, ஆர்ப்பாட்டம் ; ஆர்ப்பாட்டம் செய்பவர் ; *pl.* brava'does, brava'dos.

brava'do [2], *v.* ஆர்ப்பாட்டம்செய் ; போலித்துணிச்சல் காட்டு.

brave, *n.* அமெரிக்காக் கண்டத்தின் பழங்குடி மரபுசார்ந்த சிவப்பிந்திய வீரன் ; *a.* மன உரமிக்க, துணிவுமிக்க, துணிச்சலான ; பகட்டான ; தகுதிவாய்ந்த ; மேலான, பெரும் தன்மையான ; போற்றத் தகுந்த ; சிறந்த, நேர்த்தியான ; *v.* எதிர்த்து நில், வீரமாகப்போராடு ; நெஞ்சு உரத்தோடு தாங்கு.

brav'ery, *n.* மனஉரம், உள்ளத்துணிவு ; வீரம், தீரம் ; புறப் பகட்டு ; அணிமணி நேர்த்தி.

bra'vo [1], *n.* துணிவுமிக்க கயவன், கொலைஞன், கூலிக்கொலை யாளி ; *pl.* bra'voes, bra'vos.

bravo [2], *int.* ஆகா, நன்று, மிகநன்று.

bravur'a, (இத்.) *n.* (இசை.) அருந்திறல் இசைப்பு, விரைவும் திறலாண்மையும் தோன்றப் பாடுதல் ; அறிவாற்றல் மிக்க செயல் ; உயர் அவாவுடைய முயற்சி ; வலிந்த செயற்கைத் தோற்றம்.

braw, *a.* நேர்த்தியான, ஒப்பனமிக்க.

brawl [1], *n.* பூசல், அமளி, சச்சரவு ; *v.* பூசலிடு ; சந்தடி உண்டு பண்ணு ; சடசடவென்று ஒலிசெய்.

brawl [2], *n.* முற்காலப் பிரஞ்சு நாட்டு நடனவகை ; பிரஞ்சு ஆடற்பண்வகை.

brawl'er, *n.* சச்சரவிடுபவர்.

brawl'ing, *n.* சண்டை, பூசல் ; *a.* பூசலிடுகின்ற ; கூக்குர லிடுகிற.

braw'ly, *a.* நேர்த்தியான பண்புடைய, ஒப்பனை செய்யப் பட்ட.

brawn, *n.* தசைநார் ; மேற்கைப் புறமும் கீழ்க்காற்புறமும் உள்ள கொழுவிய தசைப்பற்று ; கொழுந்தசை ; தசையாற்றல் ; பன்றி ஏற்றை ; ஆண் பன்றியின் இறைச்சியிட்ட ஊறுகாய்.

brawned, *a.* தசையுள்ள ; வலிமை மிக்க.

brawn'y, *a.* தசைப்பற்றுள்ள ; வலிமைவாய்ந்த.

brax'y, *n.* நுண்மங்காரணமான ஆட்டின் நோய்வகை ; நுண் மங்காரணமான நோய்ப்பட்ட ஆடு ; நோய்ப்பட்ட ஆட் டிறைச்சி ; *a.* ஆடுகளில் நுண்மங்காரணமான நோய்க்கு ஆட்பட்ட.

bray [1], *n.* கழுதையின் கனைப்பு ; கொடிய வெறுக்கத்தக்க ஓசை ; *v.* கத்து, கழுதை போலக்கனை ; பறை ஒலிசெய்.

bray [2], *v.* உடை, நொறுக்கு, சிறுதுகளாக்கு ; உரலிலிட்டுக் குற்று.

bray'er [1], *n.* கழுதைபோல் கத்துபவர் ; கனைப்பவர்.

bray'er [2], *n.* அச்சுக்குரிய மை அரைக்கும் தொறி ; அச்சு வேலையில் மையைப் பரப்பும் கருவி.

bray'ing, *n.* கழுதைக் கணைப்பு; கடுஒலி; *a.* வெறுக்கத் தக்க ஒலியுடைய; கொடிய ஓசையுடைய.

braze [1], *v.* பித்தளைபோல நிறமுண்டாக்கு, பித்தளை வண்ணம் செய்.

braze [2], *v.* பித்தளையும் துத்தநாகமும் சேர்ந்த கலவையைப் பற்றுசு வைத்துச்சேர்; ஒட்டவை; கடுமையாக்கு, உரமளி.

braze'less, *a.* பற்றுசிடப்படாத.

braz'en, *a.* பித்தளையாற் செய்யப்பட்ட; உறுதியான; மஞ்சள் வண்ணமான; கடுஒலி உடைய; பித்தளை போன்ற; நாணமற்ற; *v.* ஆணவத்தோடு எதிர்த்து நில்; வெட்கத்தை ஒழி; (தொ.) brazen age, பொன்னூழி - வெள்ளியூழி - பித்தளையூழி - இருப்பூழி என்ற நாகரிகத்தளர்ச்சி பற்றிய பழைய மரபின்படி மனித அழிவின் மூன்றுவது கட்டம்.

braz'en-face, *n.* செருக்குமிக்கவர், நாணிலி.

braz'en-faced, *a.* வீம்புத்தனமான; ஆணவம் நிறைந்த.

bra'zenness, bra'zenry, *n.* நாணம் இல்லாத் துணிவு, நாணம் இல்லாத நடத்தை.

bra'zier [1], *n.* கன்னன்.

bra'zier [2], *n.* நெருப்புக்கலம், கனல் தட்டு.

Brazil', *n.* வண்ணப்பொருள்கள் செய்யப் பயன்படும் தென் அமெரிக்க மரவகை.

Brazil'ian, *n.* தென் அமெரிக்காவிலுள்ள பிரசீல் (Brazil) நாட்டைச் சேர்ந்தவர்; *a.* பிரசீல் நாட்டைச் சார்ந்த.

Brazil'-nut, *n.* உணவுக்குதவும் பிரசீல் நாட்டு மரக்கொட்டை வகை.

Brazil'-wood, *n.* = Brazil.

breach, *n.* (கப்.) உடைப்பு, முறிவு; உடைந்த இடம்; முறிவுற்றநிலை; அரணில் பிளவு; இடையீடு, இடைவெளி; மீறுகை, சட்டம் - உடன்படிக்கை - ஒப்பந்தம் - வாக்குறுதி ஆகியவற்றுக்கு எதிராக நடத்தல்; கடமை தவறுகை; நட்பு முறிவு; அமைதி குலைவு; ஒரு பொருளின் உடைந்த நிலை; அலைமோதுகை; திமிங்கிலம் நீருக்குப் புறமாகப் பாய்தல்; *v.* பிளவுண்டாக்கு; இடைவழி உண்டுபண்ணு; உடைப்பு ஏற்படுத்து; திமிங்கில வகையில் நீரிலிருந்து மேலே பாய்.

bread, *n.* ஊதப்பம், புளிப்புறையூட்டப்பட்ட மாவில் செய்யப்படும் ரொட்டி, அப்பம்; உணவு; வாழ்க்கைத்தொழில், பிழைப்புச்சாதனம்; *a.* வாழ்க்கைத்தொழில் சார்ந்த, பிழைப்புக்குரிய; உயர் நோக்கமற்ற; முழுதும் உலகியல் சார்பான; இயற்பொருள் வாதம் சார்ந்த; முதிரா இளமைக்கூறுடைய; உரமற்ற; (தொ.) bread and butter, வெண்ணெய் தடவிய ரொட்டி; தேவையான உணவு; பிழைப்புத்தொழில்; bread-and-butter letter, விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவிக்கும் முடங்கல்; bread and cheese, எளிய உணவு, பொதுநிலை உணவு; வாழ்க்கைப் பிழைப்பு; bread buttered on both sides, மிக்க செழிப்பான நிலை; take the bread out of one's mouth, ஒருவர் பிழைப்பைக் கெடு.

bread'berry, *n.* கூடான பாலிலூறிய அப்பத்துண்டுகள்.

bread'-corn, *n.* அப்பம் செய்யப் பயன்படும் தானியம்.

bread'-crumb, *n.* அப்பத்தின் உள்ளீடான பகுதி; சமையலில் பயன்படுத்தப்படும் அப்பத்துண்டு; *v.* அப்பத்துண்டுகளை மேலீடாகத்தூவு.

bread'fruit, *n.* தென்கடல் பகுதியின் மரவகை; ஈரப்பலா மரம்.

bread'-line, *n.* உணவு பெறநிற்கும் ஏழைகளின் அணி வரிசை.

bread'nut, *n.* பொரித்தோ வேகவைத்தோ அப்பம்போல உண்ணத்தக்க கனிவகை; (தொ.) breadnut tree, ஈரப் பலாவினம் சேர்ந்த கனிமரவகை.

bread'-stud'y, *n.* பிழைப்புக்காக எடுத்துக்கொண்ட கல்வி, வாழ்க்கைத் தொழிலுக்கான படிப்பு.

breadth, *n.* அகலம்; பரப்பு; பரந்த மனப்பாங்கு, அகல நோக்கம்; விரிந்த மனம்; கலையில் முழுமைக்குக் கிளைப் பொருளடங்கி நிற்கும் ஒருமைநிலை.

breadth'ways, breadth'-wise, *adv.* அகலப்போக்காக, குறுக்காக.

bread'-ticket, *n.* உணவுப் பங்கீட்டுத்தாள்.

bread'-winner, *n.* குடும்பத்தில் உணவு ஆதரவுக்குரிய வருவாய் உடையவர், குடும்ப உணவாதரவுக்கு உரியவர்.

break [1], *n.* பிளவு, முறிவு, உடைவு, தகர்வு; தொடர்பறுதல், இடைமுறிவு; இடைநிறுத்தம்; இடையீடு, இடைவெளி; இடை ஓய்வு; தடை; விடிவு; தொடக்கம்; மாறுபாடு; குரல் வேறுபாடு; ஒழுங்கு மீறுகை; பந்தாட்ட வகைகளில் தொடர்கெலிப்பு; தொடர்கெலிப்பெண்; மரப்பந்தாட்டத்தில் பந்தெறிவின் வாட்டவழு; வாய்ப்பு; *v.* அறு, முறிவுசெய், பிள; துண்டுதுண்டாக்கு; உடை, தகர்; சிதறடி, நொறுக்கு; தொடர்பறுவி; இறு, முறிவுறு, பிளவுறு; உடைபடு, தகர்வுறு; சிதறு, நொறுங்கு; பிரிவுறு, இணைவற்றுப்போ; விலகு; இடையிட்டுத் தடு; ஊடுருவு, துளை; கிழித்துச் செல், வழி உண்டுபண்ணிக்கொண்டு செல்; ஆற்றலை முறி; பழக்கு; பணியவை, அடக்கு; ஊக்கம் தகர்; இடிந்துவிழு, நிலைகுலை; தளர்த்து; பழக்கம் தடுத்தாளு; மீறு; மீறிச் செல்; ஒழுங்குகலை; பயனில்லாததாக்கு; தள்ளிவை; கண்டித்து விலக்கு; விரியவை; விரி; மெல்ல எடுத்தியம்பு; வெடி; வெடித்துச் செல்; தெறித்தோடு; தப்பிச்செல்; திடீரென்று புறப்படு; புகுத்து; தொடங்கு; விடி; வாய் விட்டுரை, கொதித்துரை; திடீரென்று செயலாற்று, வெடிபடச் செயலாற்று; இடைக்கோடிடு; நீடித்த ஒருநிலை மாற்று, இடையிட்டு மாறுபாடுசெய்; தோன்று, காட்சியளி; கருத்திற் புலப்படு; வெளிப்படுத்து; வெளிப்படு; சீறு; வெடிப்புகள் உண்டாகச் செய்; கீறலுறு, வெடிப்புக்கள் உண்டாகப்பெறு; பொருளகம் முறிவுறு; நிகழ்; திடுமெனத் திரும்பு; (இசை.) முடுகிசை மூட்டு; (மொழி.) தனி உயிரை இணை உயிராக மாற்று; தனி உயிர் இணையுயிராக மாறுபடு; (தொ.) break a lance with, எதிராக வாதாடு; break away, பிரிந்துசெல்; தெறித்தோடு; break butterfly on wheel, ஆற்றல் வீணுகச் செலவிடு; break cover, மறைவினின்றும் வெளிப்படு; break down, வெட்டி வீழ்த்து, இடித்து அழி; தகர்ந்து விழு; ஆற்றலழிந்து வீழ்; கூறு கூறுக்கு; கூருய்வு செய்; சிதைத்து ஆக்கக் கூறுகளாகப் பிரி; break even, ஆதாயமோ இழப்போ இல்லாத நிலையை அடை; break fast, உண்ணுநிலை அகற்று; break off, திடுமென முடிவுறு; break open, வெட்டிப்பிள; துளை; break out, திடுமெனத்தோன்று; வாய்விட்டுக் கழறு; break Priscian's head, இலக்கணம் பிழைபடு; break the heart, துயரத்தால் அழி; break the ice, தொடக்கச் சிக்கலகற்று; முதல் நாணம் நீக்கு; break through, வழிநெருக்கிச் செல்; break up, துண்டு துண்டாக்கு; கலை, கூறு கூறுக்கு.

break [2], *n.* குதிரைகளைப் பழக்குவதற்கான கூண்டற்ற அடிக்கட்டை வண்டி; நீண்ட இன்பப்பயண வண்டிவகை.

break'able, *a.* உடையக்கூடிய; உடைக்கக்கூடிய.

break'age, *n.* தொடர்பறுத்தல்; பிளவு; உடைவு; உடைவுற்ற இடம், உடைந்த பகுதி; உடைத்தலின் விளைவு; இடையீடு.

break'away, *n.* கிளர்ச்சி; பிரிந்துசெல்லல், பிரிவினை.

break'back, *a.* முதுகு நெரிக்கிற, பெரும்பளுவான.

break'-bone fever, *n.* குலைக்காய்ச்சல் வகை.

break'-down, *n.* முறிவு, நிலைகுலைவு; இயந்திரப் பொறியின் சீர்குலைவு; நீகிரோவரின் ஆடல்வகை; (தொ.) break-down gang, எதிர்பாரா இடர் அறிபாடுகளை அகற்றும் பணியாளர்.

break'er [1], *n.* உடைதிரை, குமுறும் அலை; உடைப்பவர் முரட்டுக் குதிரை அடக்குபவர்.

break'er [2], *n.* சிறு மிடாக்கலம்.

break'ers, *n. pl.* மோதலைவாய்; பெரிய கடல் அலை.

break'fast, *n.* காலையுண்டி ; முதலுண்டி.

break'-jaw, *a.* பல்லுடைக்கிற ; உச்சரிப்புக்கடினமான.

break'neck. *a.* கழுத்து முறியும்படியான; பேரிடர்தரத்தக்க; பதற்றமான.

break'through, *n.* வல் ஊடுவழி, தடை தகர்த்து உண்டாக்கப்பட்ட வழி.

break'water, *n.* அலைதாங்கி ; அலைகரை, அணைகரை.

bream[1], *n.* நன்னீர்வாழும் மஞ்சள் நிறமுடைய கூன்முதுகு வாய்ந்த மீன்வகை.

bream[2], *v.* கடற்பூண்டுகளைக் கொளுத்திக் கப்பலின் அடித்தளத்தைத் தூய்மையாக்கு.

breast, *n.* மார்பு ; கொங்கை ; நெஞ்சு ; விலங்குடல் முன்பகுதி ; உடுப்பின் முன்னுடல் மேற்பகுதி ; சாய்குவடு ; மனச்சான்று ; உள்நாட்டம், அன்பு, ஆசை ; உணர்ச்சி ; கருத்து, எண்ணம் ; *v.* எதிர்த்துத்தாங்கு ; ஏறு ஆண்மையோடு எதிர் ; (தொ.) breast stroke, நெஞ்சு நீரில்பட இருகை வீசி நீந்துமுறை ; make a clean breast of, செய்த குற்றங்களை மறையாமல் கூறு, உள்ளதை ஒப்புக்கொள்.

breast'-deep, *adv.* மார்பு அளவு ஆழமாக.

breast'ed, *a.* மார்பு உடைய.

breast'-girdle, *n.* மார்பு எலும்பு வளையம்.

breast'-high, *adv.* மார்பு அளவு உயரத்தில்.

breast'-knot, *n.* மார்பணி இழை முடி.

breast'plate, *n.* மார்புக்கவசம், கவசத்தின் மார்புத்தகடு, மார்போடு ; யூதத் தலைமைக்குருவின் மணிபதித்த மார்புக் கச்சை ; சவப்பெட்டியின் மேலுள்ள பெயர்த்தகடு ; ஆமையின் அடிப்புற ஓடு.

breast'-plough, *n.* மார்பு பொருந்தித் தள்ளக்கூடிய குறுக்குச் சட்டமுடைய மண்கிளறிப்பொறி.

breast'rail, *n.* மார்பளவுயர்ந்த கட்டுமானத்தின் மேல்வரிச் சலாகை.

breast'summer, *n.* கட்டிட முகப்புத்தாங்கும் உத்தரக் கட்டை.

breast'-wall, *n.* அணைசுவர்.

breast'-wheel, *n.* நீராழி, ஊடச்சு வழிபாயும் நீரால் சுழற்றப்படும் விசை உருளை.

breast'work, *n.* அவசர அரண், மார்பளவு உயர மண் மதில்.

breath, *n.* மூச்சு, உயிர்ப்பு ; மூச்சோட்டம் ; மூச்சளவு நேரம் ; உயிர்க்கும் ஆற்றல் ; உயிர், ஆவி ; காற்றலை ; இளங்காற்று ; (ஒலி.) அதிர்வற்ற குரல் ; *a.* குரல்நாள அதிர்வற்ற ; (தொ.) breath of life, உயிர்மூச்சு, உயிர்க்காற்று ; out of breath, மூச்சுத்திணறுகிற நிலை உடைய ; take breath, ஓய்வு எடு ; நிறுத்து ; விட்டாற்றிக்கொள் ; with bated breath, பயத்தாலோ பணிவாலோ மூச்சு அடக்கிக்கொண்டு.

breathe, *v.* மூச்சுவிடு, மூச்சுவாங்கு ; உயிர்ப்புக்கொள் ; உயிருடன் இயங்கு ; நன்றாக மூச்சுவிடு ; அச்சந்தவிர் ; ஓய்வுகொள் ; தயங்கு, இடையில் ஓய்வு மேற்கொள் ; ஊது, மேல்வீசு ; கூறைபடியவிடு ; கலக்கவிடு ; காதுக்குள் சொல் ; வெளியிடு, இயம்பு ; மூச்சுப் பயிற்சிசெய் ; உள்ளேற்று ; தூண்டு ; தளர்வுறுத்து ; பண்பு பரப்பு ; மணம்பரப்பு.

breathed, *a.* ஒலியிலா உச்சரிப்பான.

breath'er, *n.* உயிர்ப்பவர், வாழ்பவர் ; சிறுநேரப்பயிற்சி ; ஓய்வு.

breath'ing, *n.* உயிர்த்தல் ; உள்ளவா, வேண்டுதல், அகநேர்வு ; ஓய்வு ; (இலக்.) கிரேக்கமொழி உயிர்ப்புக்குறி ; *a.* உயிருள்ளது போன்ற.

breath'ing-space, **breath'ing-time**, *n.* ஓய்வு நேரம் ; உயிர்க்கும் நேரம் ; சிறுநேர ஓய்வு.

breath'ing-while, *n.* மூச்சு இழுக்கும் நேரம்.

breath'less, *a.* உயிரற்ற ; மூச்சற்ற ; மூச்சுவிட முடியாத, திணறுகிற ; உணர்ச்சி வசமான ; ஆர்வத்தில் மூச்சுவிட மறந்த நிலையுடைய ; காற்றலையற்ற, காற்றுவீசாத.

breath'lessly, *adv.* மூச்சுவிடாமல் ; உணர்ச்சிவசமாக.

breath'-taking, *a.* திகைக்கும்படியான ; அதிர்ச்சியடையும்படியான ; எதிர்பாராத.

breath'y, *a.* நாதமின்றிப் பாடுகிற.

brec'cia, *n.* சுண்ணக்கூழாங்கற் கலவைப் பாறை.

brecc'iated, *a.* சுண்ணக்கூழாங்கற் கலவைப்பாறை சார்ந்த.

bred, *v.* breed என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

bree, *n.* வடிசாறு, பொருளை இட்டு கொதிக்கவைக்கப்பட்ட கொதிநீர்ச்சாறு.

breech, *n.* உடலின் கீழ்ப்புறப் பின்பகுதி, பிட்டம் ; பொருளின் அடிப்புறம் ; துப்பாக்கியின் பிற்பகுதி ; பீரங்கியின் புழைக் குழாயின் பின்பகுதி ; *v.* குறுங்கால்சட்டை அணிவி ; அடி, துன்புறுத்து.

breech-block, *n.* குண்டு உள்ளேபோடும் துப்பாக்கியின் பின்வழிஅடைப்பு.

breeched, *a.* குறுங்காற் சட்டை அணிந்துள்ள.

breech'es, *n. pl.* குறுங்கால்சட்டை, முட்டின்கீழ் இழுத்துக் கட்டவல்ல உலாவேளைக் காற்சட்டை ; (தொ.) Breeches Bible, 1560-ஆம் ஆண்டுக்குரிய ஜெனீவாப்பதிப்பு விவிலிய நூல் ; breeches part, நாடகத்தில் பெண் ஆணுடையில் நடிக்கும் நடிப்பு ; wear the breeches, கணவன் மீது ஆட்சி செலுத்து.

breech'es-buoy, *n.* மெய்பொதிந்தியங்கும் உயிர்காப்பு மிதவை.

breech'ing, *n.* குதிரையின் பின்புறச்சேணம் ; பீரங்கியைக் கப்பலோடு இணைக்கும் கயிறு.

breech'less, *a.* குறுங்கால் சட்டை இல்லாத.

breech'-loader, *n.* பின்வழியே மருந்து குண்டு அடைக்கும் துப்பாக்கி.

breech'-loading, *n.* துப்பாக்கியின் பின்வழியே மருந்து குண்டு அடைத்தல்.

breed, *n.* இனம், குருதி மரபு ; மரபுவகை, வளர்ப்பினம் ; மரபு, கால் வழி ; மரபுப் பண்புகள் செறிந்த குடி ; கான்முளை, மரபுக் கொழுந்து ; *v.* ஈனு, பெறு, பிறப்பி ; கருத்தரி, கருவில் பேணிவளர் ; உண்டாக்கு, உற்பத்திசெய் ; பயிற்றுவித்துப் புதுவகை உண்டாகச்செய் ; காரணமாயிரு, தூண்டு, உள்விளைவி ; பெருக்கு ; தழைப்பி, பிள்ளைகள் பெற்றுப் பெருகு, இனம்பெருக்கு ; இனப்பெருக்கமுறு.

breed'er, *n.* வளர்ப்பவர் ; பயிற்றுவிப்பவர் ; (தொ.) breeder reactor, தொடர்வரிசைக் கருவுள் இயக்கத்தில் உட்கொள்ளும் பொருட்சிதைவுத் திறத்தைவிட மிகுதியாக உண்டுபண்ணும் தொடர்வரிசை.

breed'ing, *n.* வளர்ப்பு ; இனப்பெருக்கம் ; பயிற்சிப்பண்பு ; நடைநயம் ; நன்னடத்தை, நல்லொழுங்கு ; (தொ.) breeding in-and-in, மட்டுமீறிய இன உட்கலப்பு, நெருங்கிய உறவின ரிடையே மணஞ்செய்துகொள்ளுதல்.

breeze[1], *n.* இளங்காற்று, தென்றல் ; மென்காற்றலை ; காற்று ; குழப்பம் ; கலகம் ; சிடுசிடுப்பு ; அடங்கிய அலருரை.

breeze[2], *n.* உலைக்கரி, பளுவற்ற இளங்காரை செய்யப் பயன்படுத்தப்படும் எரிந்த நிலக்கரித்துண்டுகள்.

breeze[3], *n.* உண்ணிவகை.

breeze'less, *a.* காற்றுவீசாத ; காற்று இல்லாத ; அசைவற்ற.

breez'ily, *adv.* காற்றோட்டத்தில் ; உற்சாகமுடன்

breez'iness, *n.* காற்றோட்டம் ; மகிழ்ச்சி ; உற்சாகம்.

breez'y, *a.* காற்றலையின் வீச்சுப்போன்ற ; காற்றோட்டமான ; எழுச்சியுள்ள ; ஒள்ளிய ; களிப்புமிக்க.

breg'ma, *n.* மண்டை ஓட்டின் முன்னிணை விலாப்பகுதி எலும்பு ; *pl.* breg'mata.

breg'matic, *a.* மண்டை ஓட்டின் முன்னிணை விலாப்பகுதி எலும்பு பற்றிய.

breloque', *n.* கடிகாரச்சங்கிலியோடு இணைக்கப்பட்டுள்ள அணிவகை.

Bren, *n.* = Bren-gun.

Bren carrier, *n.* துப்பாக்கி குண்டு துளைக்க முடியாத ஊர்தி.

Bren'-gun, *n.* பளு இல்லாத பொறிந்துப்பாக்கி.

brent'-goose, *n.* கார்காலத்தில் இங்கிலாந்துக்கு வரும் சிறு காட்டுவாத்து இனம்.

bress'ummer, *n.* = breastsummer.

breth'ren, *n. pl.* உடன்பிறப்புரிமையாளர்கள், தோழர்கள்.

Bret'on, *n.* பிரான்சிலுள்ள பிரிட்டனி (Brittany) மாகாணப் பழங்குடியினர்; பிரிட்டனி மாகாணப் பழங்குடிமக்களின் மொழி; *a.* பிரான்சிலுள்ள பிரிட்டனி மாகாணத்துக்குரிய; பிரிட்டனி மாகாணப் பழங்குடிமக்கள் மொழிசார்ந்த.

Bretwal'da, *n.* முற்கால பிரிட்டனின் அரசர்கள் தம் மேலாட்சியுரிமை தோன்ற மேற்கொண்ட பட்டம்.

breve, *n.* போப்பாண்டவரின் முடங்கல்; வளைபிறைக்கோடு, யாப்பியலில் குற்றசைக் குறியீடு; (இசை.) பழங்கால மாத்திரை அளவை.

brev'et, *n.* படைத்துறை உயர்பணியாளர் ஊதியத்திற்கும் மேம்பட்ட ஒரு படிநிலை அளிக்கும் ஆணைப்பத்திரம்; நன்மதிப்புப் பதவி; *v.* ஊதியமற்ற உயர்நிலை அளி; மதிப்பியல்பான உயர்வுகொடு; (தொ.) brevet major, இராணுவத்தில் ஊதியமற்ற உயர்பணியாளர்; brevet rank, ஊதியமற்ற உயர்நிலை.

brev'iary, *n.* ரோமன் கத்தோலிக்கக் கோயிலில் நாடோறும் ஓதும் திருமுறை நூல்.

bre'viate, *n.* சிறுபொழிப்பு, சிறுசுருக்கம்; வழக்குரைஞருக் குரிய வழக்காளியின் வழக்குக்குறிப்பு.

brevier', *n.* அச்சுருப்படிவ அளவு.

brev'ity, *n.* சுருக்கம், செறிவு; காலத்தின் குறுகிய அளவு; குறுக்கம்.

brew, *n.* வடிப்பு, வடித்திறக்குதல்; ஒருதடவை வடிப்பளவு; வடியத்தின் பண்பு, வடிப்புத்தரம்; வடிப்புமுறை; வடிமான வகை; *v.* நுரைப்பானம் வடி, காய்ச்சு, மது இறக்கு; கலக்கு; கலந்து உருவாக்கு, இட்டுக்கட்டி உண்டுபண்ணு; உள்ளீடாகச் சதிசெய்; வடிப்பில் உருவாகு; கலந்து உருவாகு, உள்ளுறவினை.

brew'age, *n.* வடித்திறக்குதல்; வடிக்கப்பட்ட சரக்கு; வடித்துக் கலக்கப்பட்ட குடிவகை.

brew'er, *n.* தேறல் வடிப்பவர், சாராயம் காய்ச்சுபவர்.

brew'ery, **brew'-house**, *n.* வடிப்பாலை, சாராயக்கிடங்கு.

brew'ing, *n.* இன்தேறல் வடித்தல்.

brew'is, *n.* குழம்பு, மாட்டிறைச்சிச்சாறு.

brew'ster, *n.* சாராயம் காய்ச்சுபவர்; (தொ.) Brewster Sessions, வெறிய வகைகளை விற்பதற்கான தனி இணக்க மளிக்கும் மன்றப் பருவஅமர்வு.

bri'ar, *n.* = brier.

brib'able, *a.* கைக்கூலி கொடுத்து வசப்படுத்தக்கூடிய; கையுறையால் முடிவு மாற்றக்கூடிய.

bribe, *n.* கைக்கூலி, இலஞ்சம்; *v.* கைக்கூலிகொடு, கையுறை யால் வசப்படுத்து, பணம் கொடுத்துத் தீர்ப்புப் பிறழச்செய்; பொருள்கொடுத்துத் தகாத ஆதாயமடை.

brib'ery, *n.* கைக்கூலி கொடுத்தல்; இலஞ்ச ஊழல்.

bric'-a-brac, *n.* தொன்மை அரும்பொருள்களின் தொகுதி.

brick, *n.* செங்கல்; செங்கல் வடிவுள்ள பாளம்; குழந்தை விளையாட்டுக் கட்டிடம் கட்டப் பயன்படுத்தும் மரத்துண்டு; செங்கல் வடிவுடைய அப்பப்பாளம், அப்பக்கட்டி; *v.* செங்கல் அடுக்கிக்கட்டு; செங்கல் பாவு; செங்கல் பாவிய தோற்றம் உண்டுபண்ணு.

brick'-bat, *n.* செங்கல் துண்டு, செங்கற்கட்டி.

brick'-clay, *n.* செங்கல் செய்யப் பயன்படும் களிமண்; மணலும் இரும்புச் சத்தும் சேர்ந்த களிமண்.

brick'-dust, *n.* செங்கல் தூள், செங்கற்பொடி; செங்கற் பொடி நிறம்.

brick'en, *a.* செங்கலாலான.

brick'-field, *n.* செங்கற்களம், காளவாய்.

brick'ing, *n.* செங்கல் வேலைப்பாடு; செங்கற் பாவியது போன்ற தோற்றந்தரும் வேலைப்பாடு.

brick'-kiln, *n.* செங்கற்சூளை, செங்கற் காளவாய்.

brick'layer, *n.* கொல்லத்துக்காரன், கொத்தன்.

brick'-laying, *n.* கொத்துவேலை, கொல்லத்துவேலை.

brick'maker, *n.* செங்கல் செய்பவர்.

brick'-nog, **brick'-nogging**, *n.* மரவேலை இடைப்பட் டிணைக்கும் செங்கல்.

brick'-red, *a.* செங்கல் நிறமான, சிவப்பான.

brick'shaped, *a.* செங்கல் வடிவான.

brick'-tea', *n.* அப்பம் போன்று அழுத்தப்பட்டுள்ள தேயிலை.

brick'work, *n.* செங்கல் வேலைப்பாடு, செங்கற் கட்டுமானம்; செங்கற் கட்டிடம்; கொத்துவேலை; செங்கல் தொழிற்சாலை.

brick'y, *a.* செங்கல்லினால் இயற்றப்பட்ட; செங்கல்போன்ற.

bric'ole, *n.* கல் எறிவதற்கான பழங்காலப்பொறி; வரிப்பந் தாட்டத்தில் பந்து சுவரில் தெறித்து மீளல்; பிறிதுமுகமான பந்தடி; மேசைக்கோற்பந்தாட்டத்தில் சுற்றுமுகமான பந்தடி.

brid'al, *n.* திருமண விருந்து; திருமணம்; *a.* திருமணஞ் சார்ந்த; மணப்பெண்ணைப் பற்றிய.

bride[1], *n.* மணப்பெண்.

bride[2], *n.* பூவேலைப்பாடுகளை இணைக்கும் நுட்பமான வலைப் பின்னல்; மகளிர் அணியும் தொப்பியிலுள்ள கயிறு.

bride'-bed, *n.* மன்றற்படுக்கை, திருமணப்பள்ளி.

bride'cake, *n.* திருமண அப்பம், மணப்பண்ணியம்.

bride'-chamber, *n.* மணமக்கள் பள்ளியறை.

bride'groom, *n.* மணமகன், மணவாளன், மாப்பிள்ளை.

bride'maid, **bride'maiden**, *n.* = bridesmaid.

bride'man, *n.* = bridesman.

brides'maid, *n.* மணப்பெண் தோழி.

brides'man, *n.* மாப்பிள்ளைத் தோழன்.

bride'well, *n.* திருத்தகம், சிறை.

bridge[1], *n.* பாலம்; யாழ்க்குதிரை, இன்னியங்களின் நரம்பு களைத் தாங்கும் மரத்துண்டு; (கப்.) கப்பல் தலைவன் நிற் பதற்கான மேடை; மூக்குத் தண்டு; மூக்குக் கண்ணாடி யின் இடைஇணைப்புக் கம்பி; *v.* இணை; பாலங்கட்டு; (தொ.) bridge of boats, படகுப்பாலம்; bridge of gold, தோல்வியுற்ற எதிரிகள் எளிதாகப் பின்வாங்க அமைக்கப் பட்ட வழி.

bridge[2], *n.* சீட்டாட்ட வகை.

bridge'board, *n.* ஏணிப்படிகளில் படிப்பலகைகளை ஏற்றி இணைக்கும் செங்குத்தான பலகை.

bridge'-head, *n.* எதிரியின் நாட்டிற்குள் செல்லக்கூடிய குறுகிய வழி; எல்லையாய் அமைந்துள்ள ஆற்றின் குறுக்கே யுள்ள பாலம்.

bridge'less, *a.* பாலம் அற்ற.

bri'dle, *n.* கடிவாளம்; தடை, செறுப்பு; தலையைச் சொடுக்கி யிழுத்தல்; (கப்.) நங்கூரவடம், தளைக்கம்பி வடம்; (உ.ட.) உறுப்பியக்கம் தடுக்கும் தசைநார்; *v.* கடிவாளமிடு; பிடித் திழு; அடக்கு; அடக்கிச்செல்; எதிர்ப்பைத் தெரிவி; முறைப்புக் காட்டு.

bri'dle-bridge, *n.* குதிரைக்காரர்களுக்காக அமைந்த வண்டி செல்லாத பாலம்.

bri'dle-hand, *n.* இடதுகை, குதிரையில் இவர்ந்து செல்லும் போது கடிவாளத்தைப் பிடித்திழுக்கும் கை.

bri'dle-path, *n.* குதிரைக்காரர்களுக்கான வண்டி செல்லாத பாட்டை.

bri'dler, *n.* கடிவாளம் இடுவோர்; அடக்குவோர்.

bri'dle-rein, *n.* கடிவாளத்தின் வார்.

br'idle-road, *n.* = bridle-path.

bridoon', *n.* படைத்துறை ஈரிணைக் கடிவாளத்தின் மெல் லிணை.

Brie, *n.* வெண்ணெய் நீக்கப்படாத பாலேடு.

brief, *n.* வழக்குரைஞரிடமுள்ள வழக்காடிகளின் வழக்குக் குறிப்பு, சுருக்க அறிவிப்பு; வழக்குரைஞரின் பணி; சிறு பணி; போப்பாண்டவரின் ஒழுங்குமுறையாணை; தாள் வடிவளவு; கையச்சுப்பொறி வீச்சளவு; வான் படைத்துறையில் வானோடிகட்கு அறிவிக்கப்படும் கட்டளை; *a.* சுருக்கமான; சுருங்கிய காலக்கூறுடைய; செறிவான; *v.* சுருக்கிக் குறிப்பிடு; சுருக்கக் குறிப்பெடு; சுருக்க விவரத்தின்மூலம் அறிவி; வழக்காட அமர்த்திக் கொள்; வானூர்திப் பணியாளருக்கு விமானத்தாக்குப் பற்றிக் கட்டளை இடு; (தொ.) be brief, சுருக்கமாகக்கூறு; be watching brief, அக்கரையுடன் வழக்காடியின் வழக்கு கவனி; hold brief for, வாதாட வழக்குரைஞராகத் தொடர்ந்திரு; ஆதரித்து வாதாடு; in brief, சுருக்கமாக.

brief'-bag, *n.* சிறு தோற்பை.

brief'less, *a.* கட்சிக்காரர் இல்லாத; வேலையற்ற.

brief'ly, *adv.* சுருக்கமாக, குறிப்பாக.

brief'ness, *n.* சுருக்கம்.

briefs, *n. pl.* (பே-வ.) பெண்டிர் குறுங்காற்சட்டை.

bri'er, *n.* காட்டுரோசா உட்பட்ட முட்செடிவகை; புகைக் குழாய் செய்யப் பயன்படும் வேரையுடைய வெண்புதர்ச்செடி; இவ்வேரால் செய்யப்பட்ட புகைக்குழாய்; (தொ.) Brier rose, காட்டுரோசா வகை; Sweet Brier, மணங்கமழும் இலைகளையும் மலர்களையுமுடைய ரோசா வகை.

bri'ered, *a.* முட்செறிந்த, முள் நிறைந்த.

bri'er-root, bri'er-wood, *n.* புகைக்குழாய் செய்ய உதவும் வேர்வகை.

brier'y, *a.* முள்ளார்ந்த, முள்ளடர்ந்த.

brig, *n.* இருபாய்மரக்கப்பல்.

brigade', *n.* படை அணிப்பகுதி; களப்பிரங்கிப் பிரிவுடன் மூன்று காலாட் பிரிவுகளடங்கிய படைவகுப்பு; கவசப் படைப்பகுதி; ஒழுங்கும் கட்டுப்பாடுமுள்ள தொண்டர்குழு; *v.* படைப்பகுதியாக அமை; படைப்பிரிவுடன் இணை; படை வகுப்புக்களாக உருவாகு; ஒழுங்காக அமை.

brigade'ma'jor, *n.* படைப்பகுதித் துணைப்பணியாளர்.

brigadier', *n.* படைப்பகுதித் தலைவர், படைப்பணியாளர்.

Brigadier'-General, *n.* படைப்பகுதித் தளபதி.

bring'and, *n.* கொள்ளைக்காரர், ஆறலைப்போர்.

bring'andage, *n.* கொள்ளையடித்தல், வழிப்பறி செய்தல்.

brig'andish, *a.* கொள்ளைக்காரனுக்குரிய; கொள்ளையடிக்கும் இயல்புடைய, கொள்ளைக்காரன் போன்ற.

brig'andry, *n.* = brigandage.

brig'antine[1], *n.* உடலின் மேற்பகுதியைக் காக்கும் இருப்புக் கவசம்.

brig'antine[2], *n.* இருபாய்மரக்கப்பல் வகை.

bright, *a.* ஒளிர்கிற; ஒளிமிக்க; பளபளப்பான; விளக்கமான; முனைப்பான; தெளிந்த; மகிழ்ச்சிமிக்க; அறிவுக் கூர்மையான, முன்னறிவுடைய; புகழ்சான்ற; சிறப்புவாய்ந்த.

bright'en, *v.* ஒளிமிகச்செய்; பொலிவுறச்செய்; பளபளப்பாக்கு; ஒளிபெறு; பொலிவுபெறு; தெளிவடை.

bright'ness, *n.* ஒளி; பொலிவு; கிளர்ச்சி; தெளிவு; பளபளப்பு; அறிவுக்கூர்மை.

Bright's disease', *n.* சிறுநீரகத்தில் ஏற்படும் நோய்வகை.

brigue, *n.* சச்சரவு, கலகம்; சூழ்ச்சி; *v.* சூழ்ச்சிசெய்.

brig'uing, *n.* ஆதரவு தேடுதல்.

brill, *n.* வெண்புள்ளிகளையுடைய தட்டையான மீன்வகை.

brill'iance, *n.* பிறங்கொளி, ஒளி, விளக்கம், மினுமினுக்கம்; பெருந்திறமை; பகட்டழகு.

brill'iancy, *n.* மின்னொளியுடைமை; சுடரொளி; கூரொளி; மினுமினுப்பு; பெரும்புகழ், கூரறிவு.

brill'iant[1], *n.* பட்டையிட்ட சிறந்த வைரம்; மணியுரு அச்சு.

brill'iant[2], *a.* ஒளிமிக்க; மின்னுகிற; சுடர்விடுகின்ற; புகழ்சான்ற; சிறப்பு வாய்ந்த; பகட்டான, முனைப்பான; திறமிக்க; மிடுக்குடைய.

brill'iantine, *n.* பளபளப்புத் தைலம், கூந்தல் மெருகு நெய்.

brill'iantness, *n.* திகழொளியுடைமை; புகழ்ப்பேராண்மை; மேம்பாடு.

brim, *n.* விளிம்பு, ஓரம்; குவளையின் வாய்வரை; பள்ளத்தின் கரைக்கோடு; *v.* விளிம்புவரை நிரப்பு, கரைமட்டமாய் நிரப்பு; விளிம்பு வரை நிரம்பி இரு; (தொ.) brim over, பொங்கித் ததும்பு.

brim'ful, brim'-full', *a.* விளிம்புவரை நிறைந்த; கரை மட்டமாய் நிரம்பிய; நீர் ததும்புகிற.

brim'full'ness, brim'fulness, *n.* விளிம்புவரை நிறைதல்.

brim'less, *a.* விளிம்பற்ற.

brimmed, *a.* விளிம்புவரை நிறைந்த; கரைமட்டமான.

brimm'er, *n.* நிறைகிண்ணம், நிறைகலம்.

brimm'ing, *a.* பொங்கி வழிகிற.

brim'stone, *n.* கந்தகம்; பெண்பேய்; (தொ.) brimstone butterfly, brimstone moth, மஞ்சள்நிற வண்ணப் பூச்சி வகை.

brin'ded, *a.* பழுப்பு நிறத்திடையே இடைவரிகளை அல்லது புள்ளிகளை உடைய.

brin'dle, *n.* பழுப்பு நிறத்திடையே புள்ளிகள் அல்லது இடைவரிகளுடைமை.

brin'dled, *a.* = brinded.

brine, *n.* உவர்நீர்; கடல்நீர், கடல்; கண்ணீர்.

brine'-pan, brine'-pit, *n.* உப்புக்காய்ச்சும் இருப்புக்கட்டம்; உப்புப்பாத்தி, உப்பளம்; உப்பு ஊற்று.

brine'-shrimp, *n.* உவர்நீரில் வாழும் நத்தை இனம்.

bring, *v.* கொணர், எடுத்துக்கொண்டு வா; வருவி; இணங்குவி, வயப்படுத்து; எடுத்துச்செல்; சான்றுகாட்டு; ஈட்டு; ஏற்படுத்து; நிறுவு; தொடங்கிவை; வழி நடத்து, நடத்திச்செல்; முன்னேறச்செய்; (தொ.) bring about, நடைமுறைக்குக் கொண்டுவா; ஏற்படுத்து; bring back, நினைவிற்குக் கொண்டுவா; bring down, வீழ்த்து; தாழ்த்து; குறை; அடக்கு; சுட்டுத் தள்ளு; bring down the house, பொதுப்பாராட்டுப் பேரொலி எழுப்பு; bring forth, ஈனு, கருவுயிர், பிறப்பி, பெறு; உண்டாக்கு; bring forward, முன் கொணர்; முன்தொகையைப் பின் கொண்டு வந்திணை; bring home, மெய்யெனக்காட்டு; மனத்தில் பதியவை; bring in, புதிதாகக் கொணர்; புகுத்து; விளைவி; அளி; bring off, அழைத்துவா; பாதுகாப்பாகக் கொண்டுவந்துவிடு; செய்து நிறைவேற்று; bring on, தூண்டு; வழிசெய்; முன்னேறச்செய்; வாதத்துக்கு வழி வகு; bring out, விளக்கு, தெளிவுபடுத்து; முனைப்பாக்கு; வெளிக்கொணர், வெளியிடு; bring over, மாற்றியமை; தன்வயமாக்கு; bring round, உணர்வு பெறச்செய்; தன்வயப்படுத்து; bring to, தன்னுணர்வு

நிலைக்குக் கொண்டுவா ; (கப்.) கொண்டுவந்து நிறுத்து ; நிலைகொள் ; bring under, அடக்கு ; கீழ்ப்படுத்து ; bring up, பேணிவளர் ; பயிற்றுவி ; தொடர் ; சமநிலைக்குக் கொண்டுவா ; நிணைவிற்குக் கொண்டுவா ; புதிதாகக் கொணர் ; எழச்செய் ; மன்றத்தில் எழுந்து பேசச்செய் ; வழக்குத் தொடு ; (கப்.) நங்கூரம் பாய்ச்சு ; bring up the rear, கடைசியாக வா.

bring'er, *n.* கொண்டுவருபவர் ; இணங்கச் செய்பவர்.

bring'ing, *n.* கொண்டுவருதல் ; இணங்கச் செய்தல் ; ஈட்டல் ; நிறுவல் ; தொடக்கம் ; வழிநடத்தல்.

brin'ish, *a.* உவர்நீர்த்தன்மையுடைய ; உப்புபோன்ற.

brin'jal, *n.* கத்தரிக்காய்வகை, வழுதுணங்காய்வகை ; கத்தரிச்செடி.

brink, *n.* செங்குத்தான ஓரம் ; நீர்நிலையின் முடிவெல்லை ; கரை ; விளிம்பு.

brink'manship, *n.* கொள்கைகாரணமாகப் போரின் உட்புகாமல் ஓரத்தில் நின்று ஊடாடும் முறைமை.

brin'y, *a.* உவர் நீரையுடைய ; கடலைப் பற்றிய ; உப்பான.

bri'o, (இத்.) *n.* களியார்வம், கிளர்ச்சி, ஊக்கம்.

brioche', *n.* பஞ்சுபோன்ற மென்மையான அப்பவகை.

briquette', *n.* நிலக்கரித்தூளினாலான செங்கல் வடிவான பாளம் ; செங்கல் வடிவுடைய சிறுகட்டி.

brise'-bise, *n.* பலகணியின் கீழ்ப்பகுதியில் விரிக்கப்பட்ட திரைத்துணி.

brisk, *a.* சுறுசுறுப்பான, கிளர்ச்சிகரமான ; விரைவான ; விறுவிறுப்பூட்டுகிற, எழுச்சி தருகிற ; பொங்கித் ததும்புகிற ; கூர்மதியுடைய ; *v.* சுறுசுறுப்பாக்கு ; கிளர்ச்சிகொள் ; விரைவுபடுத்து ; சுறுசுறுப்படை.

brisk'en, *v.* ஊக்கு, வேகமூட்டு, சுறுசுறுப்பாக்கு ; விறுவிறுப்படை.

brisk'et, *n.* விலங்குகளின் மார்புப்பகுதி ; மார்புப்பகுதி இறைச்சி.

brisk'ly, *adv.* சுறுசுறுப்போடு ; விரைவாக.

brisk'ness, *n.* சுறுசுறுப்பு ; விரைவு.

bris'ling, *n.* நார்வே நாட்டுக்குரிய சிறுமீன்வகை.

bri'stle, *n.* மயிர் சிலிர்ப்பு ; பன்றியின் உடல் மயிர் ; விலங்கினத்தின் தடித்த குட்டையான முள் மயிர் ; மனிதனின் குட்டையாக வெட்டப்பட்ட தாடி ; *v.* சிலிர் ; முள் மயிர் சிலிர்க்கச் செய் ; வெகுளிகாட்டு ; சண்டைக்கு எழு ; துன்ப முண்டாக்கு ; அடர்ந்து நிறைந்திரு.

Bris'tol, *n.* கிளாஸ்டர்ஷயரில் (Gloucestershire) உள்ள ஒரு நகரம் ; (தொ.) Bristol fashion, (கப்.) எல்லாம் சீராக, முழுதும் நன்முறையில்.

Bris'tol-board', *n.* படம்வரையப் பயன்படும் அட்டைப் பலகை.

Bris'tol-brick, *n.* இரும்புத்தொழிற் கருவிகளைத் தேய்த்துத் துப்புரவாக்கப் பயன்படும் மட்பொருள்வகை.

Bris'tol-di'amond, *n.* பிரிஸ்டல் நகரத்திற்கருகில் கிடைக்கும் படிகக்கல்வகை.

Bris'tol-milk', *n.* இன்தேறல்வகை.

bris'ure, *n.* கோட்டை மதிற்சுவர் அல்லது கைப்பிடிச்சுவரின் முடங்கிய கோணப்பகுதி ; பெருமக்களின் குடும்பச் சின்னங்களில் இனமரபுக் கிளைஉறவுகளைக் காட்டும் வேறுபாடு.

brit, *n.* மீன்வகைகளின் குஞ்சு ; சிறுமீன் வகை.

Brit'ain, *n.* இங்கிலாந்து - வேல்ஸ் - ஸ்காத்லாந்து ஆகிய நாடுகளின் இணைப்பு ; பிரிட்டனின் ஆட்சிப் பேரரசு.

Britann'ia, *n.* பிரிட்டன் நாடு பற்றிய கற்பனை உருவகமான நாட்டன்னை ; (தொ.) Britannia metal, வெள்ளி போன்ற வெள்ளீய நிமிளைக்கலவை உலோகம்.

Britann'ic, *a.* பிரிட்டனுக்குரிய ; பிரிட்டன் நாட்டன்னை சார்ந்த.

Brit'icize, *v.* பிரிட்டனுக்குரியவராகு ; பிரிட்டனுக்குரியவராக்கு ; பிரிட்டனுக்குரியவர் போலாகு ; பிரிட்டனுக்கு உரியவர் போலாக்கு ; பிரிட்டனின் மக்களோடு ஒன்றுபட்டுக்கல ; பிரிட்டனின் பண்புகளுடன் ஒன்றுபடு.

Brit'ish, *n.* பண்டைப் பிரிட்டானியர்களின் மொழி ; வெல்ஷ் மொழி ; *a.* பிரிட்டன் நாட்டுக்குரிய ; பிரிட்டன் குடிமக்களைப் பற்றிய ; பிரிட்டனின் பேரரசைச் சார்ந்த ; பிரிட்டனுடன் இணைந்த பொதுவரசு நாடுகளைப் பற்றிய ; பண்டைப் பிரிட்டானிய இனம் சார்ந்த ; (தொ.) British gum, பசைப் பொருள்வகை, கோந்துவகை ; British plate, உலோக வகை ; British warm, படைத்துறையினர் மேற்சட்டை வகை.

Brit'isher, *n.* பிரிட்டனுக்குரிய குடியுரிமையாளர்.

Brit'ishism, *n.* பிரிட்டனில் பேசப்படுகிற ஆங்கிலத்திற்கே உரிய பேச்சுமொழித்தன்மை.

Brit'on, *n.* பிரிட்டன் நாட்டிற் பிறந்தவர் ; பிரிட்டனுக்குரிய பேரரசில் பிறந்தவர் ; பிரிட்டன் தீவின் தென்பகுதியில் ரோமர் கண்ட பழங்குடியினர்.

brit'tle, *a.* எளிதில் உடைக்கூடிய, எளிதில் நொறுங்கத் தக்க, நோய்மையான.

brit'tleness, *n.* உடையும் தன்மை, நொறுங்கும் இயல்பு, நொய்ம்மை.

britt'le-star, *n.* விண்மீன்வடிவ மீன்வகை ; நீர்வாழ் சிறு விலங்குவகை.

brit'zka, britz's'ka, *n.* ஒரே இருக்கை உள்ள திறந்த நாற்சக்கர வண்டிவகை.

broach, *n.* துளைபோடு கருவி ; ஊசி ; அகப்பைக்கோல் ; இறைச்சி சுடும் இரும்புமுள் ; திருக்கோயில் தூபி ; *v.* துளை ; திற ; தொடங்கு ; உரையாடல் துவக்கு ; வெளியிடு ; தேறல்வடி ; (கப்.) கப்பலைக் காற்றலைகள் பக்கவாட்டிலடிக்கும்படி திருப்பு.

broach'er, *n.* துளைக்கருவி ; ஊசி ; இறைச்சி சுடும் இரும்புமுள் ; துளைபோடுபவர் ; திறப்பவர் ; பேச்சுத் தொடங்குபவர்.

broad [1], *n.* அகன்றபகுதி ; விரிந்த பக்கம் ; ஆற்றின் விரிந்த பகுதி ; *a.* அகன்ற ; அகல்விரிவான ; தட்டையான, பரந்த ; திறந்த ; பட்டாங்கமான, வெளிப்படையான ; கரடுமுரடான ; கொச்சையான ; நயமற்ற ; நுண்ணயமற்ற ; மொட்டையான ; விரிந்த மனப்பான்மையுடைய ; பரவுகிற ; குறியிலிருந்து விலகிய, சிதறுகிற ; மொத்தப் பார்வையான ; பொதுத் தன்மையான ; தொனியில் நிறைவகலமான, ஒலிப்பில் அழுத்தந்திருத்தமான ; (தொ.) broad daylight, பட்டப் பகல் ; வெளிச்சம்.

broad [2], *n.* = broadpiece.

broad'-arr'ow, *n.* அரசாங்கப்பொறிப்பு, அரசாங்கத்தின் பொருள்கள்மேல் இடப்படும் மேல்நோக்கிய அம்புக்குறிப் பொறிப்பு.

broad'-bean', *n.* தட்டை மொச்சைவகை.

broad'-brim, *n.* அகன்ற ஓரமுடைய தொப்பி.

broad'cast, *n.* ஒலிபரப்புதல் ; ஒலிப்பரப்பு ; ஒலிபரப்பறிவிப்பு ; வானொலி ; கம்பியில்லாத்தந்தி அறிவிப்பு ; விதை பரப்புதல், விதைத் தெளிப்பு ; *a.* பரவிய ; பரப்பப்பெற்ற ; பரந்து சிதறிய ; பொதுவாக அறிவிக்கப்பட்ட ; பேச்சு-சுற்றறிக்கை-துண்டுவிளம்பரம் - ஒலிபெருக்கி - கம்பியில்லாத்தந்தி ஆகியவற்றில் எங்கும் அறிவிக்கப்பட்ட ; *v.* பரப்பு ; விதைதெளி, விதைதூவு ; ஒலிபரப்பு ; கம்பியில்லாத்தந்தி மூலம் செய்தி பரப்பு ; *adv.* எங்கும், எல்லாத்திசைகளிலும்.

broad'caster, *n.* ஒலிபரப்பி, வானொலி ஒலிபரப்புக்கருவி ; செய்தி பரப்புபவர் ; விதைபரப்பும் கருவி ; விதை தெளிப்பவர்.

broad'casting, *n.* ஒலிபரப்பு ; விதை தெளித்தல் ; வானொலி வாயிலாகச் செய்தி பரப்புதல் ; பரப்பறிவிப்பு.

broad'cloth, *n.* ஆடவர் உடைக்குரிய கம்பளித்துணிவகை.

broad'gauge, *n.* அகல்படி இருப்புப்பாதை, ஐம்பத்தாறரை அங்குலத்திற்கும் மேலான இடைவெளி உடைய இருப்புப் பாதை.

broad'-glass, *n.* பலகணிக்கண்ணாடி.

broad'ish, *a.* சற்றே அகலமான, சற்று மிகையான விரிவுடைய.

broad'-leaf, *a.* அகல் இலையுடைய.

broad'ly, *adv.* பொதுவாக ; முழுமையாக ; நிறைவுடன்.

broad'mind'ed, *a.* பரந்த உள்ளமுடைய, விரிந்த நோக்குடைய, விரிந்த மனப்பான்மையுடைய, பெரும்போக்குடைய.

broad'mind'edness, *n.* பரந்த மனப்பான்மை.

Broad'moor, *n.* அறிவு திறம்பிய குற்றவாளிகள் உறையுள் ; பைத்தியக்காரக் குற்றவாளிகள் தங்குமிடம்.

broad'ness, *n.* அகல்விரிவு ; பரந்தநிலை, நிறைதன்மை.

broad'piece, *n.* 20வெள்ளிக்கீடான பதினேழாம் நூற்றாண்டின் நாணயவகை.

broad'sheet, *n.* ஒருபுறத்திலே மட்டும் அச்சடிக்கப்பட்ட அகன்ற தாள் வெளியீடு.

broad'side, *n.* கப்பலின் பக்கம் ; போர்க்கப்பலின் ஒருபக்கத் துப்பாக்கி வரிசை ; கப்பலின் ஒருபக்கத்துத் துப்பாக்கி வரிசையின் மொத்த வேட்டுவெடிப்பு.

broad'-silk, *n.* நாடாவாக ஆக்கப்படாத பட்டுத்துணிக் கச்சை.

broad'sword, *n.* அகன்ற அலகுடைய வாள் ; அகல் வாளினைத்தாங்கிய வீரன்.

broad'way, *n.* அகல்வீதி, பெருஞ்சாலை.

broad'ways, broad'wise, *adv.* அகலப்போக்காக ; அகலத்தில்.

Brob'dingnag, *n.* ஜோனதன் ஸ்விப்ட் (Jonathan Swift) என்ற ஆங்கில ஆசிரியரின் 'கலிவரின் பிரயாணங்கள்' (Gulliver's Travels) என்ற நூலில் கற்பனை செய்துள்ள பேருருவ மனிதர் வாழும் இடம் ; *a.* பேருருவமான ; மிகப் பெரிய.

Brob'dingnagian, *a.* பேருருவம் படைத்த ; அரக்கனைப் போன்ற.

brocade', *n.* முனைப்பான சித்திரப்பூவேலை பொறிக்கப்பட்ட பட்டுத்துணிவகை ; பொன்-வெள்ளி-சரிகை வேலைப்பாடுடைய துணிவகை ; *v.* துணியில் பூவேலைப்பாடு செய் ; துணியில் சித்திரவேலை செய்.

brocad'ed, *a.* சித்திரப்பூவேலைப்பாடுள்ள ; சித்திர வேலைப் பாடுடைய உடையணிந்த.

broc'ard, *n.* அடிப்படைச்சட்டம், மூலவிதி.

broc'coli, *n.* திண்ணிய பூக்கோசு வகை.

bro'che, *n.* முகப்புச்சித்திர அமைப்புடன் நெய்யப்பட்ட பட்டுவகை ; *a.* முகப்புச்சித்திர அமைப்புடன் நெய்யப்பட்ட.

bro'chure, *n.* சிற்றேடு, துண்டு வெளியீடு.

brock, *n.* தகசு, தவழ்கரடி, கரடியின விலங்குவகை ; முடை நாற்றமுடையவர்.

brock'et, *n.* நேர்கொம்புடைய ஈராட்டைப் பருவக்கலைமான்.

brock'ram, *n.* கோணச் சல்லிகளாலான பாறை.

broc'oli, *n.* = broccoli.

brod'ekin, *n.* கணுக்கால்வரை மூடும் பண்டைக்காலப் புதையடி வகை.

brod'erie Anglaise', *n.* வெள்ளை நயநேரியல் துணிமீதுள்ள அகலப்பின்னல் வேலைப்பாடு.

brod'kin, *n.* = brodekin.

brogue[1], *n.* பதனிடப்படாத தோலில் செய்யப்பட்ட தடித்த செருப்புவகை.

brogue[2], *n.* அயர்லாந்து மொழியில் சொல்லழுத்தம்.

broid'er, *v.* பின்னல்வேலை செய் ; பூவேலை செய் ; அழகு செய் ; அணிசெய் ; பின்னல்வேலை செய்வி ; அணி செய்வி.

broid'erer, *n.* பின்னல் வேலை செய்பவர் ; அணிசெய்பவர்.

broid'ering, *n.* பின்னல்வேலை செய்தல் ; பூவேலை செய்தல்.

broid'ery, *n.* பின்னல்வேலை ; பூவேலை.

broil[1], *n.* பூசல், சண்டை, குழப்பம் ; இடையூறு.

broil[2], *n.* வெதுப்பிய இறைச்சி.

broil[3], *v.* தணலின்மேல் சமை ; வெதுப்பு ; சூடாகு.

broil'er, *n.* வெதுப்புவதற்குச் சித்தமாக விற்கப்படும் விரை வளர்ச்சியூக்கப்பட்ட இளங்கோழிக்குஞ்சு.

broke[1], *n.* குறுந்துய் உடைய கம்பளி உரோமம்.

broke[2], *v.* வீலபேசு ; பேச்சுவார்த்தை நடத்து.

broke[3], *v.* break என்பதன் இறந்தகால வடிவம்.

broke[4], *adv.* அழிவுக்காட்பட்டு ; பணியிலிருந்து விலக்கப் பட்டு.

brok'en, *a.* உடைந்த, நொறுங்கிய, தகர்ந்த ; முறிவுற்ற ; பிளவுற்ற ; துண்டுபட்ட ; இடையறுந்த ; இடையிடையிட்ட, தொடர்பற்ற ; நிலையற்ற ; மேடுபள்ளமான ; அரைகுறையான ; நொடித்த ; உட்கீறலுடைய, அதிர்வுடைய ; முனைப்பழிக்கப் பட்ட, அடக்கப்பட்ட ; தளர்ந்த ; சிதறிய ; உடல்நலம் குறைந்த ; உளநலம் கெட்ட ; நொடித்த ; எல்லைமீறிய ; (தொ.) broken English, குறைபாடுள்ள ஆங்கிலம் ; broken ground, மேடுபள்ளமான தரை, கரடுமுரடான நிலம் ; broken man, (வர.) நாடு கடத்தப்பட்டவன் ; மனமுறிவுற்ற மனிதன் ; நம்பிக்கை இழந்தவன் ; broken meat, உண்டு மீந்த உணவு ; broken money, சிறுசில்லரை, சிறுதொகை ; broken numbers, பின்னம் ; சிறுபகுதி ; broken reed, நட்டாற்று மண்குதிரைபோலப் பயனில் சிறுதுணை ; broken time, இடையீடுகளால் குறைந்துவிட்ட வேலைநேரம்.

brok'en-backed, *a.* உருக்குலைந்த முதுகுடைய ; கப்பல் வகையில் உறுதியற்ற அடிப்புறத்தை உடைய.

brok'en-down, *a.* சிதறிய ; குலைந்த ; சிதைந்த ; அழிந்த ; ஒழுக்கங்கெட்ட ; நலங்குன்றிய.

brok'en-hearted, *a.* உள்ளமுடைந்த ; துன்பத்தால் நைந்த, மனம்புண்பட்ட.

brok'enly, *adv.* விட்டுவிட்டு, இடையிடைவிட்டு, இடையிட்டு, வெட்டிவெட்டி.

brok'enness, *n.* உடைந்த நிலை, உடைந்ததன்மை.

brok'en-winded, *a.* குதிரைவகையில் குறுமூச்சுடைய, மூச்சுத்தடைபடுகிற.

brok'er, *n.* தரகர், வணிகத்துறை இடையீட்டாளர்.

brok'erage, *n.* தரகுத் தொழில் ; தரகுக்கூலி, தரகு.

brok'ing, *n.* தரகுத் தொழில்.

brom'al, *n.* (வேதி.) சோரியகி வெறியத்தோடு சேருவதால் உண்டான கூட்டுப்பொருள்.

brom'ate, *n.* (வேதி.) சோரிகை, சோரியக்காடியின் உப்பு.

brom'ic, *a.* (வேதி.) சோரியம் சேர்ந்த ; சோரியத்தை உட் கொண்ட ; (தொ.) bromic acid, சோரிகக்காடி.

brom'ide, *n.* (வேதி.) சோரிகை ; சடங்கு முறைப்பேச்சு ; (தொ.) bromide paper, நிழற்படமெடுக்கப் பயன்படும் தாள்.

bromidro'sis, *n.* நாற்ற வியர்வை உண்டாதல்.

bromi'ne, *n.* (வேதி.) சோரியம்.

brom'ism, *n.* (மரு.) சோரியம் மிகுதி உட்கொண்டதனால் ஏற்படும் உடற்கோளாறு.

brom'ize, *v.* (வேதி.) சோரியம்சேர் ; சோரியமாக்கு.

bro'moform, *n.* (வேதி.) பாசிகக்கரியம் போன்று மயக்க மருந்தாகப் பயன்படும் சோரியச் சேர்மானம்.

bronch'i, bronc'hia, (ல.) *n. pl.* காற்றுக்குழாயின் இரு பிரிவுகள்; மூச்சுக் குழாயின் இரு பிரிவுகள்.

bronc'hial, *a.* காற்றுக்குழாய் பற்றிய; காற்றுக்குழாயைச் சார்ந்த.

bronchit'ic, *a.* மார்புச்சளி சார்ந்த.

bronchit'is, *n.* மார்புச்சளி நோய்.

bronc'hocele, *n.* குரல்வளைக்கேடய சுரப்பியின் அழற்சி.

bron'co, *n.* அரைகுறையாகப் பழக்கப்பட்ட குதிரை; வட அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா (California) வுக்குரிய காட்டுக் குதிரை; *pl.* bron'cos.

Brontosaur'us, *n.* நிலவுலகத் தொல்லூழிக்குரிய புதை படிவப் பெருவிலங்கு வகை.

bronze, *n.* வெண்கலம், செம்பு வெள்ளீயக்கலவை உலோகம்; வெண்கல வார்ப்படப்பொருள்; வெண்கலத்தால் செய்யப்பட்டது; வெண்கல நிறம்; வெட்கமின்மை; துணிச்சல்; ஆணவம்; *a.* வெண்கலத்தால் செய்யப்பட்ட; வெண்கல நிறமுடைய; ரு. வெண்கலம் போன்றதாக்கு; கடினமாக்கு; வெண்கலம் போன்றதாகு; திண்ணிதாகு; வெண்கலம்போல் நிறமடையச்செய்; வெண்கலவண்ணமாகு.

bronzed, *a.* வெண்கலம் மேலிடப்பட்ட; வெண்கல நிற முடைய; கடினமான; (தொ.) bronzed skin, நோய்வகை.

bronz'ite, *n.* வெண்கலம் போன்ற பளபளப்புடைய கனிப் பொருள்வகை.

bronz'y, *a.* வெண்கல வண்ணம் கொண்ட, வெண்கலத் தோற்றங் கொண்ட.

brooch, *n.* உடை ஊசி, அணியூக்கு.

brood, *n.* ஓர்ஈட்டு முட்டையின் குஞ்சுத்தொகுதி; வளர்ப்பினம்; குழந்தைகள்; வழித்தோன்றல்; பிறப்பு மரபு; இனம்; வகை; வளர்ப்பு முறை; மக்கள் தொகுதி; விலங்குக் கூட்டம்; பொருள்களின் கோவை; ரு. அடைகாத்தல் செய்; குஞ்சுபொரி; அருகணைத்திரு; நிணைவில் ஆழ்; நிணைந்து நிணைந்தேங்கு.

brood'iness, *n.* அடைகாத்தல் நிலை; ஆழ்ந்த சிந்தனை இயல்பு.

brood'ing, *a.* அடைகாக்கிற; நிணைந்து ஏங்குகிற.

brood'ingly, *adv.* தன்னை மறந்த நிணைவுடன்.

brood'-pouch, *n.* முட்டைகளையும் குஞ்சுகளையும் வைத்து வளர்ப்பதற்காக உடலிலேயே உள்ள பை அமைப்பு.

brood'y, *a.* அடைகாக்கும் அவாவுடைய; கருத்தில் ஆழ்ந்து விடும் இயல்புடைய, சிந்தனையில் தேங்கிய தோற்றமுடைய.

brook [1], *n.* ஓடை.

brook [2], ரு. பொறு, தாங்கு, ஏற்றமை.

brook'ite, *n.* கனிப்பொருள்வகை, இயற்கைப் பொருளாகக் கிடைக்கும் உலோக வகையின் (Titanium) உயிரகை.

brook'let, *n.* சிற்றோடை.

brook'lime, *n.* (தாவ.) வாய்க்கால் ஓரப் படர்கொடிவகை.

brool, *n.* கடுமுணுமுணுப்பு.

broom, *n.* மணல் வெளிகளிலுள்ள மஞ்சள் நிறப்பூக்கள் கொண்ட குத்துச் செடிவகை; விளக்குமாறு, வாருகோல், துடைப்பம்; ரு. துடைப்பத்தால் பெருக்கு.

broom'-corn, *n.* துடைப்பம் செய்யப் பயன்படும் கூல வகைப் பயிர்.

broom'rape, *n.* துடைப்பச்செடியின் வேரில் வாழும் ஒட்டுயிர்ச் செடிவகை.

broom'staff, broom-stick, *n.* துடைப்பத்தின் கைப்பிடி.

broom'y, *a.* விளக்குமாறு நிறைந்த; துடைப்ப உருவான.

brose, *n.* பால் அல்லது கொதிநீர் சேர்க்கப்பட்ட யவை மாவுணவு வகை; (தொ.) Athole brose, தேனும் தேறலும் சேர்ந்த கலவை.

broth, *n.* காய்கறிகள்-இறைச்சி முதலியவை வெந்த சாறு.

broth'el, *n.* விலைமகளிர் மனை.

broth'er, *n.* உடன்பிறப்பாளன், அண்ணன், தம்பி; நெருங்கிய நண்பன்; உறவினன்; உடன்குடி உரிமையாளன்; ஒரே நாட்டினன்; உடன்பிறவாத்தோழன்; இனத்தான்; சமயக் குழுவில் ஓர் உறுப்பினன்; உடன்பணித்துறையாள்; (தொ.) brother german, முழு உடன்பிறப்பாளர், ஒரே தாயையும் தந்தையையும் பொதுவாகக் கொண்ட உடன் பிறப்பாளர்.

broth'erhood, *n.* உடன்பிறப்பாளர் நிலை, சகோதரர் என்ற நிலை; பொதுப்பணிக்காகச் சென்று கூடி இருக்கும் நிலை; நட்பு; சமூக ஒற்றுமை உணர்ச்சி.

broth'er-in-law, *n.* மைத்துனன், மனைவி உடன்பிறந்தான்; கணவன் உடன்பிறந்தான்; உடன்பிறந்தாள் கணவன்.

broth'erless, *a.* உடன்பிறந்தானில்லாத, அண்ணன் தம்பியற்ற.

broth'erlike, *a.* அண்ணன் தம்பி போன்ற; அன்பான; உறவு முறையான; சகோதர பாவமுடைய.

broth'erliness, *n.* உடன்பிறப்புப்பாசம், அன்புத் தொடர்பு.

broth'erly, *a.* உடன்பிறந்தான் போன்ற, அண்ணன் தம்பி போன்ற; அன்பு நிறைந்த.

broth'ers, *n. pl.* உடன்பிறப்பாளர்கள், அண்ணன் தம்பியர்கள்.

broug'ham, *n.* ஒற்றைக் குதிரை மூடுவண்டி; மின்வண்டி.

brought, ரு. bring என் பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

brow [1], *n.* புருவம்; நெற்றி; குன்றின் உச்சி ஓரம், மலையின் எல்லைக் கோடு; முனைப்புப்பகுதி, மேடு; நிலக்கரிச் சுரங்கத்தின் குறுக்குத்தரை வரை; முகத்தோற்றம்.

brow [2], *n.* (கப்.) கப்பல் ஏறுவதற்குரிய சாரப்பலகை.

brow'-ague, *n.* ஒற்றைத்தலை மண்டையிடி.

brow'-antler, *n.* மான்கொம்பின் முதற்கிளை.

brow'beat, ரு. கொடுஞ்சொற்களாலும் கொடுநோக்காலும் அதட்டு, கொடுமைப் படுத்திக் கீழடக்கு.

brow'-bound, *a.* முடிசூடிய; தலையில் சூட்டிய.

browed, *a.* ஓரங்களில் கொண்ட; சூழப்பட்ட; புருவமுடைய; தோற்றமுடைய.

brow'less, *a.* புருவமற்ற; தோற்றமில்லாத; வெட்கங் கெட்ட; நாணமற்ற.

brown, *n.* காவி நிறம், பழுப்புவண்ணம், கறுத்த ஆரஞ்சு வண்ணம்; *a.* காவி நிறமான, தவிட்டு நிறமான; ஆரஞ்சும் கறுப்பும் கலந்த கூட்டு நிறமான; வெயிலிற் பழுப்பேறிய; ரு. காவி நிறமாக்கு; (தொ.) Brown Bess, பழங்கால வெடிவகை; brown George, கடுமையாய்ந்த மாப்பண்ட வகை; பழுப்புநிற மட்பாண்டம்; brown owl, பழுப்பு நிற ஆந்தை; பழுப்பு உடை அணிந்த இளம் பெண் சாரணர்களில் ஒரு குழுவின் பொறுப்பாளர்; brown paper, பொட்டணம் சிப்பம் முதலிய கட்ட உதவும் பழுப்பு வண்ண முரட்டுத்தாள் வகை; brown shirt, ஹிட்லரின் செர்மானிய தேசிய பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்; brown stout, கூலியாள்; brown study, பகற்கனவு; வீண் சிந்தனை; மனக்கோட்டை; ஆழ்ந்த சிந்தனை; brown sugar, பழுப்புச் சர்க்கரை; முற்றிலும் நயம்படுத்தப்படாத சர்க்கரை.

Brown'ian, *a.* இயல் நூலறிஞர் ராபர்ட் பிரௌன் (Robert Brown, 1773-1858) என்பவரைச் சார்ந்த; (தொ) Brownian movement, (இயற்.) ராபர்ட் பிரௌன் முதல்முதலாகக் கண்டுணர்ந்த அணுக்கரைசலின் அணுக்களின் இயலியக்கம்.

brown'ie, *n.* நன்மை செய்யும் கூளிவகை; பெண் சிறு சாரணர் படையைச் சேர்ந்தவர்.

brown'ing, *n.* பழுப்பு நிறமாக்கல்; மங்குதல்; மாநிறமாகுதல்; பழுப்பு நிறமாக்குவதற்குரிய செய்முறை.

Brown'ing, *n.* தானே இயங்கும் துப்பாக்கி.

brown'ish, *a.* சற்றே பழுப்பு நிறமான.

brown'stone, *n.* பழுப்புநிற மணற்கல், மாநிற மணற்கல்.

browse, *n.* இளந்தளிர் உணவு, கிளை தழை, பசுந்தீவனம்; தழை மேய்தல், புற்கறித்தல்; *v.* மேய்; இடைவிட்டுப் படி, மேலெழுந்தவாரியாகப் படி.

brows'ing, *n.* செடியின் முளை-தளிர்-இலை முதலியன; பசுந்தீவனம்; கறித்தல், கொய்தல், பறித்தல்; விட்டுவிட்டு வாசித்தல்.

bruc'ine, *n.* காஞ்சிரங்காயிலிருந்து கிடைக்கும் காரப் பொருள்வகை.

bruc'ite, *n.* வெளிமநீருயிரகை, புரூஸ் (Bruce) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட கனிப்பொருள்வகை.

Bru'in, *n.* கரடி, பிரஞ்சு காப்பியத்தில் (Reynard the Fox என்ற நூலில்) வரும் கரடியின் பெயர்.

bruise, *n.* கன்றிப்போன காயம்; இரத்தம் கட்டிய நோவிடம்; *v.* அடித்துக்கன்றவை; வடுப்படுத்து; புண்படுத்து; இயலாதாக்கு; குத்து, நொறுக்கு; இடி; சிறுதுகளாக்கு; கண் மூடிக் குதிரையோட்டிச்செல்.

bruis'er, *n.* கன்றும்படி காயப்படுத்தியவர்; பந்தயச் சண்டை போடுபவர்.

bruis'ing, *n.* கன்றிப்போகும்படி அடித்தல்; நொறுக்குதல்; புண்படுத்தல்; *a.* கன்றிப்போக வைக்கிற; நொறுக்குகிற; புண்படுத்துகிற.

bruit, *n.* ஆரவாரம், இரைச்சல், கம்பலை; அலர், வதந்தி; *v.* செய்திபரப்பு; அறிவி; புகழ்பரப்பு.

brum'al, *a.* குளிர்காலத்திற்குரிய.

brumb'y, *n.* பழக்கப்படாத குதிரை.

brume, *n.* மூடுபனி.

Brumm'agem, *n.* பெர்மிங்ஹாம் (Birmingham) நகரைக் குறிக்கும் வெறுப்பான வழக்குச்சொல்; *a.* பெர்மிங்ஹாம் நகரைச் சார்ந்த; பெர்மிங்ஹாம் நகரில் செய்யப்பட்ட; வெறும் பகட்டான; போலியான.

brumm'er, *n.* வெட்டுக்கிளிகளை அழிக்கும் முட்டைப் புழுக்களையுடைய தென் ஆப்பிரிக்காவிலுள்ள பெரிய ஈ வகை.

brum'ous, *a.* மூடுபனியார்ந்த; குளிர்காலத்திற்குரிய.

brunch, *n.* காலை உணவிற்கும் நண்பகல் உண்டிக்கும் இடைப்பட்ட ஊண்.

brunette', *n.* கரிய அல்லது மாநிற முடி உடைய மாநிறப் பெண்; *a.* கரிய அல்லது மாநிறமுடியுடன் மாநிறமேனியுடைய.

Bruns'wick, *n.* செர்மனி நாட்டிலுள்ள ஒரு பகுதி; (தொ.) (வர.) Brunswick line, முதலாம் ஜார்ஜை முதல்வராகக் கொண்ட பிரன்ஸ்விக் அரசமரபு.

brunt, *n.* முதன்மையான தாக்குதல்; வேகம், தாக்குமுனை; *v.* தாக்குதலைத் தாங்கு; பாரத்தைப்பொறு; (தொ.) at the instant brunt, தொடக்கத்திலேயே, உடனடியாக.

brush, *n.* குறுங்காடு, தூறு, செறிகாடு; முறிவுற்ற சுள்ளிக் கிளைகள்; புதர்க்குவியல்; உட்காடு; தூரிகை, வண்ணந் தீட்டுக்கோல்; வண்ணம் தீட்டும்முறை; வண்ண ஓவியர்; துடைப்பம், வாருகோல்; வால்நுனிக்குஞ்சம்; மயிர்முடி, கொண்டை; கம்பிகளைச் சேர்த்துக் கட்டிய ஒரு கட்டு; இயங்குகிற இருபரப்புகளை மின்சாரத்தின் மூலம் இணைக்கும் துண்டுத் துணுக்கு, இடையிடு; மின்னிணைக்கவும் துண்டிக்கவும் இயக்கப்படவல்ல இடைமின்னூடு; மின்பொறிக்கற்றை; தூரிகைபோன்ற உருவுடையது; தூரிகைக் கையாட்சி; உராய்வு; சிறுபூசல்; *v.* தூரிகை கையாளு; வண்ணந்தீட்டு; துடைத்துப் பெருக்கு; தூய்மைப்படுத்து; சரிசெய்; உராய்; தொடு; தொட்டும் தொடாமலும் செல்; (தொ.) brush aside, brush away, புறக்கணி; ஒதுக்கித்தள்ளு; brush kangaroo, சிறு கங்காரு விலங்கு; brush over, வண்ணந்தடவு, பூசு; பட்டும்படாமலும் செல்; brush turkey, கிழக்கு ஆஸ்திரேலியப் பறவைவகை; வான்கோழி வகை; brush up, ஒளியாக்கு; நினைவுபடுத்திக் கொள்.

brush'er, *n.* ஓவியர், வண்ணம் தீட்டுபவர்; சிறு கங்காரு விலங்கு.

brush'ing, *n.* தூரிகையால் வண்ணந்தீட்டல்; தூய்மையாக்கல்; *a.* கிளர்ச்சிமிக்க; உற்சாகமான; சுறுசுறுப்பான.

brush'-off, *n.* (பே-வ.) பண்பு நயமின்றிப் புறக்கணித்துத் தள்ளும் செயல், ஒதுக்கீடு, கண்டனப்புறக்கணிப்பு.

brush'-pen'cil, *n.* ஓவியரின் வண்ணக்கோல்.

brush'wheel, *n.* சுழலும் தூரிகை; தேய்வு தடுக்கும் தடித்த குற்றிழை நிறைந்த இடை உருளை.

brush'wood, *n.* புதர்ச்செடிகளுள்ள சிறுதூறு; குத்துச் செடிகளுள்ள சிறுகாடு.

brush'-work, *n.* வண்ண ஓவியரின் கைத்திறம்; வண்ண ஓவியரின் செயல்முறை.

brush'y, *a.* தூரிகைபோன்ற; கொத்தான; திரளான.

brusque, *a.* நயமற்ற; மழுங்கலான; அரைகுறையான; திடீரென்ற.

brusque'ly, *adv.* தொடர்ச்சியற்றதாக; நயமின்றி; மொட்டையாக.

brusque'ness, *n.* நயமற்றதன்மை; தொடர்ச்சியற்ற நிலை.

Bruss'els, *n.* பெல்ஜியத்தின் தலைநகர்; *a.* பிரசெல்ஸில் செய்யப்பட்ட; பிரசெல்ஸ் நகரில் விளைந்த; (தொ.) Brussels sprouts, கோசுக்கீரை வகை.

brut, (பிர.) *a.* தேறல் வகைகளில் இனிப்பேற்றப்படாத.

brut'al, *a.* கொடுமைமிக்க; முரட்டுத்தனமான; விலங்கியல் புள்ள; இரக்கமற்ற; பண்பற்ற; பகுத்தறிவில்லாத; சின்றின்பச் சார்புமிக்க.

brut'alism, *n.* முரட்டுத்தனம்; விலங்கியல்பு; கொடுமை; அநாகரிகம்.

brutal'ity, *n.* ஈனச்செயல்; கொடுமை; மனிதப்பண்பற்ற தன்மை; வேடத்தனம்.

brut'aliza'tion, *n.* விலங்கியல்பாக்குதல்; கொடுமையாக்குதல்; பண்பறச்செய்தல்.

brut'alize, *n.* விலங்கியல்பாக்கு; கொடுமையாக்கு; விலங்கு போன்றாக்கு.

brut'ally, *adv.* முரட்டுத்தனமாக; கொடுமையாக.

brute, *n.* விலங்கு; மாக்களினம்; காட்டுமிராண்டி; பகுத்தறிவில்லாதவர்; கொடுமையானவர்; அறிவிலி; *a.* விலங்கினத்தைச் சார்ந்த; பகுத்தறிவுக்கு மாறான, அறிவுக்குப் பொருந்தாத; அறிவற்ற; முரட்டுத்தனமான; நாகரிகமற்ற.

brute'ness, *n.* விலங்கியல்பு; அறிவின்மை; பண்பற்ற தன்மை; கொடுமை.

brut'ify, *v.* விலங்குபோலாக்கு; பண்பின்றிச் செயலாற்று; கொடுமைசெய்.

brut'ish, *a.* விலங்கியல்புடைய; விலங்கு போன்ற.

brut'ishly, *adv.* விலங்கியல்பாக; விலங்கு போன்று.

brut'um ful'men, (ல.) *n.* போலிப் பயமுறுத்தல்; வெற்று வேட்டு.

Brut'us, *n.* பத்தொன்பதாம் நூற்றாண்டின் பொய்மயிர்த் தொப்பி.

bryol'ogical, *a.* (தாவ.) பாசியைப் பற்றிய, பாசியைச் சார்ந்த.

bryol'ogist, *n.* (தாவ.) பாசியைப் பற்றிய ஆராய்ச்சியாளர்; பாசிக ஆராய்ச்சியாளர்.

bryol'ogy, *n.* (தாவ.) பாசிநூல்.

bry'ony, *n.* (தாவ.) தொற்றிப்படரும் கொடி இனம், கொடிவகை.

bry'ophyte, *n.* பாசி இன வகை.

Bryozo'a, *n. pl.* பாசிபோன்ற வடிவுடைய நீர்வாழ் உயிரின வகை.

bub'al, *n.* வட ஆப்பிரிக்க மான்வகை.

bub'ble, *n.* நீர்க்குமிழி; ஒன்றுமில்லாதது, வெறுமையானது; சூது நிறைந்த திட்டம்; தவறுடைய திட்டம்; *a.* உண்மையற்ற; திடமற்ற; ஏமாற்றுத்தன்மை வாய்ந்த; விரைவில் அழிந்து போகிற; விரைவில் மாறிப்போகிற; நிலையற்ற; *v.* குமிழி இடு; குமிழிபோல் கிளம்பு; நீர்க்குமிழ் வெடிப்பது போன்ற ஒசை எழுப்பு; மாயத் திட்டங்களால் ஏமாற்று; (தொ.) bubble and squeak, இறைச்சியும் கோசுக்கீரையும் சேர்ந்த பொரியல்; bubble over, குமிழியிட்டுப் பொங்கு; கொதித்தெழு, குமுறு; prick the bubble, வேடத்தை வெளிப்படுத்து.

bubb'le-car, *n.* முகட்டுப்பலகணியுடைய குமிழ்வடிவச் சிற்றுந்துகலம்.

bubb'le-chamber, *n.* மின்னியக்கத் துகள்களின் பாதையைக் குமிழிகளின் வரிசைமூலம் காட்டுவதற்கான அமைவு.

bubb'le-gum, *n.* குமிழியாக ஊதத்தக்க மெல்லற்பசை.

bubb'le-shell, *n.* குமிழ்வடிவ ஓடுடைய சிப்பிவகை.

bub'bly, *a.* குமிழி போன்ற; வெறுமையான; நிலையற்ற.

bub'o, *n.* அக்குளிலோ தொடை மடிப்பிடத்திலோ ஏற்படும் வீக்கம், அக்குட்கட்டு; அரையாப்பு, நெறிக்கட்டு.

bubon'ic, *a.* நெறிக்கட்டுச் சார்ந்த, அக்குள்கட்டு அல்லது அரையாப்புக்குரிய.

bubon'ocele, *n.* இடுப்போதநோய்.

bucc'al, *a.* கன்னத்தைப் பற்றிய; கன்னத்தைச் சார்ந்த.

buccaneer', *n.* கடற்கொள்ளைக்காரர்; கடலோடி; ஸ்பானிய அமெரிக்கக் (Spanish American) கடலோரக்கொள்ளைக்காரர்; நாடோடி; வீர வேட்டையாடி வாழ்பவர்; *v.* கடற்கொள்ளைக் காரனுகச் செயலாற்று.

buccaneer'ing, *n.* நாடோடி வீரவாழ்வு; கடற்கொள்ளை வாழ்வு.

buccaneer'ish, *a.* கடற்கொள்ளைக்காரனைச் சார்ந்த; நாடோடி வீரவாழ்க்கை சார்பான; கடற்கொள்ளையடிக்கிற.

buc'cina, *n.* ரோமர்களின் வளைந்த முரசு வகை.

buc'cinator, *n.* கன்னத்தசை.

buc'cinatory, *a.* கன்னத்தசையைச் சார்ந்த.

Buceph'alus, *n.* பெருவீரன் அலெக்சாந்தரின் போர்க்குதிரை; ஏறிச்செல்லுதற்குரிய குதிரை.

Buch'manism, *n.* 1921-இல் புக்மன் (Buchman) என்பவரால் தொடங்கப்பட்ட ஆக்ஸ்போர்டு குழுவினரின் (Oxford group) சமய வாழ்க்கைமுறை இயக்கம்.

Buch'manite, *n.* ஆக்ஸ்போர்டுக் குழுவினரின் சமயத்துறை இயக்கத்தைச் சார்ந்தவர்; *a.* ஆக்ஸ்போர்டுக் குழுவினரின் சமயத்துறை இயக்கத்தைச் சார்ந்த.

buck [1], *n.* வண்டியின் உடற்பகுதி.

buck [2], *n.* மான்-ஆடு-முயல் ஆகியவற்றின் ஆண்; ஆட்டியல் மான்வகை; அழகன், விடலை; துணிவு மிக்கவன்; ஆண் நீகிரோ; அமெரிக்கச் செவ்விந்திய ஆடவர்; சீட்டாட்டத்தில் எண்ணிக்கையாளர்.

buck [3], *n.* குதிரை வகையில் உயரக் குதித்தெழுந்து முன்கால் இணைத்து முதுகு வளைந்து ஆளைக் கீழே தள்ள முயற்சி செய்தல்; *v.* நெளித்தெழுந்து ஆளைக் கீழே நள்ள முயற்சி செய்.

buck [4], *n.* துணிகளை வெளுப்பதற்குமுன் ஊறவைக்கப் பயன் படும் காரக்கரைசல் வகை; *v.* வெளுப்பதற்காகத் துணிகளைக் காரக்கரைசலில் ஊறவை.

buck [5], *n.* விலாங்குமீன் பிடிக்கப் பயன்படும் கூடை.

buck [6], *n.* உரையாடல்; வீண்பெருமை கூறும் வம்பளப்பு; *v.* உரையாடு; பேசு; பெருமைபேசு, வீருப்புப்பேசு.

buck'-board, *n.* வண்டியின் உருளைகளின்மேல் உந்தலாக நீட்டிக்கொண்டிருக்கும் பலகை; இரண்டு பேர்களுக்கான இருக்கைகளோடு நான்கு உருளைகளின்மேலே ஒரு பலகை யுடைய வண்டிவகை.

buck'-cart, *n.* இருவர் இருக்கைகளுடன் உருளைகளின்மேல் நீட்டிக்கொண்டிருக்கும் பலகைகளையுடைய வண்டிவகை.

buckeen', *n.* அயர்லாந்தைச் சேர்ந்த வறுமைமிக்க உயர்குடிப் பிறப்பாளர்.

buck'er, *n.* ஆளைக் கீழேதள்ள முயலும் குதிரை, இடக்கு விலங்கு.

buck'et, *n.* வாளி, நீர் இழுக்கவும் நீர் வைக்கவும் பயன்படும் வாளி, இறைசால், தொட்டி; நீர் இறைக்கும் உருளைப் பொறியின் ஒரு பகுதி; தூர் வாரும் பொறியில் உள்ள பெரிய கரண்டி போன்ற பகுதி; சாட்டை-ஈட்டி-துப்பாக்கி-கட்டைக் கால் முதலியவை வைக்கும் தோல் உறை; மலர்ச்செடி வகையின் சாடி வடிவ இலை; வாளி நிரம்பிய அளவு; *v.* வாளியில் தூக்கு; குதிரைமீது முரட்டுத்தனமாக ஏறி இவர்ந்து செல்; தயக்கமின்றி முன் தள்ளிச்செல்; விரைந்து படகு உகைத்துச்செல்; ஏய்த்துப்பறி, ஏமாற்று.

buck'etful, *n.* வாளி நிறை அளவு; *pl.* buck'etfuls.

buck'etseat, *n.* வானூர்தியிலும் உந்துகலத்திலும் தொட்டி போல வட்டவளைவான சாய்மானமுடைய இருக்கை.

buck'et-shop, *n.* பங்குக்களப் புறத் தரகுக்காரரின் பணிமனை.

buck'et-wheel, *n.* உருளையில் இணைக்கப்பட்டுள்ள வாளி மூலம் நீர் இறைக்கும் அமைவு.

buck'-eye, *n.* வழவழப்பான பழுப்புவண்ணமுடைய அமெரிக்க நாட்டுக் கொட்டைவகை.

buck'-horn, *n.* கத்தி முதலியவற்றின் கைப்பிடிகள் செய்யப் பயன்படும் மான்கொம்பு.

buck'-hound, *n.* மான் வேட்டைக்குப் பயன்படும் சிறு வேட்டைநாய் வகை.

Buck'ingham Pal'ace, *n.* பிரிட்டிஷ் அரசர்களின் லண்டன் நகர மாளிகை.

buck'ish, *a.* கிளர்ச்சியுள்ள, சுறுசுறுப்பான, விரைதுடிப் புடைய; பகட்டுகிற, மினுக்குகிற; ஆட்டுத்தன்மை வாய்ந்த; சிற்றின்ப வேட்கைமிக்க.

buck'-jumper, *n.* ஊர்ந்து செல்பவர்களைக் கீழேதள்ள முயலும் விலங்கு.

buc'kle, *n.* வார்ப்பூட்டு, கொளுவி; வார்முதி, கொளுவி முகப்பு; நுணிமுறுக்கு, முறுக்கிய நிலை; *v.* மாட்டு, கொளுவு, வார் பூட்டிட்டுக்கட்டு; செயலாற்ற முனை, கச்சைகட்டி முன் வா; நெருங்கி இணை; வளை, திருகு, முறுக்கிவிடு; இறு, தளர்ந்துவீழ், சுருண்டுவீழ்.

buck'ler, *n.* சிறு கேடயம், பரிசை.

buck'ra, *n.* வெள்ளையர்களைக் குறிக்கும் மேலை இந்திய அமெரிக்க நீகிரோவர் வழக்குச்சொல்; ஆண்டை, தலைவர்; *a.* வெள்ளையர்களுக்குரிய.

buck'-rabb'it, *n.* ஆண் நரிமுயல்; வேல்ஸ் காட்டு முயல்.

buck'ram, *n.* கஞ்சி அல்லது பசை ஊட்டப்பட்ட முரட்டுத் துணி; விறைப்பு; முரட்டு நடை; விறைப்பான தோற்றம்; முரட்டுறுதி; *a.* தக்க அளவோடு கஞ்சியூட்டப்பட்ட முரட்டுத்துணியாலான; விறைப்பான; இம்மியும் வளைந்து கொடுக்காத; *v.* கஞ்சி ஊட்டப்பட்ட முரட்டுத்துணியின் தன்மையுண்டாக்கு.

buck'shee, buck'shish, (பெர்.) *n.* கையுறை, இலவசக் கொடை, மிகை ஊதியம்; *a.* இலவசமான, விருப்பப் பரிசான; *adv.* இலவசமாக.

buck'wheat, *n.* கோதுமையினம் சார்ந்த கூலவகை.

bucol'ic, *n.* முல்லைநிலப்பாடல்; முல்லைநிலப்பாட்டுப் பாடுபவர், முல்லைக் கவிஞர்; நாட்டுப்புறத்தார்; *a.* ஆயரைச்சார்ந்த; நாட்டுப்புற வாழ்க்கை பற்றிய; முல்லை நிலத்தைச் சார்ந்த.

bucol'ics, *n. pl.* முல்லைநிலப்பாடல் தொகுதி.

bud, *n.* அரும்பு, மலர்மொக்கு; இளந்தளிர்; மூளை, இளங் கொத்து; போது; (வில.) முதிராக்கருமூளை; முன்னுயிர் உடற்கூறுபாட்டின் விளைவான புத்துயிர்; இளம்பைதல்; *v.* அரும்பு; தளிர்விடு, மொக்குவிடு; கிளை; மொட்டாய் எழு; அரும்பிலிருந்து வெளிப்படு; புதிதுபிற; வளரத் தொடங்கு, புதுவளர்ச்சி பெறு; (வில.) முன்னுயிர் உடற் கூறுபாட்டிற் பிரிந்து தனி உயிராய் உருவாகு; (தொ.) nip in the bud, இளைதாகக் கொல்லு.

budd'ed, *a.* அரும்பிய; அரும்பான.

Buddh'a, *n.* அறிவொளி ஊட்டப்பெற்றவர், போதிசத்துவர், கௌதமபுத்தர்.

Budd'hism, *n.* புத்தசமயம், கௌதம புத்தரால் தோற்று விக்கப்பட்ட சமயம்.

Budd'hist, *n.* புத்த சமயத்தைச் சார்ந்தவர்; பௌத்தர்; *a.* புத்த சமயத்தைச் சார்ந்த; புத்த சமயத்தைப் பற்றிய; (தொ.) Buddhist cross, சுவஸ்திக் சக்கரம்.

Buddhist'ic, *a.* = Buddhist.

budd'ing, *a.* (தாவ.) மூளைவிடுகிற, அரும்புகிற; முன்னுக்கு வருகிற; உருவாகி வருகிற.

budd'le, *n.* மண்கலந்த உலோகங்களைக் கழுவுவதற்கான சாய்ந்த தொட்டி; *v.* சாய்தொட்டியில் மண்கலந்த உலோகம் கழுவு.

budd'leia, *n.* அழகிய செங்நில அல்லது மஞ்சட் சிவப்புநிற மலர்க்கொத்துக்களை உடைய செடியினவகை.

budd'y, *n.* (பே-வ.) உடன்பிறந்தான்; தோழன், ஏடன்; *a.* அரும்புகளை உடைய; தளிர் விடுகின்ற.

budge [1], *n.* ஆட்டுக்குட்டித்தோல், இளஆட்டுக் கம்பளி; *a.* பகட்டான; தற்பெருமையான; விறைப்பான.

budge [2], *v.* நகர்த்து; நகர், அசை, இடம் பெயர்; இடம் விட்டுக்கொடு.

budg'er, *n.* அசையச் செய்பவர்; அசைபவர்.

budg'erigar', *n.* கூண்டில் வளர்க்கப்படத்தக்க ஆஸ்திரேலியப் பறவை வகை.

budg'et, *n.* மன்ற வரவுசெலவுத் திட்டப்பட்டியல்; கோணிப்பை; கோணிப்பையிலுள்ள பொருள் தொகுதி; நெருக்கமாகச் சேகரிக்கப்பட்ட பொருட்கள்; குதிரைப்படை யாட்களிடம் இருக்கும் சிறு துப்பாக்கி தொங்கவிடும் பை; குடும்ப வரவுசெலவுக்கணக்கு; *v.* வரவு செலவுத் திட்டப் பட்டியல் உருவாக்கு; வரவு செலவுத் திட்டத்தில் சேர்; வரவு செலவுத் திட்டத்தில் இடங்கொடு.

budg'etary, *a.* வரவு செலவுத் திட்டத்தைச் சார்ந்த.

bud'less, *a.* அரும்பற்ற, மூளையற்ற, சினை இல்லாத.

buff [1], *n.* எருமைத்தோல்; மெத்தென்ற முரட்டுத்தோல்; படைத்துறைக்குரிய பதனிட்ட வெண்தோல்; படைத்துறை முரட்டுச் சட்டை; ஆடையற்ற மனித உடல் தோற்றம்; மங்கலான மஞ்சள் நிறம்; தோல் போர்த்த கைத்தடி; தோல் போர்த்த சக்கரம்; மஞ்சள்நிறச் சட்டையுடைய கட்சியினர்; (மரு.) காய்ச்சல் கொண்ட நோயாளிகளின் குருதிமீதுள்ள உறை குருதியாடை; *a.* எருமைத்தோலாலான; எருமைத் தோல் போன்ற; முரடான; மங்கலான மஞ்சள் நிறமுடைய; *v.* உலோகத்துக்கு எருமைத் தோலால் மெருகிடு.

buff [2], *v.* அடி, மொத்து; அடித்துக்கிழி.

buff'alo [1], *n.* எருமை; எருது இனத்தைச் சார்ந்த பெரிய விலங்கு; நீர் நில இயக்கமுடைய இயங்கரண்; *pl.* buff'aloes.

buff'alo [2], *v.* தடுமாறச்செய்; குழப்பமடையச் செய்; அச் சுறுத்தி அடக்கமுனை.

buff'alo-grass, *n.* (தாவ.) சமவெளிகளில் வளரும் புல் வகை.

buff'alo-nut, *n.* சந்தனமர இனத்தைச் சார்ந்த எண்ணெய் தரும் கொட்டைகளையுடைய தென் அமெரிக்கக் குத்துச் செடி வகை; எண்ணெய் தரும் கொட்டை வகை.

buff'alo-robe, *n.* அமெரிக்கக் காட்டெருமைத் தோல் போர்வை; காட்டெருமைத் தோல் மேலாடை.

buff'-coat, *n.* கத்திக் காயம் ஏற்படாமல் தடுப்பதற்காகப் பண்டைப் போர்வீரர்கள் அணிந்த முரட்டு மேற்சட்டை.

buff'er [1], *n.* எருமைத்தோலால் மெருகிடுபவர்.

buff'er [2], *n.* அடிதாங்கி; தாக்குதல் தடுக்கும் பொறி; புகை வண்டிப் பெட்டிகளிலும் கப்பலிலும் மோதுவதால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் அமைப்பு; படகோட்டியின் தோழன்; மந்த மதியினன், அப்பாவி; பழம் போக்காளன்.

buff'er-state', *n.* இடைத்தடுக்குநாடு, மனத்தாங்கல் உள்ள இருநாடுகளுக்கு இடையே உள்ள சிறிய நடுநிலை நாடு.

buff'et [1], *n.* பக்கப்பலகை; தாழ்ந்த நீண்ட சதுர நாற்கால் மேஜை; நிலையறைப்பெட்டி; சிற்றுண்டிச்சாலை.

buff'et [2], *n.* கையடி, கைக்குத்து, கைத்தட்டு; மோதல், அடி, தாக்குதல்; அலைப்பு, அலைக்கழிப்பு; போராட்டம்; *v.* அடி, குத்து, மோது, தாக்கு; போராடு; திருப்பி அடி; முரட்டடி கொடு.

buff'eting, *n.* கையால் அடித்தல்; குத்துச் சண்டை செய்தல்; சச்சரவு; அடிமேல் அடி அடித்தல்.

buff-leath'er, *n.* மெருகிடப் பயன்படும் எருமைத்தோல்.

buff'lehead, *n.* தென் அமெரிக்க நீர்மூழ்கி வாத்துவகை; அறிவிலி.

buff'o, (இத்.) *n.* விகடன், நகைச்சுவை நடிகன்; கேலிக் கூத்தன்; *a.* நகைக்கத் தக்க, கேலிக்கூத்தான; நகைச் சுவையுடைய.

buffoon', *n.* விகடகவி, பரியாசகர், கேலிக்கூத்தர்; கீழ்த்தர நகைச்சுவை நடிகர்; *v.* கேலிக்கூத்தாடு, விகடம் பண்ணு.

buffoon'ery, *n.* கேலி, விகடம், கோமாளித்தனம்; கீழ்த்தரக் கேலிக்கூத்து; பண்பில்லாப் பகடித்தனம்.

buff'-stick, *n.* எருமைத்தோல் சுற்றப்பட்டு மெருகிடத்தக்க அமைப்புடைய கைத்தடி.

buff'-tip, *n.* விட்டில்பூச்சி வகை.

buff'-wheel, *n.* எருமைத் தோல் சுற்றப்பட்டு மெருகிடுவதற் கான அமைப்புடைய உருளை.

bug, *n.* மூட்டுப்பூச்சி; மூட்டுப்பூச்சி போன்ற பூச்சிவகை; சிறு நோய்க்கிட வகை; அரை வெறியர்; புள்ளி; ஆள்; *a.* அரை வெறி கொண்ட; (தொ.) big bug, பெரிய புள்ளி, முக்கியமான ஆள்.

bug'aboo, *n.* அச்சுறுத்தி, பூச்சாண்டி.

bug'bane, *n.* பூச்சிகளை அண்டவிடாமல் விரட்டும் தன்மை வாய்ந்த செடிவகை.

bug'bear, *n.* அச்சுறுத்தி, பூச்சாண்டி; *a.* அச்சுறுத்துகிற.

bugg'er, *n.* (சட்.) சட்டத்திற்கு முரணாக நடக்கும் இயல் புடைய பல்கேரிய முரண் சமயக் கோட்பாட்டாளர்; இயற்கைக்கு மாறான புணர்ச்சிப் பழக்கங்கள் உள்ளவர்; விலங்குத்தன முடையவர்; கயவன், பேர்வழி, பயல்; *v.* அலங்துதிரி, கிடந்தலை.

bugg'ery, *n.* இயற்கைக்கு மாறான புணர்ச்சிப்பழக்கம்.

bugg'y, *n.* இலேசான சிறு ஒற்றைக்குதிரை வண்டிவகை.

bug'house, *a.* பித்துப்பிடித்த.

bug'-hunter, *n.* பூச்சி சேகரம் செய்பவர், பூச்சியின ஆராய்ச்சி யாளர்.

bu'gle [1], *n.* எக்காளம், படைத்துறை அடையாள ஒலிப்பாகப் பயன்படும் பித்தளை உலோகத்தால்செய்யப்பட்ட எக்காளம்; வேட்டைக்காரர் ஊதுகொம்பு; வேட்டைக்காரர் கொம்புக் கலம்; *v.* எக்காளம் முழங்கு; கொம்பு ஊது.

bu'gle [2], *n.* அழகுக்காக ஆடைகளில் தைக்கப்படும் நொய்ம்மையான நீண்ட கருமணி வகை.

bu'gle[3], *n.* (தாவ.) நீல மலர்களைக்கொண்ட படரும் செடி வகை.

bu'gle-band, *n.* எக்காளம் வாசிக்கும் இசைக்குழு.

bu'gle-call, *n.* எக்காள ஒலி; ஊதுகொம்பு முழக்கம்.

bug'le-horn, *n.* குவளை, பருகப் பயன்படுத்தப்படும் கொம்புக் கலம்; வேட்டை ஊதுகொம்பு.

bug'ler, *n.* எக்காளம் இசைப்பவர்; உயர் படைத்துறைப் பணியாட்களின் கட்டளைகளை எக்காள ஓசைமூலம் அறிவிப் பவர்.

bug'let, *n.* சிறு எக்காளம்; சிறு ஊதுகுழல்.

bug'loss, *n.* (தாவ.) வயல்களில் உண்டாகும் களைச் செடி வகை.

bu'gong, *n.* ஆஸ்திரேலிய மக்கள் உணவாகப் பயன்படுத் தும் இராப்பூச்சி வகை.

buhl, *n.* ஆமையோட்டில் உட்செதுக்கிய பல்வண்ணப் பொன்மணி உலோக வேலைப்பாடு; *a.* ஆமையோட்டில் பல் வண்ணப் பொன் வெள்ளி உலோக வேலைப்பாட்டுடன் உட் செதுக்கிய.

buhr'stone, *n.* திரிகையாகப் பயன்படும் ஒருவகைப் படிகக் கல்; பல வெற்றறைகளைக்கொண்ட சொரசொரப்பான படிகக்கல்.

build, *n.* கட்டமைப்பு, கட்டுமானப்பாங்கு; கட்டமைதி; உடல் அமைப்பு; *v.* கட்டு; கட்டியெழுப்பு; இணைத்துரு வாக்கு, அமை; வீடுகட்டு; கூடுகட்டு; மீது எழுப்பு, அடிப் படையாகக்கொள்; படிப்படியாக உருவாக்கு, முயன்று பேணிவளர்; (தொ.) build in, கட்டி வளை, சுற்றிக்கட்டு; build on, build upon, சார்ந்திரு; நம்பு; build up, கட்டி யெழுப்பு; கட்டி அடை.

build'ed, *v.* build என்பதன் முடிவெச்ச அருவடிவம்.

buil'der, *n.* கட்டிட அமைப்பாளர்; கட்டுவிப்பவர்; கட்டு பவர், கட்டிடக்கலைஞர், சிற்பி.

buil'ding, *n.* கட்டிடம்; வீடு; கட்டிடக் கலை.

buil'ding-board, *n.* சுவரின் உட்புறம் அணைவரியாகப் பயன்படும் பாளவடிவான செய்பொருள்.

buil'ding-lease, *n.* நிலத்தின்மீது கட்டிடம் கட்டிக் கொள் ளும் குத்தகை.

buil'ding-society, *n.* கட்டிடக்கழகம்; உறுப்பினர்கள் வீடு கட்டுதற்குப் பணம் உதவித் தவணைகளில் திரும்பப் பெற்றுக் கொள்ளும் கட்டிடம் கட்டும் கழகம்.

build'-up, *n.* சிறிது சிறிதாகக் கட்டியமைத்தல்; கட்டுமானத் தொகுதி; கட்டுமான அளவு; செயற்கைப் புகழ்; உண்டு பண்ணுகை; பேச்சுக்களிலும் கதைகளிலும் உணர்ச்சி முகடு நோக்கிய கட்டமைவு.

built[1], *v.* build என்பதன் இறந்தகாலமுடிவெச்ச வடிவம்.

built[2], *a.* கட்டப்பட்ட; எழுப்பப்பட்ட; உருவான.

built'-in, *a.* முன்கட்டுமானத்தின் பகுதியாக உள்ளிணைக்கப் பட்ட, கட்டுமான உள்வளைவுடன் இசைவூட்டப்பட்ட.

buk'shee, buk'shi, (பெர்.) *n.* சம்பளம் கொடுப்போர், கூலி வழங்குபவர்

bulb, *n.* அடிநிலத்தண்டு, பூண்டு; தண்டங்கிழங்கு; புடைப்பு; உந்திக் கொண்டிருக்கும் பகுதி; மின்விளக்கின் குமிழ்ப்பகுதி; கண்ணுடிக்குழாயின் புடைத்த பகுதி; (உள்.) நீள் உறுப்பின் புடைத்த முனைப்பகுதி; *v.* குமிழ் உண்டுபண்ணு; குமிழ் ஆகு; புடை, வீங்கு.

bulb'ar, *a.* குமிழைப்பற்றிய, புடைத்த பகுதியைச் சார்ந்த; புடைத்த தண்டு நரம்பின்மேல்முனையைப்பற்றிய.

bulbed, *a.* பூண்டினை உடைய; குமிழ்வாய்ந்த; குமிழ்வடி வான, புடைத்த, உருட்சியான.

bulbif'erous, *a.* (தாவ.) பூண்டுகளை உடைய.

bul'biform, *a.* குமிழ்வடிவான, பூண்டு வடிவுடைய, உருண்டையான உருவுடைய.

bulb'il, *n.* (தாவ.) தனிச்செடியாக வளரக்கூடிய தண்டங் கிழங்கின் குமிழ்மொட்டு.

bulb'less, *a.* தண்டங்கிழங்கற்ற, வேர்ப்பூண்டற்ற.

bul'bous, *a.* (தாவ.) பூண்டுகளினின்று தோன்றுகிற; தண்டங்கிழங்கினைச் சார்ந்த; குமிழ்வடிவான; வேர்ப்பூண் டினை யுடைய.

bul'bul, *n.* (அரா.) இனிமையாகப் பாடும் பறவைவகை; பாடகர்; கவிஞர்.

bulge, *n.* வீக்கம், புடைப்பு; இடைவளர்ச்சி; தற்கால மிகை பாடு; *v.* புடை; வீங்கு.

bul'ger, *n.* புறக்குவிந்த முகப்பை உடைய குழிப்பந்தாட்ட மட்டை.

bul'giness, *n.* புடைத்த நிலை; வீக்கம்.

bul'gy, *a.* புடைத்த; வீங்கிய.

bul'imia, bul'imy, *n.* (மரு.) தீராப் பசிநோய், ஆனைப்பசி, பேருண்வேட்கை.

bulk[1], *n.* பேரளவு, பெரும்பகுதி; பரும அளவு, திரள்; பேரு ருவம், பெரும் பிண்டம்; புகையிலைப் பெருந்தொகுதி; கப்பல் ஏற்றிச்செல்லும் சரக்கு; வயிறு; பெட்டி; உடல் நடுப்பகுதி; கப்பலின் அடிப்பாகம், கப்பலின் உடற்பகுதி; *v.* பேரள வுடையதாகத் தோன்று; மிகைபடத்தோன்று; குவி; (தொ.) bulk buying, பருமக் கொள்முதல், செய்தொழி லரிடமிருந்து சரக்கு முழுவதையுமோ பெரும்பகுதியையோ ஒருவரே அல்லது ஒரு குழுவே வாங்கிவிடுதல்; முழுமக் கொள்முதல், ஒரு நாட்டின் சரக்கு அனைத்தையுமோ பெரும் பகுதியையோ ஒரே நாடு வாங்க உத்தரவாதத்துடன் கொள்ளுதல்.

bulk[2], *n.* கடையின் முகப்பு விற்பனைமேடை.

bulk'er, *n.* தெருக் கள்வன்; தெருக்கேடி; விலைமகள்.

bulk'head, *n.* கப்பலின் கண்ணறை; கப்பல் அறைத்தடுப்பு; அறைக்கூறு; தடுப்பறை, சாவடி; கடைமுகப்புமோடு; கடைமுகப்பு.

bul'kiness, *n.* புடைப்பு, பருமன், பேரிடமடைக்கும் பண்பு.

bulk'y, *a.* பெருத்த, பருமனான, பாரித்த, இடம் பெரிது அடைக்கிற.

bull[1], *n.* ஆனேறு, விடையெருது; விதையகற்றப்படாத காளை; யானை-திமிங்கலம் முதலியவற்றின் ஆண்; இடப இராசி, எருத்து வான்மனை; பொருள்களின் விலையை ஏற்றுபவர்; பங்கு மதிப்பேற்றுபவர்; இலக்குக்குறி மையம், இலக்குமைய வேட்டு; *a.* ஆண்மையுடைய; பெருத்த; திரண்ட; மதிப்பு உயர்த்துகிற; விலை உயருகிற; *v.* விலை வாசிகளை உயர்த்து; ஆணினத்துடன் இணங்கு கூடு; ஆனேற்றின் இயல்பு அவாவு, ஈத்தளை.

bull[2], *n.* போப்பாண்டவரின் கட்டளை.

bull[3], *n.* நகைப்புக்கிடமான முரண்பாடுடைய சொற்றொடர், மிகு சூருக்கத்தால் முரண்பாடாகத் தோன்றும் தொடர்.

bull[4], *n.* சாராயம் இருந்த மிடாவில் ஊற்றி நீர்கலந்து செய்யும் குடிவகை.

bull[5], *n.* சாய் தட்டாட்டம், கப்பலின் மேல்தள விளையாட்டு வகை, எண்கள் பொறித்த சதுரக்கட்டங்களைக் கொண்ட சாய்வுப் பலகையிலே சிறுதட்டையான மெத்தென்ற பைக் கட்டுகளை எறிந்து விளையாடும் ஆட்டம்.

Bull, *n.* ஆங்கிலேயரைப் பொதுப்படக் குறிக்க அவர்கள் பண்புருவமாக வழங்கப்படும் ஜான் புல் (John Bull) என்ற பெயரின் சுருக்கம், ஆங்கிலேயர்.

Bull'a, *n.* குமிழ்வடிவான கிளிஞ்சில் இனம்.

bull'a, *n.* பண்டை ரோமநாட்டுக் குழந்தைகளின் பதக்கம் போன்ற அணிவகை; ஆவணத்தின் பொறிப்பு; புண், கொப்புளம்; வட்டமாகவும் உருண்டையாகவுமுள்ள பொருட்கள்.

bull'ace, *n.* காட்டுப் பழமரவகை; கூனிவகை.

bull'ary, *n.* போப்பாண்டவரின் திரு அறிக்கைத்திரட்டு.

bull'ate, *a.* கொப்புளம் கொண்ட ; சுரிப்புக்கொண்ட ; குமிழி போன்ற ; குமிழ் வடிவான ; உப்பிய.

bull'-bait'ing, *n.* எருதுவேட்டை, நாய்களை எருதின்மீது தூண்டிவிட்டுப் போர் செய்யவிடல்.

bull'-beef, *n.* எருது இறைச்சி; முரட்டுமாட்டு இறைச்சி.

bull'-bitch, *n.* விடாப்பிடியும் அச்சுறுத்தும் தோற்றமும் உடைய பெருநாயின் பிணவு.

bull'-begg'ar, *n.* கூளிவகை.

bull'-board, *n.* கப்பலில் ஆடப்படும் சாய்தட்டாட்டத்துக் குரிய ஆட்டப்பலகை.

bull'-calf, *n.* காளைக்கன்று ; அறிவிலி, மடையன் ; பாங்கற்றவன்.

bull'-dance, *n.* ஆண்கள் மட்டும் ஆடும் ஆட்டம்.

bull'dog, *n.* எருதுவேட்டைநாய், விடாப்பிடி வேட்டைநாய், அச்சந்தரும் தோற்றமும் விடாப்பிடியும் உடைய பெரிய நாய்வகை ; விடாப்பிடியர், விடாக்கண்டர் ; சிறு கைத் துப்பாக்கி வகை; பல்கலைக்கழக ஒழுங்குத்தலைவர் பணியாள்; *v.* விடாப்பிடியுடைய அச்சந்தரும் தோற்றமுடைய நாய் வகையைப் போலத் தாக்கு ; மல்லிட்டெறி.

bull'doze, *v.* அச்சுறுத்தி அடக்க முயலு ; வேலொடு நின்று இடுவெனக் கூறு.

bull'dozer, *n.* நிலச்சமன்பொறி, நிலத்தைச் செப்பமாகச் சமன்செய்யும் கருவி ; அச்சுறுத்துபவர் ; துப்பாக்கி ; அச் சுறுத்தப் பயன்படும் கருவி.

bull'et, *n.* துப்பாக்கிக்குண்டு, இரவைக்குண்டு.

bull'et-drawer, *n.* காயத்தினின்றும் துப்பாக்கிக்குண்டை எடுக்கும் கருவி.

bull'et-head, *n.* உருண்டையான தலை ; அறிவற்றவர், சுரணையற்றவர், பிடி முரண்டர்.

bull'et-head'ed, *a.* உருண்டையான தலையுடைய; பிடிவாதம் கொண்ட.

bull'etin, *n.* கால அறிவிப்பு வெளியீடு ; அரசியல் செய்தி வெளியீடு ; நோயாளி நிலை அறிவிப்பு.

bull'et-proof, *a.* குண்டுத்தடையான, துப்பாக்கிக்குண்டு துளைத்துச்செல்ல முடியாத.

bull'fight, *n.* ஸ்பெயின் நாட்டுப் பெருவிருப்பக் காட்சியான எருது-மனிதன் சண்டை ; மஞ்சி விரட்டு, ஏறுகோள்.

bull'fight'er, *n.* ஏற்றுப்பொருநர், எருதோடு போர்புரிபவர்.

bull'fight'ing, *n.* எருதுடற்றல், எருதும் மனிதனும் போராடுதல்.

bull'finch, *n.* கொழுவிய சிவந்த மார்புடைய சிறுபறவை வகை ; தாண்டுதற்கரிய உயர்ந்த அடர்த்தியான முட்புதர்.

bull'frog, *n.* பெரிய தவளை வகை.

bull'-head, *n.* பெருந்தலையுள்ள சிறுமீன் வகை.

bull'-head'ed, *a.* வேகமாகச் செல்கிற ; பிடிவாதமான ; அசைக்க முடியாத.

bull'ion, *n.* பொற்கட்டி ; வெள்ளிக்கட்டி ; நாணயமாக்கப் படாத பொன்-வெள்ளிப்பாளம் ; தம்பட்டமடிக்கப்படுவதற்கு முற்பட்ட பொன்-வெள்ளிப்பிழம்பு ; பொன்-வெள்ளிக்கம்பி களின் திருகு முடிகள் ; *a.* சொக்கத் தங்கத்தாலான; சொக்க வெள்ளியாலான.

bull'ionist, *n.* உலோகச் செலாவணி ஆதரவாளர், உலோக நாணயங்களை விரும்புபவர்.

bull'ish, *a.* எருதின் தன்மையான ; தடித்த ; முரட்டு இயல் புடைய.

bull'-necked', *a.* தடித்த கழுத்துடைய.

bull'ock, *n.* மட்டக்காளை, காயடிக்கப்பட்ட எருது.

bull'ock's-heart, *n.* சீத்தாப்பழம்.

bull'-pen, *n.* எருதுத் தொழுவம் ; அமெரிக்க ஐக்கிய நாடு களில் குற்றவாளிகளை அடைப்பதற்கான சிறு - தடுப்பு அறை.

bull'-puncher, *n.* ஆஸ்திரேலிய எருது ஓட்டி.

bull'-pup, *n.* விடாப்பிடி வேட்டைநாயினத்தின் சிறுகுட்டி.

bull'-ring, *n.* எருதுக்கும் மனிதனுக்கும் சண்டை நடக்கும் இடம் ; எருதுக்கும் விடாப்பிடி வேட்டைநாயினத்துக்கும் போட்டி நடத்தப்படும் இடம் ; வட்ட வெளியரங்கு ; எருதின் மூக்காஞ் சரட்டு வளையம்.

bull'-roar'er, *n.* சிறு பையனின் ஒலி உண்டாக்கும் விளை யாட்டுப்பொருள், விளையாட்டுக் கையிராட்டை.

bull's'-eye, *n.* கண்ணுடிக் குமிழின் புடைப்பு ; விளக்கின் முகப்பாகவுள்ள குவிந்த கண்ணுடிச்சில்லு ; காவலர் கைவிளக்கு ; வட்டமான திறப்பு ; சாளரம் ; துப்பாக்கி சுடும் இலக்கின் மையம் ; இலக்கு மையம் ; பெரிய வட்டமான இனிப்புப் பண்டம் ; (தொ.) bull's-eye lantern, காவலர் கைவிளக்கு.

bull'-terr'ier, *n.* விடாப்பிடி வேட்டைநாய் இனவகைக்கும் குட்டைநாய் இனவகைக்கும் இடைக்கலப்பான சிறு வேட்டை நாய்வகை.

bull'-trout, *n.* கடற்பெருமீன் வகை ; கடலிலே முட்டையிட்டு விட்டு நன்னீருக்குத் திரும்பும் மீன்வகை.

bull'-whack, *n.* கனத்த சாட்டை ; *v.* கனத்த சாட்டையால் அடி.

bull'y [1], *n.* கொடுமைக்காரன், எளியவரைக்கொடுமை செய் பவன் ; வீம்பு வீருப்புக்காரன், அடாவடியன் ; கூலிக் கொலைஞன், கூலிக்காகக் கொடுமையிழைப்பவன் ; பரத்தர் உதவியால் பிழைப்பவன் ; *v.* கொடுமைப்படுத்து; கொடுமைப் படுத்தி அடக்கு ; விடாத்தொல்லை கொடு ; அச்சுறுத்து ; ஆரவாரம் செய், ஆர்ப்பரி.

bull'y [2], *n.* கால் பந்தாட்டத்தில் முன்னணி ஆட்டக்காரர்கள் பந்தைப் பற்றச் சேர்ந்துசெய்யும் பெருமுயற்சி ; வளைகோற் பந்தாட்டத்தில் ஆட்டத் தொடக்கவினைமுறை மரபு, எதிரெதிர் ஆட்டக்காரர் மும்முறை காலால் பந்தருகில் நிலத்தையும் மட்டையால் மட்டையையும் அடித்து உடனே பந்து தாக்கத் தொடங்குதல்.

bull'y [3], *n.* சிறுதகரப் பெட்டிகளில் அடைக்கப்பட்ட மாட் டிறைச்சி, இறைச்சி ஊறல்பதனம்.

bull'y [4], *n.* சுரங்கத் தொழிலாளியின் சுத்தியல்.

bull'y [5], *a.* முதல் தரமான ; *int.* முதல் தரம் !

bull'yism, *n.* எளியவரைக் கேலி செய்து கொடுமைப் படுத்தும் முறை.

bull'y-off, *n.* வளைகோற்பந்தாட்டத் தொடக்கப் பந்தெறி வதற்குரிய வினைமுறை மரபு, எதிரெதிர் ஆட்டக்காரர் ஒருங்கே காலால் பந்தருகே நிலமறைந்து மட்டையுடன் மட்டைமோதிப் பந்தெறியத் தொடங்குதல் ; *v.* வளைகோற் பந்தாட்டத்தில் பந்தாட்டத் தொடக்க வினைமுறை மரபாற்று.

bull'yrag, *v.* = ballyrag.

bull'y-rook, *n.* கொடியவன், எளியவரைத் துன்புறுத்து பவன் ; கூலிக்காரக் கொடியவன் ; தோழன், நண்பன்.

bull'y-tree, *n.* பாற்பசையும்-உண்கனியும்-பிசினும்-பலகை யும் தரும் மேலை இந்தியத் தீவுகளின் மரவகை.

bul'rush, *n.* நீண்ட நாணற்செடிவகை ; (தொ.) bulrush millet, 'முத்தரிசி', நாணற்புல்வகையின் அரிசி.

bul'rushy, *a.* நாணல் வகையைச் சார்ந்த.

bulse, *n.* வைரம் வைப்பதற்குரிய பை, வைரப்பை.

bul'wark, *n.* கொத்தளம், வல்லரண் ; தடைச்சுவர் ; பாது காப்பு ; அலைதாங்கி, காப்புச் செய்கரை ; மேல்தளத்திற்கு மேல் நீட்டிக்கொண்டிருக்கும் கப்பலின் பக்கப்பகுதி ; பாதுகாப்புத் தருவது, பாதுகாப்பிடம், அரணம் ; *v.* பாது காவல் செய், அரண்செய்.

bum [1], *n.* பின்புறம் ; பிட்டம்.

bum[2], *n.* ஊர்ச்சுற்றி, ஒழுக்கங்கெட்டவர்; பிறர் சார்பிலே வாழ்பவர், ஒட்டுயிராளர்; *a.* பயனற்ற; வெறுக்கத்தக்க; *v.* ஊர்சுற்று; பிறரை ஒட்டிவாழ்; பிறர்பொருள்வெளவு; ஒழுங்குகெட்டு நட.

bum[3], *n.* வண்டிசை, 'பொம்' மென்று முரலும் ஓசை; *v.* முரலு; முணுமுணு, இரைச்சல் செய்.

bum'-bai'liff, *n.* பின்புறமாக வந்து கைது செய்யும் வழக்கு மன்றத் தலையாரி; நாட்டாண்மைக்காரரின் மேலாள்; மாநகர் மணியக்காரரின் உயர் பணியாள்.

bumbaz'e, *v.* கலக்கு, குழப்பு, திகைக்கச்செய்; ஏமாற்று.

bum'ble[1], *n.* திருக்கோயில் குருவுக்கு உதவி செய்பவர்; திருக்கோயில் காவற்பணியாளர்; பகட்டிக்கொள்ளும் அதிகாரி.

bum'ble[2], *n.* குழப்பம்; தெளிவற்ற பேச்சு; குழப்புபவர், வேலையை அரைகுறையாகச் செய்பவர்; சோம்பேறி; *v.* குழப்பமடை; தெளிவின்றிச்சொல்; தவருக ஆரவாரம் செய்.

bum'ble-bee', *n.* பெரிய வண்டுவகை.

bum'bledom, *n.* திருக்கோயில் சிறுதிறப் பணியாளர்களின் பகட்டுநிலை; வெற்றுரவாரப் பணியாளர்.

bum'ble-foot, *n.* கோழிக்கால் தொற்றுநோய்; உருக்கேடடைந்த காலடி.

bum'ble-puppy, *n.* பழைய விளையாட்டு வகை; முறையற்ற சீட்டாட்ட வகை; வரிப்பந்தைக் கம்பத்தில் கட்டியாடும் பந்தாட்டம்.

bum'bo, *n.* இன்தேறல்வகை, சாராயம்-நீர்-சர்க்கரை-சாதிக்காய் சேர்ந்த குடிவகை.

bum'-boat, *n.* கப்பலுக்கு உணவுப்பொருள் ஏற்றிப்போகும் படகு.

bumm'alo, *n.* வாத்துவகை, பம்பாய் வாத்து; 'சால்மன்' குடும்பத்தைச் சார்ந்த சிறுமீன்வகை; உலர்த்தி உண்ணும் மீன்வகை.

bummaree', *n.* லண்டன் நகரின் பெரிய மீன் சந்தைத்தரகர்; இறைச்சி சந்தைச் சுமட்டாள்.

bumm'er[1], *n.* படை அணிவகுப்பினின்றுந் தப்பியோடிக் கொள்ளையடித்துச் சுற்றித் திரிபவர்; சோம்பேறி, ஊர்சுற்றி.

bummer[2], *n.* இரைபவர்; இரைவது, வண்டு.

bum'mock, *n.* ஆர்க்னித்தீவுக்குழுவில் (Orkney Islands) விழாவிருந்திற்குத் தேறல் வடித்தல்.

bump, *n.* வீக்கம், புடைப்பு; ஊமையடி, மொத்தல்; மோதல்; திடீர்க்குலுக்கம்; வளிமண்டல மாறுதல் காரணமான விமானத்தின் திடீர் உந்தல்; பந்தின் வேக எதிருந்தல்; மரப்பந்து மட்டையருகே மோதி ஆட்டக்காரர்மீது எகிறி எழுதல்; படகுப்பந்தயத்தில் முன்படகைத் தொட்டு விடுவதால் கிட்டும் கெலிப்பெண்; மூளைப்புடைப்பு; அறிவாற்றல்; *v.* முட்டு, தட்டு; மொத்து; தாக்கு; மோது; மோதித் தள்ளு; வீசி எறி; காயம் உண்டுபண்ணு; வீக்கம் தோற்றுவி; விலகு, புடைத்தெழு; மோதப்பெறு; கைகால் பற்றித்தூக்கி நிலத்தில் அறை; திடீர்க்குலுக்கம் உண்டுபண்ணு; பொத்தென்ற ஓசை உண்டுபண்ணு; தடாலென்ற ஒலி எழுப்பு, வெட்டிவெட்டிச்செல்; முட்டி எழு, பாய்ந்தெழு, எகிறு; முன்பட தட்டி மேற்செல்; அச்சில் உருவிரித்து வேண்டிய இடம் நிரப்பு; *adv.* திடீரென்று, தடாலென்று.

bump'er, *n.* மோதுபவர்; மோதும் பொருள்; உந்துபொறி வண்டியின் முட்டுத்தாங்கி; புகைவண்டியில் ஊடே நின்று தாக்குதல் ஏற்கும் அமைப்பு; படகுப் பந்தயம்; நிறைந்து ததும்பும் கிண்ணம், பொங்குகலம்; மிகுவிளைவு, பொங்குவளம்; மக்கட்பொங்கு மாதிரன்; சீட்டாட்டத்தில் ஒரு தரப்பு இரட்டிப்புக் கெலிப்பு; *a.* நிறைந்து வழிகின்ற; *v.* சாராயம் நிறைந்த கிண்ணத்தைக்குடி.

bump'iness, *n.* வெட்டிவெட்டியிழுக்கும் இயல்பு; ஆட்டியலைக்கும் தன்மை.

bump'kin[1], *n.* கப்பலின் முன்புறத்தினின்று நீட்டிக்கொண்டிருக்கும் சிறு மரத்தூலம்; படகுகளின் பின்புறத்தில் வெளிப்புறமாக நீட்டிக்கொண்டிருக்கும் புறச்சட்டம்.

bump'kin[2], *n.* நாட்டான், பாங்கறியாதவன்; கோணங்கி

bump'kinish, *a.* பாங்கறியா நாட்டுப்புறப்பண்புடைய.

bump'tious, *a.* வெறுப்பான அளவிற்குத் தன்முனைப்புமிக்க, முன்துருத்தல் பண்புடைய.

bump'tiously, *adv.* அகம்பாவத்துடன்.

bump'tiousness, *n.* வெறுப்பான அளவிற்கு முந்துறும் பண்பு, தன்ஞுணவப்போக்கு.

bump'y, *a.* ஆட்டி அலைக்கிற.

bun[1], *n.* அப்பவகை; சிறுபழம் உட்செறித்து இனிப்பூட்டிய வட்ட அப்பவகை; குட்டையாகவும் வட்டமாகவும் வெட்டிய வட்டத் தலைமுடி.

bun[2], *n.* உலர்காம்பு; முயல்-மான் ஆகியவற்றின் குறுவால்.

bun[3], *n.* அணில்-குழிமுயல் குறித்த குழந்தை வழக்கு.

bu'na, *n.* செய்முறைத்தொய்வகம், செயற்கை இரப்பர் வகை.

bunch, *n.* கொத்து, குலை; தொகுதி, கும்பு, குவியல்; முடிச்சு; வீக்கம்; மொத்தம்; நிட்ட அளவுள்ள கட்டுக் காயத்துணிச் சுருள் (1,80,000 கெசங்கள்); *v.* கட்டிபோல வீங்கு, புடை; ஒன்றுகச்சேர், கொத்தாக இணை; அடர்த்தியாக்கு; ஆடை மடித்துக் கொசுவம் வை; நெருங்கு; (படை.) நேரிய இடைவெளியின்றி நெருக்கு.

bunched, *a.* கொத்தான; புடைத்த; கனலான; முன்துருத்தியுள்ள, உந்தலான.

bunch'iness, *n.* புடைப்பு; தொகுதி; கொத்துத்தன்மை.

bunch'y, *a.* கொத்தாக உள்ள; குலையுடைய; புடைத்த.

bunc'o, *n.*, *v.* = **bunko**.

bun'combe, *n.* = **bunkum**.

bund[1], (செர்.) *n.* கூட்டுக்குழு, கூட்டரசுக்குழு.

bund[2], (இ.) *n.* கரை மேடு, அணைகரை; ஊடுசெல் பாதை; இடைகரைப் பாதை.

bun'der, (இ.) *n.* இறங்குமிடம், இறங்குதுறை; துறைமுகம்; இரேவு, கப்பலில் சரக்கு ஏற்றி இறக்குமிடம்.

bun'der-boat, *n.* துறைமுகப் படகு, கரையோரப் படகு.

bun'dle, *n.* பொட்டணம், மூட்டை முடிச்சு; துணியிட்டு மூடிய சிப்பம்; கொத்து, குலை, கும்பு, களம்; கம்பு கட்டைகளின் தாறுமாறான கட்டு; வைக்கோல் புரி, வைக்கோல் கட்டு; நார்ப்பொருள் சிட்டம்; நரப்புநாள முடிச்சு; நானூற்று எண்பது தாள் அளவுகொண்ட கட்டு; இழை நூல் சிட்டத்தின் அளவுத் தொகுதி; *v.* மூட்டையாகக் கட்டு, பயணத்துக்கான பொட்டணம் கட்டு; கும்பு களமாக விரைந்து இடு; அவசர அவசரமாக வெளியேற்று; குழப்பத்துடன் நெருக்கியடித்துச் செல்லு; முழு ஆடையுடன் படுக்கையில் ஒருங்குகிட.

bun'dook, (இ.) *n.* சுழல் துப்பாக்கி; பழங்காலத் துப்பாக்கி வகை.

bung, *n.* அடைப்பான், மிடாவின் துளையடைக்கும் தக்கை; *v.* தக்கையால் மிடாவின் துளையை அடை.

bung'aloid, *a.* எளிய மாளிகை போன்ற; சுற்றுத் தாழ்வாரத்தோடு கூடிய.

bung'alow, (இ.) *n.* சுற்றுத் தாழ்வாரத்தோடுகூடிய ஓரடுக்கு வீடு, ஒற்றைமாடி இல்லம்.

bung'-hole, *n.* தக்கையால் அடைக்கப்படும் மிடாத்துளை.

bung'le, *n.* செயற் குளறுபடி, அரைகுறைச் செயலாண்மை, அரைகுறையான நயமற்ற செய்பொருள்; *v.* குளறுபடி செய்; திறமையின்றித் தவறு இழை; அரைகுறை வேலைசெய்; அருவருப்பாக நடந்துகொள்.

bung'ler, *n.* நயமற்ற தொழிலாளி; தவறு இழைப்பவர்; அருவருப்பாகச் செயலாற்றுபவர்; குழப்பி விடுபவர்.

bung'ling, *n.* செயற் குளறுபடி, பரும்படி வேலை; குழப்ப வேலை; *a.* குழப்பமான; அருவருப்பான; நயமிலா; தவருன; அலங்கோலமான.

bung'lingly, *adv.* அலங்கோலமாக; தவருக; நயமில்லாமல்.

bung'-vent, *n.* உட்காற்றை வெளியேற்ற உதவும் மிடாத் துளையிலுள்ள சிறு புழை.

bun'ion, *n.* கால் வீக்கம், காற்பெருவிரலின் முதற்கணுவின் வீக்கம்.

bunk [1], *n.* கப்பல் அறையிலுள்ள ஒதுக்கிடம், அடைப்பிட இருக்கை, மூடிருக்கை; துயிலிடம்; *v.* கப்பல் அறையி லுள்ள ஒதுக்கிடத்தைப் பெற்றமர்; துயிலிடத்தைக் கைக் கொள்ளு.

bunk [2], *n.* = **bunkum**.

bunk'er, *n.* கப்பல் எரிபொருள் அறை, கப்பல் கரித்தொட்டி; குழிப்பந்தாட்டத்தில் பந்து ஓட்டத்தைத் தடைப்படுத்தும் மணற்குழி; (படை.) குண்டுவீச்சுக்காலப் பாதுகாப்பிடம், குண்டு காப்பரண்; *v.* விறகுகூட்டு, எரிபொருளூட்டு; எரி பொருளாயுதவு; குழிப்பந்தாட்டத்தில் குழியிடத்தில் பந்தைச் செலுத்து; இடரில் சிக்கவை.

bunk'ered, *a.* குழிப்பந்தாட்டத்தில் குழிப்பட்ட; இடர்ப் பட்ட, இடருக்குள்ளான.

bunk'o, *n.* நம்பிக்கை மோசம் செய்து பொருள் பறித்தல்; *v.* ஆசை காட்டி ஏமாற்றி இட்டுச்சென்று பொருள் பறி.

bunk'o-steer'er, *n.* ஆசைகாட்டி ஏமாற்றும் குழுவினர்.

bun'kum, *n.* புரட்டு, பித்தலாட்டம், மடக்கடி.

bunn'ia, (இ.) *n.* வணிகர், கடைக்காரர்.

bunn'y, *n.* குழந்தை வழக்கில் முயல்குறித்த செல்லப்பெயர்.

bunn'y-hug, *n.* அமெரிக்கநாட்டு நடன வகை; *v.* அமெரிக்க நடனமாடு.

bu'nodont, *a.* புண்ணுள்ள கடைவாய்ப் பற்களையுடைய.

Bun'sen, *a.* ஆர். டப்ள்யூ. பன்சென் (R. W. Bunsen) என்ற செர்மனிநாட்டு விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்ட; (தொ.) Bunsen battery, Bunsen cell, மின்கல அமைப்பு வகை; Bunsen burner, புகையிலாக் கரிவளிக்கனலி, காற்றடுப்பு.

bunt [1], *n.* முட்டுதல், தள்ளுகை; தளக்கட்டுப்பந்தாட்டத்தில் உட்களம் நோக்கிய சிறு பந்தெற்றி; விமானத்துறையில் அரை வட்டணித்து அரைக்கரணமிடல்; *v.* கொம்பெறி, முட்டு; குதி, துள்ளு; மட்டையைச் சுழற்றுமல் பந்தைத் தட்டி நிறுத்து; விமானத் துறையில் அரைவட்டணித்து அரைக்கரணமிடு.

bunt [2], *n.* கோதுமைப்பயிர் நோய்; பயிர்நோய்க்குரிய காளான் வகை.

bunt [3], *v.* பை-வலை-கப்பற்பாய் போன்றவற்றின் குழிவுப் பகுதி, இடைமடிப்புப்பகுதி; *v.* குழிவாகு, தொய், உள் மடிப்புக் கொள்.

bunt'ed, *a.* கோதுமைப்பயிரில் நோய்வகைக்கு உள்ளான.

bunt'er, *n.* கந்தல் பொறுக்கி, கீழ்த்தரப்பெண்.

bun'ting [1], *n.* மென்கம்பிளியாலான கப்பற் கொடித்துணி; கப்பற்கொடி; துகிற்கொடி, அழகு ஒப்பனைக்குரிய கொடிச் சீலை.

bun'ting [2], *n.* தள்ளுதல்; கொம்பு வைத்துக்கொண்டு சிறுவர் விளையாடும் விளையாட்டு வகை; வலிமைமிக்க மரத்தடி, திண்ணிய கைக்கோல்.

bun'ting [3], *n.* பறவை இனத்தின் வகை.

bunt'line, *n.* கப்பலின் சதுரப்பாய் தொய்வுற்று மடிப்புரும லிருக்க நடுவே கட்டப்படும் கயிறு.

bunt'y, *a.* கோதுமையில் நோய்வகைக்கு உள்ளான.

bun'ya, bun'ya-bun'ya, *n.* கொட்டைகள் ஈனும் ஆஸ்தி ரேலிய முள் மரவகை.

bun'yip, *n.* ஆஸ்திரேலியப் பழங்கதைகளுக்குரிய சதுப்பு நிலப் பேருருவ விலங்குவகை; ஏமாற்றுபவர், மோசடிக்காரர்.

buoy, *n.* மிதவை, கடலில் வழிகாட்டியாகவும் எச்சரிப்புக் கருவியாகவும் பயன்படும் மிதப்பு அடையாளக்கருவி; *v.* மிதவைகள் ஏற்பாடுசெய்; மிதவைமூலம் அடையாளம் அறிவி; மிதக்கச் செய்; மேலெழச்செய்; மேலெழு, குதி, துள்ளு; மித; ஊக்கு.

buoy'age, *n.* மிதவை அமைப்பு, மிதவை ஏற்பாடு, மிதவை வரிசை.

buoy'ance, buoy'ancy, *n.* நீரில் மிதக்கும் பண்பு, மிதப் பாற்றல்; மிதக்கச் செய்யும் திறம்; காற்றில் எழும்திறம்; பளுவின்மை, நீர்மத்துள் அழுத்தலால் எடை குறைவாகக் காணும் இயல்பு; கிளர்ச்சி, மன எழுச்சி.

buoy'ant, *a.* மிதக்கிற; மிதக்கும் ஆற்றலுள்ள; நொய்ம்மை யான; மகிழ்ச்சி மிக்க; நீட்டிப்பாற்றலுள்ள.

bur [1], *n.* உடையில் அல்லது உடம்பில் ஒட்டும் கொக்கிகளை யுடைய விதைக்கூடு, ஒட்டுமுள்விதையுறை; ஒட்டுமுள் மலர்; பூச்சி முள், ஒட்டுச்சளி; விடாது ஒட்டிக்கொள்பவர், விடாது ஒட்டி வாழ்பவர், விடாக்கண்டர், விடாக்கட்டை; மரத்தின் கரணை; மான் கொம்பின் அடித்திரடு; நூல் சரடு; கழிவுப்பட்டுநூல்; செதுக்குவேலையில் கோட்டின் சொர சொரப்பான விளிம்பு; வயிற்றுச்சுரப்பி வகை, கனையம்; கொல்லத்துவேலைக்கரண்டி; உலோகத் தகட்டில் துளையிடும் போது வெளியே தள்ளப்பட்ட பகுதி; பாதி பளபளப்பாக்கப் பட்ட செங்கல்.

bur [2], *n.* ரகர ஒலி, வருடொலி, கரகரத்த ஒலி; *v.* கரகர வெனும் ஒலி எழுப்பு.

Burb'erry, *n.* நீர் தோயா மேற்சட்டை; 'பர்பெரி' (Burberry) கம்பெனியார் செய்யும் ஒருவகை மேற்சட்டை.

bur'ble [1], *n.* சிக்கல், குழப்பம்; *v.* குழப்பமாக்கு, தாறு மாருக்கு.

bur'ble [2], *n.* முணுமுணுப்பு; *v.* முணுமுணு; குமிழியிடு, கடகடென்ற ஒலி எழுப்பு.

bur'ble [3], *v.* பொங்கும் களி கிளர்ச்சியுடன் நகையாடு, கடுஞ் சினத்தால் கொதித்தெழு.

burb'ot, *n.* விலாங்குமீன் போன்று தட்டையான தலையும் கீழ்த்தாடையில் நீண்ட மெல்லிய தாடிபோன்ற அமைப்பு முடைய நன்னீர் மீன்வகை.

burd'ash, *n.* குஞ்ச அருகுடைய முற்கால ஆடவர் அரைக் கச்சை வகை.

burd'en [1], *n.* பாரம், சுமை, பளு; கப்பலில் சரக்கேற்றிக் கொள்ளும் அளவு; பொறுப்பு, கடமை, கடப்பாடு; மேற் கொண்டு தீரவேண்டிய செலவு; வில்லங்கம்; (விவி.) தெய்வமொழி; துன்பு செறி ஊழ், துயரம், இடுக்கண்; பல்லவி, இடையிடையிட்டு மீண்டும் மீண்டும் பாடப்படும் பாடல் பகுதி; முக்கிய செய்தி; அடுத்தடுத்துக் கூறப்படுவது; ஏட்டின் சாரம்; *v.* சுமை ஏற்று; பொறுப்புச்சுமத்து; அழுத்து; தொல்லைக்காளாக்கு; வில்லங்கப்படுத்து.

burd'en [2], *n.* தீர்த்த யாத்திரியின் கைத்தடி.

bur'denous, *a.* பாரமான; தாங்கற்கரிய.

burd'ens, *n. pl.* படகிலுள்ள நிலத்தளப் பலகைகள்.

burd'ensome, *a.* பாரமான; பளுவால் அழுத்துகிற; தாங்கு தற்கியலாத; வருத்துகிற; சோர்வு ஊட்டுகிற.

bur'densomeness, *n.* இடைஞ்சற்பாடு; கனப்பூட்டும் தன்மை.

bur'dock, *n.* (தாவ.) கொக்கி போன்ற புல்லியும் தறித்த வால் போன்ற இலையும் உடைய அமெரிக்கப் புல்வகை.

bureau', **bu'reau**, *n.* இழுப்பறை மேசை, அடுக்கறை மேடை; இழுப்பறை மேசையைப் பயன்படுத்தும் அலுவலகம்; புள்ளி விவரச் சேகரப் பணிமனை; செய்தி அறிவிக்கும் அலுவலகம்; அரசியல் துறையரங்கம்.

bureau'cracy, *n.* பணித்துறை ஆட்சி; மையக்குவிமுக ஆட்சி; பணிமனையாளர், அரசியற் பணி முதல்வர், ஆளும் வகுப்பு.

bu'reaucrat, bureau'cratist, *n.* சட்டநூல்கூற்றை ஏற்றுக் கொண்டு அதன்படியே நடக்கும் மேலாள்; அதிகார மனப் பான்மையுடையவர்; பணித்துறை ஆட்சி ஆதரவாளர், ஒருமுக மைய ஆட்சிக்கோட்பாட்டாளர்.

bureaucrat'ic, *a.* அதிகார இனத்திற்குரிய; அதிகார இன ஆட்சித்தொடர்பான.

bureaucrat'ically, *adv.* ஒருமுக மைய ஆட்சியோடு; பணித்துறை ஆட்சிப்போக்காக.

bureau'cratism, *n.* ஒருமுக மைய ஆட்சிக்கொள்கை; பணித் துறை ஆட்சிக்கோட்பாடு.

bu'reaus, bu'reaux, *n.* bureau என்பதன் பன்மை.

bu'rel, *n.* = burhel.

burette', *n.* (வேதி.) சிறுதிற நீர்மம் அளக்கும் கண்ணுடி அளவைக்குழாய், வடியளவைக் குழாய்.

burg, *n.* (வர.) அரண்; மதிலுடைய நகர்; நகரம்.

bur'gage, *n.* பண்டை நிலமரபுரிமை; ஆண்டுகட்டு மரபுரிமை; பெயரளவில் காவற்கடமையுடைய மண்ணிலவுரிமை.

bur'gee, *n.* தொங்கல் வாலுடைய துகிற் கொடி; சூளையிற் போடும் துண்டு நிலக்கரி வகை.

bur'geon, *n.* சிறுமுளை, குருத்து, அரும்பு; *v.* கொழுந்து விடு, தளிர்த்தெழு, வளரத்தொடங்கு, வளர், மலர்ச்சியுறு.

bur'gess, *n.* (வர.) உரிமைபெற்ற நகர வாழ்நன், நகர உரிமைக்குடியினன்; நகரினன்; நகர உயர் குடியினன்; பாராளுமன்ற நகர உறுப்பினர்; நகரக் குற்ற நடுவர்; நகரவை உறுப்பினர்.

burgh, *n.* ஸ்காத்லாந்து நாட்டு உரிமை பெற்ற நகரம்; (தொ.) parliamentary burgh, நகரத் தேர்தல் எல்லையாக ஏற்கப்பட்ட சட்டமாமன்றத் தேர்தலெல்லை; முன் சட்ட மாமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் உரிமை உடையதா யிருந்த இடம்; police burgh, காவல் துறைக்காக வட்ட முதல்வரால் வகுக்கப்பட்ட எல்லைப்பிரிவு.

burgh'a, *a.* உரிமை பெற்ற நகரத்தைச் சார்ந்த.

bur'gher, *n.* உரிமைபெற்ற நகரத்தின் உரிமைக்குடியினன்; அயல் நகரவாணன்; நாட்டான்; (வர.) தென் ஆப்பிரிக்க போயர் குடியரசுகளில் ஒன்றின் குடிமகன்; இலங்கைக் குடிமக்களோடு இணைந்துவிட்ட ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்தவர்.

burg'lar, *n.* வீட்டுக்குட் புகுந்து திருடுபவன், கன்னமிடுபவன்; *v.* வீட்டிற்புகுந்து திருடு, கன்னம் வைத்துத் திருடு.

burglar'ious, *a.* கன்னம் வைக்கிற; வீட்டை உடைத்துத் திருடும் பழக்கமுள்ள.

burg'lary, *n.* கன்னம் வைத்தல், வீடுபுகுந்து திருடுகை.

burg'le, *v.* கன்னம் வைத்துக் களவாடு; வீடுபுகுந்து திருடு.

burg'omaster, *n.* ஆலந்து-செர்மனி-பிளாண்டர்ஸ் (Holland-Germany-Flanders) ஆகிய நாடுகளிலுள்ள நகரச்சட்ட முதல்வர்.

bur'gonet, *n.* கன்னங்களைக் காக்கும் ஒட்டுப் பொருத் துடைய முன்னுளைய எஃகுத் தலைக்கவசம்.

burgoo', *n.* (கப்.) கப்பலோட்டியின் கஞ்சி உணவு, கூழ்; அமெரிக்க நாட்டு மணப்புறவிருந்திலே பயன்படுத்தப்படும் சூப்பி; கறிக்குழம்பு.

bur'grave, *n.* கோட்டை நகரத்தின் குடிமரபான ஆட்சி யாளர்.

bur'gundy, *n.* பிரஞ்சுநாட்டுப் பர்கண்டி எனும் மாவட்டத்தில் வடிக்கப்படும் முந்திரித்தேறல் வகை; (தொ.) burgundy mixture, (வேதி.) செப்புக்கந்தகையும் உவரக் கரியகையும் நீரும் கலந்த காளான் கொல்லி; burgundy pitch, நார்வே நாட்டில் உள்ள மரப்பிசின் வகை.

bu'rhel, *n.* வருடை, இமயமலையில் வாழும் காஞ்சட்டு வகை.

bur'ial, *n.* மண்ணுக்கடியில் புதைத்தல், புதைவினை; இழவு வினை; (தொ.) burial society, பிணம் புதைப்பதற்கான செலவை ஏற்றுக்கொள்ளும் காப்பீட்டுக்குழு.

bur'ial-ground, bur'ial-place, *n.* கல்லறை; இடுகாடு.

bur'ial-service, *n.* இறந்தவர்பொருட்டு இறுதியாக நடத்தப் படும் வழிபாடு.

Bu'ridan's ass, *n.* சரிதொலை இரு நல் உணவுக்கிடையே ஒன்று தேரமுடியாமல் பட்டினிகிடந்திறந்ததாகக் கூறப்படும் கழுதை; தேர இயலாது கெடுபவர்.

bur'in, *n.* செப்புத்தகட்டில் செதுக்குவேலை செய்யப் பயன் படும் கருவி; செதுக்குவேலைக்காரருடைய தனித் தன்மையான பாணி.

bur'inist, *n.* செதுக்குவேலைக்காரர், உலோகத்தகடுகளிற் செதுக்குவேலை செய்பவர்.

burke, *v.* திக்குமுக்காட வைத்துக் கொல்; சந்தடியின்றி அடக்கிவை, வெளித் தெரியாமல் மூடிமறை, முழு மூடாக்குச் செய்.

burl, *n.* நூல் முடிச்சு, கம்பிளிநூல் சிக்கு; மரங்களின் சுரணை; *v.* சிக்கறற்று, முடிச்சு நீக்கு.

bur'lap, *n.* கரடுமுரடான திரைச்சீலை, பருக்கன் துணிவகை.

burlesque', *n.* கிண்டல்; போறல் நையாண்டி; நகைவசைச் செய்யுள்; *a.* கேலியான; நையாண்டித்தன்மையான; நகைத்திழிவுபடுத்தத்தக்க; *v.* நையாண்டி செய்; நகைத் திறங்கூறு.

burlett'a, *n.* நகைச்சுவைமிக்க இசைநாடகம், இசையார்ந்த கேலிக்கூத்து.

bur'liness, *n.* வலிவு, முரட்டுத்தன்மை; பருமனுக இருத்தல்.

burling-i'ron, burling-machine', *n.* கம்பிளிநூல் சிக்கு வாரி, சிக்ககற்றும் இயந்திரக்கருவி.

Burl'ington House, *n.* பிரிட்டனின் அரசுரிமைக் கலைக் கூடம் (Royal Academy) பிரிட்டிஷ் கலைக்கூடம் (British Academy) பிரிட்டிஷ் சங்கம் (British Association) ஆகிய வற்றின் செயலகங்கள் உள்ள கட்டிடம்.

bur'ly, *a.* பெரிய; முரடான; உறுதியுள்ள.

Burm'an, Burmese', *n.* பர்மாநாட்டுக் குடிமகன்; பர்மிய மொழி; *a.* பர்மியநாட்டைச் சார்ந்த; பர்மிய மொழியைப் பற்றிய; பர்மியக் குடிமக்களைச் சார்ந்த.

bur'-mar'igold, *n.* (தாவ.) முள் அமைந்த கனித்துய்களை உடைய செடிவகை.

burn[1], *n.* சிற்றோடை, சிற்றாறு, கால்வாய்.

burn[2], *n.* வெந்தபுண், தீக்கொப்புளம்; தீத்தழும்பு; *v.* எரி, அழலெழு, தீப்பற்று; கொளுத்து; விளக்கேற்று, பொருத்து; எரிந்து போ; தீக்கிரையாக்கு, எரித்தழி; சுடு, நீருக்கு, பொசுக்கு; வாட்டு, வதக்கு; வேகவை, வறு, சுட்டுக் கடினமாக்கு, வாட்டிக் கடும்பதம் செய்; தூளியிடு; தீப்புண் படுத்து; தீங்கு செய்; கரி, கருக்கு; கருகு; அரித்துத் தின்னு, கரம்பு, எரிவூட்டு; அணு இயக்கப் பொருள் வெளி யிடும் கருவுள் இயக்க ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்; எரிவுகொள், காந்து; அனல் வீசு; வெப்பம் உறு; காய்வுறு, வெம்பு, வெதும்பு; வெளிச்சம் கொடு, ஒளிவிடு; வெப்ப உணர்வுறு; உயிர்வளியுடன் கல; மெல்லத் தேய்வுறு; கன்று, தவிட்டு நிறமாகு, செங்நிறமாகு; கொதித்தெழு; ஆர்வமுறு; உணர்ச்சி வேகம் கொள்; (தொ.) burn a hole in one's pocket, பணம் செலவிடும் ஆர்வம் காரணமாகத் தங்காது விரைந்து கரைவுறு; burn day light, நேரம் வீணுக்கு; burn down, எரித்துத் தரைமட்டமாக்கு; தீக் கிரை யாக்கு; burn in, வாட்டிச் செறிவுபடுத்து, வெப்புத் தோய்வித்துக் கெட்டியாக்கு; சுட்டுத் தழும்பேற்று, தீப் பொறிப்பிடு; burn into, அரி; தூளியிடு; உட்சென்று அரி, உள் எரி; burn midnight oil, துயிலொழித்திருந்து உழை; burn one's boats, தப்பும் வழி அழித்து முன்னேறு, வாழ்வு மாள்வுப் போராட்டத்தில் துணிந்திறங்கு; burn one's fingers,

செயல் விளைவான தீங்கு பெற்றுத் துன்புறு, அனுபவத்தால் கடும் படிப்பினை பெறு; burn the candles at both ends, ஊதாரியாகப் பணம் செலவிடு, சிக்கனங் கருதாது வாழ்; விதை நெல்லை உண்டு வாழ்; burn the water, பந்த ஒளியில் மீன் வேட்டையாடு; burn up, சுட்டுப் பொசுக்கு; எளிதில் அழித்தொழி; கொழுந்துவிட்டெரி; have money to burn, பணத்தில் கிடந்து புரளு.

burn'er, *n.* விளக்கு; விளக்கில் திரி தாங்கும் பகுதி, தகளி; எரிப்பவர், சுடுபவர்; எரிவது.

bur'net, *n.* இடைக்காலத்திய பழுப்பு வண்ணத் துணிவகை; ரோசா இனத்தைச் சார்ந்த செடிவகை; பழுப்புவண்ண மலர்களைக் கொண்ட செடிவகை; விட்டில்பூச்சி வகை; *a.* அடர்ந்த பழுப்பு வண்ணமான.

bur'nettize, *v.* மரங்களைப் பாதுகாக்க சர் வில்லியம் பர்னட் (Sir William Burnett 1779-1861) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட நீர்ம மருந்தைப்பூசு.

burn'ing, *n.* எரித்தல்; பெருந் தீ; எரித்தழித்தல்; எரிந்து போதல்; எரியழிவு, தீப்பாடு; *a.* எரிகிற; சுட்டெரிக்கிற; சுடர் வீசுகிற; சூடான; எரிவுடைய; காந்துகிற; தீவிரமான; எல்லாருக்கும் தெரிந்த; கடு விவாதத்துக்கிடமான; மனவெழுச்சி மிக்க; (தொ.) burning bush, ஸ்காத்லாந்து திருச்சபையின் சின்னம்; burning mountain, எரிமலை; burning question, கடு விவாதத்துக்கிடமான செய்தி.

burn'ing-glass, *n.* பகலவன் ஒளிர்க்கதிர்களை ஒருமுகப்படுத்தி அனல் உண்டாக்கும் கண்ணுடிக் குவிமுக வில்லை, சூரிய காந்திக் கண்ணுடி.

burn'ing-house, *n.* காளவாய், சூளை.

bur'ning-mirr'or, *n.* குழிவில்லை ஆடி, பகலவன் கதிர்களை ஒருமுகப்படுத்தி வெப்புண்டாக்கும் கண்ணுடி.

bur'ning-point, *n.* காய்ச்சிய எண்ணெய்வகை எளிதில் தீப்பற்றும் வெப்பநிலை, எரிநிலை முனை.

bur'ning-scent, *n.* நெடி.

burn'ish, *n.* பளபளப்பு, மெருகொளி; *v.* தேய்த்துப் பளபளப்பாக்கு, மெருகிடு, துலக்கு, மினுக்கு; தேய்ப்பில் பளபளப்புக்கொள், மெருகேறப்பெறு.

burn'isher, *n.* பளபளப்பாக்கும் கருவி, பொருள் மெருகிடும் கருவி; துலங்கச்செய்பவர்; மினுமினுப்பாக்குவோர்.

burn'ishing, *n.* தேய்ப்பு; மெருகீடு; *a.* தேய்த்து மெருகிடுகிற, பளபளப்பாக்குகிற; மெருகேற்கிற; மெருகிட உதவுகிற.

burni'shment, *n.* பளபளப்பு, மினுமினுப்பு.

burnouse', *n.* அராபிய நாட்டவர்கள் அணியும் முக்காடுள்ள ஆடை.

burn'side, *n.* சிற்ருற்றின் அருகிலுள்ள நிலம்.

Burns'ite, *n.* இராபர்ட் பர்ன்ஸ் (Robert Burns 1759-1796) என்ற ஸ்காத்லாந்து கவிஞரிடம் ஈடுபாடுடையவர்.

burnt' [1], *v.* burn என்ற சொல்லின் இறந்தகால முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

burnt' [2], *a.* எரிந்த; எரிந்து மிஞ்சிய; வாடி வதங்கிய; வெந்த; கருகிய; சுட்ட; வாட்டிக் கடும்பசையற்ற; பதமாக்கப்பட்ட; எஃகில் பற்றேற்காது கடுபதமிஞ்சிய.

burnt'-almonds, *n. pl.* நீய்ந்துபோன சர்க்கரையிலிட்ட வாதுமைக்கொட்டைகள்.

burnt'-cork', *n.* முகத்தைக் கருமையாக்கப் பயன்படும் கருகிய நெட்டிக்கரி; *v.* நெட்டியைக் கருக்கு.

burnt'-ear, *n.* பயிர்நோய் வகை.

burnt'-off'ering, *n.* அவியுணவு, அவிப்பலி.

burr [1], *n.* = bur [1].

burr [2], *n.*, *v.* = bur [2].

burr [3], *n.* ஊர்கோள், பரிவேடம், வானகோளங்களின் சூழ் ஒளி வட்டம்; உலோகங்களின் முரமுரப்பான வெட்டுவாய்; சுக்கான்பாறை; திரிகைக்கல், சாணைக்கல்.

bur'-reed, *n.* (தாவ.) பந்துபோன்ற மலர்க்கொத்துக்களை உடைய நீர்வாழ் நாணற் செடிவகை.

burr'el, *n.* இடைக்கால முரட்டுப் பழுப்புநிறத் துணிவகை.

burr'o, *n.* பொதி விலங்காகப் பயன்படும் சிறு கழுதை வகை.

burr'ow, *n.* வளை, பொந்து, குறுவிலங்குகள் நிலந்துளைத்து இடும் நிலப்புழை வழி; மரப்பொந்து; கல்விடர்; தங்கிடம்; புகலிடம்; *v.* வளைதோண்டு; உட்குடை; உட்குடைந்தியற்று; பதுங்கு; துளைத்துச்செல், நிலங்குடைந்து கொண்டு வழி உண்டுபண்ணு; கண் மறைந்துசெல்; மறை மெய்ம்மைகள் அகழ்ந்தாராய்.

burr'y, *a.* தொத்திக் கொள்ளுகிற; ஒட்டிக்கொள்ளும் இயல்புடைய.

bur'sa, *n.* உராய்வு தடுப்பதற்குரிய பசைநீர் சுரக்கும் பை போன்ற அமைப்பு; மசகுநீர்ச் சுரப்பி; *pl.* bur'sae.

bur'sal [1], *a.* (வில.) மசகுநீர்ச் சுரப்பி சார்ந்த.

bur'sal [2], *a.* நிதி சார்ந்த.

burs'ar, *n.* பொருளாளர்; ஸ்காத்லாந்துநாட்டுப் பல்கலைக் கழகம்-பள்ளி இவற்றின் காட்சிச் சாலையாளர்; நிலைய அறக்கொடை பெற்றுப் பயிலும் மாணவர்.

bur'sarial, *a.* பள்ளிப் பொருளகத்தைச் சார்ந்த; உதவிச் சம்பளத்துக்கு உரிய.

bur'sarship, *n.* கல்விநிலையப் பொருளகரின் பணிநிலை; கல்விநிலையப் பொருளாளர் பணிமனை.

bur'sary, *n.* கல்லூரிப் பொருளகம்; கலைநிலையக் கருவூலம்; உதவிச் சம்பளம்.

bursch, *n.* செர்மன்நாட்டு மாணவர்; *pl.* bursch'en.

bursch'enschaft, *n.* செர்மனிநாட்டு மாணவர் மன்றம்; மாணவர் சங்கம்.

burse, *n.* பணப்பை; ரோமன் கத்தோலிக்கத் திருக்கோயில் வழிபாட்டு மேடையில் வழங்கும் பட்டுப்பை; நாணயமாற்றுச் சபை.

bursic'ulate, *a.* சிறு பையைப் போன்ற.

bursi'tis, *n.* (வில.) பசைநீர்ச்சுரப்பி வீக்கம்.

burst [1], *n.* வெடிப்பு, உடைவு, தகர்வு; குபீர்ப்பாய்ச்சல், திடீர்க் கிளர்ச்சி, திடீர் நிகழ்ச்சி; தெறிப்பு; கடும் காய்ச்சல்; திடீர்த்தோற்றம்; குடியாட்டு, வெறிமுறையாட்டு; *v.* நொறுக்கு; சிதறச்செய்; உடைத்துத்திற; உடைத்துச்செல்; நொறுங்கு, தகர்; உடைந்து வீழ், அழி; திடீர்ச் செயலாற்று; முரட்டுத்தனமாக செயலாற்று; திடீரெனத் தோன்று; உடைந்து வெளிப்படு; பகீரெனத்திற; திடீரென இயங்கு; நிரம்பி வழி, பொங்கு; சட்டென உரை; (தொ.) burst in, திடுமென நுழை; இடையே பேச்சில் தலையிடு; இடையே நுழை; burst into flame, கொழுந்துவிட்டு எரி; திடுமெனத் தீப்பற்று; burst into tears, கண்ணீர்விட்டு அழு; burst one's sides by laughing, விலாப்புடைக்கச் சிரி; burst out, வியப்புடன் பேசு; burst out laughing, குலுங்கச் சிரி; திடீர் நகையாடு; burst up, வெடித்துச் சிதறு, தகர், அழிவுறு; burst upon, திடுமெனத் தோன்று, உடன் வந்திடு.

burst [2], *v.* burst [1] என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

burst'er, *n.* துண்டாக்குபவர்; உடைப்பவர்; உடைத்துச் சிதறுவது.

burst'-up, *n.* முழு முறிவு; தகர்வு; குழப்பம்; கொந்தளிப்பு; வீழ்ச்சி, அழிவு; தோல்வி.

burth'en, *n.*, *v.* = burden.

bur'-this'tle, *n.* (தாவ.) ஒட்டிக்கொள்ளும் முட்செடிவகை.

bur'ton, *n.* இரண்டு அல்லது மூன்று உருளைகளுள்ள கப்பிக் கொக்கி.

Bur'ton, *n.* புகழ்சான்ற உயர்தரக் குடிவகை.

bur'weed, *n.* கொக்கி அமைப்புள்ள செடிவகை.

bu'ry, *v.* புதை, மண்ணிலிட்டு மூடு; பொதி, உள்ளிட்டு மூடு; கடலில் மூழ்க விடு; மறை, காட்சியிலிருந்து அகற்று; நிஜ விலிருந்து அகற்று; மற; (தொ.) bury the hatchet, பகையை விட்டொழி.

bur'ying-beetle, *n.* தன் இள உயிர்களுக்கு உணவாகச் சிறு பூச்சிகளைப் புதைத்துவைக்கும் வண்டுவகை.

bur'ying-ground, *n.* இடுகாடு, இறந்தவர்களைப் புதைப் பதற்காக ஒதுக்கப்பட்ட இடம், கல்லறை.

bur'ying-place, *n.* இடுகாடு, கல்லறை.

bus, *n.* விசைக்கலம், உந்துவண்டி, பஸ்; *pl.* bus'es.

bus'-bar, *n.* பல மின்சுற்றுக்களோடு இணைந்துள்ள மின்னேகி.

bus'boy, *n.* விசைக்கலத் துணை ஏவலாள்.

bus'by, *n.* வலதுபுறம் சிறு தொங்குபை போன்ற அமைப்புக் கொண்ட குதிரைவீரர்கள் அணியும் கம்பளித்தொப்பி.

bus'-fare, *n.* விசைக்கலக் கட்டணம்.

bush [1], *n.* குத்துச்செடி; புதர், குறுங்காடு; சிறுதூறு; சாராயக் கடைகளில் அடையாளத்திற்காகத் தொங்கவிடப் படும் செடிவகையின் கிளை; மரங்களில்லாத பயிரிடப்படா நிலம், தரிசு நிலம்; புறக்காடு; சாராயக்கடை; *v.* அடர்ந்து வளர்; குத்துச்செடி போலாகு; குத்துச்செடிகளை நடு; குத்துச்செடிகளுக்கு ஆதரவளி; பரம்பால் விதைகளை மூடு; (தொ.) beat about the bush, சுற்றி வளைத்துச் செல்.

bush [2], *n.* இருசு பதிந்து சுழல்வதற்குரிய உலோகக் கட்டை; இருசு சுழலும் வாய்வரைப்பள்ளம்; இருசு சுழலும் உருளை யின் உள்வரி உலோகக் கலவைப் பூச்சு; *v.* சக்கரத்தின் இருசு சுழல்கின்ற உருளைக்கு உலோகக் கலவை பூசு.

bush'-ba'by, *n.* குரங்கு போன்ற தென்ஆப்பிரிக்க பால்உணி யின உயிரினம்.

bush'craft, *n.* குத்துச் செடிகளின் பாங்கறி திறம்.

bushed, *a.* குத்துச் செடிகளில் மறைந்துபோன.

bush'el, *n.* மரக்கால், எட்டுக் காலன் அளவு.

Bush'ido, *n.* ஜப்பானிய நாட்டினரின் வீரப் பண்புநய மரபுத் தொகுதி.

bush'iness, *n.* அடர்த்திமை; மயிரடர்ந்த தன்மை; புதர் அடர்ந்த நிலை.

bush'man, *n.* பண்படுத்தப்படாத புதுநிலக் குடியிருப்பாளர்; நாடாக்கப்படாக் காட்டகத்து வாழ்நர்; காடுவழி செல்லும் நாடு சூழ்வாணர்.

Bush'-man, *n.* குட்டையான பழுப்பு நிறம் வாய்ந்த தென் ஆப்பிரிக்க நாடோடி வேட்டுவ இனத்தவர்.

bush'manship, *n.* குத்துச்செடிப் பாங்கறியும் ஆற்றல்.

bush'master, *n.* தென் அமெரிக்க நச்சுப் பாம்புவகை.

bush'-met'al, *n.* துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் கடும் பித்தளைக்கலவை.

bush'-pilot, *n.* மக்கள் வாழாப் பகுதிகள்வழி பயிலும்விமானி.

bush'-ranger, *n.* ஆஸ்திரேலியாவில் தப்பி ஓடிய குற்றவாளி, சட்டத்துக்குப் புறம்பானவர், பதுங்கி வழிப்பறி செய்து வாழ்பவர்.

bush'-rope, *n.* தொற்றிப்படருகிற திருகு கொடிவகை.

bush'-telegraph, *n.* செய்திவிரைந்து அலர்பரவுதல்.

bush'veld, *n.* குறுங்காடுகள் கொண்ட தென் அமெரிக்கப் புல்வெளி நாடு.

bush'whack, *v.* புதர்களில் திரி; குரங்குச் சண்டை முறை யில் போரிடு.

bush'whacker, *n.* குரங்குப் போர்முறைவீரர், பதுங்கிச் சண்டை செய்பவர்; காட்டான்; சிறு வெட்டாரிவாள்.

bush'y, *a.* புதர்கள் செறிந்த; புதர்போன்ற; அடர்ந்த; கற்றையான.

bus'ied, *v.* busy என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

bus'ily, *adv.* சுறுசுறுப்பாக; முழு ஈடுபாட்டுடன்; ஆழ்ந்து.

bus'iness, *n.* ஈடுபட்ட தொழில்; வாழ்க்கைத் தொழில்; வாணிகம்; மேற்கொள்ளப்பட்ட கடமை, ஊதியம்; கருத் தீடுபாடுடைய பொருள்; வாணிக நடவடிக்கை; வாணிகத் தொடர்பு, கொடுக்கல்வாங்கல்; தொழில் துறைத் தொடர்பு; உறவு; அலுவல், தொழில் ஈடுபாடு; தொழில் தொடர்பு, தொடர்பு; நாடகத்தில் கதை நடப்பு, நிகழ்ச்சிப் போக்கு; (பே-வ.) பொருள், செய்தி.

bus'iness-like, *a.* வினைத்திட்பமுடைய, செயலொழுங்கான, வாணிக முறைமை வழுவாத; செயலுக்கொத்த.

bus'iness-man', *n.* வாணிகத்துறையில் ஈடுபட்டுள்ளவர், வணிகர்.

busk [1], *n.* மார்புக்கச்சுக்கு முனைப்பு அளிப்பதற்குரிய எலும்பு அல்லது எஃகினாலான முகப்பு.

busk [2], *v.* (கப்.) கரையோரமாகச் சுற்றித்திரி; அங்குமிங்கும் செல்; தேடச் செய்.

busk [3], *v.* ஏற்பாடு செய்; உடை அணி; உடை அணிவி.

busked, *a.* மார்புக்கச்சில் முனைப்புடைய முகப்புப் பொருத்தப் பட்ட.

bus'ker, *n.* நாடோடிப் பாடகன்; ஊர்சுற்றும் நடிகன்.

bus'kin, *n.* முழந்தாளளவான காலுறை; பண்டைக் கிரேக்க நாட்டில் துன்பியல் நாட்கங்களில் நடிப்போர் உயரமிருத்துக் காட்ட வழங்கப்பட்ட மேட்டு உள்ளடி கொண்ட நீள் புதைமிதி.

bus'kined, *a.* உயர்ந்த மொத்தையான உள்ளடி கொண்ட புதைமிதி அணிந்த; துன்பியலான.

bus'man, *n.* பொறிவண்டி ஓட்டி; விசைக்கல வலவர்; பொறிவண்டித் துணைவர்.

buss [1], *n.* முரட்டுமுத்தம்; *v.* முரட்டுத்தனமாக முத்தமிடு.

buss [2], *n.* ஆலந்து நாட்டைச் சார்ந்த மீன்பிடிக்கும் சிறிய இருபாய்மரக்கலம்.

bust [1], *n.* மார்பளவான தலைச்சிலை; மார்புப்பகுதி; பெண்டிர் மார்பு அமைதி.

bust [2], *v.* = **burst** [2].

bust'ard, *n.* கொக்கு வரிசையில் சேர்க்கப்படும் பறவைவகை, வேகமாக ஓடக்கூடிய பேரினப் பறவைவகை.

bust'ed, *a.* மார்பு அமைவுடைய; மார்பளவாய தலைச்சிலை யால் அழகு படுத்தப்பட்ட.

bust'er, *n.* பெரியது; விந்தையானது, புதுமைவாய்ந்தது; எழுச்சி தருவது; கிளர்ச்சி தருபவர்; குதிரை பழக்குபவர்; ஆஸ்திரேலியாவில் புயலார்ந்த தென்திசைக் காற்று.

bu'stle [1], *n.* சுறுசுறுப்பு; ஆரவாரம்; இரைச்சல்; சந்தடி; அமளி, சிறு குழப்பம்; *v.* விரைந்தோடியாடிச் செயலாற்று; கிளர்ந்தெழு, சுறுசுறுப்பாக இரு; ஆரவாரம் செய்; இரை; அமளிபண்ணு.

bu'stle [2], *n.* இடையினின்றும் விரிந்து சென்று தொங்கு வதற்கான மெத்தைபோன்ற பாவாடை உட்சட்ட அமைப்பு.

bust'up, *n.* தகர்வு, முறிவு, தோல்வி.

bus'y, *a.* சுறுசுறுப்பான; முழுதும் வேலையில் ஈடுபட்ட; ஆர வாரக் கிளர்ச்சியுடைய; ஆர்ப்பாட்டம் செய்கிற; விடா முயற்சியுள்ள; ஓயாது குறுக்கீடு செய்கின்ற; *v.* சுறு சுறுப்பாக்கு; ஈடுபட்டுழைக்க வை; முழுஈடுபாடு கொள்ளுவி; (தொ.) busy idle, பயனில் சிறு செயலில் ஈடுபட்டுள்ள; busy idleness, பயனில் செயலீடுபாடு.

bus'y-body, *n.* பிறர் அலுவல்களில் தலையிடுபவர்; செல் வோரைக் காணும்படி பலகணியில் அமைக்கப்பட்டகண்ணாடி.

bus'yness, *n.* சுறுசுறுப்பாக இருக்கும் தன்மை.

but [1], *n.* மறுப்பு, எதிர்ப்பு, தடை; *a.* தடையான, எதிர்க்கிற; *v.* மறுப்புக் கூறு, தடைசெய், தடையாக எதிரேறை.

but [2], *n.* வெளியறை, புற அறைச் சமையற்கட்டு; (தொ.) but and ben, உள்ளும் வெளியும், முழுதும்.

but [8], *rel. pron.* அல்லாதவர்; *adv.* ஒழிய, மட்டும்; *rel. adv.* இல்லாவிடில், அல்லா நிலையில்; *conj.* ஆனால், எனினும்; மாறாக, அவ்வாறன்றி, எதிராக; (தொ.) but for, அன்றி; but that, என்றில்லாவிட்டால்.

butadi'ene, *n.* (வேதி.) செயற்கை இரப்பர் செய்யப் பயன் படும் நீரகக் கரிய வகை.

bu'tane, *n.* (வேதி.) நீரகக்கரியவகை, சதுப்புநிலவளிவகை.

butch'er, *n.* இறைச்சிக் கடைக்காரன், தினற்பொருட்டுக் கொல்லுபவன்; தசைவாணிகன்; இரத்தக்களரிச் செயல் களில் விருப்புள்ளவன்; கொலைகாரன்; மீன் தூண்டிலுக் கான செயற்கைப்புழு; *v.* உணவிற்காகக் கொலைசெய்; கொல்லு; சிதை, கொடுமையாகக் கொல்லு; இரத்தக் களரி யாக்கு; நடிப்பைப் பாழ்படுத்து; சிதைத்துப் பாழ்படுத்து.

butch'ering, *n.* தினற்பொருட்டு உயிர்களைக் கொல்லுதல்.

butch'erly, *a.* இறைச்சிக் கடைக்காரனைச் சார்ந்த; கசாப்புக் காரன் போன்ற; கொடுமைமிக்க.

butch'ery, *n.* பெருங் கொடுமை, சித்திரவதை, படுகொலை; கொலைக்களம்; இறைச்சி வெட்டுமிடம்; இறைச்சிக்கடை.

butch'ing, *n.* = butchering.

But'ea, *n.* (தாவ.) உயரிய பிசின் தரும் பட்டாணிக் குடும்பஞ் சார்ந்த மரவினம்.

but'ler, *n.* உணவுமேடைப் பணியாள்; தொண்டுழியர்; அரசர் அகப்பணியாள்; *v.* உணவுமேடைப் பணியாளாக வேலைசெய்.

but'lerage, *n.* அகப்பணித்துறை.

but'lership, *n.* உண்கலங்கள் - சாராயவகைகள் ஆகியவற் றின் பொறுப்பாளர் நிலை; அரசகுடும்ப மேலாள் நிலை.

but'lery, *n.* சமையல் தட்டு முட்டகம்; அரச குடும்ப மேலா ளின் குடிகல உக்கிராணம்.

but'ment, *n.* மூட்டு; மூட்டி இணைத்தல்; பொருந்திக் கூடுதல்.

butt [1], *n.* தலையால் முட்டுதல்; இடித்தல்; *v.* ஆடுபோன்று தலையாலே முட்டு; (தொ.) butt in, தலையிடு, தலையை உள் நுழைய விடு, துருத்து.

butt [2], *n.* பெரிய தேறல்மிடா (இன்தேறல் மிடா = 126 காலன் கள், சாராயவகை மிடா = 108 காலன்கள்.)

butt [3], *n.* வில்லாண்மைப் பயிற்சிக்கான இலக்கு; மேடு, திட்டு; இலக்குக்குப் பின்னாலுள்ள மேடு; கேலிக்கூத்திற்கு இலக்கானவர்; காட்டுக் கோழி சுடுபவர்களின் மறைவிடம்.

butt [4], *n.* தடித்த முனை; மூடு, தறிகுற்றி, தூர், அடிமரம்; விலங்குத் தோலின் பிற்பகுதி; நடிந்த தோல்; சுருட்டின் கடைக்காம்பு; எஞ்சிய பகுதி, எச்சம்; பலகையின் மூட்டு விளிம்பு; *v.* சார்: எல்லையில் இரு; மூட்டு, முனைகளைச் சேர்.

butt [5], *n.* தட்டையான மீன் இனம்.

butte, *n.* செங்குத்தாயுயர்ந்து தட்டையான உச்சியுடன் சூழ எந்தொடர்பு மில்லாமல் தனியொரு தூபிபோன்று நிற்கும் குன்று, கோவுயர் குன்று.

butt'-end, *n.* தடிந்த முனை; கைப்பிடி.

butt'er [1], *n.* தலையாலே முட்டும் விலங்குவகை.

butt'er [2], *n.* வெண்ணெய்; வெண்ணெய் போன்ற பொருள்; வெண்ணெய் கலந்த பொருள்; வெண்ணெய் போன்ற பாசிதை வகை; முகப் புகழ்ச்சி; *v.* வெண்ணெய் தட வு; சாந்துக் கலவை பூசு; மென்மையான பொருளைத் தடவு; முகத்துக்கெதிரே புகழ்; நழுவ விடு; பிடிக்கத் தவறு; கைப் பற்றத் தவறு.

butt'er-boat, *n.* மேசையில் உருக்கின வெண்ணெயை வைக் கும் கலம்.

butt'er-box, *n.* வெண்ணெய்ப் பெட்டி; ஆலந்துநாட்டினுக்கு வழங்கிய கேலிப் பெயர்.

butt'er-cool'er, *n.* மேசைமீது நீரில் வெண்ணெயை வைத் திருக்கப் பயன்படும் கலம்.

butt'ercup, *n.* கிண்ண வடிவான பொன்னிறப் பூக்களைக் கொண்ட செடிவகை.

butt'ered, *a.* வெண்ணெய் பூசிய; (தொ.) buttered eggs, பால் வெண்ணெயோடு முட்டை கலந்து வேகவைத்த உணவு.

butt'er-fingered, *a.* எதையும் எளிதில் நழுவ விடுகிற.

butt'er-fingers, *n.* மரப்பந்தாட்டத்தில் பந்தினை நழுவ விடுபவர்.

butt'erfly, *n.* வண்ணத்துப்பூச்சி; மேனி மினுக்குநர்; பிலுக்குக்காரர்; *a.* நொய்ம்மையான; நிலையற்ற; துடிப் புள்ள; (தொ.) butterflies in the stomach, வயிற்று நரப் புத் துடிப்பு; butterfly breaststroke, நெஞ்சுறழ் நீந்து வகை விகற்பம்.

butt'erfly-nut, butt'erfly-screw, *n.* சிறகு வடிவான திருகு அமைப்புள்ள மரையாணி.

butt'erfly-orchis, *n.* வண்ணத்துப்பூச்சி போன்ற வடி வுடைய மலர்கள் கொண்ட செடிவகை.

butt'erine, *n.* செயற்கை வெண்ணெய்.

butt'eris, *n.* குளம்புசீவி, குதிரைக்கு இலாடமடிப்பவன் குளம்பு சீவுதற்கு வைத்திருக்கும் கருவி.

butt'er-knife, *n.* வெண்ணெய் எடுக்கப்பயன்படும் மொட்டை யான கத்தி; மழுங்கல் கத்தி.

butt'ermilk, *n.* மோர்; வெண்ணெய் நீக்கப்பட்ட உறை பால்.

butt'er-mus'lin, *n.* வெண்ணெய் சுற்றி வரிவதற்கான தளர்த்தியாக நெய்யப்பட்ட துணிவகை.

butt'er-nut, *n.* எண்ணெய்ப்பசை உள்ள தென் அமெரிக்கக் கொட்டைவகை; கொட்டைவகை தரும் மரம்; மரவகையின் மென்சாயல் நிறமுள்ள பலகை.

butt'er-paper, *n.* வெண்ணெய் சுற்றப் பயன்படும் ஒளி ஊடுருவும் தாள்.

butt'er-pat', *n.* வெண்ணெய்க் கட்டி; வெண்ணெயை உருப் படுத்துங் கருவி.

butt'er-print, *n.* வெண்ணெய்க்கு உருவம் கொடுக்கும் பொறிப்புக் கருவி.

butt'er-scotch, *n.* வெண்ணெய் மிகுதியான அளவில் சேர்த் துள்ள தின்பண்டவகை.

butt'er-tree, *n.* வெண்ணெய் மரம், வெண்ணெய் போன்ற பொருள் தரும் மரவகை.

butt'er-wife, butt'er-wom'an, *n.* வெண்ணெய் கடைந்து விற்பவள், வெண்ணெய்யள்.

butt'erwort, *n.* பூச்சிகள் உண்ணுகின்ற பளபளக்கும் இலை களைக்கொண்ட சதுப்பு நிலச்செடி.

butt'ery [1], *n.* வீட்டுச் சரக்கறை, விடுதிச் சரக்கறை.

butt'ery [2], *a.* வெண்ணெய் போன்ற; வெண்ணெய் தடவப் பட்ட.

butt'ery-bar', *n.* தேறல் அறையின் கலவறையடுக்கு.

butt'ery-hatch', *n.* திறந்த மேல்பாதி வழியாகப் பொருட் கிடங்கினின்று பொருள்களை எடுத்துக் கொடுக்கப் பயன்படும் கதவு.

butt'ock, *n.* பிட்டம், உடலின் பின்புறத்தில் புடைப்பாக உள்ள பகுதி; மற்போரில் பிட்டத்தால் தள்ளுதல்; *v.* பிட் டத்தால் தள்ளு.

butt'on, *n.* குமிழ்மாட்டி, சட்டைமாட்டுவதற்கான குமிழ்க் கொளுவி, பொத்தான்; குமிழ், மரை, சுரை, மொக்குள்; விரியாத காளான்; பரு; மின்சார விற்குமிழ்; சிறுதிறப் பொருள்; நடித்து ஏமாற்றும் உளவாள்; ஒரு சிறிது; *v.* குமிழ்கொண்டு மாட்டு; இறுக மூடு; குமிழ் மாட்டி வைத்திணை.

butt'oned, *a.* கொளுவி மாட்டப்பெற்ற, பொத்தான் பொருத்தப் பட்ட; (தொ.) buttoned up, கைவசப் பாதுகாப்பாக; செயலுக்குச் சித்தமாக.

butt'onhole, *n.* குமிழ்மாட்டி செருகும் துளை; பொத்தான் செருகும் துளைக் குரிய மலர்; மலர்க் கொத்து; *v.* பொத்தான் செருகும் துளைபோடு, ஓரத்தைப் பாதுகாக்கத்தக்க தையல் போடு; பேச்சின்போது பிடித்து நிறுத்திவை.

butt'onhook *n.* பொத்தானைத் துளைக்குள் மாட்டி இழுக்கும் கொக்கி.

butt'onless, *a.* கொளுவியற்ற, பொத்தான் இல்லாத.

butt'ons [1], *n.* தோள் வார்ப்பட்டையணிந்த பணியாள்.

butt'ons [2], *n. pl.* ஆட்டுச் சாணம், பிழுக்கை.

butt'on-scurvy, *n.* வெப்பமண்டலத்துக்குரிய தோல் சார்ந்த தொற்றுக் கொள்ளை நோய்வகை.

butt'on-stick, *n.* பொத்தானுக்கு மெருகிடப் படைவீரர்கள் பயன்படுத்தும் சாதனம்.

butt'on-through, *n.* முன்புறமுழுதும் குமிழ்மாட்டியிட்ட பெண்டிர் உடை.

butt'ony, *a.* பல பொத்தான்களையுடைய; பொத்தானைப் போன்ற.

butt'ress, *n.* சுவர் தாங்கி, சுவர் அணை; உதைகால், ஆயக் கால்; *v.* முட்டுக் கொடு, அண்டை கொடு; தாங்கு, ஆதரவு கொடு.

butt'ress-root, *n.* தாங்கும் வேர்; உதவி வேர்; பின் தோன்றும் வேர்.

butt'y, *n.* (பே-வ.) தோழன், ஏடன்.

bu'tyl, *n.* (வேதி.) வெறியப் படிமூலப் பொருள்.

bu'tylene, *n.* (வேதி.) மூன்று சமஎடை விகிதமுள்ள தனிமங்கள் கலந்த நீர்க்கரிமப் பொருள்.

butyra'ceous, *a.* வெண்ணெய் போன்ற; வெண்ணெய் அடங்கிய.

bu'tyrate, *n.* எளிதில் ஆவியாகிற எண்ணெய்ப்பசையுள்ள காடி உப்பு.

buty'ric, *a.* வெண்ணெயைச் சார்ந்த; வெண்ணெய்க் கலப் புள்ள; (தொ.) butyric acid, எளிதில் ஆவியாகிற எண் ணெய்ப் பசையுள்ள காடி.

bux'om, *a.* கொழுமையான; அழகிய; வளைந்து கொடுக்கிற; இணங்கி வருகிற; மகிழ்ச்சிமிக்க; சுறுசுறுப்புள்ள; எழுச்சியுள்ள; தளதளப்பான.

buy, *n.* விலைக்கு வாங்குதல்; *v.* கொள், விலைக்கு வாங்கு; அரிதிற்பெறு; கைக்கூலி கொடுத்துத் தன் வயமாக்கிக் கொள்; ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் பெறு, பரி மாற்றம் செய்; (தொ.) buy in, வாங்கிச் சேமி; ஏலக் காரருக்காகத் திரும்ப வாங்கிவை; buy off, கைக்கூலி கொடுத்து விடுவிப்புரிமை வாங்கு, பணம் தந்து பொறுப்புத் தவிர்; buy out, விலை தந்து முழு உடைமையாகப் பெறு; கைக்கூலி கொடுத்து உரிமை பெறு; buy over, கைக்கூலி கொடுத்து வசப்படுத்து; buy up, ஒரே மொத்தமாக வாங்கு; முழுச் சரக்கையும் விலைக்குவாங்கு.

buy'er, *n.* விலைக்கு வாங்குபவர்; பொருள் வாங்குவதற்கான பணியாள்; (தொ.) buyers' market, சரக்கு வளமும் விலை மலிவும் உடைய வாணிகக்களம்; buyers' strike, விலைக் குறைப்புக்காகச் சரக்கு வாங்குபவர்கள் ஒத்துவாங்கா திருத்தல்.

buzz [1], *n.* வண்டின் மென் முரலொலி; அடங்கிய இரைச்சல்; கலகலப்பு; *v.* முரலு, வண்டுபோல் ஒலி எழுப்பு; இரைச்ச லிடு, அடங்கிய அரவம் உண்டுபண்ணு; இறக்கைகளை அதிர்வித்து ஓசை உண்டுபண்ணு; மெல்லப் பரவு; தொலை பேசிக் கம்பியின்மூலம் தந்திமொழி (Morse) ஒலிக்குறி அறிவிப்புச்செய்; விமானத்துறையில் தாழ்ந்து மிக அருகாகப் பறந்துசெல்; அருகே பறந்து போக்கில் தலையிடு.

buzz [2], *v.* மதுவைக் கடைசித்துளிவரை விடாமல் குடி.

buzz'ard [1], *n.* பருந்துவகை; முட்டாள், அறிவிலி; கோழை; சோம்பேறி.

buzz'ard [2], *n.* தட்டுத் தடுமாறும் இயல்புடைய பூச்சிவகை; தவறிழைத்துக் குளறுபடி செய்பவர்.

buzz'ard-clock, *n.* பயிர்களுக்குத் தீங்கிழைக்கும் பழுப்பு நிறப் பெருவண்டு.

buzz'-bomb, *n.* பறக்கும் குண்டு.

buzz'er, *n.* வண்டுபோன்ற ஒலி எழுப்புபவர்; முணுமுணுப் பவர்; ஒலிக் கருவிவகை; வட்டமான இரம்பம்; மின்சார அறிவிப்புக் கருவி.

buzz'ing, *n.* ஒலித்தல்; முணுமுணுத்தல்; முரலுதல்; *a.* ஒலிக் கிற; முணுமுணுக்கிற; முரலுகிற.

buzz'-saw, *n.* வட்டமான இரம்பம்.

buzz'-wig, *n.* அடர்த்தியான பெரிய பொய்மயிர்த்தொப்பி.

buzz'y, *a.* வண்டுபோல் ஒலி எழுப்புகிற; முரலுகிற; முணு முணுக்கிற.

bwa'na, *n.* ஆப்பிரிக்க வழக்கில் தலைவர், ஐயா.

by [1], *adv.* அருகே, பக்கமாக; ஒதுக்கி, சேமித்து; அப்பால், விலக்கி; *prep.* ஆல், மூலமாக, காரணத்தினால்; துணை கொண்டு; உடன், உடனாக; ஊர்திமூலம்; வழியாக, முறையில்; ஊடாக; அருகில், அருகாக; இடத்தில், கைவசமாக; சாய் வாக; பக்கமாக, கடந்து; பெயரால், முன்னிலையில்; இடை யீட்டு வாயிலாக, இடையாள்மூலமாக; வகையில்; தொடர்ந்து; வரிசையில்; இணங்க; காலத்தில்; காலத்துக்குள்ளாக; கொண்டு பெருக்கி, பெருக்கலாக; கொண்டு வகுத்தபடி; அளவில்; மாற்றளவையாக; ஒப்பிடு செய்தபடி; (தொ.) by all means, எப்படியாவது; எவ்வழியிலாயினும்; தடையின்றி; by and by, எதிர்காலம்; வருங்காலத்தில் ஏதாவதொரு சமயத்து; விரைவில்; by and large, மொத் தத்தில், மொத்தமாகப் பார்த்தால்; (கப்.) காற்றருகிலும் அப்பாலும்; by default, செய்யத் தவறியதனால், செய்யாமல், செயல் தவறி; by dint of, தொடர்ந்திடைவிடாத் தன்மையால்; by oneself, தானாக, பிறர் உதவியின்றி; by the by, by the way, இருநிலையில், இதற்கிடையில்; by way of, வழியாக; ஆக, முறையில்; போகிறபோக்கில், தற்செயலான தன்மையில்; day by day, நாள்தோறும்; set by the ears, பூசல் மூட்டி விடு.

by [2], *n.* = bye.

by'-blow, *n.* பக்கவாட்டான அடி; முறைகேடாகப் பிறந்த குழந்தை.

by'coket, *n.* உயர்குடியர் அணியும் வளைந்த கூர்முனைத் தொப்பி.

by'-cor'ner, *n.* நேர்பாதையிலிருந்து விலகி ஒதுங்கிய இடம்.

bye, *n.* துணை நிலைப்பொருள்; முக்கியமல்லாத கிளைச்செய்தி; நேரடிநோக்கில்லாத பொருள்; விளையாட்டுப் போட்டியில் ஆடாமல் அடுத்தவட்ட நிகழ்ச்சியை அடைபவர் நிலை; கோழிச் சண்டையில் கிளைக்காட்சி; குழிப்பந்தாட்டத்தில் போட்டி முடிவில் எஞ்சிய குழிகளைக் குறித்த ஆட்டம்; குழிப் பந்தாட்டத்தில் ஆட்டம் முடிவுற்றபின் எடுக்கும் குழிகள்; *a.* முக்கியமல்லாத, துணைமையான; விலகிய; கிளைநோக்க முடைய, தனியான; நேரல்லாத, சுற்றுமுகமான.

bye'-law, *n.* = bylaw.

by'-elec'tion, *n.* துணைத்தேர்தல், இடைத்தேர்தல்.

by'-end, *n.* துணைநோக்கம்.

by'-form, *n.* கிளை ஒழுங்குமுறை; வழக்கு நெறியிலிருந்து சிறிது மாறுபட்ட ஒழுங்கு.

by'-going, *n.* இடைகடப்பு, கடந்து செல்லுதல்; (தொ.) in the by-going, போகிற போக்கில், போகிறவாக்கில்.

by'gone, *a.* கடந்துசென்ற, கழிந்த.

by'gones, *n. pl.* சென்றகால நிகழ்ச்சிகள், பழங்குறைபாடுகள்.

byke, *n.* = bicycle. bike.

by'lane, *n.* குறுக்குச்சந்து.

by'law, *n.* துணைவிதி; கிளைநிலைச் சட்டவிதி; தனிநிலைச் சட்டவிதி; இணைநிலைவிதி; துணைநிரப்பு ஒழுங்கு; உய்த்துணர் ஒழுங்கு.

by'-mo'tive, *n.* வெளியிட்டுக் கூறுத உட்கோள், உள்நோக்கம், தனிநோக்கம்.

by'-name, விளையாட்டுப் பெயர்; சாட்டுப் பெயர்; அடைபெயர்; இழிவுப் பெயர்; புனைபெயர்.

by'pass, *n.* பக்கவழி, பாதை இடைகடப்பு நெறி; நீரோட்டமின்னோட்டங்களில் இடைத்துரடு கடக்கும் சுற்றுவழி; *v.* பக்கவழியாகச் செல்; கிளைவழியூடாகச் செலுத்து; இடைச் சுற்றி வழியில் பாயவிடு; வஞ்சிக்க முயலு.

by'passage, *n.* கிளைவழி, ஊடுவழி.

by'past, *a.* கடந்த, சென்ற, கழிந்த.

by'path, *n.* கிளைவழி, ஒதுக்குவழி; சுற்றுமுகப்பாதை.

by'play, *n.* நாடகத்துணை நிகழ்ச்சி; கிளைக்காட்சி; துணை உறுப்புக்களின் நிழற்காட்சி.

by'plot, *n.* கிளைக்கதைக்கூறு, கதையின் துணைநிகழ்ச்சி.

by'-product, *n.* கிளைவிளைவு, துணைப்பயன், இயந்திரத் தொழிலில் கிடைக்கும் இடைவிளைவுப் பொருள்.

byre, *n.* மாட்டுக் கொட்டில், தொழுவம்.

byr'law, *n.* உள்ளூர் வழக்குகளைக் குறித்த பஞ்சாயத்துப் போன்ற மக்கள் வழக்குமன்ற முறைமை.

byr'law-man, *n.* பொதுவர், நடுவர், நடுநிலைத் தீர்ப்பாளர்.

byr'nie, *n.* கவச மேற்சட்டை, மார்புக்கவசம்.

by'-road, *n.* ஒதுக்குப் பாதை, பக்கப் பாதை.

Byron'ic, *a.* பைரன் (Lord Byron) என்ற ஆங்கிலக் கவிஞரின் பண்புகளையுடைய; பைரனின் கவிதைப் பண்பு சார்ந்த; உணர்ச்சி மீறிய; செயற்கை உளப்பாட்டுச் செறிவுடைய; சோகமிக்க.

By'ronism, *n.* ஆங்கிலக் கவிஞன் பைரன் (Lord Byron) பண்பு.

by'-speech, *n.* திடீர்ப்பேச்சு.

byssa'ceous, *a.* மெல்லிழைத் தொகுதிகள் கொண்ட.

byss'al, *a.* கிளிஞ்சில்களின் இழைத்தொகுதியைச் சார்ந்த.

byss'ine, *a.* மெல்லிய சணல் நாரால் செய்யப்பட்ட.

byssinos'is, *n.* பஞ்சுத் தொழிலாளர்களின் நுரை ஈரல் நோய் வகை.

byss'us, *n.* மென் மஞ்சள் சணல்; சணல்துணி; கிளிஞ்சில்கள் பாறைகளில் ஒட்டிக்கொள்ள உதவும் பட்டுப் போன்ற மெல்லிழைத் தொகுதி.

by'stander, *n.* பக்கத்தில் நின்றுகொண்டிருப்பவர்; பார்வையாளர்.

by'street, *n.* மூலத்தெரு.

by'thing, *n.* சிறப்பில் பொருள், சிறு முக்கியத்துவம் உடைய பொருள்.

by'-time, *n.* இடை ஓய்வுக்காலம்.

by'way, *n.* தனிவழி, மறைவான பாதை, கிளைச்சாலை, ஒதுக்குத் தெரு.

by'woner, *n.* மற்றொருவர் பண்ணையில் உரிமைமுறையுடன் தங்கியிருப்பவர்; வெள்ளொட்டுயிர் வகை.

by'word, *n.* பொதுவழக்குச்சொல்; பழமொழி; பழியுரை; பொது ஏளனத்துக்குரியவர்.

by'-work, *n.* ஓய்வுநேர வேலை, இடைவேலை.

Byzant'ine, *n.* பண்டைக் கீழை ரோமப் பேரரசின் (Eastern Roman Empire) தலைநகரான பைசாண்டியம் (Byzantium) அல்லது கான்ஸ்டான்டிநோப்பிள் (Constantinople) நகரத்தவர்; *a.* பைசாண்டியம் நகரைச் சார்ந்த; கீழை ரோமப் பேரரசுக்குரிய; கீழை ரோமப் பேரரசுக்காலக் கட்டிடக் கலைப்பண்பு சார்ந்த; (தொ.) Byzantine church, கிழக்கு அல்லது கிரேக்கத் திருச்சபை; Byzantine Empire, கீழை ரோமப் பேரரசு (கி. பி. 395-1453).

Byzantinesque', *a.* பைசாண்டைன் நகரப்பண்பு சார்ந்த.

Byzant'inism, *n.* பைசாண்டைனுக்குரிய நகரப் பண்பு; கீழை ரோமப் பேரரசுக்காலக் கலைப்பாணி.

Ca'aba, (அரா.) *n.* மெக்காவிலுள்ள கருந்துரபி உட்கொண்ட இஸ்லாமிய உலகின் மையத் திருநிலைக் கட்டிடம்.

cab[1], *n.* வாடகை வண்டி, வாடகை உந்து கலம், சிறுமோட்டார் வண்டி; புகைவண்டியில் ஓட்டுபவர்களுக்குரிய பாது காப்புடைய இருக்கையிடம்.

cab[2], *n.* கூல முதலிய பொருள்களுக்குரிய எபிரேய முகத்த லளவை.

cabal', *n.* மறை சூழ்ச்சி, சதி; மறை குழு; சதிக்கூட்டம்; (வர.) இங்கிலாந்தில் இரண்டாம் சார்லஸ் அரசன் காலத்திய ஐவரடங்கிய அமைச்சர் குழுவினைக் குறித்த பெயர்; *v.* மறை முகக் கட்சி அமை; சதிசெய், சூழ்ச்சிசெய்.

cab'ala, *n.*=cabbala.

caball'er, *n.* சதி செய்பவர்.

cab'alline, *a.* குதிரையைச் சார்ந்த.

caba'na, *n.* சுருட்டு வகை.

cab'aret, *n.* பிரெஞ்சுச் சாராயக்கடை; விருந்தினருக்கு உண்டிச்சாலை அளிக்கும் ஆடல்பாடல்.

cabb'age[1], *n.* கோசுக்கீரை, முட்டைக்கோசு.

cabb'age[2], *n.* தையற்காரன் களவாகக் கைக்கொள்ளும் துணி; *v.* தைக்கக் கொடுக்கும் துணியில் களவு செய்; களவாகக் கைக்கொள்.

cabb'age-butt'erfly, *n.* முட்டைப்புழுப் பருவத்தில் முட்டைக் கோசின் இலைகளை அரித்துத் தின்னும் பெரிய வெள்ளை நிற முள்ள வண்ணத்துப் பூச்சி.

cabb'age-net, *n.* கோசுக்கீரைக் கொதி வலை.

cabb'age-rose, *n.* முட்டைக்கோசைப் போன்ற கொத்து ரோசாவகை.

cabb'ala, *n.* எபிரேய மறை வாய்மொழி மரபு; மறைமுறை விளக்கம், மறைநிலைக் கோட்பாடு; மறைதுறை அறிவுக்குவை.

cabb'alism, *n.* மறை பொருட் கோட்பாடு.

cabb'alist, *n.* மறை பொருட் கோட்பாட்டாளர்.

cabbalis'tic, cabbalis'tical, *a.* மறை பொருளியலைச் சார்ந்த; மறைபொருளுள்ள.

cabb'y, *n.* (பே-வ.) வாடகை வண்டி ஓட்டுபவர்.

cab'er, *n.* வட ஸ்காத்லாந்தில் வீரப்பயிற்சி விளையாட்டில் பயன்படுத்தப்படும் எறிகோல் வகை.

cab'in, *n.* சிறு குடில்; சிற்றறை; கப்பலறை; *v.* சிற்றறையில் இட்டடை; கப்பலறையில் தங்கி வாழ்.

cab'in-boy, *n.* கப்பல் அறை ஊழியன்.

cab'inet, *n.* தனி அறை; மறைவடக்கமான அறை; நிலைப் பெட்டி, இழுப்பறைப் பெட்டி; முக்கிய அமைச்சர்களின் ஆய்வறை; முக்கிய அமைச்சர் குழு, அமைச்சரவை; (தொ.) cabinet council, அமைச்சரவை ஆய்வுக்கூட்டம்; cabinet crisis, அமைச்சரவை நெருக்கடி, அமைச்சரவை மாறுதல் கட்டம்; cabinet edition, ஏட்டின் நூலகப் பதிப்புக்கும் பொது நிலைப் பதிப்புக்கும் இடைநிலைப்பட்ட பதிப்பு; cabinet minister, ஆட்சிக்குழுவுட்பட்ட அமைச்சர், அமைச்சரவை மதிப்புடைய அமைச்சர்; cabinet photograph, $3\frac{7}{8}$ அங்குல அகலமும் $5\frac{1}{2}$ அங்குல உயரமும் உடைய நிழற் படம்; cabinet pudding, பிட்டப்ப வகை; முட்டைப்பால் கலந்த மென்மையான மாப்பண்ட வகை.

cab'inet-maker, *n.* நிலைப்பெட்டி செய்பவர்; தச்சர்.

cab'inet-making[1], *n.* அமைச்சரவை அமைத்தல்.

cab'inet-making[2], *n.* நிலைப்பெட்டி செய்தல்; தச்சுவேலை.

cab'in-pass'enger, *n.* கப்பல் உயர்நிலைப் பிரயாணி.

cab'in-ship', *n.* ஒரே வகுப்புப் பிரயாணிக் கப்பல்.

ca'ble, *n.* கம்பி வடம்; வட்கயிறு; நங்கூரச் சங்கிலி, நங்கூர வடம்; கடலடித் தந்திக் கம்பிவடம்; அடிநிலக் கம்பி வடம்; கடல் கடந்து செல்லும் தந்திச் செய்தி; (க-க.) கயிற்றுருவக் கட்டு அணி அமைப்பு; *v.* கம்பி வடத்தினுல் கட்டு; கம்பிவட அமைப்புப் பொருத்து; கடல் கடந்து செல்லும் தந்திச் செய்தி அனுப்பு.

ca'blegram, *n.* கடல் கடந்த தந்திச் செய்தி.

ca'ble-laid, *a.* வலம்புரி முறையில் கம்பிவடப்புரி முறுக்கிய; முப்புரி முறுக்கிய.

cab'le-length, *n.* கப்பல் துறை நாழிகை நீளத்தில் பத்தில் ஒரு பகுதி, ஏறத்தாழ 600 அடி நீளம்.

ca'ble-mould'ing, *n.* மணிவடம், வடத்தைப் போன்றிழைக் கப்பட்ட மணிக்கோவை; மணிவடம் போன்ற வார்ப்புரு.

ca'ble's-length, *n.*=cable-length.

ca'blet, *n.* பத்தங்குலத்திற்குக் குறைவான சுற்றளவுள்ள சிறு கம்பி வடம்.

ca'ble-way, *n.* கம்பி விசைக்கல அமைப்பு, கம்பி விசையில் சரக்கேற்றிச் செல்லும் விசைக்கலப் பாதை.

ca'bling, *n.* வடக்கயிறு போன்ற அமைப்பு; சித்திரவேலை; மணிவடம் போன்ற வார்ப்புரு; தூணின் செவ்வுயரக் குழுவினைக் கம்பி வார்ப்புருவால் நிரப்பும் அணி அமைப்பு.

cab'-man, *n.*=cabby.

cabob', (அரா.) *n.* பொரித்த கறி; பூண்டுகளுடன் பொரித்த கறியுணவு வகை, சூட்டிறைச்சிக்கறி; *pl. cabobs'*.

cabochon, (பிர.) *n.* மெருகிடப்பட்ட பட்டையிடா மணிக் கல்; முகடு உருண்டையாகவும் அடிதட்டையாகவும் பட்டை யிடப்பட்ட ஒண்மணி; *a.* மெருகிடப்பட்ட; உருள்பட்டை யிடப்பட்ட.

caboose', *n.* கப்பல் சமையற்கட்டு; திறந்த வெளிச் சூட்டடுப்பு; புகை வண்டி ஆக்கத் தொழிலாளர்களுக்காக வேலை நேரத்தில் இருப்புப்பாதை மீது செல்லும் தனி வண்டி; புகைவண்டிக் காவலர் பெட்டி.

cab'otage, *n.* கரையோர வணிகம்; நாட்டு வரம்பிற்குள் போக்குவரத்துத் துறையை அந்நாட்டுரிமையாக ஒதுக்கி வைத்துக்கொள்ளல்.

cab'-rank, *n.* வாடகை வண்டிகள் நிற்கும் வரிசை.

ca'bre, *a.* (கட்.) எற்றி எறிகிற; வானூர்தி வகையில் வால் தாழ்ந்து பறக்கின்ற.

cab'rie, *n.* கவர்முள் கொம்பு, கலைமான் வகை.

cab'riole, *n.* தட்டுமுட்டுப் பொருள்களின் வளைகால் பாணி; *a.* வளைகாலுள்ள.

cabriolet', *n.* இருசக்கர வண்டி; மடிக்கத்தக்க கவிகை முகடுள்ள உந்து வண்டி; கை வளைவுள்ள சிறு சாய்வு நாற்காலி.

cab'-runner, *n.* வாடகை வண்டியைக் கூப்பிடுபவன், வாடகை வண்டி மூட்டை தூக்குபவன்.

cab'-tout, *n.*=cab-runner.

caca'o, *n.* அமெரிக்க வெப்ப மண்டல மரவகை, 'கொக்கோ' மரம்; 'கொக்கோ' விதை.

cachae'mia, *n.* குருதிக் கோளாறு.

cache, *n.* பதுக்கிடம்; புது நிலத்தேட்டாளர்கள் உணவு நிதி படைக்கலங்களைப் பதுக்கி வைக்கும் மறைவிடம்; புதையல், மறை பொருட்குவை; மறைவில் புதைத்து வை.

cachec'tic, chchec'tical, *a.* உடல்நலக் குறைவான; மனநிலை இழிந்து சீர்கெட்ட.

cach'e-pot, *n.* பூந்தொட்டியை உள்ளடக்கிய அணிப் பூந் தொட்டி.

cachet, (பிர.) *n.* முத்திரை; நாணயமுடைமை குறித்த தனி முறைப் பொறிப்பு, போலியிலிருந்து பிரித்தறியும் சின்னம்; சிறு மருந்துப் பொதியறை.

cachex'ia, cachex'y, *n.* சீர்கேடான உடல்நிலை; உள்ளத்தின் நீடித்த இழிபண்பின் படிவு.

cac'hinnate, *v.* உரக்கச் சிரி, வெடிச்சிரிப்புச் சிரி.

cachinn'atory, *a.* உரக்கச் சிரிக்கின்ற.

cach'olong, *n.* பால்வண்ணப் படிகக் கல்வகை.

cach'ou, *n.* முச்சை நறுமணப்படுத்தும் குளிகை.

cachu'cha, (ஸ்பா.) *n.* முடுகியலான ஸ்பானிய நடனம்.

cacique', *n.* மேற்கிந்தியத் தலைவன்; அரசியல்துறை மேலதிகாரி.

cac'kle, *n.* கோழி அல்லது வாத்தின் கொக்கரிப்பு; பொருளற்ற பேச்சு; வீம்புமொழி; வெற்று நகைப்பு; *v.* கொக்கரி.

cac'kler, *n.* கோழி, பறவை; கொக்கரிப்பவர், உளறுபவர்; பயனில் சொல்லாடுபவர்.

cacodaem'on, cacodem'on, *n.* நிய ஆவி, பேய்.

caco'dorous, *a.* கெட்ட நாற்றமுடைய.

cac'odoxy, *n.* கெட்டகொள்கை, தவருன கருத்து; முரணுன சமயக்கோட்பாடு.

cac'odyl, *n.* கெட்ட வாடையுள்ள நிறமற்ற சேர்மான நீர்ப் பொருள்.

caco'epy, *n.* தப்பு உச்சரிப்பு.

cacoeth'es, (கிரே.) *n.* கெட்டவழக்கப் படிமானம், தவறு செய்வதற்குரிய விருப்பார்வம்; (தொ.) *scribendi cacoethes*, கிறுக்கும் விருப்பார்வம்.

cacogas'tric, *a.* வயிற்றுக்கோளாறு சார்ந்த, வயிற்று மந்தத்துக்குரிய.

cacogen'ics, *n.* இனச் சீர்கேட்டாய்வியல்.

cacog'raphy, *n.* மோசமான கையெழுத்து, தெளிவில்லாத எழுத்துமுறை.

cac'olet, *n.* கோவேறு கழுதைமீதமைந்த படைத்துறை இயங்கு கட்டில், கோவேறு கழுதை ஊர்தி.

cacol'ogy, *n.* தவருன சொல் தொடர்; மோசமான பேச்சு அல்லது எழுத்துநடை; பிழைபாடான ஒலிப்பு முறை.

cacomor'phia, *n.* உருக்கோட்டம், ஒப்பிசைவற்ற உரு.

cacoon', *n.* வெப்ப மண்டலப் புதர்ச்செடி வகையின் பெரு விதை, பொடிமட்டையாகவோ-மணப் பொருள் புட்டிலாக வோ பயன்படத்தக்க அளவு பருமனுடைய விதைக்கொட்டை களடங்கிய நெற்றுடைய அவரை வகை.

cacoph'onous, *a.* வெறுப்பொலியுடைய, ஒலிவகையில் அருவருப்புக்குரிய.

cacoph'ony, *n.* வெறுப்பொலி, அருவருப்பான ஓசை.

cacophthal'mia, *n.* கண்ணோய் வகை.

cac'tus, *n.* கள்ளிச்செடி வகை, கற்ருழை வகை; *pl.* cac'ti, cac'tuses.

cacu'men, *n.* முகடு, உச்சி, முனை.

cacu'minal, *a.* முகட்டினைச் சார்ந்த; (ஒலி.) நாநுனியை மேற்புறமும் பின்புறமும் திருப்புவதால் தோன்றுகின்ற.

cacu'minous, *a.* முனை முகடுள்ள, கூர்ங்குவடுள்ள.

cad, *n.* பண்பிலி, குடிகேடி, போக்கிரி; பணிப்பையல், குற்றேவலன், கீழ்மகன்.

cadas'tral, *a.* வரிவிதிப்புக்குரிய நில உடைமையின் அளவு சார்ந்த, நில அளவிடு சார்ந்த.

cadave'ric, *a.* (மரு., உட.) பிணத்தன்மையுடைய.

cadav'erous, *a.* பிணம்போன்ற, பிணம் போன்று வெளிறிய, உயிர்க்களையற்ற.

cadd'ice, *n.* = caddis.

cadd'ie, *n.* குழிப்பந்தாட்டக்காரரின் ஊழியன்.

cadd'is, *n.* (உயி.) தூண்டில் புழுவாகப் பயன்படுத்தப்படும் நீர்வாழ் ஈ வகையின் முட்டைப் புழுப்பருவவுயிர்.

cadd'y, *n.* தேயிலைக்கான சிறுபெட்டி.

cade [1], *n.* மிடா, கடாகம்.

cade [2], *n.* கைவளர்ப்பான ஆட்டுக்குட்டி; வளர்ப்புக் குதிரைக் குட்டி; *a.* கைவளர்ப்பான, செல்வ வளர்ப்புக் குரிய.

cad'ence, *n.* வண்ணம், இலயப் போக்கு, மெல்லிசை ஏற்றத் தாழ்வு; அளவொத்த ஓசை நடை; குரலின் மென்னயத் தளர்வு இறக்கம்; இசையின் கடைநிலையதிர்வு; தொனி, குரலிசைப்பேற்ற இறக்கம்; ஒலிக்குறிப்பு.

cad'enced, *a.* மெல்லிசை ஏற்றத்தாழ்வுடைய, அளவொத்த ஓசை நடையுடைய; தொனியதிர்வுடைய.

cad'ency, *n.* ஓசை ஏற்ற இறக்க மென்னய சந்தம்; இளைய கால் வழி மரபு; இளந்தொண்டர் படையினர் நிலை.

caden'za, (இத்.) *n.* (இசை.) முடிபிசை அதிர்வு, ஆளத்தி.

cadet', *n.* இளவல், இளைய மகன், குடும்பத்தின் இளையகிளை மகன்; உயர் பணித்துறைப் பயிற்சி இளைஞன்; மாணவப் பயிற்சிப்படைஞர்; புதுப்பயிற்சியாளன்; ருசிய மக்களாட்சிக் கட்சி உறுப்பினர்; (தொ.) cadet corps, படைப்பயிற்சி பெறும் மாணவ இளைஞர் படை.

cadet, (பிர.) *n.* மரபுசால் இளவல்.

cadge [1], *n.* வேட்டைப்பருந்துகளைக் கொண்டு செல்லும் மரச் சட்டம்.

cadge [2], *v.* ஏற்பதற்காகத் திரி, இரந்துதிரி; இரந்துபெறு; பிறரை அண்டிப் பிழை; கொண்டு விற்பனை செய், அலைந்து திரிந்து விற்பனைசெய்.

cadg'er, *n.* கொண்டு செல்பவர்; நாட்டுப்புறப் பொருள்களைத் திரிந்து விற்பவர், தெருவில் கூவி விற்பவர்; இரவலர்; திரிபவர், தெருச்சுற்றி வாழ்பவர்.

cad'i, (அரா.) *n.* நடுக்கிழக்கு நாடுகளில் முறை நடுவர், நீதிபதி.

Cadme'an, *a.* கிரேக்க மொழிக்கு எழுத்தை வழங்கிய காட்மஸ் (Cadmus) என்பவரைச் சார்ந்த; பெயரளவிலேயே வெற்றியாய் மிகப் பெருமுயற்சியுடன் சிறுபயன் தருகிற.

cad'mium, *n.* தகரம் போன்ற வெண்ணீல உலோக வகை.

cad'mium-yellow, *n.* திண்மஞ்சள் வண்ணம்.

cad'rans, *n.* மணிப்பிடி, மணிக்கல் பட்டையிடும் சமயம் அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் கருவி.

ca'dre, *n.* தொழில் நிலைப்பிரிவு; திட்ட அமைவு, ஏற்பாடு, பணி முறைப்படிவம்; படைத்துறையில் தேவைப்பட்டபோது விரிவுபடுத்தும் நிலையில் அமைக்கப்பட்ட நிலவரப் பிரிவு.

cad'uac, *n.* தற்செயல் நிகழ்வு, எதிர்பாரா நற்பேறு.

cadu'ceus, *n.* கிரேக்கத் தெய்வங்களின் தூதரான ஹெர்மிஸின் (Hermes) கைக்கோல்; பண்டை அரசியல் வள்ளுவரின் கட்டியக்கோல்; *pl.* cadu'cei.

cadu'city, *n.* நிலையாமை, மூப்பு, தளர்ச்சி; பயனற்று வீழ்தல், நழுவுதல், காலக்கழிவு.

cadu'cous, *a.* பழுத்து விழுகின்ற; இலைகள்-மலர்கள் ஆகியவற்றில் முதிர்ச்சியடையுமுன் உதிர்கின்ற; நிலையற்ற, அழியக்கூடிய.

caec'al, *a.* குடல்வால் சார்ந்த; முட்டுகுழாயான.

caec'iform, *a.* குடல்வால் வடிவான, முட்டுகுழாய் உருவான.

caecil'ian, *n.* மறைந்துள்ள கண்களுடைய நிலநீர்வாழ் விலங்கு வகை; *a.* விலங்குவகை சார்ந்த.

caecit'is, *n.* குடல் வால் அழற்சி.

caec'um, *n.* (உள்., வில.) பெருங்குடல் முற்பகுதி, பெருங்குடல் வாய்; முட்டு குழாய்; *pl.* cae'ca.

ca'en-stone, *n.* பாலேடு நிறச் சுண்ணும்புக்கல்.

caer'ule, *a.* வானீல நிறமுடைய.

Cae'sar, *n.* கேயஸ் ஜூலியஸ் சீசர் (Gaius Julius Caesar கி. மு. 100 - 44) என்ற முதல் ரோமப் பேரரசர்; ரோமப் பேரரசர்; வல்லாட்சியாளர்.

Caesa'rean, Caesa'rian, *n.* ஜூலியஸ் சீசர் (Julius Caesar) என்ற ரோமப் பேரரசரைச் சார்ந்த கட்சியினர்; *a.* ஜூலியஸ் சீசரைச் சார்ந்த; (தொ.) Caesarean operation, வயிற்றறுப்புப் பிரசவம், வயிற்றைக் கீறிக் குழந்தையை வெளிப்படுத்துதல்.

Caes'arism, *n.* தன் முனைப்பாட்சி, தனிவல்லாட்சி.

caes'ious, *a.* (தாவ.) நீலங்கலந்த பச்சை நிறமான, சாம்பற் பச்சையான.

caes'ium, *n.* (வேதி.) நில ஒளிவரையுடைய கார இயல் புடைய வெள்ளி போன்ற உலோகம்.

caes'pitose, *a.* கொத்தான, குடுமியுள்ள; புல்கரண் போன்ற.

caesur'a, *n.* (இலக்.) சீரின் சொற்களுக்கிடையில் நிறுத்தம்; பாடல் வரி இடை நிறுத்தம்.

caesur'al, *a.* பாட்டடியின் இடை நிறுத்தம் சார்ந்த.

cafard', *n.* மனச்சோர்வு, கிளர்ச்சியின்மை.

caf'e, *n.* அருந்தகம், சிற்றுண்டிச்சாலை; (தொ.) cafe chantant, இசையும் கேளிக்கையுமுள்ள அருந்தகம்.

cafe, (பிர.) *n.* காப்பி, கொட்டை வகையின் வடித்தெடுத்த சுவை நீர்க்குடிவகை; (தொ.) *cafe au lait,* பால் கலந்த குடிவகை; *cafe noir,* கருங்காப்பி, பாலில்லாச் சுவை நீர்.

cafeter'ia, *n.* உண்ணவருபவர் தாமே பரிமாறிக்கொள்ளும் சிற்றுண்டிச் சாலை.

caffe'ic, *a.* (வேதி.) காப்பியைச் சார்ந்த, கொட்டை வகையின் சத்துக் கலந்த.

caff'eine, *n.* காப்பி-தேயிலைக் குடிவகைகளிலுள்ள மரவுப்புச் சத்து.

caff'einism, caff'eism, *n.* காப்பி-தேயிலையிலுள்ள மரவுப் பினால் நேரும் கோளாறு நிலை.

caf'fre, *n.* தென்னுப்பிரிக்க 'பண்டு' (Bantu) இனத்தவர்; 'பண்டு' இனத்தவர் மொழி; ஆசியாவில் கபிரிஸ்தான் (Kafiristan) நாட்டினர்.

caf'fres, *n. pl.* தென்னுப்பிரிக்கச் சுரங்கப் பங்குகள்.

caf'tan, *n.* இடைக்கச்சையுள்ள நீண்ட உள்சட்டை.

cage, *n.* கூடு; கூண்டு; கண்ணறைப்பெட்டி; சிறை; (சுரங்.) பொறி ஊர்திகளை உயர்த்த அல்லது தாழ்த்த உதவும் சட்டம்; கம்பி அடைப்பு; சிறு மணித் தொகுதிக்கான சட்டம்; அழிச்சட்டம்; *v.* கூண்டில் அடை, சிறையிடு; சிறையில் வைத்திரு.

cage'-bird, *n.* கூண்டுப் பறவை, கூண்டில் வைத்து வளர்க்கத்தக்க புள்.

caged, *a.* கூட்டிலடைபட்ட; சிறைப்பட்ட.

cage'ling, *n.* கூண்டுப்பறவை.

cage'work, *n.* கம்பியடைப்புவேலை.

ca'gey, *a.* கூர்ந்து உணரும் ஆற்றலுடைய; தன்னிறை வுடைய, புறஞ்செல்லாத, அண்டமுடியாத; கரவான, சூதான, ஒளிவடக்கமான; மட்டுமீறிய விழிப்புடைய, ஐயுறவு மனப் பான்மையுடைய.

cag'ing, *n.* கூட்டிலடைத்தல்; கூடு; கம்பியடைப்பு.

cahoot', *n.* வாணிகப் பங்கு; பங்காளித்துவம்; (தொ.) go cahoots, பங்காளியாகு; in cahoot, பங்காளியாய் இணைந்து.

cai'man, *n.* தென் அமெரிக்க முதலை வகை.

Cain, *n.* உடன் பிறப்பாளரைக் கொலை செய்பவன்; கொலை காரன்; (தொ.) raise Cain, கலகம் விளை.

cainozo'ic, *a.* (மண்.) புத்துயிரூழி சார்ந்த, மூன்றுவது மண்ணூல் ஊழியைச் சேர்ந்த.

caique', *n.* பளுவற்ற தண்டுகைத்தும் படகு; கிழக்கு நடு நிலக் கடற்பகுதிக்குரிய பழைய பாய்க் கப்பல் வகை.

caird, *n.* நாடோடி, புலம் பெயர்வோர்.

cairn, *n.* கற்குவியல்; கற்குவியல்வடிவான கல்லறை நினைவுச்சின்னம்; கல்லறை, சவக்குழி; நிலக்குறிப்படை யாளச் சின்னம்; குட்டையான ஸ்காத்லாந்து நாட்டு நாய் வகை; (தொ.) cairn terrier, குறுகிய காலுள்ள ஸ்காத்லாந்து நாட்டுச் சிறு வேட்டை நாய் வகை.

cairngorm', **cairngorm'-stone,** *n.* ஸ்காத்லாந்திலுள்ள ஒரு மலை; மஞ்சள் நிற மணிக்கல் வகை.

caiss'on, *n.* போர்த்தளவாடப் பேழை; தளவாட வண்டி; நீரின்கீழ் அடித்தளம் அமைக்க உதவும் நீரேருப் பெரும் பேழை; படகுருவான துறைமுக வாயில் கதவம்; (தொ.) caisson disease, அமுக்கமிக்க காற்றூடாக உழைப்பவர்க்கு வரும் நோய்வகை.

cait'iff, *n.* இழிவானவன், வெறுக்கத்தக்கவன்; *a.* இழிவான; வெறுக்கத்தக்க.

cajole', *v.* மருட்டி இசைவி, பசப்பி இணங்கச் செய்; புகழ்ச்சியாகப் பேசி வசப்படுத்து, ஏய்த்து ஒப்புக்கொள்ளச் செய்.

cojole'ment, *n.* மருட்டி வசப்படுத்துதல், முகமனுல் இசைவித்தல்.

cajol'ery, *n.* பசப்புதல், ஏய்ப்பு.

cake, *n.* சுட்ட அப்பம், மாவடை; வறட்டிய மாப்பண்டம், ரொட்டி; திரட்டு மாப்பண்ணிய வகை; பிண்ணுக்கு; வறட்டி; செங்கற்கட்டி; சவுக்காரப்பாளம்; துண்டு, சவுக்கம்; சில்லு; *v.* கெட்டியாகு; குருதி வகையில் கெட்டிப் பட்டு உறை; நிலக்கரி வகையில் சூட்டினுல் இளகிய பசையுடைய பாளமாகு; (தொ.) cake and ale, வாழ்க்கையின் இன்னலங்கள்; cake of soap, wax etc., சவுக்காரம் மெழுகு ஆகியவற்றின் கட்டி; eat one's cake and have it, முரண் பட்ட நிலையில் முடியாத இரு திசை அவாக்களும் ஒருங்கே கொள், காசுக்கும் தோசைக்கும் ஆசைகொள்; one's cake is dough, தோல்வி எய்தப்பெறு; take the cake, மதிப்பு நலமெலாம் பெறு, முதல் மதிப்படை.

cake'-walk, *n.* அப்பத்துண்டுகளைப் பரிசாகக் கொண்டு நடத்தப்படும் நீகிரோவரின் நடைநய ஆடற்போட்டி வகை.

cak'ing, *n.* கெட்டியாதல்; உறைதல்; சூட்டால் பசை கட்டுதல்; *a.* கெட்டியாகிற; உறைகிற; சூட்டால் பசைக் கட்டியாகிற; (தொ.) caking coal, சூட்டால் பசைக்கட்டியாகிற நிலக்கரி வகை, 'பசைநிலக்கரி.'

cal'abar, *n.* = calaber.

cal'abash, *n.* சுரைக்காய்; சுரைக் குடுக்கை; புகையிலைக் குழாய்.

cal'aber, *n.* சாம்பல் நிற அணிலின் மென்மயிர்த்தோல்.

calaboose', *n.* சிறைக்கூடம், காவல் மனை.

calaman'co, *n.* பளபளப்பான பிளாண்டர்ஸ் (Flanders) நாட்டுக் கம்பளி வகை.

calaman'der, *n.* கருங்காலி மரவகை.

cal'amary, *n.* பத்துக்கிளைக்கையுடைய கடல் விலங்கு வகை.

cal'amine, *n.* துத்தநாகம் கலந்த சுரங்கக் கனிப்பொருள் வகை, துத்தநாகக் கரிகை.

cal'amint, *n.* நறுமண மருந்துப் பூண்டு வகை.

cal'amite, *n.* புதைபடிவச் செடிஇனத்தின் வகை; பெருமர இனம்.

calam'itous, *a.* இடும்பை நிறைந்த, கடுந்துயரம் உண்டு பண்ணத்தக்க.

calam'ity, *n.* பேரிடர், விழுமம், இடுக்கண்.

cal'amus, *n.* நறுமணநீர்ச் செடி வகை; நாணலால் செய்த பண்டை எழுதுகோல்; பிரம்பு தரும் பணிவகை; (வில.) இறகு, இறகுக் காம்பு; *pl.* cal'ami.

calan'do, (இத்.) *a.* (இசை.) படிப்படியாகத் தளர்வுற்றிறங்கிச் செல்லும் இசை.

cala'nus, *n.* கடல்மிதவை அணு உயிர்மங்களில் திமிங்கில உணவாகப் பயன்படும் உயிர்ம வகை.

calash', *n.* மடக்கு முகட்டுடைய சிறு சக்கர வண்டி; மகளிரின் தலைத்துணி.

cal'avane, *n.* பருப்பு வகை.

calca'neal, calca'nean, *a.* குதிகால் எலும்பைச் சார்ந்த.

cal'car [1], *n.* (தாவ.) தார்முள் போன்ற மலரிதழ் அடியின் தொடர்முனை ; (உயி.) பறவைக் காலடிக் கூர்முனை ; இன மூலந் தேய்மரபுச் சின்னமான கால்விரல் ; மூளைக்கீழ் அறையின் உயர் வளைவு நுதி.

cal'car [2], *n.* பளிங்கு உருக்குபத அடுப்பு.

calca'reous, *a.* சுண்ணநீற்றுச்சார்புள்ள ; சுண்ணநீற்றுரலான.

calcar'ious, *a.* = calcareous.

cal'ceate, *v.* மிதியடி அணிவி ; *a.* மிதியடி அணிந்த.

cal'ceated, calced, *a.* மிதியடி அணிந்த.

Calceolar'ia, *n.* மிதியடி போன்ற மலருள்ள தென் அமெரிக்கச் செடியினம்.

cal'ceolate, *a.* (தாவ.) மிதியடிபோன்ற உருவுள்ள.

cal'cic, *a.* சுண்ணகநீறு சார்ந்த, சுதையமுள்ள.

cal'cicole, calcic'olous, *a.* சுண்ணும்புக்கல் அல்லது சுண்ணும்பு நிலத்தில் வளர்கிற.

calcif'erol, *n.* ஊட்டச்சத்து வகை (D_2 ஊட்டம்).

calcif'erous, *a.* சுண்ணகக்கரிகையுள்ள, சுண்ணகக்கரிகை தருகின்ற.

cal'cific, *a.* சுண்ணகமயமாக்குகிற ; சுண்ணகமயமாக்கப் பட்ட.

calcifica'tion, *n.* சுண்ணகமயமாக்குதல் ; சுண்ணகமயமாக மாறுதல்.

cal'cifuge, calcif'ugous, *a.* சுண்ணும்புக் கல்லுடன் முரணுகிற.

cal'cify, *v.* சுண்ணகமயமாக்கு ; சுண்ணகமாக மாறு ; சுண்ணக உப்புப் படிமானத்தால் கடினமாகு ; கல்லாகச் செய்.

calcig'erous, *a.* சுண்ணகம் உட்கொண்ட.

cal'cimine, *n.* தீற்று சுண்ணகம் ; *v.* சுண்ணகந்தீற்று, சுண்ணும்பு அடி.

calcina'tion, *n.* (வேதி.) சுண்ணகநீருக்குதல், நீற்றுதல் ; புடமிடல் ; வறுத்தல் ; உலர்த்துதல், உணக்கல் ; சாம்பராக்குதல்.

cal'cine, *v.* நெருப்பில் சுட்டு மாருச் சுண்ணகமாக்கு ; ஈரத்தைப்போக்கு, உலர்த்து ; புடமிடு ; கீழ்த்தரப் பண்புப் பொருள்களை எரித்து நயமாக்கு ; கொளுத்திச் சாம்பலாக்கு.

cal'cite, *n.* இயல்வரவான சுதையக்கரிகை, அறுகோணமணி உருவுடைய சுண்ணகச் சரக்கு.

cal'cium, *n.* உலோக வகை, சுண்ணகம், சுண்ணகம்–சுண்ணக்கல்-களிக்கல் ஆகியவற்றிலுள்ள மூல உலோகம்.

calc'-sin'ter, *n.* ஊற்றில் படிந்துறையும் சுண்ணகக் கரியகிக் கலவை.

calc'spar, *n.* = calcite.

calc'-tuff, *n.* = calc-sinter.

cal'culable, *a.* கணக்கிடக்கூடிய ; அளவிடத்தக்க ; எண்ணக்கூடிய ; நம்பத்தக்க.

cal'cular, *a.* நுண்கணித முறையைச் சார்ந்த.

cal'culary, *a.* கல்லமைவுக்கோளாறு சார்ந்த ; தடிப்பு நோய்க்கு ஆளான.

cal'culate, *v.* கணி, கணக்கிடு ; எண்ணு, ஆராய், கருது, பாவி ; மதிப்பிடு ; முன் கூட்டியே கண்டறி ; ஆராய்ந்து நிட்டமிடு, முன்னறிந்து ஏற்பாடு செய்.

cal'culated, *a.* ஆராயப்பட்ட ; கணிக்கப்பட்ட ; கணக்கிட்டுத் திட்டம் செய்யப்பட்ட ; முன் கூட்டித் திட்டமிடப் பட்ட, முன்னேற்பாட்டுடன் செய்யப்பட்ட.

cal'culating, *a.* கணிக்கிற ; முன்னுய்வுடைய ; திட்டமிடப் பட்ட ; தன்னலமும் சூழ்ச்சியுமுடைய ; (தொ.) calculating machine, கணிப்புப் பொறி.

calcula'tion, *n.* கணித்தல் ; கணக்கிடு ; கணித்தாராயும் முறை ; மதிப்பீடு ; முன்னறிவு ; திட்டம், திட்ட முடிவு ; தன்னலச் சூழ்ச்சி ஏற்பாடு.

cal'culative, *a.* கணக்கீடு சார்ந்த ; கணித்தாய்கிற.

cal'culator, *n.* கணக்கிடுபவர், கணக்கர் ; கணிப்பேடு ; கணிப்பு அட்டவணை ; கணிப்புப் பொறி.

cal'culose, cal'culous, *a.* = calculary.

cal'culus [1], *n.* (மரு.) உடலின் உள்ளுறுப்புக்களில் கல் போன்ற தடிப்பு, கல்லடைப்பு ; *pl.* cal'culi.

cal'culus [2], *n.* (கண.) நுண் கணிப்பு முறை ; நுண் கணிதம் ; நுண் கணிதவியல் ; *pl.* cal'culuses ; (தொ.) differential calculus, வகையீட்டு நுண்கணிதம் ; integral calculus, தொகையீட்டு நுண்கணிதம்.

caldar'ium, (ல.) *n.* (தொல்.) பண்டை ரோமாபுரியில் சுடுநீரில் குளிப்பதற்குள்ள அறை.

calde'ra, *n.* (மண்.) எரிமலையின் அகல் முகட்டு வாய், பேழ்வாய்.

cal'dron, *n.* = cauldron.

Caledon'ian, *n.* பண்டை ஸ்காத்லாந்து குடிமகன் ; *a.* பண்டைய கலிடோனியா (Caledonia) அல்லது ஸ்காத்லாந்தைச் சார்ந்த ; (மண்.) மலை உருவாக்கும் நில மடிப்பு மடக்கு இயக்கத்தைச் சார்ந்த.

calefa'cient, *n.* சூடுண்டாக்கும் பொருள் ; கொப்புளம் ; மேலீடான ஊக்கமூட்டும் பொருள் ; *a.* சூடுண்டாக்கத் தக்க.

calefac'tion, *n.* சூடுண்டாக்குதல் ; சூடுண்டாக்கப்படும் நிலை.

calefac'tive, *a.* சூட்டைத் தருகிற.

calefac'tor, *n.* சூடாக்கும் அமைவு.

calefac'tory, *n.* துறவிகள் குளிர் காயும் அறை ; கணப்புச் சட்டி அல்லது கைக்குச் சூடுண்டாக்கும் சுடுநீர்ப்பந்து.

cal'efy, *v.* சூடுண்டாக்கு, சூடுமிகும்படி செய்.

calembour, (பிர.) *n.* சொற்சிலம்பம்.

cal'endar, *n.* ஆண்டுக்குறிப்பேடு ; ஆண்டு விவரக் குறிப்பு ; 'ஐந்தொகுதி' பஞ்சாங்கம் ; திருத்தொண்டத் தொகையுட் சேர்ந்த பெரியார்கள்-சிறைச்சாலைக் கைதிகள்-கால ஒழுங்கான ஆவணம் முதலியவற்றின் பட்டியல் ; பட்டியல் ; *v.* பட்டியலில் குறி.

cal'ender, *n.* துணிமணிகளுக்குப் பெட்டிபோடும் ஈராவிப் பொறி ; *v.* துணி-காகிதம் முதலியவை படிந்து உருவாக்கும் படி உருளை இயந்திரத்தில் அழுத்து.

cal'ender, (பெர்.) *n.* துருக்கி அல்லது பெர்சியாவைச் சேர்ந்த முஸ்லீம் துறவி இரவலர்.

cal'endry, *n.* துணி-காகிதம் முதலியவற்றை மழமழப்பாக்கும் இடம், பெட்டிபோடும் இடம்.

cal'ends, *n. pl.* ரோமன் ஆண்டின் முதல் மாதம் ; (தொ.) on the Greek calends, எப்பொழுதுமில்லை.

cal'enture, *n.* வெப்ப மண்டலக் கப்பற் காய்ச்சல்.

cales'cence, *n.* வெப்ப உயர்வு, சூட்டுப் பெருக்கு.

calf [1], *n.* கன்று, கன்றுக்குட்டி ; கன்றின் பதனிட்ட தோல் ; அறிவற்றவன், மூடன் ; குழந்தை ; யானைக்கன்று ; மான் கன்று ; திமிங்கிலக் குழவி ; கடலில் மிதக்கும் பனிக்கட்டி மலை ; *pl.* calves ; (தொ.) golden calf, பணத்தெய்வம் ; ஏரானுல் (Aaron) ஏற்படுத்தப்பட்ட பொன் கன்றுத் தெய்வம் ; அறிவற்றவன் ; slip her calf, கருச்சிதைவுறு ; willow calf, மிதியடி செய்யப் பயன்படும் உயர்ந்த தவிட்டு நிறத்தோல் ; with calf, cow in calf, கருக்கொண்டுள்ள.

calf [2], *n.* பின்காலின் சதைப்பகுதி.

calf'-bound, *a.* கன்றின் தோலினுல் ஏடு கட்டடம் செய்யப் பட்ட.

calf'-country, *n.* இளமை உறைவிடம்.

calf'dozer, *n.* நிலத்தை அகழ்ந்து தோண்டும் சிறு பொறி.

calf'-ground, *n.* = calf-country.

calf′-knee, *n.* நடக்கும்போது ஒன்றோடொன்று இடிக்கும் முட்டிக்கால்.

calf′less, *a.* காலின் பின்புறச் சதைப்பகுதி குறைந்த, காலுறைக் குறைவான.

calf′-lick, *n.* பசுவின் நக்கல்.

calf′-love, *n.* இளைஞர்களின் நிலையற்ற காதல் தொடர்பு, சிறு பிள்ளைத்தனமான காதல் நிகழ்ச்சி.

calf's′-foot, calves′′-foot, *n.* பாகு செய்யப்பயன்படும் கன்றின் கால்.

calf′skin, *n.* புத்தக ஏடு கட்டடம் அல்லது மிதியடி செய்ய உதவும் கன்றின் தோல்.

calf's′-teeth, *n.* முதலில் முளைக்கும் பல்.

calf′-time, *n.* இளமை.

cal′iatour, cal′iature-wood, cal′liature, *n.* செஞ்சந்தன மரம், சிவப்புச் சந்தனக் கட்டை.

Cal′iban, cal′ibean, *n.* இழிந்த விலங்குத் தன்மையுள்ள மனிதன்.

cal′iber, *n.* = calibre.

cal′ibrate, *v.* பண்பாற்றல் அறி, திறமையைக் கண்டுபிடி; குழாயின் உள் குறுக்களவுக் கூடுதல் குறைவுகளைக் கணக்கிடு.

calibra′tion, *n.* (இய.) மதிப்பாராய்தல், அளவு திருத்துதல்.

cal′ibre, *n.* குழல் விட்டம்; வலு, பண்பாற்றல்; திறமை; சிறப்பு.

cal′icle, *n.* (உயி.) சிறு கிண்ணம் போன்ற உரு.

cal′ico, *n.* வெண்ணிறப் பருத்தித்துணி; சொர சொரப்புள்ள அச்சிட்ட துணி; கள்ளிக்கோட்டையிலிருந்து முதலில் கொண்டு வரப்பட்ட பஞ்சுத்துணி; *pl.* cal′icoes, cal′icos; *a.* 'காலிகோ' துணியால் செய்த; புள்ளியுள்ள.

cal′ico-ball, *n.* பருத்தித் துணி நடனம்.

cal′ico-print′er, *n.* 'காலிகோ' துணியில் அச்சிடுபவர், வெண்ணிறப் பஞ்சுத் துணியில் அச்சிடுபவர், சீட்டித்துணி அச்சிடுபவர்.

cal′ico-print′ing, *n.* சீட்டித்துணி அச்சிடுதல்.

cal′id, *a.* சற்றுச் சூடான, வெதுவெதுப்பான.

cal′if, *n.* = caliph.

caliol′ogy, *n.* பறவைக் கூடுகளின் ஆராய்ச்சி.

cal′ipash, cal′ipee, *n.* கடலாமையின் சுவையுள்ள எலும்புப் பசைப்பொருள்கள்.

cal′iper, *n.* = calliper.

cal′iph, *n.* முகம்மது நபியின் பின்தோன்றல், இஸ்லாமிய அரசியல் அல்லது சமயத்துறை அதிகாரி.

cal′iphate, *n.* இஸ்லாமிய அரசியல் அல்லது சமயத்துறை அதிகாரியின் கடமைப் பணிமனை - பதவி - மதிப்பு - ஆட்சி அல்லது பேரரசு.

calisthen′ics, *n.* கட்டழகுப் பயிற்சிகள்.

cal′ix, *n.* = calyx.

Calix′tin, Calix′tine, *n.* ஹஸ் (John Huss) என்ற கிறித்தவ சீர்திருத்தவாதியினரில் மிதவாதக் கட்சி உறுப்பினர்.

calk[1], *n.* குதிரை லாடம் அல்லது மிதியடி நழுவி விழாமல் தடுக்கும் கூர் இரும்பு; *v.* குதிரை லாடம் அல்லது மிதியடி நழுவாமல் தடுக்கும் கூர்முனையைப் பொருத்து.

calk[2], *v.* உருவரைபடப் பின்புறத்தை வண்ணமிட்டு வேறு தாளில் கோடு பதியும்படி செய்.

cal′kin, *n.* குதிரை லாடத்தில் கீழ்நோக்கித் திருப்பப்பட்ட குதிகால் பகுதி, திருப்பப்பட்ட ஓரம்; மிதியடியணிந்த இருப்புக் காலிலர்.

call, *n.* அழைப்பு; அழைப்பிதழ்; அழைப்பாணை; பதவி அடைவுக்கட்டளை; முறைமன்ற விளி. நாடகமேடை வருகைக் கோரிக்கை; தொலைபேசி ஆள்வேண்டுகை; தொலைபேசிப் பேச்சுத்தொடர்பு; சீட்டாட்டக் கேள்விமுறை, பங்குக் கோரிக்கைமுறை; கூக்குரல், கூப்பாடு; பறவையின் கூவிளி; போலிப்பறவை விளி; சமிக்கை ஒலி; மணி ஓசை; எக்காள முழக்கம்; கடமைக்குரல், கடப்பாடு; வாழ்க்கையிலக்கு, வாழ்க்கைப்பணி; தேவை; தவணைமுறை; வேண்டுதல், கோரிக்கை; வருமுறை; செல்முறை; காட்சிமுறை, சந்திப்பு; பணிமுறை, வேலையீடுபாடு; தனியழைப்பு, தனித்தேர்வு; *v.* அழை, கூப்பிடு; கூவு; வரப்பணி, கூவியழை; பெயர் கூறு; பெயரிட்டுக் கூப்பிடு; கூக்குரலிடு; தொலைபேசியில் பேசு; வேண்டு, கோரு; பதவிக்கு அழைப்பு அறிவி, தெரிவி; தேர்ந்தெடு; தனியழைப்புவிடு, தேர்ந்தழை; சமிக்கைக் குரலெழுப்பு; முழங்கு; கேள்விமுறை கோரு, உரிமையுடன் கேள்; (தொ.) at call, எளிதிற் பெறு நிலையில்; call attention to, சான்றுக்கழை; குறித்துக்காட்டு; call away, கவனந் திருப்பு; call back, திரும்ப அழை, திரும்பிப் பெறு, மீட்டுக்கொள்; call cousins, உறவு கொண்டாடு; call down, தொழுது வேண்டு; திட்டு, கண்டி; call for, உரக்கக்கேள்; உரிமையுடன் கோரு; call forth, அழை, வெளிவரச்செய், வெளிக்கொணர்; call in, உதவிக்கு அழைத்துக் கொள்; call in question, அறைகூவல் விடு, மறுப்புக் கூறு; call off, கவனம் திருப்பு; பின்வாங்கு; கைவிடு; தள்ளுபடி செய்; call on, call upon, கண்டு கேள், வேண்டு, முறையிடு; சென்றுகாண்; call out, அறைகூவிச்சண்டைக்கு அழை; வேலைக்குக் கூப்பிடு; செயல் முறைக்குக் கொண்டுவா; call over, உரக்கப்படி; call to account, கணக்கு ஒப்புவிக்கும்படி அழை; call to mind, நினைவுபடுத்திக்கொள்; call to order, வாத ஒழுங்கின்படி நடக்கச்செய்; call up, வர ஆணையிடு, வரவழைப்புக் கட்டளையிடு; பட்டாளச் சேவைக்கு அழை, நினைவிற்கு வரும்படி செய்; within call, கூப்பிடு தொலையில்.

Call′a, *n.* சதுப்பு நிலச் செடிவகை.

call′-bird, *n.* பார்வைப்புள், பிற பறவைகள் கண்ணியில் சிக்குமாறு செய்யப் பழக்குவிக்கப்பட்ட பறவை.

call′-box, *n.* பொதுத் தொலைபேசிப் பெட்டி.

call′-boy, *n.* நாடகமேடைப் பணிப்பையன்.

call′er, *n.* அழைப்பவர், கூப்பிடுபவர்; வருகை தருபவர்.

call′-girl, *n.* தொலைபேசி மூலம் அமர்த்தப் பெறத்தக்க விலை மகள்.

call′id, *a.* சூழ்ச்சி நுட்பம் உள்ள, மதியூகம் வாய்ந்த.

callig′rapher, *n.* அழகான கையெழுத்தாளர், சித்திரவேலைப் பாடுடைய கைத்திறமுடையவர்; பார்த்து எழுதும் எழுத்துத் தொழிலர்.

calligraph′ic, calligraph′ical, *a.* அழகான கையெழுத்தைச் சார்ந்த; அழகான கையெழுத்தாளர்களின் இயல்புள்ள.

callig′raphist, *n.* எழுத்து வனப்புடையவர்.

callig′raphy, *n.* கையெழுத்து நேர்த்தி; தனிப் பண்புடைய கையெழுத்துத் திறம்.

call′ing, *n.* அழைத்தல்; கூவுதல்; வாழ்க்கைத் தொழில்; ஒரு தொழிலாளர் கூட்டு; சிறப்பார்வத் தொழில், நலமெனத் துணிந்திறங்கி மேற்கொண்ட பணி; இறையருள் தொண்டு, தெய்வம் அல்லது அகச்சான்றின் கட்டளைப்படி மேற் கொண்ட வினை; (தொ.) calling card, பேட்டி காணும் பெயர்ச் சீட்டு.

Calli′ope, *n.* காப்பியக் கலைத்தெய்வம்; நீராவியால் இயங்கும் ஊற்றுப் பொறிகளின் அமைவுடைய இசைக்கருவி.

call′iper, *a.* திட்பமானியில் பிழம்புருக்களின் விட்டம் திட்பம் ஆகியவற்றை அளக்கும் இடுக்கி விரல்களையுடைய; விட்ட மானியில் அகப்புற விட்டங்களை அளக்கும் வகையில் அளவு கருவிக் கோலில் இழையும் அளவுக்காய்களை உடைய; *v.* திட்பமானியால் அள; விட்டமானியால் அள; (தொ.) calliper splint, ஊறுபாடு உற்றவர் காலில் அழுத்தம் ஏற்படாமல் நடக்கும்படி உதவ இணைத்துக் கட்டப்படும் வரிச்சல்.

call'iper-compasses, call'ipers, *n. pl.* திட்பமானி, வட்ட உருளைப் பிழம்புகளின் விட்டங்களையும் பொருள்களின் திட்பங்களையும் நுண்ணிதாக அளக்க உதவும் பற்றுக் கைகளையுடைய அளவுக்கருவி.

call'iper-square, *n.* விட்டமானி, பிழம்புகளின் அகப்புற விட்டங்களை அளக்கும் முறையில் அளவுகோலின்மீது இழையும் அளவுக் காய்களை உடைய அளவுக் கருவி.

callipyg'ean, callipy'gous, *a.* அழகிய பிட்டத்தையுடைய.

callisthen'ic, *a.* வலிமையும் அழகும் ஒருங்கே அளிக்கத்தக்க உடற்பயிற்சி பற்றிய.

callisthen'ics, *n.* கட்டழகுக்கலை, வலிமையையும் அழகையும் பேணி வளர்க்கும் உடற்பயிற்சிகள்.

call'-loan, call'-mon'ey, *n.* கேட்டவுடன் கொடுக்க வேண்டிய கடன்.

call'note, *n.* அகவலிசை, பறவை அல்லது விலங்கு தன் னினத்தை அழைக்கும் ஒலிக்குறிப்பு.

callos'ity, *n.* தோல் தடிப்பு, தோல் காய்ப்பு; மரமரப்புக் கொண்ட பகுதி.

call'ous, *a.* காழ்க்கொண்ட, தடிப்பான; மரமரப்பான, உணர்ச்சியற்ற, சொரணையற்ற.

call'ousness, *n.* காய்ப்பு, தடிப்பு; உள்ளத்தின் உணர்ச்சி யற்ற தன்மை; சொரணையின்மை.

call'ow, *n.* ஆற்றுவண்டலுள்ள சமநிலம்; *a.* வெள்ளத்தில் மூழ்கத்தக்க நிலையில் தாழ்வான; இறகு முளைக்காத; தாடியில்லாத; தேராத, அநுபவமற்ற.

call'-up, *n.* வரவழைப்பு; கொண்டு வருகை, முன்னிலைப்படுத் துகை; நினைவுக்குக் கொண்டு வருதல்.

call'us, *n.* தோலின் மேல்தடிப்பு; எலும்பு முறிவு குணமாகும் போது முகிழ்க்கும் என்புப்பொருள்; (தாவ.) வெட்டப்பட்ட பரப்பின்மீது படரும் இழைபொருள்.

calm, *n.* அசைவின்மை; தெளிவமைதி; *a.* அமைதியான; ஓசையற்ற; அசையாத; காற்றலைவற்ற; *v.* அமைதிப்படுத்து; கொந்தளிப்பைத் தணியவை; ஒய்வுறு, அமைதிப்படு; (தொ.) a calm, காற்றில்லா நிலை.

cal'mant, cal'mative, *n.* (மரு.) அமைதியூட்டும் பொருள்; நோவாற்றும் மருந்து; *a.* கொந்தளிப்பு அகற்றுகிற; நோவாற்றுகிற; அமைதிப் படுத்துகிற.

calm'ness, *n.* அமைதி, முழுஒய்வுநிலை, சாந்தம்.

calms, *n. pl.* (நில.) கடலின் அமைதிநிலை, காற்றின் ஒய்வுநிலை.

cal'omel, *n.* (வேதி.) பூரம், இரசக பாசகை.

calores'cence, *n.* வெப்பக் கதிர்கள் ஒளிக்கதிர்களாக மாறுபடுதல்.

calo'ric, *n.* முற்பட்டகாலக் கருத்துப்படி நுண்ணிய நீர்மப் பொருள் வடிவான வெப்பம்.

calo'ric-engine, *n.* சூடான காற்றினால் இயங்கும் இயந்திரம்.

cal'orie, *n.* வெப்ப அளவைக் கூறுகனலி, கலோரி.

calorif'ic, *a.* சூடு உண்டுபண்ணுகிற, சூடாக்குகிற; (தொ.) calorific value, உணவு அல்லது எரிபொருள் தரும் சூட்டின் அளவு.

calo'rifica'tion, *n.* சூடு உண்டுபண்ணுதல்; உயிர்வெம்மை, உயிரினத்தின் உடலில் உண்டாக்கப்படும் வெப்பம்.

calorim'eter, *n.* கனல்மானி, சூட்டின் அளவு காட்டும் கருவி.

calorim'etry, *n.* கனலளவை.

cal'orist, *n.* சூட்டின் இயல்பு நுண்ணிய நீர்மம் என்ற முற்பட்ட காலக் கொள்கையை உடையவர்.

calotte', *n.* ரோமன் கத்தோலிக்கக் குருமார் அணியும் சுபாலத் தொப்பி.

cal'otype, *n.* பழங்கால நிழற்பட முறை.

cal'oyer, *n.* கிரேக்கத் துறவி மடத்தவர்.

calp, *n.* அயர்லாந்தில் காணப்படும் கரும்பழுப்புநிறச் சுண்ணும்புக்கல்.

calque, *v.* = **calk**[2].

cal'trop, *n.* கப்பணம், குதிரைப்படைகளை முடமாக்கும் நோக்கத்துடன் தரையில் எறியப்படும் நான்கு முனைக் கூருள்ள இருப்புப் பந்து; விண்மீன் உரு முட்செடி வகை; விண்மீன் உருவக் கடற்பாசி; விண்மீன் வடிவக் காயுடைய செடி.

cal'umet, *n.* நட்பிணக்க அறிகுறியாக அமெரிக்கச் செவ்விந் தியர் (Red Indians of America) வழங்கும் புகைக்குழாய்; அமைதிச்சின்னம்.

calum'niate, *v.* பழி, இழித்துக்கூறு; பொய்க்குற்றம் கற்பி; பொய்ச் செய்திகளைப் பரப்பு.

calumnia'tion, *n.* இழிப்புரை, பழித்துக் கூறுதல்.

calum'niator, *n.* தூறு பேசுபவர்.

calum'niatory, calum'nious, *a.* இழித்துக்கூறும் இயல் புடைய, தூறுகூறும் பாங்கான.

cal'umny, *n.* எற்றியுரைத்தல்; பொய்க்குற்றச்சாட்டு; அவதூறு.

Cal'vary, *n.* இயேசுநாதரைச் சிலுவையிலறைந்த இடம்; சிலு வைக் காட்சி ஓவியம்; (தொ.) Calvary cross, மூன்று படிகளுடைய பீடத்திலமைக்கப்பட்ட சிலுவை.

calve, *v.* கன்றீனு, பெற்றெடு; பனிப்பாறை வகையில் பனிக் கட்டியை நெகிழ்வித்துத் தள்ளு.

calved, *a.* பின்னங்கால் கெண்டைச் சதையுடைய, கெண்டைப் பகுதியுடைய.

cal'ver, *v.* உயிருடைய நிலையிலேயே மீனை முன்னேற்பாடாக ஒழுங்குசெய்.

Cal'vinism, *n.* ஜினீவா (Geneva) நகரத்தில் வாழ்ந்த சமய சீர்திருத்தவாதியாகிய ஜான் கால்வின் (John Calvin 1509-1564) நிறுவிய இறைமையியல் கொள்கை.

Cal'vinist, *n.* ஜான் கால்வின் என்பாரின் இறைமையியல் கொள்கையைப் பின்பற்றுபவர்.

calx, *n.* புடநீறு, உலோகம் அல்லது கனிப்பொருளை எரித்தால் எஞ்சிநிற்கும் பொருள்; *pl.* cal'ces, calx'es; (தொ.) calx of mercury, இரசத்துரு.

calycan'themy, *n.* புல்லிவட்டம் அகவிதழ் வட்டத்தை ஒத்திருக்கும் நிலை.

calyciflor'al, calyciflor'ate, calyciflor'ous, *a.* மலர் களில் பூவிழைகளும் இதழ்களும் புல்லிவட்டத்திலிருந்தே எழுகிற.

cal'yciform, *a.* புல்லிவட்ட உருவுடைய.

calyc'inal, *a.* புல்லிவட்டத்தைச் சார்ந்த; புல்லிவட்டத்தை யுடைய; புல்லிவட்டத்தின் மீதுள்ள.

calyc'inar, *a.* புல்லிகளே இதழ்களாக மாறுபட்டிருக்கிற; புல்லிவட்டத்தைச் சார்ந்த; புல்லிவட்டம் போன்ற; புல்லி வட்ட இயல்புடைய; புல்லிவட்டத்தின் மீதுள்ள.

cal'ycine, *a.* = **calycinal.**

cal'ycle, *n.* (தாவ.) புல்லிவட்டஞ் சூழ்ந்த சிதல்வட்டம், துணைப்புல்லி வட்டப்போலி; விதைச்சூட்டு; (வில.) குவளை அமைப்புடைய உள்ளுறுப்பு.

cal'ycled, *a.* (வில.) குவளை வடிவ உள்ளுறுப்புடைய; (தாவ.) சிதல்வட்டமுடைய.

cal'ycoid, calycoi'deous, *a.* புல்லி வட்டம்போன்ற.

calyc'ular, *a.* (தாவ.) புல்லிவட்டப் போலியான, சிதல் வட்ட வடிவுடைய; சிதல் வட்டத்துக்குரிய.

calyc'ulate, *a.* (தாவ.) சிதல் வட்டத்தையுடைய; (வில.) பல் குழிவுடைய எதிரிணை புணர்ச்சியுறுப்புடைய.

cal'ycule, *n.* (தாவ.) சிதல்வட்டம்; (வில.) குவளை அமைப் புடைய உள்ளுறுப்பு.

calyp'so, *n.* அமெரிக்க மேலை இந்தியத்தீவின் பழங்குடிகள் (West Indians) இயல்வரவாகப் பாடும் காட்டுப்புறப் பாடல்.

calyp'tra, *n.* கிரேக்க முகமூடி; பாசி மேலுறை; வேரின் நுனியுறை.

calyp'trate, *a.* மூடியையுடைய.

calyp'trogen, *n.* வேர்மூடியை உருவாக்கும் உயிர்மத்தொகுதி.

cal'yx, *n.* (தாவ.) புல்லிவட்டம், புறவிதழ் வட்டம்; (வில.) கிண்ணம்போன்ற உறுப்பு, குவளை அமைப்பு வகை; பவளத் தின் குழிவு; *pl.* ca'lyces, ca'lyxes.

cam, *n.* இயக்கும் சக்கரத்தின் சுற்றுவட்டம் கடந்த முனைப்பு.

camaieu', *n.* உள் வண்ணப் பின்னணியுடைய புடைப்புருச் செதுக்கு மணி; ஒருவண்ண ஓவியம்; இயற்கை வண்ணங் களாக அமையாத எளிய வண்ணங்களில் அமைந்த சித்திரம்; கரிக்கோல் சித்திரப்பாணியமைந்த அச்சுப்பட முறை.

cam'an, *n.* முறையமையாச் சிறுவர் வளைகோற் பந்தாட் டத்தில் பயன்படுத்தப்படும் கோல்.

camaraderie, (பிர.) *n.* தோழமையுணர்ச்சி, உழுவலன்பு, கெழுதகைமை.

camarill'a, (ஸ்பா.) *n.* சூழ்ச்சிக் குழு; உட்குழு; மதியமைச் சருக்கெதிரான மன்னவை மறைகுழு; சிறு அறை.

cam'aron, *n.* பெரிய நன்னீர் மீன் வகை.

cam'ber, *n.* மெல் வளைவான சிறு கோட்டம், மேல் வாட்டமான வளைவு; கப்பற் பலகையின் மேல் வளைவு; மரம் இறக்கும் துறை; *v.* சிறிது வளையச்செய்; சற்றே வளைவுறு.

Cam'berwell Beaut'y, *n.* அழகிய பெரிய வண்ணத்துப் பூச்சி வகை.

cam'bial, *a.* மர இனத்தின் வளர்படையைச் சார்ந்த; ஆக்கு படைக்குரிய.

cam'biform, *a.* ஆக்குபடை வடிவான, வளர்படை உருவான.

cam'bist, *n.* நாணயமாற்றுத்துறை வல்லுநர்.

cam'bium, *n.* (தாவ.) வளர்படை, ஆக்குபடை, தண்டின் மென் மரத்துக்கும் கடுமரத்துக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள இருவகைகளின் ஆக்கு முதற்கூறு.

camboge', *n.* மஞ்சள் பிசின் அரக்கு வகை.

cam'brel, *n.* இறைச்சிக்கொளுவி.

Cam'brian, *n.* வேல்ஸ் (Wales) கம்பர்லாந்து (Cumberland) பகுதிகளில் வாழ்பவர்; (மண்) வேல்ஸ்-கம்பர்லாந்து பகுதி களில் காணப்படும் தொல்லுயிரூழிக்குரிய பாறை அடுக்கு; *a.* வேல்ஸ் நாட்டுக்குரிய; (மண்.) வேல்ஸ்-கம்பர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள தொல்லுயிரூழி அடுக்குக்குரிய.

cam'bric, *n.* நயமான வெண்ணிற இழைத்துணி வகை; கைக்குட்டைகள்; *a.* வெண்ணிற இழைத்துணியால் இயன்ற.

Cam'bridge blue, *n.* இள நீல வண்ணம்.

came[1], *n.* பின்னல் கம்பிப் பலகணியில் தழங்கும் தொடுகுழி யுடைய ஈயப்பாளம்.

came[2], *v.* come என்பதன் இறந்த காலம்.

cam'el, *n.* ஒட்டகம்; ஆழமற்ற நீரில் கலத்தைத் தூக்கப் பயன்படும் நீர் புகா அமைப்பு; கூனல் வானூர்தி; (விவி.) நம்ப முடியாதது.

cam'el-back, *a.* சக்கரங்களின் பட்டைக் குழாயை வலுப் படுத்தக் கையாளப்படும் கீழ்த்தர இருமடிச் செயற்கைத் தொய்வகம்.

cam'el-backed, *a.* கூனல் முதுகுடைய.

cameleer', *n.* ஒட்டகம் ஓட்டுபவர்.

camel'eon, *n.* = chameleon.

camel'eopard, *n.* = camelopard.

cam'eline, *n.* ஒட்டக மயிர் ஆடை; கம்பள ஆடை; *a.* ஒட்டக இயல்புடைய.

cam'elish, *a.* ஒட்டகம் போன்ற; பிடிவாதமுடைய.

camell'ia, *n.* கீழை ஆசியாவுக்குரிய அழகிய மலர்களைக் கொண்ட தேயிலையினம் சார்ந்த பசுமை மாறுத குத்துச் செடி வகை.

cam'eloid, *n.* ஒட்டக இனத்தின் வகை; *a.* ஒட்டக இனத்தைச் சார்ந்த.

camel'opard, *n.* ஒட்டகச் சிவிங்கி.

cam'elry, *n.* ஒட்டகப்படை.

cam'el's-hair, *n.* தூரிகையாகப் பயன்படும் ஒட்டக மயிர்; அணிலின் வால் மயிர்; *a.* ஒட்டக மயிரால் செய்யப்பட்ட.

cam'embert, *n.* பிரான்சு நாட்டிலுள்ள நார்மண்டிப் பகுதிக் குரிய மென்மையான ஊட்டம் மிக்க உறைபாற்கட்டி.

cam'eo, *n.* புடை வண்ணச் செதுக்குமணி, புடைப்புருவாகச் செதுக்கப்பட்ட மணி, உள் வண்ணம் வேற்றுப்பின்னணி வண்ணமாக அமையும்படி புடைப்புருவாகச் செதுக்கப்பட்ட மணி; *pl.* cam'eos.

cameo ware, *n.* வேற்று வண்ணப் பின்னணி உடைய புடைப்பகழ்வுச் சித்திரங்கள் கொண்ட மட்பாண்டம்.

cam'era, *n.* மறைவறை, வில் வளைவான முகட்டினை உடைய உள்ளறை; நடுவரின் தனி அறை; நிழற்படக் கருவி; சட்ட மன்றம்; போப்பாண்டவரின் கருவூலம்; தொலைக்காட்சியில் உருப்பதிவு செய்து மின் அலைகளாக அனுப்பும் அமைவு; (தொ.) *in camera*, மறைவாக, தனியாக, வெளியிடத்தி லன்றி.

cam'era-lu'cida, (ல.) *n.* உருப்பதிவுப் பெட்டி, பளிங்குப் பட்டை மூலம் பொருளின் உருசாயல் தாள் அல்லது திரைத்துணி மீது விழச்செய்யும் வரைபடத் துணைக்கருவி.

cam'era-man', *n.* நிழற்படம் எடுப்பவர்; பத்திரிகை-திரைப் படத் துறைகளின் நிழற்படப் பதிவாளர்.

cam'era-obscu'ra, (ல.) *n.* வெளிப்புற உருவைத் திரையில் விழவைக்கும் இருட்டறைப் பெட்டி.

camera'tion, *n.* கவிதை மோட்டமைவு; கவிதை மோட மைத்தல்.

camerleng'o, camerling'o, *n.* போப்பாண்டவரின் பொருளகர்; போப்பாண்டவர் திருத்தூனவர் குழுவின் கருவூலத் தலைவர்.

Cameron'ian, *n.* ரிச்சார்டு காமிரான் (Richard Cameron) என்பவரைப் பின்பற்றும் கிறித்தவ சமயக்குழுவினர்; குறிப் பிட்ட ஒரு படைப்பிரிவினர்; *a.* ரிச்சார்டு காமிரானைப் பின்பற்றிய.

cami-knick'ers, *n. pl.* மகளிர் உள் உடுக்கை.

cam'ion, *n.* பெரும்பாரப் பொறி வண்டி; பொதி வண்டி.

cam'isole, *n.* கை வைத்தோ வைக்காமலோ தைத்துள்ள பெண்டிர் உள் ஆடை, மகளிர் காலை ஆடை.

cam'let, *n.* ஒட்டக மயிர் ஆடை வகை; கம்பளி ஆடை வகை.

camm'ock, *n.* (தாவ.) மஞ்சள் நிற மலர்களைக் கொண்ட செடிவகை.

cam'omile, *n.* செவ்வந்திப் பூவினத்தைச் சார்ந்த செடிவகை.

Camo'rra, (இத்.) *n.* நேப்பில்ஸ் நகர மறைவுக்குழு; இரகசிய சங்கம்.

cam'ouflage, *n.* உரு மறைப்பு; ஏமாற்று கருவி; ஏமாற்று வித்தை; *v.* ஏமாற்று; மாற்றுரு மேற்கொள்.

camouflet, (பிர.) *n.* வெடிகுண்டு விளைத்த அடித்தள விடர்; எதிரிகளின் சுரங்க வழிகளைத் தகர்க்கும் சுரங்க வெடி.

camp[1], *n.* பாசறை; கூடாரம்; தங்கல் மனைகள்; கூடார வாசிகள்; வழிப்போக்கர் இராணுவத்தார் முதலியோர் இடைவழித்தங்கல்; அரணுடைய பழைய இடம்; இராணு வத்தினர் நிலையாகத் தங்குமிடம்; சுரங்க வேலை செய்யும் இடங்களிலுள்ளது போன்ற காளான் நகரங்கள், திடீரெனத் தோன்றி வளரும் நகரங்கள்; இராணுவப்பணி, இராணுவ வாழ்க்கை; கட்சி; *v.* கூடாரமடித்துத் தங்கு; கூடாரமடி; கூடாரத்தில் தங்கு.

camp[2], *n.* உதைபந்தாட்டத்தின் பழைய முறை ; *v.* சண்டையிடு ; போராடு.

Campag'na, *n.* இத்தாலிய சமவெளி.

campaign', *n.* களத்தினை இராணுவம் கைவசம் வைத்திருக்கும் நேரம் ; நாட்டிற்குள் இன்பப் பயணம் செல்லுதல் ; போராட்ட ஏற்பாடு ; வினையாள் முறை ; *v.* போர் வினையில் ஈடுபடு.

campaign'er, *n.* பல போர் எழுச்சிகளில் பணியாற்றியவர் ; போரனுபவம் உடையவர்.

campa'na, *n.* மணிபோன்ற வடிவுள்ள பொருள் ; மலர் வகை.

campani'form, *a.* மணி வடிவான ; மணிபோன்ற அமைப்புள்ள.

campanil'e, *n.* மணிக்கூண்டு, தூய திருக்கோயிலினின்றும் பிரிந்துள்ள மணிக்கூண்டு ; *pl.* campanil'es, campanil'i.

cam'panist, *n.* ஒலிக்கும் மணியாளர்.

campanol'ogy, *n.* மணி நூல்.

campan'ula, *n.* மணி போன்ற பூக்களை உடைய இனம் ; ஸ்காத்லாந்து நாட்டு நீல மணிப் பூவினம்.

campan'ulate, *a.* (தாவ., வில.) மணி வடிவான.

camp'-bed, *n.* மடக்குப் படுக்கை.

camp'-chair, *n.* மடக்கு நாற்காலி.

camp'-colour, *n.* குறியிடுவதற்குப் பயன்படும் கொடி.

campeador', (ஸ்பா.) *n.* வாகைவீரன், முதல்வன்.

campes'tral, *a.* வயலில் வளர்கிற ; செறுவைச் சார்ந்த.

camp'-fe'ver, *n.* கூடாரக்காய்ச்சல், கூடாரங்களில் வரக்கூடிய குடற்காய்ச்சல் நோய் போல்வது.

camp'-foll'ower, *n.* இராணுவக்குழுவோடு செல்லும் பரிவாரத்தார்.

cam'phor, *n.* கற்பூரம், சூடம்.

camphora'ceous, *a.* சூடம் போன்ற, கற்பூரத்தை ஒத்த.

cam'phorate, *v.* சூடத்தால் நிறை ; மற்றொன்றுடன் சூடத்தினை ஏற்கக்கூடிய அளவு கல.

camphor'ic, *a.* சூடத்தைச் சார்ந்த.

cam'pion, *n.* வெள்ளை சிகப்பு வண்ணங்களிலுள்ள மலர்ச் செடி வகை.

camp'-meet'ing, *n.* கூடாரங்களில் திறந்த வெளியின்கண் கூடும் சமயக்கூட்டம்.

Campo'dea, *n.* வயிற்றின் இறுதியில் இரு நுண்ணிழைகளை உடைய கண்ணற்ற பூச்சி வகை.

cam'po san'to, (இத்.) *n.* இத்தாலியிலுள்ள இடுகாடு.

camp'shed, *v.* ஆற்றங்கரைப் பாதுகாப்பு அடுக்கு அமை.

camp'shedding, camp'-sheeting, camp'shot, *n.* ஆற்றின் கரையைப் பாதுகாக்கும் அடுக்கு அமைவு.

camp'tonite, *n.* பூமிக்கு அடியில் உருகிய நிலையிலிருந்த பாறைப் பொருளின் இறுகிய நிலை.

cam'pus, *n.* கல்லூரியைச் சுற்றியுள்ள நிலம் ; பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள மனை.

campylot'ropous, *a.* வளைந்த சூலகத்தினையுடைய.

cam'-shaft, *n.* முனைந்த பகுதியுள்ள சுற்றுருளை.

cam'stone, *n.* அடுப்புக்கல்லையும் வாயிற்படிகளையும் வெண்மையாக்க உதவும் களிமண் கல்வகை.

cam'-wheel, *n.* சுற்றுருளையில் பிறிதொன்றற்குச் சுழற்றிக் கொடுக்கும் முனைத்த பகுதியுள்ள சக்கரம்.

cam'wood, *n.* மேலை ஆப்பிரிக்க மரவகை ; சிவப்புச் சாயம் செய்யப் பயன்படும் மரவகை.

can[1], *n.* பிடியுள்ள தகரக்குவளை ; புகைப்போக்கியின் தகர மேல்மூடி ; பழம்-இறைச்சி இவற்றை இறுகமூடி வைக்கப் பயன்படும் தகரக்கலம் ; நீர்க்குவளை ; *v.* தகரங்களிற் பாதுகாப்பிற்காக வை.

can[2], *v.* தகுதிவாய்ந்திரு ; தேவையான ஆற்றல் பெற்றிரு ; தெரிந்திரு ; திறமை பெற்றிரு.

Can'aan, *n.* இன்ப உலகம்.

Can'ada, *a.* கனடா நாட்டினின்றும் வந்த ; கனடா நாட்டினைச் சார்ந்த.

Cana'dian, *n.* கனடா நாட்டுக் குடிமகன் ; *a.* கனடா நாட்டைச் சார்ந்த.

canaille, (பிர.) *n.* சந்தைக்கூட்டம், பொதுமக்கள் திரள்.

canal', *n.* கால்வாய் ; (தாவ.) நெய்மக்குழாய் ; பள்ளம்.

canal'-cell, *n.* (தாவ.) பாசி பெரணி ஆகியவற்றின் பெண் இனப் பெருக்க உறுப்பின் கழுத்திலுள்ள உயிரணு.

canalic'ular, *a.* (உள்.) சிறு கால்வாய் போன்ற உறுப்பமைப் பினைச்சார்ந்த ; உடலில் சிறு பள்ள அமைப்புக்களுடைய.

canalic'ulate, canalic'ulated, *a.* (உள்.) கால்வாய் உடைய ; சிறுபள்ளம் போன்ற அமைப்புடைய.

canalic'ulus, *n.* (உள்.) உடலில் உள்ள சிறு கால்வாய் போன்ற அமைப்பு ; *pl.* canalic'uli.

canaliza'tion, *n.* கால்வாய்க் கட்டுமானம் ; செயற்கைக் கால்வாய் அமைப்பு ; கால்வாயாக மாற்றுதல் ; வழிப்படுத்துதல், வரையறுக்கப்பட்ட வழியில் இயக்குதல்.

can'alize, *v.* கால்வாய் வெட்டு ; கால்வாயாக மாற்று ; வரையறுக்கப்பட்ட வழியில் செலுத்து ; நெறிப்படுத்து.

canape, (பிர.) *n.* உப்பிட்ட மீன்முட்டைத் தொகுதியோடு பொரிக்கப்பட்ட சிற்றுண்டி வகை.

canard, (பிர.) *n.* புரளி, பொய்யாகப் பரவவிடப்படும் செய்தி.

canar'y, *n.* இனிப்புடைய இளந் தேறல் வகை ; மஞ்சள் வண்ணமுள்ள பாடும் பறவை வகை ; கானரித் தீவுகளில் தோன்றிய கிளர்ச்சி மிக்க கூத்துவகை ; தூண்டில் இரையாகப் பயன்படும் மஞ்சள் நிறமான புழுவகை ; *a.* கானரித் தீவுகளுக்குரிய ; பளப்பளப்பான மஞ்சள் நிறமுள்ள ; *v.* கானரித்தீவுக் கூத்தினை மேற்கொண்டு ஆடு ; இங்கும் அங்கும் துள்ளிப்பாய்.

can'ary-cree'per, *n.* கேடய வடிவான இலைகளையும் மஞ்சள் வண்ண மலர்களையும் கொண்ட கொடிவகை.

cana'ry-seed, *n.* பாடும் புள்ளின் உணவாகப் பயன்படும் புல்விதை.

canas'ta, *n.* தென் அமெரிக்காவில் தொடங்கிய சீட்டாட்ட வகை.

canas'ter, *n.* நடு அமெரிக்கப் புகையிலை வகை.

cancan, (பிர.) *n.* பிரஞ்சுக்கூத்து வகை, ஊர்த்துவ நடன வகை.

can'cel, *n.* எதிராணை ; அச்சடித்த தாளை வெளிவிடாதடக்குதல் ; அச்சிட்டதாளை வெளிவிடாதடக்கி வேறுக அச்சிட்ட படி ; *v.* துடைத்தழி, இல்லாதாக்கு, நீக்கு ; நடைமுறையிலிருந்து விலக்கு ; கோடிட்டு அழி, கீறித்தள்ளுபடி செய் ; எதிரீடு செய், சரிக்கட்டு ; மறு எதிராணை செய் ; பின்னத்தில் ஒரே பகுதி தொகுதி யிரண்டிலும் ஒரே சினை அடி ; சமன் தொடரில் பொதுச்சினை அடி ; (தொ.) pair of cancels, சீட்டுக்களில் துளையிடும் அழுத்துகுறடு.

can'cellate, can'cellated, *a.* எதிரெதிராக வெட்டும் கறுக்கு வரிகளையுடைய ; சிலுவைக் குறியால் குறிக்கப்பட்ட ; பின்னல் வலை போன்ற அமைப்புடைய ; எலும்புகளில் இழை இதழ் வலைப் பின்னலமைப்பு மூலம் கடற்பஞ்சு போன்ற இயல்பு வாய்ந்த.

cancella'tion, *n.* குறுக்குக் கோடிடுதல் ; அழித்தல், நீக்கம்.

cancell'i, *n. pl.* தடுப்புச் சட்டத்தின் பின்னல் கம்பி வலைக்கூறு.

can'cellous, *a.* (உள்.) எலும்புகளில் இழையிதழ்க் குறுக்குப் பின்னல் அமைப்பு மூலம் கடற்பஞ்சுபோன்ற தன்மையுடைய.

Can'cer, *n.* கடக இராசி, ஆடி வீடு; விண்மீன் குழு, ஆடிக் கோடு; உணவுக் குரிய நண்டு வகையின் இனம்.

can'cer, *n.* புற்றுநோய், உள்ளிருந்து அரிக்கும் தீமை.

cancer'ate, *v.* புற்று வை.

can'cerous, *a.* புற்றுநோய் போன்ற; புற்றுநோய் கொண்ட.

can'criform, *a.* நண்டு வடிவான; புற்றுநோய் போன்ற.

can'crine, *a.* நண்டு போன்ற; மாலை மாற்றணி பொருந்திய.

can'croid, *n.* நண்டு போன்ற உயிரினம்; புற்றுப்போன்ற கட்டி; *a.* அலவன் போன்ற; புற்றுநோயை ஒத்த.

candel'a, *n.* ஒளி அலகுக் கூறு.

candela'brum, *n.* கொத்து விளக்குத் தண்டு; அழகிய மெழுகுவர்த்திக் கொத்து; *pl.* candela'bra.

can'dent, *a.* பகட்டொளியுடைய; வெள்ளொளி வெப்புடைய.

candes'cence, *n.* வெள்ளொளி வெப்பு, வெள்ளொளி.

candesc'ent, *a.* வெள்ளொளி வெப்புடைய; வெள்ளொளி காலுகிற, வெண்சுடர் வீசுகிற.

can'did, *a.* கள்ளமில்லாத, கபடற்ற; தெளிவான; ஒருசார் பற்ற, நேர்மையான; (தொ.) candid camera, மக்கள் அன்றுடத் தொழிலில் இயல்பாக ஈடுபட்டிருப்பதைப் படம் எடுக்கத்தக்க நிழற்படக் கருவி; தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களை அவ்வாறே இயல்பாக நிழற்படம் எடுக்கும் பாணி.

can'didacy, *n.* வேட்பாளர்நிலை, நாடிநிற்கை, கோரிக்கை.

can'didate, *n.* வேட்பாளர், பணிக்கு மனுச்செய்பவர்; தேர்வு நாடுபவர்; தேர்தல் நாடுபவர், அபேட்சகர்.

can'didature, *n.* வேண்மர்நிலை; வேண்டுதல், கோரிக்கை, அபேட்சித்தல்.

can'didly, *adv.* கபடின்றி, கரவின்றி, நேர்மையாக; ஒரு சார்பின்றி.

can'didness, *n.* கள்ளங்கபடின்மை, வெள்ளை உள்ள முடைமை; நேர்மை; ஒரு சார்பின்றி இருத்தல்; தெளி வுடைமை.

can'died, *a.* சர்க்கரைப்பாகு படிந்த; சர்க்கரையில் பதனம் செய்யப்பட்ட; மணிக்கண்டு ஆக்கப்பட்ட, மணியுருவான; மினுங்குகிற; இனிய, தேனினிமையுடைய, இனிப்பூட்டப் பட்ட; இன்புகழ்ச்சியான.

can'dies, *n. pl.* கற்கண்டுகள்; தித்திப்புப் பண்டங்கள்.

can'dle, *n.* மெழுகுத் திரி, கொழு விளக்கு; ஒளியுடைய பொருள்; ஆவி அடுப்பின் பீற்றல்; ஒளிச் செறிவலகுக்கூறு; *v.* முட்டை முதலிய பொருள்களை விளக்கொளியின் எதிரே காட்டி ஆய்ந்துபார்; (தொ.) burn the candle at both ends, ஒரேசமயத்தில் இருவழிகளில் பொருள் செலவழி; not fit to hold a candle to, ஒப்பிடுதற்கியலாத; the game is not worth the candle, பயனில் முயற்சி, உழைக்கும் கூலிக்குக் கூடக் கூட்டிவராத முயற்சி.

can'dle-berry, *n.* காய்ந்தால் விளக்குப் போன்று ஒளிதரும் கொட்டைகளையுடைய மரவகை; மரவகையின் கொட்டை.

can'dle-bomb, *n.* விளக்கனலில் வெடிக்கக்கூடிய தண்ணீர் நிரம்பிய கண்ணாடிக் குண்டு.

can'dle-dipp'ing, *n.* கொழுப்பில் தோய்த்து மெழுகுவர்த்தி செய்யும் முறை.

can'dle-end, *n.* எரிந்து தேய்ந்துபோன மெழுகுதிரி அடிக் கட்டை.

can'dle-fish, *n.* உலர்த்தி மெழுகுதிரி போன்று பயன்பட வல்ல நெய்யார்ந்த வட பசிபிக் மாக்கடலின் மீன்வகை.

can'dle-holder, *n.* பணியியற்றுங்கால் விளக்கு தாங்குபவர்; மறைமுக உடன்தையாளர்.

can'dle-light, *n.* மெழுகு விளக்கொளி, விளக்கொளி; மெழுகுதிரிக்கட்டின் ஒளிவிளக்கம்; விளக்கு ஒளி நேரம்.

can'dle-lighter, *n.* விளக்கு ஏற்றுபவர்; விளக்கேற்றப் பயன்படும் பொருள்.

Can'dlemas, *n.* கத்தோலிக்கர் திருவிளக்குத் திருநாள், பிப்ரவரி 2-ஆம் நாள்.

can'dle-nut, *n.* பசிபிக் தீவுகளிலுள்ள நெய்ப்புடைக் கொட்டை வகை.

can'dle-power, *n.* மெழுகு விளக்கொளி, ஒளி அலகுக்கூறு.

can'dle-snuffer, *n.* மெழுகுதிரியின் கரிந்த திரியை வெட்டுங் கத்திரி; நாடக சாலைகளில் விளக்குகளின் கரிந்த திரியை வெட்டும் பணியாள்.

can'dlestick, *n.* மெழுகுதிரி நிலைச்சட்டம்.

can'dle-tree, *n.* மெழுகுதிரியின் வடிவுடைய கனியுள்ள அமெரிக்க வெப்ப மண்டல மரவகை.

can'dle-waster, *n.* இரவு நெடுநேரங் கடந்துங் கற்பவர்.

can'dle-wood, *n.* நடு அமெரிக்கப் பகுதிக்குரிய பிசின் மர வகை.

can'dock, *n.* மஞ்சள் நிற நீர்வாழ் மலர் வகை, மஞ்சள் நிற அல்லிக்கொடி வகை.

can'dour, *n.* ஒருபாற் கோடாமை, நடுவுநிலைமை, வாய்மை, நேர்மை; கரவின்மை, படிறின்மை.

can'dy [1], *n.* கற்கண்டு; *v.* சர்க்கரை படிவி, சர்க்கரையி லிட்டுப் பதனப்படுத்து; சர்க்கரையை மணிக்கண்டுருவாக்கு; மணியுருவாகு; (தொ.) candy floss, கழி நுனியில் வைத்து விற்கப்படும் பஞ்சு போன்ற உருண்டைத் தித்திப்புப் பண்டம்; candy stripe, ஆடையின் கரையருகே விட்டு விட்டு இடப்படும் வெள்ளிடை மென்கரை.

can'dy [2], *n.* கண்டி, பாரம், இருபது மணங்கு கொண்ட எடை.

can'dytuft, *n.* (தாவ.) பெரும்புறவிதழுடைய மலர்க்கொத்துச் செடிவகை.

cane, *n.* பிரம்பு; சூரல்; கரும்பு; மூங்கில்வகை; அடிக்கும் மெல்லிய பிரம்பு; கைத்தடி; அரக்கு - கந்தகம் - கண்ணாடி ஆகியவற்றின் கம்பியுருளை; *v.* பிரம்பால் அடி.

cane'-apple, *n.* சிவப்புப் பழங்களைக் கொண்ட மரவகை; சிவப்புப் பழவகை.

cane'-bottomed, *a.* பிரம்பால் பின்னப்பட்ட இருக்கையை உடைய.

cane'-brake, *n.* மூங்கிற் புதர்க்காடு; பிரப்பங்காடு.

cane'-chair, *n.* பிரம்பு நாற்காலி.

cane'-fruit, *n.* பிரப்பம்பழம்; மூங்கிற் பழம்.

Canell'a, *n.* கருவாமரம், இலவங்க மரவகை.

cane'-mill, *n.* கரும்பு ஆலை.

can'ephor, *n.* (கட்.) தலையிலே கூடையைச் சுமந்திருக்கும் பெண் உருவக்கலைச் சிற்பம்.

caneph'orus, (ல.) *n.* கூடையைச் சுமந்து நிற்பது போன் றமைந்த கிரேக்க இளைஞர் அல்லது மகளிர் சிற்பம்; *pl. canep'hori.*

canes'cent, *a.* வெண்மையாகும் போக்குடைய, பழமையான.

cane'-sugar, *n.* கரும்புச் சர்க்கரை; கருப்பஞ் சாற்றினின்று எடுக்கப்படும் வெல்லச்சத்து.

cane'-trash, *n.* கரும்பாலை எரிபொருளாகப் பயன்படும் கரும்புச்சக்கை.

can'ful, *n.* குவளையளவு.

cang, cangue, *n.* சீன இளங்குற்றவாளிகள் கழுத்திற் சுமத்தப்படும் தண்டனைப் பலகை.

canic'ular, *a.* அக்கினி நட்சத்திரத்தைச் சார்ந்த; கத்திரி நாளைச் சார்ந்த; (தொ.) canicular cycle, ஆயிரத்து நானூற்று அறுபது ஆண்டுகளைக் கொண்ட எகிப்திய காலக்கூறு; canicular year, அக்கினி நட்சத்திர உதய முதற் கணக்கிடும் ஆண்டு.

can'ine, *a.* நாயைச் சார்ந்த; நாய் போன்ற; பல் வகையில் நாய்க்கிருப்பது போன்ற; (தொ.) canine letter, உறுமல் ஒலி (R என்ற) எழுத்து; canine tooth, கோரைப்பல்.

can'ing, *n.* பிரம்படி, பிரம்பால் அடித்தல்.

can'ister, *n.* தேயிலைப்பெட்டி; குண்டு ரவைப்பெட்டி; அப்பப்பெட்டி.

cani'ties, *n.* முடிநரை.

can'ker, *n.* வாய்ப்புண்; அரிப்பு எரிப்பு உடைய அழிசிக் கட்டு; மரஞ்செடியினங்களில் தோன்றும் காளான் நோய் வகை; பழமர நோய்வகை; குதிரைகள் காலில் தோன்றும் வீக்கம்; நாயின் காதில் வரும் படைநோய்; பறவைகளுக்கு வரும் கட்டி; அரிக்கும் புழு; அழிகேடு; *v.* உள்ளிருந்தரி; அரித்தழி, அழிவுக்கு ஆளாக்கு; பழியொட்டு, அழி, கேடு பரப்பு; பண்புகெடு, சீர்குலைவூட்டு; ஊழ்த்துப்போ, கெடு.

cank'ered, *a.* அரிக்கப்பட்ட; நச்சுப்பட்ட, சீர்கெட்ட, பண்பு குலைவுற்ற; மனக்கசப்புற்ற.

cank'eredly, *adv.* ஊழலாக.

cank'erous, *a.* புற்றுநோய் போன்று அரித்து அழிவுசெய்கிற, அரித்துத் தின்னுகிற, பழிகேடான.

can'ker-rash, *n.* அழற்காய்ச்சல், தொண்டைப்புண் காய்ச்சல்.

cank'er-worm, *n.* இலைதளிர்களை அழிக்கும் முட்டைப்புழு.

cank'ery, *a.* அரித்துத் தின்னுகிற, சாகும்போக்குடைய.

Cann'a, *n.* பன்னிற மலருள்ள கல்வாழை வகை, காஞ வாழை.

cann'abic, *a.* சணலினைச் சார்ந்த.

cann'abin, *n.* சணல் இனச்செடியின் பிசின் வகை.

canned, *a.* பெட்டியில் அடைத்த, தகரப்பெட்டிகளில் அடைத்துப் பாதுகாக்கப்பட்ட; இசை வகையில் மீட்டிசைப் பதற்காகப் பதிவு செய்யப்பட்ட.

cann'el, cann'el-coal, *n.* எரிமூட்டு நிலக்கரி.

cann'elure, *n.* நீள்வரைப் பள்ளம்; துப்பாக்கி குண்டில் சுற்றுவரிப்பள்ளம்.

cann'er, *n.* தகர அடைப்புக்களில் அடைப்பவர்.

cann'ery, *n.* தகர அடைப்புச்சாலை, உணவுப்பொருள்கள் தகர அடைப்புக்களில் வைத்தடைக்கப்படும் இடம்.

cann'ibal, *n.* தன்னினந்தின்னி, அரக்கன்; *a.* தன்னினத்தைத் தின்னுகிற.

cann'ibalism, *n.* தன்னின உயிருண்ணும் பழக்கம்.

cannibalis'tic, *a.* தன்னின உயிருண்ணும் இயல்புடைய.

cann'ibalize, *v.* இயந்திரத்துக்கு அதனுடனொத்த பிற இயந்திரப் பகுதிகளை எடுத்துச் செப்பம் செய்; இயந்திரப் பகுதி நிரப்பப் பிற இயந்திரப் பகுதிகளைப் பிரித்தெடு.

cann'ikin, *n.* சிறு தகரக்குவளை.

cann'ing, *n.* உணவுப் பொருள்களைத் தகர அடைப்புக்களில் அடைக்கும் தொழில்; அடைப்புமுறை.

cann'on, *n.* பீரங்கி; பாரவெடிப்படை, பெரிய துப்பாக்கி; விமானப் பீரங்கி; பாலுண்ணிகளின் உள்ளங்கால் பாத எலும்புகளின் கெட்டிப்பு இணைப்பு எலும்பு; வட்டமான கடிவாளச்சில்லு; மேடைக்கோற் பந்தாட்டத்தில் இரு பந்துகளை ஒருங்கே அடிக்கும் தெறி அடி; *v.* பீரங்கியால் தாக்கு; மேடைக்கோற் பந்தாட்டத்தில் தெறி அடிகொடு; மோதுவி; மோது; சென்றுமுட்டு.

cannonade', *n.* பீரங்கியின் தொடர்குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதல்; *v.* பீரங்கியால் தாக்கு, குண்டுவீச்சால் தகர்.

cann'on-ball, *n.* பீரங்கிக்குண்டு.

cann'on-bit, *n.* வட்ட வடிவக் கடிவாளச் சில்லு.

cann'on-bone, *n.* பாலுண்ணிகளின் உள்ளங்கால் எலும்பு பாத எலும்புகளின் கெட்டிப்பு இணைப்பான எலும்பு.

cannoneer', *n.* பீரங்கி வலவர்.

cann'on-fodder, *n.* பீரங்கி இரை, போரில் ஈடுபட்டு மாள்வதற்குரிய மனிதர் தொகுதி.

cann'on-game, *n.* மேடைக்கோற் பந்தாட்ட வகை.

cann'on-met'al, *n.* பீரங்கி உலோகம், துப்பாக்கி செய்யப் பயன்படும் உலோகம், ஒன்பது பங்கு செம்பும் ஒரு பங்கு வெள்ளீயமும் கொண்ட வெண்கலக் கலவை.

cann'on-proof, *a.* பீரங்கிக்குண்டு ஏறுத; பீரங்கிக்குண்டு காப்பான.

cann'onry, *n.* பீரங்கித் தாக்குதல்; பீரங்கித்தொகுதி.

cann'on-shot, *n.* பீரங்கிக்குண்டு; பீரங்கிக்குண்டு வீச்செல்லை.

cann'ot, *v.* முடியாது, இயலாது.

cann'ula, *n.* (மரு.) துளைக்கருவி உட்கொண்ட குழாய்க் கருவி; உயிர்ப்பு உதவும் குழாய்க்கருவி.

cann'ulate, *a.* (மரு.) அறுவை உயிர்ப்புக் குழாயைச் சார்ந்த.

cann'y, *a.* விறல் படைத்த, சாமர்த்தியமான, சூழல் புரிந்து கொள்ளுகிற; உலகியல் திறமைவாய்ந்த; கூரிய அறிவுள்ள; நற்பேறான; நன்னிமித்தமுடைய; இடர்ப்பாடு நீங்கிய; நலமான, வசதியான; கடுஞ் சிக்கனமான; மென்னயமிக்க; சூழ்ச்சி நயமுடைய.

canoe', *n.* வள்ளம், சிறு படகு; தூற்றுப்பு வட்டுக்கொண்டு உகைக்கப்படும் தோணி; *v.* படகு உகை.

canoe'ist, *n.* படகோட்டி, படகு உகைப்பவர்.

can'on [1], *n.* கட்டளை, பொது ஒழுங்கு; சட்டம், விதி, சூத்திரம்; கட்டளை ஏடு; கட்டளை மறை ஏடு, திருமுறை; திருச்சபைக் கட்டளைக் கோட்பாடு; ஆசிரியர் மெய்ம்மர புரிமை ஏடு; மணியின் கொளுவி; ஆசிரியரே எழுதியதாக ஏற்றமைந்த ஏட்டுத் தொகுதி; முறைப்படி அமைந்த கட்டளை இசைப்பாட்டு; புனிதர் பெயர்ப்பட்டியல், அருணெறி அடியார் பெயர்த் தொகுதி; பெரிய அச்சுருப்படிவ வகை; (தொ.) canon of the mass, தொழுகை முறையேட்டின் ஒருபகுதி.

can'on [2], *n.* கட்டளைக்கு உட்பட்டுக் கிறித்தவ மாவட்ட முதற்கோயிலிலோ வேறு திருக்கோயிலிலோ ஊழியம்செய்யும் சமயக் குருக்கள் குழுவின் உறுப்பினர்; கிறித்தவ மாவட்டத் தலைமைக்கோயிலைச் சார்ந்து தனிச் சலுகை ஊதியம் பெறும் உயர்நிலைச் சமயகுரு; (தொ.) Canon Regular, தூய திரு. அகஸ்டினின் (St. Augustine) போதனைகளைப் பின்பற்றும் குழுவினர்; canon residentiary, கிறித்தவத் தலைமை இடக் கோயிலிலேயே தங்கிப் பணிகளில் பங்கெடுத்துக் கொள்ளும் சமயகுரு; canon secular, தூயதிரு. அகஸ்டினைப் பின் பற்றும் குழுவுக்குப் புறம்பான குழுவினர்.

can'on [3], *n.* அருவிபாய்ந்து உண்டான கெவி, மலைவிடர், ஆழ்கிடங்குப் பள்ளத்தாக்கு.

can'oness, *n.* விதிமுறைக்கு உட்பட்டு வாழும் சமயப் பெண் துறவிக் குழுவின் உறுப்பினர்; கிறித்தவத் தலைமைக்கோயிலினின்றும் ஊதியம் பெற்று உலகியல் வாழ்வில் ஈடுபட்டுள்ளமாது.

canon'ic, canon'ical, *a.* கட்டளை முறையான, விதிமுறை தழுவிய; ஒழுங்கு முறைப்பட்ட; திருச்சபை மரபு வழுவாத.

canon'icals, *n. pl.* திருச்சபைக் கட்டளைப்படி அமைந்த அலுவல்முறை உடைகள்.

canoni'city, *n.* திருச்சபைச் சட்டத்தைச் சார்ந்த நிலை.

can'onist, *n.* திருச்சபைக் கட்டளை முறைகளில் தேர்ந்தவர், விதிமுறை அறிஞர்.

canonis'tic, *a.* திருச்சபை விதிமுறை அறிஞருக்குரிய; கட்டளை முறைகளைச் சார்ந்த.

canoniza'tion, *n.* புனிதர் தொகையுட்படுத்துதல்; புனிதர் திருமுறையுட் சேர்த்தல், திருமுறை வகுப்பு; வழிமுறைப் படுத்துதல்; விதிமுறைப்பாடு, திருச்சபை இசைவேற்பு.

can'onize, *v.* தூய்மையர் வரிசையிற் சேர், திருமுறைப் படுத்து; கட்டளைப் படுத்து, விதிமுறையானதென்று ஒப்புதல் தெரிவி.

can'on-law, *n.* கிறித்தவ சமயச்சட்டம், திருச்சபைக் கட்டளைமுறைத் தொகுப்பு.

cano'nry, *n.* கட்டளைச் சமயக் குழுவினர் மானியம்.

canoph'ilist, *n.* நாயிடம் பற்றுச் செலுத்துபவர், நாய் ஆர்வலர்.

cano'pic, *a.* குடற்சுழி சார்ந்த, பண்டை எகிப்தில் நீள் பதனப்படுத்தப்படும் இறந்தவர் உடலின் உள்ளுறுப்புக்களை வைப்பதற்குரிய மனிதத் தலையுடன் கூடிய உருவுடைய பேழை சார்ந்த.

Canop'ic, *a.* கனோபஸ் (Canopus) என்ற பண்டை எகிப்திய நகருக்குரிய ; (தொ.) Canopic jar, Canopic vase, எகிப்திய புதை தாழி.

Cano'pus, *n.* அகத்திய நட்சத்திரம், அக்கினி நட்சத்திரத்துக்கு அடுத்தபடி ஒளிமிக்க தென்திசை வானின் விண்மீன் குழுவிலுள்ள விண்மீன் ; குடற்சுழி, எகிப்தில் கெடாமல் பேணி வைக்கப்படும் பிணத்தின் உள் உறுப்புக்களை வைக்கப் பயன்படும் மனிதத் தலையுடைய புதைகலம்.

can'opy, *n.* மேற்கட்டி, விதானம் ; மேற்கவிகை, உலகக் கவிகை மாடம் ; (க-க.) மாட மேற்கட்டு ; உருவச் சிலை-கல்லறை-பலிமேடை-சாவடி ஆகியவற்றின் மேற்கட்டுமானம் ; விமானமோட்டி இருக்கைமீதுள்ள ஒளியூடுருவும் மேற்கவிகை ; விமானக் காப்புக்குடையின் மேற்பகுதி ; *v.* மேற்கட்டி போலக் கவிந்து இயலு ; விதானம் அமை.

canor'ous, *a.* காதுக்கினிதாக இசைக்கிற, இசை அதிர்வுடைய.

canst, *v.* **can** என்பதன் பழைய முன்னிலை ஒருமை வடிவம்.

cant [1], *n.* செயற்கைப் பேச்சு, பகட்டுரை, பொருளற்ற மரபுரை, வெற்றுரை ; கொச்சை, இழிசொல் ; தனிமொழி, குழூஉக்குறி வழக்கு ; போலிக்கருத்து ; சமயப்பகட்டு, பாசாங்கு ; படிற்றொழுக்கம், கபட நடத்தை ; *a.* பொய்யான, போலியான, பகட்டான, வெற்றுரவாரமான ; *v.* வெற்றுரவாரம் செய் ; பொய் நடிப்பு நடி, பகட்டு, கபட நாடகமாடு ; சிணுக்கு, நீலிக் கண்ணீர் வடி ; போலிவாதம் செய் ; வெற்றுரையாடு.

cant [2], *n.* தளச்சாய்வு, சரிவு ; கப்பல் அகட்டிலிருந்து சாய் தளமான கூட்டை ; சாய்தளம், சரிவு முகப்பு ; மிடாமூடியின் பக்கப் பலகை ; திடீர் எறிவு, குலுக்கம் ; *v.* சாய், மூலை வாக்கில் சரி ; விளிம்பின் மீது திருப்பு ; தூக்கி எறி.

cant [3], *n.* ஏல விற்பனை ; *v.* ஏலத்தின் மூலம் விற்பனைசெய்.

can't, *v.* cannot என்பதன் பேச்சு வழக்குச் சுருக்கம்.

Can'tab, Cantabri'gian, *n.* கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உறுப்பினர் ; *a.* கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த.

can'tabank, *n.* நாடோடிப் பாடகன்.

can'taloup, *n.* முலாம்பழ வகை.

cantank'erous, *a.* இடக்குமுடக்கான, ஏறுமாறான, முரணியலான.

canta'ta, *n.* (இசை.) பாடற்கதை நாடகம்.

Canta'te, *n.* துதிப்பாடல்.

cantatri'ce, (இத்.) *n.* தொழில்முறைப் பாடகி, பாடுவதைத் தொழிலாகக் கொண்ட பெண்.

cant'-board, *n.* சாய் பலகை.

canteen', *n.* பணிமனைச் சிற்றுண்டிச்சாலை ; உலாக் கேளிக்கைக்குரிய உணவுக்கலப் பேழை ; பாசறை மதுக்கடை ; கடலோடிகளின் மதுப்புட்டிக் கலம் ; (தொ.) dry canteen, மதுவகைகள் விற்காத சிற்றுண்டிச்சாலை ; wet canteen, மதுவகைகள் உள்ள அருந்தகம்.

cant'er [1], *n.* சிணுங்கி ; பிச்சைக்காரன் ; போலித்தனமான தொழில் செய்பவன், பாசாங்கு செய்பவன்.

cant'er [2], *n.* தளர் விரைநடை, கதழ் பரி ; எளிய பாய்ச்சல் ; *v.* எளிதாகப் பாய்ந்தோடு ; எளிதாகப் பாய்ந்தோடச்செய்.

can'terbury, *n.* சுவடிமணை, புத்தகந்தாங்கி, இசைக்கருவி கலங்கள் வைப்பதற்குரிய நிலைச்சட்டம்.

Can'terbury Bell, *n.* பூச்சிமுள் போன்ற துய்களையும் மணிவடிவான பல்வண்ண மலர்களையும் கொண்ட செடி வகை.

can'thari, *n.* **cantharus** என்பதன் பன்மை.

can'tharid, *n.* கொப்புளம் உண்டாகப் பயன்படுத்தப்படும் ஈ வகை ; *pl.* cantha'rides.

can'tharus, *n.* கமண்டலம் ; கிறித்தவத் திருக்கோயில் படிவாயிலில் வைக்கப்பட்டுள்ள தொட்டி.

can'thi, *n.* **canthus** என்பதன் பன்மை.

cant'-hook, *n.* வெட்டு மரங்களை உருட்ட உதவும் நீண்ட கைக்கோலின் நுனியிலுள்ள இரும்புக் கொக்கி.

can'thus, *n.* கடைக்கண், கண் இமைகள் கூடுமிடத்துள்ள கோணம்.

can'ticle, *n.* சிறுபாடல், பாசுரம், யாப்பு அமைதியில்லாத கிறித்தவத் திருக்கோயில் பாடல்.

Can'ticles, *n. pl.* சாலமன் பாடலேடு.

can'tilever, *n.* பிடிமானம், சுவர்களிலிருந்து கைபோல் நீண்டு பாரத்தினைத் தாங்கும் கவை.

can'tillate, *v.* பாடு.

can'tillatory, *a.* இசைக்குரலுடன் பாடுகிற.

cant'ing [1], *a.* சிணுங்குகிற ; போலியான கடவுள் பக்தி உடைய ; (கட.) சிலேடை குறித்துக் குத்திக்காட்டுகிற.

cant'ing [2], *n.* சாய்த்தல்.

can'tle, *n.* வெட்டுத் துண்டு ; சேணத்தின் பின்பகுதி ; *v.* துண்டு வெட்டு ; பிரி ; பகு.

cant'let, *n.* துண்டுப் பகுதி.

can'to, *n.* காவியப் பெரும்பிரிவு, காண்டம் ; (இசை.) இன்னிசையை ஏந்திச் செல்லும் பகுதி ; *pl.* can'tos.

can'ton [1], *n.* நாட்டுப் பிரிவு, மண்டலம் ; சுவிட்சர்லாந்து நாட்டின் மாகாணம் ; பிரான்சு நாட்டின் ஆட்சிச் சிறு பிரிவு ; நிலப்பிரிவு ; மூலை ; (க-க.) அரை உட்பதிவான சதுரத்தினுல் அழகு செய்யப்பட்ட மூலை ; (கட.) கேடய மேல் மூலையில் சிறு சதுரம் ; *v.* பகுதிகளாகப் பிரி, தனி ஆட்சிப் பகுதிகளாக வகு.

canton' [2], *v.* போர் வீரர்களுக்கு உறைவிடம் ஒதுக்கு.

can'tonal, *a.* தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ; தனி ஆட்சிப் பகுதிகளைச் சார்ந்த.

can'toned, *a.* (க-க.) அரை உட்பதிவான சதுரத் தூண்களினுல் அழகு செய்யப்பட்ட மூலைகளையுடைய ; (கட.) மூலைச் சின்னங்களுக்கிடையே வைக்கப்பட்டுள்ள.

canton'ment, *n.* பாளையம், படைவீரர்களின் தற்காலக் குடியிருப்பு ; படையினர் நகரம்.

can'tor, *n.* கிறித்தவத் திருக்கோயில் இசை இயக்குநர்.

canto'rial, *a.* கிறித்தவத் திருக்கோயில் இசை இயக்குநருக்கு உரிய ; பாடகர் குழுவுக்குரிய பகுதியின் வடதிசை சார்ந்த.

canto'ris, (ல.) *a.* திருக்கோயில் பாடகர் குழுப்பகுதியின் வடதிசைக்குரிய ; (இசை.) இயக்குநர் புறமிருந்து பாடுதற்குரிய.

cant'-rail, *n.* புகைவண்டிப் பெட்டியின் மேற்பகுதியைத் தாங்கும் கட்டை.

can'trip, *n.* மாயக்காரியின் சூழ்ச்சி வித்தை ; சிறு குறும்பு ; குறும்புச் செயல்.

can'vas, *n.* கப்பற் பாய்த்துணி ; கூடாரத்துக்குரிய முரட்டுத் துணி ; கித்தான் ; சித்திரப்படாம் ; கெட்டி மெழுகூட்டிய துணி, திரைச்சீலை ; பந்தயப்படகின் பின்புறபோக்குத் திரை ; *v.* முரட்டுத் துணியால் மூடு ; (தொ.) under canvas, கப்பல் பாய் விரிந்த நிலையில், பாய் விரித்து ; கூடாரத்தில்.

can'vas-back, *n.* முதுகுப்புறம் சாம்பல் வண்ணமும் கோணலான கோடுகளுமுடைய தென் அமெரிக்க வாத்து வகை.

can'vass, *n.* நுண்ணுய்வு, தேர்தலாதரவு நாட்டம், ஆதரவுக் கோரிக்கை ; *v.* வாக்குரிமை ஆதரவு நாடு; ஆதரவு கோரிச் செல் ; வாணிகத் தொடர்பு வேண்டு, வாடிக்கை திரட்டு, பங்குகள் பெறும்படி தூண்டு ; ஆதரவாளர் உளப்பாங்கு ஆராய் ; சுண்டிப்பார், குலுக்கிப்பார்.

can'vasser, *n.* வாக்குரிமை வேண்டுபவர் ; நுணுகி ஆராய்பவர்.

can'vas-stretch'er, *n.* நெய்வண்ண ஓவியம் வரைவதற்கான திரைச்சீலையைத் தாங்கும் மரச்சட்டம்.

can'vas-work, *n.* திரைச்சீலைமேல் செய்யப்படும் சித்திரப் பூ வேலை.

can'yon, *n.* கெவி, விடர், இடுங்கிய செங்குத்தான பள்ளத் தாக்கு.

canzo'ne, *n.* பல உறுப்புக்களைக்கொண்ட உணர்ச்சிப்பாடல் வகை ; உணர்ச்சிப் பாடலுக்கேற்ற கருவியிசைப்பு ; பல்சந்த முடைய இத்தாலியப் பாடல் தொகுதி ; *pl.* canzo'ni.

canzonet', canzonet'ta, *n.* பல உறுப்புக்களைக் கொண்ட சிறிய உணர்ச்சிப் பாடல் வகை ; *pl.* canzonet'te.

caou'tchouc, *n.* கெட்டிப்படுத்தப்படாத ரப்பர் ; *a.* கெட்டிப் படுத்தப்படாத ரப்பரைச் சார்ந்த.

cap, *n.* குல்லாய் ; துணியாலான மகளிர் தலைச்சீரா ; விளிம் பில்லாத தொப்பி ; கூட்டிணைப்பினரின் அடையாளத் தலையணி; நச்சுக்காளானின் மேற்பகுதி ; முகடு; மேற்பகுதி; வெடிக்கக்கூடிய பொருளைக் கொண்டுள்ள உலோக உறை ; கைத்துப்பாக்கியில் வெடிக்கும் பொருளைக் கொண்டுள்ள தாள் சில்லு ; வணக்கத்திற்காகத் தொப்பியை உயர்த்துதல்; *v.* குல்லாய் அணி ; முகப்பு வாயினை மூடு ; குல்லாயினுல் தட்டுவதுமூலம் பட்டம் உரிமைப்படுத்து ; மேம்பட்டு முந்து; கூட்டிணைப்பில் உறுப்பினராக ஏற்றுக்கொள் ; குல்லாய் உயர்த்தி வணக்கம் செய்; உடலில் ஒரு பகுதியில் ஊறுண்டு பண்ணு ; (தொ.) black cap, கொல்லத் தீர்ப்புக் கூறுமுன் நடுவர் அணிந்து கொள்ளும் கறுப்புக் குல்லாய் ; cap and bells, விதூடகனின் அடையாள அணிகள் ; cap in hand, பணிவாக; இரந்துவேண்டும் நிலையில்; cap verses, அந்தாதித் தொடை வகையிற் பதிலிறு ; feather in one's cap, பெருமைக்குரிய கூறு ; the cap fits, பொதுச்சொல் தனக்குரியதாகக் கருதப்படுதல் ; throw up one's cap, மட்டுமிஞ்சிய மகிழ்ச்சியுறு.

capabil'ity, *n.* செயல் வல்லமை, திறமை ; செயற்படுவதற்குரிய இயல்பு ; முதிர்வுரு உள்ளார்ந்த தகுதி.

cap'able, *a.* கூடிய, செயற்படும் இயல்பு வாய்ந்த ; தகுதி பெற்றுள்ள ; செயலுக்குரிய துணிவுகொண்ட ; இயல்பான திறமை வாய்ந்த, வல்லமையுடைய ; தனி ஆற்றல் உடைய.

capa'cious, *a.* இடமகன்ற, விரிந்த, பரந்த ; உள்ளிடமிக்க, மிகுதி உட்கொள்ளக்கூடிய.

capac'itance, *n.* மின்தகையாற்றலுக்கும் மின் அழுத்தத் துக்கும் உள்ள வீத அளவு.

capac'itate, *v.* திறமையூட்டு ; தகுதிபெறச் செய்.

capac'itor, *n.* மின்னியல் உறைகலம்.

capa'city, *n.* பருமை அளவு ; கொள்திறம் ; உறிஞ்சு திறன்; செயல் ஆற்றல் ; புரிந்துகொள்ளும் ஆற்றல் ; திறமை, அறிவுத் திறன் ; செயல்நிலை, இயல் திறம், முறைமை ; சட்டத்தகுதி; இயன்ற உச்ச வேலை அளவு; மின் ஏற்றம் மின் அழுத்தம் ஆகியவற்றின் விகிதம்; (தொ.) capacity for heat, வெப்பம் உறிஞ்சும் தன்மை; legal capacity, தன்னிச்சையாக உரிமைகளையும் கடமைகளையும் மாற்றிக்கொள்ளும் ஆற்றல்; to capacity, முழு அளவு வரை.

cap-a-pie', *adv.* கவச வகையில் தலைமுதல் கால் வரைக்கும், முடிமுதல் அடி வரை.

capar'ison, *n.* குதிரையின் அணிமணிப் பூட்டு ; முழு ஆடை அணிமணி ; *v.* குதிரையை முழுதும் அணிமணிப்பூட்டி ஒப்பனைசெய் ; முழுஆடை அணிமணிபூட்டு.

cape [1], *n.* மேற்சட்டையோடு இணைக்கப்பட்ட தோள் அணியாடை ; கையற்ற தளர் மேற்சட்டை.

cape [2], *n.* நிலமுனை, நிலக்கோடி ; கரைக்கூம்பு ; *v.* (கப்.) ஒரு நேர் வழியைப்பற்றிச் செல் ; (தொ.) Cape boy, தென் ஆப்பிரிக்கக் கலப்பினச் சிறுவன் ; Cape cart, மேல் மூடியுள்ள இரு சக்கர வண்டி ; Cape doctor, நன்னம்பிக்கை முனையில் வீசும் தென் கிழக்குக் காற்று ; Cape Dutch, தென் ஆப்பிரிக்காவில் பேசப்படும் டச்சுமொழி வகை ; Cape girl, தென்ஆப்பிரிக்கக் கலப்பினச் சிறுமி ; Cape nightingale, தவளைவகை ; Cape pigeon, கடற்பறவை வகை ; Cape smoke, தென் ஆப்பிரிக்கச் சாராய வகை ; the Cape, தென் ஆப்பிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கைமுனை (Cape of Good Hope).

cap'elin, *n.* தூண்டிலிரையாகப் பயன்படுத்தப்படும் சிறு மீன் வகை.

cap'eline, *n.* இரும்பாலான சிறு மண்டைக் கவிகை ; மாலைப் போதுக்குரிய மென் கம்பிளியாலான முகத்திரை ; அறுவை மருத்துவத்துக் குரிய தலைக்கட்டு.

Capell'a, *n.* விண்மீன் குழுவகையின் ஒளிமிக்க முதல்விண்மீன்.

cap'er [1], *n.* துள்ளல், குதியாட்டம், கேலிக்குரிய நடை ; *v.* துள்ளிக்குதி, குதியாட்டம்போடு ; (தொ.) cut a caper, cut capers, குதியாட்டமிடு.

cap'er [2], *n.* தென் ஐரோப்பிய முட்செடி வகை.

capercail'lie, capercail'ye, capercail'zie, *n.* மிகப் பெரிய கோழியினத்தின் வகை.

cap'erer, *n.* துள்ளிக்குதிப்பவர்; துள்ளித்திரிவது; முட்டைப் புழுப் பருவத்தில் தூண்டிற்புழுவாகப் பயன்படும் ஈயினத்தின் வகை.

Caper'naite, *n.* பாலஸ்தீன் நாட்டின் கலிலிப் பகுதியில் (Galilee) கப்பேர்ணும் (Capernaum) என்ற இடத்தில் வாழ்பவர் ; இயேசுவின் தசைக்குருதித் திருமாற்றத்தை நம்புபவர்.

cap'ers, *n. pl.* ஊறுபதனமிடப்பட்ட தென் ஐரோப்பிய முட்செடி வகையின் மலர் ; (தொ.) English capers, ஊறுபதனமிட்ட மலர்ச்செடிவகையின் காய் நெற்று.

cap'er-sauce, *n.* முட்செடிவகையின் மலர் கலந்த காரச்சுவையூட்டப் பொருள்.

cap'ful, *n.* தொப்பி நிரப்பும் அளவு, சிறிது ; (தொ.) capful of wind, தற்செயல் காற்றுவீச்சின் ஓர் அலை.

cap'ias, (ல.) *n.* சிறையாணைச்சீட்டு.

capilla'ceous, *a.* மயிர் போன்ற, இழைவடிவான.

capilla'rity, *n.* மயிரிழைபோன்ற நுண்துளையின் ஈர்ப்பெறிவாற்றல் ; நுண்துளை ஈர்ப்பெறிவாற்றலுடைமை.

capill'ary, *n.* மயிரிழைபோன்ற நுண்குழல் ; நாடி நாளங்களை இணைக்கும் நுண்புழை நாளம் ; *a.* மயிர் சார்ந்த ; மயிரிழை போன்ற ; நுண்புழையுடைய; (தொ.) capillary attraction, நுண்துளை ஈர்ப்பாற்றல் ; capillary repulsion, நுண்துளை எறிவாற்றல்.

cap'ital [1], *n.* தலைநகர் ; அரசியல் மைய இடம் ; முதலீடு, நிலைமுதல், இடுமுதல், மூலதனம் ; முதலாண்மை, மூலதனத் துறை, மூலதனத்தளம், முதளாளித்துவம் ; மூலதளம், மூல ஆதாரம் ; முகட்டெழுத்து, பெரிய தலைப்புக்குரிய எழுத்து வடிவு ; முதன்மைச் செய்தி, முக்கியமானது ; *a.* தலைமையான ; தலைசிறந்த, முக்கியமான; முதல்தரமான, மிக நேர்த்தி வாய்ந்த ; முதலீடு சார்ந்த ; முதலீடான, முன்னீடான ; தலைக்குரிய, உயிர் இழப்புக்குரிய ; *v.* முதலிட்டு உதவு, முதலீடு அளி ; (தொ.) capital cross, நான்கு முகப்புக் கோடிகளும் தூண் தலைப்புப்போல் முடிவுறும் சதுரச்சிலுவை; capital expenditure, நிலைமுதல் வளர்ச்சிக்கான செலவீடு ; capital goods, நிலைமுதல் சரக்கு ; செய்தொழில் மூலச் சரக்கு ; capital levy, முதலீட்டின்மீது பிரிக்கும் வரி ; capital murder, கொலை முதலிய பிற குற்றச்செயல்களுக் கிடையே ஆற்றப்படும் தூக்குத் தண்டனைக்குரிய கொலைக்

குற்றம்; capital ship, வலிமையும் பேரளவும் உடைய முதல்தரப் போர்க்கப்பல் வகை; circulating capital, floating capital, பணம்-சரக்கு ஆகியவற்றின் உருவிலுள்ள முதலீடு; fixed capital, கட்டிட இயந்திர முதலீடு; make capital out of, தன்னலமேம்பாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்.

cap'ital [2], *n.* (க-க.) தூண் தலைப்புறுப்பு; ஏட்டுப் பெரும் பிரிவு.

cap'italism, *n.* நிலைமுதலுடைமை; முதலாண்மை, முதலீட்டாட்சி; முதலீட்டாட்சிச்சூழல், முதலாளித்துவம்; தனியுடைமை, முதலாளித்துவ ஆதிக்கம்.

cap'italist, *n.* முதலாளி, முதலீட்டின் மூலம் ஆதாயமும் ஆற்றலும் பெறுபவர்; *a.* முதலாளிக்குரிய; முதலாளித்துவஞ்சார்ந்த.

capitalis'tic, *a.* முதலாளிக்குரிய; முதலாளித்துவம் சார்ந்த.

capitaliza'tion, *n.* முதலீடாகப் பயன்படுத்தல்; தன்னுதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல்; வருதொகைகளுக்குத் தக்க கழிவு நீக்கி உடனடித்தொகையாக மாற்றுதல்.

cap'italize, *v.* முதலிடு, முதலீடளி; முதலீடாக மாற்று, பணமாக்கு; முழுதும் பயன்படுத்திக்கொள், தன் ஆதாயத்துக்குப் பயன்படுத்து; வருதொகையின் உடனடி மதிப்புக் காண்; உடனடிப் பணம் பெறு.

cap'itally, *adv.* முக்கியமாக; சிறப்பாக; முதல்தரமாக; உயிர்த்தண்டனைத் தீர்ப்பாக.

capitan'o, *n.* ஊர்த்தலைவன், தலையாரி.

cap'itate, cap'itated, *a.* (தாவ.) தனித் தலைப்புப்பகுதியுடைய, தலையுறுப்புடைய; கொத்துமலருடைய.

capita'tion, *n.* தலை எண்ணிக்கை; தலைவரி, ஆள்வரி; தலைவரி பிரிப்பு; (தொ.) capitation grant, சில கட்டுப்பாடுகளுக்கு மட்டும் உட்பட்ட நிலையுடைய ஆள்வீதமான உதவித் தொகை, தலைவிழுக்காட்டுப் பண உதவி.

Cap'itol, *n.* ரோமரின் ஜூபிட்டர் (Jupiter) என்ற தெய்வத்தின் கோயில்; அமெரிக்க ஐக்கிய நாட்டு (U. S. A.) மாமன்றம் அல்லது சட்டப் பேரவை கூடுமிடம்.

capito'lian, *a.* ரோமரின் ஜூபிட்டர் என்ற தெய்வத்தின் கோயிலுக்குரிய.

capit'oline, *a.* ரோம் நகர் அருகிலுள்ள ஏழுமலைகளில் மிகச் சிறிய மலைப்பெயர்: *a.* ரோம் நகரின் ஏழுமலைகளில் கடைசிச் சிறுமலைக் குரிய; ரோமரின் ஜூபிட்டர் என்ற தெய்வத்தின் கோயில் சார்ந்த.

capit'ulant, *n.* சரணடைபவர்.

capit'ular, *n.* கோயில் மன்றம் அல்லது திருச்சபைக்குழு நிறைவேற்றிய சட்டம்; கோயில் ஆட்சிக் குருக்களின் சபை உறுப்பினர்; *a.* திருச்சபைக் குழுவுக்குரிய.

capit'ulary, *n.* மன்னர் கட்டளைத் தொகுதி; அவசரச் சட்டத் தொகுதி; தலைப்பு; திருச்சபைக்குழு உறுப்பினர்; *a.* திருச்சபைக் குழுவுக்குரிய.

capit'ulate, *v.* கட்டுப்பாட்டின்மீது சரணடை, உடன்படிக்கைமீது பணிந்து விட்டுக்கொடு; சமரசம் செய், உடன்படு.

capitula'tion, *n.* தலைப்பறிவிப்பு; உடன்படிக்கைக் கட்டுப்பாடுகளின் வகுப்பு; சரணடைவு உடன்படிக்கை; கட்டுப்பாட்டுடன் சரணடைதல்.

capit'ulatory, *a.* சரணடைவான, சரணடைதல் சார்ந்த, விட்டுக்கொடுக்கிற.

capit'ulum, *n.* (தாவ.) நெருங்கிய காம்பற்ற மலர்களின் கொத்து; (உள்.) எலும்பின் தலைப்பு, விலா எலும்பின் முனைப்பு; *pl.* capit'ula.

ca'ple, *n.* குதிரை.

cap'l n, *n.* = capelin.

cap'nomancy, *n.* புகைமூலம் வருங் குறிகூறுதல்.

cap'on, *n.* விதையடித்த சேவல்.

caponier', **caponiere',** *n.* அரணின் அகழியூடான மூடு பாதை.

cap'onize, *v.* சேவலை விதையடி.

caporal, (பிர.) *n.* பிரஞ்சுப் புகையிலை வகை.

capot', *n.* கைத்திறச் சீட்டாட்ட வகையில் ஒரு தரப்பின் முழு நிறைவான தெலிப்பு; *v.* எல்லாக் கைத்திறங்களும் தெலித்து வெல்லு.

capote', *n.* நீண்ட மேலங்கி, பிரயாணிகளும் படைவீரரும் அணியும் தலைமூடாக்குடன் கூடிய மேலாடை.

cap'-paper, *n.* பொதி தாள்; எழுதும் தாளின் அளவு வகை.

capp'ing, *n.* மூடுகை; பட்டமளிப்பு விழா.

Cappucci'no, *n.* சிறிதே பால் கலந்த கடுங்காப்பி, கருங்காப்பி.

cap'rate, *n.* கொழுங்கார வகை, கொழுநெய்க்காடியின் கார வகை.

cap'reolate, *a.* கொடிகளில் பற்றுதளிர்க்கையுடைய.

cap'ric, *a.* வெண்ணெயிலிருந்து எடுக்கப்படும் கொழுப்பு வகை சார்ந்த, கொழுநெய் வகையார்ந்த; (தொ.) capric acid, கொழுநெய்க்காடி வகை.

capric'cio, (இத்.) *n.* விளையாட்டு நடவடிக்கை; (இசை.) விறுவிறுப்பான இசைப்பாடற் பகுதி; கட்டுப்பாடற்ற இசைப்பாடல்.

caprice', *n.* நிலையின்மை, பச்சோந்தியியல்பு, கட்டற்ற மனப்பாங்கு, முரண்பட்ட உளப்போக்கு; பொருந்தாத் தற்போக்கு; ஏறுமாறான நடத்தை; கலைத்துறையில் வரம்பற்ற கற்பனை.

capri'cious, *a.* கட்டிலமையாத, விளையாட்டுத்தனமான; பச்சோந்திபோல் மாறுகிற; மனம்போல நடக்கிற; ஏறுமாறான.

capri'ciously, *adv.* ஏறுமாறாக; அடிக்கடி மாறிக்கொண்டு; மனம்போல; கண்ட கண்டபடி.

Cap'ricorn, *n.* மகர இராசி, வெள்ளாட்டுருவ விண்மீன் குழு; (தொ.) Tropic of Capricorn, மகர வரை.

caprifica'tion, *n.* அத்திப் பழத்தைச் செயற்கை வகையாகக் கனிவிக்கும் முறை.

cap'rifig, *n.* காட்டத்தி; காட்டத்திக்காய், காட்டத்திப்பழம்.

cap'riform, *a.* வெள்ளாடு போன்ற.

cap'rine, *a.* வெள்ளாட்டினுடைய; வெள்ளாட்டுக்குரிய; வெள்ளாடு போன்ற.

cap'riole, *n.* துள்ளல், குதிப்பு; *v.* துள்ளு, குதி; இடக்குப் பண்ணு.

capro'ic, *a.* வெண்ணெயிலிருந்து எடுக்கப்படும் கொழுப்பு வகை சார்ந்த, கொழுநெய் வகையார்ந்த.

cap'rylate, *n.* கொழுங்கார வகை, கொழுநெய்க்காடியின் காரவகை.

caps, *n.* capitals (பெரிய எழுத்துக்கள்) என்பதன் சுருக்கக் குறியீடு.

cap'sicum, *n.* சிவப்பு மிளகை உள்ளடக்கிய விதையுறையுடைய செடியினம்; பதம் செய்த சிவப்பு மிளகுக்காய்.

capsize', *v.* மறிந்து வீழ், குடைமறி; கவிழ்வி, குடைமறியச்செய்.

cap'stan, *n.* கப்பலில் கம்பி வடத்தைச் சுற்றியிழுக்கும் விசைப் பொறி, பாயுயர்த்தும் கம்பிப்பொறி, பாரந்தூக்கி.

cap'sular, cap'sulary, *a.* பொதியுறைக்குரிய; உறைவடிவான; உறைபொதி தாங்கிய.

cap'sulate, *a.* உறையில் பொதிவுற்ற, பொதியுறை உடைய; உறையாய் உருவான.

cap'sule, *n.* (மரு.) மருத்துறை, மாத்திரையின் பொதியுறை; புட்டியின் உலோக அடைப்பு; (தாவ.) உலர்ந்து வெடிக்கும் விதையுறை, நெற்று; பாசிச்சிதலுறை; (உயி.) மென்தோல் பொதியுறை; ஆவியாதலை ஊக்கும் பரந்த வட்டில் கலம்.

cap'suliform, *a.* உறைபொதி வடிவான, நெற்றுருவான.

cap'tain, *n.* தலைவர், தலைமைப்பணியாளர், பணி முதல்வர்; கப்பல் மீகான்; கப்பற்குழு முதல்வர்; கடற்படைத் தளபதி, படைக்கப்பல் முதல்வர்; குதிரைப்படை முகவர்; படைத் துறைத்தலைவர்; படைப்பிரிவுத் தளபதி; சுரங்க மேலாளர்; ஆட்டக்குழு முதல்வர்; பள்ளிமாணவர் தலைவர்; இயக்குநர், தலைமைத்திறலாளர், தேர்ந்த வல்லுநர்; ஏ. தலைமை தாங்கி நடத்து, இயக்கு; (தொ.) captain of industry, பெருந் தொழில்துறை முதல்வர்.

cap'taincy, *n.* தளபதிப் பதவி; மீகான் நிலை; தலைமை; தளபதி அமர்வாணை நிலை.

cap'tain-gen'eral, *n.* படைப் பெருமுதல்வர்.

cap'tainship, *n.* மீகான் பதவி; தளபதி நிலை; தலைமைத்திறம், இயக்குந் திறலாண்மை; தலைமை.

capta'tion, *n.* உணர்ச்சிமூலம் கவரவல்ல வாதம், கவர்ச்சி நாட்டமுடைய பேச்சு முறை.

cap'tion, *n.* கைப்பற்றுதல், ஈர்த்து நிறுத்துதல்; சட்டப் படியான பற்றுணை, கைது செய்வதற்கான கட்டளைப் பத்திரம்; தலைப்பு; முன்னேற்பான முகப்புரை; முகப்புப்படம்.

cap'tious, *a.* குறைகாணும் இயல்புடைய, சொற்பொறியில் அகப்படுத்தும் ஆர்வமுடைய, விதண்டையான; தவருன போக்குடைய, பிழைபாடான.

cap'tivate, ஏ. கவர்ச்சி செய், உளங்கவர்; மருட்சியூட்டு.

cap'tivating, *a.* மருட்சியூட்டுகிற; வசப்படுத்துகிற.

captiva'tion, *n.* கவனம் கவர்தல், கவர்ச்சி.

cap'tive, *n.* சிறைப்பட்டவர்; கைதி; தடுத்து நிறுத்தப்பட்டவர், கட்டுப்பட்டவர்; கட்டுப்பட்டது; அகப்பட்டது; *a.* சிறைப்பட்ட, கட்டுப்பட்ட; வசப்பட்ட; கட்டுப்பட்ட நிலைக்குரிய; தப்ப முடியாத.

captiv'ity, *n.* சிறைப்பட்ட நிலை.

cap'tor, *n.* சிறைசெய்பவர்; கைப்பற்றுபவர்; பெறுபவர்.

cap'tress, *n.* கைப்பற்றுபவள்; பெறுபவள்.

cap'ture, *n.* கைப்பற்றுதல்; சிறைப்பிடிப்பு; பெறுகை, வசப்படுத்துகை; பிடிபட்டவர்; கைப்பற்றப்பட்டது; (மண்.) மறுகிளைப்பற்றிடு, ஆழ்திற அரிப்பாற்றல் மிகுதிமூலம் ஆறு மற்றோர் ஆற்றின் விழுகிளையைத் தன் விழுகிளையாக்கிக் கொள்ளுதல்; ஏ. கவர்ந்துகொள், அகப்படுத்து, கைப்பற்று; சிறைப்படுத்து, பிடி; வென்று கொள், வலிந்து கைக்கொள், கொள்ளையிற்பெறு.

Cap'uchin, *n.* தனிமுறை முகமூடியணிந்த துறவுக்குழு வகையினர், 1528-இல் புதுவிதிமுறைகளை ஏற்றுக் கொண்ட பிரான்சிஸ்கன் துறவுக்குழுவின் பிரிவினர்; பெண்டிரின் மேலாடையுடன் கூடிய தலையுறை வகை; தலைக்கவிகை யுடைய மணிப்புரு வகை; தலைக்கவிகை அமைப்புடைய மந்தி வகை.

cap'ut mor'tuum, (ல.) *n.* அடிமண்டி, கசடு.

capybar'a, *n.* நீரருகே வாழும் உலகின் மிகப்பெரிதளவான கொறிக்கும் உயிரின வகை.

car, *n.* வண்டி, சகடம், தேர்; இருசக்கரப்பண்டி, நான்கு சக்கர இரதம்; விழா ஊர்தி; இழவு செல்கலம்; வெற்றித்தேர்; விசைவண்டி, உந்துகலம்; மின்னூர்தி வண்டி; புகைத் தொடர்வண்டி; உணவுக்கான பெட்டி வண்டி; துயில்வதற் கான தனி வண்டி; விமானச் சுமைகலம்.

ca'rabine, *n.* = carbine.

carabineer', *n.* கைத்துப்பாக்கி ஏந்திய போர்வீரர்.

ca'racal, *n.* காட்டுப்பூனை வகை.

ca'racol, **ca'racole**, *n.* பாதி இடதுபுறமாகத் திரும்புதல்; பாதி வலம், அரைவலமாகத் திரும்புதல்; சுழல் படிக்கட்டு; ஏ. அரைச் செங்கோண அளவில் திரும்பு; இங்குமங்கும் துள்ளிக்குதி.

ca'racul, *n.* கம்பளி ஆட்டு வகை; மென்மயிர் அடர்ந்த தோல் துகில் வகை; தோல் போன்ற செயற்கைத்துணிவகை.

carafe', *n.* மேசைமீது வைப்பதற்குரிய நீர்க்குப்பி.

ca'ramel, *n.* கருவெல்லம், சாராய வகைகளுக்கு நிறமூட்டு வதற்காகப் பயன்படும் தீய்ந்த சர்க்கரை; தித்திப்புப்பண்ட வகை: இளந்தவிட்டு நிறம்; ஏ. தீய்ந்த சர்க்கரையாக்கு, கருவெல்லமாக்கு.

ca'rapace, *n.* ஆமை ஓடு; நண்டு-நத்தை போன்றவற்றின் மேல் தோடு.

carapa'cial, *a.* நத்தை முதலியவற்றின் மேல்தோடு போன்ற; ஆமைத் தோட்டுக்குரிய.

ca'rat, *n.* ஏறத்தாழ 3½ குன்றிமணி நிறையுள்ள மணிக்கல் எடை; பொன்னின் மாற்று அளவு, முழுமாற்றின் 24-இல் ஒரு கூறு.

caravan', *n.* சாத்து, பாலைநிலங்களைக் கடக்கும் வணிகர் கூட்டம்; திருத்தல வழிபாட்டுக்குழு; மூடப்பட்டுள்ள வண்டி, கூண்டு வண்டி, சக்கரங்கள்மீது செல்லும் விலங்குமனை; துணைக்காவலுடன் கூடிய கப்பற்படை; ஏ. கூட்டமாகப் பயணம் செய்.

caravaneer', *n.* பயணம் செய்யும் வணிகக் கூட்டத்தலைவர்.

caravan'sary, **caravan'sera**, **caravan'serai**, *n.* வணிகர் கூட்டம் தங்கும் வழிமனை, சத்திரம்.

ca'ravel, *n.* நடுநிலக்கடலில் (Mediterranean) முன்னுள் வழங்கிய விரைவேகமுடைய சிறு கப்பல் வகை.

ca'raway, *n.* நறுமணக் கனிவிதைகளுடைய குடைப்பூக் கொத்துள்ளசெடி.

ca'raway-seeds, *n.* அப்பங்களில் பயன்படுத்தப்படும் குடைப் பூக் கொத்துச் செடிவகையின் கனி விதை, பெருஞ்சீரகம் போன்ற நறுமண விதை.

carb'ide, *n.* கரியகை, கரியமும் மற்றொரு தனிமமும் கலந்த சேர்மம்.

carb'ine, *n.* குதிரைப்படை வீரர்கள் வைத்திருக்கும் சிறு துப்பாக்கி.

carbineer', *n.* = carabineer.

carbocyc'lic, *a.* (வேதி.) மூடுமண்டலிப்புடைய.

carbo-hyd'rate, *n.* (வேதி.) கரிநீரேகி, மாச்சத்து வகை-சர்க் கரை-பழவெல்லம் முதலிய பொருள்களின் இனம்.

carbol'ic, *n.* நச்சரி நீர்ம வகை, தொற்றொழி நீர்மப் பொருள்; *a.* (வேதி.) கீலெண்ணெய் வடிப்பினின்று எடுக்கப்பட்ட; (தொ.) carbolic acid, (வேதி.) நச்சரி நீர்ம வகை, தொற் றொழி நீர்மப் பொருள்.

carb'on, *n.* (வேதி.) கரியம், உலோகத் தொடர்பற்ற (அணு எண் 6 உள்ள) தனிமம்; கரிப்பொருள்; (மின்.) ஒருவகை மின் விளக்கில் பயன்படும் கரிமூங்கில்; கரித்தாள்; கரிய வைரம்; *a.* கரியம் சார்ந்த.

carbona'ceous, *a.* கரிபோன்ற; கரி சார்ந்த; நிலக்கரி போன்ற, நிலக்கரிக்குரிய; கரித்தன்மையுள்ள; கரியம் கலந்த.

carbona'do, *n.* வயிரத்தினும் திண்ணிய மணி உருக் கரியம், கருவயிரம்.

carbonar'i, (இத்.) *n.* இத்தாலியில் குடி அரசு ஏற்படுத்து வதற்காக (1811-இல்) உருவாகிய இரகசிய அரசியல் கழகத்தினர்.

carb'onate, *n.* (வேதி.) கரியகை, கரியகக்காடியின் உப்பு, ஏ. கரியகை ஆக்கு, கரியகக்காடி ஆவி ஊட்டிச் செறிவி, காற்றூட்டு.

carb'on copy, *n.* வடிவெடுத்த படி, எழுத்து அல்லது தட் டெழுத்துப்படி.

carbon'ic, *a.* (வேதி.) கரியஞ்சார்ந்த; (தொ.) carbonic acid[1], தளர்காடி வகை; carbonic acid[2], carbonic acid gas, கரிய ஈருயிரகை; கரியம் எரியும் போதும் மூச்சுவிடும்போதும் உண்டாகும் வளி; காற்றூட்ட நீர்மத்திலிருந்து அழுத்தங் குறைந்தவுடன் குமிழியிட்டு வெளிவரும் கரிய ஈருயிரகை ஆவி.

carbonif'erous, *a.* கரியம் உண்டாக்குகிற, நிலக்கரி உண்டு பண்ணுகிற ; நிலக்கரி விளைவுக்குரிய ; நிலக்கரியை உட் கொண்ட.

Carbonif'erous, *a.* (மண்.) நிலக்கரிப்படிமத் தளங்களுரு வான தொல்லுயிரூழிப் பகுதிக்குரிய ; நிலக்கரி ஆக்கப் பாறை ஊழிக்குரிய.

carb'onization, *n.* கரியாக்கம் ; கரியமாக மாறுபடுதல்.

carb'onize, *v.* கரியாக்கு ; நிலக்கரியாக்கு ; சுட்ட நிலக்கரி யாக்கு ; படி எடுப்பதற்காகக் கரிபூசு.

carb'on-paper, *n.* படிவுத்தாள், படியெடுக்க உதவுந்தாள்.

carborun'dum, *n.* தோகைக்கல், கரிக்கன்மகை.

carb'oy, *n.* மூங்கிற்கூடை அணைப்புடைய பெரிய உருண்டைக் கண்ணுடிப்புட்டி.

carb'uncle, *n.* மாணிக்கக்கல் ; அரசபிளவை, நச்சுப்பரு ; நச்சுச் சீக்கட்டு ; முகப்பரு.

car'buncled, *a.* மாணிக்கக்கல் பதிக்கப்பெற்ற ; அரச பிளவையால் பீடிக்கப்பட்ட ; சிவந்து வீங்கிய புள்ளிகளை யுடைய.

carbun'cular, *a.* மாணிக்கக்கல்லுக்குரிய ; மாணிக்கக்கல் போன்ற ; சிவந்த ; வீங்கிய.

car'burate, carburet', *v.* வேதியியல் முறையில் கரியத் துடன் இணை ; கரியச் சேர்மானம் செறிவி.

car'buretted, *a.* கரியத்துடன் இணைக்கப்பட்ட, கரியச் சேர்மானம் செறிவிக்கப்பெற்ற.

carburett'er, carburett'or, *n.* உள்வெப்பாலையில் எரி பொருளாவியொடு காற்றைக் கலக்கச் செய்யும் அமைவு.

car'cajou, *n.* பெருந்தீனி கொள்ளும் பெரிய கீரியின விலங்கு வகை.

car'canet, *n.* கல்லட்டிகை போன்ற கழுத்தணிகலன்.

car'case, car'cass, *n.* விலங்கின் பிணம் ; இறைச்சிக்கடைக் காரர் வழக்கில் கூண்டு, தலையும் உறுப்புக்களும் அகற்றப்பட்ட விலங்கின் உடல் பாகம் ; அவமதிப்பு வழக்கில் நடைப்பிணம் ; பயனற்ற கழிவுப்பொருள் ; வீடு-கப்பல் முதலியவற்றின் கூண்டுச் சட்டம் ; திட்டக்குறிப்பு ; பாழ் ; அழிபாடு ; (படை.) தீக்கொளுவும் வெடிகுண்டு ; (தொ.) carcase meat, carcass meat, பெட்டியிலடைக்கப்படாத நேர்தசை இறைச்சி.

carcin'ogen, *n.* புற்றுநோய் வளரத் தூண்டுதல் செய்யும் பொருள்.

carcinol'ogy, *n.* மேல்தோட்டு உயிரினங்களைப் பற்றிய ஆய்வுநூல்.

carcinom'a, *n.* (மரு.) பிளவை, புற்றுநோய் ; *pl.* carcino'mata.

carcinomato'sis, *n.* உடலில் புற்றுநோய் பரவுதல்.

carcino'matous, *a.* புற்றுநோய்க்குரிய.

card [1], *n.* ஆட்டச்சீட்டு ; அட்டை ; பேட்டிச்சீட்டு ; நுழைவுச் சீட்டு ; அழைப்புச்சீட்டு ; அஞ்சல் சீட்டு ; நிகழ்ச்சி நிரல்சீட்டு ; சாளரத்தில் அல்லது சுவரில் தொங்கவிடுவதற்கான அச்சிட்ட அறிக்கைச்சீட்டு ; டாமினோஸ் (dominoes) என்னும் ஆட்டத்தின் கவறு ; திசையறி கருவியின் முகப்பு ; நாட்டுப் படம் ; நெசவு வேலைக்குப் பயன்படும் துளைபோட்ட அட்டைத்தகடு ; ஆள், தனிவகை மனிதர் ; விசித்திர மனிதர் ; *v.* கெலிப்புக் குறிச்சீட்டில் எதிர்க்குறியிடு ; (தொ.) card up one's sleeve, கையிருப்பாக வைத்திருக்கும் திட்டம் ; doubtful card, ஐயத்துக்கிடமானது ; ஐயத்துக்கு இட மானவர், உறுதியற்ற பேர்வழி ; get one's cards, விலக்கப் பெறு ; house of cards, நிலையற்ற திட்டம், உறுதியில்லா அமைப்பு ; make a card, சீட்டில் வித்தை காட்டு ; safe card, sure card, உறுதியானது ; உறுதியானவர் ; show one's cards, throw up one's cards, திட்டம் வெளியிட்டுரை, speak by the card, துல்லியமான விவரங்களுடன் பேசு, சரிநுட்ப விவரத்துடன் கூறு.

card [2], *n.* நார்-கம்பளி-பஞ்சு ஆகியவற்றின் சிக்குவாரி ; *v.* கம்பளி முதலியவற்றை வாரு, சிக்கெடு.

Cardam'ine, *n.* கடுகுச்செடி வகைகளின் இனம்.

card'amom, *n.* ஏலக்காய்.

card'an, *a.* (பொறி.) எல்லாக் கோணங்களிலும் விசை மாற்றக்கூடிய ; (தொ.) cardan joint, முழுதுறழ் விசை மாற்று இணைப்பு ; cardan shaft, இருகோடி முழுதுறழ் விசைமாற்று உருளை.

card'-basket, *n.* பேட்டிச்சீட்டுப் பெட்டி.

card'board, *n.* அட்டைத்தாள், சீட்டுகள் வெட்டி எடுப் பதற்கான கெட்டித்தாள் ; அட்டைப்பலகை.

card'-case, *n.* பேட்டிச்சீட்டு உறை.

card'-castle, *n.* ஆட்டச்சீட்டுகளை வைத்துக் கட்டிய வீடு ; வலிமையற்ற கட்டுமானம்.

card'-catalogue, *n.* தாள் நறுக்குப் பட்டியல்.

card'er, *n.* சிக்கெடுக்கும் பொறி.

card'iac, *n.* நெஞ்சுப்பைக்கு வலிவுதரும் மருந்து ; நறுநீர்ப் பானம் ; *a.* நெஞ்சுப்பைக்கு உரிய ; இரைப்பையின் மேற் புறத்துக்குரிய ; ஊக்கந்தருகிற ; நெஞ்சார்ந்த.

cardi'acal, *a.* நெஞ்சுக்குரிய, நெஞ்சார்ந்த.

cardial'gia, car'dialgy, *n.* நெஞ்சுப்பை எரிச்சல், இரைப் பையின் மேற்புறத்தண்டை ஏற்படும் எரிவு.

card'igan, *n.* பின்னல் கம்பளி உடற்சட்டை.

card'inal, *n.* போப்பாண்டவருக்கு அடுத்த இரண்டாவது குருவகுப்பில் ஒருவர் ; போப்பாண்டவர் மன்ற உறுப்பினர், போப்பாண்டவரின் தேர்வுக்குழு உறுப்பினர் ; முன்பு செங் நிறத்தில் பெண்கள் அணிந்த சிறு மேலாடை ; செங்நிறச் சிறு பறவை வகை ; *a.* குருதிச் சிவப்பான ; தொப்பி வகையில் கத்தோலிக்கத் திருத்துணைவர் அணிவது போன்ற ; (வில.) இரு தடுக்கிதழின் சுழல் குடுமிக்குரிய ; சுழல் அச்சுக்குரிய ; சுழல் அச்சு முளையாயிருக்கிற ; அடிப்படையான, முக்கிய மான, முதன்மையான ; (தொ.) cardinal numbers, செவ்வெண்கள், இயல் எண்கள் ; cardinal points, காற்றிசை முனைகள், தலைத்திசை முனைப்புக்கள் ; cardinal virtues, மக்கள் நலனுக்கு அடிவேர்கள் எனக் கருதப்படும் முறைமை-மதியுடைமை-வரையுடைமை-நேர்மை என்னும் நான்கு நல்லியல்புகள்.

car'dinal-bird, *n.* பெரிய அமெரிக்கப் பறவை வகை, சூட்டுடைச் செங்நிறப் பாடற்பறவை வகை.

car'dinal-flower, *n.* செங்நிற மலர்களையுடைய அமெரிக்கச் செடி வகை.

car'dinally, *adv.* அடிப்படையாக, மூலமுதல் தொடர் புடையதாக, முக்கியமாக.

card'-index, *n.* தாள் நறுக்கு முதனினைப்பு ; *v.* தாள் நறுக்கு முதனினைப்பு அமை.

card'ing-machine, *n.* எண்ணெய்-கம்பளி முதலியவற்றில் சிக்கு எடுக்கும் பொறி.

car'diogram, *n.* நெஞ்சுத்துடிப்பளக்குங் கருவி பதிவு செய்த நெளிவரை.

car'diograph, *n.* நெஞ்சுத்துடிப்பைப் பதிவு செய்யும் கருவி.

car'dioid, *n.* நெஞ்சுப்பை வடிவான வளைவு ; *a.* நெஞ்சுப்பை வடிவான.

cardit'is, *n.* நெஞ்சுப்பை அழற்சி.

cardoon', *n.* முள்ளி போன்ற தின்னத்தக்க கிழங்குகளை யுடைய தோட்டக் காய்கறிச் செடிவகை.

cardoph'agus, *n.* முட்செடித்தின்னி, கழுதை.

card'-rack, *n.* பேட்டிச் சீட்டு வைப்பறை.

cards, *n.* சீட்டாட்டம்.

card'sharper, *n.* சீட்டாட்டத்தில் ஏமாற்றுபவர்.

card'-table, *n.* சீட்டாட்ட மேசை.

card′-thistle, *n.* முள் மலர்ச் செடி வகை; ஆடைக் கம்பிளியின் மயிர்நீவு கருவி.

card′-vcte, *n.* எண்ணுரிமை மொழிச்சீட்டு, ஒருவர் எத்தனை பேருக்குப் பிரதிநிதியாய் இருக்கிறாரோ அத்தனை எண்ணிக் கைக்குத் தக்கபடி அவர் வாக்கு மதிப்புப் பெறும் வாக்களிப்பு முறை.

care, *n.* அக்கறை, கவலை; கவலைக்குரிய செய்தி; கவனம், நினைப்பு; முன்கருதல், விழிப்பு, எச்சரிக்கை; துன்பம், வருத்தம்; பொறுப்பு; காப்பு, ஆதரவு; செய்தற்குரிய பணி, கவனிக்க வேண்டிய செயல்; மேற்பார்வை; *v.* கவலைப்படு, நாட்டங்கொள், அக்கறை கொள், பொருட்படுத்து, மதிப்புக் கொடு, பொருட்டாக மதி; அன்புகாட்டு, விருப்பம் கொள்; கவனித்துப்பேணு, கவனித்துக்கொள்; உணவு கொடுத் தாதரி; மேற்பார்வையிடு; (தொ.) care and maintenance, பிடுங்கிநட்ட செடிக்கு மீண்டும் தழைக்கும்வரை உரிய பராமரிப்பு; care for, அக்கறைப்படு; care of, மேற்பார்வை முகவரிக்கு, முகவரி மூலமாக; take care, விழிப்பாயிரு; பத்திரமாயிரு; take care of, கவனித்துப்பேணு.

careen′, *n.* (கப்.) சாய்த்து நிறுத்தப்படும் நிலை; *v.* (கப்.) செப்பனீட்டுத்துறையில் ஒருபக்கமாய்ச்சாய்ந்து நிற்கச் செய்; சாய்ந்திரு.

careen′age, *n.* கப்பல்கள் ஒருபக்கமாகச் சாய்த்து வைத்துச் செப்பனிடப்படுகிற இடம்; சாய்த்த நிலை; செப்பனிடும் செலவு.

career′, *n.* விரை செலவு, பாய்வு; வாழ்க்கைப் போக்கு, வாழ்வின் வளர்ச்சி; வாழ்க்கைப்பணி முன்னேற்றம்; பிழைக் கும் வழி; *v.* பாய்ந்தோடு, விரைந்து செல்; (தொ.) career diplomat, அரசியலாட்டத்தைத் தொழிலாகக் கொண்டவர்.

career′ist, *n.* தம் முன்னேற்ற நாட்டமுடையவர்.

care′-free, *a.* கவலையற்ற.

care′ful, *a.* அக்கறை கொண்ட, கவலையுள்ள; பொறுப்பில் வைத்திருக்கிற; வருந்தி உழைக்கிற; விழிப்புடைய, கவன முள்ள, எச்சரிக்கையாயிருக்கிற; அக்கறையுடன் செய்யப் பட்ட, அக்கறை காட்டுகிற.

care′fully, *adv.* ஊன்றிய கவனத்துடன், விழிப்போடு, உன்னிப்பாக.

care′laden, *a.* கவலைகள் நிரம்பிய.

care′less, *a.* கவனமில்லாத, அக்கறை கொள்ளாத, கவலையற்ற, கருத்து ஊன்றாத, அசட்டையாயிருக்கிற, சிந்தனையற்ற; தவறான, சரியாயிராத.

care′lessness, *n.* உன்னிப்பாயிராமை, கவனமின்மை.

caress′, *n.* தைவரல், வருடுதல், அன்பாகத்தடவிக் கொடுத்தல்; முத்தம் கொடுத்தல்; புகழ்தல்; *v.* அன்பாகத்தடவிக் கொடு; வருடு; கொஞ்சு, சீராட்டு; புகழைச்சொல், பாராட்டு.

caress′ing, *n.* சீராட்டுதல்; *a.* அன்பாய்த் தட்டிக்கொடுக்கிற.

ca′ret, *n.* இடையெச்சக்குறி, விடுபட்டுப் போனதைச் சேர்க்கு மாறு சுட்டிக்காட்டும் குறி (∧).

care′taker, *n.* காவற்பணிப் பொறுப்பாளர்; கட்டிட மேற்பார்வைப் பொறுப்பாளர்; *a.* இடையீட்டுக்காலக் கண்காணிப்பு மேற்கொண்ட.

care′-worn, *a.* கவலைகளினால் அலுத்துப்போன, நச்சரிக்கப் பட்ட.

Ca′rex, *n.* கோரைப்புல் வகையின் இனம்.

car′fax, **car′fox**, *n.* சதுக்கம், நாற்சந்தி.

carg′o, *n.* கப்பல் சரக்கு, கப்பற்பாரம்; *pl.* carg′oes.

car′goose, *n.* குறுஞ்சிறகுள்ள கூட்டுடை நீர்ப்பறவை; *pl.* car′geese.

Ca′rib, *n.* மேற்கிந்தியத் தீவுகளின் தென்பகுதியிலுள்ள பழங் குடியினர்; மேற்கிந்தியத் தீவுகளின் பழங்குடி மக்கள் பேசிய மொழி; *a.* மேற்கிந்தியத் தீவுகளின் பழங்குடி மக்களுக்குரிய.

caribou′, *n.* வட அமெரிக்கக் கலைமான் வகை.

Car′ica, *n.* பப்பாளி மர இனம்.

caricature′, *n.* பகடிப்படம், கேலிச்சித்திரம்; ஒருவரது தனி இயல்புகளை மிகைப்படுத்திக்காட்டும் உரை; நையாண்டி வருணனை; *v.* மிகைப்படுத்திக் கேலிக்குள்ளாக்கு, நகைப்புக் கிடமாக்கிப் படம் வரை, கேலிக்கூத்தாக்கிப் பழி.

caricatur′ist, *n.* பகடிப்படம் வரைபவர்; நையாண்டி மிகை யுரை எழுதுபவர்; திரித்து மிகைப்படுத்திக் கேலி செய்பவர்.

car′ies, (ல.) *n.* பல் சொத்தையாதல், எலும்பு உள்ளழிவு.

carillon, (பிர.) *n.* இசைபடு மணி ஒலித்தொகுதி; மணி ஒலி எழுப்பும் இசைப்பொறி அமைவு; மணிகளின் மூலம் மிழற்றப்படும் இன்னிசை.

carin′a, *n.* தோணி அகட்டு வரை; (தாவ.) பயற்றினத்தில் அடியிதழ்கள் இரண்டினைந்துண்டான தோணி வடிவான மலர் வடிவம்.

cari′nal, *a.* தோணி வடிவத்துக்குரிய, தோணி வடிவம் உடைய.

car′inate, *a.* தோணியகடு போன்ற அமைவுடைய.

cario′ca, *n.* தென் அமெரிக்காவில் பிரசீல் (Brazil) நாட்டு ஆடல் வகை; ஆடல் இசை வகை.

car′iole, *n.* மூடாக்கில்லாத சிறு வண்டி, பளுவற்ற வண்டி.

ca′rious, *a.* பல் அல்லது எலும்பு வகையில் சொத்தை விழுந்த, இற்றுப்போன.

cark, *v.* துன்பத்தில் அழுத்து, தொல்லைப்படுத்து; கவலைப்படு.

cark′ing, *a.* கவலைகளால் அழுத்தப்பட்ட, தொல்லைப்பட்ட, வருத்துகிற.

carl, *n.* ஆள்; உழவன்; கோமாளி; கீழ்மகன்.

car′ley float, *n.* விமானியின் அவசரகால மிதவை.

carl′-hemp, *n.* பெண் சணல் செடி.

carl′ine, *n.* முட்செடியினம்.

Carl′ism, *n.* (வர.) ஸ்பானிய அரசுரிமைப் பூசலில் நான் காம் சார்லசின் இரண்டாவது மகனுகிய டான் கார்லசு (Don Carlos) பக்கமான கட்சி ஆதரவு.

Carl′ist, *n.* (வர.) ஸ்பானிய அரசுரிமைப் பூசலில் நான்காம் சார்லசின் இரண்டாவது மகனுகிய டான் கார்லசை ஆதரித்தவர்.

car′lock, *n.* ருசிய நாட்டில் செய்யப்படும் மீன் வச்சிரம்.

Carlovin′gian, *n.* (வர.) சார்லிமேன் (Charlemagne) என்ற சார்லஸ் பேரரசரை முதல்வராகக் கொண்ட இரண்டாவது பிரஞ்சு அரச மரபினர்; *a.* இரண்டாவது பிரஞ்சு அரச மரபுக்குரிய.

Carl′owitz, *n.* டான்யூப் (Danube) ஆற்றின் கரையிலுள்ள கார்லோவிட்ஸ் நகரத்தில் வடிக்கப்படும் சிவப்பு இன்தேறல்.

Carlyle′an, *a.* தாமஸ் கார்லைல் (Thomas Carlyle 1795.1881) இலக்கிய நடையை ஒட்டிய.

Carlylese′, *n.* தாமஸ் கார்லைலின் ஆற்றல் மிக்க இலக்கியப் பாணி.

Carlylesque′, *a.* ஆங்கில எழுத்தறிஞர் தாமஸ் கார்லைலின் இயல்புக்குரிய.

Car′lylism, *n.* தாமஸ் கார்லைலின் கோட்பாடு; கார்லைலின் பாங்கு.

Carmagnole, (பிர.) *n.* (வர.) பிரஞ்சுப் புரட்சிக்காரர்களின் (1793) ஆடலோடு கூடிய பாடல்; பிரஞ்சுப் புரட்சிக்காரர் கள் அணிந்த சட்டை வகை.

car′man, *n.* விசைக்கல வலவர், மோட்டார் ஓட்டுபவர்; வண்டியோட்டி.

Carm′elite, *n.* பாலஸ்தீனத்தில் (Palestine) 1156-இல் கார்மெல் மலையருகே (Mt. Carmel) தொடங்கப்பெற்ற சபையைப் பின்பற்றி இரந்துண்டு வாழும் கட்டுப்பாடு மேற்கொண்ட துறவி; இரந்துண்டு வாழும் நியதியுடைய துறவு நங்கை; பேரிக்காய்இனப் பழவகை; கூர்த்தியான கம்பளித்துணி வகை; *a.* இரந்துண்டு வாழும் சபைத் துறவி களின் அமைப்புச் சார்ந்த.

carm'inative, *n.* (மரு.) வயிற்றுப்புசத்திற்கு மருந்து; *a.* வயிற்றுப்புசம் அகற்றுகிற.

carm'ine, *n.* இந்திரகோபப் பூச்சியினின்றும் எடுக்கப்படும் சிவப்பு வண்ணப்பொருள்; இந்திரகோபப்பூச்சியின் நிறம்; கருஞ்சிவப்பு மை; *a.* தம்பலப் பூச்சியைப் போல் சிவப்பு நிறமுள்ள.

carn'age, *n.* படுகொலை, நூழிலாட்டு.

carn'al, *a.* உடலின்பத்துக்குரிய, சதைபற்றிய; இம்மை வாழ்விற்குரிய; பாலுணர்ச்சி சார்ந்த; கடவுட்டன்மைபெறுத, உலோகாயத; ப. உடலின்பத்துக்குரிய செயல் புரி.

carn'alism, *n.* சிற்றின்ப வேட்கை; உலோகாயதம்.

carn'alist, *n.* சிற்றின்ப வேட்கையர்; உலகப் பொருள்களில் உழல்பவர்.

carnal'ity, *n.* சிற்றின்ப நாட்டம், உடலின்ப வேட்கை; உலகப் பொருள்களில் ஈடுபட்டுள்ள நிலை.

carn'alize, ப. உடலின்பத்துக்குரியதாக்கு, உலோகாயதப் படுத்து.

car'nal-mind'ed, *a.* உலகப் பொருள்களில் நாட்டமுள்ள.

carnass'ial, *n.* கோரைப்பல், ஊன் உண்ணிகள் இறைச்சியைக் கிழிப்பதற்காகப் பயன்படுத்தும் நீண்ட பெரிய வெட்டுப்பல்; *a.* பல்லின் வகையில் ஊன் உண்ணிகள் தசை கிழிப்பதற் கேற்ப அமைந்த.

carna'tion [1], *n.* இறைச்சி நிறம், இளஞ்சிவப்பு நிறம்; *a.* இளஞ்சிவப்பு நிறமுள்ள.

carna'tion [2], *n.* இரட்டடுக்கான இதழ்களையுடைய மலர்ச் செடி வகை.

carnau'ba, *n.* மஞ்சள்நிற மெழுகு வகை; மெழுகு வகை தரும் பிரசீல் (Brazilian) நாட்டுப் பனையின மரம்.

carnel'ian, *n.* = cornelian.

car'neous, *a.* கொழுத்த, தசைக்குரிய; தசை போன்ற.

carn'ey, *n.* முகமனுரை; ப. (பே-வ.) கெஞ்சு, நயம்படவுரை.

car'nifex, *n.* தூக்குத்தண்டனை நிறைவேற்றுபவர்.

carnifica'tion, *n.* (மரு.) எலும்பு-ஈரல் முதலிய உறுப்புக்கள் தசை அல்லது தசைநார்போன்ற பொருளாக மாற்ற மடைதல்.

carnifici'al, *a.* தூக்கிலிடுபவருக்குரிய, கொலைகாரத்தன மான.

carn'ify, ப. (மரு.) எலும்பு-ஈரல் முதலியவற்றைத் தசை அல்லது தசைநார் போன்று மாற்று; தசை அல்லது தசை நார்போன்று மாறுபடு.

carn'ival, *n.* கேளிக்கைக் கொண்டாட்டம், வேனிற்கால உண்ணு நோன்புக்குமுன் ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர் கள் கொண்டாடும் விழா; களியாட்டம்.

Carniv'ora, (ல.) *n. pl.* ஊன் தின்னும் பாலுணியினம்.

carni'vore, *n.* புலால் உண்ணும் விலங்கு அல்லது செடி.

carniv'orous, *a.* புலால் உண்கிற.

carnos'ity, *n.* (மரு.) உடம்பில் மிகையாய்த் தோன்றும் தசை வளர்ச்சி.

ca'rob, *n.* கழற்சி-மயிற்கொன்றை ஆகியவற்றை உள்ளடக்கிய நடுநிலக்கடல் சார்ந்த மர இனத்தின் வகை.

caroche', *n.* நான்கு சக்கர வண்டி.

ca'rol, *n.* மகிழ்ச்சிப் பாடல்; ஆனந்தக்களிப்பு, சிந்து; கிறித்துமஸ் பாடல்; பறவைகளின் இன்னிசைப்பு; ப. சிந்து பாடு, களித்துக் கூடிப்பாடு; மகிழ்ச்சியொடு பாட்டுப்பாடிக் கொண்டாடு.

Ca'roline, *a.* பிரஞ்சு நாட்டுச் சார்லிமேன் (Charlemagne) பேரரசருக்குரிய; இங்கிலாந்து நாட்டின் முதலாவது இரண் டாவது சார்லஸ் மன்னர்கள் (Charles I & II) காலத்திய.

Carolin'gian, *n., a.* = Carlovingian.

ca'rom, *n.* மேடைக்கோல் பந்தாட்டத்தில் இரட்டை வெட்டு, ஆட்டக்காரருடைய பந்து அடுத்தடுத்து இரண்டு பந்துகளை இடித்தல்.

car'otene, *n.* செடிகளில் காணப்படும் செம்மஞ்சள் வண்ணப் பொருள் (ஏ-உணவூட்டப் படிவங்களின் முற்பட்ட காலப் பெயர்).

carot'id, *n.* கழுத்துக் குருதி நாளங்கள் இரண்டில் ஒன்று; *a.* தலைக்குக் குருதியைக் கொண்டு செல்லும் இருபெரும் நாடி களில் ஒன்றுக்கு உரிய; கழுத்துக் குருதிநாளத்துக்கு அண் மையில் உள்ள.

carous'al, *n.* குடியாட்டு, மதுபான விருந்து.

carouse', *n.* குடிமயக்கம்; ப. வெறியாட்டயர், மிகுதியாகக் குடி.

carousel', *n.* வீர ஆட்டப்பந்தயக் களரி, பொதுப்பந்தய விளையாட்டுக் காட்சி.

carp [1], *n.* நன்னீர் வாழும் குள மீன்வகை.

carp [2], ப. குற்றங்காண், குறை கூறு, வைது உரை.

carp'al, *n.* மணிக்கட்டு எலும்பு; *a.* மணிக்கட்டுக்குரிய, மணிக்கட்டு எலும்பு சார்ந்த.

carp'el, *n.* முசலி மூலம், சூலறை, சூலணு.

car'pellary, *a.* சூலணுக்களுக்குரிய, சூலணுக்கள் கொண்ட.

carp'enter, *n.* தச்சர், மரவேலை செய்பவர்; ப. தச்சு வேலை செய்.

carp'enter-ant, *n.* மரத்தைத் துளைத்துக் கூடாக்கிவிடும் எறும்பு வகை.

car'penter-bee', *n.* மரத்தைத் துளைத்துக் கூடாக்கும் இயல்புடைய தேனீ வகை.

carp'enter-scene, *n.* நாடக அரங்கு வகையில் பின்னுல் அரங்குத் தச்சர்கள் விரிவான காட்சியை ஒழுங்கு செய்வதற்கு நேரம் அளிப்பதற்காக அரங்கின் முகப்பில் வண்ணத்திரை யின்முன் நடைபெறும் நாடகக் காட்சி; ஒழுங்கு செய்யும் நேரத்தில் இடப்படும் வண்ணத்திரை.

carp'entry, *n.* தச்சு, மரவேலை.

carp'et, *n.* விரிப்பு, கம்பளம், சமுக்காளம்; மேசை விரிப்பு; புல் பரப்பு; மலர்ப்படுக்கை; ப. கம்பளம் விரி; மூடிப்பரப்பு; கவிந்துமூடு; கண்டிக்க வரவழை; கண்டி; (தொ.) on the carpet, ஆலேசனையில், விவாதத்தில்; (பே-வ.) கண்டிக்கப்பட்டு.

carp'et-bag', *n.* பயணப்பை, முன்பு சமுக்காளத்துணியினுல் செய்யப்பட்ட வழிப்போக்கர் பை.

carp'et-bagger, *n.* பையோடு பயணம் செய்பவர்: தமது உடைமைகளை எல்லாம் பயணப்பையில் வைத்திருப்பவர்; அரசியல் நோக்கத்துடன் அயலிடத்திற்கு வருபவர்; தேர்தல் நாடும் அயலிட அரசியல் வாதி.

car'pet-bed, *n.* சிறு செடிகள் பல உருவங்களில் கத்தரித்து அமைக்கப் பெற்றுள்ள தோட்டப் பாத்தி.

carp'et-dance, *n.* முறைப்படி நடவா ஆடல்; சாதாரண ஆடல்.

car'peting, *n.* கம்பள முதற் பொருள்; கம்பளத்தொகுதி.

car'pet-knight', *n.* வீரச்செயல்களினுலன்றி அரசவையின் ஆதரவினுல் வீரத்திருத்தகை பட்டம் பெற்றவர்; பெண்களை வட்டமிட்டுத் திரிபவர்; அடுக்களைப் படைவீரர்.

car'pet-moth', *n.* சமுக்காளப்பூச்சி, சமுக்காளம் போன்ற வரிகளையுடைய விட்டில் பூச்சி.

car'pet-rod, *n.* படிக்கட்டுக்கழி, படிக்கட்டுச் சமுக்காளம் இடம் பெயராமல் செய்வதற்கான பற்றுக்கம்பி.

carphol'ogy, *n.* உணர்வு தன்வசமிழந்த நிலையில் படுக்கைத் துணி முதலியற்றைத் தாறுமாருகப் பிடித்திழுத்தல், சன்னிச் சேட்டை.

carp'i, *n.* (உள்.) carpus என்பதன் பன்மை.

carp'ing, *a.* குற்றங்காண்கிற ; கடிந்துரைக்கிற : இடக்குப் பேசுகிற.

carpol'ogy, *n.* கனிவகைகள் பற்றிய ஆய்வு நூல்.

carpoph'agous, *a.* பழம் தின்கிற.

carp'ospore, *n.* (தாவ.) சிவப்புப் பாசிவகைகளில் கருவுற்ற பெண் உறுப்பினின்று தோன்றும் சிதல் விதை.

carp'us, *n.* (உள்.) மனிதர்கள் வகையில் மணிக்கட்டு; குதிரை முதலிய விலங்குகள் வகையில் கால் அடிக்கணு ; *pl.* carp'i.

carr, *n.* சதுப்பு நிலம் ; சதுப்பு நிலப் புதர்க்காடு.

carr'ack, carr'act, *n.* போருக்கும் உரிய பெருஞ்சரக்குக் கப்பல்.

carrageen', **carragheen'**, *n.* வட ஐரோப்பாவில் வழங்கும் உணவுக்குப் பயன்படும் கடல்பூண்டு வகை.

ca'rriage, *n.* வண்டி; போக்குவரவு; இருப்பூர்தியின் பிரயாணி வண்டி ; பீரங்கியின் சகடம் ; இறங்கும் விமானத்தைத் தாங்கிக் கொள்ளும் கட்டமைப்பு ; வண்டியின் மேற்பாகமில்லாத சகடச்சட்டம் ; இயந்திரத்தைத் தாங்கி இயக்கும் பாகம் ; கொண்டு போதல், எடுத்துச் செல்லுதல், ஏற்றிச் செல்லுதற்குப் பிடிக்கும் செலவு; செயலாண்மை, செயலாட்சி, நிறைவேற்றம் ; நடக்கை, கோலம், நடையுடை தோற்றம் ; (தொ.) carriage and pair, இரண்டு புரவிகள் பூட்டிய வண்டி.

ca'rriageable, *a.* வண்டிகள் செல்லத்தக்க.

carr'iage-clock, *n.* தலைமாறி வைத்தாலும் ஒழுங்காய் இயங்கும் கடிகாரம்.

ca'rriage-com'pany, *n.* தங்களுக்கென வண்டிகள் அமர்த்திக்கொள்ளவல்ல செல்வர்.

ca'rriage-dog', *n.* புள்ளிகளையுடைய நாய்வகை.

ca'rriage-drive, *n.* பூங்கா முதலியவற்றினூடே வண்டிகள் செல்வதற்கான சாலை.

carr'iage-folk, *n.* = carriage-company.

carr'iage-for'ward, *adv.* வண்டிக்கட்டணம் முன்னதாகச் செலுத்தாமல்.

carr'iage-free', *adv.* கொண்டு செல்வதற்கான கட்டணமின்றி.

carriage-paid', *adv.* வண்டிக் கட்டணம் முன்னதாகச் செலுத்தப்பட்டு.

carr'iage-way, *n.* வண்டிப்பாதை, வண்டிகளின் போக்குவரத்துக்காகவென்று ஒதுக்கப்பட்ட சாலையின் பாகம்.

ca'rrick-bend, *n.* (கப்.) இருமடிக்கொளுவி முடிச்சு, இரண்டு கயிறுகளை இணைப்பதற்கான முடிச்சு வகை.

ca'rrier, *n.* கொண்டு செல்பவர்; சுமை கூலிக்காரர்; தூதர் ; சிப்பங்கள் முதலியவற்றை வாடகைக்கு எடுத்துச்செல்ல ஒப்புக்கொள்பவர் ; கொண்டு செல்லும் ஏதேனுமொன்று ; தூக்கு கலம்; பொதி ஊர்தி; மிதிவண்டியில் பொருள்களை வைத்துக்கொண்டு செல்வதற்கான பகுதி ; நோய்கடத்தி, தான் நோய்க்குட்படாமல் நோய் நுண்மம் பரப்பும் உயிரினம் ; கம்பியில்லாச் செய்தியில் மின்னலை ஊடகம் ; செய்தி கொண்டு செல்லும் புரு; (தொ.) carrier wave, வானொலி இயக்கியால் அனுப்பப்படும் தொடர்பான மின் காந்த அலை.

carr'ier-pig'eon, *n.* முன்னுட்களில் செய்திகள் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட புரு ; புருவகை.

carr'iole, *n.* ஒரு மனிதன் செல்லத்தக்க சிறு வண்டி வகை ; விரைமூடு வண்டி ; கானடா நாட்டுக்குரிய சறுக்கு வண்டி.

ca'rrion, *n.* அழுகும் பிணம் ; ஊழ்த்த இறைச்சி ; இழிபொருள் ; குப்பைகூளம், அழுக்கு ; *a.* அழுகிய, அருவருப்பான, ஊழ்த்த இறைச்சிக்குரிய ; அழுகும் பிணம் தின்கிற.

ca'rrion-crow', *n.* பிணம் தின்னும் காக்கை வகை.

ca'rrion-flower, *n.* அழுகிய இறைச்சியின் நாற்றமுள்ள மலர்ச்செடிவகை.

carriwich'et, *n.* தெறுமொழி, காரசாரமான சூட்டுரை ; நகைத்துணுக்கு ; சொற்புரட்டு, சிலேடைப் பேச்சு.

carronade', *n.* (வர.) பெருந்துளையுடைய சிறு கப்பல் பீரங்கி.

carr'on-oil', *n.* ஆளிவிதையும் சுண்ணநீரும் கலந்த தீப்புண்ணுற்றும் தைலம்.

ca'rrot, *n.* சிவப்பு முள்ளங்கிச் செடி ; சிவப்பு முள்ளங்கிக் கிழங்கு.

ca'rrots, *n. pl.* (பே-வ.) செம்பட்டை மயிர் ; செம்பட்டை மயிருள்ளவர்.

ca'rroty, *a.* தலை மயிர் வகையில் செம்பட்டையான.

ca'rry, *n.* வீச்செல்லை ; வேக எல்லை ; குழிப்பந்தாட்டத்தில் அடிக்கப்பட்ட பந்து நிலத்தைத் தொடுவதற்குமுன் செல்லுந் தூரம் ; பீரங்கி முதலியவற்றின் குண்டு பாயுந் தொலை ; சுமப்பு, சுமந்து செல்லுதல் ; சுமந்து செல்லும் அளவு ; படகைச் சுமந்து செல்லுதல்; இரண்டு நீர்நிலைகளுக்கிடையில் படகைச் சுமந்து செல்ல வேண்டிய நிலப்பகுதி ; வாளேந்து நிலை ; வானம், முகிலின் இயக்கம், மேகங்களின் செலவு ; *v.* எடுத்துச்செல், ஏற்றிக்கொண்டுபோ; சுமை இட்டுக்கொண்டு போ ; தனி நிலையில் வைத்துக்கொண்டு நட ; மேற்கொள், அணி ; ஏந்திச்செல், கொண்டு செல் ; வலிந்து ஈக்கப்பற்று ; (படை.) வாளேந்தி முறைப்படி வணக்கம் செலுத்து; ஆற்று; செய்துமுடி ; பெரும்பான்மை வலத்தால் நிறைவேற்று ; நிகழச்செய் ; வெற்றிபெறு ; தாங்கு, உடன்கொண்டிரு, உடையவராயிரு ; கருவுற்றிரு ; நடத்து, நடந்துகொள் ; தேறுவி ; பண வகையில் காரியத்துக்குப் போதியதாயிரு ; முன் வருதொகையை அடுத்த பத்தியில் கொண்டு போய்ச் சேர் ; பத்திரிகையில் செய்தி வெளியிடு, நிலைக்கூறுக வெளியிடு ; உணர்ச்சி வசப்படுத்து; (தொ.) carry all before one, இடர் தகர்த்து வெற்றிபெறு; carry away, பெறு, உணர்ச்சியூட்டி வசமிழக்கச் செய் ; (கப்.) பாய்மரம் முதலியவற்றை உடைந்து இழக்கப்பெறு ; carry it, நன்கு நடந்துகொள் ; மதிப்புக் கெடுத்துக்கொள்; ஆதாயம் அடை; வெற்றிபெறு; carry off, உயிர் வாங்கு ; கெலி, அடை ; கூட்டத்துடன் கூட்டமாகச் சமாளிக்கவை ; அறைந்து பேசியோ புரட்டிப் பேசியோ சமாளி ; carry on, காரியம் நிறைவேற்றிக்கொள்; முன்னேறு ; தொடர்ந்து செய்துகொண்டு போ ; கொண்டு நடத்து ; மேற் செல்; மட்டுமீறிக் குறைப்படு, இயல்பு கடந்து நட ; மறைவாகக் காதல் நாடகமாடு, பசப்புக்காதல் புரி ; carry one's bat, carry out one's bat, மரப் பந்தாட்டத்தில் ஓர் ஆட்டத்தின் முடிவிலும் ஆட்டம் இழக்காமலிரு ; carry one's point, பிறிதொடுபடாது தன்மதம் நிறுவு, தடைகளைத் துடைத்தொதுக்கித் தன் கருத்து மேலோங்கச் செய் ; carry out, நிறைவேற்று ; carry over, கணக்கேட்டில் மறுபக்கம் கொண்டுசெல் ; கட்சி மாற்றிக்கொணர்; அடுத்த தறுவாய்க்குத் தள்ளிப்போடு ; carry the day, வெற்றிபெறு ; நாளின் செயலில் வெற்றி எய்தப்பெறு ; carry through, இடர்களினூடே தாங்கு, இடர் கடந்து காப்பாகக் கொண்டுவா; எய்தப்பெறு: நிறைவாக்கு; carry too far, மட்டுமீறிச் செல் ; carry up, கட்டிடத்தை மேலும் உயரமாகக் கட்டிக்கொண்டுபோ ; பின்னோக்கிமூலம் காட்டு ; carry weight, மிகுந்த அதிகார வலிமை பெற்றிரு, செல்வாக்குப் பெற்றிரு.

ca'rry-all, *n.* பளுவற்ற நான்குசக்கரக் குதிரைவண்டி.

ca'rry-over, *n.* பங்குமாற்றுத்துறையில் வருதொகையை மறுபுறம் கொண்டு செல்லும் முறைமை; பங்குமாற்றில் முன்பக்கத்தொகை.

cart, *n.* இரட்டைச் சக்கர வண்டி, கட்டை வண்டி ; வில் வண்டி ; *v.* வண்டியில் ஏற்றிச்செல் ; வண்டிக்காரனாகத் தொழில் செய் ; (தொ.) put the cart before the horse, ஒழுங்கு முறையைத் தலைகீழாக்கிவிடு.

cart'age, *n.* வண்டியில் ஏற்றிச்செல்லுதல் ; வண்டிக்கூலி.

carte[1], *n.* வாட்போர் நிலை வகை, சிலம்ப முறையில் மணிக்கட்டின் நான்காவது அமைவு நிலை.

carte², *n.* உணவுக் கட்டணப்பட்டியல்; அட்டையில் ஒட்டப் பட்டுள்ள சிறு நிழற்படம்.

carte-blanche, (பிர.) *n.* வெண்முறி, முன்னதாகக் கையொப்ப மிடப்பட்ட வெற்றுத்தாள்; முழுச்செயலுரிமை.

carte-de-visite, (பிர.) *n.* சிறு அட்டையில் ஒட்டப்பட்டுள்ள நிழற்படம்; மூன்றரைக்கு இரண்டேகால் அங்குல அளவுள்ள நிழற்படம்.

cart'el, *v.* மற்போருக்கு அறைகூவற்சீட்டு; சிறைப்பட்டவர் களை மாற்றிக்கொள்ளுதல்; போர்க்கைதிகளை மாற்றிக் கொள்வதற்கான உடன்படிக்கை; எழுதப்பட்டுள்ள அட்டை; அரசியல் கூட்டு நிலை, அரசியல் கட்சிகளின் கூட்டணி; போரிடையே இருதரப்புக்களுக்கும் இடைப்பட்ட கட்டுப்பாடு; போரிடையே பாதுகாப்புக் கட்டுப்பாடுடைய கப்பல்; போட்டியை அழித்து விலைகளை ஏற்றி வைப்பது போன்ற நோக்கங்களுக்கான வணிக நிலையங்களின் கூட்டணி.

cartelize', *v.* பொதுப்பணிக்காக வணிக நிலையங்களின் கூட்டணி உண்டுபண்ணு; வணிகநிலையக் கூட்டணியின் ஆட்சிக்குட்படுத்து; வணிகநிலையக் கூட்டணியாக அமை.

cart'er, *n.* வண்டி ஓட்டுபவர்.

Carte'sian, *n.* பிரஞ்சு மெய்ந்நூலாசிரியராகிய ரேனே டேகார்ட் (Rene Descartes 1596-1650) என்பவரது மெய் விளக்கத்துறையைப் பின்பற்றுபவர்; டேகார்ட்டேயின் உடனிணைவு முறையை மேற்கொள்பவர்; *a.* பிரஞ்சு மெய்ந் நூலாசிரியராகிய டேகார்ட் என்பவரது மெய்விளக்கத் துறைக்குரிய; டேகார்ட்டின் உடனிணைவு முறைமைக்குரிய; (தொ.) Cartesian bottle-imp, Cartesian devil, Cartesian diver, டேகார்ட்டின் பெயர் வைக்கப்பெற்றுள்ள இயல் நூல் தத்துவ உள்ளுறையுடைய விளையாட்டுப் பொறி, மூடியமைவுமூலம் அழுத்தமிகுந்தோறும் உள்ளிருக்கும் பொம்மை மிதப்புநிலையிலிருந்து இடைத்தங்கு அமிழ்வுநிலைக்கு மாறும் படி அமைக்கப்பட்ட புட்டி.

car'thamine, *n.* குங்குமப் பூவிலிருந்து செய்யப்படும் சாயப் பொருள்.

cart'-horse, *n.* வண்டியிழுக்கத்தக்க குதிரை.

cart'-house, *n.* வண்டிக் கொட்டில்.

Carthu'sian, *n.* தூயதிரு. புரூனே (St. Bruno 1086) என்பவரால் நிறுவப்பட்ட துறவிகளின் அமைப்பைச் சேர்ந்த வர்; கார்த்தூசியத் துறவி மடத்தின் மனையிடத்தில் அமைந்த 'சார்ட்டர் அவுஸ்' (Charter house) என்னும் கல்வி நிலைய மாணவர்; *a.* தூயதிரு. புரூனே என்பவரால் காணப்பட்ட துறவிகளின் அமைப்புக்குரிய; கார்த்தூசியத்துறவி மடத்தின் மனையிடத்தில் அமைவுற்ற 'சார்ட்டர் அவுஸ்' கல்வி நிலையத் துக்குரிய.

cart'ilage, *n.* குருத்தெலும்பு.

cartila'ginoid, *a.* குருத்தெலும்பு போன்ற.

cartila'ginous, *a.* குருத்தெலும்புக்குரிய; குருத்தெலும்பா லான; முள்முனைப்பான; குருத்தெலும்பு போன்று கெட்டிப் புடைய; (உயி.) எலும்புச்சட்ட முழுதும் குருத்தெலும்பாலான.

cart'-ladder, *n.* சுமையின் இட அளவைப் பெருக்குவதற் காகப் பக்கவாட்டில் பொருத்தப்படும் சட்டம்.

cart'-load, *n.* வண்டிச்சுமை, பார அளவு, ஒரு வண்டிச்சுமை.

cartograph'ic, cartograph'ical, *a.* நிலப்படத்துக்குரிய, தேசப்படம் வரைதல் பற்றிய.

cartog'rapy, *n.* நிலப்படத்துறை; தேசப்படம் வரைதல்.

cartol'ogy, *n.* நாட்டுப் படங்கள் மனை விளக்கப்படங்கள் ஆகியவற்றின் ஆய்வுத்துறை.

cart'omancy, *n.* ஆட்டச் சீட்டுக்களை வைத்துக் குறி சொல்லும் முறை.

cart'on, *n.* எய்குறியின் நடுவில் உள்ள வெள்ளைச்சில்லு; மையச் சில்லின்மேல் படும் வேட்டு; பொருள்கள் வைப்பதற் கான அட்டைப்பெட்டி; பெட்டிகள் செய்வதற்குப் பயன் படும் அட்டை.

car'tonnage, *n.* தாள் அட்டை, அட்டைப் பலகை; பதனப் பிணத்தின் மேற்கவிகை.

car'ton-pierre, *n.* கல்தோற்றம் அளிக்கும் அட்டைப் பலகை வகை.

cartoon', *n.* வண்ணப்படம் எழுதுதற்கு மாதிரியாகத் தடித்த தாளில் எழுதப்படும் வரைப்படம்; தொடர்ப்பட வரிசையி லிருந்து எடுக்கப்படும் திரைக்காட்சி; அரசியல் வசைக்கேலிச் சித்திரம்; *v.* வசைக்கேலிப்படம் வரை; கேலிப்படம் வரைந்து ஏளனத்துக்குள்ளாக்கு.

cartoon'ist, *n.* ஏளன ஓவியம் வரைபவர், வேடிக்கை ஓவியர்.

cartoph'ily, *n.* புகைப் பூஞ்சுருள் அட்டைத்திரட்டு, 'சிகரட்' அட்டைச்சேமிப்பு.

cartouch', **cartouche'**, *n.* துப்பாக்கிக்குண்டு - தோட்டா முதலியவைகளுக்கான பெட்டி, வெடி மருந்துப்பெட்டி; (க-க.) சுருள்தாள் போன்ற ஒப்பனை வேலைப்பாடு; (தொல்.) அரசர் பெயர்களையும் தெய்வப் பெயர்களையும் கொண்டுள்ள பழைய எகிப்திய நீள்வட்ட வளையம்.

cart'ridge, *n.* வெடிக்கலம், வெடியுறை, தோட்டா, குண்டு கள் செறித்துள்ள பொதியுறை, பீரங்கிக்குரிய வெடிமருந்து உறை.

car'tridge-belt, *n.* வெடியுறைகள் செருகி வைப்பதற்குரிய கச்சைவார்.

cartridge-pa'per, *n.* கெட்டித்தாள், வரைப்படம் எழுதுதற் கும் திண்ணிய உறைகள் செய்தற்கும் பயன்படும் முரட்டுக் காகிதம்.

cart'-road, *n.* வண்டிப் பாதை.

cart's'-tail, *n.* வண்டியின் பின் பக்கம்.

cart'ulary, *n.* ஆவணத்தொகுதி, பதிவேடு; திருமடத்தின் பதிவேட்டுத் தொகுதி; ஆவணங்கள் வைத்திருப்பவர்; பதி வேடு வைக்கப்படும் இடம், பதிவேடகம்.

cart'way, *n.* = **cart-road.**

cart'-wheel', *n.* வண்டிச்சக்கரம்; ஐந்துவெள்ளிப் பணம் போன்ற பெரிய நாணயம்; பக்கவாட்டுக் கரணம்.

cart'wright, *n.* வண்டிகள் செய்யும் தச்சர்.

car'ucage, *n.* காணி வரி, ஒரு சோடுமாடு ஒரு பருவத்தில் உழத்தக்க அளவு நிலத்தின் மீது விதிக்கப்பட்ட வரி.

car'ucate, *n.* ஏர்ப்பாசன அளவு, நுகத்தில் பூட்டிய ஒருசோடு மாடுகள் விளைச்சல் பருவம் ஒன்றில் உழக்கூடிய நில அளவை.

ca'runcle, *n.* வான்கோழி முதலிய பறவைகளின் தலையில் அல்லது கழுத்தில் இருப்பதைப் போன்ற தசைத்திரளை; (தாவ.) விதைமுடி, விதைமுண்டு.

carun'cular, *a.* விதைமுடி போன்ற, விதைமுண்டின் இயல்பு வாய்ந்த.

carun'culate, *a.* விதைமுண்டு உடைய; தசைத்திரளை வாய்ந்த.

carun'culous, *a.* = **caruncular.**

car'vacrol, *n.* துளசியினத்தின் பற்பல பூண்டுகளில் காணப் படும் பல்வலிக்குதவுகிற கெட்டிமை வாய்ந்த எண்ணெய்.

carve, *v.* செதுக்கு; செதுக்கி உருவாக்கு; வெட்டியமை, குடைந்து உண்டுபண்ணு; குறுக அரி, கொத்து; செதுக்கி உருமாற்று; உருவங்கள் செதுக்கி ஒப்பனை செய்; மாதிரிப் படங்களைச் செதுக்கு; இறைச்சி வெட்டித் துண்டாக்கு; வெட்டிப் பகிர்; சிற்பத்தொழில் நடத்து, சிற்பவேலை செய்; (தொ.) carve out, வெட்டியுருவாக்கு, நறுக்கியெடு; குடைந்து உண்டுபண்ணு; முயன்று பெறு, தன் முயற்சி யால் அடை; cut and carve, மேன்மைப் படுத்து, நயப் படுத்து.

carv'el, *n.* = **caravel.**

car'vel-built, *a.* பலகைகள் ஒன்றின்மீது ஒன்று ஏறுமல் சம மட்டமாயிருக்கும்படிக் கட்டப்பட்ட.

carv'en, *a.* செதுக்கப்பட்ட ; செதுக்கி உருவாக்கப்பட்ட.

carv'er, *n.* செதுக்குபவர், மரவேலைச் சிற்பி, சிற்பி ; இறைச்சி அறுக்க உதவும் கத்தி.

carv'ers, *n. pl.* இறைச்சி அறுக்க உதவும் கத்தியும் கவர் முள்ளும்.

carv'ing, *n.* சிற்பவேலை ; மரத்தில் அல்லது தந்தத்தில் இழைக்கப்படும் செதுக்குவேலை ; செதுக்கி அமைக்கப்பட்ட உருவம் ; உணவு மேசையில் இறைச்சி அறுத்தல் ; உணவு மேசையில் இறைச்சி அறுக்கும் கலை.

carv'ing-knife, *n.* இறைச்சி அறுக்க உதவும் பெரிய கத்தி.

caryat'ic, *a.* தூணுகப் பயன்படும் பெண் உருவச்சிலை பற்றிய.

caryat'id, *n.* சிலையுருவத்தூண், தூணுகப் பயன்படும் பெண் உருவச் சிலை ; *pl.* caryat'ides, caryat'ids.

caryop'sis, *n.* (தாவ.) உமியுடன் ஒட்டிய தானிய வகை ; முதிரை.

cas'cabel, *n.* பீரங்கியின் பின்புறக்குமிழ்.

cascade', *n.* அருவி ; அருவித்தொகுதி, நீர்வீழ்ச்சி ; அலை யலையாக விழும் பூ வேலைப்பின்னல் முடி ; கருவிகலத் தொகுதியின் இடையிணைப்பு; *v.* அருவியாக விழு; அலையலையாக விழு.

cascar'a, cascar'a sagra'da, (ஸ்பா.) *n.* குடலிளக்கும் நன் மருந்தாகப் பயன்படும் வட அமெரிக்காவின் காலிபோர்னியா நாட்டு மரப்பட்டை வகை.

cas'co, *n.* சரக்குகளைக் கொண்டு சென்று கப்பலில் ஏற்றி இறக்கும் பிலிப்பைன் (Philippines) தீவுகளுக்குரிய படகு வகை.

case [1], *n.* பை ; கூடு, உறை ; பெட்டி ; தொகுதி ; சுவர் முகப்புப் பொதிவு; புத்தக மேலட்டை; புத்தக மூட்டுப்பகுதி; அச்சகப் பொறுக்குத் தட்டு ; சிதறு வெடியுறைக்குண்டு ; *v.* பையில் போடு ; உறையில் வை ; பொதி, போர்த்து, தோலிட்டு மூடு ; (தொ.) lower case, (அச்.) ஆங்கில எழுத்து வடிவின் சிறிய பொதுமுறை உருவம் ; upper case, (அச்.) ஆங்கில எழுத்து வடிவின் பெரிய சிறப்பு முறையான முதன்மை உருவம்.

case [2], *n.* நிகழ்ச்சி, நேர்ச்சி ; நேர்வு, நிகழ்வுக்கூறு, நிகழ்வினம் ; நேர்வு வகை ; செய்தி, காரியம், கேள்விக்குரிய பொருள், ஆராய்ச்சிக்குரிய பொருண்மை ; நிலை, நிலைமை, சூழ்நிலை ; தறுவாய் ; பண்பின் செயல்வடிவ நிகழ்வுக்கூறு ; எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்க கூறு ; தொழில் முறை வாடிக்கைத் தொடர்பு ; ஒரு தரப்பு வாதம் ; வழக்கு ; வாதம், வழக்கு விவரம், வழக்கு விவர விளக்கம், வழக்கு விவர அறிக்கை ; (இலக்.) பெயர்ச்சொல்லின் உருத்திரிபு வேறுபாடு, வேற்றுமை ; (தொ.) in any case, எப்படியும், எது எவ்வாறாயினும் ; in case, என்ற நிலை ஏற்படுமானால், என்ற நிலை ஏற்படும்பொழுது ; in case to, பொருந்திய நிலையில் ; in the case of, வகையில் ; leading case, பின்வரும் வழக்குகளுக்கு வழிகாட்டியாகக் கொள்ளத்தக்க முன்மாதிரி வழக்கு; make out a case, தக்க ஆதாரத்துடன் வாதம் உருவாக்கு ; put the case, வாதத்தை உருப்படுத்திக்காட்டு ; எடுத்துக் காட்டாகக் கொள் ; கற்பனையில் மெய்ம்மையாக வைத்துப் பார்.

case [3], *v.* திருட்டை முன்னிட்டுப் புலம் பார்.

casea'tion, *n.* உறைபாற் கட்டியாக மாறுதல்.

case'-book, *n.* மருத்துவரின் தொழில்முறைக் குறிப்பேடு.

case'-bottle, *n.* பெட்டியில் குப்பியுடன் குப்பி பொருந்த வைப்பதற்கு வாய்ப்பான சதுரவடிவக் குப்பியுறை.

case'-hard'en, *v.* பரப்பில் கரியகமூட்டுவதன் மூலம் இரும்பைக் கடும்பதப்படுத்து ; மரத்துப்போகச்செய் ; உணர்ச்சியற்ற நிலை உண்டுபண்ணு.

case'-hard'en'ing, *n.* பரப்பில் கரியகமூட்டுவதன் மூலம் இரும்பைக் கடும்பதப்படுத்துதல், இரும்பில் கடும்பதம் ; உணர்ச்சியின்மை.

case'history, *n.* முன் மரபு, மருத்துவத்துக்கான தனி வரலாறு - மரபு - சூழல்கள் பற்றிய விளக்கத்தாள்.

cas'ein, *n.* பால்புரதம், உறைபாற்கட்டியின் அடிப்படைக் கூறு.

case'-knife, *a.* எப்போதும் உறையிலேயே வைக்கப்படும் பெரிய கத்தி வகை, பட்டாக் கத்தி.

case'-law, *n.* தீர்ப்புவழிச்சட்டம்; முன்வழக்குத் தீர்ப்புக்களைப் பின்பற்றிவந்த மரபுச்சட்டம்.

case'-maker, *n.* புத்தக மேலட்டை செய்பவர்.

case'-man, *n.* அச்சுக்கோப்பவர்.

case'mate, *n.* அகழி கைப்பற்றியவர்கள்மீது துப்பாக்கி நுழைத்துச் சுடுவதற்கான பக்கத்தொளைகளையுடைய அரண் மதிலகக் கவிகைமாடம், காப்பரண் மாடம் ; போர்க்கப்பல் களில் பீரங்கிகளுக்கான கவசமாடம்.

case'mated, *a.* காப்பரண் மாடத்தையுடைய, கவசமாடம் வாய்ந்த ; காப்பரண் பாதுகாப்பை உடைய, கவசமாடக் காப்பினைக்கொண்ட ; காப்பரண் மாடம் போன்ற கட்டுமான முடைய ; கவசமாடம் போன்ற.

case'ment, *n.* பலகணிச்சட்டம் ; மடக்கும் பலகணிக்கதவின் திருகுமரையிட்ட மடிப்பு ; (செய்.) பலகணி ; உட்குடைவான செதுக்குமானம்.

case'ment-cloth, *n.* பலகணித் திரைக்குப் பயன்படுத்தப் படும் துணிவகை.

case'ment-curtain, *n.* பலகணிச் சட்டத்தில் தொங்கவிடப் படும் திரை, பலகணித்திரை.

case'mented, *a.* மடங்கு மடிப்புச் சட்டத்தையுடைய.

case'ment-window, *n.* மடக்குப் பலகணி.

cas'eous, *a.* உறைபாற்கட்டியைச் சார்ந்த ; உறைபாற்கட்டி போன்ற.

casern', **caserne'**, *n.* அரணின் படைவீரர் தங்குமனை வரிசை.

case'-shot, *n.* சிதறு குண்டாகப் பயன்படுத்தப்படும் இரவைக் குண்டுகளடங்கிய தகர அடைப்பு.

case'-work, *n.* சமூகப்பணியிடையே தனிமனிதனைப்பற்றிய கவனிப்புக் கூறு.

case'-worm, *n.* ஈ வகையின் நீரில் மிதக்கவிடப்படும் முட்டைப் புழு.

cash [1], *n.* (த.) காசு, நாணயம் ; சீன நாட்டுச் செப்பு நாணயம்.

cash [2], *n.* கெட்டிப்பணம், உடனடிப்பணம், ரொக்கம் ; பொருளகத்துறையில் நாணயப்பணம்; நாணயப்பணமும் பொருளக நாணயத்தாளும் மட்டுமே அடங்கிய தொகை ; *v.* பொருளக நாணயத்தாள் - பொருளகமுறி ஆகியவற்றுக்குரிய நாணயப் பணம் வழங்கு, நாணயப்பணமாக மாற்று ; (தொ.) cash and carry, வாங்குபவரிடம் கொண்டு ஒப்படைப்பதற்குரிய ரொக்க விற்பனை முறை ; cash down, அவ்விடத்திலேயே கொடுக்கப்படும் பணம் ; cash in, பந்தயச்சூதாட்ட முடிவில் நாணய அடையாள வட்டுக்களை நாணயமாக மாற்று ; (பே-வ.) இற ; பயன்படுத்திக்கொள் ; cash in on, தனக்கே பயன்படுத்திக்கொள் ; cash on delivery, உடனடிப் பணங் கட்டி எடுப்பதற்குரிய சரக்கு அனுப்பீடு ; hard cash, spot cash, அப்பழுக்கில்லாத உடனடிக்கெட்டிப்பணம் ; in cash, பணம் கைவசமாக ; பணமுட்டின்றி ; out of cash, பணம் கைவசமின்றி, பணம் முட்டுப்பட்டு.

cash'-account', *n.* பணவகைக் கணக்கு, ரொக்கக் கணக்கு ; பொருளகத்தில் சில்லறைக்கடன் வாய்ப்பு அளிப்பதற்கான தனிக் கணக்கேடு.

cash'-book, *n.* பண வரவு செலவுக் குறிப்பேடு.

cash'-cred'it, *n.* பொருளகத்தில் சில்லறைக் கடன் வாய்ப்பு அளிப்பதற்குரிய தனிக் கணக்கேடு.

cash'ew, *n.* முந்திரிமரம், கொல்லா மாமரம்.

cash'ew-apple, *n.* முந்திரிப்பழம், கொல்லாமாம்பழம், முந்திரி மரத்தில் பழமாகக் கருதப்படும் சதைப்பற்றுமிக்க விதைக் காம்பு.

cash'ew-nut, *n.* முந்திரிக்கொட்டை, அண்டிக்கொட்டை, கொல்லாமாங்கொட்டை.

cashier' [1], *n.* காசுக்கணக்கர், பணம் கொடுக்கல் வாங்கல் கணக்குப் பணியாளர்.

cashier' [2], *v.* அவமானத்தோடு வெளியேற்று; வேலையிலிருந்து தள்ளு, கண்டித்துப் பதவியிலிருந்து நீக்கு, தள்ளிவை; ஒழி.

cashier'ment, *n.* பணி நீக்கம்.

cash'mere, cash'mere shawl, *n.* காசுமீரச் சால்வை; மென்மைமிக்க காசுமீர வெள்ளாட்டு மயிராலான கம்பிளிப் போர்வை; காசுமீரச் சால்வைப் போலி.

cash'-pay'ment, *n.* நாணயப்பணம் கொடுத்தல், பொருளக முறிக்குப் பணம் கொடுத்தல்.

cash'-price, *n.* கைப்பண விலை, ரொக்க விலை.

cash'-rail'way, *n.* வாணிக நிலையங்களில் வாடிக்கை மேடையிலிருந்து பெட்டியடிக்குப் பணம் சேர்க்கும் பொறி, காசுய்க்கும் பொறி.

cash'-reg'ister, *n.* வாணிகக்களங்களின் இடுபணக் கணக்குப் பொறி.

cas'ing, *n.* பெட்டியிலடைத்தல், உறையில் செறித்தல்; பொதித்தல்; பொதியுறை, மேலுறை, கவிகை; புறத்தோடு.

casi'no, *n.* பொது ஆடரங்கம்; நடனக்கூடம்-ஆட்ட மேசைகள் முதலிய வாய்ப்புக்களையுடைய பொதுமாளிகை; சீட்டாட்ட வகை; *pl.* casi'nos.

cask, *n.* மிடா, மரப்பட்டிகைகள் இணைத்து இரும்புப்பட்டைகளால் இறுக்கப்பட்ட தேறல் பேழை; மிடா அளவு குடிவகை; குடிவகை அளவு; *v.* மிடாவில் அடை.

cask'et, *n.* பேழை; சிறு மிடா; பெட்டகம், அணிமணிப் பெட்டி.

Cas'lon, Cas'lon type, *n.* வில்லியம் காஸ்லான் (William Caslon-மறைவு 1776) என்பவர் உருவாக்கிய அச்சுருப்படிவம்; காஸ்லானின் முறை பின்பற்றிய அச்சுருப்படிவம்.

casque, *n.* தலைக்கவசம்.

Cassan'dra, *n.* கிரேக்க கதைக்காப்பியங்களில் அப்போலோ (Apollo) என்ற தேவனுல் வருவதுகூறும் திறமும் அதை எவரும் நம்பாத குறையும் ஒருங்கே அளிக்கப்பெற்றவளான திராய் (Troy) அரசன் பிரெயிம் (Priam) என்பவரின் புதல்வி; எவராலும் மதிக்கப் பெருநிலை பெற்ற கணியர்.

cass'areep, cass'aripe, *n.* ஆற்றல்சான்ற நச்சரியாகவும் சுவைப்பொருளாகவும் பயன்படும் கசப்பான கூவைக் கிழங்கு வகையின் சாறு.

cassa'tion, *n.* துடைத்தழிப்பு, ஒழிப்பு, நீக்கம்; முறைமன்றத் தீர்ப்பு நீக்கம்; (தொ.) court of cassation, உச்ச உயர் முறைமன்றம், தலைமை வழக்குமன்றம்.

cassa'va, *n.* கூவைக் கிழங்குவகை, மரவள்ளிக் கிழங்கினத்தின் வகை; கூவைக்கிழங்கு வகையின் மாவு; கிழங்குவகையின் மாச்சத்து; கூவைக்கிழங்கு வகையின் மாவால் செய்யப்பட்ட அப்பம்.

cass'erole, *n.* புழுக்குத்தட்டம், கறியுணவு வகைகளின் வேகுகலமாகவும் பரிமாறுகலமாகவும் ஒருங்கே பயன்படும் சூடு கையேருத மண்கலத் தட்டம்.

ca'ssia, *n.* தாழ்ந்ததரக் கருவாய்ப்பட்டைவகை; கருவாமர வகை.

Cass'ia, *n.* நிலவாகை, பேதிமருந்தாகப் பயன்படும் இலையுடைய செடி வகை.

cass'imere, *n.* மணியிழை நேரியல் கம்பிளி ஆடைவகை.

cassin'o, *n.* சீட்டாட்ட வகை.

cass'ock, *n.* ஆங்கிலத் திருச்சபைக்குரிய (Anglican Church) குருமார் அணிந்துவந்த நீண்ட இறுக்கமான உள்ளங்கி வகை; ஸ்காத்லாந்து நாட்டுக் குருமார் அணியும் கரும் பட்டு உள்ளுடை.

cassolette', *n.* நறும் புகைக்கலம், தூபக்கலம்; முகடு துளையரிப்பிட்ட மணப்பொருட் பேழை, நறுமணப் பெட்டி.

cassonade', *n.* துப்புரவு ஆக்கப்படாத சர்க்கரை.

cass'owary, *n.* நியூகினியிலுள்ள (New Guinea) தீக்கோழி இனத்தின் வகை.

cassumu'nar, *n.* கிழக்கிந்தியத் தீவுகளின் இஞ்சி வகை.

cast [1], எறிதல், வீச்சு; தூண்டில் எறிவு; எறிபடை வீச்சு, ஆழம் பார்க்கும் குண்டிழை எறிவு; தூண்டில் முனைப்பகுதி; தூண்டிவிடத் தக்க இடம்; எறிதொலை; வார்ப்புரு; வார்ப்புருவின் வார்ப்பட அச்சு; உருவம், வடிவம்; பொறிப்பு; வண்ணம்; நிறத்தின் சாயல்; பண்பு; குற்ற அளவு; நாடக உறுப்பினர் நடிப்புப் பாகுபாடு, நடிப்புப் பாகுபாட்டுத் திட்டம்; நடிகர் நாடகப் பகுதி; நாடக உறுப்பினர் குழு; நாடகக்காட்சி; மாதிரிக்காட்சி; காட்சித்திருப்பம்; வாழ்க்கைப் போக்கின் திருப்பம்; காலத்திருப்பம்; தற்செயல் நேர்ச்சி; சூதாட்டத்தில் குருட்டுயோக எறி, குருட்டு வெற்றி முயற்சி; போர்வை; நோட்டம்; விழிக்கோட்டம்; பறவை எச்சம்; சிற்றுயிர்களின் எச்சம்; வண்டியில் சிறிது தொலை ஏற்றியுதவுதல்; தொகைகூட்டிக் கணித்தல்; பருந்தின் இணை; *a.* வார்த்து உருவாக்கப்பட்ட; எறியப்பெற்ற; விட்டொழிக்கப்பட்ட; ஒதுக்கித்தள்ளப்பட்ட, துறக்கப்பட்ட; வழக்கில் முறியடிக்கப்பட்ட; *v.* எறி; வீசியெறி; விட்டொழி, நீக்கு, அகற்று, துற; வீழச்செய்; விழவிடு, வீழ்த்து; வழக்கில் முறியடி; இடு, போடு, மேலிடு; சீட்டைப்போடு; வாக்குரிமைச் சீட்டிடு; கணி, கூட்டிக்கணக்கிடு; வார்த்து உருக்கொடு; கலைத்துறையில் பண்போவியம் உருவாக்கு; ஒழுங்குபடுத்து; நடிகரை நடிப்புப்பகுதிக்குத் திட்டம் செய்; நடிப்புப்பகுதியை நடிகருக்கு உறுதிசெய்; (தொ.) cast about, சுற்றிப்பார், தேடு, வகை தேடு; cast anchor, நங்கூரமிடு; cast an eye, பார்வை செலுத்து; காணநேரு; cast aside, cast asunder, cast away, cast off, துற, ஒதுக்கித் தள்ளு; வீசியெறி; cast blame, குற்றம் சுமத்து; cast down, வீழ்த்து, தொங்கவிடு, தளர்வுட்டு, துயர்ப்படுத்து; cast horoscope, சாதகம் கணி, சாதகம் உருவாக்கு; வாழ்க்கை வரையறு; cast in one's teeth, குற்றம் எடுத்துரைத்துக் கண்டி; cast loose, தொடர்பறு, கட்டவிழ்த்துவிடு; cast lot, சீட்டுக்குலுக்கிப் போடு; cast net, வலைவீசு; cast out, நீக்கு; cast spell, மயக்கு; cast up, மேலிடு; எறி; கணி.

cast [2], *v.* cast [1] என்பதன் இறந்தகால-முடிவெச்சவடிவம்.

Castal'ia, *n.* கிரேக்க பழங்கதையில் பர்ணஷஸ் (Parnassus) மலையில் செங்கதிர்த்தெய்வமான அப்போலோவுக்கும் (Apollo) கலைத்தெய்வ நங்கையர்க்கும் (Muses) புனிதமான ஊற்று; கவிதையூற்று.

Castal'ian, *a.* கிரேக்க பழங்கதையில் பர்ணஷஸ் மலையில் செங்கதிர்த்தெய்வமான அப்போலோவுக்கும் கலைத்தெய்வ நங்கையர்க்கும் புனிதமான ஊற்றுக்குரிய; கவிதையூற்றுக் குரிய.

Cas'taly, *n.* = Castal'ia.

cas'tanets, *n. pl.* காழ்மரம் அல்லது தந்தத்தால் செய்யப்பட்டுக் கிலுக்கிசையுடன் நடனங்களில் கைவிரல்களுக் கிடையே வைத்துப் பயன்படுத்தப்படும் ஒரு கைத்தாளக் கட்டை வகை.

cast'away, *n.* புயலால் கரையில் தள்ளப்பட்டவர், உடைகலப் பட்டோர்; சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்; துணையிலி; பழிகேடன்; *a.* ஒதுக்கப்பட்ட, தள்ளப்பட்ட; பயனற்ற.

caste, *n.* சாதி, பிறப்படிட்படையான செயற்கைச் சமுதாயப் பிரிவு; ஒட்டறுத்து வாழவிரும்பும் சமுதாய வகுப்பு, தனி வாழ்வுடைய வகுப்பு; சாதி முறை; சாதிப்படி, சாதி மதிப்பு;

சமுதாயத் திரிபியல் வடிவப் பூச்சியினங்களில் தனி உயிரின் உருவப்படிவம்; (தொ.) lose caste, சாதிப் படியிலிருந்து இழி, சாதி மதிப்பிழ; renounce caste, சாதி துற.

caste'less, *a.* சாதியற்ற; சாதியிழந்த.

cas'tellan, *n.* அரண்மாடத் தலைவர், அரண்மாளிகை ஆட்சியாளர்.

cas'tellated, *a.* அரண்மாடம் போன்ற கட்டமைப்புடைய, அரண்மாளிகைபோலக் கோட்டை கொத்தளக் கூடகோபுரங்களையுடைய.

cas'tigate, *v.* தண்டி, கண்டித்துரை, அடித்து ஒறு; திருத்தம் செய், பாட திருத்தம்செய்.

castiga'tion, *n.* கண்டித்துத் திருத்தல், கடுந்தண்டனை; கடிந்துரை; காரசாரமான திறனாய்வு.

cas'tigator, *n.* கண்டிப்பவர்; கண்டனம் எழுப்புபவர்.

Castile', *n.* ஸ்பெயின் நாட்டின் ஒரு பகுதி; (தொ.) Castile soap, முரட்டுச் சவுக்காரக் கட்டி வகை; தேவதாரு நெய்யும் உவரகையும் கலந்து உண்டுபண்ணப்பட்ட சவுக்காரக் கட்டி.

castil'ian, *n.* ஸ்பெயின் நாட்டுப் பகுதியான காஸ்டீலுக்கு (Castile) உரியவர், காஸ்டீல் வாழ்நர்; காஸ்டீல் பகுதிக்குரிய செப்பமிக்க ஸ்பானிய மொழி; *a.* காஸ்டீல் பகுதிக்குரிய.

cast'ing, *n.* எறிதல்; இடுதல், போடுதல்; வார்ப்படம், வார்ப்பு; வார்ப்புக்குரிய பொருள்; வார்ப்புரு.

cast'ing-net, *n.* எறிவலை, வாய்ப்பக்கம் கீழ்நோக்க எறிந்து மையமூடாக நாற்புறக்கோடியும் இழுக்கப்படத்தக்க வகையில் அமைவுற்ற பெரிய வட்ட வடிவமான வலை.

cast'ing-vote, *n.* தீர்வுமொழிச்சீட்டு, முடிவுவாக்கு, சரிசமமான வாக்குகளைப் பெற்ற கட்சியினரிடையே வெற்றி தேர்வு தரத்தக்க மேலுரிமையுடைய மொழிச்சீட்டு.

cast'ing-weight, *n.* சாய் எடை; சரிசமநிலையை ஏதேனும் ஒருபுறமாக்கவல்ல மிகை எடை.

cast'-iron, cast iron, *n.* வார்ப்பிரும்பு, கரிமம் பசைமம் முதலிய கரிய வகைகளை எஃகில் சேர்ப்பதினும் மிகுதியாகச் சேர்ப்பதால் மீண்டும் வேலைப்பாட்டுக்கு உதவா நிலையுடைய வார்ப்பட இரும்புக் கலவை; வார்ப்படத்தில் உருவாக்கி வார்த்த இரும்பு; *a.* வார்ப்பிரும்பால் ஆக்கப்பட்ட; கடின மான; சோர்வுறுத, உறுதிவாய்ந்த; விறைப்பான; வளைந்து கொடுக்காத, மாற்றியமைக்க முடியாத.

ca'stle, *n.* காப்பரண் மாளிகை; காப்பரண், காவற்கோட்டை; அரண் மாளிகையாக முன்பு இருந்த கட்டிடம்; பெருமக்கள் மாளிகை; தற்கால மேலைச் சதுரங்க ஆட்டத்தில் நால்வகைக் காயுருக்களில் ஒன்று (அம்பாரி); யானைமீதுள்ள காப்புக் கூண்டு, அம்பாரி; பெருங்கப்பல், படைநாவாய்; *v.* சதுரங்க ஆட்டத்தில் அம்பாரிக்காயுருவை நோக்கி அரசுக்காயுரு இருகட்டம் சென்று அது தாண்டிய கடைசிக் கட்டத்துக்கு அம்பாரிக்காயுருவைக் கொண்டுவருமாறு ஆடு; (தொ.) castles in Spain, castles in the air, மனக்கோட்டைகள், பகற்கனவுகள்.

cas'tle-builder, *n.* மனக்கோட்டை கட்டுபவர், பகற்கனவாளர், கற்பனைத் திட்டங்களிடுபவர்.

cas'tle-buil'ding, *n.* மனக்கோட்டை கட்டுதல், பகற்கனவு காண்டல்.

ca'stled, *a.* காப்பரண் மாளிகைகளையுடைய; காவற்கோட்டைகளைக் கொண்ட.

cas'tle-guard, *n.* காப்பரண் மாளிகைக் காவலர், மனைக் கோட்டைக் காவலர்.

cas'tle-nut, *n.* பொட்டுமரை, இயந்திரத்தில் மற்றோர் உறுப்பின் முனைப்பூசி வந்து பொருந்துவதால் சுழற்சி நிறுத்தப்படும்படியாகச் சுற்றுபுறத்தில் துளையுடைய முகிழ்.

cast'-off, *n.* கழிபொருள், பயனற்றதென ஒதுக்கி எறியப்பட்ட பொருள்; *a.* தூக்கி எறியப்பட்ட, ஒதுக்கப்பட்ட.

Cas'tor, *n.* கிரேக்க பழங்கதையில் குதிரை பழக்குதலில் வல்லுநனான லீடா (Leda) வின் இரட்டைப் பிள்ளைகளுள் ஒருவன்; மிதுனமனை வான்மீன்குழுவின் ஒண்மீன்.

cas'tor[1], *n.* உழன்றி, உழலை, இருக்கைகளின் கால்களில் பொருந்திய திருகுசுழல் சக்கரம்; தெளிபுட்டில், திவலைகள் கொட்டும் முகடு உடைய கலம்; உணவு மேடையில் துணைச் சுவைப் பொருள்களுக்குரிய கலம்; (தொ.) castor sugar, வெள்ளைத்தூள் சர்க்கரை, சீனி.

cas'tor[2], *n.* நீர்நாய் போன்ற கொறிக்கும் விலங்கினம்; விலங்கின வகையின் பிட்டத்தின் சுரப்பி நீரிலிருந்து உண்டு பண்ணப்படும் வன்மண மருந்துப் பொருள் வகை; நீர்வாழ் விலங்கின வகையின் மென் மயிர்த்தோல்; மென் மயிர்த்தோல் தொப்பி.

cas'tor[3], *n.* குதிரைக் காலடியில் கல் போன்ற கரணை.

casto'reum, *n.* நீர்நாய் வகையின் பிட்ட அடிச்சுரப்பி; நீர்நாய் வகையின் பிட்ட அடிச்சுரப்பியிலிருந்து உண்டுபண்ணப்படும் கூர்மணப்பொருள்.

cas'tor-oil, *n.* ஆமணக்கு வகையின் எண்ணெய், குடலிளக்க மருந்தாகவும் மசகெண்ணெயாகவும் வழங்கும் தாவர எண்ணெய் வகை.

cas'tors, *n. pl.* உணவு மேடையில் துணைச்சுவைப் பொருள்கள் வைப்பதற்குரிய நிலைச்சட்டம்.

cast'ory, *n.* செங்நிறம், நீலச்சாயலார்ந்த செங்நிறம்.

cas'tral, *a.* கூடாரத்துக்குரிய.

castrameta'tion, *n.* கூடார அமைப்புக்கலை.

castrate', *v.* விதையடி, ஆண்மை போக்கு, இனப்பெருக்க ஆற்றல் அழி; மெலிவி; குறைபடுத்து, அகற்றிக்குறை உண்டுபண்ணு, வெட்டிக்குறை, கத்தரித்துக்குறை; தீமை யகற்று, தூய்மைப்படுத்து.

cas'trated, *a.* விதையடிக்கப்பட்ட; தீமை அகற்றப்பட்ட, தூய்மையாக்கப்பட்ட; இடைவெட்டிக் குறைக்கப்பட்ட.

castra'tion, *n.* விதையடிப்பு, இனப்பெருக்க ஆற்றலழிப்பு; (உயி.) விதை நீக்க அறுவை; (தாவ.) கருவக நீக்கம், மலரின் பூவிழை நீக்கம்.

cast'-steel, *n.* அடித்து உருவாக்கப்படாமல் வார்த்து உருவான எஃகு.

ca'sual, *n.* தற்செயல் வருகையாளர், இடைவரவாளர்; நாட் கூலியாள்; ஒரோவொரு சமயம் உதவிநாடும் பஞ்சை; *a.* தற்செயல் வருகையான, இடைவரவான; திட்டமிடப்படாத, காலத்திற்பட்ட, காலப்போக்கிலேற்பட்ட; கைப்போக்கான, முயற்சியற்ற; முறைமைப்படாத; (தொ.) casual labourer, அவ்வப்போது உழைப்பவர், நாட்கூலியாள்; casual leave, நேர்வு விடுப்பு; casual ward, ஏழ்மையுதவி மனையில் இடையுதவிச்சாலை.

cas'ualism, *n.* எல்லாம் தற்செயற்பாங்காகவே நடக்கின்றன என்ற கோட்பாடு, காரிய காரண மறுப்புக்கொள்கை.

ca'sually, *adv.* தற்செயலாக, எதிர்பாராமல், போகும் போக்கிலே, இடையே.

cas'ualness, *n.* தற்செயல் நிகழ்வுப்பண்பு; திட்டமின்மை; இடைநிகழ்வு; தற்போக்கு.

cas'uals, *n. pl.* தட்டையான சறுக்குப் புதைமிதி.

ca'sualties, *n. pl.* படைத்துறையில் சாவு-காயப்படுதல்-ஓடிப் போதல் முதலியவற்றுல் ஏற்படும் இழப்புப்புள்ளி விவரம், சேதப்பாட்டு விவரம்; (தொ.) casualties of superiority, ஸ்காத்லாந்து நாட்டில் பழைய நிலப்பண்ணை முறையில் பண்ணையாளுக்குச் செலுத்த வேண்டிய இடை நிகழ்வுகளுக்குரிய கட்டணங்கள்.

cas'ualty, *n.* திடீர் இடையூறு, இடைநேர் இடர், இடை விபத்து; தீ நிகழ்வு; இடைநேர்வு; காயம்பட்டவர்; இடைச்செலவினம், சிறு சில்லறைச் செலவு; (தொ.) casualty ward, மருத்துவமனையின் இடைவிபத்தரங்கம்.

casua'rin'a, *n.* சவுக்கமரம், காற்றுடிமரம்.

ca'suist, *n.* சமய சாத்திரங்களின் தத்துவ ஆதரங்கள் காட்டி மயிரிழை பிளக்கும் வாத எதிர்வாதம் செய்பவர், ஆரவாரச் சொற்போராளர், விதிமுறைவாதி, மயிரிழைவாதி; குதர்க்க வாதி, விதண்டாவாதி; வாதத் திறமையுடையவர், வாய்வலர்.

casuis'tic, *a.* தத்துவவாதம் செய்கிற, மயிரிழைவாத இயல்பான; வாயடி வாதம் செய்கிற; நிகழ்ச்சி விளக்க ஆதார முடைய.

casuis'tical, *a.* தத்துவவாதம் செய்கிற; மயிரிழைவாத இயல்பான; விதிமுறை வாதக்கோட்பாட்டுக்குரிய; வாயடி வாதம் செய்கிற, ஆரவார வாதத்தால் வாயடைக்கிற.

ca'suistry, *n.* வாத இயல்; விதிமுறை வாதக்கோட்பாடு; அறச்சிக்கல் விடுவிப்பு; மயிரிழை நுணுக்க வாதம்; வாயடி வேதாந்தம்.

cas'us bell'i, (ல.) *n.* போர்க்காரணம்.

cat[1], *n.* பூனை; பூனை இன விலங்கு; வம்புக்காரி; முற்றுகைத் தாக்குதலுக்குரிய காப்பரண் சகடம்; இரு முக்காலி; இரண்டு முக்காலிகளை இணைத்த கோக்கால்; கிட்டிப்புள் போன்ற விளையாட்டு வகையின் கிட்டிக்கட்டை; கிட்டிப்புள் போன்ற விளையாட்டு வகை; ஒன்பது முடிச்சுக்கள் வாய்ந்த சாட்டை வார்; ஏ. கப்பல் நங்கூரம் தாங்கித் தூலத்தளவாக நங்கூரம் உயர்த்து; (பே-வ.) வாந்தியெடு; (தொ.) bell the cat, பூனைக்கு மணிகட்டு; ஆபத்தான செயலில் தலைமை மேற்கொள்; care killed a cat, care killed the cat, ஒன்பது உயிர்களிருப்பதாக நம்பப்படும் பூனையைக் கவலைகொன்று விடுமே (ஆதலால் மகிழ்ச்சியோடிரு); catted and fished, (கப்.) நங்கூரம் தாங்கித் தூலம் வரையில் உயர்த்திக்கட்டப் பட்ட; Cheshire cat, இளித்த பல் தோற்றத்துக்குப் பேர்போன பூனை வகை; enough to make a cat laugh, ஈடுபாடற்றவர்களுக்கும் மகிழ்ச்சியூட்டக் கூடிய; Kilkenny cats, ஒருவரை ஒருவர் அழிக்கிறவரையில் சண்டை போடுகிறவர்கள்; raining cats and dogs, அடர்த்தியாக மழை பெய்தல்; room to swing a cat, மிகக் குறைந்த அளவு தேவைப்படும் இடம்; see which way the cat jumps, உறுதி செய்யுமுன் வெற்றி எத்திசை என்பதைக் கவனித்துக் கொள்; turn cat in pan, turn the cat in the pan, திறம் படக் கட்சிமாறு.

cat[2], *n.* இங்கிலாந்தின் வடகிழக்குக் கரையில் போக்குவரத்தா யிருக்கிற நிலக்கரி-வெட்டு மரக்கப்பலின் பழைய பெயர்.

catab'olism, *n.* அழிவுண்டாக்கும் உயிர்ப்பொருள் வேதியியல் மாறுபாடு.

catacaus'tic, *a.* (வடி.) ஒளி முட்டி மீள்வதனால் உண்டாகும் கோட்ட வரைகளுக்குரிய.

catachres'is, *n.* பொருள் வழுப்படச் சொல்லை வழங்குதல்; சொற்களைத் தகாவழிப் பெய்துரைத்தல்.

catachres'tic, **catachres'tical**, *a.* பொருள் வழுப்பட வழங்கப்பட்ட, மாறுகொளப் புணர்த்தற்குரிய.

cat'aclasm, *n.* சீர்குலைவு, சிதைவு, முறிவு.

cataclas'mic, *a.* பெரும் பிளவின் இயல்பினதான; படு வீழ்ச்சிக்குரிய.

cataclas'tic, *a.* (மண்.) நொறுக்கப்பட்ட சிறு துணுக்கு களாலான.

cat'aclysm, *n.* பிரளயம், ஊழிப்பெருவெள்ளம்; திடீர் மாறு பாடு; அரசியல் கொந்தளிப்பு; சமூகப்புரட்சி.

cataclys'mal, **cataclys'mic**, *a.* ஊழிப் பெருவெள்ளத்துக் குரிய; புரட்சியின் இயல்பு வாய்ந்த.

cat'acomb, *n.* அடிநிலக் கல்லறை; சுவடிகள்-மது முதலிய வற்றைத் தொகுத்து வைப்பதற்கான சேமநிலவறை.

cat'acombs, *n. pl.* அடிநிலக் கல்லறைத் தொகுதி; கட்டு கற்களுக்காக வெட்டிக் குடையப்பட்ட நிலக்குடைவு.

catacous'tics, *n.* (இய.) எதிரொலிகளைப் பற்றிக் கூறும் ஓசையியற் பிரிவு.

catacum'bal, *a.* அடிநிலக்கல்லறை போன்ற.

catad'romous, *a.* (வில.) முட்டையிடுவதற்காக ஆற்று முகம் அல்லது கடலுக்குப் பருவந்தோறும் செல்கிற.

catafal'co, **cat'afalque**, *n.* பாடை, கல்லறை வடிவில் அமைக்கப்பட்ட பிணங்கொண்டு செல்வதற்குரிய ஊர்தி.

Cat'alan, *n.* காடலோனியர்; ஸ்பெயின் நாட்டிலுள்ள காட லோனியா (Catalonia) மாகாணத்தவர்; காடலோனிய மாகா ணத்துக்குரிய மொழி; *a.* காடலோனியாவைச் சேர்ந்த; காடலோனிய மொழிக்குரிய.

catalec'tic, *a.* முடிவுறுத; நிறைவற்ற; (இலக்.) கடைக் குறையான, அடியிறுதியில் ஓர் அசை குறைந்த.

cat'alepsy, *n.* மூடுசன்னி, உணர்ச்சியிழந்து உடம்பு விறைத்துப் போகச் செய்யும் நோய் வகை; விலங்குகள் உயிரிழந்தன போலச் செயலிழந்து கிடக்கும் நிலை, சா விறைப்பு.

catalep'tic, *n.* மூடுசன்னி நோயாளி; *a.* மூடுசன்னிக்குரிய; மூடு சன்னி கண்ட; சா விறைப்புச் சார்ந்த.

catalex'is, *n.* கடைக்குறை, பாவின் அடியிறுதியில் ஓர் அசை குறைந்திருத்தல்.

catallac'tic, *a.* நாணய மாற்றுக்குரிய.

catallac'tics, *n.* நாட்டுப் பொருளியல்.

cat'alogue, *n.* பெயர்ப்பட்டியல் வரிசை; ஏ. பட்டியல் வரிசை தொகு; நூல்கள் முதலியவற்றின் பெயர்களைப் பட்டியலில் சேர்; (தொ.) catalogue raisonne, துறை-கிளைத் துறை விரித்து அடைவு செய்யப்பட்ட பட்டியல்.

cat'aloguer, *n.* பட்டியல் தொகுப்பவர்.

cat'aloguise, ஏ. பட்டியல் அடைவுசெய்.

catal'pa, *n.* நெஞ்சுப்பை போன்ற இலைகளையும் ஊதுகொம்பு போன்ற மலர்களையும் உடைய மரவகையின் இனம்.

cat'alyse, ஏ. (வேதி.) கடுவினைக்கு உட்படுத்து, இயை பியக்கம் ஊக்கு.

catal'ysis, *n.* (வேதி.) இயைபியக்கத்தை ஊக்கும் ஆற்றல், தான் மாறுமலேயே மற்றப்பொருள்களில் வேதியியல் மாற்ற முண்டாக்கத் துணைசெய்தல்.

cat'alyst, *n.* (வேதி.) கடுவினை ஆக்கி, நுகைப்பான், இயை பியக்கம் ஊக்கி.

catalyt'ic, **catalyt'ical**, *a.* (வேதி.) கடுவினை ஊக்குகிற, இயைபூக்கமான.

catamaran', (த.) *n.* கட்டுமரம், இரட்டுறு படகு, தோணி; பழங்காலக் கப்பல் வகை; வம்புக்காரி.

catame'nia, *n. pl.* மாதவிடாய் ஒழுக்கு.

cat'amite, *n.* இயற்கைக்கு மாறுபட்ட புணர்ச்சிக்காக வைத் திருக்கப்படும் சிறுவன்.

cat'amount, *n.* ஐரோப்பியக் காட்டுப்பூனை.

catamoun'tain, *n.* சிறுத்தை; மலைவாழ் முரடர்; *a.* மூர்க்கமான.

cataphon'ics, *n.* எதிரொலிகளைப் பற்றிக் கூறும் ஓசையியற் பிரிவு.

cataphrac'tic, *a.* முழுப் போர்க்கவசத்துக்குரிய.

cat'aphyll, *n.* இலையின் முதன் மூலப்படிவம், இலைமுதல்.

cat'aplasm, *n.* வீக்கத்திற்குக் கட்டுகிற மாப்பசை.

cataplec'tic, *a.* உணர்வயர்வுக்குரிய; விலங்குகளின் உறக் கம் போன்ற நிலைக்குரிய.

cat'aplexy, *n.* உணர்ச்சியால் விளைந்த அசைவற்ற நிலை; விலங்குகளுக்கு இரைப்புப் போன்ற விறைப்புண்டாக்கும் நோய் வகை.

cat'apult, *n.* கவண், விசை வில்பொறி, எறிபடை வீச்சுப் பொறி; சிறுவர் பறவையடிப்பதற்காகப் பயன்படுத்தும் உண்டைவில்; கப்பல் தளத்திலிருந்து ஆகாய விமானத்தைப் பறக்கச் செய்வதற்கான பொறியமைப்பு; ஏ. கவண் எறி; எறிந்து தாக்கு; விசையுடன் பாய்; விமானத்தைப் பறக்க விடு; (தொ.) catapult fruit, விதைகளை விசையுடன் வெளிப்படுத்தும் பழம்.

catapultier', *n.* கவண்கொண்டு எறிபவர்.

cat'aract, *n.* நீர்வீழ்ச்சி ; பீற்றுநீர்த் தாரை ; சோணமாரி, கொட்டும் மழை ; கண்படலம், திமிரம் ; (பொறி.) தண்ணீர் பாய்வதனால் இயங்கும் நீராவிப் பொறியாட்சி உறுப்பு.

catarrh', *n.* மூக்கடைப்பு, தடுமல், நீர்க்கோப்பு.

catarrh'al, *a.* சளிச்சவ்வு அழற்சிக்குரிய, நீர்க்கோப்பினால் விளைந்த ; நீர்க்கோப்பின் இயல்புடைய.

cat'arrhine, *n.* (வில.) குரங்கினத்தையும் மனித இனத்தையும் உட்கொண்ட நிமிர் உடல் உயிரினங்களில் முற்பிரிவாகிய குரங்கினம் ; *a.* குரங்கினம்போல இருமூக்குத் தொளைகளையும் மிக நெருக்கமாகக் கொண்ட.

catas'ta, *n.* அடிமைகளின் விலைக்கள மேடை ; குற்றவாளிகளின் சித்திரவதைக் களரி.

catas'tasis, *n.* நாடகத்தின் நிகழ்ச்சி உச்சநிலை அடைந்துள்ள கட்டம்.

catas'trophe, *n.* தலைதடுமாற்றம், அழிவு, கேடான முடிவு ; திடீரென நேரிடும் விபத்து ; கவிழ்வு ; நாடக முகடு ; கதையின் உச்ச உணர்ச்சிநிலைக் கட்டம் ; (மண்.) பொருள்களின் அமைப்பைத் தலைகீழாக்கும் நிகழ்ச்சி.

catastroph'ic, catastroph'ical, *a.* தலைதடுமாற்றமான ; அழிவுக்குரிய ; பெருங்கேட்டின் இயல்பு வாய்ந்த.

catas'trophism, *n.* (மண்.) எங்களனும் திடீரென நேரிடும் நிகழ்ச்சிகளால் மண்ணியல் மாறுதல் ஏற்படுகிறதென்னும் பழங்கொள்கை.

catas'trophist, *n.* திடீர் நிகழ்ச்சிகளால் மண்ணில் மாறுதல் நேரிடுகிறதென்னும் கோட்பாட்டாளர்.

catato'nia, *n.* நினைவு சொல் செயல் மாறுபட்டக் கோளாறு, அடிக்கடி உணர்விழப்புடன் கூடிய பித்தநோய் வகை.

cataton'ic, *a.* அடிக்கடி உணர்விழப்புடன் கூடிய உன்மத்த நோய் சார்ந்த.

Cataw'ba, *n.* அமெரிக்கக் கொடிமுந்திரிப் பழவகை ; அமெரிக்கக் கொடிமுந்திரிப் பழவகையினின்றும் செய்யப்படும் சிவப்புநிற இன்தேறல்.

cat'boat, *n.* முன்புறம் அமைந்துள்ள ஒரே பாய்மரத்தோடு கூடிய படகு.

cat'-bur'glar, *n.* விரைவாக எளிதில் மதிலேறிச்சென்று திருடும் கள்ளன்.

cat'-call, *n.* சிழ்க்கை ஒலி ; நாடகம் பார்ப்பவர்கள் தங்கள் வெறுப்பைத் தெரிவிப்பதற்காகப் பயன்படுத்தும் கிறீச்சென்று ஒலிக்கிற கருவி ; *v.* சிழ்க்கையடி ; கிறீச்சென்னும் ஒலிமூலம் எதிர்ப்புத் தெரிவி.

catch, *n.* பற்று, பிடிப்பு, பற்றிப்பிடித்தல் ; கவ்வுதல் ; கைப்பற்றுதல் ; மட்டைப்பந்து முதலிய ஆட்டங்களில் பந்தினைப் பிடித்தல் ; பற்றிறுக்கி, பற்றுக்கொளுவி ; பிடிக்கப்பட்ட பொருள் ; பிடிக்கப்பட்ட மீனின் அளவு ; பிடிக்கத்தக்க பொருள் ; திடீரென எய்தப்பெற்ற நன்மை ; மறை இடர், சிக்கல், சிறு தடை ; கொன்னல், திக்கல் ; கதவு முதலியவற்றின் அசைவை நிறுத்துவதற்கான தடுக்கு அமைப்பு ; தந்திரமான கேள்வி ; ஏமாற்றம் ; வியப்புத்தரும் செய்தி ; (இசை.) சிலேடைப்பொருள் தோன்றும் வண்ணம் மூவர் பாடுதற்கென அமைக்கப்பட்ட இசைப்பாடல் ; *v.* கைப்பற்று ; இயக்கம் தடைசெய்து பிடி, தடுத்துவை, நிறுத்து ; மட்டைப் பந்தாட்டத்தில் மட்டைக்காரரால் அடிக்கப்பட்டுத் தரையினைத் தொடுவதற்குமுன் பந்தைப் பிடி ; பந்தைப் பிடித்து மட்டைக்காரரை ஆட்டமிழக்கச் செய் ; அறி ; தெரிந்துகொள் ; துரந்திப்பிடி ; சிக்கவை, மயக்கி அகப்படுத்து ; தடைப்படு ; சிக்கு ; வரப்பெறு ; உரிய காலத்தில் எய்தப்பெறு ; மேவு ; நோய்ந்தொற்றுக்கு ஆளாக்கு ; நோய்போலப் பற்றிக்கொள் ; தொற்றிக்கொள் ; தீப்பற்று ; புலன்களினால் அல்லது மனத்தினால் உணர் ; செயல் பின்பற்று ; தவறு செய்கையில் கண்டுபிடி ; (தொ.) catch a likeness, பார்த்தது போல் அமைத்துக் காட்டு ; catch at, சட்டெனப்பறி, எட்டிப்பிடுங்கு ; ஆவலுடன் கைக்கொள் ; catch a Tartar, தொந்தரவுக்கு உள்ளாக்கக்கூடிய ஒருவரை அகப்படுத்து ; தனக்கு மிஞ்சிய ஒருவரோடு தொடர்பு கொள் ; catch away, விரைவாகக் கைப்பற்று ; catch fire, தீப்பிடித்துக்கொள், பற்றியெரி ; உணர்ச்சி கொள் ; ஊக்கங்கொள் ; catch glimpse of, கணநேரக் காட்சி பெறு ; catch him, catch me ! ஒரு நாளும் முடியாத காரியம் அது ! ; catch hold of, பிடி, கைப்பற்று ; catch it, திட்டுவாங்கு, அடிவாங்கு ; catch on, புரிந்து கொள் ; எல்லாராலும் விரும்பப்பெறு ; catch one a blow, catch one on the nose, குத்துவிடு, தாக்கிக் குத்து ; catch out, அடிக்கப்பட்ட பந்து நிலத்தைத் தொடுவதற்குள் அதைப்பிடித்து அடித்த மட்டைக்காரரை ஆட்டமிழக்கச்செய் ; தவறு கண்டுபிடி ; catch sight of, காண் ; catch up, தொடர்ந்து சென்று பிடி ; சட்டென்று பிடுங்கு ; இடையிட்டுத் தடு ; மேற்கொள் ; catch up with, தொடர்ந்துசென்று பிடி, விரைந்து சென்று எட்டு.

catch'-as-catch'-can', *n.* எவ்விதமான பிடிக்கும் இசைவளிக்கப்படும் மற்போர் வகை, லங்காஷைர் (Lancashire) மற்போர்ப் பாணி ; *a.* லங்காஷைர் மற்போர்ப் பாணி சார்ந்த ; *adv.* லங்காஷைர் மற்போர்ப்பாணியின்படி.

catch'-basin, *n.* சாக்கடையில் கசடு பிரித்து நிறுத்தும் குழியமைவு.

catch'-drain, *n.* மேற்பரப்பிலுள்ள தண்ணீரைப் பிடிப்பதற்கான மலைப்பக்கத்து வடிகால்.

catch'fly, *n.* பசைப்பொருள் கசியும் தண்டினையுடைய செடிவகை.

catch'ing, *n.* பிடித்தல் ; *a.* பிடிக்கிற ; தொற்றிக் கொள்ளத்தக்க, தொற்றிப் பரவுகிற ; கவர்ச்சியுடைய, மயக்குகிற.

catch'ment, *n.* ஆற்றுநீர் வடிகால் அமைப்பு.

catch'ment-area, catch'ment-basin, *n.* நீர்வரும் பரப்பு, நீர்வாங்கு தளம்.

catch'penny, *n.* வெறும் பகட்டுப் பொருள், விற்பனைக்காக மட்டும் செய்யப்படும் பயனற்ற பொருள் ; *a.* வெறும் பகட்டான.

catch'phrase, *n.* கவர்மொழி, சுலோகம் ; கருத்தைக் கவரும் சொற்றொடர்.

catch'pole, catch'-poll, *n.* ஏவலர், நீதித்துறை அலுவலர்.

catch-the-ten', *n.* துருப்புச் சீட்டின் பத்தினைக் கைப்பற்றுவதே நோக்கமாயுள்ள சீட்டாட்ட வகை.

catch'-weed, *n.* முரட்டுத் தண்டினையுடைய செடிவகை.

catch'word, *n.* கொளுச்சொல், நடிகரின் தூண்டு சொல் ; அகராதியின் அல்லது கலைக்களஞ்சியத்தின் ஒரு பக்கத்திலுள்ள தலைப்புச் சொல் ; ஒரு பக்கத்தின் அடியில் தந்துள்ள அடுத்த பக்கத்தின் முதற்சொல் ; அரசியல் முதலிய கட்சிகளின் இலக்குச் சொல்.

catch'y, *a.* கவர்சியுள்ள ; எளிதில் உளங்கொளத்தக்க ; மருட்சி தருகிற ; விட்டுவிட்டு நடைபெறுகிற.

catechet'ic, catechet'ical, *a.* வினுவிடை வடிவமான ; வினுவிடை முறையொன்றை ஒட்டிய ; வினுவிடைமுறை பற்றி நடக்கிற ; வாய்மொழியான, வாய்மொழிப் பாடத்துக்குரிய ; கிறித்தவசமய அடிப்படைக் கொள்கைகளை வாய்மொழியாய்க் கற்பிப்பதற்குரிய.

catechet'ics, *n.* வினுவிடையாகப் பாடங் கற்பிக்கும் கலை ; வினுவிடைப் போதனை முறை ; செயல் முறையில் எளிதில் பின்பற்றத் தக்க வினுவிடை வடிவமாயுள்ள சமய சித்தாந்தம்.

cat'echism, *n.* வினுவிடையாகக் கற்பிக்கப்படும் பாடம் ; சமயத்துறை வினுவிடை ஏடு ; கேட்கப் படும் கேள்வி வரிசை.

catechis'mal, *a.* = catechistic.

cat'echist, *n.* வினுவிடையாகப் பாடம் கற்பிப்பவர் ; கிறித்தவ சமயம் புக விரும்பும் மாணவர்களுக்குப் பாடங்கற்பிப்பவர் ; சமயப் பரப்புத் திருச்சபையின் உள்ளூர் ஆசிரியர்.

catechist'ic, cat'echist'ical, *a.* வினுவிடையாகப் பாடங் கற்பிப்பவருக்குரிய ; வினுவிடைப் பாடமுறை சார்ந்த.

cat'echize, *a.* விஞ்விடையாகப் பாடங்கற்பி; விஞ்விடை விளக்க மூலம் மெய்ம்மை புகட்டு; விஞ் எழுப்பி விடை விளக்கங்கேள்; வினவி ஆராய்.

cat'echu, *n.* காசிக்கட்டி.

catechum'en, *n.* தீக்கைக்குமுன் கிறித்தவ சமயத்தின் அடிப்படை உண்மைகள் கற்பிக்கப் பெறுபவர், இளம் மாணவர்.

catechumen'ical, *a.* தீக்கைக்குமுன் கிறித்தவ சமய உண்மைகள் கற்பிக்கப் பெறும் இளம் மாணவருக்குரிய.

catego'rical, *a.* உறுதியான, ஐயத்துக்கு இடமற்ற, புறனடையற்ற; மறுப்புக் கிடமற்ற, ஆணித்தரமான; வெளிப்படையான, நேர்முகமான, ஒளிமறைவில்லாத; (தொ.) the categorical imperative, ஒழுக்கமுறையில் மேற்போக்கிட மளிக்காத உச்சமுடிவான உளச்சான்றின் கட்டளை.

categor'ically, *adv.* கட்டுறுதியாக, மாறுபாட்டுக்கு இடமின்றி, ஆணித்தரமாக.

cat'egories, *n. pl.* (மெய்.) மெய்விளக்கியலில் உளங்கொளத்தக்க மெய்ம்மை முழுவதையும் ஒன்றுவிடாமல் உளப்படுத்தி வகுத்துரைத்த பொருள்களின் இனவகைக்கூறுகள்; காண்ட் (Emmanuel Kant) என்ற செர்மன் மெய்விளக்க அறிஞர் கோட்பாட்டின்படி மெய்ம்மை முழுவதன் மூலக்கூறுகள்.

cat'egorise, *v.* தரம் பிரித்திணை; வகைப்படுத்து.

cat'egorist, *n.* வகைப்படுத்துபவர், வகைப்பிரிவு ஆய்வாளர்.

cat'egory, *n.* வகையினம், முழுமையின் வகைப்பிரிவுகளில் ஒன்று; கருத்தடிப்படையான பொருள் வகுப்பு, உறுதியுடன் அறியப்பட்ட பண்புக்குழு.

caten'a, (ல.) *n.* சங்கிலித்தொடர், இணைந்த தொடர், கோவை; (தொ.) catena patrum, தொடக்கக் காலத்திலிருந்து தொடங்கிய கிறித்தவக் கோட்பாடு பற்றிய விளக்கப் பகுதிகளின் கோவை.

catenar'ian, caten'ary, *n.* சங்கிலி வளைவு, செங்குத்துக் கோட்டிலமையாத இரண்டு குற்றுக்களிலிருந்து தளர்த்தியாய்த் தொங்கும் ஒரு சீரான சங்கிலியினுல் ஏற்படும் நெளிவு; *a.* சங்கிலி நெளிவு போன்ற; சங்கிலி நெளிவுக்குரிய.

cat'enate, *v.* சங்கிலிபோல் இணை, தொடு; சங்கிலியால் இணை; *a.* சங்கிலிபோல் இணைக்கப்பட்ட.

catena'tion, *n.* சங்கிலி இணைப்பு, தொடுப்பு.

cat'er, *v.* உணவு ஏற்பாடு செய், உணவு வழங்கு; நேரப் போக்களித்து மகிழ்வி, வேண்டியவற்றைத் தேடிக்கொடு, விரும்புவனவற்றை நிறைவேற்று.

ca'terer, *n.* உணவு ஏற்பாடு செய்பவர், உணவு தருவிப்பவர்.

ca'teress, *n.* உணவு ஏற்பாடு செய்பவள்.

ca'tering, *n.* உணவு தருவிப்பு; களியாட்டம் ஏற்பாடு செய்தல்.

cat'erpillar, *n.* விட்டிற் பூச்சியினத்தின் முட்டைப் புழு; கம்பளிப் புழு, கம்பளிப்பூச்சி; உழைக்காமல் உண்பவர்; உருள்கலங்களின் சுழலுருளை, சக்கரங்கள் பதிந்துருளும் இடையருச் சங்கிலிக் கோவை; (தொ.) caterpillar tractor, நீளச்சங்கிலிகளையுடைய இழுகருவி.

cat'erwaul, *n.* பூனையின் அலறல்; *v.* பூனைபோல் கிறீச்சென ஒலியெழுப்பு; பூனைகள்போல் சண்டையிடு.

cat'erwauling, *n.* பூனையின் அலறல் ஒலி.

cates, *n. pl.* அருஞ்சுவைப் பொருள்.

cat'-eyed, *a.* பூனைக் கண்களையுடைய, இருளில் பார்க்கவல்ல.

cat'-fish, *n.* பூனைபோன்ற அமைப்புடைய மீன்வகை.

cat'gut, *n.* விலங்கின் குடல் தசைநாளங்களிலிருந்து இழைக்கப்படும் நரம்பிழை, நரம்புக்கம்பி; நரப்பிசைக்கருவியின் தந்தி; முரட்டுவீடத் துணிவகை.

cath'arise, *v.* முற்றும் துப்புரவுடையதாகச் செய்.

cathars'is, *n.* துப்புரவாக்குதல்; (மரு.) வயிற்றிளக்கம்; பேதி, குடல் சுசடுநீக்கம்; நாடக முதலியவற்றுல் ஏற்படும் உணர்ச்சித்தூய்மை.

cathart'ic, *n.* (மரு.) பேதிமருந்து; *a.* பேதியாகிற, குடலிளக்கம் உண்டுபண்ணுகிற.

cathar'tical, *a.* = cathartic.

cathay', *n.* (செய்.) சீனதேசம்.

cat'head, *n.* நங்கூரம் தாங்கும் கப்பல் தூலம்.

cathed'ral, *n.* மாவட்டத் தலைமைக் கிறித்தவக்கோயில்; *a.* மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோயிலுக்குரிய, மாவட்டக் கிறித்தவத் திருச்சபைத் தலைவர் பதவிக்குரிய.

Cath'erine-wheel, *n.* ஆரங்கள் உள்ள வட்டமான சாளரம்; சக்கரச் சாளர அறை; சுழல் பூவாணம்; பக்கவாட்டமாகப் போடப்படும் குட்டிக்கரணம்; (கட.) விளிம்பில் பற்களுடன் கூடிய சக்கர வடிவம்.

cath'eter, *n.* (மரு.) சிறுநீர் இறக்குங் குழல்; நீர்மம் அல்லது வளிகளை உடற்குழாய்களில் ஏற்றவேர் வடியவிடவோ உதவும் குழல்.

cathetom'eter, *n.* மட்டமானி, குழல்களில் உள்ள வெவ்வேறு நீர்மங்களின் நுண்ணிய மட்ட வேறுபாடுகளை அளப்பதற்கான கருவி.

cath'etus, *n.* (வடி.) செங்கோடு, மற்றொரு நேர்வரைக்கு அல்லது தளத்துக்குச் செங்குத்தாகவுள்ள நேர்வரை.

cathex'is, *n.* (உள.) ஒருபொருள் அல்லது கருத்துச் சார்ந்த மன அவா ஆற்றலின் அளவு.

cath'ode, *n.* (இய.) எதிர்மின்வாய்; (தொ.) cathode rays, எதிர்மின் கதிர்கள், மின்வெடி நிகழும் காற்றெழிகுழலின் எதிர்மின்வாயிலிருந்து செல்லும் எதிர்மின் ஆற்றல் செறிவுற்ற துகள்களின் மின்னோட்டம்; cathode ray tube, எதிர்மின்கதிர்க்கொடியைத் திருப்பி ஒளியியக்கத் திரைமீது விழச் செய்ய உதவும் அமைவு, தொலைகாணியில் பயன்படுத்தப்படும் அமைவு.

cathod'ograph, *n.* (இய.) ஊடு கதிர்களைக் கொண்டு எடுக்கப்பட்ட நிழற்படம்.

cathodog'raphy, *n.* ஊடுகதிர்களைக் கொண்டு எடுக்கப்படும் நிழற்படக்கலை.

cat'-hole, *n.* கப்பலின் பின்புழை வாய்கள் இரண்டில் ஒன்று.

cath'olic, *n.* ரோமன் கத்தோலிக்கர், ரோமன் கத்தோலிக்கச் சமயச் சார்புடையவர்; *a.* எல்லாவற்றையும் அகப்படுத்திய, முழுநிறைவான, அகல்விரிவான, பொதுவான; கிறித்தவர்கள் எல்லோரும் உள்ளிட்ட; முதுமுறைச்சார்பான; மரபரூத, நீண்மரபுத் தொடர்புடைய; தாராளமான, விரிந்த மனப்பான்மையுள்ள, சமயப் பொறுமைவாய்ந்த, பெருமனம் உடைய; கிழைக் கிறித்தவ சமயத்தவர்க்கும் மேலைக் கிறித்தவ சமயத்தவர்க்கும் உண்டான பெரும் பிளவுக்கு முன்னிருந்த மரபு சார்ந்த; ரோமன் கத்தோலிக்கர்களுக்குரிய; (தொ.) Catholic and Apostolic, Catholic Apostolic, 1832-இல் நிறுவப்பட்ட கத்தோலிக்க குரவர் அருள்மரபுத் திருச்சபை என்னும் சமயக்குழுவினர்.

Cathol'icism, *n.* ரோமன் கத்தோலிக்க சமயக்கோட்பாடுகள்.

catholi'city, *n.* எல்லாவற்றையும் அகப்படுத்திய நிலை, விரிந்த உளப்பாங்கு, அகவெறுப்பின்மை, காழ்ப்பின்மை; கத்தோலிக்க சமயக்கோட்பாட்டில் உடன்பாடு.

cathol'icize, *v.* கத்தோலிக்கர் ஆக்கு; கத்தோலிக்க மயமாக்கு; கத்தோலிக்கர் ஆகு.

cathol'icon, *n.* பலநோய் மருந்து, சஞ்சீவி.

catilina'rian, *a.* துணிகரச் சதிகாரத் தன்மையுடைய.

Cat'iline, *n.* துணிகரச் சதிகாரன்; கி. மு. 63-இல் ரோமாபுரி அரசைக் கவிழ்க்க முயன்று தோல்வியுற்ற செர்கியஸ் கேட்டிலினு (Sergius Catilina) என்பவன்.

cat'kin, *n.* மஞ்சரி, வளைமலர்க்கொம்பு, ஒருபால் மலரிழைச் சிதற் குஞ்சம்.

cat'-lap, *n.* கீழ்த்தர மதுவகை.

cat'-like, *a.* பூனைபோல் இயங்குகிற; ஓசையற்ற; திருட்டுத்தனமான.

cat'ling, *n.* சிறுபூனை, பூனைக்குட்டி ; நேர்த்தியான நரம்புத் தந்தி ; உறுப்பினை அறுத்தெடுப்பதற்கான கூர்ங்கத்தி.

cat'mint, *n.* நீலமலருடைய நறுமணச்செடி.

cat'-nap, *n.* சாய்துயில், நாற்காலித்துயில்.

Cato'nian, *a.* ரோமாபுரியைச் சார்ந்த சீர்மையர் கேட்டோ (Cato கி. மு. 224-149) அல்லது கேட்டோ உடிசென்சிஸ் (Cato Uticensis கி. மு. 55-46) போன்ற ; வீரூர்ந்த ; கண்டிப்பான, முடிவணங்காத.

cat-o'-nine-tails, *n.* பண்டைப் படைத்துறையில் வழங்கப் பட்ட ஒன்பது இழை முடிச்சுக்களுள்ள வார்க்கசை.

catop'tric, *a.* பளிங்குக்குரிய ; உருநிழல் சார்ந்த, எதிர் ஒளிக்கோட்டத்துக்குரிய.

catop'trics, *n. pl.* நிழலுருவியல், இயற்பியலின் ஒளியியற் கூறான எதிர் ஒளிக்கோட்ட இயல் துறை.

cat'-rigged, *a.* (கப்.) கடலமைதி நேரத்துக்குரிய முறையில் முக்கிய கோணப் பாய்வகையை மேலும் கீழும் விரித்துக் கட்டிய.

cat's'-cradle, *n.* ஒருவர் கைவிரல்களில் உருவம் அமையும்படி கயிறு கோத்துக்கொண்டு மற்றவருக்கு அதனை மாற்றி மாற்றி ஆடும் குழந்தை விளையாட்டு வகை.

cat's'-ear, *n.* மஞ்சள் மலர்களையும் பூனைக்காது போன்ற இலைகளையும் உடைய ஐரோப்பியப் பூண்டு வகை.

cat's'-eye, *n.* வைடூரியம் ; சாலை நிலத்தளத்தில் பொருத்தப் பட்டுள்ள ஒளி பிறங்கும் கண்ணாடிச் சில்லு.

cat's'-foot, *n.* நிலத்திற் படரும் கொடிவகை.

cat'-sil'ver, *n.* வெள்ளிபோன்ற ஒளியுடைய அப்பிரக வகை.

cat'-sleep, *n.* = cat-nap.

cat's'-meat, *n.* பூனைத்தீனிக்காகவென்று விற்கப்படும் குதிரை இறைச்சி முதலியவை.

cat's'-paw, *n.* (கப்.) நீரின் மேற்பரப்பில் சிற்றலைகளை எழுப்பும் மென்காற்று ; கொக்கிக்கொளுவுவதற்கு இரண்டு குழைகளை உடைய முடிச்சு வகை ; மற்றொருவர் கைக்கருவி, ஏமாளி.

cat's'-tail, *n.* ஒருபால் மலரிழைச் சிதற்குஞ்சம், மஞ்சரி ; நாணல் வகைச் செடிகள்.

cat'-stick, *n.* கில்லி போன்ற ஆட்டவகைக் கோல்.

cats'up, *n.* காளான்-தக்காளிச் சாறுகளிலிருந்து செய்யப்படும் காரச் சுவையுண்டி.

cat's'-whisk'er, *n.* கம்பியில்லா உருமணி ஒலிவாங்கிக் கருவியில் வேண்டும்போல் அமைத்துக்கொள்ளக் கூடிய இழைத்தந்தி.

catt'ish, *a.* பூனைபோன்ற ; கறுவுகிற ; புறங்கூறுகிற.

cat'tle, *n.* ஆடுமாடுகள், புல்லார்நிரை, கால்நடை, கன்று காலிகள் ; எருது ; குதிரைகள்.

cat'tle-feed'er, *n.* கால்நடைத் தீனியின் அளவை முறைப் படுத்தும் இயந்திரம்.

catt'le-grid, *n.* பாதை வேலியைக் கடக்குமிடத்தில் கால் நடை செல்லாமல் ஆள் வண்டிப் போக்குவரத்துக்கு வழி செய்யும் கம்பியழிமுடிய கிடங்கு.

cat'tle-lead'er, *n.* கால்நடைகளுக்கான மூக்கு வளையம், மூக்கணாங்கொளுவி.

cat'tle-lift'er, *n.* நிரை கவர்பவர்.

cat'tle-lift'ing, *n.* ஆநிரை கவர்தல், கால்நடைக் களவு.

catt'le-piece, *n.* கால்நடைகளின் உருவம் வரையப்பட்டுள்ள படம்.

catt'le-plague, *n.* கால்நடைகளின் தொற்று நோய், கோமாரி.

catt'y, *n.* சீனக் கல்லெடையளவு.

cat'-walk, *n.* பாலங்களில் உள்ள ஒடுங்கு நடைபாதை.

cat'-witted, *a.* சிறுமைக்குணமுள்ள ; செருக்குடைய ; கறுவுகிற.

Cauca'sian, *n.* மனித உலகின் பேரின வகைப் பிரிவினர், வெள்ளை இனத்தவர் ; இந்தோ-ஐரோப்பியர் ; *a.* ஐரோப்பாவிலுள்ள காக்கசஸ் (Caucasus) மலைத்தொடருக்குரிய ; காக்கசஸ் மலைப்பகுதியைச் சுற்றியுள்ள திணைக்குரிய ; வெள்ளை இனம் சார்ந்த.

cau'cus, *n.* எதிரிகளின் ஏனைவழக்கில் உள்ளூர் அரசியல் குழு, தேர்தல் குழு, கட்சி அமைப்பு ; *v.* அரசியல் கட்சிக் கூட்டம் நடத்து ; உள்ளூர் அரசியல்குழு அமை ; அரசியல் கட்சியாற்றலைக் கொண்டு வற்புறுத்து.

cau'dal, *a.* வாலுக்குரிய, வால் போன்ற ; வால்பக்கமான.

cau'date, **cau'dated**, *a.* வால் உள்ள.

cau'dex, *a.* (தாவ.) மரத்தண்டு ; *pl.* caud'exes, caud'ices.

cau'dicle, *n.* (தாவ.) மலர்ச் செடிவகைகளில் உள்ள மகரந்தப் பையின் காம்பு.

caudill'o, *n.* ஸ்பானிய மொழி வழங்கும் நாடுகளில் மக்கள் தலைவர் ; அரசுத் தலைவர்.

cau'dle, *n.* பெண்டிர் பேறுகாலங்களில் பயன்படுத்தப்படும் கொடிமுந்திரித் தேறல் கலந்த நறுமண இனிப்புப் பான வகை ; *v.* பேறுகாலப் பானவகை கல ; பானவகை அருந்து.

caught, *v.* catch என்பதன் இறந்தகால-முடிவெச்சம்.

cauk, *n.* சீமைச்சுண்ணாம்பு ; தட்டப் பலகை வடிவிலுள்ள பாரிய கந்தகை.

caul', *n.* தலைமயிர் முடிக்கும் வலை, தலைக்கு மூடி ; பேற்றின் போது குழந்தை தலையைக் கவிந்துள்ள மென்றோல்.

caul'dron, *n.* கொப்பரை, கடாரம்.

caules'cent, *a.* (தாவ.) தெளிவான தண்டுறுப்பினை உடைய.

caul'iflower, *n.* பூக்கோசு ; (தொ.) cauliflower ear, குத்துச் சண்டையின் காயங்களால் நிலையாகத் தடிப்புப் பெற்று விட்ட காது.

caul'iform, *a.* (தாவ.) தண்டின் வடிவமுடைய.

caulig'enous, *a.* (தாவ.) தண்டின் ஆதாரம் கொண்ட.

caul'inary, **caul'ine**, *a.* (தாவ.) தண்டைச் சார்ந்த ; தண்டின் மேலுள்ள ; தண்டில் தோன்றுகிற.

cau'lis, *n.* (தாவ.) செடியின் தண்டு ; (க-க.) கொரிந்திய (Corinthian) பாணியிலுள்ள தூண் தலைப்பில் முதன்மையான தண்டுகளில் ஒன்று ; *pl.* cau'les.

caulk, *v.* (கப்.) பலகை மூட்டுக்களை நீர்க்காப்புடையதாகச் செய், நார்க்கயிறு-உருகிய நிலக்கீல் இவற்றைக் கொண்டு பலகைகளின் சந்திப்பு இடைவெளியை அடை.

caulk'er [1], *n.* சந்துகள் அடைத்து நீர் உட்புகாமல் செய்பவர் ; எடை அளவுக்கூறு ; பெரும்பொய்.

caulk'er [2], *n.* சறுக்காமலிருப்பதற்காகக் குதிரை இலாடத்தில் அமைக்கப் பெறும் கூர்முனைப்பகுதி.

cau'lome, *n.* (தாவ.) செடியின் முழுத்தண்டு அமைப்பு.

caus'al, *a.* காரணமாயிருக்கிற, விளைவு உண்டாக்குகிற ; காரணத் தொடர்புடைய, காரணகாரிய இயைபுள்ள.

causal'ity, *n.* காரணமாகச் செயற்படுதல், மூலமுதல் இயல்பு, காரண காரியத் தொடர்பு ; காரண காரியத் தொடர்புக் கோட்பாடு, சற்காரிய வாதம்.

causa'tion, *n.* காரணமாம் நிலை ; விளைவுண்டாக்கும் செயல், காரண காரியத்தொடர்பு ; சற்காரிய வாதம்.

causa'tionist, *n.* சற்காரியவாதக் கோட்பாட்டாளர்.

caus'ative, *n.* (இலக்.) பிறவினை ; *a.* காரணமாகச் செயற் படுகிற ; விளைவுண்டாக்குகிற ; (இலக்.) செயல் தூண்டுதல் காட்டுகிற.

cause, *n.* ஏது, காரணம் ; விளைமுதல், நிமித்தம் ; ஊக்குவிக்கும் நோக்கம் ; காரண விளக்கம், செயல் முதல் விளக்கம் ; குறிக்கோள், இலக்கு ; சார்புநலம், ஆக்க நலம் ; (சட்.) வழக்காடும் பொருள், வழக்கு முதல் ; வழக்கில் ஒரு திறக்

கட்சி ; வழக்கு ; ப. தூண்டு, செய்வி ; நிகழ்த்து ; விளைவி, உண்டுபண்ணு ; நிலைபெறச்செய் ; (தொ.) cause of action, வழக்கு மூலம் ; செயல் நோக்கம் ; effiicient cause, வலிய காரணம், மேம்படு விளைமுதல்; Final Cause, முழுக்காரணம்; திட்டமுதல், செயல் நோக்கம் ; First Cause, முதற்காரணம்; மூலகாரணர் ; படைப்போன், கடவுள் ; formal cause, கருத் தளவான மூலவடிவம் ; make common cause with, பொது வான குறிக்கோளுக்காக ஒருங்கிணை, ஒருங்கொத்துழை, முழு ஆதரவளி ; material cause, முதற்காரணம், கருமூலம் ; show cause, செயல் விளக்கம் அளி, குற்றச்சாட்டுக்கு எதிரான காப்புரை கூறு.

cause celebre, (பிர.) *n.* மக்கள் கவனத்தைக் கிளறிவிடும் நீதிமன்ற வழக்கு.

cause'less, *a.* காரணமற்ற, தற்செயல் நிகழ்வான ; நேர்மை யற்ற, நேரிய ஆதாரமற்ற.

cause'-list, *n.* (சட்.) விசாரணை செய்யப்படவிருக்கிற வழக்கு களின் பட்டியல், வழக்கு அட்டவணை.

causerie, (பிர.) *n.* வறுமொழி, வெட்டிப்பேச்சு ; இலக்கியம் அல்லது கலை குறித்து அளவளாவுதல்.

causeuse, (பிர.) *n.* இருவருக்கான சாய்விருக்கை.

cause'way, caus'ey, *n.* கடப்பு வழி, கரைப்பாலம், பள்ளம் படுகை கடக்கும் சிறு மேட்டுப்பாதை ; பால அருகான நடை பாதை ; ப. கல்பாவு, மேட்டுப்பாதை அமைத்துக்கொடு.

caus'tic, *n.* கடுங்காரம், எரிச்சல் தரும் பொருள், உயிர்ப்பொரு ளான இழைமங்களை அரித்துத் தின்னும் பொருள்; (கண.) கோட்ட ஒளிவரி ; கோட்ட ஒளித்தளம் ; எதிர்நிழல் ஒளிவரை ; எதிர்நிழல் ஒளித்தளம் ; *a.* எரிவந்தம் தருகிற ; அரித்துத்தின்கிற ; வெறுப்புத் தருகிற ; கடுமையான ; உள் ளத்தைப் புண்படுத்துகிற, குத்தலான ; (இய.) ஒளிவுப் பரப்பினின்றும் மீளும் அல்லது விலகிச் செல்லும் ஒளிக்கதிர் கள் ஊடறுப்பினால் உண்டாகிற ; (தொ.) caustic ammonia, நவச்சார ஆவி ; நவச்சார நீர்மம் ; caustic lime, உலைச் சுண்ணம் ; caustic potash, சாம்பர நீரகத்தியதை ; caustic soda, உவர நீரகத்தியதை ; common caustic, வெடிய உப்பு, வெள்ளிக்காலகை ; lunar caustic, அறுவை மருத்துவத்துக்குப் பயன்படும் வெள்ளிக் காலகைக்கோல்.

causti'city, *n.* கடுகடுப்பு, அரிக்குந்தன்மை ; குத்தலான பேச்சு ; தெறுமொழி.

cau'ter, *n.* கடுங்காரத் தீய்வு; சூட்டுக்கோலினால் சூடு இடுதல்; புண்ணில் சுடுவதற்கான சூட்டுக்கோல் ; புண் நச்சறுப்பதற் குரிய கடுங்காரப் பொருள்.

caut'erize, ப. சூடுபோடு, சூட்டுக்கோலினால் சூடிடு; கடுங்காரப் பொருளினால் புண்ணைச்சுடு ; உணர்ச்சி அறச்செய்.

cau'tery, *n.* சூடிடுதல் ; சூட்டுக்கோல்.

cau'tion, *n.* முன்மதி, எச்சரிக்கை, முற்காப்புணர்வு, எதிர தாக்காக்கும் அறிவு ; பிணையம் ; ப. எச்சரிப்புச் செய், முன் னறிவிப்புச் செய் ; எச்சரித்துக்கண்டி ; (தொ.) caution money, பிணைய முன்பணம்.

cau'tionary, *a.* எச்சரிப்பான ; முன்னுறுதியாக அளிக்கப் பட்ட.

cau'tious, *a.* கவனமுள்ள, எச்சரிக்கையாயிருக்கிற, விழிப் புடைய, முன்மதியுடைய.

cavalcade', *n.* புரவிவீரர் பந்தி ; படை அணிவகுப்பு ; ப. குதிரைகள்மீது இவர்ந்து பவனிசெல்.

cavalier', *n.* குதிரை வீரன் ; பண்புடைப் பெருந்தகை, வீரத் திருத்தகை, பெண்ணினத்துக்குப் பெருமை தந்து நடப்பவர் ; அணங்கின் உடன்செல் பாங்கர் ; நடனத் துணைவர் ; வீரப் புக்காரன் ; கோட்டை உயர் மேடை, பதனம் ; *a.* குதிரை வீரன் போன்ற ; வீரப்பண்பார்வமுள்ள ; போர்விருப்புடைய; ஒய்யாரமான ; வீரப்பான ; கவலையற்ற ; துணிகரமான ; களிகிளர்ச்சி கொண்ட ; ப. மாதரை மதிப்புடன் அழைத்துச் செல், பெருந்தகையாயிரு. வீரப்புடன் நடந்துகொள்.

Cavalier', *n.* (வர.) இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லஸ் காலத்திய அரசக்கட்சியினர்.

cavalier'ish, *a.* பண்புடைப் பெருந்தகையின் இயல்புள்ள.

cavalier'ism, *n.* (வர.) இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லஸ் காலத்திய மன்னர் கட்சியினர் கோட்பாடு ; மன்னர் கட்சியினர் மரபு.

cavalier'ly, *a.* பெருந்தகைப் பண்புடைய ; பெருமிதமான, வீரப்பான ; *adv.* பெருந்தகைப்பண்புடன் ; துணிகரமாக ; மட்டுமதிப்பின்றி, தூக்கியெறிந்து.

cavall'y, *n.* அமெரிக்கக் கடல்மீன் வகை.

cav'alry, *n.* குதிரைப்படை ; இவுளி மறவர்.

cavati'na, (இத்.) *n.* சிறு எளிய பாடல் ; இசைக்கருவியில் வாசிக்கப்படும் உணர்ச்சி வாய்ந்த மெல்லிசை மெட்டு.

cave, *n.* குகை, கெவி, மலை முழைஞ்சு ; அரசியல் கட்சியில் பிரிந்து செல்ல விரும்பும் உட்குழு ; ப. குழிவாக்கு ; குகை தோண்டு, பள்ளம் பறி ; குகையில் தங்கியிரு ; அரசியல் உட்பிளவுக் கட்சியை உண்டாக்கு ; (தொ.) cave in, சரிந்து விழு, குழியில் சறுக்கி விழு ; வற்புறுத்தலுக்கு இணங்கு ; விட்டுக்கொடு ; அடங்கிப்போ ; தடைநீக்கு ; அடித்து நொறுக்கு, உருக்குலை ; உள் விழு, இடிந்து விழு.

cav'eat, *n.* எச்சரிக்கை, முன்னறிவிப்பு, தடைக்கட்டு ; (சட்.) முன்னெச்சரிப்புப் பதிவு, தற்காலத் தடுப்பு நடவடிக்கை, மனுதாரர்க்கு அறிவிக்காமல் மேல்நடவடிக்கைகள் எதுவும் எடுக்கக் கூடாது என்ற அறிவிப்பின் முறைமன்றப் பதிவு.

cav'eat emp'tor, (ல.) (சட்.) 'வாங்குநர் கவனிக்க' என்ற அறிவிப்பு, சொத்து வாங்குபவர் செயலின் பொறுப்பு தனக் கின்மை அறிவிக்கும் எச்சரிக்கை.

cave'-bear, *n.* குகைகளில் காணப்படும் மிகப் பெரிய புதை படிவக் கரடிவகை.

cave'-dweller, *n.* குகை வாழ்நர், வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலங்களில் குகைகளில் வாழ்ந்த மனிதர்.

cave'-earth, *n.* (மண்.) குகையின் அடித்தளங்களில் படிந்த நுண்ணயமான மண்.

cave'-man, *n.* குகை வாழ்நன், வரலாற்றுக்கு முற்பட்ட பழங்கற்கால மனிதன் ; நாகரிகமற்றவன் ; (பே-வ.) பழைய முறைகளைக் கடைப்பிடிப்பவன்.

cav'endish, *n.* மென்மைப் பதமாக்கி இனிப்பூட்டிப் பாளங் களாக அமைக்கப்பட்ட புகையிலை.

cav'ern, *n.* அடிநிலக்குகை, நிலக்குடைவு, ஆழ்கிடங்கு, மலை முழைஞ்சு ; ப. ஆழ்கிடங்கில் வை ; குழிவாகத் தோண்டு.

cav'erned, *a.* ஆழ்கெவிகள் நிரம்பிய ; குகையில் வாழ்கிற ; குகைபோன்ற.

cav'ernous, *a.* குடைவான ; ஆழ்கெவி போன்ற ; பேழ் வாயுடைய ; குழிகள் நிரம்பிய.

caver'nulous, *a.* சிறு குழிகள் நிரம்பிய.

cav'eson, cav'esson, *n.* முரட்டுக் குதிரைகளை அடக்கிப் பழக்குவதற்குப் பயன்படும் மூக்குப்பட்டை வார்.

caviar', caviare', *n.* உப்பிட்டு உலர்த்திய உயர்தர உணவு மீன்வகையின் கருச்சினை ; பொதுநிலை மக்கள் அறிந்து நுகர இயலாத சீரிய பொருள்.

cav'icorn, *n.* (வில.) உட்குழிவான கொம்புகளையுடைய அசை போடும் விலங்கு வகை; *a.* அசைபோடும் விலங்கினங் களுக்கு உள்ளதைப்போல் உட்குழிவான கொம்புகளையுடைய.

cav'ie, *n.* கோழிக்கூடு.

cav'il, *n.* போலி ஆட்சேபம், இடக்கு; ப. குதர்க்கம் பண்ணு, அற்பத்தடைகள் எழுப்பு.

cav'ing, *n.* விட்டுக்கொடுத்தல்.

cavita'tion, *n.* திண்பொருளில் குழிவுகள் தோன்றுதல் ; நீர்மத்தில் காற்றுக்குமிழிகள் உண்டாதல் ; வெற்றிடம் ஏற்படுதல்.

cav'itied, *a.* குழிவுகள் உள்ள

cav'ity, *n.* உட்குடைவு, உட்குழிவு, உட்புழை, திடப் பொருளின் உட்புறத்திலுள்ள பொள்ளல்; வெற்றிடம்; பள்ளம், பொந்து, துளை; இடைப்பிளவு, வாயில்.

cav'y, *n.* சீமைப்பெருச்சாளி இனம்; கொறிக்கும் விலங்கினம்.

caw, *n.* காக்கையினப் பறவைகளின் கரை குரல்; *v.* காக்கை போல் கத்து, கரை.

cawk'er, *n.* குதிரை சறுக்காமலிருக்கும்பொருட்டு அதன் இலாடத்தில் அமைக்கப்பெறும் கூர்முனைப்பாகம்.

cax'on, *n.* முற்காலத்தில் அணியப்பட்ட பொய்மயிர்த் தொப்பி வகை.

Cax'ton, *n.* இங்கிலாந்தில் முதல் அச்சுத்தொழிலாளரான வில்லியம் காக்ஸ்டன் (1422-1491) என்பவரால் அச்சிடப் பட்ட புத்தகம்; காக்ஸ்டன் பயன்படுத்தியதைப் போன்ற அச்செழுத்துப் படிவம்.

cay, *n.* கரையணைந்த சிறு தீவு, மணல் திட்டு; பவளத் தீவு.

cayenne', **cay'enne-pepp'er**, *n.* கடுங்காரமுள்ள சிவப்பு மிளகு.

cay'man, *n.* தென் அமெரிக்க முதலை வகை; *pl.* cay'mans.

cay'use, *n.* அமெரிக்க இந்தியரின் மட்டக்குதிரை.

ceanoth'us, *n.* மலர்களையுடைய புதர்ச்செடியினம்.

cease, *n.* முடிவு, இறுதி; *v.* முடிவுறு; நிறுத்து; விட்டுவிடு, தவிர்.

cease'-fire', *n.* துப்பாக்கி முதலியவற்றால் சுடுவதை நிறுத்துவதற்கான ஆணை; போர் நிறுத்த உடன்பாடு; போர் நிறுத்தம்.

cease'less, *a.* இடைவிடாத, தொடர்ச்சியான.

cebadill'a, *n.* அல்லியரிசி, அல்லியினச் செடிவகையின் விதைகள்.

cec'ils, *n. pl.* கொத்திய இறைச்சி-அப்பத்துண்டுகள்-வெங்காயம் முதலியவற்றை உருண்டைகளாகச் செய்து பொரித்த பணியாரம், பொரிக் கறி உருண்டை.

ce'city, *n.* குருடு.

ced'ar, *n.* (தாவ.) தேவதாரு வகை, செவ்வகில்; *a.* செவ்வகிலினால் செய்யப்பட்ட.

ce'dar-bird, *n.* சிறகின்மேல் சிவப்பு அரக்குபோன்ற சிறு நுனிப்பாகங்களையுடைய அமெரிக்கப் பறவை வகை.

ce'darn, *a.* (செய்.) செவ்வகில் மரத்துக்குரிய.

cede, *v.* கொடு; விட்டுக்கொடு; இணங்கி ஒப்புவி; இசைவளி.

cedill'a, *n.* சி (c) என்ற எழுத்தின்கீழ் இடப்படும் ஒளி வேறுபாட்டுக் குறியீடு.

ce'drate, *n.* நாரத்தை.

ce'drine, *a.* செவ்வகில் மரத்துக்குரிய.

cee-spring, *n.* வண்டிச்சட்டத்தைத் தாங்குதற்கான ('C' வடிவுள்ள) வில்.

ceil, *v.* உட்கூரை வேய்.

ceili'dh, *n.* கதை பாடல்களுடன் பொழுதுபோக்கும் மாலை.

ceil'ing, *n.* அறையின் உட்கூரை; விமானம் பறக்கக்கூடிய உயரத்தின் எல்லை; உச்சவரம்பு, மேல்எல்லை.

cel'adon, *n.* இளம் பச்சை நிறம்; சீன மட்பாண்ட வகையின் இளம்பச்சை மெருகு; *a.* இளம்பச்சையான.

cel'andine, *n.* மஞ்சள் நிற மலருள்ள செடிவகை.

celanese', *n.* செயற்கைப்பட்டு வகை.

cel'ebrant, *n.* கொண்டாடுபவர்; விழாவினை முதல்வர், விழாக்கோளாளர்.

cel'ebrate, *v.* கொண்டாடு, வினைமுறை முற்றுவித்து நடத்து; பலரறிய நடைபெறுவி; பலர் அறியச்செய்; புகழ், பாராட்டு, போற்று.

cel'ebrated, *n.* புகழ்வாய்ந்த, பேர்பெற்ற.

celebra'tion, *n.* கொண்டாட்டம், விழா, புகழ்தல்.

cel'ebrator, *n.* கொண்டாடுபவர், விழாக்கோளாளர்.

celeb'rity, *n.* நாடறிந்திருத்தல், புகழ்பெற்றிருத்தல்; புகழ் இசை; நாடறிந்தவர், புகழ்பெற்றவர்.

cele'riac, *n.* கிழங்குள்ள தோட்டக் கீரைவகை.

cele'rity, *n.* விரைவு, வேகம்.

cel'ery, *n.* சமைத்துத் தின்பதற்குரிய வெளிறிய தண்டுகளையுடைய செடிவகை.

celeste', *n.* வானநீல வண்ணம்; இசைப்பெட்டி வகையில் குரல் மடக்கு; *a.* வானநீல வண்ணமுள்ள.

celes'tial, *n.* விண்ணவர்; சீனுக்காரர்; *a.* வானத்திற்குரிய; விண்ணுலக வாசியான, விண்ணுலகம் சார்ந்த; தெய்விகமான, தெய்விக நலம் கொண்ட; தெய்விக அழகு வாய்ந்த; (தொ.) the Celestial Empire, சீனநாடு.

cel'ibacy, *n.* மணமாகாத நிலை; மனத்துறவு, மணங்கொள்ளா நோன்பு.

celibatar'ian, *n.* மணமாகாதவர், மணங்கொள்ளா நிலை ஆதரவாளர்; *a.* மணமாகா நிலையை ஆதரிக்கிற.

cel'ibate, *n.* மணமாகாதவர்; ஒருதனி வாழ்க்கை உரவோர்; *a.* மணமாகாத; மணஞ்செய்யா உறுதிகொண்ட.

cell, *n.* சிறைக்கூடத் தனியறை; மடத்தின் ஒதுங்கிய அறை; புறஞ்சார் துறவி மடம்; புறநிலைக் கன்னிமாடம்; தனிமாடம்; குகை; (செய்.) குச்சு, குடிசை; (செய்.) கல்லறை; தேன் கூட்டிலுள்ள கண்ணறை; சிறு உட்குழிவுடைய உறுப்பின் கூறு; (மின்.) மின்கலம்; (உயி.) உயிரணு, உயிர்மம்; பொதுவுடைமைக் கொள்கை பரப்புகிறவர்களின் மையநிலையம்.

cell'a, *n.* கோயிலின் உள்ளறை, கருமனை.

cell'ar, *n.* நிலவறை; இன்தேறல்-நிலக்கரி முதலியவற்றைச் சேர்த்து வைப்பதற்கான அடிநிலக்கிடங்கு; இன்தேறலின் சேம அளவு; *v.* நிலவறையில் சேர்த்து வைத்திரு.

cell'arage, *n.* நிலவறைத் தொகுதி; நிலவறைகளில் சேர்த்து வைப்பதற்கான கட்டணம்.

cell'arer, *n.* நிலவறையின் பொறுப்பு வகிப்பவர்; துறவி மடத்தில் உணவுப்பொருள்களுக்கான ஏற்பாடுகளை மேற்பார்வையிடும் அலுவலர்.

cell'aret, *n.* புட்டிகள் வைப்பதற்கான பெட்டி.

cell'ar-flap, *n.* நிலவறைப் புழைக்கதவு.

cell'arman, *n.* நிலவறைகாப்போன்.

celled, *a.* உயிர்மங்களை உடைய; உயிர்மங்களில் அடங்கிய; உயிர்மங்களால் மூடப்பட்ட; கண்ணறைகள் நிரம்பிய.

cellif'erous, *a.* உயிர்மங்களை உடைய; உயிர்மங்களை உண்டுபண்ணுகிற.

cell'o, **'cell'o**, *n.* வாசிப்பவரின் முழங்கால்களுக்கிடையில் வைத்து வாசிக்கப்படும் நான்கு நரம்புள்ள இசைக்கருவி வகை.

Cell'ophane, *n.* மரப்பசைச் சத்தினின்றும் செய்யப்படும் பளிங்குநிறத் தாள்போன்ற பொதிபொருளின் வாணிக உரிமைப் பெயர்.

cell'ular, *a.* தனி அறைகளுக்குரிய; உயிர்மங்களாலான; கண்ணறைகளாலான; சிறு குழிகளை உடைய; துளைகளையுடைய; இழைகள் செறிவாயிராத.

cellula'rity, *n.* கண்ணறைகளாலான நிலை.

cell'ulate, *n.* கண்ணறைகள் உள்ளதாக்கு; *a.* கண்ணறைகள் உள்ள.

cell'ule, *n.* சிறு கண்ணறை.

cellulif'erous, *a.* சிறு உயிர்மங்களுள்ள; சிறு கண்ணறைகளைத் தோற்றுவிக்கிற.

celluli'tis, *n.* புறத்தோலுக்கு அடுத்துக் கீழுள்ள இழைமத்தின் அழற்சி.

cell'uloid, *n.* கற்பூரத்தைக் கொண்டும் மரக்கூற்றுக் காலகையைக் கொண்டும் செய்யப்படும் தந்தம் போன்ற நெகிழ்பொருள்; *a.* உயிரணுக்கள் போன்ற.

cell'ulose, *n.* மரக்கூறு, செடியினங்களின் மரக்கட்டை களுக்கும் பருத்தி போன்ற இழைமங்களுக்கும் உயிர்மங்களின் புறத்தோட்டுக்கும் மூலமான பொருள்; *a.* கண்ணறை களுள்ள.

cellulos'ity, *n.* மரக்கூற்று இயல்பு.

cels'itude, *n.* உயர்வு, வீறுடைமை.

Cel'sius, *a.* நூற்றியல் வெப்பமானியை அமைத்த ஆண்டர்ஸ் செல்சியஸ் (Anders Celsius 1701-44) என்பவருக்குரிய; நூற்றளவையாகப் பகுக்கப்பட்ட; (தொ.) Celsius thermometer, நூற்றளவை வெப்பமானி.

celt, *n.* (தொல்.) வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வழங்கிய கோடரி போன்ற கருவி.

Celt, *n.* (வர.) பண்டைப் பிரான்சிலும் பிரிட்டனிலும் வாழ்ந்த பழங்குடியினத்தவர், கெல்ட்டிய இனத்தவர்.

Celt'ic, *n.* இந்திய-செர்மானிய மொழிக் குடும்பத்தின் பிரிவு, கெல்ட்டிய இனத்தவர்களின் மொழி; *a.* கெல்ட்டிய இனத்த வருக்குரிய; கெல்ட்டிய இன மொழி சார்ந்த; (தொ.) Celtic cross, மையம் சூழ்ந்த வட்டமுடைய சிலுவை வகை.

Celt'icism, *n.* கெல்ட்டிய இனமொழி மரபு; கெல்ட்டிய இனப் பழக்கவழக்கக் கூறு.

cel'ticize, *v.* கெல்ட்டிய மொழிப்படுத்து; கெல்ட்டிய இனத் தவர்களின் பழக்கவழக்கங்களை மேற்கொள்வி; கெல்ட்டிய இனமரபு தழுவு.

celtol'ogist, *n.* கெல்ட்டிய மொழி இனப்பழமைகளை ஆராய் பவர்.

Celtoma'nia, *n.* மட்டிலாக் கெல்ட்டிய இனமரபார்வம்.

Celtoman'iac, *n.* கெல்ட்டிய இனமரபுச் சிறப்பை வற்புறுத் தும் போக்குடையவர்.

cel'tophil, *n.* கெல்ட்டிய இனமரபார்வலர்; கெல்ட்டிய இனத்தொடர்பான பொருள்களை விரும்புபவர்.

cem'balist, *n.* தந்திகளுள்ள இசைக்கருவி வகையை மிழற்றுபவர்.

cem'balo, *n.* தந்திகள் உள்ள இசைக்கருவி வகை.

cement', *n.* பசை மண், சீமைக்காரை, சாந்து, பொருள்களை ஒட்டவைப்பதற்காக மென்பதமாகப் பயன்படுத்தப்படும் பொருள்; இடைப்பிணைப்பு; (மரு.) பல்காரை, பல் இருந்து விழுந்த குழிகளை நிரப்புவதற்கான நெகிழ்பொருள்; பல்லடி யின் எலும்புத்தோடு; *v.* பசைமண் காரையுடன் சேர்; உறுதியாக இணை; பசுமண் காரை மேற்பூச்சிடு.

cementa'tion, *n.* ஒருங்கிணைத்தல்; இணைக்கப்பட்ட நிலை; பொடி தூவிச் சூடாக்குவதன்மூலம் ஒரு பொருளின் மேற் புறத்தில் மற்றொரு பொருளைப் பற்றவைத்தல்; கடும்பதப் படுத்துதல்; படிகை.

cement'-copper, *n.* படிகைமூலம் பெறப்பட்ட உலோகச் செம்பு.

cementi'tious, *a.* பசுமண் காரைக்குரிய.

cement'-stone, *n.* பசுமண் காரை செய்வதற்காகப் பயன் படுத்தப்படும் கல்வகை.

cement'-water, *n.* செப்புச் சுரங்கங்களிற் காணப்படும் செம்பு உப்புவகைகள் கலந்த நீர்.

cem'etery, *n.* இடுகாடு, புதைவெளி, பிணங்களைப் புதைக்கு மிடம்.

cen'obite, *n.* சமுதாயக் கூட்டுவாழ்வு வாழும் துறவிகளில் ஒருவர்.

cen'otaph, *n.* ஒருவர் புதைக்கப்பட்ட இடத்திலன்றி வேறிடத் தில் அவருக்கு எழுப்பப்படும் நினைவுச் சின்னம்; (தொ.) the Cenotaph, முதல் உலகப் போரில் (1914-18) இறந்தவர் களின் நினைவாக லண்டனில் (London) ஒயிட் ஹால் (Whitehall) கட்டிடத்தில் எழுப்பப்பட்டுள்ள சின்னம்.

Cenozo'ic, *n.* (மண்.) ஐந்து ஊழிகளுள் பாலுணிகட்குரிய ஐந்தாவது ஊழி; *a.* ஐந்தாவது ஊழி சார்ந்த.

cense, *v.* நறும்புகையூட்டு, நறும்புகை எழுப்பித் தொழு.

cen'ser, *n.* குங்கிலியக்கலயம், தூபகலசம், நறும்பொருள்களை எரித்துத் தூபமெழுப்பும் கலம்.

cen'sor, *n.* பண்டை ரோம குற்ற நடுவர்; நெறிமுறைக் கண்காணி; ஏடுகள்–செய்தித்தாள்கள்–திரைப்படங்கள்–கடிதங்கள் ஆகியவற்றின் தணிக்கையாளர், சீர்மையர்; கடித ஆய்வாளர்; குற்றங்குறை காண்பவர்; (உள.) அகமனத்திலுள்ள விரும்பத்தகாத உணர்ச்சிச் சிக்கல்கள் உணர்வுத் தளத்தில் தோன்றுதபடி தடுக்கும் உள்ளுணர்வு; பல்கலைக்கழக அலுவலர்கள்; *v.* குற்றங்குறைகள் ஆய்ந்து கண்டி, தணிக்கை செய்.

censo'rial, censo'rian, *a.* சீர்மையருக்குரிய; பொதுமக்கள் ஒழுகலாறுகளைச் சீர்படுத்துவதற்குரிய.

censor'ious, *a.* குற்றங்கண்டுபிடிக்கிற, குறைகாண்கிற; கண்டிக்கிற.

cen'sorship, *n.* சீர்மையர் பதவி; சீர்மையர் நிலையைத் தாங்கு கிற காலம்; (உள.) அகமனத்திலுள்ள விரும்பத்தகாத உணர்ச்சிச் சிக்கல்கள் உணர்வில் தோன்றுதபடி தடுத்தல்.

cen'surable, *a.* கண்டிக்கத் தக்க, பழிப்புக்குரிய.

cen'sure, *n.* பழிப்பு, கண்டனம், திட்டு; *v.* கண்டி, திட்டு, பழி.

cen'sus, *n.* ஆட்டொகைக் கணக்கு; குடிமதிப்புப் புள்ளி விவரத் தொகுதி.

cen'sus-paper, *n.* குடிமதிப்பு விவரங்களை நிரப்புவதற்காக ஒவ்வொரு வீட்டிலும் கொடுக்கப்படும் தாள் படிவம்.

cent, *n.* நூற்றில் ஒன்று; நூற்றில் ஒரு கூறு மதிப்புள்ள நாணயம்; (தொ.) per cent, நூற்றுவிழுக்காடு, சதவீதம்.

cen'tal, *n.* நூறு இராத்தல் கொண்ட கூலம் அளப்பதற்கான எடை.

cen'taur, *n.* குதிரை உடலுடனும் கால்களுடனும் கழுத்தி லிருந்து மனித உடலும் கையுமாக அமைந்த கிரேக்க புராண உரு; கலப்பினப் பிறவி; இரட்டை இயல்புள்ள மனிதன்; இரட்டைத் தன்மையுள்ள பொருள்; திறம்பட்ட குதிரை வலவன்.

Cen'taur, *n.* விண்மீன் குழுக்களுள் ஒன்று.

centau'rian, *a.* பாதி மனிதவுடலும் பாதி குதிரையுடலும் உள்ள கிரேக்க புராண உருச்சார்ந்த.

cen'taury, *n.* செடியினங்களின் வகை.

centenar'ian, *n.* நூறு வயதானவர்; *a.* நூறு வயதான.

centen'ary, *n.* நூறு; நூருண்டுக்காலம், நூருண்டு நிறைவு விழா; நூருண்டு விழாக் கொண்டாட்டம்; *a.* நூற்றுக் குரிய; நூருண்டுகள் நிறைவு கண்ட.

cen'tenier, *n.* பண்டை ரோமர் படையில் நூற்றுவர் தலைவர்; ஜெர்சித்தீவில் (Jersey) காவல் துறைப் பணியாளர்; நூறு கெலித்தவர்; நூறு என்னும் எண்ணிக்கையை எட்டிப் பிடித்தவர்.

centenn'ial, *n.* நூற்றாண்டு நிறைவு விழா; *a.* நூற்றாண்டு களுக்கு ஒருமுறை நிகழ்கிற; நூருண்டுகளுக்குரிய, நூருண்டுகள் வாழ்ந்த; நூருண்டு நீடித்த; நூருண்டுகள் முடித்த; நூற்றாண்டு விழாவுக்குரிய.

cen'ter, *n., v.* = centre.

cen'tering, *n.* = centring.

centes'imal, *a.* நூறில் ஒரு கூறான; நூறில் ஒரு பங்காகக் கணக்கிடுகிற; நூறில் ஒன்றடிப்படையில் கணக்கிடப்பட்ட.

cen'tiare, *n.* பிரஞ்சு அளவை முறையில் 1.196 சதுர கெசம்.

cen'tigrade, *a.* நூறு கூறுகளுள்ள; நூறு பாகைகளாகப் பிரிக்கப்பட்ட; (தொ.) centigrade thermometer, நீர் உறைநிலை 0 பாகையாகவும் கொதிநிலை 100 பாகையாகவும் வகுக்கப்பட்டுள்ள வெப்பமானி.

cen'tigram, cen'tigramme, *n.* பிரஞ்சு 'மெட்ரிக்' நிறுத்தல் அளவையில் நூற்றில் ஒரு கூறு, 0.0009 தோலா.

cen'tilitre, *n.* 'மெட்ரிக்' முகத்தலளவையில் நூற்றில் ஒரு பகுதி.

centill'ion, *n.* ஆங்கில நாட்டு வழக்கில் பத்திலக்கத்தின் மீது நூறன் விசைமடங்கான பேரெண் ; ஒன்றன்பின் அறு நூறு சுன்னங்களுடைய பேரெண் ; பிரஞ்சு-அமெரிக்க வழக்கில் ஆயிரத்தின்மீது நூறன் விசைமடங்கான பேரெண், ஒன்றன்பின் முந்நூறு சுன்னங்கள் உடைய பேரெண்.

centime, (பிர.) *n.* பிரஞ்சு நாட்டின் சிறுதிற நாணயம், பிராங்க் (Franc) என்னும் பிரஞ்சு வெள்ளி நாணயத்தில் நூற்றில் ஒரு பங்கு மதிப்புக் கொண்ட காசு.

cen'timetre, *n.* கீழ் நூற்றுக்கோல், பிரஞ்சு நாட்டின் நீட்டல் அளவையில் நூற்றில் ஒரு கூறு, 0.39 அங்குலம்.

cen'tipede, *n.* பூரான், நூற்றுக்கால் பூச்சி வகை.

cent'ner, *n.* செர்மானிய நிறுத்தலளைவைக் கூறு, நூற்றுக் கல்லெடை.

cen'to, *n.* மூட்டுச்செய்யுள், செய்யுட்குப்பை ; மேற்கோள் மணித்தொடர் ; *pl.* cen'tos.

cen'tral, *a.* நடுவான, மையமான; மையத்திலுள்ள; மையத்தை உட்கொண்ட; மையத் தொடர்புடைய; மையத்திலிருந்து செல்கிற ; தலைமையான, முதன்மையான, முக்கியமான ; (தொ.) central conic, கூம்பின் மையமுடைய வெட்டுவாய் வடிவம் ; central forces, ஒரு மையம் நோக்கி அல்லது மையத்திலிருந்து விசைபெறும் ஆற்றல்கள் ; central heating, மையமான தலைவாயிலிருந்து குழாய்களின் மூலம் செல்லும் சுடுநீர் அல்லது நீராவியால் கட்டிடத்திற்குள் வெப்பம் உண்டாக்கும் முறை.

cen'tralism, *n.* மைய அதிகார ஒருமிப்புக்கொள்கை.

cen'tralist, *n.* மைய அதிகார ஒருமிப்புக் கொள்கையாளர்.

central'ity, *n.* மையநிலை, மையத்தன்மை; மையத்திலேயே இருக்கும் அமைப்பு.

centraliza'tion, *n.* மையப்படுத்துதல், மையம் நோக்கிய ஆட்சியமைத்தல், அதிகாரங்களை மைய ஆட்சிக்குக்கொண்டு சேர்த்தல், ஒருமுகப்படுத்துதல்.

cen'tralize, *v.* மையத்திற்கு மாறு; மையத்துக்குக் கொண்டுவா, ஒரே மையம் நோக்கி ஒருமுகப்படுத்து ; மாகாண ஆட்சிகளை மைய ஆட்சிக்கு உட்படுத்து.

cen'tre, *n.* நடு, மையம் ; மையப்புள்ளி ; மைய முளை, முளையாணி ; ஊடச்சு, இருசு ; ஒருமிப்பின் கூடுமுகம் ; புறஞ்செல் போக்கில் பிரிமுகம் ; அணு மையம், உட்கரு; முக்கியஇடம்; இடம் ; தோற்றுவாய் ; அமைப்பாளர் ; தலைவர் ; குறிஇலக்கின் நடுப்புள்ளி, ஆட்டக்கள நடுவிடம்; இடையாட்டக்காரர்; நடுநோக்கிய பந்தடி ; படையின் நடுவணி ; அரசியல் கட்சிகளிடையே நடுநிலை வாதம், மிதவாதம்; ஈர்ப்பு ஆற்றல் இலக்கு; *v.* ஒருமுகப்படுத்து, ஒரிடத்தில் குவி ; மையத்தில் வை ; மையக் குறியிடு; மையத்தைக் கண்டுபிடி; காற்பந்து அல்லது வளைகோல் பந்தாட்டத்தில் பக்கவாட்டிலிருந்து மையத்திற்குப் பந்தடி; (தொ.) centre of attraction, கவர்ச்சி மையம்; centre of buoyancy, centre of displacement, மிதக்கும் பொருளால் தள்ளப்பட்ட நீர்மத்தின் ஈர்ப்பு மையம் ; centre of gravity, ஏண் எடை ஈர்ப்பு மையம் ; centre of inertia, centre of mass, பொருண்மை மையம்; centre of oscillation, ஊசல்குண்டு மையம் ; centre of percussion, தாக்குதள மையம் ; centre of pressure, அமுக்க மையம் ; centre of suspension, தொங்கல் மையம்.

cen'tre-bit, *n.* வட்டத்துளை செய்யும் தச்சன் கருவி ; கன்னக் கோல்.

cen'tre-board, *n.* கப்பல் பக்கவாட்டில் சாய்வதைத் தடுப்பதற்கான படகின் அடிமட்ட மையப் பலகை.

cen'tre-piece, *n.* மேசை மைய அணியொப்பனை உறுப்பு, மச்சின் மைய அணியொப்பனை உறுப்பு.

cen'tre-rail, *n.* மலையேற்று இரயிற் பாதையில் பற்றுப் பல்லுள்ள மூன்றாவது இரும்புச் சட்டம்.

cen'tre-second, cen'tre-seconds, *n.* கடிகாரத்தின் நொடி காட்டும் மையத் தனிமுள்.

cen'tric, cen'trical, *a.* மையம் சார்ந்த ; நடுவிலுள்ள ; மையத்தை உட்கொண்ட ; (தாவ.) நிண்டுருண்டு வழவழப்பாயுள்ள.

centrif'ugal, *n.* வெவ்வேறு எடைச்செறிவுள்ள பொருள்களை விரைவேகச் சுழற்சியினால் பிரிக்கும் இயந்திரம் ; பாலிலிருந்து பாலேட்டைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் ; *a.* விரிமையப் போக்குடைய, மையத்திலிருந்து புறநோக்கிச் செல்கிற ; (தாவ.) உச்சியிலிருந்து அடிநோக்கி வளர்ச்சியடைந்து செல்கிற ; விரிமைய வளர்ச்சி வலிமையைப் பயன்படுத்துகின்ற ; விரிமைய வளர்ச்சி வலிமையினால் உண்டாகின்ற ; (தொ.) centrifugal force, மையமொன்றைச் சுற்றிச் சுழலும் பொருள்களில் மையத்துக்கு எதிர்த் திசையில் செயற்படும் விசையாற்றல் ; centrifugal machine, வெவ்வேறு எடைச் செறிவுள்ள பொருள்களை விரைவேகச் சுழற்சியினால் பிரிக்கும் இயந்திரம்; பாலிலிருந்து பாலேட்டைப் பிரித்தெடுக்கும் இயந்திரம்.

centrif'ugalise, *v.* விரிமையப் போக்குடையதாக்கு.

centrifuga'tion, *n.* விரிமைய வளர்ச்சிச் சக்திக்கு உட்படுத்தல்.

cen'trifuge, *n.* வெவ்வேறு எடைச் செறிவுள்ள பொருள்களை விரைவேகச் சுழற்சியினால் பிரிக்கும் இயந்திரம் ; பாலிலிருந்து பாலேட்டைப் பிரித்தெடுக்கும் இயந்திரம்.

cen'tring, *n.* (க-க.) மேல்வளைவு அல்லது கவிகைமோடு கட்டும்போது பயன்படுத்தப்படும் தற்காலிகமான பொருத்துச்சட்டம்.

centrip'etal, *a.* குவிமையப் போக்குடைய, மையத்தை நோக்கிச் செல்கிற ; அடிப்பகுதியிலிருந்து நுனிமுனைக்குப் போகிற; (தொ.) centripetal force, குவிமைய வளர்ச்சிச் சக்தி, மையம் நோக்கிச் செல்லும் ஆற்றல் ; centripetal machine, வெவ்வேறு பிரிவினை வேறுபாடுகளுள்ள பொருள்களைத் தன்னுடைய விரைவுச் சுற்றுதலினால் மையம் நோக்கிக் குவியும்படி செய்யும் இயந்திரம்.

centrip'etalism, *n.* குவிமைய வளர்ச்சித் தன்மை, மையம் நோக்கிச் செல்லும் இயல்பு.

centrobar'ic, *a.* எடை ஈர்ப்பு மையத் தொடர்புள்ள.

centrocli'nal, *a.* (மண்.) பலதிசைகளிலிருந்து மையம் நோக்கிச் சாய்கின்ற.

cen'trode, *n.* சுற்றுதலினால் உடனடியாகத் தோன்றிக் கொண்டுவரும் மைய இடமாற்ற இயைவரை.

cen'trosphere, *n.* (மண்.) நிலவுலகின் மையக் கருவுள்.

centum'virate, *n.* நூற்றுவராட்சி.

cen'tuple, *n.* நூறு மடங்கு ; *a.* நூறுமடங்கான ; *v.* நூறு மடங்கு அதிகமாக்கு, நூற்றினால் பெருக்கு.

centup'licate, *n.* நூற்றுமடிப் படிகளில் ஒன்று ; *a.* நூறு மடங்கான ; *v.* நூறு மடங்காக்கு.

centur'ial, *a.* நூற்றாண்டுக்குரிய ; ரோமப் படைப் பிரிவுக்குரிய.

centur'ion, *n.* ரோமப்படையில் நூற்றுவர் தளபதி; நூறெண் கெலித்தவர்.

cen'tury, *n.* (வர.) நூறு ரோம வீரர்கள் கொண்ட படை வகுப்பு ; வாக்களிப்பதற்கான அரசியல் பிரிவு ; நூறு கொண்ட எண்ணிக்கை ; மரப்பந்தாட்டத்தில் நூறு ஓட்டங்கள் ; நூறுகல் பயணம் ; நூற்றாண்டு, முதன்மையான ஒரு நிகழ்ச்சியிலிருந்து-சிறப்பாக இயேசுநாதர் பிறந்ததிலிருந்து-கணக்கிடப்பட்ட நூற்றாண்டுக்கால அளவு ; நூற்றாண்டு நிறைவுநாள் ; (தொ.) century plant, அமெரிக்கக் கற்றாழை வகை.

cephalal'gia, *n.* தலை நோய்.

cephalal'gic, *a.* மண்டையிடிக்குரிய.

ceph'alate, *a.* தலையையுடைய.

cephal'ic, *n.* தலைநோய் மருந்து ; *a.* தலைக்குரிய ; தலையிலுள்ள ; தலைநோய் தீர்க்கிற ; (தொ.) cephalic index, மண்டையோட்டின் நீளத்துக்கும் அகலத்துக்கும் இடையே உள்ள நூற்றுவீதத் தகவு அளவு.

cephali'tis, *n.* மூளை அழற்சி.

Cephalochor'da, *n. pl.* முதுகெலும்புக்கு மூலங்கோலும் முதுகெலும்பில்லாத மீன் இன வகை.

ceph'alopod, *n.* கால்கள் வாயருகே இழைக்கைகளாக மாறுபட்டுள்ள நத்தையினம்.

cephalothor'ax, *n.* சிலந்தி-நண்டு போன்ற உயிரினங்களின் தலையும் மார்பும் ஒருங்கிணைந்த பகுதி.

cephalot'omy, *n.* தலையின் பிளப்பாய்வு.

ceph'alous, *a.* தலையையுடைய.

ce'pheid, *n.* ஒளி உருமாறும் விண்மீன்களில் ஒன்று.

Ce'pheus, *n.* வடதிசை விண்மீன் குழுக்களில் ஒன்று.

cera'ceous, *a.* மெழுகுபோன்ற.

ceram'ic, *a.* மட்பாண்டத் தொழிலுக்குரிய.

ceram'ics, *n.* மட்பாண்டத்தொழில், வேட்கோவர் கலை.

ce'ramist, *n.* மட்பாண்டங்கள் செய்பவர்; மட்பாண்டங்கள் செய்யக் கற்றுக்கொள்பவர்.

cer'asin, *n.* மரவகைப் பிசினின் கரையாக்கூறு.

ceras'tes, *n.* கண்களினருகே சிறுகொம்புகள் போன்ற உறுப்புடைய வட ஆப்பிரிக்க விரியன்பாம்பு வகை.

ceras'tium, *n.* (தாவ.) கொம்பு போன்ற பொதியுறைகளுள்ள பூண்டு வகை.

cerati'tis, *n.* கண் மேற்சவ்வு அழற்சி.

Cerat'odus, *n.* செதில் வழியாகவும் உயிர்ப்பீரல் வழியாகவும் மூச்சுவிடும் ஆஸ்திரேலிய மீன்வகை.

cer'atoid, *a.* கொம்புள்ள ; கொம்பு போன்ற ; கொம்பு வடிவமான.

cerbe'rian, *a.* நரகின் நுழைவாயிலைக் காக்கும் மூன்றுதலை நாய் போன்ற.

Cerb'erus, *n.* கீழுலகினைப் பாதுகாப்பதாகக் கருதப்படும் மூன்றுதலை நாய்; (தொ.) sop to Cerberus, வாய்க்கரிசி, கைக்கூலி.

cer'cal, *a.* வாலுக்குரிய.

cerca'rian, *a.* அட்டை வகைகளின் முட்டைப்புழு நிலைக்குரிய.

cer'cus, *n.* வால்போன்ற பின்னிணைப்பு.

cere, *n.* சில பறவைகளினுடைய அலகின் அடிப்பாகத்தில் காணப்படும் தோல் மூடியிராத மெழுகு போன்ற சவ்வு ; *v.* மெழுகு பூசு.

cer'eal, *n.* முதிரை, தானியம், கூலம் ; காலைச் சிற்றுண்டிப் பணியாரம் ; *a.* உண்ணத்தக்க கூலவகைகளுக்குரிய.

ce'realist, *n.* கூலத்துறையில் தனி ஆய்வு நடத்துபவர் ; முதிரைகளை உட்கொள்பவர்.

cerebell'ar, cerebell'ous, *a.* சிறுமூளைக்குரிய, சிறு மூளை பற்றிய.

cerebell'um, (ல.) *n.* தலையின் பின்பக்கத்திலுள்ள சிறு மூளை.

ce'rebral, *a.* மூளைக்குரிய ; பெருமூளைப்பகுதி சார்ந்த ; (ஒலி.) நுனிநா அண்ணத்தைத் தொடுவதனால் எழும் மெய்யெழுத்து ஒலிகளுக்குரிய ; (தொ.) cerebral hemispheres, மூளையின் இருபெரும் பிரிவுகள்.

cer'ebralism, *n.* மனத்தின் செயல்களெல்லாம் மூளையில் தான் தோன்றுகின்றன என்னுங்கோட்பாடு.

cerebra'tion, *n.* மூளை இயக்கம், மூளை செயற்படுதல் ; மனத்தின் தொழிற்பாடு ; எண்ணம் ; (தொ.) unconscious cerebration, உணர்வு நிலையில்லாத மூளையியக்க விளைவு.

cerebri'tis, *n.* மூளை அழற்சி.

ce'rebro-spin'al, *a.* மூளைக்கும் முதுகந்தண்டு வடத்துக்கும் ஒருங்கே தொடர்புடைய ; (தொ.) cerebro-spinal fever, மூளைப்போர்வை அழற்சி, சன்னி.

ce'rebrum, (ல.) *n.* தலையின் முன்பக்கத்திலுள்ள பெருமூளை.

cere'cloth, *n.* தண்ணீர் உட்புகவிடாமல் பண்டங்களைச் சுற்றுவதற்காகப் பயன்படும் மெழுகு பூசிய துணி ; பிண மூடாக்கு ; கல்லறை மூடாக்கு.

cere'ment, *n.* பிண மூடாக்கு ; கல்லறை மூடாக்கு.

ceremon'ial, *n.* சடங்கு முறைமை ; புற ஆசாரம் ; மரபு தழுவு விதி ; சிறப்புக்கால நடைமுறை ; ரோமன் கத்தோலிக்கத் திருக்கோயிலின் விதிமுறைக்குறிப்புகள் அடங்கிய சுவடி ; *a.* விதிமுறைகளுடன் கூடிய ; சடங்குகளுக்குரிய ; புற ஆசாரம் பற்றிய.

ceremon'ialism, *n.* புற ஆசாரங்களைக் கடைப்பிடித்தல், விதிமுறை வலியுறுத்தும் பண்பு.

ceremon'ious, *a.* விதிமுறைகளுக்கு அடிமைப்பட்டுள்ள ; சடங்குகளில் பற்றுள்ளவராகப் பகட்டிக் கொள்ளுகிற ; விதிமுறைகளில் உன்னிப்பான, ஆசாரங்களை நுணுகிப் பின் பற்றுகிற ; சடங்குகள் நிறைந்த.

ce'remony, *n.* விதிமுறை, சமயச்சடங்கு, கரணம்; புறவினை, ஒப்புக்குரிய நடைமுறை, மரியாதையான ஒழுகலாறு ; உள்ளீடில்லாத வெறும் ஆசாரம் ; ஆரவாரம், ஆடம்பரம் ; புறச் செயல் முறைமை ; ஆசாரங்களில் மிக்க நுட்பம் பார்க்கிற தன்மை ; (தொ.) master of ceremonies, விதிமுறை முதல்வர், சடங்குகளின் தன்மையையும் வரிசை முறையையும் வகுக்கிற பொது அதிகாரி ; stand on ceremony, stand upon ceremony, மரபு முறைகளை வற்புறுத்து, புற ஆசாரங்களில் மிக்க நுட்பம் பார் ; கலந்துகொள்ளாமல் சற்று விலகியே இரு.

cer'eous, *a.* மெழுகு போன்ற.

cerge, *n.* வேதிகையின்முன் ஏற்றப்படும் பெரிய மெழுகுத்திரி விளக்கு.

cer'ic, *a.* (வேதி.) உலோகவகைத் தனிமத்துக்குரிய, 'சீரிய'த்துக்குரிய.

cerise', *n.* தெளிவான இளஞ்சிவப்பு நிறம் ; *a.* தெளிவான இளஞ்சிவப்பு நிறமுள்ள.

cer'ium, *n.* அணு எண் 58 உள்ள உலோகத் தனிமம், சீரியம்.

cer'nuous, *a.* (தாவ.) அசைகிற ; கீழ்நோக்கி வளைந்துள்ள, கவிழ்ந்து தொங்குகிற, ஊசலாடுகிற.

ce'rograph, *n.* மெழுகின்மேல் எழுதிய எழுத்து ; உருக்கிய மெழுகில் வரைந்த வண்ணப்படம் ; மெழுகு பரப்பியுள்ள தட்டில் செய்யப்பட்ட செதுக்கு வேலை.

cerograph'ic, cerograph'ical, *a.* மெழுகின்மேல் எழுதுவதற்குரிய ; மெழுகின்மேல் செதுக்கு வேலை செய்வது பற்றிய.

cerog'raphy, *n.* மெழுகில் எழுதும் எழுத்து ; மெழுகைக் கொண்டு எழுதுதல் ; மெழுகின்மீது திட்டும் செதுக்குக்கலை ; உருக்கிய மெழுகில் வண்ணப்படம் வரைதல்.

ce'romancy, *n.* நீரில் உருக்கிய மெழுகை விடுவதனால் உண்டாகும் வடிவங்களைக் கொண்டு வருவதுணர்த்தல்.

ceroplas'tic, *a.* மெழுகினால் உருவமைக்கப்பட்ட ; மெழுகில் உருவமைப்பது பற்றிய.

ceroplas'tics, *n.* மெழுகில் உருவமைக்கும் கலை.

cer'ous, *a.* (வேதி.) சீரியம் கலந்த.

cer'tain, *a.* உறுதியான, நம்பகமான ; தவறுத, பிழைபட முடியாத ; முழுமன உறுதிப்பாடு கொண்ட, ஐயத்துக்கு இடமற்ற; வாதத்துக்கிடமில்லாத; முடிந்துபோன, முடிவான, தீர்மானமான ; விலக்கமுடியாத, நடந்து தீரவேண்டிய, கட்டாயமான; நிலையான; ஒழுங்கான; ஏதோ சில; ஏதோ ஒரு; (தொ.) a certain person, எவரோ ஒருவர்; for certain, உறுதியாக, ஐயமின்றி ; in a certain condition, சூலுற்று.

cer'tainly, *adv.* கட்டாயமாக ; உறுதியாக ; ஐயமற.

cer'tainty, *n.* ஐயுறவிலா உண்மை ; நிகழ்ச்சி உறுதிப்பாடு; தவருத தன்மை ; கட்டாயமாய் நேரிடக்கூடியது.

certes, (பிர.) *adv.* நிச்சயமாக ; ஐயமின்றி.

cer'tifiable, *a.* சான்று வழங்கத்தக்க.

certif'icate, *n.* நற்சான்று, சான்றிதழ், மெய்ம்மைக்கான எழுத்துமூலச் சான்றறிவிப்பு; தகுதிச்சான்று, உறுதிச்சீட்டு; *v.* நற்சான்றுப் பத்திரம் கொடு ; சான்று ஆவணம் கொடு.

certifica'tion, *n.* நற்சான்றளித்தல் ; நற்சான்றிதழ்.

certif'icatory, *n.* நற்சான்றிதழ் ; *a.* நற்சான்று அளிக்கிற; சான்றிதழ் இயல்பான.

cer'tified, *a.* அத்தாட்சி பெற்ற ; (தொ.) certified milk, என்புருக்கி நோய்நுண்மத் தொடர்பற்றதென உறுதிச் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ள பால்.

cer'tify, *v.* உறுதியென்று தெரியப்படுத்து; அறிவி; எழுத்து மூலம் அறிவி ; பித்தன் என்று சான்று பகர்.

certiora'ri, (ல.) *n.* பத்திரத்தைக் கொண்டுவந்து முன்னிலைப் படுத்தக் கீழ்மன்றங்களுக்கு இடப்படும் கட்டளை.

cert'itude, *n.* ஐயமிலா நிலை, உறுதியான நம்பிக்கை, உறுதிப் பாடு, உறுதி எனும் உணர்வு.

ceru'lean, *a.* வானீலமான ; அடர்ந்த நீல நிறமுடைய, பசுங்கடல் வண்ணமுடைய.

cerul'ein, *n.* பழுப்புப் பச்சை வண்ணம் உண்டுபண்ண உதவும் கீல் வண்ணப் பொருள்.

cerum'en, *n.* காதுக்குறும்பி.

ceru'minous, *a.* காதுக்குறும்பி உடைய.

cer'use, *n.* ஈய வெள்ளை, அடியியலான ஈயக்கரியகி, ஒப்பனைக்குரிய வெண்ணிற மைப்பொருள்.

ce'rusite, **ce'russite**, *n.* இயற்பொருளாகக் கிடைக்கும் ஈயக்கரியகை.

cerv'ical, *a.* (உட்.) கழுத்தைச் சார்ந்த.

cerv'ine, *a.* மானைப்பற்றிய; மானுக்குரிய; மானைப்போன்ற; இளமான் வண்ணமான.

cer'vix, *n.* கழுத்து, ஓர் உறுப்பின் கழுத்துப்பகுதி.

cesa'revitch, **cesa'rewitch**, *n.* ருசிய நாட்டுக்குரிய பேரரசரின் முதற் புதல்வர் ; ருசியப் பேரரசின் பட்டத்து இளவரசர் ; இங்கிலாந்து நியூமார்க்கெட்டில் (New Market) ஆண்டுதோறும் நடைபெறும் குதிரைப் பந்தயம்.

cess, *n.* வரி, தீர்வை ; *v.* வரி விதி.

cessa'tion, *n.* ஒழிவு, தவிர்வு, ஓய்வு ; இடை நிறுத்தம், இடை ஓய்வு.

cess'er, *n.* (சட்.) முடிவுறல், நிறுத்தல், இறுதி.

cess'ion, *n.* விட்டுக் கொடுத்தல், தவிர்கை.

ce'ssionary, *n.* சட்டப்படி உடைமையுரிமை மாற்றி அளிக்கப் பெற்றவர்.

cess'pit, *n.* எருக்கிடங்கு, குப்பைக் குழி.

cess'pool, *n.* வடிகுட்டை, மலக்குழிக்கழிவின் வண்டல் பிரித்து நீர் உள்வாங்கும் பள்ளம்.

ces'tode, *n.* குடலில் வாழும் நாடா வடிவப் புழுவகை.

ces'toid, *n.* குடலில் வாழும் நாடாப் போன்ற புழுவகை ; *a.* நாடாப்போன்ற.

ces'tus [1], *n.* அரைக்கச்சை, பட்டிகை.

ces'tus [2], *n.* குத்துச் சண்டைக் கையுறை, ரோம குத்துச் சண்டையாளர் அணிந்த உலோக உள்ளுறையுடைய கையுறை.

ceta'cean, *n.* மீனுருவ நீர்வாழ் பாலுணி இனம் ; *a.* மீனுருவ நீர்வாழ் பாலுணி இனத்தைச் சார்ந்த.

ceta'ceous, *a.* மீன் வடிவ நீர்வாழ் பாலுணி இனத்தைச் சார்ந்த.

ce'tane, *n.* நிலஎண்ணெயில் கண்டெடுக்கப்படும் மெழுகிய லான நீர்க்கரியப் பொருள் ; (தொ.) cetane number, டீஸல் இயந்திர எரிபொருளின் எரிபண்பளவைக் கூற்றெண்.

Cet'eosaur, **Ceteosau'rus**, *n.* மரபற்றுப்போன புதை படிவப் பேருருவப் பல்லி.

Cet'erach, *n.* செதில் உடைய சூரல் இனம், செதில் பெரணி.

cet'eris pa'ribus (ல.) *adv.* மற்ற பொருட்கள் சமமாக இருப்ப.

cetol'ogy, *n.* திமிங்கிலத்தைப் பற்றிய ஆராய்ச்சித்துறை ; திமிங்கில ஆய்வுநூல்.

cey'lanite, **cey'lonite**, *n.* கனிப்பொருள் வகை, வெளிம இரும்புக்கலவைக் கனி.

Ceylonese', *n.* இலங்கை நாட்டவர் ; *a.* இலங்கையைச் சார்ந்த.

Chab'lis, *n.* பிரஞ்சு நாட்டில் வடிக்கப்படும் வெண்ணிற இன்தேறல் வகை.

cha'cha', *n.* அமெரிக்க மேலைஇந்தியத் (West Indies) தீவுகளுக்குரிய ஆடல் வகை.

chac'ma, *n.* பெரிய தென் ஆப்பிரிக்க மனிதக்குரங்கு வகை.

chad, *n.* ஆற்றில் எதிர் நோக்கிச் செல்கின்ற மீன்வகை.

Chad'band, *n.* நயத்திறம் மிக்க பாசாங்குக்காரன்.

chae'topod, *n.* இழைமயிர் போன்ற கால்களின்மூலம் ஊர்ந்து செல்லும் புழு வகை.

chafe, *n.* உரசித் தேய்ப்பதால் ஏற்படும் சூடு; சீற்றம்; வெவ்வுணர்ச்சி; *v.* உரசித்தேய், தேய்த்துச் சூடுண்டுபண்ணு; தேய்மானம் செய் ; அரி, கரம்பு ; சினமூட்டு, புண்படுத்து ; கரகரப்புண்டாக்கு ; பரபரப்புக்கொள், சினங்கொள்; எரிச்சல் கொள்.

chaf'er, *n.* வண்டு வகை.

chaff, *n.* உமி ; வைக்கோல் பதர் ; கழிபொருள், குப்பை ; புல் செத்தை ; போலிப் பொருள் ; பயனற்ற பொருள் ; ஏளனப் பேச்சு, கேலிப்பேச்சு ; கொடிப் பேச்சு ; *v.* ஏளனமாகப் பேசு.

chaff'-cut'ter, **chaff'-en'gine**, *n.* வைக்கோலை வெட்டும் இயந்திரம்.

chaff'er, *n.* பேரம் ; விலைபற்றிய சச்சரவு ; *v.* பேரம் பேசு, விலைபற்றிய வாக்குவாதம் செய்.

chaff'erer, *n.* பேரம் செய்பவர்.

chaff'ering, **chaff'ery**, *n.* வாணிகக் கொடுக்கல் வாங்கல், பேரப் பேச்சு.

chaff'inch, *n.* பிரிட்டனில் பொதுவரவாகவுள்ள சிறு பறவை வகை.

chaf'ing-dish, *n.* நிலக்கரிமேல் வைத்துச் சூடாக்க உதவும் கலம்.

chaf'ing-gear, *n.* கப்பல் மர உராய்வு தடுக்கப் பயன்படும் கந்தல் பொருள் வகை.

chagrin', *n.* கடும் ஏமாற்றம், ஆரஞர்த் தன்னெடுக்கம் ; மன உராய்வுத் துன்பம் ; உள அரிப்பு ; *v.* ஏமாற்றமடைவி, மன எரிச்சலூட்டு.

chai, *n.* சிறுக்கி.

chain, *n.* சங்கிலி ; தொடர் ; வரிசைத் தொகுதி ; நிகழ்ச்சிக் கோவை ; மலைத்தொடர் ; தீவுத்தொடர் ; கட்டுத்தளை ; விலங்கு ; சிறைப்பட்ட நிலை ; தடையாற்றல் ; கழுத்தணி ; அணு இணைப்புத் தொடர் ; 66 அடி நீள அளவை ; இடை நிறுத்தம் இல்லாமல் புகைக்கும் சுருட்டு முறை; பாய்மரத்தை வெட்டுவதற்குப் பயன்படுத்தும்படி இரண்டு பங்துகள் அல்லது அரைப்பந்துகளை முனைகளில் கொண்ட சங்கிலி ; பாய்மரக் கயிறுகளின் சேமக்கட்டு; *v.* கட்டு; தளையிடு; விலங்கிடு, தடைப்படுத்து, கட்டுப்படுத்து; (தொ.) chain reactor, அணு ஆற்றல் எதிர்வு இயக்க அமைவு.

chain'-arm'our, *n.* இருப்புக் கவசம்.

chain'-bolt, *n.* சங்கிலி இணைக்கப்பட்ட கப்பலின் தாழ்க் கோல்.

chain'-bridge, *n.* சங்கிலிப்பாலம், தொங்கு பாலம்.

chain'-cable, *n.* இரும்பு வளையங்களாலான வடக்கயிறு.

chain'-coup'ling, *n.* புவைண்டிப் பெட்டிகளைத் தொடுக்கும் மிகைபடியான பாதுகாப்பு இடையிணைப்பு.

chain'-drive, *n.* சங்கிலியின்மூலம் ஆற்றல் தொடுப்பு.

chain'-driven, *a.* இணைப்புச் சங்கிலியின்மூலம் சக்தியை இயக்குவிக்கின்ற.

chained, *a.* விலங்கிடப்பட்ட; கட்டப்பட்ட; சங்கிலியில் மாட்டப்பட்ட.

chain'-gang, *n.* தொடர்சங்கிலியால் இணைக்கப்பட்ட கைதி கள் தொகுதி.

chain'-gear, chain'-gearing, *n.* சுழலும் பற்சக்கரங்கள் மீது சுற்றிச்சுற்றி வரும் சங்கிலி அமைவு.

chain'-less, *a.* விலங்கற்ற, சங்கிலி இல்லாத; தடையற்ற.

chain'let, *n.* சிறு சங்கிலி.

chain'-letter, *n.* பெறுபவர் படியெடுத்து அனுப்புவதன் மூலம் எல்லையற்றுப் பெருகித் தொடர்ந்துசெல்லும் சங்கிலித் தொடர்முறைக் கடிதம்.

chain'-light'ning, *n.* தொடர் வெட்டு மின்னல்; கடுமையான விஸ்கி வகை.

chain'-mould'ing, *n.* (க-க.) சங்கிலி வளைய உருவமைப்பு.

chain'pier, *n.* சங்கிலிக் கடற்பாலம், சங்கிலி அமைப்பாதர வுள்ள அலைதாங்கி.

chain'plates, *n. pl.* கப்பலின் பாய்க்கயிறு கட்டுவதற்குரிய அடித்தகடுகள்.

chain'-pump, *n.* முடிவற்ற சங்கிலியில் இணைத்த நீர் இறைக்கும் குழாய்.

chain'-reac'tion, *n.* செயல் விளைவுத் தொடர்.

chain'-rule, *n.* (கண.) தொடர் தகவுமுறை, தொடர் தகவுக் கணிப்பில் பல கணிப்புக்களை ஒரே இணைதொடர் சமனீடாக்கி மதிப்புக்காணும் முறை.

chain'-shot, *n.* கப்பல் பாய்மரத்தை வெட்ட உதவும் சங்கிலி யின் ஓரக்குண்டு.

chain'-stitch, *n.* சங்கிலி வளையத் தையல்.

chain'work, *n.* சங்கிலி இணைப்புப் போன்ற வேலை; வலைப் பின்னல்.

chair, *n.* நாற்காலி; சாய்விருக்கை; பணிமுதல்வர் பீடம்; தலைவர் இருக்கை; தலைவர் பதவி; தலைமை; தலைவர்; பேரா சிரியர் பதவி; மாநகர் முதல்வர் பதவி; கூட்டத்தலைவர்பதவி; இருக்கை; தனிமனிதர் இருக்கை ஊர்தி, தூக்கு நாற்காலி, அமர் சிவிகை; தண்டவாளத்தை உரிய இடத்தில் உறுதிப் படுத்தும் எஃகுப்பிடிப்பு; சான்றுப் பெட்டி; சாவுத் தண்டனைக்கான மின்பாய்வு நாற்காலி; *v.* அதிகார இருக்கை யில் அமர்வி; வெற்றி ஊர்வலமாகத் தூக்கிச்செல்; கூட்டத் தலைவராக இருந்து நடத்து.

chair'man, *n.* கூட்டத்தலைவர்; தூக்கு நாற்காலியைச் சுமந்து செல்பவர்; *pl.* chair'men.

chair'manship, *n.* தலைமைப் பதவி, தலைமைப் பொறுப்பு.

chair'-or'gan, *n.* திருக்கோயில் பாடகர் குழுவின் இசைப் பெட்டி.

chair'woman, *n.* கூட்டத் தலைவி.

chaise, *n.* ஒருவர் அல்லது இருவர் செல்லும் திறந்த இலேசான வண்டிவகை.

chaise'less, *a.* வண்டி வகை யில்லாத.

chaise'longue, *n.* ஒருபுறச்சாய்வு வசதியுள்ள நீளச் சாய் விருக்கை.

chal, *n.* சிறுக்கன், ஏடன்; ஆள், மனிதர்.

chala'za, *n.* (வில.) பறவையின் முட்டைக் கருவைப் பிடிப்பில் இருக்கும்படி நிறுத்தும் மெல் இழைமம்; (தாவ.) தண்டு முளையின் அடிப்பகுதி.

chalcedon'ic, *a.* படிகக்கல்லைச் சார்ந்த.

chalced'ony, *n.* நீலச்சாயலுடைய வெண்ணிற மணிக்கல் வகை.

chalced'onyx, *n.* வெண்மையும் பழுப்பும் மாறிக்கொண்டு வரும் சாயலுள்ள மணிக்கல் வகை.

chalcog'raphy, *n.* பித்தளை அல்லது செம்பில் செதுக்கும் கலை.

chalcopyr'ite, *n.* செம்புக் கலவை வகை, செம்புக் கந்தகக் கல்.

chal'daism, *n.* பண்டைக் கால்டியா (Chaldaea) நாட்டின் மொழி மரபு.

Chalde'an, Chalde'e, *n.* பண்டைக் கால்டியா அல்லது பாபிலோன் (Babylon) நாட்டின் மொழி; கால்டியா நாட்டுக் குடிமகன்; குறிகாரர், குறிசொல்பவர், சோதிடம் கூறுபவர்; கால்டியா திருக்கோயில் குழுவினர்; *a.* கால்டியாவைச் சார்ந்த.

chald'ron, *n.* நிலக்கரி அளவைக் கூறு.

chal'et, *n.* சுவிட்சர்லாந்தின் மலையிலுள்ள பால் பண்ணைக் குடிசை; சுவிட்சர்லாந்துக் குடியானவரின் மரக்குடிசை; தோட்டம் சூழ்ந்த மரமனை; தெருவிலுள்ள சிறுநீர் கழிப்பிடம்.

chal'ice, *n.* கிண்ணம்; கிறித்தவத் திருக்கோயில் இறை வழிபாட்டு இன்தேறல் குவளை, பூசைப் பாத்திரம்; பூக்குடுவை.

chal'iced, *a.* கிண்ணம் போன்ற.

chalk, *n.* சீமைச் சுண்ணும்பு, வெண்சுதைப்பாறை; சுண்ணக் காம்பு; சுண்ண எழுதுகோல், வண்ண ஓவியக் கோல்; *v.* சுண்ணக்கோலால் எழுது; குறியிடு; வரை திட்டம் இடு; சுண்ணமிட்டுத் தேய்த்துத் துலக்கு; சுண்ண உரமிடு; (தொ.) as like as chalk and cheese, முக்கியமான கூறுகளில் முரண்பட்ட; by a long chalk, மிகு தொலை வாக; chalking the door, ஸ்காத்லாந்தில் குடி அகன்று செல்லும்படி எச்சரிக்கை செய்தல்; chalk out, வரைத் திட்டமிடு; not to know chalk from cheese, ஒரு பொருளைப் பற்றி எதுவும் அறியா நிலை; the Chalk, (மண்.) இங்கிலாந்தில் மண்ணியல் நடு உயிரூழியின் உச்சத்தளப் பார் சார்ந்த சுண்ண நில அமைப்பு.

chalk'-bed, *n.* சீமைச் சுண்ணப்படுகை, சுண்ண நில அடுக்கு.

chalk'iness, *n.* சீமைச் சுண்ணத்தன்மை; சுண்ண வெண்மை; சுண்ணங் கலந்துள்ள நிலை.

chalk'-pit, *n.* சுண்ணச்சுரங்கப் பள்ளம், சுண்ணச் சுதைகுழி.

chalk'-stone, *n.* சுண்ணக்கல்.

chalk'-stones, *n. pl.* கீல்வாதம் அல்லது முடக்கு வாதத்தில் கைகால் எலும்பு இணைப்பைச் சுற்றித் தோன்றும் வெண் கசிவுகள்.

chalk'y, *a.* சுண்ணம் நிறைந்த; சுண்ண வெண்மையான; சுண்ணக் கற்கள் போன்ற; சுண்ணக் கற்களுள்ள.

chall'enge, *n.* அறைகூவல்; எதிர்ப்புத் தெரிவித்தல்; மற் போருக்குரிய அழைப்பு; காவலாளனின் அதிகாரக் குரல்; விளக்கக் கோரிக்கை; பணிமுறைக்கேள்வி; குற்றச்சாட்டு; உரிமைக்கோரிக்கை; *v.* மற்போருக்கழை, போரிட்டு முடிவு செய்ய அழை; குற்றம் சாட்டு; எதிர்த்துரை; மறுதலி, மறுப்பைத் தெரிவி; அதிகாரத்துடன் உசாவு.

chall'engeable, *a.* எதிர்ப்புக்குரிய, எதிர்ப்புக்கு ஆட்படத் தக்க.

chall'enger, *n.* அறைகூவுபவர்; எதிர்ப்பாளர்; விஞ்ஞை எழுப்புபவர், கோரிக்கையாளர்.

chall'enging, *a.* அறைகூவுகின்ற, போரிட அழைக்கின்ற; மறுக்கிற, எதிர்த்துக் கேட்கின்ற.

chall'is, *n.* பெருமாட்டியின் உயரிய உடைத்துணி வகை; பட்டுக் கம்பளித்துணி வகை.

chal'one, *n.* செயல் தடுக்கும் உட்கசிவு.

chalumeau', *n.* இசைக் குழல்வகை; *pl.* chalumeaux'.

chalyb'eate, *n.* இரும்புச் சத்துள்ள நீர்; இரும்புக் கலப்புள்ள குடிவகை; *a.* இரும்புச் சத்துவளம் உடைய.

cha'lybite, *n.* இரும்புச் சத்துள்ள விண்வீழ் கல்.

cham, *n.* வல்லாளர்.

chamade, (பிர.) *n.* சமரசப் பேச்சுக்கழைக்கும் பறையொலி, சரணடையும்படி அழைப்பு விடும் முரசறைவு.

cham'ber, *n.* அறை; அரங்கு; கூடம், அறைவீடு; கூட்டம் கூடும் இடம்; சட்டமன்றப் பிரிவு; நீதி மண்டபம்; வாணிகம் முதலிய தனிநோக்குடன் கூடும் குழாம்; உட்பிரிவு; கண்ணறை; உள்ளிடம், உட்பொள்ளல்; துப்பாக்கியின் பின்புறப் புழை; சிறு பீரங்கி; நீதிமன்றத்திற்குக் கொண்டுவராத வழக்குகளை விசாரணை செய்யும் நடுவர் தனி யறை; *v.* அறையில் வை; அடைத்து வை; கட்டற்ற களியாட்டமாடு.

cham'ber-concert, *n.* அரங்கிசை நிகழ்ச்சி, துணைக்கருவி களற்ற நரப்பிசையரங்கு நிகழ்ச்சி.

cham'ber-counsel, cham'ber-counsellor, *n.* நீதி மன்றத்தில் வாதாடாமல் தனிப்பட்ட முறையில் சட்டக் கருத்து தெரிவிக்கும் வழக்குரைஞர்.

cham'bered, *a.* அறைகளையுடைய; அறைக்குட்பட்ட; குனிந்த, மேல்வளைவான.

cham'berer, *n.* மறை சூழ்ச்சிக்காரர்.

cham'ber-fellow, *n.* அறைத் தோழர்.

cham'bering, *n.* கட்டற்ற காம ஒழுக்கம்.

cham'berlain, *n.* அரண்மனை அகவினைஞர்; (தொ.) Lord Chamberlain, உள்படு கருமத் தலைவர், கோவள்ளுவர், அரசகுடும்ப அலுவல் உயர் அதிகாரி; Lord Great Chamberlain, பெருங்கோ வள்ளுவர், வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) மாளிகை ஆட்சிப்பரம்பரை மேற்பார்வையாளர்.

cham'berlainship, *n.* அரண்மனை அகம்படியர் நிலை, கஞ்சுகிப்பதவி.

cham'ber-maid, *n.* வழிமனைப் பணிப்பெண்.

cham'ber-music, *n.* அரங்கிசை, கொட்டகைக்குரிய துணைக்கருவி துணையற்றத் சிற்றறையின் நரப்பிசை நிகழ்ச்சி.

cham'ber-organ, *n.* தனி அறைக்குரிய சிறிய இசைக்கருவி வகை.

cham'ber-pot, *n.* படுக்கையறைச் சிறுநீர்க்கலம்.

cham'ber-prac'tice, *n.* முறைமன்றத்தில் வாதாடாமல் அறிவுரை கூறும் வழக்குரைஞர் தொழில்.

Chambertin', *n.* புகழ்பெற்ற கொடிமுந்திரித் தோட்டப் பெயர்; புகழ்பெற்ற செங்நிற இன்தேறல் வகை.

chamel'eon, *n.* பச்சோந்தி; அடிக்கடி மாறுபவர், சந்தர்ப்பவாதி.

chameleon'ic, chamel'eon-like, *a.* பச்சோந்திபோன்ற; அடிக்கடி நிறம் மாறும் இயல்புடைய; மாறும் பண்புள்ள.

cham'fer, *n.* சாய்செதுக்குமூலை, செங்கோணமாக இருந்ததன் ஓரங்களைச்சீவி வளை சரிவாக்குதல்; குதை, வடு, பள்ளம்; உழுசால், கால்வாய்; *v.* சரிவாக வெட்டு; பள்ளம் செய்; தூணில் பள்ளக்கீற்றிடு.

cham'fered, *a.* சாய்வளைவான; சரிவுடைய; பள்ளமான பள்ளம் போன்ற சுருக்கமுடைய.

cham'frain, cham'fron, *n.* முகப்பட்டி, போர்க்குதிரையின் முகத்துக்குப் பாதுகாப்பான தோல் அல்லது எஃகுத்தட்டு.

cham'ois, *n.* ஆட்டின் இயல்புடைய ஐரோப்பிய வரைமான் வகை; மென்பதமுடைய தோல் வகை; *pl.* cham'ois.

cham'omile, *n.*=camomile.

champ[1], *n.* நெறுநெறு எனும் ஒலி, பற்கடிப்பொலி; பல்லரைப்பு அரவம்; *v.* ஓசைப்படப் பல்லால் அரை; அதுக்கு, சப்பு; நெறுநெறு எனக் கடி.

champ[2], *n.* (கட.) கேடயத்தின் மேற்பரப்பு.

champagn'e, *n.* கிழக்குப் பிரஞ்சு நாட்டில் (Eastern France) வடிக்கப்படும் ஒள்ளிய வெண்ணிறமுடைய திராட்சை மது வகை; அம்பர் நிறவகை.

cham'paign, *n.* திறந்த சமவெளி; *a.* சமவெளியான; திறந்த.

cham'part, *n.* பகுதிவரி, விளைவின் கூருக வரையறுக்கப் பட்ட நிலவரி முறை; பண்ணை முதல்வர் பங்கு; பகுதி வரிக்குரிய நிலமானியமுறை.

cham'pertous, *a.* (சட.) வழக்கு வகையில் பங்கு ஊதிய உடன்பாடு சார்ந்த.

cham'perty, *a.* (சட.) வழக்கு வகையில் வெளியார் உதவிக் காகப் பேசப்படும் பங்குபேரம்.

champign'on, *n.* உணவுக்குரிய காளான் வகை.

cham'pion, *n.* மல்லன்; பரிந்து செயலாற்றுவோன், வாகையன், வீரமுதல்வன்; *a.* வீர ஆதரவாளரான; முதன்மை சான்ற; *v.* பரிந்து விளையாற்று, ஆதரவு அளி.

cham'pioness, *n.* வீர முதல்வி, வாகையள்.

cham'pionless, *a.* வீர ஆதரவாளரற்ற; கடமைப் போராடு வார் அற்ற.

cham'pionship, *n.* வீர முதன்மை; பரிந்து துணையாதல்.

champ'leve, *n.* உள்வரி வண்ண மெருகுமுறை, மெரு கூட்டலுக்குரிய உலோகப் பரப்பில் உள்வரிப் பள்ளமிட்டு வண்ணப்பொடி நிரப்பி அதன்மீது மெருகுத் தகடு காய்ச்சும் முறை; *a.* உள்வரி வண்ண மெருகூட்டுமுறை சார்ந்த.

chance, *n.* தற்செயல் நிகழ்வு; எதிர்பாரா நிகழ்ச்சி; குருட் டிணைவு; பொறியுடைமை, நற்பேறு, பாக்கியம், நல்வாய்ப்பு; நிகழக்கூடியது, நிகழ்ச்சிப்போக்கு; கூடுதிறம்; இடர் நேர்வு, வரத்தகும் இடர், இடையூறு; *a.* தற்செயல் நேர்வான, இடைவரவான; *v.* தற்செயலாக நிகழ், நேர், நேரப்பெறு; வரத்தகும் இடர் துணிந்து இறங்கு; *adv.* தற்செயலாக; (தொ.) by chance, தற்செயலாக; எதிர்பாராத வகையில்; even chance, சரிநிகர் வாய்ப்பு; stand a good chance, வாய்ப்பு நேர்வினை காரணத்தோடு எதிர்பார்த்திரு; take one's chance, நிகழ்வதை ஏற்றுக்கொள்; the main chance, முக்கிய நோக்கம், செல்வஞ்சும் நோக்கம்.

chance'-com'er, *n.* எதிர்பாராது வருபவர், தற்செயல் வருகையாளர்.

chance'ful, *a.* இடையூறு நிரம்பிய.

chan'cel, *n.* திருச்சபைக் குருமார்களுக்கும் பாடற்குழுவின ருக்கும் இடையே தட்டியிட்டுத் தனியாகப் பிரிக்கப்பட்ட திருக்கோயிலின் கிழக்குப்பகுதி.

chance'less, *a.* நல்வாய்ப்பு இல்லாத.

chan'cellery, *n.*=chancellory.

chan'cellor, *n.* முக்கிய அமைச்சர், மன்னுய முதல்வர்; உயர் முறைமன்ற முதல்வர்; பதிவு மன்ற நடுவர்; கட்டியத் துறையில் ஏடகத்தலைவர்; பல்கலைக்கழக வேந்தர்; (தொ.) Chancellor of a cathedral, மாவட்ட முதன்மைக் கோயிற் கண்காணியார், திருச்சபை மாவட்டத்தின் முத்திரை காப்பு - கல்வி - இசைப்பயிற்சி - மேற்பார்வை ஆகியவற்றைக் கவனிக்கும் பணி முதல்வர்; Chancellor of a diocese, திருச் சபை மாவட்ட முதல்வரின் சமயத்துறை நடுவர்; Chancellor of the Exchequer, பிரிட்டனில் பொருளியல் அமைச்சர், Lord Chancellor, Lord High Chancellor, மேல்மன்றத் தலைவர், நீதித்துறையின் முதன்மை நடுவர், பெருமுத்திரை நாயகம்.

chan'cellorship, *n.* நீதித்துறை முதல்வரின் பதவி; மன்னுயமுதல்வர் பதவிக்காலம்; பல்கலைக்கழக வேந்தர் பதவி; பல்கலைக்கழக வேந்தர் பதவிக்காலம்.

chan'cellory, *n.* நீதித்துறை முதல்வர் பதவி; பதிவு மன்றச் செயல் முதல்வர் நிலை; மன்னுய முதல்வர் பணியரங்கம்; முக்கிய அமைச்சர் அலுவலகக் கட்டிடம்; தூதர் அலுவலகம், தூதர் துறை அலுவலகக் கட்டிடத்தொகுதி.

chance-med'ley, *n.* (சட்.) வேண்டுமென்றே செய்யப்படாத ஆட்கொலைக் குற்றம், கவனக் குறைவால் தீங்கு மிகுதிப் பட்ட குற்றம்.

Chan'cery, *n.* சட்ட மேல்மன்றத்துக்கு அடுத்தபடியான நீதித்துறை முதல்வர் மன்றம்; பொதுநேர்மைத் தனி மன்றம்; உயர் நீதிமன்றத்தின் பொது நேர்மைப் பிரிவு; பணித்துறைப் பதிவேடகம்; (தொ.) in chancery, வழக்கில் சிக்கி; குத்துச் சண்டையில் தலை எதிரியின் கைப்பிடியில் சிக்கிய நிலையில்.

chan'ces, *n. pl.* இடையூறுகள், வாய்ப்புக்கேடுகள்; நலந்தீங்கு வாய்ப்புக்கள்; வெற்றி தோல்வி வாய்ப்புக்கள்.

chanc're, *n.* கிரந்திப்புண், மேகப் பிளவை.

chanc'roid [1], *n.* தொற்றுமூலமாக மட்டுமே வரும் கிரந்தி நோய்வகை.

chanc'roid [2], **chance'rous,** *a.* கிரந்திப்புண் உடைய; கிரந்திப்புண் சார்ந்த.

chandelier', *n.* சரவிளக்குச் சட்டம், கொத்து விளக்குச் சட்டம்.

chand'ler, *n.* மெழுகுத்திரி செய்பவர்; மெழுகுத்திரி விற்பவர்; எண்ணெய் சவுக்காரம் முதலிய சில்லறைப் பொருள் விற்பனையாளர், பலசரக்கு வணிகர்.

chand'lering, *n.* பல்பொருள் வாணிகம், பலசரக்கு விற்பனை.

chand'lerly, *a.* பல்பொருள் வணிகரைச் சார்ந்த.

chand'lery, *n.* பல்பொருள் வணிகர் விற்கும் சரக்கு; மெழுகுத்திரி செய்யும் இடம்; சிறுவாணிகக் கிடங்கு.

change, *n.* மாற்றம்; மாற்றுதல்; மாறுதல்; ஆள்மாற்றம்; இடமாற்றம்; காலமாறுபாடு; பொருள்மாறுபாடு; பகரமாதல், பதிலாக அமர்த்துதல்; வேறுபாடு, மாறுபாடு, திரிபு, விகற்பம்; அலவு, உலவு; சில்லறை; மாற்றீடுபாடு, மாறுபாட்டுணர்வு; காசுமாற்றம்; காசுமாற்றகம், செலாவணியிடம்; ஏ. மாற்று; வேறுபாடு செய்; ஒன்றுக்கு மற்றொன்றைக் கொடு; நிலைமாற்று; பண்டமாற்று; கைமாறு, கொடுக்கல் வாங்கல் செய்; மாறு; உடைமாற்று; ஊர்திமாற்று; (தொ.) change colour, நாணுறு, வெட்கத்தால் சிவப்பாகு; நிறம் வெளிறு; change of life, பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் பருவம்; change one's mind, எண்ணத்தை மாற்றிக்கொள்; வேறுபட்ட கருத்துக்கொள்; change one's tune, இன்பத்திலிருந்து துன்பத்திற்கு மாறு; பேசும் முறையை மாற்று; put the change on, ஏமாற்று; கூது செய்; small change, சிறு காசு, சில்லறை; அற்பப் பொருள்.

changeabil'ity, *n.* நிலையில்லாத் தன்மை, மாறுபடும் ஆற்றல்.

change'able, *a.* மாறுபடக்கூடிய, திரிபுடைய; நிலையற்ற.

change'ableness, *n.* = changeability.

change'ful, *a.* மாறுதல் நிறைந்த; அடிக்கடி மாறுபடக் கூடிய.

change'ling, *n.* மாயக்குழந்தை, திருடராலோ குறும்புத் தெய்வங்களாலோ மாற்றப்பட்ட குழந்தை; வளர்ச்சி குறை வுற்றவர்; அறிவு மழுங்கியவர்.

change'-o'ver, *n.* முறைமாற்றம்.

chang'er, *n.* ஒன்றின் உருவிணை மாற்றுபவர்; செலாவணியியீடுபடுத்தப்படும் இடையீட்டாளர்.

chann'el [1], *n.* நீர்க்கால், வாய்க்கால், கால்வாய்; அகல் இடைகழி, கடற்கால்; கப்பல் செல்லத்தக்க கடலிடைவழி; நீர் செல்வழி; பள்ளம்; சாக்கடை; செலுத்தும் வழி; ஏ. கால்வாய் உண்டுபண்ணு; பள்ளம் வெட்டு; கொண்டு செலுத்து; (தொ.) the Channel, இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடைப்பட்ட ஆங்கில நாட்டுக் கடற்கால்வாய்.

chann'el [2], *n.* பாய்க்கயிறுகளைக் கட்டும்படியாகக் கப்பலின் ஒரு புறத்தினின்று நீட்டிக்கொண்டிருக்கும் பலகைத்துண்டு.

chann'el [3], *n.* வானொலி-தொலைக்காட்சி அலை அடையாளக் குறியீடுகளை இடையீடின்றி அனுப்பத்தகும் அலை இடைவெளிப்பகுதி.

chann'elled, *a.* கால்வாயினை உடைய; வாய்க்காலை உட்கொண்ட; பள்ளமுள்ள; வாய்கால் வழி செலுத்தப்பட்ட, கால்வாய்க்குள் செலுத்தப்பட்ட; கால்வாய்க்குட்பட்ட.

chansonett'e, *n.* சிறு பாடல்.

chant, *n.* இன்னிசை; பண்ணிசைப்பு; கோயிலில் பண்ணிசைத்துப் பாடப்படும் உரைப்பகுதி; ஏ. பாடு; பாட்டிலுல் வினைமுறையாற்று; பாடல் முறையால் கூறு; குரலிசை எழுப்பு; குதிரை வகையில் ஏமாற்றுத்தனமாக விற்பனைசெய்.

chantage, (பிர.) *n.* பகற்கொள்ளை, அச்சுறுத்திப் பணம் பறித்தல்.

chan'ter, *n.* பாடகர், பாண்மகன், திருக்கோயிற் பாடல் இயக்குநர்; விரல்துளைகளையுடைய தோற்பைபோன்ற ஊது இசைக்கருவி; ஏமாற்றும் குதிரை வியாபாரி.

chanterelle' [1], *n.* இசைக்கருவியின் மிக்குயர்ந்த நரம்பு.

chanterelle' [2], *n.* உண்ணும் மஞ்சள் காளான் வகை.

chan'ticleer, *n.* வீட்டுச்சேவல்.

chan'tress, *n.* கோயிற் பாடகி, பாடினி.

chant'ry, *n.* கிறித்தவர்கள் வழிபாட்டுப் பாடல்கள் பாடும் சிறுகோவில்; அறநிலைய மூலமுதல்வர் ஆன்ம நிறைவு குறித்து வழிபாடியற்றுவதற்காக விடப்பட்ட மானியம்; மானியம் பெறும் துணைக்கோவில்; மானியக் குருக்கள்; மானியத்துக்குரிய வழிபாட்டு மேடை.

chan'ty, *n.* கடலோடிகள் கூடிச்சேர்ந்து ஒருவன் இடைக்குரல் கொடுக்கப் பாடும் பாடல்.

chan'tyman, *n.* கடலோடிகளின் குழுப்பாடலில் இனிய தனிக்குரல் கொடுப்பவன்.

cha'os, *n.* பெருங்குழப்பம், ஒழுங்கற்றநிலை.

chaot'ic, *a.* குழப்பமான, தாறுமாறான, ஒழுங்கற்ற.

chaot'ically, *adv.* ஒழுங்கில்லாமல், தாறுமாறாக, குழப்பமாக.

chap [1], *n.* வெடிப்பு; குளிர் பனி காரணமாக தோலில் ஏற்படும் கீறல், பனி வெடிப்பு; நிலவெடிப்பு; தட்டுதல், மோதுதல், ஏ. வெடி; பிள; வெடிப்புண்டாக்கு; தட்டு.

chap [2], *n.* மோவாய்; விலங்கின் தாடை; கன்னம்.

chap [3], *n.* (பே-வ.) ஆள், பேர்வழி; பயல், சிறுவன்.

chapara'jos, chapare'jos, *n. pl.* பாதுகாப்பிற்காக மாட்டிடையர்கள் அணியும் தோல் காற்சட்டை.

chaparral', *n.* பசுமை மாறாக் குறுமரப் புதர்க்காடு; (தொ.) chaparral cock, வேகமாக ஓடக்கூடிய குயில் இனப்பறவை.

chap'-book, *n.* மக்கள் விரும்பும் சிற்றேடு, விற்பனையாளர் அதிகமாக விற்கும் சிறு புத்தகம்.

chape, *n.* வாளுறை முனையிலுள்ள உலோகத் தகடு; போர்க் கருவியின் உறையை அரைக்கச்சையோடு இணைக்கும் கொளுவி; அரைக்கச்சையின் சறுக்கு வளையம்.

chapeau, (பிர.) *n.* தொப்பி.

chapeau-bras, (பிர.) *n.* முக்கோணத் தொப்பி.

chap'el, *n.* திருக்கோட்டம், தனிப்பட்ட தொழுகையிடம்; சிறிய துணைத்திருக்கோயில்; கோயில் வீடு, மனைவழிபாட்டிடம்; நிறுவனங்களின் கோயில் மனை; கல்லறைக் கூடத்திலுள்ள தொழுமிடம்; திருக்கோயிலில் தனிப் பலிபீடம் கொண்ட சிறு அறை; நாட்டுத் திருச்சபையினின்றும் வேறுபட்ட நெறியினர் தொழுமிடம்; தனித் திருக்கோட்ட வழிபாடு; பாடகர்குழு; பல்லியம்; அச்சு அலுவலகம்; நாளச்சுத் தொழிலாளர்கள் சங்கம்; நாளச்சுத் தொழிலாளர்கள் கூட்டம்; (தொ.) chapel cart, கடைச்சாமான்களைக் கொண்டுவழங்கப் பயன்படுத்தப்படும் இருசக்கரமுள்ள

இலேசான வண்டி; chapel of ease, வட்டம்சாரா அணிமைத் திருக்கோயில்; chapel royal, அரண்மனைக் கோயில்மாடம்; Lady chapel, திருக்கோயிலின் பீடத் திற்குப் பின்னுல் கன்னிமரியாளிற்காக ஒதுக்கப்பட்ட தொழுமிடம்.

chapelle ardente, (பிர.) *n.* மாண்ட பெரியோர் உடல் பார்வைக்கு வைக்கப்படும் மாடம்.

chap'elry, *n.* திருக்கோட்ட ஆட்சி வரம்பு, தனித் திருக்கோயிலின் ஆட்சி எல்லை.

chap'eron, *n.* இளம் பெண்ணின் துணைக்காவல் மாது; தலை மூடாக்கு வகை; தொப்பி வகை; *v.* காப்புத் துணையாகச் செயலாற்று.

chap'fall'en, *a.* முக வாட்டமான; சோர்ந்த நிலையுடைய, கிளர்ச்சியற்ற.

chap'iter, *n.* தூண் முகடு, தூணின் தலைப்பு.

chap'lain, *n.* தனி மதகுரு; குடும்பப் புரோகிதர்; சங்கச் சார்பான சமய விணைஞர்.

chap'laincy, *n.* குடும்பப் புரோகிதர் வருமானம்; சங்கச் சமய விணைஞர் பதவி.

chap'less[1], *a.* கீழ்த்தாடையற்ற.

chap'less[2], *a.* வெடிப்பற்ற, பிளவில்லாத.

chap'let, *n.* தலைமாலை; சூளிகை, தலையணிமணி, பொன் முடிச்சூட்டு; தொழுகைக் குறுமணி மாலை; கழுத்தணி மணிமாலை; குழாயின் உலோக அடிதாங்கி; தேரையின் முட்டை வரிசை; கோவை.

chap'leted, *a.* தலைமாலையணிந்த.

chap'man, *n.* (வர.) சிறு வணிகன்.

chapped, *a.* வெடிப்புடைய; பனி வெடிப்பினுல் தோல் தடித்த; வெப்ப வெடிப்பினுல் மண் கெட்டியான; குறுகத் தறித்த.

chapp'y, *a.* வெடிப்புக்கள் நிறைந்த, பிளவுகள் செறிந்த.

chap'ter, *n.* ஏட்டின் தலைப்பிரிவு, அதிகாரம், இயல், அத்தியாயம்; முழுக்கூறு, பொருட் கூறு, நிகழ்ச்சிக்கூறு; சட்டப் பெரும் பிரிவு; கூட்டுணக் குருக்களின் தொகுதிக் கூட்டம்; துறவியர் குழுக்கூட்டம்; சங்கம், கழகம், கூட்டுக் குழு; மணிப்பொறியின் ரோம எண்கள்; *v.* இயல் வகு, இயல்களாகப் பிரி; கடி; கண்டித்துத் திருத்து; (தொ.) chapter and verse, சரியான மேற்கோள் விவரம்; chapter of accidents, எதிர்பாராத் தொடர் இடர்கள்; தொடர்ந்து வரும் தற்செயல் நிகழ்ச்சிகள் தொகுதி; to the end of the chapter, முழுவதும்; கடைசி வரை.

chap'ter-house, *n.* கூட்டுணக் குருக்கள் கூடுமிடம்.

chap'trel, *n.* வளைவிணைத் தாங்கும் தூணின் தலைப்புப்பகுதி.

char[1], *n.* நாள் வேலை; இடைவேலை; வீட்டுப்பெருக்கல் மெழுகல் பணி.

char[2], *n.* மலை ஏரிகளிலும் ஆறுகளிலும் உள்ள சிறு மீன் வகை.

char[3], *v.* கரியாக்கு, தீய்; தீய்க்கச் செய்; தீய்ந்து போகச் செய்.

Chara, *n.* நன்னீர்வாழ் கடற்பாசியினச் செடி வகை.

char-a-banc, char-a-bancs, (பிர.) *n.* நீண்ட உலாப்பயண ஊர்தி வகை.

cha'racter, *n.* சிறப்பியல்பு, பண்பு; மரபுக் கூறு; நற்குணம், ஒழுக்க உரம், நற்பெயர், நன்மதிப்பு; மதிப்பு, படிநிலை; பண்பு விளக்கம்; நற்சான்று; தனிக்குறியீடு, எழுத்து, வரி வடிவு, உருவடிவம், குறிவடிவம்; கையெழுத்து; நன்மதிப்புடையவர்; பண்புடையவர், பண்புரு; தெரிந்த மனிதர், ஆள்; கலைஞர் கற்பனைப் பண்போவிய உரு; பண்போவியம்; நடிப்புறுப்பினர்; நடிப்புப் பகுதி; குறிப்பிடத்தக்க தனிச் சிறப்புப் பண்புடையவர்; *v.* உருவாக்கு, செதுக்கு, வரை, எழுது, விரித்துக் கூறு; (தொ.) in character, இயல்பாக, பொருத்தமாக; சூழலுக்கியைய; நடிப்புப் பகுதிக்கேற்ற ஒப்பனையுடைய; பண்பு மரபுக்கிணங்க; out of character, பொருந்தாத, சூழலுக்கு ஒவ்வாத, மரபுக்கு முரணான.

cha'racter-essay, *n.* குணநலக் கட்டுரை; பண்போவிய விரிவுரை.

cha'racterism, *n.* தனிச்சிறப்புப் பண்பு; பண்பு விளக்கம், வருணணை.

characteris'tic, *n.* தனிச்சிறப்புப் பண்பு, வேறுபடுத்திக் காட்டும் இயல்பு, பண்புருவாக்கும் அடிப்படைக்கூறு; (கண.) மடக்கையின் நேர்கூறு; *a.* முனைப்பான, தனிச்சிறப்பான, குறிப்பிடத்தக்க; தனிப்பண்பு மூலமான, மரபுக் கூருன, மரபியைவான.

characteris'tically, *adv.* குறிப்பிடத்தக்க வகையில், தனித் தன்மையாக; சிறப்பியல்பாக.

characteriza'tion, *n.* பண்புரு வருணணை, பண்பேற்றக் குறிப்பீடு.

cha'racterize, *v.* பண்பு விரித்துரை, தனிச்சிறப்புக்களால் விளக்கு; வருணி; தனித்தன்மையளி; தனிச்சிறப்பாய் அமை.

char'acterless, *a.* குணச்சிறப்பற்ற; தனிச்சிறப்புப் பண்பிலாத; சான்று பெருத.

char'acter-lite'rature, *n.* குணநல இலக்கியம்; பண்போவியக் கட்டுரை இலக்கியம்.

charade', *n.* சொல் அல்லது அதன் பகுதிபற்றிய குறிப்பு அல்லது சாடையைக்கொண்டு சொல்லை ஊகித்துக் காணமுயலும் விளையாட்டு.

char'as, (இ.) *n.* கஞ்சா.

charc'oal, *n.* கரி, கட்டைக் கரி; தீய்ந்து கரியான மரக்கட்டை.

chare, *n.* = **char**[1].

charge, *n.* தாக்குதல்; மோதல்; குற்றச்சாட்டு; சுமை, பாரம்; துப்பாக்கி கொள்ளத்தக்க வெடிமருந்தின் முழு அளவு; மின் ஏற்ற முழுச்செறிவு; எரிபொருள் கொள்ளும் முழு அளவு; பொறுப்பு, பாதுகாப்பு; பொறுப்பாணை, காவற் கட்டளை; காப்புப்பொருள், காப்புக்குரியவர்; அறிவுறுஉ; விலை; சத்தம், கட்டணம்; கடமை; *v.* தாக்கு, திடீரென மோது; சுமத்து, பாரம் ஏற்று, திணி; உள்ளிடு, நிரப்பு, அடை; மின் விசை செறிவி; குற்றஞ் சாட்டு; பொறுப்பேற்று; ஒப்படை; காப்பாணையிடு, பொறுப்பாணையிடு; வரி விதி, கட்டணம் கூறு, ஆதாயப் பங்கு எடுத்துக்கொள், விலைகுறி; (கட.) கேடயத்தில் மரபுச் சின்னம் பொறி; அறிவுறுத்திக் கூறு; (தொ.) give in charge, காவலர்களிடம் ஒப்படை; take charge of, பொறுப்பினை ஏற்றுக்கொள்.

charge, (பிர.) *n.* = *charge d'affaires.*

charge'able, *a.* குற்றஞ்சாட்டப்படத் தக்க; கட்டணம் கோருவதற்குரிய: வரி விதிப்பதற்குரிய, செலவினமாக ஒதுக்கப் படத்தக்க, செலவாகச் சேர்க்கப்படுதற்குரிய.

charge d'affaires, (பிர.) *n.* துணைநிலைத் தூதுவர்; செயல் தூதுவர்; தற்காலிகப் பொறுப்பாட்சியாளர்.

charge'-hand, charge'-man, *n.* பணியாட்குழுத் தலைவன்.

char'ger, *n.* தாக்குபவர்; செறிவூட்டி நிரப்புபவர்; போர்க் குதிரை.

char'ges, *n. pl.* செலவுகள், சிறு செலவினத்தொகுதி.

charge'-sheet, *n.* குற்ற அறிக்கை, குற்றவாளிகளின்மீது சாட்டப்பட்ட குற்றங்களின் பட்டியல்.

char'ily, *adv.* மட்டற்ற எச்சரிக்கையுடன், தயக்கத்துடன்; சிறிது சிறிதாக; கஞ்சத்தனமாக.

char'iness, *n.* கஞ்சத்தனம்; மட்டற்ற தயக்கம்.

cha'riot, *n.* தேர், இரதம், நாலு சக்கரமுள்ள அரசாங்க வண்டி; போர்ச்சகடம்; வெற்றியூர்தி; *v.* தேரில் ஏற்றிச் செல்; இரதத்தில் ஏறிச்செல்.

charioteer', *n.* தேர்ப்பாகன், இரதமோட்டி; *v.* தேரோட்டு; தேரேறிச் செல்.

cha'ritable, *a.* பெருந்தன்மையுள்ள; விட்டுக்கொடுக்கிற, அறச்சிந்தனையுடைய; உதவிசெய்கிற.

cha'ritableness, *n.* அன்பிணக்கமுடைமை ; ஒப்புரவு, அற ஈடுபாடுடைமை ; பரந்த மனப்பாங்கு.

cha'ritably, *adv.* அன்போடு ; அறச்சிந்தனையோடு ; பெரிய மனத்துடன் விட்டுக்கொடுத்து.

cha'rity, *n.* மன்பதை அன்பு ; நன் மனப்பாங்கு, அன்பிணக்கம் ; தாராள மனப்பான்மை ; ஒப்புரவு, இன்னலம் ; பெருந்தன்மை ; விட்டுக்கொடுத்தல் ; அருளிரக்கம் ; ஈகை, அறம் ; அற நிலையம் ; *pl.* cha'rities ; (தொ.) Brother of Charity, ஏழைகளின் துன்பத்தைத் துடைக்கப் பாடுபடும் சமயக்குழு உறுப்பினர் ; Charity Commission, அறக்கொடை நிறுவனங்களைக் கட்டுப்பாடு செய்யும் கழகம் ; Charity Commissioners, அறக்கொடை நிறுவனங்களைக் கண்காணிக்கும் பொறுப்பாட்சி ஆணையாளர்கள், அற ஆணையாளர்கள் ; Sister of Charity, ஏழைகளின் துன்பத்தைத் துடைக்கப் பாடுபடும் சமயக் கழகத்தின் பெண் உறுப்பினர்.

cha'rity-boy, *n.* அறக்கொடை நிறுவனத்தின் ஆதரவில் படிக்கும் மாணவன்.

cha'rity-girl, *n.* அறக்கொடை நிறுவனத்தின் ஆதரவில் படிக்கும் மாணவி.

cha'rity-school, *n.* அறக்கொடை நிறுவனப்பள்ளி.

charivar'i, *n.* ஆரவாரக் கேலிக்கூத்து, பல்கூட்டொலி, இரைச்சல், கம்பலை.

chark, *n.* கரி ; சுட்ட நிலக்கரி ; *v.* எரித்துக் கரியாக்கு.

chark'a, (இ.) *n.* கைராட்டை.

char'lady, *n.* = charwoman.

charl'atan, *n.* போலி மருத்துவன் ; போலி அறிஞன் ; பகடி ; திறமையற்றவன்.

charlatan'ic, charlatan'ical, *a.* போலி அறிஞனுக்குரிய ; போலியான.

charl'atanism, *n.* போலி அறிஞர் இயல்பு, பகட்டாரவார நடிப்பு.

charl'atanry, *n.* திறமை உள்ளவர்போல் நடித்தல் ; வைத்தியர்போல் பாசாங்கு செய்தல்.

Charles's Wain, *n.* கலப்பை விண்மீன் குழு, சப்தரிஷி மண்டலம்.

Charles'ton, *n.* முழங்காலைப் பக்கவாட்டில் எறிந்தாடும் அமெரிக்க நடனவகை.

char'lock, *n.* கூட்டுக் கடுகு, மஞ்சள் வண்ணச் சிறு பூ உடைய களைச்செடி வகை.

char'lotte, *n.* அப்பத் துண்டுகளிட்டுப் பொதிந்த பழப் பாகடைப் பண்ணிய வகை ; (தொ.) charlotte russe, பாலடை உள்ளே வைக்கப்பட்ட மெல் அப்ப வகை.

charm [1], *n.* மயக்கும் ஆற்றல் ; மருட்சி ; கவர்ச்சிக் கூறு ; அழகு ; இணிமையூட்டும் பொருள் ; மாயச்சொல், மந்திரத் தொடர், மறை ஆற்றல் வாய்ந்த வாசகம் ; மந்திரம் ; தாயத்து ; சிறுதிற அணிமணி ; *v.* மயக்கு ; மகிழ்வி ; மனத்தைக் கவர் ; கவர்ச்சி செய் ; இசையோடு பாடு ; மந்திரத்தால் மயக்கு.

charm [2], *n.* சிறுபறவை வகைகளின் தொகுதி.

charmed, *a.* மந்திரத்தால் மயக்கப்பட்ட ; மகிழ்விக்கப்பட்ட ; தனி ஆற்றலால் காக்கப்பட்ட.

charm'er, *n.* மந்திரத்தால் மயக்குபவர் ; பேரழகி.

charm'euse, *n.* மென்மையும் வழவழப்பும் கொண்ட பட்டு ஆடைக்கான இழைமப்பொருள்.

charm'ful, *a.* கவர்ச்சி மிக்க ; வனப்புக் கூறுகள் செறிந்த.

charm'ing, *a.* கவர்ச்சி மிக்க ; வனப்புடைய ; இனிமை யூட்டுகிற, மகிழ்ச்சியளிக்கிற.

charm'ingly, *adv.* அழகொழுக, கவரும் வகையில் ; மருட்சி யூட்டும் முறையில்.

charm'less, *a.* கவர்ச்சியற்ற ; வனப்புக் கூறுகள் இல்லாத.

charms, *n. pl.* தனிக் கவர்ச்சிக் கூறுகள், வனப்புக்கள்.

charn'el-house, *n.* எலும்புக் கிடங்கு, கல்லறை எலும்பு களைக் கொட்டும் இடம்.

Char'on, *n.* கிரேக்க பழங்கதைகளில் கீழுலக ஓடக்காரன், இறந்தவர்களின் ஆவிகள் எரியுலக ஆற்றினைக் கடக்க உதவும் படகோட்டி.

char'pie, *n.* காயங்களைக் கட்டப் பயன்படும் மென் பஞ்சுத் துணிப்பட்டை.

char'poy, (இ.) *n.* எளிய கட்டில், சித்திரப் பூவேலை செய்த படுக்கை.

char'qui, *n.* வற்றவிட்ட மாட்டிறைச்சிக் கீற்று.

charr'y, *a.* கரி சார்ந்த ; கரியைப்போன்ற.

chars, *n. pl.* வீட்டு வேலைகள்.

chart, *n.* மாதிரிப்படம் ; கடல் பரப்பு விவர விளக்கப்படம் ; புள்ளி விவர விளக்கக் காட்சிப்படம் ; விளக்க அட்டவணை ; *v.* விளக்க வரைப்படம் அமை.

char'ta, *n.* பட்டயம், உரிமைப்பத்திரம்.

charta'ceous, *a.* தாளுக்குரிய ; காகிதம் போன்ற.

chart'er, *n.* பட்டயம், தனியுரிமைப் பத்திரம் ; நகர ஆட்சி உரிமையாவணம் ; சிறப்புரிமைச் சான்று, சலுகை உரிமைச் சீட்டு ; சலுகை ; விலக்கு, விடுபாடு ; *v.* பத்திரத்தால் நிலை பெறச்செய் ; ஒப்பந்தமூலம் வாடகைக்கு விடு ; தனி உரிமையளி.

chart'ered, *a.* பட்டயம் பெற்ற ; ஆவணமுடைய ; தனி உரிமை வாய்ந்த ; சலுகை பெற்ற ; வாடகைக்கு விடப்பட்ட ; (தொ.) chartered accountant, உரிமைக் கணக்காளர் ; chartered company, அரசுரிமை பெற்று நடத்தப்படும் வணிகச் சங்கம்.

Chart'erhouse, *n.* பழைய மடத்து மனையில் நிறுவப் பட்டுள்ள லண்டன் ஏழை விடுதியின் பெயர் ; லண்டன் மருத்துவ மனையின் பெயர் ; லண்டன் பள்ளியின் பெயர்.

char'ter-mem'ber, *n.* தொடக்கத்திலிருந்து நிலைபெறும் உறுப்பினர்.

chart'er-party, *n.* கப்பலுரிமையாளர் - வணிகர் ஆகிய வரிடையே முற்றுவிக்கப் பெறும் கப்பல் வாடகை ஒப்பந்தம்.

chart'house, *n.* கப்பலில் கடல்நெறி செய்தி விளக்க வரைப் படங்கள் வைக்கப்படும் அறை.

Chart'ism, *n.* (வர.) இங்கிலாந்தில் 1838-இல் நடைபெற்ற பேருரிமைக் கிளர்ச்சியியக்கம் ; *a.* பேருரிமைக் கிளர்ச்சி இயக்கம் சார்ந்த.

chart'less, *a.* கடல் நெறி விளக்கப்படங்கள் இல்லாத ; செய்தி விளக்கக் குறியீட்டுப் படமற்ற.

chartog'raphy, *n.* நிலப்படம் அமைத்தல்.

chartreuse', *n.* பிரஞ்சு நாட்டில் உள்ள துறவி மடம் ; தூய புருனே (St. Bruno) என்பவரால் ஆயிரத்து எண்பத்தாரும் ஆண்டு நிறுவப்பெற்ற கார்த்தூசிய துறவிகள் பிரிவின் மடம் ; மணம் ஊட்டப்பெற்ற இன்தேறல் வகை ; மணி மெருகிடப்பட்ட மட்பாண்ட வகை ; சோற்றுத் திரள் ; வெளிறிய பச்சை வண்ணம்.

chartreux', *n.* கார்த்தூசிய துறவி (Carthusian) ; கார்த் தூசிய துறவிகள் மடத்தினைச் சார்ந்த மனையில் கட்டப் பட்ட பள்ளிக்கூடம்.

chart'room, *n.* = charthouse.

chart'ulary, *n.* மடத்துப் பதிவேடு ; பதிவுக்கட்டுகளைப் பத்திரமாக வைப்பவர் ; பதிவேடு வைக்கும் இடம்.

char'woman, *n.* வீடு பெருக்கும் பணிப்பெண், முரட்டு வேலைகளைச் செய்யும் வீட்டு வேலைக்காரி.

cha'ry, *a.* எச்சரிக்கையாயிருக்கிற ; கஞ்சத்தனமான, கொடுக்கத் தயங்குகிற.

Charyb'dis, *n.* கிரேக்க பழங்கதையில் ஆறுதலைகள் கொண்ட பேருருவ விலங்கு ; சிசிலித் (Sicily) தீவு அருகிலுள்ள கடற் சுழி.

chase[1], *n.* பின் தொடர்கை ; வேட்டை ; வேட்டையாடுதல் ; வேட்டை விலங்கு, வேட்டையாடப்படும் விலங்கு இனம் ; துரத்தப்பட்ட கப்பல் ; ஆட்டக்களரி, பந்தய ஆட்டவெளி ; வரிப்பந்தாட்டப் பந்தடி வகை ; *v.* பின்பற்றி ஓடு, பின் தொடர்ந்துசெல் ; வேட்டையாடு ; துரத்து ; வெருண்டோடச் செய் ; (தொ.) beasts of chase, உணவுக்குரிய வேட்டை விலங்கு ; வேட்டைக்குரிய காட்டு விலங்கு ; give chase, பின்தொடர்ந்து வேட்டையாடு ; துரத்திச்செல் ; the chase, வேட்டைக் களியாட்டம் ; wild-goose chase, திட்டமற்ற ஓட்டசாட்டம், பயனிலா வேட்டை ; பயனில் ஆரவார முயற்சி.

chase[2], *n.* துப்பாக்கியின் குழற்புறப் பகுதி ; குழாய் வைப் பதற்குரிய குழிவுத் தளம்.

chase[3], *n.* அச்செழுத்துக்களைப் பிணைத்துப் பிடிக்கும் இரும்புச் சட்டம், உருப்பள்ளம்.

chase[4], *v.* சுற்றிப் பதிக்க வை ; புடைப்புருப் பதிய வை ; செதுக்கு ; செதுக்கி அழகு செய்.

chase'-port, *n.* துரத்தி அல்லது துரத்தப்பட்டு ஓடும்பொழுது துப்பாக்கி வைத்துச் சுடுவதற்கான கப்பல் பக்கத்திலுள்ள புழை வாய்.

chas'er[1], *n.* பின்தொடர்பவர் ; வேட்டைக்காரர் ; தடை தாண்டிப் பந்தயக் குதிரை ; எதிரி விமானத்தைத் தொடர்ந்து துரத்திச் செல்லும் வேட்ட வானூர்தி ; ஆடவர்களை விடாது பற்றித் தொடரும் மாது ; வெறியார் குடிக்குப்பின் அருந்தும் குளிர்ந்த குடி வகை ; சிறு தேறலின்பின் உட்கொள்ளப்படும் குடி வகை.

chas'er[2], *n.* செதுக்கு வேலைக்காரர் ; செதுக்குக் கருவி.

chas'ing, *n.* செதுக்குக் கலை ; மரை-திருகாணியின் இழைகளை வெட்டும் கலை.

cha'sm, *n.* ஆழ் கெவி, கசம், பாழ்ங்கிடங்கு ; எல்லையற்ற பாழ்வெளி ; பெரும் பிளவு, வெடிப்பு ; எட்டிப் பிடிக்க முடியாத வேறுபாடு.

cha'smed, *a.* பெரும் பிளப்புக்களையுடைய.

chasmog'amy, *n.* (தாவ.) அயல் பூந்தாது ஏற்பதற்கு இசைவாகத் திறந்த மலர்களைக் கொண்டிருக்கும் நிலை.

cha'smy, *a.* ஆழ்ந்தகன்ற ; ஆழ்கெவி போன்ற ; விடருடைய, பெரும் பிளவுகள் கொண்ட ; பாழ் வெளியான.

chasse[1], (பிர.) *n.* கடனத்தில் சறுக்குவது போன்று அடியெடுத்துவைத்தல், சறுக்கடி ; *v.* கடனத்தில் சறுக்கடி எடுத்து வை.

chasse[2], ***chasse-cafe***, (பிர.) *n.* காப்பி அருந்தியபின் உட்கொள்ளுதற்குரிய மணம் ஊட்டப்பெற்ற இன்மது வகை.

chassepot, (பிர.) *n.* 1866-ஆம் ஆண்டில் பிரஞ்சு நாட்டு இராணுவம் பயன்படுத்திய சுழல் துப்பாக்கி வகை.

chasseur, (பிர.) *n.* வேட்டைக்காரர் ; பிரஞ்சுப் படையின் பொறுக்கி யெடுக்கப்பட்ட காலாள் வீரர் ; பொறுக்கியெடுக்கப்பட்ட குதிரை வீரர் ; பணிச் சின்னமுடைய ஏவலாள்.

chass'is, *n.* பொறி வண்டியின் அடிச்சட்டம் ; பிரங்கி வண்டியின் அடித்தளம் ; விமானம் வந்திறங்கும் வண்டிக் கூண்டு ; *pl.* chass'is.

chaste, *a.* கற்புடைய ; வழுவாத, சட்டவரம்பு மீறுத ; அடக்க ஒடுக்கமுடைய, பண்பு நயமுடைய ; தூய்மையான ; கன்னி நலமுடைய ; கற்புநெறி வழாத ; குற்றமற்ற ; வாக்கு நாணயமான ; தன்னடக்கமுடைய ; இயலெளிமை வாய்ந்த, பகட்டற்ற.

cha'sten, *v.* தண்டித்துத் திருத்து ; தண்டி, கண்டி ; தூய்மைப் படுத்து ; பண்புடையதாக்கு ; படிமானம் பண்ணு ; மட்டுப் படுத்து ; பணியச் செய் ; அடக்கு.

cha'stener, *n.* தண்டித்து குற்றம் களைபவர் ; தூய்மை செய்பவர் ; தண்டித்து அடக்குபவர் ; கண்டிப்பவர்.

chaste'ness, *n.* கற்புடைமை ; தூய்மை ; பகட்டற்ற நிலை.

chas'tenment, *n.* தூய்மைப் படுத்தும் செயல் ; தண்டனை.

chastis'able, *a.* தண்டித்துத் திருத்தக்கூடிய ; அடித்து அடக்கத்தக்க.

chastise', *v.* திருத்துவதற்காகத் தண்டி ; கண்டி, கடிந்து கொள் ; ஒழுங்கிற்குக் கொண்டுவா ; படிய வை ; பணிய வை.

chas'tisement, *n.* தண்டனை ; கண்டனம் ; கண்டித்துத் திருத்துதல் ; ஒறுப்பு ; கண்டிப்பு ; கண்டனக் கருவி ; கண்டன விழாவு.

chas'tity, *n.* தன்னடக்கம், தற்கட்டுப்பாடு ; கற்புடைமை ; கன்னித் தன்மை ; தூய்மை ; பண்புயர்வு ; நடுநிலைமை ; எளிமை நயம்.

chas'uble, *n.* கடையுஞ் வழிபாட்டின்போது கிறித்தவக் குருமார் அணியும் கையற்ற புற ஆடைவகை.

chat[1], *n.* இன்னுரையாடல் ; *v.* அளவளாவி உரையாடு.

chat[2], *n.* குயிலினம் உள்ளிட்ட சிறு பறவை வகை.

chateau, (பிர.) *n.* அரண், மாளிகை ; கோட்டை வீடு ; நாட்டுப் புற மாளிகை ; *pl.* *chateaux*.

chat'elain, *n.* மாளிகைத் தலைவன் ; கோட்டை முதல்வன்.

chat'elaine, *n.* மாளிகை முதல்வி ; அரைக்கச்சையில் கத்தி முதலியன தொங்கவிடுவதற்குரிய வளையம் ; கைக்கடிகாரச் சங்கிலியின் சிங்கார வளையம்.

chaton', *n.* மோதிர முகப்பு.

chatoy'ant, *a.* இருளில் பூனைக்கண் போன்று மாறுபடும் ஒளியையுடைய.

chatt'el, *n.* புடைபெயர்பு உடைமை, இயங்குடைமைப் பொருள் ; தளவாடம், தட்டுமுட்டுப் பொருள்கள் ; (தொ.) goods and chattels, கொண்டுசெல்லத்தக்க உடைமைப் பொருள்கள் ; chattel mortgage, அடகுவைப்பு, இயங்குடைமை ஈடுவைப்பு.

chatt'er, *n.* நெறுநெறெனும் அரவம், பற்களைக் கடித்தலால் உண்டாகும் ஒலி ; சலசலப்பு ; மாக்பை (magpie) எனும் பறவையின் ஒலி ; பயனில் பேச்சு ; *v.* தொடர்ந்து பறவை ஒலி எழுப்பு ; குளிரில் பல் நறநறவென ஒலிப்பது போல்செய் ; பயனின்றிப்பேசு ; கடகடவெனப்பேசு.

chatt'erbox, *n.* தொணதொணவெனப் பேசுபவர், அலப்பு வாயர் ; வாயாடிக் குழந்தை.

chatt'erer, *n.* கடகடவெனப் பேசுபவர் ; பயனில் சொல் பேசுவோர், வாயாடி ; பறவை வகை.

chatt'ering, *n.* பறவை ஒலிபோல ஒலிசெய்தல் ; வாயலப்பல்.

chatt'iness, *n.* அளவளாவிப் பேசும் பண்பு ; வம்பளப்பு, வெற்றுரையாட்டு.

chatt'y[1], *a.* இன்னுரையாடல் பண்புடைய ; வம்பளக்கிற ; கதைபேசும் விருப்புடைய.

chatt'y[2], (த.) *n.* சட்டி, நீர்க்கலம்.

chaud-froid, (பிர.) *n.* பாகில் அல்லது காரக்குழம்பிலிட்டுக் குளிர்பதப்படுத்தப்பட்ட துண்டுக் கோழிக்கறி.

chauff'er, *n.* நெருப்பு வைக்கும் உலோகக் குடுவை ; கணப்புப் பெட்டி ; தூக்கு கணப்புக்கலம்.

chauff'eur, chauffeur', *n.* உந்துவண்டி ஓட்டி ; மோட்டார் ஓட்டி.

chauffeuse', *n.* மோட்டார் ஓட்டுபவள் ; உந்துவண்டி ஓட்டுபவள்.

chaulmoo'gra, chaulmu'gra, *n.* எண்ணெய்விதை தரும் மரவகை ; (தொ.) chaulmoogra oil, தொழுநோய் சிகிச்சைக்குப் பயன்படும் எண்ணெய்.

chaumontel', *n.* பெரிய பேரியினக்காய் வகை.

chau'sses, *n. pl.* காலோடு இணைந்த நீள் உறை ; நீள் காலுறை ; பண்டைய போர்க்கவசத்தில் கால் மூடும் பகுதி.

chaussure', *n.* புதையடிப் பொதுப் பெயர்.

chauv'inism, *n.* குறுகிய வெறிகொண்ட நாட்டுப்பற்று ; பிறநாட்டுப் பழிப்பு.

chauv'inist, *n.* அளவுமீறிக் குறுகிய நாட்டுப் பற்றுடையவர்.

chauvinis'tic, *a.* மட்டுமீறித் தன்னுட்டுப் பற்றுடைய; பிறநாட்டைப் பழிக்கிற.

chaw, *n.* வாயிலிட்டு மெல்லும் அளவு; புகையிலை நறுக்கு; *v.* மெல்லு; குதப்பு; (தொ.) chaw up, நன்கு முறியடி.

chaw'-ba'con, *n.* பட்டிக்காட்டுக் கோமாளி, பாங்கறியா நாட்டுப்புறத்தான்.

chawl, *n.* தொழிலாளர் குச்சுத் தொகுதி.

chay, chay'a, *n.* சாயவேர், சிவப்புச் சாயம் செய்ய உதவும் வேரினை உடைய செடி வகை.

cheap, *a.* மலிவான, விலை குறைந்த, நயவிலையில் விற்பனை செய்கிற; குறைந்த விலையில் கிடைக்கிற; மதிப்பை நோக்குமிடத்து விலை குறைவான; எளிதாகக் கிடைக்கிற; பயனற்ற; சிறு மதிப்புள்ள; சிறு மதிப்பிட்டுக் கணக்கிடப் படுகிற; இழிவான; கீழ்த்தரமான; பொருட்படுத்த வேண்டாத; புதுமையற்ற; கவர்ச்சியற்ற; *adv.* மலிவாக, எளிதாக; (தொ.) cheap and nasty, விலையில் தாழ்ந்து தரத்திலும் இழிந்ததான; Cheap Jack, Cheap John, பண்டங்களை விலைகூறித் திரிபவர்; dirt cheap, கொள்ளை மலிவாக; feel cheap, தாழ்வு மனப்பான்மை கொண்டிரு; on the cheap, விலை மலிவாக; நயமாக.

cheap'en, *v.* விலைகுறை, மலிவாக்கு; விலைமலிவாகு; மதிப்புக் குறை; விலைகேள்.

cheap'ly, *adv.* சிறுவிலையில்; மிகுதி செலவின்றி; எளிதாக.

cheat, *n.* சூது, மோசடி; வஞ்சிப்பவர், ஏமாற்றுகிறவர், மோசம் செய்பவர்; கண்டுபிடிக்கப்படாமல் ஏமாற்று வதற்கான உரிமையுள்ள சீட்டாட்ட வகை; *v.* ஏமாற்று, மோசம் செய், வஞ்சி; இழக்கச்செய்; போக்குக்காட்டு, கழி, கடத்து; இரண்டகமாக நட, நம்பவைத்து ஏமாறச்செய்; (தொ.) put a cheat upon, மோசடி செய்.

check [1], *n.* தடை; தடுத்து நிறுத்தும் பொருள்; தடுப்பமைவு; தடுப்பு நடவடிக்கை; இடைத் தடங்கல்; இடர்ப்பாடு; முறிவு, தோல்வி; சதுரங்க ஆட்டத்தில் ஒருபுற ஆட்டக்காரருடைய "மன்னர்" தாக்கப்படும் தறுவாயிலுள்ள நெருக்கடி நிலை; வேட்டை நாய் மோப்பத்தடை; பட்டியல்களின் இனங்களுக் கெதிரே இடப்படும் அடையாளக்குறி; கட்டுப்பாடு; சரி பார்த்தல், கணக்குச் சரியீட்டு முறை; எதிரிடைச்சீட்டு; பொருளகத்தில் பணம் பெறுபவர்க்குரிய அடையாளச் சின்னம்; நாடக-திரைப்படக் கொட்டகைகளில் வெளிச் செல்பவர்கள் பெறும் அடையாளச் சீட்டு; சீட்டாட்டங்களில் பணத்தின் குறியீடாகப் பயன்படுத்தப்படும் அடையாள வில்லை; சிற்றுண்டிச்சாலைச் செலவுப் பட்டியல்; இசைப் பெட்டியில் சம்மட்டி இரண்டாம் முறை அடிக்காதபடி தடுத்து நிறுத்தும் பொறி அமைப்பு; *v.* தடு, அடக்கு; தடங்கலுண்டாக்கு; கட்டுப்படுத்து; வேகம் தடு, நிறுத்து; சதுரங்க ஆட்டத்தில் எதிரியின் "மன்னரைக்" கட்டப் போவதாக அச்சுறுத்து; ஒன்றன் இயக்கத்தைத் திடீரென நிறுத்து; வேட்டை நாய் வகையில் வேட்டை விலங்குகளின் மோப்பம் அற்றுப்போவதனால் நின்று போ; படைத்துறை மேலிடத்திலிருந்து குற்றங் காண், கண்டி; ஒப்பிட்டுச் சரிபார்; தணிக்கை செய், சரியா என்று நன்கு ஆராய்; சீட்டுத் துணையிடு; பறவை வேட்டையில் துரத்தப்பட்ட பறவையை விடுத்து வேறு பறவையைத் துரத்தி வேட்டை யாடு; தற்காலிக சேமக்காப்புக்காக பிணைய முறிமீது பெறு; பிணையமுறிமீது கொடுத்து வை; *int.* சதுரங்க ஆட்டத்தில் எதிர் ஆட்டக்காரரின் "மன்னர்" நெருக்கடி பற்றிய எச்சரிக்கை விளி; (தொ.) check in, பணி செய்பவரின் வருகை பதிவு செய்; check out, பணி செய்பவர் வெளிச் சென்றதைப் பதிவு செய்.

check [2], *n.* சதுரங்கப் பலகையின் கட்டங்கட்டமான அமைவு; குறுக்கு நெடுக்கு வரைச்சட்டம் உடைய துணி; *a.* கட்டங் கட்டமான அமைவுடைய, குறுக்கு நெடுக்கு வரைச்சட்ட முடைய; *v.* குறுக்கு நெடுக்கு வரைகளிட்டுக் கட்டம் அமை.

check [3], *n.* = cheque.

check'-action, *n.* இசைப் பெட்டியில் சம்மட்டி இரண்டாம் முறை அடிக்காதவாறு பொறியமைப்புமூலம் தடுத்து நிறுத்துதல்.

check'-clerk, *n.* கணக்கு முதலியவற்றைச் சரிபார்க்கும் எழுத்தர்.

check'er [1], *n.* தடங்கல் செய்பவர்; கண்டிப்பவர்; நுழைந் தாய்பவர்.

check'er [2], *n.* மாறிமாறி வரும் வண்ணக் கட்டங்களின் அமைப்பு; *v.* மாறிமாறி வரும் நிறங்கள் கொண்ட சதுரங் களாக அமை; பன்னிறமாக்கு; பல்வகைப் பெருக்கமூட்டு; ஒரு சீரான தன்மையை மாற்று; இடையிட்டுத் தடு.

check'er-board, *n.* பல்வண்ணக் கட்டங்கள் வாய்ந்த ஆட்டப்பலகை.

check'ered, *a.* மாறிமாறிவரும் பல்வண்ணக் கட்டங்களைக் கொண்ட; பல் சீரான; நன்மை தீமைகள் விரவி நிரம்பிய.

check'ers, *n. pl.* 64 சதுரக்கட்டங்கள் போட்ட பலகையில் ஆளுக்கு 12 கழங்குகளை வைத்துக் கொண்டு இருவர் ஆடும் விளையாட்டு; மாறுபட்ட பல்வண்ணக் கட்டப்படிவம்.

check'-key, *n.* கதவின் விசைத்தாழிை வெளியேயிருந்து தளர்த்தித் திறக்கும் திறவுகோல்.

check'-list, *n.* சரிபார்ப்பதற்கான பட்டியல்.

checkmate', *n.* சதுரங்க ஆட்டத்தில் "மன்னர்" தப்பிச் செல்ல வழியின்றிக் கட்டுண்டுக் கிடத்தல்; முடிவான தோல்வி; *v.* சதுரங்க ஆட்டத்தில் எதிரியின் "மன்னரை"த் தப்பிச் செல்ல வழியின்றிக் கட்டிப்போடு; தோல்வியுறச்செய், ஒருவர் முயற்சியை வீணுக்கு; *int.* சதுரங்க ஆட்டம் வகையில் எதிரி பக்க "மன்னர்" தப்ப வழியில்லையென்ற அறிவிப்பு விளி.

check'-nut, *n.* தடுப்பு மரை, மரை கழன்று போகாதவாறு அதன்மேல் இறுக்கமாகத் திருகப்படும் மற்றோர் அமைவு.

check'-rein, *n.* குதிரை தலைகுனியாதபடி செய்யும் கடிவாள வார்; குதிரையின் கடிவாளத்தை அடுத்த குதிரையின் வாய் முள்ளுடன் இணைக்கும் வார்.

check'-string, *n.* வண்டியை நிறுத்துமாறு வலவனுக்குப் பிரயாணி உணர்த்துவதற்குரிய அமைவின் கயிறு.

check'-tak'er, *n.* கொட்டகை அடையாளச் சின்னம் திருப்பி வாங்குபவர்.

check'-till, *n.* கடைகளில் பெற்றுக்கொள்ளப்படும் தொகை களைப் பதிவு செய்வதற்கான அறைப்பெட்டி.

check'-up, *n.* சோதிப்பதற்கான நுண்ணாய்வு.

check'-weigh'er, *n.* சுரங்க வாயிலில் நிலக்கரியின் எடை யைச் சரிபார்ப்பவர்.

Chedd'ar, *n.* பாலடைக்கட்டி வகை; (தொ.) Cheddar pink, இளஞ்சிவப்பு நறுமணமலர்களையுடைய ஐரோப்பியச் செடி வகை.

chedd'ite, *n.* ஆற்றல் மிக்க வெடிமருந்து வகை.

cheek, *n.* கன்னம், கதுப்பு; (பே.வ.) துடுக்குத்தனம், நாணமில் நடத்தை; மட்டு மீறிய தன்னம்பிக்கை; கதவு-பலகணிகளின் பக்க நிலைக்கால்; குதிரைச் சேணத்தில் கன் னத்தை அடுத்த தோல் வார்; குறட்டின் பக்கக்கை; இயந் திரத்தின் சிறையலகு; கடிவாளத்தின் முனையிலுள்ள வளையம்; *v.* துடுக்குத்தனமாகப் பேசு; (தொ.) cheek by jowl, அரு கருகே, பக்கத்துக்குப் பக்கமாக; நெருங்கிய தோழமையுடன்.

cheek'-bone, *n.* கன்ன எலும்பு.

cheek'iness, *n.* திண்ணக்கம், திமிர்.

cheek'-pouch, *n.* தாடைப்பை, குரங்கினது போன்ற கன்னத்தின் தொங்கு சதை.

cheek'-tooth, *n.* பின்கடைவாய்ப் பல்.

cheek'y, *a.* துடுக்குத்தனமான; ஆணவமான.

cheep, *n.* பறவைக்குஞ்சு கீச்சிடும் ஒலி; *v.* பறவைக் குஞ்சு போல் கீச்சிடு.

cheep'er, *n.* கீச்சிடும் பறவைக் குஞ்சு; கவுதாரிக் குஞ்சு.

cheer, *n.* மகிழ்ச்சி ; மனநிலை ; ஊக்குரை, மகிழ்ச்சிக்குரல் ; பாராட்டொலி ; முகமனுரை ; வரவேற்பு ; அன்பாதரவு ; விருந்துணவு ; *v.* மகிழ்வி, கிளர்ச்சியூட்டு ; ஊக்கு ; ஊக்கொலி எழுப்பு ; மகிழ்ந்தார்ப்பரி ; பாராட்டு ; களிகொள் ; ஆறுதல்கொள் ; (தொ.) cheer up, மகிழ்வூட்டு; கிளர்ச்சி கொள்.

cheer'ful, *a.* மனநிறைவோடு கூடிய, மனமகிழ்வோடிருக்கிற; கல்லார்வம் கொண்டுள்ள ; எழுச்சி தருகிற ; இன்பமான ; விருப்பமுள்ள, இணங்கும் மனப்பாங்குடைய; இன்முகமான.

cheer'ily, *adv.* இன்ப மனஎழுச்சியுடன்.

cheer'iness, *n.* முகமலர்ச்சி.

cheer'io, *int.* உனக்கு நன்மை உண்டாகட்டும் ! மகிழ்ச்சியோடு போய் வா !

cheer'less, *a.* எழுச்சியற்ற, துயரம் நிரம்பிய.

cheer'lessness, *n.* மனவாட்டம்.

cheer'ly, *a.* முகமலர்ச்சியான ; *adv.* (கப்.) மனமார ; மகிழ்வுடன்.

cheer'y, *a.* கிளர்ச்சியுடைய, இன்முகங்கொண்ட ; மகிழ்ச்சியூட்டுகிற.

cheese, *n.* உறைபாலேடு, பாலடைக்கட்டி ; அழுத்தப்பட்ட அப்பவகை ; காட்டுச் செடிவகையின் கனி; நவதாய ஆட்டத்தில் பயன்படும் தட்டையான மரப்பக்து ; (தொ.) green cheese, உலராத பாலடைக்கட்டி ; make cheeses, பள்ளிச் சிறுமிகள் வகையில் பாவாடை விளிம்புக்குள் காற்று புகுந்து உப்பலாய்த் தோன்றும்படி வேகமாகச் சுழன்று கதுமெனக் கீழே உட்கார்.

cheese'-cake, *n.* மாப்பணியார வகை.

cheese'-cloth, *n.* பாலடையை அழுத்துவதற்குத் தக்கவாறு தளர்த்தியாக நெய்யப்பட்ட துணி.

cheese'-cutter, *n.* பாலடைக்கட்டியை வெட்டுவதற்கேற்ப அகன்று வளைந்த அலகினையுடைய கருவி ; சதுர உச்சியினையுடைய தொப்பி.

cheese'-fly, *n.* இரண்டு சிறகுகளையுடைய கறுப்புப்பூச்சி வகை.

cheese'-hopper, *n.* பாலடையில் காணப்படும் ஈயினப் பூச்சி வகையின் முட்டைப் புழு.

cheese'-mite, *n.* பாலடைக்கட்டியை மொய்க்கும் வெள்ளை நுண் பூச்சிவகை.

cheese'-monger, *n.* பாலடைக்கட்டியில் சிறு வாணிகம் செய்பவர்.

cheese'-paring, *n.* மிக மெலிந்தவர் ; கஞ்சத்தனம் ; *a.* கஞ்சத்தனமான ; ஈனத்தனமான.

cheese'-parings, *n. pl.* பயனற்ற எச்சமிச்சங்கள்.

cheese'-press, *n.* பாலடைக்கட்டிக்காகத் தயிரை அழுத்திச் செறிவாக்குவதற்குரிய இயந்திரம்.

cheese'-renn'et, *n.* உறையூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் செடிவகை.

cheese'-scoop, *n.* = cheese-taster.

cheese'-straw, *n.* பால் ஏட்டினால் மணம் ஊட்டப்பெறும் நீண்ட மெல்லிய மாப்பண்ட வகை.

cheese'-taster, *n.* பாலடைக்கட்டியின் உட்புறத்திலிருந்து மாதிரிக்காகக் கொஞ்சம் எடுப்பதற்கான கருவி.

cheese'-vat, *n.* தயிரைச் செறிவாக்கி அழுத்துவதற்குப் பயன்படும் மரத்தொட்டி.

cheese'-wring, *n.* = cheese-press.

chees'iness, *n.* பாலடைக்கட்டியின் சுவைபெற்றிருத்தல் ; பாலடைக் கட்டி போன்றிருத்தல்.

chees'y, *a.* பாலடைக்கட்டி போன்ற ; பாலடைக்கட்டியின் சுவையுள்ள.

cheet'ah, *n.* சிறுத்தைப்புலி வகை.

cheewink', *n.* சிவப்புக்கண்களையுடைய வட அமெரிக்கப் பறவைவகை.

chef*, *chef de cuisine, (பிர.) *n.* தலைமைச் சமையற்காரன் ; தலைவடிவமான பண்டை நினைவுச் சின்னங்களின் கொள்கலம்.

chef-d' oeuvre, (பிர.) *n.* தலை சிறந்த படைப்பு, ஒருவரது மிகச்சிறந்த நூல் முதலியவை ; *pl. chefs-d' oeuvre.*

cheirog'nomy, *n.* கைவரை ஆய்கலை, இரேகை சாத்திரம்.

cheirog'raphist, *n.* கையெழுத்து வல்லுநர்.

cheirog'raphy, *n.* கையெழுத்து ; எழுத்துத்திறன், கையெழுத்துப் பாங்கு ; எழுத்தாண்மை.

cheirol'ogist, *n.* கைகளின் இயல்புகளை ஆய்பவர் ; சைகை ஆய்வியலார்.

cheirol'ogy, *n.* கை பற்றிய ஆய்வு ; சைகை பற்றிய நூல்.

chei'romancy, *n.* கைவரை ஆய்வியல், கை பார்த்துக் குறி சொல்லும் கலை.

cheiromant'ic, cheiromant'ical, *a.* கைவரைக் குறி நூலுக்குரிய, கைபார்த்துக் குறிசொல்லும் கலை பற்றிய.

cheiron'omer, *n.* அவிநயக்காரன், சைகையாளர்.

cheironom'ic, *a.* அவிநயக் கலைக்குரிய, கைச்சாடை சார்ந்த; ஊமைக்கூத்துக்குரிய.

cheiron'omy, *n.* அவிநயக்கலை, ஊமைக்கூத்து.

Cheirop'teran, *n.* வெளவால் இனப்பறவை ; *pl.* Cheirop'tera.

cheirop'terous, *a.* வெளவால் இனப் பறவைகளுக்குரிய.

chek'a, *n.* 1917 முதல் 1922 வரையிலிருந்த ருசிய காவல்துறை; ருசிய வேவுத்துறை.

chel'a [1], *n.* சீடன், பௌத்த சமயத்தில் புதிதாய்ப் புகுந்தவன்.

chel'a [2], *n.* நண்டு-தேள் போன்ற உயிரினங்களின் கொடுக்கு; *pl.* chel'ae.

chel'ate, *a.* பிடிக்கும் நகங்கள் போன்ற ; கொடுக்கினையுடைய.

chelic'era, *n.* சிலந்திப் பேரினப்பூச்சி வகைகளில் முன்புறத்திலுள்ள கடிக்கும் உறுப்பு.

Che'lifer, *n.* புத்தகப்பூச்சி வகை, புத்தகத் தேள்.

Chell'ean, *a.* (தொல்.) பிரான்சில் உள்ள செல்லிஸ் (Chelles) என்னுமிடத்தில் காணப்படும் எச்சமிச்சங்களைக்கொண்டு அறியப்படும் பழங்கற்காலப் பகுதிக்குரிய.

chelo'nian, *n.* ஆமை இனம் ; *a.* ஆமை இனத்துக்குரிய.

Chel'sea, *n.* லண்டன் நகரப்பகுதி ; (தொ.) Chelsea bun, உலர்த்திய கொடிமுந்திரிப் பழங்கள் இட்டுச்செய்யப்பட்ட பொங்கப்ப வகை ; Chelsea pensioner, வயது முதிர்ந்த அல்லது தளர்வுற்ற வீரர்களுக்கான செல்சி (இங்கிலாந்து) அரச மருந்தகத்தில் உள்ளவர் ; Chelsea ware, 18-ஆம் நூற்றாண்டில் செல்சியில் செய்யப்பட்ட பீங்கான் கலங்கள்.

Chelton'ian, *n.* செல்டன்ஹாம் (Cheltenham) கல்லூரியினர் ; *a.* செல்டன்ஹாம் கல்லூரிக்குரிய.

chemiat'ric, *a.* வேதியியல் மருத்துவஞ்சார்ந்த.

chem'ic, *n.* வண்ணக்காரம், நிறம்போக்கி வெண்மையாக்கும் தூள் ; *v.* வெண்மையாக்கும் பொடிகலந்த நீர்மங்கொண்டு செயற்பட வை.

chem'ical, *n.* வேதியியல் முறையில் பெறப்பட்ட பொருள் ; வேதியியல் செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் பொருள் ; *a.* வேதியியலுக்குரிய, இயைபியலுக்குரிய ; வேதியியல் சார்ந்த ; வேதியியலாலான ; வேதியியல் நன்குணர்ந்த ; வேதியியல் கற்று வருகிற ; (தொ.) chemical affinity, வேதி நாட்டம், வேதி ஈர்ப்பு, இயைபுக் கவர்ச்சி ; chemical engineering, வேதியியல் சார்பான தொழிற்சாலைக்கும் பொறிக்கும் உரிய அமைப்பாண்மை முறை.

chem'ically, *adv.* வேதியியல் கோட்பாடுகளுக்குத் தக ; வேதியியல் வல்லுநர் நோக்கின்படி ; வேதியியல் செயல் முறையினால்.

chemin de fer, (பிர.) *n.* சூதாட்டச் சீட்டு வகை.

chemise', *n.* பெண்கள் அணியும் உட்சட்டை.

chemisette', *n.* உட்கச்சுப் போலிறங்கிய பெண்டிர் கச்சு வகை; சட்டையினுல் மூடப்படாத பெண்களின் உட்கழுத்தை அணி செய்யும் பூ வேலை.

chem'ist, *n.* வேதியியல் வல்லுநர்; மருந்து சரக்குகள் செய்பவர்; மருந்து கலந்து கொடுப்பவர்; மருந்துக்கடைக் காரர்; (தொ.) chemist and druggist, மருந்து செய்து கொடுப்பவராகத் தம்மைத் தகுதியுடைவராக்கும் கீழ்படித் தேர்வில் தேறியவர்; pharmaceutical chemist, மருந்து கலக்கிக் கொடுப்பவராகத் தம்மைத் தகுதியுடையவராக்கும் மேல்படித் தேர்வில் தேறியவர்.

chem'istry, *n.* வேதியியல், பொருளியைபாராயும் நூல் துறை; (தொ.) applied chemistry, practical chemistry, பயன்முறை வேதியியல்.

chem'itype, *n.* செதுக்கு வேலையினின்றும் படிவங்களைப் பெறுவதற்கான வேதியியல் செயன்முறை.

chemopsychi'atry, *n.* மருந்துமூலம் மனநோய் குணப் படுத்தும் முறை.

chemotax'is, *n.* (தாவ., வில.) வேதியியல் தூண்டுதலுக் கிணங்க குறிப்பிட்ட திசையில் உயிரி முழுமையாகப் பெயர்ந்து செல்லும் இயக்கம்.

chemotherapeu'tics, chemother'apy, *n.* (மரு.) நோய் உண்டாக்கும் நுண்மங்களை அழிக்குந் திறனுள்ள வேதியியல் சேர்மத்தைக்கொண்டு நோய் குணப்படுத்தும் முறை.

chemot'ropism, *n.* (தாவ., வில.) வேதித்திருப்பசைவு, வேதியியல் தூண்டுதலுக்கிணங்க வெவ்வேறு அளவில் வளர் வதனுல் திசைத்திருப்பம் ஏற்படுதல்.

chem'urgy, *n.* உழவுத் தொழில் மூலப்பொருள்களைத் தொழி லுக்குப் பயன்படுத்துவது பற்றிய செயல்முறை வேதியியல் பிரிவு.

chenille', *n.* ஆடைகளின் ஓரக்கரை புனையணியாகப் பயன் படும் மென் பட்டிழைக் கச்சை வகை; மென்பட்டு மேசைத் துணி வகை.

chenopodia'ceous, *a.* (தாவ.) அக்காரக் கிழங்குச் செடி யினத்துக் குரிய.

cheque, *n.* காசோலை, பணமுறி, உண்டியல்; (தொ.) blank cheque, தொகை குறிப்பிடாமல் கையெழுத்திடப் பட்ட காசோலை, எல்லையற்ற காசோலை; எல்லையற்ற அதி காரம் செலுத்தும் உரிமை; crossed cheque, பொருளகக் கணக்கு மூலமாகவே பணம் பெறப்படும் கட்டுப்பாட்டின் சின்னமாகக் குறுக்கே இணைகோடிட்ட காசோலை.

cheque'-book, *n.* காசோலை ஏடு, பணமுறிப் படிவங்களை இதழ்களாகக் கொண்ட ஏடு.

cheq'uer, *n.* சதுரங்கப் பலகையில் உள்ளது போல் நிறங்கள் மாறி மாறி வரும் அமைப்பு; சதுரங்க ஆட்டப்பலகை; ஏ. மாறி மாறி வரும் நிறங்களையுடைய கட்டங்கள் அமை; பல் வண்ணப்படுத்து; பலவகைப்படுத்து; ஒரு சீரான தன்மை யைக் குலை; குறுக்கிடு.

cheq'uered, *a.* பல வண்ணமுடைய; பல்வகை வேறு பாடுடைய; சீரமைதிக் குலைவுடைய; மாறி மாறி வரும் இயல்புள்ள; இன்பதுன்பம் கலந்த.

Cheq'uers, *n.* இங்கிலாந்து முதலமைச்சரின் அலுவலக வீடு.

cheq'uers, *n. pl.* பல்வண்ணக் கட்டப்படிவம்; சதுரங்கப் பலகைக்குறி.

cheq'uer-wise, *adv.* சதுரங்கப் பலகை அமைந்துள்ள வகை யாக; மாறி மாறி வெவ்வேறு நிறங்கள் அல்லது தோற்றங் கள் கொண்ட சதுரங்களாக.

cheq'uer-work, *n.* வெவ்வேறு நிறங்களுள்ள சதுரங்கள் மாறி மாறி வரும் அமைப்புடைய வேலைப்பாடு.

cher'alite, *n.* தோரிய யுரேனியங்களின் வளம் நிரம்பிய கதிரியக்கமுடைய கனிப்பொருள் வகை.

che'rish, *v.* பேணு, போற்றி வளர், காத்து ஆதரி, சீராட்டு; பாராட்டு; நெஞ்சார நேசி; பற்றுக்கொள்; நினைவில் பேணு; மதிப்புக் கொள்.

cher'ishment, *n.* போற்றிப் பேணுதல், சீராட்டு, பாராட்டு; ஊக்குதல்.

cheroot' [1], (த.) *n.* சுருட்டு.

cheroot' [2], *n.* சாயவேர், சிவப்புச் சாயந்தரும் வேரையுடைய செடி வகை.

che'rry, *a.* சிறு கொட்டையுடைய சிவந்த கனி வகை; சிவந்த கனிதரும் மரவகை; மரவகையின் கட்டை; *a.* கொவ்வைச் சிவப்பான; (தொ.) make two bites at a cherry, தட்டித் தயங்கு; பயனற்ற வேலை செய்; சிறு காரியங்களில் மட்டின்றி கண்டிப்பாயிரு.

cherr'y-bean, *n.* தட்டைப்பயறு.

che'rry-bob, *n.* இணைந்த காம்புகளையுடைய இரண்டு கனிகள்.

cherr'y-bounce, cherr'y-brandy, *n.* இன் கனிவகை ஊறவைத்த நறுமது வகை.

cherr'y-coal', *n.* மென்பதமுள்ள பளபளக்கும் நிலக்கரி வகை.

cherr'y-lau'rel, *n.* ஐரோப்பிய இலையுதிராப் புதர்ச் செடி வகை.

cherr'y-pepp'er, *n.* மேற்கிந்திய மிளகாய் வகை.

che'rry-pie, *n.* சிறு கொட்டைக் கனிவகைகளைக் கொண்டு செய்யப்படும் மசியல் உணவு வகை; நீல நிறமுள்ள நறிய மலர்ச்செடி வகை.

cherr'y-pit, *n.* சிறு துளைக்குள் கொட்டைகளை எறிந்தாடும் விளையாட்டு வகை.

cherr'y-plum, *n.* நறுஞ்சுவையும் மணமுமுடைய பழ வகை.

cherr'y-stone, *n.* கனிவகையின் கொட்டை.

cher'sonese, *n.* (நில.) தீவக்குறை.

chert, *n.* சக்கிமுக்கிக் கல்போன்ற படிகக் கல் வகை.

chert'y, *a.* படிகக்கல் வகைபோன்ற; படிகக்கல் வகை கலந்துள்ள.

che'rub, *n.* அரமைந்தன், தேவதூதன், சிறகுடைய தெய்வ வடிவம்; யூத இறைவனுடன் தொடர்பு கொண்ட தெய்வதம்; இளங்கொழுமை வாய்ந்த முகத்தையுடைவர்; குழந்தை; சிறகுடைய குழந்தை உரு; அழகுக் குழந்தை; கள்ளங் கபடற்ற குழந்தை; *pl.* cher'ubim, cher'ubs.

cheru'bic, cheru'bical, *a.* தேவதூதன் போன்ற, தெய்விக வனப்புடைய.

cherv'il, *n.* குழம்பு-சாறு முதலியவற்றுற்குப் பயன்படும் தோட்டப் பூண்டு வகை.

Chesh'ire, *n.* இங்கிலாந்திலுள்ள மாவட்டங்களில் ஒன்று; (தொ.) Cheshire cat, இளிச்சவாயன்; grin like a Cheshire cat, பல்லிளி.

ches'il, *n.* கூழாங்கல், சரளைக்கல்; தவிடு, குத்துமி.

chess [1], *n.* சதுரங்க ஆட்டம், அறுபத்து நான்கு கட்டங்கள் இட்ட பலகையில் முப்பத்திரண்டு கவறுகளை வைத்து இருவர் ஆடும் ஆட்டம்.

chess [2], *n.* படகுப் பாலத்தின் தளப் பலகைகளில் ஒன்று.

chess'board, *n.* சதுரங்கப் பலகை; மாறிமாறி வரும் நிறங் களையுடைய கட்ட அமைவு.

chess'el, *n.* பாலடைக்கட்டி செய்வதற்கான அச்சுரு.

chess'man, *n.* கவறு, சதுரங்க ஆட்டக்காய்.

chess'ylite, *n.* செப்பு நிலக்கல், செம்புக்கு இயன்மூலமாயுள்ள கரிகை.

chest, *n.* நெஞ்சு, மார்புக்கூடு, மார்பு; பேழை, பெட்டி; பட்டறைப்பெட்டி; மருந்தறைப் பேழை; இழுப்பறைப் பெட்டி; வாணிகச் சிப்பம்; பேழை அடங்கிய அளவு; கரு வூலம், பணக்குவை; நிதியம்; (தொ.) chest of drawers, படுக்கையறையில் ஆடை வைத்துக் கொள்வற்காக இழுக்கத் தக்க அறைகளுள்ள பெட்டி; get thing off one's chest, (பே-வ.) மனத்திலுள்ளதை வெளிப்படுத்தி மனச்சுமையைக் குறைத்துக்கொள்.

chest'ed, *a.* பெட்டியையுடைய; பேழையில் வைக்கப்பட்ட.

ches'terfield, *n.* நீண்ட புறமேற்சட்டை; மெத்தென்ற பொருள்கள் நிரம்பத் திணிக்கப்பெற்ற அகல் சாய்விருக்கை.

chest'ful, *n.* பெட்டி நிரப்புவதற்குப் போதிய அளவு.

chest'-note, *n.* ஆழ்ந்த பண் இசைக்குரல்.

chest'nut, *n.* மரவகையின் தவிட்டு நிறக்கொட்டை; தவிட்டு நிறக்கொட்டையையுடைய மரவகை; மரவகையின் கட்டை; சுவையற்ற கொடிக்கதை; செந்தவிட்டு நிறம்; செக்கர் நிறக் குதிரை; குதிரைக்கால் புடைப்பு; *a.* செக்கர் நிறமான, செந் தவிட்டு நிறமான.

chest'-protec'tor, *n.* மார்புக்குக் குளிர்காப்பான ஆடை.

chest'-register, chest'-tone, *n.* குறை குரல் பதிவு, குரலின் மிகத்தாழ்ந்த அளவு.

chest'-trouble, *n.* உயிர்ப்பீரல் கோளாறு.

chest'-voice, *n.* = chest-register.

chest'y, *a.* மிக மெல்லிய குரலில் பேசும் இயல்புடைய, தாழ் வாகப் பாடும் இயல்புடைய; (பே-வ.) மார்பு நோய் வந்துள்ள தாகத் தெரிகிற.

cheval'-glass, *n.* செங்குத்தாய் நிற்கும் சட்டங்களில் தங்கி ஊசலாடும் உயரமான நிலைக்கண்ணாடி.

chevalier', *n.* குதிரை வீரன்; வீரத்திருத்தகை; நாகரிகப் பாங்குள்ளவர்; பெண்டிரிடம் மென்னயப் பாங்குடன் பழகும் திறமுடையவர்; (தொ.) Chevalier of industry, எத்தன், மோசக்காரன்; பணவேட்டையாடுபவன்; The Chevalier, Chevalier de St. George, (வர.) முற்கால பிரஞ்சு நாட்டு மன்னர் ஜேம்சு ஸ்டுவர்ட் (James Stuart); The Young Chevalier, (வர.) முற்கால பிரஞ்சு நாட்டு இளவரசர் சார்லசு எட்வர்டு ஸ்டுவர்ட் (Charles Edward Stuart).

chevalier d' industrie, (பிர.) *n.* பணவேட்டையாடுபவன்; எத்தன், மோசக்காரன்.

chevaux de frise, (பிர.) *n. pl.* குதிரைப்படைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான முள்வேலி அரண் வரிசை; முள் வேலி; செடிகளின் இழைவரைக் காப்பு; உயிர்களின் மயிர்க் காப்பு வரை.

chev'elure, *n.* பொய்மயிர்க் குல்லாய், மயிர்த்தலை, தலை மயிர்; (வான்.) வான்மீன் ஒளிக்கற்றை.

chev'erel, *n.* ஆட்டுக்குட்டி; மென்மைப்பதமான குட்டி ஆட்டுத்தோல்; *a.* குட்டி ஆட்டுத் தோல் போன்ற; நெகிழ் வுடைய.

chevet', *n.* திருக்கோயில் ஒதுக்கிடம்; திருக்கோயில் ஒதுக் கிடங்களின் தொகுதி.

chev'iot, *n.* செவியட் குன்றுகளில் (Cheviot hills) வளர்க் கப்படும் குறுமயிருடைய உறுதியான உடலமைப்பு வாய்ந்த ஆட்டு வகை; ஆட்டுவகையின் கம்பளம்; கம்பள ஆடை வகை; *a.* செவியட் குன்றுகளில் வளர்க்கப்படும் ஆட்டு வகை யிலிருந்து கிடைத்த: ஆட்டு வகையின் கம்பளத்தினால் செய்யப்பட்ட.

chev'isance, *n.* சாதனை, செய்து முடித்த காரியம்; மூல வளம்; ஆதாயம்; பணக் கொடுக்கல்வாங்கல்.

chev'ron, *n.* உத்திரம், கைம்மரம்; (க-க.) வீட்டின் இரண்டு கைம்மரங்கள் உச்சியில் ஒன்று கூடுவதாகக் காட்டும் சின்னம்; படைத்துறையில் நீண்டகாலப் பணியையும் நன் னடத்தையையும் காட்டுதற்காகச் சட்டைக் கையின்மேல் பொறிக்கப்படும் கம்பு வடிவச் சின்னம்.

chev'roned, *a.* இடம் வலமாக அல்லது மேலுங்கீழுமாக வளைந்து செல்லும் அமைப்புடைய.

chev'rony, *a.* கம்பு வடிவச் சின்னங்களால் ஆன; சமனெண் ணிக்கையான கம்புச் சின்னங்கள் பக்கத்துக்குப் பக்கமாக நிறைந்த; கோணல்மாணலான.

chev'rotain, chev'rotin, *n.* சிறு கத்தூரிமான்

chev'y, *n.* வேட்டைக்குரல்; பின்தொடர்ந்து வேட்டையாடு தல்; பிடி விளையாட்டு வகை; *v.* துரத்திச் செல்; வேட்டை யாடு; தொல்லைப்படுத்து; தப்பி ஓடு.

chew, *n.* சுவைப்பு, பல்லரைப்பு; அதுக்கும் அளவு; புகையிலை யின் மெல்லும் அளவான துண்டு; *v.* பல்லால் அரை, சுவை, கடித்து அதுக்கு; புகையிலை மெல்லு; ஆழ்ந்து நினை; சென்றது நினை; நினைந்து நினைந்து சிந்தனைசெய்; (தொ.) chew the cud, அசைபோடு; பழைய நினைவுகளிலேயே நினைந் தாழ்.

chew'et[1], *n.* காக்கையினம் சார்ந்த செங்காற் பறவை.

chew'et[2], *n.* குறுக அரியப்பட்ட இறைச்சித் துவட்டல் உணவு வகை.

chew'ing-gum, *n.* அதுக்கும் சவ்வு.

chewink', *n.* சிவந்த கண்களையுடைய குருவி வகை.

chi, *n.* சிறுக்கி, சிறுமி.

Chi'an, *a.* கிரேக்க நாட்டை அடுத்த கீயாஸ் (Chios) என்ற தீவுக்குரிய.

Chian'ti, *n.* இத்தாலி நாட்டு முந்திரித் தேறல் வகை.

chiaroscur'o, *n.* ஒவிய ஒளி நிழல் வண்ண நயம்; ஒளி நிழல் வேறுபாடு; இலக்கியத்தில் முரண் நயத்திறம்; படிமாற்ற மென்னயப்பண்பு; முனைப்பகழ்வு வேறுபாடு; *a.* ஒளிநிழல் வண்ணமுடைய; அரைகுறையாக வெளிப்படுகிற, தெளிவுக் குறைவான.

chi'asm, chias'ma, *n.* (உள்.) கண் நரம்புக் குறுக்கீடு.

chias'mus, *n.* முரண்தொடர் அணி நயம், சொற்றொடரில் முற்பாதியின் முறை பிற்பாதியில் மாறுபட அமைத்தல்.

chias'tic, *a.* தொடரில் முன்பின் முரண்நயமுடைய.

chib'ol, *n.* வெங்காயத்தாள், பசுந்தாளுடன் கூடிய வெங் காய முளை.

chibouk', chibouque', *n.* நீள் புகையிலைக் குழாய்.

chic, (பிர.) *n.* நயம், நேர்த்தி, ஒயில்; கலைநயத்திறம்; ஆணித்தரம், மேம்படு தகுதி; *a.* ஒயிலான; புத்தம் புதுப்பாணியான, நடைநயப் பகட்டுடைய.

chicane', *n.* ஏய்ப்பு, ஏமாற்று; கை மோசம், கைச்சாலம், புரட்டு; சீட்டாட்ட வகையில் துருப்புச்சீட்டில்லாத கை வரிசை; *v.* ஏய், பொறியில் சிக்க வை; மோசம் செய், கைத் தந்திரத்தால் ஏமாற்று.

chica'ner, *n.* ஏமாற்றுபவன், எத்தன்.

chican'ery, *n.* சட்டப்பொறியில் சிக்க வைத்தல், குறுஞ் சூழ்ச்சி; வாயடி, போலிவாதம், சொற்புரட்டு.

chica'ning, *n.* சொற்பொறி, சொல்மாருட்டம்.

chich, *n.* சணகம், கடலையினப் பயறு.

chich'a, *n.* சோளத்திலிருந்து வடித்த தென்னமெரிக்கத் தேறல் வகை.

chick[1], *n.* கோழிக்குஞ்சு; பறவைக்குஞ்சு; மழவிளங்குழந்தை; செல்வக்குழந்தை.

chick[2], (இ.) *n.* வரிச்சுத்தட்டி.

chickadee', *n.* பாடும் அமெரிக்கச் சிறுபறவை வகை.

chickaree', *n.* அமெரிக்கச் செவ்வணில்.

chick'en[1], *n.* கோழிக்குஞ்சு; பறவைக்குஞ்சு; கோழிக்குஞ்சு இறைச்சி; குழந்தை, இளஞ்சிறார்; கோழை; (தொ.) count one's chickens before they are hatched, காரியம் ஆகுமுன் அவசரப்படு; அவசரப்பட்டுக் கெடுத்துவிடு; Mother Carey's chicken, கருமை வெண்மை கலந்த நிறங்கொண்ட நீள் சிறகுடைய சிறு கடற்பறவை வகை.

chick'en[2], (இ.) *n.* பின்னல் வேலை, பூவிழைத்துன்னல்.

chick'en-breast, *n.* உலர்ந்து முன்தள்ளிய நெஞ்செலும்பு.

chick'en-breasted, *a.* நெஞ்செலும்பு கூடாகி முன்தள்ளப் பெற்ற.

chick'en-feed, *n.* கோழித்தீனி; அற்பப் பொருள்.

chick'en-hazard, *n.* அற்பப் பந்தயத்துக்குரிய சிறு சொக்கட்டான் வகை ஆட்டம்.

chick'en-heart, *n.* கோழை நெஞ்சு, தைரியமற்ற இதயம்.

chick'en-hearted, *a.* உரமற்ற உள்ளமுடைய, கோழையான.

chick'en-pox, *n.* சின்னம்மை, தட்டம்மை, பயற்றம்மை.

chick'en-wallah, (இ.) *n.* துன்னுடை கொண்டு திரிந்து விற்பவர்.

chick'ling, chick'ling vetch, *n.* பயற்றினத்தின் வகை.

chick'-pea, *n.* சணகம், பயற்றினத்தின் வகை.

chick'weed, *n.* பறவைகள் விரும்பித்தின்னும் களையினத்தின் வகை.

chi'cle, *n.* மரவகையின் பால், அதுக்கு சவ்வின் அடிப்படைக் கூறு.

chic'ory, *n.* நீலமலர்ச் செடி வகை ; காப்பிப்பொடிக்குப் பதிலாக அல்லது அதனுடன் கலந்து வழங்கப்படும் பொடிவகையின் வேர்.

chid, *v.* **chide** என்பதன் இறந்தகால-முடிவெச்சம்.

chidd'en, *v.* **chide** என்பதன் முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

chide, *v.* கடிந்துகொள், குற்றங்கூறு ; மெல்லக்கண்டி, குறைகாண், குற்றங் கண்டு கண்டி, திட்டு.

chid'ing, *n.* இடித்துரைப்பு ; குற்றங்கண்டு திருத்துதல் ; *a.* இடித்துக் காட்டுகிற, குற்றங்கண்டுரைக்கிற.

chief, *n.* தலைவர் ; குடித்தலைவர் ; உரிமை முதல்வர் ; பணிமனை முதல்வர் ; முக்கியமானவர் ; தலைமையானது, முக்கியத்துவம் உடையது ; தலைமை, முக்கியத்துவம் ; *a.* தலைமையான ; முக்கியமான ; முதன்மையான ; முனைப்பான ; மேம்பட்ட ; குறிப்பிடத்தகுந்த ; *adv.* முக்கியமாக, சிறப்பாக ; (தொ.) in chief, நிலவகையில் அரசரிடமிருந்து நேர் உரிமை உடைய ; (கட்.) கேடய முகப்பிடம் சார்ந்த, தலைமை நிலையான.

chief'-bar'on, *n.* பொருண்முறை மன்றத் தலைவர்.

chief'dom, *n.* தலைவன்நிலை ; தலைமை, தலைமையுரிமை.

chief'less, *a.* தலைவரற்ற.

chief'ling, *n.* சிறுதலைவர், குட்டித்தலைவர்.

chief'ly, *a.* தலைவருக்குரிய, குடித்தலைவருக்கு உகந்த ; *adv.* முதன்மையாக, மற்ற எல்லாவற்றையும் தாண்டி ; சிறப்பாக, தனிவகையில்.

chief'ship, *n.* தலைமைநிலை, தலைவன் பதவி.

chief'tain, *n.* தலைமகன், குலமரபுத் தலைவர், பழங்குடித் தலைவர் ; மக்கள் தலைவர் ; படைவீரர் தலைவர், தளபதி.

chief'taincy, *n.* தலைமகனுட்சி, குடிமரபுத் தலைவர் நிலை ; தலைமகனுட்சி எல்லை.

chief'tainess, *n.* குலமரபுத் தலைவி ; பெண் தலைவர், தலைவி.

chief'tainship, *n.* தலைமகன்நிலை ; தலைமை ; தலைமைப்பதவி.

chiff'-chaff, *n.* பாடும் சிறு பறவை வகை.

chiffon, (பிர.) *n.* ஆடையோர வேலைப்பாட்டில் பயன்படுத்தப்படும் வலையாடை வகை.

chiffonier', *n.* சிங்கார நிலைப் பெட்டி, வண்ணவேலை அடுக்கு மேடை.

chiffons, (பிர.) *n. pl.* சிறு சிங்காரிப்புக்கள், ஒப்பனை மினுக்குகள்.

chigg'er, *n.* = **chigoe.**

chignon', *n.* தொங்கல் முடிக்கற்றை, வார்முடி, பின்னல்முடி.

chig'oe, chig're, *n.* தோல்துளைத்து நோயுண்டாக்கும் வெப்பமண்டல ஈ வகை.

Chihua'hua, *n.* அஸ்டக் (Aztecs) என்ற பண்டைச் செவ்விந்திய இனத்தவரால் தெய்விகமாகக் கருதப்பட்ட குறுங்கண் பெருஞ்செவி வாய்ந்த சிறுநாய் வகை.

chika'ra, (இ.) *n.* நான்கு கொம்புகள் வாய்ந்த மான் வகை.

chik'ara, (இ.) *n.* நரப்பிசைக் கருவி வகை.

chil'blain, *n.* கடுங்குளிரால் ஏற்படும் கன்னிய கைகால் கொப்புளம்.

child, *n.* குழந்தை ; சிறுவன் ; சிறுமி ; மகவு, மகன் ; மகள் ; கான்முளை, மரபில் வந்தவர், பின்னூர், மரபினர் ; மாணவர் ; உயர்குடி இளவல், ஏந்தல் ; ஆக்க உரு, விளைவுருவானவர் ; *pl.* chil'dren ; (தொ.) child's play, மிக எளிய செய்தி ; from a child, of a child, குழந்தைப் பருவ முதலாக ; with child, சூலுற்று, கருக்கொண்டு.

child'-bearing, *n.* குழந்தைப்பேறு, குழந்தைகளைப் பெறுதல் ; *a.* குழந்தைகளைப் பெறுவதற்குரிய.

child'bed, *n.* பேறுகால நிலை, பிள்ளைப் பேற்று நிலை.

child'-birth, *n.* பிள்ளைப்பேறு ; குழந்தைப் பெறுதல்.

Chil'dermas, *n.* டிசம்பர் 28-ஆம் நாளில் நடைபெறும் புனிதக் குழந்தைகள் விழா.

child'hood, *n.* குழந்தைப் பருவம் ; குழந்தை நிலை, மிகு இளமை ; (தொ.) second childhood, (குழந்தை இயல்பு மீண்டும் ஏற்படுவதாகக் கருதப்படும்) முதுமைப் பருவம்.

child'ish, *a.* சிறுபிள்ளைத்தனமான, விளையாட்டுத் தன்மையுள்ள ; அற்பமான.

child'ishly, *adv.* சிறுபிள்ளைத்தனமாக, தெரியாத்தனமாக.

child'ishness, *n.* குழந்தை இயல்பு, விளையாட்டுத்தனம், சிறு குறும்புத்தனம்.

child'less, *a.* குழந்தையற்ற, மகப்பேறில்லாத.

child'-life, *n.* குழந்தை வாழ்க்கை, பிள்ளைப்பருவ வாழ்க்கை நிலை.

child'like, *a.* குழந்தை போன்ற ; சூதுவாதற்ற ; மெல்லிணக்கமான, எளிதில் குழைகிற.

child'ly, *a.* குழந்தைக்கு இயல்பான, குழந்தைக்குகந்த.

child'-wel'fare, *n.* குழந்தைநலம், குழந்தைகளின் உடல் உளநலங்கள் பற்றிய திட்டமிட்ட சமூகப் பணித்துறை.

child'-wife, *n.* இளமை சான்ற மனைவி.

chil'e, *n.* = **chilli.**

Chil'e, *n.* தென் அமெரிக்காவிலுள்ள ஒரு நாடு ; *a.* தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டுக்குரிய ; (தொ.) Chile saltpetre, உவர வெடியகி.

Chil'ean, *n.* தென் அமெரிக்காவிலுள்ள சிலிநாட்டுக்குரியவர் ; *a.* சிலிநாட்டுக்குரிய.

chil'i, *n.* = **chilli.**

chil'iad, *n.* ஆயிரம் ; ஆயிரம் அடங்கிய தொகுதி.

chil'iagon, *n.* ஆயிரக்கோணம் ; ஆயிரங்கோணங்கள் கொண்ட வரையுரு.

chil'iahedron, *n.* ஆயிரம் முகப்பரப்புக்களைக் கொண்ட பிழம்புரு.

chil'iarch, *n.* ஆயிரமுதல்வர், ஆயிரம் பேருக்குத் தலைமை தாங்குபவர்.

chil'iasm, *n.* திரு ஆயிரக்கோட்பாடு, இயேசு நாதர் ஆயிர ஆண்டுகள் உடல் வாழ்வுடனே ஆட்சி செய்வார் என்ற நம்பிக்கை.

chil'iast, *n.* திருஆயிரக் கோட்பாட்டாளர், இயேசு நாதர் ஆயிர ஆண்டுகள் உடல் வாழ்வுடன் உலகில் ஆட்சி செய்வார் என்ற நம்பிக்கையுடையவர்.

chilias'tic, *a.* திருஆயிரக் கோட்பாடு சார்ந்த ; இயேசு நாதர் ஆயிர ஆண்டுகள் உடல் வாழ்வுடன் உலகில் ஆட்சி செய்வார் என்ற நம்பிக்கையுடைய.

chill, *n.* தணுப்பு, கடுங்குளிருணர்ச்சி ; குளிர் நடுக்கம், சன்னி ; மிகத்தாழ்ந்த தட்பவெப்பநிலை, பொறுக்க முடியாத குளிர்நிலை ; ஆர்வம் கெடுக்கும் செய்தி, தளர்வூட்டும் ஆற்றல், உணர்ச்சியற்ற நடைப்பாங்கு ; அச்சுருப்படிவ வகை,

a. குளிரால் நடுக்குகிற; மிதமான குளிருடைய; குளிர் மிக்க, குளிரால் துன்பம் அளிக்கிற; ஆர்வங்குன்றிய; உணர்ச்சியற்ற; எழுச்சியற்ற; புலனுணர்ச்சி கடந்த; ஏ. கடுங்குளிரூட்டு; உணர்ச்சிகெடு, எழுச்சி அழி; வெறுப் பூட்டு; கடுங்குளிருக்கு ஆளாக்கி அழி; (தொ.) take the chill off, வெதுவெதுப்பாக்கு, கதகதப்பாக்கு.

chilled, *a.* கடுங்குளிரால் தாக்கப்பட்ட; தணுப்பாக்கப்பட்ட; இரும்பு வகையில் குளிரால் கடினமான; மாட்டிறைச்சி முதலியவற்றின் வகையில் குளிர்பதனப்படுத்தப்பட்ட; ஆர்வம் கெடுக்கப்பெற்ற; உணர்ச்சி அழிக்கப்பெற்ற.

chill'i, *n.* மிளகாய், மிளகாய் வற்றல்.

chill'iness, *n.* கடுங்குளிர்கிலை, தணுப்பு.

chill'ing, *a.* கடுங்குளிர் ஊட்டுகிற; ஆர்வங்கெடுக்கிற; வெறுப்பூட்டுகிற.

chill'um, (இ.) *n.* புகைக்குழாய் அலகு; புகைக்குழாய்; புகைக்குழாய் வழி புகைகுடித்தல்.

chill'y [1], *a.* கடுங்குளிரான; குளிர்ச்சியூட்டுகிற; குளிருக்கு ஆற்றுத.

chill'y [2], *n.* = chilli.

Chilog'natha, *n. pl.* ஆயிரங்கால் அட்டைகள், மர வட்டைகள்.

Chilop'oda, *n. pl.* பூரான்கள்.

Chil'tern Hun'dreds, *n. pl.* இங்கிலாந்தில் முடியரசுத் தனிமானியப் பகுதி நிலக்கூறு; (தொ.) accept the Chiltern Hundreds, apply for Chiltern Hundreds, முடியரசின்கீழ் உள்ள பதவியாகிய மானியப்பகுதியின் ஏற்பு உறுப்பினர் பதவி துறந்தே பெறப்படுவதாதலின் அது பெறுமுன் மக்கள் பொதுமன்றத்தில் உறுப்பினரிடத்தைத் துற.

chimaer'a, *n.* = chimera.

chimb, *n.* = chime [2].

chime [1], *n.* ஒத்திசைக்கும் மணிகளின் கூட்டொலி; அடுத் தடுத்துத் தொடரும் பன்மணி ஒலி, கலகல வென்ற ஓசை; ஒத்திசைப்பு, கூட்டிசைப்பு, செவ்வொலி, பண்ணிசைப்பு, சந்தம்பட்ட ஓசை; உரைப்பாட்டு; ஒத்திசைவு, செவ்விசைவு; ஒலியியைபு, எதுகை, வண்ணம்; ஏ. கூட்டு மணி ஒலி எழுப்பு; ஒத்திசை; மணி அடி; மணி அடித்து நேரம் குறி; மணி ஓசை செய்து அழை; அடுத்தடுத்து ஓசை செய், பொறி முறையில் ஓசை செய்; இயை, ஒத்துப்போ; உடன் சேர்; இணக்கம் தெரிவி.

chime [2], *n.* மிடாவின் வாயலகு; (கப்.) தளத்தில் நீர் செல் வதற்குரிய சாய்வான அடித்தளமுடைய வடிகால்.

chimer'a, *n.* பழம் புராணகதைகளுக்குரிய சிங்கத்தின் தலையும் வெள்ளாட்டின் உடலும் பாம்பின் வாலும் உடைய வேதாள விலங்கு வகை; கதம்பப் புனைவுருவான விலங்கு; கலப்படப்புனைவு; பொருந்தாக் கற்பனை, கட்டற்ற கற்பனை; கதம்ப உரு; கதம்ப விலங்குச் சித்திரம்; சுறுப்போன்ற முதிரா எலும்புடைய மீனினம்; இருவகைத் தளசம மரபின் இணைவுடைய உயிரினம்.

chimere', *n.* கிறித்தவ மாவட்ட முதல்வரின் கைப்பகுதியற்ற மேலுடுப்பு.

chimer'ic, *a.* கதம்ப விலங்குருச் சார்ந்த; வெறும்புனைவான, மெய்யல்லாத; கட்டற்ற புனைவியலான; நம்ப முடியாத.

chimer'ical, *a.* பொருந்தாப்புனைவான, கட்டற்ற கற்பனை காரமான, கதம்ப உருவான, நம்ப முடியாத, மெய்ம்மையில் இல்லாத.

chim'ney, *n.* புகைப்போக்கி; மோட்டின் மேலுள்ள புகைப் போக்கியின் கம்பம்; விளக்கின் ஆவி செல்குழாய், மேற்கூடு.

chim'ney-board, *n.* அடுப்பங்கரைத் தட்டி.

chim'ney-corner, *n.* அடுப்பங்கரையடுத்த கதகதப்பான இருக்கை, வெதுவெதுப்பான மூலை.

chim'ney-jack, *n.* காற்றேட்டத்துக்கான புகைப்போக்கியின் சுழல் முகடு.

chim'ney-piece, *n.* அடுப்படி மாடத்தட்டு.

chim'ney-pot, *n.* புகைப்போக்கியின் முகட்டுக்குழல்; (தொ.) chimney-pot hat, நீடுயர் பட்டுத் தலைக்கவிகை.

chim'ney-shaft, *n.* புகைப்போக்கிக் குழாய்.

chim'ney-stack, *n.* புகைப்போக்கித் திரள், ஒரே அடியிடத் தில் தொடங்கும் புகைப்போக்கிகளின் தொகுதி.

chim'ney-stalk, *n.* நீடுயர் புகைப்போக்கி.

chim'ney-swallow, *n.* குருவி வகை.

chim'ney-sweep, *n.* புகைப்போக்கி துப்புரவாக்குபவர், ஒட்டடையடிப்பவர்.

chim'ney-sweeper, *n.* புகைப்போக்கி ஒட்டடையடிப்பவர்; ஒட்டடை வாருகோல்.

chim'ney-top, *n.* புகைப்போக்கி முகடு.

chimpanzee', *n.* மனித உருவை மிகுதியும் ஒத்த வாலில்லா ஆப்பிரிக்கக் குரங்கு வகை.

chin, *n.* முகவாய்க்கட்டை.

Chin'a, *n.* சீனநாடு; *a.* சீனநாட்டுக்குரிய; (தொ.) China Aster, விண்மீன் வடிவத் திரள் மலருடைய செடிவகை; China ink, விளக்குக் கரியும் பசையும் கொண்டு கெட்டிப்பாள வடிவில் செய்யப்படும் மை வகை; China jute, நார் தரும் பகட்டான மலர்ச்செடி வகை.

chin'a [1], *n.* மங்கு, பீங்கான்; *a.* மங்கினால் செய்த.

chin'a-clay, *n.* மங்கு செய்ய உதவும் களிமண் வகை.

chin'a-closet, *n.* மங்குக்கலக் காட்சி நிலைப்பெட்டி.

Chin'a-grass, *n.* தாளும் நாரும் தரும் பூச்சிமுள் பூண்டுவகை.

Chin'aman, *n.* சீனக்காரன், சீனநாட்டான்; மரப்பந்தாட் டத்தில் வலக்கை ஆட்டக்காரன் எல்லைக்குள் இடக்கை ஆட்டக் காரன் பந்தின் புகுதரவு, புகுதரவுப் பந்தெறி.

chin'a-man'ia, *n.* மட்டுமீறிய மங்கார்வம், பீங்கான் பைத்தியம்.

chin'a-man'iac, *n.* மங்குக்கல ஆர்வ வெறியர், பீங்கான் பித்தர்.

chinam'pa, *n.* மிதவைத் தோட்டம், நடு அமெரிக்காவில் மெக்ஸிகோ (Mexico) நாட்டில் ஏரிகளில் பாசிச் செடிவகை களைப் பரப்பி வளர்த்துப் பேணும் தோட்டம்.

Chin'atown, *n.* நகரில் சீனர் வாழும் பகுதி.

chin'a-ware, *n.* மங்குக்கலத் தொகுதி, பீங்கான் கலங்கள்.

chinch, *n.* அமெரிக்க மூட்டைப்பூச்சி வகை.

chinchill'a, *n.* மென்மயிர்த்தோலுடைய எலிபோன்ற தென் அமெரிக்கக் கொறிக்கும் இன விலங்கு வகை; கொறிக்கும் இன விலங்கு வகையின் மென்மயிர்த்தோல்.

chin'-chin', *n.* வரவேற்பு வணக்கமுறை; விடைபெறு வணக்கமுறை; ஏ. வரவேற்பு முகமனுற்று; விடையனுப்பு வணக்கமுறை நிகழ்த்து; *int.* வருக! வருக! (சீனநாட்டு வரவேற்பு வணக்கமுறை); போய் வருக! போய் வருக! (சீனநாட்டு விடைகொள் வணக்கமுறை).

chin'cough, *n.* கக்குவான் இருமல்.

chine [1], *n.* தண்டெலும்பு; முதுகெலும்புக்கணு; முது கெலும்புக்கண்ட இறைச்சி; வாள்போன்ற மலை முகட்டு வரை, ஏறு சரிவான கூர்ம்பாறை; ஏ. முதுகை முறி.

chine [2], *n.* நெடுவிடர், ஆழ்ந்திடுங்கிய பள்ளத்தாக்கு.

chine [3], *a.* ஆடையிற் பன்னிறப்படிவம் பயிற்றிய, ஊடிழை யில் உருப்படிவம் படிவிக்கப்பட்ட.

Chinese', *n.* சீன நாட்டவர்; சீனமொழி; *a.* சீனநாட்டுக்குரிய; சீனமக்களுக்குரிய; சீனமொழிக்குரிய; (தொ.) Chinese lantern, மூடுதாள் ஒளி விளக்கு, வண்ணத்தாள் விளக்கு; Chinese paper, செதுக்குப் பதிவுக்குப் பயன்படத்தக்கதாக மூங்கிலிலிருந்து செய்யப்படும் மென் பழுப்புத்தாள் வகை; Chinese pavilion, கூட்டொலி மணிகள் தொங்கவிடப்பட்ட மேற்கட்டி.

chink [1], *n.* ஓட்டை, பிளவு, புடை ; புழை, துளை.

chink [2], *n.* கணகண ஒலி ; நாணய ஒலி ; *v.* கணகண ஓசை செய் ; நாணயத்தைக் கணீரென்று ஒலிக்க வை.

chink [3], *n.* மூச்சு வாங்கமுடியாத எய்ப்பு நிலை, திணறல்.

Chinook', *n.* ஆங்கிலம் - பிரஞ்சு - அமெரிக்கப் பழங்குடி மொழிகள் முதலிய பன்மொழி கலந்த வணிகர் பேச்சுவகை.

chinook', *n.* வடஅமெரிக்கக் கீழ்க்கரை மலைப்பகுதியிலுள்ள குளிர்கால வெதுவெதுப்பான கடற்காற்று.

chinov'nik, *n.* ருசிய அரசியலின் உயர் அதிகாரி ; ஆட்சிக் குழுவினர், அதிகாரவர்க்கத்தார்.

chintz, *n.* சீட்டித்துணி ; பல்வண்ண அச்சுத்துணி ; *a.* அச்சடித்த ; அச்சுத்துணியாலான.

Chionodox'a, *n.* விடியற்காலத்தில் அலரும் நீலமலர்ச் செடி வகை.

chip [1], *n.* மரத்தின் துண்டு, துணுக்கு ; கட்டையின் சுள்ளி, வரிச்சல், சிம்பு, சிராய் ; சில்லு, கல்லின் சிறுதுண்டு ; காய் கறியின் சிறுநறுக்கு, பூழி ; அரிதல், துண்டித்தல் ; பரப்பின் வடு, தழும்பு ; பொன்காசு, பவுன் ; *v.* மரத்தைக் குறுக வெட்டு ; கல்லை ஒரமாகக் கொத்து, சிறு சில்லாக உடை ; கொத்திச் செதுக்கு, செதுக்கி உருவாக்கு ; சீவு, அரி ; வாய்ச்சியால் சீவியெடு ; அலகால் முட்டைத் தோட்டைக் குத்தி உடை ; குழிப்பந்தாட்டத்தில் பந்தை மெல்லெறியுடன் அடி ; சீவப்பெறு ; (தொ.) chip in, மேசைமீது மரநறுக் கிட்டு ஆட்டத்தில் சேர் ; தலையிடு, இடையிடு ; chip of the old block, தந்தையைப்போன்ற மகன் ; chip on one's shoulder, எதிர்ப்பை வரவேற்கும் தோற்றம் ; dry as a chip, சுவையற்ற, கவர்ச்சியற்ற.

chip [2], *n.* மற்போர்ப் பொறி முறை வகை ; *v.* மற்போர்ப் பொறிமுறை வகையைக் கையாளு.

chip'-bas'ket, *n.* வரிச்சல் கூடை, பழக்கூடை.

chip'board, *n.* ஒட்டுமரக்கட்டை, மரத்தூள் சருகு செத்தை களுடன் மெழுகிணைத்து ஆக்கப்படும் கட்டை ; கழிவுத்தாள் கூழால் செய்யப்படும் பெட்டிக்குரிய அட்டைத்தாள்.

chip'-car'ving, *n.* இடையிடையே சிம்பு செதுக்குவதன் மூலம் இயற்றப்படும் செதுக்குவேலை, கொத்துச் செதுக்குப் பணி.

chip'-hat, *n.* பனை ஓலை நறுக்குகளால் இயற்றப்பட்ட தலைக் கவிகை, ஓலைத்தொப்பி.

chip'muck, chip'munk, *n.* வடஅமெரிக்க அணில் வகை.

chipped, *a.* கொத்தப்பட்ட.

Chipp'endale, *n.* 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தச்சு விற்பனர் ; சிப்பெண்டேல் என்ற தச்சு விற்பனர் வகுத் தமைத்த உயர்தரச் சித்திர வேலைப்பாடுடைய மரத்தாலான தட்டுமுட்டுக் கலன் வகை ; புத்தக மேலட்டைப் பாணி வகை ; *a.* சிப்பெண்டேலுக்குரிய ; சிப்பெண்டேலின் பாணியுடைய ; உயர்தரச் சித்திரவேலைப்பாடுடைய மரக்கலன்கள் சார்ந்த.

chipp'ing, *n.* கொத்துதல் ; *a.* கொத்துகிற.

chipp'y, *a.* துண்டுத்துணுக்குகள் நிறைந்த ; பசையற்ற, கவர்ச்சி தராத ; குடியினுல் நிலையிழந்த.

chips, *n. pl.* உருளைக்கிழங்கு வட்டுக்கள் ; உருளைக்கிழங்கு வற்றல் ; வற்றல் ; பணம் ; படைத்துறைத் தச்சர்.

chip'-shot, *n.* குழிப்பந்தாட்டத்தில் மெல்லெறிப் பந்தடி.

chirag'ric, chirag'rical, *a.* கைச்சந்துவாதம் சார்ந்த, கைவாத சூலையுடைய.

chirk, *v.* அகவு, கூவு, கீச்சிடு.

chirm, *n.* பந்தடி, இரைச்சல் ; குருவி வகையின் திரள் ; *v.* கூவு, அகவு.

chirog'nomy, *n.* = cheirognomy.

chir'ograph, *n.* முறைப்படி எழுதிக் கையொப்பமிட்ட பத்திரம்.

chirog'raphist, *n.* = cheirographist.

chirog'raphy, *n.* = cheirography.

chirol'ogy, *n.* = cheirology.

chi'romancy, *n.* = cheiromancy.

chiromant'ic, chiromant'ical, *a.* = cheiromantic, cheiromantical.

chiron'omer, *n.* = cheironomer.

chiron'omy, *n.* = cheironomy.

chirop'odist, *n.* காலின் காய்ப்பு-விரற்கணுவீக்கம்-மெய்க் குரு முதலியவற்றின் மருத்துவ விற்பனர்.

chirop'ody, *n.* காலின் காய்ப்பு-விரற்கணுவீக்கம்-மெய்க்குரு முதலியவற்றுக்கான மருத்துவம்.

chiroprac'tic, *n.* வர்மமருத்துவ முறை, தண்டெலும்பில் தடவி நரம்புகளின் செயல் தடுத்து நோவு குணப்படுத்தும் முறை.

chiroprac'tor, *n.* வர்மமுறை மருத்துவர்.

chirop'terous, *a.* = cheiropterous.

chirp, *n.* பறவைகளின் குற்றுயிர்ப்பொலி, கிறீச்சொலி ; பல்லியின் முரல் ஒலி ; கலகலப்பு ; மென்குரல் பேச்சு ; *v.* கலகல ஒலிசெய் ; முரல் ஒலி செய் ; கீசுகீசென்று இசை ; மென்குரலில் முணுமுணு.

chirp'er, *n.* சிறுபறவை.

chirp'ily, *adv.* கலகலப்புடன்.

chirp'iness, *n.* கலகலப்பு.

chirp'ing-cup, *n.* களிகருக்கலம்.

chirp'y, *a.* கிளர்ச்சிவாய்ந்த, மகிழ்வுடைய, கலகலப்பான.

chirr, *v.* தத்துக்கிளிபோல் வீறிட்டிரை, கரகரவென்றொலி செய்.

chi'rrup, *n.* நீடித்தடுக்கிய குற்றுயிர்ப்பொலி, களகளப்பு ; குதிரை ஊக்கொலி ; குழந்தையை மகிழ்வூட்டும் ஒலி ; குடுகுடுப்பொலி, குரவை ஒலி ; *v.* குதிரை ஊக்கொலி செய் ; குரவையிடு ; ஊக்கு, கிளர்ச்சியூட்டு.

chirt, *n.* அமுக்குகை ; தாரைபீற்றுகை ; *v.* அமுக்கு ; கொட்டித்தெளி.

chis'el [1], *n.* உளி, சிற்றுளி, கொத்துளி ; *v.* உளிகொண்டு கொத்து, செதுக்கு ; குடை, கொத்தி இழை, செதுக்கி உருவாக்கு.

chis'el [2], *n.* பரல், கூழாங்கல், சரளை ; சாவி ; தவிடு.

chis'elled, *a.* உளியால் செதுக்கப்பட்ட ; உளியால் செதுக்கப் பட்டது போன்ற செம்மையான வடிவமைப்புடைய, செப்ப முடைய.

chis'elling, *n.* கொத்திழைப்பு, அருமையான கலை வேலைப்பாடு.

chis'el-tooth, *n.* கொறிக்கும் விலங்கின் பல், கொத்துளிப் பல்.

chit [1], *n.* சிறுமகவு ; சிற்றிளம்பெண், சிறுக்கி, சிற்றுருவினள்

chit [2], (இ.) *n.* சிறுமுறி, சீட்டு, குறிப்புத்துண்டு ; பணக் குறிப்புச்சீட்டு.

chit'al, (இ.) *n.* புள்ளிமான் வகை.

chit'-chat', *n.* சிற்றுரையாடல், நேரப்போக்குப் பேச்சு, இன்ப உரையாடல், வம்பளப்பு.

chit'in, *n.* உயிரினத்தோட்டின் மூலப்பொருள்.

chit'inous, *a.* தோட்டு முதற்பொருள் சார்ந்த ; தோடான ; தோடு போன்ற.

chi'ton, *n.* பண்டைக் கிரேக்கரின் மெல்லிய உட்சட்டை.

chitt'ack, *n.* வங்காள எடையளவுக் கூறு, ஆங்கிலக் கல் லெடையில் 16-இல் ஒரு பங்குக்கு ஒப்பான அளவை.

chitt'erlings, *n. pl.* உணவுக்குரிய பன்றிச் சிறுகுடற் கொடிகள் ; சிறு விலங்கு உட்குடற் கூறுகள்.

chitt'y[1], *n.* = chit[2].

chitt'y[2], *a.* சிறுமதலையான ; சிறுக்கியான.

chiv'alric, *a.* வீரப்பெருந்தகை அமைப்புச்சார்ந்த ; சான்றாண்மைக்குரிய.

chiv'alrous, *a.* வீரப்பெருந்தகைமையுடைய; பெண்பாலரிடம் அன்பாதரவுடைய, சால்புமிக்க ; விட்டுக்கொடுக்கின்ற, பெருந்தன்மைவாய்ந்த; வீரப்பண்பு நயத்துக்குரிய ; முற்கால வீரப்பண்புநய அமைப்புக்குரிய, சான்றாண்மைக்குரிய.

chiv'alrously, *adv.* பெருந்தன்மையுடன் ; பெண்பாலருமை யறிந்த பீடுடன், பெண்பாற் காப்புக்கடம் பூண்ட நிலையில் ; விட்டுக்கொடுப்பு மனப்பான்மையுடன்.

chiv'alry, *n.* வீரப்பண்புமரபு, வீரதர்மம் ; நயநாகரிக வீர மரபு, வீரப்பெருந்தன்மை ; காப்புக் கடப்பாட்டுணர்வு, மாதர்-துணையிலார் மாட்டு ஆதரவுடைமை ; பண்பகலம், மன அகலம், பெருவீரம், சால்பு ; மேலையுலகின் முற்கால வீரப் பெருந்தகை அமைப்பு, அருள்வீரர் குழுமம், வீரச்சான்றோர் குழாம் ; குதிரை வீரர் தொகுதி ; (தொ.) **flower of chivalry**, வீராண்மைக்கொழுந்து, வீரநலஞ் சிறந்த இளைஞர் தொகுதி.

chive, *n.* வெங்காய இனப்பூண்டு வகை.

chivv'y, **chivy**, *n.* வேட்டைக்குரல் ; வேட்டை ; பின் தொடர்கை ; விளையாட்டு வகை ; *v.* வேட்டையாடு ; பின் தொடர் ; துள்ளிக்குதி ; துன்புறுத்து, தொல்லைப்படுத்து ; பரிசுகெடு.

chlam'ydospore, *n.* திண்தோற்சிதல்.

chlam'ys, *n.* குட்டையான மேலுடுப்பு ; செங்நில மார்ச் சட்டை ; *pl.* chlam'ydes.

chloas'ma, *n.* பொன்தவிட்டு நிறம் படரும் படைநோய் வகை.

chlor'al, *n.* பாசிக உலர்வெறியம், நீரகற்றப்பட்ட வெறியத்தில் பாசிகம் இயைந்து செயற்படுவதால் உண்டாகிற நிறமற்ற கூர்மணமுடைய தெளிவான நீர்மம்; நச்சுத்தடை காப்பிலும்-வசியத்திலும் பயன்படுகிற நீரியல் பொருள்.

chlor'alism, *n.* பாசிக உலர்வெறியப் பழக்கம் ; பாசிக உலர் வெறியம் தரும் மயக்கக் கோளாறு.

chlor'alize, *v.* பாசிக உலர்வெறியமூட்டு, பாசிக உலர்வெறிய மூலம் மயக்கமூட்டு.

chlorar'gyrite, *n.* வெள்ளிப் பாசிகை, கொம்பின் திண்ணியல் புடைய கனிப்பொருள் வகை.

chlo'rate, *n.* பாசிகக்காடியின் உப்புவகை.

chlo'ric, *a.* பாசிகத்துக்குரிய ; பாசிகங்கலந்துருவான.

chlo'ride, *n.* பாசிகை, வேறொரு தனிமத்துடன் இயைந்த பாசிகம் ; வண்ணகத்தூள்.

chlorim'eter, *n.* பாசிகச்செறிவுமானி, வண்ணகத்தூளில் பாசிகச் செறிவை அளக்கும் கருவி.

chlor'inate, *v.* பாசிகச் செயற்படுத்து, நீரின் நுண்ம அழிப்பு வகையிலும் கனிவிளைவிலிருந்து தங்கம் பிரிப்பதிலும் பாசிகத்தை ஈடுபடுத்து.

chlorina'tion, *n.* பாசிகச் செயற்பாடு.

chlor'ine, *n.* (வேதி.) பாசிகம், நிறநீக்கம்-நுண்மத்தடை காப்பு-போருக்குரிய நச்சுவளிப்படைகள் ஆகியவற்றில் பயன் படும் நெஞ்சு திணற அடிக்கும் கார மணம் உடைய வளியிய லான தனிமங்களுள் ஒன்று ; (தொ.) **chlorine water**, பாசிக நீர்க்கரைசல்.

chlo'rinise, *v.* = chlorinate.

chlo'rite, *n.* ஊகநிலையான பாசிகக்காடியின் (நீரகப்பாசிக மூவுயிரகையின்) உப்பு வகை.

chlo'rite-schist', *n.* பாசிக உப்புக் கலந்த மடிப்புப் பாறை வகை.

chlor'odyne, *n.* நோவகற்றும் கூட்டு மருந்துச்சரக்கு வகை.

chlor'oform, *n.* மயக்கமருந்து, எளிதில் ஆவியாகும் இனிமை கலந்த சுவையுடைய நிறமற்ற உணர்ச்சியகற்றும் நீர்மம் ; *v.* மயக்கமருந்து வழங்கு.

chlor'oformer, **chlor'oformist**, *n.* மயக்கமருந்து வழங்கு பவர், மயக்க மருந்து ஈடுபடுத்துபவர்.

chlorom'eter, *n.* = chlorimeter.

chloromy'cetin, *n.* நச்சுக்காய்ச்சல் - முதுகந்தண்டுநோய்-மூளைஅதிர்ச்சி ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் மருந்து வகை.

chlor'ophyl, **chlor'ophyll**, *n.* பாசியம், இலை-தழை-தண்டு களில் பசுமையூட்டும் கூறு.

chlo'roplast, *n.* பாசணு, இலை-தழைகளில் பசுமைக்குக் காரணமான பாசியம் ஆக்கும் கூறு.

chlo'roquin, *n.* முறைக்காய்ச்சலில் பயன்படுத்தப்படும் மருந்துச்சரக்கு.

chloro'sis, *n.* இளம்பெண்டிரின் பசலைத் தளர்ச்சிநோய், பசுமை நிறம் படரும் சோகை.

chlorot'ic, *a.* இளம்பெண்டிரின் பசலைத்தளர்ச்சி நோய் சார்ந்த, பசுமைச் சோகைக்குரிய.

chlor'ous, *a.* பாசிகச் சார்பான ; (தொ.) **chlorous acid**, பாசிகச் சார்பான கரைசலிலும் உப்பு வகையிலும் மட்டுமே இருப்பதாகக் கருதப்படும் ஊக நிலையான பாசிகக்காடி வகை (நீரகப் பாசிக மூவுயிரகை).

chock, *n.* ஆப்பு, அடைப்புக்கட்டை, அடைகல், முட்டுக்கட்டை; (கப்.) படகு வைப்பதற்குரிய அண்டைக்கட்டை ; *v.* ஆப் பிட்டிறுக்கு, அடைகல் வைத்து அசைவில்லாமல் செய் ; (தொ.) **chock up**, அண்டைக்கட்டை வைத்து இறுக்கு.

chock-a-block', *a.* செம்மிய, மிடைந்து நிரம்பிய.

chock'ful, *a.* திணிக்கப்பட்ட ; முட்ட நிரம்பிய, செறிந்த.

chock'-tight, *a.* மிக இறுக்கமான.

choc'olate, *n.* இன்பசைப்பண்டம்; கொக்கோ விதை மாவுடன் வெல்லம் கலந்து செய்யப்படும் இனிப்புத் தின்பண்டம் ; நறுவிதைக்குடி தேறல் வகை, பாலிலோ வெந்நீரிலோ கலந்த நறுவிதைச்சத்து; *a.* இன்பசைப் பண்டம் கலந்த; திண்ணிய கருந்தவிட்டு நிறம் வாய்ந்த ; (தொ.) **chocolate cream**, இன்பசை உட்பொதிந்த தின்பண்டம்.

choc'taw, *n.* கால்மாறு சறுக்காட்டம், பனிச்சறுக்கு விளையாட்டில் சறுக்கு கட்டத்தின் கோடியிலிருந்து கோடிக்கு எதிரெதிர்க் கால்களால் சறுக்கிச் சென்று மீளுதல்.

choice, *n.* தெரிவு, தேர்ந்தெடுப்பு ; மிகு விருப்பம், விருப்ப மேம்பாடு ; தேர்வு முதன்மை ; விருப்பத் தேர்வு ; தேர்ந் தெடுக்கப்பட்டது, விருப்பேற்பு ; தேர்ந்தெடுக்கப்பட்டவர் ; தேர்வாற்றல் ; தேர்வுரிமை; *a.* தேர்ந்தெடுக்கப்பட்ட ; நனி சிறந்த, சுவைமை முனைப்பான; பண்புயர்வுடைய, தகவார்ந்த; (தொ.) **at choice** விருப்பப்படி ; **for choice**, தேர்வு வாய்ப் பாக ; **Hobson's choice**, இது அல்லது இல்லை எனும் நிலை ; **make choice of**, தேர்ந்தெடு ; **of one's choice**, தேர்ந் தெடுத்த, விருப்பார்ந்த ; **take one's choice**, பெற்ற வாய்ப்பினில் உற்றது தேர்ந்தெடு.

choice'ly, *adv.* நன்கு தேர்ந்தாய்ந்து ; விழிப்பாய்வுடன்.

choice'ness, *n.* தனிச்சிறப்பு ; நேர்த்தி ; நயமேம்பாடு.

choir, *n.* பாடகர் குழு ; திருக்கோயிற் பாடகர் குழாம்; திருக் கோயிலில் பாடற்குழுவுக்குரிய பகுதி ; கம்பி வேலியால் தனியாகப் பிரிக்கப்பட்ட திருக்கோயிலின் கீழ்ப்புறக்கோடி ; பறவைகளின் கூட்டம்; தேவதூதர்களின் ஈட்டம் ; *v.* ஒருங்கு கூடிப்பாடு.

choir'-boy, *n.* பாடகர்குழுச் சிறுவன்.

choir'-man, *n.* பாடகர் குழுவினன்.

choir'-master, *n.* பாடற்குழுவின் இயக்குநர்.

choir'-organ, *n.* பேரிசைக்கருவியின் உறுப்பு.

choke, *n.* மூச்சுத் தடை: திணறல்; மூச்சடைப்பு ஒலி; அடைப்பு, நெரிப்பு; நீரோட்டத் தடைமுறை; மின்னெழுக்குத் தடங்கல் அமைவு; *v.* மூச்சடைக்கச் செய்; மூச்சடைக்கப் பெறு; மூச்சுத்திணற அடி; மூச்சுத்திணறுதல் உறு; தடைப்படுத்து; தடைப்படு; சங்கைப் பிடித்து நெரி; தொண்டை அடைத்துக்கொள்; உணர்ச்சிகளுக்கு அடைப்பிடு; உள்ளடங்கிப் போ; (தொ.) choke down, உணவை விழுங்கு; உணர்ச்சி அல்லது குரலை மறைத்தடக்கு; choke off, வலிந்து கைவிடும்படிச் செய்; choke up, வழி அடைத்துத் தடு.

choke′-bore, *n.* துப்பாக்கியின் இடுங்கிய முகட்டுத்துளை.

choke′-damp, *n.* சுரங்க நச்சாவி; கிணறுகளிலுள்ள நச்சு வளி.

choke′ful, *a.* முட்டநிரப்பிய, திணிக்கப்பட்ட.

choke′-pear, *n.* தசைமஞ் சுருக்கும் ஆற்றலுடைய பேரி யினப்பழ வகை; வாயடைப்பு, பேசாதிருக்க வைக்கும் செய்தி.

chok′er, *n.* திணறவைப்பவர்; திணறடிப்பது; அடைப்பவர்; அடைப்பது; அகல் கழுத்துக்குட்டை; முறைப்பான அகல் கழுத்துப்பட்டை.

chok′ing, *a.* திணற அடிக்கிற; வாயடைக்கிற; ஓட்டம் தடைப்படுத்துகிற.

chok′ing-coil, *n.* மின்னோட்ட வேகம் தடுத்தாளும் திருகு கம்பிச்சுருள் அமைவு.

chok′ra, (இ.) *n.* சிறுவன், வேலைக்காரப்பையன்.

chok′y [1], (இ.) *n.* சிறைக்கூடம், காவற்சாவடி.

chok′y [2], *a.* மூச்சடைக்க வைக்கிற; தடைப்படுத்துகிற.

cholae′mia, *n.* பித்த சோகை, குருதியில் பித்தநீர் தேங்குவதனால் ஏற்படும் நோய்.

cholagog′ic, *a.* பித்தபேதி உண்டுபண்ணுகிற; பித்தபேதி மருந்துக்குரிய.

cho′lecyst, *n.* பித்தப்பை.

cholecysti′tis, *n.* பித்தப்பை அழற்சி.

cholecystos′tomy, cholecystot′omy, *n.* பித்தப்பை அறுவை.

chol′er, *n.* பித்தநீர், முற்கால ஐரோப்பிய மருத்துவக் கோட்பாட்டின்படி தாதுநீர் நான்கினுள் ஒன்று; கோபம், சினம், சிடுசிடுப்பு.

chol′era, *n.* வாந்திபேதி; (தொ.) chicken cholera, கோழி நோய்வகை.

chol′era-belt, *n.* கொள்ளை நோய் தடுத்துக் காக்கும் நோக்குடன் அணியப்படும் பட்டு அல்லது மென் சணல் அரைக்கச்சை.

cholera′ic, *a.* வாந்திபேதிக்குரிய, கொள்ளைநோய் சார்ந்த.

chol′eric, *a.* பித்தம் நிரம்பிய; (செய்.) கடுஞ்சினமுடைய, எளிதில் சீற்றம் கொள்ளுகிற, சிடுசிடுப்பான.

chol′erine, *n.* வேனிற்கால வாந்திபேதி.

chol′iamb, *n.* கிரேக்க ரோம மொழிகளில் குறுந்துள்ளல் யாப்பு வகை, கடைச்சீர் மட்டும் இருநெடிலாயமைந்த மூவறுசீர்யாப்பு.

choliam′bic, *a.* மூ ஏறு சீர்யாப்புக்குரிய, குறுந்துள்ளல் யாப்பிலமைந்த.

chol′ic, *a.* பித்தநீர் சார்ந்த; (தொ.) cholic acid, பித்தநீரிலிருந்து உருவாகிய காடி வகை.

chon′dral, *a.* எலும்புக் குருத்தியலான; குருத்தெலும்பு சார்ந்த.

chon′dre, *n.* பரற்குரு, வான்வீழ் கோளங்களிலும் கடலடிப் படிவங்களிலும் காணப்படும் உருள் பரல்.

chon′drify, *v.* எலும்புக் குருத்தாக மாறு.

chon′drin, *n.* எலும்பின் குருந்துமூலம், எலும்புக்குக் கருமூலமான வெண்ணீல நிறமுடைய கெட்டிப்பான மணிப் பசைப் பொருள்.

chon′drite, *n.* பரற்குரு அடங்கிய வான்வீழ் கோளம்; எலும்பின் குருத்தியலான செங்நிறக் கடற்பாசிபோல் தோன்றும் புதைபடிவம்.

chondropteryg′ii, *n. pl.* எலும்பின் குருத்தினம், முதிரா எலும்பு மூலப்பொருளை எலும்புக்கூடாக உடைய சுறு முதலிய மீனினங்களை ஒத்த உயிரினம்.

Chon′drus, *n.* எலும்பின் குருத்தியலான செங்நிறக் கடற் பாசி இனம்; *pl.* Chon′dri.

chon′drus, *n.* எலும்பின் குருத்து, முதிர்ச்சிபெரு நிலையிலுள்ள கருமூல எலும்பு.

choose, *v.* தேர், பலவற்றினின்று தேர்ந்தெடு, பொறுக்கியெடு; ஒன்றை அல்லது மற்றவற்றைக் காட்டிலும் விரும்பித் தெரிந்தெடு; விரும்பித்தேர்; விருப்பந்தெரிவி; விரும்பு; துணிந்தெடு, துணி; தேர்வுசெய்; தக்கதெனக் கருது, ஒரு முகமாகத் தீர்வுசெய்; பிரதிநிதியாகத் தெரிவுசெய்; துணைவராகத் தேர்ந்துகொள்; (தொ.) cannot choose but, வேறு வழியின்றி, கட்டாயமாக; choose between, தகுதி ஒப்பிட்டுத் தேர்; pick and choose, நன்கு பார்த்துத் தெரிந்தெடு.

choos′er, *n.* தெரிந்தெடுப்பவர்.

chop [1], *n.* வெட்டுதல்; வெட்டிக் கூறுபடுத்திய உணவு; வெட்டுத்துண்டு, கறித்துண்டு, எலும்புடன் துண்டிக்கப்பட்ட இறைச்சிக்கண்டம்; நீர்ப்பரப்பில் வேலி எதிர்த்துக் காற்றினால் ஏற்படும் முறிபள்ளம்; பிளவு; *v.* வெட்டு, துண்டித்துத் தள்ளு; குறுக நறுக்கு, அரி, சிதை; சொல்லை வெட்டிக் குறுக்கு; பிளவுபட ஒலி; குத்து, இடி, தட்டு; திடுமெனச் செல்லு; தற்செயலாக எதிர்பாராது வருகை அளி; பிளவுறு; திசையில் வெட்டிச்செல்; முட்டிச்செல்; (தொ.) chop at, இலக்குவைத்து வெட்டு, மீது மொத்து; chop away, chop down, chop off, வெட்டித்தள்ளு; chop back, திடுமென எதிர்த்திசை திரும்பு, மடங்கிச்செல்; chop in, பேச்சிடையே தலையிடு; chop out, பரப்பின்மேல் வந்து தோன்று; chop through, வெட்டிச் செல், ஊடறுத்துச்செல்; chop up, குறுக அரி; திடுமென மேற்பரப்புத் துளைத்துத் தோன்று.

chop [2], *n.* விலங்கின் தாடை, மூஞ்சி, மோவாய்; கன்னம், கதுப்பு; பன்றிபோன்ற விலங்கின் கீழ்த்தாடை அல்லது கதுப்பு இறைச்சித்துண்டு; பற்று கருவியின் அலகு; *v.* விழுங்கு; கடித்து நொறுக்கு.

chop [3], (இ.) *n.* இந்தியா-சீனா போன்ற நாடுகளில் முத்திரை, பொறிப்பு; முத்திரைப் பொறிப்பிட்ட பத்திரம்; தனி இசைவாணைச் சின்னம்; இசைவுச்சீட்டு; நுழைவுச்சீட்டு; சீனாவில் வாணிக அடையாளச் சின்னம்; சரக்குத்தரத்தின் அடையாளம்; பண்புப்படி, தரம்; (தொ.) first chop, முதல் தரம்; no chop, மோசம்.

chop [4], *n.* மாற்றம்; திசைதிருப்பம்; பரிமாற்றம், கொடுக்கல் வாங்கல்; *v.* மாறுபடு; திசை திரும்பு; பண்டமாற்றுச் செய்; (தொ.) chop about, chop round, திடுமெனத் திசை திரும்பு; chop and change, கொடுக்கல் வாங்கல்; மாறுபாடு; ஊசலாட்டம், தயக்கம்; இடையூறு; chop logic, நச்சு வாதிடு.

chop′-chop′, *adv., int.* விரைவாக, உடனடியாக, தாமதமின்றி.

chop′-fallen, *a.* நாடிதளர்ந்த; முகஞ்சோர்ந்த, கிளர்ச்சியற்ற, ஊக்கம் குலைந்த.

chop′-house, *n.* மலிவான உணவுவிடுதி.

chop′in [1], *n.* பிரான்சின் நீர்மங்களுக்குரிய பழங்காலச் சிறு முகத்தலளவைக்கூறு.

chopin′ [2], chop′ine, *n.* சேற்றில் செல்வதற்கு உதவியாகப் புதைபடிகளுக்கிடும் உயரிய அடிக்கட்டை.

chop′-log′ic, *n.* விதண்டாவாதம், நச்சுவாதம்.

chopp′er, *n.* வெட்டுபவர், தறிப்பவர்; கைக்கோடரி; வெட்டுக்கத்தி; விட்டுவிட்டு உரக்கப்பாடும் பறவை வகை.

chopp'ing[1], *n.* வெட்டுதல், சிதைத்தல்; வெட்டுத்துண்டு களின் தொகுதி; வெட்டப்பட்ட அளவு; குறைக்கப்பட்ட பொருள்; மரம் வெட்டப்பட்டுக் கிடக்கும் காட்டுப்பகுதி; *a.* வெட்டுவதற்குரிய; நிலையற்ற.

chopp'ing[2], *a.* குழந்தை வகையில் தடித்த; உறுதியான; கொழுமமுவான.

chopp'ing-block, *n.* தறிப்பதற்குரிய அடிக்கட்டை, பட்ட டைக்கட்டை.

chopp'ing-knife, *n.* வெட்டுக்கத்தி.

chopp'y[1], *a.* கீறல் நிறைந்த; மேடுபள்ளமான, கரடுநிர டான; கொந்தளிப்பான.

chopp'y[2], *a.* விட்டுவிட்டுச் செல்கிற, அலைஅலையாய்ச் செல் கிற; எதிரெதிர்ப் போக்குடைய; இசைவுப் பொருத்தமற்ற.

chopp'y[3], *a.* காற்றைப்போல நிலையற்ற, அடிக்கடி மாறு படுகிற, விட்டுவிட்டுத் திசைமாறுகிற.

chops, *n. pl.* குறட்டின் கௌவு வாய்; பீரங்கியின் பேழ் வாய்; உப்பலான முகமுடையவர்.

chop'-sticks, *n. pl.* சீனர் ஒரு கையால் உணவெடுத்தருந்தப் பயன்படுத்தும் தந்தத்தாலான குச்சியிணை.

chop-su'ey, *n.* சீன நாட்டில் நல்லெண்ணெய்த் தாளித்த புலவுச் சோறுவகை.

chorag'ic, *a.* ஆடல்பாடல் குழுத்தலைவருக்குரிய.

chora'gus, *n.* கிரேக்க நாட்டின் ஆடல்பாடற்குழுவின் அமைப்பாளர், ஆடல்பாடற்குழு இயக்குநர்.

chor'al[1], *n.* எளிய இன்னிசைப் பாட்டு, தேவபாணிப் பாசுரம்; ரோமன் கத்தோலிக்கத் திருக்கோயிலில் பாடகர் குழு முழுமை யும் இணைந்து பாடும் வழிபாட்டுப் பாடல்.

chor'al[2], *a.* பாடகர் குழாத்துக்குரிய; பாடற்குழுவினரால் மிழற்றப்பட்ட, பாடகர் குழாத்தின் உடனிசைப்புடைய.

chorale', *n.* = **choral**[1].

chor'alist, *n.* பாடற்குழுவினர், பாடகர் குழாத்தின் உறுப் பினர், பாடுவார்.

chor'ally, *adv.* ஒரே பாடற்குழுவாக; பாடற்குழுவுக்கேற்ப; பாடகர் குழாத்தினரைச் சார்ந்து; பாடகர்குழு உடனிசைக் கும் நிலையில்.

chord[1], *n.* யாழ்நரம்பு, வீணைத்தந்தி; (உட.) திண்ணிய நரம்பு நாளம், நாடி; (வடி.) வில்வளைவின் நாண்வரை; (தொ.) spinal chord, முதுகந்தண்டின் நடுநாளம், சுழிமுனை நாடி; touch the right chord, உணர்ச்சியைத் திறம்பட இயக்குவி; vocal chord, குரல்வளை நாளம்.

chord[2], *n.* நிறஇயைபு; (இசை.) ஒத்திசைக்கும் சுர இயைபு; (தொ.) break chord, spread chord, மூன்றும் ஐந்தாம் சுர நிலை இயைபு.

chord'al, *a.* யாழ்நரம்பு சார்ந்த; நரம்பு நாளம் சார்ந்த; நாண்வரைக்குரிய; தளைநாண்போன்ற; நிறஇயைபுக்குரிய; சுரஇயைபு சார்ந்த.

chor'date, *n.* தண்டெலும்பு அல்லது அதன் கருமூலத் தடங்கள் உடைய உயிரினப் பெரும்பிரிவு சார்ந்த உயிர்.

chore, *n.* இடைக்கால வேலை, அவ்வப்போது இடையிடையே தேவைப்படும் வேலை: வீட்டுப்பெருக்கல் மெழுகல்வேலை; *v.* நாட்கூலிக்கு வீட்டுவேலை செய்; வீட்டுப்பெருக்கல் மெழுகல் வேலை செய்; அவ்வப்போது தற்காலத்திய வேலை செய்.

chore'a, (ல.) *n.* காக்காய் வலிப்பு வகை.

choree', *n.* நெடில் குறிலிணைந்த ஈரசைச்சீர்.

cho'regraph, *n.* = **choreograph**.

choreg'raphy, *n.* = **choreography**.

chore'ic[1], *a.* காக்காய் வலிப்புடைய.

chore'ic[2], *a.* நெடில் குறில் இணைந்த ஈரசைச் சீர்கொண்ட; நெடில் குறில் அடங்கிய ஈரசைச் சீருக்குரிய.

cho'reograph, choreog'rapher, *n.* கூடியாட்ட ஆடல் வகையின் அமைப்பாளர்.

choreograph'ic, *a.* கூடியாட்ட ஆடல் வகை அமைப்புக் குரிய; ஆடல்வகை ஏற்பாட்டுக்குரிய.

choreog'raphy, *n.* ஆடற்கலை, கூடியாட்டவகைக்குரிய கலை; கூடியாட்ட வகைக் கலைக்குறியீட்டுப் பதிவு; ஆடல் தொகுதி அமைப்பாண்மை; கூடியாட்டவகை அமைப் பாண்மை.

cho'riamb, *n.* நெடில் குறிலிணை நெடிலான நாலசைச்சீர்.

choriam'bic, *n.* நெடில் குறில் இணை நெடிலான நாற்சீரடி யாலான பாவகை; *a.* நெடில் குறில் இணை நெடிலான நாலசைச் சீர்சார்ந்த; நெடில் குறில் இணை நெடில் அசை களடங்கிய.

choriamb'us, *n.* = **choriamb**.

chor'ic, *a.* கிரேக்க நாடகங்களின் ஆடல்பாடற் குழுவுக் குரிய; ஆடல் பாடற் குழுப்போன்ற.

cho'rioid, *a.* கருப்பையின் புறத்தோல் போன்ற.

chor'ion, *n.* கருப்பையின் புறத்தோல்: *pl.* **cho'ria**.

choripet'alous, *a.* (தாவ.) தனித்தனி வேருன இதழ்களை யுடைய.

cho'risis, *n.* கிளைவழிப் பெருக்கம், கிளைப்பதன்மூலம் உறுப்புப் பலவாகும் முறை.

chor'ister, *n.* பாடற்குழு உறுப்பினர்; பாடற்குழுவிலுட் பட்ட சிறுவன், பாடற் பைதல்.

chorog'rapher, *n.* விரிநிலநூலார், மாவட்ட வாரியாக நிலநூல் விரித்தாராய்பவர்.

chorograph'ic, chorograph'ical, *a.* விரிநிலநூல் சார்ந்த, விரிநிலநூலுக்குரிய.

chorog'raphy, *n.* விரிநிலநூல், மாவட்ட வழியாக விரிந்து செல்லும் நிலநூல்.

cho'roid, *a.* = **chorioid**.

chorolog'ical, *a.* நிலப்பரப்பு வளம்சார்ந்த.

chorol'ogist, *n.* நிலப்பரப்பு வள ஆய்வாளர், பரப்பு வளத் துக்குரிய நிலநூல் ஆராய்ச்சியாளர்.

chorol'ogy, *n.* நிலப்பரப்பு வளநூல்.

chor'us, *n.* கிரேக்க நாடகங்களிலும் சமயவிழாக்களிலும் பங்கு கொள்ளும் ஆடல்பாடற்குழு; எலிசபத் அரசிகால ஆங்கில நாடகங்களில் (English Elizabethan plays) முகப் புரையும் இடை நிகழ்வுரையும் ஆற்றியவர்; சூத்திரதாரர்; பாடகர்குழு; பலர் கூடிப் பாடும் பாடல்; பலர் குரல் பேச்சு; (இசை.) பல சுதிக் குரலிணைவு; கேட்போரும் கலந்து கொள்ளும் பல்லவிப் பகுதி; *v.* பாடகர்குழுவில் இணைந்து பாடு; குழுவின் குரலில் இணைந்து பேசு; (தொ.) in chorus, எல்லாரும் சேர்ந்து ஒரே குரலில்.

chor'us-girl, *n.* நாடக அரங்கத்தில் பாடற்குழுவுடனே பங்கு கொள்ளும் பெண்.

chose, *v.* choose என்பதன் இறந்தகாலம்.

chose jugee, (பிர.) *n.* முடிந்துபோன செய்தி.

chos'en, *v.* choose என்பதன் முடிவெச்சம்.

chot'a haz'iri, chot'a haz'ri, (இ.) *n.* காலைச் சிற்றுண்டி.

chou, *n.* பெண்டிர் தொப்பியிலோ ஆடையிலோ புணைந்து கொள்ளும் அணியிழைபூ.

chough, *n.* செங்காற் காக்கையினத்தின் வகை.

choul'try, *n.* வழித்தங்கல் மனை; கொட்டகை, சத்திரம்.

chouse, *n.* ஏமாளி; அப்பாவி; சூழ்ச்சிப்பொறி; *v.* ஏமாற்று, பொறியில் தள்ளு.

chow, *n.* சீன வளர்ப்பு நாயினம்.

chow'-chow, *n.* ஆரஞ்சுச்சுளை-இஞ்சி முதலியன கலந்த சீனப்பதன உணவு வகை; உணவு; சீன வளர்ப்பு நாயினம்.

chow'der, *n.* மீனும் மாச்சில்லும் கலந்த உணவு வகை.

chow'kidar, (இ.) *n.* காவலாள்.

chow'ry, (இ.) *n.* சாமரை, ஈ யோட்டும் மயிர்க்குச்சம்.

choy'-root, *n.* செஞ்சாய வேர் வகை.

chre'matist, *n.* நாட்டுப் பொருளியல்வாதி.

chrematis'tic, *a.* நாட்டுப்பொருளியல் பற்றிய; செல்வநிலை பற்றிய; பணவளம் பற்றிய.

chrematis'tics, *n.* செல்வ இயல்; பொருள்நிலை பற்றிய ஆய்வு நூல்.

chrestomath'ic, chrestomath'ical, *a.* தொடக்கப் பயிற்சிக்குரிய திரட்டு வடிவான.

chrestom'athy, *n.* அயல்மொழி மாணவர்க்குரிய தொடக்க நிலைத் திரட்டுச்சுவடி.

chri'sm, *n.* திருக்கோயில்களில் பயன்படுத்தப்படும் திரு முழுக்கு நெய்.

chris'mal, *n.* திருமுழுக்கு நெய் வைக்கப்படத்தக்க பேழை; பெயரீட்டு விழாவின்போது பயன்படுத்தப்படும் திரை; *a.* திருமுழுக்கு நெய்யைக் குறித்த; திருமுழுக்குக்குரிய.

chris'matory, *n.* திருமுழுக்கு நெய்க்குரிய கலம்.

chris'om, *n.* பெயரீட்டு விழாவில் குழந்தைமீதிடப்படும் மெல்லாடை; பெயரிடுவதற்குரிய குழந்தை, ஒருமாதக் குழவி.

chris'om-child, *n.* பெயரிடுவதற்குரிய குழந்தை, ஒருமாதக் குழவி.

Christ, *n.* திருப்புதல்வர், மீட்பர், இயேசு கிறித்து.

chris'ten, *v.* பெயரீட்டு விழாவில் கிறித்தவப் பெயர் சூட்டு; திருத்தீக்கை விழாவினுல் கிறித்தவனுக்கு, கிறித்துவின் பெயரால் நாமஞ்சூட்டு; பெயரிடு; பெயரிட்டழை; குழுஉப் பெயர் சூட்டு.

Chri'stendom, *n.* கிறித்தவ உலகு; கிறித்தவ நாடுகளின் தொகுதி; உலகக் கிறித்தவர் குழு.

Christ'hood, *n.* திருமீட்பர் நிலை, திருப்புதல்வர் தன்மை, இயேசுவின் பண்பு.

Chris'tian, *n.* கிறித்தவர், இயேசுகிறித்துவின் சமயத்தைச் சார்ந்தவர்; இயேசுவைப் பின்பற்றுபவர்; இயேசுவை நம்புபவர்; இயேசுவின் பண்பாளர்; கடவுட்பற்றுளர்; நல்லார்; தக்கார்; மனிதர்; *a.* கிறித்தவ; இயேசுகிறித்துவுக்குரிய; கிறித்தவ சமயஞ்சார்ந்த; இயேசுவின் திருச்சபைக்குரிய; இயேசுவைப் பின்பற்றுகிற; இயேசுவின் கோட்பாடு மேற்கொண்ட; இயேசுகிறித்துவின் பண்பு அளாவிய; கடவுட் பற்றுர்ந்த; தகுதிவாய்ந்த; அருளிரக்கமுடைய; மனிதப் பண்பு நிரம்பிய; (தொ.) Christian burial, கிறித்தவ சமய வினைமுறைகளுடன் கூடிய புதைவினைமுறை; Christian era, கிறித்தவ ஊழி, இயேசுகிறித்துவின் பிறந்த நாளி லிருந்து கணிக்கப்படுவதாகக் கருதப்படும் ஆண்டுக் கணிப்பு வரிசை; Christian name, பெயரீட்டு விழாவில் குடிப் பெயருடனிணைய அளிக்கப்படும் கிறித்தவ சமயச் சார்பான இயற்பெயர்; Christian Science, மருந்தில்லாமலே கடவுட் பற்றுமூலம் நோய்க்குணம்காண அவாவும் முறை; Christian Scientist, கடவுட்பற்றுமூலமே மருந்தின்றி நோய்க்குணம் காட்டுபவர்; Christian Socialism, கிறித்தவ சமதருமம், கிறித்தவ அறநெறி அடிப்படையாகச் சமூகச் சீர்திருத்தம் நாடிய 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் எழுந்த இயக்கம்.

Christian'ia, *n.* பனிச்சறுக்கலில் திடீர் நிறுத்தத்துக்கு உதவும் திருப்புச் சறுக்கல் முறை.

Christ'ianism, *n.* கிறித்தவ இயல்பு; கிறித்தவப் பண்பு; கிறித்தவர் சமயக்கோட்பாடு.

Christian'ity, *n.* கிறித்தவ சமயம்; கிறித்தவ சமயநெறி முறை; கிறித்தவ சமயக்கோட்பாடு; கிறித்தவப் பண்பு.

Christianiza'tion, *n.* கிறித்தவராக்குதல்; கிறித்தவ மயமாக்குதல்; கிறித்தவப் பண்பூட்டுதல்; கிறித்தவராதல்.

Chris'tianize, *v.* கிறித்தவ சமயத்துக்கு மாற்று; கிறித்தவ மயமாக்கு; கிறித்தவராகு; கிறித்தவப் பண்பூட்டு.

Christ'ian-like, *a.* கிறித்தவத் தகுதிவாய்ந்த.

Chris'tianly, *a.* கிறித்தவப் பண்புக்குகந்த.

Chris'tie, n. Christiania என்பதன் சுருக்கக் குறிப்பு.

Chris'tie's, *n.* லண்டன் மாநகரில் கலைப்பொருள் விற்பனை யிடப் பெயர்.

Christ'less, *a.* இயேசுகிறித்து இல்லாத; இயேசுகிறித்து விடம் நம்பிக்கையற்ற; கிறித்தவப் பண்புக்கொவ்வாத.

Christ'-like, *a.* இயேசுகிறித்து போன்ற; இயேசுநாதரின் பண்புவாய்ந்த; இயேசுநாதரின் செயலொத்த.

Christ'liness, *n.* இயேசுநாதரது போன்ற உயர்பண்புத் தகுதி.

Christ'ly, *a.* இயேசுநாதரைப்போன்ற; இயேசுநாதர் பண்புக் குகந்த.

Christ'mas, *n.* இயேசுநாதர் பிறந்தநாள் விழா, இயேசு நாதரின் திருப்பிறப்புநாட் பண்டிகை (டிசம்பர் 25); திருப் பிறப்புப் பண்டிகைப் பருவம்; வாடாப் பசுந்தழை வகை; பண்டிகை ஒப்பணக்குரிய பசுந்தழைச் செடிகொடியினம்.

Christ'mas-box, *n.* திருப்பிறப்புப் பண்டிகைக்குரிய பரிசுகள் அடங்கிய பெட்டி; திருப்பிறப்புப் பண்டிகைப் பரிசு; அஞ்சல்காரனுக்கு அளிக்கப்படும் திருப்பிறப்புப் பண்டிகை நல்லெண்ணப் பரிசு.

Christ'mas-card, *n.* இயேசுநாதரின் பிறந்த நாள் விழா வாழ்த்துச்சீட்டு.

Christ'mas-day, *n.* இயேசுநாதரின் பிறந்த நாள், திருப் பிறப்புப் பண்டிகை நாள் (டிசம்பர் 25).

Christ'mas-eve, *n.* இயேசுநாதர் பிறந்த நாள் பண்டிகைக்கு முந்திய நாள் (டிசம்பர் 24).

Christ'mas-pudding, *n.* திருப்பிறப்பு விழாவுக்கான அப்ப வகை.

Christ'massy, *a.* திருப்பிறப்புப் பண்டிகைக்குரிய மகிழ்வு ஊட்டுகிற.

Christ'mas-tide, *n.* இயேசுநாதர் திருப்பிறப்புக்குரிய பண்டிகைப் பருவம்.

Christ'mas-time, *n.* திருப்பிறப்புப் பண்டிகைக் காலம்; திருப்பிறப்புப் பண்டிகைக்குரிய பருவம்.

Christ'mas-tree, *n.* பண்டிகைக்குரிய பரிசுகளும் விளக்கு களும் நாட்டி ஒப்பனை செய்யப்பட்டுள்ள விழா மரம்.

Christ'masy, *a.* = **Christmassy.**

Christol'atry, *n.* இயேசுநாதர் வழிபாடு.

Christolog'ical, *a.* இயேசுநாதர் ஆளுமைத்துறை பற்றிய, இயேசுநாதர் வாழ்க்கைப்பண்பு கூறும் இறையியல் பகுதிக் குரிய.

Christol'ogist, *n.* இயேசுநாதர் பண்பாய்வாளர், இயேசு நாதர் வாழ்க்கைப் பண்பாயும் இறைநூற்பகுதி ஆராய்ச்சி யாளர்.

Christol'ogy, *n.* இயேசுநாதர் ஆளுமைப்பண்பு பற்றிக் கூறும் கிறித்தவ இறைநூற் பகுதி; இயேசுநாதர் பற்றிய பண்பாய்வு நூல்.

Christoman'iac, *n.* இயேசுநாதர் பற்றுர்வ வெறியர்.

Christoph'any, *n.* இயேசுநாதர் திருக்காட்சி வெளிப்பாடு.

Christ's'-thorn, *n.* முட்செடிவகை.

Christ'ward, *a.* இயேசுநாதரை நோக்கிய, இயேசுநாதர் பண்பினைக் குறிக்கொண்ட; *adv.* இயேசுநாதரை நோக்கி, இயேசுநாதர் அருட்பண்பினைக் குறிக்கொண்டு.

Christ'wards, *adv.* இயேசுநாதரை நோக்கி, இயேசுநாதர் அருட்பண்பினைக் குறிக்கொண்டு.

Chris'ty min'strels, *n. pl.* முகத்தில் கரிபூசிக்கொண்டு நீகிரோக்களாக நடிக்கும் பாடற்குழுவினர்.

chro'ma, *n.* வண்ணப்பண்பு, நிறத்தின் சாயல்.

chromat'ic, *a.* நிறம் சார்ந்த ; வண்ணத்தினுல் உண்டாகிற; நிற முணைப்புடைய; (இசை.) அயலுருக்கள் விரவிய; (தொ.) chromatic printing, பல்வண்ணை மை பூசிய பாளங்களின் துணைக்கொண்டு அச்சிடும் முறை ; chromatic scale, (இசை.) அயலுருக்கள் விரவிச்செல்லும் இசைப்பட்டி.

chromat'ics, *n.* நிற ஆய்வியல்.

chrom'atin, *n.* இனக்கூறு, எளிதில் நிறம் மாறிக் கறைப் படும் இயல்புடைய உயிர்மத்தின் கருவுட் பகுதி.

chromat'ogram, *n.* இயலீர்ப்பாற்றல்மூலம் சேர்மானப் பிரிவினையில் கிட்டும் வண்ணப் படிகப்பட்டி.

chromatog'raphy, *n.* நிற ஆய்வியல் ; இயலீர்ப்பாற்றல் மூலம் சேர்மானம் பிரிக்கும் முறை.

chromat'ophore, *n.* (வில.) நிற உயிர்மம் ; (தாவ.) ஊன் மத்தில் நிறப்பொருள் கொண்ட பகுதி.

chromatop'sia, **chromatop'sy**, *n.* வண்ணக்காமாலை, நிறமாறிய காட்சி தரும் கண்ணோய் வகை.

chro'matosphere, *n.* = chromosphere.

chrom'atrope, *n.* சுழல்வட்டாடிமூலம் பல்வண்ணங்காட்டும் ஒளிக்காட்சி.

chro'matype, *n.* குரும உப்புக்களைப் பயன்படுத்தும் நிழற் படமுறை ; வண்ண நிழற்படம் ; வண்ண அச்சு பதிக்கப் பட்ட தாள்.

chrome, *n.* குரும்ம். குரும்மச்சேர்மானம் ; ஈயக்குருமிகையி லிருந்து எடுக்கப்படும் மஞ்சள் வண்ணப்பொருள் ; ஈயக்குரு மிகையிலிருந்து எடுக்கப்படும் பொருளாலான மஞ்சள் வண் ணம் ; *a.* குரும்மச்சார்பான, குரும்மஞ்சேர்ந்த ; (தொ.) chrome green, chrome orange, chrome red, குரும்மச்சேர்மான வகைகளிலிருந்து எடுக்கப்படும் வண்ணப் பொருள்கள்.

chrome'-leath'er, *n.* குரும்மச்சேர்மான வகைகளால் பதனிடப்பட்ட தோல், குரும்மத்தோல்.

chrome'-plating, *n.* குரும்ம மின் பூச்சுமானம்.

chrome'-steel', *n.* குரும்மமும் இரும்பும் சேர்ந்த எஃகு, குரும்ம எஃகு.

chrome'-tann'ing, *n.* குரும்ம உப்புக்களின் உதவியால் தோற்பதனீடு செய்தல்.

chrome'-yell'ow, *n.* ஈயக்குருமிகையிலிருந்து எடுக்கப்படும் மஞ்சள் வண்ணப்பொருள்.

chro'mic, *a.* முத்திறக் குரும்மம் சார்ந்த ; (தொ.) chromic acid, சாயமிடுவதிலும் கறை போக்குவதிலும் பயன்படும் பொன் சிவப்பு நிறமான குரும்மக் காடி வகை.

chro'mite, *n.* கனிப்பொருள் வகை, இரும்புக் குரும்ம ஈருயிரகை.

chrom'ium, *n.* குரும்மம், அழகிய வண்ணங்கள் வாய்ந்த சேர்மானங்களையுடைய உலோக வகை.

chro'mo, *n.* = chromolithograph.

chrom'ogram, *n.* கலப்பால் இயற்கை வண்ணந்தரும் பல் வண்ணத் தொகுதி.

chrom'ograph, *n.* வண்ணச் சாயமூலம் எடுக்கப்படும் பசைமப் படியெடுப்புக் கருவி; *v.* பசைமப் படியெடுப்புக்கருவி மூலம் படியெடு.

chromolith'ograph, *n.* வண்ணக்கல் அச்சு, வண்ணந் தோய்த்து அடிக்கத்தக்க கற்படிவ அச்சு.

chromolithog'rapher, *n.* வண்ணக்கல் அச்சாளர்.

chromolithograph'ic, *a.* வண்ணக்கல் அச்சுக்குரிய.

chromolithog'raphy, *n.* வண்ணக்கல் அச்சு முறை.

chro'moscope, *n.* வேறுவேறு நிற வடிவங்களை இணைத்துக் காட்டும் கருவி.

chrom'osome, *n.* இனக்கிற்று. உயிர்மப் பிளவுப்பருவத்தில் உயிரியலான பங்கு கொண்டு இனமரபுப் பண்புகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் இனக்கூற்றின் கம்பியிழை போன்ற பகுதி.

chrom'osphere, *n.* கதிர் மண்டலம் சூழ்ந்து போர்த்துள்ள வெவ்வளி வட்டம்.

chrom'otype, *n.* = chromatype.

chro'mo-typog'raphy, *n.* வண்ண அச்சு வேலை.

chro'mo-xylog'raphy, *n.* வண்ண மரப்பாள அச்சு முறை.

chron'ic, *n.* நாட்பட்ட நோயாளி ; சீர்ப்பட முடியாதவர் ; *a.* நாட்பட்ட, நீடித்த, சீர்கேடுற்ற ; எளிதில் உருப்பட முடியாத.

chron'ical, *a.* நாட்பட்ட, சீர்கேடுற்ற.

chron'icle, *n.* ஆண்டுக் கணிப்பு; தொடர்வரலாறு; செய்திப் பட்டியல் ; நிகழ்ச்சித் தொடர், கதை ; *v.* தொடர்புபடுத்திப் பதிவுசெய்; காலவரன் முறையாக எழுது, வரிசையாகக் கூறு.

chron'icler, *n.* நிகழ்ச்சித் தொகுப்பாளர், வரலாற்றுப் பதிவாளர்.

chronique scandaleuse, (பிர.) *n.* அலர் தூற்றல் தொகுப்பு.

chron'ogram, *n.* ஆண்டுக் குறிவாய்பாடு, இலத்தீன் மொழி யில் (Latin) ரோம எண் இலக்க (Roman numerals) வடிவ மாய் வரும் எழுத்துக்களின் எண் மதிப்பைக் கூட்டி ஆண்டுத் தொகை உய்த்துணர வைக்கும்படி அமையும் எழுத்துப் பதிவு.

chronogrammat'ic, *a.* ஆண்டுக்குறி வாய்பாடு குறித்த ; எழுத்துக்களிலிருந்தே ஆண்டுக் குறிப்புத் தருகிற.

chron'ograph, *n.* நுட்பதிட்பமுடைய காலக் கணிப்புப் பொறி ; கொடிப்பொழுது காட்டும் மணிப்பொறி ; வீசை கணித்துக் காட்ட உதவும் நுண் மணிப்பொறி ; ஆண்டுக் குறிவாய்பாடு.

chronog'rapher, *n.* காலக்கணிப்பு வரலாற்றாளர் ; ஆண்டுக் குறிவாய்பாடு வகுப்பவர்.

chronograph'ic, *a.* நுண்காலக் கணிப்புக்குரிய.

chronog'raphy, *n.* கால வரிசைக் கணிப்பு ; கால முறை ; நுண்ணிடைக்காலக் கணிப்புமுறை.

chronol'oger, *n.* = chronologist.

chronolo'gic, **chronolo'gical**, *a.* காலக்கணிப்பு முறை சார்ந்த ; காலவரிசையான ; கால வரிசைப் படுத்தப்பட்ட.

chronolo'gically, *adv.* கால வரிசைப்படி.

chronol'ogist, *n.* காலக் கணிப்பாய்வாளர் ; காலக்கணிப்பு வல்லுநர்.

chronol'ogize, *v.* காலவரிசைப்படுத்து ; காலமுறைப்படி மாற்று.

chronol'ogy, *n.* காலக்கணிப்புமுறை நூல் ; காலவரிசை முறை ; காலவரிசைப் பட்டி.

chronom'eter, *n.* திட்பக்காலக் கணிப்பளவுக் கருவி.

chronomet'ric, **chronomet'rical**, *a.* நுண்காலக் கணிப்பு முறை சார்ந்த.

chronom'etry, *n.* நுண்காலக் கணிப்பளவை முறை ; கால அளவைமுறை.

chron'opher, *n.* மின்குறி அமைவு, குறி அடையாள அறிவிப்புக்களைப் பரப்பி வழங்குவதற்கான மின்பொறி அமைவு.

chron'oscope, *n.* உந்து விசைமானி, உந்து விசைப்பொறி களின் விசை அளக்கும் பொறியமைவு.

chrys'alid, **chrys'alis**, *n.* முட்டைப்புழு ; முட்டைப்புழுக் கூடு ; *pl.* chrysal'ides, chrys'alids, chrys'alises.

chrysan'themum, *n.* கொத்து மலருடைய செடிவகை.

chrysaro'bin, *n.* மஞ்சள் நிறமான மருந்துக் கலவைப்பொடி வகை ; முனைத்த பேதிமருந்து வகை.

chryselephan'tine, *a.* தந்தத்தாலும் தங்கத்தாலும் இழைத் தியற்றப்பட்ட.

chrysobe'ryl, *n.* பொன்வண்ணப் பச்சைநிற மணிக்கல் வகை.

chrysoc'racy, *n.* செல்வ ஆட்சி, பொன்னாட்சி.

chrys'olite, *n.* பச்சைமணிக்கல் வகை.

chrysophan'ic, *a.* மஞ்சள் நிற மருந்துக் கலவைப்பொடி சார்ந்த; (தொ.) chrysophanic acid, தோல் நோய்களில் வழங்கப்படும் மஞ்சள்நிற மருந்துப் பொடி வகையின் உயிரக ஊட்டச்சரக்கு.

chrysoph'ilite, *n.* பொன் ஆர்வலர்.

chrys'oprase, *n.* அக்கிக்கல், பச்சைமணிக்கல் வகை.

chrys'otile, *n.* பாம்புத்தோல் போன்ற புள்ளிகள் வாய்ந்த இழைம இயல்புடைய பச்சை மணிக்கல் வகை.

chtho'nian, chthon'ic, *a.* அடிநிலத்துக்குரிய; கீழுலகுக் குரிய.

chub, *n.* மேல்புறம் கரும்பசுமையான கொழுவிய சிறிய ஆற்று மீன்வகை.

chubbed, chubb'y, *a.* உருண்டு திரண்ட, கொழுங்குட்டை யான; உருண்டு திரண்ட வட்ட முகமுடைய.

chub'-faced, *a.* கொழுமையான முகத்தையுடைய.

chuck [1], *n.* பெடைக் கோழியின் அடங்கிய கொக்கரிப்பு ஒலி; கோழியை அழைப்பதற்குரிய ஒலி; குதிரை ஊக்கொலி; கோழிக்குஞ்சு: செல்லக்கட்டி (அருமை விளிச்சொல்); ரு. பெடைக்கோழியின் அடங்கிய குரலில் கொக்கரி; குரல் கொடுத்துக் கோழியை அழை; குரல் கொடுத்துக் குதிரையை ஊக்கு.

chuck [2], *n.* தாடையின்கீழ்ச் செல்லமாகத் தட்டுதல்; சுண்டுகை; எறிவு; பூவா காயா எனக் கண்டு முடிவு காணும் விளையாட்டு வகை; நீக்கம், தள்ளுபடி; சிறு கூழாங்கல்; ரு. தாடையின்கீழ்ச் செல்லமாகத் தட்டு; சுண்டு; எறி; நீக்கு, ஒதுக்கித்தள்ளு; (தொ.) chuck away, வீணாக இழ; chuck it, விட்டுத்தள்ளு; chuck out, வெளியேற்று; chuck up, வெறுத்தொதுக்கு, தள்ளிக்கவி; chuck up the sponge, போட்டி தவிர்த்துவிடு; முயற்சியை ஒதுக்கித் தள்ளு; give one the chuck, நீக்கு.

chuck [3], *n.* கட்டி, முண்டு; சுழல் கொளுவு வார், பணிக்குரிய பொருள்கவி ஏந்தி வாக்காகச் சுற்றவல்ல தோல்வார், இயந்திரப்பணி ஏந்தமைவு.

chuck'er-out, *n.* வேண்டாதவரை வேலையிலிருந்து நீக்குபவர்.

chuck'-far'thing, *n.* சிறு நாணயத்தைக் குழிகளில் சுண்டி வீழ்த்தி விளையாடும் விளையாட்டு வகை.

chuck'-full, *a.* முழுதும் நிரம்பிய.

chuck'ie [1], *n.* சிறுகோழிக்குஞ்சு.

chuck'ie [2], *n.* சிறுகூழாங்கல்.

chuck'ies, *n. pl.* சிறுகூழாங்கற்கள் கொண்டு விளையாடும் விளையாட்டு வகை.

chuc'kle [1], *n.* கோழி கொக்கரிப்பு; அடங்கிய சிரிப்பு, வாய் மூடி நகைப்பு; ஏளனநகை; அகமகிழ்வு; ரு. கொக்கரி, கோழியின் அடங்கொலி செய்; உள்ளாரநகு, வாய்விடாது சிரி; கேலியாக நகைசெய்; எக்களி; அகமகிழ்; தருக்கிக் களிப்புறு.

chuc'kle [2], *a.* அருவருப்பான தோற்றமுடைய.

chuc'kle-head, *n.* மட்டி, மண்டு.

chuc'kle-headed, *a.* மூளையற்ற.

chuck'ling, *n.* அகமகிழ்வு, எக்களிப்பு.

chuck'-wagon, *n.* உணவு கொண்டு செல்லும் வண்டி.

chuck'y, *n.* செல்லக்கட்டி (அருமை விளிச்சொல்.)

chudd'ah, chudd'ar, (இ.) *n.* மேலாடை, பெண்டிர் தலை கவித்தணியும் சவுக்கம்; இஸ்லாமியர் கல்லறைமீது விரிக்கும் துண்டு.

chuff, *n.* கோமாளி, காட்டான்.

chuff'y, *a.* பண்புக்கேடான, காட்டாண்மை வாய்ந்த.

chug, *n.* சிக்கென்ற ஒலி, மெல்ல இயங்கும் எண்ணெய் இயந்திரம் செய்யும் ஒசை.

chukk'a, chukk'er, *n.* செண்டாட்டத்தில் இடைப்பிரிவு.

chukor', (இ.) *n.* நிலா முகிப்புள், சகோரப் பறவை.

chum [1], *n.* ஏடன், உழுவலன்பன்; உடனுறைதோழர், ஓரறைத்துணைவர்; ரு. ஒரே அறையில் உடனுறை; தோழமை உறவாடு; உடனுறை தோழராகு; உடன்செல்; உடனுறை தோழராக அமர்த்தப் பெறு; (தொ.) chum up with, நெருங்கிய தோழமை கொள்.

chum [2], *n.* பசிபிக் மாகடலில் (Pacific Ocean) காணப்படும் மீன் வகை.

chumm'age, *n.* உடனுறைவு ஏற்பாடு; மிகை உடனுறைவுக் குரிய கட்டணம்.

chumm'y, *n.* ஏடன், உடனுறை தோழர்; ஒரு சிலர் செல்லத் தக்க அடக்கமான உந்து வண்டி, பெட்டி மோட்டார்வண்டி.

chump, *n.* குற்றி, தறிக் கட்டை; தறித்த இறைச்சித் துண்டு, கறிக்கண்டம்; ஆட்டிறைச்சி இடுப்புக் கண்டம்; (தொ.) off one's chump, ஆர்வ வெறியில் தன்னை மறந்து.

chunk, *n.* கெட்டித்துண்டு, பாளம்.

chupat'i, chupatt'ie, chupatt'y, (இ.) *n.* முரட்டு அடை, திண்ணமான வறட்டப்பம், சப்பாத்தி.

church, *n.* கிறித்தவக் திருக்கோயில்; வழிபாட்டு மனை; திருக்கோயில் வழிபாடு; கிறித்தவக் குருமார் குழு, திருச்சபை; குருமார் பணியரங்கத் துறை; கிறித்தவர் தொகுதி; கிறித்தவக் கினை நெறி; பொது சமய வழிபாட்டுக்குழு; *a.* கிறித்தவத் திருக்கோயிலுக்குரிய; கிறித்தவத் திருச்சபைக்குரிய; சமயத்துறைக்குரிய; ரு. திருமண முடித்த மணத் துணைவர் களையோ-பிள்ளைப் பேற்றுக்குப்பின் புனிற்றிளமாதையோ-பதவியேற்ற நகரவை உறுப்பினரையோ உடன்கொண்டு வழிபாட்டுவினை நிறைவேற்று; பேறு கழிந்த அணங்கினை நன்றியறிவிப்பு வழிபாட்டை முன்னிட்டுத் திருக்கோயிலுக்கு இட்டுச்செல்; (தொ.) Church Army, சமயத்தொண்டர் அணி; church militant, தீமை எதிர்த்துப் போர்புரியும் பூவுலகத் திருச்சபை; church triumphant, திருச்சபையின் மேலுலகப் பகுதியாகக் கருதப்படும் அணி.

church'-ale, *n.* திருக்கோயில் விழாக்களில் ஒன்று.

church'-court, *n.* திருக்கோயில் திருச்சபை ஆகியவை சார்ந்த வழக்குகட்குரிய முறை மன்றம்; திருக்கூட்டம்; திருக்கூட்டத்துத் தினையாட்சியின் ஆட்சிமுறை மன்றம்.

church'-goer, *n.* வழக்கமாகக் கோயில் செல்பவர்.

church'-going, *n.* வழக்கமாகக் கோயிலுக்குச் செல்லுதல்; *a.* வழக்கமாகக் கோயிலுக்குச் செல்கிற; கோயிலுக்குச் செல்லுகிற.

churchian'ity, *n.* இயேசுநாதருக்குப் பதிலாகத் திருச்சபையையே மையமாகச் சார்ந்த சமயப்பண்பு.

church'ing, *n.* புனிற்றிளந்தாயின் திருக்கோயில் வழிபாட்டேற்பு விழா, புனிற்றிளந்தாயை வழிபடுவித்தல்.

church'ism, *n.* சமயக்கினையினைப் பின்பற்றும் குறுகிய விழுமுறைப்பற்று.

church'less, *a.* தனித்திருச்சபைத் தொடர்பற்ற, தனிச் சமயக்கினைத் தொடர்பற்ற.

church'ly, *a.* திருக்கோயில் தொடர்புடைய; திருச்சபைச் சார்புடைய.

church'man, *n.* திருச்சபைக் குரு; நிலைபேறுற்ற திருச்சபை உறுப்பினர்; நிலைபேறுற்ற திருச்சபை ஆதரவாளர்.

church'-mouse, *n.* திருக்கோயில் சுண்டெலி நிலையில் இடையரு வறுமைக்கு ஆட்பட்டவர்.

church'-parade', *n.* திருக்கோயில் செல்வதற்குரிய படைத் துறைப்பாணி அமைந்த அணிவகுப்பு; வழிபாட்டுக்குப்பின் வழிபாட்டாளர் அணிவகுப்பு.

church'-rate, *n.* ஊர்க்கோயில் காப்பு வரி.

church'-ser'vice, *n.* திருக்கோயில் வழிபாட்டுத் திருவிணை ; திருவழிபாட்டு விணைமுறை ; வழிபாட்டு விணைமுறைத் திருவேடு.

church'-text, *n.* ஒடுங்கி உயர்ந்த கெட்டி அச்செழுத்து உருப்படிவம்.

church'ward, *a.* திருக்கோயில் நோக்கிய, திருச்சபை நோக்கிய; சமயக் கண்ணோட்டமுடைய ; *adv.* திருக்கோயில் நோக்கி, திருச்சபை நோக்கி.

churchward'en, *n.* ஊர்த்திருக்கோயில் காப்பாளர்.

churchwards, *adv.* திருக்கோயில் நோக்கி, திருச்சபை நோக்கி.

church'woman, *n.* திருச்சபையின் பெண்பால் உறுப்பினர் ; ஆங்கில நாட்டுத் திருச்சபை ஆதரவாளரான பெண்பாலர்.

church'y, *a.* மிகமுணைப்பான திருச்சபைச்சார்பு மேற்கொண்ட ; திருச்சபை வெறியார்வமுடைய ; திருச்சபையின் நீங்காத்தடம் கொண்ட.

church'yard, *n.* திருக்கோயில் சுற்றுப்புறத்தை அடுத்துள்ள கல்லறை வெளி.

churl, *n.* கீழ்மகன், பண்பற்றவன், கயவன், முரடன் ; நாகரிகமறியாத குடியானவன் ; நாட்டுப்புறத்தான் ; காட்டான்.

churl'ish, *a.* காட்டினத்தன்மையுடைய, முரட்டுத்தனமான, பண்பாடற்ற ; தன்மூப்புடைய.

churn, *n.* வெண்ணெய் கடையும் பொறி ; கடைவதற்குரிய போகணி ; *v.* கடை, நுரையெழக் கலக்கு ; தயிர் கடைந்து வெண்ணெய் எடு ; கடைபொறி இயக்கு ; கடல் நீரைக் கொந்தளிக்க வை.

churn'-dash, churn'-dasher, *n.* மத்து, கடைவதற்குரிய பொறி.

churn'-drill, *n.* கைக்கடைசல் மூலம் துளையிடும் கருவி.

churn'ing, *n.* கடைதல், வெண்ணெய் எடுத்தல் ; ஒரு கடைவு வெண்ணெய்.

churn'-milk, *n.* மோர்.

churn'-staff, *n.* = churn-dash.

churr, *n.* புள்வகையின் கூர்த்த சில்லொலி ; *v.* புள்வகையின் கூர்த்த சில்லொலி எழுப்பு, கூவிளி செய்.

churr'us, (இ.) *n.* கஞ்சா, வெறிப்புகை தரும் சணல் வகையின் பிசின்.

churr'-worm, *n.* சதுப்பு நிலப் பாச்சை வகை.

chut, *int.* 'சூ', "வாய் மூடு", பொறுமையிழப்புக் குறி.

chute, *n.* மென்சரிவோடை ; சரக்குக் கொண்டுய்ப்பதற்குரிய சாய் நீரோடை ; சரக்குக் கொண்டுய்ப்பதற்குரிய சறுக்குச் சாய்வு நெறி ; குப்பை கழிபொருள்களைத் தொலைவாக்கும் சாய்சரிவு ; பனிச்சறுக்கு வழி.

chut'nee, chut'ney, (இ.) *n.* காரத்துவையல்.

chyle, *n.* உணவுப்பால், உடலில் உணவிலிருந்து ஊறும் கொழுப்புக் கலந்த வெள்ளை நிணநீர்.

chylu'ria, *n.* சிறுநீரில் உணவுப்பாற்கூறு காணும் உடற் கோளாறு.

chyme, *n.* உணவுச்சாறு, குடலில் உருவாகும் உணவின் குழம்பு.

chymifica'tion, *n.* உணவு குழம்பாக மாறும் மாறுபாடு ; உணவு குழம்புருவாக மாறுபடுதல்.

chym'ify, *v.* உணவு வகையில் குழம்பாக மாறுபடு.

chym'istry, *n.* = chemistry.

chy'pre, *n.* சைப்பிரஸ் (Cyprus) தீவிலிருந்து வரும் நறுமணப் பொருள் வகை.

cib'ol, *n.* வெங்காய வகை.

cibo'rium, *n.* ரோமன் கத்தோலிக்கத் திருக்கோயிலில் வளை மூடியுள்ள இறுதி உணவுவிணைக்கு உரிய கலம் ; திவ்விய நற்கருணைப் பாத்திரம் ; பலிபீடத்தின்மீது நான்கு தூண்களால் தாங்கப்பட்டு நிற்கும் மேற்கட்டு விதானம் ; *pl.* cibo'ria.

cicad'a, cica'la, *n.* சிள் வண்டு, சுவர்க்கோழி.

cic'atrice, *n.* புண் தழும்பு ; மரப்பட்டை வடு ; இலை உதிர் தடம் ; விதை வரை ; *pl.* cicatri'ces, cic'atrixes.

cicat'ricle, cicatric'ula, cicat'ricule, *n.* முட்டை மஞ்சட் கருவின் முளை உயிர்க்கும் முனை.

cicat'rix, *n.* = cicatrice.

cicatriza'tion, *n.* தழும்பேறிப் புண்ணுறும் முறைமை.

cic'atrize, *v.* தழும்பிடச்செய், புண்மூடித்தடமேறச் செய் ; புண்ணுறு, தழும்பிடு.

ci'cely, *n.* மறிகுடைவடிவக் கொத்து மலர்ச்செடி வகை.

cic'ero, *n.* இடைத்தரமான அச்சுரு அளவு வகை.

ciceron'e, *n.* வழிகாட்டி, அயலாருக்குக் காட்சிக்குரிய பழமை சான்ற அரும்பொருள்களைக் காட்டி விளக்குபவர் ; *v.* வழி காட்டியாகப் பணிசெய் ; *pl.* ciceron'i.

Ciceron'ian, *a.* புகழ்பெற்ற ரோமப் பேருரையாளராகிய சிசரோ (Cicero) வைப் போன்ற; சிசரோவுக்குரிய; சொல்வளமார்ந்த.

Ciceron'ianism *n.* சிசரோவின் மொழிநடைப் பண்பு.

Cicho'rium, *n.* "சிக்கரி" (chicory) உள்ளடக்கிய கூட்டு மலர்ச்செடி இனம்.

cicisbe'ism, *n.* மணமான பெண் உரிமைக் காதலனைக் கொள்ளும் இத்தாலிய நாட்டு மரபு.

cicisbe'o, (இத்.) *n.* இத்தாலியில் மணமான பெண்ணின் காதலுரிமையாளன் ; *pl. cicisb'ei.*

Cid, *n.* ஸ்பானிய நாட்டு இலக்கியத்தின் பெருங்காவிய வீரன், 11-ஆம் நூற்றாண்டுக்குரிய காஸ்டிலிய (Castilian) வீரன்.

cid'er, *n.* ஆப்பிள்பழச் சாற்றினாலான குடிவகை.

cid'er-cup, *n.* இனிமையூட்டப்பட்ட ஆப்பிள்பழ மதுக் கலவை.

ci'derkin, *n.* கீழ்த்தரமான ஆப்பிள்பழ மது.

cid'er-press, *n.* ஆப்பிள்பழ மது வடிக்கும் இயந்திரக் கருவி.

ci'dery, *a.* ஆப்பிள் பழ மதுபோன்ற.

ci-devant, (பிர.) *a.* முன் வழக்காற்றின்படியான ; *adv.* முன்னாள் வழக்கின்படி.

cierge, *n.* வழிபாட்டு மேடை முன்னுள்ள நெடு மெழுகுத்திரி விளக்கு.

ciga'la, *n.* = cicada.

cigar', *n.* சுருட்டு வகை, புகைச் சுருள்.

cigarette', *n.* சிகரெட்டு, புகைப்பூஞ்சுருள்.

cigarette'-card, *n.* புகைப்பூஞ்சுருள் கட்டுடன் வழங்கப்படும் சிறு பட அட்டை.

cigarette'-paper, *n.* புகைப்பூஞ்சுருள் செய்யப் பயன்படும் தாள் வகை.

cigar'-holder, *n.* புகைச்சுருள் வைத்துப் புகை உட்கொள்வதற்குரிய கொள்குழல்.

cigar'-shaped, *a.* புகைச்சுருள் வடிவான, உருட்சியும் நீட்சியும் உடைய.

cil'ia, *n. pl.* கண்ணிமை மயிர் ; இலையில் இமை போன்ற இழை ; பூச்சிச் சிறகின் ஓர இழை ; (உ.வ.) இழையுறுப்பு, கீழின உயிர்களில் கால் போலப் பயன்படும் இழை உறுப்பு.

cil'iary, *a.* கண்ணிமை சார்ந்த ; மயிர்போன்ற உறுப்புக் கொண்டுள்ள, இழை உறுப்புச் சார்ந்த.

cil'iate, cil'iated, *a.* இழை உறுப்புக்களைக் கொண்ட ; இழைமயிர் ஓரமுடைய.

cilia'tion, *n.* மயிர்போன்ற உறுப்பால் இயங்கும் தன்மை.

cil'ice, *n.* மயிர்த்துய்யாடை, தன் பழி ஒறுப்புக்குரிய சின்ன மான ஆடை.

cilic'ious, *a.* மயிர்த்துய்யாலான.

cil'iolate, *a.* மெல்லிய மயிர்களாலான ஓரமுடைய.

cil'ium, *n.* cilia என்பதன் ஒருமை வடிவம்.

cimar', *n.* திருச்சபை மாவட்ட முதல்வர் மேலங்கி, கையற்ற உடை.

cime'lia, *n. pl.* பொருட்குவியல்கள், கருவூலங்கள்.

cimier', *n.* தலைக்கவசத்தின் முகடு.

cim'inite, *n.* பாறை வகை, நெருப்புக் கற்பாறைக்கும் எரி மலைப் பாறைக்கும் இடைப்பட்ட பாறை வகை.

Cimme'rian, *a.* என்றென்றும் இருளிலேயே வாழ்ந்ததாகக் கூறப்படும் 'சிம்மெரி' (Cimmerii) என்ற மரபுக் குழுவைச் சார்ந்த; இருள் கவிந்த; கருமை செறிந்த.

cim'olite, *n.* உவர்க்களிமண், களிமண் வகை, அலுமினியச் சிலிகை நீர்மம்.

cinch, *n.* மெக்சிகோ (Mexico) வில் வழங்கும் சேணச் சுற்று வார்; (பே-வ.) உறுதியான கருத்து; பாதுகாப்பான பிடிப்பு; *v.* சேணச் சுற்றுவாரை இறுக்கு.

cinchon'a, *n.* காய்ச்சல் மருந்துப் பொடிக்குப் பயன்படும் பட்டை, சிங்கோனு பட்டை; காய்ச்சல் பொடிக்குரிய பட்டை தரும் தென் அமெரிக்க மரம்.

cinchona'ceous, *a.* காய்ச்சல் மருந்துப் பொடி தரும் பட்டைக்கு உரிய மரத்தினைச் சார்ந்த.

cinchon'ic, *a.* சிங்கோனு என்னும் மரப்பட்டையைச் சார்ந்த.

cinch'onine, *n.* சிங்கோனு மரப்பட்டையிலிருந்து கிடைக்கும் காரச்சத்து.

cinchonin'ic, *a.* சிங்கோனு மரப்பட்டையின் காரச் சத்துச் சார்ந்த.

cin'chonism, *n.* பட்டையிலுள்ள காரச்சத்தின் ஆற்றல் அளவு கடந்து செயற்படுவதால் ஏற்படும் கோளாறு.

cin'chonize, *v.* சிங்கோனு பட்டையின் காரச்சத்தின் ஆற்றல் செயல்படச் செய்.

Cincinnat'us, *n.* ஒதுங்கி வாழ்ந்து நெருக்கடி நேரத்தில் வந்துதவும் இயல்புடைய பெரியார்; உழவு வாழ்விலிருந்து தனி வல்லாட்சிப் பொறுப்பேற்க அழைக்கப்பட்ட ரோம வீரர்.

cincinn'us, *n.* (தாவ.) தண்டிலிருந்து ஒரேகிளை ஒரே நுனி மலர்க்கொத்துடன் மாறிமாறி எதிரெதிராகக் கிளைக்கும் செடிவகை.

cinc'ture, *a.* அரைக்கச்சை, இடைவார்; சுற்று வளையம்; நெற்றிப் பட்டம், தலைக்கட்டு; தூணின் சுற்றுக்கட்டு; *v.* சுற்றிக்கட்டு; சூழ்.

cinc'tured, *a.* அரைக்கச்சையுள்ள; சூழ்பட்டமுடைய.

cin'der, *n.* கங்கு, தணல், கனல்; எரிந்துபோன நிலக்கரி; தணல் கரி, கனல்கட்டை; சாம்பல்; தீயால் கரியாக்கப்பட்ட பொருள்; நீராவித்துளைகளுள்ள எரிமலைக்குழம்புத்துண்டு; *pl.* cin'ders.

cin'der-cone, *n.* எரிமலைப்பொருள்கள் குவிந்துள்ள குன்று.

Cinderell'a, *n.* பாராட்டப்படாத அழகுடையவர்; புறக் கணிக்கப்பட்ட பண்பு உடையவர்; வெறுத்து ஒதுக்கப் பட்டவர்; சமையல் பின்னறைப் பணிப்பெண்.

Cinderel'la-dance, *n.* நள்ளிரவில் முடியும் நடன நிகழ்ச்சி.

cin'der-path, *n.* கரித்தூள் பாட்டை, தீக்கரிப் பொருள் களால் சமனிடப்பட்ட ஓட்டப்பந்தயப் பாதை.

cin'der-sifter, *n.* கரியையும் சாம்பலையும் வேருக்கும் சல்லடைக் கருவி.

cin'dery, *a.* கங்கு கரியான, சாம்பரான.

cin'e-biology, *n.* திரைப்படப் பதிவுகளின் மூலமான உயிர் நூல் சார்ந்த ஆராய்ச்சி.

cin'e-camera, *n.* திரைப்படத்துக்குரிய நிழற்படக் கருவி.

cin'e-film, *n.* திரைப்படச் சுருளின் மென்தகடு.

cin'ema, *n.* திரைப்படக் கொட்டகை; (தொ.) the cinema, திரைப்படத் துறை.

cin'ema-or'gan, *n.* திரைப்படக் கொட்டகையின் இசைக் கருவிப்பெட்டி வகை.

cin'emascope, *n.* மூவளவைக் காட்சிதரும் வீடுதிரைப்பட முறைக்குரிய வாணிக உரிமைப் பெயர்.

cinemat'ic, *a.* திரைப்படக் காட்சியைச் சார்ந்த; திரைப்படத் துறைக்குகந்த; திரைப்படப்பண்பு வாய்ந்த.

cinemat'ograph, *n.* திரைப்படக்கருவி; திரைப்படம்; *v.* திரைக்குரிய காட்சிப்படமெடு; திரைப்படம் எடு; திரைப் படம் பயன்படுத்து.

cinematog'rapher, *n.* திரைப்படக் காட்சி பிடிக்கும் தொழிலர்.

cinematograph'ic, *a.* திரைப்படத்தைச் சார்ந்த.

cinematog'raphist, *n.* திரைப்படத் தொழிலர்.

cinematog'raphy, *n.* திரைப்படக் கலை, திரைப்படத் துறை.

cinemicrog'raphy, *n.* நுண்ணோக்காடியில் தெரியும் உரு மாறுதல்களின் திரைப்படப் பதிவு.

cinemir'acle, *n.* = cinemascope.

cin'eol, cin'eole, *n.* நச்சுத்தடை மருந்தாகப் பயன்படும் சூடம் போன்ற மணமுடைய தாவரக் கலவைத் தைலம்.

cin'e-projector, *n.* திரைப்படம் காட்டும் கருவி.

cinera'ma, *n.* = cinemascope.

cinerar'ia, *n.* கண்ணுடிக் கலங்களில் வைத்து வளர்க்கப் படுகிற பகட்டு வண்ணமுடைய கொத்துமலர்ச்செடி.

cinerar'ium, *n.* எரியூட்டுச் சாம்பற் கலத்தை வைக்கும் ஒதுக்கிடம்.

cin'erary, *a.* சாம்பலுக்குரிய; இறந்தவரின் சாம்பலைக் கொண்ட; (தொ.) cinerary urn, எரியூட்டிய சாம்பலைக் கொண்ட தாழி, புதைகலம்.

cinera'tion, *n.* சாம்பலாக்கல், எரியூட்டுதல்.

cinerat'or, *n.* பிணங்களை எரியூட்டும் உலை.

cine'rea, *n.* சாம்பல் நிற நரம்புப் பொருள்.

cine'real, *a.* சாம்பல் தன்மையுடைய; இறந்தவரின் எரி யூட்டுச் சாம்பலைக் கொண்ட.

ciner'eous, *a.* சாம்பல் நிறமுடைய; சாம்பல் தன்மையுடைய.

cineri'tious, *a.* சாம்பல் வண்ணமுடைய; சாம்பல் நிற நரம்புப் பொருளைச் சார்ந்த.

cin'e-variety, *n.* திரைப்படக் காட்சியடங்கிய பலவகைக் களியாட்டம்.

cing'ulum, (ல.) *n.* அரைக்கச்சை; வளையம்; சுற்றி வளைந் துள்ள அமைப்பு.

cinn'abar, *n.* சிவப்பு நிறமான கனிப்பொருள் வகை, இர சக்கந்தகை; *a.* குருதிச் சிவப்பான; (தொ.) cinnabar moth, பெரிய சிவந்த விட்டில் பூச்சி.

cinnabar'ic, cinn'abarine, *a.* இரசக் கந்தகையைச் சார்ந்த; கந்தகையை உட்கொண்ட; இரசக் கந்தகையாலான; இரசக் கந்தகை போன்ற.

cinn'amate, *n.* இலவங்கக் காடி உப்பு; இலவங்கக் காடிமம்.

cinnam'ic, cinnamom'ic, *a.* = cinnamonic.

cinn'amon, *n.* இலவங்கப் பட்டை; இலவங்க மரம்; மென்மை யான மஞ்சள் தவிட்டுநிறம்; *a.* இலவங்கப் பட்டையைச் சார்ந்த; இலவங்க மரத்தைச் சார்ந்த; மென்மையான மஞ்சள் தவிட்டு நிறமுள்ள.

cinn'amon-bear, *n.* வட அமெரிக்க மஞ்சள் தவிட்டு நிறக் கரடிவகை.

cinnamon'ic *a.* இலவங்கத்தைச் சார்ந்த ; இலவங்கத்திலிருந்து கிடைத்த.

cinn'amon-stone, *n.* தவிட்டு நிற அல்லது மஞ்சள் வண்ண மாணிக்கக் கல்வகை.

cinq, *n.* ஐந்தெண் கவறு ; ஐந்தெண் சீட்டு.

cinq'foil, *n.* = cinquefoil.

cinque, *n.* = cinq.

cinquecen'tist, *n.* மறுமலர்ச்சி சிற்பக் கலைஞர்.

cinquecen'to, *n.* பதினாறாவது நூற்றாண்டு மறுமலர்ச்சிக்கு உரிய கலை சிற்ப வகை.

cinque'foil, *n.* (கட்.) ஐந்து இதழ்களையுடைய மலர்முகப்பு உருவம் ; (க-க.) வாயில் பலகணி வளைவுகளில் ஐயிதழ் அணி உரு ; (தாவ.) ஐந்து அலகுகளையுடைய மணப்புல்.

cinque'-pace, *n.* ஐயடி ஆடல்கூறு வகை.

Cinque Ports, *n. pl.* (வர.) இங்கிலாந்தின் தென்கரையியலுள்ள துறைமுகங்கள்.

ciph'er, *n.* சுழி, சுன்னம் ; இன்மைக்குறி ; தான வெறுமைக் குறி ; பயனற்றது ; பயனற்றவர், மதிப்பு ஏதுமற்றவர், முக்கியத்துவமற்ற ஆள் ; அரபு இலக்கம், அரபுக்குறியீடு ; பெயரின் முதலெழுத்துக்களின் இணைப்பு ; சொற்குறி ; புரியா எழுத்து, மறைகுறியீடு ; குறிப்பெழுத்து ; மறை திறவு ; இசைக் கருவிக் குறைபாட்டினால் தொடர்ந்தெழும் ஒலி ; *v.* கணக்குச் செய் ; கணக்கிடு, திட்டம் செய் ; மறை எழுத்தாக்கு ; மறைகுறியீடாக எழுது ; கணி, திட்டமிடு ; இசைக் கருவி வகையில் மீட்டப்படாமலே தொடர்ந்து ஒலி செய்.

ci'phering, *n.* மறைகுறிப்பாக எழுதுதல்.

ci'pher-key, *n.* குறியிட்டெழுத்தின் மறை திறவு.

cip'olin, cipolli'no, *n.* பச்சைப் பட்டையுடைய இத்தாலிய வெண் சலவைக்கல்வகை, அப்பிரகமும் வெளிம கன்மகியும் இடைமிடைந்த சுண்ணக் கரியகி.

cipp'us, *n.* தண்டனைக்காகக் கணைக்காலில் பூட்டப்படும் கால் கட்டை ; தூபி ; *pl.* cipp'i.

circ'a, (ல.) *prep.* ஏறத்தாழ, குத்தாயமாக.

Circa'ssian, *n.* ருசியாவிலுள்ள சர்கேசிய பகுதிக்குரிய 'காகேசிய' (Caucasian) மரபுக் குடியினர் ; காகேசிய மரபுக் குழுவினரின் மொழி ; *a.* காகேசிய மரபுக் குடியினருக்குரிய ; காகேசிய மரபுக் குடிவகையின் மொழி சார்ந்த ; காகேசிய பகுதியைச் சார்ந்த.

circa'ssian, circassienne', *n.* மென்மையான கம்பளி வகை.

Cir'ce, *n.* கிரேக்க புராணப் பெண் மாயாவி ; மாயக்காரி, சூனியக்காரி.

Circe'an, *a.* கிரேக்க புராணப் பெண் மாயாவியான சேர்ஸி (Circe) யைச் சார்ந்த ; கீழ்த்தர மாயத்துக்குரிய, சூனியஞ் சார்ந்த.

cir'cinate, *a.* வளைய உருவான, மோதிர வடிவுள்ள ; (தாவ.) இலைகள் வகையில் அடிநோக்கிச் சுருள்கிற.

cir'citer, (ல.) *prep.* = *circa.*

cir'cle, *n.* வட்டம் ; வட்டச் சுற்றுவரை ; வட்டமான பொருள் ; வளையம் ; கோளினத்தின் சுற்று நெறி ; துவங்கிய இடத்தில் முடிவுறும் நிகழ்ச்சிக் கோவை ; மாயச்சக்கரம் ; வட்டத்திற்குள்ளிருக்கும் பொருள்களின் தொகுதி ; ஆளைச் சுற்றியுள்ள தொடர்புகொண்ட குழு ; இனக்குழு, கூட்டுக் குழு ; வகுப்பு ; *v.* சுற்றிச்செல் ; வளைந்து செல், சுற்றித் திரும்பு ; சூழ், சுற்றி வளை ; வட்டமாகச் செல் ; வளையமாக அணிவகுத்து நில் ; (தொ.) dress circle, திரைப்படம் அல்லது நாடக அரங்கில் அமைந்த உயர்வகுப்பு வட்டம் ; great circle, உருளையில் மையமூடு செல்லும் தளவட்டம் ; fairy circle, வனதெய்வங்களின் குழு அடங்கிய வட்டம் ; reasoning in a circle, வளைத்து வளைத்துக் கூறியதையே கூறி மெய்ப்பிக்க முடியாமல் வாதாடுதல் ; small circle, உருளையில் மையமூடாகச் செல்லாத தளவட்டம்.

cir'cled, *a.* வட்டவடிவமான ; சுற்றி வளைக்கப்பட்ட.

cir'cler, *n.* சுற்றிச் செல்பவர் ; சுற்றிச் செல்வது.

cir'cle-rider, *n.* கால்நடைகளை ஒருங்கிணைத்துச் செலுத்துவதற்காகக் குதிரைமேல் ஏறிச் சுற்றிச்சுற்றிச் செல்பவர்.

cir'cle-riding, *n.* கால்நடைகளை ஒருங்கிணைத்துக் கொண்டு போவதற்காகக் குதிரை ஏறிச் சுற்றிச்சுற்றிச் செல்லுதல்.

circ'let, *n.* சிறுவட்டம், சிறு வளையம் ; சிறு முடி, நெற்றிப் பட்டம்.

cir'cling, *n.* வட்டமாகச் செல்லுதல், சுற்றி வருதல், வளையமிடல்.

circs, *n. pl.* (பே-வ.) = circumstances.

circ'uit, *n.* சுற்றுப்பயணம், சுற்றுலா ; சுற்றிச் செல்லும் பாதை ; சுற்றளவு ; சுற்றான பாதை ; சுற்றடைப்பு, வேலியிடப்பட்ட நிலப்பகுதி ; மின்வலி இயக்கம் செல்லும் நெறி ; உலா நடுவர் புடைபெயர்ச்சி ; உலாநடுவர் குழு ; 'மெதடிஸ்ட்' (Methodist) போதகர்களும் வணிகப் பிரயாணிகளும் சுற்றி வரும் வட்டார எல்லை ; வட்டகை, நாடகக் கொட்டகைகள் அல்லது திரைப்படக் கொட்டகைகள் கொண்ட தொகுதி ; *v.* சுற்றிச் செல்.

cir'cuit-breaker, *n.* மின் ஓட்டத்தைத் தடுக்கும் பொறி அமைப்பு.

circuiteer', *n.* சுற்றுலா நடுவர்.

circu'itous, *a.* சுற்று வளைவான.

circu'itousness, *n.* சுற்றி வளைந்து செல்லும் இயல்பு.

cir'cuit-ri'der, *n.* சுற்றுப் பயணம் செய்யும் சமய போதகர்.

circu'ity, *n.* வளைநெறி, சுற்றி வளைத்துச் செல்லும் முறை.

cir'culable, *a.* சுற்றிப்பரப்பத்தக்க.

circ'ular, *n.* சுற்றறிக்கை ; சுற்றோலை ; *a.* வட்டமான ; வட்டத்தைச் சார்ந்த ; சுற்றி வருகிற, மண்டலிக்கிற, தன்னிலே தொடங்கி தன்னிலே முடியும் இயல்பான ; சுழற்சியாகத் தொடர்ந்து நிகழ்கின்ற ; பலருக்குச் சேர்த்து அனுப்பப்பட்ட ; (தொ.) circular function, (கண.) வட்டச்சார்பு செங்கோண முக்கோணப்பக்கத் தகவு ; cicular letter, பல படிகளாகப் பலருக்கு ஒரே வேளையில் அனுப்பப்படும் கடிதம் ; circular measure, ஆர வட்ட அளவை ; வட்டத்தில் ஆர அளவான நாண்வரையுடைய வில் வளைவுக்கோண அளவை ; circular note, வழிப்போக்கர் அயலிடப் பொருளகத்தில் பணம் பெறுவதற்குரிய சான்றுரிமைச் சீட்டு.

circula'rity, *n.* வட்டமாக உள்ள தன்மை.

circ'ularize, *v.* வட்டமாகச் செய் ; சுற்றறிக்கை அனுப்பு.

circ'ularly, *adv.* வட்டமாக.

circ'ulate, *v.* சுற்றிச் செலுத்து, பரப்பு ; எங்கும் செல், பரவு ; மண்டலி ; (கண.) மீண்டும் மீண்டும் இரட்டித்துக் கொண்டு போ ; (தொ.) circulating library, உலா நூலகம், நூல்நிலையப் பங்குவரியாளர்களிடையே நூல்களைப் பரிமாறிக்கொள்ளும் நூலகம்.

circula'tion, *n.* சுற்றோட்டம் ; காற்று-குருதி ஆகியவற்றின் சுழற்சி ; போக்குவரவு இயக்கம், இடையுறுப் புடைபெயர்ச்சி ; புழக்கம், செயல் வழக்கு ; நாணயச் செலாவணிப் பரப்பு ; செய்தித்தாள் விற்பனைப் பரப்பு ; வாங்குவோரின் எண்ணிக்கை.

circ'ulative, *a.* சுற்றோட்டம் ஊக்குகிற ; சுற்றியோடுகிற, எங்கும் பரவுகிற.

circ'ulator, *n.* பரப்புகிறவர் ; செய்தி பரப்புபவர் ; தூற்றுபவர் ; புரளிக்காரர் ; நாணயச் செலாவணியாளர்.

circ'ulatory, *a.* சுற்றுகிற ; பரவுகிற ; சுழல்கிற ; குருதியோட்டம் சார்ந்த ; தாவர உணவுச் சாற்றின் சுழற்சிக்குரிய.

circumamba'ges, *n. pl.* சுற்றி வளைத்த பேச்சு.

circumam'bience, circumam'biency, *n.* சுற்றி வளைத்துச் செல்லும் தன்மை ; சூழ்வு, சுற்றி வளைத்தல்.

circumam'bient, *a.* சுற்றி வளைக்கும் தன்மையுடைய ; சுற்றிச் சூழ்ந்துள்ள.

circumam'bulate, *v.* சுற்றித்திரி, சுற்றி நட, வளைந்து செல்; பயனில் முயற்சி செய்.

circumambula'tion, *n.* சுற்றிச்செல்லல்; வீண்முயற்சி செய்தல்.

circumba'gious, *a.* சுற்றி வளைத்துப் பேசுகிற, நேராகப் பேசாத.

circumben'dibus, *n.* சுற்றி வளைத்துப் பேசுதல், சுற்றுமுக நடவடிக்கை.

cir'cumcentre, *n.* (வடி.) புறநிலை வட்ட மையம், முக்கோணம் முதலிய வடிவுருக்களின் புறக்கோடி தொட்டுச் செல்லும் வட்டத்தின் மையம்.

circ'umcise, *v.* யூத-இஸ்லாமிய மரபின்படி சுன்னத்து செய், உறுப்பின் நுனித்தோல் இதழ் அகற்று; தூய்மைப் படுத்து.

circumci'sion, *n.* தோல் நுனியிதழ் அகற்றும் வினை, சுன்னத்து வினைமுறை, சுன்னத்து விழா; சுன்னத்துச் செய்துகொள்ளும் நிலை; யூத இனம்.

circumdenuda'tion, *n.* (மண்.) சூழ் அரிப்பு, சுற்றுப்புற மண் அரிப்பு; சுற்றியும் மண் அரித்துவிடலால் நடுவில் எஞ்சியுள்ள உயர்ந்த பகுதி, விடு திட்டு, 'சூழரி' மேடு.

cir'cumduct, *v.* சுற்றி அழைத்துச் செல்; கற்பனை இருசினைச் சுற்றிச் சுழலச் செய்.

circum'ference, *n.* வட்டத்தின் சுற்றுவரை, பரிதி, சுற்றளவு. சுற்றெல்லை.

circumferen'tial, *a.* வட்டச் சுற்றுவரை சார்ந்த; வட்டச் சுற்றளவு சார்ந்த.

circumflect', *v.* வட்டமாக வளை; உயிர் அல்லது அசை மீது ஏற்றிறக்க அழுத்தக்குறி (∧) இடு.

circ'umflex, *n.* உயிர் அல்லது அசைமீது ஏற்ற இறக்க இணைவாக முன்பு அமைந்திருந்த அழுத்தக் குறியீடு; *a.* ஏற்ற இறக்க அழுத்தக் குறியான; (உள்.) சுற்றி வளைகிற, சுற்றுவளைவான.

circumfle'xion, *n.* வட்டமாக வளைதல்; வளைவுக்குறி.

circum'fluence, *n.* சுற்றி ஓடுதல்; (உயி.) உணவைச் சூழ்ந்து உட்கொள்ளும் முறை.

circum'fluent, circumflu'ous, *a.* சூழ்ந்து செல்கிற; சுற்றி ஓடுகிற.

circumfuse', *v.* நாற்புறமும் தெளி; சுற்றிலும் ஊற்று; சூழ்; அமிழ்த்தி வை, தோய்வி.

circumfus'ile, *a.* உருகிய.

circumfu'sion, *n.* சுற்றிச் சூழ்தல்; சூழப்பாய்தல்.

circumgyr'ate, *v.* வளைந்து திரும்பு; சுற்றுப் பயணம் செய்.

circumgy'ratory, *a.* சுற்றிச்செல்கிற; சுழல்கிற; சுற்றுப் பிரயாணம் செய்கிற.

circumja'cency, *n.* சுற்றிச் சூழ்ந்து அமைந்துள்ள நிலை, சூழ்வுநிலை.

circumja'cent, *a.* சூழ்ந்துள்ள; சுற்றிலுமுள்ள; எல்லாப் பக்கங்களிலும் பரவியுள்ள.

circumlitt'oral, *a.* கரையோரமான, கடற்கரைப் பக்கமான.

circumlocu'tion, *n.* சுற்றி வளைத்துப் பேசல், மிகுசொல்லாடல்; நெடு நீளச் சொற்றொடர் வழக்கு; தட்டிக் கழிக்கும் பேச்சு.

circumlocu'tional, circumlocu'tionary, *a.* சுற்று வளைப்புப் பேச்சுச் சார்ந்த.

circumloc'utory, *a.* சுற்றி வளைத்துப் பேசுகிற.

circum-merid'ian, *a.* (வான்.) மைவரைக்கு அருகிலுள்ள.

circumnav'igable, *a.* கப்பலில் சுற்றிச் செல்லக்கூடிய; கடல்வழி உலகைச் சுற்றிப் பயணம் செய்யத்தக்க.

circumnav'igate, *v.* கப்பலில் சுற்றுப் பிரயாணம் செய்; கடலில் உலகு சுற்றிச் செல், சுற்றிக் கப்பலோட்டு.

circumnaviga'tion, *n.* முழு வட்டஞ்சுற்றிய கடற்பயணம், கப்பற் சுற்று மண்டலப் பயணம்.

circumnav'igator, *n.* கடல்வழி உலகு சுற்றுபவர்.

circumnut'ate, *v.* (தாவ.) செடியின் வளரும் நுனி வகையில் ஆடி நுடங்கியபடியே சுற்றித் திருகி இயங்கு.

circumnu'tatory, *a.* செடியின் வளரும் நுனி யினைப் போன்ற சுழலசைவு கொண்ட.

circumor'al, *a.* (உட.) வாயைச் சுற்றி அமைந்துள்ள.

circumpol'ar, *a.* (மண்.) நிலக்கோடிகளின் அருகாமையான, துருவங்களைச் சுற்றி அமைந்துள்ள; (வான்.) நாள் முழுவதும் அடிவானத்துக்கு மேலேயே காணப்படுகிற.

circumpose', *v.* சுற்றி வை.

circumposi'tion, *n.* சுற்றிவைக்கும் செயல், சூழ வைத்தல்.

circumsciss'ile, *a.* (தாவ.) சுற்றுவட்டப் பிளவின்மூலம் திறக்கிற.

circ'umscribe, *v.* சுற்றி வட்டமிடு; (வடி.) வெட்டாத் தொடுவரையாகச் சுற்று வட்டமிடு; எல்லைக்குட்படுத்து; கட்டுப்படுத்து; சுருக்கு; வட்ட வரிசையாகக் கையோப்பமிடு.

circumscrib'er, *n.* கட்டுப்படுத்துபவர்; கட்டுப்படுத்துவது.

circumscrip'tion, *n.* வரையறுப்பு; எல்லைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல்; கட்டுப்பாடு; வரையறை; கட்டுப்படுத்தும் எல்லை; சுற்றுவட்டமிடுதல்; சுற்றுவட்டம்; கட்டுப்படுத்தப்பட்ட எல்லை; நாணய உள் வட்ட வரைவு.

circumscrip'tive, *a.* புறவுருவரை குறிக்கிற; புறத் தோற்றம் குறித்த.

circumsol'ar, *a.* கதிரவனைச் சுற்றிச் சுழல்கிற; கதிரவனுக்கு அருகாமையில் உள்ள.

circ'umspect, *a.* உறு விழிப்புள்ள, மிக்க எச்சரிக்கையோடு கூடிய; எச்சரிக்கையோடு எல்லாப் பக்கங்களிலும் நோக்குகிற.

circumspec'tion, *n.* விழிப்புடைமை, எச்சரிக்கையாயிருத்தல்; கவனம்; பரிசீலனை செய்தல்.

circ'umspective, *a.* சுற்றிக் கவனிக்கிற, எச்சரிக்கையுடைய, விழிப்பான, எளிதில் ஏமாற்ற முடியாத.

circ'umspectly, *adv.* எச்சரிக்கையாக, விழிப்பாக, கவனமாக.

circ'umspectness, *n.* விழிப்போடுள்ள தன்மை, எச்சரிக்கையான நிலை.

circ'umstance, *n.* சூழ்நிலை, கால இடச்சூழல்; உடனிகழ்வு; தொடர்புடைய செய்தி; புறநிலைச் செய்தி, புறக் கூறு; நுணுக்க விவரம்; புற ஆரவாரம், ஆசாரம், சடங்கு முறை; *v.* சூழ்நிலையில் கொண்டுவிடு.

circ'umstanced, *a.* சூழற்பட்டுள்ள, நிலைமைகளுக்குக் கட்டுப்பட்ட.

circ'umstances, *n. pl.* சூழ்நிலைமைகள்; (தொ.) in the circumstances, under the circumstances, தற்போதைய சூழ்நிலையில், நிலைமைகளுக்கு இணங்க.

circumstan'tial, *a.* நுணுக்க விவரங்கள் அடங்கிய; தற்செயலான; முக்கியத்துவமில்லாத, சிறுதிற; (தொ.) circumstantial evidence, சூழ்நிலைக்கேற்ற பொருத்தங் காட்டும் சான்று.

circumstantial'ity, *n.* தற்செயலான தன்மை; நுணுக்க விவரங்கள் கொண்ட நிலை.

circumstan'tially, *adv.* தற்செயலாக; நேர்முகத் தொடர்பில்லாமல்; நுணுக்க விரிவாக; போலிப் புறத்தொடர்புடன்.

circumstan'tials, *n. pl.* முக்கியத்துவமற்ற விவர நுணுக்கங்கள், நுணுக்க விவரங்கள்.

circumstan'tiate, *v.* சூழ்நிலை வாய்ப்புக்களால் நிலைநிறுத்து; நுணுக்க விவாங்களால் மெய்ப்பி; நுணுக்க விரிவாக விளக்கு.

circumvall'ate, *v.* கோட்டை மதில்களால் வளைத்துக் காப்பீடு செய்; சூழ் அரண் காப்புச் செய்.

circumvalla'tion, *n.* மதில் சூழுதல், கோட்டைச்சுவர் அமைப்பு; நகரப் பாதுகாவல் அமைப்பு; (வில.) உணவைச் சூழ்ந்து பரவி உட்கொள்ளுதல்.

circumvent', *v.* சுற்றிச்செல், வளைத்துக்கொள்; மேற் சென்று செய்துமுடி; சூழ்ந்து கைப்பற்று, சுற்றி இடைமறி; பொறியுட்படுத்து; ஏமாற்று.

circumven'tion, *n.* மேற்செலவு, சூழ்ந்து செயலாற்றுதல்; சூழ்ச்சி.

circumvent'ive, *a.* சூழ்ச்சி செய்கிற, வளைத்து ஏமாற்றுகிற.

circumvolu'tion, *n.* உருளுதல், புரளுதல், பிறழ்வு; சுருளுதல், நுடங்கி முடங்கிச் செல்லும் இயக்கம்.

circ'us, *n.* சுற்றிலும் வட்டடுக்கான இருக்கைமேடைகளையுடைய விளையாட்டு வேடிக்கைக்கான வட்டரங்கு, காட்சிக் கொட்டகை; சுற்றிலும் அடுக்கடுக்கான மலைக்காட்சிகளையுடைய நடுவரங்கப் பள்ளத்தாக்கு; தெருக்கள் நாற்புறமும் மிருந்து வந்திணையும் வட்டவடிவான மையக் கூடல்வெளி; வட்டக் கட்டுமனைத்தொகுதி; உலா வரு காட்சிக்குழு.

cirque, *n.* வட்டரங்கு; இயற்கைக் காட்சிக் கோட்டம்.

cirr'ate, *a.* சுருட்டையான; தளிர்க் கைகள் போன்ற; (வில.) சுருண்ட இழைபோன்ற.

cirrhos'is, *n.* ஈரலரிப்பு; உறுப்பின் இழைமம் இற்று இணைமங்கள் மட்டுமீறி வளர்ச்சிகொள்ளும் கோளாறு.

ci'rriform, *a.* = cirrate.

cirr'igrade, *a.* பற்றிழைகளால் இடம் பெயர்கின்ற.

ci'rriped, ci'rripede, *a.* சுருட்டைமயிர் வடிவான கால்களையுடைய சிப்பி இன ஒட்டுயிர்வகை சார்ந்த.

cirrose', *a.* தளிர்க் கைகளை உடைய.

ci'rrous, *a.* தளிர்க் கையுடைய; (வில.) சுருண்ட இழையுடைய.

ci'rrus, *n.* மென்பஞ்சியல் முகில், அடித்த பஞ்சு போன்ற தோற்றமுள்ள மேகக் கூட்டம்; (தாவ.) தளிர்க் கை; (வில.) சுருண்ட இழை; *pl.* ci'rri.

cisalp'ine, *a.* ஆல்ப்ஸ் (Alps) மலைத் தொடரின் அக எல்லைப் புறத்திலுள்ள, ஆல்ப்ஸ் தொடருக்குத் தெற்கிலுள்ள; ரோம் நகருக்கும் ஆல்ப்ஸ் தொடருக்கும் இடைப்பட்ட இடத்துக் குரிய.

cisatlan'tic, *a.* அட்லாண்டிக் மாகடலுக்கு அகவெல்லையிலுள்ள, அட்லாண்டிக் மாகடலின் கிழக்கேயுள்ள.

cise'leur, *n.* உலோக வேலையில் செதுக்கி ஒப்பனை செய்பவர்.

cise'lure, *n.* உலோக வேலைப்பாட்டின்மேல் செதுக்கி ஒப்பனை செய்தல்.

cismon'tane, *a.* மலைகளுக்கு இப்பக்கமான; ஆல்ப்ஸ் மலையின் வடக்கிலுள்ள இத்தாலிய எல்லைகடந்த.

cispa'dane, *a.* போ (Po) ஆற்றின் இப்பக்கமான, ரோம்நகர் அருகாமையான.

cispon'tine, *a.* பாலத்துக்கு இப்பக்கமான; லண்டன் நகரில் தேம்ஸ் (Thames) ஆற்றுக்கு வடக்குப் பக்கமான.

cist, *n.* (தொல்.) கற்பலகைகளால் மூடப்பட்ட கல்லறை; வட்டமான வழிபாட்டுக் கலம்.

cist'ed, *a.* (தொல்.) வரலாற்றுக்கு முந்திய காலத்திய கல்லறைகள் கொண்ட.

Cister'cian, *n.* பிரான்சில் உள்ள 1098-இல் நிறுவப்பட்ட துறவி மடத்தைச் சேர்ந்த துறவிகளில் ஒருவர்; *a.* சிஸ்டெர்சியன் துறவி மடத்துக்குரிய.

cis'tern, *n.* நீர்த்தொட்டி; நீர்த்தேக்கம்; நீராவிப்பொறியில் வாலையின் சூழ்புறக்கலம்.

cist'ic, *a.* (தொல்.) வரலாற்றுக்கு முந்திய காலத்திய கல்லறை போன்ற.

Cis'tus, *n.* (தாவ.) பெரிய வெள்ளை அல்லது சிவப்பு மலர்களையுடைய புதர்ச்செடி வகைகள்.

cist'vaen, *n.* தட்டைக் கற்களாலான பெட்டி வடிவமுள்ள கல்லறை.

cit'able, *a.* சான்றுகக் காட்டப்படத் தக்க.

cit'adel, *n.* நகர் அரண், நகரத்துக்கு அண்மையிலுள்ள கோட்டை; போர்க் கப்பலில் துப்பாக்கிகள் வைக்கப்படும் இடம்; இன்னலுக்காளானவர்களின் கடைசிப் புகலிடம்; தத்தளித்துக் கொண்டிருக்கும் கொள்கைக்கான கடைசிப் பிடிப்பிடம்.

cit'al, *n.* வந்து தோன்றுமாறு விடுவிக்கப்படும் அழைப்பு.

cita'tion, *n.* வந்து தோன்றுமாறு சட்டமுறைப்படியான அழைப்பு; அழைப்புத் தாங்கியுள்ள ஆவணம்; மேற்கோள் காட்டல்; எடுத்துக் கூறப்பட்ட வாசகம்; குறிப்பிடப்பட்ட பெயர்; அரசாங்கப் பத்திரங்களில் கண்டுள்ள குறிப்பீடு.

cit'atory, *a.* தோன்றுமாறு விடுக்கப்படும் அழைப்பின் தன்மையுள்ள; வர அழைப்புவிடும் பழக்கமுடைய.

cite, *v.* வரவழை, நீதிமன்றத்தில் வந்து தோன்றுமாறு அழை; மேற்கோள் காட்டு; பெயர் குறிப்பிடு; சான்றுகக் காட்டு; எடுத்துக்காட்டாகக் கூறு.

cith'ara, *n.* பண்டைய கிரேக்க இசைக்கருவி வகை.

cith'er, cith'ern, *n.* உலோகத் தந்திகளையுடைய இசைக் கருவி வகை.

citied, *a.* நகரம் போன்ற; நகரம் ஆக்கப்பட்ட; நகரம் அடங்கிய; நகரங்களை உட்கொண்ட.

cit'igrade, *a.* சிலந்தியினங்களின் வகையில் விரைந்த இயக்க முடைய.

cit'izen, *n.* நகர்வாழ்நர், குடி உரிமையாளர்; சுதந்திர உரிமையுடையவர்; படைத்துறை சாராப் பொதுமகன்; நாட்டில் பிறந்தவர், பிறப்புரிமைக் குடிமகன்; ஒரு நாட்டின் குடிமையை ஏற்றுக்கொண்டவர்; *fem.* cit'izeness.

cit'izenhood, *n.* குடிமகனுயிருக்கும் நிலை.

cit'izenise, *v.* குடிமகன் ஆக்கு.

cit'izenry, *n.* குடிமக்கள் ஆயம்; நகரமக்கள் தொகுதி.

cit'izenship, *n.* குடிமை உரிமைத்தொகுதி; குடிமகனுயிருக்கும் நிலை.

citole', *n.* இடைநிலைக் காலத்திய தந்தி இசைக்கருவி வகை.

cit'range, *n.* நாரத்தையும் ஆரஞ்சும் கலந்து உண்டான பழம்.

cit'rate, *n.* நரந்தக் காடியின் உப்பு.

cit'reous, *a.* எலுமிச்சை நிறமுள்ள, கரும்பச்சைச் சாயலுடைய; மஞ்சள் வண்ணமுடைய.

cit'ric, *a.* (வேதி.) நாரத்தையிலிருந்து வடித்திறக்கிய; (தொ.) citric acid, நரந்தக்காடி.

cit'rin, *n.* இழைக்குருதி நாளங்களின் முறிவெளிமைப் பண்பை இயக்குவதாகக் கருதப்பட்டு நீரில் எளிதாகக் கரையும் பண்புடைய எலுமிச்சைப் பழ ஊட்டச் சத்து வகை.

cit'rine, *n.* எலுமிச்சை நிறம்; கரும்பச்சை மஞ்சள் நிறமான படிகப் பாறை; *a.* எலுமிச்சை வண்ணமுடைய.

cit'ron, *n.* நாரத்தை, துரிஞ்சி; நாரத்தை மரம்; எலுமிச்சை நிறம்.

citronell'a, *n.* மிகுவெப்ப மண்டலப் புல்வகை; மிகுவெப்ப மண்டலப் புல் வகையினின்றும் வடித்திறக்கப்படும் நறுமணத் தைலம்.

Cit'rus, *n.* நாரத்தை-எலுமிச்சை-கிச்சிலி முதலியவை உள்ளிட்ட மரப்பேரினம்; (தொ.) citrus fruits, நாரத்தம் பழம்-எலுமிச்சம் பழம்-கிச்சிலிப்பழம்-கொடி முந்திரி உள்ளடக்கிய பேரினவகைப் பழங்கள்.

citt'ern, *n.* = cither.

cit'y, *n.* மாநகரம், பெரிய நகரம், முதன்மைவாய்ந்த பேரூர்; உரிமைப்பட்டயம் பெற்றுருவாக்கப்பட்ட நகரம்; மேல் படித்தரத்திலுள்ள நகரசபைவாய்ந்த பட்டணம்; நகரத்தில் வாணிக மைய இடம்; நகரின் மூலமுதல் பகுதி; (தொ.) Celestial City, பொன்னுலகு, துறக்கம்; City article, செய்தித்தாளில் நிதி அல்லது வாணிகம் பற்றிய கட்டுரை; City Company, லண்டன் மாநகரில் இடைநிலைக்காலத்திய வாணிக சங்கங்களுக்குப் பிரதிநிதியாயுள்ள கூட்டவை; City editor, பத்திரிகைகளில் நிதிச்செய்திகளைப் பற்றி எழுதுபவர்; city fathers, குற்ற நடுவர்கள்; நகர அவை உறுப்பினர்கள்; City man, நகரத்தில் வாணிபத்தில் அல்லது நிதித் துறையில் ஈடுபட்டிருப்பவர்; city manager, நகர நிருவாகத்திற்கெனத் தேர்வுக் குழுவினரால் அமர்த்தப்பட்டவர்; city mission, பெரிய நகரங்களில் ஏழைகளுக்கு விவிலிய போதனை செய்வதற்கான குழு; City of God, விண்ணுலகு, துறக்கம்; city of refuge, (யூதர் சட்டம்) புகலிட நகரம்; City of the Seven Hills, ஏழுமலை நகரம், ரோமாபுரி; city state, தனி உரிமை உடைய நகர அரசு; Eternal City, ரோமாபுரி; Heavenly City, துறக்கம், விண்ணுலகு; Holy City, எருசலம்; the City, மேயர் ஆட்சிக்குட்பட்ட லண்டன் நகரத்தின் நகரப்பகுதி; லண்டன் நகரத்தின் வாணிகப்பகுதி.

cit'yless, *a.* நகரம் இல்லாத.

cit'yward, *a.* நகரம் நோக்கிய; *adv.* நகரத்தை நோக்கி.

cit'ywards, *adv.* நகரத்தை நோக்கி.

cive, *n.* வெங்காய வகைச் செடியினம்.

civ'et, *n.* புனுகுப் பூனை; புனுகு.

civ'et-cat, *n.* புனுகுப் பூனை.

civ'ic, *a.* நகரம் சார்ந்த, நகரமக்களுக்குரிய; நகரவைக்குரிய; குடியுரிமைக்குரிய; குடிமக்களுக்குத் தகுந்த; (தொ.) civic centre, பட்டணத்தின் முதன்மையான பொதுக் கட்டிடங்கள் நெருங்கியிருக்குமிடம்; civic crown, குடிமகனெருவனுடைய உயிரைக் காத்ததற்காக ரோம வீரனுக்கு அளிக்கப்பட்ட வெற்றிப் புகழ்மாலை.

civ'ics, *n.* குடியியல், குடியுரிமை பற்றிய நூல்.

civ'il, *a.* கூடிவாழும் இயல்புடைய; சமுதாயத்துக்குரிய; நடைநயமுடைய; நாகரிகமான; வணக்க இணக்கமான; சமுதாய வரம்பிகவாத; பொதுத்துறை சார்ந்த; படைத்துறை சாராத; சமயச்சார்பற்ற; குற்ற இயல் சாராத; (சட்.) குடிமக்களுக்கிடையிலுள்ள தனிப்பட்ட தொடர்புபற்றிய; தனிப்பட்டவர் வாழ்க்கையினின்றும் எழும் வழக்குகள் சார்ந்த; இயல்பாகவே நல்லொழுக்கம் வாய்ந்த; (தொ.) civil day, பொதுநடைமுறைக் கணித்து வகுக்கப்பட்ட நாள்; civil death, உரிமை அறவு; உரிமைச்சாக்காடு; civil defence, போர்க்கால விமானத் தாக்குதல் இடர்களிலிருந்து பொதுமக்களைக் காப்பதற்கான படைத்துறை சாராப் பாதுகாப்பு ஏற்பாடு; civil disobedience, சட்டமறுப்பு, வரிகொடா இயக்கம்; civil engineer, அமைதிக்கால ஊர்தி-பாலம் முதலியன கட்டும் பொதுத்துறைப் பொறிவலாளர்; civil law, உரிமைச்சட்டம், உரிமை வழக்குச் சட்டம், அமைதிக்காலச் சட்டம்; Civil Law, ரோமன் சட்டம்; civil list, மன்னர் குடும்பச் செலவினப்பட்டி, அரசர்க்கென ஒதுக்கப்பட்ட விடுபொருள்; இந்தியாவில் அரச ஊழியர் அட்டவணை, அரச அலுவலர் பட்டியல்; civil list pensions, அரசர் தண்ணளியால் கொடுக்கப்படும் உதவிச்சம்பளம்; Civil Services, படைத்துறை சாராத அரச அலுவலர்கள், அமைதிக்கால அரச ஊழியர்கள்; civil time, பொது நடைமுறைக்காகக் கணக்கிடப்படும் காலம்; civil war, உள்நாட்டுக் கலகம்; civil year, பொதுக்காரியங்களுக்காகக் கணக்கிடப்படும் ஆண்டு.

civil'ian, *n.* பொதுத்துறைச் சட்டப் பேராசிரியர்; பொதுத்துறைச் சட்ட மாணவர்; படைத்துறை சாராத அரசாங்க அலுவலர்; *a.* படைத்துறை சாராத.

civ'ilist, *n.* பொது உரிமைத்துறைச் சட்ட வல்லுநர்.

civil'ity, *n.* நயநாகரிகம்; பண்புநயம், பண்பட்ட பழக்க வழக்கமுறை; மட்டுமதிப்புப் பண்பு.

civ'ilizable, *a.* சீர்ப்படுத்தத்தக்க, நாகரிகப்படுத்தப்படத் தகுந்த.

civiliza'tion, *n.* நாகரிகம்; நாகரிகமடைந்துள்ள நிலை; பண்பாடு, பண்பட்டநிலை; சமூக முன்னேற்றத்தில் மேம்பட்டநிலை; நாகரிக உலகு, நாகரிகமடைந்துள்ள நாடுகள்.

civ'ilize, *v.* நாகரிகப்படுத்து, சீர்திருத்து, பண்பு பெறப் பழக்கு.

civ'ilized, *a.* நாகரிகமக்களுக்குரிய, பண்பு நிறைந்த மக்களின் இயல்புகள் வாய்க்கப்பெற்ற.

civ'illy, *adv.* நயமாக.

civ'ism, *n.* குடியுரிமைநலம்; (வர.) 1789-ஆம் ஆண்டுக்கு உரிய பிரஞ்சுப்புரட்சியின் அடிப்படைக் கொள்கை பற்றிய ஆதரவு.

clabb'er, *n.* சேறு.

clack, *n.* கடகடப்பு, சடசடப்பு, கட்டைகளை ஒன்றோடொன்று தட்டும்போது உண்டாவதைப் போன்ற ஓசை; கடகடப்பு ஒலி உண்டுபண்ணும் கருவி; பலருடைய பேச்சரவம்; (பே-வ.) நா; *v.* உரக்கப்பிதற்று; ஓயாது பேசு; மரக்கட்டைகள் கல்லின்மீது உராய்வது போன்ற ஒலியெழுப்பு, சடசட ஓசை உண்டுபண்ணு.

clack'-box, *n.* பொறியின் தடுக்கிதழ் கொண்ட பெட்டி.

clack'-valve, *n.* இயந்திரங்களில் தடாலெனும் ஒலியுடன் மீளும்படி கீல் பொருத்தப் பெற்றுள்ள தடுக்கிதழ் அமைவு.

clad, *a.* உடுப்பு அணிந்த, ஆடை அணிபூட்டப்பட்ட, ஒப்பனை செய்யப்பட்ட.

cladd'ing, *n.* உலோகத்துக்குரிய உலோகப்பொதிவு; அணு ஆற்றல் எதிர்வு இயக்க அமைவில் உலோகப் பொதிகாப்பு.

cladocarp'ous, *a.* (தாவ.) சிறு பக்கக்கிளைகளில் காய்களை உடைய.

clad'ode, *n.* (தாவ.) இலையின் தோற்றமும் செயற்பாடும் கொண்ட கிளை.

claim, *n.* உரிமைக் கோரிக்கை; கோரிப்பெறும் தகுதி; கோரிக்கை உரிமை; பெறுவதற்கான உரிமை; கோரிப் பெறும் உரிமை உடைய பொருள்; உரிமை கோரிப் பெறப்பட்டபொருள்; உரிமைப் பொருள்; உரிமைப் பங்கு; சுரங்கத் துறையில் பங்கிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம்; *v.* உரிமை கோரு; உரிமையாகக் கேள்; உரிமை கொண்டாடு; உரிமைபற்றி வாதாடு; உரிமை வலியுறுத்து; மெய்யென வாதிடு; உண்மையை ஒப்புக்கொள்ளும்படி கேள்; தகுதி உடையதாயிரு; (தொ.) lay claim to, ஒன்றன் மாட்டுள்ள உரிமையை வலியுறுத்திக் கூறு.

claim'able, *a.* உரிமை கொண்டாடத்தக்க, உரிமை கோரத் தக்க.

claim'ant, claim'er, *n.* உரிமை கொண்டாடுபவர், உரிமை கோருபவர்.

claim'-jump'er, *n.* சுரங்கமுறுக்க மற்றொருவருக்குள்ள உரிமையைத் தமதாக்கிக் கொள்பவர்.

clairaud'ience, *n.* சேணுணர்வு, புலன்கடந்த கேள்வியாற்றல், பொறிகளுக்கு அப்பாற்பட்டவற்றைக் கேட்கும் ஆற்றல்.

clairaud'ient, *n.* புலன்கடந்தவற்றைக் கேட்கும் ஆற்றலுடையவர்; *a.* சேணுணர்வுடைய, புலன்கடந்தவற்றைக் கேட்கும் ஆற்றலுடைய, புலன்கடந்த கேள்வி ஆற்றலுக்குரிய.

clair'schach, *n.* கெல்டிய இனமக்கள் (Celts) கையாண்ட தந்திக் கம்பிகளுடன் கூடிய பழைய யாழ்வகை.

clairvoy'ance, *n.* தொலைவிலுணர்தல், உண்ணோக்கு, புலனுகாதவற்றைக் காணும் ஆற்றல், இயல்பு கடந்த நுண்நோக்காற்றல்.

clairvoy'ant, *n.* கட்புலனுக்கு அகப்படாதவற்றைக் காணும் திறனுடையவர்; *a.* புலனுகாவற்றைக் காணும் திறலுடைய

clam [1], *n.* இடுக்கி, இறுக்கிப்பிடிக்கும் கருவி ; எதிர் எதிராயுள்ள பாகங்கள் திருகாணியினுல் இறுக்கப்படத்தக்க அழுத்தக்கருவி ; ஏ. பற்று, இடுக்கு; இடைவைத்தழுத்து; (பே-வ.) வாய்மூடு, பேசாதிரு.

clam [2], *n.* இரட்டையோட்டுச் சிப்பி வகை ; சிப்பியோடு.

clam [3], *n.* ஈரம் ; ஏ. தடு ; அடை ; பூசு.

clam [4], *n.* கூட்டுமணி ஒலி, இரண்டு அல்லது பல மணிகளை ஒருங்கே இசைப்பதனுல் உண்டாகும் ஓசை ; ஏ. கூட்டுமணி ஒலி எழுப்பு ; கலகலக்கும் மணியோசை செய்.

clam'ancy, *n.* அவசரத்தன்மை, பொறுதியற்ற படபடப்பு.

clam'ant, *a.* உரக்கக்கூவுகிற; அவசரமான; வற்புறுத்துகிற.

clam'-bake, *n.* சிப்பி வறுவல், சூடேற்றப்பட்ட கற்களின் மேல் சிப்பி மீனைப் போட்டு வறுத்து உருளைக்கிழங்கு மீன் சோளம் முதலியன மேலிட்டு உண்டுபண்ணும் உண்டிவகை; சிப்பி வறுவல் பரிமாறப்படும் புறவெளி விருந்துக் குழு.

clam'ber, *n.* இடர்ப்பட்டுத் தவழ்ந்தேறும் முயற்சி ; ஏ. தொற்றி ஏறு, தத்தித்தாவு, கைகால்களால் பற்றிக்கொண்டு மேற்செல்.

clam-chow'der, *n.* சிப்பி மீன் கலந்து செய்யப்படும் பணியார வகை.

clamm'y, *a.* ஒட்டிக்கொள்கிற, பசைபோன்ற ; ஈரமான.

clam'orous, *a.* கூச்சலிடுகிற, ஆரவாரம் செய்கிற.

clam'our, *n.* ஆரவாரம், சந்தடி ; அமளி, இடைவிடாத உரத்த கூச்சல் ; அடுத்தடுத்துக் குறை வற்புறுத்துதல் ; ஆரவார வேண்டுகோள் ; ஏ. ஆர்ப்பரி, உரக்கக் கேள் ; இடைவிடாமல் கூச்சலிடு.

clam'ourer, *n.* ஆரவாரம் செய்பவர், கிளர்ச்சிக்காரர்.

clamp [1], *n.* பற்றுக்கட்டை, பற்றிரும்பு, அள்ளு, இறுக்கிப் பிடிக்கும் கருவி; பற்றுக்கருவி; ஏ. இறுகப்பற்று, பிணைத்து முடுக்கு ; அள்ளுவைக் கொண்டு பிணி.

clamp [2], *n.* கால்பளுவுடன் நடத்தல், காலெடுத்து வைத்து நடத்தல் ; ஏ. காலை அழுத்திவைத்து நட, நிலம் அதிர நட.

clamp [3], *n.* குவியல், போர் ; செங்கற் சூளை ; மூடிவைத்த உருளைக் கிழங்குக் குவியல் ; ஏ. போராகக் குவி ; செங்கல்லைச் சூளையில் வைத்துச் சுடு.

clam'per, ஏ. ஒட்டுப்போட்டுச் சமாளி, போலி வேலை செய்.

clam'-shell, *n.* சிப்பி மீனின் தோடு, சிப்பி.

clan, *n.* பொதுக்குடி மரபுக்குழு ; ஸ்காத்லாந்து நாட்டு மேட்டுநில மக்களிடையே (Scottish Highlanders) பொது முன்னோனையுடைய கூட்டுக்குழு ; பங்காளிக் கிளை, தந்தை வழியுரிமைச்சுற்றம் ; குலமரபு ; இனம், கிளை மரபு ; குறுகிய தனிப்பற்றுடைய குழு, தனிக்குழு, சிறுகுழு.

clandes'tine, *a.* கள்ளத்தனமான, ஒளிவு மறைவான ; வஞ்சகமான.

clang [1], *n.* உலோகங்கள் அடிபடுவது போன்ற கணீரென்ற பேரொலி ; எக்காள ஒலி ; பெரிய மணியோசை ; நாரை-வாத்து போன்ற பறவைகள் எழுப்பும் உரத்த ஒலி ; ஏ. கணீரென்ற ஒலி செய்.

clang [2], *n.* (இசை.) பல நயங்கள் வாய்ந்த குரல் ; நயத்தரம்.

clang'ing, *n.* கணீரென்று ஒலித்தல் ; *a.* கணீரென்று ஒலிக்கிற.

clang'orous, *a.* அலை அலையாய் ஒலிக்கும் ஓசையுடைய ; உலோகங்கள் அடிபடுவது போன்ற கணீரென்ற ஓசைமிக்க.

clang'our, *n.* உரத்த மணியோசை ; ஏ. உரத்த மணியோசை எழுப்பு.

clank, *n.* கனத்த சங்கிலி சலசலக்கும்போது உண்டாவது போன்ற ஓசை ; ஏ. சங்கிலி சலசலக்கும்போது உண்டாவது போன்ற ஓசை எழுப்பு.

clank'less, *a.* சங்கிலியோசை எழுப்பாத.

clann'ish, *a.* குறுகிய இனப்பற்றுள்ள; மற்றவர்களிடமிருந்து பிரிந்து வாழும் இயல்புடைய ; குறுகிய குழுப்பற்றுடைய.

clann'ishness, *n.* குறுகிய இனப்பற்றுடைமை, பிற்போக்கான குலமரபு மனப்பான்மை.

clan'ship, *n.* ஒரு முதல்வனுக்குட்பட்ட குடும்பங்களின் தொகுதி ; குலமரபுக் கட்டுப்பாட்டுணர்வு ; குலமரபு முறை ; இனப்பிரிவு வேறுபாடு ; இனப்பிரிவுகளின் உட்பகை வெறுப்பு ; குழு-உட்குழு இடைப்பட்ட பகைமை வெறுப்பு.

clans'man, *n.* குலமரபினன், இனத்தவன்.

clans'woman, *n.* குலமரபினள், இனத்தவள்.

clap [1], *n.* இடிஒலி ; வெடிப்போசை ; கைதட்டொலி ; தட்டல், கைதட்டும் ஓசை ; கொட்டல், அறை ; ஏ. மொத்து, அறை, ஓசையுண்டாகும்படி அடி ; திணி, திடுமென நெக்கித்தள்ளு ; உடனடியாக இறுக்கிக்கட்டு ; ஊக்கந்தரும் வகையில் தட்டு ; அறைந்து தட்டு ; கைகொட்டி ஆர்ப்பரி ; கைகொட்டு ; கைதட்டு ; திடுமென (சிறையில்) அடை ; (தொ.) clap eyes on, காணப்பெறு ; clap hold of, முரட்டுத்தனமாகப் பற்று.

clap [2], *n.* மேகநோய், வெட்டை ; ஏ. வெட்டை நோய்த் தொற்றுபடர்.

clap'board, *n.* சாரல்தடுக்கு, மழைச்சாரல் அடிக்காதபடி கதவின்மீது சாய்வாகப் பொருத்தப்படும் பலகை.

clap'-bread, *n.* முரட்டு மாவினுல் செய்யப்படும் சூட்டப்பம் வகை.

clap'-net, *n.* சுருக்கு வலை, கயிற்றை இழுப்பதனுல் திடுமென மூடிக்கொள்ளும்படி அமைக்கப்பட்டுள்ள புள் வலை.

clapp'er [1], *n.* கை தட்டி ஆதரிப்பவர் ; மணியின் நா ; பறவைகளைத் துரத்துவதற்கான கிலுகிலுப்பை; மாவாலையில் அரிதட்டினைத் தட்டி மா வீழ்த்தும் கட்டை அல்லது உலோக அமைவு.

clapp'er [2], *n.* கற்பலகைகளால் அல்லது மரப்பலகைகளால் ஆன கரடு முரடான பாலம் ; மேடான நடைபாதை ; முயல்வலை.

clapp'erclaw, ஏ. பிறாண்டித் தாக்கு ; திட்டு ; கறுவுகொள் நெஞ்சொடு குற்றங்காண்.

clapp'ers, *n. pl.* விரல்களிடையே வைத்தடிக்கும் நீகிரோவர்கள் இசைக் கருவியாகப் பயன்படுத்துகிற எலும்புத் துண்டுகள்.

clapp'ing, *n.* அடிப்பதனுல் எழும் ஓசை ; கைதட்டல்.

clap'-sill, *n.* கால்வாய் அணை அடைப்பின் அடிவாய்ச்சட்டம்.

clap'trap, *n.* பிறர் மெச்சுவதற்கான போலிச்செயல் ; வெற்றுப்பசப்புரை ; பகட்டு ஆரவாரக் கருத்து ; *a.* பகட்டார வாரமான.

claque, claqueur, (பிர.) *n.* கூலிக்குப் புகழ்ந்து கைதட்டும் கூட்டம்.

cla'rabella, *n.* இனிய ஓசையெழுப்பும் இசைக்கருவித் தூளியின் அழுத்துக்கட்டை.

cla'rence, *n.* நால்வர் அமர உட்புறத்திலும் வலவன் அமர வெளிப்புறத்திலும் இருக்கைகள் அமைந்த நான்கு சக்கர வண்டிவகை.

Cla'renceux, Cla'rencieux, *n.* (கட.) இங்கிலாந்தில் முக்கிய கட்டியர் ஐவர்களுள் ஒருவர், இரண்டாம் கட்டியர்.

cla'rendon, *n.* கனத்த முகப்புவாய்ந்த அச்செழுத்து வகை ; *a.* கனத்த முகப்பு வாய்ந்த.

cla'ret, *n.* பிரான்சிலுள்ள போர்டோவிலிருந்து (Bordeaux) தருவிக்கப்படும் திண்சிவப்பு இன்தேறல் வகை ; *a.* திண் சிவப்பு நிறம் வாய்ந்த ; ஏ. திண் சிவப்பு இன்தேறல் அருந்து.

clar'et-cup, *n.* பனிக்கட்டி-சாராயம்-சர்க்கரை முதலியவை கலந்த திண் சிவப்பு இன்தேறல் கலவை வகை.

clarifica'tion, *n.* தெளிவு ; தெளிவாக்கல் ; துப்புரவாக்கல்.

clar'ifier, *n.* தெளிவாக்குபவர் ; தெளியச் செய்யும் பொருள்.

cla'rify, *v.* தெளிவுறும்படி செய், தெளிவாக்கு, துலக்கி அழுக்கு நீக்கித் துப்புரவாக்கு; பளிங்குபோல் ஆக்கு; வெண்ணெயைத் துப்புரவாக்கி நெய்யாக மாற்று; தெளிவாகு, துலங்கு; தெளிவுபடு, பளிங்கு போலாகு.

cla'rinet, *n.* (இசை.) மரத்தினுலான ஊது துளைக்கருவி வகை; இசைப் பெட்டியின் குழலிசைப்பகுதி; (தொ.) the bass clarinet, தாழ் குரல் துளைக்கருவி வகை.

clarinett'ist, *n.* துளைக்கருவி வகை வாசிப்பவர்.

cla'rion, *n.* சில்லிட்டிசைக்கும் எக்காளம்; எழுச்சியூட்டும் உரத்த ஒலி; எக்காள ஓசை; எக்காளத்தினது போன்ற ஒசை; *a.* தெளிவான; உரத்த.

cla'rionet, *n.* = clarinet.

cla'rity, *n.* துலக்கம், தெளிவு.

Clark'ia, *n.* பகட்டான மலர்களையுடைய செடியினம்.

clar'y, *n.* காய்கறித் தோட்டப் பூண்டு வகை.

clash, *n.* மோத்தல் ஒலி; மோதுதல், கைகலப்பு, சச்சரவு; கருத்து வேற்றுமை, முரண்பாடு; *v.* மோதொலி எழுப்பு; எதிர்த்து நில்; முட்டி மோது; முரண்படு, சிக்கற்படு.

clasp, *n.* பிடிப்பு, பற்றுதல்; அணைப்பு, தழுவுதல்; கைகுலுக்கல்; கொளுவி, அள்ளு; கச்சு இறுக்கி, ஆடை ஊக்கு; (படை.) பதக்க நாடாவின்மேல் ஒப்பணையாகப் பொருத்தப்படும் வெள்ளிப்பட்டை; *v.* நெருக்கிப்பிடி, பற்றிப் பிடித்துக் கைகுலுக்கு; தழுவு; அள்ளு வைத்துச் செருகு, அள்ளுவைக் கொண்டு பிணை; (தொ.) clasp hands, கைகுலுக்கு; கைகோத்து ஒத்துழை; clasp one's hands, விரல்களுடன் விரல்கள் பிணை.

clas'per, *n.* பற்றிப்பிடிப்பவர்; பற்றிப்பிடிக்கும் பொருள்; (தாவ.) செடியின் தளிர்க்கை; (வில.) பற்றிப் பிடிக்கும் உறுப்பு.

clasp'-knife, *n.* மடக்குக் கத்தி.

class, *n.* பள்ளி வகுப்பு, கல்வி வகுப்பு; ஒரே ஆண்டுப் படியில் பயிலும் மாணவர்குழு; இனவகுப்பு, ஒத்தபொருள்களின் குழு; வகை; உயிர்நூற் பெருங்குழுவின் பிரிவு; சமுதாயப்பிரிவு, ஒத்த பண்புடைய மக்கள் குழு; ஒத்த படிநிலையுடைய சமுதாயக் குழு; 'மெதடிஸ்டு' (Methodist) என்ற சமயக்கிளையின் பிரிவு; படைத்துறை உரிமைப் படிநிலை; உரிமைப் படிநிலைக் குழு; படிநிலை; திறமைப்படி; தேறுதல் தரம்; பண்பின் தரம்; ஊர்தி-நாடகம் முதலியவற்றின் இருக்கைப் படித்தரம்; மேன்மை, உயர்தரம்; *v.* வகு; வகுப்புக்களாக அமை, வகைப்படுத்து; வகைதேர்ந்து இணை, வகுப்பில் இணை, தரப்படுத்திச் சேர்; வகுப்பில் படு, தரக் குழுவில் இடம் பெறு; (தொ.) class legislation, சமுதாய வகுப்பின் நலங்கருதி இயற்றப்படும் சட்டம்; take a class, தேர்வில் சிறப்பு மதிப்பெண்கள் பெற்றுத் தேறு.

class'able, *a.* வகைப்படுத்தத்தக்க. வகையுள் சேர்க்கத்தக்க.

class'-con'scious, *a.* வகுப்பு உணர்வுள்ள, சமூகத்தில் தாம் ஒரு வகுப்பைச் சேர்ந்தவரென நன்கு அறிந்திருக்கிற.

class'ic, *n.* புகழ்சான்ற எழுத்தாளர்; தலைமைசால் கலைஞர்; பண்டைக் கிரேக்க ரோம இலக்கியச் சான்றோர்; பண்டை உயர்தனிச் செம்மொழி இலக்கிய மாணவர்; புகழ்சான்ற ஏடு; பண்டை உயர்தனிச் செம்மொழிப்பாணி பின்பற்றுபவர், செம்மொழி முன்மாதிரி மேற்கொள்ளுபவர்; *a.* முதல் தரமான; ஒப்புக்கொள்ளப்பட்ட மேம்பாடுடைய; பண்டைய கிரேக்க இலத்தீன மொழியின் இலக்கிய ஆசிரியருக்குரிய; பண்டைய கிரேக்க ரோமக் கலை சார்ந்த; பண்டைய கிரேக்க ரோமரின் நாகரிகப் பண்பாடு சார்ந்த; கிரேக்க இலத்தீனப் பழமைக்குரிய; பண்டைக் கிரேக்க ரோமக் கலையின் இன்னெளிமைக் கட்டமைதி வாய்ந்த; பண்டைய கிரேக்க ரோம இலக்கிய காலத் தொடர்புடைய; பண்டை வரலாற்றுத் தொடர்புடைய; (தொ.) classic races, ஆண்டுதோறும் நடக்கும் ஐந்து முதன்மையான உலகக் குதிரைப் பந்தயங்கள்.

class'ical, *a.* ஒப்புக்கொள்ளப்பட்ட சிறப்புடைய; முதல் தரமான இலக்கிய நலம் வாய்ந்த; பண்டைய கிரேக்க இலத்தீன ஆசிரியர்களுக்குரிய; பண்டைய கிரேக்க இலத்தீன கலைக்குரிய; பண்டைய கிரேக்க இலத்தீன கலை இலக்கியங்களில் புலமை வாய்ந்த; பண்டைய கிரேக்க இலத்தீன நூல்களை அல்லது கலைகளை அடிப்படையாகக் கொண்ட; பண்டைய கிரேக்க ரோம ஆசிரியர்களின் நடையைப் பின்பற்றிய; தூய இன்னெளிமை நயமும் கட்டமைதியும் வாய்ந்த.

class'icism, *n.* பண்டைக் கிரேக்க இலத்தீன மொழிமரபு; பண்டைய கிரேக்க இலத்தீனக்கலை இலக்கிய மரபுப் பண்பு; பண்டைய கிரேக்க இலத்தீன கலைத்துறைப் புலமை; பண்டைய கிரேக்க ரோமமொழிகள் கலை கல்விமுறை ஆதரவு.

class'icist, *n.* பண்டைய கிரேக்க இலத்தீன நூல்களின் நடையைப் பின்பற்றுபவர்; பண்டைய கிரேக்க இலத்தீன கலைத்துறைகளில் புலமை பெற்றவர்; பண்டைய கிரேக்க இலத்தீன மொழிக்கல்வியை ஆதரிப்பவர்.

class'icize, *v.* முதல்தரமானதாக்கு; பண்டைய கிரேக்க இலத்தீன மொழிப்பாணியைப் பின்பற்று.

classicol'atry, *n.* பண்டைய கிரேக்க இலத்தீன மொழிக் கலைத்துறைகளில் ஈடுபாடு.

class'ics, *n.* பண்டைய கிரேக்க இலத்தீன மொழிக்கலைத் துறைகளின் தொகுதி, உயர்தனிச் செம்மொழித்துறை.

class'ifiable, *a.* வகைப்படுத்தத்தக்க.

classifica'tion, *n.* வகைப்படுத்துதல்; வகுப்பு முறை, வகுப் பொழுங்கு.

class'ified, *a.* வகைப்படுத்தப்பட்ட; பாட்டைகள் வகையில் அரசியல் பொருள் உதவிக்கு உரிமையுடைய.

class'ify, *v.* வகைப்படுத்து, இனவாரியாகப் பிரி; வகுப்பில் இணை; பாதுகாப்பை முன்னிட்டு புதைமறைவாக்கி வை.

class'-lead'er, *n.* கிறித்தவ சமய 'மெதடிஸ்ட்' (Methodist) பிரிவினருள் ஒரு வகுப்பின் தலைவர்.

class'man, *n.* பல்கலைக்கழகத் தேர்வுகளில் மதிப்பெண் நிரம்பிய வகுப்புப்பெற்றுத் தேறியவர்.

class'-room, *n.* வகுப்பு அறை.

clas'tic, *a.* (மண்.) பழம் பாறைகளின் உடைந்த துண்டுகளாலான.

clatt'er, *n.* கடகட ஒலி; உரத்த பேச்சு; *v.* சடசடவென்று ஒலி; உரத்த ஒலியெழுப்பு; ஓயாது பேசு, பிதற்று.

claudica'tion, *n.* நொண்டுதல்.

clause, *n.* (இலக்.) தனி எழுவாய் பயனிலையுடைய வாக்கிய உறுப்பு, துணை வாசகம்; சட்ட விதியின் கூறு; உடன் படிக்கை விதியின் கூறு.

claus'tral, *a.* துறவி மடத்துக்குரிய; கன்னிமடம் சார்ந்த; குறுகலான; ஒதுக்கிடமான; மூளைக்கோளங்களில் உள்ள சாம்பல் நிறப்பொருளின் மென்படலம் சார்ந்த.

claustra'tion, *n.* ஒதுப்புறப்படுத்துதல், ஒதுக்கிடத்தில் தள்ளி அடைத்து வைத்தல்.

claustrophob'ia, *n.* ஒதுக்கிடம் என்றாலே அச்சமுண்டாகும் கோளாறு.

claus'trum, *n.* மூளைக்கோளங்களில் உள்ள சாம்பல் நிறப் பொருளின் மென்படலம்.

claus'ular, *a.* வாக்கியப்பகுதிக்குரிய; விதிமுறை அடங்கிய.

clav'ate, clav'ated, *a.* (தாவ.) செண்டு போன்ற, குண்டாந்தடி உருவுடைய.

clava'tion, *n.* (தாவ.) தடிபோன்று உருவுள்ள தன்மை; (உள்.) அசையாக்குண்டு குழிப்பொருத்தம்.

clave, *v.* cleave [1] என்பதன் முற்கால இறந்தகால வடிவம்; cleave [2] என்பதன் இறந்தகால வடிவங்களுள் ஒன்று.

clav'ecin, *n.* இசைக்கருவி வகை, இசைப்பெட்டி வகை.

clav'ichord, *n.* இசைப்பெட்டியின் முன்னோடி, இசைக்கருவி வகை.

clav'icle, *n.* கழுத்துப்பட்டை எலும்பு.

clav'icorn, *n.* வண்டு வகை; *a.* செண்டு வடிவான உணர் இழை உறுப்புக்களையுடைய.

clavic'ular, *a.* கழுத்துப்பட்டை எலும்பைச் சார்ந்த.

clavier', *n.* இசைப்பெட்டி வகை; இசைப்பெட்டி வகையின் இசைக் கட்டைப்பகுதி.

clav'iform, *a.* செண்டுருவான, குண்டாந்தடி போன்ற வடிவுடைய.

clav'iger[1], *n.* தண்டேந்தியவர், செண்டு தாங்கிய வீரர்.

clav'iger[2], *n.* திறவுகோல் காப்பவர், கடைகாப்பாளர்.

clavig'erous[1], *a.* தண்டேந்திய, செண்டுதாங்கிய.

clavig'erous[2], *a.* திறவுகோல் காத்துப் பேணுகிற.

cla'vis, *n.* திறவுகோல்; மறைதிறவு, புதைமறை விளக்கக் குறிப்பு; *pl.* cla'ves.

clav'ulate, *a.* செண்டுருவின் சாயலுடைய.

claw, *n.* விலங்கின் வளை நகம்; பறவையின் கூருகிர்; நண்டின் கொடுக்கு; வண்டு முதலியவற்றின் இடுக்கிக் கால் நுனி; வளைநகம் போன்ற கருவி; (தாவ.) மலரிதழின் குறுகிய அடிப்பகுதி; *v.* நகத்தால் கீறு, பிருண்டு, கிழி, பிளை; சுரண்டு; பிடி; பற்றி இழு; முகமன் கூறு, முகப் புகழ்ச்சி செய், நேரடியாகப் புகழ்ந்து பேசு; செல்வமாகக் கொஞ்சு; (கப்.) காற்று முகமாகச் செல்.

claw'back, *n.* இச்சகம் பேசிப் பிழைப்பவர், முகமன் வல்லவர்.

clawed, *a.* உகிருடைய, வளைநகங்களுடைய; வளைவான இரு பிரிவுகளுள்ள.

claw'-hammer, *n.* வார்சுத்தியல், ஆணி பற்றி இழுக்கும் அமைவுடைய சுத்தியல்.

claw'-hamm'er-coat, *n.* கருநிற மேல்சட்டையைக் குறிக்கும் ஏளனப்பெயர்.

claw'less, *a.* வளைநகமற்ற.

clay, *n.* களி, களிமண்; தூய்மையற்ற அலுமினியக் கன்மக் கலவை மண்வகை; மண்; மனித உடல்; புகைக்குழல்; *v.* சர்க்கரை முதலியவற்றைக் களிமண் கொண்டு துப்புரவு செய்; (தொ.) wet one's clay, குடி.

clay'-cold, *a.* உயிரற்ற.

clay'-eater, *n.* களிமண் தின்னி, பிரேசில் (Brazil) முதலிய நாடுகளில் கொழுப்புள்ள களிமண்ணை மென்றுகொண்டிருக்கும் பழக்கத்திற்கு அடிமையானவர்.

clayed, *a.* களிமண் போன்ற.

clay'ey, *a.* களிமண்ணாலான; களிமண்ணால் மூடப்பட்ட; களிமண் போன்ற.

clay'ish, *a.* களிமண் இயல்புடைய.

clay'-marl, *n.* வெண்ணிறக் களிமண் வகை.

clay'-mill, *n.* களிமண் உருவாக்கும் ஆலை.

claymor'e, *n.* பண்டைக்கால ஸ்காத்லாந்தில் வழங்கிய இரு புறமும் கூருடைய நீண்ட வாள்.

clay'-pigeon, *n.* புரு வடிவுடைய களிமண் எய்குறி.

clay'-pipe, *n.* புகை குடிக்கும் மட்குழல், புகைக்குழல்.

clay'-pit, *n.* களிமண் தோண்டியதனால் ஏற்பட்ட குழி.

clay'-slate, *n.* திண்ணமான களிமண் பாறை.

clean[1], *a.* துப்புரவான; கறைபடியாத, அழுக்குப் போக்கப்பட்ட; உள்ளத் தூய்மையுடைய; களங்கமில்லாத; தவறில்லாத; எழுதப்படாத; தெளிவான; வரையறை செய்யப்பட்ட; முழுமையான; தூண்டில் வகையில் இரைபற்றுத; கதிரியக்கச் சிதறுதல் இல்லாத; *v.* துப்புரவாக்கு, மாசு துடை; மேசை-தட்டம் முதலியவற்றின் மீதிருப்பன அகற்றி வெற்றிடமாக்கு; ஒழுங்குபடுத்து; மெருகேற்று; ஒப்பனை செய்; (தொ.) clean hands, குற்றம் பற்றாநிலை; clean slate, வில்லங்கமற்ற தன்மை; புதுத் தொடக்கம்; show a clean pair of heels, தப்பியோடு.

clean[2], *adv.* முழுதும், தீர, ஒட்டற; கலப்பின்றி; வழுவில்லாமல்.

clean'er, *n.* தூய்மையாக்குபவர்; தூய்மையாக்கும் பொருள்.

clean'ing, *n.* தூய்மையாக்கும் செயல்; *a.* தூய்மையாக்குகின்ற.

clean'-limbed, *a.* கட்டமைவுடைய, நேர் ஒழுங்கான, திட்பநயமுடைய.

clean'liness, *n.* உடல் தூய்மை; செயல் துப்புரவு; தூய்மைப் பழக்கவழக்கம்.

clean'ly, *a.* தூய்மையான பழக்கமுள்ள; தூய்மைக் கவனமுள்ள; *adv.* தூய்மையான முறையில், துப்புரவாக.

clean'ness, *n.* துப்புரவு, தூய்மை.

cleans'able, *a.* தூய்மையாக்கப்படத்தக்க.

cleanse, *v.* கழுவித் தூய்மையாக்கு; துப்புரவுப்படுத்து; (விவி.) நோய் நீக்கிக் குணப்படுத்து.

cleans'er, *n.* தூய்மையாக்குபவர்; தூய்மை செய்யும் பொருள்.

cleans'ing, *n.* தூய்மையாக்கும் செயல்.

clean'-up, *n.* முழுத்துப்புரவு; தீமை ஒழிப்பு.

clear, *a.* தெளிந்த; ஒளி ஊடுருவுகின்ற, பளிங்குபோன்ற; கலங்கலில்லாத, தூசுதும்பற்ற; எளிதான, விளக்கமான, சிக்கலற்ற; சிக்கலுக்கு இடமில்லாத; மங்காத, மறை திரையற்ற; குற்றமற்ற, கறையற்ற; தவறுக்கிடமற்ற; கறைப்படாத; விடுபட்ட; வெட்டவெளியான; இடநெருக்கடியற்ற; தடைப்படாத, தடங்கலற்ற, குந்தகமற்ற; ஈடுபாடற்ற; இடர்ப்பாடற்ற, இடையூறில்லாத; தொடர்பற்ற, அப்பாற்பட்ட; *v.* தெளிவுபடு; தெளிவாக்கு; தடைநீக்கு; வறிதாக்கு, துடைத்தொழி, வெற்றிடமாக்கு; விடுவி; கறைநீக்கு; குற்றமில்லையென்று விளக்கமளி; தாண்டிக் குதி; கடந்து செல்; கடன் வகையில் தீர்; தொழில் வகையில் ஆதாயமாகப்பெறு; (தொ.) clear off, விட்டொழி, விலக்கித்தள்ளு; முடித்துவிடு; கலந்து சென்றுவிடு; clear out, விலக்கு, ஒழிவு செய், ஒதுக்கித்தள்ளு; (கப்.) துறைமுகத்தைவிட்டு நீங்கு; விலகிச் சென்றுவிடு; clear the air, நிலைமையைத் தெளிவாக்கு, நெருக்கடி நிலையைத் தளர்த்து; clear the way, வழி திறந்துவை; clear up, தெளிவாக்கு; தெளிவாகு; in the clear, ஐயுறவினின்று விலகிய; சிக்கல் நீங்கிய; நிலைய முறிவுக்குரிய நெருக்கடி நிலை கடந்த.

clear'age, *n.* பயிரிடுவதற்காக மரம் வெட்டித் திருத்திய நிலப்பகுதி.

clear'ance, *n.* தடை ஒழிப்பு; இட ஒழிப்பு, அகற்றுதல், நீக்குதல்; நிலத்திலிருந்து அப்புறப்படுத்துதல்; மரம்வெட்டித் திறந்த வெளியாக்கல்; இடைவெளி; இயங்கும் இயந்திரப் பகுதிகளுள் இரண்டின் இடையில் விடப்படும் இடைவெளி; காசோலை மாற்று மூலமான கணக்குத் தீர்ப்பு; அரசின் அலுவலிலிருந்து விலக இசைவுப்பேறு; சுங்கநிலையத்தில் கப்பல் புறப்பட்டுச் செல்வதற்குரிய இசைவுச்சான்று.

clear'cole, *n.* வண்ணந்தீற்றுவதற்கு முன்னீடான முதற் பசை வெள்ளடிப்பு.

clear'-cut, *a.* திட்டவட்டமான, தெளிவான.

clear'-eyed, *a.* தெளிவான பார்வை உடைய; அறிவுத் தெளிவுடைய.

clear'-head'ed, *a.* உணர்வுத் தெளிவுடைய.

clear'ing, *n.* அடைசல் அகற்றல்; தடைநீக்கம்; இடஒழிப்பு, காடுவெட்டி வெளியிடம் உண்டுபண்ணுதல்; காடு வெட்டித் திருத்தப்பட்ட நிலம்; பணச்சீட்டு-பணமுறி ஆகியவற்றின் கணக்குத்தீர்வு.

Clear'ing-House, *n.* காசோலை-பணச்சீட்டு முதலியவற்றை மாற்றிக் கணக்குத் தீர்வு செய்யும் நிலையம்; இருப்புப்பாதைக் கழகங்கள் அஞ்சற் கூட்டுக்களிடையே கட்டணப் பரிமாற்றக் கணக்குத் தீர்வகம்.

clear'ing-nut, *n.* தேற்றுங்கொட்டை.

clear'ly, *adv.* தெளிவாக; வெளிப்படையாக; எளிதாக; தடையின்றி; ஐயத்துக்கிடமில்லாமல்.

clear'ness, *n.* தெளிவு; மங்கலின்மை; மறைப்பின்மை; ஒளி ஊடுருவும் தன்மை, பளிங்கு இயல்பு; மனத்தெளிவு, அறிவுத் தெளிவு.

clear'-sight'ed, *a.* தெளிவான பார்வையுடைய; அறிவுத் தெளிவுடைய.

clear'-starch'er, *n.* ஆடைவெளுப்பவள், வண்ணகப் பணிப் பெண்.

clear'-starch'ing, *n.* தெளிந்த கஞ்சிப் பசையால் துணிகளை விறைப்பாக்கும் செயல்.

clear'wing, *n.* பளிங்கு போன்ற சிறகுடைய விட்டில் வகை.

cleat, *n.* கப்பல் பாய்மரத்தில் உள்ள ஆப்பு; முளை.

cleav'age, *n.* பிளத்தல்; பிளவு; வேறுபாடு, மனவேறுபாடு; பிரிவினை.

cleave [1], *v.* பிரி, பிள; பி ள வு று; வல்லந்தமாகப் பிரி; கிழித்துச்செல்; ஊடுருவு; துளை; வெட்டு, துண்டுபடுத்து.

cleave [2], *v.* ஒட்டிக்கொள், விடாதுபற்று, தொற்றிக்கொள்.

cleav'er, *n.* இறைச்சிக்கடைக்காரனின் வெட்டுக்கத்தி; பிளப் பவர்; பிளப்பது; பிரிப்பவர்; பிரிப்பது.

cleav'ers, *n.* ஒட்டுப்புல், துணியில் ஒட்டிக்கொள்ளும் கொடி வகை.

clech'e, *a.* (கட்.) முழுதும் உட்குடைந்து ஒடுங்கிய வரம் புடையதாயமைந்த.

cleek, *n.* இரும்புத்தலைப்புடைய குழிப்பந்தாட்டத் தடி.

clef, *n.* இசையொலியின் அதிர்வெல்லையைக் குறிக்கும் மூன்று அடையாளங்களுள் ஒன்று.

cleft [1], *n.* பிளவு, வெடிப்பு.

cleft [2], *v.* cleave [1] என்பதன் இறந்தகால வடிவங்களில் ஒன்று; முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

cleg, *n.* உண்ணி வகை, குதிரை ஈ.

cleistogam'ic, *a.* (தாவ.) திறவாத் தற்கருப் பொலிவுடைய, நிலையாக மூடியபடியேயிருந்து தானே கருப்பொலிவுறும் இயல்புகொண்ட.

cleistogam'y, *n.* திறவாமலே தற்கருப்பொலிவுறுதல்.

clei'thral, *a.* முழுதும் மோடு இட்ட, முற்றிலும் கூரை கவிந்த.

clem, *v.* பட்டினிபோடு, பட்டினிகிட.

clem'atis, *n.* தழுவியேறும் கொடிவகை.

clem'ency, *n.* அருளிரக்கம், தயவு; எளிதிற் பிழைபொறுக் கும் தன்மை; மட்டியல்பு, மென்னயப்பு.

clem'ent, *a.* அருளிரக்கமுடைய; இன்னமைதியுடைய.

clench, *n.* விடாப்பிடி, இறுகுபிடி; தீர்முடிவு; முடிவுத் தீர்வு; *v.* கைவிரல்களை இறுக்கிமூடு; பற்களை அழுத்திமூடு; இறுகப் பற்று, இறுக்கிப்பிடி; ஆணி முதலியவற்றின் முனையைப் பக்கவாட்டில் மடக்கியடிப்பதன்மூலம் பிடியிறுக்கு; வாதத் நுக்குத் தீர்வான முடிவுகொடு, வலியுறுத்தி முடிவுசெய்; (கப்.) தனி முடிச்சால் கயிற்றின் கட்டிறுக்கு.

clen'cher, *n.* = clincher.

Cleopat'ra's nee'dle, *n.* லண்டனிலுள்ள தேம்ஸ் (Thames) ஆற்றோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் எகிப்திய தூபி.

clep'sydra, *n.* பழங்கால நீர்வட்டில் நாழிகைப்பொறி.

clere'story, *n.* திருக்கோயில் சாய்விறக்கிற்கு மேலுள்ள பலகணி வரிசையுடைய மதிற்பகுதி.

cler'gy, *n.* திருச்சபைக் குருமார் தொகுதி; சமய குருமார் மரபு.

cler'gyman, *n.* திருச்சபைச் சமயகுரு, நிலைபெற்ற திருச்சபை அமர்வு பெற்ற திருக்கோயிற்குரு.

cler'gywoman, *n.* திருச்சபைப் பெண்குரு.

cle'ric, *n.* திருச்சபைக்குரு; *a.* திருச்சபைக் குருமரபுக்குரிய; எழுத்தாயருக்குரிய.

cle'rical, *n.* அரசியல் மன்றக் கட்சி வகையினர்; *a.* திருச் சபைக் குருமரபைச் சார்ந்த; எழுத்தாயரைச் சார்ந்த.

cler'icals, *n. pl.* திருச்சபைக் குருமரபினர் உடை.

cler'icate, *n.* திருச்சபைச் சமயகுருவின் பதவி.

cleric'ity, *n.* திருச்சபைச் சமயகுருவின் நிலை.

cle'rihew, *n.* நகைச்சுவையுள்ள துணுக்குப்பாட்டு.

cler'isy, *n.* கற்றோர் குழு.

clerk, *n.* எழுத்தாயர்; பணிமனைத் துணைவர்; பொருளகப் பணியாளர்; படியெடுப்பாளர்; அலுவலகக் கடிதப்போக்கு வரவு வரைவாளர்; கணக்கர்; வாணிகச் செயலர், பதிவக அலுவலர்; நகரவைப் பணியாளர்; திருக்கோயில் சமயச் சார்பற்ற பல்பணி முதல்வர்; கற்றோர்; கல்வியறிவுடையவர், புலவர்; திருக்கோயில் சமயகுரு; *v.* எழுத்தராகப் பணிபுரி; (தொ.) clerk of the works, கட்டிடவேலை ஊழியர் மேற் பார்வையாளர்.

clerk'ess, *n.* பெண் எழுத்தர்.

clerk'ish, *a.* எழுத்தாயரின் இயல்புடைய, எழுத்தாளர் போன்ற.

clerk'less, *a.* அறியாமையுள்ள; படிப்பில்லாத.

clerk'-like, *a.* புலமை சான்ற.

cler'omancy, *n.* திருவுளச் சீட்டின்மூலம் வருவதுணர்த்தல்.

cleve, *n.* செங்குத்தான பாறை; குன்றுசூழ் பகுதி.

clev'er, *a.* திறமையுள்ள; கைத்திறம் வாய்ந்த; தேர்ச்சித் திறனுள்ள; சூழ்ச்சி நயம் வாய்ந்த.

clev'erness, *n.* கைத்திறமை; சூழ்ச்சிநயம், மதியுடைமை, செயல்திறம்.

clev'is, *n.* கயிறு கப்பி இணைப்பதற்காக விட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள இருப்பு வளைகம்பி.

clew, *n.* நூற்கண்டு, பந்தாகக் கட்டப்பட்டுள்ள நூல் திரள்; பழங்கதைகளில் திருகு நெறிகளில் வழிகாட்ட உதவும் கண்டு நூல்; புரியாத மறை செய்தியை விளக்கும் குறிப்பு; கப்பற் பாய் மூலைப்பகுதி, பாய்மர மூலை; கருத்து, எண்ணம்; (கப்.) வலைப்படுக்கையைக் கட்டும் சிறு கயிறு; *v.* நூலைப் பந்துபோல் சுருட்டு; பாய் நுனியை இழுத்துக்கட்டு.

cliche, (பிர.) *n.* வார்ப்புரு, நிலையச்சுப்பதிவுரு; மின்படிப் பெருக்க முறையின் படிவுரு; வழங்கி அடிபட்ட சொற்றொடர், வெறுஞ்சொல் துணுக்கு.

click [1], *n.* 'கிளிக்' என்ற ஒலி; 'கிளிக்' எழுவதற்குக் காரணமாகும் இயந்திரப்பகுதி; குதிரை முன்கால் இலாட மும் பின்கால் இலாடமும் இடித்துக்கொள்ளும் கோளாறு; தென்னுப்பிரிக்க மொழியில் நாவை அண்ணத்தில் அழுத்தித் திடுமெனப் பின்வாங்குவதால் ஏற்படும் ஒலி; கொண்டி, தாழ்ப்பாள்; *v.* 'கிளிக்' என்னும் ஓசை எழுப்பு.

click [2], *v.* ஒத்துறவாடு; காதலில் இழைந்து ஒன்றுபடு.

click'-bee'tle, *n.* சடக்கென்ற அரவத்துடன் குதிக்கும் இயல் புடைய விட்டில் வகை.

click'-clack, *n.* இடைவிடா அரவம்.

click'er, *n.* அச்சுக் கோக்கும் படிவங்களைப் பகிர்ந்தளிக்கும் பணியர்; மிதியடித் நோல்களை வெட்டுபவர்.

click'et, *n.* தாழ்ப்பாள்; *v.* 'கிளிக்' என்ற ஒலி செய்.

cli'ent, *n.* கட்சிக்காரர்; வாடிக்கைக்காரர்; சார்ந்திருக்கிறவர்.

cli'entage, *n.* வாடிக்கை, வாடிக்கைக்காரரின் தொகுதி; முகவருடன் கட்சிக்காரருக்குரிய தொடர்பு.

client'al, *a.* வாடிக்கை சார்ந்த; கட்சிக்காரர் தொடர்பான.

cli'entele, *n.* தொடர்சுற்றம், பரிவாரம்; வாடிக்கைக்குழு; சார்பாளர் தொகுதி; பின்பற்றுபவர் குழாம்.

cliff, *n.* கொடும்பாறை, செங்குத்தான பாறை; மலையின் செங்குத்தான பகுதி; கடல் கவிந்து நோக்கும் செங்குத்தான பாறை.

cliff′-hanger, *n.* சிலிர்ப்பு ஊட்டும் திடீர் இடர்நிகழ்ச்சிகள் நிரம்பிய புதுமைக்கதை, திடுக்கிடச் செய்யும் உணர்ச்சி கொண்ட புதினம்; வாசகரை ஊசலாட்டத்தில் கொண்டு நிறுத்தும் முடிவு கட்டம், உணர்ச்சி கிளறிவிடும் கடைசிவரி.

cliffs′man, *n.* மலையேறி, பாறைகளில் ஏறுவதில் திறமை யுடையவர்.

clift, *n.* = cliff.

clift′ed, clift′y, *a.* கொடும் பாறைகளாகப் பிளவுற்ற.

climac′teric, *n.* வாழ்க்கையின் முக்கிய திருப்புக் கட்டம், உடல் மாறுதல் ஏற்படுவதாகக் கருதப்படும் நெருக்கடிக் கண்டம்; *a.* நெருக்கடி நிலைமையான 45-60 வயதுகளுக்கு இடைப்பட்ட தளர்ச்சிமிக்க பருவத்தில் நிகழ்கிற; (தொ.) grand climacteric, மனித வாழ்க்கையில் நெருக்கடியான 63-ஆவது ஆண்டு.

climact′ic, climact′ical, *a.* உணர்ச்சி ஏற்றமுடைய, உணர்ச்சி முகடுசார்ந்த.

cli′matal, climat′ic, climat′ical, *a.* தட்பவெப்பநிலை சார்ந்த, சூழமைதிக்குரிய.

clim′ate, *n.* தட்பவெப்பநிலை; காலப்போக்கு; சமுதாயச் சூழ்நிலை அமைதி; காலச் சூழ்நிலை அமைதி; பண்பமைதி; (தொ.) climate of opinion, கருத்தமைதிநிலை, ஆய்வு நிலை அமைதி.

cli′matise, *v.* = acclimatise.

climatog′raphy, *n.* தட்பவெப்ப நிலைகளின் விரிவு விளக்கம்.

climatol′ogy, *n.* தட்பவெப்ப நிலைநூல், தட்பவெப்பநிலை யின் காரணகாரியத் தொடர்புபற்றிய ஆராய்ச்சித்துறை.

cli′max, *n.* ஏறணி, உணர்ச்சி ஏற்றம், நுகர்பவர் உணர்ச்சி யைப் படிப்படியாக உயர்த்தும் கலைப்பண்புநயம்; உணர்ச்சி முகடு; *v.* உணர்ச்சியைப் படிப்படியாக ஏற்றிச்செல், உச் சிக்குக் கொண்டுசெல்; படிப்படியாக உயர்ந்துசெல்.

climb, *n.* ஏற்றம்; ஏறுதல்; ஏறும் முயற்சி; ஏறவேண்டிய இடம்; *v.* ஏறு; தவழ்ந்தேறு; தாவியேறு; மீதேறு; மேற்செல், உயர்ந்துசெல்; (தொ.) climb down, தோல்வி, நோக்கம் கைவிடுதல்; இறங்கு; பின்வாங்கு; விட்டுக்கொடு; climb up, மேலே செல்.

cli′mber, *n.* ஏறுபவர், ஏறிச்செல்பவர்; சமுதாயத்தில் தன் முன்னேற்றங் குறிக்கொண்டவர்; ஏறிச்செல்வது; தழுவு கொடி; ஏறுவதற்கு வாய்ப்பாகக் காலில் முன்னிரண்டு விரல்களையுடைய பறவை வகை.

climb′ing-iron, *n.* மரத்தின்மீதோ பனிச்சரிவின்மீதோ ஏறும்போது மிதியடியுடன் இணைக்கப்படத்தக்க கம்பிமுள் அமைவு.

clime, *n.* (செய்.) நாடு, தேசம், பல்வேறு தட்பவெப்ப நிலை யுடைய நிலப்பரப்பு.

clina′men, *n.* சாய்வு, மனக்கோட்டம், மனச்சார்பு, இயற்கை விருப்பப்போக்கு.

clinch, *n.* விடாப்பிடி; தீர்முடிவு; முடிவுத் தீர்வு; *v.* ஆணியை அடித்து மடக்கி இறுக்கு; வாதத்துக்குத் தீர்வான முடிவுகொடு, வலியுறுத்தி முடிவுசெய்; (கப்.) தனி முடிச் சால் கயிற்றின் கட்டிறுக்கு; குத்துச்சண்டையில் கை ஓங்க முடியாத அளவில் நெருங்கிப்பிடி.

clin′cher, *n.* பற்றிப்பிடிப்பவர்; வலியுறுத்துபவர்; வலி யுறுத்தும் முடிவு, நிர்முடிவு.

clinch′er-built, *a.* = clinker-built.

clinch′er-work, *n.* கப்பலின் பக்கத்தில் கீழிருந்து ஒன்றன் மீதொன்றான பலகைகளின் மேற்கவிவு அமைவு.

cling, *n.* ஒட்டுதல், சார்பு; *v.* பற்றிக்கொள், விடாது ஒட்டிக் கொள்; பற்றி உறுதியாயிரு; கொள்கை கடைப்பிடித்து நில்; மரம் உட்சுருங்கு.

cling′stone, *n.* சதை கொட்டையுடன் ஒட்டிக்கொள்ளும் இயல்புடைய பழவகை; *a.* கொட்டையுடன் சதை உறுதி யாக ஒட்டிக்கொள்ளப்பெற்ற.

cling′y, *a.* ஒட்டிக்கொள்கிற.

clin′ic, *n.* மருத்துவப் பயிற்சிப் போதனைச்சாலை, நோயாளி கள் படுக்கை அருகிலேயே மருத்துவத்துறை அல்லது அறு வைத் துறைக்குரிய பயிற்சி போதிக்கும் வகுப்பு அல்லது நிலையம்; படுக்கை மருத்துவப் பயிற்சிப்போதனை; தனி மருத்துவமனை, பண்டுவமனை; வெளியுதவி மருத்துவ ஊழி யர்மனை; படுக்கை சார்ந்த நோயாளி; தனித்துறை வல்லு நர் குழுக்கூட்டம்; குறுகியகாலச் செறிபயிற்சித் திட்டம்; *a.* நோய்ப்படுக்கை சார்ந்த.

clin′ical, *a.* நோய்ப்படுக்கைத் தொடர்புடைய; படுக்கை மருத்துவப் பயிற்சியைச் சார்ந்த; (தொ.) clinical baptism, நோய்ப்படுக்கையாளர்க்கு இறப்பின்முன் அளிக்கப்படும் கிறித்தவ சமயத்தீக்கை; clinical convert, நோய்ப்படுக்கை யில் சமயம் மாற்றப்பட்டவர்; clinical lecture, நோயாளிப் படுக்கையருகில் செய்யப்படும் சொற்பொழிவு; clinical medicine, படுக்கை மருத்துவச்சாலையில் கற்பிக்கப்படும் மருத்துவமுறை; clinical surgery, படுக்கை மருத்துவச் சாலையில் கற்பிக்கப்படும் அறுவைமுறை; clinical thermometer, நோயாளிகளின் தட்பவெப்பநிலையை அறியப் பயன் படும் வெப்பமானி.

clink[1], *n.* 'கண்கண்' என்ற ஒலி, உலோகம் அல்லது கண் ணாடியில் கொட்டினால் ஏற்படும் ஒலி; *v.* 'கண்கண்' என்ற ஓசை எழுப்பு; 'கண்கண்' என ஒலி; 'கண்கண்' என்ற ஒலியுடன் இயங்கு.

clink[2], *v.* பற்றிப்பிடி; ஆணியை மடக்கி அடித்து இறுக்கு.

clink′er[1], *n.* 'கண்கண்' என்று ஒலிப்பது; கடும்பதமான செங்கல்; கடுஞ்சூட்டினால் மேற்பரப்பு மணிப்பதமாக்கப்பெற்ற செங்கல்; சிவக்கக் காய்ச்சிய இரும்பைச் சம்மட்டியால் அடிப் பதால் கிடைக்கும் கரிய இரும்பு உயிரகைக் கட்டி; கொல்லு லைச் சாம்பற் கட்டி; எரிமலைக் குழம்பின் கரிய ஓடு; பெருஞ் சூட்டினால் திண்ணிதாக்கப்பெற்ற செங்கல் திரள்; எரிமலைக் குழம்பின் இறுகிய கற்குழம்பின் தொகுதி.

clink′er[2], *n.* போற்றத்தக்க ஒன்று, இனத்திற் சிறந்தது.

clink′er-built, *a.* (கப்.) கீழுள்ள பலகைகள் மேற்கவிந்து கட்டப்பட்டிருக்கும் பலகைகளாலான.

clink′-stone, *n.* 'கண்கண்' என்று ஒலிக்கும் பாறை வகை.

cli′nochlore, *n.* பச்சை நிறக் கனிப்பொருள் வகை.

clinom′eter, *n.* தளச்சாய்வுமானி, சாய்வு அளக்கும் கருவி.

Cli′o[1], *n.* கிரேக்க புராண மரபில் வரலாற்றுக்கலைத்தெய்வம்.

Cli′o[2], *n.* சிறகுபோல் விரிந்த சினைகளால் நீந்துகிற ஓடில்லாத நீர்வாழ் இப்பி வகை.

clip[1], *n.* கத்திரிப்பு, கத்திரியால் வெட்டுதல்; கத்திரித்த துண்டு; கத்திரிக்கப்பட்ட கம்பளி அளவு; உறைக்கும் அடி; சாட்டை வீச்சு; *v.* கத்திரி, கத்திரியால் வெட்டு; துண்டு படுத்து; மயிர் செடி ஆகியவற்றின் நுனி கத்திரித்து ஒழுங்கு செய்; பயன்படுத்திவிட்டதற்கறிகுறியாகப் பயணச் சீட்டு முனை வெட்டிக்கொடு; ஓரத்தைச் சீவு, நுனி குறை, சுருக்கு; தெளிவில்லாது சுருங்கப் பேசு; விரைவாகச் செல்; (தொ.) clip coin, நாணயத்தின் ஓரத்தைச்சீவு, வெட்டு; clip the wings, இறக்கைகளின் இறகுகளை வெட்டிப் பறப்பதைத் தடு; பேராவல் தடு; மேலேறும் வாய்ப்புக்களைக் கெடு.

clip[2], *n.* பற்றுகருவி; பிடிப்பு ஊக்கு; ஆடைமீது செருகி வைக்கும் இணைப்பு ஊக்கு; வெடிமருந்துக் கலங்களின் தொகுதி; *v.* சூழ்; பற்று.

clip′-hook, *n.* இடுக்கி இணைகொக்கி.

clipp′er, *n.* வெட்டுபவர், கத்திரிப்பவர்; கத்திரிக்கும் கருவி; விரைந்தியங்குவது; விரைபரி; வேகக்கப்பல்; மாகடல் கடக்கும் விரைவு விமானம்; முன்புறம் முன் உந்தியும் பாய் மரம் பின்சாய்ந்தும் உள்ள பாய்க்கப்பல் வகை.

clipp′ing, *n.* வெட்டல்; நுனி கத்திரித்தல்; நாணய விளிம்பு வெட்டு; வெட்டப்பட்ட துண்டு; பத்திரிகைத் துணுக்கு; *a.* மிகச் சிறந்த; மிகவிரைவாகச் செல்கிற.

clique, *n.* தனிக்குழு, சிறு குழு, கும்பு ; தன்னலக்குழு, குழுவினுள்ளிருந்துகொண்டு தனி நலங்களுக்காகத் தனிச் செயலாற்றும் சிறு உட்குழு.

cli'quish, *a.* தன்னலக்குழுவைச் சார்ந்த, குறுகிய குழு நல மனப்பான்மையுள்ள.

cli'quism, *n.* சிறுகுழு அமைக்கும் போக்கு, உட்குழுவம், தன்னலக்குழுவின் சார்பு.

clitell'ar, *a.* புழுக்கூட்டிழையினை உருவாக்கும் புழுவின் சுரப்பி வளையம் சார்ந்த.

clitell'um, *n.* புழுக்கூட்டிழையினை உருவாக்கும் புழுவின் சுரப்பி வளைய அமைப்பு ; *pl.* clitell'a.

cli'thral, *a.* = cleithral.

clit'oris, *n.* மகளிர் கந்து.

clit'ter, *v.* கடகடவென்ற உரத்த ஒலி எழுப்பு ; கடகட ஒலி எழுப்புவி.

clitt'er-clatt'er, *n.* வம்பளப்பு, சோம்பேறிப்பேச்சு.

cliv'ers, *n.* = cleavers.

cloa'ca, (ல.) *n.* பறவைகள்-ஊர்வன முதலியவற்றின் முடை நாற்ற உடலிடுக்குப் பகுதி ; தீமை தேங்கிடம், கயமைச் செறிவு ; ***pl. cloa'cae.***

cloa'cal, *n.* முடைசெறிந்த ; கயமையின் செறிவிடம் சார்ந்த, கயமை செறிந்த.

cloak, *n.* தளர் மேலுடுப்பு, தளர்ச்சியான மேலங்கி ; மேற் போர்வை ; மறைக்கும் பொருள் ; உருமாற்றம் ; பொய்க் காரணம், சாக்குப்போக்கு, தலைக்கீடு, போலித்தனம், பகட்டு ; *v.* மேலங்கி அணிவி ; மூடு, மறை ; உரு மாற்று.

cloak'-and-dagg'er, *a.* சூழ்ச்சி சதித்திட்டங்களின் தொடர் புடைய.

cloak'-and-sword', *a.* போருடனும் புத்தார்வ வீரக் காதலுடனும் தொடர்புடைய.

cloak'-room, *n.* மேல் சட்டை-தொப்பி முதலியவற்றை வைப்பதற்கான அறை ; பயண மூட்டைகளை வைப்பதற்கான புகைவண்டி நிலைய அலுவலக அறை.

cloam, *n.* மட்கலம், களிமண் பாண்டம் ; *a.* களிமண்ணுலான.

clobb'er, *n.* தோற்கீறலை மறைக்கச் செம்மான் பயன்படுத்தும் பசைப் பொருள்.

cloche, (பிர.) *n.* மணிவடிவான மகளிர் தொப்பி ; செடிகளைப் பாதுகாக்கும் கண்ணுடி மூடி.

clock [1], *n.* மணிப்பொறி, மணியடிக்கும் கடிகாரம், காலக் கணிப்புப் பொறி ; *v.* மணிப்பொறியினுல் காலக் கணக்கிடு ; பதிவு மணிப்பொறியால் கால நுட்பத்தை அறுதியிடு ; பந்தய வினையை வரையறைக் காலத்தினுள் செய்துமுடி ; (தொ.) clock in, வருகிற நேரத்தைப் பதிவு செய் ; clock off, வேலை விட்ட நேரத்தைப் பதிவு செய் ; clock on, வேலை தொடங்கு நேரத்தைப் பதிவு செய் ; clock out, செல்கிற காலத்தைப் பதிவு செய் ; know what o'clock it is, முழுவிழிப்பாய் இரு ; உள்ள நிலையை அறி ; 'o clock (=of clock),...மணிக்கு, கடிகாரப்படி.....மணிக்கு.

clock [2], *n.* அடைகாக்கும் பெட்டைக்கோழியின் கூவல் ; *v.* அடைகா.

clock [3], *n.* காலுறை விளிம்பில் பட்டினுல் புனையப்படும் துன்னல் ஒப்பனை.

clocked, *a.* காலுறை வகையில் விளிம்புத்துன்னல் ஒப்பனை செய்யப்பட்ட.

clock'er, *n.* அடைகாத்துக்கூவும் பெட்டைக்கோழி.

clock'-golf, *n.* மணிப்பொறி வடிவில் அமைந்த நிலச் சட்டத்தின் மீது ஆடப்படும் குழிப்பந்தாட்ட வகை.

clock'wise, *a.* வலஞ்சுழித்த ; *adv.* கடிகார முள் செல்லும் திசையில், வலஞ்சுழித்து, இடமிருந்து வலம் செல்வதாக.

clock'work, *n.* கடிகாரத்தின் பொறியமைப்பு ; மணிப் பொறி போன்று தானுகவே ஒழுங்காக இயங்கும் இயந்திர அமைப்பு ; *a.* தானுகவே ஒழுங்குபட இயங்குகிற.

clod, *n.* மண்ணுங்கட்டி ; மண்கட்டி, புல்கரண் ; திரள்கட்டி ; நிலம், தரை ; நிலக்கரிச்சுரங்கத்தின் சரிதளங்கு கடுங்களிப் படுகை ; மனித உடல் ; அறிவிலி, மூடன் ; எருதின் சொர சொரப்பான கழுத்துப் பகுதியின் இறைச்சி ; *v.* எறி, வீசு, மண்ணுங்கட்டியால் எறி ; (தொ.) the clod, மண் ; நிலம் ; உயிர்க்கூறில்லாத பருப்பொருள்.

clodd'ish, *a.* மண்ணுங்கட்டி போன்ற, மண்ணின் தன்மை யுடைய.

clodd'y, *a.* மண்ணுங்கட்டி செறிந்த ; மண்ணுலான.

clod'hopper, *n.* நாட்டுப்புறத்தான் ; பாங்கறியாதவன் ; அறிவிலி ; வேளாளன்.

clodhopp'ing, *a.* முரட்டுத்தனமான, நாகரிகமில்லாத, காட்டுத் தன்மையுள்ள.

clod'pate, clod'pole, clod'poll, *n.* பேதை, அறிவிலி.

cloff [1], *n.* பிளவு.

cloff [2], *n.* மொத்த வாணிகத்தில் வாங்குபவர்க்குரிய தள்ளிக் கணிப்புச்சலுகை.

clog, *n.* மரக்கட்டை ; காற்கட்டு ; முட்டுக்கட்டை, தடை, தடங்கல் ; சதுப்புநில மீது நடப்பதற்குரிய கட்டையாலான பெண்டிர் புறமிதியடி ; உலோக விளிம்புடைய கட்டை மிதியடி ; *v.* கட்டைகட்டிவிடு ; முட்டுக்கட்டையிடு ; தடு, தடங்கலிடு ; பளுவினுல் இயக்கம் தடு ; திணித்துவை, திணித்துத் திணறவை ; ஒட்டும் பொருள் மூலம் திக்கு முக்காட்டு ; ஒட்டுப்பொருளால் இயக்கம் தடைபடு ; ஒட்டுப் பொருளால் இயக்கம் கெடப்பெறு ; மிதியடியின் அடியில் கட்டையிடு.

clog'-dance, *n.* கட்டை மிதியடியின் தானத்துக்கியைய ஆடும் நடனவகை.

clogged, *a.* தடங்கலுக்கு இடமான, தடுப்புக்கு ஆளான.

clogg'er, *n.* புறமிதியடிக்கட்டை செய்பவர்.

clogg'y, *a.* கட்டிகள் நிரம்பிய, முடிச்சுக்களுள்ள ; ஒட்டிக் கொள்கிற.

cloi'son, *n.* இழைப்பட்டைகளைப் பிரித்துக் காட்டும் இடையீடு.

cloisonnag'e, *n.* பட்டையிட்ட மெருகு வேலை ; மெருகுப் பட்டை முறை.

cloisonne enamel, (பிர.) *n.* உலோக வரைக்கட்டிடங்களில் இடப்படும் பட்டை மெருகுவேலை.

clois'ter, *n.* துறவுக்கன்னியர் மாடம், துறவுமடம் ; துறவு மடத்தின் பாதுகாப்பான மூடுபாதை ; சமயவாழ்வுக்கான காப்பிடம் ; ஒதுக்குப்புறமான இடம் ; வளைவு, சுற்றி வேயப் பட்ட இடம் ; துறவு வாழ்க்கை ; *v.* மடத்தில் அடைத்துவை ; மதிலகத்தே கட்டுப்படுத்தி வை.

clois'tered, *a.* மடத்தில் வாழ்கின்ற.

clois'tral, *a.* மடத்தைச் சேர்ந்த, மடத்தோடு தொடர்புடைய ; ஒதுக்கமான.

cloke, *n.* = cloak.

clomb, *v.* climb என்பதன் முற்கால இறந்தகால முடிவெச்ச வடிவம்.

clon'al, *a.* பால்படு பிறப்புடைய ஒரே விதையிலிருந்து பால் படாது பிறந்த செடித்தொகுதி சார்ந்த.

clone, *n.* (உயி.) பால்படப்பிறந்த ஒரே விதையிலிருந்து பால்படாது பிறந்த செடிகளின் முழுத்தொகுதி.

clon'us, *n.* மாறிமாறிச் சுருக்கமும் தளர்வுமாக வரும் தசைத் துடிப்பு.

cloop, *n.* தக்கையை இழுத்துத் திறப்பதால் உண்டாகும் ஓசை ; *v.* தக்கை திறப்பதால் ஏற்படும் ஓசை உண்டுபண்ணு.

clop, *n.* சடார் ஒலி, குதிரைக்குளம்படி ஓசை; *v.* சடாரொலியுடன் செல்; சடார் ஒலியுடன் செலுத்து; *adv.* சடாரொலியுடன்.

close[1], *n.* அடைப்பு, வளவு, தனி எல்லை; வேலியிடப்பட்ட விளைநிலம்; குறுகிய தெரு; தலைமைத் திருக்கோயிலின் சுற்றெல்லை; பள்ளிக்கூட விளையாட்டு வெளி; *a.* அடைக்கப்பட்ட; திறப்பில்லாத; காற்று வெளிச்சமில்லாத; திக்கு முக்காடுகிற; குறுகிய; கடுஞ்சிக்கனமான; அண்மையான; அணிமைக்காலத்துக்குரிய; நெருங்கிய; அடக்கமான, இறுக்கமான; நெருக்கமான; மறைக்கப்பட்ட, தனிமறைவான; புதைமறைவான; ஒதுங்கிய; (ஒலி.) உயிர் ஒலிகளில் உதடுகள் குவித்து ஒலிக்கப்படுவதான; *adv.* நெருக்கமாக, நெருங்கி; இறுக்கமாக; அண்மையில்; அடர்த்தியாக; மறைவாக; (தொ.) close corporation, உறுப்பினர் இடங்களை வெளியார் நிலையிடின்றி நிறைவு செய்துகொள்ளும் கூட்டுக்கழகம்; close season, close time, சட்டப்படி பறவைகளையும் மீன்களையும் பிடிப்பது தடை செய்யப்பட்ட காலம்; close tennis, வரிப்பந்தாட்டம்.

close[2], *n.* முடிவு; முடிவுநேரம்; முடியும் வகை; நிறுத்தம்; இடை நிறுத்தம்; தளர் சந்தம்; இணைப்பிடம், சந்திப்பிடம்; நெருங்கிய போராட்டம்: *v.* மூடு, அடை; வேலைமுற்றுவி, முடி, முடிவுசெய்; சூழ், அடைத்துவை; வேலை நிறுத்திவை; நெருக்கு; நெருங்கு; நெருக்கிப்போட்டியிடு; எல்லையாயிரு; அணுக்கமாகு; ஆர்வ இசைவு தெரிவி; (தொ.) close a bargain, ஒப்பந்தம் முற்றுவி, உடன்பாட்டுக்கு வந்தமை; close down, வேலைநிறுத்து, செயலற்று நில்; கடையை மூடு; close in upon, சூழ்ந்து நெருக்கு; close with, இணங்கு, பற்று, இறுக்கிப்பிடி.

close'-ban'ded, *a.* நெருக்கமாக இணைக்கப்பட்ட.

close'-barred, *a.* இறுக்கமாக மூடப்பட்ட.

close'-bod'ied, *a.* உடலோடு பொருந்திய, உடம்புடன் ஒட்டினாற்போல.

closed, *a.* அடைத்த; முடிவுற்ற; கட்டுப்படுத்தப்பட்ட; தடை செய்யப்பட்ட; (தொ.) closed circuit, வரையறுக்கப்பட்ட பார்வையாளர்களுக்கு மட்டும் உரிய தொலைக்காட்சி முறை; closed shop, பொதுவான தொழிற்சங்க உறுப்பினர்கள் மட்டும் வேலைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனம்; தனித் தொழிற்சங்க உறுப்பினர் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் நிலையம்; நிறுவனங்களில் தொழிற் சங்க உறுப்பினர் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் கட்டுப்பாடு; தொழிற்சங்கங்களால் ஒதுக்கிவைக்கப்பட்ட நிறுவனம்; closed syllable, சொல்லில் மெய்யெழுத்தை இறுதியாகக் கொண்ட அசை; with closed doors, தனியடக்கமான முறையில், வெளியார் விலக்கப்பட்ட நிலையில்.

close'-fist'ed, close'-hand'ed, *a.* கஞ்சத்தனமான, பேராசையுள்ள.

close'-grained, *a.* நெருக்கமாக இணைக்கப்பட்ட; அடர்த்தியான.

close'-hauled, *a.* காற்றுவாட்டத்தில் கப்பல் புறப்பட ஆயத்தமாயுள்ள.

close'ly, *adv.* கட்டுப்பாடாக; கவனமாக, உன்னிப்பாக; அணுக்கமுடன்; மறைவடக்கமாக.

close'ness, *n.* நெருக்கம்; அடர்த்தி; ஒடுக்கம்; தனி ஒதுக்கம், தொடர்பின்மை; மறைவடக்கம்; அணிமை.

clos'er, *n.* முடிவு செய்பவர்; முடிவாக்கும் பொருள்; செங்கல் அமைப்பின் முடிவை நிறைவு செய்யும் செங்கல் பகுதி.

close'-reef'ed, *a.* கப்பற்பாயின் மடிப்புக்கயிறுகள் ஒருங்கே உள்வாங்கப்பட்ட.

close'-stool, *n.* பெட்டியில் அடைக்கப்பட்ட கழிப்புக்கலம்.

clos'et, *n.* சிறு தனியறை; ஒதுக்கிடம்; அறையில் தனி அடைப்பிடம்; மறைவிடம்; கழிப்பிடம்; அரசனுடைய தனிப் பேட்டி அறை; தனி வழிபாட்டு அறை; *v.* தனி அறையில் இட்டடை; தனி அறைக்கு இட்டுச்செல்; மறை, மூடு.

clos'et-drama, clos'et-play, *n.* அறையிலிருந்து வாசிப்பதற்குரிய நாடகம்.

clos'et-strat'egist, *n.* போர்முறை வாய்க்கோட்பாட்டாளர்.

close'-up, *n.* மிக அருகிலிருந்து எடுக்கப்பட்ட முனைப்புருவ நிழற்படம் அல்லது திரைப்படம்; நுணுகிய விளக்க ஆராய்ச்சி.

clos'ing, *n.* சூழ்வு; மூடுதல், முடிவாதல்; உடன்பாடு.

clo'sure, *n.* முடிவுசெய்தல்; மூடுதல், முடிவு; சட்டசபை வாதத்தை அதனுடைய தீர்மானத்தின்படி நிறுத்திவிடுதல், வாத நிறுத்தத் தீர்மானம்; *v.* வாத நிறுத்தத் தீர்மானத்தைச் செயற்படுத்து.

clot, *n.* உறைகுருதி; உறைகட்டி; பேதை, அறிவிலி; *v.* குருதி உறை; கெட்டிப்படு; (தொ.) clotted cream, கட்டிப்பாலாடை, பாலாடைக் கட்டியால் செய்யும் தின் பண்டம்.

cloth, *n.* துணி, துகில்; நெய்யப்பட்ட துண்டு; அழுத்தக் கம்பளி அறுவை; துணிச்சீட்டி; ஆடை, உடை; பணியுடை; சமயநிலையுடை; மேசை விரிப்புத் துணி; கப்பல்பாய் இரட்டு; நாடக அரங்கின் திரைச்சீலை; (தொ.) cloth of gold, பொன்னுடை, பொன்னிழையாடை, கசவு, சரிகை; cloth of state, மேற்கட்டி, விதானம்; lay the cloth, உணவுக்காக மேசையை ஒழுங்கு செய்; the cloth, திருக்கோயில் குருத்துவத் தொழில்; திருக்கோயில் குருக்களின் தொகுதி.

clothe, *v.* ஆடை அணி; ஆடையால் மூடு; மூடு, போர்த்து; (தொ.) clothe in words, சொற்களால் தெரிவி; clothe on, clothe upon, ஆடை உடுத்து; பதவியில் அமர்த்து; மூடு.

clothes, *n. pl.* ஆடைகள்; போர்வைகள்; படுக்கை விரிப்புக்கள்.

clothes'-basket, *n.* துவைக்கும் துணிகளைக் கொண்டு செல்வதற்குரிய கூடை.

clothes'-brush, *n.* ஆடை துடைப்புத்தூரிகை.

clothes'-horse, *n.* துணி உலர்த்தும் சட்டம்.

clothes'-line, *n.* துணி உலர்த்தும் கொடி.

clothes'-moth, *n.* கம்பளி ஆடைகளை அரித்துண்ணும் பூச்சிவகை.

clothes'-peg, clothes'-pin, *n.* துணிக்கொக்கி, கொடியில் துணியைப் பிணித்துப் பிடிக்கும் கொளுவி.

clothes'-pole, *n.* துணி தொங்கவிடும் கொடி தாங்கும் கம்பு.

clothes'-press, *n.* துணி அழுத்து பொறி; துணிகளின் மடிப்புக்கலையாமல் வைத்திருக்கும் பெட்டி.

clothes'-prop, *n.* துணி தொங்கவிடும் கொடிதாங்கி.

cloth'-hall, *n.* துணி விற்பனைக்களம், அங்காடி.

cloth'ier, *n.* துணி செய்பவர்; ஆடை செய்பவர்; துணி விற்பவர்.

clo'thing, *n.* ஆடை, உடை; போர்வை, மூடியிருப்பது; புறத்தோல், புறப்பொதிவு.

cloth'-yard, *n.* இருமுழமுடைய துணிக்கோல் அளவை; (தொ.) cloth-yard shaft, இருமுழ நீளமுள்ள அம்பு.

clott'er, *v.* உறைந்துபோ, கெட்டியாகு, தோய்ந்துபோ.

clott'iness, clott'ing, *n.* உறைதல், தோய்ந்துபோதல், தோய்தல், கெட்டியாகுதல்.

clou, (பிர.) *n.* கவர்ச்சிமிக்க மையக்கூறு, உயிர்ச்சுவைக்கூறு, கருப்பொருள் குறிப்பு.

cloud, *n.* முகில்; பனிப்படலம்; ஆவித்திரள்; புகைமேகம்; நிலையின்றி விரைந்தோடுகிற பொருள்; ஆவி, திட்பமற்ற பொருள்; புகை, ஒளி மங்கலாக்கும் பொருள்; கறை; மங்கலான தன்மை; புழுதிப்படலம்; திவலைத் தொகுதி; நுண்ணுயிர்த்திரள்; பின்விளைவு அறிவிக்கக்கூடிய பொருள்; பறவைக்கூட்டம்; படைத்திரள்; நிழல்; கருநிறம்; மெல்லிய கம்பளியாலான கழுத்துக்குட்டை; மறைப்பு, திரை;

தெளிவற்றநிலை ; மனவருத்தமான நிலைமை ; துன்பம் ; ஐயம்; சிடுசிடுப்பான அல்லது சோர்வு மிகுந்த தோற்றம் ; ஏ. வானம் கவி, மூடாக்கிடு ; ஒளிமறை, இருளடையச்செய் ; நற்பெயரைக் கெடு ; கறைப்படுத்து, களங்கமாக்கு ; ஒளி மங்கலாக்கு ; இருளாகு, மங்கலாகு ; தெளிவற்ற நிறப் படலங்களால் பலதிறப்படுத்து ; துயருறு, சோர்வுறு ; (தொ.) in the clouds, மறை பொருளான; அறிவு கடந்த; கற்பனைத் தன்மையுடைய ; under a cloud, துயருட்பட்ட ; பழிப்புக்காட்பட்ட, ஐயுறவுக்காளான ; நல்லாதரவு இழந்த நிலையுடைய.

cloud'-built, *a.* மெய்ந்நிலையற்ற.

cloud'-burst, *n.* கடுமையான இடிமின்னல் மழை ; சிறுபகுதி மீது பெய்யும் பெருமழை.

cloud'-capped, *a.* முகில் சூழ்ந்த உச்சியை உடைய.

cloud'-castle, *n.* பகற்கனவு, மனக்கோட்டை ; ஆர்வக் கற்பனை நாடு.

cloud'-chamber, *n.* உறை ஆவி நீர்த்திவலைகளின் வாயிலாக மின்துகளின் நிலையும் போக்கும் தெரிவிக்கும் அமைவு.

cloud'-compeller, *n.* முகிலை ஆளும் தெய்வம், ஜியூஸ் (Zeus) என்ற கிரேக்கப் பெருந்தெய்வம்.

cloud'-compell'ing, *a.* முகிலை ஆட்கொள்ளுகிற.

cloud'-drift, *n.* இயங்குநிலையிலுள்ள முகில்.

cloud'ed, *a.* மேகங்களால் மூடப்பட்ட ; இருளடைந்த ; தெளிவில்லாத ; மங்கலான ; புள்ளிகளால் பலதிறப்படுத்தப் பட்ட.

cloud'ing, *n.* மங்கலான தோற்றம்; *a.* மங்கலாகிக்கொண்டு வருகின்ற.

cloud'less, *a.* மேகமில்லாத, தெளிவான.

cloud'let, *n.* சிறுமுகில்.

cloud'rack, *n.* முகில் அடுக்கு.

cloud'-scape, *n.* முகில் அணி வரிசைக்காட்சி, முகிலணி ஓவியம்.

cloud'-topped, *a.* முகிலால் மூடப்பட்ட ; மேகமளாவிய.

cloud'y, *a.* முகில் மூடிய ; முகிலார்ந்த ; மங்கலான, விளக்க மற்ற ; புகைபோன்ற ; இருளார்ந்த ; கரும்புள்ளிகளுடைய.

clough, *n.* மலைவிடர், ஆழ்ந்த செங்குத்தான பள்ளத்தாக்கு, ஆறுசெல்லும் மலைப்பிளவு.

clout, *n.* துணிப்பத்தை, ஒட்டிட்டுத் தைப்பதற்குகந்த துணிக் கண்டம் ; ஒட்டுத்துண்டு ; கந்தை ; செருப்படியில் ஆணி வில்லை ; வில்லாளர் எய்குறி ; வெற்றிகரமான இலக்கெய்வு, குறிதாக்கு ; அடி, கைத்தாக்குதல், குட்டுதல் ; ஏ. துணியால் ஒட்டுப்போடு ; செருப்புக்கு வில்லையாணியால் பாதுகாப்புச் செய் ; துணியால் மூடு ; கையால் அடி, குட்டு.

clout'erly, *a.* கோமாளித்தனமான.

clout'-nail, *n.* செருப்பின் வில்லையாணி.

clout'-shoe, *n.* வில்லையாணி பதித்த செருப்பு ; கோமாளி.

clove[1], ஏ. **cleave**[1] என்பதன் இறந்தகால வடிவங்களுள் ஒன்று.

clove[2], *n.* கிராம்பு, இலவங்கம்.

clove[3], *n.* வெள்ளைப்பூண்டு வகையின் கிளைக்கதுப்பு.

clove[4], *n.* கம்பளி-பாலடை போன்றவற்றின் பழைய நிறுத்த ளவைக்கூறு (7 முதல் 8 கல் எடைவரை யுடையது.)

clove'-gill'yflower, *n.* இலவங்க மணமுள்ள செவ்வண்ண மலர்வகை.

clove hitch, *n.* (கப்.) கயிறு அல்லது பொருளுடன் கயிற்றை இறுகக் கட்டுவதற்குரிய முடி வகைகளுள் ஒன்று.

clove hook, *n.* துணைக்கொக்கி, பக்கக்கொளுவி.

clov'en[1], ஏ. **cleave**[1] என்பதன் முடிவெச்ச வடிவங்களுள் ஒன்று.

clov'en[2], *a.* பிளந்துள்ள, பிளவுள்ள, பிரிந்துள்ள ; (தொ.) the cloven hoof, தீயவழி உய்க்கிற சைத்தானுடைய செயல்.

clov'en-foot'ed, clov'en-hoofed, *a.* பிளவுள்ள குளம் புடைய.

clove'-pink, *n.* = clove-gillyflower.

clov'er, *n.* கால்நடைத் தீவனமாகப் பயன்படும் மணப்புல் வகை ; (தொ.) be in clover, live in clover, இன்ப வாழ்வில் இரு, சொகுசாக வாழ், மிக்க செல்வத்துடன் வாழ்.

clov'ered, *a.* கால்நடை உணவுக்குரிய மணப்புல் வகை நிரம்பிய.

clov'erleaf, *n.* பாதையுடன் பாதை நேரே குறுக்கிடாமல் ஒழுங்கு செய்யப்படுகிற போக்குவரத்துப் பாதை அமைப்பு.

clov'ery, *a.* கால்நடைத் தீவன மணப்புல் வகை செறிந்த.

clown, *n.* நாட்டுப்புறத்தான், காட்டான் ; பண்பாடற்றவன்; கோமாளி ; ஏ. கோமாளியாக நடி.

clown'ery, *n.* கோமாளிக்கூத்து.

clown'ish, *a.* கோமாளிக்குரிய ; கோமாளி போன்ற ; கோமாளித்தனமான.

clox, *n.* = clock[3].

cloy, ஏ. உவட்டு, நிறைவு காரணமாக வெறுப்பூட்டு ; சலிப் பூட்டு ; அருவருப்படையச் செய்; அளவு மீறி உண் ; கொம்பி னால் குத்து ; பீரங்கியை ஆணி அறைந்து செயலற வை ; துளையை அடைத்துவிடு.

cloy'ing, cloy'some, *a.* தெவிட்டுகிற, தெவிட்டும் தன்மை யுள்ள.

club, *n.* செண்டு, கைத்தண்டு ; குண்டாந்தடி, முனைபருத் துள்ள குறுந்தடி ; குழிப்பந்தாட்ட மட்டை ; (தாவ.) குமி முடியும் பருத்த முகடும் உள்ள குலை, கொத்து ; ஆட்டச் சீட்டின் நால் வகைகளில் ஒன்று, கரிய முக்கவரிலைக்குறி யுடைய சீட்டு ; பொதுநோக்குள்ள உறுப்பினர்களடங்கிய கூட்டுக்குழு, தனிக்குழு, கழகம் ; கூட்டு, கும்பல் ; கழக மனை ; ஏ. தடியாலடி ; துப்பாக்கியடியினால் மோது ; குறுந் தடியாகப் பயன்படுத்து ; ஒருங்கிணை, பொதுநோக்குடன் கூடு ; பொதுவாகச் சேர்ந்து செலவினம் தாங்கு ; (படை.) சிதறடி, குழப்பத்துக்குள்ளாக்கு.

club'able, clubb'able, *a.* பழகுந்தன்மையுள்ள, சமூகப் பாங்குடைய

clubbed, *a.* குறுந்தடியைப்போல் முனைபருத்துள்ள.

clubb'ing, *n.* அடித்தல் ; ஒன்று கூட்டுதல் ; பூச்சிக்கடி யினால் விரல் நுனி பருத்துப்போதல் ; நோய் நுண்மச் செய லால் முட்டைக் கோசுத்தண்டுகள் வீங்குதல்.

clubb'ish, *a.* கழகங்களில் ஊடாட்டம் மிக்க.

clubb'ism, *n.* கழகமுறைமை.

clubb'ist, *n.* கழக உறுப்பினர், கழகத்தொடர்புடையவர்.

club'-face, *n.* குழிப்பந்தாட்ட மட்டையின் முகப்புத்தோற்றம்.

club'-foot, *n.* கோணக்கால், தொட்டிக்கால்.

club'haul, ஏ. (கப்.) காற்றோட்டத்துக்கு எதிர்ப்புறமாயுள்ள நங்கூரத்தைத் தாழ்த்திக் கப்பலை திசைமாறிச் செலுத்து.

club'-head, *n.* குழிப்பந்தாட்டக்கோலின் தலைப்பு.

club'-head'ed, *a.* மட்டியான.

club'-house, *n.* கழகமனை ; கூட்டுப் பொழுதுபோக்கு மனை.

club'-law, *n.* வல்லவர் ஆட்சிமுறை.

club'-line, *n.* பத்தியின் முடிவிலுள்ள குறுகிய கோடு.

club'-man, *n.* தண்டேந்தி, குறுந்தடி வைத்திருப்பவர் ; கழக உறுப்பினர் ; கழகங்களுக்கு அடிக்கடி போகிறவர் ; நகர வாழ்வுப் பழக்கமுடையவர்.

club'-master, *n.* கழக நடைமுறை மேலாளர், கழகத்திற்கான தட்டு முட்டுப் பொருள்கள் சேகரிப்பவர்.

clubs, *n.* = clumps.

cluck, *n.* அடைகாக்கும் கோழியின் கொக்கரிப்பு; பெட்டைக் கோழி தன் குஞ்சுகளை அழைக்கும்போது மிடற்றினின்றும் எழுப்பும் ஒலி; *v.* கொக்கரி.

clue, *n.* மறைசெய்தியை விளக்கும் குறிப்பு, மறைதிறவு; வழிகாட்டும் குறிப்பு, தடம்; கதைத் தொடர்பு; எண்ணத் தொடர்பு.

clue'less, *a.* தடம் அற்ற; துணைக்குறிப்பற்ற.

clum'ber, *n.* வேட்டை நாய் வகை.

clump, *n.* மரங்களின் அல்லது புதர்ச்செடிகளின் செறிவு, கும்பு; கொத்து; கட்டி; செருப்பில் காலடியுடனிணைந்த மேலடைத் தோல்; பலத்த அடி; *v.* நிலம் அதிர நட; ஒன்றுகக்குவி; கெட்டியாகு; கும்பில்வை; அடி.

clumps, *n.* விளுவிடை விளையாட்டு வகை.

clump'-sole, *n.* செருப்பில் ஆணியடித்துச் சேர்க்கப்படும் திண்ணிதான அடித்தோல்.

clump'y, *a.* உருவமற்ற; கட்டிகள் நிறைந்த; மொத்தையான; பளுவான.

clum'sy, *a.* அருவருப்பான; உருவமற்ற; ஏடாகோடமான, அலங்கோலமான; அமைப்புக்கேடான; செயல் நயமற்ற, திறமை நயமில்லாத.

clunch, *n.* உறுதிவாய்ந்த களிமண்; உட்செதுக்கு வேலைக்குப் பயன்படும் வெண் சுண்ணக்கல் வகை.

clung, *v.* **cling** என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவம்.

clu'peoid, *n.* கடல்வாழ் மீன் வகை.

clus'ter, *n.* கொத்து, குலை; கூட்டம்; தொகுதி; *v.* கொத்தாகச் செய்; கொத்தாகத்திரள்; கொத்தாக வளர்; கொத்துகளால் நிரப்பு.

clus'ter-cup, *n.* காளான் குடை வகை.

clus'tered, *a.* இனமாகச் சேர்க்கப்பட்ட; திரண்ட; கொத்தான; (தொ.) clustered column, (க-க.) தூண்கோவை, தூண் வரிசைக் கட்டமைவு.

clutch [1], *n.* இறுக்கமான பிடிப்பு; இரக்கமற்றபிடி; வளைந்த கூர்நகம்; சட்டெனப் பறித்தல்; பாரந்தூக்கியின் பற்று உறுப்பு; (இய.) இயங்குறுப்புக்களை ஓடவும் நிறுத்தவும் செய்யும் பொறியமைப்பு; *v.* ஆவலுடன் பற்று, இறுகப் பிடி; பற்றிப்பிடுங்கு, பற்றிக் கௌவு; சட்டெனப் பறிப்பது போல் கைகுவி.

clutch [2], *n.* ஓரீட்டுமுட்டைகளின் தொகுதி; ஓரீட்டுக்குஞ்சுகளின் தொகுதி.

clutch'es, *n. pl.* இறுகப்பற்றும் கைகள்; கொடும்பிடி.

clutt'er, *n.* ஆரவாரம், இரைச்சல்; கம்பலை, கலவரம்; அமைதிக்கேடு; குழம்பிய திரள்; தாறுமாறான துப்புரவற்ற நிலை; குப்பைக்கூளம்; *v.* ஆரவாரமாகத் திரி; கும்புகூடு; குப்பையாக்கு.

Clydes'dale, *n.* கடுஞ்சுமை இழுக்கவல்ல குதிரை வகை; *a.* பெருஞ்சுமை இழுக்கும் குதிரை இனத்துக்குரிய.

clyp'eal, *a.* பூச்சித்தலையின் கேடயம்போன்ற பகுதிக்குரிய.

clyp'eate, **clyp'eiform**, *a.* கேடய வடிவமுள்ள.

clyp'eus, *n.* பூச்சித்தலையின் கேடயம்போன்ற பகுதி.

clys'ter, *n.* (மரு.) குடல் கழுவு நீர்மம்; *v.* எருவாய்வழி நீர்மம் செலுத்திக் குடல் கழுவு.

cni'da, *n.* (வில.) இழுது மீன் முதலிய உயிரினங்களின் கொடுக்கு; *pl.* cni'dae.

coac'ervate, *a.* குவிக்கப்பட்ட, திரட்டப்பட்ட.; *v.* குவி, கூட்டு, சேர்.

comb [1], *n.* சீப்பு; சீப்பு போன்ற கருவி; இழைமங்களைத் தூய்புரவுப்படுத்தும் பல்வரிசையுள்ள வார்கருவி; பறவைகளின் கொண்டை; அலைஉச்சி; கூரை அல்லது மலையுச்சி; தேன்கூடு, தேனடை; *v.* சீப்பினால் ஒழுங்குசெய்; துப்புரவாக்கு; சீவு; வாரு, குதிரையைத் தேய்; முழுதும் தேடிப்பார்; கடுமையாக அலசிப்பார்; தேடி ஒழி; அலசித்திரட்டு; சுருண்டு திரள்; வெண்ணுரையோடு சிதறு.

comb [2], *n.* காடார்ந்த ஆழ்ந்த சிறு பள்ளத்தாக்கு; குன்றின் சரிவிலுள்ள குடைவு.

comb [3], *n.* முகத்தலளவைக்கூறு (நான்கு மரக்கால்).

com'bat, *n.* சண்டை, போர் ; *v.* எதிர் ; போரிடு ; எதிர்த்துப்போராடு ; மல்லாடு ; போட்டியிடு ; எதிர்த்துநில் ; வாதிடு ; சொற்போர் செய் ; உழன்று முயற்சிசெய்.

com'batable, *a.* போரிடும் இயல்புள்ள.

com'batant, *n.* பொருநர், போரிடுபவர், சண்டையில் ஈடுபடுபவர் ; *a.* போரிடுகிற ; சண்டையில் ஈடுபடுகிற, போர்நாட்டமுள்ள.

com'bative, *a.* எதிர்ப்புச் செய்கிற ; சண்டைக்குணமுள்ள, போர் மனப்பான்மையுடைய.

combe, *n.* = **comb** [2].

com'ber [1], *n.* கம்பளி சிக்கெடுப்பவர் ; தூய்மையாக்குபவர், வார் கருவி ; சுருள்பேரலை, நுரையுடைய நீண்ட அலை.

com'ber [2], *a.* கடல் மீன் வகை ; முள்மீன் இனம்.

combina'tion, *n.* இணைதல், ஒன்றுசேர்தல் ; செயற் கூட்டுறவு, தனிப்பொருள்களின் இணைப்பு ; பக்கவண்டி, இணைப்புள்ள இயங்கு மிதிப்பொறி வண்டி ; பொதுநோக்கிற் காக ஒன்றுசேர்ந்த குழு ; சேர்மானம்.

combina'tion-room, *n.* கேம்பிரிட்ஜ் (Cambridge) பல் கலைக்கழக உறுப்பினர்களின் பொது அறை.

combina'tions, *n. pl.* கையில்லாத சட்டையும் குறுங்கால் சட்டையும் இணைந்த முழு உள்ளாடைத்தொகுதி ; (கண.) சேர் வகைகள், குறிப்பிட்ட உருக்கள் குறிப்பிட்ட தொகையடுக்காக இணையும் வகைப்படிவங்கள்.

com'bine [1], *n.* வணிகச்சங்களின் கூட்டு நிறுவனம் ; பொறுப் பாட்சிக் குழு ; அறுவடைக் கருவியோடு போரடிக்கும் கருவியும் இணைந்த கூட்டுப்பொறி.

combine' [2], *v.* ஒருங்கிணை, ஒன்றுசேர் ; திரள், ஒன்றுகூடு ; நெருங்கித் தொடர்புகொள் ; ஒத்துழை ; (வேதி.) இணைத் துருவாக்கு ; இணைந்து உருவாகு.

combi'ngs, *n. pl.* சீவப்பட்ட மயிர்க்கூளம், வாரப்பட்ட இழைக்கூளம்.

comb'-out', *n.* தேடிப்பார்த்துத் தேவையற்றதை நீக்கும் முறை ; இராணுவப் பணிக்குத் தகுதியுடையவர்களைத் தேடிப் பிடிக்கும் முறை.

combur'gess, *n.* தன்னுரிமை பெற்ற நகரத்தின் உடன் உரிமைக் குடிமகன்.

combust', *n.* சுட்டெரிக்கப்பட்ட பொருள் ; *a.* கதிரவனால் எரிக்கப்பட்ட ; கோள்கள் வகையில் கதிரவனிடமிருந்து வரும் கடுவெப்பு எல்லைக்கு (8½ பாகை அளவுக்கு) உட்பட்ட.

combustibil'ity, *n.* எரியும் தன்மை.

combus'tible, *n.* தீப்பற்றி எரியக்கூடியபொருள் ; *a.* தீப் பற்றி எரியக்கூடிய ; எளிதில் தூண்டிவிடப்படத்தக்க.

combus'tion, *n.* எரிதல் ; தீயின் எரிப்பாற்றல் ; உள்ளெரி தல் ; கருகுதல் ; உயிரகக் கலப்பால் மாறுபடல் ; குமுறல் ; குழப்பம் ; (தொ.) spontaneous combustion, தன்னிடத்தி லேயே எழும் வெப்பத்தினால் தீப்பற்றிக்கொள்ளும் இயல்பு.

combust'ive, *a.* எளிதில் தீப்பற்றும் தன்மையுள்ள, தீப் பற்றத்தக்க.

come [1], *v.* வா ; அணுகு ; அணுகிவா ; நிலைக்கு வந்துசேர் ; வெளிப்படு ; வந்தடை ; கொணரப்பெறு ; வந்து விழு ; வந்திறங்கு ; வந்துறு ; நிகழ், நேரிடு ; ஆகு ; உண்டாகு ; மொத்தமாகு ; எட்டு, அடை ; ஆகத்தொடங்கு ; உருவாகு ; செயலாற்று ; (தொ.) as they come, இயல்வரவு முறைப்படி, வருந்தோறும் அம்முறையிலேயே ; come about, நிகழ், நேரிடு ; come and go, ஊசலாட்டம், அலைவு ; come at, எட்டு ; அடை ; சேர் ; come back, திரும்பிவா, மீண்டும் மக்கட் செல்வாக்கு பெறு ; come by, நெருங்கு ; கடந்து செல் ; அடை, பெறு ; come down, இறங்கி வா ; இழிநிலை அடை ; come down upon, கடுமையான கண்டனத்துக்கு ஆட்படுத்து, கண்டிப்பாக நடத்து ; come down with, பணம் கட்டிவை, உடனடியாகக் கொடு ; come high, மிகுச் செலவாகு, பெருவிலை பெறு ; come home, தன் வீடு திரும்பு, தன் இடத்துக்குவா ; கருத்தில் அல்லது உணர்ச்சியில் நன்கு பதிவுறு ; (கப்.) நங்கூரத்தின் வகையில் அடிநிலத்திலிருந்து எளிதாக மேலெழு ; come in, நுழை ; பணி, இணங்கு ; விட்டுக்கொடு ; come in for, தன் பங்காகக் கொள்ளும் தகுதி பெறு ; தற்செயலாகப் பெறு ; come into, மரபு வழியாகப் பெறு, மரபுரிமையாளனாகு ; come low, குறைவிலை பெறு ; குறைந்து செலவாகு ; come of, மரபில் வா ; மரபுக்கு உரிமை ஆகு ; come of age, உரிய அகவை பெறு, சட்ட நிறைவு வயதடை ; come off, வந்துவிடு ; கழன்றுவிடு ; வெளிவா, விட்டு வெளியேறு ; விடுவிக்கப்பெறு ; நிறைவெய்து ; come on, முன்னேறு ; வந்து தொடங்கு ; வந்து தெரிவி ; எதிர், தாக்கு, எதிர்த்துப்பார் ; come out, வெளிவா, வெளியிடப்பெறு ; விளைவாகு ; தெரியவரலாகு ; சமுதாயத் தொடர்புகொள் ; வெற்றியுடன் மீளு ; வெளிப்படு, காட்சிப் படு ; தோற்றமளி ; வெளியேறு ; come out with, சொல்லு ; உரை ; கூவு ; உரத்துப்பேசு ; come over, நிகழ் ; வந்து நேர் ; மனத்தில் தோன்று ; come round, சுற்றுப் பாதையில் வா ; உலாவா, சுற்றிப்பார்க்கச்செல் ; இயல்பாக நிகழ் ; திரும்பச் செய் ; திரும்பு ; மனமாறிச் சாதகமாகு ; மயக்கந்தெளிவுறு ; come short, தவறு ; தோல்வியடை ; தகுதி குறைபடு ; come short of, பெறமுடியாமல் தவறு, சிறிது குறையால் உரிமையிழ ; come to, பெறு ; தொகையாகு ; திரும்பவும் தெளிநிலை பெறு ; come to grief, கடுந்துன்பத்தை அடை ; come to oneself, இயல்பான தன்னிலைக்குத் திரும்பு ; come to pass, நிகழ், நடைபெறு ; come to stay, நிலையாகிவிடு ; நிலையாயிரு ; come true, மெய்யாகு ; நிறைவேறு ; come under, உட்படு, பாற்படு, சேர்க்கப்படு ; come up, காட்சியளி, தோன்று ; come upon, தாக்கு ; பாதிக்கவை, மீது பொறுப்பு ஏற்று ; கண்ணுறு, சந்தி ; come up with, தொடர்ந்து சென்று எட்டு, உடனெத்துச் சென்றுசேர் ; to come, வருகிற, வருங்காலத்துக்குரிய.

come [2], *int.* ஊக்குரை அல்லது எதிர்ப்பு அல்லது கடிதல் அல்லது தடை குறிக்கும் சொல்லசை.

come'-and-go', *n.* போக்குவரவு.

come-at'-able, *a.* கிட்டக்கூடிய ; அணுகக்கூடிய.

come'-back, *n.* திரும்பிவருதல் ; மீட்டுயிர்ப்பு ; புதுப்பிப்பு ; எதிருரை, தெறியுரை.

co-medd'le, *v.* கல, கூடியுறவாடு.

comed'ian, *n.* இன்பஇயல் நாடக ஆசிரியன் ; களிநாடக நடிகன்.

comedienne', *n.* இன்பநாடக நடிகை.

comediett'a, *n.* நகைச்சுவை சிறுதுணுக்கு.

com'edist, *n.* இன்பியல் நாடக ஆசிரியர்.

com'edo, *n.* தோலடியில் காணப்படும் கரியமுகடு கொண்ட வெண்ணிறமான சுரப்பி வகை.

come'down, *n.* இறக்கம் ; தன் மதிப்புக்கேடு ; இழிவு.

com'edy, *n.* நகைச்சுவை நாடகம் ; இன்பியல் நாடகம் ; மகிழ் முடிவுக் கதை ; நகைச்சுவையைக் குறிப்பாகத் தெரி விக்கும் நிகழ்ச்சி.

com'ely, *n.* மகிழ்ச்சி உண்டாக்குகிற ; நயஞ்செறிந்த ; அழகுள்ள ; *adv.* அழகான தன்மையில்.

come'-off, *n.* முடிவு ; கடமையினின்று நழுவுதல்.

come'-o'-will, *n.* தன்னியல்பாக வருதல் ; முறைகேடாகப் பிறந்த குழந்தை.

com'er, *n.* வந்திருப்பவர் ; நம்பிக்கையளிப்பவர்.

comes'tible, *a.* தின்னத்தக்க.

comes'tibles, *n. pl.* தின்பண்டங்கள்.

com'et, *n.* வால்மீன், வால்வெள்ளி.

com'et-finder, *n.* வால்வெள்ளி ஆய்வுத் தோலைநோக்கி.

com'fit, *n.* இனிப்புத் தின்பண்டம், சர்க்கரையால் சூழப்பட்ட கொட்டை வகை.

com'fort, *n.* ஆறுதல், தேறுதல், ஊக்குதவி ; ஓய்வமைதி ; இன்பநலம், வாய்ப்புநலம் ; துணைவர் ; துணை தருவது ; இன்பமளிப்பது ; ஆறுதலளிப்பது ; அன்னவகையின் தூவி களாலான திண்டு ; *v.* துயராற்று ; நோவு தணி ; ஆறு தலளி ; தளர்வகற்று, ஓய்வமைதி வழங்கு ; இன்ப வாய்ப்பு நல்கு ; மகிழ்ச்சியூட்டு ; (தொ.) cold comfort, மிகச் சிறு நலம் ; வசதிக்குறைவு.

com'fortable, *a.* ஆறுதலளிக்கக்கூடிய; மகிழ்ச்சி வாய்ந்த; அமைதியான.

com'forter, *n.* ஆறுதலளிப்பவர், அமைதி நல்குபவர் ; தேற்றரவாளர் ; நீண்ட ஓடுக்கமான கம்பளிக் கழுத்துக் குட்டை ; பொய்ப் பாற்காம்பு ; (தொ.) Job's comforter, ஆறுதல்கூறி ஊக்கங்கெடுக்கும் அறிவுரையாளர் ; the Comforter, பரிசுத்த ஆவி.

com'ic, *n.* நகுமியல்பு, நகுதிறம் ; நகைச்சுவை நடிகர் ; விகடன் ; நகைச்சுவைப் பத்திரிகை ; *a.* இன்பியல் நாடகம் சார்ந்த ; நகைப்பூட்டுகிற ; வேடிக்கையான.

com'ical, *a.* நகைப்புக்கிடமான ; கோமாளித்தனமான, விசித்திரமான.

Com'inform, *n.* 1947-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலகப் பொதுவுடைமை மைய நிலையம் (Communist Information Bureau).

com'ings-in', *n.* வருவாய்.

Com'intern, *n.* அனைத்து நாட்டுப் பொது உடைமை அமைப்பு, 1947-ஆம் ஆண்டுக்குமுன் இருந்த மூன்றாவது உலகத் தொழிலாளர் பொதுவமைப்பு.

comique', *n.* நகைச்சுவை நடிகர் அல்லது பாடகர்.

comitadj'i, *n.* பல்கேரிய (Bulgaria) நாட்டுப் புரட்சிக் குழு வின் உறுப்பினர் ; பல்கேரிய கொள்ளைக்காரர்.

comita'tus, *n.* அரசிளங்குமரனின் வழித்துணை, மெய்க் காவலன் ; மாவட்டம், கோட்டம்.

comit'ia, *n. pl.* குற்ற நடுவர்களைத் தேர்ந்தெடுப்பது-சட்டங் களை நிறைவேற்றுவது முதலியவற்றைச் செய்யும் ரோம நாட்டுப் பேரவைகள்.

com'ity, *n.* மட்டுமதிப்பு, மரியாதை ; பண்பமைதி, பழக்க வழக்க ஒழுங்க மைவு ; (தொ.) comity of nations, அனைத்துநாட்டுச் சட்ட ஒப்புரவுப்பண்பு, கூடுமானவரை ஒரு நாட்டுச்சட்டம் மற்றொரு நாட்டில் செயற்படும் ஒழுங் கமைவு.

comm'a, *n.* காற்புள்ளி, கால்மாத்திரை நிறுத்தக்குறி ; மிகச் சிறு இடைவெளி ; சிறு நிறுத்தம் ; சிறிய இடைத்தொடர்பு முறிவு ; (இசை.) நுணுக்க இடையீடு ; (தொ.) comma bacillus, வாந்திபேதி நுண்மம் ; comma butterfly, பின் சிறகில் கால்நிறுத்தப் புள்ளிபோன்ற வெண் குறியுள்ள வண்ணத்துப்பூச்சி ; inverted commas, மேற்கோள் குறிகள்.

command', *n.* ஆணை ; அதிகாரம் ; ஆதிக்கம் ; கட்டுப் பாடு ; கட்டளை ; கட்டளை இடப்பட்ட செய்தி ; *v.* ஆணை யிடு, அதிகாரம் செலுத்து ; செயற்படும்படி செய் ; ஆட்சி செலுத்து ; (தொ.) at command, தேவைக்குக் கிடைக்கக் கூடிய ; command paper, அரச ஆணையால் பாராளு மன்றத்தின்முன் வைக்கப்படும் தாள்; command performance, அரச ஆணையால் நடத்தப்படும் செயல், காட்சிச் செயல்.

commandant', *n.* படைத்தலைவன்.

commandeer', *v.* இராணுவ சேவைக்குக் கட்டாயப்படுத்து அல்லது இராணுவ பணிக்குக் கைப்பற்று ; படைத்துறைக் காகக் கைப்பற்று.

comman'der, *n.* படைத்தலைவர், ஆணை அதிகாரி ; கப்பற் படையில் மாலுமிக்கு அடுத்த அதிகாரி, மேலாள் ; வீரத் திருவுடையர்; (தொ.)Commander of the Faithful, இஸ்லாமிய நாட்டுத் தலைவர்களின் விருதுப்பெயர், கலீபாக்களின் பட்டப்பெயர்.

Comman'der-in-Chief, முதற்பெரும் படைத் தலைவர்.

command'ery, *n.* ஆணை அதிகாரியின் மாவட்டம்.

comman'ding, *a.* ஆண்மையுடைய, பணியவைக்கத்தக்க ; மனத்தில் பதியவைக்கத்தக்க ; மேம்பட்ட ; முனைப்பான ; விரிந்த சூழ்புலக் காட்சியையுடைய.

command'ment, *n.* ஆணை, கட்டளை ; விதி ; (தொ.) the ten commandments, மோசேயினூல் கொடுக்கப்பட்ட பத்துக்கட்டளைகள்.

comman'do, *n.* போர்முனைக்கு அனுப்பப்படும் சிறப்புப் படைப்பிரிவு ; (தொ.) on commando, களப்போர் பணி புரிகிற.

Comman'do, *n.* இரண்டாம் உலகப்போரில் (1939-1945) பிரிட்டிஷ் பேரரசுத்துறை அதிர்ச்சித் தாக்குதல் படை.

comme il faut, (பிர.) *a.* ஒழுங்கான, நயத்தக்க.

commem'orate, *v.* நினைவுவிழாக் கொண்டாடு ; நினைவுச் சின்னமாகப் பேருரையாற்று ; நினைவினைப் பேணிக் காப்பாற்று ; நினைவுச் சின்னம் நாட்டு ; எழுத்துருவில் நிலை நிறுத்து.

commemora'tion, *n.* நினைவுவிழா ; நினைவுக்காப்பு ; நினைவு வழிபாடு ; வழிபாட்டில் நினைவுக்குறிப்பு ; வழிபாட்டில் புனிதர் பற்றிய நினைவுக் குறிப்பீடு ; ஆக்ஸ்போர்டுப் பல் கலைக் கழகத்தில் நிறுவன முதல்வர் ஆண்டு நினைவு விழா.

commem'orative, commem'oratory, *a.* நினைவுக்குரிய, நினைவு வைக்கத்தக்க.

commence', *v.* தொடங்கு ; தோற்றுவி ; புகுமுகம் செய் ; முழுநிறைவான பல்கலைக்கழகப் பட்டம் பெறு.

commence'ment, *n.* தொடக்கம் ; பல்கலைக்கழகங்களில் பட்ட நிறைவுரிமையளிப்பு விழாமுறை ; பட்டமேற்பு.

commend', *v.* அடைக்கலமாக ஒப்படை ; தகுதியுடையது என மேவி உரை, நலம் கூறு ; பரிந்துரை, புகழ்ந்துரை ; அணி செய் ; அழகுபடுத்து ; (தொ.) commend me to, அன்போடு நினைவு கூர் ; தகுதி எனக்கருதி அளி.

commen'dable, *a.* பாராட்டத்தக்க, போற்றத்தக்க.

commen'dam, *n.* தற்காலிகத் திருக்கோயில் மானியம், மதிப்புநிலை மானியம்.

commenda'tion, *n.* பாராட்டுதல், மெச்சுதல் ; இறக்கும் தறுவாயிலுள்ளவர்களுக்கு இறைவனின் கருணைகிட்டும்படி பரிந்து இறைஞ்சுதல் ; புகழ்ச்சி ; உயர்வினை அறிவித்தல்.

commen'datory, *a.* மெச்சத்தக்க, பாராட்டத்தக்க ; புகழ்ச்சி பொதிந்துள்ள ; பாராட்டல் சார்ந்த ; ஆதரவான வரவேற்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட ; மானியத்துட்படுத்தப் பட்ட.

commen'sal, *n.* உணவுப்பொழுது நண்பன், உடன் உண் ணும் தோழன் ; கூட்டு வாழ்வு வாழும் உயிரினம் ; *a.* ஒரே மேசையில் உண்ணுகிற ; (உயி.) ஒன்றுக்கொன்று உதவிக் கொண்டு இணைந்து வாழ்கிற.

commen'surable, *a.* ஒரே அளவான; பொது அளவுடைய; ஒரே அளவால் சரியாக அளக்கத்தக்க ; சரியான விகிதத்தி லுள்ள.

commen'surate, *a.* ஒரே அளவான.

comm'ent, *n.* விளக்கக் குறிப்பு ; கருத்துரை, குறிப்புரை, குறிப்பீடு ; மதிப்புரை ; *v.* கருத்துரை அல்லது மதிப்புரை கொடு ; விளக்கவுரை அளி ; இடங்காலம் கூறி விளக்கு.

comm'entary, *n.* விளக்கவுரை ; கருத்துரை ; குறிப்புக் களடங்கிய நூல்.

commenta'tion, *n.* சந்தர்ப்பம் கூறி விளக்கல், இடம் காலம் கூறி விளக்குதல்.

comm'entator, *n.* கருத்துரையாளர்; உரையாசிரியர், மதிப்புரைஞர்; விளக்கவுரையாளர்; நடப்பு நிகழ்ச்சியின் விளக்கவுரை ஒலிபரப்பாளர்.

commentato'rial, *a.* விளக்கவுரை சார்ந்த, விரிவுரை பற்றிய.

comm'erce, *n.* பெரு வாணிகம்; வாணிகத் தொடர்பு; விரிவான கொடுக்கல் வாங்கல் தொடர்பு; போக்கு வரவுத் தொடர்பு; செயல் தொடர்பு; தோழமைத் தொடர்பு; *v.* வாணிகம் செய்; தொடர்புகொள்.

commer'cial, *n.* வாணிகப் போக்குவரவாளர், பிரயாணம் செய்யும் வாணிகத்துறைப் பணியாள்: வானொலி-தொலைக் காட்சித் துறைகளில் வணிகத்துறையினர் நடத்தும் நிகழ்ச்சி நிரல், வானொலி-தொலைக்காட்சிகளில் வாணிக விளம்பரச் சார்பான நிகழ்ச்சி; *a.* வாணிகத் தொடர்புடைய, வாணிகஞ் சார்ந்த; (தொ.) commercial room, உணவுச்சாலையில் வணிகப் பயணிகளின் தனி அறை; commercial traveller, வணிகப்பயணி, வணிக நிலையத்தின் உரிமை பெற்றுப் பயணம் செய்யும் பிரதிநிதி.

commer'cialism, *n.* வாணிகப்பண்பு, வாணிக மனப் பான்மை; வாணிகத்துறை மொழிவழக்கு.

commer'cialize, *v.* வாணிகத்துறையாக்கு; வாணிகப்பண் பூட்டு; வாணிகச் சார்பாக்கு.

commere', *n.* compere என்பதன் பெண்பால் வடிவம்.

commina'tion, *n.* அச்சுறுத்தல்; பழிப்பு, கண்டனம்; ஆங்கில நாட்டுரிமைத் திருக்கோயிலில் (Anglican Church) சிறப்பு நாட்களில் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் இறை வனின் அச்சுறுத்தல் தொகுதி.

comm'inative, comm'inatory, *a.* தண்டனை பற்றி அச்சுறுத்துகிற.

commin'gle, *v.* ஒருங்கு கல, இடைவிரவு, ஒன்றுகச் சேர்.

comm'inute, *v.* நுண்துகள்களாகச் செய், பொடியாக்கு; நில உடைமைகளை மிகச்சிறு துண்டுகளாகப் பிரி; (தொ.) comminuted fracture, ஒரே எலும்பில் பல விடத்து ஏற்படும் முறிவு, சிக்கல் முறிவு, பெரும்படி முறிவு.

Commiph'ora, *n.* பிசின் வகை தரும் ஆசிய-ஆப்பிரிக்க மரவகை.

commis'erable, *a.* இரக்க உணர்ச்சிக்குரிய; இரக்கப்படத் தக்க.

commis'erate, *v.* பரிவுகொள், இரக்கம் காட்டு, வருத்தம் தெரிவி.

commisera'tion, *n.* பரிவிரக்கம்.

commis'erative, *a.* இரக்க உணர்வு செறிந்த; வருத்தம் தெரிவிக்கிற.

commissar', *n.* பொறுப்பாளர்; சோவியத் ருசியா ஒன்றி யத்தின் (U.S.S.R.) அரசியற் பணியரங்கப் பொறுப்புடைய அமைச்சர்.

commissar'ial, *a.* பொறுப்பாளர்க்குரிய; படைத்துறை உணவுப்பொருள் மேலாளைச் சார்ந்த.

commissar'iat, *n.* படைத்துறை உணவுத்துறை அரங்கம்; சோவியத் ருசியாவின் (U.S.S.R.) அரசியற் பணியரங்கத் துறை; உணவுத்துறை அரங்கப் பணிமனை; பொறுப்பாளர் குழு; ருசிய அமைச்சர் குழு.

comm'issary, *n.* பொறுப்பாளர்; ஆட்பேர்; தனிமன்ற நடுவர்; உயர்நிலைக் காவல்துறைப் பணிமுதல்வர்; சமய வட்டத் தலைவரின் தனிப்பேராள்; படைத்துறை உணவு வள ஆதாரப் பணியரங்கத்தலைவர்; (தொ.) Commissary general, படைத்துறை உணவு அரங்க மா முதல்வர்.

commi'ssion, *n.* செயல்துறைப்படுத்திவிடல்; செய்துவிடல்; செய்தல்; செயல்; ஒப்படைத்துவிடல், பொறுப்பளிப்பு; அனுப்பிவைத்தல், செயல் தீர்வு; செயலுரிமையளிப்பு; உரிமைக்கட்டளை, ஆணைப் பத்திரம்; தனிப்பொறுப்பு; பொறுப்பான பணி; பொறுப்பாண்மைக் குழு; விற்பனை முகவர் பங்கு வரி, தரகு; வாணிகக் கட்டளை; வேண்டுத லறிவிப்பு; போர்க்கப்பலின் செயல் ஆயத்த நிலை; பொறுப் புரிமை, பணி ஆணை; இணைந்து பணி செய்யும் குழுவினரிடம் தற்காலிகமாக அல்லது நிலையாக உரிமையை ஒப்படைத்தல்; *v.* பொறுப்பளி; அதிகாரம் கொடு; அமர்த்து; ஒப்படை; செயற்படுத்து; செயற்படச் செய்.

commiss'ion-agent, *n.* தரகு வணிகர், தரகுக்காக வாணிகம் செய்பவர்.

commissionaire', *n.* பணிமுறைத் தூதர்; வாயிற்காப் போன்; வாயிற்காப்போராகப் பணியாற்றும் வயது முதிர்ந்த கடல் நிலப் படைவீரர்.

comm'issioned, *a.* பொறுப்புரிமை அளிக்கப்பட்ட; தனிக் கட்டளையமர்வு பெற்ற; செயல் நிலைப்படுத்தப்பட்ட; (தொ.) commissioned officer, பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மேலாளர்.

commi'ssioner, *n.* ஆணையர், தனிக் கட்டளைமூலம் பணி ஏற்றவர்; பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்; பிரதிநிதி, பேராள்; (தொ.) High Commissioner, உயர்தனிப் பேராள்.

comm'issure, *n.* இணைப்பு; சந்திப்பின் மேற்பரப்பு; தையல் வாய் விளிம்பு; இருநரம்பு மையங்களை இணைக்கும் நரம் பிழைத் தொகுதி.

commit', *v.* பொறுப்பு ஒப்படை; ஒம்படையாக ஒப்புவி; சேர்ப்பி; குற்றவாளியாகு, குற்றம் செய்; குற்றத்துக்கு உட்படுத்து, சிக்கவை; உறுதி செய்; (தொ.) commit oneself to, தன்னை ஒப்படைத்துவிடு, கட்டுப்படுத்தி ஈடு படுத்த உறுதி கொள்; commit to memory, மனப்பாடம் செய்.

commit'ment, *n.* ஒப்படைப்பு, சேர்ப்பித்தல்; சிறைக்குக் குற்றவாளியை அனுப்பும் ஆணை; சிறையில் அடைத்தல்; மேற்கொள்ளப்பட்ட பொறுப்பு, ஈடுபாடு பற்றிய கடப் பாட்டுநிலை.

committ'al, *n.* ஒப்படைப்பு; வாக்குறுதி, நேரடியாக அல்லது குறிப்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிப் பொறுப்பு.

committ'ee, *n.* குழு, வாரியம், பெருங்குழுவிலிருந்து சிறப்பான பணிக்காக அமைக்கப்பட்ட சிறுகுழு; (சட்.) பொறுப்பு ஒப் படைக்கப்பட்ட ஒருவர்; பைத்தியக்காரரின் பொறுப்பை ஏற்பவர்; (தொ.) Committee of the whole House, தலைவ ருடன் தன் உறுப்பினர் அனைவரையுமே சட்டமன்றம் ஒரு குழுவாக்கிக் கொண்ட நிலையிலுள்ள சட்டமன்ற நிறைகுழு; committee stage, சட்டப் பகர்ப்பின் இரண்டாவது மூன்றாவது வாசிப்புக்கு இடைப்பட்ட நுணுக்க விரிவான ஆய்வாராய் வுப்படி; goes into Committee, House resolves itself into a Committee, is in Committee, சட்டமன்ற வகையில் நிறை குழுவாக இயங்கத்தொடங்கு; in committee, குழுவின் ஆய்வுப்படியில்; Joint Committee, ஒன்றுக்கு மேற்பட்ட பெருங்குழுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுக்குழு; Standing Committee, நிலைக்குழு.

commix', *v.* கல, ஒருமிக்க கல.

commix'tion, commix'ture, *n.* ஒருங்கு கலத்தல்; கலக்கும் நிலை; கலவை, கூட்டு; உடலும் ஆவியும் இணைந்த திருமீட்டெழுச்சியின் அடையாளமாகத் திருவுணவு அப்பச் சில்லைத் திருக்கலத்திலிடும் கிறித்தவ சமயத் திருவினை.

commode', *n.* பக்கச் சுவரில் பதித்துள்ள சிறுபலகை, பக்கப்பலகை; கோக்காலி; இழுப்பறைப் பெட்டி; படுக்கை அறைக் கழிவுக் கலம்; பழங்காலச் சீமாட்டிகளின் உயர் தொப்பி.

commod'ious, *a.* இடமகன்ற, இடவாய்ப்பு மிக்க; இன்ப நலவாய்ப்புடைய; தகுதியான, பொருத்தமான.

commod'iousness, *n.* இடவசதி, போதிய இட அகற்சி.

commod'ity, *n.* பயனுடைய பொருள், சரக்கு; விளை பொருள்.

comm'odore, *n.* கடற்படைப் பணிமுதல்வர்; வாணிகக் கப்பற்படையின் முதல்நிலை மீகாமன்; பந்தயப் படகுச் சங்கத் தலைவர்; கடற்படைப் பணிமுதல்வரின் கப்பல்.

comm'on, *n.* பொதுநிலம்; பொது வெளி; *a.* பொதுப் படையான, எல்லோருக்குமுரிய; வழக்கமான, அடிக்கடி நிகழ்கிற; பொதுமுறையான, வழக்கமாக நிகழ்கிற; எளிதாகக் கிடைக்கிற; குறைமதிப்புள்ள; நாகரிகமில்லாத; கீழ்த்தரமான; (கண.) பொதுவான, ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களுக்கு ஒருங்கே உரிய; (தொ.) Book of Common Prayer, இங்கிலாந்தின் திருக்கோயிலைச் சார்ந்த பொது வழிபாட்டு நூல்; common chord, (இசை.) மூன்றுவது பெரு நரம்பு சிறுநரம்புகளுடன் ஐந்தாவது முழுநரம்பும் இயைந்த தொனி வகை; common gender, ஆண்பெண் இரண்டும் குறிக்கும் பொதுப்பால்; common ground, பொது வாத ஆதாரம்; common law, இங்கிலாந்து நாட்டின் பண்டைப் பழக்கவழக்க மரபுச்சட்டம்; common market, நாடுகளின் வாணிகக் கூட்டணி அமைப்பு, தங்குதடையற்ற அக இடை வாணிகமும் புறக்காப்பு வரிமுறையும் உடைய நாடுகளின் வாணிகத்துறைக் கூட்டமைப்பு; common measure, (கண.) ஒன்றுக்கு மேற்பட்ட எண்களின் பொது வகுத்தல் மூல எண்; (இசை.) பொதுத் தாளம்; common noun, பொதுப்பெயர், இனஞ்சுட்டும் ஒருமைப் பெயர்; common sense, பொது அறிவு, நல்லறிவு; common stair, பொது மாடிப்படி, வசிக்கும் இடங்கள் பலவற்றிற்குச் செல்வதற்குரிய பொதுவான மாடிப்படி; common time, (இசை.) நான்கு அல்லது இரண்டு அளவையுள்ள தாள வகை; Court of Common Bench, Court of Common Pleas, உயர்நீதிமன்றப் பிரிவுகளில் ஒன்று; in common, பொதுவில்; பிறருடன் ஒப்ப; make common cause with, பிறரோடு ஒத்த நோக்கு உடையவராகு; short commons, மிகக் குறைந்த உணவு; the common, பொதுப்படையானது, இயல்பாயமைவது; the common good, பொதுநலம், பொது நன்மை; இனநலம்; ஸ்காத்லாந்தில் நகரப்பொது உரிமையாளர் உடைமை; the common people, பொதுமக்கள்.

comm'onable, *a.* பொதுவுரிமையாகக் கொள்ளப்பட்ட.

comm'onage, *n.* பொதுநில மேய்ப்பு உரிமை; பொதுப் பயனீட்டு உரிமை; பொது உரிமை நிலம், பொது நிலம்.

comm'onalty, *n.* பொதுமக்கள், பொதுமக்கள் தொகுதி.

comm'oner, *n.* பொதுமக்களில் ஒருவர்; பெருமக்கள் தொகுதியில் சேராதவர், பெருமக்கள் மரபுத் தகுதியற்றவர்; பாராளுமன்ற மக்கள் சபை உறுப்பினர்; ஆக்ஸ்போர்டுப் பல்கலைக்கழகத்தில் பணம் கொடுத்து உணவு உண்ணும் மாணவர்.

comm'oney, *n.* பொதுநிலையான விளையாட்டுக் கோலி வகை.

comm'onplace, *n.* பொதுச்செய்தி; அடிக்கடி அடிபடும் பொருள்; அடிபட்ட தலைப்பு; அடிபட்ட பொருளற்ற வழக்கு; குறித்தெடுக்கத்தக்க சிறப்புடைய ஏட்டுப்பகுதி; *a.* சிறப்பற்ற; வழங்கித் தேய்ந்த, பழமைப்பட்ட; *v.* சிறப்புடைய ஏட்டுப்பகுதி குறித்தெடு; பொதுக்குறிப்புப் புத்தகத்தில் எழுது; பொருளற்ற வழக்குச் சொல் பேசு.

comm'onplace-book, *n.* நினைவுக்குறிப்புப் புத்தகம்.

comm'on-room, *n.* பொது அறை; கல்வி நிலையப் பொதுக் கூடம்.

comm'ons, *n. pl.* பொதுமக்கள்; பொதுமக்கள் பிரதிநிதிகள், பொதுமக்களின் பிரதிநிதித்துவ மன்றம், பிரிட்டனின் சட்டப் பொதுமன்றம்; பொதுநிலம்; ஆக்ஸ்போர்டுப் பல்கலைக் கழகத்தில் பொதுமேசை உணவு; ஆக்ஸ்போர்டுப் பல்கலைக் கழகத்தில் குறிப்பிட்ட விலைக்குப் பரிமாறப்படும் உணவுப் பொருள் பங்கீடு; பொதுவான உணவு, பங்கீட்டு உணவு.

comm'onweal, comm'onwealth, *n.* தன்னுரிமையுடைய இனக்குழு; மக்கட் பொதுவுரிமையரசு; பிரிட்டனின் மன்னர் இல்லாக் குடியுரிமைக்கால அரசு (1649-1660); சரிசமத் தனி உரிமையுடைய கூட்டரசு; சரிசம வருவாய்ப்பங்கு கொள்ளும் நடிகர் குழு.

commo'tion, *n.* கிளர்ச்சி, குமுறல், குழப்பம், கொந்தளிப்பு; சந்தடி.

comm'unal, *a.* நகராட்சி மன்றப் பிரிவைச் சேர்ந்த; சமுதாயத்தைச் சேர்ந்த, சமூகப் பொது உடைமைக்குரிய; சாதிக்குரிய, வகுப்புக்குரிய.

comm'unalism, *n.* திணையாட்சி யுரிமைக் கோட்பாடு.

comm'unalize, *v.* திணையாட்சியுரிமைப்படுத்து.

comm'une[1], *n.* நகராட்சி மன்றம்; தன்னுட்சி நகரப்பகுதி; பிரான்சு முதலிய நாடுகளில் தன்னுட்சியும் மாநகரத் தலைவரும் உள்ள சிறு நில ஆட்சிப்பகுதி.

comm'une[2], *n.* பேசுதல், உரையாடல்.

commune'[3], *v.* கூடிப்பேசு அல்லது உரையாடு; சமய ஒழுக்கத்திற்குரிய செயல் தொடர்புகொள், ஆன்மிகக் கூட்டுறவுகொள், தூயநற்கருணை பெறு.

commun'icable, *a.* தெரிவிக்கக்கூடிய, அறிவிக்கத்தக்க, சொல்லத்தக்க; அன்பான.

commun'icant, *n.* தூயநற்கருணையில் பங்குகொள்பவர்.

commun'icate, *v.* பங்குகொடு, பகிர்ந்துகொடு; அறிவி, தெரிவி; கற்பி, வெளிப்படுத்து; கொடு, அளி, மற்றொருவரோடு பொதுவாக யாதானும் தொடர்புவைத்துக்கொள்; போக்குவரத்து வைத்துக்கொள், கூட்டுறவுத் தொடர்பு கொள்; தூயநற் கருணையில் பங்குகொள்.

communica'tion, *n.* அறிவிப்பு, அறிவிக்கும் செயல்; அறிவிக்கப்பட்ட பொருள், தெரிவிக்கப்பட்ட செய்தி; தொடர்பு; செய்தி இணைப்பு; கடிதப் போக்குவரத்து; அறிவிக்கும் வகைதுறை; இணைப்பு வழி; இணைப்புக் கால்வாய்.

commun'icative, *a.* அறிவிக்கும் இயல்புடைய, செய்தி தெரிவிக்கும் குணமுள்ள; தாராளமாகப் பழகுகிற.

commu'nicatory, *a.* அறிவு கொடுக்கிற, அறிவூட்டுகிற.

commun'ion, *n.* கூடிக் கலந்து பேசுதல், சிந்தனை செய்தல்; ஆன்மிகக் கூட்டுறவு; தோழமை; பொது உரிமை; சமய வழிபாட்டு ஒற்றுமை; சமய வழிபாட்டுக்கு ஒன்றுகூடிய மக்கள் குழு; இயேசுநாதரின் இறுதி விருந்து.

commun'ionist, *n.* தூய நற்கருணையிற் பங்கு கொள்பவர்.

communique, (பிர.) *n.* பணித்துறை அறிவிப்பு.

comm'unism, *n.* பொதுவுடைமைக் கொள்கை; பொதுவுடைமை; பொதுவுடைமை இயக்கம்; பொதுவுடைமைக் கட்சி, தொழிலாளர் இன சர்வாதிகாரத்தின் தேவை வலியுறுத்தும் கட்சி.

comm'unist, *n.* பொதுவுடைமைக் கொள்கையர்.

communitar'ian, *n.* சமுதாய உறுப்பினர்.

commun'ity, *n.* பொதுச் சொத்துரிமை, உடைமைகளைப் பொதுவாகக் கொண்டு அனுபவிக்கும் முறைமை; பொதுச் சொத்துரிமைக் குழு; சமுதாயம், பொது உரிமைநலக் குழுமம்; பொதுக் குடிவாழ்வுக் குழுமம்; பொது அரசியல் அமைப்புக் குழுமம்; நகரவை மக்கட் பொதுக் குழுமம்; சமயக்கூட்டுக் குழு; பொதுவழிபாட்டுக் குழுமம்; தொழிற் கூட்டுக்குழு; பொது மக்கள் குழு; தனிமுறைக் கூட்டுக் குழு; ஒத்த பொதுப் பண்பு, ஒத்த குழுநலம்; தோழமை, பொது உடன்பாடு; (தொ.) community centre, சமூக உறவு மைய நிலையம்; community singing, கூட்டிசை; கோஷ்டி பஜனை.

comm'unize, *v.* பொதுவுடைமையாக்கு; பொதுவுடைமையராக்கு.

commut'able, *a.* மாற்றீடு செய்யக்கூடிய; இனமாற்றுச் செய்யக்கூடிய; பொருளைக் கொடுத்துச் சமரசமாகத் தீர்க்கக் கூடிய.

comm'utate, *v.* மின் ஓட்ட வகையை மாற்று.

commut'ation, *n.* இன மாற்றுதல்; தண்டனையைக் குறைத்து மாற்றல்; பண ஈடுசெய்து மாற்றுதல்.

commut'ative, *a.* இனமாற்றத்துக்குரிய; பரிமாற்றம் செய்யக்கூடிய.

comm'utator, *n.* மின்னோட்ட அலகைத் திருப்பிவிடும் கருவி; இனமாற்றம் செய்பவர்.

commute', v. மாற்றிப்பெறு, கொடுத்துவாங்கு; கடுமை குறைந்த தண்டனைக்கு மாற்று; தண்டனையைக் குறை; ஒன்றுக்கொன்றுக இனமாற்று; பொருள் கொடுக்கல் வாங்கல் மாற்றிடு செய்; கடமை மாற்றிடு செய்.; இருதிசை மின்னோட்டத்தை ஒருதிசை மின்னோட்டமாக்கு அல்லது மாற்றி அமை.

comose', **comous'**, a. மரவகையில் உச்சியில் தழையுடைய; விதைகளில் நுனியில் இழைக்கொத்துடைய.

com'pact [1], n. நெருக்கமான பொருள்; கச்சிதமான பொருள் அல்லது கட்டிடம்; கூட்டு; இணைப்பு; சுண்ணச் சிமிழ்; கைப்பையில் கொண்டுசெல்லக்கூடிய சிறு முக ஒப்பனைச் சுண்ணப்பெட்டி.

compact' [2], a. நெருக்கமாக வைக்கப்பட்ட; நெருக்கமாக இணைக்கப்பட்ட; அமைக்கப்பட்ட; இயற்றப்பட்ட; உறுதியான; வன்மையான; நெருக்கமான; சுருக்கமான; v. இணைப்பாகச் சேர்த்து அழுத்து; திடமாக்கு; வலுப்படுத்து; இணைந்து ஆக்கு.

com'pact [3], n. உடன்படிக்கை; ஒப்பந்தம், கட்டுப்பாடு; கூட்டுக்குழு.

compa'ges, n. சட்டம்; கட்டிடம்; சிக்கல் வாய்ந்த அடி அமைப்பு; *pl.* compa'ges.

compa'ginate, v. இணை, சேர், பொருத்து.

compan'ion [1], n. தோழன்; உடனிருப்பவன்; நண்பன், கூட்டாளி; உயர்நிலைப்பணியாள்; ஆள்; பயனற்றவன்; ஓர் அமைப்பின் உறுப்பினர்; சோடியில் ஒன்று; a. கூடச் செல்கின்ற; தோழன் தன்மையான; v. சேர்ந்து செல்; உடனியங்கு.

compan'ion [2], n. (கப்.) மேல்தளத்தினின்று கீழ்த்தளத்திற்கு வெளிச்சம் அனுப்பும் சாளரச்சட்டம்; பலகணிக் கிராதி; கீழ்த்தளத்திற்கு வர உதவும் ஏணி.

compan'ionable, a. தோழனுக்கு இருக்கத்தக்க; மனத்திற் கொத்த; இசைவான.

compan'ionate, a. தோழமையில் பங்குகொள்கிற; (தொ.) companionate marriage, சட்டப்படி கருத்தடையோடு கூடியதும் திருமண விலக்கிற்கு எளிதாக இடங்கொடுப்பதும் ஆகிய திருமணம்.

compan'ioned, a. தோழன் உள்ள, நண்பன் உடைய.

compan'ion-hatch, n. (கப்.) தளத்தில் உள்ள துளையின் அல்லது திறப்பின் மூடி; மரமூடி.

compan'ion-hatchway, n. (கப்.) தளத்தினின்று அறைக்குச் செல்லும் வழி.

compan'ion-ladd'er, n. (கப்.) மேல் தளத்தினின்று அறைக்குச் செல்லும் படிக்கட்டு; ஏணி.

compan'ionship, n. தோழமை; தோழன் நிலை; கூட்டுக் குழு நண்பர் குழாம்.

compan'ion-way, n. = companion-hatchway.

com'pany, n. மக்கள் கூட்டம்; சங்கம், கழகம்; பறவை அல்லது விலங்குத் தொகுதி; வாணிகச் சங்கம்; சமூகம்; படைப்பிரிவு; கப்பலோட்டிகள் தொகுப்பு; தோழமை நிலை; சமூகக் கூட்டுறவு; தொடர்பு; v. கூடிச்செல்; தொடர்பு கொள்; கூட்டுச்சேர்; கூடி வாழ்; (தொ.) bad company, தோழமைப் பண்புகள் இல்லாத; பழகத்தக்க பண்புகள் இல்லாத; company promoter, கூட்டு முதல் கழகங்களின் ஆதரவாளர்; மேற்பார்வையாளர்; good company, நல்ல தோழமைப்பண்புகள் பொருந்தியுள்ள; தோழமைக் குண இயல்புடைய; keep company, உடனிரு; காதல் வேட்கை தெரிவி; know a man by his company, ஒருவர் நண்பர்களின் குணத்தால் அவர் நடத்தையினைத் தீர்மானி.

com'parable, a. ஒப்பிடக்கூடிய.

compa'rative, n. உறழ்படி; a. ஒப்புமை செய்கிற; ஒப்பீடு சார்ந்த; பிறவற்றோடு ஒத்துப்பார்த்து உயர்வாகப் போற்றப்பட்ட; நேர் நிலையல்லாத, முழுமையற்ற; (இலக்.) அதிகத்தை அறிவிக்கிற; உறழ்படியான.

compare', n. ஒப்பீடு; v. ஒத்துப்பார்; ஒப்பிடு; ஒரே மாதிரியானதென்று தெரிவி; ஒத்ததென விவரித்துரை; (இலக்.) ஒப்புப்படிகளைத் தா; ஒப்பீடு செய்; ஒப்புமை காட்டு; ஒப்பாக நில்; போட்டி இடு; போராடு; (தொ.) beyond compare, ஈடு இணையற்ற; ஒப்பாரும் மிக்காருமில்லா.

compa'rison, n. ஒப்புமை காண்டல்; ஒப்பீடு செய்தல்; ஒப்புக் காணும் அளவு; ஒப்பீடான மதிப்பீடு; ஒப்பிட்டுணர்ந்த மதிப்பீடு; இருபொருட்களை ஒத்துக்காட்டும் உவமை, உவமை அணி; உருவகம்; (இலக்.) தரத்தின் வெவ்வேறு தளங்களைக் காட்டுவதற்காக பெயரடை அல்லது வினையடை அடையும் மாறுதல்.

compart', v. தனி அறைகளாகப் பிரி; தனிப் பிரிவுகளாக்கு; பல தடுப்புக்களாகப் பிரி.

compart'ment, n. தடுத்த தனி இடம்; அறை; பிரிவு; புகை வண்டிப் பெட்டி; ஏதாவதொன்றின் பிரிவு.

com'pass, n. வட்டம்; சுற்று; இடம்; எல்லை; வரம்பு; குரல் எடுப்பின் பரவெல்லை; சுற்றளவு; வட்டத்தின் சுற்றுக்கோடு; திசையறி கருவி; திசைகாட்டி; v. சுற்றிச் செல்; சூழ்ந்துகொள்; சுற்றிக்கொள்; செய்து முடி; நிறைவேற்று; பெறு; திட்டம் செய்; சூழ்ச்சி செய்; சதி செய்; (தொ.) fetch a compass, வட்டமாகச் சுற்றிவா.

com'passable, a. சுற்றி வளைக்கத்தக்க; கைப்பற்றத்தக்க; வரம்பிற்குட்பட்ட; செய்துமுடிக்கத்தக்க; அறிந்துகொள்ளத்தக்க.

com'pass-card, n. திசையறிகருவியின் வட்டமான முகப்பு.

com'passes, n. *pl.* வட்டம் வரைய உதவும் கருவி, கவராயம்.

com'passing, n. சூழ்ச்சி முறை; திட்டம்.

compa'ssion, n. பரிவு, இரக்க உணர்ச்சி; v. இரங்கு.

compass'ionable, a. இரங்கத்தக்க; இரங்கக்கூடிய.

compass'ionate, a. இரக்க குணமுள்ள, பிறர்துயர் தம் துயர்போல் உணரும் இயல்புடைய; v. இரக்கங்கொள்; இரக்கங்காட்டு.

com'pass-plane, n. வளைந்த மரத்தை மழமழப்பாக்கும் கருவி, கோட்ட இழைப்புளி, குவி மட்டம்.

com'pass-plant, n. திசையுணர் செடி; உச்சி வெயிலை விலக்குவதற்காக வடக்கு தெற்கு நோக்கி இலைகள்விடும் செடிவகை.

com'pass-saw, n. வளைவாக வெட்டும் இரம்பம்.

com'pass-tim'ber, n. கப்பல் கட்டுவது முதலியவற்றிற்குப் பயன்படும் வளைந்த வடிவுடைய மரம்.

com'pass-win'dow, n. அரைவட்டப் பலகணி.

compatibil'ity, n. ஒத்தியல்வு, உடனியைவு; தொலைக் காட்சியில் நிறமிலி அமைவு ஒளிகிழல்வண்ணம் மட்டும் ஏற்கும் நிலை.

compat'ible, a. இணைவொத்த, ஒத்தியலக்கூடிய, ஒன்றுடனொன்று இணையக்கூடிய.

compat'riot, n. உடனெத்த ஒரே தேசத்தவர், ஒரே நாட்டைச் சேர்ந்தவர்.

compeer', n. சரி ஒத்தவர், உடன் துணைவர், தோழர், கூட்டாளி.

compel', v. கட்டாயப்படுத்து; வல்லந்தமாக நிறைவேற்று; அன்புரிமையால் வலியுறுத்து; வலிந்து செயற்படுத்து.

compell'ing, a. வலிந்து கருத்தீர்க்கிற; விலக்கமுடியாக் கவர்ச்சியுடைய; ஆர்வமாகப் பாராட்டித் தீரவேண்டிய.

com'pend, n. = compendium.

compen'dious, a. சுருக்கச்செறிவான; பலவற்றை உட்கொண்டுள்ள, எல்லாம் அடங்கிய.

compen'dium, n. செறிவடக்க ஏடு; பெரிய ஏட்டின் சிறு சுருக்கப் பதிப்பு; மணிச்சுருக்கம், பொழிப்பு; சாரம்; கருத்துரை.

com'pensate, v. சரியீடு செய்; இழப்பீடு அளி; பயன் அளி, ஊதியம் கொடு.

compensa'tion, *n.* சரியீடு செய்தல், இழப்பீடு; சம்பளம், கூலி, ஊதியம்; (இய.) எதிரெதிர் ஆற்றல் இணைவால் ஏற்படும் செயலற்ற தன்மை; (தொ.) compensation balance, தட்பவெப்ப நிலைகளுக்கேற்பச் சரிசெய்யப்பட்ட நிறைகோல்; compensation pendulum, தட்பவெப்பநிலைக் கேற்ப விரிந்து சுருங்கிச் சரிநிலை காத்துக்கொள்ளும் அமைவுடைய ஊசல்குண்டு.

compensa'tional, compen'sative, compen'satory, *a.* குறைவு நிரப்புகிற, கூடுதல் குறைவு சரிசெய்கிற; இழப்பீடு செய்கிற.

com'pere, *n.* சூத்திரதாரர், காட்சிமேடை அமைப்பாளர், பொழுது போக்குக் கேளிக்கை உருப்படிகளை இணைப்பவர்; களியாட்ட நடிகர்களை அறிமுகப்படுத்துபவர்; *v.* சூத்திர தாரராகச் செயலாற்று.

compete', *v.* போட்டியிடு; பரிசிலுக்குரிய போட்டியில் பங்குகொள்; பண்பில் மேம்பாடு நாடு.

com'petence, com'petency, *n.* தகுதி, ஆற்றல், திறன்; போதிய அளவு; சட்ட உரிமை; சட்ட இசைவு.

com'petent, *a.* தகுதிவாய்ந்த; போதுமான; பொருத்தமான; சட்டப்படி உரிமையுடைய; சட்ட இசைவுடைய; தகை நேர்மையுடைய.

competit'ion, *n.* போட்டியிடுதல்; போட்டி; ஒரே குறிக்கோளுக்கான போட்டிப்போராட்டம்; போட்டிப் பந்தயம்; திறமை அறுதிசெய்யும் போட்டித்தேர்வு.

compet'itive, *a.* போட்டிக்குரிய; போட்டியால் முடிவு செய்யப்படுகிற.

compet'itor, *n.* போட்டியிடுபவர்; எதிரி; எதிராளி.

compila'tion, *n.* திரட்டல், தொகுத்தல்; தொகுப்பு, திரட்டு; தொகுப்பு ஏடு, பல ஆசிரியர் ஏட்டுப் பகுதிகளின் திரட்டு.

compile', *v.* தொகு, திரட்டு; சேகரித்து ஏடாக இயற்று, சேகர ஏடு உருவாக்கு; ஆட்டக் கெலிப்புக்களைத் தொகையாக்கு.

compile'ment, *n.* தொகுத்தல்; தொகுப்பு.

compil'er, *n.* தொகுப்பவர்; பல இலக்கியங்களினின்றும் சிறந்தவற்றைத் திரட்டுபவர்.

compla'cence, compla'cency, *n.* தன்னிறைவு; அக மகிழ்வு, மனநிறைவமைதி.

compla'cent, *a.* உள்ள நிறைவினைத் தெரிவிக்கிற; மன நிறைவினையுடைய; அகமகிழ்வுடைய, தன்மகிழ்வுள்ள.

complain', *n.* முறையீடு; *v.* முறையிடு, குறை தெரிவி; வருத்தம் வெளியிடு; குற்றங்கூறு; கண்டி; மனக்குறை உணர்த்து; முணுமுணுத்துக்கொள்; ஏங்கு, நோவுகொண்டு இரங்கு.

complain'ant, *n.* முறையீட்டாளர், குறை கூறுபவர்; (சட்.) வாதி, வழக்காடுபவர்.

complain'er, *n.* முணுமுணுப்பவர், குறை கூறுபவர்; முறையிடுபவர்; வாதி.

complaint', *n.* முறையீடு; குறையீடு, குறை தெரிவிப்பு; குற்றச்சாட்டு, குறை, குற்றம்; நோவு, பிணி; பிணிபற்றிய குறையீடு; வழக்கு, வருத்தமறிவிப்பு; மனக்குறை; இரங்கற்பா, துயர்ப்பாடல்.

complaisance', *n.* இன்முகமுடைமை, மகிழ்வூட்டும் பண்பு, துணைமை நயம், விட்டுக் கொடுப்பு மனப்பான்மை.

complaisant', *a.* அன்பாதரவான; மகிழ்வூட்டும் விருப்புள்ள; எளிமைத் திறமுள்ள; மன்னிக்கும் பாங்குடைய.

com'planate, *a.* தட்டையான.

complect', *v.* தழுவு; இணைத்துப்பின்னு.

com'plement[1], *n.* நிரப்புக் கூறு; முழுமையாக்குவது; குறைநிரப்புப் பொருள்; இணைநிறைவுப்பொருள்; இணைவள நிறைவு; (வடி.) செங்கோண நிரப்புக்கூறு, நிரப்புக்கோணம், செங்கோண அளவாகிய 90 பாகையில் கோணம் குறைபடும் அளவு; (இலக்.) வினையுடனிணைந்து பயனிலைப்பொருள் நிரப்பும் சொல்; (இசை.) சுர இடையீடு பாலையில் குறைபடும் அளவு; வண்ணத்தை வெண்மையாக மாற்றவல்ல எதிர் வண்ணக்கூறு, எதிர் நிரப்பு வண்ணம்; எண் மடக்கை பத்தில் குறைபடும் அளவு; முழுமை.

complement'[2], *v.* நிரப்புக்கூறுயமை; குறைநிரப்பு.

complement'al, *a.* முழுமையாக்குகிற; நிரப்புகிற.

complemen'tary, *a.* முழுமையாக்குகிற; இணைந்து முழுமையாகவல்ல; இணைந்து செங்கோணமாகவல்ல; இணைந்து வெண்ணிறமாகவல்ல; இணைந்து மடக்கையைப் பத்தாக்கவல்ல; இணைந்து இசையிடையீட்டை ஒருபாலையாக்கவல்ல.

complete', *a.* குறைபாடற்ற; முழுநிறைவுடைய, முழுமையான; முடிந்த; நிறைவான; முழுமையும் ஆயத்தமான; நிறைவு செய்யப்பட்ட; நிறைவான; *v.* முடி; முழுமையாக்கு; நிறைவேற்று.

comple'tion, *n.* நிறைவுசெய்தல்; நிறைவு; முழுமையான நிலை.

complet'ive, complet'ory, *a.* முழுமையாக்குகிற; நிறைவேற்றுகிற.

com'plex[1], *n.* சிக்கல் வாய்ந்த முழுமை; பல்திறக்கூட்டொருமை; (உள.) செறிதேக்க உணர்ச்சித் தொகுதி, அடக்கி உணர்வாழத்தின் மறதியில் செறிவிக்கப்பெற்றுக் குமுறும் உணர்ச்சித்தொகுதி; உள்ளுணர்ச்சிச் சிக்கல் நிலை; *a.* பல்கூட்டான, பல்கூட்டுத் தொகுதியான; எளிதற்ற, உட்சிக்கல் வாய்ந்த; கடுமைவாய்ந்த; (இலக்.) உள்ளிணைவான, வாக்கியங்கள் வகையில் சார்பு வாசகங்களை உட்கொண்ட; (தொ.) complex number, (கணை.) மெய்ந்நிலை எண்-புனைவியலெண் ஆகியவற்றின் கூட்டுத்தொகை; complex sentence, கலப்பு வாக்கியம், சிறுவாசகங்களுடன் ஒரு நேர்வாசகம் உட்கொண்ட வாக்கியம்; inferiority complex, தாழ்வு மனப்பான்மை; superiority complex, உயர்வு மனப்பான்மை.

complex'[2], *v.* சிக்கலாக்கு; கடினமாக்கு.

comple'xion, *n.* இயல் நிறம்; மேனி வண்ணம்; உடலின் புறத்தோற்றம், முகத்தோற்றம்; தோற்றம்; மனநிலை; குணம், பண்பு; *v.* நிறங்கொடு.

complex'ional, *a.* மேனி நிறஞ்சார்ந்த; இயல்நிறம்பற்றிய; முகத்தோற்றத்துக்குரிய.

complex'ioned, *a.* நிறம்கொண்ட; தோற்றம் உடைய; பண்புள்ள.

complex'ionless, *a.* தனிநிறமற்ற; வெளிறிய.

complex'ity, *n.* உட்சிக்கல் நிலை, கடுஞ்சிக்கல்.

compli'ance, **compli'ancy**, *n.* கீழ்ப்படிதல்; இணக்கம்; உடன்பாடு; பணிவிணக்கப் பண்பு.

compli'ant, *a.* கீழ்ப்படிகிற; இணங்குகிற; நெகிழ்வுடைய; விட்டுக் கொடுக்கிற.

com'plicacy, *n.* சிக்கலான நிலை.

com'plicate, *a.* சிக்கலான, சிக்கிக்கிடக்கிற, உள் மடித்துப் பின்னிக்கிடக்கிற; குளறுபடியான; *v.* சிக்கலாக்கு; முறுக்கு, பின்னு; மாட்டவை, சிக்கவை.

com'plicated, *a.* சிக்கலான; புரியாத; குழப்பமான; (தொ.) complicated fracture, சிக்கலான எலும்பு முறிவு, புற்பான வேறு ஊறுபாட்டின் சிக்கலுடைய எலும்பு முறிவு.

complica'tion, *n.* சிக்கலான கலப்பு; பின்னல் கோளாறு; (தொ.) complication of diseases, ஒரே சமயத்தில் பல நோய்கள் உடனியலுதல்.

com'plicative, *a.* சிக்கலாக்கும் இயல்புடைய.

complic'ity, *n.* சிக்கியிருத்தல்; உடந்தைமை, குற்றப் பொறுப்பில் பங்கு; சிக்கல் தன்மை.

com'pliment[1], *n.* முகமன், இன்புகழ்ச்சியுரை, நயநாகரிக மொழி; ஆசாரமொழி, உபசார வார்த்தை; நுண்ணயம் வாய்ந்த முகப்புகழ்ச்சி; ஆசாரநடைமுறை; பரிசு; (தொ.) compliments of the season, சிறப்பான காலங்களுக்குப் பொருத்தமான வாழ்த்துரைகள், பருவ வாழ்த்துரைகள்; left-handed compliment, போலிப்பாராட்டுரை, வஞ்சப் புகழ்ச்சி உரை; pay one's compliments, present one's compliments, வணக்கம் தெரிவி, வாழ்த்துத் தெரிவி.

compliment'[2], *v.* இன்புகழ்ச்சி கூறு; நுண்ணயத்துடன் முகப்புகழ்ச்சி செய்; நேசமதிப்புத் தெரிவி; பாராட்டு, மகிழ்ச்சி தெரிவி; அன்பளிப்புச் செய்.

compliment'al, *a.* புகழ்ச்சி தெரிவிக்கிற; நேசப்புகழ்ச்சியான.

com'plimentary, *a.* புகழ்ச்சி தெரிவிக்கிற; பாராட்டு முறையான; அன்பளிப்பான; இலவசமான.

com'plin, com'pline, *n.* நாளின் கடைசி ஆராதனை, துயில் கொள்ளும் முன் ஓதும் செபம்.

comply', *v.* பிறர் விருப்பத்திற்கு இணங்கச் செயலாற்று, இசைந்து கொடு, உடன்படு.

com'po, *n.* சிமிட்டி கலந்த காரை; சுவரை அழகு செய்யும் பசைக் கலவைப் பொருள்; கடன் தீர்க்க வகையற்றவரிடம் கடன்கொடுத்தோர் பெற்றுக்கொள்ளும் நூற்றுவீதம்.

compon'ent, *n.* ஆக்கக்கூறு, உள் உறுப்பு, உள்ளடங்கிய பகுதி; *a.* ஆக்கக்கூறான, பகுதியாயுள்ள, அங்கமான.

comport', *n.* நடத்தை; *v.* இணங்கு, இசைவுறு; மதிப்புடன் நடக்கும்படி செய், தகுதியுடன் நடந்துகொள்ளுவி.

comport'ment, *n.* நடைநயம், நடந்துகொள்ளும் முறை, நடத்தை.

compose', *v.* இணைந்து ஆக்கு, ஒன்றுபட்டு உருவாக்கு; சொற்களை இணைத்துப் பாட்டியற்று, யாப்பமைதிப்படுத்து; பண் புனைந்து உருப்படுத்து, பாட்டிசைப்படுத்து; கருத்துரு வாக்கு, சொல்லமைதிப்படுத்து; அச்சுக்கோத்தினை; அச் சுருப்படுத்து; இணக்கமாக்கு; பிணக்குத்தீர்த்துவை; அமைதிப்படுத்து, தணியச்செய்; கலை ஒழுங்குபடுத்து; சரிப் படுத்து, முன்னேற்பாடு செய்தமை.

composed', *a.* தணிந்த; தீர்ந்துபோன; அமைந்த; அமைதி யான.

compos'er, *n.* இசைப்பாடல் ஆக்குவோர், பண்ணமைப் பாளர்; எழுத்தாசிரியர்; ஏட்டாசிரியர்.

compos'ing-stick, *n.* அச்சுக்கட்டை, பெட்டி போன்ற அச்சுக்கோப்புக் கருவி.

com'posite, *n.* பல சேர்ந்தமைந்த பொருள்; சூரியகாந்திக் குடும்பத்தைச் சேர்ந்த செடி; *a.* பலவின் ஆக்கம் சார்ந்த, பல்வகை தொக்க; (க-க.) கட்டிடக் கலைப்பாணிகள் மிடைந்து மிளிர்கிற; (தாவ.) தனி மலர் வடிவான கொத்துமலர் சார்ந்த; (தொ.) composite carriage, பல வகுப்புகளுள்ள புகைவண்டிப் பெட்டி; composite portrait, பல படங்களின் இணைப்போவியம்; பலர்பட எதிர்படிவ இணைப்பச்சு வடிவம்; ஒரே மனிதரின் பலபடிவ இணைப்பச்சு வடிவம்.

composi'tion, *n.* இணைப்பாக்கம்; கூட்டமைவு; ஆக்க அமைவு; ஆக்க இசைவுப்பொருத்தம், உறுப்பளவமைதி, கூறமைதி; கலவை; கட்டுரை; இசைப்பாட்டு; இசைப் பாட்டுருப்படி; கலைப்படைப்பு; கட்டுரையாக்கம், கட்டுரை யாக்கக் கலை; கூட்டமைதி ஒப்பந்தம்; விட்டுக்கொடுப்பு; இருதிசைக்கலப்பு இணைப்பாலேற்படும் ஒருமை, சமரசம்; வகையற்றவர்களின் கடன்காரர் பெறும் பங்குவீதம்; (கணி.) பல்திற ஆற்றல் வேகங்களின் ஒருமுகச் செயல்திற இணைவு; (தொ.) composition of felony, கொடுங் குற்றத்திற்கான வழக்கைத் தொடராமலிருத்தல்.

compos'itive, *a.* இணைகிற, சேருகிற.

compos'itor, *n.* அச்சுக்கோப்பவர்.

com'pos men'tis, (ல.) *a.* நலமார்ந்த உள்ளத்துடன்கூடிய, அறிவுக்கோளாறற்ற மனநிலையில் உள்ள.

composs'ible, *a.* ஒரேசமயத்தில் ஒருங்கு உடனெய்து இருக்கக்கூடிய, மற்றொன்றோடு உடனிணைவாய் இயலத்தக்க.

com'post, *n.* கலப்பு உரம்; இணைப்பு, கலவை; *v.* கலப்பு உரமிடு; கூட்டு உரம் உண்டுபண்ணு.

compo'sure, *n.* தன்னிறைவமைதி, சமநிலையமைதி, அமை வடக்கம்.

com'pot, *n.* தேம்பாகில் பதனம் செய்யப்பட்ட பழம்.

compota'tion, *n.* கூட்டமாக மதுக்குடித்தல்.

com'potator, *n.* குடிகாரத் தோழன்.

com'pote, *n.* = compot.

com'pound[1], *n.* பல்சினைப்பொருள், பல கூறுகளடங்கிய திரள்; பல் பொருட் கூட்டு; (வேதி.) சேர்மானம், ஆக்கக் கூறுகள் தம் இயல்மீறிய புதுப்பண்புகளையுடைய புதுப் பொருளாகும் நிலையுடைய கலவை; சொற்கூட்டு, தொகை மொழி; (மரு.) கூட்டுச்சரக்கு; *a.* பலகூறுகளால் ஆக்கப் பட்ட; பல பகுதிகளைக் கொண்ட; கலப்பினமான; (கணி.) கூட்டு நிலையான, பல் கவரான; (மரு.) சிக்கல் வாய்ந்த; (வேதி.) கூட்டான, ஆக்கக்கூறுகள் தம் இயல்மீறிய புதுப் பண்புகளையுடைய புதுப்பொருளாகும்படியான இணைவு சார்ந்த; (தொ.) compound animal, உடல்கள் ஒன்றுபட்டிணைந்த உயிர்களின் தொகுதி; compound engine, ஒரே நீராவி உருளையால் இயக்கப்படும் இயந்திரத்தொகுதி; compound fracture, தோல்சதைக் காயங்களுடனிணைந்த சிக்கலான எலும்பு முறிவு; compound householder, வாடகைப் பணத்துடன் வரியையும் சேர்த்து வீட்டுக்காரரிடம் கட்டும் நிலைக் குடிக்கூலிக்காரர்; compound interest, கூட்டு வட்டி; compound leaf, பல்லலகிலை, நடுநரம்புவரை முழுதும் பிளவுபட்டுத் தனிச் சிற்றிலைகள் போலமைந்துள்ள பகுதி களையுடைய இலை; compound quantity, (கணி.) கலப்பினக் கூட்டளவெண்; compound ratio, தொடர் தகவெண், ஒன் றுக்கு மேற்பட்ட தகவுகளின் சினைப்பெருக்க எண்களின் தகவெண்; compound sentence, கூட்டு வாக்கியம், துணை வாசகங்களுடனே அவை இல்லாமலோ தலைவாசகங்கள் ஒன்றுக்கு மேற்பட்டன இணைந்துவரும் வாக்கியம்; compound time, (இசை.) கூட்டுத்தாளக் குறி.

compound'[2], *v.* கலந்து இணை; சேர்த்து ஒன்றுபடுத்து; இருதரப்பும் ஒருங்கொத்து முடிவுகாண்; குற்றச்சாட்டு வழக்கை ஏதேனும் நலம்பெற்றுப் பின்வாங்க இணங்கு; சமரசத்துக்கு ஒத்துப்போ, உடன்பாட்டுக்கு இசை; மொத்தப் பேரம் செய்.

com'pound[3], *n.* வளாகம், வீட்டைச்சுற்றிய மதிலக வளவு.

compound'er, *n.* மருந்துகலப்பவர்.

comprador', **compradore'**, *n.* சீன வணிகருடன் வாணிகம் செய்ய ஐரோப்பிய வாணிகக் கழகங்கள் பயன்படுத்தும் இடையாள்; ஐரோப்பிய வாணிகக் கழகங்களின் சீன வேலை யாள்.

comprehend', *v.* மனத்தால் பற்று, தெரிந்துகொள், புரிந்து கொள், அறி; உட்கொள், தன்னகம்படக் கொள்.

comprehen'sible, *a.* புரிந்துகொள்ளக்கூடிய, அறிந்து கொள்ளத்தக்க; உட்கொள்ளத்தக்க.

comprehen'sion, *n.* உணர்வாற்றல், புரிந்துகொள்ளும் திறன்; பிறவற்றை அகங்கொண்டியலும் நிலை; இங்கிலாந்து நாட்டுத் திருச்சபையினுள் (Church of England) அதற்குப் புறம்பானவர்களையும் அகங்கொள்ளுதல்; சொல்லின் பொருள்கவிவு ஆற்றல்; (அள.) பதப்பொருளிலடங்கிய பண்புக் குறிப்புத் தொகுதி.

comprehen'sive, *a.* உணர்வாற்றல் சார்ந்த; புரிந்து கொள்ளும் திறனுள்ள; கவிவாற்றல் மிக்க, விரிபொருள் அகப்படுத்தவல்ல; அகல் விரிவான; அகல் பெருந்தொகுதி யான; (தொ.) comprehensive school, பல்வகைப் பயிற்சி களை உடைய உயர்நிலைப் பள்ளிக்கூடம்.

com'press[1], *n.* உறுப்புகட்கு அழுந்தந்தரப் பயன்படுத்தப் படும் பஞ்சு திணித்த கட்டுத்துணி; வீக்கமடக்கக் கட்டும் நீர் தடையிட்டுப் பொதியப்பட்ட ஈரத்துணி.

compress' [2], *v.* நெருக்கி அழுத்து ; சிறு இடத்திற்குள் திணித்துச் செலுத்து ; சுருக்கு ; திட்பம் மிகுவி, செறிவி, அடர்த்தியாக்கு.

compressed', *a.* சேர்த்து அழுத்தப்பட்ட ; நெருக்கமாக அமைக்கப்பட்ட ; (உயி.) பக்கவாட்டில் தட்டையாக்கப் பட்ட, ஒடுக்கப்பட்ட.

compressibil'ity, compress'ibleness, *n.* அழுத்தத்தினால் பரும அளவு குறையும் தன்மை ; பரும அளவுக்கு அழுத்த எடையின் அழுத்த வீதம்.

compress'ible, *a.* அழுத்தக்கூடிய ; சுருக்கக்கூடிய.

compress'ion, *n.* அழுத்துதல் ; அழுத்தம் ; அழுத்தப்படும் நிலை : அமுக்கம், அடர்த்தி, நெருக்கம் ; சுருக்கம் ; அழுத்தத் தால் ஏற்படும் உருத்திரிவு ; தட்டையாதல் ; உள்வெப்பாலை யில் வளி அமுக்கும் இயக்கம்.

compress'ive, *a.* அழுத்தக்கூடிய ; அடர்த்தியாக்குகிற ; நெருக்கித் தட்டையாக்கக்கூடிய.

compress'or, *n.* அழுத்தும் கருவி, அமுக்கம் பெருக்கும் இயந்திரப் பகுதி ; அழுத்தும் தசைநார்.

compris'al, *n.* உட்கொண்டிருத்தல், உள்ளடக்கமாகக் கொள்ளுதல், பாகமாகப் பெற்றிருத்தல்.

comprise', *v.* உட்கொண்டிரு, உள்ளடக்கமாகக் கொண்டிரு, உட்கூருகக் கொண்டிரு ; ஆக்கக் கூருக்கு.

com'promise, *n.* சமரச இணக்கம், இருபுற விட்டுக்கொடுப் புடன் ஏற்படும் உடன்பாடு ; சமரச விட்டுக்கொடுப்பு, இளக் காரச்சலுகை ; இடைநிலைப்பாடான ஒன்று, இரண்டுங்கெட்ட நிலையுடைய செய்தி ; *v.* இருதிறமும் விட்டுக்கொடுக்கச் செய்து உடன்பாடு உண்டுபண்ணு ; உடன்படு, ஒப்பந்தம் செய் ; விட்டுக்கொடு ; கவர் நிலைக்கு ஆளாக்கு, ஐயுறவு நிலைக்கு உட்படுத்து.

comprovin'cial, *n.* சமயவட்டத்தலைவர் வகையில் அதே மாகாணத்தைச் சேர்ந்தவர்.

comptroll', *n.* = control.

comptroll'er, *n.* கணக்குத் தணிக்கையாளர், தம்பட்ட சாலையிலும் கடற்படையிலும் செலவுக் கட்டுப்பாட்டாளர்.

compulse', *v.* கட்டாயம்பண்ணு.

compul'sion, *n.* வலுக்கட்டாயம், வல்லந்தம், நிர்ப்பந்தம்.

compul'sionist, *n.* வலுக்கட்டாயம் செய்வதில் நம்பிக்கை யுள்ளவர்.

compul'sitor, *n.* (சட்.) கட்டாயம் செய்யும் வகைதுறை.

compul'sive, *a.* வலுக்கட்டாயம் வாய்ந்த ; கட்டாயப்படுத் தும் ஆற்றலுள்ள.

compul'sory, *a.* வலுக்கட்டாயமான, வல்லந்தமான ; பெருங் கட்டுப்பாடுடைய.

compunc'tion, *n.* மனச்சான்றின் உறுத்தல், உள்ளுறுத் தல் ; கழிவிரக்கம், வருத்தம் ; உணர்ச்சித் தயக்கம்.

compunc'tious, *a.* மனச்சான்றின் உறுத்தலுடைய ; குத்த லுணர்ச்சியுடைய, உணர்ச்சித் தடையுடைய ; கழிவிரக்க முடைய.

compurga'tion, *n.* குற்றச்சாட்டு நீக்கம், குற்றவாளிக்குச் சார்பான சான்றாளர் சான்று முடிவு.

com'purgator, *n.* மற்றொருவருடைய குற்றமற்ற தன்மைக்கு உறுதிச் சான்றளிப்பவர்.

comput'able, *a.* கணிக்கத்தக்க, கணக்கிடத்தக்க ; அளவிட்டு மதிப்பிடக்கூடிய.

com'putant, *n.* கணக்கிடுபவர்.

computa'tion, *n.* கணக்கிடுதல், மதிப்பிடுதல், எண்ணி அளவிடுதல், கணிப்பு.

com'putative, *a.* கணக்கிடும் இயல்புடைய.

com'putator, *n.* = computant.

compute', *v.* கணக்கிடு, எண்ணி அளவிடு, கணி, மதிப்பிடு.

comput'er, *n.* கணக்கிடுபவர் ; கணக்கிடும் பெரிய பொறி.

com'putist, *n.* = computant.

com'rade, *n.* தோழன். ஏடன் ; நெருங்கிய துணைவன், உற்ற நண்பன் ; பொதுவுடைமை பொதுவுறச் சூழல்களில் தனி மனிதர் குறித்த மதிப்படைமொழி.

Com'stockery, *n.* கலை இலக்கியத் துறையில் ஆன்டனி காம்ஸ்டாக் (Anthony Comstock 1844-1915) என்ற அமெரிக்கர் எழுப்பிய பட்டாங்க மெய்ம்மைப்பாங்கெதிர்ப்பு.

Comti'sm, *n.* அகஸ்ட் காம்டே (Auguste Comte 1798.1857) தோற்றுவித்த நேர்க்காட்சி வாதம் (Positivism).

con [1], *v.* கவனத்தோடு படி ; மேலோட்டமாகப் பார் ; மனப் பாடம் செய்.

con [2], *n.* விமான முதலியவற்றை ஓட்டுதற்கு வழிகாட்டுதல் ; விமான முதலியவற்றை ஓட்டுபவர்க்குரிய வழிகாட்டு நிலை யம் ; *v.* விமான முதலியவற்றை ஓட்டுபவருக்கு வழிகாட்டு.

con [3], *n.* எதிராக உள்ளது ; *prep.* எதிராக ; (தொ.) pros and cons, ஆதரவாகவும் எதிராகவும் உள்ளவை, சாதக பாதகங்கள்.

con [4], *n.* நம்பிக்கையார்வம் ; *v.* நம்பிக்கைமோசம் செய் ; ஏமாற்று ; (தொ.) con game, நம்பிக்கை மோசடி.

con'acre, corn'acre, *n.* அயர்லாந்து (Ireland) நாட்டில் நிலக்கிழாக் குத்தகைமுறை ; *v.* கீழ்க்குத்தகைக்கு விடு.

con amor'e, (இத்.) *adv.* ஆர்வத்தோடு ; பற்றவாவுடன்.

cona'tion, *n.* செயல் துணிவாற்றல், விருப்பு வெறுப்புணர்ச்சி களைச் செயல்படத்தூண்டும் மன ஆற்றல்.

cona'tus, *n.* முயற்சி ; உள் தூண்டுகை ; போக்கு, சார்பு.

concat'enate, *v.* தொடராக இணை ; தொடர்புபடுத்து, சங்கிலிபோல் தொடு, கோவைப்படுத்து.

concatena'tion, *n.* கண்ணிகளின் தொகுதி, சங்கிலித் தொடர்கோவை ; ஒன்றோடொன்று சார்பு கொண்டுள்ள பொருட்களின் தொடர்வரிசை.

con'cave, *n.* உட்குழிவான வடிவம், குழிவு, பள்ளம் ; மேல் வளைவு, வான வளைவு, நிலவறை வளைவு மாடம் ; *a.* உட் குழிவான, பள்ளமான ; *v.* உட்குழிவாக்கு ; பள்ளமாக்கு.

concav'ity, *n.* உட்குழிவு நிலை ; பள்ளம்.

conca'vo-con'cave, *a.* இருபக்கங்களும் உட்குழிவான.

conca'vo-con'vex, *a.* ஒருபுறம் உட்குழிந்து மறுபுறம் வெளிக்குவிவான.

conceal', *v.* முழுதும் மறை ; நன்கு மறைத்துவை ; மறை வடக்கமாக வைத்திரு ; மாற்றுருக்கொள் ; வெளியிடாதிரு, மறையடக்கு.

conceal'ment, *n.* மறைத்தல் ; மறைவடக்கம், ஒளிவு மறைவு ; மாற்றுருவம் ; மறைவிடம், பதுங்கிடம்.

concede', *v.* எதிர்ப்பின்றி விட்டுக்கொடு ; சலுகையளி ; அட்டியில்லாமல் ஏற்றுக்கொள், ஒத்துக்கொள்.

conceit', *n.* இறுமாப்பு, போலித் தற்பெருமை, தற்செருக்கு ; கருத்துப் படிவம் ; கற்பனை, தற்புனைவு ; சொல்திறம், திறம் பட்ட கருத்து ; வீணெண்ணம் ; போலிக் கருத்து ; செயற் கைக் கற்பனை ; போலிப் புனைவு ; செயற்கை அணி, போலி நயம் ; மதிப்பீடு, பாவனை ; *v.* புனைந்து கற்பி, இல்லாததை உள்ளதாகத் தன்னையே நம்ப வை ; (தொ.) out of conceit with, வெறுப்புடன்.

conceit'ed, *a.* போலித் தற்பெருமையுடைய, செருக்குள்ள, இறுமாப்புடைய ; தன்முனைப்புள்ள, ஆணவமுடைய.

conceit'y, *a.* இறுமாப்பு வாய்ந்த.

conceiv'able, *a.* கருதத்தக்க, எண்ணிப்பார்க்கக் கூடிய, மனத்தால் பாவிக்கவல்ல.

conceive', *v.* கருக்கொள், சூலுறு ; கருது, கருத்தில் உரு வாக்கு ; பாவனை செய், எண்ணிப்பார் ; உணர், புரிந்து கொள் ; கருத்துப்பற்றிக்கொள் ; சொல்லுருவில் கருத்துக் குறிப்பிடு.

concel'ebrate, *v.* ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் சமய மாவட்ட முதல்வரால் புதிதாக அமர்வுபெற்ற சமயகுரு வகையில் அமர்வு செய்த முதல்வருடனிருந்து திருவுணு வினை முறை நிகழ்த்து.

concent', *n.* பல்குரல் இசைவு.

concent'er, *v.* = concentre.

con'centrate [1], *n.* மனம் ஒருமுகப்படுத்துவதன் விளைபயன்; *v.* பொதுமைய நோக்கி இயக்கு; பொதுமையம் நோக்கிச் செல்; சுருத்தை ஒருமுகப்படுத்து, எண்ணங்களை ஒரு பொருள் நோக்கிச் செலுத்து, முழுக் கவனத்தையும் ஒருங்கே ஒருநிசையில் செலுத்து; ஒருமுகப்படு, ஒருமுக நோக்கு; கெட்டியாக்கு, முழுச்செறிவூட்டு; குறிப்பிட்ட பருமனளவுக்கு அணுத்திரள்வீத மிகுதியாக்கு.

concen'trate [2], *a.* பொது மையமுடைய; கெட்டியான; செறிவான.

concentra'tion, *n.* ஒருமுகப்படுத்துதல்; ஒருமுகப்படல்; ஒரு முகச் சிந்தனை; கூர் நோக்கு; கருத்தூன்றல், ஒருமித்த கவனம்; கெட்டியாக்குதல்; திட்பம், அடர்த்தி, செறிவு; பிழம்பளவில் அணுத்திரளின் மிகு வீதம்; (தொ.) concentration camp, அரசினருக்கு எதிர்ப்பானவர்களை ஒதுக்கி வைக்கும் குடியேற்றப் பகுதி.

con'centrative, *a.* ஒருமுகப்படுத்தும் தன்மை வாய்ந்த.

con'centrator, *n.* கரைசல்களைக் கெட்டியாக்கும் கருவி; சுரங்க உலோகக் கலவையிலிருந்து கனிப்பொருள்களைப் பிரித்து எடுக்கும் கருவி.

concent're, *v.* பொதுமையத்தில் கூடு; பொதுமைய நோக்கிச் செல்; ஒரே மையம் கொண்டிரு; பொது மையத்தை நோக்கி இயக்கு.

concen'tric, concen'trical, *a.* ஒரே மையமுள்ள, பொது மையம் கொண்டுள்ள.

con'cept, *n.* கருத்துப்படிவம்; பொதுக்கருத்து; ஓரினப் பொருளைச் சுட்டும் கருத்து; கருதப்பட்ட ஒன்று.

concep'tacle, *n.* வைக்குமிடம், கொள்ளுமிடம்; கருக்குழி.

concep'tion, *n.* கருக்கொள்ளுதல்; மலர்த்துகள் பொலிவுறுதல்; கருதுதல், கருத்துருவாக்கல்; எண்ணம், கருத்து; கருத்தாற்றல்; கற்பனையாற்றல்; திட்டப்புனைவாற்றல்; கருத்துருவம், திட்டம்.

concept'ive, *a.* எண்ணங்களுக்குரிய; கருத்தரித்தல் தொடர்பான.

concep'tual, *a.* பொதுக்கருத்துத் தொடர்பான; கருக் கொள்ளுதல் சார்ந்த.

concep'tualism, *n.* பொதுமைக் கருத்துக்கள் மனத்தில் தான் உள்ளன என்னும் மெய்விளக்கியல் கோட்பாடு.

concern', *n.* சார்புடையது; தொடர்பு, சார்பு; அக்கறை; கவலை; மதிப்பு; கவனம்; தொழில் நிறுவனம், அமைப்பு; *v.* தொடர்புடையதாயிரு, சார்புடையதாயிரு, பற்றியதாயிரு, உரியதாயிரு; நலந்தீங்குகளுக்கு உரித்தாயிரு; பாதிப்பதாயிரு; தொழில் கடமை அல்லது நலங்கள் சார்ந்ததாயிரு; ஈடுபாடு கொண்டிரு; தொடர்புபடுத்து, சார்புபடுத்து; அக்கறை யூட்டு; மன அமைதி கலை, கவலையுண்டு பண்ணு; (தொ.) as concerns, பற்றி, சார்பாக, வகையில்.

concern'ancy, *n.* தொடர்பு, பொருத்தம்.

concerned', *a.* தொடர்பு கொண்ட, சார்புடைய; அக்கறையுள்ள; கவலையுடைய; ஈடுபட்டுள்ள; துன்பப்படுகிற.

concern'ing, *prep.* பற்றி, குறித்து; சார்பாக, வகையில்.

concern'ment, *n.* முக்கியத்துவம்; ஈடுபட்டுள்ள செய்தி, தொழிலீடுபாடு.

con'cert [1], *n.* ஒற்றுமை, இசைவு, உடன்பாடு; ஒத்திசைவு; இசைத்திற இயல்பு; இசையரங்கு நிகழ்ச்சி; (தொ.) concert pitch, இசையரங்க முழக்கதிர்வெல்லியின் கட்டளைப் பொது அளவு.

concert' [2], *v.* ஒன்றுசேர்ந்து திட்டமிடு; ஏற்பாடு செய்; சரி செய்.

concert'ed, *a.* பலர் சேர்ந்து ஒன்றுபட்டுத் திட்டமிட்ட; (இசை.) பகுதி பகுதியாக வகை செய்யப்பட்ட.

con'cert-goer, *n.* இசை நிகழ்ச்சிகளுக்கு வழக்கமாகச் செல்பவர்.

con'cert-grand, *n.* இசை நிகழ்ச்சிகளுக்கேற்ற பேரிசைப் பெட்டி.

concerti'na, *n.* துருத்திபோன்ற இசைக்கருவி வகை; *v.* இசைக்கருவி வகையில் மடங்கிச் சுருக்கப்பெறு.

concerti'no, *n.* தனி இசைக்கருவிக்காக அமைக்கப்பட்ட சிறு பாடல்.

concer'to, *n.* தனி இசைக்கருவிக்கும் பல்லியத்திற்கும் பயன்படும்படி அமைக்கப்பட்ட பாடல்; *pl.* concer'tos.

concessi'on, *n.* விட்டுக் கொடுத்தல்; விட்டுக்கொடுப்பு; சலுகை; கொடைப்பொருள், பொருளுதவி; சலுகை உரிமைக் கொடை, தனியாள்-குழு அல்லது அரசினர் பயன்படுத்திக் கொள்ளும்படி நிலப்பகுதி விட்டுக்கொடுக்கப்படுதல்.

concessionaire', *n.* கொடைப்பொருள் பெற்றவர்; சலுகைக் கொடை உரிமை பெற்றவர்.

concess'ive, *a.* விட்டுக்கொடுக்கும் இயல்புள்ள; விட்டுக் கொடுக்கும் குறிப்புடைய; சலுகையான.

concett'ism, *n.* செயற்கைச் சொல்லடுக்குகளைப் பயன்படுத்தல்.

conch, *n.* சங்கு; கிளிஞ்சல் சிப்பி வகை; ஊது சங்கு; (க-க.) வளைவுமாடத்தின் அரையுருளை முகடு; அரைவட்ட வளைவு மாடம்; புறச்செவி; புறச்செவி மையம்.

conch'a, *n.* அரைவட்ட வளைவுமாடம்; வளைவுமாடத்தின் அரையுருளை முகடு; புறச்செவி; புறச்செவி மையம்.

conch'ate, conch'iform, *a.* கிளிஞ்சல் வடிவான; சிப்பி போன்ற அமைப்புள்ள.

conchif'erous, *a.* தோடுள்ள; மேலோடுடைய.

conchol'ogy, *n.* சிப்பி-சிப்பியோட்டாய்வு நூல்.

concierge, (பிர.) *n.* பாதுகாவலர்; சிறைச்சாலை-மாணவர் விடுதி இவற்றின் மேலாள்; வாயில் காப்போன்; வாயில் காக்கும் பெண்.

concil'iar, *a.* மன்றம் சார்ந்த, திருச்சபை குழாத்துக்குரிய.

concil'iate, *v.* இணக்கப்படுத்து, சந்து செய்வி; சரி செய்தீணை; தன் வயப்படுத்திக்கொள், நட்பினராக்கு; நன்மதிப்புப் பெறு; நட்பாடு.

concilia'tion, *n.* இணக்கப்படுத்தல், சந்து செய்வித்தல்; ஒப்புரவிணக்கம், சமரசம்.

concinn'ity, *n.* இலக்கிய அழகுநயம்; இசைவிணக்கம்; பொருத்தம்; நடை நயம்; நேர்த்தி.

concinn'ous, *a.* அழகு செறிந்த; இசைவிணக்கமுடைய; நேர்த்தியான.

concise', *a.* சுருக்கமான, பொழிப்பான, அடக்கமான.

concise'ness, *n.* சுருக்கம், அடக்கம், திட்பம்.

conci'sion, *n.* வெட்டுகை; உறுப்பழிவு; சுன்னத்து; சுருக்கம்; பொழிப்பு.

conclama'tion, *n.* பலர் சேர்ந்து எழுப்பும் பேரொலி.

con'clave, *n.* போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கக் கத்தோலிக்க கருதினுல்மார் (cardinals) கூடியிருக்கும் அறை; போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுடைய கருதினுல்மார் குழு; தனிக் கூட்டுக்குழு.

con'clavist, *n.* போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கக் கூடும் கருதினுல்மார் குழுவின் ஊழியன்.

conclude', *v.* முடிவுறு; முடிவுக்குக் கொண்டுவா; ஏற்பாடு முற்றுவி, செய்து முடி; முடிவு செய்; தீர்மானி; ஆய்ந்து முடிவுகாண், முடிவுக்கு வா, முடிவு உருவாக்கு; (சட்.) நோக்கம் தெரிவி.

conclud'ed, *a.* முடிந்த; தீர்க்கப்பட்ட.

conclud'ing, *a.* முடிவான; இறுதியான.

conclu'sion, *n.* முடிவு செய்தல்; முடிவு; முடிபு, தீர்மானம்; முடிவுரை, முடிவுப் பகுதி; வாத முடிபு; ஆய் முடிபு; (தொ.) in conclusion, இறுதியாக, முடிவாக; to try conclusion, சோதனை செய்; போட்டி அல்லது போரில் ஈடுபடு.

conclu'sive, conclu'sory, *a.* இறுதியான; முடிவான; நம்பவைக்கிற; மெய்ப்பிக்கிற.

concoct', *v.* சேர்த்து வடித்திறு; இணைத்து உருவாக்கு; புனைந்தியற்று, கற்பனை செய், இட்டுக்கட்டு; திட்டமிடு; சதி செய்; உண்டுபண்ணு, குதிர வை, பாகம்பண்ணு; செரிமானம் செய்.

concoc'tion, *n.* கலந்து வடித்திறுத்தல்; வடிசாறு; மருந்துக் கலவை; பொய்புனைதல்; புனைசுருட்டு, கட்டுக்கதை; முதிர்வு, குதிர்வு.

con'color, concol'rate, concol'orous, *a.* ஒரு சீர் வண்ணம் கொண்ட.

concom'itance, concom'itancy, *n.* இணை நிலை; ஒருங்கிணைந்து இயலும் தன்மை.

concom'itant, *n.* உடனிணை துணைவர்; உடனிணை துணை; இணைந்தியலும் பொருள்; *a.* உடனியங்குகிற, இணைந்த, ஒன்றுசேர்ந்த.

conc'ord [1], *n.* உடன்பாடு, இசைவு, இணக்கம், ஒருமனப் பாடு; ஒப்பந்தம்; (இசை.) செவிக்கின்பந்தரும் ஒலிகளின் சேர்க்கை, செவ்விசைவு; (இலக்.) சொற்களுக்கிடையே பால்-எண்-இடம் பற்றிய ஒத்திசைவு.

concord' [2], *v.* உடன்படு, இணங்கு, இசைவுறு.

concord'ance, *n.* ஒத்திசைவு; ஏட்டின் சொல்தொகுதி விளக்கப்பட்டியல்.

concord'ant, *a.* ஒத்திருக்கிற, இணக்கமான, இசைவான; ஒருமனப்பட்ட, ஒருமைப்பட்ட; (இசை.) செவ்விசைவான, ஒத்திசைவான.

concord'at, *n.* திரு உடம்படிக்கை, போப்பாண்டவருக்கும் சமயச்சார்பற்ற ஓர் அரசுக்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கை.

concor'dial, *a.* இசைவிணக்கமான.

conc'ourse, *n.* கூட்டம்; பெருந்திரள்; ஒருங்கிணைவு; சந்திப்பு; இணையியக்கம், ஒருங்கிணைந்து செல்லும் திரள்; பெரிய மண்டபம்; சாலைச் சந்திப்புவெளி; இருப்பூர்திநிலையப் பொது வெளியிடம்.

concres'cence, *n.* (உயி.) இணைதிரட்சி, திரள்வளர்ச்சி.

conc'rete [1], *n.* பருப்பொருள்; திரள் பிழம்பு; திரள்வளர்ச்சி; காரைக்கட்டு, திண்காரை, பசைமண் கூழாங்கற்கலவைப் பிழம்பு; *a.* பருப்பொருளான, பிழம்புருவான; திண்ணிய, பொருளியலான, புலனீடான; மெய்யான; காரைக்கட்டான; (தொ.) concrete steel, எஃகுக்கம்பிகொண்டு வலுவாக்கப் பட்ட திண்காரை.

concrete' [2], *v.* காரைக்கட்டாகக் கட்டியெழுப்பு; திரண்டுரு வாகச்செய்; கெட்டிப்படுத்து; கடினமாகு.

concre'tion, *n.* ஒன்றுசேர்தல்; திரட்சி, திரண்ட பிண்டம்; (மரு.) உடற்கட்டி; (மண்.) திரள்துகள் கணு, சிறுதுகள் சேர்ந்திறுகுவதால் அமைந்த பாறையின் உட்கணு.

concre'tionary, *a.* பாறையுள் திரள்துகள் கணு இயல்பான.

concret'ive, *a.* கெட்டியாகத் திரளும் ஆற்றலுடைய.

concub'inage, *n.* காமக்கிழத்தியர் கூட்டுறவு, திருமண மாகாத ஆணும் பெண்ணும் கூடிவாழ்தல்; வைப்பாட்டி யைக் கொண்டிருத்தல்; வைப்பாட்டியாயிருத்தல்.

concub'inary, *n.* திருமணமாகாமல் கூடிவாழும் ஆண் பெண்களில் ஒருவர்; *a.* திருமணமாகாமல் கூடிவாழ்கிற; சட்டத்துக்குப் புறம்பான ஆண்பெண் கூட்டுறவுக்குரிய; சட்டப்புறம்பான கூட்டுறவிலிருந்து தோன்றிய.

conc'ubine, *n.* காமக்கிழத்தி, வைப்பாட்டி, மணவியாயிரா மல் ஒருவருடன் கூடிவாழ்பவள்; (பன்மனைவியர் கொள்ளும் மக்களிடையே) துணைமை நிலையான மனைவி.

concu'bitancy, *n.* திருமணம் செய்துகொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கும் பழக்கம்; முறைக்கட்டுநிலை.

concu'bitant, *n.* முறைமணத் துணைவர், முறைப்பெண்; முறைமாப்பிள்ளை.

concup'iscence, *n.* இணைவிழைவு, பால்வகைச்சேர்க்கை விருப்பம்; மட்டுமீறிய சிற்றின்ப வேட்கை; (விவி.) உலகியல் பற்று, உலகப் பொருள்கள்பால் தோன்றும் அவா.

concup'iscent, *a.* சிற்றின்ப வேட்கையுள்ள; பேரவாவுடைய.

concur', *v.* உடனிகழ், முற்றும்பொருந்து; ஓரிடத்தில்கூடு; இசைவுறு, கூடிச் செயலாற்று; கருத்தில் ஒன்றுபடு, உடன்படு.

concu'rrence, concurr'ency, *n.* ஒருமுனை, கோடுகள் ஒரு புள்ளிமுனையில் சென்றிணைதல்; ஒருங்கு நடைபெறுதல், உடனிகழ்வு; முழுதுறழ் இசைவு, முற்றும் பொருந்துதல்; கூட்டுச்செயல்; உடன்பாடு; போட்டி.

concu'rrent, *n.* உடன்படுபவர், இசைபவர்; போட்டியிடு பவர்; ஒரு புள்ளியில்சென்று கூடுகிற கோடு; நாட்டாண் மைக்காரரின் அலுவலருடன் சான்றுளராகச் செல்பவர்; *a.* ஒரே புள்ளியில் கூடுகிற; உடன் இருக்கிற; உடன் நிகழ்கிற; உடன் இயங்குகிற; முற்றும் பொருந்துகிற.

concu'rrently, *adv.* ஒருங்கிணைவாக, ஒரேசமயத்தில் நிகழ் வதாக.

concurr'ing, *a.* இசைகிற, உடன்படுகிற.

concuss', *v.* கலக்கு, அதிர்ச்சியுறும்படி குலுக்கு; அச் சுறுத்து; வல்லந்தப்படுத்து, வலுக்கட்டாயப்படுத்து.

concu'ssion, *n.* தாக்குதல், மோதல்; தலைமீது பேரடி; அதிர்ச்சி, கலக்கம்; வலுக்கட்டாயப்படுத்துதல், நெருக்கடி உண்டுபண்ணுதல்.

concuss'ive, *a.* மோதும் ஆற்றலுடைய; அதிர்ச்சி விளை விக்கும் இயல்புடைய.

condemn', *v.* பழித்துரை, கண்டி; எதிராகத் தீர்ப்புக் கொடு; குற்றத் தீர்ப்பளி; எதிர்வாக முடிவுசெய், பாதக மாக முடிவுகட்டு; முன்கூட்டி முடிவுக்கு வா; தீதறிவி.

condem'nable, *a.* பழிப்புக்கிடமான.

condemna'tion, *n.* கண்டனம், சட்டமன்றக் குற்றத்தீர்ப்பு; கண்டிப்பதற்கான காரணம்; கண்டிக்கப்பட்ட நிலை.

condem'natory, *a.* கண்டனம் தெரிவிக்கிற, பழிப்பு இயல் பான.

condemned', *a.* பழிக்கப்பட்ட; குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்ட; தீர்த்தொதுக்கப்பட்டுவிட்ட; கைவிடப்பட்டு விட்ட; குற்றத் தண்டனை அளிக்கப்பட்டவருக்குரிய; தீய தென்று அறிவிக்கப்பட்ட.

condens'able, *a.* சுருக்கத்தக்க; அடக்கப்படக்கூடிய; செறி விக்கக்கூடிய; உறையக்கூடிய; நீர்மமாக வடிக்கப்படக் கூடிய.

condens'ate, *n.* சுருக்கிச் செறிவாக்கப்பட்ட பொருள்; உறைபொருள்; வடிமானம்; *v.* சுருக்கு, செறிவாக்கு; சுருங்கு; செறிவாகு.

condensa'tion, *n.* சுருக்குதல்; அடக்குதல்; செறிவித்தல்; செறிவு; உறைவித்தல்; உறைவு; வடித்தல்; வடிபடல்; சுருங்கிய பொருள், சுருக்கம், அடக்கம், செறிமானம்; செறி பொருள்; உறைமானம், உறைபொருள்; வடிமானம்; வடி பொருள்; சேர்மானத்தில் இடைநீர்மம் நீக்கப்பெற்ற இணைவு, எடைமிகும் சேர்மானம்.

condense', *v.* சுருக்கு; சுருக்கிக்கூறு; சுருங்கு; செறிவி, நீர்மத்தை உறைவி, வளிப்பொருளை வடித்தெடு; செறி; உறை, வடிமானமாக உருவாகு; கெட்டிப்படுத்து; ஒருமுகப் படுத்து; மின்வீறு பெருக்கு; நீர்மநீக்கித் திண்மைப்படுத்து.

condensed', *a.* உறைவிக்கப்பட்ட, நீர்வற்றச் செய்த, உறைந்த; சுருக்கப்பட்ட; சுருங்கிய; (தொ.) condensed milk, கட்டிப்பால், உறைபால்; condensed type, குறுகிய முகப்பினையுடைய அச்செழுத்து.

condens'er, *n.* வடிகலம், வாலை, நீராவிப்பொறியில் ஆவியை நீர்ப் பொருளாக மாற்றுவதற்கான அமைவு; (இய.) ஒளிக்கதிர்களை ஒருமுகப்படுத்தும் குவிமுகவில்லை; மின்விசையேற்றி, மின் ஆற்றலின் வீறுபெருக்குவதற்கான அமைவு.

conden'sery, *n.* உறைபால் தொழிற்சாலை.

condescend', *v.* திருவுளங்கொள், எளிமைதோன்ற இறங்கிவந்தருள்செய், அருள்பாலி, அளிசெய்; பெருமிதநிலையினை விட்டுக்கொடுத்துச் செயலாற்று, வீறுதுறந்து செயல்முனை; இரங்கியருள், கருணை நயம்படச் செயலாற்று, பணிவு நயம்பட நட; தகாதன செய்; விட்டுக்கொடு, பணிந்துபோ; உடம்படு, இசை.

condescend'ence, *n.* இணக்கம், அமைவு; (சட்.) ஸ்காத்லாந்தில் முறைமன்ற அழைப்பாணையுடன் இணைக்கப்படும் குற்றச்சாட்டு விவரப்பட்டியல்.

condescend'ing, *a.* அருள்பாலிக்கிற; ஆதரவு நல்குகிற; கீழோரிடத்துக் கருணை காட்டுகிற; புண்படுத்துமுறையில் ஆரவார இரக்கம் காட்டுகிற.

condescen'sion, *n.* கீழோரிடத்து அன்புடைமை; அருள்பாலிக்கும் பண்பு.

condign', *a.* ஏற்ற, உரிய; போதிய; தகுதிவாய்ந்த.

con'diment, *n.* சுவையூட்டுப் பொருள்; *v.* சுவையூட்டு.

condi'tion, *n.* நிலைமை; நன்னிலை, தகுதி; முறைமை; பண்பு; படிநிலை, தரம்; உயர்நிலை; மனநிலை, உணர்ச்சிநிலை; ஒப்பந்த விதியின் வரையறைக்கூறு, கட்டுப்பாடு; முன்னீடு, செயலுக்கு முன்பே பெற்றிருக்கவேண்டிய இன்றியமையாக்கூறு; (அள.) காரியத்துக்குரிய காரணக்கூறுன இன்றியமையா முன்னிகழ்ச்சி; (சட்.) கடப்பாட்டுக்குரிய முன்வரையறை; (இலக்.) முன்வரையறைக் குறிப்பு, முன்வரையறை வாசகம்; *v.* கட்டுப்பாடு விதி; வரையறைமீது ஒப்புக்கொள்; தக்க சூழலில் வை, வேண்டும் சூழ்நிலையமை; தகுதியுடையதாக்கு; கட்டுப்படுத்து; வரையறு; உறுதிசெய்; வாணிகச்சரக்கின் நிலையை ஆராய்ந்து பார்.

condi'tional, *n.* (இலக்.) வாக்கியத்தின் சார்புநிலைவாசகம்; சார்புநிலைக் குறிப்புச்சொல், சார்புநிலை இணை இடை; சார்புநிலை குறித்த வினைப்பாங்கு; *a.* கட்டுப்பாடு தெரிவிக்கிற; வரையறைமீது நிகழ்கிற, கட்டுப்பாடு சார்ந்த; சார்புநிலை குறித்த.

condi'tionally, *adv.* துணிபின்றி, சார்புநிலையில்; வரையறையுடன், கட்டுப்பாட்டின்மீது.

condi'tionate, *v.* கட்டுப்பாடு விதி, நிபந்தனை கூறு; வரையறு.

condi'tioned, *a.* வரையறுக்கப்பட்ட, கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட; ஒருநிலைப்படுத்தப்பட்ட; சூழ்நிலைக்கு உட்பட்ட, சூழல் சார்பான; சார்புடைய; தொடர்புடைய; நிலையுடைய, பாங்குடைய; (தொ.) conditioned reflex, வழக்கமான நிகழ்ச்சித் தொடர்பு காரணமாக முன் அனுபவத்தை ஒட்டி உள்மனத்தில் இயல்பாக ஏற்படும் எதிர்த்தூண்டுதல் குறிப்பு.

condi'tioner, *n.* பண்படுத்துமுறைக்கு முன்னீடாக நிலத்தைப் பக்குவப்படுத்தவல்ல பொருள் வகை.

condi'tioning, *n.* தக்க சூழ்நிலையமைப்பு; *a.* தக்கசூழ்நிலையமைக்கிற; வரையறுக்கிற; (தொ.) conditioning house, வாணிபப் பண்டங்களின் எடை-அளவு-பண்புகள் விஞ்ஞான முறைப்படி நிச்சயிக்கப்படும் நிலையம்.

condi'tions, *n. pl.* சூழ்நிலைகள்; வாழ்க்கைச்சூழற் பண்புகள்.

condol'atory, *a.* வருத்தம் தெரிவிக்கிற, ஒத்துணர்வு வெளிப்படுத்துகிற.

condole', *v.* வருத்தந்தெரிவி; ஒத்துணர்வு அறிவி, மற்றொருவருடன் சேர்ந்து துயரப்படு.

condole'ment, condol'ence, *n.* மற்றொருவர் துயரத்துக்காக வருத்தந் தெரிவித்தல்.

con'dom, *n.* கருத்தடை உறை.

condomin'ium, (ல.) *n.* கூட்டுத்தலைமை ஆட்சி, ஓர் அரசின் ஆட்சியில் இருவேறு அரசுகள் சரிபங்கு பெற்றிருக்கும் நிலை.

condona'tion, *n.* குற்றம் பொறுத்தல், மன்னிப்பு; (சட்.) கணவன் அல்லது மனைவி மணவொழுக்கந்தவறி மணமுறிவு கோரும்போது குற்றத்தினுல் பாதிக்கப்பட்டவர்களால் முதல் தடவையாக அளிக்கப்படும் மன்னிப்பு.

condone', *v.* குற்றத்தைப் பாராட்டாமல் பொறுத்தருள், மன்னித்துவிடு; கழுவாய் தேடு.

con'dor, *n.* பெரிய தென் அமெரிக்கக் கழுகுவகை.

condottier'e, (இத்.) *n.* கூலிப்படைத்தலைவர்; *pl.* ***condottie're'ri.***

conduce', *v.* செயல் துணையாயிரு, நிறைவேற்றத்துக்கு உதவு; விளைபயனுக்கு உகந்ததாயிரு.

conduc'ible, condu'cive, *a.* செயல்துணையான, உகந்த; மேம்பட உதவுகிற; நன்மை பயக்கவல்ல, சாதகமான.

con'duct[1], *n.* நடத்தை, ஒழுகலாறு; வழித்துணை, காப்புதவி; தொழிலின் நடைமுறையாட்சி, செயலாட்சி; கலைத்துறைக் கையாட்சி, கைங்கலம்.

conduct'[2], *v.* வழிகாட்டு; வழியாக இட்டுச்செல்; வழியாயமை; குழாய் முதலியவற்றின் வகையில் நீர் முதலியன கொண்டு செல்; ஏற்றிச்செல்; படை-இசைக்குழு முதலியவற்றை நடாத்து; நிலையம் இயக்கு; தொழில் நடத்து; நடைமுறைப்படுத்து, ஒழுகுவி; நடக்கும்படிசெய்; (இய.) வெப்பம் ஊடுசெல்லவிடு; மின்வலி ஊடுகடத்து.

con'duct[3], *n.* ஈடன் (Eton) நிறுவனச் சமயகுரு.

conduct'ance, *n.* (இய.) மின்னூடு கடத்தியின் மின் கடத்தாற்றல்.

conduc'tible, *a.* சூடு முதலியவற்றைக் கடத்தக்கூடிய; நடத்திச் செல்லப்படத்தக்க; கொண்டு செல்லப்படக்கூடிய; கடத்தப்படத்தக்க.

conduc'tion, *n.* (இய.) இகைப்பு; குழாய் முதலியவை மூலமாக நீர்மத்தைக் கொண்டுசெல்லுதல்; இகைப்பாற்றல், கொண்டுசெல்லும் ஆற்றல்.

conduct'ive, *a.* கடத்தும் இயல்புள்ள; கொண்டுசெல்லும் ஆற்றலுடைய.

conductiv'ity, *n.* ஊடுகடத்தும் ஆற்றல், இகைப்புத் திறன்.

conduc'tor, *n.* வழிகாட்டி, வழித்துணை; செயல்முதல்வர், தொழில் ஆட்சியாளர்; இசைக்குழு இயக்குநர்; ஊர்தி வழித்துணைவர், நெறி காப்பாளர்; படைத்துறைத் தடை காவலர்; (இய.) வெப்ப ஊடியக்கி; மின் ஊடுகடத்தி.

conduc'tress, *n.* வழித்துணை மாது; ஊர்தி நெறிகாப்பு நங்கை.

con'duit, *n.* நீர்செல்குழாய்; குழாய்க்கால்வாய்; மின் கம்பிகளின் காப்புக்குழாய், ஊர்ப்பொது ஊற்றுநீர்க்குழாய், பொது ஊருணி.

condup'licate, *a.* (தாவ.) நீளவாட்டில் நடுவே மடிக்கப்பட்ட.

Con'dy, *n.* = **Condy's fluid.**

con'dyle, *n.* (உள்.) எலும்புமுனை முண்டுப்பொருத்து.

condylo'ma, *n.* (மரு.) சளிவரும் வழிகளுக்கருகில் கரணை போன்ற தோலின் புறவளர்ச்சி; *pl.* condylo'mata.

Con'dy's fluid, *n.* நச்சுத்தடை மருந்தாகப் பயன்படும் உவர பரமங்கனிகைக் கரையம்.

cone, *n.* கூம்பு, குவிகை வடிவு, கூர்ங்குடை உரு; தேவதாரு வகையின் குவி செதிற்கூடு; கடற்கிளிஞ்சில் வகை; கூம்பு வடிவப் பொருள்; வானிலை அறிவிப்புக்கருவி; இயந்திரத்தின் குவி முகடு; எரிமலைக்குன்று; சரிவினடியில் அல்லது ஏரி முகப்பில் ஆற்றில்படிந்து பரவும் வண்டல் நிலம்; கண்திரைப் பகுதி; குளிர்பாலேட்டுக் குவளை; *v.* கூம்பு வடிவாக்கு; வானில் எதிரி விமானத்தை நீடொளிவிளக்கக் கீற்றுக்களால் கண்டுபிடி; விமானமீது நீடொளி விளக்கம் காட்டு.

cone′-in-cone′, *a.* (மண்.) பாறைகள் வகையில் கூம்பினுள் கூம்பாய் அமைந்துள்ள.

cones, *n.* அப்பக்காரர் மாப்பிசையும் கலத்தில் தூவுவதற்குப் பயன்படுத்தும் நேர்த்தியான மாவு.

cone′-shell, *n.* கூம்புவடிவத் தோடுடைய நத்தை வகை.

cone′-wheat, *n.* துய்ம்முடியுடைய கோதுமை வகை.

con′ey, *n.* குழிமுயல்; குழிமுயல் தோல்; சிறுகுழிமுயல் போன்ற நாற்கால் பாலுணி விலங்கின வகை.

confab′, **confab′ulate**, *v.* கூடிப்பேசு, உரையாடு, அளவளாவு.

con′fect [1], *n.* சர்க்கரை சேர்த்துச் செய்யப்பட்ட தின்பண்டம்.

confect′ [2], *v.* உண்டுபண்ணு; பதனம் செய், கெடாமல் வைத்திரு.

confec′tion, *n.* கலத்தல், சேர்த்தல், கலவை; மருந்துக் கலவை; பதனம் செய்யப்பட்ட பொருள்; தின்பண்டம்; தைத்து வைக்கப்பட்டுள்ள மகளிர் உடுப்பு; *v.* தின்பண்டம் செய்..

confec′tionary, *n.* தின்பண்டம் செய்பவர்; மிட்டாய் விற்பவர்; தின்பண்டம், இனிப்புப்பண்டம்; தின்பண்டம் செய்யுமிடம்; தின்பண்டசாலை; தின்பண்டக்கடை; *a.* தின் பண்டவகைகளுக்குரிய; தித்திப்புப்பண்ட வகைகளின் தன்மையுள்ள.

confec′tioner, *n.* தின்பண்டம் செய்பவர், தின்பண்டம் விற்பவர்.

confec′tionery, *n.* தின்பண்டத்தொழில்; தின்பண்டத் தொகுதி; தின்பண்டக் குவை.

confed′eracy, *n.* அரசியற்கூட்டு, நாடுகளின் இணைவு; கூட்டுக்குழு, இணைவுறவு; நேச ஒப்பந்தம்; கூட்டு; சதிக்குழு, சதி.

Confed′eracy, *n.* (வர.) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள் நாட்டுப் போரில் விலகிப்போன பதிஞ்ஞெரு நாடுகளின் கூட்டமைவு.

confed′erate, *n.* கூட்டாளி, குற்ற உடந்தையாள், உட் கையாள், சதியின் உள்ளாள்; *a.* இணைவுறவுகொண்ட, நேசக்குழுவில் இணைந்த; *v.* நேசக்கூட்டுறவில் சேர்; நேசக் கூட்டுறவு அமை.

confedera′tion, *n.* நேசக்குழு, கூட்டுக்குழு; நேசக்கூட் டமைவு.

confed′erative, *a.* நேச இணைக்குழு சார்ந்த.

con′fer [1], (ல.) *v.* (சுருக்கக்குறிப்பு *cf.*) ஒப்பிட்டுப்பார்க்க.

confer′ [2], *v.* அளி, கொடு; உரையாடு; அறிவுரைகோரு, கலந்தாய்.

conferee′, *n.* அறிவுரை கோரப்பெறுபவர், கலந்தாய்வதற் குரியவர்.

con′ference, *n.* சேர்ந்து உரையாடல், கலந்தாய்வு; கலந் தாய்வுக் கூட்டம், மாநாடு; மெதடிஸ்ட் திருச்சபையினரின் (Methodist Church) ஆண்டுக்கூட்டம்.

confer′ment, *n.* அளித்தல், அளிப்பு, வழங்கல்; வழங்கப் பட்ட பொருள்.

confess′, *v.* குற்றத்தை ஒத்துக்கொள், முழுமையும் வெளிப் படத் தெரிவித்துவிடு, தானுக ஏற்றுக்கொள்; செய்த பாவங்களைச் சமயகுருமாரிடம் முறைபடத் தெரிவித்துவிடு; சமயகுருமார்வகையில் பாவ அறிவிப்பை ஏற்றுக்கொள்; (தொ.) confess to, ஒப்புக்கொள், ஏற்புத் தெரிவி.

confessed′, *a.* ஒப்புக்கொள்ளப்பட்ட; உறுதியான; தெளி வான, வெளிப்படையான; (தொ.) stand confessed, வெளிப் படையாகத் தெரியப்பெறு.

confe′ssion, *n.* குற்றத்தை ஒப்புக்கொள்ளுகை; குறை ஏற்பு; ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி; வெளியிடப்பட்ட மறை மெய்ம்மை; சமயகுருமாரிடம் பழிபாவங்களை வெளி யிட்டுரைக்கை; சமயக்கோட்பாட்டு அறிவிப்பு; பொது சமய நம்பிக்கைக்குரிய கோட்பாட்டுத் தொகுப்பு; (தொ.) confession of faith, சமயப்பிரிவினரின் கோட்பாடுகள் அடங்கிய ஏடு.

confess′ional, *n.* பாவமன்னிப்புக் கேட்கும் இருக்கை; சமய குரவரின் பாவமன்னிப்பறை; பாவமன்னிப்பு முறைமை; *a.* பாவமன்னிப்புப் பற்றிய.

confe′ssionary, *n.* சமயகுரவர் பாவமன்னிப்புக் கேட்கும் இருக்கை; *a.* பாவமன்னிப்புக் குறித்த.

confe′ssionist, *n.* வரையறுக்கப்பட்ட சமயக்கொள்கையைக் கடைப்பிடிப்பவர்; மார்ட்டின் லூதர் (Martin Luther) கோட் பாடு பின்பற்றுபவர்.

confess′or, *n.* பாவங்களை ஒப்புக்கொள்பவர்; பாவச்செய்தி களைக் கேட்டு மன்னிப்பு வழங்கும் குரவர்; இடர்கள் தாங்கித் தம் சமயத்தை நிலைநாட்டுபவர்; (தொ.) The Confessor, எட்வர்ட் தி கன்பெசர் (Edward the Confessor 1042-1066) என்னும் முற்கால இங்கிலாந்து நாட்டின் மன்னர்.

confest′, *a.* = confessed.

confett′i, *n. pl.* தித்திப்புப்பண்டம்; தித்திப்புப்பண்டம் போலச் செய்யப்பட்ட குழைமவண்ணத் துணுக்குகள்; திருமணக்காலங்களில் மண மக்கள் மீது வேடிக்கையாய் எறியப்படும் வண்ணத்தாள் துண்டுகள்.

confidant′, *n.* நம்பகமானவன், அணுக்கத் துணைவன்; காதல் துணைவன்; பாங்கன்; *fem.* confidant′e.

confide′, *v.* நம்பிக்கை வை, முழுவதும் நம்பு, நம்பியிரு, நம்பிச் செயலாற்று; நம்பிக்கையாகத் தெரிவி; நம்பி ஒப்படை.

con′fidence, *n.* உறுதியான நம்பிக்கை; நம்பகத்தன்மை; பற்றுறுதி; தன்னம்பிக்கை; ஆர்வ நம்பிக்கை; துணிவார்வம்; தன் முனைப்பு; மறை செய்தி; இரகசிய காரியங்களை அறியும் தனியுரிமை; (தொ.) confidence trick, நம்பவைத்து மோசம் செய்தல், மோசடி.

con′fident, *n.* நம்பிக்கைக்குரிய நண்பர், அந்தரங்கத் தோழர்; *a.* உறுதியாக நம்புகிற, ஆர்வத்துடன் எதிர்பார்க்கிற; துணிவார்வமிக்க; மிகு முனைப்பான.

confiden′tial, *a.* நம்பிக்கைக்குரிய, நம்பகமான; இரகசியப் பணி ஒப்புவிக்கப்பட்ட; இரகசியமாக அறிவிக்கப்பட்ட; அந்தரங்கமான; தனிமனிதருக்குரிய; தனிப்பட்ட காரியங் களுக்குரிய, மறைவடக்கமான.

confid′er, *n.* நம்பிக்கை வைப்பவர்; இரகசியம் சொல்லி வைப்பவர்.

confid′ing, *a.* நம்பியிருக்கும் இயல்புடைய, ஆர்வ நம்பிக்கை யுடைய.

config′urate, *v.* உருவங்கொடு, உருவாக்கு.

configura′tion, *n.* கோலம், வடிவமைதி, ஒழுங்கமைதி; புறவடிவமைதி, வெளித்தோற்றம்; உருவரை; (வான்.) கோள்நிலை அமைதி; (வேதி.) அணுத்திரளில் அணு அமைதி.

config′ure, *v.* உருவங்கொடு, உருவாக்கு.

con′fine [1], *n.* = confines.

confine′ [2], *n.* கட்டுப்பாடு; சிறை; *v.* எல்லைக்குட்படுத்து, கட்டுப்படுத்து, வரையறு; அடை, சுற்றி வளை; சிறைப் படுத்து; உடனிணை; அடுத்துள்ளதாக்கு.

confined′, *a.* வரையறுக்கப்பட்ட; கட்டுப்படுத்தப்பட்ட; சிறைப்படுத்தப்பட்ட; குறுகலான; (தொ.) be confined, பெண்டிர் வகையில் பிள்ளைப்பேற்றுக்குரிய படுக்கையில் கிடக்கப்பெறு.

confine′ment, *n.* கட்டுப்பாடு, வரையறை; சிறைப்பட்ட நிலை; நோய் காரணமாக வெளியே போகமுடியாத நிலை; பிள்ளைப்பேற்று நிலையிலிருத்தல்.

confin′er, *n.* எல்லைக்குட்பட்டு வசிப்பவர்.

con′fines, *n. pl.* எல்லைப்பகுதி; இடைநிலம், இடைவரம்புப் பகுதி; இடைநிலைப்பண்பு.

confin'ing, *a.* எல்லையருகிலமைந்துள்ள ; வரையறுக்கிற, கட்டுப்படுத்துகிற.

confirm', *v.* உறுதிசெய், வலியுறுத்து ; நிலைநாட்டு, உறுதிப்படுத்து ; தொடர்ந்து ஊக்கு, நிலைப்படுத்து, திடப்படுத்து ; மெய்ப்பி, மேற்கொண்டு வலியுறவு செய் ; முறை முற்றுவி, நிறைவேற்றுவி ; தீக்கைமுறை முற்றுவி.

confirma'tion, *n.* நிலைநாட்டுதல் ; வலுப்படுத்தல் ; உறுதிப்பாடு ; சான்றுகொண்டு மெய்ப்பித்தல் ; வலியுறுத்தும் சான்று ; திருக்கோயிலில் ஒருவருக்குச் செய்யப்படும் தீக்கைச் சடங்கு.

confirm'ative, *a.* நிலைநாட்டக்கூடிய, உறுதிப்படுத்தத்தக்க.

confirm'atory, *a.* மேற்கொண்டு வலிமையான சான்று தருகிற, உறுதிப்படுத்துகிற.

confirmed', *a.* நன்கு ஊன்றிய, ஊன்றி உறைத்துப்போன.

confirmee', *a.* தீக்கைச் சடங்கு செய்யப்பெறுபவர்.

con'fiscate, *a.* பறிமுதலாக்கப்பட்ட ; *v.* பறிமுதல் செய் ; தண்டத் தொகையாக அரசுக்கு உரிமையாக்கு ; அதிகாரத்தைக் கொண்டு கைப்பற்று.

confisca'tion, *n.* பறிமுதல் செய்தல் ; பறிமுதல் ; அதிகாரங் கொண்டு கைப்பற்றல் ; (பே-வ.) ஆட்சியினரின் அனுமதியுடன் சட்டப்படி கொள்ளையடித்தல்.

con'fiscator, *n.* பறிமுதல் செய்பவர்.

con'fiscatory, *a.* பறிமுதல்செய்யும் தன்மையுள்ள.

confit'eor, (ல.) *n.* திருக்கோயில் பாவமன்னிப்புத் தொடர் புடைய செபம்.

con'flagrate, *v.* எரித்தழி.

conflagra'tion, *n.* பெருந் தீ, காட்டுத் தீ, பேரழிவுசெய்யும் நெருப்புப் பிழம்பு, ஊழித்தீ.

conflate', *v.* பற்றவை ; கலந்திணைவி, இரண்டு பாட பேதங்களை ஒருங்கிணை.

confla'tion, *n.* பற்றவைத்தல் ; வெவ்வேறான இரண்டு பாட பேதங்களை ஒருங்கிணைத்தல்.

con'flict [1], *n.* சண்டை, சச்சரவு, பிணக்கு; மனப்போராட்டம்; மோதல்; முரண்பாடு.

conflict' [2], *v.* சண்டையிடு, மோது ; எதிர்த்து நில் ; முரண்படு, ஒன்றுடனொன்று ஒவ்வாதிரு.

conflict'ing, *a.* போராடுகிற, மோதுகிற ; ஒன்றுக்கொன்றொவ்வாத, முரண்பாடான.

conflict'ive, *a.* முரணும் பாங்குள்ள.

con'fluence, *n.* கூடல், சங்கமம், ஆற்றுச் சந்திப்பு ; கூடுமிடம்.

con'fluent, *n.* இணையாறு, ஆற்றுடன் கூடிக்கலக்கும் ஆறு; *a.* இணைந்து பாய்கிற, இணைந்துசென்று கலக்கிற, கூடி ஒன்றுபடுகிற.

con'flux, *n.* ஒன்றுகப் பாய்தல், இணைகூட்டு, சந்திப்பு.

conform', *v.* உருவொத்த படிவமாக்கு, ஒத்திருக்கச் செய் ; முன்மாதிரியாகப் பின்பற்று ; ஒத்திரு ; இணக்குவித்துச் சரி செய் ; இணங்கு, ஒத்துப்போ ; கீழ்ப்படி.

conformabil'ity, *n.* ஒப்புரவு, பொருந்து நிலை.

conform'able, *a.* ஒத்திருக்கிற ; தொடர்தகவுடைய ; பொருத்தமான; இணக்கமான, வழிக்குக் கொண்டுவரத்தக்க; (மண்.) அடிநிலப்பாறை வகையில் ஒரே இடையருத் தொடர் நிலையுடைய.

conforma'tion, *n.* வடிவமைதி, கட்டமைப்பு ; இணக்க இசைவு.

conform'ist, *n.* இங்கிலாந்துநாட்டுத் திருக்கோயிற் பிரிவின் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பவர்.

conform'ity, *n.* ஒத்துப்போதல் ; ஒப்பு, பொருத்தம், இணக்கம் ; (மண்.) அடிநிலப்பாறையின் இடைவிடாத தொடர் நிலை ; (தொ.) in conformity with, இணங்க, இசைவாக.

confound', *v.* தோல்வியுறச் செய் ; அவமாக்கு ; கலை, சீர்குலை, அலங்கோலமாக்கு ; குழப்பு, திகைப்பூட்டு, பிரித்துணர முடியாமல் மயக்கமூட்டு; வியப்படைவி; வாதத்தில் தோல்வியடையச் செய் ; *int.* பாழ்படுக (மென்பழிமொழி) ; (தொ.) confound you, (தெறுமொழி) அட கெடுவாய் !

confound'ed, *a.* குழப்பமடைந்த ; திகைப்புற்ற ; (பே-வ.) முதல்தரமான, மிகச்சிறந்த.

confound'edly, *adv.* (பே-வ.) மிக மோசமாக, பழிகேடாக, வெட்கக் கேடாக.

confound'ingly, *adv.* வியக்கத்தக்க முறையில்.

confratern'ity, *n.* தோழமைக் கூட்டுறவு, உடன்பிறப் புரிமைக் குழாம்; உடன்பிறப்புரிமை; குலம், குடியுரிமைக் குழு.

confrere, (பிர.) *n.* தொழிற்கூட்டாளி, கலைக்குழுத்தோழர்.

confront', *v.* எதிர்முகமாக நில், எதிரெதிராயிரு ; எதிர்ப்படு, சந்தி ; நேர் எதிர்ப்புறமாயிரு ; எதிர்த்து நில் ; முரணு ; நேருக்குநேர் நிறுத்து, எதிர்முகப்படுத்து ; ஒப்பிட்டு நோக்கு.

confronta'tion, *n.* நேருக்குநேர் சந்திக்கச் செய்தல் ; எதிர்ப்படுதல்.

confront'e, *a.* நேருக்கு நேரான.

confront'ment, *n.* = confrontation.

Confu'cian, *n.* பண்டைச் சீனநாட்டு மெய்விளக்கியலாரான கன்பூசியசை (Confucius) பின்பற்றுபவர்; *a.* கன்பூசியஸ் என்ற பண்டைச் சீன மெய்விளக்கியலாரைச் சார்ந்த.

Confu'cianism, *n.* கன்பூசியசின் மெய்விளக்கியல், கன்பூசியசின் கோட்பாடு, கன்பூசியஸ் நெறி.

Confu'cianist, *n.* சீனநாட்டு மெய்விளக்கியலாரான கன்பூசியசைப் பின்பற்றுபவர்.

confuse', *v.* தாறுமாருக்கு, அலங்கோலமாக்கு ; மனத்தைக் குழப்பு ; மலைப்பூட்டு, வெட்கச்செய்.

confused', *a.* குழப்பமான, அலங்கோலமான ; மலைப்புற்ற.

confus'edly, *adv.* குழம்பிய நிலையில் ; தாறுமாருக.

confus'edness, *n.* குழம்பிய நிலை ; சீர்குலைவு.

confu'sion, *n.* குழப்புதல்; குழப்பம், குழம்பிய நிலை; சந்தடி; மனக்குழப்பம் ; வெட்கம் ; திகைப்பு ; கலக்கம் ; குலைவு.

confut'ative, *a.* மறுக்கும் நோக்கமுடைய.

confute', *v.* தவறு எண்பித்துக்காட்டு ; வாதம் தவறென்று தெளிவுபடுத்து, மறுத்துரை.

conge, (பிர.) *n.* தலைதாழ்த்தல், வணக்கங் தெரிவித்தல் ; விடையளிப்பு ; உபசரிப்பின்றி அனுப்பிவைத்தல் ; *v.* தலை தாழ்த்து, வணக்கம் செய் ; விடைபெறு.

congeal', *v.* உறையச்செய், குளிரால் கெட்டியாக்கு ; குருதி கட்டுவி ; குளிரினால் கெட்டியாகு, உறை, இறுகு ; குருதி கட்டு.

congeal'ment, *n.* = congelation.

conge d'elire, (பிர.) *n.* தேர்ந்தெடுக்க அனுமதி ; மாவட்டச் சமய முதல்வரைத் தேர்ந்தெடுப்பதற்கான அரசரின் இசைவு.

con'gee, *n.*, *v.* = *conge*.

congela'tion, *n.* உறைதல் ; உறையவைத்தல் ; உறைந்த நிலை ; உறைந்த பொருள்.

con'gener, *n.* ஒரே வகைப்பட்டவர், ஒரே தன்மையுடையவர்; ஒரே வகைப்பட்டது, ஒரே தன்மையுடையது; ஓரினப்பொருள்; *a.* ஒரேவகைப்பட்ட, இனத்தொடர்புடைய.

congene'ric, congene'rical, *a.* ஒரே இனத்தைச் சேர்ந்த, ஒரே இனமரபுடைய ; ஒரேவகைப்பட்ட ; தன்மையில் ஒத்த.

congen'erous, *a.* ஒரே இனத்தைச் சார்ந்த ; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ; ஒரேவகையைச் சேர்ந்த ; ஒரே செயற்பண்பில் ஈடுபட்ட.

congenet'ic, *a.* மூலத்தில் ஒத்த, ஒரே தோற்ற மூலத்தை உடைய.

congen'ial, *a.* இன அமைவுடைய, உறவமைதி வாய்ந்த, ஒத்துணர்வுள்ள, மனதுக்கொத்த, உகந்த, இசைவான.

congen'ital, *a.* பிறவியோடுபட்ட, கருமுதலமைவுடைய, பிறவிக்கூறான.

cong'er [1], *n.* விலாங்கு இனத்தைச் சேர்ந்த பெரிய கடல்மீன் வகை.

con'ger [2], *n.* கூட்டுறவாகப் புத்தகம் விற்பவர்களின் கழகம்.

con'ger-eel, *n.* = conger [1].

conge'ries, *n.* திரள், தொகை, பிண்டம், குவியல், தொகுதி; *pl.* conge'ries.

congest', *v.* மட்டுமீறி ஓரிடத்தில் குவி, அடர்த்தி மிகுதியாக்கு, நெருக்கடிப்படுத்து.

congest'ed, *a.* மட்டுமீறி நெருக்கமிக்க; அடர்த்தியான; மிகச் செறிவான; நெருக்கடியான; செம்மிய, இயங்க முடியாமல் தடைப்பட்ட; வாழ்மக்களுக்கு ஆதாரமளிக்க இயலா நிலைப்பட்ட; இயல்புமீறிக் குருதி ஒரு திசை திரண்டுள்ள.

congest'ion, *n.* (மரு.) மட்டுமீறிய குருதித் திரட்சி; நெருக்கடி; அடர்த்தி.

congest'ive, *a.* மட்டுமீறிய செறிவுகொண்டுள்ள, இட நெருக்கடிக்குரிய.

con'globate, *a.* உருண்டையாக உருவாக்கப்பட்ட; *v.* உருண்டையாக்கு; பந்துபோலாகு.

conglobe', *v.* உருண்டையாகத் திரள்; உருண்டையாகத் திரட்டு.

conglob'ulate, *v.* சிறு உருண்டையாகத் திரள்.

conglom'erate, *n.* கதம்பத்திரள், பல்கூட்டுத் திரட்டு; (மண்.) பல்கூட்டுப் பாறை, கூழாங்கற்கள் திரண்டு ஒன்று பட்டு உருவான பாறை வகை; *a.* உருண்டு திரண்ட, பல் கூட்டுருவான; (மண்.) கூழாங்கற்கள் இணைந்து திரண்டு உருவான; *v.* உருண்டு திரண்டு உருவாகு; பல்கூட்டாகத் திரட்டு.

conglomerat'ic, *a.* (மண்.) கூட்டுப்பாறையின் இயல்புள்ள.

conglomera'tion, *n.* திரளை, பந்துபோல் திரட்டப்பட்ட நிலை; பல பட்டடைக்குவை, கதம்ப கூளம்.

conglu'tinate, *v.* பசைகொண்டு ஒட்டு; பசையினால் ஒட்டிக் கொள்; இணைவித்துக் குணப்படுத்து; ஒன்றுபடு, ஒன்று பட்டு வளர்.

conglutina'tion, *n.* பசைப்பொருளைக்கொண்டு இணைத்தல்; இணைவித்துக் குணப்படுத்துதல்.

conglu'tinative, *a.* ஒட்டவைக்கவல்ல.

congo', **cong'ou,** *n.* கறுப்புத்தேயிலை வகை.

congrat'ulant, *n.* பாராட்டுபவர், மங்கலங்கூறுபவர்; *a.* வாழ்த்துகிற, மகிழ்ச்சி தெரிவிக்கிற.

congrat'ulate, *v.* மகிழ்ச்சி தெரிவி, நலம் பாராட்டு, மங்கலங்கூறு.

congratula'tion, *n.* மகிழ்ச்சி தெரிவித்தல்; பாராட்டு, வாழ்த்துரை.

congratula'tions, *n. pl.* மகிழ்ச்சி தெரிவிக்கும் சொற்றொடர்கள், நலம் பாராட்டுரை.

cong'regate, *v.* ஒருங்கு திரள், கூட்டங்கூடு; ஒருங்கு கூட்டு; கும்பலாகத் திரட்டு.

congrega'ted, *a.* சபை கூடியுள்ள; மொத்தமாகத் திரட்டப் பட்டுள்ள.

congrega'tion, *n.* ஒருங்கு கூட்டுதல்; ஒன்று கூடுதல்; திரளுதல்; கூட்டம், சபை; பல்கலைக்கழகப் பேரவை, தகுதி நிரம்பிய பல்கலைக்கழக உறுப்பினர்கள் திரள் குழாம்; திருக் கூட்டம், திருக்கோயிலுக்கு வழக்கமாகச் செல்பவர்களின் தொகுதி; ஸ்காத்லாந்தில் முற்காலத் தீவிரப் 'புராட்ட ஸ்டாண்டுக்' • (Protestants) கிறித்தவர்களின் குழாம்; ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் அரங்க ஆட்சிப் பொறுப்பேற்கும் குழு; போப்பாண்டவர் தேர்வுரிமை நிலைக் குழு; நோன்பு இன்றி இயங்கும் துறவிமட வகையின் துறவியர் தொகுதி; (விவி.) இஸ்ரவேலர் தொகுதி; தொகுதி, குழாம்.

congrega'tional, *a.* பேரவைக்குரிய; கூட்டு வழிபாட்டுக்குரிய.

Congrega'tionalism, *n.* திருக்கோயில் உரிமை ஆட்சி முறை, திருக்கோயில் திருக்கூட்டம் ஒவ்வொன்றும் தன் செயலாண்மையில் கட்டற்றதாக உடைய திருச்சபை ஆட்சி முறை.

Congrega'tionalist, *n.* கட்டற்ற திருக்கூட்டத்தை உடைய திருச்சபை வகை சார்ந்தவர்.

cong'ress, *n.* ஒருங்கு கூடுதல்; குழுமம்; பேராண்மைக் கழகம்; பேராட்களோ அரசியல் தூதுமுதல்வரோ பல்துறை அறிஞரோ வந்து கூடிக்கலந்தாய்ந்து கொள்வதற்குரிய அகல் பேரவை; திருச்சபை ஆட்டைப் பெருங்கூட்டம்; அறிஞர் மா பேரவை; *v.* பேராண்மைக் கழகமாகக் கூடு; அகல் பேரவையில் கூடு.

Cong'ress, *n.* அமெரிக்க கூட்டரசின் சட்டமாமன்றம்; அமெரிக்க குடிஅரசுகளின் சட்டமாமன்றம்; 1885-இல் காணப்பட்ட இந்திய அரசியல் நிறுவனம்; இந்திய அரசியல் கட்சி வகை.

congre'ssional, *a.* அமெரிக்க சட்டமாமன்றத்துக்குரிய.

Con'gressman, *n.* அமெரிக்க சட்டமாமன்ற உறுப்பினர்; இந்திய அரசியல் நிறுவன வகையின் உறுப்பினர்; இந்திய அரசியல் கட்சி வகை சார்ந்தவர்.

Cong'reve, *n.* உராய்வுத் தீப்பெட்டி வகை; முற்காலப் போர்த்துறை வாணவெடி வகை.

Con'greve-match, *n.* உராய்வுத் தீப்பெட்டி வகை.

cong'ruence, **cong'ruency,** *n.* முழு ஒப்பு, முழுதுறழ் பொருத்தம், முற்றிசைவு.

cong'ruent, *a.* முழுதொத்த, முற்றிசைவான; ஏற்றபடியான; (வடி.) முழுதுறழ் பொருத்தமுடைய, கூறுகூறு ஒப்பான, முற்றிலும் கூறுதோறும் பொருந்துமாறு மேற் படியவைக்கத்தக்க; (கண.) நிறைதகவுடைய, ஒரே எண்ணால் வகுக்க ஒரே மீதம் வரத்தக்க பொருத்தம் கொண்ட.

congru'ity, *n.* சரி ஒப்பு, இரண்டு பொருள்களுக்கிடையிலுள்ள ஒற்றுமை; சரி நேர் பண்பு, விடா ஒருமைப்பாடு; பொருத்தம், தகுதி.

cong'ruous, *a.* தக்க, முழுதும் பொருத்தமான, ஒப்பமைதியுடைய, சரியிசைவான, சரிநேரான.

co'nia, *n.* = coniine.

con'ic, *n.* கூம்பு வெட்டு, கூம்பின் வெட்டுவாய் வடிவம்; *a.* கூம்பு வடிவமுள்ள; கூம்புக்குரிய; (தொ.) conic section, கூம்பறை, கூம்பு வெட்டுவாயின் வடிவம்.

con'ical, *a.* கூம்பு வடிவான, கூம்பு வடிவுக்குரிய.

con'ics, *n.* (வடி.) கூம்பு வெட்டளவையியல், கூம்பு பற்றியும் கூம்பு வெட்டுகளைப்பற்றியும் ஆராயும் நூல் துறை.

con'ifer, *n.* குவிந்த காய் காய்க்கும் மரவகை.

conif'erous, *a.* குவிந்த காய் காய்க்கிற; குவிந்த காய் காய்க்கிற மரப்பேரினத்தைச் சேர்ந்த.

con'iform, *a.* கூம்பு வடிவமைந்த.

con'iine, *n.* செடிவகையினின்று எடுக்கப்படும் வெடியக் கலப்புடைய கொடிய நச்சு நீர்.

co'nine, *n.* = coniine.

conject'urable, *a.* ஊகிக்கத்தக்க.

conjec'tural, *a.* உய்த்துணர்வுக்குரிய, ஊகத்துக்கிடமான; ஊகம்பண்ணும் பழக்கமுடைய.

conjec'ture, *n.* முன்னறி கூற்று; ஊகம், சான்றில்லாமல் அல்லது அற்பச் சான்றினடியாகக் கொண்ட கருத்து; உய்த்துணர்வு, உத்தேசம், அனுமானம், கற்பனை, எண்ணம்; *v.* ஊகம்பண்ணு; உய்த்துணர், அனுமானம்செய், குத்தாயமாகக் கருது; போதிய சான்றில்லாமல் கற்பனை செய்.

conjoin', *v.* ஒருங்கிணை, ஒன்று சேர், பிணை; ஒன்றுபடு.

conjoined', *a.* ஒன்றிய, இணைக்கப்பட்ட.

conjoint', *a.* ஒருங்கிணைக்கப்பட்ட ; கூட்டாளியான, கூட்டான.

con'jugal, *a.* திருமணத்துக்குரிய ; மணவாழ்க்கைக்குரிய, கணவன் மனைவியருக்குரிய, கணவன் மனைவியருக்கு இடையேயுள்ள ; (தொ.) conjugal rights, (சட்.) கணவன் மனைவியர் உரிமைகள், வாழ்க்கைத்துணைநல உரிமைகள்.

Conjuga'tae, *n. pl.* (தாவ.) அயலினக் கலப்புடன் இனம் பெருக்கும் நன்னீர்ப்பாசி வகை.

con'jugate, *n.* மூலமொத்த சொல் ; மற்றொன்றுடன் இணைக்கப்பட்ட அல்லது தொடர்பான ஒன்று ; *a.* இணைக்கப்பட்ட, சேர்க்கப்பட்ட, பிணைக்கப்பட்ட ; (தாவ.) இரட்டையாக இயல்கிற ; பரிமாற்றத் தொடர்பு பூண்ட ; (கண.) துணையிய ; (இலக்.) ஒரே வேர்ச்சொல் உடைய ; (உயி.) ஒன்றுகப் பொருத்தப்பட்ட ; *v.* (இலக்.) வினைவிகற்பம் கூறு, வினைச் சொல் அடையும் மாறுதல்களைக் கூறு ; இணைவுறு, மெய்யுறப்புணர் ; (உயி.) கலந்தொன்றுபடு, ஒருங்கு கல ; (தொ.) conjugate diameters, (வடி.) இணைவிட்டங்கள், கூம்பு வெட்டில் ஒன்று மற்றொன்றின் கோடியிலுள்ள தொடு வரைக்கு ஒருபோகு ஆக அமையும்படி உள்ள இரண்டு விட்டங்கள் ; conjugate foci, (இய.) இணைகுவியங்கள், ஒன்றிலிருந்து புறப்படும் கதிர்களுக்கு மற்றது குவியமாக மாறிமாறி அமையும் இரு குவியப்புள்ளிகள் ; conjugate mirrors, (இய.) இணை ஆடிகள், ஒன்றன் குவியத்திலிருந்து வெளிப்படும் கதிர்கள் மற்றொன்றின் குவியத்துக்கு மீளும்படி அமைக்கப்பட்ட கண்ணாடிகள்.

con'jugated, *a.* இணைக்கப்பட்ட ; இணையிணையான ; (வேதி.) அணுத்திரள்கள் - அணுக்கூட்டுக்கள் வகையில் கரியகப் பகுதிகள் ஒன்றுடனொன்று இணைவமைவுடைய.

conjuga'tion, *n.* ஒன்று சேர்த்தல், இணைவு ; (இலக்.) வினைவிகற்ப வகுப்புப்பட்டி ; வினைக்கணம், வினைத்திரிபு அமைவுக்குழு ; (உயி.) இனப்பெருக்கத்துக்காக ஒருங்கிய இரு உயிர்ம நிலை.

conjuga'tional, *a.* இணைந்த, இணைவான ; கலந்திணைவது பற்றிய.

con'jugative, *a.* கலந்திணையும் பாங்குள்ள.

conjunct', *n.* மற்றொருவருடன் சேர்க்கப்பட்டவர் ; மற்றொன்றுடன் இணைக்கப்பட்ட பொருள் ; *a.* ஒருங்குசேர்க்கப்பட்ட ; இணைக்கப்பட்ட ; இணைந்தியல்கின்ற, கூட்டிணையான ; (தொ.) conjunct tetrachords, கிரேக்க இசை முறையில் ஒன்றன் உச்ச சுரத்தந்தி மற்றதன் முதற் சுரத்தந்தியுடன் ஒன்றுபட்டுத் தொடரும் நிலையிலுள்ள நான்கு நரம்பு இசைக் கருவிகளின் இணைவு.

conjunc'tion, *n.* சந்திப்பு, இணைப்பு ; நிகழ்ச்சிகளின் இணைவு ; ஒருங்கு நிகழும் செய்திகளின் தொகுதி ; தொடர்புடைய மக்கள் கும்பு ; தொடர்புடைய பொருள்களின் குவை ; (இலக்.) இணையிடைச்சொல், சொற்களையும் தொடர்களையும் வாசகங்களையும் ஒன்றுடனொன்று இணைக்கும் சொல் ; (வான்.) தோற்ற அளவான கோள் அணிமை.

conjunc'tional, *a.* இணையிடைச் சொல்லுக்குரிய.

conjunctiv'a, (ல.) *n.* (உள்.) இமையிணைப்பு, இமையிணைப் படலம், புற இமையையும் விழிக்கோளத்தையும் இணைக்கும் படலம்.

conjuncti'val, *a.* (உள்.) இமையிணைப் படலத்துக்குரிய.

conjunc'tive, *n.* இணைக்கும் சொல் ; *a.* நெருங்கி இணைந்த ; இணைக்கப்பயன்படுகிற ; சேர்க்கிற ; (இலக்.) இடைநின்று பொருந்த வைக்கிற ; இணையிடைச் சொல்லின் தன்மையுள்ள ; இணையிடைச் சொல்லை முதலாகக் கொண்ட ; (தொ.) conjunctive mood, (இலக்.) ஈரொட்டு வினைவிகற்பப்பாங்கு, புணர்வு ஐயுறவு நிலைகளையுடைய பிறசார்பு வினைகளுடன் தொடர்பு கொண்ட வினைமுற்று வடிவப் பாங்கு.

conjunctivi'tis, *n.* (மரு.) இமையிணைப் படலத்தின் அழற்சி.

conjunct'ly, *adv.* கூட்டாக, ஒன்றுசேர்ந்து.

conjunc'ture, *n.* நிகழ்ச்சிகளின் இணைவு ; சூழ்நிலை இணைவு ; முக்கிய தறுவாய் ; நெருக்கடி.

conjura'tion, *n.* சதிச்செயல் ; தெய்வப்பெயர் சொல்லி அழைத்தல், நிறைமொழி பகர்ந்து அழைத்தல் ; மந்திரிப்பு ; மனமார்ந்த வேண்டுகோள்.

con'jurator, *n.* சதிகாரர்.

con'jure[1], *v.* சாலவித்தை செய் ; வணக்க வழிபாட்டுடன் வேண்டிக்கொள் ; மந்திர உச்சரிப்பினால் ஆவிகளைத் தோன்றும்படி வற்புறுத்து ; மாயத்துக்குட்படுத்து ; செப்பிடு வித்தைகளால் விளைவி ; மனக்கண்முன் கொண்டுவா.

conjure'[2], *v.* தெய்வப்பெயர் சொல்லிக்கூப்பிடு ; வேண்டி வற்புறுத்து ; மன்றாடிக்கேள் ; மனமார வேண்டிக்கொள்.

conjure'ment, *n.* ஆணைவழிப்படுத்தல், சூளுரைத்து ஏவுதல்.

con'jurer, *n.* செப்பிடு வித்தைக்காரர், மந்திரவாதி.

con'juring, *n.* மாயவித்தை செய்தல் ; அற்புதம்போல் காட்டி விளைவுகளை உண்டாக்குதல்.

con'juror[1], *n.* = conjurer.

conju'ror[2], *n.* பிறருடன் ஒத்து ஆணைவழிக் கட்டுப்பட்டவர்.

con'jury, *n.* மாயவித்தை, செப்பிடு வித்தை.

conk[1], *n.* காளான் வகையினால் உண்டாகும் மரநோய் வகை ; மரநோயினால் ஏற்படும் வெட்டுமரக்கோளாறு.

conk[2], *v.* (பே-வ.) கெட்டுப்போ ; முறிந்து போ, இயந்திர வகையில் சீர்கேடுறு.

conk'er, *n.* கயிற்றில் கோத்துப் பிள்ளைகள் விளையாட்டு வகையில் பயன்படுத்தப்படும் நத்தை ஓடு அல்லது மரக் கொட்டை வகை.

conk'ers, *n. pl.* நத்தை ஓட்டினை அல்லது மரக்கொட்டை வகையைக் கயிற்றில் கட்டி அதை வீசி எதிரியின் கயிற்றை அறுப்பதையே நோக்கமாகக் கொண்ட பிள்ளைகள் விளையாட்டு.

conk'y, *a.* மரவகையில் காளான்வகை நோயினால் பீடிக்கப்பட்ட.

conn, *n.* கப்பலை நெறிப்படுத்துதல் ; கப்பலை இயக்குபவர் நிலை ; *v.* கப்பலை வழிப்படுத்து, இயக்கு.

connasc'ent, *a.* ஒரே சமயத்தில் உண்டான ; அதே வேளையில் உண்டுபண்ணப்பட்ட.

conn'ate, *a.* பிறப்புடனமைந்த, உள்ளார்ந்த ; ஒருங்குடன் தோன்றிய, சமகால வாழ்வுடைய ; (தாவ., வில.) பிறவியிலேயே ஒட்டிக்கொண்டுள்ள.

conna'tion, *n.* (உயி.) இணையொத்த உறுப்புக்கள் பிறப்பிலேயே ஒட்டிக்கொண்டிருத்தல்.

conn'atural, *a.* இயல்பாயமைந்துள்ள ; இணையொத்த இயல்புள்ள.

connect', *v.* இணை, சேர், பொருந்தவை ; ஒன்றுபடுத்து, சேர்த்துக்கட்டு ; இசைவி, இணக்கி ஒருநிலைப்படுத்து ; கருத்தில் இணை, தொடர்புபடுத்து ; பிறவற்றுடன் கூடு.

connect'able, *a.* இணைக்கப்படத்தக்க.

conne'cted, *a.* இணைக்கப்பட்ட ; தொடர்பான ; பொருத்தப்பட்ட ; பிணைப்புடைய ; உறவுத் தொடர்புடைய ; ஒருசீரான ; (தொ.) be connected, உறவு கொண்டிரு ; செயல் துறைத் தொடர்பு கொண்டிரு.

connect'edly, *adv.* பொருத்தமாக, வரன்முறையாக, முன்னுக்குப்பின் முரணின்றி.

connect'er, *n.* இணைப்பவர் ; இணைக்கும் பொருள்.

connect'ible, *a.* இணைக்கப்படத்தக்க.

connec'tion, *n.* = connexion.

connect'ive, *n.* (இலக்.) இணைப்பிடைச் சொல், வாக்கியங்களையும் சொற்களையும் இணைக்கும் சொல் ; *a.* சேர்த்துக் கட்டுகிற ; இணைக்கப் பயன்படுகிற ; இணைக்கும் பாங்குள்ள ; (தொ.) connective tissue, உடலின் இணைப்பு இழைத் தொகுதி, தசை நார்.

connect'or, *n.* = connecter.

conne'xion, *n.* ஒன்று சேர்த்தல்; இணைப்பு, இணைக்கப் பட்டுள்ள நிலை; ஒட்டுறவு, பொருத்தம்; இடையிணைப்பு, ஒன்று சேர்க்கும் பகுதி; கூட்டிணைப்புக் குழு, நேச உறவுக் குழு; தொழில் தொடர்பு; வாடிக்கைக்காரர் தொகுதி; சமயக்குழு; உறவினர்; குடும்ப உறவு, இனத்தொடர்பு; நெருங்கிய பழக்கம்; இருபால் புணர்ச்சியுறவு; சந்திப்பு வாய்ப்பு, ஊர்தி-இருப்பூர்தி வண்டிமாற்று வாய்ப்பு.

conn'ing, *n.* வலவனுக்கு வழிகாட்டுதல்; *a.* வழிகாட்டுகிற.

conn'ing-tow'er, *n.* போர்க்கப்பலின் வலவன் அறை; நீர் மூழ்கிக் கப்பலின் இயக்குநர் மணை.

conniv'ance, conniv'ancy, *n.* கண்டுங்காணாததுபோல் இருத்தல், உட்கையாயிருத்தல், மறைமுக ஆதரவு.

connive', *v.* கண்டுங்காணாதது போலிரு; உட்கையாயிரு, மறைமுக ஆதரவு கொடு; (உயி.) குவி, ஒருமுகப்படு.

conniv'ence, conniv'ency, *n.* = connivance.

conniv'ent, *a.* (தாவ.) படிப்படியாய்க் குவிகிற.

conniv'er, *n.* உட்கையாள், உள்ளாள்.

connoisseur', *n.* சுவைத்திற வல்லுநர், கலை-பண்பாடு-சுவை முதலியவற்றின் திறனுய் நடுவர்.

connoisseur'ship, *n.* சுவைத்திறனுய்வுடைமை, கலைப் பண்பறிஞரின் திறன்.

conn'otate, *v.* பண்புக்கூறுகளைக் குறிப்பிலுணர்த்து.

connota'tion, *n.* சொல்லில் பருப்பொருளுக்குப் புறம்பாக உய்த்துணரக் கிடக்கும் பொருள், சொல் குறிக்கும் பண்பு களின் திரள்.

connote', *v.* மூலக்கூருக உய்த்துணரவை; பின்விளைவாகக் குறிப்பிடு; உள்படுத்து, அகப்படுத்து; உள்ளார்ந்த பண்பு களைக் குறிப்பிலுணர்த்து; துணைப்பண்புகளைச் சுட்டி உணரவை; பொருள்படு; (அள.) பருப்பொருள் சுட்டுவ தன்றிப் பண்புத்தொகுதி உணர்த்து.

connub'ial, *a.* திருமணத்துக்குரிய; கணவன் மனைவியர் பற்றிய.

con'oid, *n.* (வடி.) போலிக்கூம்புரு; கூம்பு வெட்டுத் தன் அச்சின்மேல் சுழல்வதனுல் உண்டாகும் பிழம்புரு; ஏறத் தாழக் கூம்பு வடிவமைந்த பொருள்; *a.* கூம்பு வடிவமுள்ள.

conq'uer, *v.* வலிமையினுல் வெல், முயன்று வெற்றிகொள்; வென்று அடை; கீழ்ப்படுத்து; வெற்றி வீரனுகு.

conq'ueress, *n.* வெற்றிகொண்ட பெண்.

conq'ueror, *n.* வெல்பவர்; வென்று கைக்கொண்டவர்; வெற்றியாளர்; பிள்ளைகளின் விளையாட்டு வகையில் எதிரி யின் காயை அடித்து ஓடித்த காய்; (தொ.) the Conqueror, இங்கிலாந்தின் முதலாவது வில்லியம் (William I) மன்னர்.

conq'uest, *n.* அடிப்படுத்தல், கீழ்ப்படுத்தல்; வென்று நிலம் கொள்ளுதல்; வென்ற நிலப்பகுதி; அன்பு வெற்றி; அன்பினுல் ஆட்கொள்ளப்பட்டவர்; (தொ.) the Conquest, பிரஞ்சு நாட்டு நார்மண்டிப் பகுதிக்குரிய வில்லியம் (William of Normandy) 1066-இல் இங்கிலாந்தின் அரசுரி மையைக் கொண்ட நிகழ்ச்சி.

conquis'tador, (ஸ்பா.) *n.* வெற்றி வீரன்; (வர.) 16-ஆம் நூற்றாண்டில் மெக்ஸிகோ (Mexico) வையும் பெரு (Peru) வையும் வென்ற ஸ்பானிய வீரர்.

consang'uine, consanguin'eous, *a.* குருதிக் கலப்புடைய; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த; உறவான, ஒரே மரபைச் சேர்ந்த.

consanguin'ity, *n.* குருதி உறவு.

con'science, *n.* உளச்சான்று, நன்மை தீமையறியும் நேர்மை யுணர்வு; மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட நிலை; நெஞ்சங் கோடாமை; (தொ.) bad conscience, தம் செயல்கள் தீயன என்னும் உணர்வு; case of conscience, முரண்படு கொள்கைகளுக்கிடையே மனச்சான்றைக் கொண்டு முடிவு காணவேண்டிய செய்தி; conscience clause, சட்டத்தினுல் உறுத்தப்படுபவர்கள் துயருருதபடி அவர்தம் மனச்சான் றுக்கு மதிப்பளிக்கும் சட்ட வாசகம்; conscience money, வருமானவரி முதலியவற்றில் முன்பு செலுத்தவேண்டி யிருந்தும் செலுத்தாததனுல் ஏற்பட்ட மனவுறுத்தலைத் தவிர்ப்பதற்குச் செலுத்தப்படும் பணம்; good conscience, தம் செயல்கள் நல்லன என்னும் உணர்வு; in all conscience, உறுதியாக; (பே-வ.) நீதி நேர்மை ஆகியவற்றின் பெயரால்; make a matter of conscience, நுட்பநுணுக்கமாக ஆய் வாராய்வுக்குரியதாக்கு; o'my conscience, upon conscience, உண்மையாக!

con'science-proof, *a.* மனச்சான்றுறுத்தலுக்குச் செவி சாய்க்காத.

con'science-smitten, *a.* மனச்சான்றுறுத்தலுக்கு ஆளான.

conscien'tious, *a.* மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட; இம்மி யளவும் மனச்சான்றினின்றும் பிழைபடாத; (தொ.) conscientious objector, மனச்சான்று இடந்தரவில்லையெனக் கூறி படைத்துறைப் பணியை எதிர்ப்பவர்; உறுத்தப்பட்ட மக்கள் துயருரு வண்ணம் ஏற்படுத்தப்பட்ட சட்ட விதியைப் பயன்படுத்திக்கொள்பவர்.

conscien'tiously, *adv.* உளச்சான்றுக்குக் கட்டுப்பட்டு.

conscien'tiousness, *n.* கடமையுணர்ச்சி, நெஞ்சங் கோடாமை.

con'scionable, *a.* மனச்சான்றின்படி நடக்கிற; நேர்மை யான.

con'scious, *a.* உணர்வு நிலையுடைய; உணர்வு விழிப்புடைய; உணர்கிற; தெரிகிற; தெரிந்துள்ள; நெஞ்சறிந்த, உணர்ச்சி மூளப்புடைய.

con'sciously, *adv.* நெஞ்சறிந்து, மனமார.

con'sciousness, *n.* உணர்வு நிலை, மனத்தின் விழிப்பு நிலை, நனவு; எண்ணத்தொகுதி; உணர்ச்சிகளின் திரள்; எண்ணம்; புல உணர்வு.

con'script[1], *n.* கட்டாயப் படைத்துறைப் பணிக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்; *a.* கட்டாயப் படைத்துறைப் பணிக்குப் பெயர்ப் பதிவு செய்யப்பெற்ற; (தொ.) conscript fathers, பண்டைய ரோமாபுரி மேன்மக்கள், மேலவையினர்.

conscript'[2], *v.* படைத்துறைக்குக் கட்டாயநிலையில் சேர்.

conscrip'tion, *n.* படைத்துறைக் கட்டாய ஆள் சேர்ப்பு; கப்பல் படை-விமானப்படைக்குரிய கட்டாய ஆளெடுப்பு.

con'secrate, *a.* புனித காரியத்துக்கென ஒதுக்கிவைக்கப் பட்ட, நேர்ந்துவிடப்பட்ட, தெய்விகமாக்கப்பட்ட; *v.* தெய்வப்பணிக்கென ஒதுக்கிவை; நேர்ந்துவிடு; தெய்வப் பண்புள்ளதாக்கு; நற்றூய்மையுள்ளதாக்கு.

consecra'tion, *n.* படையல், புனிதப் பணிக்கென நேர்ந்து விடல்; எழுந்தேற்றம், திருநிலைப்பாடு, திருக்கோயிற் பதவிக்கு நிக்கை செய்யப்பெறல்; கடமை ஒப்படைப்பு, கருமத்தில் கண்ணுயிருத்தல்.

consecra'tory, *a.* புனிதமாக்குகிற, எழுந்தேற்றத்துக்கு உரிய.

consect'ary, *n.* தொடர் விளைவு, கிளை முடிபு, விதிதரு முறை, மெய்ம் முடிபிலிருந்து பெறுவித்த மறு முடிபு.

consecu'tion, *n.* அளவை முறையான காரணகாரியத் தொடர்பு, நிகழ்ச்சிகளின் தொடர் கோவை; (இசை.) பல பண்திற இசைவில் ஒரே மாதிரியான இடையீடுகள் அடுத் தடுத்து வருதல்; (இலக்.) சொற்களின் தொடர்பு; காலத்தின் இடைத்தொடர்பு.

consec'utive, *a.* இடைவிடாது தொடருகிற; தொடர்ச்சி யாக வருகிற; (இலக்.) விளைவைத் தெரிவிக்கிற.

consenes'cence, consenesc'ency, *n.* இயலழிவு, பாழ், முழுநாசம்.

consen'sion, *n.* பரிமாற்றமான உடன்பாடு, இருதரப்பாரும் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் ஒப்பந்தம்.

consen'sual, *a.* உடனிணக்கத்துக்குரிய, ஒத்தியைவான; (உட.) விருப்பாற்றல் இயலாற்றல் திறங்களின் ஒத்தியை விஞல் தோற்றுவிக்கப்பட்ட; (தொ.) consensual contract, கட்சிக்காரர்களின் ஒத்தியைவு மட்டுமே வேண்டியிருக்கிற ஒப்பந்தம்.

consen'sus, *n.* பல்வேறுபாகங்களின் பொருத்தம்; (உட.) செயல் நிறைவேற்றத்தில் வெவ்வேறு உறுப்புக்களின் ஒத்துழைப்பு; கருத்து ஒருமைப்பாடு; முழு ஒற்றுமை, இசைவு.

consent', *n.* உடன்பாடு, இசைவு, இணக்கம்; இணக்க மளிப்பு, ஒப்புதல்; *v.* உடன்படு, இணங்கு; ஒப்புதலளி, சரி யென்று சொல்; (தொ.) age of consent, (சட்.) இணக்க உரிமை அகவை, திருமணம்-கலவி போன்ற சில செயல் களுக்கு ஒருவர் சட்டப்படி இணக்கம் தெரிவிக்கவல்ல வயது; with one consent, ஒருமனதாக, ஒரு கருத்தாக.

consentan'eous, *a.* இணங்கிய, இசைவான; ஒத்தபடி யான, பொருத்தமான, உகந்த; ஒருமனதான, ஒத்தியங்குகிற.

consen'tience, *n.* உடன்பாடு; உணர்வுநிலை கடந்த உணர் வற்ற உள்ளுணர்வுத்தள நிலைவுகளை ஒருமுகப்படுத்தும் ஆற்றல்; அரைகுறையான உணர்வு நிலை.

consen'tient, *a.* உடன்படுகிற; இணங்குகிற; ஒத் தியங்குகிற; ஒருங்கியல்கிற; அரைகுறையான உணர்வு நிலையிலுள்ள.

con'sequence, *n.* விளைவு, பயன்; காரணகாரியத் தொடர்பு; முக்கியத்துவம்; சமுதாய மதிப்பு, சமுதாயச் செல்வாக்கு; விளைவாக உண்டான செயல்.

con'sequent, *n.* விளைவு; காரணத்தின் இயல்பான பயன்; *a.* செயல்விளைவான, பயனுக ஏற்பட்ட; (நில.) தொடக் கத்தில் இருந்த நிலச்சாய்வுப் போக்கின்படி செல்கிற.

consequen'tial, *a.* விளைவாகப் பின்தொடர்கின்ற; தற் பெருமையுள்ள.

conserv'ancy, *n.* பேணுகை, ஆறு-காடு-தெரு-உடல்நலம் முதலியவற்றின் பாதுகாப்பு; பாதுகாப்புக்குழு; பாதுகாப்புத் துறை; பாதுகாப்புச் செயல்.

conserva'tion, *n.* பாதுகாப்புச் செயல்; பேணுகை; முழுதும் பாதுகாத்தல்; (தொ.) conservation of energy, தனிப்பட்ட அமைப்பில் உள்ள முழுச்சக்தியும் நிலை பெயராத் தன்மையது என்ற கொள்கை; conservation of matter, இயற்பொருள் என்றும் அழியாது என்னும் கொள்கை.

conser'vatism, *n.* பழம் பண்புப் பாதுகாப்புக் கொள்கை; புதுமை வெறுப்பு.

Conser'vative, *n.* பழமை பேணும் கட்சியினர், பழமைப் பற்றாளர்; மாறுதல் விரும்பாதவர்.

conser'vative, *a.* பாதுகாத்துக் கொள்ளும் இயல்புடைய; மாறுதல் விரும்பாத; நடுத்தரமாக மதிக்கப்பட்ட அல்லது குறைத்துக் கூறப்பட்ட.

conservatoire, (பிர.) *n.* (ஐரோப்பிய பெருநிலப்பகுதியி லுள்ள) இசை-சொற்பொழிவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் பொதுப்பள்ளிக்கூடம்.

con'servator, *n.* பாதுகாப்பவர், காவலாளர், காப்பாளர்.

conservato'rium, *n.* இசைப்பள்ளி.

conser'vatory, *n.* களஞ்சியம், கிடங்கு; அருமையான செடிகொடிகளை வளர்க்கும் கண்ணாடி வீடு; இசைப்பள்ளி; *a.* பாதுகாக்கிற.

conserve', *n.* பாதுகாத்து வைக்கப்பட்ட பொருள்; *v.* பழுது படாமல் பேணு; முழுதும் வைத்திரு; விடாமல் கொள்; பாதுகாத்து வை; சேமித்து வை; தீங்கு சிதைவு அல்லது இழப்பு இல்லாமல் பாதுகாவல் செய்.

consid'er, *v.* கவனமாய்ப் பார், ஆழ்ந்து ஆராய், எண்ணிப் பார்; சிந்தி; அமைந்து எண்ணு; கவனி; பரிசு கொடு.

consid'erable, *a.* எண்ணத்தக்க; சிறிது முக்கியத்துவம் வாய்ந்த; சிறிதளவின் மேம்பட்ட, மிகுதியான, பெரிய, பல.

consid'erate, *a.* எண்ணிப்பார்க்கிற; அன்பாதரவுடைய, விட்டுக்கொடுக்கும் பண்புடைய; முன்கவனமான, மதியுள்ள.

consid'erateness, *n.* பிறர் நலத்தை எண்ணிப்பார்க்கும் தன்மை.

considera'tion, *n.* ஆராய்வு; சலுகை; முக்கியத்துவம், சிறப்பு; நோக்கம் அல்லது காரணம்; நட்ட ஈடு, இழப்பீடு, பரிசு; ஒப்பந்தத்தின் காரணம் அல்லது அடிப்படை; (சட்.) பிறர் தந்ததற்கேற்பத் தருதலும் பிறர் விட்டதற்கேற்ப விடுதலும்.

consid'ering, *prep.* பார்க்குமிடத்து, நோக்குகையில், கவ னித்தால்.

consign', *v.* கையெழுத்து அல்லது முத்திரை இடு; ஒருமுகப் படுத்து; மாறுபாடு செய், இடமாற்று, உரிமை மாற்று; நம்பகமாக ஒப்படை; கடத்து, அனுப்பு.

consigna'tion, *n.* சட்டப்படி அமர்த்தப்பட்டவரிடம் ஒழுங்கு முறையின்படி பணம் கொடுத்தல்; சரக்கை ஒப்படைக்கும் செயல்.

consigned', *a.* நம்பகமாக ஒப்படைக்கப்பட்ட.

consignee', *n.* சரக்கை ஏற்றுக்கொள்பவர், பொருள் ஒப் படைக்கப்பட்டவர்.

consign'ment, *n.* ஒப்படைப்புச் செயல்; ஒப்படைப் பொருள்; ஒப்படைக்கப்பட்ட பொருள்களின் தொகுதி; அனுப்புச் சரக்கு.

consil'ient, *a.* ஒத்துக்கொள்கிற.

consist', *v.* கூருகக் கொண்டிரு; இரு, உளதாகு, அமைந்திரு; உடனமைந்திரு; ஒருங்கிரு; ஒப்புக்கொள்; இணைந்திரு; (தொ.) consist of, அடக்கிக் கொண்டிரு.

consist'ence, *n.* நெருக்க அளவு; பதார்த்தம்.

consist'ency, *n.* நெருக்க அளவு, உடன்பாடு; நிலையா யிருத்தல், கொள்கை மாருமை.

consist'ent, *a.* கொள்கை மாறுத, நிலைபேறுள்ள, ஒத்திருக் கிற, முரண்பாடற்ற; கொள்கைப்பற்றுள்ள.

con'sistory, *n.* பேரவை கூடும் இடம்; பண்டை ரோமப் பேரரசர் அந்தரங்க ஆலோசனைக்குழு; மன்றம் அல்லது குழு; திருக்கோயில் முறை மன்றம்.

conso'ciate, *n.* கூட்டாளி; *a.* கூட்டாளியான; *v.* கூட் டாகச் சேர்.

conso'lation, *n.* ஆறுதல்; துயராற்றுதல்; ஆறுத லளிக்கும் நிகழ்ச்சி; (தொ.) consolation match, consolation prize, consolation race, consolation stakes, தோல்வியுற் றோரின் ஆறுதலுக்கான போட்டி-பரிசு-பந்தயம்.

consol'atory, *a.* ஆறுதலளிக்கிற.

console' [1], *v.* தேற்று, துயராற்று, ஆறுதலளி, பெருந்துயர் நீக்கி மகிழ்வி.

con'sole [2], *n.* (கட்.) மூலைதாங்கும் தள நேரிணை; நெஞ்சள வுச் சிலை-மலர்க்குவளை-சிற்பஉருவம் முதலியவற்றைத் தாங் கும் மூல இணைப்பு; இசைப்பெட்டித் திருகுச் சாய்வு மேடை; பெரிய வானெலிப்பெட்டி.

con'sole-mirror, *n.* சுவரொட்டியுள்ள முகம்பார்க்கும் கண்ணாடி.

con'sole-table, *n.* சுவரொட்டு மேசை.

consol'idate, *a.* ஒன்றுக்கப்பட்ட; கெட்டியாக்கப்பட்ட; *v.* திடமாக்கு; வலுப்படுத்து; கெட்டியான தொகுதியாக்கு; ஒன்றுக்கு; இரண்டறக்கல; கெட்டியாகு; ஒன்றுகு; (தொ.) consolidated fund, பல்வேறு வரிகளின் இணைப்பு நிதி; தேசியக்கடனுக்காகக் கொடுக்கப்படும் வட்டியும் பிரித் தானிய அரச குடும்பத்திற்கு அளிக்கப்படும் பொருளுதவியும் வேறு சில இனங்களும் கூடிய நிதி; consolidation acts, தனிப்பட்ட வெவ்வேறு சட்டங்களைப் பொதுத் தொகுதி யாக்கும் பாராளுமன்றச் சட்டங்கள்.

consomme, (பிர.) *n.* தெளிவான இறைச்சிச் சாறு.

con'sonance, *n.* உடன்பாடான நிலை ; ஒலி இணைப்பு அல்லது உடன்பாடு ; இசை ஒலிக்கூட்டணி ; இசைப்பொருத்தம்.

con'sonant, *n.* மெய்யெழுத்தொலி ; மெய்யெழுத்து ; *a.* முரணில்லாத, ஒத்திருக்கிற ; தகுதியுள்ள ; இசைவிணக்க முள்ள.

con'sort[1], *n.* வாழ்க்கைத்துணைவர் ; கூட்டாளி ; பங்காளி ; மனைவி அல்லது கணவன் ; கூடச் செல்லும் கப்பல் ; கூட்டிணைப்பு ; கூட்டுக்குழு ; ஒப்பந்தம் ; உடன்பாடு ; (தொ.) in consort, தோழமையாக, இணைப்புப் பொருத்தமாக.

consort'[2], *v.* கூடச்செல் ; கூட்டாக இணை ; ஒப்புக்கொள்.

consor'tium, *n.* தோழமை, நல்லுறவு, நட்பு, தொடர்பு ; அணைத்து நாட்டு வங்கி அல்லது நிதியின் கூட்டிணைப்பு ; காளான் வகைகளின் கூட்டிணைப்பு.

conspecif'ic, *a.* ஒரே இனத்தைச் சார்ந்த, ஒரே வகுப்பை அல்லது வகையைச் சார்ந்த.

conspec'tus, *n.* விரிவான மதிப்பீடு, பலவற்றை உட்கொண்டுள்ள தோற்றம் அல்லது மேற்பார்வை ; சுருக்கம், பொழிப்பு.

conspic'uous, *a.* தெளிவாகத் தெரிகிற ; முனைப்பான.

conspi'racy, *n.* கூட்டுச் சதி செய்தல் ; மறைமுக நோக்கத்துடன் ஒன்று சேர்தல் ; சதித் திட்டம் ; உடன்பாடு.

conspi'rator, *n.* கூட்டுச் சதியாளர்.

conspire', *v.* கூடிச் சதிசெய் ; ஒன்று கூடிச் செயலாற்று ; திட்டமிடு ; ஒருமுடிவுக்காக ஒத்தியங்கு, இசைவுறு.

co'nstable, *n.* கோட்டைக் காவலர் ; அமைதி அதிகாரி ; ஊர்க்காவலர், போலீசுக்காரர் ; (தொ.) Constable of France, பண்டை பிரஞ்சு அரசர்களின் அரண்மனை அலுவல் தலைமை அதிகாரி ; இராணுவத் தலைமைத் தளபதி, இராணுவப் பண்பு - போட்டிப் பந்தயம் - படைத்திறன் - காட்சியணி முதலிய வற்றின் நடுவர் ; High Constable, படைக்கலக் காட்சி செய்தல் - அமைதியைப் பாதுகாத்தல் ஆகியவை கவனித்த இரு பண்டைக் காவலர்களில் ஒருவர் ; Lord High Constable of England, இங்கிலாந்து அரசரின் அதிகாரி ; முன்னுள் நல்வீரர் பண்பு மன்றத்தின் நடுவர் ; outrun the constable, அதிவிரைவாகச் செல் ; கடனுளியாகு ; petty constable, திருக்கோயில் வட்டாரப் பகுதியின் துணைக் காவலர் ; special constable, அமைதிப் பாதுகாப்பு உறுதி மொழியாளர், சிறப்பான தறுவாய்களில் பற்றுணை நிறை வேற்றும் அதிகாரி.

constab'ulary, *n.* ஊர்க்காவலரின் படைத்தொகுதி ; *a.* ஊர்க் காவலரைச் சார்ந்த, அமைதி அதிகாரிகளின் சார்பு கொண்ட.

con'stancy, *n.* உறுதி ; மாறுதன்மை ; திடப்பற்று.

cons'tant, *n.* (கணி.) நிலை எண், மாறுமதிப்பளவை ; *a.* நிலையான, மாறுத, உறுதியான ; தொடர்ச்சியுள்ள ; திடப் பற்றுடைய.

Constan'tia, *n.* இன்தேறல், தென்னுப்பிரிக்காவிலுள்ள கேப் டவுன் (Cape Town) அருகே கான்ஸ்டாண்டியா (Constantia) என்னும் ஊர்ப்புறத்தில் உற்பத்தி செய்யப்படும் இனிய மது.

con'stantly, *adv.* எப்போதும் ; அடிக்கடி, ஓயாது, இடைவிடாமல், என்றும், ஒய்வொழிவின்றி.

con'stellate, *v.* கொத்தாகச் சேர் ; விண்மீன்கள் வகையில் குழுவாயமை ; நட்சத்திரபலன் பாதிக்கச்செய்.

constella'tion, *n.* விண்மீன் குழு ; சிறப்புடையோர் கூட்டம் ; மனித வாழ்க்கையைப் பாதிப்பதாகக் கருதப்படும் கோள்நிலை அமைதி.

con'sternate, *v.* திகைக்க வை, கிலிபூட்டு.

consterna'tion, *n.* பரபரப்பூட்டும் அச்சம், கிலி, திகைப்பு, திண்டாட்டம்.

con'stipate, *v.* தடைப்படுத்து ; மலச்சிக்கல் உண்டாக்கு.

constipa'tion, *n.* மலச்சிக்கல்.

constit'uency, *n.* வாக்காளர் தொகுதி, தேர்தல் தொகுதி, மொழியுரிமையாளர் குழுமம் ; வாக்காளர் பட்டியலுக்குரிய வட்டாரம்.

constit'uent, *n.* இன்னொருவரைத் தம் முகவராக அமர்த்துபவர், மூலவர் ; ஆக்கக்கூறு ; மூலக்கூறு ; முக்கிய பகுதி ; வாக்காளர் குழுவினர் ; தேர்தல் தொகுதியாளர் ; *a.* ஆக்கக் கூருயுள்ள ; மூலப்பகுதியாயுள்ள ; முக்கியமான, உயிர் நிலையான ; தேர்வுரிமையுடைய ; அரசியலமைப்பை உருவாக்குகிற ; (தொ.) constituent assembly, அரசியல் நிர்ணயசபை.

con'stitute, *v.* அமைப்பு உருவாக்கு, ஆக்கிப்படை ; சட்ட உருக்கொடு, உரிமைப்படுத்து ; நிறுவு, ஏற்படுத்து ; உருக் கொடுத்து அமைவி ; இணைந்து உருவாக்கு, சேர்ந்து அமை.

constitu'tion, *n.* அமைத்தல், நிறுவுதல் ; ஆக்க அமைவு, அமைப்பு ; யாக்கை, உடல் கட்டமைவு ; மனத்தின் ஆக்க நலம் ; அரசியல் அமைப்பு ; அமைப்பாண்மை, அமைப்பு விதித்தொகுதி.

constitu'tional, *n.* உடல் நலத்துக்கான உலாவரவு ; *a.* இயற்கை அமைப்புச் சார்ந்த ; இயல்பான ; உள்ளார்ந்த ; ஆக்க அமைவு சார்ந்த ; அடிப்படைப் பண்புக்குரிய ; உடலமைப்புக்குரிய ; மன ஆக்கநலத்துக்குரிய ; அரசியலமைப்புக்குரிய ; அரசியலமைப்புக்குகந்த ; அரசியலமைப்போடு இசைவான ; நடைமுறை அரசியலமைப்பின்படியான ; நடைமுறைச் சட்டத்தைப் பின்பற்றிய ; (தொ.) constitutional government, அரசியலமைப்போடு இசைவான ஆட்சி ; constitutional sovereign, அரசியலமைப்புக்குகந்தவாறுள்ள அரசர் அல்லது அரசி.

constitu'tionalism, *n.* அரசியலமைப்பில் பற்றுடைய கோட்பாடு.

constitu'tionalist, constitu'tionist, *n.* அரசியலமைப்பின் ஆய்வாளர் ; அரசியலமைப்பின் ஆதரவாளர்.

constitu'tionalize, *v.* அரசியலமைப்போடிசைவி ; சட்ட ஒழுங்குப்படுத்து, சட்ட அமைதிப்படுத்து ; உடல் நலத்துக்குரிய உலாவரல் மேற்கொள்ளு.

con'stitutive, *a.* இணைந்து உருவாக்குகிற ; நிறுவுகிற ; அமைக்கும் உரிமையுடைய ; முக்கியமான ; ஆக்கக்கூருயுள்ள, ஆக்கமான, கட்டுமானப்பகுதியாயுள்ள.

con'stitutor, *n.* அமைப்பாளர், உருவாக்குபவர், நிறுவனர், ஏற்படுத்துபவர்.

constrain', *v.* வற்புறுத்து ; வல்லந்தமாகச் செய்வி ; கட்டாயப்படுத்து ; வலுக்கட்டாயமாக நடைபெறுவி ; கைப்பற்று ; வலக்காரமாக அடைத்து வை ; கட்டுப்பாட்டுக்கு உட்படுத்து, வரம்பிட்டுக் கட்டுப்படுத்து.

constrained', *a.* வலிந்து உண்டுபண்ணப்பட்ட, கட்டான ; செயற்கையான ; மன மீடுபடாது குழம்பிய ; (தொ.) constrained manner, குழம்பிய நடை, மனக்குழப்பம் உண்டு பண்ணும் நடைமுறை ; constrained voice, இயல்பல்லாத குரல்.

constraint', *n.* வலுக்கட்டாய நிலை, தடுக்க முடியாத வலியுறவு ஆற்றல் ; புறக்கட்டுப்பாடு ; கட்டுப்பாட்டு விதி, கட்டுப்படுத்தும் செய்தி ; சிறை வைப்பு ; இக்கட்டு நிலை, நிர்ப்பந்த நிலை ; வலிந்த உணர்ச்சியடக்கம்.

constrict', *v.* நெரி, இடுக்கு, ஒடுக்கு ; இறுக்கு, நெருக்கு ; சுருக்கு ; தசை சுருங்கவை.

constric'tor, *n.* நெருக்கி இறுக்கும் பொருள் ; நெருக்கி அழுத்தும் தசை ; வெங்கிணைத்தி, இரைவிலங்குகளை வளைத்து நெருக்கிக் கொல்லும் இயல்புடைய மலைப்பாம்பு.

constringe', *v.* ஒருங்கு சேர்த்து இழு ; சுரிக்கவை, சுருக்கு ; சுருங்கு.

construct', *v.* கட்டிடம் கட்டு, கட்டியெழுப்பு ; இணைத்துருவாக்கு, கட்டமை ; உண்டுபண்ணு, ஆக்கு ; புனைந்தியற்று, பாடல் இயற்று ; வரை, கோடிணை ; தொடர்புபடுத்து ; (இலக்.) வாசகத்தில் சொற்களைத் தொடர்புபடுத்து.

construc'tion, *n.* கட்டுதல்; கட்டிடம்; கட்டுமானம், கட்டமைப்பு முறை; அடுக்கமைவு, அடுக்கப்பட்ட பொருள்; நாடகக் கட்டுமானம்; உருவமைதி; பொருள்கோள் வகை, பொருள் விளக்க வகை; கொள்பொருள்; வாக்கியத்திலுள்ள சொற்களின் இலக்கணத் தொடர்பு; (தொ.) bear a construction, குறிப்பிட்ட பொருள்கோளுக்கு இடம் அளிப்பதாயிரு.

construc'tional, *a.* கட்டும் செயலைச் சார்ந்த; கட்டிட வேலைக்கான; கட்டிடங்களைப் பயன்படுத்துகின்ற; கட்டுமான முறைக்குரிய; கட்டமைப்புக்குரிய, அடிப்படை சார்ந்த.

construc'tive, *a.* கட்டுதல் சார்ந்த; கட்டிடத்துக்குரிய; ஆக்கச் சார்பான; வள ஆக்கம் நாடுகிற.

construc'tor, *n.* கட்டிடம் கட்டுபவர்; கட்டமைப்பவர், உண்டுபண்ணுபவர், ஆக்குநர்.

con'strue, *n.* சொல்லுக்குச்சொல் மொழிபெயர்க்கப்படவேண்டிய பகுதி; பொருள்கோள்; *v.* சொல்லிணைத்துப்பொருள் கொள்ளு; இலக்கணத் தொடர்பு தெளிவுபட விளங்குவதாயிரு; சொல்லும் இலக்கணத் தொடர்பும் மாறாது அயல் மொழிப்படுத்திக் காட்டு; மொழிபெயர்; விளக்கு; பொருள் கொள், பொருள் விளக்கம் செய்; உய்த்துணர்.

consubstan'tial, *a.* பொருண்மை மாறுபடாத; கிறித்தவத் திருக்கோட்பாட்டின்படி மும்மை இறைமை நிலைகளிடையே பொருண்மை ஒருமை நிலைக்கோட்பாடு சார்ந்த.

consubstan'tiate, *a.* ஒரே பொதுப்பொருளில் இணைவு பெற்ற, ஒரு பொதுப்பண்பில் இணைந்த; *v.* ஒரே பொதுப் பொருளில் ஒன்றுபடு, ஒரே பொது இயல்பில் ஒன்று சேர்.

consubstantia'tion, *n.* உடன்பொருண்மைக் கொள்கை, கிறித்தவ சமயத் திருக்கோயில் வழிபாட்டு அப்பமதுக்களில் அப்பமதுப் பொருண்மைகளுடன் பொருண்மைகளாக இயேசுவின் உடலும் குருதியும் உடனியல்கின்றன என்னும் மார்ட்டின் லூதரின் கோட்பாடு.

con'suetude, *n.* வழக்கம், சட்ட வலிமையுடைய மரபு வழக்கு; சமுதாயக்கூட்டுறவு; நெருங்கிய பழக்கம்.

consuetud'inary, *n.* தொல்மரபு வழக்கத்தால் நிலைநாட்டப்பட்ட எழுதாச்சட்டம்; சமய நிலையங்களின் மரபு வழக்குத் தொகுதி; மரபு வழிபாட்டுச் சடங்கு; *a.* வழக்கமான, மரபு வழக்கான.

con'sul, *n.* அயலிட நாட்டுப்பேராளர்; வெளிநாட்டில் வாழும் குடிமக்கள் நலப்பாதுகாப்பாளர்; நாடுகடந்த வாணிக நலக் காவலர்; மிதிவண்டி உலாவாணர் கழகத்தின் திணைநிலப் பேராள்; (வர.) பிரஞ்சுக் குடியரசின் (1799-1804) ஆட்சி உரிமைத் தண்டலாளர் மூவருள் ஒருவர்; பண்டை ரோமாபுரிக் குடியரசின் உச்ச ஆட்சி உரிமையுடைய இரு தண்டலாளர்களில் ஒருவர்.

con'sular, *n.* அயல்நாட்டுப் பேராளுக்கு ஒப்பான உயர்நிலை உடையவர்; *a.* அயல்நாட்டுப் பேராளுக்குரிய.

con'sulate, *n.* வெளிநாட்டு ஆட்சிப் பேராளின் பணி; அயல் நாட்டுப் பேராளின் அலுவலகம்; அயல்நாட்டுப் பேராளின் மாளிகை; நாடு கடந்த குடிகாவலர் ஆட்சிக்காலம்.

consult', *v.* அறிவுரைகோரு; தகவல் கேள்; ஏட்டில் கருத்துரை நாடு; கலந்தாய்; கலந்து பேசு, வாதி; அக்கறைகொள், எண்ணிப்பார், கவனத்துக்கு எடுத்துக்கொள்; நலங்கருதித் துணி; நலங்கருதிச் செய்; (தொ.) consult one's pillow, இரவு முழுதும் விழித்திருந்து சிந்தனையில் கழி.

consul'tant, *n.* அறிவுரை நாடுபவர்; தகவல் வேண்டுபவர்; அலுவல் துறை அறிவுரையாளர்; அலுவல்துறை ஆய்குழுவில் பங்கு கொள்பவர்; அறிவுரை உதவி கோரப்படும் மருத்துவர்.

consulta'tion, *n.* அறிவுரை கோருதல்; கலந்து பேசுதல்; ஆழ்ந்து ஆராய்தல்; மருத்துவர் ஆலோசனைக் கூட்டம், வழக்குரைஞர் ஆய்வுக் கூட்டம்.

consume', *v.* வாட்டிப்பொசுக்கு, சுட்டெரி; அரித்தழி; ஆவியாக்கு; வீணாக்கு; இல்லாததாக்கு; செலவுசெய், பயன்படுத்து; செலவழித்துத்தீர், பயன்படுத்திக் கழி; விழுங்கு.

consum'edly, *adv.* மிகுதியாக, மட்டுமீறிய தன்மையில்.

consum'er, *n.* பயனீட்டாளர், பயன்படுத்துபவர்; (தொ.) consumer goods, consumers' goods, பயன்படுத்துபவரிடம் அளிக்கப்படும் நிலையிலுள்ள பொருள்கள்; செயல் தீர்ந்த பயனுக்குரிய சரக்குகள்; consumer resistance, பயன் படுத்துபவர் சார்பான வாணிகத் தயக்க நிலையாற்றல்.

consumm'ate [1], *a.* முழுநிறைவான, முழுமையான, குறை பாடில்லாத, நிறைவுடைய.

con'summate [2], *v.* நிறைவேற்று, செய்துமுடி; திருமண நிறைவுசெய், மன்றலமளியேற்றி மணவுறவு முழுமையாக்கு.

consumma'tion, *n.* நிறைவேற்றம்; முழுநிறைவு; நிறைவேறிய செய்தி; விரும்பிய முடிவு; வாழ்க்கை அல்லது உலகத்தின் முடிவு; திருமண நிறைவு விழா, மன்றலமளி ஏற்றம்.

consump'tion, *n.* செலவழிவு, பயன்படுத்தித் தீர்த்தல்; அழிவு; பயன்படுத்தித் தீர்ந்த அளவு, பயனீட்டளவு; வீணுதல்; தேய்வு, மெலிவு; நோய் நலிவு; எலும்புருக்கி நோய்.

consump'tive, *n.* எலும்புருக்கி நோய் உடையவர்; *a.* அழிவு செய்கிற; எலும்புருக்கி நோயுடைய; எலும்புருக்கி நோய்ச் சார்பான.

contabes'cence, *n.* மலர்த்துகளைக் கருவிலழிக்கும் நோய்க் கோளாறு.

contabes'cent, *a.* தேய்ந்து அழிகின்ற, வழங்கா உறுப்புக்கள் சத்துக் குறைந்து வாடிவதங்கிப் போகின்ற; பூந்தாது உற்பத்தியற்ற.

con'tact, *n.* தொடுநிலை, தொக்கு, தொடக்கு; சந்திப்பு, இணைவு; தொடர்பு, கூட்டுறவு, நெருங்கிய பழக்கம்; இணைக்கும் பொருள்; மின்தாவுவதற்குப் போதிய நெருக்கம், மின் தொடர்பு; (வடி.) வெட்டி மேற்செல்லாமல் கோட்டுடன் கோடு கூடுகை; (மரு.) தொற்றுக்குரிய நெருக்கம், தொற்றிணைப்பு; தொற்றிணைப்பாளர்; *v.* தொடர்பு கொள்; தொடர்பை ஏற்படுத்து; பற்றிணைப்புக்கொள்; பற்றிணைப்பு உண்டுபண்ணு; (தொ.) contact flight, நிலப்பரப்பின் காட்சியறிவின்மூலம் வானூர்தியை இயக்குதல்; contact man, (பே-வ.) இடையீட்டாளன், தரகன்; பொதுமக்களுடன் அரசியலரங்கத்தை இணைப்பவர்.

con'tact-lens, *n.* கண் பார்வைக்கோளாறு திருத்தக் கண் விழியோடொட்டி அணியப்படும் குழைமக் கண்ணுடி வில்லை.

contadi'no, (இத்.) *n.* இத்தாலி நாட்டுப்புறத்தவன், *pl. contadi'ni; fem. contadi'na.*

conta'gion, *n.* தொற்று, ஒட்டுவாரொட்டி நோய்; தொற்றுதல்; தொற்று நச்சுக்கூறு; தொற்றுக்கருவி; ஒழுக்கங் கெடுக்கும் பண்பு, நச்சொழுக்கம் பரப்பும் பண்பு; தீமை பரப்பும் ஆற்றல்.

conta'gionist, *n.* ஒரு நோய் தொற்றக்கூடியது என்ற கோட்பாட்டாளர்.

conta'gious, *a.* தொற்றும் தன்மையுடைய, தொடர்பினால் ஒட்டிக்கொள்ளக்கூடிய; தொற்றுநோய் கொண்டு செல்கிற; தொற்றுப்பரப்புகிற.

contain', *v.* தன்னகம் கொண்டிரு, உட்கொண்டிரு; உள் அடக்கிவை; கட்டுப்படுத்திக்கொண்டிரு; தடுத்து நிறுத்து; உள்ளடக்கமாகக் கொண்டிரு, முழு அடக்கமாகக் கொண்டிரு; (கண.) சரிசிணை எண்ணுகக் கொண்டிரு; (வடி.) சூழ்ந்து கவி, வளைத்திரு.

contain'er, *n.* கொள்கலம், உட்கொண்டிருக்கும் ஏனம்; சரக்குகளை வைத்து அனுப்புதற்குரிய கடகம்; பொதியுறை; வளி அடக்கிய புட்டில்.

contain'ment, *n.* நிலைமை தெளிவுபெறும்வரை எதிரியைத் தாக்குக் காட்டி வைத்திருக்கும் சூழ்ச்சி நயம்; நேசவுறவு அவாவித் தன் வலிமை வளர்த்துக்கொள்ளும் அரசியல் கோட்பாட்டு நயம்.

contam'inate, *a.* மாசுபடுத்தப்பட்ட ; *v.* கறைப்படுத்து ; தூய்மை கெடு; தொற்று உண்டுபண்ணு; ஒன்றுபட்டுக் கல.

contamina'tion, *n.* கறைப்படுத்தல்; தூய்மைக் கேடு; ஒன்று சேர்த்தல், கலத்தல்.

contang'o, *n.* அடுத்த கடன் தீர்க்கும் நாள் வரை வாங்கிய சரக்குகளை விற்பவரே வைத்திருப்பதற்குக் கொடுக்கப்படும் தரகு வீதம் ; *pl.* contang'os.

contang'o-day, *n.* தரகுவீதங்கள் நிச்சயிக்கப்படும் நாள்.

conte, (பிர.) *n.* சிறுகதை இலக்கியத்துறை.

contemn', *v.* ஏளனமாகக் கருது, மதிப்புக் குறைவாக நடத்து.

con'template, *v.* ஆழ்ந்து நினை, சிந்தனை செய் ; கவனமாகப் பார், கூர்ந்து ஆராய் ; கருத்துக்கொள், எண்ணு.

contempla'tion, *n.* ஆழ்ந்து நினைதல் ; சிந்தனை ; கவனமாகப் பார்த்தல், நோக்கீடுபாடு ; சிந்தனைக்குரிய பொருள் ; எண்ணம், ஈடுபடும் கருத்து.

con'templative, *a.* சிந்தனை செய்கிற, ஆழ்ந்த ஆராய்ச்சியின் பாற்பட்ட ; (தொ.) contemplative life, ஆன்மிக வாழ்வு, சிந்தனை வாழ்க்கை.

contemporan'eous, *a.* ஒரே காலத்தில் இயல்கின்ற, ஒரே காலத்துக்குரிய, சமகால நிகழ்ச்சியான ; (மண்.) காலத் தொடர்பின் ஒரே படிவரிசைக்குரிய.

contem'porary, *n.* உடன்வாழ்நர், சமகாலத்தவர் ; உடனியல்வது ; ஒரே காலத்துக்குரிய மற்றொரு பத்திரிகை, சமகால உடன்வெளியீட்டு நாளிதழ் ; *a.* சமகாலத்திய, உடனிகழ்வான.

contem'porize, *v.* மனத்தில் சமகாலத்ததாகச் செய், உடனிகழ்வாகக் கற்பனை செய்.

contempt', *n.* அவமதிப்பு, இகழ்ச்சி, புறக்கணிப்பு, ஏளனம்; வெறுப்பு; (தொ.) contempt of court, (சட்.) நீதிமன்றத்தை அவமதிப்புச் செய்த குற்றம், நீதிமன்ற நடைமுறை விதி மீறிய குற்றம்.

contemp'tible, *a.* வெறுக்கத்தக்க.

contemp'tuous, *a.* இறுமாப்பான, ஆணவம் பிடித்த ; வெறுப்புக்கிடமான ; அவமதிப்பான ; ஏளனமான.

contend', *v.* முயற்சி செய் ; போராடு ; போட்டியிடு ; வாதிடு; ஆர்வத்துடன் வற்புறுத்து, போராடி நிலை நிறுத்த முயல்.

con'tent [1], *n.* உட்பொருள், உள்ளடக்கம் ; கொள்ளப்பட்ட பொருள் ; கொள்ளும் அளவு.

content' [2], *n.* மனநிறைவு; *a.* மனநிறைவுடைய ; நிறைவமைதியுடைய, போதுமென்றமைந்த, கிடைத்த நலத்தளவில் அவாவைக் கட்டுப்படுத்துகிற ; *v.* மனநிறைவு உண்டுபண்ணு; அவாத்தணி; அமைதிப்படுத்து; மகிழ்வூட்டு; *int.* சட்டமன்றில் 'சரி' என்று ஒத்துக்கொள்ளும் குறிப்பு மொழி.

content'ed, *a.* மனநிறைவுகொண்ட, போதுமென்றமைந்த ; மகிழ்வமைதியுடைய.

content'edly, *adv.* மனநிறைவமைதியுடன், மகிழ்வமைதியோடு.

conten'tion, *n.* சச்சரவு, பூசல், சண்டை, வாதம், சொற்போர் ; வாதாட்டம், வாதாட்டக் கூறு ; கடுமுயற்சி ; நிலை நிறுத்தப்படும் செய்தி.

conten'tious, *a.* சச்சரவு செய்கின்ற, சண்டையிடுகிற ; வாதமிடும் இயல்புடைய ; சச்சரவுத் தொடர்புள்ள, வாதாட்டத் தொடர்பான.

con'tents [1], *n. pl.* ஏட்டின் பொருளடக்கம், உள்தலைப்புப் பட்டியல்.

contents' [2], *n. pl.* சட்டமன்றில் 'சரி' என்ற மொழி அளிப்பவர்கள்.

conterm'inal, *a.* அடுத்தடுத்துள்ள, கோடியுடன் கோடி இணைந்துள்ள.

conterm'inous, *a.* அடுத்தடுத்துள்ள ; பொது எல்லை நெடுகச் சந்திக்கின்ற ; முடிவும் முடிவும் சந்திக்கின்ற ; முற்றிலும் பொருந்துகின்ற ; ஒரே தொடர்ச்சிப் பரப்புள்ள.

con'test [1], *n.* வெற்றி குறித்த போராட்டம் ; போட்டி ; சச்சரவு, சண்டை ; வாதம்.

contest' [2], *v.* சச்சரவு செய் ; போட்டியிடு ; தர்க்கம் செய், வாதிடு ; எதிர், போரிடு, வெற்றி குறித்துக் கடுமுயற்சி செய், தேர்தலில் போட்டியிடு.

contes'tant, *n.* போட்டியிடுபவர்.

contesta'tion, *n.* போட்டியிடுதல்; போட்டி; போர்; சச்சரவு.

contest'ed, *a.* போட்டிக்குரிய ; எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட ; (தொ.) contested election, தெரிந்தெடுக்கப்பட வேண்டிய வர்களைவிடத் தேர்வு நாடுவோர்கள் மிகுதியாக இருக்கும் தேர்தல் ; சட்டப்படி செல்லத்தக்கதன்று என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட தேர்தல்.

con'text, *n.* தறுவாய், கட்டம், சூழ்நிலைப் பொருத்தம் ; சூழமைவு, பொருந்து சூழல் ; சந்தர்ப்பம்.

contex'tual, *a.* சூழிசைவு சார்ந்த.

context'ure, *n.* இணைத்துப் பின்னும் வகை அல்லது முறை ; அமைப்பு, கட்டிடம் ; கட்டுமானம் ; நெசவுமானம் ; நெசவு மானப் பொருள்.

contigu'ity, *n.* அணிமை, அருகாமை, பக்கத்தில் இருத்தல்.

contig'uous, *a.* ஒட்டியுள்ள, சேர்ந்துள்ள ; பக்கத்திலுள்ள, அடுத்துள்ள ; அருகிலுள்ள.

con'tinence, con'tinency, *n.* தன்னடக்கம், தற்கட்டுப்பாடு, நுகர்வடக்கம், நிறையுடைமை, ஒழுக்கத்தூய்மை.

con'tinent [1], *n.* நிலவுலகின் பெரும்பகுதி, கண்டம் ; அடுத்துள்ள கண்டம், பெருநிலப்பகுதி, தலைநிலம் ; கெட்டியான நிலப்பிழம்பு ; நிலம் ; முழுப்பகுதி ; திட்பச் சுருக்கம் ; உள்ளடக்கி இருப்பது ; கரை ; அணை ; மேடு ; (தொ.) the Continent, ஐரோப்பாவின் பெருநிலப்பகுதி.

con'tinent [2], *a.* கட்டுப்பட்ட, வரம்புக்குட்பட்ட ; தன் அடக்கமுடைய ; இன்பநுகர்விலிருந்து முழுதும் விலகிய, சிற்றின்ப நுகர்வு அறவே நீக்கிய ; மட்டுமீறுத, நடுநிலை கோடாத ; ஒழுக்கக் கட்டுப்பாடுடைய ; நிறைவுடைய.

continen'tal, *n.* பெருநிலப்பகுதி வாழ்நர் ; தலைநிலத்து ஐரோப்பியர் ; அமெரிக்கச் சுதந்திரப் போர்வீரர் ; அமெரிக்கப் புரட்சிக் காங்கிரசின் தாள்ணையம் ; *a.* பெருநிலப் பகுதியைச் சார்ந்த, தலைநிலப் பகுதியின் இயல்புகொண்ட ; ஐரோப்பியப் பெருநிலப்பகுதிக்குரிய ; வடஅமெரிக்கத் தலை நிலப்பகுதியைச் சார்ந்த ; அமெரிக்கப் பெருநிலப்பகுதியைச் சார்ந்த ; (தொ.) Continental Congress, (வர.) அமெரிக்கப் புரட்சிப் பேரவை, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியலமைப்புச் சட்டம் உருவாவதற்குமுன் தோன்றிய அமெரிக்கக் குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகளின் பெருங்குழு ; Continental System, (வர.) இங்கிலாந்தை விலக்கி நெப்போலியன் (Napoleon) ஏற்படுத்திய ஐரோப்பிய வணிகத் திட்டம்.

continent'alism, *n.* தலைநிலப் பகுதியின் சிறப்பான மரபு வழக்கு.

contin'gency, *n.* தற்செயல் நிகழ்வு ; நெருங்கிய தொடர்பு ; வருநிகழ்வு, மேல்வருமென்ற உறுதியற்ற பின்நிகழ்வு ; தற்செயல் நிகழ்ச்சி, நிகழக்கூடிய செய்தி.

contin'gent, *n.* படைப்பிரிவு, வருநேர்வு, மேல் நிகழ்வு, எதிர்பாராப் பின்னிகழ்ச்சி ; *a.* மற்றொன்றைச் சார்ந்திருக்கிற ; நிகழக்கூடிய ; தற்செயலான, உறுதியாகக் கொள்ள முடியாத.

contin'ual, *a.* ஓய்வற்ற, தொடர்ந்து நிகழ்கின்ற ; இடைவிடாத, தடையற்ற, குறுக்கீடில்லாத ; முடிவில்லாத ; நிலைத்திருக்கின்ற.

contin'uance, *n.* தொடர்ச்சி ; நிகழ்ச்சிக்காலம் ; இடைவிடா மரபுத் தொடர்பு ; நிலைபேறுடைமை.

contin'uant, *n.* தொடர் ஒலி எழுத்து, விடாது தொடர்ந் தொலிக்கவல்ல மெய்யெழுத்து; *a.* தொடர்கின்ற; தொடரக் கூடிய, தொடரும் தன்மையுள்ள.

continua'tion, *n.* தொடர்தல்; தொடர்ச்சி; செயல் தொடர்வு; நிகழ்ச்சி தொடர்கை; கதைத் தொடர்ச்சி; ஏட்டுத் தொடர்வு; தொடர் தவணை; மீண்டும் தொடங்குகை; நீட்டுகை; விரிவுபடுத்துகை; இடைவிடா மரபுத் தொடர்பு; விடாப்பிடித்தன்மை; செலாவணிக் கணக்கு ஒத்திவைப்பு.

continua'tion-class, *n.* பள்ளியை விட்டவர்கள் தொடர்ந்து படிக்கும் வகுப்பு.

continua'tion-day, *n.* = contango-day.

contin'uative, *a.* தொடர்ந்துகொண்டு செல்லும் இயல் புடைய, நீடிக்கும் தன்மை வாய்ந்த.

contin'uator, *n.* தொடரர், தொடர்ந்து செயல் செய்பவர்; தொடர்ந்திருப்பவர்; தொடர்பு வரிசையைப் பேணுபவர்; மற்றொருவர் ஏட்டினைத் தொடர்ந்து எழுதுபவர்.

contin'ue, *v.* தொடர், செயல்தொடர், தொடர்ந்து நிகழ்த்து, விடாதியங்கு; நீட்டு, விரிவுபடுத்து; தொடர்ந்திரு, விடாது பேணு; மீண்டும் தொடங்கு, விட்ட இடத்திலிருந்து துவங்கு; நிலைபெற்றிரு; தங்கியிரு; விடாப்பிடியாயிரு; கைவிடாதிரு; தளராதியங்கு; ஒத்திவை, தள்ளிப்போடு.

contin'ued, *a.* தொடர்ந்த; இடைவிடாத; ஓயாத, முடிவில்லாத; நீடித்த; விரிவுபடுத்தப்பட்ட; முன்தொடர் புடைய, மீண்டும் தொடங்கப்பட்ட; தொடர்பான, பகுதி களாகத் தொடர்கிற.

contin'uer, *n.* தொடர்ந்திருப்பவர், தொடர்ச்சியாளர்; விடா முயற்சி ஆற்றலுள்ளவர்.

continu'ity, *n.* தொடர்ச்சி; இடைவிடாத் தொடர்பு; தடையற்ற இணைப்பு; முழுத்திரைப்படக் குறிப்புத் தொகுதி; முழுத்திரைப்படத் தொகுதி இணைத்து எழுதுபவர்.

contin'uous, *a.* விடாத் தொடர்விணைப்புள்ள, இடையறுத.

contin'uum, *n.* தொடர்பம், பிரிவிலாத் தொடர்பியலான பொருண்மை; *pl.* contin'ua.

cont'-line, *n.* அடுக்கி வைக்கப்பட்ட பேழைகளின் இடை வெளி; கயிற்றின் இழை முறுக்குகளுக்கு இடையிலுள்ள வெளியிடம்.

contorn'iate, *n.* சுற்றிலும் விளிம்பில் ஆழ்ந்த பள்ள வரைகளுள்ள நாணயம்; சூழ்விளிம்பு வரையுள்ள பதக்கம்; *a.* சுற்றிலும் விளிம்பில் ஆழ்வரைப் பள்ளமுடைய.

contort', *v.* வல்லந்தமாக முறுக்கு; திருகு; உருத்திரிபுறுத்து; நோயினால் நெளிந்து திருகலுறு.

contort'ed, *a.* முறுக்கப்பட்ட, திருகிய; வளைந்து நெளிந்த, கோணல்மாணலான; (தாவ.) இதழ்கள் சுற்றுவட்டமாக ஒன்றன்மீது ஒன்று மடிந்து செல்கிற; (மண்.) ஒழுங்கின்றித் திருகி மடிவுற்ற.

contor'tion, *n.* திருக்கு முறுக்கு; உருத்திரிபு, அருவருப்பான உருமாற்றம்.

contor'tionist, *n.* உடலை அருவருப்பாகத் திருக்கி வளைக்கும் உடற்பயிற்சியாளர்; சொற்களை வலிந்து திரித்து வழங்குபவர்.

con'tour, *n.* உருவரை; வடிவ விளிம்புவரை; பொதுத் தோற்றம், முனைத்த மேலீடான பண்பு; உருவரை சார்ந்த கலைப்பண்பு; மேடு பள்ள எல்லைக்கோடு, உயர்வு தாழ்வு எல்லைக்கோடு; நிலப்படத்தின் பண்புகுறித்த எல்லையீனைப் புக் குறி; *v.* தள வேறுபாட்டெல்லைக் கோடிடு, மட்டநிலைக் கோட்டினைப் பின்பற்றிச்செல்; (தொ.) contour farming, மேடுபள்ள அடுக்கு நில வேளாண்மை; சாய்வடுக்கு நிலப் பண்பாடு; contour feathers, உடல் உருவரை எல்லைகளை வரையறுக்கும் இறகுகள்; contour line, நிலப்படத்தில் கடற் பரப்புக்கு மேற்பட்ட மட்டவேறுபாட்டெல்லையின் இணைப்பு வரை, மட்ட இணைப்புவரைச் சின்னம்; contour map, தள எல்லை வேறுபாடு குறித்த நிலப்படம்.

con'tra, *n.* எதிர்வாதம்; எதிர்ப்புறம்; கணக்கின் வரவுப் பக்கம்; *prep.* எதிராக; (தொ.) pro and contra, சார்வாகவும் எதிர்ப்பாகவும்.

con'traband, *n.* சட்டமீறிய வாணிகம்; கள்ளச்சரக்கு இறக்குமதி; கள்ள வாணிகச் சரக்கு; தடையுத்தரவு விதிக்கப் பட்ட சரக்கு; அமெரிக்க உள்நாட்டுப் போரில் (American Civil War) புகல் இழந்த அடிமை; *a.* சட்ட மீறிய; தடை செய்யப்பட்ட; கள்ளவாணிகம் சார்ந்த; (தொ.) contra-band of war, நடுநிலை நாடுகள் போர்புரியும் நாடுகளுக்கு அனுப்பக்கூடாத தடைச்சரக்குகள்.

con'trabandist, *n.* கள்ள வாணிகம் செய்பவர், கள்ளச் சரக்கு இறக்குமதி செய்பவர்.

con'trabass, **contrabas'so**, *n.* இருமட்ட ஒலி உடைய இசைக்கருவி; *a.* இருமட்ட ஒலியுடைய இசைக்கருவியைச் சார்ந்த.

contracep'tion, *n.* கருத்தடை.

contracep'tive, *n.* கருத்தடைக்கருவி; *a.* கருத்தடை சார்ந்த, கருத்தடைக்குப் பயன்படுகிற.

con'tract[1], *n.* உடன்படிக்கை, பொதுக்கட்டுப்பாட்டு வரையறையுடைய ஒப்பந்தம்; குத்தகை, தொழில் ஒப்பந்தக் கட்டுப்பாடு; மொழியுறுதிக் கட்டுப்பாடு; மண உறுதி, மனம் செய்துகொள்ளுவதற்குரிய ஒப்பந்தம்; ஒப்பந்தப் பத்திரம்; பருவப் பயணச்சீட்டு; சீட்டாட்ட வகை; சீட்டாட்ட வகையில் இறுதிக் கேள்வி; செய்ய மேற்கொண்ட காரியம்; (தொ.) contract bridge, சீட்டாட்ட வகை, ஒப்பந்தப்பிடிவகைச் சீட்டாட்டம்.

contract'[2], *v.* உடன்படிக்கை செய்; தொழில் ஒப்பந்தம் செய், குத்தகைக் கட்டுப்பாடு மேற்கொள்; மணவுறுதி செய்; உடன்படிக்கைமூலம் நிறைவேற்று; உறுதிமொழி கூறு; முயன்று பெறு, நட்பு முதலியன மேற்கொள்; பிணி–கடன் முதலியன எய்தப்பெறு; பற்றி இழு; சுருக்கு; சுருங்கு; சொல் குறுக்கமுறு, சொற்பகுதி சிதைந்து சொல் குறுகு; (தொ.) contract out, விலக்கி ஒப்பந்தம் செய், விலக்குப்பெறும்படி ஏற்பாடு செய்துகொள்.

contract'able, *a.* நோய்வகையிலும் பழக்கவழக்கங்கள் வகையிலும் எளிதில் பற்றக்கூடிய.

contract'ed, *a.* ஒன்றுகச் சேர்க்கப்பட்ட; குறுக்கப்பட்ட; ஒடுங்கிய, இடுக்கமான; குறுகிய மனப்பான்மையுள்ள; கஞ்சத்தனமான; மணஉறுதி செய்யப்பட்ட.

contrac'tible, *a.* ஒப்பந்த உறுதி செய்யக்கூடிய; பற்றிக் கொள்ளக்கூடிய.

contrac'tile, *a.* சுருங்கக்கூடிய; சுருக்கும் ஆற்றலுள்ள, சுருக்கத்தை உண்டாக்குகிற.

contrac'tion, *n.* சுருக்கல், சுருங்குதல்; சுருக்கம், குறுக்கம்; வழக்கில் குறுக்கப்பட்ட சொல்; இறுக்கம், செறிவு; குறுக்கக் குறியீடு, முற்காலக் கையெழுத்தின் சுருக்கச் சின்னம்; நோய்-கடன் பழக்க முதலியவற்றின் பற்றுகை.

contrac'tive, *a.* குறுகலாக்கும் இயல்புடைய.

contrac'tor, *n.* உடன்படிக்கையாளர், ஒப்பந்தக்காரர்; குத்தகையாளர், குறிப்பிட்ட வீதத்தின்படி வேலை செய்து முடிக்க அல்லது சரக்குகளைத் தருவித்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்துகொள்பவர்; சுருக்க ஆற்றலுடைய தசைநார்.

contrac'tual, *a.* ஒப்பந்தத்தைச் சார்ந்த, ஒப்பந்த இயல் புடைய.

contradict', *v.* மறுதலி, மறுத்துப்பேசு; எதிர்ப்பான கருத்தை வற்புறுத்து; குணத்தில் மாறுபாடாயிரு; நேர் மாறுயிரு, முரண்படு.

contradic'tion, *n.* மறுத்தல், முழுநிலை மறுப்பு; எதிர்ப் பாகப் பேசுதல்; நேர் மாறுபாடு, முழு எதிர்மறை; எதிர் முரண்பாடு, ஒவ்வாத்தன்மை.

contradic'tious, *a.* மறுக்கும் இயல்புடைய.

contradic'tory, *a.* நேர்மாறுன, பொதுநிலை எதிர்மறையான, உடன்பட்டது நீங்கலாக மற்ற யாவும் மறுக்கிற; எதிர்மறையானதை வற்புறுத்துகின்ற; முரண்பாடான, ஒவ்வாத; மறுக்கும் இயல்புடைய.

contradistinc'tion, *n.* வேறுபடுத்திக்காட்டும் தனிச்சிறப்பு, மாறுபட்ட தனிப்பண்பு.

contradistinct'ive, *a.* நேர் எதிர்ப் பண்புகள்மூலம் தனித் தறியக்கூடிய.

contradisting'uish, *v.* மாறுபாட்டால் உணர், வேறுபாட்டின்மூலம் பிரித்தறி.

contral'to, *n.* பெண்களின் குறைந்த இசை ஒலி; பெண்மைத் தாழ் இசைப்பொலியாளர்; பெண்மைத் தாழ் இசைக்குரிய பாடற்பகுதி; *pl.* contral'tos; *a.* பெண்மைத் தாழ் இசைப் பொலியுடைய.

contraposi'tion, *n.* நேர்மாறுனநிலை, எதிர்மறைநிலை; (அள.) எதிர்மறுப்பு, கருவாசகத்தின் உருமாற்ற வகை, பயனிலையின் எதிர்மறை எழுவாயாகி மறுக்கப்படும் உருமாற்றம்.

con'traprop, *n.* அச்சில் எதிர்ப்புறமாகச் சுழலும் வானூர்தி விசிறி.

contrap'tion, *n.* (பே-வ.) போலித்தனமான சமாளிப்புக் கருவி, விசித்திரக் கட்டமைப்புடைய பொறி.

contrapun'tal, *a.* (இசை.) சுர இணைப்புச் சார்ந்த.

contrapun'tist, *n.* சுர இணைப்பு வல்லுநர்.

contrar'iant, *a.* எதிரிடையான.

contrari'ety, *n.* எதிர்மாறியல்பு; முரண்பாடு; இசையாமை, ஒவ்வாமை; செயல்முரண்; பண்பு முரண்; ஏறுமாறுன குணம்.

contrar'ious, *a.* முரண்பாடு காட்டுகின்ற; வெறுப்பைத் தருகின்ற; எதிரான, முற்றிலும் மாறுன.

con'trariwise, *adv.* முற்றிலும் மாறுன வழியில்; எதிர்ப் புறத்தில்; நேர்மாறுக.

con'trary, *n.* தொலை எதிர்நிலை, முனைப்பான நேர் எதிர் மறை; (அள.) இரண்டும் பொய்யாகினும் இரண்டும் ஒத்து மெய்யாக முடியாத நிலையிலுள்ள கருவாசகம்; *a.* முனைப்பாக நேர் எதிர்மறையான; முரண்பாடான; வேண்டுமென்றே தவறுன வழியில் செல்கிற; *v.* எதிர்த்துநில்; மறுத்துப் பேசு; தொந்தரவு செய்; (தொ.) on the contrary, முற்றிலும் மாறுக; to the contrary, நேர் எதிரிடையான; எதிர் பார்ப்பதற்கு நேர் மாறுக.

con'trast [1], *n.* ஒப்பீட்டடிப்படையில் வேறுபாடு; மாறுபட்ட தன்மை; வேறுபடும் பண்பு; மாறுபடும்பொருள்; வேறு பாட்டு முனைப்பு, வேறுபாடுகளின் காட்சி, மாறுபட்ட இயல்புகளை அருகருகே காட்டல்.

contrast' [2], *v.* மாறுபடு, வேறுபடு; வேறுபடுத்திக்காட்டு; வேறுபட அமை.

contras'ty, *a.* முனைப்பான வேறுபாடுகளைக் காட்டுகின்ற.

con'trate, *a.* சக்கரத்தில் தளத்துக்குச் செங்குத்தான பற்க ளுள்ள, அச்சுடன் இணைவான பல்லமைவுகளுடைய.

contravalla'tion, *n.* முற்றுகை செய்யப்பட்ட இடத்தைச் சுற்றி முற்றுகையாளர்கள் கட்டும் தற்காலிக அரண் வரிசைகள்.

contravene', *v.* ஒப்பந்தத்தை மீறி நட, சட்டத்துக்கு எதிராகச் செயலாற்று; முரண்படு.

contraven'tion, *n.* மீறுகை, எதிரிடை நடப்பு; (தொ.) in contravention of, மீறி, எதிராக.

contretemps, (பிர.) *n.* அவகேடு, எதிர்பாரா இடையூறு; இடக்கு, சிக்கல், மலைப்பு.

contrib'ute, *v.* கொடு, பங்காகக்கொடு, பொதுப்பணிக்கு உதவு, பொதுநிதிக்கு வழங்கு; பத்திரிகைக்குக் கட்டுரை முதலியன அளி; முயற்சியில் பங்குகொண்டுதவு, உடனுதவியளி.

contribu'tion, *n.* பங்களிப்பு, பொதுநிதிக்குப் பங்களித்து உதவுதல்; துணைப்பணி, துணையுதவி, முயற்சியில் பங்கு கொண்டுதவுதல்; பங்குவரி; பங்குக் கட்டணமாகப் பிரிக்கப் படுவது; வழங்கிய பங்கு, அளித்த உதவி; கடப்பாடு; பத்திரிகைக்கு எழுத்து வழங்குதல்; பத்திரிகைக்கு வழங்கிய மாற்றம்; படைத்துறைப் பங்குக் கட்டணம்.

contrib'utor, *n.* நன்கொடைப் பங்காளர்; பங்கு முயற்சி யாளர்; துணையுதவியாளர்; பத்திரிகைக்கு எழுத்து வழங்குபவர்.

contrib'utory, *n.* கூட்டுக்கழக முறிவின்போது கடன் தீர்ப்புப் பொறுப்பில் பங்குக் கடப்பாட்டாளர்; *a.* பங்களித் துதவுகிற; துணையுதவி செய்கிற.

con'trite, *a.* பழியுணர்ந்து மனமழுந்துகிற, பாவத்தை எண்ணி உளைவுறுகிற; தன்னுறுத்தலுடைய.

contri'tion, *n.* தன்மறுக்கம், செய்ததற்கிரங்கி உளைதல்.

contriv'able, *a.* முனைந்து திட்டமிடக்கூடிய; புனைந்து உண்டுபண்ணத்தக்க; சூழ்ச்சியால் முற்றுவிக்கத்தக்க.

contriv'ance, *n.* திட்டமிடல், கண்டுபிடித்தல், செயற் படுத்துதல்; கண்டுபிடிக்கப்பட்ட பொருள்; கண்டுபிடிப்பு; பொறி அமைவு; சூழ்ச்சி; வஞ்சகம்; உள் எண்ணம்; தந்திரம்.

contrive', *v.* திட்டமிடு; முயன்று கண்டுபிடி; புனைந்து தோற்றுவி; முனைந்து செயற்படுத்து; வெற்றியாகச் செய்து முடி; சதிசெய், சூழ்ச்சிசெய்.

contriv'er, *n.* சூழ்ச்சியாளர்; திட்டமிடுபவர்; செயலாட்சி யாளர்.

control', *n.* கட்டுப்பாடு; கட்டுப்படுத்தும் ஆற்றல், ஆட்சி யாற்றல்; கட்டுப்பாட்டு ஒழுங்கு, விதி; ஆட்சி அதிகாரம், தலைமையுரிமை; தடுப்பாற்றல், தடுத்து நிறுத்தும் திறம், தடுத்தியக்கும் ஆற்றல்; தடுக்கும்பொருள், தடைப்பண்பு; கட்டுப்படுத்தும் கருவி; சோதனைக்கருவி; கட்டுப்பாட்டு நிலையம், சோதனை நிலையம்; கட்டுப்படுத்தும் செயல், செய் முறைக்கட்டுப்பாடு; கட்டளைச் சட்டம்; ஒப்பீட்டு மதிப் பீட்டுக்குரிய கட்டளை அளவு; போக்குவரவுக்கட்டுப்பாட்டு விதிகள் செயற்படுவதற்குரிய பாதைப்பகுதி; போக்குவரவுச் சாதனங்களின் கட்டுமானத் துப்புரவு இடைநிலையம்; விமான உறுப்புக்களைப் புறநின்றியக்கும் விமானம்; ஆவியுலக ஊடு ஆள்மூலம் இயக்குவதாகக் கருதப்படும் உடலற்ற ஆவி; வானூர்தி இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் நெம்புகோல்; *a.* கட்டுப்பாட்டைச் சார்ந்த; *v.* கட்டுப்படுத்து; தடுத்து நிறுத்து; தடுத்தாள்; இயக்கு, செயலாட்சி செய்; அடக்கி ஆள், ஆதிக்கம் செலுத்து.

controll'able, *a.* கட்டுப்படுத்தக்கூடிய, தடை செய்து நிறுத்தத்தக்க; அடக்கத்தக்க.

controll'er, *n.* கணக்குத் தணிக்கையாளர்; செயல்துறைக் கட்டுப்பாட்டு அதிகாரி; அரசியல் அரங்கச் செயல்துறைக் கட்டுப்பாட்டாளர், செயல் ஒழுங்குபடுத்துபவர்; சமநிலைப் பொறி, காலமாறுதலுக்கியைய மணிப்பொறி - இயந்திர முதலியவற்றில் சரியீடு செய்யும் அமைவு.

control'ment, *n.* கட்டுப்பாடு; கட்டுப்படுத்தும் செயல்; கட்டுப்பாட்டுரிமை; கட்டுப்படுத்தப்படும் நிலை.

control'-tower, *n.* வானூர்தி ஏற்ற இறக்கப் பயிற்சி அளிப்பிற்குரிய வானூர்தி நிலையக் கட்டிடம்.

controver'sial, *a.* வாத எதிர்வாதத்துக்குரிய, கருத்து மாறுபாட்டுக்குரிய, வாதத்துக்கிடமான.

controver'sialist, *n.* வாத எதிர்வாதக்காரர், கருத்து மாறு பாட்டாளர்.

con'troversy, *n.* வாத எதிர்வாதம், சொற்போராட்டம், கருத்து மாறுபாடு.

con'trovert, *v.* எதிர்த்து வாதிடு; மறுத்துரை; கருத்து வேறுபாடு தெரிவி.

contuma'cious, *a.* சட்டப்படியமைந்த அதிகாரியைப் பழிக்கிற; பிடி முரண்டான, விடாப்பிடியான.

con'tumacy, *n.* கீழ்ப்படியாமை ; பிடி முரணுன எதிர்ப்பு.

contumel'ious, *a.* ஆணவம் மிகுந்த ; அவமதிப்பான.

con'tumely, *n.* ஆணவமிக்க நடத்தை, தான்தோன்றித் தனமான பேச்சு, அவமதிப்பு.

contus'e, *v.* அடி, இடி.

contu'sion, *n.* அடிபட்ட காயம்.

contu'sive, *a.* கன்னத்தக்க, புண்ணுகத்தக்க.

conun'drum, *n.* விடுகதை, நொடி, புதிர்.

conurba'tion, *n.* நகரங்களின் தொகுதி.

convalesce', *v.* மீண்டும் உடல்நலம் பெறு, நோய் நீங்கி உடல் தேறுதல் அடை.

convales'cence, convales'cency, *n.* உடல்நல மீட்டாக்கம், நோய் நீங்கியபின் படிப்படியாக உடல்தேறி நலம் பெறு நிலை.

convales'cent, *n.* நோய் நீங்கி உடல்நலம் மீளப்பெற்று வருபவர் ; *a.* படிப்படியாக உடல்நல மீட்பைப் பெறுகின்ற ; நோய் நீங்கி நலம்பெறுகின்ற.

convec'tion, *n.* உகைப்பு, வெப்ப மின்னூற்றல்கள் தம்மால் இயக்கப்படும் அணுக்களின் இயக்கத்திலூலே பரவுதல் ; *a.* உகைப்பியக்கம் சார்ந்த.

convec'tor, *n.* உகைப்பியக்கத்தால் வெப்பமூட்டும் கருவி, வெதுவெதுப்பான காற்றூட்டமியக்கும் கருவி.

convenance, convenances, (பிர.) *n.* தகைமை, மரபு வழக்குத் தகுதி, சமுதாய ஆசாரம்.

convene', *v.* ஒன்றுசேர், கூட்டு; அவைகூட்ட அழைப்புவிடு; அழை ; கூடு.

conven'er, *n.* அவைகூட்டுநர், குழுத்தலைவர்.

conven'ience, *n.* தகை நலம், சூழலிசைவு, வாய்ப்பு ; இட வசதி; வேளை இசைவு ; இன்னலம், வாய்ப்பு நலம்; அலம்பு மனை, கழிப்பிடம்.

conven'iences, *n. pl.* வாழ்க்கை நலங்கள், வாய்ப்பு நலங்கள்.

conven'iency, *n.* = convenience.

conven'ient, *a.* தக்க, தகுதியான , பொருத்தமான; எளிமை இசைவான, ஏற்ற ; வசதியான ; கைவாக்கான, கைப்பழக்க முள்ள.

con'vent, *n.* கன்னிமாடம், பெண் துறவியர் மடம்.

conven'ticle, *n.* சட்டமீறிய மறைவொதுக்கமான சமயக் குழு ; அரசியல் ஒவ்வாத புறச்சமயக் குழு ; புறச்சமயக் குழுக்கூடும் இடம் ; *v.* புறச்சமயக் குழுக்கூட்டம் கூட்டு.

conven'tion, *n.* அவை கூட்டுகை ; பேராண்மைப் பேரவை, பிரதிநிதிகள் கூட்டாய்வுக் கழகம் ; தனி முறைச் சிறப்புப் பேரவை ; பொதுப்பிரதிநிதி வேட்பாளர் தேர்வுக்கான கட்சிப் பெருங்குழு ; அரசியலமைப்பாண்மைச் சிறப்புக் குழு ; (வர.) பிரிட்டனில் 1660-இலும் 1668-இலும் நடைபெற்ற மன்னர் அழைப்புப் பெருத சட்டமன்றக் கூட்டம் ; பொது இணக்க ஒப்பந்தம் ; தற்காலிக உடன்படிக்கை; ஒப்பந்த மரபு வழக்கு; எழுதாச் சட்டம், புலனெறி வழக்கம், வழக்கு முறைமை ; நடைமுறை மரபு, நாண்முறைமை ; சீட்டாட்ட வழக்கு நடைமுறை.

conven'tional, *a.* மரபொழுங்கு சார்ந்த, வழக்காற்றுத் தொடர்புள்ள ; புலனெறி வழக்கார்ந்த, மரபொழுங்கின் வயப்பட்ட ; வழக்கமான ; இயல்பற்ற, கட்டுப்பட்ட ; செயற்கையான ; பொது இணக்க ஒப்பந்தப் பயனுன ; குண்டுகள் வகையில் அணுகுண்டல்லாத.

conven'tionalism, *n.* நீளியல் மரபு முறைமை, புலனெறி வழக்கப்பண்பு.

conven'tionalist, *n.* மரபொழுங்கைப் பின்பற்றுபவர் ; மர பொழுங்கில் இழைபவர்.

conventional'ity, *n.* மரபொழுங்கு தழுவும் நிலைமை ; நீடித்த பழமைக் கட்டு.

conven'tionalize, *v.* மரபொழுங்குப்படுத்து, பொதுமரபின் பாற்படுத்து ; இயற்பண்பட்க்கு, தற்பண்பற்றதாக்கு.

conven'tionary, *n.* ஒப்பந்தப்படியான நடைமுறை; ஒப்பந்த உரிமைக் குடியாண்மையாளர் ; *a.* ஒப்பந்தத்தின்படி செய லாற்றுகின்ற.

conven'tual, *n.* கன்னிமாடப் பெண் துறவி ; பிரான்சிஸ்கன் (Franciscan) என்ற கத்தோலிக்கத் துறவு நிலையத்தின் தளர் விதிப்பிரிவைச் சார்ந்த உறுப்பினர் ; *a.* கன்னிமாடத் தைச் சேர்ந்த, பிரான்சிஸ்கன் என்ற கத்தோலிக்கத் துறவி நிலையத்தின் தளர்விதிப் பிரிவைச் சார்ந்த.

converge', *v.* குவி ; வரைகள் வகையில் ஒரு புள்ளியில் சென்று கூடு ; மையத்தை நாடு ; ஒருமுகப்படு ; நெருங்கு ; இணைவுறு ; பண்பு ஒப்புமை கொண்டணுகு ; குவியச்செய் ; கூடுவி, இணைவி.

conver'gence, *n.* குவிவு, கூடுகை.

conver'gent, *a.* குவிகிற, ஒருங்கு கூடுகிற, நெருங்குகிற ; குவிவு காரணமான ; குவிதலியல்புடைய.

conver'ging, *a.* ஒரு புள்ளியில் இணைகிற, சந்திக்கிற ; நெருங்கி அணுகுகிற ; (தாவ.) படிப்படியாக அணுகும் முனைகளையுடைய.

convers'able, *a.* உரையாடும் விருப்புடைய, கலந்து பேசும் இயல்புடைய; பழகும் தன்மையுள்ள, இனிது அளவளாவுகிற.

con'versance, con'versancy, *n.* பழக்கப்பட்ட நிலை, நன்கறியப்பட்ட தன்மை ; நடப்புணர்வு, அறிமுக நிலை ; பழக்கம்.

con'versant, *a.* பரவலாக அறிந்துள்ள ; கற்றுணர்ந்த, படித்துத் தெரிந்துகொண்ட ; பழகியறிந்த, நன்கு பழக்கப் பட்ட, அறிமுகமான ; ஈடுபாடுள்ள, அக்கறை கொண்ட.

conversa'tion, *n.* உரையாடல் ; பேச்சு ; பழக்கம் ; பாலுறவு, முயக்கம்.

conversa'tional, *a.* உடையாடல் சார்ந்த ; பேச்சு வழக்குக் குரிய ; உரையாடல் வல்ல ; உரையாட்டு அவாவுடைய.

conversa'tionalist, *n.* உரையாடல் வல்லுநர்.

conversa'tionism, *n.* பேச்சு வழக்குத்தன்மை.

conversa'tionist, *n.* = conversationalist.

conver'sative, *a.* பேசும் செயல் விரைவுள்ள.

conversazion'e, *n.* உரையாட்டவைக் குழாம்.

con'verse[1], *n.* தோழமைத் தொடர்பு; உரையாடல்.

converse'[2], *v.* கலந்து பேசு, உரையாடு ; கூடியுறவாடு, ஒருங்கு பழகு.

con'verse[3], *n.* மறுதலை, தலைமாறிய ஒன்று ; (கண.) முடிவு தரவாகத் தரவு முடிவாக மாறிய விதி ; (அள.) மறிவாசகம், சொல் தலைமாறிய கருவாசகம் ; *a.* எதிர்நிலையான, நேர் மாருன ; தலைமாறிய, வரிசை திருப்பப்பட்ட.

conver'sion, *n.* தலைமாற்றுதல் ; தலைமறிவு ; நிலைமாற்றம் ; கருத்துமாற்றம் ; கொள்கை மாறுபாடு ; சமயமாற்றம் ; பயன்மாறுபாடு ; உருத்திரிபு, பங்கு முறி-கடன்முறி முதலிய வற்றை ஒன்று மற்றொன்றுக மாற்றுதல் ; (அள.) கருவாசகச் சிறை மாறுபாடு, தலைமறிப்பு.

con'vert[1], *n.* சமயம் மாறியவர் ; கொள்கை மாறியவர்.

convert'[2], *v.* திரிபுறுத்து ; நிலைமாற்று ; உருமாற்று ; கொள்கை மாற்று ; சமயமாற்று ; கட்சி மாற்று ; மாற்றிக் கொள்ளும்படி செய்; பொருளைத் திரிபுறுத்தி வேறொன்றுக்கு; இரும்பை உருக்காக்கு ; பொருள்முறி வகைகளை இனமாற்று ; பணமுறியைக் காசாக்கு ; பண்புமாறுபடுவி ; பயன் வேறு படுத்து ; தனிப்பயனுக்கு ஈடுபடுத்து ; (அள.) தலைமறி வாசகமாக்கு.

con'vertend, *n.* மாற்றியமைக்க வேண்டிய வாசகம்.

convert'er, *n.* மாற்றியமைப்பவர் ; சமயமாற்றுபவர் ; மாற்றியமைப்பது ; இரும்பை எஃகாக மாற்ற உதவும் கலம், திரி கலம் ; மின்னோட்டத்தை மாற்றியமைக்கும் பொறி, மின் மறி.

convert'ible, *a.* மாற்றிக்கொள்ளக்கூடிய ; சொற்கள் வகையில் ஒரே பொருள் கொண்ட ; நாணய வகையில் தங்க மாகவோ அமெரிக்க வெள்ளியாகவோ நிலையான விலைக்கு மாற்றக்கூடிய சம மதிப்புள்ள ; வேளாண்மை வகையில் பருவப்பயிர் மாற்றிக் கொள்ளக்கூடிய.

con'vertite, *n.* சமயம் மாறியவர் ; கொள்கை மாறியவர் ; சீர்திருந்திய பெண்பாலர்.

conver'tor, *n.* மின்னோட்டத்தை மாற்றியமைக்க உதவும் பொறி, மின்மறி.

con'vex, *n.* குவிந்த உரு, புறக்குவிவுரு; குவடு, மேற்குவிவான பகுதி ; புறவளைவான பொருள் ; வான்முகடு ; *a.* குவடான, புறங்குவிந்த, வெளி வளைவான, புறங்கவிந்த.

convexed', *a.* புறங்குவிவாக்கப்பட்ட, புறங்கவியும்படி செய்யப்பட்ட.

convex'ity, *n.* புறங்குவிவு ; புற உருட்சி ; கவிந்த பகுதி ; கவிந்த உருவம்.

convex'o-con'cave, *a.* ஒருபுறம் புறங்குவிந்தும் மறுபுறம் உட்கவிந்துமுள்ள.

convex'o-con'vex, *a.* இருபுறமும் புறங்குவிந்துள்ள.

convey', *v.* ஏற்றிச்செல் ; கொண்டு செல் ; செய்தியை அனுப்பு; கொண்டு சென்று தெரிவி; அறிவி; சொல் வகையில் கருத்து அல்லது பொருளை உடையதாயிரு, சுட்டித்தெரிவி ; வழங்கு, அளி ; சட்டப்படி ஒப்படை ; திருட்டுத்தனமாகக் கொண்டுபோ.

convey'ance, *n.* கொண்டு செல்லுதல்; அனுப்புதல்; கொண்டு செல்லும் கருவி ; பொருள் சுட்டுதல், கருத்துக் குறிப்பீடு ; செல்கலம், வண்டி, ஊர்தி ; (சட்.) உடைமை மாற்றம் ; உரிமை மாற்றுப் பத்திரம் ; தந்திரம், மோசடி.

convey'ancer, *n.* உடைமை மாற்றுப் பத்திரம் உருவாக்கும் வழக்கறிஞர்.

convey'ancing, *n.* உடைமை மாற்றுப் பத்திரம் உருவாக்குதல்.

convey'er, convey'or, *n.* கொண்டு செல்பவர் ; கொண்டு செல்வது ; வழங்குபவர் ; வழங்குவது ; பொருள் சுட்டுபவர் ; பொருள் சுட்டுவது ; தொழிலகத்தில் தொழிற்படும் பொருள் களைக் கொண்டுசெல்லும் கருவி.

con'vict [1], *n.* கடு ஊழியத்தண்டனையை மேற்கொண்டுள்ள குற்றவாளி, தண்டக் கைதி.

convict' [2], *v.* குற்றவாளியெனத் தீர்ப்பளி ; குற்றமெய்ப்பி, குற்றமென்று ஏற்கச் செய், குற்றத்தை உள்ளத்தில் உறைப்பி.

convic'tion, *n.* குற்றத்தீர்ப்பு, குற்றவாளியென முடிவு செய்தல் ; குற்ற எண்பிப்பு, குற்றவாளியெனத் தெளிவு படுத்துதல் ; மெய்ப்பிப்பு ; மெய்ம்மை காணும்படி செய்தல் ; உள்ளத்தின் உறைப்பு ; மெய்ம்மையில் பற்றுறுதி, பற்றுக் கோள்; (தொ.) carry conviction, மறுக்கமுடியாத உண்மை என்னும் முத்திரையிடு.

con'victism, *n.* குற்றத்தண்டனை முறைமை.

convic'tive, *a.* மெய்ப்பிக்கும் ஆற்றலுடைய ; குற்றவாளி யெனத் தண்டிக்கும் திறனுடைய.

convince', *v.* நம்பவை, பற்றுறுதியூட்டு ; மெய்ப்பித்துக் காட்டு, சான்றுமூலம் மனமேற்கும்படி செய் ; பொய்ம்மை மெய்ம்மை உறைப்பி ; தன் குற்றம் தானே ஏற்கச் செய்.

convin'cible, *a.* தவறு கண்டால் ஏற்றுக்கொள்ளக் கூடிய, பிறர் கருத்தேற்க மறுக்காத, திறந்த மனமுடைய.

convinc'ing, *a.* நம்பத்தக்க ; நம்பவைக்கிற ; உறுதிப் பாடான.

conviv'ial, *a.* விருந்தைச் சார்ந்த ; விருந்துக்குத் தக்கதான ; கூட்டமாக விருந்துண்கிற; மது அருந்துகிற; கூடி மகிழ்கிற, மகிழ்ச்சியான.

conviv'ialist, *n.* மது அருந்துபவர் ; களியாட்டக்காரர்.

convoca'tion, *n.* ஒருங்கழைப்பு ; கூட்டவை, பேரவை ; பல்கலைக்கழகப் பட்டமளிப்புப் பேரவை ; ஆக்ஸ்போர்டு (Oxford) முதலிய பல்கலைக்கழகங்களின் சட்டமன்றம் ; பிரிட்டனில் காண்டர்பெரி (Canterbury) யார்க் (York) ஆகிய மாகாணங்களின் சமயகுருமார் திருக்கூட்டம்.

convoke', *v.* ஒருமிக்க அழை, கூட்டத்திற்கு அழைப்பு விடு.

con'volute, *n.* சுருள் ; *a.* சுருண்ட; முறுக்கிய; உள் மடிந்த; (தாவ.) பக்கவாட்டில் சுருண்ட, மலர்-அரும்பு வகையில் திருகிய ; சங்கு-சிப்பி வகையில் உள் திருகு மறைவுற்றுப் புறங்கவிந்து சுருண்ட.

con'voluted, *a.* (வில.) சுருண்ட, முறுக்கிய; முறுக்கப்பட்ட.

convolu'tion, *n.* சுருளல், முறுக்கு ; மடிப்பு, மூளை மேற் பரப்பின் நெளிவு மடிப்பு.

convolve', *v.* ஒன்று சேர்த்துச் சுருட்டு, மடித்துச் சுருட்டு.

convol'vulus, *n.* படர்ந்தேறி அல்லது தொங்கலாக நீண்டு சுற்றிக் கொள்ளும் செடியினத்தின் வகை.

con'voy [1], *n.* வழித்துணைக்காப்பு, பயணப்பாதுகாப்பு ; பாதுகாப்புத்துணை ; மெய்க்காப்பு ; துணைக்காப்புக் குழு, பாதுகாப்புடன் செல்லும் கூட்டம் ; காவலுடன் செல்லும் படைத்துறை வண்டித்தொடர் ; உணவுச் சாதனத் திரள் ; பாதுகாப்புடன் கூடிய வாணிகக் கப்பற் குழாம் ; பாதுகாப்புத் திறன் வாய்ந்த வாணிகக் கப்பற் கூட்டம்.

convoy' [2], *v.* கப்பலுக்குப் பாதுகாப்பாக உடன்செல் ; படைக்கலமேந்தி வழித்துணை செல் ; விருந்தினர்களுக்கு மெய்க்காப்பளி.

convulse', *v.* அதிரவை, நடுக்குறுத்து, அஞ்சி நடுங்கவை ; துடிதுடிக்கவை ; பிடித்தாட்டு ; சிரிப்பு முதலிய உணர்ச்சி களில் மும்மரமாகக் குதித்தாடவை.

convul'sible, *a.* நடுக்கத்திற்கு ஆளாகத்தக்க, துடிதுடிக்கத் தக்க.

convul'sion, *n.* வலிப்பு, உடல் நடுக்கம் ; குழப்பம் ; சமுதாய அமளி ; வெறியாட்டம் ; குமுறல் ; குலவு.

convul'sional, *a.* வலிப்பு சார்ந்த, நடுக்கம் உடைய ; குழப் பம் உண்டுபண்ணுகிற.

convul'sionary, *n.* வெறியாட்டக்காரர் ; 1730-ஆம் ஆண்டில் பிரான்சில் தோன்றிய வெறிகொள்கைக் குழுவினைச் சார்ந்தவர் ; *a.* வெறியாட்டம் சார்ந்த ; குழப்பம் உண்டு பண்ணுகிற.

convul'sionist, *n.* சமயவெறியாட்டாளர் ; மண்ணியல் வரலாற்றில் நிலக் குமுறல்களின் முக்கியத்துவத்தில் பெரு நம்பிக்கை கொண்டவர்.

convul'sions, *n. pl.* சிரிப்பினால் ஏற்படும் உடல் குலுக்கம் ; குழந்தைகளின் இசிப்பு நோய்.

convul'sive, *a.* வலிப்போடு கூடிய ; அதிர்வு உடைய.

con'y, *n.* முயல் ; முயல் தோல் ; (விவி.) பழங்காலத்தின் தோலுடைய சிறு மலிவுப்புற விலங்கு வகை.

con'y-burr'ow, *n.* முயல் வளை.

con'y-catcher, *n.* ஏமாற்றுபவர்.

con'y-wool, *n.* முயலின் மென்மயிர்; மென்மயிருள்ள முயலின் தோல்.

coo, *n.* புருவின் ஒலி, கூவுமொலி ; *v.* புருவின் ஒலி செய்; கூவு ; குலவு, செல்லம் கொஞ்சு ; மெல்லுரை பயில், சிங்கார மீக்கப் பசப்பிப் பேசு ; (தொ.) bill and coo, கொஞ்சிக் குலவு, காதல்மொழி பயில்.

coo'ee, coo'ey, *n.* ஆஸ்திரேலிய சைகை அழைப்பொலி ; *v.* சைகை ஒலி எழுப்பு, சைகை ஒலியால் பேசு.

cook [1], *n.* சமையல் செய்பவர், மடைத்தொழிலாளர், சமையற் காரர் ; சமையற்காரி ; தூடுபடுத்து முறை வகை ; சதுரங்க ஆட்டத்தில் ஆட்ட நலங்கெடுக்கும் எதிர்பாரா மாற்று முறை ; *v.* உணவு சமை, சமையல் செய் ; சமையற்கலை பயில் ; பக்குவமாகு, சமையல் செய்யப்பெறு ; பொய்க்

கணக்கு முதலியவற்றை வலிந்து புணை ; சூழ்ச்சியுடன் இயற்று, புணைந்து போலியாக உருவாக்கு ; சதுரங்க ஆட்டத்தில் மாற்றுவழியின்மூலம் ஆட்டநலங்கெடு ; ஏற்பாடாகு, நடைபெறு.

cook [2], *v.* குயில்போன்று கூவு.

cook'er, *n.* பொறியடுப்பு; சூட்டடுப்பு ; சமைகலம், சமையல் துணைக்கருவித் தொகுதி ; சமையலுக்குரிய தனிவகைப் பொருள் ; சமையலுக்கு மிகவும் உகந்த காய்கனி ; பொய்க் கணக்கு உருவாக்குபவர், வலிந்து உருவாக்குபவர்.

cook'ery, *n.* சமையற்கலை, சமையல் வேலை.

cook'ery-book, *n.* சமையற்கலை ஏடு, பாக நூல், சமையல் தொழில்முறை விளக்க நூல்.

cook'-gen'eral, *n.* சமையல் வேலையும் பொது வேலையும் செய்யும் பணியாள்.

cook'-house, *n.* மடைப்பள்ளி, சமையல் அறை.

cook'-house'maid, *n.* = cook-general.

cook'ie, *n.* தேநீருடன் உண்ணும் இனிப்பு அப்பவகை.

cook'ing-apples, *n.* சமையல் செய்வதற்கேற்ற ஆப்பிள் பழவகை.

cook'ing-range, *n.* பலவகை உணவுகளை ஒரே சமயத்தில் சமைப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட சூட்டடுப்பு.

cook'maid, *n.* சமையற் பணிப்பெண், சமையற்காரரின் உதவிப் பணிப்பெண்.

cook'-room, *n.* சமையல் அறை, அடிசிற்களம்.

cock'shop, *n.* உணவு விடுதி.

cool, *n.* குளிர் நலம், சில்லென்ற தன்மை; குளிர் நலமுடையது; குளிர் வானிலை, குளிர்ந்த காற்று ; குளிர்ச்சிதரும் இடம் ; *a.* இளங்குளிரான, மட்டான குளிர்ச்சி வாய்ந்த ; பரபரப்பற்ற, அடங்கிய, அமைதியான; கிளர்ச்சியற்ற, ஆர்வமற்ற; அசட்டையான, மதிப்புக்கேடான; ஆணவமான ; *v.* குளிர்ச்சியாக்கு ; சூடு தணி, சூடு ஆற்று ; குளிர்ச்சியாகு ; சூடு ஆறு; மட்டுப்படுத்து ; அமைதியூட்டு ; மிதமாகு, அமைதியுறு ; கிளர்ச்சி குன்றவை ; ஆர்வமிழ ; (தொ.) cool one's heels, காத்துக்கொண்டு இரு.

cool'ant, *n.* வெப்பாற்றி ; வெட்டுபொருள்களின் விளிம்பில் உராய்வு வெப்புத்தணிப்பதற்கான நீர்.

cool'er, *n.* குளிர்ச்சியாக்கும் பொருள்; குளிர் கலம், பொருள்களைக் குளிரவைப்பதற்குரிய கலம்.

cool'-head'ed, *a.* எளிதில் உணர்ச்சி வசப்படாத, அமைதியோடு செயலாற்றக்கூடிய, ஆர்ந்தமர்ந்த.

cool'-house, *n.* செடி கொடிகளைக் குளிர்ந்த நிலையில் வைத்து வளர்க்கும் கண்ணாடி மனை.

cool'ie, (*த.*) *n.* கூலியாள் ; இந்திய அல்லது சீன ஒப்பந்த வேலையாள்.

cool'ish, *a.* ஓரளவு குளிர்ந்த.

cool'ness, *n.* குளிர்பதம், மிதக் குளிர்ச்சி ; புறக்கணிப்பு, கவனக்குறைவு ; நட்புத்தளர்ச்சி ; ஆர்வமற்ற தன்மை.

cool'-tankard, *n.* குளிர் இன்தேறல் கலவை வகை ; நீல மலர்ச் செடிவகை.

cool'y, *n.* = coolie.

coomb [1], *n.* = comb [2].

coomb [2], *n.* முகத்தலளவைக் கூறு (4 புஷல் அல்லது 32 காலன் அளவு).

coon, *n.* அமெரிக்கக் கரடி இனவகை ; தந்திரக்காரன் ; நீகிரோ இனத்தவர் ; (தொ.) a gone coon, மோசமான நிலைமையில் இருப்பவர்.

coon'-can', *n.* சீட்டுக்களை வரிசைப்படுத்தி இருவராடும் சீட்டாட்ட வகை.

coon'-song, *n.* நீகிரோ இனத்தவரின் பாட்டு.

coop, *n.* பிரம்புக்கூடை ; கோழிக் கூண்டு; மீன் கூடை ; சிறு விலங்குகளை அடைக்கும் பட்டி ; சிறை ; *v.* கூண்டில் அடை, சிறைப்படுத்து.

coop'er [1], *n.* கூடைமுடைபவர் ; மிடா வனைப்பவர் ; பெட்டி-தொட்டி செய்பவர் ; கப்பலில் மிடாக்கள் பழுது பார்ப்பவர் ; மதுச்சுவை தேர்பவர் ; மதுவைப் புட்டிகளில் அடைப்பவர் ; மதுவைச் சில்லறையாக விற்பவர் ; இன்தேறல் கலவை வகை; *v.* கூடை திருத்து ; மிடாப் பழுது பார் ; மிடாவில் அடை ; சரி செய்து வை, ஒட்டுப்போடு ; (தொ.) dry cooper, ஈரச் சார்பற்ற பொருள்களுக்கான மிடாச் செய்பவர் ; wet cooper, ஈரப்பொருள்களுக்கான மிடாச் செய்பவர் ; white cooper, வாளி-தொட்டி செய்பவர்.

coop'er [2], *n.* = coper.

coop'erage, *n.* மிடா முதலியன செய்பவரின் பணி ; மிடா முதலியன செய்பவரின் பணிமனை ; மிடாச் செய்பவருக்குரிய கூலி.

co-op'erant, *a.* ஒன்றுக வேலை செய்கிற.

co-op'erate, *v.* பிறருடன் கூடியுழை ; வேலையில் ஒத்துழை ; பயன் நாடி உடன் பணிபுரி ; பயன் நோக்கி ஒத்துச் செயலாற்று, கூடி விளைவி.

co-op'erating, *a.* ஒத்துழைக்கிற ; ஒத்தியல்கிற ; (தொ.) co-operating grace, இறைவன் விருப்பாற்றலும் மனித விருப்பமும் ஒத்தியல்வதே திருவருட்பேறு என்ற ரோமன் கத்தோலிக்கர் முதலிய சமய மரபுகளின் கோட்பாடு.

co-opera'tion, *n.* கூட்டுறவு, உடனுழைத்தல்; ஒத்துழைப்பு, கூட்டு வேலை; கூட்டுறவுச் சங்கப் பண்பு, கூட்டு நடைமுறை.

co-op'erative, *n.* கூட்டுறவு நிலையம் ; *a.* கூட்டுறவு சார்ந்த ; ஒத்துழைக்கிற ; கூட்டுறவுக்குகந்த, கூட்டுறவு நோக்கிய ; (தொ.) co-operative society, கூட்டுறவுச் சங்கம் ; co-operative store, கூட்டுறவுப் பண்டசாலை, களஞ்சியம்.

co-op'erator, *n.* கூட்டுறவாளர், ஒத்துழைப்பவர் ; உதவியாக வேலை செய்பவர் ; கூட்டுறவுச் சங்க உறுப்பினர்.

co-opt', *v.* அமைப்பின் உறுப்பினர்களை உறுப்பினர்கள் உரிமை மொழிகளாலேயே தேர்ந்தெடு, ஒத்துத் தேர்ந்தெடு.

co-or'dinance, *n.* கூட்டொழுங்கு முறை, கூட்டுக் கட்டளை.

co-ord'inate, *n.* இனமொத்த பொருள், நேரினப் பொருள் ; சமவரிசைப்பட்டது, ஒத்த தரமுடையது ; (வேதி.) ஒரே வரிசை எண் கொண்ட தனிமம் ; (கண.) ஆயத்தொலை, கட்ட நிலை அளவையின் ஒரு கூற்றளவை ; *a.* இனமொத்த, வகையொத்த ; சமவரிசையுடைய, ஒத்த தரமுடைய ; நிரை வைப்பமைதி சார்ந்த, நிரற்பாடுடைய ; (இலக்.) உறுப்பு வாசகங்களில் சமநிலைப்பாடுடைய ; *v.* ஓரினப்படுத்து, ஒரு தரப்படுத்து ; ஒத்திசைவி, இணக்கி ஒரு நிலைப்படுத்து ; (தொ.) co-ordinate geometry, ஆயத் தொலைவைப் பயன்படுத்தும் வடிவியல்.

co-or'dinative, *a.* நேரினப்படுத்துகிற ; ஒத்திசைவாக்கப்பட்ட ; இனப்பொருத்தம் காட்டுகின்ற.

coot, *n.* உச்சியில் வெண்சுட்டியும் குறுவாலுமுள்ள வாத்தின நீர்ப்பறவை வகை.

cop, *n.* உச்சி, தலைப்பு ; நூற்கும் கதிரில் சுற்றப்பட்ட குவிவடிவ நூற்பந்து.

copai'ba, *n.* தென்னமெரிக்க மரத்திலிருந்து பெறப்படும் நறுமணப் பிசின் மருந்து வகை.

copai'va, *n.* = copaiba.

co'pal, *n.* வெப்ப மண்டல மரவகைகளின் பிசினிலிருந்தும் புதைபடிவமாகவும் கிடைக்கும் கடினமான குங்கிலிய வகை.

copar'cenary, *n.* கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமையாளர் ; *a.* கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெற்ற.

copar'cener, *n.* கூட்டுடைமையுரிமையின் இன மரபுரிமை யாளர்.

copar'cenery, *n.*, *a.* = coparcenary.

copart'ner, *n.* உடன் பங்காளி; உடனெத்த தோழர்; உடனெத்துப் பங்கு கொள்பவர்.

copart'nery, *n.* கூட்டுப்பங்கு நிலை.

cope [1], *n.* மேலுறை, மூடி; குல்லாய்; மேற்கட்டி; வில் வளைவு, கவிகை; மதிலின் முகட்டுறுப்பு, முகட்டுக் கவிகை; குருமாரின் தலைமூடியோடு கூடிய நீள் அரைவிட்டமான பின் தோற்றமும் கையற்ற திறந்த முகப்பும் உடைய மேலங்கி; *v.* மூடியிடு; கவிகையை மேலிட்டணை; மதிலுக்கு முகட்டுத் தளமிணை.

cope [2], *v.* பண்டமாற்றுச் செய், கொடுத்து வாங்கு.

cope [3], *v.* எதிர்த்துச் சமாளி, முயன்று வெற்றிபெறு; சரி சமநிலையில் செயலாற்று; ஈடு செலுத்து.

cop'eck, *n.* ருசிய நாட்டின் ரூபிள் (rouble) நாணயத்தில் நூற்றில் ஒரு பகுதி, ருசியச் செப்புக் காசு.

cop'er, *n.* ஆழ்கடல் பரதவருக்குக் கள்ளத்தனமாகக் கடுமை யான இன்தேறலை வழங்க உதவும் கப்பல்; *v.* ஆழ்கடல் மீனவருக்குக் கள்ளத்தனமாகக் கடுந்தேறலை வழங்கு.

Copern'ican, *a.* புகழ்பெற்ற பிரசிய (Prussian) வானநூல் வல்லுநராகிய கப்பர்னிக்கஸ் (Copernicus 1473-1543) என் பவருக்குரிய; கதிரவணை நிலவுலகு சுற்றி வருகிறதென்னும் கப்பர்னிக்கஸின் கொள்கையைச் சார்ந்த.

cope'-stone, *n.* மதிலின் முகட்டுக்கல்.

cop'ier, *n.* பார்த்துப் பகர்த்தெழுதுபவர், படி எடுப்பவர்; பார்த்துச் செய்பவர்; குருட்டுத்தனமாகப் பின்பற்றுபவர்.

co'-pilot, *n.* உடன் வலவர், கூட்டு வானூர்தி ஓட்டி.

cop'ing, *n.* மதிலின் சாய்வான மேல் முகடு.

cop'ing-stone, *n.* = cope-stone.

cop'ious, *a.* வளமான, ஏராளமான, செழித்த; பொங்கி வழிகின்ற; சொல் வளமுள்ள; விளக்கமிக்க.

copp'er, *n.* செம்பு, தாமிரம்; செப்பு நாணயம், செப்புக் காசு; செப்புக்கலம்; துணி வெளுப்பதற்குரிய வெள்ளாவிக் கலம், வேம்பா; *a.* செம்பாலான; செம்பு நிறமுள்ள; *v.* கப்பலடியைச் செப்புத் தகட்டால் மூடு, செம்பு பொதி; (தொ.) Copper Age, செப்புக் காலம், வெண்கல ஊழிக்கு முற்பட்ட ஊழி; hot coppers, குடியாட்டு விருந்திற்குப் பின் உள்ள தொண்டை நாவறட்சி.

copp'eras, *n.* இரும்புக் கந்தகை, அன்னபேதி.

copp'er-beech', *n.* செம்புநிற இலைகளுடைய மரவகை.

copp'er-bott'omed, *a.* அடிப்புறம் செப்புத்தகடு பொதிந்த; பொருள்துறை உறுதிப்பாடுடைய; ஊறுபாட்டுக்கு இட மற்ற.

copp'er-cap'tain, *n.* தன்னை மீகான் என்று தவருகக் கூறித் திரிபவர்.

copp'er-faced, *a.* அச்சுரு முதலியவற்றில் செப்பு முகப் புடைய.

copp'er-fas'tened, *a.* செப்புத்தாழிட்டு உறுதி செய்யப் பட்ட.

copp'er-glance', *n.* செம்புக் கந்தை வகை.

copp'erhead, *n.* அமெரிக்க நச்சுப் பாம்பு வகை.

copp'ering, *n.* செம்பினுல் உறையிடுதல்; செம்பு பொதிதல்.

copp'erish, *a.* சிறிதளவு செம்பு போன்ற.

copp'er-nick'el, *n.* செந்நிறக் கனிப்பொருள் வகை; நிக்கல்-சவ்வீரச் சேர்மானம்.

copp'er-nose, *n.* செந்நிற மூக்கு.

copp'erplate, *n.* பட்டயம் செதுக்குவதற்குரிய மெருகிட்ட செப்புத்தகடு; செப்புத்தகட்டுப் பதிவடிவம்; செப்பமிக்க கையெழுத்து.

copp'er-pyri'tes, *n.* மஞ்சள்நிறமான செம்பு, இரும்பு கலந்த இருமடிக் கந்தகை.

copp'er-skin, *n.* அமெரிக்கச் செவ்விந்தியர்.

copp'er-smith, *n.* கன்னுன்; செம்பு வேலைப்பாடு.

copp'er-work, *n.* செம்பு வேலைப்பாட்டிடம்; கன்னுன் பட்டறை.

copp'er-worm, *n.* கப்பற் புழு.

copp'ery, *a.* செம்பு போன்ற.

copp'ice, *n.* சிறு காடு, புதர்க்காடு; வெட்டப்பட்ட முளை களுள்ள குறுங்காடு; *v.* சிறுகாடாக்கு, சிறு புதர்களால் மூடிவை.

copp'in, *n.* = cop.

cop'ra, *n.* கொப்பரைத் தேங்காய்.

co-pres'ence, *n.* உடனமைவு; உடன் இருப்பு; ஒன்றுக இருத்தல்.

cop'rolite, *n.* புதைபடிவச் சாணி; எரியப்பொருள்களின் செறிபடிவம்.

cop'rology, *n.* கீழை இலக்கியக் கசடு.

coproph'agan, *n.* சாணி வண்டு.

coproph'agist, *n.* சாணம் தின்னி.

cop'rophagous, *a.* சாணம் தின்கிற.

coprophil'ia, *n.* சாணம் அல்லது அழுக்கில் மகிழ்ந்திணையும் பண்பு.

coproph'ilous, *a.* சாணம் அல்லது அழுக்கில் மகிழ்ச்சி கொள்கிற; சாணத்திலுல் வாழ்கிற; சாணத்தில் வளர்கிற.

copros'terol, *n.* பித்த சுரப்பியின் நெருக்கத்திலுல் குடலில் தோன்றும் சேர்மானப் பொருள் வகை.

copse, **copse'wood**, *n.* = coppice.

Copt, *n.* பண்டை எகிப்திய மரபினரான கிறித்தவர்.

Cop'tic, *n.* பண்டை எகிப்திய மொழியின் இறுதிக் காலத் திரிபு வகை.

cop'ula, *n.* இணைப்பு; இணைக்கும் பொருள், இணைப்பது; உடற் புணர்ச்சி; எழுவாய் பயனிலை ஒப்பிணைப்பு வினை.

cop'ulate, *v.* சிற்றின்பப் புணர்ச்சியில் ஈடுபடு.

copula'tion, *n.* கலவி; இலக்கணத் தொடர்பு; அளவை இயல் தொடர்பு.

cop'ulative, *n.* (இல.) இணையிடை; *a.* ஒன்று சேர்க்கிற; இணைப்பைக் குறிக்கிற; எழுவாய் பயனிலை ஒப்பிணைப்புச் செய்கிற.

cop'y, *n.* சரிபடிவம், ஒத்த வடிவம்; படி, பகர்ப்பு, நகல்; மேல்வரிச்சட்டம், கட்டளை; முன்மாதிரி, பின்பற்றத்தக்கது; அச்சுக்கான எழுத்துப் படி; ஏட்டின் கைப்படி; ஏட்டின் ஒரு புத்தகப்படி; தாள் அளவை மாதிரி (16 × 20 அங்குலம்); (சட்.) நிலப்பண்ணைப் பேரேட்டுப் பகுதிப் பகர்ப்புப்படி; *v.* பகர்த்து, பார்த்தெழுது; பார்த்துப் பின்பற்று; மாணவர் வகையில் திருட்டுத்தனமாக அடுத்தவனைப் பார்த்து எழுதி விடு; (தொ.) copy of verses, கல்லூரி மாணவர் பயிற்சிக் குரிய செய்யுள் தொகுதி.

cop'y-book, *n.* கையெழுத்துச் சட்ட ஏடு, மேல் வரிச்சட்ட ஏடு.

cop'yhold, *n.* படியுரிமை நிலம், படியுரிமை.

cop'yholder, *n.* படியுரிமை நிலத்தவர்; அச்சுத் திருத்து வோருக்கு உடனிருந்து வாசித்து உதவுபவர்.

cop'ying-ink', *n.* பதிப்புப் படியெடுக்க உதவும் மை.

cop'ying-ink-pencil, **cop'ying-pencil**, *n.* படியெடுக்க உதவும் வரைகோல்.

cop'ying-press, *n.* கடிதங்களை அழுத்திப் படியச்சு எடுக்கும் பொறி.

cop'yism, *n.* குருட்டுத்தனமாகப் பார்த்துப் பின்பற்றும் பண்பு.

cop'yist, *n.* படி எடுப்போர், பார்த்து எழுதுபவர்; தற்பண் பற்றுப் பிறரைப் பின்பற்றும் எழுத்தாளர்.

cop'yright, *n.* பதிப்புரிமை, தனிப்பயனீட்டுரிமை, ஏடு-படம்-பாடல்-நாடகம் முதலியவற்றை ஆக்கிய மூல முதல்வருக்கு அல்லது அவர் ஆட்பேருக்கு அதை அச்சிட்டு வெளியிட்டு விற்பனை செய்யவோ பாடவோ ஒலிப்பதிவு செய்யவோ நடிக்கவோ திரைப்படமாக்கவோ குறிப்பிட்ட ஆண்டு அளவுக்குச் சட்டம் அளிக்கும் தனியுரிமை; *a.* பதிப்புரிமை பெற்ற, தனிப்பயனீட்டுரிமைக் காப்புடைய; *v.* பதிப்புரிமை பெறு.

cop'y-wri'ter, *n.* அச்சகத்தில் பகர்ப்பெழுத்தாளர்; விளம் பரங்களின் படியெழுத்தாளர்.

coque, *n.* இழைக்கச்சையின் சிறு கண்ணி, நாடாவின் வளை முடி.

coquet', *v.* பொய்க் காதல் புரி, பசப்புக் காதல் புரி; பொழுது போக்காக விளையாடு.

coq'uetry, *n.* போலிக்காதல் விளையாட்டு; பசப்பி ஏய்ப்பு; பகட்டு மினுக்கு; இழைவு குழைவு நயம்.

coquette', *n.* தற்பெருமையுடன் மயக்கித் திரிபவள், மேனி மினுக்கி, பிலுக்குக்காரி, பகடி, பசப்புக்காரி; தலைச்சூட்டுடைய பாடும் பறவை வகை; *v.* பொய்க்காதலாடு, போலிக் காதல் புரி; பசப்பி ஏய்; பிணங்கி ஊடாடு, பிகுவுச் செய்.

coquett'ish, *a.* நடிப்புக் காதல் புரிகிற; பசப்புக்காரிக்கு இயல்பான.

coqui'to, *n.* சிலி நாட்டின் (Chilean) அழகான பனைவகை.

cor, *n.* ஏறத்தாழ 11 மரக்கால் கொண்ட எபிரேய (Hebrew) முகத்தலளவை.

co'racle, *n.* பரிசல், தோல் அல்லது மெழுகுத் துணி மூடிய கூடைவரிசலாலான நீர் வட்டமான சிறு படகு வகை.

co'racoid, *n.* (உட.) முன்கை எலும்புடனிணையும் தோள் பட்டை எலும்போடிணைந்த எலும்பு.

co'ral, *n.* பவழம்; பவழப்பாறை, கடலுயிர் வகையின் தோட்டின் செறிவடுக்கால் வளரும் பாறை; கடலுயிர் வகை; கடலுயிர் வகையின் குடியிருப்புத் தொகுதி; பல் வளரும் குழந்தைக்குரிய பவழத்தாலான விளையாட்டுப் பொருள்; நண்டின் பொலிவுரு முட்டைத் தொகுதி; *a.* பவழத்தாலான; பவழம் போன்ற; செக்கச் சிவந்த.

cor'al-berr'y, *n.* பவழ நிறக் கொட்டையுடைய அமெரிக்கப் புதர்ச் செடி வகை.

cor'al-fish, *n.* கடற்பாறைப் பவழத் தொடர்ப் பகுதியிலுள்ள மீன் வகை.

coralla'ceous, *a.* பவழம் போன்ற, பவழத்தின் குணங்களுள்ள.

Coral'lian, *n.* (மண்.) பவழத்தொடர் அமைப்பு.

corallif'erous, *a.* பவழமுள்ள, பவழத்தைக் கொண்டுள்ள.

coral'liform, *a.* பவழம் போன்ற, பவழ உருவுள்ள.

corallig'enous, *a.* பவழம் உண்டாக்குகின்ற.

co'ralline, *n.* செங்நிறச் சார்புள்ள கடற்பாசி; பவழம் போன்ற பொருள்; பவழம் போன்ற உயிரினம்; *a.* பவழம் சார்ந்த; பவழம் போன்ற; பவழம் உள்ள, பவழத்தைக் கொண்டுள்ள; (தொ.) Coralline Crag, (மண்.) ஆங்கில மண்ணியல் ஊழிக்கூற்றுக்குரிய புதைபடிவப் பவழமுடைய சிப்பி மணல் திரள் பாறை.

co'rallite, *n.* கிண்ண உருவான பவழத்தின் தனிச் சிப்பி; புதைபடிவப் பவழம்; பவழநிறச் சலவைக்கல்.

coralloid, coralloid'al, *n.* பவழம் போன்ற உயிரினம்; பவழந்துடன் தொடர்புடைய உயிரினம்; *a.* பவழ உருவிலுள்ள; பவழம் போன்ற.

coral'lum, *n.* பவழத்தொகுதியின் எலும்புக்கூடு; *pl.* coralli'a.

co'ral-rag, *n.* கரடுமுரடான பவழச் சுண்ணப்பாறை.

co'ral-reef, *n.* பவழப்பாறை; பவழப்பாறை வரிசை; பவழக்கரை.

cor'al-rock', *n.* பவழச் சுண்ணப்பாறை, பவழத்தாலான சுண்ணக்கல்.

cor'al-root', *n.* பவழம் போன்ற கிழங்குள்ள மலர்ச் செடியினம்.

cor'al-snake, *n.* சிறிய அமெரிக்க நச்சுப் பாம்பு வகை, பவழப் பாம்பு.

cor'al-tree, *n.* பவழம் போன்ற செந்நிற மலர்களுள்ள வெப்ப மண்டல மரஇனம், பவழ மரம்.

cor'al-wort, *n.* பவழ வேர்; பவழம் போன்ற செந்நிறவேர்.

cor'am, (ல.) *prep.* முன்னிலையில்; (தொ.) ***coram judice***, நடுவர் முன்னிலையில்; ***coram populo***, பொதுமக்கள் முன்னிலையில்.

cor ang'lais, *n.* (இசை.) வல்லொலித் துளைக்கருவி வகை.

corb'el, *n.* (க-க.) தண்டையக்கட்டு, பொருள்களை வைப்ப தற்காக அல்லது பளுத்தாங்குவதற்காகச் சுவரில் ஏந்தலாக வைத்திணைக்கப்பட்ட கல் அல்லது கட்டை.

cor'bel-block, *n.* (க-க.) உத்தரத்தின் கீழ் நீட்டித் தாங்கலாக அமைந்த தண்டையக்கட்டு.

corb'el-table, *n.* தண்டையக்கட்டு வரிசைமீதமைந்த மதிற் கட்டுமானம்.

corb'ie, *n.* பிணந்தின்னி காக்கை; அண்டங்காக்கை, காகம்.

cor'bie-steps, *n.* முக்கோண மோட்டுச் சுவரின் படி போன்ற சாய்தளக் கோணங்கள்.

cord, *n.* நூல்கயிறு, மணிக்கயிறு; கட்டுதளை, கட்டிழை; (உள்.) திண்ணிய நாளம்; 128 கனஅடி கொண்ட வெட்டுமர அளவை; மணியிழை, துணியில் தளமுனைப்பான திண்ணிய இழை; சுவடிக் கட்டிடத்தின் மூட்டு நூல் கயிறு; *v.* கட்டுதளை ஏற்பாடு செய்துகொடு; வரிந்து கட்டு.

cord'age, *n.* கப்பல் கட்டுதளைத்தொகுதி.

cord'ate, *a.* நெஞ்சுக்குலை வடிவான, இதய உருவான; (தாவ.) இலையின் காம்படியில் உள்வளைவான விளிம்புடைய.

cord'ed, *a.* கயிறுகளால் கட்டப்பட்ட; கயிறுகள் அடுக்கிய; கிளைநரம்புகள் ஓடிய, பக்கவாட்டில் வரிவரியாயமைந்த; (கட்.) கயிறுகளால் வரிந்து சுற்றப்பட்ட.

Cordelier', *n.* கடுமையான கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரான்சிஸ்கன் (Franciscan) மடத்தின் பிரிவைச் சேர்ந்த கிறித்தவத் துறவி.

cordeliers', *n. pl.* கடுந்துறவி மடத்தில் கூடிய பிரஞ்சு புரட்சியாளர்களின் (French Revolutionaries) குழாம்.

cord'-grass, *n.* கயிறு செய்யப்பயன்படும் சேற்றுநிலப் புல் வகை.

cor'dial, *n.* இதயக்கிளர்ச்சி தரும் மருந்து; கிளர்ச்சியூட்டும் குடிவகை; ஊக்கம் தரும் உணவு வகை; மணமும் இனிமையும் ஊட்டப்பட்ட சாராயச்சத்துவகை; *a.* மன மார்ந்த, உள்ளுணர்ச்சியுடன் கூடிய; ஆர்வமிக்க; கபடற்ற; அன்பு நிறைந்த, உளங்கனிந்த; கிளர்ச்சி யூட்டுகிற.

cor'dialise, *v.* மகிழ்ச்சிகொள், இணக்கமாயிரு; தோழமை உணர்ச்சிகொள், மகிழ்வுடன் உறவாடு.

cordiller'a, (ஸ்பா.) *n.* இணைவரிசையான மலையடுக்குத் தொடரில் ஒருவரிசை.

cord'ing, *n.* வரிந்துகட்டுதல்; கப்பல் பாய்மரக் கயிற்றுத் தொகுதி.

cord'ite, *n.* கயிறுவடிவான புகையற்ற வெடிப்பொருள்.

cor'doba, *n.* நிகராகுவா (Nicaragua) நாட்டின் மூல அளவை நாணயம்.

cord'on, *n.* கோட்டை மதில்மீதுள்ள முத்துக்கல் வரிசை; இராணுவ அரண் தளவரிசை; காவல்துறையினர் தடுப் பெல்லை வேலி; உடல்நலத்துறையினர் தொற்றெல்லை ஒதுக் கீட்டு வேலி; தடைவேலி ஆள் அணிவரிசை; கத்தரித்து ஒற்றைத்தடியாக வளர்க்கப்படும் பழமரவகை; அழகொப் பனைக்கான கயிற்றுவட வடிவம்.

cord'ovan, *n.* ஸ்பெயின் நாட்டிலுள்ள கார்டோவா (Cordova) விலிருந்து முன்னுள் வந்த ஆட்டுத்தோல் வகை; *a.* கார்டோவாவைச் சார்ந்த.

cord'uroy, *n.* சொரசொரப்பான பஞ்சுத்துணி வகை; *a.* சொரசொப்பான துணி வகையாலான; (தொ.) corduroy road, சதுப்பு நிலத்தின்மீது மரத்தடிகளால் அமைக்கப்பட்ட பாதை.

cord'uroys, *n. pl.* சொரசொரப்பான பஞ்சுத்துணி வகையாலான காற்சட்டை.

cord'wainer, *n.* புதைமிதி செய்பவர்.

cord'wood, *n.* 128 கன அடி அளவாகத் துண்டிக்கப்பட்டு அடுக்கிய வெட்டுமரத் தொகுதி.

core [1], *n.* கொட்டை, பழத்தின் நடுப்பகுதியிலுள்ள கடுவிதை உறை; சுரங்கம் வைப்பதற்குரிய முதற் குடைவுக்குழி; மின் காந்த விசைச்சுருளின் மையத்திலுள்ள தேனிரும்புச்சலாகை; வார்ப்படத்தில் உருச் செறிவுக்குரிய உள்ளிடப் பொள்ளல்; கயிற்றின் மைய உட்புரி; உள்மையப்பகுதி, கருவுள்; இதயம்; உள்ளிடம்; ஆட்டுக்காய்ப்பு நோய்; *v.* கொட்டை எடு; உள்ளீடகற்று.

core [2], *n.* தனிக்குழு, உட்பிரிவு; நேரமாற்று வேலை வகுப்பு.

cored, *a.* நடுப்பகுதி நீக்கப்பட்ட; நடுப்பகுதியை உடைய; வார்ப்பட உட்பொள்ளலிடத்தில் வார்த்து உருவாக்கப்பட்ட.

co-re'gent, *n.* கூட்டுப் பகர ஆட்சியாளர், அரசருக்குப் பதிலாக ஆட்சி செய்பவரோடு உடனிணைந்து ஆட்சிசெய்பவர்.

co-rela'tion, *n.* = correlation.

co-rela'tive, *n.*, *a.* = correlative.

core'less, *a.* நடுப்பகுதி இல்லாத; உள்ளீடில்லாத, பொள்ளலான.

co-reli'gionist, *n.* சமயப்பங்காளி, உடன்சமயத்தோழர், ஒரே சமயத்தைச் சேர்ந்த இருவரில் ஒருவர்.

coreop'sis, *n.* வட்டவடிவான மஞ்சள் மலருடைய செடி வகை.

cor'er, *n.* உள்ளீடு அகற்றும் கருவி.

co-respon'dent, *n.* (சட்.) மணவிடுதலை வழக்கில் எதிர் வாதியின் உடன் கூட்டாளி, கூட்டு எதிர்வாதி.

corf, *n.* நிலக்கரிச் சுரங்கத்தொழிலாளரின் கூடை; கூண்டு இல்லாத பார வண்டி; மீன் அல்லது நண்டின் வகையைப் பிடிக்கும் கூடு; உயிருடன் மீன் வைத்திடும் கூடை.

cor'gi, cor'gy, *n.* வேல்ஸ் நாட்டுச் சிறுநாய்.

coria'ceous, *a.* தோல் போன்ற.

corian'der, *n.* கொத்துமல்லிச் செடி; (தொ.) coriander seed, கொத்துமல்லி.

Corin'thian, *n.* கிரீஸ் (Greece) நாட்டிலுள்ள கோரிந்து (Corinth) நகரத்தவர்; காலவண்ணப் புதுமையில் மிதப்பவர், புதுமைப் பாங்காளர்; விருப்பார்வ கேளிக்கையாளர்; இன்பவாணர்; ஒழுக்கங்கெட்டவர்; *a.* கிரீஸ் நாட்டிலுள்ள கோரிந்து நகரத்தைச் சார்ந்த; மணிவடிவத் தூண் தலைப் புடைய, கிரேக்க அணிவண்ணச் சிற்ப வகை சார்ந்த; பகட்டழகான இலக்கிய நடையுடைய; ஒழுக்கவரம்பு கெட்ட; (தொ.) Corinthian brass, Corinthian bronze, கோரிந்து நகரில் செய்யப்பட்ட உலோகக் கலவை; தன் ஆணவம், தன்மூப்பு; துடுக்குப் பேச்சு.

corinth'ianise, *v.* ஒழுக்க வரம்பற்று நட.

cork, *n.* தக்கை, நெட்டி; நெட்டிமரத்தின் பட்டை, தெற்கு ஐரோப்பா-வடக்கு ஆப்பிரிக்கா முதலிய இடங்களிலுள்ள நெட்டிமர வகை; தக்கையால் செய்யப்பட்ட அடைப்பான்; மூடி, அடைப்பு வகை; (தாவ.) மர மென்பட்டை, வெளிப் பட்டையை உருவாக்கும் தடித்த உயிரணுச் சுவருள்ள நெருக்கமான இழைமம்; நீர்காப்புடைய அடைப்பு; வளி காப்புடைய மூடி; தக்கைத் துண்டு; தக்கை மிதவை; *a.* தக்கையாலான, தக்கையால் செய்யப்பட்ட; *v.* தக்கையால் அடை; மூடு; மூடி வழியடைத்துவிடு; தக்கைக் கரியால் கருமையாக்கு.

cork'age, *n.* தக்கையால் மூடுதல்; மூடி திறத்தல்; தக்கை திறப்புக்கான கட்டணம்.

cork'-borer, *n.* தக்கைகளில் துளையிடும் கருவி.

cork'-cam'bium, *n.* பட்டையாக்குபடை, மரப்பட்டையை ஆக்கி வளர்க்கவல்ல உயிர்மங்களைக்கொண்ட மென்மரப் பட்டைக்கூறு.

cork'-car'pet, *n.* தக்கையும் தொய்வகமும் ஆளியெண்ணெயும் கலந்து செய்யப்படும் நிலத்தள விரிப்பு.

cork'-cutter, *n.* தக்கை வெட்டும் கருவி; தக்கை வெட்டுபவர்.

corked, *a.* தக்கையால் அடைக்கப்பட்ட; மதுவகையில் தக்கையால் கறைப்படுத்தப்பட்ட, பழுதாக்கப்பட்ட; தக்கைக் கரியால் கருமையாக்கப்பட்ட.

cork'er, *n.* மூடிவுக்குக் கொண்டுவருபவர்; மூடிவுசெய்வது; தனி மேம்பாடு உடையவர்; தனி மேம்பாடு உடையது.

cork'-heel', *n.* தக்கையாலான புதைமிதியடியின் குதிகால் பகுதி.

cork'-heeled', *a.* புதைமிதியடி வகையில் தக்கையாலான குதிகால் பகுதியுடைய; வேண்டுமென்ற, அழிவழக்கான.

cork'ing-pin, *n.* மிகப்பெரிய ஊசி, முளை.

cork'-jack'et, *n.* தக்கை மேலங்கி, நீந்துவதற்கு உதவியாக உட்புறம் தக்கை வைத்துத் தைக்கப்பட்ட மேல் சட்டை.

cork'-leg, *n.* செயற்கைக் கால்.

cork'-lino'leum, cork'-mat, *n.* = cork-carpet.

cork'-oak, *n.* ஸ்பெயின்-போர்ச்சுகல் நாடுகள் வணிகத்திற்கு வேண்டிய தக்கை தரும் மர வகை.

cork'-screw, *n.* தக்கை திருகி, தக்கைவாங்கி; *a.* தக்கைத் திருகி போன்ற உருவுடைய; *v.* திருகலாக இயங்கு; வலிந்து பிடுங்கு; வலிந்து தகவல் பெறு.

cork'-sole', *n.* புதைமிதியடியின் தக்கையாலான உள்ளடித் தோல்.

cork'-tree, *n.* தக்கை மரம்; தக்கை மரவகை.

cork'wing, *n.* ஐரோப்பிய தென் அமெரிக்கக் கரையோரங்களுக்குரிய முள் மீன் வகை.

cork'wood, *n.* மிக இலேசான கட்டை தரும் மரவகை.

cork'y, *a.* தக்கை போன்ற, நெட்டி போன்ற.

corm, *n.* குமிழ்வடிவான அடிநிலத்தண்டு வளர்ச்சி; தண்டுக் கிழங்கு.

corm'ophyte, *n.* வேர்-அடிமரம்-இலை என்று வேறுபடுத்தப் படும் செடிவகை.

corm'orant, *n.* பெருந்தீனி தின்கிற வாத்தின் காலடியுடைய கடற்பறவை இனம்; பெருந்தீனிக்காரன்.

corn [1], *n.* பருப்பு; கொட்டை; பயிர்; விதை; தானியம், கதிர்மணி; கூலத்தொகுதி, மக்காச்சோளம்; *a.* கூலத்துக் குரிய; கூலத்திற்கான; கூலத்தினுல் செய்யப்பட்ட; பயிர்களிடையே வளர்கிற; கூலத்தை உணவாகக் கொள்கிற; நுண்மணிகளாலான; *v.* நுண்மணிகள் போலாக்கு; உப்புத்துணுக்குகளைத் தூவு; உப்பிட்டுக் கெடாமல் வைத்திரு; கூலமாய் உருவாகு; விதையாகு; (தொ.) corn in Egypt, பொங்கு வளம்.

corn [2], *n.* காய்ப்பு, காலடியிலோ கால்விரலிலோ மிரு உராய்வு அல்லது மட்டுமீறிய அழுத்தத்தால் ஏற்படும் மேல்தோல் தடிப்பு; (தொ.) tread on one's corns, ஒருவர் உணர்ச்சியைப் புண்படுத்து.

corn'age, *n.* (வர.) கால்நடைகளின் எண்ணிக்கைக்குத் தக்க வாறு அறுதி செய்யப்படும் நிலமானியப்பணி; கணிப்பறுதியிடப்பட்ட நிலமானிய வாரம்.

corn'-ba'by, *n.* முற்கால நிலவளத் தெய்வமரபில் அறுவடை இறுதியில் எடுக்கப்படும் கூலமணிகளாலான பெரும்மை வடிவம்.

corn'-beef, *n.* உப்பிட்டுப் பதனம் செய்யப்பட்ட மாட்டிறைச்சி.

corn'-bin, *n.* கூலப்பத்தாயம்.

corn'-borer, *n.* மக்காச்சோளப் பயிரை அழிக்கும் முட்டைப் புழுவை ஈனும் அந்துப் பூச்சி வகை.

corn'brake', *n.* மக்காச்சோளப் பண்ணை.

corn'-bran'dy, *n.* கூலங்களிலிருந்து செய்யப்படும் சாராய வகை.

corn'brash, *n.* (மண்.) முன்னூனாய முட்டை மீன்கருச்செறிவினுல் உண்டாகிக் கூலம் வளர்வதற்கு நல்ல செழிப்பளிக்கும் சுண்ணும்புக்கல் வகை.

corn'-chandler, *n.* சில்லறைக் கூலவாணிகர்.

corn'-cob, *n.* மக்காச்சோளக் கதிரின் கெட்டிக்காம்பு; கெட்டிக் கதிர்க் காம்புகொண்டு செய்யப்படும் புகையிலைக் குழல்.

corn'cockle, *n.* கூலவயலில் விளையும் நெட்டையான அழகிய களைப்பூண்டு வகை.

corn'crake, *n.* வயல்களில் வாழும் சிற்றலகுடைய ஐரோப்பியப் பறவை வகை.

corn'-cure, *n.* கால் காய்ப்புக்குரிய மருந்து.

corn'-cutter, *n.* காலில் தோன்றும் காய்ப்புகளை வெட்டி அகற்றுபவர், கால் மருத்துவர்.

corn'-dealer, *n.* கூலவாணிகர்.

corn'ea, *n.* விழி முன்தோல், விழிவெண்படலம்.

corned, *a.* நுண்மணிகளாய் அமைந்த; உப்பிட்ட; (தொ.) corned beef, உப்பிட்டுப் பதனம் செய்யப்பட்ட மாட்டிறைச்சி.

cor'nel, *n.* தென் ஐரோப்பாவைச் சேர்ந்த சிறு மரவகை.

cornel'ian, *n.* மங்கிய சிவப்பு நிறமுள்ள நேர்த்தியான மணிக்கல் வகை.

corn'eous, *a.* கொம்பு போன்ற செறிவுள்ள; கொம்பையொத்த; கடினமான; காய்ப்புள்ள.

corn'er, *n.* மூலை, இடுக்கு; கோணம், குவிவரைச் சந்திப்பு, தளச்சந்திப்பு இடுக்கு; முனங்கு, முனைப்பான கூம்பு; ஒடுங்கிய உள்வளைவிடம்; மறைவிடம், தனியிடம்; வளைவு, அடைப்பு; தொலைவிடம்; இக்கட்டு நிலை, திக்குமுக்காடச் செய்யும் நிலை; சாய்பன்தெறிவு; வாணிகக் களத்தில் சரக்கு முற்றும் வாங்கிவிடும் குத்தகை; குத்தகைக் கூட்டு; *v.* மூலை முக்கு அமை; மூலையில் வை; இக்கட்டுக்கு உட்படுத்து; வலிந்து பணியவை; சரக்கு முழுவதையும் வாங்கி வாணிகக் கள ஆதிக்கம் செய்; பிறவாணிகருக்கெதிராகக் குத்தகைக் கூட்டில் சேர்; குத்தகைக் கூட்டு அமை; (தொ.) turn the corner, மூலையைக் கடந்து திசைதிரும்பிச் செல்; நெருக்கடிக் கட்டத்தைக் கடந்துவிடு; within the four corners of, உள்ளாக, உள்ளடங்கி.

corn'er-boy, *n.* தெருவீணன், சந்திக்குறும்பன்.

cor'nered, *a.* மூலைகளையுடைய; இக்கட்டான நிலையில் சிக்கவைக்கப்பட்ட, போக்குமுட்டிய.

corn'er-man, *n.* நீகிரோ பாடகர் வரிசையில் கடைக்கோடியிலுள்ள பாண்மகன்.

corn'er-stone, *n.* மூலைக்கல், ஆதாரக்கல், கட்டிட அடிப்படையின் சேமக்கல்; இன்றியமையாத மூல முதன்மையுடைய செய்தி; சேம அடிப்படை.

cor'ner-teeth, *n. pl.* குதிரையின் தாடைப் பக்கத்திலுள்ள வெட்டுப் பற்கள்.

cor'nerwise, *adv.* மூலை நோக்கி; மூலைவிட்டமாக.

corn'et[1], *n.* எக்காளம் போன்ற பித்தளை இசைக்கருவி வகை; மளிகைச் சரக்குகளை வைப்பதற்காக கூம்பு வடிவமாய்ச் சுருட்டப்பட்ட தாள்; குளிர் பாலேடு நிறைந்த கூம்பு வடிவத் தாள்பில்லை.

corn'et[2], *n.* பக்கத் தொங்கல்களுடன் கூடிய மாதர்களின் பழைய தொப்பி வகை; மாதர்களின் பழைய தொப்பி வகையின் பக்கத் தொங்கல்; புரவிப்படை அதிகாரி; புரவிப் படை அணிவகுப்பின்போது கொடி தாங்கிச் செல்பவர்.

cor'net[3], *n.* = coronet.

cornet-a-piston, **cornet-a-pistons**, (பிர.) *n.* = cornet[1].

cor'netcy, *n.* புரவிப்படை அதிகாரியின் ஆணைப்பத்திரம்; புரவிப்படை அதிகாரியின் படிநிலை.

corn'etist, *n.* எக்காளம் போன்ற பித்தளை இசைக்கருவி வகையை வாசிப்பவர்.

corn'-exchange', *n.* கூலவாணிகக் களம்.

corn'-factor, *n.* கூலவாணிகர்.

corn'-fed, *a.* கூல உணவு ஊட்டப் பெற்ற; நல்ல ஊட்டம் பெற்ற.

corn'field, *n.* கூல வகைகள் விளையும் வயல்.

corn'flag, *n.* கத்தி வடிவமைந்த இலைகளையுடைய செடி வகை.

corn'-flour, *n.* கூலமாவு; மக்காச்சோள மாவு.

corn'flower, *n.* கூலப்பயிர்களிடையே விளையும் அழகிய நீலமலர்களையுடைய களை வகை.

corn'-fly, *n.* கோதுமைப்பயிர் முதலியவற்றின் தண்டினைத் துளைத்து நோயுண்டாக்கும் முட்டைப்புழுவை ஈனும் ஈ வகை.

corn'husker, *n.* கூல வகைகளின் உமி நீக்குபவர்; கூல வகைகளின் உமி நீக்கும் இயந்திரம்.

corn'ice, *n.* (க-க.) கட்டிட உச்சியின் சிற்ப வேலைப்பாடு அமைந்த பிதுக்கம்; எழுதகம், அலமாரச்சுவர் உச்சி நெடுகை கூரைக்கு அடுத்துக் கீழ் உள்ள அச்சுருவச் சிற்ப வேலைப்பாடு; படங்களுள்ள சுவடிகளைத் தாங்குவதற்கான ஒப்பனைச் சட்டம்; மலையேறல் வகையில் மேற்கவிந்துள்ள பனிமுகடு; *v.* கட்டிட உச்சியில் சிற்ப வேலைப்பாடமைந்த பிதுக்கம் அமை; அச்சுருவ எழுதகம் அமை.

cor'nice-hook, *n.* படமாட்டிக் கொளுவி; திரை மாட்டி.

cor'nice-pole, *n.* படங்கள்-திரைச்சீலைகள் முதலியவற்றைத் தொங்கவிடுவதற்கான கழி.

cor'nice-rail, *n.* படங்கள்-திரைச்சீலைகள் முதலியவற்றைத் தொங்கவிடுவதற்கான இருப்புச் சலாகை.

cor'nice-ring, *n.* பழங்காலப் பீரங்கியில் வாய் வளையத்தை அடுத்துப் பின்னுள்ள ஒப்பனை அச்சுரு வளையம்.

corn'icle, *n.* சிறு கொம்பு; கொம்பு போன்ற அமைவு; ஈ வகையின் மெழுகு சுரப்பிக்கும் குழல்களில் ஒன்று.

cornic'ulate, *a.* கொம்புள்ள; கொம்பு வடிவமைந்த.

cornic'ulum, *n.* = cornicle.

cornif'erous, *a.* (மண்.) எளிதில் கொறுங்கும் பாறை வகையை உண்டாக்குகிற; பாறை வகை அடங்கியுள்ள; (தொ.) corniferous limestone, (மண்.) களுக்களுள்ள பவழச் சுண்ணக்கல் வகை.

corn'iform, *a.* கொம்பினையொத்த வடிவமைந்த.

cornig'erous, *a.* கொம்புடைய.

corn'ing-house, *n.* துப்பாக்கி மருந்து நுண்மணிகளாக வார்க்கப்படுமிடம்.

corn'ist, *n.* துளை இசைக்கருவி வகையை வாசிப்பவர்.

corn'land, *n.* கூல வகைகளைப் பயிர்செய்வதற்குத் தகுந்த நிலம்.

corn'-law, **corn'-laws**, *n.* (வர.) பிரிட்டனில் 1846 வரை இருந்த கூல இறக்குமதிக் கட்டுபாட்டுச் சட்டம்.

corn'loft, *n.* கூலக் களஞ்சியம், பத்தாயம்.

corn'-maiden, *n.* = corn-baby.

corn'-mar'igold, *n.* கூல வயல்களில் விளையும் மஞ்சள் நிற மலர்ச் செடி வகை.

corn'-merchant, *n.* கூல வாணிகர்.

corn'-mill, *n.* மாவாலை.

corn'-moth, *n.* கூல வகைகளைத் தின்னும் முட்டைப் புழுக்களை ஈனும் அந்துப்பூச்சி வகை.

cor'no, *n.* பிரஞ்சு துளை இசைக்கருவி வகை.

corno di basset'to, *(இத்.)* *n.* மிக்க நயமும் மெல்லோசையும் உடைய துளை இசைக்கருவி வகை; இசைக்கருவித் துளையின் அழுத்துகட்டை.

cornop'ean, *n.* = cornet [1].

corn'pipe, *n.* கூலப்பயிர் வகைகளின் காம்பிலிருந்து செய்யப்படும் இசைக்கருவி வகை.

corn'-plaster, *n.* காலில் தோன்றும் காய்ப்புகளுக்கு மேற் பூச்சு மருந்து.

corn'-popper, *n.* கூல வகைகளைப் பொரிப்பதற்கான இரும்பு அடுப்புத்தட்டம்.

corn'-rent, *n.* பணமாக அல்லாமல் தானியமாகச் செலுத்தப்படும் வாரம்.

corn'-sal'ad, *n.* சிறு சதைப்பற்றுடைய ஐரோப்பியப் பூண்டு வகை.

corn'-snow, *n.* நுண்மணி உறைபனி.

corn'-spirit, *n.* கூலப்பயிர்ச் சிறு தெய்வம்.

corn'stalk, *n.* கூலச்செடியின் காம்பு; நீண்டுயர்ந்த மெல்லிய மனிதர்; நியூ சௌத் வேல்ஸில் (New South Wales) பிறந்தவர்.

corn'starch, *n.* களிவகைகள் செய்வதற்கான மக்காச் சோள மாவு.

corn'stone, *n.* கூலப்பயிருக்கு ஊட்டந்தரும் கன்மச் சத்து அடங்கியுள்ள சுண்ணகக்கல்.

corn'-thrips, *n.* கூலச்சத்தினை உறிஞ்சும் மிக நுண்ணிய பூச்சி வகை.

cor'nu, *n.* கொம்பு; கொம்பு போன்ற உறுப்பு; எலும்பு முனை; *pl.* cor'nua.

cornucop'ia, *n.* வளமார் கொம்பு; வளங்காட்டும் சின்னம், மலர்-கனி-பயிர்வளம் பொங்கி வழிவதாகக் கலைத்துறையில் காட்டப்படும் கொம்பு; வளமார் கொம்பு வடிவாகப் புனையப்பட்ட அழகுக்கலம்; பொங்கு மாவளம்.

cornute', **cornut'ed,** *a.* கொம்புடைய; கொம்பு போன்ற; கொம்பினையொத்த பிதுக்கங்களுள்ள.

corn'-weevil, *n.* தானியக் களஞ்சியங்களில் அழிவு விளைக்கும் சிறு அந்துப்பூச்சி வகை.

corn'-whisky, *n.* மக்காச் சோளத்திலிருந்து செய்யப்படும் அமெரிக்கத் தேறல் வகை.

corn'worm, *n.* தானியக் களஞ்சிய அந்துப்பூச்சி வகை; அந்துப்பூச்சி வகையின் முட்டைப்புழு.

corn'y [1], *a.* கூலம் போன்ற; கூலத்தினின்றும் உண்டாக்கப்பட்ட; கூலத்திற்குரிய; கூலம் மலிந்த.

cor'ny [2], *a.* காலில் தோன்றும் காய்ப்புக்குரிய; காலில் காய்ப்பு நோயுடைய.

coroll'a, *n.* *(தாவ.)* பூவிதழ் வட்டம், அல்லி வட்டம்.

coroll'ary, *n.* பின்தொடர்பு, தொடர் முடிபு; தெளியப்பட்ட முடிபிலிருந்து எளிதில் உய்த்தறியப்படும் உண்மை; துணை முடிபு, கிளை முடிபு, தெளியப்பட்ட முடிபடிப்படையாக ஏற்படும் முடிபு; இயல் விளைவு, பின்விளைவு, தொடர் பயன்.

coron'a [1], *n.* மகுடம் போன்ற அமைவு; கதிரவனையோ வெண்ணிலாவையோ சுற்றியுள்ள செல் விளிம்புடைய ஒளி வட்டம், பரிவேடம்; வில் ஒளிவட்டம், கதிரவனுக்கெதிராக உறைபனியிலும் முகிலிலும் தோன்றும் விளிம்பொளி வளையம்: வீரொளி வளையம், கதிரவனின் முழு மறைவின் போது வெண்ணிலாவைச் சுற்றிலும் காணப்படும் வெள் ளொளி வட்டம்; நிலமுனை வளரொளிக் கதிர்களின் குவியம்; தொங்கல் சரவிளக்கு வட்டம்; (க-க.) தூணின் அகல் நெடுந் தலைப்பு; (உட.) பல் முதலிய உறுப்புக்களின் கூர்ங்குவடு; (தாவ.) அகவிதழ்க்கேசம், மலரின் இதழ் வட்டத்தினுட்புறத் துணை இதழ் வட்டம்; (இய.) மயிர்க்குச்சுப் போன்ற மின் உமிழ்வு; *pl.* coro'nae; coro'nas.

coron'a [2], *n.* ஹவானு (Havana) நாட்டுச் சுருட்டு வகை.

co'ronach, *n.* ஒப்பாரி, புலம்பல்பாட்டு, இரங்கற் பா.

co'ronal [1], *n.* அணி முடி, பொன்முடி, மணி முடி, சிறு மகுடம்; தலைமாலை, கண்ணி.

coron'al [2], *a.* மகுடத்துக்குரிய; மகுடம் போன்ற; தலை உச்சிக்குரிய; *(தாவ.)* மலரில் அகவிதழ்க்கேசத்துக்குரிய; *(தொ.)* coronal bone, தலை ஓட்டின் முன் முகட்டு எலும்பு; coronal suture, தலை ஓட்டின் முன் முகட்டெலும்பையும் பின் முகட்டெலும்பையும் இணைக்கும் பொருத்து வரை.

cor'onary, *a.* மகுடத்துக்குரிய; தலை உச்சிக்குரிய; *(தாவ.)* அகவிதழ்க்கேசத்துக்குரிய; மகுடம் போன்ற; மகுடம் போலச் சுற்றியுள்ள; *(உள்.)* ஓர் உறுப்பைச் சுற்றியுள்ள; *(தொ.)* coronary arteries, *(உள்.)* நெஞ்சுப்பைச் சுவரின் தசைக்குக் குருதி வழங்கும் நாடி; coronary circulation, நெஞ்சுப்பை சுற்றிய குருதியோட்டம்.

co'ronate, **co'ronated,** *a.* *(தாவ.)* அகவிதழ்க்கேசமுள்ள; *(வில.)* மகுடம் போன்ற உறுப்புடைய.

corona'tion, *n.* முடிசூட்டுதல், முடிசூட்டு விழா.

corona'tion-oath, *n.* அரசரின் அல்லது அரசியின் முடி சூட்டு விழாச் சூளுரை.

co'roner, *n.* பிண ஆய்வாளர், கொலைநிகழ்ச்சி-இடர் ஆகியவை பற்றிய ஆராய்ச்சி நடத்துபவர்; புதையல் எடுப்பு ஆய்வுப்பணியாளர்; *(தொ.)* coroner's inquest, பிண ஆய்வாளர் பொது விசாரணை.

co'ronet, *n.* சிறு மகுடம், சிறு மணிமுடி; ஒப்பனை மிக்க தலையணி; மாலை; *(உள்.)* குதிரைக் குளம்பின் மேற்பகுதி.

co'roneted, *a.* சிறு மகுடம் அணிந்துள்ள.

coro'nium, *n.* ஞாயிற்றின் ஒளி வட்டத்திலிருப்பதாக முன்பு தவருகக் கருதப்பட்ட கற்பனைத் தனிமம்.

coron'oid, *a.* *(உள்.)* எலும்புப் பகுதிகளில் காக்கையின் அலகுபோல் வளைந்த.

coroz'o-nut, *n.* தாவர தந்தம் தரும் தென் அமெரிக்கப் பனை இன மரவகையின் கொட்டை.

corp'oral [1], *n.* படைத்துறைச் சிற்றலுவலர்; கப்பல் காவல் துறைச் சிற்றலுவலர்; சுரங்கத் தொழிலாளர் குழுத் தலைவர்.

corp'oral [2], *n.* கிறித்தவத் திருவிருந்தின் (Eucharist) போது அப்பத்தையும் தேறலையும் வைப்பதற்குப் பயன்படும் துணி.

corp'oral [3], *a.* மனித உடம்புக்கடுத்த; உடலுக்குரிய; உடம்பினை உடைய; தனிமனிதருக்குரிய; சடமான, சித்து அல்லாத, ஆன்மா சாராத; *(தொ.)* corporal punishment, உடல் ஒறுப்பு, கசையடிபோன்ற உடல் சார்ந்த தண்டனை.

corporal'ities, *n. pl.* உடம்பு பற்றிய செய்திகள்; உடம்பு பற்றிய தேவைகள்.

corporal'ity, *n.* உடல் வாழ்வு; உடம்பு.

corp'orate, *a.* சட்டப்படி ஒன்றுபட இணைக்கப்பட்ட; ஒரு முழு நிறுவனமாய் இயங்குகிற, உறுப்பினர் நிறைகூட்டான; கூட்டுரிமையுடைய; நகரவைத் தன்னுட்சியுரிமையுடைய; கூட்டான; கூட்டுக் குழுவுக்குரிய; கூட்டாண்மைக்குரிய.

corpora'tion, *n.* மாநகராண்மைக் கழகம்; கூட்டுரிமைக் குழு, அரசியலுரிமைப் பத்திரமூலம் அமர்வு பெற்ற குழு; அரசியல் தனியுரிமை பெற்றவர்; *(தொ.)* corporation aggregate, பலரடங்கிய இணைக்கழகம்; corporation sole, தனியுரிமை பெற்றவர்; municipal corporation, மாநகராண்மைக் குழு, மாநகராண்மை.

corp'orative, *a.* சட்டப்படி உண்டாக்கப்பட்ட இணைக் கழகம் சார்ந்த.

corp'orator, *n.* கூட்டுரிமைக்குழு உறுப்பினர்.

corpor'eal, *a.* உடல் சார்ந்த; உடம்பினையுடைய; சடப் பொருளான; (சட்.) உருப்படியான.

corpo'realism, *n.* உலோகாயதம்.

corpore'ity, *n.* பரு உடம்பியல்பு; பரு உடல் பெற்றிருத்தல்; பரு உடலின் பொருண்மை.

corporifica'tion, *n.* உருவாக்கம்; திட்பமுறுவித்தல்.

corpo'rify, *v.* பிழம்புருவாக்கு; உருவங்கொடு.

corp'osant, *n.* புயலடிக்கும்போது சில சமயம் கப்பலின் மேல் காணப்படும் ஒளி உருண்டை.

corps, *n.* படைப்பிரிவு; படைத்துறைப்பணி வகுப்பு; படை அரங்க வகுப்பு; ஒழுங்கமைக்கப்பட்ட குழு; செர்மன் மாணவர் கழகம்; தொழில் துறை அமைப்புக் குழு; *pl.* corps.

corpse, *n.* உயிரற்ற மனித உடல், பிணம்.

corpse'-can'dle, *n.* சாவின் முன்னறிவிப்பாக இடுகாட்டிற் காணப்படும் தீக்கொழுந்து.

corpse'-gate, *n.* இடுகாட்டில் பாடையை இறக்கி வைப் பதற்கான கூரையிட்ட நுழைவாயில்.

corp'ulence, corp'ulency, *n.* ஊழற்சதையுடையவரா யிருத்தல், மிதமிஞ்சிய கொழுப்புடைமை, உடல் பருத் திருத்தல்.

corp'ulent, *a.* பருத்த, கொழுத்த.

corp'us, *n.* உடம்பு; பிணம்; (உட.) உடம்பில் தனி இயல்பு வாய்ந்த கட்டமைப்பு; இலக்கியத் தொகுப்பு; சட்டத் தொகுதி; (தொ.) Corpus Christi, இயேசுநாதரின் திரு உணவு விழா; corpus delicti, சட்டமீறின செயல்களின் தொகுதி; corpus vile, பயனற்ற பொருள்.

corp'uscle, *n.* நுண் துகள்; (உட.) குருதிக்கணம்; நுண் குழு, குருதியில் உள்ள நுண் அணுவுடலி; (இய.) மின்னணு.

corpus'cular, *a.* நுண்துகள் சார்ந்த; மின்னணுக்களுக் குரிய; குருதி நுண்குழுச் சார்ந்த; (தொ.) corpuscular theory of light, பருப்பொருள் துகள்களின் வெளியேற்றமே ஒளியாகும் என்ற நியூட்டனின் (Newton) கோட்பாடு.

corpuscula'rian, *n.* பருப்பொருள் துகள்களின் வெளி யேற்றமே ஒளியாகுமென்னும் நியூட்டன் கோட்பாட்டாளர்; *a.* நுண்துகள் சார்ந்த.

corpus'cule, *n.* = corpuscle.

corral', *n.* கால்நடைப் பட்டி; வேட்டை விலங்குகளைத் துரத்திப் பிடிப்பதற்கான அடைப்பிடம்; படைவீட்டில் வண்டித் திரையால் அடைக்கும் அடைப்பு அரண்; *v.* தொழு வத்தில் அடை; அடை; பாதுகாப்பினிமித்தம் வண்டிகளின் வளைவான நிரல் அமை.

correct', *a.* சரியான, சரி நுட்பமான; திருத்தமான, வழு வற்ற; படியளவைக்கொத்த; ஒப்புக்கொள்ளப்பட்ட அள வுக்குச் சரியான; மெய்யான; தக்க, ஏற்புடைய; *v.* சரிப் படுத்து, திருத்து; தவறு நீக்கிச் சரி செய்; பிழைதிருத்தம் செய், பிழை குறி; கண்டி, தவறு எடுத்துரை; குறையகற்று; சரியீடு செய்; நேரளவுக்குக் கொண்டு வா.

correc'tion, *n.* திருத்துதல்; திருத்தம்; திருத்தப்பாடு; திருத்தப்படுதல்; திருத்தப்பட்ட வடிவம்; திருத்த மாறுபாடு; கண்டனம்; தண்டனை; மெய்யுறும் ஒறுப்பு; சரியீடு; சரிநிலை பெறுதற்குரிய பிழை நீக்க அளவு; (தொ.) under correction, மேலுரிமையாளர் திருத்தத்துக்குக் கட்டுப்பட்ட நிலையில்.

correc'titude, *n.* சரி திட்பம், பிழைபடாமை, தவறில்லா நடத்தை.

correc'tive, *n.* திருந்துவது; தீங்கினைத் தவிர்க்கும் பொருள்; தீமையினை எதிர்த்தியங்கும் பாங்குடைய பொருள்; *a.* தீங்கினைத் தவிர்க்கிற; தீமை எதிர்க்கப் பயன்படுகிற; திருந்துகிற; திருத்தும் இயல்புடைய; (தொ.) corrective training, விடாது தொடர்ந்து குற்றத்திலீடுபடும் 21 அல்லது மேற்பட்ட வயதுடைய இளைஞர்களுக்கு இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை நடத்தப்படும் திருத்தச் சிறையீடு.

correc'tor, *n.* திருத்துபவர்; திருத்தும் பொருள்; சீர்மையர்; திறனுய்வாளர், குற்றங்காண்பவர்; ஒறுப்பவர்; இயக்குநர்; பார்வைப் படித்தாள் திருத்துபவர்.

correct'ory, *a.* சீர்படுத்தும் பாங்குடைய; ஈடு செய்யும் இயல்புடைய.

co'rrelate, *n.* எதிரிணையான பொருள், ஒன்றற்கொன்று தொடர்புடைய எதிரிணையான பொருள்களில் ஒன்று; *v.* ஒன்றற்கொன்று தொடர்புடையதாக்கு; ஒன்றற்கொன்று தொடர்புடையதாய் இணைவுறு, எதிரிணையாயிரு; தொடர் புடைமை காட்டு; இடை ஒப்புமை நாட்டு.

correla'tion, *n.* தொடர்புபடுத்துதல்; இடைத்தொடர்பு.

correl'ative, *n.* ஒருவருடன் ஒப்புமைத் தொடர்புடைய மற் றொருவர்; ஒன்றுடன் ஒப்புமைத் தொடர்புடைய மற்றொன்று; *a.* ஒன்றற்கொன்று தொடர்புடைய; ஒருவருக்கொருவர் தொடர்புடைய; இருதிற ஒருங்கொப்புமையுடைய; (சொல் இலக்கணம்) இணையாட்சியுடைய, எதிரிணையான.

cor'reli'gionist, *n.* = co-religionist.

correspond', *v.* சரி ஒப்பாயிரு; இயைந்துடன்படு; பொருந்து, ஒத்திசைந்திரு; ஒத்திரு; ஒப்புமை கொண்டிரு; அளவொத் திரு, நிலையொத்திரு; கடிதப் பரிமாற்றத் தொடர்புகொள், கடிதப்போக்குவரவு நடத்து.

correspon'dence, *n.* பொருத்தம்; இயைபுடன்பாடு; இடை ஒப்புமை; ஒத்திசைவு; நட்புத் தொடர்பு; கடிதத்தொடர்பு; கடிதங்கள்; (தொ.) correspondence course, அஞ்சல் கடிதங்கள் மூலமாக நடத்தப்படும் பாடப்பயிற்சி; correspondence school, அஞ்சல் கடிதங்கள்மூலமாகப் பாடங்கற்பிக்கும் பள்ளி; doctrine of correspondences, இயற்கைப்பொருள் ஒவ்வொன்றுக்கும் நிகரான சித்துருவ மாதிரிப் படிவமூலம் இருக்கிறதென்றும் இதற்கான மறை விளக்கம் திருநூலில் இருக்கிறதென்றும் கொண்ட ஸ்வீடன் போர்க் (Swedenborg) என்பாரின் கோட்பாடு.

correspon'dency, *n.* = correspondence.

correspon'dent, *n.* கடிதம் எழுதுபவர்; கடிதத் தொடர்பு கொள்பவர்; பத்திரிகை நிருபர், இதழகத் தனி எழுத்தாளர்; நிறுவனத்தின் அயல்நாட்டுத் தொழிலாண்மைப் பேராளர்; நிறுவனத்தின் எழுத்தாண்மைப் பேராளர்; எழுத்தாண் மைத் தொழிற் பேராளர்; *a.* சரி ஒத்த; ஏற்புடைய; தக்க; உடன்பாடான.

correspond'ing, *a.* ஒத்திசைவான; ஏற்புடைய; பொருந்து கிற, தகுதியாயிருக்கிற; கடிதத்தொடர்பு கொண்டிருக்கிற; (தொ.) corresponding member, சேய்மையில் வாழ்ந்து கொண்டு கழகத்தின் ஆட்சியில் பங்குகொள்ளாமலேயே அதனுடன் கடிதத்தொடர்பு கொள்ளும் உறுப்பினர்.

correspon'sive, *a.* ஒத்துள்ள, பொருந்துகிற, ஏற்புடைய.

co'rridor, *n.* இரண்டறைகளுக்கு இடையேயுள்ள நடைக் கூடம்; புகையூர்தியில் இரண்டு வளைவுகளுக்கிடையிலுள்ள இடைவழி; ஒரு நாட்டுக்குரியதாயிருந்து மற்றொரு நாட்டின் ஊடே சென்று கடல்-துறைமுகம் முதலியவற்றைச் சென்றடைவதற்குரிய இடைவழி நிலம்.

corr'idor-carr'iage, *n.* ஓர் அறை வளைவிலிருந்து மற்றோர் அறை வளைவுக்குச் செல்லும் வழியுள்ள வண்டி.

corr'idor-train, *n.* ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை செல்ல குறுகலான இடைவழியுள்ள இருப்பூர்தித் தொடர்.

co'rrie, *n.* மலைச்சரிவிலுள்ள மட்டமான பள்ளம்.

corrigen'da, *n. pl.* அச்சிட்ட புத்தகத்தில் பிழைதிருத் தங்கள்.

corrigen'dum, *n.* திருத்தப்படவேண்டிய தவறு.

corr'igent, *n., a.* = corrective.

corr'igible, *a.* திருத்தப்படத்தக்க; வழிக்குக் கொண்டுவரக் கூடிய; திருத்தக்கூடிய; படிமானமுடைய.

corriv'al, *n.* போட்டியிடுபவர், எதிராளி, ஒத்த தகுதியுடையவர்; *a.* போட்டியிடுகிற, எதிராளியான; *v.* போட்டியிடு, எதிர்த்து வெல்ல முயல், விஞ்ச முயற்சி செய்.

corrob'orant, *n.* வலிமைதரும் மருந்து; உறுதிப்படுத்தும் செய்தி; *a.* வலிமை தருகிற; உறுதிப்படுத்துகிற.

corrob'orate, *a.* வலியுறுத்தப்பட்ட; *v.* முறைப்படி உறுதிப்படுத்து; நிலைநிறுத்து, சான்று காட்டி வலியுறுத்து.

corrobora'tion, *n.* உறுதிப்பாடு, நிலைபடுத்தல்; கூடுதலான சான்றுகளினால் வலியுறுத்தல்.

corrob'orative, *n.* வலியுறுத்தும் செய்தி, உறுதிப்படுத்தும் சான்று; *a.* வலியுறுத்தும் பாங்குடைய.

corrob'oratory, *a.* வலியுறுத்தும் பாங்குடைய.

corrob'oree, *n.* ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் நாட்டு ஆடல் வகை; ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் ஆடலுக்கான பாடல் வகை; ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் விழாக்கூட்டம்; *v.* ஆஸ்திரேலிய நாட்டு ஆடல் வகை நடத்து.

corrode', *v.* கரம்பு, பையப் பைய அரித்துத்தின்னு; கரை, சிதை; அழிவுறு.

corrod'ent, *n.* கரம்புவது, அரித்து அழிக்கும் பொருள்; *a.* அரித்துச் சிதைக்கவல்ல.

Corroden'tia, *n. pl.* புத்தகப்பேன் போன்ற சிறு பூச்சியினம்.

corro'sion, *n.* அரித்தல், கரைத்தழித்தல்; கரைதல்; துருப்பிடித்து வீணுதல்.

corros'ive, *n.* அரித்துத் தின்னவல்ல பொருள்; *a.* கரைத்துச் சிதைக்கவல்ல; (தொ.) corrosive sublimate, (வேதி.) வீரம், இரசகப்பாசிதை, இரசங்கலந்த உறைப்பான கொடிய நஞ்சு.

co'rrugate, *v.* தாள்-இரும்பு முதலியவற்றைத் திரைக்கச் செய்; வளைத்து நெளி; மடித்துத் திட்பமாக்கு; மடிப்புக் குறியிடு, மடிப்பிட்டு வளை.

co'rrugated, *a.* நெளிவுள்ள, திரைந்த; (தொ.) corrugated iron, வலிவு மிகும்பொருட்டு நெளிநெளியாக வளைக்கப்பட்ட இரும்புத்தகடு; corrugated paper, அட்டைத்தாளாகப் பயன்படும் மடிப்புச் சுருக்கம் விழுந்த தாள்.

corruga'tion, *n.* மடிப்புகளாகச் சுருக்குதல்; திரை விழுந்த நிலை; திரை, சுரிப்பு.

co'rrugator, *n.* (உள்.) முகம் சுளிக்கும்போது புருவத்தைச் சுருக்கும் தசை.

corrupt', *a.* அழுகின, ஊழலான; ஊசிப்போன; இழிந்த, பழிகேடுற்ற, சீரழிந்த; மாசுபட்ட; தூய்மைகெட்ட; ஒழுக்கங்கெட்ட; கைக்கூலி வாங்கும் இயல்புடைய, இலஞ்ச ஊழல் மலிந்த; இலஞ்சத்தால் வசப்படுத்தத்தக்க; போலியான, மோசமான, செல்லுபடியாகாத; உண்மையற்ற; பிழை மலிந்த; *v.* அழுகலாக்கு; ஊழ்த்துப்போ; கெடு; கறைப்படுத்து; நச்சுப்பரப்பு; தொற்றூட்டு; மொழித்தூய்மை கெடு; கைக்கூலி கொடுத்து வசப்படுத்து, இலஞ்ச ஊழலால் கெடு; இழிவுபடுத்து; கெட்டுப்போ, சீரழிந்து போ.

corrup'tible, *a.* கைக்கூலியினால் வசப்படுத்தத்தக்க; அழிவுறுக்கூடிய; ஒழுக்கக்கேடுறத்தக்க.

corrup'tion, *n.* அழுகல், ஊழ்த்தல்; அழுகற் பொருள்; கட்டழிவு, பொருள் சிதைவு; நுப்புரவுக்கேடு; இலஞ்ச ஊழல் பழக்கவழக்கத் தொகுதி; ஒழுக்கக்கேடு; மொழிச் சிதைவு, நடைச் சீரழிவு; (தொ.) corruption of blood, (சட்.) கொலைத்தீர்ப்பு அல்லது நாடு கடத்தலுக்கு ஆட்பட்டவர் சொத்துரிமை-பட்டம்-மதிப்பு முதலியவற்றின் தன்னுரிமையுடன் அவற்றை அளித்தல்-மரபுரிமையாக விட்டுச் செல்லல் ஆகிய உரிமைகள் யாவும் இழக்கும் நிலை.

corrup'tionist, *n.* கைக்கூலி கொடுப்பவர்; கைக்கூலி வாங்குபவர்; இலஞ்சப் பழக்கத்தை ஆதரிப்பவர்.

corrupt'ive, *a.* சீரழிக்கும் இயல்புள்ள, கெடுக்கும் பண்புள்ள.

cors'ac, *n.* இளமஞ்சள் நிறமும் குச்சுவாலுமுடைய குள்ள நரி வகை.

cors'age, *n.* மகளிர் கச்சு; கச்சணி மலர்க் குஞ்சம்.

cors'air, *n.* பகைவர் கப்பலைக் கொள்ளையிடும் போர்க் கப்பல் தலைவன்; கடற்கொள்ளைக்காரன்; சூறைக்கப்பல்.

cors'ak, *n.* = corsac.

cors'elet, *n.* = corslet.

cors'et, *n.* மகளிரின் இறுக்கமுடைய விறைப்பான மார்புக் கச்சு; *v.* கச்சு அணிவி.

cors'let, *n.* கவச உடற்பகுதி; பெண்டிரின் கை நீங்கலான இறுக்கமான மார்புச் சட்டை; (வில.) பூச்சியின் தலைக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட மார்புக்கூறு.

cortege, (பிர.) *n.* பரிவாரம், பின்செல்லும் ஊழியர் வரிசை; ஊர்வலம்; இழவு ஊர்வலம்.

cor'tes, (ஸ்பா.) *n. pl.* ஸ்பெயின் அல்லது போர்ச்சுக்கல் நாட்டின் இருசட்டமன்றங்களுமடங்கிய பேரவை.

cort'ex, *n.* உள்ளுரி, செடியினத்தின் உள்மரப்பட்டை; மேலுறை; மூளைமேலுள்ள சாம்பல் நிறப்பொருள்; சிறு நீர்ப்பையின் புறப்பகுதி; *pl.* cor'tices.

cort'ical, *a.* (தாவ.) உள்ளுரியைச் சார்ந்த; (வில.) உடலின் புறம் சார்ந்த; உறுப்பின் புறப்பகுதி சார்ந்த.

cort'icate, **cort'icated**, *a.* மேல்தோலையுடைய; புறத்தோடு போன்ற.

corun'dum, (த.) *n.* குருந்தம், வைரத்திற்கடுத்தபடி கடினம் வாய்ந்த கனிப்பொருள் வகை.

corus'cant, *a.* ஒளி வீசுகிற, மின்னுகிற.

co'ruscate, *v.* மின்னு, பளிச்சென ஒளிவிடு.

corusca'tion, *n.* மின்னுதல், பளபளப்பாக ஒளிவீசுதல்; திடீரென வீசும் ஒளி.

corvee', *n.* நிலப்பண்ணையாட்சி முறையில் ஊழியக்கடமை, கூலியில்லா வேலை.

corvette', *n.* வழித்துணைக் கப்பல், கூட்டத்தை நீர் மூழ்கிக் கப்பலின் தாக்குதலினின்றும் பாதுகாத்துச் செல்லும் வேக முடைய சிறிய கப்பல்.

corv'ine, *a.* காக்காய்-பருந்து இனத்தைச் சார்ந்த.

Co'rybant, *n.* சிபீலி (Cybele) என்ற பண்டைக் கிரேக்க பெண் தெய்வத்தின் ஆடலார்ப்பரிப்பு வாய்ந்த வழிபாட்டுக்கு உரிய சமய குரு; *pl.* Co'rybants.

Coryban'tic, *a.* முரட்டுத்தனமிக்க உணர்ச்சிப் பெருக்குள்ள.

Co'rydon, *n.* நாட்டுப்புறத்தானைச் சுட்டிய குறிப்புப்பெயர்.

co'rymb, *n.* (தாவ.) சரிமட்ட முகட்டையுடைய மலர்க் கொத்து.

corym'bus, *n.* பெண்ணின் உச்சிக்கொண்டை, 'பிச்சோடா'.

cor'ypha, *n.* வெப்ப மண்டலப் பெரும் பனைவகை.

coryphae'us, *n.* இசைக்குழு முதல்வர்; *pl.* coryphae'i.

co'ryphee, *n.* நடனக்குழுவின் தலைமை நடிகை.

coryz'a, *n.* மண்டைச்சளி; தடுமல்.

cos [1], *n.* கோசு, நீண்ட இலையுடைய கீரை வகை.

cos [2], *n.* cosine என்பதன் சுருங்கிய வடிவம்.

cosaque, (பிர.) *n.* சீனவெடி, பட்டாசு.

cose, *v.* வாய்ப்பமைதிகொள், வாக்காக அமர்ந்துகொள்.

cosec'ant, *n.* (கண.) கோணத்தின் எதிர்நெடுக்கை, செங்கோண முக்கோணத்தில் கோணத்துக்கெதிரான நிலைவரை மீது சாய்வரை கொள்ளும் சார்பளவு.

coseis'mal, *n.* நில நடுக்க உடனதிர்வு எல்லைக்கோடு; *a.* நிலநடுக்கத்தில் ஒரே சமயத்தில் உடனதிர்கிற.

cosh, *n.* குண்டாந்தடி, செண்டு; *v.* குண்டாந்தடியாலடி; (தொ.) cosh boy, தடியேந்திய இளைஞன்; செண்டேந்திய மனிதர்.

cosh'er [1], *v.* இடங்கொடுத்துக் கெடு, இளக்காரம் கொடு, செல்லம் கொஞ்சு.

cosh'er [2], *a.* தூய்மையான, மாசற்ற; யூதர்கள் சட்டத்தின்படி தூய்மையாக்கப்பட்ட.

cosh'er [3], *v.* சார்ந்தவர்களைப் பற்றிவாழ்.

cosh'ering, cosh'ery, *n.* அயர்லாந்தின் நிலக்கிழார் தம் உரிமை ஏவலாளருடன் குடிவாரக்காரனிடம் தங்குவதற்குள்ள பண்டைய உரிமை.

co-sig'natory, *n.* கூட்டொப்பக்காரர், பலருடன் கையெழுத்திடுபவர்; *a.* பலருடன் சேர்ந்து கையெழுத்திடுகிற.

co-signif'icative, *a.* உடனெுத்த உட்குறிப்புடைய.

co'sine, *n.* (கண.) கோணத்தின் கிடக்கை, செங்கோண முக்கோணத்தில் சாய்வரைமீது கோணமடுத்த அடிவரை கொள்ளும் சார்பளவு.

cos'lettize, *v.* துருத்தடைக் காப்புமுறை கையாளு; மிதிவண்டி உருளையின் குறுக்குக் கம்பிகளுக்குத் துருக்காப்பிடு முறை செய்.

cosmet'ic, *n.* ஒப்பணைப்பொருள், சிங்காரிப்புப் பொருள்; *a.* ஒப்பணைக்குரிய; முடிசிங்காரிப்பு-வண்ணவடிவொப்பணை ஆகியவற்றுக்குரிய.

cos'mic, *a.* இயலுலகொடு சார்ந்த; இயலுலக அண்டத்துக்குரிய; சீர்பெற அமைந்த இயலமைவுக்குரிய; ஒழுங்குமுறையான; (தொ.) cosmic rays, மின்காந்த நுண்ணலைகள், 1925-இல் டாக்டர் ஆர். ஏ. மில்லிகன் (Dr. R. A. Millikan) என்பவரால் கண்டுணரப்பட்டு அண்டவெளியில் விண்மீன்களின் இடையிலிருந்து வருவதாகக் கருதப்பட்ட மின்காந்தச் சிற்றலைகள்.

cos'mical, *a.* இயலுலக அண்டத்துக்குரிய; (வான்.) கதிரவன் எழும்போது நிகழ்கிற; கதிரவனுடன் எழுகிற; (தொ.) cosmical constant, அண்ட அமைப்பிற்கு இன்றியமையாததாக எண்ணப்படும் அடிப்படை எண் (தற்போதைய மதிப்பில் 10^{78}).

cos'mism, *n.* இயலுலக அண்டம் தானே தோன்றி நிலைபெற்றுள்ள முழுமைப் பொருள் என்னும் கோட்பாடு.

cos'mist, *n.* சமயச்சார்பற்ற கோட்பாட்டினர், உலோகாயதர்.

cos'mocrat, *n.* இயலுலகாள்பவர்.

cosmog'eny, *n.* இயலுலகத் தோற்றம்.

cosmogon'ic, cosmogon'ical, *a.* அண்டத் தோற்றம் சார்ந்த, இயலுலகப் படைப்புப்பற்றிய.

cosmog'onist, *n.* அண்டத்தோற்ற ஆய்வாளர், இயலுலகப் படைப்புக் குறித்து ஆழ்ந்து ஆராய்பவர்.

cosmog'ony, *n.* அண்டப்பிறப்புக் கோட்பாடு, இயலுலகத் தோற்றம் பற்றிய கொள்கை.

cosmog'raphy, *n.* இயலுலக விளக்க விரிவுரை; அண்ட அமைப்பியல்.

cosmol'atry, *n.* இயலுலக வழிபாட்டாளர், அண்ட வழிபாடு செய்பவர்.

cosmol'ogy, *n.* அண்ட முழுமை இயல்; அண்டப் படைப்புக் கோட்பாடு.

cos'monaut, *n.* விண்வெளிச் செலவினர்.

cosmoplas'tic, *a.* அண்டத்தை உருவாக்குகிற, உலகினை உருவாக்குகிற.

cosmop'olis, *n.* அகலுலகத் தொடர்பு கொண்ட நகரம்.

cosmopol'itan, *n.* அகலுலகக்குடிமகார்; உலகப் பொதுப் பற்றுளர்; பிறநாட்டில் பொதுவுடைமையரல்லாதவரிடமும் ஒத்துணர்வு காட்டும் பொதுவுடைமையாளர்; *a.* உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் தொடர்பான; தனிச்சார்பற்ற.

cosmopol'itics, *n.* உலக அரசியல்.

cosmora'ma, *n.* பல்வண்ண உலகக் காட்சிக்கோவை, கண்ணாடி வில்லைகள்மூலம் இணைத்துக் காட்டப்படும் உலகளாவிய வண்ணக் காட்சித் தொகுதி.

cos'mos, *n.* இயலுலகு, அண்டம்; ஒழுங்கமைதி வாய்ந்த முழுமைப்பொருள் உலகு, சீர்பெற அமைந்த உலகம்; ஒழுங்கமைதி.

cos'mosphere, *n.* நிலைமாறு விண்மீன் மண்டலத்துடன் நிலவுலகின் காலப் புடைபெயர்ச்சி மாறுபாட்டை நேர்முகப்படுத்திக் காட்ட உதவும் கருவி அமைவு.

cosmothe'ism, *n.* இயலுலகையும் இறைவனையும் ஒன்றுபடக்கொள்ளும் கோட்பாடு, அத்துவைதம்.

cosmothet'ic, cosmothet'ical, *a.* புறவுலகு உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிற.

Coss'ack, *n.* தென்கிழக்கு ருசியாவிலுள்ள (South Eastern Russia) மக்கட் பிரிவினர்; ருசிய விரை குதிரைப்படை வீரர்; (தொ.) Cossack boots, ருசியப் புதைமிதியடி; Cossack post, எல்லைக் காவலிலுள்ள சிறு குதிரைப்படைப் பகுதி.

coss'et, *n.* அன்பாக வளர்க்கப்படும் ஆட்டுக்குட்டி; செல்வமாக வளர்க்கப்படும் உயிரினம்; *v.* செல்லங்கொஞ்சு, சீராட்டி வளர்.

cost [1], *n.* விலை; செலவு; செலவுத்தொகை; விலையாகக் கொடுக்கப்பட்ட பணம்; *v.* விலைபெறு; விலை பிடி; செலவாகு; (தொ.) at all costs, cost what may, எது எப்படியானலும்; என்ன விலையானலும்; cost of living, பொது நிலைக் கணிப்பீட்டின்படியான வாழ்க்கைச் செலவு; cost of living index, வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், கணிப்பு மூலமாகக்கொள்ளப்படும் மற்றோர் ஆண்டுக்காலத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு பணித்துறையாளரால் ஒப்பிட்டு உருவாக்கப்பட்ட நடைமுறை ஆண்டுக் காலத்திய வாழ்க்கைச் செலவு ஏற்ற இறக்கநிலை எண்; cost price, கொள்விலை, வணிகர் வாங்கும் விலை; prime cost, ஆதாயம் செலவு சேர்க்காத பொருள் ஆக்க விலை.

cost [2], *v.* cost [1] என்பதன் இறந்தகால முற்றெச்ச வடிவம்.

cos'ta, *n.* விலா எலும்பு; விலா எலும்பு போன்ற அமைப்பு; வடிகுழாய்; நாளம்; மலைத்தொடர்; வண்டின் சிறகின் முன்விளிம்பு; வண்டின் சிறகு விளிம்பினுக்குகில் உள்ள வலிவூட்டும் இலை நரம்பு போன்ற அமைவு.

cos'tal, *n.* வண்டு சிறகின் விளிம்பினுக்கு வலிவூட்டும் இலை நரம்புபோன்ற அமைப்பு; *a.* விலா எலும்பைச் சார்ந்த; உடலின் பக்கத்திலுள்ள.

cos'tard, *n.* பெரிய ஆப்பிள் பழவகை.

cos'tard-monger, *n.* ஆப்பிள் முதலிய பழவகை விற்பனையாளர்; தள்ளுவண்டியில் பழம் விற்பவர்.

cos'tate, cos'tated, *a.* விலா எலும்புள்ள; விலா எலும்பு போன்ற தோற்றமுள்ள.

costean', costeen', *v.* சுரங்க வளம் ஆராயக் கனிப்பாறையின் போக்கறியக் குழியெடு.

cos'ter, cos'termonger, *n.* = costard-monger.

cos'tive, *a.* மலச்சிக்கலுள்ள; கைக்கடிப்பான, கஞ்சத்தன முடைய.

cost'ly, *a.* விலையேறிய; பெருமதிப்புள்ள; பெருஞ்செலவு பிடிக்கிற.

cost'mary, *n.* நறுமண இலைகளுக்காகத் தென் ஐரோப்பாவில் வளர்க்கப்படும் மலர்ச் செடிவகை.

costs, *n. pl.* நீதிமன்ற வழக்குச் செலவுகள்.

cos'tume, *n.* ஆடை; அங்கி; மாதர் புற உடை; பகட்டணி உடை; உடையின் பாணி; உடையின் புதுமை நயம்; விசித்திரமான உடை; வேடிக்கை நடிப்பு உடை; *v.* உடை வழங்கு; உடையணிவி, உடுத்து; (தொ.) costume jewellery, செயற்கை அணிமணி, ஒப்பணைப் போலி நகைநட்டு.

costum'er, costum'ier, *n.* உடை உருவாக்குபவர்; உடை விற்பனையாளர்.

cos'y, *n.* தேநீர்க்கல மேல்மூடி; வேகவைத்த முட்டையினைச் சூடாக வைத்திருக்கும் மூடி; *a.* சொகுசான, வாய்ப்பாக இன்பநல்குகிற.

cot [1], *n.* சிற்றில், குச்சில்; (செய்.) குடில்.

cot[2], (இ.) *n.* கட்டில், சிறு படுக்கை; தொட்டில்; (கப்.) கித்தானுலான ஊசற்படுக்கை; மருத்துவமனைப் படுக்கை.

cot[3], *n.* cotangent என்பதன் சுருக்கக் குறிப்பு.

cotan'gent, *n.* (கணை.) கோணத்தின் எதிரிருக்கை, செங்கோண முக்கோணத்தில் சாய்வரைமீது கோணத்தையடுத்த அடிவரை கொள்ளும் சார்பளவு.

cote, *n.* கொட்டில், தொழு; தங்கிடம்; கட்டில்.

co-tem'porary, *n.*, *a.* = contemporary.

co-ten'ant, *n.* உடன் குடிக்கூலியாளர்.

cot'erie, *n.* தனிக்குழு; தனிப்பட்ட இலக்கியக் குழாம்; தனி வாழ்க்கைக் குழு; சிறப்புக்குழுமம்.

co'thurn, cothurn'us, *n.* துன்பியல் நடிகர் அணியும் உயர் புதை மிதி.

co-tid'al, *a.* கடலின் வேலி ஏற்ற நேர ஒருமைப்பாடுடைய.

cotill'ion, coti'llon, *n.* நாட்டு நடன வகை; நடனப் பண்.

cotoneas'ter, *n.* முள்ளுள்ள சிறு மரவகை.

cott'a, *n.* சமய குருவின் பணித்துறைச் சார்பான குறுகலான வெண்ணிற அங்கி.

cott'age, *n.* சிற்றில், குச்சில், குடில், குடிசை; நாட்டுப்புற மனை; (தொ.) cottage hospital, எளிய சிறு மருத்துவ மனை, குடிசை வீட்டிலமைந்த மருந்தகம்; cottage loaf, பெரிய அப்பத்தின்மீதுள்ள சிறு அப்பக்கட்டி; cottage piano, சிறு இன்னிசைக் கருவி வகை.

cott'aged, *a.* குடிசைகள் நிரம்பிய; குடியானவர் இல்லங்கள் செறிந்த.

cott'ager, *n.* குடிசை வாழ்நர்; தொழிலாளர்.

cott'ar, *n.* பண்ணையிலேயே குடிலில் வாழ்ந்து வரையறுக்கப் பட்ட கூலிக்கு வேண்டும்போதெல்லாம் உழைக்கும் கடப் பாடுடையவர், பண்ணைக் கூலிக்குடியாள்.

cott'ed, *a.* குடிசை வரிசைகளுள்ள.

cott'er[1], *n.* = cottar.

cott'er[2], *n.* இயந்திரப் பகுதிகளை இறுக்கும் கவர்முள் கொளுவி.

cott'ier, *n.* குடில்வாழ்நர்; அயர்லாந்தில் ஏலச்சுத்தகைக் குடியானவர்; (தொ.) cottier tenure, பண்ணை ஏலக் குத்தகைக் குடிமை முறை.

cott'ierism, *n.* அயர்லாந்தில் பண்ணை ஏலக்குத்தகைக் குடியாண்மை முறை.

cott'on, *n.* பருத்திப்பயிர்; பருத்திச்செடி; பஞ்சு; பருத்தி நூல்; பருத்தி ஆடை; *a.* பருத்தியாலான; *v.* பஞ்சு இணை; இணங்கு; ஒத்து இயை; ஒன்றி இரு; பற்றுக்கொள்; பற்றுக்கொண்டு இணக்கமாயிரு; நட்பாடு.

cottonade', *n.* மட்டமான பருத்தித்துணி.

cott'on-boll, *n.* பருத்தி நெற்று.

cott'on-gin, *n.* பஞ்சு கடையும் பொறி; பஞ்சு வேறு கொட்டை வேருக்கும் பொறி அல்லது இயந்திரம்.

cott'on-grass, *n.* கருவகஞ் சூழ மென்துய்யுடைய கோரைப் புல் வகை.

cott'on-lord, *n.* பருத்தி வாணிகப் பெருஞ்செல்வர்.

cott'on-mill, *n.* பஞ்சாலை, பருத்தி நூற்பு நெசவுத் தொழிற் சாலை.

cott'on-mouth, *n.* உள்வாய் வெண்ணிறமான நச்சுநீர்ப் பாம்பு வகை.

cottonoc'racy, *n.* பருத்திப் பண்ணை அதிபர் தொகுதி; பருத்தித் தொழிலதிபர் தொகுதி.

cott'on-plant, *n.* பருத்திச்செடி, பஞ்சுதரும் செடியினத்தின் வகை.

cott'on-press, *n.* பருத்தியைச் சிப்பமாக அழுத்திக் கட்டும் இயந்திரம்.

cott'on-seed, *n.* எண்ணெய் வகை தரும் பருத்திவிதை.

cott'on-spinner, *n.* பருத்திநூல் நூற்பவர்; பருத்திநூல் நூற்புத் தொழில் முதல்வர்.

cott'on-tail, *n.* ஐக்கிய அமெரிக்காவிலுள்ள குழிமுயல் வகை.

cott'on-thistle, *n.* பஞ்சு போன்ற மென்மையுடைய முட்செடி வகை.

cott'on-tree, *n.* அமெரிக்க மரவகை, முள் இலவம்.

cott'on-waste, *n.* பஞ்சாலைகளிலிருந்து வெளியே தள்ளப் படும் கழிவுப்பஞ்சு; இயந்திரங்களைத் துடைக்க உதவும் கழிவுப்பஞ்சு.

cott'on-weed, *n.* பஞ்சுபோன்ற கடலோரக் களைச்செடி வகை.

cott'on-wood, *n.* மெல்லிய வளையத்தக்க கிளைகளுள்ள அமெரிக்க மரவகை.

cott'on-wool', *n.* பதம் செய்யப்பட்டாத பஞ்சு.

cott'on-worm, *n.* அமெரிக்கப் பருத்திச் செடிகளை அழிக்கும் கம்பளிப்புழு வகை.

cott'ony, *a.* பஞ்சுபோன்ற; மென்மையான; பஞ்சியலான.

cot'-town, *n.* குடிசைத் தொகுதி.

Cott'us, *n.* பெரிய தட்டையான தலையினைக் கொண்ட சிறு ஆற்று மீன் இனம்.

cot'yle, *n.* பண்டைய கிரேக்க குவளை, குடி கிண்ணம்; (வில.) கிண்ணம்போன்ற பள்ளம் அல்லது குழி; *pl.* cot'ylae, cot'yles.

cotyled'on, *n.* (தாவ.) விதை இலை; விதையிலுள்ள இலைப் பருப்பு; கதுப்பு; (வில.) அசைபோடும் விலங்கினங்களின் நஞ்சுக் கொடியிலுள்ள மெல்லிய மயிர்க்கொத்துப் போன்ற அமைப்பு.

cotyle'donary, cotyled'onous, *a.* (தாவ.) விதை இலை சார்ந்த; கதுப்புச் சார்ந்த.

cotyl'iform, *a.* (தாவ.) உயர்ந்த விளிம்புடைய கிண்ணம் போன்ற.

cot'yloid, *a.* கிண்ணம்போன்ற.

couch, *n.* துயிலிடம், படுக்கை, பாயல், சேக்கை, மஞ்சம்; ஓய்விருக்கை, சாய்வுக்கட்டில்; காட்டு விலங்கின் தூறு, குகை, அடுக்கு; பரப்புவதற்குரிய இடம், தளம்; *v.* கிடத்து, படுக்கவை; பக்கத்துக்குப் பக்கமாகக் கிடக்க விடு, அருகில் வை; கீழிடு; தாழ்த்திப்பிடி, ஏந்து; பதுங்கு, கூனிக்குறுகு; ஒளிந்திரு, பதியம்போடு; பரப்பு, நிரப்பு; மூளையூறவைத்துப் பரப்பு; உட்பொருள் பொதிய வை; கண்படலமகற்று; படலமகற்றக் கண்ணைப் பக்குவமாக்கு; (தொ.) couch a spear, கவசத்தருகே ஈட்டியை ஏந்தலாகப் பிடித்திரு.

couch'ant, *a.* படுத்துள்ள, படுக்கையான; (கட்.) விலங்குகள் வகையில் தலை தூக்கிப்படுத்துள்ள.

Cou'eism, *n.* எமிலி குவே (Emile Coue, *1862-1926*) என் பவரால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ முறை, நோயாளி தன் உள்ளார்வ எண்ணஅலை எழுப்பும்படி செய்வதன்மூலமே நோய் நீக்க நாடும் முறை.

coug'ar, cou'guar, *n.* பெரிய பூனையின அமெரிக்கக் கொடு விலங்கு வகை.

cough, *n.* இருமல்; இருமல் நோய்; இருமலொலி; *v.* இருமு; (தொ.) cough down, இருமிப் பேச்சை அடக்கு.

cough'-drop', cough'-loz'enge, *n.* இருமல் தணிக்கும் இனிப்பு மாத்திரை.

could, *v.* can என்பதன் இறந்தகால வடிவம்.

couleur de rose, (பிர.) *n.* ரோசா நிறம்; *a.* ரோசா நிறமான.

coulisse', *n.* நாடக அரங்கின் திரைத்தட்டி சறுக்கிச் செல்வதற் குரிய பள்ள வரை வாய்ந்த மரக்கட்டு.

coulisse's, *n. pl.* நாடக அரங்கப் பக்கச் சிறகம்; இரு சிறகங்களின் இடைவெளி.

couloir, (பிர.) *n.* செங்குத்தான மலைவிடர், அருவியால் தோண்டப்பட்ட மலைப்பள்ளம்.

coulomb', *n.* ஒரு நொடியில் ஒரு மின்னலகால் ஈர்க்கப்படும் மின் ஆற்றலலகு.

coul'ter, *n.* ஏர்க்கொழுவின்முன் அமைக்கப்பட்டுள்ள வெட்டிரும்புத் தகடு.

coum'arin, *n.* செடிகொடி வகைகளிலிருந்து கிடைக்கும் படிக உருவ மணப்பொருள் வகை.

coun'cil, *n.* மன்றம்; ஆய்வராய்வுக் கழகம்; அறிவுரைக் குழாம்; ஆட்சிமுறைப் பேரவை; சட்ட மன்றம்; மன்ற உறுப்பினர் குழு; நகரவை; மாவட்ட ஆட்சி மன்றம்; திருச்சபைக் கொள்கை நடைமுறை வகுப்புப் பேரவை; சமயச் சீரமைப்புக் குழு; பல்கலைக் கழக ஆட்சிக்குழு; சங்க ஒழுங்கு முறைக்குழு; (தொ.) Council of Europe, ஐரோப்பா மாமன்றக் கருமுதலாகக் கருதப்பட்ட 1949-இல் கூடிய ஐரோப்பிய நாடுகள் மன்றம்; Council of States, இந்திய அரசியல் மேல்மன்றம்; Council of War, படைத்துறைப் போர் ஆய்வுக் கூட்டம்; general council, திருச்சபைப் பொதுக்கூட்டம்; in council, மன்றக்கூட்டத்தில்; கலந்தாராய்ந்து; legislative council, சட்டசபை, மாகிலத் தலைவருக்கு உதவியாகச் சட்டமியற்றும் குழு.

coun'cil-board, *n.* மன்ற மேடை; மன்ற உறுப்பினர் சூழ அமர்வதற்குரிய நடு மேசை

coun'cil-cham'ber, *n.* ஆய்வு மன்றக் கூடம், அவைக்களம்.

coun'cil-house, *n.* மன்ற மாளிகை, அவைக்கட்டிடம்; நகராண்மைக் கழகம் கட்டிய வீடு.

coun'cillor, *n.* மன்ற உறுப்பினர்.

coun'cilman, *n.* நகராட்சிக் கழக உறுப்பினர்.

coun'cil-school, *n.* நகராட்சிக் கழகம் அல்லது மாவட்ட ஆட்சிக் கழகத்தாரால் நடத்தப்படும் பள்ளி.

coun'sel, *n.* கலந்தாய்வு; கலந்து பேசுதல்; அறிவுரை, கருத்துரை; கட்டளை; திட்டம்; நோக்கம்; தனி மறைவான செய்தி; வழக்குரைஞர்; வழக்குரைஞர் குழு; *v.* அறிவுரை கூறு; பரிந்துரை நல்கு; எச்சரிக்கை செய்; (தொ.) counsel of perfection, முழுநிறைவுப்பண்பு பெறுவதற்கான அறிவுரைக் கட்டளை; keep counsel, மறை காப்பாற்று, இரகசியம் பேணு; King's Counsel, Queen's Counsel, அரச ஆணையால் நியமிக்கப்பட்ட நன்மதிப்பு வழக்குரைஞர்.

coun'sellable, *a.* அறிவுரை பகர்தற்குரிய; ஆலோசனைக்குரிய.

coun'sellor, *n.* அறிவுரை கூறுபவர்; வழக்குரைஞர்.

count[1], *n.* (வர.) ரோமாபுரிப் பேரரசின் உயர் பணியாளர்; கோமான், உயர் குடிமகன், பெருமகன்.

count[2], *n.* கணக்கீடு, கணிப்பு; தொகைப்படுத்துதல்; எண்ணிக்கை; எண்ணிய எண்; நூலிழைத் தரக் குறிப்பெண்; குத்துச்சண்டையில் விழுந்தவன் எழுந்து போர் தொடர்வதற்கு வரையளவான நொடி நேர எண்ணிக்கை; மதிப்பு; சலுகையளவு; குற்றச்சாட்டின் குற்றக்கணிப்புக் கூறு; வரையளவில்லாமை முன்னிட்ட மன்ற ஒத்திவைப்பு; *v.* எண்ணு; எண்ணப்படு; கணக்கிடு; மொத்தம் கணி; வரிசை முறையில் எண் அடுக்கிக் கூறு; கணக்கில் எடுத்துக் கொள்; கவனத்துக்குக் கொண்டுவா; முக்கியமுடையதெனக் கருது; கருது; மதிப்பிடு; குறிப்பிடு; குறிப்பிட்ட செய்தியின் விளைவாகக் குறிப்பிடு; (தொ.) count out, கூட்டத்திற்கு வேண்டிய குறைந்த அளவு உறுப்பினர் இல்லை என்று குறிப்பிட்டுக் கூட்டத்தைக் கலை; சிறுவர் விளையாட்டில் பாட்டைத் திரும்பத் திரும்பச் சொல்லி எண்ணிக்கைப்படி ஒவ்வொரு வராக ஆட்டத்திலிருந்து அகற்று; குத்துச் சண்டையில் விஞ்டிகளைக் கணக்கிட்டுத் தோல்வியை முடிவுசெய்; out for the count, உணர்விழந்து மயக்கமடைந்துள்ள, மிகக் களைப்படைந்துள்ள.

count'able, *a.* கணக்கிடத்தக்க; எண்ணவேண்டிய; எண்ணப்பட்ட; பொறுப்புள்ள; காரணமாகத்தக்க.

count'-down, *n.* இறங்குமுகக் கணிப்பு; குறித்த நேரச்செயல் நடைமுறையில் செயல் நேரம் இன்மை எண் (*0*) ஆக வரவரக் குறையும்படி இடைநேரமமைத்தல்.

count'ed, *a.* கணக்கிடப்பட்ட; மதிப்பிடப் பெற்ற; கணிக்கப்பட்ட.

count'enance, *n.* முகம்; முகத்தோற்றம்; முகபாவம்; முக அமைதி; விருப்பு வெறுப்புக் குறிப்பு நிலை; உவப்புவர்ப்புத் தோற்றம்; இசைவுக் குறிப்பு; ஒப்புதல் குறிப்பு; *v.* ஆதரவு காட்டு, உடன்பாடு தெரிவி; (தொ.) change countenance, முகத்தோற்றத்தை மாற்று; in countenance, நாணமற்ற, வெட்கப்படாத; keep in countenance, அமைதி குலையாதிரு; keep one's countenance, முக அமைதி காத்துக்கொள்; சிரிப்படக்கிக்கொள்; out of countenance, ஆர்வங்கெடும்படிச் செய்யப்பட்ட; புண்பட்ட; put out of countenance, புண்படச் செய்.

coun'ter[1], *n.* எண்ணுபவர்; கணக்கிடுபவர்; கணக்கிடும் பொறி; எண்குரு, எண்காட்டி; குறிவில்லை, நாணயக் கணக்கீட்டுக்குப் பயன்படும் நாணயப் போலிவட்டு; பொருளக விணைமுகப்பு; பணம் எண்ணிக் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் மேடை; வாணிகக்களத் தொழிலிட முகப்பு, பொருள் கொடுக்கல் வாங்கல் மேடை; (வர.) முற்காலச் சிறைக்கூட வகையின் பெயர்; (தொ.) under the counter, வாடிக்கைக்காரர்களின் பார்வையினின்று மறைந்த நிலையில்.

coun'ter[2], *n.* குதிரையின் தோளுக்கும் கழுத்தடிக்கும் இடைப்பட்ட மார்புப் பகுதி.

coun'ter[3], *n.* (கப்.) நீர்வரைக்கு மேற்பட்ட பின்பக்கத்தின் உள்வாங்கிய பகுதி.

coun'ter[4], *n.* வாட்போரில் கை சுற்றுமுன் வாள் சுற்றித் தாக்குதல், சுழற்றுத்தாக்கு.

coun'ter[5], *n.* மிதியடி அல்லது புதைமிதியில் குதிகால் சூழ்ந்த பின்பகுதி.

coun'ter[6], *n.* பனிச்சறுக்காட்டத்தில் உள்வளை வியக்க மாறிப் புறவளைவாகத் திரும்பு முறை.

coun'ter[7], *n.* எதிரிடையானது, மாறுனது; (இசை.) பண்ணுக்கு முரணிசைவான குரற்பகுதி; *a.* எதிரான, மாறுன, முரணுன; *v.* எதிர்; மறுதலி; எதிராயிரு; முரணு; சதுரங்கத்தில் எதிர்த்தரப்பு எதிர்ப்புக்கு ஆளாகு; குத்துச்சண்டையில் எதிர்த்தாக்குதலைத் தடுத்த வண்ணம் எதிர்த்துத் தாக்கு; *adv.* எதிர்வழியாக, எதிர்ப்பக்கமாக, எதிர்த் திசையில்; எதிர்த்து.

counteract', *v.* எதிரிடையாகச் செய், மாறு செய்; எதிர்த்துத் தடைசெய்; தோல்வியடையச் செய்; சமப்படுத்து; மட்டுப்படுத்து, முனைப்பழி.

counterac'tive, *n.* எதிரிடையாகச் செய்வது; மாறு செய்பவர்; தடை செய்பவர்; *a.* எதிரிடையாகச் செய்யும் இயல்புடைய; மாறு செய்யும் குணமுடைய.

counter-a'gent, *n.* எதிரிடையாகச் செய்யும் ஆற்றலுடைய பொருள்; எதிரிடையாக்குபவர்.

coun'ter-approach, *n.* முற்றுகை இடுபவர்களைத் தடை செய்வதற்காக அரண்காப்பாளர்கள் அரணின் வெளிப் புறத்தில் அமைக்கும் கட்டுமானம்.

coun'ter-attack', *n.* எதிர்த்தாக்குதல்; *v.* தாக்குதலை எதிர்த்துத் தாக்கு, புறம் போந்து தாக்கு.

coun'ter-attrac'tion, *n.* எதிர்க்கவர்ச்சி, போட்டியான கவர்ச்சிக் கூறு.

coun'terbal'ance, *n.* சரிசம எதிர் எடை; சரிசம எதிர் ஆற்றல்; *v.* சரிசம எதிர் எடையிடு; சரிசம வலிமை காட்டு; ஒத்த எதிர்ச்செல்வாக்கு நிறுவு; சரி ஈடு செய்.

coun'ter-base, *n.* = contrabass.

coun'ter-batt'ery, *n.* (படை.) எதிர்த்தாக்குப் பீரங்கி வரிசை.

coun'terblast, *n.* எதிர் முழக்கம்; எதிர்ப் பழிப்பு.

coun'terblow, *n.* எதிரடி, எதிர்த்தாக்கு அதிர்ச்சி.

coun'terbond, *n.* பிணைமுறி இழப்பீட்டு உத்தரவாதச் சீட்டு.

coun'ter-brace, *n.* (கப்.) முன்பாய்மர உச்சிப் பற்றிறுக்கி; *v.* (கப்.) எதிரெதிராக இறுக்கிக் கட்டு.

coun'terbuff, *n.* தடைத்தாக்குதல், இயக்கத்தை நிறுத்தவல்ல தாக்குதல்; எதிர்த்தாக்குதல், இயக்கத்தைப் பின்னிடைய வைக்கும் தாக்குதல்; எதிரடி; எதிர்த்தாக்கதிர்ச்சி, தோல்வி; *v.* எதிர்த்தாக்கு செய்; தடை செய்.

coun'ter-ceiling, *n.* மேல்தள அடுக்குகளுக்கிடையில் வைக்கப்படும் உலர் பொருள்.

counterchange', *v.* பரிமாற்றம் செய், தலைமாற்று; குறுக்குக்கட்டமிடு; இடமாற்று; கூறுமாற்று.

coun'ter-changed', *a.* பரிமாற்றம் செய்யப்பட்ட; குறுக்குக் கட்டமிடப்பட்ட; வண்ணங்கள் மாற்றப்பட்ட; நிறம் ஒன்றுக்கு ஒன்றாக மாற்றப்பட்ட.

coun'tercharge, *n.* எதிர்க் குற்றச்சாட்டு.

coun'tercharm, *n.* எதிர் மாயம், எதிர்ச் சூனியம், கவர்ச்சி மாற்று; *v.* எதிர்மாயம் செய்; மாயம் கெடு, எதிர்க் கவர்ச்சி செய்; கவர்ச்சி முறி.

coun'tercheck, *n.* தடையெதிர்ப்பு, தடுப்பு, எதிரீடு; இடையூறு, தடங்கல்; கண்டனம், அதட்டல்; *v.* இடையூறுகளால் தடைசெய்; திட்டு; கண்டி, அதட்டு.

coun'ter-claim, *n.* எதிர் உரிமைக் கோரிக்கை, எதிர்வழக்கீடு.

counter-clock'wise, *a.* இடஞ்சுழித்த; *adv.* இடஞ்சுழியாக.

coun'ter-curr'ent, *n.* எதிர் நீரோட்டம்; எதிரொழுக்கு; எதிர்ப்பாய்ச்சல்.

coun'ter-drain, *n.* பக்க வடிகால், கால்வாயின் அருகாக அதன் ஊறல் கசிவு நீரை அப்புறப்படுத்தும் வடிநீர் வாய்க்கால்.

coun'terdraw, *v.* நெய்மத்தாள்மீது உருவரைப்படியெடு.

coun'ter-es'pionage, *n.* எதிர் வேவு, எதிர் ஒற்று, எதிரிகளின் ஒற்றர் அமைப்பிணை வேவு பார்த்தல்.

coun'ter-ev'idence, *n.* எதிர்ச்சான்று, சாட்சிக்கு எதிரான சாட்சி.

coun'ter-feisance, *n.* போலிச் செயல்; கள்ளத்தனம்; ஏமாற்றும் தொழில்; பொய்க் கையெழுத்திடுதல்.

coun'terfeit, *n.* போலியானவர்; எத்தர், மோசடிக்காரர்; போலியானது; போலி நடிப்பு; கள்ளச்சரக்கு; போலி ஏடு; போலி நாணயம்; *a.* திருட்டுத்தனமாகப் பார்த்துப் பின்பற்றப்பட்ட; போலியான, மோசடியான, கள்ளத்தனமான; *v.* கள்ளத்தனமாகப் பார்த்துப் பின்பற்று; உரிமையின்றி மேற்கொள்; பொய்புனை; மோசடி செய்; போலி நடிப்பு நடி; மிகவும் உரு ஒத்திரு.

coun'terfeiter, *n.* போலி நடிப்புக்காரர்; பொய்க் கையெழுத்திடுபவர்.

coun'terfeitly, *adv.* போலியாக; கள்ளத்தனமாக.

counter-fleu'ry, counter-flo'ry, counter-flow'ered, *a.* மலர்கள் எதிர்நிலையான தன்மையில் வைக்கப்பட்ட.

coun'terfoil, *n.* அடிச்சீட்டு, எதிரிடைப்படி, காசோலை-அஞ்சல்-ஆணை நுழைவுச்சீட்டு முதலியவற்றின் கையிருப்புச் சரிநேர்படி.

coun'ter-force, *n.* எதிராற்றல், எதிர்க்கும் ஆற்றல்.

coun'terfort, *n.* அணைசுவர், உதை மதில்; மோட்டு உதை தாங்கி.

coun'ter-gauge, *n.* தச்சரின் அளவை நெகிழ்வுடைய நுண் அளவைக் கருவி வகை.

coun'ter-guard, *n.* இணை மதிலுடைய பாதுகாப்பரண்.

coun'ter-in'fluence, *n.* எதிரிடையான செல்வாக்கு.

counter-i'rritant, *n.* உடலெரிவுமூலம் நோய்த்தீர்வு நாடும் மருந்து வகை.

coun'ter-jumper, coun'ter-skipp'er, *n.* கடைக்காரனைக் குறிக்கும் வெறுப்பான சொற்கள்.

coun'terlight, *n.* வண்ணம் வகையில் எதிரொளி, பொருளின் மீது செல்லும் ஒளியின் அமைவு குலைக்கும் பிறிதோர் ஒளி.

countermand', *n.* எதிர்க்கட்டளை; மாற்று உத்தரவு; *v.* எதிர்க்கட்டளை இடு; உத்தரவை மாற்று.

coun'termarch, *n.* படையணி எதிர்ச் செலவு, அணி திருப்பம்; படைத்துறைப் பயிற்சிமுறையில் அணிமாறுத் திசைத் திருப்பம்; *v.* அணிவகுத்துப் பின்திரும்பிச் செல், அணி திரும்பு.

coun'termark, *n.* கூட்டுச் சிப்பத்தில் தனிக்குறிகளுக்கு மேற்பட்ட குழுவின் சிறப்புப்பொறிப்பு; மேலும் பாதுகாப்பை உறுதி செய்வதற்குரிய மேற்பொறிப்பு; ஆக்குவோர்க் குறியீட்டுக்குப் புறம்பான தரச் சான்றுக்குறி; குதிரை வயதை மறைக்கப் பற்களில் இடப்படும் பள்ளக் குறி.

coun'termine, *n.* எதிர்ச் சுரங்கம், முற்றுகையாளர்களின் சுரங்கத்தைத் தடுத்தழிப்பதற்காகச் செய்யப்படும் சுரங்கம்; எதிர்ச் சதி, எதிர்ச் செயல் வகை; *v.* எதிராகச் சுரங்கம் அமை; எதிர்ச்சுரங்கம் அமைத்து எதிர்த்து நில்; எதிர்ச் சூழ்ச்சிச் செயலால் தடு.

coun'ter-mo'tion, *n.* எதிர் இயக்கம், எதிர்ப் போக்கு, எதிர்ச்செயல்.

coun'ter-move, *n.* எதிர்ச் செயல்முறை, எதிர்ப்புத் திட்டம்.

coun'ter-move'ment, *n.* எதிரிடை இயக்கம்.

coun'termure[1], *n.* பின்னணிக் காப்பரண் மதில், மதிலை வலுப்படுத்தப் பின்எழுப்பப்படும் மதில்; முற்றுகையாளர் எதிர் மதிலரண்.

coun'ter-mure'[2], *v.* பின்னணி மதிலெழுப்பிப் பாதுகாப்புச் செய்.

coun'ter-offen'sive, *n.* எதிர்த்து மேற்சென்று தாக்குதல்; எதிர்த்து அரண்புறம் சென்று தாக்குதல்.

coun'ter-o'pening, *n.* எதிர்ப்புறத்தில் அமைந்த புழை வாயில்; வேறு இடத்திலுள்ள வாய்வழி.

coun'ter-pace, *n.* எதிர்ப்பக்கப் போக்கின் ஒருபடி, எதிரான செயல், எதிர் நடவடிக்கை.

coun'ter-paled, *a.* (கட்.) குலமரபுக் கேடயத்தின் இரு பகுதிகளும் வண்ணம் மாறுபட்டு ஒன்றில் நிமிர்வரையும் மற்றொன்றில் நேர்வரைக் கோடுகளும் நிரம்பிய.

coun'terpane, *n.* படுக்கை விரிப்பு.

coun'ter-parole', *n.* துணையடையாள வாசகம், போர் நிலவரத்திடையே பகை பிரித்தறிய உதவும் அடையாள மொழியுடன் பயன்படுத்தப்படும் துணைமொழி.

coun'terpart, *n.* எதிரிணை, சரி எதிர்ப்பகுதி; சரி நிரப்புக் கூறு; குறை ஈடு செய்யும் கூட்டாளி; மறுபடிவம், சரிநேர் படிவம்; சரிநேர் அலுவர்.

coun'ter-pass'ant, *a.* (கட்.) எதிர்ப்புறமாக ஒருவரை யொருவர் கடந்து செல்கிற.

coun'terplea, *n.* வழக்கில் எதிர்வாதம்; எதிர்க்குறையீடு; வேண்டுகோளுக்கு மறு வேண்டுகோள்.

counterplead', *v.* எதிர்மாறாக வழக்காடு.

coun'terplot, *n.* எதிர்ச் சதி, எதிர்ச் சூழ்ச்சி; *v.* சூழ்ச்சி அழிக்க எதிர்ச் சூழ்ச்சி செய்; எதிர்ச் சூழ்ச்சி செய்தழி.

coun'terpoint, *n.* (இசை.) பண்ணிசைவுத்திறம்: உடன் துணைப்பண்திறம்; விதிமுறையான பண்மிசைப் பண்.

coun'terpoise, *n.* சமன்படுத்தும் எதிர் எடை; சரி எதிராற்றல்; சரி சமநிலை, சரி ஒப்புநிலை; *v.* சரி எதிர் எடையிடு; சரிசம ஆற்றலுடன் எதிர்ப்புச் செய்; சமநிறையாக்கு; குறைபாடு ஈடு செய்; சரி ஒப்பு நிலைக்குக் கொண்டுவா.

coun'ter-poison, *n.* நச்சுமாற்று, நஞ்சு முறிவு.

coun'ter-pressure, *n.* எதிர் அழுத்தம்.

coun'ter-proof, *n.* புதிதாக அச்சிட்ட படியின் தலைகீழான எதிரமுத்தப்படி.

Coun'ter-Reforma'tion, *n.* (வர.) எதிர்ச் சீர் திருத்த இயக்கம், 'புராடஸ்டண்டு' சமயத்தின் (Protestantism) சீர்திருத்தப்புரட்சிக் கெதிராகக் கத்தோலிக்க சமயத்துக்குள் எழுந்த சீர்திருத்த இயக்கம்.

coun'ter-revolu'tion, *n.* புரட்சிக்கு எதிரான மறுபுரட்சி, முதல் புரட்சியின் விளைவுகளுக்கு எதிராகச் செயல்படும் அடுத்த புரட்சி.

coun'ter-roll, *n.* எதிர்ப் பதிவேடு, மேல்வழக்குப் பொது ஆய்வுப் பத்திரப் பதிவுகளைத் தணிக்கை செய்ய உதவும் எதிர்க் காப்பேடு.

coun'ter-round, *n.* சுற்றிப் பார்வையிடும் கண்காணிப்பாளர் குழு.

coun'ter-sa'lient, *a.* (கட்.) எதிர்த்திசைகளில் கோணம போன்று முனைப்பாகவுள்ள.

coun'terscarp, *n.* முற்றுகையாளர் பக்கமுள்ள அகழியின் புறக்கரை.

count'er-secur'ity, *n.* மறுபிணை, பிணை ஆளாக உள்ள வருக்குக் கொடுக்கப்பட்ட பிணை.

coun'ter-sense, *n.* திரிபொருள், உண்மைப் பொருளுக்கு எதிராக உள்ள விளக்கப் பொருள்.

coun'tershaft, *n.* இயந்திரசாலையில் தலைமையான சுழல் அச்சினுல் ஓட்டப்படும் இடைச்சுழல் அச்சு.

coun'tersign, *n.* காவலாளர்களுக்கு நுழைவு அனுமதிப்பதற் காகக் கொடுக்கப்படும் அடையாளச் சொல்; ஆள் அடையாளம் காட்டும் குறி; *v.* கையொப்பமிட்ட ஆவணத்தில் மேற் கையொப்பமிடு; உறுதி செய், உறுதிக் கையொப்பமிடு.

coun'ter-sig'nal, *n.* பதில் சைகை.

coun'ter-sig'nature, *n.* மேற் கையொப்பம், எழுத்திற்கு உறுதியளிக்கும் முறையில் இடப்படும் கையொப்பம்.

coun'tersink, *v.* திருகாணித்தலைப்புப் பதியும்படி துளையின் விளிம்பினைச் சுற்றிச் சரிவாகப் பள்ளம் செய்.

coun'ter-stand, *n.* எதிர்ப்பு; தடை.

coun'ter-state'ment, *n.* எதிர் அறிக்கை, பதில் அறிவிப்பு.

coun'ter-tall'y, *n.* எதிர்கணிப்புக் குறி, கணிப்புக்குறி சரி பார்க்க உதவும் மறு குறி.

counter-ten'or, *n.* (இசை.) ஆணின் உச்சக்குரல்.

coun'ter-time, *n.* தடை; எதிர்ப்பு; குதிரை தனக்குச் சொல் லிக் கொடுத்தது போல் அடிபோடாமல் எதிர்த்து நிற்றல்.

coun'terturn, *n.* நாடகத்தில் எதிர்பாராத் திருப்பம்.

countervail', *v.* எதிரீடு செய்ய உதவு; சரிசம வலுவுடன் எதிர்ச் செயலாற்று; சரிசம மதிப்புடையதாயிரு.

coun'ter-view, *n.* எதிரிடை நோக்கு; எதிரெதிர் நோக்கும் நிலை அமைதி; எதிரீடு, மாறுபாடு.

counter-vote', *v.* எதிராக மொழிச்சீட்டு இடு, எதிர் வாக்களி.

counter-weigh', *v.* எதிராக நிறு; சம நிறையிடு, சரியீடு செய்.

coun'terweight, *n.* எதிரிடையான எடை, சரி எதிரெடை.

coun'ter-wheel, *v.* எதிர்த்திசையில் சுழலு, நேரெதிர்த் திசை திரும்பு.

coun'terwork, *n.* எதிர்ப் பணி; எதிரிக்கு எதிரிடையான கட்டுமானம்; *v.* மாறு செய், எதிர்ச் செயல் செய்; எதிர்த்தழி.

coun'tess, *n.* கோமாட்டி, கோமகள், உயர்குடிப் பெருமாட்டி; உச்சஉயர்குடிமகனின் மனைவி.

coun'ting-house, coun'ting-room, *n.* வணிகரின் அலுவ லறை; வணிகக் கணக்கு மனை.

count'less, *a.* எண்ண முடியாத, எண்ணற்ற, மிக மிகப் பல.

coun'try, *n.* நாடு; நாட்டரசு; நிலப்பகுதி; நாட்டுப்புறம்; பிறந்த நாடு; தாயகம்; குடியுரிமை நாடு; வேட்டை நாய்த் தொகுதியின் வேட்டை எல்லை வட்டம்; கனிப்பொருட் படுகையைச் சூழ்ந்துள்ள பாறை; *a.* நாட்டைச் சார்ந்த; நாட்டுப்புறமான; நயநாகரிகமற்ற; திருந்தாத; (தொ.) country gentleman, நாட்டுப்புறப்பண்ணையில் வாழும் பெரு நிலக்கிழார்; go to the country, பொதுத்தேர்தல் மூலம் வாக்காளரிடம் ஆதரவு நாடு.

coun'try-box, *n.* சிறு நாட்டுப்புற வீடு, குடில்.

coun'try cousin, *n.* நாகரிகம் பழகாத நாட்டுப்புற உறவினர், நகரப் பழக்கவழக்கங்கள் தெரியாத நாட்டுப்புறவாசி.

coun'try-dance, *n.* நாட்டுப்புற நடனம்; இரு வரிசைகளில் வரையறையில்லாது இருவரிருவராகச் சேர்ந்து ஆடத்தக்க ஆடல்.

coun'tryfied, *a.* நாட்டுப்புறஞ் சார்ந்த; நாட்டுபுறத் தோற்ற முடைய; நாட்டுப்புறப் பழக்கவழக்கமுள்ள.

coun'try-folk, *n. pl.* நாட்டுப்புற மக்கள்; ஒரு நாட்டு மக்கள்.

coun'try-house, coun'try-seat, *n.* உயர்குடியாளரின் நாட்டுப்புற மாளிகை.

coun'tryman, *n.* நாட்டுப்புறவாசி; உழவன்; உடனெத்த நாட்டவர், ஒரே நாட்டில் உடனெத்து வாழ்பவர்.

country party, *n.* (வர.) அரசர் அவைக்குழுவுக்கு எதிரான கட்சி.

coun'tryside, *n.* நாட்டுப்புறம், நாட்டுப்புறச் சூழிடம்.

country town, *n.* நாட்டுப்புற மாவட்டத்திலுள்ள சிறு நகரம்.

countrywide', *a.* நாடெங்கும் பரவிய, தேசமளாவிய.

coun'try-woman, *n.* நாட்டுப்புற மகள்; உடனெத்த நாட் டைச் சாந்தவள்.

count'ship, *n.* கோமகனின் படி நிலை; கோமகனின் ஆட்சி வட்டாரம்.

count'-wheel, *n.* மணியாழி, மணிப்பொறி, மணியடிப் பதைக் கட்டுப்படுத்தியாளும் சூழ் பல்லுடைய சக்கரப்பொறி.

coun'ty, *n.* பிரிட்டனின் மாவட்டம்; பிரிட்டிஷ் பொதுவரசு நாட்டின் கோட்டம்; நாட்டின் உட்பட்ட அரசியல் பெரும் பிரிவெல்லை; *a.* மாநிலப் பகுதிச் சார்ந்த; பெருமகனின் குடும்பத்தைச் சார்ந்த; (தொ.) county council, மாவட்ட மன்றம்; county court, மாவட்ட உயர்நீதி மன்றம்; county cricket, மாவட்டப் போட்டி மரப்பந்தாட்டம்; county family, நாட்டுப்புறத்தில் சொத்தும் மாளிகையு முடைய உயர்குடியினர்; county school, மாவட்ட மன்ற ஆட்சியிலுள்ள பள்ளிக்கூடம்; county town, கோட்டத் தலைநகர்; வரலாற்றுச் சிறப்புடைய கோட்ட முதல் நகர்.

coup, *n.* வலங்கொண்ட வீச்சு, வல்லடி; வெற்றிகரமான முயற்சி; மேடைக்கோற் பந்தாட்டத்தில் பையில் பந்தின் வெற்றிகரமான நேரடி வீழ்ச்சி; (தொ.) coup de grace, இறுதி வீச்சு, முடிவாக்கும் செயல்; coup de main, எதிர் பாராக் கடுந்தாக்குதல்; coup d'etat, சட்டமீறிய வலிந்த அரசியல் மாறுபாடு, திடீர் அரசியல் புரட்சி; coup de theatre, நாடகத்தில் திடீர் உணர்ச்சி நடிப்பு; coup d'oeil, விரிவான நோக்கு, விரைந்த சுற்றுப்பார்வை பலவற்றை உட்கொண் டுள்ள கணநேரப் பார்வை.

coup'e, *n.* வலவனல்லாது உள்ளே இருவருக்கு இடமுள்ள நாலு சக்கர வண்டி: ஒரே பக்க இருக்கையுள்ள புகையூர்தி யின் இறுதி அரைப்பெட்டி வண்டி; பிரஞ்சு அஞ்சல் வண்டி யின் முன் பகுதி; இருவர்க்கு இருக்கையுடைய உந்து கலம்; *a.* (கட்.) விலங்கு வகையில் தலைநேர் வேறுபட்ட; கைகால் நேர் துணிக்கப்பெற்ற.

couped, *a.* = coupe.

cou'ple, *n.* இருவர், துணைவர்; இரண்டு; துணையிணை, சோடி; மணத்துணைவர், தம்பதிகள்; ஆடல் துணைவர்; ஒரு வாரில் கட்டப்பட்ட வேட்டை நாய் இணை; மோட்டின் இணைவிட்டம்; இரண்டின் இணைப்பு; (இய.) ஒரே பொருளில் எதிரெதிராய் இயங்கும் இரண்டு ஆற்றல்களின் இணைவு; *v.* இரண்டு ஒன்றுய் இணை; சோடியாக்கு; மணவினையால் இணை; வேட்டை நாய்களை இணைத்துக் கட்டு; ஊர்திப் பெட்டிகளைத் தொகுத்திணை; இரு கருத்துக்களை ஒருங்கு தொடர்புபடுத்து, கருத்துடன் கருத்து இணை.

coup'lement, *n.* இணைப்பு ; இரட்டை ; இணை.

coup'ler, *n.* இணைப்பவர் ; இணைக்கும் பொருள் ; ஒன்றுக் கொன்று இணைந்தியக்கும் இசைப்பொறி அமைப்பு.

coup'let, *n.* சோடி, இணை, இரட்டைகள் ; இரட்டையர் ; ஈரடிச் செய்யுள், குறளடிப்பா.

coup'ling, *n.* இணைத்தல் ; இயந்திரத்தில் இயக்கத் தொடர்பு உண்டுபண்ணும் இணைவமைவு ; புகையூர்திப் பெட்டிகளின் இணைப்பு.

coup'ling-box, *n.* இயந்திரச் சுழல் அச்சுக்களின் கோடி களை இணைக்கும் இருப்பு வளையம் ; சுழலச்சுக்களை இணைக் கும் இருப்புப் பெட்டி.

coup'on, *n.* அடையாளச்சீட்டு, கைச்சீட்டு, சீட்டின் கைம்முறி எதிர் நறுக்கு ; பற்றுரிமைச் சீட்டு ; பணமோ பணியுதவியோ தவணையாக அல்லது நிலவர வழக்காகப் பெறும் உரிமைச் சான்றன சீட்டு ; சலுகைச் சீட்டு ; தனிச்சலுகை அல்லது உரிமை பெறுவதற்காக வாணிக விளம்பரம் முதலியவற்றி லிருந்து வெட்டி எடுத்துக்கொள்ளவேண்டிய துண்டு ; தேர்வுத்தொகுதி வாக்காளர்களின் ஆதரவுக்காகத் தேர்தல் வேட்பாளருக்குக் கட்சித் தலைவர் அளிக்கும் தேர்தல் ஆதரவுச் சின்னச் சீட்டு.

cou'rage, *n.* வீரம், துணிவு ; ஆண்மை ; மன உரம் ; int. வீரத் தோடிரு, துணிவாயிரு ; Dutch courage, குடியினுல் தூண்டப் பட்ட போலி வீரம் ; pluck up courage, மன உறுதிப்படுத்திக் கொள், துணிவு கொள் ; the courage of one's convictions, கொள்கை உரம் ; கொள்கை மாருத்துணிவு ; கொள்கையைச் செயற்படுத்தும் வீரம்.

coura'geous, *a.* வீரஞ்செறிந்த ; ஆண்மையுள்ள, அஞ்சா நெஞ்சுடைய.

cou'rier, *n.* ஓடுபவர் ; விரை தூதர், ஓடிச்சென்று தூது உரைப்பவர் ; அரசியல் தூதுவர் ; பயணத்துணை ஊழியர், தொலை நாடுகளில் பயண வசதிகளை முன்சென்று ஏற்பாடு செய்ய அனுப்பப்படும் பணியாளர்.

cour'lan, *n.* சோகமான உரத்த கூக்குரலிடும் நீளகுடைய நீரில் நடக்கும் அமெரிக்க வெப்பமண்டலப் பறவை வகை.

course, *n.* ஓட்டம் ; செல்வழி ; பந்தய நிலம் ; குழிப்பந்து விளையாட்டிடம் ; நீர்நிலையின் ஒழுக்கு ; செல்லும் திசை ; பயணம் ; ஓட்டப்பந்தயம் ; போக்கு, படிப்படியான முன் னேற்றம் ; வாழ்க்கைப்போக்கு ; தொழில் நிலைப்போக்கு ; நடவடிக்கை, வழக்கமான நடைமுறை ; வரிசை முறை, தொடர் கோவை ; நீடித்த பயிற்சி ; தொடர்ந்த மருத்துவப் பண்டுவ முறை ; மாவட்டத் தலைக்கோயிலூழியர்களிடையே கடமை வரிசை மாற்று ; பருகு முறை ; உணவு முறைத் தொகுதி, வட்டிப்பு முறை : நடத்தை ; அடுக்கு வரிசை, தளவரிசை ; கப்பற்பாய்த் தொகுதி ; செலாவணி மாற்றுவீத நிலை ; ரு. பின்தொடர்ந்து செல் ; வேட்டையாடித் தொடர் ; துரத்திச் செல் ; ஓடு, விரைந்துசெல், விரைந்தொழுகு ; குதிரையை விரைந்து ஓட்டு ; விரைந்து வேட்டைமேற் செல் ; (தொ.) by course of, பொதுமுறைச் செயல்வகைப்படி ; in course, ஒழுங்கு முறையில் ; in due course, இயல்பான முறைப்படி, காலக்கிரமத்தில் ; in the course of, ஏல்வையில், நிகழ்வின்போது ; matter of course, இயற்கையான நிகழ்ச்சி ; of course, இயல்பாக ; ஐயத்துக்கிடமின்றி.

cours'er, *n.* ஓடுபவர் ; அஞ்சல் கொண்டோடுபவர் ; தூதர் ; பந்தயக் குதிரை ; (செய்.) வாம்பரி, வேகக் குதிரை ; வேட்டை யாடுபவர் ; துரத்துபவர் ; வேகமாக ஓடும் பறவை வகை.

cours'es, *n. pl.* பெண்டிர் மாதவிடாய்.

cours'ing, *n.* வேட்டை நாயுடன் வேட்டையாடுதல்.

cours'ing-joint, *n.* இரு வரிசை செங்கல்களுக்கிடையே யுள்ள இணைப்பு.

court, *n.* வழக்கு மன்றம் ; நீதிபதிகள் குழாம் ; முறைநடுவர் குழு இருக்கை ; வழக்கு மன்றக் கூட்டம் ; முற்றம் ; மதில் சூழ்ந்த அகவெளி ; கட்டிடங்கள் சூழ்ந்த சதுக்கக் கூடம் ; பல்கலைக் கழகத்தில் கல்லூரிச் சதுக்கம் ; காட்சியரங்கக் கூடம் ; காட்சிச் சாலைப்பிரிவு ; தெருப்பக்க அகக்கூடம் ; நகரில் தெருப்பக்க வாயிலுடைய சுற்றுக் கட்டிடமுள்ள அக வளவு ; விளையாட்டுக்கூடம் ; கரண் பந்தாட்ட ஆட்ட வரையறை எல்லை வெளி ; அரண்மனை ; அரசவை ; மன்ன வைக்குழாம் ; மன்னர் பரிவாரம் ; கொலுவிருக்கை ; மன்னர் திருமுன் பேட்டி, அரசவைத் திருக்காட்சி ; வணக்க இணக்க முறை, முகமன் முறை, நயநாகரிகப் புகழ்ச்சிமுறை ; காதல் ஊடாட்டம் ; ரு. காதல் நாடி ஊடாடு ; ஆதரவு வேண்டி அணுகு ; மதிப்புக்காட்டு, வணக்க இணக்கத்துடன் நடந்து கொள் ; நயந்துகொள் ; நாடு, தேடு ; வரவழை, நாடிப் பெறு ; பசப்பி வசப்படுத்த முயற்சி செய் ; (தொ.) court tennis, வரிப்பந்தாட்டத்தின் முற்கால மூலமுதல் வடிவமான வளைப்பந்தாட்டம் ; out of court, கவனிக்கப்படுவதற்கே உரிமையற்ற.

court'-bar'on, *n.* பண்ணை ஆட்சிமுறையில் பெருமகன் கீழுள்ள தனியுரிமை நிலக்கிழார்களின் கூட்டம்.

court'-craft, *n.* அரசவைப் பண்பு ; தன்னல மறைசூழ்ச்சி முறை.

court'-day, *n.* நீதிமன்றம் அமரும் நாள்.

court'-dress, *n.* அரசவை நாட்களில் அணியும் தனிச்சிறப் புடைய ஆடை.

court'-dress'er, *n.* முகப்புகழ்ச்சியாளர்.

Courtelle', *n.* செயற்கை இழை அல்லது துகிலுக்குரிய வாணிக உரிமைப் பெயர்.

court'eous, *a.* இணக்கவணக்கமான ; அடக்கமான ; அன் பாதரவான ; விட்டுக்கொடுக்கும் பண்புடைய ; பண்புடைய பழக்க வழக்கம் செறிந்த ; கடமை மனப்பாங்குடைய.

courtesan', *n.* அரசவையணங்கு ; விலைமகள் ; பரத்தை.

court'esy, *n.* நயநாகரிக நடை, இணக்க நயப்பண்பு, வணக்க வரிசை முறை ; நயநாகரிகச் செயல் ; மதிப்பு நயச் செயல் ; வணக்க முறை ; அன்புரிமைச் சலுகை ; (சட்.) இறந்த மனைவியின் சொத்தில் கணவனுக்குரிய ஆயுட்கால உரிமை ; ரு. வணக்கம் செலுத்து.

courtesy title, *n.* சட்ட உரிமையற்ற சமுதாய வழக்குப் பட்டம்.

courtezan', *n.* = **courtesan.**

court'-fool, *n.* அரசவைக் கோமாளி, மன்னவை விகடன் ; கேலிக்கூத்தன்.

court'-guide, *n.* அரசவை அறிமுகம் பெற்றவர் பட்டியல் ஏடு, நகரப் பெருமக்களின் பெயர்-முகவரி கொண்ட தகவல் திரட்டு.

court'-hand, *n.* முற்காலங்களில் (16-18-ஆம் நூற்றாண்டு களில்) பிரிட்டனின் வழக்கு மன்றங்களில் வழங்கிய நார் மனியர் (Normans) காலக் கையெழுத்துத் திரிபு.

court'-house, *n.* வழக்கு மன்ற மாளிகை.

court'ier, *n.* அரசவையினர் ; மன்னர் பரிவாரத்தினர் ; புகழ்ச்சி செய்பவர், பசப்பர்.

court'ierism, *n.* அரசவையினர் பண்பு ; இச்சகம் பேசும் தன்மை

court'ing, *n.* காதல் புரிதல், காதலீடுபாடு ; மணம் நாடி ஊடாடுதல்.

court'let, *n.* சிறு நீதி மன்றம்.

court'like, *a.* அரசவைக்குரிய ; இணக்க வணக்கமுடைய.

court'ling, *n.* அரசவையைச் சார்ந்திருப்பவர்.

court'ly, *a.* அரசவைக்குரிய பழக்கவழக்கமுடைய, வன்மை வக்கணை மிக்க ; நயநாகரிகத்துடன் வீறமைதியுடைய ; இன் முகப்புகழ்ச்சி கூறுகிற, உரைநயமார்ந்த.

court'-mar'tial, *n.* படைத்துறை முறைமன்றம் ; சிறப்புப் படை மன்றம் ; ரு. படைத்துறை முறைமன்றத்தைக்கொண்டு விசாரணைசெய்.

court'-plas'ter, *n.* முற்கால அரசவை மகளிர் வழங்கிய பட்டாலான காய ஒட்டுப்பசைத் துணி.

court'-roll, *n.* நீதிமன்றப் பதிவுப் பட்டியல் ஏடு.

court'ship, *n.* காதலாடுதல், காதலூடாட்டம்; மண முன்னிட்ட காதல் வேட்டம்; நயநாகரிக நடத்தை.

courts'-mar'tial, *n.* court-martial என்பதன் பன்மை.

court'-sword, *n.* அரசவை உடையோடு அணியப்படும் மென்னயமான வாள் வகை.

court'yard, *n.* வீட்டோடு சேர்ந்த முற்றம்; சுற்றுக்கட்டு வெளியிடம்.

cou'scous, cou'scousou, *n.* தென் ஆப்பிரிக்காவில் வழங்கும் கஞ்சி ஆவியில் வேகவைக்கப்பட்ட கறிகலந்த மாவுப் பிட்டு வகை.

cous'in, *n.* பெற்றோரின் உடன் பிறந்தாரின் சேய், அத்தை மகன்; அத்தைமகள்; மாமன் மகன்; மாமன் மகள்; சிற்றப்பன்-பெரியப்பன் மகன்; சிற்றப்பன்-பெரியப்பன் மகள்; சிற்றன்னை-பெரியன்னை மகன்; சிற்றன்னை-பெரியன்னை மகள்; தொலை உறவினர்; உடன் தோழமைக் கூட்டத்தார்; (பெருமக்களைக் குறித்த மன்னர் சுட்டு வழக்குச் சொல்); (தொ.) first cousin, பெற்றோரின் நேர் உடன் பிறந்தாரின் பிள்ளை; உடன் பிறந்தாரின் பிள்ளை; first cousin once removed, பெற்றோரின் உடன் பிறந்தாரின் பிள்ளையின் பிள்ளை; உடன் பிறந்தாரின் பிள்ளையின் பிள்ளை; forty-second cousin, மிகு தொலை உறவினர்; second cousin, பெற்றோரின் ஒன்று விட்ட உடன் பிறந்தாரின் பிள்ளை; பெற்றோரின் உடன் பிறந்தாரின் பிள்ளையின் பிள்ளை; உடன் பிறந்தார் பிள்ளையின் பிள்ளை.

cous'in-ger'man, *n.* பெற்றோரின் உடன்பிறந்தாரின் சேய்; அத்தை-மாமன் பிள்ளை; சிற்றப்பன்-பெரியப்பன் பிள்ளை; சிற்றன்னை-பெரியன்னை பிள்ளை; உடன்பிறந்தார் பிள்ளை; நெருங்கிய உறவினர்.

cous'inly, *a.* பெற்றோரின் உடன்பிறந்தாரின் சேய் உறவுடைய; பெற்றோரின் உடன்பிறந்தார் சேய் போன்ற; நெருங்கிய உறவுமுறை உடைய.

cous'inry, *n.* பெற்றோரின் உடன் பிறந்தார் பிள்ளைகளின் தொகுதி.

coute que coute, (பிர.) *adv.* என்ன செலவு பிடித்தாலும்; எப்படியும்.

couvade', *n.* பழங்குடி மக்களிடையே மனைவியின் பேறு காலத்தில் கணவன் மேற்கொள்ளும் போலி நோய்.

cove, *n.* சிறு கடற்கூம்பு, சிறுகுடா; வளைகுடா; பாறைக் குடைவு, குகை; ஒதுக்கிடம், வளைவிடம்; சுவர் மோட்டு வளைவுச் சந்திப்பு; *v.* வளைவாக்கு; குடைவாக்கு; உட்சரிவாக்கு.

coved, *a.* வளைவோடு அமைத்த.

cove'let, *n.* சிறு வளைகுடா, சிறு கடற்கூம்பு.

co'ven, *n.* = covin.

co'venant, *n.* கூட்டு ஒப்பந்தம், இணை உடன்படிக்கை, முத்திரை ஒப்பந்தம்; இணை ஒப்பந்தப் பத்திரம், கூட்டு உடன்படிக்கை வாசகம்; (விவி.) இஸ்ரவேலருக்கு (Israelites) ஆண்டவனருளிய திரு ஒப்பந்த உறுதி; *v.* ஒப்பந்தம் செய்; ஒப்புக்கொள்; கட்டுப்பாடு கோரிக்கொள்; (தொ.) covenant of grace, covenant of redemption, கிறித்துவை முழுதும் நம்பினுல் பாவிகள் மீட்புற்று வாழ்வர் என்ற உறுதியளிக்கும் அருள் உடன்படிக்கை; covenant of works, ஆதாமின் (Adam) கீழ்ப்படிதல் ஒப்பந்தம், மனித இனத்தின் கூட்டிணைப்புப் பிரதிநிதியான ஆதாம் கடவுளுடைய ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று செய்யப்பட்ட உடன் படிக்கை.

co'venant-break'er, *n.* ஒப்பந்தத்தை மீறுபவர்.

co'venanted, *a.* ஒப்பந்தத்தால் கட்டுப்பட்ட; உடன்படிக்கையின் படியான, ஒப்பந்தத்தின்கீழ்ப் பதவி வகித்துள்ள.

covenantee', *n.* ஒப்பந்தம் வழங்கப் பெற்றவர், ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட்டவர், ஒப்பந்த உரிமையாளர்.

co'venanter, *n.* ஸ்காத்லாந்திய தேசிய ஒப்பந்தத்தில் (Scottish National Covenant 1638) கையெழுத்திட்டவர்; ஸ்காத்லாந்திய தேசிய ஒப்பந்தச் சார்பாளர்.

cov'enantor, *n.* ஒப்பந்தத்தை மீறினுல் தண்டனைக்கு உட்படுவதற்கு ஒப்புக்கொள்பவர்.

Cov'ent Gard'en. *n.* லண்டனிலுள்ள காய் கறிப்பழச் சந்தைக்களம்.

Cov'entry, *n.* இங்கிலாந்தில் வாரிக்ஷியர் (Warwickshire என்ற கோட்டத்திலுள்ள நகரம்; சமுதாய விலக்கீடு; (தொ.) Coventry blue, 'கவெண்ட்ரி' (Coventry) யில் முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட நீலநிற நூல்; send to Coventry, சமுதாயத் தொடர்பிலிருந்து விலக்கு, தொடர்புகொள்ளமறு.

co'ver, *n.* புறங்கவிந்து மூடும்பொருள், மேலுறை; போர்வை; கவசம்; மூடி; புத்தகத்தின் புற அட்டை; முன் அட்டை; அடி அட்டை; தாள் கூடு; அஞ்சல் உறை; மறைவிடம், ஒதுக்கிடம்; பாதுகாப்பிடம்; மறைப்பு; பாதுகாப்பு; விமானத் தாக்குதலிலிருந்து மறைகாப்பு; படை அல்லது கடற்படைக்குரிய பாதுகாப்பு விமானத்தொகுதி; உருமாற்றம்; பொய்க்காரணம், சாக்குபோக்கு; விலங்குகளுக்கு மறைகாப்புத்தரும் காடு, புதர்க் கும்பு; சதிக்கூட்டாள்; உணவு மேடையில் ஒருவர்க்குரிய தட்டம் முதலிய துணைக் கலங்களின் தொகுதி; வாணிகத் துறையில் நேரக்கூடிய இழப்புக்கு ஈடாக நிறுவப்படும் வருகாப்பு நிதி; மிதிவண்டிச் சக்கரத்தின் குழாய்ப்பட்டை உறை; *v.* மேலிட்டுப்பரப்பு, போர்த்து, மேற்கவி, மூடு, பொதி; பூசு; சுற்றியிரு; சூழ்ந்திரு, புறங்கவிந்திரு; போர்த்திரு; புற ஆடையாயிரு; பரப்பு, பரவலாகச் சிதறவை; மறை, ஒளித்து வை; இடைநின்று தடு, இடை மறைப்பாயிரு; காப்புச்செய்; மேலிருஅடைகா; போதியதாயிரு; காப்பு வளமாயிரு, நேரிடக் கூடும் இழப்புக்கு ஈடுகாப்பாயிரு; உள்ளடக்கு; ஊடு செல்; கடந்து செல்; இடங்கொள், செயற்களமாகக் கொள்; சீட்டாட்டத்தில் உயர்மதிப்புச் சீட்டிடு; சம மதிப்புள்ள நாணயத்தை மேசைமீது இடு; உணவு மேடை ஒழுங்கு செய்; பொலி குதிரை வகையில் குதிரைப் பெடையுடன் கூடியிணை; படைக்கலங்கொண்டு இலக்குப்படுத்து; தலை மீது தொப்பியிடு; கூட்ட முதலியவற்றின் வகையில் பத்திரிகைக்கான செய்தி அறிவிப்புப் பொறுப்பு முற்றுவி; பந்து விளையாட்டில் பின்னுதரவாய் நின்று ஆடு; (தொ.) cover girl, பத்திரிகை மேலட்டையிலுள்ள அழகான பெண்ணின் படம்; cover into, மாறுபாடு செய், மாற்றியிடு; cover shorts, கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகக் குறைவான அளவில் விற்பனை செய்யப்படும் சரக்குகளை அதிக விலை கொடுத்து வாங்கு; cover the buckle, நடனத்தில் கடினமான பகுதியை நிறைவேற்று.

cov'erage, *n.* முழுக்கவிவளவு, ஆற்றலெல்லை; செயலெல்லை; முழுப்பரப்பு; முழுத்தொகை; மொத்த அடக்கம்; உள்ளடக்கக் கூறு; விளம்பர ஆற்றலெல்லை, விளம்பரம் சென்று பரவவல்ல மக்கள் குழுத்தொகுதி; காப்பீட்டின் காப்புக்குரிய இடர்த் தொகுதி; கடன் மீட்புக்குரிய கையகத் தொகை.

cov'er-charge, *n.* சிற்றுண்டிச்சாலை ஊழியப் பணிக்குரிய ஆள்வீதமான கட்டணம்.

cov'er-crop, *n.* நிலவளத்தை ஓரளவு பாதுகாப்பதற்காக வளர்த்துப் பேணப்படும் துணைப்பயிர்.

cov'ered, *a.* மூடப்பெற்றுள்ள; பாதுகாப்புள்ள; மறைக்கப்பட்டுள்ள; மேல்மோடுள்ள; தொப்பியணிந்துள்ள.

cov'ered-way, *n.* கோட்டையின் அகழிக்கு வெளியிலுள்ள மறைவான ஆழப்பாதை.

cov'er-glass, *n.* உருப்பெருக்கிக் கண்ணுடியின்கீழ் பொருள் மீது வைக்கப்படும் மெல்லிய கண்ணுடிச் சில்லு.

cov'ering, *n.* மூடி; மூடும் பொருள்; மேற்போர்வை; பொதி உறை; (தொ.) covering letter, உள்ளடக்க விளக்கக் கடிதம்.

co'verlet, co'verlid, *n.* படுக்கை விரிப்பு; பஞ்சுறை, மெத்தை.

cov'er-point, *n.* மரப்பந்தாட்டத்தில் ஆட்டக்காரரின் வலப் புறத்தில் மதிப்பெண்பெற ஆதரவாக நிற்பவர்; ஆட்ட ஆதர வாளர்; ஆட்ட ஆதரவாளர் இடம்.

cov'er-slut, *n.* கந்தை அல்லது அழுக்குத் துணியை மறைப் பதற்காக அணியும் மேலாடை.

co'vert [1], *n.* பறவைகளின் இறகடிகளையும் வாற்பகுதியையும் மூடியுள்ள மெல்லிறகு.

co'vert [2], *n.* மறைவிடம், பாதுகாப்பிடம்; வேட்டை விலங்கு-பறவைகள் பதுங்கியிருப்பதற்குரிய புதர்க்காடு; புதர்த் திரள்; *a.* மறைவடக்கமான, இரகசியமான; ஒளிவு மறை வான; உருமறைத்துள்ள.

cov'ert-coat, *n.* சிறிய இலேசான புறமேற்சட்டை.

cov'ert-coat'ing, *n.* சிறிய இலேசான புறமேற்சட்டைக்கு வேண்டிய துணி.

cov'ertly, *adv.* புதைவாக; மறைவாக, திருட்டுத்தனமாக.

co'verture, *n.* பாதுகாப்பிடம்; உருமாற்றம்; போர்வை, ஆடை; (சட்.) கணவன் பாதுகாப்பில் இருக்கும் மணவியின் நிலை.

cov'ert-way, *n.* = covered-way.

co'vet, *v.* ஆவலுடன் விருப்பம்கொள், நாட்டம் கொள்; பிறர் பொருள் விரும்பு, தவறுக அவாக்கொள்.

co'vetous, *a.* தகா விருப்புடைய; பிறர் பொருள் நச்சுகிற; பேராவலுள்ள.

co'vey, *n.* ஓர் ஈட்டு முட்டையில் பொரிக்கப்பட்ட கவுதாரிக் குஞ்சுகளின் தொகுதி; வேட்டைப்பறவைகளின் சிறு கூட்டம்; கூட்டம்; குடும்பம்; குழு, தொகுதி; *pl.* co'veys.

co'vin, *n.* ஒப்பந்தம்; சதி, கூட்டுச் சூழ்ச்சி; இரகசியச் சதித் திட்டம்; சூனியக்காரிகளின் திரள் குழு; பதின்மூன்று சூனியக்காரிகளின் தொகுதி, குழு.

co'ving, *n.* கட்டிடத்தின் வளைவான பகுதி; அடுப்படியின் வளைவான பகுதிகள்; கீழ்மாடி கடந்து நீளும் மேன்மாடிப் பகுதி.

cov'inous, *a.* மோசடியான, ஏமாற்றுகின்ற.

cov'in-tree', *n.* ஸ்காத்லாந்து நாட்டில் விருந்தினரைச் சந்தித்து வழியனுப்புவதற்குரிய மாளிகை முன்புள்ள மரம்.

cov'yne, *n.* = covin.

cow [1], *n.* பசு; யானை-காண்டாமிருகம்-திமிங்கிலம்-கடல்நாய் மான் முதலியவற்றில் பெண் விலங்கு.

cow [2], *v.* அச்சுறுத்து, அடக்கிவை, கீழ்ப்படுத்து.

cow'age, *n.* = cowhage.

cow'ard, *n.* கோழை; துணிவு இல்லாதவர்; வலிமை குறைந் தவரிடம் வலிமை காட்டிக் காரியம் ஆற்றுபவர்; *a.* கோழை யான; (கட்.) கால்களுக்கிடையில் வாலுள்ளதான; *v.* கோழையாக்கு.

cow'ardice, *n.* கோழைத்தனம், துணிவின்மை, பயங் கொள்ளித்தனம் அச்சம்; (தொ.) moral cowardice, கண்டனம் கிடைக்கக்கூடுமென்ற அச்சம்.

cow'ardly, *a.* கோழையின் குணமுள்ள; கோழைக்குரிய; *adv.* கோழையைப் போன்று; கோழைத்தனமாக.

cow'-bane, *n.* கால்நடைகளுக்குக் கேடான நீர் நச்சுப்பூண்டு.

cow'-bell, *n.* பசுவின் கழுத்தில் அணியும் மணி.

cow'-berry, *n.* செந்நிறக்கொட்டையுள்ள புதர்ச்செடிவகை.

cow'-bird, cow'-black'bird, *n.* மற்றப் பறவைகளின் கூடு களில் முட்டையிடும் பழக்கமும் கால்நடைகளுடன் தொடரும் இயல்புமுடைய அமெரிக்க வெப்ப மண்டலப் பறவை வகை.

cow'boy, *n.* பசுவை மேய்த்துப் பாதுகாக்கும் பொறுப் புடைய பையன்; பெரிய பண்ணை நிலத்தில் கால்நடைகளை மேய்க்கும் மனிதன்.

cow'-bunt'ing, *n.* = cow-bird.

cow'-calf, *n.* பெண் கன்று, பெட்டைக்கன்று, கடாரி.

cow'-cher'vil, *n.* காட்டுச்செடி வகை.

cow'die-gum, *n.* எண்ணெய்ச் சாயம் செய்யப் பயன்படும் பிசின் வகை.

cow'die-pine, *n.* பிசின் வகை தரும் குவிகாய் உடைய மர வகை.

cowed, *a.* அச்சுறுத்தி அடக்கப்பட்ட; முனைப்பழிந்த; முற்றிலும் ஆர்வமிழந்த.

cow'er, *v.* அச்சத்தால் அடங்கு, கூனிக்குறுகு; பதுங்கு, குவிவுறு; குந்தியிரு.

cow'feeder, *n.* பால்பண்ணைக்காரன்.

cow'fish, *n.* பசுவினது போன்ற முகமுடைய மீன்வகை, 'கடற்பசு'; 'பிரசீல்' (Brazil) நாட்டு ஆறுகளிலுள்ள மீன் வகை; பல்லுள்ள சிறு திமிங்கில மீன்வகை; கொம்புபோன்ற புருவ முள்ளுடைய மீன்வகை.

cow'-grass, *n.* ஆண்டு முழுவதும் தழைக்கும் செங்நிற மணப் புல் வகை.

cow'hage, *n.* வெப்பமண்டல அவரைவகைக் கொடி; புழுக் களை வெருட்டப் பயன்படும் அவரைவகைக் கொடி விதையின் கொடுக்கு முள் மயிர்; அவரை வகைக் கொடியின் விதைகள்.

cow'-heel, *n.* பாகுபோல் புழுக்கிப் பக்குவம் செய்யப்பட்ட எருதின் கால்.

cow'herd, *n.* மாட்டிடையன்.

cow'hide, *n.* பசுவின் தோல்; பதனிடப்பட்ட பசுத்தோல்; பசுத்தோலின் முறுக்குவார்களால் செய்யப்பட்ட சொரசொரப் பான கசை; *v.* பசுத்தோல் வாரின் சவுக்கினால் அடி.

cow'house, *n.* பசுத்தொழுவம்.

cow'ish, *a.* பசுமாடு போன்ற; கோழையான.

cow'itch, *n.* = cowhage.

cowl [1], *n.* தொப்பி; தலைமூடாக்கு; மடத்துத் துறவியின் மூடாக்கு; மடத்துத் துறவியின் மூடாக்கிட்ட மேலங்கி; மடத்துத் துறவிக்குரிய சின்னம்; மடத்துத்துறவிநிலை; மடத்துத்துறவி; புகைப்போக்கி மூடி; இயந்திர மூடாக்கு; விமான இயந்திரக்கவிகை மூடி; *v.* மூடாக்காக மூடு; மடத் துத் துறவியாக்கு.

cowl [2], *n.* தண்ணீர்த்தொட்டி, இருவர் தூக்க இருபுறப்பிடிக ளுள்ள மிடா.

cow'-leech, *n.* மாட்டு மருத்துவர்.

cow'lick, *n.* நெற்றிச் சுழிமயிர்க்குஞ்சம்.

cowl'ing, *n.* வானூர்தி இயந்திரத்தின் மேல்மூடி.

cow'-pars'ley, *n.* = cow-chervil.

cow'-pars'nip, *n.* பசுத்தீவனச் செடிவகை.

cow'-pea, *n.* மொச்சை இனச் செடிவகை.

cow'-pil'ot, *n.* மேற்கு இந்தியத் தீவுகளின் (West Indies) மீன் வகை.

cow'-plant, *n.* இலங்கையிலுள்ள பால் போன்ற சாறுள்ள செடி வகை.

cow'-pox, *n.* கோவசூரி, பசுக்களின் மடுக்காம்புகளைப் புண்ணாக்கும் நோய்வகை.

cow'-puncher, *n.* பசுமேய்க்கும் சிறுவன், மாட்டிடையன்.

cowr'ie, cowr'y, *n.* சோழி; பண்டமாற்று நாணயமாக வழங்கும் சிப்பி; சிப்பி மீன்வகை.

cowr'ie-pine, *n.* = cowdie-pine.

cow'shed, *n.* பசுத்தொழுவம், மாட்டுக்கொட்டில்.

cow'slip, *n.* மணமுள்ள மஞ்சள் மலர் உடைய காட்டுச செடிவகை.

cow'slip'd, *a.* காட்டுச் செடிவகையின் மஞ்சள் மலர்களால் மூடப்பட்ட.

cow′-tree, *n.* பால்மரம், பால் போன்ற சாறுள்ள தென் அமெரிக்க முசுக்கட்டையின மரம்.

cow′-weed, *n.* = cow-chervil.

cow′-wheat, *n.* கோதுமை தானியங்களைப் போன்ற விதைகளுள்ள மஞ்சள் மலர்ச் செடிவகை.

cox, *n.* = coxswain.

cox′a, *n.* இடுப்பு; வளைய உடலிகளின் காலின் முதல் எலும்பு இணைப்பு.

coxal′gia, *n.* இடுப்புவலி, இடுப்பு நோய்.

cox′comb, *n.* கோமாளிகள் தலையில் அணியும் சேவல் சூட்டு நிறத்துண்டு; கோமாளி; முட்டாள்; பகடி, பசப்பன்.

coxcomb′ic, coxcomb′ical, *a.* பகட்டான; தற்பெருமையுடைய, தருக்குடைய.

cox′combry, *n.* கோமாளித்தனம்; பகட்டுத்தனம்.

coxcom′ical, *a.* = coxcombic.

cox′swain, *n.* படகோட்டி, படகையும் படகின் ஆட்களையும் பொறுப்பாகக் கொண்டுள்ள சிறு அதிகாரி; ஏ. படகோட்டியாகச் செயலாற்று.

coxy, *a.* இறுமாப்புடைய, தன் முனைப்புமிக்க.

coy, *a.* நாணமுடைய, கூச்சமுள்ள; இடவகையில் ஒதுக்கமான; பேச்சு வகையில் ஒதுங்குகிற, தன்னடக்கமான.

coyot′e, *n.* சிறு வடஅமெரிக்க ஓநாய் வகை.

coy′pu, *n.* நீரில் வாழும் தென்னமெரிக்கக் கொறிக்கும் விலங்கு வகை.

coz, *n.* = cousin.

coze, *n.* வம்பளப்பு; ஏ. அளவளாவி உரையாடு.

co′zen, ஏ. ஏமாற்று; வஞ்சித்துப் பறி; மயக்கிச் சிக்கவை; வஞ்சகமாக நட.

co′zenage, *n.* ஏமாற்று, வஞ்சகச்செயல்.

coz′y *a.* = cosy.

crab [1], *n.* நண்டு; கடக இராசி, ஆடிவான்மீன; பளுவான பொருள்களை உயர்த்தும் இயந்திரம்; ஏ. பக்கவாட்டில் நட; விலாப்புறமாக ஓடு; நண்டுபிடி; (தொ.) catch a crab, துடுப்பை மிக ஆழமாகவோ மேவலாகவோ தண்ணீரில் தூழாவுவதன் பயனுகப் பிந்திவிடு.

crab [2], *n.* சோர்வு, வாட்டம்; குற்றங்காணல், குற்றங்காணும் தன்மை; ஏ. பருந்து முதலியவற்றின் வகையில் கூர் நகத்தால் கீறு; பிருண்டு; கீறிக்கிழித்துப் போராடு; தடு; அழி; தடுத்தழி.

crab [3], *n.* கசப்பான காட்டு ஆப்பிள் பழவகை; சிடுசிடுப்பானவர், 'சுடுமூஞ்சி'.

crabb′ed, *a.* குறுக்குமறுக்கான, ஏடாகோடமான, திண்டு முண்டான; கெட்டகுணமுள்ள, கடுகடுப்புடைய; கோணல் மாணலான; கடுஞ்சிக்கலான; புரிந்துகொள்ள முடியாத.

crab′-eat′er, *n.* பட்டைக் கோடுள்ள மீன்வகை; தென் துருவக் கடல்நாய்.

crab′-faced, *a.* சிடுசிடுப்பான தோற்றமுள்ள, எளிதில் சீறுகிற முகத்தோடு கூடிய.

crab′-louse, *n.* நண்டுருவப் பேன்வகை.

crab′-nut, *n.* எண்ணெய்தரும் கொட்டை வகை.

crab′-oil, *n.* எண்ணெய்வகை.

crab′-pot, *n.* நண்டுகளைப் பிடிக்க உதவும் பிரம்பாலான கண்ணி, பொறி.

crabs, *n. pl.* பந்தய எறிகாய் ஆட்டத்தில் குறைந்த எண்ணுள்ள இரண்டுடைய காய்; (தொ.) turn out crabs, தோல்வியில் முடிவுறு.

crab′s′-eyes, *n. pl.* அக்கமாலை, தொழுகைமணி மாலை, மீன் வகையின் வயிற்றில் ஏற்படும் சுண்ணச்செறிவு.

crab′-si′dle, ஏ. நண்டுபோல் பக்கவாட்டில் செல்.

crab′-stones, *n. pl.* = crab's-eyes.

crab′-wood, *n.* எண்ணெய்தரும் கொட்டையையுடைய மர வகை.

crab′-yaws, *n. pl.* உள்ளங்காலிலும் உள்ளங்கையிலும் தோன்றுகிற தொற்றுநோய்க் கட்டி.

crack [1], *n.* திடீர் வெடிப்போசை; சாட்டை விளாசல் ஓசை; சாட்டையடி; வீச்சு, அடி; இடி ஓசை; வெடிப்பு, கீறல்; வடு, குற்றம்; கணம்; விடிவு, புலர்ச்சி; பைத்தியம், கிறுக்கு; கிறுக்கர், கோட்டிக்காரர்; வல்லுநர்; சிறந்த ஆட்டக்காரர்; திருட்டு; திருடர்; சிறந்த குதிரை; *a.* (பே-வ.) மிகச்சிறந்த; முதல் தரமான; ஏ. திடீர் வெடிப்போசை உண்டுபண்ணு; சாட்டையை விளாசு; பிளவு செய், கீறல் உண்டுபண்ணு; பிளவுறு; முறிவுறு; கொறுங்கவை; கல்லெண்ணெய் முதலியவற்றை தனிமூலக் கூறுகளாகப்பிரி; சிரித்து உரையாடு; அழி, கெடு; (தொ.) a crack on the head, தலைமீது கடுமையான அடி; crack a bottle, குப்பியைத் திறந்து குடி; குடித்து வெறுமையாக்கு; crack a joke, வேடிக்கை பேசு, கொடி பேசு; crack credit, மதிப்புக் கெடுத்துக்கொள், செல்வாக்குக் கெடு; crack down on, எதிராகக் கடுமையான நடவடிக்கை எடு; crack of doom, இறுதி இறைத் தீர்ப்பு நாளின் இடியோசை; crack up, புகழ்ந்து பேசு; திடிரெனத் தோல்வியடை, சிதறு; சிதறிப்போ; get cracking, விரைவில் செல்; in a crack, கண நேரத்தில்.

crack [2], *n.* திறமையுள்ள பேச்சு, குத்தலான சிலேடைப் பேச்சு, கேலிப்பேச்சு.

crack′ajack, *n.* மிகுசிறப்புள்ளவர்; உயர்சிறப்பான பொருள்; *a.* உயர்சிறப்புள்ள, மிகு நேர்த்திவாய்ந்த.

crack′-brain, *n.* கிறுக்கன், கோட்டி, பைத்தியக்காரன்.

cracked, *a.* கிழிந்துபோன; பிளந்துள்ள; தகர்க்கப்பட்ட; சிதைந்த, அழிந்த, சேதமான; கிறுக்கான, அறிவு பிறழ்ந்த.

crack′er [1], *n.* வெடியோசை செய்பவர்; வெடியோசை செய்யும் பொருள்: சீன வெடிவகை; துள்ளிக்குதிக்கும் வெடி; ஊசி வெடி; உடைப்பவர்; உடைப்பது, உடைக்கும் பொருள்; சிரித்துப் பேசுபவர்; தற்பெருமைக்காரர்; பொய்; நீண்டு ஒடுக்கமான வாலுள்ள வாத்துவகை; பொருபொருப்பான மாச்சில்லு; தகர்வு, உடைவு.

crack′er [2], *n.* கிழிந்த தாள்சுருள், கந்தைக்கீற்று.

crack′ers, *a.* கிறுக்கான, அறிவு பிறழ்ந்த; நிலைதவறிய; நடுநிலை இல்லாத.

crack′-halt′er, *n.* = crack-rope.

crack′-jaw, *a.* ஒலிப்பதற்கு மிகக் கடுமைவாய்ந்த, 'பல்லுடைக்கிற'.

crack′le, *n.* 'சடசட' ஒலி; முறிவொலி; முறிவு; சடசடவென்ற வெடிப்பு; ஏ. சடசடவென்று ஒலிசெய், முறிவொலி செய்; முறிவுறு; படபடவென்று வெடி.

crack′lin, *n.* அழகுக்காக வேண்டுமென்றே வெடிப்புடையதாகச் செய்யப்படும் சீனப் பீங்கான் கலம்; பாத்திரம்.

crack′ling, *n.* வறுக்கப்பட்ட பன்றிக் கறியின் மேல்தோல்; கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகத்தின் தூயயோவான் கல்லூரி (St. John's College) யிலுள்ள மாணவர் அணியும் அங்கியின் கைப்பகுதியின்மேல் இணைக்கப்படும் நான்கு மென்பட்டுப் பட்டைகள்.

crack′lings, *n. pl.* ஆடுமாடுகளின் இடுப்புப் பகுதியில் சேரும் கொழுப்பின் தோல் போன்ற மேலீடான பகுதி.

crack′ly, *a.* எளிதில் உடையக்கூடிய, நொய்ம்மையான.

crack′nel, *n.* எளிதில் நொறுங்கக் கூடிய மென்மையான மாச்சில்லு.

crack′nels, *n. pl.* மொரமொரப்பாக வறுக்கப்பட்ட கொழுப்பான பன்றிக்கறித் துண்டுகள்.

crack′pot, *n.* கிறுக்கர், கோட்டிக்காரர், அறிவுமாறாட்டமுள்ளவர்.

crack′-rope, *n.* தூக்கிலிடப்படத்தக்கவன்.

cracks'man, *n.* கன்னக்கோல் திருடன்.

crack'-tryst, *n.* ஒப்பந்தத்தை மீறுபவர்.

crack'y, *a.* வெடிப்புகளுள்ள; வெடிக்கத்தக்க; அறிவு மாருட்டமுள்ள.

cra'dle, *n.* தொட்டில்; குழந்தைப்பருவம்; பிறப்பிடம்; வளர்ப்பிடம்; நோயாளியின் படுக்கைக் கீழுள்ள அழுக்குத் துணிச்சட்டம்; பழுதுபார்க்கும்போது நிலத்திலிருக்கும் கப்பலின் நில அடிச்சட்டம்; தங்கம் கழுவுவதற்கான அரிப்புத் தொட்டி; செதுக்கு வேலைக்காரரின் அசைவு இயக்கமுடைய கத்தி; நிரப்பாக வெட்டும்படி அரிவாளுடன் இணைக்கப்பட்ட சட்டம்; *v.* தொட்டிலில் இடு; தொட்டிலில் இட்டு ஆட்டு; தொட்டிலென ஆதரவளித்துப் பேணு; பேணி வளர்; கப்பலை நிலச்சட்டம்மீது வை; அரிவாள்கொண்டு பயிரறு.

cra'dle-scythe, *n.* அரிமட்டச் சட்டமிணைக்கப்பட்ட அரிவாள்.

cra'dle-walk, *n.* மரங்கள் வளைந்து கவிந்துள்ள நெடுஞ் சாலைப்பாதை.

craft, *n.* தந்திரம், சூழ்ச்சி; ஏமாற்று, செயற்கைத்திறம்; கைத்திறம்; கலை; கைவினை, கைத்திறனுள்ள தொழில்; கப்பல், மரக்கலம்; சிறுகப்பல் தொகுதி; *v.* தொழில் செய்; சூழ்ச்சிசெய்; கைத்திறனைப் பயன்படுத்து.

craft'-broth'er, *n.* உடனெத்த ஒரே தொழில் தோழர், ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றொருவர்.

craft'-guild, *n.* ஒரே தொழிற்சங்கம், ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் கூட்டுக்குழு.

craft'less, *a.* கள்ளங்கபடற்ற; எத்தொழிலிலும் பயிற்சியற்ற.

crafts'man, *n.* கைவினைஞர், ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்.

crafts'master, *n.* தொழில் வல்லுநர், தொழில் திறலாளர்.

craf'ty, *a.* திறமையுடைய; சூழ்ச்சியுள்ள, வஞ்சனையுள்ள; தந்திரமான.

crag [1], *n.* கொடும்பாறை, பாறைக் கூர்முகடு.

crag [2], *n.* (மண்.) தென்கிழக்கு இங்கிலாந்திலுள்ள கிளிஞ்சில் செறிந்த மணல்படிவப் பாறை.

crag [3], *n.* கழுத்து, குரல்வளை.

crag'-and-tail', *n.* (மண்.) ஒருபுறம் செங்குத்தாகவும் மறுபுறம் மென்சாய்வாகவும் அமைந்த குன்று.

crag'fast, *a.* கொடும்பாறையில் தட்டி அசைய முடியாத.

cragg'ed, *a.* கொடும்பாறைகள் செறிந்த; பிளவுபட்ட பாறைகளையுடைய; கரடுமுரடான, கூர்மேடு பள்ளமான.

cragg'y, *a.* கொடும் பாறையான; உடைக்கப்பட்ட பாறைகளுள்ள; கரடுமுரடான; மேடுபள்ளமான.

crags'man, *n.* பாறையேறும் திறமையாளன்.

crake, *n.* பயிர் பச்சைகளில் குடியிருக்கும் பறவைவகை; (பே-வ.) காக்கை, அண்டங்காக்கை; பறவை வகையின் கரைவு; *v.* பறவைவகைபோல் கரை, காக்கைபோல் கத்து.

crake'-berry, *n.* கறுப்புப் பழங்களுள்ள படர்கொடி வகை.

cram, *n.* கூட்டம், நெருக்கடி, நெரிசல்; உருவேற்றல்; குத்திச் செலுத்தல்; உருப்போடும் முறை; *v.* நெருக்கித் தள்ளு, செறிவி; குத்திச்செலுத்து; திணி, அழுத்தி நிரப்பு; மட்டுமிறி உணவு திணி; கொழுக்கவை; பேராவலுடன் உண்; மனப்பாடம் செய், உருவேற்று; உருவிட்டுப்படி.

cram'bo, *n.* ஒருவர் கூறிய சொல்லுக்குப் பிறர் எதுகை இசைவான சொற்கள் கூறும் விளையாட்டு வகை; எதுகை இசைவு; (தொ.) dumb crambo, கொடுத்த எதுகையிசைவுப் பதத்தால் நினைத்த பதம் ஊகித்து விளக்கி மறு பதங்களை ஊமைபோல் செய்து காட்டும் விளையாட்டு.

cram'boclink, cram'bo-jingle, *n.* எதுகை இசைத்தல்.

cram'esy, cram'oisy, *n.* மிகு சிவப்பு நிறம்; செக்கர் நிறத்துகில்; *a.* மிகுசிவப்பான.

cramm'er, *n.* உருவிடுபவர்; மாணவர்களை உருப்போட வைப்பவர்; கோழிகளைக் கொழுக்கவைப்பவர்; கோழிகளைக் கொழுக்க வைக்கும் பொறி.

cramp [1], *n.* சுளுக்கு, பிடிப்பு; கடுங்குளிராலோ மட்டுமீறிய தளர்ச்சியாலோ ஏற்படும் தசைநார்ச் சுரிப்பு; *v.* சுளுக்கு உண்டாக்கு, இசிப்பு உண்டாக்கு; (தொ.) bather's cramp, குளிக்கிறவருக்கு ஏற்படும் பக்கவாதம்; writer's cramp, எழுத்தாளரின் சுளுக்கு, இடைவிடாது எழுதுபவரைத் தாக்கும் பிடிப்பு நோய்.

cramp [2], *n.* பற்றிணைப்பு, கட்டுமானங்களை இறுக்கிப் பிணைக்கும் பகர வளைவுடைய இரும்புக் கம்பி; பிணைப்புக்கருவி, இடத்துக்கிடம் பெயர்க்கவல்ல கட்டை இறுக்கிப்பிணிக்கும் கருவி; தடைநிலை, கட்டுப்பாட்டு நிலை; *v.* பற்றிணைப்பால் இணை; தடைப்படுத்து, கட்டுப்படுத்தி வை; ஆற்றல் கட்டுப்படுத்து.

cramp [3], *a.* கையெழுத்து வகையில் விளக்கமற்ற, புரியாத; குறுக்கப்பட்ட, இடுக்கமான; *v.* இடுக்கப்படுத்து.

cramp'-bone, *n.* சுளுக்கு நீக்கும் மந்திர ஆற்றலுடையதாக முற்காலங்களில் கருதப்பட்ட செம்மறியாட்டின் முழங்கால் சில்லு.

cramp'et, *n.* வாளுறையின் முனைத்தகடு; வாளுறையின் மாட்டுக்கொக்கி; பற்றிணைப்பு; பிணைப்பிரும்பு; கப்பல்களைப் பற்றிப் பிடித்திழுக்கும் இரும்பாலான கொக்கிப்பொறி; பனிக்கட்டிமீது கற் சறுக்காட்டக்காரருக்கான இரும்புக் காற்படித்தட்டு.

cramp'-fish, *n.* மின்னெறி மீன்.

cramp'-iron, *n.* பகர வடிவான வளைவுடைய இரும்பாலான பற்றிணைப்பு.

cramp'it, *n.* = crampet.

cram'pon, *n.* கப்பல்களைப் பற்றிப் பிடித்திழுக்கும் இரும்பாலான கொக்கிப் பொறி; உலோகத்தாலான கொக்கி; பனிக்கட்டிமீது நடப்பதற்குரிய பெரிய ஆணிகளுள்ள இருப்புப்பலகை; மலையேறு மிதியடி; தந்திக்கம்பம் முதலிய வற்றில் ஏறுவதற்குரிய முள்ளாணிச் செருப்பு.

cramp'-ring, *n.* அரசரால் சிறப்புநாள் விழுமுறைப்படுத்தி அளிக்கப் பெற்றுச் சுளுக்கு முதலியன நீக்கியதாக முற்காலங்களில் கருதப்பட்ட கணையாழி.

cramp'y, *a.* சுளுக்கு நோயால் பீடிக்கப்பட்ட; பிடிப்பு நோயை உண்டாக்கத்தக்க.

cran, *n.* ஸ்காத்லாந்து நாட்டு வழக்கில் பிடித்த புது மீனுக்குரிய முகத்தலளவைக் கூறு (37½ காலன்கள்).

cran'age, *n.* பாரந்தூக்கியைக் கையாளுகை; பாரந்தூக்கிக் கையாட்சிக்குரிய கட்டணம்.

cran'berry, *n.* புதர்ச்செடி வகையின் காடித்தன்மையுடைய திண்சிவப்பான சிறு கொட்டை வகை; காடித்தன்மையுடைய சிவப்பான சிறுகொட்டைதரும் புதர்ச்செடிவகை.

cranch, *n., v.* = crunch.

crane [1], *n.* நாரை; பாரந்தூக்கிப்பொறி; மிடாக்களிலிருந்து தேறல் எடுக்க உதவும் காலிக்குழாய்; இருப்புப்பாதை நீராவி இயந்திரத்துக்கு நீர் வழங்கும் குழாய்; காற்றழுத்த ஆற்றல் வழி நீர் ஏறி இடையறாது வழியும் கவான் குழாய்; *v.* நாரைபோல் கழுத்தை நீட்டு; நீளு; தலைநீட்டு; எட்டியடைய முனை; பாரந்தூக்கிமூலம் தூக்கு; பாரந்தூக்கி வழி இயங்கு; தாவுமுன் தசை சுருக்கிநில்; (தொ.) crane at, கண்டு பின்னிடு, கண்டு தயங்கிநில்.

crane [2], *n.* = cranium.

crane'-fly, *n.* நீண்ட கால்களையுடைய ஈ வகை.

crane's'-bill, *n.* நாரை அலகுபோன்ற பழமுள்ள காட்டுச்செடி.

cran'ial, *a.* மண்டையோட்டுக்குரிய; மூளை பொதிந்த குடுவைக்குரிய; (தொ.) cranial index, நீளத்தின் நூற்று வீதமாகக் கணிக்கப்படும் மண்டையோட்டின் வடிவளவு வரைக் குறியெண்.

craniog'nomy, *n.* மண்டையோடு சார்ந்த புற உடலமைப்புக் குறி நூல்.

craniol'ogy, *n.* மண்டையோட்டாராய்ச்சி நூல்; மண்டை ஓட்டுப் புடைப்பகழ்வுகளால் உளவியல் கூறுகளை விளக்க மாக அறிய முடியுமென்ற கோட்பாட்டடிப்படையில் மண்டையோட்டு அமைப்பியல் ஆராய்ச்சித் துறை.

craniom'eter, *n.* மண்டையோட்டுமானி, மண்டை ஓட்டை அளக்கும் கருவி.

cranios'copist, *n.* மண்டையோட்டுப் புடைப்பகழ்வுகளால் உளவியல் கூறுகளை விளக்கமாக அறிய முடியுமென்ற கோட் பாட்டடிப்படையாக நூலியலாக உருவாகக் கூடுமென்று கருதப்படுகிற மண்டையோட்டு அமைப்பியல் ஆராய்ச்சி யாளர்.

cranios'copy, *n.* மண்டையோட்டுப் புடைப்பகழ்வுகளை உள வியல் கூறுகளை விளக்கமாக அறிய உதவுமென்ற கோட் பாட்டடிப்படையாக வருங்காலத்தில் நூலியலாக உருவாகக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிற மண்டையோட்டு அமைப் பியல் ஆராய்ச்சித்துறை.

craniot'omy, *n.* இளஞ்சூலின் மண்டையோட்டைத் தகர்த் துக் கூறுபடுத்துதல்.

cran'ium, *n.* மண்டை ஓடு, மூளை பொதிந்த குடுவை, மூளையை மூடியுள்ள எலும்புகளின் கூட்டுத்தொகுதி.

crank [1], *n.* வளைவு, கோட்டம்; அள்ளு, செந்திரிப்புக்கோட் டம், இயந்திரத்தில் ஊடச்சின் இயக்கத் திசை திருப்பிச் சுற்றித் திரிக்கும் செங்கோணமடக்கான அமைவு; பெரிய மணியைத் தொங்கவிடுவதற்குரிய முழங்கை வடிவான ஆதார உத்திரம்; திருகுவிட்டம், குற்றவாளிகள் உடலை வருத்திக் கடுந்தண்டனை தரும் பழங்காலக் கருவி; *a.* வளைந்த; இடுக் கப்பட்ட; *v.* வளை, திருப்பு, கோட்டு; செந்திரிப்புக் கோட்டமமை; திரும்பு, கோடு; செந்திரிப்புக்கோட்டமாக இயங்கு; செந்திரிப்புக் கோட்டமூலம் இயக்கு.

crank [2], *n.* பேச்சுவிகடம்; சொற்பொறி, செயற்கைச் சொற் புரட்டு; தாறுமாறான எண்ணம், புனைபோலிக் கருத்து; மனம்போன போக்கு; பொதுப்பண்பு மீறிய செயல், பித்துக் கொள்ளித்தனம்; பித்துக்கொள்ளி, பொதுப்பண்பு மீறியவர், பற்று வெறியர்.

crank [3], *a.* இயந்திரவகையில் மெலிந்த, வலுவற்ற, ஆட்டங் கொடுக்கின்ற.

crank [4], *a.* (கப்.) தலைகீழாகக் கவிழக்கூடிய.

crank [5], *a.* சுறுசுறுப்பான, விரைவான; களிப்பான, மகிழ்ச்சி விளைவிக்கிற; *adv.* சுறுசுறுப்பாக; களிப்பாக.

crank'le, *n.* வளைவு, திருப்பம்; சுரிப்பு, திருக்கு முறுக்கு; *v.* உள்ளும் புறமுமாக வளை, திருகி முறுக்கு.

crank-si'ded, *a.* = crank [4].

crank'y, *a.* வளைந்த, கோணலான; நொய்ய, உறுதியற்ற, வலுவற்ற; மனம்போன போக்கான, எண்ண ஒழுங்கற்ற, ஏடாகோடமான.

crann'ied, *a.* பிளவுகளுள்ள, கீறல்களுடைய, வெடிப்புக் களுள்ள.

crann'og, *n.* தீவரண், ஸ்காத்லாந்திலும் அயர்லாந்திலும் ஏரியில் இயற்கையாகவும் செயற்கையாகவும் அமையப் பெற்ற அரண்காப்புடைய தீவு; ஏரியகமனை.

crann'y, *n.* பிளவு, கீறல்; மறைவிடம்; *v.* பிளவுகளுக்குள் செல்.

crape, *n.* துயர்க்குறியாய் அணியப்படும் கரும்பட்டுத் துணி வகை; புறச் சுரிப்புடைய நேரிழைக் கரும்பட்டு வகை; துயர்க் குறியான கரும்பட்டிழைப் பட்டை; *a.* மென்பட்டுக் கறுப்புத் துணியாலான; *v.* மென்பட்டுத் துணி அணிவி; மென்பட்டுத் துணி மேலிட்டுக் கவி; கரும்பட்டுத் துணியால் அணி செய்; முடியைச் சுருளச் செய்.

crape'-cloth, *n.* மெல்லிழைக் கரும்பட்டுப் போன்ற கம்பளித் துகில்.

craps, *n. pl.* பகடைக்காயைக் கொண்டு ஆடும் சூதாட்ட வகை; (தொ.) shoot craps, பகடைச் சூதாட்டம் ஆடு.

crap'ulence, *n.* அளவு மீறிய குடியினால் உண்டாகும் நோய்; மட்டுமீறிய குடி.

crap'ulent, crap'ulous, *a.* மட்டுமீறிய குடிக்கு ஆட்பட்ட; அளவிறந்த குடியினால் நோய்க்கு ஆளான.

crash [1], *n.* தகர்வொலி, முறிவோசை, மோதல் ஒலி, இடி முழக்கம்; திடீர் இசை எழுச்சி; மோதல்; மோதல் அதிர்ச்சி; திடீர்த் தகர்வு; முறிவு; வாணிக நிலைய நொடிப்பு; அழிவு; வீழ்ச்சி; வீழ்ச்சிநோக்கிய விரைபோக்கு; *v.* பேரோசை யுடன் நொறுங்கி வீழ்; விழுந்து நொறுங்கு; இடிமுழக்க மிடு; இடிமுழக்கமிட்டு விழு; பேரொலியுடன் செலுத்து; இரைச்சலுடன் இயங்கு; துயர் முடிவெய்து; மோதி உடை; சென்று மோது; அழையாது திடீர் விருந்தினராக நுழை; விமான வகையில் விழுந்து சேதமுறு.

crash [2], *n.* நார்த்துணி, கைக்குட்டைகளுக்கான சொரசொரப் பான துணி வகை.

crash'-dive', *n.* நீர் மூழ்கிக் கப்பலின் திடீர் மூழ்கல்; *v.* நீர் மூழ்கிக் கப்பல் வகையில் திடீரென முழுகு.

crash'-helmet, *n.* விமானம்-உந்துவண்டி-மிதி உந்துவண்டி ஆகியவற்றின் ஓட்டிகளுக்குரிய பஞ்சுறையிட்ட பாது காப்புத் தலைக்கவசம்.

crash'-land, *v.* வானூர்தி வகையில் திடீரெனப் பேரொலி யுடன் நிலத்தில் வலிந்து இறங்கு.

cras'is, *n.* தாதுக் கலவை, உடலமைப்பின் பல்வேறு தனிப் பொருள்களின் கலவை; உடல்நிலை; மனநிலை, உணர்ச்சி நிலை; (இலக்.) கிரேக்க மொழியில் இரு உயிர் இணைந்து நீளுதல் அல்லது இணையுயிராதல்; *pl.* cras'es.

crass, *a.* பருத்த, தடித்த, திண்ணிய, அடர்த்தியான; அறிவற்ற; (தொ.) crass stupidity, முழுமடமை.

crassament'um, *n.* உறை குருதியின் அடர்பகுதி; உறைந்த குருதிக் கட்டி.

crass'itude, *n.* திண்ணிய சடத்தன்மை; கரடுமுரடான தன்மை; நெருக்கம், அடர்த்தி; முட்டாள்தனம், மடமை.

cratch, *n.* கவணை, கால் நடைகளுக்குத் தீனி வைக்குமிடம்; விலங்குகளுக்கு வெளிப்புறத்தில் தீனி வைக்கும் அடுக்கு வரிச்சட்டம்.

cratch'es, *n. pl.* குதிரைக்காலின் கீழ்ப்புறப் பின்பகுதி வீக்கம்.

crate, *n.* பிரப்பங்கூடை, கண்ணுடி-மட்பாண்டம்-பழம் முதலியன வைத்துக்கொண்டு செல்வதற்கான பிரப்பங்கழி வேய்ந்த வரிச்சட்டம்; சிப்பக்கூட்டுமான வரிச்சல் அழிப் பெட்டி; *v.* அழிக்கூடையில் வைத்தடக்கு.

crat'er, *n.* இன்தேறல் கலவைக் கும்பா, கிண்ணம்; எரிமலை வாய்; எரிமீன் வீழ்ச்சி-குண்டு-சுரங்க வெடி முதலியவற்றால் ஏற்பட்ட நிலக்குழி; மின் வளைவுக் கரியக் குழி.

cravat', *n.* கழுத்துப் பட்டி; *v.* கழுத்துப் பட்டியை அணி.

crave, *n.* ஏக்கம், ஆர்வ விருப்பம்; *v.* ஆர்வத்துடன் இர; பிச்சையெடு; கெஞ்சிக் கேள்; தேவைப்படு; அவாவு, மிக விரும்பு.

crav'en, *n.* கோழை; ஊக்கமற்றவன்; *a.* கோழையான; ஊக்கமற்ற; (தொ.) cry craven, சரணடை.

crav'er, *n.* கெஞ்சிக் கேட்பவர்; இரப்பவர்.

crav'ing, *n.* வேணவா, அடக்க முடியாத ஆசை, மிகு விருப்பம், நீடித்த நாட்டம்.

craw, *n.* கோழி-பறவைகளின் கழுத்துப் பை; பூச்சியினத்தின் கழுத்துப் பை; விலங்கினத்தின் இரைப்பை, விலங்கினத்தின் வயிறு.

craw'fish, *n.* நன்னீர் நண்டு வகை.

crawl [1], *n.* ஆழமற்ற நீர்நிலையில் அமைந்த மீன் வளர்ப்புப் பட்டி; கடலாமைக்குரிய நீர்நிலை வளர்ப்புப்பட்டி; தென் ஆப்பிரிக்காவில் வேலியடைப்பிட்ட சிற்றூர்க் குடிசைத் தொகுப்பு; ஆடுமாடுகளின் தொழுவம்.

crawl [2], *n.* நகர்வு, தவழ்வு, ஊர்ந்து செல்லுதல்; மெல்லசைவு, மென்னடை, நகர்வியக்கம்; வீச்சு நீச்சு, முதல்தர விரை நீந்தல் முறை, முகங்கவிழ்ந்த நிலையில் உடல் நீர்ப்பரப்பில் மிதப்பக் கைகளை மாறி மாறி வட்டாகாரமாக வீசி உடல் சிறிது புரளும்படி துழாவி நீர் கிழித்துச் செல்லும் போக்கு; *v.* ஊர்ந்து செல், மெல்ல நடந்து செல்; தவழ்; தன்மையிழந்து நடந்துகொள்; நிலத்தின் வகையில் ஊரும் உயிரினங்கள் பரபரப்புடன் மொய்க்கப்பெறு; ஊருதல் உணர்ச்சிகொள்; வளைந்து வளைந்து செல்; (தொ.) the crawl, தற்கால முதல்தர விரை நீச்சு முறை, வீச்சு நீச்சு.

crawl'er, *n.* ஊர்ந்து செல்பவர்; ஊர்ந்து செல்வது; இழி மகன், தன் மதிப்பில்லாதவர்; மந்தமானவர், மசணை; ஊரும் உயிரினம்; வாடகைக்காக மெதுவாக ஊர்ந்து செல்லும் வண்டி; பேன்; உருள்தடமீது ஊர்ந்து செல்லும் இயந்திரக் கலப்பை; குழந்தையின் படுக்கைக் கட்டு.

cra'yfish, *n.* = crawfish.

cra'yon, *n.* வண்ணத் தீட்டுக்கோல், சாயச் சுண்ணக் காம்பு; வண்ணக் கோலால் வரையப்பட்ட ஓவியம்; மின் விளக்கில் கரி முனை; *v.* வண்ணக்கோலால் வரை; உருவரை கோலு, வரைத்திட்டமிடு; (தொ.) in crayons, சாயச்சுண்ணக் காம்பால் வரையப்பட்ட.

craze, *n.* வெடிப்பு; வெடிப்புத்தடம்; வடு; மனமாருட்டம், கோட்டி, பித்த மயக்கம்; ஆர்வவெறி, மட்டுமீறிய வெறி ஆர்வம்; மாறுபடும் பற்று மயக்கம், வேறுபடும் நாண் மரபு; *v.* வெடிக்கச் செய்; மட்பாண்டத்தில் நுண்ணிய வெடிப்புத் தடங்கள் தோற்றுவி; வெடிப்புத் தடங்கள் தோன்றப் பெறு; மனமாருட்டம் செய்; கிறுக்காக்கு.

craz'ing-mill, *n.* தகரக் கனி உலோகக் கலவை நொறுக்கிப் பொடி செய்யும் ஆலை.

craz'y, *a.* வெடிப்புள்ள; பிளவாக்கப்பட்ட; கப்பல் வகையில் ஆட்டங் கொடுக்கிற; கட்டிடவகையில் உறுதியற்ற; நலி வுற்ற; நோய்ப்பட்ட; பித்துப்பிடித்த, கிறுக்கான, மன மாருட்டமுடைய; தாறுமாறாக ஒட்டப்பட்டமைந்த; (பே-வ.) ஆர்வ வெறி கொண்ட.

creak, *n.* கிரீச்சொலி, எண்ணெய் இடப்படாத கீல்பொருத்து எழுப்பும் ஒலி; புதுச்செருப்பொலி; *v.* கிரீச் ஒலியிடு.

cream, *n.* பாலேடு, நெய்ச்சத்துள்ள பாலின் மேலேடு; பாலேடு கலந்த பண்ட வகை; பாலேடு போன்ற தண் குழம்பு; ஒப்பனைக் குளிர் களிம்பேடு; நீர்மத்தில் மேலீடாக மிதக்கும் ஆடை, புரையேடு; சிறந்த பகுதி, சுவைமிக்க கூறு; உயிர்க் கூறு; *a.* பாலேடு நிறமான; பாலேடு சேர்த்து உண்டாக்கப் பட்ட; *v.* பாலேடு பிரித்தெடு, ஆடையெடு; பாலேடு கல; பாலேடு போன்றதாக்கு; பாலேடுபோல் ஆடை திரையச் செய்; பாலேடு தோய்வி; பாலேடாக உருவாகு, ஆடை யாகு; ஆடைபோலப் படர்; சிறந்த பகுதியைப் பிரித்தெடு, உயிர்க்கூறு அகற்று; (தொ.) cream of tartar, மருந்துக் குப் பயன்படும் வகையில் புடமிட்டு மணியுருப்படுத்தப்பட்ட சாம்பர இருபுளியகி; cream of tartar tree, வெப்பமண்டல மரவகை.

cream'-cake, *n.* பாலேடு நிரப்பப்பட்ட அப்ப வகை.

cream'-cheese', *n.* பாலேட்டிலிருந்து உருவாக்கப்படும் பாலடைக்கட்டி.

cream'-coloured, *a.* பாலேட்டு நிறமுள்ள, இளமஞ்சள் வண்ணமுள்ள.

cream'er, *n.* பாலிலிருந்து பாலேடு பிரிப்பதற்குரிய மென் தட்டு; பாலேடு பிரித்தெடுக்கும் பொறி.

cream'ery, *n.* பாலினின்று வெண்ணெய்-பாலடைக் கட்டி உருவாக்கும் நிறுவனம்; பால்-வெண்ணெய்-பாலேட்டு விற்பனைக்களம்.

cream'-faced, *a.* விளரிய தோற்றமுள்ள.

cream'-laid, *a.* வெண்ணிறத்திடையே நீர்வரைக்குறிகளை யுடைய.

cream'-nut, *n.* பிரேசில் நாட்டுக் கொட்டை வகை.

cream'-slice, *n.* பாலினின்று பாலேட்டினை எடுக்க உதவும் கத்திபோன்ற மரத்தாலான அலகு.

cream'-wove, *a.* பாலேட்டு நிறமுள்ளதாக நெய்யப்பட்ட.

cream'y, *a.* பாலேடு போன்ற; பாலேடு நிறைந்துள்ள; பாலேடு போல் படருகின்ற.

crease [1], *n.* மடிப்புவரை, மடிப்பதால் ஏற்படும் தடம்; மட்டைப் பந்தாட்டத்தில் ஆட்டக்காரரிடையே வரம்பு குறிக்கும் கோடு; *v.* மடித்து அடையாளம் செய்; கோடிட்டு வரம்பிடு; வரைபடிய மடிப்புறு.

crease [2], *n.* = creese.

cre'asote, *n.*, *v.* = creosote.

creas'y, *a.* மடிப்புக்குறிகள் நிறைந்த.

create', *v.* படை, உளதாக்கு, வெறும்பாழிலிருந்து தோற்றுவி; உருவாக்கு, இயற்று; புதிது ஆக்கு; கற்பனையால் தோற்றுவி; புதிது திட்டமிடு; புத்துரு அளி, புதுப்பண் பூட்டு, புதிய இயல்பு வழங்கு; பிறப்பி, மரபு உண்டு பண்ணு; முன்பு நடிக்கப்படாத நடிப்புப் பகுதியை முதல் தடவையாக நடி.

cre'atine, *n.* சதையின் சாற்றில் காணப்படும் உயிர்ப் பொருள் மூலக்கூறு, முதுகெலும்புள்ளவற்றுக்குரிய வரி நிலைத்தசையின் நிலையான தனிச் சிறப்புக் கூறு.

crea'tion, *n.* படைத்தல், ஆக்கல்; உலகப் படைப்பு; படைப்புப்பொருள்; படைப்புத் தொகுதி; படைக்கப்பட்ட உலகம்; அண்டம்; பட்டம்-பதவியளிப்பு; கற்பனைப் படைப்பாற்றல்; தொழில்-நடிப்புத்துறைகளில் புதுமைக் கற்பனையாற்றல்; தனிப்பட்ட திட்ட அமைப்புடைய ஆடை.

crea'tionism, *n.* தனித்தனிப் படைப்புக் கொள்கை, ஒவ் வொருவர் பிறப்பிலும் கடவுள் ஆன்மாவை உடனுக்குடனே தோற்றுவிக்கிறார் என்னும் கொள்கை; உயிர் வகையும்-உலகப் பொருளும் மலர்ச்சியாலன்று தனிச்சிறப்புப் படைப் பினாலேயே ஆவதென்று கருதும் கோட்பாடு.

crea'tive, *a.* படைக்கும் திறனுள்ள; புதிது ஆக்கும் ஆற்ற லுடைய; படைக்கிற, தோற்றுவிக்கிற.

crea'tor, *n.* படைப்பவர்; கடவுள்; தோற்றுவிப்பவர், ஆக்கு வோர்; *fem.* creat'ress, creat'rix; (தொ.) The Creator, பரம்பொருள், கடவுள்.

cre'atural, crea'turely, *a.* வாழும் உயிரினம் சார்ந்த; உயிரின வாழ்க்கைக்குரிய.

crea'ture, *n.* படைப்புயிர், உயிரினம்; கைப்பாவை, கைப் படைப்பு; சார்பாளர்; விரும்புபவரைக் குறிப்பிடும் சொல்; வெறுப்பவரைக் குறிப்பிடும் சொல்; (தொ.) creature comforts, அடிப்படை உடல் தேவைப் பொருள்கள், உணவு-இன் தேறல் முதலிய பொருள்கள்.

creche, *n.* குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொது நிறு வனம், குழந்தை வளர்ப்புப் பண்ணை.

cred'ence, *n.* நம்புதல்; நம்பிக்கை, நம்புதல் பெறும் நிலை; திருக்கோயிலில் முந்திரித் தேறலும்-ரொட்டியும் வைக்கப்படு வதற்குரிய பலிபீடத்திற்கு முன்னுள்ள சிறு மேசை; திருக் கோயில்களில் புனித கலங்களைக் கழுவிய நீர் வெளிச் செல் லும் வழிக்கு மேலுள்ள அடுக்கு மேடை.

creden'dum, *n.* நம்பவேண்டிய பொருள்; சமயக்கடைப் பிடிக்குரிய செய்தி; *pl.* creden'da.

cre'dent, *a.* நம்பத்தகுந்த; எதையும் நம்புகிற, எளிதில் நம்பும் இயல்புடைய.

creden'tial, *n.* நம்பிக்கையூட்டுவதற்குரிய ஆதாரச் சான்று, *a.* நம்பிக்கைக்குரிய சான்று அளிக்கிற.

creden'tials, *n. pl.* அறிமுகச் சான்றுக் கடிதங்கள்.

cred'ible, *a.* நம்பிக்கைக்குரிய, நம்பத்தக்க.

cred'it, *n.* நம்பிக்கை; தகுதிக்குரிய மதிப்பு, பாராட்டு; நன்மதிப்பு; நன்மதிப்பின் விளைவான செல்வாக்கு; நற்பெயர்; புகழ்; மேன்மை; சிறப்பளிப்பவர்; சிறப்பளிப்பது; மேம்பாடு, தனிச்சிறப்பு; நன்னடத்தை; கடன் பொறுப்பில் விற்பனை; கடன் மதிப்பு; கடன் தவணைச்சலுகை; பணப் பொறுப்பு நிறைவேற்றுவதற்கு அளிக்கப்பட்ட காலத் தவணை; கணக்கேட்டின் வரவினப்பகுதி; சிறு செலவினங்களுக்கு வரையறுத்து அளிக்கப்பட்ட மொத்தத் தொகை, பொறுப்பீட்டுத் தொகை; சலுகைக் கடன் மதிப்பெல்லை; அமெரிக்கப் பள்ளி-கல்லூரிகளில் தேறுதல் சான்று பெறுதற்கு நிறைவேற்றவேண்டிய பயிற்சிக் கூறுகளின் திட்ட வகுப்பு; ப. நம்பு; நம்பிக்கை கொள்; சலுகையளி, கடன் தவணை கொடு, பணம் செலுத்தத் தவணை வழங்கு; கணக்கேட்டின் வரவினத்தில் பதிவு செய்; மற்றொருவர் கணக்கில் வரவினநோக்கி ஒதுக்கி வை; மதித்து ஏற்றுக்கொள், நம்பி ஒப்புக்கொள்; (தொ.) credit titles, படக்காட்சியின்போது பட எடுப்பில் நடிகரல்லாத பிற கலைத் தொழிலாளர்க்குரிய பங்கை மதித்து வெளிப்பட அறிவித்தல்.

cred'itable, *a.* நம்பத்தகுந்த, நம்பிக்கைக்குரிய; பாராட்டத்தக்க, மதிக்கத்தக்க, நன்மதிப்புத் தருகிற.

cred'itor, *n.* கடன் கொடுத்தவர், பற்றாளர்; கணக்காண்மையில் கொடுத்தவர் பக்கக் கணக்குக் கூறு, வலதுபுறக் கூறு.

cred'o, *n.* சமயப்பற்றுக்குரிய கோட்பாடு; திருக்கோயில் வழிபாட்டில் அமைக்கப்பட்ட கோட்பாட்டு வாசக இசை அமைப்பு; *pl.* cred'os.

credul'ity, *n.* ஏமாளித்தனம், எதையும் எளிதில் நம்புகிற குணம், தக்க சான்று இல்லாமல் நம்புகிற இயல்பு.

cred'ulous, *a.* எளிதாக நம்புகிற; தக்க ஆதாரமில்லாமல் நம்பும் இயல்புடைய; ஐயப்படாத.

creed, *n.* திருமுறைக் கோட்பாடு, முறைப்பட்ட சமயக் கோட்பாடு; கிறித்தவ சமயக் கோட்பாட்டின் முறையான சுருக்க விளக்கத் தொகுப்பு.

Creed, *n.* பிரடெரிக் ஜார்ஜ் க்ரீட் (Frederick George Creed 1871-1957) என்பவரால் கண்டு நிறுவப்பட்ட தொலைக்காட்சி வகை.

creek, *n.* கழி, கடற்கூம்பு; வேலிக்கழிமுகம்; ஆற்றுக்கால், வங்கம்; சிறு துறைமுகம்; ஆற்றுப் புகுமுகம்; ஆற்று வளைவு; மலைகளுக்கிடையிலுள்ள சமவெளி.

creek'y, *a.* கழிகள் நிறைந்த; வளைந்து செல்கிற.

creel, *n.* மீன் பிடிப்போரின் பெரிய பிரப்பங்கூடை.

creep, *n.* நகர்வு, ஊர்வு; நடுக்கம், புல்லரிப்பு, அவல அச்சம்; புகையூர்திப் பாலத்தின் தாழ் வளைவு; வேலியின் இடைவெளி; சந்து, முடுக்கு; கலஞ்சூழ்ந்த நீர்மப் படிக நுரைப்பு; (மண்.) வானிலை மாற்றத்தால் ஏற்படும் பாறை நகர்வு; ப. நகர்ந்து செல், ஊர்ந்து இயங்கு; பதுங்கிச் செல், அஞ்சி அஞ்சி முன்னேறு; மெல்ல மெல்ல இடம் பெயர்; பையவந்து புகு; கொடியாகப் படர், சுவர்மீது படர்ந்து பரவு; கெஞ்சு; நயந்து சலுகை பெறு; தன்மையிழந்து வாழ், தன் மதிப்பிழந்து நட; ஊருதலுறு; புல்லரிப்புறு; நடுக்குறு; அருவருப்புறு; (கப்.) நீரடிக் கொடியுடன் இழுத்துச் செல்; (தொ.) flesh creeps, அச்சத்தாலோ அருவருப்புணர்ச்சியாலோ உடலில் ஊருதலுணர்ச்சி பெறு.

creep'er, *n.* நகருபவர், ஊருபவர்; நகருவது, ஊருவது; படர்கொடி; படர் கொடி வகை; கடலடித் தூர் வாங்கும் பாதாளக் கரண்டி; மரங்களின்மேல் ஏறும் சிறு பறவை வகை; இடையருதியங்கு சங்கிலி, இடையருது பொருள் கலைக் கொண்டு செல்லும் சங்கிலி வட்ட அமைவு.

creep'ered, *a.* கொடி படர்ந்து மூடியுள்ள.

creep'-hole, *n.* ஒளிந்துகொள்வதற்கான வளை; மறைவழி வகை; வாதத்தில் தட்டிக்கழிப்பு முறை.

creep'ie, *n.* தாழ்வான முக்காலி, கோக்காலி; தற்கழிவிரக்கத்துக்குரிய இருக்கை, தன்னெறுப்புச் சின்னம்.

creep'ing, *a.* ஊர்ந்து செல்கிற; படர்கிற; ஊருகிற; ஊருதலுணர்ச்சியுடைய; (தொ.) creeping barrage, முன்னேறும் படையணியுடன் முன்னேறிக்கொண்டே செல்லும் படை முகப் பாதுகாப்புத் தடை நடவடிக்கைப் பரப்பு; creeping Jenny, படர்கொடி வகை.

creep'-mouse, *a.* அஞ்சிப் பின்னடைகிற; தயக்கங்கொண்ட.

creeps, *n. pl.* (பே-வ.) நடுக்கம், அவல அச்சம், புல்லரிப்பு; அச்சமோ அருவருப்போ காரணமான உடலூருதலுணர்ச்சி.

creep'y, *a.* புல்லரிப்புணர்ச்சியுள்ள; புல்லரிப்பு உண்டுபண்ணுகிற; புல்லரிப்புக் கொள்ளும் இயல்புள்ள.

creese, *n.* வளைபாம்பு போன்ற வளைநெளிவுள்ள அலகினையுடைய மலேயா நாட்டுக் குத்துவாள் வகை.

cremate', ப. எரி; பிணம் சுடு.

crema'tion, *n.* பிணம் எரித்தல், எரியூட்டு விழா.

crema'tionist, *n.* பிணங்களை எரித்தலே நன்றெனும் கோட்பாட்டாளர்.

cremat'or, *n.* பிணம் சுடுபவர்; குப்பை கூளங்களை எரிப்பவர்; பிணங்களை எரிக்கும் கருவி; குப்பை கூளங்களை எரிப்பதற்கான எரிபொறி.

cremator'ium, *n.* சுடுகாடு.

crem'atory, *n.* சுடுகாடு; *a.* பிணம் எரிப்பதற்குரிய.

creme, (பிர.) *n.* பாலேடு; பாலேடுள்ள பொருள்கள்; (தொ.) *creme de la creme*, முதல் தரத்தில் முதன்மை, பொறுக்கி எடுத்தவற்றுள் பொறுக்கித் தேர்ந்தது; *creme de menthe*, மணம் ஊட்டப்பெற்ற இன்தேறல் வகை.

cremon'a, *n.* இத்தாலியிலுள்ள கிரிமோனாவில் (Cremona) செய்யப்படும் உயர்வகை நரப்பிசைக் கருவி; இசைக்கருவி ஆணியில் அழுத்து கட்டை.

cre'na, *n.* சிறு வெட்டுவாய்; பல்.

cren'ate, cren'ated, *a.* (தாவ., வில.) பல் விளிம்பினையுடைய.

cren'ature, *n.* வளைவான பல் விளிம்புடைமை.

cren'el, *n.* (க-க.) நின்று எய்வதற்குரிய அரண்மதிலின் மேலுள்ள இடைவெளி; ப. இடைவெளியிட்டு அமை.

cren'elate, cren'ellate, *a.* அரண் மதில் வகையில் இடைவெளிகளிட்டமைக்கப்பட்ட; புழைவாய்கள் அமைந்த; ப. இடைவெளிகளிட்டு அரண்மதிலமை.

cren'ellated, *a.* அரண்மதில் வகையில் இடைவெளிகளிட்ட; புழை வாய்கள் அமைக்கப்பட்ட.

crenelle', *n.* = crenel.

cren'ulate, cren'ulated, *a.* வெட்டுவாய்களுள்ள, அரம் போன்ற நுண் பல் விளிம்புடைய.

cre'ole, *n.* மேற்கிந்தியத் தீவுகள்-மோரீசு (Mauritius) முதலிய நாடுகளில் குடியேறிய ஐரோப்பியர் அல்லது நீகிரோவர் அல்லது அவர்தம் கால்வழியினர்; அமெரிக்காவில் பிறந்த நீகிரோவர்; *a.* மேற்கிந்தியத் தீவுகள்-மோரீசு முதலிய நாடுகளில் குடியேறிய ஐரோப்பியரின் அல்லது நீகிரோவரின் கால்வழியினரான; விலங்குகள் முதலியன வற்றின் வகையில் மேற்கிந்தியத் தீவுகள் முதலிய நாடுகளின் சூழலுடன் இணக்குவிக்கப்பட்ட.

cre'osote, *n.* கீலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் வடிவான ஆற்றல் வாய்ந்த நச்சரி; வாணிகத்துறைக் கரியகக் காடி; ப. மரக்கீலிலிருந்து வடித்திறக்கப்படும் நெகிழ்ச்சிப் பொருள் கொண்டு பக்குவப்படுத்து.

cre'osote-plant, *n.* கீலெண்ணெய் மணமுள்ள அமெரிக்கப் புதர் வகை.

crepe, (பிர.) *n.* சுருக்கங்களுள்ள மெல்லிய துணி; ப. மயிர் போலச் சுருள்வி; (தொ.) *crepe de Chine*, சுருக்கங்களுள்ள மெல்லிய பட்டுத்துணி; crepe paper, சுருக்கங்களுள்ள மெல்லிய காகிதம்; crepe rubber, புதைமிதியடி அடிப்பகுதியாகப் பயன்படும் நீடித்துழைக்கக்கூடிய ரப்பர்.

crepe'-soled', *a.* புதை மிதியடி வகையில் சுருக்கங்களுள்ள ரப்பர் தாள்களினுலான அடிப்பகுதியுள்ள.

crep'itate, *v.* படபடவென வெடி; வெடிப்போசை எழுப்பு; கடகடவென்று ஒலி; ஒடி, முறி; வண்டினங்கள் வகையில் அருவருப்பான நெகிழ்ச்சிப் பொருள் வெடித்துப் பீறிட வை.

crepita'tion, *n.* படபடத்தல், நெறுநெறுத்தல்; வெடிப் போசை எழுப்புதல்; (மரு.) குறுகுறு ஒலி, உடைந்த எலும்பின் இரண்டு துண்டங்கள் உராய்வதைப் போன்று மருத்துவர் ஆய்வினுல் நுரையீரல்களில் கேட்கப்படும் ஒலி வகை.

crep'oline, *n.* சுருக்கங்களுள்ள இலேசான மெல்லிய பட்டுத் துணி போன்ற ஆடைப்பொருள்.

crepon, (பிர.) *n.* சுருக்கங்களுள்ள மெல்லிய உறுதிமிக்க துணி வகை.

crept, *v.* **creep** என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

crep'uscle, *n.* மாலை அரை இருள், அந்தி அரை ஒளி.

crepus'cular, crepus'culous, *a.* அந்தி அரை ஒளி சார்ந்த; மங்கலான, விட்டுவிட்டு ஒளிர்கிற; முழுவிளக்க மற்ற, முழு அறிவொளி பெறுத; (வில.) அந்திமாலையில் தோன்றுகிற; அந்தி ஒளியில் விரைவியக்கமுடைய.

crescen'do, (இத்.) *n.* படிப்படியான ஒலிப்பெருக்கம்; படிப் படியாய் ஒலி பெருக்கிக்கொண்டு பாடவேண்டிய இசைப் பாடல்; உச்ச நிலையை நோக்கிய போக்கு; *a.* படிப்படியாய் ஒலி பெருகுகிற; *v.* படிப்படியாய் ஒலியில் பெருகு; *adv.* படிப்படியாய்ப் பெருகுகிற ஒலியுடன்.

cres'cent, *n.* வளர் மதி; வளர்பிறை வடிவம்; வளர்பிறை வடிவுடையது; துருக்கிய சுல்தானின் கொடி; துருக்கிய அரசர் சின்னம்; துருக்கிய அரசு; இஸ்லாமிய சமயம்; பிறைவடிவக் கட்டிட வரிசை; பிறைவடிவ அப்பம்; *a.* வளர்கிற, பெருகுகிற; பிறைவடிவமுள்ள.

cresc'entade, *n.* இஸ்லாமியரது சமயநெறிப்போர்.

cresc'ented, crescent'ic, *a.* பிறைபோல் அமைந்த, பிறை வடிவான.

cress, *n.* உணவுக்குதவும் காரச்சத்துள்ள இலைகளையுடைய செடி வகை.

cress'et, *n.* இருப்புச்சட்டி; தீப்பந்தம்; காட வெளிக்கு; சொக்கப்பானை உச்சி எரி கூடை; விளக்குக் கம்பத்துக்குரிய எண்ணெய்ச்சட்டி; துறைமுகத்தில் விளக்கேற்றுவதற்குரிய ஒளிப்பந்தக் கூடை.

cress'y, *a.* காரச்சத்துள்ள இலைகளையுடைய செடிகள் நிறைந்த.

crest, *n.* தலைச்சூட்டு, கொண்டை; சிகையணி இறகு, மயிர் முடி; தலைக்கவசத்தின் உச்சி; கவச முடிச்சூட்டு; மலைக் குடுமி, மலைச்சிகரம்; அலைமுகடு; உச்சி, முகடு; குதிரை முதலிய விலங்குகளின் பிடரி; மாலை-கவசம்-பட்டயங்களில் தனிச்சின்னமாக வழங்கப்படும் அணியுருச்சிலை; (உள்.) எலும்பின்மீதுள்ள வரைமுகடு; (கட்.) கேடயச் சின்னம்; *v.* கொண்டை பொருத்து; சூட்டு ஆகப் பயன்படு; முகடு அளாவு; அலைகள் வகையில் முகடெழ எழு.

crest'ed, *a.* சூட்டு உடைய; முகடாக உடைய; உச்சியிற் கொண்ட; (தாவ.) தலைச்சூட்டுபோன்ற கிளர்ந்த அமைவு இணக்கப்பட்டுள்ள.

crest'-fallen, *a.* கிளர்ச்சியிழந்த, சோர்வுள்ள; அவமதிப் படைந்த, தலைகுனிவு எய்தியுள்ள.

crest'less, *a.* சூட்டிழந்த, கொண்டை அற்ற; உயர்குடி உரிமையற்ற.

creta'ceous, *a.* சீமைச் சுண்ணும்பினுலான; சீமைச் சுண்ணும் பின் இயல்பு வாய்ந்த.

Creta'ceous, *n.* (மண்.) சீமைச்சுண்ணும்பு ஊழி; *a.* சீமைச் சுண்ணும்பு ஊழிக்குரிய.

Cre'tic, *n.* பண்டைய கிரீட் (Crete) நாட்டவர்; *a.* கிரீட் நாட்டுக்குரிய.

cre'tic, *n.* (இலக்.) இரண்டு நெடிற்சீர்களுக்கிடையில் ஒரு குறுஞ்சீர் கொண்ட வரி.

cret'ify, *v.* சீமைச் சுண்ண உப்புச்செறியவை; சீமைச் சுண்ணமாக மாற்று.

cret'in, *n.* ஆல்ப்ஸ் மலைப்பகுதிகளில் காணப்படும் அங்கக் கோணலுடைய குறையறிவு மக்கள் வகையினர்; கேடயச் சுரப்பிக் கோளாறினுல் உடல்வளர்ச்சி அறிவுவளர்ச்சி தடைப்பட்ட மனிதர்.

cret'inism, *n.* கேடயச் சுரப்பி சுரப்பாற்றலிழந்து போவது காரணமாக அங்கக் கோணல் அல்லது தடைப்பட்ட வளர்ச்சி யுடன் அறிவு மந்தம் ஏற்படும் நிலை.

cre'tism, *n.* பொய், புளுகு.

cret'onne, *n.* சலவையற்ற முரட்டு அச்சடித்த துணி வகை.

crevasse', *n.* பனிப்பாறைப் பிளவு; *v.* பனிப்பாறைகளாகப் பிளவு செய்.

crev'ice, *n.* கீறல், பிளவு, வெடிப்பு; சிறு இடைவெளி.

crew[1], *n.* படகோட்டிகளின் தொகுதி; கப்பலோட்டிகளின் தொகுதி; கும்பல், கூட்டம்; (தொ.) crew cut, கடலோடி களின் மயிர் ஒப்பணையில் குறுந்தறிப்புப் பாணி.

crew[2], *v.* **crow** என்பதன் இறந்தகால வடிவம்.

crew'el, *n.* திரைச் சித்திர வேலைக்குரிய முறுக்கப்பட்ட மெல்லிய கம்பிளி நூல்; பின்னல் சித்திர வேலைப்பாட்டுக் குரிய கம்பிளி இழை; முறுக்கப்பட்ட மெல்லிய கம்பிளி நூலைக்கொண்டு துணிமீது செய்யப்படும் சித்திர வேலை; *v.* முறுக்கப்பட்ட மெல்லிய கம்பிளி நூலைக்கொண்டு துணி மீது சித்திர வேலை செய்.

crew'man, *n.* பணிமக்கள் குழுவில் ஒருவர்.

crib, *n.* மாட்டுத்தொழு; தீவன அழி அடைப்பு, தீனித் தொட்டி; கூலப்பெட்டி; உப்புக்குடுவை; குப்பைத் தொட்டி; மட்பாண்ட முதலியவற்றுக்கான கூடை; மீன் கூடை; தொட்டில்; சிறுஅறை; குடில், குச்சு வீடு; இடுக்கமான இடம், சிறு அடைப்பு; மணற்பாங்கான இடத்தில் அணை கடைக்கால்களுக்கு இடையே கல்-மண்ணிட்டு நிரப்புவதற் குரிய மரத்தாலான பணிச்சட்டம்; சுரங்க வழியமைப்பு ஆதாரப் பணிச்சட்டம்; சிறு திருட்டு; திருடிய சிறு பொருள்; நூற் கருத்துத் திருட்டு; திருட்டு ஏட்டு வெளியீடு; மாணவர் திருட்டுப் பாடக்குறிப்பு; மறைமொழி பெயர்ப்பு; சீட்டாட்ட வகையில் ஆட்டக்காரர் பயன்படுத்தவல்ல கழி சீட்டு; *v.* கொட்டிலில் தீவனமிடு; தொட்டியில் இடு; கூடையில் வை; தொட்டிலில் கிடத்து; இடுக்கமான இடத்தில் அடைத்து வை; சிறு திருட்டுச் செய்; கருத்துத் திருடு; உரிமையின்றி வெளியிடு; இசைவின்றிப் படிசெய்.

cribb'age, *n.* நால்வர் வரை ஆடும் சீட்டாட்ட வகை.

cribb'age-board, *n.* சீட்டாட்ட வகையில் எடுத்த எண்ணிக்கை குறித்த முனைகள் செருகுவதற்கான துளை களுடன் கூடிய பலகை.

crib'-bit'ing, *n.* தீனித்தொட்டியைக் கடித்து மூச்சினை வேகமாக உள்ளுக்கு வாங்கும் சில குதிரைகளுக்குரிய கெட்ட பழக்கம்.

crib'riform, *a.* (உள்., தாவ.) சல்லடை போல் சிறு துளைகளுள்ள.

crib'-work, *n.* குறுக்கு மரத்துண்டுகளாலான பணிச்சட்டம்.

crick, *n.* கழுத்துச் சுளுக்கு; முதுகுப் பிடிப்பு; *v.* கழுத்துச் சுளுக்குண்டாக்கு; முதுகுப் பிடிப்புக் கொள்ளுவி.

crick'et[1], *n.* சிள் வண்டு, சுவர்க்கோழி; வெட்டுக்கிளியினப் பூச்சி.

crick'et[2], *n.* மரப்பந்தாட்டம்; (பே-வ.) நெறிமுறை திறம் பாத ஒன்று; பெருந்தன்மை; *v.* மரப்பந்தாட்டம் ஆடு.

crick'et[3], *n.* மணை, தாழ்வான கோக்காலி.

crick'eter, *n.* மரப்பந்தாட்டக்காரர்.

cric'oid, *n.* (உள்.) குரல்வளைக் குருத்தெலும்பு; *a.* மோதிர வடிவமுள்ள.

cried, *v.* **cry** என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

cri'er, *n.* அழுபவர், கூச்சலிடுபவர்; முரசறைவோர்.

crime, *n.* குற்றம், சட்டப்படி தண்டிக்கப்படத்தக்க செயல்; குற்றச் செயல்களின் தொகுதி; குற்றத்துறை; தீச்செயல், பழி, பாவம்; *v.* படைத்துறைக் குற்றம் செய்தாரெனச் சாட்டு, படைத்துறைக் குற்றத் தீர்ப்பளி.

crime'ful, *a.* குற்றமுடைய.

crime'less, *a.* குற்றமற்ற, தீங்கற்ற.

crime passionel, (பிர.) *n.* புலத்தல் காரணமாகச் செய்யப்படும் குற்றம்.

crime'-sheet, *n.* படைவீரர் செய்த குற்றங்களின் பதிவுப் பட்டியல்.

crim'inal, *n.* குற்றம் செய்தவர், குற்றவாளி; *a.* குற்ற இயல்புள்ள; குற்றத்தொடர்பான: குற்றத் தண்டனைக்குரிய; சட்டத்தை மீறுகிற; (தொ.) criminal connexion, criminal conversation, கூடாவொழுக்கம், பிறர்மனை நயத்தல்.

crim'inalist, *n.* குற்றத்தொடர்பான சட்ட வல்லுநர்.

criminal'ity, *n.* குற்றப் பழியுடைமை.

crim'inate, *v.* குற்றம் சாட்டு; கண்டி; குற்றவாளியென எண்பி.

crimina'tion, *n.* குற்றம் சாட்டல்; குற்றச்சாட்டு, குற்ற வாளியென எண்பித்தல்.

crim'inative, **crim'inatory**, *a.* குற்றச்சாட்டுக்கு வழி வகுக்கிற.

criminol'ogy, *n.* குற்றவியல் நூல், குற்றம்-குற்றவாளிகள் பற்றிக்கூறும் மானிட நூல் பிரிவு.

crim'inous, *a.* குற்றம் செய்திருக்கிற.

crimp [1], *n.* படைக்கு வலையிட்டு ஆள் பிடிப்பவர்; கப்பலோட்டியாக வலையிட்டு ஆள் பிடிப்பவர்; *v.* படைக்கு ஆள் பிடி; கப்பலோட்டியாக ஆள்சேர்.

cul'tured, *a.* பண்பட்ட; கல்வியால் மேம்பட்ட; நாகரிக நயமுள்ள, மேன்மையாக்கப்பட்ட.

cult'us, *n.* சமயக் கொள்கை அமைப்பு; கோட்பாடு; வழி பாடு; செயற்கைப் பற்றுவெறி.

cul'ver, *n.* மாடப்புறு வகை.

cul'verin, *n.* (வர.) 18 பவுண்டு குண்டு வெடிக்கும் நீளமான பழைய பீரங்கி வகை; சிறு வெடிகலத் தொகுதி.

cul'ver-key, *n.* காட்டுமலர்ச் செடிவகை; தேக்கு இன மரத் தின் இறகுடைய பழவகை.

cul'vert, *n.* பாலம்; கால்வாயின் கீழ்ச்செல்லும் மதகு; மின் கம்பி வடத்துக்குரிய நெறி.

cul'vertage, *n.* பண்ணையாளை அடிமையாகும்படி இழிவு படுத்துதல்.

cum, (ல.) *prep.* உடனுக, கூட, உடன்கலந்து; (தொ.) *cum dividend*, தரப்படவிருக்கும் ஈதியப்பங்குடன் கூட; *cum grano, cum grano salis*, முன் எச்சரிக்கையுடன், நன்கு ஆர்ந்தமர்ந்து சிந்தித்து.

cum'ber, *n.* வீண்சுமை; வில்லங்கம்; தடை, தொந்தரவு; *v.* வீண்சுமையாயிரு; குறுக்கிடு; வழியடை, தடங்கலாயிரு, முட்டுக்கட்டை இடு.

cum'bered, *a.* தடைப்படுத்தப்பட்ட, கற்கட்டுண்ட, வில்லங்கப்பட்ட.

cum'ber-ground, *n.* பயனற்ற பொருள்.

cum'berless, *a.* தடையில்லாத, இடையூறற்ற, வில்லங்க மற்ற; பளுவில்லாத.

cum'bersome, *a.* பெரும் பளுவான, இடைஞ்சலான, எளிதில் கையாள முடியாத, வாக்குப்போக்குக் கெட்ட.

cum'brance, *n.* வில்லங்கம், தொந்தரவு, சுமை, தடை.

cum'brous, *a.* பெருஞ்சுமையான, முட்டுக்கட்டையாயுள்ள; தடைப் படுத்துகின்ற; எளிதில் கையாள முடியாத, இசைவு கெட்ட.

cum'in, *n.* சீரகச்செடி.

cumm'er, *n.* பெண், சிறுமி; வாயாடி; தோழி, துணைவி.

cumm'erbund, *n.* இடைக்கச்சை, அரைப்பட்டிகை.

cum'min, *n.* = **cumin.**

cum'quat, *n.* ஊறுகாய்க்குரிய சிறு கிச்சிலிப்பழ வகை.

cum'shaw, *n.* நன்கொடை, சிறு கையுறை, சிறு கைக்கூலி.

cum'ulate, *a.* ஒன்றுகக் குவிக்கப்பட்ட, திரளாகச் சேர்க்கப் பட்ட; *v.* திரளாகச்சேர்; ஒன்றுகக் குவி, அடுக்கு; படிப்படியாகச் சேகரி.

cum'ulated, *a.* = **cumulate.**

cumula'tion, *n.* ஒன்றுதிரட்டல்; குவித்தல்; திரட்சி; குவிப்பு.

cum'ulative, *a.* அடுக்கடுக்காகச் சேர்க்கப்பட்டு வளர்கிற, படிப்படியாகத் திரண்டு வளர்கிற; (தொ.) cumulative vote, வேட்பாளர் அனைவர்க்குரிய வாக்குகளையும் வாக்காளர் ஒரு வருக்கே அளிக்க இடந்தரும் தேர்தல் முறை.

cu'mulo-stra'tus, *n.* திரள்குவிவும் படியடுக்கும் கலந்த நிலையிலுள்ள முகிற்படிவம்.

cum'ulus, *n.* திரள் குவியல், திரளாகக் குவிந்து கறுத்த அடித்தளம் கொண்ட முகிற்படிவம்.

cu'neal, cu'neate, *a.* ஆப்பு வடிவமுடைய.

cuneat'ic, *a.* ஆப்பு வடிவுடைய.

cun'eiform, *n.* ஹிட்டைட் (Hittite) பாபிலோனிய (Babylonian) அசிரிய (Assyrian) பாரசீக (Persian) மக்களின் ஆப்பு வடிவமுள்ள எழுத்துமுறை; *a.* எழுத் துக்கள் வகையில் ஆப்பு வடிவமுள்ள.

cunette', *n.* அகழியின் நடுவூடான நீர்வாரிக் கால்வாய்.

cunn'er, *n.* அமெரிக்க மீன்வகை.

cunn'ing, *n.* சூழ்ச்சி, தந்திரம்; வஞ்சகம்; திறமை; கைத் திறம்; அறிவு; *a.* சூழ்ச்சித் திறமுடைய, தந்திரமுடைய; இரண்டகமுடைய, வஞ்சகமான; திறமையுடைய, கைத்திற மிக்க; அறிவார்ந்த.

cunn'ingness, *n.* தந்திரமுள்ள தன்மை; சூழ்ச்சிக் குணம், வஞ்சகக் குணம்; சூதுள்ள தன்மை.

cup, *n.* குடிகலம், கிண்ணம், குவளை; பரிசுக்கலம்; குழிவு, பள்ளம்; கிண்ணம் போன்ற அமைவு, குழிவுடைய பகுதி; குவளை நிறை அளவு; கிண்ண நீர்மம், குடிகலத்திலுள்ள பொருள்; குடிகலவை; ஊழின் பங்கு, வரற்பாலது; இன்ப அளவு; துன்ப அளவு; *v.* கிண்ணம் போலக் குழிவாக்கு; குவளையில் வை; குழிவுறிஞ்சியினுல் குருதி உறிஞ்சவை; குழிவாகு; (தொ.) in his cups, மது மயக்கத்தில், குடி வெறியில்; there's many a slip 'twixt the cup and the lip, எந்த நேரத்திலும் தவறுதல் ஏற்பட வழி உண்டு, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போகும்.

cup′-and-ball, *n.* குதைகுழிப் பொருத்து; பிணிப்புற்ற பந்தைக் கழியின் நுனியிலுள்ள குழிவில் பிடிக்கும் விளையாட்டுவகை.

cup′-and-ring′, *n.* பாறைகளில் கிண்ணவடிவைச்சுற்றி வளையங்களாக அமைந்த வரலாற்றுக்கு முற்பட்ட குறி.

cup′bear′er, *n.* விருந்தில் குடிகலம் பரிமாறுபவர்.

cupb′oard, *n.* அடுக்குப்பலகை, அடுக்களைத் தட்டுமுட்டுக்களை வைக்க உதவும் நிலையடுக்கு; *v.* சேமித்து வை; (தொ.) cry cupboard, உணவிற்காக அழு.

cup′board-faith, *n.* பொருளியல் நோக்குடைய சமயப்பற்று.

cup′board-love, *n.* பொருளியல் நோக்குடைய பற்று.

cup′-cor′al, *n.* கிண்ண வடிவமுள்ள பவளம்.

cup′el, *n.* மூசை, பொற்கொல்லர் மாற்றுப்பார்க்கப் பயன்படுத்தும் சிறுகலம்; புடைபெயர்க்கத் தக்கதாய்ப் புடமிடப் பயன்படுத்தப்படும் எறிகனல் அடுப்பு; *v.* எறிகனல் அடுப்பு மூலம் மாற்றுப்பார்.

cupella′tion, *n.* புடமிட்டு மாற்றுப்பார்ப்பதன் மூலமே உயர் உலோகங்களை மீட்டுப்பெறுதல்.

cup′ful, *n.* கிண்ண நிறையளவு; *pl.* cup′fuls.

cup′-gall, *n.* மரவகையின் இலைகளில் கிண்ண வடிவமுள்ள புடைப்புக் கோளாறு.

cup′head, *n.* பாதி உருண்டை வடிவமுள்ள தாழின் சுரைத்தலை; குமிழ் வடிவ ஆணித்தலை.

Cup′id, *n.* மேலையுலகின் வேள்மதன், ரோமரின் காதல் தெய்வம்; (தொ.) Cupid's bow, மேலுதட்டின் விளிம்பு.

cupid′inous, *a.* சின்றின்ப அவா நிரம்பிய.

cupid′ity, *n.* ஆதாய ஆர்வம், பொருட் பேரவா, பிறர் பொருள் கவரும் ஆசை.

cup-li′chen, *n.* கிண்ணம் போன்ற அமைப்புடைய காளான் வகை.

cup′man, *n.* மனத்திற்குகந்த தோழன்.

cup′-mark, *n.* வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கிண்ண வடிவான குகைப்பாறைப் பள்ள அடையாளம்.

cup′-moss, *n.* = cup-lichen.

cup′ola, *n.* தூபி மாடம், வில்மச்சு மண்டபம்; குவி மாடத்தின் உட்பகுதி; குவி மாடம்; தூங்காணை மாடவிளக்கு; துப்பாக்கி வைக்கும் பாதுகாப்பு மாடம்; இரும்பு வார்ப்படத் தொழிற் சாலை அடுப்பு; *v.* வளைமாடம் அமை, காப்புமாடம் நிறுவு.

cupp′er, *n.* விருந்தில் குடிகலம் பரிமாறும் பணியாள்; குழிவுறிஞ்சிமூலம் குருதி வாங்குபவர்.

cupp′ing, *n.* காற்று நீக்கப்பட்ட கண்ணுடிக்குமிழ் உதவியால் குருதி வாங்குதல்.

cupp′ing-glass, *n.* குருதி உறிஞ்சு கருவி, காற்று நீக்கப் பட்ட கண்ணுடிக் குமிழ்மூலம் குருதி உறிஞ்சும் அமைவு.

cup′reous, *a.* செம்புக்குரிய; செம்பு அடங்கிய; தாமிரம் போன்ற; ஓரிணைதிறத் தாமிரத்துக்குரிய; ஓரிணைதிறத் தாமிரம் அடங்கிய.

cup′ric, *a.* ஈரிணைதிறச் செம்பாலான; ஈரிணைதிறச் செம்பைச் சார்ந்த.

cuprif′erous, *a.* செம்பு விளைவிக்கின்ற, செம்பு தருகின்ற.

cu′prite, *n.* சிவந்த செம்பு கனி உலோகக்கலவை; செம்பியல் உயிரகை.

cu′pro-nick′el, *n.* செம்பும் நிக்கலும் சேர்ந்த கலவை.

cup′-shake, *n.* வெட்டு மரத்தில் இருவளையங்களினிடையே காணப்படும் பிளவு.

cup′-tie, *n.* பரிசுக்கோப்பை ஆட்டம், பரிசுக்கோப்பைப் போட்டியில் வெற்றி பெறுபவர்களைத் தீர்மானிப்பதற்கான தொடர் ஆட்டங்களில் ஒன்று.

cu′pular, **cu′pulate**, *a.* கிண்ணம் போன்ற; கிண்ண வடிவக் காய் வகைகளின் உறை சார்ந்த; தனிச் செடியாக வளரும் சிறு இலைமொட்டைச் சார்ந்த.

cup′ule, *n.* (தாவ., வில.) கிண்ண வடிவ உறுப்பு; கல்லீரல் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் செடிவகையின் இலையில் உள்ள தனிச் செடியாக வளரத்தக்க கிண்ண வடிவ மொட்டு; காய் வகைகளின் கிண்ணம் போன்ற மேலுறை.

cupulif′erous, *a.* கிண்ணவடிவ மேலுறையையுடைய கனிகளேந்திய மர இனப்பிரிவு சார்ந்த.

cur, *n.* கீழின நாய்; வெறுக்கத் தகுந்த கயவன், இழிஞன்; போக்கிரி.

cur′acao, **cur′acoa**, *n.* கசப்பு ஆரஞ்சுத் தோலினுல் மணமூட்டப்பட்ட தேறல்.

cur′acy, *n.* சிற்றூர்த் துணைமெனிலைச் சமயகுரு நிலை; துணை நிலைச் சமயகுருவின் வேலை; துணைநிலைச் சமயகுருவின் மானியம்.

cura′ra, **curar′e**, **curar′i**, *n.* அரளி போன்ற தென் அமெரிக்க செடியின் வேர் வகையிலிருந்து எடுக்கப்படும் ஊக்க அழிவு செய்யும் நஞ்சுவகை.

cur′arine, *n.* வேர்வகையிலிருந்து எடுத்து அறுவை மருத்துவத்தில் தசைகளுக்கு அயர்வு அகற்றப் பயன்படுத்தப்படும் கொடிய நச்சு மருந்து.

cur′assow, *n.* வான்கோழி இனப் பறவை.

cur′ate, *n.* ஆன்ம மருத்துவர், சிற்றூர்த் துணைநிலைச் சமயகுரு; அப்பம் வைக்கும் நிலைதாங்கி; (தொ.) curate's egg, ஒரொரு பகுதி மட்டிலும் சிறப்பாயுள்ள பொருள்.

cur′ateship, *n.* = curacy.

cur′ative, *a.* நோய் குணப்படுத்தும் இயல்புடைய; நிவாரணமான.

curat′or, *n.* பொறுப்பாளர், காப்பாளர், மேற்பார்வையாளர்; காட்சிச்சாலையின் காப்பாட்சியாளர்; பாதுகாவலராகச் சட்டப்படி நியமிக்கப்பட்டவர்; பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முதலியோரைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் உறுப்பினர்; சொத்துப் பாதுகாப்புக்குழுவின் உறுப்பினர்.

cur′atory, *a.* = curative.

curb, *n.* கடிவாள வார்; கடிவாளச் சங்கிலி; அடுப்பில் சாம்பலைத் தடுத்து வைக்கும் முன்தட்டு; தள விளிம்பு வரிசைக்கல்; விளிம்புக் கட்டை, ஓரப்பலகை; நடைபாதைக் கடை; தடை, தடைகாப்பு; குதிரைக் கால்காய்ப்பு நோய்; கிணற்றுத் தோவளம்; மரம் அல்லது இரும்பாலான வட்ட அழி; *v.* தடு, தடுத்து நிறுத்து; கடிவாளமிடு; கடிவாளமிட்டு இயக்கு.

curb′-roof, *n.* இருபக்கச் சரிவுகளிலும் மேல்பகுதிச் சாய்வை விடக் கீழ்ப்பகுதிச் சாய்வு கீழ்நோக்கிச் செங்குத்தாகச் சரிந்திருக்கும்படி அமைக்கப்பட்ட மோடு.

curb′stone, *n.* விளிம்பு வரம்புக்கல், தள ஓரங்களைப் பாதுகாக்கும் செங்குத்தான கல்.

curc′uma, *n.* மஞ்சள்; மஞ்சள் செடி.

curd, *n.* தயிர்; பாலேட்டில் பாலடைக்கட்டிப்பகுதி; தயிரைப் போன்ற பொருள்; சவுக்காரத் தொழிலில் காரக் கரைசலில் மிதக்கும் மணிச்சக்கை; மீன்வகையின் தசைச்சுளைகளுக் கிடையிலுள்ள கொழுப்புப் பொருள்.

cur′dle, *v.* தயிராகு; உறை, கெட்டியாகு.

curd′y, *a.* தயிர் போன்ற; கெட்டியான; தயிர் நிறைந்த.

cure[1], *n.* குணமடைவு; பிணிநீக்கம், நலிவு நீக்கம்; நோய் நீக்க மருந்து; பிணி நீக்கும் பொருள்; பிணிநீக்கு முறை; பண்டுவம்; மருத்துவக் கவனிப்பு; நிவாரணம், தீங்கு தவிர்க்கு முறை; தணிக்குமுறை; ஆன்மநலக்காப்பு; பதன முறை; பதனம் செய்யப்பட்ட மொத்த அளவு; வன்கந்தக ஆக்கமுறை; *v.* குணப்படுத்து; நோய் நீக்கு; பண்டுவம் செய்; குணப்படுத்துமுறை மேற்கொள்; ஆன்மநலம் செய்; பதனப்படுத்து; கந்தகத்தை வன்கந்தகமாக்கி வலிவூட்டு.

cure[2], (பிர.) *n.* பிரஞ்சுநாட்டில் வட்டார மதகுரு.

cure′-all, *n.* சஞ்சீவி, குருமருந்து, அனைத்துநோய்மருந்து, மூப்பு

cure'less, *a.* குணமாக்க முடியாத, தீராத.

cur'er, *n.* குணமாக்குபவர், நோய் நீக்குநர், மருத்துவர்.

curette', *n.* அறுவை மருத்துவரின் சுரண்டும் சிறுகருவி; *v.* இக்கருவியால் சுரண்டு.

curf'ew, *n.* இடைநிலைக் காலத்தில் நடைமுறையிலிருந்த மாலைநேர விளக்கணைப்புக் கட்டுப்பாடு; விளக்கணைப்புக் கட்டுப்பாட்டு நேரம்; பொது அறிவிப்பு மணி; மாலைநேர மணி; பொதுக்கட்டுப்பாட்டு முறை; ஊரடங்கு ஆணை.

cur'ia, *n.* ரோமரின் குலமரபுகள் மூன்றன் பத்துக் கிளைக் குலமரபுகளுள் ஒன்று; கிளைக்குலமரபின் தொழுகை இடம்; ரோமர் ஆட்சிமன்றக் கூடம்; பண்டை இத்தாலிய நகர ஆட்சிமன்றம்; மாகாண ஆட்சிமன்றம்; சட்ட முறை மன்றம்; நீதி மன்றம்; போப்பாண்டவரின் தனி ஆட்சி மன்றம்.

cu'ria reg'is, *n.* மன்னர் உயர் பேரவை; மன்னுரிமை உயர் முறைமன்றம்; பண்ணேநில முகவர் பேரவை.

cur'ing-house, *n.* பொருள்களைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் இடம்; மேலை இந்தியத் தீவுகளில் சர்க்கரையை வடித்தெடுக்கும் கட்டிடம்.

cur'io, *n.* விந்தைப்பொருள், அருங்கலைப்பொருள்; *pl.* cur'ios.

curios'ity, *n.* அறிய ஆர்வமுள்ள இயல்பு; பிறர் காரியங்களில் தலையிடுகிற குணம்; புதுமையான அல்லது அவாவைத் தூண்டுகிற பொருள்; அரும்பொருள்; வழக்கத்திற்கு மாறான பொருள்.

cur'ious, *a.* அறிய ஆர்வமுள்ள, அறிவார்வ மிக்க; கூரிய நுண்ணுணர்வுள்ள; பிறர் காரியங்களில் தலையிடுகிற; மிகு அக்கறையுள்ள; அரிய வேலைப்பாடுடைய, தனித்திறம் வாய்ந்த; அரிதான; நடை நயமற்ற; (தொ.) curious arts, மாய வித்தைகள்.

curl, *n.* சுருளுதல்; சுருள்வு; சுருண்ட நிலை; அலை வளைவு; சுழி, சுழல்; திருகு சுருள், சுருகுழல்; சுருமயிர்க்குழல், பனிச்சை; இலைகள் சுருள வைக்கும் செடிநோய் வகை; உருளைக்கிழங்குச்செடி நோய்வகை; *v.* சுருமயிர்க் குழலாக்கு; திருக்கு; சுருட்டு; வளைந்துசெல்லச் செய்; அலையதிர்வுறுத்து; சுரி, சுருண்டு சுருங்கு; நெளி; அலையதிர்வுறு; சுழி, சுழல்; பனித்தளத்தில் கற் சறுக்காட்டமாடு.

curl'er, *n.* சுருட்டுபவர்; சுருட்டுவது; சுருளுவது; பனிப் பரப்பில் வழவழப்பான கற்களை நழுவவிடும் விளையாட்டில் ஈடுபடுபவர்.

curl'ew, *n.* அழுகுரலெழுப்பும் வளைமூக்குள்ள பறவை வகை.

curl'icue, *n.* வேடிக்கை விசித்திரமான சுருள்.

curl'ing, *n.* பனிக்கல் சறுக்காட்டம், ஸ்காத்லாந்தில் பனிப்பரப்பில் வழவழப்பான கற்களை நழுவவிடும் விளையாட்டு வகை.

curl'ing-i'rons, *n. pl.* தலைமுடியைச் சுருட்டையாக்கும் இருப்புக் கருவி.

curl'ing-pins, *n.* கொண்டை ஊசி, சுருளாக்கப்பட்ட முடியைப் பாதுகாக்கும் ஊக்கு.

curl'ing-pond, *n.* பனிப்பரப்பில் வழவழப்பான கற்களை நழுவவிடும் விளையாட்டுக்குரிய நீர் நிலை.

curl'ing-stone, *n.* பனிப்பரப்பில் நழுவவிட்டு விளையாடுவதற்கான கைப்பிடியுள்ள கனத்த கல்.

curl'ing-tongs, *n. pl.* = curling-irons.

curl'-pa'per, *n.* முடியைச் சுருட்டுவதற்காக முறுக்கி முடிக்குள் செலுத்தப்பட்ட தாள்.

curl'y, *a.* சுருளுள்ள, சுருள் சுருளான, சுருள் நிறைந்த.

curl'y-greens', *n.* சுருண்ட இலைகளுள்ள கோசுக்கீரை வகை.

curmudg'eon, *n.* கஞ்சன், கருமி, உலோபி; பேராவற் காரன்; சிடுசிடுப்புடையவன்.

curmurr'ing, *n.* குமுறல்; வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல்.

curn'ey, curn'y, *a.* சிறு துணுக்குகளாகவுள்ள; சிறுமணிகளாகவுள்ள.

cu'rrach, curr'agh [1], *n.* பரிசல், ஓடம், சிறு படகு.

cu'rragh [2], *n.* தரிசான சதுப்பு நிலம்.

cu'rrant, *n.* விதையற்ற உலர்ந்த கருமுந்திரிப்பழம்.

curr'ant-bread', *n.* உலர்ந்த முந்திரிப்பழம் உள்ளீடாய் அமைந்த அப்பம்.

currant-bun', *n.* உலர்ந்த முந்திரிப்பழங்கள் நிரம்பச் சேர்க்கப்பட்ட மணமுள்ள கருநிற மெல்லப்ப வகை.

curr'ant-cake', *n.* உலர் முந்திரிப்பழம் உள்ளீடாக வைக்கப்பட்ட மென் மாவடை.

curr'ant-jell'y, *n.* உலர்ந்த சிவப்பு அல்லது கறுப்பு முந்திரிப் பழப் பாகு.

currant-loaf', *n.* = currant-bun.

curr'anty, *a.* முந்திரிப்பழங்கள் நிறைந்துள்ள.

cu'rrency, *n.* நடப்பு நாணயம், செலாவணி; செலாவணியிலுள்ள பணம், செலாவணியிலுள்ள தாள் நாணயம்; நடப்பு, நடைமுறைப் போக்கு, சுற்றோட்டம்; கருத்து நிலவரத்திலிருத்தல்; சொல் வழக்காறுடைமை; செய்தி ஊடாட்ட நிலையிலிருத்தல்; (தொ.) currency note, தாள் நாணயம்.

cu'rrent, *n.* ஒழுக்கு; நடப்பு; போக்கு; நிலவரம்; நீரோட்டம்; காற்றுவீச்சு; மின்னோட்டம்; *a.* ஓடுகிற; வழக்காற்றிலுள்ள, நிகழ்கிற; நடப்பிலுள்ள, நடைமுறைக்குரிய; நிகழ் காலத்துக்குரிய, இன்றைய; நாளது; மக்களிடையே ஊடாடுகிற, உலவுகிற, பலராலும் ஏற்கப்படுகிற, ஏற்றமைந்ததான; (தொ.) current account, நடப்புக்கணக்கு, நடப்புச் செலவினங்களுக்கான பொருளக இருப்புக் கணக்கு; pass current, உண்மையென்று ஏற்றுக்கொள்ளப்படு.

curr'ent-bedding, *n.* (மண்.) பொய்ப்படுகை.

cu'rricle, *n.* இரு சக்கரங்களும் இரு குதிரைகளுமுள்ள திறந்த வண்டி, இரதம், தேர்.

curric'ulum, *n.* பல்கலைக்கழகப் பாடத்தொகுதி; பாடத் திட்டம்; *pl.* curric'ula.

cu'rrier, *n.* பதப்படுத்தப்பட்ட தோலை நிறமூட்டி ஒழுங்கு செய்பவர்.

cur'rish, *a.* இழிந்த நாய் போன்ற; வெடுவெடுப்பான, உறுமுகிற; அற்பகுணமுள்ள; இழிந்த உணர்ச்சியுள்ள.

cu'rry [1], (த.) *n.* கறி-குழம்பு-கூட்டுவகை, துணை உணவு; *v.* கறி கூட்டு, குழம்புப்பொடி கலந்து சுவையூட்டு; துணை உணவு ஆக்கு.

cu'rry [2], *v.* தோலைத் தேய்த்து வாரு; ஒழுங்கு செய்; குதிரையைத் தேய்; அடி, பிராண்டு, கீறு; (தொ.) curry favour, தயவைப்பெறு, நல்லெண்ணத்தைப் பெறு.

cu'rry-comb, *n.* குதிரைச் சீப்பு, குதிரையைத் தேய்த்துத் துப்புரவாக்க உதவும் இரும்புக்கருவி.

curr'y-leaf, *n.* கருவேப்பிலை.

cu'rry-paste, cu'rry-pow'der, *n.* கறிகளுக்கு இடும் கூட்டு அரைப்பு.

curse, *n.* தெறுமொழி, வசைமொழி; பழிப்பாணை, சாபம்; சாப விளைவு; வெம்பழி, தீம்பு; வேதனை, படுதுயர்; சமூக விலக்கீடு, சமுதாயக் கட்டு; பழிக்கப்பட்ட பொருள்; தெய்வப் பழிப்பு; *v.* தெறுமொழி கூறு; பழிப்புக்கு ஆட்படும்படி வேண்டுதல் செய்; மீளாப்பழிக்கு உரிமைப்படுத்து; கட்டுச் செய், விலக்கீடு செய்; தெய்வம் பழி; பழிப்பின் வேதனைக்குட்படுத்து; (தொ.) curse of Scotland, சீட்டாட்டத்தில் மணி வடிவம் பொறித்த ஒன்பதாம் எண்ணுள்ள சீட்டு.

curs'ed [1], *v.* curse என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

curs'ed [2], *a.* பழிப்புரைக்கு ஆட்பட்ட; தெறுமொழியால் அழிக்கப்பட்ட; பழிப்புக்குரிய; வெறுக்கத்தக்க.

cur'sive, *a.* கையெழுத்து வகையில் எளிதாக ஓடும் போக்குடைய, நேரொழுக்கான; ஒழுகலான.

curs'or, *n.* கருவியின் சறுக்குறுப்பு ; கணிப்பளவுகோலின் கணிப்புக் கூறுக நுண்ணிழை வரையிட்ட பளிங்கியலான சறுக்குச் சட்டம்.

cursc'res, *n. pl.* ஓடும் பறவைகள்.

cursor'ial, *a.* ஓடுவதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்ட ; ஓடும் செயலுக்கேற்ற உறுப்புள்ள.

curs'ory, *a.* மேலோட்டமான ; மிகு விரைந்தியன்ற ; நன்கு ஆராயாத ; ஆழமில்லாத, மேலீடான.

curt, *a.* சுருக்கமான ; குறுகலான ; சுருக்கென்ற, மட்டுமதிப் பற்ற முறையில் வெடுக்கென்ற.

curtail', *v.* வெட்டிக்குறை, குறுகலாக்கு, சுருக்கு ; உரிமை இழக்கச்செய்.

curt'ail-step, *n.* விளிம்புகள் வட்டமாக வளைவாக்கப்பட்ட ஏணிப்படிக்கட்டின் கடைசிக் கீழ்ப்படி.

curt'ain, *n.* திரை, திரைச்சீலை ; துணியாலான மறைப்பு ; பலகணித் திரை ; படுக்கையைச் சுற்றித் தொங்கும் மூடு திரை ; ஞாயில்களின் இடைமதில் ; மேற்கூரையற்ற இடைச் சுவர் ; நாடக மறைப்புத்திரை ; தீப்பாதுக்காப்புக்கான நாடக இரும்புத்தட்டி ; திரை வீழ்ச்சி ; காட்சிமுடிவு ; அனல் கக்கும் பீரங்கிகளாலான தடைகாப்பு வேலி ; *v.* திரை மறைப்பு அமை ; திரையால் மூடு ; திரையிட்டுத் தடு ; (தொ.) bamboo curtain, காட்சியாளர்க்கும் தகவல் நாடுவோர்க்கும் நுழைந்து தொடர்புகொள்ள முடியாது தடுக்கும் சீன அல்லது ஆசியத் தடைமுறைத் திட்டம் ; behind the curtain, பொதுமக்கள் பார்வைக்கு அப்பாற்பட்ட ; draw the curtain, திரை நீக்கு ; திரை இடு ; iron curtain, இரும்புத்திரை, காட்சியாளர்களுக்கும் தகவல் நாடுவோர்க்கும் நுழைந்து தொடர்புகொள்ள முடியாது தடுக்கும் ருசிய நாட்டுத் தடை முறைத்திட்டம்.

cur'tain-call', *n.* காட்சி முடிவில் மேடையில் தோன்றும்படி அழைப்பாளரின் அழைப்பு.

cur'tain-lec'ture, *n.* தலையணைமந்திரம், பள்ளியறையில் கணவனிடம் மனைவியின் பேச்சு, மனைவியின் படுக்கையறை இடித்துரை.

curt'ain-raiser, *n.* முக்கிய நாடக ஆட்டத்திற்குமுன் நிகழ்த்தப்படும் சிறு நாடகம்.

cur'tain-speech, *n.* நடிகரோ நாடக நூலாசிரியரோ மேலாளரோ திரைக்குமுன் வந்து நின்று நிகழ்த்தும் உரை.

cur'tain-wall, *n.* இடைநிரப்புச்சுவர்.

curta'na, *n.* முடிசூட்டு விழாவில் கருணைப்பண்பின் அறிகுறியாகக் கொண்டு செல்லப்படும் முனையற்ற வாள்.

curt'ate, *a.* குறுக்கப்பட்ட ; குறைக்கப்பட்ட ; நிலவுலகம் அல்லது கதிரவனிடமிருந்து கோளுக்குள்ள தொலைவு வகையில் கோளெறிமீது படிவான.

curt'ilage, *n.* மனையளாவிய வெளிநிலம்.

curt'sey, curt'sy, *n.* வணக்கம், முழங்காலை வளைத்து பெண்கள் செய்யும் வணக்கம் ; *v.* முழங்காலைத் தாழ்த்தி வணக்கம் செய்.

cur'ule, *a.* வளைகாலுள்ள முக்காலி போன்ற ; ரோம உயர்நீதி நடுவரின் வளைநாற்காலி இருக்கைக்குரிய.

cur'vate, cur'vated, *a.* ஒழுங்காக வளைந்துள்ள, ஒழுங்காக வளைவாக்கப்பட்ட.

curv'ature, *n.* வளைவு ; தொய்வு ; நேர்க்கோட்டிலிருந்து கோடிய கோட்டம் ; தொய்வின் நேர்நிலை திறம்பிய அளவு ; வட்டத்தின் ஆர எதிர் கூற்றளவு.

curve, *n.* வளைவு ; வளைகோடு ; வளைபொருள் ; வளைவடிவம் ; வளைபரப்பு ; (க-க.) வளைமுகடு ; மாறுபாடு அல்லது இயக்கப் போக்குக் காட்டும் அளவு கட்டச் சாய்வரை ; சமநிலைக் குறிக்கோடு ; *v.* வளைவாக்கு ; வளைவாகு ; வளைந்து செல் ; வளை.

curved, *a.* வளைந்த.

curve'some, *a.* வடிவழகுடைய ; வளைவுகளையுடைய.

curvet', *n.* குதிரையின் மென் பாய்ச்சல், முன்கால்கள் முதலிலும் அவை நிலம் பாவுமுன் பின் கால்களும் ஒருங்கு தாவும் இயக்கம் ; துள்ளிக் குதித்தல், குதியாட்டம் ; *v.* துள்ளிப் பாய் ; குதித்து மகிழ்.

curvicau'date, *a.* கோணலான வாலுள்ள, வளைந்த வாலுடைய.

curvicos'tate, *a.* வளைந்த விலா எலும்புகளுள்ள.

curviden'tate, *a.* வளை பல்லுள்ள.

curvifo'liate, *a.* வளைந்த இலைகளையுடைய.

cur'viform, *a.* வளை வடிவுள்ள.

curvilin'eal, curvilin'ear, *a.* வளை கோடுகளை வரம்புகளாகக் கொண்ட ; கோணல் வரைகளைக் கொண்ட.

curviner'vate, *a.* இலைகளில் கிளைநரம்புகள் நடு நரம்பிலிருந்து பிரிவுற்று ஓரத்தை நோக்கிக் குவிந்து செல்கிற.

curviros'tral, *a.* கீழ்நோக்கி வளைந்த அலகுள்ள.

cur'vital, *a.* வளைவு சார்ந்த.

cur'vity, *n.* வளைவுநிலை.

cus'cus[1], *n.* கசகசா, ஆப்பிரிக்கத் தினைவகையின் கூலமணி.

cus'-cus[2], *n.* (வில.) மலேயாத் தீவக்கூட்டத்திலுள்ள (Malay Archipelago) பையில் குட்டிகளைக் கொண்டு செல்லும் சிறு விலங்கின வகை.

cus'cus[3], *n.* வெட்டி வேர்.

cu'sec, *n.* நொடிக்கு ஒரு கன அடி வீதம் ஓடும் நீரளவு அலகு.

cush'at, *n.* மாடப்புறு வகை.

cu'shion, *n.* மெத்தை ; திண்டு ; தலையணை ; பஞ்சு திணித்த இருக்கை ; வில் வைத்த இருக்கை ; பஞ்சடை கைத்திண்டு ; திண்டுறை ; துள்ளல் பஞ்சுறை ; செதுக்குவேலை அடித்திண்டு ; மின்பொறியின் தொய்வகக் காப்பு ; பெண்டிர் மயிர் ஒப்பனை வட்டு ; பெண்டிர் பாவாடை புடைக்கட்டு ; மேடைக் கோற்பந்தாட்ட மேசை உள்வரிக் கட்டு ; வளைவு மையக் கட்டு ; நீராவிப் பொறியில் உந்துகோலுக்கு அணையுறையாக விடப்படும் நீராவி எச்சம் ; அடிதாங்கும் தடையுறை ; பன்றி முதலிய விலங்குகளின் பிட்டப் பக்கச் சதைப்பற்று ; குதிரைக் கால்குளம்புச் சதை ; மென்பஞ்சு போன்ற தின் பண்ட வகை ; மிதிவண்டிச் சக்கரத்தின் புறவுறை ; *v.* பஞ்சுறை இணை ; மெத்தைமீது அமர்த்து ; திண்டுறைமீது வை ; மெல்லணையாய் உதவு ; மோதல் தடுத்துதவு.

cush'ioned, *a.* மெத்தையுடன் கூடிய ; பஞ்சு திணிக்கப்பட்ட ; மெல்லணை வாய்ந்த ; தடையுறை குழாய்ப் பட்டை உள்ள.

cush'ionet, *n.* சிறு மெத்தை ; சிறிய திண்டு.

cush'ion-plant, *n.* நீர் ஆவியாகப் போவதைக் குறைக்கும் முறையில் மெத்தை போன்ற வடிவமைப்புடைய செடிவகை.

cush'ion-tire, cush'ion-tyre, *n.* மிதிவண்டிச் சக்கரங்களுக்குரிய தொய்வகம் திணிக்கப்பட்ட தொய்வகக் குழாய்.

cush'iony, *a.* மெத்தை போன்ற ; திண்டு போன்ற ; மெத்தென்ற.

cusp, *n.* முனை ; முகடு ; முளை ; பிறைக் கதுப்பு, இளந் திங்களின் கொம்பு ; பற்குவடு, பற்கிளை ; (க-க.) பல் போன்ற அணி அமைவு, வளை விடை முனை ; (கண.) முனைப்பட ஒன்றுபடும் இருவளைவு, சாய்முகடு ; இலைநுனி, இலைக் கதுப்பு.

cus'pidal, cus'pidate, cus'pidated, *a.* உறுதியான முளையோடு கூடிய ; முகட்டுக்குரிய ; கதுப்பு வடிவான ; கொம்பு போன்ற.

cus'pidor, *n.* எச்சிற் படிக்கம்.

cuss, *n.* பேர்வழி.

cuss'ed, *a.* பாழாய்ப்போன, பழித்துரைக்கப்பட்ட ; பிடிமுரண்டுடைய.

cuss'edness, *n.* தன்மூப்பு.

cus'tard, *n.* முட்டையும் பாலும் சேர்ந்த தின்பண்ட வகை; முட்டையும் பாலும் சேர்ந்த இன்குழம்பு வகை.

cus'tard-apple, *n.* சீத்தாப்பழம், மேலை இந்தியக் கனி வகை.

cus'tode, *n.* = custodian.

custod'ial, *a.* பாதுகாவலனைச் சார்ந்த; சிறைகாப்பைச் சார்ந்த.

custod'ian, custod'ier, cus'tos, *n.* காவலர், பாதுகாவலர்; பொதுக்கட்டிடப் பொறுப்பாளர்; பொதுநிலையப் பொறுப்பாளர்.

cus'tody, *n.* முதுகணுண்மை, பாதுகாப்புப் பொறுப்பு; சிறை காப்பு, சிறைகாவல்; பாதுகாப்பு, கவனிப்பு.

cus'tom, *n.* வழக்கம்; சட்ட மதிப்புடைய வழக்கம்; வாடிக்கை; மரபு, செயல் வழக்காறு, அடிப்பட்ட வழக்காறு; பொருள்மீதுள்ள வரி, சுங்க வரி, தீர்வை.

cus'tomable, *a.* வழக்கமான, மரபு வழக்கான; பொதுவரி விதிக்கத்தக்க.

cus'tomary, *n.* பண்ணை வழக்கங்களின் தொகுதி; பண்ணை வழக்கங்களின் தொகுதி ஏடு; சமய சமூகத்தினரின் சடங்குப் புத்தகம்; *a.* மரபு வழக்கான, வழக்கமான; பழக்கமான, இயல்பான, வழக்கமாகக் கொண்டுள்ள; நிலவுரிமை மரபுப் பத்திரமுள்ள.

cus'tomed, *a.* பழக்கப்பட்ட; வழக்கமான, இயல்பான.

cus'tomer, *n.* வாடிக்கைக்காரர்; வாங்குபவர்.

cus'tom-house, *n.* சுங்கச் சாவடி, ஏற்றுமதி - இறக்குமதி வரி நிலையம், தீர்வை வரி பிரிக்குமிடம்.

cus'toms, *n. pl.* ஏற்றுமதி-இறக்குமதி வரி; தீர்வை பிரிக்கும் அலுவல் துறையினர்; (தொ.) customs union, சுங்க வரி நோக்கங்களுக்காக மட்டும் ஒன்று சேர்க்கப்பட்ட பல நாடுகளின் இணைப்பு; the Customs, சுங்கவரி விதிக்கும் பொதுப் பணித்துறைப் பிரிவு.

cus'tos, (ல.) *n.* பாதுகாப்பாளர், காப்பாளர்; (தொ.) *custos rotulorum*, பெயர்ப்பட்டியல்களின் காப்பாளர், மாவட்டத்தலைமை அமைதி நடுவர்.

cut, *n.* தறிப்பு, வெட்டு, கத்தரிப்பு; பிளவு, பிரிவு; அடி, வீச்சு, அறை; கத்திக்குத்து; வாள் எறிவு; சாட்டையடி; ஊறுபாடு, வெட்டுக்காயம்; துணிப்பு, துண்டிப்பு; துண்டு; வெட்டப்பட்ட துண்டுகளின் தொகுதி; வெட்டும்பாணி; உருமாதிரி, தினுசு, வகைத்தரம்; விளையாட்டுக்களில் வீச்சடி, சாய்வெறிவு; சுழற்றடி; அடியினுல் ஏற்படும் பந்தின் சுழற்சி; மரப்பந்தாட்டத்தில் பக்க வெட்டடி; கழிப்பு, குறைப்பு; பகுதிநீக்கம், அகற்றுகை; பாதைக்கான அகழ்வு, இருப்புப்பாதைக்கான வெட்டுப்பள்ளம்; நாடக அரங்கில் காட்சித்தட்டிகளை இயக்குவதற்குரிய நில இடுக்குப்பள்ளம்; குறுக்குப்பாதை; கடுஞ்செயல், கொடுமை; முகமுறிப்பு; துணி நீள அளவு வகை; இழை நீள அளவு வகை; செதுக்குச் சித்திரப்பாளம்; செதுக்குப் பாளத்திலிருந்து உருவாக்கப்பட்ட படம்; ஏ. வெட்டு, தறி, கத்தரி, அறு; புத்தக ஓரந்தறி; அறுபடு; துளை; ஊடுருவிச்செல்; பிளவுசெய், பகு, பிரிவினை செய்; துண்டுபடுத்து; அரி, அறுவடைசெய்; வெட்டி உருவாக்கு; செதுக்கு, குடை, அகழ்; குறுக்கிட்டுச் செல், குறுக்காக ஊடுருவு; சீட்டுக் கட்டினை வெட்டி எடு; வெட்டிய சீட்டினை எடுத்துக்காட்டு; பந்து விளையாட்டில் வீசியடி, சாய்த்தடி, சுழற்றியடி; நடனத்தில் கால்களை வேகமாகச் சுழற்றியாடு; சாய்வாகச் செல்; பாய், விரைந்துசெல்; ஊறுபடுத்து, காயப்படுத்து; குறை, வெட்டிக் குறுக்கு; சுருக்கு; பட எடுப்பை நிறுத்து; முகமுறிப்புச்செய், வேண்டுமென்றே வணக்கம் காட்டாது செல்; உளந்தாடு, உணர்ச்சியைத் தூண்டு; கைவிடு, ஒழி, துற, நீக்கு; விலகியிரு; விதையடி; கரண முதலியவற்றினைச் செய்து காட்டு; (தொ.) a cut above, தனி முறையில் மேம்பாடுடைய பொருள்; cut a dash, cut a figure, பகட்டாகத் தோற்றம் கொள்; cut and come again, தடையின்றி வேண்டுமளவு எடுத்துக்கொள்ளத்தக்க பெருவளம் உறு; cut and cover, பள்ள நெறி வெட்டிக் கவித்து மூடிச் சுரங்கமாக்கும் முறை செய்; cut and dried, cut and dry, முன்னேற்பாடாகச் செய்யப்பட்டுள்ள, முன்னமேயே அமைக்கப்பட்ட, நிலைப்படுத்தப்பட்ட; cut and run, விரைவாக ஓடிவிடு; cut back, செடி கொடிகளைத் தண்டினை ஒட்டிக் கத்தரி; முன்காட்சிக்குத் திரும்பிச் செல்; cut dead, கண்டு கொள்ள மறு, அடையாளம் அறியாதது போலிருந்துவிடு; cut down, தூக்கிலிடப்பட்ட பிறகு கயிற்றை வெட்டிக் கீழே இறக்கு; வெட்டி வீழ்த்து; வெட்டிக்குறை, சுருக்கு; cut in, இடையிட்டுப் பேசு; குறுக்கிடு, தடைசெய்; நடனக் கூட்டாளியைக் கவர்ந்துகொள்; தொலைபேசியின்மூலமாக மறை ஒற்றுக்கேள்; வண்டிப்போக்குவரத்து வரிசை முறையினின்று விலகி முன்வண்டி தாண்டிச் சென்று முன்னின்று தடு; குறுக்குச் சீட்டைக் கைப்பற்றி ஆட்டத்தில் இடம் பெறு; cut it fine, மட்டுமீறிய கணிப்பால் தன்னை இடர் நேர்வுக்கு உள்ளாக்கிக்கொள்; cut it out, முடிவு செய்துவிடு, விட்டுவிடு; cut it too fat, அளவு மீறிச்செய்; cut off, பிரித்துவிடு, துண்டி, வேருக்கு; அழி, முடிவுக்கு ஆளாக்கு; காலமின்றி இறக்கும்படி செய்; தலையிட்டுத் தடு; நுழைவு தடைசெய்; மரபுரிமை இழக்கச்செய்; cut off with a shilling, பெயருக்கு ஒரு வெள்ளி கொடுத்து மரபுரிமைச் செல்வம் இழக்கச்செய்; cut one's coat according to one's cloth, வரவுக்கேற்ற செலவு செய்; காலத்துக்கேற்ற கோலம் மேற்கொள்ளு, காலத்திற்கேற்றவாறு நட, சூழ்நிலையோடு ஒட்ட ஒழுகு; cut one's losses, பயனற்ற காரியத்தை ஒழித்துவிடு; cut one's stick, புறப்பட்டுச்சென்றுவிடு, விட்டுச்செல்; cut out, வெட்டி அகற்று; செயல் நிறுத்து; கையாளுவதை ஒரு முடிவுக்குக் கொண்டுவா; உருவாக்கு, முனைந்து செய்து முடி; உரிமை தள்ளுபடி செய்; விஞ்சு; வஞ்சனையால் மற்றொருவர் இடம் கைக்கொள்ளு; மந்தையிலிருந்து தனிப்படுத்து; கூட்டிலிருந்து பிரித்து வேருக்கு; கரை அணுகுமுன் தடுத்து எதிரிக் கப்பலைக் கைப்பற்று; முன்செல்வதற்காக வரிசை முறையை மீறிப் போக்குவரத்து வண்டிகளின் ஒழுங்கினின்று விலகு; cut out for, இயல்பாகப் பொருந்திய, ஒன்றற்கென்று அமைந்த; cut short, சுருக்கு, வெட்டிச் சிறிதாக்கு; குறுக்கிட்டு வாயடைக்கச் செய்; cut the teeth, பல்முளைக்கப்பெறு; cut up, குறுக அரி, துண்டுதுண்டாக்கு; கடுமையாகக் குற்றங்காண்; பகுதிகளாகப் பிரிப்பதால் நன்மை தீமை பட்டாங்கமாகப் பெறு; ஆழ்ந்த துயருட்படுத்து; cut up rough, தவருகப் புரிந்துகொள்; near cut, short cut, குறுக்கு வழி, சுருக்கு வழி.

cutan'eous, *a.* தோலைச் சார்ந்த, மெய்த்தோலைச் சார்ந்த.

cut'-away, *n.* முன்புறத்தில் வளைவாக வெட்டப்பட்ட மேல் சட்டை.

cut'back, *n.* நாடகத்தில் முன்நிகழ்ச்சிகளுக்குத் திரும்பிச் செல்லல்.

cutch'a, *a.* பக்குவமுறுத, செயல் முதிராத; செங்கல் வகையில் உலர்ந்த களிமண்ணுலான.

cutche'rry, cutch'ery, *n.* குற்றநடுவரின் முறைமன்றம்; கொலுவிலிருக்கை; பொதுநிலையம்; பண்ணை முதல்வர் மன்றம்.

cute, *a.* கூரறிவுடைய, அறிவுத் திறமிக்க; கவர்ச்சி வாய்ந்த.

cut'ey, *n.* = cutie.

cut'-glass, *n.* சக்கிமுக்கிக் கல்லை அரைத்து உருவாக்கப்பட்ட கண்ணுடிக் கலம்.

cut'icle, *n.* தோலின் மேலிடான புறத்தோல், மென்தோல்; (தாவ.) புறத்தொலி; வளிபுகா உறை, செடிகளின் மேல் தோலடுத்த மெழுகு அல்லது நெட்டி போன்ற பகுதி.

cut'ie, *n.* சுறுசுறுப்பான இளம் பெண்.

cut'is, *n.* தோலின் மேலிடான பகுதி கடந்த அகத்தோல், மெய்த்தோல்.

cut'lass, *n.* கடலோடிகள் பயன்படுத்தும் அகல் அலகுடைய வளைந்த குறுவாள்.

cut'-leaved, *a.* ஆழ்பிளவுற்ற இலைகளையுடைய.

cut'ler, *n.* கத்தி முதலிய இருப்புக் கலன்கள் செய்பவர்; இருப்புக் கருவி விற்பனையாளர்.

cut'lery, *n.* வெட்டுக் கருவிகளின் தொகுதி; இருப்புக்கருவித் தொழில்; இருப்புக் கருவி வாணிகம்.

cut'let, *n.* ஆட்டு விலா இறைச்சிக் கறி; கன்றுக்குட்டி விலா இறைச்சிக்கறி; விலா இறைச்சிக்கறி போன்ற பிற கறி.

cut'-off, *n.* வெட்டிக் குறுக்குவது; பாதை வளைவுகளில் குறுக்காக வெட்டிச் செல்லும் நேர்வழி; ஆற்றின் திருப்பத்துக்குக் குறுக்கே வெட்டப்பட்ட குறுக்குக்கால்வாய்; குறுக்கு நேர்நெறியால் அறுத்துச் செல்லப்படும் வளைவு; நீர்-நீராவி-ஒளி-மின்ஆற்றல் ஆகியவற்றின் தடைப்பொறி அமைவு; சுழல்துப்பாக்கி அடுத்தடுத்துச் சுடாதபடி தோட்டாவை நிறுத்திவிடுவதற்கான பொறியமைப்பு.

cut'purse, *n.* திருடன், முடிச்சுமாறி, அரைக்கச்சையிலுள்ள பணப்பையைக் கத்தரித்துக் களவாடுபவன்.

cutt'er, *n.* வெட்டுபவர்; வெட்டுவது, வெட்டுக்கருவி; துணி அளந்து வெட்டும் தையற்காரர்; போர்க்கப்பலைச் சேர்ந்த படகு; ஒற்றைப் பாய்மரக் கப்பல்வகை; ஆழ நீள்கலம்; வெட்டப்படக்கூடிய உயர்செங்கல் வகை; முன்வாய் வெட்டுப்பல்.

cut'throat, *n.* கொலைகாரன்; போக்கிரி, முரடன், கொடியவன்; சீட்டாட்டத்தில் மூன்றுபேர் தத்தமக்கெனத் தனிப்பட ஆடும் சீட்டாட்டவகை; திறந்த அம்பட்டக்கத்தி; *a.* கொலைகாரத்தனமான; பாழ்படுத்துகிற.

cutt'ing, *n.* பிரித்தல்; வெட்டுதல்; கூர்ங்கருவியால் செதுக்குதல்; செதுக்கிய துண்டு; வெட்டுவாய்; பிளவு; பத்திரிகைத் துண்டு; பதியம், வேரூன்றிடத்தில் பதியம் வைத்து வளர்ப்பதற்காக வெட்டப்பட்ட செடியின் கிளை; சாலை அல்லது இருப்புப் பாதைக்காக வெட்டப்பட்ட அகழ்வு.

cut'tle, *n.* கணவாய் மீன், துரத்தப்பட்டால் கறுப்பு நீர்மத்தை வெளிப்படுத்தும் சிப்பிமீன் வகை.

cutt'le-bone, *n.* பற்பொடி செய்தற்கும் உலோகங்களுக்கு மெருகிடுதற்கும் பயன்படும் கணவாய் மீனின் உள்தோடு.

cutt'y, *n.* புகைபிடிக்கும் சிறு களிமண் குழல்; தடித்த குள்ளமான சிறுமி; குறும்புக்காரி, துடுக்கான பெண்.

cutt'y-stool, *n.* ஸ்காத்லாந்து திருக்கோயில்களில் ஒழுக்கங் கெட்ட பெண்கள் ஊரார் கண்டனத்துக்காக அமர்த்துவிக்கப் படும் இருக்கை.

cut'water, *n.* தண்ணீரைக் கிழித்துச் செல்லும் கப்பலின் முன்புற முகப்பு; பாலத்தின் அலைதாங்கி முன்விளிம்பு.

cut'worm, *n.* நிலத்தளை அருகிலேயே செடிகளின் தண்டுகளை அறுக்கும அந்துப்பூச்சி இனத்தின் முட்டைப்புழுவகை.

cyan'ic, *a.* நீல நிறமான; (வேதி.) கரிய வெடியச் சேர்ம வகைக்குரிய; (தொ.) cyanic acid, (வேதி.) கரிய வெடியச் சேர்மவகையின் காடி, சயனிகக்காடி.

cy'anide, *n.* (வேதி.) கரிய வெடியச் சேர்ம வகையுடன் உலோகம் சேர்ந்த நேர்சேர்மம்; �ரு. கரிய வெடியச் சேர்ம வகையுடன் உலோகம் சேர்ந்த நேர் சேர்மத்தால் செயற்படுத்து.

cyan'ogen, *n.* (வேதி.) கரியமும் வெடியமும் கொண்ட சேர்மான வகை.

cyanom'eter, *n.* வானத்தின் அல்லது கடலின் நீல நிறத்தை அளந்து மதிப்பிடுவதற்கான கருவி.

cyanos'is, *n.* (மரு.) உயிரகம் சரிவர ஊட்டப்பெறுத குருதி சுழல்வதனால் தோல் நீல நிறமாகக் காணப்படும் நோய்வகை.

cyan'otype, *n.* நீல அச்சுப்படிமம், நீலத்தில் வெண் கோடாக உருவப் படிவுறும் நிழற்படமுறை அச்சு.

cy'cad, *n.* (தாவ.) பனைபோன்ற செடிவகை.

cyc'lamen, *n.* (தாவ.) தொடக்கத்திலேயே தோன்றும் மலர்களுக்காகவென்று பயிரிடப்படும் செடிவகை.

cy'cle, *n.* ஊழி, காலவட்டம்; திரும்பத் திரும்ப வரவல்ல பெருங்காலப் பிரிவு; முழுநிலை மாறுதல் தொகுதி, மண்டலம், முழுநிலைத் தொடர் வரிசை; சுழற்சியாக வரும் நிகழ்ச்சி; வானெறிச் சுற்றுவட்டம்; பாடல் தொகை, ஒரு பொருள் பற்றிய பாடல் தொகுதி; இருசக்கர மிதிவண்டி; முச்சக்கர மிதிவண்டி; ரு. வட்டமாகச் சுழல்; மிதிவண்டி ஏறிச்செல்.

cy'cle-car, *n.* எளிய அமைப்புடைய சிறு உந்துவண்டி.

cyc'lic, cyc'lical, *a.* மீண்டும் மீண்டும் சுழன்று வருகிற, மண்டலிக்கிற; காலவரன்முறை வட்டத்துக்குரிய; செய்யுள் தொகைநிலைத் தொடருக்குரிய; (தாவ.) மலர்கள் வகையில் வரிசைச் சுற்றுகளான அமைவுள்ள உறுப்புக்களையுடைய, வளைய அமைப்புடைய; (வேதி.) வளையத்தொகுதிகளாக அமைந்துள்ள.

cyc'list, *n.* மிதிவண்டி ஏறிச்செல்பவர்.

cy'clograph, *n.* வட்டம்-வளைவுகள் வரைவதற்கான கருவி.

cyc'loid, *n.* வட்டப்புள்ளி நெறி வளைவு, வட்டத்தின் மீதோ எல்லையிலோ உள்ளோ உள்ள புள்ளிவட்டம், நேர்வரைமீது உருளும்போது செல்லும் நெறிவட்டம்; *a.* வட்டப்புள்ளி நெறிவளைவின் வடிவான; (வில.) ஒரு சீரான விளிம்புடைய செதிள்களைக் கொண்ட.

cycloid'ian, *n.* (வில.) ஒரு சீராக மடிந்த விளிம்புள்ள செதிள்களையுடைய மீன்வகை.

cyclom'eter, *n.* வட்டைகளை அளப்பதற்கான கருவி; மிதிவண்டி ஓடிய தொலைவைப் பதிவு செய்வதற்காக அதன் சக்கரத்துடன் இணைக்கப்பட்டுள்ள அமைவு.

cyc'lone, *n.* சுழல்காற்று, சூறை, புயல், குறையளவு காற்றழுத்தமிக்க இடத்தைச் சுற்றியெழும் சிறுதிறப் பரப்பின் வன்றிறற் சூருவளி; சுழற்சியால் பொருள் பிரித்தெடுக்கும் அமைவு, சக்கரச்சுளகு.

cyclopaed'ia, *n.* பல்பொருட்களஞ்சியம்.

Cyclope'an, *a.* கிரேக்க புராணக் கதைக்குரிய ஒற்றை நெற்றிக் கண் அரக்கனுக்குரிய; ஒற்றை நெற்றிக்கண் அரக்கன் போன்ற; மிகப்பெரிய உருவுடைய; (க-க.) செப்பமுறுப் பெருங்கற்களைக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட மிகப் பழங்காலத்தில் கட்டப்பட்ட கட்டிடப் பாணிக்குரிய.

cyclopro'pane, *n.* (வேதி.) பொதுநிலை நோவுத்தடை மயக்க மருந்தாகப் பயன்படும் நீர்க்கரிம வகை (C_3H_6).

Cyc'lops, *n.* ஒற்றை நெற்றிக்கண்ணுடைய அரக்கன்; ஒற்றைக் கண்ணுடையவர்; (வில.) முன்புறம் ஒரு கண்ணுடைய நுண்ணிய நன்னீர் நத்தையினம்.

cyclora'ma, *n.* சுற்றுவட்ட அடுக்கணிக்காட்சி, சுற்றணிக் காட்சித்தொகுதி; நாடக அரங்கிலும் திரைப்படத்திலு முள்ள வளைவான காட்சித் திரைப்பின்னணி.

cyc'lostyle, *n.* கையெழுத்துக்குப் படிகள் எடுப்பதற்கான அமைவு; ரு. கையெழுத்துப் படியெடுக்கும் அமைவினால் படிகள் எடு.

cyc'lotron, *n.* (இய.) அணுப்பிளப்பிலும் செயற்கைக் கதிரியக்க ஆக்கத்திலும் பயன்படுத்தப்படும் மின்காந்த விரை வூக்கக் கருவி.

cyg'net, *n.* அன்னப்பறவையின் குஞ்சு.

cyl'inder, *n.* வட்டுரு, நீள் உருளை, இருகோடிகளும் இடைவெட்டுப்பரப்புக்களும் வட்டமாகவோ ஒழுங்குடைய பிற வளைவாகவோ அமையும் நீள்தடி உரு; குழல்வடிவப் பொருள்; இயந்திர உருளை; அச்சியந்திர உருளை; நீராவி இயந்திரத்தின் உந்து தண்டு இயங்கும் குழல்வடிவ உருளை; தொல்பொருள் ஆய்வுத்துறையில் பாபிலோனிய (Babylonian) அசிரிய (Assyrian) கோயில்களில் காணப்படும் ஆப்புவடிவ எழுத்துக்கள் நிரம்பிய சுட்ட களிமண் உருளை; பண்டை அசிரிய மக்கள் பயன்படுத்திய கல்லுருளை முத்திரை.

cyl'inder-block, *n.* உள்வெப்பாலை உருளைகள் அடங்கி உள்ள உறை.

cyl'inder-head, *n.* உள்வெப்பாலை உருளையின் மேல்மூடிப் பகுதி.

cyl'inder-seal', *n.* பண்டைய அசீரியர்கள் (Assyrians) களிமண்மீது பொறிக்கும் முத்திரையாகப் பயன்படுத்திய உருளை வடிவக்கல்.

cylin'dric, cylin'drical, *a.* வட்டுருவான, நீள் உருளை வடிவான.

cylin'driform, *a.* நீள் உருளை வடிவத்திலுள்ள.

cylin'drite, *n.* நீள் உருளைச்சார்புடைய தகரம்-ஈயம்-நீலாஞ் சனம்-கந்தகம் ஆகியவற்றின் கலவை.

cyl'indroid, *n.* நீள் உருளைபோன்ற உரு; *a.* வட்டுருப் போன்ற.

cyl'ix, *n.* இரண்டு கைப்பிடிகளை உடைய அகன்ற பருகு கிண்ணம்.

cym'a, *n.* (க-க.) பாம்பு வளைவுடைய முகட்டுச் சிற்ப உறுப்பு; (தொ.) cyma recta, உள்வளைவில் மேலே தொடங்கும் பாம்பு வளைவுடைய முகட்டுச் சிற்ப உறுப்பு; cyma reversa, புறவளைவில் மேலே தொடங்கும் பாம்பு வளைவுடைய முகட்டுச் சிற்ப உறுப்பு.

cymar', *n.* மகளிரது தளர்த்தியான எளிய உட்சட்டை; மாவட்ட முதல்வரின் கையற்ற உட்சட்டை.

cym'bal, *n.* தாளம்.

cym'balo, cym'balon, *n.* தந்திகளுள்ள இசைக்கருவி வகை.

cym'biform, *a.* (உள்., தாவ.) படகு வடிவமுள்ள.

cymbocephal'ic, *a.* படகு வடிவமான மண்டையோட்டை உடைய.

cyme, *n.* இளந்தளிர் முளை; (தாவ.) குவிவடிவ மலர்க் கொத்து, பூங்குலை.

cy'mograph, *n.* கட்டிட உறுப்புக்களின் புறவரை பதிவு செய்வதற்கான கருவி.

Cym'ric, *a.* வேல்ஸ் (Wales) நாட்டுக்குரிய.

Cyn'ic, *n.* கலை இன்பச் செல்வங்களைக் கண்டித்து வெறுத் தொதுக்கும்படி போதித்த ஆதென்ஸ் (Athens) என்ற கிரேக்க நகரத்தில் வாழ்ந்த ஆன்டிஸ்தெனிஸ் (Antisthenes, பிறப்பு 444 கி. மு.) என்பார் நிறுவிய கோட்பாட்டுக் குழுவினர்.

cyn'ic, *n.* எரிந்து விழுபவர்; இன்பம்வெறுப்பவர், வெறுப்பு வேதாந்தி; ஒயாது குற்றங்காண்பவர்; *a.* நாய் போன்ற, சீறிவிழுகிற, சிடுசிடுப்புடைய; நன்மையை நம்பி ஏற்க மறுக்கிற.

cyn'ical, *a.* நாய்க்குணம் படைத்த, எரிந்து விழுகிற; குற்றம் நாடுகிற; நன்மையை விரும்பி ஏற்காத, நன்மையில் நம் பிக்கையற்ற.

cyn'icism, *n.* நலத்தின்கண் நாரின்மை; மனிதப்பண்பு வெறுப்பு; அழுகை வேதாந்தம், வெறுப்பு மனப்பான்மை.

Cynoceph'alus, *n.* நாய்த்தலையுடைய புராணக்கதை மனி தன்; (வில.) நாய் முகமுள்ள பெரிய குரங்கு வகை.

cynophob'ia, *n.* நாயினிடத்து அச்சம்.

cyn'osure, *n.* வடமீன்; வடமீன் உள்ளிட்ட விண்மீன்குழு; வழிகாட்டும் வான்பொருள்; கவர்ச்சிக்குரிய மையப்பொருள்; வியப்பினிய நடுவிடம்.

Cypera'ceae, *n.* (தாவ.) தாள்புல் உள்ளிட்ட வெப்ப மண் டலக் கோரைப்புல் பேரினம்.

cypera'ceous, *a.* (தாவ.) கோரைப்புல் வகைக்குரிய; கோரைப்புல் வகைச் செடிகள் போன்ற.

Cype'rus, *n.* (தாவ.) வெப்பமண்டலக் கோரைப்புல் இனம்.

cyph'er, *n.*, *v.* = cipher.

cy pres', *n.* (சட்.) ஒன்று செயற்பட முடியாதபோது ஏற்கப் படவேண்டிய அதற்கு மிக அணித்தான நிலை; *a.* மிக அணித் தான நிலையுடைய; *adv.* மிக அணித்தான நிலையில்.

cyp'ress[1], *n.* கெட்டியான கட்டையும் திண்பச்சை இலைகளு முள்ள குவிந்த காய் மரம்; இழவுத்துயர்க் குறியான இம் மரத்தின் கிளை.

cyp'ress[2], *n.* கண்ணுடி போன்ற மெல்லிய கறுப்புப்பட்டு அல்லது பருத்தித்துணி வகை; *a.* மென் கறுப்புப்பட்டு வகையாலான.

Cyp'rian, *n.* சைப்ரஸ் (Cyprus) தீவில் வாழ்பவர், சைப்ரஸ் நாட்டினர்; ஒழுக்கவரம்பற்றவர்; காமவெறிபிடித்த பெண்; *a.* சைப்ரஸ் தீவுக்குரிய; ஒழுக்கவரம்பற்ற; காமவெறி பிடித்த.

Cyp'riot, Cyp'riote, *n.* சைப்ரஸ் தீவில் வாழ்பவர், சைப் ரஸ் நாட்டினர்; *a.* சைப்ரஸ் தீவுக்குரிய.

Cyrena'ic, *n.* பண்டைய ஆப்பிரிக்காவிலிருந்த சைரீன் (Cyrene) நகரத்தைச் சேர்ந்த அரிஸ்டிப்பஸ் (Aristippus) என்னும் மெய்விளக்கியலாரின் இன்பக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவர்; *a.* பண்டைய ஆப்பிரிக்காவிலிருந்த சைரீன் நகரத்துக்குரிய; சைரீன் நகரத்தைச் சேர்ந்த அரிஸ் டிப்பஸ் என்னும் மெய்விளக்கியலாரின் இன்பக் கோட் பாட்டுக்குரிய.

Cyrill'ic, *a.* ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தூய திரு. சிரில் (St. Cyril) அமைத்த கீழைத்திருச்சபைக்குரிய ஸ்லேவானிய (Slavonic) நெடுங்கணக்கு வகைக்குரிய.

cyst, *n.* (உயி.) விலங்குகளில் அல்லது செடிகளில் சுரக்கும் நீர்மம் கொண்டுள்ள உட்குழிவான பை; (மரு.) கெட்ட நீர்-ஒட்டுயிரிகளின் முட்டைப்புழுக்கள் முதலியவை கொண் டுள்ள குடுவை; கரு-முளை முதலியவற்றை உட்கொண்டுள்ள உயிர்மம்.

cys'tic, *a.* சிறுநீர்ப்பைக்குரிய; பித்தப்பைக்குரிய; உடலில் உள்ள கழிவுநீர்ப் பைபோன்ற உறுப்பின் இயல்பு வாய்ந்த.

cystit'is, *n.* (மரு.) சிறுநீர்ப்பை அழற்சி.

cys'tocele, *n.* (மரு.) சிறுநீர்ப்பையின் சரிவு.

cyst'oscope, *n.* சிறுநீர்ப்பையின் உட்புறத்தை ஆய்வதற் கான கருவி.

cystot'omy, *n.* சிறுநீர்ப்பைக்குள் செய்யப்படும் அறுவை மருத்துவம்.

cytol'ogy, *n.* (உயி.) உயிர்மங்களைப் பற்றி ஆயும் உயிர் நூற்பிரிவு.

cytol'ysis, *n.* (உட.) உயிர்மங்களின் கூறுபாடு.

czar, *n.* ருசியப் பேரரசர்.

cza'revitch, cza'rewich, *n.* ருசியப் பேரரசரின் மகன்.

czarev'na, *n.* ருசியப் பேரரசரின் மகள்.

czarin'a, *n.* ருசியப் பேரரசரின் மனைவி, ருசியப்பேரரசி.

czarit'za, (ருசிய.) *n.* ருசியப் பேரரசி.

Czech, *n.* ஸ்லேவானிக் இனத்தின் (Slavonic) மேலைக்கிளை ஒன்றினைச் சார்ந்தவர்; ஸ்லேவானிக் மேலைக்கிளையினத்தின் மொழி; *a.* ஸ்லேவானிக் இனத்தின் மேலைக் கிளை ஒன்ற னுக்குரிய.

Częch'ic, *a.* ஸ்லேவானிக் இனத்தின் மேலைக்கிளை ஒன்றனுக்குரிய.

Czechoslov'ak, *n.* செக்கோஸ்லேவாக்கிய (Czechoslo-vakia) நாட்டவர்; *a.* செக்கோஸ்லேவாக்கிய நாட்டுக்குரிய

Da, *n.*=dad.

dab[1], *n.* மென்மையான அடி, இலேசான தட்டு; மென்மை அல்லது ஈரப்பசையுள்ள சிறு திரள், கட்டி; பஞ்சு ஒற்றுகை; கைக்குட்டையால் மெல்லிய துடைப்பு; *v.* மெல்ல அடி, மெதுவாகத் தட்டு; கொஞ்சலாகக் கொத்து; இலேசாக ஒற்று.

dab[2], *n.* தட்டையான மீன்வகை.

dabb'er, *n.* மரக்கட்டை அல்லது தகடுகளின்மீது மை அப்பும் மெல்லுறை.

dab'ble, *n.* நீரில் குதித்தாடுதல்; சிறுபிள்ளைத்தனமாகச் செய்தல்; பொழுதுபோக்கான செய்கை; *v.* நீரில் அளை; ஈரமாக்கு; சிறுதிறமாகச் செயலாற்று, சிறுபிள்ளைத்தன மாக விளையாடு.

dab'chick, *n.* நன்னீர்ப் பறவை வகை, குட்டையான இறகு களுள்ள வாலற்ற நீர்மூழ்கிப் பறவை.

dab'ster, *n.* கலைத்திறமையில்லாமல் தாறுமாறாக வண்ணங் களை அப்புபவர்.

da ca'po, (இத்.) *v.* (இசை.) முதலிலிருந்து திருப்பிப்பாடு.

dace, *n.* சிறு ஆற்று மீன்வகை.

dachs'hund, (செர்.) *n.* மிகக் குட்டையான கால்களும் நீண்ட உடலுமுள்ள நாய் வகை, வளைதோண்டி வாழும் உயி ரினத்தை வெளியே இழுக்கும் செர்மானிய நாய் வகை.

dacoit', (இ.) *n.* படைக்கலமேந்திய கொள்ளைக் கூட்டக் காரன்.

dacoit'age, **dacoit'y**, *n.* கூட்டுக்குழுவினரின் கொள்ளை, வழிப்பறி.

dac'tyl, *n.* (வில.) விரல், கால் விரல்; (யாப்.) முதலில் நீளசைகொண்ட மூவசைச்சீர்.

dactyl'ic, *n.* (யாப்.) முதலது நீண்ட மூவசைச்சீராலான பா; *a.* முதலது நீண்ட மூவசையுடைய; முதலது நீண்ட மூவசைச் சீர் சார்ந்த.

dad, *n.* (பே-வ.) தந்தை.

dad'a, *n.*=dad.

dadd'y, *n.*=dad.

dadd'y-long'legs, *n.* நீண்ட காலுள்ள ஈ வகை.

dad'o, *n.* சீலை உருவின் பீடத்தினுடைய இடைக்கட்டுப் பகுதி; மரமிழைத்த அல்லது மாற்று நிறமான அறைச் சுவரடி; *pl.* dad'oes, dad'os.

dae'dal, **dae'dale**, **Daeda'lian**, *a.* கலைத்திறம் வாய்ந்த வடிவுடைய; கலைப்பண்பின் திறன் காட்டுகின்ற; கலை நுணுக்கமிகுந்த; பல்திறக் கவர்ச்சிவாய்ந்த.

dae'mon, *n.* தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் இடைநிலை யிலுள்ள ஆவி உரு.

daemon'ic, *a.* இயற்கை கடந்த, மனித இயல்புக்கு அப்பாற் பட்ட.

daff, *v.* ஒதுக்கித்தள்ளு, அப்புறப்படுத்து, அகற்று.

daff'odil, **daffodill'y**, *n.* இளமஞ்சள் வண்ணமலர்; இள மஞ்சள் நிறம்; *a.* இளமஞ்சள் நிறமான.

daft, *a.* மடத்தனமான; மடத்துணிச்சல் மிக்க; கிறுக்கான.

dagg'er, *n.* பட்டாக்கத்தி, குத்துவாள், உடைவாள்; நீள் சிலுவையுருவ அச்சுத்துறை அடையாளக் குறி; (தொ.) at daggers drawn, போர்செய் நிலையில்; பகைமை நிலையில்; double dagger, (அச்சு.) அடிக் குறிப்பின் இரட்டைக் கூரச் சுக்குறி; அச்சுத்துறையில் மேல் கீழ் எதிர் எதிரான இரண்டு நெடுஞ்சிலுவை வடிவான அடையாளக் குறியீடு; look daggers, குத்திவிடுபவர்போல நோக்கு.

dag'o, *n.* ஸ்பெயின் நாட்டினர் (Spaniard) போர்ச்சுகீசியர் (Portuguese) அல்லது இத்தாலியர் (Italian) ஆகியோரைக் குறிக்கும் இகழ்ச்சிச்சொல்; *pl.* dag'oes.

da'goba, *n.* இலங்கைப் புத்த தூபி.

dague'rreotype, *n.* பாதரச ஆவி மூலம் நிழற்படமெடுக்கும் முறை; பாதரச ஆவி முறையில் எடுக்கப்பட்ட நிழற்படம்; *v.* பாதரச ஆவி முறையில் நிழற்படமெடு.

dah, *n.* பர்மிய (Burmese) பட்டாக்கத்தி வகை.

dahabee'ah, ***dahabi'yah***, ***dahabi'yeh***, (அரா.) *n.* நைல் (Nile) ஆற்றில் செல்லும் படகு வகை.

Dahl'ia, *n.* பன்னிற மலர்களையுடைய தோட்டச் செடிவகை.

dai, (இ.) *n.* பால் கொடுக்கும் செவிலித்தாய்.

Dail, **Dail Ei'reann**, *n.* அயர்லாந்துக் குடியரசின் (Irish Republic) மாமன்ற மக்கள் சபை.

dail'y, *n.* நாளிதழ், தினசரி; வேலைசெய்துவிட்டுப் போகும் வேலைக்காரப்பெண்; *a.* நாண்முறையான, நாள்தோறும் வரு கிற; ஒவ்வொரு நாளும் நிகழ்கிற; நாள்தவருது செய்யப் படுகிற; இடைவிடாது நிகழ்கிற; அடிக்கடி நடைபெறுகிற, பொது நிகழ்வான; *adv.* நாள்தோறும், ஒவ்வொரு நாளும், நாள் முறையாக, நாள் தவருது; அடிக்கடி.

dai'mio, (ஜப்.) *n.* முற்கால ஜப்பானிய (Japanese) நில மானிய முறையில் அரசர்கீழ் நேருரிமையுடைய உயர் குடி யினர்.

dain'ty, *n.* அருஞ்சுவையுண்டி; அருஞ்சுவைக்கூறு; அரும் பெறற்பொருள்; நறுஞ்சுவைத்துணுக்கு; *a.* தேர்ந்தெடுத்த அருஞ்சுவையுடைய, சுவை நயமிக்க; மாசுமறுவற்ற, தூநல மிக்க; நேர்த்தியான, நாகரிகம் வாய்ந்த; ஒயிலான, சிங்கார மான; இன்பத்திலிழைகிற; சுவைநயந்தெரிந்த, நுண்சுவை உணர்வுடைய; மயிரிழை வழுவிணக்கூடப் பொருத, நயத் தின் கூருணர்வுமிக்க.

dair'y, *n.* பால் பண்ணை, பால் சேமித்துப் பாலேடு-வெண் ணெய் முதலியவற்றை ஆக்கிப் பேணுமிடம்.

dais, *n.* மேடை, மேடையரங்கம்; அமரும் இடமும் மேற் கட்டியுமுள்ள மேட்டிருக்கை; உணவுக்கூடத்தில் உணவு மேடைக்குரிய மேட்டுத்தளம்; பலிமேடைமீதுள்ள மேற் கட்டி.

daisi'ed, *a.* சிறுமலர் வகைகள் பரவிக்கிடக்கிற, மலர்வகை களால் நிரப்பப்பெற்ற.

dais'y, *n.* பசும்புல்வெளிகளிலுள்ள சிறுமலர் வகை, காட்டு மலர்வகை; பாராட்டுரைப்போலி.

dais'y-chain, *n.* சிறு மென்மலர் வகையால் தொடுத்த சரம்.

dais'y-cutter, *n.* காலை அதிகம் உயர்த்தாமல் விரைந்து செல்லும் குதிரை; மரப்பந்தாட்டத்தில் நிலமட்டத்தோடு படிந்து செல்லும் பந்து.

dak, (இ.) *n.* அஞ்சல் மாற்று, பயணக்குதிரை இடைமாற்று; தூதின் இடையிடை ஆள்மாற்று; அஞ்சல் பயணம்; இந்தியாவில் அஞ்சல் துறை; (தொ.) dak bungalow, இந்தியாவில் பிரயாணிகள் தங்குமனை; dak runner, அஞ்சல் காரன்; அஞ்சல் கொண்டு செல்லும் குதிரை வீரன்.

dal, *n.* துவரை, துவரம் பருப்பு; பயற்றின வகை.

dale, *n.* பள்ளத்தாக்கு; ஆற்று இடைவெளி.

dales'man, *n.* பள்ளத்தாக்கு வாழ்நர்; பிரிட்டனின் மேலைப் பகுதியிலுள்ள ஏரி மாவட்டவாணர்.

dall'iance, *n.* களியாட்டம், நேரப்போக்கு விளையாட்டு; வீண் நேரப்போக்கு; தாமதம், காலந்தாழ்த்தல்; கொஞ்சித் தழுவி விளையாடுதல்.

dall'ier, *n.* சிறுபிள்ளைத்தனமாக நடப்பவர், களியாட்டக் காரர்; நேரத்தை வீணுக்குபவர், வீண்காலங் கடத்துபவர்.

dall'y, *v.* இன்பக்கேளிக்கையாடு; காதல் விளையாட்டு விளை யாடு, அணைத்து மகிழ்ந்தாடு; ஆடிப்பாடி மயக்கு; சிறு பிள்ளைத்தனமாக விளையாடு; சேர்மம்பற்றித்தனமாக நேரத்தை வீணுக்கு; வறிதே காலங்கடத்து; தாமதம் செய்; தட்டிக்கழி, பசப்பி ஏமாற்று, ஏய்த்து விளையாடு.

Dalma'tian, *n.* டால்மேஷிய நாய்; *a.* டால்மேஷியாவைச் (Dalmatia) சார்ந்த.

dalmat'ic, *n.* திருக்கோயில் குருமார் சிறப்பு நிகழ்ச்சிகளின் போது அணியும் திறந்த விலாப்பக்கங்களையும் அகன்ற கைப்பகுதிகளையும் உடைய நீண்ட தளர் சட்டை.

dal segn'o, *(இத்.) n.* குறிப்பிட்ட இடத்திலிருந்து திரும்பப் பாடுக என்னும் இசைத்துறைக் கட்டளை.

dalt'onism [1], *n.* நிறமயக்கம், பச்சையையும் சிவப்பையும் வேறு பிரித்தறிய இயலாக் கோளாறு நிலை.

Dal'tonism [2], *n.* டால்டன் (Dalton) கல்வித்திட்டம், மாதந் தோறும் தவணைகளாகப் பாடப்பகுதிகளைப்பிரித்துக் கொண்டு ஒவ்வொரு மாணவனும் தனித்தனியாக முறைப்படிக் கல்வி பயிலும் முறை.

dam [1], *n.* அணை ; அணையால் தடுத்துத் தேக்கப்பட்ட நீர் ; சதுப்பு நில அணைகரைப்பாதை ; *v.* அணையால் நீரைத் தேக்கு, அணையிட்டுத் தடு, தடுத்து நிறுத்து.

dam [2], *n.* தள்ளை, வெறுப்பான வழக்கில் விலங்கின் தாய் ; (தொ.) the devil and his dam, தீயசக்திகள்.

dam'age, *n.* தீங்கு; இன்னல், ஊறுபாடு ; பயன்சிதைவு, மதிப்பிழப்பு ; இழப்பின் மதிப்பு, இழப்பீடு ; *v.* துன்புறுத்து; அழிவுண்டாக்கு ; காயம் ஏற்படுத்து ; மதிப்பிழக்கச் செய், பெயர்கெடு ; (தொ.) damage feasant, சேதம் உண்டாக்கு கிற, கால்நடை விலங்குகள் வகையில் மீறிச்சென்றழிக்கிற.

dam'ages, *n. pl.* (சட்.) இழப்பீடு, மற்றொருவர் குற்றத்தாலோ கவனக் குறைவாலோ ஒருவர்க்கு ஏற்படும் இழப்பு அல்லது தீங்குக்குரிய பொருளியல் சரியீடு ; (தொ.) direct damages, general damages, ஊறுபாட்டின் உடனடி விளைவு நோக்கிய இழப்பீடு ; indirect damages, special damages, ஊறுபாட்டின் தொலைமுக விளைவு நோக்கிய இழப்பீடு.

dam'asceene, damascene', *n.* டமாஸ்கஸ் (Damascus) நகரத்தில் செய்யப்பட்ட வாள் ; செதுக்கு வேலைப்பாட்டில் உள்ளீடாகத் தங்கம்-வெள்ளி பதிக்கப்பட்ட அல்லது மேல் வண்ணப்பூச்சுடன் அணி செய்யப்பட்ட வாள் ; நீர்வரை படிவித் தணி செய்யப்பட்ட வாள் ; எஃகுமீது செதுக்கீடான உள்ளீடாகத் தங்கம்-வெள்ளி பதிக்கப்படல் ; டமாஸ்கஸ் எஃகுப் பொருளின் தோற்றம் ; முட்டைவடிவ ஊதாநிறப் பழ வகை ; *v.* எஃகுப் பொருளின் செதுக்கு வேலைப்பாட்டில் உள் ளீடாகத் தங்கம் வெள்ளி பதி; எஃகுமீது மேற்பூச்சிட்டு அணி செய்வி ; எஃகுமீது இலைவடிவ நீர்வரை படிவித்தணிசெய்.

dam'ascening, *n.* எஃகுமீது செதுக்கு வேலைப்பாட்டுடன் உள்ளீடாகத் தங்கம் அல்லது வெள்ளி பதித்து இழைத்தல் ; அலைபோன்ற நீர்க்குறிவரை அமைப்பு உண்டாக்கல்.

dam'ask, *n.* பட்டினூலோ பருத்தியாலோ மென் சணலாலோ நெசவிலேயே வடிவுருக்கள் வருவிக்கப்பட்ட துகில் வகை ; சிரியா நாட்டு டமாஸ்கஸ் நகரத்தில் செய்யப்பட்ட எஃகுப் பொருள் ; டமாஸ்கஸ் நகரத்து எஃகுப்பொருள்களின் பள பளப்பு ; ரோசா மலர்வகையின் செந்நிறம் ; *a.* ரோசா வகையின் செந்நிறமுடைய ; டமாஸ்கஸ் எஃகிலான ; டமாஸ்கஸ் எஃகுப்பொருள் போன்ற ; வடிவுரு வேலைப் பாடுடைய துகிலாலான ; வடிவுரு வேலைப்பாடுடைய துகில் போன்ற; *v.* துகிலில் நெசவு முலமே வெவ்வேறு நிறமுடைய மலர் வடிவங்கள் உருவாக்கு ; செதுக்கு வேலைப்பாட்டுடன் தங்கம் அல்லது வெள்ளியை உள்ளீடாகப் பதித்து அழகு செய் ; பூச்சு வண்ணங்களால் அணி செய் ; டமாஸ்கஸ் எஃகுப் பொருளில் உள்ளதுபோன்ற நீரொளி வரை படிவி.

damaskeen', *v.*=damascene.

dam'ask-plum, *n.* கரு ஊதா நிறமுள்ள பழவகை.

dam'ask-rose, *n.* இளஞ்சிவப்பு வண்ண ரோசா மலர் வகை.

dam'ask-steel, *n.* நீர்க்குறி அல்லது அலைபோன்ற புறத் தோற்றமுள்ள எஃகுப்பொருள்.

dame, *n.* இல்லத் தலைவி ; பேரிளம் பெண்; அன்னை, தாய் ; பெருமாட்டி ; வீரமகள் ; சீமாட்டி ; பெருமகனுரின் மனைவி ; உயர்குடி மாது ; அவிநயக்கூத்தில் வரும் இழிகுணக்கிழவி ; ஈட்டன் (Eton) கல்வி நிலையத்தின் இல்லத்தலைவர் ; திரு வாட்டி (மாதர் பெயர் முன்வரும் அடை).

dame'-school, *n.* சிறுவர்களுக்காகப் பெண்பாலராலேயே நடத்தப்படும் பள்ளிக்கூடம்.

damm'ar, *n.* ஊசியிலை மரங்களினின்று எடுக்கப்பட்டுச் சாய எண்ணெய் உருவாக்கப் பயன்படும் கெட்டிப்பிசின்.

damn, *n.* சூளுரை, சபதம் ; தெறுமொழி, வஞ்சினம், சாபம் ; மிகச் சிறு அளவு ; அறவும் சிறிய அளவு ; *v.* கண்டி ; மீளாத்தண்டனைத் தீர்ப்பளி ; நரகத்துக்கு உரியதாக்கு ; தெறுமொழி கூறு ; பழி ; சாபமிடு.

dam'nable, *a.* பழி கூறத்தக்க ; கண்டிக்கத் தகுந்த ; வெறுக்கத்தக்க ; நரகதண்டனைக்குரிய ; நிலையான தண் டனைக்குரிய ; தொந்தரவுக்குரிய, நச்சுத்தொல்லை தரக்கூடிய.

damna'tion, *n.* மீளா நரகு ; நீங்காப் பழி ; நிலையான தண் டனை ; நாடகத்தை உணர்ச்சியின்றிப் பார்த்தல் ; நாடகத் தைப் பின்வாங்குவித்தல் ; *int.* பாழாய்ப்போக !

dam'natory, *a.* நரக தண்டனை தரக்கூடிய ; வெறுப்பு உண்டாக்குகிற.

dam'ned, *a.* மீளாத் தண்டனைக்குரிய ; கடு வெறுப்புக்குரிய; மட்டற்ற ; (தொ.) the damned, நரகத்திலுள்ள உயிர்கள்.

dam'nification, *n.* பாழ்படுத்துதல், பேரழிவுக்கு ஆளாக்கு தல் ; பேரிழப்பு உண்டாக்குதல்.

dam'nify, *v.* பேரிழப்புக்காளாக்கு, அழிமதி செய்.

damn'ing, *n.* மீளாப்பழிக்கு ஆட்படுத்துதல் ; பழிப்பு ; கண் டிப்பு ; *a.* பழிகேட்டிற்கு ஆளாக்குகிற ; வெறுப்பிற்கு உட் படுத்துகிற ; கண்டனத்திற்கு ஆளாக்குகிற.

damnos'a hereditas, *(ல.) n.* ஆதாயத்தைவிடச் சுமையைத் தரும் மரபுரிமைச் செல்வம்.

Damocle'an, *a.* ஒற்றைமயிரில் தொங்கவிடப்பட்ட வாளடி யில் விருந்தளிக்கப்பட்டு டயானிஷிஸ் (Dionysius) என்ற பண்டைக் கிரேக்க அரசனுல் அரச வாழ்வின் நிலையாமைப் படிப்பினையளிக்கப்பட்ட அவ்வரசனின் இன்பத் தோழனை டமோக்ளிஸ் (Damocles) என்பவனைப் போன்ற.

Dam'ocles, *n.* டயானிஷிஸ் என்ற கிரேக்க அரசனின் இன்பத் தோழனின் பெயர்; (தொ.) the sword of Damocles, அரசவாழ்வின் நிலையாமை அறிவுறுத்த டயானிஷிஸினுல் டமோக்ளிஸுக்கு அரச விருந்தளித்து விருந்தின்போது அவன் தலைமீது ஒற்றை மயிரில் தொங்கவிடப்பட்ட வாள் ; இன்பத் திடைப் பேரிடர் நிலை.

Dam'on and Pyth'ias, *n.* கிரேக்கப் பழங்கதையில் வரும் இரு பற்றுறுதியுடைய நண்பர்கள் ; இணைபிரியாத் தோழர் கள் ; *a.* பற்றுறுதியுடைய கிரேக்கப் பழங்கதை நண்பர் களைப் போன்ற, இணைபிரியாத.

damp, *n.* ஆலி, பனி, ஈரஞ்செறிந்த காற்றுத்தெளி ; நீர்த் தோய்வு, புழுக்கம், ஈரம் ததும்புநிலை ; உணர்ச்சியின்மை, கிளர்ச்சியின்மை, சோர்வு, ஊக்கக்கேடு ; சுரங்க நச்சாவி ; *a.* பனிப்படலம் போர்த்த ; ஈரம் நிரம்பிய, ஒதம் தோய்ந்த ; *v.* சிறிது ஈரமாக்கு ; ஊக்கங்கெடு ; தடு ; எழுச்சியடக்கு ; ஆற்றல் தணிவி, வீச்சிணக்குறை.

damp'en, *v.* ஈரமாக்கு, நனை ; ஈரமாகு ; திணறடி ; திக்கு முக்காடு: தளர்த்து, எழுச்சி அடக்கு, ஊக்கங்கெடு; தளர்ச்சி யடை, மனம் சோர்வுறு, ஆர்வம் குன்று.

damp'er, *n.* ஈரமாக்குபவர் ; ஈரமாக்குவது, அஞ்சல்தலை தாள்போன்றவற்றை நனைப்பதற்குரிய சாதனம் ; ஊதைக் காற்றைத் தடுக்கும் கதவு ; நேர் காற்றைத் தளர்த்தும் கதவின் அழிப்பலகை ; ஆர்வம் கெடுப்பவர் ; எழுச்சி கெடுக் கும் பொருள் ; ஊக்கம் கெடுக்கும் ஆற்றல் ; தளர்வூட்டும் செய்தி ; அதிர்வு-சுழற்சி ஆகியவற்றின் வீச்சினைக் குறைக் கும் அமைவு ; (இசை.) இசைக்கருவிகளில் ஒலியை அடக்கும் இடுக்கி அல்லது திண்டு போன்ற பொருள் ; மின்கம்பி உருகி விடாமற் காக்கும் உலோகத் தகட்டுக் காப்புறை.

damp'-proof, *a.* ஈரம்புகாத ; ஈரக்கசிவு அல்லது ஈரக்காற்று ஊடுருவ முடியாத.

damp'y, *a.* (செய்.) ஈரமான ; ஈரக்கசிவுடைய.

dam'sel, *n.* மணமாகா அழகிய இளநங்கை, மங்கை, மடந்தை.

dam'son, *n.* சிறு கருஊதா நிறமுடைய பழவகை; (தொ.) damson cheese, சிறு கரு ஊதாநிறமுடைய பழங்களையும் சர்க்கரையையும் கொண்டு செய்யப்பட்ட கெட்டிப்பண்டம்; damson plum, பெரிய கரு ஊதாப் பழவகை.

Dan [1], *n.* பெருமதிப்புப் பட்டம்; வீரப்பெருந்தகைக்கு ஒப்பாக மடத்துறவியருக்கு வழங்கப்பட்ட பட்டம்; பெருங்கவிஞர் களுக்குக் கவிஞர்கள் அளிக்கும் பட்டம்.

dan [2], **dan buoy**, *n.* ஆழ் கடல் மீன்பிடிப்பில் அடையாளக் குறியாகப் பயன்படும் சிறு மிதவை; கடலில் கடற்கண்ணி அகற்றப்பட்ட பரப்பின் வரம்பு காட்டும் நீண்ட அடையாளக் கொடிக்கம்பம் உடைய சிறு எஃகுப் பெட்டி.

dance, *n.* நடனம்; கூத்து, ஆடல்; ஒருவர் அல்லது பலர் ஆடும் ஆட்டம்; ஆடல் போன்ற இயக்கம், துள்ளிக் குதிப்பு, அழகான அசைவு; நடன இசை; நடன இசைப்படிவம்; நடனத்திற்கான கூட்டம்; *v.* கூத்தாடு, நடனமாடு; இசைக்கேற்ப நடனமாடு; துள்ளு, குதி; ஆடவை, குதிக்கச் செய்; நடனம் நிகழ்த்து; (தொ.) dance attendance, விழிப் புடன் காத்திருந்து ஊழியம் செய்; Dance of Death, Dance of Macabre, கங்காள உருவில் சாவுக்குரிய தெய்வத்தினைத் தீட்டி அதன் ஆற்றலைப் குறிக்கும் தொடருருவக ஓவியங்கள்; dance to one's pipe or tune, ஒருவர் தலைமையைப் பின்பற்று; dance upon nothing, தூக்கிலிடப்பெறு; lead one a dance, தொடர்ந்த ஏமாற்றங்களுக்கும் குழப்பங்களுக்கும் உட்படுத்து.

dance'music, *n.* நடன இசை.

dan'cer, *n.* நடனமாடுபவர்; ஆடல் தொழிலர்; (தொ.) merry dancers, புலர்காலை ஒளி; வடமுனை வளரொளி.

dan'delion, *n.* அகன்ற ஒரப்பற்களையுடைய இலைகளையும் மஞ்சள் மலரையும் உடைய செடிவகை.

Dan'die Din'mont, *n.* சிறுநாய் வகை.

dan'dle, *v.* கொஞ்சு, சீராட்டு, கோதாட்டு.

dan'driff, dan'druff, *n.* தலைப்பொடுகு, அசறு.

dan'dy [1], *n.* பிலுக்கன், பகட்டித்திரிபவன், ஒய்யாரமாக உடை அணிபவன்; குள்ளக் கோழிவகை; தாளில் நீர்வரை பதிக்க உதவும் கம்பி வலை உருளை; *a.* ஆடை அணி ஒப்பனையில் நாட்டமுள்ள, பகட்டான, ஒய்யாரமான; சீராக ஆடை யணிந்த, நற்கோலமுடைய; முதல் தரமான, சிறந்த.

dan'dy [2], *n.* தூக்கு தொட்டில், தொட்டிற் சிவிகை.

dan'dy [3], *n.* முடக்குக் காய்ச்சல்.

dan'dy-cart, *n.* எளிய அமைப்புள்ள வில்வண்டி.

dan'dy-cock, *n.* சண்டைக்கோழி; சண்டையிடும் இயல்பு மிக்கதான வீட்டுக் கோழி வகை.

dan'dy-fe'ver, *n.* முடக்குக் காய்ச்சல்.

dan'dy-hen, *n.* சண்டைக்கோழி; சண்டையிடும் இயல்பு மிக்கதான வீட்டுப் பெடைக் கோழிவகை.

dan'dy-roll, *n.* தாள் செய்யுந் தொழிலில் நீரெழுத்துப் பதியச் செய்யும் உருளை.

Dane, *n.* டென்மார்க் (Denmark) நாட்டவர்; (வர.) இங்கிலாந்துமீது படையெடுத்து வந்த டேனியர்; குறுமயி ருள்ள ஆற்றல் மிக்க பெரிய நாய் வகை; குறுமயிருள்ள ஆற்றல் மிக்க சிறிய நாய் வகை; (தொ.) great Dane, குறுமயிருள்ள ஆற்றல் மிக்க பெரிய நாய் வகை; lesser Dane, குறுமயிருள்ள ஆற்றல் மிக்க சிறிய நாய் வகை.

dan'ger, *n.* இடர், ஆபத்து; பாதுகாப்பாற்ற தன்மை; இடையூறு விளைக்கும் செய்தி; இடர் எச்சரிப்பு; (தொ.) danger line, அபாய எல்லை, காப்பு நிலைக்கும் இடர் நிலைக்கும் இடையேயுள்ள நிலை.

dan'gerous, *a.* இடருடைய, ஆபத்தான; பாதுகாப்பற்ற.

dan'gerously, *adv.* பேரிடர் உற்ற நிலையில்.

dang'le, *v.* ஊசலாடு, தொங்கிய நிலையில் முன்னும் பின்னும் அசைந்தாடு; தளர்த்தியாய் ஆடவிட்டுக்கொண்டு எடுத்துச் செல்; ஆசை காட்டு; பின்பற்றிச் சுற்றித் திரி, பின் தொடர்ந்து காதலூடாட்டமாடித் திரி.

dang'ler, *n.* பெண்களைச் சுற்றித்திரிபவர்.

Dan'iel, *n.* நேர்மையான நடுவர், கேடில் மதியுடையவர்.

Dan'ish, *n.* டென்மார்க் (Denmark) நாட்டவர் மொழி; *a.* டென்மார்க் நாட்டுத் தொடர்பான.

dank, *a.* நீர்த்தோய்வான, ஈரக்கசிவான, வெறுப்புத்தரும் அளவுக்கு ஈரமாயிருக்கிற.

Dante'an, *n.* தாந்தே (Dante) என்னும் கவிஞரின் நூல்களைப் பயிலும் மாணவர்; *a.* கவிஞர் தாந்தேயைப் போன்ற; தாந்தேயின் கவிதையைப் போன்ற; தாந்தேயின் கவிதை நடையை ஒத்த; தாந்தேயின் வருணனைகளை நினைவூட்டுகிற; வீரூர்ந்த, வீறமைதி மிக்க.

Dantesque', *a.* தாந்தேயின் கவிதையைப் போன்ற; தாந்தேயின் கவிதை நடையை ஒத்த; வீரூர்ந்த, வீறமைதி மிக்க.

Dan'tist, *n.* கவிஞர் தாந்தேயின் (Dante) நூல்களில் வல்லுநர்.

dap, *n.* துள்ளல், உந்தியெழல், பந்தின் துள்ளலெழுச்சி; மெல்ல நீரில் இடப்படும் தூண்டிலிரை; *v.* பந்துபோல் நிலந்தாக்கி எழச்செய்; உந்தி உயர்; துள்ளிக் குதி; மெல்லத் தூண்டிலிடு; தூண்டிலிரை நீரில் அமிழ்ந்தெழச் செய்; மெல்ல அமிழ்த்து.

daph'ne, *n.* மலர்களையுடைய புதர்ச்செடிகளின் இனம்.

dapp'er, *a.* விரைவியக்கமுடைய; மிடுக்கான தோற்ற முடைய, நேர்த்திமிக்க.

dapp'erling, *n.* சுறுசுறுப்பான சிறுவன்.

dapp'le, *n.* புள்ளியிட்ட தோற்றம்; *a.* நிறவேறுபாடுடைய புள்ளிகளமையப்பெற்ற; *v.* புள்ளியிட்டு உரு வேறுபாடு செய்; பல நிறப் பட்டைகளுடையதாக்கு; பல நிறங்களுள்ள தாக்கு; பல வகைப்படுத்து.

dapp'le-bay', *a.* வேறுநிறப் புள்ளிகளுடன் கருஞ்சிவப்பு உடல் நிறமுள்ள; வேறு நிறப் பத்தைகளோடு கருஞ்சிவப்பு உடல் நிறம் உடைய.

dare [1], *n.* துணிகரச் செயல்; போருக்கழைப்பு; *v.* துணி, துணிவுகொள்; திடங்கொள்; முனைந்து முயற்சி செய்; இடர் நோக்காது தலையிடு; எதிர்த்துநில், போருக்கழை, அறைகூவு; (தொ.) I dare say, நான் இவ்வாறு கருது கிறேன்.

dare [2], *n.* கண்ணுடிகளைக் கொண்டு வானம்பாடிகளை மயக்கு வதற்கான அமைவு.

dare [3], *n.* கயல் இனத்தைச் சேர்ந்த சிறு ஆற்றுமீன் வகை.

dare'devil, *n.* முரட்டு ஆள்; *a.* மடத்துணிச்சலுள்ள.

dar'i, *n.* திணைபோன்ற கூலவகை.

dar'ing, *n.* துணிவு, முனைப்பு; வீரம், அஞ்சாமை; *a.* துணிச்சலுள்ள, துணிந்திறங்குகிற; தைரியமான, அஞ்சாத; எதிர்த்து நிற்கிற; மல்லுக்கிழுக்கிற.

dark, *n.* இருள், ஒளியின்மை, மருள் ஒளி, இரா நேரத் தொடக்கம்; கருமை, இருட்சாயல்; அறியாநிலை; *a.* ஒளி யற்ற; இருட்சாயலான; இருண்ட; கருநிறமான; கருநிற மேனியுடைய; திண்ணிய; மருளார்ந்த; சோகமான; கிளர்ச்சியற்ற; புரியாத, விளக்கமற்ற, சிக்கல் வாய்ந்த; அறியப்படாத; மறை நிலையான, இரகசியமான; கடுகடுப்பான தோற்றமுடைய; கொடிய; அறியாமையுட் பட்ட; தீமைவாய்ந்த, தீங்கான; (தொ.) the dark ages, ஐரோப்பாவில் அறிவு விளக்கம் குன்றியிருந்த கி. பி. 395-க்கும் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு முடிவுக்கும் இடைப் பட்ட இருண்ட காலம்; the Dark Continent, ஆப்பிரிக்கா; dark horse, எத்துணை ஆற்றலுடையதென்று மற்றவர் களுக்குத் தெரிந்திராத பந்தயக் குதிரை; எவ்வளவு திறமை யுடையவரென்று மற்றவர்களுக்குத் தெரிந்திராத ஆள்; keep dark, பேசாதிரு, இரகசியமாயிரு; keep it dark, மறைத்து வை.

dark'en, *v.* இருட்டாக்கு, இருள்படியவை; இருட்டை மிகுதியாக்கு; இருள், இருளாகு; இருள் மிகுதியாகு; அறியாமைக்கு உட்படுத்து; கறைப்படுத்து; (தொ.) darken one's door, ஒருவர் வீட்டுக்குள் நுழை, ஒருவரைச் சென்று பார்.

dark'-lant'ern, *n.* மறைத்துவிடக்கூடிய ஒளியையுடைய விளக்கு.

dark'le, *v.* இருள், இருளாகு; மறைந்திரு.

dark'ling, *a.* இருட்டான; *adv.* இருட்டில்.

dark'ness, *n.* இருட்டு; இரவு; (தொ.) prince of darkness, நரகத்தலைவன்.

dark'-room, *n.* நிழற்படத்துக்குரிய இருட்டறை, நிழற்படத் தகடுகளைக் கெடுக்கவல்ல ஒளி தடுத்து நீக்கப்பட்ட அறை.

dark'some, *a.* இருண்ட; (செய்.) துயரார்ந்த, வருத்தமிக்க.

darl'ing, *n.* அருமைக்குரியவர், ஆர்வ அன்புக்குரியவர், கண்ணுனவர்; ஆசைக்குரியது, கண்ணுனது; தனிப்பற்றுக்குரியவர்; தனிப்பற்றுக்குரியது; *a.* அருமைக்குரிய, ஆர்வ அன்புக்குப் பாத்திரமான, கண்ணுன; தனிப்பற்றுக்குரிய.

darn, *n.* இழையிட்டுத் தைத்த இடம்; *v.* இழையிட்டுச் செப்பனிடு; பொத்தல்களை மூடுவதற்காகப் போடப்படும் தையல்களைக் கொண்டு பின்னற் பூவேலை செய்.

darn'el, *n.* கூலப்பயிர்களினூடே களையாக விளையும் புல் வகை.

dart[1], *n.* கைவேல், ஏவுகணை, எறிபடை; கட்ட எறிவு விளையாட்டுக்குரிய எறிமுட்கோல்; திடீர் விசை இயக்கம்; எறிபடை வீச்சு; பூச்சியினத்தின் கொடுக்கு; (வில.) சில நத்தைகளில் பாலினப் புணர்ச்சிக்குத் தூண்டுதலாய்ப் பயன்படுத்தப்படுவதாகக் கருதப்படும் ஊசி போன்ற உறுப்பு; முன்சிறகில் வேல் போன்ற குறியுள்ள பட்டுப்பூச்சி வகை; *v.* எறி, வீசு; எறிபடை ஓச்சு, வேல் ஏவு; விரைந்து ஒரு திசையிற் பாய்.

dart[2], *n.* சிறு ஆற்று மீன்வகை.

dart'-board, *n.* கட்ட எறி விளையாட்டில் எறிமுட்கோலின் இலக்காகப் பயன்படுத்தப்படும் கட்டப்பலகை.

dart'er, *n.* எறிபவர்; எறியும் பொருள்; நன்னீரில் மூழ்கி இரை தேடும் நாரையினத்தைச் சேர்ந்த தோலடிப் பறவை வகை; மீன் வகை.

dart'ers, *n. pl.* மீன்கொத்தி முதலியவற்றை உள்ளிட்ட பறவையினம்; மீன் இனப்பிரிவு.

dar'tle, *v.* படைக்கலம் எறிந்துகொண்டேயிரு.

Dart'moor, *n.* இங்கிலாந்தின் பேர்போன சிறைச்சாலையாகிய டார்ட்மோர் சிறைச்சாலை.

dart'-moth, *n.* முன்சிறகில் வேல் போன்ற குறியுடைய பட்டுப்பூச்சி வகை.

Dart'mouth, *n.* இங்கிலாந்தில் டார்ட்மத் நகரத்து அரசாங்கக் கப்பற் படைக் கல்லூரி.

dar'tre, *n.* (மரு.) தோல் நோய்வகை.

darts, *n.* எறிமுட்கோல்கள் பலகையை நோக்கி எறியப்படும் உட்கூட விளையாட்டு வகை.

Darwin'ian, *n.* சார்லஸ் டார்வினைப் (Charles Darwin 1809-82) பின்பற்றுபவர், டார்வினின் உயிர்மலர்ச்சிக் கோட்பாட்டை ஏற்பவர்; *a.* சார்லஸ் டார்வினுக்குரிய.

Dar'winism, *n.* கூர்தல் வாதம், சார்லஸ் டார்வின் (Charles Darwin 1809-82) ஆய்ந்து நிறுவிய உயிரினத் தோற்றக் கோட்பாடு, உயிர்மலர்ச்சிக் கோட்பாடு.

dash, *n.* மோதல்; பாய்ச்சல், பாய்வு; திடீர் மேற்செலவு, தாக்குதல்; தீக்ர்வு; அடி; வீச்சு; நீர்மோதும் ஒலி; வீசி எறிந்ததால் ஏற்படும் அகல் கறை, அடை, பத்தை; எழுது கோல் தொட்டிழுப்புக் குறி; கருத்துத் தடையை அல்லது தனிநிலைத் தொடரைக் காட்டும் இடைக்கோடு, கீற்று; இசைத்துறையில் விட்டொலிப்புக் காட்டும் கோடு; உருக் கணக்கில் உரு எழுத்துமீது குறிக்கப்படும் சாய் செங்கோட்டு வடிவான திரிபுக்குறி; தந்தியில் 'கட' என்ற ஒலிக்குறிப்புக் கோடு; ஆர்வ எழுச்சி; பகட்டு, ஒய்யாரம்; சிறிதளவு கலப்பு; குதிரை வண்டியில் சேற்றுத் தடைக்கட்டை; விமானக் கருவிகள் வைக்கும் பலகை; 'கெடுக' என்ற பழிமொழியின் இடக்கரடக்கல் வழக்கு; *v.* வீசி எறி, தூக்கி வீசு; தள்ளு, மோது, சென்று முட்டு; வேகமாக எழுதித்தள்ளு; விரைவாக ஓட்டு; பாய், தாவிச்செல்; மோதி நொறுக்கு; தெளி, சிதறடி; தெறித்து அப்பு, கறைப்படுத்து; ஊக்கம் குறை; ஏமாறச்செய்; திக்குமுக்காட வை, குழப்பு; சிறிது கலந்து இணை; கீழ்க்கோடிடு; ஊக்கம்கொள், எழுச்சியுடன் நட; ஒய்யாரமாகத் திரி; (தொ.) dash off, வேகமாக எறி; விரைவாகத் தோற்றுவி; திடீரென விட்டுச்செல்; dash out, மோதித் தள்ளு.

dash'board, *n.* சேற்றுக்காப்பு, குதிரை வண்டி வலவனுக்கெதிரில் குதிரைக் குளம்புகளால் தெறிக்கப்படும் மண் முதலியவற்றைத் தடுப்பதற்காக அமைந்துள்ள பலகை அல்லது திரை; கருவித்தட்டு, உந்து வண்டியில் அல்லது வான ஊர்தியில் கருவிகளை எடுத்துச் செல்வதற்கான பலகை.

dash'er, *n.* மோதுபவர்; மோதுவது; விரைந்து செல்பவர்; விரைந்து செல்வது; பகட்டுக்காரன்; வெண்ணெய் கடையும் மத்து.

dash'ing, *a.* ஊக்கமுள்ள; பகட்டான; நவநாகரிகத் தோற்ற முடைய.

dash'-pot, *n.* (இயந்.) நீர்கொண்ட பெருங்குழாய் அலம் புருமல் தடுக்கும் உந்துகட்டை அமைவு.

dash'-wheel, *n.* சாயத்தொழிலில் மிடா வடிவான அலம்பு பொறி.

das'tard, *n.* கோழை; கீழ்மகன், எத்துவேலைக்காரன்; தன்னை இடருக்குட்படுத்திக்கொள்ளாமல் கொடுஞ்செயல் புரிபவன்; *a.* இடரினின்றும் ஒதுங்குகிற, கோழைத்தனமான.

da'syure, *n.* குட்டிகளுக்கான வயிற்றுப்பையுடைய ஆஸ்திரேலியாவிலுள்ள ஊனுணி விலங்கின வகை.

dat'a, *n. pl.* தரப்பட்டவை, வாத ஆதாரக் கூறுகள், தெரி பொருட்கூறுகள், உய்த்துணர உதவும் மூலகாரணப் பகுதிகள்; மெய்ச் செய்திகள்; செய்திக் குறிப்புகள்.

dat'aller, *n.* நாட்கூலியாள்.

date[1], *n.* பேரீச்ச மரம்; பேரீச்சம் பழம்.

date[2], *n.* தேதி; நாள்; நிகழ்வுக்காலம்; நடைமுறைக் காலம்; வாழ்வுக்காலம்; காலவரையறை; காலக்குறிப்பு, கடிதம்-பத்திரம்-ஏட்டுவெளியீடு ஆகியவற்றில் கால-இட விவரக் குறிப்பு; *v.* தேதியிடு; காலங்குறி; கால வரையறை செய், காலமதிப்பீடு செய்; காலங்குறிப்பிடு; குறிப்பிட்ட காலத்துக்குரிய பண்புடையதாயிரு; தொடங்கு; காலங்கடந்து போ, வழக்கற்றுப் போ; (பே-வ.) சந்திப்பு நேரத்திட்டம் குறி; (தொ.) out of date, காலங்கடந்துவிட்ட, வழக்கற்றுப் போய்விட்ட; up to date, காலத்துக்கொத்த, காலத்தோடொட்டிய வளர்ச்சியுடைய, புத்தம் புதிய முன்னேற்றத்துடன் கூடிய, புதுப்பாணியிலமைந்த.

date'less, *a.* தேதியற்ற; கால எல்லையற்ற; முடிவில்லாத; தொல்பழமையான; நாள் ஈடுபாடுகளில்லாத.

date'-line, *n.* தேதி எல்லை, தேதிக்கோடு, உலக ஒப்பந்தப்படி ஏறத்தாழ 180° நிரை கோட்டினூடாகச் செல்லுகிற நாள் கணிப்புத் தொடக்கக் கோடு.

date'-palm, *n.* பேரீச்ச மரம்.

date'-plum, *n.* கருங்காலி இன மரத்தின் பழம்.

dat'er, *n.* தேதி குறிப்பவர்; தேதி பொறிக்கும் முத்திரை.

date'-shell, *n.* சுண்ணக்கல் பாறையைத் துளைத்து வாழும் உயிரினத்தின் பேரீச்சம் பழ வடிவுள்ள தோடு.

dat'ive, *n.* (இலக்.) கொடைப்பொருள் வேற்றுமை, நான்காம் வேற்றுமை; நான்கனுருபு ஏற்ற சொல்; *a.* கொடுக்கப் பெற்ற; நியமிக்கப்பெற்ற; (இலக்.) மறைமுகச் செயப்படு பொருளைக் குறிப்பிடுகிற, நான்காம் வேற்றுமைக்குரிய.

dat'um, *n.* தெரிந்திருக்கிற அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி, பிறவற்றை ஊகித்தறிவதற்கிடந்தருமாறு கொடுக்கப் பட்ட செய்தி, தரவு; அளவுகோல் முதலியவற்றின் நிலையான தொடக்கப்புள்ளி; மெய்ச்செய்திகள் தொகுதி; செய்திக் குறிப்புகளின் தொகுதி.

datur'a, *n.* (தாவ.) ஊமத்தை.

datu'rine, *n.* ஊமத்தைச் சத்து, செடிவகையிலிருந்து கிடைக்கும் வெடியக் கலப்புடைய நஞ்சு வகை.

daub, *n.* சரவையான வண்ணப்பூச்சு; பூசப்படும் பொருள்; *v.* களிமண் முதலியவை கொண்டு பூசு; நீறு பூசு; மெழுகு போன்ற பொருளை மேலே அப்பி அடையவை; அழுக்காக்கு; கறைப்படுத்து; பரும்படியாக வண்ணம் பூசு.

daub'er, *n.* பூசிமெழுகுபவர்; சரவையாக வண்ணம் பூசுபவர், கலைப்பண்பற்ற ஓவியர்.

daub'ery, *n.* பூச்சுமானம்; போலிவேலை; பொறிச்சூழ்ச்சி; போலிப்பகட்டு.

daught'er, *n.* மகள், புதல்வி; பெண் குழந்தை; பெண்பால் மரபு வழித்தோன்றல்; குடும்பப் பெண் உறுப்பினர், குலத்தின் பெண் உறுப்பினர்; பெண்பாலர், அணங்கு; ஒருவரின் அறிவுரிமைக்கொழுந்தான செல்வி; ஒருவரின் ஆன்மிக வாழ்வின் விளைவான மாது; ஒன்றன் அறிவால் விளைவான அணங்கு; வருவிளைவின் உருவகம்; *a.* (உயி.) வழித் தோன்றிய, வழிஉருவான.

daugh'ter-in-law, *n.* மகன் மனைவி, மருமகள், மருகி; *pl.* daught'ers-in-law.

daugh'terling, *n.* சிறுமகள்.

daugh'terly, *a.* மகள்போன்ற; மகளுக்கு உரித்தான.

daunt, *v.* ஊக்கமிழக்கச் செய்; அச்சுறுத்து; அடக்கு; உணவுக்குரிய மீன் வகையை மிடாவில் வைத்து அழுத்து.

daunt'less, *a.* இடுக்கணழியாத; அஞ்சாத; விடாமுயற்சி யுடைய.

dauph'in, *n.* பிரான்ஸ் நாட்டு மன்னரின் மூத்த மகன்.

dauph'iness, *n.* பிரான்ஸ் நாட்டு மன்னரின் மூத்தமகனுடைய மனைவி.

dav'enport, *n.* எழுதுவதற்குதவும் ஒப்பனை வேலைப்பாடுள்ள சிறு சாய்வு மேசை.

dav'enport-trick, *n.* சுற்றிக்கட்டியுள்ள கயிறுகளினின்றும் விடுவித்துக்கொள்ளும் வகைமுறை.

Dav'id and Jon'athan, *n.* பற்றுறுதி கொண்டுள்ள இரு நண்பர்கள், இணைபிரியாத ஈடுபாடுடைய இரு தோழர்கள்.

dav'it, *n.* நங்கூரத்தை மேலே தூக்குவதற்காகக் கப்பலின் முன்புறத்தில் அமைந்துள்ள பாரந்தூக்கிப்பொறி; கப்பலின் படகை இறக்குவதற்கான பாரந்தூக்கிகள் இரண்டிலொன்று.

Dav'y, Dav'y lamp, *n.* நிலக்கரிச் சுரங்கத்தினுள் வேலை செய்பவர்களுக்குரிய கம்பி வலையுள்ள காப்பு விளக்கு.

Da'vy Jones', *n.* கப்பலோட்டிகள் வழக்கில் கடலின் பேயாற்றல்; (தொ.) Davy Jones's locker, கடலில் மூழ்கிய வர்களின் கல்லறையாகிய ஆழ்கடல்.

daw, *n.* காக்கையினப் பறவை வகை.

daw'dle, *n.* மடியன், சோம்பித்திரிபவன்; *v.* பயனற்ற செயல்களில் காலத்தை வீணுக்கு; சோம்பித்திரி.

dawn, *n.* விடியல், புலரி; விடியலொளி; தொடக்க ஒளி; முதல் தோற்றம், தொடக்கம்; *v.* பொழுது புலர்வுறு; பகலொளி தொடங்கு; ஒளிவளரத் துவங்கு; தோற்றத் தொடங்கு; (தொ.) dawn on, dawn upon, முதல் முதலாகத் தெளிவுபடு, விளக்கமாகப் புலப்படத் தொடங்கு.

dawn'-man, *n.* தொடக்கக் காலத்தியதென்று முன்பு கருதப்பட்ட புதைபடிவ மனிதன்.

day, *n.* நாள், நள்ளிரவிலிருந்து அடுத்த நள்ளிரவு வரையுள்ள குத்துமதிப்பான 24 மணிநேரம், நிலவுலகம் தன் அச்சின்மேல் ஒருமுறை சுழல்வதற்குப் பிடிக்கும் நேரம்; பகல், எழு ஞாயிற்றுப்போது தொடங்கி விழுஞாயிற்று வேளை வரை யுள்ள ஓரளவு இடத்துக்கிடம் ஏற்றத்தாழ்வான 12 மணி நேரம்; நாள்வேலை நேரம்; வாழ்நாள்; வாழ்நாள் காலம் நடப்புக்குரிய காலம்; செல்வாக்கு வேளை; வெற்றிநாள்; வெற்றி; விருந்தினர்க்காக ஒதுக்கிவைக்கப்பட்ட நாள்; காலம், காலப்பகுதி; பகலொளி; பலகணி நிலைக்கம்பிகளின் இடைவெளி; சுரங்கமீதுள்ள நிலத்தளப்பரப்பு; (தொ.) call it a day, ஒருவர் ஒருநாள் வேலை செய்து விட்டாரெனக் கருது; நிறுத்தல் முடிவு தெரிவு; day by day, நாடோறும்; வைகலும்; day in day out, தொடர்ந்து பல நாட்களாக; day off, விடுமுறைநாள்; day out, வேலையாள் வேலை செய்ய வேண்டியிராத நாள்; days of grace, சலுகை நாட்கள், கெடுக் கடந்தும் உண்டி முதலியவைகளுக்குப் பணம் கொடுக்க இசைவளிக்கப்பட்ட காலம், அருளிசைவுக் காலம்; know the time of day, முழு விழிப்புடனிரு, விவரமறிந்திரு; one of these days, அண்மையில், வருங்காலத்திலே ஏதோ ஒரு சமயத்தில்; see daylight, ஒருவகையில் தீர்வுகாண்; ஒரு மட்டில் விளக்கம் காண்; காட்சிப்பட வந்தமை; the day, குறிப்பிடப்பட்ட காலம்; எதிர்பார்த்த காலம்; the day after the fair, காலங்கடந்து; the other day, கொஞ்ச காலத்துக்கு முன்; the time of day, கடிகாரப்படியான மணி நேரக்குறிப்பு; win the day, வெற்றியடை.

day'-blind'ness, *n.* மங்கலான ஒளியிலேயே பொருள்களை நன்றாகப் பார்க்க இயலும் பார்வைக்கோளாறு.

day'-board'er, *n.* பள்ளியில் துயில் கொள்ளாமல் உணவு மட்டும் கொள்ளும் மாணவன்.

day'-book, *n.* நாட்குறிப்பேடு.

day'-boy, *n.* வீட்டில் தங்கிக்கொண்டு பள்ளி வந்து படிக்கும் மாணவன்.

day'break, *n.* புலர்காலை.

day'-coal, *n.* நிலக்கரியின் மேல் அடுக்கு.

day'-fly, *n.* மே மாதத்தில் தோன்றிச் சின்னாள் வாழும் பூச்சி வகை.

day'girl, *n.* வீட்டில் தங்கிப் பள்ளி வந்து படிக்கும் மாணவி.

day'-la'bour, *n.* நாட்கூலி.

day'-la'bourer, *n.* நாட்கூலியாள்.

day'-level, *n.* சுரங்கத்தில் மேற்பரப்பிலிருந்து கீழே அழுத்தப் பட்ட தளம்.

day'light, *n.* பகல் வெளிச்சம்; பட்டாங்கநிலை, பலரறியும் தன்மை; விடியற்போது; வெற்றிடம்; இடைவெளி.

day'light-sav'ing, *n.* விளக்குகள் ஏற்ற வேண்டிய அவசிய மிராதவாறு கோடை காலத்தில் கடிகாரமுள்ளைத் தக்கபடி முன்னும் பின்னும் மாற்றிக் கற்பனை மணி நேரத்தின் மூலம் பகலொளியைப் பயன்படுத்திக்கொள்ளுதல்.

day'-lil'y, *n.* ஒருநாள் மட்டும் விரிந்து பின்னர் வாடிவிடும் மலர்களையுடைய அல்லி வகைச்செடி.

day'long, *a.* நாள்முழுவதும் நீடித்திருக்கிற; *adv.* நாள் முழுவதும்.

day'mark, *n.* ஒளியேற்றிக் காட்டப்பெறுத கடல் அறிகுறி.

day'-nettle, *n.* முட்செடி வகை.

day'-old, *a.* ஒரு நாள் சென்ற; ஒருநாள் வாழ்ந்துள்ள.

day'-scholar, *n.* வீட்டில் தங்கிப் பள்ளிசென்று பயிலும் மாணவர்.

day'-school, *n.* நாள்முறைப்பள்ளி, இரவுப்பள்ளியாகவோ தங்கல் விடுதிப் பள்ளியாகவோ நடத்தப்பெறுமல் பகற் பொழுதிற்குள்ளாக மட்டும் நடைபெறும் பொதுமுறைப் பள்ளி.

day'-sight, *n.* (மரு.) மாலைக்கண், அந்திமாலை.

days'man, *n.* வழக்கை விசாரிப்பதற்கு நாள் குறிப்பவர்.

day'spring, *n.* விடியற்காலம்.

day'star, *n.* விடிவெள்ளி.

day'time, *n.* பகற்பொழுது.

daze, *n.* குழப்பம், திகைப்பு, மனக்கலக்கம், பெருவியப்பு; *v.* உணர்வு மழுங்கச்செய், உணர்ச்சியறச்செய்; திகைப் பூட்டு; கண்கூசச்செய்.

daz'zle, *n.* மினுமினுப்பு, பகட்டு; பளபளப்பு; கண்கூசப் பண்ணும் பொருள்; *v.* ஒளிமிகுதியால் கண்கூசச்செய்; மேம்பாடு காட்டிப் பகட்டு, திறமையால் குழப்பு; அழகுத் தோற்றத்தால் மிரட்சியுறச்செய்; பெருமையால் திகைக்கவை; அளவினுல் பொறி கலங்கவை; dazzle paint, கப்பலின் மாதிரி-போக்கு முதலியவற்றை எதிரிகள் அறியாவண்ணம் கப்பலுக்குச் செய்யப்பட்ட வண்ணப்பூச்சு.

daz'zlement, *n.* மிக்கொளியால் கண்ணெளி மயங்கச் செய்தல்; திகைப்பூட்டல்.

dazz'le-paint'ing, *n.* மாருட்ட வண்ணப்பூச்சு; உருமறைத் துப் பிறிதுருக்காட்டுதற்காக முரண் புனைவாக வண்ணம் பூசுதல்.

D-Day, *n.* இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ்-அமெரிக்க இணைப்புப் படைகள் வடக்கு பிரான்ஸ் மீது படையெடுத்த நாளாகிய 1944 சூன் 6-ஆம் நாள்; முக்கிய திரும்பு கட்ட நிகழ்ச்சிக்குரிய நாள்.

deac'on, *n.* உதவிக்குரு; திருக்கோயில் மணியக்காரர்; ஸ்காத்லாந்து நாட்டில் வரைநிலைக்குழும முதல்வர்; *fem.* deac'oness.

dead, *n.* மாண்டவர், இறந்துபோனவர்; முழு அமைதிநேரம்; *a.* மாண்ட, உயிர்வாழ்வு முடிந்துபோன, உயிரற்ற; பட்டுப் போன; சாவுநிலை ஒத்த; உயிர்ப்பற்ற; செயலற்ற; புல் பூண்டு வளர்ச்சியற்ற; மரத்துப்போன, உணர்ச்சியிழந்த; கவனத்தில் கொள்ளாத, ஏற்காத; கடிதவகையில் ஏற்கப் பெருத; தணுப்புற்ற; கிளர்ச்சியற்ற; சோர்வுமிக்க; குரல் வகையில் அடங்கிய; ஆற்றலற்றுப் போன; வளவு நெளி வற்ற; மீளாத; வழக்கற்றுப் போன, வழங்காத, மரபற்றுப்போன; முழுநிறைவான, மிகுதியான; மிக மோசமான; திடீரென்ற; பிழைபடாத, துல்லியமான; தவருத; பந்துவகையில் விளையாடப்படாமல் நிலையா யிருக்கிற; குழிப்பந்தாட்டப் பந்து வகையில் குழியில் எக்கணமும் விழுந்துவிடக் கூடிய நிலையில் குழிக்கு மிக அணிமையிலிருக்கிற; *v.* மழுங்கச் செய், ஆற்றலிழக்கச் செய்; மரத்துப்போகச்செய்; ஆற்றலிழ; மரத்துப்போ; *adv.* முழுதும், முற்றிலும், தீர, நன்ருக; மாறுபாட்டுக்கு இட மின்றி; இயந்திர வகையில் எதிர்செயல் இல்லாமல்; இறந்து போனமாதிரியாக; (தொ.) dead against, முற்றும் மாருக; dead arch, போலி வளவு, வளவு போன்ற தோற்றமுடைய மதிலமைவு; dead as a door nail, dead as a herring, முற்றிலும் இறந்துபோன; dead colour, முதலிலிடும் கொய்ம்மையான நிறச்சாயல்; dead gold, மெருகிடாப் பொன்; dead language, பேச்சு வழக்கற்ற மொழி, வழக் கொழிந்த மொழி; dead man's fingers, dead men's fingers, நண்டு போன்ற உயிரினங்களில் செவுளில் உள்ள விரலொத்த பிரிவுகள்; dead men's bells, கையுறையணிந்த விரல்களைப் போன்ற மலர்களையுடைய செடிவகை; dead men's shoes, இறந்துபோனவருக்குப்பின் அடையத்தக்க அவர் உடைமை; Dead Sea apple, Dead Sea fruit, பார்ப்பதற்கு அழகா யிருந்து தொட்டால் சாம்பலாக உதிர்ந்துவிடுவதாகக் கருதப் படும் பழம்; அழகாயிருந்து ஏமாற்றந்தரும் பொருள்; dead set against, முற்றும் எதிர்க்கிற நிலையில், நேர்முரணுக.

dead'-alive', **dead'-and-alive'**, *a.* எழுச்சியற்ற, சோம்பி யிருக்கிற, செயலற்ற.

dead'-beat, *a.* முற்றிலும் தோல்வியுற்ற; தீரக்களைத்த.

dead'-born, *a.* இறந்து பிறந்த.

dead'-cart, *n.* கொள்ளை நோயினுல் இறந்தவர்களின் சடலங் களைச் சேர்த்து எடுத்துக்கொண்டு போவதற்கான வண்டி.

dead'-clothes, *n. pl.* இறந்த சடலங்களுக்கு அணிவிக்கப் பட்டிருக்கும் ஆடைகள், பிணக்கோடி.

dead'col'ouring, *n.* படம் எழுதுவதில் பரவலான தொடக்க உருவரைச் சட்டம்.

dead'-deal, *n.* பிணம் கிடத்தப்படும் பலகை.

dead'-drunk', *a.* வெறிக்கக் குடித்துள்ள, தீரக் குடித்து வெறிமயக்கமுற்ற.

dead'en, *v.* உயிர்ப்பு அகற்று; ஆற்றல் அடக்கு; ஒளி மழுக்கு; ஒளி ஊடுருவாதபடி செய்; உணர்ச்சி குன்றச்செய்; உயிர்ப்பு இழ; ஆற்றல் சோரு; ஒளிமழுங்கு; உணர்ச்சி இழ; மரத்துப்போகச்செய்.

dead'-end, *n.* ஒரு முனை அடைக்கப்பட்டுவிட்ட குழாய்; ஒரு முக அடைப்பு வழி; முட்டுச்சந்து.

dead'-eye, *n.* (கப்.) தளைவட்டு, பாய்க்கயிறு புகுத்திக்கட்டு வதற்காக மூன்று துளைகள் போடப்பட்டிருப்பதும் சுற்றிலும் கயிற்றுப்பட்டை அல்லது இரும்புப்பட்டையைக் கொண் டிருப்பதுமான வட்டத்தட்டையான மரக்கட்டை.

dead'-fall, *n.* முட்டுப்பொறி, முட்டு அகற்றப்பட்டதும் விலங்கின்மேல் விழுந்து அதனைக் கொல்லுகிற அல்லது முடமாக்குகிற பளுவுடைய பொறி.

dead'-fire, *n.* சாவின் முன்னறிவிப்பெனக் கருதப்படுகிற தீயின் தோற்றம்.

dead'-freight, *n.* (கப். வாணிபம்) தெண்டச்சத்தம், கப்பலை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதன் நிறைய சரக்கு போடாதவர் அதன் வெற்றிடத்துக்காகச் செலுத்தும் பணம்.

dead'-ground, *n.* படைத்துறையில் பீரங்கி வேட்டுப்பட முடியாத இட எல்லை.

dead'-hand, *n.* கோயிலக மானியம், மறுபடியும் பிறர்க்கு உரிமையாக்கலாகா உடைமை மாற்றம்.

dead'-head, *n.* உரிமையின்றித்துய்ப்பவர்; நுழைவுக் கட்டணம் செலுத்தாமல் நாடகங்கள் முதலியவற்றிற்குச் செல்பவர்; சத்தம் செலுத்தாமல் பயணம் செய்பவர்; உலோகம் உருகிக் குவைக்குச் செல்லும் வழி; குவையில் உருகி இறுகிய உலோகம்.

dead'-heat', *n.* போட்டியிடுபவர்கள் சமநிலை எய்தியிருக்கிற பந்தய ஆட்டம்; போட்டிப் பந்தயச் சமநிலையடைவு.

dead'-house, *n.* புதைப்பதற்குமுன் பிணங்களை வைத்திருக்கு மிடம், சாவுக்கிடங்கு.

dead'lett'er, *n.* உரியவரிடம் ஒப்புவிக்கப்படாது அஞ்சல் நிலையத்தில் கேட்பாரற்றுக்கிடக்கும் கடிதம்; நடைமுறைப் படுத்தப்படாத சட்டம்.

dead'-lev'el, *n.* மேடுபள்ளமற்ற நெடுநிலப்பரப்பு; பாழ் மட்டம், வேறுபாடற்ற மட்ட நிலை.

dead'-lift, *n.* பாழும்பளு, நெம்புகோல் முதலிய இயந்திரத் துணையின்றித் தூக்கும் முயற்சி; ஊக்கம் கெடுக்கும் கடுமுயற்சி.

dead'-light, *n.* கப்பல் பக்கத்தொளைக்கு வெளியே வெளிச்சம் தெரியாதபடி அதன் உட்புறத்திலுள்ள பலகணிக்கதவு.

dead'-lights, *n. pl.* கப்பல் அறையில் புயல் வீசாதபடி தடுக்கும் பலகணிக்கதவுகள்.

dead'-line, *n.* படைத்துறைச் சிறைச்சாலையில் கைதி கடந்து சென்ருல் சுட்டுவீழ்த்துவதற்குரிய கோடு.

dead'lock, *n.* முட்டுக்கட்டைநிலை, முட்டுநிலை, முடக்கம்.

dead'-loss', *n.* பாழ் இழப்பு, ஈடு அற்ற இழப்பு.

dead'ly, *a.* சாவுக்கு வழிவகுக்கிற, உயிரிழப்பில் கொண்டு விடுகிற, நச்சுத்தன்மையுடைய; கொடிய; சாத்துயர் அளிக்கிற; பாழான; சாவொத்த; தப்ப முடியாத; கழி மிகுதியான; *adv.* இறந்தாற்போன்று; கழிமிகுதியாக; (தொ.) deadly sin, வெம்பழி, கொடிய பாவம்.

dead'ly-night'shade, *n.* கொடிய நச்சுப் பூண்டு வகை.

dead'-march', *n.* படைவீரர்களின் சாவு ஊர்வல இசை.

dead'-meat, *n.* விற்பனைக்களத்துக்கு ஆயத்தமாயிருக்கும் விலங்கிறைச்சி.

dead'-men, *n. pl.* மிகுதிக் குடிக்குப் பிறகு எஞ்சியுள்ள வெற்றுப்புட்டிகள்.

dead'-nett'le, *n.* முள் இல்லாத முட்செடி போன்ற செடி வகை.

dead'-pan, *n.* உணர்ச்சியற்ற முகத்தோற்றம்; உணர்ச்சி அற்ற முகத்தோற்றமுடையவர்; உணர்ச்சியற்ற முகத் தோற்றம் மேற்கொள்பவர்; *a.* முகபாவமற்ற; உணர்ச்சி யற்ற முகபாவ மேற்கொள்கிற; விருப்பான முகத்தோற்ற முடைய; கேலி விருப்புத்தோற்றமுடைய; *v.* உணர்ச்சியற்ற தோற்றம் கொண்டிரு; வீ ருப் புடனிரு; கேலிவீருப்பு மேற்கொள்.

dead'-pay, *n.* இறந்துபோனவர்களின் பெயரால் தவருக ஏமாற்றி வாங்கப்படும் சம்பளம்.

dead'-point, *n.* முட்டுநிலை, இயந்திரத்துறையில் தாக்கு செலுத்தப்பட்டும் திருப்பமுடியாத வளைவு திருகின்நிலை, மீட்டும் இயக்கினுலன்றி இயங்காது முட்டுப்பட்டு நிற்கும்நிலை.

dead'-pull, *n.* நெம்புகோல் முதலிய இயந்திரத்துணையின்றி இழுத்தல்; ஊக்கங்கெடுக்கும் நிலையிலும் செய்யப்படும் முயற்சி.

dead'-reck'oning, *n.* கணிப்புச்சுட்டு, பதிவேட்டின் துணைக் கொண்டு மட்டும் கப்பலிருக்குமிடத்தை மதிப்பிட்டறிதல்.

dead'-rope, *n.* (கப்.) கப்பி வட்டினூடே செல்லாத கயிறு.

dead'-set', *n.* குத்துநோக்கு, வேட்டை இரையைக் கண்ட வேட்டை விலங்கு அதனை நோக்கி அசையாது கண் குத்திட்டு நிற்கும்நிலை; தாக்குறுதி, சிறைபிடித்துவிடும் நோக்கத் துடன் நீடித்த உறுதியான தாக்கு.

dead'-shot, *n.* குறிதவருது சுடுபவர்.

dead'-stroke, *a.* இ யந் தி ர ங் க ளில் இயங்கும்போது பின்னுதைப்பற்ற.

dead'-wall, *n.* (க-க.) பலகணிகள்-வ:யில் முதலிய புழை இல்லாத சுவர்.

dead'-wa'ter, *n.* தேங்கி நிற்கும் நீர்; கப்பல் செல்லும்போது அதன் பின்புறத்தில் நெருங்கிச் சுழலிடும் நீர்.

dead'-weight, *n.* பாழும் பளு, துணை உயிர்த்திறமற்ற பாரம், தாங்க முடியாத சுமை; (கப்.) நிறைபாரத்துக்கும் குறை பாரத்துக்கும் இடையேயுள்ள கப்பல் அமிழ்வு வேற்றுமை.

dead'-wind, *n.* புயல்காற்றின் நடுவிலுள்ள காற்றமைதிநிலை.

dead'wood, *n.* கப்பல் அடிக்கட்டையின் முனையில் மேற்புறம் பொருத்தப்படும் கட்டைத்துண்டுகள்; பயனற்ற பொருள்.

dead'-work, *n.* நேர் விளைவு தராத முன்னீடான வேலைப் பகுதி, தொடக்க முயற்சியில் கழிவுறும் வேலை.

deaf, *a.* செவிடான, காதுமந்தமான; கேளாத, செவி கொடாத; கேட்க விருப்பமில்லாத; கவனிக்காத; கருத் தில்லாத; இசைவற்ற; இசைநுட்பங்களில் கேள்வித் திறமற்ற; தாளச்சந்த வகைகளில் ஈடுபாடற்ற; கொட்டை வகையில் உட்பருப்பற்ற; (தொ.) turn a deaf ear to, காதில் வாங்கிக் கொள்ளாதிரு.

deaf'-aid, *n.* செவித்துணைக்கருவி, காது கேட்பதற்குத் துணைபுரியும் கருவி.

deaf'-and-dumb, *a.* செவிட்டுமரான; செவிட்டுமர்களுக்குரிய; (தொ.) deaf-and-dumb alphabet, deaf-and-dumb language, செவிட்டுமைகள் கருத்தைத் தெரிவிப்பதற்கான அடையாளக் குறியீட்டுத் தொகுதி.

deaf'en, *v.* கூச்சலினுல் காதடைக்கச்செய், கூக்குரலிட்டுக் காது கேட்காதபடிசெய்; செவிடுபட முழங்கு; மற்ற இசை கேளாதபடி பேரொலி செய்; செவி அதிரவை; ஓசை ஊடுருவாதபடி செய்; தள முதலியவற்றின் வகையில் ஒலித் தடைப்படுத்து.

deaf'ening, *n.* (க-க.) ஒலித்தடைப்பொருள், தளத்திலும் குறுக்குச் சுவர்களிலும் ஒலி ஊடுருவாதபடி அவற்றினுள் திணித்தடைக்கப்படும் பொருள்; *a.* செவிடுபடுத்துகிற, காதடைக்கிற.

deaf'-mute', *n.* செவிட்டுமை, செவிட்டுமர்.

deal[1], *n.* தேவதாருமர வகைகளின் வரையளவைப்பட்ட அறுவைப் பட்டிகை (6 அடி நீளம், 7 அல்லது 9 அங்குல அகலம், 3 அங்குலத்துக்குக் குறைந்த திட்பம் உடையது), தேவதாரு வகை மரம்; வெட்டுமரக் கட்டை; *a.* தேவதாருமர வகையாலான.

deal[2], *n.* பங்கு, பகுதி; அளவு, கூறு; சீட்டுப் பகுப்பு; சீட்டுப் பங்கீடு; பேரம்; சீட்டு ஆட்டப் பங்கு, பங்கு முறை, (பே-வ.) செயல் தொடர்பு; *v.* பகுத்தளி, பாத்தீடு செய்; சீட்டுப் பங்கிட்டு விளம்பு; சீட்டுக்கூறு அளி; செயல் தொடர்புகொள்; வாணிகத் தொடர்புகொள், வாணிக முறை யில் ஈடுபடு; வாணிகம் செய்; நடந்துகொள்; நடவடிக்கை மேற்கோள்; கூடி வாதிடு, கூடிப் போராடு; (தொ.) New Deal, 1932-இலும் அதற்குப் பின்னரும் ரூசுவெல்ட்டின் (Roosevelt) ஆட்சிக் குழுவினரால் தி ட் ட மி ட ப் ப ட் ட சமூக-பொருளாதார ஏற்பாடு.

deal'bate, *a.* வெண்மையாக்கப்பட்ட.

deal'er, *n.* வாணிகம் செய்பவர்; ஆட்டச் சீட்டுகளைப் பங்கிடு பவர்; ஆட்டச் சீட்டுகளைப் பங்கிடும் முறையிலுள்ளவர்.

deal'fish, *n.* ஓலைவாளை இனத்தைச் சேர்ந்த ஆழ்கடல் மீன் வகை.

deal'ing, *n.* செயல் தொடர்பு, நடைமுறைத் தொடர்பு; வாணிகத் தொடர்பு.

dealt, *v.* deal என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

deambula'tion, *n.* நடத்தல்.

deam'bulatory, *n.* உலாவிடம்; கோயில் திருச்சுற்று மாளிகை; *a.* இங்குமங்கும் போகிற, திரிகிற.

dean[1], *n.* கோயில் குரு; கல்வி நிலையத் தலைவர்; பல்கலைக் கழகத் துறை முதல்வர்; கல்லூரியின் ஆட்சி-ஒழுக்கக் கட்டுப் பாட்டு அலுவல்கள் வாய்க்கப்பெற்று அங்கேயே வசிக்கும் கல்லூரி உறுப்பினர்; கூட்டுக் குழுவின் மூத்த உறுப்பினர்; திருக்கோயில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நடுவர்; வணிகச் சங்கத் தலைவர்; (தொ.) rural dean, சில திருவட்டகைகளில் மாவட்டச் சமய முதல்வருக்குட்பட்டு சமயக் குருமார் நலனைக் கவனித்துக்கொள்பவர்.

dean[2], *n.* சிறு பள்ளத்தாக்கு.

dean'ery, *n.* சமயகுரு பதவி; சமயகுருவின் வீடு; சமய குருவுக்குட்பட்ட திருவட்டகைகளின் தொகுதி.

dean'ship, *n.* சமயகுருவின் பதவி; சமயகுருவுக்குரிய மதிப்புத் தரம்.

dear, *n.* அருமையானவர், அன்புக்குரியவர்; காதலன்; காதலி; *a.* மிகவும் நேசிக்கிற, அருமையான, அன்புள்ள; அதிக விலையுள்ள; விலையேறிய, இயல்பாகவே அக விலையுள்ள; கிடைத்தற்கரிய; பெருமதிப்புள்ள; *adv.* அகவிலையில்; *int.* வியப்பு-துன்பம்-இரக்கம் முதலியவற்றை வெளிப்படுத் தும் வியப்பிடைச் சொல்.

dear'ie, *n.* விளி வழக்கில் அன்புக்குரியவர்.

dear'ness, *n.* அன்புக்குரியதாக்கும் இயல்பு; அன்பு; விலை யேறியுள்ள நிலை; (தொ.) dearness allowance, அக விலைப்படி, பஞ்சப்படி.

dearth, *n.* இன்மை; பஞ்சம்; உணவுப் பஞ்சம்; ஏதாகிலும் ஒன்று போதிய அளவு கிடைக்காமை; அகவிலை; தரிசு நிலை.

dear'y, *n.* அருமையானவர்.

death, *n.* சாதல், மாள்வு, சாவு, இறப்பு; உயிரற்ற நிலை; வேட்டையில் உயிர்க்கொலை; சா முறை, சாகும் வகைமுறை; இறப்பின் காரணம்; சாகும் தன்மை; அழிவு; உயிருக்கு இறுதி; மரபழிவு; ஆன்மிக அழிவு; கூற்றம், சாவின் உருவகக் குறிப்பு; செத்த தோற்றம்; (தொ.) at death's door, இறக்குந்தறுவாயில்; be death on, ஒன்றின் சாவுக்கு ஏதுவாயிரு; ஒன்றைப்பற்றி அவாக் கொண்டிரு; ஒன்றைச் செய்வதில் திறமை பெற்றிரு; death knell, சாவுமணி; gates of death, jaws of death, சாவின் வாயில், மாளும் தறுவாய்; in at the death, வேட்டை நாய்கள் விலங்கினைக்

கொல்லும்போது அதனருகில்; நிகழ்ச்சி முடிவுறுந் தறுவாயில் உடனுயிருக்கும் நிலையில்; to death, கடைசிப் படிவரை, இறுதி வரை; ஓயும் வரை.

death'-ag'ony, *n.* சாத்துயர், மரண வேதனை.

death'-bed, *n.* இறுதிப்படுக்கை; சாவுக்குரிய இறுதி நோய்; (தொ.) deathbed repentance, காலங் கடந்த மனமாற்றம்.

death'-bell, *n.* சாவு நேர மணி.

death'-blow, *n.* சாவினை உண்டாக்கவல்ல அடி, கொல்லுவதற்குரிய கொடு வீச்சு; அழிவுண்டாக்கும் செயல்.

death'-cup, *n.* நச்சுக்காளான் வகை.

death'-damp, *n.* இறப்புக்குமுன் தோன்றும் குளிர் வியர்வை.

death'-duties, *n. pl.* சாவு வரி, உடைமையை உரிமை வழியாய் அடையும்போது செலுத்தப்படும் வரி.

death'-fire, *n.* சாவினை முன்னறிவிப்பதாகக் கருதப்படும் ஒளி.

death'ful, *a.* கொலைக்காரணமான; அழிவுண்டாக்கத்தக்க; இறக்குமியல்புள்ள; சாவினைப் போன்ற.

death'less, *a.* இறவாத; எக்காலத்துமுள்ள.

death'like, *a.* சாவுக்குரிய; சாவினைப் போன்ற.

death'ly, *a.* கொலைக்குரிய, உயிர் போக்குவதற்குரிய; சாவினைப் போன்ற.

death'-marked, *a.* இறப்பதற்கெனக் குறித்துவிடப்பட்ட; சாவதென்று விதிக்கப்பட்ட, இறந்தே தீரவேண்டிய.

death'-mask, *n.* இறந்தவர் முகத்தினின்றெடுக்கப்பட்ட சுதை அடைவுரு.

death'-rate, *n.* மரண விகிதம், மக்கள்தொகை மொத்தத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை விழுக்காடு.

death'-ratt'le, *n.* சாகும்வேளைக்குரிய தொண்டை இரைச்சல், சிலேட்டும நடப்பு.

death'-ray, *n.* சாக்கதிர், முற்படும் உயிர்களனைத்தையும் அழித்துவிடக்கூடிய ஆற்றலுடையதென்று கருதப்படும் அழிவுக் கருவியான ஒளிக்கதிர்.

death'roll, *n.* இறந்தவர் பட்டியல்.

death's-head, *n.* மனித மண்டையோடு; மனித மண்டையோட்டு உருவம்; மண்டையோட்டின் உருவமைந்த கைவிரல் மோதிரம்; (தொ.) death's-head moth, மார்புக்கூட்டின் பின்புறத்தில் மண்டையோட்டைப் போன்ற அடையாள முள்ள மிகப் பெரிய ஐரோப்பிய விட்டில்பூச்சி வகை.

death'-song, *n.* இறப்பதற்குமுன் பாடப்படும் பாடல் வகை.

death'-stroke, *n.* சாகடிக்கும் அடி.

death'-throe, *n.* சாத்துடிப்பு, மரண வேதனை.

death'-trap, *n.* சாப்பொறி, பாதுகாப்பதாகத் தோற்றினாலும் உயிருக்குப் பேரிடர் விளைக்கக்கூடிய இடம்.

death'-warrant, *n.* மரண தண்டனை நிறைவேற்றுவதற்குரிய ஆணை.

death'-watch, *n.* இறக்குந் தறுவாயிலிருப்பவரின் பக்கத் தமர்ந்து விழிப்போடு பார்த்துக் கொள்ளல்; 'டிக், டிக்' கென்றொலி செய்யும் வண்டு போன்ற பூச்சி வகை.

death'-wound, *n.* சாவுக் காயம், மரணம் உண்டுபண்ணத் தக்க புண்.

debacle, *(பிர.) n.* ஆற்றில் பனிக்கட்டி உடைபாடு; இடிவு தகர்வு, நெருக்கடி நெரிசல்; கூட்டத்தின் வேக மிதித்தடிப்புப் போக்கு, நெரித்து மிதித்துத் தள்ளிக்கொண்டு போதல்; அரசியல் தகர்வு; படுவீழ்ச்சி; (மண்.) பாறைகளையும் சிதை கூளங்களையும் வாரி அடித்துக்கொண்டு வரும் பெருநீர்ப் பெருக்கு.

debar', *v.* விலக்கித்தடு; வெளியே தடுத்து நிறுத்து; வாயிலில் தடை கம்பியிட்டுத் தடு; தடங்கல் செய்.

debark', *v.* கப்பலிலிருந்து இறக்கு; கரையில் இறங்கு.

debarr'ass, *v.* மீலவகற்று; சிக்கலினின்றும் விடுவி; தடை விலக்கு.

debase', *v.* மதிப்பில் தாழ்த்து; தரத்தில் குறைவுபடுத்து; ஒழுக்கத்தில் இழிவுபடுத்து; நாணயத்தைக் கலப்படம் செய்து மதிப்புக் கெடு.

debased', *a.* தாழ்ந்த, இழிந்த, பதமிழந்த; (கட.) தலை மறிக்கப்பட்ட.

debase'ment, *n.* தாழ்த்துதல்; தாழ்வு, இழிவு; சிறுமை.

debat'able, *a.* வாதத்துக்கிடமான, வாதத்துக்குரிய, இரு தரப்பிலிருந்து விவாதிக்கப்படத்தக்க, மறுத்துரைக்கத்தக்க; (தொ.) debatable ground, இருதிறத்தார் தமதெனப் போராடும் எல்லை நிலப்பகுதி; ஐயப்பாட்டுக்குரிய இடை எல்லைப்பகுதி.

debate', *n.* வாதம், சொற்போர்; வாய்ச்சண்டை, வாக்கு வாதம்; வாதாட்டம், பலதிசைக் கருத்துமோதல், சர்ச்சை, பொது விவாதம்; *v.* வாதிடு, தருக்கம் செய்; வாதாடு, வாய்ச்சண்டையிடு; வாதாட்டத்தில் கலந்துகொள்; எதிர்த்துக் கூறு; கலந்தாராய்; ஆழ்ந்து சிந்தி, அமைந் தாய்வு செய்.

debat'er, *n.* தர்க்கம் செய்பவர்; வாதத்திறமையுடையவர்.

debauch', *n.* மட்டற்ற குடிவெறி; ஓயாக் குடிப்பழக்கம்; புலனுகர்ச்சி வெறி, காமவெறி; ஒழுக்கக்கேடு; *v.* நெறிபிறழச் செய், கடமை திறம்பச்செய்; ஒழுக்கங் கெடச்செய்; இழிந்த புலனுகர்ச்சியில் தோய்வி, சிற்றின்பத்தில் புரளுவி, கீழ்மைப் படுத்து, இழிஞனுக்கு; குடிப்பழக்கமூட்டு; கற்பழி; மட்டு மீறிய புலனுகர்ச்சி மேற்கொள்.

debauched', *a.* சிற்றின்பத்தில் அழுந்திய, ஒழுக்கங்கெட்ட, வரம்பிகந்த நடையுடைய.

debauchee', *n.* பரத்தன்; பரத்தை.

debauch'ery, *n.* வரம்பு மீறிய ஒழுக்கக்கேடு, சிற்றின்பத் தோய்வு; மட்டுமீறிய குடிப்பழக்கம்.

deben'ture, *n.* கடனீட்டுப் பத்திரம், கடனுகப் பெற்றுக் கொண்ட தொகையைத் திருப்பிக் கொடுக்குமளவும் வட்டி செலுத்துவதாகக்கண்டு வணிக நிலையம் முதலியவை தம்முடைய முத்திரையிட்டுக் கொடுக்கும் ஆவணம்; அரசு நிலையங்கட்கு வழங்கிய சரக்குக்கீடான பண உரிமைச்சீட்டு; சுங்கத்துறையினரிடமிருந்து ஏற்றுமதிக்கெதிராப் பெறும் பற்றுமுறி.

debent'ured, *a.* கடனீட்டுப் பத்திர உரிமையுடைய; பண ஈட்டுரிமையுடைய.

debil'itate, *v.* தளர்வூட்டு, வலுக்கெடு, சோர்வுறச்செய்.

debil'ity, *n.* நரம்புச் சோர்வு; தளர்ச்சி, ஊக்கக் கேடு.

deb'it, *n.* பெறு கடன், கொடுக்கப்பட வேண்டிய ஒன்று; பற்று, கொடுக்கப்படவேண்டிய தொகையைக் காட்டும் கணக்குப் பதிவு; கணக்கில் பற்றுப் பதிவுகள் எழுதப்படுகிற இடதுபக்கம்; *v.* பெறு கடனுக எழுது; பற்று வை, பற்றுக எழுது.

deb'lai, *n.* கோட்டை கொத்தளங்களில் அணைசுவர் எழுப்புதற்காக அகழியினின்றும் தோண்டியெடுக்கப்பட்ட மண்.

debonair', **debonnaire',** *a.* நயப்புடைய, முகமினிய, மரியாதையுடைய; இன்புடைய.

debouch', *v.* படையணி வகையில் இடுங்கிய கணவாயிலிருந்து வெளிப்பட்டு பரவு; நீர் ஒழுக்குவகையில் இடுங்கிய பாதை கடந்து வெளியே ஒழுகு.

debouche', *n.* வெளிச்செல் வழி, புறப்போக்குக் குழாய்.

debouch'ment, *n.* கணவாய் கடந்து புறப்படல், இடுங்கிய வழியினின்று வெளியேறுதல்; புலப்படுமிடம்; ஆற்றுவாய்.

debouchure', *n.* ஆற்றுவாய்; கடற்கால் தொடங்குமிடம்.

beb'ris, *n.* சிதைவு, சிதை கூளம்; கழிபொருள்.

debruised', *a.* (கட.) மரபு வழக்கான உருவங்களின் மேலீட்டால் அரைகுறையாக மறைக்கப்பட்ட.

debt, *n.* கடன்; பொறுப்பு, கடப்பாடு; கடமை; (விவி.) பாவம்; (தொ.) bad debt, வாராக்கடன்; debt of honour, சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத கடன், சூதாட்டக்கடன்;

debt of nature, சாவு; floating debt, அரசியலாரின் பல்திறப் பட்ட பொதுப்படைக்கடன், நிதிநிலவரக் கடனுக்கப்படாத கருவூலமுறிகள் போன்ற சில்லறைக்கடன்; in one's debt, பணக்கடன் கொடுக்கக் கடமைப்பட்ட; கடமைப்பட்ட.

debt'ee, *n.* கடன் கொடுப்பவர்.

debt'or, *n.* கடன் வாங்குபவர், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டவர், கடன்பட்டவர்.

debunk', *v.* (பே-வ.) உணர்ச்சித்திரை கிழி, பாசாங்கை அம்பலப்படுத்து; மேற்பூச்சகற்று, போலி மதிப்பை அழித்து மெய்த்தோற்றத்தை வெளிப்படுத்து; செயற்கைப் புகழ்ப் பீடத்திலிருந்து வீழ்த்து.

debus', *v.* (பே-வ.) உந்து வண்டியிலிருந்து இறங்கு; உந்தகத்திலிருந்து ஆட்களை இறக்குவி; பேருந்துவிலிருந்து சரக்குகளை இறக்கு.

debut, (பிர.) *n.* அரங்கேற்றம், முதல் முயற்சி, பொது விடத்தில் முதன்முறையாகத் தோற்றமளித்தல்.

debutant, (பிர.) *n.* அரங்கேறுபவன், முதன் முறையாகத் தோற்றம் அளிப்பவன்; *fem.* ***debutante.***

de'cachord, *n.* பத்து நரம்புகளுள்ள பழங்கால இசைக்கருவி.

dec'ad, dec'ade, *n.* பத்து; பத்தான தொகுதி; பதிகம்; பத்தாண்டு.

dec'adence, dec'adency, *n.* நிலைதளர்வு, நலிவு, சோர்வு, தரங்கெட்டழிந்த நிலை; கலை இலக்கியத்துறைகளின் வளர்ச்சியில் உச்சநிலை திரிந்த இறங்குமுகப் பருவம்; பிரஞ்சு இலக்கியத்தில் 19-ஆம் நூற்றாண்டில் நிலவிய மறை குறியீட்டுக்குழுவினர் (symbolists) பண்பு.

dec'adent, *n.* இழிபுற்றவர், தரங்கெட்டவர், சீர்கேடுற்றவர்; இலக்கியத் தளர்ச்சி எழுத்தாளர், கலைத்தரங்கெட்ட நிலைமை உற்றவர்; பிரஞ்சு மறைகுறி மரபின் எழுத்தாளர்; *a.* நிலையிழிபுற்ற, தரங்கெட்ட, சீர்கேடுற்ற, நலிவுற்ற, சோர்ந்த; அழிகிற; அழுகிய; உடலுரமற்ற; மனஉரமிழந்த; மறைகுறி மரபு சார்ந்த.

dec'agon, *n.* பதின் கோணம், பத்துக் கோணங்களும் பத்துப் பக்கங்களும் கொண்ட நேர்கட்ட வடிவம்.

decal'cify, *v.* எலும்பிலிருந்து சுண்ணத்தை நீக்கு; சுண்ணும்புச் சத்தினைப் போக்கு.

decal'ogist, *n.* பத்துக் கட்டளைகளை விளக்கிக் கூறுபவர்.

dec'alogue, *n.* பத்துக் கட்டளை.

Decam'eron, *n.* பத்து நாட்களில் கூறப்பட்டதாகக் கருதப்படும் பொக்காசியோ (Boccaccio) என்ற இத்தாலிய எழுத்தாளர் எழுதிய நூறு கதைகள்.

decamp', *v.* திருட்டுத்தனமாகச் சென்றுவிடு, திடீரென்று ஓடிவிடு; தங்கல் கலைத்து விடு; கூட்டுக் கலைந்து செல்.

decan'al, *a.* சமய வட்டத் துணைத்தலைவரைச் சார்ந்த; வட்டத் துணைத்தலைவருடைய ஆட்சி வரம்பைச் சார்ந்த; வட்டத்துணைத்தலைவர் திருக்கோயிலில் அமரும் தென் சிறைப் பகுதி சார்ந்த.

decant', *v.* தெளிய வைத்து இறு, வடித்திறு; கலத்தினின்று மற்றொரு கலத்திற்கு ஊற்று; மதுவைப் புட்டியிலிருந்து வடிகுவளைக்கு ஊற்று.

decan'ter, *n.* வடிகலம், மேசையினிடமாக மது ஊற்றிக் கொண்டு வருவதற்குரிய அழகிய குப்பி.

decap'itate, *v.* தலையை வெட்டு, தலை துணித்துத் தண்டி; தலை துண்டித்து வேருக்கு; நுனி தறித்து வேருக்கு.

dec'apod, *n.* பத்துக் கால்களை உடைய நண்டை உட் கொண்ட தோடுடைய உயர் உயிரின வகை; *a.* பத்துக் கால்களையுடைய உயிரினத்தைச் சார்ந்த.

Decap'oda, *n. pl.* பத்துக் கால்களுள்ள நண்டு-இரால் முதலியவற்றை உள்ளடக்கிய உயிரினம்.

decar'bonate, decarb'onize, decar'burise, *v.* கரியம் அகற்று; கரிய ஈருயிரகை வளியை நீக்கு.

deca'sualize, *v.* அன்றுடக் கூலியாளை நீக்கு.

decasyllab'ic, *a.* பத்து அசைகளைக் கொண்ட.

decasyll'able, *n.* பத்து அசைகள் கொண்ட பாவின் அடி.

decathol'icize, *v.* பொதுமைப் பண்பைப் பிரித்தகற்று; கத்தோலிக்கப் பண்பை மாற்று.

decay', *n.* வீழ்ச்சி, பதனழிவு, சிதைவு; அழுகிப்போதல்; தேய்வு, உடற்சீர்கேடு; அழுகிய கூறு; கதிரியக்கத் திற முடைய பொருளின் காலச் சிதைவு; *v.* அழிவுறு, அழுகிக் கெடு; தரங்கெடு; தரங்கெடச்செய்; நலமழி; செப்பமிழ; பண்பு இழ; உரங்கெடு; ஊக்கமழி; செல்வச் சீர்கேடுறு; தேய்வுறு, நலிவுறு.

decease', *n.* சாவு, உயிர்ப் பிரிவு; *v.* இற, மாள்வுறு.

deceased', *n.* அணிமையில் மாள்வுற்றவர்; *a.* இறந்து போன; அணிமையில் மாள்வுற்ற.

deceit', *n.* வஞ்சகம், ஏய்ப்பு; இரண்டகம், சூது; எத்து மானம், ஏமாற்று, வேண்டுமென்றே தவருனவழி காட்டுதல்; புரட்டு, புனைசுருட்டு, புரளி, பொய்ம்மை; போலித் தோற்றம்.

deceit'ful, *a.* சூழ்ச்சி மிக்க, வஞ்சகம் நிறைந்த, போலிப் புனைவான; ஏமாற்றுகிற; வஞ்சிக்கும் இயல்புடைய; இரண்டகமான, உள்ளொன்று புறமொன்றுன.

deceiv'able, *a.* ஏமாற்றப்படக்கூடிய, எளிதில் வஞ்சனைக்கு உட்படத்தக்க.

deceive', *v.* தப்பு வழிகாட்டு; தவறிழைக்கச் செய்; ஏய், ஏமாற்று; ஏமாற்றமடையச் செய்.

decel'erate, *v.* வேகந்தணி, மெதுவாக்கு, தாமதப்படுத்து.

Decem'ber, *n.* ஆங்கில ஆண்டின் பன்னிரண்டாவது மாதம்.

Decem'brist, *n.* ருசியாவில் 1825-ஆம் ஆண்டில் நடந்த புரட்சி இயக்க உறுப்பினர்.

decem'vir, *n.* பதின் குழுவினர்; பண்டை ரோமாபுரியில் பன்னிரண்டு கட்டளைகளை (451 B. C.) உருவாக்க அமர்வு பெற்ற பதின்மருள் ஒருவர்; முற்கால வெனிஸ் (Venice) மாநகரில் ஆட்சிக் குழுவினர் பதின்மருள் ஒருவர்.

decem'virate, *n.* பதின்மர் குழு; பதின்மர் ஆட்சிக்குழு; பதின்மர் ஆட்சிக்காலம்.

de'cency, *n.* தகைமை, நடைமுறைத் தகுதி; நாகரிக நுண்ணயக் கூறு, சுவை நலம்; பண்பு நலம்; இழி சொல்லும் இழி நடைத் தோற்றமும் விலக்கிப் பிறர்க்கின்னு நேராமற் காக்கும் பெருமிதச் சால்பு; மதிப்புடைமை, ஒப்புரவுடைமை; (தொ.) the decencies, நாகரிக முறைகள், உயர்வாழ்க்கைத் தகுதிக் கூறுகள்.

decenn'ary, *n.* பத்தாண்டுகள் கொண்ட காலக்கூறு; *a.* பத்தாண்டுக் காலத்துக்குரிய.

decenn'iad, *n.* பத்தாண்டுக் காலம்.

decenn'ial, *a.* பத்தாண்டுகள் கொண்ட; பத்தாண்டுகளுக் கொருமுறை நிகழ்கிற.

decenn'ium, *n.* =decenniad.

de'cent, *a.* ஏற்புடைய; பண்பார்ந்த; மட்டான; நடுத் தரமான, வரம்பு மீறுத, பாங்குடைய.

decen'tralize, *v.* நடுவாட்சி வலுத்தளர்த்து; ஆட்சி உரிமை பன்முகப்படுத்து; கிளையாட்சி வலுப்படுத்து.

decept'ible, *a.* ஏமாற்றப்படத்தக்க, வஞ்சிக்கப்படக்கூடிய.

decep'tion, *n.* ஏமாற்றுதல், மோசடி, வஞ்சனை; சூழ்ச்சிப் பொறி, தந்திரம்; ஏமாற்றப்பட்ட நிலை; ஏமாற்றுமுறை; ஏமாற்றப்பட்டதால் விளையும் தவறு.

decep'tive, *a.* ஏமாற்றும் இயல்புடைய; மாயமான; ஏமாற்றக்கூடிய; மயங்கவைக்கிற.

decep'tory, *a.* ஏமாற்றும் இயல்புடைய.

dechris'tianize, *v.* கிறித்தவ சமயத்தினின்றும் மாற்று; கிறித்தவ சமயப் பண்பைக் குறையச் செய்.

decid'able, *a.* தீர்மானிக்கப்பட்டத்தக்க, அறுதியிடக்கூடிய.

decide', *v.* முடிவு செய், தீர்மானி, உறுதிகொள், அறுதி இடு; முடிவுக்கு வா; தீர்ப்பளி.

decid'ed, *a.* உறுதியான; தெளிவான, ஐயத்துக்கு இடமற்ற; வரையறைப்பட்ட; தயக்கத்துக்கு இடம் தராத; மறுகேள்வி யற்ற, உறுதிப்பாடான.

decid'er, *n.* உறுதி செய்பவர்; உறுதி செய்வது; பந்தயத்தில் தயக்க நிலை முறித்து ஆட்டம் மீட்டும் தொடங்கப்படும் நிலை.

decid'ua, *n.* குழந்தைப் பேற்றிற்குப் பிறகு வெளிப்படும் மெல்லிய கருச்சவ்வு.

decid'uous, *a.* குறிப்பிட்ட பருவத்தில் உதிரக்கூடிய; தாவர வகையில் ஆண்டுதோறும் பருவத்தில் இலை உதிர்க்கக்கூடிய; எறும்பு முதலிய உயிரின வகையில் இணை பருவத்தின்பின் இறகு கொட்டிவிடுகிற; பற்கள் வகையில் பருவத்தில் விழத் தக்க; கொம்புகள் வகையில் கழன்று விழக்கூடிய; நிலை யற்ற; மாறுபடக்கூடிய.

dec'igramme, *n.* பிரஞ்சு மெட்ரிக் முறையில் எடையளவைக் கூறு, 'கிராமி'ல் (gramme) பத்தில் ஒரு கூறு.

dec'ilitre, *n.* பிரஞ்சு மெட்ரிக் முறையில் முகத்தலளவைக் கூறு, 'லிட்டரி'ல் (litre) பத்தில் ஒன்று.

decill'ion, *n.* பத்திலக்கத்தின் பத்தடுக்கிய விசை மடங்கு, ஒன்றன்பின் அறுபது சுன்னங்கள் இணைத்த பேரெண்; அமெரிக்க பிரஞ்சு வழக்கில் ஆயிரத்தின் பதிஞென்றடுக்கிய விசை மடங்கு.

de'cimal, *n.* பதின்கூற்றுக் கீழ்வாய் எண், பதின்முறைப் பின்னம்; *a.* பதின்மானமான, எண்மான முறையில் பத்தடுக்கு வரிசையான, பதின்கூருன, கீழ்வாய் எண் முறையில் பதின்கூற்றடுக்கான; (தொ.) decimal fraction, பதின்கூற்றுப் பின்னம்; decimal notation, பதின்மான இலக்கம்; decimal system, பதின்மான முறை.

dec'imalism, *n.* பதின்மான முறை வழக்காறு; பதின் கூற்று முறை ஆதரவு.

de'cimalize, *v.* பதின்மான முறையாக்கு; பதின்கூருக்கு.

de'cimate, *v.* பத்தில் ஒரு பங்கு அகற்று; பத்துப்பேரில் ஒருவனைக் கொலை செய்து தண்டி; பெரும்பகுதியைக் கொன்றழி, பெரும்பகுதி அழிவு செய்; பேரளவில் குறை.

dec'imetre, *n.* பிரஞ்சு மெட்ரிக் முறையில் நீட்டல் அளவைக் கூறு, கோலின் (metre) பத்தில் ஒன்று.

de'cimo-sex'to, *n.* பதினாறு மடி, பதினாருக மடிக்கப்பட்ட தாள்; பதினாறு மடிப்பு; பதினாறு மடிப்பாக உருவான ஏடு.

de'cimus, *n.* பத்தாமவர், பத்தாவது ஆள்.

deciph'er, *n.* மறைகுறியெழுத்துமூலத்தின் பொருள் விளக்கம்; *v.* மறைகுறியீட்டின் குறிப்புக் கண்டுணர்; மறை குறி யீட்டின் குறிப்புக் கண்டு பொது எழுத்து முறைப்பட எடுத் தெழுது; மறைகண்டுணர்; அடையாளம் அறி; பொருள் கண்டுபிடி.

deci'sion, *n.* தீர்மானித்தல்; முடிவு, தீர்மானம்; தீர்வு; தீர்ப்பு; உறுதிப்பாடு; உறுதிப்பாட்டுப் பண்பு, மன உறுதி.

decis'ive, decis'ory, *a.* தீர்மானிக்கும் ஆற்றலுள்ள; முடிவான, தீர்வான, அறுதி செய்து முடிக்கிற; இறுதி யான; உறுதியான; ஐயமற்ற; தெளிவான.

deciv'ilize, *v.* நாகரிகப்பண்பகற்று; பண்பாட்டு நிலையி னின்று தாழ்த்து.

deck, *n.* கப்பல் தளம், கப்பலில் பக்கத்துக்குப் பக்கமாகச் சென்று தளமாகப் பயன்படும் தட்டடுக்கு; கப்பல் தள மேடை; மேல் கட்டு; பேருந்துவில் தள அடுக்கு; பாலத்தின் அடுக்கத்தளம்; பொருட் குவியல்களின் அடுக்கு; சீட்டாட்ட வகையில் சீட்டுக்கட்டு; சீட்டாட்ட வகையில் எடுக்காது கிடக்கும் கட்டு; *v.* அழகு செய், ஒப்பனை செய்; ஆடை அணி பூட்டு; மேற்கவிந்து மூடு; கப்பலுக்கு மேல் தளம் அமை; தளமேடைமீது ஒழுங்குபட அடுக்கு.

deck'-bridge, *n.* சாலை செல்லும் மேற்பகுதியுடைய பாலம்.

deck'-car'go, *n.* கப்பலில் மேல்தளத்தில் பாதுகாப்பாக அடுக்கி வைக்கப்படும் சரக்கு.

deck'-chair, *n.* எளிதாக எடுத்துச்செல்லக்கூடிய நீள் மடக்கு நாற்காலி.

deck'er, *n.* அழகு செய்பவர்; ஒப்பனைப் பொருள்; தள அடுக்கு கொண்ட கப்பல் அல்லது ஊர்தி.

deck'-hand, *n.* கப்பல்தளத் தொழிலாளி; பொதுநிலைக் கடலோடி.

deck'-house, *n.* கப்பல் மேல்தள அறை.

deck'ing, *n.* அழகொப்பனை; மேடை.

dec'kle, *n.* தாள் செய்யும் தொழிலில் தாளின் அகலத்தை உறுதி செய்ய உதவும் அமைப்பு; கைமுறைத்தாளின் செப்ப மற்ற ஓரம்; திருந்தா ஓரம்; செப்பமற்ற ஓரப்போலி.

deck'le-edge, *n.* வெட்டப்படாத செப்பமற்ற தாள் விளிம்பு.

deck'-load, *n.* கப்பலின் மேல் தளத்திலுள்ள சரக்குமூடை.

deck'-passage, *n.* அறைத் தங்கல் வசதியின்றி மேல்தளத் திலே மட்டும் பயணம் செய்யும் உரிமை.

deck'-quoits, *n.* கப்பல் தளத்தில் கயிறு கட்டி ஆடப்படும் முனைவளைய ஆட்ட வகை.

deck'-tenn'is, *n.* கப்பல் தளத்தில் விளையாடப்படும் வரிப் பந்தாட்ட வகை.

declaim', *v.* முழக்கமிட்டுப் பேசு, தாக்கிப்பேசு; உணர்ச்சி யுடன் முழங்கு; பேருரை பயிலு.

declama'tion, *n.* கலைத்திறன் வாய்ந்த சொற்பொழிவு; பகட்டான பேருரை; கட்டமைவான மேடைப்பேச்சு.

declam'atory, *a.* உணர்ச்சி வசப்படுத்துகிற; உரத்துப் பேசுகிற; சொற்பகட்டு வாய்ந்த.

declar'able, *a.* அறிவிக்கத்தக்க; விளம்பரப்படுத்தும் திற முடைய; மெய்ப்பிக்கப்படவல்ல.

declar'ant, *n.* வாக்குமூலம் கொடுப்பவர்; உறுதி கூறுபவர்.

declara'tion, *n.* சாற்றுதல், அறிவித்தல்; அறிவிக்கப்பட்ட அறிக்கை; விளம்பரம்; உறுதிமொழி; எழுத்துமூல அறிவிப்பு; உறுதி ஆவணம்; (சட்.) ஸ்காத்லாந்து முறை மன்றத்தில் கைதி குற்றநடுவர்முன் கொடுக்கும் வாக்குமூல அறிக்கை; (சட்.) வாதி எதிர்வாதிமீது சாட்டும் வழக்கு விவர அறிவிப்பு.

declar'atory, *a.* விளக்கமான; விரிவான; (தொ.) declaratory act, தெளிவில்லாத அல்லது சச்சரவுக்குரிய சட்டப்பகுதியை விளக்குவதற்கான சட்டம்.

declare', *v.* சாற்று, அறிவி, தெரிவி, பலரறியக் கூறு; விளம்பரப்படுத்து; வலியுறுத்திக் கூறு, உறுதியாகக் கூறு; முழு விவரம் அறிவி; சீட்டாட்ட வகைகளில் கையிருப்புக் காட்டி வெற்றி அறிவி; துருப்புத் தெரிவி, துருப்பிலா ஆட்டங்கூறு; அறிவிப்புச் செய்; முடிவு தெரிவி; உளச் சார்பு வெளிப்படக் கிளந்துரை; மரப்பந்தாட்டத்தில் பத்துப் பேரின் முழு ஒழிவின் முன்பே தானாக ஆட்டத்தை முடி; (தொ.) declare off, கைவிடு, துற; பின்வாங்கு; திரும்பப் பெற்றுக்கொள்.

declared', *a.* முன்பே உறுதி கூறப்பட்ட; ஒத்துக்கொள்ளப் பட்ட.

decla'redly, *adv.* கூறப்பட்ட உறுதிப்படியே.

declar'er, *n.* விளம்பரம் செய்பவர்; அறிவிப்பாளர்; உறுதி கூறுபவர்; சீட்டாட்டத்தில் வெற்றிகோருபவர்.

declasse, (பிர.) *a.* தரமிழந்த, படியிறக்கமுற்ற; சாதிகெட்ட; *fem. declassee.*

declen'sion, *n.* நேர்நிலையினின்றும் பிறழ்ச்சி, சாய்வு, சரிவு, கோட்டம்; வீழ்ச்சி, இறக்கம்; (இலக்.) வேற்றுமைப் பாகுபாடு, வேற்றுமையுருபேற்கும் ஒரேவகைச் சொற்கள், வேற்றுமை வரிசை.

declin'able, *a.* வேற்றுமைகளை ஏற்றுச் சொல் மாறுபடக் கூடிய; வேற்றுமையுருபுகளை ஏற்றுத் திரிபுறுகிற.

declin'al, *a.* கீழ்நோக்கி வளைவான, கீழ்நோக்கிச் சரிகிற.

dec'linant, *a.* (கட்.) வால்பக்கம் கீழே தொங்குகிற.

declina'tion, *n.* கீழ்நோக்கிச் சரிதல்; கீழ்நோக்கிய சரிவு; நெறி விலகுதல், பிறழ்ச்சி, கோட்டம்; கவராயத்தின் முனைப் பிறழ்ச்சிக் கோண அளவு; (வான்.) வான் கோள நடுநேர் வரையிலிருந்து விண்மீனுக்குரிய கோணத் தொலைவு, வான் கோள நேர் வரை.

decline', *n.* இறக்கச்சரிவு; பிறழ்வு, விலகுதல்; நலிவு, தேய்வு, படிப்படியான குறைபாடு; அழிவு, நல அழிவு, தரங்கெடல்; உடல்நலக்கேடு; தளர்ச்சி, ஊக்கங்கெடல்; ஈரல் காசம், எலும்புருக்கி நோய்; விலையிறக்கம்; கதிரவன் சாய்வு; வாழ்வின் மாலைப்போது; *v.* கீழ்நோக்கிச் சரியச்செய்; சாய், சரிவிறக்கமுறு; வளைவுறு, நொய்வாகு; தளர்வுறு, நலிவுறு; முடிவை அணுகு; குறைவுறு, தேய்வுறு; ஊக்கமிழ, மன உரங்கெடு; விட்டுவிலகு; திரும்பு; மறு, ஏற்க முடியா தென்று தெரிவி; (இலக்.) வேற்றுமை உருத்திரிபுகள் எடுத்துரை; வேற்றுமையில் உருத்திரிபுறு.

declinom'eter, *n.* மெய்யான நேர்வடக்கிலிருந்து திசை காட்டியிலுள்ள ஊசியின் சரிவுக் கோணத்தை அளக்கும் கருவி.

decliv'ity, *n.* கீழ்நோக்கிய சரிவு.

decliv'ous, *a.* கீழ்நோக்கிச் சரிவான.

declutch', *v.* பொறியை ஓட்டவும் நிறுத்தவும் செய்யும் இணைப்புக் கொளுவியை அகற்று.

deco'ction, *n.* காய்ச்சி இறக்கப்பட்டது, கஷாயம், வடிநீர்.

decode', *v.* குழூஉக்குறிகளை மறைவிடுத்து எழுது.

decoll'ate, *v.* தலையை வெட்டு, கழுத்தை அறு.

decolla'tion, *n.* கழுத்தறுத்தல், தலையற்ற முண்டமாக்கும் செயல்.

decolletage, (பிர.) *n.* இரவிக்கை.

decollete', *a.* கழுத்து மூடப்படாத; இறக்கமாக வெட்டப் பட்ட சட்டைக் கழுத்துப் பகுதியையுடைய.

decol'ourization, *n.* நிறம் நீக்குதல், சாயம் போக்குதல்.

decol'ourize, *v.* நிறம் இழக்கச்செய், நிறம் நீக்கு.

dec'omplex, *a.* இருமடிப் பல்கலப்பான, பல்கலப்புப் பகுதி உட்கொண்ட, பல்கலப்புடைய.

decompose', *v.* ஆக்கக்கூறுகளாகப் பிரி; தனிக்கூறுகளாகச் சிதறு; சிதை; கெடு; அழுகு; கூரும்வுசெய், பகுத்தாராய்.

decom'posite, *n.* மீக்கூட்டுப்பொருள், பொருள்களின் கூட்டுடன் மேலும் தனிப்பொருள் சேர்ந்த மறுகூட்டு; மீத்தொகை, சொற்களின் தொகையுடன் பிறிதும் சொல் இணைந்த மறுதொகை; *a.* மீக்கூட்டான, முதற்கூட்டின் மீது தனிப்பொருள் சேர்ந்த மறுகூட்டான.

decomposi'tion [1], *n.* ஆக்கக்கூறுகளாகப் பிரித்தல்; தனிப் பொருட்களாக்கல்; கூரூக்கச் சிதைவு; சிதைதல், அழுகுதல்.

decomposi'tion [2], *n.* இருமடிச் சேர்மானம்; சேர்மானமா யுள்ளவை இணைந்து மீட்டும் மீச்சேர்மானமாக்கப் பெறுதல்.

dec'ompound, *n.* மீக்கூட்டு, கூட்டுடன் தனிப்பொருள் மேலும் சேர்ந்த மறுகூட்டு; (தாவ.) மீக்கொத்து, மலர்க் கொத்துடன் மேலும் மலர்சேர்ந்த பெருங்கொத்து; *a.* மீக்கூட்டான; மீக்கொத்தான.

decompress', *v.* அழுத்தம் தளர்த்து; காற்றுப்புகாப் பேழை மூலம் நீரடியிலும் பிற இடங்களிலும் உழைப்பவர்களுக்கு நேரும் அழுத்தமிகுதியைத் தடு.

decompress'or, *n.* உந்துகலத்தின் பொறியில் அழுத்தந் தளர்த்துவதற்கான அமைவு.

decon'secrate, *v.* திருநிலை நீக்கு, உலகியல் சார்பாக்கு.

decontam'inate, *v.* தீட்டகற்று; நச்சுத் தொடர்பின் விளை வகற்று, நச்சுவளிமூலம் இடம்-ஆடை முதலியவற்றுக் கேற்படத்தக்க நச்சுச் சார்பு நீக்கு.

decontrol', *n.* கட்டுப்பாடு நீக்கம்; *v.* சரக்குகள்மீது போர்க் கால அரசாங்கக் கட்டுப்பாட்டை விலக்கு.

decor, (பிர.) *n.* திரை அரங்கொப்பனை; அரங்க அமைப்பு, செயற்கை அறை அமைப்பு, திரை ஓவிய அமைதி.

dec'orate, *v.* புனைந்தொப்பனை செய், அணியலங்காரம் புரி; நன்மதிப்புப் பதக்கம் அணிவி, சிறப்புமதிப்பளி.

deco'rated, *a.* அணிசெய்யப்பட்ட; (தொ.) Decorated style, (கூக.) 14-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பரவி யிருந்த சித்திர அணி ஒப்பனை வாய்ந்த காதிக் (Gothic) மரபுக் கட்டிடக் கலைப்பாணி.

decora'tion, *n.* அணிசெய்தல், ஒப்பனை செய்தல்; அணி; ஒப்பனை; நன்மதிப்புச்சின்னம்; சிறப்புப் பதக்கம்.

dec'orative, *a.* அணியான, ஒப்பனையான.

dec'orator, *n.* அணிசெய்பவர்; ஒப்பனையாளர்; வீட்டினை அழகுசெய்பவர்.

de'corous, *a.* சுவைகலம் பிழையாத; தகுதிவாய்ந்த, மதிப் பமைதியுடைய; மெருகு குறையாத, மெட்டான.

deco'rum, *n.* சீரொழுங்கு, மரபமைதி, நயநாகரிக அமைதி; தகுதி.

decoy', *n.* பொறிக்குள் சிக்கவைக்க உதவும் பொருள்; காட்டுத் தாராக்களைப் பழகிய தாராக்களின் துணையால் செலுத்திச் சிக்கவைக்கும் வலை; புட்குலங்களை அகப்படுத்த உடந்தையா யிருக்கும் பறவை, பார்வை மிருகம்; ஏமாற்றுக்காரனுக்கு உடந்தையாய் இருப்பவர், உள்ளாள், கையாள்; தூண்டிற் பொருள்; மருட்டுக்கருவி; *v.* வசப்படுத்திப்பிடி; பொறியுள் ஏய்த்துச்செலுத்து; பழக்கிய பறவையுதவியால் காட்டுத் தாராவை வலையுட்படுத்து மருட்டிச் சிக்கவை.

decoy'-duck, *n.* காட்டுத்தாராக்களை மயக்கி வலைக்குள் விழவைப்பதற்காகப் பழக்கப்படுத்திப் பயன்படுத்தப்படும் காட்டுத்தாரா; பிடிக்குள் பிறரை வீழ்த்துவதற்காகப் பயன் படுத்தப்படுபவர்.

decrass'ify, *v.* அடர்த்தியைக் குறை; மடமையைத் தளர்த்து.

dec'rease [1], *n.* குறைபடுதல்; குறைபாடு, குறைவு; நட்டம், இழப்பு.

decrease' [2], *v.* குறை, குறைவாக்கு; குறைவுறு.

decree', *n.* ஆணை, கட்டளை, ஆணைப்பத்திரம், சட்டம்; நடுவர் முடிவு, தீர்ப்பு, கடல்துறை-மணவிலக்கு முதலியவை சார்ந்த வழக்குமன்றங்களின் முடிவு; இயற்கையின் நியதி, கடவுளின் கட்டளை, ஊழ்வரு முடிவு; *v.* ஆணை பிறப்பி, கட்டளையிடு; விதிசெய், முடிவுசெய், தீர்ப்பளி; (தொ.) decree nisi, வரையறைத் தீர்ப்பு, குறிப்பிட்ட கால எல்லைக் குள்ளாகத் தடுக்க விரும்புபவர் தக்க காரணம் கூரூவிட்டால் நடைமுறைக்கு வரத்தக்க முறைமன்ற ஆணை; மணவிலக்கு வழக்கில் தவணைக்குள் மறுப்புக்காரணம் காட்டாதபோது நடைமுறைக்கு வந்துவிடத்தக்க மணவிலக்காணை.

dec'rement, *n.* குறைவு, குறைமானம்; இழப்பளவு, சேதாரம்.

decrep'it, *a.* சிதைந்துபோன, முதுமைத் தளர்ச்சியுற்ற; இறுதிக் கட்டத்திலுள்ள.

decrep'itate, *v.* உப்பு வகைகளில் பற்றியவிடத்தில் சூட்டினால் வெடித்துச் சிதறு; உப்பு அல்லது கனிப்பொருள்கள் வகையில் சுட்டு நீருக்கு; வெந்து நீருகு.

decrep'itude, *n.* முதுமைத் தளர்ச்சி.

decres'cent, *a.* தேய்கிற, படிப்படியாகக் குறைகிற.

decre'tal, *n.* போப்பாண்டவரின் கட்டளை.

decre'tals, *n. pl.* போப்பாண்டவரின் கட்டளைத் தொகுப் பேடு.

decry', *v.* இகழ்ந்துரை; குறைகூறு; கண்டி.

dec'uman, *n.* பேரலை; *a.* மிகப்பெரிய, அலைகள் வகையில் தலைமையான.

decum'bence, decum'bency, *n.* கிடக்கும் நிலை.

decum'bent, *a.* படுத்த நிலையிலுள்ள; (வில., தாவ.) நிலத்தின்மீது படிந்து கிடக்கிற; (வில.) உடல்மீது நெடுக்காகக் கிடக்கிற; (தாவ.) கிளைமீது படிந்துகிடக்கிற.

dec'uple, *n.* பத்து மடங்கு; *a.* பதின்மடங்கான; *v.* பத்து மடங்காக்கு.

decu'ria, *n.* பதின்மர் குழு; பத்துப் பேர்கள் அல்லது மேற் பட்டோர் கொண்ட குழு.

decuss'ate, *a.* குறுக்குமறுக்கான; ஒன்றையொன்று வெட்டு கிற; சொற்றொடரில் பின்னுள்ள தொடரை எதிரிணையாகக் கொண்ட அணிநயமுடைய; (தாவ.) குறுக்குமறுக்கான, எதிரிணை இலைகள் கொண்ட; *v.* குறுக்குக்கோடிடு; குறுக்குவெட்டாக வெட்டு.

dedans', *n.* வரிப்பந்தாட்டத்தில் ஆட்டக்களத்தின் பந்தேறு பகுதிக் கோடியிலுள்ள திறந்த அடுக்குமேடை வரிசை; ஆட்டப் பார்வையாளர் குழாம்.

ded'icate, *v.* நேர்ந்தளி, அர்ப்பணஞ்செய், ஒப்படைத்துவிடு.

dedicatee', *n.* நேர்ந்தளிப்பை ஏற்பவர்.

dedica'tion, *n.* உரிமை ஒப்படைப்பு, நிவந்தம்; உரிமையுரை.

deduce', *v.* உய்த்துணர், ஊகி; தெரிந்த முடிபுகளிலிருந்து புது முடிபாக வருவி; மரபு தொடர்புபடுத்திக் காட்டு; குறிப்பிட்ட காலத்திலிருந்து தொடர்புபடுத்திக் குறிப்பிட்ட காலம் வரைக் கொண்டுவந்து இணை.

deduc'ible, *a.* உய்த்துணரத்தக்க, ஊகிக்கத்தக்க.

deduct', *v.* எடு, தள்ளு, கழி, குறை.

deduc'tion, *n.* உய்த்துணர்தல்; உய்த்துணரப்படுவது, ஊகிக்கப்படுவது, அனுமானம்; (அள.) விதிதருமுறை, பொதுக் கருத்தினின்று தனிப்பட்ட உண்மையைப் பிரித் தெடுக்கும் முறை; கழித்தல், கழிவு.

deduct'ive, *a.* விதிதருமுறையான, ஒப்புக்கொள்ளப்பட்ட மெய்ம்மையினின்றும் வருவிக்கப்படுவனவற்றைச் சார்ந்த.

deed, *n.* செயல்; மெய்ந்நிகழ்ச்சி, நடைமுறைச்செய்தி; துணிவுச்செய்கை; பத்திரம், ஆவணம்; சட்டமுறை ஒப்பந்தம்; (தொ.) in deed, உண்மையில்; உண்மையாக, மெய்யாக.

deed'poll, *n.* ஒரு கூற்றினரால் எழுதப்பட்டு நிறைவேற்றப் பட்ட பத்திரம்.

deem, *v.* மதி, கணி; எண்ணு, நினை; நம்பு; கருது.

deem'ster, *n.* மேன் தீவிலுள்ள (Isle of man) இரு நடுவர் களில் ஒருவர்.

deep, *n.* ஆழ்தடம்; கடல்; நெருக்கமிக்க கூறு; எய்த முடியாதது; உணரமுடியாதது, உணர்வுகடந்த ஒன்று; மரப்பந்தாட்டத்தில் எல்லையடுத்த ஆட்டக்காரர் இடம்; *a.* ஆழமிக்க, முகட்டிலிருந்து நெடுந்தொலை இறக்கமான, மேற்பரப்புக்கு நெடுந்தொலை கீழான; மதிப்பிட் டுரைக்க முடியாத ஆழமுடைய; ஆழ்ந்த புலமைவாய்ந்த; நுழைபுலம் வாய்ந்த; மிகத் தாழ்வாக உள்ள; மிக உள்ளார்ந்த; ஆழ்ந்து உட்குழிந்த; ஆழ்ந்து மிகுதொலை உட்சென்றுள்ள; நடுமையம் அளாவியுள்ள; சூழ்ச்சிவாய்ந்த; கடுஞ்சிக்கலான; கவனத்தை மிகவும் ஈர்க்கிற; முழு ஈடு பாடுடைய; மீளமுடியாத அளவு படிவுற்ற; அருமறைவான, இரகசிய மிக்க; திண்ணிய, அடர்த்திமிக்க, முணைப்பான; வரம்பு மீறிய, எல்லையற்ற; உளமார்ந்த; ஓசையில் தாழ் விசையுடைய; குரலில் முழுநிறைவுடைய; குரல் மூச்சு வகை களில் உள்ஆழத்திலிருந்து எழுகிற; சேரூர்ந்த; மணற் பாங்கான; மரப்பந்தாட்டத்தில் இலக்கைவிட்டுத் தொலைவில் எல்லைக்கோட்டுக்குப் புறம்பான; *adv.* ஆழமாக; நெடுந் தொலை உள்ளார்ந்து, ஆழ்ந்து தோய்ந்து; அறிய முடியா நிலையில்; (தொ.) deep field, மரப்பந்தாட்டத்தில் பந்து வீசுபவருக்குப் பின்னுல் எல்லைக்கோட்டில் உள்ள பந்து தடுப்பவர் நிற்குமிடம்; deep litter, ஒளிவாய்ப்புடைய பட்டியில் முட்டையிடும் பெட்டைக்கோழியை அடைத்து வைப்பதன் மூலம் முட்டை வளம் பெருக்கும் முறை; deep therapy, ஊடுகதிர் அல்லது நுழைகதிர் மூலம் நடத்தப்படும் மருத்துவமுறை; go in off the deep end, தங்கு தடையற்ற முறையில் உணர்ச்சியோடு பேசு; deep water, துன்பநிலை, இக்கட்டுகள் உள்ள நிலை; two deep, three deep, இரண்டு அல்லது மூன்று அடுக்கு வரிசையாக.

deep'-browed, *a.* மிகுந்த அறிவாற்றல் திறங்கள் நிரம்பிய.

deep'-draw'ing, *a.* (கப்.) மிதப்பதற்கு மிகுந்த ஆழம் தேவைப்படுகிற அளவுடைய.

deep'-dyed, *a.* வெறித்தபோக்குடைய, மிகமோசமான அளவில் கடுநிலைவாய்ந்த; இம்மியும் விடா நிறைவு வேண்டுகிற.

deep'en, *v.* ஆழமிகுதியாக்கு; மிகுதியாக்கு, பெருக்கு; செறிவூட்டு; ஆழமிகுதியுடையதாகு; செறிவாகு.

deep'-felt, *a.* உணர்ச்சியின் ஆழ்தடத்திலிருந்து எழுந்த, உள்ளார்ந்த உணர்ச்சியுடைய.

deep'-freeze', *n.* தாழ் தட்பவெப்பநிலையில் அழிதக்க உணவுப்பொருள்களைப் பதனம் செய்யும் முறை; *v.* தாழ் தட்பவெப்பநிலையில் அழிதக்க உணவுப்பொருள்களைப் பதனம் செய்.

deep'ing, *n.* மின்வலையின் குறுக்களவான ஆறு அடி ஆழம்.

deep'-laid, *a.* ஆழ்ந்து அடிகோலப்பட்ட, உறுதிவாய்ந்த அடிப்படையுடைய.

deep'most, *a.* மிகுந்த ஆழமுள்ள.

deep'-read, *a.* கற்றுத் தேர்ந்த, புலமைவாய்ந்த.

deeps, *n. pl.* கடலின் ஆழ்பகுதிகள்; ஆழ்தடம், படுபாதாள ஆழ்தடம், கோரப்பள்ளம்; உணர்ச்சியின் மறை அகடு; அறிவின் தொலைமுகடு.

deep'-sea, *a.* ஆழ்கடற்பகுதிகளைச் சார்ந்த.

deep'-seat'ed, *a.* உள்ளார்ந்த, மேற்போக்கல்லாத, ஆழ்ந்த தன்மையுள்ள.

deer, *n.* மான்; மான் வகை; *pl.* deer.

deer'-forest, *n.* வேட்டை மான்களுக்கென ஒதுக்கி வைக்கப் பட்ட காட்டு நிலப்பரப்பு.

deer'-hound, *n.* பெரிய வேட்டை நாய் வகை.

deer'let, *n.* மான் போன்ற சிறு விலங்கு வகை, எலிமான்.

deer'-lick, *n.* மான் நாவால் நக்கும் பழக்கமுடைய களர் நிலப்பகுதி.

deer'-neck, *n.* குதிரைகள் வகையில் மெலிந்த வடிவமைதி அற்ற கழுத்து.

deer'skin, *n.* மான் தோல்.

deer'stalker, *n.* சந்தடியின்றித் தொடர்ந்து சென்று மான் வேட்டையாடுபவர்; ஆட்டக்காரரின் தலைக்கவசம் போன்ற குல்லாய்.

deface', *v.* உருக்கெடு, தோற்றங்கெடு, அழகைக்கெடு; துடைத்தழி; தெளிவற்றதாக்கு; மதிப்புக்கெடு, பெயர் கெடு.

deface'ment, *n.* உருவழித்தல், தோற்றத்தைக் கெடுத்தல், அழகைக் கெடுத்தல்; புரியாதாக்குதல்; துடைத்தழிப்பு; அழகை அழிப்பது.

de fac'to, (ல.) *a.* மெய்யான, சட்டப்படி எவ்வாறுயினும் நடப்பின்படி உண்மையான; *adv.* சட்ட உரிமையின்படி எப்படியாயினும் மெய்ந்நடப்பில்.

def'alcate, *v.* பணத்தைக் கையாடல்செய்; சொத்தினை லஞ்ச வழிப்படுத்து.

defalca'tion, *n.* பணக்கையாடல்; பணக்குறைவு, பொறுப் பில் ஒப்படைக்கப்பட்ட பணம் பொறுப்பாளர் வரம்பு மீறிய செயலால் குறைதல்; கையாடப்பட்ட பணம்.

defama'tion, *n.* அவதூறு, பழித்துரைத்தல், நற்பெயரைக் கெடுத்தல், இகழுரை, பழி.

defam'atory, *a.* அவதூருன, நற்பெயரைக் கெடுக்கிற, பெருமை குலைக்கிற, பழிப்புரை சார்ந்த.

defame', *v.* நற்பெயரைக் கெடு; புகழ் அழி; அவமதிப்புக் காட்டு, பழித்துக் கூறு; பொய்யாகக் குற்றம் சாட்டு.

default', *n.* குறை; தவறு; கடமை திறம்புகை; சட்டப்படி நடக்கத் தவறுகை; பணம் செலுத்தத் தவறுதல்; தவணை தவறுதல்; கணக்குக் கொடுக்கத் தவறுதல்; *v.* கடமை தவறிய குற்றம் செய்; அழைப்பு விடுக்கப்பட்டபோது வழக்குமன்றத்துக்கு வராதிரு; செயல் தவறு; பணம் செலுத்தத் தவறு, தவணை தவறு; (தொ.) judgment by default, நீதிமன்றத்தில் தோன்றத் தவறியவர்மீது அளிக்கப் படும் தீர்ப்பு; வழக்காடத் தவறியவர்மீது அளிக்கப்படும் தீர்ப்பு.

default'er, *n.* நீதிமன்றத்தில் தோன்றத் தவறியவர்; ஒப்படைக்கப்பட்ட பணத்திற்குக் கணக்குக் கொடுக்கத் தவறியவர்; தன்மதிப்புக்காக்க முன்னுட்களில் நடத்தப்பட்ட போராட்டக் கடமையில் தவறியவர்; படைத்துறைக் குற்றம் செய்தவர்; (தொ.) defaulter sheet, படைத்துறைக் குற்றப் பட்டியல்

defeas'ance, *n.* இலதாக்குதல்; அழிவு.

defeas'ible, *a.* செல்லுகையழிவுபட்ட; பறிமுதல் செய்யப் படத்தக்க.

defeat', *n.* தோல்வி, கைகலப்பில் முறிவு; திட்டத்தகர்வு, முயற்சிச் சிதைவு; உளமுறிவு; ஆட்ட இழப்பு; பந்தயத் தோல்வி; (சட்.) தள்ளுபடி, செயலொழிப்பு; *v.* போரில் தோற்கடி, சண்டையில் முறியடி, ஆட்டத்தில் இழக்கச் செய், பந்தயத்தில் வீழ்த்து; திட்டம் தகர்; நோக்கம் கெடு, முயற்சி சிதை; பயனழி; (சட்.) செல்லுபடியாகாமற் செய், நடப்பொழி.

defeat'ism, *n.* தோல்வி மனப்பான்மை, தோல்வியை ஏற்கும் பண்பியல்பு; தோல்விக்குகந்த சூழலியல்பு; தோல்வியைப் பணிந்தேற்கச் செய்யும்படி படைத்துறை சாராப் பொது மக்களிடையே ஏற்படுத்தப்படும் கருத்து நிலை.

defea'ture, *v.* உருக்குலை.

def'ecate, *v.* வண்டலகற்று; மாசு நீக்கு, தூய்மைப்படுத்து.

defect', *n.* வழு, குற்றம், மாசு; ஊனம், குறைபாடு; ஊறுபாடு, உருக்குறை; முழுமைநிலை கெடுக்கவல்ல உயிர்ப் பண்புக்கூற்றின் குறைநிலை; (தொ.) the defects of one's qualities, மட்டுமீறிய அளவு நற்குணங்களோடு தோன்றக் கூடிய குறைபாடுகள்.

defect'ible, *a.* நிறைவெய்தாத, குறைபாடுள்ள.

defec'tion, *n.* கடமை தவறுதல், கடமை வழு; தலைமை மீறுகை; கட்சித்துறப்பு; கொள்கை கைநெகிழ்வு; சமயம் கைவிடுகை; விலகுதல், விட்டேகுதல்.

defence', *n.* பாதுகாப்பு; அரண்காப்பு; மரப்பந்தாட்டத்தில் எதிராட்டம் ஆடுதல்; தாக்குதலை எதிர்த்த தற்காப்புப்போர்; மரப்பந்தாட்டத்தில் இலக்குக் காப்பு; குற்றச்சாட்டுக் கெதிரான தன்னிலை விளக்கம்; உரிமை மெய்ப்பிப்பு; எதிர்வாதி பக்கத்து வாதவிளக்கம்; எதிர்வாதி பக்க வழக்கு நடவடிக்கை; (தொ.) defence in depth, அடுக்கடுக்கான பல பாதுகாப்பு எல்லைத்தொகுதி அமைப்பு; defence mechanism, (உள.) விரும்பாத செய்திகளை உணர்வுத் தளத்திலிருந்தே தடுத்து அகற்ற வல்லதாகப் பெரும்பாலும் உணர்வு கடந்த தளத்திலேயே அமைவுறும் மன ஒழுங் கமைவு நிலை.

defen'ces, *n. pl.* பாதுகாப்பு அரண்கள்; அரண்காப்பு முறைகள்.

defend', *v.* பாதுகாப்புச் செய், காவல் செய்; தாக்குதலை எதிர்த்து நில்; படைக்கலத்தாக்குதலை எதிர்த்து விலக்கு; தீமை எதிர்த்துப் போராடு; இன்னல் தடுத்தாதரி, காப்பாற்று; (சட்.) அழிவழக்காளருக்கெதிராக உரிமை காத்து நில்; குற்றச்சாட்டுக்கு எதிர் விளக்கமளித்து வழக் காடு, எதிர்வழக்காடு; வழக்குரைஞர் வகையில் எதிர்வாதி பக்கம் வாதாடு, எதிர்வாதிசார்பில் வழக்கு நடத்து.

defend'ant, *n.* பாதுகாப்பவர்; (சட்.) எதிர்வாதி, பிரதிவாதி.

defend'ed, *a.* பாதுகாக்கப்பட்ட; காவல் செய்யப்பட்ட; அரண்காப்புச் செய்யப்பட்ட; தாக்குதலுக்கு எதிராகத் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் முற்றுவிக்கப்பட்ட.

defend'er, *n.* பாதுகாப்பாளர், ஆதரவாளர்; பெற்ற வாகை வீரப் பதவியை இழந்துவிடாமல் காப்பவர்; (தொ.) Defender of the Faith, எட்டாம் ஹென்றி (Henry VIII) கால முதல் (1521-இலிருந்து) பிரிட்டனின் ஆங்கில அரசர்க்கு வழங்கப் பட்டுவரும் 'சமயப் பாதுகாவலர்' என்ற பட்டம்.

defer' [1], *v.* தள்ளிவை, ஒத்திப்போடு; காலங்கடத்து, காலந் தாழ்த்து; தயக்கங்காட்டு; (தொ.) deferred annuity, குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகே தொடங்கப்படும் ஆண்டளிப்புத் தொகை; deferred pay, படைவீரர் சம்ப ளத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டுப் பதவி விலகும்போதோ இறப்பின்போதோ அளிக்கப்படும் சம்பளம்; அரசாங்கப் பணியாளரின் ஓய்வு ஊதியம்; deferred shares, குறிப்பிட்ட காலம் அல்லது நிகழ்ச்சி வரையில் ஆதாயப்பங்கில்லாமலோ குறைந்த ஆதாயப் பங்குடனே அமையத்தக்க முதலீட்டுப் பங்குகள்.

defer' [2], *v.* கீழ்ப்படி; விட்டுக்கொடு, இணங்கிப்போ.

def'erence, *n.* பணிவிணக்கம், மேலோர்க்குக் காட்டும் வணக்கத்தோடு கூடிய நன்மதிப்பு; மேலோர் கருத்துக்குக் காட்டப்படும் பணிவிசைவு; பண்பிணக்கம்; விட்டுக் கொடுத்தல்.

def'erent, *n.* உடலில் வெளிநோக்கிச் செல்லும் குருதி நாளம்; *a.* கொண்டு செல்கிற; புறநோக்கிச் செல்கிற; பணிவிணக்க முடைய, இணக்க வணக்கம் காட்டுகிற.

deferen'tial, *a.* பணிவிணக்கம் காட்டுகிற.

defer'ment, *n.* தள்ளிப்போடுதல்.

deferr'er, *n.* காலந்தாழ்த்துபவர், காலங்கடத்துபவர்; ஒத்திப் போடுபவர்.

defervesc'ence, **defervesc'ency**, *n.* வெப்பத் தணிவு; குளிர்ச்சி; காய்ச்சலின் அறிகுறிகள் தளர்வுறுதல்.

defeu'dalize, *v.* நிலமானியத்திற்குரிய பண்பிலிருந்து விலக்கு.

defi'ance, *n.* எதிர்ப்பு, அறைகூவல்; எதிர்த்து நிற்றல், எதிர்ப்பறிவிப்பு; வலிந்து தாக்குதல், மீச்செலவு; பகை புறக்கணிப்பு; பணிய மறுத்தல், மீறுகை.

defi'ant, *a.* எதிர்க்கிற; ஏற்க மறுக்கிற; ஐயப்படுகிற.

defic'ience, **defi'ciency**, *n.* குறைபாடு, குறைவு; (தொ.) deficiency disease, பற்றுக்குறைநோய், தேவையான சத்துப் பொருள்கள் உணவில் இல்லாமையால் தோன்றும் பிணி.

defi'cient, *n.* குறைபாடுற்றவர், உடல் திறக் கூறுகளிலோ உளத்திறக் கூறுகளிலோ குறைபட்டவர்; *a.* குறை பாடுடைய.

def'icit, *n.* பற்றுக்குறை, செலவினத்திற்குக் குறைந்த வரவின்நிலை.

de fid'e, (ல.) *a.* சமயப் பற்றுக்கோடாகக் கொள்ளவேண்டிய.

defied', *v.* **defy** என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

defi'er, *n.* எதிர்ப்பவர்.

defilade', *n.* வேட்டணிக்காப்பு நடவடிக்கை, பீரங்கி அணி வரிசைத் தாக்குக்குப் பாதுகாப்பான அரணுக்குரிய முன்னேற் பாட்டு நடவடிக்கை; *v.* பீரங்கிக் குண்டுகளின் அணிவரிசைத் தாக்கிலிருந்து அரணுக்குக் காப்பீடு அளி.

def'ile [1], *n.* நீண்ட ஒடுக்கமான வழி, படைகள் நெடுநீள் அணியாக மட்டும் செல்லத்தக்க இடுங்கிய இடைவழி; கணவாய், கெவி.

defile' [2], *v.* ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்துச் செல், இடுங்கிய அணிவரிசையில் செல்.

defile' [3], *v.* கெடு; கறைப்படுத்து, தூய்மை கெடு; கற்பழி; தெய்விகத் தன்மையை இழிவுசெய், மேன்மை குலை; ஆசாரம் கெடு.

defile'ment, *n.* கறைப்படுத்துதல்; தூய்மைக் கேடு; புனிதத்தன்மையைக் கெடுத்தல்; சீர்குலைப்பு; பழிப்பு; இழிதகவு, கீழ்மை.

define', *v.* வரையறு; எல்லை தெளிவுபடுத்து; கருப்பொருள் தொகுத்துரை; பொருள் வரையறை செய்.

def'inite, *a.* வரையறுக்கப்பட்ட; உறுதிசெய்யப்பட்ட; தெளிவான எல்லையுடைய; நிலையான, உறுதியான; தெளிவான, ஐயமற்ற; (தாவ.) உள்முதிர்க்கொத்தான, இணைத் தண்டுடைய.

defi'nitely, *adv.* உறுதியாக.

defini'tion, *n.* பொருள் வரையறை; சொற்பொருள் விளக்கம்; பொருளின் பண்பு விளக்கம்.

defin'itive, *n.* (இலக்.) வரைநிலை அடைமொழி; *a.* வரையறை செய்கிற, வரம்பிட்டுக் காட்டுகிற, கட்டுப்படுத்துகிற; உறுதி செய்கிற.

defin'itude, *n.* உறுதிப்பாடு.

de'flagrate, *v.* கொழுந்துவிட்டு எரித்துச் சாம்பராக்கு, சட சடவென்று எரித்துப் பொசுக்கு.

deflate', *v.* உள்ளடைத்த காற்றை வெளிவிடு; புடைப்புத் தளர்வுறு; (நிதி.) பணப்பெருக்கத்தைக் குறைவுபடுத்து; பணப் புழக்கத் தளர்வுக் கொள்கையைப் பின்பற்று.

defla'tion, *n.* புடைப்புத்தளர்வு, உள்ளடைத்த காற்றின் வெளியீடு; நாணயச் செலாவணித் தளர்வு நிலை; பணப் புழக்கத் தளர்த்தல் முறை; தூசகல்வு, காற்றின் ஆற்றலால் நொய்மைமிக்க கூறுகள் போக்குதல்.

defla'tionist, *n.* பணப்புழக்கத் தளர்வுக் கொள்கையை ஆதரிப்பவர்.

deflect', *v.* ஒரு பக்கமாகத் திருப்பு; கீழ்நோக்கி வளை; நேர் வழியிலிருந்து விலகிச் செல்; நேர்க்கோட்டிலிருந்து விலகு, பிறழ்வுறு.

deflect'ed, *a.* (தாவ.) திடுமெனக் கீழ்நோக்கி வளைந்துள்ள.

deflec'tion, *n.* முனை மடங்கியுள்ள நிலை; கீழ்நோக்காக வளைந்துள்ள நிலை; கோட்டம்; திருப்பம்.

deflec'tive, *a.* வளைவாக்குகின்ற; கோட்டமுண்டுபண்ணுகிற.

deflec'tor, *n.* தீக்கொழுந்தை ஒருபக்கமாகத் திருப்பும் பொறி அமைவு.

defle'xion, *n.* = **deflection.**

deflo'rate, *a.* மலர்ச்சிப் பருவம் கடந்த; பூந்தாது கழித்து விட்ட; *v.* பூக்கழி; இளநலங்குலை.

deflora'tion, *n.* பூவுதிர்வு; நலங்குலைத்தல்.

deflow'er, *v.* மலர்களை அகற்று; இளநலங்குலை; அழகு கெடு; கன்னிமையழி; கற்பழி.

de'fluent, *n.* பனிப்பாறைச் சறுக்கலின் அடிப்பகுதி; *a.* கீழ் நோக்கி ஒழுகுகின்ற; (தாவ.) அடிநோக்கிப் பரவுகின்ற, தண்டில் தொடர்ந்திறங்குகின்ற.

defo'rest, *v.* காட்டை அழி, காட்டின் மரங்களை வெட்டி அகற்று.

deform', *v.* உருச்சிதை, அருவருப்பான தோற்றமுடைய தாக்கு; அழகு பாழ்படுத்து.

deforma'tion, *n.* உருத்திரிபு; சீர்குலைவு, அழகுக்கேடு; சொற் சிதைவு; (இய.) வடிவ மாறுபாடு.

deformed', *a.* உருத்திரிபுற்ற; அருவருப்பான வடிவுடைய; தவருன வடிவம் அமைந்துள்ள.

deform'ity, *n.* அருவருப்பான தோற்றம்; உருத்திரிபு; அழகைப் பாழ்படுத்தும் கூறு; மோசமான பண்பு.

defraud', *v.* ஏமாற்று, வஞ்சனையால் பறிபோகச் செய்.

defray', *v.* பணங்கட்டு, கொடுத்துத்தீர்.

defrock', *v.* மேலங்கியை அகற்றுவி, மேல் சட்டையை நீக்கு.

deft, *a.* கைவந்த, செய்திறமிக்க.

deft'ly, *adv.* சாமர்த்தியமாக.

defunct', *a.* செயலற்றுப்போன; இறந்த.

defy', *v.* போருக்கழை; போட்டிக்கு அறைகூவல் விடு, எதிர்த்து நில்.

degage, (பிர.) *a.* எளிமை நலம் வாய்ந்த, தலையில்லாத.

degauss', *v.* காந்த ஈர்ப்பகற்றும் அமைப்பின் மூலம் கடற் கண்ணியிலிருந்து கப்பலுக்குப் பாதுகாப்பு அளி.

degen'eracy, *n.* பாடழிவு, சீர்க்குலைவு, இனப்பண்புக்கேடு; பண்புச் சிதைவு, இழிநிலை, தாழ்வு.

degen'erate, *n.* சீர்க்கேடுற்றவர், இனப்பண்பழிந்த விலங்கு; *a.* பாடழிந்த. இனத்திறம்கெட்ட, முன்னை மேம்பாடிழந்த, (உயி.) கீழ்நிலைப்படிக்கு மடங்கிச் சென்றுள்ள; *v.* சீர்க் கேடுறு, தாழ்நிலைக்கேகு.

degenera'tion, *n.* இனச்சிதைவு, கீழ்நிலை நோக்கிய போக்கு.

degluti'tion, *n.* விழுங்குதல்; விழுங்குமாற்றல்.

degrada'tion, *n.* படியிறக்கம், தரக்குறைவு; அவமதிப்பு, இழிவு.

degrade', *v.* தரங்குறை, கீழ்ப்படிக்குக் கொண்டுபோ; இழிவுபடுத்து, பணித்துறைகளில் தண்டனையாகப் படி இறக்கு; அடுக்குத் திறங்களில் அடுக்கு விசை குறை.

degrad'ed, *a.* படி இறக்கம்பெற்ற; தரங்குறைந்த; இழிந்த, கீழான, பண்பிழந்த; (கட்.) படிகளில் அமைந்த.

degrad'ing, *a.* இழிவுபடுத்துகிற, தாழ்வு தருகிற, மதிப்புக் கேடான.

degree', *n.* படி, தரம்; சிறு கூறு, சிற்றளவு; சிறு தொலை, போக்கின் நுண்படி; அளவு; சமுதாயப் படிநிலை, மதிப்புப் படி; உறவின் அணுக்கத் தொலைவளவுக்கூறு; மரபுவழியின் தலைமுறைப்படி; மதிப்பின் அளவுப்படி; குற்ற அளவுத் தரம்; கணிப்பளவைச்சட்டத்தின் நுண் கூறு; பல்கலைக் கழகப் பட்டம்; சிறப்புப்பட்டம்; பதவி, பணித்துறைத் தரம்; பாகை, கோணத்தின் அலகுக்கூறு; வட்டச் சுற்றில் 360-இல் ஒரு பங்கு; நிலவுலக வட்டத்தில் 60 கல் தொலை அளவு; தட்ப வெப்பமானியின் பாகைக்கூறு; (இலக்.) பெயரடை வினையடைகளின் ஒப்பீட்டுப்படி; (கணை.) தொடரளவையில் அளவுருவின் உச்ச விசை எண்; (தொ.) by degrees, சிறிது சிறிதாக, படிப்படியாக; forbidden degrees, மணத்தொடர்புக்குத் தகா உறவுப்படிமைகள்; third degree, குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கொடுமைப்படுத்திக் குற்றஞ் செய்ததாக ஒப்புக்கொள்ளச் செய்யும் முறை.

degre'ssion, *n.* கீழ்நோக்கிய போக்கு, இறக்கம்; குறிப்பிட்ட வரம்புக்குக் கீழுள்ள தொகைகள்மீது வரிக் குறைப்பு வீதம்.

de haut en bas, (பிர.) *adv.* அருளிப்பாட்டுணர்ச்சியுடன், அனுக்கிரகிப்பதுபோல.

dehisce', *v.* (தாவ.) கூம்பவிழ், வாயைப்பிள.

dehort', *v.* எதிராகத் தூண்டிவிடு.

dehort'ative, *a.* எதிராக வற்புறுத்துகிற.

dehum'anize, *v.* மனிதத் தன்மையைப் போக்கு, மனிதனின் சிறப்பியல்புகளை இழக்கும்படி செய்.

dehyd'rate, *v.* (வேதி.) நீரை அகற்று, நீர்க்கூறகற்று.

dehyp'notize, *v.* வசியமயக்கநிலையிலிருந்து விடுவி, ஏவுதுயிலிலிருந்து எழுப்பு.

de-ice', *v.* வானூர்திகளின்மீது படிந்துள்ள பனிக்கட்டியை அகற்று; வானூர்திமீது பனிக்கட்டி உறைவதைத் தடுக்கும் ஏற்பாடு செய்.

de-i'cer, *n.* பனிக்கட்டி உறைவதைத் தடுக்கும் கருவி; பனிக்கட்டி உறையைத் தவிர்க்கும் மின் அமைவு; பனிக் கட்டிகள் விமானச்சிறகுகளில் உருவாகாமல் தடுக்கப் பயன் படுத்தப்படும் கூட்டுக்கலவை.

de'icide, *n.* தேவ வதை; தேவக் கொலைஞன்.

deic'tic, *a.* (மொழி., இலக்.) சுட்டிக்காட்டுகின்ற, சுட்டியலான.

deif'ic, deif'ical, *a.* தெய்வத்தன்மையுள்ள ; தெய்வத்தன்மையளிக்கிற.

deifica'tion, *n.* தெய்வமாக்கும் செயல் ; தெய்மாக்கப்பட்ட திருவுரு.

de'iform, *a.* தெய்வ உருவுடைய ; தெய்வ இயல்புடைய.

de'ify, *v.* தெய்வமாக்கு ; கடவுள் மங்கலஞ் செய்.

deign, *v.* தகுதி ஏற்றருள் ; அருளிச்செய் ; அருளியுரை.

de'i gra'tia, (ல.) *adv.* இறைவன் அருளால், தெய்வத்தின் கருணையால்.

de in'tegro, (ல.) *adv.* புதிதாக, மறுபடியும்.

de'ism, *n.* இயற்கைச் சமயம், கடவுளே நேரில்வந்து அருளுதலை மட்டும் ஏற்காத இறையுண்மைக் கோட்பாடு.

de'ist, *n.* இயற்கைச் சமயவாதி, அருள்வெளிப்பாட்டை ஏற்காத இறையுண்மைக் கோட்பாட்டாளர்.

de'ity, *n.* தெய்வத்தன்மை; இறைமை; தெய்வநிலை ; தெய்வப் பண்பு ; தெய்வம் ; தேவன் ; தேவி ; (தொ.) the Deity, பரம்பொருள், கடவுள், இறைவன்.

deject', *v.* சோர்வூட்டு, வாட்டமுறுவி.

dejec'ta, *n. pl.* மலம், சாணம்.

deject'ed, *a.* சோர்வுற்ற.

dejec'tion, *n.* கிளர்ச்சியற்ற நிலை, உளச்சோர்வு ; (மரு.) குடற்கழிவு, மலம்.

deject'ory, *a.* மலக்கழிவை எளிதில் வெளியேற்றும் இயல்புடைய.

dejeuner, (பிர.) *n.* காலை உணவு ; நண்பகல் உண்டி.

de jur'e, (ல.) *a.* உரிமையான; *adv.* உரிமைப்படி, சட்டப்படி.

delaine', *n.* மெல்லிழைத் துகிற்பொருள் வகை.

delate', *v.* குற்றப்படுத்திக்கூறு, குற்றஞ்சாட்டு, எதிர்த்துக் குற்றச்சாட்டுத் தெரிவி ; குற்றச்சாட்டு நடவடிக்கை எடு.

delay', *n.* காலதாமதம், சுணக்கம் ; காலங்கடத்தல் ; செயல் நீட்டிப்பு ; தடங்கல் ; *v.* காலந்தாழ்த்து, சுணக்கம் செய் ; நேரங்கடத்து ; தடங்கல் செய்.

del cred'ere, (இத்.) *n.* வாணிகத்துறையில் வாங்குபவர் வகையில் முகவர் அளிக்கும் பிணையம் ; *a.* வாங்குபவர் சார்பில் பிணையம் அளிக்கிற; முகவர் பிணையத்துடன் கூடிய; *adv.* வாங்குபவர் வகையில் முகவர் பிணையத்துடன்.

del'e, *v.* அச்சகத்திருத்தத் துறை ஓரக் கட்டளை அடையாள வகையில் அடித்துவிடு, ஒழி, எடுத்துவிடு.

delect'able, *a.* மகிழ்ச்சி தருகிற, இன்பமான, மனநிறைவு தருகின்ற.

delecta'tion, *n.* மகிழ்ச்சி.

delec'tus, *n.* பாடத்திரட்டு.

del'egacy, *n.* ஆணைப்பேராண்மை முறை ; ஆணைப் பேராண்மை அமர்விப்பு ; ஆணைப்பேராண்மை, ஆணைப் பேராளர் குழு ; ஆணைப்பேராளரின் அதிகாரம்.

del'egate, *n.* ஆணைப்பேராள் ; கட்டளைத் தூதர், ஆட்பேர் ; தேர்ந்தெடுக்கப்பட்ட மாநாட்டுப் பிரதிநிதி ; *a.* ஆணைப் பேராளராக அமர்வுபெற்ற, கட்டளைப் பேராண்மை பெற்ற; *v.* பேராளராக அனுப்பு, ஆட்பேர் உரிமை தந்து அனுப்பு, அதிகாரம் கொடு; ஒப்படை ; (தொ.) delegated legislation, சட்ட வலிமையுடைய ஆணைகளையும்-கட்டளை-விதிகளையும் பிறப்பிக்கும்படி அமைச்சர்களுக்குச் சட்ட மாமன்றம் சட்ட மூலம் அளிக்கும் அதிகாரம்.

delega'tion, *n.* அதிகார ஒப்படைப்பு ; ஆணைப்பேராண்மை, உரிமைப் பேராளர் குழு ; அமெரிக்க ஐக்கிய அரசில் ஓரரசின் கட்டளைப் பேராளர் குழு ; (வர.) ஆஸ்திரிய-ஹங்கேரிய (Austria-Hungary) மாமன்றங்களால் பொதுப்பேரரச காரியங்களை நடத்த அமர்த்தப்பட்ட இரு குழுக்களில் ஒன்று.

delete', *v.* அடித்துவிடு, ஒழி, நீக்கு.

deleter'ious, *a.* தீங்கான, உடல் நலனுக்குக் கேடான ; ஒழுக்கத்துறையில் தீங்கு தருகிற.

delf, delft, *n.* ஹாலண்டு (Holland) நாட்டில் 'டெல்ப்' (Delf) என்ற இடத்தில் செய்யப்பட்ட பளபளப்பான மட்பாண்ட வகை.

delib'erate, *a.* வேண்டுமென்றே செய்யப்பெற்ற ; திடீரெழுச்சியினால் செய்யப்படாத, குறிக்கொண்டு சூழப்பட்ட, கருத்தூன்றிச் செய்யப்பட்ட ; திட்டநோக்குடைய ; முன் கருதலுடனமைந்த, செயலூன்றிய, ஆர்ந்தமர்ந்து முடிவு செய்யப்பட்ட ; உளமார்ந்த உணர்ச்சியுடன் கூடிய ; விரைவில்லாத, மெல்லமைவான ; *v.* ஆழ்ந்து ஆராய், சிந்தனை செய் ; சார்பு எதிர்வு இருபுறமும் ஒப்ப எண்ணிப்பார் ; அமைந்து நினை, தொடர்ந்து சிந்தித்துப்பார் ; கலந்தாராய், கூடிக்கலந்து வாதிடு.

delibera'tion, *n.* ஆழ்ந்தாராய்வு, முதிர் சிந்தனை ; அமைதியான தன்மை, அமைதி நிலை.

delib'erative, *a.* ஆராய்ந்து தீர்மானிக்கிற, ஆழ்ந்தாராய்கிற, கலந்தாலோசனை செய்கிற.

del'icacy, *n.* நுண்ணயம், மென்னயம், பண்பு நயம், நயநாகரிகத்தன்மை ; அருஞ்சுவைப் பொருள் ; கேர்த்தி ; நடைநயம் ; உணர்ச்சி நயம் ; கூருணர்வு நலம் ; நுண்ணுணர்வுத்திறம் ; கருவிகலங்கள் வகையில் நுண்கூறுபாடுகளைக் காட்டும் அருந்திறம் ; மட்டுமீறிய கூருணர்வு ; மிகச்சிறு ஊறுபாடும் தாங்க முடியாத நொய்மை ; பிணி சிறிதும் தாங்கப்படா நிலை ; பாதுகாக்கத்தக்க அரு நுண்ணலம்.

del'icate, *a.* இன்சுவையுடைய, சுவைநலமிக்க; புலன்களுக்கு இனிய ; இன்பத்தில் இழைகிற ; நொய்தின் நொய்மை வாய்ந்த ; ஊறுபாடு பொறுத ; கூருணர்வுடைய ; கண்டிப்பான சுவையுணர்வுடைய; கருவிகலவகையில் நுண் கூறுபாடு காண உதவுகிற ; மிக நுண்ணிய, காணரிய; அருவேலைப்பாட்டுத் திறம் வாய்ந்த.

delicatess'en, *n. pl.* வாணிகத்துறையில் மேசை உணவிற்கான இன்சுவைப் பொருள்கள்.

deli'cious, *a.* புலன்களுக்கு மிக்க மகிழ்ச்சி தருகிற ; சுவை மிக்க.

delict', *n.* சட்டமீறுகை, பழிவினை.

delight', *n.* பெருமகிழ்ச்சி, உவகை ; பெரு மகிழ்ச்சி தரும் பொருள் ; *v.* களிப்பூட்டு, மகிழ்வி.

delight'ed, *a.* அகமகிழ்வுடைய.

delight'ful, *a.* மகிழ்ச்சி நிரம்பிய.

Delil'ah, *n.* மாயக்காரி.

delim'it, delim'itate, *v.* வரையறு, எல்லைகுறி, கட்டுப்படுத்து, வரம்பிடு.

delin'eate, *v.* வரை, உருவப் படமெழுது ; விரித்துரை.

delinea'tion, *n.* வரைதல், சித்திரிப்பு ; உருமாதிரி, ஓவிய உருவம் ; வருணனை.

delineaver'unt, (del. சுருக்கக் குறிப்பு) (ல.) *v. pl.* "இன்னின்னார் இதை எழுதினார்கள்".

delineav'it, (del. சுருக்கக்குறிப்பு) (ல.) *v.* "இன்னார் இதை எழுதினார்".

delinq'uency, *n.* கடமை வழு, விட்ட கேடு ; தீச்செயல்.

delinq'uent, *n.* கடமை தவறுபவர் ; கடமைப் புறக்கணிப்புக் குற்றத்துக்காளானவர் ; குற்றவாளி ; சமுதாயப் பண்பற்றவர் ; *a.* கடமையில் தவறுகிற.

deliquesce', *v.* ஈரமுறிஞ்சி நீரியலாகி நெகிழ்வுறு, உப்புப் போலக் கசிவுறு ; கசிவுற்றுக் கரைந்து போ, உருகி நைவுறு.

deliques'cent, *a.* காற்றுவெளியில் ஈரமுறிஞ்சிக் கசிவுறுகிற.

deli'rious, *a.* சன்னி சார்ந்த, மனத்தடுமாற்றமுள்ள, மூளைக் கோளாறினால் மயக்க வெறிகொண்ட ; அறிவுதிறம்பிய.

deli'rium, *n.* சன்னி, வெறிப்பிதற்றலான நிலை; (தொ.) delirium tremens, மட்டற்ற குடியினால் ஏற்படுகிற வலிப்பு அல்லது நடுக்கத்தோடு கூடிய வெறிப்பிதற்றலுள்ள மூளைக் கோளாறு.

delites'cence, *n.* மறைந்துள்ள நிலை.

delites'cent, *a.* உள்ளுறைவாக மறைந்திருக்கிற.

deliv'er, *v.* விடுவி; தீங்கினின்றும் தப்புவி, இடர்நீக்கிக் காப்பாற்று; அச்சத்திலிருந்து தவிர்த்தாளு; பிள்ளைபெறு; சுமை இறக்கிவிடு; வழங்கு; அஞ்சல் வகையில் எங்கும் சென்றுகொடு; பொருளை ஒப்புவி; கணக்குத் தீர்த்துக்கொடு; முறைப்படி ஒப்படைத்துவிடு; செலுத்து; தீர்ப்பை வெளியிடு; கருத்தைத் தெரிவி; பேருரையினை வழங்கு.

deliv'erance, *n.* விடுதலை, மீட்பு, காப்பு; பிள்ளைப்பேறு; தீர்ப்புத் தெரிவிப்பு, அதிகாரமுறையான அறிவிப்பு.

deliv'erer, *n.* காப்பவர், மீட்பவர், விடுவிப்பவர்.

deliv'ery, *n.* பிள்ளைப்பேறு; ஒப்படைப்பு; அஞ்சல் வகையில் எங்கும் சென்று வழங்குதல்; அஞ்சல்காரரின் வாடிக்கைச் சுற்றுவட்டச் செலவு; பந்தெறி; குண்டுவீச்சு; நீரின் வெளியோட்டம்; எறிமுறை, வீச்சு முறை; பேருரை முழக்கம்; பேச்சு முறை, ஒலிப்பு முறை; வார்ப்பிலிருந்து அச்சின் பிரிப்பு; (சட்.) முறைமை வாய்ந்த பொருள் ஒப்படைப்பு; (தொ.) general delivery, முகவரியாளர்களுக்கு அஞ்சல் நிலையத்திலேயே அஞ்சல் கடிதங்கள் வழங்கப்படுதல்.

dell, *n.* ஆழ்ந்த பள்ளம்.

Dell'a Crus'can, *n.* பிளாரென்ஸிலுள்ள (Florence) முற்கால இத்தாலிய கலை இலக்கியக் குழு உறுப்பினர்; *a.* இத்தாலியக் கலை இலக்கியக் குழுவினுக்குரிய.

delouse', *v.* பேனை ஒழி; நிலவெடிகுண்டுகளை முற்றிலும் அகற்று.

Del'phian, Del'phic, *a.* பண்டைக் கிரேக்கரின் பேர்போன 'டெல்பி' (Delphi) என்ற இடத்துக்குரிய; வருவதுரைக்கும் 'டெல்பி' பாவைக்குரிய; பொருள் விளக்கமில்லாத, புதிரான, இருபொருள் தருகிற.

Del'phin, *a.* பிரஞ்சு நாட்டு அரசரின் மூத்தமகனைச் சார்ந்த; பிரஞ்சு இளவரசருக்காக 1674–1730-இல் 64 ஏட்டுப்பிரிவுகளுடன் வெளியான இலத்தீன் பேரிலக்கியப் பதிப்பைச் சார்ந்த.

del'phinine, *n.* (வேதி.) நச்சுப்பு மருந்து வகை.

delphin'ium, *n.* மஞ்சள்நிறக் கிண்ணவடிவுள்ள மலர்ச் செடிகளின் இனம்.

del'phinoid, *n.* கடல்வாழ் இயல்புடைய பாலுணி உயிரினக் குடும்பம்; *a.* கடல்வாழ் இயல்புடைய பாலுணி உயிரினக் குடும்பம் சார்ந்த.

del'ta, *n.* ஆற்றின் கழிமுக நடுவரங்கம்; கிரேக்க நெடுங் கணக்கில் முக்கோண வரிவடிவமுடைய நான்காவது எழுத்து; (தொ.) delta metal, செம்பு-துத்தநாகம்-இரும்பு மங்கனிகம் அடங்கிய கலவை.

delta'ic, *a.* ஆற்றின் கழிமுக அரங்கத்தைச் சார்ந்த.

del'toid, *a.* முக்கோண வடிவுடைய; (தொ.) deltoid muscle, தோள்பட்டையிலுள்ள முக்கோண வடிவுடைய தசை.

delude', *v.* ஏமாற்று; மயக்கு.

del'uge, *n.* பெருவெள்ளம்; ஊழி வெள்ளம், ஊழி இறுதிக் காலத்தில் பேரழிவுதரும் நீரெழுச்சி; *v.* பெருவெள்ளத்தில் ஆழ்த்து.

delu'sion, *n.* மருட்சி, மயக்கம்; ஏமாற்றம்.

delu'sional, *a.* மருட்சிக்குரிய; மாயத்தோற்றங்கட்கு இரையான.

delus'ive, delu'sory, *a.* மயக்கும் இயல்புடைய, ஏமாறச் செய்கிற; உண்மையல்லாத.

delve, *n.* பள்ளம்; குழி, சுரிப்புவரை; *v.* தோண்டு, குடை, கிண்டு; பத்திரங்கள் முதலியவற்றில் உண்மையை நாடி ஆராய்ச்சிசெய்; பாதைகள் வகையில் திடுமென அமிழ்ந்து செல்.

demag'netize, *v.* காந்த வலிமையைப் போக்கு.

dem'agogue, *n.* மக்கள் ஆர்வத்தலைவர்; கிளர்ச்சித்தலைவர்; மக்கள் உணர்ச்சிகளைக் கிளறிப் பயன்படுத்துபவர்; கட்சி வாதச் சொற்பொழிவாளர்.

demand', *n.* உரிமைக்கோரிக்கை; கோரிக்கை, வேண்டுகோள்; கோரிக்கைப்பொருள்; பொருள்கள் பற்றிய தேவை, வேண்டுகை; விசாரணை; *v.* வேண்டு, உரிமைகோரு, உரிமையுடன் கேள்; அதிகாரத்துடன் கோரிக்கை செய்; வற்புறுத்திக் கேள்; வினவு, விசாரி, எதிர்த்துக் கேள்; வேண்டுமென்று கோரு; (தொ.) in great demand, மிகத் தேவைப்படுகிற.

demand'able, *a.* வற்புறுத்திக் கேட்கப்படத்தக்க.

demand'ant, *n.* வற்புறுத்திக் கேட்பவர்; வாதி, வழக்காடி.

de'marcate, *v.* எல்லைவரையறு.

demarca'tion, *n.* எல்லை குறித்தல்; எல்லை வரையறை; எல்லைப்பிரிவினை.

demarche, (பிர.) *n.* அரசியல் நடவடிக்கை, அரசியல் முயற்சி.

demater'ialize, *v.* பருப்பொருள் தன்மையை நீக்கு, உடல் வாழ்க்கையை ஒட்டிய தன்மைகளை விட்டுப்பிரி, ஆன்மிக மாக்கு.

deme, *n.* பண்டைய கிரேக்க நாட்டின் அரசான அட்டிகாவில் (Attica) உட்பிரிவு; தற்கால கிரேக்க நாட்டில் நகரவட்டம்; (உயி.) வகை பிரிவுறுத படிஉயிர்மங்களின் தொகுதி.

demean', *v.* தாழ்த்திக்கொள், மதிப்பைக் குறைத்துக்கொள்.

demean'our, *n.* நடத்தை, நடந்துகொள்ளும் முறை, புறத் தோற்றம் சார்ந்த ஒழுகலாறு.

dement', *v.* பைத்தியமாக்கு, கிறுக்காக்கு.

dement'ed, *a.* பைத்தியம் பிடித்த, மூளைத்தளர்ச்சியால் அறிவு குழம்பிய.

dementi, (பிர.) *n.* மறுப்பு, அதிகாரமுறை வதந்தி மறுப்பு.

demen'tia, *n.* (மரு.) மனத்தளர்ச்சியினால் ஏற்படும் பைத்தியம்.

demerar'a, *n.* பழுப்புநிறச் சர்க்கரைக்கட்டி வகை.

deme'rit, *n.* குற்றம், குறை.

demesne', *n.* பண்ணைமனை சார்ந்த நிலம்; பண்ணைமனையும் குடிவாரத்தில் விடப்படாத அதைச் சார்ந்த நிலங்களும் சேர்ந்த தொகுதி.

dem'igod, *n.* அரைத் தெய்வ உரு; தெய்வமாகக் கருதத் தக்கவர்; தெய்வத்தோடொத்தவர்; தெய்வத்துக்கும் மனிதருக்கும் இடைப் பிறந்தவராகக் கருதப்பட்ட முற்காலப் பெரு வீரர்; *fem.* dem'i-godd'ess.

dem'ijohn, *n.* புதிலிப்புட்டி, பிரப்பங்கூடையால் சூழப்பட்ட குறுகிய கழுத்தும் பரு உடலுமுள்ள கண்ணுடிக் குப்பி.

dem'ilune, *n.* கோட்டையின் பிறை வடிவப்பகுதி.

demi-mondaine, (பிர.) *n.* பரத்தை.

demi-monde, (பிர.) *n.* நிறையிலாப் பெண்டிர் வகுப்பு.

dem'i-rep, *n.* ஒழுக்கம் நிரம்பாத பெண்.

demise', *n.* உடைமை மாற்றம், இறுதி விருப்பப் பத்திரத்தாலோ ஈட்டுப் பத்திரத்தாலோ உடைமையை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்தல்; அரசுரிமை மாற்றம், அரசு உயிர் துறப்பினாலோ முடி துறப்பினாலோ ஏற்படும் பதவி மாற்றம்; அரசு உயிர்நீப்பு; மறைவு; *v.* இறுதிப் பத்திரத்தால் உடைமை மாற்றிக்கொடு; ஈட்டுப் பத்திரத்தால் உரிமைமாற்றம் அளி; மரபுரிமையாக அரசுரிமை விட்டுச் செல், அரசுரிமை மாற்றிக்கொடு.

demiss'ion, *n.* உரிமை துறத்தல், பதவி துறப்பு.

demit', *v.* முடிதுற, பதவி விலகு.

dem'iurge, *n.* பிளேட்டோ (Plato) வின் மெய்விளக்க இயலில் உலகப்படைப்பு முதல்வர்; கிறித்தவக் கோட்பாட்டின்படி படைப்புத் துணைகளுடன்கூடிய படைப்பு முதல்வர்.

demob', ν. படைக்கலப்புச் செய் ; தனி வீரரைப் படைக் கலப்பின்போது படையமைப்பிலிருந்து விடுவி.

demob'ilize, ν. படைக்கலப்புச் செய்; படையமைப்பிலிருந்து தனிவீரரை விடுவி ; படைத்துறை அமைப்பிலிருந்து படைப் பிரிவுகளைப் பிரி.

democ'racy, *n.* குடியாட்சி, மக்களாட்சி, குடியாட்சியரசு ; பொதுமக்கள் ; அரசியல் முறையில் உரிமைபெரு வகுப்பு.

dem'ocrat, *n.* மக்களாட்சிக் கோட்பாட்டாளர், குடியாட்சிப் பற்றுளர்.

democrat'ic, democrat'ical, *a.* மக்களாட்சியைச் சார்ந்த; எல்லோருக்கும் சம உரிமைகள் வேண்டுமென்று வற்புறுத்து கின்ற ; (தொ.) Democratic party, அமெரிக்காவில் மைய ஆட்சி வலிமையைவிட உறுப்பரசுகளின் உரிமைகளையும் காப்புவரி நீக்கத்தால் தனி மனித உரிமைப்பெருக்கங்களையும் வலியுறுத்தும் கட்சி.

democ'ratist, *n.* மக்களாட்சிக் கொள்கையர்.

democ'ratize, ν. மக்களாட்சிக் கொள்கை உடையதாக்கு.

Democ'rite'an, *a.* டெமாக்ரிட்டஸ் (Democritus) என்னும் கிரேக்க மெய்விளக்க அறிவரைச் சார்ந்த; டெமாக்கிரிட்டசின் நகைத்திறம் சார்ந்த ; டெமாக்கிரிட்டசுக்குரிய அணுவாதம் சார்ந்த.

demode, (பிர.) *a.* காலவண்ணத்திற்குப் புறம்பான; செவ்வி யிழந்த.

Demogorg'on, *n.* பாதாள தேவதை.

demog'raphy, *n.* பிறப்பு-நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளி விவர ஆய்வு.

dem'oiselle', *n.* வட ஆப்பிரிக்க நாரை வகை.

demol'ish, ν. அழி, சிதை, பாழாக்கு ; கோட்பாட்டை எதிர்த்துத் தகர்த்துவிடு ; நிறுவனத்தை எதிர்த்தழி ; தின்றொழி.

demoli'tion, *n.* தகர்ப்பு ; வீழ்ச்சியடையும்படி செய்தல்.

dem'on, *n.* ஆரஞர்த் தெய்வம் ; பேயுருவம், தீய ஆவி ; சிறு தெய்வம் ; நரக ஆவி ; கொடியவன், பழிகாரன், வெறுப்புக்குரியவன் ; பாவவுரு.

demo'netize, ν. பணத்தின் மதிப்பைக் குறை.

demon'iac, *n.* பேய் பிடித்தவர், அணங்கேறியவர் ; *a.* பேய் பிடித்த ; கொடிய ஆவியின் இயல்புடைய ; வெறிபிடித்த ; சீற்றமிக்க.

demoni'acal, *a.* பேய்த்தனமான.

demon'ic, *a.* தெய்வமுற்ற, அருளிப்பாடுடைய.

dem'onism, *n.* பேய்களின் ஆற்றலில் நம்பிக்கை.

dem'onize, ν. பேயாக்கு ; பேய்போல் ஆக்கு ; பேயாக மாற்று.

dem'onology, *n.* பேய்நிலை ஆய்வு விளக்கம், பேய்களின் வகை களையும் அவற்றின் செயல் திறங்களையும்பற்றி விரிவாக ஆய்ந்து விளக்கும் அறிவுத்துறை.

demon'strable, *a.* விளக்கிக் காட்டக்கூடிய, மெய்ப்பிக்கத் தக்க.

dem'onstrate, ν. செய்ம்முறைகள் மூலம் மெய்ப்பித்துக் காட்டு, செயல் விளக்கமளி ; எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவுபடுத்து ; வாதமூலம் மெய்ப்பி ; மெய்ம்மை உறுதிப் படுத்து ; தெளிவுபடுத்திக்காட்டு ; கண்கூடாகக்காட்டு ; உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்காட்டு ; படைத்துறை அணி வகுப்பு நடத்திக்காட்டு ; ஊர்வலம் பொதுக்கூட்டம் முதலிய பொது ஆரவார முறைகளில் கலந்துகொள்ளு ; சரக்குகளைப் பகட்டாகக் காட்டி விளம்பரப்படுத்து.

demonstra'tion, *n.* சான்று விளக்கம் ; கண்கூடான தெளிவு, உள்ளுணர்ச்சிகளை உருப்படுத்திக்காட்டல் ; உணர்ச்சியை வெளிப்படுத்துதல் ; உணர்ச்சி வெளிப்படுத்தும் பொது ஆர்ப் பாட்ட நிகழ்ச்சி, ஊர்வலம், பொதுக்கூட்டம், விளம்பர நடவடிக்கை ; செய்ம்முறைப்பாடம், சான்று விளக்கக் கல்வி முறை ; போர்பற்றிய நினைவு தூண்டுதற்குரிய படைத் துறை நடவடிக்கை ; எதிரிகளை அச்சுறுத்துதற்குரிய படைத்துறைச் செயல்முறை ; மாறுட்ட நடவடிக்கை, எதிரிகள் கருத்தில் தம் நோக்கம் பிறிதாகப்படும் எண்ணத் துடன் மேற்கொள்ளப்படும் போர்த்துறை ஏமாற்று நட வடிக்கை ; பகட்டாரவாரம் ; விளம்பரக்காட்சி ; கண்காட்சி ; சுட்டிக்காட்டல், சுட்டுதல்.

demon'strative, *n.* சுட்டுச்சொல் ; சுட்டியல் மறுபெயர் ; சுட்டியல் பெயரடை ; சுட்டியல் வினையடை ; *a.* சுட்டுகிற, சுட்டிக்காட்டுகிற ; தெளிவுபடுத்துகிற ; விளக்கிக்காட்டும் இயல்புடைய ; வாதமுறையில் முடிவான ; சான்று விளக்கத் திறமுடைய, மெய்ப்பிக்கும் இயல்புடைய, உணர்ச்சிகளை உருப்படுத்திக் காட்டுங் தன்மை வாய்ந்த, வெளிப்படக் காட்டும் இயல்புடைய.

dem'onstrator, *n.* செய்ம்முறை ஆசிரியர், ஐயந்திரிபற மெய்ப் பிப்பவர் ; கண்கூடாகக் காட்டுபவர், ஆய்வுக்களத்துணைவர் ; வாணிகச் சரக்குகளின் சுற்றுலா விளம்பரக்காரர், பொருள் களைக் காட்டிப் பயனும் சிறப்பும் விளக்கி வாணிக ஆதரவு நாடுபவர் ; பொது ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்பவர்.

demoraliza'tion, *n.* ஒழுக்கக் சிதைவு ; நெறிபிறழ்வு, கட்டழிவு.

demo'ralize, ν. கட்டழி, ஒழுங்கு குலை, உள உரங்குலை ; கட்டுப்பாட்டுணர்ச்சி சிதை ; ஊழற்படுத்து.

de mort'uis nil nis'i bon'um, (ல.) இறந்தவர்களைப்பற்றி நல்லதைத்தவிர வேறொன்றும் பேசக்கூடாது.

Dem'os, *n.* பொதுமக்கள்.

Demosthen'ic, *a.* டெமாஸ்தெனிஸ் (Demosthenes) என்ற பண்டைக் கிரேக்க நாட்டுச் சொற்பொழிவாளரைச் சார்ந்த ; டெமாஸ்தெனிசைப் போன்ற ; டெமாஸ்தெனிசின் சொற் பொழிவு நடைக்குரிய பண்புகள் வாய்ந்த, நாட்டுப்பற்றும் சொல்வளமும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் மிக்க.

demote', ν. படியிறக்கு, பதவியில் கீழ்நிலைக்குத் தாழ்த்து.

demot'ic, *a.* மக்களைச் சார்ந்த ; மக்கள் பேச்சுவழக்கான ; மக்கள் விருப்புக்குரிய.

demul'cent, *n.* நோயைத் தணிக்கும் மருந்து ; *a.* நோயை ஆற்றுகிற.

demur', *n.* தடை, தயக்கம் ; ஆட்சேபம் ; ν. உறுதியற்ற தன்மையாலோ செயற் கடுமையாலோ தயக்கங் காட்டு, சுணங்கு, மறுப்புரை கிளப்பு, தடை கூறு.

demure', *a.* அமைதியான, அடக்கமான ; பொறுமையான ; நடிப்பு நாணமுடைய.

demu'rrable, *a.* மறுத்துரைக்கக்கூடிய.

demu'rrage, *n.* கப்பலிலோ புகைவண்டியிலோ ஏற்படும் தகாக்கால நீட்டிப்பு ; சரக்கிடக் குத்தகைக்காரர் சரக்கேற்றத் திலோ இறக்கத்திலோ புரியும் தாமதத்துக்கீடான கட்டண விகிதம் ; தங்கக் கட்டிகளுக்கு மாற்றுக நாணயமோ நாணயத்தாளோ கொடுக்கப் பொருளகத்தார் விதிக்கும் கட்டணம்.

demu'rrer, *n.* மறுத்துரைப்பவர் ; தடங்கல் செய்பவர் ; (சட்.) தடங்கல் செல்லாதென்ற எதிர்ப்புரை ; கால நீட்டிப்பு நடவடிக்கைக்குத் தடையெழுப்பல்.

demy', *n.* 17½-க்கு 22½ அங்குல அளவான அச்சுத்தாள் ; 15½-க்கு 20 அங்குல அளவுடைய எழுதுந் தாள் ; ஆக்ஸ்போர்டுப் பல்கலைக்கழகம் சார்ந்த மகதலன் கல்லூரியில் (Magdalen College) உபகாரச் சம்பளம் பெறுபவர் ; *pl.* demies'.

den, *n.* குகை ; திருடர் பதுங்கிடம் ; வாழத் தகுதியற்ற இடுக்கறை ; தனிமையறை.

denar'ius, (ல.) *n.* பண்டைய ரோம வெள்ளி நாணயம் ; *pl.* ***denar'ii***.

den'ary, *n.* பத்தின் தொகுதி ; பத்து ; *a.* பத்துச் சார்ந்த ; பதின்மானமான.

dena'tionalize, *v.* நாடு தன் மதிப்புப்படியினை இழக்கும்படி செய்; நாட்டிலிருந்து அதன் தனிப் பண்புகளை நீக்கு; நாட்டின் குடியுரிமையிலிருந்து ஒருவரை விலக்கிவை; நாட்டின் பொதுப் பண்புகளிலிருந்து ஒருவரை விலக்கிவை; நாட்டுப் பொதுவுடைமையான ஒன்றின் பொதுவுரிமை நீக்கித் தனியுரிமைப்படுத்து.

dena'turalize, *v.* இயல்பு நீக்கு, இயல்பு மீறியதாக்கு; குடியுரிமை நீக்கு, நாட்டுரிமை இழக்கச்செய்.

dena'turant, *n.* பொருளின் இயல்பை மாற்றி விளைவற்ற தாக்கப் பயன்படுத்தப்படும் பிறிதொரு பொருள்.

dena'ture, *v.* இயற்கைத் தன்மையைச் சிதை, இயல்பான பண்புகளை மாற்று; வெறியம் அல்லது சாராயத்தைக் குடிப்பதற்குத் தகுதியற்றதாக்கு.

den'driform, *a.* மரம் போன்ற, மரவடிவுடைய.

den'drite, *n.* மரம் போன்ற வரைத்தடங்களையுடைய படி அடுக்கியற் பாறை; மரம் போன்ற வரைத்தடங்கொண்ட கல்.

dendrit'ic, dendrit'ical, *a.* மர வளர்ச்சிபோன்ற வரைத் தடம் உடைய; மரக்கிளைகள் போன்ற உருவுடைய தடங்களைக் கொண்ட.

den'droid, *a.* மரம் போன்ற; மரவடிவுடைய.

dendrol'atry, *n.* மர வழிபாடு.

dendrol'ogy, *n.* மரங்களைப் பற்றிய ஆய்வுரைத் தனிநூல்; மரங்களின் வளர்ச்சிமுறை வரலாறு.

dendrom'eter, *n.* மரமானி, மரங்களை அளக்கும் கருவி.

dene [1], *v.* சிறு பள்ளத்தாக்கு.

dene [2], *n.* மணல்வெளி; மணற்பரப்பு, மணற்குன்று; தேரி.

denega'tion, *n.* மறுப்பு.

dene'-hole, *n.* பழம்பொருளாய்வுத்துறைக்குரிய வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த சுண்ணும்புப்பாறை நிலத்திலுள்ள செயற்கைக் குகை.

deng'ue, *n.* கணுத்தோறும் கடுநோவு உண்டுபண்ணும் கொள்ளைக் காய்ச்சல் வகை.

deni'able, *a.* மறுத்துரைக்கத்தக்க, மறுதலிக்கக்கூடிய, மறுப்புக்குரிய.

deni'al, *n.* மறுப்பு; வேண்டுகோளை மறுத்தல்; உண்மை ஏற்க மறுத்தல், இன்மை வலியுறுத்தல்; தலைவரை ஏற்க மறுத்தல், தலைமை மறுப்பு.

deni'er, *n.* மறுத்துரைப்பவர், மறுதலிப்பவர்.

den'igrate, *v.* கருமை பூசு, பெருமை குலை.

den'im, *n.* முழு மேலங்கி தைக்கப் பயன்படும் சாய்வரி வண்ணப் பருத்தித் துணிவகை.

denit'rate, denit'rify, *v.* வெடியகக்கூறு நீக்கு.

denitrifica'tion, *n.* வெடியகக்கூறு நீக்கம்.

den'izen, *n.* குடிவாழ்நர், தங்கியிருப்பவர்; நாட்டுக்குடியுரிமை பெற்றவர்; நாட்டில் வந்தமைவுற்றவர்; தங்கிவாழும் விலங்கு; சூழலிசைவுற்ற உயிரினம்; சூழலிசைவமைதி பெற்ற செடியினம்; *a.* குடிவாழ்வு சார்ந்த; *v.* குடிவாழ்வுரிமையளி; தங்கி வாழ்வி; தங்கி வாழுமிடமாக்கு, வாழுநர் குடிபரப்பு; தங்கிவாழ்.

denomin'ate, *v.* பெயரிடு; அழை; பெயர் குறித்து விவரங்கூறு.

denomina'tion, *n.* பெயரிடுதல்; பட்டப்பெயர்; இடுபெயர்; குழுப்பெயர், தொகுதிப்பெயர்; வகுப்புப் பெயர்; சமயக் கிளைப்பெயர்; படிநிலைப்பெயர், தர வகுப்புப் பெயர்.

denomina'tional, *a.* சமயக்கிளையினைச் சார்ந்த; இனப் பிரிவினைத் தழுவிய.

denomina'tionalism, *n.* சமய வகுப்புணர்ச்சி; சமயக் கிளையின் கொள்கை; மதப்பிரிவின் சார்பான குழுநல ஈடுபாடு.

denom'inative, *a.* பட்டப்பெயராகப் பயன்படுகிற; சமயக் குழுப்பெயரின் இயல்புடைய; குழுப்பெயர் வழங்குகிற.

denom'inator, *n.* தரநிலைப்பெயர் சூட்டுபவர்; வகைப் பெயர் சூட்டுவது; (கண.) தொகுதிக்கூற்று எண், பின்னத்தின் அடியெண் கூறு; வகையீட்டெண், வகுக்கும் எண்; (தொ.) common denominator, பொதுத் தொகுதிக் கூற்றெண்; பொதுப் பகுவெண்; அடிப்படைப் பொது இணை வெண்; அடிப்படைப் பொது உடன்பாட்டுக் கூறு; பொது உடன்பாட்டுக்கு உதவுபவர், பொது உடன்பாட்டுக்கு உதவுவது.

de'notate, *v.* பொருள்குறி, உருச்சுட்டு.

denota'tion, *n.* பொருட்குறி, சுட்டு, குறிப்பீடு; (அள.) சொல்லின் புறப்பொருட் சுட்டு, சொல் சுட்டும் புறப்பொருட் பரப்பெல்லை.

denote', *v.* சுட்டிக்காட்டு; குறித்துக்காட்டு; வேறு பிரித்துக் காண்பி; குறியீடாய் அமை; பொருள் தெரிவி.

denoue'ment, *n.* கதை நாடகம் காவியம் முதலியவற்றில் முடிவமைதி நோக்கிய நிகழ்ச்சி முறுக்கவிழ்வு; முடிவமைதி.

denounce', *v.* வெளிப்படையாகக் கண்டனம் தெரிவி, பல ரறியப் பழித்துரை; குற்றத்தை வெளிப்படக் கூறு, மறை வெளிப்படுத்து; ஒப்பந்த முறிவு தெரிவி, வரும்பழி கூறி இடித்துரை.

denounce'ment, *n.* பலரறியப் பழித்துரைத்தல்; படுபழிச் சாட்டு, வெளிப்படைக் கண்டனம்.

de nouveau, (பிர.), ***de nov'o***, (ல.) *adv.* புதிதாக, மறுபடியும் தொடக்கத்திலிருந்து, மீண்டும் அடியிலிருந்து தொடங்கி.

dense, *a.* நெருக்கமான, அடர்த்தியான, இடைவெளியில்லாத, ஒரு சேர்வான; தடித்த, மூளையற்ற, மந்தபுத்தியுள்ள.

densim'eter, *n.* செறிவுமானி, செறிவு ஒப்பீட்டளவைக்கருவி.

dens'ity, *n.* அடர்த்தி, நெருக்கம்; செறிவு; கழிமடமை; (இய.) செறிமானம், பரும அளவுடன் எடைமானத்துக்குள்ள விகிதம்.

dent', *n.* வடு, பள்ளம்; அடியின் தழும்பு; *v.* வடுப்படுத்து, தடம் செறிவி.

den'tal, *n.* பல் அண்ண ஒலி; *a.* பல்லுக்குரிய; பல் மருத்துவஞ் சார்ந்த; ஒலி வகையில் பல் அணவி எழுகிற.

den'tate, dent'ated, *a.* பல்லுள்ள; பல்லுருவ வடுக்கள் கொண்ட; பல்வரிசை போன்று அமைந்துள்ள.

denta'tion, *n.* பல்லமைதி, பற்கள் உள்ள நிலை; பற்கள் போன்ற அமைப்புடைய தன்மை; பல்போன்ற முளைப்பு.

dent'icle, *n.* சிறு பல்; பல் போன்ற முளைப்பு.

dentic'ulate, dentic'ulated, *a.* பற்கள் போன்ற முளைப் புடைய.

dent'iform, *a.* பற்கள் போன்ற அமைப்புடைய.

dent'ifrice, *n.* பல் துலக்க உதவும் பொருள், பற்பசை; பற்பொடி.

den'til, *n.* பல்போன்ற சிற்றமைவு; தூண்முகட்டு மேல் தட்டின் சூழ்வரையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள செவ்வகப் பாளம்.

dentilin'gual, *n.* பல்லுநாவொலி, பல்லிற்கும் நாவிற்கும் இடையில் தோன்றும் மெய் ஒலி; *a.* பல்லிற்கும் நாவிற்கும் இடையில் தோன்றுகிற.

dent'ine, *n.* பற்காழ், பல்லின் பெரும்பகுதியான காழ்க்கூறு.

dent'ist, *n.* பல்நோய் மருத்துவர்.

dent'istry, *n.* பல் மருத்துவம்.

dent'ition, *n.* பல் முளைப்பு; விலங்கு வகைகளின் பற்களது எண்ணிக்கை; பல்வரிசை அமைப்பு.

dent'ure, *n.* பல் தொகுதி; செயற்கைப்பல் தொகுதி.

denuda'tion, *n.* ஆடை நீக்குதல், அம்மணமாக்குதல்; (மண்.) மேற்பரப்புப் பாறை நீக்கம்.

denude', *v.* உடை அகற்று; உடல் வறிதாக்கு; மேலுறை போக்கு; பண்பிழக்கச் செய்; (மண்.) பாறையின் மேற் கவிந்த கூறுகளை நீக்கி வெறுமையாக்கு.

denuncia'tion, *n.* பலரறி பழிப்புரை, பொதுமன்றக் குற்றச் சாட்டு; கண்டனம், இடித்துரை; கண்டன அறிவிப்பு.

denun'ciator, *n.* இடித்துரைப்பவர்; பலரறியப் பழிகூறுபவர்; குற்றங் கூறுபவர்; கண்டனம் எழுப்புபவர்.

denun'ciatory, *a.* பழிப்புரையான; கண்டனம் தெரிவிக்கிற; வசைமாரியான; அச்சுறுத்துகிற; கண்டன அறிவிப்புச் சார்ந்த.

deny', *v.* மறு, கொடுக்கமாட்டேனென்று கூறு, பேட்டியாளருக்கு நுழைவுரிமையளிக்க மறு; ஒப்புக்கொள்ள மறுத்துவிடு; உண்மையன்றென்று அறிவி; மறுப்புத் தெரிவி; மறுதலி, கூறியது இல்லையென்று கூறு; தொடர்பு மறு; கைதுறந்துவிடு; (தொ.) deny oneself, மனநிறைவு கொள்ள மறு; தன்னலமறு, தன்னலந்துற.

de'odand, *n.* (வர.) மனித உயிரின் அழிவுக்குக் காரணமானதாகப் பறிமுதல் செய்யப்பட்டு அறநிலைப்படுத்தப்பட்ட பொருள்.

de'odar, (ச.) *n.* தேவதாரு மரம்.

deod'orize, *v.* மணம் அகற்று.

deontol'ogy, *n.* கடமை இயல்; ஒழுக்க நூல், அறநூல்.

De'o op'timo max'imo, (ல.) சிறப்பும் உயர்வும் மிக்க இறைவனுக்கு.

De'o volen'te, (ல.) *adv.* இறைவன் விரும்பினால்; வேறு ஏதும் தடுக்காதிருந்தால்.

depart', *v.* புறப்படு, விட்டு நீங்கு; வழி விலகிச்செல், வேறு வழியிற் செல்; பிறழ்வுறு, நெறி திறம்பு; மாள்வுறு, இறப்பு மூலம் பிரிவுறு; விடைகொண்டு செல்.

depart'ed, *a.* இறந்துபட்ட, மாண்ட; காலஞ்சென்ற; (தொ.) the departed, மாண்டவர்; மாண்டவர்கள்.

depart'ment, *n.* துறை, இலாகா; பணியரங்கம், தொழிற்களப்பகுதி; செயலரங்கக் கூறுபாடு; பிரஞ்சு நாட்டு ஆட்சித் துறை வட்டாரம்.

depar'ture, *n.* புறப்பாடு; வெளிச்செல்லுதல்; செயல்முறை, முயற்சி; கருத்தீடுபாடு; அறிவு முயற்சி; பிறழ்வு, மெய்ம்மையிலிருந்து விலகுதல், நேரளவிலிருந்து திறம்புதல்; நிலவுலக நிரைகோட்டளவில் கப்பல் கிழக்கு மேற்காக விலகும் தொலைவளவு; (தொ.) new departure, புதிய வழி, புதுக் கருத்து மாற்றம்; புதுச்செயல்முறை.

depa'sture, *v.* புல்லைக் கறி, மேய்; கால்நடைகளை மேயவிடு; மேய்ச்சலளி; நிலவகையில் மேய்ச்சலிடமாய் உதவு.

depau'perate, *a.* வறுமையான; ஒன்றுமற்ற; *v.* ஊக்கங் குறை, வளர்ச்சி தடைசெய், பண்பு இழிவுறுத்து; ஏழ்மைப்படுத்து; வறிதாக்கு.

depau'perize, *v.* ஏழ்மை நிலையினின்று நீக்கு; வறுமை நிலையினின்று உயர்த்து.

depend', *v.* தொங்கு; சார்ந்திரு; நம்பு; நம்பியிரு; முயற்சியை எதிர்பார்த்திரு; வருவாயை நம்பிவாழ்; வருநிலைகளைப் பொறுத்ததாயிரு; தீர்வு எதிர்நோக்கிக் காத்திரு; (இலக்.) தழுவுசொல் அவாவி நில்.

depen'dable, *a.* நம்பத்தக்க, பொறுப்புக்குரிய.

depen'dant, *n.* சார்ந்து வாழ்பவர், ஆதரவில் இருப்பவர்; உழையர், பணியாள்.

depen'dence, *n.* சார்ந்துள்ள நிலை; சார்பு; துணைமைநிலை, மற்றொன்றுக்குக் கீழ்ப்பட்ட நிலை, மற்றொன்றன் ஆதரவை எதிர்நோக்கிய நிலை; சார்புநிலை; பிறரை எதிர்நோக்கிய வாழ்வு; நம்பிக்கை, பொறுப்பு அளிப்பதற்குரிய தகுதி; நம்பிக்கைக்குரிய செய்தி; அடுத்து நிகழவிருக்கும் மற்போர்.

depend'ency, *n.* சார்பு நிலையுடையது; சார்பரசு; தன்னுரிமையாட்சியற்ற நாடு, சார்புநிலை நாடு; சார்புநிலை ஆட்சிப் பகுதி, துணைநிலை மண்டலம்.

depen'dent [1], *n.* =dependant.

depen'dent [2], *a.* சார்ந்திருக்கிற; துணைமையான, கீழ்ப்பட்டிருக்கிற; சூழல் சார்ந்த; ஆதரவை எதிர்பார்த்து வாழ்கிற.

dephos'phorize, *v.* எரியத்தை நீக்கு, பாஸ்வரம் இல்லாமற் செய்.

depict', *v.* திட்டிக்காட்டு, வரைந்து காட்டு; படமாக்கித் தெளிவுபடுத்து; வண்ண ஓவியப்படுத்து; கருத்து உருப்படுத்திக்காட்டு; சொற்கள் மூலம் விரித்துரை, நுட்பமாக விளக்கிக்காட்டு; உருவமைதி உண்டுபண்ணு.

depic'ture, *n.* படம் வரைந்து காட்டல்; விரித்துரைத்தல்; *v.* படம் வரைந்து காட்டு; விரித்துரை.

dep'ilate, *v.* மயிர்நீக்கு, முடிகளை.

depila'tion, *n.* மயிர்நீக்கம்.

depil'atory, *n.* மயிர் நீக்கும் மருந்து; *a.* மயிர் களையும் குணமுள்ள.

deplane', *v.* வானூர்தியினின்று இறங்கு.

deplen'ish, *v.* வெறுமையாக்கு, உள் ஒழி; கையிருப்பை அழி.

deplete', *v.* வெறுமையாக்கு, உள்ளீடற்றதாக்கு; செறிவு தளர்த்து, ஆற்றல் குறை.

deple'tion, *n.* வெறுமையாக்குதல்; ஊக்கம் குறைத்தல்; (மரு.) குருதி வெளியேற்றிக் குருதி நெருக்கத்தைக் குறைத்தல்.

deplor'able, *a.* வருந்தத்தக்க; இரங்கத்தக்க; துயரந் தரத்தக்க.

deplore', *v.* வருத்தந் தெரிவி, பரிதாபங்கொள்; புலம்பு.

deploy', *n.* மடிப்பவிழ்வு, விரிவு; அணிவரிசை விரிவு; *v.* மடிப்பவிழ், விரிவுறுத்து; அணி வகுப்பை விரிவரிசைப்படுத்து.

deplume', *v.* இறகுகளை நீக்கு; இறகுகளைப் பறி.

depol'arize, *v.* ஒளிக்கதிர் அலைமுகப்பின் திசையை மாற்று; மின்காந்த முனைப்பியக்கம் அகற்று; ஆராயா நம்பிக்கைகளைக் குலை; ஊன்றிய கருத்துக்களின் உறுதி குலைவி.

depo'nent, *n.* சான்றாளர், ஆணையிட்டு வாக்குமூலம் கொடுப்பவர்; எழுத்து மூலச் சான்றறிக்கை அளிப்பவர்; லத்தீன் (Latin) கிரேக்க (Greek) இலக்கணங்களிற் செய்வினைப் பொருளில் வழங்கும் செயப்பாட்டு வினை; *a.* (இலக்.) வினைச் சொற்களில் செய்வினைப்பொருளில் செயப்பாட்டுவினை உருவான.

depop'ulate, *v.* மக்கள் தொகையைக் குறைவாக்கு; மக்கள் தொகை குறையப்பெறு; குடியிருப்பவர்களை இல்லாமற் செய்; *a.* மக்கள் தொகை குறைக்கப்பட்ட; மக்கள் தொகை அருகிய; குடியழிந்த.

depopula'tion, *n.* மக்கள் தொகைக் குறைப்பு; குடியழிவு.

deport' [1], *v.* நாடுகடத்து; வெளியேற்று.

deport' [2], *v.* நடந்துகொள்.

deport'ment, *n.* நடையுடைபோக்கு, ஒழுகலாறு; இயங்கும் பாங்கு, பொருளின் இயற்பாங்கு.

depose', *v.* தவிசிலிருந்து அகற்று; பணியிலிருந்து விலக்கு; உயர்நிலையிலிருந்து இறக்கு; படியிறக்கு; ஆணையுறுதிமீது சான்று தெரிவி; எழுத்துப்பதிவு செய்; சான்றுரை.

depos'it, *n.* சேமிப்பு; ஏமவைப்பு, கையடைப்பொருள்; பணையம்; ஈடு, அடைமானம்; வண்டல், படிவுப்பொருள்; *v.* வை, கிடத்து; முட்டையிடு; சேர்த்துவை, சேமித்துவை; பாதுகாப்புக்காக ஒப்படை; பணையமாக வை; படிய விடு; வண்டலிடு; படுகையமைவி.

depos'itary, *n.* ஏமவைப்பின் காப்பாளர், ஒப்படைப் பொருளை ஏற்பவர்.

deposi'tion [1], *n.* தவிசிறக்கம்; பதவி நீக்கம், பணிவிலக்கு; நிலையிறக்கம்; இயேசுநாதரைச் சிலுவையிலிருந்து இறக்கும் காட்சிப் படம்; அதிகார முறையான சான்றறிக்கை; ஆணைச் சான்றறிவிப்பு; குற்றச்சாட்டறிவிப்பு.

deposi'tion [2], *n.* படியவிடல்; படிவு, வண்டல்; சேமிப்பு.

depos'itory, *n.* களஞ்சியம், சேமிக்குமிடம்.

dep'ot [1], *n.* சேமிப்பிடம், கிடங்கு, படைத்துறைக்களஞ்சியம்; படைப்பிரிவின் மைய மேலிடம்; புதுப்படைவீரர் பயிற்சி நிலையம்; வெளிநாட்டுச் சேவையிலீடுபடாத படைப்பிரிவின் பகுதி.

de'pot [2], *n.* புகைவண்டி நிலையம்; உந்தூர்திகள் சேம இடம்; மின்னூர்தி வைப்பிடம்.

deprava'tion, *n.* சீரழிவு; கீழ்நிலை; ஒழுக்கக்கேடு.

deprave', *v.* சீர்கெடு, சீரழி; ஒழுக்கம் கெடு; நடத்தை மோசமாக்கு.

depraved', *a.* கீழான, மோசமான, நடத்தை கெட்ட.

deprav'ity, *n.* நடத்தைக்கேடு, ஒழுக்கச் சீர்க்கேடு, படுமோசமான இயல்பு; மனித இனத்தின் உள்ளார்ந்த பழிசூழ்வுநிலை.

depre'cate, *v.* வேண்டாமென்று வாதிட்டுத்தடு; விருப்பமின்மை தெரிவி, ஒவ்வாமை அறிவி.

depreca'tion, *n.* விட்டுவிட வேண்டுதல்; ஒழிப்பு மனு.

depre'ciate, *v.* விலைமதிப்பைக் குறை; மதிப்பிற் குறைபடு; நாணய முதலியவற்றின் வகையில் மதிப்புக் குறைபடு; விலையைத்தணி; சிறுமைப்படுத்து, இகழ்.

deprecia'tion, *n.* விலையிறக்கம்; மதிப்பிறக்கம்; குறைக் கணிப்பு; அவமதிப்பு, மதிப்புக்குறைவு.

depre'ciative, depre'ciatory, *a.* குறைவாக மதிக்கிற; இகழும் தன்மையுள்ள.

depreda'tion, *n.* கொள்ளை, சூறையாட்டு; கொள்ளையிடப்பட்ட நிலை, அழிமதி, அட்டுழியம்.

dep'redator, *n.* சூறையாடுபவர், கொள்ளையடிப்பவர்; பாழாக்குபவர்; அழிப்பவர்.

depress', *v.* அமுக்கு; தாழ்த்து; கீழ்ப்படுத்து, பணிய வை; ஊக்கங்குறை, சோர்வூட்டு; வாணிக முதலியவற்றை மந்தமாக்கு; குரல் தணிவி.

depress'ant, *n.* ஊக்கமழிப்பது, சுறுசுறுப்பைக் குறைப்பது; வலியை ஆற்றுகிற அல்லது தணிக்கிற மருந்து; மிதவைக் கலத்தில் கனிப்பொருளைக் கீழே அமிழச்செய்யும் வேதிப் பொருள்; *a.* அமிழ்த்துகிற; நோவாற்றுகிற.

depressed', *a.* அழுத்தப்பட்ட; தாழ்த்தப்பட்ட; ஊக்கம் அழிக்கப்பட்ட; சோர்வுடைய; தட்டையாக்கப்பட்ட அல்லது சிறிது பள்ளமாக்கப்பட்ட; கிளர்ச்சியற்ற; மகிழ்ச்சியற்ற.

depress'ing, *a.* சோர்வடையச் செய்கிற; அழுத்துகிற; தாழ்த்துகிற; ஊக்கங்கெடுக்கிற, கிளர்ச்சியற்ற.

depre'ssion, *n.* அமிழ்வு, தாழ்வு; பள்ளம், குழிவு, தொய்வு; குரல் தாழ்வு; கிளர்ச்சியின்மை, சோர்வு, வாட்டம்; காற்றழுத்த இழிப்பு, காற்றழுத்த இழிப்பு மையம்; விழிவரை இறக்கக் கோணம்; அடிவான்கோட்டின்கீழ் இழிகோணம்.

depress'ive, *a.* சோர்வூட்டுகிற; அழுத்துகிற; தளர்ச்சியுண்டாக்குகிற.

depress'or, *n.* கொடுமையாளர்; செயல்விரைவைக் குறைப்பது; கீழே இழுக்கும் தசை; கீழே அழுத்திப்பிடிக்கும் அறுவை மருத்துவக் கருவி.

depriva'tion, *n.* இழக்கச் செய்தல்; இழப்பு, கையறுநிலை; பிரிவாற்றுமை; இடர்ப்பாடு, கட்டநட்டம்; பதவியிழப்பு; திருக்கோயிற் பணியிழப்பு.

deprive', *v.* இழக்கச்செய், இல்லாதாக்கு; பறி, கவர்ந்துகொள்; நுகர்வினின்று விலக்கு; பதவியிலிருந்து அகற்று; திருக்கோயிற் பணியிலிருந்து நீக்கு; பிரிவுத்துயர் அடையச் செய்.

de profund'is, (ல.) *n.* துயருற்ற நெஞ்சின் உள்ளாழத்திலிருந்து வரும் குரல்; *adv.* ஆழத்திலிருந்து.

depth, *n.* ஆழம்; ஆழமாயிருத்தல்; ஆழ அளவு; மேல்கீழ் தொலைவளவு; உள்ளாழ்வளவு; அகழ்வளவு; உள்ளாழம்; ஆழ்தடம்; ஆழ்கசம்; ஆழமுடைய நீர்நிலை; உள்ளிடம்; நடுப்பகுதி; திட்பம், செறிவு, முனைப்பு; மறை புதிர்மை; கருத்தாழம்; ஆழ் உணர்வு; (தொ.) out of one's depth, நிலைகொள்ளா ஆழத்திற் சிக்கி; ஆற்றலுக்கு அப்பாற்பட்ட எல்லை சென்று; புரியாச்செய்தியில்; the depths, கழிபேரிடுக்கண் எல்லை.

depth'-bomb, depth'-charge, *n.* நீர்மூழ்கிமீது சென்று தாக்கும்படி நீருக்கடியில் குறிப்பிட்ட ஆழம்வரை சென்று வெடிக்கும் வலிமைவாய்ந்த வெடிகுண்டு.

de'purate, *v.* தூய்மைக்கேடகற்று; மாசினின்று விடுபடு.

deputa'tion, *n.* தூதுக்குழு; பேராண்மைக்குழு; பிரதிநிதிக் குழுவாக அனுப்புதல்; பிரதிநிதிகளாக அமர்த்தப்படும் குழுமம்; ஒருவர் சார்பில் செயலாற்றும் உரிமை பெற்றவர்; செயலாற்றும் அதிகாரம் பெற்ற குழு; தனியுரிமை வேட்டை நிலத்தில் வேட்டைச்சலுகை பெற்ற குழு; தனிவேட்டைச் சலுகைப்பத்திரம்.

depute', *v.* ஆட்பேருரிமையளி, பிரதிநிதியாக அனுப்பு; தனி அதிகாரத்தோடு அனுப்பு; தனது ஆட்பேராக அனுப்பு.

dep'utize, *v.* ஆட்பேராக நியமனம் செய்; பிரதிநிதியாகச் செயலாற்று; இசைவாணரின் ஆட்பேராகப் பணிசெய்.

dep'uty, *n.* ஆட்பேர், அதிகாரம் பெற்ற பிரதிநிதி; தூதுக்குழு உறுப்பினர்; சட்டமன்ற உறுப்பினர்; தங்கல்விடுதி மேலாள்; நிலக்கரிச் சுரங்கத்திற் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பவர்; பகர உரிமை பெற்றவர்.

derac'inate, *v.* வேரோடு எடுத்தெறி, நிர்மூலமாக்கு.

derail', *v.* தண்டவாளத்தை விட்டு விலகச்செய்; தண்டவாளத்தை விட்டு விலகு.

derange', *v.* ஒழுங்கு குலை, சீர்கேடாக்கு; மூளைகுழப்பு, அறிவு திறம்புவி.

derange'ment, *n.* ஒழுங்குகுலைவு, கோளாறு; மூளைத்திரிவு, கிறுக்கு.

derate', *v.* திணைநிலத் துறைக்குரிய வரியினின்று அளவொத்த விகிதம் தள்ளிக்கொடு.

der'ation, *v.* பங்கீட்டு முறையினின்று விடுவி; உணவுப் பொருள் வகையில் பங்கீட்டுத் திட்டத்திலிருந்து விலக்கு.

der'by [1], *n.* தொப்பிவகை; வலிமை வாய்ந்த புதைமிதி வகை.

Der'by [2], *n.* டெர்பி என்னுமிடத்திற் செய்யப்படும் மங்குக்கலம், பீங்கான் வகை; 'எப்ஸம்' என்னுமிடத்தில் நடைபெறும் குதிரைப்பந்தயம்; (தொ.) Derby dog, குதிரைப்பந்தய மைதானத்தில் வழிதவறி அலையும் நாய்; தவருன சமயத்தில் தலையிட்டுத் தொல்லை தருபவர்.

Der'byshire, *n.* இங்கிலாந்து நாட்டின் மாவட்டங்களில் ஒன்று; (தொ.) Derbyshire neck, குரல்வளைச் சுரப்பி வீக்க வகை; Derbyshire spar, டெர்பிஷையர் என்னுமிடத்திற் கிடைக்கும் பல நிறங்கொண்ட ஒளிவிடும் கனிப்பொருள் படிகம்.

de regle. (பிர.) *a.* விதிக்கேற்ற, தகுதியான; வழக்கமான.

der'elict, *n.* துணையிலி; சமுதாயத்தால் கைதுறக்கப்பட்டவர்; கைவிடப்பட்ட கப்பல்; கைவிடப்பட்டது; *a.* துணையற்ற; கைவிடப்பட்ட.

derelic'tion, *n.* கைவிடுகை; கைவிடப்பட்ட நிலை; கடமைத் தவறு, கடமையில் கவனமின்மை; புதுநிலம் தோற்றுவித்துக் கடல் பின்வாங்குதல்; கடற்கரையெல்லை மாற்றத்தால் ஏற்படும் புது நிலப்பகுதி.

deride', *v.* எள்ளி நகையாடு, ஏளனம் செய்.

de rigueur, (பிர.) *a.* ஆசார முறைக்குகந்தபடியான.

deri'sion, *n.* ஏளனம், கேலிக்கூத்து; எள்ளப்படும் பொருள்.

deris'ive, *a.* ஏளனம் செய்கிற, நையாண்டி காட்டுகிற.

deris'ory, *a.* ஏளனம் செய்கிற, நையாண்டி காட்டுகிற; கேலிக்குரிய, சிறுபிள்ளைத்தனமான.

deriva'tion, *n.* மூலத்திலிருந்து வருவிப்பு, மரபு தருவிப்பு; மரபுமூல வரலாறு, மரபு வரவு, கால்வழிமரபு; சொல் மூலத்தினடிப்படையான சொல்லாக்கம்; சொல்லாக்க விளக்கம்; சொல்மரபு விளக்கம்; படி வளர்ச்சிக் கோட்பாடு.

deriv'ative, *n.* ஒரு சொல்லின் அடியாகப் பிறந்த மற்றொரு சொல்; ஒன்றிலிருந்து வருவிக்கப்பட்டது; *a.* ஒன்றிலிருந்து ஒன்று வருவிக்கப்பட்ட, மரபு மூலத்திலிருந்து தோன்றிய; தனி மூலமல்லாத, மரபுமுதலல்லாத.

derive', v. மூலத்திலிருந்து பெறுவி; மரபுத்தொடர்புபடுத்து; மற்றொன்றிலிருந்து தருவி; வருவித்து உருவாக்கு; மற்றொன்றிலிருந்து உய்த்துணர்; மற்றொரு மெய்ம்மை வழி வருவி; தகவல் வரப்பெறு.

derm, der'ma, n. மெய்த்தோல், தோலின் அடித்தொலி.

der'mal, dermat'ic, der'mic, a. தோலைச் சார்ந்த; தோலாலான.

dermatit'is, n. தோல் அழற்சி.

dermat'ogen n. (தாவ.) மரத்தின் உட்கூட்டையின் வளரும் நுனியிலிருந்து மென்மரப்பகுதி உருவாகும் தள அடுக்கு.

dermatog'raphy, n. தோலின் உட்கூற்றியல் பற்றிய ஆய்வுத்துறை.

der'matoid, a. தோல் போன்ற; தோலின் உருவான.

dermatol'ogy, n. தோலைப்பற்றிய இயல்நூற் பிரிவு.

dernier ressort, (பிர.) n. இறுதிப்போக்கிடம், போக்கு முட்டிய புகலிடம்.

de'rogate, v. மதிப்புக் குறைத்துவிடு, தகுதி குறை; தரத்தில் இழி, இழிவானசெயல் செய்.

deroga'tion, n. குறைப்பு; மதிப்புக்குறைவு; விலைமதிப்புக் கழிவு, சேதாரம்; தர இழிவு, படியழிவு; மதிப்புக் கேடு; அதிகாரத்துக்கு ஊறுபாடு: சட்ட மதிப்புத்தாழ்வு.

derog'atory, a. இழுக்கான; தீங்கான; மதிப்புக் குறைக்கிற; பெருமை குலைக்கிற, சிறுமைப்படுத்துகிற; தாழ்த்துகிற.

de'rrick, n. பாரந்தூக்கு பொறி, பளு ஏற்றி இறக்குவதற்கும் உரிய வாய்ப்பு வன்மைகளைக் கொண்ட அமைவு; எண்ணெய்க்கிணறுமீதுள்ள கூர்ங் கோபுரச் சட்டம்; குழாய்க் கிணறுவகைகள்மீதுள்ள கூம்புச் சட்டம்.

de'rring-do', n. கண்மூடித் துணிச்சல்.

derr'inger, n. குட்டையான அமெரிக்கக் குழல் கைத் துப்பாக்கி.

der'vish, n. இஸ்லாமியரிடையே கடுநோன்புடைய துறவி.

des'cant[1], n. (செய்.) இன்னிசைப்பாட்டு, இன்னிசை; பல தலைப்பு வாத ஆய்வாராய்வு; (இசை.) குரலுக்கு மேற்பட்டுக் குரலுடன் ஒத்திசைவுடைய கருவியிசை.

descant'[2], v. விரிவாக விளக்கம் செய்; சொற்பொழிவாற்று; விளக்கவுரை கூறு.

descend', v. இறங்கு; மேலிருந்து கீழே செல்; வீழ், தாழ்; இழிவுறு; சாய், சரி; மரபுவழியில் இயலு; மரபிற் பெறு, சொல்மரபு வகையிற் சார்ந்து தோன்று, மாறித் திரிபுறு, மூலமாகக்கொண்டு தோன்று; மேல்விழுந்து தாக்கு, திடுமெனத் தாக்கு; கதையில் முற்பட்ட காலத்திலிருந்து பின் தொடர்காலம் நோக்கி ஒழுகு; (கண.) பெரிதிலிருந்து சிறிது நோக்கி இயலு; பொதுவிலிருந்து சிறப்பு நோக்கி இயங்கு; இறங்கிவந்தருள்.

descen'dable, descen'dible, a. மரபுரிமையாக இறங்கிச் செல்லத்தக்க, கால்வழியுரிமையாக வரக்கூடிய; இறங்கத் தக்க, இறங்கிவரத்தக்க.

descen'dant, n. மரபினர் வழித்தோன்றல்.

descen'ded. a. வழிவந்த, மரபில் வந்த, வழித்தோன்றிய.

descend'ent, a. கீழிறங்குகிற; கீழ்நோக்கிச் செல்கிற; வழித்தோன்றிய.

descent', n. இறங்குதல்; இறக்கம், கீழ்நோக்கிய செலவு; கீழ்நோக்கிய சாய்வு, சரிவு; கால்வழி, மரபுவழி வருகை; மரபுக்கொடி வழியில் ஒருபடி; உடைமையின் மரபுவழிவரும் உரிமை; பண்பின் மரபுவழி வருகை; பட்டத்தின் கொடிவழி வருகை; ஆற்றின் ஒழுக்குவழிப் போக்கு; கடல்வழித் திடீர்த்தாக்குதல்; வீழ்ச்சி; தாழ்வு; கலிவு; தர இழிவு; அளவில் குறைபடுகை; (தொ.) descent from the cross, இயேசுநாதர் சிலுவையிலிருந்து இறக்கப்பெறும் தோற்ற ஓவியம்.

describe', v. விரித்துரை; விளக்கியுரை, முழு விவரம் கூறு; பண்புகளை எடுத்துரை; சொற்களால் வருணி; பண்பேற்றியுரை, குறித்துரை; வரைந்து காட்டு, வரைவடிவம் கொடு.

descrip'tion, n. விரித்துரைத்தல்; குறித்துரைத்தல்; விரிவுரை, வருணனை, விளக்கவுரை; குறித்துரை, சாட்டுரை; வரைந்துகாட்டுதல், வரைவடிவளிப்பு; சொல்விளக்கம்; பண்புரு, வகை, மாதிரி, இனம்.

descrip'tive, a. விளக்கமான, விரிவான; விளக்கத்தக்க; விரித்துரைக்கும் பண்பு வாய்ந்த, வருணனை ஆர்வமுடைய.

descry', n. கண்டுபிடிப்பு; v. நோக்கியறி, கண்டுணர்; தொலைவிலுள்ளதைப் பார்த்தறி.

des'ecrate, v. தூய்மை கெடு; தெய்விகப் பண்புக்கு மாறுகப் பயன்படுத்து; தெய்வீகத் தன்மையை அவமதிப்புச் செய்.

desecra'tion, n. தெய்விகத் தன்மையைக் கெடுத்தல்; தூய்மை கெடுத்தல்; தூய்மைக்கேடு, பழிகேடு.

desen'sitize, v. கூர் உணர்ச்சியைக் குறை, நிழற்படக் கருவியின் நுட்பத்திறம் கெடு.

des'ert[1], n. பாலைவனம், நீரில்லாப் பாழ்நிலம், மரங்களற்ற பொட்டல்காடு, மக்கள் வாழ்க்கைக்கொவ்வாத தரிசு நிலம்; கவர்ச்சியற்ற பரப்பு; உவர்ப்பூட்டும் செய்தி; சுவைத்திறமற்ற ஊழி; a. மக்கள் வாழாத, மனித நடமாட்டமற்ற; பாழான, மரபற்ற, புல் பூண்டற்ற, விளைச்சலற்ற, உரிசான, வெட்டையான; (தொ.) desert pea, ஊதா நிறப் புள்ளிகள் கொண்ட மலர்களையுடைய ஆஸ்திரேலிய நாட்டுப் பட்டாணிச் செடிவகை; desert rat, இரண்டாம் உலகப் போரில் வட ஆப்பிரிக்க அரங்கத்தில் சேவை செய்த (1941-2) பிரிட்டிஷ் 7-வது கவசப்படை வீரர்.

desert'[2], n. தகுதிப்பாடு, தகுதிக்கேற்ற தரம்; பண்புத் தகுதி, மதிப்புரிமை; ஊதியத்துக்குரிய மெய்யுரிமை.

desert'[3], v. விட்டுநீங்கு; படைத்துறைச் சேவையிலிருந்து இசைவுபெறாமல் தப்பியோடு; பொறுப்பைத் துறந்துவிடு; பொருளைக் கைவிடு; கொள்கை துற, கட்சி துற.

dilu'vialist, *n.* மண்ணியல் நிகழ்ச்சிகளை ஊழிப் பெரு வெள்ளத்தின் விளைவுகளாக விளக்குபவர்.

dim, *a.* மங்கலான; ஒளிகுறைந்த; பார்வை மங்கிய; தெளி வற்ற; *v.* இருட்டாக்கு, தெளிவற்றதாக்கு; புலப்படாது செய்; மங்கலாகு; (தொ.) take a dim view of, (பே-வ.) கிளர்ச்சியில்லாது கருத்துச் சோர்வுடனிருந்து நோக்கு.

dime, *n.* அமெரிக்க வெள்ளிநாணயத்தில் பத்தில் ஒரு பகுதி, பத்து அமெரிக்கக் காசு; (தொ.) dime novel, மலிவான புதினம்.

dimen'sion, *n.* உருவளவை, அளவுக்கூறுகளின் தொகுதி; நீள அகல உயர அளவுத்தொகுதி; உருவளவைக்கூறு, நீள அகல உயர முதலியவற்றுள் ஒன்று; பருமன், பரும அளவு, பருமானம்; நீள அகல உயரம்; பரப்பு, அகற்சி; நீள அகலம்; தொடரெண் கூறுகளில் தெரிவரா உருக்களின் பெருமடிப் பெருக்கம்; (தொ.) dimension work, வரையள வுக் கற்களினாலான கட்டிடம்; of great dimensions, பாரிய, மிகப்பெரிதான; the three dimensions, மூவளவைக்கூறு கள், நீள அகல உயரங்கள்.

dimen'sional, *a.* உருவளவை சார்ந்த, பரும அளவு குறித்த; அளவுக்கூறுகளுக்குரிய.

dim'erous, *a.* இருபகுதிகள் கொண்ட; (தாவ.) ஒரு சுற்றில் ஈருறுப்புக்களுடைய; (வில.) இரு பொருத்துக் கூணிக்காற் பகுதியுடைய.

dim'eter, *n.* இருசந்தச் செய்யுள், சீரிணைப்பு இரண்டு கொண்ட செய்யுள்; *a.* சீரிணைப்பு இரண்டு கொண்ட.

dimet'ric, *a.* மணி உருக்களில் நாற்கோண வடிவமுடைய.

dimid'iate, *a.* இரு பாதிகளாகப் பிரிக்கப்பட்ட, இரு சம கூறுகளாகப் பிளக்கப்பட்ட; பாதிபோன்ற உருவுடைய; ஒரு பாதி மட்டும் வளர்ச்சியுற்ற; ஒருபுறம் பிளவுற்ற; *v.* (கட்.) உருப்பாதி குறி.

dimin'ish, *v.* குறைபடுத்து, குறைவாக்கு; ஒருகூறு பிரித் தெடுத்துக் குறை; வன்மை குறைவு செய்; தாழ்த்து, தரக் குறைவு உண்டுபண்ணு; குறைபடு; குறுகு, தோற்றத்தில் சிறிதாகு; வலுக்குறைபடு; நணி; தாழ்வுறு; கூம்பி ஒரு முணைப்படு.

dimin'ished, *a.* குறைவாக்கப்பட்ட ; சிறிதாக்கப்பட்ட ; தாழ்த்தப்பட்ட ; கீழ்ப்படுத்தப்பட்ட ; செருக்குக் குலைக்கப் பட்ட ; (இசை.) முழுநிறைவற்ற மைய இசையுள்ள.

dimin'ishing, *a.* குறைக்கிற ; குறைபடுகிற ; (தொ.) diminishing glass, உருச்சுருக்கி ; பொருட்களைச் சிறிதாகக் காட்டும் கண்ணாடி ; law of diminishing returns, பொரு ளியல் வகையில் குறைந்துசெல் பயன்முறை.

dimin'uendo, (இத்.) *n.* (இசை.) படிப்படியான குரல் தணிவு (சு-வ : *dim.*)

diminu'tion, *n.* குறைவு ; குறுக்கம் ; இழிவு ; குறைபடும் அளவு.

dimin'utive, *n.* (இலக்.) இனத்திற் சிறுமைகுறிக்கும் சொல் ; *a.* மிகச்சிறிய ; சுருங்கிய ; இனத்திற் சிறிய.

dim'issory, *a.* வேறு ஆட்சி வரம்பிற்கு அனுப்ப இசைவளிக் கிற, ஆட்சியெல்லை கடந்து புறப்பட உத்தரவு கொடுக்கிற.

dim'ity, *n.* முனைப்பிழையுடன் சித்திரவேலைப்பாடு கொண்ட வெண்மையான முரட்டுப் பருத்தித்துணி வகை.

dimm'er, *n.* ஒளியின் போக்கினை ஒழுங்குபடுத்தும் ஏற்பாடு அல்லது அமைப்பு.

dimorph'ic, *a.* இனவகையில் இரு திரிபுருப் படிவங்களை யுடைய ; பொருள் வகையில் இரு மணியுருப் படிவங்களை யுடைய.

dimorph'ism, *n.* (உயி.) இனவகையில் இருதிரிபுருப் படிவங் களையுடைமை ; (வேதி.) இரு மணியுருப் படிவங்களை யுடைமை.

dimorph'ous, *a.* = dimorphic.

dim'ple, *n.* கன்னத்தில் விழும் சிறுகுழி ; நீரின் சிறுசுழி, சிற்றலை ; *v.* கன்னத்திற் குழி உண்டாக்கு ; கன்னத்திற் குழைவுகாட்டு.

din, *n.* பேரொலி ; இரைச்சல் ; *v.* காது செவிடுபடும்படி ஓசையுண்டாக்கு ; பேரொலியெழுப்பித் தொந்தரை கொடு ; பலவந்தமாகக் காதிற் புகுத்து ; பிடிவாதமாகப் புகுத்து.

dinar', *n.* பழைய அராபிய தங்க நாணயம் ; ஈராக் நாட்டின் நாணய அளவு ; யுகோஸ்லாவியா நாட்டு வெள்ளிக்காசு.

dine, *v.* சாப்பிடு ; உண்டிகொள் ; முக்கிய உணவுகொள் ; (தொ.) dine out, வீட்டிலின்றி வெளியே விருந்துண் ; வெளியே எங்காவது உணவு உட்கொள் ; dine with Duke Humphrey, உணவின்றிச் செல்.

din'er, *n.* உண்பவர் ; புகைவண்டி உணவறை.

din'er-out, *n.* வீட்டுக்குப் புறம்பாக வெளி விருந்துகளுக்கு அடிக்கடி செல்பவர்.

dinette', *n.* அடுக்களையிலோ வேறு அறையிலோ சாப்பாட் டுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தனியிடம்.

ding'-dong', *n.* மணி ஓசை ; அடுக்கெதுகை இசைப்பு ; வேறுபாடில்லா ஒரே தன்மை ஒலிப்பு ; *a.* இரண்டுபட ஒலிக்கும் மணியோசை போன்ற ; இரண்டுபட ஒலிக்கும் சம்மட்டி ஓசை போன்ற ; மாறிமாறி வெற்றிதோல்வி வரத் தக்க சரிசமப் போட்டியான ; *v.* மாறி மாறி மணியடி ; ஓசைசெய் ; வைது தொந்தரை செய் ; *adv.* மணியோசை போன்று ; மாறிமாறி.

ding'ey, ding'hy, *n.* சிறு படகு ; இன்பத்தோணி ; விமான மோட்டியின் தொய்வுப்படகு.

ding'le, *n.* மரமடர்ந்த ஆழ்ந்த பள்ளத்தாக்கு.

ding'le-dang'le, *adv.* இங்குமங்கும் ஊசலாடிக்கொண்டு.

ding'o, *n.* ஆஸ்திரேலிய நாட்டு நாய்வகை ; *pl.* ding'oes.

din'gy, *a.* மங்கல் நிறமுள்ள ; அழுக்கடைந்த ; கறைபடிந்த.

din'ing-car, *n.* சாப்பாட்டறை வண்டி.

din'kum, *a.* நேர்மையான, மெய்யான, வாய்மையான ; (தொ.) dinkum oil, திரிபற்ற மெய்ம்மை.

dink'y, *a.* (பே-வ.) நேர்த்தி மிக்க தோற்றமுடைய, மிகநல்ல, மனப்பார்ந்த.

dinn'er, *n.* சிறப்பூண் ; விருந்து, பாராட்டு விருந்து ; *v.* உண் ; விருந்தளி.

dinn'er-jack'et, *n.* வாலற்ற நீண்ட மேலங்கி.

dinne'r-service, dinn'er-set, *n.* விருந்திற்கான தட்டு முட்டுக் கலத்தொகுதி.

dinn'er-wagon, *n.* சிறப்பூண் தள்ளுவண்டி ; ஈரடுக்கு வரிசைகள் கொண்ட பக்கப் பலகை.

dino'ceras, *n.* மண்டையோட்டிலே கொம்புகள் போன்ற மூன்று சோடிப் புடைப்புகளையுடைய புதைபடிவ விலங்கு வகை.

Dinorn'is, *n.* தீக்கோழி போன்ற மரபழிந்துபோன பறக்கும் ஆற்றலற்ற பறவை வகை.

din'osaur, *n.* மண்ணியல் தொடக்க ஊழிகளில் வாழ்ந்து மறைந்துபோன ஊருமினத்தைச் சேர்ந்த மாபெரு விலங்கு வகை.

din'othere, *n.* மண்ணியல் தொடக்க ஊழியில் வாழ்ந்து தும்பிக்கை போன்ற உறுப்புடைய மரபழிந்துபோன மாபெரு விலங்கு வகை.

dint, *n.* வடு, தழும்பு, வெட்டுவாய் ; அடி., அறை, தாக்கு ; ஆற்றல், விசை ; *v.* வடுப்படுத்து, தழும்புகள் உண்டுபண்ணு ; (தொ.) by dint of, ஆற்றலின் விளைவாக.

dio'cesan, *n.* மாவட்டத் திருச்சபை ஆட்சி முதல்வர் வகை யில் திருச்சபை உறுப்பினர் ; மாவட்டத் திருச்சபை உறுப் பினர் வகையில் ஆட்சி முதல்வர் ; *a.* மாவட்டத் திருச்சபை எல்லைக்குரிய.

di'ocese, *n.* மாவட்டச் சமய முதல்வரின் அருளாட்சிப் பரப்பு, மேற்றிராசனப் பிரிவு.

dioe'cious, *a.* (தாவ.) இருவேறு பாற்கூறுகளும் இரு வேறு செடிகளில் உடைய ; (வில.) இருபாலும் இருவேறு தனி உயிர்களாகக் கொண்ட.

Dionys'iac, Dionys'ian, *a.* டயானிசஸ் (Dionysus) என்ற கிரேக்க மதுத் தெய்வத்தைச் சார்ந்த ; டயானிசஸ் வழி பாட்டுக்குரிய.

diop'ter, diop'tre, *n.* கண்ணாடி வில்லையின் குவியத் தொலைவுக்கேற்ற கோட்ட அளவைக்கூறு.

diop'tric, *n.* கண்ணாடி வில்லையின் குவியத் தொலைவுக்கேற்ற கோட்ட அளவைக்கூறு ; *a.* பார்வைக்கு ஊடுபொருளாகப் பயன்படுகிற ; கோட்டத்தினுல் பார்வைக்குத் துணை செய்கிற ; கோட்டத்துக்குரிய ; விலகுகிற ; ஒளிபுகுகிற.

diop'trics, *n.* ஒளிக்கோட்டம் பற்றிய ஒளிநூற்பகுதி.

diora'ma, *n.* ஒளி-நிழல் வண்ண வரைத்திறங்களின் மூலம் எழுஞாயிறு போன்ற இயற்கை நேர்க் காட்சிப் பண்பு தோன்றத் தீட்டப்படும் ஓவியம்.

diox'ide, *n.* (வேதி.) ஈருயிரகை.

dip, *n.* நீரில் அமிழ்த்துதல், அமிழ்த்தும் செயல் ; தோய்த்தல் ; கழுவுதல் ; இறக்கம் ; முகத்தல், மொண்டெடுத்தல் ; அமிழ்ந் துள்ள அளவு, மூழ்கியுள்ள கூறு ; முகந்தெடுத்த அளவு ; கடற் குளிப்பு, கடல் முழுக்கு ; மேட்டுக் காட்சியில் புறத் தோற்றத்திற் காணப்படும் தொடுவான் இறக்கம் ; அடிவான் வரை கடந்த காந்த ஊசியின் இறக்கம் ; மண்ணியல் அடுக் கின் கீழ்நோக்கிய சாய்வு ; தொய்வு ; பள்ளம் ; குழி ; வான் வரைத் தொங்கல் ; மெழுகு திரி ; கழுவுதல், முழுக்காட்டுதல் ; கழுவுநீர், ஆடுமாடுகள் குளிப்பாட்டுதற்குரிய நீர் ; *v.* நீரில் அமிழ்த்து, தோய், தோய்த்தெடு ; நீரில் மூழ்குவித்துத் தீக்கை செய் ; சாயத்தில் தோய்வி ; உருகிய கொழுப்பில் திரி தோய்த்து மெழுகுதிரி ஆக்கு ; ஆடுமாடுகளைப் பூச்சி பொட்டழிப்பு மருந்தூட்டிய நீரில் குளிப்பாட்டு ; அகப்பை யில் முகந்தெடு ; கரண்டியால் கோரியெடு ; நெல் முதலி யவற்றை வாரி எடு ; கீழே சிறிது நேரம் இறக்கு ; (பே-வ.) கடலில் சிக்கவை ; நீராடு, நீரில் மூழ்கி எழு ; இடு, புகவிடு ; வளை, தொய்வாகு ; இறக்கமுறு, கீழ்நோக்கி வளைந்தெழு ; சாய்வுறு, சரிவுறு ; அமிழ் ; கீழ்நோக்கிச் சென்றடை ;

சிறிது புகுந்தெழு; மேலீடாகப் படிந்துசெல்; (தொ.) dip of the horizon, கண்பார்வை மட்டத்துக்குக் கீ ழே தோன்றும் தொடுவானத்தின் இறக்கம்; dip of the needle, காந்த ஊசியின் கீழ் நோக்கிய சாய்வு.

diphther'ia, diphtherit'is, *n.* (மரு.) தொண்டை அழற்சி நோய், காற்றுக்குழல் தோல்போன்ற சவ்வினுல் அடைக்கப் படும் தொண்டைத் தொற்றுநோய் வகை.

diph'thong, *n.* (ஒலி.) இணையுயிர், ஓரசையாக ஒலிக்கப் படும் இரண்டு உயிரெழுத்தொலிகள்; ஒரே உயிரொலியை யுடைய ஈரெழுத்து; இரண்டு உயிரெழுத்துக்கள் இணைந்த அச்சுரு.

diplom'a, *n.* பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ்; கல்லூரிப் பட்டச் சான்றிதழ்; தகுதிப்பத்திரம்; அரசுப்பத்திரம், அரசாங்க ஆவணம்; உரிமைச் சீட்டு, பட்டயம்; *v.* தகுதி ஆவணம் அளி; அரசுப் பட்டயங் கொடு; *pl.* diplom'as.

diplom'acy, *n.* அரசியல் செயலாட்சி நயம்; நாடுகளிடைப் பட்ட இயைபிணக்க நயத்திறம், அரசியல்களிடைப்பட்ட செயலாண்மைத்திறம்; சூழ்ச்சித் திறநயம், முறைநயம், செயல் நயம்.

dip'lomat, *n.* தானுதிபதி, அரசியல் விரகர்.

dip'lomate, *n.* தகுதிப்பத்திரம் வைத்திருப்பவர்; *v.* பட்டயம் அளி.

diplomat'ic, *n.* வேற்று நாட்டு அரசவையிலுள்ள நாட்டுப் பேராண்மை அமைச்சர்; *a.* பழம்பட்டய ஆராய்ச்சித்துறை சார்ந்த; உடன்படிக்கைப் பத்திரங்கள் சார்ந்த; அரசியல் செயலாட்சிக்குரிய; அரசியல் செயல்திறமுடைய; கலந்து பேசியே செயலாற்றுகிற; ஏமாற்றுகிற, இரண்டகமான; (தொ.) diplomatic corps, ஒரு நாட்டின் தலைநகரில் வாழும் வேற்று நாட்டு அரசியல் தூதுவர்களின் முழுக்குழு.

diplomat'ical, *a.* உடன்படிக்கைப் பத்திரங்கள் சார்ந்த; அரசியல் செயலாட்சிக்குரிய; கலந்து பேசிச் செயலாற்றுகிற; இரண்டகமான.

diplomat'ics, *n.* பண்டை வரிவடிவாராய்ச்சித்துறை, பட்ட யங்கள் முதலிய தொன்மைக்கால ஆவணங்களை ஆய்ந்து விளக்கும் துறை.

diplom'atist, *n.* அரசியல் விரகர், தானுதிபதி.

diplom'atize, *v.* அரசியல் வல்லுநராகச் செயலாற்று; சூழ்ச்சி நயத்திறங்களைப் பயன்படுத்து.

dip'noan, *n.* (வில.) செவுள்களோடு நுரையீரல்களும் ஒருங்கேயுடைய மீன்வகை; *a.* செவுள்களும் நுரையீரல் களும் ஒருங்கே உடைய.

dipp'er, *n.* அமிழ்த்துபவர்; அகப்பை; தூர்வாரியின் வாளி; பெரிய கரண்டி; உந்து வண்டியின் தலை விளக்கு களை மேலுங்கீழும் நகர்த்துவதற்கான பொறியமைப்பு; தீக்கை செய்விப்பவர்; (வில.) முக்குளிப்பான்; பறவை வகை; (வான்.) வடமீன்குழு; நிழற்பட எதிர்மூலப் படிகளை நீரில் அமிழ்த்துவதற்கான அமைவு; (தொ.) the Dipper, வட விண்மீன் குழு.

dipp'ing-needle, *n.* தொடுவானத்தினின்றும் காந்த ஊசி யினுல் ஏற்படுங் கோணத்தை அளப்பதற்கான கருவி.

dip'-pipe, *n.* வளியாக்க மனையின்கண் நீரில் மூழ்கிய வெளிப் போக்கிடமுள்ள குழாய்.

dipp'y, *a.* அறிவு மாறுட்டமுள்ள.

dipsoman'ia, *n.* வெறியத்தின்மீது வேணவா.

dip'teral, *a.* (வில.) இரண்டு சிறகுடைய; (க-க.) இரட்டைத் தூண் வரிசையுள்ள.

dip'terous, *a.* பூச்சி வகைகளில் இரண்டு சிறகுகளையுடைய; (தாவ.) இரண்டு சிறகு போன்ற இணைப்புக்களையுடைய.

dip'-trap, *n.* வளித்தொடர்பு அறுப்பதற்காக நீர்மம் அடங் கிய குழாயிலுள்ள வளைவு.

dip'tych, *n.* மெழுகிட்ட உள்மடிப்புள்ள ஈரிதழ் எழுது பட்டிகை; இயேசுநாதரின் இறுதியுணவு விழாவின்போது உரக்கப் படிக்கப்படும் மாவட்டச் சமய முதல்வர்கள்-திருத் தொண்டர்கள் முதலியோர் பற்றிய பதிவேடு; மடிப்புப் பட்டி கைகள் வடிவத்திலுள்ள இரட்டைப்படங்கள்.

dire, *a.* கிலியூட்டுகிற, கொடிய, பேரிடர் பயக்கவல்ல.

direct', *n.* (இசை.) அடுத்த பக்கத்தின் அல்லது வரியின் முதல் இசைமானம் பற்றிய குறிப்பு; *a.* நேரான, வளைவற்ற, கோடாத; நேர்குறுக்கான, மிகச்சுருக்க நெறியான; சுற்றி வளையாத, வாத வகையில் எடுத்துக்கொண்ட பொருளுக்கு உடனே வருகிற; சாய்குறுக்கான, மூலைவாட்டமான; நிமிர்ந்த, சாயாத; இயக்க வகையில் முன்னேக்கிய, பின்னேக்காத; சரிந்து செல்லாத; நேரடியான; சாயங்களில் நேர்பற்ருன, துணைப் பொருளுடாகப் பற்ருத; உடனடி யான, இடையீடில்லாத; தயக்கமற்ற; இடைப்படிகளற்ற; நேர்ச்செயலான; இடையாளற்ற; பேச்சறிவில் நேர் முறையான, உருத்திரிபு அற்ற; கிளைமரபூடு செல்லாத; நேர்மையான, ஒளிவு மறைவற்ற; வாய்மையுடைய, மன மார்ந்த; கபடமற்ற; தெளிவான, ஈரொட்டாயிராத, இரண்டகமற்ற; எளிய, நேர்நடையான; புற ஆசாரப் பொதிவற்ற; (வான்.) நேர்மேற்குக் கிழக்கான போக்குடைய, பின்னிடையாத; வரி முதலியன வகையில் ஆள்மீதே சார்கிற; *v.* இயக்கு, தூண்டு, ஏவு; கட்டளையிடு; கட்டுப் படுத்தி ஆளு, செயலாட்சி செய்; வழிகாட்டு, சுட்டிக்காட்டு, அறிவுரை கூறி உதவு; வழியில் திருப்பு, திசை சுட்டிக் காட்டு; திசையில் செலுத்து, இலக்கு நோக்கிப் பாய்ச்சு; திரைப்பட ஆக்கப்பொறுப்பாளராகச் செயலாற்று; முக வரிக்கு அனுப்பு; ஆளை நோக்கி உரை; ஆளைக்குறித்து எடுத்துரை; முன்னிட்டு எழுது, கருத்திற்கொண்டு குறிப்பிடு; *adv.* நேராக; சுருக்காக, குறுக்காக, மிகக் குறுகிய வழியில்; சுற்றி வளையாமல்; இடையாளின்றி; இடையீடில்லாமல்; ஊடுபொருளில்லாமல்; சாயாமல்; கோணுமல்; (தொ.) direct action, நேரடி நடவடிக்கை; direct current, (சு-வ: d. c.) நேர்மின்னேட்டம், ஒரு திசைப் போக்குடைய மின்னேட்டம்; direct speech, (இலக்.) தற் கூற்று, நேர்முகப் பேச்சு.

direc'tion, *n.* இலக்கு; போக்கு, திருப்பம், செல்லும் பக்கம், திசை; வழிகாட்டுதல்; கட்டளை; ஏவுரை, தூண்டுரை, அறி வுரை; செயலாட்சி, மேலாட்சி; பொறுப்புக் குழு ஆட்சி; முகவரி.

direc'tional, *a.* பரந்த வெளியில் திசைபற்றிய.

direc'tion-find'er, *n.* (வானெலி) ஒலியலைகள் வருகிற திசையைக் காட்டும் கம்பியில்லாக் குரல்வாங்கி.

direct'ive, *n.* பொதுக்கட்டளை; *a.* கட்டளையிடும் பாங் குள்ள, ஆணை பிறப்பிக்கும் ஆற்றலுடைய; (தொ.) direc. tive principle, நெறிமுறைக் கோட்பாடு.

direc'tly, *adv.* உடனே, தாமதமின்றி, உடனடியாக; நேர்முகமாக, இடையீட்டாளர் இன்றி; *rel. adv.* (பே-வ.) நடந்தவுடனே.

Direc'toire, *n.* முதல் பிரஞ்சுக் குடியரசில் (1795-1799) செயலாண்மை அதிகாரம் பெற்றிருந்த ஐவர் குழு; *a.* உடை யிலும் மனைப்பொருள்கள் வகையிலும் முதல் பிரஞ்சுக் குடி யரசுக் காலப் பாணியிலுள்ள.

direc'tor, *n.* இயக்குநர்; கண்காணிப்பவர்; மேலாளர்; வாணிகக் கழகச் செயலாட்சிக்குழு உறுப்பினர்; திரைப்பட ஆக்கப் பொறுப்பாளர், திரைக் காட்சி மேற்பார்வையாளர், பிரஞ்சுப் புரட்சிக்காலப் பொறுப்பாட்சிக்குரிய ஐவர் குழுவின் உறுப்பினர்; அறிவுரையாளர்; நெறிப்படுத்துபவர்; காப் பாளர், முதுகணுளர்; நற்றந்தை, ஆன்மிக வழிகாட்டி; அறி வுரை கூறும் சமயகுரு; இயந்திரத்தில் இயக்கத்தை நெறிப் படுத்துகிற உறுப்பு; படைத்துறையில் பல துப்பாக்கிகளை ஒருமுகப்படுத்திக் குறிபார்த்து இயக்குவதற்குரிய அமைவு.

Direct'orate[1], *n.* முதல் பிரஞ்சுக் குடியரசில் 1795 முதல் 1799 வரை செயலாண்மை அதிகாரம் பெற்றிருந்த ஐவர் குழு.

direct'orate[2], *n.* இயக்குநர் பதவி ; இயக்குநர் குழுமம்.

Direc'tory[1], *n.* முதல் பிரஞ்சுக் குடியரசில் 1795 முதல் 1799 வரை செயலாண்மை அதிகாரம் பெற்றிருந்த ஐவர் குழு.

direc'tory[2], *n.* கட்டளைச்சுவடி, பொது அல்லது தனிமுறை வழிபாட்டுக்கான விதிகளடங்கிய சுவடி ; வழி விவரங்கள் தரும் புத்தகம் ; ஊர் பெயர்கள் குறிப்பு நூல் ; *a.* கட்டளையிடும் பாங்குள்ள, ஆணை பிறப்பிக்கும் ஆற்றலுடைய ; கட்டளைகள் அடங்கிய; சட்டத்துறையில் வகைதுறை அறிவுரை வழங்குகிற.

direct'ress, *n.* இயக்குவோள்.

dire'ful, *a.* அச்சந் தருகிற, கிலிபூட்டுகிற.

dirge, *n.* கையறுநிலைப்பாடல், புலம்பற்பாட்டு.

di'rigible, *n.* செலுத்தப்படத்தக்க புகைக்கூண்டு, பறவைக் கப்பல் ; *a.* வழிப்படுத்தக்கூடிய, செலுத்தப்படத்தக்க.

dirigisme, (பிர.) *n.* சமூகப் பொருளாதாரத் துறைகளில் அரசாங்கக் கட்டுப்பாடுபற்றிய கொள்கை.

di'riment, *a.* செல்லாதாக்குகிற.

dirk, *n.* ஸ்காத்லாந்து மேட்டுநிலத்தில் கையாளப்படும் குத்து உடைவாள் வகை ; கப்பலோட்டும் பயிற்சி பெறுபவர்கள் தாங்கும் படைக்கலம் ; *v.* உடை வாளினூற் குத்து.

dirn'dl, *n.* கச்சும் பாவாடையும் கூடிய ஆல்ப்ஸ் பகுதிக்குரிய (Alpine) நாட்டுப்புற மாதர் உடை ; (தொ.) dirndl skirt, அரைக்கச்சையுடன் கூடிய முழுப் பாவாடை.

dirt, *n.* அழுக்கு, மலம், மாசு ; சேறு, புழுதி, மண் ; சாணம்; பொருக்கு, புறவடை ; ஒட்டிக்கொண்டிருக்கும் வேற்றுப் பொருள் ; தூய்மையற்ற பொருள், பயனற்ற பொருள் ; அழுக்குப்படிவு; கீழ்த்தரப் பேச்சு; *v.* அழுக்காக்கு ; (தொ.) eat dirt, பணிந்து அவமதிப்பை ஏற்றுக்கொள் ; throw dirt, **நற்பெயரைக்** கறைப்படுத்து.

dirt'-bed, *n.* (மண்.) மட்கிப்போன பழம் புதைமண்.

dirt'-cheap, *a.* கொள்ளை மலிவான.

dirt'-eating, *n.* பழங்கால மக்களின் மண்ணுண்பழக்கம் ; மண் உண்ணும் நோய்வகை.

dirt'-pie, *n.* சிறுவர்விளையாட்டு மண்பணியாரம்.

dirt'y, *a.* அழுக்கடைந்த, மாசுற்ற ; கந்தலான ; கீழ்த்தரமான, தாழ்வான, மட்டமான ; தெளிவற்ற, துப்புரவற்ற ; இழிந்த உணர்ச்சி சார்ந்த ; எண்ணத்தில் அல்லது பேச்சில் தூய்மையற்ற ; மோசமான ; வெறுக்கத்தக்க ; நம்பிக்கைக் கேடான ; முறைகேடாகப் பெறப்பட்ட ; கொந்தளிக்கிற ; *v.* அழுக்காக்கு ; கறைப்படுத்து ; மண்படிய வை ; (தொ.) dirty money, இழிந்த வழியில் ஈட்டப்பட்ட பணம் ; இழி பொருள் மூட்டைதூக்குவதற்காகத் துறைமுகக் கூலிகட்குத் தரப்படும் மிகை ஊதியம் ; dirty work, கைகளை அல்லது துணிகளை அழுக்காக்கும் வேலை ; மற்றவர் சார்பாக மேற்கொள்ளப்படும் நேர்மையற்ற செயல்கள் ; மூர்க்கத்தனம், கொலை.

dirz'i, (இ.) *n.* தையற்காரர்.

disabil'ity, *n.* இயலாமை ; சட்டப்படிக்கான தகுதியின்மை; ஆற்றல்கேடு ; செயலுக்குத் தடங்கலான குறைபாடு.

disa'ble, *v.* ஆற்றல்கெடு, தளர்வுறச்செய், முடமாக்கு ; தகுதியற்றதாகச் செய் ; சட்டப்படி தகுதிக்குறைவு உண்டுபண்ணு ; ஆற்றல் அற்றவரென்று தெரிவி ; தடை செய்.

disabuse', *v.* மருள் நீக்கு, ஐயம் அகற்று; தவருன எண்ணத்தைப் போக்கு ; சரிப்படுத்து.

disaccord', *n.* பூசல், மாறுபாடு ; *v.* கருத்து வேறுபாடு கொள் ; மாறுபடு.

disadvan'tage, *n.* தீங்கு, எதிரான நிலை, பாதிக்கும் தன்மை; வசதியற்ற சூழல்.

disad'vanta'geous, *a.* பாதகமான, எதிர்நிலையான ; தீங்குடன் கூடிய, வசதியற்ற ; தாழ்த்துகிற, அவமதிப்புக் கொணரத்தக்க.

disaffec'ted, *a.* நட்புக்கேடுற்ற ; மனக்குறையுடைய ; அரசனிடம் பற்றுறுதியற்ற.

disaffec'tion, *n.* அரசியல் அமைதிக்கேடு ; பற்றுறுதியின்மை, நேசப்பாங்கு அற்ற நிலை.

disaffirm', *v.* (சட்.) முன்முடிவினை மாற்றியமை ; மறு, தள்ளிவிடு.

disaffo'rest, *v.* காடு பற்றிய சட்டங்களின் ஆட்சி எல்லையினின்றும் அகற்று ; காடு அழி.

disagree', *v.* கருத்து மாறுபடு ; ஒவ்வாதிரு, இசையாதிரு ; இயல்பு வேறுபடு ; வேற்றுமைகொள், பூசலிடு ; உணவு வகையில் ஒத்துக்கொள்ளாதிரு ; வானிலை வகையில் தீய விளைவுகளை உடையதாயிரு.

disagree'able, *a.* மனத்துக்கொவ்வாத, வெறுப்புத் தருகிற, அருவருப்பான ; நட்புப்பாங்கற்ற ; மனக்கோட்டமுள்ள, சிடுசிடுப்பான, தொல்லைதருகிற.

disagree'ables, *n. pl.* மனக்கசப்புத்தரும் அனுபவங்கள், துன்பங்கள், தொல்லைகள், கவலைகள்.

disagree'ment, *n.* உடன்பாடின்மை; வேற்றுமை, பொருத்தமின்மை ; கருத்துவேறுபாடு, பூசல்.

disallow', *v.* ஒப்புறுதியளிக்க மறுத்துவிடு ; நேர்மையானதென்று ஒப்புக்கொள்ள மறுத்துவிடு ; ஏற்றுக்கொள்ள உடன்படாதிரு ; தள்ளிவிடு, தடைசெய், தடையாணைப் படுத்து.

disannul', *v.* தள்ளுபடி செய், முற்றும் விலக்கு.

disappear', *v.* மறைந்து போ, கண்ணுக்குத் தெரியாமற் போய்விடு ; ஒழி, கெடு.

disappear'ance, *n.* மறைவு, ஒடிமறைதல் ; மறைவாகப் பின்வாங்குதல்.

disappoint', *v.* நம்பிக்கை குலை ; ஏமாற வை ; அவா நிறைவேற்றத் தவறு, சந்திப்பு ஏற்பாட்டை முறி ; பொய்ப்பி ; மனம் முறிவுறச் செய், மனக்கசப்பூட்டு.

disappoint'ed, *a.* ஏமாற்றப்பட்ட ; நம்பிக்கை குலைந்த ; மனமுறிவுற்ற, மனக்கசப்புற்ற.

disappoint'ing, *a.* ஏமாற்றம் விளைக்கிற, நம்பிக்கை கெடுக்கிற ; அவாமுறிவுண்டாக்குகிற.

disappoint'ment, *n.* ஏமாற்றம், எண்ணங்கள் நிறைவேறுமற் போதல் ; நம்பிக்கைக் குலைவு ; மனமுறிவு ; மனக்கசப்பு, தோல்வியினுல் விளையும் வெறுப்புணர்ச்சி.

disapproba'tion, *n.* ஒப்புதலளிக்காமை ; விருப்பமின்மை தெரிவித்தல், மறுப்பு.

disapprove', *v.* ஒவ்வாதிரு, மாருன கருத்துக்கொள் ; மறுப்புத்தெரிவி ; கண்டனம் பண்ணு ; தள்ளுபடி செய்.

disarm', *v.* படைக்கலம் அகற்று, போர்க்கருவியைக் கீழே போடும்படி செய் ; படைக்கலம் கையிழக்கச் செய் ; காப்பற்றவராக்கு ; தீங்கு செய்யும் ஆற்றலைக் குறை ; பாதுகாப்பு அற்றதாக்கு, காப்பரண் தகர்த்தொழி ; படைவலிமை குறை ; படைவலிமையில்லாதாக்கு ; அமைதிகாலப் படைநிலைக்குக் கொண்டு வா ; அமைதிகாலப் படைநிலை மேற்கொள் ; அழிக்கும் ஆற்றலை நீக்கு.

disarm'ament, *n.* படைவலிமைக் குறைப்பு ; அழிக்கும் ஆற்றல் நீக்கம்.

disarrange', *v.* நிலைகுலை, சீர்கெடு, தாறுமாருக்கு, குழப்பு ; அமைதி குலை, அலங்கோலப்படுத்து.

disarray', *n.* அலங்கோலம், குழப்பம் ; சிறப்பிலாப் பொது ஆடை ; *v.* குழப்பு, அலங்கோலப்படுத்து ; (செய்.) ஆடைகளை.

disartic'ulate, *v.* பூட்டு அகற்று, பொருத்து நெகிழ்வி ; அக்கு அக்காகப் பிரி, வேறுவேறு ஆக்கு ; பிரி.

disassimila'tion, *n.* (உட.) செரிமானம் செய்யப்பட்ட பொருள் சிறு கூறுகளாகப் பிரிதல் ; செரிபொருள் கழிவுப் பொருளாகப் பிரிவுறல்.

disassocia'tion, *n.* கருத்துக்குரிய இணைவுத்தொடர்பின் குலைவு.

disas'ter, *n.* துன்பநிகழ்ச்சி, விபத்து; திடுமென நேரும் பேரிடர், அவப்பேறு, கேடு.

disas'trous, *a.* அவலமான, துக்கமான, அழிவுண்டாக்கு கிற; வருத்தந்தோய்ந்த; இடரின் முன்னறிவிப்பான.

disavow', *v.* தெரியாதென்று சொல்; ஒப்புக்கொள்ள மறு; மறுப்புத்தெரிவி; கைவிடு; தொடர்பில்லையெனப் பகர்; பொறுப்பைத் தட்டிக்கழி.

disband', *v.* படையணியினைக் கலை, அணிகலைந்து போ.

disbar', *v.* வழக்கறிஞர் கழகத்திலிருந்து வெளியேற்று; சட்டவாணர் நிலையினின்றகற்று.

disbelieve', *v.* அவநம்பிக்கைகொள், நம்பிக்கைகொள்ள மறு; சமயத்துறையில் உறுதியான நம்பிக்கையற்றவராயிரு.

disbench', *v.* வழக்கறிஞர் மன்ற மூத்த உறுப்பினர் நிலை யினின்று அகற்று.

disbranch', *v.* கிளைகளை அகற்று.

disbud', *v.* மிகையாகவுள்ள மொக்குகளைக் கிள்ளியெறி.

disbur'den, *v.* சுமை நீக்கு; சுமையையிறக்கு; விட்டு ஒழி; வெளியேற்று, அகற்று.

disburse', *v.* செலவழி, செலவுகொடு; பணங்கொடு.

disburse'ment, *n.* பணங்கொடுத்தல்; கொடுக்கப்பட்ட பணம்; பிரித்துக்கொடுத்தல்.

disc, *n.* = **disk.**

discal'ceate, *n.* வெறுங்காலுடன் போகிற துறவி; மிதியடி மட்டும் அணிந்து செல்கிற துறவி; வெறுங்கால் துறவிப் பெண்; பாதுகையுடன் செல்லும் துறவிப்பெண்; *a.* வெறுங் காலுடன் போகிற; மிதியடி மட்டும் அணிந்துசெல்கிற.

discal'ceated, discalced', *a.* = **discalceate.**

dis'card [1], *n.* சீட்டுக்கழிப்பு; கழித்த சீட்டு; விலக்கீடு, தள்ளுபடி, கழிப்பு, எறிவு.

discard' [2], *v.* சீட்டாட்டத்திற் சீட்டுக்கழி; சீட்டுக்களைக் கீழே போடு; எறி, களை; விட்டுவிடு, விலக்கு, நீக்கு; கொள்கையைத் துறந்துவிடு, கைவிடு; தள்ளுபடி செய்; வேலையிலிருந்து தள்ளு.

discarn'ate, *a.* பருவுடலிலிருந்து அகன்ற; உடற்சார்பில்லாத.

discern', *v.* தெளிவாக உய்த்துணர்; நுணுகிக்காண்; எண்ணியுணர்; உற்றுப்பார்த்து அறிந்துகொள்; கேட்டுத் துணி; ஆர்ந்தமர்ந்தறி; வேறுபாடறி.

discern'ing, *a.* நுழைபுலமுடைய; நோட்டமுடைய, ஊடு ருவிக் காண்கிற, பகுத்தறிகிற; நுட்ப வேறுபாட்டறி வுடைய; அறிவுக்கூர்மையுள்ள.

discern'ment, *n.* பகுத்தறிதல்; அறிவுக்கூர்மை; உற் றறிவு, ஆய்வுணர்வு; நுண்ணோக்கு; நுழைபுல உணர்வு.

discerp'tible, *a.* தனியே கொய்துவிடக்கூடிய, பிரித்தெடுக் கப்படத்தக்க; பிரித்தாலழியக்கூடாத ஒருமைப்பாடு இல்லாத.

discerp'tion, *n.* வேருகும்படி கொய்தல், துண்டித்தல்; வேருக்கப்பட்ட துண்டு.

discharge', *n.* கப்பல் சுமையிறக்கம்; வெடிதீர்வு; மின் கலத்திலிருந்து மின்போக்கு; செறிவு தளர்ப்பு; நீர்க் கசிவு; வெளியேற்றம்; பொறுப்பு நிறைவேற்றம்; கடமை நிறைவேற்றம்; செயல் முடிப்பு; குற்றத்தினின்றும் தவிர்ப்பு, சிறைக்கூடத்தினின்றும் விடுவிப்பு; படைத்துறை விடுவிப்பு; வேலையிலிருந்து நீக்கம்; கடன் தீர்ப்பு; கட்டண மளிப்பு; கூலிவழங்கீடு; விலக்குச் சான்றிதழ், விடுவிப்பு உரிமைச்சீட்டு; கொடுத்துத் தீர்க்கப்பட்ட ஒன்று; சாயம் போக்கும் முறை; சாயம் போக்கும் கூறு; *v.* சுமையிறக்கு; பளுக்குறை, பளு எடுத்துவிடு; வெடிதீர்; மின்கலத்திலிருந்து மின்வலி வெளியேற்று; செறிவு தளர்த்து; நீர்வெளியேற்று, பிலிற்று, கசியச்செய்; கொண்டுசென்று கொட்டு; அனுப்பு, வெளியேற்று; பொறுப்பு நிறைவேற்று; கடமை ஆற்று; செயலாற்று, செயல் முடித்துவிடு; குற்றத்தினின்றும் தவிர்ப்பளி; சிறையினின்றும் விடுவி; படைத் துறையினின் றும் விடுவிப்பு அளி; வேலையிலிருந்து நீக்கு; கடன் தீர்; கொடுத்துத்தீர்; கணக்குச் சரிவர ஒப்புவி; கணக்குச் சரிக் கட்டிக்காட்டு; காரணங்கூறி விளக்கமளி; பங்கிட்டளி; வெளியிடு; புறஞ்செல்லவிடு; சரக்கு வகையில் இறக்கப் பெறு; செறிவு தளர்வுறு; ஒழுகு; புறஞ்செல்; சாயமகற்று, துணியின் சாயம்போக்கு; (சட்.) நீதிமன்ற ஆணையைத் தள்ளுபடி செய்.

discharg'er, *n.* மின் ஆற்றலை வெளிச்செலுத்துதற்கான அமைவு.

disci'ple, *n.* சீடர், மாணாக்கர்; மாணவரென்று உரிமை கோருபவர்; கொள்கை பின்பற்றுபவர், வழிநிற்பவர், பண்பு மேற்கொள்பவர்; இயேசுநாதரின் 'திருமாணாக்கர்'; இயேசு நாதரைப் பின்பற்றிய முற்காலத்தவர்.

disciplinar'ian, *n.* கண்டிப்பாளர், கண்டிப்பான ஒழுங் கினைக் கடைப்பிடிக்கச் செய்பவர்.

dis'ciplinary, *a.* ஒழுங்கு சார்ந்த, நெறிமுறை வளர்க்கிற; உளப் பயிற்சியின் இயல்புள்ள; (தொ.) disciplinary action, ஒழுங்கு நடவடிக்கை, கட்டுப்பாட்டு நடவடிக்கை.

dis'cipline, *n.* கட்டுப்பாடு; ஒழுங்குமுறை; கண்டிப்பு; ஒழுங்காட்சி; விதிமுறைப்பயிற்சி; உளப்பயிற்சி; ஒழுக்கப் பயிற்சி; கடும் பயிற்சி; கடும்பயிற்சிதரும் துன்பம்; தண் டிப்பு; தண்டனைக்கருவி; தன்னொறுப்பு, கடுநோன்பு; தன் னொறுப்புக் கருவி; திருக்கோயில் நடவடிக்கை; ஒழுங்கு முறை; பயிற்சி விளைவாகிய ஒழுங்காற்றல்; *v.* கட்டுப் பாட்டுக்குக் கொண்டுவா; அடக்கியாள்; கட்டுப்படுத்து; விதிமுறைப் பயிற்சியளி; ஒழுங்குமுறை படிய வை; கண்டிப் புடன் பயிற்றுவி; தண்டி; பயிற்றுவித்துத் தகுதி யுடை யவராக்கு; கண்டித்து ஒறு; கடுநோன்புக்கு உட்படுத்து.

disclaim', *v.* மறுதலி, தெரியாதென்று கைவிரி; ஏற்றுக் கொள்ள மறு; சட்டப்படியான உரிமையைக் கைதுற; ஒப்புதலளிக்க மறுத்துவிடு; பொறுப்பேற்க முடியாதென்று கூறிவிடு; தள்ளுபடி செய்; கைவிடு.

disclaim'er, *n.* (சட்.) மறுப்பு; உரிமை கைதுறப்பு; தெரியாதென்ற கூற்று.

disclama'tion, *n.* மறுதலித்தல், தொடர்பு மறுப்பு, கை துறப்பு.

disclose', *n.* திறந்துகாட்டல்; *v.* திறந்துகாட்டு; வெளிப் படுத்து; வெளியிடு; தெரிவி.

disclo'sure, *n.* வெளிப்படுத்துதல்; வெளிப்படுத்தப்பட்ட பொருள்; கண்டு விளக்கப்பட்ட செய்தி; தெரிவிக்கப்பட்ட செய்தி; மறை வெளியீடு.

discob'olus, *n.* பண்டைக் கிரேக்கரிடையே திகிரி வட்டம் எறிபவர்; திகிரிவட்டம் எறியும் நிலையிலுள்ள சிலை; *pl.* discob'oli.

disc'oid, discoid'al, *a.* தட்டு வடிவுள்ள; (தாவ.) மலர் களின் ஓரம் நீங்கலான கொண்டை சார்ந்த.

discolora'tion, *n.* நிறம் வேருக்குதல்.

discol'our, *v.* நிறம் வேருக்கு, நிறங் கெடு; கறைப்படுத்து, தோற்றம் மாறச்செய், உருவழி; நிறம் வேருகு, கறைப்படு.

discoloura'tion, *n.* நிறம் வேருக்கல், கறைப்பட்ட நிலை.

discom'fit, *v.* சண்டையில் தோல்வியுறச்செய்; குறுக்கிட்டுக் கெடு; மன உலைவுண்டாக்கு.

discom'fiture, *n.* தோல்வி; எண்ணக்குலைவு, ஏமாற்றம்.

discom'fort, *n.* உடல்நலமின்மை; மன உலைவு; வாழ்க்கை நலக்குறைவு; *v.* மன உலைவுறச்செய், வசதியிழக்கச்செய்.

discommode', *v.* வாய்ப்புக்கேடு உண்டுபண்ணு, இடுக்கட் படுத்து.

discomm'on, *v.* பட்டம் பெறவிருக்கும் கல்லூரி மாணவர் களுடன் வணிகர் தொடர்புகொள்ளாதபடி தடு; (சட்.) பொதுநிலத்தில் வேலியிட்டு அடை.

discomm'ons, v. பல்கலைக்கழக மாணவரைப் பிறருடன் தொடர்புகொள்ளாமல் விலக்கு; பிறரைப் பல்கலைக்கழக மாணவருடன் தொடர்புகொள்ளாமல் தடு.

discompose', v. மனவமைதியைக் குலை; குழப்பு, கலக்கு; சீர்குலை, ஒழுங்கு குலை.

discompo'sure, n. மனவமைதிக் கேடு.

disconcert', v. அலங்கோலப்படுத்து, கெடு, குலை; மனவுறுதி இழக்கப்பண்ணு; குழப்பு, கலக்கு.

disconnect', v. இணைப்பைப் பிரி, கழற்றிவிடு, பிரித்து வேருக்கு.

disconnec'ted, a. பிரிக்கப்பட்ட, கழற்றப்பட்ட; பேச்சு கட்டுரை வகைகளில் தொடர்பற்ற, இணைவுப் பொருத்தமில்லாத.

disconnec'tion, disconnex'ion, n. கழற்றல், பெயர்த்தெடுத்தல்; இணைவு முறிவு; தொடர்பின்மை.

discon'solate, a. ஆற்றவொண்ணுத, துயர்மிக்க; திக்கற்ற.

discontent', n. மனநிறைவின்மை, மனக்குறை, அதிருப்தி; a. மனநிறைவற்ற; v. மனக்குறை உடையவராக்கு.

discontent'ed, a. மனநிறைவற்ற, அதிருப்திமிக்க; மன அமைதி இழந்த.

discontig'uous, a. ஒட்டணிமையாயிராத, அடுத்து அமையாத.

discontin'uance, discontinua'tion, n. தொடர்பு அற்றுப்போதல், நின்றுபோதல்.

discontin'ue, v. தொடர்ந்து நடைபெறுது இடையறுத்துவிடு; நிறுத்திவிடு; முடிவுக்குக் கொண்டுவா; விட்டொழி, தவிர், இடையே நின்றுவிடு.

discontin'uous, a. தொடர்ச்சியாயிராத; இடையிடையே விட்ட; இடையீடுகளையுடைய, இடையிடைத் தடைப்பட்ட; விட்டுவிட்டு நிகழ்கிற; பிளவுற்ற; பிரிவுற்ற.

dis'cord [1], n. ஒவ்வாமை; உடன்பாடின்மை; முரண்பாடு; மாறுபாடு; பூசல், பிணக்கு; கடுமையான ஒலி; இசைவுக் கேடான ஒலிகளின் சேர்க்கை; முரணிசை ஓசை, திடீர் இசைமுரண்; (தொ.) apple of discord, ஆட்களிடையே பொருமை பூசல்களுக்குக் காரணமான பொருள், வேற்றுமை விளைவிப்பதற்குரிய செய்தி.

discord' [2], v. கருத்துமாறுபாடுகொள்; பிணங்கு, வேறுபடு; பொருந்தாதிரு, முரண்படு, மோது; இசைகேடாகு, இசை முறிவாகு; செவியதிர ஒலியெழுப்பு.

discord'ant, a. உடன்பாடற்ற, ஒத்திசைவில்லாத, ஒன்றுக்கொன்றெவ்வாத, முரண்படுகிற; கரகரப்பொலியுள்ள, இசைமுறிவான.

dis'count [1], n. கழிவு, முன்பணம் அல்லது உடனடிப்பணம் கருதி வாணிகத்துறையில் ஒப்பிக்கொடுக்கப்படும் விலைக் கழிவீடு; கழிமானம், முன்பணம் கருதி மாற்று முறி வகையில் செய்யப்படும் தள்ளுபடி; வட்டம், வாசி; கழிவு வீதம்; தள்ளிக்கொடுப்பு; முகப்பு மதிப்பிற் குறைபாடு; (தொ.) at a discount, முகப்பு மதிப்புக்குக் குறைவாக; வேண்டப்படாத; மிகையான; மதிப்புக் குறைந்த.

discount' [2], v. கழிவு தள்ளிக்கொடு, வட்டங் கழித்துக் கொள்ளவிடு; நடப்பு மதிப்புத் தொகையை முன்னதாகக் கொடு; நடப்பு மதிப்புத்தொகையைப் பெறு; உடனே கிடைக்குங் குறைந்த விலைக்கு ஒன்றை விற்பனை செய்; புறக்கணி; கழிவுவாணிகம் செய்; செய்தி முதலியவற்றின் விளைவைப் பயன்படுத்திக்கொள்; செய்தியை முன்னதாக அறிவித்துச் சுவையற்றதாக்கு.

dis'count-brok'er, n. வட்டம் பெற்றுக்கொண்டு நாணயத்தாள் அல்லது மாற்றுக் காசுமுறியைப் பணமாக மாற்றுபவர்.

discount'enance, n. முகங்கொடுத்துப் பேசாதிருத்தல், புறக்கணிப்பு; ஒப்புக்கொள்ள மறுத்தல்; v. முகம் மறு, முகத்திலடி; ஊக்கங்கெடு, உடன்பாடின்மையைக் காட்டு; வெட்கமடையச் செய்.

discou'rage, v. ஊக்கங்கெடு; தன்னம்பிக்கை இழக்கச் செய்; மனத்தளர்வுண்டாக்கு, பின்வாங்கச்செய்; தடை செய்; முகம் மறு.

discour'agement, n. ஊக்கங்கெடுத்தல்; நம்பிக்கையிழக்கச் செய்தல்; வாட்டம், சோர்வு.

discour'aging, n. மனவுறுதியிழக்கப் பண்ணுதல்; a. சோர்வடையச் செய்கிற.

dis'course [1], n. பேச்சு, உரையாடல்; பேருரை; ஆராய்ச்சிக் கட்டுரை; சமயவுரை, போதனையுரை; ஆய்திறம்.

discourse' [2], v. பேசு, சொல்லாடு; ஒரு பொருளைப்பற்றிப் பேசு; ஒரு பொருள் குறித்து விரிவாக எழுது; வாதாடு; இசை முதலியவற்றை முறைப்படி இயக்கு, உருப்படுத்திக் காட்டு.

discourt'eous, a. நடைநயமில்லாத, பண்புக்குறைவான; முரட்டுத்தனமான, அவமரியாதையான.

discourt'esy, n. அவமதிப்பு.

disco'ver, v. கண்டுபிடி; கண்டுணர்; வெளிப்படுத்திக் காட்டு; திறந்துவை; திறந்துகாண்பி; பலரறியக் காட்டு; வெளிப்படுத்து; தெரியப்படுத்து.

discov'erer, n. கண்டுபிடிப்பவர்; மறைந்திருந்த ஒன்றைக் கண்டுணர்பவர், முன் அறியப்படாததை அறிந்து காட்டுபவர்.

disco'vert, a. (சட்.) மணமாகாத, கன்னியான; கைம்பெண்ணையிருக்கிற.

disco'very, n. கண்டுபிடித்தல்; கண்டுபிடிப்பு, கண்டுபிடிக்கப்பட்ட பொருள்; வெளிப்படுத்துதல்; தெரியப்படுத்துதல்; தெரியாததைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல்; கதை நிகழ்ச்சிக்கறுக்கப்படுதல்; (தொ.) voyage of discovery, புது நிலத்தேட்டம் கருதிய கடற்பயணம்.

discred'it, n. கெட்ட பெயர், நற்பெயருக்குக் கேடு, கறை; கெட்ட பெயருக்குக் காரணமான செய்தி; நாணயக்கேடு, வாணிக மதிப்புக்கேடு; நம்பிக்கைக்கேடு, ஐயப்பாடு; v. நம்ப மறு; அவநம்பிக்கை தெரிவி; நாணயம் கெடு; நற்பெயர் கெடு; இகழ்ச்சி உண்டுபண்ணு.

discred'itable, a. நம்பமுடியாத; மதிக்கத்தகாத; மானக்கேடான, அவமதிப்புத் தருகிற.

discreet', a. முன் விழிப்புடைய, கூரிய நோக்குடைய, காலமறிந்து செயலாற்றுகிற, வேண்டாதபோது பேசாத.

discrep'ancy, n. முன்பின் இசைவின்மை, முரண்பாடு.

dis'crepant, a. முன்னுக்குப்பின் முரணுகிற, ஒப்பிசைவற்ற.

dis'crete, a. தனியான, வேருன; தொடர்ச்சியற்ற; வெவ்வேறு பாகங்களைக் கொண்ட; (மெய்.) பண்பியலான, பருப்பொருளாயிராத.

discre'tion, n. தன்விருப்புரிமை, பொருந்துமாறு அறிதல்; உசிதம்; (தொ.) age of discretion, years of discretion, தன்னறிவு வந்த வயது; at discretion, மனம்போனபடி; be at one's discretion, ஒருவர் விருப்பத்துக்கு முழுதும் உட்பட்டிரு; surrender at discretion, தட்டுத்தடங்கலற்றுச் சரணடை.

discret'ive, a. பிரிக்கிற, வெவ்வேருக்குகிற; பிரிநிலையான.

discrim'inate, v. வேறுபாடு கண்டறி; வேறுபடுத்தி உணர்; தனிச்சிறப்புக் காண்; மற்றவற்றிலிருந்து தேர்ந்தெடு; கூர்ந்து வேறுபாடு உணர்; ஓரங்காட்டு, ஒருசார்பாயிரு.

discrim'inating, a. வேறுபாடு காண்கிற; திரித்துணர்வுடைய, கூரறிவுடைய, நுழைபுலம் வாய்ந்த; வேறுபாடுடைய, வேறுபாடு காட்டுகிற.

discrim'inative, a. வேறுபாடு குறிக்கிற; சிறப்பியல்பாயமைந்த; வேறுபாடு காண்கிற.

discrown', v. முடியிழக்கச்செய், அரச பதவியிலிருந்து விலக்கு.

discur'sive, *a.* மேலோட்டமான, தாவித்தாவிச் செல்கிற; தொடர்ச்சியற்ற, இங்கொன்றும் அங்கொன்றுமான; சுற்றி வளைத்துச் செல்கிற; மற்றொன்று விரிக்கிற; வாதமுறையான, ஆய்வு முறையான.

dis'cus, *n.* கனமான திகிரிவட்டம்; சக்கரப்படை.

discuss', *v.* ஆய்வுரை நிகழ்த்து; விவாதம் செய், வாதாடு; வாதிட்டு ஆராய்; (பே-வ.) உணவு-இன்தேறல் முதலியவற்றை மகிழ்ச்சியோடு உட்கொள்.

discu'ssion, *n.* ஆய்வுரை, விவாதம்; கலந்தாராய்ச்சி செய்தல்; மகிழ்ச்சியோடு உணவு உட்கொள்ளுதல்; அறுவை மருத்துவத்திற் கட்டியை உடைத்தல்.

disdain', *n.* ஏளன இகழ்ச்சி, ஆணவப் புறக்கணிப்பு; *v.* ஏளனமாகக் கருது, வெறுத்தொதுக்கு, ஆணவத்துடன் அவமதி.

disease', *n.* நோய், பிணி; நோக்காட்டின் காரணம்; செடியினத்தின் நோய்; மனத்தின் சீரழிந்த நிலை; ஒழுக்கத்தின் சீர்குலைவு.

diseased', *a.* நோய்ப்பட்ட, பிணியினுற் பீடிக்கப்பட்ட; கோளாறுற்ற, சீரழிந்த.

disembark', *v.* கப்பலிலிருந்து கரையில் இறக்கு; கரையில் இறங்கு.

disemba'rrass, *v.* தொல்லைகளிலிருந்து விடுதலை செய், கலக்கம் நீக்கு; விடுவி; சிக்கலகற்று.

disembod'y, *v.* ஆவியுருவை உடலினின்றும் அகற்று; உடலினின்றும் பிரி; பருப்பொருளினின்றும் விடுவி; படையினைக் கலை.

disembogue', *v.* ஆறு முதலியவற்றின் வகையில் கழிமுகத்திற் சென்று பாய்; ஊற்று, பொழி; பேச்சு முதலியவற்றைக் கொட்டு; மக்கள் திரளைச் சென்று கலக்கவிடு.

disembos'om, *v.* நெஞ்சில் உள்ளதை வெளியிடு, மனச்சுமை இறக்கு, மறைவடக்கமான செய்திகளைத் தெரிவி.

disembow'el, *v.* குடலைப்பிடுங்கு, குடல் பிதுங்கும்படி கிழி; உட்பிளந்து வெளிப்படுத்து.

disembroil', *v.* சிக்கலிலிருந்து விடுவி, குழப்பந்தெளிவி.

disenchant', *v.* மயக்கமகற்று, மருள்நீக்கு.

disencum'ber, *v.* வில்லங்கம் நீக்கு, சுமையிறக்கு.

disendow', *v.* திருக்கோயில் மானியங்களைப் பறி.

disenfran'chise, *v.* வாக்குரிமையைப் பறி.

disengage', *n.* முட்டுமாற்று, வாட்போரில் எதிரியினுடைய வாளின் ஒரு பக்கத்திலிருந்து வாளின் முனையை மறுபக்கத்துக்கு மாற்றிக்கொள்ளும் முறை; *v.* பிடிதளர்த்திவிடு, பிடிப்பு அகற்று; தொடர்பு விடுவி, பற்று விடுவி; ஈடுபாடு நீக்கு; சிக்கறுத்துவிடு, கட்டறுத்துவிடு; விடுதலை செய்; கழலு, விலகிவந்துவிடு.

disengaged', *a.* விடுவிக்கப்பட்ட; பிடி அகற்றப்பெற்ற; ஈடுபாடுகளினின்று விடுபட்ட, வேறு ஈடுபாடற்ற, ஓய்வுடைய.

disengage'ment, *n.* விடுவித்தல்; விடுவிப்பு, இணைபிரிப்பு, தொடர்பு நீக்கம்; கட்டுநீக்கம், பற்றின்மை; ஈடுபாடற்ற நிலை, வில்லங்கமின்மை; செயற்கைக் கட்டுப்பாடற்ற தன்மை, இயல்பான எளிய நடைமுறை; மண உறுதிக்கலைப்பு; முட்டுமாற்று, வாட்போரில் எதிரி வாளின் மறுபக்கமாக வாள் முனையை மாற்றும் முறை; போரில் ஒரு குறிப்பிட்ட நிலையில் இரு தரப்பினரும் ஒத்துப் பின்வாங்கும் நடைமுறை; (வேதி.) சேர்மானத்திலிருந்து ஆக்கக் கூற்றின் வேறுபிரிப்பு.

disentail', *n.* (சட்.) மரபுரிமைக் கட்டுப்பாட்டினின்றும் விடுவித்தல்; *v.* (சட்.) மரபுரிமைக் கட்டுப்பாட்டினின்றும் விடுவி; உடைமையின்மீதுள்ள மரபுரிமைக் கட்டுப்பாட்டினை முறி.

disentang'le, *v.* சிக்கலகற்று; சிக்கல் நிலையினின்றும் விடுவி; குழப்பம் தெளியவை.

disenthral', **disenthrall',** *v.* அடிமைத்தனத்தினின்றும் விடுவி.

disentomb', *v.* கல்லறையினின்றும் வெளியே எடு; தோண்டியெடு; புத்தாய்வு செய்து கண்டுபிடி.

disentwine', *v.* முறுக்கவிழ், சுற்றவிழ்.

disequilib'rium, *n.* சமநிலையின்மை, சரிநிலையிழப்பு; நிலையில்லாமை.

disestab'lish, *v.* அமைப்பினைக் குலைவுசெய்; திருக்கோயில் வகையில் அரசாங்கத் தொடர்பினை இழக்கப்பண்ணு; பணித்துறைப் பதவியிலிருந்து நீக்கு.

diseur, (பிர.) *n.* தனியுரைகளையும் பாடல்களையும் பாடி மக்களை மகிழ்விக்கும் பாடற்கலைஞர்; *fem.* ***diseuse.***

disfav'our, *n.* தயவின்மை; வெறுப்பு, ஒவ்வாமை; வெறுக்கப்படுதல்; *v.* வெறுத்து நோக்கு; வெறுப்புடன் நடத்து; பாசம் தவிர், ஒத்துக்கொள்ள மறு; எதிர்ப்புக் காட்டு.

disfea'ture, *v.* உருக்குலை, விகாரப்படுத்து.

disfig'ure, *v.* அழகைக்கெடு, உருக்குலை, அருவருப்பாக்கு, கறைப்படுத்து.

disfo'rest, *v.* காடு அழி, காடு பற்றிய சட்டங்கள் செயற்படுதலினின்றும் விடுவி.

disfran'chise, *v.* குடிமையுரிமைகளைப் பறி; தேர்தல் தொகுதி வகையில் சட்டமன்றப் பிரதிநிதியை அனுப்பும் உரிமையை மறு; வாக்காளர் வகையில் சட்டமன்றப் பிரதிநிதியைத் தேர்ந்தனுப்பும் உரிமையைப் பறி.

disfrock', *v.* திருக்கோயில் அதிகாரியின் உடையையும் நிலையையும் பறி.

disgorge', *v.* வாந்தியெடு, கக்கு; பறித்ததைத் திருப்பிக் கொடுத்து விடு; ஆறு முதலியவற்றின் வகையில் கழிமுகத்திற்கொண்டு பாய்ச்சு.

disgrace', *n.* தயவிழப்பு; வெறுப்பிகழ்வு; பதவியிலிருந்து வீழ்ச்சி; இகழ், வெட்கக்கேடு; இகழ் உண்டுபண்ணும் செயல், வீழ்ச்சிதரும் செய்தி; பழிகேடர், வெறுப்புக்குரியவர்; பழிகேடு, இகழ்ச்சிக்குரியது; உருக்குலைவு, அலங்கோலம்; *v.* அன்பாதரவு நிலையிலிருந்து அகற்று; பதவியில் இறக்கு; அவமதிப்பூட்டு, இகழ்ச்சி உண்டுபண்ணு; அவக்கேடாயமை.

disgrace'ful, *a.* அவமானம் விளைவிக்கிற; அவமதிப்புத் தருகிற; வெட்கக்கேடான, பழிப்புக்கிடமான.

disgrun'tled, *a.* மனக்குறை மிகுதியுடைய, உளநிறைவில்லாத; மனச்சோர்வுடைய; வாட்டமிக்க.

disguise', *n.* மாறுவேடம், பொய்க்கோலம், மறைந்தொழுகுதற்காக வேற்றுரு வேற்றுடை வேறு நடைகள் கொள்ளுதல்; ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் உடை; செயற்கை ஒழுகலாறு; ஏமாற்றுதல், ஏமாற்று; *v.* மாறு வேடங் கொள், பொய்க்கோலம் கொள்; மறைந்தொழுகு; உரு மறைத்துக்காட்டு, பொய்த்தோற்றமளி, மறைத்துவை, போர்த்து, மூடு; (தொ.) blessing in disguise, நலக்கேடு போலத் தோன்றும் நலம்.

disgust', *n.* அருவருப்பு, கடுவெறுப்பு; குமட்டல்; சீற்றம்; *v.* வெறுப்புணர்ச்சி தூண்டு; அருவருப்படையச்செய்; சீற்றங்கொள்ளச் செய்; குமட்டுதல் உண்டாக்கு.

disgust'ful, *a.* வெறுப்பைத் தூண்டுகிற, அருவருப்பைத் தூண்டுகிற; வெறுப்புக்குரிய.

dish [1], *n.* வட்டில், தட்டம்; வள்ளம், உண்கலம்; உண்கல நிறைவளவு; தட்ட உணவு; உணவுக்கூறு, உணவுவகை; சூடுவை, குழிவு; சக்கரத்தில் உட்குழிவான வடிவம்; நாற்காலிச் சாய்மானத்தில் உள்வளைவான உரு; *v.* வட்டிலிலிடு; தட்டத்தில் வைத்துப் பரிமாறு; குழிவாக்கு; குடுவையாகு; செய்திகளைக் கவர்ச்சியுடையன ஆக்கு; குதிரை வகையில் முன்காலை வளைத்து நட; அரசியலில் எதிரியைச் சூழ்ச்சியில் விஞ்சு; எதிரியின் சூழ்ச்சிமுறையையே கையாண்டு வெற்றிபெறு; (தொ.) dish up, உணவு பரிமாறு; பழைய பண்டங்களையே புதிதாகச் சமைத்துப் பரிமாறு; செய்திகளைக் கவர்ச்சியாக்கி ஒழுங்கு.

dish [2], *v.* (அச்சு.) எழுத்துருக்களைப் பகிர்ந்திடு.

dishabil'itate, *v.* தகுதியற்றதாகச் செய்; உரிமையகற்று; இழிவுபடுத்து; கறைப்படுத்து.

dishabille', *n.* கவனக்குறைவான உடைச் சீர்க்குலைவு; அரை குறை உடைநிலை; புற ஆடை அகற்றிய நிலை.

dishabit'uate, *v.* படிந்துவிட்ட வழக்கத்திலிருந்து விடுவி.

disharm'onize, *v.* பொருத்தமற்றதாக்கு; முரண்பாடாகு.

dishar'mony, *n.* ஒவ்வாத தன்மை; ஒற்றுமைக்கேடு.

disheart'en, *v.* ஊக்கம் கெடு, சோர்வூட்டு.

dishe'rison, *n.* மரபுச் சொத்துரிமை இல்லாமற் செய்தல்.

dishev'elled, *a.* தலைமுடி வகையில் பரட்டையான, கட்டாது தாறுமாறுகத் தொங்குகிற, விரிகோலமான; பம்பைத் தலையுடைய; ஒழுங்கற்ற; திரைத்த, சுருக்கங்கள் கொண்ட, திருந்தாத் தோற்றமுடைய, பண்படாத.

dishon'est, *a.* நாணயமற்ற, நேர்மையில்லாத, நேர்மை குறைந்த; வஞ்சகமான, ஏமாற்றும் நாட்டமுடைய.

dishon'our, *n.* மானக்கேடு, அவமதிப்பு, இகழ்ச்சி; இழி தகைமை, இகழ்ச்சிக்குரிய செய்தி; பொருள்முறிக்குரிய மதிப்பு மறுப்பு, மாற்று முறிக்குரிய மதிப்பு மறுப்பு; *v.* அவமதிப்புச்செய்; இகழ்; கற்பழி; பணமுறிக்குப் பணம் கொடுக்க மறு, மாற்று முறிக்குப் பணம் வழங்க மறு.

dishon'ourable, *a.* மதிப்புக்கேடான, இகழ்ச்சிக்குரிய, நெறி கேடான, கீழ்த்தரமான, இழிந்த.

dishorn', *v.* கொம்புகளை நீக்கு, கொம்புகளைக் கவர்.

dishouse', *v.* வீடற்றவராக்கு.

disillu'sion, *n.* மருட்சி நீக்கம், தெருட்சி, தேற்றம்; *v.* மயக்கத்திலிருந்து தெளிவி, தெருட்டு.

disillu'sioned, *a.* மாயையிலிருந்து மீண்ட; மயக்கந் தெளிந்த; அறிவுத் தெளிவுடைய; பொது நம்பிக்கைகளிலிருந்து விடுபட்ட.

disillu'sionize, *v.* மயக்கத்திலிருந்து விடுவி, மருட்சி தெளிவி; மாயையிலிருந்து மீட்பி.

disincen'tive, *n.* பின்வாங்கச் செய்கிற ஒன்று; ஊக்கக் கேடு, தடை; முயற்சி செய்வதற்குத் தடை; *a.* பின்வாங்கச் செய்கிற, ஊக்கம் கெடுக்கிற, தடையான.

disinclina'tion, *n.* மனமில்லாமை, விருப்பமில்லாமை.

disincline', *v.* விருப்பமில்லாமற் செய், வெறுப்பு உண்டாகும்படி தூண்டு.

disinclined', *a.* மனமில்லாத, விருப்பமில்லாத, வெறுப்புள்ள.

disincor'porate, *v.* கூட்டவை கலை, கூட்டுக்குழு உரிமைகளில்லாதாக்கு.

disinfect', *v.* தொற்றுத் தடைகாப்புச் செய்; ஆடைகளை நோய் நுண்மங்களிலிருந்து தூய்மையாக்கு; இடத்தின் தொற்று நீக்கித் துப்புரவாக்கு.

disinfect'ant, *n.* தொற்றுத்தடை மருந்து, நச்சுத்தடை காப்புப் பொருள்.

dis'inflation, *n.* பணப்பெருக்கத்திலிருந்து திரும்பி ஒழுங்கான நிலைக்கு வருதல்.

disingen'uous, *a.* இரண்டகமான, கரவடமுள்ள.

disinher'it, *v.* மரபுரிமை இழக்கச் செய்; மரபுரிமை மறு.

disin'tegrate, *v.* ஆக்கக் கூறுகளாகப் பிரி, கூட்டழி, சிதை, கூறுகூருக்கு; கூட்டழிவுறு, சிதைவுறு.

disin'tegrator, *n.* நொறுக்கிப் பொடிசெய்யும் பொறி.

disinter', *v.* புதைகுழியிலிருந்து எடு; நிலத்திலிருந்து எடுத்து வெளிப்படுத்து; புதைமறைவு நிலையிலிருந்து வெளிப்படுத்து.

disin'terest, *n.* தன்னலமற்ற தன்மை; குறைபாடு, குறை; அக்கறையற்ற தன்மை; *v.* தனி நலம் அகற்று.

disint'erested, *a.* தன்னலமற்ற; தனிநலச் சார்பற்ற; அக்கறை கொள்ளாத; ஒரு சார்பற்ற; நடுநிலையான; தாராள நோக்குடைய.

disinvest'ment, *n.* வெளிநாட்டு முதலீட்டுச் சேமங்களின் மீட்பு.

disjec'ta mem'bra, (ல.) *n. pl.* உடைந்த பகுதிகள், துண்டுத் துணுக்குகள்.

disjoin', *v.* தனித்தனியாகப் பிரி, இணைப்பகற்று.

disjoint', *v.* இணைப்பொழுங்கு குலை, இயலமைதி குலை; இயைபு கெடு; பொருத்தமற்றதாக்கு; ஏறுமாறுக்கு; இணைப்புப் பிரி, துண்டுதுண்டாக்கு.

disjoint'ed, *a.* இயைபற்ற; பேச்சு வகையில் முன்பின் தொடர்பற்ற; இனம் இனமாக ஒழுங்குபடப் பிரிக்கப்படாத, தாறுமாறான.

disjunc'tion, *n.* இயைபறுத்தல்; பிரித்தல்; இயைபின்மை பிரிநிலை.

disjunc'tive, *n.* (இலக்.) பிரிநிலை இடைச்சொல்; (அள.) பிரிநிலை இணைவாசகம்; *a.* பிரிவுறுகிற, தனித்தனியான; (இலக்.) பிரிநிலை இணைவான, பொருள்பிரித்துச் சொல் இணைக்கிற; (அள.) இரண்டில் ஒன்று தேர்வுக்குரிய.

disk, *n.* வட்டு, வட்டத்தகடு; பண்டைய கிரேக்க உடற் பயிற்சி வல்லுநர்களால் எறிவதற்கு வழங்கப்பட்ட திகிரி வட்டம்; வட்டச்சில்லு; நாணயம் போன்ற வட்டவில்லை; கதிரவன் ஆழிவட்டம்; திங்கள்வட்டம்; இசைத்தட்டு; வட்டவடிவப் பொருள்; உடலின் தட்டையான வட்ட உறுப்பு; தண்டெலும்புத் துண்டுகளினிடைப்பட்ட மெல்லெலும்புத்தகடு; செடியினத்தின் தட்டையான வட்டுப் பகுதி; மலரின் விரிந்த கொள்கலம்; கூட்டுத்தொகுதிச் செடியினத்தில் காம்பில்லாத் தலைப்பின் உட்பகுதி; *v.* சாய்வான வட்டத் தகட்டமைவுள்ள பரம்பினுல் வயலில் பரம்படி; (தொ.) disk brake, சக்கரத்தின் வட்டின்மீது நீர்விசையால் அமுக்கப்படும் திண்டுபோன்ற அமைவுமூலம் செயலாற்றும் விசைத்தடுப்புக் கருவி.

disk'-flor'et, disk'-flower', *n.* காம்பில்லாத மலர்க்கொத்திற் புழைவடிவான உள்மலர்.

disk'-harr'ow, disk'-plough, *n.* சாய்வான வட்டத் தகடுகளுள்ள இயந்திரக் கலப்பை.

dislike', *n.* விருப்பின்மை, வெறுப்பு; *v.* வெறு; வெறுப்புக் கொள்; அருவருப்புறு.

dis'locate, *v.* இடம்பெயர்; இணைப்பொழுங்கு குலை, இயைபுக் கேடு உண்டுபண்ணு; சுளுக்கு உண்டுபண்ணு; குணக்கு ஏற்படுத்து; இணைவறு, துண்டு துண்டாக்கு; (மண்.) தொடர்பற்றதாக்கு.

disloca'tion, *n.* இடப்பெயர்வு; அமைதி குலைவு; திட்டச் சீர்க்குலைவு; போக்குவரவுக்குழப்பம்; நழுவியமூட்டு, இடப் பெயர்வுற்ற கணு; (மண்.) படுகைக்கோளாறு.

dislodg'e, *v.* இடம் பெயரச்செய்; குடி பெயரச்செய்; பாதுகாப்பிடத்திலிருந்து துரத்து; விலகிச்செல், போய்விடு.

disloy'al, *a.* மெய்ப்பற்றற்ற, உண்மை ஈடுபாடற்ற; விசுவாசமற்ற; பற்றுமாறிய, அரசியல் தலைமையினிடம் பற்றுதல் நீங்கிய; நட்பில் உறுதியில்லாத, மெய்ப்பிடிமானமில்லாத, பற்றுறுதியில் மாறுபடும் தன்மையுள்ள.

dis'mal, *n.* சோர்வுற்றவர்; *a.* சோர்வுற்ற; துயரார்ந்த; வருத்தம் தோய்ந்த; கிளர்ச்சியற்ற; கிளர்ச்சியூட்டாத; மகிழ்வற்ற; சலிப்பூட்டுகிற; இருளார்ந்த; (தொ.) the dismal science, பொருளியல் நூல்.

dis'mals, *n. pl.* கிளர்ச்சியற்ற நிலை, துயரார்ந்த நிலை.

disman'tle, *v.* மேலுறை நீக்கு, போர்வை அகற்று; கோட்டையின் அரண்காப்பழி; கப்பலின் மேலுறுப்புக்களைப் போக்கு; துணைக்கலங்களை அப்புறப்படுத்து; துணையுறுப்புக்களைப் பிரித்தெடு; தட்டுமுட்டு நீக்கு; பூட்டுப்பொருத்துக் கழற்று; அரண்களை இடித்துத் தளமட்டமாக்கு; சின்னபின்னமாக்கு, இடித்து வீழ்த்து.

dismast', *v.* கப்பலிற் பாய்மரம் அகற்று.

dismay, *n.* கலக்கம், திகில், மனக்குழப்பம்; கிலி, ஊக்க மிழப்பு, அச்சத்தினால் வலிமையும் தைரியமும் இழத்தல்; *v.* கிலியூட்டு; திடுக்கிடச்செய்; மலைக்கச்செய்; ஊக்கம் கெடு.

dismem'ber, *v.* உறுப்புவெட்டி நீக்கு, இணைவறு; உறுப் புறுப்பாகப் பிரித்தெடு; தனித்தனி பிரி; பேரரசினைச் சிதறச் செய்; நாட்டைத் துண்டாடு.

dismem'bered, *a.* (கட்.) உறுப்புக்கள் துண்டிக்கப்பட்ட.

dismiss', *n.* களப்பயிற்சிமுறை முடிவிற் கலைவு; *v.* நீக்கு, வேலையிலிருந்து விலக்கு; தொலைவில் அனுப்பு, அப்புறப் படுத்து; போகவிடு; விடுவி; மனத்திலிருந்து அகற்று; விரைந்து செய்துமுடி; துற, கைகெகிழவிடு; மரப்பந்தாட் டத்தில் பந்தை எல்லைநோக்கி எறி; ஆட்டக்காரனை வெளி யேற்று; (சட்.) வழக்கைத் தள்ளுபடி செய்; வழக்கு மன் றத்திலிருந்து வெளியே அனுப்பு.

dismiss'al, *n.* அகற்றுதல்; பதவி நீக்கம்; கலைப்பு.

dismount', *n.* குதிரைமீதிருந்து இறங்குதல்; *v.* குதிரையி லிருந்து இறங்கு; குதிரையிலிருந்து இறக்கு; குதிரை மேலி ருந்து வீழ்த்து; குதிரை வகையில் சேணத்தின்மீதிருந்து தள்ளு; ஊர்தியிலிருந்து இறங்கு; ஊர்தியிலிருந்து இறக்கு; சரக்கைக் கீழே இறக்கு; பீரங்கி முதலியவற்றை இறக்கு; பூட்டவிழ்த்துக் கழற்றி வை.

disobed'ience, *n.* பணியாமை, கீழ்ப்படிதலின்மை; தலைமை மீறுகை, சட்டமீறுதல், ஆணைகடத்தல்.

disobed'ient, *a.* கீழ்ப்படிய மறுக்கின்ற, அதிகாரம் மீறு கின்ற; கீழ்ப்படியாமல் அசட்டையாயுள்ள, கீழ்ப்படிவதைச் சிறுமையெனத் தள்ளுகின்ற.

disobe'y, *v.* கீழ்ப்படிய மறு, அதிகாரம் மீறு; கீழ்ப்படியாமல் அசட்டைசெய், கீழ்ப்படிவதை சிறுமையெனத் தள்ளு; சட்டத்தை உதறித்தள்ளு, ஆணைமறு.

disoblig'e, *v.* கடப்பாட்டிலிருந்து விடுவி; விருப்பத்தை மதிக்கத் தவறு; கோரிக்கை மறு; உதவி மறு; உணர்ச்சி புண்படச்செய்.

disoblig'ing, *a.* உதவ மறுக்கிற; விருப்பத்தைக் கவனிப் பதில் அக்கறையில்லாத; ஒத்துணர்ந்து செயலாற்றுத; அன்பில்லாத, அன்பாதரவற்ற.

disord'er, *n.* சீர்குலைவு, ஒழுங்கற்ற நிலை, குழப்பம்; அமைதிக்கேடு, கொந்தளிப்பு; உடல்நிலைக்கோளாறு, நோய்; *v.* ஒழுங்குகெடு; அமைதிகுலை; சமநிலை கெடு; குழப்பு, கோளாறு உண்டாக்கு; தொந்தரவு செய்.

disor'dered, *a.* ஒழுங்கு குலைந்த; குழம்பிய; மூளைதிரிந்த, அறிவு திறம்பிய.

disord'erly, *n.* ஒழுங்கின்மையாக நடப்பவர்; *a.* ஒழுங்கு கேடான; குழப்பமான; முறைகெட்ட; கட்டுப்பாட்டை மீறிய; சட்டத்துக்குக் கட்டுப்படாத; தாறுமாறான தோற்ற முடைய; கொந்தளிக்கிற; கட்டுக்கடங்காத; பொதுமக்க ளுக்குத் தொந்தரவு தருகிற, பொதுநலத்துக்குக் குந்தக மான; *adv.* சட்டத்துக்குமாறாக; குழப்பமாக; (தொ.) disorderly house, விலைமகளிர் இல்லம்; சூதாடுமிடம்.

disorg'anize, *v.* ஒழுங்குமுறையைக் கெடு, தாறுமாறாக்கு; உயிரியல் கூட்டுச் சிதை.

diso'rient, diso'rientate, *n.* திருக்கோயில் முதலியவற்றை நேர்கிழக்குமுகமாயிராமல் மாற்று; திசை குழப்பு, திசை தெரியாமற் செய்.

disown', *v.* தனதன்றெனக் கூறி மறு, தனதல்ல எனக் கைவிடு; ஏற்க மறு, மறுதலி; கைதுற, கைவிடு.

dispa'rage, *v.* இழித்துரை, பழித்துரை, இகழ்; மதிப்புத் தாழ்த்து, இழிவேற்று; கீழானவற்றுடன் ஒப்பிட்டு மதிப் புக் குறைவுபடுத்து.

dis'parate, *a.* ஒலைமடுப்போன்ற வேற்றுமையுடைய, தொடர்பு படுத்தத் தகாத; முற்றிலும் வேறான, வகைவேறுபட்ட.

dis'parates, *n. pl.* முற்றிலும் வேறுபட்டவர்கள்; ஒவ்வாப் பொருள்கள்.

dispa'rity, *n.* ஏற்றத்தாழ்வு, ஒவ்வாமை; ஒப்பிசைவின்மை, ஒட்டா வேறுபாடு.

dispark', *v.* பூங்கா நிலத்தை வேறுவழியிற் பயன்படுத்து; பூங்காவியல் கெடுத்துத் திறந்த வெளியாக்கு; பூங்காவி லிருந்து அப்புறப்படுத்து.

dispart', *n.* இலக்கலகு, பீரங்கியின் பின்முக முன்முக வட்டங் களின் ஆர வேறுபாடு; இலக்கலகு வரை, இலக்கலகுக்கு ஈடுசெய்யும் நோக்குவரை; *v.* வேறுவேறு திசையிற் பிரித்துச் செலுத்து; வேறுவேறு திசையிற் பிரிந்துசெல்; ஈவித்துக்கொடு; பாத்தீடு செய்; வேருகப் பிரி; பிரிந்து செல்.

dispass'ionate, *a.* உணர்ச்சிக்கு இடங்கொடாத, உணர்ச்சி வசப்படாத; அமைதியான; நடுநிலை உணர்வுடைய.

dispatch', *n.* விரைவாக அனுப்பிவிடுதல்; அஞ்சல் விடுக்கை, அஞ்சல் அனுப்பிவிடுதல்; விலக்குதல், விலக்கீடு; வேக மாகச் செயலாற்றுதல், விரைசெயல்; விரைவு; விரை செய்தி, தந்திச்செய்தி; ஒழிப்பு, உயிரழிப்பு; *v.* விரைந் தனுப்பு; உலகினின்று அப்புறப்படுத்து; ஒழி, உயிரகற்றி விடு; தீர்வுசெய், செயல்தீர்த்து அமை; தின்றுதீர், உண்டு தீர்த்துவிடு; வேகமாகச் செய்து முடி; விரைந்து செய லாற்று.

dispatch'-boat, *n.* தீர்வேடுகளைக் கொண்டுசெல்லும் கலம்.

dispatch'-box, *n.* முக்கியமான தாள்கள் அல்லது பத்திரங் கள் வைக்கும் பெட்டி.

dispatch'es, *n. pl.* அரசியல் நடவடிக்கைத் தாள்கள்; படைத்துறை நடைமுறை ஏடுகள்.

dispatch'-rider, *n.* விரைந்து குதிரையிலோ விசைமிதியிலோ கடிதங்களைக் கொண்டு செல்பவர்.

dispel', *v.* துரத்து; சிதற வை; மறையச்செய்; சிதறு, கொஞ்சங் கொஞ்சமாக மறைந்துபோ.

dispen'sable, *a.* இன்றியமையாத்தக்க, கட்டாயத் தேவை யில்லாத; சட்டவிதி சூளுரை முதலியவற்றின் வகையில் சிறப்புத் தறுவாய்களில் தளர்த்திவிடக்கூடிய.

dispens'ary, *n.* மருந்தகம்; மருத்துவ அறக்கூடம்; வழங்கு மிடம்; மருத்துவச்சாலையில் தங்காத நோயாளிகளுக்கு மருந் தளிக்கும் பகுதி; மருந்து விற்கப்படுமிடம்.

dispensa'tion, *n.* பாத்தீடு, பங்கிட்டு வழங்குதல்; வகைமை, வகுத்தமைவாட்சி; இறைமையின் அருள்முறை வகுப் பாட்சி, அருளாட்சி; இயற்கையின் வகைமுறை ஒழுங்கு, முறையாட்சி; தனிக்குழுவிற்குரிய இறைவனின் ஊழ்வகுப்பு; தனி மனிதனுக்குரிய ஆண்டவனின் வகுப்பீடு; குறிப்பிட்ட காலச் சமயநிலை; விலக்குரிமை அமைதி; விலக்கீடு.

dis'pensator, *n.* கொடுப்பவர்; பகிர்ந்தளிப்பவர்; செய லாட்சி நடத்துபவர்.

dispense', *n.* செலவு; செலவினம்; வருவளம்; *v.* பங் கிட்டுக்கொடு, பரிமாறு; நீதிமுறை வழங்கு; திருக்கோயில் அருள்முறை வழங்கு; மருந்தளி; விலக்கமைவு அளி; கடப்பாடு தவிர்த்துதவு; இல்லாமற் கழி; துறந்தமைவுறு; (தொ.) dispense with, இல்லாது கழி; குறை ஏற்றமைவுறு; தேவைநிலை ஒழி; இன்றியமையா நிலைதளர்த்து; கட்டுப் பாடு தளர்த்து.

dispen'ser, *n.* மருந்து சேர்த்தளிப்பவர்.

dispeo'ple, *v.* குடியிருப்பவர்களை அகற்று, மக்களை வெளி யேற்று.

dispers'al, *n.* கலைத்தல்; அகலப்பரப்புதல்.

disperse', *v.* சிதறச்செய்; கலையச்செய்; பரவலாக்கு; தூவு, எங்கும் பரப்பு; கலை, கலைந்துசெல்; பரவு; ஒளிக்கதிர் களைச் சிதைத்து ஆக்கக்கூறுகளாகப் பிரி.

disper'sion, *n.* கலைத்தல்; சிதற அடித்தல்; பரப்பீடு; கலைவு; பரவுகை; சிதறுகை; சிதறிய நிலை; ஒளிக்கதிர்ச் சிதைவு; வீக்க நீக்கம்; சவ்வூடு செல்லாக் கரைசற் பொருள்; சவ்வூடு செல்லாக் கரைசல்நிலை; குறிக்கணக்கில் உருவின் சராசரியிலிருந்து மதிப்புச் சிதறிப்போதல்.

dispers'ive, *a.* சிதறுகிற ; சிதறும் இயல்புடைய.

dispir'it, *v.* ஊக்கம் குலை ; ஊக்கம் கெடு, மறைமுகமாகத் தடைசெய்.

dispir'ited, *a.* வாட்டமுள்ள, சோர்ந்த, கிளர்ச்சியற்ற ; மந்தமான, வலுக்குறைந்த, அறிவுச்சோர்வுள்ள.

dispit'eous, *a.* இரக்கமற்ற.

displace', *v.* புலம் பெயர்த்துவை ; பிறிதொன்றனுக்காக இடம்பெயர வை ; இடம் மாற்றிவை ; பதிலாக இடம் பெறுவி ; பெயர்த்து இடம்பெறு ; பதவியிலிருந்து நீக்கு ; நிலையிலிருந்து தள்ளு ; இடவமைதி குலைவுசெய் ; (தொ.) displaced person, குடியிழந்தவர் ; நாடிழந்தவர் ; நாடு விட்டுச் சிறைப்பட்டவர் ; நாடுவிட்டு ஒப்பந்தத் தொழிலாளரானவர் ; புகலற்றவர், நாடற்றவர்.

displace'ment, *n.* இடம் பெயர்த்தல், இடப்பெயர்ச்சி ; புடைபெயர்வு, பிறிதொன்றன் தாக்குதலால் பொருள் இடம் பெயர்ந்த அளவு ; இடக் கவர்வு, நீர்மத்தில் மூழ்கும் பொருள்கள் அல்லது கப்பல்போல அமிழ்வுடன் மிதக்கும் பொருள்கள் நீரில் இடங்கொள்ளும் அளவு ; இடக் கவர்வால் வெளியேற்றப்படும் நீர்ம எடை.

display', *n.* காட்சிமுறை, காட்சியமைவு ; காட்சி வரிசை, காட்சி ஒழுங்கு ; கண்காட்சி, கவர்ச்சிமிக்க காட்சித் தொகுப்பு ; தோற்றப்பகட்டு ; அச்சகத்தில் கவனத்தைக் கவரும்படி வைக்கப்படும் எழுத்துருக்களின் வரிசையணி ; *v.* முனைப்பாகக்காட்டு, காட்சிக்குரியதாக்கு, பலர் அறியத் திறந்து காட்டு, அம்பலப்படுத்து ; பொருட்காட்சியாக வை ; பகட்டாகக்காட்டு, ஆடம்பரஞ் செய் ; வெளிப்படுத்து ; தோற்றும்படி செய், காணவிடு ; அச்சுருக்கலை எளிதில் எடுக்கும்படி அடுக்குவரிசைப்படுத்தி வை.

displease', *v.* மகிழ்வமைதி கெடு ; விருப்பக்கேடு உண்டுபண்ணு ; சலிப்புக் கொள்ளச்செய் ; மனக்குறை ஏற்படும்படி நட ; வெறுப்பூட்டு ; சினங்கொள்ளுவி ; நட்பமைதி கெடு, நல்லிணக்க நிலைகுலை ; (தொ.) be displeased, குறைப்படு, மனவருத்தங்கொள், வெறுப்புக்காட்டு, சினமுறு.

displeas'ing, *a.* வெறுக்கச் செய்கிற ; சினமூட்டுகிற.

displea'sure, *n.* மனக்குறை ; வெறுப்பு ; சினம் ; எரிச்சலூட்டும் செய்தி.

displume', *n.* சிறகுகளை அகற்று ; சிறப்பினை அழி.

disport', *n.* கேளிக்கை, பொழுதுபோக்கு ; *v.* விளையாடி மகிழ்வி, பொழுதுபோக்கில் ஈடுபடுத்து ; களிப்புடன் விளையாடு ; (தொ.) disport oneself, மகிழ்வுடன் ஈடுபடு, விளையாடி மகிழ்.

dispos'al, *n.* ஒழுங்கமைவு, வரிசைப்பாடு ; செய்ம்முறை, செயலாட்சி ; செயல் முடித்தல் ; பொறுப்புத்தீர்வு, கைப்பொறுப்பு நீக்கம் ; சரக்குகளின் விற்றுமுதல் தீர்வு ; கடப்பாட்டு நிறைவேற்றம் ; பாத்தீட்டு முறைமை, பங்கிடும் வகைமுறை ; பணம் செலவழித்தல் ; பொருள் பயன்படுத்துதல் ; செலவழிக்கும் உரிமை ; பயன்படுத்தும் உரிமை ; சேமக் கையிருப்பு, தேவை நேரத்துக்கு உதவும்படியான கையடைவு வாய்ப்பு.

dispose', *n.* ஒழுங்கமைதி ; செயலாட்சி ; நடைமுறை ஒழுங்கு ; மனநிலையமைதி ; *v.* ஒழுங்குபடுத்து ; வை, நிரல்பட வை, வரிசைப்படுத்து ; கடவுள் அல்லது ஊழ்வகையில் ஆணைசெலுத்தி அமைவுறச்செய் ; வாழ்வு வகுத்தமை ; திட்டஞ் செய், திட்டம் நிறைவேற்று ; செயல் முடிவு கட்டு, செய்யவேண்டுவனவற்றைச் செய்துமுடி ; தீர்வு செய் ; செலவு செய் ; தன் விருப்பப்படி கையாளு ; செயலாட்சி செய் ; சரக்குக் கையிருப்பை விற்பனை செய் ; தள்ளிக்கழி, ஒழி, தவிர் ; ஒழித்துக்கட்டு, கொன்றழி ; பகிர்ந்தளி ; நன்கொடை வழங்கு ; மனம் பற்றுவி, விருப்பம் கொள்ளுவி ; நாடுவி ; உள்ளம் முன்னுடியே ஒருதலைப்படச் சாய்வுறுத்து, கருத்து ஒருசார்புறுத்து ; (தொ.) dispose of, முடிபமைதி செய், என்ன செய்வது என்பதை முடிவுகட்டு ; செயல்தீர், செய்யவேண்டுவனவற்றைச் செய்துமுடி ; ஒதுக்கிவை, சேமித்துவை ; நீக்கு, விலக்கு ; ஒழித்துக்கட்டு ; விற்பனை செய். செலவழி, பயன்படுத்தித் தீர்.

disposi'tion, *n.* ஒழுங்கமைத்தல் ; ஒழுங்கமைதி ; வகுத்தமைத்தல், பகிர்ந்தளிப்பமைதி ; சூழமைதி, சார்புநிலை ; இருப்பு ; நிலை ; தன்மை ; போக்கு ; மனநிலை, செவ்வி ; உளச்சார்பு, மனச்சாய்வு ; திட்டநிலை, முன்னேற்பாட்டமைவு ; செயலுரிமை, செயலாட்சி ; சட்டப்படி பத்திரம் மூலமான உடைமை உரிமையளிப்பு, உடைமை உரிமைமாற்றம்.

dispossess', *v.* உடைமை கவர், சொத்துப்பறி ; உறைவிடத்தினின்றும் வெளியேற்று ; பற்றியிருக்கும் பேயினின்றும் விடுவி.

dispraise', *n.* இகழ்ச்சி ; பழிப்பு ; குற்றச்சாட்டு, கடிந்துகூறல், கடிந்துரை ; *v.* இகழ், பழித்துரை ; குற்றஞ்சாட்டு, குறைசொல்லு ; கண்டி.

disproof', *n.* தவறென்று எண்பித்தல் ; வாதமறுப்பு, மறுப்பாராய்ச்சி ; கண்டிப்பு, மறுப்பு.

dispropor'tion, *n.* இயைபுப் பொருந்தாமை, இயைவுக்கேடு, ஏறுமாறான தன்மை ; *v.* முரண் பாடு கொள்ளுவி.

dispropor'tionate, *a.* அளவொவ்வாத ; உரு ஒப்பில்லாத ; அளவு மீறிப் பெரிதான ; அளவுமீறிச் சிறிதான.

disprov'e, *v.* தவறென்று எண்பி ; அன்றென்று மறு.

dis'putable, *a.* விவாதத்துக்குரிய, எதிர்வாதத்துக்கிடமான ; கருத்து வேற்றுமையுள்ள ; ஐயத்துக்குரிய.

disputa'tion, *n.* வாக்குவாதம், சொற்போராட்டம், நீண்ட வாத எதிர்வாதம்.

disputa'tious, disput'ative, *a.* வாதாடும் இயல்புடைய ; மறுத்துப்பேசுகிற.

dispute', *n.* விவாதம், வாதாடல் ; ஆராய்ச்சித்துறையில் கருத்து வேறுபாடு ; கருத்துவேறுபாட்டுக்குரிய நிலை, ஐயத்துக்குரிய நிலை ; வாய்ச்சண்டை, சொற்பூசல் ; *v.* வாதாடு ; விவாதம்செய் ; ஆய்வு செய் ; வாய்ச்சண்டையிடு ; போராடு ; கேள்வி எழுப்பு ; எதிர்த்துக்கேள் ; மறுத்துரை ; படையெடுப்பை எதிர்த்துத் தடு ; போட்டிக்கு நில் ; வெற்றி நாடிப் போராடு ; (தொ.) beyond dispute, without dispute, ஐயத்துக்கிடமில்லாமல், உறுதியாக.

disqualifica'tion, *n.* தகுதியின்மை ; தகுதிக்கேடு செய்யும் கூறு.

disqual'ify, *v.* தகுதி கெடு, தகுதியற்றவராக்கு ; சட்டப்படி ஏலா நிலை ஏற்படுத்து, உரிமையைத் தள்ளுபடிசெய் ; தகுதியற்றவரென அறிவி, தகுதி மறு ; தகுதியின்மை காரணமாகத் தடு.

disqui'et, *n.* அமைதியின்மை, மன உலைவு ; கவலை, கலக்கம் ; *a.* அமைதியற்ற ; கவலைகொண்ட ; *v.* அமைதிகெடு ; மனங்கலங்கச் செய் ; தொந்தரவுகொடு.

disquisi'tion, *n.* ஆய்வாராய்வு, விரிவகலமான நுண்ணாய்வு ; வாத எதிர்வாதங்களை விரித்துச் சொல்லும் ஆராய்ச்சிக் கட்டுரை.

disquisi'tional, disquisi'tionary, disquis'itive, disquis'itory, *a.* ஆய்வு சார்ந்த ; விளக்கமான ஆராய்ச்சி இயல்புடைய.

disrate', *v.* (கப்.) சிறிய அதிகாரியின் நிலைக்கு இறக்கு, படி தாழ்த்து.

disregard', *n.* கவனியாதிருத்தல், புறக்கணிப்பு ; மதியாமை, அசட்டை மனப்பான்மை ; *v.* புறக்கணி ; மதியாதிரு, அசட்டைசெய் ; அற்பமாகக் கருது.

disrel'ish, *n.* சுவைகேடு, உவர்ப்பு ; வெறுப்பு ; *v.* உவர்ப்புக்கொள், வெறு, வெறுப்புணர்ச்சிகொள்.

disrepair', *n.* பழுதுற்ற நிலை, சீர்கேடான தன்மை, பழுது பாரா மோச நிலைமை.

disrep'utable, *a.* இழிவான, மானக்கேடான ; ஒழுங்கற்ற ; இழிதோற்றமுடைய, மதிப்பற்ற.

disrepute', *n.* இகழ்ச்சி, பழி ; பெருமையழிவு ; மானக்கேடு.

disrespect', அவமதிப்பு, மதிப்புக்கேடு.

disrespect'ful, *a.* அவமதிப்புக் காட்டுகிற; பணிவிலைக்க மில்லாத.

disrobe', *v.* உடை களை, ஆடையகற்று.

disroot', *v.* வேருடன் பிடுங்கு; மூட்டோடு பெயர், அப்புறப் படுத்து.

disrupt', *v.* உடை, தகர்த்தெறி; பிள, ஊடறு, தொடர்பு கெடு.

disrup'tion[1], *n.* இடிவு, தகர்வு; பிளவு, உடைப்பு; நெவு, கிழிவு.

Disrup'tion[2], *n.* ஸ்காத்லாந்து நாட்டுத் திருச்சபையில் ஏற்பட்ட பிளவு (1843).

disrup'tive, *a.* தகர்க்கிற, பிளவு உண்டாக்குகிற, பிரிக்கிற.

dissatisfac'tion, *n.* மனக்குறை, அதிருப்தி; மனநிறை வின்மை.

dissat'isfied, *a.* மனக்குறைவுடைய; திருப்தியற்ற.

dissat'isfy, *v.* மனநிறைவு செய்யத் தவறு; மனக்குறை யுண்டாக்கு; வெறுப்படையச்செய்.

dissave', *v.* சேமித்ததை எடுத்துச் செலவுசெய்.

disseat', *v.* இருக்கையினின்று அப்புறப்படுத்து.

dissect', *v.* பிள, வெட்டு, கூறுபடுத்து, துண்டுதுண்டாக்கு; அறுத்து ஆய்வுசெய்; கூறுகூருக்கி நுணுகி ஆராய்; வகுத்தாய்வுசெய்.

dissec'tion, *n.* கூருக்குதல்; பகுத்தாய்வு.

disseise', *v.* இறையிலி நிலத்தின் உடைமை கவர்; உடைமை பறி; தவருக வலிந்து கைக்கொள்.

dsseis'in, *n.* உடைமை பறிப்பு.

disseize', *v.* = disseise.

disseiz'in, *n.* = disseisin.

dissem'ble, *v.* உருமாற்று, பொய்வேடமிடு; கூருதடக்கு, உண்மையினை மறை; பொய்யாக நடி; கண்டும் காணுததுபோலப் பாசாங்கு செய்; உள்நோக்கம் வெளிப்படாமற் செயலாற்று.

dissem'inate, *v.* பரவலாக விதை. எங்கும் தூவு; பரப்பு, நாற்றிசையிலும் பரவவிடு; *a.* சிதறிய, பரவிய; (தொ.) disseminated sclerosis, நடு நரம்புமண்டல முழுவதும் திட்டுத்திட்டாகத் தடிப்புக்காணும் நோய்வகை.

dissen'sion, *n.* கருத்துவேறுபாடு; கருத்துவேறுபாட்டால் நிகழும் உட்பிளவு; உட்பூசல்.

dissent', *n.* கருத்துவேறுபாடு; கருத்துவேறுபாட்டு அறிவிப்பு; மறுப்பு; சிறுபான்மையினர் தெரிவிக்கும் கண்டன எதிர்ப்பு; நிறுவப்பட்ட சமயக்கோட்பாட்டுக்கு மாருன கருத்துவேறுபாடு; சமய எதிர்ப்பு, சமயக்கோட்பாடு மறுத்துப் பிரிந்து செல்லுதல்; பிரிவுற்றவர் தொகுதி; *v.* கருத்துவேறுபடு; மாறுபாடு தெரிவி; கொள்கை ஏற்க மறு.

dissent'er, *n.* நிறுவப்பட்ட நாட்டுத் திருச்சபையை ஏற்க மறுப்பவர்.

dissen'tient, *n.* பெரும்பான்மையருடன் மாறுபாடுடையவர்; பணிமுறைத் தலைவரின் கருத்தை ஏற்க மறுப்பவர்; *a.* பெரும்பான்மையருடன் மாறுபட்ட; அதிகார வர்க்கத்தின் கருத்துக்கு முரண்பட்ட.

dissepi'ment, *n.* (தாவ.) மலரின் கருவகத்திலுள்ள இடைத் தடுப்பு; (வில.) பவளக்குழிசியின் அடிப்பகுதியை அரை குறையாகப் பிரிக்கும் இடையீடு.

dissert', **diss'ertate**, *v.* விளக்கவுரையாற்று, ஆய்வுரை நிகழ்த்து, கழறு.

disserta'tion, *n.* விளக்கவுரை; விளக்க ஆராய்ச்சிக்கட்டுரை, விளக்க ஆராய்ச்சி ஏடு.

disserve', *v.* தீங்கிழை; உணவுமேடையில் இட ஒழிவு செய்.

disserv'ice, *n.* தீங்கு, பொல்லாங்கு.

dissev'er, *v.* தொடர்பை அறு, பிணைப்பை நீக்கு, இரண்டாகப் பிரி.

diss'idence, *n.* இணக்கமின்மை, கருத்துவேறுபாடு.

diss'ident, *n.* நிலைபெற்ற திருச்சபையினின்று பிரிந்தவர், திருச்சபைக் கோட்பாட்டை ஏற்க ஒவ்வாதவர்; *a.* கருத்து வேறுபடுகிற; இணக்கமற்ற.

dissight', *n.* பார்க்க அருவருப்பான பொருள்.

dissim'ilar, *a.* ஒத்திராத, மாறுபட்ட; வேறுபாடுடைய.

dissimilar'ity, *n.* ஒத்திராமை, வேறுபாடு.

dissim'ilate, *v.* ஒவ்வாதிருக்கும்படி செய்; (மொழி.) ஒலி மாறுபடச்செய்.

dissimila'tion, *n.* இயையாமை; (உயி.) ஊன்மச் சிதைவு, உயிர்ச் சத்தழிவு.

dissim'ile, *n.* வேற்றுமையால் ஒப்பிடுதல்.

dissimil'itude, *n.* ஒப்பின்மை, வேற்றுமை.

dissim'ulate, *v.* பொய்யாக நடி, பாசாங்குசெய்; பாவனை செய்; மாய்மாலஞ்செய், உருட்டுப்புரட்டுச்செய்; உண்மையை மறை.

dissimula'tion, *n.* பாசாங்கு, கபடநாடகம், போலி நடிப்பு; கள்ள வேடம்; பொய்புரட்டுத்தனம்.

diss'ipate, *v.* சிதற அடி, கலை; தூள்தூளாக்கு, அழிவுசெய்; வீணுக்கு, வீண்செலவு செய், ஊக்கம் அழி, ஊற்றங்கெடு; சிறுசெயல்களில் ஈடுபடு, கீழ்த்தர இன்பத்தில் அழுந்தித் தன்னிலை கெடு; மறைவுறு; அழிவுறு.

diss'ipated, *a.* ஒழுக்கக்கேடான; குடிப்பழக்கமுடைய; கூடா ஒழுக்கமுடைய.

dissipa'tion, *n.* சிதறுதல்; கலைதல்; பரவிய நிலை; சிதறிய கவனம்; ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை; சிற்றின்பம்; அளவு மீறிப் பணத்தை அழிவுசெய்தல்; (தொ.) dissipation of energy, ஆற்றல் அழிவு, சக்தியைப் படிப்படியாக இழத்தல்.

diss'ipative, *a.* சிதறக்கூடிய; வீணுகிற; ஆற்றல் வீணுக அழிவதற்குரிய, சக்தி குலைக்கிற.

disso'ciable, *a.* பழகுந்தன்மை இல்லாத, அளவளாவற்ற; இணங்காத, ஒவ்வாத; இசைவுகேடான.

disso'cial, *a.* சமூகச்சார்பற்ற; தோழமை கொள்ளாத; சமூக ஒத்துணர்வற்ற.

disso'cialize, *v.* சமூகச் சார்பறச்செய்; பழக விரும்பாதபடி செய், ஒத்துணர்வகற்று, கூட்டுறவற்றதாக்கு.

disso'ciate, *v.* தொடர்பையறு; கூட்டுறவு பிரி; பிரிந்து போ; சேர்க்கையை விலக்கு; சேர்மானங்களில் கூட்டுச் சிதைவுறு; அகநிலையில் ஒருவர் உள்ளத்தில் இரண்டு உணர்வு மையங்கள் உண்டாகச் செய்.

dissocia'tion, *n.* தொடர்பறுத்தல்; தொடர்பறுந்த நிலை; (உள.) ஈருணர்வு மைய ஆக்கம்; கருத்துத்தொடர்பு நீக்கம்; குறிப்பிட்ட கருத்துக்களோ அவற்றோடு தொடர்புகொண்ட உணர்ச்சிகளோ தன்னறிவினின்று துண்டிக்கப்படல்; (வேதி.) சேர்மானச்சிதைவு.

disso'ciative, *a.* தொடர்பறும் போக்குடைய; பிரியும் இயல்புடைய; கட்டுச்சிதையும் தன்மைவாய்ந்த.

diss'oluble, *a.* கரையுமியல்புடைய; கூட்டாக்கம் சிதைந்து தனிக்கூறுகளாகப் பிரியும் தன்மைவாய்ந்த; பிணிப்பவிழ்க்கப்படத்தக்க.

diss'olute, *n.* ஒழுக்கங்கெட்டவர்; *a.* ஒழுக்கக்கேடான, நெறிதவறின, தீயொழுக்கமுள்ள.

diss'oluteness, *n.* ஒழுக்கக்கேடு, இழிந்தவாழ்க்கைப்போக்கு.

dissolu'tion, *n.* கரைவு; உருகுதல்; சேர்மான ஆக்கச் சிதைவு; பங்காண்மைக் கூட்டுப்பிரிவு; கட்டவிழ்வு; மண உறவு முறிப்பு; நேச உறவு கலைப்பு; அவைக்கலைப்பு, பொதுத் தேர்தலுக்கு முற்பட்ட சட்டமன்றக் கலைப்பு.

dissolv'able, *a.* கரைக்கத்தக்க; கரையக்கூடிய; கரையும் இயல்புடைய.

dissolve', *v.* கரையச்செய், கரை; பனிக்கட்டி வகையில் உருகச்செய், உருகு; நீரியலாக்கு, நீரியலாகு; நீர்பெருக்கு, நீரில் தோய்வுறு; கூட்டுச்சிதைவி; சேர்மானம் பிரிவுறு; அவையினைக்கலை; அவைகலைவுறு; தேய்ந்துமறை, படிப் படியாக மறை, மறைவுறு; முடிவுறு; தள்ளுபடி செய்; தளர்வுறச் செய்; தசைநார்கள் தளர்வுறவிடு.

dissolv'ent, *n.* கரைப்பான்; கரைக்கும் பொருள்; *a.* கரைக்கும் இயல்புடைய.

diss'onance, diss'onancy, *n.* ஒலிமுரண்பாடு; இசைகேடு, இசைமுரண்பாடு; முரண்பாடு, ஒவ்வாமை, பொருத்தக்கேடு.

diss'onant, *a.* கடுமுரண் ஒலியுடைய, இசையொவ்வாத; மாறுபட்டுள்ள; கரடுமுரடான; பொருந்தாத.

dissuade', *v.* எதிராக அறிவுரை கூறு; அறிவுரைமூலம் மனம் திருப்பு; கருத்தைமாற்று; தூண்டிச் செயல்மாற்று; எதிர் வாதிட்டுச் செயல்தடு; செயல்கடிந்துகொள், செயல் ஒப்புதலின்மை தெரிவி.

dissua'sive, *n.* மனத்தை மாற்றுவது; *a.* மனத்தை மாற்றத் தக்க; அறிவுரை மூலம் தடை செய்யத்தக்க.

dissyll'able, *n.* = disyllable.

dissymmet'rical, *a.* முற்றொப்பிசைவற்ற, எதிர்முக ஒப் பிசைவுடைய.

dissymm'etry, *n.* முற்றொப்பிசைவின்மை, எதிர்முக ஒப்பி சைவு, மெய்பொருந்தவைத்தால் பொருந்தாத இருபுறச் சீர் சமநிலை.

dis'taff, *n.* நூற்புக்கழி; நூற்புக்கதிர்; பெண்டிர்பணி; (தொ.) distaff side, குடும்பத்தின் பெண் கிளைவழி.

dis'tal, *a.* மையத்தினின்று மிகவும் விலகிய; இணைவாயி லிருந்து நெடிதகன்ற; நெடிதுவிலகிய; புறக்கோடியான; முனைகோடியான.

dis'tance, *n.* தொலைவு; தொலைவிடம்; தொலைக்காட்சி; ஓவியத்தில் தொலைக்காட்சிப்பகுதி; தொலைவளவு, தூரம்; இடைத்தொலைவு, இடைவெளித்தொலைவின் அளவு; நீண்ட கால அளவு; பழகாது ஒதுங்கிநடக்கும் பண்பு; பந்தய இடைப்போட்டிகளில் மேல்நடக்கும் பந்தயத்திற் கலப்பதற்கு உரிமையளிக்கும் எல்லையளவு தொலைவளவு; *v.* தூரத்தில் வை; காட்சித்தொலைவுணர்வு உண்டுபண்ணு; நெடுந் தொலை பிந்தவை, விஞ்சி முன்னேறு; (தொ.) keep one at a distance, நெருங்கிப் பழகவிடாமல் இரு; keep one's distance, நெருங்கிப் பழகாது விலகியிரு, ஒதுங்கியிரு.

dis'tanceless, *a.* மூடுபனிச்சூழலில் தூரப் பார்வைக்கு இட மில்லாத; படவகையில் தூர அளவுகாட்டும் வகைமுறை இல்லாத.

dis'tance-sig'nal, *n.* தொலைவிலிருந்தே காட்டப்படும் அடையாள அறிகுறி.

dis'tant, *a.* தொலைவான; தூரத்திலுள்ள; தொலைவள வுடைய; தூரமிகுதியான; தொலையளவு மிகுதியுடைய; இடைத்தொலைவு மிகுதியுடைய; நெடுங்காலத்துக்கு முற் பட்ட; நெடுங்காலங் கடந்த; மிகுதியான கால இடை யீடுடைய; உறவு வகையில் நெருக்கமில்லாத; நெருங்கிய ஒப்புமையற்ற; ஒப்புமை குறைந்த; உறவாடாது ஒதுங்கி நடக்கிற, நெருங்கிப்பழகாது விலகியிருக்கிற.

distaste', *n.* வெறுப்பு; விருப்பமின்மை; சுவையின்மை.

distaste'ful, *a.* சுவையற்ற; விருப்பமற்ற; வெறுப்பான.

distem'per [1], *n.* உடற்கேடு; மனக்கோளாறு; நோய்நிலை; நாய் நோய்; விலங்கின நோய்வகை; சிடுசிடுப்பு; அரசி யற் குழப்பநிலை; *v.* உடல்நலங்கெடு; மனக்கோளாறு உண்டுபண்ணு; முனை நலங்கெடு.

distem'per [2], *n.* உட்சுவர்களிற் சுண்ணப்பரப்பின்மீதும் நீற் றுப்பரப்பின் மீதும் முட்டைக்கருவுடன் கஞ்சிப்பசை கலந்து தீட்டப்படும் வண்ண ஓவியமுறை, பற்றேவியமுறை; *v.* பற்றேவிய முறையில் வண்ண ஓவியந்தீட்டு.

distem'pered, *a.* குழப்பமான; தாறுமாறான; மட்டமைதி யற்ற; சிடுசிடுப்பு வாய்ந்த.

distend', *v.* பரப்பி விரிவுறச்செய், உள்ளிருந்து பருக்கச் செய்; நீட்டு, பரப்பு; விரிவுறு, பரப்புறு, வீங்கு.

distensibil'ity, *n.* விரியும் இயல்பு, நீளும் இயல்பு.

disten'sible, *a.* நீட்டக்கூடிய; விரிக்கக்கூடிய.

disten'sile, *a.* நீட்டக்கூடிய; விரிக்கக்கூடிய; பருக்கு மியல்பினைத் தூண்டக்கூடிய.

disten'sion, disten'tion, *n.* விரிவுறுத்தல்; விரித்தல்; விரிதல்; விரிவு, பெரிதாகும் நிலை; விரியுமியல்பு; விரி வுற்ற நிலை.

dis'tich, *n.* ஈரடித்தொகுதி; ஈரடிச்செய்யுள், குறளடிப்பா; *pl.* distichs; *a.* (தாவ.) இரு வரிசைகள் கொண்ட, இரு வரிசையாகவுள்ள.

distil', *v.* வடித்திறக்கு, ஆவியாக்கிக் குளிரவைத்து நீர்ம மாகத் திரட்டியெடு; சாராய வகைகளை வடித்து உண்டு பண்ணு; வடிகலத்தைக் கையாளு; வடித்திறக்கப் பெறு; கூடேறி ஆவியாகுமியல்புடைய கலவைக்கூற்றினை ஆவியாகப் போகவிடு; சொட்டுச் சொட்டாக விழு; துளி துளியாக வெளியிடு; துளியாகக் கசிந்து வடி; மெல்ல வழிந்தோடு; திவலைகள் கசிந்து பரவவிடு.

dis'tillate, *n.* வடித்திறக்கப்பட்டபொருள், வடிநீர்மம்.

distilla'tion, *n.* வடித்திறக்கல்; வாலைவடித்தல்; சாராய வகை இறக்குதல்.

distill'atory, *a.* வாலைவடிப்பதற்கான; சாராய வடிப்புக் குரிய.

distill'er, *n.* வடித்திறக்குபவர்; சாராயவகை வடிப்பவர்.

distill'ery, *n.* வடிசாலை, வடிமனை, சாராயம் வடிக்கு மிடம்.

distinct', *a.* தெளிவாகத் தெரிகிற, எளிதில் விளங்குகிற, நன்கு வரையறைப்பட்ட; தனிவேறுபட்ட, தனித்த, வேறான, மாறுபட்ட பண்புகளையுடைய; மற்றொன்றுக்குக் கருதப்பட இடமற்ற, மயக்கத்துக்கு இடமற்ற, உறுதிப்பாடான.

distinc'tion, *n.* தனித்தன்மை, வேறுபாட்டுப்பண்பு; தனிச் சிறப்பியல்பு, தனிவேறுபாடு; தனிச்சிறப்பு, தனிமேம்பாடு, தனிமதிப்பு; முனைப்பான தனிப்பண்புக்கூறு; தனிச்சிறப்புக் குறி; மதிப்புச் சின்னம்; தனிச்சிறப்புப்பெயர்; சிறப்புப் பட்டம்; வேறுபாடு, வேறுபட்டநிலை; பிரிவு; பண்புமாறு பாடு; தனிச்சலுகை, தனி ஒருச்சார்பு.

distinct'ive, *a.* வேறுபாட்டைத் தெரிவிக்கிற, தனிமாதிரி யான; குறிப்பிடத்தக்க.

distingue, (பிர.) *a.* மேம்பட்ட தோற்றம்வாய்ந்த, சிறப்புக் குரிய கூறுடைய, மேதக்க நடையுடைய.

disting'uish, *v.* வேறுபடுத்திக் கண்டறி; கேட்டு அடை யாளம் கண்டுபிடி; அடையாளம் உணர்; வகை வேறுபாடு காண்; வேறுபாடு காட்டு, வேறுபடுத்திக்காட்டு; வகை வேறுபாடாயமை, பண்பு வேற்றுமையாகு; தனிக் குறி யாகத் திகழ், சிறப்படையாளமாக விளங்கு; மேம்படுத்திக் காட்டு, சிறப்புக்குரியவராக்கிக்கொள்.

disting'uishable, *a.* வேறு பிரித்தறியக்கூடிய.

disting'uished, *a.* புகழ்பெற்ற; சிறந்த; மேன்மைவாய்ந்த.

disting'uishing, *a.* தனிப்பட்ட; வழக்கத்திற்குமாறான; தனிச்சிறப்புடைய.

distort', *v.* உருவேறுபடுத்து, உருச்சிதை; வடிவு அலங் கோலமாக்கு; வளைமுகக்கண்ணுடி போன்றவற்றின் வகை யில் தோற்றத்தை அருவருப்பானதாக்கு; கருத்தினைப் புரட்டு, செய்திகளைத் திரித்துக்கூறு; நோக்க வகையில் மாறுட்டம் செய்; மெய்ம்மை திரித்துப் புரளிசெய்; தீவறான வழியில் செலுத்து.

distor'tion, *n.* உருத்திரிவு, வடிவச்சிதைவு; குலைவு, கோட் டம், கோணல்; நெறிபிறழ்வு; வானொலியிலும் தந்தியில் லாக் கம்பியிலும் அலைக்கோட்டங்களால் ஏற்படும் ஒலிக் கோளாறு.

distort'ive, *a.* உருத்திரிபை உண்டாக்குகிற ; கோணலாக்குகிற ; தவருன வழியிற் செலுத்துகிற.

distract', *v.* கவனத்தைத் திருப்பு ; வெவ்வேறு திசையில் எண்ணத்தை மாற்று ; உணர்வு குழப்பு, கலக்கமுண்டாக்கு ; தொல்லைகொடு, நச்சரிப்புச் செய், இடைவிடாத தொந்தரவு உண்டுபண்ணு ; பைத்தியமாக்கு.

distrac'tion, *n.* கவனமாற்றம் ; கவனமாற்றத்துக்குரிய செய்தி ; கருத்துமாற்றம், கவலைமாற்றம், ஒருதிசைக் கருத்துச் செறிவின் உளைவகற்றும் பிறிதுபோக்கு ; அழிவுப் பொழுதுபோக்கு ; இடைத்தடங்கல் ; மனஉலைவு, கருத்தொருமைக்கேடு ; மனக்கலக்கம், சித்தக் குழப்பம் ; மூளைக் குழப்பம், பைத்தியம்.

distract'ive, *a.* குழப்பமுண்டாக்குகிற ; தடுமாற்றம் விளைவிக்கிற ; திகைப்பூட்டுகிற.

distrain', *v.* கைப்பற்று, வாடகை அல்லது கடனுக்காக உடைமைகளைப் பறி.

distraint', *n.* கடனுக்காகப் பற்றீடு ; வாடகைக்காகக் கைப்பற்றுதல்.

distrait, (பிர.) *a.* கவனம் பிறிதான, தன்னை மறந்த நிலையுடைய.

distress', *n.* கடுந்துன்பம், வேதனை, வருத்தம் ; இக்கட்டு, இன்னல், வருத்தந்தரும் செய்தி ; இடையூறு, இடுக்கண், இடர்ப்பாடு ; பேரிழப்பு ; அவலநிலை, கையாறு, அருவாய்ப்புக் கேடு ; நிரப்பு, கொடுவறுமை ; சட்டப்படியான உடைமைக் கைப்பற்றீடு ; ஊக்கஅழிவு, கடுந்தளர்வு ; *v.* வேதனை கொடு ; துன்புறுத்து ; கடுந்துயரளி ; இடுக்கட்படுத்து ; பெருந் தொல்லை உண்டுபண்ணு ; சட்டப்படி உடைமை கைப்பற்று, நடவடிக்கை எடு.

distressed', *a.* இடுக்கட்பட்ட, இடர்ப்பட்ட, துயருக்காளான ; (தொ.) distressed area, பொது மீறிய அளவில் மிகக் கொடுமையான தொழிலில்லாமைக்கு உட்பட்ட பகுதி.

distrib'utable, *a.* பங்கிட்டளிக்கத்தக்க.

distrib'utary, *n.* ஆற்றின் பிரிகிளை, செல்கிளை ; பிரிநிலத் தொகுதியின் கூறு, பிரிகூறு ; *a.* பிரித்துக்கொடுக்கிற, பிரிந்து பரவுகிற.

distrib'ute, *v.* பகிர்ந்துகொடு ; பிரித்துப்பரப்பு, பல திசைப் படுத்து, சிதறடி ; கூறுகூருக்கு, வகைப்படுத்து, பிரித்து ஒழுங்குபட வை ; அச்சில் எழுத்துருக்களைப் பிரித்துத் தனித் தனி அறைகளிற் போடு, சிதைத்துப் பிரித்திடு ; (அள.) சுட்டுப்பொருளின் எல்லை முழுவதையும் தனித்தனிக் கூறு கூருகச் சென்று பரவிக் குறிக்கும்படி சொல்லை வழங்கு.

distribu'tion, *n.* பாத்தீடு, எங்கும் பரப்பி வழங்குதல் ; பங்கீடு, பகிர்ந்தளித்தல் ; பரப்பீடு, பரவலாகச் சிதறுதல் ; வகுத்தமைவு, வகைப்படுத்தி ஒழுங்கீடு செய்தல் ; பிரிப்பீடு, அச்சில் எழுத்துருக்களைச் சிதைத்துத் தனித்தனி அறைகளிற் பிரித்திடுதல் ; பரவற் பயனீடு, பயனீட்டாளர்களில் எல்லாத் தனிமனிதரும் வகையினரும் ஒருங்கே பங்கு கொள்ளும்படி செய்பொருள்களைப் பரப்பி வழங்கும் முறைமை ; சொல்லின் பரப்புறழ்வு வழக்கு ; (அள.) சுட்டும் எல்லை முழுதும் பொருள் சென்று கூறுகூருய்த் தனித்தனி பரவி உறழும் முறையிற் சொல்லை வழங்குதல் ; (தொ.) geographical distribution, விலங்கு செடி முதலியவற்றின் வகையில் நில உலகப் பரப்பெங்கும் சிதறிக்கிடக்கும் முறைமை.

distrib'utive, *n.* (இலக்.) தனியுறழ்வுச்சொல் ; குழுமுழுதும் பரவித் தனித்தனி குறிக்கிற சொல் ; *a.* பங்கிடுகிற ; பரவிப் பிரித்துக் காட்டுகிற ; தனித்தனி பரவிச் செல்கிற ; குழு முழுதும் பரவித் தனித்தனி குறிக்கிற.

dis'trict, *n.* மாவட்டம், ஜில்லா ; கோட்டம், நாட்டின் அரசியற் பிரிவு, மாகாணத்தின் பகுதி ; முறைமன்றத் துறைக்காகவோ கல்வித்துறைக்காகவோ பிற ஆட்சித் துறைகளுக்காகவோ வகுத்தமைக்கப்பட்ட நிலப்பிரிவு ; வட்டாரம், நகர்ப்புற வட்டகை ; தனித்திருக்கோயிலும் திருச்சபைப் பணி முதல்வரும் கொண்ட திருச்சபை வட்டகை ; திட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கிவிடப்பட்ட எல்லைப் பிரிவு ; பொது இயல்புகளையுடைய திணைவட்டாரம் ; *v.* மாவட்டங்களாகப் பிரி ; (தொ.) district council, மாவட்டக்கழகம், மந்தணம், கோட்டமன்றம்.

distrust', *n.* அவநம்பிக்கை ; ஐயம், ஐயப்பாடு ; *v.* அவநம்பிக்கை கொள் ; நம்பிக்கைகொள்ளத் தயங்கு ; ஐயுறவு கொள்.

distrust'ful, *a.* அவநம்பிக்கையுடைய ; ஐயப்பாடு செறிந்த ; ஐயுறுகிற ; ஐயுறும் இயல்புடைய.

disturb', *n.* கலைவு ; *v.* அமைதிகுலை, உலைவுசெய் ; இடையிட்டுத் தடு ; தொல்லைகொடு ; குழப்பு, கலக்கு ; கிளர்ச்சி செய்.

disturb'ance, *n.* குழப்பம், கலக்கம், தடுமாற்றம் ; கொந்தளிப்பு, கிளர்ச்சி ; அமளி, ஆரவாரம் ; தொடர்பு கலைவு, இடைத்தடை, இடையீடு ; அமைதிகுலைவு, உலைவு ; பூசல், சச்சரவு ; தொந்தரவு, தொல்லை ; உடைமை உரிமையில் தலையீடு.

disturb'ant, *n.* அமைதிகுலைப்பவர் ; அமைதி குலைப்பது ; *a.* அமைதி குலைக்கிற.

disun'ion, *n.* ஒற்றுமையின்மை ; பிரிவு ; பொருந்தாமை, இசைவுக்கேடு ; வேற்றுமை.

disunite', *v.* கூட்டிலிருந்து பிரி ; கூட்டுப்பிரி, பிரிவுசெய் ; ஒற்றுமை கெடு ; பிரிவுறு, பிளவுறு.

disu'nity, *n.* ஒற்றுமைக்கேடு, ஒற்றுமையின்மை.

disuse', *n.* வழக்கொழிவு ; வழங்காமை, வழக்காறின்மை ; பயனெழிவு, பயிலாமை ; *v.* வழங்காதொழி, வழக்கொழி.

disutil'ity, *n.* இடையூறு, தடங்கல், வாக்குப்போக்குக் கேடு.

disyll'able, *n.* ஈரசைச்சொல் ; ஈரசைச்சீர்.

ditch, *n.* குழி ; பள்ளம் ; அகழ் ; நீர்வடிகால் ; பந்தாடுஞ் சமநிலத்தின் கரை ; *v.* குழி அகழ், பள்ளம் தோண்டு ; அகழியைச் சீர்செய் ; வடிகாலைத் தூய்மையாக்கு ; சூழ அகழிடு ; வடிகாலிட்டு நீர் வடியவை ; வண்டி முதலிய வற்றின் வகையில் பள்ளத்தில் மாட்டிக் கொள்ளும்படிச் செய்.

ditch'er, *n.* குழிதோண்டுபவர் ; குழி தோண்டும் கருவி ; பள்ளத்தைத் தூய்மை செய்பவர் ; பள்ளத்தைத் தூய்மை செய்யும் இயந்திரம் ; அகழி செப்பனிடுபவர் ; அகழி செப்பனிடும் பொறி.

ditch'-water, *n.* சாக்கடைநீர் ; கட்டுக்கரை நீர்.

di'theism, *n.* கடவுளர் இருமைக் கோட்பாடு ; சமய இருமைக் கோட்பாடு, நன்மை தீமையாற்றல்கள் இரு வேருகக் கொள்ளும் கோட்பாடு.

dith'er, *n.* நடுங்குநிலை, நடுக்கம் ; நடுக்குவாத வலிப்பு ; உணர்ச்சியார்வம், பரபரப்பு ; துடிதுடிப்பு, மனக் கலக்கம் ; *v.* நடுங்கு, துடிதுடி ; குழப்பமடை, தயங்கு, தடுமாறு.

dith'yramb, *n.* பாக்கஸ் (Bacchus) என்ற கிரேக்கக் கடவுளுக்குரிய துதிப்பாடல் ; கொந்தளிக்கும் களியாட்டப் பாடல் ; ஆரவாரப் புகழ்ப்பாசுரம், தேவபாணி வகை.

dithyram'bic, *n.* ஆரவாரப் புகழ்ப்பாசுரம் ; *a.* பாக்கஸ் (Bacchus) என்ற கடவுளின் பெருமையினைக் கூறும் கிரேக்க துதிப் பாடலைப் போன்ற ; கழிமகிழ்வுடைய ; துதிப்பாடலுக்குரிய ; இசை ஆரவாரமான.

ditt'any, *n.* நெடி பரப்பும் இலைகளுடன் ஆவி நெய் அளிக்கும் பூண்டுவகை, நாரத்தை இனச் செடிவகை.

ditt'o, *n.* (சு. வ : do.) மேற்படி, மேலே கூறப்பட்ட அதே செய்தி ; முன் குறிப்பிட்ட அதேசொல் ; எதிர்மடியான பொருள், மறுபடிவம் ; *a.* மேற்படியான, மேற்குறித்த, முன் குறிப்பிட்ட, முன் குறிப்பிட்டதே போன்ற ; ஒரே வகைப்பட்ட, ஒரே மாதிரியான ; *v.* இருமடியாக்கு, படி இரட்டுறுத்து ; *adv.* முன் போலவே, மேலே கூறியபடியே ; அப்படியே, அதுவே.

dittog'raphy, *n.* எழுத்துப்படியெடுக்கும்போது தற்செயலாக ஏற்படும் பிழைபட்ட இரட்டுறு பக்ர்ப்பு.

ditt'os, *n.* ditto என்பதன் பன்மை.

ditt'y, *n.* பாட்டு, சிறுபாட்ல்; ஒ. சொற்கள் இணைத்துப் பாடலமை.

ditt'y-bag, **ditt'y-box**, *n.* கடலோடிகளும் மீன் படவர்களும் துண்டுத்துணுக்குப் பொருள்கள் வைத்துக்கொள்ளும் பை.

diure'sis, *n.* சிறுநீர்ப்போக்கு; மிகு சிறுநீர்ப்போக்குக் கோளாறு.

diuret'ic, *n.* சிறுநீர்க் கழிவினைத் தூண்டும் மருந்துச்சரக்கு; *a.* சிறுநீர்க் கழிவினைத் தூண்டுகிற.

diurn'al, *n.* நாட்குறிப்பேடு; நாள் வழிபாட்டு வேளைக் குறிப்பு; *a.* நாண்முறையான; நாளுக்குரிய, நாளினுள் செய்யப்படுகிற; (வான்.) ஒரு நாளளவில் இயங்குகிற, நாளியக்கமுடைய; பகலுக்குரிய.

div, *n.* பாரசிகப் புராணகதை மரபுக்குரிய கெட்ட ஆவி, பேய்த்தெய்வம்.

di'va, *n.* பேர் சான்ற பாடகி; இசை நாடகத்தில் தலைமை நடிகை.

di'vagate, ஒ. சுற்றித்திரி, வழிவிலகி அலை.

div'alent, *n.* ஈரிணைதிறத் தனிமம், இரண்டு நீரக அணுக்களுடனே அவற்றிற்குச் சரியாக இரு திறங்களுடனே இணையும் ஆற்றலுடைய தனிமம் அல்லது அணு; இணைதிறமுடைய இருதிற உருப்படிவங்களையுடைய தனிமம்; *a.* ஈரிணை திறமுடைய; இரண்டு நீரக அணுக்களுடனே இணையும் ஆற்றலுடைய; இணைதிற முடைய இருதிற உருவப்படிவங்கள் வாய்ந்த.

divan', (பெர்.) *n.* உயர் அரசியல்மன்றம்; துருக்கிய அரசியல் மன்றம்; நீதிமன்றம்; பேரவை; மெத்தை வைத்த நீள் இருக்கை உடைய கொலுமண்டபம்; மெத்தை வைத்த நீண்ட இருக்கை; சுவரோரச் சாய்விருக்கை; படுக்கையாகவும் இருக்கையாகவும் பயன்படும் பூந்தவிசிருக்கை; பாடல் திரட்டேடு; புகை குடிக்கும் அறை; புகைச் சுருள் விற்பனைக் கடை; கிழ்த்திசை முதலமைச்சர், கிழ்நாட்டுக் கருவூல அமைச்சர்.

diva'ricate, *a.* பெரிதும் விலகிச் செல்கிற, கவர்வழியான; ஒ. பிரிந்துசெல், கிளைத்துச்செல், கவர்ப்படு; விலகிச் செல், வேறுபட்டுச் செல்.

dive, *n.* முக்குளிப்பு, நீரில் தலைகீழாகப் பாய்ந்து மூழ்குதல்; தலைகீழ்ப்பாய்வு, கழுருப்பாய்ச்சல்; தலைகீழ் வீழ்ச்சி, தலைகீழ்ச்சரிவு; புகலிடம்; சுருங்கை, அடிநிலப்பாதை; ஒ. முக்குளி, நீரில் தலைகீழாகப் பாய்; மூழ்கு; விமான வகையில் காற்றுவெளியில் தலைகுப்புறப் பாய்ந்திறங்கு; நீர்மூழ்கி வகையில் நீரில் அமிழ்; முழுகி மறை, அமிழ்ந்து மறைவுறு; திடீரெனக் காட்சியிலிருந்து மறை; நீரில் கையினை அமுக்கு; பையினுள் கை நுழையவிடு; ஆழ்ந்துசெல்; காடு முதலிய வற்றின் பரப்பில் உள் ஊடுருவிச்செல்; ஆழ்ந்தாராய்; முழுதும் தோய்ந்து ஈடுபடு.

dive'-bomber, *n.* வெடிகுண்டு வீசும் கழுகுப்பாய்வு விமானம், தலைகீழாகச் செங்குத்துப் பாய்ச்சலின்போதே குண்டு விடுத்து மேலெழும் தாக்குதல் வானூர்தி.

div'er, *n.* முக்குளிப்பவர்; நீரில் முக்குளிக்கும் ஆற்றல் உடையவர்; ஆழ்கடற் குளிப்பாளர்; முத்துக்குளிப்பவர்; நீர்மூழ்கிக் கூண்டினுளிருந்து வேலை செய்யும் ஆழ்கடற் பணியாளர்; நீர்மூழ்கிக் கவசமணிந்து வேலை செய்யும் கீடலடிப் பணியாளர்; மூழ்கிய கப்பல்களைச் சென்றுய்பவர்; நீர்மூழ்கிப் பறவை.

diverge', ஒ. விலகிச்செல்; இருவேறுபட்டுச் செல்; பிரிந்து செல்; வெவ்வேறு திசைகளில் இயங்கு; வழிதிறம்பு; பொது நிலையில் வேறுபடு; தம்முள் வேற்றுமைப்படு; திசை திருப்பு.

div'ers, *a.* சில்லறைப்பட்ட; சிலபல; எவையோ சில.

diverse', *a.* தம்முள் மாறுபட்ட தன்மையுடைய; பல்வேறு வகைப்பட்ட.

diverse'ly, *adv.* பல்வேறு வழிகளில்; வெவ்வேருன வகையில்.

divers'ify, ஒ. பல்வகைப்படுத்து; ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மையுடையதாக்கு.

diver'sion, *n.* வேறுவழிச் செலுத்துதல்; கருத்துத் திருப்பம்; மாற்றுக்கவர்ச்சி; பொழுதுபோக்கு, விளையாட்டு, வேடிக்கை; போக்குமாற்றம், திசைமாற்றம்; கவனத்தை வேறுவழியில் திருப்புதல்; போக்குக் காட்டி ஏய்ப்பு, மாறுட்டச் சூழ்ச்சி; பாதை பழுதுபட்ட இடத்தில் சுற்றிச் செல்லும் வழி, மாற்றுவளை நெறி.

diver'sionist, *n.* ஏற்றுக்கொள்ளப்பட்ட நேர்படிக் கோட்பாட்டிலிருந்து மாறுபடும் பொதுவுடைமையாளர்.

divers'ity, *n.* ஒத்தியையாமை, மாறுபாடு, வேற்றுமை; பல்வகைமை.

divert', ஒ. வேறுவழியிற் செலுத்து; போக்குமாற்று, நெறிமாற்று, திசைமாற்று; கவனத்தை வேறு வழியில் திருப்பு; கருத்தாழ்வு தளர்த்து, மனச்செறிவு மாற்று, போக்குக் காட்டு, பராக்குக் காட்டு; பொழுதுபோக்காக மகிழ்செய்.

divertissement, (பிர.) *n.* நாடகக் காட்சிகளுக்கிடையே காட்டப்படும் சிறிய குழுநடனக்காட்சி.

Div'es, *n.* பெருஞ்செல்வர், பணக்காரர்; பகட்டு வாழ்வு வாழ்பவர்.

di'vest, ஒ. ஆடையகற்று; களை, உரி, நீக்கு.

divide' [1], *n.* நீர்ப்படுகை; இடைவரம்பு.

divide' [2], ஒ. பிரிவுறு; பிரிவினைக்கு இடங்கொடு; பிளவுறு; கூறுபடு; வகைப்படு; வேறுபடு; பகுதிகளாகப் பிரி; பிரித்து வரம்புகோலு; பகு, இருபாகமாகப் பிள; கூறுபடுத்து; வகைப்படுத்து; வகுத்துணர், வகைப்படுத்திக் காண்; துண்டுபடுத்து; வேறுபடுத்து; வேறுபடுத்திக் காட்டு; முரண்பாடு உண்டுபண்ணு; பங்கிடு; பங்கீடு செய்; உடன்பங்கு கொள்; எண்வகையில் ஈவுசெய்; தலை எண்ணைக் கிளை எண்ணால் வகு; மாமன்ற வாக்கெடுப்பு வகையிற் பிரிவீடுசெய்; வாக்கெடுப்பிற் பிரிவுறு; (இசை.) கூறுபாடு காட்டிப் பகட்டாகப் பாடு.

div'idend, *n.* வகுக்கப்படும் எண்; தவணைப்பங்கு; வட்டியாக வரும் பகுதி; ஆதாயப் பங்கு; தொடித்த செல்வ நிலையத்திலிருந்து கடன்வழங்கியவர்கள் பெறும் பங்கு; ஆதாயத்தில் ஒருவர்க்குரிய பங்குவீதம்; (தொ.) declare a dividend, பங்குதாரர்களுக்கு வணிக நிறுவனம் அளிக்கவிருக்கும் நூற்றுவீதத்தை அறிவி.

div'idend-warr'ant, *n.* ஆதாயப்பங்கு பெறுதற்குரிய உரிமைச் சான்றுச்சீட்டு.

divid'er, *n.* பிரிப்பவர்; பிரிப்பது; பங்கீட்டாளர்; வகுப்பது; கணக்கியலிலும் தச்சிலும் வழங்கும் கவைமுள் கருவி, கவராயம்.

div'i-div'i, *n.* சுமிக்கிக்காய், தோல்பதனிடுவதற்கும் சாயமிடுவதற்கும் பயன்படும் கொன்றைக் குடும்பச் செடியின் வளைந்த காய்நெற்று; சுமிக்கி மரம்.

divid'ual, *a.* பகுக்கக்கூடிய; பிரிக்கக்கூடிய.

divina'tion, *n.* குறிகூறல்; முன்னுணர்தல்; மறைவுணர்தல்; வருவது கூறுதல்; நல்லூகம்.

div'inator, *n.* நிமித்திகன், யூகி, குறிகூறுபவன்; வருவதுரைப்போன்.

divine', *n.* இறைமையியல் வல்லுநர்; சமயத்துறை அறிஞர்; *a.* திப்பியமான; தெய்வத்தன்மை வாய்ந்த; கடவுளிடமிருந்து வருகிற; தெய்வத்துக்குரிய; புனிதமான; உயர்வு சிறந்த; ஒ. தெய்வங்கூறு; தெய்விக ஆற்றலால் முன்கூட்டி உணர்; உள்ளாற்றலால் முன்னறி; மந்திர ஆற்றலால் முன்னதாகக் காண்; முன்னறிந்து கூறு; முன்னுணர்வு பயில்.

div'ing, *n.* முழுகுதல் ; முக்குளித்தல் ; *a.* முழுகுகிற ; முக்குளிக்கிற.

div'ing-bell, *n.* மூழ்கு கூண்டு, ஆழநீர்நிலையில் ஆளை வைத்து அனுப்பத்தக்க வாய்ப்பிசைவுகளையுடைய மணியுருவ அமைவு.

divin'ing-rod, *n.* அடிநில நீர் உலோக வளங்களைக் கண்டு பிடிக்க உதவுவதாகக் கருதப்படுங் கோல்.

divin'ity, *n.* தெய்வத்தன்மை ; கடவுள் ; தேவதை, தெய்வம் ; தெய்வத்தன்மை வாய்ந்தவர் ; பூசிக்கத் தக்கவர் ; இறைமையியல் ; பல்கலைக்கழகத்தின் இறைமையியல் ஆய்வுத்துறை.

div'inize, *v.* தெய்வமாக எண்ணு, கடவுள் ஆற்றலுடையதாகக் கருது.

divisibil'ity, *n.* பிரிக்கப்படுந் தன்மை ; பிரித்துணரப்படும் தன்மை ; (கண.) மீதியில்லாமல் வகுபடும் நிலை.

divis'ible, *a.* பகுக்கக்கூடிய ; பிரித்துணரவல்ல ; எண் வகையில் மற்றெரேண்ணினால் மீதமின்றி வகுபடக்கூடிய.

divi'sion, *n.* பிரித்தல் ; பிரிவு ; பிரிக்கப்பட்ட நிலை ; பிரிவினை ; ஒற்றுமைக்கேடு, உட்பிளவு, வேற்றுமை ; பங்கிடுதல் ; பங்கீடு ; பங்கு, பாகம் ; பாகுபாடு, கூறுபாடு ; பகுதி, கூறு ; வகைப்படுத்தல் ; வகை ; இனப்பிரிவு, கிளை, துறை ; படைப்பிரிவு ; நாட்டுப் பிரிவு, மண்டலம், வட்டாரத் தொகுதி ; சட்ட மாமன்றத்துக்குரிய தேர்தல் தொகுதி ; தர வகுப்பு ; வகுப்புப்படி ; இடையெல்லை, இடைவரம்பு ; இடைவேலி ; இடைத்தட்டி ; வாக்கறிவிப்புக்காகச் சட்ட மாமன்றத்தில் மன்றத்தினர் இரண்டாகப் பிரிதல், மாமன்றப் பிரிவீடு ; (கண.) எண்ணை மற்றொரு எண்ணால் வகுத்தல் ; வகுத்தல்முறை ; (தொ.) division of labour, உழைப்புப் பங்கீடு, வெவ்வேறு தொழில்களை வெவ்வேறு ஆட்களுக்குப் பகுக்கும் முறை.

divis'or, *n.* (கண.) வகுக்குமெண் ; வகுக்கப்படும் எண்ணில் மீதமின்றி வகுக்குமெண்.

divorce', *n.* சட்டப்படியான மணவிலக்கு, விவாக ரத்து ; பிரிவினை, பிளவீடு ; *v.* திருமண விலக்குச் செய் ; இணைப்பையறு ; மண விலக்குச் செய்து பிரி ; தள்ளிவை, விலக்கு ; மண உறவினைத் தள்ளுபடிசெய் ; இணைபிரி, தொடர்பறு, நீக்கு.

divorcee', *n.* திருமணவிலக்குக்கு ஆளானவர்.

divorce'ment, *n.* திருமணவிலக்கு ; பிரிவினை, பிளவு.

div'ot, *n.* குழிப்பந்தாட்டத்தில் ஒரே பந்து வீச்சில் அகழ்ந் தெறியப்பட்ட புல்கரண்.

divulge', *v.* மறைவெளியிடு, பலரறியக் கூறு.

dixi'e, dix'y, *n.* படைத்துறைச் சமையற்கலம்.

dizz'iness, *n.* கிறுகிறுப்பு, மயக்கம், தலைசுற்றல்.

dizz'y, *a.* தலைசுற்றுகிற ; மயக்கமான ; குழம்பிய ; தலை சுற்றலுண்டாக்குகிற : *v.* தலைமயக்கமுண்டாக்கு ; குழப்பு.

djibb'ah, (அரா.) *n.* ஜிப்பா.

do[1], *n.* (இசை.) கேள்வித்தானத்தின் அடிச்சுரம், முதற்சுரம்.

do[2], *n.*,*a.* ditto என்பதன் சு-வ.

do[3], *v.* செய் ; செயல்துறைகள் வகையில் செயல்புரி ; முனைந்து செயலாற்று ; விரைந்து செயல்செய், சுறுசுறுப்பாயிரு ; உழை, தொழிலாற்று, முயற்சிசெய் ; செய்துமுடி ; முடிவுறுத்து ; ஆக்கு, பழுதுபார்க்கும் பணிதீர் ; நடத்து, பிறர் வகையில் நடந்துகொள் ; நட, ஒழுகு, நடைமேற்கொள் ; நடிப்புப்பகுதியை நடி ; முன்னேற்பாடு செய் ; சமை ; வேகவை, பொரி ; கட்டு, ஒழுங்குபடுத்து ; அளி, வழங்கு ; அமை, போதியதாயிரு ; தக்கதாயிரு, சூழலுக்குப் பொருந்து ; நோக்கத்துக்குப் பயன்படு ; வாழ், ஆக்கநலங்கள் பெறு ; நல்வாழ்வு பெறு ; பயணத்தில் தொலைவு கழி ; சிறையில் நாட்கழி ; சுற்றிச்சென்று காண் ; (தொ.) be done, முடிவுறு ; முடிவாகு ; do away with, அழி, ஒழி, நீக்கு ; do brown, பொன்னிறமாக வறு, கோதுமை நிறமாகப் பொரி ; do by, பாங்கில் நின்று நடத்து, ஒருவரிடம் நடந்துகொள் ; do down, அடக்கு, கீழ்ப்படுத்து ; do in, (பே-வ.) அழி, கொலைசெய் ; do over, திரும்பச்செய் ; வண்ணவகையில் மறுபடியும் தீட்டு ; do to death, கொலைசெய் ; do up, கட்டு, சிப்பத்தைப் பொதிந்து கட்டு ; ஒழுங்காக்கு, சீர்செய் ; ஒப்பனைசெய் ; சணலிழை கோது ; மீட்டும் சரிசெய் ; திருத்து ; சோர்வூட்டு, முற்றிலும் களைப்புறச்செய் ; do with, பயன்படுத்து ; பொறுத்துக்கொண்டு செல் ; தலையிடு ; do without, இல்லாது கழி ; தவிர்த்துவாழ் ; நீக்கியிரு ; சாராதியங்கு ; have done, முடி ; நிறுத்து ; have to do with தொடர்பு ஏதேனும் கொண்டிரு ; what's to do, என்ன செய்தி ?

do'ab, *n.* இடைத்துறைநிலம், கங்கை யமுனைக்கு இடைப்பட்ட நிலம்.

do'able, *a.* செய்யக்கூடிய.

do'-all, *n.* பலதிற வேலையாள்.

doat, *v.* = dote.

dobb'in, *n.* பண்ணைவேலை செய்யுங்குதிரை ; வண்டி இழுக்குங் குதிரை.

doce'tism, *n.* இயேசுநாதர் திருமேனி தசையுடலன்று என்றும் நுண்ணியலாக்கமுடையதென்றும் கொண்ட 2-ஆம் நூற்றாண்டுக்குரிய சமய முரண்பாட்டுக் கோட்பாடு.

doce'tist, *n.* இயேசுநாதர் திருமேனி நுண்ணியலாக்க முடையதென்று கொண்ட 2-ஆம் நூற்றாண்டுக்குரிய முரண் கிளைக் கிறித்தவ சமயத்தவர்.

doch'-an-do'rach, doch'-an-do'ris, *n.* புறப்படுமுன் குதிரைவீரன் குடிக்கும் இன்தேறல் ; பிரிவு நேர மதுக்கலம்.

doch'miac, *a.* ஒன்றும் நான்கும் குறிலாகவுள்ள ஐந்தசைச் சீர்களையுடைய.

doch'miacs, *n.* ஒன்றும் நான்கும் குறிலான ஐந்தசைச் சீர்களைக் கொண்ட அடிகள்.

do'cile, *a.* எளிதில் பயிற்றுவிக்கத்தக்க ; கற்கும் ஆர்வமிக்க ; பணிவிணக்கமுள்ள ; எளிதில் வசப்படுத்தத்தக்க ; வசப்படுத்தி நடத்தத்தக்க.

dock[1], *n.* முரட்டுக் களைப்பூண்டு வகை.

dock[2], *n.* வாலடி, வாலின் தசைப்பற்றுடைய பகுதி ; தறிக்கப்பட்ட வால் ; *v.* குறுகத்தறி ; வாலைத்தறி ; மயிரைக் கட்டையாக வெட்டு ; குறுக்கு ; உடைமை வெட்டிக்குறை ; கட்டுப்படுத்து ; ஆற்றல்குறை ; வளங்குறைபடுத்து.

dock[3], *n.* செயற்கைத்துறைமுகம், கப்பல் வந்தொதுங்கி நின்று சரக்கேற்றவும் இறக்கவும் பழுதுபார்க்கவும் வாய்ப்பாக அமைந்த மதகுடைக் கலத்துறை ; நாவாய்க்குறடு, இரேவு, சரக்கேற்றி இறக்கும் மேடை ; கடற்பாலம் ; இருப்புப்பாதை முடிவிடமேடை ; *v.* கப்பல்துறைக்குக் கொண்டு செல் ; கப்பல்துறையில் புகு ; கப்பல்துறைகள் வாய்ப்பமை ; கட்டுதுறையில் விடு.

dock[4], *n.* குற்றமுறைமன்றத்தில் கைதிக்கூண்டு ; குற்றஞ் சாட்டப்பட்டவர் கூண்டு ; (தொ.) dock brief, ஏழைக் கைதிக்காகக் காசின்றி வாதாடத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குரைஞரின் வழக்குவாதம்.

dock'age, *n.* கடற்றுறைகளில் கப்பல்கள் தங்குவதற்கு அளிக்கப்படும் இடவாய்ப்பு ; கடற்றுறைக் கட்டணம்.

dock'-dues, *n.* கப்பல்துறைக் கட்டணம்.

dock'er, *n.* கப்பல்துறையில் வேலைசெய்பவர்.

dook'et, *n.* சுருக்கக்குறிப்பு ; உள்ளடக்க அறிவிப்புச்சிட்டை ; முகப்புச்சீட்டு ; வழக்குப்பதிவுப்பட்டியல் ஏடு ; நீதிமன்றத் தீர்ப்புக்களின் பதிவுப்புத்தகம் ; சுங்கக் கட்டணப் பற்றுச்சீட்டு ; சரக்கைத்திருப்பிப் பெறுவதற்குரிய பஞ்சு இருப்பு விற்பனைக் களத்தின் பற்றுச்சீட்டு ; கட்டுப்பாடுள்ள அல்லது அருகலான சரக்குகளை வாங்குவதற்குரிய உரிமைச்சீட்டு ; பொருள் வாங்குவதற்குரிய பணித்துறை அதிகாரச்சீட்டு ; *v.* பதிவேட்டிற் பதிவுசெய் ; உள்ளடக்கம் மேற்குறிப்பிடு ; தலைப்புச்சுருக்கக் குறிப்பிடு.

dock'-glass, *n.* இன்தேறல் சுவைக்கப் பயன்படுத்தப்பெறும் பெரிய கண்ணுடிக்கோப்பை.

dock'-master, *n.* கப்பல்துறையக மேற்பார்வையாளர்.

docks, *n.* இரேவுகள் அலுவலகங்கள் அடங்கிய கப்பல்துறை வரிசை.

dock'-tailed, *a.* வெட்டப்பட்ட வாலுடைய.

dock'yard, *n.* கப்பல் கட்டல் பழுதுபார்த்தல் சாதனங்க ளடங்கிய கப்பல்துறையகம்.

doc'tor, *n.* மருத்துவர்; முனைவர், பல்கலைக்கழகத்தின் கலைத் துறை ஒன்றில் மிக உயர்ந்த பட்டம் பெற்ற அறிஞர்; இறைமை நூல் துறைபோன அறிஞர்; திருச்சபைச் சட்ட வல்லுநர்; திருச்சபையில் அறிவார்ந்த திருத்தந்தையார்; பழுதுபார்ப்பவர்; குளிரிளக்தென்றல்; கப்பற் சமையற் காரர்; செய்தொழிற் கோளாறுகளை அகற்றும் அமைவு முறை; கலப்படச்சரக்கு; பழுப்புநிற மதுவகை; போலி ரூபாய்; கடல்மீன்வகை; போலித்தூண்டில் ஈ; *v.* முனை வர் பட்டமளி; முனைவர் பட்டமிட்டழை; மருத்துவம் செய், பண்டுவம் பார்; மருத்துவராகப் பணிசெய்; இயந்திரக் கருவிகளைச் சீர்ப்படுத்து; ஒட்ட வை; கலப்படம்செய், போலியாக்கு; (தொ.) Doctor's Commons, இங்கிலாந்தின் முற்காலப் போர்த்துறை சாராச் சட்ட அறிஞர்களின் கல்லூரிக் கூடம், சட்ட அறிஞர் கல்லூரிக்கூட மேசை; doctor's stuff மருந்து.

doc'torate, *n.* பேரறிஞர் பட்டம், முனைவர்பட்டம்; *v.* பேரறிஞர் பட்டம் வழங்கு.

doc'tors, *n. pl.* உள் ஏடையிட்ட பகடை.

doctrinaire', *n.* வளைவுநெகிழ்வற்ற கோட்பாட்டுக் கண்டிப் பாளர், கால இடச் சூழல்களைக் கவனிக்காமல் வறட்டுக் கோட்பாட்டையே பற்றி நிற்பவர்; *a.* செயல்முறைக்கு ஒவ் வாத கோட்பாடுடைய, வளைவு நெகிழ்வின்றிக் கொள்கைப் பிடிமுரண்டுடைய.

doctrinair'ism, *n.* குருட்டுக் கோட்பாட்டுப் போக்கு.

doc'trinal, *a.* கொள்கைச் சார்புடைய, கொள்கையை விளக்குகிற.

doctrinar'ian, *n.*, *a.*=doctrinaire.

doctrinar'ianism, *n.*=doctrinairism.

doc'trine, *n.* கோட்பாடு, வகுத்தமைத்த கொள்கை விளக்கம்; போதனைத் தொகுப்பு; சித்தாந்தம், சமயமுடிபு விளக்கக் கோட்பாடு; அறிவியல் விளக்க இணைப்புக் கோட்பாடு; அரசியல் தத்துவக்கோட்பாடு.

doc'ument, *n.* ஆவணம், பத்திரம்; ஆதாரமூலம், ஆதாரச் சான்று; *v.* பத்திர ஆதாரம் வழங்கு; ஆதாரமூலம் காட்டு; ஆதார மூலமாக எண்பி.

documen'tary, *n.* புனையாமெய்விளக்கத் திரைப்படம், இடையிடைப்பட்ட விளக்கவுரைகளுடன் இயல்நூலையோ பழமையாய்வையோ தொழில்துறையையோ பயணத்தையோ பற்றிய மெய்ந் நிகழ்ச்சிகளை மட்டும் கலப்பின்றிக் காட்டும் இயக்கப்படம்; *a.* ஆவணம் சார்ந்த; பத்திரங்களில் காணப்படுகிற; பத்திர ஆதாரமுடைய; மெய்ந்நிகழ்வு காட்டும் நோக்குடைய.

documenta'tion, *n.* ஆவணச்சான்று வழக்காட்சி, பத்திர மேற்கோளாட்சி; மெய்யான எழுத்தாதார வடிவிலமைந்த புனை கதை.

dodd'er, *v.* நொய்மையால் நடுங்கு, பதறு, வாதத்தினால் நடுக்குறு, தலையசை.

dodd'ered, *a.* உச்சி இழந்த, கிளைகளை இழந்த.

dodec'agon, *n.* பன்னிரு கோணங்களும் பக்கங்களும் உடைய மட்டத்தளமான வடிவம்.

dodecahe'dron, *n.* பன்னிரண்டு முகப்புடைய பிழம்புரு.

dodecasyll'able, *n.* பன்னிரண்டு அசைகள் கொண்ட அடி.

dodge, *n.* அடியின் வீச்சினிருந்து பக்கவாட்டில் விலகித் தப்புதல்; ஏய்ப்பு; காலம் கடத்தும் சூழ்ச்சி; சூழ்ச்சித்திறம், உபாயம்; சொற்புரட்டு; மணி ஓசைப் பிறழ்ச்சி; (பே-வ.) சொற்பொறி; சூழ்ச்சிப்பொறி; *v.* வெட்டி விலகு; தட்டிக் கழி, போக்குக்காட்டு; தட்டுமறி, விளையாட்டுக்காட்டு; சூழ்ச்சிசெய்து ஏமாற்று, ஏய்; காலங்கடத்து; சொற்புரட்டுச் செய், ஏய்த்துப் பசப்பு.

dodg'er, *n.* ஏமாற்றுபவர்; (பே-வ.) நீர்த்திவலைகள் படாமல் காக்கும் கப்பற் பாலத் தட்டி.

do'do, *n.* வான்கோழி அளவுள்ள பறக்க இயலாத அருவருப் பான தோற்றமுடைய மரபழிந்துபோன மோரிஸ் (Mauritius) தீவுகளுக்குரிய பெரிய பறவை; *pl.* do'dos, do'does.

doe, *n.* பெண்மான்; பெண்முயல்.

do'er, *n.* செய்பவர், வழக்கமாகச் செய்பவர்; செயல்முதல்வர், செயல்முதல்.

does, *v.* do என்பதன் நிகழ்கால ஒருமை வினைவடிவம்.

doe'-skin, *n.* பெண்மான் தோல்; நெருக்கமாக நெய்யப் பட்ட வழவழப்பான கம்பளி ஆடை.

doff, *v.* தொப்பி ஆடை முதலியவற்றைக் கழற்று; அகற்று.

dog, *n.* நாய்; காட்டுநாய்; வேட்டைநாய்; ஆண் நாய்; பயனற்றவன், போக்கிரி, வீணன்; வெறுப்புக்குரியவர், புறக் கணிப்புக்குரியவர்; வான்மீன் குழுவில் பெருநாய் மண்டலம்; அழல்மீன், பெருநாய் மண்டலத்தின் தலைமை விண்மீன்; சிறு நாய் மண்டலத்தின் தலைமை விண்மீன்; இடுக்கு குறடு; கட்டைக் கொளுவி, வெட்டு மரங்களை இணைத்துப்பிடிக்கும் பகர வடிவ வளையிருப்பாணி; விறகுக்கட்டை அணைகோல்; துப்பாக்கியின் குதிரை; மீன்வகை; *v.* நாய்போல் விடாது தொடர், பற்றித்தொடர்; தடங்கண்டு தொடர்ந்து இடை விடாது விழிப்பாகக் கவனி; நாய்களைக் கொண்டு வேட்டை யாடு; இடுக்கு குறட்டினால் பற்றிப்பிடி; (தொ.) die a dog's death, die like a dog, இரங்கத்தக்க நிலையில் இறந்துபோ, வெட்கங்கெட்ட சாவு பெறு; dog in the manger, தனக்குப் பயன்படாதது பிறருக்கும் பயன்பட மறுப் பவர்; give dog ill name and hang him, கெடுபேரிட்டுஅழி; go to the dogs, பாழாய்ப்போ, ஒழி; lead a dog's life, தொல்லைகள் நிரம்பிய வாழ்க்கை வாழ்; lead one a dog's life, நாயாய்ப்படுத்து; let sleeping dogs lie, சும்மாயிருப் பதைக் கிளறிவிடாமல் அப்படியே இருக்கவிடு; not a dog's chance, சிறுவாய்ப்புக்கூட இன்றி; throw to the dogs, give to the dogs, send to the dogs, வீசியெறி, கைவிடு, புறக்கணி.

dog'ate, *n.* முற்கால வெனிஸ் (Venice) ஜெனோவா (Genoa) நகரக் குடியரசுகளின் தலைவர் பணிமனை.

dog'bane, *n.* நாய்களைக் கொல்லும் நச்சுச்செடி வகை.

dog'-bee, *n.* ஆண்தேனீ; சோம்பேறித்தேனீ.

dog'-belt, *n.* பிடித்து இழுப்பதற்குரிய நாயின் இடுப்புப் பட்டைத் தோல்வார்.

dog'berry[1], *n.* இலையுதிர்காலத்தில் தண்டும் இலையும் சிவப் பாக மாறுகின்ற சிறுமர வகை; ஊதா நிறப் பழவகை.

Dog'berry[2], *n.* தற்பெருமை மிக்க நடுவயதினன்.

dog'cart, *n.* இருசக்கரமும் முதுகுக்கு முதுகான ஈரிருக் கையுமுடைய குதிரைவண்டி வகை.

dog'-cheap, *a.* மிக மலிவான.

dog'-collar, *n.* நாயின் கழுத்துப்பட்டை; கோயில் அதிகாரி யின் கழுத்துப்பட்டை; பெண்களின் விறைப்பான கழுத்துப் பட்டை; பெண்டிர் கழுத்தணி.

dog'days, *n. pl.* அழல்மீன் நாட்கள், கத்திரிகாலம், அழல் மீன் கதிரவனோடு தோன்றி மறையும் மிகவெப்பமான காலப் பகுதி (ஜூலை 3 முதல் ஆகஸ்டு 11 வரையுள்ள நாட்கள்).

do'ge, *n.* முற்கால வெனிஸ் (Venice) ஜெனோவா (Genoa) நகரக் குடியரசுகளின் தலைவர்.

dog'-ear, *n.* புத்தக மூலை மடிப்பு; *v.* புத்தகத்தை மூலையில் மடியவிடு.

dog'-fall, *n.* மல்லர்கள் வகையில் இருதரப்பினரும் ஒருங்கே தரையில் விழுதல்.

dog'-fan'cier, *n.* நாய்வளர்ப்பவர்; நாய் விற்பவர்.

dog'-fight, *n.* நாய்ச்சண்டை, குழப்பமிக்க கைகலப்பு.

dog'fish, *n.* சிறு சுறுமீன் வகை.

dog'fox, *n.* ஆண் நரி.

dogg'ed, *a.* வேட்டைநாய்ப் பிடியான, விடாப்பிடியுடைய; சீறிய, சிடுசிடுப்பான.

dogg'er [1], *n.* விடாது பின்பற்றுபவர்.

dogg'er [2], *n.* ஆலந்து நாட்டு இரட்டைப் பாய்மர மீன் தோணி.

dogg'er [3], *n.* செறிதிரள் இருப்புக்கல்; மண்ணியலூழிப் பாறைவகைப் பகுதி.

dogg'erel, *n.* நையாண்டிச் செய்யுள்; பயனற்ற கீழ்த்தர மான பாடல்; *a.* சந்த ஒழுங்கற்ற, அற்ப, கீழ்த்தரமான, ஒழுங்கற்ற.

dogg'ery, *n.* நாயின் பண்பு; நாயின் செயல்முறை; நாய்த் தொகுதி; கீழ்த்தரக் கும்பல்.

dogg'ing, *n.* நாய்களோடு வேட்டையாடுதல்; நாயைப்போல் பின்பற்றிச் செல்லுதல்.

dogg'ish, *a.* நாய்போன்ற, நாய் இயல்புடைய; இழிகுண முள்ள; முரட்டுத்தனமான.

dogg'y, *a.* நாய்ப்பற்றுடைய, நாய்களின் மீது பற்றார்வம் மிக்க; நாய்போன்ற; குதித்தாடுகிற; பகட்டி மினுக்கித் திரிகிற.

dog'hole, dog'hutch, *n.* நாய்க்கே தகுதியுடைய இடம்; மிக மோசமான குடியிருப்பிடம்.

dog'-Lat'in, *n.* பிழைபட்ட கொச்சைக்கலவை லத்தீன் மொழி.

dog'-lead, *n.* நாய்க்கயிறு, நாய்ஞாண்.

dog'leech, *n.* நாய் நோய் மருத்துவர்.

dog'-leg, dog'-legged, *a.* நாயின் பின்கால்போல் வளைந் துள்ள; படிக்கட்டுகளின் வகையில் எதிரெதிர் பக்கங்களில் செல்கின்ற; வேலிவகையில் சிலுவை வடிவமான ஆதாரங் களை இணைக்கும் நீண்ட கழிகளை உடைய.

dog'-letter, *n.* உறுமல் ஒலியுடைய (r என்ற) எழுத்து.

dog'ma, *n.* உறுதிக்கோட்பாடு; சமயக்கொள்கை; அதிகார பூர்வமாக நிலைநாட்டப்பட்ட கொள்கை; ஆணவப் பிடிவாதக் கருத்துரை; *pl.* dog'mas, dog'mata.

dogmat'ic, dogmat'ical, *a.* கொள்கைப்பிடிவாதமான; கோட்பாட்டுறுதி மிக்க; கருத்து வற்புறுத்துகிற; ஆணவ வீருப்பான.

dogmat'ics, *n.* கிறித்தவக் கொள்கைகளின் விளக்கம்; ஒழுங்குபடுத்தப்பட்ட சமய சித்தாந்தம்.

dog'matism, *n.* கொள்கையை ஒருதலையாக வற்புறுத்திக் கூறுதல்; உறுதியான கோட்பாடாகக் கூறும் பண்பு; பிடிவாதம்.

dog'matist, *n.* கோட்பாட்டை ஒருதலையாக அதிகார முறை யிற் கூறுபவர்.

dog'matize, *v.* பிடிவாதமாக வற்புறுத்திக் கூறு; வீருப் போடு பேசு, முடிந்த முடிபாகக் கூறு.

dogmatol'ogy, *n.* பிடிவாதக்கொள்கை இயல், சித்தாந்த இயல்.

Dog'ra, *n.* வடமேற்கு இந்தியாவிலுள்ள படைத்துறை இனத்தைச் சேர்ந்தவர்.

dog'rose, *n.* காட்டு ரோசா வகை.

dog's'bane, *n.* = dogbane.

dog's'-ear, *n.* = dog-ear.

dog's'-fenn'el, *n.* கெட்ட நாற்றமுள்ள செடிவகை.

dog'shores, *n. pl.* கடலில் இறக்குவதற்குமுன் கப்பலைக் கரையில் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்படும் மரக் கட்டைத் துண்டுகள்.

dog-sick', *a.* முழுதும் நோயுற்ற, முழுமையும் நோய்ப் பட்டுள்ள.

dog'sleep, *n.* மெல்லுறக்கம்.

dog's'-meat, *n.* நாயுணவு, நாயின் உணவு என விற்கப்படும் துண்டுத் துணுக்குகள்.

dog's'-nose, *n.* இன்தேறல் கலவை வகை.

Dog'star, *n.* அழல்மீன்; வானில் பெருநாய் மீன் மண்டலம்; சிறுநாய் மீன் மண்டலம்.

dog's'-tongue, *n.* முட்செடி வகை.

dog'tooth, *n.* (க-க.) சதுர மோட்டுருவ நுட்பவேலைப் பாடுள்ள நார்மன் (Norman) கட்டிடக் கலையைச் சார்ந்த சித்திர வேலைவகை.

dog'-trick, *n.* கீழ்த்தரமான சூழ்ச்சி.

dog'trot, *n.* அமைந்த ஓட்ட நடை.

dog'-watch, *n.* (கப்.) குறுகிய காவல் நேரம், நான்கு மணிக் குப் பதில் இரண்டு மணியேயுடைய மாலை முன்னிரவுக்காவல் தவணைகளில் ஒன்று.

dog'wood, *n.* இலையுதிர் பருவத்தில் தண்டும் இலைகளும் சிவப்பாக மாறவல்ல சிறுமர வகை.

doh, *n.* (இசை.) முதல் சுரம்.

doi'ly, *n.* உண்கலங்களுக்குமேல் அல்லது அடியில் விரிக்கப் படும் சிங்காரக் கைத்துணி.

do'ing, *n.* செய்தல்; செயல்முறைப்படுத்தல்; *a.* செயல் செய்கிற, சுறுசுறுப்பான.

do'ings, *n. pl.* செயல்கள்; நிகழ்ச்சிகள்; நேர்ச்சிகள்.

doit, *n.* டச்சு நாட்டு சிறுநாணயம்; மிகச்சிறுதொகை; பயனற்ற பொருள், அற்பப்பொருள்.

dol'ce far nien'te, (இத்.) *n.* மகிழ்ச்சியான சோம்பேறித் தனம்; இன்ப ஓய்வு.

dol'drums, *n. pl.* (கப்.) எதிரெதிர் காற்று முட்டும் நில நடுக்கோட்டுக்கு அருகிலுள்ள பெருங்கடலில் திணற அடிக் கும் பெருங்காற்று வீசும் பகுதிகள், காற்றுத்தேக்கம்; வெப்பமண்டலப் பகுதி; அமைதி; எழுச்சியற்றநிலை.

dole [1], *n.* ஊழ், ஊழ்வகுப்பு; பங்கு; அறமுறைப்பங்கீடு; அறமுறை உணவுப்பங்கு; அறமுறை உடைப்பங்கு; கஞ் சத்தனமான கொடை, கஞ்சத்தனமாக விதித்துக் கொடுத்த பங்கு; துயருதவி, இடருதவி; வேலையில்லாதவர்களுக்கு அளிக்கப்படும் உதவிச்சம்பளம்; சிறுபகுதி, அற்ப அளவு; *v.* சிறுசிறுபகுதிகளாகப் பங்கிட்டுக்கொடு, சிறிதுசிறிதாகக் கொடு.

dole [2], *n.* (செய்.) துயரம், கவலை, ஆரிடர்; புலம்பல், அழுகை.

dole'ful, *a.* துயரம் மிகுந்த, முகவாட்டமுள்ள, மகிழ்ச்சியற்ற.

dol'erite, *n.* சரளைக்கற்களாகப் பெரிதும் பயன்படுத்தப்படும் எரிபாறை.

dole'some, *n.* துயரமுள்ள, துயர்குறித்த.

dolichocephal'ic, dolichoceph'alous, *a.* நீண்ட தலை யோட்டையுடைய.

Dol'ichos, *n.* கொள்ளு மொச்சை அவரை முதலிய செடி யின வகை.

doll, *n.* பொம்மை; கைப்பாவை; ஆலி, மனித உருவப் பொம்மை; அளவுக்கு மீறி ஆடையணிந்த அறிவற்ற அழகி; ஒரே ஈற்றுக்குட்டிகளில் மிகச் சிறிய பன்றிக்குட்டி; *v.* மிகை யாக ஆடையணி, மட்டுமீறி ஒப்பனைசெய்.

doll'ar, *n.* வெள்ளி, அமெரிக்க வெள்ளிநாணயம்; மெக்ஸிக்கோ (Mexico) ஹாங்காங் (Honkong) ஆகிய இடங்களில் வழங்கும் வெள்ளிநாணயம்; செர்மனிக்கும் (Germany) ஸ்பானிய நாட்டுக்கும் (Spain) உரிய நாணயங்

களின் ஆங்கிலப்பெயர்; (தொ.) dollar area, அமெரிக்க வெள்ளியுடன் செலாவணியில் இணைக்கப்பட்ட நாடுகளின் தொகுதி; dollar diplomacy, அரசியல் ஆற்றலை உயர்த்துவதற்காகப் பணத்தைக் கருவியாகப் பயன்படுத்தும் அரசியல் சூழ்ச்சி.

doll'op, *n.* புற்கற்றை; கூளத்திரள்; வயலில் அளவு மீறிச் செழிப்பான பகுதி; கட்டி; உணவுமொந்தை.

doll'y [1], *n.* தாம்பாளத்தில் மலர் இன்பண்டங்கள் முதலியன வைத்து அன்பளிப்பாகக் கொடுக்கும் தட்டம்.

doll'y [2], *n.* பொம்மை (செல்லமான விளி வழக்குச்சொல்).

doll'y [3], *n.* சலவைத்தொட்டியைக் கிளறுவதற்கு வழங்கப்படும் துடுப்பு; கனிப்பொருள் கருப்பாறை அலம்ப உதவும் கருவி; சுரங்க ஆதாரக்கம்பம் அடித்திருக்கும் பொறி; இருப்புத்தொலை செய்யும் தொலைக்கருவி; மெருகிடும் கருவி கலம்; திருகு முனையின் பிடி; சக்கரங்களின் மீது உருளும் தட்டைச்சகடம்; உருளை மீது ஓடும் சகடச்சட்டம்; *v.* திருகு பிடிக்கருவியைக் கையாளு; தொலைக் கருவியைப் பயன்படுத்து; இறுக்கு பொறியால் இறுக்கு; தட்டைச் சகடத்தை வழங்கு; தட்டைச்சகட மூலம் பெறுவி.

doll'y-catch, *n.* மரப்பந்தாட்டத்தில் எளிய வெற்றி.

doll'y-shop, *n.* கடல்துறை சார்ந்த பொருட் கிடங்கு; அடகு கொள்விலை கொடுப்புவிலைக் கடை.

doll'y-tub, *n.* சலவைத்தொட்டி; கனிப்பொருள் கருப்பாறையின் கழுவுதொட்டி.

Doll'y Vard'en, *n.* பெண்களுக்குரிய பின்னல் வேலைப் பாடுடைய மெல்லிய துணிவகை; ஒருபுறமாகக் கீழே வளைக்கப்பட்டுப் பூவேலை ஒப்பனை செய்யப்பட்ட பெரிய குல்லாய் வகை.

dol'man, *n.* சிறிய கைப்பகுதியுடன் முன்புறம் திறந்த நிலையிலுள்ள நீண்ட துருக்கிய (Turkish) அங்கி; கைகள் தொங்கிக் கொண்டிருக்கும்படியாக அணியப்படும் மேலங்கி போன்ற குதிரை வீரனுடைய சட்டை, பெண்ணின் மேலங்கி.

dol'men, *n.* கல்மேடை, செதுக்கப்படாத செங்குத்தான இரு கல்லும் அவற்றின்மீதுள்ள தட்டையான கல்லும் கொண்ட வரலாற்றுக்கு முந்திய காலக் கல்லறைப்படிவம்.

dol'omite, *n.* சுண்ண வெளிமக் கரியகிகளின் கலப்புடைய பாறை வகை.

dol'orous, *a.* (செய்.) துன்பமிக்க; துயரார்ந்த; வேதனை குறித்த; வருத்தஞ் செய்கிற.

dolose', *a.* (சட்.) குற்ற நோக்கங்கொண்ட, மனமார ஏமாற்றும் எண்ணங்கொண்ட.

dol'our, *n.* துன்பம், துயரம்; வேதனை; துக்கம், கடுந்துயர்.

dol'phin, *n.* கடற்பன்றி, திமிங்கில இனம் சார்ந்த எட்டு அல்லது பத்து அடி நீளமுள்ள அலகு போன்ற நீண்ட முன்னுறுப்புடைய கடல் விலங்கு வகை; மீன்வகை.

dolt, *n.* மட்டி, மடையன்.

dolt'ish, *a.* மடத்தனமான, அறிவற்ற.

Dom, *n.* மேதகை, போர்ச்சுகலிலும் (Portugal) பிரசீலிலும் (Brazil) பெருமக்கட் பெயர் முன்னும் உயர்தர ரோமன் கத்தோலிக்கக் குருமார் பெயர் முன்னும் வழங்கப்படும் நன்மதிப்பு அடைமொழி.

domain', *n.* ஆட்சிப்பரப்பு, மேலாண்மை எல்லைப்பரப்பு; பண்ணை நிலப்பரப்பு, பண்ணை எல்லைப்பரப்பு; ஆட்சி எல்லை, அதிகார எல்லை; செயல் எல்லை, செயற்களம்; பண்புரிமை எல்லை; அரங்கம், துறை, பெருங்கூறு; உலகநாடுகளின் சட்டத்துறையில் நில எல்லையில் உடைமை உரிமை முழு மேலாண்மை நிலை.

dome, *n.* கவிகைமாடம், தூங்கானை மாடம், கவிகைமாடத் தூபி; மாடக்கோயில்; வான்மோடு; காமரக்கவிகை; மலையின் வளைமுகட்டுச்சி; கவிகை உருவுடைய பொருள்; மண்டை; இயந்திரக் கவிகைமூடி; உந்து வண்டி இயந்திர மேலுறை; வெப்பாலையின் உட்கவிகை; நடுவரையிலிணைந்து கவியும் ஈரிணை மணியுரு; பிடிப்பில் பொருந்தும் இறுகலான கொளுவி; *v.* கவிகையுருவாயமை; கவிகை வடிவாக்கு; கவிகையை இணைத்துதவு.

dom'ed, *a.* குவிமாடமுள்ள, குவிமாடம் கொண்ட.

Domes'day, Domes'day Book, *n.* இங்கிலாந்தில் முதலாம் வில்லியம் காலத்தில் கி. பி. 1086-இல் வகுத்தமைக்கப்பட்ட பெருநில அளவாய்வுத் திட்டம், நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு.

domes'tic, *n.* வீட்டு வேலைக்காரர்; *a.* வீட்டுக்குரிய; குடும்பத்தைச் சார்ந்த; உயிர்கள் வகையில் வீட்டில் வைத்து வளர்க்கப்படுவதற்குரிய, மனைப்பழக்கமுடைய, பழகிய; மிகுதியும் இல்லுறைவான, மனையை விட்டகலாத; வீட்டார்வமிக்க; குடும்பப்பற்று மிகுதியான; பொதுவல்லாத, தனி ஒதுக்கமான, தனிமுறையான; தாயகத்துக்குரிய, தாய்நிலத்துக்குரிய; உள்நாட்டுக்குரிய; அயல்நாடு சாராத; உள்நாட்டிற் செய்யப்பட்ட, சுதேசியான; (தொ.) domestic architecture, குடியிருப்புக் கட்டிடக்கலை; domestic economy, குடும்பநிர்வாகக் கலை; domestic science, குடும்பநூல், குடும்பத்துக்குரிய உடல் உணவு உடை ஆகியவை சார்ந்த கலைத் தொழில்கள் பற்றிய அறிவுத்துறைத் தொகுதி.

domes'ticate, *v.* வீட்டுவாழ்க்கையில் பற்றுக்கொள்ளச் செய்; குடும்பப்பற்று உண்டுபண்ணு; நாகரிகப்படுத்து, மூர்க்கத்தன்மை குறை; வசப்படுத்து; மனைப்பண்பூட்டு, வீட்டுச் சூழலில் பழக்கு; பயிற்றுவி; நாட்டுச் சூழலுடன் இயைவி; தாய்நிலச் சூழலுடன் இணக்குவி.

domes'ticated, *a.* பழக்கப்பட்ட, பயிற்றப்பட்ட, மூர்க்கத் தன்மை குறைந்த.

domesti'cities, *n. pl.* மனைசார்ந்த செய்திகள்; இற்பழக்கப் பண்பாடுகள்.

domesti'city, *n.* மனைவாழ்க்கை இயல்பு, குடும்பப்பண்பு; குடும்ப வாழ்வுக்குரிய தனி ஒதுக்கநிலை; இயலெளிமை, வீட்டு வாழ்விலுள்ள இயற்கையான தன்மை.

domes'tics, *n. pl.* வீட்டு வேலைக்காரர்கள்; உள்நாட்டுச் செய்பொருள்கள், சுதேசிச்சரக்குகள்; தாய்நாட்டு ஆடைகள், சுதேசித் துணிகள்.

dom'ett, *n.* கம்பளியும் பருத்தியும் கலந்து நெய்யப்பட்ட துணிவகை; பிணம்போர்த்தப் பயன்படுத்தப்படும் ஆடை வகை.

dom'icile, *n.* உறையுள், உறைவிடம்; வாழ்வகம்; சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட நிலவரக் குடியிருப்புநிலை; சட்டப்படியான நிலவர உரிமை வாழ்விடம்; மாற்று முறிக்குப் பணம் பெறத்தக்க இடம்; *v.* நிலவரமாகக் குடியிருத்து; நிலவரமாகக் குடியிரு; குறிப்பிட்ட இடத்தில் மாற்று முறியைப் பணமாக்கக் கூடியதாகச் செய்.

domicil'iary, *a.* இருப்பிடத்தைச் சார்ந்த; (தொ.) domiciliary nurse, நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று பார்க்கும் செவிலி; domiciliary visit, அதிகாரிகள் உரிமையுடன் தனி வீடுகளுக்குச் சென்று மேற்பார்த்தல்; உரிமை பெற்ற அதிகாரிகளின் வீட்டுச்சோதனைமுறை

domicil'iate, *v.* நிலையாகக் குடியிருத்து; நிலவரப்படுத்து.

dom'inance, dom'inancy, *n.* முதன்மைநிலை, உச்சநிலை, ஆதிக்கம்; மேலாட்சிநிலை, மேலாண்மை, மேலுரிமை; மேல்நிலை, ஏற்றம், மேம்பாடு; விஞ்சுநிலை, முனைப்பு.

dom'inant, *n.* இசையில் ஐந்தாவது சுரம்; திருச்சபை ஓதுமுறையின் அடிச்சுரம்; மரபாய்வியலில் விஞ்சுமரபுக்கூறு, கலப்பின முதல் தலைமுறையில் மேம்பட்டு நிற்கும் ஒருவழிப் பெற்றோர் பண்புக்கூறு; செடியினத்தில் மேம்பட்டு நிலையுறும் வகை; மரக்கூட்டில் உயர்மரம்; *a.* ஆதிக்கம் வகிக்கிற, ஆட்சியிலுள்ள; முதன்மையான, மேம்பட்ட, விஞ்சிய ஆற்றலுடைய; முனைப்பான, விஞ்சிநிற்கிற, கவித்த; நடப்பாட்சியிலுள்ள, ஆட்சிவழக்கிலுள்ள, பெருவழக் காறுடைய; கலப்பினங்களின் இருவழிமூல இனப்பண்புக் கூறுகளிடையே முதல் தலைமுறையிலேயே முந்துறத் தோற்றுகிற.

dom'inate, *n.* வெளிப்பட வல்லாட்சியாய் உருவான பிற்கால ரோமப் பேரரசு; *v.* ஆதிக்கம் செலுத்து; மேலாட்சி கொள்; முதன்மையாயிரு, முஜீப்பாக அமை; மேலுயர்ந்தோங்கு, விஞ்சு, மேம்பட்டுநில்; வென்று நிலைபெறு; செல்வாக்கு மிக்கதாயிரு; நடப்பாட்சியில் பரவி வெற்றியுடன் நிலைபெறு; சூழ்புலமடக்கியாளும் வாய்ப்பு வலிமையுடையதாயிரு; சூழ்புலப்பெரும்பரப்பின் காட்சி வாய்ப்புடையதாயமை.

domina'tion, *n.* ஆட்சி; மேலாட்சி; மேலாண்மை, ஆதிக்கம்; மேம்பட்ட செல்வாக்கு; வல்லாட்சி; கொடுங்கோன்மை.

domina'tions, *n. pl.* தேவதூதர்களின் படிவரிசைகள் ஒன்பதில் நான்காம் படிவரிசைக்குரிய தேவதூதர் கணத்தினர்.

domineer', *v.* கொடுங்கோன்மையாக நட, ஆணவத்துடன் அதிகாரம் செலுத்து; வீரூப்புக்காட்டு; அடக்குமுறை ஆரவாரம் செய்.

domineer'ing, *a.* வீரூப்புக்காட்டுகின்ற, ஆணவத்துடன் அதிகாரம் செலுத்துகின்ற.

domin'ical, *a.* இயேசுநாதருக்குரிய; இயேசுநாதரின் சிறப்பு நாளாகிய ஞாயிற்றுக்கிழமை சார்ந்த; (தொ.) dominical letter, ஆங்கில நெடுங்கணக்கின் முதல் ஏழு எழுத்துக்களில் ஒன்று, ஆண்டுக் குறிப்பேட்டில் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு இடப்படும் கணிதமுறைக் குறியீட்டெழுத்து.

Domin'ican, *n.* செயிண்ட் டாமினிக் (St. Dominic) என்ற அருட்பெரியாரால் 1215-இல் நிறுவப்பட்ட கருநிற உடையணிந்த துறவியர் குழுவினர்; *a.* செயிண்ட் டாமினிக் என்ற அருட்பெரியாரைச் சார்ந்த; செயிண்ட் டாமினிக் என்பாரின் துறவியர் குழுவினுக்குரிய.

domin'ion, *n.* ஆட்சி, மேலாட்சி; ஆட்சியுரிமை, மேலாதிக்க உரிமை; தனியாணை ஆட்சியுரிமை; ஆட்சிப்பகுதி; பண்ணைத் தனியாட்சிப்பகுதி; ஆள்வோர் நேருரிமையாட்சிப் பகுதி; மன்னர் நேராட்சிப்பகுதி; தன்னுரிமையுடைய குடியேற்றநிலை நாடு, தாயகத்துடன் தோழமையுரிமை கொண்ட தனிமாநிலம்; சட்டப்படியான உடைமையாட்சியுரிமை; (தொ.) Dominion Day, கனடா (Canada) வின் ஐக்கிய நாள் விழா, கனடாவிலுள்ள மாகாணங்கள் ஒன்று சேர்ந்த 1867-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள் விழா.

domin'ions, *n. pl.* தேவதூதர்களின் ஒருகணம் சார்ந்த தெய்விக ஆவிகள்.

dom'ino, *n.* முகமூடியுடன் கூடிய புறவுடைப்போர்வை; மாறுவேட முகமூடி அங்கி; முகமூடி அங்கி அணிந்தவர்; விளையாட்டு வகையின் கருநிற ஆட்டக்காய் வகை.

dom'inoes, *n. pl.* சதுரங்கம் போன்ற ஆட்டவகை.

Don [1], *n.* ஸ்பானிய நாட்டு மக்கட் பெயர்முன் இட்டழைக்கும் மதிப்புக்குறிப்பு.

don [2], *n.* ஸ்பெயின் (Spain) நாட்டுப் பெருமகன்; ஸ்பெயின் நாட்டார்; சிறப்புக்குரியவர், தனித்திறலாளர்; கல்லூரி ஆயர், பயிற்சித்துணைவர்; கல்லூரி முதல்வர்; கல்லூரி ஆட்சியுறுப்பினர்.

don [3], *v.* ஆடையணி அணி, உடையணிகளை மாட்டிக் கொள்.

donate', *v.* கொடு, நன்கொடையளி.

dona'tion, *n.* நன்கொடை கொடுத்தல்; நன்கொடை; நன்கொடைப்பொருள்; (சட்.) சொத்துரிமை மாற்றீடு.

don'ative, *n.* பணித்துறைப் பற்றுரதியம், பரிசுக்கொடை, நன்கொடை, அன்பளிப்பு; சமய அறத்துறையில் நேருரிமை மானியம்; *a.* நன்கொடையான, நேர்பரிசான, பற்றுரதிய மான, நேருரிமை மானியமான.

don'atory, *n.* நன்கொடை ஏற்பவர், பரிசிலர்.

done [1], *v.* do என்பதன் முடிவெச்சம்.

done [2], *a.* முடிந்த; களைப்புற்ற; (தொ.) done brown, ஏமாற்றப்பெற்ற; done for, done up, களைத்துப்போன.

donee', *n.* நன்கொடை பெற்றவர், நன்கொடையளிக்கப் பட்டவர்.

dong'a, *n.* விடர், அருவியால் தோண்டப்பட்ட பள்ளம்.

don'jon, *n.* பண்டைக்காலக் கோட்டைகளில் வலிமையான மைய அரண், கடுமையாகத் தாக்கப்படும்போது கோட்டைப் படையினர் பின்வாங்கிச் சென்றடையும் வலிமையான மைய அரண்.

donk'ey, *n.* கழுதை; முட்டாள், பேதை; (தொ.) donkey's years, நீண்ட காலம்.

don'key-en'gine, *n.* கப்பலின் மேல்தட்டில் பாரம் இழுப்பதற்கும் ஏற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் நீராவி இயந்திரம்.

don'key-man, *n.* துணையான சிறு இயந்திரத்தின் பொறுப்பாளர்.

don'key-pump, *n.* மிகையான நீராவிக்குழாய்ப்பொறி.

don'key-work, *n.* கீழ்த்தரமான கடுமையான ஊழியம்.

Donn'a, (இத்.) *n.* இத்தாலி ஸ்பெயின் போர்ச்சுகல் (Italy, Spain, Portugal) போன்ற நாடுகளின் உயர்குடி மாது.

Donn'ybrook, Donn'ybrook Fair, *n.* ஆரவாரக் களரி, அமர்க்களம், அடிதடிச்சண்டை.

do'nor, *n.* கொடையாளி, நன்கொடையாளர்; மருத்துவத் துறையில் குருதிக் கொடையாளர்.

don't, *v.* = do not.

dood'le, *n.* பொருளற்ற கிறுக்குவரை; *v.* பொருளற்ற தன்மையில் கிறுக்கி எழுது, கருத்தில்லாமல் கிறுக்கு.

dood'lebug, *n.* வண்டுவகை; வண்டுவகையில் முட்டைப் புழு; கனிப்பொருள்கள் உள்ள இடத்தை ஊகிக்க உதவிய பழங்கருவி.

dool'ie, dool'y, *n.* நோயாளி பல்லக்கு, 'டோலி'.

doom, *n.* ஊழ், விதி; தீர்ப்பு; குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு; இறுதி, சாவு, அழிவு; கடைநாள் தீர்ப்பு; கடைநாள் தீர்ப்புக்காட்சிப் படம்; *v.* எதிராகத் தீர்ப்புக்கூறு, தண்டி; கண்டி; ஊழ்வழிப் பழிகேட்டுக்கு ஆளாக்கு, முன்கூட்டி அழிவுக்குரிய முடிவுசெய்; முன்கூட்டிக் கேட்டுக்குரியதாக ஒதுக்கிவை; (தொ.) crack of doom, கடைசித் துருப்பு.

doomed, *a.* தண்டனை விதிக்கப்பட்ட; கேட்டுக்கு முன்கூட்டி ஒதுக்கிவைக்கப்பட்ட, ஊழ்வழி உந்தப்பட்ட.

dooms'day, *n.* தீர்ப்புநாள், இறுதித்தீர்ப்பு; (தொ.) till doomsday, என்றென்றைக்கும்.

dooms'man, *n.* தீர்ப்பளிப்பவர், தண்டனை கொடுப்பவர்; தண்ட நடுவர்.

doom'ster, *n.* நடுவர்.

door, *n.* கதவு, வாயில்; புகுமுகம், நுழைவழி; (தொ.) lay at the door of, குற்றம் சுமத்து; lie at the door of, குற்றம் சுமத்தக்கூடியதாக அமை; next door to, அடுத்த வீட்டிலுள்ள, அருகிலுள்ள, அடுத்து; மிகவும் நெருக்கமான தன்மையில்; out of doors, வெளியே; வெளிப்புறத்தில்; திறந்த வெளியில்; show one the door, வீட்டை விட்டு வெளியே விரட்டு; within doors, வீட்டில், வீட்டிற்குள்.

door'bell, *n.* வெளிப்புறக் கைப்பிடி அல்லது விசைக்குமிழின் மூலம் வீட்டிற்குள் அடிக்கக்கூடிய மணி.

door'-keeper, *n.* வாயிலோன்.

door'-mat, *n.* வாயிலருகே கால் துடைத்துக்கொள்வதற்குரிய பாய்வகை; (பே-வ.) பிறர் காலடியில் மிதிபடுபவர்.

door'-money, *n.* பொழுதுபோக்கு அல்லது களியாட்ட இடத்தின் வாயிலில் வாங்கும் பணம்.

door'nail, *n.* கதவாணி, கதவுக்குமிழ்.

door'-plate, *n.* கதவிற் பதிக்கப்பட்ட பெயர்த்தகடு.

door'-post, *n.* கதவின் சார்புக்கால், சாரக்கால், கதவுச் சட்டம், கதவுநிலை.

door'sill, *n.* வாயில் நிலை.

door'-stead, *n.* நுழைவாயில்.

door'-step, *n.* வாயிற்படி.

door'-way, *n.* கடைவாயில்.

dop [1], *n.* மலிந்த தென் ஆப்பிரிக்க குடிவகை; வெட்ட அல்லது மெருகிட்டுப் பளபளப்பாக்க உதவும் மணிக்கல் பதித்த செப்புக்குவளை போன்ற கருவி.

dop [2], *v.* முக்கு, அமுக்கு, தோய்; துள்ளு, மேலெழும்பிக் குதி.

dope, *n.* கெட்டி நீர்மம்; களிம்பு; எண்ணெய்ப்பசை; மசக் கெண்ணெய்; விமானப்பூச்சுக்குரிய வண்ண மெருகு; உறிஞ்சுபொருள்; ஆற்றல் பெருக்கும் சரக்கு; மயக்க மருந்து; அபின்; பந்தயக்குதிரைகளுக்கும் வேட்டை நாய்களுக்கும் வெற்றிபெறும் ஆற்றல் பெறுவதற்காக அளிக்கப் படும் மருந்து; அறிவை மழுங்கவைக்கும் செய்தி; மனச் சான்றை மழுங்கவைப்பது; உள்ளுணர்ச்சியை மழுங்க வைப்பது; தகவல்; கம்பியில்லாத் தந்திச்செய்தி; *v.* மயக்க மருந்து கொடு; மயக்கமூட்டு; மயக்கமருந்தை உண்.

dopp'el-gang'er, (செர்.) *n.* பேயுரு; உயிரோடு இருப்பவரின் ஆவித்தோற்றம்.

Dopp'er, *n.* ஆலந்து நாட்டு முஸ்தீத்த சீர்திருத்தத் திருச் சபையுடன் இணைந்த தென் ஆப்பிரிக்காவின் திருச்சபையைச் சார்ந்தவர்.

dop'y, dope'y, *a.* மயக்கம் தருகிற; உணர்வுமழுங்கப் பட்ட; மனச்சான்று மங்கிய.

dor, *n.* சாணி எருவில் வாழும் விட்டில்வகை.

Do'ra, *n.* போர்க்காலக் கட்டுப்பாட்டுச்சட்டம்.

dora'do, *n.* அழகிய வண்ண முள்ள கடல்மீன் வகை; அமெரிக்க பொன்வண்ண மீன்வகை.

Dorc'as, Dorcas society, *n.* ஏழைகளுக்கு உடைகள் தைத்து வழங்கும் பெண்கள் கூட்டம்.

Dor'ian, *n.* பண்டைக் கிரேக்கநாட்டில் டோரிஸ் (Doris) என்ற பகுதி சார்ந்தவர்; கிரேக்க இனத்தின் முப்பெரும் பிரிவில் ஒன்றைச் சார்ந்தவர்; *a.* டோரிஸ் பகுதியைச் சார்ந்த; கிரேக்க இனத்தின் முப்பெருங்கிளையில் ஒன்றைச் சார்ந்த; (தொ.) Dorian mode, பண்டைய கிரேக்க இசை முறை; பழைய திருக்கோயில் இசைமுறை.

Do'ric, *n.* பண்டைக் கிரேக்கரின் முப்பெரும் பிரிவினுள் ஒன்றினுக்குரிய கிளைத்திசைமொழி; நாட்டுப்புற ஆங்கிலத் திசைமொழி; நாட்டுப்புற ஸ்காத்லாந்து வழக்கு மொழி; *a.* கட்டிடக் கலையில் பண்டைய கிரேக்க மரபு வகைக்குரிய; டோரிஸ் பகுதிக்குரிய; கிரேக்க திசைவழக்குக்குரிய; கிரேக்க இனத்தின் முப்பெரும் பிரிவுகளில் ஒன்றற்குரிய.

Dork'ing, *n.* கோழி வளர்ப்பினவகை; பலவண்ணங்களும் ஒவ்வொரு காலில் ஐந்து நகங்களும் கொண்ட சதுர உடலமைப்புள்ள கோழிவகை.

dorm'ant, *n.* குறுக்குவிட்டம்; பாவுகட்டை; *a.* உறங்குகின்ற; செயலற்ற, செயலடங்கியிருக்கிற, செயல் நிறுத்தி வைத்திருக்கிற; செடியின உயிரின வகைகளில் செறிதுயில் நிலையிலுள்ள, இயக்கம் ஒடுங்கிக் கிடக்கிற; பழக்கத்தில் இல்லாத; வழக்கற்ற; (கட்.) தூங்கும் தோற்றமுடைய, முன்கால்கள்மீது நிலைசாய்த்திருக்கிற.

dorm'er, dorm'er-win'dow, *n.* சாய்கூரையில் செங்குத்தாக உந்திக்கொண்டிருக்கும் பலகணி.

dormeuse', *n.* பயண உறக்கவண்டி, சாய்படுக்கை வகை.

dor'mice, *a.* dormouse என்பதன் பன்மை.

dorm'itory, *n.* பலபடுக்கைகள் கொண்ட பெரிய துயிற் கூடம்; நகர்ப்புற ஓய்வுக்குடியிருப்புப் பகுதி.

dorm'ouse, *n.* குளிர்கால முழுதும் சுருண்டு செறிதுயில் நிலையில் அடங்கிக்கிடக்கும் அணில் வடிவ எலியின உயிர் வகை.

dor'my, *a.* குழிப்பந்தாட்டத்தில் மேற்கொண்டு ஆட வேண்டிய ஆட்டங்களுக்குச் சரியான குழிகளையுடைய.

do'rothy bag, *n.* பெண்களின் திறந்தகன்ற வாயுடைய கைத்தொங்கற் பை.

Do'rothy Perk'ins, *n.* இரட்டை நீலச்சிவப்பு மலர்களுள்ள ரோசா இனத்தழுவு கொடி.

dorp, *n.* ஆலந்து நாட்டிலும் தென் ஆப்பிரிக்காவிலும் சிற்றூர்; நகர்வட்டம்.

dor'sal, *n.* மீனின் முதுகுத் துடுப்பு; முதுகுத்தண்டிலுள்ள முள்ளெலும்பு; திருக்கோயில் பலிபீடத்தின் பின்புறம் தொங்கும் துணி; திருக்கோயில் கிழக்குச் சிறகின் பக்கத்திரைச் சீலை; *a.* பின்புறத்தைச்சார்ந்த, முதுகைச்சார்ந்த, கூர் விளிம்பு வரையுடைய.

dor'sigrade, *a.* கால்விரல்களின் பின்பகுதியால் நடக்கின்ற.

dort'er, dort'our, *n.* படுக்கையறை, கிறித்தவத் துறவி மடத்தின் படுக்கையறைக் கூடம்.

dor'y [1], *n.* உணவுக்கு உதவும் பொன்மஞ்சள் வண்ண மீன் வகை.

dor'y [2], *n.* அலைமீது செல்லத்தக்க அகன்ற அடித்தளமுள்ள சிறுபடகு.

dos'age, *n.* மருந்தளவு; வேளாவேளைக்கு மருந்து கொடுத்தல்; வேளாவேளைப்பழக்கம்; *v.* மருந்துகொடு; கல; வேளை அளவுகளாகக் கொடு; வேளையளவுகளாகக் கொடுக்கும்படி கட்டளையிடு.

dose, *n.* ஒருவேளை மருந்து; ஒரே நேரத்தில் வழங்கப்படும் மின்விசை; நுண் அலை ஒளிக்கதிர் முதலியவற்றின் அளவு; சிறிதளவு; மென்புகழ்ச்சிக்கூறு; படிப்படியாக அடுக்கப் படும் தண்டனையின் கூறு; அளவிட்டுக் கொடுக்கப்பட்ட கூறு; அளந்து சேர்க்கப்பட்ட பகுதி; உட்கொள்ள வேண்டிய வெறுப்பூட்டும் மருந்து, விரும்பாத பொருள்.

doss, *n.* தூக்கம்; *v.* தூங்கு, படுக்கைக்குச் செல், பொது உறைவிட விடுதியில் தூங்கு.

doss'al, doss'el, *n.* திருக்கோயில் பலிபீட மேடையின் பின் புறம் தொங்கும் திரைச்சீலை; திருக்கோயில் கிழக்குப் பக்கத் திரைத்துணி.

doss'er, *n.* மிக மலிவான தங்கிடத்தில் வசிப்பவர்.

doss'-house, *n.* மிக மலிவான தங்கிடம்.

doss'ier, *n.* ஆவணத்தொகுதி; ஒருவரது சென்றகால வரலாற்றுப் பத்திரங்கள்.

dost, *v.* do என்பதன் முன்னிய நிகழ்கால முன்னிலை ஒருமை வினைச்சொல்லின் வடிவம்.

dot [1], *n.* புள்ளி; சிறுதுகள்; மாசு; மைக்கோலின் வட்ட வடிவப்பதிதடம்; முற்றுப்புள்ளி; எழுத்துக்களின் மீதிடும் ஒற்று; எழுத்தின் ஒலிமாறுபாடு குறிக்கும் புள்ளிக்குறி; இசைமானப் புள்ளிக்குறி; தந்திக்குறியீட்டில் புள்ளிக்குறி; நுண்பொருள்; சிறு குழந்தை; *v.* புள்ளி அடையாளமிடு; எழுத்தின்மீது புள்ளியிடு; புள்ளிகளாற் பலதிறப்படுத்து; குறிப்பு வைத்துக்கொள்; புள்ளி சிதறச் செய்; புள்ளி நிரப்பு; புள்ளிகள் போடு; புள்ளியுருவாகு; கொண்டு; (தொ.) dot and carry, கல்வித்துறைக் கணக்கில் ஒருதானம் கட்டியிட்டபின் மறுதானத்துக்குரிய தொகையைக் குறித்துக் கொண்டு மறுதானத்தில் கொண்டு சேர்; dot the is and cross the ts, விவரம் நிரப்பு, பொருளைத் தெளிவுபடுத்து.

dot [2], (பிர.) *n.* சீதனம்.

dot'age, *n.* மிகையான அன்புகாட்டுதல்; மிகையான பற்று, அளவு கடந்த அன்பு; முதுமையால் ஏற்படும் சிறுபிள்ளைத் தனம்; முதுமையால் தோன்றும் மனத்தளர்ச்சி.

do'tal, *a.* சீதனத்தைச் சார்ந்த.

dot'-and-dash', *n.* தந்திக் குறியீட்டுத் தொகுதியில் புள்ளி-கீற்றுக்களைப் பயன்படுத்தும் முறை.

dot'ard, *n.* மட்டுமீறிய பற்றுக் காட்டுபவர்; முதுமைத் தளர்ச்சியுடையவர்.

dote, *v.* மட்டுமீறிய அன்புகாட்டு, செல்லங்கொடு; தன்மையிழந்து பற்றுர்வங்காட்டு, பாசம் முழுதும் ஒரு திசையிற் செல்லவிடு, ஒன்றன்மீது பித்தாகப் படர்வுறு; முதுமைத் தளர்வுறு; அறிவுச் சோர்வுறு; வெட்டு மரவகையில் இற்றுப்போ, மட்குறு.

doth, *v.* do என்பதன் முற்காலப் படர்க்கை ஒருமை நிகழ்கால வினையின் வடிவம்.

dott'ed, *a.* புள்ளியிடப்பட்ட; புள்ளிக்குறியுடைய; புள்ளி நிரம்பிய; புள்ளிகளாலான; புள்ளிகள்போலச் சிதறலான.

dot'tle, *n.* சுருட்டுக் குழாயிற் புகைக்கப்படாமல் எஞ்சியுள்ள புகையிலைச் சருகு.

dott'rel, *n.* பவளக்காலி, எளிதிற் பிடிக்கத்தக்க பறவை வகை.

dott'y, *a.* புள்ளிகளையுடைய; புள்ளிக்குறிகளிட்ட; புள்ளிகளாலான; சிதறலான; தள்ளாடுகிற; அறிவு மந்தமான.

dot'-wheel, *n.* புள்ளி புள்ளியான கோடு போடுவதற்குப் பயனபடும் சக்கரம்.

dou'ai, dou'ay, *n.* ரோமன் கத்தோலிக்கத் திருக்கோயிலிற் பயன்படுத்தப்படும் வி வி லி ய நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பு.

douane, *(பிர.) n.* சுங்கச்சாவடி.

dou'ble, *n.* இருமடங்கு; இரட்டிப்பளவு; இரட்டை உரு, ஈரிணை; எதிரிணை, ஒத்த மறுபடிவம்; எதிரிணைமுறிச்சீட்டு; நேரொத்த ஆவி மறுபடிவம்; ஆற்றின் திடீர்முடக்கு; வேட்டைவிலங்கின் திடீர்த் திசைதிரும்பல்; திடீர்த் திருப்பம்; படைத்துறை நடையில் இரட்டிப்பு விரைவு, ஒட்ட விரைவு; எறிகணைக்குறியாட்டத்தில் இருபுற வட்டங்களின் இணை; கவிவிடத்தினுட்படும் எறிவு; குதிரைப்பந்தயத்தில் ஒரு பந்தயத்தின் ஒரு குதிரை மீது வரும் கெலிப்பு தோல்விகளையே மறு பந்தயத்தின் மறு குதிரைமீதாக்கும் இணைபந்தயத் தொகையீடு; புல்வெளிப்பந்து விளையாட்டில் ஒவ்வொரு பக்கத்திலும் இருவர்ஆட்டம்; வரிப்பந்தாட்டத்தில் தொடர்ந்த இருபந்தடி இழப்புக்கள்; ஒரே தொடர் திட்டத்தில் அடுத்தடுத்து வரும் இரு தோல்விகள்; ஒரே தொடர் திட்டத்தில் அடுத்தடுத்து வரும் இரு வெற்றிகள்; சீட்டாட்டக் கோரிக்கையில் வெற்றிக்கு இரட்டிப்புப் புள்ளி என்ற கேள்வி; சிறுதிறப் பந்தயச் சீட்டாட்ட வகையில் மூன்று புள்ளிக்குக் குறைந்த ஒரு பக்கக்கெலிப்புக்கெதிரான மறுபக்கத்தின் ஐந்துபுள்ளிக் கெலிப்பு; பெருந்திறப் பந்தயச் சீட்டாட்ட வகையில் கெலிப்பற்ற ஒருபக்கத்துக்கெதிரான பத்துக்கெலிப்பு; *a.* இரட்டிப்பான; இருமடங்கான, எண்ணிக்கையிலோ நீள உயர அகலங்களிலோ பரப்பிலோ அளவிலோ பண்பிலோ இரட்டிப்பு அளவான; இரட்டையான, இரட்டித்த, ஈரிணையான; இணையான; சோடியாய் இணைந்த; இணை இணையான; இருபாகங்களில் நடிக்கிற; இரண்டகமான, இருமனப்பட்ட; வாய்மையற்ற, வஞ்சகமான; மடிந்த, ஒருமடிப்பு மடித்த; நாடி வகையில் இருமடியான; இரட்டித்த உறுப்புடைய; அடுத்த கீழ்ப்பாலைக்குரிய; பூவில் இதழ்ப்போலியான இழையுடைய; *v.* இரட்டிப்பாக்கு; அளவிலோ எடையிலோ பண்பிலோ இருமடங்காகப் பெருக்கு; தொகையில் இருமடங்காக்கு; இரண்டால் பெருக்கு; இருமடங்காகு; எதிரிணையாக்கு; ஒத்த மறுபடிவமாயிரு; எதிரிணைப் போலியாயமை; பகரமாக்கு; பகரமாயிரு; எதிரிணை முறியாயமை; கெலிப்பை இரட்டிப்பாக்கு; இசையில் அடுத்து மேல் பாலை அல்லது கீழ்ப்பாலைபுடன் இணை; மடி; முட்டியை முடக்கு; மடக்கித் திருப்பு; பக்கவாட்டில் சுற்றிச்செல்; கப்பலைப் பக்கவாட்டில் சுற்றிச்செல்; பதிலாளாக நடி; இருபாகங்களில் நடி; (கட.) அடிக்கோடிடு; *adv.* இரட்டிப்பாக, இருமடங்காக; ஒன்றை இரண்டாக; இரண்டிரண்டாக; இணையாக; இணையிணையாக; வஞ்சகமாக; (தொ.) double up, இரட்டிப்பாக மடிப்புறு; மிகு சிரிப்பினுல் உடலைக் கவித்து வளை; அடித்து மடக்கு, மடியச்செய்; உடனிணைவாகப் பங்குகொள்.

doub'le-act'ing, *a.* இருதிசைகளில் சக்தியைப் பயன்படுத்துகிற; இருபயன்களைத் தோற்றுவிக்கிற.

doub'le-axe', *n.* இருமுனைக் கோடரி.

doub'le-banked', *a.* ஒவ்வொரு துடுப்பிலும் இரண்டு மனிதர்களுள்ள, ஒன்றின்மேலொன்றுன இரட்டை வரிசைத் துடுப்புக்களுள்ள.

doub'le-bar', *n.* இசை இயக்கத்தின் இறுதியைக் குறிக்கும் இரட்டைச் செங்குத்துக்கோடுகள்.

doub'le-barr'elled, *a.* துப்பாக்கி வகையில் இரட்டைக் குழல்களுள்ள; (கட.) குடும்ப மரபைக் குறித்த இணைப்புக் குறியுள்ள; முகமனுரை வகையில் இருபொருள் மயக்கமுள்ள.

dou'ble-bass', *n.* நரப்பிசைக் கருவிவகை.

doub'le-bit'ing, *a.* இருபுறமும் வெட்டுகிற.

doub'le-breast'ed, *a.* இரட்டை மார்புடைய, புற உடுப்பு வகையில் ஒன்றின்மேலொன்று மடிக்கக்கூடிய மார்புகளுள்ள.

doub'le-charge', *v.* துப்பாக்கியில் இருமடங்கு மருந்தடை.

doub'le-cross', *n.* இருபுறமும் காட்டிக்கொடுத்தல்; *v.* இருபுறமும் காட்டிக்கொடு.

doub'le-dagg'er, *n.* அச்சுத்துறையில் இரட்டைக்கத்திச் சின்னம் (‡).

doub'le-deal'er, *n.* ஏமாற்றுக்காரர், ஏமாற்றுபவர்.

doub'le-deal'ing, *n.* வஞ்சகம், இரண்டகம்.

doub'le-decked, *a.* இரட்டை அடுக்குள்ள, இரட்டைத் தளங்களுள்ள.

doub'le-deck'er, *n.* இரட்டைத்தளங்களுள்ள கப்பல்-பொறி வண்டி-உந்துவண்டி முதலியன.

doub'le-decomposi'tion, *n.* இரட்டைச் சிதைவு, இரு கூட்டுப் பொருள்கள் தம்முடைய பகுதிகளைப் பரிமாற்றிக் கொள்ளும் வேதியியல் வினை.

doub'le-Dutch, *n.* தெளிவில்லாத உரையாடல், புரிந்து கொள்ள முடியாத பேச்சு.

doub'le-dyed, *a.* இருமுறை சாயந்தோய்க்கப்பட்ட, மனத்தில் ஆழ்ந்து பதிக்கப்பட்ட.

doub'le-ea'gle, *n.* (கட.) இருதலையுள்ள கழுகுவடிவம்.

doub'le-edged', *a.* இருபுறமும் கூருள்ள; இருபுறமும் வெட்டுகிற; இருபுறச் செயலுள்ள.

doub'le-end'er, *n.* ஒரே மாதிரியான இரு விளிம்புகளுள்ள பொருள்; குறுக்கு நெடுக்காக வெட்டும் இயந்திரம்; மரத்தின் இரு ஓரங்களிலும் வெட்டுகிற வட்ட வடிவ வாள்.

double entendre, *(பிர.) n.* இருபொருட் சிலேடை.

doub'le-en'try, *n.* ஒவ்வொரு கணக்கையும் இருமடியாகப் பதியவைக்கும் கணக்காண்மை முறை.

doub'le-faced, *a.* பாசாங்கான, போலியான.

doub'le-first, *n.* வெவ்வேருன இரு பாடங்களில் தலைமைச் சிறப்புடன் பெறும் பல்கலைக்கழகப் பட்டம்; இரட்டை முதன்மைப் பட்டம் பெறுபவர்.

doub'le-gild, *v.* இருமுறை தங்கமுலாம் பூசு; முகப்புகழ்ச்சி கூறு; மென்மையான சொற்களால் ஏமாற்று.

doub'le-Glos'ter, *n.* 'கிளாஸ்டர்ஷைரி'ற் செய்யப்படும் அதிக சத்துள்ள பாலடைக்கட்டி.

dou'ble-locked', *a.* இருபூட்டுக்களால் பூட்டப்பட்ட, திறவுகோலின் இருதிருப்பங்கள் அல்லது சுழற்சிகளினுல் பூட்டப்படுகிற.

doub'le-na'tured, *a.* இருவிதமான இயல்புகளை ஒருங்கே உடைய.

doub'leness, *n.* இருவகை இயல்புகளை உடைய நிலை; வஞ்சகம், இரண்டகம்.

doub'le-quick', *n.* ஓட்ட நடை; *a.* ஓட்டநடையுடைய; *adv.* ஓட்டநடையில்.

doub'let, *n.* ஆடவர் உட்சட்டை வகை; சொல்விரட்டை, இரட்டைப் பதம்; இருமடி நிகழும் செய்தி; ஈரிணைகளுள் ஒன்று; இருமடிகளில் ஒன்று.

dou'bleton, *n.* ஆட்டக்காரர்க்கு அளிக்கப்படும் சீட்டுத் தொகுதிகளில் இரண்டாக மட்டும் அளிக்கப்படும் சீட்டுக் களின் இணை.

doub'le-tongued', *a.* இரண்டு நாவுள்ள; பிளவுபட்ட நாவுள்ள; முன் சொன்னதை மறுத்துப் பேசுகின்ற; ஏமாற்றுகின்ற, வஞ்சகமுள்ள.

doub'lets, *n. pl.* முரண்படு சொல்லிரட்டை இணை, இரட் டைப் பதங்கள்; இரட்டைக்குழல் துப்பாக்கியால் ஒருங்கே சுடப்பட்ட பறவைச் சோடி; ஒருங்கே எறியப்பட்டு ஒரே எண் காட்டும் பகடை இணை; இரு வில்லைகளை ஒருங்கிணைத்த கண்ணுடிச்சில்லு; இருமடி நிகழும் செய்தி இணைவு.

doub'ling, *n.* இரட்டிப்பாக்குதல்; ஓடும்போது பின்புறம் திரும்புதல்; தந்திரம், சூழ்ச்சி; மடிப்பு, பின்னல்; (கட்.) குடும்ப மரபுச் சின்னத்தில் ஆடைமடிப்புவரை; *a.* திருக்கு மறுக்குச் செய்கிற, சூழ்ச்சி செய்து ஏய்க்கிற.

doubloon', *n.* முற்கால ஸ்பானிய பொன் நாணயம்.

doubt, *n.* ஐயுறவு; ஐயப்பாட்டு நிலை, மனவுறுதியின்மை; தயக்கம்; நம்பிக்கைக்கேடு; உறுதியற்ற நிலை, தெளிவான சான்றின்மை; *v.* ஐயுறவுகொள்; கருத்து வகையில் தள் ளாடு; முடிவுக்கு வராமல் ஊசலாட்டம் கொள்; தயக்கம் காட்டு; அவநம்பிக்கைகொள்; ஏற்கத்தயங்கு; ஐயுறவு எழுப்பு; மாருன முடிபுபற்றி அச்சங்கொள்.

doubt'ful, *n.* ஐயத்துக்கிடமானவர்; ஐயப்பாட்டுக்குரிய செய்தி; *a.* ஐயத்துக்கிடமான; உறுதியற்ற, உறுதிப் படாத; பொருள் உறுதிப்பாடற்ற; இருபொருள் தரத்தக்க; தயக்கத்துக்குரிய; ஐயப்பாடு நிரம்பிய; தெளிவற்ற; நம்பத்தகாத, காப்புறுதியில்லாத; ஐயுறுகிற; தன்னம் பிக்கையற்ற.

doubt'less, *a.* ஐயத்துக்கிடமில்லாத; *adv.* தவருமல், ஐயத்துக்கிடமில்லாமல், உறுதியாக; மறுப்பின்றி.

douceur, (பிர.) *n.* அன்பளிப்பு; கைக்கூலி.

douche, *n.* நீராடலுக்கான பீற்றுநீர்த்தாரை; மருத்துவத் துறையில் உட்கழுவு முறையாகப் பயன்படுத்தப்படும் பீற்றுகுழலின் தாரை; பீச்சாங்குழல்; *v.* நீர்த்தாரையைச் செலுத்து; துருத்தி நீர் படிவித்துக்கொள்.

doucine', *n.* (க-க.) மேற்பகுதி குழிவாகவும் கீழ்ப்பகுதி குவிவாகவும் உள்ள பிழம்புரு.

dough, *n.* பிசைந்த மாவு; அப்ப மாவு; கூழ்மொத்தை.

dough'-baked, *a.* பாதி வெந்த; அறிவுக்குறைபாடுள்ள.

dough'-boy, *n.* பொதியப்பம், பழம் பொதிமா வேவல்; வெந்த மாவுருண்டை.

dough'nut, *n.* கொழுப்பில் வதக்கியெடுத்த இனிப்புக்கலந்த மாவு.

dought'y, *a.* உரமிக்க, வீரமுள்ள; ஊற்றமுள்ள; வலி வுடைய; அஞ்சத்தக்க, வெல்லமுடியாத.

dough'y, *a.* பிசைந்த மாப்போன்ற; மென்மையான.

Dou'khobors, *n. pl.* படைப் பணியிற் சேர மறுத்ததனால் துன்புறுத்தப்பட்டமை காரணமாக ருசியாவிலிருந்து (Russia) கனடாவுக்குப் (Canada) பெருவாரியாகக் குடி யேறிய சமயப்பிரிவினர்.

doum', **doum'-palm,** *n.* எகிப்திய பனைமர வகை.

douse[1], *n.* பலத்த அடி; *v.* அடி, தாக்கு.

douse[2], *v.* கப்பற்பாய் இறக்கு; கப்பற்பக்கக் காலதர்களை மூடு; விளக்கை அணை, மேலே நீர்வார், தோய்வி, நீங்கு நனையச்செய்.

dous'er, *n.* திரைப்படம் காட்டும் கருவியில் ஒளியை ஊடறுப் பதற்கான அடைப்பு.

dove, *n.* புரு; (கிறித்தவம்) தூய ஆவி; மனப் புனிதத்தின் சின்னம், பணிவிணக்கத்தின் திருவுரு; நற்செய்தி கொண்டு வருபவர், அமைதித்தூதர்; அன்புக்குரியவர்; *v.* புருவைப் போல் நடத்து.

dove'cot, dove'cote, *n.* புருக்கூடு, புருமாடம்; (தொ.) flutter the dovecots, அமைதியான மக்களுக்குக் கிலியூட்டு.

dove'-eyed, *a.* அமர்ந்த பார்வையுள்ள.

dove'-house, *n.* புருக்கூடு.

dove'let, *n.* புருக்குஞ்சு.

dove'like, *a.* புருப்போன்ற, கபடமற்ற, மனத்தூய்மை யுள்ள.

Dov'er's powd'er, *n.* (மரு.) அபின்-தென் அமெரிக்க பூண்டுவகையின் வேர்-சாம்பரக்கந்தகை அல்லது பாலின் இனிப்புச் சத்து ஆகியவற்றிலிருந்து செய்யப்பட்டு வியர்வை உண்டாக்கி நோவகற்றும் மருந்துவகை.

dove's'-foot, *n.* காட்டு ரோசாப்பூச்செடி வகை.

dove'tail, *n.* இசைப்புக்கூர், புரு வாற்சந்து; பசம்பை; *v.* சரியாகப் பொருத்து, கழுந்திட்டிசை, பசம்பை கடாவு; கண்ணறுத்துப் பொருத்து; இறுகப்பொருந்து.

dow, *n.* 200 டன் நிறையுடைய ஒரே பாய்மரமுள்ள அரபிக் கடல் கப்பல்; அராபிய கப்பல்.

dow'ager, *n.* இறந்துபோன கணவரிடமிருந்து பெற்ற உரிமை அல்லது உடைமையுடைய மாது.

dowd, dowd'y, *n.* பகட்டாயிராத இழி தோற்றமுள்ள அணங்கு, நாகரிகப் பாங்காயிராத மாது; *a.* (உடுப்பு) பகட்டாயிராத; நாகரிகப் பாங்காயிராத; துப்புக்கெட்ட, அவத்தோற்றமுடைய.

dow'el, *n.* நெம்பு, இணைப்பாணி, மரத்துண்டுகள் கற்கள் முதலியவற்றைப் பொருத்துவதற்கான மரம் அல்லது உலோகத்தாலான தலைப்பில்லாத ஆணி; *v.* தைத்து இறுக்கு.

dow'er, *n.* கைம்மைக்காலத்துக்கென விடப்படும் பொருள்; சீதனம், சீர்வரிசை, மணமகள் கணவன்வீட்டுக்குக் கொண்டு வரும் உடைமை; இயற்பண்பு, இயற்கைத்திறம், இயல் வாய்ப்பு; *v.* மணமகளுக்குச் சீர்வரிசை கொடு; இயற் பண்பாக அமையப் பெறுவி.

dow'er-house, *n.* கைம்பெண்ணுக்கென விடப்பட்டுள்ள வீடு.

dowl'as, *n.* முரட்டுநார்த் துணி வகை.

down[1], *n.* தூவி, மெத்தை முதலியவைகளில் இட்டு நிரப்பப் படும் மெல்லிறகு; முகமீதுள்ள மென்பட்டுப் போன்ற குறு மயிர்த்துய்; பழங்கள்மீதுள்ள மென்துய்; பஞ்சுபோன்று மெத்தென்றிருக்கும் பொருள்.

down[2], *n.* தேரி, மணல்திட்டு, மணற்கரை; மரங்களற்ற மேட்டு நிலம்; மேட்டு நிலப்பரப்பு.

down[3], *n.* இறக்கம்; தாழ்நிலம், பள்ளம்; வாழ்வின் தாழ் வுக் காலம், போதாக்காலப் பகுதி; கீழே எறிதல், போடுதல்; கீழே வைத்தல்; கீழடக்கி வைத்தல், அமுக்குதல்; *a.* கீழ் நோக்கிய; கீழ்நோக்கிச் செல்கிற; கீழ்நிலையடைகிற; மையத்தி லிருந்து புறம்நோக்கிய, புறஞ்செல்கிற; தாழ்ந்த; ஊக்கங் குன்றிய; *v.* கீழே மோதித் தள்ளு; கீழே எறி; கீழிடு, கீழ்வை; அடக்கு, வென்று வீழ்த்து; ஊக்கங்கெடு; *adv.* கீழே; மேலிருந்து கீழாக; மேட்டிலிருந்து பள்ளம் நோக்கி; கீழ்த்தளத்தில்; தாழ்வாக; நிலத்தளத்தில்; தாழே, அடியில்; நிலத்தளத்துக்கு அடியில்; மேற்பரப்புக்கு அடியில்; கீழ்நிலையில், தாழ்நிலையில்; நீரில், நீரடியில், ஆழத்தில், வெள்ளத்தினுள்; வீழ்ச்சியடைந்து; வீழ்ச்சி யுற்ற நிலையில்; கையற்ற நிலையில்; தாழ்த்தப்பட்ட நிலையில்; பணிந்து, சரணடைந்து; முடிவுற்று; போக்குநின்று, வேகம் ஒய்ந்து; ஊக்கங்குன்றி; அமைந்து, ஓய்வு நிலை யுற்று; ஓசை ஒடுங்கி; பேசவொட்டாமல் ஆக்கி; செயல் முற்றுவித்து, ஒடுக்க நிலைப்பட; தோல்வியுற்று; துய ரார்ந்து; கேட்டுக்காளாகி, பாதகநிலையடைந்து; நோயுற்று; பின்தங்கி; மைய இடத்திலிருந்து விலகி, புறநோக்கி; வடக்கினின்று தெற்காக; காற்றடிக்கும் பக்கமாக, கப்பலில் காற்றெதுக்கப் பக்கமாக; நீரோட்டத்தின் பக்கமாக,

ஆற்றின் விழுவாய்நோக்கி; இறங்குமுகமாக; பெரியதிலிருந்து சிறியதுநோக்கி; செறிவுநிலையிலிருந்து தளர்வுநிலை நோக்கி; முனைப்பு நிலையிலிருந்து கலிவுநிலை நோக்கி; அருந்தல் நிலையிலிருந்து மலிவுநிலை நோக்கி; தொலைவிலிருந்து அருகில்; கணக்கியல் தொடரில் மற்றும் கீழாக ஒரு படிவரை; குறிப்பிட்ட காலத்திலிருந்து பின்வரும் காலப்பகுதி வரை; நிகழ்காலம் நோக்கி, நிகழ்காலம்வரை; முற்ற, முடிய; எழுத்துருவில்; உடனடியாக; கைமேற்பணமாக; பாய ஆயத்தமாக; எதிர்ப்பில் விழிப்புடன்; *prep.* நெடுக, நெடுகிலும்; ஊடாக, ஊடே; உள்ளூடாக, உள்ளே; கீழ்ப்பகுதியில்; ஆற்றில் விழுவாய் நோக்கிய பக்கமாகச் சிறிது தொலைவில், விழுவாய் நோக்கிய பக்கமாக; முகட்டிலிருந்து அகடுவரை; *int.* ஆழ்க! வீழ்க! ஒழிக! பாழ்படுக! (தொ) be down on, திடீரென மேலே பாய்ந்து பிடி; கடுமையாயிரு, கடுமையாக நடந்துகொள்; down and out, குத்துச்சண்டையில் மீண்டும் போரிட முடியாத நிலையில்; வாழ்க்கைப் போராட்டத்தில் அடிபட்டுத் தீரக் கீழ்ப்படைந்த நிலையில்; down at heel, மிதியடி வகையில் தேய்வுற்ற குதிகால் பகுதியுடன்: தேய்வுற்ற குதிகால் பகுதியுடன் கூடிய மிதியடியை அணிந்துகொண்டு; ஒழுங்கற்று; down in the mouth, முகவாட்ட மடைந்து, உளஞ்சோர்ந்து; down on one's luck, போதாக்கால இடர்ப்பாட்டிற் சிக்கி; down to the ground, முற்றிலும்; down town, நகருக்குள், நகரின் நடுவே; down under, நில உலகின் நேர் எதிர்முனையில்; down with, அடக்கு, கண்டி; விழுங்கு, ஏற்றுக்கொள், நம்பு; get down, விழுங்கு; இறங்கு, இறங்கிச்செல்; go down, இறங்கு; இறங்கிச்செல்; தாழ், அமிழ்ந்துபோ; go down with, ஏற்றுக்கொள்ளத்தக்கதாயிரு: put down, set down, take down, தாள்மீது எழுதிவை; up and down, மேலுங்கீழும், அங்குமிங்கும், முன்னும்பின்னும்.

down'-and-out', *n.* குத்துச்சண்டையில் மீளமுடியாது அடிபட்டவர்; வாழ்க்கையில் தோல்வியுற்றவர்; துணையற்றவர்; *a.* வாழ்க்கை வளமிழந்த.

down'-and-out'er, *n.* குத்துச்சண்டையில் மீளமுடியாது அடிபட்டவர்; வாழ்க்கை வளமிழந்தவர்; ஏலாதவர், வறியர்.

down'-beat, *n.* இசையியக்குநரது கோலின் கீழ்நோக்கிய இயக்கம்; வலிந்த இயக்கம்.

down'bow, *n.* நரப்பிசைக்கருவியில் குமிழ்நுனி மீதிருந்து நரம்புகள் மீதான இயக்கம்.

down'cast[1], *n.* உள்காற்றோட்டம், சுரங்கத்தினுட் செல்லும் காற்றோட்டம்; உள்காற்றோட்ட வழி.

down'cast[2], *n.* கீழ்நோக்கிய எறிவு; *a.* வாட்டமுற்ற; முகந்தொங்கவிட்ட, கீழ்நோக்கிய.

down'cast-shaft', *n.* சுரங்கத்தினுள் காற்றோட்டத்தைக் கொண்டுசெல்லும் வழி.

down'come, *n.* வீழ்ச்சி, அழிவு; கடுமழை.

down'fall, *n.* மழை முதலியவற்றின் பெரும் பொழிவு; வீழ்ச்சி, வாழ்க்கைவளமுறிவு, அழிவு, தோல்வி, தாழ்வு.

down'fallen, *a.* அழிவுற்ற, வீழ்ச்சியடைந்த.

down'grade, *n.* கீழ்நோக்கிய சரிவு அல்லது வழி; *a.* இறக்கமாயிருக்கிற, சரிவாயிருக்கிற, *v.* படியிறக்கு, மதிப்புக்குறை, புல்லெனக்கருது; *adv.* இறங்கி, சரிந்து.

down'-haul, *n.* கப்பலின் பாயினைக் கீழே இறக்குதற்குத் துணைசெய்யும் கயிறு.

down'-heart'ed, *a.* உள்ளம் சாம்பிய, மனம் வாடிய.

down'hill'[1], *n.* கீழ்நோக்கிய சரிவு, சாய்வு, இறக்கம்; *a.* கீழ்நோக்கிச் சரிகிற, சரிவில் இறங்குகிற, சரிவான, சாய்வான.

downhill'[2], *adv.* இறங்குதிசையில், சரிவில், இறக்கமாக.

Down'ing Street, *n.* லண்டன் (London) நகரில் முதலமைச்சர் பணிமனையும் அரசாங்க அலுவலகங்களும் உள்ள தெரு; பிரிட்டிஷ் அரசாங்கத் தலைமையிடம்; பிரிட்டிஷ் அரசாங்கம், பிரிட்டனின் நாளரசு.

down'-line, *n.* தலைநகரிலிருந்து வெளிச்செல்லும் இருப்புப் பாதை.

down'-ly'ing, *n.* ஓய்வெடுத்துக்கொள்ளும் நேரம்; பெண் கருவுற்றிருக்கும் நிலை; *a.* ஓய்வெடுத்துக்கொள்கிற; கருவுற்றிருக்கும் வேளைக்குரிய; *adv.* ஓய்வுகொள்ளும் நிலையில்; கருவுற்றிருக்கும் நிலையில்.

down'most, *a.* மிகக் கீழான; *adv.* மிகக்கீழே.

down'pour, *n.* மழையின் பெரும்பெயல், மிகுபொழிவு.

down'right, *a.* வெளிப்படையான, ஒளிவுமறைவற்ற; கட்டுறுதியான, தீர்க்க, ஐயத்துக்கிடமில்லாத; நேர்முகமான; *adv.* ஒளிவுமறைவின்றி; தீர, முற்றும், ஐயத்துக்கிடமற்ற நிலையில்.

down'rush, *n.* கீழ்நோக்கிய பாய்வு, பாய்ச்சல்.

downs, *n. pl.* தென் இங்கிலாந்தில் ஏற்ற இறக்கங்களுடன் மேய்ச்சலுக்கு உதவும் மேட்டுநிலப்பரப்பு.

down' sett'ing, *n.* கண்டித்தடக்குதல்.

down'-sitt'ing, *n.* கீழே அமர்தல்; ஓய்வுநேரம்.

down'stage', *a.* நாடக அரங்கின் முன்புறத்துக்குரிய; *adv* அரங்கின் முன்புறத்தை நோக்கி, அரங்கின் முன்புறத்தில்.

down'stair, *a.* கீழ்த்தளத்திலுள்ள, கீழ்த்தளத்துக்குரிய.

down'stairs[1], *n.* கீழ்த்தளம், கீழ்த்தளத்திலுள்ள இடம்; *a.* கீழ்த்தளத்திலுள்ள; கீழ்த்தளத்துக்குரிய.

downstairs'[2], *adv.* கீழ்த்தளத்தில், கீழ்த்தளம் நோக்கி.

down'stream[1], *a.* நீரோட்டத்துடன் செல்கிற; நீரோட்டததில் இன்னும் கீழ்ப்பாலுள்ள.

downstream'[2], *adv.* நீரோட்டத்திசையில்.

down'stroke, *n.* எழுதும்போது கீழ்நோக்கி இழுக்கப்படும் கோடு.

down'throw, *n.* கீழே எறிதல்; கீழே எறியப்பட்ட நிலை; (மண்.) பிளவுற்ற அடுக்குகள் ஒரு பக்கம் சாய்வுபெற்றிருக்கும் நிலை.

down'-tools', *v.* நாள்வேலை நிறுத்து, வேலைநிறுத்தம் செய்.

down'town', *a.* நகரின் தாழ்வான பாகத்திலிருக்கிற; நகரின் உட்பகுதி சார்ந்த; *adv.* நகரின் தாழ்வான பாகத்தில்; நகரின் தாழ்வான பாகம் நோக்கி; உள்நகரில்; உள்நகர் நோக்கி.

down'-train, *n.* மையத்திலிருந்து புறப்பட்டுச்செல்லும் புகைவண்டி.

down'trod, down'-trodden, *a.* மிதித்துத் துவைக்கப்பட்ட; அடக்கியொடுக்கப்பட்ட; கொடுமைக்குட்படுத்தப்பட்ட.

down'-turn, *n.* கீழ்நோக்கிய போக்கு, தளர்வு.

down'ward, *a.* கீழ்நோக்கிய; கீழ்த்தளம் நோக்கிச்செல்கிற; கீழ்முகமான; கீழ்நிலைநோக்கிய; இழிவுநிலை நோக்கிச்செல்கிற; நிலவுலக மைய நோக்கிய; விழுவாய்நோக்கிச்செல்கிற, விழுவாயின் பக்கமுள்ள; இறங்கிச் செல்கிற; கீழ்நோக்கிச்சரிகிற; தாழ்வான; தாழ்பகுதி சார்ந்த; வாட்டமுள்ள; நிகழ்காலமை நோக்கிய, பிற்பட்டகாலம் நோக்கிய; காலமரபு வழிப்பட்ட; *adv.* கீழ்நோக்கி; கீழ்த்தளம் நோக்கி; கீழ்முகமாக; இழிநிலைநோக்கி, தாழ்வான நிலைக்கு இழிந்து; இறங்குமுகமாக; முற்காலத்திலிருந்து பிற்பட்ட காலத்தை நோக்கி; மரபுவழியில்; விழுவாய்ப் பக்கமாக; கீழிடத்தில், கீழ்ப்பகுதியில்.

down'wardness, *n.* தாழ்நிலை; அமிழும்பண்பு.

down'wards, *adv.* = downward.

down'y[1], *a.* தூவிபோர்த்த; மெல்லிறகுகளால் இயன்ற; தூவிபோன்ற; பட்டுப்போன்ற மென்மயிர் போர்த்த; மென்மயிர் இயல்புடைய.

down'y[2], *a.* பாலைமேட்டுநிலம் போன்ற; பாலைமேட்டுநிலத்துக்கு உரிய.

dowr'y, *n.* சீதனம், பரிசம், பரியம், திருமணத்தின்போது மனைவி கணவன் வீட்டுக்குக் கொண்டுவரும் உடைமை; இயற் பண்பு, இயல்புத் திறம்.

dowse, *v.* மண்ணின்கீழே தண்ணீரோ கனிப்பொருளோ இருப்பதைக் கண்டுபிடிக்க உதவும் கோலைப் பயன்படுத்து.

dows'er, *n.* மண்ணின்கீழே தண்ணீரோ கனிப்பொருளோ இருப்பதைக் கண்டுபிடிப்பவர்.

dows'ing, *n.* அடிநில ஊற்றுய்வு, அடிநிலக்கனியுண்மை ஆய்வு, மண்ணின் அடியில் தண்ணீரோ கனிப்பொருளோ இருப்பதைக் கண்டுபிடிக்க உதவும் கோலைக்கொண்டு அவற்றைத் தேடுதல்.

doxo'logy, *n.* கடவுட் புகழ்ச்சி வாய்பாடு.

dox'y [1], *n.* சமயமுடிவுகள் பற்றிய கருத்து.

dox'y [2], *n.* பிச்சைக்காரப்பெண்; விலைமகள்.

do'yen, *n.* மூப்பர், சங்கத்தின் மூத்த உறுப்பினர்; தூதுக் குழுவின் முதல்வர்.

doze, *n.* சிறுதுயில், அரையுறக்கம்; *v.* சிறுதுயில்கொள்; அரைத் தூக்கத்திலிரு; சோம்பிய அல்லது உணர்வுமழுங்கிய நிலையிலிரு, சோம்பலாகக் காலங்கழி.

do'zen, *n.* (*sing.* & *pl.*) பன்னிரண்டன் தொகுதி, பன்னிரண்டு; *a.* பன்னிரண்டன் தொகுதியான, பன்னிரண்டான; (தொ.) baker's dozen, devil's dozen, long dozen, printer's dozen, பதின்மூன்று.

do'zens, *n.* *pl.* ஒவ்வொன்றும் பன்னிரண்டுகொண்ட வேறு வேறு தொகுதிகள்; பன்னிரண்டு கணக்கிலுள்ள தொகுதி.

do'zy, *a.* அரைகுறைத்தூக்க நிலையிலுள்ள; அழுகத் தொடங்குகிற.

drab [1], *n.* பரத்தை, விலைமகள்; *v.* விலைமகளிருடன் உறவாடு.

drab [2], *n.* மங்கலான இளம்பழுப்பு நிறம்; கனத்த உறுதியான பழுப்புத்துணி; சுவர்ச்சியின்மை, வேறுபாடில்லாமை, சலிப்பு; *a.* மங்கலான இளம்பழுப்பு நிறமுள்ள; கவர்ச்சியற்ற, வேறுபாடில்லாத, சலிப்புத்தருகிற.

drabb'et, *n.* தொழிலாளியின் மேலாடையாகப் பயன்படும் முரட்டு நார்த் துணியுடை.

drab'ble, *v.* நீரில் துளைந்துசெல், நீர்தெறிக்கும்படி போ; நீர் அல்லது சேற்றைக்கொண்டு நனைத்து அழுக்காக்கு.

drabb'ling, *n.* நீண்ட கயிறுடன் கூடிய தூண்டிலைக் கொண்டு நன்னீர் மீன்வகையினைப் பிடிக்கும் முறை.

drabb'y, *a.* கீழான, ஒழுக்கங்கெட்ட.

Dracaen'a, *n.* குங்கிலிய வகை தருவதற்குப் பேர்போன கானரித் தீவுகளைச் (Canary Islands) சேர்ந்த மர இனம்.

drachm, *n.* பண்டைய கிரேக்க (Greek) வெள்ளிநாணயம்; எடுத்தலளவைக்கூறு (60 கிரெய்ன் அல்லது அரைக்கால் அவுன்சு); சிறிதளவு.

drach'ma, *n.* பண்டைய கிரேக்க (Greek) வெள்ளி நாணயம்; தற்கால கிரேக்க நாணயம்; பண்டைய கிரேக்க எடுத்தலளவைக்கூறு; *pl.* drach'mae, drach'mai, drach'mas.

Dracon'ian, Dracon'ic, *a.* சட்டங்கள் வகையில் கடுமையான, விடாக்கண்டிப்பான, கொடுமையான.

draff, *n.* மண்டி; கழுநீர்; சக்கை, கழிவு; கழிசாக்கடை.

draff'ish, draff'y, *a.* பயனற்ற.

draft, *n.* இழுவை, இழுக்கப்படும் பொருள், சுமை; தெரிந்தெடுத்தல்; பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள், சேனைத்தளம்; படைப்பிரிவில் ஒருவர்; உண்டியல், காசோலை; வேண்டுதல், பணம் எடுக்க வேண்டிய தேவைநிலை, வளம் பயன்படுத்த வேண்டிய நிலைமை, பண்பின் தேவை; திட்டம்; முன்வரிவு; பூர்வாங்கத்திட்ட வரைவு; (க-க.) கல்முகப்பின் ஓரத்தில் உளிகொண்டு ஒழுங்கு செய்தல்; *v.* வரைச்சட்டம் எழுது; முன்னீடான உருவரை தீட்டு; தெரிந்தெடு, ஆய்ந்தெடு, பிரித்தெடு, பொறுக்கு; முன்வரிவு செய்; (க-க.) கல்முகப்பின் ஓரத்தில் உளிகொண்டு ஒழுங்குசெய்.

draft'er, *n.* முன்வரிவமைப்போர், எழுத்துப்படிவம் உரு வாக்குபவர்.

draft'-horse, *n.* பாரம் இழுக்குங் குதிரை.

drafts, *n.* = draughts.

drafts'man, *n.* உருவரைப்படங்கள் எழுதுபவர்; ஆவணங்களை வரைபவர்; மசோதாக்களை உருவாக்குபவர்.

drag, *n.* இழுவை, இழுக்கப்படும்பொருள்; இழுப்பு, சுணக்கம்; வானூர்தியில் ஊடச்சின் நெடுகக் கிடக்கும் காற்றின் விரைவியக்கப்பகுதி; பாதாளக்கரண்டி; கனத்த பரம்பு, முரட்டுச் சம்மட்டி; மரக்கட்டையை இரம்ப வாய்க்குக் கொண்டு செலுத்துதற்கான பொறியமைப்பு; அஞ்சல் வண்டி; குறுக்காக இருக்கைகள் உள்ள கூண்டில்லாத நீண்ட வண்டி; இறங்கு சரிவிற் செல்லும் வண்டிச்சக்கரத் தடைக்கட்டை; முன்னேற்றத்தடை; மோப்பநெறி; நரி வேட்டையாடும் நாய்கள் பின்பற்றிச் செல்வதற்காக தரையின்மேல் இழுக்கப்படும் செயற்கை மோப்ப அமைவு; மேடைக்கோல் பந்தாட்டத்தில் பந்தின் மையத்துக்குச் சற்றுக் கீழே தட்டுவதனால் விளையும் அப் பந்தின் தடைப்பட்ட செலவு; மந்த இயக்கம்; இழுப்பு வலை; உரம் வாரி; *v.* பிடித்து இழு; மெல்ல இழு; நிலமீது உராயவிட்டு இழுத்துச்செல்; வலுக்கட்டாயமாக முரட்டுத்தனமாய் இழு; மோப்பம்பிடித்துச் செல்; பரம்படி; பாதாளக்கரண்டி போட்டுத் தேடு; தடைப்பொறி பொருத்து; தரையிற் படருமாறு தொங்கு; வலுக்கட்டாயமாக இழுபட்டுச் செல்; கனத்த அடி வைத்து மெதுவாகச் செல், பின்தங்கு, மெல்ல நட; மிக மெதுவாயிருப்பதாகத் தோன்று; இழுத்துப் பறித்துக்கொண்டிருப்பதாகத் தோன்று; சோம்பியிரு; (தொ.) drag one's feet, செயலில் விருப்பமில்லாது தயங்கு, மிக மெள்ளச்செய்.

drag'-bar, *n.* இருப்பூர்திவண்டிகளை இணைப்பதற்குப் பயன்படுங் கோல்.

drag'-chain, *n.* சக்கரத்தின் இயக்கத்தைத் தடைப்படுத்தும் பொறியாகப் பயன்படுத்தப்படும் சங்கிலி; இருப்பூர்தி வண்டிகளை இணைப்பதற்கான சங்கிலி.

dra'gee, *n.* மருந்து-கொட்டை-பழம் முதலியவற்றைப் பொதிந்துள்ள தின்பண்ட வகை.

drag'gle, *v.* தரையின்மேல் இழுத்து நனைத்து அழுக்காக்கு; தரையின்மேல் நீண்டு தொங்கிக்கொண்டே இழுபட்டுச் செல்; பின்தங்கு, பின்தங்கித் திரி.

dragg'le-tail, *n.* தூய்மையற்றவள், பாங்கற்றவள், சீர்கேடி.

drag'hound, *n.* மோப்ப நெறியைப் பின்பற்றிச்செல்லப் பழக்கப் பெற்றுள்ள நரிவேட்டை நாய்.

drag'-man, *n.* இழுவலையைப் பயன்படுத்துஞ் செம்படவர்.

drag'-net, *n.* இழுவலை, நீருக்கடியில் அல்லது தரைநெடுக இழுப்பதற்குரிய வலை.

drag'oman, *n.* கீழைநாடுகளில் உள்ள மொழிபெயர்ப்புத் துணைவர்; வழிகாட்டி; *pl.* drag'omans, drag'omen.

Drag'on [1], *n.* (வான்.) வடமீன்குழுக்களுள் ஒன்று.

drag'on [2], *n.* புராணகதைகளில் விலங்கு பறவை பாம்பு முதலை ஆகியவற்றின் தோற்றம் கலந்த நெருப்புயிர்க்கும் பாரிய விலங்கு வகை, வேதாளம்; அச்சந்தரும் மனிதர்; விழிப்பாயுள்ளவர்; பெண்ணினத்தின் பாதுகாவலர்; வளர்ப்புத்தாய்; பட்டம், காற்றாடி; (வில.) மரம்வாழ் சிறு பல்லிவகை; புரூவகை; மருந்துச்செடியின் வகை; *fem.* drag'oness.

drag'onfly, *n.* தும்பி வகை.

dragonnade', *n.* பிரான்சில் பதினான்காம் லூயி மன்னர் (Louis XIV) ஆளுகையில் குதிரைப்படைத் துப்பாக்கிவீரர்களைக்கொண்டு புரோட்டஸ்டாண்டுகள்மீது (Protestants) நடத்தப்பட்ட அடக்குமுறை; *v.* படைவீரர்களை ஏவி அடக்குமுறை அட்டூழியம் செய்.

drag'on's-blood, *n.* குங்கிலிய வகை.

dragoon', *n.* குதிரைப்படைவீரன்; மூர்க்கத்தனமான முரடன்; நெருப்புமிழும் புருவகை; பழங்காலக் கைத்துப்பாக்கி; *v.* படைவீரர்களை ஏவி அட்டூழியம் செய், துன்புறுத்தி வலுக் கட்டாயப்படுத்து.

drags'man, *n.* அஞ்சல்வண்டி வலவர்.

drail, *n.* மீன்பிடிக்கையில் நீரினூடே ஆழத்திற்போட்டு இழுப்பதற்காக ஈயத்துண்டு கட்டியுள்ள முள்ளுடன்கூடிய தூண்டில் கயிறு; கலப்பையிற் குதிரைகள் பூட்டப்படும் இரும்பு நுகம்; *v.* தரைமேல் இழுபட்டு நீண்டு அழுக்காகு.

drain, *n.* நீர்க்கால், வடிகால், கால்வாய், சாக்கடை; குழி, பள்ளம்; இடைவிடாத செலவழிவு, ஓயாப்புறப்போக்கு; வலுக்கேடு; அறுவையில் கூட்டி முதலியவற்றிலிருந்து சீழ் அழுக்குநீர் ஆகியவற்றை வடிப்பதற்கான குழல்; *v.* படிப்படியாக வடித்தெடு, வடிகட்டு; குழாய் வழியாக வடி; நீர் முதலியவற்றைப் பருகு; கலத்தை வெறுமையாக்கு; நிலம் முதலியவற்றில் நீர்போக்கு; மிகைநீரை வெளியே கொண்டு சேல்; உடைமை இழக்கச்செய்; கசிந்தொழுகு, ஆற்றல் இழக்கச் செய்; பிலிற்று; பாய்; ஈரம் போக்கு; நீர்ப்பொருள் வடிவதற்குத் துணைசெய்.

drain'age, *n.* வடிமானம்; வடிகால்களின் அமைப்பு; நீர்த் தாரை ஏற்பாடு; வடிக்கப்படும் பொருள், சாக்கடை நீர்.

drain'age-basin, *n.* ஆற்றினுல் மிகைநீர் வடிக்கப்பெறும் நிலப்பாப்பு.

drain'age-tube, *n.* சீழ் முதலியவற்றை வடித்தெடுப்பதற்கான குழல்.

drain'er, *n.* வடிதட்டு, வடிகலம்.

drain'-trap, *n.* தீவளி வெளிச்செல்ல விடாமலே வடிநீர் விழும்படியாக அமைக்கப்பட்டுள்ள சாக்கடை அமைவு.

drake[1], *n.* ஆண் வாத்து; 'தத்தெறி' (ducks and drakes) விளையாட்டில் நீரின் மேற்பரப்பில் தத்திச் செல்வதற்காக எறியப்படும் தட்டைக்கல்; (தொ.) make ducks and drakes, play ducks and drakes, தட்டைக்கற்கள் நீரின்மேல் தத்திச் செல்லுப்படி எறி; கண்மூடித்தனமாகப் பயன்படுத்து; வீண்செலவு செய், பாழழிவு செய்.

drake[2], *n.* பறவை நாசம்; எரிமீன்வகை; ஸ்காண்டினேவிய (Scandinavian) கடற்கொள்ளைக் கூட்டத்தாரது போர்க்கப்பல்; மீன் பிடிப்பதில் பயன்படுத்தப்படும் விரைந்தழியும் பூச்சி வகை.

drake'stone, *n.* 'தத்தெறி' கல்.

dra'lon, *n.* செயற்கைப்பஞ்சு, பருத்திக்குப் பதிலாக உருவாக்கப்பட்ட செர்மன் இழைமம்.

dram, *n.* 'அவுன்ஸ்' (ounce) என்னும் எடுத்தலளவையில் பதிசக் கூறு; ஒருமிடறு வெறியநீர்ப் பானம்; சாராயக்குடி; *v.* ஒருமிடற்று வெறியநீர்ப் பானம் குடி; ஒருகிண்ணம் வெறியநீர்ப் பானங் கொடு.

dra'ma, *n.* நாடகம்; மேடை நடிப்பு; நாடகக்கதை; நாடகக்கலை; நாடக இலக்கியம்; நாடக ஏடு; மேடைக் களியாட்டம்; நாடகம் போன்ற நிகழ்ச்சிகளின் தொகுதி; பெரிதும் கருத்தைக் கவரும் நிகழ்ச்சிகளின் கோவை.

dramat'ic, dramat'ical, *a.* நாடகம் சார்ந்த; நாடகவடிவத்திலுள்ள; அரங்கில் நடித்துக் காட்டுதற்குத் தகுந்த; நடிகருக்குரிய; நாடகத்தின் உணர்ச்சியாற்றலுடைய; உயிர்த்துடிப்புள்ள; திடீர்த் திருப்பங்களுடைய; சட்டென நிகழ்கிற; வியப்புத்தருகிற, மனத்தில் பதிகிற; படர்க்கைப் பாடான, பிறிதுமுக நவிற்சியான.

dramatiza'tion, *n.* நாடகவடிவம் கொடுத்தல்; கதை-புனைகதைகளை நாடக உருவாக மாற்றுதல்; நாடகக்காட்சியாக்குதல்.

dram'atize, *v.* நாடகவடிவத்தில் எழுது, நாடக உருவங் கொடு; நாடகக் காட்சியாக அமை.

dram'atis person'ae, (ல.) *n. pl.* நாடக உறுப்பினர்; நாடகக் கதையுறுப்பினர் பட்டியல்.

dram'atist, *n.* நாடக ஏட்டாசிரியர்.

dram'aturge, dram'aturgist, *n.* நாடக ஆசிரியர்.

dram'aturgy, *n.* நாடக இலக்கணம், நாடக இயல்நூல், நாடகக்கலைக் கோட்பாடுகளின் தொகுதி; நாடகக்கலை.

drank, *v.* drink என்பதன் இறந்தகால வடிவம்.

drape, *n.* திரை, திரைச்சீலை; *v.* துணி முதலியவற்றால் போர்த்து, துணியால் மூடி ஒப்பனைசெய்; துணி முதலியவற்றை அழகாகத் தொங்கவிடு; அழகுமடிப்புகளாக ஒழுங்கு செய்; (தொ.) drape suit, நீண்ட சட்டையும் ஒடுக்கமான காற்குழல்களும்கொண்ட ஆடவர் உடைவகை.

drap'er, *n.* அறுவை வாணிகர், துணிமணி விற்பனை செய்பவர்.

drap'eried, *a.* அழகான துணிமடிப்புக்களால் ஒப்பனை செய்யப்பட்ட, தொங்கல்களால் அலங்கரிக்கப்பட்ட.

drap'eries, *n. pl.* மடிப்புத் தொங்கல்கள்.

drap'ery, *n.* அறுவை வாணிகம், துணிமணி விற்பனைத் தொழில்; ஆடையணிமணிச் சரக்கு; மடியாடை; தொங்கல் ஒப்பனை, திரைச்சீலை மடிப்புத்தொங்கல்; சிற்பத்தில் ஆடை உரு அமைதி; *v.* துணி போர்த்து; திரைச் சீலை தொங்கல் மடிப்புக்களால் ஒப்பனைசெய்.

dras'tic, *n.* (மரு.) கடும் பேதிமருந்து; *a.* வல்லுரமிக்க, தீவிரமான, தீர்க்கமான, முனைத்த; கடுமை வாய்ந்த. கண்டிப்பான, நெளிவு குழைவுக்கிடம் அளிக்காத; (மரு.) கடும் பேதி உண்டுபண்ணுகிற.

drat, *v.* பாழாக்கு; *int.* நாசமாய்ப்போக.

draught, *n.* இழுப்பு; பாரம் இழுப்பு; ஈர்ப்பு, கவர்ச்சி; இழுக்கும் பார அளவு; இழுக்கப்படும் பொருள்; வலை இழுப்பு; இழுவை, ஒருதடவை வலையில் பிடித்த மீன் அளவு; மிடாவைத்திறக்கும் செவ்விநிலை; மிடாவிலிருந்து சாராய வடிப்பு; பருகுதல், குடி; ஒரு தடவை குடிப்பளவு, ஒரு மிடறு; வாயளவு நீர், ஒரு மடக்கு; ஒரு வேளை அருந்தும் சாராயஅளவு; ஒரு வேளை மருந்தளவு; காற்றின் ஒரு வீச்சு; கப்பல் செல்லும் ஆழம்; கப்பல் அமிழ்வளவு; தேர்ந்தெடுத்த படைப்பிரிவு; சரவைக் குறிப்பு, படத்தின் முதல் உருவரைப் படிவம்; முதற்படித் திட்டம்; இருவர் சதுரங்க ஆட்டவகை வட்டு; *v.* படைப்பணிக்கு ஆட்களைப் பொறுக்கியெடு, தேர்ந்தெடு; தரைப்படம் எழுது; முதற் படியான வரிவடிவம் வரை; (தொ.) feel the draught, அல்லற்கால நிலையை உணர்ந்துகொள்.

draught'-animal, *n.* சுமைகளை இழுப்பதற்குப் பயன்படும் விலங்கு.

draught'-bar, *n.* இருப்பூர்தி வண்டிகளை இணைப்பதற்குப் பயன்படுங்கோல்.

draught'board, *n.* இருபத்துநான்கு காய்களை வைத்து ஆடும் விளையாட்டு வகைக்குரிய சதுரங்கப்பலகை.

draught'-engine, *n.* நிலக்கரிச் சுரங்கவழியின் மேலுள்ள பொறி.

draught'er, *n.* சுமை இழுக்கும் குதிரை.

draught'-hooks, *n. pl.* பீரங்கி வண்டியின் பக்கங்களிற் பொருத்தபடும் பெரிய இரும்புக் கொளுவிகள்.

draught'-horse, *n.* பாரமிழுக்கும் குதிரை.

draught'man, *n.* சதுரங்கப்பலகை வைத்து ஆடும் விளையாட்டு வகைக்குப் பயன்படும் காய்.

draught'-net, *n.* இழுவலை.

draughts, *n.* இருவர் சதுரங்கப் பலகையின்மீது ஒருவர் விட்டொருவராகக் காயசைக்கும் விளையாட்டு.

draught'-screen, *n.* காற்றுவீச்சினைத் தடுப்பதற்கான மறைப்பு.

draughts'man, *n.* வரைவு வல்லார்; படம் வரைதற்கு அமர்த்திக்கொள்ளப்பட்டவர்; ஆவணங்களின் வரைவு எழுதுபவர்: *pl.* draughts'men; *fem.* draughts'woman.

draught'y, *a.* காற்றுவீச்சு மிக்குள்ள.

Dravid'ian, *n.* திராவிடர்; திராவிடமொழி; தமிழ்-தெலுங்கு-கன்னடம்-மலையாளம் முதலிய மொழிகளின் குழுவில் ஒரு மொழி; *a.* திராவிட, திராவிட இனத்துக்குரிய, திராவிடருக்குரிய.

draw, *n.* உருவுகை; இழுப்பு; வரைவு; துப்பாக்கி முதலியவற்றின் திடீர உருவல்; உருவப்பட்டது; வரையப்பட்டது, ஒருதடவை வரைவு; இழுவை, ஒருதடவை இழுக்கப்பட்டது; சோர்வு; கவர்ச்சி, கருத்தீர்க்கும் பண்பு; கருத்தீர்க்கும் பொருள்; சீட்டுக் குலுக்கீடு, பெயர்ப்பட்டியலின் தேர்வுக் குலுக்கீடு; விற்பனையிற் கையாளப்படும் யோகச் சீட்டு முறை; குலுக்கீட்டுத் தேர்வினால் வகுத்தமைக்கப்படும் தொகுதி; வெற்றிதோல்வி உறுதிபெறுத விளையாட்டின் தயக்கநிலை; தூண்டுரை, வாயைக் கிளறிச் செய்தி வருவிப்பதற்குரிய பேச்சு; தூண்டுமொழி, ஆர்வத்துடன் பேச வைப்பதற்குரிய தூண்டுதலுரை; தொங்கு பாலத்தின் இயங்குறுப்பு; *v.* இழு; இழுத்துச்செல்; கட்டியிழு; ஒருங்கிழு; இட்டுச்செல்; இறை; உருவு; பிரித்தெடு, வெளியே எடு; இழுத்துச் சுருக்கு; சுருக்கவை; இழுக்கப் பெறு; சுருங்கு, சுரி; வெட்டியிழு, சுண்டு; பிடுங்கு, பறி; வெறுமையாக்கு; திரையினை இழுத்துவிலக்கு, இழுத்திணை; வில்லினை வளை; மூச்சுவாங்கு; தேக்கு; திரட்டு; தேங்கு; கூடு, திரள்; வடியவிடு; சாறிறக்கு, பிழி; வெளிக்கொணர்; தோற்றுவி; வரவழை; விளைவி; வாயைக்கிளறு; செயல் தூண்டு; சூழ்ச்சியால் பெறு; கோடு கீறு; வரை தீட்டு; வரைபயிற்சி பெறு; படம் எழுது; உருவரை பதிவி; விளக்கியுரை; விரித்தெழுது; ஆவணம் எழுதி எடு; பத்திரம் உருவாக்கு; கவர்; ஈர்; உறிஞ்சு, உட்கொள்; கவர்ச்சியூட்டித் தூண்டு; ஊகித்துணர், முடிவை வருவி; நீட்டு; விரிவுறுத்து; முழுதுற நீள், விரிவுறு; காலதாமதம் செய்; பின்னுக்கு இழு; பின்வாங்கு; குலுக்கியெடு; சீட்டுக்கலைத்தெடுப்பு மூலம் பெறு; சீட்டு இறக்குவி; சீட்டு ஆடும்படி செய்; பெறு, எய்தப் பெறு; சேமிப்பிலிருந்து எடு; ஊதியமாக அடை; வருவாயாகப்பெறு; கடனுக வாங்கு; பொருளகத்திலிருந்து பணம் எடு; காசு முறி முதலியவற்றுக்குப் பணம் கோரு; தொகையிலிருந்து எடு; எண்ணிலிருந்து கழி; இயங்கு, அசைவுறு, புடைபெயர், செல், அணுகு; வழிவகை மேற்கொள்; பங்கு வகையில் மட்டைபட்டு நழுவிச்செல்; ஆட்ட வகையில் வெற்றிதோல்வியற்ற நிலையில் முடிவு பெறு; (கப்.) மிதக்க ஆழ எல்லை வேண்டு; பாய்கள் வகையில் காற்றை உட்கொண்டு புடைப்புறு; (தொ.) draw a blank, பரிசு பெறுத அதிட்டச் சீட்டுபெறு; எத்தகைய முடிவையும் பெறுதிரு; draw a cover, draw a covert, மறைவிடத்திற்குள் வேட்டை நாய்களை ஏவி நரிகளை அச்சுறுத்தி வெளியேற்று; draw back, பின்வாங்கு, மடங்கு, மீள்; draw blank, வேட்டைநாய்களை மறைவிடத்துக்குள் ஏவியும் நரிகளைக் காணப்பெறுதிரு; draw cuts, சீட்டுக்குலுக்கு; draw, hang and quarter, குற்றவாளிகளை இழுத்துச் சென்று தூக்கிலிட்டு உடலைத் துண்டுபோடு; draw in, சுருக்கு, குறை; சுருங்கு, குறுகு; draw it fine, மிகு நுணுக்கம் நாடு; draw it mild, மிகைப்படுத்தாதிரு; draw near, அணுகு, கிட்டச்செல்; draw off, வடியும்படி செய்; திரும்ப எடு; பின்வாங்கு; draw on, அணுகு; இட்டுச்செல்; இயக்கிக்கொண்டுசெல்; வசப்படுத்திச் செயலாற்று; பொருளகத்திலிருந்து பெறு; பொருளகம் கொடுக்கக் காசோலைக்கட்டளை எழுது; வள ஆதாரமுடைய இடத்திலிருந்து பணம் எதிர்நோக்கிச் செயலாற்று; வள ஆதாரமுடைய இடத்திலிருந்து பண்பு எதிர்நோக்கிச் செயலாற்று; எதிராகத் தாக்கு, படைக்கலம் உருவு; draw on one's imagination, புனைந்துரை; பொய் புகல்; draw on one's memory, நினைவுக்குக் கொண்டுவர முயல்; நினைவாற்றலைப் பயன்படுத்திக்கொள்; draw out, படை முதலியவற்றை இடம்விட்டுப் பெயர்ந்து செல்லுவி; இடத்தை விட்டுச்செல்; நீட்டு; நாட்கள் வகையில் நீண்டு செல்வதாகத் தோன்று; வாயைக்கிளறு; எழுத்துமூலங்களைச் சரியான படிவத்தில் உருவாக்கு; பேச்சுமூலத்தைச் சரிவர உருவாக்கு; draw rein, வேகம் குறை; நிறுத்து; draw stumps, மரப்பந்தாட்டத்தில் பந்திலக்குக்கட்டைகளை அகற்றுவதன் மூலம் அன்றைய ஆட்டத்தை முடி; draw the line, வரம்பு ஏற்படுத்து; எல்லைவகு; draw the long-bow, அளவுகடந்து மிகைப்படுத்து; draw to a head, செயல் முதிர்வுபெறு; draw up, ஒழுங்கு வரிசையில் அமை; வகுத்து இயற்று; உருவங்கொடு; நில்; நிறுத்து; draw upon, பொருளகத்திலிருந்து பெறு; பொருளகம் கொடுக்குமாறு காசோலைக் கட்டளை எழுது; வள ஆதார முடைய இடத்திலிருந்து பணம் எதிர்நோக்கிச் செயலாற்று; வள ஆதாரமுடைய இடத்திலிருந்து பண்பு எதிர் நோக்கிச் செயலாற்று; எதிராகத்தாக்கு, படைக்கலம் உருவு.

draw'back, *n.* குறைபாடு, குறை; ஏற்றுமதிப்பண்டங்களின்பேரில் திருப்பிக் கொடுத்துவிடப்படும் இறக்குமதி ஆயத்தீர்வைத்தொகை; தொகைக்கழிவு.

draw'bridge, *n.* தூக்குபாலம்; இருவர் ஆடும் சீட்டாட்ட வகை.

Drawcan'sir, *n.* வீம்பு பேசும் கொடுமையாளன்; நண்பர்-பகைவர் ஒருங்கே அஞ்சும் வீம்புக்காரன்; *a.* நண்பர்-பகைவர் இருதிறத்தாரும் கண்டு அஞ்சுகிற.

drawee', *n.* உண்டியல் ஏற்போர், பணம் கொடுத்தற்குரியவரென்று காசோலையிற் பெயர்பொறிக்கப் பெறுபவர்.

draw'er, *n.* சித்திரம் வரைபவர்; இழுப்பவர்; இழுக்கும் பொறி அல்லது விலங்கு; சாராயம் வடித்துக் கொடுப்பவர்; மேசை முதலியவற்றில் இழுப்பறை; செருகுபெட்டி; (சட்.) காசோலை எழுதிக்கொடுப்பவர்.

draw'ers, *n. pl.* உட்கால்சட்டை; (தொ.) chest of drawers, செருகு அறைகள் கொண்ட படிவச்சட்டம்.

draw'ing, *n.* இழுத்தல், வலித்தல்; எழுதுதல், தீட்டுதல், வரைதல; வரைப்படம் எழுதுதல், ஓரேவண்ணச்சித்திரம் வரைதல்; வரைப்படம்; கருமை வெள்ளையாலான வரிவடிவப் படம்; ஒருவண்ணச்சித்திரம்; சீட்டுக்குலுக்கியெடுத்தல்; (தொ.) in drawing, சரியாக எழுதப்பட்ட; out of drawing, முறைகளை மீறித் தவருக வரையப்பட்ட.

draw'ing-board, *n.* படம்வரை தாளைப் பரப்பிக் குத்தி வைப்பதற்கான பலகைச்சட்டம்.

draw'ing-pin, *n.* படம்வரை தாளைப் பலகையில் பரப்பிக் குத்துவதற்கான அகன்ற தலைப்பினையுடைய குறுகிய ஊசி.

draw'ing-room, *n.* விருந்தினர்களை வரவேற்கும் அறை; அரசவையில் முறைப்படியான வரவேற்புக்கூடம்; (பொறி.) திட்டப்படங்களும் மாதிரிப்படங்களும் வரையப்படும் அறை; *a.* வரவேற்பறைக்குகந்த.

drawl, *n.* இழுத்து நீட்டிப்பேசும் பேச்சு; *v.* இழுத்து நீட்டிப் பேசு; சொற்கள் வகையில் இழுத்து நீட்டிப்பேசப் பெறு.

drawn[1], *v.* draw என்பதன் முடிவெச்ச வடிவம்.

drawn[2], *a.* இழுக்கப்பட்ட; சேர்த்து இழுக்கப்பட்ட; இறுக்கமாக இழுக்கப்பட்ட, விறைப்பான; மூடப்பட்ட; வெற்றி தோல்வியின்றி முடிந்த; உருவிய; குடல்பிடுங்கப் பெற்ற; செடிகள் வகையில் கதிரொளி இன்றி வெம்பி வெளிறின.

draw'-well, *n.* வாளி கயிறு முதலிய அமைவுகளைக் கொண்டு நீர் எடுக்கப்பெறும் ஆழ்கிணறு.

dray, *n.* பெருஞ்சுமைகளை இழுப்பதற்கான உறுதிவாய்ந்த தாழ்வான வண்டி; வெட்டுமரச் சறுக்கு வண்டி; இழுக்கப்படும் சுமை.

dread, *n.* பேரச்சம், திகில்; திகிலூட்டும் பொருள்; அச்சம் தருபவர்; *a.* அஞ்சுதற்கேதுவான; பேரச்சம் ஊட்டுகிற; கிலியூட்டுகிற; மதிப்பச்சம் கொள்ளும்படி செய்கிற; போற்றத்தக்க, உருத்தகு; *v.* பெரிதும் அச்சங்கொள்; அச்சத்தால் பின்னிடு; விளைவு கருதிச் செயலுக்கு அஞ்சு; போற்று, உயர்வாகக் கருது; விளைவு எதிர்பார்த்து அஞ்சி நடுங்கு.

dread'ful, *a.* அச்சந்தருகிற, நடுக்கந்தருகிற, திகிலுண்டாக்குகிற; தொல்லைதருகிற; வெறுப்பூட்டுகிற; சோர்வடையச் செய்கிற; மிகமோசமான, கேடுகெட்ட; (தொ.) penny dreadful, பயங்கரங்கள் நிறைந்த கதைப் புத்தகம்.

dread'nought[1], *n.* எதற்கும் அஞ்சாதவன்; மழைக்காலத்துக்கான கனத்த மேற்சட்டை; கனத்த மேற்சட்டை தைக்கப் பயன்படும் துணி.

Dread'nought[2], *n.* மிக்க ஆற்றல்வாய்ந்த இருபதாம் நூற்றாண்டுப் போர்க்கப்பல் வகை.

dream, *n.* கனவு; கனவு காணுதல், கனவுக்காட்சி; கனுத் தோற்றம்; கனவு காணும் நேரம்; வெறுங் கற்பனையான ஒன்று; எய்த முடியாத இலக்கு; மனக்கோட்டை; ஆழ்ந்த சிந்தனை; கனுத்தோற்றம் போன்ற காட்சி; கனுக்காட்சி போன்ற உரு; கனுக்காட்சிக்குரியது போன்ற பொருள்; *v.* கனுக்காண்; வீண் நினைவுகளில் ஆழ்; கனவிற்காண்; கனவிற் கற்பனைசெய்; கனவிற் காண்பதைப்போலக்காண், கனவிற் கற்பனை செய்வதைப்போலச்செய்; கனவிலேனும் நினைக்கத்தக்கதாயிரு; முடியாதது முடியுமென்று எண்ணு; நினைவில் ஆழ்; கருத்துக்கொள்; கற்பனைத்தோற்றங்கள் பெறு; சோம்பியிரு; செயல்முறைத் திறமற்றிரு.

dream'-hole, *n.* கோபுரச்சுவரில் ஒளிவருவதற்குரிய புழை வாய்.

dream'land, *n.* கனவுலகம், ஆழ்ந்த சிந்தனை; மனக் கோட்டை, கற்பனை; இயற்கையமைதிகளுக்குப் புறம்பான கற்பனைச் சூழல்.

dreamt, *v.* dream என்பதன் இறந்தகால முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

dream'world, *a.* கனவுலகம், இயற்கையமைதிகட்குப் புறம்பான கற்பனை மாய உலகம்.

dream'y, *a.* கனவுகள் நிறைந்த; மனக்கோட்டை கட்டும் பாங்குள்ள; கனவுத்தோற்றமான; செயல்முறையை ஒட்டியிராத; தெளிவற்ற.

drear, *a.* (செய்.)=dreary.

drear'y, *a.* கவர்ச்சியற்ற, கிளர்ச்சியளிக்காத; துயரார்ந்த; வரண்ட காட்சியான, பாழுந்தோற்றமுடைய.

dredge[1], *n.* தூர்வாரி, சிப்பிகள் முதலியவற்றை வாரும் வலைப் பை அமைவு; அடியகழ்வுப் பொறி, ஆறு-துறைமுகம் முதலியவற்றில் மண்பறித்து ஆழமாக்கும் இயந்திரம்; *v.* தூர்வாரியினுல் அள்ளி மேலே கொண்டுவா; அடித்தலம் துப்புரவாக்கு; தூர்வாரியைக் கையாளு; அடியகழ்வுப்பொறியைக் கையாளு.

dredge[2], *v.* மாத்தூவு; பொடிசிதறு.

dredg'er[1], *n.* சேறுவாருவோன்; சேறுவாரும் இயந்திரம்; சேறுவாரும் அமைவு பொருத்தப்பெற்றுள்ள கலம்.

dredg'er[2], *n.* மாத்தூவுவதற்காகத் துளைகளிட்ட மூடியுள்ள பெட்டி.

dredg'ing-box, *n.*=dredger[2].

dreg, *n.* எச்சம்.

dregg'y, *a.* கசடுகள் நிறைந்த; சேரூன, அழுக்கான.

dregs, *n. pl.* அடிமண்டி; வண்டல்; கழிவு, சக்கை, பயனற்ற பொருள்; கசடு, மாசு, கூளம்.

Drei'bund, (செர்.) *n.* (வர.) முக்கூட்டு ஒப்பந்தம், செர்மனி (Germany) ஆஸ்ட்ரியா-அங்கரி (Austria-Hungary) இத்தாலி (Italy) ஆகிய மூன்று நாடுகளுக்கிடையே 1882-இல் ஏற்பட்ட நேச உடன்படிக்கை.

drench, *n.* மிடற்றுப்பானம்; விலங்குகளுக்குத் தரப்படும் மிடற்றுக்குடிநீரளவு; மருந்துநீர் மடக்கின் அளவு; நச்சு மருந்தின் மிடற்றளவு; முட்ட நனைவு; கொட்டு மழை; *v.* பெருக்கமாகக் குடிக்கச்செய்; விலங்கினை வலிந்து மருந்து குடிக்கச் செய்; ஆடுகளை நீரில் முழுகியிருக்க வை; தோலைப் பதனிடும்படி நீரில் ஊற வை; நீர் கொட்டி முற்றும் நனைய வை.

dren'cher, *n.* முற்ற நனையவைக்கும் படுமழை; விலங்குக்கு மருந்துநீர் புகட்டுவதற்கான கருவி.

Dres'den, Dres'den chin'a, Dres'den porce'lain, *n.* 18-ஆம் நூற்றாண்டில் சாக்சனி (Saxony) யில் உண்டாக்கப் பட்ட பீங்கான் வகை.

dress, *n.* உடை; ஆடையணிமணி; மகளிர்மேலங்கி; உடைப்பாங்கு; சிறப்பு வினைமுறை உடை; பணிமுறை உடை; உடையணித் தோற்றம்; புறத்தோற்றம்; மேலுறை, மேற்போர்வை; *a.* மாலை உடைக்குரிய; *v.* உடு; உடுத்து; நேர்த்தியான ஆடை அணி; சிறப்புடையணி; மாலை உடை அணி; அணிசெய், ஒப்பனைசெய்; மயிர்கோது, சீவிவிடு; சீவிச்செப்பனிடு; செடியினைக் கத்தரித்து ஒழுங்குசெய்; உரமிட்டுப் பேணு; குதிரையைத் தேய்; காயத்துக்கு மருந்திட்டுக் கட்டு, காயம்பட்டவருக்குப் பண்டுவம் பார்; உணவினைச் சமை; நிமிர்த்து; நேராக்கு; சமப்படுத்து; வழவழப்பாக்கு: துப்புரவாக்கு; வினைமுற்றுவி, தக்க துணைப்பொருள் சேர்த்திணை; வேண்டுவன செய்து முடி; சித்தமாக்கு; கடிந்துகொள்; நையப்புடை; படையணி ஒழுங்குசெய்; வரிசையுடன் ஒத்திசைவாக்கு; அணியொழுங்கு பட நில்; (தொ.) dress down, கடுமையாக நடத்து; கடிந்துகொள்; நன்றாக அடி; dress up, ஆய்ந்து தேர்ந்து உடுத்து; நடிப்புப்பாகத்துக்குரிய விதத்தில் உடையணி; ஒப்பனைசெய்; உருமாற்றி நடி.

dressage, (பிர.) *n.* நடைக்கட்டுப்பாடுகளில் குதிரைக்களிக்கப் படும் பயிற்சி.

dress'-cir'cle, *n.* நாடக அரங்கில் மாலைச் சிறப்புடையில் வருபவர்களுக்கென்று முன்பு விடப்பட்டிருந்த முன் அடுக்கு மேடை இடம்.

dress'-coat, *n.* மாலை மேற்சட்டைவகை.

dress'er[1], *n.* சமையலறைக் கோக்காலிப்பலகை.

dress'er[2], *n.* அறுவையில் மருத்துவருக்கு உதவும் துணைவர்; காயங்களைக் கட்ட உதவும் மருத்துவ மாணவர்; பாங்கி, தோழி; நாடக அரங்கத்தில் உடைகளை வைத்துப் பேணுபவர்; ஒப்பனை செய்பவர்; சீர்மை செய்வதற்கான கருவி அல்லது இயந்திரம்; உணவு சித்தமாக்கப் பயன்படுத்தப்படும் மேசை.

dress'-guard, *n.* மிதிவண்டி ஏறிச்செல்பவருடைய ஆடைக்குக் காப்பான இழைக்கச்சை.

dress'ing, *n.* ஆடை; ஆடைத்தொகுதி; உரப்பண்டுவம்; காயங்களுக்கான கட்டு; செய்பொருள்களின் நிறைதீர்வு; ஆடையின் முறுமுறுப்பு மெருகு; உணவுக்குரிய சுவைக் கூட்டு; பூரணம், சுவை உள்ளீடு; சித்திர இழைப்பு வேலை; திட்டு; அறைவு.

dress'ing-case, *n.* ஒப்பனைப்பெட்டி.

dress'ing-gown, *n.* முழுதும் உடுப்பணியாதபொழுது போட்டுக்கொள்ளப்படும் மேலங்கி.

dress'maker, *n.* உடுப்புத் தைப்பவர்.

dress'-rehears'al, *n.* நாடக உடையணிந்த முழு ஒத்திகை.

dress'y, *a.* நன்கு ஆடையணிந்துள்ள; ஆடைகளில் விருப்பமுள்ள; ஆடையணிப்பகட்டான; உடைவகையில் புதுப் பாணி வாய்ந்த.

drest, *v.* dress என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவங்களில் ஒன்று.

drew, *v.* draw என்பதன் இறந்தகாலம்.

drey, *n.* அணிற்கூடு.

drib'ble, *n.* நீர்க்கசிவு, ஓடுநீர் ஒழுக்கு; உதைபந்தாட்டத்தில் பந்தின் படிப்படியான முன்னேக்கிய செலவு; மழைத் தூறல்; *v.* கசி, கோழையாக வடி; சொட்டு, துளிதுளியாக விழு; ஓடையாகக் கசிந்தோடு; உதைபந்து வகையில் பல்வேறு ஆட்டக்காரர்களின் கால்கள் பட்டுப் படிப்படியாக முன்னேறுவி; மேசைக்கோற் பந்தாட்டப்பந்து வகையில் உருண்டுருண்டு தொங்கற் பையிற் சென்று விழு.

drib'blet, drib'let, *n.* துளி, திவலை; சிறிதளவு; சிறு தொகை.

dried, *v.* dry என்பதன் இறந்தகால-முடிவெச்ச வடிவம்.

dri'er[1], *n.* உலர்த்துபவர்; உலர்த்துவது, துணி ஈரம் புலர்த்து கருவி; நெல் நயப்பு உணக்கும் பொறி; எண்ணெய்ச் சாயத்தின் ஈரம்புலர்த்தும் கருவி.

dri'er[2], *a.* dry என்பதன் உறழ்படி வடிவம்.

dries, v. dry என்பதன் படர்க்கை நிகழ்கால ஒருமை வினை வடிவம்.

dri'est, a. dry என்பதன் ஏற்றுயர்படி வடிவம்.

drift, n. காற்றுப்போக்கு; நீரொழுக்கு; பனிச்சறுக்கல்; ஒழுக்காற்றல், சறுக்காற்றல்; வீசுபனிப்படலம், படுமழை வீச்சு, மணற்புயல்வீச்சு; இழுப்பு, இழுப்பாற்றல்; உந்தித் தள்ளுகை, உந்தாற்றல்; மிதப்பு, மிதந்துசெல்லும் போக்கு; செயலின்மை, செயலற்ற போக்கு; புடைபெயர்வு; செல்திசை; செலுதடம்; போக்கு, சாய்வு; காற்றூட்ட நீரோட்டங்களால் கப்பலின் போக்கில் ஏற்படும் நெறி பிறழ்வு; சுழற்சியால் ஏற்படும் புடைபிறழ்வு; அசைப்பு, அலைப்பாற்றல், ஒதுக்காற்றல்; வண்டல், சருகு; ஒதுக்கப் பட்ட பனிக்குவியல்; ஒதுக்கப்பட்ட மணற்குவியல்; சுரங்கப் பக்கவழி; இயற்கை ஒழுக்கு; பொதுபபோக்கு; புலப்படாப் புடைபெயர்வியக்கம்; உட்கருத்து; உள் நோக்கம்; உட்பொருள்; குறிக்கொண்ட செய்தி; எண்ணப் பாங்கு, கருத்துப்போக்கு; காட்டுச்சட்டப்படி கால்நடை களின் உடைமையுரிமை உறுதிப்பாட்டை முன்னிட்டுக் குறித்த நாளில் குறித்த இடத்தில் கால் நடைகள் மந்தை களாக ஒதுக்கித் திரட்டப்படுதல்; மிதவைவலை; வலைத் தொகுதி; துளையிட்டுப் பெரிதாக்கும் கருவி; விமானத்தின் வெளிப்புறங்களிற் செயற்படும் காற்று விசையியக்க அழுத்தம்; மண்ணியலூழிகளிற் காற்றூட்ட நீரோட்ட இயக்கங்களால் ஏற்படும் மேலீடான பாறைப்படுகை; v. மிதந்து செல், காற்றூட்ட நீரோட்டங்களால் இழுபட்டுச் செல்; போகிற போக்கிற்செல், முயற்சியின்றி இயங்கிச் செல்; தானாக இயங்கிச்செல்; நோக்கமின்றிச் செல், முனைப்பின்றி இயங்கு; சூழ்நிலைகளுக்கு முழுதும் இணங்க இயங்கு; போகிற போக்கில் விட்டுவிடு; மிதக்கவிட்டுக்கொண்டு செல்; கொண்டு ஒதுக்கு, வாரிக்கொண்டு குவி; கொண்டு ஒதுக்கப் பெறு; ஒதுங்கிச் சென்ற பொருள்களினடியில் புதை; சருகுகளால் மூடு; துளையிடு; துளை பெரிதாக்கு.

drift'age, n. அடித்துச் செல்லப்படும் பொருள்; காற்றூட்டத்தினால் கப்பல் திசைமாறும் அளவு.

drift'-anchor, n. கப்பலின் முகப்பைக் காற்றடிக்கும் பக்கம் வைத்திருப்பதற்குதவும் நங்கூரம்.

drift'-bolt, n. மற்ற தாழ்ப்பாள்களை அகற்றுவதற்குப் பயன்படும் எஃகுத்தாழ்ப்பாள்.

drift'er, n. மிதந்துசெல்லும் பொருள்; அடித்துச் செல்லப் படும் பொருள்; நோக்கமற்றவர், முயற்சியற்றவர், சூழ்நிலை களுக்குப் பணிந்துபோகிறவர்; மிதவைவலையைக் கையாளும் மீனவர்; மிதவை வலைக்குரிய படகு; முதல் உலகப்போரிற் பயன்படுத்தப்பட்ட கடற்கண்ணிவாரிப் படகு.

drift'-ice, n. காற்றினால் அடித்துச் செல்லப்படும் மிதவைப் பனித்திரள்.

drift'-net, n. மிதவைவலை, வேலி ஏற்ற இறக்கங்களுடன் அலைய விடப்படும் மீன்வலை.

drift'-weed, n. கரையில் அடித்தெறியப்படும் கடற்பாசி.

drift'-wood, n. நீரில் அடித்துக்கொண்டுவரப்பட்ட மரக் கட்டை.

drill[1], n. துரப்பணம், கல்லிலோ உலோகத்திலோ பற்களிலோ பிற திண்ணியபொருள்களிலோ துளையிடுவதற் கான கருவி; கூங்கத் துளைப்புப்பொறி; துளைக்கும் சிப்பி வகை; ஒழுங்குபட்ட உடற்பயிற்சி முறை; முறைப்பட்ட படைப்பயிற்சி; கண்டிப்பான ஒழுங்குமுறை; சரியான நடைமுறை; சரியான நாள்முறை ஒழுங்கு; பயிற்சிமுறை யின் ஒருபடி; உடற்பயிற்சி ஆசான்; v. துளை, துருவிச் செல்; துளையிடு; துளைக்கருவிகொண்டு செயலாற்று; படைப் பயிற்சியளி, உடற்பயிற்சி செய்வி; கண்டிப்பான ஒழுங்கு முறைக்குட்படுத்து; தொடர்ந்த பயிற்சிமூலம் படியவை.

drill[2], n. விதை தூவுவதற்கான சிறுசால்; உச்சியில் சிறு சால்வழியுடைய வரப்பு; உழவுச்சாலில் வித்திட்டு வினைந்த செடிகளின் வரிசை; பத்திப்பரம்பு. கொறு கலப்பை; v. பத்தி பத்தியாக விதையிடு; பத்திபத்தியாகச் செடிகளை நடு.

drill[3], n. பெருங்குரங்கு வகை.

drill[4], n. முரட்டுச்சாய்வரித் துணிவகை.

drill'-harrow, n. பத்திப்பரம்பு.

drill'-master, n. உடற்பயிற்சி ஆசான்.

drill'-plough, n. பத்திபத்தியாக வித்துவிதைக்கும் கொறு கலப்பை.

drill'-sergeant, n. போர்வீரர்களுக்குப் பயிற்சியளிக்கும் படைத்தலைவர்.

dril'y, adv. கடுகடுப்புடன், உணர்ச்சியின்றி; வினர்ச்சி யின்றி; கவர்ச்சியில்லாமல்.

drink, n. குடி, குடித்தல்; குடிக்கும்பொருள், பருகுநீர்மம்; குடிக்தும் அளவு; இன்குடி நீர்ம வகை; வெறிக்குடி வகை; மட்டுமீறிய குடி, குடிமயக்க நிலை; குடிவகையடங்கிய குவளை. குவளையிலுள்ள குடிவகை; v. குடி, பருகு; குடி வகை பயில், குடிகாரனுயிரு; செடிகள் வகையில் நீர் உட் கொள்; திண்பொருள் வகையில் நீர் உறிஞ்சு; ஆவலுடன் படி; அவாவுடன் மனத்துட்கொள்; புலன்கள் வாயிலாக ஆர்வத்துடன் நுகர்; (தொ.) drink down, drink the others under the table, drink under the table, மற்றவர்கள் வெறியேறிய பிறகும் குடித்துக்கொண்டு வெறியேறப் பெரு திரு; drink in, உறிஞ்சு; drink off, ஒரே மூச்சிற் குடித்து விடு; drink oneself drunk, தலைதிருகக் குடி; drink to, drink to the health of, ஒருவர் உடல் நலத்தைக் கோரி இன் தேறல் முதலியவற்றைப் பருகு; drink up, ஒரே மூச்சிற் குடித்துத்தீர்; in drink, வெறிமயக்கமுற்ற நிலையில்.

drink'able, n. பானவகை; பருகுதற்குரிய பொருள்; a. குடிக்கத்தக்க, பருகுதற்கினிய.

drink'er, n. குடிப்பவர்; குடிப்பழக்கமுடையவர், அடிக்கடி குடிப்பவர்.

drink'ing, n. குடித்தல்; மதுபானப் பழக்கம்; a. குடிக்கத் தக்க; குடித்தற்கான.

drink'ing-bout, n. குடிக்கும்வெறி, வெறிக்குடிப்பு.

drink'ing-water, n. குடிநீர், குடிப்பதற்குரிய நன்னீர்.

drink'-mon'ey, n. சாராயம் வாங்கிக் குடிப்பதற்கான படி; பணிக்கொடை, உதவித்தொகை.

drink'-offering, n. தெய்வத்துக்குப் படைக்கப்படும் குடி நீர்ம வகை.

drip, n. துளிகளாக விழுதல்; சொட்டுச்சொட்டாக வடியும் நீர்மப்பொருள்; வாரி, கூரைவிளிம்பு; v. துளிதுளியாக விழு, சொட்டு; நீர்மம் தோய்வுற்று நனைந்து சொட்டு; குருதி வகையில் சொட்டுச்சொட்டாக வடி, (தொ.) drip dry, பிழியாமலும் பெட்டிபோடும் தேவையில்லாமலும் காயவிடு; right of drip, ஒருவர் கூரையினின்று விழும் மழைநீர் மற்ற வர் நிலத்தில் விழும்படி செய்யச் சட்டப்படியுள்ள உரிமை.

drip'-drop, n. இடைவிடாது சொட்டுதல்.

dripp'ing, n. சொட்டுச்சொட்டாக வடிதல்; சொட்டுச் சொட்டாக வடியும் பொருள்; பொரியும் பண்டத்திலிருந்து வடியும் நெய்.

dripp'ings, n. pl. வடிநெய், பொரியும் பண்டங்களி லிருந்தோ வேறு பொருள்களிலிருந்தோ வடியும் நெய் அல்லது நிணப்பொருள்; வடிநீர்த் திரள்.

drip'-stone, n. (க-க.) மழைத்துளிகளை அப்பால் வீழச் செய்யும் வாசற்படி முதலியவற்றின் மேலுள்ள கட்டமைவு.

drip'tip, n. (நாவ.) மேல்விழும் மழைத்துளிகளை வடிய விடுதற்கான இலையின் நீண்ட நுனிப்பாகம்.

drive, n. ஊர்தியில் உலாப்போக்கு, சிறு சுற்றுலா; வண்டிப் பாதை; தனிமனையெல்லைக்குட் செல்லும் வண்டிப்பாதை; ஊக்கமிக்க பந்தடி; வேட்டை விலங்கின் தலைப்பு விரட்டு; வேட்டை விரட்டாட்டம்; துரத்துதற்குரிய பொறியமைவு; போரில் எதிரிகளைத் துரத்தி ஓட்டுதல்; தெம்பு, செயலூக்கம்; தூண்டுதல், உள்ளவா; குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கான பொருள் திண்டுமியக்கம்; குறைவிலை விற்பனைப் பெருக்கத்துக்குரிய திரள் முயற்சி; v. துரத்து, அச்சுறுத்தி ஓட்டு, வலிந்து

விரட்டு, அடித்து வெருட்டு; கால்நடைகளை நடத்திச் செல்; கூட்டுச் சட்டப்படி உடைமை உரிமை உறுதிப்பாட்டுக்காகக் கால்நடைகளை மந்தை விரட்டுக்குத் துரத்து; வேட்டை விலங்குகளைக் கலைத்து விரட்டு; ஊர்தியினைச் செலுத்து; வண்டியோட்டியாகச் செயலாற்று; ஏறிச்செல்; இட்டுச்செல்; உடன்கொண்டு செல்; பொறியினை இயக்கு; இயங்கும் ஆற்றல் அளி; இயங்குவி; ஆற்றலுக்கு உட்பட்டு இயங்கு, இயக்கப்பெறு, செலுத்தப்பெறு; குறிகொண்டு செல்; விரைவுபடுத்து; ஊக்கு, தூண்டு; தாக்கு; வேகமாகத் தள்ளு; பந்தினை வீசி எறி, முன்னேறிச் செல்லுவி; வாதத்தை ஆற்றல்படப் பயன்படுத்து; எழுதுகோல் முதலிய கருவிகளைக் கையாளு; வாளை வீசியெறி; தொழிலை நடத்து; ஆணி முதலியவற்றை அடித்திறுக்கு; பாய்ச்சு; பாய், குதி; விரை, விரைந்து செயலாற்று; கடுமையாக வேலைசெய்; (தொ.) drive at, நாடு, செயல் நோக்கமாகக் கொள்; let drive, குறிபார்த்து எறி.

driv'el, *n.* சளை, கோழை, சொள்ளு; பிதற்றல்; *v.* குழந்தை போலச் சொள்ளு வடியவிடு; வீணுகச் சிதறு; பேதையெனப் பிதற்று; மூடனுயிரு.

driv'er, *n.* ஓட்டுபவர்; வண்டியோட்டி; ஊர்தி வலவர்; குழிப்பந்தாட்டத்தில் தொடக்க இடத்திலிருந்து பந்தெறிவ தற்குப் பயன்படுத்தப்படும் கைத்தடி: (இயந்.) நேர்முக மாகத் திறனைப் பெறுகிற சக்கரம்; விசை ஆக்கத்துடன் இணைந்த உறுப்பு.

drive'way, *n.* வண்டிப்பாதை; வேட்டை விலங்குகளைத் துரத்துவதற்கான வழி.

driv'ing-wheel, *n.* இயந்திரத்தின் பிற உறுப்புக்களை இயங்கவைக்கும் சக்கரம்; இருப்புப்பாதை நிராவி இயந்திரத் தின் பெரிய சக்கரம்; நேரடியாக இயக்கப்படுகிற மிதி வண்டிச் சக்கரம்.

driz'zle, *n.* மழைத்தூறல், நெருக்கமான நுண் திவலைகளாக மழை பெய்தல்; *v.* சிறு தூறலாகப் பெய்.

dro'gher, *n.* கரையோரமாகச் செல்லும் கப்பல்; மெது வாய்ச் செல்லும் கன எடை மரக்கலம்.

drogue, *n.* திமிங்கில வேட்டைக்குப் பயன்படும் ஈட்டிக் கயிற்றின் முனையிலுள்ள மிதவைக்கட்டை; கடல் நங்கூரம், படகின் ஆட்டத்தைச் சமப்படுத்தி அதன் வேகத்தை மட்டுப் படுத்துதற்குப் பயன்படுத்தப்படும் பைபோன்ற அமைவு.

droit, *n.* சட்டப்படியான உரிமை; சட்டப்படியான உரிமைப் பொருள்; கப்பற்படைத் தளபதிக்குரிய சட்டப்படியான மேல்வருவாய் இனம்.

droll, *n.* வேழம்பர், கோமாளி; *a.* குறும்பான, நகைப்பூட்டு கிற, அரைக்கிறுக்கான, இயல் முரணிய, வியப்பூட்டுகிற; *v.* கேலி செய், கோமாளித்தனம் புரி.

droll'ery, *n.* கோமாளித்தனம்; களியாட்டமிக்க கலைப் படைப்பு; இழிதிற நகைச்சுவை; கேலிக்கூத்தான காட்சி; பொம்மலாட்டம்.

drome, *n.* (பே-வ.) வானூர்தி நிலையம்.

drom'edary, *n.* ஏறிச்செல்லுவதற்கேற்ற நிறை இனமரபுப் பயிற்சியுடைய அராபிய ஒற்றைத் திமில் ஒட்டகம்.

drom'ond, *n.* (வர.) இடைக்காலப் போர்க்கப்பல்; வாணிகக்கப்பல்.

drone, *n.* வேலை செய்யாத ஆண் தேனீ, சோம்பேறித்தேனீ; சோம்பேறி; பிறர் உழைப்பில் வாழ்பவர்; பொம்மென்ற இரைச்சல் ஒலி; சலிப்புத்தரும் பேச்சு; சலிப்பு உண்டு பண்ணும்படி பேசுபவர்; தோற்பை இசைக்கருவி வகையின் படுத்தலோசைக்குழல்; இசைக்கருவி வகையின் படுத்த லோசைக் குழலினின்றும் வெளிவரும் ஒத்தூதல் போன்ற மாருநிலையுடைய ஓசை; *v.* தேனீப்போல இரைச்சலிடு, இரைந்து முரலு; சலிப்புத் தோன்றும்படி பேசு.

droop, *n.* குனிவு; கீழ்நோக்கிய சாய்வு; தளர்வு; ஊக்கக் கேடு; குரல் கம்மிய நிலை, தொனியிறக்கம்; *v.* குனி, வாடி வளை, தொங்கு; சாய்வுறு; தொங்கவிடு; கீழ்நோக்கிப் பார்; கதிரவன் வகையில் அடிவானில் ஆழ்; சோர்வடை, ஊக்கமிழ, நலிவுறு.

drop, *n.* துளி, நீர்-கண்ணீர்-வியர்வை-குருதி-மழை-பனி போன்ற நீர்மங்களின் ஒரு சொட்டு; சிறிதளவு நீர்; சிறி தளவு நீரியலான மருந்து; சிறிதளவு; வீழ்துளியுருவப் பொருள்; தொங்கல் மணி, பதக்கம், தொங்கட்டம்; மணி யுருவ வடிவான தின்பண்ட வகை; வீழ்ச்சி; செங்குத் தான பள்ளம்; மிகப்பெரிய அளவான திடீர் ஏற்றத்தாழ்வு; விடுதிரை; திரை வீழ்ச்சி; தூக்குமரப் பொறித்தட்டு; பொறித்தட்டு விழத்தகும் ஆழ எல்லை, வீழ்ச்சியளவெல்லை; கப்பல் தளத்தில் சரக்குகளை இறக்கி வைப்பதற்கான அமைவு; அதிர்ச்சியூட்டும் திடீர் நிகழ்ச்சி; சமுதாயத் தளத்திற் படியிறக்கம்; விலையிறக்கம்; வெப்பதட்பநிலை வீழ்ச்சி; கடுந்தேறல் சிறுகல அளவு; *v.* துளிதுளியாக வடியவிடு; துளி சிதறவிடு; திவலை சிதறி உலர்வுறு; சொட்டுச்சொட்டாக விழு; திடுமெனக் கீழே விழு; செங் குத்தாக விழு; செங்குத்தான இறக்கமுடையதாயிரு; மெல்லக் கீழ் விழும்படி விடு, விழச்செய், கீழே விடு; இலக்கிற் சென்று விழும்படி பந்தெறி; வை, இடு, போடு; இறக்கிவிடு; விட்டுச்செல்; சாய், கீழ்நோக்கு; இற, அழி, இல்லாதுபோ; நின்றுவிடு, தொடர்பறுந்து போ; தாழ், அமிழ்; நிலத்தில் விழு, வேட்டைநாய் வகையில் வேட்டைக் குரிய விலங்கைக்கண்டு பதியமிடு; தாழ்த்து, கிடத்து; கைவிடு, துற; கூருதுவிடு, குறியாமல் விட்டுவிடு; பெற்று விடு, பிறப்பி; தற்செயலாக வந்துசேர்; தற்செயலாக வாய்விட்டுக் கூறு; வாய்தவறி வெளியிடப்பெறு; இயல் பாகத் தூக்கத்துக்கு ஆளாகு; வழக்கத்துக்கு ஆட்படு; குறைவுறு, அளவில் குறை; குரல்தாழ்த்து; குரல் தணிவுறு; (தொ.) a drop in the bucket, a drop in the ocean, மிகச்சிறிய அளவு; drop a brick, மடச்செயல்புரி; drop a curtsy, வணங்கு; drop astern, (கப்.) நெடுந் தொலை பின்தங்கிவிடு, மிகப்பிந்து; drop away, drop off, ஒவ்வொருவராக வெளியே சென்றுவிடு; drop in, தற் செயலாக நுழை; ஒவ்வொருவராக உட்புகு; எதிர்பாரா வகையாக நேர்; தற்செயலாய் அமை; drop it! போதும் நிறுத்து; drop off, ஒவ்வொருவராக வெளியேறிச்செல்; தூங்கிப்போ; drop out, உரிய இடத்திலிருந்து காணுமற் போ, விலகிக்கொள்.

drop'-cur'tain, *n.* நாடக மேடையில் காட்சிகளுக்கிடையே விடப்படும் திரை.

drop'-forging, *n.* வார்ப்புக்குழியில் உருகிய நிலையில் உலோகத்தை ஊற்றி அடித்திறுக்கி உருவாக்கும் வார்ப்பட முறை.

drop'-hamm'er, *n.* காய்ச்சியடித்து வார்ப்படம் உரு வாக்கும் பொறி.

drop'let, *n.* சிறு துளி.

dropp'ing, *n.* கீழே போடப்படுவது.

dropp'ings, *n. pl.* கீழே விழுந்த பொருள்கள்; துளிகளாக விழுந்த பொருள்; மெழுகுதிரிகளினின்றும் வழிந்த மெழுகு; விலங்குகளின் சாணம்; பறவைகளின் எச்சம்.

drop'-press, *n.*=drop-hammer.

drops, *n.* துளி மருந்து, துளிகளாகப் பயன்படுத்தப்பட வேண்டிய மருந்து.

drop'-scene, *n.*=drop-curtain.

drop'sy, *n.* (மரு.) நீர்க்கோவை, மகோதரம், உடலின் புழை யிடங்கள் தோறும் நீர்திரண்டு தேங்குவிக்கும் நோய்.

drosh'ky, dros'ky, *n.* ருசிய நாட்டுக்குரிய தாழ்வான நான்கு சக்கர வண்டி வகை; செர்மனி நாட்டின் நான்கு சக்கர வாடகை வண்டி.

dross, *n.* உருக்கிய உலோகக்கழிவு; மாசு, களிம்பு, துரு, சுசடு, கழிவுப்பொருள்; கலப்படத்தில் கலக்கப்பட்ட அயற் பொருட்கூறு; சக்கை, சவறு; தீயவழியில் ஈட்டிய பணம்.

dross'y, *a.* சுசடு போன்ற; தூய்மையற்ற; பயனற்ற.

drought, *n.* வறட்சி, கருப்பு, நீடித்த பஞ்சநிலை; மழையின்மை; நீரின்மை; காய்வு, வெப்பு, நீர்வேட்கை.

drought'y, *a.* மிகுவறட்சியுள்ள, மழையற்ற, நீர்வேட்கையுள்ள.

drove[1], *v.* drive என்பதன் இறந்தகால வடிவம்.

drove[2], *n.* மேய்ச்சல் மந்தை; மீன்திரள்; கும்பு, கூட்டம்; கல்தச்சனது அகன்ற உளி.

drove[3], *v.* கால்நடை மந்தைகளை ஓட்டிச்செல்; கால்நடை வணிகராகத் தொழில்புரி.

droved, *v.* drove[3] என்பதன் இறந்தகால வடிவம்.

drov'er, *n.* கால்நடை மந்தைகளைச் சந்தைக்கு ஓட்டிச் செல்பவர்; கால்நடை வணிகர்.

drown, *v.* மூழ்கடி; மூழ்கடித்து மாளச்செய்; நீரினுள் அமிழ்த்தி மூச்சு முட்டவைத்துக் கொல்லு; நீர்ப்பெருக்கு வகையில் அமிழ்வி; அமிழ்வித்து மூச்சுமுட்டி இறக்கும்படி செய்; வெள்ளம் வகையில் மேற்கவிந்து சென்றழி; நீரில் தோய்வி; குடி முதலியவற்றால் துன்பத்தை மறக்கடி; குடி முதலியவற்றின் வகையில் துன்பத்தை மறக்கும்படி செய்; மேற்கவிந்து மறை; பேரொலி வகையில் பிற சிறிய ஒலிகள் கேளாமல் அடக்கிவிடு.

drowse, *n.* அரைத்தூக்க நிலை; *v.* தூங்கிவிழு, தூங்கிவழி; சோம்பியிரு, மந்தித்திரு; தூங்கிவிழச்செய், உணர்வு மழுங்கச் செய்; தூங்கி விழுந்து காலங்கழி.

drows'y, *a.* அரைத்தூக்க நிலையிலுள்ள, உறங்கிவழிகின்ற; மந்தமான, சோம்பியிருக்கிற; தூக்கம் வருவிக்கிற.

drub, *v.* மொத்து; தடியால் அடி; கையப்புடை; சண்டையில் தோல்வியுறச்செய்; கருத்தை அறைந்துசெலுத்து.

drubb'ing, *n.* தடியாலடித்தல்.

drudge, *n.* ஊழியவேலை, அடிமைவேலை; கொத்தடிமை; தொண்டுழிய வேலையாள், குறைந்த கூலிக்கு நிறைந்த வேலைசெய்து காலந்தள்ளுபவர்; *v.* அடிமைவேலை செய்; குற்றேவல்புரி, தொண்டுழியம் செய்.

drudg'ery, drudg'ism, *n.* அடிமைவேலை, மட்டுமீறிய உழைப்பு, சுவையற்ற வேலை, கடுந்தொழில்.

drug, *n.* மருந்துச் சரக்கு, வெறிமயக்கப்பொருள்; விலை போகாப்பண்டம்; *v.* வெறிமயக்க மருந்து சேர்த்துக் கலப்படம் செய்; வெறிமயக்கமருந்தூட்டு; மருந்து கொடு, மயக்கப் பொருள்களை வழக்கமாய் மிகுதியாக உட் கொள்ளுவி; அருவருப்பூட்டு, உவர்ப்பூட்டு.

drugg'et, *n.* முரட்டுக்கம்பளித்துணி, நிலத்தளத்திற் பரப்புதற்கான இரட்டுத்துணி; மேசைத்துணி.

drugg'ist, *n.* மருந்துக்கடைக்காரர் மருந்துச் சரக்குகளில் வாணிகம் செய்பவர்; மருந்து செய்து விற்பவர்.

Dru'id, *n.* பண்டைய கெல்டிக் (Celts) இனத்தவரின் குருவகுப்பினர்; கெல்டிய மந்திரவாதி: கெல்டிக் இனக் குறிகாரர்; வேல்ஸ் (Wales) நாட்டு மாமன்றப்பணியாளர்.

dru'idism, *n.* கெல்டிக் இனக் குருமார் கற்பித்த கோட்பாடுகள்; கெல்டிக் இனக் குருமார் கையாண்ட விஜ முறைகள்.

drum[1], *n.* முரசு; முரசொலி; முரசடிப்பவர், முரசொலி போன்ற நாரையினக் கூக்குரல்; முரசொலி போன்ற ஒலி எழுப்பும் அமெரிக்க மீன்வகை; உட்செவியுறுப்பு, காதுக் குருதது; ஊளையிடும் குரங்கினத்தின் உண்ணுக்கெலும்பு; முரசு வடிவப் பொருள்; மிடா; இயந்திரத்தின் சுழல் வட்டருளை; இழைகளைச் சுற்றிவைக்கப்பயன்படும் சுழல் கூட்டு; மாலை அல்லது பிற்பகல் தேநீர் விருந்து; (கூ-க.) கவிகைமாடத்தின் செங்குத்தான பகுதி; கொரிந்திய (Corinthian) பாணித் தூண் தலையுறுப்பின் கெட்டியான பகுதி; *v.* முரசு முழக்கு; முரசொலி எழுப்பு; கைவிரல்களால் தாளங்கொட்டு; காலால் மேளங்கொட்டு; முரசொலிப்புப் போன்று இரை; இடைவிடாதடி, தட்டு, ஓங்காடு; பறவைகள் பூச்சிகள் வகையில் முரசடிப்பதுபோல இறக்கைகளை அடித்து ஒலியெழுப்பு; முரசு முழக்கி வெளியேற்று; முரசொலி மூலம் அழைப்புவிடு; அடித்தடித்து உருவேற்று; அடுத்தடுத்துச் சொல்லிப் புகட்டு; விடாது செய்து வெறுப்பூட்டு; (தொ.) beat the drum, முரசடி; பறைசாற்றிக்கொள், தற்புகழ்ச்சிசெய்.

drum[2], *n.* குறுகிய நீள்மலைப் பாறை; (மண்.) பனிப்படலத்தின்கீழ் உருவான பனி ஊழிக்குரிய நீள்முட்டை வடிவப் பாறை.

drum'fire, *n.* காலாட்படைத்தாக்குதலுக்கு முன் நிகழ்த்தப்படும் பீரங்கிகளின் முழங்கொலி வேட்டுத் தீர்வு.

drum'fish, *n.* பறையடிப்பது போன்ற ஒலியெழுப்பவல்ல அமெரிக்க மீன் வகை.

drum'head, *n.* முரசுத்தோல்; செவிப்பறைச்சவ்வு; பாரஞ் சாம்பியின் வட்டத்தலையுறுப்பு; (தொ.) drumhead court-martial, (படை.) போர்க்களத்திலேயே அல்லது படைப் பெயர்ச்சியின்போதே குற்றங்களை ஆய்வதற்காகச் சுருக்கு வகையாய் நடத்தப்படும் படைத்துறை முறைமன்றம்.

drum'lin, *n.* =drum[2].

drum'-ma'jor, *n.* முரசு அணியின் இளம்படித்தலைவர்.

drumm'er, *n.* முரசடிப்பவர்.

drumm'ond-light, *n.* காப்டன் டி. டிரம்மண்ட் (Captain T. Drummond 1797-1840) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளொளி அல்லது உயிரக-நீரக ஒளி.

drum'-stick, *n.* முரசுகொட்டுதற்கான குமிழ் நுனியுடைய கோல்; சமைத்த கோழிக்காலின் கீழ்மூட்டு; முருங்கைக்காய்.

drunk[1], *v.* drink என்பதன் முடிவெச்ச வடிவம், முற்கால இறந்தகால வடிவம்.

drunk[2], *n.* குடிவெறி, குடித்தல்; (காவல்துறைக்குற்றத்தாள்) குடிவழக்கு; குடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்; கள் முதலியன குடித்தவர்; *a.* வெறியுண்ட; கட்குடியில் மூழ்கியிருக்கிற; பொங்கும் உணர்ச்சியில் மூழ்கிய.

drunk'ard, *n.* குடிகாரர்; குடிப்பழக்கமுள்ளவர்; போதையேறக் குடிப்பவர்.

drunk'en, *a.* குடிபோதையிலிருக்கிற; அறிவுமயங்கிய; குடிப்பழக்கமுள்ள; குடிபோதையின் விளைவான; குடிபோதையிலிருப்பதைக் காட்டுகிற; பயனற்ற.

drunk'enness, *n.* குடிபோதை; வழக்கமாகக் குடிபோதையிலிருத்தல்.

drupa'ceous, *a.* (தாவ.) உட்கொட்டை சூழ இன்சதைச் சாறு உடைய கனிகளை விளைவிக்கிற.

drupe, *n.* (தாவ.) கொட்டையுடைய இன்தசைச்சாறு கொண்ட கனி

drup'el, drupe'let, *n.* (தாவ.) பல்சுளைக் கொட்டைகளையுடைய கனியின் ஒருசுளைக் கொட்டை.

druse[1], *n.* பாறைக்குழிவின் உட்புறத்தைப் போர்த்துள்ள மணியுறைவுத்தோடு; மணியுறைவுத்தோட்டிலுள் உட்புறம் போர்த்தப்பெற்றுள்ள பாறைக்குழிவு.

Druse[2], *n.* சிரியா (Syria) வில் உள்ள லெபனான் மலைகளில் (Lebanon mountains) வாழும் மகம்மதிய சமயம் சார்ந்த அரசியல்-சமயப் பிரிவினர்.

dry, *n.* மதுவிலக்குக் கோட்பாட்டாளர்; *a.* வறண்ட; வற்றிப்போன; நீர்ப்பசையற்ற, ஈரமில்லாத; ஈரம் குறைவான; வடிகால் மூலம் நீர்வடிக்கப்பெற்ற; சாறு இல்லாத; சாறு குறைவான; மழையில்லாத; மழைகுறைவான; நீர்வேட்கையுள்ள; நில வகையில் புன்செய் வகை சார்ந்த; மழையின்றி உலர்ந்த; நீர்நிலையினின்றும் தொலைவான; நீர் வராத; கால்நடை வகையில் பால் தராத; கெட்டிப் பொருளான; பழத்தில் சதைப்பற்றில்லாத; நீர்ப்பொருளாயிராத; நீரியலல்லாப் பொருள்களை அளப்பதற்குரிய; பசுமையற்ற; சாரமற்ற; அப்பவகையில் வெண்ணெய் தடவப்பெறுத; சாவு வகையில் நீரிழல் அல்லது குருதி சிந்தப்பெற்று வராத; காசவகையில் கபமற்ற; மது வகைகளில் இனிப்போ பழத்துக்குரிய நறுமணமோ அற்ற; நாடு-நாட்டுப்பகுதி முதலியவற்றின்

வகையில் மதுபான வாணிகத்தைச் சட்டப்படி தடை செய்கிற; மதுவிலக்கினைச் செயலாற்றுகிற; மதுவிலக்குக்கு உட்பட்ட; எழுச்சியற்ற, கவர்ச்சியற்ற, சுவையற்ற; பயனற்ற; அன்பற்ற, உணர்ச்சியற்ற; கண்டிப்பான, கடுமையான; ஒத்துணர்வற்ற; கனிவற்ற; பராமுகமான; கரிசனையற்ற; வெறுமையான; புனையப்படாத; காய்தலுவத்தலில்லாத; சிறப்பற்ற, பொதுப்படையான; ப. உலர்த்து; நீர்ப்பசையறச்செய்; வறு; வறட்டு; வாட்டு; வற்றலாக்கு; வறட்டுப்பசுவாக்கு; உலர்வுறு, நீர்ப்பசையறு, வறள், வாடு, வற்று; (தொ.) cut and dried, cut and dry, முன்னரே செயல் முற்றுவித்து வைக்கப்பட்டுள்ள; உடனடியாகப் பயன்படுத்தத்தக்க; முன்னரே வரையறுக்கப்பட்டுவிட்ட; dry farming, புன்செய் வேளாண்மை, புழுதிப் பயிர்; dry light, காட்சி மயக்கம் தரா ஒளி; காய்தலுவத்தலகற்றிய கருத்து; dry measure, கூலம் முதலிய பண்டங்களை அளப்பதற்கான முகத்தலளவை முறை; dry steam, நீர்த்துளிகள் கலவாத நீராவி; dry up, முற்றும் உலர்த்து; (ஈரம்) முழுவதும் வற்றிப்போ; வற்றவை; (கிணறு முதலியவை) வறண்டு போ; (பே-வ.) பேசாதிரு; சும்மா இரு; நாடக நடிகர் வகையில் நடிப்பு வாசகத்தை மறந்து விடு; go dry, மதுவிலக்கு ஏற்பாட்டினை மேற்கொள்; high and dry, (கப்பல்) அலைவாயிலிருந்து தொலைவாகக் கரைமேட்டில்; நடைமுறை நிகழ்ச்சிகளுடன் தொடர்பற்ற.

dry'ad, *n.* அணங்கு, நீரரமகள், வனதேவதை; காட்டு மரம்; *pl.* dry'ads, dry'ades.

Dry'asdust[1], *n.* கவர்ச்சியற்ற முறையில் கடும் உழைப்புச் செய்து ஆராயும் பழம்பொருளாய்வாளர்; சுவர்ச்சியில்லாத வரலாற்றுசிரியர்.

dry'asdust[2], *a.* சிறிதும் கவர்ச்சியற்ற, சாரமற்ற, சுவைத் திறமற்ற.

dry'cell, *n.* மின்பகுவுறுப்பு நீர்ப்பொருளாயிராமல் பசையாயிருக்கிற மின்கலம்.

dry'-clean, ப. உலர்வுச் சலவைசெய், நீரிற் கழுவாமல் சாராயச் சத்து முதலியவற்றால் தூய்மையாக்கு.

dry'-cure', ப. = dry-salt.

dry'-dock, *n.* நீரின்றி வெற்றிடமாக்கப்படக்கூடிய கப்பல் துறை; ப. நீர் வெளியேற்றப்பட்ட துறையில் நிறுவு.

dry'er, *n.* = drier[1].

dry'-fist, *n.* கஞ்சத்தனமானவர்.

dry-fist'ed, *a.* ஊதியம் கிடைத்தால் பணம் பெற்றுக் கொண்டு இழப்பு நேர்ந்தால் பணம் கொடுக்கிற; *adv.* ஊதியம் கிடைத்தால் பணம் பெற்றுக்கொண்டு இழப்பு நேர்ந்தால் பணம் கொடுத்து.

dry'-fly, *a.* நீரில் அமிழாத செயற்கை இரை வாய்ந்த தூண்டில் முள்ளையுடைய; ப. நீரில் அமிழாத செயற்கை இரையுடன் தூண்டிலிட்டு மீன்பிடி.

dry'-goods, *n. pl.* நீர்ப்பொருளாயிராத கூலம்போன்ற பண்டங்கள்.

dry'ice, *n.* குளிர்பதனமுறையிலும் பொறியாண்மையிலும் பனிக்கட்டிக்கு மாற்றுப் பயன்படுத்தப்படும் உறை கரியீருயிரகைப்பாளம்.

dry'-nurse, *n.* தானே பாலூட்டாமல் குழந்தையை வளர்க்கிற தாதி; ப. தானே பாலூட்டாமல் குழந்தையைப் பேணி வளர்.

dry'-plate, *n.* (நி-ப.) முன்னதாகவே தி நீர்மங்களில் தோய்க்காமல் படம் எடுக்கக்கூடிய கூருணர்ச்சியுடைய நிழற்பட அட்டை.

dry'-point, ப. காடிக்காரம் இல்லாமலே செப்புத்தகட்டில் செதுக்கு வேலை செய்வதற்கான கூரிய ஊசி; கூரிய ஊசியினால் செதுக்கப்படும் தகடு; கூரிய ஊசியினால் தகட்டில் செய்யப்பட்ட செதுக்கு வேலை; ப. காடி வகைகளைப் பயன்படுத்தாமல் கூரிய ஊசியைக்கொண்டு செப்புத்தகட்டில் உருவந்தோண்டும் முறையைக் கையாளு.

dry'-rot, *n.* உளுப்பு, காளான் வகைகளினால் வெட்டு மரத்துக்குப் புறந்தோன்றுமல் உள்ளீடாகச் சிதைவு ஏற்படுத்தும் நோய் வகை; உள்ளீடான சிதைவு, பண்புச் சீர்கேடு.

dry'-salt', ப. நீர்ப்பொருளில் ஊறவையாமலே உப்பிட்டுப் பதனப்படுத்து.

dry'-salter, *n.* மருந்துச்சரக்குகள்-சாயங்கள்-பதனச்சரக்குகள் ஆகியவற்றில் வாணிகம் செய்பவர்.

dry'-saltery, *n.* மருந்துச்சரக்குகள்-சாயங்கள்-பதனச்சரக்குகளின் வாணிகம்; மருந்துச்சரக்குகள்-சாயங்கள்-பதனச்சரக்குகள் விற்கும் கடை.

dry'-shod, *a.* செருப்பு நனையாத; கால்கள் நனையாத; *adv.* செருப்பு நனையாமல்; கால்கள் நனையாமல்.

dry'-stone, *a.* காரையின்றிக் கல்லினால் கட்டப்பட்ட.

dry'-wall'er, *n.* காரையின்றிச் சுவர்கள் எழுப்புகிறவர்.

du'ad, *n.* = dyad.

du'al, *n.* (இலக்.) மொழிகள் சிலவற்றில் காணப்படும் ஒருமை பன்மை எண்களுக்கு இடைப்பட்ட இரட்டைப் பொருள்களைக் குறிக்கும் இருமை எண்; இருமை எண் சார்ந்த சொல்; சொல்லில் இருமை எண் சார்ந்த வேற்றுமைத் திரிபுவடிவம்; *a.* இரண்டுக்குரிய; இரண்டுகொண்ட; இருமடியான; இரண்டாகப் பகுபட்ட; இரட்டையான; (தொ.) dual control, கூட்டுக்கடப்பாடு; இணைக்கட்டுப்பாடு; dual monarchy, இணையரசு, கூட்டரசு; ஒரே அரசருக்குட்பட்ட இரண்டு தன்னுரிமை நாடுகள்; the Dual Monarchy, 1918-க்கு முற்பட்ட ஆஸ்ட்ரிய-அங்கரிப் பேரரசு (Austro-Hungarian Empire).

du'alin, *n.* (வேதி.) வாள்தூள் வெடியுப்பு முதலிய பொருள்கள் கலந்த ஆற்றல்மிக்க வெடிமருந்து வகை

du'alism, *n.* இருமை; இருமை எண் வழக்காறு; (மெய்.) இருபொருள்வாதம், துவைதம், நன்மை தீமை இருவேறு தத்துவங்களாகக் கொள்ளும் கோட்பாடு; பருப்பொருள் உயிர் இருவேறெனக் கொள்ளும் கோட்பாடு.

du'alist, *n.* (மெய்.) இருபொருளுண்மைக் கோட்பாட்டாளர், இருபொருள்வாதி, துவைதி.

dualis'tic, *a.* இரண்டுகொண்ட; (மெய்.) இருபொருள் வாதத்துக்குரிய.

dual'ity, *n.* இருமை, இரட்டைத்தன்மை; இரட்டையாயுள்ள நிலை.

dub[1], *n.* ஆற்றின் சிறுமடு, குட்டை, சேற்றுக்குழி, சேறு.

dub[2], ப. வாளின் மொட்டைப்பக்கத்தால் தோளில் தட்டும் விழுமுறை மூலம் முற்கால வழக்கப்படி வீரப்பெருந்தகை (knight) என்ற பட்டஞ் சூட்டு; புது நன்மதிப்புப்பட்டம் அளி. சிறப்புப்பெயர் புனைவி; நன்மதிப்பு நயம்படச் சாட்டுப் பெயரிட்டழை; வாய்ச்சியினால் இழைத்து மென்னயப்படுத்து; கத்தரித்து ஒழுங்குசெய்; புள்ளினங்களின் சூட்டும் தொங்கு சதையும் துண்டித்தகற்று; தோல் முதலியவற்றின்மீது நீர்க்காப்பான மென்னயமூட்டும் கலவையைத் தோய்வி; தூண்டிலிற் போலி ஈ வடிவ இரைபொருத்திவை.

dub[3], ப. திரைப்படத்திற்கு வேறு மொழியிற் புதிய, ஒலிப்பதிவை இணை; இயக்கத்திரைப்படத்துடன் ஒலி இசைப் பதிவு இணை.

dubb'ing, *n.* வீரப் பெருந்தகையெனப் பெயரிடுஞ் செயல், வாளின பட்டையால் தோளைத் தட்டும் விழுமுறை; தோலை மென்மைப்படுத்தும் பசைப்பொருள்.

dubi'ety, *n.* ஐயப்பாட்டுணர்வு; சந்தேகத்துக்குரிய செய்தி.

dub'ious, *a.* ஐயுறவுக்குரிய, இரண்டகமான விளைவுக்குரிய; சந்தேகம் கொள்ளுதற்குரிய, ஐயப்பாடுகொள்ள இடந்தருகிற; ஐயுறுகிற, தயங்குகிற, ஊசலாட்டமான; நம்பகமற்ற, நம்பும் ததியில்லாத; தெளிவற்ற, இனந்தெரியாத; இரண்டகமான, புதிரான.

du'bitation, *n.* ஐயம்; தயக்கம்.

dub'itative, *a.* ஐயத்துக்குரிய ; ஐயுறவான ; ஐயுறவு தெரிவிக்கிற ; தயக்கத்துக்குரிய ; தயக்கமுடைய ; தயக்கம் தெரிவிக்கிற.

duc'al, *a.* கோமகனைச் சார்ந்த ; கோமகனைப்போன்ற ; கோமகன் நிலைக்குரிய ; கோமகன் பட்டத்துக்குகந்த.

duc'at, *n.* முற்கால ஐரோப்பிய பொன்நாணய வகை, பழம் பொற்காசு ; நாணயம்.

duc'ats, *n. pl.* நாணயங்கள் ; பணம்.

du'ce, *n.* தலைவர், இத்தாலிய வல்லாட்சியாளர், முசோலினி (Mussolini) யால் மேற்கொள்ளப்பட்ட தலைவர் பட்டம்.

duch'ess, *n.* கோமாட்டி ; கோமகனுடைய மனைவி ; மாண்ட கோமகனின் மனைவி.

duchesse', *n.* மேசை மையத்துணியாகப் பயன்படுத்தப்படும் மென்பட்டு வகை ; மேசை மையத்துணி ; (தொ.) duchesse lace, தலையணைவிளிம்புப் பூவேலை வகை.

duch'y, *n.* கோமகனுடைய ஆட்சிப்பகுதி.

duck[1], *n.* கப்பற்பாயும் பைகளும் செய்ய உதவும் முரட்டுத் துணி வகை.

duck[2], *n.* முக்குளிப்பு, குளிக்கும்போது நீரில் ஒருதடவை மூழ்கி எழுதல் ; தலையை நீரில் அமிழ்வித்தெடுத்தல் ; சட்டெனக் குனிந்து நிமிர்தல் ; *v.* நீரில் மூழ்கி எழு ; தலையை நீரில் அமிழ்த்தி எடு ; நீரிற் சிறிதுநேரம் அமிழ்த்திவை ; திடுமெனக் குனிந்து தலைதாழ்த்து ; தலைதாழ்த்து.

duck[3], *n.* நிலத்திலும் நீரிலும் இறங்கவல்ல வான்கலம் ; சரக்கேற்றிச் செல்லும் நில நீரியக்கமுடைய படைத்துறைக் கலம்.

duck[4], *n.* தாரா, குள்ளவாத்து ; தாராக்கள், தாராக்களின் தொகுதி ; பெட்டைத்தாரா ; மரப்பந்தாட்டத்தில் ஆட்டக்காரரின் கெலிப்பு மதிப்பு எதுவும் இல்லா நிலை, இன்மைப் புள்ளி ; அன்புக்குரியவர், அருமைச் செல்வம், செல்லக் காதலர் ; பங்குக்களத்தில் தவணை தவறியவர், கொடித்தவர் ; (தொ.) Bombay duck, சிறுமீன் வகை ; break one's duck, மட்டைப்பந்தாட்டத்தில் முதலில் ஓர் 'ஓட்டம்' எடுத்தல் ; lame duck, பங்குக்களத்தவணை தவறியவர் ; கொடித்தவர் ; ஏலாதவர், ஏலாதது ; like a dying duck, சோர்வடைகின்ற ; make ducks and drakes, play ducks and drakes, நீர்ப்பரப்பின்மீது தட்டைக் கற்சில்லுகளை வீசித் தத்திக் குதித்துச் செல்லும்படி செய்து விளையாடு ; வீண்செலவு செய், பாழாக்கு ; பாழாகப் பயன்படுத்து.

duck'bill, *n.* வாத்துப் போன்ற அலகும் காலுமுள்ள ஆஸ்திரேலிய நீர்வாழ் உயிரின வகை ; செங்கோதுமை வகை.

duck'-billed, *a.* வாத்தினைப்போன்ற அலகுடைய.

duck'-board, *n.* அகழி கடக்க உதவும் மரக்கட்டைப்பாதை ; சேற்றினூடாக ஒடுங்கிய மரக்கட்டை வழி.

duck'er[1], *n.* மூழ்குபவர் ; நீர்மூழ்கிப்பறவை வகை.

duck'er[2], *n.* வாத்துக்களைப் பேணி வளர்ப்பவர்.

duck'-hawk, *n.* சதுப்புநிலச் சிறுநாய் வகை.

duck'ing, *n.* வாத்துவேட்டை.

duck'ing-stool, *n.* குற்றவாளியை நீரில் மூழ்கடிக்க உதவும் நீள் கழியுடன் இணைத்த இருக்கை.

duck'ling, *n.* வாத்துக்குஞ்சு.

duck'mole, *n.* வாத்துப்போன்ற அலகும் காலுமுள்ள ஆஸ்திரேலிய நீர்வாழ் விலங்கு வகை.

ducks, *n. pl.* முரட்டுத்துணிவகையாலான காற்சட்டை.

duck'-shot, *n.* காட்டுவாத்துக்களைச் சுடுவதற்குரிய துப்பாக்கிக் குண்டு.

duck'weed, *n.* அமைந்த நீர்ப்பரப்பை மூடிமறைத்துப் படரும் பாசியின வகை.

duct, *n.* கசிவுநீர் கொண்டுசெல்லும் உயிரின உடலின் இழைநாளம் ; நீரும் காற்றும் உட்கொண்டிருக்கும் செடியினத்தின் நுண்புழை ; மின்கம்பிவடக் குழாய் ; வளி செல்வழி.

duc'tile, *a.* உலோகங்களின் வகையில் வேலைப்பாடுகளில் அடித்துருவாக்கத்தக்க இயல்புடைய ; கம்பியாக இழுத்து நீட்டக்கூடிய ; களிமண்போன்று குழைவான ; எளிதில் இணங்கிப்போகும் பண்புடைய ; எடுப்பார் கைப்பிள்ளை போன்ற, எளிதில் திருத்தி உருவாக்கத்தக்க ; வளைந்து கொடுக்கும் இயல்புடைய.

ductil'ity, *n.* ஒசிவு, மசிவு, உடையாமல் கம்பிகளாக இழுக்கப்படும் ஆற்றல்.

duct'less, *a.* இழைநாளமற்ற ; (தொ.) ductless glands, நாளமற்ற சுரப்பிகள், இழைநாளமில்லாமலே நேரடியாகக் குருதிக்குள் கசிவுநீர் பரப்பும் சுரப்பிகள்.

dud, *n.* கொல்லைப்பொம்மை ; மதிப்பு மறுக்கப்பட்ட பொருளகப் பணமுறி ; சோழிசிப்பி ; போலிப்பொருள் ; பயனற்ற பொருள் ; பயனற்ற திட்டம் ; பயனற்ற ஆள் ; தோற்று முறிவுற்றவர் ; *a.* போலியான ; பயனற்ற ; மோசமான.

dude, *n.* பகட்டன், ஒய்யாரக்காரன் ; பகட்டுக் கலையார்வலன் ; போலித்துரைமகன், ஆங்கிலேய நடையுடை பாவனைகளைப் போலியாகப் பின்பற்றித் திரிபவன்.

dudeen', *n.* சிறிய களிமண் புகையிலைக்குழாய்.

dudg'eon[1], *n.* கடுஞ்சினம், சீற்றம்.

dudg'eon[2], *n.* உடைவாளின் கைப்பிடி ; சிறு குத்துவாள்.

dudheen', *n.* = dudeen.

duds, *n. pl.* துணிகள், கந்தல் துண்டுகள்.

due, *n.* மதிப்புரிமை, பிறர் காட்டக் கடமைப்பட்டுள்ள தகுதியுரிமை ; தகையார்ந்த மதிப்பு ; கடன் ; கடப்பாடு ; கடமை, வரி, தீர்வை, சுங்கம் ; நிலைய வரி ; *a.* கடன்வகையில் கொடுக்கப்படவேண்டிய, பாக்கியான ; வரி தீர்வை முதலிய வற்றின் வகையில் செலுத்தப்படவேண்டிய ; உரிய, கடமைப்பட்ட ; தக்க, தகுதியாகக் காட்டப்படவேண்டிய ; நேரிய, நேர்மையாக அளிக்கப்படவேண்டிய ; காலவகையில் குறிக்கப்பட்ட, திட்டம் செய்யப்பட்ட, எதிர்பார்க்கப்பட்ட ; சரியான, சரிநுட்பமான, ஏற்ற அளவான, விளைவான, காரணமாகக் கொண்ட ; வரவேண்டிய, செல்லவேண்டிய, எதிர்பார்க்கப்படவேண்டிய ; *adv.* செவ்வாக, சரிநேராக, அப்புறம் இப்புறம் விலகாமல் ; (தொ.) due to, காரணமாக, விளைவாக ; for a full due, (கப.) முடிவாக, முழுநிறைவாக ; give the devil his due, பொல்லார்க்கும் நேர்மை வழங்கு ; in due course, காலப்போக்கில், நாளடைவில்.

du'el, *n.* மற்போர், மானமதிப்புக்காப்பை முன்னிட்டு முற்காலங்களில் திட்டவரையறைகளுக்குட்பட்டு நடத்தப்பட்ட இருவர் போராட்டம் ; சச்சரவு தீர்த்துவைக்க இருவரிடையே நிகழ்த்தப்படும் போராட்டம் ; எதிரெதிராக மனிதர் விலங்குபுள் உயிரினங்களிடையே நிகழ்த்தப்படும் காட்சிச்சண்டை ; கட்சிப்போராட்டம், கொள்கைப் போராட்டம் ; இருபக்க மோதல் ; *v.* மற்போரிடு, இருவர் போராட்டத்தில் ஈடுபடு ; சண்டையிடு ; சச்சரவிடு ; (தொ.) the duel, வரையறைச் சட்டங்களுடன் கூடிய இருவர் போராட்டம்.

duenn'a, *n.* செவிலி, ஆயமும் காவலும் ஆனவள்.

dues, *n. pl.* கடன், கடன்தொகைகள் ; கொடுக்கவேண்டிய கடன்பாக்கி ; கடமை ; வரி, தீர்வை, சுங்கம் ; நிலையவரி.

duet', **duett',** *n.* உறழ்பாடல், இருவர் பாடுதற்குரிய இசைப் பாடல்.

duff, *v.* போலிப்புதுமைத் தோற்றம் அளி ; கால்நடைகளைத் திருடிச் சூடிட்ட அடையாள மாற்று ; குழிப்பந்தாட்டத்தில் அடிதவறு, வீச்சுத்தவறு.

duff'el, *n.* முரட்டுக்கம்பளித்துணி வகை ; ஆட்டக்காரரின் கூடார மாற்றுடை.

duff'er, *n.* திறமையற்றவர், பயிற்சித்திறன் இல்லாதவர் ; பயனற்றவர் ; ஏலா முதியவர் ; போலி நாணயம் ; விளைவிலாச் சுரங்கம் ; போலிச் சரக்கு ; போலி ஓவியச்சரக்கு ; போலிப்பொருட்கள் செய்பவர் ; திரிந்து விற்பவர் ; பயனற்ற பழைய பொருட்களைப் புதுக்கித் திருட்டுச் சரக்கென்றே கள்ளவாணிகச் சரக்கென்றே கூறி ஏமாற்றி விற்பவர் ; கால்நடை கவர்பவர்.

duf'fle, *n.*=duffel.

dug[1], *n.* விலங்கின் பால்சுரக்கும் மடி.

dug[2], *v.* dig என்பதன் இறந்தகால முடிவெச்சவடிவம்.

du'gong, *n.* தழையுண்ணும் கடல்வாழ் பால்குடி விலங்குவகை.

dug'out, *n.* அடிமரத்தைக் குடைந்து செய்யப்பட்ட படகு; அகழியிற் குடைந்து அமைக்கப்பட்ட மறைவிடம்; நிலச் சரிவிற் குடைந்தமைக்கப்பட்ட மனை; மீண்டும் வேலைக்குக் கொண்டுவரப்பட்ட முதியவர்.

dui'ker, *n.* தென்னாப்பிரிக்க மான்வகை.

duke, *n.* கோமகன், அரசகுடும்ப எல்லைக்குப் புறமாக உச்ச உயர்குடியினர் பட்டப்பெயர்; கோமான், தனியுரிமையுடைய சிறு நிலச் சிற்றரசன்; குலமரபுக்குமூவின் முதல்வன்; (வர.) பண்டை ரோமாபுரியின் பிற்பட்ட காலப் பேரரசரின் கீழுள்ள மாகாணப் படைத்தள முதல்வர்; பழவகை; (தொ.) royal duke, மன்னுரிமைக் கோமகன், இளவரசர்களுக்குள் அரசபதவிக்கு முன்னுரிமையுடையவர்.

duke'dom, *n.* கோமகன் நிலை; கோமகன் பட்டம்; கோமகன் ஆட்சியெல்லை.

duk'ery, *n.* கோமகன் நிலை; கோமகன் ஆட்சிப்பகுதி; (தொ.) the Dukeries, நாட்டிங்காம் (Nottinghamshire) என்னும் இங்கிலாந்து மாவட்டத்தைச் சேர்ந்த கோமக்கள் ஆட்சிப்பகுதிகள் கொண்ட தொகுதி.

dul'cet, *a.* செவிக்கின்பமான, மகிழ்வூட்டுகிற.

dul'cify, *v.* இனிமையாக்கு, செவிக்கின்பமூட்டு.

dul'cimer, *n.* பல்வேறு நீளமான தந்திகளுள்ள இசைக் கருவி வகை; யூதரின் பையிசைக்கருவி.

Dulcine'a, *n.* இலட்சியக் காதலி, தன்னேரில்லாத் தலைமகள்.

dull' *a.* ஊக்கமற்ற, எழுச்சியற்ற; சோர்ந்த தோற்ற முடைய; தூங்கி வழிகிற, அரையுறக்க நிலையுடைய; சுறு சுறுப்பற்ற; சோம்பிய; துயரார்ந்த; கேள்வியுணர்வு குன்றிய; புலனுணர்வு மழுங்கிய; அறிவாற்றல் குறைந்த, கூரறிவற்ற; மக்கான; கூரற்ற, மழுங்கலான; சுவை யற்ற, உவர்ப்பான; விரைவற்ற, தேங்கலான; வாணிகத் துறையில் தொழில் மந்தமான; சலிப்புத்தருகிற, ஒரே மட்ட மான; இடைமாறுபாடற்ற; ஓவிய வகையில் உயிரோட்ட மற்ற; நிறவகையில் மங்கலான, முனைப்பற்ற; ஒலிவகை யில் தெளிவாகக் கேட்காத; வானிலை வகையில் மூடாக்கான; இருள்மண்டிய நிலையிலுள்ள; *v.* மழுங்கலாக்கு; கூர் மழுக்கு; புலனுணர்வு மழுங்கவை; ஓசைமந்தப்படுத்து; உணர்ச்சிகுன்றச்செய்; முனைப்புக் குறை; அறிவாற்றல் மங்கவை; சுறுசுறுப்புத்தடு; கவிந்து இருளாட வை; ஊக்கங்கெடு; கிளர்ச்சிகுலை.

dull'ard, *n.* அறிவற்றவன், மட்டி.

dull'ness, *n.* மந்தம்; மழுக்கம்; முனைப்பற்ற தன்மை; கவர்ச்சியின்மை; சோர்வு.

dull'y, *a.* ஒருவாறு மந்தமான; *adv.* மந்தமாக.

dul'ness, *n.*=dullness.

dulse, *n.* உணவுக்குரிய கூடற்பாசி வகை.

dul'y, *adv.* சரியாக; சரியான நேரத்தில்; நேர்மையாக; தகுதிப்படி; போதிய அளவில்.

du'ma, *n.* ருசியா (Russia) நாட்டில் 1906-1917 ஆண்டுகளில் இயங்கிய சட்ட மாமன்றம்.

dumb, *a.* ஊமையான; வாய்விடாத, பேச்சாற்றலற்ற; பேச இயலாத; பேசாத; பேச்சுரிமையற்ற; எதிர்த்துக் கேட்கும் உரிமையில்லாத; ஒலியற்ற; ஓசைபடாத; நாணத்தால் வாய்திறவாத; அதிர்ச்சியினால் பேச்சடங்கிய; இயல்பாக அமைதியான, வாயாடாத; மௌனமான; கூத்து முதலியவற்றின் வகையில் வாய்ப்பேச்சில்லாத, இயந்திர அமைப்புக்கள் வகையில் மனிதருக்குப் பதில் செயற் படுகிற; செயற்படாத, எதிர்பார்க்கப்படும் செயற்பாடில் லாத; *v.* ஊமையாக்கு, வாயடை; (தொ.) strike dumb, திகைப்பாற் பேசமுடியாமற் செய், வாயடங்கச்செய்.

dumb'-barg'e, *n.* பாய்மரங்கள் இல்லாத தெப்பம், பொறி யியக்கம் அற்ற மரக்கலம்.

dumb'-bell, *n.* தசை வளர்ச்சிக்காகக் கைகளாற் பிடித்து உடற்பயிற்சி செய்ய உதவும் இருமுனைப் பளுக் கருவி.

dumb'-craft, *n.*=dumb-barge.

dumbfound', *v.* ஊமையாக்கு, குழப்பு, திகைக்க வை.

dum'bledore, *n.* உரத்து முரலும் ஓசையுடைய பெரிய வண்டுவகை.

dumb'-pia'no, *n.* இசையில்லாத விசையமைவு.

dumb'-show', *n.* ஊமைக்கூத்து.

dumb'-wait'er, *n.* உணவுக்கலங்களையுடைய நகரும் மேடை; உணவுக்குப்பின் உண்ணும் பழவகை முதலியவற்றை வைக்கும் சுழலுச்சியுடைய நிலைதாங்கி; பரிமாறுபவன் தேவை இல்லாமல் உணவு படைக்க உதவும் சுழல்நிலைப்பெட்டி.

dumb'-well, *n.* மேற்பரப்பு வடிநீரைக் கீழேகொண்டு செல்லும் கிணறு போன்ற ஆழ்குழி.

du'mdum, *n.* கிழிப்புக்குண்டு.

dumm'y, *n.* வாய்பேசாத உருவம்; மட்டி, பேதை; போலி ஆள்; செயல் செய்யாத ஆள்; போலிப்பகட்டு உருவம்; வைக்கோல் உருவம்; கைப்பாவை; கைக்கருவி; போலிப் பொருள்; பொம்மைப்போலி உரு, ஆடையணி தாங்கும் விளம்பரப்பொம்மை; சுடுவதற்கான பொம்மை இலக்கு; குழந்தைக்குப் பாலூட்டுவதற்கான குமிழ்கலம்; அச்சிடாப் போலி வெள்ளேடு; சீட்டாட்ட வகையில் திறந்த சீட்டுக் களுக்குரிய கற்பனை ஆட்டக்காரர்; சீட்டுக்கள் திறந்து வைக்கப்படும் சீட்டாட்ட வகை; திறந்த சீட்டுக்களை எடுத் தாடும் முறையுடைய துணையாட்டக்காரர்; உதைபந்தாட்ட வகையில் பந்துவீசுவதாகக் காட்டிக்கொள்ளும் போலிப் பாவனை; *a.* ஊமையான, மௌனமான, பேசாத, போலியான, பாசாங்கான; (தொ.) sell the dummy, உதைபந்தாட்ட வகையில் பந்தை வேறொருவருக்கு அனுப்பப்போவதாகப் பாசாங்கு செய்து எதிர்த்தரப்பு ஆட்டக்காரரை ஏமாற்று.

dump[1], *n.* தடித்த குறுகிய வடிவமுடைய பொருள்; ஆட்டக் கெலிப்பின் மதிப்புக்குறியான போலி ஈயவட்டு; சிறுநாணய வகை; கப்பல் கட்டுமானத்தில் குமிழ் இறுக்காணி; கப்பலில் ஆடப்படும் விளையாட்டுவகையில் எறியும் கயிற்றுக் கண்ணி வளையம்; தடித்துக் குறுகிய ஆள்; ஆட்டவகையின் எறி கழல்; இனிப்புத் தின்பண்டவகை; ஆட்டவகைக்குரிய குற்றிக்கோல்.

dump[2], *n.* தொப்பென விழும் அடி; மெத்தென விழும் ஒலி, குப்பைக் குவியல்; குப்பைகொட்டுமிடம்; சேமிப்பு; படைத் துறையின் தற்காலிக வெடிமருந்துச் சேமிப்புச்சாலை; *v.* தொப்பெனக் கீழிடு; கீழே கொட்டு; தடாலென விழும்படி வீசியெறி; வாணிகத்துறையில் உள்நாட்டில் உயாவிலைக்கு விலைபோகமுடியாத பொருள்களை ஆக்க விலைக்குக் கீழாக வெளிநாட்டில் குவித்துப் புதுவிலைக்களம் கைப்பற்று; நாடு கடந்து அயல் நாட்டில் ஆட்களைப் பேரளவில் குவித்திறக்கு.

dump[3], *n.* மடு; சிறுகுட்டை; ஆற்றுப்படுகையில் ஆழமான பள்ளம்.

dump'ling, *n.* வேகவைத்த அல்லது சுடப்பட்ட பிசைந்தமாக் கொழுக்கட்டை; சீமை இலந்தைப்பழம் முதலியவை உள் ளடக்கிய பிசைந்த மாவாற் செய்யப்பட்ட பணியாரம்.

dumps, *n. pl.* முகவாட்டம்; மனச்சோர்வு.

dum'py, *n.* குட்டையான தடித்த மனிதன் அல்லது விலங்கு; ஸ்காத்லாந்தின் (Scotland) சிறுகால் பயிற்சியினக்கோழி வகை; குட்டையான சிறு குடை; *a.* சிறுத்துத் தடித்த.

dump'y-lev'el, *n.* தொலைநோக்கியுடன் மட்டத்தொடர்பில் இணைக்கப்பட்ட அளவாய்வாளரின் காட்சித்தள மட்டம்.

dun[1], *n.* மங்கலான பழுப்புச்சாம்பல் நிறம், சுண்டெலிநிறம், கழுதைநிறம்; புகைநிறக் குதிரை, மீன்தூண்டிலுக்குரிய செயற்கை ஈ வகை; *a.* சாம்பல்வண்ணப்பழுப்பு நிறமான; புகை நிறமான; மாசுபடிந்த தோற்றமுடைய; *v.* சாம்பல் வண்ணமாகு.

dun[2], *n.* கொடுத்த கடனைக் கேட்டு நெருக்குபவர்; கடன் தண்டுபவர், கடன் தண்டற் பணியாளர்; கடனடைப்புக் கோரிக்கை, கொடுத்த கடனைத் திருப்பிக்கேட்டல்; *v.* கொடுத்த கடனுக்காக நெருக்கு; தொல்லைகொடு.

dun[3], *n.* குன்று; திட்டு, திடல்; அரண்காப்புடைய மேடு.

dun'-bird, *n.* நீரில் மூழ்கும் செந்தலையுள்ள வாத்துவகையின் பெண்.

dunce, *n.* மடையன்.

dun'derhead, *n.* முட்டாள், மூடன்.

dun'der-headed, *a.* அறிவற்ற, முட்டாளான, மூடத் தன்மையுள்ள.

dun'-div'er, *n.* நீர்மூழ்கும் வாத்து இனப் பெடை; வாத்து வகை இள ஆண்.

Dundrear'y, *n.* தாடியில்லாத நீண்ட சிலிர்ப்பான மீசை, கிருதாமீசை; *a.* நீண்ட சிலிர்ப்பான.

dune, *n.* தேரி, மணற்குன்று.

dung, *n.* சாணம், விலங்குகளின் மலம்; உரம், எரு; மாசு, அருவருப்புப்பொருள்; ஒழுக்கக்கேடு, இழிநிலை; *v.* சாணத் தினால் உரமிடு.

dung'aree, *n.* முரட்டுக் காலிக்கோத் துணி.

dung'arees, *n. pl.* முரட்டுக் காலிக்கோத் துணியால் செய்யப் பட்ட நிறைகொள் படுக்கைக்கட்டு.

dung'-bee'tle, *n.* முட்டைப்புழுவைச் சாணத்தில் வளரவிடும் வண்டு வகை.

dun'geon, *n.* சிறைக்கிடங்கு; கோட்டையின் உள்ளிடத் தலைமை அரண்; காற்றோட்டமற்ற இடம்; இருட்டறை; *v.* நிலவறையில் இட்டடை; அரண்காப்பான நிலவறையிற் சிறைப்படுத்திவை.

dung'-fork, *n.* குதிரை இலாயத்திலுள்ள எருவை அகற்று வதற்குப் பயன்படுத்தப்படும் கவட்டைக் கொம்பு.

dung'-heap, dung'hill, *n.* சாணக்குவியல்; பண்ணை நிலத்தின் கழிவுப்பொருள், இழிந்த நிலை.

dunk, *v.* உணவின் போது அப்பத்துண்டைக் குடிநீர்மத்தில் அல்லது சாற்றில் அமுக்கி எடு.

Dunkirk', Dun'kirk, *n.* இரண்டாம் உலகப்போரில் (1939–1945) டன்கர்க்கிலிருந்து (1940 மே) பிரிட்டிஷார் நடத்திய துணிகரப் படைத்துறை வெளியேற்றம்; முழு நிறைநிலை துறப்பு, இடம் விட்டுக்கொடுப்பு; விரைந்த பின்வாங்கல்; துணிகரப் பின்வாங்கல் நடவடிக்கை.

dun'lin, *n.* செங்நிற முதுகும் நீண்ட அலகும் உடைய சதுப்பு நிலப் பறவை வகை.

dunn'age, *n.* கப்பல் மூட்டைகளின்கீழ் ஈரக்காப்பாக இடப் படும் பாய் கட்டை கம்பிக்கூளங்கள்; மூட்டை இடைச் செருகு கட்டை; கப்பல் மூட்டை.

dunn'ish, *a.* மங்கிய, சாம்பல் நிறமுள்ள.

dunn'ock, *n.* வேலிக்குருவி.

dunt, *n.* திடீரென வரும் செங்குத்துக் காற்றசைவினால் வானூர்திக்கு ஏற்படும் பேரடி.

du'o, *n.* இசை இரட்டையர்.

duode'cimal, *n.* பன்னிரண்டின் பகுதியான எண்மானம்; *a.* பன்னிரண்டின் பகுதியான, பன்னிரண்டின் கூறான.

duode'cimals, *n. pl.* அடி அங்குலம் முதலிய பன்னிரண்டு மான அளவை ஆய்வாளர் பயன்படுத்தும் குறுக்குப் பெருக்கக் கணிப்பு முறை.

duode'cimo, *n.* பன்னிரண்டாக மடிக்கப்பட்ட தாள் மடிப்பு (சு-வ: 12 mo.); பன்னிரண்டான தாள் மடிப்பளவுள்ள புத்தகம்; சிற்றளவான பொருள்; சிற்றளவான மனிதன்; *a.* பன்னிரண்டு தாள் மடிப்புக் கொண்ட.

duoden'ary, *a.* பன்னிரண்டு மடக்கான.

duodeni'tis, *n.* சிறுகுடல் முகப்பு வீக்கம்.

duoden'um, *n.* (உள்.) சிறுகுடலின் முதற்கூறு.

du'ologue, *n.* நாடகத்தில் இருவர் உரையாடல், இரு நடிகர்க ளுள்ள நாடகம்.

duom'o, (இத்.) *n.* இத்தாலிய மாவட்டத் தலைமையிடத் திருக்கோயில்; *pl.* duom'os.

dupe, *n.* ஏமாற்றப்பட்டவன்; ஏமாளி, எளிதில் ஏமாறுபவன்; *v.* ஏமாற்று, மோசம் செய், மடையனுக்கு.

du'pery, *n.* ஏமாற்று வித்தை.

du'ple, *a.* இரட்டையான; இசைமானத்தில் கோட்டுக்கு இரு கொட்டு உள்ள.

dup'lex, *a.* இரட்டையான; இருமடியான; இருதிசை இயக்கம் ஒருங்கேயுடைய; (தொ.) duplex gas.burner, இருபீற்றின் ஒரு சுடரான வளி விளக்கு; duplex lamp, இருதிரி விளக்கு; duplex telegraphy, ஒரே சமயத்தில் இருபுறமும் ஒரு கம்பியின்மூலம் செய்தி அனுப்பப்பெறும் தந்தி அமைப்பு.

dup'licate, *n.* இருமடிப் பகர்ப்பின் மறுபடிவம்; பார்த் தெழுதிய எதிர்ப்படி; இருமடிப்படிவக் கட்டுப்பாடு, இருமடித் தொகுதி; *a.* இரட்டிப்பான; இருமடங்கான; முதலது போன்ற, நிகர் ஒத்த, ஒற்றை மாற்றான; *v.* இரண்டுபடுத்து, இரட்டிப்பாக்கு; மடி; இரண்டாற் பெருக்கு; இருமடியாக்கு; இருபடியெடு; படியெடு; (தொ.) in duplicate, இரண்டு படிகளில், மூலத்தோடு கூடிய படியில்.

du'plicator, *n.* படியெடுப்புப் பொறி.

dupli'city, *n.* வஞ்சகம், உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுதல்; இரண்டகம்.

dur'able, *a.* நிலைத்து நிற்கக்கூடிய, நீடித்து உழைக்கக் கூடிய; தேய்மானத்தை எதிர்த்து நிற்கிற, சேதாரத்தைத் தடைசெய்கிற.

dural'umin, duralumin'ium, *n.* வலிவலுமினியம், வானூர்தி முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் வலிமையும் கடினமும் உள்ள அலுமினியக் கலவைப் பொருள்.

du'ra mat'er, (ல.) *n.* (உள்.) மூளையையும் முதுகுத் தண்டையும் சூழ்ந்துகொண்டிருக்கும் உறுதியான மேல் சவ்வு.

duram'en, *n.* காழ்மரம், மரவகையின் வைரம் பாய்ந்த உட்பகுதி.

dur'ance, *n.* சிறைவைப்பு, சிறைக்காவல்.

dura'tion, *n.* காலத்தொடர்ச்சி, கால நீட்சி; கால வரை யறை; வரையறைப்படாக்காலம்; தொடர்ந்திருக்கும் ஆற்றல்.

durb'ar, (பெர்.) *n.* கொலுவிருக்கை; ஓலக்கம், அரசுப் பேரவை கூடும் மண்டபம்; வரவேற்புக் கூடம்; வரவேற்பு விழா.

dur'ess, dur'esse, *n.* கட்டாயச் சிறை வைப்பு, வலுக் கட்டாயம்; கட்டாயப்படுத்துதல்; வற்புறுத்தல்.

dur'ian, *n.* கெட்ட நாற்றமும் நறுஞ்சுவையுமுள்ள பழவகை; பழமரவகை.

dur'ing, *prep.* நேரத்தினிடையே, நேரமுழுதும் தொடர்ந்து.

durm'ast, *n.* சிந்தூர மரவகை.

durn, *v.* = darn.

du'rra, *n.* தினை, சாமை.

durst, *v.* dare என்பதன் இறந்தகால வினைவடிவங்களில் ஒன்று.

dusk, *n.* அரையிருள், ஒளிமறைவு, படர்நிழல்; சந்தி, பொழுதுமயங்குவேளை; *a.* இருளார்ந்த; *v.* அரையிருளாகு; நிழலாகு, ஒளிமங்கு.

dusk'y, *a.* மங்கலான, தெளிவில்லாத; கருநிறமான; துயர மான, சோர்வான.

dust, *n.* தூள், பொடி, அணு; தூசி; மலர்த்துகள்; தூளிப்படலம்; தூள், தூசு; மண், நிலம்; கல்லறை; இறந்தோர் உடல்; மனித உடல்; மனிதன்; மாசு; குப்பை; இழிவு; தாழ்நிலை; பொன்துகள்; பணம்; விரைவு; சச்சரவு, குழப்பம்; *v.* தூசிதுடை; தூசியடித்து

நீக்கு; தூசி துடைத்துத் துலக்கு; தூள்தூவு; தூசியை மேலேதூவிக்கொள்; தூசியில் முழுகு; தூசி படிய வை; (தொ.) bite the dust, தாழ்வுறு; காயமுற்று வீழ்; இற; dust one's jacket, நன்கு அடி கொடு; dust the eyes of, ஏமாற்று; kick up a dust, குழப்பத்தை உண்டாக்கு; throw dust in one's eyes, ஏமாற்று.

dust'-bin, *n.* குப்பைத்தொட்டி.

dust'-bowl, *n.* புயல்காற்று தாக்கும் பஞ்சப்பகுதி; வறட்சியாலும் நீடித்த பயிர்விளைவின் வளக்கேட்டினாலும் தரிசுபட்டுப் புழுதிக்காடான பாலைநிலம்.

dust'-brand, *n.* பயிர்நோய் வகை.

dust'-cover, *n.* புத்தக மேலட்டை.

dust'-devil, *n.* தூசியெழுப்பும் புயற்காற்று.

dust'er, *n.* தூசி துடைக்கும் துணி; துடைப்பத் தூரிகை.

dust'-hole, *n.* குப்பைத்தொட்டி, குப்பைக்குழி.

dust'-jack'et, புத்தக மேலட்டையுறை.

dust'-man, *n.* குப்பைக்காரர், குப்பை அகற்றுபவர்.

dust'-proof, *a.* தூசியால் மாசுறுத, தூசி படியாத.

dust'-shot, *n.* இரவைக்குண்டு, மிகச்சிறிய துப்பாக்கிக் குண்டு.

dust'y, *a.* தூசியால் மூடப்பட்ட; தூசி தெளிக்கப்பட்ட; தூசி போன்ற; கவர்ச்சியற்ற, உவர்ப்பூட்டுகிற; தெளிவற்ற, உறுதியற்ற.

Dutch, *n.* ஆலந்து (Holland) அல்லது நெதர்லாந்துப் பகுதிக்கு (Netherlands) உரிய மொழி; பரந்துபட்ட சேர்மன் (Germany) நிலப்பரப்பின் மொழிப் பொதுப்பெயர்; *a.* ஆலந்து நாட்டுக்குரிய; ஆலந்து நாட்டவர் பற்றிய; ஆலந்து நாட்டு மொழிசார்ந்த; ஆலந்து நாட்டிலிருந்து வருகிற; ஆலந்து நாட்டவரால் செய்யப்பட்ட; ஆலந்து நாட்டவரால் புத்தமைக்கப்பட்ட; ஆலந்து நாட்டவரின் சிறப்பியல்பான; நெதர்லாந்து உள்ளிட்ட சேர்மன் நிலப்பரப்புக்குரிய; மந்தமான; செப்பமற்ற; (தொ.) double Dutch, புரியாச் சலசலப்புப்பேச்சு; Dutch auction, விற்பனையாளர் அதிக விலையில் தொடங்கி படிப்படியாக விலையைக் குறைக்கும் போலி ஏலவகை; Dutch courage, மதுக்குடியினால் தூண்டப்பட்ட போலித்துணிவு; Dutch hoe, மண்வெட்டியிலுள்ளதைப்போல் அலகு பொருத்தப்பெற்றுள்ள களைக்கொட்டுவகை; Dutch oven, கங்கினுள் வைத்துச் சமைக்குங்கலம்; வெளியிடத்தழல் மேலிட்டு வறுப்பதற்குள்ள தட்டம், திறந்த பக்கம் நெருப்பின் பக்கமாக்கி வறுக்கவல்ல உலோகப்பேழை; Dutch treat, ஒவ்வொருவரும் தமது பங்கினைக் கொணரும் அல்லது அதற்காகப் பணம் கொடுக்கும் விருந்து; Dutch wife, படுக்கும்போது கைகால்களைக் கிடத்துவதற்கான பிரம்புச்சட்டம்; High Dutch, தென் சேர்மானிய மொழி; Low Dutch, ஆலந்து மக்கள் உட்படக் கடற்கரையில் வாழும் வட சேர்மானியர் பேசும்மொழி; talk like a Dutch uncle, திட்டு, கண்டி; the Dutch, ஆலந்து நாட்டவர்கள்.

Dutch'-built, *a.* செப்பமின்றி அமைக்கப்பட்ட.

dutch'man, *n.* ஆலந்து (Holland) நாட்டவன்; ஆலந்துக் குடிமகன்; ஆலந்துக்காரர் கால்வழியில் தோன்றிய தென்னப்பிரிக்கவாணன்; (கப்.) ஆலந்துநாட்டுக் கப்பல்; *pl.* dutch'men.

dutch'woman, *n.* dutchman என்பதன் பெண்பால்; *pl.* dutch'women.

dut'eous, *a.* கடமையுணர்ச்சியுள்ள, கடமையறிந்த, கடமையில் நாட்டமுடைய, கீழ்ப்படிதலான.

dut'iable, *a.* சுங்கம் தீர்வைகள் முதலிய வரிகள் விதிக்கப் பெறுவதற்குட்பட்ட.

du'tied, *a.* சுங்கங்களும் தீர்வைகளும் விதிக்கப்பெற்ற.

dut'iful, *a.* கடமையில் நாட்டமுடைய; கடமையுணர்ச்சி காட்டுகிற; மதிப்புக்காட்டுகிற; மகிழ்ந்து பணி செய்கிற; ஒழுங்கு தவறாமல் கீழ்ப்படிகிற.

dut'y, *n.* கடமை; மேலோர்க்குக் காட்டத்தகும் மட்டுமதிப்பு; பணிவிணக்கம்; அறமுறைக்கடப்பாடு; சட்டக்கட்டுப்பாட்டுணர்ச்சி; நேர்மைப் பற்றுணர்வு; பணித்துறை அலுவல்; பணிசுடுபாடு; தொழில்துறைச் செயல்முறை; திருக்கோயில் நடைமுறை; தீர்வைவரி, சரக்கின்மீது செலுத்தப்படவேண்டிய இறைமுறைக்கடன்; சுங்கவரி; இயந்திரத்தின் பொருள் செலவழிவுக்கியைந்த ஆக்க ஆற்றல் அளவை விழுக்காடு; (தொ.) do duty for, பகரமாகப் பயன்படு; duty call, விரும்பாவிடினும் செய்துதீரவேண்டிய பணி; off duty, அலுவல் விடுபாடுடைய; on duty, அலுவல் ஈடுபாடு சார்ந்த.

du'ty-free, *a.* இறையிலியான, வரி-தீர்வை முதலியவற்றினின்றும் விலக்களிக்கப்பெற்ற.

du'ty-paid, *a.* தீர்வை செலுத்தப்பெற்ற, சுங்கம் செலுத்தப்பட்ட.

duum'vir, *n.* சரிசமநிலையுடைய இருவரடங்கிய குழுமத்தின் உறுப்பினர்.

duum'virate, *n.* ஒரு பதவியில் இருவர் இணையமர்வு; இருமை ஆட்சி, சம அதிகாரமுள்ள இரண்டு அலுவலர்கள் நடத்தும் ஆட்சி.

duum'viri, duum'virs, *n.* duumvir என்பதன் பன்மை வடிவங்கள்.

duvet, (பிர.) *n.* கடல்வாத்து வகையின் அல்லது அன்னத்தின் தூவியினால் நிரப்பப்பட்ட மெத்தை.

dux, *n.* சட்டாம்பிள்ளை, பள்ளியில் அல்லது வகுப்பில் தலை மாணவன் அல்லது மாணவி; முதல்வர்.

duy'ker, *n.* = duiker.

dwarf, *n.* குள்ளன், விலங்கில் கூழை; செடிமர இனத்தில் தன்னளவில் குறுகிய வளர்ச்சியுடையது; குள்ளத் தெய்வதம், கூளி, குறளி, வளர்ச்சிகுன்றியவர்; வளர்ச்சி குன்றியது; தன் இனத்தில் சிறியது; உயர் எடைமானத்துடன் தாழ் ஒளிர்வுடைய விண்மீன்; *a.* மிகச்சிறிய; குட்டையான; தடைப்பட்ட வளர்ச்சியுடைய; *v.* வளர்ச்சியைத் தடு; வளர்ச்சிகுறுக்கு; ஒப்பீட்டால் சிறிதுபடுத்து; தொலைவால் மிகச் சிறியதாகத் தோன்றும்படி செய்.

dwarfed, *a.* வளர்ச்சி தடைப்படுத்தப்பட்ட, கூழையான; (தொ.) dwarfed trees, சீன-ஜப்பானிய வீடுகளிலும் தோட்டங்களிலும் பூத்தொட்டிகளில் வளரும் சிறுமரங்கள்.

dwarf'ish, *a.* குள்ளனைப்போன்ற; மிகச்சிறிய; வெறுக்கத் தக்க, இகழ்ச்சிப்பொருளான.

dwell, *n.* இடைத்தயக்கம்; இயந்திரத்தின் நொடிநேர இடைநிறுத்தம்; *v.* தங்கு; தங்கிவாழ்; குடியிரு; மெல்ல இயங்கு; ஊன்றிநினை; கருத்தூன்றி நீடித்துப்பேசு; நினைவூன்றி விரித்தெழுது; காலநீட்டிப்புச்செய்; (குதிரை) மெதுவாகக் கால்களைத் தூக்கு; தடை வேலியைத் தாண்டுமுன் தயங்கு.

dwell'er, *n.* குடியிருப்பவர், தங்கிவாழ்பவர்; தடைவேலியண்டைத் தயங்கிநிற்கும் குதிரை.

dwell'ing, *n.* தங்குதல், குடியிருத்தல்; குடியிருப்பிடம், வீடு; நீடிப்பு, நிலைப்பாடு.

dwell'ing-house, *n.* குடியிருப்பு வீடு.

dwell'ing-place, *n.* குடியிருப்பிடம்.

dwin'dle, *n.* கலிவு; *v.* ஒடுங்கு, சுருங்கு; குன்று, மெலி; குறை; சீர்கேடுறு, சிதைவுறு; முதன்மை குறைவுறு; தரத்தில் இழிவுறு.

dy'ad, *n.* இரண்டன் தொகுதி; இணை, இரட்டை, சோடி; (வேதி.) நீரக ஈரணுவுடன் இயையும் தனிம அணு; நீரக ஈரணுவுடன் இயையும் மூலப்பொருள் அணு.

Dy'ak, *n.* போர்னியோத் தீவின் (Borneo) தொல்குடியினர்.

dye, *n.* வண்ணச்சாயம்; சாயப்பொருள்; சாயநீர்; வண்ணம்; சாயல்; *v.* சாயந்தோய்வி; வண்ணந்தீட்டு; நிறங்கொடு; வண்ணக் கறைப்படுத்து; வண்ணம் பெறு; நிறம் எளிதில் தோயப்பெறு.

dy'er, *n.* சாயந்தோய்ப்பவர், சாயத்தொழிலாளி.

dy'er's-broom, dy'er's-green'weed, *n.* மஞ்சள் சாயப் பொருள் தரும் அவரைப்பூவுருவுடைய புதர்ச்செடிவகை.

dye'-stuff, *n.* சாயப்பொருள்.

dye'-wood, *n.* சாயமிடுதற்குரிய பொருள் கிடைக்கப்பெறும் கட்டை வகை.

dye'-works, *n.* சாய நிறுவனம், சாயச்சாலை.

dy'ing, *n.* சாவு, இறத்தல்; *a.* இறக்க வேண்டிய; இறக்குந் தன்மையுள்ள; சிதைவுறுகிற; தளர்வுறுகிற; சாவுக்குரிய; சாவேளையடுத்த, சாவு நேரத்துக்குரிய; (தொ.) dying declaration, (சட்.) இறக்கும் நேர வாக்கு மூலம், இறக்குந் தறுவாயிலிருப்பவர் தெரிவிக்கும் கூற்று.

dyke, *n.*, ஏ.=dike.

dynam'ic, *n.* இயக்காற்றல்; (இய.) விசையியக்க ஆற்றல்; *a.* விசையியக்க இயல் சார்ந்த; இயற்கையாற்றல் விளைவுகளுக்குரிய; இயக்கம் சார்ந்த; இயங்குபொருள் சார்ந்த; ஆற்றல் வாய்ந்த; செயல் விரைவுடைய, விசையார்ந்த; உரமிக்க, ஊக்கமிக்க; ஊக்கு மூலமான, காரணமான; (மெய்.) இயல் ஆற்றல் மூலக்கோட்பாடு சார்ந்த; (மரு.) செயல் திறத்துக்குரிய.

dynam'ical, *a.* விசையியக்க இயல் சார்ந்த; இயங்காற்றலுக்குரிய; இயந்திர ஆற்றல் பற்றிய; (இறை.) இயற்கை இயங்காற்றல் கடந்த தெய்விக ஆற்றலால் தூண்டப்பட்ட; (மெய்.) இயல் ஆற்றல் மூலக்கோட்பாடு சார்ந்த.

dynam'ics, *n.* விசையியக்கவியல், இயக்க ஆற்றல்-இயக்கத் தாக்கு ஆற்றல் ஆகியவற்றை ஆயும் இயற்பியலின் இயக்கவியல் சார்ந்த துறை.

dyn'amism, *n.* இயல் ஆற்றல் மூலக் கோட்பாடு, பிறபொருள்களைப்போலவே மனமும் இயற்கையாற்றல்களின் விளைவே என்று கருதும் கொள்கை; ஆற்றல் செயல்படுமுறைமை.

dyn'amist, *n.* இயல் ஆற்றல் மூலக்கோட்பாட்டாளர்.

dyn'amitard, *n.* அரசியல் புரட்சிகளுக்காக வெடிமருந்தினைப் பயன்படுத்துபவர்.

dyn'amite, *n.* சுரங்கவெடி, பேராற்றல் வாய்ந்த வெடிமருந்துவகை; ஏ. சுரங்கவெடியைக்கொண்டு தகர்த்தெறி.

dyn'amiter, *n.*=dynamitard.

dyn'amo, *n.* (மின்.) மின் ஆக்கப்பொறி, காந்தச் சூழுறவில் செப்புக்கம்பிகளைச் சுழற்றுவதன் மூலம் இயக்க ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றும் இயந்திரக் கருவி; *pl.* dyn'amos.

dynamom'eter, *n.* திறன்மானி, உறுப்பாற்றல்களை அளந்து கணிக்கும் கருவி; பெருக்கு திறன்மானி, தொலைநோக்கிப் பெருக்காற்றல் மானி.

dyn'ast, *n.* ஆளுநர், மன்னர்; அரசகுலத்தவர்.

dynas'tic, *a.* அரசர் குலத்துக்குரிய.

dyn'asty, *n.* அரசர்குலம்; மன்னர்களின் வழிவழி மரபு.

dyne, *n.* (இய.) நொடி விசையழுத்தம், ஒரு கிராம் எடை மானத்தை ஒரு நொடியில் நொடிக்கு ஒரு சென்டிமீட்டர் விழுக்காடு செலுத்தவல்ல அளவுடைய விசை ஆற்றல் அலகு.

dys'entery, *n.* வயிற்று அளைச்சல், சீதபேதி.

dysgen'ic, *a.* இனவளர்ச்சிக்கு உகந்ததாயிராத.

dyslogis'tic, *a.* மறுக்கிற, கண்டிக்கிற, இழிவுதருகிற.

dyspep'sia, dyspep'sy, *n.* (மரு.) வயிற்று மந்தம், உணவு செரியாமை.

dyspep'tic, *n.* வயிற்றுமந்த நோயாளி; *a.* வயிற்று மந்த முடைய; செரிமானக்கேடு சார்ந்த.

dyspnoe'a, *n.* (மரு.) மூச்சுவிடுவதில் இடர்ப்பாடு.

dysu'ria, dys'ury, *n.* (மரு.) சூடுபிடிப்பு, சிறுநீர்கழிக்கும் போது நோவு ஏற்படும் கோளாறு.

Each, *pron.* இருவரில் ஒருவர்; ஒவ்வொருவர்; தனித் தனியாக ஒவ்வொருவரும்; இரண்டில் ஒன்று; ஒவ்வொன்று; தனித்தனியாக ஒவ்வொன்றும்; *a.* ஒவ்வொரு; (தொ.) each other, ஒருவரோடொருவர்.

eag'er, *a.* ஆவலுள்ள, மிகு விருப்பமுடைய; ஆர்வமிக்க; கூரவாவுடைய; அடக்கமுடியாத ஆர்வத்தால் தூண்டப்பட்ட.

ea'gle, *n.* கழுகு; ரோமாபுரி அல்லது பிரஞ்சுப் (French) படையின் கழுகுக்கொடிச் சின்னம்; கழுகுபோன்ற உருவ முடைய திருக்கோயில் சாய்வுமேடை; குழிப்பந்தாட்டத்தில் இரண்டு அடியில் ஆட்ட நிறைவுறும் குழி; 10 வெள்ளி மதிப்புடைய அமெரிக்க நாணயம்; (தொ.) Double eagle, இருபது வெள்ளி மதிப்புள்ள அமெரிக்க நாணயம்.

ea'gle-eyed, *a.* கூர்மையான பார்வையுடைய; ஊடுருவிப் பார்க்கும் திறனுடைய, தெளிவாக அறிகிற, கூர்ந்துணர்கிற.

eag'le-owl, *n.* ஐரோப்பிய நாடுகளிலுள்ள மிகப்பெரிய ஆந்தை வகை.

eag'let, *n.* கழுகுக்குஞ்சு.

ea'glewood, *n.* அகில்மரம்.

ea'gre, *n.* வேலியேற்ற ஆற்றெதிரெழுச்சி அலை.

ear[1], *n.* காது, புறச்செவி; செவிப்புலம்; இசைநுட்பம் உணரும் திறம்; செவிகொடுப்பு, கவனம்; இலை முதலிய வற்றின் காதுவடிவ விளிம்புப்பகுதி; துருத்திநிற்கும் ஆதாரம்; புற ஒட்டுப்படி.

ear[2], *n.* கூலக்கதிர்.

ear'ache, *n.* காதுவலி.

eared, *a.* கதிர்களுள்ள; காதுள்ள.

ear'ing, *n.* (கப்.) பாய்மரத்தின் மேல்மூலையைக் கட்டும் சிறு கயிறுகளில் ஒன்று.

earl, *n.* கோமான், இங்கிலாந்தில் உள்ள பெருங்குடிமரபுப் பட்டங்களில் ஒன்று; (தொ.) Earl Marshal, இங்கிலாந்தில் 'ஹெரால்ட்ஸ்' கல்லூரித் (Heralds' College) தலைவர்.

ear'lap, *n.* காதின் நுனி; காதுமூடிக் குல்லாய்.

ear'less, *a.* காதுகளற்ற, புறச்செவியற்ற.

ear'lier, *a.*, *adv.* early என்பதன் உறழ்படி வடிவம்.

ear'lierise, *v.* திட்டம் செய்யப்பட்ட காலத்திற்கு முந்திய நாளில் செய்.

ear'liest, *a.*, *adv.* early என்பதன் ஏற்றுயர்படி வடிவம்.

ear'lock, *n.* காதின் அருகில் முன்னுட்களில் வளர்க்கப்பட்ட சுருள்முடி.

earl'y, *a.* தொடக்க நேரத்துக்குரிய; தொடக்கக் காலத்துக் குரிய; தொடக்கத்தை அடுத்த; முற்பகுதி சார்ந்த; முந்தி வந்த; முற்பட்ட; முந்துற எழுந்த; முன்கூட்டிச் சித்தமான; முற்காலத்திய, தொலை இறந்தகாலத்திய; அணிமை வருங் காலத்திய; *adv.* குறித்த காலத்துக்கு முன், முன்கூட்டி; சரியான நேரத்தில்; விரைவில்; முந்தி, முற்பட; தொடக் கத்தில், தொடக்கத்தை அடுத்து; முற்பகுதியில்; காலை நேரத்தில், விடியற்காலத்தில்; (தொ.) earlier on, இதற்கு முன்னதாக, முந்தியதொரு கட்டத்தில்; early and late, எக்காலத்தும், எந்த நேரத்திலும்; early bird, வைகறைத் துயிலெழுபவர்; early closing, வாரத்தில் அரைநாள் விடு முறை விடுதல்; முன்னிரவு நேரத்தில் மூடிவிடுதல்; early door, நாடகக் கொட்டகைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னமேயே மிகுதியான கட்டணம் கொடுத்துச் செல்லும் தனிவாயில்; Early English, இடைப்பட்ட காலத்தின் (1150–1500) முற்பட்ட காலத்திய ஆங்கிலமொழி; (க-க.) காதிக் (Gothic) வளைமுகட்டு முறையில் 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் (1189-1272) நிலவிய மைய முனைப்பாணி; Early Victorian, விக்டோரியா அரசியார் (1837-1901) ஆட்சியின் முற்காலத்துக்குரிய எழுத்தாளர் அல்லது கலைஞர்; விக்டோரியா ஆட்சியின் முற்காலத்துக்குரிய; விக்டோரியா ஆட்சி முற்காலப் பாணியிலுள்ள; பழமைப் பட்ட; keep early hours, முன் தூங்கி முன்னெழு.

ear'mark, *n.* விலங்கின் காதில் பொறிக்கப்படும் உரிமை யாளரின் அடையாளம்; தனிப்பட்ட உரிமைக்குறி, அடை யாள முத்திரை; *v.* தனிப்பட்ட அடையாளமிடு; குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கி வை.

earn, *v.* ஈட்டு, உழைத்துப் பொருள் சம்பாதி; முயற்சியினால் பெறு; தகுதியினால் அடை; பெற்றுக்கொடு.

earn'est[1], **ear'nest-money**, **ear'nest-penny**, *n.* அச்சாரம், உறுதிப்பணம், பேர உறுதிக்காக அளிக்கப்படும் முன் தவணைக்கூறு; அக்கறைச் சான்று; சான்றீடு; முதல் விளைவு; முன்னறிகுறி; முன்சுவை, முனிமுகம்.

earn'est[2], *n.* மெய்யார்வம், விளையாட்டற்ற தன்மை; மெய் யுறுதிப்பாடு; *a.* அக்கறையுள்ள; உள்ளார்வமிக்க, மன மார்ந்த விணைமையுடைய, விளையாட்டல்லாத; வேணவா வுடைய, முனைப்பார்வமுள்ள; (தொ.) in earnest, விளை யாட்டாக அல்லாமல், மனமார.

earn'ings, *n. pl.* ஈட்டியபொருள்; ஊதியம், வருவாய்.

ear'-phone, *n.* தொலைபேசியில் செவியுடன் பொருந்தவைத்து ஒலி வாங்கும் கருவி.

ear'ring, *n.* காதணி, கடுக்கன், கம்மல்.

ear'shot, *n.* காதுகேட்கும் தொலைவு, கூப்பிடுதூரம்.

earth, *n.* நிலவுலகம், தற்கால வானூலில் கதிரவனையடுத்துச் சுழலும் மூன்றாவது கோள்; பூவுலகக் கோளத்தின் மேல் தோடு; பூவுலகின் நிலப்பரப்பு; உலகம்; மண்ணுலகு; உலகுவாழ் உயிர்த்தொகுதி; உலகமக்கள் தொகுதி; நிலம்; தரை, நிலத்தளம்; மண்; மண் புழுதி, மண்கட்டி; நிலவளை; சடப்பொருள்; மனித உடல்; மின் ஓட்ட நிலத்தொடர்பு; உலோக வகைகளின் துரு; *v.* வேர்களை மண் குவித்தணை; மண் கொண்டு அணை; மண்ணால் மூடு; மண்பூசு; மண் கொண்டு தடு; மண்ணிற் புதை; மறைத்துவை; வளை தோண்டு; வளைக்குட்செல்; மின்னோட்டத்துக்கு நிலத் தொடர்பு உண்டாக்கு.

earth'-bag, *n.* அரணமைப்பில் பயன்படும் மண் நிறைந்த கோணிப்பை.

earth'-bath, *n.* மண்ணூட்டு, மண்ணில் படிவுறும் குளிப்பு முறை; மண் வைப்பு, மண்ணிடை வைக்கும் முறை.

earth'-board, *n.* நிலனுழுபடையின் உறுப்பு வகை, கலப் பைக் கொழுவின் பக்க உறுப்பு.

earth'-born, *a.* நில உலகில் தோன்றிய, மண்ணுலகுக்குரிய; மண்ணில் தோன்றிய.

earth'-bound, *a.* நிலவுலகத் தொடர்புடைய, உலகியல் வாழ்வில் சிக்குண்ட.

earth'-bred, *a.* மண்ணில் தோன்றி வளர்ந்த; நிலமீது பிறந்து வளர்ந்த; கீழான, வெறுக்கத்தக்க.

earth'-closet, *n.* மண் மலக்கழிவிடம்.

earth'en, *a.* மண்ணால் செய்யப்பட்ட; சுட்ட களிமண்ணால் ஆன; மண்ணுக்குரிய.

earth'enware, *n.* மண்பாண்டங்களின் தொகுதி, மட் கலங்கள்.

earth'-fall, *n.* நிலச்சரிவு.

earth'fast, *a.* நிலத்தில் உறுதியாகப் பதிக்கப்பெற்ற.

earth'-fed, *a.* உலகியல் பொருள்களில் அழுந்தி மனநிறைவு பெற்ற.

earth'-flax, *n.* கல்நார்.

earth'-hog, *n.* எறும்புதின்னும் தென் ஆப்பிரிக்க விலங்கு வகை.

earth'house, *n.* நிலத்திற்கு அடியிலுள்ள பண்டைக் காலத்திய மனை, பழங்காலக் களஞ்சியம்.

earth'-hunger, *n.* மண்ணாசை, நிலவேட்கை.

earth'ing tires, *n. pl.* நிலத்தில் இறங்கியவுடனே நிலையியல் மின்னற்றலை வெளியேற்றும் தன்மை வாய்ந்த வானூர்தி உருளைகளின் தொய்வகப்பட்டைகள்.

earth'ling, *n.* நிலவுலகில் வாழ்பவர்; உலகியல் வாழ்வில் பற்றுமிக்கவர்.

earth'ly, *a.* நிலவுலகுக்குரிய; மனித வாழ்க்கை சார்ந்த; உலகியல் பற்றுடைய; கீழான, இழிந்த; நிலவுலகில் நிகழக் கூடிய; மனிதரால் பெறத்தக்க; உலகில் உள்ள.

earth'ly-minded, *a.* உலகியற் பொருள்களில் ஈடுபாடுடைய.

earth'-movement, *n.* நில மடிப்பு, நிலப்பரப்பின் மேடு பள்ள மாறுபாடு.

earth'-nut, *n.* தின்பதற்குரிய கிழங்கினையுடைய கோரைப் புல் வகை; தின்னத்தக்க கிழங்குவகை; பயற்றினச் செடி வகை.

earth'-pea, *n.* பயற்றினச் செடிவகை.

earth'-pillar, *n.* நில அரிப்பிடையே மேலேயுள்ள கல்லால் பாதுகாக்கப்பட்டு அமையும் தூண் போன்ற மென்னில அமைப்பு.

earth'plate, *n.* நிலத்தில் புதையுண்டு மின்தாங்கியையோ தந்திக்கம்பியையோ நிலத்துடன் பிணைக்கும் உலோகத்தகடு.

earth'quake, *n.* நில அதிர்ச்சி, நில நடுக்கம்; நில எழுச்சி தாழ்ச்சி இயக்கம், பூகம்பம்.

earth'quaked, *a.* நில நடுக்கத்துக்கு உட்பட்ட, நில அசைவால் பாதிக்கப்பட்ட; நில அதிர்ச்சியால் அழிந்த; நில நடுக்கத்தால் ஆட்டங்கொண்ட.

earth'-shine, *n.* நிலநிழல்படியும் திங்களின் மங்கலான பகுதி.

earth'-smoke, *n.* கரப்பான் நோய்க்கு மருந்தாகப் பயன் படுத்தப்பட்ட செடிவகை.

earth'-star, *n.* காளான்வகை, நாய்க்குடை வகை.

earth'-table, *n.* நிலவரிசைத்தளம், நிலத்தளத்துக்குச் சற்றே மேற்படத் தெரியும் தளக் கட்டுமானம்.

earth'-tremor, *n.* சிறு நிலநடுக்கம்.

earth'ward, *a.* நிலம் நோக்கிய; *adv.* மண்ணை நோக்கி.

earth'wax, *n.* அரைகுறையாக ஒளி ஊடுருவிச் செல்லும் மெழுகுக்கூட்டுவகை.

earth'wolf, *n.* ஓநாய் போன்ற தென் ஆப்பிரிக்க ஊனுணி விலங்குவகை.

earth'work, *n.* நிலவரண்; மண் கோட்டை; அணைகரை; அகழ்ந்தணைத்த பள்ளமேடு.

earth'-worm, *n.* மண்புழு; சிற்றுயிர்; இழிஞர், கடையர்.

earth'y, *a.* மண்ணுலான; மண்ணுக்குரிய; மண் போன்ற; நிலவுலகில் வாழ்கிற; நிலத்துக்குரிய; கீழான, பருவியலான, திருத்தமற்ற.

ear'-trum'pet, *n.* காதுமந்தமானவர் கேட்க உதவும் குழாய்க் கருவி.

ear'wax, *n.* காதுகுரும்பி.

ear'wig, *n.* செவிப்பாம்பு; காதுகளில் புகத்தக்கதென்று கருதப்பட்ட புழுவகை; முகப்புகழ்ச்சியாளர்; *v.* மறைதக வல்களால் தன்வயப்படுத்திக்கொள்; ஒருசார்புபடுத்து, தன் சார்பு படுதிக்கொள்; ஓயாத தகவல்களால் தொல்லூட்டு.

ear'-witness, *n.* நேர்கேள்விச் சான்றாளர்.

ease, *n.* இயலமைதி, நோவின்மை; நோவினின்று விடுபாடு, குணநலம்; இயல்நலம், இன்னலம், தொல்லையின்மை; இன்ப அமைதி; இயல் எளிமை, இயல் தளர்வுநிலை, சிக்கலின்மை; எளிமை; *v.* நோவு தவிர்; தொல்லை நீக்கு, இன்னமைதி அளி; மன அமைதி வழங்கு; சிக்கல் நிலை அகற்று; கட்டுத்தளர்த்து, இணைப்பவிழ், உடற் சோர்வகற்று, முயற்சிநிலை தளர்த்து; நாடி நரம்புகளை நெகிழவிடு; நெகிழ்வுறு; (தொ.) ease her, இயந்திரத்தின் வேகத்தைக் குறை; ease off, பளுக் குறைவாகு; ease oneself, மலங்கழி; தெளி. ill at ease, இயல் அமைதியில்லாத நிலையில்; stand at ease, கால்களை அகற்றி இயல்தளர்வான நிலையில் நில்; take one's ease, இன்ப அமைதியுடன் இரு.

ease'ful, *a.* நோவாற்றுகிற; இன்ப வாய்ப்பளிக்கிற; ஓய்வளிக்கிற, தொய்வான, அமைதி வாய்ந்த; இயல்பான சோம்பல் குணமுள்ள.

eas'el, *n.* ஓவியர் பயன்படுத்தும் நிலைச்சட்டம்.

ease'ment, *n.* (சட்.) மற்றொருவருடைய நிலத்தின்மீது செல்லும் வழியுரிமை; துணைவிரிவுக் கட்டுமானம்; நோவு நிலைத் தளர்வு; நெருக்கடி தளர்வு.

east, *n.* கிழக்குத்திசை; கிழக்குப்பக்கம்; கிழக்குப் பகுதி; கொண்டல், கீழ்க்காற்று; கீழையுலகம், கீழ்நாடுகளின் தொகுதி; *a.* கிழக்குத்திசையிலுள்ள; கிழக்குப்பக்கமான; கிழக்கு நோக்கிய; கிழக்கிலிருந்து வீசுகிற; *v.* கிழக்காக இயங்கு; கிழக்குமுகமாகத் திரும்பு; *adv.* கிழக்குத் திசையில்; கிழக்குநோக்கி; கிழக்குப்பக்கமாக; (தொ.) East End, லண்டன் நகரின் கிழக்குப்பகுதி; Far East, சீனு ஜப்பான் முதலிய தொலைகிழக்கு நாடுகள்; Middle East, எகிப்திலிருந்து ஈரான் வரையிலுள்ள நடுக்கிழக்கு நாடுகள்; Near East, மேலையுலகுக்கு அணித்தான துருக்கிபோன்ற அண்மைக் கிழக்கு நாடுகள்; to the east, கிழக்குத்திசைநோக்கி.

Eas'ter, *n.* இயேசுநாதர் மறைந்தபின் உயிர்த்தெழுந்ததைக் குறிக்கும் திருவிழா.

eas'terly, *a.* கிழக்குப் பக்கத்திலுள்ள; கிழக்குத் திசையான; கிழக்கிலிருந்து வருகின்ற; *adv.* கிழக்குத் திசையில்.

eas'tern, *n.* கீழ்த்திசையில் வாழ்பவர்; கீழ்த்திசைத் திருச்சபை சார்ந்தவர்; *a.* கீழ்த்திசையுலகில் வாழ்கிற; கீழ்த்திசை உலகுக்குரிய; கிழக்குத்திசை நோக்கியிருக்கிற; (தொ.) Eastern Church, கிரேக்கமரபுத் திருச்சபை; Eastern Question, துருக்கிபோன்ற கீழை ஐரோப்பியப் பகுதிக்குரிய அரசியல் செய்தி.

eas'y, *n.* சிறிதுநேர ஓய்வு; *a.* எளிதான, முயற்சி எளிமையுடைய, கடுமையில்லாத; இயலமைதி வாய்ந்த, கவலையற்ற; தொல்லைகளிலிருந்து நீங்கிய; இயல் நலமார்ந்த, நோவற்ற; வேதனையிலிருந்து விடுபட்ட; இயலெளிமை வாய்ந்த, சிக்கலற்ற; இயல்பான, செயற்கை நடை முரணில்லாத; உடற் சோர்வற்ற, நாடிநரம்பு நெகிழவிடப் பெற்ற, தொய்வான; எளிவந்த, எளிதாக அணுகத்தக்க; எளிதில் வசப்படுத்தத்தக்க, எளிதாக விட்டுக்கொடுக்கிற; மூணப்பாகத் தேவைப்படாத; கிராக்கியற்ற; *adv.* இயல்பாக, இயலமைதியுடன்; மெள்ள; (தொ.) easy chair, தொய்வான சாய்நாற்காலி; easy circumstances, செழிப்பான வாழ்க்கை நிலை, நலம் பலவுள்ள சூழ்நிலை; easy money, எளிதாக ஈட்டிய பொருள்; easy street, இன்பவாய்ப்பு நிலைமை, செழிப்பான நிலைமை, வாழ்க்கைநலத் தன்மை; honours easy, (சீட்டாட்டம் முதலியவற்றில்) வெற்றி தோல்வியில்லாத சரிசமமான நிலைமை; stand easy, (படை வீரர்கள் வகையில்) மிகவும் எளிதான தளர்வு நிலையில் நில்; take it easy, முயற்சி செய்வதைத் தவிர், பரபரப்படையாமல் இரு, விரைவுபடுத்தாமல் இரு, தளர்வான நிலையில் இரு.

eas'y-go'ing, *a.* எளிதான நடைபாணியுள்ள; சொகுசான வாழ்க்கையை விரும்புகிற, சோம்பலான, வேலையில் விருப்பமில்லாத.

eat, *v.* தின்; உண்; மென்று தின், பல்லால் அரைத்து உட்கொள்; விழுங்கு; அரித்தழி; அழித்தொழி; படிப்படியாக அழி; தொல்லைப்படுத்து; தின்னப்பெறு; (தொ.) eat away, அரித்துத் தின்னு; படிப்படியாக அழி; eat humble pie, ஆணவம் அடங்கப் பெறு; eat in, உள்ளூர அழி; eat one's hat, ஆகாதது என்று சூட்டி ஆவதாலுல் செய்யாதது செய்வதாகக் குறிப்பிட்டுக் கூறு; eat one's head off, தன்மதிப்புக்கு மேற்பட்ட செலவுக்குக் காரணமாயிரு; eat one's heart out, ஓயாது நினைந்து நினைந்து மிகவும் கடுமையாகத் துன்பப்படு; eat one's terms, eat one's dinners, உயர் வழக்கறிஞர் தொழிலுக்குப் படித்துக் கொண்டிரு; eat one's words, சொன்ன சொல்லுக்கு மனமாரத் தவறென்று ஒப்புக்கொண்டு கேட்டுப் பின்வாங்கிக் கொள்; eat out, தின்றுமுடி; வரம்புகடந்து பிறர் உரிமைகவர்; eat up, முழுவதும் விழுங்கு.

eat'able, *a.* தின்னத்தக்க.

eat'ables, *n. pl.* உணவுப்பொருள்கள்.

eat'er, *n.* உண்ணுபவர் ; தின்னுவது.

eat'ing, *n.* தின்னுதல், உண்ணல் ; *a.* பக்குவம் செய்யாமல் உண்ணத் தகுந்த.

eau, (பிர.) *n.* நீர் ; (தொ.) ***eau-de-Cologne,*** 'கலான்' (Cologne) என்னும் செர்மன் நகரில் உருவாக்கப்படும் நறுமண நீர்மவகை ; ***eau-de-Nil,*** நைல் ஆற்றுக்குரியதாகக் கருதப்பட்ட பச்சைச் சாயல் வண்ணம் ; ***eau-de-vie,*** உயிர் நீர், இன்தேறல் வகை ; ***eau sucree,*** பாகு, சர்க்கரைநீர்.

eaves, *n.* இறப்பு, இறவாரம்.

eaves'drop, *v.* இறவாரத்தடியில் நின்று உற்றுக்கேள் ; ஒற்றுக்கேள், ஒளிந்து மறைபேச்சுக் கவனி.

eaves'dropper, *n.* மறைந்திருந்து ஒற்றுக் கேட்பவர்.

ebb, *n.* வேலி இறக்கம் ; எழுச்சி தணிவு, வடிதல் ; தளர்வு, நலிவு, தாழ்வு, பின்னிடைவு ; *v.* எழுச்சி தணி, வடிந்திறங்கு, தணிவுறு, தாழ்வுறு, பின்செல்.

E'-boat, *n.* எதிரியின் விரைதாக்கு நீர்மூழ்கிப்படகு.

eb'on, *a.* (செய்.) கருங்காலி மரத்தாலான, கருங்காலி போன்று கருநிறமுள்ள.

eb'onite, *n.* வன்கந்தகம், தொய்வகம் கலந்த கந்தகக் கலவை.

eb'ony, *n.* கருங்காலிமரம், கருங்காலிக்கட்டை ; *a.* கருங்காலி மரத்தாலான ; கருங்காலி போன்று கருநிறமுடைய.

ebri'ety, *n.* குடிபோதை, மதுமயக்கம், குடிவெறி.

e'briose, eb'rious, *a.* மதுவுண்ட, மதுவெறியுள்ள ; மது வெறியைச் சார்ந்த ; மதுவெறிப் பழக்கத்துக்கு ஆட்பட்ட.

ebull'ient, *a.* கொதித்து எழுகிற, பொங்குகிற ; எழுச்சி யார்வமிக்க, உணர்ச்சி கொந்தளிக்கிற.

ebulli'tion, *n.* பொங்கழற்சி ; நுரையெழுச்சி, நுரை தழைப்பு ; எதிர்பாராக் கிளர்ச்சி, திடீர் எழுச்சி.

ecar'te, *n.* கழிப்பாட்டம், இருவர் சீட்டாட்டவகை.

Ec'ce Hom'o, *n.* முள்முடி தரித்த இயேசுநாதரின் படம்.

eccen'tric, *n.* உறழ்வட்டம், மையத்தை வேருக்கொண்ட வட்டம் ; சுழலியக்கத்தை முன்பின் அல்லது மேல்கீழான நேர் வரை இயக்கமாக மாற்றும் இயந்திர அமைவு ; இயற்கைக்கு மாறுபட்டவர், விசித்திரமானவர், கோட்டிக்காரர் ; *a.* உறழ் வட்டமான, வட்டங்கள் வகையில் மைய வேறுபாடுடைய ; மையத்தினின்றும் விலகிய ; மையநிலையிலிருந்து விலகிய ஊடச்சுடைய ; கோணெறி வகையில் உறழ்வட்டமான ; கோள் வகையில் வட்டந்திரிந்த பாதையில் செல்கிற ; இயற்கைக்கு மாறுபட்ட, இயல்பு திரிந்த, விசித்திரமான ; பொது முறை விதிகளுக்குக் கட்டுப்படாத, தனிப்போக்குடைய.

eccentric'ity, *n.* மைய உறழ்வு ; உறழ்மையமுடைமை ; பொதுவிலிருந்து விலகிய நடத்தை ; தனிப்போக்கு, விசித்திரப்பாங்கு.

eccles'ia, *n.* பண்டைக் கிரேக்க நாட்டில் ஆதென்ஸ் நகருக்குரிய (Athenian) குடிமக்களின் பொது அவை ; யூதர் பொதுப்பேரவை.

eccles'iast, *n.* பண்டைக் கிரேக்க நாட்டில் ஆதென்ஸ் நகருக்குரிய (Athenian) குடிமக்களின் பொதுச்சபை உறுப்பினர் ; சமய உரையாற்றுபவர் ; மதகுரு ; இஸ்ரவேல் (Israel) மன்னராகிய சாலமன் (Solomon).

Ecclesias'tes, *n.* பழைய ஏற்பாட்டுச் சுவடிகளில் ஒன்று

ecclesias'tic, *n.* மதகுரு, திருச்சபைக்குத் தம் வாழ்வை ஒப்படைத்துள்ளவர், சமய உரையாற்றுபவர் ; *a.* திருக்கோயில் தொடர்பான ; மதகுருசார்ந்த.

ecclesias'tical, *a.* திருக்கோயில்தொடர்பான ; மதகுருசார்ந்த.

Ecclesias'ticus, *n.* கிறித்தவத் திருமறைத் தொகுதிகளிலிருந்து பிரித்தொதுக்கப்பட்ட ஏடுகளில் ஒன்று.

ecclesiol'ogy, *n.* திருக்கோயில் கட்டிடம்-ஒப்பனை ஆகியவற்றைப் பற்றிய நூல்.

ec'dysis, *n.* மேந்தோல்கழிப்பு ; உரிசட்டை, இற்று அகலும் மேல்தோடு ; பழக்கவழக்கக் கழிப்பு ; *pl.* ec'dyses.

e'chelon, *n.* ஏறுபடியணி, ஒவ்வொரு படைவீரர் முன்னும் முகப்பு வரை தடையற்றிருக்கும்படி அமைந்த ஏறுபடி போன்ற படைத்துறை அணிவகுப்பு ; படைக் கப்பல்களின் ஏறுபடி வரிசை வகுப்பு.

echid'na, *n.* முள்ளெலி போன்ற குழிபறிக்கும் பல்லில்லாத ஆஸ்திரேலிய (Australian) விலங்கினம்.

echid'nine, *n.* பாம்பின் நஞ்சு.

e'chinite, *n.* முட்டைவடிவமான முள்செறிந்த கூட்டினையுடைய புதை படிவக் கடல் உயிர் வகை.

echi'noderm, *n.* முட்கள் செறிந்த முட்டை வடிவமான கூட்டினையுடைய பேரினம் சார்ந்த உயிர் வகை.

echin'us, *n.* முட்களுள்ள முட்டை வடிவமான கூட்டினையுடைய கடல் உயிர் வகை ; (க-க.) தூண் தலைப்பின் மேல் மட்டத்தைத் தாங்கும் புறங்கவிவான அடிப்பகுதி.

ec'ho [1], *n.* எதிரொலி ; மீள்ஒலி ; எதிரலை, எதிரதிர்வு ; பின் அடுக்கொலி ; கூறியதுகூறல் ; செய்ததுசெய்தல் ; எதிர் நிகழ்வு ; பின்தொடர்வு, பின்தொடுப்பு ; பாட்டில் அடி இறுதி ஒலி இயையு ; பேரிசைப்பேழையில் எதிரொலிக்கும் சிற்றமைவு ; சீட்டாட்ட வகையில் சீட்டுக்களைப் பற்றிக் கூட்டாளிகளுக்குத் தெரிவிக்கப்படும் குழூஉக் குறிப்பு ; அணுக்கப்போலி, மிகஒத்திருப்பது ; குருட்டுத்தனமாகப் பின் பற்றுபவர், தலையாட்டி இசைபவர், சொல்வதைத் திரும்பச் சொல்பவர் ; *pl.* ec'hoes ; *v.* எதிரொலி எழுப்பு ; ஒலி மீளச் செய் ; எதிரொலியாக எழு ; ஒலிமீள்வுறு ; கூறியது கூறு ; மற்றொருவர் சொற்களையே வழங்கு ; போலிசெய் ; குருட்டுத் தனமாகப் பின்பற்று ; தலையாட்டி இசைவளி ; சீட்டாட்டத்தில் குழூஉக் குறிப்புக் காட்டி ஆடு ; (தொ.) cheer to the echo, மனமாரக் கைகொட்டிப் பாராட்டு.

Ec'ho [2], *n.* கிரேக்கபுராணக்கதையில் வரும் அரமகள் ; எதிரொலியின் உருவகம்.

ech'ogram, *n.* எதிரொலி மூலம் கப்பல் அடிக்குக் கீழுள்ள கடலாழத்தைக் கணித்துக் காட்டும் கருவிப்பதிவு.

echo'ic, *a.* எதிரொலியின் இயல்புள்ள ; (மொழி.) ஒலிகளைப் போல் சொற்கள் அமைந்துள்ள, ஒலி அனுகரணம் சார்ந்த.

ec'hoism, *n.* ஒலிகளைப்போல் சொற்கள் அமையும் பண்பு, சொல்லொலியியைவு.

ech'oless, *a.* எதிரொலிக்காத ; உணர்ந்து செயல் ஆற்றுத.

ech'o-sounder, *n.* கப்பலடிக்குக் கீழ் உள்ள கடலாழத்தை எதிரொலிப் பண்புமூலம் கணித்துக்காட்டும் கருவி.

ec'lair, *n.* குளிர் பாற்கட்டி நிரப்பிச் செய்யப்படும் சிறு விரல் வடிவப் பண்ணியம்.

eclaircissement, (பிர.) *n.* தெளிவாக்கல், விளக்கங்கூறல்.

eclamp'sia, eclamp'sy, *n.* (மரு.) சூலுற்றிருக்கையில் அல்லது மகப்பேற்றின்போது பெண்களுக்குத் திடீரெனத் தோன்றும் வலிப்புநோய், பேறுகாலச்சன்னி.

eclat, (பிர.) *n.* பகட்டான வெற்றி, மிருசீர்த்தி ; சமூகச் சிறப்பு ; தனிமுனைப்பான இகழ்.

eclec'tic, *n.* பன்னலத்திரட்டாளர், பல கோட்பாட்டுக்குழுக்களின் கருத்துக்களையும் தேர்ந்து இசைந்தேற்றுக்கொள்ளும் இயல்புடைய பண்டை மெய்விளக்க அறிஞர் ; பல்திறப்பட்ட மூலங்களிலிருந்தும் குறுகிய உவப்புவர்ப்புக் கட்டுப்பாடின்றித் தாராளமாகக் கருத்துக்களை வரவேற்பவர் ; *a.* மெய்விளக்கத்துறையில் பல கோட்பாடுகளின் கருத்துக்களையும் தேர்ந்தெடுத்து இணைத்துக்கொள்கிற ; பன்னலக் கூட்டான, பல்திரட்டான ; விரிந்த மனப்பாங்குடைய, குறுகிய கொள்கை வரம்புணர்ச்சிக் கட்டுப்பாடற்ற.

eclec'ticism, *n.* நற்கூறுகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்பவர் செயல் ; கி. மு இரண்டாவது முதலாவது நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்க மெய்விளக்க அறிஞர்களின் கோட்பாடு ; பல்வேறான நற்கூறுகளைத் தேர்ந்து திரட்டி உருவாக்கும் பாங்கு.

eclec'tics, *n. pl.* கி. மு. இரண்டாவது முதலாவது நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்க மெய்விளக்க அறிஞர்களின் குழு.

eclipse', *n.* வானகோளங்களின் ஒளிமறைப்பு; இடைத்தடுப்பு; நிழலடிப்பு; ஒளிமறைவு; ஒளிமழுக்கம்; மறுக்கம்; கீழடிப்பு; கலங்கரை விளக்க ஒளியின் இடையிடை நிழலடிப்பு; இருட்டடிப்பு; *v.* வானகோளங்களின் ஒளியை மறை; ஒளிவட்டத்தை இடைநின்றுதடு; கோள்வட்டமீது நிழலடி; கலங்கரை விளக்க ஒளியை இடையிட்டு நின்று மறை; ஒளிமழுங்குவி; ஒளிமங்கவை; விஞ்சிஒளிவீசு; கடக்துமேம்பாடுறு; புகழ்விஞ்சு; வென்றுமேலிடு.

eclip'tic, *n.* ஞாயிறு செல்வதாகத் தோன்றும் நெறி, கதிர்வீதி; *a.* கதிர்வீதிக்குரிய; வான்கோள மறைப்புச் சார்ந்த.

ec'logue, *n.* சிறுஅளவான முல்லைப்பாட்டு, ஆயர் உரையாடற் பாட்டு.

ecol'ogy, *n.* உயிரின வாழ்க்கைச்சூழல் ஆய்வுநூல்.

econom'ic, *a.* பொருளியல் சார்ந்த; சிக்கனமான; வீண்செலவின்றிச் செட்டான; ஆதாயவண்மையுடைய; பயன்வளம்வாய்ந்த; கணித்துநோக்குகிற; செலவு கட்டிக்கொண்டு போகிற; பயன்கருதிய, பணம் கருதிய; தொழில் துறைத் தொடர்பான.

econom'ical, *a.* சிக்கனமான, வீணழிவு அற்ற; மிச்சப்படுத்துகிற, பொருளியல் நூல் சார்ந்த; நாட்டுப்பொருளியல் பற்றிய.

econom'ically, *adv.* சிக்கனமாக; சிக்கனத்தை முன்னிட்டுப் பார்க்கையில்.

econom'ics, *n.* பொருளாக்கவியல், பொருளியல்; பொருள் வளநிலை; பொருளாட்சி; நாட்டுப்பொருளியல்; செல்வத்தின் ஆக்கத்தையும் பங்கீட்டையும் பற்றிய செயல்முறை நூல்.

economi'ser, *n.* சிக்கனமாயிருப்பவர்; வெப்பம்-எரிபொருள் முதலியவற்றை மிச்சப்படுத்துவதற்கான இயந்திர அமைவு.

econ'omist, *n.* பொருளியல் ஆய்வாளர்; பொருளியல் நூலாசிரியர்; நாட்டுப்பொருளியல் ஏடு ஆக்கியோர்; சிக்கனக்காரர்; செல்வத்துறை நடைமுறை மேலாட்சியாளர்.

economiza'tion, *n.* சிக்கனமுறைக் கடைப்பிடிப்பு.

econ'omize, *v.* சிக்கனமாயிரு; பணத்தைச் செட்டாகச் செலவழி; செலவுகளைக் குறை, மிச்சப்படுத்து; அரிதாகப் பயன்படுத்து; பயன்தரு வகையில் நடத்திக்கொண்டு போ.

econ'omy, *n.* குடும்பநடைமுறையாட்சி; குடும்பப் பொருளாட்சி; சிக்கனம்; சிக்கனச்செயல், செட்டாகச் செலவிடல்; மிச்சப்படுத்தல்; மட்டு, செட்டு; ஒழுங்கமைவு, ஒழுங்குபட்ட நடைமுறை; ஒழுங்கமைந்த சமூகம்; சமய நடைமுறை ஒழுங்கு; கோட்பாட்டு ஒழுங்குமுறைத் திட்டம்; இயற்கையின் ஒழுங்காட்சி; (தொ.) Political Economy, நாட்டுப் பொருளியல், நாட்டுச் செல்வத்தின் ஆக்கத்தையும் பங்கீட்டையும் பற்றிய கோட்பாட்டுநூல்.

ecru', *n.* வெளுக்கப்படாத சணல்நார்; வெளுக்கப்படாத சணல் நாரின் நிறம்; *a.* வெளுக்கப்பட்டாத சணல் நார் போன்ற.

ec'stasize, *v.* கழிபேருவகைக்காளாக்கு; மிகு களிப்புக்கொள்.

ec'stasy, *n.* மெய்மறந்த மகிழ்ச்சி, களிவெறி, ஆனந்த பரவசம்; கவிதை வெறி, கற்பனைவெறி; (மரு.) ஒருமைவெறி, நரம்புகளின் நோய்ப்பட்ட தன்மையினால் மனம் ஒன்றிலேயே நாட்டம் செலுத்தும் நிலை; *v.* மிகுகளிப்பில் ஆழ்த்து.

ecstat'ic, *n.* மிகு களிப்புக்கொள்ளும் பாங்குள்ளவர்; மெய்மறந்த நிலையில் வெளியாகும் பேச்சு; *a.* கழிமகிழ்வுக்குரிய; பேருவகைக்குட்பட்ட; மிருகளிப்புண்டாக்குகிற; பரவசமாகிற.

ecumen'ic, ecumen'ical, *a.* கிறித்தவ உலக முழுமைக்கும் உரிய; கிறித்தவத் திருச்சபை முழுமையும் சார்ந்த; பொதுப்படையான, பரவலான, முழுமொத்தமான; எல்லாவற்றையும் உட்படுத்திய.

ec'zema, *n.* தோல் தடிப்பு நோய்வகை, கரப்பன் புண், பற்று, படை.

eda'cious, *a.* உண்டி சார்ந்த; பெருந்தீனிகொள்கிற; பேரவாவுள்ள.

Ed'am, *n.* உருண்டைவடிவ ஆலந்து நாட்டுப் பால் கட்டி.

Edd'a, *n.* பழங்கால ஐஸ்லாந்துநாட்டு இலக்கியத்திரட்டு.

edd'y, *n.* சிறுநீர்ச்சுழி; சுழல்காற்று; நீர்ச்சுழல்போல் இயங்கும் மூடுபனித்திரை, புகையின் சுழலலை; *v.* சுழன்று சுழன்று இயங்கு.

ed'elweiss, *n.* ஆல்ப்ஸ் மலைகளில் பாறைப்பாங்கான இடங்களில் வளரும் வெள்ளைமலருடைய செடிவகை.

Ed'en, *n.* கிறித்தவசமயக் கொள்கைப்படி படைப்புக் காலத் தொடக்கத்தில் ஆதம்-ஏவா வாழ்ந்த பூங்கா; மகிழ்விருக்கை; பொன்னுலகு, இன்ப உலகு.

eden'tate, *n.* (வில.)முன்வாய் வெட்டுப் பற்களும் கோரைப் பற்களும் இல்லாத விலங்கு; பற்களில்லாத விலங்கு; *a.* முன்வாய் வெட்டுப் பற்களும் கோரைப் பற்களும் இல்லாத; பற்கள் இல்லாத.

edge, *n.* விளிம்பு, வக்கு; முனை; கோடி; ஓரம், அருகு; கருவியின் கூரியபக்கம், கூர்; கூர்மை; காயப்படுத்தும் கருவி முனை; பாறையின் முனைவிளிம்பு; முகடு; பிழம்புருவில் இருபரப்புக்களின் சந்திப்புவரை; பரப்பின் எல்லைக்கோடு; மதிக்கூர்மை; உணர்ச்சிக்கூர்மை; கூரிய சுவையுணர்ச்சி; உள்ளக்கூர்மை; சிடுசிடுப்பு, எளிதில் எரிச்சலூட்டும் நிலை; *v.* தீட்டு, கூராக்கு; விளிம்பாக அமை; ஓரங்கட்டு, கரை அமை; கரை இணை; உணர்ச்சி கூர்மைப்படுத்து; நகர்த்து; சிறிதுசிறிதாக மெல்ல நகர்; மெல்லப் புகுத்து; தூண்டு; சாட்டிக் கூறு, மறைமுகமாகக் குறிப்பிடு; கூர்விளிம்பால் தாக்கு; (தொ.) be on edge, படபடப்புறு, பொறுதியிழ; கூரார்வம்கொள்; edge in a word, ஒரு சொல்லிணை இடர்ப்பட்டு இடைச்செருகு; edge one on, தூண்டு; inside edge, சறுக்குக்கட்டையின் உட்புற விளிம்பில் இருந்துகொண்டு பனிமீது சறுக்குதல்; outside edge, சறுக்குக்கட்டையின் வெளிப்புற விளிம்பில் இருந்து கொண்டு பனிமீது சறுக்குதல்; set on edge, ஊக்கு, தூண்டு, கிளர்ச்சியூட்டு; set one's teeth on edge, நடுக்க முறச்செய், வெறுப்படையச்செய்.

edge'-bone, *n.* பிட்ட எலும்பு; மாட்டின் பிட்டத்தசைக்கறி.

edge'less, *a.* கூர்அற்ற, மழுங்கிய.

edge'-tool, *n.* கூர்விளிம்புடைய கருவி, வெட்டுக்கருவி.

edge'ways, edge'wise, *adv.* கூர்விளிம்புமுன்னுக; கூர் விளிம்பு மேலாக; பக்கவாட்டாக; விளிம்போடு விளிம்பு சேர; (தொ.) get a word in edgeways, பேச்சு இடை ஒய்ந்த நேரத்தில் பேச வாய்ப்புப்பெறு.

edg'iness, *n.* கோணமுடைமை; வரைக்கோடு மிகத் தெளிவாயிருத்தல்; கூருணர்வுநிலை.

edg'ing, *n.* கரைக்கட்டு, கரை; விளிம்புத்தொங்கல்; விளிம்பமைத்தல்.

edg'y, *a.* கூர்விளிம்புடைய, கூர்மையான; (வண்ணம் பூசுதல்) திட்டவட்டமான எல்லைவரையறைப் பாங்குள்ள; எளிதில் சினமூட்டப்பெறத்தக்க.

edibil'ity, *n.* உணவாகக்கொள்ளும் தகுதியுடைமை.

ed'ible, *n.* உணவாகக்கொள்ளத்தக்க பொருள்; தின்றி; *a.* தின்னற்குரிய, உண்ணத்தக்க.

ed'ict, *n.* அரச ஆணை; விளம்பரம், அதிகாரத்தைக் கொண்டு அறிவிக்கப்படும் செய்தி.

edifica'tion, *n.* செவியறிவுறூஉ, நல்லறிவுறுத்தல், வாழ்க்கை மேம்பாட்டுக்குரிய நல்லொழுக்கப்போதனை.

edif'icatory, *a.* ஒழுக்க மேம்பாடுறச் செய்யத்தக்க.

ed'ifice, *n.* பெரிய கட்டிடம், மாளிகை; பெருஞ்செயற் கட்டமைவு.

ed'ify, *v.* ஆன்மிகத்துறையில் பயனடையச்செய்; ஒழுக்கத்தில் மேம்படச்செய்; சமயத்தில் பற்றுக்கொள்ளச்செய்; ஆறுதலளி, மகிழ்வி.

ed'ifying, *a.* அறிவுறுத்துகிற; மேம்பாடுறச்செய்கிற.

ed'it, *v.* பதிப்பி; பதிப்புக்கு வேண்டிய முறையில் ஏட்டை உருவாக்கு; வகுத்துத் தொகுத்தமை; தேர்ந்து திரட்டியமை; திருத்தியமை; பத்திரிகைப் பதிப்பாசிரியராயிருந்து பணியாற்று.

edi'tion, *n.* பதிப்பு, மாறுதலின்றி ஒருதடவை வெளியிடப்பட்ட ஏட்டுப்படிகளின் தொகுதி; ஒரே அளவில் வெளியிடப்பட்ட தொகுதி; ஒரேசமயத்தில் ஒரேமுறையில் வெளியிடப்பட்ட பத்திரிகைப்படிகளின் தொகுதி; ஒருதடவை கோத்து அச்சிட்ட படிகளின் தொகுதி; ஒரே ஏட்டின் பல படிவங்களில் ஒன்று; பதிப்பாசிரியரளித்த மூல எழுத்தாண்மை வடிவம்; ஒத்த மறுபடிவம்.

edition de luxe, (பிர.) *n.* உயர்விலைப்பதிப்பு; அழகிய பதிப்பு.

editio prin'ceps, (ல.) *n.* ஏட்டின் அச்சிட்ட முதல்பதிப்பு.

ed'itor, *n.* பதிப்பாசிரியர்; இதழாசிரியர், செய்தித்தாள் முதலியவற்றை அல்லது அவற்றின் ஒரு பிரிவினை நடத்துபவர்.

editor'ial, *n.* தலையங்கம், தலையங்கக் கட்டுரை, செய்தித்தாளில் அதன் ஆசிரியரால் அல்லது அவர்தம் பொறுப்பில் வேறொருவரால் எழுதப்படும் கட்டுரை; *a.* பதிப்பாசிரியருக்குரிய; இதழாசிரியருக்குரிய.

ed'itress, *n. fem.* பதிப்பாசிரியை; இதழாசிரியை.

ed'ucate, *v.* பேணிப்பயிற்றுவித்து வளர்; அறிவொழுக்கப் பயிற்சியளி; அறிவுபுகட்டு, கல்வியளி; பள்ளியில் பயிற்றுவி; பயிற்றுவித்துப்பழக்கு, செயலுக்குப் பழக்கப்படுத்து; பழக்கு; பண்பூட்டு.

educa'tion, *n.* கல்விப்பயிற்சியளித்தல்; கல்விப்பயிற்சி; கல்விப்பயிற்சித் திட்டம்; வளர்ப்புப்பயிற்சி; மனப்பண்புப் பயிற்சி; விலங்குகளின் பயிற்றுவிப்பு; பழக்குவிப்பு.

educa'tionalist, educa'tionist, *n.* கல்வித்துறை வித்தகர், கல்விபுகட்டு முறைகளில் தனித்திறமை பெற்றவர், கல்வி வளர்ப்பவர்.

ed'ucative, *a.* கல்விசார்ந்த, கல்விக்குரிய; அறிவுறுத்துகிற, கல்விபுகட்டவல்ல.

educe', *v.* உள்ளார்ந்த பண்புகளை வெளிக்கொணர், புறமலர்ச்சியுறச்செய்; தருகூறுகளிலிருந்து முடிவு தருவி, புதுமெய்ம்மை உறுவி; உய்த்துணர்; (வேதி.) பொருட் கூட்டிலிருந்து பிரித்தெடு, வேறுபிரித்துக்காட்டு.

ed'uct, *n.* உய்த்துணர் மெய்ம்மை, வருவிக்கப்பட்ட முடிபு; (வேதி.) பிரித்தெடுக்கப்பட்ட பொருள்.

educ'tion, *n.* வெளிக்கொணர்தல், புறமலர்ச்சி; இயந்திரங்களின் ஈராவி முதலியவற்றின் வெளிப்போக்குக் குழாய்.

educ'tor, *n.* வெளிப்படுத்துபவர், தோன்றச் செய்பவர்; வெளிப்படுத்துவது, தோன்றச் செய்வது.

edul'corate, *v.* கடுஞ்சுவை நீக்கு, இனிக்கச் செய்; கரையத்தக்க கூறுகளகற்றித் துப்புரவுபடுத்து, தூய்மையாக்கு.

eel, *n.* மலங்கு, விலாங்கு மீன், முரல், எளிதில் பிடிகொடாத மனிதர், ஓயாது தட்டிக்கழிப்பவர்; (தொ.) electric eel, stand eel, மலங்கு வகைகள்.

eel'fare, *n.* இளவிலாங்கு மீன்கள் புடைபெயர்ந்து செல்லும் பாதை; விலாங்கு மீனின் ஓரீற்று இளமீன் தொகுதி; இள விலாங்கு மீன்.

eel'grass, *n.* கோரைப்புல் போன்ற கடற்பாசி வகை.

eel'-pout, *n.* நன்னீர் மீன்வகை; குட்டியீனுகின்ற மீன் வகை.

eel'-set, *n.* விலாங்குமீன் பிடிப்பதற்காக ஆற்றின் குறுக்கே இடப்பட்ட வலை.

eel'-worm, *n.* வளையப்புழு.

eel'wrack, *n.* = eelgrass.

eer'ie, eer'y, *a.* முன்பின் எதிர்பாராத, இன்னதென்றறியப்படா அச்சம் விளைவிக்கிற; பேயச்சமூட்டுகிற, இயற்கை மீறிய மாய உணர்ச்சியால் தாக்குண்ட; துணுக்குறச் செய்யக்கூடிய, மயிர்க்கூச்செறிய வைக்கிற, நடுக்குறுவிக்கிற.

efface', *v.* துடைத்தழி, தடங்கெட வை, மேற்பரப்பின் உருவழி; ஒளிமறைப்புச் செய், மங்க வை, விஞ்சி ஒளிவிடு; முனைப்பு அழி, உரு மறைத்துவிடு, சிறப்புக் குன்றவை; (தொ.) efface oneself, தன்முனைப்பழி, தன்னைச் சிறப்பற்றவராக்கிக் கொள், பொதுமைப்படுத்திவிடு.

effect', *n.* பலன், விளைவு, விளைபயன்; பண்புவிளைவு, உளத்தில் ஏற்படும் மாறுதல், முகத்தோற்ற மாறுதல், முகபாவனை மாறுதல்; மெய்ந்நிலை, மெய்ப்பாடு; செயல் திட்பம், பயனுரம்; உட்கருத்து; சாயல் நுட்பம், தோற்றச்செவ்வி; *v.* செயலுருப்படுத்து, செயல் வெற்றி காண், செய்து முடி, செயலுருவாக்கு, தோற்றுவி; (தொ.) cause and effect, காரண காரியம்; for effect, விளைபயனை முன்னிட்டு, பயன் மிகுத்துக்காட்டலை எதிர்பார்த்து; general effect, மொத்தத் தோற்றத்தால் காட்சியில் ஏற்படும் திறம்; give effect to, செயலில் நிறைவேற்று, செயற்படுத்திக்காட்டு; in effect, மெய்யாக, உருப்படியாக, செயல் முறையளவில்; take effect, செயல் கருக்கொள், செயல் பயனுறத் தொடங்கு.

effec'tible, *a.* செய்து முடிக்கத்தக்க.

effec'tive, *n.* போருக்கு ஆயத்த நிலையிலுள்ள படைவீரன்; போர்முனைப்பு நிலையிலுள்ள படைப்பிரிவு; *a.* செயல் விளைவுடைய, பயனுறுதியுள்ள; செயலாக்கமுடைய, விளைபயன் திட்பம் வாய்ந்த; செயலுரமிக்க, ஆற்றல் வாய்ந்த; விளைவின் வலிமை முழுதுமுடைய; பயன்முனைப்பான; பயனுடைய; சேவைக்கு ஆயத்த நிலையிலுள்ள; மெய்யான; நடப்பிலுள்ள.

effect'less, *a.* செயல்விளைவில்லாத; விளைபயனற்ற.

effect'or, *n.* (உயி.) உயிரினங்களில் புறத்தூண்டுதலுக்கு எதிரான அகவுணர்வு புறங்காட்டும் உறுப்பு.

effects', *n. pl.* உடைமைகள், உடைமை உரிமைகள்; (தொ.) leave no effects, பின்மரபுக்கு உடைமை எதுவும் விட்டுச் செல்லாதிரு, இறுதிப்பத்திரம் எழுதி வைப்பதற்குரிய எதுவுமில்லாமல் போ; personal effects, மரபுரிமையாகச் செல்லாத தனியுரிமை உடைமைகள்.

effec'tual, *a.* விரும்பிய பயன் விளைவித்தலில் வெற்றியுள்ள; திட்ப உறுதியான, முடிவான பயனுடைய; நேர் பயனுடைய; (தொ.) effectual calling, தேர்ந்தாய்வுற்ற சால்புடையவர்க்கு இயேசுநாதரிடம் வருவதற்கான திருஅழைப்பு.

effec'tuate, *v.* செயல் நிறைவுறுத்து, செய்து முடி.

effem'inacy, *n.* பெண்தன்மை, மெல்லியல்பு, ஆண்மைக்கேடு, வலிவின்மை; ஆணின் தன்னிலை கெட்ட இன்பத் தோய்வு.

effem'inate, *n.* ஆண்தன்மை இல்லாதவன், பேடி; *a.* ஆண்மையில்லாத; பெண்தன்மையுள்ள; வலிவற்ற; மென்மைமிக்க; சிற்றின்ப ஈடுபாடுள்ள; *v.* பெண்தன்மையாக்கு, மெலியச் செய், ஆண்மை குலையச்செய்.

effen'di, *n.* துருக்கியில் அரசியற்பணியாளர்களுக்கும் கல்வித்துறை முதல்வர்களுக்கும் 1934-வரை உரித்தாக வழங்கப்பட்ட பட்டப்பெயர்.

eff'erent, *a.* (உட.) நாடிநரம்புகளில் வெளிநோக்கிச் செல்கின்ற, கொண்டு செலுத்துகின்ற.

effervesce', *v.* கொதி, சூவென்ற ஒலியுடன் குமிழியிட்டுப் பொங்கியெழு; நுரைத்தெழு.

effervesc'ent, *a.* ஆவிவெளிவருவதனால் பொங்குகிற, ஆவி வெளியேற்றுவதனால் நுரைத்தெழுகின்ற.

effete', *a.* முற்றிலும் களைத்துப்போன, தளர்ந்துலைந்த; வலுவிழந்த; உரமழிந்த, ஊக்கங் குலைந்த.

effic'acious, *a.* கருதிய பயனைக் கட்டாயமாகத் தரத்தக்க, பயனுரமுடைய.

efficac'ity, eff'icacy, *n.* செயற்படுத்தும் திறன், பயனிறை வுடைமை; கற்றிறம்.

effi'cience, *n.* திறமையான செயல்; திறன்நிறைவு.

effi'ciency, *n.* பயனுறுதி, குறிப்பிட்ட பயனை நிறை வேற்றும் ஆற்றல்; தகைதிறம், தேவைக்குப்போதுமான தகுதி; இயக்குதிறம், இயந்திரத்தின் இயக்காற்றல்மீது வினைவாற்றலுக்குரிய விழுக்காடு.

effi'cient, *n.* பயன்விளைவிப்பவர்; பயன் விளைவிக்கும் பொருள்; *a.* தகை திறமுடைய, நிறைவேற்றும் ஆற்ற லுடைய; பயனுறுதியுடைய.

eff'igy, *n.* சிறிய உருவப்படம்; மாதிரி உருவம்; நாணயத் தில் பொறிக்கப்பட்ட உரு, தலையுருப்பொறிப்பு; (தொ.) burn in effigy, வெறுப்புணர்ச்சியின் விளைவால் ஒருவரின் உருவப்படத்தைக் கொளுத்து.

effloresce', *v.* பூத்துக்குலுங்கு; பொங்குமாவளமுறு, மலர்ச்சியுறு; பொடியார்ந்த தோட்டால் மூடப்பெறு; பொடியார்ந்த தோடாக உருப்பெறு; (வேதி.) பொருட் களின் மணி உருவகையில் திறந்த வெளிக்காற்றுப்பட்டுப் பொடிப்பொடியாகு; உப்புக்கள் வகையில் கலவையின் மேற் பரப்புக்கு வந்து மணிஉருப்பெறு; நிலஞ்சுவர்ப்பரப்புக்கள் வகையில் உப்புப் பொலிவுறு.

effloresc'ence, *n.* மலர்ச்சி; மலர்ச்சிப்பருவம்; உடலின் மேந்தோல் பெறும் செந்நிறத்தன்மை; பொடியார்ந்த மேல் தோடு; பொடியார்ந்த மேல்தோடு உருவாதல்.

eff'luence, *n.* வழிந்தோடுதல்; மற்றொன்றினின்று வெளிப் படுதல்; ஒளியின் புறஎழுச்சி; மின்வலியின் புறஒழுக்கு; புறஞ்செல்வது.

eff'luent, *n.* ஏரியிலிருந்து வெளிச்செல்லும் ஆறு, மறிகால்; மற்றோர் ஆற்றிலிருந்து பிரிந்தோடும் கிளையாறு; புறக் கிளைக் கால்வாய்; புறக்கிளை ஓடை; கழிவுநீர்த் தொட்டியி லிருந்து வெளிச்செல்லும் வடிகால்; கழிவுநீர்த் தேக்கத் துப் புரவு நீர்க்கால்; தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் நீரியற் கழிவு; *a.* புறஞ்செல்கின்ற; வழிந்தோடுகிற.

efflu'vium, *n.* பொருளிலிருந்து வெளிப்படும் நுண்ணிய அணுக்கள்; அழுகிய பொருள்களிலிருந்து வெளிப்படுகின்ற உடல் நலத்துக்கு ஒவ்வா வாடையுடைய தீயாவி; காந்தத் தால் வெளியிடப்படுவதாகக் கருதப்பட்ட நுண் துகள் திரள்.

eff'lux, efflux'ion, *n.* நீரியல் ஆவியியல் பொருள்கள் வகை யில் புறநோக்கிய ஒழுக்கு; கடத்தல்; புறவொழுக்கு.

eff'ort, *n.* ஊக்கம், முயற்சி; ஆற்றலை ஈடுபடுத்திய செயல்; அருஞ்செயல், தொடர்ந்த உழைப்பு; முயற்சியின் பயனுய் விளைந்த செய்தி, அருஞ்செயல் விளைவு.

eff'ortless, *a.* முயற்சியற்ற, எளிதான; முயற்சி எடுத்துக் கொள்ளாத, செயல்முனைப்பற்ற, தன்முயற்சியற்ற, ஏனே தானே என்றிருக்கின்ற.

effront'ery, *n.* வெட்கமில் ஆணவம்; நாணழிவு; அகந்தை.

effulge', *v.* ஒளிதுலங்கு; ஒளிபெறு.

efful'gence, *n.* ஒளிர்வு.

efful'gent, *a.* சோதியான, போரொளி விடுகிற.

effuse', *a.* (தாவ.) வழிந்து போன; *v.* ஊற்று; வெளிப் படுத்து; சிந்து; கொட்டு; இறை; வழி.

effu'sion, *n.* ஊற்றுதல், வழிதல்; சிந்துதல்; கொந்தளிப் புரை.

effu'sive, *a.* அதிக அளவில் சொரிந்த; பீறிடுகின்ற; எரி மலைக்குரிய உருக்குப்பொருள் வெளிக்கொட்டிய; உறுதிப் படுத்தும் வகையில் அதிக உணர்ச்சி காட்டுகின்ற.

eft, *n.* பல்லி வகை.

egad', *int.* 'அட! கடவுளே!' என்னும் வியப்பு மொழி.

Ege'ria, *n.* பெண் ஆலோசகர்; ஒரு குலதெய்வம்.

egg, *n.* முட்டை; கரு; உயிரணு; ஈருயிரின்பச் சேர்க்கை யின் உயர்விளைவு; கோழிமுட்டை போன்ற பொருள்; *v.* தூண்டு, விரைவுபடுத்து; (தொ.) put all one's eggs into one basket, ஒரே அருவினையில் அனைத்தையும் வைத்து அபாய முயற்சிசெய்; take eggs for money, தருவதாக வாக்குறுதி தரப்பட்ட பணத்தில் திருப்தியடை; teach your grandmother to suck eggs, உன்னைக்காட்டிலும் அறு பவம் உடையவர்க்குப் புத்தி கூறு; tread upon eggs, விழிப்போடு நட.

egg'-and-anch'or, *n.* நங்கூரத்தின் அல்லது அம்புகளின் இடையே வார்ப்படத்தாலான முட்டைவடிவப் பொருள்களை ஒன்றையடுத்து ஒன்றுகப் பதித்தமைத்த அணிவகை.

egg'-binding, *n.* முட்டையை வெளிப்படுத்த முடியாமை.

egg'-bird, *n.* கரிய கடற்பறவை வகை.

egg'-capsule, *n.* சிலவகை விலங்குகளின் முட்டைமேல் மூடியிருக்கும் கரப்புறைத் தோல்.

egg'-cosy, *n.* வேகவைத்தெடுத்த முட்டை கூடு கெடாதவாறு வைக்கப்படுகின்ற மேலுறை.

egg'-dance, *n.* முட்டைகளினிடையே கண்களைக் கட்டிய வாறு ஆடப்பெறும் நடனம்.

egg'er, *n.* காட்டுக் கோழிமுட்டைகளைத் திரட்டுபவர்; முட்டைபோன்று கூடுகட்டும் பூச்சி வகை.

egg'ery, *n.* முட்டையிடும் இடம்.

egg'-flip, *n.* முட்டையோடு புளித்தமாநீர் திராட்சைச் சாறு வெறியம் பால் முதலியவற்றைச் சேர்த்துச் சர்க்கரையிட்டுச் செய்த குடிவகை.

egg'-fruit, *n.* முட்டை வடிவப் பழவகை.

egg'-glass, *n.* முட்டைகள் வேகும் நேரத்தைக் கணக்கிடும் சிறு மணல்வட்டில்.

egg'ler, *n.* முட்டை வாணிகர்.

egg'-nog, *n.* முட்டையுடன் சாராயங் கலந்து செய்யப்படும் குடிவகை.

egg'-plant, *n.* கத்தரிச்செடி.

egg'-shell, *n.* முட்டையின் வெண்தோடு, மேலோடு; மெல்லிய பீங்கான்வகை.

egg'-slice, *n.* பொரித்த முட்டையை எடுப்பதற்கான கரண்டி.

egg'-tooth, *n.* முட்டையினின்று வெளிப்படாத குஞ்சு முட்டையோட்டையுடைப்பதற்கான அலகுமுனைப்பகுதி.

egg'y, *a.* முட்டைகள் நிறைந்த; அண்மையில் முட்டையிட்ட அல்லது முட்டையிடப் போகின்ற; முட்டைச்சுவையுடைய.

eg'lantine, *n.* முட்செடி வகை.

e'go, *n.* 'நான்' என்னும் முனைப்பு.

egocen'tric, *a.* தன்முனைப்புள்ள.

e'goism, *n.* (மெய்.) தன்னல வாழ்வைத்தவிர வேறெதும் இல்லை என்ற கோட்பாடு, தான் என்ற எண்ணம்; தன்னல வேட்கை நெறி; தன்னலம்; தன்னைத்தானே புகழ்ந்து பேசுதல்.

e'goist, *n.* தற்புகழ்ச்சியாளர்; தன்முனைப்பாளர்.

egoist'ic, egoist'ical, *a.* தன்னலம்பற்றிய ஆணவம் வெளிப்படுகின்ற.

egothe'ism, *n.* நானே கடவுளெனல்.

e'gotism, *n.* 'நான்' என்ற முனைப்புச் சொல்லை அடிக்கடி பயன்படுத்துதல்; தற்பெருமை கூறுதல்.

e'gotist, *n.* தற்பெருமையாளர்.

egotist'ic, egotist'ical, *a.* தற்பெருமை காட்டுகின்ற; இறுமாப்பான.

e'gotize, *v.* தன்னை மிகுத்துப்பேசு.

egre'gious, *a.* அதிர்ச்சியுண்டாக்குகிற.

e'gress, *n.* வெளிப்போதல்; புறப்பாடு; வெளியே செல்லும் வழி; வெளியேறும் உரிமை; (வான்.) கோள்மறைவின் முடிவு.

egress'ion, *n.* வெளியேறுதல்.

e'gret, *n.* நாரையினம்; கொக்கு.

Egyp'tian, *n.* எகிப்தியர், எகிப்திய நாட்டார்; நாடோடி; *a.* எகிப்திய; பழமையான.

Egyptol'ogy, *n.* எகிப்திய பழமை ஆய்வுநூல்.

eh, *int.* வியப்பிடைச் சொல்.

eid'er, *n.* வடதுருவக் கடல் வாத்து.

eid'er-down, *n.* வாத்தின் மென்மையான இறகு, மெத்தையில் திணிக்கப் பயன்படும் தூவி.

eid'ograph, *n.* படங்களைப் படியெடுப்பதற்கான கருவி.

eidol'on, *n.* உருவம்; கற்பனை வடிவம்; ஆவித்தோற்றம்.

eight, *n.* எட்டு; எண்மர்; எட்டுப்பொருள்கள்; நண்பகலுக்கு அல்லது நள்ளிரவுக்கு அடுத்த எட்டாவது மணி; *a.* எட்டாவதான; (தொ.) an eight days, வாரம்; figure of eight, சறுக்கு விளையாட்டு முதலிய ஆடல்களால் ஏற்பட்ட 8 என்னும் எண்ணைப் போன்ற வடிவப் பதிவு; the eights, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கல்லூரி மாணவர்களிடையே ஆண்டுக்கொருமுறை கோடைக்காலத்தில் நடத்தப்படும் படகுப் பந்தயங்கள்.

eight'-day, *a.* எட்டு நாளளவும் நீடிக்கின்ற.

eighteen', *n.* பதினெட்டு; பதினெட்டன் குறி; *a.* பதினெட்டான.

eigh'teenth, *n.* பதினெட்டில் ஒரு பகுதி; *a.* பதினெட்டாவதான, பதினெட்டாம், பதினெட்டில் ஒரு பகுதியான.

eight'foil, *n.* எட்டிதழ்களுள்ள மலர்.

eight'fold, *a.* எண்வகுப்பான; எட்டு மடங்கான; *adv.* எண்பகுப்பாக; எண்மடங்காக.

eight'-foot, *a.* எட்டடி அளவான, எட்டடி அளவுள்ள இசைக் கருவியின் எடுப்பொலி பெறுகின்ற அல்லது அக்கருவியின் தாழ்ந்த குறிப்பொலி பெறுகின்ற; *adv.* எட்டடி அளவில்.

eighth, *a.* எட்டாம்; எட்டாவதான; எட்டில் ஒரு பகுதியான, அரைக்காலான; (இசை.) எட்டாஞ்சுரமான.

eighth'ly, *adv.* எட்டாம் இடத்தில், எட்டாவதாக.

eight'ies, *n. pl.* எண்பதிலிருந்து எண்பத்தொன்பது வரையுள்ள எண்கள்; வாழ்க்கையில் அல்லது நூற்றாண்டில் எண்பது முதல் எண்பத்தொன்பது வரையுள்ள எண்களைக் கொண்டு முடியும் ஆண்டுகள்.

eigh'tieth, *n.* எண்பதில் ஒரு பங்கு; *a.* எண்பதாவதான; எண்பதாம்; எண்பதில் ஒரு பகுதியான.

eight'-oar, *n.* எட்டுத் துடுப்புடைய பந்தயப் படகு; *a.* எட்டுத் துடுப்புடைய.

eight'-score, *n.* நூற்றறுபது, எண்மடங்கான இருபது; *a.* நூற்றறுபதான.

eights'man, *n.* படகோட்டிகள் எண்மருள் ஒருவர்.

eight'some, *n.* எண்மர் தொகுதி; எண்மர் கூட்டு; எண்மர் சேர்ந்து ஆடும் நடனம்; *a.* எண்மர் தொகுதியான; எண்மர் கூட்டான; எண்மர் சேர்ந்து ஆடுகிற.

eight'y, *n.* எண்பது; *a.* எண்பதான.

eiren'icon, *n.* அமைதிக்கான திட்டம்; போர்நிறுத்தம் செய்வதற்கான சமாதானப்பேச்சு.

eistedd'fod, *n.* வேல்ஸ் நாட்டுப் புலவர் சங்கம்; வேல்ஸ் நாட்டுக்குரிய பாண்புலவர் குழாம்; இசைப்போட்டிக்கென்று சூழ்ந்திருக்கும் இசைவாணர் குழாம்.

eis wool, *n.* ஈரிழைக் கம்பளி வகை.

ei'ther, *pron.* யாதேனுமொன்று, இரண்டிலொன்று; இரண்டில் ஒவ்வொன்றும்; *a.* இரண்டில் ஒவ்வொன்றுமான; *adv.* இரண்டிலொன்றாக; *conj.* அல்லது.

ejac'ulate, *v.* விட்டெறி; திடீரெனச் சாற்று.

ejacula'tion, *n.* வெளிப்படுத்துதல்; திடீரெனத் தோன்றும் வழிபாட்டுமொழி.

ej'ect[1], *n.* ஊகித்து அறியப்படுவது.

eject'[2], *v.* வெளிப்படுத்து; விலக்கு; நீக்கு; வெளியே துரத்து.

eject'a, ejectament'a, *n. pl.* எரிமலையால் எறியப்பட்ட பொருள்கள்.

ejec'tion, *n.* வெளிப்படுத்துதல், வெளியேற்றம்; வெளிப்படுத்தப்பட்டநிலை; வாக்கியெடுத்தல்; வெளியேற்றப்பட்ட பொருள்.

ejec'tive, *a.* வெளியேற்றும் பாங்குள்ள.

eke[1], *v.* குறை நிரப்பு; வாழ்க்கை வகை தேடு.

eke[2], *adv.* மேலும்; போன்று.

ekk'a, (இ.) *n.* சிறிய ஒற்றைக் குதிரைவண்டி.

elab'orate, *a.* நுட்பமாகச் செய்யப்பட்ட, அக்கறையோடு செய்யப்பட்ட; *v.* உழைப்பினால் உண்டாக்கு, சிந்தித்து விளக்கமாகச் செய்; பொருட்களைப் பொருட் கூறுகளிலிருந்து உண்டாக்கு.

elabora'tion, *n.* விரிவுபடுத்துதல்.

elaeome'ter, *n.* எண்ணெய்களின் தூய்மையைச் சோதிக்கும் கருவி.

elan, (பிர.) *n.* திடீர்வேகம்.

el'and, *n.* தென்னப்பிரிக்க மானினம்.

elapse', *n.* கடந்துவிடுகை, கழிவு; *v.* கழிந்துவிடு.

elastic', *n.* தொய்வு நாடா, தொய்வுக் கயிறு; *a.* மெகிழும் தன்மையுள்ள.

elasti'city, *n.* மெகிழ்திறம்.

elate', *a.* வீண் பெருமிதம் கொள்கிற; *v.* ஊக்கப்படுத்து; செருக்குப்படுத்து.

ela'tion, *n*, வெற்றிச் செருக்கு.

el'bow, *n.* முழங்கை; கைமுட்டு; வளைவு அல்லது திருப்பு முனை; *v.* முழங்கையால் தள்ளு; நெருக்கித்தள்ளு; (தொ.) at one's elbow, கைக்கெட்டும் வகையில்; up to the elbows, முழுதும் ஈடுபட்டு.

el'bow-grease, *n.* வன்மையாகத் துடைத்தல்; கடுமையான வேலை.

el'bow-room, *n.* இயங்குதற்குப் போதிய இடம்; சுயேச்சை வாய்ப்பு.

el'chee, *n.* அரசியல் தூதுவர்.

eld, *n.* முதுமை; தொன்மை.

el'der[1], *n.* உறவினரில் மூத்தவர்; இருவரில் மூப்பானவர்; நிறுவனங்களில் சிறப்புயர்வுடைய உறுப்பினர் குழாத்தில் ஒருவர்; மூப்புக்காரணமாக உயர்பதவிபெற்றவர்; முதியவர்; மேலவை உறுப்பினர்; தொடக்ககாலக் கிறித்தவத் திருச்சபைப் பணியாளர்; திருச்சபை வகையில் பணியாளர்; *a.* உறவினர்களில் மூத்த; இருவரில் வயது முதிர்ந்த; நீண்டகாலம் வாழ்ந்த; முன்பிறந்த, முன்தோன்றிய; (தொ.) Elder Brethren, நிறுவன வகையின் குழுவில் சிறப்புச் செயலுறுப்பினர்கள்; elder hand, சீட்டாட்டத்தில் முதலில் சீட்டு இறக்கும் ஆட்டக்காரர்.

el'der[2], *n.* வெள்ளை மலருடைய உயரக்குறைவான மரவகை.

eld'er-berry, *n.* வெள்ளை மலருடைய உயரக்குறைவான மர வகையின் புளிப்பான கருஞ்சிவப்புப்பழம்.

eld'erly, *a.* வயதாகிக்கொண்டு வருகிற.

eld'ership, *n.* மூத்தவராயிருக்கும் நிலை; பிரிஸ்பிடீரியப் பிரிவுத் திருக்கோயில் (Presbyterian Church) அலுவலர் பதவி.

eld'er-wine, *n.* வெள்ளை மலருடைய உயரமில்லாத மர வகையின் பழங்களிலிருந்து இறக்கப்படும் இன்தேறல்.

el'dest, *a.* முதற்பிறந்த; இருப்பவர்களில் மூத்த; எல்லாரிலும் மூத்த.

El Dorad'o, *n.* கற்பனைப்பொன்னூடு, சுவர்ணபூமி; *pl.* El Dorad'os.

elecampane', *n.* கசப்புச்சுவையும் நறுமணமும் உள்ள இலைகளையும் வேரினையும் உடைய செடிவகை; செடிவகையினின் நறுமணம் ஊட்டப்பெற்ற தின்பண்டம்.

elect', *n.* தேர்ந்தெடுக்கப்பெற்றவர்; தனிப்படத் தேர்ந்தெடுத்து அமர்த்தப் பெற்றவர்; *a.* தேர்ந்தெடுக்கப்பட்ட; மிகவுயர்ந்த; வீடுபேற்றுக்கெனக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட; பதவி முதலியவற்றிற்குத் தெரிந்தெடுக்கப்பட்டும் பதவி யேற்காத; *v.* தெரிந்தெடு, வாக்கு மூலமாய்த் தேர்ந்தெடு; (கடவுள்) வீடுபேற்றுக்கெனப் பொதுநீக்கிச் சிலரைத் தேர்ந்தெடு.

elec'tion, *n.* வாக்கு மூலம் தெரிந்தெடுத்தல்; தேர்தல்; தங்கு தடையற்ற விருப்பம்; சிலருக்கு வீடுபேறளிப்பதென முன்னரே கடவுள் கொண்ட திருவுளப்பற்றுதல்.

electioneer', *n.* ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உழைப்பவர்; *v.* ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பாடுபடு; அரசியல் தேர்தல்களில் ஈடுபடு.

elec'tive, *a.* தேர்ந்தெடுப்புக்குரிய; தேர்தலைப் பொறுத்திருக்கிற; தேர்தல் அதிகாரத்தைச் செலுத்துகிற; தேர்ந்தெடுக்கும் அதிகாரமுடைய; தேர்தலினால் அமர்த்தப்படுகிற, தேர்ந்து நிரப்பப்படத்தக்க.

elec'tor, *n.* வாக்காளர், தேர்ந்தெடுப்பவர்; தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளவர்; (வர.) முன்பு செர்மன் பேரரசின் தேர்தலில் பங்குகொள்ள உரிமை பெற்றிருந்த இளவரசர்.

elect'oral, *a.* தேர்தலுக்குரிய; வாக்காளர் தொடர்பான; வாக்காளர்களைக் கொண்ட.

elec'torate, *n.* வாக்காளர் தொகுதி, தேர்தல் தொகுதி; (வர) முன்பு செர்மன் (Germah) பேரரசின் தேர்தலில் பங்கு கொள்ள உரிமை பெற்றிருந்த இளவரசரின் பதவி; செர்மன் பேரரசுத் தேர்தல் உரிமையுடைய இளவரசர் ஆட்சியெல்லை.

elect'oress, *n. fem.* பெண்வாக்காளர்.

elec'tress, *n. fem.* பெண்வாக்காளர்; (வர.) முன்பு செர்மன் பேரரசின் தேர்தலில் பங்குகொள்ள உரிமை பெற்றிருந்த இளவரசரின் மனைவி.

elec'tric, *n.* உரசித்தேய்ப்பதனால் ஆற்றல் எழுப்பக்கூடிய பொருள்; *a.* மின்ஆற்றலுக்குரிய, மின்வலி ஏற்றப்பட்டுள்ள, மின்ஆற்றல் பெருக்கக்கூடிய; மின்ஆற்றல் உண்டாக்குகிற; மின்ஆற்றலால் விளைகிற; மின்ஆற்றலைக் கொண்டு செல்லுகிற; மின்ஆற்றலால் இயக்கப்படுகிற; மின்ஆற்றலைப் பயன்படுத்துகிற; மேனி சிலிர்க்கச்செய்கிற; திடீரென அதிர்ச்சியுண்டாக்குகிற; மின்வெட்டுப்போன்ற, நிலையற்ற; (தொ.) electric arc, மின்வில், மின்வாய்களுக்கிடையே மின் ஓட்டம் பாயும்போது உண்டாகும் ஒளி இடைவெளி; electric battery, மின்கல அடுக்கு, electric blue, பைஞ்ஞீலம், உருக்கு நீலநிறமுடைய; electric chair, உயிர்த்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியை மின்செலுத்தி மாள்விப்பதற்கான இருக்கை; electric charge, மின் ஊட்டம், மின்கலத்திலுள்ள மின்செறிவு; electric eel, மின்மலங்கு, மின்அதிர்வு கொடுக்கவல்ல விலாங்குமீன் வகை; electric hare, மின்பொறியினால் இயக்கப்பட்டு வேட்டை நாய்களுக்கு முன்னால் பந்தய வளவைச் சுற்றி வரும் முயலின் பொம்மையுரு; electric ray, மின்மீன், மின்தாக்கு எறியும் மீன் வகை; electric shock, மின் பேரதிர்வு; மின்தாக்குப் போன்ற அதிர்ச்சி; electric storm, மின்புயல், வளிமண்டலத்தின் மின் நிலையில் ஏற்படும் குலைவு.

elec'trical, *a.* மின் ஆற்றலுக்குரிய.

electri'cian, *n.* மின்னல் ஆய்வாளர்; மின்னியல் வல்லுநர்; மின் அமைவுகளைச் செய்பவர்; மின்அமைவு நிறுவுபவர்; மின் அமைவு செப்பனிடுபவர்.

electri'city, *n.* மின் ஆற்றல், மின்வலி, மின் அணுக்களின் இயக்கம்பற்றிய ஆய்வுத்துறை.

electrifica'tion, *n.* மின் ஊட்டம்; நீராவிவண்டித் தொடரை மின்வண்டித் தொடராக மாற்றுதல்.

elec'trify, *v.* மின் ஊட்டு; மின் அதிர்வுக்கு உள்ளாக்கு; இருப்புப்பாதை-போக்குவரத்து-செய்தொழில் முதலியவைகளை மின்சாரத்தினால் இயங்குமாறு மாற்றியமை; கிளர்ச்சியூட்டு, திடுக்கிடச்செய்.

elec'trize, *v.* = electrify.

elec'trobio'logy, *n.* உயிர்ப்பொருள்களில் தோன்றும் மின் நிகழ்வுகளைப் பற்றிய ஆய்வுநூல்.

elec'trochem'istry, *n.* வேதியியல் சார்ந்த மின்னூற்றுத் துறை.

elec'trocul'ture, *n.* மின் ஆற்றலைச் செலுத்திச் செடிகளைப் பயிரிடுதல்.

elec'trocute, *n.* மின் ஆற்றல் செலுத்தி மாய்வி.

electrocu'tion, *n.* மின் ஆற்றல் செலுத்திக் கொலைத் தண்டனை விதித்தல்; மின்திற மரணதண்டனை; எவ்வித மாகவேனும் மின் ஆற்றல் தாக்கி ஏற்படும் மாய்வு.

elec'trode, *n.* மின்வாய், வெற்றுக்கல மின்னேட்டத்தில் இருகோடி முனைகளில் ஒன்று.

elec'trodynam'ics, *n.* மின்விசையியக்கவியல்.

elec'tro-gild'ing, *n.* மின்வலி உதவியாற் செய்யப்படும் பூச்சுமான வேலை.

elec'trograph, *n.* கணிப்புப் பதிவுசெய்யும் மின்மானி.

elec'tro-kinet'ics, *n.* மின் இயக்கவியல்.

electrolier', *n.* கொத்தான மின்விளக்குகளின் தொகுதி.

electrol'ogy, *n.* மின் இயல்; மின் இயல் மருத்துவமுறை.

elec'trolyse, *v.* மின்செலுத்திக் கூறுபடுத்து.

electrol'ysis, *n.* மின்பகுக்கை; மின்பகுப்பியல்.

elec'trolyte, *n.* மின்பிரி, மின்பகுப்புக்கு உதவும் நீர்மப் பொருள், மின்னேட்டத்தால் பாதிக்கப்படும் கரைசல் நீர்மம்.

elec'tro-mag'net, *n.* மின்காந்தம், சுற்றிவரியப்பட்ட மின்னேட்டமுடைய கம்பிச்சுழலால் காந்தமாக்கப்பட்ட தேனிரும்புப் பிழம்பு.

elec'tro-magnet'ic, *a.* மின்காந்த இயல்புடைய, மின் விளைவும் காந்த விளைவும் ஒருங்கே கொண்ட.

elec'tro-mag'netism, *n.* மின் ஆற்றலால் உண்டுபண்ணப்படும் காந்த ஆற்றல்; காந்த ஆற்றலுடன் மின்னாற்றலின் தொடர்புபற்றிய ஆய்வுப்பிரிவு.

electromechan'ical, *a.* மின் வலியைப் பயன்படுத்த வேண்டியுள்ள இயந்திர வேலை முறைக்குரிய.

electromechan'ics, *n.* மின் ஓட்டம் பற்றிய பொறித்துறை.

electrom'eter, *n.* மின்மானி.

electromo'tion, *n.* மின் ஓட்ட இயக்கம்; மின் ஆற்றலால் தோன்றும் இயக்கம்.

electromo'tive, *a.* மின் இயக்கம் உண்டுபண்ணுகிற; மின் இயக்கம் தூண்டுகிற; மின் இயக்கத்துக்குரிய; மின் இயக்க விதிகளுக்குரிய.

electromo'tor, *n.* மின்வலியை இயக்க ஆற்றலாகப் பயன்படுத்தும் அமைவு.

elec'tron, *n.* மின்னணு, எதிர்மின்மம், எதிர்மின் ஆற்றலுடன் அணுவின் கருவுளைச் சுற்றிச் சுழலும் உள்ளணுத்துகள்களில் ஒன்று; பண்டைக்காலத்தவரால் பயன்படுத்தப்பட்ட இயல்பான பொன் வெள்ளிக்கலவை; (தொ.) electron pair, ஒருமின்மத்தைப் பொதுவாகக் கொண்ட அணு இணை.

electroneg'ative, *a.* எதிர்மின் ஆற்றல் ஊட்டப்பெற்றுள்ள.

electron'ic, *a.* மின்மம் சார்ந்த; மின்ம இயக்கத்துக்குரிய; (தொ.) electronic brain, மின்னியக்கக் கணிப்புப்பொறி; electronic flash, நிழற்படத்துறையில் பயன்படுத்தப்படும் மின்வெட்டுப் போன்ற வளிக்குழாய் மின்னேட்ட ஒளி.

electron'ics, *n.* மின்மங்கள் போன்ற அணுவுள் துகள்களைப் பற்றிக் கூறும் இயற்பியல் பிரிவு.

electrop'athy, *n.* மின் ஆற்றலைப் பயன்படுத்தும் மருத்துவ முறை.

electroph'ore, electroph'orus, *n.* அணுக்கத்தால் நிலை மின் ஆற்றல் உண்டுபண்ணும் பொறி அமைவு.

elec'troplate, *n.* மின்பிரிப்பூச்சுமானம்; *v.* மின்பிரி முறையினால் பூச்சுமானம் செய்.

elec'tropo'lar, *a.* மின்கடத்தி போன்று ஒருமுனை நேர்க் காந்தக் கோடியும் மறுமுனை எதிர்க்காந்தக்கோடியும் உடைய.

electropos'itive, *a.* நேர்மின் ஆற்றல் ஊட்டப்பெற்றுள்ள.

elec'troscope, *n.* மின்காட்டி, பொருளில் மின்ஞற்றல் இருப்பதையும் அதன் இயல்பையும் காட்டும் கருவி.

electrostat'ics, *n.* நிலைமின் இயல்.

electrotech'nics, *n.* மின்ஞற்றல் தொழில் நுணுக்கத் துறை.

electrotherapeu'tics, electrother'apy, *n.* மின்ஆற்றல் செலுத்தி நோய்தீர்க்கும் முறை.

electrotherm'al, electrotherm'ic, *a.* மின்ஞற்றலால் பெறப்படும் சூடுசார்ந்த.

electrot'onus, *n.* (உட.) மின்பாய்வுக்குட்பட்ட உணர்ச்சி நரம்பின் நிலை.

elec'trotype, *n.* மின் அச்சு, மின்பகுக்கை முறையினால் அச்சுருவின்மீது செம்பு பூசிச்செய்யப்படும் அச்சுத்தகடு; *v.* மின் அச்சினால் படியெடு.

elec'trum, *n.* பண்டைக்காலத்தவரால் பயன்படுத்தப்பட்ட இயல்பான பொன்வெள்ளிக்கலவை.

elec'tuary, *n.* தேனுடன் அல்லது இன்குழம்புடன் கலந்த மருந்துத்தூள்.

eleemos'ynary, *a.* இரவலர்க்களிப்பது பற்றிய; ஈகையைப் பொறுத்த; உதவிசெய்கிற; இலவசமான, கைம்மாறு கருதாத.

el'egance, el'egancy, *n.* நயநாகரிகம்; நேர்த்தி, அழகு; தகவு, செம்மை; பண்புடைமை; சான்றெழுங்கு.

el'egant, *n.* நயநாகரிகர்; நாகரிகப்பகட்டாளர், சுவைநயப் பகட்டர்; *a.* நடையினிய, நடைநயம்வாய்ந்த; நாகரிகத் தோற்றமுடைய, காண்பினிய; சுவைநயம் வாய்ந்த; நுட்ப நயமுடைய, நேர்த்தியான; பண்பட்ட நயநாகரிகமுடைய; மதிப்பு நலமார்ந்த; இன்பநலம்வாய்ந்த; ஒழுங்கு நலமுடைய.

elegi'ac, *n.* புலம்பற்பாட்டு; *a.* புலம்பற்பாட்டுக்குரிய; துயர் தருகிற; நெடில் இணைகுறில் ஆன மூவகைச்சீர் ஆறு அல்லது ஐந்து கொண்ட அடியாலான.

elegi'acs, *n. pl.* புலம்பற்பாட்டுக்கள்; நெடில் இணைக்குறில் ஆன மூவசைச்சீர் ஆறு அல்லது ஐந்துகொண்ட யாப்புச் சார்ந்த பாடல்.

el'egize, *v.* கையறு நிலையாக எழுது, துயரமனப்பான்மை காட்டி எழுது, புலம்பற்பாடல் எழுது.

el'egist, *n.* புலம்பற்பாட்டுக்கள் எழுதுபவர்.

el'egy, *n.* புலம்பற்பாட்டு, கையறுநிலைப்பாடல்; சரமகவி; ஆழ்ந்த சிந்தனை அல்லது துயரத்தைக் குறிக்கும் செய்யுள்; புலம்பற்பாட்டின் சீர் உடைய செய்யுள்.

el'ement, *n.* தனிமம், தனிப்பொருள், மூலப்பொருள்; ஆக்கக்கூறு; மூலதத்துவம்; மூலதத்துவங்களாக முற் காலங்களில் கருதப்பட்ட மண்-நீர்-காற்று-அனல் ஆகிய நாற்பெரும் பூதங்களில் ஒன்று; கடல்; வான்; வான கோளகை; வளிமண்டல இயற்கை ஆற்றல் கூறுகளில் ஒன்று; அறுதிசெய்யும் கூறு; மின்அடுப்பிலுள்ள தடுப்புக் கம்பி; மின்வாய்; அடிப்படைக்கூறு; இயல்பான வாழ்விடம்; இயல்பான சூழல்; இயற்கையான இயக்க ஊடுபொருள்.

element'al, *n.* பூதங்களின் பின்னணித்தெய்வம், இயற்கை யாற்றலின் அதிதேவதை; ஆவித்தெய்வம்; *a.* நாற்பெரும் பூதங்களுக்குரிய; இயற்கை ஆற்றல்களுக்குரிய; மா பேராற்றல் வாய்ந்த, இயற்கை ஆற்றல்களோடு வைத்து எண்ணத்தக்க; இன்றியமையாத; கலவையாயிராத, தனித்த.

element'alism, *n.* நாற்பெரும் பூதங்களுக்குரிய அதி தேவதைகளின் வழிபாடு.

elemen'tary, *a.* மூலக்கோட்பாடுகளுக்குரிய; மூலதத்துவ மான; அடிப்படையான, ஆதாரமான, தொடக்கமான; (வேதி.) பகுதிகளாகப் பிரிக்கமுடியாத; ஒரே தனிமத்துக் குரிய; கலவையாயிராத; மண்-வளி முதலிய பூதங்களுக்குரிய.

el'ements, *n. pl.* நாற்பெரும் பூதங்கள்; அடிப்படைக் கல்விக்கூறுகள்; அடிப்படைக்கலைக்கூறுகள்; திருக்கோயில் இறுதி உணவுத் திருவிணைக்குரிய திரு அப்பத் திருத்தேறல் கூறுகள்.

el'emi, *n.* களிம்பு-மெருகெண்ணெய் முதலியவற்றில் பயன் படுத்தப்படும் நறுமணப்பிசின் வகை.

elen'chus, *n.* வாதமறுப்பு, வாத மூலம் தவறென்று காட்டுதல்.

elenc'tic, *a.* வாதமறுப்புவாய்ந்த, குறுக்குக்கேள்விகள் கேட்டுமடக்கும் பாங்குள்ள.

el'ephant, *n.* யானை; 28 அங்குலநீளமும் 23 அங்குல அகலமும் உள்ள தாள் அளவு; (தொ.) a white elephant, தாங்கமுடியாத பெருஞ்செலவு பிடிக்கும் உடைமை; தண்டத்தீனி கொள்வது; தண்டத்தீனி கொள்பவர்; double elephant, 40 அங்குலநீளமும் 26½ அங்குல அகலமுமுள்ள தாள் அளவு.

el'ephant-fo'lio, *n.* மிகப்பெரிய அளவுள்ள மடிப்புத்தாள்

el'ephant-grass', *n.* நாணற் செடிவகை; யானைப்புல்.

elephanti'asis, *n.* யானைக்கால் நோய்.

elephan'tine, *a.* யானைக்குரிய; யானைபோன்ற; மிகப் பெரிய; அழகற்ற, அருவருப்பான; (தொ.) elephantine epoch, நிலவுலகெங்கும் யானையின விலங்குகள் மலிவுற் றிருந்த முற்பட்டகால மண்ணியலூழி.

elephant'oid, *a.* யானைபோன்ற.

el'ephant-seal, *n.* ஆணினம் ஏறத்தாழ இருபதடி நீளமுள்ள மிகப்பெரிய நீர்நாய்வகை.

Eleusin'ian, *a.* அட்டிக்காவிலுள்ள (Attica) எலூசிஸ் (Eleusis) என்னும் பண்டை நகரத்துக்குரிய; (தொ.) Eleusinian mysteries, எலூசிஸ் என்னும் பண்டை நகரத்தில் கொண்டாடப்பட்ட டெமிட்டர் (Demeter) என்னும் கிரேக்க உழவுக்கடவுள் பற்றிய மறைச்செய்திகள்.

eleuthe'rian, *a.* விடுதலை வழங்குகிற.

eleuth'eroman'ia, *n.* விடுதலையார்வவெறி.

eleuth'erophyll'ous, *a.* திட்டவட்டமாய் இலைகளையுடைய.

el'evate, *a.* வீரூர்ந்த, மதுமாந்தி எழுச்சியுற்ற; *v.* உயர்த்து; ஏற்று; தூக்கு; மேன்மைப்படுத்து, சிறப்பி; பண்பு உயர்வுபடுத்து; போற்று; மகிழ்ச்செய், எழுச்சி யூட்டு.

el'evated, *a.* உயர்ந்த, மேடான; மேம்பட்ட; வீரூர்ந்த மதுமூலம் எழுச்சியுற்ற.

eleva'tion, *n.* உயர்த்துதல்; உயர்த்தப்பெறுதல்; உயர்வு; உயரம்; உயர்நிலை, மேம்பட்ட பதவி; மேம்பாடு; மேடு; ஏற்றம், ஏறுசரிவு; கட்டிடமுகப்புத்தோற்றம்; கலையில் காட்சியிசைவற்ற சரிதள அளவைச் சித்திரிப்பு; அடிவானின் மேல் உயரம்; அடிவானத்துக்கு மேலுள்ள மீகோணம்; குழுநடனத்தில் அந்தரத்தில் மிதப்பது போன்ற தோற்றந் தரும் குதியாட்டுமுறை.

el'evator, *n.* உயர்த்துபவர்; உயர்த்துவது; உயர்த்தும் தசை; கூலந்தூக்கிப்பொறி; கூலக்களஞ்சியம்; மின் ஏற்ற மாடம்; விமானத்தின் பின்புற ஏற்ற இறக்கத்தட்டு.

el'evatory, *a.* உயர்த்தவல்ல, உயர்த்தும் பாங்குள்ள.

elev'en, *n.* பதினொன்று; மரப்பந்தாட்டம்-கால்பந்தாட்டம் முதலியவை வகையில் பதினொருவர் கொண்ட குழு; பகல் அல்லது இரவுக்குரிய பதினொராவது மணி; *a.* பதினொரு, பதினொன்று சார்ந்த.

elev'enth, *n.* பதினொராமவர்; பதினொராவது; பதினொன் றுகப் பகுக்கப்பட்ட பகுப்பின் கூறு, பதினொன்றிலொன்று; *a.* பதினொராவதான; பதினொன்றிலொருபகுதியான; (தொ.) eleventh hour, கடைசி நேரம்.

elf, *n.* கூளி, சிறு குள்ளத்தெய்வதம்; சிறுகுறும்புத் தெய்வம்; வனதெய்வம்; குள்ளர், கூழையர்; சிற்றுரு வினர், சிறுகுழந்தை; இழிசினர்.

elf'-arrow, elf'-bolt, *n.* தீக்கல்லால் ஆன அம்புத்தலை.

elf'in, *n.* சிறுகூளி; குள்ளர்; குழந்தை; *a.* கூளிகள் சார்ந்த; கூளிகள் போன்ற.

elf'ish, *a.* கூளிபோன்ற; குறும்பு செய்கிற; தந்திரமான; மனக்குழப்பமடைந்த; அடம்பிடிக்கிற.

elf'-lock, *n.* சடை, சிக்கல் தலைமயிர்க்கற்றை.

elf'-struck, *a.* சூனியத்துக்கு ஆட்பட்ட.

eli'cit, *v.* மறைகருத்தினை வெளிப்படுத்து; உள் மெய்ம்மை வெளியிடுவி; தூண்டி வெளியிடச் செய்; உட்கரந்த பண்பை வெளிக்கொணர்; மெய்ம்மையினை வருவி.

elide', *v.* ஒலிப்பிடையே உயிரொலி கெடுவி; அசையை ஒலிக்காது விட்டுவிடு.

eligibil'ity, *n.* தேர்வுத்தகவு, நுழைவுத்தகுதி, தகுதிப் பொருத்தம்.

el'igible, *a.* தெரிந்தெடுக்கப்படத் தகுதியுள்ள; முறைப்படி தகுதிபெற்ற; விரும்பத்தக்க; பொருத்தமான.

elim'inate, *v.* நீக்கு, விட்டொழி; வெளியேற்று, கழித்தகற்று; விட்டுவிடு; விலக்கியமை; பிரித்துப்புறமாக்கு.

elimina'tion, *n.* நீக்குதல்; விலக்கீடு, அகற்றீடு; விட்டொழிப்பு.

elim'inative, *a.* விலக்கி ஒழிக்கிற.

elim'inator, *n.* பிரித்தகற்றுபவர்; அகற்றும் பொருள்; மின்னூற்றல் பயன்படுத்தும் கம்பியில்லாத் தந்திக்குரிய கருவி வகை.

eli'sion, *n.* ஒலிப்பில் உயிரொலி கெடுதல்; சொல்லில் அசை கெட்டு மறைதல்.

elite, *(பிர.) n.* மிகச்சிறந்ததாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கூறு; இனக்கொழுந்து; உயர்ந்தோர் குழாம்.

elix'ir, *n.* அமுதம், உயிர்நீர், இறந்தவர்க்கு உயிர்தரவும் ஏனை உலோகங்களைப் பொன்னுக மாற்றவும் வல்லதெனக் கருதப்பட்ட மருந்து நீர்மம்; உள்ளுயிர்க்கூறு; ஊக்கந் தரும் பொருள்; கற்பம், சஞ்சீவி; அருமருந்து; வடிநீர்; *(தொ.)* elixir of life, கற்பம், வாணாள் நீட்டிக்கவல்ல மருந்து.

Elizabeth'an, *n.* முதலாவது எலிசபெத் அரசியின் காலத்தவர்; முதலாவது எலிசபெத் அரசிகாலத்து எழுத்தாளர்; *a.* முதலாவது எலிசபெத் அரசியின் ஆட்சிக்காலத்துக்குரிய.

elk, *n.* மரை, காட்டுமான் இனப் பெருவிலங்கு வகை.

elk'-hound, *n.* முரட்டு மயிருள்ள பெரிய வேட்டைநாய் வகை

ell, *n.* ஏறத்தாழ 45 அங்குலத்துக்குச் சரியான நீட்டலளவைக் கூறு; *(தொ.)* give him an inch and he'll take an ell, இடங்கொடுத்தால் மடம் பிடிப்பான்.

ellipse' [1], *n.* முட்டை வடிவம், நீள்வட்டம்.

ellipse' [2], *n.* =ellipsis.

ellip'ses, *n. pl.* ellipse [2], ellipsis என்பவைகளின் பன்மை வடிவம்.

ellip'sis, *n.* *(இலக்.)* அவாய்நிலை, வாக்கியச் சொல்லெச்சம், கருத்தை முடிப்பதற்கு வேண்டிய சொற்கள் வாக்கியத்தில் அவாய்நிலையாதல்.

ellip'soid, *n.* ஓரைவட்டக்கட்டி; குறுக்குவெட்டுக்கள் ஓர் ஊடச்சு நெடுக நீள் வட்டமாகவும் மற்ற ஊடச்சு வழி நீள்வட்டமாகவும், வட்டமாகவும் அமைகின்ற பிழம்புரு.

ellip'tic, ellip'tical [1], *a.* முட்டைவடிவமான, நீள்வட்டமான, ஓரைவட்டத்துக்குரிய.

ellip'tical [2], *a.* *(இலக்.)* சொல்லெச்சத்துக்குரிய; உய்த்துணரவேண்டிய உறுப்பினையுடைய.

elliptic'ity, *n.* வட்டவடிவத்தினின்றும் அல்லது கோள வடிவத்தினின்றும் வேறுதல்; நிலவுலகக்கோளத்தில் நடு வரைப்பகுதி விட்டத்துக்கும் துருவ ஊடுவிட்டத்துக்கும் உள்ள வேறுபாடு.

elm, *n.* இரட்டை அரம்பப்பல் விளிம்புடைய இலைகளும் சிறு மலர்க்கொத்துகளும் உள்ள மரவகை; *a.* இந்த மரவகைக் குரிய.

elm'y, *a.* இரட்டை அரம்பப்பல் விளிம்புடைய இலைகளும் சிறுமலர்க்கொத்துக்களும் உள்ள மரவகைகள் நிரம்பியுள்ள.

elocu'tion, *n.* பேச்சுக்கலை; பேசும்பாணி; நாவன்மை, பேச்சுவளம்.

elocu'tionist, *n.* நாவன்மை தேர்ந்தவர்; நாவன்மை பயிற்றுவிப்பவர்; பாடம் ஓதுபவர், ஒப்பிப்பவர்.

eloge, *(பிர.) n.* இறந்தவர் பற்றிய பாராட்டுரை; பிரஞ்சு மொழிக்கழகத்தின் மறைந்த உறுப்பினரைப்பற்றிய மற்றோர் உறுப்பினரது பாராட்டுரை.

Elo'hist, *n.* விவிலிய ஏட்டின் பழைய ஏற்பாட்டில் இறைவனை எலோஹிம் (Elohim) என்று சுட்டும் பகுதிகளை இயற்றியவர்.

el'ongate, *a.* நீண்டொடுங்கிய; நீண்டு கூரான; *v.* நீட்டு, நீளச்செய்; நீளு, நீடு; நீண்டொடுங்கியதாயிரு; நீளத்தை மிகுதியாக்கு, தொடர்ந்து நீட்டு.

elonga'tion, *n.* நீட்டுதல்; நீள்தல்; நீட்சி; நீட்டப்பெற்ற பகுதி, தொடர்ந்த நீளம், கவிந்த நீட்சி; தொலைவு, தூரம்; கதிரவனிடமிருந்து திங்கள் அல்லது கோள் விலகியுள்ள கோணத்தூரம்.

elope', *v.* காதலனுடன் உடன்போக்குச் செய்; வீட்டை விட்டோடு; கணவனை விட்டோடு; மறைந்தோடு, ஓடிமறை.

elope'ment, *n.* உடன்போக்கு.

el'oquence, *n.* நாகலம், பேச்சுநயம், பேச்சுத்திறன்; சொல்வன்மை, சொல்லாற்றல்; சொற்பெருக்கு, சொற்பொழிவு; சொற்கோப்புக்கலை.

el'oquent. *a.* நாகலம் வாய்ந்த; சொல்திறமிக்க; ஆற்றல் முனைப்பார்ந்த; கருத்தியக்கும் ஆற்றலுடைய.

else, *adv.* அதுவன்றியும், அதோடு கூட; வேறு, மற்று; மற்றப்படி, அஃதின்றேல்.

elsewhere', *adv.* வேறேரிடத்தில், வேறேதாவது இடத்தில், வேறெவ்விடத்திலும்; பிறிதோரிடத்துக்கு, பிறிதேதாவது இடத்துக்கு, பிறிதோரிடத்துக்கும்.

elu'cidate, *v.* விளங்கச்செய், தெளிவாக்கு; மேற்கோள் காட்டி விளக்கு.

elucida'tion, *n.* தெளிவாக்கல்; விளக்கம்.

elu'cidative, elu'cidatory, *a.* விளங்கவைக்கிற, தெளிவாக்குகிற; விரித்துரைக்கிற.

elude', *v.* திறம்படத் தப்பித்துக்கொள், சட்டம் முதலியவைகளுக்குப் பிடிகொடாமல் ஏய்; புரியாதபடி திகைக்கச்செய்.

elu'sion. *n.* தப்பித்துக்கொள்ளுதல், பிடிகொடுக்காமலிருத்தல், மழுப்புதல்.

elu'sive, *a.* கழுவித் தப்பித்துக்கொள்கிற, மழுப்புகிற, பிடிபடாமலிருக்கிற; மாயமான, மருட்சிதருகிற.

elu'sory, *a.* கழுவிச்செல்லும் பாங்குடைய; ஏமாற்றக்கூடிய; பிடிகொடுக்காமலிருக்கிற; ஏமாற்றுகிற.

el'van, *n.* கடுமை வாய்ந்த அனற்பாறை வகை; பிளப்பில் உறைந்த கடினமான அழற்பாறை.

el'ver, *n.* விலாங்குமீன் குஞ்சு.

elv'ish, *a.*=elfish.

Elysee', *n.* பிரஞ்சுத்தலைவரின் அலுவலக இருப்பிடம்.

Elys'ium, *n.* கிரேக்க புராண கதைகளின்படி புண்ணியஞ் செய்தவர் இறந்தபின் வாழுமிடம், துறக்கம், சுவர்க்கம்.

el'ytra, *n. pl.* elytron என்பதன் பன்மை.

el'ytron, el'ytrum, *n.* *(வில.)* வண்டினது பின்சிறகுக்கு உறைபோல் அமைந்துள்ள உறுதியான முன்சிறகு; அல்குல் வாய்.

El'zevir, *n.* ஆலந்திலுள்ள எல்ஸிவியர் (Elzivier) குடும் பத்தாரால் அச்சிடப்பட்ட சுவடி ; அச்சு வடிவ வகை ; *a.* ஆலந்திலுள்ள எல்ஸிவியர் குடும்பத்தாரால் அச்சிடப் பட்ட.

em, *n.* அச்சு வரி நீளத்துக்குரிய அலகுகளில் பெரும்படி அலகுக்கூறு.

ema'ciate, *a.* மெலிந்த ; *v.* மெலியச்செய் ; பாழாக்கு, வலுக் குறையச்செய் ; மெலி, இளை, பாழாகு.

ema'ciated, *a.* மெலிந்த, இளைத்த.

emacia'tion, *n.* மெலிதல், மெலிவு, இளைத்த நிலை.

em'anate, *v.* வெளிப்படு ; தோன்று ; எழு ; சுர, ஊற் றெடு, பெருகு, எழுந்து பரவு.

emana'tion, *n.* வெளிப்படுதல் ; பொங்கியெழுதல் ; புற ஒழுக்கு ; புறமலர்ச்சி, வெளிப்படும் தோற்றம் ; பண்பு மலர்ச்சி ; தெய்வ ஆற்றலினின்றெழும் தோற்றம் ; தெய்வக் கூருனவர் ; தெய்வக்கூறு ; இயற்கை மலர்ச்சி, படைப்பு இயக்கம் ; இயலொளி உலோகங்களிலிருந்து அலை எழும் கதிரியக்க வளி.

eman'cipate, *v.* சிறைநீக்கி விடுதலை செய் ; கட்டறுத்து விடுவி ; அடிமைத்தளையகற்றி விடுதலை உரிமையளி ; குறை நீக்கியுதவு.

emancipa'tion, *n.* விடுதலை செய்தல் ; விடுதலை ; அடிமை ஒழிப்பு ; சட்டத்தடைநீக்கம் ; வீடுபேறுற்ற நிலை ; வீடு பேறு.

emancipa'tionist, *n.* அடிமைகளை விடுதலைசெய்யவேண்டு மென்னும் கோட்பாடுடையவர்.

eman'cipist, *n.* சிறைத்தண்டனையை அனுபவித்து முடித்த பின் விடுவிக்கப்பட்ட குற்றக்கைதி.

emas'culate, *a.* காயடிக்கப்பெற்ற ; ஆண்மையற்ற ; *v.* விதையடி ; கோழையாக்கு, ஆண்மையகற்று ; மெலிவுறச் செய், நலிவுறப்பண்ணு ; மொழியின் ஆற்றல் கெடு, பகுதி களை வெட்டியெடுத்து இலக்கியக்கட்டுரை முதலியவற்றை வலுவிழக்கப்பண்ணு.

embalm', *v.* பிணத்தை நறுமணமூட்டிப் பேணிவை ; குருதி நாளங்களில் ஊசியிட்டு உயிரற்ற உடலைப்பாதுகாத்துவை ; மறதியுட்படாமல் நினைவில் வைத்துப்பேணு ; நறுமணந் தோய்வி.

embank', *v.* கரையணை, அணையிடு ; வரம்புகட்டு, அரண் செய்.

embank'ment, *n.* அணையிடல், அணை, வரப்பு ; கரை ; தாழ்நிலத்தில் பாதை அல்லது இருப்புப்பாதை செல்வதற் காகக் கட்டப்பட்ட மண்மேடு.

embarg'o, *n.* தடையாணை, நிறுத்திவைப்புக் கட்டளை ; அயல்நாட்டுக் கப்பல் போக்குவரவு வகையில் இடப்படும் தடைநடவடிக்கைக் கட்டளை ; தற்காலிகமான வாணிகத் தடைநடவடிக்கை ; *v.* கப்பல்களைத் தடையாணைசெய் ; வாணிகம் தடுத்து நிறுத்து ; கப்பல்களை அல்லது சரக்குகளை அரசியல் பயனீட்டுக்காகக் கைப்பற்று.

embark', *v.* குறித்த இடம் நாடிக் கப்பலேறிப் புறப்பட்டுச் செல் ; குறித்த இடத்துக்குக் கப்பலேற்றி அனுப்பு ; கப்பலேறு ; புறப்படு ; தலைப்படு, புதுச்செயலிற் புகு ; புதுப்பணியில் புகுத்து ; புதுத்துறையில் முதலிடு ; புதுத் துறையில் ஈடுபடுத்து.

embarka'tion, *n.* கப்பலில் ஏற்றல் ; கப்பலேறிச் செல்லுதல் ; கப்பலிலேற்றப்பட்ட சரக்கு.

embarras de choix, (பிர.) *n.* பலவற்றுள் எதைத் தெரிந் தெடுப்பதென்னும் மலைப்பு.

embarras de richesse, (பிர.) *n.* இத்துணைச் செல்வங்களை வைத்து என்ன செய்வதென்னும் தடுமாற்றம்.

emba'rrass, *v.* முட்டுக்கட்டையிடு, தடங்கல் செய், தொல்லை கொடு ; திக்குமுக்காடச்செய், குழப்பமூட்டு, சிக்கலாக்கு.

embarr'assed, *a.* திகைப்புற்ற, மலைப்புக்காட்பட்ட ; வன் செயலுக்குட்படுத்தப்பட்ட ; கடன் தொல்லைக்கு ஆட்பட்ட.

embarr'assment, *n.* குழப்பம், தடுமாற்றம், மன உளைவு ; பணமுடை, பொருள்வகை இடர்ப்பாடு.

em'bassy, *n.* அரசியல் தூதுவரின் அலுவல் ; அரசியல் தூதுவர் அலுவலகம் ; அரசியல் தூதுவர் வாழுமிடம் ; மன்னர் முதலியோரிடம் செல்லும் தூதுக்குழு.

embat'tle [1], *v.* படையைப் போர் அணியில் அமைத்து நிறுத்து.

embat'tle [2], *v.* கட்டிட மதில்களுக்கு ஞாயில் அமை.

embay', *v.* கப்பலை விரிகுடாவில் கொண்டுநிறுத்து ; காற்று வகையில் கப்பலை விரிகுடாவுக்குள் செலுத்து ; நாலாபக்கமும் சூழ், சுற்றி வளைத்துக்கொள்.

embed', *v.* சூழ்ந்தணைத்துக்கொள் ; பதித்துவை ; கிடத்து

embedd'ed, *a.* பதிக்கப்பெற்ற.

embell'ish, *v.* ஒப்பனைசெய், அழகுபடுத்து, நுணுக்க நய முடையதாக்கு ; கற்பனை இணைத்துச் சுவைபெருக்கு.

embell'ishment, *n.* அழகுடையதாக்கல் ; நுண்நய ஒப்பனை ; அணி, அணிகலன்.

em'ber, *n.* தணல், கங்கு ; கணப்பு, கொதி சாம்பல் ; வெந்தழல் நீறு.

Em'ber-days, *n. pl.* நோன்பு வழிபாட்டுக்குரிய கிறித்தவப் பெருநாட்கள்.

em'ber-goose, *n.* வடமாகட்பகுதிக்குரிய பெரிய நீர்முழ்கிப் புள்வகை.

em'bers, *n. pl.* கணப்பு, கங்குகனல், எரிதழற்சாம்பல்.

Emb'er-week, *n.* உண்ணுநோன்பிலிருந்து வழிபாடு மேற் கொள்ளப்படும் மூன்று கிறித்தவப் பெருநாட்கள் வருகிற வாரம்.

embez'zle, *v.* பணத்தைத் தகாத முறையில் கையாடு ; பொதுப்பணத்தைத் தனி நலனுக்குப் பயன்படுத்தி மோசடி செய்.

embezz'lement, *n.* ஒப்புவிக்கப்பட்ட உடைமையை மோசடி யாகக் கையாடல்.

embitt'er, *v.* புண்படுத்து, கசப்பூட்டு, பகைமையுண்டு பண்ணு.

embitt'ered, *a.* மனக்கசப்புற்ற, புண்பட்ட, உளமுறிவுற்ற, வாழ்வில் வெறுப்புற்ற, நலங்களில் நம்பிக்கையிழந்த.

emblaz'on, *v.* (கட்.) மரபுவழிக்கேடயத்தில் முனைப்பாகத் தீட்டிக்காட்டு ; மரபுவழிச்சின்னங்கள் தீட்டு ; பகட்டாக வரைந்துகாட்டு ; பறைசாற்று, புகழ் பரப்பு, கொண்டாடு, பாராட்டு.

emblaz'onment, *n.* (கட்.) மரபுரிமையான உருவங்களால் ஒப்பனை செய்தல் ; புகழ்ந்து பேசுதல்.

emblaz'onry, *n.* (கட்.) வீரமரபுச்சின்னங்கள் தீட்டுங்கலை கேடயத்திலுள்ள வீரமரபுச் சின்னங்கள்.

em'blem, *n.* தனிக்குறி, மரபுச்சின்னம், சிறப்பு அடையாளம் ; மாதிரியுரு ; வகைமாதிரி ; உருமாதிரி, பண்புக்குரிய சின்ன மாகக் கருதத்தக்கவர் ; பண்புக் குறியீடாகக் கருதத்தக்கது ; மரபுரிமைச் சின்னம் ; *v.* சின்னமாகக் குறித்துக்காட்டு, அடையாளமாயமை.

emblemat'ic, emblemat'ical, *a.* சின்னங்களுக்குரிய ; சின்னங்களைக்கொண்ட ; சின்னமாயமைந்த, உருப்படுத்திக் காட்டுகிற, வகைமாதிரியான ; பண்புருச்சின்னமான.

emblem'atist, *n.* சின்னங்களை அமைப்பவர் ; அடையாளச் சின்னங்களைப் புனைந்துருவாக்குபவர் ; பண்புருவகம் தீட்டுபவர்.

emblem'atize, *v.* சின்னமாயிரு, அடையாளமாக அமை, குறித்துக்காட்டு ; அடையாளச் சின்னமூலம் உருமாதிரி காட்டு.

embod'iment, *n.* உடம்பொடு தோன்றுதல், மூர்த்தீகரிப்பு ; உடம்பொடு கூடிய உருவம், பிழம்புருவம் ; கருத்துருவம், கருத்தின் புறவடிவம் ; கண்கூடான உருவம் ; பண்புருவம் ; பண்புகளை அங்கமாகக் கொண்ட உரு, திரளுரு.

embod'y, ν. உடலுருக்கொடு, மூர்த்தீகரி; அகப்பண்புகளுக்குப் புறவுருவம் கொடு; பிழம்புருவம் கொடு; கொள்கை கோட்பாடுகளைச் செயலுருப்படுத்து; கருத்தின் புறவுருவாகத் திகழ், பயனுருவாக இலங்கு; உடம்பெடு, உடலொடு தோன்று; உள்ளடக்கு, அங்கமாகக் கொள்.

embog', ν. சேற்றில் அமிழ்த்து, அளறில் சிக்கவை; மூழ்கச் செய், அழுந்துவி.

embol'den, ν. துணிவளரி, திடங்கொள்ளச்செய், ஊக்கு.

em'bolism, *n.* (மரு.) குருதிக்குழாயடைப்பு, பக்கவாதத்துக் குரிய நிலையில் குருதிக்குழாய்களில் குருதிக்கட்டி வழியடைத்தல்.

embonpoint', (பிர.) *n.* கொம்மை; கொங்கை; *a.* கொழுகொழுப்பான.

mbos'om, ν. தழுவு, அணை; அன்புடன் போற்று; நெஞ்சில் பதியவை; சூழ்ந்திரு, வனைத்தகங்கொள்.

embos'omed, *a.* சூழப்பெற்ற, இடைநடுவே அமைந்த.

emboss', ν. புடைப்புருப்படச்செதுக்கு; மேல்வந்து முனைப்பாயிருக்கச்செய்; துருத்திநிற்கச் செய், உந்துவி.

emboss'ment, *n.* முகிழ் முனைப்பு; புடைப்பகழ்வுச் சித்திர வேலைப்பாடு.

embouchure, (பிர.) *n.* ஆற்றுவாய்; பள்ளத்தாக்கின் வாயில்; துளை இசைக்கருவியை வாயுடன் இணைக்கும் உறுப்பு; துளை இசைக்கருவி உறுப்புடன் வாயிணைப்பு.

embow'el, ν. குடலெடு, குடர்பிடுங்கு; உள்வைத்து மூடு.

embow'er, ν. கொடிவீட்டில் இருத்து; நிழலில் வை; புகலிடமளி; புகலிடங்கொள்.

embrace', *n.* தழுவல், ஆர்வ அணைப்பு; புணர்ச்சி, இணைவிழைச்சு; ν. தழுவு, கையால் அணை; மார்போடு சேர்த்துக் கொள்; ஆர்வமாக ஏற்றுக்கொள், விரும்பி வரவேற்றுக் கொள்; மேற்கொள், பின்பற்று; உள்ளடக்கமாகக்கொள்.

embrac'es, *n. pl.* புணர்ச்சி, இணைவிழைச்சு.

embranch'ment, *n.* ஆறு முதலியவற்றின் வகையில் கிளைத்தல், கிளைகளாகப் பிரிந்துசெல்லல்.

embrang'le, ν. சிக்கவை, குழப்பு.

embra'sure, embra'zure, *n.* மதிலிடைப்புழை, பிரங்கிச் சாலகம், ஏப்புழை; கதவுப்புறச்சுவரின் உள்வாய்ச்சரிவு; பலகணிப்புற மதிலின் உட்புறச் சாய்வு.

em'brocate, ν. மருந்துநீர் பூசித் தேய், மருந்து நீர்மத்தால் கழுவு.

embroca'tion, *n.* தடவு மருந்து, நோயுற்ற உறுப்பின்மீது பூசித் தேய்ப்பதற்குப் பயன்படும் நீர்மம்; பூசித் தேய்த்தல்.

embroid'er, ν. தையல் பூவேலைசெய், பின்னல் ஒப்பனை வேலை செய்; கற்பனைச் செய்திகளைக்கொண்டு கதை முதலியவற்றை அழகுபடுத்து,

embroid'ery, *n.* பூத்தையல்வேலை, சித்திரத் துன்னல் வேலைப்பாடு; சித்திரப்பின்னல் வேலைப்பாடுடைய துணி வகை; பல்வகை வேறுபாடுடைய ஒப்பனை வேலைப்பாடு; நுணுக்க நய வேலைப்பாடு; செயற்கை ஒப்பனை; மிகுபுனைவுக் கலப்பு, இட்டுக்கட்டு விரிவு; கற்பனை நுணுக்கம்.

embroil', ν. குழப்பத்தில் சிக்கவை; சச்சரவில் சிக்கச்செய்; மனக்குழப்பமூட்டு, மலைப்பு உண்டுபண்ணு.

embroil'ment, *n.* குழப்பம், சிக்கல்; கலவரம்.

embrown', ν. தவிட்டுநிறமாக்கு; மங்கலாக்கு; இருண்ட தோற்றமளி.

em'bryo, *n.* கருமுளை; முட்டைக்கருவுயிர்; முதிர்வுருக் கருவுயிர்; தொடக்கநிலை; *a.* தொடக்கநிலையிலுள்ள, முதிராத.

embryoc'tony, *n.* (மரு.) கருவழிவு, கருவிலேயே உயிரழிவுறுதல்.

embryogen'esis, *n.* கரு உருவாதல், கருவாக்கம்.

embryol'ogy, *n.* கருவியல் நூல், கரு உருவாகி வளர்ச்சியடைவது பற்றிய ஆய்வு நூல்.

embryon'ic, *a.* முதிரா நிலையில் உள்ள; தொடக்க நிலையிலுள்ள; முதிராநிலைக்குரிய; முதிராநிலைத் தொடர்பான.

embryot'omy, *n.* (மரு.) கருவுயிர்க்கூறுபாடு, வயிற்றினுள் கருவை வெட்டியெடுத்தல்.

embus', ν. படைத்துறை வீரர்களையோ சரக்குகளையோ பேருந்து வண்டியில் ஏற்று; பேருந்து வண்டியில் ஏறு.

embusque, (பிர.) *n.* களச்சேவை தட்டிக்கழிப்பவர், உள்நாட்டிலோ மூலதளத்திலோ வேலைதேடிக்கொள்வதன் மூலம் களமுன்னணிச் சேவையிலிருந்து தப்பித்துக்கொள்பவர்.

emend', ν. மூலபாடத்திலுள்ள குற்றங் களை, குறைபாடுகளை அகற்று; திருத்து, சீர்ப்படுத்து.

emenda'tion, *n.* பிழையினைக் களைதல்; பாடதிருத்தம்.

em'endator, *n.* சுவடிகளிற் பிழைகள் திருத்துபவர்; சீர்ப்படுத்துபவர்.

emen'datory, *a.* செப்பனிடுகிற; திருத்தஞ் செய்கிற.

em'erald, *n.* பச்சைக்கல், மரகதம்; மரகத நிறம்; அச்செழுத்துரு அளவு வகை; (தொ.) Emerald Isle, அயர்லாந்து.

emerge', ν. நீர்மத்தினின்றும் மேலெழு; கிளம்பு; வெளிப்பட்டுத்தோன்று; வெளிப்படு, மீள், விட்டு வெளியேறு; ஆய்வின் விளைவாகத் தெளிவுபடு.

emer'gence, *n.* வெளிப்படல்; திடுமெனத்தோன்றுதல்.

emer'gency, *n.* உடனடித்தேவை, திடீர்த்தேவை; நெருக்கடி நிலை; எதிர்பாரா நிகழ்ச்சி; சேமப்பகரப் பொருள்; சேமப்பகர ஆள்; *a.* நெருக்கடி நிலை எதிர்நோக்கிய.

emer'gent, *a.* வெளிப்படுகிற; திடுமெனத்தோன்றுகிற; எதிர்பாராமல் கிளம்புகிற; அவசரமான; இயல்மலர்ச்சிவழி இயல்பாகத் தோன்றுகிற.

eme'ritus, *n.* பொதுப்பணியிலிருந்து மாண்புடன் விடுவிக்கப்பட்டவர்; *pl.* emer'iti; *a.* பொதுப்பணியினின்றும் மாண்புடன் விடுவிக்கப்பட்ட; (தொ.) emeritus professor, ஓய்வுபெற்ற பேராசிரியர்.

em'erods, *n. pl.* மூலநோய்.

emer'sion, *n.* தோன்றுதல்; மீளல்; (வான்.) ஞாயிறு-திங்கள்-விண்மீன் ஆகியவற்றின் வகையில் ஒளி மறைப்புக்குப் பின்னர் மீளத்தோன்றுதல்.

em'ery, *n.* குருந்தக்கல், சாணைபிடிப்பதற்குப் பயன்படும் மிகக் கடினமான கனிப்பொருள்வகை; ν. குருந்தக்கல் பொடியினால் தேய்; குருந்தக்கல் பொடியை மேற்பரப்பில் பொருத்து.

em'ery-cloth, *n.* தேய்ப்புத் துணி, பட்டறைச்சீலை.

em'ery-pa'per, *n.* தேய்ப்புத்தாள், உப்புத்தாள்.

em'ery-wheel, *n.* சாணைக்கல், சாணைபிடிப்பதற்காகக் குருந்தக்கல் பொடி ஒட்டப்பெற்ற சக்கரம்.

emet'ic, *n.* (மரு.) வாந்தி மருந்து; *a.* வாந்தியுண்டாக்குகிற.

emeute, (பிர.) *n.* பொதுமக்கள் கிளர்ச்சி, கலகம், அமளி.

em'igrant, *n.* நாடுவிட்டுக் குடிபெயர்ந்து செல்பவர், வெளியேறிப்போகிறவர்; *a.* நாடுவிட்டுக் குடிபெயர்ந்து செல்கிற; குடிபெயர்ந்த.

em'igrate, ν. நாடுவிட்டுப் பிறநாட்டிற் சென்று குடியேறு; குடியேறுதற்கு உதவு; (பே.வ.) இருப்பிடம் மாற்று.

emigre, (பிர.) *n.* பிரஞ்சுப் புரட்சியின்போது பிரான்சிலிருந்து வெளியேறிக் குடியேறியவர், பிரான்சிலிருந்து வெளியேறிய பிரஞ்சுமன்னர் சார்புக்கட்சியினர்.

em'inence[1], *n.* மேடு, மேட்டுத்திடல்; உயர்வு, மேம்பாடு, சிறப்பு; சமுதாய மதிப்புக்குரிய உயர்நிலை.

Em'inence[2], *n.* போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமைக்குழுவில் ஒருவரான கத்தோலிக்க திருத்துணைவரது பட்டப்பெயர்; கார்டினலது பட்டம்.

eminence grise, (பிர.) *n.* அந்தரங்க முகவர், பணித்துறை தொடர்பற்ற முறையில் அதிகாரம் செலுத்துபவர்.

em'inent, *a.* மேம்பட்ட, சிறந்த, உயர்வான; மாண்புமிக்க, குறிப்பிடத்தக்க பண்புயர்வுடைய; (தொ.) eminent domain, பொதுநலப்பயன் வகையில் தனியார் உடைமைகளைப் பறிமுதல் செய்யும் அரசின் தனிமுதல் மேலுரிமை.

emir', *n.* அராபிய இளவரசர்; இஸ்லாமிய வழக்கில் ஆளுநர்; முகம்மது நபியின் வழித்தோன்றல்.

em'issary, *n.* தூதுச்செய்தியாளர்; ஒற்றர்; *a.* வெளியே செல்கின்ற.

emi'ssion, *n.* வெளிப்படுத்துதல்; வெளிப்படுத்தப்படும் பொருள்; (தொ.) emission theory, ஒளிவிடு பொருள்களின் நுண்ணிய பகுதிகளிலிருந்து ஒளிவெளிப்பாடு.

emiss'ive, *a.* வெளிப்படுத்துகின்ற.

emit', *v.* வெளிப்படுத்து.

emm'et, *n.* எறும்புவகை.

emollesc'ence, *n.* ஒருமிப்பு.

emoll'iate, *v.* மெலிவடையச்செய்.

emoll'ient, *n.* கட்டி வீக்கம் முதலிய நோய்களுக்கிடும் இளக்கு மருந்து, விலங்குகளின் தோற்புண்ணேயாற்றுதற்கான மருந்து; *a.* இளகுந்தன்மையுள்ள; குழையச் செய்கின்ற.

emolli'tion, *n.* இளகல்; நெகிழ்தல், தளர்தல்.

emol'ument, *n.* ஊதியம், ஆதாயம்.

emo'tion, *n.* மனக்கிளர்ச்சி, உணர்ச்சிவேகம்.

emo'tional, *a.* உணர்ச்சிவயப்பட்ட.

emo'tionalism, *n.* மனக்கிளர்ச்சியைத் தூண்டிவிடும் போக்கு.

emo'tive, *a.* மனக்கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிற.

empan'el, *v.* வரிசைப்பட்டியலில் சேர்.

em'pathy, *n.* (உள.) மற்றொருவரின் ஆளுமையிற் புகுந்து கற்பனேயாக மற்றொருவரின் அனுபவத்தை அனுபவித்தல்.

em'perise, *v.* பேரரசனுக நடி.

em'peror, *n.* பேரரசன்; மன்னர்மன்னன்; *fem.* em'press; (தொ.) purple emperor, வண்ணுத்திப்பூச்சி வகை.

em'pery, *n.* பேரரசு, வல்லரசு.

em'phasis, *n.* உரம்பெறச்செய்தல், அசையழுத்தம்; உணர்ச்சிப்பெருக்கில் விடாப்பிடியாகப் பேசுதல்; சொல்வன்மை; குறிப்பிட்ட பொருளுக்கு இன்றியமையாமை தந்து நிற்றல்; முதன்மை.

em'phasize, *v.* வற்புறுத்து; அசையழுத்தத்தோடு பேசு; அழுத்தமாகக் கூறு.

emphat'ic, emphat'ical, *a.* அழுத்தமான; உறுதியான; அசையழுத்தம் பொருந்திய.

emphysem'a, *n.* தொடர் இழைமங்களில் காற்றின் இருப்பு; சீழ்க்கட்டி.

em'pire, *n.* பேரரசு; வல்லரசு; பேரரசு ஆணைக்குட்பட்ட நிலவெல்லை; (தொ.) empire city, "நியூயார்க்கு" மாநிலம்; empire day, பேரரசி விக்டோரியா பிறந்த நாளான மேத்திங்கள் 24-ஆம் நாள்.

empi'ric, *n.* செயன்முறையில் நம்பிக்கையுள்ளவர், வெறும் சொல்லில் நம்பாதவர்; அரைகுறை அனுபவ வைத்தியர்; *a.* பயிற்சிக்குட்பட்ட; அனுபவ மருத்துவம் செய்கிற.

empir'ical, *a.* செயலறிவால் தெரிந்துகொள்ளப்படுகிற, அனுபவத்தால் அறியப்படுகிற.

empir'icism, *n.* அனுபவத்திலேயே நம்பிக்கைவைக்கும் முறை; அனுபவ வைத்தியம்.

empir'icist, *n.* அனுபவப் பயிற்சியாளர்.

emplace', *v.* பீரங்கி மேடை அமை; வை.

emplace'ment, *n.* நிலைமை; வைத்தல்; பீரங்கிமேடை.

emplane', *v.* விமானத்திற் செல்லு, வானூர்தி மூலம் எடுத்துச்செல்.

employ', *n.* பணி; ஒ தொழில்கொடு; பயன்படுத்து; சுறுசுறுப்பாயிரு.

employ'able, *a.* வேலையில் ஈடுபடுத்தத்தக்க, பயன்படுத்தத்தக்க.

employe', employee', *n.* வேலையில் உள்ளவர், காசுக்கு வேலைசெய்பவர்.

employed', *a.* வேலை பெற்றுள்ள.

employ'ment, *n.* வேலை, தொழில்; பயன்படுத்துதல்.

empois'on, *v.* நஞ்சிடு; மாசுபடுத்து; அறிவுகெடச்செய்; வெறுப்புக்கொள்ளச்செய், பேதமையாக்கு.

empor'ium, *n.* பண்டப்பெருநிலையம், வாணிக மையம்.

empow'er, *v.* உரிமைகொடு, அதிகாரமளி.

empressement, (பிர.) *n.* பேரன்புப்பகட்டு.

emp'tiness, *n.* வெறுமைநிலை; திருப்தியற்றநிலை, பைத்தியம்.

emp'ty, *n.* வெறுமை; இன்மை; வறிதான நிலை; பொருளற்ற நிலை; முயற்சியின்மை; ஒன்றும் இல்லாத கலம்; *a.* வறிதான, பொருளற்ற; *v.* வெறுமையாக்கு; வறிதாக்கு; மாற்று; வடி; வெறுமையாகு; (தொ.) come away empty, ஏதும் பெற்றுக்கொள்ளாமல் திரும்பு.

emp'ty-hand'ed, *a.* ஒன்றும் கொண்டுவராத.

emp'ty-head'ed, *a.* அறிவற்ற; வேடிக்கைத்தனமான.

empur'ple, *v.* ஊதாநிறமாக்கு; ஊதாநிறச்சாயம் தோய்.

empyre'al, *a.* எரியில் உருவான; ஒளியில் தோன்றிய; வானுலகத்தைப் பற்றிய; விழுமிய.

empyre'an, *n.* ஒண்சுடர் உலகு, இறையுலகு; *a.* இறையுலகைச் சார்ந்த.

em'u, em'eu, *n.* ஆஸ்திரேலிய நாட்டுப் பெரும் பறவை வகை.

em'ulate, *v.* மேம்படும் முயற்சிகொள்; போட்டியிடு; முன்மாதிரியாகக்கொள்.

emula'tion, *n.* முன்மாதிரியாகக் கொள்ளுதல்; போட்டி.

em'ulative, *a.* போட்டியிடும் பான்மைவாய்ந்த.

em'ulous, *a.* போட்டியிடவிரும்புகிற; மற்றவர்போல் மேம்படும் முயற்சியிலீடுபடுகிற.

emul'sifier, *n.* குழம்பாகச் செய்யப் பயன்படும் துணைக்கருவி.

emul'sify, *v.* குழம்பாக மாற்று, நீர்மப் பொருளாக்கு.

emul'sion, *n.* பிசின்துகள் ஊடே கிடக்கும் பால்மம், நெய்ப்புப்பிடித்த பால்மம்; பசைக்குழம்பு; நிழற்படத் தகடுகளுக்கும் படச்சுருளுக்கும் பயன்படும் வெள்ளி உப்புக் கலவை வகை.

emunc'tory, *n.* மூக்குச்சளி சிந்துதல், கழிவுப்பொருள்களை வெளிப்படுத்தும் உறுப்பு; *a.* மூக்குச்சளி சிந்துகின்ற, கழிவுப்பொருள்களை வெளிப்படுத்துகின்ற.

en, *n.* அச்சுக்கோப்பதில் உள்ள ஓர் அகல அளவு.

ena'ble, *v.* இயலச்செய்; அதிகாரம் கொடு; (தொ.) enabling act, enabling bill, நடத்துவதற்கு உரிமைதருஞ் சட்டம் அல்லது சட்ட வரைவு.

enact', *v.* ஆணையிடு; சட்டம் இயற்று; நாடகம் நடத்து.

enact'ment, *n.* சட்டமியற்றுதல், சட்டம்.

enam'el, *n.* பூச்சுவேலை; இனமல் பொருள்; இனமல் பூச்சு; பற்களின் பளபளப்பு; *v.* பூசு; மேற்பூச்சுப்பூசு, பளபளப்பாக்கு.

enam'our, *v.* மகிழ்ச்செய்; மயங்கவை.

enantiop'athy, *n.* நோயின் குணத்துக்கு எதிரான குணமுள்ள மருந்தைப் பயன்படுத்தும் மேலைநாட்டு மருத்துவ முறை.

enarthros'is, *n.* உடலின் உரலாணி மூட்டு, பந்துக்கிண்ண மூட்டு.

en bloc, (பிர.) *adv.* தொகுதியாக, மொத்தமாக.

encaen'ia, *n.* உரிமையுறுதி அளிக்கும் விழா, ஆக்ஸ் போர்டில் சமர்ப்பணவிழா.

encage', *v.* கூண்டில் அடை.

encamp' *v.* கூடாரம் அமை ; கூடாரம் அடித்துத்தங்கு.

encamp'ment, *n.* படைஞர் தங்கிடம் ; கூடாரத்தில் தங்குதல்.

encase', *v.* உறையிலிடு ; பெட்டகத்து வை.

encash', *v.* பணமாக மாற்று.

encaus'tic, *n.* சூளையிலிட்டு வண்ணம் பாய்ச்சுதல் ; *a.* சூட்டுவண்ணமுள்ள.

enceinte, (பிர.) *n.* அடைப்பு, அரண் ; *a.* கருக்கொண்ட.

encephal'ic, *a.* மூளையைச் சார்ந்த.

encephali'tis, *n.* மூளைவீக்கம்.

enchain', *v.* விலங்கிடு, சங்கிலியால் கட்டு ; நன்முகப் பிடித்துக்கொள்.

enchain'ment, *n.* சங்கிலியால் பிணைத்தல் ; சங்கிலித் தொடர்.

enchant', *v.* வயப்படுத்து, மயக்கு, கவரச்செய் ; மகிழ்ச்சி யூட்டு.

enchant'er, *n.* மயக்குந்திறன் வாய்த்தவர், மாந்திரீகன்.

enchant'ingly, *adv.* கவரும் திறமையோடு.

enchant'ment, *n.* வசியம், மாந்திரீகம் செய்தல் ; மயக்க நிலை ; மயக்கும் பொருள்.

enchant'ress, *n.* மயங்க வைப்பவள்.

enchirid'ion, *n.* கைச்சுவடி, துணை நூல்.

encir'cle, *v.* வளை ; வட்டவடிவமாகச்சூழ்.

enclasp', *n.* அணைத்துப்பிடி ; தழுவு.

enclave', *n.* வேற்றுநாட்டினர் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதி.

enclit'ic, *n.* சொல்லைச் சேர்ந்திருக்கிற துணைக்கூறு.

enclose', *v.* வேலிபோடு ; உறையிலடக்கு ; அடைத்துவை ; சூழ்.

enclo'sure, *n.* வேலியடைப்பு, அடைப்பு ; முடங்கலை உறையி லிட்டு மூடுதல், உள்ளடக்கம்.

enclothe', *v.* உடுத்து.

encloud', *v.* முகிலால் மூடு.

encom'iast, *n.* புகழ்மாலை சூட்டுபவர் ; முகமன் கூறுபவர்.

encom'ium, *n.* புகழ்மாலை, போற்றுதல்.

encom'pass, *v.* சூழ்ந்துகொள்.

encore', *n.* "இன்னும் ஒருமுறை" என்னும் குறிப்புமொழி ; *v.* மீண்டும் பாடும்படி கேள் ; *int.* இன்னொரு முறை !

encoun'ter, *n.* எதிர்ப்படுதல் ; *v.* எதிர்பாராத முறையில் எதிர்ப்படு ; பகைமையோடு எதிர்த்து நில், போராடு.

encou'rage, *v.* துணிவூட்டு ; ஊக்கமூட்டு ; தூண்டு ; உதவியாயிரு.

encour'agement, *n.* ஊக்குதல்.

En'cratite, *n.* முற்காலத்தில் கள்-புலால்-திருமணம் ஆகிய வற்றை விலக்கிய கிறித்தவக்குழு உறுப்பினர்.

encrim'son, *v.* செங்நிறம் தீட்டு ; சிவப்பாக்கு.

encroach', *v.* தடம் மீறு, மற்றவர் ஆட்சியெல்லைக்குள் அடாத முறையில் நுழை.

encroach'ment, *n.* அளவு கடப்பு, அத்துமீறுகை.

encrust', *v.* கெட்டிப்படுத்து, கெட்டிப்பூச்சுப் பூசு.

encum'ber, *v.* தடைசெய் ; கடன்சுமத்து ; நிரப்பு.

encum'brance, *n.* சுமை ; தொந்தரவு ; தடை ; வில்லங்கம்.

encum'brancer, *n.* மற்றவர் சொத்தின்மேல் தடை யுடையவர்.

encyc'lical, *n.* போப்பாண்டவரின் சுற்றுக்கடிதம் ; *a.* சுற்றறிக்கையான ; பலர் பார்வையிடுதற்குரிய.

encyclopaed'ia, *n.* கலைக்களஞ்சியம் ; பல்பொருள் விளக்கம்.

encyclopae'dian, *a.* எல்லாக் கலைகளையும் தழுவியிருக்கிற.

encyclopae'dic, encyclopae'dical, *a.* பல்பொருள் அறிவு நிரம்பிய.

encyclopae'dism, *n.* பல்பொருள் அறிவு.

encyst', *v.* பையில் அடை.

end, *n.* முடிவு ; கடைசி ; எல்லை ; வரையறை ; இறுதிநிலை ; அழிவு ; இறப்பு ; விளைவு ; நோக்கம் ; மெழுகுத்திரிக் கடை ; துண்டு ; ஒரு மூலையிலிருந்து ஆடிய விளையாட்டின் ஒரு பகுதி ; மூலை ; *v.* அழி ; முடி ; முடிந்திடச்செய் ; (தொ.) at a loose end, செய்வதற்கொன்றும் இல்லாத நிலையில் ; at loose end, குழப்பத்தில் ; at the end of one's tether, மேற் கொண்டு வகையில்லாமல் ; end for end, தலைகீழாய் முடிந்த நிலையில் ; get hold of the wrong end of the stick, தவருகப் புரிந்துகொள் ; keep one's end up, தன் பாகத்தைச் செய லாற்று ; make both ends meet, தன் வருமானத்துக்குள் வாழ் ; on end, நிமிர்ந்து.

endan'ger, *v.* இடருண்டாக்கு.

endear', *v.* விருப்புடையராக்கு, பிரியமுடையதாக்கு.

endeared', *a.* பேரன்புபட்ட, பிரியமுற்ற.

endear'ing, *a.* நேயமான.

endear'ment, *n.* நேயம், பெருவிருப்பு.

endeav'our, *n.* பெருமுயற்சி ; *v.* பெருமுயற்சிகொள்.

endem'ic, *n.* திணையின முறைப்பட்ட நோய் ; *a.* நோய் வகையில் திணையின முறைப்பட்ட, குறிப்பிட்ட சில இடச் சூழல்கள் மக்கட்சூழல்கள் சார்ந்து முறையாகக் குறிப்பிட்ட காலங்களில் தோன்றுகின்ற.

enderm'ic, *n.* தோல்மீது தாக்குதல் விளைவிக்கிற.

end'ing, *n.* முடிவு ; இறுதி, கடைப்பகுதி ; சொல்லின் விகுதி.

en'dive, *n.* இனிய குடிநீர்மம் செய்யப் பயன்படும் சுருள் இலைச் செடிவகை.

end'less, *a.* முடிவற்ற ; ஓய்வற்ற ; எல்லையில்லாத ; இடை விடாத ; தொடர்ச்சியான.

end'ocardit'is, *n.* குலையணைச் சவ்வின் வீக்கம்.

en'docard'ium, *n.* குலையணைச் சவ்வு, நெஞ்சுப்பையின் உள்வரி மென்தோல்.

en'docarp, *n.* விதைத்தோட்டின் கடைசி உள்ளேடு.

en'docrane, *n.* மண்டையோட்டின் உட்பரப்பு.

en'docrine, *a.* சுரப்பி வகையில் உள்ளாரச்சுரக்கிற, செல் நரம்பிழையின்றி நேரே குருதியுள் கசிவு செலுத்துகிற.

en'doderm, *n.* அரும்பு மேற்கவிவின் உள்தாள் ; கருவுயிர் உறையின் உள்வரிச்சவ்வு.

endog'amous, *a.* குலப்பிரிவில் அகமண உறவுக்கட்டுடைய, புறமணத்தடையுள்ள.

endog'amy, *n.* குலப்பிரிவில் அகமண உறவுக்கட்டு, புற மணத்தடை முறை.

en'dogen, *n.* தண்டில் அகவளர்ச்சியுடைய மரவகை, புறக் காழ்ப் புல்லினவகை.

en'dogenous, *a.* தண்டக வளர்ச்சியுடைய, உள்ளீடான தண்டு வளர்பகுதி வாய்ந்த,

en'dolymph, *n.* காதின் உள்நீர்மம், செவி நிணநீர்.

endometrit'is, *n.* கருப்பை உட்புறச் சவ்வின் வீக்கம்.

endomet'rium, *n.* கருப்பையின் உள்வரிச் சவ்வு.

en'domorph, *n.* கனிப்பொருளின் உள்ளீடாயுள்ள கனிப் பொருள்.

endopa'rasite, *n.* உடலக ஒட்டுயிர்.

en'doplasm, *n.* ஊன்ம உள் தொலி, உயிர்ச்சத்தின் உள்வரிச் சவ்வு.

endorse', *v.* பத்திரத்தின் பின்புறம் எழுது; பொருள் முறியில் புறவரியாகப் பெயர் எழுது; விளக்கக் குறிப்பெழுது, புறவுரை குறி; வலியுறவு செய்; ஆதரவுக் கருத்துக்குறி; ஆதரி; (தொ.) endorse over, உரிமைகளை வேறொருவருக்கு மாற்றி ஒப்படை.

endorse'ment, *n.* புறவரி எழுதுதல்; புறக்குறிப்பு; ஏற்பிசைவு.

en'dosarc, *n.* = endoplasm.

en'doscope, *n.* உடலின் உட்புறங் காண உதவும் கருவி.

endoskel'eton, *n.* முதுகெலும்புள்ள விலங்குகளின் உள் அமைப்புருவம்.

en'dosmose, endosmos'is, *n.* சவ்வுத்திரையூடு கடந்த கசிவு.

en'dosperm, *n.* முட்டையில் வெண்கரு; கருவில் முளை சூழ்தசை; விதையில் முளை சூழ்ந்த அரிசிப்பகுதி.

en'dospore, *n.* சிதல் விதையின் உள்முடித்தோல்; தாய் உயிர்மத்திலுள் உருவான உயிர்மக்கரு.

endothel'ium, *n.* குருதிக்குழாயில் உயிர்மச்செறிவால் ஆன உள்வரித்தாள் சவ்வு.

endow', *v.* சீதனமாக வழங்கு; உரிமையாக விட்டுச்செல், உரித்தாக்கு; நிலவர உடைமையாக வழங்கு; மானியமாக அளி; நிலையான ஊதியக் கட்டளை வகுத்தளி; பரிசளி, அறக்கொடை வழங்கு; இயல்புத்திறமாக விட்டுச்செல்; இயற்பண்பாக அமைவி.

endow'ment, *n.* உரிமை வழங்குதல்; மானிய அளிப்பு; மானியம்; அறக்கொடை; (தொ.) endowment insurance, குறிப்பிட்ட தேதியிற் குறிப்பிட்ட தொகை பெறுதற்கான காப்புறுதிக் கட்டணத்திட்டம்.

endue', *v.* ஆடை முதலியன அணிவி; ஆடை முதலியன அணி; பண்பு முதலியவற்றின் வளமளி.

endur'ance, *n.* பொறை; துன்பம் தாங்கும் ஆற்றல்; உழைப்பாற்றல்; நீடித்துழைக்கும் திறம்.

endure' *v.* நீடித்திரு, நிலைத்திரு; நீடித்துழை; தாங்கு, பொறு; துன்பத்தை ஏற்றமைவுறு; பணிவுடன் மேற் கொள்ளு.

end'ways, end'wise, *adv.* விளிம்பு முனைப்பாக; முனை மேலாக; ஓரம் முன்னுக; விளிம்புடன் விளிம்பாக.

en'ema, *n.* குதவாய் வழியே குடல் கழுவுதல்; குடல் கழுவும் அழுத்தக் குழாய்க் கருவி, நீரேற்றி.

en'emy, *n.* எதிரி, பகை; எதிர்ப்புப்படையினன்; பகைமை நாட்டினன்; எதிர்ப்புப்படை அல்லது கப்பல்; *a.* எதிரியைச் சார்ந்த, எதிரியினுடைய; (தொ.) the Enemy, the old enemy, சைத்தான், நரக முதல்வன்.

energet'ic, *a.* ஊக்கமுள்ள; ஆற்றலுடைய; வலுவான; வலிமையுடன் செயலாற்றுகின்ற; விடாமுயற்சியோடு கூடிய; சுறுசுறுப்புள்ள.

energet'ics, *n. pl.* ஆற்றல் ஆய்வியல் துறை.

en'ergize, *v.* ஊக்கமூட்டு, முனைப்பாக்கு, தீவிரப்படுத்து; விரைசெயற்படுத்து, சுறுசுறுப்பாக்கு; புதுவலுப் பெறு; விரை.

energum'en, *n.* பேய் பிடித்தவர்; வெறியர்; மீதார்வலர்.

en'ergy, *n.* ஊக்கம், ஆற்றல்; வலிமை, உரம், வீரியம்.

enerv'ate [1], *a.* ஊக்கம் குறைந்த, உரமிழந்த.

en'ervate [2], *v.* வலுவிழக்கச்செய், நலிவுறுவி.

enface', *v.* விலைப்பட்டி முகப்புவரி எழுது; முகப்புவரி பொறி; முகப்பு வரி அச்சிடு; முகப்புவரி நிரப்பு.

en famille, (பிர.) *adv.* தன்மனையில், குடும்பத்திடையே.

enfant terrible, (பிர.) *n.* அருவருப்பான கேள்விகளைக் கேட்கும் குழந்தை, கேட்டதைத் திருப்பிச் சொல்லும் குழந்தை.

enfee'ble, *v.* தளர்த்து, நலிவி, வலுக்குறைவாக்கு.

enfeoff', *v.* மானியம் அளி; அளி, ஒப்படை.

enfeoff'ment, *n.* மானியம் அளித்தல்; மானியம் அளிக்கும் பத்திரம், மானியம்.

en fete, (பிர.) *a.* விழாக்கோலம் பூண்ட; *adv.* விழாக் கோலம் பூண்டு.

enfett'er, *v.* விலங்கிடு; அடிமைப்படுத்து.

enfilade', *n.* அணிவரிசைவேட்டு, கோடியிலிருந்து கோடி யாகப் படையணியை அழிக்கும் வேட்டு; அரண்வரிசை வேட்டு; நேரணியான வாயில்களைக் கொண்ட அறை வரிசை; இழைவரிசைத் தொகுதியான பொருள்கள்; *v.* வரிசைவேட்டாகச் சுட்டுத்தள்ளு, வரிசை வேட்டாகச் சுட்டழி.

enfold', *v.* பொதி; சுற்றிப் போர்த்து; தழுவு, கட்டியணை; மடி, மடிப்புறுவி.

enforce', *v.* வலியுறுத்தி நடைமுறைப்படுத்து; வலிந்து செயற்படுத்து; வன்முறையிற் சுமத்து; கட்டாயப்படுத்து; செயலாக்கு; ஏற்கும்படிசெய்.

enframe', *v.* சட்டத்தில் இணை, சட்டம் போடு; கட்டிட மாய் அமை.

enfran'chise, *v.* தன்னுரிமையளி, அடிமை நிலையினின்று விடுதலை வழங்கு; குடியுரிமை அளி; தேர்தல் உரிமை வழங்கு; வாக்குரிமை கொடு.

enfran'chisement, *n.* தன்னுரிமையளித்தல்; அடிமை நிலையி னின்று விடுவிப்பு; குடியுரிமை; தேர்தலுரிமை; அரசிய லுரிமை.

engage', *v.* மணக்கட்டுச்செய், திருமண வாக்குறுதி செய்து வை, திருமண ஒப்பந்தம் செய்துகொடு; கட்டுப்படுத்து, வாக்குறுதி செய்வி; ஒன்றை ஒன்று பிணி, இறுகப்பிணை; கடப்பாட்டில் ஈடுபடுத்து; வாடகைக்கெடு; இடம் ஒதுக்கீடு செய்; கோரிக்கை பதிவு செய்; வேலையிலமர்த்து; வண்டி முதலியன அமர்த்திக்கொள்; ஈடுபடுத்திக்கொள்; ஈடுபடுவி, நேரம் போக்கிக்கொண்டிரு, போக்குக்காட்டிக்கொண்டிரு; கவனத்தைக்கவர்; பண்பிணக்கம் காட்டு; பயன்படுத்து; செயல்தொடர்புபடுத்து; போரில் ஈடுபடுத்து; ஈடுபடு; செயலில் இறங்கு; போரில் கைகலப்புச் செய்; எதிரெதிராக மோது; தூணைச்சுவரினுள் பதிவி.

engaged', *a.* கட்டுப்பட்ட; ஈடுபாடு கொள்ளப்பட்ட; வாக் குறுதியளிக்கப்பட்ட, திருமணம் செய்துகொள்வதாக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட; மிகவும் ஆழ்ந்த கவனம் கொண்டுள்ள.

engage'ment, *n.* ஈடுபடுதல்; தொழில் தேர்வு, ஈடுபாடு; ஈடுபட்ட நிலை, கடப்பாடு; ஈடுபாடுடைய செய்தி; மண உறுதி; மணக்கட்டு ஒப்பந்தம்; வாக்குறுதி; வேலையமர் வீடுபாடு; பணிக்கடப்பாடு; கைகலப்பு, போர் நடவடிக்கை.

engage'ment-ring, *n.* மண வொப்பந்தம் செய்யப்பட்ட தற்கு அறிகுறியான மோதிரம்.

en garcon, (பிர.) *a.* மணமாகாத ஆடவர் நிலையிலுள்ள; *adv.* மணமாகா ஆடவர் நிலையில்.

engarl'and, *v.* மாலையிடு; மாலை தொடு.

engen'der, *v.* தோற்றுவி, உண்டுபண்ணு, தோன்றக் காரணமாயிரு.

en'gine, *n.* பொறி, இயந்திரம், பல்வேறு பகுதிகளுள்ள இயந்திர அமைப்பு; போர்க்கருவி; கருவி, துணைக்கலம்; வகைதுறை; சூழ்ச்சிப்பொறி; சூழ்ச்சி; திறமை; உள ஆற்றல்; *v.* கப்பல் முதலியவற்றுக்கு இயந்திர அமைப்புப் பொருத்து; வகைதுறை காண்.

engineer', *n.* பொறிவலாளர், இயந்திரப் பொறியமைப்புத் திட்டம் வகுப்பவர்; பொறியமைப்பாளர், இயந்திரப் பொறி களை அமைத்து நிறுவுபவர்; படைத்துறைக் கட்டுமான வேலைகளைத் திட்டமிட்டு வகுத்தமைப்பவர்; படைத்துறைப் பொறியமைப்பாண்மைப் பிரிவினர்; கப்பலின் இயந்திரப் பொறி மேற்பார்வையாளர்; கட்டாண்மை வல்லுநர், பாதை அணை கால்வாய் பாலம் வடிகால் இருப்புப்பாதை துறைமுகம்

முதலிய பொதுத்துறைக் கட்டுமான அரங்கப்பணி மேலாளர்; விசைப்பொறி இயக்குநர்; ப. பொறிவலாளராகச் செயலாற்று; கட்டமை, திட்டமிட்டியற்று, வகுத்தமை; சூழ்ந்தமை, திறம்படச் செயலாற்று; வகுத்துருவாக்கு.

en'ginery, *n.* இயந்திரப்பொறித் தொகுதி; இயந்திரப் பொறியமைப்பு; இயந்திரப்பொறித்தொழில்.

engir'dle, ப. சூழ அமை, சூழ்ந்திரு, சுற்றி வளை.

Eng'lish[1], *n.* ஆங்கிலமொழி; அச்சுரு அளவைவகை; *a.* இங்கிலாந்து நாட்டுக்குரிய; ஆங்கில மக்களுக்குரிய; ஆங்கில மரபு சார்ந்த; ஆங்கிலமொழிக்குரிய; (தொ.) the English, ஆங்கில மக்கள்.

eng'lish[2], ப. ஆங்கிலமொழிப்படுத்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்; ஆங்கிலமாக்கு.

engorge', ப. பேராவலுடன் விழுங்கு; திணி, செறிவி; குருதி செறிவி.

engraft', ப. ஒட்டினம் உண்டுபண்ணு, முதிர்கிளையுடன் இளங்கன்றிணை, இரண்டு இனங்களை ஒட்டி இணை; சேர்த்திணை, ஒன்றுபட இணை; உள்ளத்திற் பண்பு ஊன்றுவி.

engrail', ப. ஓரத்திற் பற்களாக வெட்டு; வாள்போல் பற்களமைந்த தோற்றம் கொடு.

engrain', ப. (வண்ணச்சாயம் முதலியன) ஆழமாகப் பதியும்படி செய்வி.

engrained', *a.* உள்ளூறித்தோய்ந்த, உள்ளூன்றிய, செறிந்த.

engrave', ப. செதுக்கு; உட்செதுக்கு வேலைப்பாட்டால் ஒப்பணைசெய்; செதுக்குருவம் தீட்டு; அச்சுக்குரிய உரு வரைப்பாளம் செதுக்கு; மனத்தில் நன்கு பதியவை.

engrav'ing, *n.* செதுக்கு வேலைப்பாடு செய்தல்; செதுக்கு வரிவேலை செய்யப்பட்ட அச்சுப்பாளத்தின்மூலம் அச்சிடப் பட்ட படம்.

engross', ப. பத்திரமுதலியவற்றைப் பெரிய எழுத்தில் எழுது; சட்ட உருவில் எடுத்துக்குறிப்பிடு; விற்பணையில் தனி முழு உரிமை ஏற்படும்படி இருப்பு முழுவதையும் வாங்கிவிடு; உரையாடலை முற்றிலும் தன்வயமாக்கு; கவனத்தை முழுவதும் கவர்; நேரத்தை முழுவதும் தனதாக்கிக்கொள்.

engulf', ப. விழுங்கு, வளைந்து சூழ், உள் அமிழ்த்திக்கொள்; விழுங்குவி, அமிழ்த்துவி.

enhance', ப. உயர்த்து, விலை மிகுதிப்படுத்து, மேம்படுத்து, உயர்வுபடுத்து; மதிப்பேற்று, மிகைபடுத்து; கூடுதலாக்கு, பெருக்கு; முணைப்பாக்கு; மிகுதிப்படு; கூடு; விலையுயர்வுறு.

en'iac, *n.* வெற்றிடம்-வளி-மின்கடவாப் பொருள் ஆகிய வற்றில் மின்வலி இயக்கநிலைகளைக் கணிக்கும் அமெரிக்க அளவைப்பொறி.

enig'ma, *n.* புதிர், ஊகிக்கவேண்டிய மறைபொருளுடைய தொடர்; விடுகதை; பொருள் விளங்காதது, புரியாதது; புரியமுடியாதவர், விசித்திரப் பண்புடையவர்.

enisle', ப. (செய்.) தீவாக்கு; தீவில் வை; தனிப்படுத்து, துண்டி.

enjamb'ment, *n.* யாப்பியலில் ஈரடித்தொடர்புநிலைச் செய்யுளில் இரண்டாம் அடி கடந்தும் வாக்கியம் நீண்டு செல்லுதல்.

enjoin', ப. கட்டளையிடு, ஆணை விதி; வரையறை செய், கட்டுப்படுத்து; வற்புறுத்திக்கூறு, அழுத்தமாக வேண்டிக் கொள்.

enjoy', ப. துய்த்து மகிழ்; மகிழ்வுடன் நுகர்; கண்டுமகிழ்; கேட்டு மகிழ்; உணர்ந்து மகிழ்.

enkin'dle. ப. நெருப்பு அழன்றெழுவி; போர்கிளர்ந்தெழுவி; உணர்ச்சியைத் தூண்டியெழச்செய்; உணர்வு கொளுத்து.

enlace', ப. சூழ்; சூழ்ந்திறுக்கு, வளைந்து சுற்று; சுற்றிப்பிணை, முறுகு; அணை, தழுவு; சிக்கவை; பின்னு; வலைபடர்வி; பின்னல் வேலைப்பாடு மேவுவி.

enlarge', ப. பெரிதாக்கு; பரப்புப் பெரிதாக்கு; அகலப்படுத்து; மனம் விரியச்செய்; எண்ணம் விரிவடையச்செய்; இதயம் பெரிதாக்கு; அளவுபெருக்கு; தொகை மிகுதியாக்கு; நிழற்படம் விரிவுறுத்து; விரிவுறும் தகுதியுடையதாயிரு; பெரியதாக வளர்; விரித்துரை, பாரித்துரை; விரிவாகப் பேசு; சிறைவிடுவி.

enlarge'ment, *n.* பெரிதாக்குதல்; பெரிதாக்கப் பெறுதல்; மிகை; பரப்பீடு; அளவுப்பெருக்கம்; உரைப்பெருக்கம், சொற்பரந்துபடல்; பெரிதாக்கப்பட்ட நிழற்படம்; விடுவிப்பு; (இலக்.) சொற்பொருள் விரிவுத்தொடர், பண்புவிரி.

enlar'ger, *n.* புகைப்படத்தைப் பெரிதாக்கும் கருவியமைப்பு; நிழற்பட எதிர்ப்படிவத்தைப் பெரிது சிறிதாக்கும் கருவி.

enlight'en, ப. ஒளியூட்டு; அறிவுறுத்து, அறிவுகொளுத்து; கற்பி, தெரிவி; ஐயந்தெளிவி, தப்பெண்ணம் அகற்று; மூடநம்பிக்கையிலிருந்து விடுவி.

enlink', ப. சேர்த்து இணை; பொருத்து; கொக்கியால் பிணை.

enlist', ப. படையில் சேர்த்திடு; படையில் இடம்பெறு; பட்டியலில் இணைத்துக்கொள்; சேர், இணைவுறு; ஆள்சேர், படைக்கு வீரர் திரட்டு; துணையாகப்பெறு; எய்தப்பெறு; பயன்படுத்து; ஈடுபடுத்து; புகுந்தீடுபடு.

enlist'ment, *n.* படையில் சேர்த்தல்; படையில் சேர்க்கப் படல்; படை திரட்டு; ஈடுபடுத்தல், பயன்படுத்தல்.

enliv'en, ப. உணர்ச்சியூட்டு, எழுச்சியூட்டு; ஒளிர்வுடையதாக்கு, மகிழ்ச்சியுள்ளதாக்கு; படத்துக்கு உயிர்த்துடிப்பூட்டு; உயிர்த்துரண்டுதலளி.

en masse, (பிர.) *adv.* மொத்தமாக, திரளாக, ஒரேகூட்டாக.

enmesh', ப. கண்ணியில் சிக்கவை, வலையில் அகப்பட்டது போலச் சிக்கச்செய்.

en'mity, *n.* பகைவர்நிலை; பகைமை; எதிர்ப்பு; வெறுப்பு; பகை எண்ணம்; நட்புக்கேடு.

enn'ead, *n.* ஒன்பதன் தொகுதி, ஒன்பது ஏடுகளின் திரள், ஒன்பது செய்திகளின் கோவை, ஒன்பது சொற்பொழிவுகளின் திரட்டு, ஒன்பது புள்ளிகளின் இணைவு.

enno'ble, ப. உயர்வுபடுத்து, மேம்படுத்து; மேன்மக்கள் நிலைக்கு உயர்த்து, பெருமகார் ஆக்கு; உயர்தரமாக்கு, உயர் தகுதியுடையதாக்கு; உயர்வு தூண்டு; மேன்மையுறச்செய்.

enn'ui, *n.* முசிவு, சடைவு, வேலையற்றிருப்பதால் ஏற்படும் மனச்சோர்வு, எதிலும் கருத்தீடுபாடு இல்லாததால் ஏற்படும் கிளர்ச்சிக்கேடு.

enorm'ity, *n.* வெங்கொடுமை, மாபெருங்குற்றம்.

enorm'ous, *a.* மிகப்பெரிய, மாபேரளவுடைய.

en'osis, *n.* கிரீஸ் சைப்ரஸ் இணைப்பு; பிரிட்டனின் ஆட்சியிலிருந்து பிரிந்து சைப்ரஸ்தீவு கிரீஸ் நாட்டுடன் சேரவேண்டுமென்ற கிளர்ச்சிக்குரல்.

enough', *n.* போதுமான அளவு; தேவையளவு; மன நிறைவளவு; *a.* போதுமான; தேவையளவான; மனநிறை வளவான; *adv.* போதுமான அளவில்.

enounce', ப. விளங்கக்கூறு; தெளிவுபடக்கூறு; சொற்களை ஒலி, உச்சரி.

enow', *a., adv.* (செய்.) = enough.

en passant, (பிர.) *adv.* இதற்கிடையில், தற்செயலாக; போகிறபோக்கில், வழியே செல்லுகையில்.

en prise, (பிர.) *adv.* (சதுரங்க ஆட்டத்தில் பகடைக்காய்) எடுக்கும் நிலையில்.

enquire', ப. உசாவு, விசாரணைசெய்; விவரம் கேள், நாடி ஆராய்; தகவல் வினவு; இயல்பாராய், தேர்ந்தாய்வுசெய்; வேண்டிக்கேள்.

enquir'y, *n.* விசாரணை.

enrage', *n.* சீற்றமூட்டு, சினமூட்டு, மூர்க்கமாகும்படி செய்.

en rapport, (பிர.) *adv.* தொடர்புவிடாத நிலையில், இணைப்புத்தொடர்ந்துள்ள நிலையில்.

enrap'ture, ப. களிப்பூட்டு, உவகையூட்டு, கழிமகிழ்வளி.

enre'giment, *v.* படையணிப் பிரிவாக வகு; பயிற்சியளித்துக் கட்டுப்பாடு உண்டுபண்ணு.

en regle, (பிர.) *adv.* முறைப்படி, ஏற்றவாறு, உரியபடி.

enrich', *v.* செல்வம்பெறச்செய்; செல்வராக்கு; செல்வம் பெருக்கு; வளமூட்டு, செழிப்பாக்கு; ஏடு-தொகுப்பு-காட்சிச் சாலை முதலியவற்றில் வளம் பெருக்கு; பயன்பெருக்கு; சுவைமிகுதிப்படுத்து; மதிப்புயர்த்து; ஆக்கப்பொருள்களில் மதிப்பேறிய கூறுகளின் வீத அளவு பெருக்கு.

enrobe', *v.* உடைமேற்கொள்வி, ஆடையணிவி.

enrol', **enroll'**, *v.* பட்டியில் சேர்; படையணியில் சேர்; கழகத்தில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்; நீதிமன்றத்தின் பதிவேட்டில் பதிவுசெய்; மதிப்புப் பட்டியில் பதிவுசெய், புகழ்ப்பதிவுசெய்; பதிவுசெய்யப்பெறு.

en route, (பிர.) *adv.* போகிறவழியில், வழிப்பாதையில்; இடையில்.

ens, *n.* மெய்ம்மைக்கூறு, கருத்துப்படிவம், தத்துவம்; *pl.* en'tia. •

En'sa, *n.* படைகள் முதலியவற்றிற்குப் பொழுதுபோக்கு ஏற்பாடு செய்யும் அமைப்பு.

ensam'ple, *n.* = example.

ensang'uined, *a.* குருதிக்கறையுள்ள, குருதிதோய்ந்த, கொலைகாரத்தனமான.

ensconce', *v.* நிலைபெறுவி, பாதுகாப்பான இடத்தில் தங்கவை.

ensemble, (பிர.) *n.* பொதுததோற்றம், மொத்த மதிப்பு; இசைக்குழுவில் மொத்த ஒத்திசைவு.

enshrine', *v.* கோயில் கொள்ளுவி, போற்றிவைத்துப் பேணு, காத்துப் பொதிந்துவை; தன்னகமாகக் கொண்டு பேணு, பேணுமிடமாக அமை.

enshroud', *v.* முழுதும் மறை; மூடுதிரையாயமை; போர்த்தி மூடு.

en'siform, *a.* வாளுருவான.

en'sign, *n.* சின்னம்; படையின் கொடி; கொடியைத் தாங்கும் வீரன்.

en'silage, *n.* பசுந்தீவனத்தை உலராமல் பாதுகாக்கும் காற்றுப்புகாக் குழிபதனமுறை; குழிபதனமுறையில் பாதுகாக்கப்பட்ட பசுந்தீவனம்; *v.* குழிபதனமுறையால் பசுந்தீவனத்தைப் பாதுகாத்து வை.

ensile', *v.* தீவனத்தைப் பசும்பதனக்குழியிலிடு, குழிபதனம் செய்.

enslave', *v.* அடிமைப்படுத்து, அடிமையாக்கு.

enslav'er, *n.* அடிமைப்படுத்துபவர்; தன் வனப்பினால் மனிதனை அடிமையாக்கும் அழகி.

ensnare', *v.* சிக்கவை, பொறியில் அகப்படுத்து, கண்ணியில் மாட்டிக் கொள்ளும்படிசெய்.

ensoul', *v.* ஆன்மநிலையூட்டு, உயிர்முதல் வழங்கு.

ensphere', *v.* சுற்றிவளை, சூழ்; கோளத்தில் வை; கோள உருவம் கொடு.

ensue', *v.* விளைவுறு; பின்நிகழ்வாகு; நிகழ்வுறு.

ensure', *v.* உறுதிப்படுத்து; இடரிலிருந்து தடைகாப்புச் செய், இடையூறு வராமல் காப்புறுதிசெய்; காப்பாக வைத்திரு, பாதுகாப்பில் வை.

enswathe', *v.* வரிந்துகட்டு, கட்டிப்பொதி, சுற்றிக்கட்டிடு.

entab'lature, *n.* தூண் தலைப்பு அமைவு.

enta'blement, *n.* சிலைதாங்கு பட்டிகை.

entail', *n.* மரபுரிமைக் கட்டுப்பாடு, தலைமுறைகளின் மரபுரிமையைக் கட்டுப்படுத்தும் முதலேற்பாடு; மரபுரிமைக் கட்டுப்பாட்டுப் பத்திரம்; மரபுரிமை கட்டுப்பட்ட உடைமை; மாறு மரபுரிமைப்பண்பு; *v.* மரபுரிமைக் கட்டுப்பாடு செய்; நீங்கா உடைமையாக வழங்கு; மேற்சுமத்து; இன்றியமையாததாக்கு, தவிர்க்கமுடியாதபடியாக்கு.

entang'le, *n.* எதிரிமுன்னேற்றம் தடுக்கும் தடைவேலி அரண், முட்கம்பி வேலி; *v.* சிக்கவை; இடர்களில் தொடர்புபடுத்து; சிக்கலாக்கு, புரியாததாக்கு.

en'tasis, *n.* தூணின் மிகச் சிறிதளவான மையப்புடைப்பு முறை.

entel'echy, *n.* (மெய்.) பொருளின் நிறைநிலை, பொருண்மை.

entell'us, *n.* தெய்வத்துக்குரிய திருநிலையுடையதாகக் கருதப்படும் இந்தியக் குரங்கு வகை.

entente, (பிர.) *n.* நாடுகளிடையே நட்புறவொப்பந்தம்; நட்புறவுக்குழு.

enter, *v.* புகு, நுழை, உட்செல்; ஊடுருவு, துளை; தொடங்கு, மேற்கொள்; மேடையில் வந்துதோன்று; பெயரைப் பதிவுசெய்; குறிப்பிடு, எழுது; எழுதுவி, பதிவுசெய்வி; குழுவில் சேர்த்துக்கொள்; குழுவில் சேர்; போட்டியில் இடம்பெறு; தொடர்புகொள், ஈடுபடு; ஆழ்ந்துசெல்; உள்ளுணர்வுகொள், உள்ளீடுபாடுகொள்; நாய்பயிற்று; குதிரை பழக்கு; (தொ.) enter an appearance, கூட்டம் முதலியவற்றில் தோற்றமளி, காணப்படு; enter a protest, எதிர்ப்பைத் தெரிவி, கண்டனத்தைப் பதிவுசெய்; enter on, தொடங்கு, ஈடுபடு; உடைமையின் உரிமை மேற்கொள்; கடமை மேற்கொள்; enter up, கணக்குப் பதிவு முடித்துவிடு.

ente'ric, *n.* குடற்காய்ச்சல்; *a.* குடல் சார்ந்த.

en'terprise, *n.* துணிவுவினை, கடுஞ்செயல்; இடர்நிறைந்த முயற்சி; துணிவாண்மை, தறுகண்மை, விணைத்திட்பம்.

en'terprising, *a.* துணிந்து வினை செய்யத்தயங்காத, ஊக்கெழுச்சியுடைய.

entertain', *v.* மேற்கொள், மேற்கொண்டு நடத்து, கொண்டுசெலுத்து; மனங்கொள், ஏற்றுக்கொள், ஏற்று முடிவாய்வுக்கு எடுத்துக்கொள்; மகிழ்வி, பொழுதுபோக்குவி; வரவேற்பளி; விருந்தோம்பு, விருந்தில் அன்பு பாராட்டு.

entertain'ing, *a.* மகிழ்விக்கிற; நேரம்போக்குகிற.

entertain'ment, *n.* விருந்தோம்பல்; மனமகிழச் செய்தல்; விருந்தளிப்பு; விருந்து; பொழுதுபோக்கு; பொழுதுபோக்குக் காட்சி, பொதுநாடக ஆட்டம்.

enthal'py, *n.* எடைமான வீதமான வெப்பக் கூற்றளவு; செயற்குதவும் பொருளின் வெப்பியக்க உள்ஆற்றல் அடக்கம்.

enthral', **enthrall'**, *v.* அடிமைப்படுத்து; மயக்கு, வசப்படுத்து; கவர்ச்சியால் கட்டுப்படுத்து.

enthrone', *v.* அரியணையிலமர்த்து, தவிசேற்று.

enthroniza'tion, *n.* அரியணையிலேற்றல்; தவிசேற்றப்படுதல்; உயர்த்தல், பெருமைப்படுத்தல், தவிசேற்றம்; உயர்வு.

enthuse', *v.* (பே-வ.) ஆர்வங்கொள், உணர்ச்சிக் கனிவுறு.

enthu'siasm, *n.* ஆர்வம், உணர்ச்சிக்கனிவு; விருவிருப்பு, கிளர்ச்சி.

enthu'siast, *n.* பற்றுர்வலர், உணர்ச்சியார்வம் மிகுந்தவர், கிளர்ச்சி மிக்கவர்; கனவுக்காட்சியாளர்; தன்னேத்தானே ஏமாற்றிக்கொள்பவர்.

entice', *v.* கவர்ச்சியூட்டியிழு, மயக்கிச் சிக்கவை; மருட்சியூட்டு, ஆவலுட்டி ஏய்.

entire', *n.* முழுமை, மொத்தம்; மதுக்கலவை; விதையடிக்கப்பெறுத விலங்கு, பொலிமா; *a.* முழுமையான; சிதைவுபடாத; குறைவற்ற, நிறைவான; கலப்பற்ற; விதையடிக்கப்பெறுத; (உயி.) பல்வேளவுகளற்ற ஒரத்தையுடைய.

entire'ly, *adv.* முழுவதும், முழுமையும், நிறைவுள்ளதாக, தீர.

entire'ty, *n.* முழுமை, முழுநிறைவு; கூட்டுமொத்தம்.

enti'tle, *v.* பெயர் அளி; பட்டம் சூட்டு; மதிப்புப்பெயர் வழங்கு; உரிமையளி; தகுதியளி.

en'tity, *n.* உளதாந்தன்மை ; உள்பொருள்.
entomb', *v.* கல்லறையில் இடு ; கல்லறையாகு.
entom'ic, *a.* பூச்சி புழு இனத்தைச்சார்ந்த.
entomol'ogy, *n.* பூச்சிநூல்.
entomoph'agous, *a.* பூச்சிகளைத் தின்கிற.
entomoph'ily, *n.* பூச்சிகளால் மகரந்தம் பரவுதல்.
entourage, (பிர.) *n.* சுற்றுப்புறம் ; ஆயம்.
en-tout-cas, (பிர.) *n.* வெயில் மறைப்புக்கு உதவும் குடை.
entr'acte, (பிர.) *n.* நாடகக்காட்சிகளின் இடைநிகழ்ச்சி.
en'trails, *n. pl.* குடல்கள் ; பூமியின் உள்ளிடங்கள்.
entrain', *v.* தொடர்வண்டியில் அமர்த்து, தொடர் வண்டியில் ஏறு.
entramm'el, *v.* சிக்கவை ; இடையூருயிரு.
en'trance, *n.* நுழைவு ; மேடைக்கு வருதல் ; நுழைவுரிமை ; வாயில் ; புகுவழி ; தொடக்கம் ; *v.* பரவசப்படுத்து, பெரு மகிழ்ச்சிக்குள்ளாக்கு ; மெய்மறக்கச்செய்.
entranc'ing, *a.* மயக்குகின்ற ; தன்வயப்படுத்துகின்ற.
en'trant, *n.* நுழைபவர் ; தொழிற்படுபவர்.
entrap', *v.* பொறியிலகப்படுத்து ; சிக்கவை ; வஞ்சனைசெய் ; ஏமாற்று.
entreat', *v.* பரிந்துகேள், கெஞ்சிக்கேள்.
entreat'ive, *a.* கெஞ்சுகின்ற.
entreat'y, *n.* கெஞ்சுதல் ; பரிவோடு விஞவுதல்.
entrechat, (பிர.) *n.* நடனத்தில் துள்ளிக் குதிக்கும்பொழுது குதிகால்களை இணைத்துப் பன்முறையும் அடித்தல்.
entrecote, (பிர.) *n.* விலாஎலும்புப்பகுதியிலிருந்து எடுத்த இறைச்சித்துண்டு.
en'tree, *n.* நுழைவுரிமை, நுழைவதற்கான தனிச்சலுகை, விருந்தில் முறையாகப் பரிமாறும் துணையுணவு ; (இசை.) பாடுவதற்கு முன்னே இழுக்கப்படும் ராகம், சுதி கூட்டுதல்.
entremets, (பிர.) துணைக்கறி.
entrench', *v.* அகழிதோண்டிக்கொள் ; வலிதாக்கிக்கொள்.
entrench'ment, *n.* அகழிசூழ்ந்த கோட்டை ; வலிய காப்பிடம்.
entre nous, (பிர.) *adv.* உனக்கும் எனக்கும் இடையே.
entrepot, (பிர.) *n.* பொருள் சேமிப்பிடம், களஞ்சியம் ; பண்டகசாலை.
entrepreneur, (பிர.) *n.* தொழிற்றுறை உரிமையாளர் ; குத்தகையாளர், இசைநிகழ்ச்சி அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியின் அமைப்பாளர்.
entresol, (பிர.) *n.* அடித்தளத்திற்கும் முதல்மாடிக்கும் இடைப்பட்ட பத்திமாடம்.
entrust', *v.* காக்கும் பொறுப்பை ஒப்படை ; நம்பிக்கையாக வை.
en'try, *n.* நுழைதல் ; புகுவழி ; தலைவாயில் ; (சட்.) உடைமை கொள்ளல் ; பதிவுசெய்தல் ; பதிவுக்குறிப்பு ; போட்டியிடுவோரின் பெயர் வரிசை ; வீடுகளுக்கிடையே உள்ள வழிச்சந்து ; மேடைமீது வருதல் ; இசைக்கருவி உள்ளே வருதல் அல்லது இசைக்கருவி வாசிப்பவர் உள்ளே வருதல்.
entwine', *v.* கோத்துப்பின்னு.
entwist', *v.* முறுக்கிப்பிடி.
enuc'leate, *v.* விளக்கிக்கூறு ; தெளிவாக்கு ; (மரு.) மேற் பகுதியிலிருந்து கட்டி முதலியவற்றைப் பிரித்தெடு.
enum'erate, *v.* கணக்கிடு ; எண்ணிக்கையிடு.
enumera'tion, *n.* கணக்கிடு ; விவரக்குறிப்பு.
enun'ciable, *a.* தெளிவுபடக்கூறப்படத்தக்க.
enun'ciate, *v.* விளங்கக்கூறு ; தெளிவுபடக்கூறு.
enuncia'tion, *n.* விளக்கக்கூற்று ; கருத்தைச் சொல்லும் வழிமுறை, தனிச்சிறப்பான அறிவிப்பு ; திருத்தமான பேச்சு.
enun'ciator, *n.* விளங்கக்கூறுபவர், தெளிவாகப் பேசுபவர்.
enun'ciatory, *a.* தெளிவான கூற்றுக்குரிய ; உறுதி கூறுதற்குரிய.
enure', *v.* பழக்கு ; பயிற்று ; வழக்கத்தில் கொண்டுவா ; இயங்கச்செய்.
enures'is, *n.* சிறுநீர் அடக்கமுடியாமை.
envel'op, *v.* மூடு ; மறையச்செய் ; சூழ்ந்துகொள் ; உறையிலிடு.
en'velope, *n.* உறை, கடித உறை.
enven'om, *v.* நஞ்சிடு ; மணங்கெடு ; உள்ளப் பகைமை உண்டாக்கு.
en'viable, *a.* பொறுமையுறத்தக்க.
en'vious, *a.* பொறுமை நிறைந்த ; பொறுமையுடைய.
envir'on, *v.* சுற்றிவளை ; சூழ்ந்துகொள்.
envi'ronment, *n.* சூழல், சுற்றுப்புறம், சூழ்நிலைகள்.
environs, *n. pl.* சுற்றுப்புற இடங்கள் ; நகர்ப்புறம் ; அயலிடம்.
envi'sage, *v.* எதிர்நோக்கு ; எதிர்பார்த்திரு, கருது.
en'voy, *n.* தூதுவர் ; அரசியல் பேராள்.
en'vy, *n.* பொறுமை ; *v.* பொறுமைப்படு ; எரிச்சல்கொள்.
enwind', *v.* சுற்றிக்கொள்.
enwomb', *v.* கருக்கொள்ளச்செய்.
enwrap', *v.* பொதிந்துவை.
enwreathe', *v.* கோதைசூழ், முறுக்கிப்பின்னு.
enzoot'ic, *n.* கால்நடைகளுக்கு வரும்நோய் ; *a.* கால்நடை நோய் பற்றிய.
en'zyme, *n.* செரிமானப்பொருள்வகை.
eolith'ic, *a.* பழங்கற்காலத்துக்கு முற்பட்ட காலப்பகுதியான.
eon, *n.* ஊழி.
e'osin, *n.* சிவப்பூதாநிறச் சாயப்பொருள்.
ep'act, *n.* சனவரி முதல்தேதியில் திங்களின் வயசு, சந்திர மானத்திற்கு மேற்பட்ட சௌரமான மிகை.
ep'arch, *n.* கிரேக்க நாட்டரசின் மாகாணத்தலைவர், சமய வட்டத்தலைவர்.
ep'archy, *n.* இக்காலக் கிரேக்க நாட்டரசின் உட்பிரிவு, ருசிய-கிரேக்க நாட்டுத் திருச்சபையிலுள்ள சமய ஆட்சிப் பகுதி.
epaule'ment, *n.* பிரங்கிப்படைகளுக்கான காப்பீட்டுத் தொழில்.
ep'aulet, ep'aulette, *n.* படைவீரர் தலைவரின் தோளில் அணியும் சின்னம் ; தோள்கச்சை ; பெண்ணின் தோட் சட்டையணி.
epee', *n.* வாட்போர்ப்பயிற்சிக்காகக் கூர்மை மழுங்கச் செய்து பயன்படுத்தப்படும் போர்வாள்.
epergne', *n.* மேசையின் நடுவே வைக்கப்படும் பூக்கிளையணி.
epexeges'is, *n.* பொருள் விளக்கத்திற்காகக் கூட்டியுரைக்கும் சொற்கள்.
ephebe', *n.* பதினெட்டிலிருந்து இருபதுக்குட்பட்ட வயதுடைய குடிமகன்.
ephem'era, ephem'eron, *n.* ஒரேநாள் உயிர்வாழும் பூச்சி புழுவினம் ; குறுகியகால வாழ்வுடைய பொருள் ; *pl.* ephem'eras, ephem'erons.
ephem'eral, *a.* ஒருநாள் மட்டும் நிலைத்திருக்கிற, சில நாட்கள் நிலைத்திருக்கிற ; நிலையில்லாத.
ephem'eris, *n.* நாள் நடைமுறைக் குறிப்பு ; நாளேடு ; வானியற் பஞ்சாங்கம்.

eph'od, *n.* யூத மதகுருமாரின் உடுப்பு.

eph'or, *n.* ஸ்பார்ட்டா (Sparta) என்னும் கிரேக்க நகரத்துக் சூற்றநடுவர்களில் ஒருவர்; மேற்பார்வையாளர்.

ep'ic, *n.* வீரகாவியம்; பெருங்காப்பியம், தொடர்நிலைச் செய்யுள்; *a.* காப்பியத்திற்குரிய; காவிய இயல்புடைய, விழுமிய.

epiced'ium, *n.* கையறுநிலைப்பாடல்.

ep'icene, *n.* (இலக்.) பலர்பால், ஆண்பால் பெண்பாற் பொது; ஆண் பெண் பண்புகளையுடைய ஒருவர்; *a.* ஆண் பெண் தன்மைகள் உள்ள.

epicen'tre, epicen'trum, *n.* நிலநடுக்கமுனை.

ep'icure, *n.* உண்ணுதலிலும் குடித்தலிலும் தேர்ந்த விருப்பினன்; சிற்றின்ப வேட்கையன்.

epicure'an, *n.* உலோகாயத மதத்தினர், சிற்றின்பக் கோட்பாட்டாளர்.

epicure'anism, *n.* உலோகாயத மதத்தின் கோட்பாடு, இன்பவாதம்.

ep'icurism, *n.* இன்பநாட்டம்.

ep'icycle, *n.* வட்டக்கோலில் வட்டம்.

epicyc'loid, *n.* வட்டக்கோல் வட்டத்தின் வளைவரி.

epideic'tic, *a.* வெளித்தோற்றத்துக்கான.

epidem'ic, *n.* கொள்ளை நோய்; தொத்து நோய்; *a.* நோய் வகையில் பெருவாரியாகப் பரவியுள்ள.

epidemiol'ogy, *n.* கொள்ளைநோய் நூல்.

epiderm'is, *n.* மேந்தோல்.

epidi'ascope, *n.* படம் திரையில் விழும்படி செய்யும் விளக்கு.

epigas'trium, *n.* இரைப்பைக்கு மேலுள்ள அடிவயிற்றுப் பாகம்.

ep'igene, *a.* மண்ணின் மேற்புறத்தில் உண்டாகிய; வேதித்த.

epiglott'is, *n.* குரல்வளைமூடி.

ep'igram, *n.* திட்ப நுட்பவுரை, அங்கதச் செய்யுள் வகை.

ep'igraph, *n.* கல்வெட்டு; கல்லில் எழுத்து; புத்தகத் தொடகத்தில் குறிக்கோட் குறிப்பு.

ep'ilepsy, *n.* காக்காய் வலிப்பு.

epilep'tic, *n.* காக்காய் வலிப்புடையார்; *a.* இழுப்பு நோயுள்ள.

epil'ogist, *n.* முடிவுரை கூறுபவர், பின்னுரை எழுதுபவர்.

ep'ilogue, *n.* முடிவுரை; சுருக்கம், நூற் கட்டுரை.

epiph'any, *n.* இயேசுநாதரின் திருவருள் தோற்றம்; கடவுட் பிரசன்னம்

ep'iphyte, *n.* ஈரினச் செடி ஒட்டு, ஓரினச் செடியில் மற்றோர் இனச்செடி சேர்ந்து வினைதல்; விலங்கின் உடலில் ஒட்டுகின்ற புல்லுருவி, நாயுருவி.

epis'copacy, *n* மேற்றிராணியார் திருச்சபையாட்சி, திருச்சபை மாவட்டம், மேற்றிராசனம்.

epis'copal, *a.* சமயவட்டத் தலைவர் ஆட்சிக்குட்பட்ட, மேற்றிராணியைச் சார்ந்த.

episcopal'ian, *n.* மேற்றிராணியார் திருச்சபை உறுப்பினர்; *a.* சமயவட்டத்தலைவர் ஆட்சிக்குரிய.

epis'copate, *n.* மேற்றிராணியார் பதவி.

ep'isode, *n.* கிளைக் கதை; உட்கதை.

epispas'tic, *n.* கொப்புளமுண்டாக்கும் பொருள்; கொப்புள முண்டாக்கும் காரை; *a.* கொப்புளமுண்டாக்குகின்ற.

epistemol'ogy, *n.* அறிவாதார முறை இயல், அறிவின் ஆதாரத்தையும் அறியும் முறைகளையும் ஆராயும் இயல்துறை.

epis'tle, *n.* முடங்கல்; விவிலிய ஏட்டின் புதிய ஏற்பாட்டில் இயேசுநாதரின் சீடர் எழுதிய கடிதம், வழிபாட்டினிடையே வாசிக்கப்படும் விவிலியப் பகுதி; கவிதை வடிவான முடங்கல்; முடங்கல் இலக்கியம்.

epis'tolary, *a.* முடங்கல் சார்ந்த; கடித வடிவான; கடிதத்துக்குத் தகுதியான; கடிதமூலம் இயங்குகிற.

epis'toler, *n.* இயேசுநாதர் மாணவ முதல்வர்களின் தனி முறை வகுப்புக்களை விவிலிய நூலிலிருந்து படிப்பவர்.

epis'trophe, *n.* ஒரே சொல்லில் சென்று முடியும் பல வாசகங்களின் தொகுதி.

ep'istyle, *n.* தூண் முகட்டின் மேலுறுப்பு வகை.

ep'itaph, *n.* கல்லறை வாசகம்; கல்லறைக் கல்வெட்டு; *v.* கல்லறை வாசகம் எழுது.

epithalam'ium, *n.* திருமணப் பாடல்; *pl.* epithalam'ia, epithalam'iums.

epithel'ium, *n.* சளிச்சவ்வின் மேல்தோலிழைமம்.

ep'ithet, *n.* அடைமொழி; சிறப்புப்பட்டம்; பண்பு குறித்த பெயரடைச்சொல், குணம்சுட்டும் தழுவு தொடர்.

epit'ome, *n.* சுருக்கம், பொழிப்பு; நூலின் சுருக்கமான கருத்து; சுருக்கக் குறிப்பு; சிற்றுருவ மாதிரி, செறி சுருக்கப் பதிப்பு.

epizo'on, *n.* புற ஒட்டுயிர்; உடலிடங் கொண்டு உணவு பங்குகொள்ளும் சார்துணையுயிர்; *pl.* epizo'a.

ep'izoot'ic, *n.* விலங்குகளிடத்தில் அவ்வப்போது நிலவுகின்ற நோய்; *a.* விலங்குகளிடத்தில் தற்காலிகமாக நிலவுகின்ற.

ep'och, *n.* ஊழிமூல முதற்காலம், சகாப்த ஆண்டெண்ணிக்கையின் தொடக்கக் காலம்; புத்தூழித் தொடக்கம்; முழு ஊழிக்காலம்; ஒரே பண்படிப்படையில் வகுத்துணரப்படும் ஓர் ஊழிப்பிரிவு; ஊழித் திருப்பம், திரும்பு கட்டம்.

ep'ode, *n.* உணர்ச்சிப்பாடல் வகை; கிரேக்க இசைக்குழுப் பாடலின் மூன்றாவது பிரிவு.

ep'onym, *n.* இனப் பெயர் முதல்வர்; இடப்பெயர் மூலவர்; நிறுவனத்தின் பெயருக்குரிய முன்னோர்.

ep'opee, *n.* பெருங்காப்பிய இலக்கியம்; பெருங்காப்பியம்.

ep'os, *n.* எழுதப்படாத முற்கால வீரகாதைச் செய்யுள் தொகுதி; வீரப் பெருங்காப்பியம்; வீரகாதையால் விரித்துரைக்கப்படும் நிகழ்ச்சிக்கோவை.

epsil'on, *n.* கிரேக்க நெடுங்கணக்கின் ஐந்தாவது எழுத்து ("எ" குறில்).

Ep'som, *n.* இங்கிலாந்தில் சர்ரே (Surrey) என்ற மாவட்டத்தைச் சேர்ந்த நகரம்; எப்சம் நகரத்திலுள்ள குதிரை ஓட்டப் பந்தயவெளி; எப்சம் நகரவெளியில் நடைபெறும் குதிரை ஓட்டப்பந்தயம்; (தொ.) Epsom salt, பேதிமருந்து வகை, வெளிமக் கந்தகி.

eq'uable, *a.* சரி சமமான, ஏற்றத்தாழ்வற்ற; ஒரு சீரான, ஒழுங்கு குலையாத; மட்டான, நடுநிலை அமைதியுடைய; மாறு உள அமைதியுடைய.

eq'ual, *n.* ஈடானவர், நிகரானவர்; சமமானது; சம வயதினர்; சமநிலையாளர்; *a.* ஒப்பான, எண்ணிக்கையிலோ அளவிலோ நிலையிலோ மதிப்பிலோ படியிலோ ஒத்த; ஈடு செலுத்தவல்ல. வலிமையிலோ வீரத்திலோ திறத்திலோ தாழ்நிலைக்கு வேண்டிய ததுதியுடைய; ஒரு சீரான, ஏற்றத் தாழ்வற்ற, என்றும் எங்கும் ஒரே நிலையில் நடைபெறுகிற; சாயாத, நடுநிலையுடைய; வீத அளவொத்த; நேர்மை வாய்ந்த; *v.* சமமாயிரு.

equal'ity, *n.* சமநிலை, சரி நிகர்வு, ஒப்பு.

eq'ualize, *v.* சரி சமமாக்கு; ஒப்பானதாகு; ஆட்ட எண்ணிக்கையை எதிர்ப்பக்கத்தாரின் அளவோடு ஒப்பான தாக்கு.

eq'ually, *adv.* சமமான அளவில்; ஒரேபடியாக; ஒரு சீரான நிலையில்.

equanim'ity, *n.* உள்ளச் சமநிலை; கொந்தளிப்பின்மை, மன அமைதி; கவலையற்ற தன்மை; பற்றற்ற தன்மை.

equate', *v.* சமப்படுத்து, சரிநிகராகக்கொள்; சமமாகக்கருது; சரிமதிப்புள்ளதாக நடத்து; ஒன்றுபடுத்து, ஒன்றுபடவை.

equa'tion, *n.* சமமாக்கல்; சமநிலை; இருபக்கமொப்பச் சரி நிலைப்படுத்தல்; சரிஒப்புநிலை; சரியீடு, சிறு வழுக்களுக் குரிய எதிர்க்காப்பீடு செய்தல்; ஒப்புக்காண்டல், ஒப்புப் படுத்தல்; ஒப்புநிலைவாசகம்; (கண.) சமன்தொடர்.

equat'or, *n.* நிலநடுக்கோடு, நிலவுலகநடுவட்டவரை; கோளங் களில் இருதுருவங்களுக்கு இடையிலுள்ள நடுவட்டக்கோடு.

equator'ial, *a.* நிலநடுக்கோட்டைச்சார்ந்த; நடுவரைக் கோட்டிற்கு அருகிலுள்ள.

eq'uerry, *n.* குதிரைப்பாதுகாப்புவீரர்; குடும்ப இலாயத் துறைத் தலைவர்.

eques'trian, *n.* குதிரை ஏறிச்செல்பவர், குதிரை வீரர்; குதிரையேற்ற வல்லுநர்; *a.* குதிரையேற்றஞ் சார்ந்த; குதிரை மீதிவர்ந்த; பண்டைக்கால ரோம குதிரை வீரர் அமைப்பைச்சேர்ந்த.

equestrienne', *n.* குதிரைமீதிவர்ந்த அணங்கு; காட்சி யரங்கக் குதிரை ஏற்ற அணங்கு.

equidis'tant, *a.* சரிசமத்தொலைவிலுள்ள; சமமான தூரத்தி லுள்ள.

equilat'eral, *a.* எல்லாப்பக்கங்களும் ஒத்த; முக்கோண வகையில் முழுதும் சரிசமமான பக்கமுள்ள.

equilib'rate, *v.* இரு பொருள்களை எதிரெதிர் சமனீடாக்கு.

equil'ibrist, *n.* நடுநிலை அமைதிபேணிக் கயிற்றின்மீது நடப்பவர், கழைக்கூத்தாடி.

equilib'rium, *n.* நடுநிலை அமைதி, சரி அமைதிநிலை; (தொ.) neutral equilibrium, நெகிழ்வியல் நடுநிலை அமைதி; stable equilibrium, நிலையுடைய நடுநிலையமைதி; unstable equilibrium, குலைவுடைய நடுநிலையமைதி.

equimul'tiple, *n.* இணைமடங்கு, மற்றோர் எண்ணுடன் பொதுமுலக் கூற்றினையுடைய எண்.

eq'uine, *a.* குதிரை சார்ந்த, குதிரை போன்ற, குதிரைக்குரிய.

equinoc'tial, *n.* நில உலக ஊடச்சுக்குச் செங்குத்தான தளமுடைய வான்கோள வட்டம்; *a.* பகலிரவு சமமான, பகலிரவு சமமான காலத்தில் இயல்கின்ற, பகலிரவு சமமான காலத்துக்கு அருகில் நடைபெறுகின்ற; நிலநடுக் கோட்டி லுள்ள, நிலநடுக்கோட்டுக்கு அருகிலுள்ள; (தொ.) equinoctial gales, நிலநடுக் கோட்டருகில் வீசுவதாகக் கருதப்படும் புயற்காற்றுக்கள்; equinoctial line, நிலநடுக் கோட்டிற்குச் செங்குத்தான மட்டத்தளமுள்ள வான்கோள வட்டம்.

equinoc'tials, *n. pl.* நடுநிலக் கோட்டருகில் வீசுவதாகக் கருதப்படும் புயற்காற்றுக்கள்.

eq'uinox, *n.* ஞாயிறு நிலநடுக்கோட்டினைக் கடந்து செல்லும் காலம், பகலிராச் சம நாட்கள் இரண்டில் ஒன்று.

equinox'es, *n. pl.* ஞாயிறு நில நடுக்கோட்டினைக் கடந்து செல்லும் இரண்டு இடங்கள்.

equip', *v.* படைக்கலம் பெறுவி, போர்த்தளவாடங்கள் சேகரித்தளி; முன்னேற்பாடுகள் செய்து வை; பயணசாதன வாய்ப்புக்களை அமைவி.

eq'uipage, *n.* துணைப்பொருட் சாதனங்கள்; பயணத்துக்கு வேண்டிய ஆடை அணிமணி ஆள் துணையாதரவுகளின் தொகுதி.

eq'uipoise, *n.* சரி அமைதி நிலை: சரியீட்டமைதி; சரிக் கட்டும் பொருள்; *v.* ஈடுகட்டு, சரிக்கட்டு; மனத்தை இரு திறமும் சாரா நிலையில் வை, பற்றற்றிரு.

equipoll'ent, *n.* சரிசம ஆற்றல்வாய்ந்த பொருள்; செயற் களத்தில் சம மதிப்புள்ள பொருள்; *a.* சரிசம ஆற்றல் கொண்ட; செயற்களத்தில் சம மதிப்புள்ள.

equipon'derate, *v.* சரியீடுகட்டு, எதிர்ப்புறம் சரிசமமாயிரு.

equipoten'tial, *a.* விசைவகையில் எல்லாத் திறங்களிலும் சரிசம இயலாற்றலெல்லையுடைய.

eq'uitable, *a.* நேர்மையான, நடுநிலை அணைவான; சட்ட நோக்கிலில்லாவிட்டாலும் நேர்மை நோக்கில் உரியதான.

equita'tion, *n.* குதிரையேற்ற உலா; குதிரையேற்றத் திறம்.

eq'uity, *n.* சரி ஒப்புரவு, நடுநிலை நேர்மை இலக்கு; சட்ட நடைமுறைக்குத் துணைநிறைவான நேர்மைத் தத்துவங்களின் தொகுதி; பொதுச் சமுதாயச் சட்டங் கடந்த அடிப்படை இயற்கை நீதி ஒப்புரவுப்பண்பு; அடகு வைக்கப்பட்ட பொருளில் கட்டணம் குறைக்கப்பட்ட நிகர மதிப்பு.

equiv'alent, *n.* இணைமாற்று, மாற்று மதிப்பு; சமமதிப் புள்ள பொருள்; சரிசமத் தொகை; சரிமாற்றுச் சொல்; *a.* சமமதிப்புள்ள; சம விலையுள்ள; ஒரே பயனுள்ள; மாற்றிணையாயுள்ள; சரி ஒத்திருக்கின்ற; (வேதி.) சரிநிகர் இணைவு மதிப்புடைய.

equiv'ocal, *a.* இருபொருள் மயக்கமுள்ள; தெளிவில்லாத இயல்புடைய, உறுதியற்ற தன்மையுள்ள; முடிவியல்பு அற்ற; ஐயப்படுவதற்கு இடம் தருகிற.

equiv'ocate, *v.* இருபொருள் மயக்கமுள்ள சொற்களைப் பயன்படுத்து; மழுப்பிப் பேசு, சாக்குப்போக்குக் கூறி ஏமாற்று; மெய்யை மறை; தவருன கருத்துத் தூண்டு.

eq'uivoke, eq'uivoque, *n.* சிலேடை, இருபொருள் மயக்கம்.

er'a, *n.* ஊழி, வரலாற்றுப் பிரிவு, காலப் பெரும் பிரிவு; காலக் கணிப்புமுறைத் தொடக்கம்.

eradia'tion, *n.* ஒளியலையெறிவு.

erad'icate, *v.* வேருடன் பறித்தெறி; வேருடன் அழி, அடியோடு அழி, தொலைத்தொழி.

erase', *v.* தேய்த்தழி, துடைத்தழி, தடமில்லாமல் அழி.

eras'er, *n.* துடைப்பான், வரைவு துடைத்தழிக்க உதவும் தொய்வகத்துண்டு.

Eras'tian, *n.* சுவிட்சர்லாந்து நாட்டுக்குரிய எராஸ்டஸ் (Erastus 1524-83) கொள்கையைச் சார்ந்தவர், திருச்சபை அரசியல் ஆட்சிக்கு உட்பட்டது என்ற கொள்கை உடையவர்; *a.* எராஸ்டஸ் என்பாரின் கொள்கையைச் சார்ந்த; எராஸ்டஸின் கொள்கையையுடைய.

era'sure, *n.* துடைத்தழிப்பு; தடமழிக்கும் செயல்; துடைத் தழித்ததடம்; துடைத்தழித்த இடம்.

E'rato, *n.* உணர்ச்சிப் பாடலுக்குரிய பண்டைக் கிரேக்கரின் கலைத் தெய்வம்.

ere, *prep., conj.* முன்னே, முன்பு; (தொ.) ere long, விரை வினிலேயே, நீண்டகாலம் ஆகாமுன்.

E'rebus, *n.* கிரேக்க பழம் புராணத்தில் நிலவுலகுக்கும் கீழுலகுக்கும் இடைப்பட்ட இருளிடம்.

erect', *a.* நிமிர்ந்த, செங்குத்தான; நேரான, வளையாத, சாயாத; தொங்கலாயில்லாத; கிடைநிலையிலிராத; சிலிர்த் துள்ள; மேல் நோக்கிய, உயர்த்திய நிலையிலுள்ள; விம்மிதமான; *v.* நிமிர்த்து, உயர்த்து; நேரானதாக்கு; செங்குத்தாக்கு; கட்டிடம் எழுப்பு; நிறுவு; உருவாக்கு; வகுத்தமை.

erec'tile, *a.* நிமிர்த்தக் கூடிய, விறைப்பாக்கி எழுப்பக் கூடிய; விம்மி நிமிர்வுறத்தக்க.

erec'tion, *n.* கட்டி எழுப்புதல்; கட்டமைப்பு; கட்டிடம்.

erec'tor, *n.* நிமிர்க்குந் தசை, கட்டமைப்பவர்.

e'remite, *n.* ஆண்டி, துறவி; ஒதுங்கி வாழ்பவர்.

e'rethism, *n.* உடற்பகுதி-உறுப்பு-மனம் ஆகியவற்றின் வகையில் இயல்புமீறிய கூர்உணர்வுக் கோளாறு.

erewhile', *adv.* முன்பு, முன்னுட்களில்.

erg, *n.* வேலைக் கூறு.

ergatoc'racy, *n.* தொழிலாளர் ஆட்சி.

erg'o, (ல.) *adv.* ஆகையால், அக்காரணத்தினுல்.

erg'ot, *n.* காளான் வகையால் ஏற்படும் கீலநோய்; மருந் தாகப் பயன்படும் நோயுற்ற கம்புக் கூலவிதை.

erg'otism, *n.* நலிவுற்ற தானியமாவினுல் செய்யப்பட்ட ரொட்டியினுல் உண்டாகும் நோய்.

erica'ceous, *a.* முட்செடி வகை சார்ந்த; முட்செடிக்குடும்ப வகை சார்ந்த.

E'rin, *n.* அயர்லாந்தின் பழங்காலப் பெயர்.

Erin'ys, *n.* கிரேக்கப்புராணப் பழி ஆவித் தெய்வங்களில் ஒன்று; *pl.* Erin'yes.

eris'tic, *n.* விவாத இயல்; *a.* விதண்டாவாதமான, மெய்யூன்றாது வாத வெற்றியை மட்டுமே இலக்காகக் கொண்ட.

erl'-king', *n.* குழந்தைகளை மயக்கி மாள்வுலகம் கொண்டு செல்லுகிற தாடி பொன் முடியுடைய டியூட்டானிய (Teutonic) இனப் பழங்கதைக்குரிய அரக்கன்.

erm'ine, *n.* கீரியின உயிர் வகை, நடுவர் பெருமக்கள் அங்கிகளில் பயன்படுத்தப்படும் கீரியின உயிர்வகையின் மயிர்ப் பட்டு.

erne, *n.* கழுகு; கடற் கழுகு, வெள்ளைவாலுடைய கழுகின வகை.

Ern'ie, *n.* பரிசுரிமையுடைய பங்குமுறிச் சீட்டைத் தேர்ந்து கூட்டும் பொறியமைவு.

erode', *v.* சரம்பு, அரித்துத் தின், படிப்படியாக அழி.

Er'os, *n.* காதல் தெய்வம், காமன், மாரன், வேள்மதன், காதல்.

ero'sion, *n.* அரித்துத் தின்னுதல்; அரித்தழிப்பு, உள்ளரிப்பு; (மண்.) மழை வெப்பங் குளிர்காற்று முதலிய இயலாற்றல்களால் பாறைகளடையும் அரிப்புத் தேய்மான அழிவு.

erot'ic, *n.* சிற்றின்பப்பாடல்; காதற் பாட்டு; *a.* சிற்றின்பத்துக்குரிய, காமம் சார்ந்த.

erot'oman'ia, *n.* சிற்றின்ப நினைவுகளால் ஏற்படும் மயக்க வெறிச் சோர்வு; காமக்கோட்டி.

err, *v.* வழுவு, தவறுசெய்; பிழைபடு; சரிநுட்ப நிலை பிறழ்வுறு; இலக்குத் தவறு; நேர்மை தவறு; பாவம் செய்.

e'rrand, *n.* தூதுரை, பணிமுறைத் தூதுச் செய்தி; ஏவலர் இடையீட்டுப் போக்குவரவு, பணிமுறைப் போக்குவரவு; பணிமுறைப் போக்குவரவு நோக்கம்; பயண நோக்கம், குறிக்கொண்ட செய்தி.

e'rrand-boy, *n.* பணித்துறைக் குற்றேவலன், இடையீட்டுப் போக்குவரவுப் பணியாள்.

e'rrant, *n.* வீரச்செயல் நாடிச் சுற்றித்திரிகிறவர்; *a.* அலைந்து திரிகிற; வீரச்செயல் நாடிச் சுற்றித்திரிகிற; தவறு செய்கிற; நெறிதிறம்பிய.

e'rrantry, *n.* வீர அருஞ்செயல் வேட்டம், வீர அருஞ்செயல் நாடிச் சுற்றித்திரியும் நிலை; அருஞ்செயல் வேட்டை வீரர் நடைமுறைப்பாங்கு; அருஞ்செயல் தேட்ட வீரர் எண்ணக் கனவுத் தொகுதி.

errat'a, *n. pl.* பிழைகள்; அச்சுத்தவறுகள்; அச்சுப் பிழைத் தொகுப்புப் பட்டியல்; *sing.* errat'um.

errat'ic, *a.* தவறுகிற, நெறிதிறம்பிய, ஒழுங்கற்ற; ஒழுங்காக இயங்காத; நடை ஒழுங்கற்ற; பழக்கவழக்கங்களில் ஏறுமாறான; கருத்துக் குழப்பமுடைய; நோய்வகையில் உடலில் இடத்துக்கு இடம் மாறிமாறித் தாவுகிற; (மண்.) சூழ்பாறைகளுக்கு அயல் வரவான.

erron'eous, *a.* பிழைபட்ட; சரியல்லாத, தவறான; பிழை மலிந்த; தப்பெண்ணத்தால் ஏற்பட்ட.

e'rror, *n.* தவறு, பிழைபாடு; தவறு செய்தல்; தவறான செயல்; தவறான கருத்து; கருத்துப் பிழைபட்டநிலை; நெறி பிறழ்ச்சி; மெய்ம்மையிலிருந்து விலகுதல்; கணிப்பீட்டுக்கும் மெய்ந்நிலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு.

ersatz', (செர்.) *n.* செயற்கைப் பகரப்பொருள், இயற்கைப் பொருளினிடமாகப் பயன்படுத்தத்தக்க செயற்கைக் கூட்டுப் பொருள்; *a.* பகரச் செயற்கைப் பொருளான.

Erse, *n.* அயர்லாந்து நாட்டுப் பழைய மொழியுடன் தொடர்புடைய ஸ்காத்லாந்து நாட்டு மேலை மேட்டுநில (Western Highlands) மக்கள் மொழி; *a.* ஸ்காத்லாந்து நாட்டு மேலை மேட்டுநில மக்கள் பேச்சு மொழிக்குரிய.

erst'while, *a.* முன்னுட்களுக்குரிய; *adv.* முன்னுட்களில்.

erubes'cent, *a.* சிவப்பாகின்ற; முகம் சிவக்கின்ற.

eructa'tion, *n.* உமிழ்தல், எரிமலை வகையில் அனல் கக்குதல்.

e'rudite, *a.* புலமை நிரம்பிய, அறிவாழம் வாய்ந்த.

erupt', *v.* பல் வகையில் ஈற்றினை ஊடுருவி வெளிப்படு; எரிமலை வகையில் வெடித்துக்கிளம்பு; திடீர் வெடிப்புறு.

erup'tion, *n.* எரிமலைவெடிப்பு; பொக்குளம், பரு; திடீர் உணர்ச்சியெழுச்சி; திடீர் ஊற்று எழுச்சி; போரின் திடீர்த் தொடக்கம்; நோயின் திடீர்த்தோற்றம்; திடீர்ச்சிரிப்பு; எதிர்பாரா நிகழ்ச்சி.

erup'tive, *a.* வெடிக்கிற; திடீரென வெடிக்கும் இயல்புடைய, எரிமலை வெடிப்பினால் தோன்றுகிற; எரிமலை வெடிப்பினால் மேலுந்தப்பட்ட; எரிவெடிப்பைச் சார்ந்த.

erysip'elas, *n.* அக்கி, உடல்மீது திண்சிவப்பு நிறம் படரும் நோய் வகை.

erythem'a, *n.* தோல் தடிப்பு நோய் வகை, தோலின்மீது பட்டை பட்டையாகத் தடிப்பு விழும் நோய்.

escalade', *n.* ஏணிமூலம் மதிலேறிக் கடத்தல்.

es'calator, *n.* இயங்கும் படிக்கட்டு; (தொ.) escalator clause, ஒப்பந்தத்தில் ஏற்ற இறக்க இசைவமைதி வாசகம்.

escallon'ia, *n.* தென் அமெரிக்க மலர்ச்செடி வகை.

escall'op, *n.* ஈரிதழ்த் தோடுடைய நத்தைச் சிப்பியினம்; சிப்பியோடு, சோழி.

escapade', *n.* தப்பியோடல்; கட்டுப்பாட்டுத் தளர்வு; தவறான நடத்தை, குறும்புச்செயல், துடுக்கு நடவடிக்கை.

escape', *n.* தப்பியோடுதல்; தப்பிப்பிழைத்தல்; இடர் பிழைப்பு; மறைந்தோடுதல்; தப்பியோடும் வகைதுறை; தப்பியோடியநிலை; கைநழுவிச் செல்லல், நழுவல்; வெளியேற்றம்; ஒழுக்கு, கசிவு; ஒழுக்கு குழாய்; கசிபுழை; வெளிப்படுவழி; வெடித்து வெளியேறல்; நெறிபிறழ்ச்சி; தற்செயலான தவறு; சிறு குற்றம்; மன்னிக்கத்தக்க வழு; குறும்புச்செயல்; சோர்வகற்றும் வகைமுறை, நேரம் போக்கும் முறை; பணிமாற்று ஈடுபாடு; இலக்கியத்தில் மெய்ம்மை விட்டோடும் போக்கு; தப்பியோடியவர்; தப்பியோடியது; காடாக வளர்ந்து தோட்டத்திலிருந்து வெளிப்படரும் செடி வகை; *a.* இலக்கியத்தில் வாழ்வின் மெய்ம்மையிலிருந்து தப்பியோடுகிற; ஒப்பந்த வாசகத்தில் கட்சிக்காரர் கடப்பாட்டுத் தளர்வுக்குரிய சூழ்நிலை குறித்த; *v.* தப்பிச்செல்; பிழைத்தோடு; இடரிலிருந்து தப்பிப்பிழை; தண்டனைக்கு விலகிச்செல்; சிறையிலிருந்து தப்பியோடு; மறைந்தோடு; கட்டிலிருந்து வெளியேறு; பாதுகாப்புடன் வெளியே செல்; தட்டிக்கழி; தவிர்; அகப்படாமல் தப்பு; நழுவிச்செல், நழுவு; கசி, ஒழுகு, வெளிச்செல்; (தொ.) escape clause, ஒப்பந்தத்திலிருந்து விடுவித்துக்கொள்ளக் கூடிய பிரிவு; escape mechanism, (உள.) வேண்டாத வற்றை விலக்குதற்குரிய உள்மனச் சூழ்திற முயற்சி.

escapee', *n.* தப்பி ஓடுபவர்.

escape'ment, *n.* போக்கிடம், வெளிச்செல் வழி; மணிப்பொறியில் சமநிலைப்பொறிக்கும் இயக்கும் சக்திக்கும் இடையே தொடர்புசெய்து ஒழுங்குபடுத்தும் அமைவு.

escarp', *n.* அரணைச் சூழ்ந்துள்ள செங்குத்தான திடீர்ச் சரிவுக்கரை; அரணடுத்த அகழின் கரை; செங்குத்தான சரிவு; *v.* செங்குத்தான திடீர்ச்சரிவு உருவாக்கு.

escarp'ment, *n.* நேர்ச்செங்குத்தான மலைச்சரிவு; அரணில் நேர்ச்செங்குத்தான கரைச்சரிவு; அகழின் கோட்டைப்புறக் கரை.

eschalot', *n.* வெள்ளைப்பூடு மணமுடைய வெங்காய வகை.

eschatol'ogy, *n.* அம்மை மறுமைக் கோட்பாடு; சாவு இறுதித்தீர்ப்பு துறக்கம் நரகம் முதலியவை பற்றிய கொள்கைத் தொகுதி.

escheat', *n.* இறையுரிமைப்பாடு, பறிமுதலான உடைமை அலது விருப்ப ஆவணமெழுதப்பெறுத மரபற்றவர் உடைமை அரசுக்கோ அரசுநிலைக் குடிவார முதல்வர்க்கோ இயல்பாகச் சென்றடைதல்; இறையுரிமைப்பாட்டுக்கு உரிய உடைமை; பறிமுதல்; ஏ. இறையுரிமைப்படுத்து; இறையுரிமைப்பட்ட உடைமையாகச்சென்று மீள்வுறு; பறிமுதல் செய்.

eschew', ஏ. தவிர், விட்டொழி, விலக்கு.

eschscholt'zia, *n.* பொதுவாக மஞ்சள் வண்ணமலர்களையுடைய செடிவகை.

esclandre, (பிர.) *n.* அவதூறு, இகழ்ச்சியுரை, பழிப்புரை.

es'cort[1], *n.* வழிகாப்பாளர்; வழித்துணைக்குழு; வழிகாப்புக் கப்பல்; வழிகாவற் கப்பற்குழு; மெய்க்காவலர்; மெய்க்காவல் உழையர்; மெய்க்காவல்; *a.* வழித்துணையான; மெய்க்காவலான; (தொ.) escort carrier, பாதுகாப்புடன் செல்லும் கப்பல் கூட்டத்திற்கு வழித்துணையாகச் செல்லும் விமானந்தாங்கிக் கப்பல்.

escort'[2], ஏ. மெய்க்காவலாகச் செல்; வழித்துணையாக உடன் செல்; துணையாக உடன்செல்.

es'critoire, *n.* தாள் எழுதுகோல் முதலிய பொருள்களை வைக்க உதவும் இழுப்பு அறைகளுள்ள சாய்வான எழுது மேசை.

escrow', *n.* சில நிபந்தனைகள் நிறைவேறும் வரை மூன்றுவது ஆளுடைய பாதுகாப்பில் ஒப்படைக்கப்படும் எழுத்து மூலமான சட்ட ஒப்பந்தம்.

escud'o, *n.* 4 ஷில்லிங்கு 5 பென்ஸ் மதிப்புள்ள போர்ச்சுகீசிய நாணயம்; *pl.* escud'os.

es'culent, *n.* தீனி, உண்ணத்தக்கது; *a.* மனிதனுல் உண்ணத்தக்க.

escutch'eon, *n.* கிடுகு, விருது தாங்கிய கேடயம்; மரபுரிமைசின்னம்.

es'kar, es'ker, *n.* (மண்.) ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் அமைந்த பனிகடட்டி வரம்பு.

Es'kimo, *n.* வடதுருவம் சார்ந்த பகுதிகளில் வாழ்கின்ற 'எஸ்கிமோ' என்ற வகுப்பினர்; *pl.* Es'kimoes.

esote'ric, *a.* சிலருக்குமட்டும் கற்றுக்கொடுக்கக்கூடிய; மறைபொருளான.

espagnolette', *n.* பிரஞ்சுநாட்டுப் பலகணித்தாழ்ப்பாள்.

espal'ier, *n.* கொழுகொம்புப் பலகணி.

espart'o, *n.* தாள்செய்வதற்காக ஸ்பெயின் வடஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புல்வகை, தாள் செய்யப் பயன்படும் புல்வகை.

espe'cial, *a.* தனிச்சிறப்புள்ள; மேதகவுடைய; தனியொன்றிற்கான.

Esperan'to, *n.* உலகப் பொதுச் செயற்கைமொழி.

espi'al, *n.* ஒற்றுதல், வேவுபார்த்தல்.

espieglerie, (பிர.) *n.* போக்கிரித்தனம்.

es'pionage, *n.* வேவுபார்த்தல்; ஒற்றுடல்.

esplanade', *n.* மதிற்கோட்டைக்கும் நகரத்துக்கும் இடையுள்ள அகலிடம்.

espous'al, *n.* மணவுறுதிசெய்தல்; திருமணம்; மேற்கொள்ளுதல்.

espouse', ஏ. திருமணம் செய்துகொள்; மகட்கொடு; மணக்க உடன்படு; ஆதரவுகொடு.

espressivo, (இத்.) *adv.* (இசை.) உணர்ச்சியுடன், மெய்ப்பாட்டுடன்.

esprit, (பிர.) *n.* நுண்ணறிவுத்திறம், மதிநுட்பம், எழுச்சி; (தொ.) *esprit de corps*, குழுமதிப்புணர்ச்சி, குழுவின்கண் கவலையுடைமை; *esprit fort*, நிண்ணிய நெஞ்சினர், தற்சிந்தனையாளர்.

espy', ஏ. உற்றுப்பார்; கண்டுபிடி.

Es'quimau, *n.* = Eskimo; *pl.* Es'quimaux.

esquire', *n.* திருவாளர் போன்ற அடைமொழி.

ess'ay, *n.* முயற்சி; கட்டுரை; ஏ. ஆய்வுநடத்து, சோதித்துப்பார்.

ess'ayist, *n.* கட்டுரையாளர்; பரிசோதிப்பவர்.

ess'e, *n.* உளதாந் தன்மை; இயல்பு.

ess'ence, *n.* சாறு; சாரம்; உள்ளியல்பு; பிழிவு; உள்ளபொருள்; தனிச்சிறப்புள்ள பொருள்; இன்றியமையாத பொருள்; நறுமணப்பொருள்.

Essene', *n.* யூதத்துறவியர் குழுவினருள் ஒருவர்.

essen'tial, *n.* இன்றியமையாத கூறு; தலையாய கொள்கை; *a.* இன்றியமையாத, சாருன; எளிதில் ஆவியாகிற.

estab'lish, ஏ. நிலைநாட்டு; உறுதிப்படுத்து; நிலைபேறுடையதாக்கு; நிறுவு; சட்டப்படி அமை.

estab'lished, *a.* நிலைநாட்டப்பட்ட; சட்டப்படி நிறுவப்பட்ட.

estab'lishment, *n.* நிலைநாட்டுதல்; நிறுவுதல்; பணியாளர்குழாம்; தொழிலகம்; குடித்தனம்.

establishmentar'ian, *n.* சட்டப்படியான திருச்சபைக் கொள்கையைத் தழுவுபவர்; *a.* சட்டபூர்வமான திருச்சபைச் சார்புடைய.

estaminet, (பிர.) *n.* பிரஞ்சுநாட்டு அருந்தகம்.

estate', *n.* சொத்து: சொத்துரிமை: வரிசையர்; மொத்த வரவு செலவினங்கள்.

esteem', *n.* மதிப்பு; ஏ. உயர்வாகக்கருது.

esteemed', *a.* மதிக்கப்பட்ட, மதிப்புக்குரிய.

es'timable, *a.* மதிக்கத்தக்க.

es'timate, *n.* மதிப்பீடு; மதிப்பீட்டுப்பட்டியல்; ஏ. மதிப்பிடு; அளவிடு; கணக்கிடு; (தொ.) the estimates, சட்டமன்றத்தில் வைக்கப்படும் மதிப்பீட்டுக் கணக்கு.

estima'tion, *n.* மதிப்பிடுதல்; கணக்கிடுதல்; ஊகம்.

estop', ஏ. (சட்.) விலக்கு; தடு.

estopp'el, *n.* (சட்.) தன் தவருல் தடைப்படல்.

estov'ers, *n. pl.* அவசியமான பொருள்கள்.

estrade', *n.* மேடை.

estrange', ஏ. நட்பைக்கெடு, மனஸ்தாபம் உண்டாக்கு.

estranged', *a.* நட்புமுறிவுற்ற; மனவேறுபாடு கொண்ட.

estreat', *n.* எடுகுறிப்பு.

es'tuary, *n.* ஓதம் பொங்குமுகம், கழிமுகம்.

esur'ient, *a.* பசித்துள்ள, பேராசையுள்ள.

et'a, *n.* கிரேக்க நெடுங்கணக்கின் ஏழாவது எழுத்து (E நெடில்.)

etat-major, (பிர.) *n.* படைத்துறைப்பணியாளர், படைத்துறைப்பணியாளர் அலுவலகம்.

et cet'era, etcet'era, *n.* முதலியவை, இன்னோரன்ன பிற; (சு வ.) *etc.*, & *c.*

et cet'eras, etcet'eras, *n. pl.* மிகையான வைகள், சில்லறைப் பொருள்கள்.

etch, ஏ. உலோகத்திற் செதுக்கு வேலைசெய்.

etch'ing, *n.* செதுக்குருவக்கலை; செதுக்குருவம்.

etern'al, *a.* நிலைபேறுடைய, சாசுவதமான.

etern'alize, etern'ize, ஏ. நிலைபெறச்செய்; பொன்றுப் புகழுடையதாக்கு.

etern'ity, *n.* நிலைபேறுடைமை; ஈறில்காலம்; பேரூழி; துறக்க வாழ்வு.

Etes'ian, *a.* ஆண்டுதோறும் வேனிற்காலத்தில் ஏறத்தாழ 40 நாட்கள் வரை நிலநடுக்கடலில் வடமேற்கிலிருந்து வீசுகிற, நிலநடுக்கடல் வடமேற்குப் பருவக்காற்றைச் சார்ந்த; (தொ.) Etesian winds, நிலநடுக்கடல் வடமேற்குப் பருவக்காற்று.

eth'ane, *n.* (வேதி.) வெளிறிய நிறமாக எரிசுடர் வீசுகிற நீரில் கரையாத நிறவாடையற்ற நீர்க்கரியகச் சேர்மவகை.

eth'er, *n.* முகில் மண்டலத்துக்கு அப்பாற்பட்ட தூய வான வெளி; விசும்பு, இயலுலகெங்கணும் இடையற நிரம்பி மின்காந்த அலைகளின் இயக்கத்துக்குரியதாகக் கருதப்படும் ஊடுபொருள்; மயக்க மருந்தாகப் பயன்படுகிற எளிதில் ஆவியாகக்கூடிய சேர்மநீர்மவகை.

ether'eal, ether'ial, *a.* புலன்கடந்த, நுண்பொருளான; கட்புலனுகாத; காற்று போன்ற, ஆவியான, நொய்தான; வானுலகத்தைச் சார்ந்த, உலகப்பொருள்களுக்கு அப்பாற்பட்ட; இயற்கைமீறிய நுண்ணியல் மேனித் தோற்ற நடையுடைய; தெய்வ ஆவி வடிவான; (வேதி.) மயக்க மருந்தாகப் பயன்படும் நீர்மவகை சார்ந்த; (இய.) மின்காந்த அலை ஊடுபொருள் சார்ந்த.

eth'erize, *v.* மயக்க மருந்துவகை நீர்மமாக மாற்று; மருந்து நீர்மவகை பயன்படுத்தி மயக்கமூட்டு.

eth'ic, eth'ical, *a.* நன்னெறி சார்ந்த, நெறிமுறை பற்றிய; மருந்துச் சரக்குகளில் கட்டளை ஒழுங்கு மீறுத.

eth'ics, *n. pl.* ஒழுக்கவியல்; அறவியல் ஆய்வேடு; நன்னெறிக் கோட்பாடுகளின் தொகுதி; மனிதப்பண்பாடு நடத்தைகள் பற்றி ஆராயும் மெய்விளக்கத்துறை; நடை ஒழுங்கு முறை முழுப்பரப்பாய்வியல்.

Ethiop'ian, *n.* ஆப்பிரிக்காக் கண்டத்தில் எதியோபியா நாட்டவர், மனித இனநூலின்படி மனிதப்பேரினத்தின் இனங்களில் ஒன்று, கருநிற மனித இனம்; *a.* எதியோபியா நாட்டைச் சேர்ந்த; கருமை நிறமுடைய.

eth'moid, *a.* சல்லடைபோன்ற, அரிதட்டுப்போன்ற; (தொ.) ethmoid bone, முகர்தல் நரம்புகள் செல்வதற்குரிய பல துளைகளையுடைய சதுர வடிவான மூக்கடி எலும்பு.

eth'narch, *n.* இனஆட்சி முதல்வர்; மாகாண ஆட்சியாளர்.

eth'nic, eth'nical, *a.* இனத்துக்குரிய; மனித இனப்பிரிவு சார்ந்த; மனித இன ஆராய்ச்சிக்குரிய.

ethnog'raphy, *n.* இனப்பரப்பு விளக்கவியல், மனித இனப் பரப்புப் பற்றிய விஞ்ஞான விளக்க ஆய்வியல்.

ethnol'cgy, *n.* மனிதவின இடைவேறுபாட்டுத்தொடர்பு நூல், மனித இனவகை வேறுபாடுகளையும் தொடர்புகளையும் பண்பாடுகளையும் பற்றிய ஆய்வியல்; பண்பாட்டுச் சார்பான மனிதவினநூல்.

et hoc gen'us om'ne, (ல.) (தொ.) இவைபோன்றன பிறயாவும்; இன்னோரன்ன பிற.

ethol'ogy, *n.* மனிதப் பண்பாண்மை ஆக்கம்பற்றிய ஆய்வு நூல்.

eth'os, *n.* பண்பாண்மை, தனிப்பண்பமைதி; இயல்பான நடத்தை ஒழுங்கமைதி; ஒழுக்க உயர்நிலை இயல்பு; நாட்டுச் சிறப்புப்பண்பு; இனப்பண்பு; சமுதாயப் பொதுப்பண்பு; மக்கட்பண்பு; அமைப்புமுறைத் தனியியல்புக் கூறு.

eth'yl, *n.* (வேதி.) வெறிய முதலியவற்றிலடங்கிய அடிப்படை நீர்க்கரியகப் பொருள்.

et'iolate, *v.* செடிவகையில் ஒளிபடாமல் தடுத்துப் பசும் பகுதி வெளிறச்செய்; ஆள்வகையில் வெளிறச்செய்து நோய்த்தோற்றம் உண்டுபண்ணு.

etiol'ogy, *n.* = aetiology.

etiquette', *n.* ஒழுங்காசாரம், சமுதாய ஆசாரமுறை; அரசவை மென்னய ஒழுங்குமுறை; விஜைமுறை நடையொழுங்கு; குழுநலக்கூட்டுப்பாட்டொழுங்கு முறை, எழுதாக் கட்டுமுறைச் சட்டதிட்ட முறை.

et'na, *n.* எரிவெறியத்தின் மூலம் சிறு அளவான நீர்மங்களைச் சூடாக்குவதற்குரிய கொள்கல வகை.

Etne'an, *a.* எட்ணை (Etna) என்னும் எரிமலை சார்ந்த அல்லது போன்ற.

Et'on, *n.* இங்கிலாந்தில் பழங்காலமுதல் இருந்து வருகிற பொதுப்பள்ளி இடம் பெற்றுள்ள பட்டணம்; (தொ.) Eton collar, மேற்சட்டைக் கழுத்துப்பட்டைக்கு வெளியே அணியப்படும் அகன்ற விறைப்பான கழுத்துப்பட்டை; Eton crop, பெண்ணின் தலைமயிரைப் பையன் தலைமயிரைப் போல் குறுகத்தறித்தல்; Eton jacket, இடுப்புவரைமட்டும் நீண்டிருக்கும் பையனது குறுகிய மேற்சட்டை.

Etrus'can, *n.* இத்தாலியிலிருந்த பண்டை எட்ரூரியா (Etruria) வைச் சேர்ந்தவர்; *a.* பண்டை எட்ரூரியா சார்ந்த.

et seqq. et sequen'tes, et sequen'tia, (ல.) (தொ.) பின் வருவன; பின்வரும் சொற்கள் பக்கங்கள் முதலியன.

etude, (பிர.) *n.* சிற்றிசைப் பாடல்; சிற்றிசைப் பயிற்சி.

etui', etwee', *n.* ஊசிகள் வைக்கும் சிறுபெட்டி; பற்குச்சிகள் வைக்கும் சிறு பேழை.

etymol'ogize, *v.* அடிச்சொல் வரலாறு கொடு, சொல்லிலக்கணம் காட்டு; சொல் வரலாறு உய்த்தறிவி; சொல் வரலாறு பயின்றுராய்.

etymol'ogy, *n.* சொல்லாக்க விளக்கம்; அடிச்சொல்வரலாறு; மொழியியலின் சொல்லாக்க விளக்கத்துறை; சொல்லிலக்கணம், சொல் திரிபு வேறுபாடு ஆயும் இலக்கணப்பகுதி.

et'ymon, *n.* அடிப்படை மூலச்சொல், வேர்ச்சொல்.

eucalyp'tus, *n.* தைலந்தரும் தேவதாரு மரவகை; (தொ.) eucalyptus oil, நச்சுத் தடைமருந்தாகப் பயன்படும் நீலகிரித் தைலம்.

eu'charis, *n.* அடிப்பூண்டுடைய தென் அமெரிக்க மணிவடிவ வெண்மலர்ச் செடி வகை.

Eu'charist, *n.* இயேசுநாதரின் இறுதி விருந்துச் சடங்கு; இறுதி விருந்தின் வழிபாட்டுத் திருவிணையில் பயன்படுத்தப்படும் அப்பத் தேறல்கள்.

euchlor'ine, *n.* டேவி (Davy) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒள்ளிய மஞ்சள்-பச்சைக்கலவை நிற நிலக்கரி வளி.

eu'chre, *n.* அமெரிக்கச் சீட்டாட்ட வகை; *v.* அமெரிக்கச் சீட்டாட்ட வகையில் மூன்று பிடி பிடிக்காமல் தோல்வியுற்ற எதிர்ப்பாட்டக்காரரின்மீது கெலிப்பாதாயம் பெறு.

Eu'clid, *n.* எகிப்தைச் சேர்ந்த அலெக்சாண்டிரியாவில் கி. மு 300-இல் இருந்த யூக்ளிட் என்ற அறிஞரியற்றிய வடிவியல் சார்ந்த கருப்பொருள் நூல்; யூக்ளிட் வடிவியல் கருப்பொருள் நூலின் ஓர் ஏட்டுப்படி; பொதுமுறை வடிவியல் நூல்.

Euclid'ean, *a.* கிரேக்க வடிவியலறிஞர் யூக்ளிட் என்பாருக்குரிய; யூக்ளிட் வகுத்துணர்ந்து கண்ட மூல மெய்ம்மைகளுக்கிசைவான இலக்கணமுடைய இடவெளி சார்ந்த.

eudaem'onism, *n.* நிறை இன்ப அமைதியை இலக்காகக் கொண்ட ஒழுகை முறை அமைப்பு.

eudiom'eter, *n.* இரும்பு மூடிவழி மின்பொறி உட்செலுத்தி உள்ளிருகும் வளிகளை இயைவிக்கும் வாய்ப்புடைய படியள விட்ட கண்ணுடிக் குழாய் வகை.

eugen'ic, *a.* மனிதவின மேம்பாட்டாராய்ச்சி சார்ந்த.

eugen'ics, *n. pl.* இன ஆக்க மேம்பாட்டியல், இனத்தை மேம்படுத்தி வளம்பட உயர்த்தும் வகைமுறைகள்பற்றி ஆராயும் ஆய்வுத்துறை.

euhem'erism, *n.* புராணகதைகளுக்கு வரலாற்று அடிப்படையான விளக்கம் அளிக்கும் முறை, தெய்வங்கள் மக்கள் ஆர்வ வழிபாட்டுக்குரிய பெருமக்களே என்று கூறும் விளக்கம்.

eul'ogize, *v.* புகழ்ந்து பேசு, புகழ்ந்து எழுது.

eul'ogy, *n.* புகழ்ச்சி, புகமுரை.

Eumen'ides, *n. pl.* கிரேக்க பழங்கதை மரபுப்படி 'நற்றெய்வங்கள்', வெறித்தெய்வ அணங்குகளுக்குரிய மங்கலப் பெயர்.

eun'uch, *n.* அலி; முற்கால அரசவைகளில் அமர்த்தப்பட்ட விதையகற்றப்பட்ட ஆண் பணியாள்.

euon'ymus, *n.* புதர்ச்செடி வகை.

eupep'tic, *a.* நல்ல உணவுச் செரிமான நிலை உள்ள.

euph'emism, *n.* மங்கல வழக்கு, தீயசொல்லை மறைத்துக் கூறும் மங்கலக் குறிப்பு; இடக்கரடக்கர் வழக்குச்சொல்; மூணைத்த கெட்ட திறங்களை மறைத்துச் சிறு கெடுபண்பு களாகக் கூறுதல்.

euph'ony, *n.* இன்னோசை; செவிக்கினிமை; சொல் தொடர் ஆகியவற்றின் வகையில் எளிய இன்னோசை நோக்கிய ஒலியியல் வேறுபாடு.

euphor'bia, *n.* விறுவிறுப்பான பால் போன்ற சாறுள்ள புதர்ச்செடி வகை.

euphor'ia, euph'ory, *n.* நன்னிலையுணர்வு, நன்னிலை உடையேம் என்ற மனநிறைவுநிலை.

euph'rasy, *n.* கண்கோளாறு நீக்க முன்னர்ப் பயன்படுத்தப் பட்ட செடி வகை.

Euphros'yne, *n.* கிரேக்க பழங்கதையில் கலைநயத் தெய்வ அணங்குகளில் ஒருவர்.

euph'uism, *n.* அணிகள் மட்டின்றிச் செறிவுற்ற போலிச் செயற்கை மொழிநடை.

Euras'ian, *n.* பறங்கியர், ஐரோப்பிய-ஆசிய தாய் தந்தை யரை உடையவர்; *a.* ஐரோப்பிய ஆசிய பிறப்புடைய; ஐரோப்பா-ஆசியா ஆகிய இரண்டையும் சார்ந்த.

Eurat'om, *n.* அமைதிமுறை சார்ந்த அணு ஆற்றலின் கூட்டுவள ஆக்கத்துக்காக 1958-இல் அமைந்த பிரான்சு-இத்தாலி-மேலைச்செர்மனி-பெல்ஜியம்-நெதர்லாந்து-லக்ஸம் பர்க் ஆகிய நாடுகளடங்கிய கூட்டுறவு (European Atomic Energy Committee என்ற பெயர்த்தொடரின் முதலிரு சொற் பகுதிகளின் இணைப்புக்குறிப்பு).

eurek'a, *n.* ஆராய்ச்சி வெற்றி எக்களிப்பு; *int.* கண்டு கொண்டேன்! (வெற்றி எக்களிப்பு விளிக்குறிப்பு)

eurhyth'mic, *a.* ஒத்திசைந்த, இசைவு பொருத்தமுடைய.

eurhyth'mics, *n. pl.* உடலியக்க ஒத்திசைவமைதி; இசை முறை உடலியக்க ஒத்திசைவமைதிப் பயிற்சி.

Eu'romarket, Eu'romart, *n.* பிரான்சு-இத்தாலி-மேலைச் செர்மனி-பெல்ஜியம்-நெதர்லாந்து-லக்ஸம்பர்க் ஆகிய நாடுகள் அடங்கிய 1959-இல் நிறுவப்பட்ட ஐரோப்பியப் பொது வாணிகக்களக் கூட்டுறவமைப்பு (European Common Market).

Europe'an, *n.* ஐரோப்பியர்; *a.* ஐரோப்பாவைச் சார்ந்த; ஐரோப்பாவில் நிகழ்கின்ற; ஐரோப்பாவெங்கும் பரவியுள்ள.

Eu'rovision, *n.* அணைத்தைரோப்பியத் தொலைக்காட்சிப் படர்வலையமைப்பு (European Television Network).

eu'sol, *n.* வண்ணக் காரத்திலிருந்து உருவாக்கப்படும் நுண் மங்கள் கொல்லும் நச்சுத்தடை மருந்து.

Eustach'ian, *a.* யுஸ்டேஷியஸ் (Eustachius இறப்பு: 1574) என்ற இத்தாலிய உடற்கூற்று நூலறிஞரைச் சார்ந்த; (தொ.) Eustachian tube, முன் தொண்டையிலிருந்து நடுக் காதுக்குழிவரையில் செல்லும் குழாய்.

eutec'tic, *a.* கூறுநிலையமைதியுடைய, கலவைகளில் ஒரே வெப்பநிலையில் ஒருங்கே திட்ப உருப்பெறும்படியான அளவுத் தொடர்பமைதியில் எல்லாக்கலப்புக் கூறுகளை யுடைய; (தொ.) eutectic mixture, நிலையமைதி அலகு, கூறுநிலையமைதியுடைய கலவை; eutectic point, eutectic temperature, கலவை கூறுநிலையமைதியடைவதற்குரிய தட்பவெப்ப நிலை.

Euterp'e, *n.* பண்டைக் கிரேக்கரின் இசைக்கலைத்தெய்வம்; ஒற்றைநாற்றடிமர வகை.

Euterp'ean, *a.* பண்டைக் கிரேக்க இசைக்கலைத்தெய்வம் சார்ந்த; ஒற்றைத்தடி மரவகை சார்ந்த.

euthanas'ia, *n.* நல்ல சாக்காடு; நோவில்லாச் சாவு; குணப்படுத்த முடியாத துன்பம் நிறைந்த நோயிலிருந்து செயற்கை முறையில் சாவை வருவிக்கும் முறை.

evac'uant, *n.* பேதி மருந்து; *a.* பேதியாகச்செய்கிற.

evac'uate, *v.* வெறுமையாக்கு; உள்ளடக்கப்பொருளை வெளியே கொட்டு; குடியெழுப்பி வெளியேற்று; இடர்ப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்து; படைவகையில் பின் வாங்கிச் செல், வெளியேறு; மலங்கழி.

evacua'tion, *n.* வெளியேற்றம், பின்வாங்குதல், வெளி யேற்றப்பட்ட பொருள்.

evacuee', *n.* வெளியேற்றப்பட்டவர், வீடிலி, ஊரிலி, நாடிலி.

evade', *v.* தவிர், விலக்கு; சூழ்ச்சி செய்து தப்பிச்செல், அகப்படாமல் தப்பு, விடைகொடாமல் மழுப்பு, வாதத்திற்கு இடங்கொடாமல் மேவிச்செல், பிடிகொடாமல் நழுவு; சட்டத்தை நயமாக மேவி ஏய்த்துவிடு; கடமையிலிருந்து ஒதுங்கிச்செல்; தட்டிக்கழி.

eva'ginate, *v.* (உட.) குழல்வடிவ உறுப்பு அகம்புறமாக மாற்றி வை.

eval'uate, *v.* கணி, தொகை மதிப்பிடு; கணக்கிடு, விலை மதிப்புக்கூறு.

evanesce', *v.* பார்வையிலிருந்து மறை, காணுமற்போ; உருமறைவுறு; உருவரை தெரியாமற் போ.

evanes'cent, *a.* விரைந்து மறைகிற; நிலையற்ற, அழியக் கூடிய; மிக நுண்கணிப்பியலான.

evan'gel, *n.* விவிலியநூலின் நான்கு சுவிசேஷப்பகுதிகளில் ஒன்று; அரசியற் கொள்கை; கோட்பாடு.

evangel'ic, *n.* விவிலிய மறையின் உயிர்த்தத்துவம் நன் னம்பிக்கை நற்செயல் இறுதியுணவழிபாட்டேற்பு முதலிய வற்றின் மூலமே வீடுபேறு எய்தும் என்று கொள்ளும் கோட் பாட்டையுடைய புரோட்டஸ்டாண்டுக் (Protestant) கிறித் தவ சமய உட்கிளையின் உறுப்பினர்; *a.* கிறித்தவ சமயநெறி சார்ந்த; விவிலிய மறைக்கோட்பாட்டுக்குரிய; நம்பிக்கை நற்செயல் திருவுணவழிபாடு மூலமே வீடுபேறு எய்தும் என்ற கோட்பாடுடைய.

evangel'ical, *a.* = evangelic.

evan'gelism, *n.* விவிலிய 'நற்செய்தி'யைப் பற்றி மேடை உரையாற்றுதல்.

evan'gelist, *n.* விவிலிய 'நற்செய்திகள்' எழுதிய நால்வரில் ஒருவர்; 'நற்செய்திகளை'ப் பற்றி மேடையுரையாற்றுபவர்; சமயத்திருப்பணி செய்யும் பொதுநிலை மக்களில் ஒருவர்.

evangelis'tic, *a.* 'நற்செய்திகள்' எழுதிய நால்வர்களைச் சார்ந்த; விவிலிய நூல் மேடைப் பேச்சாளரைப் பற்றிய.

evan'gelize, *v.* விவிலிய நூலைப்பற்றி உரையாற்று; கிறித் தவ சமயத்தைப் போதி.

evan'ish, *v.* திடீரென மறைந்துபோ; சிறிதாக மறைவுறு; மாயமாய்ப் போ.

evap'orate, *v.* ஆவியாய் மாற்று; ஆவியாய் மாறு; ஈரம் புலர்வுறு; ஈர நயப்பு வெளியிடு; மறைவுறு.

evap'orograph, *n.* அலைவிரிவியக்கமுடைய நெய்யாவிமீது நிழற்படிவம் படியவிடுவதன்மூலம் உருவெளி நிழலுருப் படுத்திக் காட்டும் கருவி.

eva'sion, *n.* சூழ்ச்சிசெய்து தப்புதல்; மழுப்புதல்; மேவிச் செல்லுதல்; கடமை தவிர்ப்பு; பிடிகொடாமை; தட்டிக் கழிப்பு; தட்டி ஏய்ப்பு; தட்டி ஏய்ப்பு முறை; போலிச் சாக்குப்போக்கு.

Eve[1], *n.* விவிலிய மரபின்படி மனித இனப்படைப்பின் முதற் பெண்; 'ஏவா'.

eve[2], *n.* (செய்.) மாலை; பெருநிகழ்ச்சியின் முன்னணை பொழுது.

evec'tion, *n.* நிலாவட்ட நிரைகோட்டின் ஏற்றத்தாழ்வு.

e'ven[1], *n.* (செய்.) மாலைக்காலம்.

e'ven[2], *a.* சரிமட்டமான, சமதளமான; வழவழப்பான, சம அழுத்தமுடைய; ஒருசீரான, மாறுபாடற்ற; ஏற்றத்தாழ் வில்லாத; சரிஒப்பான, சரிசம அளவான, சரிசம எண்ணிக் கையுடைய; சரிசம நிலையுடைய; சரிநடு அமைதி வாய்ந்த,

சாயாத, வெற்றிதோல்வியற்ற ; மாற்றமற்ற, மீண்டும் மூன்னதேயான ; மிகை குறையற்ற; எண்வகையில் சமனான, இரட்டைப் படையான ; மன உலைவற்ற, அமைதி வாய்ந்த ; ஏ. வழவழப்பாக்கு ; சரிசமமாக்கு ; ஒப்பாக்கிவிடு ; ஒப்பிடு ; ஒப்பாகு, ஒப்பாகக் குறி; *adv.* சரியாக ; கிட்டத்தட்ட ; ஒருவேளை ; அளவிலேனும் ; அளவாகக்கூட ; கூட, அளவிலேனும் (இழிவு சிறப்புக் குறிப்பு); அளவாகக்கூட (உயர்வு சிறப்புக் குறிப்பு) ; மேலும் மிகுதியான அளவில் ; (தொ.) be even with, பழிக்குப் பழி செய்து அமை.

eve'ning, *n.* மாலை, பொழுது சாய்வு முதல் படுக்கைவேளை வரையுள்ள நேரம் ; பகற்பொழுதின் கடைசிக் கட்டம் ; வாழ்க்கையின் கடைசிப் பருவம் ; ஓய்வுக்காலம் ; மாலை விருந்து நிகழ்ச்சி; நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட மாலைவேளை: (தொ.) evening dress, காலப்பாங்கிற்கேற்ப மாலை நேரத்துக்குரிய பாணியிலுள்ள உடை ; evening star, மாலை வெள்ளி; சுக்கிரன்; வியாழன்; புதன்.

e'vensong, *n.* ஆங்கில நாட்டுத் திருக்கோயிலில் (Church of England) மாலை வழிபாடு, மாலை வழிபாட்டு நேரம்.

event', *n.* நிகழ்ச்சி ; முக்கியமான நிகழ்ச்சி ; பந்தயம் கட்டப்பட்ட நிகழ்ச்சி ; விளைவு ; பயன் ; ஊசல் நிலைக்கணிப்பில் கூடுநிலை மாற்று நடப்பு ; (தொ.) at all events, in any event, in either event, எப்படியிருந்தாலும்; in the event of, நேர்வதானால், நிகழுமானால்.

e'ventide, *n.* மாலைக்காலம்.

even'tual, *a.* முடிவாக விளைகிற ; பயனுக நிகழ்கிற ; குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நிகழ்கிற, மேல் நிகழக்கூடிய.

eventual'ity, *n.* நேர்வு, மேல்நிகழ்வு, பின்வருநிலை, கூடிவிடும் நிகழ்ச்சி நிலை.

even'tuate, *v.* சென்று முடிவுறு, வந்து கைகூடு, விளைவாகு ; நிகழ், நேரிடு.

ev'er, *adv.* எப்போதும், எக்காலத்திலும்; இனி என்றென்றும் ; முடிவில்லாமல். ஓய்வொழிவின்றி ; (கேள்விகளில்) எப்போதாவது ; (எதிர்மறையுடன்) எந்த வேளையிலும் ; (தொ.) as ever, என்றையும்விடக் குறையாத அளவில் ; better than ever, என்றையும்விட நன்றாக ; ever after, பின் என்றென்றும் ; ever and anon, அவ்வப்போது, இடையிடையே; ever since, முதற்கொண்டு எப்போதும்; ever so, எவ்வளவோ; ever so many, எத்தனையோ; ever so much, எவ்வளவோ மிகுதியான அளவில் ; for ever, for ever and for ever, for ever and a day, வருங்காலத்திற்கெல்லாம், ஓய்வொழிவில்லாமல்.

ev'erglade, *n.* சதுப்பு நிலப்பரப்பு.

ev'erglades, *n. pl.* அமெரிக்காவில் தெற்கு பிளாரிடாவில் (South Florida) உள்ள சதுப்பு நிலம்.

ev'ergreen, *n.* ஆண்டு முழுதும் பச்சையாகவே இருக்கும் செடியின் வகை; *a.* எப்போதும் பச்சையாகவே இருக்கின்ற, என்றும் புதிதாக உள்ள ; (தாவ.) இலையுதிர்க்காத.

everlas'ting, *n.* எல்லையற்ற காலம்; என்றும் வாடா மலர் வகை ; வலிமையுள்ள கம்பளி வகை ; *a.* எக்காலத்துமுள்ள.

ev'ery, *a.* ஒவ்வொரு ; ஒவ்வொன்றாக எல்லா ; (தொ.) every now and then, every now and again, அடிக்கடி ; every other day, ஒன்றுவிட்டு ஒரு நாளாகத் தொடர்ந்து ; every so often, அவ்வப்போது, இடையிடையிட்டு.

everyday', *a.* நாள்தோறும் நிகழ்கின்ற ; வழக்கமான நாட்களில் பயன்படுத்தப்படுகின்ற, வழக்கமான, யாவரும் அறிந்த.

Ev'eryman, *n.* பொதுமுறை மனிதன், பொதுமக்களின் படிவமாதிரி.

evict', *v.* வெளியேற்று, அப்புறப்படுத்து, துரத்து, உரிமையிலிருந்து விலக்கு ; சட்டமுறைப்படி சொத்தைத் திரும்பப் பெறு.

evic'tion, *n.* வெளியேற்றல், அப்புறப்படுத்துதல்.

ev'idence, *n.* சான்று ; சான்றாளர், சான்றாளர் குழு ; சான்றுமூலம், சான்றறிவிப்பு ; எண்பிப்புக்குரிய ஆதாரம் ; அடையாளம், அறிகுறி, தடம் ; தெளிவு, வெளிப்படத் தெரியும் பொருள் ; *v.* சான்றளி, எண்பி ; தெளிவுபடுத்து ; சுட்டிக்காட்டு ; சான்றுபகர்.

ev'ident, *a.* தெளிவான, ஐயமற்ற; தெளிவாகத் தெரிகிற; தெளிவாக உணரப்படத்தக்க.

ev'il, *n.* கேடு, பொல்லாங்கு; கொடுமை; கேடான பொருள்; தீவினை, பழி, பாவம்; தீங்கு, ஊறு; *a.* கெட்ட, தீங்கான; (தொ.) Aleppo evil, கொப்புள நோய்; evil eye, கண்ணேறு, தீங்கான பார்வை, கெட்ட எண்ணமுள்ள நோக்கு ; King's evil, கண்டமாலை நோய்.

evince', *v.* காட்டு ; குறித்துக் காட்டு ; பண்புக்கூறு வெளிப்படுத்திக் காட்டு.

ev'irate, *v.* விதையடி; ஆண்மைத் திறத்தைப் போக்கு, ஊக்கமழி.

evis'cerate, *v.* குடலை வெளிப்படுத்து, உள்ளுறையகற்று; உயிர்ப்பூக்கமழி; வெறுமையாக்கு.

evoke', *v.* ஆவிகளை மந்திரித்து வரவழை; எண்ணங்களை உள்ளத்தின் நினைவாழத்திலிருந்து வெளிவரச்செய் ; உயர் நீதிமன்றங்களில் முன்னிலைப்பட ஆணை அனுப்பு.

evolu'tion, *n.* அலர்தல், இதழவிழ்தல், விரிவுறுதல்; சுருளவிழ்வு; படிப்படியாக விரிந்து செல்லும் வளை கோட்டுத் தொகுதி ; நிகழ்ச்சிகளின் படிப்படியான தொடர்ச்சி ; வளையலத் தொகுதி, வெப்ப அலைத் தொகுதி; உயிர் மலர்ச்சி, உள்ளது சிறத்தல், உயிர் இனங்களும் இன வகைகளும் படிமுறை வளர்ச்சியடைந்தே தொகை வளமும் வகை வளமும் வளர்ச்சி மாறுபாடுகளும் உயர்வும் பெற்றன என்ற உயிரியல் கோட்பாடு.

ev'olutive, *a.* படிமுறை வளர்ச்சி நோக்கிச் செல்கிற.

evolve', *v.* அலர்வி ; மலர்வுறு, இதழவிழ் ; படிப்படியாகத் தோற்றுவி, முறையாக வெளிப்படச்செய், படிவளர்ச்சியுறுவி, உருமலர்ச்சியுறுவி, முதிர்வுறுவி ; படிப்படியாகத் தோன்று, முறையாக வெளிப்படு, படிவளர்ச்சியுறு, உருமலர்ச்சியுறு, முதிர்வுறு ; வெப்பஒளி வகைகளில் அலை அலையாக இயங்குவி ; உணரப்பட்டவற்றிலிருந்து வருவி ; உய்த்துணரவை ; புனைவுருவாக்கு ; புனைவுருவாகு.

evul'sion, *n.* வன்பறிப்பு, வலுக்கட்டாயமாகப் பிரித்தெடுத்தல்.

ewe, *n.* ஆட்டுக்கடாரி, பெண் ஆடு ; மிகவும் கொண்டாடப்பட்ட உரிமைப் பொருள்.

ewe'-necked, *a.* குதிரை வகையில் மெல்லிய வளைவான கழுத்தினையுடைய.

ew'er, *n.* சாடி; அகல்வாயினையுடைய நீர்க்குவளை.

e'wigkeit, (செர்.) *n.* மென்காற்று உயர்வெளி, அறியப்படாச்சூழல்.

ex, (ல.) *prep.* இருந்து, வெளியே ; இல்லாமல்; (தொ.) ex dividend, அடுத்த பங்கூதியம் இல்லா நிலையில்; ex ship, கப்பலிலிருந்தே கொள்ளும் நிலையில் ; ex store, கிடங்கிலிருந்தே கொள்ளும் நிலையில்.

ex—, *pref.* முன்பிருந்த, முன்னாள்.

exa'cerbate, *v.* கடுப்பூட்டு, கசப்புப் பெருக்கு; எரிச்சலூட்டு, சினம் தூண்டிவிடு; நோய் கிளறிவிடு, நோவுபெருக்கு; புண்படுத்து.

exact', *a.* சரிநுட்பமான, மயிரிழைத்திருத்தமுடைய, துல்லியமான, இம்மியும் பிசகாத ; கண்டிப்பான, விதிமுறை தவறவிடாத ; வரையறைத் திருத்தப்பாட்டுக்கு இடந்தராத ; வரையறை தீர்ந்த, கணக்கான ; *v.* இறையிறு, வலிந்து தண்டு, வன்கண்மையுடன் கைப்பற்று ; கட்டாயப்படுத்து, வலியுறுத்திச் செய்வி; நெருக்கடிப்படுத்து, உடனடியாகச் செய்து தீரவேண்டும்நிலை உண்டுபண்ணு.

exac'tion, *n.* இறையிறுக்கச் செய்தல், கொடுமைசெய்து வரி தண்டுதல்; சட்டமீறிய வரி; அளவுகடந்த வரிச்சுமை; வலிந்து பெறுதல்; வேண்டாப்பணிச்சுமை.

exact'ly, *adv.* அவ்வாறே; மிகுநுட்பமாக.

exa'ggerate, *v.* மிகைபடக்கூறு; மிகைப்படுத்து, பெரிதாக்கு; இயல்புகடந்ததாக்கு, இயற்கை மீறியதாக்கு.

exalt', *v.* உயர்த்து; உயர்பதவியில் அமர்த்து; புகழ்ந்து பேசு; உயர்மதிப்புக்கொடு: பண்பு மேம்படுத்து; மேன்மக்களாக்கு; நிறவகையில் செறிவார்ந்ததாக்கு.

exalta'tion, *n.* உயர்த்துதல்; பதவி உயர்வு; இறும்பூது, பெரு மகிழ்வுணர்ச்சி; ஆர்வமிகுதி; சோதிடத்தில் கோளின் உச்சபலனிலை.

examina'tion, *n.* தேர்வு, மாணவர் திறமை ஆய்வுமுறை; கூராய்வு, மேலாய்வு, நுணுகிய கண்காணிப்பு; அறிவுச் சோதனை, திறமை ஆய்வு.

examina'tion-paper, *n.* தேர்வுக்கேள்வித்தாள்; தேர்வு விடைத்தாள்.

exam'ine, *v.* தேர்வுசெய், தேர்வுநடத்தித் தெரிந்தெடு; கூர்ந்தாராய். துருவியுணர்; நுணுகி ஒப்பிட்டுக் காண்; உசாவு, விசாரணை செய்; மேற்பார், கண்காணி.

examinee', *n.* தேர்வுக்கு அல்லது விசாரணைக்கு உட்படுபவர்.

exam'ple, *n.* சான்று, எடுத்துக்காட்டு; முன்மாதிரி, மேற்கோள், பின்பற்றத்தக்க வழிகாட்டி; முன்னோடி நிகழ்வு, முன்சான்று; எடுத்துக்காட்டுமாதிரி, மாதிரிக்கூறு; எச்சரிக்கைக்குரிய சான்று; பயில்தேர்வுக்குரிய மாதிரி.

exan'imate, *a.* இறந்த; உயிரற்ற; கிளர்ச்சியற்ற, ஊக்கமற்ற.

ex an'imo, (ல.) *a.* உள்ளார்ந்த, மனமார்ந்த; உணர்ச்சி நிறைந்த; *adv.* உள்ளார, மனமார.

ex'arch, *n.* பண்டைக்கீழை ரோமாபுரிப் பேரரசில் (Byzantine Empire) தொலை மாகாண மண்டலிகர்; கீழைத திருச்சபையில் முதல்வர்; முதல்வர் ஆட்பெயர்; சமய மாவட்ட முதல்வர்.

exas'perate, *v.* சினங்கிளறிவிடு; எரிச்சலூட்டு, கடுப்புண்டுபண்ணு; நோவுபெருக்கு; மேலும் மோசமாக்கு; தீமையில் தூண்டிவிடு.

ex cathed'ra, (ல.) *a.* அதிகாரபூர்வமான; *adv.* மேலாணமை உரிமையாக, தனி அதிகாரத்துடன்.

ex'cavate, *v.* அகழ், உட்குடைவாக்கு; தோண்டு, நிலம் பறி; குழிதோண்டு, பள்ளம்வெட்டு, கால்வாய் தொடு; தோண்டியெடு; மறைவிலிருந்து வெளிப்படுத்து; அகழ்வாராய்ச்சி செய்.

excava'tion, *n.* தோண்டுதல்; குழி, பள்ளம், நில அகழ்வு; நில அகழ்வாய்வு.

ex'cavator, *n.* தோண்டுபவர்; அகழ்பொறி.

exceed', *v.* மிகைபடு; எல்லைகட; பெருகு; பெரிதாகு; உயர்; மிகைபடச்செய்; பெருக்கு; விஞ்சு, மேம்படு; முதன்மைநிலையடை.

excel', *v.* விஞ்சு, மேம்படு; தகைமைபெற்றிரு, சிறப்புறு: அருஞ்செயல்புரி; சால்புறு, முதன்மைநிலை பெறு.

ex'cellence, *n.* சிறப்பு, நயநேர்த்தி, மேம்பாடு, மிகுநலம், சால்பு; தனித்தகுதி; முதன்மைநிலை.

ex'cellency, *n.* மேதகைமை, மண்டலிகர் தூதர் நிலையிலைரைச் சுட்டியுரைக்கும்போது பதவிப் பெயரின் முன்னே தனித்தோ வழங்கப்படும் மதிப்படைமொழிப்பட்டம்; ஆளுநர் மனைவியர் பட்டம்; (தொ.) His Excellency, Her Excellency, Their Excellencies, மேதகையர்; Your Excellency, Your Excellencies, மேதகையீர்.

ex'cellent, *a.* நேர்த்திவாய்ந்த, மேம்பட்ட, மிகச்சிறந்த; ஈடெடுப்பற்ற, ஒப்புவமையற்ற, முதல்தரமான.

excel'sior, *n.* மிகவும் உயர்ந்தது; உள்திணித்து இடுகிரப்ப உதவும் மரச்சீவல்; *a.* மிக உயர்ந்த.

except', *v.* விதிவிலக்காக்கு, சேர்க்காமல் ஒதுக்கிவிடு; தனி விலக்களி; எதிர்த்துத் தடங்கல் கூறு; *prep.* தவிர்த்து, நீங்கலாக; *conj.* என்றாலல்லாமல்.

excep'ting, *prep.*, *conj.* = except.

excep'tion, *n.* விதிவிலக்கு; விதிவிலக்கான பொருள்; வழக்க மீறிய செய்தி, இயல்புமீறிய ஒன்று, தடைஎதிர்ப்பு; (தொ.) take exception, எதிர்ப்புத்தெரிவி; the exception proves the rule, விதிவிலக்கு ஒழுங்கை மெய்ப்பிக்கிறது; with the exception of, தவிர்த்து, நீங்கலாக.

excep'tional, *a.* விதிவிலக்கான; பொதுநிலைமீறிய, வழக்க மீறிய, இயல்புகடந்த; தனிச்சிறப்புவாய்ந்த.

ex'cerpt, *n.* நூலிலிருந்து எடுத்த பகுதி; சங்க நடவடிக்கைகளிலிருந்து தனியாக அச்சிடப்பட்ட கட்டுரை; *v.* நூலிலிருந்து ஒரு பகுதியை எடு, தனிமேற்கோளாக எடுத்துக் காட்டு.

excess', *n.* மிகுதி; மிகைபாடு, விஞ்சிய அளவு; வரம்பு கடந்த மிகையளவு; மிகையளவுப்பொருள், மிகையளவுத்தொகை; இடைமிகைவேறுபாடு; ஊர்தி முதலியவற்றின் சீட்டில் கீழ்ப்படியை மேற்படிகளாக்குவதற்கு வேண்டிய இடைவேறுபாட்டு மிகை; வழக்கமீறிய எல்லை, இயல்பு கடந்த அளவு; மட்டுமீறிய பழக்கம், பேரூண், பெருங்குடி; ஒழுக்கவரம்புக்கேடு; வரம்புகடந்த செயல்; அடாச்செயல், அட்டுழியம்; (தொ.) excess fare, மிகைக்கட்டணம்; excess luggage, பெறப்பட்ட் கட்டணத்துக்கு மேற்பட்ட மூட்டையின் எடையளவு; excess profits duty, excess profits tax, மட்டிறந்த ஆதாயங்களின் மீது விதிக்கப்படும் வரி; in excess of, அளவுமீறிய.

exchange', *n.* பரிமாற்றம், கொடுக்கல்வாங்கல்முறை; பண்டமாற்று; அடிதடிச்சச்சரவுகளில் இருதிறக் கைகலப்பு; சொல்வீச்சுவாதங்களில் இருபுற இடைக்கலப்பு; கொள்வினை கொடுப்புவினை, செயல் எதிர்ச்செயல்; கைதிகள் கைமாற்றம்; படைக்குப் படை படைவீரர் பரிமாற்ற ஏற்பாடு; நாணய மாற்று; அயல்நாடுகள் நாணயப் பரிவர்த்தனை; பணமுறி மாற்று; இடங்களிடையே பணமதிப்பு வேறுபாடு; பரிமாற்றப்பொருள்; பரிமாற்றத்தில் மாற்றப்பட்ட பொருள்; நாணயச் செலாவணித்துறை; நாணயச் செலாவணித் தொழில்; இடையீட்டலுவலகம், பங்குக் களப் பணிமனை; தொலைபேசி இணைப்பகம்; *v.* பரிமாறிக்கொள், கொடுத்து வாங்கு; பண்டமாற்றுக்கொள், பண்டமாற்றுக் கொடு; நாணயப் பரிவர்த்தனை செய்; கைதிகளைப் பரிமாறிக்கொள்; சொற்களைப் பரிமாறிக்கொள்; வாதாட்டத்தில் இருபுறமும் கைகலந்துகொள்; சச்சரவில் இருபுறமும் இடைகலந்து கொள்; இருபுறமும் மாறிமாறிச் செயலாற்று; சரிமாற்றுக நாணயம் பெறு; சரிமாற்றுக வழங்கு; படைக்குப்படை பரிமாற்ற முறையில் மாறிச்செல்; (தொ.) bills of exchange, பாதுகாப்பிற்காக ஒரே தொகையும் தேதியுமுள்ள வெவ்வேறு தொகுதிகளான நாணயமாற்றுச் சீட்டுகள்; par of exchange, மற்றொரு நாட்டு நாணயத்தோடு ஒப்பிட்ட படியளவு மதிப்பு; rate of exchange, course of exchange, அயல்நாட்டு நாணயமாற்றுச் சீட்டை வாங்கும் விலை மதிப்பு; அயல்நாட்டு நாணயமாற்று வேற்றுமை வீதம்; வெவ்வேறு நாடுகளிலுள்ள இருவரின் கடன் தொகைகளை முடிவுசெய்யும் திட்ட அமைப்பு.

exchan'geable, *a.* பரிமாற்றம் செய்யத்தக்க; பண்டமாற்றம் செய்யத்தக்க.

excheq'uer, *n.* கருவூலம், நாட்டுநிலை நிதிச்சாலை; நாட்டரசின் வரிவருமான நிதிப்பாதுகாப்புத்துறை; தனிப்பட்ட வரின் பொருட்குவை; கைவசமுள்ள நிதி; பிரிட்டனின் பழைய நிதியரங்க முறைமன்றம்; (தொ.) Chancellor of the Exchequer, பிரிட்டன் நிதி அமைச்சர்.

excise' [1], *n.* தீர்வை, உள்நாட்டுப்பொருள்வரி; உள்நாட்டுப் பொருள்வரி அரங்கம்; *v.* தீர்வை கொடுக்கும்படி கட்டாயப் படுத்து; அளவுமீறி வரிசுமத்து.

excise' [2], *v.* வெட்டியெடு, நறுக்கு; உறுப்பைத் துண்டித்து விடு; ஏட்டின் பகுதியைப் பிரித்தகற்று.

excise'man, *n.* தீர்வையாளர், தீர்வையரங்கக் காவற் பணியாளர்.

excit'able, *a.* தூண்டிவிடத்தக்க, கிளறிவிடக்கூடிய; எளிதிற் சினங்கொள்கிற; எளிதில் உணர்ச்சி கொள்கிற.

ex'citant, *n.* தூண்டிவிடும்பொருள்; ஊக்கும்பொருள்; உணர்ச்சி கிளறிவிடுவது; மின்னதிர்வூட்டு பொருள்; *a.* அவாக் கிளறுகிற; செயல் தூண்டிவிடுகிற; செயல்விரைவு படுத்துகிற, ஊக்குகிற.

excita'tion, *n.* கிளர்ச்சியுறச் செய்தல்; கிளர்ச்சியுறச் செய்யும் வகைமுறை; கிளர்ச்சியுற்ற நிலை.

excit'ative, excit'atory, *a.* எழுச்சியூட்டும் பாங்குடைய.

excite', *v.* ஏவு, செயல் தூண்டு, இயக்கிவிடு; ஊக்கு, செயல்விரைவுபடுத்து, பரபரப்பூட்டு; கொந்தளிப்பூட்டு, கலக்கு; எழுப்பு, உணர்ச்சி கிளறிவிடு; அவாத்தூண்டு; சினமூட்டு; மின் அதிர்வூட்டு, காந்த இயக்கமுண்டு பண்ணு; நிழற்படத்தகட்டுக்கு ஒளிப்பதிவாற்றலுண்டு பண்ணு, செயற்பதப்படுத்து.

excit'ed, *a.* கிளர்ச்சியுற்ற; ஆர்வமெழுப்பப்பட்ட, உணர்ச்சி வசப்பட்ட; பரபரப்புற்ற, கொந்தளிப்பான; சுறுசுறுப்பாயுள்ள.

excite'ment, *n.* மன எழுச்சி, உணர்ச்சியூக்கம்; கிளர்ச்சி; பரபரப்பு, கொந்தளிப்பு; கிளர்ந்தெழச்செய்வது.

excit'ing, *a.* கிளர்ச்சியூட்டுகிற, எழுச்சிதரும் பாங்குடைய; உணர்ச்சியூட்டுகிற; மெய்சிலிர்க்கப் பண்ணுகிற; ஊக்குகிற, பரபரப்பூட்டுகிற; செயல்தூண்டுகிற, விரைவூட்டுகிற.

exclaim', *n.* கூக்குரல்; *v.* சாற்று, குரலெழுப்பு; கூவு, ஆர்த்துரை; உணர்ச்சி மீதூரக் கூறு; வியந்துரை.

exclama'tion, *n.* கூவிளி, கூக்குரல், ஆர்ப்புரை; ஆர்த்தெழுந்துரைத்த சொற்கள், உணர்ச்சியுரை; வியப்பொலி; வியப்புக்குறி (!); (இலக்.) வியப்பிடைச்சொல்.

exclam'atory, *a.* வியப்பைக் காட்டுகிற; வியப்பை உட்கொண்ட.

exclude', *v.* தவிர்; விலக்கு, நீக்கு; சேர்த்துக்கொள்ளாமல் ஒதுக்கிவை; தள்ளிவை, நீக்கிவை; பிரித்துக்காட்டு, வேறுபடுத்திவை; உள்ளே வராமல் தடைசெய்; வெளியேற்றிக் கதவடை; புறந்தள்ளு; நிகழாதபடி தடு; இயலாதபடி செய்.

exclu'sion, *n.* விலக்கல்; தவிர்ப்பு, நீக்கம்; புறந்தள்ளுதல், வெளியேற்றுதல்.

exclus'ive, *n.* தனிக் குத்தகைச்சரக்கு, வேறு எங்கும் கிடைக்காத பொருள்; பிறரை விலக்கிவைக்க விரும்புபவர்; *a.* விலக்கிவைக்கிற; நுழைவு தடுக்கிற; ஒதுக்கித்தள்ளும் பாங்குடைய; நுழைவுரிமை கொடுக்க விரும்பாத; குறுகிய மனப்பான்மை உடைய; சமுதாயத்துடன் பழகாது ஒதுங்கி வாழ்கிற; தேர்ந்தெடுத்த சிலருக்குரியதாகக் கட்டுப்பட்ட; பிறரால் அணுக முடியாத; தனிப்பட்ட, பிறிது விலக்கிய, தனி ஒன்றான, தனி ஒரே; சரக்குகள் வகையில் தனி உரிமைத் தன்மையுடைய; வேறு எங்கும் கிடைக்காத.

exco'gitate, *v.* சிந்தித்துக் கண்டுபிடி, தேர்ந்து தெளி; நினைந்துருவாக்கு, புனை.

excogita'tion, *n.* கடுஞ்சிந்தனை; சூழ்செயல்; புனைவு, புத்தேற்பாடு.

excommun'icate, *v.* சமயவிலக்குச்செய்; திருவிணை வழிபாடு முதலிய எல்லாத் திருச்சபைத் தொடர்புகளிலிருந்தும் விலக்கிவை.

excommunica'tion, *n.* சமயக்கட்டு விலக்கு, திருச்சபைத் தொடர்புரிமை நீக்கம்.

excommun'icatory, *a.* திருச்சபைத் தொடர்பினின்றும் விலக்குதற்குரிய.

exco'riate, *v.* உராய்ந்து தோலினைத் தேய்வி; தோல் உரி.

excoria'tion, *n.* தோல் உரித்தல்; தோல் உரிக்கப்பெறும் நிலை.

ex'crement, *n.* குடலினின்றும் வெளிப்படுத்தப்படும் கழிவுப் பொருள், மலம், எரு, சாணம்; வண்டல், மண்டி.

excrement'al, excrementitia'l, excrementi'tious, *a.* மலம் போன்ற கழிவுப் பொருளுக்குரிய; கழிவுப்பொருள் அடங்கிய.

excres'cence, *n.* வீண்தசைத் திரட்சி; காய், கழலை; மிகையுறுப்பு; திடீர் எழுச்சி.

excres'cent, *a.* வீண்தசைத் திரட்சியான, மிகை வளர்ச்சியான; வேண்டா மிகையான; (இலக்.) எழுத்துப் பேறான, இன்னெலிக்குரிய மிகையான.

excret'a, *n. pl.* மலசலம், கழிவுப்பொருள்கள்.

excrete', *v.* கழித்து வெளியேற்று, எச்சங்கழி.

excre'tion, *n.* மலங்கழித்தல்; மலம், கழிவுப்பொருள்.

excre'tive, *a.* கழிக்கவல்ல; மலங்கழிப்புப்பற்றிய.

excre'tory, *n.* மலத்தை ஏற்று வெளியேற்ற உதவும் இழை நாளம்; *a.* கழித்து நீக்கும் இயல்புள்ள.

excru'ciate, *v.* மிக்க வேதனை செய், சித்திரவதை செய், நோகப்பண்ணு, துன்புறுத்து.

excru'ciating, *a.* சித்திரவதை செய்கிற, கடுவேதனை தருகிற.

excrucia'tion, *n.* சித்திரவதை, தொந்தரவு, அல்லல், துன்பம்.

ex'culpate, *v.* பழியினின்றும் விடுவி, பழியை மன்னித்துவிடு; நேர்மை மெய்ப்பி, குற்றச்சாட்டிலிருந்து விடுவி.

excul'patory, *a.* குற்றச்சாட்டினின்றும் விடுவிக்கும் பாங்குடைய.

excu'rrent, *a.* வெளிப்பாய்கிற; குருதி வகையில் நெஞ்சுப் பையினின்றும் புறம்செல்கிற; குருதி செல் நாடிக்குரிய; வெளிச்செல்ல உதவுகிற; புறமுந்தி நிற்கிற.

excur'sion, *n.* சுற்றுலா, சுற்றி மீள வருவதற்குரிய பயணம்; இன்பக்குழுப் பயணம்; இன்பப் பயணக்குழு; அரண் வெளியேறித்தாக்குதல்; கொள்ளைக்காரரின் தூறையாட்டு; காவற்படையினர் தண்டமுறைச்சுற்று; வானகோளங்களின் நெறிப்பிறழ்ச்சி; இலக்கியத்துறையில் எடுத்தது விடுத்து மற்றொன்று விரித்தல்.

excur'sionist, *n.* இன்பப் பயணம் செய்பவர்.

excurs'us, *n.* விரிவிளக்கத் தனிக்குறிப்பு, நூலிறுதி விளக்கக் குறிப்பு; *pl.* excurs'uses.

excusa'tory, *a.* சாக்குப்போக்குச் சொல்லுகிற; குற்றக் காரண விளக்கம் அடங்கிய; மன்னிப்புக் கேட்கிற.

excuse', *n.* குற்றங்குறை விளக்கம்; பிழை மன்னிப்புக் கோருவதற்குரிய செயல்விளக்கம்; சாக்குப்போக்கு, குற்றம் மழுப்பு வாதம்; சாக்கு, செயலுக்குரிய காரண விவரம்; கடமையிலிருந்து விடுவிக்கும்படி கோருவதற்குரிய காரணம்; மன்னிப்பு; பொறுத்தருள்கை; *v.* குற்றம் பொறுத்தருள், மன்னி; குற்றம் புறக்கணித்தருள்; குற்றத்தினின்றும் விடுவி; குற்றப்பொறுப்புக் குறைத்துக் காட்டு; பொறுப்பினின்றும் விடுவி; மன்னிப்புக் கோரிக்கையை ஏற்றருள்; குற்ற மழுப்பிப் பசப்பு; சாக்குபோக்குக் கூறு; தண்டம் குறைத்தருள்; ஆசாரமுறைத்தவறைப் பொறுத்து அமை; வருகை தவிர்க்க இசைவளி; (பே-வ.) இயலாநிலைக் கண்டிப்புக் குறித்து வருந்தாதிரு; (தொ.) excuse me, பொறுத்தருள்க; குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்; எதிர்த்துக் கூறுவதற்கு மன்னிக்க வேண்டும்.

ex'eat, *n.* (பள்ளிகள் கல்லூரிகள் முதலியவைகளில்) சிறிது காலம் வராமலிருப்பதற்குரிய இணக்கம்.

ex'ecrable, *a.* வெறுக்கத்தக்க, அருவருப்பான.

ex'ecrate, *v.* வெறு, அருவருப்புறு; நிந்தி, தெறுமொழி கூறு.

execra'tion, *n.* வெறுத்தல்; கூறப்பட்ட தெறுமொழி; வெறுக்கப்பட்ட பொருள்.

ex'ecrative, *a.* சபிக்கிற ; பழிக்கிற ; பழிப்புச்சார்ந்த.

exec'utable, *a.* நிறைவேற்றப்படக்கூடிய, செய்து முடிக்கக் கூடிய.

exec'utancy, *n.* இசைக்கலைத் துறை நுட்பம்.

exec'utant, *n.* செய்து முடிப்பவர், செயல் வல்லுநர் ; கலை நுட்பம் தேர்ந்த இசை இயக்குநர்.

ex'ecute, *v.* செயலாற்று ; செய்துமுடி ; செயல்முற்றுவி ; திட்டத்தை நிறைவேற்று ; கையொப்பமிட்டு முத்திரை வைத்துப் பத்திரத்தை முற்றுப்பெறுவி ; ஆணையை நடை முறைப்படுத்து ; தீர்ப்பினைக் கொண்டுசெலுத்து ; சட்டத்தைச் செயற்படுத்து ; உடைமை உரிமை மாற்றிக்கொடு : கடமை நிறைவுறுத்து, பணிதீர் ; இசை இயக்கு ; தூக்கிலிடு.

execu'tion, *n.* செய்துமுடித்தல் ; நிறைவேற்றம் ; செயல் முறை, செயற்பாங்கு ; இசை இயக்குதிறம் ; படைக்கலத்தின் அழிவாற்றல் திறம், செப்ப அழிதிறம் ; தூக்குத்தண்டனை ; உடைமைக் கைப்பற்றீடு ; கடன்பட்டவர் கைப்பற்றீடு ; வேலைப்பாட்டுத் திறம், கைத்திறம்.

execu'tioner, *n.* தூக்கிலிடுபவர்.

exec'utive, *n.* சட்டநிறைவேற்ற ஆட்சித்துறை : தீர்ப்பு நிறைவேற்றுத்துறை ; செயல் நிறைவேற்றத்துறை, செயலாட்சித்துறை ; செயலாட்சிக்குழு ; நிறைவேற்றற்குழு ; செயற்குழு : செயல் ஆட்சித்துறையினர் ; செயலாட்சித் தலைவர் ; *a.* செயலாட்சித்துறை சார்ந்த ; நிறைவேற்றத்துறைக்குரிய ; ஆட்சியரங்கத்துறை சார்ந்த ; செயல் திறமைக்குகந்த ; செயல்சார்ந்த ; செயலாட்சித் தொடர்புடைய ; செயல் புரிகிற ; செயலாட்சி செய்கிற ; நிறைவேற்றுகிற ; சட்டத்தைச் செயற்படுத்தும் தகுதியுடைய ; சட்டநிறைவேற்றத் தொடர்புடைய.

ex'ecutor [1], *n.* நிறைவேற்றுபவர், செய்பவர்.

exec'utor [2], *n.* விருப்ப ஆவணம் நிறைவேற்றப் பத்திர முதல்வரால் அமர்த்தப்படுபவர் ; (தொ.) literary executor, எழுத்தாளர் வெளியிடாது விட்டுச்செல்பவற்றின் பொறுப்பு ஒப்படைக்கப்பெறுபவர்.

exec'utress, *n.* executor [1], executor [2], என்பவற்றின் பெண்பால் வடிவங்களுள் ஒன்று.

executri'ces, *n. pl.* executrix என்பதன் பன்மை.

exec'utrix, *n.* executor [1], executor [2] என்பவற்றின் பெண்பால் வடிவங்களுள் ஒன்று.

exeges'is, *n.* விவிலியத் திரு ஏட்டுவிளக்கம் ; பொருளுரை விளக்கம் ; விவிலுரை.

exeget'ic, exeget'ical, *a.* பொருள் விளக்கம் சார்ந்த ; விளக்கமாகக்கூறுகிற.

exeget'ics, *n. pl.* விவிலிய விளக்க ஆய்வுநூல்.

exeget'ist, *n.* விவிலிய ஏட்டு விளக்க ஆய்வாளர்.

exem'plar, *n.* முன்மாதிரி, மேற்காட்டு ; பின்பற்றத்தக்கவர் ; வகைமாதிரிப்படிவம் ; வகையின் எடுத்துக்காட்டு ; மாதிரி உரு, ஒத்திசைபடிவம் ; சுவடியின் சரிநேர்படி.

exemplar'ity, *n.* முன்மாதிரியான நடத்தை.

exem'plary, *a.* பின்பற்றத்தக்க ; மாதிரிப்படிவமாய் அமைந்த ; விளக்குகிற ; எச்சரிக்கையாகப் பயன்படுகிற.

exemplifica'tion, *n.* எடுத்துக்காட்டு மூலமாக விளக்குதல் ; எடுத்துக்காட்டுதல் ; எடுத்துக்காட்டு ; சரிநேர்படி, சரிபகர்ப்பு.

exem'plify, *v.* எடுத்துக்காட்டு மூலமாக விளக்கு ; முன் மாதிரியாயிரு ; அலுவலக முத்திரையிட்டு ஆவணத்துக்குச் சான்றுப்படியெடு ; சான்றுப்படியைக் காட்டி மெய்ப்பி.

exempt', *n.* தனி விலக்குரிமையளிக்கப் பெற்றவர் ; வரி செலுத்துவதனின்றும் விலக்களிக்கப் பெற்றவர் ; நாட்டுக் காவற்படைவீரர்களைத் தலைமை வகித்து நடத்தும் நான்கு பணியாளருள் ஒருவர் ; மேலாளர் இல்லாவிடத்து ஆட்சி புரிந்ததனால் தம் கடமையிலிருந்து விலக்குரிமை பெற்றவர் ; *a.* விலக்களிக்கப்பெற்ற, வரிக்கு உட்படாத ; கட்டுப்பாடு களுக்கு உட்படாத ; *v.* விலக்களி, நீக்கு, தவிர் ; விடுவி.

exemp'tion, *n.* விலக்கு, விலக்களித்தல் ; விலக்களிக்கப் பெற்ற நிலை ; சிறப்பு விலக்குரிமை ; பணி-கடமை-பொறுப்பு முதலியவற்றினின்றும் விடுதலை, விடுபாடு.

exen'terate, *a.* உள்ளீடு பிடுங்கியெடுக்கப்பெற்ற ; *v.* உள் ளீட்டைப் பிடுங்கியெடு.

exequat'ur, *n.* தூதாளரின் நாட்டு வேற்று அரசியல் ஏற் பமைவு ; போப்பாண்டவர் கட்டளைகளுக்கு ஆட்சியாளர் ஏற்பிசைவு ; போப்பாண்டவரால் அமர்த்தப்படும் மாவட்ட முதல்வர்கட்கு ஆட்சியினர் ஏற்பிணக்கம்.

ex'equies, *n. pl.* இறுதி வினைகள் ; பிண ஊர்வலம்.

ex'equy, *n.* exequies என்பதன் ஒருமை.

ex'ercise, *n.* உறுப்பின் பயனுட்சி, ஆற்றலின் கையாட்சி, உரிமையின் நடைமுறையாட்சி, பண்புத்திறங்களின் செய லாட்சி ; பண்புகளின் பயின்முறை ; தொழிற்கடமைகளின் செயலீடுபாடு ; அறவினைகளின் நடைமுறை ஈடுபாடு ; உடற் பயிற்சி ; மனப்பயிற்சிமுறை ; பயிற்சிக்குரிய பகுதி ; பயிற்சிப்பாடம் ; பல்கலைக்கழகப் பட்டத்துக்கு முற்படுட்ட பயிற்சி மேடையுரை ; கிறித்தவசமயக் கிளைவகையின் வழி பாட்டு மேடை வகுப்புமுறை உரை ; கிறித்தவ சமயக்கிளை வகையின் வழிபாட்டு மேடையுரைக் கூட்டம் ; கிறித்தவ சமயக்கிளை வகை ; *v.* கையாளு ; செயலில் பயன்படுத்து ; செயலாட்சி செய் ; உரிமை வகையில் பயனுட்சி செய் ; நடை முறைப்படுத்து ; பழக்குவி, பயிற்றுவி ; பயிற்சிமேற்கொள் ; பழகிப்பயில் ; உழைக்கவை ; முயற்சியிலீடுபடுத்து ; தொல்லை கொடு.

ex'ercise-book, *n.* பள்ளிப்பாடங்களை எழுதுவதற்கான சுவடி.

ex'ercises, *n. pl.* உடற்பயிற்சிப்பயில்முறைகள் ; படைத் துறை அணிவகுப்புப் பயிற்சிமுறைகள்.

exercita'tion, *n.* செயற்பழக்கம் ; பயிற்சி ; இலக்கியப் பயிற்சி ; சொற்பொழிவுக்கலைப் பயிற்சி.

ex'ergue, *n.* நாணயத்தின் அல்லது பதக்கத்தின் பின்புறத் தில் தலைமைப் பொறிப்புக்குக் கீழுள்ள சிறுவெற்றிடம் ; பொறிப்புக்குக் கீழுள்ள எழுத்துவரைவு.

exert', *v.* முயற்சியில் ஈடுபடுத்து, முயன்று உண்டுபண்ணு ; முயற்சியில் ஊக்கு, செயலில் முனை.

exer'tion, *n.* கடுமுயற்சி ; முனைத்த நடைமுறை, விரை செயல்.

ex'eunt, (*லா.*) *v.* (நாடகமேடைக்குறிப்பு) நடிகர்கள் மேடையை விட்டுச் செல்கிறார்கள் ; (தொ.) *exeunt omnes,* நடிகர்கள் எல்லாரும் மேடையைவிட்டுச் செல்கிறார்கள்.

exfol'iate, *v.* எலும்பு தோல் கனிப்பொருள்கள் வகையில் சிம்பு சிம்பாக உதிர்ந்துவிழு ; மரங்களின் பட்டைவகையில் அடை அடையாக உரிந்துவிடு.

exhala'tion, *n.* ஆவியாய்ப்போதல் ; வெளியே விடப்படும் மூச்சு, புற உயிர்ப்புவீச்சு ; சிற்றம் முதலிய பண்புகள் வகையில் திடீர் உணர்ச்சி வெளிப்பாடு ; புகைபோன்ற ஆவி, மூடுபனி ; மணம், வாடை, நாற்றம்.

exhale', *v.* ஆவிவடிவத்தில் வெளியிடு ; வாடை வீசச்செய் ; ஆவிவடிவத்தில் வெளிப்படுத்தப்பெறு ; ஆவியாய்ப்போ ; மூச்சுவிடு ; உடலின் நீர்மங்கள் வகையில் குருதியுடன் சிறிது சிறிதாகக் கசிந்தொழுகு ; ஊதித்தள்ளு, ஒழித்துக் கட்டு.

exhaust', *n.* புறம்போக்கி, கழிவுநீர் ஆவி வளி முதலிய வற்றை வெளியேற்றும் இயந்திரப்பொறியமைவு ; உள்வெப் பாலை வெளியேற்றமைவு ; வெளிச்செல் நீர்மம் ; நீர்மம் வெளிச்செல்வதற்குரிய நேர அளவு ; புறஞ்செல்காற்றேட்டம் ; புறஞ்செல் வளியொழுக்கமைவு ; ஆய்கல வளிவெளியேற்று முறை ; *v.* காற்று வளி நீர்மங்களை வெளிவாங்கு ; ஆய்கல முதலியவற்றை வெறுமையாக்கு ; தேக்கம் வடித்துத் தீர் ; செலவு செய்தழி, பயன்படுத்தித் தீர் ; பணம் கரையவை ; உரம் அழியச்செய் ; முற்றிலும் சோர்வுறுத்து ; சொல்வன யாவும் சொல்லித்தீர், செய்திகள் யாவும் தீர் ; தெரிந்து

கொள்ள வேண்டுவன எல்லாம் சொல்லு ; தெரிந்துகொள்ள வேண்டுவன எல்லாம் கண்டுபிடி ; ஆற்றல் இழக்கச்செய் ; வளம் வறக்கப்பண்ணு ; சோர்வடைவி.

exhaust'ed, *a.* செலவாய்விட்ட ; வடியப்பெற்ற ; வெளியேற்றித தீர்ந்த ; வெறுமையாக்கப்பெற்ற ; முழுமையும் பயன்படுத்தப்பட்ட ; முழுதும் ஊக்கமழிந்த ; முற்றும் சோர்வடைந்த ; நாடு வகையில் வலிமைமிழந்த, வளமிழந்த.

exhaust'ible, *a.* செலவுசெய்துதீரக்கூடிய, வெறுமையாக்கப் பெறத்தக்க.

exhaus'tion, *n.* முழுச்சோர்வு; முற்றும் வெறுமையாக்குதல்; முழுவதும் பயனபடுத்துதல் ; முற்றும் வெறுமையாக்கப் பெற்ற நிலை ; வாதங்களில் ஒற்றைமாற்றுகள் யாவும் தீர்வுறல்.

exhaus'tive, *a.* ஒரு பொருளைப்பற்றித் திர ஆயும் பாங்குடைய, தீர்வாய்வான ; ஒன்றுவிடாமல் யாவுமளாவிய, நுணுக்கம்விடா அகல்விரிவான.

exhaust'less, *a.* எடுக்க எடுக்கக் குறையாத, வற்றுத.

exhaust'-pipe', *n.* வளிபோக்கிக்குழல்.

exhib'it, *n.* (சட்.) சான்றுவணம் ; சான்றுக நீதிமன்றத்தில் கொண்டுவைத்துக் காட்டப்படும் பொருள் ; பொருட்காட்சியிலுள்ள காட்சிப்பொருள் ; பகட்டுக்காட்சி, ஆரவாரப்பகட்டு; *v.* பொருட்சுரட்சியில் வை ; பொதுவிடத்தில் காட்சிக்கு வை ; ஆய்வுக்காக முன் வை ; திறந்துகாட்டு, பகட்டாகக் காட்டு ; பண்பினை எடுத்துக்காட்டு, இயல்பினைத் தெளிவாகக் காட்டு ; குறித்துக்காட்டு.

exhibi'tion, *n.* பார்வைக்கு வைத்தல் ; பொருட்காட்சி ; புறப்பகட்டு, விளம்பரம் ; காட்சிக்கு வைக்கப்பட்டபொருள் ; பள்ளி ஆண்டின் இறுதியில் நடைபெறும் பொது ஆடல்-பாடல்-நாடகக்காட்சி ; கொடை, பொருளுதவி ; பல்கலைக் கழகப் புலவர்களுக்கு ஆதரவாகக் கொடுக்கப்படும் படி ; (மரு.) தீங்கு மாற்றுமுறை செயல் ; (தொ.) make an exhibition of oneself, பிறர் ஏளனத்துக்கிடமாக மடத்தனமாய் நடந்துகொள்.

exhibi'tioner, *n.* பல்கலைக்கழகத்தில் ஆதரவுப்படியைப் பெற்று வருபவர்.

exhibi'tionism, *n.* பகட்டாரவாரப்பாங்கு ; மிகைபட்ட நடத்தைப்பண்பு ; (மரு.) அம்மணமாகத் திரியும் சித்தக் கோளாறுநிலை.

exhib'itory, *a.* காட்டிக்கொள்ளுகிற, பகட்டிக்கொள்ளும் பாங்குடைய.

exhil'arant, *n.* ஊக்கந்தரும் மருந்து ; *a.* உணர்ச்சியூட்டுகிற, ஊக்குகிற, மகிழ்விக்கிற.

exhil'arate, *v.* மகிழ்வி, ஊக்கு, உயிர்ப்பூட்டு.

exhil'arating, *a.* மகிழ்விக்கிற, கிளர்ச்சியூட்டுகிற.

exhilara'tion, *n.* கிளர்ச்சியுற்றநிலை, மகிழ்வு, பூரிப்பு, களிப்பு.

exhort', *v.* வற்புறுத்து, ஆர்வமாகத்தூண்டு, நற்செயலுக்கேவு ; அறிவுரை கூறு ; பரிந்து பேசு.

exhorta'tion, *n.* நன்மதிகூறல் ; செவியறிவுறூஉ, அறிவுகொளுத்தும் உரை ; சமயச்சொற்பொழிவு.

exhort'ative, exhort'atory, *a.* நன்மதிகூறும் பாங்குடைய ; நலந்தூண்டுகிற.

ex'humate, exhume', *v.* தோண்டியெடு, புதைத்த பிணத்தை வெளியிலெடு ; மறைவிலிருந்து வெளிப்படுத்து.

ex'igence, ex'igency, *n.* அவசரத்தேவை ; நெருக்கடிநிலை; பெருந்துயரம்.

ex'igent, *a.* அவசரமான, உடனடியாகச் செயலாற்ற வேண்டிய, உடனே கவனிக்கவேண்டிய ; நெருக்கடியான ; தொல்லைமிக்க ; கொடுமைப்படுத்துகிற.

ex'igible, *a.* கேட்கப்படக்கூடிய ; கொடுமைசெய்து வாங்கப்படக்கூடிய.

exig'uous, *a.* குறைவான, போதாத.

ex'ile, *n.* நாடு கடத்தும் தண்டனை ; நாடு கடத்தப்பெற்றவர் ; நீடித்த தாயக நீங்கு வாழ்வு, தொலைவயல்நாட்டுவாழ்வு ; *v.* நாடுகடத்துத் தண்டனை அளி, நாடு கடத்து.

exil'ian, exil'ic, *a.* பாபிலனில் (Babylon) யூதர்கள் நாடு கடத்தப்பட்டமை சார்ந்த.

exil'ity, *n.* மென்மை, நொய்ம்மை, நன்மை, நயம்.

exist', *v.* உளதாகு, உளதாயிரு ; வாழ், வாழ்ந்திரு ; குறிப்பிட்ட சூழ்நிலையில் அமைவுறு, தோன்று, காணப்படுபொறு.

exis'tence, *n.* உளதாயிருத்தல் ; வாழ்தல் ; உளதாம் தன்மை ; வாழ்வு ; வாழ்க்கைவழி, பிழைப்பு ; வாழும்முறை; உள்பொருள் ; வாழுயிர் ; உள்பொருள் உலக முழுமை, இயலுலகு.

exist'ent, *a.* உளதாயிருக்கிற ; வாழ்கிற ; உண்மையான ; நடைமுறையிலுள்ளதான.

existen'tial, *a.* உளதாந்தன்மை சார்ந்த ; புறநிலை உண்மை நிலை வலியுறுத்துகிற.

existen'tialism, *n.* புறமெய்ம்மை மறுத்த வாழ்வியல் மெய்ம்மைக் கோட்பாடு.

ex'it [1], *n.* மேடையிலிருந்து நடிகர் வெளியேறுதல் ; புறப்பாடு, போதல், கடந்து செல்லுதல் ; வெளியேறும் உரிமை ; வெளிச்செல்லும் வழி ; புறப்பட்டுப்போகும் வழி, உலகமாகிய மேடையைவிட்டு வெளியேறல், இறப்பு.

ex'it [2], (ல.) *v.* (நாடகமேடைக் குறிப்பு) நடிகர் மேடையை விட்டுச் செல்கிறார்.

ex-lib'ris, *n.* புத்தக உடைமை உரிமையாளரின் பெயர் சின்ன முதலிய விவரங்களடங்கிய முகப்புப்பொறிப்புச் சீட்டு.

exoder'm, *n.* (தாவ.) அரும்பின் புறத்தோல் மேல்தோல்.

ex'odus [1], *n.* புறப்பாடு, குடியெழுந்துசெல்லும் குழுவின் வெளியேற்றம் ; எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் (Israelites) மேற்கொண்ட செலவு.

Ex'odus [2], *n.* (விவி.) பழைய ஏற்பாட்டில் எகிப்திலிருந்து யூதர் வெளியேற்றம்பற்றிக் கூறும் பகுதி.

ex offi'cio, (ல.) *a.* பதவிமுறைப்பட்ட, அலுவல் சார்பான ; *adv.* பதவிமுறையில்.

exogam'ic, exog'amous, *a.* ஒருவன் தனது இனத்துக்குப் புறம்பேதான் மணம் செய்துகொள்ளவேண்டுமென்னும் கட்டுப்பாடு உடைய.

exog'amy, *n.* ஒருவன் தனது இனத்துக்குப் புறம்பேதான் மணம் செய்துகொள்ளவேண்டுமென்று கட்டுப்படுத்தும் வழக்க மரபு.

ex'ogen, *n.* (தாவ.) தண்டின் புறவளர்ச்சியுடைய இருகூதுப்பு விதைச்செடியினம்.

exog'enous, *a.* (தாவ.) தண்டின் புறவளர்ச்சியுடைய இருகூதுப்பு விதைச் செடியினம் சார்ந்த.

ex'on, *n.* நாடுகாவல் படைவீரர்களின் நாற்பெருந்தலைவருள் ஒருவர்.

exon'erate, *v.* குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய் ; குற்றமில்லையென்று தெளிவுபடுத்து ; பொறுப்பிலிருந்து விடுவி.

exonera'tion, *n.* பழிதுடைத்தல், குற்றம் இல்லையென்று தெளிவுபடுத்தல், பொறுப்பு விடுவிப்பு.

exon'erative, *a.* கடப்பாட்டினின்றும் விடுவிக்கிற, பொறுப்பிலிருந்து நீக்குகிற.

exopath'ic, *a.* நோய்வகையில் உடம்புக்கு வெளியேயிருந்து தோன்றுகிற.

exoph'agous, *a.* மனிதர்களை உண்ணும் மனிதர்களிடையே தம் இனத்தவர்களல்லாத மற்றவர்களை மட்டும் உண்ணும் வழக்கத்தையுடைய.

exoph'agy, *n.* மனிதர்களை உண்ணும் மனிதர்களிடையே தம் இனத்தவர்களல்லாத மற்றவர்களை மட்டும் உண்ணும் வழக்கம்.

exophthal'mia, exophthal'mos, exophthal'mus, *n.* (மரு.) இயல்புக்கு மீறிக் கண்விழி பிதுங்கியிருத்தல்.

ex'oplasm, *n.* உயிர்ச்சத்தின் புறப்படலம்.

exor'bitance, exor'bitancy, *n.* வரம்புகடந்த அளவு, மட்டுமீறிய தன்மை.

exorb'itant, *a.* வரம்பிகந்த, அளவுகடந்த, முறையற்ற.

ex'orcism, *n.* பேயோட்டுதல்; பேயோட்டும் விணைமுறை வகை; பேயோட்டுதற்கான மந்திரம்.

ex'orcist, *n.* பேயோட்டி.

ex'orcize, *v.* மந்திரித்துப் பேயோட்டு; பேய்நடமாட்டம் இல்லாமற்செய்.

exor'dial, *a.* முகப்புரையான.

exord'ium, *n.* தொடக்கப்பகுதி, முகப்புரை; *pl.* exor'dia, exor'diums.

exoskel'eton, *n.* (வில.) எலும்பாகவோ தோலாகவோ உள்ள உடலின் புறத்தோடு.

exote'ric, *a.* வெளியரங்கமான; கொள்கை கோட்பாடுகள் வகையில் புறத்தார்க்கும் தெளிவாகத் தெரியத்தக்க; மாணவர்கள் வகையில் உள்வட்டப்போதனைக்குச் சேர்த்துக் கொள்ளப்படாத; மிகப்பொதுப்படையான; சாதாரணமான.

exote'rics, *n. pl.* எல்லாருக்கும் தெரிவிக்கப்படத்தக்க பொதுக்கொள்கை முறைகளின் தொகுதி, கோட்பாட்டு முறை.

exot'ic, *n.* வேற்றுத் திணைச்செடி வகை; சூழலுக்கு ஒவ்வா அயல் வரவுப்பொருள்; *a.* வேற்றுநாட்டிலிருந்து கொணரப்பட்ட; அயற்பண்புடைய; தாய்நிலத்துக்குப் புதிதான; திணைப்புறம்பான.

expand', *v.* பரப்பு; பரவுறு; விரித்துரை, விளக்கு, விரிவுபடுத்தி எழுது; பருமையாக்கு, விரிவாக்கு; விரி, அகலமாகு, பெரிதாகு; பெருகு, விரிவடை, பருமை மிகு, உருவாகிவளர்; பழகுநலம் உடையவராகு, தனிப்பட ஒதுங்கியிருப்பதை விட்டொழி; (தொ.) expanded metal, வெட்டிக் காரைக் கட்டுமான உள்ளீடாகப் பயன்படும் பின்னல் சட்டமாக விரிவாக்கப்படுகிற உலோகத்தகடு.

expanse', *n.* விரிவு; அகல்பரப்பு, அகலிடம்; அகல்வெளி; வானவெளி; பரப்பின் அளவு.

expan'sible, *a.* விரிவாக்கப்படத்தக்க, விரிவுறக்கூடிய.

expan'sile, *a.* விரியக்கூடிய.

expan'sion, *n.* விரிவடைதல்; விரிவடைந்தநிலை; விரிவு; பரப்பு; படர்ச்சி; பெருக்கம்; விரிவாக்கப்பட்ட ஒன்று; வாணிகக் கொடுக்கல்வாங்கல் பெருக்கம்; விரிவாக்கப்பட்ட அளவு; ஆட்சிப்பரப்பின் விரிவு.

expan'sionism, *n.* ஆட்சிஎல்லை விரிவுக்கொள்கை.

expan'sionist, *n.* நாட்டின் ஆட்சிப்பரப்பினை விரிவாக்க வேண்டுமென்னும் கோட்பாடுடையவர்.

expan'sive, *a.* நாலாபக்கமும் பரவுகிற; பெரிதும் விரிவாக்கப்பட்ட; விரிவான; அணைத்தையும் உள்ளடக்குகிற, விரிவகற்சியுறும் இயல்புடைய; வளரும் ஆற்றலுடைய; விரிவான; பரந்தகன்ற; ஆட்கள் வகையில் தாராளமாகப் பேசிப்பழகுகிற; உணர்ச்சிவகையில் கனிவு எழுச்சியுடைய; பேச்சு வகையில் சொல்வளமுடைய.

ex part'e, (ல.) *a.* (சட்.) ஒருதலையான, ஒருபக்கச்சார்பான; *adv.* ஒருதலையாக.

expa'tiate, *v.* வளம்பட உரை; விரிவாக எழுது; கட்டற்றுச் சுற்றிச்செல்.

expa'tiative, expa'tiatory, *a.* எல்லைகடந்து விரிந்து செல்கிற.

expat'riate, *v.* நாடுகடத்து; குடிபெயர்த்து வெளியேற்று; குடிமை உரிமையைத்துற.

expatria'tion, *n.* நாடுகடத்தல்; நாட்டைவிட்டு வெளியேற்றப்பெறல்; தாயகத்துறப்பு.

expect', *v.* எதிர்பார், காத்திரு, வரவு நோக்கு, எதிர்நோக்கு, நடக்கக்கூடுமெனக்கருது; இன்னபடி நடக்கவேண்டுமென நினை.

expec'tance, expec'tancy, *n.* எதிர்நோக்கியுள்ள நிலை; கருதியிருக்கை; எதிர்கால வாய்ப்புவளம்; எதிர்பார்க்கப்படுவது; அவாநம்பிக்கை.

expec'tant, *n.* எதிர்நோக்கியிருப்பவர்; பதவி முதலிய வற்றுக்கான வேண்மர்; *a.* எதிர்நோக்குகிற, காத்திருக்கிற; உடைமைபெறும் வாய்ப்பு எதிர்நோக்கியுள்ள; பதவி வாய்ப்பு எதிர்நோக்குகிற; (தொ.) expectant mother, கருக்கொண்டுள்ள மாது.

expecta'tion, *n.* எதிர்நோக்கியிருத்தல், காத்திருத்தல்; எதிர்பார்த்திருப்பதற்குரிய செய்தி; எதிர்பார்க்கத்தக்கது; எதிர்பார்க்கத்தக்க அளவு; எதிர்பார்க்கப்படுவதன் மதிப்பு.

expecta'tions, *n. pl.* மரபுவழி வந்துசேரத்தக்க உடைமை வாய்ப்புக்கள்; எதிர்பார்க்கப்பட்ட செய்திகளின் தொகுதி; வருநிலை வாய்ப்பு வளங்கள்; வருநிலை நேர்வுவளங்கள்.

expec'tative, *n.* ஒழிவாகுமுன்பே முற்பட எதிர்நோக்கி வழங்கப்படும் மானியம்; எதிர்பார்க்கப்படும் பொருள்; *a.* எதிர்பார்க்கப்படுகிற; எதிர்பார்க்கப்படும் பொருள் சார்ந்த; மானிய வகையில் கொடுப்பவர்க்கே மீள்கிற; மானிய மீட்சி சார்ந்த.

expect'ing, *a.* (பே-வ.) சூலுற்ற.

expec'torant, *n.* கபம் வெளிக்கொணரும் மருந்து; *a.* கபம் வெளிக்கொணர உதவுகிற.

expec'torate, *v.* கபம் வெளியேற்று; இருமிக் கபத்தை வெளிக்கொணர்.

expectora'tion, *n.* இருமிச் சளி வெளிப்படுத்துதல்; கபம் உமிழ்வு.

exped'ience, exped'iency, *n.* சூழலுக்கேற்ற தகுதி; வேளைக்கேற்ற பொருத்தமுடைமை; விரும்பத்தக்கநிலை; தனி நலவாய்ப்புடைமை.

exped'ient, *n.* தகுமுறை, வழிதுறை, கருவி; *a.* தக்க, சூழ்நிலைக்கிசைந்த; உகந்த, விரும்பத்தகுந்த; நலமளிக்கிற.

ex'pedite, *a.* தடங்கலற்ற; விரைவான, உடனடியான; *v.* தடைநீக்கு; ஊக்கிவிடு, விரைவுபடுத்து; போக்கு, விரைந்தனுப்பு.

expedi'tion, *n.* விரைவு; படையெழுச்சி; தனிநோக்கத்துக்கு உட்பட்ட சுற்றுப்பயணம்.

expedi'tionary, *a.* படையெழுச்சிசார்ந்த; படையெழுச்சியின் இயல்புடைய; சுற்றுப்பயணம் சார்ந்த; சுற்றுப் பயணத்தின் தன்மையுடைய.

expedi'tious, *a.* செயல் விரைவுடைய, உடனடியாகச் செய்கிற; விரைவார்ந்த, விரைவாகச் செய்யப்பட்ட; முறுகிய, விரைசெயலாற்றுவதற்குத்தக்க.

expel', *v.* ஓட்டு, துரத்து; நீக்கு, அகற்று; புறந்தள்ளு, வெளியேற்று; வீசியெறி; நாடுகடத்து.

expend', *v.* செலவிடு; பயன்படுத்திக்கொள்; செலவழி, பயன்படுத்தித்தீர்; ஈடுபடுத்தி இழவி.

expend'able, *a.* செலவிடத்தக்க; குறிக்கோளுக்காக இழந்துவிடத்தக்க.

expen'diture, *n.* செலவிடுதல்; பயன்படுத்தித் தீர்த்தல். செலவழிவு; செலவினம், செலவிடப்பட்ட தொகை.

expense', *n.* செலவு; செலவழிவு, செலவழிந்த தொகை; கைச்செலவு, நடைமுறைச் செலவினம்; சுட்டணச் செலவு; ஆக்கவினைப் பொருளாக்கச் செலவினம்; கைம்முதல் செலவு, முதலீடாகவேண்டிய தொகை; (தொ.) at one's expense, ஒருவரது செலவில்; ஒருவரது ஆதாய இழப்புப் பொறுப்பில்.

expen'ses, *n. pl.* குறிப்பிட்ட வேலைக்காகத் தேவைப்படும் கைப்பணம்; செலவு செய்த தொகை; (சட்.) வழக்காடுதற்குப் பிடிக்கும் செலவு.

expen'sive, *a.* மிகுவிலையுள்ள ; பெருஞ்செலவு பிடிக்கிற ; ஊதாரித்தனமான.

exper'ience, *n.* அனுபவம், நேருணர்வு, செயலீடுபாடு; அனுபவ அறிவு, நேர்க்காட்சியுணர்வு; பட்டறிவு, தேர்வறிவு; நுகர்வு; நீடுபல்காட்சியுணர்வு; வாழ்க்கைப்புற நிகழ்ச்சி; புறநிகழ்ச்சியின் அகநேர்ச்சி, உள்ளனுபவம்; பொறியுணர்வு; புலனுணர்வு, அகக்காட்சியுணர்வு; தனி ஈடுபாட்டுணர்வு; *v.* நுகர்; துய்த்துணர்; படு, தாங்கிக் கொள்; புலனுணர்வுகொள், அகஉணர்வுகொள்; புறநிகழ்வுணர்; பட்டறி, தேர்ந்துணர்; செயலீடுபாடுகொள்; கண்கூடாயறி, நேர்காட்சியாலுணர், நேர்காண்; (தொ.) experience table, காப்புறுதித்துறையில் அனுபவ அடிப்படையாக உருவாக்கப்பட்ட வயதுக்குழுவுக்கான வருவாழ்வு வள நேர்ச்சிப்பட்டியல்.

exper'ienced, *a.* தேர்ந்த; பட்டறிந்துகொண்ட; தேர்ச்சித் திறமை வாய்ந்த.

exper'iences, *n. pl.* சமய அகவுணர்வு நிலைகள்.

experien'tial, *a.* பட்டறிவு சார்ந்த; அனுபவத்தினூல் பெற்ற.

experien'tialism, *n.* எல்லா அறிவும் புறக்காட்சியுணர் வினின்றே கிடைக்கிறதென்னும் கோட்பாடு.

expe'riment, *n.* செய்முறை, தேர்முறை; தேர்வாய்வு; சோதனை, செயல்தேர்வு, முடிவுகாண்பதற்குரிய தற்காலிக முயற்சி; *v.* தேர்முறையாற்று, செய்முறையால் தேர்ந்து பார்; சோதனை செய், செய்துபார், பலதடவை விழுந்தெழுந்து முயல்.

experimen'tal, *a.* அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட; இயற்றிப்பார்த்ததை அடிப்படையாகக் கொண்ட ஆய்நிலையான; சோதனைகளில் பயன்படுத்தப்படுகிற; ஊகம் மேற்கொண்டு செய்யப்படுகிற, செய்துசெய்து பார்க்கும் நிலை உடைய.

experimen'talism, *n.* தேர்வாய்வுமுறை, தேர்வாய்வு மீது நம்பிக்கை.

exper'imenter, exper'imentist, *n.* தேர்வாய்வு செய்பவர்.

ex'pert[1], *n.* வல்லுநர், நிபுணர், ஒருதுறையில் தனித்திறமை பெற்றவர்.

expert'[2], *a.* கைதேர்ந்த, பலமுறைசெய்து பழக்கமேறிய; திறமை வாய்ந்த.

ex'pertise, *n.* தனித்துறைச் சிறப்பறிவுத்திறம்; சிறப்புத் திறமை; சிறப்பறிவாளர் ஆய்வுரை.

expert'o cred'e, (ல.) (தொ.) தேர்ந்தறிந்தவர் அனுப்பும் இதை நம்புக; (சான்றுக்குறிப்பு).

ex'piable, *a.* கழுவாய் செய்யத்தக்க, பரிகரிக்கத்தக்க.

ex'piate, *v.* கழுவாய் செய், பரிகரி, ஈடுபண்ணு.

expia'tion, *n.* கழுவாய் செய்தல்; ஈடுசெய்யும் முறை; ஈடு தீர்வு, நிவர்த்திப்பு, பரிகாரம்.

expira'tion, *n.* மூச்சு வெளிவிடுதல்; காலஞ்செல்லாதல், கால எல்லை கடப்பு, அவதிமுடிவு.

expir'atory, *a.* மூச்சு வெளிவிடுவது சார்ந்த, வெளி உயிர்ப்புக்குரிய.

expire', *v.* மூச்சுவெளிவிடு; இற; அணைந்துபோ; முடிவுறு; கால அவதியாகு; அவதிகடந்து செல்லாததாகிவிடு; மரபு அற்றுப்போ.

expired', *a.* இறந்த; மரபற்றுப்போன; காலாவதியான; வழக்கற்றுப்போன.

expi'ring, *a.* இறந்துகொண்டிருக்கிற; சாகும் காலத்துக் குரிய; சாகுந்தறுவாயில் சொல்லப்பட்ட.

expir'y, *n.* காலஅவதி, காலஎல்லைகடப்பு; காலக்கழிவு; முடிவு.

expis'cate, *v.* நுழைந்தாய்வு செய்து கண்டுபிடி; தீர்ந்த தேர்வினூல் கண்டுணர்.

explain', *v.* விளக்கு, புரியும்படி சொல்; புதிர்அகற்று, எளிதாக்கு; நுணுக்க விரிவாகத் தெரிவி; காரணங்கூறி விளக்கம் செய்; காரணவிளக்கம் கூறு; செயல்நோக்க விளக்கம் அளி; கூறத்தகாதனவற்றை விலக்கியடக்கப் பிறிதுற விளக்கியுரை; (தொ.) explain away, காரணங்கூறி பேச்சின் வேகத்தைக் குறை; explain oneself, நோக்கம் தெளிவுபடுத்து, கருத்து விளக்கு.

explana'tion, *n.* விளக்குதல்; விளக்கம்; பிணக்குத்தீர்ப்பு, சமரச முயற்சி; விளங்கவைக்கும் அறிக்கை, சமாதானம்.

explan'atory, *a.* விளங்கவைக்கிற; விளக்கக்கருதுகிற.

ex'pletive, *n.* சாரியை; அசைநிலை; யாப்புநிரப்பு அசை; பொருளற்ற இடநிரப்புச்சொல்; சூளுரையில் வரும் வெற்றுரை; *a.* செய்யுள் இசை நிரப்புவதற்குப் பயன்படுகிற; ஓசைநிரப்புதற்குமட்டுமே சேர்க்கப்படுகிற; இட நிரப்பியலான.

ex'plicable, *a.* விரித்துரைக்கத்தக்க, விளங்கவைக்கக் கூடிய.

ex'plicate, *v.* விரித்துரை, விளக்கு, தெளிவாக வெளிப் படுத்து.

explica'tion, *n.* விரித்துரைத்தல், விளக்குதல், விளக்கம்.

ex'plicative, ex'plicatory, *a.* விரித்துரைக்கிற, விளங்க வைக்கிற, விளங்க உதவுகிற.

expli'cit[1], *a.* தெளிவான, விளக்கமான, வெளிப்படையான; ஐயத்துக்கிடமற்ற, உய்த்துணரவைக்காத; விரிவாகச் சொல்லப்பட்ட; திட்டவட்டமான; மனம்விட்டுப் பேசுகிற; முழுதுறத் தெரிந்து செயற்படுகிற.

ex'plicit[2], (ல.) *v.* முற்றிற்று (ஏட்டிறுதியில் எழுதப்பட்டு வந்துள்ள குறிப்பு).

explode', *v.* படீரென வெடி; உரத்த ஒலியுடன் வெடிக்கச் செய்; தவறெனக்காட்டி மறு; இகழுக்கு உள்ளாக்கிவிடு; கர்ட்சிமேடை நடிகர்மீது உரத்த குரலில் கண்டனம் தெரிவி, எதிர்த்துப் பழிதூற்று.

explo'ded, *a.* தகர்த்தெறியப்பட்ட; தள்ளிவிடப்பட்ட, ஒதுக்கப்பட்ட.

ex'ploit[1], *n.* வீரச்செயல், துணிசெயல்; அருஞ்செயல், செயற்கரிய செயல்.

exploit'[2], *v.* இயற்கைவளத்தை உழைத்துப் பயன்படுத்திக் கொள்; சுரண்டிப்பிழை, பிறரைத் தன் நலங்களுக்குப் பயனுடையதாக்கிக்கொள்.

exploit'age, exploita'tion, *n.* இயற்கை மூலப்பொருளை உழைத்துப் பயன்படுத்துதல், சுரண்டுதல், தன்னலத் தேட்டம்.

explora'tion, *n.* முற்ருய்தல்; ஆய்வுப்பயணம், புதிய நிலப் பகுதி முதலியவற்றைக் கண்டறிதற்காக மேற்கொள்ளப் படும் பயணம்.

explor'ative, explor'atory, *a.* ஆய்தற்குப் பயன்படுகிற; புதிதாய்வு செய்கிற; நிலந்தேடி ஆய்கிற.

explore', *v.* ஆய்வுப்பயணம் செய், நாடிப்புறப்படு; நாடியறி, புத்தாய்வு செய்; (மரு.) காயத்தைத் தொட்டுப் பரிசோதனை செய்.

explo'sion, *n.* படீரென வெடித்தல்; வெடிப்பொலி; சீற்றம் முதலிய உணர்ச்சிகளின் திடீர் எழுச்சி.

explos'ive, *n.* வெடிமருந்து, வெடிக்கவைக்கும் பொருள்; தடை வெடிப்பொலி எழுத்து, ஒலிக்கும்போது மூச்சுவருவது முற்றும் தடைபடச்செய்யும் மெய்யெழுத்து; *a.* உரத்த ஒலியுடன் வெளித்தள்ளும் பாங்குடைய. வெடிக்கும் இயல்புடைய; வெடிக்கவைக்கிற; (மெய்யெழுத்து) மூச்சுத் தடைப்பட்டு ஒலிக்கப்படுகிற; (தொ.) explosive rivet, புறத்தே தட்டியடிப்பதன் மூலம் எட்டா இடத்தில் உள் வெடிப்பமைப்பு வழியாக கொழுச்செருகி இறுக்கும் இயல்புடைய தாழ்ப்பாள்; high explosive, செலுத்தப்பட்ட பின் குண்டு முதலியவற்றினுள்ளிருந்து வெடிக்கிற முனைத்தவெடி மருந்துப் பொருள்.

expon'ent, *n.* விளக்குபவர்; விளக்கும்பொருள்; இசை முதலியவற்றில் நுட்பத்திறமைமிக்கவர்; வகை; மாதிரி; (கண.) விசைக்குறி எண்.

ex'port[1], *n.* ஏற்றுமதிப்பண்டம், ஏற்றுஞ்சரக்கு, ஏற்றுமதி.

export'[2], *v.* ஏற்றுமதிசெய், சரக்கேற்றியனுப்பு.

ex'ports, *n. pl.* ஏற்றுமதி அளவு, ஏற்றியனுப்பப்பட்ட சரக்கின் அளவு.

expose[1], (பிர.) *n.* முறைப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கை; இடக்கர் வெளிப்பாடு, இகழத்தக்க செய்திகளை வெளிப்படுத்தல்.

expose'[2], *v.* காட்சிப்படுத்து, வெளிப்படவை; மறைவெளியிடு, வெளிப்படுத்து; மேலுறையகற்று, மறையகற்று, திறந்து காட்டு; வறிதாக்கு, வெறுமையாக்கு; பாதுகாப்பு அகற்று, இடருக்குள்ளாக்கு; குழந்தையைப் பாதுகாப்பின்றி வெளியே துரத்திக் கைதுறந்துவிடு; திறந்த வெளியில் உடை முதலிய பாதுகாப்பின்றிவிடு; ஒளி காற்றுப்படவிடு; நிழற்படத் துறையில் ஒளி செயலாற்றவிடு, உலரவிடு, காற்றுடவிடு; பொதுவில வை; காட்சிக்கு வை; விற்பனைக்கு வை; விளக்கிக்காட்டு; நேர்முகப்படுத்து; குற்றம் வெளிப்படுத்திக் காட்டு.

exposed', *a.* காப்பற்ற, புகலிடமற்ற, திறந்த.

expos'edness, *n.* காப்பற்றநிலை.

exposi'tion, *n.* விளக்கிக்காட்டுதல்; விளக்கம்; விரித்துரைத்தல்; விரிவுரை, பண்டங்கள் முதலியவற்றைக் காட்சிக்கு வைத்தல்.

expos'itive, *a.* விரிவுரையாயமைந்துள்ள; விளக்குகிற.

expos'itor, *n.* விரித்துரைப்பவர்; தெளிவாக்குவது; பொருள் விளக்குபவர்; *fem.* expos'itress.

expos'itory, *a.* விளக்குகிற; விளக்கமாயமைந்துள்ள, விளக்க உதவுகிற.

ex post fac'to, (ல.) *a.* பின்னோக்கிச் சென்ற காலத்தையும் உட்படுத்துகிற.

expos'tulate, *v.* நட்புமுறையில் அறிவுறுத்து; இடித்துரை.

expost'ulative, expost'ulatory, *a.* அறிவுறுத்தல் அடங்கியுள்ள.

expo'sure, *n.* இடர்காப்பின்மை; தடைகாப்பின்மை; திறந்த நிலை; மறைப்பற்றநிலை; திரைநீக்கம்; மேலுறைநீக்கம்; தடைநீக்கம்; மறைநீக்கம்; மறைவெளியீடு; மறை குற்றம் வெளிப்படுத்துதல்; தீமை வெளிப்படுத்துதல்; நேர்எதிர்நிலை, நேர்முகநிலை; படுநிலை, சூழ்வளாவுநிலை; நிழற்படத்துறை நேரொளிவாய்ப்பு; ஒளிபடர்நேரம்; தோற்ற முகப்பு: குழந்தையின் கைதுறப்பு; பொதுக்காட்சிவைப்பு, விற்பனைக் காட்சி வைப்பு.

expound', *v.* விவரமாக எடுத்துக்கூறு; விளக்கு, பொருள் கூறு.

express', *n.* விரைஊர்தி, விரைவுத்தொடர்வண்டி; தனிமுறைத் தூதர்; அணிமையிலிருந்து சுடுவதற்கேற்ற தொடக்க உயர் விசையுடைய வேட்டைச்சுழல் துப்பாக்கிவகை: *a.* விரைந்து செல்கிற; தனிமுறையில் அனுப்பப்பட்ட, தனிநோக்கத்துடன் இயற்றப்பட்ட; ஒப்புவகையில் இம்மியும் மாறுபடாத; திட்டவட்டமான; வெளிப்படையாகக் கூறப்பட்ட; தெளிவான, உய்த்துணர்வுக்கு இடமில்லாத; நேரடியாகத் தெரிவிக்கப்பட்ட, மறைவுக் குறிப்பு எதுவுமற்ற; *v.* வெளியிட்டுரை, சொல்லுருவிற் கூறு; வெளிப்படையாகக் கூறு; கருத்து வெளிப்படுத்து; உணர்ச்சி தெரியக்காட்டு; பண்பு குறித்துக்காட்டு; ஒப்புமை மூலம் உருப்படுத்திக் காட்டு: குறிப்பால் தெரிவி; அடையாளப்படுத்தி அறிவி; பிழிந்து சாறு வெளியேற்று; புறங்கசியவிடு; வெளியே பரவவிடு; (கண.) பிறிது வகைப்படுத்திப் பெயர்த்துக்கூறு, வகை பெயர்த்துரை; *adv.* விரைவுபட; விரை செலவாக; விரை ஊர்திவழியே; தனிமுறைத் தூதர் மூலமாக; (தொ.) express delivery, தனிமுறைத் தூதுவர் கைவழியான உடனடிச் சேர்ப்பு; express oneself, உள்ளக்கருத்தைத் தெரிவி; express rifle, பெரியவேட்டை விலங்கினை அண்மையிலிருந்து சுடுவதற்கான சுழல் துப்பாக்கி; express train, சில இடங்களில் மட்டும் நின்று விரைவாகச் செல்லும் இருப்பூர்தித் தொடர்வண்டி.

expre'ssion, *n.* சொல்லுதல், தெரிவித்தல்; சொல்லமைப்பு; சொல் உணர்ச்சி முனைப்புப்பாங்கு; சொல்திறம், மொழிநடை; சொல்; சொற்றொடர்; தோற்றம், முகபாவம்; தொனி; (இசை.) உயிர்ப்பண்பு, பாட்டின் உணர்ச்சி வெளிப்படுமாறு பாடும் பாங்கு; (கண.) எண்ணுருக் கோவை, ஓர் அளவைத் தெரிவிக்கும் குறியீடுகளின் தொகுதி சாறெடுப்பு; அழுத்தித்தள்ளுதல்; (தொ.) expression mark, expression stop, தொனிபாவக்குறி; இசைபபெட்டியின் தொனியழுத்தக்கட்டை.

expre'ssional, *a.* சொல்லமைப்புக்குரிய; முகத்தோற்றத்துக்குரிய; கலைத்தொனிபாவம் சார்ந்த, உணர்ச்சி வெளிப்பாட்டுக்குரிய.

expre'ssionism, *n.* அகத்திறப்பாங்கு; இயல்வாய்மையை அடக்கிக் கலைஞரின் அல்லது நாடக பாத்திரத்தின் உள்ளனுபவத்தை வெளிப்படுத்தும் வகையில் ஓவியர்கள்-நாடகாசிரியர்கள் முதலியோர் கடைப்பிடிக்கும் தற்காலப்போக்கு.

express'ive, *a.* வெளியிடுகிற; சொல்திறம் சார்ந்த; குறிப்புத்தெரிவிக்கிற; உணர்ச்சி விளக்கமான; பண்பு வலியுறுத்துகிற; பொருள் பொதிந்த.

express'ly, *adv.* தெளிவாக; வெளிப்படையாக; குறிப்பிட்ட நோக்கத்துக்காக; திட்டவட்டமாக.

express'ure, *n.* பிழிந்தெடுத்தல்.

exprobra'tion, *n.* கண்டனம், கடிந்துரை.

exprop'riate, *v.* பறி, உடைமைகவர்; உடைமையிலிருந்து வெளியேற்று.

expul'sion, *n.* வெளியே துரத்துதல்; நாடுகடத்தல்.

expul'sive, *a.* புறந்தள்ளவல்ல; வெளியேற்ற உதவுகிற; வெளியே துரத்துகிற.

expunge', *v.* அடித்துவிடு; அடித்துவிடும்படி குறியீட்டால் தெரிவி; துடைத்தழி; எடுத்துவிடு, எடுத்தகற்று.

ex'purgate, *v.* வேண்டாதன விலக்கித் தூய்மைப்படுத்து; வேண்டாதன அகற்று.

ex'quisite, *n.* ஒய்யாரன், பகட்டுக்காரன்; *a.* சீரிய, மிகு நேர்த்தியான; எழில் நலம் வாய்ந்த; நயநுணுக்கமிக்க; கூர்மதி வாய்ந்த.

exsang'uinate, *v.* குருதியை வடித்தொழி, குருதியை வற்றச் செய்.

exsang'uine, *a.* குருதிச்சோகையுற்ற, குருதிக்குறைபாடுடைய.

exscind', *v.* வெட்டு; செதுக்கியெடு, நறுக்கு.

exsert', *v.* (உயி.) முந்துற நீட்டு, உந்துவி, முன்துருத்து.

ex-serv'ice, *a.* போர்த்துறைப் பணியிலிருந்து விலகியிருக்கிற.

ex'siccate, *v.* உணக்கு, உலர்த்து; ஈரம் புலரும்படி வடி.

ex'tant, *a.* ஆவண வகையில் இன்னும் இருந்து வருகிற; உளதான, நடப்பிலுள்ள, இருப்பிலுள்ள.

ex'tasy, *n.* = ecstasy.

extem'pore, *a.* முன்னேற்பாடின்றி ஆற்றப்படுகிற, முயற்சியினறி இயல்கிற, உடனடியாகச் செய்யப்படுகிற.

extem'porize, *v.* முன்முயற்சியின்றி ஆற்று; துடுமென்று பேசு.

extend', *v.* நீட்டு, நீட்டிப்பிடி, ஏந்து, நீடு; நீண்டு நிற்கச் செய், நீட்டிக்கிடத்து; பரப்பு; விரிவுபடுத்து, அகலப்படுத்து, எல்லைவிரிவாக்கு, நேராக நிமிர்த்து; மலர்த்து; சென்றெட்டுவி; காலநீட்டிப்புச்செய்; தொடர்ந்து இயங்குவி; நீள், நீண்டிரு, நீண்டுகிட; பரந்துகிட; விரிவுறு, அகலப்படு, எல்லை

விரிவாகு ; நேராக நிமிர்வுறு ; அலர்வுறு ; சென்றெட்டு ; நீடி ; தொடர்ந்து இயல்வுறு ; விளைவு பரவலாக்கு, பயன் பரவுவி; வழங்கு ; (சட்.) கடனுக்காக உடைமை கைப்பற்று ; வரியளவை மதிப்பிடு ; படையணியைப் பரவலாக விரிவுபடுத்து.

exten'sile, *a.* நீட்டக்கூடிய, விரிவுபடுத்தக்கூடிய.

exten'sion, *n.* நீட்டுதல், பரப்புதல், விரிவுபடுத்தல் ; நீளல், பரவுதல், விரிவுறுதல்; நீட்டித்த நிலை, நீட்சி, நீட்டிப்பு; பரப்பு; விரிவு; பொருள்களின் இடங்கொளற்பண்பு; நீட்டித்த பகுதி; விரிவுபடுத்தப்பட்ட ஒன்று ; புதுமனை, பழைய கட்டிடத்தின் தொடர்பான புதிய கட்டிடப்பகுதி ; புதுவிரிவு, பழைய ஒன்றன் தொடர்விரிவான புதிய ஒன்று; தொடர்ச்சி; தொடர் பகுதி; கால நீட்டிப்பு; எல்லை நீட்டிப்பு; எல்லை விரிவு; (அள.) சொல்லின் சுட்டுப்பரப்பு ; (இலக்.) எழுவாய்-பயனிலை முதலிய வாசக உறுப்புக்களின் அடைவிரி ; (தொ.) University Extension, மாணவராகச் சேர்ந்து பயிலமுடியாதவர்களுக்காகப் பல்கலைக்கழகம் அளிக்கும் பயிற்சி முறை, நேரடி மாணவர்களுக்கல்லாத அறிவுப்பரப்பு வாய்ப்பு முறை.

exten'sive, *a.* விரிவான ; பரந்தகன்ற ; பல இடங்களிலும் படர்ந்த; பரவலான; பெரிய; மிகுதியான; தொலைவளாவிய; நெடுங்காலப் பரப்புடைய ; விரிவடங்கலான ; விரிவகற்சி சார்ந்த ; சொற்சுட்டுப்பரப்புச் சார்ந்த ; விரிதிற இயலான, வேளாண்மை வகையில் நிலப்பரப்பு மிகுதி மூலமே விளைவு பெருக்கும் இயல்புடைய.

exten'sor, *n.* நீட்டத் தசைப்பற்று, உடற்பகுதியினை நிமிர்த்தும் தசை.

extent', *n.* பரவெல்லை, பரப்பு; பரப்பளவு; அளவு; (சட்.) நில மதிப்பீடு; நிலக் கைப்பற்றல்; கைப்பற்றலுக்கான கட்டளை.

exten'uate, *v.* குறைத்துக்காட்டு, தணித்துக்காட்டு; குறைவாக மதிப்பிடு ; குறை ; தளர்வுறச்செய் ; மன்னித்துக் குற்றத்தைக் குறைவாக்கு.

exter'ior, *n.* புறம், வெளிப்பக்கம் ; புறத்தோற்றம் ; புறத்தோற்ற நடுநிலை இயக்க இயல்பு ; *a.* புறஞ்சார்ந்த ; வெளிப்பக்கமிருக்கிற ; வெளிவரவான ; அயலான ; (தொ.) exterior angle, புறக்கோணம், கோணத்துக்கு அல்லது வரைவுருவுக்கு வெளியேயுள்ள கோணம்.

exter'iorize, *v.* புறத்தோற்ற வடிவமாக உள்ளத்தில் படிவப்படுத்தி உணர் ; புறமெய்ம்மை உளதாகக் குறி.

exter'iors, *n. pl.* வெளிப்பகுதி.

exterm'inate, *v.* பூண்டோடழி, அடியோடு கீளை, தடமில்லாமல் துடைத்தொழி.

extern'al, *n.* வெளிப்புறம் : *a.* புறவியலான; புறந்தேயுள்ள; வெளியிலிருந்து வருகிற, புறம்பான ; புறவுடல் சார்ந்த ; புறநோக்கிய ; புறவினைகளாலான, செயல் சார்ந்த ; புறப்பொருளுலகு சார்ந்த, அகநிலை உணர்வுக்குப் புறம்பான ; புறக்காடசிக்குரிய, காணத்தக்க ; கருமெய்ம்மை சாராத, சிறுதிறக்கூறான, தற்செயல் நிட்டானை, அயலான ; சான்றுகள் வகையில் புறமிருந்து வலியுறவு தருகிற, தொடர்பற்ற புதுத்தெளிவு தருகிற.

extern'alize, *v.* புறவடிவம் கொடு; பண்புருக்கற்பி.

extern'als, *n. pl.* புறக் கூறுகள் ; புறப்பண்புக்கூறுகள், கருமெய்ம்மை சாராத செய்திகள், முக்கியத்துவம் இல்லாத சிறுதிறப் பண்புகள்.

exterritor'ial, *a.* ஆட்சி எல்லைக்கு அப்பாற்பட்ட ; ஆட்சிக்குப் புறம்பான எல்லை சார்ந்த ; தூதுவர் வகையில் பணிநில ஆட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்குரிமை பெற்ற.

exterritor'iality, *n.* வாழ்நிலை ஆட்சியெல்லைக்குப் புறம்பே இருக்கத்தக்க உரிமை.

extinct', *a.* குடும்பம் இனம் ஆகியவற்றின் வகையில் மரபற்றழிந்த ; உரிமைகள் வகையில் தகுதி வாய்ந்த கோரிக்கையாளரின்மையால் தொடர்பற்றுப்போன ; நிலையம் முதலியவற்றின் வகையில் வழக்காறொழிந்த ; நெருப்பு வகையில் தணலவிந்த ; எரிமலை வகையில் எழுச்சியடங்கிய, துஞ்சுநிலையுற்ற ; வாழ்க்கை அவாவகையில் தணிந்தாறிப்போன ; மாண்ட, உயிர்ப்படங்கிய ; நடப்பிலிருந்து மறைந்த.

extinc'tion, *n.* தீநொதுப்பு, அணைவு ; மரபழிவு ; உயிர்ப்படக்கம் ; எழுச்சி ஓய்வு ; வழக்கொழிவு ; தொடர்பறவு ; கடன் அறுதி ; மாள்வு; மறைவு.

exting'uish, *v.* அணை, அவி ; தணிவி, ஆற்றல் அழி, மேமபட்ட ஒளியின்முன் மங்கச்செய் ; மறைவி ; எதிரியை வாயடக்கு ; அழி ; கடன் முழுதும் தீர் ; ஒழி, துடைத்தழி.

exting'uisher, *n.* அணைப்பவர், அழிப்பவர் ; அணைப்பது, அழிப்பது ; விளக்கொளி அணைக்கும் கருவி ; தீயணைப்புப் பொறி ; அணைப்புக்கருவி போன்ற குவிகுவட்டு வடிவக் கட்டமைப்பு.

ex'tirpate, *v.* வேரோடு பிடுங்கியெறி ; அடியோடழி, பூண்டோடகற்று.

extol', *v.* மெச்சு, மிக உயர்வாகப் புகழ், ஆர்வமாகப் பாராட்டு.

extort', *v.* அச்சுறுத்திக் கைப்பற்று, வலிந்து பறி; வாக்குறுதியை விடாப்பிடியாய் வற்புறுத்திப்பெறு ; சொற்களிலிருந்து வலிந்து பொருள் தருவி, மூல ஆதாரங்களிலிருந்து வாரா முடிபு வருவி ; பிழிந்தெடு, கசக்கித்தருவி.

extor'tion, *n.* அச்சுறுத்திப் பணம் பறித்தல் ; வலிந்து பெறுதல் ; சட்டத்திற்குப் புறம்பான பணம் பறிப்பு.

extor'tionate, *a.* சட்டத்திற்குப் புறம்பாகப் பணம் பறிக்கிற ; வலிந்து கொள்ளைகொள்ளும் பழக்கமுடைய ; விலைவகையில் மட்டுமீறிய ; கொடிய.

ex'tra, *n.* மிகைப்படியானவர் ; மிகைப்படியானது ; தனி மிகைக்கட்டணத்துக்குரிய கூறு ; பாடதிட்டத்துக்குப் புறம்பான பகுதி ; விலைப்பட்டியலிடங்காத தனி உருப்படி ; பத்திரிகையின் வெளியீட்டுக்குப்பின் அச்சிடப்பட்ட தனி மிகையான படி ; மரப்பந்தாட்டத்தில் நேரடிப் பந்தெறியின்றிப் பிறிது வழியில் பெறப்பட்ட கெலிப்புப் புள்ளி ; திரைப்படத்துறையில் சிறுதிற நடிப்புக்குரிய குழு நடிகருள் ஒருவர் ; *a.* தனி மிகையான, மிகைப்படியான ; இயன்மிகையான, இயல்பான வகையைவிடப் பேரளவான ; மேம்பட்ட பண்புடைய ; *adv.* மிகைப்படியாக, தனிமிகையாக ; இயன்மிகையாக, வழக்க மீறி மேம்பட்ட நிலையில்.

ex'tra-atmosphe'ric, *n.* வளி மண்டலத்திற்கப்பாற்பட்ட இயல் வெளி.

ex'tracos'mical, *a.* அண்டத்திற்கப்பால் செயற்படுகிற.

ex'tracra'nial, *a.* மண்டையோட்டுக்குப் புறம்பே உள்ள.

ex'tract'[1], *n.* உறைசத்து, பொருளினை நீர்மத்தில் கரைத்து ஆவியாகும்படி விட்டபின் உறைந்த பசைக்களிம்புக் கூறு ; கருச்சத்து, பொருளின் கருநிலை ஆற்றல் கூறுகளைச் செறிவடிவில் கொண்ட செய்முறை விளைவான சரக்கு ; வடிசாறு, சத்து ; புத்தகத்தினின்று எடுக்கப்பட்ட பகுதி.

extract'[2], *v.* புத்தகத்திலிருந்து பகுதி பிரித்தெடு ; பகுதி பிரித்தெடுத்துப் பகர்ந்து; படியெடு; பல் முதலியன வகையில் வலிந்து பிடுங்கு ; வன்கண்மையாகப் பிடித்நிழுத்தெடு ; வல்லந்தப்படுத்திப்பறி ; விருப்பத்துக்கெதிராக வல்லந்தப் படுத்திப் பணம் பெறு ; வலுக்கட்டாயப்படுத்தி ஏற்பு ஒப்புதல் பெறு; சாறு முதலியவற்றைப் பிழிந்தெடு; உறிஞ்சிப் பெறு ; வடிந்தெடுத்து வெறுமையாக்கு ; தேர்ந்தெடு ; கல்லுடிபிடி ; கடுமுயற்சியினால் விளைவித்துப்பெறு ; வருவி, தருவி; தத்துவம் முதலியவற்றை உய்த்துணர்வித்துப்பெறு; (கண) எண்ணின் விகைமூலம் கணிந்துக்காண்.

extrac'tion, *n.* பிரித்தெடுத்தல் ; பிழிந்தெடுத்தல் ; வலிந்து பிடுங்குதல் ; வடித்திறக்குதல் ; பிறப்பு மரபு, இனக்கூறு ; (தொ.) extraction rate, மாவுமாலம், கோதுமையின் மொத்த எடையில் உமிதவிடு நிங்கலாக மாவாகத்தேறிய பகுதியின் விழுக்காடு.

extrac'tive, *a.* பிரிவினியல்புடைய, சாரத்தின் தன்மை வாய்ந்த ; வடிக்கக்கூடிய, வடித்திறக்க இடந்தருகிற.

extradit'able, *a.* குற்ற வகையில் நாடுகடத்தப்பட்டு அயல் நாட்டுக்கு வந்தவரைத் தாயகத்துக்கே மீட்டும் அனுப்புதற்குரிய ; தாயக மீட்டனுப்பும் கட்டுரிமை உடைய.

ex'tradite, *v.* கடத்தல் மீட்டொப்படைப்பு, நாடுகடத்தப் பட்டு வந்த குற்றவாளியை நாடுகடத்தப்பட்டு வந்தவரின் தாயகத்தின் ஆட்சியாளரிடமே மீட்டும் ஒப்படை.

extradi'tion, *n.* கடத்தல் மீட்டொப்படை, நாடுகடத்தப் பட்டு வந்தடைந்த குற்றவாளியை அவர் தாயகத்து ஆட்சியாளரிடமே மீண்டும் ஒப்படைத்தல்.

extrad'os, *n.* வளைமுகட்டின் வெளிப்புற வளைவு.

ex'tra-essen'tial, *a.* கருநிலைப் பண்புகளுட்படாத, உள்ளார்ந்த பண்புத்திறங்கட்குப் புறம்பான.

ext'ra-judi'cial, *a.* முறைமன்ற நேரடி வழக்குடன் தொடர் பற்ற; சட்ட முறைப்படியான உரிமை சாராத; குற்ற ஏற்பு ஒப்புதல் வகையில் முறைமன்றத்தில் செய்யப்படாத.

ex'tramun'dane, *a.* உலகியலுக்கப்பாற்பட்ட; அண்டத் துக்குப் புறம்பான.

extramur'al, *a.* நகர மதிலெல்லைக்குப் புறம்பான; சொற் பொழிவு வகையில் பல்கலைக்கழகத்திற்கு வெளியே நிகழ்த்தப் படுகிற.

extran'eous, *a.* அயலினப்பிறப்புடைய, அயலினவரவான; அயலான; புறம்பான; தொடர்பற்ற, பிறிதின் சார்பான, வகை வேறுபட்ட உள்ளார்ந்த பண்புகள் சாராத, புறச்சார் பான, முக்கியத்துவமற்ற.

extra-offi'cial, *a.* பணிமனை சாராத, அலுவலகச் சார்பற்ற.

extraord'inaries, *n. pl.* படைத்துறை மிகை ஊதியப் படிகள்; பொதுவழக்கான வகைதுறை வரிசைகளை மீறிய செய்திகள்.

extraord'inary, *a.* வழக்கமீறிய; பொதுநிலை கடந்த; தனிப்பட்ட, பொது முறை விலக்கான; பொது அளவு கடந்த, மாபெரிய; வியத்தக்க; பணியாளர் வகையில் பொது மிகையான, துணை மிகையான, துணையிணைப்பான; (தொ.) envoy extraordinary, உதவி அமைச்சர், தூதுவருக் கடுத்தபடி உயர்பதவியாளர்.

extraparoch'ial, *a.* திருக்கோயில் வட்டத்துக்குப் புறம் பான.

extraphys'ical, *a.* இயற்கையின் இயற்பொருள் நியதி களுக்கு உட்படாத.

extra-sen'sory, *a.* பொதுநிலைப் புலனுணர்வுக்கப்பாற் பட்ட, உண்ணோக்கு-தொலைவிலுணர்தல் ஆகியவற்றின் வகையில் பயன்படுத்தப்படும் உணர்வு சாராத.

extraspec'tral, *a.* கண்ணுக்குப் புலப்படக்கூடிய நிறப் பட்டைக்கு வெளியேயுள்ள.

extraterres'trial, *a.* நில உலகுக்குப் புறம்பான; நில உலக வளிமண்டலத்துக்கு அப்பாற்பட்ட.

extraterritor'ial, *a.*=exterritorial.

extrav'agance, *n.* ஊதாரித்தனம், வீணழிவு; வீண்மிகை, கழிமிகுதி, தாராளம்; மட்டுமீறிய தன்மை; விலைவகையில் வரம்பு கடந்த உயர்வு; பகுத்தறிவுக்கொவ்வாமை, நம்பத் தகாத தன்மை; பொருத்தமற்ற செய்தி; இசைவுக்கேடான செய்கை.

extrav'agant, *a.* ஊதாரித்தனமான, வரம்பு மீறிச் செலவு செய்கிற; வீண் அழிவு செய்கிற; விலைவகையில் மட்டுமீறி உயர்ந்த; மட்டுமீறிய அளவான, தாராளமான; எல்லை கடந்த, அளவுகடந்த; நம்பத்தகாத, பகுத்தறிவுக்கொவ்வாத.

extravagan'za, *n.* மிகு கற்பனை இலக்கியம்; வரம்பற்ற கற்பனை மொழிநடை.

extrav'agate, *v.* தகுதி வரம்புகட; நெறிதவறி அலை.

extrav'asate, *v.* கலத்தினின்றும் நீர்மத்தை வன்மையுடன் வெளியேற்று; வெளியே பாய்ந்து வடி.

extreme', *n.* முனைக்கோடி; புறக்கோடி; முகட்டுக்கூறு; உச்சமுனை; உச்ச எல்லை, உச்ச அளவு; (கண.) முதலும் இறுதியுமான இருதிசைக் கோடிகளில் ஒன்று; (அள.) கருவாசகத்தின் எழுவாய் பயனிலைகளுள் ஒன்று; பெரும்பதம் சிறுபதமாகிய ஈரெல்லைப் பதங்களில் ஒன்று; *a.* புறக்கோடியான; மையத்தினின்றும் மிகுதொலை விலகிய; இரு புறக் கோடிகளிலும் அமைந்துள்ள; உச்ச அளவான, உச்ச நிலையான; மிகுதியான, கடந்த நிலையான; கடைசியான; வாழ்க்கை இறுதிவேளைக்குரிய; கடு முனைப் பான; நெடுந்தொலை முனைந்து செல்கிற; கண்டிப்பான; மட்டில்லாத; விசையெழுச்சிமிக்க; (தொ.) extreme unction, இறக்கும் தறுவாயிலுள்ளவர்களுக்குக் கிறித்தவ குருமார் கொடுக்கும் இறுதி எண்ணெய்ப்பூச்சு; go to extremes, கடுமையான நடவடிக்கை எடு; மட்டுமீறித் தீவிரமாக முனைந்துசெல்; in the extreme, உச்ச அளவில்.

extrem'ity, *n.* இறுதி முனை; கடைசி; அறுதி; எல்லை; கெடுதி; இடர்; மனக்கலக்கம்; துயர்; தொல்லை; (தொ.) the extremities, கைகால் பகுதிகள்; the last extremity, காலக்கேட்டின் உச்சநிலை; சாவு.

ex'tricate, *v.* சிக்கலிலிருந்து விடுவி; சிக்கல் அகற்று; இக் கட்டிலிருந்து காத்து வெளியேற்று; இடரிலிருந்து வெளிக் கொணர்; (வேதி.) சேர்மானத்திலிருந்து இயைபியலாற்றல் மூலம் வளிபிரிந்து செல்லவிடு.

extrin'sic, *a.* புறம்பேயுள்ள, புறம்பேயிருந்து வருகிற; புறம்பேயிருந்து இயக்குகிற; அயல்வரவான, அயற்பண் பான; உரியதல்லாத, உள்ளார்ந்ததல்லாத; முக்கியத்துவ மற்ற, சிறுதிறமான; தசைப்பற்றுக்கள் வகையில் உடல் முதலிலிருந்து கிளையை அல்லது அரை வளையத்தை நோக்கிச் செல்கிற.

extrorse', *a.* (தாவ.) மகரந்தப்பை வெளிப்புறம் திரும்பி யுள்ள.

ex'trovert, *n.* வெளியுலக ஈடுபாட்டாளர்; *v.* புறமுகமாகத் திருப்பு.

extrude', *v.* வெளியே தள்ளு; புறத்தே உந்துவி; வெளி நீட்டு; புறந்துருத்து, உந்து.

exub'erance, exu'berancy, *n.* வளங்கொழிப்பு, பொங்கு வளம்; களி கிளர்ச்சி; மொழி வகையில் சொல்வளம், நடைவகையில் அணிவளம்; உணர்ச்சிப் பொங்கல்; திடீர் உணர்ச்சி எழுச்சி; கூறியது கூறல், வீண்மிகை.

exub'erant, *a.* வளங்கொழிக்கிற; செழித்து வளர்கிற; பொங்கி வழிகிற; ஏராளமான; உணர்ச்சி பொங்குகிற; களி கிளர்ச்சியுடைய; மொழிவகையில் சொல்வளமிக்க; மொழிநடை வகையில் அணிவகை மலிந்த; செயல் வகையில் தாராளமான.

exub'erate, *v.* மல்கு, பொங்கி வழி; தடையின்றி நுகர்வி லாழ்.

exude', *v.* கசி; கசியவிடு, வெளிவிடு; வடி; புழுங்கு, ஈர ஆவி வெளிப்படுத்து.

exult', *v.* மகிழ்ச்சியில் திளை, களி மகிழ்வுகொள்.

exuv'iae, *n. pl.* மேலோட்டுக்கழிப்புப் பொருள்கள், விலங் கினுல் களையப்பட்ட தோல் ஓடு முதலியவை; புதைபடிவ மேலோட்டுப்பகுதி.

exuv'iate, *v.* தோலுரி, ஓடு களை; சட்டை கழற்று.

ex voto', (ல.) *n.* நேர்ச்சிக்கடன் படையல்; *adv.* நேர்ச்சிக் கடனுக.

ey'as, *n.* பருந்தின் இளங்குஞ்சு; புயிற்றுவதற்காகக் கூட்டி லிருந்து எடுக்கப்பட்ட பருந்தின் குஞ்சு.

eye, *n.* கண்; கண்விழி, கண்ணுருளை; கட்பகுதி, கண்குழி விடம்; விழித்திரை, விழி முகப்பு; பார்வை; பார்க்கும் ஆற்றல்; நோக்கு; இலக்கு; கவனம்; புலனுற்றல், உணருந்திறம்; கண்ணிறமுடையது, மயில் இறகுக்கண்; மையப்புள்ளி; கண்போன்ற குழிவுடையது; ஊசியின்காது; வட்டத்துளை; காலதர், புழைவாயில்; முடிபீப்பாயில் முடக்கு நுழைப்புக்குரிய புழை; சுரங்க வாய்வழி; நீரூற்றுக்கண்; கொக்கியின் கம்பியிழைக்கண்ணி; கொக்கியின் வளையம்; உருளைக்கிழங்கிலுள்ள விதைமுளை; முட்டை மீதுள்ள பொட்டு; மூக்குக்கண்ணுடிவில்லை; *v.* நோக்கு, கூர்ந்து பார்; கவனி; (தொ.) be all eyes, முழுக்கவனம் செலுத்து, அயராது கூர்ந்து கவனி; be a sheet in the wind's eye,

வெறிகொள் ; cry one's eyes out, மிகு கண்ணீர்விடு, நிரம்ப அழு ; eye of day, பகலவன், கதிரவன் ; give an eye to, கவனி ; have an eye to, நோக்கமாகக்கொண்டிரு ; in the eye of, மதிப்பில் ; கருத்தின்படி ; in the eye of law, சட்டத்தின்படி, சட்டத்துறையின் கோணத்திலிருந்து பார்த்தால் ; in the mind's eye, கற்பனையில் ; எதிர்நோக்கி ; in the wind's eye, காற்றுக்கெதிரே ; keep one's eye on, keep an eye on, கூர்ந்து கவனி ; கவனித்துப்பார் ; காவல் செய் ; keep one's eye skinned, மிக்க விழிப்புடனிரு ; make eyes at, காதற்பார்வை பார், கடைக்கண் பார்வை பார் ; make one open one's eyes, வியப்படையச்செய், வியப்பால் விழிக்கச்செய் ; my eye! வியப்புக்குறித் தொடர் ; put a finger in the eye, அழு, கண்ணீர் விடு ; put a person's eye out, குருடாக்கு ; ஒருவர் பெறும் ஆதரவை அகற்றி அவ்விடம் பற்றிக்கொள் ; see eye to eye, முற்றிலும் ஒத்த கருத்துக்கொள் ; see with half an eye, எளிதிற்கண்டுகொள் ; throw sheep's eyes at, கண்ணெசிந்து பார் ; turn a blind eye on, காணாததுபோற் பாசாங்குசெய், கண்டுங்காணாதது போலிரு ; under the eye of, கவனிப்பில், பராமரிப்பில் ; up to the eyes, முழுதும் ஆழ்ந்து ஈடுபட்டு.

eye'-ball, *n.* கண்விழி.

eye'-bath, *n.* கண் கழுவுதற்குரிய கண்ணுடி நீர்க்கலம்.

eye'-beam, *n.* கண் நோக்கு, நொடி நோக்கு.

eye'bright, *n.* கண்நோய் தீர்க்கப் பயன்படுத்தப்பட்ட மலர்ச்செடி வகை.

eye'brow, *n.* புருவம்.

eye'-flap, *n.* குதிரையின் சேணத்திற் பொருத்தப்பட்டுள்ள கண்மறைப்பு.

eye'-glass, *n.* மங்கல் பார்வையாளர் பார்க்கப் பயன் படுத்தும் கண்ணுடிவில்லை; மூக்குக்கண்ணுடி.

eye'hole, *n.* கட்குழி ; பார்க்க உதவும் புழை.

eye'lash, *n.* கண்ணிமையின் மயிர் வரிசை.

eye'let, *n.* கப்பற்பாயின் கயிற்றுத்துளை ; இழை பின்னுவதற்கான நுண் புழை ; பார்ப்பதற்கான சிறு புழை ; சுரங்கம் வெடிப்பதற்கான சிறு குழி ; சிறு கண்.

eye'lid, *n.* கண்ணிமை.

eye'-opener, *n.* தெளிவு தரும் செய்தி ; வியப்பூட்டும் செய்தி.

eye'piece, *n.* தொலைநோக்காடியின் கண் வில்லை.

eye'-rhyme, *n.* எதுகைப்போலி.

eyes, *n. pl.* கப்பல் முகப்பின் முன்புறம் ; முகப்பு முன்புறத்தில் கயிறு வடம் புகுத்துதற்குரிய கண்கள் போன்ற புழைகள் ; கட்பகுதி, கண்ணிருக்கும் முகத்தின் பகுதி.

eye'-servant, *n.* கண் துடைப்பு வேலையாள், மேலாளின் கண்பார்வையில் மட்டும் வேலை செய்பவர்.

eye'-service, *n.* கண் துடைப்பு வேலை.

eye'shot, *n.* கண் எட்டும் தூரம் ; விரை நோக்கு.

eye'sight, *n.* பார்வையாற்றல் ; காட்சித்திறம்.

eye'sore, *n.* கண்ணருவி.

eye'-splice, *n.* கயிற்றில் நுனி முறுக்குச் சுருக்கு, மடித்து அடிமுறுக்கின் புரிகளுடன் முறுக்கப்பட்ட கயிற்றின் கண்ணி.

eye'-spot, *n.* கண்போன்ற பொட்டு ; கண்போன்று பார்ப்பதற்கு உதவும் முதிராக்கருவிலை உறுப்பு.

eye'-string, *n.* கண்ணிமைக் கதுப்பினை இயக்க உதவும் தசைப்பற்று, கண்ணிமை நரம்பு.

eye'-tooth, *n.* கோரப்பல், கண்ணிற்குக் கீழே மேல்தாடையிலுள்ள கூரிய பல்.

eye'wash, *n.* கண் கழுவு மருந்து ; கண் துடைப்பு வேலை.

eye'water, *n.* கண்ணீர் ; கண்ணருகே சுரக்கும் நீர்மக்கூறு; கண்கழுவும் நீர்.

eyot, *n.* = ait.

eyre, *n.* (வர.) சுற்றுப்பயணம் ; சுற்றுலா நீதிமன்றம்.

eyr'ie, eyr'y, *n.* = aerie.

Fa, *n.* மேலே இசைமானத்தில் நான்காம் சுரம்.

Fab'ian, *n.* இங்கிலாந்தில் 1884-இல் நிறுவப்பட்ட ∴பேபியன் கழகத்தில் உறுப்பினர்; *a.* போரில் நேரிடைக் கைகலப்புக் கிடங்கொடாமல் பதுங்கித்திரிந்து காலம் நீட்டித்து எதிரியைத் தளர்வூட்டும் முறையைப் பின்பற்றுகிற; படிப்படியாகச் சமதர்மத்தைப் புகுத்திப் பரப்புதலைக் கோட்பாடாகவுடைய.

fa'ble, *n.* கட்டுக்கதை; பழங்கதை, பழம்பாட்டி கதை; புராணக்கதைத்தொகுதி, இயற்கை கடந்த நிகழ்ச்சி கூறும் கதைத்திரட்டு; புள்-விலங்குக்கதை; நொடிக்கதை; விளக்கக் கதை; நீதிக்கதை; கதை நிகழ்ச்சி; கற்பனைச் செய்தி; பொய், புரளி; பயனிலாப் பேச்சு; *v.* கதை கட்டு; கட்டுக் கதை கூறு; கற்பனையான கதைகளைச் சொல்; கற்பனையாகக் கூறு.

fa'bled, *a.* பழங்கதைகளில் கூறப்பட்ட; புராணப்புகழ் பெற்ற; பழம்புகழ் வாய்ந்த.

fab'liau, *n.* செய்யுள் வடிவான முற்காலத்திய பிரஞ்சுப் பழங்கதை; *pl.* fab'liaux.

fab'ric, *n.* மாளிகை, கட்டிடம்; கட்டுமானம்; கூட்டிணைப்புப் பொருள், யாப்புறுத்தப்பட்ட ஒன்று; சட்டம், அமைப்பு; நெய்யப்பட்ட துணி வகை; நெசவுமானம்; இழைமானம்; நெசவு மூலப்பொருள்.

fab'ricate, *v.* கட்டமை, கட்டியுருவாக்கு; செய், சமை, படை, உண்டுபண்ணு; புனைந்துகட்டு; பொய்யாக அமை; கள்ளக் கையொப்பமிட்டுப் பத்திரங்களை உருவாக்கு.

fabrica'tion, *n.* கட்டுதல், கட்டுமானம்; செய்துருவாக்குதல், படைப்பாக்கம்; கட்டுக்கதை; பொய், புனைசுருட்டு; பொய்ப்பத்திரம்.

fab'ulist, *n.* கட்டுக்கதையாளர்; நீதிக்கதை இயற்றுபவர்; பொய்யர்.

fab'ulous, *a.* கட்டுக்கதை கூறுகிற; கட்டுக்கதையில் கொண்டாடப்பட்ட, பழம் புகழ் உடைய; வரலாற்றுக்கு மாறான; நம்பத்தகாத; புனை சுருட்டான; அறிவுக்குப் பொருந்தாத; **மிகைப்படுத்தப்பட்ட.**

facade', *n.* கட்டிடத்தின் முகப்பு, முன்பக்கம்; முகப்புத் தோற்றம், புறத்தோற்றம்.

face, *n.* முகம்; முகத்தோற்றம்; முகமாறுபாடு; முகபாவம்; பார்வை; முகப்பு; முன்புறம்; முன்பகுதி; மணிப்பொறி முகப்பு; பாறை பிளப்பு முகம்; ஆட்டச்சீட்டில் படமுள்ள புறம்; சுரங்கவாயில்; வெட்டுவாய்; வெட்டுக் கருவியின் முனை; மணிக்கல்லின் பட்டைமுகம்; குழிப்பந்தாட்ட மட்டையின் அடிக்கும் பக்கம்; புற அமைப்பு; புறத் தோற்றம்; பரப்பு, மேற்பரப்பு; பிழம்புருவின் பக்கத்தளம்; அச்சுருவின் எழுத்து வடிவப்பாணி; துணிச்சல்; துடுக்குத் தனம்; *v.* முன்னிலைப்படு; எதிர்ப்படு, சந்தி; பார்; எதிராக நில்; தடுத்து நில்; வீரத்துடன் தாங்கு; உறுதியாயிரு, திறமையுடன் நின்று சமாளி; முகம் திருப்பு; முகம் திரும்பு; நோக்கியிரு; நோக்கித்திருப்பு; நோக்கித்திரும்பு; நேராயிரு, எதிர்ப்புறமாயிரு; சீட்டு வகையில் முகம் மேலாகக் காட்டு; முன்னே திரையாயமை; முகப்பாயமை; மேலுறையிடு; மேற்பூச்சிடு; பரப்புமீது ஒப்பனை செய்; விளிம்புசித்தரி; விளிம்பு இணை; (நொ.) face down, எதிர்த்தடக்கு, அச்சுறுத்திக் கீழடங்கச்செய்; face off, ஆட்ட வகைகளில் காய்களை எதிரெதிராக வைத்துத் தொடங்கு; face out, முழுதும் நடத்திச்செல்; face to face, நேருக்கு நேரான; எதிரெதிராக; face to face with, முன்னிலையில்; fly in the face of, வெளிப்படையாகக் கீழ்ப்படிய மறு, நேரடியாக எதிர்த்து நில்; have the face, வெட்கத்தை உதிர்த்து நில்; in face of, எதிராக; in face of, in the face of, இருந்த போதிலும், அச்சூழல் எதிர்த்து; lose face, மதிப்பிழ; தாழ்வுறு; நற்பெயரை இழ; look one in the face, நேருக்கு நேராக நின்று நோக்கு; make a face, முகத்தைச் சுளித்துக்காட்டு, 'அழகு' காட்டு; on the face of it, வெளித்தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடும்போது; pull a long face, wear a long face, முகத்தைச் சுண்ட வைத்துக் கொண்டிரு, சோர்வுற்றிரு, துயரார்ந்திரு; put a good face on matter, put a bold face on matter, தளராமல் உறுதியாகக் காட்சியளி, தீரமான தோற்றமளி; put a new face on, தோற்றத்தை முழுதும் மாற்று; save one's face, மானத்தைக் காப்பாற்றிக்கொள், அவமானப்படுத்துவதிலிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொள்; set one's face against, உறுதியாக எதிர்த்து நில்; show one's face, தோற்றமளி, தோன்று, காட்சியளி; to one's face, முன்னிலையில், நேரிடையாகவே.

face'-ache, *n.* முகத்தின் நரம்பு வலி.

face'-card, *n.* சீட்டாட்டத்தில் அரசன்-அரசி-அடிமை முகப் படமுள்ள சீட்டு.

face'-lifting, *n.* முகச்சுருக்கத்தை நீக்கி இளமைத் தோற்றத்தை அளிக்கும் அறுவைச் செயல்.

fa'cer, *n.* முகத்தில் அடிக்கும் அடி; திடீரென நிகழ்கிற பெரிய இக்கட்டு.

fa'cet, *n.* வைரத்தின் பட்டை; பட்டையிட்ட பரப்பின் ஒரு முகப்புக் கூறு; கருத்துக் கூறு.

face'tiae, *n. pl.* வேடிக்கைப் பேச்சுக்கள், நொடிப்பேச்சுக்கள், கேலித்துணுக்குகள்; நகைச்சுவை ஏடுகள், கேலித்துணுக்கு ஏட்டுப்பட்டியல்; மறைக்கத்தக்க பொருள்கள்பற்றிய ஏட்டுத்தொகுதி.

face'tious, *a.* விளையாட்டுப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள, கிண்டலான, நகையாட்டான, நொடிபேசுகிற, குறும்புத் தன்மையுடைய.

fa'cia, *n.* கடைமுகப்புப் பெயர்த்தகடு.

fa'cial, *n.* முகத்தசை பிடித்துவிடல்; *a.* முகம் சார்ந்த; (தொ.) facial angle, காது - மூக்கு - நெற்றிவரைகளிடையேயுள்ள கோண அளவு.

fa'cile, *a.* எளிதான; எளிதாகச் செய்யக்கூடிய; எளிதில் பெறத்தக்க; எளிமை நயமுடைய, வாய்ப்பு நயம் வாய்ந்த; ஒழுகு நயமுடைய, இழைவான; தட்டுத்தடையின்றிப் பேசுகிற; தங்குதடையற்ற சொல்லொழுக்குடைய; நடை நயமுடைய; இணக்க நயமுடைய, இசைவார்ந்த; வளைந்து கொடுக்கிற; கடுமையற்ற பண்புடைய, குண அமைதியுடைய, அமைந்த போக்குடைய.

fa'cile prin'ceps, (ல.) *a.* எளிதில் முதன்மையான.

facil'itate, *v.* எளிதாக்கு, துணை தந்து ஊக்கு, முன்னேற உதவு.

facil'ities, *n. pl.* வாய்ப்புநலங்கள்; துணைநலங்கள்; துணை நலவாய்ப்புப் பொருள்கள்.

facil'ity, *n.* எளிமை; இக்கட்டின்மை; தட்டுத்தடங்கலின்மை; விரைந்தியங்கும் திறம்; எளிமை நயம், முயற்சியற்ற உடனடிச் செயல்திறம்; இழைவு, ஒழுகு நயம்; இணக்க நயம்; வாய்ப்பு நலம்; துணை நலம்; துணைநலப் பொருள்.

fa'cing, *n.* எதிர்நிலை; சந்திப்பு; சமாளிப்பு; பக்க நோக்கிய திருப்பம்; முகப்பு; பாதுகாப்பான முகப்பு மறைப்பு; ஒப்பனை மறைப்பு; சுவரில் முகப்புக்கல்; விளிம்பு அமைப்பு; மேற்பூச்சு; மேலீடு.

fa'cings, *n. pl.* சட்டையின் வண்ண வேறுபாடுடைய முன்கை முகப்பு; வண்ணவேறுபாடுடைய கழுத்துப்பட்டை விளிம்பு; திருப்பத்திசை முகங்கள், வாழ்க்கைப்போக்கு மாறுதல்கள்; (தொ.) go through one's facings, குண இயல்புகள் பற்றிய சோதனைகளுக்கு உட்படு; put person through his facings, ஒருவருடைய குண இயல்புகளைச் சோதனை செய்து பார்.

facsim'ile, *n.* உருவ நேர்படி, எழுத்து மட்டுமன்றி வரிவடிவின் தோற்றமும் நிழற்படுத்திக் காட்டும் நேர்படி உருப்பகர்ப்பு; படத்தின் நேர்படி உருமாதிரி; *v.* சரி மாதிரி செய், உருவநேர்படி எடு.

fact, *n.* செய்தி, நடந்த செயல்; நிகழ்ச்சி; கண்கூடான நிகழ்ச்சி; மெய்ந்நிகழ்வு; அனுபவச் செய்தி, அறிவாதார மான அனுபவம்; வாத ஆதாரச் செய்தி; மெய்ம்மை, இயன்மை; (தொ.) as a matter of fact, மெய்யாக; உய்த் துணர்வு எதுவுமில்லாமலே; facts of life, வாழ்வில் இனப் பெருக்கம்பற்றிய விளக்க விவரங்கள்; ஊக அடிப்படைகள்; in fact, in point of fact, மெய்யாகவே; the fact of the matter, வாதத்திற்குரிய பொருள் வகையில் தெளிவான உண்மை.

fac'tion, *n.* தன்னலக் கும்பல்; உட்கலகம்; உட்கட்சி வேறுபாடு.

facti'tious, *a.* இயற்கைக்கு மாறான, செயற்கையான; போலியான.

fac'titive, *a.* பிறவினைப்படுத்துகிற; (தொ.) factitive verb, செயப்படுபொருளுடன் பயன்நிரப்பு அடையினையும் ஒருங்கே ஏற்கிற வினைச்சொல்.

fac'tor, *n.* வாணிகத்துறை ஆட்பேர், உரிமைப்பேராள்; தரகு வணிகர்; காரணக்கூறு; ஆக்கக்கூறு; துணையாக்கக் கூறு, துணைக்கூறு; (கண.) அளவைக் கூற்றெண், காரண எண்; (தொ.) factor cost, ஆக்கச்செலவு, அடக்கவிலை; factor of safety, உறுதிப்பாட்டுக்கும் உயர்வெல்லைப் பாரத் துக்கும் இடையேயுள்ள மித அளவு.

fac'torage, *n.* தரகர் ஊதியம், தரகுக்கழிவு; வணிகப்பேராள் ஊதியம்.

factor'ial, *n.* படிவரிசைப் பெருக்கப் பேரெண், வரிசை முறைப்படியுள்ள எண்களின் பெருக்கம்; படியிறக்கப் பெருக்கப் பேரெண், முழு எண்ணை இறங்கு வரிசையில் அவ் வெண்ணடுத்து ஒன்றுவரையுள்ள எல்லா முழு எண்களாலும் பெருக்கிய தொகை; *a.* காரண எண் சார்ந்த.

fac'tory, *n.* அயல்நாடுகளிலுள்ள வாணிகக் கழகத்தின் வாணிகக்களம்; தொழிற்சாலை, ஆக்கத்தொழிலகம்; பண்டக சாலை.

factot'um, *n.* பல்பணி ஒருவர்.

fac'tual, *a.* மெய்ந்நிகழ்ச்சியைச் சார்ந்த, உண்மை நிகழ்ச்சி யோடு தொடர்புகொண்ட, உள்ளது உள்ளவாறான.

fac'tum, *n.* செய்திப்பட்டியல்; வாதக்குறிப்புத் தொகுதி; நினைவுக்குறிப்பேடு.

fac'ultative, *a.* இசைவு தருகிற; விருப்பத்துக்குரிய, தேர் வுரிமையுள்ள; மேலே நேரிடத்தக்க; கலைத்திறக் குழு வினைச் சார்ந்த.

fac'ulty, *n.* வினைத்திறம்; இயற்கை உளச்சார்பு, இயல்பு வலிமை; பல்கலைக்கழகக் கலையியற்குழு; மேலாண்மை அடிப் படையான தனிமுறை அதிகாரம்; தொழில்முறைப் பணி யாளர் தொகுதி; தனிப்பட்ட நுட்பத்திறமை; செயலுரிமை.

fad, *n.* ஆர்வக்கொள்கை, பித்து, போலி விளக்கக்கூறு.

fade, *v.* வாடு, வதங்கு; பட்டுப்போ; தளர்வுறு, சோர் வுறு; வரவர மெலிவுறு, படிப்படியாகத் தேய்வுறு; ஓசை வகையில் வரவரக் குறைவுறு; மங்கு, மங்கலாகு; தெளிவு குறைவுறு; நிறம் விளறு; மலர்ச்சி இழ, பொலிவு குன்று; வலுவிழ; மாள்வுறு; மறை, படிப்படியாக மறைவுறு.

fae'ces, *n. pl.* வண்டல், மண்டி; மலம்.

Fa'erie, Fa'ery, *n.* மாய உலகு, வனதெய்வ உலகு; வன தெய்வம்; *a.* கனவுத் தோற்றமான, மாயத்தோற்றமான; கற்பனையான.

fag, *n.* தொழும்பு; வேண்டா வேலை; கீளைப்பு, அசதி; கட் டாய ஊழியத்துக்கு உட்படுத்தப்படும் பள்ளிநிலையக் கீழ் நிலை மாணவர்; *v.* தொழும்படிமையாயிரு; கீளைப்பூட்டு, அயர்வு கொள்ளுவி; மேல்நிலை மாணவர்களுக்குத் தொண் டுழியம் செய்; கீளைப்புறு, அயர்வுறு.

fag'-end, *n.* பயனற்ற மிச்சத்துண்டு, தரங்குறைந்த கடைசித் துணுக்கு; தொங்கல் விளிம்பிழை; கயிற்றின் முறுக்குருத் தும்புப்புரி; எறிந்துவிட்ட பூஞ்சுருட்டுக் கட்டை.

fagg'ot, fag'ot, *n.* விறகுக்கட்டு; குழிதூர்க்கவும் கரை யணைக்கவும் பயன்படுத்தப்படும் புதர்க்கட்டு; எரிக்குக் கம்பி களின் கற்றை; கட்டு, மூட்டை; கல்லீரலைக் குறுகத் தறித்துப் பொரித்த கூட்டு; *v.* விறகுக்கட்டாகக் கட்டு, கற்றையாகக் கட்டு.

fagg'ot-vote, *n.* தகுதிபெற்றிராதவருக்குப் போதுமான அளவு சொத்தை மாற்றி உண்டாக்கப்படும் வாக்குரிமை.

Fahr'enheit, *a.* 'பாரென்ஹீட்' வகை வெப்பமானியைச் சார்ந்த; (தொ.) Fahrenheit thermometer, உறைநிலை 32 பாகையாகவும் கொதிநிலை 212 பாகையாகவும் கொண்ட 'பாரென்ஹீட்' வகை வெப்பமானி.

fa'ience, *n.* ஒப்பனை மண்பாண்டத் தொகுதி; சித்திர வேலைப் பீங்கான் தொகுதி.

fail, *v.* குறைபடு; போதாதிரு; ஆற்றல் கெடப்பெறு; தளர்வுறு; தரங்குறைபட்டுச் செல்; தவறு; செயற்சோர் வுறு; செய்யாதொழி; கைவிடு; தவணை தப்புதலுறு; நட்புக்கேடு செய்; உதவி மறு; ஏமாற்றமூட்டு; உதவா திரு; பெருது போ; தோல்வியடை; தேர்வுக்குரிய வேட் பாளர் வாய்ப்பு இழ; ஏலாது போ; ஏலாநிலையுறு; நொடித்துப்போ; குறிபிசகு; வராதுபோ; இல்லாதுபோ; மரபற்றுப்போ; மறைவுறு; அழிவுறு; (தொ.) without fail, தப்பாமல், கட்டாயமாக, உறுதியாக.

fail'ing, *n.* குறைபாடு, குறை, வழு, தவறுதல்; *prep.* இல்லாவிட்டால்; தவிர்த்து.

faille, *n.* பளபளப்பில்லாத மெல்லிய பட்டாடைத் துணி வகை.

fail'ure, *n.* தோல்வி, வெற்றிபெருமை; வெற்றிபெறுதவர், தோல்வியுறுபவர்; குறைபாடு; தளர்வு; சோர்வு; அழிவு; நொடிப்பு; செயலொழிவு; நிகழாமை; தொடர் பறவு; வராமை; கடனிறுக்க மாட்டாமை.

fain, *adv.* மகிழ்வுடன்; வேறு மாற்று வழியில்லாத நிலையில்.

faineant, (பிர.) *n.* சோம்பேறி; *a.* சோம்பருடைய.

faint, *n.* உணர்விழப்பு, மயக்கம்; *a.* மங்கலான; ஒளி குறைந்த; பார்வை மங்கிய; தெளிவற்ற; வெளிறிய; மந்தமான; தளர்வான; மெலிந்த; வலுவற்ற; மெல்லியல்பு வாய்ந்த; திடமற்ற, உள்ளுரமற்ற; துணிவற்ற, கோழைத் தனமுடைய; தலைசுற்றுதலுடைய; அச்சத்தாற் செயலிழந்த; புழுக்கமிக்க; திணற வைக்கும் கடுமணமுடைய; நோக்காடு உண்டுபண்ணுகிற; *v.* உணர்வு இழ, மயக்கம் அடை; வலு இழ, தளர்வுறு; மங்கு; மந்தமாகு; மறை; துணிவு இழ.

faints, *n. pl.* வடித்திறக்கும்போது தொடக்கத்திலும் இறுதி யிலும் எழுகிற துப்புரவு கெட்ட சாராயச் சத்து.

fair[1], *n.* சந்தை, வாணிகக்கூட்டம்; விழாக்காட்சி; அற நோக்கக் காட்சி விழா; (தொ.) a day after the fair, காலங்கடந்து, வேளை தவறி.

fair[2], *a.* அழகான; செவ்விய தோற்றமுடைய; ஒளிர் வுடைய, ஒளியார்ந்த; ஒளிவண்ணமார்ந்த; மழை மப்பு மந் தாரமற்ற; தூய, மாசற்ற; கறையற்ற; தெளிவான; செவ்வான, நேரான, ஒழுங்குடைய, நெறிமுறை திறம்பாத; நடுநிலையுடைய; சட்டத்துக்கு முரண்படாத; நலம் எதிர் பார்க்கத்தக்க; நம்பிக்கைக்குரிய; விரும்பத்தக்க; மகிழ் வூட்டுகிற; நடுத்தரம் வாய்ந்த; மட்டான; கேடற்ற; அறிவுக்குகந்த; நல்லாதரவான; நல்ல; நலமிக்க; செல்வ வளமுடைய; *v.* நற்படி பகர்த்தெடு; காலநிலை வகையில் ஒழுங்குபடு; நலமாகு; கப்பல்கட்டுமான வகையில் நேரி தாக்கு; வழவழப்பாக்கு; *adv.* பகர்ப்புப்படி வகையில் நேரொழுங்குபட, வழுவின்றி, மாறுபாடில்லாமல்; நடுநிலை தவறுமல், ஒழுங்குமுறைப்படி, விதிமுறை வழுவாமல்; நய இணக்கம்பட, நயநாகரிகப்பண்புடன்; நன்கு, நல்லாதர வாக, நன்னம்பிக்கையுடன்; நேராக, குறிதவறுது; தகுதி யாக; ஒருசீராக, மென்னயம்பட, அமைதியாக; (தொ.) by fair means, நேரான வழிமுறையில்; fair copy, துப்புர வுப் படி; fair field and no favour, தனி அன் பிரக்க

உணர்ச்சிகளற்ற நேர்மை ; fair play, நடுவுநிலை கோடாமை; fair trade, இருபுறமொத்த நலமுடைய தங்குதடையற்ற வாணிகத் தொடர்பு ; fair weather, விரும்பத்தக்க காலநிலை; வாழ்க்கை நலமுடைய காலம் ; in a fair way to succeed, வெற்றிக்குரியதென நம்பத்தகுந்த நல்ல வழியாக.

fert'ilize, *v.* வளப்படுத்து, செழிப்பாக்கு; உரமூட்டு; சினைப்படுத்து, பொலிவி; (தாவ.) மகரந்தக் கலப்பு ஏற்படச்செய்.

fer'tilizer, *n.* கருக்கொள்ளச் செய்பவர்; சினைப்படுத்தும் பொருள்; நல்வள உரம், எரு.

Fe'rula[1], *n.* (தாவ.) குடைப்பூக்கொத்துச் செடிவகை.

fe'rula[2], *n.* ஒறுத்தற்கான கழி, பிரம்பு; ஆணைக்கோல்.

fe'rule, *n.* ஒறுத்தற்கான பிரம்பு அல்லது கழி; *v.* கோல் கொண்டு அடி, அடித்து ஒறு.

ferv'ency, *n.* வெப்பம்; ஆவல், ஆர்வம், உணர்ச்சி மிகுதியால் எழும் அன்பு; மிகு உணர்ச்சி, விதிர்விதிர்ப்பு.

ferv'ent, *a.* வெப்பமான; சுடர்விட்டு ஒளிர்கிற; தணியாப் பற்றுள்ள, ஆர்வமிகுந்த; செறிவார்ந்த.

ferv'id, *a.* மிகுவெப்பமான; சுடர்விட்டொளிர்கிற; கனன்றெழும் ஆவலுடைய; அழன்றெழும் உணர்ச்சி வாய்ந்த; பற்றார்வமிக்க.

ferv'our, *n.* சுடர்விட்டொளிரும் நிலை; மிகுவெப்பம்; வெறியார்வம், உணர்ச்சி வேகம், தணியாப்பாசம்.

Fes'cennine, *a.* கீழ்த்தரமான வசை நிரம்பிய; (தொ.) Fescennine verses, வசைப்பாடல்கள்.

fes'cue, *n.* சிறுகழி; சுட்டிக்காட்டுவதற்காக ஆசிரியர் பயன்படுத்தும் கோல்; புல்வகை.

fess, fesse, *n.* (கட்.) கேடயத்தின் நடுப்பாகத்தின் குறுக்கே பட்டைபோன்று அமைந்துள்ள இரண்டு கிடைக்கோடுகள்.

fesse'-point, *n.* கேடயத்தின் மையம்.

fes'tal, *n.* விழா, கொண்டாட்டம்; *a.* விருந்துக்குரிய; பண்டிகைநாள் கொண்டாடுகிற; மகிழ்வார்ந்த.

fes'ter, *n.* நச்சு நீர் வடிக்கும் புண்; புரைத்துச் சீக்கொண்ட நிலை; *v.* (புண்—சிரங்கு) புரைத்துச் சீக்கொள், புண்ணுறு, கொதி, நீர்வடி; சீக்கட்டு; சீறிக்கொள்; மனம் புண்ணுறு; அழுகு; புண்ணுக்கு.

fes'tival, *n.* விழா; விழாநாள்; விழாக்கொண்டாட்டம்; மகிழ்ச்சியில் திளைத்தல்; பருவகாலச் சிறப்பு இசை நிகழ்ச்சிகள்; *a.* விழாச் சார்ந்த; விழா நாளுக்குரிய.

fes'tive, *a.* விருந்துக்குரிய; விருந்தில் நாட்டமுள்ள; மகிழ்ச்சி நிரம்பிய, களிப்பான; உவகை கொந்தளிக்கிற.

festiv'ities, *n. pl.* விழாநடைமுறைகள்.

festiv'ity, *n.* களியாட்டு, கொண்டாட்டம், விழா.

festoon', *n.* தோரணம் பூத்தொங்கல், பிறைவடிவமாகத் தூக்கிய மாலை; *v.* தோரணங்கட்டு, தோரணங்களால் ஒப்பனை செய்; தோரணங்களாக அமை.

fetch[1], *n.* கொணர்தல்; தட்டிக்கழிப்பு; சூழ்ச்சி முறைச் செயல்; விரிகுடா முதலியவற்றின் வகையில் தொடர்வரை நீளம்; நெடுந்தொலை முயற்சி, சுற்று முயற்சி; *v.* சென்று கொணர்; போய் மீட்டுக்கொண்டுவா; இங்குமங்கும் கொண்டு

செல்; தருவி; விலையாகத் தருவி; கொண்டு கொடு; எடு; வருவி; வெளிக்கொணர்; மெய்ப்பாடுகளைத் தோற்றுவி; மகிழ்வு உண்டுபண்ணு; குருதி கசியவிடு; மூச்சுவெளி வரச்செய்; படுவி, அடி முதலியவற்றை ஏற்கச்செய்; மயக்கத்தினின்றும் மீள்வி; செய், செய்து முடி; செய்து காட்டு; பெறுவி; முயன்று பெறு; நெடுமூச்சுவெளிவிடு; சென்றடை, செல்; திறம்படச் செயலாற்று; (தொ.) fetch a circuit, fetch a compass, சுற்றி வளைத்துக்கொண்டுபோ; fetch and carry, குற்றேவல் செய்; fetch a pump, குழாய் தண்ணீர் இழுக்கும்படி செய்யும்பொருட்டு அதன் மேல்முனையில் நீர் ஊற்று; fetch off, இடர் அல்லது இன்னலினின்று மீட்டுக் கொண்டு வா; fetch out, வெளியே இழு; வளரச்செய்; fetch up, இயக்கந்தடுத்து நில்; வாந்தியெடு.

fetch[2], *n.* உயிருடனிருப்பவரது ஆவி இரட்டை, மறு ஆவி வடிவம்.

fetch'ing, *a.* கண்ணைக்கவர்கிற.

fete, *n.* விழா, பெருவிருந்து, களியாட்டம்; விடுமுறைநாள்; குழந்தைக்கு வைத்துள்ள பெயரையுடைய திருத்தொண்டரது விழாநாள்; *v.* விருந்தூட்டி மகிழ்வி; விழாக்கொண்டாடிச் சிறப்பி.

fete champetre, (பிர.) *n.* திறந்த வெளியில் நடைபெறும் விருந்து விழாக்கொண்டாட்டம்.

fe'tial, *n.* அரசியல் தூதர்களாகப் பணிசெய்த ரோமாபுரிச் சமயகுருமார்குழுவினர்; *a.* அரசியல் தூதர்களாகப் பணி செய்த ரோமாபுரிச் சமயகுருமார் குழுவுக்குரிய; அரசியல் தூதர் சார்ந்த, தூதாண்மை நிலைக்குரிய.

fet'ich, fet'iche, *n.* = fetish.

fet'ichism, *n.* = fetishism.

fet'id, *a.* முடைநாற்றமுடைய, புழுங்கி வாடைவீசுகிற.

fet'ish, *n.* உயிரற்ற போலி வழிபாட்டுப்பொருள்; மூடபக்தி, மூடநம்பிக்கை.

fet'ishism, *n.* உயிரிலாப் போலி உருவ வழிபாடு; தாயத்து முதலியவைகளில் நம்பிக்கை.

fet'lock, *n.* குதிரைக்காலடிக் குழைச்சு; குதிரைக்காலடி, குதிரைக்குளம்பின் மேல் மயிர்க்குச்சமுள்ள பகுதி.

fet'or, *n.* முடைநாற்றம்.

fett'er, *n.* கால்விலங்கு; தளை; தடை, தடங்கல்; *v.* கால் விலங்குகளாற் பிணை; தடு, தடங்கல் செய்.

fett'ers, *n. pl.* சிறைக்கட்டு, விலங்கீடு.

fet'tle, *n.* நிலைமை, ஒழுங்கு, முறை; *v.* ஆயத்தம் செய், ஒழுங்குபடுத்து, ஏற்பாடுபண்ணு; இங்குமங்கும் சுற்றித்திரி.

fet'us, *n.* = foetus.

fet'wa, (அரா.) *n.* இஸ்லாமிய வழக்கில் நீதிபதியின் தீர்ப்பு.

feud[1], *n.* குடிமரபுப்பகை, வழிவழிப்பகை; ஓயாச் சண்டை சச்சரவு நிலை; (தொ.) right of feud, தன்னையும் தன் உறவினர்களையும் பாதுகாத்துக்கொண்டு தீங்கிழைத்தவர்களை ஒறுப்பதற்கான உரிமை.

feud[2], *n.* நிலமானியம், படைத்துறை முதலியவற்றில் ஊழிய ஊதியத்துக்கீடான நிலவுரிமை முறை; ஊழிய மானிய நிலம்.

feud'al, *a.* ஊழியமானியத்துக்குரிய; மானிய நிலம் சார்ந்த; நிலப்பண்ணைமுறை சார்ந்த; (தொ.) feudal system, பண்ணை நிலவுரிமை முறை, குடியாட்கள் மேலாளர்களுக்குப் பணிந்து படைப்பணி புரிய வேண்டுமென்னும் கட்டுப்பாட்டின்பேரில் நிலவாரம் அமையும் முறை.

feud'alism, *n.* நிலப்பண்ணை உரிமை முறை.

feudal'ity, *n.* நிலப்பண்ணை முறை; நிலப்பண்ணை முறைக் கோட்பாடு; நிலப்பண்ணை முறையிற் கொள்ளப்பட்ட நிலம்.

feud'ary, feud'atory, *n.* பண்ணைநிலக் குடியுரிமையாளர், குடியானவர்; *a.* பண்ணைக்குடியுரிமையுடைய, கீழ் உரிமைப் பட்ட.

feu de joie, (பிர.) *n.* சிறப்புக் கொண்டாட்டங்களின்போது வணக்க முறையாக முழக்கப்படும் வேட்டுக்கள்.

feuilleton, (பிர.) *n.* புனை கதை-திறனுய்வு-எளிய கட்டுரைகள் முதலியவைகளுக்கெனச் செய்தித்தாள்களின் அடியில் கோடிட்டு ஒதுக்கப்படும் பகுதி.

fev'er, *n.* காய்ச்சல், சுரம், வெப்புக் காய்ச்சல் வகை; உணர்ச்சிப் பரபரப்பு; நரம்புத் துடிதுடிப்பு; மனக்கலக்கம்; நடுநடுக்கம்; கடுங்கவலை; *v.* காய்ச்சலுக்குட்படுத்து; காய்ச்சலுக்காளாகு.

fe'vered, *a.* காய்ச்சல் கண்டுள்ள; மனக்கொந்தளிப்புடைய.

fev'erfew, *n.* முன்னுட்களில் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பூண்டு வகை.

fe'ver-heat, *n.* சுரவெப்பம்; உடலின் கடுவெப்பு; கடுமையான மனக்கலக்கம்.

fev'erish, *a.* காய்ச்சல் குறிகளுள்ள; காய்ச்சலின் அடையாளமான; ஒரு சிறிது சுரமுடைய; மனக்கொந்தளிப்புடைய; அமைதியற்ற, பரபரப்பு மிக்க; அவாப்படபடப்புடைய; ஏங்கித் துடிக்கிற; இடவகையில் காய்ச்சல் பரவியுள்ள; சுரம் பரவத்தக்க.

fev'erous, *a.* காய்ச்சல் பரவியுள்ள; சுரம் உண்டாக்கவல்ல; சமநிலையற்ற, திடீர் மாறுபாடுகளைக் கொண்ட.

few, *a.* குறைவான, சில; பலரல்லாத; (தொ.) a few, ஒன்றல்லாத; சிலர்; ஒருவரல்லாத; a good few, quite a few, ஓரளவு நிரம்பிய எண்ணிக்கையுடைய; ஓரளவு போதிய எண்ணிக்கையுடையவர்கள்; every few days, சிலநாட்களுக்கு ஒரு முறையாக; in few, in few words, சில சொற்களில், சுருக்கமாக; not a few, பல; பலர்; some few, குறைந்த எண்ணிக்கையுடைய சிலர்; the few, சிறுபான்மையோர்; தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர்.

few'ness, *n.* எண்ணிக்கையின் சிறுமை.

fez, *n.* துருக்கிக் குல்லாய்.

fi'acre, *n.* பிரஞ்சு நாட்டு நான்கு சக்கர வாடகை வண்டி வகை.

fiance, (பிர.) *n.* மண உறுதிசெய்யப்பட்ட ஆண்.

fiancee, (பிர.) *n.* மண உறுதிசெய்யப்பட்ட பெண்.

Fi'anna Fail, *n.* ஐரிஷ் குடியரசுக் கட்சி.

fias'co, *n.* பெருந்தோல்வி; முறிவு; பழிப்புக்கிடமான இறுதி விளைவு.

fi'at, *n.* கட்டளை, ஆணை, தீர்ப்பு; உரிமையளிப்பு; உரிமைப் பத்திரம்; *v.* அதிகாரங்கொடு; ஒப்புறுதி அளி; (தொ.) fiat money, அரசியல் ஆணையினால் நாணயமாக்கப்பட்டுள்ள மாற்றமுடியாத தாள் பணம்.

fib[1], *n.* புளுகு, மன்னிக்கக்கூடிய சிறுதிறப் பொய்; *v.* சிறு புளுகு அளை.

fib[2], *n.* மற்போரிற் குத்து, அடி; *v.* அடிகொடு, குத்துவிடு.

fi'bre, *n.* சிம்பு நாருரி; நார்ப்பொருள்; விலங்கு செடியினப் பகுதியான நாரியற்பொருள்; நூலிழை அமைப்பு; இழைம வகை, இழையமைதித் திறம்; சிறு வேர்த்துய்; சல்லிக் கிளைச்சுள்ளி.

fi'bre-board, *n.* கட்டிடத்திற் பயன்படுத்தப்படும் செயற்கை நார் அட்டை.

fi'bre-glass, *n.* கண்ணாடி நுண்ணிழையாலான இழைமப் பொருள்.

fib'ril, *n.* சிறுநாரியற்பொருள்; நாரின் நுண்ணிழைக்கிளை; வேரின் துய்; தசைநார் இழைத்துய்.

fib'rin, *n.* விலங்கு-தாவரம் ஆகியவற்றில் கட்டியாக உறையக்கூடிய கசிவு **ஊனீர்**.

fib'roid, *n.* நாரியல் அமைப்புடைய கருப்பைப் பரு; *a.* நாரியல் அமைப்புடைய; இழைநார்த்தோற்றம் வாய்ந்த.

fib'roin, *n.* நுண்ணிழைமப் பொருள், பட்டிழை-சிலந்திநூல் போன்றவற்றின் அடிப்படை ஆக்கப்பொருள்.

fibrom'a, *n.* நரப்புச்சிலந்தி, நரப்புக்கட்டி.

fibrosit'is, *n.* கீல்வாதச் சார்பான தசைநாரின் வீக்கம்.

fib'ula, *n.* காலின் வெளிப்புறத்திலுள்ள சிம்பு எலும்பு.

ficelle', *a.* நூலின் நிறத்தைக்கொண்ட.

fi'chu, *n.* பெண்டிர் தோளிலணியும் முக்கோணச் சவுக்கம்.

fic'kle, *a.* அடிக்கடி மாறும் இயல்புள்ள, நிலையற்ற; எளிதில் பேதுறுகிற.

fic'tile, *a.* களிமண்ணால் செய்யப்பட்ட; குயவன் தொழிலைச் சார்ந்த; மட்கலங்களைச் சார்ந்த.

fic'tion, *n.* போலி, புனைவு; போலிப்பொருள்; கற்பனைப் பொருள், புனை கூற்று; புனைகதை; புதினம், நாவல்; போலி நம்பிக்கை; தவறான கருத்து; கற்பனைக்கதை இலக்கியம்; (சட்) வழக்குகளில் எதிர்க்கட்சி மறுப்புக்கிடமளிக்கப் படாமலே நடக்கக்கூடியதென்று வாதிட இசைவளிக்கப்படும் செய்தி.

ficti'tious, *a.* போலியான, உண்மையல்லாத, புனைந்து கொள்ளப்பட்ட, பாவனையான; பொய்சார்ந்த; மரபொழுங்காக உண்மையென்று கொள்ளப்பட்ட.

fic'tive, *a.* கற்பனையால் உருவாக்கப்படுகின்ற, புனைந்துருவாக்கப்பட்ட.

fid, *n.* (கப்.) கூருளையான மர முளை; பாய்மர உச்சியைத் தாங்கும் மரத்தினால் அல்லது இரும்பினால் ஆன சதுரச் சட்டம்; தடித்த ஆப்பு.

fid'dle, *n.* 'பிடில்', நரப்பிசைக்கருவி வகை; (கப்.) மேசை மீதிருந்து பொருள்கள் உருண்டு விழாமலிருப்பதற்கான தடுப்பு அமைவு; *v.* நரப்பிசைக் கருவிவகையை மீட்டு; வீண்காலம் போக்கு, சோம்பேறியாயிரு; விளையாட்டுத் தனமாக இரு; குறிக்கோளில்லாமல் இயங்கு; *int.* மண்ணாங் கட்டி! (தொ.) face as long as a fiddle, துயரார்ந்த முகம்; fit as a fiddle, செயலுக்குகந்த நன்முறுக்கு நிலையில்; play first fiddle, செயலில் முதன்மைப் பங்குபெறு; play second fiddle, செயலில் கீழ்ப்பட்ட பங்கு பெறு; play the fiddle, யாழ்வகை வாசி; சோம்பேறியாகப் பொழுதுபோக்கு.

fid'dle-bow, *n.* குதிரை முடியால் புனையப்பட்ட யாழ்வகை நாண்வில்.

fid'dle-de-dee', *int.* மண்ணாங்கட்டி! வீணுட்டம்! (வெறுப்புக்குறிப்பு).

fid'dle-faddle, *n.* அற்பப்பொருள்; சிறு செய்தி; சோம்பேறி; *a.* அற்பமான, சிறுதிறமான; *v.* வேடிக்கை விளையாட்டுச் செய்; வீணரவாரம் செய்; *int.* முட்டாள்தனம்!

fid'dle-head, *n.* கப்பலின் முகப்பிலுள்ள யாழ்வகை அணியொப்பனைப்பகுதி.

fid'dler, *n.* யாழ்வகை வாசிப்பவர்; கூலிக்காக யாழ்வகை மீட்டுபவர்; சிறு நண்டுவகை; (தொ.) Fiddler's Green, கடலோடிகளின் ஆர்வக் கனவுக்குரிய இன்பநிலம்.

fid'dlestick, *n.* யாழ்வகை மீட்டும் வில்; அற்பப்பொருள்.

fid'dle-sticks, *int.* மண்ணாங்கட்டி!

fidd'ley, *n.* நீராவிக் கப்பலின் விறகெரி பகுதியில் எஃகுப் பொதிவு; கப்பலின் சரக்கெறி புழையின் இருப்புச்சட்டம்.

fidd'ling, *a.* யாழ்வாசிக்கிற; சிறுதிறமான; வீணுகப் பொழுது போக்குகின்ற; அற்பசொற்பத்திற்காகப் பரபரப்புக் காட்டுகிற.

fidel'ity, *n.* மெய்ப்பற்று, அன்புறுதி; கடமைதவறுமை; கணவன் மனைவியர் பற்றுமாறா உறுதிப்பாடு; விசுவாசம்; மெய்ம்மையின் மாறுபடாநிலை; மூலத்துக்கு மாறுபடா முற்றிசைவு.

fidg'et, *n.* படபடப்பு, துடிதுடிப்பு, உடலின் அமைதியற்ற நிலை; சஞ்சலம்; உள்ளப் பரபரப்புநிலை; பரபரப்பாளர்; *v.* படபடப்புறு; மிகுகவலைப்படு; தொந்தரைப்படு; தொல்லை கொடு, அமைதி இழக்கும்படி செய்.

fid'ibus, *n.* பற்றுகுச்சு, மெழுகுதிரி-புகைக்குழாய் போன்ற வற்றில் நெருப்புப் பற்றவைப்பதற்காக வழங்கப்படும் தாள் துணுக்கு.

Fid'o, *n.* ஒடுபாதையை மறைக்கும் பனிப்படலத்தை நெய் யாவி எரியூட்டின் மூலம் நீக்கி வானூர்திகள் இறங்குவதற்கு உதவும் அமைவு.

fidu'cial, *a.* கணக்கிடுவதற்கு அடிப்படையாகப்பயன்படுகிற; நம்பிக்கை காட்டுகிற; பொறுப்பின் தன்மைவாய்ந்த.

fidu'ciary, *n.* பொறுப்பாளர், தர்மகர்த்தா; *a.* பொறுப் பாண்மை சார்ந்த; பொறுப்புக்குரிய; பொறுப்பாகக் கொண்ட; பொறுப்பாகக் கொடுக்கப்பட்ட; தாள் நாணய வகையில் பொதுமக்களின் நம்பிக்கை அல்லது பிணைப்பத்திரங்கள்மீது மதிப்புச் சார்ந்துள்ள.

fid'us Acha'tes, (ல.) *n.* பற்றுறுதியுடைய சீடன், அணுக்கத் தொண்டன்.

fie, *int.* சீ! சீ! கேவலம்!

fief, *n.* நிலமானியம், படை முதலிய துறை ஊழிய வகையில் சம்பள ஊதியத்துக்கீடாக அளிக்கப்படும் நிலவுரிமை.

fie'-fie, *a.* தகாத, ஒழுங்கற்ற, பழிப்புக்குரிய.

field, *n.* வயல், விளைநிலப்பரப்பு; வேலியால் சூழப்பட்ட மேய்ச்சல்நிலம்; கனிப்பொருள் வளம்தரும் பரப்பு; போர்க் களம், போர் நடைபெறும் இடம்; போர்க்காட்சியிடம்; போர்நடவடிக்கை; செயற்களம்; செயல் எல்லை; நட வடிக்கை எல்லை; ஆற்றல் எல்லை, செல்வாக்கெல்லை; மின் காந்த ஆற்றல்களம்; சூழ்காட்சியெல்லை; தொலைநோக்காடி நுண்ணோக்காடி காட்சிப்பரப்பெல்லை; சந்திப்பிடம்; விளை யாட்டுக்களம்; ஆடுபவர் நிங்கலான கள ஆட்டக்காரர் தொகுதி; ஆட்டக்களநிலை; வேட்டையில் கலந்துகொள்பவர் தொகுதி; கேடயமுகப்பு; கேடயப்பரப்பின்தொகுதி; படம்-நாணயம்-கொடி ஆகியவற்றின் பின்னணித்தளப் பரப்பு; அகல்வெளி, கடல்-வான்-பனிப்பாறை போன்றவற்றின் பரந்த அகலிடம்; *v.* பந்தாட்ட வகைகளில் பந்தைத் தடுத்துத் திருப்பி அனுப்பு; பந்தை எடுத்துக்கொண்டு மீண்டோடு; தடுக்கும்நிலையில் நில்; பிடிக்கும் நிலையில் நில்; கள ஆட்டக் காரராகச் செயலாற்று; களத்தில் இறக்கு; கள ஆட்டக் காரர் நிங்கலாகப் பிறர் பக்கமாகப் பந்தயம் வை; (தொ.) field dressing, போர்க்களக் காயக்கட்டுக்குரிய தள வாடங்களின் தொகுதி; field events, பயிற்சிக்களரியின் திட்ட நிகழ்ச்சிகள்; field of view, field of vision, ஒரே நேரத்தில் காணப்படும் காட்சி எல்லை; keep the field, தன்னிலை விடாது காத்துக்கொண்டிரு; போர்முடிந்துவிடாமல் தொடர்வி; take the field, போராட்டந்தொடங்கு.

field'-allow'ance, *n.* களப்படி.

field'-artill'ery, *n.* பளுவற்ற களப்பீரங்கி; களப்பீரங்கித் தொகுதி.

field'-batt'ery, *n.* களத்திலுள்ள பீரங்கி அடுக்கு.

field'-book, *n.* நில அளவையாளர் களக்குறிப்பேடு.

field'-cor'net, *n.* தென் ஆப்பிரிக்க நகரக் குற்ற நடுவர்.

field'-day, *n.* கள அணி வகுப்புநாள்; பெருநாள், அருஞ் சிறப்புக்குரிய நாள்; மன்றத்தில் முக்கிய விவாத நாள்.

field'er, *n.* பந்தாட்ட வகைகளில் பந்தைத் தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பும் ஆட்டக்காரர்.

field'fare *n.* மாரிக்காலத்தைப் பிரிட்டனில் கழிக்கும் இன் னிசைப் பறவை வகை.

field'-glass, *n.* வெளியே கொண்டுசெல்லத்தக்க தொலைநோக் காடி.

field'-gun, *n.* வண்டியில் பொருத்தப்பட்ட பளுவற்ற பீரங்கி.

field'-hand, *n.* உழவுப்பண்ணையின் புறவெளிப்பணியர்.

field'-hos'pital, *n.* தற்காலிகப் போர்க்கள மருத்துவ நிலையம், இயங்கு மருத்துவக்கூடம்.

field'-ice, *n.* பனிக்கட்டிப் பரப்பு.

field'ing, *n.* மட்டைப் பந்தாட்டத்தில் பந்தடிப்பவர்க்கெதிரான கள ஆட்டம்.

field'-mar'shal, *n.* படைத்துறை உயர்தரப்பணியாளர்.

field'-mouse, *n.* வயல்வெளி எலி.

field'-night, *n.* சிறப்பு நிகழ்ச்சிக்குரிய இரவு, அருஞ்சிறப்புக் குரிய இரவு நேர நிகழ்ச்சி.

field'-notes, *n. pl.* செயற்களக் குறிப்புக்கள்; புறவெளிக் குறிப்புக்கள்.

field'-off'icer, *n.* தளபதிக்கு அடுத்த உயர்படைத்துறைப் பணியாளர்.

field'piece, *n.* பளுவற்ற களப்பீரங்கி.

field'-preach'er, *n.* புறவெளிப் பேச்சாளர்.

fields'man, *n.* = fielder.

field'-sports, *n.* மதிற்புற விளையாட்டுகள், அகல்வெளிக் கேளிக்கைகள்.

field'ward, field'wards, *adv.* போர்க்களத்தை நோக்கி, போர்க்களத்திசையில்.

field'-work, *n.* வயல்வெளிவேலை, உழவுத்தொழில்; ஆய்வுக் களத்துக்கு வெளியிலுள்ள இயல்வெளிக்கள ஆய்வுப்பணி; களவீரர் எழுப்பும் தற்காலிகப் பாதுகாப்பு அரண்.

field'-works, *n. pl.* படைவீரர் எழுப்பும் தற்காலிகப் பாதுகாப்பரண் வரிசை.

fiend, *n.* பேயிறை, சைத்தான்; பேயுரு, கூளி; மனித எல்லை மீறிய கொடுமைக்காரர், சண்டாளர்; குடிமுதலிய பழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர்; மட்டுமீறிப் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்ட வெறியர்; பொல்லாத பேர் வழி.

fiend'ish, fiend'like, *a.* பேயுருப்போன்ற; பேய்க்குண முள்ள, கொடூரமான.

fierce, *a.* மூர்க்கமான, கொடிய, கோரமான; கொடும் பகைமை வாய்ந்த; முரட்டுப்பாய்ச்சலுள்ள; கடுஞ்சீற்ற முடைய; வெறியார்வமுள்ள.

fier'y, *a.* தீப்போன்ற; தீ உட்கொண்ட; நெருப்புமிழ்கின்ற, அனல் கக்குகிற; செந்தீவண்ணமான, அழற்சிவப்பான; தீ வெப்பமான; எரியூட்டுகிற, காந்துகிற; கண்கள் வகையில் சுடரிடுகின்ற; பொறிபறக்கிற; அழன்றெழுகின்ற, கொழுந்துவிட்டெரிகின்ற; எளிதில் தீப்பற்றக்கூடிய; எளிதில் வெடிக்கத்தக்க; குதிரைவகையில் அடங்காத, துடிதுடிப்புடைய; மட்டற்ற அவாவெறியுடைய; உணர்ச்சிப் படபடப்புடைய; மனக்கொந்தளிப்புடைய; கடுகடுப்புமிக்க, வெடுவெடுப்புடைய, எளிதில் சீறியெழுகின்ற; விளையாட்டுக் களத்தின் நிலவகையில் கட்டாந்தரையான, கரடுமுரடான; பந்தெறிவகையில் ஆபத்தான உயரத்துக்குப் பந்தைச் செலுத்துகிற; (தொ.) fiery cross, (வர.) ஸ்காத்லாந்து நாட்டில் போருக்கழைப்பாக முன்பு சுற்றியனுப்பப்பட்ட குருதிதோய்ந்த சிலுவை; fiery taste, காந்துதல்.

fi'esta, *n.* விழா, பண்டிகை நாள், விருந்து விழாக்கொண்டாட்டம்.

fife, *n.* படைத்துறை இசைக்குழல்வகை; ப. படைத்துறை இசைக்குழல்வாசி; இசைக்குழலில் பண்திறம் இயக்கு.

fif'er, *n.* படைத்திற இசைக்குழல் வாசிப்பவர்.

fife'-rail, *n.* (கப்.) கயிறு கட்டுவதற்குள்ள முளைகளுடன் கூடிய முக்கியமான பாய்மரத்தைச் சுற்றியுள்ள தண்டவாளச் சலாகை.

fifteen', *n.* பதினைந்து; கால்பந்தாட்ட வகையில் 15 ஆட்டக்காரர்களடங்கிய குழு.

fifteen'er, *n.* பதினைந்து அசைச் செய்யுள்.

fifth, *n.* ஐந்தாவது; ஐந்தில் ஒருகூறு; (இசை.) ஐந்து மாத்திரை இடைவெளி; *a.* ஐந்தாவதான; ஐந்திலொன்றான; வேவுபார்க்கின்ற; (தொ.) fifth column, ஐந்தாம் படை, எதிரிக்கு உதவியான உள்நாட்டு மறைபகைவர்; பகை ஒற்றர்.

fifth'ly, *adv.* ஐந்தாவதாக, ஐந்தாவது இடத்தில்.

fifths, *n. pl.* ஐந்தாந்தரப் பொருள்கள், மிகமோசமான சரக்குகள்.

fif'ties, *n. pl.* ஒருவர் வாழ்க்கையில் அல்லது நூற்றாண்டில் 50-59-ஆம் ஆண்டுகட்கிடைப்பட்ட காலப்பகுதி.

fif'tieth, *n.* ஐம்பதாவது; ஐம்பதில் ஒருகூறு; *a.* ஐம்பதாவதான; ஐம்பதில் ஒன்றான.

fif'ty, *n.* ஐம்பது; ஐம்பது ஆட்களின் தொகுதி; ஐம்பது பொருள்களின் தொகுதி; *a.* ஐம்பது எண்ணிக்கையுடைய; பல; (தொ.) have fifty things to tell you, எவ்வளவோ பேசவேண்டியிருக்கிறது.

fif'ty-fif'ty, *n.* சரிசம இருபாதிப் பிரிவினை; சரிசம இருபாதி நிலை; *a.* பாதிபாதியான, சரிசம இருபாதியான; *adv.* பாதிபாதியாக, சரிசம இருபாதியாக.

fig[1], *n.* அத்திமரம்; அத்திப்பழம்; பயனற்ற சிறுபொருள்; ஒருசிறிது; (தொ.) do not care a fig for, ஒருசிறிது கூடப் பொருட்படுத்தவில்லை.

fig[2], *n.* உடை, தளவாடம்; நிலைமை, தோற்றம்; ப. உடுத்து, ஒப்பனை செய், பகட்டான ஆடையணிவி; குதிரையைத் தட்டிவிடு, ஊக்கு.

fight, *n.* போர்; கைகலப்பு; சச்சரவு, பூசல், கலகம்; விலங்குபுள் வகைகளின் சண்டை; போட்டி; போர் ஆர்வம்; எதிர்ப்பு உணர்ச்சி; போர் ஆற்றல்; எதிர்ப்பாற்றல்; செயலுரம், செயல்முறுக்கு; ப. போரிடு; போரிலீடுபடு; சண்டை செய்; போர் நடவடிக்கையிலீடுபடுத்து; விலங்கு-புட்கள் சண்டைக்கேவு; தனித்து ஒருவருடன் மல்லாடு; சச்சரவிடு; போட்டியிடு; எதிர்த்து நில்; போராடு, கடுமுயற்சி செய்; எதிர்த்துச் சமாளி, முயன்று தடு; குறிக்கோளுக்காக நீடித்து உழை; வாதாடு; வழக்காடு; (தொ.) fight off, முயற்சியோடு எதிர்த்து விலக்கு; fight one's way, போரிட்டு முன்னேறு; fight out, முடிவுவரை போராடு, போராடி ஒரு முடிவுகாண்; fight shy of, நம்பிக்கையின்றி விலகி ஒதுங்கு; running fight, ஓடிக்கொண்டே நடத்தும் போர்; sham fight, பயிற்சிப்போர், பகட்டுப்போர்; காட்சியணிப் போர்; show fight, செயலூக்கமிழவாதிரு; எதிர்ப்பாற்றல் நீங்கப் பெறுதிரு; stand-up fight, வெளிப்படையான ஒழுங்கு முறைப்படியுள்ள போர்.

fight'ing-cock, *n.* பந்தயப் போர்க்கோழி; சண்டையில் ஆர்வமுள்ளவர்; (தொ.) live like fighting-cocks, சிறந்த இறைச்சியும் இன்தேறலும் பெறு.

fig'-leaf, *n.* அத்தியிலை; உருவச்சிலை அல்லது படத்தில் மறைவிடத்தை மூடும் அத்தியிலைத்தோற்றம்; மூடிமறைக்கும் வகை; போதா உடை; பாசாங்கு ஒழுக்கமுடைய மழுப்புதல்; சமாளிப்புமுறை.

fig'ment, *n.* புனைசுருட்டு, வெறுங்கற்பனைச்செய்தி.

figurant, *(பிர.) n.* குழுநிலையாட்ட நடிகன்; ***fem. figurante.***

figura'tion, *n.* உருவங்கொடுத்தல், வடிவ அறுதிசெய்தல்; உருவ அமைதி, அறுதிசெய்த வடிவம்; தோற்றம், அமைப்பு; உருவரையமைதி; பண்புருவக அமைப்பு; உருவரை அணி ஒப்பனை வேலைப்பாடு; பூவேலைப்பாடு; (இசை.) முனைப்பான அணிச்சந்தம்.

fig'urative, *a.* உருவமைப்புச்சார்ந்த; உருவப்படுத்திக் காட்டுகிற; வடிவக்கலைசார்ந்த; உருமாதிரியான; உவம உருவகமான; அணிவளஞ்செறிந்த; அணிவகைகளை நிரம்ப வழங்குகிற; குறித்துக்காட்டுகிற, குறிப்பில் தெரிவிக்கிற; சுட்டிக்காட்டுகிற, ஒன்றுகூறி மற்றொன்று உய்த்துணர வைக்கிற.

fig'ure, *n.* புறவுரு, உருவம்; வடிவம், தோற்றம்; உடலுரு அமைதி, அங்கவடிவமைப்பு; ஆள்வடிவம்; ஆள்; கருத்துருவம், பண்புருவம்; சிறப்பியல்பு; சிறப்புத் தன்மை; உருவப்படிவம், சிலை; சித்திரம்; உருமாதிரி; மாதிரிச்சின்னம்; உருவரைப்படிவம்; உருவரைப்படிமம்; உருவரைப்படம்; விளக்கப்படம்; பிறப்புப்பட்டி, சாதகம்; எண் இலக்கம்; ஒப்பனைப் படிவம்; உவம உருவக அணிவகை; பேச்சுத் திற அணி; சொற்சித்திரம்; (இசை.) சுரவரிசைச் சித்திர அணி; ஆடல்முறை வகுப்பணி; பனிச்சறுக்காட்ட வகையில்

மையநோக்கிய அணி இயக்கப்போக்கு; (அள.) வாய்பாட்டுத் தலைச்சொல் அமைதி ; ஏ. உருவப்படுத்திக்காட்டு ; கருத்தில் உருப்படுத்திக்காண் ; கற்பனைசெய், புனைந்துருவாக்கிக் காட்டு ; சின்னமாயமை, உருமாதிரியாயமை ; உருவமைதி வேலைப்பாட்டுடன் ஒப்பனைசெய் ; எண் இலக்கமிடு, விலை குறிப்பிடு ; கணி, கணக்கிடு ; தொகைப்படுத்து ; தோன்று ; முனைப்பாகக் காட்சியளி, உருக்கொண்டு இயலு ; பண்போவிய உருக்கொண்டுநடி; (தொ.) at a high figure, மிகு விலைக்கு ; at a low figure, மலிவாக ; cut a brilliant figure, make a brilliant figure, சிறந்த தோற்றமளி ; மிகுபுகழுடன் விளங்கு; cut a figure, முனைப்பான தோற்றம் உண்டுபண்ணு ; முனைப்பாகத் தோற்றமளி ; cut a poor figure, make a poor figure, இரங்கத்தக்க தோற்றமளி, மோசமான தோற்றமளி ; figure as, வேறுவகையில் தோற்றமளி, குணவியல்பை மேற்கொள், பாவனையை மேற்கொள் ; figure of speech, சொல்லணி, இலக்கிய அணி ; figure out, கணக்கிட்டுத் தொகைகாண் ; தொகைபடு ; figure up, கணக்கிடு, தொகையை மதிப்பிடு ; income of five figures, 10,000-க்கும் 1,00,000-க்கும் இடையிலுள்ள வருவாய் ; keep one's figure, உடல் பருமனுகாமற் பேணு ; person of figure, புகழ்பெற்றவர், தனிச்சிறப்புடையவர் ; reach three figures, மரப்பந்தாட்டத்தில் நூறு ஓட்டங்கள் எடு.

fig'ure-dance, *n.* தெளிவான பகுதிகளுடன் வகுத்தமைத்த அணிநடனக் காட்சி.

fig'ure-dancer, *n.* வகுத்தமைத்த அணிநடனம் ஆடுபவர்.

fig'ure-head, *n.* கப்பலின் முகப்பிலுள்ள உருவத்தலை ; பெயரளவில் மட்டும் தலைமை ஏற்கும் பொம்மைத்தலைவர், உரிமையற்ற தலைவர் ; செயலற்ற போலித்தலைவர்.

figurine', *n.* சிறு உருவச்சிலை.

fig'urist, *n.* உருவங்களைக் கொண்டு விளக்குபவர், உருவங்களைப் பயன்படுத்துபவர்.

fig'-wort, *n.* முன்னர் மூலநோயைத் தீர்ப்பதாகக் கருதப்பட்ட மூலிகைச் செடி வகை.

fil'agree, *n.* = **filigree.**

fil'ament, *n.* இழை ; நார்வடிப் பொருள் ; (தாவ., உயி.) நூல் போன்ற உறுப்பு ; உருகாது அழலொளிவிடும் மின் குமிழ் இழை ; நீரோட்டத் துகள் வரிசையில் கற்பனையாகக் காணப்படும் வரியிழை ; தூசியிழை வரி.

filament'ary, *a.* இழை போன்ற.

fil'atory, *n.* நூல் உருவாக்கும் அல்லது பின்னும் இயந்திரம், நூற் பொறி.

fil'ature, *n.* புழுக்கூட்டிலிருந்து பட்டுநூலை உருளையில் சுற்றுதல் ; பட்டு இழை சுற்றுவதற்கான அமைப்பு.

fil'bert, *n.* பண்படுத்தப்பட்ட பழுப்பு நீல நிறமுள்ள கொட்டைவகை ; கொட்டைவகை தரும் மரம்.

filch, *v.* களவு செய் ; சிறு அளவில் திருடு.

file[1], *n.* அரம், அராவுவதற்குரிய எஃகுக்கருவி ; பளபளப்பாக்கும் வகைமுறை; செப்பமிக்க இலக்கிய நடை அமைக்கும் வழிமுறை ; ஆழ்ந்த சூழ்ச்சித்திறமுள்ளவர் ; ஏமாற்றுபவர், ஏய்ப்பவர் ; ஆள் : திருட்டுப் பேர்வழி ; *v.* அராவு ; அராவி மழமழப்பாக்கு ; சமப்படுத்து ; தேய்த்துக்குறை ; அராவிக் குறுக்கு ; இலக்கியநடையைச் செப்பமாக்கு ; (தொ.) bite file, gnaw file, வீண்வேலையில் ஈடுபட்டு முயற்சிசெய் ; file away, மேடுபள்ளமகற்றிச் சமப்படுத்து, கரடுமுரடான பகுதிகளை அராவியகற்று.

file[2], *n.* கோப்பு, இணைத்தொகுப்பு ; பதிவுமூலங்களைக் கோத்திணைத்துப் பேணுவதற்கான திண்கம்பி ; வேண்டும் போது எளிதாகப் பார்ப்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல்தாள் சேகரம் ; சட்டப்பதிவுத் தொகுப்பு ; பத்திரிகை வரிசைத் தொகுப்பு; பெயர்வரிசை, பட்டியல்; *v.* கோத்திணை; தகவல் தாள்களை ஒழுங்காக வரிசையில் வை ; பொது ஆவணங்களிடையே சேர்த்து வை ; பதிவு செய் ; வழக்கு மன்றத்திற் கொண்டு வை.

file[3], *n.* படையின் முகப்பு வீரனுக்குப் பின்னுள்ள ஒற்றை அணிவரிசை ; ஒருவர்பின் ஒருவரான ஒற்றை ஆள்வரிசை ; சதுரங்கப் பலகையில் இடைநீளத்திலுள்ள ஒற்றைக்கட்ட வரிசை ; *v.* அணிவரிசையாகச் செல் ; அணிவரிசையில் செல்லும்படி கட்டளையிடு ; (தொ.) file off, file away, வரிசையாகச் செல் ; வரிசையாகச் செல்லும்படி கட்டளையிடு ; Indian file, single file, ஒருவர்பின் ஒருவரான ஒற்றை அணிவரிசை.

fil'emot, *n.* சருகிலை நிறம் ; *a.* சருகிலை நிறமுள்ள, தவிட்டு நிறத்தோடு கூடிய மஞ்சள் நிறமுள்ள.

fil'et, *n.* சதுரக் கண்ணுள்ள வலை வகை.

fil'ial, *a.* மகவுரிமை சார்ந்த, மகன் அல்லது மகளுக்குரிய ; புதல்வர் புதல்வியரிடமிருந்து எதிர்பார்க்கத்தக்க.

filia'tion, *n.* மகவுத் தொடர்பு ; நேர்மரபுவழி உறவு ; கிளை விரித்தல் ; மொழி இனக் கிளைத்தோற்றம் ; மக்கள் இனக் கிளைவழித்தோற்றம் ; மரபுக்கொடித் தொடர்பு ; மரபுக்கொடி ஒழுங்கு.

fil'ibuster, *n.* அயல்நாட்டோடு தன்நாட்டுச் சட்ட உரிமையில்லாமலே சண்டையில் ஈடுபடுபவர் ; நாடுகடந்து கொள்ளையிடும் படைவீரர் ; சட்டமன்றத்தில் முட்டுக்கட்டை யிடுபவர் ; *v.* அயல்நாட்டுடன் நாட்டுரிமையில்லாமலே போரில் ஈடுபடு ; சட்டமன்றத்தில் முட்டுக்கட்டையிடு.

fil'ibusterer, *n.* அயல்நாட்டோடு சட்டப்படி உரிமையற்ற சண்டையில் ஈடுபடுபவர் ; சட்டமன்றத்தில் முட்டுக்கட்டை யிடுபவர்.

fil'igree, *n.* சரிகைச் சித்திரவேலை, கசவுப்பூவேலை; நொய்ம்மையான மினுக்கு வேலைப்பாடு.

fil'ing, *n.* அராவுதல்.

fil'ings, *n.* அராவல் தூள் ; துண்டுத்துணுக்குப் பொடித் திரள்.

fill, *n.* உணவு குடிவகையில் நிறையளவு ; மன நிறை வளிக்கும் அளவு ; வள நிறைவு, ஏராளம் ; ஒருதடவை செறி நிறை அளவு ; *v.* நிரப்பு ; நிரம்பு ; திணித்து இடத்தை அடை ; விட்ட இடத்தை இட்டு நிரப்பு ; பூர்த்தி செய் ; குறை நிரப்பு ; பள்ளம் நிரப்பு, குளங் குட்டைகளைத் தூர்த்துவிடு ; நிறைத்து இடங்கொள், இடம் நிரம்பியிரு ; இடங் கொளப் பரப்பு ; பரவி இடங்கொள் ; விரிவுறு, திரண்டு வளர் ; நிறை வளர்ச்சியுறு ; நிறையச் சேமித்து வை ; நிறைவூட்டு ; தெவிட்டுதலுறு ; மன நிறைவுபடுத்து ; பதவி நிரப்பு ; பதவியில் இடம் பெற்றமர்ந்திரு ; கடமை நிறை வேற்று ; கட்டளை நிறைவேற்று ; ஓய்வு வேளையைப் பயன்படுத்தி நிறைவு செய் ; பருத்தித் துணிகளில் இடைப்பிறிதிட்டு நிரப்பிக் கலப்படம் செய் ; (தொ.) fill in, இட்டு நிரப்பு, வேண்டுவன பெய்து சரிசெய் ; fill out, ஏற்ற அளவுக்கு விரிவாக்கு ; முழு அளவில் விரிவுறு ; fill the bill, முக்கிய கூருயமை ; வேண்டிய யாவும் செய்தமை ; போதியதாயிரு ; fill up, முழுதும் நிறை ; வெற்றிடம் நிரப்பு ; தூர்த்துவிடு ; sails fill, பாய்கள் காற்றினுல் விரிக்கப் படுகின்றன.

fille de chambre, (பிர.) *n.* மனைப்பணிப்பெண்.

fille de joie, (பிர.) *n.* பொதுமகள், விலைமகள்.

fill'et, *n.* தலைப்பட்டி ; மயிர்க்கொடி ; தலைமுடிகட்டும் இழைக்கச்சை ; நாடா ; கட்டு ; பட்டை ; மேடான இடை விளிம்பு ; ஏட்டு மேலுறையின் பட்டைக்கோடு ; மெல்லிய நாடாப்போன்ற பொருள் ; விலா இறைச்சித் துண்டு ; இடுப்பின் எலும்படி இறைச்சித்துண்டு ; எலும்பு நீக்கிய கன்றின் காலிறைச்சிச் சுருணை ; மாட்டிறைச்சிச் சுருணை ; மீனிறைச்சிச் சுருணை ; கொழுமீன் கண்டம் ; (கட்.) கேடய முகட்டின் அடித்தளக் காற்கூறு ; (க-க.) கட்டுமான உருவின் இடைப்பட்டை ; *v.* தலைப்பட்டி வரிந்துகட்டு ; தலைப்பட்டியால் ஒப்பனை செய் ; இழைக்கச்சையால் கட்டு ; இழைக்கச்சை கட்டி அணிசெய் : மீனைக் கண்டமாகத் துண்டுபடுத்து.

fill'ing, *n.* நிரப்புவதற்கோ தொளையடைப்பதற்கோ நிறைவு செய்வதற்கோ பயன்படும் ஒன்று ; வழங்குதல்.

fill'ip, *n.* சொடக்கு, விரல் நொடிப்பு; சுண்டியடித்த அடி, சுண்டுகை; சிட்டிகையளவு; சிறு துணுக்கு; தூண்டுதல்; ஏ. சுண்டி அடி; விரல்களால் தெறித்து எறி; தூண்டுதல் கொடு, கிளறி ஊக்குவி; சொடக்கிடு, விரல் நொடி.

fill'ister, *n.* பலகணிக்கண்ணுடியின் சறுக்குச் சட்டம்.

fill'y, *n.* பெண் குதிரைக்குட்டி; துடுக்கான இளஞ்சிறுமி.

film, *n.* மென்தாள்; மெல்லிய சவ்வு; மென்தோல்; மென் படலம்; மென்பூச்சு; நீரில் மிதக்கும் மென்புரை; கண்ணை மறைக்கும் மென்திரை, பார்வை மங்கல்; மென்திரை முகமூடி; மெல்லிழை; மென்பசை பூசப்பட்ட நிழற்படத்தகடு; திரைப் படச் சுருள் தகடு; (தொ.) film star, திரைப்பட நட்சத்திரம், சிறந்த நடிகர்; film test, நடிகராகப் போகின்றவரின் நிழற் படச்சோதனை; the films, திரைப்படக் காட்சி.

film'-fan, *n.* திரைப்பட ஆர்வலர்.

fil'my, *a.* மென்புரைபோன்ற; மென்புரையாலான; மென் புரை மூடிய; வலைபோன்ற; மங்கலான; ஒளிமறைக்கிற.

fil'oselle, *n.* கழிவுப்பட்டு.

fils, (பிர.) *n.* புதல்வர்.

fil'ter, *n.* வடிகட்டும் அமைவு, கசடகற்றி நீர்மம் கடந்து செல்லவிடும் மணல்-கரிப்படுகையமைவு; ஏ. வடிகட்டு; ஊறிச்செல், ஊடாகச்செல்; துப்புரவாக்கு; தூய்மையாக்கு; செய்தி முதலியவற்றின் வகையில் கசிவுறு; வெளிப்படு.

fil'ter-bed, *n.* வடிகட்டு தளம்; மிகுதியாக நீர் வடிகட்டு தற்கான மணற்படுகை.

fil'ter-paper, *n.* வடிகட்டுதாள்.

filth, *n.* அருவருப்பான அழுக்கு; மாசு; கழிவுப்பொருள்; குப்பை; அழுக்குடைமை; தீட்டுடையது; தகாத நடை; இழி ஒழுக்கம்; கீழ்மக்கள் மொழி, கொச்சை மொழி.

fil'trate, *n.* வடிகட்டிய நீர்மம்; ஏ. வடிகட்டு; ஊறிச்செல்.

filtra'tion, *n.* வடிகட்டுதல்; வடிகட்டுமுறை.

fim'briate, **fim'briated**, *a.* (தாவ., வில.) விளிம்பில் மயிரிழையுடைய.

fin, *n.* துடுப்பு, மீனின் உகைப்பியக்க உறுப்பு; துடுப்புப் போன்ற உறுப்பு; வானூர்திப் பின்புறத்தின் நிமிர் நேர் விளிம்பு; நிமிர் நேர் விளிம்புடைய தகடு.

fin'al, *n.* இறுதி ஆட்டம், வெற்றி தோல்வி தீர்மானிக்கும் கடைசி விளையாட்டு; சொல்லின் இறுதி எழுத்து; இறுதி ஒலிக்குறி; இசையில் பண்ணின் முக்கிய சுரம்; கல்வித் தேர்வு வரிசையில் கடைசி ஆண்டிறுதித்தேர்வு; *a.* இறுதியான, கடைசியான, முடிவான; ஐயத்திற்கு இட மற்ற, அறுதியான, மாற்றமுடியாத; நோக்கம் சார்ந்த, முடிவுடன் தொடர்புடைய; (தொ.) final cause, அறுதி செய்யும் காரணக்கூறு; final clause, நோக்கம் குறிக்கும் உறுப்பு வாசகம்.

fina'le, *n.* நாடக இறுதி, கடைக்காப்பு; இசைநிகழ்வின் முடிப்பு, மங்களம்; முத்தாய்ப்பு, இறுதி மகுடம்.

fin'alist, *n.* கடை ஆட்ட உறுப்பினர், இறுதி ஆட்டத்தில் பங்குகொள்ளும் விளையாட்டுக்காரர்.

final'ity, *n.* முடிந்த முடிவு, கடைமுடிவு, மேல் தொடர்புக்கு இடமில்லாத முடிவு; ஐயத்துக்கிடமில்லா நிலை, அறுதி முடிவு; இறுதி நிகழ்ச்சி; அறுதிசெய்யும் மூலகாரணம்.

fin'alize, ஏ. நிறைவேற்று, முடிவுக்குக்கொண்டுவா.

fin'als, *n. pl.* தேர்வு வரிசையில் கடைசி, இறுதித்தேர்வு; ஆண்டிறுதித் தேர்வு.

finance', *n.* பொதுநிதி; ஆட்சியாளரின் பண வருமானத் துறை; நாட்டுப் பொருள்வருவாய்த் துறை; பொதுநிதி ஆட்சி, பொதுச்செல்வ ஆட்சிமுறை; ஏ. நிதி ஆட்சி செய்; பண விவகாரங்களில் ஈடுபடு; பணங்கொடு; பணமளித் துதவு, பணப்பொறுப்பு ஏற்றுக்கொள்; முதலீடு உதவு.

finan'cial, *a.* பொருள் பற்றிய, வருவாய் சார்ந்த, நிதிநிலைக் குரிய; (தொ.) financial year, நிதியாண்டு, பொதுக் கணக்குகளுக்குரிய வரையறுக்கப்பட்ட ஆண்டுக்காலம்.

finan'cier[1], *n.* பொருளியல் ஆட்சி வல்லுநர், நிதிவிவகாரங் களில் திறமையுடையவர்; பொது வருமானத்துறை ஆட்சி யாளர்.

financier'[2], ஏ. பணங்கொடுக்கல் வாங்கல் செய்; பணத்தை மோசடி செய்.

finch, *n.* குருவி வகை.

find, *n.* கண்டுபிடிப்பு; கண்டுபிடித்த பொருள்; புதையல்; கனிப்பொருள் முதலியவற்றின் அடிநிலத்தடக்காட்சி; வேட்டையில் நரி இருக்கும் இடம் கண்டுபிடித்தல்; ஏ. கண்டு பிடி, தேடி எடு, முயன்று காண்; கண்டுணர், ஆய்ந்து முடிவுசெய்; நேரிட்டறி; பட்டறி, கண்டுகொள்; எதிருறு, கண்ணுறு, நேர்பட்டுக்காண்; காண்; அடை; எய்தப் பெறு; தேடிக்கொடு; அறியப்பெறு, தெரியப்பெறு; (தொ.) find one's account in, போதிய ஆதாய நலம் கிடைக்கப்பெறு; find oneself, தன் சிறப்பு வாழ்க்கைத்துறை கண்டறி, தன் தேவைகளுக்குத் தானே வேண்டும் ஏற்பாடு செய்துகொள்; find one's feet, கால் நிற்கும் உறுதி அடையப் பெறு; புதிய சூழ்நிலையைச் சமாளிக்கும் ஆற்றல் கைவரப் பெறு; find out, கண்டுபிடி; தீர், வழிகண்டுபிடி; உளவறி; sure find, தேடும் பொருள் கட்டாயம் காணத்தக்க இடம்.

fin'der, *n.* இலக்கடைவுக்கருவி, பெரிய தொலைநோக்காடி யைப் பொருள்மீது பொருத்த உதவும்படி அதனுள் அமைந்த சிறு தொலைநோக்காடி; உருப்பெருக்கியின் குறியடைவு அமைவு; நிழற்படக்கருவியின் இலக்கடைவு அமைவு.

fin de siecle, (பிர.) *a.* பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதி யின் தனிப்பட்ட இயல்புடைய; முன்னேற்றமான; தற்காலத் திற்குரிய; புதுமையான; சரிகிற.

fine[1], *n.* இறுதி; தண்ட வரி; தண்டனைக்கீடான கட்டணம்; அபராதம்; வினைமுறை ஈடான சிறப்பு வேலைக்கட்டணம்; மரபுரிமைக் கட்டுப்பாட்டிலிருந்து தப்புவதற்கான போலி வழக்கு நடவடிக்கை; ஏ. தண்டனைத் தீர்ப்புச் செய்; தண்டனைக் கீடான வரிசுமத்து; அபராதம்விதி; பதவி உரிமைகளுக் கீடான கட்டணம் செலுத்து; (தொ.) in fine, முடிவாக; சுருக்கமாக.

fine[2], *a.* நேர்த்தியான; செப்பமுடைய, அழகு வாய்ந்த; உயர்ந்த, மேன்மையான; பண்படுத்தப்பட்ட, சீர் செய்யப் பெற்ற; தெளிவான; தூய்மைமிக்க, கலப்பற்ற; தங்க வகையில் ஒன்பதரை மாற்றுடைய; வெள்ளி வகையில் உயர் தூய்மைப்படியுடைய; மற்ற பொருள்கள் வகையில் ஆயிரவீதக் கணக்கில் உயர் தூய்மை நயமுடைய; சுவை நயமுடைய; நுண்ணயமுடைய; நுண் துகளான; மிக நுண் துகளடங்கிய; மிக நொய்தான, மிக மெல்லிய; கூர்மை யான; உயர்ந்த உணர்ச்சியுடைய; ஆர்வஞ் செறிந்த; கூருணர்ச்சியுடைய, நுண்ணய உணர்வுடைய; மட்டுமீறிய மிகு நுணுக்க உயர்வுடைய; பகட்டழகு வாய்ந்த, பகட்டாக அழகுசெய்துகொள்கிற; குறிப்பிடத்தக்க; முனைப்பான; ஏ. தேறலைத் தெளியவை; தெளிவுபடு; நேர்த்தியான தாக்கு; நுண்துகளாக்கு; மிக நுண்படிகளில் சிறுகச் சிறுக மாற்றியமை; தூய்மையாக்கு, புடமிடு; (தொ.) fine arts, நுண்கலைகள், கவின் கலைகள், அழகுணர்ச்சி அல்லது கலையுணர்ச்சியைத் தூண்டும்கலைகள்; fine chemicals, சிறு அளவில் தூய்மையான நிலையில் பயன்படுத்தப்படும் வேதிப் பொருள்கள்; fine gentleman, fine lady, நாகரிக மானவர்; சோம்பேறித்தனமானவர்; வேலை செய்தல் இழுக் கென எண்ணுபவர்.

fine champagne, (பிர.) *n.* உயர்தர பிராந்தி வகை; மேன்மை யான இன்தேறல் வகை.

fine'-draw, ஏ. கண்ணுக்குப் புலப்படா வகையில் இரண்டு துண்டுத் துணிகளைச் சேர்த்துத் தைத்திணை.

fine'-drawn, *a.* மிக மென்மையான; நுட்பமான; அளவு கடந்து மெல்லிய.

fine'ish, **fin'ish**[1], *a.* ஓரளவு சிறந்த; சிறிதே உயர்ந்த.

fin'ery[1], *n.* பகட்டணிமணி; பகட்டாடை ஒப்பனை; அணி யலங்காரத் தோற்றம்; புதுப்பாணி நடையுடை.

fin'ery[2], *n.* துப்புரவுச்சாலை; வார்ப்பிரும்பைத் தேனிரும்பாக்கும் ஆலை; தேனிரும்பிலிருந்து எஃகு உருவாக்கும் உலைக்களம்.

fine'-spok'en, *a.* அழகுத் தொடர்களைப் பயன்படுத்துகிற.

fine'-spun, *a.* மிக நொய்தான, மிக மெல்லியதாக நூற்கப்பட்ட; மட்டுமீறிய நுட்பம் வாய்ந்த; செயலுக்கு ஒத்து வராத.

finesse', *n.* சூழ்ச்சி நுண்ணயம், தந்திர நுட்பம்; நய நுணுக்கத் திறம், நுட்ப வேறுபாடு பிரித்தறியும் ஆற்றல்; நய நுட்பச் சூழ்ச்சி; சீட்டாட்டத்தில் மேற்சீட்டைக் கையில் வைத்துக்கொண்டே சீட்டிறக்கி எதிரியின் உச்சச் சீட்டை ஒதுக்கிவிட எண்ணும் துணிச்சலான சூழ்ச்சிநய முயற்சி; *ஏ.* நுணுக்க நயங்காட்டிச் சூழ்ச்சியாகப் பொறியில் வீழ்த்து; சீட்டாட்டத்தில் எதிர்த் துருப்பினை இறக்கச் செய்யும் சூழ்ச்சி முறையைக்கொள்.

fing'er, *n.* விரல்; கட்டை விரலல்லாத மற்ற நான்கு விரல்களுள் ஒன்று; கையுறையின் விரற்பகுதி; விரல் வடிவான பொருள்; விரலகலம்; ஊறுணர்ச்சி; காலுறை செய்வதற்குரிய தடித்த கம்பளி நூல் வகை; *ஏ.* விரலால் தொடு; விரலால் தடவிப்பார், விரலால் உருட்டிப்பார்; இசைக்கருவி மீட்டு; இசைமானத்தில் மீட்டுதற்குரிய விரலிக்குறியிட்டுக் காட்டு; கையாடு, மோசடிசெய்; கைக்கூலியாகப்பெறு; (தொ.) burn one's fingers, தலையிட்டுத் தீங்குக்கு ஆளாகு, துடுக்குத்தனத்தின் பயனைக் கண்டுகொள்; have a finger in the pie, செயற்பொறுப்பில் பங்குகொள்; have one's fingers all thumbs, அருவருப்பாகச் செயலாற்று, நயமின்றிக் கையாளு.

fing'er-al'phabet, fing'er-language, *n.* செவிடர்கள் உணர்தற்குரிய கைச்சைகைக் குறியீட்டுத் தொகுதி.

fing'er-board, *n.* இசைக்கருவியில் விரல்களை அழுத்துவதற்குரிய கட்டை.

fing'er-bowl, *n.* மேசையில் விரல்களைக் கழுவிக்கொள்வதற்காக வைக்கப்படும் நீர்க்கலம்.

fing'er-breadth, *n.* விரலகலம், முக்கால் அங்குலம்.

fing'ered, *a.* விரல்களுள்ள; விரல்போன்ற அமைப்புள்ள.

fing'er-fern, *n.* மண்ணீரல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்பட்டு வந்த சூரல்வகைச் செடி.

fing'er-fish, *n.* விண்மீன் போன்ற அமைப்புக்கொண்ட கடலுயிர் வகை.

fing'er-glass, *n.* = finger-bowl.

fing'ering[1], *n.* விரலால் தொடும் முறை அல்லது செயல்; இசைக்கருவியினை மீட்ட ஏற்ற விரல்களைத் தேர்ந்தெடுத்தல்.

fing'ering[2], *n.* காலுறைகளுக்குரிய முரட்டுக்கம்பளி இழை.

fing'erling, *n.* சிறு கடல் மீன்வகை; மிகச்சிறு உரு அல்லது உயிர்.

fing'er-mark, *n.* விரற் குறி; விரலால் ஏற்பட்ட அழுக்குக் கறை.

fing'er-plate, *n.* விரலழுக்குப்படாமல் கதவினைக் காக்குந் தகடு.

fing'er-post, *n.* வழிகாட்டும் கம்பம், கைகாட்டுமரம்.

fing'er-print, *n.* விரல் அடையாளம், கைநாட்டுக்குறி.

fing'er's-breadth, *n.* = finger-breadth.

fing'er-stall, *n.* விரலுறை.

fin'ial, *n.* (க-க.) கூரைமுகட்டொப்பனை வேலைப்பாடு; தூபி முகட்டின் இலைக்கொத்தணி ஒப்பனை.

fin'ical, *a.* அளவுமீறிய செயற்கை நேர்த்திவாய்ந்த; பகட்டாரவாரமான, போலிச்செப்பமுடைய; செயற்கைத் தன்மை வாய்ந்த; போலிப்பகட்டான.

fin'icking, fin'ikin, *a.* முக்கியமற்ற செய்திகளில் அதிக கருத்துச் செலுத்துகிற; போலியாகப் பகட்டுகிற; பொய் ஆசாரமுடைய.

fin'is, *n.* இறுதி, முடிந்த முடிவு.

fin'ish[3], *n.* இறுதிக்கட்டம்; நரிவேட்டையின் இறுதிப்படி; முடிவு; முடிவுற்றநிலை; முழுநிறைவு, நிறைதிட்பம்; செயல் தீர்ந்த செப்பம்; நிறைவளிப்பது, நிறைவளிக்கும் கூறு; *ஏ.* முடித்துவிடு; முடிவுக்குக் கொண்டுவா; அழி; செய்து முடி; முடிவுறு; நிறைவுசெய், செய்துதீர்; நிறைவூட்டு; இறுதிவரை தீட்டு; கடைசிப்பூச்சுக்கொடு; முடிதிறம்கூட்டு; பயிற்சி முற்றுவி, முத்தாய்ப்பளி; முடிவடை; தொடர்பறு, நின்றுவிடு, ஓய்ந்துவிடு; முடிவாக நிகழ்வுறு; முடிவாகு; (தொ.) fight to a finish, ஒருதிறத்தவர் முற்றிலும் தோல்வியுறும்வரை போராடு.

fin'isher, *n.* செய்தொழிலில் முடிவான செயல்தீர்வாக்கும் தொழிலாளர்; செயல்தீர்வு முற்றுவிக்கும் இயந்திரம்; கடுங்தாக்கு; தோல்வியுறச்செய்யும் பொருள்; உறுபேரடி, அழுத்தி வீழ்த்துகின்ற பேரடி; அழுத்தும் மாத்துயர்.

fin'ite, *a.* முடிவுடைய; எல்லையுடைய; வரையறைக்குட்பட்ட; அளவிற்குட்பட்ட; (கண.) எண்வகையில் வரைநிலையான; (இலக்.) வினைவகையில் முற்றான.

Finn, *n.* பின்லாந்து நாட்டு இனமக்களில் ஒருவர்.

finn'an, finn'an haddock, *n.* புகையூட்டுப் பதனமுறையில் பக்குவப்படுத்தப்பட்ட மீன் இனவகை.

finn'er, *n.* முதுகுத் துடுப்புடைய திமிங்கில வகை.

Finn'ic, *a.* பின்லாந்து நாட்டு மக்களினத் தொகுதியைச் சார்ந்த.

Finn'ish, *n.* பின்லாந்துமக்கள் மொழி; *a.* பின்லாந்து மொழியைச் சார்ந்த; பின்லாந்து மக்களைச் சார்ந்த; பின்லாந்து நாட்டுமக்கள் இனத் தொகுதிசேர்ந்த.

finn'y, *a.* துடுப்புகள் கொண்ட; மீன்துடுப்புப்போன்ற; மீனைச் சார்ந்த; மீன்கள் நிறைந்து காணப்படுகிற.

Fin'sen light, *n.* கட்புலப்படா ஊதா மேற்கதிர் உண்டாக்கும் கருவி.

fiord, *n.* நார்வே நாட்டில் செங்குத்தான மலைப்பாறைகளுக்கிடையேயுள்ள இடுக்கமான கடற்கால்களில் ஒன்று; இடுங்கு விடர்கழி.

fi'orin, *n.* வளைகொடிப் புல் வகை.

fir, fir'-tree, *n.* கனங்குறைந்த உயர்தரக் கட்டைதரும் குளிர் மண்டல ஊசியிலை மரவகை.

fir'-apple, fir'-ball, fir'-cone, *n.* ஊசி இலை மரவகையின் காய்.

fire, *n.* தீ; நெருப்பின் அழல்; தீநா, தணற்கொழுந்து; சுடர்; அனற்பொறி; எரிதல்; அடுப்புக்கனல்; உலை நெருப்பு; காட்டுப்பெருந்தீ; அழிவுப்பெருந்தீ; (செய்.) மின்னல்; எரிமலை அகக்கனல்; வெப்பம்; வெப்பு; காய்ச்சல்; அழன்றெழும் உணர்ச்சி; எழுச்சி; சினம்; கொதிகிளர்ச்சி; ஆர்வக்கனல்; உயிர்த்துடிப்பு; கற்பனை; கவிதையெழுச்சி; வேட்டு; வேட்டுத் தீர்வு; வேட்டுத்தொகுதி; தாக்குரை; கண்டனத்தொகுதி; எதிர்ப்பு; *ஏ.* தீவை; வெடி முதலியவை வகையில் நெருப்புப் பற்றவை; வெடி-சுரங்க வகைகளில் தீப்பற்றிக்கொள்; வெடிக்கவை; வேட்டுத்தகர்; வணக்கமுறை வேட்டிடு; வெடி தீர்வுறு; வெப்பமூட்டு; தீயில் வாட்டு; மட்கல முதலியன சுட்டு வேகவை; செங்கல் சுடு; சூடிடு; செயற்கை வெப்பத்தால் புகையிலை-தேயிலை முதலியவற்றைப் பதனம் செய்; வெப்பமடை; சிவப்பாக்கு; விறகிடு; எரிபொருளூட்டு; சுட்டுத் தள்ளு; வெடித்து வீசியெறி; தள்ளு; வெளியேற்று; கற்பனை தூண்டு; ஊக்கமூட்டு; கிளர்ச்சியூட்டு; உணர்ச்சியூட்டு; சினமூட்டு; கிளர்ந்தெழு; சினந்தெழு; (தொ.) catch fire, take fire, தீப்பற்றிக்கொள்; எரியத் தொடங்கு; தூண்டுதல் பெற்று எழுச்சிகொள், ஊக்குதல் பெற்றுக் கிளர்ந்தெழு; fire and brimstone, நரகம்; கடுஞ்சின வெறுப்புக்குறிப்பு; fire and sword, பேரழிவு; fire away, சுடத்தொடங்கு; முன்னேறு; போய்விடு; துப்பாக்கியிலிருந்து எறிபுடையை இயக்கு; fire broadside, கப்பலின் ஒரு பக்கத்திலுள்ள பீரங்கிகளைச் சுடு; fire off, சுடு, வேட்டுத்தீர்; வெடிதீர்; தொடர்ந்து விடாமல் விளுக்களை எழுப்பு; விடாமல் தொடர்ச்சி

யாகப் பேசு ; fire out, மனிதர்களை வெளியேற்று ; பதவி நீக்கு ; தள்ளு ; fire salute, குண்டுவெடித்து வணக்கமுறை காட்டு ; fire up, வெப்புற்றெழு ; திடீரென்று சீறியெழு ; on fire, கொழுந்துவிட்டு எரியும் நிலையில் ; உணர்ச்சிக்கொந் தளிப்புற்று ; set fire to, set on fire, தீக்கொளுத்து, எரி யூட்டு ; தீப்பற்று ; set Thames on fire, குறிப்பிடத்தக்க பெருங்காரியம் செய் ; strike fire, உராய்ந்து பொறி பறக்கச் செய் ; தூடுபிடி ; under fire, எதிரியின் குண்டுகளுக்கு இலக் கான நிலையில்.

fire'-alarm, *n.* நெருப்பு பற்றியதை அறிவிக்கும் தானி யங்கிக் கருவி.

fire'-arms, *n. pl.* சுடுபடைக்கலங்கள், வேட்டுப்படைக் கருவிகள், வெடிக்கும் போர்க்கருவிகள்.

fire'back, *n.* சுமதிதிரா தீவுக்குரிய சிவந்த முதுகினைக் கொண்ட வேட்டைப் பறவை வகை ; அடுப்பின் பின்சுவர் ; பின்சுவர் அணியிருப்புத்தகடு.

fire'-ball, *n.* பெரிய விண்வீழ் எரிகோளம் ; கோளவடிவமான மின்னல் ; எரிபொருள்கள் நிறைக்கப்பட்ட பந்து வடிவமான போர்க்கருவி.

fire'-balloon', *n.* வெப்பாவிக்கூண்டு, வெடிப்புமூலம் வெப் பூட்டிப பளுவற்றதாக்கப்பட்ட ஆவிக்கூண்டு.

fire'-bird, *n.* தேனீயை உண்ணும் பறவை வகை.

fire'-blast, *n.* செடியினந் தாக்கும் நோய்வகை.

fire'-blight, *n.* கனிமரங்களுக்குக் கரிந்த தோற்றத்தைத் தரும் காளான் நோய்வகை.

fire'-box, *n.* நீராவி இயந்திரத்திலுள்ள நெருப்பறை.

fire'-brand, *n.* எரிகொள்ளி, எரியும் மரத்துண்டு ; சச்சர வினைத் தூண்டுபவர் ; கலகக்காரர்.

fire'-brick, *n.* தீக்காப்புடைய செங்கல்.

fire'-brigade', *n.* தீயணைப்புப்படை.

fire'-clay, *n.* சுடு செங்கலுக்குரிய களிமண்.

fire'-control', *n.* கப்பல்-கோட்டைப் பீரங்கிகளின் வேட்டுக் கட்டுப்பாட்டமைவு.

fired, *a.* நெருப்பால் தாக்கப்பட்ட ; சுடப்பட்ட ; வெந்துபோன தோற்றம்கொண்ட ; தீக்கொளுத்தப்பட்ட ; பீரங்கியால் சுடப்பட்ட ; தூண்டப்பட்ட.

fire'-damp, *n.* சுரங்க எரியாவி, நிலக்கரிச் சுரங்கத்தில் காற்றுடன் கலக்கும் சமயம் வெடிவிபத்து விளைவிக்கும் கரியநீரகைவளி.

fire'-dog, *n.* அடுப்புக்கட்டை, விறகு அணைகோல்.

fire'-drake, *n.* விண்வீழ் கல் ; செர்மானிய பழங்கதை மரபில் தீயுமிழ் வேதாளம் ; கம்பவெடி.

fire'-drill, *n.* குச்சியைச் சுழற்றி அல்லது முறுக்கித் தீயுண் டாக்கும் பண்டைய கருவி ; ஞெலிகோல்.

fire'-eat'er, *n.* மாயச்செப்பிடு வித்தைக்காரர் ; பயங்கர மற்போர் வீரர் ; கலகக்காரர், சண்டைப்பிரியர்.

fire'-engine, *n.* தீயணைக்கும் இயந்திரம்.

fire'-escape', *n.* எரியும் கட்டிடத்திலிருந்து ஆட்களை மீட்டுக் கொண்டு வருதற்குரிய கருவி.

fire'-extinguisher, *n.* தீயணைக்குங் கருவி ; வேதிப்பொருள் களை வெளிசிதறித் தீயணைக்கும் அமைவு.

fire'-eyed, *a.* (செய்.) ஒளிவீசும் கண்களையுடைய.

fire'fly, *n.* மின்மினி.

fire'-grate, *n.* அழல்தாங்கி, அடுப்பில் நெருப்பினைத் தாங்கி நிற்கும் இருப்பு வலைச்சட்டம்.

fire'-guard, *n.* கணப்படுப்புத் தீயிற்குப் பாதுகாப்பான இருப்பு வலைச்சட்டம்.

fire'-hose, *n.* தீயணைக்கும் வளைநீள் குழாய்.

fire'-insu'rance, *n.* நெருப்பிடர்க் காப்பீடு, தீயழிவுக்கு ஈடு செய்யும் கூட்டமைப்பு முறை.

fire'-irons, *n. pl.* அடுப்படி இருப்புக் கருவிகள்.

fire'-light, *n.* அடுப்பின் நெருப்பொளி.

fire'-lighter, *n.* அடுப்பிலிட ஆயத்தநிலையிலுள்ள எரி நெருப்பு.

fire'lock, *n.* முற்காலத் துப்பாக்கி வகை.

fire'man, *n.* தீயணைக்கும் படைவீரர் ; இயந்திர உலை காப் போர் ; சுரங்கத்தொழிலாளர் நலங்காப்போர் ; சுரங்கவெடி வைப்பவர்.

fire'-mark, *n.* நெருப்புக்காப்பீட்டுறுதி செய்யப்பட்ட கட்டி டத்தில் காப்பீட்டு நிலையத்தார் பொறிக்கும் உலோகத்தகடு.

fire'-new, *a.* புத்தம்புதிய ; தூடு ஆறாத.

fire'-office, *n.* நெருப்புக்காப்பீட்டுறுதிப் பணிமனை.

fire'-opal, *n.* தீ வண்ணம் நிழலாடும் மணிக்கல் வகை.

fire'-pan, *n.* நெருப்புச்சட்டி, தணல்தட்டு.

fire'-place, *n.* கணப்படுப்பு, அடுப்படி.

fire'-plug, *n.* அடிநில மூல நீர்க்குழாயில் தீயணைப்பு வளை குழாய் பொருத்துதற்குரிய இணைப்பு.

fire'-policy, *n.* நெருப்புக்காப்புறுதி எழுத்துப் பத்திரம்.

fire'proof, *a.* தீத்தடைகாப்புடைய, தீயாலழியாத ; நெருப் பினால் பாதிக்கப்படாத ; எரியாத ; தீப்பற்றாத ; *v.* தீத்தடை காப்புச் செய்.

fir'er, *n.* தீயிடுபவர் ; எரியூட்டுபவர் ; இயக்கும் பொறிக்கு எரியூட்டுபவர் ; துப்பாக்கி-பீரங்கி முதலாயின சுடுபவர் ; இடையே மருந்தடைக்காமலே குறிப்பிட்ட தடவைகள் சுடவல்ல துப்பாக்கி.

fire'-raiser, *n.* தீக்கொளுத்தி எரியூட்டுபவர்.

fire'-raising, *n.* தீக்கொளுத்தல், எரித்துப் பொசுக்கும் அழிவுவேலை ; வேண்டுமென்றே பிறர் வீடு அல்லது சொத் திற்குத் தீயிடல் ; காப்பீடு செய்யப்பட்ட தன் பொருளுக்கே தீயிடும் வினை.

fire'-screen, *n.* தீயின் வெப்பத்தைத் தடுக்கும் திரை, நெருபுத் தடைகாப்புத்தட்டி.

fire'-ship, *n.* தீக்கலம், எதிரிகளின் கப்பல்களுக்கிடையே செலுத்தப்படும் எரிபொருள்கள் நிறைந்த கப்பல்.

fire'-shovel, *n.* தழல்வாரி.

fire'side, *n.* அடுப்படி, கணப்படி ; அடுக்களை ; குடும்பவாழ்வு ; குடும்பவாழ்விடம் ; *a.* பழக்கமான வீடு சார்ந்த.

fire'-step, *n.* அகழ் அரணில் வீரர்கள் சுடுவதற்காக நிற்கும் குறுஞ்சுவர் மேடு ; குறுஞ்சுவரின்பின் வீரர்கின்று வெடிப்ப தற்குரிய படிச்சுவர்.

fire'-stick, *n.* ஞெலிகோல், தீக்கடைகோல்.

fire'-stone, *n.* உலைகளிற் பயன்படுத்தப்படும் வெப்பத்தைத் தாங்கக்கூடிய கல் வகை.

fire'-teazer, *n.* இயந்திரங்களுக்கு எரிபொருளூட்டுவோர்.

fire'-trap, *n.* தீப்பிடிததால் தப்பி வெளியேறத்தக்க வழியற்ற கட்டிடம்.

fire'-walk, fire'-walking, *n.* தீ மிதித்தல்.

fire'-war'den, *n.* தீத்தடுப்பதற்கும் அணைப்பதற்கும் உரிய பணிப் பொறுப்பாளர்.

fire'-watch'er, *n.* தீ விபத்து ஏற்படாமல் கண்காணிப்பவர் ; குண்டுத்தாக்குதல் ஏற்பட்ட இடத்தில் நெருப்பெழாமல் காப்பவர் ; கணப்படுப்பு நெருப்புக்குப் பாதுகாப்பான வலைச்சட்டம்.

fire'-wa'ter, *n.* காரமான சாராயச்சத்து.

fire'wood, *n.* விறகுக்கட்டை.

fire'work, *n.* வாணவெடி, கம்பவேடிக்கை.

fire'-works, *n. pl.* செயற்கைத் திறமை காட்டும் காட்சி முறைகள் ; இசையிலும் பேச்சிலும் காட்டப்படும் வாண வேடிக்கைப் பண்புத்திறம்.

fire'worm, *n.* மின்மினி.

fire'-wor'ship, *n.* தீவழிபாடு, தீயைக் கடவுள் சின்னமாக மதித்துப் பூசிக்கும் முறை.

fir'ing, *n.* கொளுத்துதல்; தீயூட்டல்; துப்பாக்கி-பீரங்கி வேட்டு; பன்மணிக் கலகலப்போசை; எரிபொருளூட்டல்; சூடுபோடுதல்; விறகுக்கட்டை; எரிபொருள்; வெப்பூட்டுதல்; கொதிக்கவைத்தல்; வேகவைத்தல்; மிகுவெப்புக்காயம்.

fir'ing-line, *n.* பீரங்கி சுடும் வரம்பெல்லை; எதிரி பீரங்கி வேட்டெல்லைக்கு உட்பட்ட படைப்பகுதி.

fir'ing-par'ty, *n.* கைதியைச் சுடும்படி கட்டளையிடப்பட்ட படைப்பகுதி; படைத்துறைப் பிண அடக்க வேளையில் வணக்கமுறை வேட்டு இடப் பணிக்கப்பட்ட படைவீரர் பிரிவு.

fir'ing-point, *n.* தீக்கொள்நிலை, எண்ணெய் தீப்பற்றிக் கொள்ளுதற்கு வேண்டிய வெப்பநிலை.

firk'in, *n.* மீன்-வெண்ணெய்-இன்தேறல்வகை முதலியவற்றிற்கான சிறு மிடா; முகத்தல் அளவைக்கூறு.

firm [1], *n.* கூட்டுவாணிக நிலையம், தொழிற்கூட்டு.

firm [2], *a.* உறுதியான; கெட்டியான; நிலையான; அசையாத; மாறுத; நிலைநிறுத்தப்பட்ட; மாற்றமுடியாத; ஏற்றுக் கொண்ட பிறகு தள்ளுபடி செய்யமுடியாத; ஒழிக்க முடியாத; பற்றில் உறுதியுடைய, மனவுறுதியுடன் நிற்கிற; வாணிகப்பொருள்கள் வகையில் விலையும் மதிப்பும் குறையாது ஒரே படியில் நிற்கிற; ரு. வெண்ணெய் வகையில் கெட்டியாக்கு; கெட்டியாகு; நடவின்பின் நிலத்தை உறுதிப்படுத்து; உறுதிப்படு.

firm'ament, *n.* வானமண்டலம், முகில்-மீன்களுக்கிடமாகக் கருதப்பட்ட விண்வலயம்.

firm'an, (பெர்.) *n.* அரசராணைப் பத்திரம்; நன்கொடை மானியம் தனியுரிமை வழியுரிமை அளிக்கும் அரசர் கட்டளைச் சீட்டு.

fir'-needle, *n.* ஊசியிலை மரவகையின் இலை.

firr'y, *a.* ஊசியிலை மரவகை சார்ந்த.

first, *n.* முதலாவது; முதன்மையானது; முதல்வர்; வரிசையில் முதன்மையானவர்; முதல்வரிசை சார்ந்தவர்; தேர்வில் முதல் வகுப்பிடம், உச்சநிலைவரிசை வகுப்பு; போட்டியில் முதலிடத்தவர்; காலத் தொடக்கம்; வரிசையில் தொடக்கம்; *a.* முதலாவதான; காலத்தால் மிக முந்திய; வரிசையில் முதன்மையான, மிக முற்பட்ட; தலைமைச் சிறப்புடைய; அணைவரிலும் முதன்மை வாய்ந்த, அணைத்திலும் முந்திய; தொடக்கத்தைச் சார்ந்த; மேம்பட்ட; அடிப்படையான, மூலாதாரமான; (இலக்.) பேசுபவரைக் குறித்த, தன்மை இடத்துக்குரிய; *adv.* முதலில், முதலாவதாக; எல்லாவற்றுக்கும் முன்னதாக; முந்தி, முற்பட; குறித்த காலத்துக்கு முற்பட்டு. மற்றொன்றினைக் காட்டிலும் முற்படு சிறப்பு முறையாக; (தொ.) at first, முதலில்; தொடக்கத்தில்; at first hand, நேரடியாக, இடையீடின்றி; at first blush, at first sight, at first view, பார்த்தவுடன்; முதல் தோற்றத்திலேயே; come in first, பந்தயத்தில் வெற்றிபெறு; first and last, மொத்தத்தில் ஒன்றேடொன்று கூட்டிப் பார்த்தால்; First Cause, முதற்காரணம்; கடவுள்; first coat, முதல் மேல்வண்ணப்பூச்சு; முதற்பூச்சு; first cost, இலாபம் சேராத விலை மதிப்பு; கொள்முதல் செலவு மதிப்பு; First Lord of the Admiralty, சட்ட மாமன்றத்துறை சார்ந்த கடற்படைத் தலைவர்; First Lord of the Treasury, நிதியரங்க முதல்வர்; first name, கிறித்தவர்களின் முதற்பெயர், கிறித்தவர் பெயரின் முதற் சொற்பகுதி; first or last, முன்னையிலும் பின்னையிலும் எப்படியும் விரைவில்; First Sea Lord, பணிமுறைக் கப்பற்படைத் தலைவர்; from first to last, முழுவதும், தொடக்கமுதல் இறுதிவரை; from the first, தொடக்கத்திலிருந்து, முதலிலிருந்து; in the first place, முதன்முதலாக; the First, முதலில் குறிப்பிடப்பட்டவர்; முதலில் குறிப்பிடப்பட்ட பொருள்; the First, 'கௌதாரி' வேட்டைத் தொடக்க நாள் (செப்டம்பர் முதல் நாள்).

first'aid', *n.* முதலுதவிச் சிகிச்சை, மருத்துவர் வருதற்கு முன் காயப்பட்டவருக்கு அளிக்கப்படும் மருத்துவ உதவி.

first'-begott'en, *a.* முதற் பிறந்த; மூத்த; தலைமூத்த.

first'-born, *n.* முதற் குழந்தை, தலைச்சன் பிள்ளை; *a.* முதற் பிறந்த; தலையீற்றான.

first'-class', *a.* தொடர்வண்டியில் முதல்வகுப்புச் சார்ந்த; தேர்வுப் பட்டியலில் முதல்வரிசையிலுள்ள; முதல்தரமான; மிகச்சிறந்த; *adv.* முதல்வகுப்பு வண்டியில்; முதல்வகுப்பாக.

first'-day, *n.* ஞாயிறு, வாரத்தின் தலைநாள்.

first'-floor', *n.* கட்டிடத்தின் முதல் மாடி, நிலத்தளத்துக்கு மேற்பட்ட முதல்மாடித் தளம்; அமெரிக்க வழக்கில் நிலத்தளம்.

first'-fruits, *n. pl.* பருவத்தின் முதல்விளைவு; கடவுளுக்கான பருவ முதல்விளைவுப் படையல்; முதற்பணி ஊதியம், தொழில் தொடக்க ஆதாயம்; முற்காலப் பண்ணை மேலாளர்க்கு அளிக்கப்பட்ட புதுப்பணித் தொடக்கக் காணிக்கை.

first'-hand [1], *a.* நேரடியான, இடையீடின்றிப் பெறப்பட்ட.

first-hand' [2], *adv.* நேரடியாக, இடையீடின்றி.

first'ling, *n.* முதற்பயன்; முதல்விளைவு; பருவ முதற் பலன்; பருவ முதற் பழங்களின் தொகுதி; முதற்குழந்தை, தலைச்சன்; முதலீற்றுக்குட்டி.

first'ly, *adv.* முதலாவதாக, முதன்முதலாக.

first'-night, *n.* நாடகத்தின் முதலிரவுக் காட்சி.

first'-night'er, *n.* நாடகங்களை முதல்நாளே வழக்கமாகக் காண்பவர்.

first'-offend'er, *n.* முதன்முறைக் குற்றவாளி.

first'-rate [1], *n.* முதல்தரப் போர்க்கப்பல்; *a.* முதல்தரமான, உச்ச உயர் வகையான, முதல்தரப் பண்புடைய, உச்சநிலை நய நேர்த்தியுடைய; (தொ.) the first-rate Powers, முதல்தர மதிப்புடைய வல்லரசுகள்.

first-rate' [2], *adv.* மிகச் சிறப்பாக, மிக நயநேர்த்தியுடன்.

firsts, *n. pl.* மா-வெண்ணெய் வகைகளில் முதல்தரத்துக்குரிய வகைகள்.

firth, *n.* கடற்கழி; ஆற்றின் கழிமுகம்.

fisc, *n.* பண்டைய ரோமநாட்டின் கருவூலம்; ரோமப் பேரரசின் தனிப்பட்ட முறைநிதிச் சேமம்.

fis'cal, *n.* சில நாடுகளில் சட்டத்துறைப் பணியாளர்; *a.* அரசிறை வரும்படிக்குரிய, நாட்டின் வருமானத்திற்குரிய.

fish [1], *n.* மீன்; மீன் இறைச்சி; மீனினம்; கடல்வாழ் உயிர்; சூழ்ச்சி வலையில் அகப்படுத்துதற்காக நாடப்பெறும் மனிதர்; மீன் வகை; (பே-வ.) பேர்வழி; ரு. மீன்பிடி; நீருக்கடியில் தேடு; மறைமுக வழிகளில் தேடு; நீரினின்று வெளியே எடு; குளம் குட்டைகளில் மீன்பிடி; துருவித்தேடு; தூண்டிலிடு; கொக்கியால் பிடித்தெடு; சிறிது சிறிதாக வெளிப்படுத்து, மெல்ல வெளிப்படுத்து; மறைவிடத்தினின்று வெளிக்கொணர்; (தொ.) drink like a fish, அளவுமீறிக் குடி; feed the fishes, நீரில் மூழ்கிப் போ; கடல் பழக்கமில்லாக் குமட்டல் நோயினால் துன்பப்படு; fish in troubled waters, குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தித் தன் நலனைப் பெருக்கிக் கொள்; fish out, நீர்நிலையில் மீன்களை எல்லாம் பிடித்து வெறுமையாக்கு; fish out of water, ஒவ்வாத சூழ்நிலையில் சிக்கித் தவிப்பவர்; fish the anchor, நங்கூரக் கொக்கி கப்பல்விளிம்புமட்டத்துக்கு வரும்படி தூக்கிவை; have other fish to fry, கருத்துச்செலுத்த வேறு முக்கிய செய்திகள் பெற்றிரு; make fish of one and flesh of another, மனக்கசப்பு உண்டுபண்ணக்கூடிய வேறுபாட்டைக் காட்டு, நச்சுத்தன்மையான வேற்றுமை உண்டுபடுத்து; neither fish nor flesh nor good red herring, neither fish, flesh, nor fowl, வரையறை இல்லாததொன்று; pretty kettle of fish, குழப்பம், தாறுமாறான நிலை; queer fish, விந்தைத பழக்கவழக்கமுடையவர்; the Fish, the Fishes, மீன இராசி மண்டலம்.

fish [2], *n.* (கப்.) பாய்மரத்தை உறுதியாக்குதற்கு வைக்கப்படும் சிறு பிறைவடிவ மரத்துண்டு; விட்டப்பகுதிகளை இணைக்கும் தட்டையான இரும்பு அல்லது மரப்பாலம்; ஆட்டங்களில் மேசைப் பணச்சின்னமாகப் பயன்படுத்தப்படும் தந்த வட்டுக்கள்; ரு. மரத்துண்டால் அணை; இடைப்பாலத்தால் உறுதிப்படுத்து.

fish'-carv'er, *n.* மீனைத்துண்டிக்க உதவுங் கருவி.

fish'er, *n.* பொழுதுபோக்கிற்காக அல்லது இலாபத்திற்காக மீன்பிடிப்பவர்; கீரியினவகை விலங்கு.

fish'erman, *n.* மீன்பிடிப்பவன், வலைஞன், செம்படவன்.

fish'ery, *n.* மீன்பண்ணை; மீன்பிடிப்புத் தொழில்; மீன் தொழில் துறை; மீன்பிடிக்குமிடம்; மீன்பிடிக்கும் உரிமை.

fish'-fag, *n.* மீன் விற்பவள், மீன்விலையாட்டி.

fish'ful, *a.* மீன்வளமிக்க, மீன் நிறைந்த.

fish'globe, *n.* பொன்மீன் முதலிய அழகிய சிறுமீன்களை விட்டு வளர்க்கும் கண்ணாடிக்கூண்டு.

fish'-glue, *n.* மீன்பசை, மீன்வகைகளினின்று கிடைக்கிற பசை செய்யவுதவும் வெண்மையான நுங்கு போன்ற பொருள்.

fish'-hatch'ery, *n.* செயற்கைமுறையில் மீன்வளர்க்கும் நிலையம்.

fish'-hawk, *n.* மீன்கொத்தி; கடற்பருந்து.

fish'-hook, *n.* தூண்டில்; தூண்டில்முள், மீன்பிடிக்கும் இரும்புக்கொக்கி.

fish'ing, *n.* மீன்பிடிக்குந்தொழில்; மீன்பிடிப்புக்கலை; *a.* மீன்பிடிப்புத்தொழிலிற் பயன்படுத்தப்படுகிற.

fish'ing-rod, *n.* தூண்டிற்கோல், தூண்டில் முள் இணைக்கப் பட்ட நீண்ட கொம்பு.

fish'ing-tack'le, *n.* வலை-தூண்டில் முதலிய மீன்பிடிக்குங் கருவித்தொகுதி.

fish'-kett'le, *n.* மீன்சமைக்கும் குடுவை.

fish'-knife, *n.* மீன் தின்னப் பயன்படும் கத்தி.

fish'-manure', *n.* மீன் எரு.

fish'-monger, *n.* மீன் விற்பவர், நுளையர்.

fish'-oil, *n.* மீன் எண்ணெய்.

fish'-plate, *n.* தண்டவாளங்களை இணைக்கும் இருப்புக் கட்டை.

fish'-pond, *n.* மீன்களை வளர்ப்பதற்காக விட்டுவைக்கும் குளம்.

fish'-pot, *n.* விலாங்கு-நண்டு முதலியன பிடிக்கப் பயன்படும் பிரம்புவலைக் கூடை.

fish'-sound, *n.* நீந்துவதில் மீனுக்கு உதவும் உள்ளீடான காற்றுப்பை.

fish'-tail, *a.* மீன்வால் போன்ற வடிவுடைய; மீனின் வால் துடுப்புப் போன்ற அமைப்புடைய.

fish'-torpe'do, *n.* தானே இயங்கும் நீர்மூழ்கிக்குண்டு.

fish'wife, fish'-woman, *n.* மீன் கொடையாள்.

fish'y, *a.* மீன் நிறைந்த; மீனுலான, மீன்போன்ற மணச் சுவையுடைய; மீன்வடிவான; ஐயுறவான; உறுதியற்ற; இருபொருளுடைய; (தொ.) fishy eye, ஒளியற்ற பார்வை; கருத்திலா நோக்கு.

fisk, *n.*=fisc.

fissidac'tyl, *a.* பிளவுண்ட விரல்களையுடைய.

fiss'ile, *a.* பிளவுபடக்கூடிய; பிளக்கும் இயல்புடைய.

fissiling'ual, *a.* பிளவுபட்ட நாக்குடைய, இருபிளவான நாக்கு கொண்ட.

fissil'ity, *n.* பிளவுபடுந் தன்மை.

fi'ssion, *n.* (உயி.) புது உயிரணுக்களின் தோற்றத்திற்காக உயிரணுக்களைப் பிளத்தல்; இன்பப்பெருக்கத்துக்காக உயிரணு வெடித்தல்; அணுப்பிளப்பு, அணுவின் கருவுள் பிளப்பு.

fissip'arous, *a.* பிளவுற்று இனம்பெருக்குகிற; பிளவுண்டாக்குகிற.

fissiros'tral, *a.* ஆழ்ந்த பிளவுடை அலகுடைய.

fi'ssure, *n.* பிளவு; வெடிப்பு; பிளவினாலும் பாகங்களின் பிரிவினாலும் ஏற்படும் இடைச்சந்து பிளப்பு; மூளைச் சுருக்கங் களிலுள்ள நெடும்பள்ளம், மூளை இடைச்சந்து; *v.* பிளவு படுத்து; பிளவுறு.

fiss'ured, *a.* பிளவுபடுத்தப்பட்ட; பிரிக்கப்பட்ட.

fist, *n.* கைமுட்டி; குத்துச்சண்டை போடுதற்கேற்றாற்போல் அமைந்த கைமுட்டு; *v.* கைமுட்டியால் குத்து; (தொ.) fist law, வல்லான் வகுத்தது.

fis'ticuffs, *n. pl.* கைக்குத்துச்சண்டை, முட்டிப்போர்.

fis'tula, *n.* புண்புரை, குறுகிய வாயுடைய புரையோடிய புண்; திமிங்கிலப் பீற்றுக்குழல்; வண்டுவகையின் பற்றுகுழல் உறுப்பு.

fit [1], *n.* வலிப்பு, இசிப்பு; நோயின் திடீர்த்தாக்குதல் அலை; வலிப்பு முதலிய நோய் வகைகளின் திடீர் எழுச்சியலை; சிறிது நேர உணர்விழப்பு; சிறிது நேரச் செயலிழப்பு; சிறிது நேரத் தனிமை; திடீர் உணர்வுநிலை; திடீர் நகையலை; திடீர் எழுச்சியலை; நீடித்திராத மனநிலை; காரணமில்லா உணர்ச்சிப் போக்கு; (தொ.) beat one into fits, give one fits, எளிதாகத் தோற்கடி; by fits and starts, விட்டுவிட்டு, திடீர் எழுச்சி தளர்ச்சிகளுடன்; give one a fit, வியப்படையச்செய்; சின மடையச்செய்.

fit [2], *n.* உடைப்பொருத்தநிலை; இசைவுப்பாங்கு, வாய்ப்புமுறை; *a.* இசைவான, பொருத்தமான, ஏற்ற; தகுதிவாய்ந்த; தக்க திறமையுடனிருக்கிற; தகுதிபெற்ற; வாய்ப்பான, நன்னிலையில் இருக்கிற, உடல்நலம் குன்றுதிருக்கிற; *v.* இசைவாக்கு, பொருத்து; இசைவாயிரு, பொருந்து; சரிசெய்; அளவொத்திரு; வடிவொத்திரு; கூறொத்திரு; ஏற்றதாயிரு; தகுதியாக்கு; தகுதியுடையதாயிரு; துணைக்கலம் பூட்டு, வேண்டிய தளவாட வாய்ப்புச்செய்; ஒட்டியிணை, சேர்த்துப் பொருந்தவை; (தொ.) fit for, தகுதியான; fit in, பொருந்து; fit into, சரியாயிரு, உள்ளேசென்று பொருந்தத்தக்க சரியளவாயிரு; fit in with, முற்றிலும் இசைவாயிரு; fit on, போட்டுச்சரிபார், அணிவித்துப் பொருத்தம் பார்; fit out, தேவையான தளவாடம் பொருத்தி உருவாக்கு, வேண்டும் துணைக்கலம் இணைத்துச் செயலுக்குச் சித்தமாக்கியனுப்பு; fit up, தேவையான கருவிகளைப் பொருத்து.

fit [3], *n.* பாடல் ஏட்டுப்பகுதி.

fitch, *n.* விலங்குவகை வால்மயிராற் செய்யப்பட்ட தூரிகை.

fitch'ew, *n.* மரநாய் ஒத்த ஊனுண்ணும் விலங்குவகை.

fit'ful, *a.* திடீர்ச்செயலான; விட்டுவிட்டு இயங்குகிற; இடையிடையே முயலுகிற.

fit'ment, *n.* தட்டுமுட்டுப்பொருள், துணைக்கருவி.

fit'ness, *n.* பொருத்தம்; தகுதி, ஏற்றமைவு; பொருத்தும் நேர்மை; ஏற்பமைதி; ஒழுக்கநலம்; (தொ.) the fitness of things, தக்கது, ஏற்புடையது, பொருத்தத்தக்க அமைதி.

fit'-out, *n.* ஆடையணிமணித் தொகுதி; தளவாடம், கருவி கலத் தொகுதி.

fitt'er, *n.* பொருத்துவது; பொருத்துபவர்; இணைப்பது; இணைப்பவர்; பொறியின் பகுதிகளை இணைப்போர்; இசைவிப்போர்; துணிகளை ஏற்றவாறு வெட்டுவதையும் பொருத்துவதையும் மேற்பார்வை செய்பவர்.

fitt'ing, *a.* பொருத்தமான, இசைவான; ஏற்ற, தக்க, சரியான.

fitt'ing-out, *n.* பொருத்தமானதும் தேவையானதுமான பொருள்களைச் சேகரம் செய்து அளித்தல்.

fitt'ings, *n. pl.* துணைக்கருவிகள், கருவிகலத்தொகுதி; தளவாடங்கள், தட்டுமுட்டுப் பொருள்களின் தொகுதி; இணைப்பொருத்தக் கட்டுமானம்; பொருத்தமான வேலையாளின் பணித்துறை.

fitt'ing-shop, *n.* பொறியின் பகுதிகளை இசைவித்துப் பொருத்தும் பட்டறை.

fit'-up, *n.* நாடக அரங்க வகையில் தற்காலிகமான மேடை யமைப்பு; எடுத்துச்செல்லக்கூடிய ஒப்பணக்கருவிகளை உடன்கொண்ட மேடையமைப்பு; ஊர் ஊராகக் கொண்டு செல்லக்கூடிய தற்காலிகச் சிறு திரை ஓவியங்கள்.

five, *n.* ஐந்து; ஐந்துகொண்ட தொகுதி; ஐந்து என்ற எண் கொண்ட சீட்டு; ஐந்து எண்ணுடைய ஆட்டக்கட்டை; ஆட்டத்தில் எடுத்த ஐந்து வெற்றிக்குறி மதிப்புக்கள்.

five'-day week, *n.* ஐந்து வேலைநாள்களைக்கொண்ட வாரம்.

five'-finger, *a.* இசைக்கருவியில் ஐந்து விரல்களுக்கும் பயிற்சி கொடுக்கிற; ஐந்து விரல்களும் வகுத்துக் குறிக்கப்பட்ட இடத்திலேயே எப்போதும் வைத்திருக்கவேண்டிய பயிற்சி முறை சார்ந்த.

five'fold, *a.* ஐந்துமடங்கான; ஐந்து பிரிவுகள்கொண்ட; ஐந்துமுறை மடித்த பருமனுள்ள; *adv.* ஐந்துமடங்காக.

fives, *n. pl.* ஐந்தாவது தரத்துக்குரிய புதைமிதித்தொகுதி; ஐந்தாவதுதரக் கையுறைத்தொகுதி; ஐந்து நூற்றுமான விழுக்காடுடைய பங்குகள்; பந்தாட்டவகை.

fix, *n.* இக்கட்டுநிலை, சிக்கல்நிலை; வான்கோள்-வானூர்தி ஆகியவற்றின் இயக்கநிலைப் பதிவுக்குறிப்பீடு; *v.* பதியவை; ஒட்டு; அடித்திறுக்கு; கட்டியிறுக்கு; இணை, பொருத்து; நிலைநாட்டு; அசையாது நிலைநிறுத்து: உறுதிப்படுத்து; இடவுறுதி செய்; திட்பமாக்கு; கால அறுதிசெய்; நிலவர மாக்கு; நிலைத்திருக்கச்செய்; மாறுதிருக்கச்செய்; மாறுதல் தடுத்து நிறுத்து; முடிவு செய்; மனத்தில் ஊன்றவை; நிழற்பட உருநிறம் நிலைப்படுத்து; கெட்டியாக்கு; உறையவை, இறுகவை; கட்டி வை; முகத்தோற்றம் ஒருநிலைப்படுத்து; விறைப்பாக்கு; முறைக்க வை; பார்வை நேராகப் பதியவை; பார்வையால் தனிப்படக் குறித்தொதுக்கு; கவர்ச்சிசெய்து நிறுத்திவை, மயக்கி நிறுத்து; ஒழுங்குபடுத்தி அமை, ஏற்பாடுசெய்; நிழற்படம் எடுக்கச் சிததமாக அமைப்பைத் திட்டப்படுத்திவை; திருத்து, சீர்ப்படுத்து; (தொ.) fix on, தனியாகப் பிரித்துக் குறி; fix up, ஏற்பாடு செய்; radio fix, வானெலியின்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட வானூர்தி-கப்பல் முதலியவறறின் இடநிலை அல்லது நிலையிடம்.

fixa'tion, *n.* பொருத்துதல்; பொருத்தப்படல்; கெட்டி யாகும்படி செய்தல்; இறுகுதல், உறைவு; உறுதிப்பாடு; அறுதி; நிலைப்பு, மாறுநிலை; திடப்பொருளோடு வளிப் பொருளை இணைக்கும் முறைமை; ஆவியாகா நிலை; வளி மண்டல வெடியம் கலந்த மாற்ற மெய்ம்முறை; மனவளர்ச்சி தடைப்பட்டநிலை, வளர்ச்சிதடைப்பட்டு முதிராநிலை, இயல் உணர்ச்சி வழிச்செல்லும் நிலை.

fix'ative, *n.* சாயங்கள் நிலையாக இருக்கும்படி செய்யும் பொருள்; *a.* பொருந்தும்படி செய்கின்ற; நிலைப்படுத்துகின்ற.

fix'ature, *n.* தலைமுடியைப் படியவைக்கின்ற பசைப்பொருள்.

fixed, *a.* நிலையான, உறுதியான; நிலைப்பட்ட, திடமான: (தொ) fixed acid, சிதைவின்றி ஆவியாகாத காடி: fixed capital, இயந்திரம்-தளவாடம் முதலிய முதலீடு; fixed idea, பைத்தியமாக்கும் இயல்புடைய ஒரே ஊன்றிய கருத்து; fixed oil, சிதைவின்றி ஆவியாகாத எண்ணெய்; fixed point, ஊர்க்காவலர் நிலையாகத் தங்குமிடம்; fixed property, நிலைப்பொருள் உடைமை, நிலமும் வீடுகளும்; fixed star, நிலைபெயரா விண்மீன்.

fix'edly, *adv.* நிலையான தன்மையில்; ஆவலுடன், கவன முடன், கருத்துடன், கூர்நோக்குடன்.

fix'edness, *n.* உறுதிநிலை; அசைக்க முடியாத தன்மை; நிலையான இயல்பு; பற்றுறுதியுள்ள பாங்கு.

fiix'er, *n.* இறுக்கு கருவி.

fix'ings, *n. pl.* செயற்களக்கருவி, துணைக்கருவித் தொகுதி, தளவாடம், துணைச்சாதனம்; உடையின் சிங்காரிப்பு, பின் சேர்ப்புகள், புற ஒட்டுகள்.

fix'ity, *n.* இயங்கா நிலை; அசையாது பொருத்தப்பட்ட நிலை; உறுதிமாறு நிலை; நிலைத்த தன்மை, நிலைபேறான தன்மை.

fix'ture, *n.* இட உறுதிப்பாடு; ஓரிடத்திற் பொருத்தப்பட்ட பொருள்; இணைத்துக் கட்டப்பட்ட பொருள்; ஓர் எல்லைப் பட்ட ஆள்; எல்லைக்குட்படுத்தப்பட்ட பொருள்; நிலை நாட்டப்பட்டுள்ளவர்; கேளிக்கையாளர் கூட்டுச்சந்திப்பு; பந்தய ஆட்ட ஏற்பாடு; கேளிக்கையாளர் கூட்டுச் சந்திப்புக்குரிய நாள்; பந்தயத்திட்டம் செய்யப்பட்டுள்ள காலம்.

fiz'gig, fis'gig, *n.* காதலாட்டம் ஆடித்திரியும் பெண்; ஈர மருந்துப்பொடியால் இயக்கப்படும் வாணவெடி வகை; சீன வெடி; சிறுதிறப் பொறி; அற்பப்பொருள்; வலைத்துன்னல் வேலைப்பாடு; திமிங்கிலமெறியும் வேல்; *a.* நிலையற்ற துடிப்புப் போக்குடைய, உறுதியற்ற, படபடப்பான.

fizz, *n.* உயர்ந்த தேறல் வகை; சீறி நுரைத்தெழும் ஒலி; *v.* 'உசு' என்று ஒலிசெய்; கடகடவென்றிரை.

fizz'er, *n.* 'உசு' என்று ஒலிசெய்கின்ற பொருள்; மிகச் சிறந்த பொருள்; மிகவிரைவாகச் செல்லும் பந்து.

fiz'zle, *n.* மென்மையான 'உசு' என்ற ஒலி; திக்கிப்பேசும் ஒலி; குளறுபடி: தோல்வி; *v.* மென்மையாக 'உசு' என்ற ஒலிசெய், மென்மையாகத் திக்கிப்பேசு, தெற்றிப்பேசு; (தொ.) fizzle out, உருகிப்போ; சென்று தேய்ந்திறு; நற் பயனளிக்கத் தவறு; ஒன்றுமில்லா நிலைக்கு வா; தோல்வி யுறு; புசுபுசுத்துப்போ, 'கழுதை தேய்ந்து கட்டெறும் பாகு'.

fjord, *n.* = fiord.

flabb'ergast, *v.* திடுக்கிடச்செய், வியப்புறச்செய், வியப் பினால் செயலற்றுப்போகும்படி செய், திகைப்பினால் ஊமை யாக்கு.

flabb'y, *a.* தளதளப்பாகத் தொங்குகிற, சுருக்கம் விழுந்த; உரமற்ற; கெட்டியில்லாத; மனத்திட்பமில்லாத; மொழி-நடை முதலியவற்றின் வகையில் வலிவற்ற; தளர்ந்த.

flabell'ate, flabell'iform, *a.* (வில., தாவ.) விசிறி வடி வான.

flac'cid, *a.* தொங்கு சதையுடைய; தளர்வுற்றுத் தொங்கு கிற; சுருக்கம் விழுந்த; நெகிழ்வான; சோர்வுற்ற; வலிமையற்ற, உரமற்ற; நரம்புத் தளர்ச்சியுடைய; கெட்டி யில்லாத.

flag[1], *n.* துகிற்கொடி; படைச்சிறப்புக்கொடி; விருதுக் கொடி; அழகொப்பணைக்கொடி; விளம்பரக்கொடி; குறிப் படையாளக்கொடி; கொடிக்கப்பல்; நாய்வகையில் சடை நிறைந்த வால்; *v.* கொடிகளால் ஒப்பணை செய்; கொடியை முகட்டிற் கட்டு; கொடி அடையாளவழியே செய்தி அறிவி; குறிப்படையாளக் கொடிச்சின்னம் நாட்டு; (தொ.) black flag, கடற்கொள்ளைக்காரரின் கொடி; குற்றவாளியைத் தூக்கிலிடுதற்கு அறிகுறியாகச் சிறைக்கு வெளியில் உயர்த் தப்படும் கொடி; Black Flags, ஒழுங்கான படையைச் சேராத சீனப்படை வீரர்கள்; flag of convenience, தாயக வரிக்கடமை கட்டுப்பாடுகளிலிருந்து தப்புதற்காகத் தாயக வாணிகக் கழகம் அயல்நாட்டுக் கப்பல்களிற் சரக்குகளைப் பதிப்பித்துக்கொள்ளுவதற்குரிய கொடி; flag of truce, எதிரி யுடன் பேரம் பேசும் அவாவைக் காட்டும் வெண்கொடி; hoist one's flag, பணித்தலைமையை ஏற்றுக்கொள்; lower one's flag, strike one's flag, வணக்கத்திற்கு அறிகுறியாகக் கொடியை இறக்கு; சரணடைவதற்கு அறிகுறியாகக் கொடியை இறக்கு; white flag, தற்காலிகப்போர் நிறுத்த அறிகுறியான வெண்கொடி; yellow flag, கப்பலில் தொற்று நோய் உள்ளதாக அறிவிக்குங் கொடி.

flag[2], *n.* பாவு கல், தட்டையான தளவரிசைக்கல்; *v.* தள வரிசைக் கற்களாற் பாவு.

flag[3], *n.* பறவைச் சிறகின் இறகினுலான எழுதுகோல்.

flag[4], *n.* நிண்டு அலகுபோன்ற சொரசொரப்பான இலைகளை யுடைய செடிவகை; செடிவகையின் நீண்ட அலகுபோன்ற சொரசொரப்பான இலை; நீண்டு அலகுபோன்ற சொரசொரப் பான இலைகளையுடைய செடிகளின் தொகுதி.

flag[5], *v.* தொங்கலாகக் கிட, தொய்வாகத்தொங்கு; தொங்கி ஆடு; வாடு, வதங்கு; பின்தங்கு, தாமதம் செய், சோர்வுறு; ஊக்கம் குன்று; வலிமை இழக்கப்பெறு; அக்கறை குறையப் பெறு.

flag'-boat, *n.* நீர்விளையாட்டுப் படகுப் போட்டியில் அடையாளமாக வைக்கப்படும் கொடிப்படகு.

flag'-cap'tain, *n.* கொடிக்கப்பலின் மீகாமன்.

flag'-day, *n.* பொதுநலக் காரியங்களுக்கான நன்கொடைச் சின்னக் கொடிகள் விற்கப்படும் நாள்.

flagell'ant, *n.* தன்னைத்தானே கசையால் அடித்துக் கொள்பவர், கசை நோன்பாளர்; *a.* கசையால் அடிக்கும் இயல்புடைய.

fla'gellate, *v.* கசையால் அடி, அடித்துதொறுக்கு, கசையடித் தண்டனையளி.

flagell'um, *n.* கசை; (தாவ.) தாவுகொடி, வேர்விட்டுக் கொண்டே நீண்டு தாவிப்படரும் கொடி; (உள்.) கசை போன்ற உறுப்பு; *pl.* flagell'a.

flageolet'[1], *n.* அடிப்புறத்திலிருந்து ஊதப்பெறும் சிறு புல்லாங்குழல்.

flageolet'[2], *n.* அவரையின வகை, மொச்சைவகை.

flagi'tious, *a.* அட்டூழியம் வாய்ந்த; பழிக்குற்றம் வாய்ந்த; மாபெருங்குற்றத்துக்கு ஆளான.

flag'-lieuten'ant, *n.* கப்பல் தளபதியின் மெய்க்காவல் துணைவர்.

flag'list, *n.* உயர்தரக் கப்பல் அதிகாரிகள் பட்டியல்.

flag'man, *n.* பந்தய ஓட்டங்களில் அடையாளக் குறி கொடி காட்டுபவர்.

flag'on, *n.* குடுவை, கமண்டலம், கைப்பிடியும் மேல்மூடியும் மூக்கு வாயும் உடைய பெரிய இன்தேறல் மேசைக்கலம்; இயேசுநாதரின் இறுதி உணவுவிழாக் குவளை; வடிதேறல் இருபுட்டிகள் கொள்ளத்தக்க தட்டையான உருளை வடிவான கண்ணாடிக்கலம்.

flag'-rank, *n.* கொடிக்கப்பல் தளபதியர்களின் பதவி.

flag'rant, *a.* இகழ்மூளைப்பாகத் தெரிகிற; படுமோசமான.

flags[1], *n.* பாவு கற்களால் பாவப்பட்ட தளவரிசை.

flags[2], *n. pl.* நீண்டு மெல்லிய அலகு போன்ற சொரசொரப்பான இலைகளையுடைய செடிகளின் தொகுதி.

flag'-ship, *n.* கப்பல் தளபதி இவர்ந்துசெல்லும் கொடிக் கப்பல்.

flag'staff, *n.* கொடிக்கம்பம்.

flag'-station, *n.* கொடி அடையாளம் காட்டினால் மட்டும் வண்டிகள் நிற்கும் புகைவண்டி நிலையம்.

flag'-waver, *n.* கிளர்ச்சியாளர்.

flail, *n.* சூடடிக்கும் கோல், நுனியில் சிறிய பளுவான கழி தொங்கிக்கொண்டிருக்கும் மரத்தடி; முற்காலச் சணல் வெட்டும் கருவி.

flair, *n.* இயல்புதிறம்; சிறந்ததைத் தெரிந்தெடுக்கும் நுட்பத் திறம், உள்ளார்ந்த நுண்ணியல் தேர்வாற்றல்.

flak, *n.* சேர்மானியரது வழக்கில் விமான எதிர்ப்புப் பீரங்கி வேட்டு; (தொ.) flak ship, வானூர்திகளை எதிர்த்துச் சுடுதற்கான சேர்மானியக் கப்பல்.

flake[1], *n.* சூட்டப்பம் முதலியவற்றைச் சேமித்து வைப்பதற்கான அடுக்குநிலை; மீன் முதலியவற்றைக் காயப் போடுதற்கான மேடைச்சட்டம்; வாட்போர்முறையில் பயன்படும் இயங்கு இட்டித் தடைச்சட்டம்; விளிம்படைப்பு முதலியன வைப்பதற்காகக் கப்பல் பக்கங்களில் தொங்கவிடப்படும் சட்டம்.

flake[2], *n.* காற்றில் மிதந்தலைபடும் பஞ்சுத்துணுக்கு; விசிறியப்பட்டுக் காற்றில் மிதக்கும் எரிதழல் இணுக்கு; சீவல் துணுக்கு, உரித்தெடுக்கப்பட்ட மெல்லிய பரந்த சிம்புப்பகுதி; சிறு விரல்போன்ற துண்டு; மிதவைத் துய்; மீனிறைச்சியின் இயற்கைப்பாளம்; அடை அடுக்கு; செங்நிறத் தோட்ட மலர் வகையில் கோடுடைய இதழ் கொண்டவை; *v.* பனி வகையில் இணுக்கு இணுக்காக விழு, துணுக்குத் துணுக்காகத் தூற்றலுறு; அடையடையாக உரித்தெடு; சிம்பு சிம்பாக உரிந்துபடு.

flake'-white, *n.* ஈயங்கலந்த வெண்கலவையிலிருந்து எடுக்கப்படும் வண்ணப்பொருட்கூறு.

flam, *n.* பொய்க்கதை; சூழ்ச்சிப்பொறி, ஏமாற்றுமுறை.

flam'beau, *n.* சுளுந்து, மெழுகுதிரிகளை இணைத்துக்கட்டிய தீப்பந்தம்.

flamboy'ant, *n.* தீக்கொழுந்து நிறமுள்ள மலர்வகைகளில் ஒன்று; *a.* அலையெழுந்து வீசியெறியும் தீக்கொழுந்து போன்ற; (க-க.) அலைத்தெழும் தழல்போன்ற தோற்றம் வாய்ந்த வேலைப்பாடுடைய; அழல்வண்ணப் பூம்பகட்டு ஒப்பனையுடைய; வண்ணப்பகட்டான, வீணரவாரமிக்க, ஆர்ப்பாட்டமான.

flame, *n.* அனற்கொழுந்து, தீநாக்கு, எரிதல் ஆவி; ஒளிப் பிழம்பு; சுடரொளி; ஒளிவண்ணம்; ஆர்வக்கனல்; பற்றார்வம்; கருத்துவேகம்; சீற்றம், கடுஞ்சினம்; முனைத்தெழும் காதல்; ஆர்வக்காதலர்; அந்துப்பூச்சி வகைகளில் ஒன்று; *v.* கொழுந்துவிட்டெரி; அழன்றெழு; சுடரொளி வீசு; அனற் பிழம்பாக வீசு; தழலாகப் பரவு; எரிதழல் ஒளிச்சின்ன வழியாகச் செய்தி அறிவி; எரிதழல் வெப்பத்துக்கு உட்படுத்து; உணர்ச்சிகொந்தளித்தெழு; சினந்தெழு; எழுச்சியூட்டு; சினமூட்டு; காதல் வெறியூட்டு; (தொ.) fan the flame, எரிநெருப்பைத் தூண்டிவிடு; உணர்ச்சியை மிகுதியாக்கு; ஆர்வம் பெருக்கு; வெறியூட்டு.

flam'en, *n.* பண்டைய ரோமாபுரித் தெய்வத்துக்குரிய சமயகுரு.

flam'ing, *a.* கொழுந்துவிட்டெரிகிற; கடுவெப்பமான, மிகுசூடான; ஒளிகிறமுடைய; உருத்தெழும் வண்ணமுடைய; உயர்வு நவிற்சியான, அளவுக்கு மீறிய புகழ்ச்சியான; (தொ.) flaming onions, நெருப்புப் பந்துகளின் சங்கிலி போன்ற விமான எதிர்ப்புக் குண்டுவீச்சு.

flaming'o, *n.* மராளம், நாரைபோன்ற பெரிய செங்நிறப் பறவை வகை.

flamm'enwerfer, (செர்.) *n.* போரில் நெருப்புக்குழம்பைப் பீறிட்டு வெளிப்படுத்தும் இயந்திரப்பொறி.

flan, *n.* பழம் முதலியனவுள்ள பணியார வகை.

flanerie, (பிர.) *n.* சோம்பேறித்தனமாயிருத்தல், காலத்தை வீணுக்குதல்.

flaneur, (பிர.) *n.* சோம்பேறி, வீணுகச் சுற்றித்திரிபவன்.

flange, *n.* தட்டையான விளிம்பு; நீட்டிக்கொண்டுள்ள கழுத்துப்பட்டை வகை; விலாவெலும்பு; *v.* நீட்டிக்கொண்டுள்ள கழுத்துப்பட்டை வகையை அணி.

flank, *n.* விலா எலும்புகளுக்கும் இடுப்புக்கும் இடைப்பட்ட சதைப்பற்று மிக்க பாகம்; மலையின் பக்கச்சிறை; கட்டிடத்தின் புடைச்சிறை; படையின் புடையணி; சிறகம், புடைச்சிறை; *v.* படைவகுப்பின் பக்க அணியாய் அமை; புடையணி காத்துநில்; சிறையணியில் அமைவுறு; பக்க அணியில் இடம்பெறு; பக்கச்சிறையில் தாக்கு; பக்கவாட்டில் இடர் வருவி, புடைப்பகுதியை அச்சுறுத்து.

flank'er, *n.* பக்கவாட்டுக் காப்பரண்; சிறையணிவகுப்பு, பக்கச்சிறைப்பகுதி.

flank'ers, *n. pl.* பக்க அணி தாக்குபவர்கள், படையின் புடைச் சிறைக்குத் தாக்குதல் தொல்லை தருபவர்கள்.

flann'el, *n.* நாரியல் சணல் துணி; நாரியல் சணல் துணியாலான உள்ளுடை.

flannelette', *n.* பருத்தியாலான நாரியல் மென்சணலாடைப் போலி.

flann'els, *n. pl.* நாரியல் மென்சணல் துணிவகைகள்; நாரியல் மென்சணல் துணியாலான உள்ளுடைகள்; மென்சணல் துணிக்கட்டுகள்.

flap, *n.* மொத்துதல், தட்டல்; சிறகடிப்பு; திண்வார்த் தொங்கல்; ஆடல்விளிம்பு, தொங்கற்பகுதி; சட்டைப் பையின் மூடு விளிம்பு; தொப்பியின் கவிகைவிளிம்பு; பொறிக்கதவம்; ஒருபுற அடைப்பிதழ், தடுக்கிதழ்; அறு வையில் தளரவிட்ட தோல் தொங்கல்; காளான் குடையின் திறந்த மேற்பகுதி; (பே-வ.) கொந்தளிப்பு நிலை; *v.* சிற கடித்துக்கொள்; சிறகுபோன்ற அகல் தொங்கல் பகுதியை அடித்துக்கொள்; படபட என்று அடி; மேலும் கீழும் ஆட்டு; முன்பின் ஊசலாட்டு; படபட என்று அடிக்கப் பெறு; ஆடு, ஊசலாடு.

flapdoo'dle, *n.* பித்தலாட்டம், வெறும்புரட்டு; மட்டமான முகப்புகழ்ச்சி.

flap'jack, *n.* மாவிற் சுட்ட எண்ணெய்ப் பணியாரவகை; முகப்பூச்சுமா வைக்கும் தட்டையான சிங்காரப்பெட்டி.

flapp'er, *n.* ஈக்களைக் கொல்லும் தட்டையான கருவி; கிளி கடி கருவி, தட்டை, பறவைகளை அச்சுறுத்தி விரட்டும் கிலு கிலுப்பை; காட்டு வாத்துக்குஞ்சு; கவுதாரிக்குஞ்சு; கீலிற் பொருத்தப்பட்ட தொங்குமடல்; தொங்கல், மடி; அகல மான மீன்துடுப்பு; மேலோடுள்ள உயிரின வகையின் வால; நிஜவில் ஓயாது ஊடாடுபவர்; ஓயாது நிஜவில் ஊடாடும் பொருள்; துடுக்கான பெண்.

flare, *n.* கிளரொளி, முரண் கதிரொளி; திடீர் அழல்வீச்சு, பட்டொளி; கடலின் அடையாள ஒளிவீச்சு; தீப்பந்தம்; இலக்கொளிப்படுத்த வானூர்தியிலிருந்து எறியப்படும் கிள ரொளி வெடிகுண்டு; பகட்டாரவாரம்; கப்பற் பக்கங்களின் மேல்நோக்கிய புடைப்பு; பாவாடை முதலியவற்றின் அகன்று செல்லும் புடைப்புப் பகுதி; மணியின் கூண்டுபோன்ற விரிவு; *v.* சுடர்விட்டெரி; மின்னிடு; கூரொளிவீசு; கொழுந்துவிட்டெரி; உணர்ச்சி கிளர்ந்தெழு, சீறியெழு; பகட்டாகக்காட்டு; பாவு, பாவாடைபோல் பரப்பு; மணியின் கூண்டுபோல் அகல்விரிவாகு; அலங்தாடு; (தொ.) flare up, திடீரெனக் கொழுந்துவிட்டெரி; திடீரெனச் சினங்கொண்டு சீறு.

flare'-path, *n.* வானூர்தி ஓடி வான் ஏற அல்லது இறங்கி ஓட உதவும் ஒளிவிளக்கம் செய்யப்பட்ட நிலப்பாதை.

flare'-up', *n.* திடீர் அழல் எழுச்சி; திடீர்ப்புகழ்; மிகக் குறுகிய காலத் திடீர்விளம்பரம்; தீடீர்ச்சீற்றம்; ஆர்ப் பாட்டக் களியாட்டம்.

flash, *n.* திடீரொளி, மின்வெட்டொளி; கணநேர அழற் பாய்ச்சல்; கணநேரம், கொடிப்போது; வெளிப்பகட்டு, புற ஆரவாரம்; திடீருணர்ச்சி; மின்விடும் கருத்துப்பாய்ச்சல்; திரைப்படத்தில் கணநேரக்காட்சி; கணநேர முன்காட்சிப் பதிவு; சுருக்கமான தந்திச்செய்தி; சாராயச் சத்துக்களுக்கு வண்ணமூட்டும் கலவைக்கூறு; படைத்துறைப் பிரிவு களின் அடையாளமான வண்ணப்பட்டை; முழந்தாளுக்குக் கீழ்த் தெரியும்படி விடப்படும் படைத்துறை அடையாளக் காலுறைப் பகுதி; முழந்தாளுக்குக்கீழ் விடப்பட்ட அடையாள இழைக்கச்சை; ஆழம் குறைந்த இடத்தைப் படகு கடப்ப தற்காக மதகுவாயிலிருந்து திறந்து விடப்படும் நீரோட்ட ஒழுக்கு; ஆழம் குறைந்த இடத்தைப் படகு கடப்பதற்காகச் செய்யப்படும் துறை; நீரை ஆழமாக்குதற்கான பலகை அணைப்பு; கருதிய திசையில் நீரை ஓடச்செய்தற்கான அணைப்பலகை; திருடர்களின் கொச்சை வழக்குக் குழூஉக் குறி; *a.* பகட்டான; பொய்யான, போலியான, பொய் வேடமான; கீழ்த்தரமான; கொச்சையான; திருடர்களைச் சார்ந்த; திருடர்களின் கொச்சை வழக்கு சார்ந்த; *v.* திடீரெனச் சுடரிட்டு ஒளிவீசு; பொறி சிதறி அழன்றெழு; பளிச்சிடு, மின்னிட்டு மறை; எதிரொளியிடு, மினுங்கு; மின்னொளிபோலத் தெறி; மின்வெட்டுப்போல விரைந்தனுப்பு; திடீர்ப்பாய்ச்சல்கள் மூலமாகச் செலுத்து; விரைந்துசெல்; பாய்வுறு; மின்னிட வை; திடுமெனத் தோன்று; திடீரென்று கருத்தில் தோன்று; கூசவை; தந்தி மூலம் அனுப்பு; கண்ணுடிவார்ப்பில் உருக்கிய குழம்பை மெல்லிய தகடாகப் பரப்பிப்பாய்ச்சு; மெல்லிய தகடாகப் பரவிப்பாய்வுறு; கண்ணுடிப் பாளத்தின்மீது வண்ண மென்படலம் பரப்பு; நீர்வகையில் வேகமாகப்பாய்; எழுந்துபாய்; பாய்ந்து நிரப்பு; பாய்ந்துபெருகு; பாய்ந்து பொங்குவி; (தொ.) flash in the pan, பகட்டான தொடக்கத்திற்குப் பிறகு தோல்வியுறு; flash out, flash up, ஒளிவீசச்செய்; திடீரென உணர்ச்சியைக் காட்டு.

flash'back, *n.* திரைக்காட்சியிடையே முன்னிகழ்ச்சியின் இடைப்பதிவு.

flash'-board, *n.* நீரோடையை ஆழமாக்குதற்கு இருபுறங் களிலும் பதிக்கப்படும் பலகைகளில் ஒன்று.

flash'er, *n.* புறப்பகட்டாளர்; விளம்பரக் காட்சியணியில் ஒளி தோன்றித்தோன்றி மறையச் செய்வதற்கான அமைவு.

flash'-house, *n.* விலைமகளிர் இல்லம்.

flash'ing [1], *n.* கொழுந்துவிட்டெரிதல்; விளம்பரப்படுத்துதல்; திடீரென நீர் உடைப்பெடுத்துப் பெருகுதல்; *a.* ஒளிக் கதிர்களை உமிழ்கின்ற; மின்னுகிற; பளபளப்பான, பளிச் சென ஒளிவிடுகிற.

flash'ing [2], *n.* கூடல்தகடு, மழைநீர் உள்ளே ஊருமல் விலக்குதற்காக மோட்டின் கூடல்வாய்களிற் பொருத்தப் படும் உலோகத் தகடு.

flash'ing-point, *n.* = flash-point.

flash'-light, *n.* மின்பொறிக் கைவிளக்கு; கைப்பந்தம்; கலங் கரை விளக்க ஒளி, அடையாளக் குறியீடான விளக்கொளி; நிழற்படமெடுப்பதற்குரிய கூரொளி.

flash'-pipe, *n.* ஆவி விளக்கில் வரித்துளைகளுள்ள மிகைப் படியான குழாய்.

flash'-point, *n.* தீயை அருகிற் கொண்டுசென்றால் உடனே தீப்பற்றிக்கொள்ளக்கூடிய நீர்மத்தின் வெப்பநிலை.

flash'y, *a.* கணநேரத்தோற்றமுடைய; தோன்றிமறைகிற; புறப்பகட்டான; பகட்டித்திரிகிற; உள்ளீடற்ற, போலி யான; மலிவுச்சரக்கான; அற்பமான.

flask, *n.* குடுவை; எண்ணெய்க்குடுவை; வேட்டைப்பையுறை, தோல் அல்லது உலோகத்தாலான வேட்டைக்காரரின் வெடி மருந்துக்குரிய பெட்டி; பிரம்பினால் வரிந்து பின்னப்பட்ட குறுகிய கழுத்தையுடைய எண்ணெய்க்கு அல்லது தேறலுக்கு உரிய இத்தாலியப் புட்டி வகை; பயணக்குடுக்கை, பயணம் செல்பவர்கள் தேறல்-சாராய வகைகள் கொண்டுசெல்லும் உலோகத்தாலான அல்லது தோலுறையுடன் கூடிய கண்ணுடியாலான புட்டி; (தொ.) Thermos flask, தட்ப வெப்ப நிலைக்காப்புக்கலம்.

flask'et, *n.* துணிக்கூடை; சிறிய குப்பி.

flat [1], *n.* அறைக்கட்டு, குடியிருப்புத்தட்டு, குடிவாழ்வுக்கு அமைந்த பல அறைகளின் தொகுதி; கடற்படை சார்ந்த கப்பலில் அறைமுகப்புக்களுடன் இணைந்த தட்டுக்கூடம்.

flat [2], *n.* தட்டையான பொருள்; தட்டையான பகுதி; சம தள நிலம்; தாழ்நிலம்; ஆழமற்ற நீர்நிலைப்பகுதி, சதுப்பு நிலம்; தட்டையான அடித்தளமுள்ள படகு; அகல் விரிவான உள் ஆழமற்ற கூடை; அகழ்வு புடைப்புக் காட்டாத சமதளக்கலை; நாடக மேடையில் இடையே ஏற்றி இறக்கப்படும் காட்சி ஓவியத்திரை; அரைத்தொனி யளவு குறைக்கப்பட்ட இசைமானம்; அரைத்தொனியளவு குறைக்கப்படுவதற்கான இசைமானக் குறியீடு; *a.* தட்டை யான, சமதளமான; புடைப்பகழ்வற்ற, வழவழப்பான; பரவலான, அகன்ற; முழுநீளத்தில் நிலம் படிந்து கிடக்கிற; முனைப்பற்ற; கவனத்தை ஈர்க்கும் கூறுகளற்ற; கவர்ச்சி யற்ற; ஒரே மாதிரியான; சலிப்பைத் தருகிற, உவர்ப் பூட்டுகிற; அக்கறையூட்டாத; கிளர்ச்சிதராத; உருக்கமற்ற, கனிவற்ற, மனங்கொள்ளாத; ஊக்கமற்ற, உயிர்ப்பற்ற, துடிப்பற்ற; மந்தபுத்தியுள்ள; வாட்டமுள்ள; சோர்ந்த; தீர்ந்த, மோசமான, கடைப்பட்ட; காலடி வகையில் சப்பை யான; ஒலிகள் வகையில் மென்மைவாய்ந்த; *v.* தட்டையாக்கு, தளமட்டமாக்கு; *adv.* தட்டையாக, சம தளமாக; நிலம் படிந்து; உணர்ச்சியின்றி; மந்தமாக; கவர்ச்சியின்றி; தொனியில் மிகமட்டமாக; தாழ்வாக; உயர்வின்றி, சிறப் பின்றி; தகுதிகெட்டு; (தொ.) fall flat, தோல்வியுறு;

பாராட்டுப்பெறத் தவறு; கவர்ச்சியற்றிரு; flat beer, நுரைத்துப் பொங்கும் தன்மையை இழந்த சாராய வகை, சுவையற்ற சாராயவகை; flat rate, ஒரே வீதம்; sharps and flats, இசைப்பெட்டியில் கருநிற ஓசைக்கட்டைகள்; that's flat, இதைப்பற்றி ஐயமே வேண்டாம்.

flat'-boat, *n.* தட்டைப்படகு.

flat'-fish, *n.* தட்டைக் கடல்மீன் வகை.

flat'-foot, *n.* உட்குழிவுப்பகுதி தட்டையாகவுள்ள காலடி.

flat'-iron, *n.* துணித்தேய்ப்புப்பெட்டி.

flatt'en, *v.* தட்டையாக்கு; தட்டையாகு; (தொ.) flatten out, வானூர்தியைச் சமதள மட்டமாகக் கொண்டு வா.

flatt'er, *v.* முகப்புகழ்ச்சிசெய்; இச்சகம் பேசு, பொய்யாகப் புகழ்ந்துபசப்பு; கெஞ்சி ஆதரவைப்பெறு; மட்டுமீறி முகமனுரை; அளவுமீறிப் புகழ்; பெருமைப்படுத்திப் பேசு; வீணான நம்பிக்கையைத் தோற்றுவி; தற்பெருமை உணர்ச்சிக்கு நிறைவளி; மனநிறைவுசெய், மகிழ்செய்; கலைப் பண்பை மிகைபடப்பாராட்டு; கலைஞரை அளவுகடந்து பாராட்டிப்பேசு, மிகைபடப் பாராட்டுக்கூறு.

flatt'ery, *n.* முகப்புகழ்ச்சி; தகாப்பாராட்டுரை, மட்டுமீறிய புகழ்ச்சி; போலிப்புகழ்ச்சி.

flatt'ish, *a.* ஓரளவு தட்டையான.

flat'ulence, *n.* வயிற்றுப்பொருமல்.

flat'ulent, *a.* உணவுக்குழாயில் வாயுவைப் பிறப்பிக்கின்ற; உணவுக்குழாயின் வாயுவால் விளைவுற்ற; பொருமலுக்கு ஆட்பட்ட, வயிற்றில் பொருமலுள்ள; உப்பலான; செருக்குமிக்க, வீம்புடைய; காற்றுப்பிரிகிற; வெறுமையான, பயனற்ற; பகட்டான.

flat'us, (ல.) *n.* வாய்வு, வயிற்றுவளி, குடல்வளி.

flat'ways, flat'wise, *adv.* தட்டையான பகுதியில், தட்டைப் பகுதியின் போக்கில்.

flat'-worm, *n.* குடற்புழு.

flaunt, *n.* வீம்படிப்பு, வீரூப்பு, பகட்டாரவார ஆர்ப்பாட்டம்; *v.* தன்மிகைப்புக்கொள்; ஆர்ப்பரி.

flaut'ist, *n.* குழலோர்.

flaves'cent, *a.* மஞ்சளாக மாறுகிற; மஞ்சள் சாயலுள்ள; சிறிது மஞ்சளான.

flav'in, fla'vine, *n.* மரப்பட்டை வகையிலிருந்து எடுக்கப்பட்டு அறுவை மருத்துவ நச்சுக்காப்பாகப் பயன்படும் மஞ்சள் சாய வகை.

flav'our, *n.* நறுமணச்சுவை; தனிச்சுவைத்திறம்; *v.* நறுஞ் சுவையூட்டு; பக்குவப்படுத்து.

flaw[1], *n.* வடு; வெடிப்பு, பிளவு; கோட்டம், பழுது; குறைபாடு; ஆவணமோ நடைமுறையோ சான்றுகளோ சட்டமுறைப்படி செல்லுபடியாகாமல் தடைசெய்யத்தக்க வழு; *v.* பிள; வெடிப்புறு; கெடு, பழுதுண்டாக்கு; கேடடை, பழுதுபடு.

flaw[2], *n.* திடீர்ப்புயல்; சிறுநேரச் சண்டமாருதம்.

flax, *n.* ஆளிவிதைச்செடி, மென்னயச்சணல் தரும் நீலமலர்ச் செடி வகை; (தொ.) cloth of flax, மென்சணல்துணி.

flax'-comb, *n.* சணல் சிக்கறுற்றும் சீப்புப்போன்ற கருவி.

flax'en, *a.* சணலாலான, சணல்சார்ந்த; தலைமயிர்வகையில் செம்மை செய்யப்பட்ட சணல் போன்ற நிறமுடைய; இலேசான பழுப்பு மஞ்சள் வண்ணமான.

flax'-seed, *n.* ஆளிவிதை.

flax'y, *a.* சணல்போன்ற; சணலின் வண்ணச்சாயலுடைய.

flay, *v.* தோலுரி; கடுமையாகக் கண்டனம் செய்; கொள்ளையடி; பாறாக்கு; குதிரைப்பந்தய வெளிப்புல் நிலவகையில் ஓரத்தைக் கத்தரி.

flay'-flint, *n.* பணம் பிடுங்கி; கஞ்சன்.

flea, *n.* தெள்ளுப்பூச்சி; உண்ணி; வெறுக்கத்தக்க இழிவான சிறிய உயிரினம்; (தொ.) a flea in one's ear, மூக்கறுபடல்.

flea'-bite, *n.* தெள்ளுப்பூச்சிக்கடி; தெள்ளுப்பூச்சிக்கடியாலான சிறு வடு; அற்பப்பொருள்; அற்பச்செய்தி; மிகச் சிறிய தொந்தரை; மிகச்சிறு செலவு; விலங்கு வண்ணத்திற் சிறிய செங்நிறச் சாயலுள்ள கறை.

flea'-bitten, *a.* தெள்ளுப்பூச்சிகளால் கடிக்கப்பட்ட; கஞ்சத்தனமான, இழிந்த; விலங்குகளின் மங்கல்நிற மேனிமீது சிறிய செங்நிறச் சாயலுள்ள கறைகள் படிந்த.

fleam, *n.* அறுவைக் கூர்ங்கத்தி.

fleche, (பிர.) *n.* திருக்கோயிலின் இருபுற மாடத்திற்கும் இடையேயுள்ள மெல்லிய தூபி.

fleck, *n.* மறு, மச்சம்; தோலிலுள்ள புள்ளி; வடு; வண்ணக்கீற்று; ஒளிக்கீற்று; சிறுதுகள்; புள்ளி; *v.* புள்ளிகளிடு; மறுப்படுத்து; வெவ்வேறான நிறங்களாக்கு.

flecked, *a.* புள்ளிசளுள்ள.

fleck'er, *v.* புள்ளிகளிடு; பல்வேறு நிறங்களாக்கு; பட்டைபட்டையாகச் சிதறடித்துவை.

fled, *v.* flee என்பதன் இறந்தகாலம்.

fledge, *v.* சிறகுடையதாக்கு, இறகளி; இறகுகளால் அணிசெய்; பறப்பதற்குரிய சிறகுகளை எய்தப்பெறு.

fledge'ling, fledg'ling, *n.* சிறுபறவை; புதிதாகச் சிறகு முளைத்த பறவைக்குஞ்சு; உலக அனுபவமற்றவர்.

flee, *v.* ஓடிப்போ; தப்பி ஓடு; மறைந்துபோ; அணுகாதிரு, தொலைவாக்கி வை; தவிர், விலக்கு, நீக்கு.

fleece, *n.* கம்பளியாட்டுமயிர்; கம்பளியாட்டு மயிர்போலப் பயன்படும் பிற விலங்குமயிர்; ஓர் ஆட்டில் ஒருதடவை கத்தரித்த கம்பளி அளவு; கம்பளிபோன்ற முறமுறப்பான வளமான தலைமயிர்; கம்பளிபோன்ற பொருள்; முகிற்கற்றை; பனிக்கீற்று; பஞ்சுக்கற்றை; கம்பளிக்கற்றை; *v.* கம்பளி மயிரினைக் கத்தரி; மயிர்கத்தரித்து ஆட்டின் உடலை வெறுமையாக்கு; பணம்பறி; உடைமை கைப்பற்று; கம்பளிபோல மூடிமறை, மூடாக்கிடு.

fleeced, *a.* கம்பளிமயிர் போர்த்த.

fleec'er, *n.* ஆட்டு உரோமம் கத்தரிப்பவர்; கொள்ளையடிப்பவர்.

flee'cy, *a.* கம்பளிபோன்ற, ஆட்டுரோமம்போன்ற.

fleer, *n.* ஏளனப்பார்வை; ஏளனப்பேச்சு; *v.* எள்ளி நகையாடு; குத்தலாகப்பேசு; கிண்டல்செய்.

fleet[1], *n.* கப்பற்படை; ஒரு தலைமையின் கீழுள்ள போர்க் கப்பல்களின் எண்ணிக்கை; இணைந்துசெல்லும் கப்பல்களின் தொகுதி; கூட்டாகச்செல்லும் படகுகளின் குழு; வானூர்திகளின் குழு; (தொ.) Fleet Air Arm, கப்பற்படையின் வானூர்திப்பிரிவு; fleet of cabs, fleet of taxis, ஒரே உரிமையாளருக்குட்பட்ட வாடகை உந்துவண்டிகளின் தொகுதி; the fleet, கடற்படை.

fleet[2], *n.* சிறுகடற்கழி, ஓடை, உட்குடா; *a.* ஆழமில்லாத; *adv.* ஆழம் நிறைய இல்லாத இடத்தில்; (தொ.) Fleet marriage. கள்ளத்தனமாக நடத்தப்படும் திருமணம்; Fleet parson, கடனுக்காகச் சிறையிலடைக்கப்பட்ட சமயபோதகர்; Fleet Street, பத்திரிகை உலகம், லண்டன் நகர்ப் பத்திரிகைத் தொழில் உலகம், The Fleet, லண்டன் நகரிலுள்ள தேம்ஸ் ஆற்றிற் கலக்கும் வடிகால் கழிநீர் ஓடை; ஓடை மருங்குள்ள சிறை.

fleet[3], *a.* விரைவான; எளிதில் இயங்குகிற; *v.* வழுக்கிச்செல்; மறைந்துபோ; கணநேரம் தோன்றிமறை; வேகமாகக் கடந்துசெல், நழுவிச்செல்; விரை; பறந்தோடு.

fleet'ing, *a.* விரைவிற் செல்கின்ற; தற்பொழுதைக்கான.

Flem'ing, *n.* பிளாண்டர்ஸ் (Flanders) நாட்டுக் குடிமகன்.

Flem'ish[1], *n.* பிளாண்டர்ஸ் (Flanders) மாநிலமொழி; *a.* பிளாண்டர்ஸ் மாநிலஞ் சேர்ந்த.

flem'ish[2], *v.* வேட்டைநாய்வகையில் மோப்பம் பிடிக்கும் வேளையில் வாலையும் உடலையும் உலுக்கு.

flench, flense, *v.* திமிங்கிலத்தை வெட்டு, திமிங்கிலத்தைத் துண்டுபோடு; கடல்நாயைத் தோலுரி.

flesh, *n.* தசை; உடலின் ஊன்முழுத்தொகுதி; விலங்கின் எலும்பைச் சுற்றியுள்ள மென்தசைப்பொருள்; இறைச்சி, மாமிச உணவு; விலங்கின் உடல்; உடம்பு, பருவுடல்; விலங்கு; விலங்கியல்பு, விலங்குக்கூறு; மனிதனின் உடல் சார்ந்த இயல்பு; மனித இனம்; உடலுறவு, உறவினர் பாசம்; உடல்சார்ந்த ஆசைகளின் தொகுதி; பழத்தின் சதைப்பற்று; தின்னும் சுளைப்பகுதி; கொழுப்பு, தசை வளம்; உடலோடு கூடிய உயிர்; தோலின் தசைப்பக்கம்; *v.* வேட்டைநாயைக் குருதிச்சுவைமூலம் தூண்டி வெறி யூட்டு; குருதி சிந்தும் முறையில் பழக்கிவிடு; வெற்றியின் முன்சுவைகாட்டிக் கிளர்ந்தெழச்செய்; வாளை முதன்முத லாகத் தசைமீது பதம்பார்; அறிவுத்திறத்தை வழங்கித் தொடக்கப்பதம்பார்; மைக்கோலை வழங்கிப் பதம்பார்; தசை பரிசாக வழங்கு; பழகித்தேறும்படி செய்; திணி; கொழுக்கவை; தசையூட்டி அவா நிரப்பு; தசைகொழுக்க வை; தசையைச் சுரண்டி எடு; (தொ.) after the flesh, உடல் சார்ந்து, உடலியல்பு பின்பற்றி; flesh and blood, உடல்; தசைப்பொருள்; மனித இனம்; உணர்ச்சிகளும் குறைபாடுகளும் உள்ள மனித இனவியல்பு; உயிரோடு கூடிய, கற்பனையல்லாத; flesh and fell, முழு உடலும்; முழுவதும்; flesh side, விலங்கின் சதையோடு சேர்ந்திருந்த தோலின் பகுதி; flesh tights, உடலமைப்போடு நெருங்கி இயற்கையான தோலின் நிறத்தோடு கூடி இணைந்த உடை; flesh tints, ஓவியர் படத்தில் அமைக்கும் தோலின் நிறம்; in flesh, பருத்த, தடித்த; in the flesh, உடலுருவில்; வாழ்க்கையில்; lose flesh, இளைத்துப்போ; make one's flesh creep, இயற்கை கடந்தவற்றைப் பற்றிய அச்சத்தைக் கிளப்பிக் கிலிபூட்டு; one flesh, ஒருவரே போன்ற ஒருமைப் பாடுடையவர்; one's own flesh and blood, ஒருவருடைய நெருங்கிய உறவினர்; பின்மரபினர்; proud flesh, புண்ணின் மீது முளைத்தெழுகின்ற சிறுமணிகள் போன்ற அளவுமீறிய வளர்ச்சி; put on flesh, தடிப்பாகு, பருமனாகு, சதை வைக்கப்பெறு.

flesh'-brush, *n.* குருதி ஒட்டத்தைத் தூண்டி விரைவுபடுத்தும் மயிர்க்குச்சு வாய்ந்த தூரிகை.

flesh'-colour, *n.* தசைநிறம், மஞ்சள் சார்புகொண்ட இளஞ் சிவப்புநிறம்.

flesh'-coloured, *a.* தசைநிறமான, மஞ்சள் சாயல்கொண்ட இளஞ்சிவப்பு நிறமான.

flesh'-fly, *n.* இறந்த உடற்சதையில் முட்டையிட்டு முட்டைப் புழுக்களை வளரவிடும் ஈ வகை.

flesh'-glove, *n.* குருதி ஒட்டத்தைத் தூண்டி விரைவுபடுத்தும் மயிர்க்குச்சு வாய்ந்த கையுறை.

flesh'ings, *n. pl.* உடலமைப்போடு நெருக்கி இயற்கையான தோலின் நிறத்தோடு கூடி இணைந்த உடை.

flesh'ly, *a.* தசைக்குரிய; உடல்சார்ந்த; உடல்வாழ்க்கையோ டொட்டிய; மனித இயல்புக்குரிய; புலனுணர்ச்சியின்பங் களில் நோய்ந்த; சிற்றின்பம் சார்ந்த; உலகியல் பற்றுடைய; தெய்வத்தன்மையில்லாத; மேலுலகப் பற்றற்ற; ஆன்மிக மல்லாத.

flesh'-pot, *n.* இறைச்சி சமைக்கப்படும் கலம்; இறைச்சிவளம்; இன்பகிறை உயிர்வாழ்க்கை.

flesh'-wound, *n.* எலும்பு அல்லது உயிர்நிலையான உறுப்பை எட்டாத காயம்.

flesh'y, *a.* கொழுப்புள்ள, தசைப்பற்றுள்ள; கொழுத்த, உருண்டு திரண்ட, பருமனான; சதைசார்ந்த, எலும்பில்லாத; பழவகையில் சதைப்பற்றுள்ள; சதைபோன்ற.

fleur'-de-lis', *n.* பகட்டான மலர்வகை; கட்டிய மரபில் அல்லிமலர்; பிரான்சு நாட்டரசரின் அரசுச்சின்னம்; பிரான்சு நாட்டின் அரசகுடும்பம்; பிரான்சு.

fleur'et, *n.* சிறுமலர்போன்ற அணிகலன்.

fleuron, (பிர.) *n.* மலர் வடிவமான சிற்ப அணியொப்பனை.

fleur'y, *a.* (க. க.) பகட்டான அல்லிமலர் வகையினால் ஒப்பனை செய்யப்பட்ட.

flew, *v.* fly என்பதன் இறந்தகாலம்.

flews, *n. pl.* வேட்டைநாய் முதலியவற்றின் தொங்கு தாடைகள்.

flex, *n.* மின்விளக்குப் போடுவதில் பயன்படுத்தப்படும் கூப் பிட்ட துவள்கம்பி; *v.* வளையச்செய்; உறுப்புக்களை வளை; பாறைகளை மடியச்செய்.

flex'ible, *a.* உடையாமல் வளைகிற; வளையத்தக்க, துவள்கிற, நெகிழ்வான; எளிதில் கையாளத்தக்க; எளிதில் பின்பற்றுகிற; இசைவிணக்கமுடைய; எளிதில் வழிக்குக் கொண்டுவரத்தக்க; எளிதில் இசைந்துகொடுக்கிற; பலதிறப் பயிற்சியுள்ள.

flex'ile, *a.* எளிதில் இசைந்துகொடுக்கிற, இழைவான, குழை வான; எளிதில் இயங்குகிற; எளிதிற் பழகக்கூடிய, எளிதில் வசப்படுத்தத்தக்க.

fle'xion, *n.* வளைவு; நெளிவு; வளைந்த நிலை; உறுப்பு வளைவு; வளைந்த பகுதி; (இலக்.) இலக்கணக்கூற்றின் பலதிறப் பாங்கு.

flex'or, flexor muscle, flexor tendon, *n.* மடக்கி, வசிநரம்பு, மூட்டுமடங்கச்செய்யும் தசை.

flex'uose, *a.* (தாவ.) வளைந்து வளைந்து செல்கிற, அலையாடிச் செல்கிற.

flex'uous, *a.* வளைவுகள் நிரம்பிய, வளைந்து வளைந்து செல்கிற.

fle'xure, *n.* வளைவு, நெளிவு, வளைந்த நிலை; திருப்பம்; கோணல்.

flibb'ertigibb'et, *n.* வாயாடி; அவதூற்றாளர்.

flick, *n.* சவுக்குச்சொடுக்கு, சுண்டியிழுத்தல்; சுண்டுதல், சொடுக்கிடல்; சடாரென்ற வெடிப்பொலி; *v.* கசைக் கயிற்றினால் சொடுக்கி அடி; விரலினால் சுண்டு; உதறியடி.

flick'er [1], *n.* சுடர்நடுக்கம்; மினுக்குமினுக்கென ஒளிவிடுதல்; *v.* நடுங்கு; துடி; அதிர்வுறு; ஊசலாடு; சிறகுவகையில் பட படவென்றடித்துக்கொள்; சுடர்வகையில் இமைத்திமைத்து ஒளிகால்.

flick'er [2], *n.* அமெரிக்க மரங்கொத்தி பறவைவகை.

fli'er, *n.* = flyer.

flies, *n. pl.* நாடகமேடை முகப்பின் மேற்பகுதி.

flight [1], *n.* பறத்தல்; பறக்கும் முறை; பறக்கும் ஆற்றல்; வானிற் பறத்தல், வான்செலவு; பருந்தின் வான்மீச்செலவு; பறவையைப் பின்பற்றி வேட்டையாடுதல்; குடிபெயர்ச்சி; குடிபெயர்குழு; புலம்பெயர் பறவைக்கூட்டம்; இடம்பெயர் பூச்சியினத் தொகுதி; புறம்பெயர்வு; எறிபடைகளின் விரை வியக்கம்; காலத்தின் விரைசெலவு; எட்டா அவா உயர்வு; மட்டுமீறிய எண்ண உயர்வு; வரம்புகடந்த சிந்தனை உயர்வு; எண்ணவேகம்; கற்பனைவேகம்; நகைத்திற வேகம்; பறவை பறக்கும் தொலைவெல்லை; விமானம் பறக்கும் தூர அளவு; எறிபடை செல்லும் தொலைவெல்லை; படிக்கட்டின் திசை திரும்பாக் கூறு; பந்தயத் தடைவேலித் தொகுதிக்கூறு; அம்புப் படலம்; எறிபடைத்தொகுதி; குண்டுத்தொகுதி; விமானப் படைப்பிரிவு; ஒரே பருவத்தில் தோன்றிய பறவை களின் தொகுதி; *v.* காட்டுக்கோழியை இலக்குவைத்து எய்; காட்டுக்கோழிமீது வேட்டிடு; பறக்கும்போது இலக்குவைத்து எய்; பறக்கும்போது வேட்டிடு; மரப்பந்தாட்டத்தில் பந்து வேகத்தையும் செல்பாதை வளைவையும் மாற்றியமை; (தொ.) in the first flight, in the top flight, முதன்மை இடம்பெற்ற நிலையில்.

flight [2], *n.* ஓடிப்போதல், ஓட்டம்; ஓடியொளித்தல், விரைந்து பின் வாங்குதல்; (தொ.) take flight, take to flight, betake oneself to flight, ஓடிப்போ; put to flight, துரத்து, கலைத்து வெருட்டு.

flight'-deck, *n.* விமானந்தூக்குங் கப்பலில் விமானத்தளம்.

flight'-feather, *n.* பறக்க உதவும் இறகு.

flight'less, *a.* பறக்கும் ஆற்றலற்ற.

flight'-lieutenant, *n.* விமானப்படைத் துணைத்தலைவர்.

flight'y, *a.* குணம் பிறிதாகும் இயல்புள்ள ; அறிவுக்கட்டை யான ; அறிவுமாறுட்டமுள்ள.

flim'-flam, *n.* வஞ்சகம் ; வெற்றுரை ; அற்பம்.

flim'sy, *n.* மெல்லிய தாள் ; செய்தியாளரது படி ; *a.* எளிதில் அழிக்கப்படக்கூடிய ; நொய்தான, உறுதியற்ற, மெலிந்த ; அற்ப ; விளையாட்டுத்தனமான, மேலீடான.

flinch[1], *v.* திமிங்கிலத்தைத் துண்டு போடு; கடற்சிங்கத்தைத் தோல் உரி.

flinch[2], *v.* பின்வாங்கு, தயங்கு, கூசு; இடங்கொடு; அஞ்சி விலகு.

flin'ders, *n. pl.* சிதறல்கள்.

fling, *n.* வீச்சு, எறி; சூதாட்ட எறிமுயற்சி, வெற்றிதோல்வித் தேர்வு முயற்சி ; சாட்டுரை, இகழுரை, ஏளன வசைச்சொல் ; சுடுசொல் ; பாய்ச்சல் ; திடீர்முழுக்கு; வெறித்த ஈடுபாடு, முழுநிறை இன்பத்தோய்வு ; *v.* எறி, வீசு ; சுண்டியெறி, வீசியெறி ; வேகமாகச்செலுத்து; எய்; வேட்டெறி ; திடுமென ஏட்டு ; திடுமெனப் பார்வை செலுத்து ; திடீரென அனுப்பு ; வெளியேறச்செய், படைப்பிரிவினைத் திடுமெனத் தாக்குத லுக்கு அனுப்பு ; திடுமெனச் சிறையில் தள்ளு ; மற்போரில் மண்மீது வீழ்த்து ; குதிரை வகையில் நிலமீது தூக்கியெறி ; உதைத்துத்தள்ளு ; சென்றுவிழும்படிசெய் ; அணைப்பு ஏற்கச் செய் ; முழுவேகத்துடன் ஈடுபடுவி, முழுநிறைவாக ஒப்படை; சொற்களைச் சென்று உறைக்கும்படிகூறு; வசைச் சொற்களை வீசு ; மணம் படர்வி; ஒளிகாலு; (தொ.) fling out, மனத்தி லுள்ளதை உணர்ச்சியோடு அப்படியே கொட்டு ; வசைமாரி வீசியெறி ; குதிரைவகையில் குதித்துக்குதித்து உதை ; பாய்ந்து செல், சீற்றத்துடன் செல் ; full fling, மிக்க விரை வாக, மடத்துணிச்சலுடன் ; have a fling at, ஏளனமாக இகழுரை கூறு.

flint, *n.* சக்கிமுக்கிக்கல்; கன்மத்தின் பாளம் ; நெகிழ்ந்து கொடுக்காத கடினப்பொருள் ; *a.* சக்கிமுக்கிக் கல்லினுல் செய்யப்பட்ட ; கடினமான ; (தொ.) set one's face like a flint, உறுதியாயிரு ; skin a flint, கஞ்சத்தனமாயிரு; wring water from a flint, தெய்விக அருஞ்செயல் செய்.

flint'-glass, *n.* முன்பு சக்கிமுக்கிக் கல்லினுற் செய்யப்பட்ட பளபளப்பான கண்ணாடிக்கலம்.

flint'-lock, *n.* சக்கிமுக்கியால் பொறியூட்டி இயக்கப்படத் தக்க துப்பாக்கி ; சக்கிமுக்கியால் பொறியூட்டி இயக்கிவிடத் தக்க துப்பாக்கி விசை.

flin'ty, *a.* சக்கிமுக்கிக்கல் கொண்ட ; சக்கிமுக்கிக்கல் நிரம்ப வுள்ள ; சக்கிமுக்கிக்கல் போன்ற ; கடினமான ; கொடிய, இரக்கமற்ற.

flip[1], *n.* சுளீரென்ற இலேசான அடி ; விரல் நொடி, தூண்டும் அடி ; சவுக்குச்சொடுக்கு; *v.* சுண்டிவிடு, விரலால் நொடித்து இயக்கு ; விரலால் மெல்லத்தட்டு ; இலேசாக அடி ; சுண்டிச் செலுத்து.

flip[2], *n.* பழுக்கக் காய்ந்த இரும்பால் சூடாக்கப்பட்ட இன் மதுவகை.

flip'-flap', flip'-flop', *n.* குட்டிக்கரண வகை ; வாணவெடி வகை ; வேடிக்கைகாட்டுமிடங்களில் சுழல் இராட்டினம் போன்ற அமைவு ; *adv.* அடிக்கடி தட்டிக்கொண்டு.

flipp'ancy, *n.* சளசளப்பு ; துடுக்குத்தனம் ; கவலையின்மை.

flipp'ant, *a.* வம்பளக்கிற ; கருத்து உறுதியற்ற, ஆழ்ந்த சிந்தனையற்ற, கவலையற்ற, பொறுப்பற்ற, முக்கியமான வற்றையும் இலேசாகக் கருதுகின்ற ; மட்டுமதிப்பற்ற.

flipp'er, *n.* ஆமை-கடற்பறவை வகைகளில் நீந்துதற்குப் பயன்படும் உறுப்பு.

flipp'erty-flopp'erty, *a.* தளர்த்தியான, தொங்குகிற.

flirt, *n.* திடீர்க்குலுக்கு; காதல் விளையாட்டாளர்; *v.* அதிர்ச்சி யூட்டு ; குலுக்கி இயக்கு ; விளையாட்டுக் காதல் புரி, சாகசஞ் செய்.

flirta'tion, *n.* பிலுக்குநடை; விளையாட்டுக் காதல்.

flirta'tious, *a.* குலுக்கிமினுக்கும் பாங்குள்ள; விளையாட்டுக் காதலில் ஈடுபடுகிற.

flirt'ish, *a.* குலுக்கிமினுக்கும் இயல்புள்ள, காதல்விளையாட்டுப் பான்மையுள்ள.

flit, *n.* இருப்பிடமாற்றம், புலம்பெயர்வு, இடப்பெயர்வு; *v.* புலம் பெயர், இடம்பெயர்; சென்றுவிடு, புறப்படு; நழுவு, விரைந்து செல் ; பறந்துதிரி, பறந்து சிறுதொலை செல்.

flitch, *n.* உப்பிட்டுப் பக்குவப்படுத்தப்பட்ட பன்றியின் விலா இறைச்சி ; திமிங்கிலக்கொழுப்பின் சதுரத்துண்டம் ; பெரிய மீன் வகையின் இறைச்சித் துண்டம் ; அடிமரத்திலிருந்து வெட்டப்பட்ட சீவல் கட்டை ; *v.* துண்டங்களாக வெட்டு; மரச் சீவல்களாகத் தறி.

flitt'er, *v.* இங்குமங்கும் விரைந்துசெல்; சிறகடி, சிறகடித்துத் திரி.

flitt'er-mouse, *n.* வௌவால்.

flix, *n.* மென்மயிர்த் தோல் வகைகள் ; நீர்நாயின் குறு மென் மயிர்.

float, *n.* மிதக்கும்நிலை, மிதப்பு ; மிதக்கும் வண்டல்தொகுதி ; மிதவைப்பாசிக் கூளம் ; தக்கையால் அல்லது இறகினுலான தூண்டில் மிதவை ; வலையின் மிதப்புக்கட்டை ; அலை ; மீனின் உடலி னுட்பட்ட காற்றுப்பை யுறுப்பு ; நீர்த்தொட்டியின் மிதவை அடைப்பு ; படுக்கையறை அடங்கொளி விளக்கு ; நாடக மேடையடிக்குரிய திரைவிளக்கு; மேடையடித் திரைவிளக்குத் தொகுதி; கொல்லறு, இழைப்புக்கரண்டி; மெருகூட்டுக்கருவி; நீராற்றல் இயந்திரத்தின் சக்கர அலகு ; தாழ்வான கட்டை வண்டி ; ஒற்றைத்துணித் தாளிணைப்புக் கோவை ; ஊடிழை யுடன் பின்னுது செல்லும் பாவிழைப்பகுதி ; *v.* மிதக்கவிடு ; மித ; மிதக்கச்செய் ; தரைதட்டிய கப்பலைப் போதிய ஆழத் தில் மிதக்கவிடு ; போதிய ஆழத்தில் மிதக்கும் நிலைபெறு ; மிதப்புக்கு ஆதாரமாயமை; மிதக்கவிட்டுச் செல்; மிதவைகளில் ஏற்றிச்செல் ; மிதந்துசெல் ; மிதப்பதுபோலத் தோற்றமளி ; தவழ், இழைந்தியங்கு ; காற்றில் மித; கண்முன் வட்டமிடு ; செய்தியை எங்கும் பரவச்செய் ; நோக்கமின்றித் திரி ; பாவிழையை ஊடிழையுடன் பின்னுமல் மேற்படிய விடு, மிதப்புத்துணியைப் பயன்படுத்து ; நீர்பெருக்கி அமிழ்வி ; மிதப்பாற்றலால் கூறுபிரி, மிதப்பாற்றலால் வகை வேறு படுத்து; வழவழப்பாக்கு; முதிர்விளைவு எதிர்நோக்கிப் பழக் கத்தில் ஊடாடு; நிறுவனத்துக்கு ஆதரவளித்து இயங்கவிடு, திட்டத்துக்கு ஆதரவளித்துத் தொடங்கிவை ; தொடங்கி வைக்கப்பெறு ; (தொ.) on the float, மிதந்துகொண்டு, மிதக்கும் நிலையில்.

float'able, *a.* மிதக்கத்தக்க; மிதவைகள் முதலியவை செல்லத் தக்க.

float'age, *n.* மிதத்தல் ; கப்பல் உடைந்து மூழ்கிய பிறகு கடலில் மிதக்கும் சரக்கு ; கடலில் மிதக்கும் சரக்கினைப் பயன் படுத்திக்கொள்ளும் உரிமை ; ஆற்றில் மிதந்து செல்லும் கப்பல்கள் முதலியன ; மிதக்கும் திரள் ; மிதப்பாற்றல் ; நீர்வரையின் மேலுள்ள கப்பல்பகுதி.

floata'tion, *n.* மிதக்கும் நிலை ; மிதக்கவிடுதல் ; வாணிக நிறுவனம் தொடங்கிவைத்தல்; (தொ.) centre of floatation, மிதக்கும் பிழம்பின் எடைமான மையம் ; line of floatation, மிதவைவரை ; plane of floatation, மிதவை வரைத்தளம்.

float'-board, *n.* நீராற்றல் இயந்திரத்தின் சக்கர அலகுகளில் ஒன்று.

float'er, *n.* மிதப்பவர் ; மிதக்கவிடுபவர் ; மிதப்பது ; பிணைய மாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்க மதிப்புக்குரிய பங்குச்சீட்டு வகை.

float'ing, *n.* மிதத்தல் ; மிதக்கவிடல் ; தொடங்கிவைத்தல் ; சுவரில் சாந்துப்பூச்சு ; *a.* மிதக்கிற வாணிகச்சரக்கு வகை யில் கடலிற் செல்கிற ; மாறும் இயல்புள்ள, நிலைத்திராத ; ஏற்றத்தாழ்வுடைய ; புழக்கத்திலுள்ள ; பரிமாற்றமுள்ள ; (தொ.) floating anchor, மிதந்துசெல்லும் நிலையில் கப்பலின் காற்றுவாட்ட வேகம் தடுக்கும் மிதவைச்சட்டம் ; floating

bridge, படகுப்பாலம்; floating dock, நீர்தேங்காக் கப்பல் துறையாகப் பயன்படுத்தக்கூடிய மிதக்கும் கட்டுக்கோப்பு; floating kidney, குண்டிக்காய்கள் நிலைபெயர்வுறும் கோளாறு; floating light, கலங்கரைவிளக்கமாகப் பயன்படும் கப்பல்; விளக்குடன் கூடிய கடல் மிதவை.

float'-stone, *n.* நீரில் சிறிதுநேரம் மிதக்கக்கூடிய தொளையுடைய கடற்பஞ்சுபோன்ற கல்வகை; கொத்தரின் இழைப்புக்கல்.

floccilla'tion, *n.* (மரு.) நோயாளி சன்னிவேகத்தில் படுக்கைத்துணிகளைப் பிரண்டுதல்.

flocci-nauci-nihili-pili-fica'tion, *n.* மதிப்பு வைக்காமல் இருத்தல்.

flocc'ose, *a.* (தாவ.) குஞ்சம்வாய்ந்த.

flocc'ule, *n.* கம்பளி மயிர்த்திரள்; சிறுதொகுதி.

flocc'ulence, *n.* சிறுமொத்தைகளாகத் திரண்ட நிலை, குஞ்சத்தொகுதி.

flocc'ulent, *a.* கம்பளிமயிர்க்குஞ்சங்கள் போன்ற; குஞ்சங்களாகவுள்ள; குஞ்சங்களாகத் தோற்றமளிக்கிற.

flocc'ulose, flocc'ulous, *a.* = flocculent.

flocc'ulus, (ல) *n.* கம்பளி மயிர்த்திரள் போன்ற சிறு பொருட்டொகுதி; (உள்) சிறுமூளையின் கீழ்ப்புறத்திலுள்ள சிறு அலகு; *pl.* ***flocc'uli.***

flocc'us, (ல) *n.* கம்பளி மயிர்த்திரள்; மெல்லிழைத்திரள்.

flock[1], *n.* மக்களின் கூட்டம்; ஓரின விலங்கின் திரள்; இணங்கி உண்ணும் பறவைத்திரள்; ஒருங்குசெல்லும் புட்குழாம்; ஆட்டுமந்தை; மாட்டுமந்தை; ஈட்டம், கணம்; கிறித்தவத்திருக்கூட்டம்; குழந்தைகள் கொண்ட குடும்பம்; மாணவர்குழாம்; *v.* கூடு, திரள்.

flock[2], *n.* மயிர்க்கற்றை; பஞ்சுக்குஞ்சம்.

flock'-bed, *n.* கம்பளி மயிர்க்கழிவு அல்லது கிழிந்த துணிகள் திணிக்கப்பெற்ற படுக்கை.

flock'-mas'ter, *n.* ஆட்டுப்பண்ணையாளர்.

flock'-pa'per, *n.* பசைதடவிக் கம்பளிமயிர்த்திரள் தூவப்பெற்றுள்ள சுவர்த்தாள்.

flocks, *n. pl.* சுவர்த்தாளுக்கான கம்பளித் துணிச்சிதைவுகள்; (வேதி.) பொருளின் தளர்த்தியான இலேசுப் படிகத்திரள்.

floe, *n.* மிதக்கும் பனிக்கட்டிப்பாளம்.

flog, *v.* பிரம்பினலடி; வளாறினல் வீசு; கசையடிகொடு; படிப்பை அடித்து ஏற்று; சாட்டையாலடித்து முடுக்கு; தூண்டிலை அடுத்தடுத்து வீசி மீன்தேடு.

flogg'ing, *n.* சாட்டையடி, சவுக்கடி, தல்லுதல்.

flong, *n.* பதிவுத் தகட்டினுல் அச்சடிப்பதற்குச் செப்பனிட்ட தாள்.

flood, *n.* வெள்ளப்பெருக்கு; ஆற்றுப்பெருக்கு; திடீரெனப் புரண்டோடிவரும் வெள்ளம்; நிலமீது பரவும் பெருவெள்ளம்; ஊழிவெள்ளம்; சோனமாரி; கண்ணீர்ப்பெருக்கு; கூட்டம், திரள்; *v* வெள்ளப்பெருக்கெடு; வெள்ளத்தில் மூழ்குவி; பெருவெள்ளமாக்கு; பாசன வளம் பரப்பு; மழைவகையில் ஆறு வழிந்தோடும்படி நிரப்பு; மலிவுபெறு பேரளவில் வந்து அடை; நிரம்பு, குவி; பிள்ளைப்பேற்றுக்குப்பிறகு குருதி பெருகி ஒழுகு; (தொ.) the Flood, Noah's Flood, விவிலிய நூலின்படி முன்னைய நோவா (Noah) காலத்திய ஊழிவெள்ளம்.

flood'-gate, *n.* நீர்பெருக்குவதற்குரிய அடிவாய் மதகு; நீர் வடிப்பதற்குரிய நெடுவாய் மதகு.

flood'-light, *n.* நிழல் விழாதபடி பல திசைகளிலிருந்து வீசப்படும் பேரொளிப்பெருக்கு; *v.* பலதிசைகளிலிருந்து பேரொளி வீசச்செய்.

flood'lighted, *a.* = floodlit.

flood'-lighting, *n.* பரப்பு விளக்கம்.

flood'lit, *a.* பேரொளி பாய்ச்சப்பெற்ற.

flood'mark, *n.* அலையெழுச்சி அல்லது வெள்ளம் உயர்ந்து எட்டிய அடையாளம், வெள்ள உச்சநீர் வரை.

flood'-tide, *n.* வேலி ஏற்றம், அலையெழுந்து முன்னேறும் கடல்வெள்ளம்.

flood'way, *n.* வெள்ளநீர் செல்வதற்கான செயற்கைவழி.

floor, *n.* தரை; அறையின் நிலத்தளம்; அடித்தளம்; கடலடி; குகையடி; மாமன்றத்தில் உறுப்பினர்கள் அமர்ந்து பேசுமிடம்; வீட்டில் ஒரே தளத்திலிருக்கிற அறைகளின் தொகுதி; வீட்டின் அல்லது கட்டிடத்தின் தள அடுக்குகளில் ஒன்று: சமதளமான பரப்பு; குறைவிலை எல்லைத்தளம்; *v.* தளமிடு, கல் பாவு; அடித்தளமாகப் பயன்படு; நிலத்தளத்தில் வீழ்த்து, விழும்படி மோதித்தள்ளு; குழப்பு, திகைக்கவை; பாடம் தெரியாததால் பள்ளிமாணவனை அமர்ந்துவிடும்படி சொல்; வெற்றியடை, வெல், அடக்கியாள்; (தொ.) first floor, வீட்டின் கீழ்த்தளத்துக்கு மேலுள்ள முதல் மாடித்தளம்; floor the paper, கேள்வித்தாளின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை கொடுத்துத்தீர்; ground floor, கீழ்த்தளம், நிலத்தளம்.

floor'-cloth, *n.* தரைவிரிப்பு.

floor'er, *n.* மோதிவீழ்த்தும் அடி; வெல்லும்சொல்; விடையிறுக்க இயலாத்தேர்வு வினு; மன உலைவுதரும் செய்தி.

floor'ing, *n.* தளமிடுதற்கான பலகை முதலிய மூலப்பொருள்; செய்தளம், மேடை.

floor'-show, *n.* மன்றங்களில் மேடையில் அன்றி நிலத்தளத்தின் மீதிலேயே இராப்போது காட்டப்படும் காட்சி.

floor'-tim'ber, *n.* கப்பலின் அடிக்கட்டைக்கு அடுத்துக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள கட்டை.

flop, *n.* தொப்பென்ற ஒலி; கடக்கு கடக்கென்ற அசைவு; தள்ளாடிச் செல்லுதல்; வீழ்ச்சி, தோல்வி, முறிவு; *v.* தொப்பென்று விழு; அசட்டையாகக் கீழே விட்டெறி; அலங்கோலமாகக் குந்தியிரு; தடுமாறி நட, அருவருப்பான முறையில் நுடங்கிநட; கடக்கு கடக்கென்று ஆடிச்செல்; *adv.* தொப்பென்று, கடக்கு கடக்கென்று, தள்ளாடித் தள்ளாடி; *int.* தொப்பெனுங் குறிப்பு.

flor'a, *n.* மரவடை, தினை அல்லது ஊழிக்குரிய செடிகளின் விளக்கப் பட்டியல்; *pl.* flor'ae, flor'as.

flor'al, *a.* மரவடை சார்ந்த; மலர்களுக்குரிய; (தொ.) floral zone, குறிப்பிட்ட மரவடைத் தொகுதிக்குரிய தினை, மரவடை மண்டலம்.

Flo'rentine, *n.* இத்தாலி நாட்டிலுள்ள பிளாரென்ஸ் (Florence) நகரில் வாழ்பவர்; சாய்வரிப்பட்டு வகை; *a.* பிளாரென்ஸ் நகரைச் சார்ந்த; (தொ.) Florentine iris, வெள்ளை அல்லது வெண்ணீல மலர்களையும் கிழங்கினையு முடைய செடியினம்.

flores'cence, *n.* மலர்ச்சி, முகை நெகிழ்ந்து மலராகும் நிலை; (தாவ.) மலர்ச்சிப்பருவம்.

flor'et, *n.* (தாவ.) கொத்துப்பூவின் கூரான சிறு மலர்; சிறு மலர்.

flor'iate, *v.* மலர் உருவரைகளால் ஒப்பனைசெய்.

flor'iculture, *n.* மலர்ச்செடி வளர்ப்பு.

flo'rid, *a.* பூவளமிக்க; பூவொத்த, பூவனப்புடைய; பகட்டொளி வண்ணம் வாய்ந்த; செக்கச்சிவந்த; மலர்களால் அணிசெய்யப்பட்ட; மலர்போன்ற உருவரை ஒப்பனை செய்யப்பெற்ற; கலை இசைத்துறைகளில் நயவளமார்ந்த; இலக்கியத்துறையில் அணிவளமிக்க.

Flo'rida, *n.* அமெரிக்க ஐக்கிய அரசுகளுள் ஒன்று; (தொ.) Florida water, நறுமண நீர்வகை; Florida wood, உள்ளீடாக இழைப்பதற்குப் பயன்படும் கட்டை வகை.

florif'erous, *a.* விதைகள் செடிகள் வகையில் மலர்களைத் தோற்றுவிக்கிற; மலர்வளத்துக்குரிய.

florile'gium, (ல.) *n.* இலக்கிய இன்சுவைப்பகுதித்திரட்டு; *pl.* ***florile'gia.***

flo'rin, *n.* முற்காலத்து ஐரோப்பிய பொன் அல்லது வெள்ளி நாணயவகை; (வர.) மூன்றும் எட்வர்டு (Edward III) காலத்திய ஆங்கில நாட்டுப் பொன் நாணய வகை; இரண்டு ஷில்லிங்கு பெறுமான தற்கால ஆங்கிலநாட்டு வெள்ளி நாணயவகை.

flor'ist, *n.* மலர்ப்பண்ணை வளர்ப்பவர்; பூ விற்பவர்; மலர் வகைகளை ஆயும் மாணவர்.

flor'uit, *n.* பிறந்தநாளும் இறந்தநாளும் சரியாகத் தெரியாத போது குறிப்பிடப்படும் வாழ்வுக்காலம்.

flor'y, *a.* = **fleury.**

flos'cular, **flos'culous**, *a.* சிறுமலர்களைக்கொண்ட; கொத்துமலர்களையுடைய.

flosh, **floss**, *n.* பட்டுப்பூச்சிக்கூட்டினைப் போர்த்துள்ள சொரசொரப்பான பட்டு; பட்டுச்செய்தாழிலின் கழிவுப்பொருள்; துன்னலிலும் பல்தூரிகையிலும் பயன்படுத்தப்பெறும் முறுக்குறு மென்பட்டிழை; பஞ்சுபோன்ற செடியினப்பொருள்; மரப்பஞ்சு, பஞ்சியல்துய்.

flota'tion, *n.* = **floatation.**

fo'rest, *n.* காடு; புதர்மரப் பரப்பு; இயற்கைப் பெருவளம்; இயல்பான பெருந்திரள்; மேய்ச்சற்காடு; வேட்டைக்காடு; (சட்.) காவற்காடு; *a.* காட்டுக்குரிய; *v.* காடாக்கு.

forestall', *v.* முன்னதாகச் செயலாற்று; முந்துற ஏற்பாடு செய்; முன்னுணர்ந்து தடு; உரிய காலத்துக்கு முன்னரே செய்து முடி; (வர.) உயர்வியலக்கால ஆதாயம் நாடிச் சரக்குகளை வாங்கிவைத்துச் சேமி.

fore'stay, *n.* முன்தலைப்பு வடம், பாய்மரத்தின் முற்பகுதியைத் தாங்குதற்காகத் தலைப்பிலிருந்து அடிவரை செல்லும் பாய்மரக் கயிறு.

fo'rester, *n.* காடு பாதுகாவலர்; வளர் மரங்களைக் கவனிப்பவர்; காடு வாழ்நர் சங்கம் என்ற முற்கால நிறுவன உறுப்பினர்; காட்டில் வாழ்பவர்; காட்டில் வாழ்வது; இங்கிலாந்திலுள்ள மட்டக்குதிரை; விட்டில் வகை.

fo'restry, *n.* காடுகளின் தொகுதி; காட்டு நிலம்; மரங்களுள்ள பரப்பு; காட்டியல், காடு வளர்க்கும் கலை.

fo'rest-tree, *n.* காட்டிற்கேற்ற பெரு வளர்ச்சியுள்ள மரம்.

fore'taste [1], *n.* முன்னுகர்வு; முன்னனுபவம்.

foretaste' [2], *v.* முன்பே சுவைத்துப்பார், முன்கூட்டி நுகர்ந்துணர்; நுகர்வை எதிர்நோக்கி மகிழ்.

foretell', *v.* வருவதுரை, முன்னறிந்து கூறு; முன்னறிவி, முன்னறிகுறி காட்டு; முன்னோடியாயிரு; முன்னோடு தூதராயமை.

fore'thought, *n.* முன்னறிவு, முன்னெண்ணம், முன்னுய்வு; முன்னேற்பாட்டுக்குரிய அக்கறை, சேமநலக் கவனம்.

fore'time, *n.* கடந்த காலம், முந்தைய நாட்கள்; பண்டைக் காலம்.

fore'token [1], *n.* முன்குறிப்பு, முன்னறிகுறி, முன் அடையாளம்.

foretok'en [2], *v.* முன் குறிப்பிடு; முன்னறிகுறி காட்டு.

fore'top, *n.* முன் பாய்மர உச்சி; முன் பாய்மர உச்சியிலுள்ள மேடை.

fore-top-gall'ant mast, *n.* பாய்மர உச்சியின்மேலுள்ள பாய்மரம்.

fore-topgall'ant-sail, *n.* கப்பல் பாய்மரத்தின் உச்சியிலுள்ள பாய்.

fore-top'-mast, *n.* முன்னணிப் பாய்மரத் தலைப்பிற் பொருத்தப்பட்ட பாய்மரம்.

fore-top'sail, *n.* கப்பலில் முன் பாய்மரத்தின் முக்கிய பாய்க்கு மேலுள்ள பாய்.

fore'type, *n.* வரப்போகும் பொருளின் முன் உருமாதிரி.

forev'er, *adv.* என்றென்றைக்கும், எல்லாக் காலத்துக்கும்.

forev'er-more', *adv.* இனிமேல் எப்போதும்.

forewarn', *v.* முன்கூட்டி எச்சரிக்கை செய்.

fore'woman, *n.* முறைகாண் அரிவையர் ஆயத் தலைவி; பணியாளர் மேற்பார்வை முதல்வி.

fore'word, *n.* முன்னுரை, புறவுரை; பாயிரம், ஆசிரியரல்லாத பிறரால் எழுதப்படும் தொடக்க உரை.

fore'yard, *n.* பாய்மரத்தின் மிகத்தாழ்ந்த பகுதி.

forf'eit, *n.* பறிமுதலான பொருள்; பறிமுதலானது; உரிமை பறிபோன பொருள்; தண்டவரி, ஒப்பந்தம் மீறியதற்கான தண்டம்; கடமை தவறியதற்காகச் செலுத்தப்படும் தண்டத் தொகை; ஆட்டக் கழகங்களில் விதி மீறுகைக்கான ஒறுப்புத் தொகை; ஆட்டவகையில் தண்டப்பணிகள் செய்து மீட்கப்பட வேண்டிய பறிமுதற் பொருள்; பறிமுதல்; *a.* பறிமுதலான; *v.* இழ; உரிமை இழக்கப்பெறு; தண்டவரி விதிக்கப்பெறு; தண்டத்தொகை செலுத்து; ஒறுப்புத்தொகை கொடு; விட்டுக்கொடு.

forfend', *v.* தவிர், விலக்கு; வேறுபக்கமாகத் திருப்பு.

forf'icate, *a.* (வில.) கத்திரிக்கோல் வடிவுள்ள.

forgath'er, *v.* கூடு; ஒன்றுசேர்; திரட்டு; உரையாடு; கூடிப்பேசு.

forgave', *v.* forgive என்பதன் இறந்தகாலம்.

forge [1], *n.* கொல்லுலை; கொல்லனின் துருத்திகளுள்ள உலைக்களம்; உலோகங்களை உருக்கி அடிக்கும் உலை; *v.* உலோகங்களைக் காய்ச்சி அடித்து உருவாக்கு; பொய்யாகக் கற்பனை செய்; போலியாக இட்டுக்கட்டு; கள்ளப் பத்திரமெழுது; மோசடியான போலிப் பொருள்கள் உண்டாக்கு.

forge [2], *v.* படிப்படியாக முன்னேறு; உழன்று முன்னேற்ற மடை; (தொ.) forge ahead, பந்தயத்தில் முதன்மையான இடம்பெறு; திடீரென்று புறப்படு.

for'gery, *n.* கள்ளப்பத்திரம் எழுதுதல்; போலிப் பத்திரம் உண்டாக்கல்; பத்திரத்தில் போலிக் கையெழுத்திடல்; போலி ஆவணம்; பொய்க் கையெழுத்து.

forget', *v.* மற; புறக்கணி; கவனக்குறைவால் தவறு; தவறுதலால் குறிப்பிடாமலிருந்து விடு; நினைவின்றிச் செயல் தவறு; உணர்விழ; மனத்தினின்று அகற்று; நினைக்காமலிரு; அவமதி; அசட்டை செய்; (தொ.) forget oneself, தன் நலங்களைப் புறக்கணி; தகாத முறையில் நட; நினைவிழ, உணர்விழ.

forget'ful, *a.* மறதியுடைய, மறக்கும் இயல்புடைய; கவனமற்ற, ஓராத.

forget'-me-not, *n.* மஞ்சள்நிற மையமுடைய நீல மலர்களை உடைய செடி வகை; (தொ.) forget-me-not blue, நீல வண்ண மலர்ச்செடி வகை.

forgiv'able, *a.* மன்னிக்கத்தக்க, மன்னிக்கப்படக்கூடிய.

forgive', *v.* பொறுத்தருள்; மன்னித்துவிடு; கடன் விட்டுக்கொடு; கடமை தவிர்த்தருள்; குறை கவனியாது விடு; பொறுக்கும் பண்புடையராயிரு.

forgive'ness, *n.* பிழை பொறுத்தல்; மன்னிப்பு, மன்னிக்கும் மனநிலை; கடன் விட்டுக்கொடுப்பு; குறை கவனியாது விட்டுவிடும் பண்பு.

forgiv'ing, *a.* பிழைபொறுக்கிற; உடனடியாக மன்னிக்கிற, எளிதில் மன்னித்துவிடும் இயல்புடைய; அருளிரக்கம் வாய்ந்த, இரக்கச் சிந்தையுள்ள.

forgo', *v.* துற, கைவிடு; விலக்கிவாழ், இல்லாமற் கழி; விட்டுவிலகு.

fork, *n.* கவைமுள்; கவைக்கோல்; கவடு, கவர்படு பிளவு; பிளவுபடும் இடம்; கவர், கிளை; மண்வாரி, மண்ணைத் தோண்டவும் வாரி எறியவும் பயன்படும் உழவர் கருவி; இசைச்சுரம் எழுப்பும் கோல்; கவைபடும் அம்புமுனை; முந்திரிக்கொடிக்குத் தாங்கலாகப் பயன்படுத்தப்படும் கவருடைய உதைகோல்; மிதிவண்டிச் சட்டத்தில் சக்கரம் இணைக்கப்படும் இடம்; சுரங்கத்தில் நீர்மம் படும் பள்ளத்தின் அடிப்பகுதி; கிளையிடை வளைவு; பாதைப் பிளவு; ஆற்றுப் பிரிவு; மின்வீச்சு; *v.* கவடுபடு; கவர்பட்டுக் கிளைவிடு; மண்வாரி எடுத்துக்கொண்டு செல்; கிளைவழித் திரும்பிச் செல்; கவட்டுக்கோல் கொண்டு இயக்கு; கவைமுள்கொண்டு குத்து; படுபள்ள நீர்வாங்கி வற்றவை; சதுரங்க ஆட்டத்தில் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களிலிருந்து நெருக்கு; (தொ.) tuning fork, தட்டினால் குறிப்பிட்ட இசையொலியெழுப்பும் எஃகு கவைக்கருவி.

forked, *a.* கவர்முள் வடிவுடைய; கவடுபட்ட; கவைத்த, பிளவுபட்ட; வேறுவேறுபட்டுச் செல்கிற; இரு கால்களுடைய.

forlorn', *a.* கைவிடப்பட்ட; துணையற்ற; நம்பிக்கையிழந்த; கையற்ற; இரங்கத்தக்க தோற்றமுடைய, துயரார்ந்த.

forlorn' hope, *n.* வேளைப்படை, துணிவுத்தாக்குதல் படை; அரைகுறை நம்பிக்கை.

form, *n.* உருவம்; வடிவம்; உருப்படிவம்; தோற்றம்; இனம் தெளியவராத ஆள் உருவம்; இனந்தெளியப்படா விலங்கு உரு; இனம் தெளியவராத் தோற்றம்; தோற்ற வகை; வகை வடிவம்; உருவகை; வகுப்பு, பள்ளிப்படிவம்; நீள் மணையிருக்கை; அமைப்பு; உடலமைப்பு; உறுப்பமைதி; முறை; முறைமை; உருவமைதி; ஒழுங்கு; மொழி நடை அமைதி; கலைவடிவமைப்பு; இலக்கியக் கட்டுக்கோப்பமைதி; வக்கணை, சொல்வகுப்புக் கட்டளை; விணைமுறை, சடங்கு; மாதிரிச்சட்டம்; முன்மாதிரி; அச்சுப் பதிப்புச் சட்டம்; மணியுருப்படிக நிரலின் திரள் தொகுதி; தகுதி நிலை; உடல் நன்னிலை; சொல்லின் புறவுரு; ஒலிவடிவம்; எழுத்துமுறை வடிவம்; வேற்றுமை வடிவம்; திரிபுவகை வடிவம்; அகப் படிவம், பொருள் பற்றிய கருத்துப்படிவம்; பொருண்மை, பொருளின் உள்ளார்ந்த இயல்பு; முயல் வளையின் கிடக்கைப் படிவு; *v.* குறிப்பிட்ட வடிவம் கொடு; வகுத்தமை, அமைப்பாக உருவாக்கு; திட்டமாக அமை, கட்டமை; நிறுவனஞ் செய்; கூட்டுக் கழகமாக அமை; சொல்லை ஒலியுருவப்படுத்து, சொல்லாக்கு; சொல் மூலத்திலிருந்து வருவி; வேற்றுமை வடிவம் கொள்வி; கருத்துருவாக்கு; கற்பனைசெய்; ஒப்பந்தம் வகு; பயிற்றுவித்து உருப்படுத்து; பண்புருவாக்கு; அணிவகு; உருவாகு; வடிவம் மேற்கொள்; அணிவகுப்பாக அமைவுறு; சொல்லாக உருப்படு; திட்டப் பொருளாகப் படிவுறு; படிக உரு ஆகு; செய்பொருள் ஆக்கு; மூலப்பொருளாய் உதவு; மூலப்பொருளின் கூறுய் அமை; செய்பொருள் முற்றுவிக்க உதவு; (தொ.) bad form, நடைமுறைக்கு இயையாத முரண்பாடான முறை; good form, நடைமுறைக்கு இயைந்த ஒழுங்குமுறை; in form, செயல் தகுதிக்குரிய நன்னிலையில்; out of form, செயல் தகுதிக்கு ஒவ்வாத நிலையில்.

form[2], *n.* = forme.

form'al, *a.* புற வடிவம் சார்ந்த; புற அமைதி சார்ந்த; புறப் பண்புகளுக்குரிய; இயல்துறைகளில் முறைமைச் சார்புடைய, பொருண்மைச்சார்பு இல்லாத; விதிமுறைக்குரிய; முறையான; ஒழுங்கு முறைக்குரிய; ஒழுங்குமுறை தவறாத; சரியான; பொருத்தமான; விணைமுறைச் சார்பான, சடங்கியல்பு வாய்ந்த; மரபொத்த; நாகரிக ஒழுங்குமுறை சார்ந்த, நடைமுறை ஆசாரமான; புற ஆசாரமான, சம்பிரதாயமான, உள்ளுணர்ச்சியற்ற; விதிமுறை பின்பற்றுகிற; விதிமுறை வகையில் மிகு கண்டிப்பான; நெகிழ்வற்ற, நெளிவிழைவற்ற; மரச்சட்டப்பண்புடைய; நடைவிறைப்பான.

form'alism, *n.* விணைமுறை வழாப் பண்பு; விணைமுறை மட்டுமீறி முனைப்பான சமயப்பண்பு; விதிமுறைக் கண்டிப்பு; நெளிவிழைவின்மை; முறைப்பான நடை; மரச்சட்டம் போன்ற பண்பு.

form'alist, *n.* விணைமுறையாளர், மட்டுமீறி விதிமுறைகளைப் பின்பற்றுபவர்; மரபுவழி வலியுறுத்துபவர்.

formal'ity, *n.* சட்ட விதிமுறை ஒழுங்கு; சம்பிரதாயம்; மரபொழுங்கு, ஆசாரம்; விணைமுறை, சடங்கு, நயநாகரிக முறை; புற ஆசாரத்தன்மை; மரச்சட்டம் போன்ற நடைமுறைப் பண்பு.

form'alize, *v.* சட்ட உருக்கொடு; விதிமுறைப்படுத்து; ஆசாரமாக்கு; வழுவிலா ஒழுங்கமைதி அளி; நெளிவு இழைவு அற்றதாக்கு.

format, (பிர.) *n.* புத்தகத்தின் வடிவமும் அளவும்.

form'ate[1], *n.* கரிசக்காடி உப்பு, எறும்பின் கசிவில் அடங்கிய காடியிலிருந்து எடுக்கப்படும் உப்புவகை.

form'ate[2], *v.* விமானங்கள் வகையில் போர்நிலைத் தொகுதியமைவாக உருவாகு.

forma'tion, *n.* உருவாக்குதல்; உருவாதல்; வகுத்தமைப்பு; செயலாக்கம், உற்பத்தி; ஆக்க அமைவு, உரு அமைவு; கட்டமைவு; உறுப்பொழுங்கமைவு; படை அணிவகுப்பு; அணிவகுப்பமைதி; போர்நிலை விமானத் தொகுதிநிலை அமைவு; (மண்.) பாறை அடுக்கமைவு; (தாவ.) செடியினக் குழு.

form'ative, *n.* உருவாக்கி வளர்க்க உதவும் கூறு; ஆக்கச் சொல்; *a.* உருவாக்கம் சார்ந்த; வளர்ச்சிக்குரிய; உரு வரையறை செய்கிற; உருவாக்க உதவுகிற; வளர்ச்சிக்கு உதவுகிற; உருவாகிற, உருப்பெற்று வளர்கிற; வளரத் தக்க; வளரும் பருவத்துக்குரிய; (இலக்.) சொல்லாக்கத்துக்குக் கூறுய் உதவுகிற, பகுதி சாராத.

forme, *n.* அச்சகப்பதிப்புப் படிவம், அச்சிடுவதற்காகத் தளைச் சட்டத்தில் முறையாக வைத்து இறுக்கப்பட்ட அச்சுருப் படிவம்.

form'er, *pron.* முந்தியது, இரண்டில் முதலாவதாகச் சொல்லப்பட்டது; *a.* சென்ற காலத்துக்குரிய; முந்திய காலம் சார்ந்த; முந்திய, இரண்டில் முன்கூறப்பட்ட.

form'erly, *adv.* முற்காலங்களில், முன்னாளில்.

form'ic, *a.* எறும்புகள் சார்ந்த; (தொ.) formic acid, கரிசக் காடி, எறும்புகளால் வெளிவிடப்பட்ட கசிவில் அடங்கிய காடிவகை.

formica'tion, *n.* தோலின்மேல் எறும்பு ஊர்வது போன்ற அரிப்புணர்ச்சி.

form'idable, *a.* அஞ்சவரு தோற்றமுடைய; கடுமிடல் வாய்ந்த, வல்லமைமிக்க; வெல்ல முடியாத; தடுக்க முடியாத; எதிர்த்து நிற்கமுடியாத.

form'less, *a.* உருவற்ற; திட்டமான வடிவமில்லாத; ஒழுங்கான தோற்றமற்ற.

form'ula, *n.* வாய்பாடு; சுருக்க விதிமுறை; விளக்க நூற்பா; கட்டளைச் சொல், வக்கணை வாசகம்; குறிப்புச்சொல்; நிஜைவுக் குறிப்பு; மருந்துமுறைப் பட்டியல்குறிப்பு; வகை முறைமை; சமயமரபு முறை; குருட்டு விதிமுறை; கொள்கை முறை வகுப்பு; (கண.) கட்டளை விதி; *pl.* form'ulae, form'ulas.

form'ulary, *n.* வாய்பாடுகளின் தொகுதி; மரபுமுறைகள் அடங்கிய சுவடி; விஜைமுறைக் கட்டளை ஏடு; *a.* வாய்பாடுகள் வடிவிலுள்ள; வாய்பாடுகள் சார்ந்த; விஜைமுறைகளுக்குரிய; விதிக்கப்பட்ட.

form'ulate, form'ulize, *v.* வாய்பாடு வடிவமாக்கு; வாய்பாடாகச் சொல்; முறைப்படுத்து, ஒழுங்குமுறையாக எடுத்துக்காட்டு.

fornica'tion, *n.* மணமாகா ஆண் பெண் கலவி.

fo'rrel, *n.* கணக்குச் சுவடிகளுக்கு உறைபோடுதற்கான தோல் போன்ற தாள்.

forsake', *v.* கைவிடு, துற, விட்டுவிடு; நீக்கு, விலக்கு; புறக்கணி; துணை மறுத்தொதுக்கு; உதவி மறு.

forsak'en [1], *a.* கைவிடப்பட்ட.

forsak'en [2], *v.* forsake என்பதன் முடிவெச்சம்.

forsook', *v.* forsake என்பதன் இறந்தகாலம்.

forsooth', *adv.* உண்மையாக, உண்மையைச் சொல்லப் போனால்; திண்ணமாக, ஐயமின்றி.

forswear', *v.* சூளிட்டுத் துற; ஆணையிட்டுக் கொள்கை கைவிடு; பொய் ஆணையிடு; (தொ.) forswear oneself, பொய் ஆணையிடு.

forswore', *v.* forswear என்பதன் இறந்தகாலம்.

forsworn' [1], *a.* பொய் ஆணையிட்ட.

forsworn [2], *v.* forswear என்பதன் முடிவெச்சம்.

forsyth'ia, *n.* முனைப்பான மஞ்சள் நிற மலர்களையுடைய அழகுச் செடிவகை.

fort, *n.* கோட்டை; அரண் காப்பிடம்; கோட்டையமைந்த முற்கால வாணிகத்தளம்; *v.* அரண்செய்.

fort'alice, *n.* (செய்.) சிறு கோட்டை; கோட்டைப்புற அரண் காப்பிடம்; படைத்துறை அரண்.

forte [1], *n.* வன்மைக்கூறு, ஆளின் தனிவன்மைச் சார்புடைய திறம்; வாளடி, வாளின் கைப்பிடியிலிருந்து நடுப்பகுதி வரையுள்ள பகுதி.

fort'e [2], (இத்.) *n.* (இசை.) உரத்த இசைப்பாடல்; *a.* உரத்த; *adv.* உரக்க; (தொ.) *forte forte*, மிக உரத்து.

forte pia'no, (இத்.) *n.* தொடக்கக்கால இசைப்பெட்டி; *a.* (இசை.) உரத்த ஓசையையடுத்த மெல்லோசையான; *adv.* (இசை.) எடுத்தும் படுத்தும்.

forth, *adv.* முன்; முன்னுல்; காலத்தில் முன்னுக்கி; புறத்தே; தொலைவாக; மிகுதியாக; (தொ.) and so forth, இவைபோலப் பிற.

forthcom'ing, *a.* வரவிருக்கிற, அணுகி வருகிற, அடுத்துள்ள; வேண்டும்போது கொணரக்கூடிய நிலையிலிருக்கிற.

forth'right [1], *n.* நேரான பாதை; *a.* நேராகச் செல்கிற; அஞ்சாமற் பேசுகிற; ஒளிவுமறைவின்றிப் பேசுகிற; சாயாத, உறுதியான; முடிவான; கைத்திறம் வாய்ந்த.

forthright' [2], *adv.* நேரே; உடனே; நேர்மையாக.

forthwith', *adv.* உடனே, காலந்தாழ்த்தாமல்.

for'ties, *n. pl.* 40-ஆம் ஆண்டுக்கும் 49-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பத்தாண்டுக் காலப் பகுதி; (தொ.) Hungry Forties, இங்கிலாந்து மக்களிடையே பெரு வறுமை நடமாடிய 1840-க்கும் 1849-க்கும் இடைப்பட்ட ஆண்டுக்காலம்; roaring forties, நிலவுலகத் தென் நேர்கோடு 40 பாகைக்குத் தெற்கே மேற்குப் புயற்காற்று வீசும் கடற்பகுதி; the Forties, ஸ்காத்லாந்து நாட்டின் வடகிழக்குக் கரைக்கும் நார்வே நாட்டுத் தென்மேற்குக்கரைக்கும் இடைப்பட்ட 40 பாகை ஆழத்துக்கு மேற்பட்ட கடற்பகுதி.

fort'ieth, *n.* நாற்பது சமகூறுகளில் ஒன்று; *a.* நாற்பதாவது; நாற்பது சமகூறுகளில் ஒன்றை ஒத்த.

fortifica'tion, *n.* அரணமைத்தல்; அரண்காப்புக்கலை; அரணமைப்பு ஆய்வுநூல்; வலுப்படுத்துதல்; வெறியம் சேர்த்து இன்தேறலுக்குச் செறிவூட்டுதல்.

fortifica'tions, *n. pl.* அலங்கம், காப்பரண் கட்டுமானங்கள்; மண்கோட்டை; அரண்காப்பு மதில்; காப்புக் கூட கோபுரம்.

fort'ify, *v.* கோட்டை கொத்தளங்கள் எழுப்பி வலுப்படுத்து; அரண்காப்புக்களால் நகரை வலிமைப்படுத்து; படையைக் காவலரண் செய்து வலுப்படுத்து; தற்காப்புச் செய்து முற்றுவி; கட்டுமானத்துக்கு வலுவூட்டு; உடலை வலிமைப்படுத்து; உரமூட்டு; மனத்துக்குத் திடமூட்டு; ஊக்கமூட்டு; ஊட்டச்சத்துக்களால் உணவை வளப்படுத்து, குடிவகைகளுக்கு வெறியச்சத்தூட்டி வீரியப்படுத்து; செய்தியை வலியுறுத்து; சான்று தெளிவுகள் வழங்கிப் பின்னும் உறுதிப்படுத்து.

fortiss'imo, (இத்.) *a.* (இசை.) உச்ச அளவில் உரத்த; *adv.* உச்ச அளவில் உரத்து.

fort'iter, (ல.) *adv.* உறுதியாக.

fort'itude, *n.* மனவுரம், உள வலிமை, இடுக்கணழியாமை.

fort'night, *n.* இரண்டு வார காலம், பதினுன்குநாளெல்லை.

fort'nightly, *a.* இரண்டுவாரங்களுக்கொருமுறை நிகழ்கிற; *adv.* இரண்டுவாரங்களுக்கொரு முறையாக.

fort'ress, *n.* படையரண், பெரும்படை வைத்திருத்தற்குரிய வலிய அரணமைந்த நகர்.

fortu'itism, *n.* இயன்மூலத் திட்டமின்மை வாதம், இயற்கை மாறுதல்கள் தற்செயலாகவோ இயல்பான காரண விளைவுகளாலோ நிகழ்வனவன்றி மூலத்திட்டத்தின் பயனுகவல்ல என்ற கோட்பாடு.

fortu'itist, *n.* இயன்மூலத் திட்ட மின்மை வாதி, இயற்கை மாறுதல்கள் தற்செயலாகவோ இயல்பான காரண விளைவுகளாலோ நிகழ்வனவன்றி மூலத்திட்டத்தின் பயனுகவல்ல என்ற கோட்பாடுடையவர்.

fortu'itous, *a.* தற்செயலான, எதிர்பாராமல் நிகழ்கிற.

fortu'ity, *n.* தற்செயல் நிகழ்வு; இடையுறுநிகழ்ச்சி; தானறியாது தோற்றும் பண்போவியம்; முயற்சியின்றி வெளிப்படும் பண்புடையுரு.

fort'unate, *a.* நல்வாய்ப்புடைய, நற்பேறுடைய, பாக்கியஞ் செய்த, செல்வ வளமுடைய; மங்கலமான, நன்னிமித்தமான; அனுகூலமான, நல்லாதரவான.

fort'unately, *adv.* நல்ல காலமாக; வெற்றியாக.

fort'une [1], *n.* ஆகூழ், தற்செயல் வாய்ப்பு; வருவளம், எதிர்கால நிலை; நல்வாய்ப்பு, நற்பேறு; வளம், செல்வவளம்; செல்வம்; சொத்து; (தொ.) make one's fortune, செல்வனுகு; marry a fortune, பெருஞ் சொத்துக்குரிய பெண்ணை மணந்துகொள்; spend a small fortune on it, பெருந்தொகை செலவுசெய்; tell fortunes, குறி சொல்லு.

Fort'une [2], *n.* ஆகூழ்; பாக்கிய தேவதை.

for'tune-hunter, *n.* செல்வமிக்க மணவியை நாடுபவர்.

for'tuneless, *a.* சொத்தில்லாத; பாக்கியங்கெட்ட.

for'tune-teller, *n.* குறி சொல்பவர், வருவதுரைப்போர்.

fort'y, *n.* நாற்பது; நாற்பது வயது; *a.* நாற்பது; (தொ.) forty winks, சாப்பாட்டிற்குப் பிறகு கொள்ளப்படும் சிறு துயில்; the Forty-five, 1745-ஆம் ஆண்டின் "ஜாக்கோபைட்" கிளர்ச்சி (Jacobite rebellion).

for'um, *n.* பண்டைய ரோமாபுரியின் பொது அங்காடி; பொதுவிடம்; நீதிமன்றம்; கருத்தரங்கு; சொற்போர் நடக்கும் பொதுவிடம்.

for'ward, *n.* பந்தாட்டங்களில் முன்வரிசை ஆட்டக்காரர்களில் ஒருவர்; *a.* முன்னேக்கிய; முந்திச் செல்கிற; முன்னேற்றம் வாய்ந்த; முன்னேற்றம் நாடிய; முற்போக்குடைய; முனைத்த கருத்துடைய; கப்பலின் முற்பகுதி சார்ந்த, முற்பகுதி அருகிலுள்ள; முந்தி வளர்கிற; முந்தி நிறைவுபெற இருக்கிற; காலத்தில் முந்துற்ற, முன்னதாக வந்துற்ற; செயல் முனைப்பான; செயலார்வமுடைய; ஆர்வத்துடிப்பான; துடுக்குத்தனமிக்க; முந்து முதிர்வுற்ற; பருவத்துக்கு மேற்பட்ட அறிவுடைய; வாணிகத்துறையில் வருங்கால விளைவை அடிப்படையாகக் கொண்ட; *v.* பேணி முன்னேற்றுவி, ஆதரவுகாட்டி வளர்; முன்னேற்றத்துக்குத் துணைசெய், வளர்ச்சியை ஊக்கு; கடிதம் முதலியவற்றை உரிய இடத்துக்கு அனுப்பிவை; சரக்குகளை அனுப்பு; *adv.* முன்னேக்கி; மேன்மேலும், தொடர்ந்து முன்னேறிக் கொண்டு; முன்னதாக, முன்கூட்டி; முன்னுக; தனி முனைப்பாக; வருங்காலத்தில், இனிமேலெல்லாம்; கப்பல் முன்பக்கத்தில்; முன்பக்கம் நோக்கி; முன்பகுதிக்கு; (தொ.) forward contract, வாணிகத்துறையில் இனிவரும் விளைச்சலை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தம்; from this time forward, இச்சமய முதலாக; look forward, தொலைதூரம் முன்னுக நோக்கு, எதிர்பார்த்திரு.

for'wards, *adv.* முன்னேக்கி.

forwent', *v.* forgo என்பதன் இறந்தகாலம்.

fosse, *n.* குழி, பள்ளம்; நீண்டு குறுகிய அகழ்வு; கால்வாய்; கோட்டை அகழி; (உள்.) குழி, குழிவு, பள்ளம்.

fossette', *n.* (உள்.) சிறு குழி, பள்ளம்.

foss'ick, *v.* கிளறித்தேடு, இங்குமங்கும் தேடு.

foss'il, *n.* (மண்.) புதைபடிவம், மரபற்றுப்போனவற்றின் பழஞ்சின்னம்; பழமைப்பட்டவர், காலத்துக்கு ஒவ்வாப் பழம் பாணியினர்; வழக்கிலில்லாப் பழம்பொருள்; *a.* புதைபடிவ நிலையிலுள்ள; பழமைப்பட்ட; காலத்துக்கு ஒவ்வாப் பழம் பாணியிலுள்ள; மேற்கொண்டு வளர்ச்சியடையுந் திறனற்ற.

fossilif'erous, *a.* புதைபடிவங்கள் கொண்ட.

foss'ilize, *v.* புதைபடிவமாக்கு; புதைபடிவமாகு.

fossor'ial, *a.* (வில.) வளைதோண்டுகிற; வளைதோண்டுதற்குப் பயன்படுத்தப்படுகிற.

fos'ter, *v.* அன்பாக வளர், ஊட்டிவளர், சீராட்டு, நெஞ்சில் அணைத்தாதரித்துப் பேணு; வளர்ச்சிக்குத் துணைசெய்; ஆதரித்து இடமளி; மனத்தில் வைத்துப்பேணு; சாதகமாயுதவு, அனுகூலமாயுதவு.

fos'terage, *n.* ஊட்டி வளர்த்தல்; செவிலித்தாயர்களை அமர்த்தும் வழக்காறு.

fos'ter-brother, *n.* வேறு பெற்றோர்களுக்குப் பிறந்து உடன் வளர்க்கப்பட்ட ஆண்குழந்தை.

fos'ter-child, *n.* வளர்ப்புக்குழந்தை.

fos'ter-father, *n.* வளர்ப்புத்தந்தை.

fos'terling, *n.* வளர்ப்புக்குழந்தை.

fos'ter-mother, *n.* செவிலித்தாய், வளர்ப்புத்தாய்; கோழிக் குஞ்சுகளை முட்டைபொரித்து வளர்ப்பதற்கான கருவி.

fos'ter-sister, *n.* வேறு பெற்றோர்களுக்குப் பிறந்து உடன் வளர்க்கப்பட்ட பெண்குழந்தை.

fougade', **fougasse'**, *n.* (படை.) கற்கள் செறிக்கப்பெற்றுள்ள சிறு சுரங்கவெடி.

fought, *v.* fight என்பதன் இறந்தகால முடிவெச்சவடிவம்.

foul, *n.* வெறுக்கத்தக்க செய்தி; தீமை; மோதல்; முறை தவறிய ஆட்டம்; *a.* அருவருக்கத்தக்க, புலன்களுக்கு வெறுப்புத்தருகிற; கடுவெறுப்பூட்டுகிற; உருக்குலைவான; முடை நாற்றம் வாய்ந்த; துப்புரவு கெட்ட; காற்று-நீர்ச் சூழல் வகையில் நச்சுப்பட்ட; அழுக்கடைந்த; கறைபடிந்த; சேரூர்ந்த; குப்பையடைந்த; வண்டலார்ந்த; கப்பலடி வகையில் சிப்பிகூளமடைந்த; அடைப்புண்ட; சிக்கலான; முடிச்சுவகையில் தாறுமாறான; புயலார்ந்த; மழைமலிந்த; ஓயாத்தூறலான; கேடார்ந்த; பாதகமான; மிகமோசமான; வெட்கக்கேடான; கீழ்த்தரமான; கீழ்த்தர உணர்ச்சி சார்ந்த; கொச்சையான; நேர்மைக்கேடான; ஆட்ட வகையில் முறை தவறான; மோதலான; பயனற்ற; அற்பமான; *v.* அழுக்காக்கு; மாசுபடு, கறைபடு; அடைப்புண்டு தடைப்படு; புகை வண்டிப்பாதைப் போக்குவரத்துத் தடைப்படு; நங்கூரத்தைக் கம்பிவடங்களிற் சிக்க வை; சிக்குறு; மோது; குற்றப்படுத்து; இகழ் உண்டுபண்ணு; புகழ் கெடு; *adv.* ஆட்ட வகையில் முறை தவறி; மேல் மோதலாக; நேர்மைக் கேடாக; நம்பிக்கைக்கேடாக; (தொ.) claim a foul, விதியை மீறியவர் தண்டனை அடைய வேண்டுமென்று வற்புறுத்து; fall foul of, சண்டை பிடி; தாக்கு; மோதிக்கொள்; play foul, முறை தவறி ஆடு; ஏமாற்று; through foul and fair, நன்மை தீமைகள் எல்லாவற்றிலும்.

foul'ard, *n.* நெகிழ்வுடைய மென்மையான பட்டுத்துணிவகை; பட்டுத்துணி வகையிலான கைக்குட்டை.

foule, (பிர.) *n.* பளபளப்பான மேற்பரப்புடைய மெல்லிய கம்பளி ஆடை.

foul'ly, *adv.* வெறுப்புண்டாக்கும் வகையில்; கொடுமையாக, இரக்கமின்றி; பொருந்தா அவமானத்தோடு.

foul'-mouthed, *a.* இழிசொற்களையே பேசும் வழக்கமுள்ள.

foul'ness, *n.* அழுக்குற்ற நிலை; அருவருப்பான பொருள்; வெறுப்புண்டாக்கும் கொடுமை.

foul'-play', *n.* முறைதவறான ஆட்டம்; வாய்மையற்ற செயல், வஞ்சனை; வன்செயல், கொலை.

foum'art, *n.* மரநாய் வகை.

found[1], *v.* find என்பதன் இறந்தகால முடிவெச்சவடிவம்.

found[2], *v.* கட்டிடம் முதலியவை வகையில் அடிப்படையிடு; நிறுவுதல் செய்; ஏற்படுத்து, நிறுவு, தோற்றுவி, தொடங்கிவை; கட்டு, அடிப்படைமீதமை; ஆதாரமாகக்கொள்.

found[3], *v.* உலோகம்-கண்ணாடி ஆகியவற்றை உருக்கி வார்த்தல் செய்; வார்ப்பு உருவஞ் செய்.

founda'tion, *n.* நிறுவுதல்; நிதியேற்பாட்டு நிறுவனம்; நிதியேற்பாட்டு நிறுவனத்தின் வருமானம்; கடைக்கால்; அடிப்படை, அஸ்திவாரம்; ஆதாரம்; அடித்தளம்; அடிப்படை அமைப்பு; மூலதத்துவம், அடிப்படைக் கோட்பாடு; பின்னல் வேலையில் பின்னணித் தையல்; (தொ.) foundation garment, பெண்டிர் அரையிறுக்க உள்ளாடை அணிகலன்.

founda'tioner, *n.* நிறுவனத்தின் நிதிகளிலிருந்து ஆதரிக்கப் பெறுபவர்.

founda'tion-mus'lin, **founda'tion-net**, *n.* உடுப்புகளையும் பெண்டிர் அணியுங் குல்லாய்களையும் விறைப்பாக்குவதற்காகப் பசையிட்டு ஒட்டவைத்த துணிவகைகள்.

founda'tion-school, *n.* நிதியேற்பாட்டுத் திட்ட உதவி மீதமைந்த பள்ளி.

founda'tion-stone, *n.* கடைக்கால், அடிக்கல்.

found'er[1], *n.* நிறுவுபவர், அமைப்பவர், தோற்றுவிப்பவர்; அறக்கொடை அளிப்பவர்.

foun'der[2], *n.* உருக்கி உருவாக்குபவர், வார்ப்புவேலை செய்பவர்.

foun'der[3], *n.* தகர்வு, மட்டுமீறிய வேலையினால் குதிரைக் காலில் காணும் விக்கம்; குதிரைகளின் மார்புத்தசைப்பற்றுக்களில் வாதநோவு; *v.* நிலவகையில் உள்ளிழு, கீழ்நெருங்துவிடு, அமர்ந்து அமிழ்ந்துவிடு; கட்டிட வகையில் இடிவுறு, தகர்வுறு; இடிந்துவிழு; குதிரைவகையில் வலுவிழந்து வீழ்; இடறு, கால் ஒடிந்து விழு; சேற்றில் அழுந்து; மிகு உழைப்பால் குதிரை களைப்புற்று விழச்செய்; கப்பல்வகையில் நீர் உட்கொண்டு அமிழ்வுறு; கப்பலை நீர் உட்கொண்டு அமிழும்படி செய்; குழிப்பந்தாட்டத்தில் பந்தை அடித்து நிலத்தினுள் செலுத்து.

found'ling, *n.* எடுப்புப் பிள்ளை, கேட்பாரற்றுக் கண்டெடுக்கப்பட்ட குழந்தை.

found'ry, *n.* வார்ப்புக்கலை; வார்ப்படக்களம், வார்ப்படச் சாலை.

fount[1], *n.* (செய்.) ஊற்று, மூலம், ஆதாரம்; விளக்கின் எண்ணெய்ச் சேமிப்பிடம்; ஊற்றுப்பேனாவின் மைகொள் பகுதி.

fount[2], *n.* அச்செழுத்துப்பந்தி, முகப்பிலும் அளவிலும் ஒரு சீரான அச்சுருப்படிவங்களின் தொகுதி.

foun'tain, *n.* நீர் ஊற்று; ஆறு முதலியவற்றின் மூலம்; பீறிட்டடிக்கும்படி செய்யும் நீர்த்தாரை, தாரை நீரூற்றுக்கான அழகிய கட்டுக்கோப்பு; பொதுக் குடிதண்ணீர் ஊற்று; விளக்கின் எண்ணெய்ச் சேமிப்பிடம்; அச்சகங்களில் மை வழங்கும் கொள்கலம்.

fount'ain-head, *n.* மூலாதாரம்; மூலத் தோற்றுவாய்; மூலத் தொடக்கம்.

fount'ain-pen, *n.* ஊற்றுப்பேனா.

four, *n.* நான்கு; நான்கு என்னும் இலக்கம்; நால்வர்; நான்கு பொருள்கள்கொண்ட தொகுதி; ஆட்டம் முதலியவைகளில் நான்குகொண்ட கெலிப்புப் புள்ளிகள்; நான்கு துடுப்புள்ள படகு; நீள் உருளைகள் நான்குள்ள இயந்திரம்; நான்கு உருளைகளையுடைய விசைவண்டி; 'நான்கு' என்னும் குறி அளவுள்ள மிதியடி; குறி அளவு நான்காகவுள்ள பொருள்; நான்கு புள்ளிகளையுடைய அட்டை; நாலுகெலிப்புப் புள்ளித் தொகுதி; நண்பகல் அல்லது நள்ளிரவுக்குப் பின்னர் நான்காவது மணி; *a.* நான்கு என்னும் எண்ணுக்குரிய; (தொ.) •four-stroke cycle, உள்வெப்பாலை வகையில் நான்கு முழுச் செயற்பாடுகளுள்ள வட்டம்; the Four Freedoms, *1941*-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவர் ரூஸ்வெல்ட் (Roosevelt) வகுத்த பேச்சுரிமை - வழிபாட்டுரிமை - வறுமை காப் புரிமை - அச்சக்காப்புரிமை ஆகிய நான்கு உரிமைகள்; the four hundred, திணை நிலத்தின் தனித்தொதுங்கி வாழும் சமுதாயப் பகுதி; the four seas, பிரிட்டனைச் சுற்றியுள்ள கடல்கள்.

four'-ball, *n.* குழிப்பந்தாட்ட வகையில் நான்கு பந்துகளை வைத்துக்கொண்டு இருவருக்கெதிராக இருவர் ஆடும் ஆட்ட வகை.

four'-eyes, *n. sing.* நீரிலிருக்கும்போதும் நீருக்கு வெளியிலிருக்கும்போதும் பார்ப்பதற்காக இரண்டு பிரிவுகளாயுள்ள கண்களையுடைய மீன்வகை.

four'-figure, *n.* 1,000 முதல் 9999 வரையுள்ள எண்களில் ஒன்று.

four'-flush', *n.* சீட்டாட்ட வகையில் ஒரே இனத்தைச்சேர்ந்த நான்கு சீட்டுக்களைப் பெற்றிருக்கும் ஆட்டக்காரர்; *a.* ஏய்ப்பான, உண்மையல்லாத; *v.* சீட்டாட்டவகையில் ஏமாற்று.

four'-fold, *a.* நான்காக மடிக்கப்பட்ட; நான்கு மடங்கான; *adv.* நான்கு பிரிவுகளாக.

four'-foot, *a.* அளந்தால் நான்கடியுள்ள; (தொ.) four-foot way, இருப்பூர்திகளில் கம்பிகளுக்கிடையில் 4 அடி 8½ அங்குல அகலம் உள்ள பாதை.

four'-foot'ed, *a.* நான்கு கால்களுள்ள.

four'-hand'ed, *a.* சீட்டாட்ட வகையில் நான்கு ஆட்டக்காரர்களால் ஆடப்படுகிற; குரங்குகள் வகையில் நான்கு கைகளுள்ள.

four'-horse, four'-horsed, *a.* நான்கு குதிரைகளால் இழுக்கப்படுகிற.

four'-in-hand, *n.* ஒரே வலவனால் செலுத்தப்படும் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டி; ஒரே வலவன் செலுத்தும் நாற்கால் வண்டிக் குதிரைகள்; அசைந்தாடுமாறு கட்டப்படும் கழுத்துப்பட்டை; *a.* நான்கு குதிரைகள் பூட்டிய; *adv.* நான்கு குதிரைகள் பூட்டிக்கொண்டு.

four'-leaved, *a.* நான்கு சிற்றிலை உறுப்புக்களையுடைய.

four'-oar, *n.* நான்கு துடுப்புக்களைக்கொண்டு செலுத்தப்படும் படகு.

four'-o' clock, *n.* அந்திமந்தாரை, பிற்பகலில் பூக்கும் மலர்ச் செடிவகை.

four'-part, four-part'ed, *a.* நான்கு பாகங்களுடைய; இசைத்துறையில் நால்வர் பாடுவதற்கென அமைக்கப்பட்ட.

four'pence, *n.* நான்கு பென்னி (penny) களின் விலை மதிப்பு.

four'penny, *n.* நான்கு பென்னி மதிப்புடைய பழைய வெள்ளி நாணயம்.

four'-post, *a.* கட்டில் வகையில் நான்கு திரைக்கம்பங்களையுடைய.

four'-post'er, *n.* நான்கு திரைக்கம்பங்களையுடைய பெரிய கட்டில்; நான்கு பாய்மரங்களையுடைய கப்பல்.

four'-pound'er, *n.* நான்கு கல் எடையுள்ள குண்டெறியும் பீரங்கி; நான்கு கல் எடையுள்ள அப்பம்.

fours, *n. pl.* படைத்துறையில் நான்கு வரிசைகொண்ட அணிவகுப்பு; நான்கு மணிக்குக் கொள்ளப்படும் சிற்றுண்டி; நான்கு முனைக்கோடிகள்; நான்கு துடுப்புடைய படகின் பந்தயம்; (தொ.) on all fours, கைகள்-முழங்கால்கள் கொண்டு தவழ்கிற; முற்றும் ஒத்திருக்கிற, முழுவதும் ஒப்பிடத்தகுந்த.

four'score, *n.* எண்பது; *a.* எண்பது வயதான.

four'some, *n.* நால்வர்கொண்ட தொகுதி; பக்கத்துக்கு இருவராக நால்வர் ஈடுபடும் குழிப்பந்தாட்டம்; *a.* நான்கு கொண்ட; நால்வர் பங்குபெறவேண்டிய.

four'square', *a.* சதுரவடிவுள்ள; திண்ணமாகவும் உறுதியாகவும் நிலைபெற்ற.

fourteen', *n.* பதினான்கு; *a.* பதினான்கான.

fourteen'er, *n.* பதினான்கு அசைகளுள்ள செய்யுள் வரி.

fourteenth', *n.* பதினான்கிலொன்று; *a.* பதினான்காவதான; பதினான்கு சம பாகங்களில் ஒன்றுக்குச் சமமான.

fourth, *n.* கால், நான்கு சம பாகங்களில் ஒன்று; மாதத்தின் நான்காம் நாள்; *a.* நான்காவதான; நான்கு சம கூறுகளில் ஒன்றுக்குச் சமமான; (தொ.) Fourth Estate, பத்திரிகைத் துறை, பத்திரிகை உலகம்.

fourth'ly, *adv.* நான்காவதாக; நான்காமிடத்தில்.

fourths, *n. pl.* நான்காந்தரப் பொருள்கள்.

four'-wheel'er, *n.* நான்கு சக்கர வண்டி.

fowl, *n.* கோழி; கோழிக்கறி; பறவை; *v.* காட்டுக்கோழியை வேட்டையாடு; காட்டுக்கோழிமீது வேட்டிடு; காட்டுக் கோழியைக் கண்ணியிற்படுத்து; காட்டுக்கோழியைப்பிடி.

fowl'er, *n.* காட்டுக்கோழி பிடிப்பவர்.

fowl'ing-net, *n.* பறவைகளைப் பிடிப்பதற்கான வலை.

fowl'ing-piece, *n.* காட்டுக்கோழி வேட்டையில் பயன்படுத்தப்படும் துப்பாக்கி வகை.

fox, *n.* நரி; சூழ்ச்சிக்காரன், கபடி; வடக்கு விண்மீன் குழுவினுள் ஒன்று; *v.* தந்திரமாகச் செயலாற்று, கபடம் பண்ணு, ஏமாற்று; சுவடிப்பக்கங்கள் முதலியவற்றில் சாம்பல் நிறப் புள்ளிகளிட்டு நிறத்தோற்றமாற்று; (தொ.) fox and geese, பலகையின்மேல் காய்கள் வைத்து ஆடும் ஆட்டவகை.

fox'-brush, *n.* நரியின் வால்.

fox'-earth, *n.* நரி வளை.

foxed, *a.* சுவடிகள் வகையில் உருவழிந்த, புள்ளிகள் விழுந்த; மதுமயக்கமுள்ள.

fox'glove, *n.* கையுறை போன்ற நீண்ட ஊதா அல்லது வெண்ணிற மலர்களையுடைய செடி வகை.

fox'hole, *n.* (படை.) வேட்டுக்களிடுவதற்கோ வேட்டுக்களிலிருந்து தப்புவதற்கோ மறைவாகப் பயன்படுத்தப்படும் குழி.

fox'hound, *n.* நரிகளைத் துரத்திப் பிடிப்பதற்குப் பயன்படும் வேட்டைநாய் வகை.

fox'-hunt, *n.* நரிவேட்டை; *v.* நரிவேட்டையாடு.

fox'iness, *n.* தந்திரம்; சீரழிவு; உறைப்பான புளிப்புச் சுவை; சுவடிகளில் புள்ளி விழுந்தநிலை.

fox'ing, *n.* கபடியின் செயல்.

fox'tail, *n.* நரியின் வால்; நரிவால் போன்ற நுனிப்பகுதி யுடைய புல் வகை.

fox'terrier, *n.* நரிகளை வளைகளிலிருந்து வெளிப்படுத்து வதற்குப் பயிற்றுவிக்கப்படும் அகழ் நாய்வகை; வளர்ப்பு நாய்வகை.

fox'trot, *n.* குதிரையின் குறுநடைக்கதி; அமெரிக்க ஆட்ல் வகை.

fox'y, *a.* நரிபோன்ற; நரிகளுக்குரிய; தந்திரமான; செம் பழுப்பு நிறமான; பூஞ்சணம் முதலியவற்றுல் சேதப்படுத்தப் பட்ட.

foyer, (பிர.) *n.* நாடக அரங்குகளில் இடைவேளையில் அவை யினர் பயன்படுத்துவதற்கான பெரிய அறை.

Fra', *n.* துறவியின் பெயருக்குமுன் இடப்படும் பட்டம்.

frac'as, *n.* அமளி, சண்டை, சந்தடி, குழப்பம், கலகம்; *pl.* frac'as.

frac'tion, *n.* கீழ்வாய் எண், பின்னம்; கூறு, பகுதி; சிறு துண்டு, சிறிதளவு; சிறுசில்லு; இயேசுநாதரின் அப்பப் பகிர்வுத் திருநிகழ்ச்சி; வடித்தல்மூலமாகப் பிரிக்கப்பட்ட கூறு; (தொ.) decimal fraction, பதின்மானக் கீழ்வாய், தசாம்சப் பின்னம்; improper fraction, தகாப்பின்னம்; proper fraction, தகு பின்னம்; vulgar fraction, பொது நிலைப்பின்னம், மேல் கீழ்க் கூறுகள் கொண்ட கீழ்வாய்.

frac'tional, *a.* பின்னத்துக்குரிய; பின்னத்தின் இயல்பு வாய்ந்த; (தொ.) fractional distillation, வடித்துப் பிரித்தல், படிப்படியாகச் சூடேற்றுவதுமூலமாக வெவ்வேறு கொதி நிலைகளையுடைய நீர்மங்களைப் பிரித்தல்.

frac'tionary, *a.* பின்னத்தின் இயல்புவாய்ந்த; துண்டுப் பகுதியான.

frac'tionate, *v.* வாலைவடித்தல் முதலிய முறைகளினுல் சேர் மானத்தை வெவ்வேறு இயல்புகளுள்ள கூறுகளாகப் பிரி.

frac'tionize, *v.* பின்னங்களாகப் பிரி; கூறுகளாகப் பிரி.

frac'tious, *a.* சண்டைக்கு ஆயத்தமாயிருக்கிற; சிடுசிடுக்கிற, வெடுவெடுப்பான; அடங்காத, கலசலான.

frac'ture, *n.* உடைவு, முறிவு; எலும்புமுறிவு; கனிப் பொருளின் உடைந்த விளிம்புப்பகுதி; அடுத்துவரும் மெய் யெழுத்தினுல் பாதிக்கப்பட்டு உயிரெழுத்துக்குப் பதிலாக இணையுயிர் அமைதல்; (ஒலி.) உயிரெழுத்துக்குப் பதிலாக அமையும் இணையுயிர்; *v.* முறிவு உண்டாக்கு; தொடர்ச்சி யினைக்கெடு; பிள, வெடிப்புறு; (தொ.) compound fracture, தாறுமாருன எலும்புமுறிவு; தோல்-சதைகளில் எலும்பின் கூறுகள் சென்று சிக்கும் எலும்பு முறிவு; simple fracture, வெறு முறிவு, பொதுநிலை முறிவு, தோல் கிழிபடாமல் எலும்பு முறிதல்.

fraen'um, *n.* (உள்., வில.) உறுப்பின் இயக்கத்தைத் தடுக்கும் சிறு நரம்பு; *pl.* fraen'a.

fra'gile, *a.* எளிதில் முறிகிற; எளிதில் உடைகிற; அழியத் தக்க; வலுவற்ற; வலுக்கேடான கட்டமைப்புடைய.

fragil'ity, *n.* எளிதில் உடையும் நிலை; வலுவற்ற இயல்பு.

frag'ment, *n.* முறிந்த துண்டு; பிரிந்துவந்துவிட்ட துணுக்கு; முழுமையற்ற கூறு; மீந்த பகுதி, எச்சக்கூறு; முடியாத பகுதி, அரைகுறையாக விடப்பட்ட பகுதி.

fragment'al, *a.* பழம் பாறையின் துணுக்குகள் கொண்ட; துண்டுகளாயுள்ள.

frag'mentary, *a.* துண்டுத்துணுக்குகள் கொண்ட; முறிந்து போன, உடைந்த.

fragmenta'tion, *n.* சிறு கூறுகளாகப் பிரித்தல்; கூறு பாடு; உயிரணுக் கூறுபாட்டுக்குரிய படிவளர்ச்சிகளில்லா மலே பிரிவுறுதல்; (தொ.) fragmentation bomb, வெடிக்கும் போது சிறு துணுக்குகளாக உடைந்து சிதறும் வெடிகுண்டு.

fragment'ed, *a.* = fragmentary.

fra'grance, **fra'grancy**, *n.* நறுமணம்; இனிமைத்திறம்.

frag'rant, *a.* நறுமணமுள்ள.

frail[1], *n.* அத்திப்பழம்-உலர்ந்த கொடிமுந்திரிப்பழம் முதலிய வற்றைச் சிப்பங் கட்டுவதற்குரிய நாணற்புல்லினுல் செய்யப் பட்ட கூடை; நாணற் புல்.

frail[2], *a.* எளிதில் உடைகிற, நொய்தான; நிலையற்ற, நிலை யாத் தன்மையுடைய; நலிந்த; உடல்நலிவுடைய; ஒழுக்க உறுதியற்ற; அவாமருட்சி அடக்கும் ஆற்றலில்லாத; பெண் கள் வகையில் கற்பொழுக்கமற்ற.

frail'ness, **frail'ty**, *n.* தவறிழைக்கும் பாங்கு; அவாமருட் சிக்குட்படுமியல்பு; குறைபாடு, இழுக்கம்; வலுவின்மை, நொய்ம்மை, நலிவு.

fraise[1], *n.* கோட்டையமைப்பு வகையில் மதிலின் பிதுக்கத் தைச் சுற்றியுள்ள கிடையான கம்பிவேலி; *v.* மதிற்பிதுக்கஞ் சுற்றிக் கம்பிவேலியிட்டு அடை.

fraise[2], *n.* வட்டத்தொளையைப் பெரிதாக்குவதற்கான கருவி; கடிகாரச் சக்கரங்களில் பற்கள் வெட்டுவதற்கான கருவி; 16-ஆம் நூற்றாண்டைய கழுத்தணி வகை.

framboes'ia, *n.* நீகிரோவர்கள் இனத்திடையே நிகழும் தோல்சார்ந்த தொற்றுக் கொள்ளைநோய் வகை.

frame, *n.* கட்டுமானம்; அமைப்பு, கட்டமைதி; நிலவர ஒழுங்குமுறைச் சட்டம்; அடிப்படைத் திட்டம்; முறைமை; மனத்தின் தற்கால நிலை; கட்டமைந்த உரு; உடலமைப்பு; உறுப்பிணைவமைதி; என்புச்சட்டம், இணைவரிக்கூடு; கட்டிட உருவரைச்சட்டம்; உள்ளுறைச் சட்டம், அடிப்படைச்சட்டம்; ஆதார அடிப்படை; புறவரிச்சட்டம்; சித்திரவேலைத் துணை வரிச்சட்டம்; துன்னல் வேலைப் பொறிச்சட்டம்; செயற்கைத் தேன்கூட்டுச் சட்டம்; தோட்டச் செடிகளின் குளிர்காப்புப் பெட்டிச் சட்டம்; சுரங்க மூலப்பொருளை அலம்புவதற் குரிய சாய்வுப்பலகை; ஆட்டவகை; ஆட்டக் காய்களின் முக்கோண வடிவ அடுக்குச் சட்டம்; அடுக்கிலுள்ள காய்கள் தொகுதி; திரைத்தகட்டு ஒற்றைத்தனிப்படம்; தொலைக் காட்சியில் ஒரே உருப்படிவத்துக்குரிய வரைத்தொகுதி; *v.* உருவாக்கு; வடிவம்கொடு; இணை; திட்டமிடு; இசைவி; பொருத்து; இணைத்தமை, வகுத்தமை; கலந்து உருவாக்கு; திட்டமிட்டு இயற்று; ஒலி உருப்படுத்து; இயக்கு; நடத்து; சட்டமிடு, சட்டத்தில் அமை; சட்டத்துக்கு உட்படுத்தி அமை; பொறிச்சட்டத்தில் மாட்டுவி; வழிவகுத்துச்செல்; நாடிச்செல்; இடம்பெயர்வுறு; முன்னேற்றத்துக்குரிய குறி காட்டு; சூழ்ந்துருவாக்கு, திறங்கொண்டியற்று; புனைந்துரு வாக்கு, பாவனைசெய்; (தொ.) frame aerial, திசையேற்புக் கெனக் கட்டக் கம்பி அமைவுகளுடைய வானலைவாங்கி; frame up, புனைந்து உருவாக்கு.

frame'-house, *n.* பலகைகளிட்டு அடைக்கத்தக்க மரச் சட்டங்களால் அமைந்த வீடு.

frame'-maker, *n.* படச்சட்டங்கள் செய்பவர்.

fram'er, *n.* உருவாக்குபவர்; கட்டுபவர்; படங்கள் முதலிய வற்றிற்குச் சட்டம் போடுபவர்.

frame'work, *n.* பணிச்சட்டம், வரைச்சட்டம்.

fram'ing, *n.* கட்டுதல், நிர்மாணித்தல், அமைத்தல்; சட்டம், கட்டமைப்பு.

franc, *n.* பிரஞ்சு நாணயச் செலாவணியில் அலகு நாணயம்; 1914–18-ஆம் ஆண்டுகளின் போருக்குமுன் ஏறத்தாழ 9½ பென்னி மதிப்புள்ள வெள்ளி நாணயம்; பெல்ஜியம்-ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்குரிய நாணயம்.

fran'chise, *n.* வாக்குரிமை; வாக்களிக்கும் தகுதி; குடிமை உரிமை; உரிமைக்குழுமத்தின் முழு உறுப்பினர் உரிமை; விலக்குரிமை; தனியுரிமை.

Francis'can, *n.* தூய திரு. பிரான்சிஸ் (St. Francis of Assisi) என்பவரால் 1209-இல் நிறுவப்பட்ட நிறுவனத்தைச் சேர்ந்த துறவி; *a.* தூய திரு. பிரான்சிஸின் துறவு மடத்தைச் சேர்ந்த; தூய திரு. பிரான்சிஸின் மடத்துத் துறவிகள் சார்ந்த.

Franc'o-Ger'man, *n.* பிரான்சு நாட்டுக்கும் செர்மனி நாட்டுக்கும் உரியவர்; *a.* பிரான்சுக்கும் செர்மனிக்கும் உரிய.

franc'olin, *n.* வான்கோழி போன்ற கவுதாரி வகை.

franc'omania, *n.* பிரஞ்சு ஒழுகலாறுகளிற் பேராவல்.

franc'ophil, franc'ophile, *n.* பிரான்சின் நண்பர்.

franc'ophobe, *n.* பிரான்சையும் பிரஞ்சுத் தொடர்பான வற்றையும் வெறுப்பவர் அல்லது அஞ்சுபவர்.

franc tireur, (பிர.) *n.* நிலைமுறையற்ற காலாட்படைவீரர், குரங்குப்போர் முறையில் போரிடுபவர்; *pl. francs tireurs.*

fran'gible, *a.* எளிதில் உடைந்துவிடுகிற.

fran'gipane, fran'gipani, *n.* சிவப்பு மல்லிகை வகை; சிவப்பு மல்லிகை வகையிலிருந்து பெறப்படும் நறுமணப் பொருள்; வாதுமை கலந்த பாலேடுவகை; வாதுமை கலந்த களி வகை.

Frank[1], *n.* கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டை வென்று பரவிய செர்மானிய இனக் குழுவினருள் ஒருவர்; செர்மனியில் பிராங்கோனியா (Franconia) என்ற பகுதியிலுள்ள இனக்கூட்டிணைப்புக் குழுவினருள் ஒருவர்; கீழ்த் திசை வழக்கில் பறங்கியர், மேலை ஐரோப்பியர்.

frank[2], *n.* கடிதத்தைச் செலவின்றி அனுப்பும் உரிமை உடையவரது கையெழுத்து; கட்டணமின்றிக் கடிதம் அனுப்பும் உரிமை உடையவரது கையெழுத்துத் தாங்கிய உறை; *v.* கட்டணமின்றி அனுப்பும் உரிமையின்படி கடிதமீது கையெழுத்திடு; கடிதத்தைக் கட்டணமின்றி அனுப்பு; கட்டணமின்றி ஊர்தியில் இட்டுச்செல்; மேலே கட்டணம் செலுத்தும் கடமையிலிருந்து விடுவி; தங்குதடையற்ற சமுதாய ஊடாட்ட உரிமை வழங்கு; தாராளமாகப் போகவர வாய்ப்பு வழங்கு.

frank[3], *a.* நேர்மையான, கபடற்ற, ஒளிவு மறைவில்லாத; அஞ்சாமற் பேசுகிற; மனம் விட்டுத் தெரிவிக்கிற; வெளிப்படையான.

Frank'enstein, *n.* தான் படைத்த பொருளால் தனக்கே தொல்லையும் அழிவும் தேடிக்கொள்பவர்; (தொ.) Frankenstein's monster, ஆக்கியவர்க்கே அழிவுதரும் ஒன்று.

Frank'fort black, *n.* செப்புத்தகட்டுச் செதுக்கு வேலையில் பயன்படுத்தப்படும் நேர்த்தியான கறுப்பு நிற மை.

frank'furt, frank'furter, *n.* செர்மனியில் முனைத்த காரச் சுவையூட்டப்பட்ட இறைச்சி உணவுவகை.

frank'incense, *n.* சாம்பிராணி, குங்கிலியம்.

frank'lin, *n.* சிறு நிலக்கிழார்; 14, 15-ஆம் நூற்றாண்டுகளிற் பண்ணை நிலைக்குட்படாத சிறு தனி உரிமையாளர்.

frank'-pledge, *n.* முற்கால வரிக்கடமையில் பத்துக் குடும்பக் குழுவினர்கள் ஏற்றிருந்த கூட்டுப்பொறுப்பு.

fran'tic, *a.* மூர்க்க வெறிகொண்ட; சினங்கொண்டு தன்னை மறந்த; வெறி பிடித்த; துயராற் கொதித்தெழுந்த; கட்டு மீறிய.

frap, *v.* (கப்.) இறுக்கிக்கட்டு.

frappe, (பிர.) *a.* இன்தேறல் வகையில் பனிக்கட்டியினுல் குளிரவைக்கப்பட்ட.

frass, *n.* முட்டைப்புழுக்களின் எச்சம்; துளைக்கும் பூச்சியினங்களின் எச்சம்.

frat'e, (இத்.) *n.* துறவி.

frat'er[1], *n.* உணவுக்கூடம்.

frat'er[2], *n.* துறவி; தோழன், கூட்டாளி.

fratern'al, *a.* உடன்பிறப்பாளர் சார்ந்த; உடன்பிறப்பாளர்கள் போன்ற; உடன்பிறந்தாரின் இயல்புக்கு உகந்த.

fratern'ity, *n.* தோழமை, உடன்பிறப்பாண்மை; உடன்பிறப்பாளர் பாங்கு, உடன்பிறப்பாளர் நிலை; கல்லூரி அல்லது பல்கலைக்கழக மாணவர் கழகம்; திருச்சபை; வாணிகக் கூட்டுக் குழு; பொதுநோக்கங்கள் கொண்டவர்களின் கழகம்; ஒரே இனத்தவர்கள் அல்லது வகையினர்களின் ஈட்டம்.

fraterniza'tion, *n.* உடன்பிறப்பாளர்களைப் போன்று அளவளாவுதல்.

frat'ernize, *v.* தோழமைகொள், நெருங்கி அளவளாவு.

frat'ricide, *n.* உடன்பிறப்புக் கொலை.

fr'atry, *n.* = frater[1].

frau, (செர்.) *n.* செர்மன் மொழிவழக்கில் பெண்; திருவாட்டி.

fraud, *n.* (சட்.) ஏமாற்றுக் குற்றம்; ஏய்ப்பு, மோசடி; வஞ்சச் சூழ்ச்சி, ஏமாற்றுப் பொறி; போலியான பொருள்; போலியானவர்; (தொ.) in fraud of, to the fraud of, (சட்.) வஞ்சித்துப் பறிக்கும் பொருட்டு, ஏமாற்றும் பொருட்டு; pious fraud, பிறருக்குத் தெரியாது நலத்தையுன்னி ஏமாற்றம் போலச் செய்யும் செயல்.

fraud'ulent, *a.* வஞ்சனைக்குரிய; ஏய்க்கும் இயல்புடைய, ஏமாற்றும் பழக்கமுடைய; மோசடியால் விளைந்த.

fraught, *n.* சுமை, மூடை; கப்பற்சரக்கு; *a.* சுமையேற்றப்பட்ட; நிரப்பப்பட்ட; ஆர்ந்த, நிரம்பிய, செறிந்த; இடருக்கு வழிவகுக்கிற; மூலகாரணமான; பின்விளைவாகவுடைய; பின்விளைவுபற்றி முனைப்பாக அச்சந்தருகிற; *v.* நிரப்பு, செறித்துவை.

fraul'ein, (செர்.) *n.* மணமாகா இளம்பெண், குமாரி.

Fraun'hofer lines, *n. pl.* கதிரவன் ஒளிநிறப் பட்டையிற் காணப்படும் கருவரிகள்.

Fraxinell'a, *n.* தோட்ட நறுமணச் செடிவகைகள்.

fray[1], *n.* சண்டை, அமளி, சச்சரவு; *v.* அச்சுறுத்து.

fray[2], *v.* தேய்த்து இறும்படி செய்; முனையில் அல்லது விளிம்பிலுள்ள முறுக்கின் புரியவிழ்; தேய்வினுல் இற்றுப்போ; முனைத்துவரும் கொம்புகளின்மேலுள்ள மென்பட்டுப் போன்ற பரப்பைத் தேய்த்தகற்று.

frazil', *n.* ஆறுகளின் அடித்தலத்திலுள்ள பனிக்கட்டி.

fraz'zle, *n.* வழங்கித் தேய்ந்துபோன நிலை; களைப்புற்ற நிலை; *v.* தேய், மாயச்செய்.

freak, *n.* இயற்கைப் பிறழ்வு; கண்ணராவி; எண்ணுச் சிறு செயல்; தடுமாற்றம்; விளையாட்டுத்தனத்தின் விளைவு; குறும்புச் செயல்; மனம்போன போக்கு, தான்தோன்றித்தனம்.

freaked, *a.* உருக்குலைக்கும் புள்ளிகளையுடைய; கீற்று வரிகளையுடைய.

freak'ish, *a.* மனம்போன போக்குடைய; திடுமென மனமாறும் இயல்புடைய, சபலத்தன்மை வாய்ந்த.

frec'kle, *n.* தோலில் இலேசான தவிட்டுநிறமுள்ள புள்ளி; பொட்டு; *v.* தோலில் இலேசான தவிட்டுநிறமுள்ள புள்ளிகளாற் கறைப்படுத்து; பொட்டுக்களையுடையதாகு.

frec'kles, *n. pl.* உடலில் ஆங்காங்கே வெயில் வெப்பிரு ஏற்படும் கன்றிய பொட்டுக்கள்.

free, *a.* தன்னுரிமையுடைய; அடிமைப்படாத; புறச்சார்பற்; அயலாட்சிக்கு உட்படாத; வல்லாட்சிமுறைக்கு உட்படாத; மக்களுரிமையுடைய; முழுநிறை குடியுரிமையுடைய; த உரிமைக் கழக உறுப்பினரான; கட்டற்ற; கட்டுப்பாட்(வரம்புகளற்ற; சமுதாயத்தில் தாராளமாகப் பழகுகிற சிந்தனையாளர் வகையில் சமயச்சார்பற்ற; சிந்தனை வகையிவ் திறந்த மனப்பான்மையுடைய; தொழிலாளர் வகையில் தொழிற்குழுத் தொடர்பற்ற; விடுதலை பெற்ற; மொழிநடை வகையில் ஒழுங்குக்கோட்பாட்டு வரம்புகளுக்குக் கட்டுப்படாத; மொழிபெயர்ப்பு வகையில் சொல்லுக்குச்சொல் பெயர்க்கப்படாத; சண்டை முதலிய நிகழ்ச்சிகள் வகையில் எல்லாரும் கலந்துகொள்ளத்தக்க; வரியற்ற; தனி விலக்குரிமையுடைய; சக்கர வகையில் முட்டின்றிச் சுழல்கிற; தன்னியக்கமுடைய; இயந்திரக்கருவி வகையில் தனி இயக்கமுடைய; முற்றிலும் இணைக்கப்பெறுத; வேதியியல் வகையில் சேர்மங்களில் முற்றிலும் இணைவுறுத; ஆற்றல் வகையில் பயனில் ஈடுபடுத்தப்படாத; பயன்படுத்தும்படி கிட்டக்கூடிய; தன்னியல்பான; தனி விருப்பார்ந்த; புறத்தூண்டுதலற்ற; கையெழுத்து வகையில் முயற்சியற்ற; தனி முனைப்பற்ற;

தூண்டப்படாத; வலுக்கட்டாயத்துக்கு உட்படாத; வரையாது கொடுக்கிற; கட்டற்ற வளமுடைய; தாராளமான; ஈட்டப்படாத; விலையற்ற, இலவசமான; மனம் விட்டுத் தெரிவிக்கிற; ஒளிவுமறைவற்ற, அஞ்சாது கூறுகிற; ஆசாரக் கட்டற்ற; துடுக்கான; வரம்புமீறிய; அடக்கமற்ற; மட்டு மதிப்பற்ற; கொச்சையான; ப. தளையறு, கட்டுநீக்கு; கட்டுப்பாடகற்று; தடைவிலக்கு; விடுவி, விடுதலையளி; அச்சம் முதலியவற்றிலிருந்து விலக்கு; சிக்கல்நிலை அகற்று; சிறைவீடு செய்; வரம்புக் கட்டுப்பாடகற்றி வெளிச்செல்ல விடு; தொடர்பறு, இணைப்பறு; (தொ.) be free with, make free with, வரம்புமீறி உரிமை எடுத்துக்கொள், இல்லாத பழக்க உரிமை கொண்டாடு; Free Church, அரசியல் தொடர்பற்ற திருச்சபை; Free Church of Scotland, நிலை பெற்ற ஸ்காத்லாந்து நாட்டுத் திருச்சபையிலிருந்து 1843-இல் விலகிய தனிக்குழு; free fight, உடனிருப்பவரெல்லாம் சேர்ந்துகொள்ளும் சண்டை; free grace, தகுதிநோக்காது காட்டப்படும்அருள்; free labour, அடிமையல்லாத தொழிலாளிகள் தொகுதி அல்லது சேவை; தொழிற்குழுச் சார்பற்ற தொழிலாளர்கள் தொகுதி அல்லது சேவை; free living, உணவு முதலிய வாய்ப்புக்களின் இன்ப நுகர்வில் மகிழ்ந்து தோய்தல்; free pass, காசில்லா நுழைவுச்சீட்டு; free school, இலவசப்பள்ளி; free trade, சுங்கவரி-காப்புவரி-கட்டுப்பாடு முதலியவையற்ற வாணிகம்; free verse, யாப்பிலக்கணக் கட்டுப்பாடற்ற செய்யுள் வகை; free will, ஊழ்க்கட்டுப் பாடற்ற தன் துணிபாற்றல்; give a free hand, இடம் நேரத்துக்கொத்துத் தன் விருப்பம்போல் செயலாற்றும் உரிமை கொடு; have a free hand, இடம் நேரத்துக்கிசைந்து தன் விருப்பம்போல் செயலாற்றும் உரிமை பெற்றிரு.

free'-ag'ency, *n.* தன்னுரிமையோடு இயங்கும் நிலை.

free'-and-eas'y, *n.* பண்புடையோர் கட்டுப்பாடற்றுப் புகை பிடிப்பதற்கும் பாடுவதற்கும் உரிய பொதுவிடுதி; *a.* தடைகளற்ற செயலுரிமையுடைய.

free'-board, *n.* கப்பல்தளத்திற்கும் நீர்மட்டத்திற்கும் இடையேயுள்ள தூரம்; வேலிக்கு அப்பாலுள்ள துண்டு நிலம்; வேலிக்கு அப்பாலுள்ள துண்டு நிலவுரிமை.

free'booter, *n.* கடற் கொள்ளைக்காரர், கடலில் வழிப்பறி செய்பவர்.

free'born, *a.* சுதந்திரமாகப் பிறந்த, அடிமையாகப் பிறக்காத, குடியுரிமையையும் தனித்தற்சார்பு உரிமையையும் இயல்பான மரபுரிமையாகப் பெற்ற.

freed'man, *n.* விடுதலையளிக்கப்பட்ட அடிமை; *pl.* freed'men.

free'dom, *n.* தன்னுரிமை, சுதந்திரம்; தன்னுட்சியுரிமை; குடியாட்சியுரிமை, குடியாண்மை; திணையாட்சியுரிமை; தனிமுறை ஆட்சியுரிமை; உறுப்பினர் உரிமை; வழக்காற்றுரிமை; பயனுரிமை; தனி விலக்குரிமை; தற்சார்பு; புறச்சார்பின்மை; தடையற்ற செயலுரிமை; ஊழ்ச்சார்பின்மை; கட்டாய நிலையின்மை; தடையற்ற பழக்க உரிமை; அஞ்சாமை; பேச்சில் ஒளிவு மறைவு தவிர்ப்பு; சிந்தனைத் துணிவு; தடையற்ற இயக்கம்; சிக்கற்ற செயலிழைவுத் தன்மை; தவிர்ப்புநிலை, சார்பின்மை, தொடர்பின்மை; சிக்கலின்மை, இணைவின்மை; சார்பறவு, தொடர்பறவு; (தொ.) The Four Freedoms, பேச்சுரிமை சமயக்கொள்கையுரிமை அச்சந்தவிர்ப்புரிமை வறுமை தவிர்ப்புரிமை ஆகிய நான்கு அடிப்படை உரிமைகள்.

free'-hand, *a.* கருவியின்றி இயல்பாகக் கையினுல் வரையப்பட்ட.

free'-hand'ed, *a.* தாராளமான, வண்மையுடைய.

free'hold, *n.* இறையிலி நிலம்.

free'holder, *n.* இறையிலி மானியத்தார்.

free'lance, *n.* கட்டுப்பாடற்ற போர்வீரர்; கட்டற்றவர்; எப்பத்திரிகையையும் சாராத பொது எழுத்தாளர்; சார்பற்ற அரசியல் வாதி; பணிமுதல்வரற்ற தன்னிச்சையான தொழிலாளி.

free'-liv'er, *n.* தடங்கலின்றி உணவு குடியின்பங்களில் தோய்பவர்.

free'-love, *n.* திருமணக் கட்டுப்பாடற்ற காதல் தொடர்பு; குடும்பப் பொறுப்புக் கடப்பாடற்ற காதல் வாழ்வு.

free'ly, *adv.* கட்டின்றி, தன்னுரிமையாக; தாராளமாக; இலவசமாக; (கப்.) காற்றுப்பக்கமாகப் பாய்களை மிகுதியாய் இழுக்காமல்.

free'man, *n.* கட்டற்ற சுதந்தர மனிதர்; அடிமை வாழ்வற்றவர்; குடியுரிமையுள்ளவர்; கழகத் தனியுரிமை உறுப்பினர்; நகரத் தனியுரிமை உறுப்பினர்.

free'martin, *n.* முதிராப் பெண்மை உறுப்புடைய ஆண் கன்று; சேங்கன்றுடன் இரட்டையாகப் பிறந்து புறப் பெண்மையுறுப்புடன் முனைப்பான ஆண் கூறுடைய பெண் விலங்கு.

free'mason, *n.* மறை குறியீடுகளும் வினைமுறை வழக்காறுகளும் உடைய பழமை வாய்ந்த கூட்டுரிமைக் கழகத்தின் உறுப்பினர்.

free'masonry, *n.* மறைகுறியீடுகளும் வினைமுறை வழக்காறுகளும் உடைய பழமை வாய்ந்த கூட்டுரிமைக்கழக அமைப்பு; கூட்டுரிமைக் கழக நிறுவனம்; ஒத்த பண்புடையாரின் இயலார்ந்த கூட்டுறவு.

free'-mind'ed, *a.* கவலையற்ற மனமுடைய.

free'-port, *n.* சுங்கமற்ற துறைமுகம்.

frees'ia, *n.* தென் ஆப்பிரிக்காவிலுள்ள பகட்டான மலர்களையும் குமிழ் வடிவான தண்டையுமுடைய செடிவகை.

free'-spok'en, *a.* கருத்து மறைப்பில்லாமல் பேசும் இயல்புடைய, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத.

free'stone, *n.* மாக்கல், பாளம் பாளமாகப் பிளவுறுத வாள் அறுப்பு வேலைப்பாட்டுக்குரிய கல்வகை; *a.* உள்ளீடு எளிதில் பிரியும் இயல்புள்ள கொட்டையையுடைய.

free'thinker, *n.* கட்டற்ற பகுத்தறிவாளர், சமய மூட நம்பிக்கைச் சார்புகளற்ற தற்சிந்தனையாளர்.

free'-thinking, free'-thought, *n.* கட்டற்ற பகுத்தறிவுச் சிந்தனை, சமய மூடநம்பிக்கைச் சார்பற்ற அறிவாராய்வு.

free'-trade, *n.* தங்குதடையற்ற வாணிகம்; சுங்கப் பாதுகாப்புமுறைக் கட்டுப்பாடில்லா வாணிகம்.

free'-trad'er, *n.* தங்குதடையற்ற வாணிகத்தில் நம்பிக்கையுடையவர்; தடையற்ற வாணிகமுறைக் கோட்பாடு பரப்புபவர்; தடையற்ற வாணிகம் செய்பவர்; கள்ள வாணிகர், சுங்கக் கட்டுப்பாட்டை மீறி வாணிகம் செய்பவர்; கள்ள வாணிகக் கப்பல்.

freeze, *n.* பனி உறையும்நிலை; பனி உறைபருவம்; பனி உறைபருவ வருகை; கூலிவகையில் ஒருநிலை அறுதிப்பாடு; ப. பனிக்கட்டியாக இறுகச்செய்; உறை, பனிக்கட்டியாகு; பனிக்கட்டியால் மூடப்பெறு; பனிக்கட்டியாக மாறு; குளிரால் இறுகச்செய்; குளிரால் இறுகு; குளிரால்விறைப்பாகு; பனிக்கட்டியால் இறுகு, உறைதட்ப நிலையிலிரு; அச்சத்தால் நடுக்குறுத்து, ஊக்கங்கெடச்செய்; கிளர்ச்சி ஒடுக்கு; செயலறச்செய்; இறைச்சி முதலியவற்றைக் குளிர்பாதுகாப்பு முறையால் கெட்டுப்போகாமல் பாதுகாத்து வை; விலையை ஒருநிலைப்படுத்து; ஊதியத்தை நிலவரப்படுத்து; (தொ.) freeze one's blood, திகிலூட்டு, அச்சுறுத்து; freeze to death, மிகுந்த குளிரினுல் இற; தணுப்பினுல் இறக்கச்செய்.

freeze'-out, *n.* முதலிழந்த உடனே ஒவ்வொரு ஆட்டக்காரராக விலகிவிடும் சீட்டாட்ட வகை.

freez'er, *n.* உறையவைக்கும் துணைக்கருவித்தொகுதி; உறையும்பொருள்.

freez'ing, *a.* மிகு குளிரான; ஊக்கம் கெடுக்கிற; ஆர்வக் குறைவான; நெருங்கிப்பழகாத; விலகிநடக்கிற.

freez'ing-mixture, *n.* பொருள்களை உறையும்படி செய்யும் கலவை.

freez'ing-point, *n.* உறைநிலை, பொருள்களின் உறைதட்ப நிலை.

freight, *n.* சுமை, கப்பற்சரக்கு, பாரம், சரக்கேற்றிக்கொண்டு செல்லுதல்; சரக்கேற்றிக்கொண்டு செல்லுதற்காகக் கப்பலை வாடகைக்கு அமர்த்துதல்; *v.* கப்பலிற் சரக்கை ஏற்று; சரக்குகளையும் பிரயாணிகளையும் ஏற்றிச்செல்ல வாடகைக்கு எடு; சரக்குகளையும் ஆட்களையும் ஏற்றிச் செல்லுவதற்காக வாடகைக்கு விடு.

freight'age, *n.* கப்பல் சரக்குத்தொகுதி; கப்பலிற் சரக்கேற்றிச் செல்லுதற்கான கட்டணம்; கப்பலில் சரக்கேற்றுதல்; சரக்கேற்றிச் செல்வதற்காகக் கப்பலை வாடகைக்கு அமர்த்துதல்.

freight'er, *n.* கப்பலிற் சரக்கேற்றுபவர்; சரக்கேற்றுதற்காகக் கப்பலை வாடகை ஒப்பந்தம் செய்பவர்; உள்நாட்டுக்கு ஏற்றிச்செல்லச் சரக்குகளை வாங்கி அனுப்பும் பொறுப்பேற்பவர்; சரக்கேற்றும் கப்பல்; சரக்கேற்றிச் செல்லும் விமானம்.

French, *n.* பிரஞ்சுமொழி; *a.* பிரான்சுநாடு சார்ந்த; பிரான்சுமொழிக்குரிய; பிரான்சுநாட்டு மக்களின் பண்புகளை யுடைய; (தொ.) French bean, காயாகவும் முதிர்விதையாகவும் உணவாய்ப் பயன்படுத்தப்படும் அவரை வகை; French bread, அழகு அப்ப வகை; French chalk, ஆடைக்கறியாகவும் கறைப்போக்கியாகவும் உடல் மசகாகவும் பயன்படும் கனிப்பொருள் கற்றைவகை; French drain, நீர் ஊறிச் சென்றுவிடும்படி உடைகல் சில்லுகளிட்ட வடிகால்; French grey, வெண்மை கருமை சிவப்பு நீலம் கலந்த மங்கலான நிறம்; French horn, இசைக்குழுவிற் பயன்படுத்தப்படும் எக்காளவகைக்கொம்பு; French letter, கருத்தடைக்கருவி; French roof, எல்லாப்பக்கங்களிலும் மேல் சரிவைவிடக் கீழ்ச்சரிவு செங்குத்தாக உள்ள கூரைவகை; French sash, French window, பலகணியாகவும் கதவாகவும் பயன்படும் மெருகூட்டப்பட்ட மடிப்புக்கதவு; take French leave, சொல்லிக்கொள்ளாமல் போ, அறிவித்து இசைவு பெறுது செல்; the French, பிரான்சு நாட்டினர்; பிரான்சு நாட்டு மக்கள்.

French'ify, *v.* பிரான்சுநாட்டின் மொழி-பண்பு ஆகியவற்றின் உருவங் கொடு; பிரான்சு நாட்டு மக்கள் போலாகு; பிரான்சுநாட்டினர்போல் நட; பிரான்சுநாட்டுப் பாணியூட்டு; பிரான்சுநாட்டுப் பாங்கு மேற்கொள்.

French'less, *a.* பிரஞ்சுமொழி தெரியாத.

French'man, *n.* பிரான்சுநாட்டுக் குடிமகன்; பிரான்சு நாட்டிற் பிறந்தவன்.

French'woman, *n.* பிரான்சு நாட்டுப் பெண்.

French'y, *n.* பிரான்சுநாட்டவரைக் குறித்த ஏளனக் குறிப்புச் சொல்; *a.* மிகைப்பட்ட பிரஞ்சு பாணியையுடைய, பிரஞ்சு வழக்கவழக்கங்களையுடைய.

fret'ic, *a.* வெறியெழுச்சி கொண்ட; வெறித்த; கொள்கை மூண்டபான.

fr **m**, *n.* உறுப்புக்களின் இயக்கத்தைத் தடைசெய்யும் நோர்.

ed, *a.* வெறியூட்டப்பட்ட; சீற்றங்கொண்ட; (தொ.) ed rage, வெறியாளரின் சினம்.

, *n.* வெறி; மூளைக்கோளாறு; தற்காலிகப் பைத்தியம்; னம், தீவிர ஆத்திரம்; சன்னியாலான கிளர்ச்சி; போன போக்கான மடமை; தன்னை மறந்த சீற்றம்; ளிப்பு; *v.* வெறியூட்டு; மிகுசினமூட்டு.

ncy, *n.* அடுக்குநிகழ்வு, விட்டுவிட்டு அடிக்கடி நிகழும் ம, அடுத்தடுத்து நிகழும் நிலை; பொதுமுறை நிகழ்வு; த விரைவெண்; நாடித்துடிப்பு விசையெண்; (இய.) அதிர்வெண்; (தொ.) frequency modulation, பேச்சுக்காட்டுக்கும் இசைந்த வானொலி அலையதிர்வின் மாறுபேச்சுக்கும் பாட்டுக்கும் இசையலையதிர்வில் வேறுபாடும் முறை.

nt[1], *a.* அடுக்கு நிகழ்வான, அடிக்கடி நிகழ்கிற; டுத்து நிகழ்கிற, பொதுநிகழ்ச்சியான, பொது நிலை வழக்கமான; அடுத்தடுத்துக் காணப்படுகிற; திரளான, மான.

frequent'[2], *v.* அடிக்கடி செல்; அடுத்தடுத்துச் செல்; வழக்கமாகச்செல், சென்றுபழகு.

